# வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி நான்கு



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு

அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உலகெலாம் உயர்வல்ல
தமிழ்நாடு

அச்சகம்

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி நான்கு

இராசசர்சு கார்ல் — உரிச்சொல் நிகண்டு

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81 - 7090 - 084 - 0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53 - 4

திருவள்ளுவராண்டு 2018 - ஏப்பிரல் 1987

| | | |
|---|---|---|
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம்<br>தொகுதி நான்கு |
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | முனைவர் நா. பாலுசாமி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | களஞ்சியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 1987<br>மறுபதிப்பு 2002, **2009** |
| பக்கம் | : | (xxiv + 1000) 1024 |
| தாள் | : | டிஎன்பிஎல் மேப்லித்தோ எச்சல் 16Kg. |
| அளவு | : | 1/4 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | காலிகோ |
| விலை | : | உரூ. **800/-** |
| படிகள் | : | 500 |
| அச்சு | : | **நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்<br>சிவகாசி.** |

# வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

**மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்**

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

**மேதகு திரு. எஸ்.எல். குரானா**

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**

சட்டம், மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

**பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்**

முதன்மைப் பதிப்பாசிரியர்

**பேரா. டாக்டர் ந. பாலுசாமி**

பொறுப்பாசிரியர்கள்

**பேரா. டாக்டர் அ.மா. பரிமணம்**

**திரு. வீ. சேகர்**

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu04unse

# பதிப்புக்குழு

**முதன்மைப் பதிப்பாசிரியர்:**

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.
(4.4.84)

**பதிப்பாசிரியர்:**

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83) — பொருளியல், வணிகவியல்.
2. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல்.
3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85) — தத்துவம்.
4. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி. (1.12.85) — அரசியல்.
5. திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல். (25.7.86) — சட்டம்.
6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்). ( 5.8.86) — வரலாறு, அகழாய்வு.

**செய்தி திரட்டுவோர்:**

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில். (25.4.84) — வரலாறு, அகழாய்வு.
2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட். ( 1.8.84) — மொழி, மொழியியல்.
3. டாக்டர் சி. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி. (7.1.85) — கல்வியியல்.
4. திரு.சி. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்.
5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்.
6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி. (1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்

**மொழிவல்லுநர் — மெய்ப்புத் திருத்துநர்:**

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

# நன்றியுரை

## நான்காம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By Sivarama Murthi, C., Archaeological Remains Monuments and Museums, Archaeological Survey of India, Part I & II., The Houses of Mankind by Colin Duly, Physical Anthropology by Lasker G.W.

## ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை, டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் துணைப்பதிவாளர் திரு. இரா.சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டு தவிய தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு. தே. நெடுஞ்செழியனுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 30-1-87

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

# நான்காம் தொகுதி : கட்டுரையாளர்கள்

அ.அ.

டாக்டர் அ. அனந்தகிருஷ்ணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தெ.தி. இந்துக்கல்லூரி
நாகர்கோயில்.

அ.கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.கே.

பேரா. அ. கேசவன்,
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

அ.சி.

டாக்டர் அருணா சிவகாமி
அரசியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.த.

திரு அ. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

அ.பா.

டாக்டர் அ.பாண்டுரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தாகூர் கலைக்கல்லூரி
பாண்டிச்சேரி.

அ.பி.பொ.

திருமதி அ.பி.பொற்கொடி, பி.எஸ்ஸி.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஆ.ஆ.

டாக்டர் ஆ.ஆனந்தராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சைவசித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆ.ச.

திரு ஆ.சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு ஆ.செல்லபெருமாள், எம்,ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம்.ஓ.எல்.,பிஎச்.டி
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.இ.

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.கே.பா.

திரு. ஆர்.கே.பாலசுப்பிரமணியன்
முதன்மை அதிகாரி
பாராளுமன்ற பணிக்குழு
30, சித்திரகுளம்—வடக்கு
சென்னை.

ஆர்.சீ.

பேரா. ஆர்.சீனிவாசன், எம்.காம்.,எம்.பில்.
வணிகவியல் பேராசிரியர்
சரஸ்வதி நாராயணன் கல்லூரி
மதுரை.

ஆர்.ஜா.

டாக்டர் ஆல்பர்ட் ஜான்சன்
விரிவுரையாளர்
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இர.

லெப்டி.கர்ன.இரத்னாசலம்
1, கேனல் ரோடு
தொழிற் பாதுகாப்புப் பயிற்சி மையம்
எம்.ஜி.காலனி
சென்னை.

இர.ந.

பேரா.இரத்தினநடராசன்
வரலாற்றுத்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

இரா.அ.

பேரா.இரா.அண்ணாமலை
ஏ—54, அண்ணாநகர்
சென்னை.

இரா.இரா.

திருமதி இரா.இராசலட்சுமி
துணைப் பேராசிரியை
வரலாற்றுத்துறை
அரசு மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எஸ்.,டி.ஓ.
சி.87, 8-ஆவது குறுக்குச் சாலை
தில்லைநகர் மேற்கு
திருச்சி.

இரா.கி.

திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி
1, நந்திகோயில் தெரு
தெப்பக்குளம்
திருச்சி.

இரா.கு.

திரு.இரா.குருநாதன், எம்,ஏ.,எம்.பில்.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.ச.

வித்துவான் இரா.சங்கரன்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.ச.

பேரா.இரா.சந்திரசேகரன்
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

இரா.செ.

டாக்டர் இரா.செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.செ.

டாக்டர் இராதா செல்லப்பன், எம்.ஏ ,பிஎச்.டி.
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.த.

டாக்டர் இரா.தண்டாயுதம், எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகள் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர்
மலேசியா.

இரா.பி.

செல்வி இரா.பிரேமா
தமிழ்த்துணைப் பேராசிரியர்
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை.

இல.இரா.

பேரா.இல.இராமமூர்த்தி
வரலாற்றுத்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இல.மு.

பேரா.இல. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத்துறை,
பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி
மேலையூர்.

ஈ.வே.மா.

பேரா.ஈ.வே.மாரியப்பன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

உ.செ.

பேரா.உசுமான் செரீப்
ஓய்வு பெற்ற முதல்வர்
50, மேடாக்சு சாலை
சூளை
சென்னை.

எச்.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.எஸ்.கோ.

டாக்டர் எம். எஸ். கோவிந்தசாமி
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சு.

டாக்டர் எம்.சுசீலா, எம். ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சு.

டாக்டர் எம்.சுரேஷ்பாபு
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

எம்.சு.

திரு எம்.சுவாமிநாதன்,எம்.ஏ.,எம்.லிட்.
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சே.

டாக்டர் எம்.சேதுராமன்,எம்.எஸ்சி.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

எம்.ப.

டாக்டர் எம்.பரதன்
இணைப் பேராசிரியர்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.ச.

திரு.என்.எஸ்.சத்தியநாதன்
விரிவுரையாளர்
அரசியல் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.தா.

திரு.என். எஸ்.தாதாசார்யர்,பி.ஓ.எல்.
1168, பாலோபா சந்து
மேலவீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,
பிஎச்.டி
பொருளியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா.

டாக்டர் என்.மாத்ருபூதம்
2589 ஏஐ 79,
ஐந்தாவது பிளாக், இரண்டாவது தெரு
அண்ணாநகர்
சென்னை.

என்.மா.

திருமதி என்.மாலதி தெய்வராசன், எம்.எஸ்ஸி., எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேரா.எஸ்.அன்புக்கொடி
318/3, எச்.ஐ.ஜி.பெல்லி ஏரியா
அண்ணாநகர்
சென்னை.

எஸ்.ஆ.

திரு.எஸ்.ஆண்டியப்பன்
காந்தியக் கல்வி மற்றும் இராமலிங்கர் தத்துவத் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ்.ஆரோக்கியநாதன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
தம்ழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.இரா.

பேரா.எஸ்.இராசலட்சுமி,
வி.வி.வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி
விருதுநகர்.

எஸ்.இரா.

திரு.எஸ்.இராமச்சந்திரன்,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.
ஆய்வாளர்
மக்கள் தொகையியல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.இல.

டாக்டர் எஸ்.இலக்குமணன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
அரசினர் கல்லூரி
கும்பகோணம்.

எஸ்.எஸ்.எம்.சு.

பேரா.எஸ்.எஸ்.எம்.சுந்தரம்,எம்.காம்.
வணிகவியல் பேராசிரியர்
சௌராஷ்டிரா கல்லூரி
பசுமலை
மதுரை.

எஸ்.ஒ.இரா.

திரு.எஸ்.ஒ.இராமகிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
தேசியக் கல்லூரி
திருச்சி.

எஸ்.கு.

டாக்டர் எஸ்.குளோரியா சுந்தரமதி,எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
கேரளப் பல்கலைக்கழகம்
காரிய வட்டம்
திருவனந்தபுரம்.

எஸ்.கே.இரா.

வித்துவான் எஸ்.கே.இராமராசன்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.ச.

திரு.எஸ். சந்தானம், எம்.ஏ.
44, இரண்டாவது மேற்குக் குறுக்குத்தெரு
காந்தி நகர் (மேற்கு)
வேலூர்.

எஸ்.சா.

திரு.எஸ். சாம்பசிவம், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
தத்துவத்துறை
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை.

எஸ்.சீ.

திரு எஸ். சீத்தாராமன், எம்.ஏ., எம்.எட்.
தலைமையாசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
ஆலங்குளம்.

எஸ்.நா.

திருமதி எஸ். நாகரத்தினம்
முதல்வர்
சீதாலெட்சுமி இராமசாமிக் கல்லூரி
திருச்சி.

எஸ்.நா.

திரு. எஸ். நாராயணசாமி, எம்.ஏ.,எம்.எல்.
பேராசிரியர்
சென்னை சட்டக் கல்லூரி
சென்னை.

எஸ்.பெ.

டாக்டர் எஸ். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
பொருளியல் துறைப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.மு.

திரு. எஸ். முத்துக்கிருட்டிணன்
விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆர்.ச.

திரு. ஏ.ஆர். சனகன், எம்.ஏ.,எம்.எல்.
முன்னாள் பேராசிரியர்
சென்னை சட்டக் கல்லூரி
42, வேங்கடாசலம் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

ஏ.சு.

டாக்டர் ஏ. சுவாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத்துறைத் தலைவர்
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
நந்தனம்
சென்னை.

ஏ.ப.

திரு. ஏ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
மதுரை.

க.அ.

திருமதி க. அனுசூயாதேவி
முதல்வர்
வே.வ. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி
விருதுநகர்.

க.த.தி.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு
சென்னை.

கதிர்.ம.

டாக்டர் கதிர்மகாதேவன், எம்.ஏ., எம்.லிட்.,
பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.பு.சீ.

பேரா.க.பு. சீனிவாசன், பி.ஏ., (ஆனர்சு), பி.டி.
ஏ 4, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு
முசிறி
திருச்சி மாவட்டம்.

க.ம.

புலவர் க. மருதமுத்து
தமிழாசிரியர் (ஓய்வு)
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி
திருச்சி மாவட்டம்.

கி.அ.

டாக்டர் கி. அரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.க.

டாக்டர் கி. கருணாகரன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ., பி.ஓ.எல்.
ஓய்வு பெற்ற பேராசிரியர்
11/13, திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ப.

திரு. கி. பழநியப்பனார்
3, வ.உ.சி. தெரு
மதுரை.

கி.ப.

பேரா.கி. பிரகதாம்பாள்
64, பி. நாச்சியார் அம்மாள் இல்லம் (மேல்மாடி)
வெளிப்பட்டினம்
கேணிக்கரை
இராமநாதபுரம்.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன்
113, பி. ஆழ்வார் நகர்
நாகமலை
மதுரை.

கி.வீ.

திரு.கி. வீரமணி, எம்.ஏ., பி.எல்.
புரவலர்
பகுத்தறிவாளர் கழகம்
பெரியார் திடல்
சென்னை.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பி.ஓ.எல்., பிஎச்.டி.,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

கே.இரா.

திரு.கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன்.ஆர்க்.
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என்.இராமானுஜம், எம்.காம்.,எம்.லிட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.கே.சு.

திரு.கே.கே. சுவாமிராவ், பி.எஸ்சி., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தா ரெட்டி, எம்.எஸ்சி. பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.வி.கா.

திரு.கே.வி. காளியப்பன்
31, கிளப் ரோடு
சேத்துப்பட்டு
சென்னை.

கே.ஜி.கி.

திரு.கே.ஜி. கிருட்டிணன்
711, வைஜந்தி
16-ஆவது மெயின் ரோடு
சரசுவதிபுரம்
மைசூர்.

கொ.இ.

டாக்டர் கொ. இலக்குமணசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பதிப்பாசிரியர்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இ.

கோவை. இளஞ்சேரன்
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இரா.கி.

டாக்டர். கோ.இரா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

கோ.க.

திரு கோ. கருணாநிதி, எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

கோ.சி.

டாக்டர் கோ. சிவகுருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

கோ.சீ.

டாக்டர் கோ. சீநிவாசவர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கோ.பா.

டாக்டர் கோ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைப் பேராசிரியர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

கோ.வி.

டாக்டர் கோ. விஜயவேணுகோபால், எம்.ஏ. எம்.லிட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.அ.

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.த.

மகாவித்துவான் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்,
திருக்குறள் துறை
அழகர் கோயில் சாலை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.பா.

பேரா. வித்துவான் ச. பாலசுந்தரம்
( 367, மேலவீதி
தஞ்சாவூர். )
ஓய்வு பெற்ற பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

சா.இரா.

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
முதல்வர்
தமிழ்க் கல்லூரி
பேரூர். கோயம்புத்தூர் மாவட்டம்.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஓ.எல்.,பி.எட்., பிஎச்.டி.
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.தி.

திருமதி சாந்திதிலக் சாமுவேல்
தென்னிந்தியத்திருச்சபை
ஆலய வளாகம்
வால்பாறை
பொள்ளாச்சி (வழி)
கோயம்புத்தூர் மாவட்டம்.

சி.அ.

பேரா. சி. அருணைவடிவேல் முதலியார்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

சி.ஈ.இரா.

டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன்
இந்திய வரலாற்றுத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராசன்
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக
முதுநிலைப்பட்ட விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கோ.

பேரா. வித்துவான் சி. கோவிந்தராசனார்
ஆய்வாளர்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.சி.

பேரா. சி. சின்னய்யன்
வரலாற்றுத் துறை
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

சி.ஞா.

டாக்டர் சி. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.ந.

டாக்டர் சி. நயினார் முகமது, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர் – தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.பா.

பேரா.சி.பாலசுப்பையா, எம்.காம்., எம்.பில்.
வணிகவியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

சி.ம.

திரு.சி.மகேசுவரன், எம்.ஏ.,எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்-மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.சே.தே.

டாக்டர் சீ.சே.தேக்கமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சமூகவியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்.
தஞ்சாவூர்.

சீ.ஞா.

திரு.சீ.ஞானதேசிகன்
18,சாம்பசிவம் தெரு
தியாகராய நகர்
சென்னை.

சு.சா.

டாக்டர் சு.சாமிஐயா,எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா. வித்துவான் சு. சுவர்ணகாளீசுரன்
ஓய்வு பெற்ற பேராசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை,எம்ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

செ.அ.

டாக்டர் செ.அய்தர் அலி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
வக்போர்டு கல்லூரி
மதுரை.

செ.வை.

பேரா.செ.வைத்தியலிங்கன்.எம்.ஏ.,எம்.லிட்.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.ஜோ.

திரு.செ. ஜோசப்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

சே.சு.இரா.

பேரா.சே.சு.இராசன்
தமிழ்த்துறைத் தலைவர்
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி
திருச்சி மாவட்டம்.

சை.வே.சி

டாக்டர் சை.வே.சிட்டிபாபு
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சொ.சா.

திரு.சொ.சாந்தலிங்கம்
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

சோ.சோ.மீ.சு.

பேரா.சோ.சோ.மீ.சுந்தரம்
வணிகவியல் பேராசிரியர்
சௌராஷ்ட்டிரா கல்லூரி
பசுமலை
மதுரை.

சோமலெ

திரு. சோமலெ
இந்திரா நகர் அஞ்சல் அலுவலக மேல்மாடி
அடையாறு
சென்னை.

சௌ.ச.

திரு. சௌ.சந்திரசேகரன்
புலவிருந்தகக் காப்பாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி.எஸ்.ந.

திரு.டி .எஸ்.நடராஜன்
இணைப் பேராசிரியர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி. சித்தலிங்கய்யா, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சைவசித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா.எ.

திரு. தா.எட்மண்ட்சு
வரலாறு, அரசியல் துறைத் தலைவர்
தரங்கம்பாடி பிசப்பு மாணிக்கம்
லுத்தரன் கல்லூரி
பொறையாறு.

தா.எ.

டாக்டர் தா. எட்வர்டு வில்லியம்ஸ்.,எம்.ஏ.,
பிஎச்.டி

இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ.சண்முகம்
சிறப்பு நிலைப் பேராசிரியர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
தாமு நகர்
கோயம்புத்தூர்.

தா.செ.

பேரா.தா.செல்லப்பா,எம்.ஏ.,எம்.ஏ., எம்.லிட்.
காப்பாளர்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி
மதுரை.

தி.ஆர்.இரா.

பேரா. தி.ஆர்.இராமச்சந்திரன்
37, 8-ஆவது குறுக்குத் தெரு (மேற்கு)
செனாய் நகர்
சென்னை.

தி.சு.

திரு.தி.சுப்பிரமணி
காப்பாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

தி.மு.

டாக்டர் தி.முருகரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
திருக்குறள் இருக்கை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

தி.லீ.

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்,
இராணி மேரி கல்லூரி
சென்னை.

தி.வெ.கு.

டாக்டர் தி.வெ.குப்புசாமி
ஆர்-661, நியூ ராஜிந்தர் நகர்
புதுதில்லி.

தி.வை.சொ.

பேரா. தி.வை. சொக்கப்பா
4/98, கான்வெண்டு சாலை
சேலம்.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

தே.ஆ.

டாக்டர் தே.ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16. ஜவகர் ரோடு
காந்திநகர்
மதுரை.

தே.ச.

டாக்டர் தேனியல் தேவசங்கீதம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.கு.

டாக்டர் ந.குமாரசாமிராஜா, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ந.இரா.

பேரா.ந.இராமநாதன், எம்.ஏ.,பி.ஓ.எல்.
முதல்வர்
பெரியார் பயிற்சிப் பல்கலைக்கழகம்
விடுதலை அலுவலகம்
பெரியார் திடல்
சென்னை.

ந.சு.

டாக்டர் ந.சுப்பிரமணியன்
பிரபு ராஜ்பவன்
30, கல்யாணிஅம்மாள் லேஅவுட்
காந்திநகர்
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

ந.மெ.

திரு.ந.மெய்ப்பொருள்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

நா.சி.

டாக்டர் நா.சின்னராசு
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.செ.

டாக்டர் நா.செயராமன்,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

நா.ப.

பேரா.நா.பக்தவச்சலு
604, அண்ணாநகர் மேற்கு
சென்னை.

நா.ஜெ.

பேரா. நா. ஜெயபாலன்
வரலாற்றுத்துறை
அரசுக் கல்லூரி
கரூர்.

நே.தே.

திரு.நே. தேவசகாயம், எம். எஸ்சி., எம்.ஏ.,எம்.ஏ.
காப்பாட்சியர் மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.ம.

டாக்டர் ப.மருதநாயகம்,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பழ.மு.

டாக்டர் பழ.முத்துவீரப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.சோ.ச.

திரு. பா.சோசப்பு சத்தியராசு
துணைப் பேராசிரியர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

பா.ரா.க.

பேரா. பா.ரா. கந்தசாமி, எம்.ஏ.
10-சி, வெங்கமேடு
வேலூர்
சேலம் மாவட்டம்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர்.நரசிம்மன்,எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.இரா.

திரு.பி.இராஜகோபாலன், எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழ்கம்
அண்ணாமலைநகர்.

பி.எஸ்.வே.

செல்வி பி.எஸ். வேதவல்லி,எம்.ஏ.
'ரேவதி'
1,2-ஆவது தெரு
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.ஏ.மோ.

டாக்டர் பி.ஏ.மோகனராஜன்
நூலகர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.கோ

டாக்டர். பி.கோவிந்த ரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
உடல்சார் மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பி.தெ.

டாக்டர்பி.தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

பி.நா.

டாக்டர் பி.நாகராஜராவ்,எம்.ஏ.,பிஎச்.டி.
டாக்டர் ரங்காச்சாரியார் சாலை
அபிராமபுரம்
சென்னை.

பெ.தி.

திரு.பெ.திருஞானசம்பந்தன்,எம்.ஏ.
27, கோவிந்தன் தெரு,
தியாகராசர் நகர் அஞ்சல் நிலையம்
சென்னை.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியன்
வரலாற்றுத்துறை
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

பொன்.சூ.

பேரா. பொன். சூரியராசன்
உடற்பயிற்சிக் கல்வித்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ம.இரா.த.

பேரா. ம. இராசசேகரதங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

மகா.வே.

டாக்டர் மகா. வேங்கடராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தேசியக் கல்லூரி
திருச்சி.

ம.சு.

பேரா. ம. சுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.ஏ.
மனை எண்: 4, 6-ஏ, மூன்றாவது பெருஞ்சாலை
அண்ணா நகர்
சென்னை.

ம.தி.

டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன்
வரலாற்றுத் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பொருளியல் துறைத்தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.அ.

டாக்டர் மு. அப்துல்ரகீம்
3/4 காஜாமலைக் குடியிருப்பு
திருச்சி.

மு.இரா.

திரு. மு. இராமமூர்த்தி
தமிழாசிரியர்
இளைஞர் சீர்திருத்தப்பள்ளி
தஞ்சாவூர்.

மு.ச.

பேரா. வித்துவான் மு.சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மோ.இ.

டாக்டர் மோ.இசரயேல்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைத்தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ய.சா.

திருமதி யதீஸ்வரி சாரா பிரியா அம்பா
தாளாளர்
ஸ்ரீ சாரதா கல்லூரி கல்வி அறக்கட்டளை
அழகர்புரம்
சேலம்.

யு.சு.

திரு.யு.சுப்பிரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு)
இராஜப்பா நகர்
தஞ்சாவூர்.

ரா.கி.

திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி
1, நந்தி கோயில் தெரு
தெப்பக்குளம்
திருச்சி.

வி.ஆர்.அ.

பேரா. வி.ஆர்.அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வி.என்.இரா.

திரு.வி.என்.இராசகோபால்
நிருவாக அலுவலர்
மாவட்டச் சட்ட உதவிக் குழுமம்
நாகப்பட்டினம்.

வி.சு.

டாக்டர் வி.சுதர்சன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.ஞா.

டாக்டர் வி.ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
இந்திய மொழிகளின் நடுவளாகம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

வீ.இரா.அ.

பேரா.வீ.இரா.அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வீ.சொ.

புலவர் வீ.சொக்கலிங்கம்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா.சுந்தரம்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
தல்லாகுளம்
மதுரை.

வீ.மு.

திரு வீ.முத்துச்சாமி,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
சிவகங்கை அரசினர் துரைசிங்கம் கல்லூரி
சிவகங்கை.

வெ.ப.

டாக்டர் வெ.பழநியப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வே.க.

திரு.வேதகிரி கணேசன்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.சா.அ.

டாக்டர் வே.சா.அருள்ராஜ்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பல்கலைக்கழக நீரகழாய்வு மையம்
மண்டபம் முகாம்
இராமநாதபுரம் மாவட்டம்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர்.கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.க.

திரு.ஜி.கனகசபை, எம்.ஏ.,எல்.டி.
வடக்கு வீதி
இலால்குடி
திருச்சி மாவட்டம்.

ஜி.ச.

டாக்டர் ஜி.சங்கரநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
இந்திய மொழிகளின் நடுவளாகம்
மைசூர்.

ஜெ.மு.

திருமதி ஜெயாமுனுசாமி,எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியை
தத்துவத்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

ஜே.சீ.

திரு ஜே.சீனிவாசராகவன்
வழக்கறிஞர்
46, வடக்கு வெளி வீதி
மதுரை.

ஜே.பா.

டாக்டர் ஜே.பார்த்தசாரதி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையினமக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அகத். | — அகத்திணையியல் |
| அப். | — அப்பர் |
| ஆ.ஆ. | — ஆட்சி ஆண்டு |
| ஆரணிய. | — ஆரணிய காண்டம் |
| இடை. | — இடையியல் |
| இராவணன் வதைப். | — இராவணன் வதைப் படலம் |
| உரூ. | — உரூபாய் |
| ஊர்தேடு. | — ஊர்தேடு படலம் |
| எ—டு. / எ.கா. | — எடுத்துக்காட்டு |
| எழுத்து. | — எழுத்ததிகாரம் |
| ஐங். | — ஐங்குறுநூறு |
| கம்பராமா. | — கம்பராமாயணம் |
| காட்சி. | — காட்சிக் காதை |
| கி.பி. | — கிறித்துவுக்குப் பின் |
| கி.மீ. | — கிலோமீட்டர் |
| கி.மு. | — கிறித்துவுக்கு முன் |
| கும்ப.வதைப். | — கும்பகருணன் வதைப் படலம் |
| குறள். | — திருக்குறள் |
| குறு. / குறுந். | — குறுந்தொகை |
| ச.கி.மீ. | — சதுரக் கிலோ மீட்டர் |
| சம். | — சம்பந்தர் |
| சிலம்பு. | — சிலப்பதிகாரம் |
| சிறுபாண். | — சிறுபாணாற்றுப்படை |
| சீவக. | — சீவகசிந்தாமணி |
| சுந்தர காண். | — சுந்தர காண்டம் |
| சூ. | — சூக்தம் |
| சொல். | — சொல்லதிகாரம் |
| தேவா. | — தேவாரம் |
| தொ.எ. | — தொல்காப்பிய எழுத்ததிகாரம் |
| தொ.சொ. | — தொல்காப்பியச் சொல்லதிகாரம் |

| | | |
|---|---|---|
| தொல். | — | தொல்காப்பியம் |
| தொ.வி. | — | தொல்காப்பிய வினையியல் |
| ந. | — | நச்சினார்க்கினியர் |
| நம்பி. | — | நம்பியகப்பொருள் |
| நற். | — | நற்றிணை |
| நன். | — | நன்னூல் |
| நூ. | — | நூற்பா; நூற்றாண்டு |
| பதிற். | — | பதிற்றுப்பத்து |
| பரி. | — | பரிபாடல் |
| பா. | — | பாசுரம் |
| பிங். | — | பிங்கல நிகண்டு |
| புறம். | — | புறநானூறு |
| பொருள். | — | பொருளதிகாரம் |
| மண்ட. | — | மண்டலம் |
| மந். | — | மந்திரம் |
| மரபு. | — | மரபியல் |
| மாரீசன் வதைப். | — | மாரீசன் வதைப் படலம் |
| மீ. | — | மீட்டர் |
| மௌன. | — | மௌன குரு வணக்கம் |
| யுத்த. காண். | — | யுத்த காண்டம் |
| ரூ. | — | உரூபாய் |
| வாழ்த்து. | — | வாழ்த்துக் காதை |

# வாழ்வியற் களஞ்சியம்

**இராசர்சு, காரல்:** உளவழி மருத்துவத்தில் அறிவுரை பகர்தலின் சிறப்பை முதன்முதலாக எடுத்துரைத்த உளவியல் அறிஞர் இராசர்சு ஆவார். இவர் 1902-ஆம் ஆண்டு இல்லினாய் மாநிலத்தில் ஓக்பார்க்கு (Oak Park) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் சமயக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற பின் உளவியலில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றார். குழந்தைகள் வழிகாட்டு நிலையத்தில் இவர் பத்து ஆண்டுகள் பணி புரிந்தார். காரல் இராசர்சு (Carl Rogers), தியோடர் இரீசு, ஆட்டோ இராங்கு போன்ற பிராய்டுக் கோட்பாட்டினருடன் தொடர்பு கொண்டார். இவர் 1940-ஆம் ஆண்டு ஒகையோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பதவி ஏற்றுப் பணிபுரிந்தார். பின்னர் 1945-ஆம் ஆண்டு சிகாகோப் பல்கலைக்கழகத்தில் அறிவுரை பகர் நிலையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அறிவுரை பகர்தலில் பல புதிய உத்திகளைப் புகுத்தினார். ஆட்படுநருடன் உரையாடல்களைப் பதிவு செய்யும் முறையை இவர் பயன்படுத்தி, அதில் வெற்றி கண்டார்.

இவர், 1951-ஆம் ஆண்டு வெளியிட்ட ஆட்படுநர் மைய உள மருத்துவம் (Client Centered Therapy) என்னும் நூலில் தம் உளவியல் கருத்துகளை விளக்கியுள்ளார். கலிபோர்னியாவில் தாம் நிறுவியுள்ள கல்வி நிலையத்தில் 1964-ஆம் ஆண்டுக்குப்பின்னர்ப் பொறுப்பாளராக இருந்து வந்தார். உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் வளர்ச்சியடைந்து முதிர்ச்சி நிலையை அடைய வேண்டும் என்னும் உந்து இருப்பதாகவும், அதை 'நிறைவேற்றும் இயல்பு' என்றும் இராசர்சு கூறியுள்ளார்.

மனிதர்களின் சிக்கல்களை ஆய்வு செய்வதற்காகவும் அதற்கு மருத்துவம் செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டிருந்த முறைகளின் மேல் இவருக்குப் பல ஐயங்கள் எழுந்தன. இவர் நோயாளிக்கும் (ஆட்படுநர்) மருத்துவருக்கும் இடையில் நல்ல உறவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலும் ஏற்படவேண்டும் என்று கருதினார். நோயாளி மருத்துவச் சூழலில் இருக்கும் பொழுது அவர் எந்தவிதமான கட்டளைகளுக்கும் உட்படுபவராக இருக்கக் கூடாது என்று இராசர்சு கூறினார்.

துன்புறுத்தல்களுக்கும் உளத்தாக்குதல்களுக்கும் ஆளாகிய குழந்தைகளை ஆய்வு செய்வதன் விளைவாகத் 'தொல்லைகளுக்குள்ளான குழந்தைகளுக்குரிய உளநோய் மருத்துவம்' (The Clinical Treatment of the Problem Child) என்னும் நூலை இவர் எழுதினார். ஒகையோ, சிகாகோ, விசுகான்சின் ஆகிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவும் இவர் பணியாற்றினார். சிகாகோப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது அறிவுரை பகர் மையம் ஒன்றை இவர் நிறுவினார். அங்கே தமது உளமருத்துவ முறையைப் பற்றி ஆய்வு செய்தார். அதன் முடிவுகளைத் தமது 'உளமருத்துவமும் ஆளுமை மாற்றமும்' (Psychotherapy and Personality Change) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், 'ஆட்படுநர்

மைய மருத்துவம்' (Client Centered Therapy) என்ற நூலில் இம்மருத்துவ முறையைப் பற்றி விளக்கியுள்ளார். 'மனிதனாதல் பற்றி' (On Becoming a Person) என்ற நூல் இவருக்குப் பெரும் புகழைத் தந்தது. 'அறிவுரை பகர்தலும் உளமருத்துவ முறைகளும்', 'எதிர் குழுக்களைப் பற்றி' (On Encounter Groups) என்பன போன்ற பல நூல்களை இவர் இயற்றி உளவியல் துறையில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளார். இராசர்சின் கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

மனிதர்களின் நடத்தைகள் அவர்களின் தற்கருத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. மனிதர்களின் இயல்பான அடிப்படைப்பண்பு நலம் சார்ந்ததாகவே உள்ளது. சமூகக் காரணிகளால் தனிமனிதன் வன்முறை, தன்னலம், அழிவு ஆகிய இயல்புகளைப் பெறுகிறான். மனிதனின் தற்கருத்திற்கும் அவன் வாழ்க்கையில் அடையும் அனுபவங்களுக்கும் இடையே பெரும் வேறுபாடு உள்ளது. குழந்தையின் தற்கருத்தினைச் சிதைவுபடுத்தும் வழியிலேயே இன்றுள்ள கட்டுப்பாடுகளும் அறிவுரைகளும் அமைந்துள்ளன. ஆதலின், 'தான்' என்னும் உணர்வுக்கும் தற்கருத்திற்கும் இடையே வேறுபாடுகள் எழுகின்றன. தற்கருத்து நல்லமுறையில் அமையப்பெறாவிடில் குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் அதன் ஆளுமை பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக மனவெழுச்சிச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாளடைவில் இது உளக் கோளாறுகளுக்கும் காரணமாக அமையலாம்.

துணை நூல்:

**William Samuel**, Personality, Mcgraw Hill, Tokyo, 1981.

**இராசரத்தினம் பிள்ளை, டி.என்.:** இவர் தமிழகத்துத் தலைசிறந்த நாதசுரக் கலைஞராவார். தஞ்சை மாவட்டத் திருமருகல் என்னும் ஊரில் இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு பிறந்தார். அவ்வூர் நடேச பிள்ளை என்பவர் இவர்தம் வளர்ப்புத் தந்தை ஆவார்.

தம் வளர்ப்புத் தந்தை நடேசபிள்ளை திருவாவடுதுறைச்சைவ மடத்தில் நாதசுர வித்துவானாக இருந்த காரணத்தினால் தம் ஒன்பதாம் வயதிலேயே திருவாவடுதுறை வந்துவிட்டார். அங்கு மார்க்கண்டம் பிள்ளை என்பவரிடம் தம் பத்தாம் வயதில் நாதசுரப் பயிற்சி பெறத் தொடங்கினார். தம் சிந்தனைத் திறத்தால் விரைந்து முன்னேறினார். தஞ்சையில் நடந்த ஒரு திருமணத்தின் போது துணைநாதசுரக்காரராக வாசித்துத் தம் நாதசுர வாழ்வைத் தொடங்கினார்.



இராசரத்தினம்பிள்ளை, டி.என்.

திருக்குவளை அருணாசலம், திருவிடைமருதூர் டி.எசு. வீராசாமிபிள்ளை, கக்காயி நடராச சுந்தரம் பிள்ளை ஆகியோர் டி.என். இராசரத்தினம் பிள்ளையுடன் இணைந்து நாதசுரம் வாசித்துள்ளனர்.

இவருக்கு ஐந்து மனைவியர் இருந்தனர். குழந்தைப்பேறில்லை. கர்ணன் என்ற பெயருள்ள குழந்தையை மகனாகவும் கிரிசா என்ற குழந்தையை மகளாகவும் ஏற்று வளர்த்தார்.

பிற்காலத்தில் தம் முக்கிய மாணவராகக் காருகுறிச்சி அருணாசலத்தைத் தேர்ந்தெடுத்து, தம் கற்பனை நுணுக்கங்களைப் பயிற்றுவித்தார். இவர் 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு சிங்கப்பூருக்கும் மலேசியாவிற்கும், இலங்கைக்கும் சென்று, தம் கலைத் திறமையைப் புலப்படுத்தினார். அமெரிக்காவிற்குச் செல்லப் பயணம் உறுதியாக்கப்பட்டது; ஆனால் போகும் முன்பு மறைந்துவிட்டார். தம் வளர்ப்புத் தந்தை நடேச பிள்ளை மறைந்த பிறகு இவர் திருவாவடுதுறை ஆதீன நாதசுர வித்துவானாக இருந்துவந்தார். இவர் 1950-ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து விலகிச் சென்னை அடையாற்றில் குடியேறினார்.

'அகில உலக நாதசுரச் சக்கரவர்த்தி' என்று பட்டம் பெற்ற இவர், 'தோடி' இராகம் வாசிப்பதில் சிறப்புற்றுவிளங்கியமையால், 'தோடிஇராசரத்தினம்' என்று புகழப் பெற்றார். இவர் காலத்தில் நாதசுரக் கலைஞர்களுக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. சட்டை அணியாது துண்டினை இடுப்பில் கட்டிக் கொண்டு நாதசுரம் வாசிப்பது மரபென்றாலும், இவர் அதனை மீறிச் சட்டையணிந்தே வாசித்தார்.

தம்புரா சுருதியோடு நாதசுரம் வாசித்த கலைஞர் இவர் ஒருவரே. பெரிய நாதசுரமான பாரி (Bhari) நாயனத்தையே வாசிப்பதற்குப் பயன்படுத்தினார்.

வாய்ப்பாட்டிலும் வீணைவாசிப்பதிலும் கைதேர்ந்தவராக விளங்கிய இவர், வெளியிடங்களில் இக்கலைகளை மேற்கொள்ளவில்லை.

இசைச் சிந்தனை மிகுதியாகவுள்ள இவர் இரவு நேரத்திலேதான் பயிற்சி செய்வார். திருவாவடுதுறையில் உள்ள தம் வீட்டு மாடியில் இவர் பயிற்சி செய்யும்பொழுது பொது மக்கள் ஆர்வத்துடன் சாலையில் நின்று கேட்பார்கள்.

'கவி காள மேகம்' என்னும் திரைப்படத்தில் கவி காள மேகமாக நடித்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் தில்லி சென்று சுதந்திர தின விழாவில் வாசித்து, நேரு அவர்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றார்.

இவர், 1954-ஆம் ஆண்டு வாதநோயால் பீடிக்கப் பட்டார். அமெரிக்க மருத்துவர்கள் இலவசமாக மருத்துவம் செய்து குணப்படுத்தினார்கள். சென்னை தாசப்பிரகாசு உணவு விடுதி உரிமையாளர்கள் இவருக்கு எல்லாவித உதவிகளும் செய்து வந்தனர்.

புகைவண்டிப் பயணத்தின்போது தம் வைரக் கடுக்கனைப் பாதுகாக்க ஒரு வேலையாளை அமர்த்தியிருந்தார்.

நாதசுவரம் வாசிக்கக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியும் கேளாமல், 1956-ஆம் ஆண்டு ஆலப்புழை சென்று, விடியற்காலை சென்னையைச் சேர்ந்தவுடன் காலை ஒன்பது மணியளவில் இதயக் கோளாறு நோயால் திடீரென உயிர் துறந்தார். ஐம்பத்து ஒன்பதாம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த டி.என். இராசரத்தினம் பிள்ளையின் இறுதி ஊர் வலம் கலைவாணர் என்.எசு. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. இரா.கு.

**இராசராசக் காடவராயன்** குறுநில மன்னன். பிற்காலப் பல்லவர்குலத் தோன்றலான இவன், 'கடல் ஆளப்பிறந்தான்', 'மோகனான காடவராயன்', 'நாலுதிக்கும் வென்றான்' முதலான பெயர்களாலும் குறிக்கப் பெற்றுளான். இவன் காலத்தில் இராசராசச் சேதிராயன் என்பான் இரண்டாம் இராசராச சோழனின் வலிமைமிக்க குறுநில மன்னனாகத் திகழ்ந்தான். வலிமை மிக்க இவ்விரு சிற்றரசர்களிடையே திருமண உறவு ஏற்படுத்தி இருவரையும் ஒன்றுபடுத்த எண்ணினான் ஆகாரசூரனான கோவலராயன் என்பான். எனவே, இராசராசக் காடவராயன் தன் மகளை இராசராசச் சேதிராயனுக்கு மணம் புரிவித்தான். மண உறவால் பிணைக்கப்பட்ட இவர்கள், இரண்டாம் இராசராசசோழனின் 16-ஆம் ஆண்டில் (கி.பி. 1162) தமக்குள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டனர். பகைவர்க்கு எதிராக இருவரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்குவதென உடன்பாடாயிற்று. இதனைத் திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவன் மகள் அம்மச்சிகுடி உய்ய வந்தாள் போலும். ம.இரா.த.

**இராசராசக் கோவலராயன், முதலாம்,** சோழருக்குட்பட்ட சிற்றரசன். இவன் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டுவந்தான். இவன் கல்வெட்டுகள் கி.பி. 1181 முதல் கி.பி. 1221 வரை கிடைத்துள்ளதால், இவன் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனலாம். இவன் பெரும்பாலும் தன் தந்தைக்குப் பேருதவி புரிந்துவந்தான்.

இவன் இரண்டாம் இராசராசச் சேதிராயன் என்னும் மலையமன்னனுக்கும் பூமாழ்விக்கும் பிறந்தவன் ஆவன்.

நீர்ப்பாசனப் பணிகள்: இவன் தன் தந்தையுடன் இணைந்து மக்கள் நலன் பேணும் பணியில் ஈடுபட்டான். விவசாயம் பெருகுதற் பொருட்டு நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும், குடிநீர் வசதியைப் பெருக்கவும் இவன் பாடுபட்டான். அத்திப்பாக்கம் என்னும் ஊரில் கி.பி. 1181-இல் குளம் ஒன்றினை அமைத்தான்; தன் தாயான பூமாழ்வியின் பெயரால் புத்தூர், பாலூர், கொல்லியூர் முதலான ஊர்களில் கால்வாய்கள் வெட்டி, நீர்ப்பாசனத்தைப் பெருக்கினான்.

அறக்கொடைகள்: இவன் கி.பி. 1200-இல் அறையணிநல்லூர் அண்ணலுக்கு நுந்தா விளக்குகள் எரிக்க 1500 குழி நிலங்களை விளக்குப் புறமாகஅளித்துள்ளான். அடுத்துத் திருக்கோவலூர் வீரட்டானமுடையார் கோயிலிலுள்ள சேதிநாயகன், நாச்சியார், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரை உலாவரச் செய்யவும், அன்றாட அமுதுபடைப்பிற்கும் விழாக்காலங்களில் வைணவர்களை உண்பிக்கவும் இவன் நிலம் அளித்துள்ளான்.

**இராசராசக் கோவலராயன், இரண்டாம்:** இவன் மூன்றாம் குலோத்துங்க சோழனது (கி.பி. 1178–1218) காலத்தில் வாழ்ந்த மலையமான் மன்னன்; சோழருக்கு உட்பட்ட சிற்றரசன். இவன் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள குகையூரைத் தலைநகரமாகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதியினை ஆண்டு வந்தான். மலையமான் நாட்டின் ஒரு பகுதியினை ஆண்டுவந்த இவன், பங்குனி மாதம் பிறந்தவன் என்பதனை, இவன் பங்குனித் திங்கள் விழாவின் பொருட்டுப் பல அறங்களைச் செய்துள்ளதால் அறியலாம்.

இவ்வேந்தன் தன் மகள் புண்ணியவாட்டி என்பாளை ஆறகளூர் இராசராச வாணகோவரையனுக்கு மணம் செய்து கொடுத்துத் தனது வலிமையைப் பெருக்கினான். புண்ணியவாட்டி ஆறகளூர் கரிவரதராசப் பெருமாள் கோயிலைக் கற்றளியாக அமைத்து, அதற்கு இராசராச விண்ணகர் எனப் பெயரிட்டாள். இவள் மலைநாட்டுத் திருப்பாலைப்பந்தல் திருநாகேசுவரமுடையார்க்கு நிலக் கொடையும் அளித்தாள். இவளுக்கும் இராசராச வாணகோவரையனுக்கும் பிறந்தவனே ஆறகளூருடைய பொன் பரப்பினனான இராசராச தேவனான மகாதேசன் ஆவான்.

இரண்டாம் இராசராசக் கோவலராயனுக்கு ஆறகளூருடையான் இராமன் பொன்பரப்பினான் என்ற விருதுப் பெயரும் இருந்தது. ம.இரா.த.

***இராசராசச் சேதிராயன், முதலாம்***

மலையமான் மன்னர்களுள் ஒருவன். இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் சிற்றரசர்களுள் ஒருவனாகத் திகழ்ந்தான். தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூருக்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில் உள்ள அரியூர்ப் பகுதியை இவன் ஆண்டுவந்தான். இவன் கிளியூர்மலையமான் பெரிய உடையான் எனவும் குறிக்கப்பட்டான்.

இச்சேதிராயன் முதலாம் குலோத்துங்க சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1076) திருக்கோவலூர் வீரட்டான முடையாருக்குத் திருக்கார்த்திகைத் திருநாளுக்கும், திருநாட் படிக்கும், சந்திக்கும், அரியூரின் நான்கெல்லைகளுக்குட்பட்ட நன்செய், புன்செய் நிலங்களின் கடமை, குடிமை உள்ளிட்ட அனைத்து ஆயங்களையும் தானமாக அளித்தான்.

இவ்வேந்தனது கால்வழியினர் பிற்காலத்தில் மலையமான் நாட்டின் ஒரு பகுதியினை இறையூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். இரண்டாம் இராசராசனின் ஆட்சிக் காலத்திலும் இராசராசச் சேதிராயன் என்பான் ஒருவன் மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். எனவே, இருவரையும்வேறுபடுத்தி அறிதற்பொருட்டு இவனை முதலாமவன் எனக் குறிக்கின்றனர்.

ம.இரா.த.

**இராசாதிராசச் சேதிராயன், இரண்டாம்** மலையமான் நாட்டு வேந்தர்களுள் பெருவலிமை படைத்தவன். பிற்பட்ட சோழர் காலத்து மலையமானான இவனது முழுப்பெயர் கிளியூர் மலையமான் பெரிய உடையான்இறையூரானானஇராசராசச்சேதிராயன். இவனுக்கு வன்னியர் நாயன், சற்றுங் கொடாதான் முதலான விருதுப்பெயர்களும் உண்டு. இவ்வேந்தன் ஐப்பசி மாதம் திருவாதிரை நாளில் பிறந்தவன்; இரண்டாம் இராசராசன் கால முதற்கொண்டு மூன்றாம் இராசராசன் கால முற்பகுதி வரையில் தொடர்ந்து 73 ஆண்டுகள் (கி.பி. 1148–1221) மலைய நாட்டினை ஆட்சிபுரிந்த பெருமைக்குரியவன்.

ஆட்சிப்பரப்பு: பெருவலி படைத்த இச்சேதிராயன் வாணகப்பாடி, செங்குன்றநாடு, மலாடு, உடைக்காட்டு நாடு முதலான பகுதிகளைக் கொண்ட பெரு நாட்டினை ஆண்டுவந்தான். இவனது தலைநகர் இறையூர் (இன்றைய எறையூர்) ஆகும். இது திருக்கோவலூர்க்குத் தெற்கே ஆசனூர்ப் பெருவழியில் ஏறத்தாழ 22 கி.மீ. தொலைவில் உள்ளது.

மண உறவும் பாதுகாப்பு உடன்பாடும்: அரசியல் திறனில் கைதேர்ந்த இவன், தன்னைப் போன்று பெருவலி படைத்து விளங்கிய பல்லவர் குலத் தோன்றலான இராசராசக் காடவராயன் என்னும் சிற்றரசனின் மகளைத் திருமணம் செய்துகொண்டு, தனது வலிமையைப் பெருக்கினான். இவன் இராசராசக் காடவராயனுடன் கி.பி. 1162-இல் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றினையும் செய்து கொண்டான்.

இவ்வேந்தனுக்கு அம்மச்சிக்குடி உய்யவந்தாள், பூமாழ்வி என்னும் இரு அரசியர் இருந்ததாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. முதலாமவள் காடவராயனின் மகளாக இருத்தல் கூடும். பூமாழ்வி என்னும் அழகி பொன்பரப்பின வாணகோவரையனின் மகள். இவ்வாணகோவரையனுடனும் இவ்வேந்தன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டு, தனது மேலாண்மையை அண்டைப் பகுதிகளில் நிலைநாட்டினான். இவன் கி.பி. 1198 ஆம் ஆண்டில் எரியப்பன் மருந்தனான மூவேந்தரையனுடனும் கி.பி. 1206-இல் இராசகெம்பீரச் சேதிராயனுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டான். இவ்வாறு பல வேந்தர்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, தனது வலிமையைப் பெருக்கிக் கொண்ட இவன், தனது பாதுகாப்பிற்காக வேளைக்காரப்

படையினரையும் அமர்த்திக் கொண்டான். இவனது வேளைக்காரப் படையினருள் 47 பேர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் பெயர்களைக் கொல்லூர், அறையணி நல்லூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுகளால் அறியலாம்.

**இறைவர்க்கு அறக்கொடைகள்:** இவ்வேந்தன் பல சிவன்கோயில்களுக்கும் திருமால் கோயில்களுக்கும் பெருமளவில் அறக்கொடைகள் அளித்துள்ளான். திருக்கோவலூர் இடைக்கழி எம்பெருமானுக்கு விளக்குகள் எரிக்க நிலக் கொடையும் திருப்பள்ளித்தாமம் அமைக்க நந்தவனமும், திருவிழாக்காலங்களில் வைணவர்களை உண்பிக்க நிலக்கொடையும் இவன் அளித்துள்ளான். திருக்கோவலூர் வீரட்டானமுடைய பரமசுவாமிக்குப் பல அறக்கட்டளைகளையும், அறையணிநல்லூர் ஒப்பொருவருமில்லா நாயனார்க்கு ஐப்பசி மாதத்தில் திருவாதிரை நாளில் விழா நடத்த நிலக்கொடையையும், ஆமூர் அகத்தீசுவரமுடையார்க்கு வழிபாடுகள் நிகழ்த்த நிலக்கொடையையும் இவன் அளித்துள்ளமை கல்வெட்டுகளால் புலனாகிறது.


பெருவலியும் பெரும்புகழும் பெற்று விளங்கிய இவ்வேந்தன், தனக்கு உதவிபுரியப் பல அரசியல் அதிகாரிகளையும் படைத்தலைவர்களையும் பெற்றிருந்தான். இவர்களுள் இராமன் பொற்குடம் கொடுத்தானான வன்னிய தேவேந்திர மலையமான் என்பான் குறிப்பிடத்தக்கவன். இவன் திருக்கோவலூர்க்கு அருகில் உள்ள நெற்குணம் என்னும் ஊர்ச் சிவன் கோயிலில் மண்டபம் ஒன்றினை எடுப்பித்துள்ளான். அதிவீரசூரமலையமான், காமன் சேதிராயன் ஆகியோர் இவ்வேந்தனது அரசியல் அதிகாரிகளாவர்.

இவ்வேந்தனுக்குப் பெரிய உடையான் இராசராசக் கோவலராயன் என்னும் மகன் இருந்தான் இவன் பூமாழ்விக்குப் பிறந்தவனாவான்.

ம. இரா.த.

**இராசராச சோழன், முதலாம் (ஆ.ஆ. 985-1014)** சோழப் பேரரசர். சோழ அரசர்களுள் தலை சிறந்தவர். இராசராசனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் எனப்படும். இவர் தந்தை சுந்தரசோழப் பராந்தகன்: தாயார் வானவன் மாதேவியார். இவர் தமையன் பெயர் ஆதித்த கரிகாலன்; தமக்கை குந்தவை. இராசராசன் 5-ஆம் வயதிலேயே தம் தந்தையை இழந்தார். தாய் வானவன் மாதேவி சுணவன் இறந்தவுடன் உடன் கட்டை ஏறினார். தமக்கை குந்தவை, பாட்டியார் செம்பியன் மாதேவியார் ஆகியோரின் பொறுப்பில் இராசராசன் வளர்ந்தார். தமையன் ஆதித்த கரிகாலன் கொலைசெய்யப்படவே, இராசராசன் கி.பி. 985-ஆம் ஆண்டு சூன் 25-ஆம் நாள் பட்டத்திற்கு வந்தார்.

வெற்றிகள். இராசராசன் இரண்டு படையெடுப்பில் பாண்டிய நாட்டையும் கேரள நாட்டையும் வென்று, அவாகளது நாட்டைக் கைப்பற்றினார். ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழரை எதிர்த்துப் பாண்டியருக்கும் கேரளருக்கும் உதவியதால், இராசராசன் ஈழத்தின் தென்பகுதிக்கு ஈழவேந்தனை ஓடச் செய்தார். ஈழத்தின் தலைநகரமாக விளங்கிய அனுராதபுரம் அழிக்கப்பட்டது. ஈழத்தின் வடபகுதி மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டு, சோழப் பேரரசின் ஒரு மண்டலமாகத் திகழத் தொடங்கியது. பொலனருவை என்ற பெயர் பெற்ற பட்டினம் சோழ மண்டலத்தின் தலைநகராக்கப் பட்டது. இவர் ஈழத்தை வென்றபின், கர்நாடக மாநிலத்தில் இருந்த கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி ஆகிய ஊர்களை கி.பி. 991-இல் வென்று சோழப் பேரரசுடன் இணைத்தார். பின்னர், வேங்கியைத் தலைநகராகக் கொண்டு கீழைச் சாளுக்கிய நாட்டை ஆண்டுவந்த சாடசோட பீமனை வென்று, தம்மிடம் அடைக்கலம் புகுந்திருந்த கீழைச் சாளுக்கிய இளவரசன் சக்திவர்மனை வேங்கி அரியணையில் அமர்த்தினார். சக்திவர்மனின் தம்பியான விமலாதித்தனுக்குத் தம் மகள் குந்தவையை மணமுடித்துக் கொடுத்து, கீழைச் சாளுக்கிய நாட்டைத் தம் மேலாண்மையின் கீழ்க் கொண்டு வந்தார். பின்னர் இவர் மேலைச் சாளுக்கிய அரசன் சத்தியாசிராயனுடன் போர் புரிந்து, சாளுக்கிய நாட்டின் தலைநகரான மானியகேடத்தைத் தாக்கி அழித்து, சோழருடைய ஆதிக்கத்தை வடமேற்கே துங்கபத்திரை வரை நிறுவினார். இதனுடன் சேர நாட்டிற்கு மேற்கே அரபிக் கடலில் காணப்படும் மாலத் தீவுகளையும் வென்று, இவர் தம் ஆட்சிக்குட்படுத்தினார். இத் தீவுகளில் இருந்த மக்கள் சோழநாட்டிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே இருந்து வந்த வாணிகத்திற்கு இடையூறு செய்திருக்கக்கூடும்: அதன் விளைவாகவே அத்தீவுகளை இராசராசன் கைப்பற்றியிருக்க வேண்டும் என்று எண்ணப்படுகிறது. இவ்வாறு பல திசைகளிலும் போர் செய்து இவர் சோழப் பேரரசை நிறுவினார். இவரது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசானது வடமேற்கே துங்கபத்திரை ஆறு வரையிலும் கிழக்கே நெல்லூர் வரையிலும் பரவியிருந்ததுடன், ஈழத்தின் வடபகுதியையும் மாலத் தீவுகளையும் உட்கொண்டதாக விளங்கியது. இவர் சோழப் பேரரசின் ஆதிக்கம் ஓங்குவதற்கு அடிகோலினார் என்று கூறலாம்.




சோழப் பேரரசு — முதலாம் இராசராசன் காலம்

ஆட்சிமுறை: இராசராசன் கி. பி. 1000-ஆம் ஆண்டு நாட்டில் நில அளவீடு செய்து நிலவருவாயைச் சீர்செய்தார். பேரரசின் ஆட்சியைவலிமைப் படுத்தியதுடன் நாட்டின் சிற்றூர்களில் உள்ளாட்சி முறையை ஏற்படுத்தினார்; படைப் பலத்தைப் பெருக்கினார். சோழர் படையில் கப்பற்படை சிறப்புமிக்க படையாக விளங்கியது. தம் மைந்தன் இராசேந்திரனைப் பட்டத்து இளவரசனாக்கி ஆட்சித்துறையில் உதவிபுரியச் செய்தார்.

சமயப்பற்று: சிவநெறி கண்ட சோழன் என்ற பட்டப் பெயர் பூண்ட இராசராசன், சிவனிடம் மிக்க பக்தி செலுத்தினார். தஞ்சையில் இராசராசேச்சுவரம் என்னும் மிகப்பெரிய கோயிலைக் கட்டினார். நாகப்

பட்டினத்தில் சூடாமணிவிகாரம் என்னும் புத்த விகாரத்தை அமைக்கச் சைலேந்திர அரசர் மாற விசய துங்க வர்மருக்கு அனுமதி அளித்ததுடன், ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச் சந்த மாகவும் அளித்தார்.

தில்லைக் கோயிலில் அடைபட்டுக் கிடந்த தேவாரப் பாடல்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளை வெளிக்கொணரக் காரணமாயிருந்தவரும், நம்பி யாண்டார் நம்பியைக்கொண்டு சைவத்திருமுறை களை வகைப்படுத்தியவரும் இராசராசனே ஆவார். இதன் காரணமாக இவர் திருமுறை கண்ட சோழன் எனப் புகழப்பட்டார். திருக்கோயில்களில் தேவாரப் பாடல்களை முறைப்படி இசைப்பதற்கும் நிவந்தங்கள் அளித்தார். சைவத்தைத் தம் சமயமாகக் கொண்டி ருந்தாலும், இவர் சமயப் பொறை உடையவராகத் திகழ்ந்தார்.

தஞ்சைப் பெரிய கோயில்: இராசராசனின் புகழுக்குக் காரணமாக விளங்கும் தஞ்சைப் பெரிய கோயில் கி. பி. 1010—இல் கட்டி முடிக்கப்பட்டது. இராசராசேச்சுவரம் என்னும் பெயருடைய இக் கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் கொண்ட நீள்சதுர (செவ்வக) வடிவத்தில் கட்டப் பட்ட கற்றளியாகும். திராவிடக் கலைப் பாணியில மைந்த இக்கோயில் இரண்டு கோபுரங்களை உடையது. முதல் வாயில் கேரளாந்தகன் திருவாயில் எனப்படும். இரண்டாம் வாயில் இராசராசன் திரு வாயில் எனப்படும். முதல் கோபுரம் 30 மீட்டர் உயர முடைய மூன்று மாடக் கோபுரமாகும். இரு கோபு ரங்களிலும் அழகுமிக்க சிற்பங்கள் உள்ளன. இக்கோயி லின் விமானம் மிக உயரமானது. கருவறையின் 32 மீட்டர் சதுரமான அடித்தளத்தில் 69 மீட்டர் உயரத்திற்கு 13 அடுக்குகள் கொண்ட விமானத்தைக் கருங்கல்லினால் கட்டியுள்ளனர். கல்வெட்டுகளி லிருந்து இக்கோயிலைக் கட்டியவர் பெயர் இராச ராசப் பெருந்தச்சன் என அறிய முடிகிறது. விமானத்தின் உச்சியில் உள்ள கலசம் 4 மீட்டர் உயரம் உடையது.இது 3083 பலம் நிறையுள்ள செம்பி னால் செய்யப்பட்டு, 2926½ கழஞ்சு பொன் அதன்மேல் பூசப்பட்டுள்ளது. கருவறையில் உள்ள இலிங்கம் மிகப் பெரியதும் ஒரே கல்லினாலானதுமாகும். இதன் உயரம் 4மீட்டர். ஆவுடையார் சுற்றளவு 18 மீட்டர். இக் கோயிலின் விமானத்தில் உள்ள சிற்பங்களும், மாடக் குழிகளில் உள்ள தெய்வங்களும் அழகு மிக்கவை. இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட சண்டிகேசுவரர் கோயிலும் அமைப்பில் பெரியதாக உள்ளது. இக் கோயிலில் 108 கரணங்களை விளக்கும் புடைப்புச் சிற்பங்களும் ஓவியங்களும் புகழ் பெற்றவை. கரணங் களுள் சில செதுக்கப்படா நிலையிலேஉள்ளன. ஓவியங் கள் அசந்தா, எல்லோரா ஓவியங்கள் போன்று புகழ் மிக்கவை. ஓவியங்களில் காணப்படும் நங்கையர் மெல் லிய ஆடை உடுத்தியுள்ளனர். ஆண்கள் இக்காலத் தைப் போன்றே வகை வகையான மேல் சட்டைகள் அணிந்துள்ளனர். ஓவியங்களில் மிகச் சிறந்தவை இராசராசனும் கருவூர்த் தேவரும், சுந்தர மூர்த்தி நாயனார் கைலாயம் செல்லல், நடராசனின் ஆனந்தத் தாண்டவம் போன்றவையாகும்.

பட்டப் பெயர்கள்: இராசராசன் பல சிறப்புப்பெயர் களைக் கொண்டிருந்தார். அவை இவர்தம் குணநலன் களை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பண்டித சோழன், நித்தியவிநோதன், இராசவித்தியாதரன் என்ற சிறப்புப் பெயர்கள் இவருக்குக் கலைகளில் இருந்த ஈடுபாட்டை விளக்குகின்றன. இராசராசன் ஒரு சிறந்த சிவபக்தன் என்பதைச் சிவபாதசேகரன் என்ற பெயர் உணர்த்துகின்றது. இவர் வெற்றியின் நினைவாக மும்முடிச்சோழன், சோழமார்த்தாண் டன், செயங்கொண்ட சோழன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், தெலிங்குகாலன் போன்றபட்டப்பெயர்களைக் கொண்டு விளங்கினார்.

இராசராசனின் குடும்பம்: இராசராசனுக்குப் பல மனைவியர் இருந்தனர். பட்டத்தரசியின் பெயர் உலகமாதேவி (தந்தி சக்திவிடங்கி). இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் மற்றொரு மனைவி யாகிய வானவன்மாதேவி என்ற திரிபுவன மகாதேவி யார் மகன். இராசராசனுக்கு மேலும் 3 மக்கள் இருந்திருக்கவேண்டும். அவர்களுள் குறிப்பிட்டத் தக்கவர் குந்தவை. இவர் விமலாதித்தியர் என்னும் கீழைச் சாளுக்கிய இளவரசருக்கு மணமுடிக்கப் பட்டார்.

சிறப்புகள்: இராசராசன் தென்னிந்திய அரசர் களுள் மிகச் சிறந்த அரசராகக் கருதப்படுகின்றார். இவரது ஆட்சித் திறன், வெற்றிகள், கலையார் வம் ஆகியன பெரிதும் போற்றப்படுவனவாகும்.

இராசராசன் சீன நாட்டிற்கு, தாம் இறக்குமுன் வாணிகத் தொடர்பு வளர்வதற்காகத் தூதுக் குழுவை அனுப்பிவைத்தார் என்பது சீன நாட்டுக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.வரலாற்றுச் செய் திகளைக் கால வரன்முறைப்படுத்தி மெய்க்கீர்த்தி களின் வாயிலாக எடுத்துரைக்கும் பழக்கத்தை முதன் முதலாகத் தொடங்கிக் கொடுத்து, சோழப்பேரரசின் வரலாற்றைப் பிற்காலத்தவர் தெரிந்து கொள்ளச் செய்த பெருமையும் இவரையே சாரும். தமிழக அரசு இராசராசனின் ஆயிரமாம் ஆண்டைத் தஞ்சை யில் 1984-இல் கொண்டாடியது. அப்பொழுது பார தப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவ் விழாவைத் தொடங்கிவைத்துச் சிறப்புறச் செய்தார்.

சி. ஈ.இரா.

துணை நூல்கள்:

Sastri, K.A.N, The Colas, University of Madras, 1984.

Bharatiya Vidya Bhavan's History and Culture of the Indian People, Vol. V, The Struggle for Empire, Bombay, 1979.

இராசராசசோழன், இரண்டாம் (ஆ.ஆ.1146-1163): இரண்டாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1150-இல் இறந்த பிறகு, அவர் மகன் இரண்டாம் இராசராச சோழன் சோழப் பேரரசின் அரசராகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் முடிசூட்டப் பெற்றார். இவர் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து கொண்டு அரசாளத் தொடங்கினார். இவருடைய மெய்க்கீர்த்திகள் 'பூமருவிய திருமாதும்' எனவும், 'பூமருவிய பொழிலேழும்' எனவும் தொடங்குகின்றன. இவை இரண்டும் இவர் ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவற்றுள் 'பூமருவிய பொழிலேழும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகளில் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படவில்லை. ஆயினும், இவற்றால் இவரது ஆட்சியின் சிறப்பு, தமிழ்த் தொண்டு, மனைவிமார்களின் பெயர்கள் ஆகியவற்றை அறியலாம். 'கடல் சூழ்ந்த பார் மாதரும்' எனவும், 'புயல் வாய்த்து வளம் பெருக' எனவும் தொடங்கும் வேறு இரண்டு மெய்க்கீர்த்திகளும் இவர் கல்வெட்டுகளில் மிக அருகிக் காணப்படுகின்றன.

இராசராசனின் கல்வெட்டுகள் வடக்கேயுள்ள கோதாவரி, கிருட்டிணா, குண்டூர், நெல்லூர் மாவட்டங்களிலும், மேற்கேயுள்ள சேலம், கோலார் மாவட்டங்களிலும் காணப்படுவதால் வேங்கி நாடு, கொங்கு நாடு, கங்க நாடு ஆகியவை இவர் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பது திண்ணம். இவர் தந்தை குலோத்துங்க சோழனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த நாடுகள் எல்லாம் சோழப் பேரரசிலிருந்து விலகாமல் இவரது ஆட்சியின் கீழும் அமைதியாக இருந்து வந்தன எனலாம். இவர் காலத்தில் பெரும் போர்கள் நிகழாமையால் மக்கள் எல்லோரும் அல்லலின்றி இனிது வாழ்ந்து வந்தனர்.

இவ்வேந்தர் தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார். இவரை 'முத்தமிழுக்குத் தலைவன்' என்றும் 'இராசராச பண்டிதன்' என்றும் இவரது மெய்க்கீர்த்தி கூறுவதால் இவர் புலமையை நன்குணரலாம். இத்தகைய தமிழ்ப் புலமையை ஆசிரியர் ஒட்டக்கூத்தர்பால் கல்வி பயின்றே இவ்வரசர் பெற்றிருத்தல் வேண்டும். இராசராசன் வடமொழிப் புலமையைக் கேசவசுவாமி என்பவரிடமிருந்து பெற்றார். ஒட்டக்கூத்தர் இராசராசனின் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர்தம் தந்தை தில்லையம்பலமுன்றிலிலிருந்த திருமாலை அலைகடலில் கிடத்தியமை பற்றி வைணவர்கள் மனம் புண்பட்டிருத்தலையுணர்ந்து, தம் ஆட்சியில் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்கள் உளங்குளிரச் செய்தார். இதுபற்றி, 'விழுந்த அரிசமயத்தையும் மீளவெடுத்தனன்' என்று இவரது மெய்க்கீர்த்திகூறும். எனவே, இவர் சிறந்த சைவராயினும் பிற சமயங்களிடத்தில் வெறுப்பின்றிச் சமயப் பொறையுடையவராய்த் திகழ்ந்தார் என்பது தெள்ளிது.

இவ்வேந்தரின் ஆட்சிக் காலத்தில் மலையமலைக் குப்பக்கத்தில்காவிரியாறுஅடைப்புண்டு, கிழக்கு நோக்கித் தண்ணீர் வாராமல் தடைப்படவே, சோணாட்டு வளம் சுருங்குவதாயிற்று. இவர் அம்மலையை நடுவில் வெட்டுவித்துக் காவிரியாற்றிற்கு வழிகண்டு, சோழ நாட்டிற்கு என்றும் தண்ணீர் வந்து கொண்டிருக்குமாறு செய்தார்.

இராசராசனின் ஆட்சியின் முற்பகுதியில் கங்கை கொண்ட சோழபுரமே தலைநகராயிருந்தது. இங்கிருந்து இராசராசபுரத்திற்குத் (இன்றையதாராசுரம்) தலைநகரை மாற்றினார்.இந்நகரின் வடகீழ்ப் பகுதியில் இராசராசேச்சுரம் என்ற சிவாலயம் ஒன்றை இம்மன்னர் எடுப்பித்து, அதில் இராசராசேச்சுரமுடையாரை எழுந்தருளுவித்து வழிபாடு புரிந்தார். கண்டோர் கண்களைப் பிணிக்குஞ் சிற்பத்திறம் உடையது இக்கோயில். கோயிலிலுள்ள கருவறையின் புறச்சுவரில் சிவனடியார் அறுபத்து மூவருடைய வரலாறுகளைக் கூறும் புடைப்புச் சிற்பங்கள் கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன. திருச்சுற்று மாளிகையின் வடபுறத்திலுள்ள சைவாசாரியார் நூற்றெண்மர் சிற்பங்களும் இக்கோயிலிலுள்ள இராச கம்பீரன் திருமண்டபமும் புகழ் பெற்றவை. (காண்க – தாராசுரம்).

இவ்வரசரின் அவைக்களப் புலவராகவிளங்கியவர் ஒட்டக்கூத்தர். அவர் இராசராச சோழனுலா என்ற நூலொன்று இவ்வரசன் பெயரில் எழுதியுள்ளார். இவ்வரசரின் பெருமைகளை இந்நூலில் விவரித்துள்ளார். இரண்டாம் இராசராசரின் சிறப்புப் பெயர்கள் சோழேந்திரசிங்கன், தெய்வப் பெருமாள், கண்டன், சொக்கப் பெருமாள், இராசகம்பீரன் என்பன. தாராசுரம் கோயிலில் உள்ள மண்டபம் ஒன்று இராசகம்பீரன் திருமண்டபம் என்று சொல்லப்படுகிறது.

கி.பி.1163-ஆம் ஆண்டின் இறுதியில் இவர் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்ற நிலையில், தான் அந்நோயினின்று விடுபட்டுப் பிழைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். அந்நாளில் இவர் மக்

கள் இருவரும் ஈராண்டும் ஓராண்டும் நிரம்பிய இளங்குழந்தைகளாக இருந்தனர். ஆகவே, அவர்கள் முடிசூட்டப் பெறுவதற்குத் தக்க வயதினராக இல்லை. அதுபற்றி இராசராசன் பெருங்கவலை கொண்டு, தம் தாயத்தினருள் ஒருவனாகிய நெறியுடைப் பெருமாளின் புதல்வன் எதிரிலிப் பெருமாளைக் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வருவித்து, அவ்வரச குமாரனுக்கு இளவரசுப்பட்டங்கட்டிவிட்டு, அந்நாளிலேயே இறந்து போனார். எதிரிலிப் பெருமாள் கி.பி.1166-இல் தான் இராசாதிராசன் என்னும் பெயருடன் முறைப்படி அரசராக முடிசூட்டிக் கொண்டார். இரா.இரா.

துணை நூல்கள்:

Sastri, K.A.N., The Cholas, University of Madras, 1984.

Majumdar, R.C. (Ed.), The Struggle for Empire, History and Culture of the Indian People, Bharatiya Vidya Bhavan, Bombay, 1979.

**இராசராச சோழன், மூன்றாம்**(கி.பி. 1216-1256): மூன்றாங்குலோத்துங்க சோழன் கி. பி. 1218-ஆம் ஆண்டில் இறந்தார். அதற்கு இரண்டாண்டுகட்கு முன் கி.பி. 1216-இல் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டிருந்த மூன்றாம் இராசராச சோழன் சோழப் பேரரசிற்கு அரசராக முடிசூட்டப்பெற்றார்.

சோழ மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்ட இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவர் இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசாண்டவர் ஆவார்.

இவ்வேந்தரின் கல்வெட்டுகளில் இரு மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ‘சீர் மன்னி இருநான்கு திசை விளங்கும்’ என்று தொடங்குகிறது. மற்றொன்று ‘சீர்மன்னு மலர்மகளும் சிறந்த தனி நிலைச் செல்வியும்’ என்னும் தொடக்கத்தையுடையது.

இவர் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு பல்வகைத் துன்பங்களுக்குள்ளாகித் தன் சீருஞ்சிறப்பும் இழந்தது. இவர்தம் முன்னோர்கள் தம் பேராற்றலால் உயர்நிலைக்குக் கொணர்ந்த சோழப் பேரரசை அதன் நிலை குன்றாதவாறு தாங்கிப் புரத்தற்குரிய ஆண்மையும் வீரமும் இவர்பால் இல்லாமற்போயினமையே அதன் வீழ்ச்சிக்கு முதற் காரணமாகும். சோழப் பேரரசிற்கு வடமேற்கே ஒய்சளரும், தெற்கே பாண்டியரும் வல்லரசுகளாகித் தம் பேரரசை நிறுவுவதற்குப் பெரிதும் முயன்று அம் முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்று வந்தனர். எனினும், அவ்விரு பேரரசர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு நின்றமையால், நடுவிலிருந்த சோழப் பேரரசு அவர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டு, அவர்கள் அரசுக்குள் ஒடுங்கி மறைந்தொழியாமல் ஒருவாறு நிலைபெற்றிருந்தது எனலாம். சோழப் பேரரசிற்கு வடகிழக்கே நெல்லூருக்கு அருகில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த தெலுங்குச் சோழர்கள் தமக்கு வடக்கேயிருந்த காகதீயரை உற்ற நண்பராகவும் கொண்டு வலிமை எய்தி வந்தனர். இந்நிலையில், மகத நாட்டு வாணகோவரையர், திருமுனைப்பாடி நாட்டுக் காடவராயர் முதலான குறுநில மன்னர்கள் இராசராசனோடு பகைமை கொண்டு, உள்நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டு பண்ணித் தாமே தனியரசு நடத்த முயன்றனர்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழப் பேரரசின் மீது இரண்டு முறை படையெடுத்துச் சோழப் பேரரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இக்காலத்தில் போசள மன்னன் உதவி புரிந்தான் என்றும், காவேரியாற்றங்கரையிலுள்ள மகேந்திர மங்கலத்தில் வீரநரசிம்மனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் பெரும்போர் நிகழ்ந்ததென்றும், வெற்றியெய்திய போசள மன்னனுக்குப்பாண்டியன் பணிந்து கப்பஞ் செலுத்தினார் என்றும் கத்திய கர்ணாமிர்தம் என்னும் நூல் கூறுகிறது.

இவ்வேந்தர் கல்வெட்டுகள் தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு, சேலம், சித்தூர், கடப்பை, நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் காணப்படுவதால், இவர் தந்தையின் ஆட்சிக்குட்பட்டுச் சோழப் பேரரசிலிருந்த நாடுகளுள் பாண்டிய நாடு ஒன்று நீங்கிய பிற நாடுகள் எல்லாம் இவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனலாம்.

இவர் தந்தையின் ஆட்சிக்காலம் போலவே இவரது காலத்திலும் சைவசமயம் உயர்நிலையில் இருந்தது என்பது, இவர் காலத்துக் கல்வெட்டுகள் எல்லாச் சிவன் கோயில்களிலும் மிகுதியாக உள்ளமையால் நன்குணரக் கிடக்கின்றது. வைணவம், சமணம் முதலான சமயங்களையும் மூன்றாம் இராசராசன் முன்னோர்களைப் போல் ஆதரித்துள்ளார்.

இவரது ஆட்சியில் 41-ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர் கல்வெட்டுகள் கிடைக்காமையால், இராசராசன் கி.பி. 1256-இல் இறந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். இவர் தாம் இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரே கி.பி. 1246-இல் தம் புதல்வன் மூன்றாம் இராசேந்திரனுக்கு இளவரசுப்பட்

டம் கட்டி, அது முதல் அவ்விளவரசனே நாட்டை ஆண்டுவருமாறு செய்து விட்டார். இரா. இரா.

துணை நூல்கள்:

**Sastri**, K. A. N., The Cholas, University of Madras, Madras, 1985.

**Majumdar**, R.C. & Others, The Struggle for Empire, History and Culture of the Indian people Vol. V, Bharatiya Vidya Bhavan, Bombay, 1979.

***இராசராச சோழனுலா*** இரண்டாம் இராசராசன் மீது ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட ஓர் உலா நூலாகும். இவ்வுலா 391 கண்ணிகளையும் இறுதியில் 'அன்று தொழுத வரிவை' எனத் தொடங்கும் வெண்பாவினையும் கொண்டது.

இவ்வுலா 'புயல்' என்னும் மங்கலச் சொல்லை முதற்சீராகக் கொண்டு தொடங்குகிறது. உலகத் தோற்ற முதல் அதனைக்காத்த பல்வேறு வேந்தர் சிறப்பும், சோழ மன்னர்களின் வழிமுறையும், அவர்கள் செய்த போரும், அடைந்த வெற்றியும், அளித்த கொடை முதலியவற்றால் பெற்ற பெரும் புகழும் வரலாற்றுச் சான்றுகளுடன் இவ்வுலாவில் விளங்கப் பட்டுள்ளன. மன்னன் தன்தேவியுடன் வைகறையில் துயிலெழுந்து, முரசங்கள் முழங்கக் காவிரியில் நீராடி, மேலைக் குரவர்க்கும் விண்ணவர்க்கும் வேதியர்க்கும் செயக்கடவ காலைக் கடன்களைச் செய்து முடித்து, வழிபாடுகள் செய்து, தில்லைக் கூத்தனைச் சிந்தித்து உலா வருதற்பொருட்டு வேழ மேற் கொண்டமை நன்கு கூறப்பட்டுள்ளது. மன்னன் உலாவருஞ் சிறப்பினைக் கண்டு எல்லையிலா மகிழ்ச்சி கொண்ட மெல்லியலாரும் கண்டோரும் உவகை மிகுதியாற் கூறும் பாராட்டுரைகளும், பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக உள்ள மாதர் மால் கொள்ள மன்னன் உலாப் போந்த சிறப்பும் நிரல் படக் கூறப்பட்டுள்ளன.

ஒட்டக்கூத்தர் பாடிய பிற உலாக்களினும் இராசராச சோழனுலா தனிச்சிறப்பினதாகும். இவர் இராசராசன் மீது இவ்வுலா நூலை இயற்றி அரங்கேற்றிய போது, மன்னன் நூலின் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசில் வழங்கி இதனை ஏற்றுக் கொண்டான் என்று 'சங்கர ராசேந்திர சோழனுலா'வும், 'தமிழ்விடு தூது'வும் பாராட்டிக் கூறுதல் இதற்குத் தக்க சான்றாகும்.

இவ்வுலா நூல் இராசராசனின் வரலாற்றுக் குறிப்புகளையும் அரும்பண்புகளையும் விரித்துரைக்கிறது. இம்மன்னன் கருநிறத்தினன். இவன் மனைவியருள் புவன முழுதுடையாள் என்பாளே இவனுடைய பட்டத்துத் தேவியாக இருந்தனள் என்பதனைத் 'தவன குலதிலகன் தன்பெருந்தேவி புவன முழுதுடைய பூவை' (39) என்னும் உலாத்தொடர் தெரிவிக்கிறது. வரராசன், கண்டன், சனநாதன் என்பன இம்மன்னனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள்.

இராசராசன் சைவ சமயப் பற்றும் தில்லைக் கூத்தப் பெருமானிடம் எல்லையற்ற அன்பும் உடையவன். சிவபெருமான் சிவாகமத்திற் கூறியபடி திருநீறு புனைந்து, 'தொல்லைத் திருமரபிற் கெல்லாம் தொழுகுலமாம் தில்லைத் திருநடனஞ் சிந்தித்து' உலாப் புறப்பட்டான் என்னும் உலா மொழிகளால் மேற்கண்ட கூற்று விளக்கம் பெறுகிறது. இராசராசன் வந்த உலாக் காட்சியில் அம்மன்னன், 'ஓவாது செய்ய தமிழ் முழங்கத் தெய்வப் பொதியிலாய்க்' காணப்பட்டான் என்னும் உலாக்கூற்று அவன் தமிழ் மொழி மீது கொண்டிருந்த ஆராக் காதலைப் புலப்படுத்தும்.

இராசராசன் பாசறையையே பள்ளியறையாகக் கொண்டான். 'அயிற்படை வீரன்' எனச் சிறப்பிக்கப் படுவதால், முருகனைப் போன்ற இவனுடைய சினமிகு போர்மறம் அறியப்படுகிறது. பார்மடந்தை அவன் கைத்தலத்தும், போர்மடந்தை அவன் திருத் தோள்களிலும், திருமகள் அவன் விழிகளிலும், கலைமகள் அவன் செவிகளிலும் வாழ்ந்தனர் என்பதால் இராசராசன் வீரம், செல்வம், கல்வி ஆகிய முத்திறத்தானும் சிறந்திருந்தான் என்பதை அறியலாம். 'வேந்தர், பணியும் தடமகுடம் பன்னூறு கோடி, அணியுந்திருத்தாள் அபயன்' (352)என்று இம்மன்னன் பாராட்டப்படுவதால் பகையரசர் பலரை வென்றடக்கிய இவன்றன் ஆட்சிச் சிறப்பும், விரிந்து பரந்த ஆட்சிப் பரப்பும் புலனாகின்றன. இவன் பட்டத்து யானை 'தமிழ் வேந்தர் பாடும் பரணிபுனைந்த பகடு' என்று சிறப்பிக்கப்படுகிறது. இவ்வுலாவில் இவன் பட்டத்து யானை பெறும் சிறப்புகள் யாவும் இராசராசன் தன் அரச வாழ்வில் பெற்ற சிறப்புகளாகும். இம்மன்னன் ஞாலத்திறைவன்; எண்ணற்கரிய பெரியோன்; ஈரேழ் உலகுடையான் என்று பெருமை துலங்கச் சிறப்பிக்கப்படுகிறான்.

ஒட்டக்கூத்தர் இவ்வுலாத் தலைவனைத் திருமாலாகக் கருதிப் பாடுவதால் திருமால், கண்ணன் பற்றிய புராண வரலாற்றுக் குறிப்புகளும், இராமாயணக் கருத்துகள் சிலவும் இந்நூலுள் இடம் பெறுகின்றன. இரண்டாங் குலோத்துங்கன் தில்லையிற் செய்த திருப்பணிகள் (30-33) இந்நூலுள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. திருவெம்பாவையும் (120) கச்சிக் கற்றளியும் (262) இடம் பெறுவது சிறப்புடையதாகும். கொப்பத்துப் பரணி, கூடல்சங்கமத்துப் பரணி, கலிங்கப்பரணி ஆகிய மறைந்து போன மூன்று பரணி

நூல்களைக் குறிப்பிடுவது, இவ்வுலா தமிழ் இலக்கிய வரலாற்றுக்குச் செய்யும் பேருதவியாகும். இரா.செ.

**இராசராச மலையகுலராயன்** மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு (கி.பி. 1178-1218) உட்பட்டு மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த மலையமான் சிற்றரசன். எலவானாசூர் என்று இக்காலத்தில் சொல்லப்பெறும் இறையானரையூர்ப் பகுதியை இவன் ஆண்டுவந்தான். எலவானாசூர் தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூருக்குத் தெற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வேந்தனைப் பற்றிய கல்வெட்டுகள் கி.பி. 1184 முதல் 1191 முடிய கிடைத்துள்ளதால், இவன் குறைந்தது ஏழு ஆண்டுகளாவது ஆண்டிருக்கலாம்.

இவனுக்குச் சோழங்க தேவன், சூரிய தேவன், எதிரிகள் நாயகன், சூரியன் நீரேற்றான், சூரியன் நீரேற்ற பெருமாள் முதலான சிறப்புப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

இவ்வேந்தன் இராசராச தேவன் பொன் பரப்பினான் ஆன குலோத்துங்க சோழ வாண கோவரையனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினை, மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1191) செய்துகொண்டான். இதன் விளைவாக இராசராச மலையகுலராயன் தனது அரசியல் செல்வாக்கினைப் பெருக்கிக் கொண்டான். இவன் தனக்கெனத் தனித்ததோர் வேளைக்காரப் படையினையும் தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்தான். எலவானாசூர்க் கல்வெட்டு இவ்வேளைக்காரப் படையின் ஒருசில உறுப்பினரைக் குறிப்பிடுகிறது. இவர்களுள் தேவப்பெருமாள் என்ற பெண் ஒருத்தியும் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.

அறக் கொடைகள்: இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இவ்வேந்தன் சைவ, வைணவக் கோயில்களுக்குப் பலவிதமான நிவந்தங்களை விட்டுள்ளான்; மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1184) இறையானரையூர் ஊர்பாகங் கொண்டருளிய நாயனார்க்கும், அவ்வூரிலுள்ள நடுவில் திருமுற்றத்தாழ்வார்க்கும், திருச்சக்கரத்தாழ்வார்க்கும், ஓகையார்க்கும் புத்தூர் முதலான ஊர்களை இறையிலி தேவதானமாக அளித்தான். சித்தலிங்க மடம் திருப்புலிப்பகவ நாயனார்க்கும், திருப்பாலைப் பந்தல் திருநாகேசுவரமுடையாருக்கும், திருக்கோவலூர் வீரட்டானமுடையார்க்கும், திருவெண்ணெய் நல்லூர் ஆட்கொண்டருளிய தேவர்க்கும் நிலக்கொடையும் பசுக்கொடையும் செய்துள்ளமை இவனது சமயப் பொதுமைக் கொள்கையை எடுத்துக்காட்டுகிறது.

இறையானரையூர் ஊர்பாகங்கொண்டாரின் இராசகோபுரத்துக்கு முன்பு திருமாளிகை ஒன்றினை இவ்வேந்தன் எடுத்துள்ளான்.

**இராசராச விசயம்**: முதலாம் இராசராச சோழனின் (கி.பி 985-1014) ஆட்சிக்காலத்தில் வழக்கில் இருந்த நாடகங்களுள் இராசராச விசயம் தலைமை சான்றது. இச்சோழ வேந்தனின் அவைக்களப் புலவரான சுவர்ணன் நாராயண பட்டாதித்தன் என்பான் இந்நாடகத்தை வடமொழியில் இயற்றினான். வடமொழிப் புலவனான இவன் இராசராச சோழனின் இளமைக்காலம், வீரவரலாறு ஆகியவற்றை இந்நாடகத்தில் குறிப்பிட்டுள்ளான். இந்நாடகம் திருவிழாக்காலங்களில் நடிக்கப்பட்டது இந்நாடக நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

**இராசராசேச்சுரம்** என்பது தஞ்சையிலுள்ள பெரிய கோயிலைக் குறிக்கும் பெயராகும். சோழ மன்னர்கள் தமிழ்நாட்டில் பல கற்கோயில்களை எடுப்பித்தனர். அவற்றுள் தலைசிறந்து விளங்குவது முதல் இராசராசனால் கட்டப்பெற்ற 'இராசரர்சேச்சுரம்' எனப்படும் இப்பெரிய கோயிலே ஆகும். இக்கோயில் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் இராசராசனால் எடுப்பிக்கப் பெற்றதென்பதையும், இதற்கு அம்மன்னன் இட்ட பெயரே இராசராசேச்சுரம் என்பதையும் இதன் கண்ணுள்ள கல்வெட்டொன்று அறிவிக்கிறது.

இக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையதாகும். கருவறையின் மேல் நான்கு முகப்புக் கூம்பகமாக 13 அடுக்குகளுடன் எழுப்பப் பட்டுள்ள விமானம் 216 அடி உயரம் உடையது. இவ்விமானம்'தட்சிணமேரு' எனப்படும். விமானத்தின் உச்சித் தளக்கல் 80 கண்டி (Tonnes) நிறையுடையது என்பர்.

கருவறையுள் மிகப் பெரிய இலிங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ள திருமேனியினை இராசராசேச்சுரமுடைய பரமசுவாமி, இராசராசேச்சுரமுடையார், தக்கணமேரு விடங்கர் என்றெலாம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கருவூர்த் தேவர் என்னும் சைவ முனிவர் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்து நிறுத்திப் பந்தனம் செய்வித்தார் என்று கருவூர்ப் புராணம் கூறுகிறது. இக் கருவூர்த் தேவர் இராசராசேச்சுரத்தின் மீது பதிகம்பாடியுள்ளார். அப்பதிகம் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

விமானத்தின் உச்சியில் நிறுத்தப்பட்டுள்ள கலசம் 3083 பலம் நிறையுடைய செம்பினால் ஆக்கப் பெற்று, $2926\frac{1}{2}$ கழஞ்சு பொற்றகட்டினால் போர்த்தப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு மூன்று திருவாயில்



இராசராசேச்சுரம்

கள் உள்ளன. அவை முறையே கேரளாந்தகன் திருவாயில், இராசராசன் திருவாயில், திருஅணுக்கன் திருவாயில் என்னும் பெயர்களுடன் விளங்குவதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இராசராசேச்சுரத்தில் கருவறை முகவாயிலைச் சார்ந்த பக்க வாயில்கள் கருவறைக்கு அணுக்கமாக இரு புறமும் உள்ளன. தென்புற வாயில் 'சீ விக்கிரமன் திருவாயில்' என்றும் வடபுற வாயில் 'அட்ட மங்கல வாயில்' என்றும் பெயர் பெறும்.

உட்கோயில் இறையகம், முகமண்டபம், பெரிய மண்டபம், தாபன மண்டபம், நடன மண்டபம், வாத்திய மண்டபம் என்னும் ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. கோயிலிலுள்ள ஏழுவாயில்களிலும் 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள 14 வாயிற் காவலர் சிலைகள் பெருமிதத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் திருமதிலுடன் உட்புறம் தொடரும் திருச்சுற்று மாளிகையினைக் கட்டியவன் சேனாதிபதி கிருட்டிணன் இராமனான மும்முடிச் சோழப் பிரமராயன் ஆவான். திருச்சுற்றாலையில் எட்டுத் திக்கிலும் சூரிய'ன் முதலான திக்குப்பாலர்கள் எண்மர்க்கும் சிறிய விமானத்துடன் கூடிய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை தனிச் சிறப்பாகும். திருச்சுற்றிடத்தின் மேற்குப் பகுதியில் மந்தாரை மரத்துடன் உள்ள மேடையைச் சார்ந்து கருவூர்த் தேவரின் சமாதிக் கோயில் உள்ளது.

கோயில் திருமுற்றத்தில் உள்ள பெரிய அழகிய நந்தி ஒரே கல்லிற் செய்யப்பட்டதாகும். இதன் உயரம் 12 அடி; நீளம் $19\frac{1}{2}$ அடி: அகலம் $8\frac{1}{4}$ அடி.

இராசராசேச்சுரம் உடைய பரம சுவாமியுடன், இராசராசன் எழுந்தருளுவித்த அம்மன் திருமேனி உமா பரமேசுவரியார் என்பதை வடபுறத் திருச்சுவரிலுள்ள கல்வெட்டொன்று அறிவிக்கிறது. இப்பொழுது உள்ள அம்மன் கோயிலும் நந்தி மண்டபமும் நாயக்கர் காலத்தில் கட்டப் பெற்றவை. கோயிலைச் சூழ்ந்துள்ள அகழுடன் கூடிய கோட்டை

கொத்தளங்கள் சேவப்ப நாயக்கரால் கட்டப்பெற்றவையென்று அறியப் பெறுகின்றன.

இராசராசனின் ஆட்சியில் பொய்கை நாட்டின் தலைவனாக இருந்த ஆதித்தன் சூரியனாகிய தென்னவன் மூவேந்த வேளான் என்பவன், கோயிலின் வடகிழக்குத் திருமாளிகையிடத்தில் தேவார மூவர்க்கும் படிமங்கள் செய்தமைத்து நிவந்தங்களும் அளித்துள்ளான். திருச்சுற்று மாளிகையின் வடகிழக்குப் பகுதியில் இராசராசனால் நிறுவப்பெற்ற நாக தேவர் திருமேனிகள் உள்ளன.

இப்பெருங்கோயில் மாடக்கோயில் என்பதற்கேற்ற இலக்கணத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் இராசராசனால் கி.பி. 1005-இல் தொடங்கப்பட்டு, நான்கு ஆண்டுகளில் திருப்பணி நிறைவு பெற்றதென்பதைச் சீ விமானத்துச் செம்பின் தூபித் தறியில் வைக்கக் கொடுத்த கலசத்தினைப் பற்றிக் கூறும் கல்வெட்டால் அறிய முடிகிறது.

இராசராசன் சேர, பாண்டியரை வென்று கைப்பற்றிய பண்டாரங்களைக் கொண்டு, பொற்குவியல்களையும் இரத்தினங்களையும் திருமேனிகட்குப் பொன்னணிகளாகவும் இரத்தினக்கலன்களாகவும் வழிபாட்டுக்குரிய பொருள்களாகவும் செய்தளித்துள்ளமையினைக் கோயிலிலுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

கருவறையைச் சூழ்ந்துள்ள திருச்சுற்றுச் சுவர்களில் சோழர் கால ஓவியங்களும் நாயக்கர் கால ஓவியங்களும் உள்ளன. விமானத்தின் முதல் தளத்தில் அமைந்த சுற்றுச் சுவரில் நடனக் கலைக்கமைந்த சிற்பங்கள் அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன.

கோயில் கல்வெட்டுச் செய்திகள் இராசராசன் கோயிலில் திருப்பதிகம் நாள்தோறும் பாட 48 பிடாரர்களையும் (ஓதுவார்கள்) கொட்டிமத்தளம், உடுக்கை வாசிப்போர் இருவரையும் நியமித்து நிவந்தம் வழங்கியுள்ளமையினையும், ஆடல் பாடல் கோயில் பணிகள் ஆகியவற்றை நிகழ்த்த 400 தளிச்சேரிப் பெண்டுகளைச் சோழ நாட்டில் பிற கோயில்களிலிருந்து நியமித்து, அவர்கட்கு நிலம் வீடு நிவந்தம் செய்துள்ளமையினையும், மெய்காவலர், பண்டாரிகள் ஆகிய கோயில் பணியாளர் பலரை நியமித்து அவர்களுக்கு நிவந்தங்கள் வழங்கியுள்ளமையினையும் அறிவிக்கின்றன.

தஞ்சை இராசராசேச்சரம் முதல் இராசராசனின் ஆட்சிக்கும் புகழுக்கும் சிவ பக்திக்கும் அமைந்த சின்னமாகவும், சோழர் காலக் கோயில் கட்டடக் கலையுடன் நுண்கலைகளின் வளர்ச்சியினைக் காட்ட அமைந்த பெட்டகமாகவும் விளங்குகிறது. சி.கோ.


**இராசராசேசுவர நாடகம்** முதலாம் இராசராசசோழனின் காலத்தில் (கி.பி.985 1014) இயற்றப்பட்டது. இது இராசராசனின் பிறப்பு, இளமைக் காலம், வீரம், தியாகம் முதலானவற்றையும், அவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்த வரலாற்றையும் பற்றிய வரலாற்று முதன்மை கொண்ட நாடகநூல். திருவிழாக் காலங்களிலும் மற்றச் சிறப்பு நாட்களிலும் இந்நாடகம் தஞ்சையில் சாந்திக் கூத்தர்களால் நடிக்கப்பட்டது. முதலாம் இராசேந்திரனது ஆட்சிக்காலத்திலும் இந்நாடகம் நடிக்கப்பட்டது. இதற்காக இராசேந்திரன் நிவந்தங்கள் விட்டுள்ளான். இரண்டாம் இராசேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1051-1063) வைகாசித் திங்களில் நடைபெற்ற பெரிய திருவிழாவின்போது, தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவர நாடகம் நடித்துக் காட்டுவதற்குச் சாந்திக் கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றன் ஆன விசயராசேந்திர ஆசாரியனுக்கும் அவன் கால்வழியினருக்கும் 120 கல நெல் ஆண்டுதோறும் ஊதியமாக அளிக்க நிவந்தம் அளிக்கப்பட்டது. இதனை இவ்வேந்தனே அளித்துள்ளான் என்பதனை இரண்டாம் இராசேந்திரனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலறியலாம்.

இராசராசேசுவர நாடகத்தில் ஆசியன் (ஹாஸ்யன்) விக்கிரமாதித்தன் அச்சனான இராசராச நாடகப் பிரியன் என்பான் முக்கியப் பங்கேற்று நடித்தான் என்பதனை இவனது பெயரே உணர்த்தும்.

**இராசன், சர்.பி.டி.** (கி.பி.1892-1974): பொன்னம்பல தியாகராசன் என்ற பி.டி. இராசன் மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம் என்னும் ஊரில் கி.பி. 1892-இல் பிறந்தார். தந்தையார் தியாகராச பொன்னம்பல முதலியார்; தாயார் மீனாம்பாள் அம்மையார். இராசன் உடன்பிறந்த பெண்கள் இருவர். இவர் மனைவி கற்பகாம்பாள். இவருக்கு இரண்டு ஆண் மக்கள்; மூன்று பெண் மக்கள்.

இராசன் மதுரைச்சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தபின் மேற்படிப்பிற்கு 1909-இல் இங்கிலாந்து சென்றார்; அங்குக் கேம்பிரிட்சு இலீசு பள்ளியில் (Leys School)மூன்றாண்டுகள் படித்துப் பின்னர் 1912-இல ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்; பட்டப்பேரறிஞர் (Bar-at-Law) என்ற பட்டம் பெற்றார்.

இவ்வாறு இளம்வயதில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து ஆங்கில நாட்டில் வாழ்ந்ததன் பயனாய்ப் பெற்ற அந்நாட்டுப் பழக்கவழக்கங்களை இராசனால் உடனடியாக விடமுடியவில்லை. பல ஆண்டுகள் உறுதியுடன் முயன்று தமிழ்நாட்டுப்



இராசன், சர்.பி.டி.

பழக்க வழக்கங்களைத் தமதாக்கிக் கொண்டதும் அன்றிச் சிறந்த சமயப் பற்றாளராகவும் விளங்கினார்.

இராசன் இங்கிலாந்திலிருந்து திரும்பிய மறு ஆண்டே (1920) சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. இவர் நீதிக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழ்நாடும் ஆந்திரப்பிரதேசமும் இணைந்த சென்னை மாகாணத்தில், மிண்டோ மார்லி சீர்திருத்தப்படி நீதிக்கட்சி முதல் முதலாக 1920-இல் அமைச்சரவை அமைத்தது. அப்போது சட்டமன்ற நீதிக்கட்சிக் கொறடாவாக (Whip)இராசன் விளங்கினார். அடுத்து 1926, 1930 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் இராசனே நீதிக் கட்சியின் சார்பாக வெற்றி பெற்றுச் சட்ட சபைக்குச் சென்றார். பி.முனிசாமி நாயுடு தலைமையில் 1930-இல் அமைந்த அமைச்சரவையில் இராசன் அமைச்சராகப் பதவி வகித்தார். அன்று முதல் 1937வரை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து இவர் அமைச்சராக இருந்தார். பின்னர் 1952 பொதுத் தேர்தலிலும் நீதிக்கட்சியின் சார்பில் தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்வு பெற்றார்.

இரண்டாம் உலகப்போர் 1939-இல் தொடங்கியது. அப்போது ஆங்கில அரசுக்கு உதவியாக இவர் ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டி இவருக்குச் 'சர்' (Sir) பட்டம் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ் மக்கள் இவருக்குத் 'தமிழவேள்' என்னும் பொருத்தமான பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தனர்.

இராசன் குடும்பம் வழிவழியாகத் தெய்வ பக்தி உடையது. இவர் வைணவக்கோயில், சைவக்கோயில் என்று பாகுபாடு கருதாதவர். சென்னை வடபழனியாண்டவர் கோயில் திருப்பணியை 1928-இல் நடத்தினார். திருவாதவூர் திருக்கோயில் திருப்பணி, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருப்பணி (1963) ஆகியவற்றின் பொறுப்பை இவரே ஏற்றார். சைவ சமயத்தைக் காப்பாற்றிய மங்கையர்க்கரசிக்குப் புதிதாக ஓர் அழகிய மண்டபம் அமைத்தார். தென்காசி, திருவாலங்காடு கோயில்களுக்கும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தினார்.

இராசனின் சமயப் பணிகளில் பெரிதும் குறிப்பிடத்தக்கது 1949-இல் சபரிமலை ஐயப்பன் சிலையைத் தமிழ்நாடு முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் சென்றதாகும்.

பாண்டித்துரைத் தேவர் 1901-இல் தோற்றுவித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு 1950 முதல் இராசன் துணைத்தலைவராக இருந்தார். சங்கத்தின் பொன்விழாவை 1956-இல் மதுரையில் சிறப்பாக நடத்தினார். மதுரைத் திருக்கோயிலின் வடக்கு ஆடி வீதியில் திருவள்ளுவர் கழகம் 1941-ஆம் ஆண்டு அமைந்ததற்கும், 1963-இல் அதற்கு ஓர் அழகான மண்டபம் கட்டப் பெற்றதற்கும் இராசனே முக்கியக் காரணமாக இருந்தார்.

இராசனைப் போன்று மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட சான்றோர் ஒரு சிலரேயாவர். குடியரசுத் தலைவர் முதல் கூலியாள் வரை இராசன் வேற்றுமை இல்லாது பண்புடன் பழகினார். இவர் 1974-இல் காலமானார். கி.ப.

**இராசாதித்தன்**: இவன் முதலாம் பராந்தகனுக்கும் (Parantaka I) சேர மன்னன் மகள் கோக்கிலானடிகளுக்கும் மகனாகப் பிறந்தவன். பராந்தக சோழனுக்குப் பல மனைவியர்கள் இருந்த போதிலும் இராசாதித்தனின் தாயே பட்டத்தரசியாகத் திகழ்ந்தாள். அதுபோலவே இராசாதித்தனுக்கு மற்றத் தாய்களின் பிள்ளைகளான கண்டராதித்தன் (Kandaraditya), அரிஞ்சயன் (Arinjayan), உத்தம சோழன் (Uttama Cholan) என்ற சகோதரர் இருந்தபோதிலும் இராசாதித்தனே பட்டத்து இளவரசனாகத் திகழ்ந்தான்.

பராந்தக சோழன், ஆட்சிக் காலத்தின் இறுதியில் தன் பேரரசின் வடக்கில் இராட்டிரகூட

(Rashtrakutas), கங்க (Ganga) மன்னர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனும் (Krishna III), கங்க மன்னன் பூதுகனும் (Butuga II) ஒன்று சேர்ந்துபெரும்படையுடன்தொண்டைமண்டலத்தைத் தாக்கத் திட்டமிட்டனர். இதையறிந்த பராந்தகன் தன் மூத்த மகன் பட்டத்து இளவரசன் இராசாதித்தனை கி.பி. 936-ஆம் ஆண்டு பெருமளவிலான யானை, குதிரைப் படைகளுடன் அவர்களை முறியடிக்க அனுப்பி வைத்தான்.

இராசாதித்த சோழன் அப்பெரும் படைகளுடன் திருமுனைப்பாடிநாட்டிலுள்ள ருநாவலூரில் தங்கிப் பகைவர்களை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கலானான்.

தக்கோலப்போர் (Battle of Takkolam): தங்கள் திட்டப்படி மூன்றாம் பூதுகனும் மூன்றாங் கிருட்டிணனும் இணைந்து,பெரும்படையுடன் கி.பி.949-ஆம் ஆண்டு தக்கோலம் என்ற இடத்தில் சோழப் படையுடன் மோதினர். (தக்கோலம் என்ற இடம் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறு மைல் தூரத்திலுள்ளது.) இரு பக்கத்திலும் பல ஆயிரக்கணக்கான வீரர்கள் மாண்டனர். இப்போரில் இராசாதித்தன் மிகவும் வீரத்துடன் போர் புரிந்தான். இருந்தும் விதி அவனை விடவில்லை. யானை மீதமர்ந்து போர் செய்து கொண்டிருந்த இராசாதித்தன் இதயத்தைப் பூதுகனால் ஏவப்பட்ட அம்பு துளைக்கவே, யானையிலிருந்து கீழே விழுந்து வீரமரணமடைந்தான்.

கும்பகோணம், திருவிடைமருதூர், திருவெள்ளாறு முதலிய ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் 'ஆனை மேற்றுஞ்சிய' என்று குறிப்பிடுவதால் போர்க்களத்தில் யானையின் மேலிருந்தபடியே வீழ்ந்து இறந்தான் என்பது உறுதியாகிறது.

இப்போரைப் பற்றித் திருவாலங்காடு செப்பேடு இராசாதித்தன் மூன்றாம் கிருட்டிணனை வென்று பின்னர் வீரமரணம் அடைந்தான் என்று குறிப்பிடுகிறது. இதன்படி பார்த்தால் வெற்றிபெற்ற சோழ இளவரசன் இராசாதித்தனைப் பூதுகன் தன் அம்பால் கொன்றிருக்க வேண்டும். ஆகவேதான் பெருமகிழ்ச்சியடைந்த மூன்றாம் கிருட்டிணன் அவனைப் பாராட்டி நன்கொடைகள் வழங்கியிருக்க வேண்டுமென்பது வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு.

இராசாதித்தனின் வீர மரணம் பராந்தகனுக்குப் பேரதிர்ச்சியையும் எல்லையில்லாத் துக்கத்தையும் கொடுத்தபோதிலும், பேரரசின் நலத்திற்குத் தன் அடுத்த மகன் கண்டராதித்தனைப் பட்டத்து இளவரசாக்கினான். அதன்படி பராந்தகனுக்குப் பிறகு கண்டராதித்தன் அரசுக்கட்டிலேறினான். சி.சி.

துணை நூல்கள்:

**Chopra, P.N., Ravindran, T.K. & Subramanian, N.,** History of South India, S. Chand & Co., Delhi, 1979.

**Nilakanta Sastri**, K.A., The Colas, University of Madras, 1974.

சதாசிவ பண்டாரத்தார் **தி.வை.**, பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1975.

**இராசாதிராசன், முதலாம்** (ஆ.ஆ. **1018-1054**) சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரனின் (1012-1044) மகன். சோழ வமிசம் கண்ட பெரும் படைத்தலைவர்களுள் ஒருவன். இவன் கி.பி. 1018-இல் இளவரசுப்பட்டம் கட்டப்பெற்றுத் தன் தந்தையுடன் 25 ஆண்டுகள் இணைந்து ஆட்சி நடத்தியபின், கி.பி. 1044-இல் சோழ அரசின் தனி வேந்தனாக முடிபுனைந்துகொண்டான். இராசகேசரி என்பது இவன் பட்டப்பெயர்.

முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டுகள் 'திங்களேர் பெறவளர்', 'திங்களேர் தரு', 'திருக்கொடியொடு தியாகக்கொடி' எனத் தொடங்கும் மூன்று வகையான மெய்க்கீர்த்திகளைக் கொண்டுள்ளன.

சிறப்புப் பெயர்கள்: இவனுக்கு விசயராசேந்திரன், சயங்கொண்டசோழன், ஆகவமல்ல குலாந்தகன், கல்யாணபுரங்கொண்ட சோழன், வீரராசேந்திரவர்மன் முதலான சிறப்புப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இவன் பூரட்டாதியில் பிறந்தவன்.

வெற்றிகள்: கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இவன் அண்டை நாடுகளை வென்று, தன் அதிகாரத்தை விரிவுபடுத்தினான். தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் இளவரசனாக இருந்தபோதே இவன் பாண்டிய வேந்தர்களான மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூவேந்தரையும் வென்று, சோழராட்சிக்கெதிராக எழுந்த கலகத்தை ஒடுக்கினான். இராமகுட வேந்தரையும் வேணாட்டரசனையும் வென்று சோழரது புகழை நிலைநாட்டினான். மேலைச் சாளுக்கிய நாட்டின்மீது கி.பி. 1042-இல் படையெடுத்துச் சென்று, சோமேசுவரன் தன் மகன்

விக்கிரமாதித்தனையும், கீழைச்சாளுக்கிய வேந்தனான ஏழாம் விசயாதித்தனையும் தோற்கடித்தான். இவன் கி.பி. 1044-இல் நடைபெற்ற கொள்ளிப் பாக்கைப் போரில், தன் வீரத்தினையும், தந்தையைப் போன்று தானும் ஆற்றல் மிக்க படைத்தலைவனே என்பதையும் மாற்றாருக்கு உணர்த்தினான்.

ஈழவெற்றி: தன் தந்தையின் காலத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த சிங்களவர்கள் சோழர் ஆட்சிக்கு அடிபணிய மறுத்தனர். விக்கிரம பண்டு என்ற விக்கிரம பாண்டியன் ஈழநாட்டைக் கி.பி.1044 முதல் 1047 முடிய ஆண்டுவந்தான். சிங்கள வேந்தனான மகாலான கித்திக்கும் பாண்டியத் தாய்க்கும் பிறந்த விக்கிரம பாண்டியன் கி.பி. 1047-இல் சோழர் படையால் தோற்கடிக்கப்பட்டான். இவ்வாறு இராசாதிராசன் ஈழத்தில் தோன்றிய எழுச்சியை ஒடுக்கினான். இதுவே இவனது முதலாவது ஈழப் படையெழுச்சியாகும். சோழப்படை இரண்டாம் தடவையாக கி.பி. 1051-இல் ஈழத்தின்மீது படையெடுத்துச் சென்று, ஈழ நாட்டு வேந்தனான சக்திபாலனை வென்று, அவனைக் கொன்று, அவனது பெருநிதியத்தைக் கைப்பற்றியது. இராசாதிராசன் மீண்டும் கி.பி. 1053-அளவில் தனது ஏகாதிபத்தியத்தை ஈழத்தில் நிலைநாட்ட வேண்டியிருந்தது. சீவல்லப மதனராசன் என்ற கன்னட தேசத்தவன் ஈழ நாட்டினரின் தேசிய போராட்டத்திற்குத் தலைமை தாங்கினான். இவன் கி.பி. 1053-இல் சோழர் படையால் கொல்லப்பட்டான். இதுவே இராசாதிராசனின் ஈழநாட்டின் மீதான கடைசி இராணுவப் படையெழுச்சியாகும். இதன் விளைவாக ஈழத்தின் பெரும் பகுதி சோழரது ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

சாளுக்கியப் போர்: சோழ-சாளுக்கியப் போர் தமிழக வரலாற்றில் சுவைமிக்க பகுதியாகும். இராசாதிராசன் முதலாம் சாளுக்கியப் போரில் கொள்ளிப் பாக்கையில் கண்ட வெற்றியுடன் சோழ-சாளுக்கியப் போராட்டம் நிற்கவில்லை. இராசாதிராசன் கி.பி. 1044-இல் முடிசூடிக்கொண்ட பின்பு, இவனே முன்னின்று இரண்டாம் சாளுக்கியப் போரைத் (கி.பி. 1044-1046) தலைமை தாங்கி நடத்தினான். இப்போரில் ஆகவமல்லனின் படைத்தலைவர்களான மதுசூதனன், கண்டர்தினகரன், நாரணன், கணபதிமுதலானோர் தோல்வியுற்று ஓடினர். வெற்றிகண்ட சோழர் படை பல்லாரி மாவட்டம் ஆசுபெட்டுவட்டத்திலுள்ள கம்பிலி நகரத்தை (கி.பி.1046) அழித்து, அங்கு வெற்றித் தூண் ஒன்றினையும் நிறுவியது. இரண்டாண்டுகள் சென்ற பின்னர் இராசராசன் சாளுக்கியரின் மீது மூன்றாம் போரையும் தொடங்கினான். சோழருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆகவமல்லனின்படைகளைச் சோழர் படைகள் கிருட்டிணா நதியின் தென்கரையிலமைந்த பூண்டூரில் சந்தித்தன. அங்கு நடந்த கடும்போரில் தெலுங்க விச்சயன், அத்திராசன், அக்கப்பையன், முஞ்சன், தனஞ்செயன், வீரமானிக்கன் முதலான சாளுக்கியப்படைத்தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பூண்டூர் நகரின் கோட்டை கொத்தளங்கள், மன்னப்பாயில் நகரம் ஆகியன கி.பி. 1048-இல் அழிக்கப்பட்டன. வெற்றி பெற்றசோழவேந்தன் 1050-இல் கல்யாணி நகரத்தில் வீராபிடேகம் என்னும் வேள்வியை நடத்தி, விசய ராசேந்திரன் என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டான். வெற்றி வாகை சூடிய சோழர் படை கல்யாணபுரத்தை எரித்து, அங்குள்ள கோயிலில் சிறப்புடன் திகழ்ந்த துவாரபாலகர் சிற்பத்தை வெற்றிச் சின்னமாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தது. நான்காம் தடவையாகக் கிருட்டிணா நதிக் கரையிலுள்ள ‘கொப்பம்’ என்னுமிடத்தில் கி.பி.1054-இல் போர் நடந்தது இப்போரில் யானைமீது அமர்ந்து போர் செய்த இராசாதிராசன் மாறப் பெருமாள் தேவனால் கொல்லப்பட்டான். ஆதலின் இவன், ‘யானைமேல் துஞ்சிய தேவர்’ என்று குறிக்கப்பெற்றான். இருப்பினும் இவன் தம்பியான இரண்டாம் இராசேந்திரன் இப்போரில் சோழர்க்கு வெற்றியைக் கொடுத்தான். இவ்வாறு போர்க்களத்திலேயே பல ஆண்டுகளைக் கழித்த இம்மாவீரன் போர்க்களத்திலேயே இறந்தான்.

அரசியல் அதிகாரிகளும் சிற்றரசர்களும்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் தண்டநாயகன் அப்பிமையனாகிய இராசேந்திர சோழ பிரமாதிராசன், சேனாபதி இராசேந்திர சோழ மாவலி வாணராயன், சேனாபதி சயங்கொண்டசோழ வாணகோவரையன், தண்டநாயகன் சோழன் குமரன் பராந்தக மாராயனாகிய இராசாதிராய நீலகங்கரையன், தண்டநாயகன் வெண்காடன் சங்கரனாகிய இராசாதிராசப் பல்லவரையன் முதலான வீரம் செறிந்த படைத்தலைவர்களும் உலகளந்த சோழப் பிரமராயர் போன்ற அரசியல் அலுவலரும் பணிபுரிந்தனர். இவன்தன் தம்பியான இரண்டாம் இராசேந்திரனுக்கு கி.பி.1052 ஏப்பிரலில் இளவரசுப் பட்டம் கட்டி, ஆட்சியில் பங்கு பெறச் செய்தான்.

இவ்வேந்தனுக்குப் பல அரசியர் இருந்தனர். அவர்களுள் ‘திரைலோக்கியமுடையார்’ என்பவரே பட்டத்தரசியார் ஆவார். உலகுடைய பிராட்டி என்பாரும் இவனது மனைவியாகவே குறிக்கப்பட்டுள்ளார்.

தன் பெரிய தந்தையார், உடன் பிறந்தார் மகன்கள் அனைவருக்கும் தன் ஆட்சிப் பொறுப்

களைப் பகிர்ந்து கொடுத்ததால் இவனது அரசியல் திறன் புலனாகிறது. உள்நாட்டு நிருவாகம் இவ்வேந்தன் காலத்தில் சிறந்திருந்தது.

முதலாம் இராசேந்திரனைப் போன்று கல்விப் பணியில் ஆர்வம் கொண்ட இம்மன்னன், பாண்டிச்சேரியை அடுத்த திரிபுவனையில் வைணவ சமயத்தைப் பற்றிய உயர்கல்வி பெருகப் பெருங்கல்லூரி ஒன்றினை நிறுவினான். இது உயர்கல்வித் துறை வளர்ச்சியில் முதன்மை சான்றது.

சமயப்பணி: இராசாதிராசனின் அரசகுருவாக விளங்கியவர் வாசுதேவ நாராயணன் என்ற உலகளந்த பிரமராயர் ஆவர். இவரே இவ்வேந்தனது ஆன்மிக வழிகாட்டி. இவ்வேந்தன் வீராபிடேகம் செய்துகொண்டதுடன், சோழர் வரலாற்றில் முதன் முறையாக அசுவமேதயாகமும் செய்துள்ளான்.

தன் முன்னோர்களைப் போன்று கோயில் கட்டுவதில் நாட்டம் கொண்ட இவன், தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் சயங்கொண்ட சோழேச்சுரம், இராசாதிராசேச்சுரம் என்னும் இரு கோவில்களைக் கட்டினான்; பல கோயில்களுக்குக்கொடை வழங்கியுள்ளான். சமயத் துறையில் பரந்த மனப்பான்மை கொண்ட வேந்தன் என்பதால் இவன் சோழர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான். ம.இரா.த.

துணை நூல்:

**Nilakanta Sastri,** The Colas, University of Madras, 1984.

இராசாதிராசன், இரண்டாம் (கி.பி.1166-1180; ஆந்திரநாடு 1181-1215) இரண்டாம் இராசராச சோழனுக்குப்பின் சோழநாட்டை ஆண்ட வேந்தன். இவன் இயற்பெயர் எதிரிலிப் பெருமாள். இவன் கி.பி. 1163-இல் இரண்டாம் இராசாதிராசனால் இளவரசனாக அமர்த்தப்பட்டான். வேந்தனாக கி.பி. 1166-இல் இராசகேசரி இராசாதிராசன் என்னும் பட்டப் பெயருடன் அரியணையேறினான்.

இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் 'கடல் சூழ்ந்த பார் மாதரும்', 'கடல் சூழ்ந்த பாரேழும்', 'பூமருவிய திசை முகத்தோன்' என்னும் மூன்று வகைத் தொடக்கங்களைக் கொண்டிருந்தன. சிதம்பரத்திலுள்ள கல்வெட்டொன்று இவ்வேந்தனை 'இராசாதிராச தேவராகிய கரிகாலச் சோழ தேவர்' என்று குறிப்பிடுவதால், இவனுக்குக் 'கரிகாலன்' என்னும் சிறப்புப் பெயரும் இருந்தது என்பது புலனாகும். தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் ஆற்றூர்க் கல்வெட்டும் இதனை உறுதிசெய்கிறது. 'மதுரையும் ஈழமும் கொண்ட கோ இராச கேசரிவர்மன்' என்ற விருதுப் பெயரும் இவனுக்கு இருந்தது.

பாண்டிய நாட்டு உள்நாட்டுப்போரில் தலையிடல்: குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அப்போது அவன் உறவினனான பராக்கிரம பாண்டியனும் பாண்டிய அரியணைக்கு உரிமை கொண்டாடினான். இவ்விருவரிடையே போர் மூண்டது. பராக்கிரம பாண்டியன் இலங்கை வேந்தனான பராக்கிரம பாகுவின் உதவியை நாடினான். இலங்கைப் படையினர் பாண்டிய நாட்டை அடையுமுன்பே குலசேகரன் பராக்கிரம பாண்டியனையும் அவன் அரசியையும் கொன்றுவிட்டான். இலங்கைப் படையினர் கி.பி. 1169-இல் குலசேகர பாண்டியனை வென்று, பராக்கிரமனின் மகனான வீர பாண்டியனை அரியணையில் அமர்த்தினர். ஆனால், தன் படை வலிமையால் குலசேகரன் வீரபாண்டியனைத் துரத்திவிட்டு மீண்டும் அரியணையேறினான். ஆனால், பராக்கிரமபாகுவால் புதிதாக அனுப்பப்பட்ட படை குலசேகரனை வென்று, வீரபாண்டியனை மீண்டும் அரியணையில் அமர்த்தியது. வேறு வழியின்றிக் குலசேகரன் இராசாதிராசனிடம் உதவி கேட்கவே, சோழ வேந்தன் தன் படைத்தலைவனான திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவரையனை அனுப்பி கி.பி. 1170-இல் சிங்களப் படைகளைத் தோற்கடிக்கச் செய்து, கி.பி. 1172-இல் குலசேகரனை மீண்டும் அரசனாக்கினான்.

இதனைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு பாண்டியனையும் இராசாதிராச சோழனையும் வென்றடிப்படுத்தப் படைகளைத் திரட்டினான். இதனால் சினங் கொண்ட இராசாதிராசன் தன் படைத்தலைவனான வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன், ஈழநாட்டு அரியணையைக் கைப்பற்றச் சதித்திட்டம் தீட்டிய பராக்கிரம பாகுவின் மருமகன் சீவல்லபன் ஆகிய இருவரையும் பெரும்படையுடன் இலங்கைக்கு அனுப்பி கி.பி. 1176-இல்ஆங்குப் பேரழிவினை நிகழ்த்தச் செய்தான். இதனால் சோழ வேந்தன் எண்ணிறந்த ஈழப் பொருள்களைப் பெற்றான்.

இராசாதிராசனின் வலிமையை அறிந்த பராக்கிரம பாகு பாண்டியன் குலசேகரனுக்குப் பரிசுப் பொருள்களை அனுப்பி, அவனுடன் நட்புப் பூண்டான். நன்றி மறந்த குலசேகரனும் ஈழ வேந்தனுடன்நட்புக் கொண்டு, சோழ வேந்தனுடன் பகைமை பூண்டான்; சோழனுக்கு எதிரான சதிச் செயலிலும் ஈடுபட்டான். இதனைக் கண்டு சினம் கொண்ட சோழ வேந்தன் தன் படைத்தலைவனைக் கி.பி. 1177-இல் அனுப்பி, குலசேகரனை அரியணையினின்றும் இறக்கி,

வீரபாண்டியனை மதுரையில் மீண்டும் மன்னனாக அமர்த்தச் செய்தான். இச்சாதனை புரிந்த அண்ணன் பல்லவரையனுக்குப் பத்து வேலி நிலம் சோழனால் அளிக்கப்பட்டது. இவ்வாறு இராசாதிராசன் பாண்டியர் செயல்களில் தலையிட்டு ஆங்குத் தன் மேலாண்மையை நிலைநாட்டினான். மதுரையையும் ஈழத்தையும் வெற்றிகொண்ட இவ்வேந்தன், 'மதுரையும் ஈழமும் கொண்ட கோ இராசகேசரி வர்மன்' என்னும் பட்டப் பெயரையும் பெற்றான்.

இவ்வேந்தனைப் பற்றிய செய்திகள் திருவாலங்காட்டுக் கல்வெட்டுகளாலும் ஆலங்குடிக் கல்வெட்டாலும் பல்லவராயன் பேட்டைச் சாசனங்களாலும் ஆர்ப்பாக்கம் கல்வெட்டுகளாலும் அறியப்படுகின்றன.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் சோழ அரசின் பெருமையும் பரப்பளவும் சிறிது குறைந்தன. இவன் காலத்தில் பொருளாதார நிலை சீர்பெறவில்லை. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்திய கல்வெட்டுகள் கடம்பை மாவட்டத்திலுள்ள நந்தலூரிலும் நெல்லூர் மாவட்டத்திலும் திருக்காளத்தியிலும் காணப்பெறுவதால், அப்பகுதிகளில் இவனுக்குட்பட்ட சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர் எனலாம். இவர்களைக் கட்டுப்படுத்துந் திறன் இவனிடம் இல்லை.

குறுநில வேந்தரும் அரசியல் தலைவர்களும்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் இராசராச மலையரையன் ஆகிய அருளாளப் பெருமான், இராசராச சேதிராயன், இராசராச கோவலராயன், கிளியூர் இராசகம்பீர சேதிராயன், நிலமளந்தானாகிய சேதிராயன், திருவரங்கமுடையான் இராசாதிராச மலையரையன். ஆகார சூர மலையமான் முதலான மலையமான் நாட்டின் பகுதிகளை ஆண்டுவந்த சிற்றரசர்களும், திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமானம்பிப் பல்லவரையன், வேதவனமுடையான் அம்மையப்பன் அண்ணன் பல்லவரையன் முதலான முதலமைச்சர்களும், வேதவனமுடையான் கருணாகரத் தேவனான அமரகோன், செங்கேணி அம்மையப்பன் எதிரிலி சோழச் சம்புவராயன், அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன், அம்மையப்பன் சீயன் பல்லவாண்டானான இராச நாராயண சம்புவரையன், கடந்தைச்சேந்தன் ஆதித்தனான இராசராச சிங்கார முத்தரையன், சேந்தன் கூத்தாடுவானான இராசராச வங்கார முத்தரையன் (கி.பி. 1160 1168), அரச நாராயணன் ஏழிசை மோகனாகிய சநநாத கச்சிராயன், திருக்கொடுங்குன்றமுடையான் நிடதராசன், குணமலைப்பாடி உடையான் ஆட்கொண்டான், கங்கை கொண்டானாகிய பொத்தப்பிச்சோழன். நெல்லூர்ச் சித்திரையன், புசபலவீரன் ஆகோ மல்லராசன் முதலான அரசியல் அதிகாரிகளும், சோழரது மேலாண்மையைக் காப்பதிலும் ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்துவதிலும் பெரும்பணி ஆற்றினர்.

மதிப்பீடு: இவ்வேந்தன் சோழ அரசின் எல்லைகளை விரிவுபடுத்தினான் என்றோ சோழரின் பெயரினையும் புகழினையும் உயர்த்தினான் என்றோ கூறுதல் இயலாது. சிங்களப் படைகளை வெல்வதற்கு உமாபதி தேவர் என்ற சிவாச்சாரியாரை 28 நாட்கள் நோன்பிருக்கச் செய்து, மந்திர பலத்தைப் பயன்படுத்தியமை, சோழ அரசர் யாரும் செய்யாத, செய்ய முயலாத புதிய முயற்சியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மாந்திரீகத்தின் மூலம் சிங்களப்படைகளை வென்றதால், இவன் இவ்வகையில் மொகலாயப் பேரரசன் ஔரங்கசீபுடன் ஒப்புமை கூறத்தக்கவனாவான். மத்திய ஆட்சியிலும் அரசாங்கக் கொள்கையிலும் சிற்றரசர்களின் செல்வாக்கும் தலையீடும் மிகுதியாயின. சோழப்பேரரசின் வீழ்ச்சிக்கு இவ்வேந்தனும் ஒரு காரணமாக இருந்தான். ம.இரா.த.

துணை நூல்:

**Nilakanta Sastri**, K.A.. The Cholas, University of Madras, 1984.

***இராசாராணி கோயில்*** ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேசுவரத்தில் உள்ள புகழ்பெற்ற கோயில். இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் கோயிலின் கருவறையில் மூலவர் இல்லை. கல்வெட்டுக் குறிப்புகள் இல்லாமையால் இக்கோயில் எக்கடவுளுக்கு உரியது என்பது தெரியவில்லை. இக் கோயில் இராசாவும் இராணியும் தங்குமிடம் என்று சிலரும், இக்கோயிலில் பயன்படுத்திய கல்லின் பெயர் இராசாராணி என்று சிலரும் கூறுவர். ஆனால், இக்கோயில் கோயிலுக்கு உண்டான அனைத்துச் சிறப்புக் கூறுகளையும் கொண்டு விளங்குவதால் இதைக் கோயில் என்றே கூறலாம்.

வடமொழி நூல்களான ஏகமரா புராணமும் (Ekamara) சுவர்ணதிர் மகோதயாவின் (Svarnnadi Mahodaya) 9-ஆம் பாகமும் ஏகம்ரா சந்திரிகாவின் (Ekamra Chandrika) 14-ம் பாகமும் கபிலசம்கிதை (Kapila Samhita) போன்றவையும் இந்திரேசுவரா என்ற கோயில் புவனேசுவரத்தில் இருந்ததாகக் கூறுகின்றன. சுவரா என்று முடிவதால் இது சிவன் கோயிலாகும். இப்பொழுது இப்பெயரில் எந்தக் கோயிலும் இல்லை. எனவே அறிஞர்கள் இக் கோயிலை இந்திரேசுவரர் கோயிலாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். இக்கோயிலின் செகமோகன் (Jagamohan) என்னும் முன் மண்டபத்தின் இருபக்கங்

களிலும் உள்ள சண்டா, பிரசண்டா என்ற இரு துவாரபாலகர்கள் சடைமகுடத்துடனும் வலக்கையில் கீழே குத்திக்கொண்டு இருக்கும் திரிசூலத்துடனும் காணப்படுதலாலும், மண்டபத்தின் வாயிற் பலகையின் மேல் உள்ள கட்டையில் இலகுலிசா யோக நிலையில் காணப்படுதலாலும் இக்கோவில் சிவன் கோயிலாகத்தான் இருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது.



இராசாராணி கோயில் – புவனேசுவரம்

இக்கோயிலின் விமானமானது உயரமான சிகரத்தினையும் அதனுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் அங்க சிகரங்களையும் கொண்டு விளங்குகின்றது. சில இடங்களில் அங்க சிகரமானது ஆமலகம் (Amalakam) என்று சொல்லப்படும். கருவறையின் பீடம் ஐந்து கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் மேலும் மூன்று கட்டங்களைக் கொண்ட அடிபீடம் உள்ளது. இச் சுவரில் உள்ள சிற்பங்கள் சிற்றின்பக் காட்சிகளைக் காட்டுகின்றன. இரதங்களுக்கு இடையே உள்ள இடத்தில் வியாலமும் சிங்கமும் யானையும் அமைந்த அமைப்புடையவையும் (Gaja-Simhas) சிற்றின்பக் காட்சிகளைக் காட்டும் சிற்பங்களும் உள்ளன. இக் கோயிலின் சிகரம் ஏழு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உச்சியில் உள்ள ஆமலக சிகரத்தை நான்கு மூலையிலும் மண்டியிட்டு உட்கார்ந்த நிலையில் உள்ள நான்கு மனிதஉருவங்கள் தாங்கிக் கொண்டுள்ளன.

செகமோகன் என்று சொல்லப்படும் மண்டபமானது எவ்வித வேலைப்பாடுமின்றி விளங்குகிறது. இதன் கூரையானது ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கப்பட்ட பலகைக் கற்களைக் கொண்டு விளங்குகின்றது. இக்கோயில் கசராகோவிலுள்ள (Gajaraho) கோயில்களின் அமைப்பை உடையது. கே. இரா.

***இராசாராம் கோவிந்தராவ்*** கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தஞ்சை மராட்டிய மன்னரின் கீழ் அரசியல் அலுவல் புரிந்தவர்; மராட்டிய வகுப்பினைச் சேர்ந்த அறிஞர். இவர் தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கினார். மன்னரின் கீழ் அரசு அலுவலகத்தில் பணிபுரிந்த இவர் கவிதை நூல் இயற்றும் கவிஞராகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது. பக்தலீலாமிருதம் என்பது இவர் இயற்றிய நூல். இது மராத்தி மொழியில் அமைந்த வடநாட்டுப் பக்தர்களின் வரலாற்றைச் செய்யுளில் விளக்கும் நூலாகும். இதன்கண் விளக்கப் பெற்றுள்ள 82 பக்தர்களுள்சயதேவர், புண்டலீகர் முதலியோர் அடங்குவர். தி.வி. கோவிந்தபிள்ளை இந்நூலைத் தஞ்சையில் பதிப்பித்து வெளியிட்டார்.

***இராசாவாலியா*** என்பது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுக் குறிப்பேடு. இந்நூல் இலங்கைத் தீவின் தொடக்ககாலம் முதல் கி.பி. 1687-இல் மன்னர் இரண்டாம் விமலதர்மசூரியா முடிசூடிக் கொண்டது வரை உள்ள வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக, கி.பி.1359-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தைப் பற்றி அறிய இந்நூல் பெரிதும் பயன்படுகிறது. இராசாவாலியா அரசியல் செய்திகளுக்கே முதலிடம் கொடுத்துள்ளது; சமயச் செய்திகளை விளக்கவில்லை. இந்நூல் பொதுமக்களைக் கவரும் வண்ணம் எளிய நடையில் அமைந்துள்ளது; இலக்கிய நடையைப் புறக்கணித்துள்ளது. இது பலரால் எழுதப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

***இராசி***: வானசாத்திரத்தின் அடிப்படையிலமைந்த சோதிடக் கலையில் இடம்பெறும் ஒரு குறியீடாகும். வானில் சூரியன் இயங்கும் வட்டப் பாதையில் அசுவனி முதல் 27 விண்மீன்களும் அமைந்துள்ளன. 360 பாகையாக அமையும் இராசி மண்டலத்தினை 12 ஒத்த பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். ஒவ்வொரு பிரிவும் 30 பாகை அளவுடையது ஆகும். அது இராசி எனப்படும். அவ்வாறமைந்த இராசிகள் பன்னிரண்டு ஆகும். இப்பன்னிரு இராசிகளும் அமைந்த இராசி வட்டத்தில் (Zodiac) இடம்பெறும் ஒவ்வொரு இராசியிலும் $2\frac{1}{4}$ விண்மீன் தொகுதி அமைகின்றது. 27 விண்மீன்களுக்கும் அவற்றினைத் தனித்தனியே இனங்காணுதற்கான வடிவ அமைப்பினை அறிஞர்கள் கண்டு காட்டியிருப்பது போலவே, ஒவ்வொரு இராசிக்கும் அதில் அமையும் விண்மீன்களின் தொகுதி நோக்கி ஒரு வடிவ அமைப்பினைக் கண்டு, அதனாலும் அதன் இயல்புகளாலும் அதற்குப் பெயர் வைத்துள்ளனர். இந்த 12 இராசி

களின் பெயர்களும் வருமாறு: மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். இப்பெயர் கொண்ட பொருள்களின் வடிவங்களே இந்த இராசிகளுக்கு வடிவங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

12 இராசியிலும் சூரியன் இயங்கி மீண்டும் முதல் இராசியை அடைய 12 மாதங்கள் ஆகும். ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாத காலம் சூரிய இயக்கம் அமையும். அதனால் மேடம் முதல் 12 இராசிகளின் பெயர்களும் சித்திரை முதல் 12 மாதங்களுக்குப் பெயராகவும் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாதத்திலும் அவ்வம் மாதத்திற்குரிய இராசி முதலாக அமையும். ஓராண்டில் 12 இராசிகளும் அமைவதுபோல, ஒவ்வொரு நாளிலும் 12 இராசிகளும் ஏறத்தாழ 5 நாழிகை இடைவெளியில் உதயமாகும். இராசிகள் ஒவ்வொன்றிற்குமான மாதம், உருவம், அங்கம், திக்குகள், சாதி, நிறம், பகல், இரா, விழிப்பு, சரம், திரம், உபயம், ஆண்-பெண் இயல்பு, உதயம் முதலியவற்றைச் சோதிட நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

இராசி வட்டத்தில் இடம்பெறும் மேடம், இடபம் ஆகிய இராசிகளைப் பற்றிய குறிப்பு, சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. அங்கு இராசி இயல் என்னும் சொல்லால் கூறப்பட்டுள்ளது. 'ஆடியல்' என்னும் புறநானூற்றுத் தொடரும் (புறம். 229-1.) 'ஏற்றியல்' என்னும் பரிபாடல் தொடரும் (பரி. 11-4) முறையே மேட, இடப இராசிகளைச் சுட்டுகின்றன என விளக்கியுள்ளனர்.

சாதகம் கணிப்போர் ஒருவன் பிறந்தபோதுள்ள கோள்களின் நிலையினை அறிவது இன்றியமையாததாகும். அதனால், அவர்கள் 27 விண்மீன்களும் பொருந்திய 12 இராசிகளின் நிலையினை, முழுவட்டத்திலமைந்த 12 வீடுகளில் அமைத்துக் காண்பர். இராசி வட்டத்தில் கோள்கள் அமைந்த நிலை கண்டு அதற்கேற்பப் பலன் கூற முற்படுவர். பன்னிரண்டு இராசிகளும் பொருந்திய சக்கரம் இராசிச்சக்கரம் எனப்படும். அதன் அமைப்பு வருமாறு:-

<table>
<tr><td>மீனம்</td><td>மேடம்</td><td>இடபம்</td><td>மிதுனம்</td></tr>
<tr><td>கும்பம்</td><td colspan="2" rowspan="2">இராசி வட்டம்</td><td>கடகம்</td></tr>
<tr><td>மகரம்</td><td>சிம்மம்</td></tr>
<tr><td>தனுசு</td><td>விருச்சிகம்</td><td>துலாம்</td><td>கன்னி</td></tr>
</table>

**இராசிபுரம்**: சேலம் மாவட்டத்திலுள்ளதொரு வட்டம். இந்தப் பெயரில் ஊரும் உண்டு. சேலத்திலிருந்து 25 கி.மீ. தெற்கில் அமைந்துள்ள இவ்வூர் நெய்க்குப் பெயர்பெற்றது. அண்மையில் இவ்வட்டத்தைத் தமிழக அரசு பின்தங்கிய வட்டங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது. நெசவாளர்கள் மிகுந்த இவ்வூரில் கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. இராசிபுரம் கயிலாயநாதரைப் பற்றிக் 'கயிலாயநாதர் சதகம்' என்னும் நூலொன்றுள்ளது கடையெழுவள்ளல்களுள் ஒருவனான வல்வில்லோரியின் அழகான உருவச் சிலையைக் கயிலாயநாதர் கோயிலில் காணலாம். இவ்வூரைப்பற்றி, பிற்காலத்தில் வாழ்ந்தவரும் 'சந்திரவிலாசம்' என்னும் காவியத்தை எழுதியவருமான மாம்பழக் கவிராயர் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பார்வையிழந்தவர். இவ்வட்டத்தைச் சார்ந்த நாமகிரிப்பேட்டையில் அண்மைக்காலம் வரை இரும்புத் தாதுக்களைத் தோண்டியெடுத்து உருக்கி இரும்புக் கருவிகளைச் செய்துவந்தனர். பனைமரத்துப்பட்டி ஏரியிலிருந்து இராசிபுரத்திற்குக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இராசிபுரம் கோனேரிப்பட்டியில் கூட்டுறவுத் துறையினரால் இயங்கும் நூற்பாலையொன்று இயங்கிவருகின்றது. ஆ. இராமசாமி அய்யா என்னும் பெரியார் 'இரவீசமரபினர்காதை' என்னும் பெயரில் காவியம் ஒன்றை இயற்றியுள்ளார். 'இராகவபாண்டவீயம்' என்னும் தெலுங்குக் காவியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது இந்நூல். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் குறிக்கும் வண்ணம் சிலேடையாக தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதன் சிறப்பாகும். உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்களுள் ஒருவரான ஆர்.கே. நாராயணன் இவ்வூரில் பிறந்தவர். இவ்வூரை அடுத்துள்ள ஆண்டகலூரில் தமிழக அரசு திருவள்ளுவர் கலைக்கல்லூரியை அமைத்துள்ளது. இராசிபுரத்தின் மக்கள்தொகை 33,123 (1981) ஆகும்.

**இராசிம்** (Rajim) மத்திய பிரதேசத்தில் இராய்ப்பூர் நகரிலிருந்து 51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நகரம். இங்குள்ள திருமால் கோயில் கட்டடக் கலைச் சிறப்புடையது. கோயிலின் மூலவராகிய திருமால் இராசிவலோச்சனா (அழகிய கண்களையுடையவர்) எனப்படுகின்றார். பஞ்சாயதன வகையைச் சார்ந்த இக்கோயில் ஐந்து கோயில்களை ஒருங்கிணைத்துக் கட்டப்பட்டது. திருமால் (இராசிவலோச்சனா) கோயிலைச் சுற்றி நான்கு துணைக் கோயில்கள் உள்ளன. இக்கோயில்கள் பத்திரிநாதர், வாமனர், வராகர், நரசிம்மர் போன்ற திருவுருவங்களைக் கொண்டன. திருமால் கோயில் கருவறை, இடைகழி, முன்மண்டபம் போன்றவற்றைக் கொண்டு திகழ்கின்

றது. முன்மண்டபம் 24 தூண்களைக் கொண்டது. தூண்களில் அழகுடன் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல உள்ளன. அவற்றுள் தேவ அணங்குகள், வன தேவதைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. முன்மண்டபத்திற்குச் செல்லப் படிக்கட்டுகளுடன் கூடிய நுழைவாயில்கள் முன்மண்டபத்தின் வடக்கு, தெற்குப் பக்கங்களில் காணப்படுகின்றன. இக்கோயிலின் உச்சிப் பகுதி (Sikram) அழிந்துபட்டுப் பிற்காலத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் சிற்பங்களுள் திரிவிக்கிரமர், சேட நாகன், வாமனர், யோகநாராயணன், நரசிம்மர், இரணியகசிபு போன்றவை மிகவும் சிறப்பானவை.

**இராசு எட்வர்டு (1866-1951)** அமெரிக்க ஐக்கிய நாட்டில் சமூகவியலுக்கு அடிகோலியவர்களுள் எட்வர்டு இராசும் (Edward Ross) ஒருவராவர். இவர் சமூகத்தைச் சீர்திருத்தும் சமூகவியலை உருவாக்கியவர் என்றும் கருதப்படுகிறார். இவர் அமெரிக்காவில் உள்ள இல்லினாய் (Illinois) என்னும் மாநிலத்தில் பிறந்தார்; இந்தியானா, கார்னல் போன்ற பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றிய பின்பு, இசுடான்போர்டு பல்கலைக் கழகத்தில் நிருவாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

இதன் பிறகு விசுகான்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஓய்வு பெறும் வரை அங்குப் பணியாற்றினார். இவர் தமது சமூகவியலின் அடிப்படை (Foundation of Sociology) என்ற நூலில் பிற்போக்குத்தன்மை கொண்ட சமூகப் படிமுறை வளர்ச்சிக் (Evolution) கருத்துகளை வன்மையாகக் கண்டித்துள்ளார். அமெரிக்கச் சமூகத்தைச் சீர்திருத்தியமைக்கக் கூடிய சமூகவியல் கருத்துகளை உருவாக்க முயற்சி செய்தார். இதன் காரணமாகவே இவர் சிறப்பு வாய்ந்தவராகக் கருதப்பட்டார். சமூகவியலின் அடிப்படை என்னும் நூல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்பட்டதற்குக் காரணம், சமூகவியல் இயங்குமுறைகளை இவர் பல்வேறு வகைகளாகப் பிரித்துள்ளமையேயாகும்.

இராசின் சிறப்பான சமூகவியல்சார் கருத்துகள் யாவும் 'சமூகக் கட்டுப்பாடு' (Social Control) என்னும் நூலில் காணப்படுகின்றன. இந்நூலே இவருக்கு அனைத்துலகப் புகழைப் பெற்றுத் தந்தது. சமூக விதி முறைகளைப் (Social Order) பற்றி விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியே இந்நூலாகும். சம்னர் (Sumner) விளக்கிய பண்பாட்டு அமைப்பு, கூலே விளக்கிய மனிதனைச் சமூகவயமாக்கக் கூடிய முறை அதாவது உளவியல் சார் அமைப்பு முறை ஆகிய இரண்டினையும் ஒருங்கிணைத்துச் செம்மைப்படுத்திச் 'சமூக அமைப்பு' (Social System) என்ற கருத்தை இவர் உருவாக்கினார். இவர் மனிதனைச் சமூகத்துடன் உடன்படச் செய்யும் முறைகளையும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தும் வழிமுறைகளையும் விளக்குகிறார். ஆனால், சமூகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது என்றும் இவர் கருதினார்.

சமூக உளவியல் என்ற நூலை இவர் 1908-ஆம் ஆண்டில் இயற்றினார். அது தார்டியன் (Tardean) என்பவரின் பார்த்துச் செய்தல் - அறிவுறுத்தல் கோட்பாடு போன்றவற்றைப் பின்பற்றியதாகும். இரான் சமூகக் கட்டுப்பாடு என்னும் நூல் குறிப்பாகத் தனிமனித உரிமைக்குப் பாதுகாப்பு, சமூகத்தின் உறுதிநிலை (Social Stability) ஆகியவைபற்றி விளக்குகிறது. பழைமையான பண்பாடுகள், சடங்குகள், இயல் கடந்த சமயக் கருத்துகள் ஆகியவை சிதைவதால் சமூகத்தின் உறுதிநிலை பாதிக்கப்படுவதில்லை என்று இவர் கருதினார். மேலும், இவர் சமூகக் கொடுமைகளை அழிப்பதற்குப் பல்வேறு வழிகளையும் இந்நூல்களிற் குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய மூன்று நூல்கள் தவிர, தீவினையும் சமூகமும் (Sin and Society), மாறிவரும் அமெரிக்கா, அமெரிக்கா என்றால் என்ன, சமூகவியல் கோட்பாடுகள், புது உலகச் சமூகவியல் போன்ற பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

**இராசேசுவரி அம்மையார், ஈ.த.** (1906-1955) தமிழ்ப் புலமை பெற்ற இயற்பியல் பேராசிரியர். இவர் தந்தையார் ஈக்காடு தணிகாசல முதலியார்; தாயார் தணிகாம்பிகை அம்மையார். இவர் தந்தையார் தம் மகளிர் நால்வரையும் நன்முறையில் கல்வி கற்கச் செய்தார். அம்மையார் தம் 12-ஆம் வயது வரை பள்ளி செல்லவில்லை. இவர் வீட்டிலேயே படித்துப் பின் சென்னை வண்ணாரப்பேட்டை நார்த்விக்குப் பள்ளியில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்து படித்தார். அனைத்துப் பாடங்களிலும் முதல் மாணவியாகத் தேறினார். பள்ளியிறுதி வகுப்பிலும் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றார். பின்னர், சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று இளங்கலை, முதுகலைப் பட்டங்களும் பெற்றார்.

இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரிடமும் சைவசித்தாந்தத்தைத் தம் தந்தையிடமும் கற்றார். இவர் சென்னையில் வெலிங்டன் சீமாட்டி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இராணிமேரிக் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழ்ப் பெண்களுள் இவரே



இராசேசுவரி அம்மையார், ஈ.த.

முதல் இயற்பியல் பேராசிரியர் ஆவர். இப்பணியில் இருக்குமபோது இங்கிலாந்து சென்று மேற்படிப்பும் பெற்று வந்தார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றல்மிக்கவர். மாணவர்களுக்கு நன்றாகக் கற்பிக் கும் ஆற்றலும், மேடைகளில் நன்கு உரையாற்றும் திறமையும், இதழ்களில் கட்டுரைகள் எழுதும் பயிற்சி யும் பெற்றிருந்தார். இலக்கிய மாநாடுகளிலும் சைவ சித்தாந்த மாநாடுகளிலும் இவர் விரிவுரைகள் நிகழ்த் தியுள்ளார். தமிழறிஞர் கா. நமசிவாய முதலியார் தோற்றுவித்த திருவள்ளுவர் திருநாள் கழகக் குழுவில் 1934, '35-ஆம் ஆண்டுகளில் இவர் உறுப்பினராக இருந்து பணியாற்றியுள்ளார். இப்போது கையாளப் பட்டு வரும் திருவள்ளுவர் தொடர்ஆண்டு அப்போது தான் தோன்றியது. மூதறிஞர் இராசாசியுடன் கலைச் சொல்லாக்கக் குழுவில் இருந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கடிகாரம் இவரால் நிறுவப்பட்ட தாகும்.

இவர் தமிழில் அறிவியல் நூல்களைத் தந்த முதல் பெண்மணியாவார். சர்.சி.வி. இராமனை அடுத்து அறிவியல் நூல்களைத் தமிழில்மொழி பெயர்த்து எழுதியவர் இவரேயாவர். எதனையும் இவர் திறனாய்வு மனப்போக்கோடு ஆராய்வார். இவர் சூரியன், வானக் குமிழி, ஐன்சுடீன் கண்ட காட்சி, குழவியுள்ளம், பரமாணுப்புராணம், வானக் கப்பல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் சூரியன், வானக்குமிழி என்னும் நூல்களுக்காகத் தருமபுர ஆதீனம் இவருக்குத் தங்கப் பதக்கம் அளித்துச் சிறப்புச் செய்தது.

இவர் பெற்றோரிடம் பக்தியுடன் நடந்து கொண் டார். இவர் தோட்டக் கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; அளவிலா இறைபக்தி உடையவர்; இறைவழி பாட்டுப் பாடல்களைத் தவிர வேறுபாடல் களைக் கேட்க மாட்டார். தன்னம்பிக்கை கொண்ட இவர் எப்பொருளையும் பிறரிடமிருந்து பெற விரும்பியதில்லை. மேனாட்டுக்கல்வியில் சிறந்த இவர் தமிழ் நாட்டுக் குடும்பப் பெண்ணாகவே வாழ்ந் தார். உடல் நலமின்றி மருத்துவமனையில் படுக்கையிலிருந்தபோதும் மாணவர்களுக்குத் தேர்விற் கான பாடங்களைக் கற்பித்தார். இவர் ஔவையாரைப் போன்று துறவியாக வாழ்ந்து தமிழுக்குழைத்த பெருமாட்டியாவர். இவர் 1955 -ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல்நாள் இயற்கை யெய்தினார்.

தி.லீ.

## இராசேந்திரசோழ சேதிராயன்

மலையமான் குல வேந்தன். முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070–1120), விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135) ஆகிய இரு வேந்தர்க்குட்பட்டு மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டவன். இச்சிற்றரசன் ஆகார சூரன் என்னும் பெயர் கொண்ட மலையமானின் மகன், குலோத்துங்க சோழ பெரிய சீயனான சோழ மகதை நாடாள்வான் என்பான், இராசேந்திர சோழச் சேதிராயனின் மகனாவான். இவன் உத்திரநாளில் பிறந்தவன். இவ் வேந்தனுக்கு மலையமான் நானூற்றவன், மலைய மான் நானூற்றுவன் மலையன், மலையமான் நானூற்றுவன் அத்திமல்லன் முதலான சிறப்புப் பெயர்களும் உள்ளனவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

இவ்வேந்தன் தன் மகள் ஆளவந்தாளை மலைய மான் இராமன் சூரியனான இராசேந்திர சோழ மலயகுலராயன் என்னும் அரசியல் தலைவனுக்கு மணம் செய்வித்தான்.

அறச் செயல்கள்: சிறந்த சிவபக்தனாக விளங்கிய இவன் சமயப்பொறை உடையவனாகவும் விளங்கி னான்; சைவ வைணவத் திருக்கோயில்களுக்குப் பல அறக் கொடைகளை அளித்தான். இவன் கி.பி. 1115 -இல் நெய்வனைப் பொற்குடம் கொண்டருளிய நாயனார் கோயிலில் நடராசர் திருமேனியை நிறுவிப் படையற் பொருளுக்கு ஏற்பாடு செய்தான். அறையணி நல்லூர்க் கோயிலில் தட்சிணாமூர்த்தி யின் திருமேனியை கி.பி.1116-இல் நிறுவியதுடன், அத்தேவர்க்குத் தான் பிறந்த உத்திரநாளில் அமுது

படைக்கவும், விளக்கு எரிக்கவும் தானமளித்துள்ளான். இவன் கி.பி.1101-இல் திருக்கோவலூர் இடைக்கழி ஆள்வார்க்கும், கி.பி.1128-இல் கோவலூர் வீரட்டானமுடையார்க்கும் நிலக்கொடை அளித்துள்ளான்.

இம் மலையமான் வேந்தன் தன் மகனான மகதை நாடாள்வானை, வாணகப்பாடி நாட்டின் ஒரு பகுதிக்குத் தலைவனாக அமர்த்தினான். ம. இரா.த.

**இராசேந்திர சோழ மலையமான்**, முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1120): விக்கிரம சோழன் (கி.பி 1118-1135) ஆகியோரது மேலாண்மைக்குட்பட்ட சிற்றரசன். இவன் கிளியூரைத் தலைநகராகக் கொண்டு, மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். இவ் வேந்தனுக்குக் கிளியூர் மலையமான், சதிரன் மலையன், கிளியூர் மலையமான் மல்லன் முதலான சிறப்புப் பெயர்களும் உண்டு.

இவ்வேந்தனுக்கு மலையகுலராயர் என்னும் பட்டமுடைய சில தலைவர்கள் அரசியல் அதிகாரிகளாகப் பணிபுரிந்துள்ளனர். இவர்களுள் சூரியன் மறவன், சூரியனான மலையகுலராயன், சூரியன் சாவன் சகாயனான மலையகுலராயன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இம்மலைய குலராயர்கள் சிலர் இவ்வேந்தன் பெயரில் சிவன் கோயில்களுக்கும் திருமால் கோயில்களுக்கும் நிவந்தங்கள் பல விட்டுள்ளனர்.

கொடைகள்: இவன் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் சித்தலிங்கமடம் சிவன் கோயிலுக்கும் விக்கிரம சோழனது பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1130) நெய்வனைப் பெருமானுக்கும் நிலக் கொடைகள் அளித்துள்ளான். எனவே இவன் சிறந்த பக்தியுடையவன் என்பது புலனாகும்.

**இராசேந்திர பிரசாத்து**: (கி.பி.1884-1963) பீகாரில் சரண் மாவட்டத்தில் சீராதேவி என்ற ஊரில் 3.12.1884-இல் பிறந்தார். இவர் தந்தை மகாதேவ்சகாய். இவர் பள்ளியில் கணிதத்தில் இந்தியாவில் முதலாவதாக விளங்கினார்; விளையாட்டிலும் விருப்பம் காட்டினார்; பாரசீகம், உருது, வடமொழி, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்று விளங்கினார். இந்து, இசுலாமியப் பண்பாடுகளைப் பின்பற்றினார்.

சப்ராவில் படிக்கும்போது, இவர் திறமையைப் பாராட்டித் தலைமை ஆசிரியர் இவரை இரட்டைத் தேர்வுக்கு உயர்த்தினார். இவர் பள்ளியிறுதித் தேர்வில் முதல் தரத்தில் தேர்ச்சியுற்றார்.



இராசேந்திர பிரசாத்து

பதின்முன்றாம் வயதில் திருமணம் நடைபெற்றாலும், இவர் மனைவியோடு வாழ்ந்த காலம் குறுகியதே. இவர் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் பயின்றார். நகரத்தின் வனப்பும் விளையாட்டுகளும் கேளிக்கைகளும் இவரைக் கவரவில்லை. மிகச் சிறந்த அறிவியல் ஆசிரியர்களான டாக்டர் செ.சி. போசு, டாக்டர் பி.சி.ராய் போன்றோர் இவர் ஆசிரியர்கள். பி.ஏ., எம்.ஏ., பி.எல். ஆகிய தேர்வுகளிலும் முதல் வராகத் தேர்ச்சி பெற்று, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

சதிசு சந்திரா தோற்றுவித்த ஒரு தொண்டு நிறுவனம் (Don Society) இவரைப் பெரிதும் கவர்ந்தது. ‘பீகார் மாணவர் சங்கம்’ என்ற ஓர் அமைப்பினை 1906-ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தியாவிலேயே மாணவர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட முதல் அமைப்பு இது.

இந்தியத் தேசிய காங்கிரசு தனது ஆண்டு மாநாட்டினைக் கல்கத்தாவில்(1906) கூட்டியபோது, இராசேந்திர பிரசாத்து ஒரு தொண்டராக இருந்து பணியாற்றினார். இவர் 1911-இல் காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்தார். இலாலா லசபதிராய், அரவிந்தர், சுரேந்திரநாத் பானர்சி, கோபால கிருட்டிண கோகலே, பண்டித மதன்மோகன் மாளவியா போன்றோர் இவரைப் பெரிதும் கவர்ந்த தலைவர்கள். இவர் அவர்களோடு பழகுவதையும் பணி புரிவதையும் பெரும் பேறாகக் கருதினார்.

முசாபர்பூர்க் கல்லூரியில் 1908-ஆம் ஆண்டு ஆசிரியரானார். அரசு ஊழியம் செய்ய இவர் மனம் ஒப்பாததால், 1911-ஆம் ஆண்டு சட்டப்படிப்பில் பட்டம் பெற்ற பிறகு, கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் பணி புரியத் தொடங்கினார். புகழ் பெற்ற நீதிபதியான அசுடோசு முகர்சி கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பொறுப்பேற்றபோது, இராசேந்திர பிரசாத்தைச் சட்டக்கல்லூரியில் பேராசிரியராக நியமித்தார். இவர் எம். எல். பட்டப் படிப்பிலும் முதல் நிலையைப் பெற்றார். டாக்டர் இராசுபிகாரி போன்றோரிடம் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கோகலே தொடங்கிய 'இந்திய ஊழியர் சங்கத்தில்' (Servants of India Society) இவர் உறுப்பினரானார்.

இந்தி மொழியைப் பரப்புவதற்கும், அதன் வளர்ச்சிக்கும் இவர் பெரிதும் பாடுபட்டார். அகில இந்திய இந்தி சாகித்திய சம்மேளனத்தின் நடவடிக்கைகளில் அக்கறை காட்டினார். பாட்னாவில் 1917-இல் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது, அதன் முதல் பல்கலைக் கழகப் பேரவையிலும் ஆட்சிக் குழுவிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றினார்.

காந்தியடிகள் 1916-ஆம் ஆண்டில் காங்கிரசில் சேர்ந்தபோது, முதன்முதலாக இராசேந்திர பிரசாத்து காந்தியடிகளைப் பார்த்தார். உழவர்களுக்காகத் தொடங்கப்பட்ட புகழ்மிக்க பீகார் சம்பரான் போராட்டத்தின்போது இராசேந்திர பிரசாத்தும் காந்தியடிகளோடு இணைந்து போராடினார். இவர் 1920-இல் வழக்குரைஞர் தொழிலை விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றுக், காந்தியடிகளின் நம்பிக்கைக்குரிய முன்னணித் தலைவர்களுள் ஒருவரானார். இரௌலட்டுச் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றார்.

ஆங்கிலேய முறைக் கல்வியைத் தவிர்த்து, இந்தியப் பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியக் குடிமக்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இவர் தேசிய பல்கலைக் கழகமான பீகார் வித்தியாபீடத்தை நிறுவினார்.

இவர் சிறந்த பத்திரிகையாளர். பாட்னாவில் 'தேசம்' என்ற இந்தி வார இதழையும் 'சர்ச் லைட்' (Search Light) என்ற வார இருமுறை இதழையும் வெளியிட்டார்.

பாட்னாவில் நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். கயாவிலுள்ள புத்தகயா ஆலய நிருவாகத்தோடு தொடர்பு கொண்டு பணியாற்றியதும், சாம்செட்பூரில் தொழிலாளர் நல இயக்கத்திற்கு வித்திட்டதும் இவர்தம் சிறப்புப் பணிகளுள் சில.

'போர் தேவையற்றது' என்ற தலைப்பில் 1928-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்ள வியன்னா சென்றபோது, பிரிட்டன், பிரான்சு, செருமனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, இந்தியா கடைப்பிடிக்கும் 'சத்யாக்கிரகப் போர்' குறித்து உரையாற்றினார். ஆம்சுடர்டாமில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் பங்கேற்றார்.

உப்புச் சத்யாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு அயல்நாட்டுப் பொருள்களையும் துணிகளையும் விலக்கியமையால் இவர் கைது செய்யப்பட்டு, ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார். இவர் சிறையில் சமய, இலக்கியத் தொடர்பான நூல்களையும் அகிம்சை, சுயராச்சியம் சத்யாக்கிரகம், கல்வி, சாதி ஆகியவை குறித்து எழுதத் தேவையான நூல்களையும் படித்தார்.

காந்தியடிகள் 'அரிசன சேவா சங்கம்' தொடங்கியபோது, இராசேந்திர பிரசாத்தும் மதுரை, திருவரங்கம், ஆந்திரா, கேரளா போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று ஆலயத்திற்குள் அரிசனங்கள் சென்று வழிபடுவதற்கு வகைசெய்தார்.

இராசேந்திர பிரசாத்து 1933-இல் கைது செய்யப்பட்டு, அசாரிபாக்கில் சிறை வைக்கப்பட்டபோது, உடல் நலமின்றியிருந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது பீகாரில் நில அதிர்ச்சி ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கி, பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு இழப்பு உண்டாக்கி, உடைமைகளுக்குச் சேதம் உண்டாக்கிற்று. இராசேந்திர பிரசாத்து விடுதலை செய்யப்பட்டார். அவர் ஆயிரக்கணக்கான தொண்டர்களைச் சேர்த்து மாநில முழுவதும் மீட்புப் பணியிலும், மறுவாழ்வுப் பணியிலும் ஈடுபடுத்தினார். நாடெங்கிலும் இருந்து வந்த உதவிகளைக் கொண்டு அரிய பணிகளை இராசேந்திரபிரசாத்துத் தலைமையில் அனைவரும் ஆற்றினர்.

இராசேந்திர பிரசாத்து தம்மை நாட்டிற்கு ஒப்படைத்து விட்டதால் குடும்பத்தின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. கடன் சுமை மிகுதியானது. சம்னாலால் பசாசு, கன்சியாம் தாசு, பிர்லா போன்றோர் இவருடைய சொத்துகளை வாங்கிக், கடன்கள் அனைத்தையும் தீர்த்தனர்.

இராசேந்திர பிரசாத்து பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை

வகித்தார். இவர் 1935-இல் தமிழ்நாடு வந்து காங்கிரசை வலுவுறச் செய்தார். அபுல் கலாம் ஆசாத்தோடு அசாம் சென்று அங்குக் காங்கிரசு அரசு அமைய உதவினார். இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் கப்பல் கட்டும் தளத்திற்கு இவர் அடிக்கல் நாட்டினார். இவர் 1942-இல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்ற தால் பங்கிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். காங்கிரசு (1946) அமைச்சரவையில் உணவு அமைச்ச ராக இவர் பெறுப்பேற்றார்; இந்திய அரசியல் நிருணயசபைத் தலைவராகப் பணிபுரிந்தார்.

இந்தியா 1950 சனவரி 26-இல் குடியரசான போது, இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக இராசேந்திர பிரசாத்து தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், இரு தேர்தல்களில் அப்பதவிக்கு இவரே தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 வரை பணிபுரிந்தார். இந்தியாவின் உயரிய விருதாகிய 'பாரத ரத்னா' 1962-இல் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் பீகாரி லுள்ள சதாக ஆசிரமத்தில் 1.3.1963-இல் காலமா னார்.

அறிவு, ஆற்றல், இன்சொல், ஈகை, பணிவு, உயர்ந்த நோக்கு, ஊக்கம், எளிமை, தியாகம், தொண்டு போன்ற பல நல்ல குணங்களின் மொத்த உருவம் இராசேந்திர பிரசாத்து. இவர் இந்திய விடுதலைக்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு வகைகளில் அருந்தொண்டாற்றியவர்.

இர.ந.

**இராசேந்திரம் பிள்ளை, பா.அ.அ.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் களுள் ஒருவர்; சென்னையில் வாழ்ந்தவர். கிறித்தவ சமயத்தைச் சார்ந்த இவர் சமய, தமிழ்த் தொண்டு கள் பல புரிந்துள்ளார். இவர் தந்தையார் பெயர் அப்பாவு. அவரும் தமிழ்ப்புலமை மிக்குச் செய்யுள் இயற்றுவதில் வல்லவராக விளங்கினார். அதனால் அவர் 'அமிர்தகவி' என்னும் பட்டம் பெற்றுத் திகழ்ந்தார். இராசேந்திரம்பிள்ளை 'ஆதாம் ஏவாள் விலாசம்' என்னுமொரு நூலியற்றியுள்ளார். அதன் கண் தம் தந்தையைக் குருவாகவும் தந்தையாகவும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

இவர் மகாவிகட தூதன் என்னும் பத்திரிகை யின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இப்பத்திரி கையில் வெளியான கதைகள் தொகுத்து வெளி யிடப்பட்டுள்ளன. நான்கு தொகுதிகள் கி.பி.1897 முதல் 1899 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. பூலோக விநோதக் கதைகள் என்னும் பெயரில் அமைந்த ஒவ்வொரு தொகுதியும் 101 கதைகளைக் கொண்டதாகும். முதலாம் தொகு தியில் அமைந்த கதைகள் ஆண் பெண் பருவ மாறு தலுக்கேற்ப அவர்களிடம் தோன்றும் குணவேறுபாடு களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு கதையின் உட்பொருளை உணர்த்தும் ஒரு செய் யுள் அக்கதையின் தொடக்கத்தில் இடம்பெற்றுள் ளது. மூன்றாம் தொகுதியில் உள்ள கதைகள் அறங் கூறும் இயல்பின. நான்காம் தொகுதியில் இடம் பெற்றன உலகியல் நிகழ்ச்சிபற்றி அமைந்தனவாகும்.



**இராசேந்திரன், முதலாம் (ஆ.ஆ.1012-1044)**: பேரும் புகழும் பெற்ற பிற்காலச் சோழ வேந்தருள் முதலாம் இராசேந்திர சோழன் குறிப் பிடத்தக்கவன் ஆவான். மதுராந்தகன் என்னும் இயற்பெயர் கொண்ட இவன் சோழப் பெருமன்னன் முதலாம் இராசராச சோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன். இவன் கி.பி. 1012-ஆம் ஆண்டில் இளவரசுப்பட்டம் சூட்டப்பெற்றான். தன் தந்தை யின் இறப்பிற்குப்பின் கி.பி.1014-ஆம் ஆண்டில் பரகேசரிப் பட்டத்துடன் சோழ வேந்தனாக மணி முடி சூடினான். கல்வெட்டுகளில் இவன் 'சோழ ராசேந்திர வித்தியாதரன்' எனவும் 'ஸ்ரீ ராசேந்திர சோழதேவன்' எனவும் குறிப்பிடப் பெறுகிறான்.

இராசேந்திரனின் குடும்பம்: மாமன்னன் இரா சேந்திரனுக்கு முக்கோக்கிழானடிகள், அரிந்தவன்மா தேவி, வீரமாதேவி, பஞ்சவன்மாதேவி, நம்பிராட்டி யார் உலகுடையார், நக்கன் செம்பியன்மாதேவி யார் முதலான மனைவியர் இருந்ததாகக் கல்வெட் டுகள் வாயிலாக அறியலாம். இவனுக்கு முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1018-1054), இரண்டாம் இராசேந்திரன்(சுந்தர சோழ பாண்டியன்,கி.பி.1052-1064), பராக்கிரம சோழ பாண்டியன் (மும்முடிச் சோழன், இராச மகேந்திரன், கி.பி.1059-1063), வீர ராசேந்திர சோழன் (வீரசோழ தேவன், இராச கேசரி வர்மன் மூன்றாம் கரிகாலன், இலங்கையில் சங்கபோதி சோழன், கி.பி.1063-1070), மதுராந்தகன், பராந்தக தேவன் முதலான ஆண்மக்களும், அருண் மொழி நங்கை, அம்மங்காதேவி, குணவடிகள் முத லான பெண்மக்களும் இருந்தனர்.

வெற்றிகள்: மாவீரனாகிய இவன் தன் தந்தை யார் விட்டுச் சென்ற சோழப் பேரரசைக் கட்டிக் காத்ததுடன், தன் போராற்றலால் அதனை மேலும் விரிவுபடுத்திச் சோழரின் புகழினை உயர்த்தினான். பேராற்றல் மிக்க இவ்வேந்தனது வெற்றிகள், 'திருமன்னி வளர' என்னும் தொடக்கத்தினைக் கொண்ட இவனது மெய்க்கீர்த்திகளால் நன்கு புலனா கின்றன. இவன் இளவரசனாக இருந்த காலத்தி

லேயே இடைதுறைநாடு (இரெய்ச்சூர்ப் பகுதி), வனவாசி (குல்பர்க்கு), மண்ணைக் கடக்கம் (மால் கெட்டு) முதலான நாடுகளை வென்றான். வலிமை மிக்க கப்பற் படையைப் பெற்றிருந்த இவன், கி.பி. 1017-இல் ஈழ நாட்டின்மீது படையெடுத்து, ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து, அவனைச் சிறை பிடித்ததுடன், ஈழ நாட்டையும் சோழநாட்டு டன் இணைத்துக் கொண்டான். வென்று வாகை சூடிய சோழன் ஈழ வேந்தர் வாழையடி வாழையா கப் புனைந்துகொள்ளும் அரச முடியையும், அவர் தேவியர் முடிகளையும் (Crown), ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் ஈழ வேந்தனிடம் அடைக்கலமாக விட்டுச் சென்ற பாண்டியர் முடியையும், இந்திரன் ஆரத்தையும் கவர்ந்து கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கு டன் சோழநாடு திரும்பினான்.

ஈழநாட்டில் இணையற்ற வெற்றி பெற்ற இரா சேந்திரன் பின்னர்ச் சேரநாட்டின் மீது படையெடுத் துச் சேரனை வென்றடக்கித் தன் மேலாண்மையை அங்கு நிறுவினான். அடுத்து, பழந்தீவுகளும் சாந்தி மத்தீவும் இச் சோழனால் கைக்கொள்ளப்பட்டன, சாந்திமத் தீவென்பது 'அண்ட் ரோத்' என்னும். தீவாக இருத்தல் கூடும். அடுத்து, இவ்வேந்தன் பாண்டியரை வென்று வெண்முத்துகளைக் கவர்ந்து கொண்டான். பாண்டிய நாட்டில் சோழராட்சியை நிலைநிறுத்தும் பொருட்டு, மதுரை மாநகரின்கண் அரண்மனை அமைத்துத் தன் மகனைச் 'சடாவர் மன் சுந்தர சோழ பாண்டியன்' என்னும் பெயரில் அங்கு அரியணையேற்றிச் சோழப் பேராளனாக ஆண்டு வரச் செய்தான். இதனைப் 'பாண்டிய மண்டலத்து மதுரையில் மாளிகை எடுப்பித்துத் தன் மகன் சோழ பாண்டிய்ன் என்று அபிடேகம் செய்து' என்னும் திருவாண்டார் கோயில் கல்வெட்டால் அறியலாம். இச்சோழபாண்டியர் தம் பெயரில் தனித்துக் கல்வெட்டுகள் வெளியிடவும் அனுமதிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர்ச் சேரநாட்டு ஆட்சிப் பொறுப்பும் இச்சோழ பாண்டி யரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாளுக்கியரைத் தோற்கடித்தல்: இராசேந்திரன் கி.பி.1021-இல் சோழரின் தீராப் பகைவரான மேலைச் சாளுக்கியரின் மீது படையெடுத்துச் சென்று, சயசிங்கனை முயங்கிப் போர்க்களத்தில் தோற்கடித்தான்.இதன் விளைவாகத் துங்கபத்திரை ஆறு மீண்டும் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே எல்லையாயிற்று.

சோழப்படை அடுத்துக் கலிங்கரையும் ஒட்டரை யும் (ஒரிசா வேந்தன்) தெலுங்கரையும் வெற்றி கொண்டு, கி.பி.1019-இல் வேங்கியில் (கீழைச் சாளுக் கியரின் தலைநகரம்) இராசராச நரேந்திரனுக்கு எதிராகச் சயசிங்கன் மேற்கொண்ட சதித்திட் டத்தை முறியடித்து, வேங்கியில் அமைதியை நிலை நாட்டியது. இவ்வெற்றிகளின் விளைவாக இராசேந் திரனின் புகழ் தென்னக முழுவதும் பரவியது.

கங்கைப் படையெழுச்சி: இராசேந்திரனின் வெற்றிகளுள் கங்கைப் படையெழுச்சியே முதன்மை வாய்ந்தது. வேங்கியில் வெற்றிபெற்ற சோழப்படை அங்கிருந்து வடநாடு நோக்கி முன்னேறியது. சோழர் வெற்றிப்படை சக்கரக் கோட்டம் (சித்திர கூடம்), ஆதிநகர், தண்டபுத்தி (மிதுனபுரி), தக்கணலாடம், கீழ் வங்காளம், உத்தரலாடம் முதலான வட இந்திய அரசுகளை வென்று, தமிழரின் வீரத்தை ஆங்கு நிலை நாட்டியது. தண்டபுத்தியை ஆண்ட தரும பாலன், தக்கணலாடத்தை ஆண்ட இரண சூரன், வங்கத்தை ஆண்ட கோவிந்த சந்திரன், உத்தர லாடத்தை ஆண்ட மகிபாலன் முதலான வட இந்தியப் பெருமன்னர்கள் சோழர் படையால் தோற்கடிக்கப்பட்டனர் என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. இவ்வெற்றிகளை இராசேந்திரனது மெய்க்கீர்த்தி, 'விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்- முதிர்பட வல்லை....காமிடை வளைஇய நாமணக் கோணமும் - வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும் - பாசடைப் பழன மாசுணி தேசமும் ......... ஒட்ட விசயமும் - பூசுரர் சேருநற் கோசல நாடும் - தன்ம பாலனை வெம்முனையழித்து வண்டுறை சோலைத் தண்ட புத்தியும் ......... தங்காத சாரல் வங்காள தேசமும் ...... நித்தில நெடுங்கடல் உத்தர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்தெறிபுனல் கங்கையும்' என்று முறைப்படுத்திக் கூறுகிறது.

விளைவுகள்: இம்மாபெரும் வரலாற்றுப் புகழ் மிக்க வெற்றியின் விளைவாகச் சோழரின் புகழ் வடஇந்தியாவிலும் பரவலாயிற்று. காவிரி நாடனான இராசேந்திரன் கங்கைக்கரையில் வெற்றி பெற்றதால், 'கங்கை கொண்ட சோழன்' என்னும் விருதுப் பெயரினைப் பூண்டான். இவ்வெற்றியின் நினைவாக இவ்வேந்தன் திருச்சி மாவட்டம் அரிய லூர் வட்டத்தில் செயங்கொண்ட சோழபுரத்திற்கு அருகில் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் அழகிய புதிய நகரத்தை உருவாக்கினான்; சோழர் படை கங்கையிலிருந்து கொண்டு வந்த புனித நீரை ஊற்றிச் 'சோழகங்கம்' என்னும் பேரேரியை உரு வாக்கி, நீர்மயமான வெற்றித் தூணைஅமைத்தான். இதனைத் திருவாலங்காட்டுச் செப்பேடு 'சலமயமான சயத்தம்பம்' என்று குறிப்பிடுவதால் அறியலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ-கங்கத்தை வெட்டிய இராசேந்திரன் ஆங்கு மாபெரும் சிவன்

கோயில் ஒன்றினையும் கட்டி, 'கங்கை கொண்ட சோழேச்சுரம்' என அதற்குப் பெயர் சூட்டினான். இராசேந்திரன் தன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான்.

சோழரின் கங்கைப் படையெழுச்சியின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்க மாநிலத்தில் பரவியது. கங்கைப் படையெழுச்சியில் கலந்து கொண்ட படைத் தலைவன் ஒருவன் (கருநாடகன்) மேற்கு வங்காளத்தில் தங்கினான். அவன் வழியில் வந்த சாமந்த சேனன் என்பான் கி.பி. 1050-இல் வங்கச் சேன் மரபினைத் தோற்றுவித்தான். எனவேதான் ஆர்.டி. பானர்சி (R.D. Banerji) இராசேந்திரனின் கங்கைப் படையெழுச்சி வங்கத்தில் நிலையான அடையாளங்களை விட்டுச் சென்றதாக 'வங்க பாலர்கள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். வங்கச் சைவ மரபும் தமிழ்ச் சைவ மரபும் ஒருங்கிணைவதற்கும் இப்படையெழுச்சியே காரணமாயிற்று.

கடாரப் படையெழுச்சி: சோழநாட்டின் கடல் வாணிகத்தைப் பெருக்கும்பொருட்டோ தமிழ் வணிகர்களுக்கு இன்னல்கள் புரிந்து வந்த கடார அரசினைத் தண்டிக்கும் பொருட்டோ இராசேந்திரன் கடார நாட்டின் மீது படையெடுக்க நேர்ந்தது. இவன் கி.பி. 1025-ஆம் ஆண்டிற்கு முன்பே இப்படையெழுச்சியை மேற்கொண்டான். சோழரின் கப்பற்படை கடாரம் என்ற மலாயா, பினாங்கு பகுதியின் கெடாவையும், இந்தோனேசியாவின் தென்கிழக்குப் பகுதியான சிரீ விசயத்திலுள்ள பாலம் பாங்கு என்னுமிடத்தையும் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. போரில் தோற்கடிக்கப்பட்ட கடார வேந்தனான சங்கராம விசயோத்துங்கவர்மன் சிறை பிடிக்கப்பட்டான். இவ்வெற்றிகளை இராசேந்திரனது 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் திருவாலங்காட்டுச் செப்பேடும் விரித்துரைக்கின்றன.

இவ்வெற்றியின் விளைவாக இராசேந்திரன் 'கடாரம் கொண்ட சோழன்' என்னும் விருதுப் பெயரினைப் பூண்டான். இவ்வெற்றியினை அடுத்துத் தோன்றிய இவன் கல்வெட்டுகள் இவ்வேந்தனைப் 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ஐயன்' என்று குறிப்பிடுகின்றன.

பிற வெற்றிகள்: இவ்வெற்றியைத் தொடர்ந்து இராசேந்திரன் கீழ் கரையில் உள்ள பண்ணை (சுமத்திராவின் கீழ் கரை), மலையூர் (மலாயா), இலங்கா-சோகம் (கெடாவிற்குத் தென்பகுதி), மாயிருடிங்கம் (மலாயாவின் நடுப்பகுதி), பப்பாளம் (கிரா பூசந்திக்கு அருகில் உள்ளது), தக்கோலம் (தகோபா-மலாயா), அதனருகில் உள்ள இலிம்பங்கம், வளைப்பந்துார் ஆகியனவற்றையும், இலாமுரி தேசம் (வடசுமத்திரா), நக்கவாரம் (நிக்கோபார்த் தீவு), தாமலிங்கம்(மலாயாவின் மெலிங்நகர்)முதலான நாடுகளையும் வென்று தன்னடிப்படுத்திச் சோழரின் புகழை ஆங்குநிலைநாட்டினான். தன் கப்பற் படையின் வலிமையால் கடல் கடந்த நாடுகளின் வியத்தகு வெற்றிகள்பல பெற்ற இராசேந்திரன், இந்தியப் பேரசர்களுள் தலைசிறந்தவனாகவும் கடலாண்ட காவலனாகவும் போற்றப்படுகிறான். கடல் கடந்த நாடுகளை வென்ற வகையில் இச்சோழ வேந்தன் கிரேக்க நாட்டு மாவீரனான அலெக்சாந்தருடனும் பிரான்சு நாட்டு நெப்போலியனுடனும் ஒப்புமை கூறத்தக்கவனாவான்.

கடல் கடந்த நாடுகளைக் கொண்டதன் விளைவாகத் தமிழரின் கட்டடக்கலை, வழிபாட்டு உருவங்கள், சமயக் கோட்பாடுகள், சிற்பக்கலை ஆகியன கிழக்கிந்தியத் தீவுகளிலும், பர்மா, மலாயா, சயாம், இந்தோ-சீனா முதலான நாடுகளிலும் பரவின. தமிழரின் கடல் கடந்த வாணிகமும் ஆங்கு வளர்ந்தது. தமிழகத்தில் புத்துயிர் பெற்றுத் திகழ்ந்த இந்து சமயத்தின் கருவான ஆன்மிகப் பண்பாடு கீழை நாடுகளில் பரவி வேரூன்றியதையும், இவ்வேந்தனது கடாரப் படையெழுச்சியின் விளைவுகளுள் தலையாயதாகக் கொள்ளலாம். இவனால் வெல்லப்பட்ட கடாரப் பகுதிகள் அனைத்தும் இசுலாம் மதத்தைத் தழுவிய பின்னரும், இந்து சமயப் பண்பாட்டுச் சாயல்களைக் கொண்ட வாழ்வு முறையை மேற்கொள்ளும் அளவிற்கு அகண்ட இந்தியா (Greater India) என்ற பண்பாட்டு விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்த பெருமை இராசேந்திரனையே சாரும்.

ஆட்சிப் பரப்பு (எல்லை): மேற்கூறப்பட்ட தரைப்படை, கடற்படை வெற்றிகளால் சோழப் பேரரசு இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் மிகப் பரந்து விரிந்து கிடந்தது. சுருங்கக் கூறின் இவனது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசின் எல்லை உச்ச நிலையில் இருந்தது எனலாம். தமிழ்நாடு, தெலுங்கு தேசம், கர்நாடகம், ஒரிசா மாநிலத்தின் தென் பகுதி, சிரீலங்கா ஆகியன சோழரின் நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்தன. பரமார வேந்தனான போசராசனுடனும், சேதி நாட்டுமன்னனான காலசூரி வம்சத்துக் காங்கேயனுடனும், சாந்தல மன்னனான வித்தியாதரனுடனும் இவன் நட்புறவு கொண்டு, சோழரது பெருமையை உயர்த்தினான் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

உள்ளாட்சி: தனது ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியை அண்டை நாடுகளுடன் போரிட்டுச் சோழரின் மேலாண்மையைப் பரப்புவதில் செலவிட்ட இராசேந்திரன், தன் மக்களின் நலன் கருதி நல்

லாட்சி நல்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை 'மண்டலி' அல்லது 'மண்டல முதலிகளால்' ஆளப்பட்டு வந்தன. மண்டலங்கள் வளநாடுகள், நாடுகள் (கூற்றம்), ஊர்கள் எனப் பகுக்கப்பட்டு நிருவாகம் செய்யப்பட்டன. ஐம்பெருங்குழு, எண்பேராயம், உறுதிச் சுற்றம், அரசியல் பொறுப்புச் சுற்றம் ஆகியன மன்னனுக்கு நாடாட்சியில் துணை புரிந்தன. கிராம ஆட்சிமுறை போற்றத்தக்க வகையில் செயற்பட்டது. குடவோலை முறையில் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மிலாடுடையார், பாண்டியர், வாணர், வைதும்பர், தெலுங்குச் சோழர், கொங்காள்வார், சங்காள்வார் முதலான குறுநில வேந்தர்களும், மாராயன் அருண்மொழி, இராசேந்திர சிங்க மூவேந்த வேளான், இராசராசபிரமமாராயன், விக்கிரம சோழச் சோழிய வரையன் முதலான அரசியல் அதிகாரிகளும் மன்னனுக்கு நிருவாகத்தில் துணை புரிந்தனர். அரையன் இராசராசன், கிருட்டிணன் இராமன், உத்தம சோழப்பல்லவரையன், உத்தம சோழக் கோன், இராக மல்ல முத்தரையன், வல்லவரையன் வந்தியத்தேவன் முதலான படைத்தலைவர்கள் சோழர் படைக்கு வெற்றி ஈட்டித் தந்ததுடன், எல்லைப் புறங்களில் அமைதியையும் காத்தனர். வேளாண்மை, வாணிகம், தொழில், கைத்தொழில், கல்வி ஆகியன வளர்ச்சி பெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் மக்கள் நலம் பேண மருத்துவமனைகள் நிறுவப்பட்டு, முறையாகப் பாதுகாக்கப்பட்ட செய்திகளைப் பண்டாரவாடை, திருவாமாத்தூர் போன்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் விரித்துரைக்கின்றன.

சமயம்: இராசேந்திரன் தன் முன்னோர்களைப் போன்று சைவ சமயம் தழைத்தோங்கப் பெரு முயற்சிகளை மேற்கொண்டான். சைவ நெறி தழைத்தோங்க இவன் கங்கைக்கரை நாடுகளிலிருந்து பல சைவ சமய ஆச்சாரியர்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான். சர்வ சிவ பண்டிதர் என்னும் சிவாச்சாரியார் இவ்வேந்தனது அரச குருவாகத் திகழ்ந்ததாகத் தெரிகிறது. இவன் பல சைவக் கோயில்களையும் மடங்களையும் கட்டியதுடன் அவற்றைப் பாதுகாக்க எண்ணிறந்த அறக்கொடைகளும் செய்தான். இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் தான் பெண் தெய்வ வழிபாட்டிற்கும் உரிய இடம் அளிக்கப்பட்டது. திருக்காமக் கோட்டம் எனச் சொல்லப்படும் ஈசர் கோயிலின் அருகில் அம்மனுக்குத் தனிச் சந்நிதி அமைக்கும் வழக்கத்தைப் புகுத்திய பெருமையும் இவனையே சாரும். திருக்கோயில்களில் வழிபாடுகள் தொடர்ந்து முறைப்படி நடைபெறவும், திருவிழாக்கள் நடைபெறவும் உரிய ஏற்பாடுகளை இவன் செய்தான். சைவ நெறியே செந்நெறி என உணர்ந்து சிவத்தொண்டு புரிந்த இவன், பிற சமய வளர்ச்சிக்கும் ஆதரவு நல்கினான். சிவன் கோயில்களை எழுப்பிய இவன், எண்ணாயிரத்தில் சுந்தர சோழ ஆழ்வார் கோயில், கர்நாடகத்தில் சிக்ககன் சோ,சிரீலங்காவில் (ஈழம்) இராசேந்திர சோழப் பெரும்பள்ளி ஆகியன அமைக்கப் பெறுவதற்கும் நாகப்பட்டினம் புத்தவிகாரைக்கு அளிக்கப்பட்ட பள்ளிச்சந்தத்தை உறுதி செய்வதற்கும் பேருதவி புரிந்தான். எம்மதமும் சம்மதம் என்னும் பரந்த சமயக் கொள்கையைக் கடைப்பிடித்த வகையில், இவன் மாமன்னன்அசோகருடனும் அர்சருடனும் (Harsha) ஒப்பிடத்தக்கவன் ஆவான்.

கலைப்பணி: இராசேந்திர சோழன் தன் குல முன்னோர்களைப் போன்று கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இலக்கியக்கலை ஆகியவற்றை வளர்ப்பதில் பேரார்வம் காட்டினான். இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் கட்டடக்கலை முழுமை அடைந்தது. பேரழகு வாய்ந்த திருக்கோயில்கள் பல இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பெற்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் எழில் வாய்ந்த கங்கைகொண்ட சோழீச்சுரத்தை அமைத்த இவன், வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் கூழம் பந்தலில் கங்கை கொண்ட சோழீச்சுரர் ஆலயத்தையும், கர்நாடக மாநிலத்தில் கொத்த கெரே, தொட்டமளூர் என்னுமிடங்களில் சிவன் கோயில்களையும், சிரீலங்காவில் (ஈழம்) மாந்தோட்டம், மாத்தோட்டம் என்னுமிடங்களில் சிவன் கோயில்களையும் கட்டினான். இவன் கன்னியாகுமரியில் கோனேரீசுவரன் கோயில், தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் சுந்தரசோழ ஆழ்வார் கோயில், பனையவரத்தில் (விழுப்புரம் அருகில்) பரவை ஈசுவரமுடைய மகாதேவர் திருக்கோயில், அகரத்தில் கைலாயநாதர் கோயில் முதலானவற்றையும் கட்டியுள்ளான். இவன் தனது பட்டத்தரசி பஞ்சவன் மாதேவியின்மீது கொண்ட எல்லையற்ற காதலின் நினைவுச் சின்னமாகப் பழையாறையில் பஞ்சவன் மாதேவீச்சுரம் (இன்று இராமநாதன் கோயில் என வழங்குகிறது) என்னும் பள்ளி படைக் கோயிலைக் கட்டியுள்ளான். தன் உள்ளம் கவர்ந்த நங்கை நல்லாள் பரவை நங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கத் திருவாரூர்க் கோயிலில் வீதிவிடங்கப் பெருமானின் கோயிலைக் கற்றளியாக இவ்வேந்தன் மாற்றினான்.

இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் கர்நாடக மாநிலத்தில் பேலத்துருவிலும், கோலாரிலும் (கோலாரம்மா கோயில்) கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமழபாடி வைத்திய நாத சுவாமி கோயில், தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் தக்கண (தென்) கைலாயம், வான மங்கையில் கைலாசநாதர் கோயில் ஆகியன புதுப்பிக்கப் பட்டன. அளகாதிரிப்புத்துார்ச்சூரியன் கோயில், திருவல்லம் திருவையா ஈசுவரம் (வில்வவனேசுரர் கோயிலின் தென்புறம்) ஆகியன எடுக்கப்பெற்றதும் இவனது ஆட்சிக் காலத்திலேயாகும்.

பல கோயில்களைக் கட்டியும் புதுப்பித்தும் அருந் தொண்டு ஆற்றிய இக்கலைப் புரவலன் எண்ணிறந்த திருக்கோயில்களுக்கு அறக்கொடைகளும் அளித்துள்ளான். அவற்றுள் காமரசவல்லி கார்கோ பீசுவரம் (திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம்), திருவாலங்காட்டுச் சிவன்கோயில், வேம்பற்றூர்ச் சிவன் கோயில், திருச்சின்னாபுரச் சிவன் கோயில், கூழம் பந்தல் சிவன் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. இராசேந்திர சோழனால் புதிதாகக் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரத்தின் திட்டமும் அமைப்பும் இன்றும் பாராட்டத்தக்க அளவில் உள்ளன.

கலை உயர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். உலகப் புகழ்பெற்ற இச்சிற்பங்களின் மாற்றுரு இன்றும் பில டெல்பியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளமை போற்றுதற்குரியது. கங்கை கொண்ட சோழ புரக் கோயிலில் காணப்படும் சோமாசுகந்தர், சுப்பிர மணியர், துர்க்கை, போக சக்தி, அதிகார நந்தி போன்ற நுண்ணிய வேலைப்பாடமைந்த செப்புப் படிமங்கள், சோழர் கலைச் சிறப்பை நன்கு உணர்த்துகின்றன. இச்சிற்பங்களைக் கண்டு களிப்போர் இவ்வேந்தனது ஆட்சிக்காலம் சோழர் சிற்பக் கலையின் பொற்காலம் என்பதனை நன்குணர்வர்.

கல்வி வளர்ச்சி: இராசேந்திரனது ஆட்சிக்காலத்தில் கல்வி நன்கு வளர்ச்சி பெற்றது. தமிழ், வடமொழி, வேதம், இலக்கணம், வேதாந்தம்,மீமாம்சம் முதலானவையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப் பட்டன. திருக்கோயில்களும் மடங்களும் சிறந்த கல்வி நிலையங்களாகத் திகழ்ந்தன. தென்னார்க்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்னுமிடத்தில் இச்சோழ வேந்தனது காலத்தில் புகழ் மிக்கதொரு கல்லூரி சிறந்த கல்விப்பணியாற்றியது. திருவொற்றி



கங்கை கொண்ட சோழபுரம்

சிற்பங்களும் படிமங்களும் (Sculptures and Bronzes): இவ்வேந்தனது காலத்தில் சிறப்புற்று விளங்கிய கலைகளுள் சிற்பக்கலையும் ஒன்று. இன்றும் குன்றா அழகுடன் கங்கை கொண்ட சோழபுரச் சிவன் கோயிலில் காட்சி தரும் கலைமகள், சண்டீசப் பதம் தரும் சிவன் (சண்டீச அனுக்கிரக மூர்த்தி), திருமகள் ஆகியன இவ்வேந்தன் காலத்தைய சிற்பக்

யூரில் மூன்று கல்லூரிகளும் வேப்பத்தூரில் ஒரு வட மொழிக் கல்லூரியும் திருமுக்கூடலில் வடமொழி விடுதிக் கல்லூரியும் பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள திரிபுவனியில் ஒரு கல்லூரியும் இராசேந்திரனது ஆட்சிக்காலத்தில் சீரிய கல்விப்பணியாற்றி வந்தன என்பதனைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். ‘சரசுவதி பண்டாரம்’ என்னும் பெயரில் நாட்டின்

பல இடங்களில் நூலகங்களும் (Libraries) நிறுவப் பட்டிருந்தன.

இச்சோழ வேந்தனது ஆட்சிக் காலத்தில் சர்வ சிவ பண்டிதர், இலகுலீச பண்டிதர், ஈசான சிவ பண்டிதர், காச்ம கிராரி ஆராவமுது புருடோத்த மனான இராசேந்திர சிம்மப் பேராசிரியன், காச்ம கிராரி கிருட்டிண ரெங்கனான திரிபுவனமாதேவிப் பேராசிரியன், நம்பியாண்டார் நம்பி, நம்பி காடவ நம்பி, கருவூர்த்தேவர், அமிதசாகரர், குணசாகரர், நாராயண கவி முதலான அறிஞர்களும் பெரும்புல வர்களும் வாழ்ந்து இலக்கியப் பணி புரிந்துள்ளதால் தமிழ், வடமொழி இலக்கியங்கள் நல்ல வளர்ச்சி பெற்றன. கற்போரைக் கசிந்துருகச் செய்யும் திரு விசைப்பாக்களை இயற்றியவர் கருவூர்த்தேவர் என் பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வேந்தனது திரு வாலங்காட்டுச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி யினைச் சிறப்பான முறையில் இயற்றிய பெருமை சங்கரரின் மகனான நாராயண கவியைச் சாரும். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செப்பேடுகள், திருக் களர்ச் செப்பேடுகள் ஆகியனவும் இராசேந்திரனது ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டனவே என்பதும் இவை சிறந்த இலக்கிய நயம் கொண்டவை என்ப தும் குறிப்பிடத் தக்கன. இவன் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு நல்கியதாலும். கல்வியில் நாட்டம் கொண் டிருந்ததாலும் ‘பண்டித சோழன்’ என்னும் சிறப்புப் பெயருக்கு உரியவன் ஆனான்.

வெளிநாடுகளுடன் உறவு: இச்சோழ மன்னன் பரமாரம், சேதிநாடு, சாந்தலம், சீனம், காம்போசம் (கம்போடியா), வியட்நாம் ஆகிய நாடுகளுடனும் கிழக்கிந்தியத் தீவுகளுடனும் நட்புறவு கொண்டிருந் தான். இவன் தன் தந்தையைப் போன்று சீன நாட் டுடனும் நட்புறவு கொண்டான். எனவே கி.பி.1020 கி.பி. 1033-ஆம் ஆண்டுகளில் சீன மன்னனிடம் தூதுக்குழுக்களை அனுப்பினான். சீன வேந்தனும் சோழ அரசவைக்குத் தன் தூதர்களை அனுப்பி னான். இதன் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையே வணிக உறவும் நட்புறவும் நீடித்தன. இந் நல்லுறவினைத் தஞ்சைமாவட்டத்தில் கிடைத்துள்ள 2165 சீன நாணயங்களும் உறுதி செய்கின்றன. இரா சேந்திரன் காலத்தைய சீனவேந்தர் காலத்தில் வெளி யிடப்பட்ட இந்நாணயங்களைச் சென்னை அருங் காட்சியகத்தில் இன்றும் காணலாம். அரசியல் திற னில் பண்பாட்டு உறவும், வணிக உறவும், நட்புறவும் கொண்டு, சோழரின் வெளிநாட்டுறவுக் கொள்கை யில் புதியதோர் கட்டத்தை இராசேந்திரசோழன் தொடங்கினான் என்பது நினைவு கூரத்தக்கது.

சிறப்புப் பெயர்கள்: இராசேந்திரசோழன் வீரம், வெற்றி, ஆற்றல், செயல்திறன், கொடை, அரசியல் திறன் முதலான அருங்குணங்கள் அடையப் பெற் றான். இவன் கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்ட சோழன், மண்ணை கொண்ட சோழன், கடக்கம் கொண்ட சோழன், பூர்வ தேசமும் கங்கை யும் கடாரமும் கொண்ட கோப்பர கேசரிவர்மன், முடி கொண்ட சோழன், மலை நாடு கொண்டான், இரட்டைபாடி கொண்ட சோழன், வீரசோழன், வீர ராசேந்திரன், பராக்கிரம சோழன், சோழேந் திர சிம்மன், சயசிம்ம சிம்ம சரபன், மகிபாலகுலகா லன், இராசராசேந்திரன், உத்தமசோழன், விக்கிரம சோழன், பண்டிதசோழன், அதிசய சோழன், மனு குல சோழன், இராச வித்தியாதரன், உதார விடங் கன், தான வினோதன், நிருப திவாகரன், பார்த்தி வேந்திரன் முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றி ருந்தான் என்பதனைக் கல்வெட்டுகளாலும் செப் பேடுகளாலும் அறியலாம். கர்நாடக மாநிலத்தில் காணப்படும் இவ்வேந்தனின் கல்வெட்டுகளில் இவ் வேந்தனுக்கு வீரராட்சசன், கல்யாணபுரம் கொண்ட சோழன், கலிகந்தகா முதலான விருதுப் பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றால் இராசேந்திரனின் சிறப்பினையும் பெருமையினையும் அறியலாம்.

இறப்பு: ஏறத்தாழ 33 ஆண்டுகள் சீருடனும் சிறப்புடனும் ஆட்சி புரிந்து, புகழை உயர்த்திய பர கேசரி முதலாம் இராசேந்திர சோழன் கி.பி. 1044-ஆம் ஆண்டில் தொண்டை நாட்டில் உள்ள பிரம தேசம் (வட.ஆர்க்காடு மாவட்டம்) என்னுமிடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தான். வீரமாதேவி என்னும் அரசியார் தம் கணவனுடன் உடன்கட்டையேறி னார்.

இராசேந்திரனின் திருவுருவம்: செயற்கரிய செயல்புரிந்த செயல் வீரர்களுக்கு அவர்கள் நினை வாகத் திருவுருவச் சிலை வடித்தல் தமிழரின் மரபு. அவ்வகையில் மாவீரனாகவும் மாமன்னனாகவும் அறிவுசால் ஆட்சியாளனாகவும் திகழ்ந்த இராசேந் திரனுக்குக் கோவிந்தபுத்தூர், திருவாரூர், திருநாரை யூர், கோலார் முதலான இடங்களில் திருவுருவச் சிலைகள் எடுக்கப்பட்டன. இராசேந்திரனின் பூதவு டல் மறைந்தாலும், அவனது மங்காப் புகழினை இத்திருவுருவங்கள் இன்றும் நினைவூட்டிக் கொண்டி ருக்கின்றன.

மதிப்பீடு: இராசேந்திரன் சோழப் பெருமன்னன் இராசராசனின் மகனாகப் பிறந்து, தந்தையையும் விஞ்சிய மாவீரனாகவும் நல்லாட்சியாளனாகவும் விளங்கினான். இவன் சோழரின் புகழைத் தென்னிந் தியாவில் மட்டுமன்றி, வடநாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் விரிவடையச் செய்த செயல் வீரன் ஆவான். சோழப் பேரரசினை உச்ச நிலைக்குக் கொண்டு வந்து பொற்காலம் ஒன்றினை உருவாக்

கிய ஆற்றல் மறவனாகிய இராசேந்திரன், சோழரின் கலை வரலாற்றில் தலை சிறந்ததோர் இடத்தினைப் பெறுகிறான். அலெக்சாந்தரும் சமுத்திர குப்தனும் அசோகரும் நரசிம்மவர்மனும் தம் தந்தையைக் காட்டிலும் மிக்க புகழுடையவர்களாகத் திகழ்ந்தது போன்று, இவனும் இராசராசனை விட மேம்பட்ட சிறப்புடையவனாகத் திகழ்ந்தான். இவ்வேந்தன் கடல் கடந்த வெற்றிகளில் பாரசீக நாட்டுமகாசைர சுக்கும், கட்டடக் கலையைப் பேணிவளர்ப்பதில் உரோம்நாட்டு அகசுடசுக்கும் (Augustus), சமயப் பொறையில் மாமன்னன் அசோகருக்கும், நல்லாட்சி வழங்கியதில் சூர் வமிசத்து செர்சாவுக்கும் ஒப்பான வனாக விளங்கினான்.

தன் படை வலிமையாலும், பண்பாட்டு உறவுகளாலும், அன்றைய உலகெங்கும் மதிக்கத்தக்க அளவில், இந்தியாவில் ஓர் இந்துப் பேரரசைக் கட்டிக்காத்தவன் இராசேந்திரனே என்பது வரலாற்று உண்மையாகும். கங்கை கொண்ட சோழபுரம் என்னும் அழகிய நகரை அமைத்து, அதனைச் சிற்பக் கூடமாகவே மாற்றி, உலகோர் போற்றும் வகையில் மாபெரும் கலைப் புரவலனாகத் திகழ்ந்த இவன், இந்தியப் பெருமன்னர்களுள் தலை சிறந்த தமிழ்வேந்தன் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ம.இரா.த.

துணை நூல்:

Nilakanta Sastri, K.A., History of South India, Oxford University Press, Delhi, 1983.

இராசேந்திரன், இரண்டாம் (ஆ.ஆ. 1052–1064) பேராதிக்க மனப்பான்மை கொண்ட பிற்காலச் சோழ வேந்தர்களுள் இரண்டாம் இராசேந்திர சோழனும் ஒருவன். முதலாம் இராசேந்திர சோழப் பெருமன்னனின் இளைய மகனான இவன், கி.பி.1052–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இளவரசனாக அமர்த்தப்பட்டான். இவன் கி.பி. 1054–இல் தன் அண்ணனான முதலாம் இராசாதிராச சோழனின் (கி.பி. 1018-1054) இறப்பிற்குப் பின், பரகேசரி என்னும் பட்டப் பெயருடன் சோழப் பேரரசனாக மணிமுடி சூடினான். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன் முதலானவர்களைப் போன்று இவ்வேந்தனும் ஆதிக்கப் போர்களின் அடிப்படையில் சோழப் பேரரசை கட்டிக் காத்த பேரரசனாவான். கங்கை கொண்ட சோழபுரமே இவ்வேந்தனது ஆட்சிக் காலத்திலும் சோழரின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

அயல்நாட்டுக் கொள்கை: இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் 'இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்துச் சயக்தம்பம் நாட்டி', 'திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்', 'திருமாது புவியெனும் பெருமாதர்' முதலான மூன்றுவிதமான தொடக்கங்களைக் கொண்டுள்ளன. இவை இவ்வேந்தனது வெற்றிச் செயல்களைக் கூறுகின்றன.

இவனுடைய அயல்நாட்டுக் கொள்கை சோழரின் தொன்மைக் கோட்பாடான பேரரசுக்குரிய இராணுவ வளர்ச்சியைப் பேணி நின்றது. பேராதிக்க எண்ணங் கொண்ட இவ்வேந்தன் மேலைச் சாளுக்கியரையும் ஈழத்தவரையும் வென்றடக்குவதில் முனைந்து செயற்பட்டான்.

கொப்பத்துப் போர்: முதலாம் இராசாதிராசன் தன் தம்பியான இரண்டாம் இராசேந்திரனின் துணையுடன் மேலைச் சாளுக்கியரின் மீது படையெடுத்தான். கிருட்டிணா ஆற்றின் கரையில் உள்ள கொப்பத்தில் கி.பி. 1054-இல் முதலாம் சோமேசுவரன் (ஆகவமல்லன்) தலைமையிலான சாளுக்கியப் படைகளுக்கும், இராசாதிராசன் தலைமையிலான சோழர் படைகளுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. போரில் இராசாதிராச சோழன் கொல்லப்படவே, சோழப்படைகள் நாற்புறமும் சிதறி ஓடத் தொடங்கின. இந்நிலையில் இதனைக் கேள்வியுற்ற இரண்டாம் இராசேந்திரன் யானை மீதேறிப் போர்க்களஞ்சென்று 'அஞ்சேல் அஞ்சேல்' என்று தம் படைவீரர்களுக்கு வீரவுணர்ச்சியூட்டி, மீண்டும் போரில் உற்சாகத்துடன் ஈடுபடச் செய்து, சோழர்க்கு வெற்றி தேடித் தந்தான். சாளுக்கியப் படைத்தலைவர்களான சயசிங்கன், தசபன்மன், புலிமேசி, அசோகையன், ஆரையன், மொட்டையன், நன்னிநுளம்பன் என்போர் போர்க்களத்தில் மாண்டனர். ஆகவமல்லனும் மற்றப் படைத்தலைவர்களான துத்தன், வன்னியதேவன், குண்டமையன் ஆகியோர் போர்க்களத்தினின்றும் தப்பியோடினர். வெற்றி பெற்ற இராசேந்திரன் கொப்பத்துப் போர்க்களத்திலேயே சோழப் பெருமன்னனாக மணிமுடி தரித்துக் கொண்டான். இவ்வெற்றியின் நினைவாகக் கொல்லாபுரத்தில் இவ்வேந்தன் வெற்றித்தூண் ஒன்றையும் நிறுவினான். இச்செய்திகளைத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமழபாடி வைத்தியநாதசுவாமி கோயில் கல்வெட்டு விரித்துரைக்கிறது.

ஈழப்போர்: ஈழநாட்டில் சோழருக்கெதிராகத் தோன்றிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கப் பெரும் படை ஒன்றினை இவ்வேந்தன் கி.பி. 1058-இல் ஏவினான். சோழர் படை ஈழவிடுதலைக்குத் தலைமை தாங்கிய வீரசலாமேகன் என்ற வடஇந்திய கன்னியாகுச்சனைப் போரில் முறியடித்து, அவன் தலையையும் கொய்தது. இதனை இவ்வேந்தனது 'விரல் படைக் கலிங்கவர்மன் வீரசலாமேகனைக் கடகளிற்

றொடுபடக்கதிர் முடி கவித்து' என்னும் மெய்க் கீர்த்திப் பகுதியாலும், ஈழநாட்டில், 'சங்கிலி கனத ராவ' என்னுமிடத்தில் காணப்படும் கல்வெட்டாலும் அறியலாம். இவ்வாறு ஈழக்கிளர்ச்சி இவ்வேந்தனால் ஒடுக்கப்பட்டது. இருப்பினும் பின்னர் விசயபாகுவின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் இக்கலகம் தலையெடுத் தது.

முடக்காற்றுப் போர் (கி.பி. 1060): கொப்பத்துப் போரில் தோல்வி கண்ட ஆகவமல்லன் துவண்டுவிட வில்லை. மாறாகச் சோழரின் ஆதிக்கத்திற்குட்பட்டி ருந்த தென்மைசூர்ப் பகுதியான கங்கபாடியைப் பிடித்துக்கொண்டதுடன், சோழரைப் பழிவாங்கப் பெரும்படை திரட்டிக் கொண்டிருந்தான். இதனைக் கேள்வியுற்ற இவ்வேந்தன் தன் இளவரசனான இராசமகேந்திரனையும் தன் தம்பியான இராசேந் திரனையும் துணையாகக் கொண்டு, பெரும் படை யுடன் சாளுக்கியர்மீது பாய்ந்தான். கடிதுசென்ற சோழப்படை சாளுக்கியப்படைகளை முடக்காறு என்னுமிடத்தில் எதிர்த்தது. சாளுக்கிய மன்னன் ஆகவமல்லன், அவன் மகன் விக்கிரமாதித்தன், படைத்தலைவன் வாலதேவன், சிறப்புத் தளபதி இருகயன் ஆகியோர் சாளுக்கியரின் வெற்றிக்குக் கடும்போர் புரிந்தனர். வாலதேவன் உள்ளிட்ட படைத்தலைவர் பலர் போரில் மாண்டனர். ஆகவ மல்லன், இருகயன் முதலானோர் போர்க்களத்தி னின்றும் தப்பியோடினர். சோழர் வெற்றிக்கொடி நாட்டினர். இவ்விதமாக இராசேந்திரன் தன் வன்மையால் தன் மேலாதிக்கத்தை அண்டை நாடு களில் நிலைநாட்டினான்.

உள்ளாட்சி நிருவாகம்: தன் பன்னிரண்டு ஆண்டுக் கால ஆட்சியின் பெரும் பகுதியை இவன் போர்களில் கழித்தபோதிலும், நாடாட்சியில் நாட் டம் செலுத்தவும் தவறவில்லை. ஆட்சித்திறன் கொண்ட இவன், தன் மக்களையும் உடன்பிறப் பினரையும் உறவினர்களையும் அரசப் பேராளர் களாக அமர்த்தி, அவர்களது ஒத்துழைப்புடன் ஆட்சியை நன்கு நடத்தினான். முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மண்டல ஆட்சிமுறை இவன் காலத்திலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. அரசக் குடும்பத்தைச் சேர்ந்த பதின்மூன்று பேர் இவனது அரசாட்சியில் பங்கு கொண்டு சில நிலப்பகுதிகளை ஆண்டுவந்த தனை மணிமங்கலம், திருமழபாடி முதலான ஊர் களில் காணப்படும் கல்வெட்டுகளால் அறியலாம். இவ்வேந்தன் இவர்களுக்குச் சில விருதுப்பெயர் களையும் வழங்கிச் சிறப்பித்துள்ளான்.

இவன் தன் உடன்பிறந்தானாகிய மும்முடிச் சோழனுக்குச் சோழ பாண்டியன் என்னும் விருதை யும், மற்றொரு உடன்பிறந்தானாகிய வீரசோழ னுக்குக் கரிகாலன் (பிற்காலத்திய வீரராசேந்திரன்) என்னும் விருதையும், பிறிதொரு உடன்பிறந்தானா கிய பராந்தகனுக்குச் சோழ அயோத்திராசன் என் னும் விருதையும், சிறிய தந்தையின் மகனான ஆளவந்தானுக்கு இராசாதிராசன் என்னும் விருதை யும், தன் மக்களாகிய இராசேந்திரன், முடிகொண்ட சோழன், சோழகேரளன், கடாரங்கொண்ட சோழன் இரட்டபாடி கொண்டான் ஆகியோருக்குப் பல்வேறு போர்களில் ஆற்றிய வீரச் செயலைப் பாராட்டி முறையே உத்தமசோழன், விசயாலயன், சோழ சனகராசன், சுந்தர சோழன், சோழ கன்னகுச்சிய ராசன் முதலான விருதுகளையும் வழங்கினான். இதனைப்போன்று இவன் பேரர் இருவருக்கும் சோழ வல்லபன், நிருபேந்திரசோழன் என்னும் சிறப்புப் பெயர்களையும் வழங்கினான்.

அரசியல் அதிகாரிகள்: இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் அரச குடும்பத்தினரேயன்றி, அரசியல் அதிகாரிகள் பலர் நாட்டு நிருவாகத்தில் ஈடுபடுத்தப் பட்டனர். படைத்தலைவர் பலர் படைத்துறையிலும் அமர்த்தப்பட்டனர். இவர்களுள் சேனாபதிகள் சய முரிநாடாள்வான், சேனாபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன், இராசராச அணிமுரி நாடாள் வான், பஞ்சநதி வாணனாகிய மதுராந்தகத் தமிழ்ப் பேரரையன், வேளாளக் கூத்தனாகிய செம்பியன் மூவேந்த வேளான், சேனாபதி சயங்கொண்ட சோழ பிரமாதிராசன், உதய திவாகரன் கூத்தாடியரான வீரராசேந்திர மழவராயன், வானவன் பல்லவரை யன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். சோழரது மேலாண்மைக்குட்பட்டு மலையமான் நாட்டை ஆண்டு வந்த மிலாடுடையான் நரசிங்கவர்மனும் சோழரது மேலாண்மையை உயர்த்த உழைத்தான்.

அறப்பணிகள்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் நிவந்தங் களும் ஈயப்பட்டன. வேளக்கூத்தன் செம்பியன் மூவேந்த வேளான் என்னும் அதிகாரி மன்னனின் ஆணைக்கு இணங்கத் திருவாரூர்க் கோயில் கரு வறைக்குப் பொன்வேய்ந்ததுடன், அர்த்த சுற்று மண்டபச் சுவரையும் எழுப்பினான். இவ்வேந்தனின் சிற்றரசன் மலையமான் திருக்கோவலூரில் உள்ள திருமால் கோயிலைக் கற்றளியாக மாற்றினான். இராசேந்திரனின் தம்பியான இராசமகேந்திரன் திரு வரங்கம் அரங்கநாதருக்குப் பொன்னாலும் மணி யாலும் அரணை அமைத்து, கோயில் திருச்சுற் றாலை அமைத்து, இராச மகேந்திரன் வீதியமைத்துக் கோயில் திருப்பணியும் (Renovation) செய்துள்ளான்.

இவ்வேந்தன் நாடகம் முதலான கலைகளை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தான். இவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடைபெற ஆண்டுதோறும் 120 கல நெல்லைக் கொடையாக வழங்கியதிலிருந்து இதனை அறியலாம்.

நீதி நிருவாகம்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் நடுவுநிலை தவறாமல் அனைவர்க்கும் நீதி வழங்கப்பட்டது. வரிவசூல் அதிகாரியின் கெடுபிடி தாங்கமாட்டாமல் பெண் ஒருத்தி தற்கொலை செய்துகொண்டாள். இதனால், அவ்வதிகாரிக்கு 32 காசுகள் தண்டம் விதிக்கப்பட்டது. நாடாள்வான் என்னும் அரசியல் அதிகாரி விற்படைத் தலைவன் ஒருவனைக் கொன்றதற்காக, அவன் 96 ஆடுகள் தானமளிக்குமாறு தண்டனை விதிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட சான்றுகளால் அரசியல் அதிகாரிகளும் நீதித்துறையால் தண்டிக்கப்பட்டமை புலனாகும்.

குடும்பம்: இவ்வேந்தனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அரசியர் இருந்தனர். இவர்களுள் கிழானடிகள், திரைலோக்கிய முடையாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவனுக்கு 6 ஆண்மக்களும் மதுராந்தகி என்னும் பெண்ணும் இருந்தனர். மதுராந்தகி கீழைச்சாளுக்கிய வேந்தனான இராசராச நரேந்திரனின் மகனுக்கு மணம் செய்விக்கப்பட்டாள்.


இராசேந்திரதேவன் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் இவன் கி.பி. 1064-இல் காலமானான். இவனுடன் சோழரின் பேராதிக்க ஏகாதிபத்திய உணர்வும் மங்கியது. ம.இரா.த.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, Madras, 1984.

சதாசிவ பண்டாரத்தார், டி.வி., பிற்காலச் சோழர் வரலாறு, மூன்று தொகுதிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1974.

**இராட்கிளிபு பிரௌன், ஆல்பிரடு இரெசினால்டு** (கி.பி.1881-1955) ஓர் ஆங்கிலச் சமூக மானிடவியல் வல்லுநர்; சிறுசமூகத்தினரின் சமூக அமைப்பினை (Social Structure) அறிய முறையான கோட்பாட்டையும் பொதுமைப் பாடுகளையும் உருவாக்கியவர். ஆல்பிரடு இரெசினால்டு இராட்கிளிபு பிரௌன் (Alfred Reginald Radcliff Brown) இருபதாம் நூற்றாண்டின் முற்பாதிக் காலத்தில் வாழ்ந்த தலையாய மானிடவியலாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு சனவரி 17-ஆம் நாள் இங்கிலாந்தில்



இராட்கிளிபு பிரௌன்

பர்மிங்காமில் பிறந்தார். இவரது இயற்பெயர் பிரௌன் ஆகும். இவர் 1926-ஆம் ஆண்டில் தம் தாயின் பெயரான இராட்கிளிபு (Radcliff) என்னும் பெயரையும் இணைத்து இராட்கிளிபு பிரௌன் என்று மாற்றிப் பெயரிட்டுக் கொண்டார். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத் திரினிட்டி கல்லூரியில் (Trinity College) பயின்றபின் தம் முதல் மானிடவியல் களப்பணியை 1906 முதல் 1908 வரை அந்தமான் தீவுகளில் மேற்கொண்டார். இப்பணியின் வெற்றியை அடுத்துத் திரினிட்டி கல்லூரியின் ஆராய்ச்சிப் புத்தாய்வு ஊதியம் (Fellowship) கிடைக்கப் பெற்றார். இதனையடுத்து1910-1912இல்மேற்குஆசுத்திரேலியாவிற்கு ஆய்வுப் பயணத்தை மேற் கொண்டார். ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் உறவுமுறை, குடும்ப அமைப்பு முதலானவற்றைப் பற்றி முதன்மையாக ஆராய்ந்தார். தொங்கா(Tonga)அரசின் கல்வித்துறைக்கு இயக்குநராக 1916-ஆம் ஆண்டு பணியாற்றினார். கேப் நகரப் (Cape Town) பல்கலைக் கழகத்தில் 1920-இல் இருந்து 1925-ஆம் ஆண்டு வரை சமூக மானிடவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இங்குப் பிரௌன் ஆப்பிரிக்க வாழ்க்கையும் மொழியும் பற்றிய புலத்தை (School of African Life and Languages) நிறுவினார். சிட்னிப் பல்கலைக் கழகத்தில் 1925-இலிருந்து 1931 வரையிலும், சிகாகோப் பல்கலைக் கழகத்தில் 1931-இலிருந்து1937- வரையிலும், ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் 1937-இலிருந்து1946-வரையிலும் சமூகமானிடவியல் பேரா

சிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1947-இலிருந்து 1949 வரையிலும் எகிப்திலுள்ள பரோக்குப் (Farouk) பல்கலைக் கழகத்தில் (இப்போது அலக் சாண்டிரியாப் பல்கலைக் கழகம்) பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் 1955-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இராட்கிளிப்பு பிரௌனுக்கு அடுத்து வந்த அனைத்து மானிடவியலாரும் இவருடைய கொள்கையில் மிக்க அளவு ஈடுபாடு செலுத்தினர். இவர் 1922-இல் வெளியிட்ட அந்தமான் தீவினர் ஆய்வில் சமூக அமைப்புப் (Social Structure) பற்றிய விரிவான கொள்கையை வகுத்துள்ளார். தொடக்க காலத்தில் பண்பாடே அடிப்படை என்று எண்ணியிருந்தார். தம் ஆய்வுப் பரப்பில் முதிர்ச்சியுற்ற பொழுது, பண்பாடு சமூகத்தின் ஒரு கருத்துப் பொருளே (Abstraction) என்றும், இது மதிப்புகளையும் முறைமைகளையும் உள்ளடக்கி நிற்கிறது என்றும் எண்ணினார். இந்நிலையில் பண்பாட்டின் அறிவியலை உணருவது கடினமென்றும், மக்களுக்கிடையே அல்லது மக்கள் குழுக்களுக்கிடையே காணப்படும் அமைப்புகளையும் அவர்களுக்கிடையே நிலவும் நடத்தைக் கூறுகளையும் உறவுகளையும் அறிந்து கொள்ளுதல் எளிதென்றும் எண்ணினார். இவரது சமூக அமைப்பு (Social Structure) மிகத் தெளிவான ஒரு நிலையினைச் சமூகக் கட்டமைப்புடன் (Social Organization) தெளிவுபடுத்தி நிற்கவில்லை. 'சமூக அமைப்பு', 'சமூகக் கூட்டமைப்பு' ஆகிய இவ்விரண்டும் ஒரு பொருட்சொல்லாகக் காணப்பட்டன. அமைப்பியல்-செயற்பாட்டியல் கோட்பாட்டின் (Structural-functionalism) அணுகுமுறை இவரால் உருவாக்கப்பட்டதாகும். குடும்பம், உறவுமுறை, வயதுக் குழுக்கள், அரசியல் கட்டமைப்பு, சட்டம், பொருளாதாரக் கட்டமைப்பு முதலான செயற்பாடுகளை உள்ளடக்கிய உறவுகளை அடிப்படையாக ஆராயும் பரப்பை இவர் உருவாக்கினார். இதுவே சமூக மானிடவியல் அல்லது ஆங்கிலேய மானிடவியல் என்று கூறப்படுகிறது. இதனை ஒப்புமைச் சமூகவியல் எனவும் குறிப்பிட்டனர்.

ஆசுத்திரேலியாவில் சிட்னிப் பல்கலைக் கழகத்தில் (1925-31) பணியாற்றியபோது கல்விசார் பணியிலும் கொள்கை சார்ந்த மானிடவியல் பரப்பிலும் ஆராய்ச்சிப் பரப்பிலும் பயன்படுசார் மானிடவியல் பரப்பிலும் மிகுந்த ஈடுபாட்டினைத் தாமும் வளர்த்துக் கொண்டு மாணாக்கருக்கும் கற்பித்தார். இவர் 1931-இல் வெளியிட்ட ஆசுத்திரேலியப் பழங்குடிகளின் சமூகக் கட்டமைப்பு (Social Organization of Australian Tribe) என்னும் தம் படைப்பில் சிறந்த கோட்பாட்டினையும் அதன் அணுகுமுறையின் பயன்முறைகளையும் வெளியிட்டார். ஆசுத்திரேலியாவின் அனைத்து ஆதிக் குடிகளிலும் அவர்களின் உறவுமுறை, திருமணம், மொழி, மரபுகள், தொழில், நிலஉடைமை, பால் உறவு, வானியல் அறிவு முதலான செயற்பாடுகளின் தரவுகளை வகைப்படுத்திப் பகுத்தாய்ந்தார். இதன் அடிப்படையில் சமூகத்தின் இயல் நிகழ்ச்சிகளையும் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் கூறுகளின் செயல்தன்மையையும் அறிந்தார். இராட்கிளிப்பு பிரௌனின் முதன்மையான படைப்புகளாகக் கருதப்படுபவை அந்தமான் தீவினர் (Andaman Islanders-1922), ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் சமூகக் கட்டமைப்பு (Social Organization of Australian Tribes-1931), ஆதிக்குடிகளின் அமைப்பும் செயல் முறையும் (Structure and Function in Primate Society-1952), சமூக மானிடவியலில் முறைகள் (Methods in Social Anthropology-1958) ஆகியவையாகும்.

**இராட்டிரகூடர் (கி.பி. 753-973)** இந்தியாவில் பெரும்புகழுடன் ஆட்சிபுரிந்த ஓர் அரச மரபினராவர். இரு நூற்றாண்டுகளுக்கு மேல் தக்காணத்தில் பேரரசைப் பெற்றிருந்த இவர்கள் அக்காலத்து இந்திய அரசியலில் தலையாய இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் படைவலிமையைக் கண்டு அஞ்சாத மன்னர் வடக்கிலுமில்லை; தெற்கிலுமில்லை. திறமைமிக்க மன்னர்களை எண்ணிக்கையில் மிகுதியாகத் தோற்றுவித்த பெருமை இராட்டிரகூட மரபினைச் சாரும்.

இராட்டிரகூடரின் (Rashtrakutas) தோற்றத்தைப் பற்றி வரலாற்றாசிரியரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. இராட்டிரகூட மன்னர் தம்மை யதுகுல வழியினராகக் கூறிக்கொண்டனர். ஆனால், வரலாற்றாசிரியர் பலர் இதனை உண்மையென்று ஏற்றுக் கொள்வதில்லை. இராட்டிரகூடர் இராசபுதனத்தில் வாழ்ந்த இரதர்களின் (Rathors) வழியினர் என்று சிலரும் இரெட்டி (Reddi) குலத்தின் முன்னோர் என வேறு சிலரும் கருதுகின்றனர். ஆனால், இக்கருத்துகளுக்குத் தெளிவான சான்றுகள் இல்லை. அசோகன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள இராட்டிரிகரின் (Rasthtrikas) வழியினரே இராட்டிரகூடர்கள் என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார். இது பொருத்தமான கருத்தாகத் தெரிகிறது. இராட்டிரிகர் மகாராட்டிரத்திலும் கன்னட நாட்டிலும் இருந்தனர். இராட்டிரகூடர் போற்றியது கன்னட மொழியே; மராத்தி அன்று. இராட்டிரகூடர் தொடக்கத்தில் வாழ்ந்த ஊர் உசுமானபாது மாவட்டத்து (மகாராட்டிரம்) இலட்டூர் (Latur) ஆகும். அங்கு இப்பொழுதும் கன்னட மொழிதான் பேசப்

படுகிறது. பிறகுதான் இவர்கள் பீரார் (Berar) மாவட்டத்திலுள்ள எலிச்சபூருக்குச்(Ellichpur) சென்று குடியேறினர். அங்குத்தான் இவர்கள் செல்வாக்கு வளர்ச்சியுற்றது. இவர்களின் முதல் தலைநகர் எது வென்று தெரியவில்லை. மானியகேடம் (Manyakheta) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில்தான் கட்டப்பட்டது.

தந்திதுர்க்கன் (Dantidurga): இராட்டிரகூட மரபை நிறுவிய தந்திதுர்க்கன் முதலாம் இந்திரனின் புதல்வன். இவன் தந்தை வாதாபிச் சாளுக்கிய குலத்துடன் கொண்டிருந்த மண உறவு அவனுடைய செல்வாக்கிற்கு ஒரு காரணமாகும். இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற வாதாபிச் சாளுக்கிய வேந்தன் காலத்தில் தந்திதுர்க்கன் சிற்றரசனாக வாழ்க்கையைத் தொடங்கினான். சிறந்த போர் வீர னான தந்திதுர்க்கன் குசராத்துமீது அராபியர் படை யெடுத்தபொழுது அவர்களை எதிர்த்துக் கடும் போரிட்டுப் பெருவெற்றி பெற்றான். அதனைப் போற்றிய சாளுக்கியப் பெருவேந்தன் இவனுக்குப் பிரிதிவிவல்லபன் (Prithivivallabha), கட்காவலோகன் (Khadgavaloka) என்ற விருதுகளை வழங்கினான். பின்னர் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிமீது படையெடுத்தபொழுது தந்திதுர்க்கன் அவனுக்கு உறுதுணையாக இருந்தான். இரண்டாம் விக்கிர மாதித்தன் கி.பி. 747-ஆம் ஆண்டில் இறந்தபிறகு தந்திதுர்க்கன் தன் அரசியல் குறிக்கோளை அடையும் வாய்ப்புக் கிட்டியது. குசராத்தில் ஆட்சிபுரிந்துவந்த சாளுக்கியர்களை வென்றதுடன் கூர்சரர் நாட்டை யும் தந்திதுர்க்கன் கைப்பற்றினான். பின்னர் அவன் மாளவ நாட்டைக் கைப்பற்றி அதன் தலைநகரில் இரணிய கருப்பதானம் (Hiranyagarbhadana) செய்தான். அடுத்து, கிழக்கு மத்திய பிரதேசத்தின் மீது படையெடுத்து அதைத்தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தான். வாதாபியில் இரண்டாம் விக்கிர மாதித்தனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண் டாம் கீர்த்தி வர்மன் (Kirthivarman II) தந்திதுர்க் கனின் மேற்கூறிய வெற்றிகள் தனக்குத் தீங்காகும் என்பதை உணர்ந்து, அவனுடன் போருக்கு ஆயத்த மானான். போர் எங்கு நடந்தது என்பது தெரிய வில்லை. இருப்பினும் அதில் தந்திதுர்க்கன் வெற்றி பெற்றான் என்றும் அதன்விளைவாக அவன் தனக்கு மகாராசாதிராசன், பரமேசுவரன், பரமபட்டாரகன் என்றெல்லாம் பட்டப்பெயர் சூட்டிக் கொண்டான் என்றும்தெரிகிறது. இப்போருக்குப் பிறகு தந்திதுர்க் கன் நீண்டநாள் வாழவில்லை. அவன் கி.பி. 758க்குள் இறந்து விட்டான் என்பது திண்ணம். தந்திதுர்க்கன் காஞ்சி மன்னன் இரண்டாம் நந்திவர்மனுடன் நல் லுறவு கொண்டிருந்தான்; தன் மகளை அப்பல்லவ னுக்குத்திருமணம் செய்துகொடுத்தான். அவன் மகன் தான் பல்லவ தந்திவர்மன்.

முதலாம் கிருட்டிணன்: தந்திதுர்க்கனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த முதலாம் கிருட்டிணன் முன்னவனின் சிற்றப்பன். முன்னர்த் தோல்வியுற்ற சாளுக்கிய வேந்தன் இரண்டாம் கீர்த்திவர்மன் மீண்டும் போரிட வந்தான். கிருட்டிணன் அவனை இறுதியாகத் தோற்கடித்ததுடன் சாளுக்கியர் செல் வாக்கை முற்றிலும் அழித்துவிட்டான். சாளுக்கிய வேந்தனுக்கு உதவி புரிந்த மேலைக் கங்க (Western Ganga) மன்னன் நாட்டின் மீது படையெடுத்து அவனையும் ஒடுக்கினான். அடுத்து, தன்னிடம் பகைமை கொண்ட கீழைச் சாளுக்கியர் நாடான வேங்கிமீது படையெடுத்து வெற்றிபெற்றான். தோல்வியுற்ற நான்காம் விட்டுணுவர்த்தனன் (Vishnuvardhana IV) இராட்டிரகூடர் தலைமையை ஏற்றுக்கொண்டதுடன் தன் மகளைக் கிருட்டிணன் மகனான துருவனுக்குத் திருமணம் செய்துவைத்தான். கிருட்டிணன் இறுதியாக வென்றது தென்கொங்கணம் (South Kongan). இவன் காலத்தில் இராட்டிரகூடப் பேரரசு மும்மடங்கு வளர்ச்சிபெற்றது. கிருட்டிணன் காலத்தில்தான் எல்லோராக் (Ellora) கைலாசக் கோவில் உருவாகியது. இந்தியாவில் உள்ள குகைக் கோவில்கள் அனைத்திலும் அதுவே பெரியதும் வனப் பில் சிறந்ததுமாம். இராட்டிரகூடர் கலைச்சிறப்பிற்கு அது சிறந்ததொரு சான்றாக உள்ளது. முதலாம் கிருட்டிணன், சுபதுங்கன், அகாலவருடன் என்ற பட் டங்களைக் கொணடிருந்தான்.

இரண்டாம் கோவிந்தனும் துருவனும்: கிருட்டி ணன் கி.பி. 773-இல் இறந்தபின் அவன் மூத்த மக னான இரண்டாம் கோவிந்தன் அரியணை ஏறினான். இவன் பிரபூதவருடன், விக்கிரமாவலோகன் என்ற பட்டங்களைப் பெற்றிருந்தான். சிறந்த போர் வீர னான இவன் பதவிக்கு வந்த பின் சில போர்களில் வெற்றிபெற்றதாகத் தெரிகிறது. ஆனால், இவன் போக்கு விரைவில் மாறியது. ஆட்சிப் பொறுப்பைப் புறக்கணித்த இம்மன்னன் அந்தப்புர இன்பத்திற்கு இரையானான். இளவலான துருவன் அரசைத் தன் போக்கில் நடத்த முற்பட்டான். அதனையுணர்ந்த கோவிந்தன் தன் தம்பியை ஆட்சிப் பொறுப்பினின்று நீக்கினான். செயற்றிறம் இழந்த கோவிந்தனின் அப்போக்கால் அரசியலில் குழப்பம் தோன்றியது. சிற்றரசர்கள் கலகம் செய்யத் தொடங்கினர். அச் சூழ்நிலையில் துருவனும் தன் தமையனுக்கு எதிராகக் கிளம்பினான். கோவிந்தன் தன் நிலையை உணர்ந்து காஞ்சி, கங்கவாடி, வேங்கி, மாளவம் முதலிய நாட்டு மன்னர்களின் உதவியை நாடினான். அத்தகைய உதவியைக்கோவிந்தன் பெறும் முன்னர், துருவன்

அவனைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அரியணை ஏறினான். இது நிகழ்ந்தது கி.பி. 780-ஆம் ஆண்டு.

துருவன் நிருபமா, கலிவல்லபன், தாராவருடன், சிரீவல்லபன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். பட்டத்தை அடைந்த பிறகு துருவன் தன் தமைய னுக்கு உதவிய மன்னர்களுக்குத் தக்க பாடங் கற்பித் தான். மேலைக் கங்கர் நாட்டின்மீது படையெடுத்து அதன் மன்னனைப் போரில் தோற்கடித்ததுடன் அவன் மகனையும் சிறையிலடைத்தான். மேலும், அந்த நாட்டைத்தன் பேரரசுடன் இணைத்துக்கொண் டான். பிறகு துருவன் காஞ்சிமீது படையெடுத்தான். அப்பொழுது காஞ்சி மன்னனாக இருந்த தந்திவர்மன் துருவனுக்குப்போர் யானைகள் பலவற்றை அளித்து உடன்படிக்கை செய்துகொண்டான். மேற்கூறிய வெற்றிகளால் துருவன் தென்னிந்தியாவில் இணை யற்ற பெருவேந்தனாக விளங்கினான்.

தெற்கே தன் செல்வாக்கை நிலைநிறுத்தியபின் துருவன் வடஇந்தியாவின் மீது கவனம் செலுத்த முற்பட்டான். அப்பொழுது கன்னோசி நாட்டை ஆண்டுவந்த இந்திராயுதன் என்பவன் ஆற்றலற்றவன். அதைப் பயன்படுத்திக்கொண்டு கூர்சர பிரதிகார மன்னனான வத்சராசனும் வங்காளத்தில் ஆட்சி புரிந்துவந்த பாலமன்னனானதருமபாலனும்கன்னோசி நாட்டைத் தத்தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப் போட்டியிட்டுப் போர் புரிவாராயினர். இராட் டிரகூடர் செல்வாக்கை வடஇந்தியாவில் நிலை நாட்ட அது தக்க வாய்ப்பென்பதை உணர்ந்த துரு வன், தக்க ஏற்பாட்டுடன் வடக்கே படையெடுத்துச் சென்றான். அதனை அறிந்த வத்சராசன் போருக்கு ஆயத்தமானான். சான்சி (Jhansi) அருகே நிகழ்ந்த அப்பெரும் போரில் வ்த்சராசன் தோல்வியுற்றதுடன் மீண்டும் போர் புரிவதற்கஞ்சி இராசபுதனத்திற்கு ஓடிவிட்டான். அடுத்து, துருவன் தருமபாலனுடன் போர் செய்து அவனையும் போர்க்களத்தினின்று விரட்டினான். இவ்வெற்றிகளுக்குப் பிறகு துருவன் கன்னோசியை நோக்கிப் படையைச் செலுத்தாது தன் நாட்டிற்குத் திரும்பிவிட்டான். துருவனின் வட நாட்டுப் படையெடுப்புப் பயனற்றதெனக் கூற முடி யாது. ஏனெனில், அவன் தன் தலைநகருக்கு மிகுதி யான கொள்ளைப் பொருள்களைக் கொணர்ந்தான். இப்போர் நிகழ்ந்த காலம் கி.பி. 790.

துருவனுக்குப் பல பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூன்றாம் மகனான கோவிந்தன் ஆற்றல் மிக்கவன். துருவன் அவனை இளவரசனாக நியமித் ததுடன், சிறிதுகாலம் சென்றபின் தன் அரச பதவி யைத் துறந்ததாகவும் கூறப்படுகிறது.

மூன்றாம் கோவிந்தன்: மூன்றாம் கோவிந்தன் கி.பி. 793-ஆம் ஆண்டு அரியணையேறினான். இவன் தமையன் இசுதம்பன் (Sthambha) மேலைக் கங்கர் நாட்டில் அரசப் பேராளராகத் தொடர்ந்து இருந்துவந்தான். சிறிதுகாலம் பேரரசில் அமைதிநில விற்று. பின்னர் இசுதம்பன் அரியணையைக் கோவிந் தனிடமிருந்து கைப்பற்றத் திட்டமிட்டான். அதற்கு உதவச் சில சிற்றரசர்களும் அண்டை நாட்டு மன்னர் களும் முன்வந்தனர். அவர்களுடன் சேர்ந்து இசுதம் பன் செய்த கலகத்தைக் கோவிந்தன் அடக்கினான். தோற்ற தன் தமையனைக் கோவிந்தன் பெருந்தன் மையுடன் நடத்தினான்; மீண்டும் அவனை மேலைக் கங்கர் நாட்டிற்கு அரசப் பேராளராக இருந்துவரு மாறு செய்தான். அதன்பின் இறுதிவரை அவன் எவ் விதத் தொல்லையையும் அளிக்கவில்லை. பின்னர் மேற்கூறிய கலகத்தில் ஈடுபட்ட மேலைக் கங்கன் நாட்டின் மீது கோவிந்தன் படையெடுத்தான். சிவ மாரன் என்ற அந்த மேலைக் கங்கன் துருவனால் சிறையில் வைக்கப்பட்டான். கோவிந்தன் பட்டத் திற்கு வந்ததும் அவனிடம் தன் நட்பினைக் காட்டும் வழியாகச் சிறையினின்றும் அவனை விடு வித்தான். நன்றி மறந்த சிவமாரன் இசுதாபனுடன் சேர்ந்துகொண்டு கோவிந்தனுக்கெதிராகக் கிளம்பிய தால், கோவிந்தன் அவனுக்குத் தக்க பாடம் புகட்ட முடிவு செய்தான். அதன் காரணமாக ஏற்பட்ட போரில் இசுதம்பனும் கோவிந்தனுக்கு உதவி புரிந் தான். கோவிந்தன் போரில் வெற்றிபெற்றதுடன் சிவமாரனைப் பிடித்து மீண்டும் சிறையிலடைத்தான் அதன்பின் கோவிந்தன் தனக்கெதிராக இருந்த நந்திவர்ம பல்லவன் நாட்டின்மீதுபடையெடுத்தான். இராட்டிரகூட வேந்தனின் ஆற்றலையும் படைவலி மையையும் உணர்ந்த அப்பல்லவன் அவனுக்கு அடி பணிந்தான். அதன்பின் கோவிந்தனை எதிர்க்கக் கூடிய மன்னர் தெற்கே எவருமிலர். அப்பொழுது வேங்கி மன்னனாக இருந்த நான்காம் விட்டுணுவர்த் தனன் கோவிந்தனுக்குத் தாய்வழிப் பாட்டன் ஆவான். இருவருக்கும் நல்லுறவு இருந்தது.

இவ்வாறு தென்னகத்தில் தன் வலிமையை நிலைநாட்டிய பிறகு கோவிந்தன் வட இந்திய அரசி யலில் தன் கவனத்தைச் செலுத்தினான். துருவன் கி.பி. 790-இல் வட இந்தியாவிலிருந்து வெற்றியுடன் திரும்பிய பிறகு அங்குப் பெரிய மாறுதல்கள் ஏற்பட் டன. தருமபாலன் மீண்டும் கன்னோசிமீது படை யெடுத்து வெற்றி பெற்றான். அங்குத் தனக்கு வேண்டிய சக்கராயுதன் என்பவனை அந்நாட்டரச னாக அமர்த்தினான். அதனால், வெகுண்ட கூர்சர பிரதிகார மன்னனான இரண்டாம் நாகபட்டன் தரும பாலனையும் சக்கராயுதனையும் போரில் வென்று

கன்னோசியைத் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தான். அந்நிலையில்தான் கோவிந்தன் வடக்கே படையெடுத்துச் செல்ல முடிவுசெய்தான். அதற்கான ஏற்பாடுகள் தக்கவாறு செய்யப்பட்டன. அதனை உணர்ந்த நாகபட்டனும் போருக்கு ஆயத்தமானான். பண்டல்கண்டில் இருபடைகளுக்கும் நிகழ்ந்த போரில் நாகபட்டன் தோல்வியுற்றுப் போர்க்களத்தைவிட்டு ஓடிவிட்டான். அப்போர் முடிவினைக் கேட்ட தருமபாலனும் கோவிந்தனுக்கு அடிபணிந்தான். அதேபோல் வேறு சில வடநாட்டு மன்னரும் செய்தனர். எனவே, கோவிந்தன் கன்னோசிக்குச் செல்லாமலேயே நாடு திரும்பிவிட்டான். இப்போர் கி.பி. 800-இல் நிகழ்ந்ததாகக்கருதப்படுகிறது. அதன் பின்னர்த்தான் முதலாம் அமோகவருடன் பிறந்தான்.

வேங்கி நாட்டில் நான்காம் விட்டுணுவர்த்தனனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண்டாம் விசயாதித்தன் கோவிந்தனுடன் பகைமை பாராட்டியதால், இராட்டிரகூட மன்னன் அவனுடன் போரிட்டு வென்று அவனை அரியணையினின்றும் அகற்றித், தன்னுடன் ஒத்துச்சென்ற வீமன் சாளுக்கியை (Bhima-Salukki) அரசனாக்கினான். மேலும், கோவிந்தன் வடக்கே போரிடச் சென்றிருந்த பொழுது தெற்கே பல்லவ, பாண்டிய, கேரள, மேலைக் கங்க மன்னர்கள் அவனுக்கெதிராக ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தினர். எனவே, கோவிந்தன் அவர்களுடன் போரிட முனைந்தான். அவன் படை பல்லவன் தலைநகரான காஞ்சியைக் கைப்பற்றியது. இலங்கை மன்னன் கூட அவனுக்கஞ்சி அடிபணிந்தான் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு கோவிந்தன் வடக்கேயும் தெற்கேயும் நிகரற்ற பெருவேந்தனாகத் திகழ்ந்தான். அவன் காலத்தில் இராட்டிரகூடர்களின் புகழ் பெருநிலையை எட்டியது.

முதலாம் அமோகவருடன்: மூன்றாம் கோவிந்தனின் மகனான அமோகவருடன் கி.பி. 814-ஆம் ஆண்டு அரியணையேறினான். அவன் நிருபதுங்கன், மகாராசசண்டன், வீரநாராயணன் முதலிய பட்டங்களைக் கொண்டிருந்தான். பதவிக்கு வரும்பொழுது அவனுக்கு வயது பதினான்கு. எனவே, அவன் தக்க வயதை அடையும் வரை கர்க்கன் (Karkka) என்பவனை ஆட்சியை நடத்திவருமாறு கோவிந்தன் ஏற்பாடு செய்திருந்தான். தொடக்கத்தில் இவ்வேற்பாடு பயனுடையதாக இருந்தது. ஆனால், சில ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. அமோகவருடனுக்குப் பகையான உறவினரும் அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து ஒரு பெரும் கலகத்தை உண்டு பண்ணினர். அது தலைநகருக்கும் பரவியதால் இளைஞனான அமோகவருடன் வேறு இடத்திற்குச் செல்லும்படி நேரிட்டது. இருப்பினும் அரசை நடத்தி வந்த கர்க்கன் நிலைமையைத் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்துவிட்டான். அதற்குச் சில ஆண்டுகள் ஆயின என்பது குறிப்பிடத்தக்கது. அமோகவருடனின் நிலைமை கி.பி. 821-இல் வலுப்பெற்றது. அடுத்த சில ஆண்டுகள் அவன் நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் ஈடுபட்டிருந்தான்.

பின்னர்த் தன் தொல்லைகளுக்குப் பெரும் காரணமாக இருந்த வேங்கி நாட்டரசனான விசயாதித்தனைப் பழிவாங்க அவன் நாட்டின்மீது படையெடுத்தான். அங்கு நிகழ்ந்த போரில் அமோகவருடன் விசயாதித்தனைத் தோற்கடித்ததுடன் அவன் நாட்டைக் கைப்பற்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும் கி.பி. 845க்குள் வேங்கிநாடு இராட்டிரகூடர்களின் ஆட்சியினின்று விடுபட்டுவிட்டது.

அதேபோன்று தன்னுடன் முரண்பட்ட மேலைக் கங்கர்களுடன் அமோகவருடன் இருபதாண்டுகள் போர்புரிந்தும் பயனில்லாமற் போயிற்று. இராட்டிரகூடர் படை அந்நாட்டின் பலவிடங்களில் தோல்வியுற்றது. இறுதியில் அமைதியை விரும்பிய அமோகவருடன் தன் மகளை முதலாம் பூதுகன் (Butuga I) என்ற மேலைக்கங்க இளவரசனுக்குத் திருமணம் புரிந்துவைத்ததன் மூலம் பகையைநீக்கினான். அதன் பின் மேலைக்கங்கர்களுக்கும் இராட்டிரகூடர்களுக்கும் நல்லுறவு தொடர்ந்து இருந்தது.

அமோகவருடனுக்கு அங்க, வங்க, மகத, மாளவ, வேங்கி மன்னர்கள் கட்டுப்பட்டிருந்தனர் என்பது ஓரளவே உண்மையாகும். வேங்கி நாடு அவனுக்குச் சிறிதுகாலம் கட்டுப்பட்டிருந்தது உண்மை. ஆனால் அவன் மாளவத்திற்காகப் பிரதிகார மன்னனுடன் செய்த போரில் வெற்றியடையவில்லை. முதலில் குறிப்பிட்ட மூன்று நாடுகள் அமோகவருடனின் பகைவனான தேவபாலனின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. அவனுடன் அமோகவருடன் போர் செய்தானா? வெற்றிபெற்றானா? என்பனவெல்லாம் அறியச் சான்றுகள் இல்லை.

அமோகவருடன் ஆட்சியின் பிற்பகுதியிலும் நாட்டில் அமைதியில்லை. குசராத்தில் ஆட்சிபுரிந்து வந்த தன் உறவினர்களுடன் அமோகவருடன் சற்றேறக்குறையக் கால் நூற்றாண்டுக்காலம் போரிடும்படி நேரிட்டது. இறுதியில், கூர்சரப்பிரதிகாரர் படையெடுக்கும் சூழ்நிலை தோன்றியபொழுது,இரு சாராரும் உடன்பாட்டிற்கு வந்தனர். இவ்வாறு அமோகவருடனின் ஆட்சியில் கலவரங்களும் போர்களும் மிகுந்திருந்தன.

அமோகவருடன்தான் மானியகேட நகரைக் கட்டியவன். அது சோழர் கல்வெட்டுகளில் மண்ணைக் கடக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமோகவருடனுக்குப் போரைவிட இலக்கியத்தில்தான் மிகுந்த ஈடுபாடிருந்தது. அவன் கன்னடம், வடமொழி போன்ற மொழிகளில் மிகுந்த பயிற்சி பெற்றிருந்தான். கவிராசமார்க்கம் என்ற நூல்தான் கன்னடத்தில் யாப்புப் பற்றி முதன்முதல் எழுதப்பட்ட நூலாகும். அதை இயற்றியவன் அமோகவருடனே. பிரசனோத்தர ரத்னமாலா என்ற வடமொழி நூலும் இவனால் இயற்றப்பட்டதென்பர். மேலும், ஆதிபுராணத்தை இயற்றிய சினசேனரும் (Jinasena) கணித சாரசங்கிரகாவை இயற்றிய மகாவீராச்சாரியாவும் அமோகவிருத்தியை இயற்றிய சாகடாயானனும் சிரீவிசயனும் இவன் அவையில் வீற்றிருந்தனர்.

இவன் வைதிக இந்துசமயத்தைப் பின்பற்றிய போதிலும் பிற சமயங்களை நன்கு போற்றி ஆதரித்துள்ளான். சமண சமயத்தில் இவனுக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. இவன் அவையிலிருந்த சினசேனன் குறிப்பிடத்தக்க சமண அறிஞன் ஆவான். இராட்டிரகூட நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் சமண சமயத்தைப் பின்பற்றினார்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மேலும், அங்கு வந்த அராபியர்கூட எவ்வகைக் கட்டுப்பாடுகளின்றியும் தம் சமயத்தைப் பின்பற்றினர்.

இரண்டாம் கிருட்டிணன்; அமோகவருடனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் கிருட்டிணன் பட்டத்திற்கு வந்தான். இவன் அகாலவருடன், சுபதுங்கன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். இவன் காலத்தில் கூர்சரப் பிரதிகாரர்களின் ஆதிக்கம் ஓங்கத் தலைப்பட்டது. அதனைத் தடுக்க இவன் பெரும் போர் ஒன்றைப் புரிந்தான். குசராத்தில் ஆட்சிபுரிந்த இவன் உறவினர்கள் அப்போரில் இவனுக்குப் பேருதவி புரிந்தனர். இறுதியில் கிருட்டிணன் வெற்றி பெற்றான்.

வேங்கிநாட்டு மன்னனான மூன்றாம் விசயாதித்தன் இராட்டிரகூட மன்னனை எளியவன் என்றெண்ணி அவன் நாட்டின் வட, தென்பகுதிகளில் படையெடுத்து அதில்வெற்றியும் பெற்றான். எதிர்பாராது ஏற்பட்ட அத்தாக்குதலை இரண்டாம் கிருட்டிணன் முறியடித்ததுடன் விசயாதித்தனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த வீமனைச் சிறைபிடித்தான். பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டின்படி வீமன் விடுதலையாகி வேங்கியில் அரசாளத் தொடங்கினான். சிறிதுகாலம் கழித்து மீண்டும் அவன் கிருட்டிணனுடன் முரண்பட்டபொழுது மீண்டும் அவன் போரில் தோற்கடிக்கப்பட்டான்.

இரண்டாம் கிருட்டிணன் பிற்காலச் சோழருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தான். தன் மகளை முதலாம் ஆதித்த சோழனுக்குத் திருமணம் செய்து வைத்தான். அவளுக்குப் பிறந்த கன்னரதேவனுக்கு அரசபதவி கிடைக்காத காரணத்தால், இரண்டாம் கிருட்டிணனுக்கும் முதலாம் பராந்தக சோழனுக்கும் பகை ஏற்பட்டது.

இவன் சமயத் துறையில் தன் தந்தையைப்போல் விளங்கினான். சமண சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான்.

மூன்றாம் இந்திரன்: இரண்டாம் கிருட்டிணன் கி.பி. 914-இல் இறந்தபிறகு அவன் பேரனான மூன்றாம் இந்திரன் பதவிக்கு வந்தான். பேராற்றல் மிக்கவனான அவன் நித்தியவருடன், இரட்டகந்தர்ப்பன், கீர்த்திநாராயணன், இராசமார்த்தாண்டன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். அவன் முதலில் பரமார உபேந்திரனைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. அடுத்து, கூர்சரப் பிரதிகார மன்னனான மகிபாலனை எதிர்த்து இந்திரன் கன்னோசி மீது படையெடுத்தான். இராட்டிரகூடப் படையைக் கண்டு அஞ்சிய மகிபாலன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். மூன்றாம் இந்திரன் கன்னோசியைக் கைப்பற்றி வட இந்தியாவில் இராட்டிரகூடர் பெருமையை மீண்டும் நிலைநாட்டினான். இந்திரன் வேங்கி நாட்டுடன் நீண்ட காலம் போர் செய்த போதும் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. எதிர்பாரா வகையில் மூன்றாம் இந்திரன் கி.பி. 922-இல் இறந்துவிட்டான். அதற்குப் பிறகு அவன் இளவலான இரண்டாம் அமோகவருடன் பட்டத்திற்கு வந்தான். விரைவில் அவன் தன் இளவலான நான்காம் கோவிந்தனின் சூழ்ச்சிக்கு இரையானான். அடுத்துப் பட்டத்தை அடைந்த நான்காம் கோவிந்தன் முதலாம் பராந்தக சோழன் மகளை மணந்தவன். அவன் கொடுங்கோலனாகவும் முறை கெட்ட வாழ்க்கையையுடையவனாகவும் இருந்ததால் எல்லோருடைய வெறுப்பிற்கும்ஆளானான். அவனை விரும்பாத சிற்றரசர் அவன் உறவினனான மூன்றாம் அமோகவருடனை அரியணை ஏறும்படி கேட்டுக் கொண்டனர். அதன்விளைவாக நிகழ்ந்த மோதலில் கோவிந்தன் தோல்வியுற்றுத் தன் மாதுலன் பராந்தகச் சோழனிடம் வந்து தங்கியிருந்தான் எனவும், பின்னர் கி.பி. 939-இல் இரண்டாம் அமோகவருடன் இறந்தவுடன் மீண்டும் அரியணையைக் கைப்பற்ற அவன் முயற்சி செய்தும் பயனில்லாமற்போயிற்று எனவும், அவனுக்கு உதவியதால் பராந்தக சோழன் மூன்றாம் கிருட்டிணனின் தீராப் பகைக்கு

ஆளாயினன் எனவும் வரலாற்றாசிரியர் சதாசிவ பண்டாரத்தார் கூறுவது உண்மையே.

மூன்றாம் கிருட்டிணன்: மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 939-இல் பதவிக்கு வந்தபோது அகாலவருடன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான். தொடக்கத்திலிருந்தே அவன் தனக்கெதிராகச்செயற்பட்டசோழப் பெருவேந்தனான முதலாம் பராந்தகனுக்குத் தக்க பாடம் கற்பிக்க முடிவுசெய்து போருக்கு ஆயத்தமானான். அதில் அவனுக்கு உறுதுணையாக விளங்கியவன் அவன் மைத்துனனும் மேலைக் கங்க மன்னனுமான பூதுகனே. இராட்டிரகூட மன்னனின் பகையைக் கருதிப் பராந்தகன் தொண்டைமண்டலத்தில் தன் படைகளைப் பெருக்கியதுடன் தன் மூத்த மகனான இராசாதித்தனை அங்கிருக்கச் செய்தான். தக்கோலப் போருக்கு முன்னரே தொண்டைமண்டலத்தில் இரு சாராருக்கும் சில மோதல்கள் ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், அவை பற்றிய செய்திகளை அறிய இயலவில்லை. வடார்க்காடு மாவட்டத்துத் தக்கோலத்தில் கி.பி. 940-இல் இராட்டிரகூடர்களுக்கும் சோழர்களுக்கும் ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதில் சோழர் படை தோற்றதுடன் இராசாதித்தனும் பூதுகன் எய்த அம்பினால் இறந்தான். அதன்பின் மூன்றாம் கிருட்டிணன் தொண்டைமண்டலம் முழுவதையும் தன்னாட்சியின் கீழ்க் கொணர்ந்தான். அவன் தன் படையைத் தெற்கே இராமேசுவரம் வரை செலுத்தியதாக அல்டேகர் (Alteker) என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். ஆனால், அதற்குத் தக்க சான்றுகள் இல்லை. எனினும், மூன்றாம் கிருட்டிணன் தன்னைக் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று தன் கல்வெட்டுகளில் கூறிக்கொள்கிறான். போரில் தனக்குதவிய பூதுகனுக்கு மூன்றாம்கிருட்டிணன் வனவாசி நாட்டையும் வேறுசில இடங்களையும் அளித்தான்.

பின்னர் மூன்றாம் கிருட்டிணன் பண்டல்கண்டுமீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பினான். அதனையடுத்து அவன் மாளவத்தின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான உச்சயினியைக் கைப்பற்றிப் பரமார மன்னனின் செல்வாக்கை ஒடுக்கினான். மேலும் வேங்கிநாடு, மூன்றாம் கிருட்டிணன் ஆட்சியின் பிற்பகுதியில் இராட்டிரகூடர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. சுருங்கக் கூறுமிடத்து அக்காலத்தில் மூன்றாம் கிருட்டிணன் தென்னகத்தின் இணையற்ற பெருவேந்தனாய் விளங்கினான்.

சாந்தி புராணத்தை இயற்றிய பொன்னா என்ற கன்னடப் புலவரை மூன்றாம் கிருட்டிணன் ஆதரித்தான். ஆதி புராணத்தையும் பம்பபாரதத்தையும் இயற்றிய முதலாம் பம்பா இவன் காலத்தில் வாழ்ந்தவரே. அவரை ஒரு குறுநில மன்னன் ஆதரித்தான். இவ்விரு கன்னடப் புலவர்களும் சமண சமயத்தைப் பின்பற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொட்டிகனும் இரண்டாம் கர்க்கனும்: மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 969-இல் இறந்தபின் அவன் இளவலான கொட்டிகன் அரியணை ஏறினான். இவனது திறமையின்மையை நன்குணர்ந்த மாளவ மன்னன் சீயகன் (Siyaka) கி.பி. 972-இல் இராட்டிரகூட நாட்டின்மீது படையெடுத்துத் தலைநகரான மானியகேடத்தைக் கைப்பற்றிக் கொள்ளையடித்துச் சென்றான். அதே ஆண்டில் மனமொடிந்து கொட்டிகனும் இறந்து விட்டான். அடுத்து, பட்டத்திற்கு வந்த இரண்டாம் கர்க்கன் கொட்டிகனினும் ஆற்றல் குறைந்தவன். அதனால், அரசியல் குழப்பம் மிகுந்தது. அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு சாளுக்கிய குலத்தைச் சேர்ந்த இரண்டாம் தைலன் (Taila II) என்பவன் கலகம் செய்தான். அதனை அடக்கச்சென்ற இரண்டாம் கர்க்கன் கடும் போரிட்டும் இறுதியில் முழுத் தோல்வியடைந்து வேறிடம் சென்றுவாழ நேரிட்டது. இவ்வாறு கி.பி. 973-இல் இராட்டிர கூடர்களின் ஆட்சி முடிவுற்றது.

எம்.எஸ்.கோ.

துணை நூல்கள்:

**Yazdani**, G., The Early History of Deccan, Oriental Books Reprint Corporation, New Delhi, 1985.

**Nilakanta Sastri**, K.A., A History of South India Oxford University Press, Delhi, 1983.

***இராட்டிரகூடர் ஓவியங்கள்*** எல்லோராவில் உள்ள குகைகளின் மண்டபங்களிலும் சுவர்களிலும் கூரைகளிலும் தீட்டப்பட்டுள்ளன. கடவுளரின் திருவுருவங்கள், பூக்கள், விலங்குகள் போன்றவை இங்குள்ள ஓவியங்களாகும். அழகுமிக்க யானை, தாண்டவமாடும் நடராசர் போன்ற ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. கருடனின் மேல் அமர்ந்துள்ள இலக்குமி நாராயணன், பறக்கும் வித்தியாதரர்கள் போன்ற ஓவியங்கள் அழகுமிக்கவை. பறக்கும் வித்தியாதரர்கள் தங்கள் துணைவியருடன் காட்சி அளிக்கின்றனர். இவ்வோவியங்கள் இராட்டிரகூடர் கால ஓவியத் திறனைத் திறம்பட விளக்குகின்றன.

***இராட்டிரகூடர் கட்டடக் கலை*** முந்தைய சாளுக்கியர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த இராட்டிரகூடர்களின் கோயிற் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது, பட்டடக்கல்லில்

உள்ள கோயிலாகும். இதனைக் கோயில் நகரம் என்றும் கூறுவர். இக்கோயில், முந்தைய சாளுக்கியரின் பாணியை ஒத்துள்ளது. மூன்று அடுக்குகளை உடைய இக்கோயிலின் கீழ் அடுக்கு, கருவறையையும் கருவறையைச் சுற்றி வலம் வரும் வழியையும் இவ்வழியைச்சுற்றித் தடுப்புச் சுவரையும் கொண்டுள்ளது. கருவறையை அடுத்து நவரங்க மண்டபம் உள்ளது. இவ்விரண்டையும் இடைகழியொன்று இணைக்கிறது. கோயில் அடி முதல் முடி வரை சதுர அமைப்பை உடையது. இக்கோயிலின் அதிட்டானம் முடியும் உச்சிப் பிதுக்கத்தில் (Cornice) மூக்கு வடிவ (Nasika) அமைப்பு இல்லாமல், தட்டை வடிவ முக்கோண அமைப்பை இக்கோயில் பெற்றுள்ளது. கோயிலின் பிரசுத்தரப் (Prastara) பகுதியில் கூடுகளும் சாலைகளும் (Salas) பஞ்சரங்களும் (Panjaras) காணப்படுகின்றன. இரண்டாம் அடுக்கில் கர்ணகூடுகளும் பத்திர சாலைகளும் (Bhadra Salas) உள்ளன. மூன்றாம் அடுக்கு, கீழ் அடுக்கைவிடக் குறுகலாகக் காணப்படுகிறது.

நவரங்க மண்டபத்தை (Navaranga Mandapa) அடுத்துப் பல தூண்கள் கொண்ட முக மண்டபம் உள்ளது.

**இராட்லர்** கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சமயத்தொண்டு புரிவதற்காகத் தமிழகம் வந்த மேலைநாட்டுக் கிறித்தவச் சமயச் சான்றோர்களுள் ஒருவர். இவரது முழுப் பெயர் இராட்லர் சான் பீட்டர் (Rottler, John Peter) என்பதாகும். இவர் கி.பி. 1749-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு இசுடிராசுபர்கு (Strasburg) நகரில் பிறந்தார். இவர் இசுடிராசுபர்கு பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. பட்டமும், எர்லாசன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார். கோப்பன்கேகன் (Copenhagen) என்னும் நகரில் கிறித்தவச் சமயக் கல்வி பெற்றுக் கி.பி. 1775-ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்ற இவர் தேனிசு வேத போதக சங்கத்தைச் (Danish Mission) சார்ந்த சமயப் பரப்புநராக கி.பி. 1776-ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். தமிழகத்தில் தரங்கம்பாடி என்னுமிடத்தில் கி.பி. 1803-ஆம் ஆண்டு வரை சமயப்பணி ஆற்றிப் பின்னர்ச் சென்னை சென்று, அங்குக் கிறித்தவச் சமயப் பணிப் பொறுப்பினை ஏற்றார். சென்னையும் பழவேற்காடும் தரங்கம்பாடியும் இவர் சமயப் பணியாற்றிய இடங்களுள் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் திருநெல்வேலிப் பகுதிக்கும் சமயப்பணி குறித்துச் சென்று திரும்பினார்.

சென்னையில் சமயப்பணி ஆற்றியபோது, பெப்ரீசியசு (Fabricius) என்பார் மேற்கொண்ட புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்புப் பணிக்குப் பெருந்துணையாக இருந்தார். கிறித்தவப் பொதுச் செப நூலினைத் தமிழில் மொழி பெயர்த்தார். சென்னையில் இருந்தபோது ஐரோப்பியச் சிறுமியர் அனாதை மடத்தின் செயலராகவும், விசாரணைக் குருவாகவும் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

தமிழகம் வந்த இராட்லர், தமிழ் மொழிப் பயிற்சியில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டதுடன் இந்தியப் பயிரியல் வரலாற்றையும் விரும்பிப் பயின்றார். தென்னிந்தியத் தாவரங்களின் புதுவகைகளை ஐரோப்பாவிற்கு அனுப்பிப் பயிரியல் வரலாற்றாராய்ச்சிக்குப் பேருதவி புரிந்தார். ஓய்வு நேரங்களில் இவர் திரட்டி வைத்திருந்த பயிரினத் தொகுதிகள் இவரை எண்வகைக் கல்விக் குழுக்களில் உறுப்பினராக்கி, இவர் புகழ் பரவக் காரணமாக அமைந்தன என்பர்.

இராட்லர் தமிழுக்குச் செய்த சிறந்த தொண்டு இவர் தொகுத்த தமிழ்-ஆங்கில அகராதியாகும். அது, ‘இராட்லர் தமிழ்-ஆங்கில அகராதி’எனப்படும். இவ்வகராதி 1425 பக்கங்களில் 37,000 சொற்களைக் கொண்டமைந்துள்ளது. பயிரியற் கலைத் தொடர்பான சொற்களுக்கு இவர் அளித்த பொருளையே இவருக்குப் பின்னர் வந்த வின்சுலோ போன்ற தமிழ்-ஆங்கில அகராதித் தொகுப்பாளர்களும் மேற்கொண்டார்கள் என்பதிலிருந்து, இவரது அகராதியின் சிறப்பினை அறியலாம். அவ்வகராதி நான்கு தொகுதிகளாக அச்சிடப்பட்டது. முதல் தொகுதி, சென்னை வேப்பேரியில் கி.பி. 1834-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்நூலினை அப்போது இந்தியாவின் அரசப் பேராளராக (Governor General) விளங்கிய வில்லியம் பெண்டிங்குப்பிரபுவுக்குக் காணிக்கையாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் தொகுதி அச்சில் இருக்கும்போது இவர் காலமானமையால் தெய்லர் (Taylor) என்பாரும், டி.வெங்கடாசல முதலியாரும் அப்பதிப்புப் பணியை மேற்கொண்டு, அத்தொகுதியினை கி. பி. 1836-37-ஆம் ஆண்டில் வெளியிட்டனர். அவ்வகராதியின் மூன்று, நான்கு ஆகிய தொகுதிகள் முறையே கி.பி. 1839, 1841 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இந்த அகராதியில் தொகுக்கப்பட்டுள்ள சொற்களும் அவற்றின் பொருள்களும் பெரும்பாலும் சதுரகராதியினைப் பின்பற்றி அமைந்துள்ளன.

மிக்க மதிப்புடையதாயினும், இவரது அகராதியில் புராணக் கருத்துகள், அறிவியல், வானநூல் தொடர்பான சொற்கள் பல சேர்க்கப்படவில்லை என்பதும் இலங்கைத் தமிழ் ஒதுக்கப்பட்டுத் தமிழகத் தமிழே

பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறைகளாகச் சுட்டப்படுகின்றன. 'ஆங்கிலத் தேவாலயங்களில் வழக்கமாக இருக்கும் பொதுச் செபங்களும், ஞானதிரவியங்களைப்பரிமாறும் ஒழுங்கும், தாவீதின் சங்கீதங்களும் அடங்கிய புத்தகம்' என்னும் மொழி பெயர்ப்பு நூலினை இவர் கி.பி. 1819-ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். 'தேவாலயங்களில் ஓதும்படி குறிக்கப்பட்ட தாவீதின் சங்கீதங்களும், காலை மாலை செபிக்க வேண்டிய செப ஒழுங்கும்' என்னும் மொழி பெயர்ப்பு நூலினை கி.பி. 1821-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அறுபது ஆண்டுகள் சமயப்பணியாற்றிய இராட்லர் கி.பி. 1836-ஆம் ஆண்டுத் தம் 86-ஆம், வயதில் காலமானார். இரா. செ.

**இராணாகுண்டை,** வடக்குப் பாகிசுத்தானில் உள்ள இலொரலைப் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள சிற்றூர்; தொல்லியல் சிறப்புப் பெற்றது. இராணாகுண்டையின் (Rana Ghundai) பழமை முதன் முதலாக நோட்லிங்கு (Noteling) என்பவரால் 1927-இல் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அருல் இசுடென் (Aruel Stein) என்பவர் இப்பகுதியில் கள ஆய்வினை மேற்கொண்டார். இ.செ. உரோசு (E.J. Ross) என்பவர் 1930-இலும், வால்டர் பேர்சர்வீசு (Walter Fairservis) என்பவர் 1950-இலும் மிகச் சிறிய அளவில் அகழாய்வினை மேற்கொண்டனர். இங்கிருந்த தொன்மையான நாகரிகம் ஐந்து காலங்களாகப் பிரிக்கப்பட்டு, அ முதல் உ வரை (A to E) பெயரிடப்பட்டது.

முற்காலத்தில் (Phase A) எருது, குதிரை, ஆடு, கழுதை ஆகிய விலங்குகளின் எலும்புகளும், எலும்புக் கருவிகளும், கற்களினால் செய்யப்பட்ட பட்டைக் கத்திகளும் (Stone Blade) கிடைத்தன. வீடுகள் இருந்ததற்கான எவ்வித அறிகுறிகளும் கிடைக்கவில்லை.

இரண்டாம் காலகட்டத்தில் கற்கள் பதிக்கப்பட்டு அதன் மீது சுட்ட களிமண்ணும், சாம்பலும் பூசப்பட்ட வீட்டுத்தரை கண்டுபிடிக்கப்பட்டது. கிண்ணங்களும், குவளைகளும் (Jars) இக்காலகட்டத்தில் கிடைத்தன. இவற்றின் விளிம்பின் மீது எருது, மான் ஆகியவற்றின் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. அதனால் இக்காலம் 'எருதுக்குவளை'க் காலம் என்று குறிக்கப்பட்டது. இக்காலகட்டத்தின் இறுதியில் மண்ணினால் செய்யப்பட்ட சுடப்படாச் செங்கற்களினாலான சுவர்கள் தென்பட்டன. இவற்றைத் தவிரச் சக்கரத்தினால் வனையப்பட்டு நன்கு சுடப்பட்ட மட்பானைகளும் கிடைத்தன. எலும்பு முனைகள், ஊசிகள் (Needles) போன்றவையும் கிடைத்தன. இவை அனைத்தும் அங்கு இக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் நாடோடிகளாக வாழாது ஓர் இடத்தில் நிலையான வாழ்வை மேற்கொண்டமைக்குச் சான்று பகர்கின்றன. மட்பாண்டங்களின்மீது கருப்புக்கலந்த பழுப்பு நிற வண்ணம் (Browu black) பூசப்பட்டிருந்தது முதற்கால கட்டத்தையும் (Phase A) இரண்டாம் காலகட்டத்தையும் (Phase B) ஒப்பு நோக்குமிடத்துப் புதியவர்கள் இங்கு வந்து குடிபுகுந்தமை அறியப்படுகிறது.

மூன்றாம் காலகட்டத்தில் மேற்கூறிய சிறப்புக் கூறுகள் தொடர்ந்தபோதிலும் புதியதாகச் சிவப்பு மற்றும் கருப்பு வண்ணங்கள் பூசப்பட்ட மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வண்ணங்கள் முந்தைய காலகட்டத்தைவிடத் தெளிவாகவும் நல்ல நிலையிலும் வரையப்பட்டிருந்தன.

நான்காம் காலகட்டம், அரப்பா நாகரிகத்தின் சமகாலத்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், அரப்பா நாகரிகத்தின் தனிப்பட்ட கூறுகள் இங்குக் கிடைக்கவில்லை. கே.இரா.

**இராணா கும்பா** (கி.பி. 1431-1469) மேவாரை ஆண்ட வலிமைவாய்ந்தமன்னர்; 84 கோட்டைகளைக்கட்டியவர். இவர் மாவளத்திலிருந்து படையெடுத்த இசுலாமிய அரசர்களை எதிர்த்து அஞ்சாமல் போரிட்டார்; தலைசிறந்தபோர்வீரர்; சிறந்த கவிஞர்; இலக்கியஅறிஞர்; திறமைவாய்ந்த இசைக்கலைஞர். கும்பால்கர் (Kumbhalgarh) என்னும் கோட்டை இவர் கட்டிய கோட்டைகளுள் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. இராணுவக் கட்டடக் கலை அமைப்பிற்கு இது முதன்மையான எடுத்துக்காட்டாகும். இவர் பல போர்களில் வெற்றி கண்டவர். மேவார் இராச்சியம் இவர் காலத்தில் பெருநிலை எய்தியது.

மாளவத்தை ஆண்ட இசுலாமிய மன்னன் மாமூதும், கூர்ச்சர மன்னனும் இணைந்து இராணா கும்பாவின் தலைநகரான சித்தூரைத் தாக்கினர். ஆனால், வெற்றிவீரரான கும்பாவே வென்றார். மாமூது சிறைபிடிக்கப்பட்டு ஏறத்தாழ ஆறு மாதங்கள் சித்தூரில் வாடினான். பின்னர் அவன் விடுதலையானான். தாம் பெற்ற வெற்றியின் அடையாளமாக இராணா கும்பா சித்தூரில் அழகான வெற்றித் தூண் ஒன்றினை நிறுத்தினார். அதனை இன்றும் சித்தூரில் காணலாம். மாமூதும் கும்பாவும் இறுதியில் நண்பர்களாயினர் என்றும் சில வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். வடநாட்டில் கிருட்டிண பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மீராபாய்

இவர்தம் துணைவியாரே என்பது ஒரு சிலரின் கருத்தாகும். இக்கூற்றை ஏற்றுக்கொள்ளாதவர்கள், மீராபாய் போசராசு என்பாரை மணந்தாரென்றும், ஆனால் போசராசு இளம் வயதிலேயே காலமானபோது இந்த அம்மையார் கிருட்டிணபக்தியில் மூழ்கி, கிருட்டிணன் மீது உள்ளத்தை உருக்கும் பாடல்களைப் பாடினார் என்றும் கூறுவர்.

இராணா கும்பாவின் ஆட்சிக்காலம் கட்டடக் கலையின் பொற்காலமாகும். இவர் கோட்டைகள், மாளிகைகள், கோயில்கள் போன்றவற்றைப் பெருமளவில் கட்டினார். அவற்றுள் ஒன்றுதான் கீர்த்திதம்பம் எனப்படும் வெற்றித் தூண். இத்தூண் இந்தியாவின் தலைசிறந்த தூபிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இது சிவப்பு மணற் கற்களாலும் வெண்ணிறப் பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. இந்து சமய ஆண், பெண் தெய்வ வடிவங்களும் அவை ஒவ்வொன்றின் கீழ்க் கல்வெட்டுகளும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்து தெய்வ உருவ வடிவுக் கலையியலின் பாட நூலெனக் கொள்ளலாம். இத்தூண் கி.பி. 1442க்கும் 1449க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. சமண தீர்த்தங்கரர் ஆதிநாதரின் நினைவாகச் சித்தூரில் பிறிதொரு தூபியும் இராணா கும்பாவினால் கட்டப்பட்டது. கும்பாவின் கருவூலத்தலைவரான பண்டாரி பேலா என்பார் சிருங்கார சௌரி என்னும் கோயிலைச் சமண தீர்த்தங்கரர் சாந்திநாதரின் நினைவாகக் கட்டினார்.

இராணா கும்பா ஏறத்தாழ 50 ஆண்டுகள் ஆட்சி செய்தபின் தம் மகனாலேயே கி.பி. 1469-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

**இராணா சங்கராமசிங்கு** என்பவர் மேவாரை ஆண்ட இராசபுத்திர மரபினைச் சார்ந்தவர்; மொகலாய மன்னரை எதிர்த்துப் போரிட்டவர். இராணா சங்கர் என்றும் இவரைக் கூறுவர். இவர் இராணா கும்பாவின் பேரர்; தலைசிறந்த போர் வீரர். இராணாசங்கரின் தலைமையில் பெரும்பாலான இராசபுத்திர அரசுகள் இணைந்து இராசபுத்திர தேசிய மறுமலர்ச்சியால் திரண்டெழுந்தன. இந்துக்களின் தன்மானச் சின்னமாகத் தலைநிமிர்ந்து நின்ற ஒரே இராசபுத்திர அரசு மேவார்தான். அதன் அரசராக இருந்து பாபரை எதிர்த்த பெருமை இராணா சங்கராமசிங்கைச் சாரும்.

பாபர் கி.பி. 1526-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பானிப்பட்டுப் போரில் ஆப்கானியரான இப்ராகிம் உலோடியைத் தோற்கடித்துத் தில்லியில் மொகலாயப் பேரரசை நிலைநாட்டியிருந்தார். பாபருக்கும் இராணா சங்கராம சிங்கிற்கும் கி.பி. 1527-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரைக் கன்வாப் போர் என்பர்.

இராணா சங்கராமசிங்கு பெரும் படையொன்றைத் திரட்டியிருந்தார். இவர் படையில் 120 குறுநிலமன்னர்களும், 80,000 குதிரை வீரர்களும், 500 போர்யானைகளும் இருந்தனர். அதனுடன் மார்வார், ஆம்பர், குவாலியர், ஆசுமீரம், சந்தேரி அரசர்களும், இப்ராகிம் உலோடியின் இரண்டாம் மகனான சுல்தான் முகமது உலோடியும் இணைந்திருந்தனர். இராணா சங்கராமசிங்கு முகமது உலோடியைத் தில்லியின் சுல்தானாக ஏற்றுக்கொண்டிருந்தார். நாட்டுப்பற்று உணர்ச்சியால் தூண்டப்பெற்ற இராசபுத்திரர்கள் பாபரைப் போரில் சந்திக்க ஆயத்தமாயிருந்தனர். பாபரின் படை அளவில் மிகச் சிறியது. எனவே, இராணாவின் பெரும்படையைக் கண்ணுற்ற மொகலாயப் படைவீரர்கள் அச்சங் கொண்டனர். பாபருக்கு இப்போர் கடினமானதாகவே தோன்றியது. எனினும் படைவீரர்களைஊக்குவித்துக் குடிக்க வைத்திருந்த சாராயத்தைக் கீழே கொட்டிவிட்டு, வீரமாகப் பேசி மொகலாயப் படைவிரர்களைப் போர் புரிய ஆயத்தமாக்கினார். மொகலாய வீரர்களும் பாபருக்குக் கட்டுப்பட்டு, திரு குர்-ஆன் மீது சபதமிட்டுப் போருக்கு ஆயத்தமானார்கள். இப்போர் கி.பி. 1527-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ஆம் நாள் ஆக்ராவிற்கு மேற்கில் அமைந்திருந்த கன்வா என்னும் சிற்றூரில் நடைபெற்றது. இராசபுத்திரர்கள் மிகுந்த தீரத்துடன் உறுதியாக நின்று போரிட்டனர். ஆனாலும், பாபர் பானிப்பட்டில் எவ்வாறு படையமைத்துப் போரிட்டாரோ அம்முறையை இப்போரிலும் கையாண்டு வெற்றிபெற்றார். இராசபுத்திரர்கள் தோற்றனர். தம் துணைவர்கள் சிலரின் உதவியோடு இராணா சங்கரும் தப்பியோடினார். இரண்டாண்டுக்குப்பின்னர் மனமொடிந்து கி.பி.1526-ஆம் ஆண்டில் காலமானார். கன்வாப் போர் இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க போர்களுள் ஒன்றெனவும் வரலாற்றினை மாற்றியமைத்ததெனவும் கருதப்படுகிறது. இப்போரில் இராசபுத்திரர்கள் வெற்றி பெற்றிருந்தார்களேயானால் இந்தியாவின் வரலாறே மாறியிருக்கும் என்பது வரலாற்றறிஞர்களின் கருத்தாகும்.

**இராணுவ ஆல்பா** என்பது முதலாம் உலகப் போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் இராணுவத்தில் பல்வேறு பதவிகளுக்கான அதிகாரிகளையும் படைவீரர்களையும் தேர்வு செய்யும் பொருட்டு அமெரிக்க உளவியல் வல்லுநர்களால் அமைக்கப்பட்ட உளவியல் சோதனைகளைக் குறிக்கும். இச்சோதனை பகுத்தாய்ந்தறிதல், கட்டளை

களை நிறைவேற்றும் ஆற்றல், கணிதம், செய்தி ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் திறன் போன்றவற்றை மதிப்பீடு செய்யப் பயன்பட்டது. இராணுவ ஆல்பாச் (Army Alpha) சோதனைகளை உளவியலார்கள் அமைத்தவுடன் அவற்றின் நம்பகத் தன்மையையும் ஏற்புடைமையையும் சோதித்து அறிந்து கொள்வதற்காக, அவற்றை முன்னரே போரில் பல பொறுப்பான பணிகளைச் செய்த வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுத்தனர். அவர்கள் இச்சோதனைகளில் அதிகப் புள்ளிகளை எடுத்தனர். இச்சோதனை விளைவுகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன. இச்சோதனைகள் குழுவினருக்கும் கொடுக்கப்பட்டுப் பயனுள்ளனவாக அறியப்பட்ட காரணத்தால், இவை மற்றத் துறையினராலும் பயன்படுத்தப்பட்டன. கல்வி நிலையங்கள், தொழிலகங்கள் போன்றவை இராணுவ ஆல்பாச் சோதனைகளைத் தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டன. கல்வி நிலையங்களில் மாணவர்கள் இச்சோதனைகளின் அடிப்படையில் விரைவாகக் கற்கும் குழந்தைகள், மெதுவாகக் கற்கும் குழந்தைகள் எனத் தரப்படுத்தப்பட்டனர். அமெரிக்கக் கல்விக்கழகம் தர்சுடன் (Thurstone.L.L.) என்பவரைக் கல்வி நிலையங்களில் நுழைவுத் தேர்வுக்குப் பயன்படுத்தக் கூடிய சோதனைகளை அமைக்குமாறு கேட்டுக் கொண்டது. பல ஆண்டுகள் வரையில் இச்சோதனைகள் கல்லூரிகளின் நுழைவுத் தேர்வுடன் பயன்படுத்தப்பட்டு வந்தன. நாளடைவில் கல்வித் துறையில் தனிப்பட்ட சோதனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆல்பாச் சோதனைகள் கல்வியறிவுடன் தொடர்புடைய திறன்களை மட்டுமே மதிப்பீடு செய்தன. இயற்கைத் திறன்களும் நாட்டங்களும் இவற்றால் மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆல்பாச் சோதனைகளுள் சில சோதனை முடிவுகள், ஆட்படுநரின் கல்வித் தேர்ச்சியினையும் அவர்கள் அடைந்த திறன்களின் அளவையும் எடுத்துக்காட்டின. வரைபடம் இதனை விளக்கும். ஆனால், உளவியல் சோதனைகள் ஆட்படுநரின் இயற்கைத் திறன்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் மதிப்பிடல் வேண்டும் என்னும் அடிப்படை உளவியல் விதிக்கு மாறாக ஆல்பாச் சோதனைகள் அமைந்திருந்தன. ‘நுண்ணறிவு’, ‘திறமை’ போன்ற கலைச் சொற்கள் உளவியலில் தனிப்பட்ட பொருளுடையன. இக் காரணங்களினால் இராணுவ ஆல்பா, இராணுவத்தினருக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இராணுவ ஆல்பாச் சோதனைகள் பல மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டுப் புதிய சோதனைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வப்பொழுது புதிய சோதனைகள் சேர்க்கப்பட்டுத் தரப்படுத்தப்படுகின்றன. போர் விமானியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட சோதனைகள் உள்ளன. நுண்ணறிவு பற்றி இசுபியர்மன் கொண்ட பொதுக்கருத்துகள் மாற்றம் அடைந்து ‘சூழமைவுக்கு ஏற்ற நுண்ணறிவு’ என்ற கருத்துப் பரவலாயிற்று. இதன் விளைவாக இக் காலத்தில் இராணுவ உளவியல் சோதனைகள் தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவ உளவியல் சோதனைகள், முப்படைத்துறையினர்களால் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இவை பல சோதனைகள் அடங்கிய அடுக்குகளாக (Battery) அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொறுப்புகளை ஏற்க வேண்டிய அதிகாரிகளுக்கு ஏற்ற பல வகைப்பட்ட சோதனைகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பல சோதனைகள் நிலைமைச் சோதனைகளாகவும் குழுத்திட்டச் (Group planning) சோதனைகளாகவும் இருக்கின்றன. விமானப்படையினருக்கான சோதனைகள் உயர் நிலை அதிகாரிகளால் தரப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய விமானப்படையின் தேர்வு வாரியம் (Air Force Staff Selection Board) மைசூரில் இயங்குகிறது. இங்கு விமானப்படையினர், பல்வேறு சோதனைகள் நிகழ்த்தப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இராணுவ ஆல்பாச் சோதனையிலிருந்து சில பகுதிகள் எடுத்துக்காட்டாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவ ஆல்பாச் சோதனை (பண்பாட்டுச் சமநிலைப்படுத்தப்பட்டது) பின் வருவதாகும்.

அ) $55\frac{1}{2}$ கிலோ மரத்தூளின் விலை ரூ. 33 ஆனால் 31 கிலோ மரத்தூளின் விலை என்ன?

ஆ) உந்துவண்டியை நிறுத்துவதைக் காட்டிலும் இரயில் வண்டியை நிறுத்துவது கடினமானது. ஏனெனில் இரயில் வண்டி


அ. நீளமானது


ஆ. கனமானது

இ. அதன் நிறுத்திகள் நன்கு இயங்குவதில்லை.

இ) கொடுக்கப்பட்டுள்ள இணைச் சொற்கள் ஒரே பொருளைக் கொடுப்பதாயின் நேர் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக. எதிர்மறைப் பொருளைக் கொடுப்பதாயின் எதிர் என்னும் சொல்லின் கீழ்க் கோடிட்டுக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| விரிந்த | குறுகிய | நேர் | எதிர் |
| ஈர்த்தல் | கவருதல் | நேர் | எதிர் |
| உள்ளார்ந்த | மறைந்த | நேர் | எதிர் |
| ஏளனம் | இகழ்ந்துரை | நேர் | எதிர் |


ஆட்படுநரின் எண்ணிக்கை
1000
900
800
700
600
500
400
300
200
100
கல்வியறிவற்றவர் (பயிற்சியடைவோர்)
கல்வி தகுதியுடையவர் (பயிற்சியடைவோர்)
படை அதிகாரி
சார்ஜென்டுகள்
மேலதிகாரிகள்
இ-
இ
இ+
ஆ
அ
இராணுவத்தினரின் ஆல்பாச் சோதனைப் புள்ளிகள்


ஆட்படுநரின் எண்ணிக்கை
1000
900
800
700
600
500
400
300
200
100
பயிற்சி பெறுவோர் (குறைவான கல்வியுடையவர்
அதிகாரிகள் (குறைவான கல்வி)
பயிற்சியடைவோர் (உயர் நிலைக் கல்வி)
அதிகாரிகள் (உயர் நிலைக் கல்வி)
இ-
இ
இ+
ஆ
அ
இராணுவத்தினர் அடைந்த புள்ளிகள் (கல்வித்தகுதி அடிப்படையில்)

ஈ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு ஒரு சொற்றொடர் அமைத்தபின் அச்சொற்றொடரின் பொருள் உண்மையினை எடுத்துரைப்பதாயின் மெய் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக. உண்மையன்று என்றால் பொய் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக.

மக்களுக்கு செருக்கு பகைவர் இருப்பின் இருப்பர் அதிகம், மெய் பொய்; தவறுவதில்லை இல்லாதவர் ஒரு பொழுதும் கவனம், மெய் பொய்; விளக்குகின்றன செயல்கள் மனிதனின் பண்புகளை அவன்; மெய் பொய்.

2) விடையைக் கோடிட்ட இடத்தில் எழுதிக்காட்டுக.
பந்து வீச்சு ——————— விளையாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

அ. கால்பந்து ஆ. தென்னிசு இ. பூப்பந்து
ஈ. கிரிக்கெட்டு

கல்வித்தகுதி குறைந்தவர்களுக்காகச் சில சோதனைகள் அமைக்கப்பட்டன. அவை இராணுவ பீட்டாச் சோதனைகள் (Army Beta Tests) எனப்பட்டன. இராணுவத்தின் பல்வேறு பொறுப்புகளுக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது இச் சோதனைகள் பயன்படுத்தப்பட்டன. இராணுவ பீட்டாச் சோதனையின் பெரும்பாலான பகுதிகள் நுண்ணறிவுச் சோதனைகளின் பகுதிகளைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன. பீட்டாச் சோதனையில் கட்டளை நிறைவேற்றல் மிகுதியாக இடம் பெறவில்லை. ஏனெனில், பீட்டாச்சோதனை கல்வித் தகுதி குறைந்தவர்களுக்கு நுண்ணறிவுச் சோதனையாகவும் பல்வேறு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களுக்கு இராணுவச் சோதனைகளாகவும் கொடுக்கப்படுகின்றன. முதல் உலகப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் 1917—18-ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தில் 17 இலட்சம் பேர்கள் பல்வேறு பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழுச் சோதனைகளாக இராணுவ ஆல்பா, இராணுவ பீட்டா ஆகிய சோதனைகள் இவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் உளவியலார் புதிய குழுச்சோதனைகளை அமைத்தனர். அவற்றுள் இராணுவப் பொது வகைப்படுத்தற் சோதனை (Army General Classification Test) என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சோதனை, நான்கு வேறுபட்ட வகைகளாகவும் எளிதாக மதிப்பீடு செய்யப்படக் கூடியதாகவும் அமைந்திருந்தது இராணுவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இச் சோதனையின் உதவியால் ஐந்து வகை நுண்ணறிவினர்களாகப் பாகுபாடு செய்யப்பட்டனர். இச் சோதனையில் மிகைப் புள்ளிகள் எடுத்தவர்கள் இராணுவத்தில் அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களாக இருந்தனர் என்பது அறியப்பட்டது. அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இச் சோதனையில் குறைந்தது 110 புள்ளிகளை அடைந்தவர்களே எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

இராணுவச் சோதனைகள் குழுச் சோதனைகளாகக் கொடுக்கப்பட்டதால், தனிமனிதர்களின் திறன்களும் நுண்ணறிவும் மதிப்பீடு செய்யப்பட இச்சோதனைகளில் வாய்ப்பு இல்லை. மேலும், நுண்ணறிவு மிக்கவர்களை மட்டுமே எல்லாப் பொறுப்புகளுக்கும் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் நுண்ணறிவுத் திறன் மிகுந்தவர்கள், சலிப்பூட்டக்கூடிய ஒரே தன்மையான இயக்கங்களைக் கொண்ட தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்கள் அத்தகைய தொழில்களை நன்கு செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். அத்தகைய தொழில்களை நுண்ணறிவுத் திறன் குறைந்தவர்கள் திறம்படச் செய்வார்கள். இராணுவ அதிகாரிகள் தம் கீழ்ப் பணிபுரியும் இராணுவ ஊழியர்களைப் பற்றிய நேர்முக அறிவு கொண்டவர்களாக இருக்கின்றனர். இத்தகையவர்களைப் பொறுப்பான பதவிகளுக்கு உயர்த்துவது உகந்தது என்று இவ்வதிகாரிகள் கருத நேரிடலாம். நுண்ணறிவுத்திறன் சோதனைகளில் இவ்வூழியர்கள் மிகுந்த புள்ளிகள் எடுக்கவில்லை என்ற காரணத்தினால் இவர்களை ஒதுக்கிவிடமுடியாது.

போர் விமானியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட சோதனைகள் உள்ளன. நுண்ணறிவு பற்றி இசுபியர்மன் கொண்ட பொதுக் கருத்துகள் மாற்றம் அடைந்து ‘சூழமைவுக்கு ஏற்ற நுண்ணறிவு’ என்ற கருத்துப் பரவலாயிற்று. இதன் விளைவாக இக் காலத்தில் இராணுவ உளவியல் சோதனைகள் தனித் துறையாக உருவாக்கப்பட்டுள்ளன.

துணை நூல்கள்:

**Cronbach, Lee J.**, Essentials of Psychological Testing, (Harper International Edition) Harper & Row, New York, 1970.

**Anastasi Anne.**, Psychological Testing, Coller Macmillan, (International) New York, 1976.

***இராணுவ உளவியல்*** என்பது உளவியல் விதிகளும் கோட்பாடுகளும் இராணுவத்தினருக்குப் பயன்படும் வகையினை விளக்கும் துறையாகும். இத்

துறை முதல் உலகப் போர் இரண்டாம் உலகப் போர் ஆகிய இரு பெரும் போர்களுக்குப் பின் தனிப்பட்ட ஆய்வுத்துறையாக அமைந்தது. போர்க் காலங்களிலும் போரின்றி அமைதியுடனிருக்கும் காலங்களிலும் இராணுவத்தினரின் கடமைகள் மற்றவர்களின் கடமைகளினின்றும் வேறுபட்டனவாக இருக்கின்றன. இராணுவ உளவியலாரின் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்குப் பின்வரும் செய்திகள் பேருதவியாக இருக்கின்றன. 1. தீர்வு காணவேண்டிய இராணுவச் சிக்கல்கள், 2. செயற்படுத்த வேண்டிய தொழில் நுட்பங்கள், 3. இராணுவ உளவியலாரின் பணி தேவைப்படும் அமைப்புகள், 4. உளவியல் துறைப் பணியினைத் தரமுன்வரும் அமைப்புகள், 5. இத் துறையின் தொடர்பின் கொள்கைகளும் விதிகளும், 6. ஆய்வு-முன்னேற்றப் பணிகள்.

உளவியல் துறையின் நுட்பங்களும் திறன்களும் முதல் உலகப் போரில் பேருதவியாக இருந்தன. போரில் ஈடுபட வேண்டிய படையினரைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட உளவியல் சோதனை முறைகள் தரப்படுத்தப்பட்டன. சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கான திறமைகள் படையின் பல்வேறு அதிகாரிகளுக்கு எந்த அளவில் தேவைப்படும், அவை அவர்களிடம் அமைந்துள்ளனவா என்பன போன்ற செய்திகளை அறிவதற்கு நிலைமைச் சோதனைகளும் ஆளுமைச் சோதனைகளும் உருவாக்கப்பட்டன. போர்க்காலப் பணி நிறுவனங்கள் என்ற பெயரில் பல அமைப்புகள் இச்சோதனைகளை ஆய்வு செய்வதில் ஈடுபட்டன. இத்தகைய ஆய்வு அமைப்புகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதல் உலகப் போர்க் காலத்தில் தோன்றின. இந்த அமைப்புகள் புலன்காட்சி, காட்சித்திறன், படையின் தேர்வு முறை, படையினர் பயிற்சி, மனவெழுச்சிச் சமநிலை ஊக்குவிப்பு, நாட்டங்கள், மனப்பான்மைகள், மன உளைச்சல் சோதனைகள் போன்ற துறைகளை ஆய்ந்து தம் முடிவுகளை வெளியிட்டன. இராணுவத்தின் ஆல்பாச் சோதனை (Army Alba Test) என்பது, பல நாடுகளிலும் பயன்படுத்தப்படும் தரப்படுத்தப்பட்ட சோதனை ஆகும். இச் சோதனையின் முடிவுகள் போர் முடிந்தபின் 17 இலட்சம் பேர்களுக்கு அளிக்கப்பட்டுச் சோதனை முடிவுகள் ஒப்பு நோக்கப்பட்டன. இராணுவத்தில் முக்கியமான பதவிகளுக்கு அதிகாரிகளை அமர்த்தும்பொழுது அத்தகைய பதவிகளுக்கு ஏற்ற பண்புகள் இல்லாதவர்களைத் தவிர்ப்பதற்காக இச்சோதனைகள் பயன்படுத்தப்பட்டன. அதிகாரிகள் பதவிகளில் அமர்த்தப்பட்ட பின் அவர்களுக்குப் பதவி உயர்வு செய்யும் பொழுதும் இச்சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கான தனிப்பட்ட சோதனைகளும் தரமிடும் அளவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போர் தொடங்கியவுடன் அமெரிக்க வேலை வாய்ப்பு நிறுவனம் இராணுவ உளவியலில் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. விமானப் படையில் விமானிகள், விமானம் ஓட்டிச் சென்று பகை நாட்டினருடன் போரிட்டு, பகை நாட்டில் குறிப்பிட்ட இடங்களில் குண்டுகளைப் பொழியும் பணியில் ஈடுபடும் விமான அதிகாரிகள் (Flying Officers) போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டுத் தனிப்பட்ட சோதனைகள் அமைக்கப் பட்டன. ஆயிரக் கணக்கான உளவியல் வல்லுநர்கள் இத்தகைய பணியில் ஈடுபட்டனர். விமானப் படை, கடற்படை, நிலப்படை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், அவர்களுக்கு எத்தகைய பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அப்பயிற்சிகளில் எத்தகைய திறன் வளர்க்கப்பட வேண்டும், அப்பயிற்சிகளில் எத்தகைய செயல்முறைகளையும் நுட்பங்களையும் சேர்க்க வேண்டும் என்பன போன்றவற்றை உளவியல் ஆய்வாளர்கள் முடிவு செய்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1942-ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு ஆய்வுக் குழு (National Defence Research Committee) ஏற்படுத்தப்பட்டது. இக்குழு பொறியியல் உளவியல் (Engineering Psychology) என்னும் துறையினருடன் இணைந்து ஆய்வுகளைச் செய்து, வான் மருத்துவத் (Aero-Medical) துறையில் உளவியலார் கண்ட முடிவுகளைச் சோதித்தது. இத்துறையின் விரிவாக இக்காலத்தில் விண்வெளி உளவியல் (Space Psychology) என்னும் துறை ஏற்பட்டுள்ளது. இத்துறையில் விண்வெளிப் பயணிகளின் (Astronauts) உள இயங்கியல் பற்றி விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

படையினரின் மனப்பான்மைகளை ஆய்ந்து அறியவும் அளவீடு செய்யவும் இராணுவ உளவியலின் ஒரு பிரிவாக இராணுவச் சமூகவியல் (Military Sociology) ஏற்படுத்தப்பட்டுள்ளது. படையில் பணி புரியும் வீரர்கள் தமக்குப் பழக்கமில்லாத தட்பவெப்ப நிலைகளிலும் சூழமைவுகளிலும் நீண்ட நாள்கள் தங்கிப் போரிட நேரும் பொழுது அவர்களுக்கு ஏற்படக்கூடிய சலிப்பு, களைப்பு, மன உளைச்சல், புலனுணர்வுச் சிக்கல்கள் போன்றவற்றை ஆய்ந்தறியும் பொருட்டு உளவழி உடலியல் துறையினரும், படையினர் முற்றிலும் புதிய சூழ்நிலைகளில் உட்கொள்ளும் மருந்துகளினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய உடன் விளைவுகளை அறியும் பொருட்டு உளமருந்தியல் வல்லுநர்களும் அயராது உழைத்துப் பல உண்மைகளை வெளியிட்டுள்ளனர்.

இப்பொழுது இராணுவ ஆய்வு நிலையங்கள் பல நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய இரா

ணுவ ஆய்வினை இராணுவத்துறையே மேற்கொண்டுள்ளது. அமெரிக்க இராணுவ ஆய்வினை ஒப்பந்த முறையில் பல ஆய்வுக் கூடங்கள் நிகழ்த்துகின்றன. இவற்றுள் இராண்டு ஒன்றியம்(RAND Corporation), மனிதத் திறன் ஆய்வு அலுவலகம்(Human Resources Research Office), வாசிங்டனில் உள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகத்தைச் (American University) சேர்ந்த செயல் ஆய்வின் சிறப்பு நிறுவனம் (Special Operations Research Organization) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கடற்படையினர் தொடர்பான உளவியல் ஆய்வுகளை நிகழ்த்தும் பொருட்டுத் தனிப்பட்ட நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் கடற்படை ஆய்வு அலுவலகம் என்னும் துறையினரால் ஒருங்கிணைவு செய்யப்படுகின்றன. உளவழி உடலியல், உளஅளவையியல், கற்றல் உளவியல், குழுநடத்தை சமூக நிகழ்முறைகள் போன்ற துறைகளின் தொடர்பான ஆய்வுகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் சார்பில் இலானியர் (Lanier) என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து இராணுவ உளவியலின் சிறப்பினை ஒருவர் அறிந்து கொள்ள முடியும். மார்கன் (Morgan) என்பவர் 1963-ஆம் ஆண்டு வெளியிட்ட படைக்கல உருவரைக்கான மனிதப்பொறியியல் வழிகாட்டி(Human Engineering Guide to Equipment Design)என்னும் நூல், எத்தகைய படைக்கலங்கள் பயன்படுத்துவது எளிது, எத்தகைய படைக்கலங்கள் வீரர்களுக்கு உளச்சிக்கல்கள், உளமுறிவுகள், உளக்குலைவுகள், பதற்றநிலை போன்ற கோளாறுகள் தோன்றுவதைத் தவிர்க்கும் வகையில் பயன்படுத்தப்பட முடியும் என்பன போன்ற செய்திகளை விளக்குகிறது.

இக்காலத்தில் சமூகவியலில் வல்லுநர்கள் இராணுவத்தினருடன் இணைந்து ஆய்வுகள் நிகழ்த்துகின்றனர். இராணுவ ஆய்வு நிறுவனங்கள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் நடத்தையியல்களின் பிரிவு என்னும் பெயரில்(Division of Behavioural Science) இயங்குகின்றன. இப்பிரிவில் மானிடவியல், சமூகவியல், உளவியல் ஆகிய துறை வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். இத்தகைய புலத்திடை அணுகுமுறை (Interdisciplinary Approach) யினால் உலகநாடுகளிடையே ஒற்றுமையும், கருத்துப் பரிமாற்றமும், அமைதியும் நிலவவழி ஏற்படும் என்று இராணுவ உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**இராணுவக் கூட்டு ஒப்பந்தம்**: இக்கால அரசுகளெல்லாம் இறைமை அல்லது தன்னாட்சி உடைய நாடுகள் (Sovereign of Free States) ஆகும். ஒவ்வோரரசும் தன் சமூக, பொருளாதார, அரசியல அமைப்புகளை மற்றொன்று தாக்கி அழித்துவிடாதபடி தடுப்பதற்காகவும், ஓரரசு ஏதேனுமொரு வல்லரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்து, அதன் விளைவாக அவ் வல்லரசின் சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளைப் பின்பற்ற வேண்டியகட்டாயத்துக்கு ஆளாகாமல் தடுப்பதற்காகவும், முதலில் தனது படைவலிமையைப் பெருக்கி அதன் வாயிலாகத் தனது தன்னுரிமையைக்(Independence or Freedom) காத்துக் கொள்ளுகிறது. தனது படைவலி தற்காப்புக்குப் போதுமானதாக இல்லாவிட்டால் அது மற்ற நாடுகளின் உதவியை இராணுவக் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து (Military Alliances) பெறுகிறது. ஆகையால், இக்கால நாடு ஒவ்வொன்றும் தனது படைவலியையும், தனது அரசியல் சூழ்வலியையும் (Diplomatic Strength) பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடனேயே தனது பொருளாதார வளர்ச்சியையும், அயல்நாட்டுக் கொள்கையையும் உருவாக்குகிறது. அது தனது அரசியல் சூழ்வலியின் விளைவாகத் தனக்கு உதவக்கூடிய வலுவான நாடுகளை நண்பர்களாகப் பெற முயலுகிறது. ஐரோப்பிய நாடுகள் பலவும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே நிலமானிய முறையை நீக்கிவிட்டு (Feudal System), ஒவ்வொன்றாகத் தன்னாட்சி உரிமைபெற்ற தேசியஅரசாக(Nation States)ஆயிற்று. இச்சூழ்நிலையில்தான் இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் (Military Alliances) செய்யும் அயல்நாட்டுக் கொள்கை உருவாயிற்று. ஐரோப்பாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு நாட்டிற்கெதிராக இங்கிலாந்து, ஆலந்து(Holland), ஆசுத்திரியா(Austria) முதலிய நாடுகளெல்லாம் இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு தற்காப்புப் போர்களைச் செய்தன. பிரஞ்சு மாவீரன் நெப்போலியனுக்கெதிராகப் பிரிட்டனின் தலைமையில் ஆசுத்திரியா (Austria), பிரசியா (Prussia) உருசியா (Russia), முதலியவை தம் படைகளை இணைத்துப் போரிட்டன. நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் வெற்றி பெற்ற ஐரோப்பிய நாடுகள் புனிதக் கூட்டு ஒப்பந்தம் (Holy Alliances) என்ற பெயரில் ஓர் இராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டன. இவ்வொப்பந்தம் நெடுநாள் நீடிக்கவில்லை. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரசியாவின் தலைமையில் செருமனி (Germany) ஒரு வல்லரசாக இணைந்து தோன்றியதால் அதற்கெதிராகப் பிரிட்டனும் பிரான்சும் ஒன்றுக்கொன்று படை உதவி செய்து காப்பதென்று நேச உடன்படிக்கை என்ற இருநாட்டு ஒப்பந்தம் (Entente Cordiale) செய்து கொண்டன. பின்னர் உருசிய நாடும் ஆசுத்திரியாவுக்கு எதிரான இவ்வொப்பந்தத்தில் சேரவே, இது முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Entente) என்று ஆயிற்று. இவற்றுக்கு எதி

ராகச் செருமனியும் ஆசுத்திரியாவும் பின்னர்ப் பல்கேரியாவும் துருக்கியும் சேர்ந்து ஒரு நாற்கூட்டு ஒப்பந்தம் (Quadruple Alliance)செய்து கொண்டன. இவையே முக்கூட்டு ஒப்பந்த நாடுகளுக்கெதிராக முதலாம் உலகப்போரை நடத்தித் (1914-18)தோல்வி யுற்றன. இரண்டு உலகப்போர்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் செருமனியிலும் இத்தாலியிலும் நாசிச, பாசிச சருவாதிகார ஆட்சிகளும் சப்பான் நாட்டில் இராணுவச் சருவாதிகார ஆட்சியும் தோன்றின. இவை மூன்றும் நாடுபிடிக்கும் நோக்கத் தோடு செய்து கொண்ட ஓர் இராணுவக் கூட்டு ஒப் பந்தமே உரோம்-தோக்கியோ அச்சுப் பெர்லின் ஒப் பந்தம்(Rome Berlin Tokyo Axis) என்று கூறப்படும். இவ்வச்சு நாடுகளே இரண்டாம் உலகப்போரைத் தொடங்கி, நடத்தித் தோற்றன. இவற்றின் படைத் தாக்குதலைத் தடுத்துத் தங்களுடைய குடியாட்சி அரசியலமைப்பையும், தன்முயற்சிப் பொருளாதாரத் தையும் (Economy of Free Enterprise) பாதுகாத் துக் கொள்ளுதற்காக ஐக்கிய அமெரிக்க நாடு (U.S.A.), பிரிட்டன், பிரான்சு முதலிய மேற்பகுதிய நாடுகள் தம் படைகளை ஒன்று சேர்த்தன; இவையே ஐக்கிய நாடுகள் (United Nations) என அழைக்கப் பட்டன; போரில் செருமனி உருசியாவைத் தாக் கவே, உருசியா தனது பொதுவுடைமைப் பொருளா தார அமைப்பையும், அதை ஆதாரமாக உடைய அரசியலமைப்பையும் பாதுகாக்கும்பொருட்டு ஐக் கிய நாடுகளுடன் சேர்ந்து போரிட்டது. இரண்டாம் உலகப்போரில் ஐக்கிய நாடுகள் வெற்றி பெற்றாலும் அவற்றின் குறிக்கோள்களெல்லாம் நிறைவேறக் கூடிய வாய்ப்புத் தோன்றவில்லை. பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியா நாட்டிற்கு உலகத் தில் பல நாடுகளின் ஆதரவு பெருகலாயிற்று. இது கண்ட மேலைஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்க நாடும் தத்தம் அரசியல், பொருளாதார அமைப்புகளுக்கு ஆதாரமாக இருக்கும் தனியார் உரிமைக் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்காகவும், உருசியாவின் படைவலியைத் தடுப்பதற்காகவும் ஒப் பந்தம் செய்து கொண்டன. இக் காலப்போர் முறை அணு ஆற்றல் முதலிய பேரழிவைத் தரவல்ல கொடிய் கருவிகளை உடையதாகையாலும், மேற் கத்திய நாடுகளும் உருசியாவும் அணுக்கருவி செய் யும் தொழிலியலில் முன்னேறியிருப்பதாலும், இரு வகை நாடுகளும் அதிலும் சிறப்பாக ஐக்கிய அமெரிக்க நாடும், சோவியத்துப் பேரிணையமும் (Sovit Union) வல்லரசு (Super Power) என்ற நிலையை எய்தி இருப்பதாலும், - ஒன்றை மற் றொன்றும், இரண்டுமே உலகத்தையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அஞ்சத்தக்க சூழ் நிலையில் உருவானவைதாம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் முயற்சியால் தோன்றிய வட அட்லாண் டிக்குக் கூட்டு ஒப்பந்தம் (North Atlantic Treaty Organisation or N A T O)என்ற இராணுவக் கூட்டு ஒப்பந்தமும், சோவியத்துப் பேரிணையத்தின் முயற் சியால் தோன்றிய வார்சா ஒப்பந்தமெனப்படும் (Warsaw Pact) எதிர் இராணுவக் கூட்டு ஒப்பந்த மும் ஆகும்.

வடஅட்லாண்டிக்கு ஒப்பந்தம் எனப்படும் ஒரு கூட்டுத் தற்காப்பு ஒப்பந்தத்தை (A Collective Defence Treaty) ஆதாரமாகக் கொண்டு பெல்சியம், கனடா, தென்மார்க்கு, பிரான்சு, மேற்குச் செருமனி, கிரீசு, ஐசுலண்டு, இத்தாலி, இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், இசுபெயின் (Spain), துருக்கி, ஆங்கிலப் பேரரசு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலிய நாடுகளால் அமைக்கப் பட்டதுதான் வடஅட்லாண்டிக்குக் கூட்டு ஒப்பந்த இராணுவ அமைப்பு ஆகும். ஐரோப்பாவில் சோவி யத்து நாட்டினால் நிறுவப்பட்டிருக்கும் படை வலிமைக்கு எதிராக ஓர் இராணுவ அணியை நிறுவு வதே இதனுடைய சிறப்பான நோக்கமாகும். பிரான்சு நாடு இராணுவத் தலைமையிலிருந்து 1982 ஆம் ஆண்டிலிருந்து விலகிற்று. ஆயினும், அது இவ் வமைப்பின் ஓர் உறுப்பினராகத் தொடர்ந்து இருக் கிறது. இக்கூட்டின் நோக்கம் இவ்வொப்பந்தத்தின் 5-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. 'இவ்வொப்பந்தக் காரர்களுள் (Parties) எவர் மீதோ, அவருள் பலர் மீதோ நடத்தப்படும் தாக்குதல் அவர் யாவர் மீதும் நடத்தப்படும் தாக்குதலாகக் கருதப்படும். ஆகை யால் அவர்கள் யாவரும் அத்தகைய தாக்குதலுக்கு உள்ளான நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு உதவி செய்தல் வேண்டுமென்றும், வட அட்லாண்டிக்குப் பகுதியில் பாதுகாப்பை மீண்டும் நிறுவிப் பாதுகாத் தல் வேண்டுமென்றும் ஒத்துக்கொள்ளுகின்றனர். இவ்வொப்பந்தத்தின்படி பாதுகாக்கப்பட வேண்டிய இடங்கள் ஐரோப்பாவும், வடஅமெரிக்காவும், வட அயனக் கோட்டிற்கு (Tropic of Cancer) வடக்கே உள்ள அட்லாண்டிக்குப் பகுதியும், மத்திய தரைக் கடற் பகுதியும் ஆகும். இவ்வொப்பந்தப்படி ஐக்கிய அமெரிக்க நாடு 1949-1955-ஆம் ஆண்டுகளில் மேற்குச் செருமனி நாட்டிற்குப் பெருமளவில் பொருளாதார, இராணுவ உதவி களை அளித்தது. பின்னர் 1955-1967-இல் இவ் வொப்பந்தத்தின் முன்னணி நாடாகிய ஐக்கிய அமெரிக்க நாடு ஐரோப்பாவில் படைவலியைப் பெருக்கி, சக்தி சமநிலையை உருவாக்கி, அணு ஆற் றலின் அடிப்படையில் இராணுவ வலிமையைச் சீர் படுத்திற்று. இதனால், சோவியத்து ஆதிக்கம் பரவு தல் தடைப்படுத்தப்பட்டது. இரு வல்லரசுகளுக்கு

மிடையே உள்ள நெருக்கடி நிலைமை சிறிதும் குறைய வில்லை. இவ்வொப்பந்தம் தொடர்ந்து செயற்படு தலில், படைச்செலவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல், உறுப்பு நாடுகளில் நீண்ட தொலைவு அணுக்கருவி நிலையங்களை ஏற்படுத்துதல் முதலியவை பற்றிச் சில சிக்கல்கள் எழுந்தன. இவ்வொப்பந்தத்தைச் செயற்படுத்துதற்கு ஒரு குழுவும் (Council) ஒரு தற்காப்புத்திட்டக் குழுவும்(Defence Planning Committee), ஓர்அனைத்து நாடுகள் செயலகமும்(International Secretariat), நேச நாடுகளின் படைத் தளபதிகளை உறுப்பினர்களாக உடைய ஓர் இராணுவக் குழுவும் இருக்கின்றன.இதன் இராணுவத் தலைமையகம் பெல்சிய நாட்டிலுள்ள காசிட்டு (Casteau) என்ற நகரத்தில் உள்ளது. இவ்வொப் பந்தத்தின் பாதுகாப்புக்கு உட்பட்ட அட்லாண்டிக்கு ஆங்கிலக் கால்வாய், வடஅமெரிக்கா ஆகிய பகுதி களுக்குரிய படைத் தலைமையகங்கள் இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு ஆகியவற்றில் அமைக்கப்பட் டிருந்தன. வார்சா ஒப்பந்தம் (Warsaw Pact) என்ப தைச் சோவியத்துப் பேரிணையமும், அதனுடைய சார்பு நாடுகளாகிய (Satellites) பல்கேரியா, செக் கோசுலேவேகியா, கிழக்குச் செருமனி, அங்கேரி, போலந்து, உருமேனியா முதலியனவும் சேர்ந்து 1955–ஆம் ஆண்டு மே 14–ஆம் நாளன்று ஏற்படுத் தின. இதற்கு நட்பு, ஒத்துழைப்பு, ஒருவருக்கொரு வர் உதவிசெய்தல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் என்று பெயர். இந்நாடுகளின் ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவத் தலைமையை ஏற்படுத்தவும், இவ் வொப்பந்த நாடுகளிலே சோவியத்து இராணுவத்தை நிறுத்தவும் இவ்வொப்பந்தம் வழி செய்கிறது. வார்சா ஒப்பந்த இராணுவத்தில் இப்போது 4,750,000 போர் வீரர்களுள்ளனரென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த இராணுவ ஒப்பந்தத்தைச் சோவியத்துப் பேரிணையம் தோற்றுவித்ததற்குக் காரணம் மேலை நாடுகள் மேற்குச் செருமனியை 1955–ஆம் ஆண்டில் வடஅட்லாண்டிக்கு ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொண்டதேயாகும். இதன் வாயிலாகச் சோவியத்துப் பேரிணையம் தனது பிடியைத் தன் சார்பு நாடுகளின் மீது வலுவாக்க முயலுகிறது. பன் னாட்டு அரசியல் சூழ்வலியிலே (International Diplomacy) சோவியத்தும் பேரிணையத்துக்கு இருக்கக் கூடிய பேரம் பேசும் நிலையை (Bargaining Position) வலுப்படுத்துவதற்கு ஒரு நெம்புகோலாக (Lever) இவ்வொப்பந்தம் கையாளப்படுதல் வேண்டுமென்பது இவ்வொப்பந்தத்தின் கடைசிப்பிரிவிலிருந்தே தெரிய வருகிறது. கீழை நாடுகளுக்கும் மேற்பகுதிய நாடு களுக்குமிடையே ஒரு பொதுவான பாதுகாப்பு ஒப் பந்தம் நடைமுறைக்கு வந்தவுடனே, வார்சா உடன் படிக்கையானது நடைமுறைக்கு வாராமல் மறைந்து விடும். சோவியத்துப் படைகளைச் சார்பு நாடுகளில் நிறுத்துதல் வேண்டுமென்ற வார்சா ஒப்பந்தத்தின் பிரிவை எதிர்த்து, 1956–ஆண்டில் போலந்திலும் அங் கேரியிலும் தேசியக் கிளர்ச்சிகள் நடந்தன. சோவி யத்துப் படைகள் அக்கிளர்ச்சிகளை வார்சா ஒப்பந் தப்படைகள் என்ற பெயரில் ஒடுக்கின. செக்கோசு லேவேகிய அரசாங்கம் பேச்சுரிமையின் மீதுள்ள தடை களை நீக்கி, மேற்குச் செருமனியோடு நட்புறவு ஏற் படுத்துவதற்கு முயற்சி செய்த அளவிலே, 1968–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் சோவியத்துப் பேரிணை யம் வார்சா ஒப்பந்தப் படைகளை அந்நாட்டினுள் புகச்செய்தது, அதனைத் தனது கூட்டில் மீண்டும் கொண்டுவந்தது. பொதுவுடைமை நாடான சீனா வுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க நாடு தென்கிழக் காசிய ஒப்பந்தம் (South East Asian Treaty Organisation) என்ற ஓர் இராணுவக் கூட்டு ஒப்பந்தத் தையும் அமைத்தது. ஆனால், ஐக்கிய அமெரிக்காவும் பொதுவுடைமைச் சீனாவும் நண்பர்களாக ஆகிவிட்ட படியால், மேற்படி ஒப்பந்தம் வலுவான ஒன்றாக இல்லை.

**இராணுவச் சட்டம்,** இந்தியக் குடியரசால் 1950–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு அதே ஆண்டில் சூலை மாதம் 22–ஆம் தேதி செயல்முறைக்கு வந் தது. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்னர் 1911–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய இராணு வச் சட்டம் செயல் முறையிலிருந்தது. இந்தியா விடுதலையடைந்த பின்னர் ஏற்பட்ட புதிய சூழ் நிலைக்குத் தக்கவாறு இந்த இராணுவச் சட்டம் (The Army Act 1950) இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவர் விவரம் குறித்து இரண்டாம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. நிலைப் போர்ப் படையைச் (Regular Army) சேர்ந்த அதிகா ரிகள், இளநிலை தனிக்கட்டளையமர்வு பெற்ற அதி காரிகள் (Junior Commissioned Officers), பற் றாணை அலுவலர் (Warrant Officer), இச்சட்டத் தின்படி தேர்வு செய்யப்பட்டவர்கள், இந்திய சேமக் கையிருப்புப் படையைச் சேர்ந்தவர்கள் (Indian Reserve Forces)ஆண்டுச் சோதனை அல்லது பணிக்கு அழைக்கப்பட்டுள்ள இந்திய இணைக்கூட்டான(Supplemental) சேமக்கையிருப்புப் படையைச் சேர்ந்தவர் கள், பணியிலிருக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை(Territorial Army) யைச் சேர்ந்த அதிகாரிகள் , நிலைப் போர்ப்படையுடன் இணைக்கப்பட்டுள்ள உள் நாட்டுப் பாதுகாப்புப் படைக்காகத் தேர்வு செய்யப் பட்டவர்கள், பணிக்கு அழைக்கப்பட்டுள்ள, நிலை யான சேமக்கையிருப்புப் படையைச் சேர்ந்த தனிக் கட்டளையமர்வு பெற்ற அதிகாரிகள், போர்க்களத் தில் ஏற்படும் பாசறை, நெடுந்தொலைவான கடு

நடை அல்லது நாட்டின் எல்லைப்பகுதியுள் அமைந்துள்ள பாளையத்தில் பணியமர்த்தப்பட்ட, ஆனால் ஏனைய நிலையில் இராணுவ விதிகளுக்குக் கட்டுப் படாதவர்கள் ஆகிய மேற்குறிப்பிடப்பட்டவர்கள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுதல், பதவியிலிருந்து விடுதலையளிக்கப்படுதல், பதவிநீக்கம்செய்யப் படுதல் ஆகிய நிலைகள் ஏற்படும் வரை இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவர்களாவர். மேற்குறிப்பிடப் பெற்றவர்கள் தாங்கள் பணிபுரியும் பிரிவின் படைத்தளபதியின் ஆணைக்குட்பட்டவர்கள். மத்திய அரசால் உண்டாக்கப்படும் எந்தப் படைக்கும் இச்சட்டத்தை முழுமையாகவோ இச்சட்டத்தின் பகுதியையோ செயற்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு.

இச்சட்டப்படி இராணுவப் படைக்குத் தேர்வு செய்யும் முறை மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யும் அதிகாரி தேர்வு செய்யப்பட விரும்புபவருக்குப் பணியின் தன்மைகளை விளக்கிக் கூறவேண்டும்.மேலும், அந்த அதிகாரி கேட்கும் வினாக்களுக்குப் பொய்யான பதிலை அளித்தால் தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்க வேண்டும். அதன்பின் தகுதி வாய்ந்தவரைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்கான ஆவணத்தில் தேர்வு செய்யும் அதிகாரியும் தேர்வு செய்யப்பட்டவரும் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர் மூன்று மாத காலம் ஊதியம் பெற்ற நிலையில் தேர்வு செய்த வழி முறையில் உள்ள தவறுதல் காரணமாகவோ வேறு எவ்வகைக் காரணத்துக்காகவோ இராணுவத்திலிருந்து விடுதலை பெறக் கோர முடியாது. போரிடுவதற்காகவும், தனிக் கட்டளை அல்லாத நிலைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களும், நடத்தை காண்பருவம் (Probation) முடிந்த பின்னர் இந்திய அரசியல் சட்டத்திற்குப் பற்றுறுதி உள்ளவராய் இருப்பதாகவும், எந்த இடத்திலும் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் மேலதிகாரிகளின் ஆணைக்குப் பணிந்து பணிபுரியத் தயாராக இருப்பதாகவும் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியக் குடிமகனாக இல்லாதவனை மத்திய அரசின் எழுத்து மூலமான அனுமதியில்லாமல் இராணுவப் படைக்குத் தேர்வு செய்யக்கூடாது. ஆனால், நேபாள தேசத்தவரை மத்திய அரசின் அனுமதியில்லாமலேயே தேர்வு செய்யலாம். நிலைப் போர்ப் படைக்குப் பெண்களைத் தேர்வு செய்யக் கூடாது. ஆனால், துணைப்படைகளில் (Auxiliary Force)பெண்கள் பணிபுரியத் தடை ஏதும் கிடையாது. மேலும், மத்திய அரசு குறிப்பிடும் நிலைப் போர்ப்படையுடன் இணைந்த பிரிவுகளில் பெண்கள் பணிபுரியலாம். நிலைப் போர்ப்படையில் பணிபுரிவதற்காகத் தனிக் கட்டளையமர்வு பெற்ற இளநிலை அதிகாரிகளையும் பிற அதிகாரிகளையும், பற்றாணை அலுவலர்களையும் பணியமர்த்தும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

இச்சட்டத்தின் 4-ஆம் 5-ஆம் பகுதிகள் பணி சம்பந்தமான கட்டுப்பாடுகள், தனிச்சலுகைகள் ஆகியவை பற்றிக் கூறுகின்றன. இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும் குடியரசுத் தலைவருக்கு விருப்பம் இருக்கும் வரை பணியிலிருக்கலாம். இச்சட்டத்தின் வாசகங்களுக்கும் இச்சட்டத்தின் கீழ்ப் பிறப்பித்த விதிமுறைகளுக்கும் உட்பட்டு, மத்தியஅரசு இச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரை வேலை நீக்கம் செய்யலாம். இச்சட்டத்துக்குட்பட்டவரில் அதிகாரிகளைத் தவிர, மற்றையோரை இராணுவத்தின் முதன்மைத் தளபதி வேலை நீக்கம் செய்யலாம். பற்றாணை அலுவலரையும், தனிக்கட்டளையமர்வு பெறாத அதிகாரிகளையும் கீழ்நிலைக்கு, இராணுவ முதன்மைத் தளபதி பதவி இறக்கம் செய்யலாம். அதிகாரியையும் இளநிலை தனிக்கட்டளையமர்வு அதிகாரியையும் தவிர்த்து, தம் ஆணையின் கீழ்ப் பணிபுரியும் எவரையும், ஒரு படைத்தலைவர் (Brigadier) அல்லது அவரது நிலைக்குச் சமமான அல்லது விதிமுறைகளின்படி குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரி ஆகியோர் வேலை நீக்கம் செய்யலாம். மேலும், அவ்வாறு வேலை நீக்கம் செய்யத் தகுதி பெற்றஅதிகாரிகள் தங்கள் கீழ்ப் பணிபுரியும் பற்றாணை அலுவலரையும், தனிக்கட்டளைஅமர்வு பெறாத அதிகாரியையும் பதவி இறக்கம் செய்யலாம்.

இச்சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் வகைமுறையையொட்டி இச்சட்டத்துக்குட்பட்டவர் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்படலாம் அல்லது விடுதலை செய்யப்படலாம். இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும், எவ்வகைப்பட்ட தொழிற்சங்கங்களிலும் உறுப்பினராயிருக்கக்கூடாது எனத் தடைவிதிக்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. அதுபோல் அரசியல் கிளர்ச்சிகளிலும் கூட்டங்களிலும் பங்கு கொள்ளவும், பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்ளவும், பத்திரிகைகளில் வெளியிடவும் மத்திய அரசு தடைவிதிக்கலாம்.

இச்சட்டத்துக்குட்பட்டவரின் ஊதியத்திலிருந்து சட்டப் படியல்லாது பிடித்தம் ஏதும் செய்யக் கூடாது. மேலும், அவரது ஊதியத்தையோ படியையோ, அவர் ஆயுதங்கள், அணிகள், போர்த் தளவாடங்கள், அவர் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப் பட்டுள்ள விலங்குகள் ஆகியவற்றையோ வருவாய்த்

துறை அதிகாரி, வருவாய்த் துறை நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றின் ஆணையின் படி சப்தி செய்யக்கூடாது. கடனுக்காக அவரை மேற் கூறிய அதிகாரிகளின் ஆணையின்படி கைது செய்யவும் கூடாது. இந்தத் தனி அனுகூலங்கள் அல் லது சலுகைகள் அதாவது, சப்தி கைது செய்யப் படுதல் ஆகியவற்றிலிருந்து அளிக்கப்பட்டுள்ள விதி விலக்கு, பணி அல்லது பயிற்சியில் பங்கு கொள்ளும் அல்லது அவற்றில் பங்கு கொள்ளச் செல்லும் அல் லது பங்கு பெற்று விட்டுத் திரும்பும் சேமக் கையி ருப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கும் பொருந்தும்.

இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும் உரிமையியல் வழக்கில் (Civil Suit) சம்பந்தப்பட்டிருந்தால், அவ் வாறு சம்பந்தப்பட்டவர் விடுப்பு எடுத்துக் கொண்டு நீதிமன்றத்துக்குச் செல்லலாம். அந்த விடுப்புக்குள் அவரது வழக்கை நீதிமன்றம் முடிவு செய்ய வேண் டும். அவ்வாறு முடியாவிட்டால் அதற்கான கார ணங்களை நீதிமன்றம் பதிவு செய்ய வேண்டும். இச் சட்டத்துக்குட்பட்டவருக்கு அவரது மேலதிகாரியின் செய்கையினால் ஏற்படும் குறைபாடுகள் குறித்து அதற்கும் மேல்நிலையிலுள்ள அதிகாரிக்கு மேன் முறையீடு செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இச்சட்டத்துக்குட்பட்டவர் புரியும் செய்கைகள் எந்த நிலையில் குற்றங்களாகும் என்றும், அதற் குரிய தண்டனைகள் என்ன என்றும் இச்சட்டத்தின் ஆறாம் பகுதி விளக்கிக்கூறுகிறது. அவற்றில் முக்கிய மான குற்றங்கள் இக்கட்டுரையில் விளக்கப்படும். ஒரு கோட்டையையோ படைத்தளத்தையோ வேறு எந்த இடத்தையோ பாதுகாக்கும் கடமையிலிருந்து இழிவான முறையில் தவறுவதும், அவ்வாறான தவ றைப் புரியுமாறு மற்றவரைத் தூண்டுவதும் ஆன செய்கைகள்; எதிரிக்கு எதிராக நடவடிக்கை எடுக் காமாலிருக்கத் தூண்டுதல்; எதிரிக்கு முன்னால் ஆயு தங்களையும் படைக்கலன்களையும் எறிந்து விடுதல் மற்றும் அதுபோன்ற கோழைத்தனமான செய் கைகளைச் செய்தல்; நேரடியாகவோ மறைமுக மாகவோ எதிரிக்கு உதவி செய்தல்; எதிரியுடன் இரகசியத் தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கும் செய்கை; தனது நிலையிலிருந்து முறையாக விடு விப்புச் செய்யப்படுவதற்கு முன்பு ஓடிவிடும் செய்கை; போர்க்கைதியாகப் பிடிபட்ட பின்னர் எதிரியுடன் தன்னிச்சையாக ஒத்துழைப்பது அல்லது எதிரிக்கு உதவி செய்வது ஆகிய செய்கைகள்; போர்க்கைதி அல்லாத எதிரிக்குத் தெரிந்தே பாதுகாப்பு அளித் தல்; போர்க்காலத்தில் காவல் பணியிலிருக்கும் போது தூங்குவது அல்லது போதையிலிருப்பது; தம் படைகளின் வெற்றியைப் பாதிக்கக் கூடிய செய்கை களை வேண்டுமென்றே செய்வது ஆகியவை இறப் புத் தண்டனையுட்பட இச்சட்டத்தின்படியான எவ் வகைப்பட்ட தண்டனையையும் வழங்கக் கூடிய குற் றங்களாகும்.

படைவீரர் கலகத்தில் பங்கு கொள்வது, அவ்வாறு பங்கு கொள்ளுமாறு மற்றவரைத் தூண்டுவது, அவ் வாறான கலகம் பற்றித் தொடர்புடையவர்களுக்குத் தகவல் கொடுக்கத்தவறுவது, மற்றும் அக்கலகத்தை அடக்குவதற்குத் தன்னாலியன்ற நடவடிக்கைகளை எடுக்காமலிருப்பது போன்ற செய்கைகள் கடுங் குற் றங்களாகும். அக்குற்றங்களுக்கு இறப்புத் தண்டனை கூட விதிக்கப்படலாம்.

போர்க்காலத்தில் படையைவிட்டு ஓடிவிடும் செய் கையும் அவ்வாறு ஓடுபவருக்கு உதவும் செய்கையும் கடுங் குற்றங்களாகும். அதற்கு இறப்புத் தண்டனை கூட விதிக்கப்படலாம். போர்க்காலமல்லாத காலத் தில் ஏற்படும் அவ்வாறான குற்றத்துக்கு ஏழாண்டுக் காலம்வரையான சிறைத்தண்டனைவிதிக்கப்படலாம்.

தனது கவனக்குறைவினாலோ ஆணையை மீறு வதனாலோ கைதியாகப் பிடிக்கப்படுதல், விடுப்பு எடுக்காமல் பணிக்கு வாராமலிருத்தல், மேலதிகாரி யைத் தாக்குதல், மேலதிகாரியின் ஆணைக்குப் பணிய மறுத்தல், ஆயுதங்கள், படைத்தளவாடம், வெடிமருந்து ஆகியவற்றை எடுத்துச்சென்று விடு தல், இராணுவத்தைச் சேர்ந்த பொருள்களுக்கும் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட இராணுவத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துகளுக்கும் விலங்குகளுக்கும் தீங்கிழைத்தல் ஆகிய செய்கைகள் குற்றங்களா கும். இராணுவ நீதிமன்றத்திற்கு முன்னர்த் தோன்ற மறுப்பதும், சாட்சி சொல்ல மறுப்பதும், பொய்ச் சான்று அளிப்பதும் குற்றங்களாகும்.

மேற்கூறிய குற்றங்களை அதற்கென்று ஏற்படுத் தப்படும் இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யும். குற்றத்திற்குத் தகுந்தாற்போல் தண்டனை விதிக்கப் படும். தூக்குத் தண்டனை, ஏழாண்டுக் காலத்துக்குக் குறையாமல் ஆயுள் முழுவதும்வரை நாடு கடத்தல் (Transportation), சிறைத் தண்டனை, வேலை நீக்கம், சம்பள உயர்வைத்தடுப்பது, பதவி உயர்வைத் தடுப் பது, மூன்று மாத காலத்திற்கு மேற்படாத வகை யில் ஊதியத்தைப் பறிப்பது போன்ற தண்டனை களை இராணுவ நீதிமன்றம் விதிக்கலாம்.

இச்சட்டத்தின்படி கீழ்க்காணும் நான்கு வகை இராணுவ நீதி மன்றங்கள் செயற்படத்தக்கவைகளா கும்: 1. பொது இராணுவ நீதிமன்றம் (General Courts-Martial), 2. மாவட்ட இராணுவ நீதிமன்றம் (District Courts-Martial), 3. சுருக்க வகையான

பொது இராணுவ நீதிமன்றம் (Summary General Courts-Martial), 4. சுருக்க வகையான இராணுவ நீதிமன்றம் (Summary Courts-Martial).

பொது இராணுவ நீதிமன்றத்தை மத்திய அரசோ இராணுவ முதன்மைத் தளபதியோ அத் தளபதியால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியோ கூட்டலாம். பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்ட அதிகாரம் படைத்த அதிகாரி அல்லது அவ ரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி மாவட்ட இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம். மத்திய அரசு அல்லது இராணுவ முதன்மைத் தளபதி ஆகிய வரால் அதிகாரம் வழங்கப்பட்டவர், போர்க்களத் தில் படையை நடத்திச் செல்லும் தளபதி ஆகியோர் சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம். நிலையான படையின் பகுதியின் தளபதி சுருக்கமான இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம்.

பொது நீதிமன்றமும், சுருக்கமான பொது நீதி மன்றமும் இச்சட்டத்தின்படி குற்றம் புரிந்த எவரை யும் எந்த விதமான குற்றத்துக்கும் விசாரணை செய்து சட்டப்படியான எவ்விதமான தண்டனை யையும் விதிக்கலாம். மாவட்ட இராணுவ நீதிமன்ற மானது அதிகாரிகளையும் இளநிலை தனிக்கட்டளை யமர்வு பெற்ற அதிகாரிகளையும் தவிர்த்து, ஏனைய வரை எவ்வகைப்பட்ட குற்றத்துக்கும் விசாரணை செய்யலாம். ஆனால் இறப்புத்தண்டனை, நாடு கடத்தல் (Transportation), இரண்டாண்டுக்கு மேற் பட்ட சிறைத்தண்டனை ஆகியவற்றைத் தவிர்த்து, வேறு தண்டனையை இந்த நீதிமன்றம் வழங்கலாம். சுருக்கமான நீதிமன்றம் அதிகாரிகள், இளநிலை தனிக்கட்டளையமர்வு பெற்ற அதிகாரி, பற்றாணை அலுவலர் ஆகியோரைத் தவிர்த்து வேறு எவரையும் விசாரணை செய்யலாம். இறப்புத்தண்டனை, நாடு கடத்தல் ஆகிய தண்டனைகளை வழங்க இந்த நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை. இந்த நீதிமன்றத் தின் நீதிபதி 'லெப்டினண்ட் கர்னல்' (Lieutenant Colonel) தகுதி அதற்கு மேற்பட்ட தகுதியுடையவ ராயிருந்தால் ஓராண்டுக் காலத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கலாம். அத்தகுதிக்குக் கீழ்ப் பட்டவராயிருந்தால் மூன்று மாதத்திற்கு மேற் படாத சிறைத்தண்டனை விதிக்கலாம்.

பொது இராணுவ நீதிமன்றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது ஐந்து அதிகாரிகள் வேண்டும். அவர்களுள் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டுக்குக் குறையாமல் தனிக்கட்டளையமர்வு பெற்றவராயி ருந்திருக்க வேண்டும். அவர்களில் குறைந்தது நால்வ ராவது குழுத்தலைவர் (Captain) தகுதிக்குக் குறையா தவர்களாக இருக்கவேண்டும். மாவட்ட இராணுவ நீதிமன்றத்தில் குறைந்தது மூன்று அதிகாரிகளாவது நீதிபதிகளாகப் பணிபுரிய வேண்டும். அவர்களுள் ஒவ் வொருவரும் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் தனிக்கட்டளையமர்வு பெற்றவராயிருந்திருக்க வேண்டும். சுருக்கமான பொது இராணுவ நீதிமன் றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது மூன்று அதிகாரிகள் தேவை. சுருக்கமான இராணுவ நீதிமன்றத்தில் படைத்தளபதி மட்டும் நீதிபதியாகப் பணிபுரிவார். ஆனால் இரண்டு அதிகாரிகள் நடவடிக் கைகளில் பங்கு கொள்வார்கள்.

மேற்கூறிய முதன் மூன்று இராணுவ நீதிமன்றங் களில் பணியாற்றும் அதிகாரிகளுள் முதுநிலை அதி காரி தலைவராக இருப்பார். அவ்வாறான அதிகாரி கள் குறித்துக் குற்றம் சாட்டப்பட்டவர் மறுப்புத் தெரிவிக்கலாம் அவ்வாறு மறுப்புத் தெரிவிக்கப் பட்டவரைத் தவிர ஏனைய அதிகாரிகள் அந்த மறுப் புக்குறித்து முடிவு செய்யவேண்டும். மறுப்பு ஏற்கப் பட்டால் அந்த அதிகாரி பணிபுரியக் கூடாது. அவ ருக்குப் பதில் வேறு அதிகாரிகள் விதிமுறைகளின்படி பணியமர்த்தப்படவேண்டும். மேற்கூறிய முதல்மூன்று இராணுவ நீதிமன்றங்களில் முதலாவதில் கட்டாய மாகவும், மற்ற இரண்டில் தேவையானால் மட்டும் நீதிபதி வழக்கறிஞர் (Judge Advocate) ஒருவர் நட வடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டும். சாட்சி களை அழைப்பாணையிடவும் விசாரிக்கவும் இராணுவ நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு. சாட்சிகள் அந்த நீதிமன்றங்களுக்கு வர இயலாத நிலையில், அவர்களைத் தனிக்கட்டளையிடப்பட்ட வர் மூலம் (On Commission) விசாரிக்கலாம். விசா ரணையில் இந்தியச் சாட்சியச் சட்டம் இச்சட்டத் தின் வாசகங்களுக்குட்பட்டுக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இராணுவ நீதிமன்றத்தின் முடிவு நீதிபதிகளாகப் பணிபுரிபவர்களுள் பெரும்பான்மையினரின் கருத்துப் படி முடிவு செய்யப்பட வேண்டும். குற்றவாளியா இல்லையா என்பது குறித்தும் தண்டனை குறித்தும் எடுக்கப்படும் முடிவு குறித்துச் சம அளவில் நீதிபதி களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தால், அதன் பலன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏனைய விவகாரங்களில் அவ்வாறாகச் சமஅளவில் பிளவுபட்ட நிலையில் தலைமை நீதிபதியின் கருத்துப் படி முடிவு எடுக்கப்படும். பொது இராணுவ நீதிமன் றத்தின்நீதிபதிகளுள் மூன்றில்இரண்டுவிழுக்காட்டினர் ஏற்றுக் கொண்டால்தான் இறப்புத் தண்டனை விதிக் கலாம். சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத் தின் நீதிபதிகள் எல்லோரும் ஒரு மனமாக முடிவு செய்தால்தான் இறப்புத்தண்டனை விதிக்கலாம்.

குற்றவாளி செய்துள்ள பழைய குற்றங்கள் குறித்துச் சாட்சியம் பதிவு செய்ய இராணுவ நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தைவிட்டு ஓடிவிடுதல், பொய்த்தகவல் கொடுத்து இராணுவத்தில் சேருதல், படைவீரர் கலகம் ஆகிய குற்றங்களை விசாரணை செய்யக் காலவரம்பு கிடையாது. ஏனைய குற்றங்கள் குறித்துக் குற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலம் கடந்திருந்தால் விசாரணை செய்யத் தடையுள்ளது. இக்கால வரம்பைக் கணக்கிடும்போது குற்றம் சாட்டப்பட்டவர் போர்க்கைதியாகக் கழித்த காலமும், எதிரிப் பகுதியில் கழித்த காலமும், தலைமறைவாயிருந்த காலமும் கழிக்கப்படவேண்டும். இச்சட்டத்தின் படி குற்றம் புரிந்தவன், இச்சட்டத்தின் ஆளுகையிலிருந்து நீங்கியவனாகும் நிலையில் அவ்வாறு நீங்கிய தேதியிலிருந்து ஆறுமாத காலம் கடந்த நிலையில் அவனை இச்சட்டப்படி விசாரணை செய்யக் கூடாது. ஆனால், இந்தக்காலவரம்பு, இராணுவத்தை விட்டு ஓடிவிடுவது, ஏமாற்றி இராணுவத்தில் சேருவது, படைவீரர் கலகம் ஆகிய குற்றங்களுக்குப் பொருந்தாது.

மேற்கூறிய நீதிமன்றங்களில் பொது இராணுவ நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை மத்திய அரசால் அல்லது மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்டவரால் உறுதி செய்யப்பட வேண்டும். சுருக்கமான பொது நீதிமன்றத்தின் ஆணையானது அதைக் கூட்டிய அதிகாரியால் அல்லது அவரது நிலைக்கு மேற்பட்ட அதிகாரியால் உறுதி செய்யப்பட வேண்டும். மாவட்ட இராணுவ நீதிமன்றத்தின் ஆணையானது பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டக்கூடிய அதிகாரம் படைத்த அதிகாரியால் அல்லது அவ்வதிகாரியால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியால் உறுதி செய்யப்பட வேண்டும். அவ்வாறு உறுதி செய்யும் அதிகாரம் படைத்த அதிகாரிகளுக்குத் தண்டனையைக் குறைக்கவோ குறைந்த தண்டனைக்கு மாற்றவோ அதிகாரம் உண்டு.

ஓர் இராணுவ நீதிமன்றம் வழங்கிய ஆணையை எதிர்த்து அவ்வாணையை உறுதி செய்ய வேண்டிய அதிகாரிக்குத் தண்டிக்கப்பட்டவர் மனுச் செய்யலாம். உறுதி செய்ய வேண்டிய அதிகாரி குறிப்பிட்ட ஆணையின் சரியான தன்மை குறித்து முடிவு செய்ய வேண்டும். உறுதி செய்யப்படும் ஆணையை எதிர்த்துத் தண்டிக்கப்பட்டவர் மத்திய அரசுக்கோ இராணுவ முதன்மைத் தளபதிக்கோ அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிக்கோ மனுச் செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இறப்புத் தண்டனை விதிக்கும்போது இராணுவ நீதிமன்றம் தனது எண்ணம்போல் சாகும் வரை தூக்கிலிடுவது அல்லது சுட்டுக் கொல்லப்படுவது இவற்றில் ஏதாவது ஒரு வழியில் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆணையிடலாம். நாடு கடத்தல் தண்டனை விதிக்கப்பட்டவன், கி.பி. 1894-ஆம் ஆண்டைய சிறைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்குத் தண்டனை அனுபவிக்க அனுப்பப்பட வேண்டும். இராணுவ நீதிமன்றத்தின் முடிவிற்கிணங்கச் சிறைத்தண்டனையானது இராணுவச் சிறையிலோ சிறைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறையிலோ அனுபவிக்கப்பட வேண்டும். சிறைத் தண்டனைக்காலம் மூன்று மாதக் காலத்துக்குக் குறைந்ததாக இருந்தால் இராணுவச் சிறையிலேயே கழிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படலாம். போர்க்காலத்தில் தளபதியின் ஆணையின்படி போர்க்களத்திலேயே தகுந்த இடத்தில் விதிக்கப்படும் சிறைத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

இராணுவ நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் தண்டனைகளை, நிபந்தனைகளுக்குட்பட்டோ நிபந்தனைகள் ஏதுமின்றியோ குறைந்த தண்டனைக்கு மாற்றவும் அல்லது முழுமையாகவோ பகுதியாகவோ குறைக்கவும், கைதியை மன்னிக்கவும், தண்டனையை அனுபவிக்கச் சிறைக்குத் திரும்புவதாகக் கைதி அளிக்கும் உறுதிமொழி மீது அவரை விடுதலை செய்யவும் (Parole), மத்திய அரசுக்கும் அல்லது இராணுவ முதன்மைத் தளபதிக்கும் அல்லது அப்படையின் தளபதிக்கும் அதிகாரம் உள்ளது. மன்னிக்கப்பட்ட அல்லது தண்டனை குறைக்கப்பட்ட உறுதிமொழி மீது விடுதலை செய்யப்பட்ட கைதி அவருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையை மீறினால் மேற்கூறியவாறு வழங்கப்பட்ட அனுகூலம் நீக்கப்படலாம். அவ்வாறு நீக்கப்படும்போது அந்த அனுகூலம் இல்லா நிலையதாகக் கருதப்பட்டுத் தண்டனை நிறைவேற்றப்படும். மத்திய அரசுக்கும், இராணுவ முதன்மைத் தளபதிக்கும், பொது அல்லது சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டுவதற்கு அதிகாரம் படைத்தவருக்கும் நாடு கடத்தல் தண்டனையையும் சிறைத் தண்டனையையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க அதிகாரம் உண்டு. தண்டனைக்குப் பின் கைதியின் நடத்தையை மனத்தில் கொண்டு தண்டனையைக் குறைக்கவோ தண்டனையை அனுபவிக்கவோ உத்தரவிடலாம்.

குற்றம் செய்தவரைக் கைது செய்து காவலில் வைப்பது குறித்த விவரமும், தவறுகளுக்காக ஊதியத்தில் பிடிப்புச் செய்வதும் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தபோது பைத்தியமாக இருந்ததாகவோ விசா

ரணைக் காலத்தில் பைத்தியமாக இருப்பதாகவோ முடிவுசெய்யப்பட்டால், தண்டனையை உறுதிசெய்ய அதிகாரம் படைத்த அதிகாரிக்கு அம்முடிவு தெரிவிக்கப்பட வேண்டும். அந்த முடிவை அந்த மேலதிகாரி ஏற்றுக்கொள்ளாவிட்டால்விசாரணையை அதே நீதி மன்றம் தொடரவோ அல்லது வழக்கை வேறு நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும் என்றோ அந்த மேலதிகாரி உத்தரவிடலாம். நீதிமன்றத்தின் முடிவை மேலதிகாரி ஏற்றுக் கொண்டால் அது மத்திய அரசுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான பைத்தியக்காரனின் பாதுகாப்புப் பற்றி மத்திய அரசு முடிவு எடுக்கும். பைத்திய நிலை நீங்கியவுடன் வழக்கு விசாரணை தொடரும்.

நாட்டிலுள்ள ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் (Criminal Court) விசாரணை செய்யக்கூடிய குற்றம் சிவில் குற்றம் (Civil Offence) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய எல்லாக் குற்றங்களும் இச்சட்டப்படி குற்றங்களாகும் என்று கூறுவதற்கில்லை. இச்சட்டத்துக்குட்பட்டவர் முப்படைகளின் விதி முறைகளுக்குட்படாதவரை நாட்டிலுள்ள வேறுசட்டத்தின்படியன்றி இச்சட்டத்தின்படி கொலைசெய்வதோ இறப்பை உண்டாக்கும் கொலையல்லாத கொடுங்குற்றத்தைச் செய்வதோ (Culpable homicide not amounting to murder) அத்தகையோரைக் கற்பழிப்பதோ குற்றமாகக் கருதப்பட மாட்டாது. ஆனால், போர்க் காலத்தில் அல்லது வெளிநாட்டில் அல்லது நாட்டின் எல்லைப்பகுதியில் உள்ள பாசறையில் மேற்கூறிய குற்றங்களைச் செய்தால் அவை இச்சட்டத்தின் படியான குற்றங்களாகக் கருதப்படும். அந்நிலையில் அக்குற்றங்களைச் செய்தவர்களை இராணுவ நீதி மன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் விசாரணை செய்யும் அதிகாரமுடையவைகளாக இருக்கின்றன.

மேற்கூறியவாறு குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணை செய்ய இரு நீதிமன்றங்களுக்கும் அதிகாரம் இருக்கும் நிலையில், குற்றம் சாட்டப் பட்டவர் பணிபுரியும் படையின் தளபதி எந்த நீதி மன்றத்தில் விசாரணை நடைபெற வேண்டுமென்பது குறித்து முடிவு எடுக்க வேண்டும். அவ்வாறான குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணை செய்யக் குற்றவியல் நீதிமன்றம் விரும்பினால், குற்றம் சாட்டப்பட்டவரை அருகிலுள்ள குற்றவியல் நடு வரிடம் ஒப்படைக்குமாறு மேற்குறிப்பிட்ட படைத் தளபதியைக் கோர வேண்டும். அக்கோரிக்கைக்குப் படைத்தளபதி இணங்கினால், குற்றம் சாட்டப்பட்ட வரை அருகிலுள்ள குற்றவியல் நடுவரிடம்ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு இணங்கப் படைத்தளபதிக்கு விருப்பமில்லாவிட்டால் அந்த விவகாரம் மத்திய அரசின் முடிவுக்கு விடப்பட வேண்டும். எந்த நீதி மன்றத்தில் விசாரணை நடக்க வேண்டும் என்று மத்திய அரசு எடுக்கும் முடிவு இறுதியானது ஆகும்.

இச்சட்டத்துக்குட்பட்டவர் குற்றவியல் நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டுத்தண்டிக்கப்பட்டாலோ விடுதலை செய்யப்பட்டலோ அதே குற்றத்துக் காக அவரை மறுபடியும் இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது. ஆனால், நீதிமன்றத் தால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்டவரை மறுபடியும் அதே குற்றத்துக்காக மத்திய அரசின் முன் அனுமதியுடன் குற்றவியல் நீதிமன்றம் விசாரணை செய்யலாம். அந்நிலையில் முன்பே இச்சட்டத்தின் கீழ் விதிக்கப் பட்ட தண்டனையை மனத்தில் கொண்டு தகுந்த தண்டனையைக் குற்றவியல் நீதிமன்றம் விதிக்க வேண்டும்.

**இராணுவச் சமூகப்பணி** என்பது படையினருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் செய்யப்படும் பணிகளைக் குறிக்கும். படையினருக்குப் பல்வேறு பணிகளைச் செய்யும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தே பல்வேறு நாடுகளிடையே இருந்து வந்தது. குறிப்பாகத் தமிழ் நாட்டில் மூவேந்தர்கள் ஆட்சிக் காலத்தில் படையினரின் உடல் உளத் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பினை மன்னர்களே ஏற்று வந்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வழி அறியலாம். பண்டைத் தமிழகத்தில் மன்னர்கள் போருக்குச் செல்லும் காலத்தில் தம் படையினரின் தேவைகளுக்காகப் பாணரும் விறலியரும் பண்ணிசைத்து மனமகிழ் வித்தனர். மருத்துவர்களும் உடன் சென்றனர். மக்கள் தம் நாட்டுப் படையினர் செல்லும் வழியில் அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வந்தனர். ஆனால் இத்தகைய பணிகள் அக்காலத்தில் ஒரு துறையாக அமையவில்லை.

அலெக்சாந்தர் தம் படையினரின் பல்வேறு தேவைகளைத்தாமே கவனித்து வந்தார் என்று வரலாற்றுக் குறிப்புகளினின்று அறியலாம். பண்டைக் காலத்தில் போர்க்களத்தில் காயமுற்றவர்களுக்கு மருத்துவமும் மறுவாழ்வும் கிடைக்கப்பெற்ற போதிலும், தோல்வியுற்ற நாட்டைச் சேர்ந்த புண்பட்ட படைவீரர்கள் பெரும்பாலும் நன்கு கவனிக்கப் படவில்லை. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிளாரென்சு நைட்டிங்கேல் என்பவர் கி.பி.1854-ஆம் ஆண்டு கருங்கடற் பகுதியில் கிரிமியாப்போரில்பங்கு கொண்ட ஆங்கிலேயப் படையினருக்கு மருத்துவ உதவி அளித்துப் படையினரின் இன்னல் நீக்கினார். நைட்டிங்கேல் அம்மையார் போர்க்களத்தை அடுத்த

இருண்ட பாசறைகளில் புண்பட்டுக் கிடந்த படை வீரர்களுக்கு மருத்துவ உதவி செய்தார். நைட்டிங் கேல் அம்மையார் இராணுவச் சமூகப் பணியின் முன்னோடியாகக் கருதப்படுகிறார். இதனையடுத்து இங்கிலாந்தில் புனித சான் ஆம்புலன்சு (St. John's Ambulance) என்னும் அமைப்பும் செஞ்சிலுவைச் சங்கமும் இராணுவச் சமூகப் பணியை மேற் கொண்டன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1942-ஆம் ஆண்டு நியூசெர்சியிலுள்ள போர்ட்டு மான்மவுத்து (Fort Monmouth) என்னுமிடத்தில் படை அதிகாரியைத் தலைமையாகக் கொண்டு, உளநலப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. இதன்பிறகு இராணுவச் சமூகப் பணி ஒரு தனி உறுப்பாகப் பல நாடுகளிலும் தொடங்கப்பட்டது. அமெரிக்கப் படைத் துறையில் 1942-ஆம் ஆண்டு உளநோய் நீக்கு சமூகப் பணி ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்டது. உளநோய் நீக்கு சமூகப் பணி பற்றிய செய்தித் திரைப்படம் 1945-ஆம் ஆண்டில் எலிசபெத்து இராசு (Elizabeth Ross) என்னும் சமூகப்பணியாளரால் வெளியிடப்பட்டது. எலிசபெத்து அம்மையார் இராணுவச் சமூகப் பணி வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றினார். இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த காலத்தில் 700 பேர்களுக்கு மேற்பட்ட பயிற்சி பெற்ற சமூகப்பணி யாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்தனர். இக்காலத்தில் பல நாடுகளில், இராணுவத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகச் சமூகப் பணித் துறை அமைக்கப்பட்டுள்ளது. காலாட்படையில் மிகுந்த சமூகப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். விமானப்படையில் குறைந்த அளவே சமூகப் பணி யாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலாட்படையில் பல்வேறு வகையான சமூகப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. காலாட்படையினருக்கு மறுவாழ்வுத் திட்டப்பணியும் மக்கள் சமூகப் பணிகளும் மருத்துவச் சமூகப்பணியும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் விமானப்படையில் மருத்துவமனை சார்ந்த பணி மட்டுமே மேற்கொள்ளப்பட்டுவந்தது. அண்மைக் காலத்தில் முப்படைகளுக்கான சமூகப் பணிகள் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சமூகப் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இராணுவ அதிகாரிகளின் மனைவியர் சங்கங்கள், படையினர் நல மையங்கள் போன்ற அமைப்புகள் இராணுவத்தினரின் நலனைக் கவனித்து வருகின்றன. முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்காக இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் பணிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை முன்னாள் இராணுவத்தினர் சங்கம் (Ex-Service Men's Association) என்னும் பொது மையத்தின் கிளைகளாக இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் முன்னாள் இராணுவத்தினர் தொழில் நடத்துவதற்காகத் தனிப்பட்ட வாரியம் அமைப்பது பற்றித் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இராணுவத்திற்குத் தேவையான உதிரிப்பாகங்களை இதுவரையில் தனியார் தொழிற்சாலைகளே தயாரித்து வந்தன. இவற்றை முன்னாள் இராணுவத்தினர் தயாரிப்பதற்கெனத் தமிழக அரசு நிதி உதவி செய்யவும் திட்டமிட்டுள்ளது. குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், அதிகாரிகளுக்குத் திறன்வளப் பயிற்சியளித்தல், மருத்துவச் சமூகப்பணி, உளநோய்ச் சமூகப் பணி போன்ற பணிகள் ஆற்றப் படுகின்றன. இந்தியாவில் 1940-ஆம் ஆண்டில் இராணுவச் சமூகப்பணி தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் இது இராணுவ மருத்துவச் சமூகப்பணி என்ற பெயரில் இயங்கி வந்தது. இந்திய அரசு முப்படையினருக்கும் தேவையான மருத்துவ, சமூக, உளநோய் நீக்கு பணிகளைச்செவ்வனே செய்வதற்குப் பலஅமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 'குழந்தைகளின் திறமை' (Children Have a Potential, CHAP) என்ற அமைப்பு, விமானப்படையில் பணிபுரிபவர்களின் ஊனமுற்ற குழந்தைகளுக்காக 1961-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. இவ்வமைப்பில் பணியாற்றுபவர் அனைவரும் முறையாகப் பயின்ற சமூகப் பணியாளர்களாவர். ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தேவையான அறிவுரை பகர்தல், மருத்துவ, பொருளாதார, கல்வி சார்ந்த தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றை இவ்வமைப்பு கவனித்து வருகிறது.

**இராணுவச் செலவும் பொருளாதாரமும்:** ஓர் அரசு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ ஆறு உறுப்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுகிறார். அவர்

'படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'

என்று சுட்டிக் காட்டுகிறார். ஆறு உறுப்பினுள் முதன்மையானதாகப் படையைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. அரசு எப்பொழுது அமைந்ததோ அப்பொழுதே அரசுக்குப் படை தேவைப்பட்டது. வெளிநாட்டுப் படை யெடுப்பிலிருந்து நாட்டு மக்களைக் கட்டிக் காப்பது அரசின் தலையாய கடமை யாயிற்று.

மிகப் பழங்காலத்தில் அரசர்கள் தனியாகப் பெரும்படை வைத்திருக்கவில்லை: நாட்டுக்கு ஆபத்து வரும்பொழுது படை திரட்டினர்; வீட்டிற்கு ஒருவர் வரவேண்டுமென்று ஆணையிட்டனர். போர்

முடிந்த பிறகு படையைக் கலைத்துவிட்டனர். அக்காலத்தில் படைக்காக அரசு நிறையச் செலவிட வேண்டிய தேவை இருக்கவில்லை. காலப்போக்கில் அரசு பெரும்படையினை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. உள்நாட்டில் சண்டைகள், கலகங்கள் ஏற்படாமல் அமைதியைக் காப்பதும், வெளித் தாக்குதல்களிலிருந்து நாட்டைக் காப்பதும் படையின் பொறுப்பாயிற்று. இதற்காக அரசு தொடர்ந்து செலவிட வேண்டிய தேவையும் தோன்றியது.

அரசின் பொதுச் செலவுகளில் இராணுவச் செலவு தலையாய இடம் பெறுகிறது. இராணுவச் செலவை அமைதியான காலத்தில் பாதுகாப்புச் செலவு (Defence Expenditure) என்றும், போர் நடைபெறும் காலத்தில் 'போர் நிதி' (War Finance) என்றும் கூறுவது உண்டு. 'இராணுவச் செலவு' என்பது விரிந்த பொருளைக் கொண்ட ஒரு சொல். இக்காலத்தில் இச்சொல் பலவற்றைக் குறிக்கிறது. ஒரு படையை நிலையாக வைத்து அதற்கு உணவு, உடை, ஊதியம் கொடுப்பது மட்டில் இராணுவச் செலவு அன்று. நிறையப் படைக்கலன்களையும் போர்க் கருவிகளையும் உற்பத்தி செய்ய வேண்டிய இன்றியமையாமையும் அது தொடர்ந்து நடைபெற வேண்டிய பணியும் இராணுவச் செலவில் அடங்கும்.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாகப் போர்க் கருவிகளின் எண்ணிக்கையும் இயல்பும் அளவும் பெருகியுள்ளன. மிகுந்த அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல்மிக்க குண்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். தரையிலும் நீரிலும் வான்வெளியிலும் விரைந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் உள்ளன. அவற்றை உற்பத்தி செய்து பாதுகாக்க நிறையப் பணம் வேண்டும். போர்க் கருவிகள், போரிடும் முறைகள் ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்து ஆற்றல்மிக்க புதியனவற்றைக் கண்டுபிடிக்க அரசு முயல்கிறது; ஆதலின் இதற்கு நிறையப் பணத்தைச் செலவிடுகிறது. இவையாவும் இராணுவச் செலவு என்ற பிரிவுக்குள்தான் அடங்குகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில், குறிப்பாக அரசின் பொதுச் செலவில் இராணுவச் செலவு தலையாய இடம்பெறுகிறது. இது எப்படி என்பதைச் சுட்டிக் காட்டலாம். இக்காலத்தில் அரசு மிகுதியான அளவில் இராணுவத்திற்காகவும் இராணுவத் தொடர்பானவற்றிற்காகவும் செலவிடுகிறது. உலக நாடுகளுக்கு இடையில் போட்டியும் பொறாமையும் கடுமையாகின்றன. இதனால் ஒவ்வொரு நாடும் தனது படையின் அளவை மிகுதிப்படுத்துகிறது; மற்றைய நாடுகளில் இருப்பதைவிடத் தன்னிடம் ஆற்றல்மிக்க படைக்கருவிகள் மிகுதியாக இருக்கவேண்டுமென்று கருதுகிறது. இதனால் இராணுவச் செலவு ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே செல்கிறது.

முதல் உலகப்போருக்குப் பிறகு உலக நாடுகள் எல்லாம் திட்டமிட்டு இராணுவச் செலவைப் பெருக்கி வருகின்றன. இரண்டாம் உலகப்போர் மேலும் இராணுவத்தின், இராணுவத் தளவாடங்களின் இன்றியமையாமையை வலியுறுத்தியது. இன்று உலகில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு நாடும் இராணுவச் செலவை மிகுதிப்படுத்த வேண்டுமென்ற நிலை தோன்றியுள்ளது.

ஐக்கிய நாட்டுச் சபையின் மதிப்பீட்டின்படி, உலகநாடுகள் பாதுகாப்பின் பெயரால் ஓராண்டுக்கு ஏறத்தாழ ஐந்து இலட்சம் கோடி ரூபாய் செலவிடுகின்றன. அமெரிக்கா பாதுகாப்புச் செலவுக்கென்று 1965-ஆம் ஆண்டில் 50,790 மிலியன் தாலர் செலவிட்டது. இது அமெரிக்க நாட்டின் மொத்த வருவாயில் 9.02 சதவிகிதமாகும். இந்தோனேசியா தனது வருவாயில் 25.93 சதவிகிதத்தைப் பாதுகாப்பிற்காகச் செலவிட்டது. இதிலிருந்து ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பாதுகாப்புச் செலவு எவ்வளவு முதலிடம் பெறுகிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

இயல்பு: அரசு மேற்கொள்ளுகிற பொதுச் செலவை உற்பத்திச் செலவு (Productive Expenditure) என்றும், உற்பத்தியற்ற செலவு (Unproductive Expenditure) என்றும் வகைப்படுத்தலாம். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அமைகின்ற செலவே ஆக்கத் திறனுள்ள செலவாகும். சாலைகள் அமைத்தல், அணைகள் கட்டுதல், தொழிற்கூடம் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக அரசு செலவிடுவதை உற்பத்திச் செலவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். நாட்டு மக்களின் உற்பத்தியாற்றலைப் பெருக்காத செலவுகளை உற்பத்தியற்ற செலவு என்பர். பொதுவாக, இராணுவச் செலவை உற்பத்தியற்ற செலவு என்று வகைப்படுத்துவதுண்டு.

இராணுவச் செலவுகள் மேற்போக்காகப் பார்க்க ஆக்கத்திறனற்ற செலவுகளாகத் தோன்றினாலும், மறைமுகமாக அவை ஆக்கத்திறனுள்ள செலவுகளாக இருக்கின்றன எனக்கருதப்படும். இராணுவத் தளவாடங்களின் உற்பத்தியில் பலர் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர். இராணுவம் உள்நாட்டில் அமைதியான பாதுகாப்புச் சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற பொழுதுதான் மக்களால் உற்பத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும்: அதனாலும் இராணு

வச்செலவுகள் ஆக்கத்திறனுடையவை என்று கருதப் படுகின்றன.

இராணுவச் செலவு அரசு மேற்கொள்ள வேண்டிய தேவைச் செலவுகளில் (Necessary Expenditure) ஒன்றாக இருக்கிறது. ஆதலால், இதனை அரசின் முதன்மைச் செலவுகளில் (Primary Expenditure) ஒன்றாகக் கருதுகின்றனர். பொதுச்செலவு கூடுவதற்கான காரணங்களில் இராணுவச் செலவும் ஒன்றாக இருக்கிறது.

விளைவுகள்: பெருகி வருகின்ற இராணுவச் செலவுகளினால் பொருளாதாரத்தில் பல்வேறு வகையான நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. அவை யாவன: 1) நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகள் விரிவடைந்து விரைவு பெறுகின்றன. ஐந்நூறுக்குமேற்பட்ட படைக் கருவிகளை உற்பத்தி செய்கின்றனர். புதிய புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றுகின்றனர். காலப் போக்கில் இவற்றின் தாக்கம்பிற தொழில்களிலும் ஏற்படும். இதனால் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக வாய்ப்புத் தோன்றும். 2) இராணுவச் செலவுகளின் மூலமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் பெருகுகின்றன. படைக்கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் எண்ணற்ற மக்கள் பணிசெய்கின்றனர். இவை தவிர, மறைமுகமாகப் பலர் வேலை பெறுகின்றனர். 3) ஒரு நாட்டில் இருக்கின்ற எல்லாத் தொழிற்சாலைகளும் முழுமையாகச் செயற்பட இராணுவச் செலவுகள் துணை செய்கின்றன. 4) இராணுவப் பயிற்சியும் இராணுவக் கல்வியும் நாட்டில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கத் துணை செய்கின்றன. இராணுவக் கருவிகளை உற்பத்தி செய்வதில் நடைபெறுகிற ஆராய்ச்சியின் பயனாகத் தொழில் நுட்பம் வளர்கிறது.

மிகுந்து வரும் இராணுவச் செலவினால் சில தீங்கான பொருளாதார விளைவுகளும் ஏற்படுகின்றன. அவையாவன: 1) ஒரு நாட்டில் இருக்கின்ற பற்றாக் குறையான மூல வளங்களில் ஒரு பகுதியை இராணுவத் தளவாடங்களின் உற்பத்திக்கு ஒதுக்க வேண்டியுள்ளது. இரும்பு, பெட்ரோல் போன்ற பொருள்களைப் பெருமளவில் இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர். இதனால், இவை மக்களுக்குத் தேவையான அளவில் கிடைக்காமல் போகின்றன. தேவைப் பொருள்களின் விலைகள் உயர இது காரணமாகிறது. 2) ஒரு நாட்டில் வறுமையில் வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை பெருகுகின்றபொழுது, நாட்டின் செல்வத்தைக் கொண்டு தேவைப் பொருள்களை உற்பத்தி செய்யாமல் படைக் கருவிகளை உற்பத்தி செய்வது மனிதத் தன்மையற்ற செயலாகும். வறுமையை மறைமுகமாக இராணுவச் செலவு வளர்க்கிறதென்று கூறலாம். 3) இராணுவச் செலவுகளின் பெருக்கத்தால் வேளாண்மை, தொழில், சமுதாய நலப் பணிகள் ஆகியவற்றிற்கு ஒதுக்குகின்ற பணத்தின் அளவு குறைகிறது. மற்றைய துறைகளின் வளர்ச்சியை இது கெடுக்கிறது. 4) பாதுகாப்புத் தொடர்பான துறைகளுக்கு நிறையப் பணம் செலவிடுவதால் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி ஒரே சீராக அமைவதில்லை. 5) கட்டுக் கடங்காத இராணுவச் செலவு நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது. 6) வெளிநாடுகளிலிருந்து ஆற்றல்மிக்க அணு ஆயுதக் கருவிகளை இறக்குமதி செய்கின்றன. இதனால்வெளிநாட்டுச் செலுத்துநிலை கேடாக அமைகின்றது. இராணுவச் செலவுகளினால் பொருளாதார முன்னேற்றம் கெடுவதை மனத்தில் கொண்டு, 'படைக் குறைப்பு', 'படைக்கலைப்பு' ஆகிய கருத்துகளைப்பற்றி உலக நாடுகள் சிந்தித்தும் பேசியும் வருகின்றன.

இந்திய இராணுவச் செலவு: இந்தியா பாதுகாப்பிற்காக 1872-80-இல் 16 கோடி ரூபாய் செலவிட்டது. இது அப்போதைய மக்கள் தொகை அடிப்படையில் ஓராளுக்குச் சாராசரிச் செலவு 82 பைசாவாகும். இது 1941-1950-இல் சராசரிச் செலவு ரூ.8.27 ஆகவும், 1961-68-இல் சராசரிச் செலவு ரூ. 14.26 ஆகவும் கூடியது. அதாவது இக்காலத்தில் மொத்த இராணுவச் செலவு ரூ.681 கோடியாக உயர்ந்தது. இது 1973-74-இல் ரூ. 1405 கோடியாகவும், 1979-80-இல் ரூ.3,050 கோடியாகவும், 1981-82-இல் ரூ.4,600 கோடியாகவும், 1982-83-இல் ரூ. 5,100 கோடியாகவும், 1984-85-இல் ரூ. 7075 கோடியாகவும் உயர்ந்தது. 1985-86 வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்காக ரூ. 7,686 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு 21 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

இந்தியா விடுதலை பெற்ற பொழுது காந்தியடிகளின் கருத்துப்படி நாட்டின் பாதுகாப்புச் செலவைக் குறைத்து, வளர்ச்சிக்கான செலவுகளை மிகுதிப்படுத்த அரசு முயன்றது. எடுத்துக்காட்டாக, இரண்டாம் திட்டக்காலத்தில் அரசின் மொத்தச் செலவில் 33 விழுக்காடாக இருந்த பாதுகாப்புச் செலவை, 1960-61-இல் 27 விழுக்காடாகக் குறைத்ததைக் கூறலாம். ஆனால், சூழ்நிலை பாதுகாப்புச் செலவைக் குறைக்கும் வகையில் அமையவில்லை.

இந்தியாவின் பாதுகாப்புச் செலவு பெருகி வருவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். பரந்து விரிந்த பாரதத்தின் உள்நாட்டில் அமைதியை

நிலைநாட்டவும் இராணுவம் தேவைப்படுகிறது. தொடர்ந்து அவ்வப்போது வெளிநாட்டுத் தாக்குதல்கள் ஏற்படுவதால் இராணுவச் செலவைக் கூட்ட வேண்டியுள்ளது. இமயமலையின் எல்லையில் 1962-இல் சீனாவை எதிர்த்துப் போரிட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அண்டை நாடான பாகிசுத்தானோடு 1965-இல் போரிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. பாகிசுத்தான் பிடியிலிருந்து வங்காளத்தை விடுவிக்க 1971-இல் போரில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டது. பாகிசுத்தானோடும் சீனாவோடும் நல்லுறவு நிலையைச் சரியாக உருவாக்க முடியாததால், இந்தியாவின் பாதுகாப்பைக் கருதி இராணுவச் செலவுகளைக் கூட்ட வேண்டிய நிலை தொடர்கிறது.

இராணுவச் செலவோடு நெருங்கிய தொடர்புடையது போர்க்காலப் பொருளாதாரம்.

காண்க: ஆதிக்கப் பொருளாதாரம்.

இராணுவச்செலவு ஒரு நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் நிலையான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இராணுவச் செலவு தொடர்ந்து கூடிக்கொண்டே செல்வது மனிதக்குலத்தின் நலனுக்கு ஏற்றதன்று என்னும் கருத்து வளர்ந்து வருகின்றது. இக்கருத்துச் செல்வாக்குப் பெற்றால் இராணுவச் செலவுகள் குறையலாம். இன்றுள்ள நிலையில் இராணுவச் செலவுகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பெருஞ்சுமையாக வளர்ந்துள்ளன. ஆதலின் ஓரளவு அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது தேவையாகும். மா.பா.கு.

**இராதா கிருட்டிணன் (சர்வ பள்ளி) (1888-1975)** பாரத நாட்டின் ஆன்மிகச் சிறப்பினை அனைத்து நாட்டவரும் உணருமாறு செய்தவர்; அறிவு நுட்பமும், பாரத ஆன்மிகப் பண்பாட்டில் ஆழ்ந்து பரந்த புலமையும், இலக்கியவளம் தோய்ந்த ஆங்கில மொழியாற்றலும் உடையவர். இவரது மேன்மையை நினைவூட்டும் வகையில் இவர் பிறந்த நாள் 'ஆசிரியர் நாளாக'க் கொண்டாடப்படுகிறது.

இராதா கிருட்டிணன் சர்வ பள்ளி என்னும் ஊரில் 5.9.1888-இல் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் வீராசாமி என்பதாகும். இவர் சர்வ பள்ளியிலும் திருத்தணியிலும் பள்ளிப் படிப்பை முடித்து, வேலூர் ஊரிசுக் கல்லூரியில் எப்.ஏ. தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து, இவர் சென்னை கிறித்தவக் கல்லூரியில் தத்துவப் பிரிவில் எம்.ஏ. பட்டமும் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எல்.டி. பட்டமும் பெற்றார். இவர் கல்லூரியில் பயின்ற காலத்தில் விவிலியம், சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகள், வேதாந்தக் கருத்துகள் ஆகியவற்றால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.



இராதாகிருட்டிணன்

இவருக்குச் சிறுவயதிலேயே திருமணம் நிகழ வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

இவர் சென்னை மாநிலக் கல்லூரி (1908-1917), மைசூர் மன்னர் கல்லூரி (1918-1921), கல்கத்தாப் பல்கழைக்கழகம் ஆகியவற்றில் தருக்கவியல், தத்துவம் என்னும் துறைகளில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஆந்திரப் பல்கலைக் கழகம் (1931-1936), காசி இந்துப் பல்கலைக் கழகம் (1939-1947), தில்லிப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தராகவும் இந்திய சாகித்திய அகாடமித் தலைவராகவும் பொறுப்பேற்று அரும்பணியாற்றினார். இவர் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கீழை நாடுகளின் சமய அறிவியல் துறையில் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இராதா கிருட்டிணன் தத்துவம், சமயம் தொடர்பான கட்டுரைகள் எழுதியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், உலக அறிஞர்களிடையே பெரும் புகழ் பெற்றார். இவர் இயற்றிய பல கட்டுரைகள் மேனாட்டு இதழ்களில் வெளியாகி, உலக அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தன. இவர் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட பல்கலைக் கழகங்களின் மாநாட்டிலும், ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த அனைத்துலகத் தத்துவ மாநாட்டிலும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி

னார்; ஆக்சுபோர்டு, சிகாகோ போன்ற பல்கலைக் கழகங்களில் சமயம், தத்துவம் தொடர்பாகப் பல சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். மேலும், இவர் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று மாநாடுகளிலும் ஆய்வுக் கழகங்களிலும் உரையாற்றி யுள்ளார்.

இராதா கிருட்டிணன் பாரத நாட்டு விடுதலைப் போரில் நேரடியாகப் பங்கு கொள்ளாவிடினும், திலகர், பண்டித மதன் மோகன் மாளவியா, இரவீந்திரநாத தாகூர், மகாத்மா காந்தியடிகள் போன்ற தலைவர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் பக்கத் துணை யாக விளங்கினார். எனவே, பாரதம் விடுதலை பெற்றதும் இவரது திறமையைப் பல்வேறு துறை களில் பயன்படுத்திக் கொண்டது. இவர் 1947-இல் நடைபெற்ற பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண் பாட்டுக் கழக (UNESCO) மாநாட்டிற்குப் பாரதக் குழுவின் தலைவராக அனுப்பிவைக்கப்பட்டார். அம்மாநாடு இவரை அந்நிறுவனப் பொறுப்புத் தலைவர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுத்தது. இவர் பல்கலைக் கழகங்களின் ஆய்வுக் குழுத் தலைவராக வும் (1948-49) உருசிய நாட்டிற்கான பாரதத் தூத ராகவும் (1950-1953) அமர்த்தப்பட்டார். இவர் தூதராக இருந்த காலத்தில் பாரத-சோவியத்து உறவிற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தார். இவர் பாரத நாட்டின் முதலாம் துணைக் குடியரசுத் தலைவராகவும் (1952-1962) இரண்டாம் குடியரசுத் தலைவராகவும் (1962-1967) தேர்ந்தெடுக்கப்பட்டு, நாட்டின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றி யுள்ளார். இவர் குடியரசுத் தலைவராக இருந்த போது அமெரிக்கா, சப்பான், சீனா, உருசியா போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டு அரசுகளோடு நல்லுறவை மேம்படுத்தினார்.

இராதாகிருட்டிணனின் பேரறிவாண்மை அவருக் குப் பல பாராட்டுகளை ஈட்டித்தந்தது. பிரிட் டிசு அகாடமியின் ஆய்வுப் பரிசு (Fellowship), ஆக்சுபோர்டு ஆல்சோல்சு கல்லூரி உறுப்பினர் பட்டம், கல்கத்தாப் பல்கலைக் கழக டாக்டர் (L.L.D.) பட்டம் போல்வன அவற்றுள் குறிப்பிட தக்கன.

வேதாந்த அறிவியல், இரவீந்திர நாத தாகூர்த் தத்துவம், நம் காலத் தத்துவத்தில் சமயத்தின் ஆட்சி, உபநிடதத் தத்துவம், இந்தியத் தத்துவம், இந்து சமய வாழ்க்கை நோக்கு, கருத்துக் கொள்கை யின் வாழ்க்கை நோக்கு, சமயத்தில் மேலை கீழை நாடுகளின் பங்கு, இன்றைய இந்தியத் தத்துவம், மகாத்மா காந்தியடிகள், கீழை நாட்டுச் சமயங்களும் மேலை நாட்டுக் கோட்பாடுகளும், இந்தியாவும் சீனாவும், கல்வி-அரசியல்-போர், சமயமும் சமூகமும், பகவத்கீதை, தம்மபதம், முதன்மை உபநிடதங்கள், பிரமசூத்திரங்கள், மாறிவரும் உலகில் சமயத்தின் பங்கு ஆகிய நூல்கள் இவர் படைப்புகளுள் இறவாப் புகழ் படைத்தவை. இவற்றுள் 'வேதாந்த அறிவியல்' என்னும் நூல் இவர் எம்.ஏ. தேர்வுக்காக எழுதி வழங்கியது.

இராதா கிருட்டிணன் சாதாரண ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிப் பாரத நாட்டின் குடியரசுத் தலைவராகவும் உலகின் மிகப்பெரும் தத்துவ அறிஞராகவும் உயர்ந்து விளங்கியவர். இவரது அரசியல் வாழ்க்கை வெற்று ஆரவாரம் யாதுமின்றி, கிரேக்க அறிஞர் பிளேட்டோ குறிப் பிட்ட 'தத்துவ மன்னன்' என்னும் கருத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. எளிய வாழ்க்கை யும் உறுதியான அறிவுநுட்பமும் கொண்டு விளங்கிய இவர் 17.4.1975-இல் சென்னையில் காலமானார்.

**இராதாசாமி சத்சங்கம்** இந்தியாவின் மறைபொருள் சமய இயக்கங்களுள் ஒன்று. இதனை இந்துக்களும் சீக்கியர்களும் இன்றும் பின்பற்றுகிறார் கள். இவ்வியக்கம் கி.பி.1861-ஆம் ஆண்டில் ஆக்ரா வைச் சார்ந்த சிவதயாள் என்பவரால் தொடங்கப் பட்டது. இறைவனின் திருப்பெயரை ஒலி வடிவில் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் மக்கள் உயரிய நிலைக்குச் சென்று முழுமையை அடைய இயலும் என்று இவர் நம்பினார். இதனை வடமொழியில் சுரத சப்தயோகம் என்பர். (இறைவனிடத்திலிருந்து வரும் ஒலி அலையும் சீவாத்மாவும் இணைவதே சுரத சப்த யோகமாகும்). வீடுபேறு குருவின் வழிகாட்டுதல் மூலமே அடையக் கூடியது.

இராதாசாமி என்னும் சொல் சீவாத்மா இறை வனுடன் இணைவதைக் குறிக்கும்; நம்முள் கேட்கும் ஒலி இறைவனிடத்திலிருந்து பெறப்படுவதாகும். உண்மை விளம்பும் மக்கள் ஒன்றுபடுவது சாலச் சிறந்தது' என்பது இராதாசாமி இயக்கவாதிகளின் அசையாத நம்பிக்கை.

சிவதயாள் காலமானதும் இராதாசாமி இயக்கம் இரண்டாகப் பிரிந்தது. ஒரு குழுவின் தலை வராக இராய் சாளிகிராம் சாகேப் பகதூர் என்பவர் இருந்தார். இவருடைய குழுவினரின் தலைமையிட மாக ஆக்ரா திகழ்ந்தது. பிறிதொரு குழுவின் தலை வராகச் செய்மல் சிங் என்பவர் இருந்தார். இவர் சிவதயாளின் சீக்கியச் சீடர்களுள் ஒருவர். இக்குழு வினர் பியாசுப் பகுதியில் வாழும் இராதாசாமிகள் எனப்பட்டனர். அமிருதசரசுக்கு அருகில் பியாசு

ஆற்றங்கரையில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது. பியாசு இராதாசாமி இயக்கத்தில் சீக்கியக் குருமார் வரிசையொன்றும் உருவாகியது. இவர்களுக்கும் வைதிக சீக்கியர்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. வைதிக சீக்கியர்கள் உயிருடன் வாழ்ந்து வரும் குரு ஒருவரை வழிபடுவதுடன், முதல் ஐந்து சீக்கியக் குருமார்களின் போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்வர். அவர்களுடைய வழிபாட்டில் இசை பயன்படுத்தப்படுவதில்லை. இசையால் எழும் ஒலி பாடல்களில் வரும் சொற்களின் பொருளைக் கெடுத்துவிடும் என்பதே இதற்குக் காரணமாகும்.

இராதாசாமி இயக்கத்தினர் ஆக்ரா மாநகரில் பளிங்குக் கல் கோயிலொன்றைக் கட்டுகின்றனர். இவ்விடம் தயால்பாக்கு என்று இவர்களால் குறிக்கப்படுகிறது.

**இராப்சன், ஈ.ஜே. (கி.பி. 1861-1937)** என்பார் இந்திய வரலாற்றில் ஆர்வங்காட்டிய வரலாற்றாசிரியர். இவர் இந்திய இயலில் இளமையிலேயே மிகுந்த பற்றுக்கொண்டவர். பிரிட்டிசு அருங்காட்சியகக் காசியல் (Numismatics) துறையில் உதவியாளராக இராப்சன்(Rapson) சேர்ந்தார். இவர் கரோசுட்டி (Kharoshti) எழுத்தில் தலைசிறந்த வல்லுநர். கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்தில் 1906-ஆம் ஆண்டில் இவர் வடமொழிப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். கேம்பிரிட்சு இந்திய வரலாறு (Cambridge History of India) என்னும் நூல் தொகுதிகளுள் முதல் இரண்டு தொகுதிகளின் பதிப்பாசிரியராக இருந்த ஆரெல் இசுடெயின் (Aurel Stein) என்பாருடன் இணைந்து இராப்சன், கரோசுட்டிக் கல்வெட்டுத் தொகுப்பு நூலின் இணை ஆசிரியரானார். காசு இயல் கலையில் இவர் ஆற்றிய பணி சீரும் சிறப்புமுடையதாகும். 'பண்டைய இந்தியா' என்னும் நூலை இவர் 1914-ஆம் ஆண்டில் எழுதினார். இந்நூல் மிகப் பெரும் நூலாகக் கருதப்படமாட்டாதாயினும், படிப்பதற்குகந்ததாயும் அதில் எழுதப்பட்டுள்ள கருத்துகள் நம்பும்படியாகவும் உள்ளன.

**இராப்போசனம்** என்பது கிறித்தவர்கள் பின்பற்றும் பல புனிதச் சடங்குகளுள் (Sacrements) இரண்டாம் சடங்கு. முதல் சடங்கு திருமுழுக்கு அல்லது ஞானசுநானம் (Baptism) என்பதாகும். இராப்போசனத்தைத் தமிழ்நாட்டில் இப்போது 'நற்கருணை' (Holy Communion) என வழங்குகிறார்கள். இயேசு கிறித்து, தாம் மனிதக்குலப் பாவங்களை நீக்குவதற்காகச் சிலுவையில் இறந்ததை நினைவு கூரும் சின்னமாக (Memorial) இதை ஏற்படுத்தினார். இப்புனிதச் சடங்கு, மனிதனின் உடலையும் ஆன்மாவையும் மறுவாழ்வுக்கெனப் (Life after Death) பாதுகாக்கிறது எனக் கிறித்தவர்கள் நம்புகிறார்கள்.

இயேசு கிறித்துவைக் கொலை செய்ய வழி தேடினவர்களுக்குத் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்நாள் இரவில், அவர் தம் மாணவர் பன்னிருவருடன் உணவு உட்கொள்ளும்போது தாம் மேற்கொள்ளப் போகும் இறப்பின் வேதனைகளையும் பாரத்தையும் அவற்றின் பொருளையும் நினைவு கூரும்படி இந்தப் புனிதச்சடங்கினைச் செயற்படுத்தி விளக்கினார். அம்மாணவர்கள் உண்ண வைக்கப் பட்டிருந்த அப்பத்தையும் திராட்சைப் பழச் சாற்றையும் இயேசு உயரத் தூக்கி எடுத்து, அவற்றிற்கான நன்றி வேண்டுதல்களை இறைவனுக்கு அளித்தார். பின்பு அந்த அப்பத்தைப் பகிர்ந்து தம் மாணவர் உண்ணும்படி கொடுத்தார். அது பலியாகப் போகிற தம் உடலைக் குறிக்கிறது என்றார். திராட்சைப் பழச் சாற்றையும் பங்கிட்டு அருந்த வழங்கினார். அது மனிதக் குலத்தின் பாவ மன்னிப்பிற்காகத் தாம் சிலுவையில் சிந்தும் இரத்தத்தைக் குறிக்கிறது என்றார்.

நற்கருணை அல்லது இராப்போசனம் மூலம் அப்பத்தையும் திராட்சைப்பழச் சாற்றையும் பெற்றுக் கொள்ளும்போது, இயேசு கிறித்துவின் தூய உடலுடனும் இரத்தத்துடனும் தாங்களும் பங்குள்ளவர்களாகிறார்கள் என்பதும், அப்பத்தினாலும் திராட்சைப் பழச் சாற்றினாலும் மனிதனின் உடல் பலமடைந்து தேற்றப்படுகிறது போல, இயேசு கிறித்துவின் உடலினாலும் இரத்தத்தினாலும் மனிதனுடைய ஆன்மா பலமடைந்து தேற்றப்படுகிறது என்பதும் நம்பப்படுகின்றன.

நற்கருணையில் பங்கு பெறும் ஒவ்வொருவரும் அதில் பங்குபெறுமுன் தனித் தியானத்தில் (Meditation) ஈடுபட்டுத் தம்மை நன்கு ஆராய்ந்தறிந்து, அதனால் வெளிப்படுகிற முன் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனம் வருந்திப் பாவமற்ற புது வாழ்க்கை நடத்த உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். இயேசு கிறித்துவின் இறப்பை நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்து தம் நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றில் உறுதியாய் நிலைத்து நிற்க முன் வருபவர்களுக்கு மட்டுமே நற்கருணை வழங்கப்படும்.

கிறித்தவ சமயத்தில் பல பிரிவுகள் (Denominations of Church) காணப்படுவதால் இப் புனிதச் சடங்கைப் பின்பற்றுவதிலும் பல முறைகள் காணப்படுகின்றன. கத்தோலிக்கக் கிறித்தவர்கள் சிறு குழந்தைகளும் இதைப் பெற அனுமதிக்கின்றனர்.

மறுப்புரையாளராகிய (Protestants) கிறித்தவர்கள் வயது வந்த பெரியவர்கள் (Adults) மட்டுமே இதில் பங்குபெறத் தகுதியுடையவர்கள் என்ற கோட்பாட்டை உறுதியாய்ப் பின்பற்றுகின்றனர். சில பிரிவினர்களிடையே அப்பத்திற்குப் பதிலாக ஒரே உரொட்டியைப் பலர் பகிர்ந்து உண்பதும், ஒரே பாத்திரத்திலிருந்து திராட்சைப் பழச்சாறை அருந்துவதும் வழக்கமாக உள்ளன. திராட்சைப் பழச் சாற்றில் அப்பத்தை நனைத்து வழங்கப்படும் பழக்கமும் உள்ளது.

இப்புனிதச் சடங்கு ஆவிக்குரியதான கருணையைப் (Grace of God) பெறும் புற அடையாளமாகவும் அதை உறுதிப்படுத்தும் சான்றாகவும் இயேசு கிறித்து ஏற்படுத்திய ஆணையாகும். அவர் பலியாக இறந்ததையும் அதனால் மனிதக் குலம் பெறும் நன்மைகளையும் கிறித்தவர்கள் இச் சடங்கின் மூலம் நினைவு கூருகின்றனர்.

**இராபர்ட் சீவல்** இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் இந்தியாவில் பணியாற்றிய ஐ.சி-எசு . அதிகாரிகளுள் ஒருவர். இராபர்ட் சீவல் (Robert Sewell) விசயநகரப் பேரரசைப் பற்றி ஓர் சிறந்த நூலை எழுதியுள்ளார். 'மறக்கப்பட்ட பேரரசு' (Forgotten Empire) என்பது அந்நூலாகும். விசயநகரத்தைப் பற்றி எழுதப்பெற்ற நூல்களுள் தலைசிறந்தது அந்நூல்.

**இராபர்ட்-டி-நொபிலி** தத்துவ போதக சுவாமி என்னும் பெயரால் தமிழகத்துக்கு அறிமுகமான கிறித்தவத் தமிழ்த் தொண்டராவார். இவர் இத்தாலி நாட்டில் தசுக்கனி (Tuscany) மாகாணத்திலுள்ள உரோமாபுரியில் கி.பி. 1577-ஆம் ஆண்டு உயர்ந்த பிரபுக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். நேப்பில்சு (Naples) நகரிலும் உரோமாபுரி நகரிலும் தத்துவ சாத்திரம், வேத சாத்திரம் போன்றனவற்றைக் கற்றுத் தேர்ந்தார். தம் 15-ஆம் வயதில் அருந்துறவுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட நொபிலி (Robert-de-Nobili) 26-ஆம் வயதில் குருப் பட்டம் பெற்றார். நேப்பில்சு நகரத்திலிருந்த இயேசு சபையிற் (Society of Jesus) சமயக் கல்வி பயின்ற இவர், பயிற்சியின் இறுதியில் இந்தியாவுக்கு வந்து தமிழ் நாட்டில் கிறித்தவச் சமயப் பணி செய்ய விருப்பம் தெரிவித்தார். இவர் கி. பி. 1605-ஆம் ஆண்டு இந்தியாவில் கோவா நகர் வந்தடைந்து, பின்னர்க் கொச்சி சென்றார். இவர் தமிழ் நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

நொபிலி தமிழ் நாட்டிற்கு வந்த நோக்கம் தமிழ்நாட்டு உயர்குல இந்துக்களைக் கிறித்தவ சமயத்தில் சேர்க்க வேண்டும் என்பதேயாகும். அதனால், தம் கிறித்தவச் சமயம் பரங்கியர்களின் சமயம் அன்று எனவும், அதுவே உண்மையான சமயம் எனவும் கூறினார். கிறித்தவச் சமயத்தைச் 'சத்திய வேதம்' என்று குறிப்பிட்ட இவர், தம்மை 'இராணா சந்நியாசி' என்றும் கூறிக் கொண்டார். தம் இயற்பெயரைத் 'தத்துவ போதகர்' என்று தமிழில் மாற்றி அமைத்துக் கொண்டார். தம் நடையுடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை இந்து சமயத் துறவியர்களைப் போல அமைத்துக் கொண்டார். அதனால் புலால் உணவை நீக்கிச் சைவ உணவை உட்கொள்ளல், நெற்றியில் சந்தனமும் மார்பில் பூணூலும் அணிதல் ஆகிவற்றை மேற்கொண்டொழுகினார். ஐந்து புரியாக அமைக்கப் பட்டிருந்த பூணூலில் பொன்னாலான மூன்று புரிகள் கிறித்தவர்களின் மும்மூர்த்தங்களைக் குறிப்பனவென்று விளக்கம் தந்தார். பூணூலில் சிலுவையும் இடம் பெற்றிருந்தது. புதுமுறையிலமைந்த இவரது திருமறைப் பணியால் தமிழ் நாட்டில் அந்தணர் உள்ளிட்ட உயர்குல இந்துக்கள் பலர் கிறித்தவச் சமயத்தைத் தழுவினர்.

தத்துவ போதகரின் சமயப்பணி மதுரை, திருச்சி, சேலம், சத்தியமங்கலம் போன்ற இடங்களில் நடைபெற்றது. மதுரையில் சமயப்பணி ஆற்றியபோது இவர்க்கும் இவர்தம் பணிக்கும் தொல்லைகள் பல தோன்றின. அப்போது மதுரையைத் திருமலை நாயக்க மன்னர் ஆட்சி புரிந்தார். ஆட்சியில் திடீரென ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளாலும், தத்துவ போதகரின் சமயத் தொண்டில் காணப்பட்ட குறைபாடுகளினாலும் இவரும் இவரைச் சார்ந்த கிறித்தவர் பலரும் ஆட்சியாளரால் பன்முறை சிறை செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இவர் தம் சமயப் பணிக்கு ஏற்பட்ட இடையூறுகள் மேலும் பெருகின.

தத்துவ போதகர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுத் தேர்ந்து அம்மொழிகளில் நூல்கள் பல இயற்றியுள்ளார். தமிழ் மொழியில் இவர் எழுதிய நூல்கள் யாவும் உரைநடை நூல்களே. இவை யாவும் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன.

அயராத உழைப்பும், சமய வாழ்வின் இறுதி நிலையில் ஏற்பட்ட சிக்கல்களும் தத்துவ போதகரின் உடல்நலத்தினைச் சிதைத்தன. தமிழகத்தில் 42 ஆண்டுகள் சமயப் பணியாற்றிய இவர், கி. பி. 1656-ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் காலமானார்.

ஆர். ஜெ.

**இராபாத்து** என்பது வடஆப்பிரிக்க நாடான மொராக்கோவின் தலைநகரம். இந்த நகரம் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சிப்ரால்டர் நீர்ப் பிரிவிலிருந்து ஏறத்தாழ 274 கி. மீ. தெற்காக ஆப்பிரிக்கக் கடற்கரையில் அமைந்துள்ளது. இதன் தென்பக்கத்தில் உள்ள சலே (Sale) என்னும் நகரத்தை நோக்கியுள்ளது இது. காசாபிளாங்கா (Casablanca) என்னும் ஊர் இந்நகரத்திற்கு 97 கி. மீ. தென்மேற்கில் உள்ளது.



இராபாத்து (Rabat)

இராபாத்து (Rabat) மொராக்கோ மன்னரின் அரசாங்கத் தலைநகரமாகவும், தேசிய சட்டமன்றம் கூடும் இடமாகவும் அரசர் வாழும் இடமாகவும் உள்ளது. இந்த அடிப்படைகளிலேயே இந்நகரின் பொருளாதாரம் அமைந்துள்ளது. அதனால் அரசாங்கப் பணியாளர்கள் இப்பொருளாதாரத் திற்கு முதுகெலும்பு போன்று அமைகிறார்கள். ஒருசில தொழிற்சாலைகளும் இங்குள்ளன. நெசவாலைகள், கம்பள ஆலைகள், கல்நார் ஆலைகள், பழப்பாதுகாப்பு ஆலைகள் போன்றவை அவற்றுள் சில. அலைகள் கொணரும் மண் அடிக்கடி மூடிவிடுவதால் இங்குள்ள துறைமுகம் அவ்வளவாகப் பயன்படுவதில்லை. சிறு படகுகள் மட்டும் வந்து செல்லுகின்றன. இங்கு ஐந்தாம் முகமது பல்கலைக் கழகம் 1957-இல் தோன்றியது.

இராபாத்து உரோமானியர் காலத்திலிருந்தே இருப்பதாகக் கூறுகிறார்கள். மூர் இன இசுலாமியரின் இராணுவ-சமய முகாம் ஒன்று கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இங்கு உருவாக்கப்பட்டிருந்தது. இம்முகாம் சிறப்புப் பெற்று கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் படைவீரர்கள் கூடும் மையமாயிற்று. அப்போது அப்தல் மூமின் (Abd-al-Mumin) என்பார் சுல்தானாக இருந்தார். அவர் பேரர் யாகூப் அல்-மன்சூர் என்பார் இங்குள்ள பெரும் மதிற்சுவர்களைக் கட்டினார். அச்சுவர்கள் 'மதீனா' எனப்படும் பழைய நகரைச் சுற்றிலும் இன்றும் காணப்படுகின்றன. அவர் இங்குப் பெரிய மசூதியொன்றையும் கட்டி, அதற்குத் தம் பெயரைச் சூட்டினார். இம்மசூதி இன்று அழிந்த நிலையிலுள்ளது. இம்மசூதியில் அழகான தூபி (Minaret) ஒன்று உள்ளது. அக்காலத்தைச் சார்ந்த இந்தத் தூபியை 'ஆசன் கோபுரம்' (Tower of Hassan) என்பர். இதனைக் காணப் பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இவ்வரண்மனையிருந்த இடத்தில் சிகப்பு மணற் கல்லினால் கட்டப்பட்டுள்ள நுழை வாயில் ஒன்று அப்தல் மூமின் காலக் கட்டடக் கலையைச் சித்திரிக்கிறது. இதனுள் அழகான தோட்டமொன்றையும் கி. பி. 17-ஆம் நூற்றாண்டுக் கட்டடத்தில் வைக்கப்பெற்றுள்ள இசுலாமியக் கலை அருங்காட்சியகம் ஒன்றையும், பழைய நகருக்குள் யூதர்களின் முன்னாளைய தங்குமிடம் ஒன்றையும் காணலாம்.

நகரத்தின் இக்காலப் பகுதியில் இன்றைய அரச ரின் மாளிகையும், எண்ணற்ற அரசாங்கக் கட்டடங் களும், பிரெஞ்சுத் தூதரின் அலுவலகமும் உள்ளன. இங்குள்ள ஐந்து நுழை வாயில்களுள் ஒன்றைப் பாபல்-இரோவுவா(Babel-Rouah)என்பர். இதனைக் காற்றுகளின் நுழைவாயில் என்றும் கூறுவர்.

இராபாத்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பெருகி வளர்ச்சியுற்றிருந்தாலும், பின்னர் 17-ஆம் நூற்றாண்டுவரை நலிந்து சிறப்பிழந்து காணப்பட் டது. இசுபெயினிலிருந்து வந்த இசுலாமியர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறி னர். இங்கிருந்துகொண்டு இசுபானியக் கப்பல்களுக்கு அவர்கள் சொல்லொணாத் தொல்லைகளைக் கொடுத்தனர். இது கடற்கொள்ளைக் கூட்டத்தா ரின் சுதந்திர நாடுபோல் விளங்கியது. பிரெஞ்சியரின் பாதுகாவலில் இடம் பெற்றிருந்த இராபாத்து 1912-இலிருந்து மொராக்கோவின் தலை நகராயிற்று. இராபாத்தின் மக்கள் தொகை 3,67,620 (1971).

**இராபிசன், பால் (கி.பி. 1898-1976)** சிறந்த அமெரிக்க நடிகராகவும் இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார். இராபிசன் அமெரிக்க நீக்கிரோக்களுள் முதன் முதலில் புகழ்பெற்று விளங்கிய கலைஞர். 1930-ஆம் ஆண்டு பால் இராபிசன் (Paul Robeson) ஆங்கிலக் கவிஞர் சேக்சுபியரின் 'ஒத்தெல்லோ' என் னும் நாடகத்தில்ஒத்தெல்லோவேடம் ஏற்று நடித்

துப் புகழ்பெற்றார். இவர் சிறந்த இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார். அலங்காரப் படகு (Show Boat) என்னும் திரைப்படத்தில் இவர் பாடிய 'பழம்பெரும் நதி' (Ol'Man River) என்னும் பாடல் அழியாப் புகழ்பெற்றது. இவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார். இவர் 1952-ஆம் ஆண்டு இசுடாலின் அமைதிப்பரிசைப் (Stalin Peace Prize) பெற்றார்.

**இராபில்சு, சர் தாமசு இசுடாம்போர்டு (கி.பி. 1781-1826)** என்பார் சிங்கப்பூரை உருவாக்கிய பிரிட்டிசுக் குடியேற்ற நிருவாகி. இவர் கி.பி. 1781-ஆம் ஆண்டு சமைக்கா (Jamaica)விற்குஅண்மையில் பிறந்தார். தம் 14-ஆம் வயதில் இராபில்சு (Raffles, Sir Thomas Stamford) இலண்டன் சென்று, கிழக்கிந்திய வணிகக் குழுவில் பணியாற்றத் தொடங்கினார். இவ்வணிகக் குழுவினால் கி.பி. 1805-ஆம் ஆண்டில் மலேசியாவிலுள்ள பினாங்கு என்னும் நகருக்குத் துணைச் செயலராக அனுப்பப் பெற்றார். ஓரளவே பயிற்சி பெற்றிருந்த இவர் மலேசியா, இந்தோனேசியா நாடுகளின் இயற்கை வரலாற்றையும் பண்பாடுகளையும் மொழிகளையும் ஆராயத் தொடங்கினார். காலப்போக்கில் இவரே இப்பகுதிகளின் தலைசிறந்த வல்லுநராகக் கருதப் பெற்றார். இவர் தம் திறமைகளை அப்போது இந்தியாவின் அரசப் பேராளராக இருந்த மிண்டோ பிரபு கண்ணுற்றார். சாவா மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றத் தேவையான செய்திகளைத் திரட்டும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார். இவருடைய திறமையால் சாவா ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயரின் சார்பாகச் சாவாவையும், இந்தோனேசியாவில் தச்சுக்கு (Dutch) உரிமையாக இருந்த இடங்களையும் நிருவகிக்கும் பொறுப்பை இராபில்சு ஏற்றார். இவர் பல தீவிரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். நிலச் சொந்தம், வரி விதிப்பு போன்றவற்றில் இவர் செய்த மாற்றங்கள் இந்தோனேசியா மக்களுக்கு நலம் பயப்பனவாயிருந்தன. ஆனால், அவை கிழக்கிந்திய வணிகக் குழுவிற்குப் பெருத்த பொருள் நட்டத்தை விளைவித்தன. இவர் கி.பி. 1815-ஆம் ஆண்டில் மேற்கூறிய பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டுத் திரும்பி அழைக்கப்பெற்றார். வணிகக் குழுவின் இயக்குநர்களால் விலக்கப்பட்டாரெனினும், அறிவியல் துறையைச் சார்ந்த பெரியோர்கள் இவருக்கு நைட் (Knight) பட்டம் வழங்கிப் பாராட்டினார்கள்.

இராபில்சு மீண்டும் கி.பி. 1818-ஆம் ஆண்டில் இந்தோனேசியாவுக்குப் போய்ச்சேர்ந்தார். இம்முறை வணிகக் குழுவினருக்கு உரிய பெங்குலு (Beng kulu) என்னும் ஊருக்கு அனுப்பப்பட்டார். இவ்வூர் மேற்குச் சுமத்திராவிலுள்ளது. இவரும் இயற்கையியல் அறிஞரான சோசப்பு ஆர்னால்டு (Joseph Arn old) என்பாரும், 'இராபிலேசியா ஆர்னால்டி' (Raff lesia Arnoldi) என்னும் பெயர் கொண்ட மிகப் பெரிய மலர் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். இத்தருணத்தில் இராபில்சு சிங்கப்பூர்த் தீவின் வாணிகச் சிறப்பையும், அதற்குகந்த அமைவிடச் சிறப்பையும், அதன் எதிர்காலம் சீரியதாக இருக்கும் வாய்ப்புண்டு என்பதையும் ஆய்ந்தறிந்தார். அப்போது அத்தீவு சோகூர் சுல்தானுக்குச் (Johore Sultan) சொந்தமாயிருந்தது. இத்தீவினைச் சுல்தானிடமிருந்து கி.பி. 1819-இல் விலைக்கு வாங்கும்படி கிழக்கிந்திய வாணிகக் குழுவை இராபில்சு தூண்டினார். இவருடைய கருத்துப்படி சிங்கப்பூர் விலைக்கு வாங்கப்பட்டது. சிங்கப்பூர் திறமையாக நிருவகிக்கப்பட்டுப் பொருளாதார மேம்பாடடைவதற்கான வழி வகைகளை இவர் மேற்கொண்டார். காலப்போக்கில் சிங்கப்பூர் சீரிய வாணிக மையமாகவும், கப்பற்படைத் தளமாகவும் மாறி, இராபில்சின் நெடுநோக்கினை மெய்ப்பித்தது.

நோய்வாய்ப்பட்ட இராபில்சு கி.பி. 1824-ஆம் ஆண்டில் இங்கிலாந்து திரும்ப வேண்டியவரானார். இலண்டனில் இராபில்சு விலங்கியல் கழகத்தை நிலைநாட்ட உறுதுணையாக இருந்ததுடன், அதன் முதல் தலைவராகவும் விளங்கினார். இவ்விலங்கியல் கழகமே இலண்டன் விலங்குக் காட்சிச் சாலை என்று இன்று கூறப்படுகிறது. இராபில்சு கி.பி. 1826-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் நாள் இங்கிலாந்தில் பார்னெட்டு (Barnet) என்னுமிடத்தில் காலமானார்.

**இராபின்சன், எட்வர்டு சூவிட்டு** கி.பி. 19-ஆம்நூற்றாண்டில் தமிழிலுள்ள இலக்கியச் சிறப்பினையும் அறக்கருத்துகளின் மாட்சியையும் அறிந்து, அவற்றை மேனாட்டவர் குறிப்பாக, ஆங்கிலேயர் உணரும்படி ஆங்கிலத்தில் நூல் எழுதிய ஆங்கிலேயர்களுள் ஒருவர். இவர் 'தமிழ் ஞானம்' எனப் பொருள்படும் (Tamil Wisdom) பெயரில் கி.பி.1873-ஆம் ஆண்டில் ஒரு ஆங்கில நூலினை எழுதியுள்ளார். இவர் (Robinson Edward Jewitt) தமிழகத்தில் தொண்டு புரிந்து தம் தாயகமாகிய இங்கிலாந்திற்குச் சென்றவராவார். இந்த நூல் தமிழின் உயர்வினை மேனாட்டவர்கள் உணர்வதற்கு உதவியாக அமைந்த ஆங்கில நூல்களுள் ஒன்றாகும். இது இலண்டன் மாநகரில் உள்ள 'வெசிலியன் கான்பரன்சு' அலுவலகத்தால் (Weslyan Conference Office, London) எலிசா ஊல் (Eliza Hoole) என்பவரின் முன்னுரையோடு வெளியிடப்பட்டது. தமிழகத்திலிருந்த இந்து சமய ஞானியர் சிலரின் மரபும், அவர்களுடைய நூல்களிலிருந்து தொகுத்த சில பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதன் முதல் பகுதி தமிழ்மொழி,

தமிழ் இலக்கியம் பற்றிக் கூறுகிறது. இதனை அடுத்து, புறச்சாதிக் குழந்தைகள், திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு, திருவள்ளுவமாலை, திருக்குறளின் அறத்துப்பால், ஔவையின் வாழ்க்கை வரவாறு, மூதுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகியன ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியில் 'மரியாதை ராமன்' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆங்கிலத்தில் அமைந்துள்ளது.

இந்த நூலை 1957-ஆம் ஆண்டில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் முகவுரையோடும், நூலுள் மொழி பெயர்த்தமைக்கப் பட்டுள்ள செய்யுள்களின் தமிழ் மூலப் பாடலோடும் வெளியிட்டுள்ளது.

**இராபேல்** (கி.பி.1483-1520) பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் வாழ்ந்த ஓவியக் கலைஞர்களுள் ஒருவர் ஆவார். இவர் சுவரோவியங்கள் (Frescoes) என்னும் ஓவிய முறையில் புகழ் பெற்ற பல ஓவியங்களைத் தீட்டியுள்ளார். இவருடைய ஓவியங்கள் இத்தாலியின் மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்தனவாகும். இராபேல் (Raphael) கி.பி. 1483-ஆம் ஆண்டு அர்பினோ (Urbino) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி.1504-ஆம் ஆண்டு பிளாரென்சு நகரத்தில் குடியேறினார். இவர் கி.பி. 1509- ஆம் ஆண்டுக்குப் பின் உரோம் நகரத்திற்குச் சென்று இரண்டாம் சூலியசு (Julius II) என்னும் போப்பாண்டவரின் விருப்பப்படி பல சித்திரங்களைத் தீட்டினார். இவருடைய சித்திரங்களுள் மிகச் சிறந்தவை 'ஏவாளின் பிறப்பு' (Creation of Eve) என்பதும் மும்மை (Trinity) என்பதும் ஆகும். இவர் இரண்டாம் பெருசினோ (Perugino II) என்னும் புகழ்பெற்ற ஓவியரின் மாணவராக இருந்தார் என்று கூறப்படுகிறது. இவர் கி.பி.1504- ஆம் ஆண்டு 'கன்னிமேரியின் திருமணம்' (Marriage of the Virgin) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். கன்னிமேரியின் பல ஓவியங்களை இவர் தீட்டியுள்ளார். இவர் இலியனார்டோவின் நுட்பங்களைத் தம் ஓவியக்கலையில் புகுத்தினார். பிளாரென்சு நகரத்தைச் சேர்ந்த செல்வர்களுக்காகக் கன்னி மேரியின் ஓவியங்களைத் தீட்டினார்.

இராபேல் உரோம் நகரத்திற்குச் சென்ற காலத்தில் மைக்கேல் ஆஞ்சலோ என்னும் புகழ்பெற்ற ஓவியர் சிசுடின் மாதாகோவிலின் (Sistine Chapel) மேற்பரப்பை (விதானம்) உருவாக்கிக் கொண்டிருந்தார். போப்பாண்டவரின் இருப்பிடமான வத்திகனில் ஓர் அறைக்கு இராபேல் அகக்கட்டிட அலங்காரம் அமைத்தார். இதனைத் தொடர்ந்து இராபேல் வத்திகன் மாளிகையின் பல பகுதிகளில் அழியாத புகழ் கொண்ட ஓவியங்களைத் தீட்டினார். சிசுடின் மாதா கோவிலின் திரைகளில் மாபெரும் ஓவியங்களை இவர் தீட்டியுள்ளார். இந்த ஓவியங்கள் உலகின் மாபெரும் அருங்காட்சியகங்களிலும் கலைக்கூடங்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. சுவரோவியங்களுடன் இவர் பல கண்கவர் சிற்ப வேலைகளையும் செய்துள்ளார். இவர் கி.பி.1511-ஆம் ஆண்டு இரண்டாம் சூலியசு என்னும் போப்பாண்டவரின் ஓவியத்தைத் தீட்டினார். இவருடைய ஓவியங்களுள் மிகுந்த புகழ் பெற்றது போரகாவில் தீ (Fire in the Borogo) என்பதாகும்.



இராபேல் (Raphael)

**இராம்கர்** இராசசுத்தான் மாநிலம் கோட்டா நகரிலிருந்து 67 கி.மீ. தொலைவிலமைந்துள்ள ஊர். இராம்கர் (Ramgarh) கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றது. இவ்வூரின் பழைமையான பெயர் சிரீநகரம் (Srinagara). இந்நகரத்தின் செல்வச் செழிப்பைக் குறிக்கும் வகையில் இப்பெயர் இந்நகருக்கு ஏற்பட்டது. இராம்கரை மேடா (Meda) என்னும் மரபினர், கி.பி.7 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தனர். இவர்கள் மேவா என்னும் பழங்குடியினரின் வழிவந்தவர்கள். இப்பழங்குடியினர் இன்றும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மேடா அரசர்கள் பல கோயில்களையும் கோட்டைகளையும இங்குக் கட்டினர். மலையவர்மன் என்ற மேடா அரசர் இந்நகரில் கோயிலொன்றைக் கட்டினார். இக்கோயில் இதே மரபைச்சார்ந்த திரிசாசவர்மனால் (Trisasavarma) கி.பி. 1162-இல் புதுப்பிக்கப்பட்டது. மலையவர்மன் தம் பகைவனை வென்றதன் நினைவாக இக்கோயிலைக்கட்டினார் எனக் கல்வெட்டொன்று குறிப்பிடு

கின்றது. இவர்கள் கட்டிய கோட்டை ஒன்று இன்று பாழடைந்து காணப்படுகிறது.

இந்நகரில் சமணக் கோயில்கள் பல உள்ளன. இது சமணர்களின் புண்ணியத்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும். இங்குள்ள கோயில்களிலேயே மிகப் பெரியதும் சிறப்புப் பெற்றதுமான கோயில் பாண்டதேவரா (Bhandadevara) என்னும் இந்துக் கோயிலாகும். இக்கோயில் கசுராகோவைப்(Khajurago) போன்ற சிற்பக் கலை நுட்பங்களைப் பெற்றுள்ளது. இது கருவறை, சபா மண்டபம், புகுமுக மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு நட்சத்திர வடிவ அமைப்பில்கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் சிகரம் திராவிடக்கலைப்பாணியைக் கொண்டுள்ளது. கோயிலின் அடிமுதல் முடிவரை உள்ள வெளிச் சுவர்ப் பகுதியில் பல்வேறு செதுக்குச் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மற்றொரு கோயில் திருமாலுக்குரியது. இக்கோயிலில் இரண்டு மனித உருவச் சிற்பங்கள் உளளன. இக்கோயிலின் கல்வெட்டின்மூலம் இம்மனித உருவங்கள் மேடா அரசர்களின் அதிகாரிகளான தண்டநாயகர் சோலங்கா (Dandanayaka Solanka), இராவுதா தாம்துகா (Rauta Damduka) என்பவர்களின் உருவங்களாகும் எனத் தெரிகிறது. இராம்கரிலுள்ள பிறிதொரு இந்துக் கோயில் கணபதி கோயிலாகும்.

இந்நகரத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் சமண சமயம் தழைத்தோங்கியது. இராம்கருக்கு அருகில் 5 கி.மீ. தொலைவில் காடுகளுக்கு இடையில் பல சமணக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இங்குப் புலிகளும் சிங்கங்களும் மிகுதியாக உள்ளபடியால், இக்கோயில்களை நெருங்குவது அவ்வளவு எளிதன்று. இராம்கரின் கட்டடச் சிற்பக்கலை கசுராகோ பரோலி கோயில்களுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது.

**இராம்மோகன் ராய், இராசா (கி.பி. 1772-1833)** இந்தியாவில் பிரம சமாசத்தை நிலைநாட்டிய சீர்திருத்தச் செம்மல். இவரை இக்கால 'இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' என்றும் கூறுவர். வைதிக இந்து சமயத்தில் புரையோடியிருந்த உடன் கட்டையேறும் கொடுமையைத் தடுக்கப்பிரசாரம் செய்தவர்; உருவ வழிபாட்டைக் கண்டித்தவர்.

இராம்மோகன் ராய் கி.பி. 1772-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் நாள் மேற்கு வங்காளத்தைச் சார்ந்த இராதாநகர் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் அந்தண குலத்தவர். இராம்மோகன் சிறுவயதிலேயே கூர்த்த மதியினராய் விளங்கினார். கிராமப் புறப் பள்ளியொன்றில் வங்க மொழியையும், முசுலிம் மவுல்வி ஒருவரிடம் பார்சி மொழியையும் கற்றுக் கொண்டார். பீகார் மாநிலத்தின் முதன்மை நகரமான பாட்னாவில் அரபி மொழியையும் வாரணாசியில் வடமொழியையும் பயின்றார்.

உபநிடதம், விவிலியம், குர்-ஆன் போன்ற சமய நூல்களைக் கற்றதால், இந்து சமயத்தில் இடைக் காலத்தில் புகுத்தப்பட்டிருந்த சடங்குகள் இடைச் செருகல்கள் என்பதை உணர்ந்து கொண்டார். அவற்றைக் களைத்து இந்து சமயத்தை மாசு மறுவற்ற தாக்கப் பாடுபட்டார்.

இராம்மோகன் பள்ளி மாணவராய் இருந்த போதே உருவ வழிபாடு வேதக் கருத்துக்கு முரணானது என்று கண்டித்து எழுதினார். அதனால் அவர் கடும் எதிர்ப்புக்கு ஆளானார். இந்து சமயச் சடங்குகள், பண்டிகைகள் போன்றவற்றை எதிர்த்ததுடன் புரோகிதத்தையும் தாக்கிப் பேசினார். தம் மகனின் போக்கைப் பிடிக்காத இராம் மோகனின் தந்தையார் இவரை வீட்டை விட்டு விரட்டினார். தன்னந்தனியாக இவர் திபேத்து நாடு சென்று பாலி மொழி பயின்று பௌத்த நெறியைக் கற்றார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தம் இருபதாம் வயதில் வீடு திரும்பினார். பின்னர் வாரணாசி சென்று அங்குப் பத்தாண்டுகள் தங்கினார். அத்தருணத்தில் இவர் தந்தையார் காலமானார். தம் 31-ஆம் வயதில் இராம்மோகன் வருவாய் தேடிப் பணியில் அமர்ந்தார். பார்சி மொழியில் 'உருவ வழிபாட்டு மறுப்பு' என்னும் சிறு நூலைஅச்சிட்டுக் காசில்லாமல் வழங்கினார். இந்நூலில் இவர் அனைத்துச் சமயங்களையும் கண்டித்து எழுதியிருந்தார். சமயத்தலைவர்களின் அறியாமையை இந் நூலில் இவர் தெற்றென விளக்கியிருந்தார். எனினும் கடவுட் கொள்கையை இவர் ஏற்றுக் கொண்டார்.

போதுமானதாக வருவாய் இல்லாத காரணத்தால் இராம்மோகன் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். இந்திய மொழிகள் ஐந்தினைக் கற்றிருந்த இராம்மோகன் தம் 24-ஆம் வயதில் ஆங்கில மொழியையும் கற்கத் தொடங்கிச் சில ஆண்டுகளில் ஆங்கிலத்தில் உரையாடும் திறமையையும் பெற்றார்.

பணியில் இருந்தபோதும் சமய ஆய்வுச் சொற்பொழிவுகள் நடத்தி உருவவழிபாட்டினைக் கடுமையாக எதிர்த்தார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் அரசு ஊழியத்தை உதறிவிட்டுத் தம் தாயாருடன் சொந்த ஊரில் சில காலம் தங்கியிருந்தார்.

பண்டைய கல்வி முறையைக் கைவிட்டு ஆங்கிலக் கல்வியைக் காலத்திற்கேற்பக் கற்றல், இந்து

மகளிர்க்குச் சொத்துரிமை வேண்டுதல், உடன் கட்டை யேறுதலை ஒழித்தல், உருவ வழிபாட்டினை எதிர்த்தல் போன்ற சமுதாயப் புரட்சிக் கருத்துகளை எழுதியும் பேசியும் வந்தார் இவர். சமயத் தலைவர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார் போன்றோர் இவரைக் கடுமையாகக்குறை கூறவே, தம் தாயாரா லேயே இவர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். இராம்மோகனின் அண்ணன் கி.பி.1811-ஆம் ஆண்டு இறந்தார். அப்போது இவருடைய அண்ணியாரும் உடன்கட்டை ஏற்றப்பட்டு உயிர் துறந்தார். இந் நிகழ்ச்சி இராம்மோகனின் உள்ளத்தில் கொடும் புயலை வீசிற்று. இக் கொடிய பழக்கத்தை இந்து சமயத்திலிருந்து களைந்தெறிவது என்று உறுதி பூண்டார். ஆனால், இவர் சட்டமூலமாக அந்தப் பழக்கத்தைத் தடுப்பதை ஆதரிக்கவில்லை; மக்கள் உள்ளத்தை மாற்றி அவர்களுக்கு நற்புத்தி புகட்டி நாளடைவில் அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர விரும்பினார். ஆனால், அக் காலத்தில் அரசப் பேராளராக இருந்த வில்லியம் பெண்டிங்குப் பிரபு இராம்மோகனின் கருத்துகளையும் விஞ்சி, கி.பி. 1829-ஆம் ஆண்டில் உடன்கட்டைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இராம்மோகனுக்குப் பல அறிஞர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிட்டியது. சர் வில்லியம் சோன்சு (Sir William Jones), வில்சன் (Wilson), மெக்காலே (Macaulay), கோல்புரூக்கு (Coalbroke) போன்ற அறிஞர் பெருமக்களுடன் இந்தியக் கல்வி முறை, சமூக அமைப்பு போன்றவை குறித்து இராம் மோகன் உரையாடினார். ஆங்கிலக்கல்வியை இவர் ஆதரித்தார். மூடப்பழக்க வழக்கங்கள், உருவவழி பாடு போன்றவற்றை இடையறாது கண்டித்து வந்த இவர் 'இந்து சமயத்தின் ஒரே கடவுள்' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். உருவ வழிபாட்டிற்கும் இந்து சமயத்திற்கும் தொடர் பில்லை என்பதை இந்நூலில் இவர் வலியுறுத்தினார். கிறித்தவச் சமயத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்தியம்பும் நூலொன்றையும் இவர் எழுதி வெளியிட்டார். இதனால் இந்து சமயத் தலைவர்களும் கிறித்தவப் பாதிரிகளும் இவரைக் கடுமையாக எதிர்த்தனர்.

பிரம சமாசம் உருவாதல்: இன, மொழி, சாதிப் பாகுபாடின்றி அனைத்து மக்களும் ஒரே கடவுளை வணங்க வேண்டும் என்பது இராம்மோகனின் நோக்கம். இந் நோக்கத்தின் அடிப்படையில் பிறந்த இயக்கம் தான் 'பிரம சமாசம்' ஆகும். இவ்வியக்கத்தில் கேசவசந்திரசென் போன்ற அறிஞர் பெருமக்கள் சேர்ந்து வலிவூட்டினர். பிரம சமாசத்தை இராம்மோகன் கி.பி 1828-ஆம் ஆண்டில் நிறுவினார். அனைத்துலக மக்களும் ஒரு தன்மைப்பட்டவர்கள் என்பதே பிரம சமாசத்தின் அடிப்படைக் கொள்கை. பிரம சமாசத்தின் கிளைகள் வெளிநாடுகளிலும் தோன்றின.

அக்காலத்தில் தில்லியில் அரசராயிருந்த மொகலாயப் பேரரசர் இரண்டாம் அக்பர் என்பார் இராம்மோகன் ராயின் திறமைகளைப் பாராட்டிப் போற்றும் வண்ணம், இவருக்கு 'இராசா' (Rajah) என்னும் பட்டத்தைக் கொடுத்தார். அன்று முதல் இவரை 'இராசா இராம்மோகன் ராய், என்று அழைத்தனர். மேலும் அக்பர் இவரை இங்கிலாந்து நாட்டுக்கும் அனுப்பிவைத்தார். அங்கு இவருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஏறத்தாழ மூன்றாண்டுகள் அங்குத்தங்கி இராசா இராம்மோகன் ராய் மனித ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். இந்திய மறுமலர்ச்சிக்கும் உலக மனித ஒற்றுமைக்கும் இடையறாது பணியாற்றிய இராசா இராம்மோகன் ராய் கி.பி.1833-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள பிரிசுட்டல் (Bristol) என்னும் நகரில் காலமானார். இன்றும் அவ்வூரில் இவருடைய நினைவுச் சின்னத்தைக் காணலாம்.

**இராமகவிராயர்** கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; பாண்டிச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையைப் பாடிப் பரிசில் பெற்றவர். இவர் திருவாய்ப் பாடிப் புராணம், சாரப் பிரபந்தம் ஆகிய நூல்களையும் பல தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய இராமகவி பதங்கள் என்னும் நூல் கி.பி. 1886-ஆம் ஆண்டில் விசயரங்க முதலியாரால் பதிப்பிக்கப் பட்டது.

**இராமகிருட்டிண ஐயர், என். (1905-1986):** இவர் வடார்க்காடு மாவட்டம் ஆரணியில் 25.9.1905-இல் பிறந்தார். இவர் தந்தையார் அரசாங்கத்தில் கோட்டாட்சியராகப் (Deputy Collector) பணிபுரிந்தார். இவர் தந்தையார் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமையால் இவரது பள்ளிப் படிப்பும் பல்வேறு இடங்களில் அமைந்தது. அன்னி பெசண்டு அம்மையாரது இயக்கத்தின்போது இவர் கடலூர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது புதுச்சேரியில் வாழ்ந்த அரவிந்தர், பாரதியார் போன்ற புரட்சியாளர்களின் தாக்கம் இவருக்கு ஏற்பட்டது. இவர் 1922-இல் மதுரையில் கல்லூரிப் படிப்பு மேற்கொண்டபோது காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்க நேர்ந்தது. அன்று முதல் காந்தியத்தில் இவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. பின்னர்ச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து கணிதத்தில் பி.ஏ. ஆனர்சு பட்டம்

பெற்றார். 1929-இல் சட்டத்தில் பட்டம் பெற்ற இவர் 1931-இல் சென்னையில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். இவர் 1926-இல் சட்டக் கல்லூரியில் பயின்றபோதே சுந்தரவல்லி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர் சென்னையில் படித்தபோது புறநகர்ப் பகுதியாகிய ஆதம்பாக்கத்தில் தங்கி இருந்தார். அதனால், இவரது மனம் கிராமச்சூழலைப் பெரிதும் விரும்பியது. 1926-இல் இவர் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்பப் பொதுசன ஊழியர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். தீண்டாமையொழிப்பு, முதியோர் கல்வி, கிராமப்புறத் துப்புரவு, ஏழைகளுக்கு மருத்துவ உதவி போன்ற சமூகநலத் தொண்டுகளைத் தம் தோழர்களுடன் சேர்ந்து மேற்கொண்டார். விலங்குகளுக்குக் கொடுமை செய்தல், அவற்றைப் பலியிடுதல் முதலியவற்றைத் தடுப்பதிலும் முனைந்தார்.

தான் குடியிருந்த ஆதம்பாக்கம் பகுதியில் 1930-இல் ஒரு சிறிய மருத்துவமனையை ஏற்படுத்தினார். இவரும் இவர்தம் நண்பர் சிலரும் அங்கு வரும் நோயாளிகளைக் கவனித்துக் கொண்டனர். இத்தொண்டில் ஏறத்தாழ 15 ஆண்டுகள் இவர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். ஏழைகளின் அவல நிலையை உணர்ந்து கொள்வதற்கு இது இவருக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளித்தது. தொழுநோயால் துன்பப்படுவோருக்குத் தாமே மருத்துவம் புரிந்தார். அவர்களுடைய் துன்பத்தில் தாமும் பங்கு கொண்டார். அந்நோயாளிகளுக்கு வாழ்க்கைத் தொழில், கல்வி, பொழுதுபோக்குக்குரிய நிகழ்ச்சிகள் முதலியவற்றை ஏற்பாடு செய்தார். செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழுநோயாளிகளுக்குப் பல்வேறு மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தினார்.

இவர் 1927-இல் சென்னையில் நடந்த காங்கிரசு பேரியக்க மாநாட்டில் தொண்டராகப் பணியாற்றினார். 1941-42 ஆண்டுகளில் காந்தியடிகளின் தலைமையில் நடந்த தனிப்பட்ட சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் தீவிரப் பங்கு கொண்டார். அதனால்,சிறைத்தண்டனையும் பெற்றார். காலஞ்சென்ற சி.என்.முத்துரங்க முதலியார் இவருக்கு அரசியல் குரு ஆவார். 1950-1969 ஆண்டுகளில் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியில் அமைப்பு வேலைகளை மேற்கொண்டார். இவர் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும்(1952-1957) இந்தியப் பாராளுமன்றத்தில் மேலவை உறுப்பினராகவும் (1967-1972) இருந்துள்ளார். இவருக்குக் காந்தியடிகள் வகுத்த நிருமாணத் திட்டத்தில்(Constructive Programme) பேரீடுபாடு உண்டு. தொடக்கம் முதல் 1967 வரை மாநிலக் கதர்க் கழகத்தில் (State Khadi Board) பங்கு பெற்றார் 1954-1956 -ஆம் ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் வினோபாபாவே தலைமையில் நடைபெற்ற பூதான இயக்கத்தில் பெரும் பணியாற்றினார். ஆதம்பாக்கத்தில் ஏறத்தாழ 40 ஆண்டுகளாகச் சிறந்த சேவை புரியும் செய லட்சுமி தாய்-சேய் நல நிலையத்தை உருவாக்கி வளர்ப்பதில் முனைந்து செயற்பட்டார். 1959-இல் ஆலந்தூர் ஏ.சே.எசு நிதியில் சேர்ந்து அங்குள்ள மக்களுக்கு உதவி புரிந்ததுடன் ஒரு சிறந்த மேல்நிலைப்பள்ளியையும் அந்நிதியின் சார்பில் தொடங்கி வைத்தார். பக்தவத்சலம் கல்வி அறக்கட்டளையில் அறங்காவலராக அதன் தொடக்கம் முதல் பணியாற்றினார்.

இவர் கருநாடக சங்கீதத்திலும் பெரிதும் ஈடுபட்டார்; கோடீசுவர ஐயரின் 72 மேளகர்த்தா இராகங்களில் தமிழ்ப் பாடல்கள் அமைவதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் உதவியாக இருந்தார்.

இவர் அமைதியான இயல்புடையவர்; உண்மையான காந்தியவாதி; தற்பெருமை சிறிதும் இல்லாதவர்; அரசியல் விவாதங்களில் ஈடுபட்டபோதும் கோபமின்றி அமைதியாகப் பேசுபவர். காலஞ்சென்ற பெருந்தலைவர் காமராசர் அவர்களின் முழு நம்பிக்கைக்குரியவர். இவர் 1986 மார்ச்சு 6-ஆம் நாள் சென்னை மருத்துவமனையொன்றில் காலமானார்.

**இராமகிருட்டிண கவி** விசயநகர வேந்தரான கிருட்டிண தேவராயர் காலத்தில் விளங்கிய ஒரு சிறந்த தெலுங்கு மொழிக் கவிஞர். இவர் கிருட்டிண தேவராயருக்குப் பின்னர் ஆண்ட வெங்கட்ட என்னும் அரசர் காலம் வரை வாழ்ந்தவர். இவர் தெனாலியில் தோன்றியவராதலின் தெனாலி ராமன் என்று வழங்கப்பட்டார். இராமலிங்கா என்றும் இவரை அழைப்பர். இவர் பெரிய கவிஞராக விளங்கிய போதிலும் இவரை ஒரு விகடகவியாகவே பொதுமக்கள் பலரும் அறிந்துள்ளனர். இவருடைய தந்தையார் பெயர் இராமையர். இவர் கி.பி. 1462-இல் பிறந்தார் என்று கூறப்படுகிறது.

கிருட்டிண தேவராயர் அவையில் விளங்கிய 'அட்டதிக் கசங்கள்' என்று சிறப்பித்துப் பேசப் பெறும் எண்மருள் ஒருவரான இவர் 'பாண்டுரங்க மகாத்மியம்' என்னும் ஒரு காவியம் இயற்றியுள்ளார். தெலுங்கு மொழியில் உள்ள ஐந்து பெரிய காவியங்களுள் ஒன்றாக இந்நூல் மதிக்கப்படுகிறது. பாண்டவருக்கும் இராமருக்கும் சிலேடை அமைய மரபுக் கதையையும் இராமாயணக் கதையையும் செய்

யுள் தோறும் இணைத்து இந்நூல் செய்யப்பட்டுள்ளது. கடிகாசல மான்மியம், இலிங்கபுராணம், உத்படராத்திய சரிதம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். உத்படராத்திய சரிதத்தைக் 'கொண்ட வீடு' என்னும் பகுதிக்குத் தலைவராக விளங்கிய நாதிண்டல கோபனுக்கு உரிமையாக்கினார்.

இவருடைய அறிவுக் கூர்மையையும், சதுரப்பாடுமிக்க பேச்சுத்திறத்தையும் விளக்கும் பலகதைகள் வழங்குகின்றன. அரசவையிலுள்ள உயரதிகாரிகள் பற்றியும் கூட நகைச்சுவை மிக்க செய்திகள் பலவற்றை அவ்வப்போது கூறிக் கேட்போரை நகைப்பூட்டியும், வியப்புறுத்தியும் வந்துள்ளார்.

இவர் காளியை வழிபடக் காளி 1000 தலையுடன் கோரமாகக் காட்சிதர, அதனைக் கண்டு அஞ்சாது, 'ஒருதலையும் ஒரு மூக்கும் இருக்கும் நாங்கள் சலதோடம் பிடித்தால் எவ்வளவு துன்புறுகிறோம்; ஆயிரம் தலையும் ஆயிரம் மூக்குமுடைய தங்களுக்கு அந்நோய் வந்தால் எவ்வாறு துன்புறுவீர்' என வினவியதாகவும், அது கேட்ட காளி சினவாதுமகிழ்ந்து, 'விகடகவியாகுக' என்று அருள் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. தமிழகத்திலும் தெனாலிராமன் கதைகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

**இராமகிருட்டிண சங்கம்**: பல படையெடுப்புகளை இந்திய நாடு சந்தித்திருந்த போதிலும் ஆங்கிலேய ஆதிக்கத்தினால்தான் இந்நாட்டின் சமயம், பண்பாடு, தத்துவம் முதலியன மிகுதியாக அழியத் தொடங்கின எனலாம். அக்காலத்தில் தோன்றி ஆங்கில ஆட்சியின் மயக்கத்திலிருந்து மக்களை மீட்க முயன்றவர் இராமகிருட்டிணர். தொண்டு புரிவதில் புத்த சமயக் கொள்கையும் (போதிசத்துவக் கொள்கை) வேதாந்தத்தின் கொள்கையும் இவரிடம் ஒருங்கிணைந்திருந்தன. இவ்வேதாந்தியின் மாணவரே விவேகானந்தர் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட நரேந்திர நாத் தத்து ஆவர். இவர் மேலை நாடுகளில் ஆற்றிய உரைகள் இந்திய நாட்டின் சிறப்பையும் சமயங்களின் ஒற்றுமையையும் எடுத்தியம்புகின்றன. இவர் தாய்நாடு திரும்பியவுடன் தம் குருவின் பெயரில் நிறுவிய நிறுவனங்கள், தொண்டாற்றுவதே இறைவழிபாடு என்ற கருத்தை வலியுறுத்தி, நடைமுறை வேதாந்தத்திற்கு (Practical Vedanta) வழி வகுத்தன.

இராமகிருட்டிணர் கி.பி. 1886-இல் மறைந்தார். அவர் மறைவுக்குப் பின் சுவாமிவிவேகானந்தர் மற்ற மாணவர்களான துறவிகளின் துணையுடன் தம் குருவின் பெயரில் இரு பெரும் நிறுவனங்களை நிறுவினார். அவற்றுள் ஒன்று இராமகிருட்டிண மடம் (The Ramakrishna Math) ஆகும். இது வங்காளத்தில் ஔரா (Howrah) மாவட்டத்தில் பேலூர் என்னுமிடத்தில் கி.பி. 1899-இல் பின்வரும் குறிக்கோளை அடைய விவேகானந்தரால் அமைக்கப்பட்டது.

இராமகிருட்டிணர்தம் சிந்தனைகளாலும் வாழ்க்கையாலும் ஊக்குவிக்கப்பட்டு, அவற்றின் விளைவாக ஆசையறுத்த, தூய்மையான, ஆன்மிக வாழ்க்கை நடத்தும் துறவிகளைத் தோற்றுவிக்க வேண்டும். அவர்களை ஆசிரியர்களாகவும் வேறுபல தொழிலாளர்களாகவும் பயிற்றுவித்து, பலவழிகளில் உலகுக்குத் தொண்டாற்ற அனுப்ப வேண்டும்.

விவேகானந்தர் தோற்றுவித்த மற்றொரு நிறுவனம் இராமகிருட்டிண சங்கம் (The Ramakrishna Mission) எனப்படும். இது கி.பி. 1897-இல் மே மாதத்தில் தோன்றியதாகும். இவ்வமைப்பிற்குச் சட்ட முறையிலமைந்த தகுதி வழங்க, கி.பி. 1860-ஆம் ஆண்டின் சங்கங்கள் ஒழுங்குமுறைச் சட்டம் இருபத்தொன்றின் கீழ் (Societies Regulation Act XXI) இது 1909-இல் பதிவு செய்யப்பட்டது. இதை நிருவகிக்கும் பொறுப்பு பேலூர் மடத்தின் காவலர்களால் (Trustees) ஆன ஆட்சிக் குழுவிடம் விடப்பட்டது. இச் சங்கம் பின்வரும் குறிக்கோளையடைய அமைக்கப்பட்டதெனலாம்.

சாதி, சமய, தேசிய வேறுபாடுகாணாது மனிதர்கள் அனைவரும் இறைவனின் தோற்றங்களே என்னும் உண்மையைச் செவ்வனே உணர்ந்து கொண்ட துறவிகள், துறவறம் பூணாத தொழிலாளர்களுடன் (Lay Workers) சேர்ந்து கொண்டு, சமய, மனிதாபிமான அறச் செயல்களைத் தன்னலம் கருதாது செய்ய வேண்டும்.

இச்சங்கத்தை நன்கு புரிந்து கொள்ள இராமகிருட்டிண சங்கத்தின் குறிப்பேட்டிலிருந்து (Memorandum of Association of the Ramakrishna Mission) சில பகுதிகளைக் குறிப்பிடலாம். 1. இராமகிருட்டிணர் போதித்துத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த வேதாந்தத்தைப் படிப்பதை ஊக்குவிப்பதும், அதனைக் கற்பிப்பதும் மட்டுமல்லாமல் பல்வேறு சமயங்களை ஒப்பிட்டும் அறிய வேண்டும். 2. கலைகளையும் (Arts) அறிவியல் நூல்களையும் தொழில்களையும் கற்பிக்கவும் வளர்க்கவும் வேண்டும். 3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லாக் கல்வித் துறைகளிலும் ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் 4. பாமர மக்களுக்குக் கல்வி புகட்டும் வேலையை மேற்கொள்ள வேண்டும். 5. பள்ளிகள், கல்லூரிகள், திக்கற்றோர் விடுதிகள், தொழிற்கூடங்கள், அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் (Laboratories), மருத்துவ மனைகள், வலிகுன்றியோர் - ஊனமுற்றோர்.


இல்லங்கள் முதலியவற்றையமைத்துப் பேணிக் காத்து, வளர்த்து நல்ல முறையில் தொண்டாற்ற வேண்டும். மேலும், பஞ்ச நிவாரண வேலைகளையும் செய்ய வேண்டும். 6. இச் சங்கம் தன் குறிக்கோளை அடையத் தேவையான நூல்களையும், பத்திரி கைகளையும், சிறு வெளியீடுகளையும் அச்சிட்டு இலவசமாகவோ விலைக்கோ கொடுக்க வேண்டும். 7. தன் குறிக்கோளையடைய வழிவகுக்கும் என்று எதைக் கருதுகிறதோ அதை இவ்வமைப்பு ஏற்று நடத்த வேண்டும்.

இவ்வாறான இராமகிருட்டிண இயக்கத்தின் கொள்கைகளுக்கு அடித்தளமாக அமைந்திருப்பவை உபநிடதங்களும் பகவத் கீதையும் இராமகிருட்டிணர் தம் அனுபவங்களும் போதனைகளும் மட்டுமல்லா மல், புத்தர், இயேசு ஆகியோர்தம் வாழ்க்கையும் அவர்களுடன் தொடர்புடைய இயக்கங்களின் முன் மாதிரிச் செயல்களும் ஆகும். உபநிடதங்கள் உலகின் ஆன்மிக ஒருமைப்பாட்டினை வலியுறுத்து கின்றன; ஆனால், உலகில் சராசரி மனித அனுபவம் பன்மையைக் காட்டுகிறது. இருவேறு அனுபவங்களின் முரண்பாடுகளைக் களைய வேண்டிய தேவையை விவேகானந்தர் உணர்ந்திருந்தார். எவ்வாறு வேதாந் தத்தை நடைமுறையாக்குவது, பரமார்த்த நிலைக் கும் வியவகார நிலைக்கும் எப்படிப்பாலம் அமைப் பது, ஆன்மிகத்தையும் அன்றாட வாழ்க்கையையும் எவ்வகையில் ஒற்றுமைப்படுத்துவது என்று விவே கானந்தர் பலமுறை நினைத்ததுண்டு. அதன் விளை வாக எழுந்த கருத்துதான் மக்கள் தொண்டாகும். உயிர்களும் இறைவனும் அடிப்படையில் வேறுபட்ட வர்களல்லர் என்றுணர்ந்து, எலலா உயிர்களுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்ற கோட்பாட்டின் மூலம் விவேகானந்தர் தம் நடைமுறை வேதாந்தம் (Practical Vedanta) என்னும் கொள்கைக்குத் திட்ட வட்டமான வடிவம் கொடுத்தார். இதில் இவரது மதிநுட்பமும், இவர் உயிர்கள் பால் கொண்டுள்ள பேரன்பும், ஈரநெஞ்சமும் தெரிகின்றன. இந்நோக் கின் மூலம் ஆன்மாவின் நலனும் (Good) உலக நல் வாழ்வும் (Welfare) ஒன்றுபடுத்தப்படுகின்றன. உயிரி னங்களுக்குத் தொண்டாற்றுவதே இறைவழிபாடா கும் என்ற உண்மையை இந்நோக்குச் சுட்டுகிறது. இதனால் வாழ்கையே சமயமாகிறது. இக்கொள்கை தெய்விகத்தையும் (Sacred) சமயச்சார்பற்றவை (Sacular) என்று எண்ணப்பட்டவற்றையும் இணைக் கிறது எனலாம்.

இராமகிருட்டிண இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தீவிர இந்து சமயப் பற்றுடையவர்களாயினும் மற்றச் சமயங்களை மதிப்பதுடன், அவற்றின் தலை வர்களிடமும் மதிப்பும் அன்பும் கொண்டுள்ளார்கள். இந்திய நாட்டைப் பற்றியும், அதன் பரந்த(Catholic) நோக்கையும் பண்பாட்டையும் வேதாந்தத் தெளி வையும் வெளிநாடுகளில் இவ்வமைப்புப் பரப்பி வரு கிறது. ஆயினும் மற்றச் சமயத்தவரை இந்து சமயத் திற்கு மாற்ற முயலுவதில்லை. முறையான வேதாந்த தத்துவம் கிறித்தவர்களை மேலும் சிறந்த கிறித்த வர்களாகவும் சிறந்த இந்துக்களாகவும் ஆக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடையது.

இராமகிருட்டிண சங்கம் மிக எளிய நிலையில் தொடங்கி எண்பத்தெட்டு ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சியெய்தி, இன்றைய புதிய உலகில் நியூ யார்க்கு(New york), போசுட்டன்(Bosten), சிகாகோ (Chicago) முதல் இலாசுஎஞ்சல்சு(Los Angles) சான் பிரான்சிசுகோ (San Francisco) வரையும், பாரிசு (Paris), இலண்டன் (London) ஆகிய மாநகரங் களிலும் இந்தியாவிலும் வேறுபல நாடுகளிலும் பல்கி, வேதாந்தக் கொள்கைகளைப் பரப்புவது டன் பல்வேறு வகைகளில் பணிபுரிந்து கொண்டும் இருக்கிறது. வெள்ளத்தாலோ பஞ்சத்தாலோ பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், நில அதிர்ச்சியுற்ற இடங்களிலும் (Earthquake), தொற்று நோய் பரவி வரும் பகுதிகளிலும் இச்சங்கத்தவர் மக்களின் துயர் துடைக்க உழைப்பதைக் காணலாம். மேலும், இச்சங்கம் பள்ளிகள், கல்லூரிகள், திக்கற்றோர் இல்லங்கள், மருத்துவ மனைகள் முதலியன நடத்தி வருகிறது. உலகெங்குமுள்ள மக்கள் இச்சங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் மதிப்பும் இதற்கு அவர்கள் தரும் உதவியும் ஒத்துழைப்பும் இவ்வமைப் பின் வெற்றிக்கு இன்றியமையாத காரணங்கள் என லாம்.

**இராமகிருட்டிண பரமஅம்சர்**: பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் இராமகிருட் டிண பரமஅம்சர் போன்ற ஒரு பெருமகன் உலகத் தில் தோன்றி ஓரியக்கத்தை உருவாக்க முடியும். சூழ்நிலைகளை ஒட்டியே இயக்கங்கள் உருவாகின் றன. இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியால் மேல்நாட்டு நாகரிகத் தாக்குதல் ஏற்பட்டது; பழைமையான சமய நெறிகளிலும் ஒழுக்கங்களிலும் மக்கள் கொண்டிருந்த பிடிப்புத் தளர்ந்தது. அதே சமயம் மேல் நாட்டுப் பண்பாட்டுத் தொடர்பினால் கி.பி.19-ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய மறுமலர்ச்சி முகிழ்த்தது. கலை, அறிவியல், சமுதாய வாழ்வு, அரசியல் முதலான துறைகளில் இராசா ராம் மோகன்ராய் போன்ற தலைவர்கள் தோன் றினர். ஆரிய சமாசம் போன்ற இயக்கங்கள் தோன்றின. கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யில் தோன்றியவர் இராமகிருட்டிண பரமஅம்சர்.



இராமகிருட்டிண பரமஅம்சர்

வங்காளத்தில் கமர்புகூர் என்னும் ஊரில் கி.பி. 1836-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 18-ஆம் நாள் அந்தணர் குலத்தில் குதிராம் சட்டோபாத்தியாயர் என்பவருக்கும் சந்திராதேவி என்ற அம்மையாருக்கும் கதாதரர் என்பவர் பிறந்தார். இளமையிலேயே இவரிடம் கலையுணர்வும் கடவுட் பற்றும் காணப்பட்டன. இவர் இசை, நடிப்பு முதலியவற்றில் நாட்டம் கொண்டிருந்தார்; இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சிற்சில சமயங்களில் தியானத்தில் ஒன்றி மெய்ம்மறந்த நிலையில் காணப்படுவார். இறையுணர்வுடனேயே அன்றாட வாழ்க்கையைக் கழித்து வந்தார். கல்கத்தாவுக்கருகில் தட்சிணேசுவரம் என்னும் சிற்றூரில் உள்ள காளி கோவிலிலேயே தம் ஆயுட்காலம் முழுதும் தங்கிக் கோவில் பூசை செய்துவந்ததோடு, ஆத்ம சாதனையையும் மேற்கொண்டார். இக்கோவிலில் கிருட்டிணன், சிவன் முதலான தெய்வங்களுக்கும் கோவில்கள் அமைந்திருந்த சூழ்நிலை இவர் வாழ்வில் கடைப்பிடித்து வந்த சமயப் பொதுநோக்கிற்கு உதவிற்று. அவரவர் தத்தம் சமய நெறிகளையும் ஒழுக்கங்களையும் பின்பற்ற வேண்டும் என்று உபதேசித்து வந்ததோடு, ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் இவர் வலியுறுத்தினார்.

இராமகிருட்டிண பரம அம்சர் முறையாகச் சாத்திரங்கள் கற்றவரல்லர். ஆயினும், கேள்வியறிவு இவருக்கு மிகுதியாக இருந்தது. கமர்புகூர் தருமசாலையில் வரும் சாதுக்கள், பக்தர்கள் ஆகியோருடைய கூட்டுறவு அத்தகைய கேள்வியறிவை இவருக்கு ஊட்டியது. இயல்பாகவே இறையுணர்வு இவருள்ளத்தில் மிக்கிருந்ததால் இவர் ஆன்மிகத்துறையில் வேகமாக முன்னேறினார். நூலறிவின்றியே இறைவனை அணுக முடியும் என்பதைத் தம் வாழ்வில் காட்டிய வித்தகர் இவர்.

இவருடைய உபதேசங்கள் தம்மைச் சுற்றியிருந்தவர்களுக்கு இவர் நேரிடையாகக் கூறியவையே. அவை ஆழ்ந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளாக இருந்தன. இவருடைய உபதேசங்கள் எளியவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருந்தன. எடுத்துக் காட்டாக, இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு சூரியனுக்கும் அதன் ஒளிக்கதிர்களுக்கும் உள்ளது போல பிரிக்க இயலாத ஒன்று என்று இவர் விளக்கியதைக் கூறலாம்.

காளிதேவியைப் பூசை செய்துவந்த இவர் ஒருமுறை சிவவேடம் தரித்துத் தம்முணர்வு கெட்டுச் சிவனது தன்மையையே பெற்றவராகக் காணப்பட்டார். ஒவ்வொரு மதத்திலும் உள்ள கொள்கைகளையும் ஒழுக்க நெறிகளையும் நேரில் அறியும் அவாவினைக் கொண்டிருந்தார். இதன் பொருட்டு வைணவச் சாதனையில் சில காலம் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பிறகு துறவு நிலையை மேற்கொண்டு அத்துவிதச் சாதனையை முறையாகப் பயின்றார். இவ்வாறு சில காலம் பக்தி நெறி, ஞான நெறி இரண்டிலும் மாறி மாறிச் சாதனை மேற்கொண்டார். கோவிலுக்கு வெளியில் தங்கி கி.பி. 1866-இல் இசுலாம் மதத்தின் நடைமுறையை மேற்கொண்டு உருவற்ற கடவுளிடத்தே தம்மை ஒன்றச்செய்து கொண்டார். கிறித்தவ நெறியை கி.பி. 1874-இல் மேற்கொண்டிருந்த போது கிறித்தவருடைய கொள்கையும் அன்பு நெறியும் இவரை ஆட்கொண்டன. இவ்வாறு ஒவ்வொரு சமயத்தைப் பற்றியும் நேரிடையாக ஒன்றியிருந்து பெற்ற அனுபவ அறிவு, அனைத்துச் சமயங்களும் ஒரே குறிக்கோளை நோக்கிச் செல்லும் பல பாதைகள் என்ற உண்மையை இவருக்கு உணர்த்தியது. இதன் விளைவாகப் பொதுமை நோக்கோடு இவர் ஒவ்வொரு மதத்தையும் அணுகினார். எனினும் எல்லோரையும் தத்தம் சமய நெறியில் உறைப்புடன் ஒழுகச் செய்தார். மதமாற்றம் என்பது இராமகிருட்டிணருடைய கோட்பாட்டிற்குப் புறம்பானது. ஒரு குளத்திலுள்ள பல்வேறு துறைகளில் இறங்கி மூழ்கும் பல வகைப்பட்ட மக்களும் ஒரே நீரில்தான் மூழ்குகிறார்கள்; ஒரே பயனைத் தான் பெறுகின்றார்கள். அது போல் எம்மதத்தைச் சார்ந்தவரும், எம்முறையைப் பின்பற்றினாலும் அனைவரும் அடைகின்ற இறுதிப்

பேறு ஒன்றே என்பதை இராமகிருட்டிணர் தம் அனுபவத்தைக்கொண்டே பிறருக்கு உணர்த்தினார். நீர், பானி, சலம், பாடர் என்ற சொற்கள் வேறுபட்டாலும் பொருள் ஒன்றேயாதல் போலப் பிரமம், சிவன், கிருட்டிணன், காளி, அல்லா, ஏசு என்று எப்பெயர் கொண்டு போற்றினாலும் போற்றப்படும் பரம்பொருள் ஒன்றே என்பதை உணர்ந்து உரைத்தவர் இராமகிருட்டிண பரமஅம்சர்.

ஒவ்வொருவரும் தத்தம் இயல்பு, சூழ்நிலைக்கேற்ப ஒரு நெறியைத் தேர்ந்து கடைப்பிடித்தால் அனைவரும் இறுதிக்குறிக்கோளை அடையலாம் என்று இராமகிருட்டிணர் கூறியுள்ளார். கரும நெறியில் நின்று மக்கட் சமுதாயத்திற்குப் பணி செய்வோரும், பக்தி நெறியில் நின்று இறைவனைத் தொழுவோரும், யோக நெறியில் நின்று உள்ளத்தில் உயிருக்குயிராய் இருக்கும் இறைவனைக் காண்போரும், ஞான நெறியில் நின்று மெய்யறிவு பெற்று இறைவனை உணர்வோரும் ஒரே வீடுபேற்று நிலையை அடைய வல்லவரே என்கிறார். இல்லறத்தான் துறவறத்தான் இருவருக்குமே இதில் உரிமை உண்டு. உலகியல் வாழ்க்கை, சமய வாழ்க்கை என்று பிரித்துக் காணத்தகாது என்பதை அவர் பின்வருமாறு கூறுகிறார். 'நீ வேலை செய்யும் போது ஒரு கையால் உலகியல் பணியைச் செய்து கொண்டே மறுகையால் இறைவனுடைய தாளை இறுகப்பிடித்துக் கொள். செய்வதற்கு வேலை இல்லாதபோது இரு கைகளாலும் அவன் தாள்களைப் பிடித்து உன் இதயத்தில் இருத்திக் கொள்'.

இவ்வுலகும் உயிரும் இறைவனின் வெளிப்பாடே. உயிர்கள் அனைத்தினிடத்தும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்பதையும் மக்கள் தொண்டும் மகேசன் தொண்டே என்பதையும், வலியுறுத்தி வந்தவர் இராமகிருட்டிணர். ஒரு மனிதனை மாயை சுயநலக் காரனாக ஆக்குகிறது. அம்மாயையை விடுத்து அருளை மேற்கொண்டு, ஏழை எளியவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தில் தன் முனைப்புடன் எப்பணியையும் செய்யாமல், அவர்களைக் கடவுளின் வடிவமாகக் கருதித் தொண்டுள்ளத்தோடு பணி புரிய வேண்டும் என்கிறார். ஒருமுறை இவர் தீண்டத்தகாதவர் என்று கருதப்படும் ஒருவருடைய இல்லத்தில் உள்ள கழிவறையைத் தம் தலைமயிரால் சுத்தம் செய்தார் என்பது இவர் கொண்டிருந்த இக்கருத்தை வலியுறுத்தும். ஆவுரித்துத் தின்னும் புலையரேனும் அவர் ஈசனுக்குப் பக்தரானால் அவர் தரும் உணவை உண்ணலாம் என்று கூறியுள்ளார். இவர் தம் அனுபவத்தில் மனிதர், விலங்கு, மரம், நிலம் அனைத்தையுமே சிவமும் சக்தியுமாய்க் கண்டதாகக் கூறியிருக்கிறார்.

அத்துவைதிகள் குணம் குறிகளற்ற நிர்க்குண பிரமமே மெய்; குணங்குறிகளைக் கொண்ட ஈசுவரன் அடுத்த நிலையில் வைக்கத்தக்கவர் என்பர். இராமகிருட்டிணர் இரண்டிற்குமிடையே வேறுபாட்டைக் காணவில்லை. நிர்க்குண பிரமமே பரம்பொருள் என்ற அத்துவைதிக்கும் எல்லாக் குணங்களும் நிரம்பப் பெற்ற வழிபடு கடவுளே பரம்பொருள் என்ற சைவ வைணவர்களுக்கும் பாலமாக அமைந்தவர் இராமகிருட்டிணர். குணமற்றபிரமமே மெய்ப்பொருள் என்று கருதியிருந்த பிரம சமாசப் பேரறிஞர் கேசவ சந்திர சென் இராமகிருட்டிணரைச் சந்தித்தபோது, இவருடைய ஆன்மிகச் செல்வத்தால் ஈர்க்கப்பட்டார்; பக்தி நெறியை மதித்தார்; குணங்குறிகள் கொண்ட ஈசுவரனும் வழிபடத்தக்கவனே என்பதை ஏற்றுக் கொண்டார். நீரும் பனிக்கட்டியும் எப்படி ஒரே பொருளின் இரண்டு நிலைகளோ அப்படிக் குணமற்ற பிரமமும் குணம் நிறைந்த ஈசுவரனும் ஏற்றத் தாழ்வற்ற ஒரே பொருள் என்பதை இராமகிருட்டிணர் பலருக்கும் உணர்த்தினார். எனினும் இறைவனோடு முழுதும் ஒன்றிவிடும் சச்சிதானந்த நிலையே ஒருவர் இறுதியாக அடைய வேண்டிய அத்துவைத அனுபவ நிலை என்பதை இவர் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

இராமகிருட்டிணர் மகளிர் அனைவரையும் தாயாகவே கருதினார். துறவுநிலையில் இருந்த இவர் பெண்ணையும் பொன்னையும் விலக்கி வந்தார். ஆன்மிகச் சாதனைக்கு இவை தடை என்று கருதினார். ஆகவே, இவர் தம் மனைவியான சாரதாமணி தேவியையும் சக்தியாகக் கண்டார். இவர் காளிதேவி பூசகராக இருந்ததால் அத்தெய்வத்தாயின் அருளால் இறைவனின் பல்வேறு உருவங்கள் இவர் காட்சியில் இடம் பெற்றன. பகுத்தறிவு, உள்ளுணர்வு இரண்டையும் கடந்து நிற்பதாகிய இவர் காணும் காட்சி, நிர்க்குண பிரமத்தில் ஒன்றி அதுவே ஆன நிலையும் உண்டு. ஆனால், அந்த நிலையினின்றும் கீழே இறங்கி வந்து தம் அனுபவத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறும் வாய்ப்பினையே பெரிதும் விரும்பினார் இவர். பலமுறை இப்படி இரு நிலைகளிலும் இருந்து வந்தது இவருடைய சிறப்பாகும். சங்கரரின் ஞானமும் புத்தரின் இதயமும் இவரிடம் அமைந்திருந்ததே இதற்குக் காரணம். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற தன்னலமற்ற தன்மை இவ்விரு நிலைகளையும் இவரை ஏற்கச் செய்தது.

நோயைத் தீர்த்தல், நீர்மேல் நடத்தல், வானில் எழும்புதல் போன்ற சித்திகளில் சிலருக்கு நாட்டமுண்டு. இராமகிருட்டிணர் இவற்றை ஒதுக்கினார்.

இறைவன் திருவடிப்பேற்றையே இவர் பெரிதாக மதித்தார். இறைவனிடம் நாம் எதையும் கேட்காமல் நம்மையே அவனிடம் அடைக்கலப் பொருளாகக் கொடுத்து விட்டால், அவன் தன்னையே நமக்குத் தந்துவிடுவான் என்று கூறியுள்ளார்.

சீவன் முத்தர்கள் இருவகைப்படுவர். ஒரு வகையினர் தம்மளவிலே பரம்பொருள் ஞானம் கைவரப் பெற்று முத்திப் பேற்றினை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டவர். மறுவகையினர் தாம் பெற்ற அனுபவநிலைகளை விளக்கிப் பிறரையும் அந்நிலைகளுக்கு இட்டுச் செல்வர். ஒரு சிலர் கிடைத்த மாங்கனியைத் தாமே உண்டு மகிழ்வர். வேறு சிலரோ பிறருடன் பகிர்ந்து உண்பர். இவ்விரு வகையினரைப் போன்றவரே மேலே கூறப்பட்டவர்கள். சீவன் முத்தர்கள் பிறருக்கு வாழ்க்கை நெறிமுறைகளை உணர்த்துவதற்காகவே தம் அன்றாடக் கடமைகளைச் செய்து வருவார்கள். அவர்கள் செய்யும் வினைகளின் பயன் அவர்களைப் பற்றமாட்டா. இராமகிருட்டிணர் பரமஅம்ச நிலையை அடைந்தும் பிறருக்கு எடுத்துக்காட்டாகச் சாதனைகளை மேற்கொண்டு ஒழுகி வந்தார். பயன்படுத்தாத பித்தளைப் பாத்திரம் களிம்பேறி ஒளிகுன்றிவிடுவது போலச் சாதனைகளைக் கைவிட்ட சீவன் முத்தனுடைய ஆன்மவொளியும் குன்ற நேரிடும் என்பதற்காகவே பரமஅம்சரும் செயல்களைப் பயன் கருதாது செய்து வந்தார். ஞானியாக இருந்த இவர் கருமயோகியாகவும் வாழ்ந்து வந்தார்.

இறைவனுடைய மாயை இருவகையானது. அவித்தையாகிய மாயை அறியாமை, புறப்பற்று, சினம் முதலியன. அவை மனிதனை இறைவனிடமிருந்து விலகி இருக்கச் செய்யும். வித்தையாகிய மாயை, மெய்யறிவு, பக்தி உயிர்களிடத்து இரக்கம் முதலியன. அவை இறைவனிடம் மக்களைச் சேர்க்கின்றன. இராமகிருட்டிணர் போன்ற பரஅம்சர்கள் அவித்தையை வென்று இறைவனைச் சிக்கெனப் பற்றிக் கொள்ளும் திறம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

இராமகிருட்டிண பரமஅம்சர், மேனாட்டுக் கல்வி பெற்றுச் சமயச்சீர்திருத்தம்செய்ய வேண்டும் என்று கருதிப்பிரம்ம சமாசம் போன்ற நிறுவனங்களோடு தொடர்பு கொண்ட அறிஞர்களையும் சந்தித்தார். நரேந்திரர் என்ற படித்த இளைஞர் இவரைச் சந்தித்துக்கடவுளைக் காட்ட முடியுமா என்று வினவினார். பகுத்தறிவில் நம்பிக்கை கொண்ட நரேந்திரர் பரமஅம்சரால் ஈர்க்கப்பட்டார். வேதாந்தத்தில் தெளிவு பெற்றார். அதை ஒரு நடைமுறைப்படுத்தத்தக்க மதமாக மேனாட்டாரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகச் செய்தவர் பின்னாளில் விவேகானந்தர் என்று அழைக்கப்பட்ட இந்த நரேந்திரரே. இன்று ஆல்போல் விரிந்து சமயப் பணியையும், சமூகப் பணியையும் ஆற்றிவரும் இராமகிருட்டிண மட நிறுவனத்திற்கு வித்திட்டவர் இராமகிருட்டிண பரமஅம்சரேயாவர். பெ.தி.

**இராமகிருட்டிணானந்தர் (கி.பி.1863-1911)** தவத்திரு இராமகிருட்டிண பரமஅம்சரின் அணுக்கச் சீடர்களுள் ஒருவர். இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் ஊக்லி (Hooghly) மாவட்டத்தில் வைதிகக் குடும்பமொன்றில் கி.பி. 1863-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய இயற்பெயர் சசிபூசன்சக்கரவர்த்தி. இராமகிருட்டிண பரமஅம்சரின் நேரடிச் சீடரான இவர், சென்னை மயிலாப்பூரில் இராமகிருட்டிண தொண்டு நிறுவனத்தை நிலைநாட்டினார். தென்னாட்டில் இராமகிருட்டிண ஆசிரமங்களை நிலைநாட்டியவரும் இவரேயாவார். துறவியாக வாழ்நாள் முழுவதையும் மக்கள்தொண்டில் கழித்த சுவாமி இராமகிருட்டிணானந்தர் 1911-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 21-ஆம் நாள் சித்தி அடைந்தார்.

**இராமகீதை** அத்தியாத்ம ராமாயணம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வேதாந்தக் கருத்தமைந்த ஒரு சிறிய நூலாகும். கீதா என்னுஞ்சொல் 'பாடப்பட்டது' எனப் பொருள்படும். மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள கண்ணன் - அருச்சுனன் உரையாடலாக அமைந்த 'பகவத் கீதை' மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினால் வடமொழியில் பல கீதைகள் உருவாயின. அவ்வகையில் அமைந்த இராமகீதை வேதவியாசரால் இயற்றப்பட்ட அத்தியாத்ம இராமாயணத்தில் உத்தரகாண்டத்தின் ஐந்தாம் சருக்கமாக விளங்குகிறது. உமாமகேசுவர சம்வாதமாகச் செய்யப்பட்டுள்ள இந்நூல், உலகப் பழிப்புக் காரணமாகச் சீதையைக் காட்டிற்கனுப்பித் தனியேயிருக்குங்கால், இராமன் இலக்குவனுக்கு அறிவுறுத்தியதாக அமைந்துள்ளது. இதிலமைந்துள்ள சுலோகங்கள் வேதப்பொருளையும் வேதாந்த சமயக் கருத்துகளையும் எளிதாக விளக்குவனவாக உள்ளன. வடநாட்டில் இதன் சுலோகங்களை நாள்தோறும் பாராயணம் செய்துவரும் மரபு இன்றும் இருந்து வருகிறது. வடமொழியில் அமைந்துள்ள இச்சிறு நூலிற்குத் தஞ்சை வே. குப்புசாமிராசு தமிழில் குறிப்புரையோடு கூடிய விரிவுரை வரைந்து வெளியிட்டுள்ளார். இது கீதைக் கொத்து என்னும் நூலின் இரண்டாம் புத்தகமாக உள்ளது. இந்த நூலைப் பாராயணம் செய்வோரைப் பிரமகத்தி தோடம் முதலிய தோடங்கள் அடையா என்பது கூறப்படுகிறது. 'சிரீராமகீதா மகாத்மியம்' என்னும்

நூல் இந்த நூலைப் பாராட்டி அமைந்ததாகும். தமிழில் விரிவுரை இயற்றிய ஆசிரியர், 'ஐங்கரன் நற்றாள் அடைந்தவர்கள் எஞ்ஞான்றும், பங்கமிலராவர் பரிந்து' என்னும் விநாயக வணக்கங் கூறித் தொடங்கியுள்ளார். ஆசாரியன் வணக்கமாக இவர், 'சங்கரபகவத் பாதன் சர்வஞ்ஞன் அடிபோற்றி' என்று ஆதி சங்கரரைத் துதித்துள்ளார். உரையாசிரியர், 'வாழி இராகவன், வாழி இலக்குமணன், வாழி நல வாத ராயண மாமுனி, வாழியிக்கீதை மாநிலத்தென்றுமே, வாழியோதுவார், வாழி வாழியே' என்னும் வாழ்த்தொடு தம் உரைநூலினை நிறைவு செய்துள்ளார்.

**இராமச்சந்திரக் கவிராயர்** தொண்டை நாட்டைச் சேர்ந்த இராச நல்லூரில் பிறந்தவர்; சென்னையை உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். இவர் இராசு மரபினர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர்.

இவர் அக்காலத்துச் 'சென்னைக் கல்விச் சங்கத்தில்' ஓர் உறுப்பினராக விளங்கினார். எனவே, அச் சங்கத்தின் உறுப்பினரும் சென்னை மாநிலத்தின் ஆட்சியாளருமான எல்லீசு துரையுடன் நெருங்கிப் பழகினார்.

இராமச்சந்திரக் கவிராயர் சிறந்த கவிஞராகத் திகழ்ந்ததால் மக்கள் இவரைக் கவிச்சக்கரவர்த்தி, கவிராயர் எனப் பாராட்டலாயினர். இவர் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் இருபத்தேழு பாடல்கள் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற நூலில் காணப்படுகின்றன. நடுவெழுத்தலங்காரம், சத்தபங்கி, நவபங்கி முதலிய சித்திரக் கவிகள் பாடுவதில் இவர் மிக வல்லவராயிருந்தார். எல்லோருக்கும் விளங்கக்கூடிய எளிய சொற்களில் நகைச்சுவை பொருந்தப்பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் சிறந்த நாடகாசிரியருமாவார்.

இவர் சகுந்தலை விலாசம், தாருக விலாசம், இரணிய வாசகப்பா, இரங்கூன் சண்டை நாடகம், சூரவச் சக்கரவர்த்தி நாடகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. இவர் சதுரகராதியைப் பதிப்பித்தார்.

**இராமச்சந்திரபாவா** தமிழகத்தில் அரிகதா காலட்சேபக்கலை தோன்றி வளருவதற்கு அடிப்படையாக விளங்கிய மராட்டிய பாகவதர். இவர் மோர்கூர் இராமச் சந்திர பாவா என வழங்கப்பெற்றார். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மகாராட்டிரப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் குவாலியர் சமசுத்தானத்தில் அக்காலத்தில் நடைபெற்று வந்த 'கீர்த்தனாலயா' என்னும் காலட்சேபப் பள்ளியில் படித்துக் 'கீர்த்தனாச்சாரிய', 'கீர்த்தனகேசரி' முதலிய பட்டங்களைப் பெற்றார். தென்னாட்டில் அரிகதைக் காலட்சேபம் எனப்படுவது வடநாட்டில் கீர்த்தனம் எனப்படும். அதனை நிகழ்த்துவதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் இராமேசுவரப் பயணம் மேற்கொண்ட போது கி.பி. 1864-ஆம் ஆண்டு தஞ்சையில் தங்கினார். அப்போது தஞ்சையை ஆண்ட காமாட்சிபாயி சாகிபு என்னும் அரசியின் விருப்பப்படி சிலநாள் அரிகதை நிகழ்த்தினார். நிகழ்ச்சி வேற்றுமொழியில் இருந்தாலும், அதன் இசை இன்பத்தால் தஞ்சை மக்கள் அதில் பெரிதும் ஈடுபட்டனர். அரசியின் வேண்டுகோளுக்கிணங்கி இவர் தஞ்சையிலேயே தங்கி அரிகதைக் காலட்சேபத் தொண்டினை ஆற்றினார். இவர் 40 ஆண்டுக் காலம் தஞ்சையில் இருந்துள்ளார். தஞ்சையில் இவருக்கென ஒரு மடம் கட்டப்பட்டது. இவருக்குப் பின் இவருடைய மகன் விட்டுணுபாவா இத்தொண்டினைத் தொடர்ந்து புரிந்து வந்தார். அப்போது தஞ்சை அரசில் அமைச்சராக விளங்கிய பெரியண்ணா ஓர் அந்தணச் சிறுவனைக் கல்வியோடு இசைக்கலை, பிடில், மிருதங்கம் ஆகியன இசைக்கும் கலை முதலியவற்றைக் கற்கச் செய்தார். நிருத்தமும் அவனுக்குக் கற்பிக்க ஏற்பாடு செய்தார். இவை அனைத்திலும் வல்லவனாகத் திகழ்ந்த அச்சிறுவன், இராமச்சந்திர பாவாவிடம் அரிகதை காலட்சேபக் கலை நுணுக்கங்களை அறிந்துகொண்டான். மராட்டிரம், தெலுங்கு முதலிய பலமொழிகளையும் கற்றுத் தானே அரிகதை நிகழ்ச்சியை நிகழ்த்த முற்பட்டான். வடநாட்டுப் பாவா வழியையும் தென்னாட்டு வழியையும் இணைத்துப் புதிய முறையில் அரிகதை காலட்சேபத்தினை நிகழ்த்திப் பெயர் பெற்றான். இச்சிறுவனே தமிழ் நாட்டின் இன்று திகழும் அரிகதை காலட்சேபக் கலைக்கு முன்னோடியாக விளங்கிய தஞ்சாவூர் கிருட்டிண பாகவதராவர்.

**இராமச்சந்திரர்** (கி. பி. 1271-1310) தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சிபுரிந்த சேவுணர் (யாதவர்) அரசர் வரிசையில் புகழ்மிக்கவர்களுள் ஒருவர் ஆவார். மன்னர் மகாதேவரின் இறப்பிற்குப் பின்னர், மகாதேவரின் புதல்வரான அம்மனா சில மாதங்கள் ஆட்சி புரிந்தார். அம்மனாவை அடுத்து இராமச்சந்திரர் கி.பி. 1271-இல் அரியணையேறினார். கந்தரரின் புதல்வரான இராமச்சந்திரர் இசுலாமிய வரலாற்றாசிரியர்களால் இராமதேவர் எனக் குறிக்கப்பெறுகிறார்.

இவரது ஆட்சியின் தொடக்க காலத்தில் சேவுணர்களின் தலைநகரம் கர்நாடக மாநிலத்தில் தாவண்கரேக்கு அருகில் உள்ள பெட்டூரில் (Bettur)

இருந்தது. இராமச்சந்திரர் தமது ஆட்சிக்காலத்தில் எதிரிகளின் படையெடுப்பை அடிக்கடி சந்திக்க வேண்டியிருந்தது. ஒய்சாளர்களும், குசராத்தை ஆண்டு வந்த சாளுக்கியர்களும், மாளவ வேந்தர்களும் இவர்தம் பகைவர்களாகத் திகழ்ந்தனர். மாளவ வேந்தரான இரண்டாம் துர்சனவர்மனை இவர் வென்று அடிமைப்படுத்திய போதிலும் ஒய்சாளரையும் சாளுக்கியரையும் இவ்வரால் வெல்ல இயலவில்லை.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில்தான் இசுலாமியப் படையெழுச்சி என்னும் சூறைக்காற்றும் சுழன்று அடித்தது. காராவின் ஆளுநராக இருந்த அல்லாவுதீன் தேவகிரியின்மீது கி. பி. 1274-இல் படையெடுத்தார். எதிர்பாராத தருணத்தில் நிகழ்ந்த இப்படையெழுச்சியைச் சமாளிக்க இராமச்சந்திரர் ஆயத்தமாக இருக்கவில்லை. தம் மகனான சங்கர தேவனோ பெரும்படையுடன் தெற்கு நோக்கிச் சென்றிருந்தான். இந்நிலையில் தம்மிடம் உள்ள படையுடன் யாதவ மன்னன், அல்லாவுதீன் கில்சியின் படையுடன் மோதித் தோல்வியைத் தழுவியதால், தேவகிரிக் கோட்டையில் பாதுகாப்பாக ஒளிந்து கொண்டார். கோட்டை அல்லாவுதீனால் முற்றுகையிடப்பட்டது. யாதவ வேந்தனும் அல்லாவுதீனுக்குப் பெருமளவில் பொன்னையும் தம் பெண்ணையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார்.

அல்லாவுதீன் தேவகிரியை விட்டு வெளியேறு முன்பே இச் செய்தி அறிந்த சங்கரதேவன் பெரும் படையுடன் தேவகிரிக்கு வந்தான். தன் தந்தையின் அறிவுரையைக் கேளாமல் இசுலாமியப் படைகளுடன் போரிட்டான்; தோல்விதான் கிடைத்தது. கோபம் கொண்ட அல்லாவுதீன் இப்போது இரண்டு மடங்கு பொன்னும் பொருளும் கேட்டான். ஆண்டு தோறும் கப்பம் கட்ட வேண்டுமென்றும் விதித்தான். 600 மாண்டு முத்துகளும், 2 மாண்டு நகைகளும், 1000 மாண்டு வெள்ளியும், 4000 பட்டுச் சேலைகளும் கொடுப்பதாகச் சங்கரதேவன் ஒப்புக்கொண்டான்.

தேவகிரி வேந்தன் தில்லிச் சுல்தானுக்கு முறையாகக் கப்பம் செலுத்தவில்லை. மேலும், அல்லாவுதீனின் படைகளால் குசராத்து தாக்கப்பட்ட போது, குசராத்திலிருந்து ஓடி வந்த மன்னன் கர்ண தேவனுக்கும், அவன் இளவரசி தேவாள தேவிக்கும் தனது அரண்மனையில் அடைக்கலம் தந்தான். இவற்றால் சினம் கொண்ட தில்லிச் சுல்தான் அல்லாவுதீன் கில்சி தன் படைத் தலைவனான மாலிக்காபூரைத் தேவகிரி மீது படையெடுக்க ஆணையிட்டான். சங்கரதேவனும் இராமச்சந்திரரும் தோற்கடிக்கப்பட்டனர். இராமச்சந்திரர் கைது செய்யப்பட்டு, தில்லிக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அல்லாவுதீன் கில்சி இராமச்சந்திரரை அன்புடன் வரவேற்று ஆறு மாத காலம் தில்லியில் விருந்தினராக வைத்திருந்து, தேவகிரிக்கு அனுப்பினான். அவரது நாடு அவருக்குத் திருப்பித் தரப் பட்டது. கி.பி. 1310-இல் தான் இறக்கும் வரையில் இராமச்சந்திரர் தில்லிச் சுல்தானுக்கு உண்மையுள்ளவராக நடந்து கொண்டார். இவருக்குப் பின் இவர் மைந்தன் சங்கரதேவன் ஆட்சிப் பொறுப்பேற்றான்.

சு.

**இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். (கோவைகிழார்)** கோயம்புத்தூரில் 3.11.1888-இல் பிறந்தார். இவர் தந்தை மருதாசலம் செட்டியார்; தாய் கோனம்மாள். இராமச்சந்திரன் தமது ஆறாம் வயதில் நகரசபைத் தொடக்கப் பள்ளியிற் கல்வி பயின்றார். இவர் 1904-இல் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். மாநிலக் கல்லூரியில் சேர்ந்து 1908-இல் பி. ஏ. தேர்ச்சியும், பின்னர் நான்கு ஆண்டுகள் சட்டக்கல்லூரியில் பயின்று 1912-இல் பி.எல். தேர்ச்சியும் பெற்றார்.

இவருக்குக் கோவை நகரில் புகழ்பெற்ற தமிழறிஞர்களாக விளங்கிய திருச்சிற்றம்பலம்பிள்ளை, சபாபதிப் பிள்ளை என்பவர்கள் தமிழ் அறிவு ஊட்டினர். சென்னையிலிருந்த காலத்தில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரிடம் தமிழ்க் கல்வி பயின்றார்.

இவர் வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் நல்ல பயிற்சி பெற்றார்; இந்தி, உருது, மலையாளம் ஆகியனவும் அறிலார்.

சட்டப்படிப்பு முடித்தவுடன் இவர் கோவையில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கினார். தொழிலில் நேர்மையுடன் நடந்து பெரும் புகழீட்டினார். இவர் 1940 முதல் ஓய்வுபெறும் வரை இந்து அறநிலையத் துறையில் ஆணையாளராகப் பணியாற்றினார். தொழில் நடத்திய காலங்களில் பல நிறுவனங்களின் நிலையங்களில் கழகங்களில் பங்கு கொண்டு பணியாற்றினார். கோவைத் தமிழ்ச் சங்கத்தை சி.கே.சுப்பிரமணியமுதலியார்தலைவராய் இருக்க இவர் செயலாளராய் இருந்து நடத்தி வந்தார். சென்னைச் சுவடிகள் நூலகம், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம் ஆகியவற்றிலும் இவர் உறுப்பினராய் இருந்தார். ஆங்கில அரசாங்கப் பூவியல் சங்கத்தில் இவர் ஓர் உறுப்பினர்.

கல்வி பயிலும் காலத்தில் சென்னையில் சில இயக்கங்களோடு தொடர்பு கொண்டு மதுவிலக்குப் பிரச்சாரம் முதலியன செய்தார். கோவைப் பகுதியில் கிராம ஊழியர் சங்கத்தில் சேர்ந்து ஊர்ப்புறங்களில்

சுகாதாரம் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். சிறைக் கைதிகளுக்குக் கல்வியறிவு, ஒழுக்க, சமய போதனைகள் செய்தார்.

கோவில்களில் திருமுறை ஓதுதல், எழுதுதல் முதலியன செய்வித்தார். பல புலவர்களைக் கொண்டு தலவரலாறு முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியம் கிடைக்க வகை செய்தார். சமயச் சொற்பொழிவாளர் பலரை நியமித்தார். ஆலயத் திருக்குடமுழுக்கு விழாவில் அபிடேகங்கள் ஆகம முறைப்படி நடக்க வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர். தமிழில் அருச்சனை செய்யும் முறையையும் தொடங்கினார். சைவசித்தாந்த சமாசத்தில் பங்கு கொண்டு பல பணிகள் ஆற்றியிருக்கிறார்.

மாவட்டக் கல்விச் சங்கம், மத்திய கல்விச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப்பகுதி பெற்றதால் தொடக்கக்கல்வி முறையைச் சீர்திருத்தி அமைத்தார். மிகுதியான பள்ளிகள் தொடங்க ஏற்பாடு செய்தார். ஆசிரியர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பாடுபட்டார்.

கோவை மாவட்ட நூலகக் குழுவின் தொடக்க காலத்தில் தலைவராய் இருந்து சிறந்த முறையில் நூலகம் உருவாவதற்கும் பல கிளைகள் தோன்றுவதற்கும் அரும்பாடுபட்டார்.

இவர் கல்லூரியில் இயற்பியல், சட்டம் பயின்றிருப்பினும் தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை பெற்றிருந்தார். உரைநடையாகவும் செய்யுளாகவும் பல நூல்களை ஆக்கியுள்ளார். ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை மொழி பெயர்த்துள்ளார். தமிழ்நாட்டின் வரலாறுகளையும் புலவர்களின் வரலாறுகளையும் கல்வெட்டின் துணைக்கொண்டு ஆய்ந்து தெளிவு செய்துள்ளார்.

மயிலம் தமிழ்க் கல்லூரியும், தருமபுரம் கல்லூரியும் தோன்றுவதற்கு இவர் பெரிதும் உதவி செய்தார். பேரூர்த்தமிழ்க் கல்லூரிக் கழகம் என்னும் பெயரில் ஒரு கழகம் நிறுவப்பெற்று, அதில் கோவை கிழார் செயலாளராய் இருந்து பணியாற்றினார். பல்கலைக்கழகத்தாருடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று, 1953-ஆம் ஆண்டில் பேரூர்த் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் கல்லூரி முதல்வராகவும், பொருளாளராகவும் இருந்து பணியாற்றினார்.

திருமடத்தின் சார்பில் உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கும் இவர் மிக உதவியாய்இருந்தார். மற்றும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் நடைபெறும் விழாக்கள் பலவற்றிலும் கலந்து சிறப்பித்தார்.

இவர் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராய் இருந்த காலத்தில் 'கொங்குமலர்' என்னும் மாத இதழுக்கு ஆசிரியராக இருந்து 1934 முதல் 1937 வரை நடத்தி வந்தார். அதில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் சில நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. சென்னைச் சைவசித்தாந்த சமாசத்தின் இதழான சித்தாந்தத்திற்கு 1947-53 வரை ஆசிரியராக இருந்து நடத்தினார்.

சென்னை அரசாங்கக் கையெழுத்து நூலகத்தில் உறுப்பினராய் இருந்து சோழன் பூர்வ பட்டயம், கொங்குதேச ராசாக்கள், பேரூர் ஆகிய நூல்களையும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உறுப்பினராய் இருந்து இராமப்பய்யன் அம்மானை என்னும் நூலையும், தமிழிசைக் கருவிகள் எனும் நூலையும் பதிப்பித்திருக்கின்றார்.

இவர் எழுதியுள்ள சிறுகட்டுரைகள், ஆராயச்சிகள், வரலாறுகள், பயண நூல்கள், செய்யுள் நூல்கள் கணக்கிலடங்கா. பல அச்சிட்டு வெளியிடப்பட்டன. வெளிவராதன மிகப்பல. இவர் எழுதிய 'கொங்குநாட்டு வரலாறு' என்னும் நூல் பெரும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதி வந்துள்ள நாட்குறிப்புகளின் தொகுப்புகள் நாற்பதிற்கு மேல் உள்ளன. சா.இரா.

**இராமசரித மானசம்** என்பது ஒரு நூல். இந்தியில் இதை எழுதியவர் துளசிதாசர். இவர் கி. பி. 1532 முதல் 1623 வரை வாரணாசியில் வாழ்ந்த முதன்மைக் கவிஞர்; ஆன்மிக நெறியைப் பிறருக்குப் போதித்த அனுபூதிமான்; வடமொழியில் இயற்றப்பட்ட வால்மீகி இராமாயணத்தை இந்தி மொழியில் இராமசரித மானசம் என்னும் பெயரில் எழுதியவர். இந்நூல் இந்துக்களால் புனித நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பேரிலக்கியமாகும். இது துளசிதாசரால் சமசுகிருதம் கலந்த அவதீ (Awadhi) மொழியில் கி. பி. 1584-ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கி, ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளில் நிறைவு செய்யப் பெற்றது. தோகா, சௌபாயி, செவட்டா என்னும் விருத்தப்பாக்களில் இந்நூல் யாக்கப் பெற்றுள்ளது.

இராமசரித மானசம், ஞானத்தையும் பக்தியையும் எடுத்தியம்புகிறது. சாதுக்களின் பண்புகள், இல்வாழ்வானின் கடமைகள் போன்ற

வற்றை விரிவாகக் குறிக்கின்றது. இக்காப்பியம் பரதனின் வரலாற்றைச் சிறப்பாகச் சுட்டுகிறது. இதன் அயோத்தியாகாண்டம் மற்றக் காண்டங் களைவிடச் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் தொழிலதிபர் பிர்லா அவர்களின் பொருட் செலவில் மானசமந்திரம்(Manasa Mandir)என்னும் கோயிலில் 'இராமசரித மானசம்' முழுவதும் பளிங்குக்கற்களில் பொறிக்கப்பட்டு நாற்சுவர்களிலும் பதிக்கப்பட் டுள்ளது.

**இராம சாத்திரி பிரபுனே** மராட்டியத் தலைமை நீதிபதி; ஒரு பக்கச் சார்பின்றி நீதி வழங்குவதில் வல்லவர்; பீசுவா நாராயணராவ் ஆட்சிக்காலத்தில் நீதித்துறைக்குப் பெருமை சேர்த்தவர். இவர் கி. பி. 1761 முதல் தம்மைப் பாவ் சாகிபு என்று சில மராட்டிய அதிகாரிகள் நம்பும்படி நடித்துக் கொண்டிருந்த சுக்லால் என்பாரை, கி. பி. 1765-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் விசாரித்து, அவரிடம் உண்மையை வாவழைத்து, அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கினார். பீசுவா நாராயணராவ் கி. பி. 1773 ஆம் ஆண்டு வஞ்சகர்களால் கொல்லப் பட்டபோது, இராம சாத்திரி ஆறு வாரங்கள் நீதி விசாரணை நடத்தினார். இக்கொலைக்கு மூல காரணம் இரகுநாதராவே என்றும், இதில் 50 பேர் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் இவர் கண்டறிந்தார்.

நீதி தவறாத இராமசாத்திரி, புதிய பீசுவா வாகப் பதவியேற்ற இரகுநாதராவே இக்கொலைத் தொடர்பான முதல் குற்றவாளி என்பதனை அவரிடமே எடுத்துக்கூறி, தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்று வாதாடினார். இதனைக் கேட்டு வெகுண்ட பீசுவா இரகுநாதராவ் இராம சாத்திரியைப் பதவி நீக்கம் செய்தார். இதன் விளைவாக இவர் தமது சொந்த ஊருக்குச் சென்று அமைதியாக வாழ்ந்து வந்தார். ஓராண்டு சென்ற பின் தலைமை நீதிபதிப்பதவி மீண்டும் இவரைத் தேடி வந்தது. தாம் இப்பதவியில் அமர வேண்டு மென்று வற்புறுத்தப்பட்டபோது, நீதித்துறையில் அரசு தலையீடு இராது என்றும் கூறப்பட்ட தீர்ப்புகள் நிறைவேற்றப்படும் என்றும் எழுத்து மூலம் எழுதி வாங்கிக் கொண்டபின்னரே இவர் மீண்டும் பதவியில் அமர்ந்தார். நீதியின் காவலராக விளங்கிய சாத்திரி கி. பி. 1790-இல் காலமானார். இவருக்குப் பின் அய்ய சாத்திரி தலைமை நீதிபதியாக அமர்த்தப் பட்டார்.

இவர் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில் குற்றச்சாட்டுகள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டன. குற்றவாளிகள் விருப்பு வெறுப் பின்றித் தண்டிக்கப்பட்டனர். மாதவராவின் ஆட்சிக் காலத்தில் நீதி நிருவாகம் சிறப்புற நடைபெற இவர் பெரிதும் உதவினார். இவரை இராம்சாத்திரி பிரபுனே என்றும் கூறுவர். ம. சு.

**இராமசாமி. ஈ. வெ.** (கி.பி. 1879-1973) 17-9-1879-இல் கோயம்புத்தூர் மாவட்டம் ஈரோடு நகரில் பிறந்தார். இவர் தந்தையார் வெங்கட்ட நாயக்கர்; தாயார் சின்னத்தாயி.



இராமசாமி, ஈ, வெ.

இவர் குழந்தைப்பருவத்தில் 5 ஆண்டுகளே ஆரம் பப் பள்ளியில் படித்தார். இவரது இயற்கை அறிவை நோக்கி இவர் தந்தையார் இவரை மண்டிக்கடை யில் இருக்கச் செய்தார். மூட்டைகளுக்குக் குறிப்பு எழுதுதல், ஏலம் கூறுதல், சரக்குகளை உயர்ந்த விலைக்கு விற்றல், வாடிக்கையாளர்களிடம் அன்பு டன் பழகுதல் ஆகிய எல்லாச் செயல்களாலும் இவர் புகழ்பெற்ற வணிகராய்த் தந்தையை மிஞ்சும் வகையில் உயர்ந்தார்.

இவர் நாகம்மை என்ற பெண்ணைத் தமது 13 ஆம் ஆண்டில் மணந்து கொண்டார். வாணிகத்தில் ஈடுபட்டிருந்தவர் திடீரெனத் துறவு பூண நினைத் துக் காசி வரை சென்று அங்கு நடந்தவற்றைப் பார்த்து, வெறுத்து மீண்டும் வாணிகத்திற்கே திரும் பினார்.

புகழ்பெற்ற வணிகராக மட்டுமல்லாமல் பொதுப் பணியில் மிகவும் நாட்டம் கொண்டு, பிளேக்கு ஒழிப்புக் கமிட்டித் தலைவர், தேவத்தானக் குழுத் தலைவர், வருமானவரி தீர்ப்பாயக் குழு உறுப்பினர் முதலிய பதவிகளை ஏற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார். நகரசபைத் தலைவர் ஆனார். சேலத்தில் சி. இராசகோபாலாச்சாரியார் அப்போது சேலம் நகரசபைத் தலைவராக இருந்தார்.

நகரசபைத் தலைவர்களாக இருவரும் இருந்ததால் ஏற்பட்ட நட்புக் காரணமாக சி. இராசகோபாலாச்சாரியார் (டாக்டர் வரதராசலு நாயுடு வழக்கில் வாதாட) மதுரைக்குச் செல்லும் வழியில் ஈரோட்டில் ஈ.வெ.ரா. வீட்டில் தங்கினார். அப்போது அவர் ஈ.வெ.ரா.வைக் காங்கிரசில் சேர வற்புறுத்தி அதில் வெற்றியும் பெற்றார். ஈ.வெ.ரா. 1919-இல் காங்கிரசில் சேர்ந்தார்.

தாம் வகித்த பல பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, காங்கிரசில் சேர்ந்து, பட்டாடையையும் ஆடம்பரத்தையும் நீக்கி, முரட்டுக் கதர் கட்டும் தேசியவாதியானார். இவர் 1920-இல் காந்தியாரால் தொடங்கப்பெற்ற 'ஒத்துழையாமை இயக்கத்தில்' தீவிரமாக ஈடுபட்டுத் தமிழ்நாடு முழுவதும் அதன் கொள்கையைப் பரப்பினார். கதர் இயக்கத்தினைப் பலரும் அறியச் செய்தார். தீண்டாமை விலக்கு, நீதி மன்றப் புறக்கணிப்பு, பள்ளிகளை விடுதல், மது விலக்கு முதலியன இவரால் தீவிரமடைந்தன.

கள்ளுக்கடை மறியலைக் காங்கிரசு அறிவித்த போது (1921) இவர் தங்கை கண்ணம்மாளும் துணைவி நாகம்மையாரும் தலைமை தாங்கி நடத்தி 144 தடைச் சட்டத்தை மீறினார்கள். கள்ளுக்கடை மறியலை நிறுத்தி வேறு நடவடிக்கையில் ஈடுபடலாமா என்று காந்தியாரிடம் கேட்கப்பட்டபோது, 'மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகள் கையில் தான் உள்ளது', அவர்களைத் (கண்ணம்மாள், நாகம்மையார்) தான் கேட்க வேண்டும் என்று காந்தியார் பதிலளித்தார்.

கேரளத்தில் 1924-இல் வைக்கம் என்ற ஊரில் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்ததை எதிர்த்து, சார்சு சோசபு கிளர்ச்சி ஒன்றைத் தொடங்கினார். தொடங்கியவர்களைத் திருவிதாங்கூர் அரசு கைது செய்துவிட்டது. 'சத்தியாக்கிரகம்' நிறுத்தப்படும் நிலையில், சிறையிலிருந்தே அவர் ஈ.வெ. இராமசாமிக்கு மடல் எழுதினார். இவர் அதை ஏற்று உடனே சென்று, தம் குடும்பத்தினரையும் அக்கிளர்ச்சியில் ஈடுபடவைத்தார். ஓராண்டுக் காலம் தொடர்ந்து போராட்டம் நடத்தினார். இரு முறை சிறை சென்று அப்போராட்டத்தினை வெற்றியோடு முடித்தார். 'வைக்கம் வீரர்' எனப் பெயர் பெற்றார்.

ஆங்கிலேய அரசினை எதிர்த்துப் பேசிய பேச்சுகளுக்காக 'அரசு வெறுப்புத் தூண்டல்' குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு, இவர் எதிர் வழக்காடாமல் தண்டனை பெற்றார். இப்படிப் பலமுறை சிறை சென்று 'சிறைப் பறவை' ஆனார்.

தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் தலைவராகப் பொறுப்பு வகித்த இவர், தேசிய உணர்வினை ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டுக் குருகுலம் என்ற பெயரால் காங்கிரசுக் குழுவின் நிதி உதவியுடன், வ.வெ. சுப்பிரமணிய ஐயரால் சேரன்மாதேவியில் தொடங்கப்பட்ட குருகுலத்தில் சாதி அடிப்படையில் காட்டப்பட்ட வேறுபாடுகளைக் கண்டித்தார். அதன் காரணமாகக் காங்கிரசுடன் இவருக்குக் கருத்து வேறுபாடு தோன்றியது.

இவர் காங்கிரசிலிருந்து விலகி மனித உரிமை சமத்துவக் கொள்கை பரப்ப 1925-இல் 'சுயமரியாதை இயக்கம்' கண்டார்.

பிறவியை அடிப்படையாகக் கொண்ட சாதிமுறை, பெண்ணடிமை, ஆண்டான்-அடிமை, ஏழை-பணக்காரன் என்ற பொருளாதாரப் பேதைமை ஆகியவற்றைக் கொண்ட சமூக அமைப்பினை மாற்றி, தற்சிந்தனையும், பகுத்தறிவும் மானமும் உள்ள மக்களாகத் திகழும் நிலையை உருவாக்குவதே அதன் குறிக்கோள் என்றார்.

இந்தக் குறிக்கோளுக்குத் தடையாக உள்ள கடவுள், மதம், சாத்திரம், புராணம், இலக்கியம், சட்டம் எல்லாவற்றையும் எதிர்த்து, மக்கள் மத்தியில் சொற்பொழிவின் மூலமும் கிளர்ச்சியின் வாயிலாகவும் மாபெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதைத் தமது சிறந்த தொண்டாகக் கருதி, பதவி நோக்காது, புகழ் விரும்பாது, எதிர்ப்புக் கண்டஞ்சாது, காலம் பாராது, பெருமை-சிறுமை பற்றிக் கவலைப்படாது, நன்றியை எதிர்பாராது, முழுநேரப் பொதுப்பணியாளராகத் தம்மை மாற்றிக் கொண்டார்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் தேவையை இவர் வலியுறுத்தினார். குடும்ப நலத் திட்டத்திற்கு இவரே முன்னோடியாவார். கட்சிக் கண்ணோட்டமின்றி அப்போது நடைபெற்ற ஆட்சிகளின் போக்குகளைத்

துணிவுடன் கண்டித்தார். மலேயாவிற்கும் (1929) சிங்கப்பூருக்கும் நாகம்மையாருடனும் இயக்க நண்பர்களுடனும் சென்று, அங்கும் தம் கொள்கைகளையும் இயக்கத்தினையும் பரப்பித் திரும்பினார்.

பின்னர் எகிப்து, கிரீசு, துருக்கி, சோவியத் உருசியா, இங்கிலாந்து, இசுபெயின், போர்ச்சுக்கல், இத்தாலி, செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இலங்கை வழியாகத் திரும்பினார். சோவியத் உருசியாவில் நிலவிய புதிய சமூக அமைப்பு இவரை மிகவும் கவர்ந்தது. இவர் பொதுஉடைமைக் கருத்துகளைப் பரப்பினார் என்பதற்காகச் சிறையில் இருக்க நேரிட்டது. இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி நிறுவன முறையில் 1932-இல் தான் தோன்றியது என்றாலும், இதற்கு முன்பே பொதுவுடைமைக் கருத்துகளைத் தமிழ் நாட்டில் விதைத்தவர் பெரியார் இராமசாமி.

இவர் 1933-இல் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டு 9 மாதத்தண்டனை பெற்றுக் கோர்வைச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

பிரதமர் சி. இராசகோபாலாச்சாரியார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கியவுடன் அதை எதிர்த்து இவர் ஒரு மாபெரும் போராட்டத்தினைத் தொடங்கினார். இதன் காரணமாக 1940-இல் கட்டாய இந்தி கைவிடப்பட்டது.

இவரது தன்னலமற்ற பொதுத் தொண்டால் ஈர்க்கப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் அவர்கள் சென்னையில் நடத்திய மாநாட்டில் 13.11.1938-இல் ‘பெரியார்’ என்ற சிறப்புப் பெயர் வழங்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

இவர் 1939-இல் நீதிக்கட்சித்தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தலைமையில் 1940-இல் திருவாரூரில் ‘நீதிக்கட்சி’ மாநாடு நடைபெற்றது. அதில்தான் முதன் முறையாகத் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றினார்.

இவர் 1940 முதல் 1944வரை நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் என்ற இரண்டுக்கும் தலைவராக இருந்து தொண்டாற்றிய நிலையில், அவை இரண்டையும் இணைத்து மேலும் தீவிரமாக இயங்க வைக்க எண்ணி 1944-இல் சேலத்தில் ஒரு மாபெரும் மாநாடு கூட்டி நீதிக்கட்சியைத்‘திராவிடர் கழகம்’ எனப் பெயர் மாற்றி, பட்டம் பதவிகளைக் கட்சியில் உள்ளோர் நாடக்கூடாது என்றும், முன்னரே இருப்பனவற்றைத்துறக்கவேண்டும் என்றும் புரட்சியான முடிவு செய்தார்.

தம் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய மணியம்மையை 1949-இல் பதிவுத் திருமணம் சட்ட முறைக்கேற்பச் செய்துகொண்டார்.

பெரியார் இராமசாமி 1959-இல் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், தில்லி ஆகிய வட மாநிலங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்துகொண்டு சமூக நீதிக் கொள்கையினைப் பரப்பினார்.

இவர் 1970-இல் ‘உண்மை’ என்ற மாத ஏட்டினைத் துவக்கி அறிவுப் புரட்சிக் கருத்துகளை வழங்கினார். ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) இவருக்கு ‘புதுயுகத்தின் தீர்க்கதரிசி, தென்கிழக்காசியாவின் சாக்ரடீசு, சமூகச் சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, மூட நம்பிக்கைகளின் முழுவைரி’ என்று வருணித்துச் சிறப்பு விருது ஒன்றினை மத்திய அரசின் கல்வி அமைச்சர் மூலம் வழங்கியது. இவரது நூற்றாண்டு விழாவின் போது (1978) இந்தியப் பேரரசு இவருக்குச் சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

எதிர்ப்பு, ஏளனம், இருட்டடிப்பு, அவமானம் இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் 60 ஆண்டுகளுக்கு மேல் இடையறாது மக்களுடன் தொடர்பு கொண்டு, நாள் தவறாமல் 100, 200 மைல் சுற்றுப் பயணம் செய்து பேசியும், எழுதியும், போராடியும் சமூகத் தொண்டாற்றிய தலைவர்களுள் பெரியார் தனிச்சிறப்புக்குரியவர். எனவே, தமிழ் மக்கள் அனைவரும் இவரைத் ‘தந்தை’ என்றே அன்புடன் அழைத்தனர். இவர் தமது 95-ஆம் வயதில் 24-12-1973-இல் காலமானார். கி.வீ.

**இராமசாமி, எசு. வி. (1906-1966)** சேலம் நகரில் 16-1-1906-இல் பிறந்தார். இவர் தந்தையார் வேங்கடப்ப செட்டியார்; தாயார் பார்வதி அம்மாள். இவர் மனைவி பெயர் சீதாலட்சுமி. இவர் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, பெசண்ட்டு அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தில் (Home Rule) சேர்ந்து, காங்கிரசுத் தொண்டரானார். இவர் அந்நியப் பொருட்களைப் புறக்கணித்து, ஒத்துழையாமை இயக்கத்தில் பெரும் பங்கேற்றார்; சி. இராசகோபாலாச்சாரியார், விசயராகவாசாரியார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்; சேலம் நகராட்சி மன்றத்திலும், சென்னை சட்ட சபையிலும் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியே எசு.வி. இராமசாமி அவர்களின் நாட்டுப்பற்று மிக்க சமூகத் தொண்டிற்கும் ஆட்சிப் பொறுப்பேற்பதற்குரிய சூழ்நிலை உருவாவதற்கும் உதவியாக அமைந்தது.



இராமசாமி, எசு.வி.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற இவர், சிறந்த அறிவாளியாகவும், வடமொழியில் புலமை பெற்றவராகவும், விளையாட்டில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். இலண்டனில் சிறந்து விளங்கிய 'இன்னர் டெம்பிள்' என்ற நிறுவனத்தில் சட்டப் படிப்பை மேற்கொண்டு 'பார்-அட்-லா' (Bar-At-Law) பட்டத்துடன் தாய் நாடு திரும்பினார்.

சேலத்தில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டவர் தில்லி உச்சநீதிமன்றத்திலும் ஒரு மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றினார். காந்தியக் கொள்கைகளில் ஈடுபட்டு நாட்டின் நலனுக்காக உழைக்க முற்பட்டார்.

இராமசாமி காங்கிரசு கட்சியின் செயலராகவும், நாடாளுமன்றத்தின் செயலாளராகவும் பணிபுரிந்து சவகர்லால் நேரு போன்ற பெருந்தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மக்களவைக்கு உறுப்பினராக 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில்தொடர்ந்துமூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்து நாடாளுமன்றத்தின் சிறப்புக் குழுக்களிலும் பணிபுரியும் வாய்ப்பேற்பட்டது. 'இந்திய அரசியலமைப்பு அவை' (Constitutional Assembly of India) என்ற நூலை எழுதி நேருவின் பாராட்டுதலைப் பெற்றார். இவர் 1958-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டுவரை மத்திய அரசின் இருப்புப்பாதைத் துறையின் துணை அமைச்சராக இருந்தபோது, நாட்டுக்குச் செய்த தொண்டுகள் குறிப்பிடத்தக்கன. இவர் 1964-ஆம் ஆண்டு முதல் 1966 வரை மத்தியஅரசின் வர்த்தகத் துறையின் துணை அமைச்சராகப் பணியாற்றினார். இந்தக் குறுகிய காலத்தில் இந்திய நாட்டு வாணிகத் துறையின் மேம்பாட்டிற்காக அரிய பெரிய செயல்களைச் செய்துள்ளார். கல்விப் பணிகளின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய தொண்டு சீரியதாகும். இவர் தம் செல்வ மனைத்தையும் கல்விப் பணிக்காக 'இராம சீதா அறக் கட்டளை' என்ற பெயரில் நல்கியுள்ளார்.

சிறப்பாக, சேலம் மாநகரின் வளர்ச்சியில் இராமசாமியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சேலம் நகரில் மகளிர் கல்விக்கு வித்திட்டவர் இவரே ஆவர். இவ்வாறு அரசியல் வாழ்வில் ஈடுபட்டு, சமுதாயத் தொண்டாற்றிய இவர் 25-7-1966-இல் காலமானார்.

ய.சா.

**இராமசாமி, வ.** (வ.ரா.) முற்போக்குச் சிந்தனையாளரும், பாரதியின் புகழ் பரப்பியவரும், புகழ் வாய்ந்த பத்திரிகையாசிரியரும், தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பணி புரிந்தவரும் ஆவார். இவர் திருவையாற்றையடுத்த திங்களூரில் வரதராச ஐயங்கார், பொன்னம்மாள் ஆகியோருக்கு 17.9.1889-இல் பிறந்தார். தஞ்சையிலும் திருச்சியிலும் கல்லூரிக் கல்வி பயின்றார். நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டுப் படிப்பை நிறுத்திவிட்டார்.

புதுச்சேரி சென்று அரவிந்தருக்குத் தொண்டுசெய்தார். அங்குப் பாரதியாரின் தொடர்பு ஏற்பட,ஆசிரமப் பணியை விடுத்து அரசியலில் வேகத்துடன் ஈடுபட்டார். சென்னை வந்து, 'தமிழ்நாடு', 'ஊழியன்', 'ஸ்வராஜ்யா' ஆகிய இதழ்களில் ஆசிரியராக முறையே பணியாற்றினார். இவர் 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். பின், தஞ்சையிலிருந்து 'சுதந்திரன்' என்ற இதழை நடத்தினார். அடுத்து 1933-இல் கு. சீனிவாசன், தெ. ச. சொக்கலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து 'மணிக்கொடி' வார இதழைத் தொடங்கி நடத்தினார். இவர் 1935-இல் இலங்கை சென்று 'வீரகேசரி' இதழின் ஆசிரியரானார். அக்காலத்தில் புவனேசுவரி என்ற பஞ்சாபிப்பெண்ணை மணந்து கொண்டார். தமிழ்நாடு திரும்பி, 1943-இல் 'பாரத தேவி' ஆசிரியராகிச் சில காலம் பணியாற்றியபின், 1951-இல் காலமானார்.

இவர் பெண்ணுரிமை பேணல், சாதி வேறுபாட்டை ஒழித்தல், மொழி வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபாடுடையவர். விதி, பாவ புண்ணியம், மாயை, நிலையாமை, ஊழ் ஆகியவற்றில் கொண்ட நம்பிக்கை இந்தியர்களை வலிமையற்றவர்களாக்கி

விட்டதெனக் கருதினார். 'துட்டனைக் கண்டால் தூர விரட்டு', 'அஞ்சாமல் தனிவழியே போக வேண்டும்' என்பன இவர் படைத்த புதுமொழிகள். சாதி மரபுகளைக் கைவிட்டமையால் உறவினரும் சாதியாரும் இவரைப் புறக்கணித்தனர். எனினும், வேறுபட்ட கொள்கையினரும் 'அக்கிரகாரத்து அதிசயப் பிறவி','எழுத்துலகின் இரணவைத்தியர்', 'தமிழ்நாட்டின் முதல்எழுத்தாளர்' என இவரைப் பாராட்டினர்


'காந்தி' இதழில் இவர் எழுதிய பாரதியார் வரலாற்றுத் தொடர் 'மகாகவி பாரதியார்' என்னும் நூலாக வெளிவந்தது. இந்நூலில் அரிசன இளைஞர் கனகலிங்கத்துக்குப் பாரதியார் பூணூல் அணிவித்த செயல், காந்தியடிகள்-பாரதியார் சந்திப்புப் போன்ற தாம் நேரில் கண்ட அரிய நிகழ்ச்சிகள் முதலியவற்றை விவரித்துள்ளார்.

இவரது 'மணிக்கொடி' இதழ் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும்பணி புரிந்தது. புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, பி.எசு. இராமையா, கு.ப. இராசகோபாலன், சி.சு. செல்லப்பா முதலிய சிறந்த சிறுகதையாளர்கள் இதில் எழுதினர். தமிழ்ச் சிறுகதை வரலாற்றாசிரியர்கள் இவர்களை 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' எனவும், இவ்விதழ் வெளிவந்த காலத்தை 'மணிக்கொடி காலம்' எனவும் குறிப்பிடுவர். பாரதிதாசனின் பல சிறந்த பாடல்கள் முதன்முதலில் 'மணிக்கொடி'யில் வெளிவந்தன.

வ.ரா. எழுதிய 'சுந்தரி' கைம்பெண் மணத்தை வலியுறுத்தும் உயிரோட்டமுள்ள புதினம். இவர் எழுதிய 'கோதைத்தீவு' பெண்களே ஆட்சி செய்து, ஆணும் பெண்ணும் சமமாக வாழும் ஒரு நாட்டை இருவர் சென்று கண்டு புகழ்வதாகப் புனையப்பட்டது.

இவரது உரைநடையில் பாரதியாரின் தெளிவையும் வேகத்தையும் காணலாம். ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலந்து எழுதுவதை இவர் கடிந்தார். எளிய மக்களுக்கும் புரியுமாறு எழுத வேண்டும் என்பது இவர் கொள்கை. 'வாழ்க்கைச் சித்திரம்', 'தமிழ்ப் பெரியார்கள்' ஆகிய நூல்களில் இவரது உரைநடையின் அழகைக் காணலாம். ந.மெ.

**இராமசாமி, வே.வ. (கி.பி. 1897-1978):** இவர் விருதுநகரில் வன்னிய நாடார், பொன்னம்மாள் ஆகியோருக்கு மகவாக 18.3.1897-இல் பிறந்தார். இவர்தம் பிள்ளைப்பெயர் இராமலிங்கம். இவர் மக்களால் 'வி.வி.ஆர்' என்றும் விருதைப் பெரியார் என்றும் அன்பாக அழைக்கப்பெற்றார். இவர் 4.7.1919-இல் சிவகாமியம்மையை மணம் புரிந்தார். பள்ளிப்படிப்பை விருதுநகரில் முடித்த பின், 1915-இல்சென்னைக்கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். விடுதலைப் போராட்ட வேட்கையால் 1918-இல் கல்லூரியை விட்டு வெளியேறினார். காந்தியடிகள், பூபேந்திரநாத போசு ஆகிய காங்கிரசுத் தலைவர்களின் பேச்சால் கவரப்பட்டு அரசியலில் ஈடுபட்டார். அன்னிபெசண்டு அம்மையாரின் தன்னாட்சி உரிமை இயக்கத்தில் 1914-இல் சேர்ந்தார். காலப்போக்கில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் ஈடுபட்டு, 1920-ல் நீதிக்கட்சியில் சேர்ந்தார். விருதுநகரை நீதிக்கட்சியின் கோட்டையாக்கினார். 1937-இல் நீதிக்கட்சியின் சார்பில் இவரும் காங்கிரசின் சார்பில் காமராசரும் தமிழகச் சட்ட மேலவைத் தேர்தலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிட்டனர். இவர் காமராசரிடம் தோற்றார். ஈ.வே. ராமசாமிப் பெரியாரின் தலைமையில் தொண்டாற்றிய இவர், நீதிக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றிய போது பெரியாரை விட்டு விலகினார்.



இராமசாமி, வே.வ.

இவர் 1951-இல் தனிப்பட்ட முறையில் தேர்தலில் நின்று சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினரானார். விருதுநகர் நகராட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்து அந்நகரத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், மகப்பேறு நிலையம் முதலியன விருது

நகரில் அமைவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தார். அந்நகரில் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நாணயச் சங்கம், கூட்டுறவு வங்கி முதலியவற்றைத் தோற்றுவித்தார். விருதுநகர் வணிகத் தொழில் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றினார். பால் பண்ணைகள், குடிசைத் தொழில்கள் முதலியன கூட்டுறவு முறையில் அமைக்க உதவினார். பனைத் தொழிலாளர்களின் இருளடர்ந்த வாழ்வு ஒளிரும் பொருட்டுப் பனைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1932-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியின் செயலாளராக 1947-1955 வரை பணியாற்றி, அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். தமிழ்மொழி வளர்ச்சியில் இவருக்குப் பேரீடுபாடு உண்டு. விருதுநகரில் தமிழ்க் கழகம் கண்டு தமிழ்த் தென்றல் என்ற திங்களிதழையும் வெளியிட்டார். கடமை உணர்வு, நாட்டுத்தொண்டு, சமுதாயத் தொண்டு, கல்விப்பணி, அரசியல் பணி போன்ற பல்வேறு பணிகளில் தம் வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்தார்.

இவர் உடன்பிறந்த ஆண்கள் மூவர்; பெண்கள் மூவர். மைந்தர் மூவர்; மகளிர் நால்வர். பொது வாழ்வில் ஈடுபட்டுப் புகழுடன் விளங்கிய இவர் 27.12.78-இல் மறைந்தார். க.அ.

**இராமசாமி அடிகள்** 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; வடஆர்க்காடு மாவட்டம் கீழ்வல்லம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தந்தை கிருட்டிணக் கவுண்டர். வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர். இளம்பருவத்திலேயே துறவு பூண எண்ணிக் கோவலூர் மடத்திற்குச் சென்றார். அங்கு மகாதேவ சாமிகளிடம் வேதாந்த நூல்களைக் கற்ற இவர் அம்மடத்தின் காரியங்களை மேற்பார்வை செய்து வந்தார். பிறகு இவர் காசி முதலிய புண்ணியத் தலங்களுக்குச் சென்றார். திருக்காளத்திக்குச் சென்று மூன்று நாட்கள் தனிமையில் இருந்தார். அதன்பிறகு சேலத்திற்குப் பக்கத்திலுள்ள தலமலை, சொர்ணபுரியை யடுத்த கோகுலம் ஆகிய இடங்களில் தங்கியிருந்தபோது பலருக்கும் வேதாந்த நூல்களைக் கற்பித்தார். இவர் சச்சிதானந்த போதம், அத்துவைத ஞானாமிருதம், பிரார்த்தனைமாலை ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.

**இராமசாமி அய்யர்**: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அந்தணர் மரபில் பிறந்தவர். இவர் அல்லி நாடகம் என்னும் நாடக நூலை இயற்றியுள்ளார். இந்நூல் அருச்சுனன் மனைவியாகிய அல்லி வரலாற்றினை நாடக வடிவில் வழங்குகிறது. கதிர்காமம் எனப்படும் கதிரைமலைமேலுறையும் கந்தசாமித் தெய்வத்தின்மீது பல கீர்த்தனைகளும் இயற்றியுள்ளார். இவருடைய மாணவர் நாகேசையர்.

இராமசாமி அய்யர்[2]: இவர் திருச்செந்திற் சந்த விருத்தம் என்னும் பெயரில் 100 செய்யுள்கள் கொண்ட நூலை இயற்றியுள்ளார். ஒவ்வொரு விருத்தமும் 'செயவேளே' என்று முடிகிறது. இவர் இயற்றிய வேறொரு நூல் 'சுந்தரசுவாமிகள் தோத்திரப் பாவினம்' என்பதாகும். இது 28 செய்யுள்களைக் கொண்டது. இந்நூல் கி.பி. 1895-ஆம் ஆண்டில் சுந்தர சுவாமிகள் அட்டபந்தனக் கவி என்னும் நூலொடு சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டது.

**இராமசாமி அய்யர், என்.** திருச்சி மாநகரின் தலைசிறந்த வழக்கறிஞரும் கல்வியாளருமாவார். தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்தில் பின்னவாசல் என்னும் சிற்றூரில் கி.பி. 1896-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளன்று இவர் பிறந்தார். இவர் தந்தை நடேச கனபாடிகள் என்னும் வேதவிற்பன்னர். இவர் பள்ளிப் படிப்பை முடித்ததும் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். இவர் 1916-ஆம் ஆண்டு அலமேலு என்னும் சீதாலட்சுமியை மணந்தார்.



இராமசாமி அய்யர், என்.

இவர் 1925-இல் மாவட்ட வெள்ள நிவாரணக் குழுவின் உறுப்பினராகவும், விடுவிக்கப்பட்ட கைதிகள் நலன்நாடும் கழகத்தின் செயலாளராகவும், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல சமூக

சேவை அமைப்புகளின் உறுப்பினராகவும் விளங்கி ஆற்றிய பணிகள் பல.

மகரிசி கார்வே என்பவர் பெண்கள் பல்கலைக் கழகமொன்றை நிறுவியது, இவரது பெண் கல்வித் தொண்டிற்குத் தூண்டுகோலாக இருந்தது. இவர் தம் முழு ஆற்றலையும் ஊதியத்தையும் பெண் கல்விக்காகச் செலவிடத் தொடங்கினார். கிறித்தவ சமயத்தவரால் நடத்தப்பெறும் கல்விச் சாலையைப் போல இந்து சமயத்தவர்களுக்கென்று ஒரு கல்வி நிறுவனம் அமைய வேண்டுமென்று இவர் கருதியமை, 1938-இல் 'சாவித்திரி வித்யாசாலா' என்ற இந்து உயர்நிலைப்பள்ளி அமையக் காரணமாயிற்று.

இக்கல்விக்கூடத்தை மிகப் பெரிதாக ஆக்க வேண்டுமென்று கருதி இடையறாது உழைத்து, அதன் பயனாகச்'சீதாலட்சுமி இராமசாமி' என்ற பெயரில் 1951-ஆம் ஆண்டு கல்லூரி ஒன்று தொடங்கினார்.

இவர் ஆற்றிய சமுதாய நலப் பணிகளைப் பாராட்டி அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் இவருக்கு 1932-இல் 'இராவ்சாகிபு' என்ற பட்டத்தினையும், 1938-இல் 'இராவ்பகதூர்' என்ற பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தது. 'திவான் பகதூர்' என்னும் பட்டமும் 1946-இல் இவரைத் தேடி வந்தது. மத்திய அரசு 1962-இல் இவர் தொண்டினைப் பாராட்டி 'பத்மசிரீ' பட்டமும், 1971-இல் 'பத்ம பூசன்' பட்டமும் அளித்துச் சிறப்பித்தது. இவர் 28-3-1976-இல் காலமானார்.

இந்நிறுவனத்தில் காமகோடி வித்யாலயா, பெண்கள் தொழில் நுட்பப் பயிலகம், மாலைநேரக் கல்லூரி, கணிப்பொறி மையம், நிருவாகக் கல்வி போன்றவை தொடங்கப்பட்டு வியத்தகு முறையில் செயற்பட்டு வருகின்றன. தொடக்கப் பள்ளியில் சேர்ந்த ஒரு குழந்தை டாக்டர் பட்டம் பெற்று வெளியேறும்வரை படிப்பதற்குரிய எல்லா வாய்ப்புகளையும் ஒரே இடத்தில் ஏற்படுத்திய பெருமை என். இராமசாமி அய்யரையே சாரும்.

இந்துசமயப் பண்பாட்டோடு கல்வி அமைவது சாலச்சிறந்தது என்ற துணிவோடு அம்மரபினைப் போற்றும் வகையில் விடுதியில் வாழும் மாணவியர் வெளியிற் சென்று கோயிலில் வழிபடும் இடர்ப்பாடு நீங்க, மாணவியர் விடுதியிலேயே இராமர் கோயிலும், ஆண்டு வழிபாட்டு மண்டபமும் அமைத்த, அகிலாண்டேசுவரி அடிபணியும் இராமசாமி அய்யர் நிலைபெற்ற புகழுடையவராக விளங்குகிறார்.

எஸ்.நா.

**இராமசாமி அய்யர், சி. பி. (கி. பி. 1879 1966)** இந்தியாவின் தலைசிறந்த அரசியல் அறிஞர்; கல்வியாளர்; வழக்கறிஞர்; சொல் வேந்தர். இவர் வடார்க்காடு மாவட்டம் வந்தவாசியில் சி. ஆர். பட்டாபிராம அய்யருக்கும் சீதாலட்சுமி அம்மாளுக்கும் ஒரே மகனாக 12—11—1879-இல் பிறந்தார்.

இவர் சென்னை வெசிலி கல்லூரிப் பள்ளியில் பயின்றபோது, 'பீட்டர் கேட்டர்' (Peter Cater) விருதும், மாநிலக்கல்லூரியில் பயின்றபோது தங்கப் பதக்கமும் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்று, வழக்குரைஞராகப் (1903-இல்) பதிவு செய்தார். இராமசாமி அய்யர் தொடக்கத்திலேயே பல பெயர் பெற்ற வழக்குகளை ஏற்று நடத்திப் புகழ் பெற்றார். பல சுதந்திரப் போராட்ட வீரர்களின் சார்பாக வாதாடி அவர்களுக்கு ஊக்கமளித்தார். ஆசு (Ashe) துரை கொலை வழக்கில் வாஞ்சிநாதனின் சார்பாக இவர் வழக்குரைத்தமை அவர்நாள் ஒன்ற



இராமசாமி அய்யர், சி. பி.

இராமசாமி அய்யர் இந்திய சுதந்திர இயக்கங்களில் பங்கேற்றுத் தொண்டாற்றினார். அனைத்திந்தியத் தன்னாட்சிக் குழுவிலும் (All India Home

Rule League)இந்தியத் தேசிய காங்கிரசிலும் செயலராகப் பணியாற்றினார். இவர் பல்வேறு துறைப் பதவிகளை ஏற்று அருஞ்செயல்கள் பலவற்றைச் செய்துள்ளார். சென்னை மாநகராட்சி, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு (1918), சட்டமன்ற மேலவை (1920), இந்திய நாடாளுமன்றம், இந்திய மாநிலங்களவை போன்றவற்றின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்திய மாநிலங்களவையின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். சென்னை மாநில அரசு வழக்கறிஞர் தலைவராகப் (Advocate-General) பணிபுரிந்த காலத்தில் (1921 23), இவர் மாநகராட்சிச் சட்டம், சென்னை தல ஆட்சிக் குழுக்களின் சட்டம் போன்றவை குறித்து நுணுக்கமான கருத்துகளைக் கூறி, அவை நிறைவேற வழி செய்தார். இவர் மாணவர் சாரணர் இயக்கத்தின் மாநில ஆணையராகப் பதவியேற்று, அதன் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தார். இவர் சென்னை அரசின் நிருவாகக் குழுவில் சட்ட உறுப்பினராகப் பொறுப்பேற்று (1923-1928), சட்டம், காவல், நீர்ப்பாசனம், துறைமுகங்கள், மின்சக்தி போன்ற துறைகளைக் கவனித்தார். அப்போது மேட்டூர், பைக்காரா, பவானி நீர்த்தேக்கங்களும், கொச்சி, தூத்துக்குடி, விசாகப்பட்டினம் போன்ற துறைமுகத் திட்டங்களும் தொடங்கப்பட்டன. கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளைக் காவிரியுடன் இணைக்கும் திட்டத்தினை வகுத்து இந்திய அரசிடம் ஒப்படைத்தார். இதனால் இவர் தென்னிந்தியாவின் 'நீர்மின் திட்டத் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.

இவர் இந்திய அரசின் சட்ட உறுப்பினராகவும், வாணிகம், தொழில், இருப்புப்பாதை ஆகிய துறைகளின் பொறுப்பாளராகவும்(1932) பணியாற்றினார். காசுமீரத்திற்கு அரசியல் அமைப்புத் திட்டத்தை இவர் 1934-இல் தொகுத்துக் கொடுத்தார். முதல் உலகப் போருக்குப்பின் செனிவாவில் நடைபெற்ற அனைத்து நாட்டுச் சங்கக் கூட்டத்திற்கு இந்திய உறுப்பினராகச் சென்ற இவர், முதலாம் (1931), மூன்றாம் (1932) வட்டமேசை மாநாடுகளில் உறுப்பினராகக் கலந்து கொண்டார். மேலும், இவர் இந்திய அரசின் அரசப் பேராளரின் ஆட்சிக் குழுவில் உறுப்பினராகி, செய்தி-வானொலித் துறையின் பொறுப்பினை 1942-இல் ஏற்றார். ஆனால், சிறையில் மகாத்மா காந்தியடிகளுக்குச் செய்தித் தாள்களை வழங்கக் கூடாது என்னும் அரசு ஆணையை எதிர்க்கும் வகையில் இவர் பொறுப்பேற்ற 17-ஆம் நாளில் அப்பதவியினின்று விலகினார்.

இராமசாமி அய்யரின் பணிகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கன இவர் திருவாங்கூர் மாநிலத்தில் ஆற்றியவையாகும். இவர் திருவாங்கூர்த்திவானாகப் பணிபுரிந்த காலத்தில் (1936-1947) பல ஆக்கப் பணிகளையும் சமுதாய முன்னேற்றத் திட்டங்களையும் வகுத்துள்ளார். இவர் பேச்சிப்பாறை நீர்மின் திட்டம், பெரியாறு வனவிலங்கு சரணாலயம், பல தொழிற்சாலைகள் அமைய வழி செய்தார். திருவாங்கூர்ப் பல்கலைக் கழகம் இவரது ஆட்சிக் காலத்தில் (1939) தொடங்கப்பட்டது. இவர் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கச் செய்தார்; இந்தியாவிலேயே முதன் முதல் சாலைப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கினார்; தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் நுழைவுச் சட்டம் இயற்றித் தீண்டாமை ஒழிய வகை செய்தார். முதன் முதலாகத் தூக்குத்தண்டனை ஒழித்தவரும் திருவாங்கூர் அரசில் பெண்ணொருத்தியை (அன்னா சாண்டி) மாவட்ட நீதிபதியாக அமர்த்தியவரும் இவரே.

இராமசாமி அய்யரே திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தின் முதல் (1939-1947) துணைவேந்தர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், காசி இந்துப் பல்கலைக்கழகத்திற்கும் துணை வேந்தராக ஒரே வேளையில் (1955) இந்தியாவிலேயே முதன் முறையாக அமர்த்தப்பட்ட பெருமை இவரையே சாரும்.

இராமசாமி அய்யர் பல சமூக நல அமைப்புகளையும் கல்வி நிறுவனங்களையும் நிறுவி அவற்றின் வளர்ச்சியில் ஈடுபட்டார். சென்னைப்பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளையிலும், மயிலாப்பூர்ச்சமசுகிருதக் கல்வி அறக்கட்டளையிலும் அறங்காவலராகப் பணியாற்றினார். இவர் சென்னை இளைஞர் சங்கம் (YMIA), சென்னை இசைக் கழகம் (Madras Music Academy) போன்ற சங்கங்கள் தோன்றுவதற்கு உறுதுணையாக இருந்தார். காஞ்சிபுரம் சோமசுந்தர கன்னியா வித்தியாலய மகளிர் உயர்நிலைப்பள்ளி, மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரி போன்றவை இவர்தம் சீரிய முயற்சியால் தோன்றியவை. மேலும், இவர் இந்தியன் வங்கியை (Indian Bank) நிறுவி, அதன் இயக்குநருள் ஒருவராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் தாம் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களின் வளர்ச்சிக்காகப் பொருளுதவி செய்தார். காஞ்சிபுரம் சாமதேவ பாடசாலை அறக்கட்டளை (உரூ.5 இலட்சம்), திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம் (உரூ.50 ஆயிரம்), சென்னைப் பல்கலைக் கழகம் (உரூ.25 ஆயிரம்), இந்தியவியல் ஆய்வு (உரூ.25 ஆயிரம்) ஆகியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

இராமசாமி அய்யர் உலக நாடுகளின் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் பேரவைக் கூட்டங்களிலும்

பங்கேற்று, இந்துத் தத்துவம், இந்தியப் பண்பாடு பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிப் பல பாராட்டுகள் பெற்றுள்ளார். இவரது திறமையைப் பாராட்டி இவருக்குத்திருவிதாங்கூர்ப்பல்கலைக்கழகம் எல்.எல்.டி. பட்டத்தையும், அண்ணாமலை, காசி இந்து, சென்னை, மைசூர்ப்பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டங்களையும் வழங்கியுள்ளன.

நுண்மாண் நுழைபுலமும் அருஞ்செயலாற்றலும் நிறைந்த இராமசாமி அய்யர், ஆக்சுபோர்டு, இலண்டன் போன்ற இடங்களில் உரையாற்றச் சென்றிருந்த போது, இலண்டன் தேசிய முற்போக்குச் சங்கத்தில் (National Liberal Club) 26.9.1966-இல் உயிர் துறந்தார்.

**இராமசாமிக் கவிராயர்** (19-நூ.) அழகிய சிற்றம்பலக் கவிராயரின் மகன். இவர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மிதிலைப்பட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தமிழ்ப் புலமை மிக்க மரபு வழிப் பிறந்த இவர் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றார். கருப்பண்ணசாமி சதகம் என்னும் நூலை இவர் இயற்றியுள்ளார். இந்நூல் பூங்குன்றை வேலங்குடிக் கருப்பண்ணசாமிமீது பாடப்பட்டதாகும்.

இப்பெயரில் வேறு சில கவிராயர்களும் இக்காலப் பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முகவூர் என்னும் ஊரில் இராமசாமிக் கவிராயர் என்றொரு புலவர் வாழ்ந்துள்ளார். இவர் மு.ரா. அருணாசலக் கவிராயர், சே. (மு) ரா.சுப்பிரமணியக் கவிராயர், மு.ரா.கந்தசாமிக் கவிராயர் ஆகியோரின் தந்தையாராவார். மேலுமிவர் முகவூர்க் கந்தசாமிக் கவிராயருக்குத் தமையனாரும் சேற்றூர்ப் பெருநிலக்கிழார் சுந்தரதாசுத் தேவரின் ஆசிரியரும் ஆவார். இவரும் கந்தசாமிக் கவிராயரும் இணைந்து சேற்றூர்ப்பெருநிலக்கிழார் முத்துசாமித் துரையின் மீது 'குறவஞ்சி' பாடியுள்ளனர்.

இப்பெயரில் மதுரையில் வாழ்ந்த ஒருவர் 'கம்பர் குல திலகர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இவர் தெய்வசிகாமணிமாலை, கண்மணிமாலை ஆகிய இரு நூல்களை இயற்றியுள்ளார். 'தெய்வசிகாமணிமாலை' மதுரைச் சோமசுந்தரக் கடவுள் மீதும் 'கண்மணிமாலை' அங்கயற்கண்ணம்மை மீதும் பாடப்பட்டனவாகும்.

இதே பெயரொடு வேறொரு புலவர் தொண்டை நாட்டில் வாழ்ந்துள்ளார். இவர் இயற்றியனவாகத் தனிச்செய்யுட் சிந்தாமணியில் பதினொரு பாடல்கள் காணப்படுகின்றன.

இப்பெயரில் வாழ்ந்த கவிராயர் ஒருவர் அழகர் வர்ணிப்பு, மகாபாரதக்கும்மி, மார்க்கண்டமாலை, மதுரைக்காதல், திருப்போரூர்ச் சுப்பிரமணியர் பேரில் இரட்டையாசிரிய விருத்தம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டிலும் இப்பெயரில் சில கவிராயர்கள் இருந்துள்ளனர். பாண்டி நாட்டு மழவாபுரியில் ஓர் இராமசாமிக் கவிராயர் வாழ்ந்தார். இவர் தந்தை சிதம்பர பாரதியாவார். இவர் குஞ்சரமாலை ஆனந்தக்களிப்பு ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூற்றாண்டில் உடுமலைப்பேட்டையில் இப்பெயரொடு வாழ்ந்த கவிராயர் திருப்பேரூர்ச் சிகையறுத்தான் வண்ணம் என்னும் நூலினை இயற்றியுள்ளார்.

**இராமசாமிக் கவுண்டர், ஆ.** (கி.பி.1898-1950): வட ஆர்க்காடு மாவட்டம் மாடப்பள்ளி என்னும் சிற்றூரில் அனுமந்தராய கவுண்டருக்கும் அங்கம்மாளுக்கும் மூத்த மகனாய் கி.பி.1898-ஆம் ஆண்டு சூன் திங்களில் பிறந்தார். இவர் திருப்பத்தூரிலும் வேலூரிலும் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்து, 1922-இல் பட்டம் பெற்றார். இவர்தம் மனைவியார் கனகம்மா.



இராமசாமிக் கவுண்டர்

வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பதவியேற்ற இவர், ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்று, அக்கல்லூரி முதல்வரானார்.

பின்னர்ச் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வராய் 1927-ஆம் ஆண்டு பதவியிலமர்ந்து, அக்கல்லூரியின் தலைவராய் இருபத்து மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். இவர் முதல்வராக இருந்த காலத்தில் கல்வியில் பிற்பட்ட மாணவர்களும் உயர் கல்வி பெறுதற்கு வாய்ப்பாகப் போதிய இடம் ஒதுக்கி அவர்களை ஊக்குவித்தார்.

இராமசாமிக் கவுண்டர் சிறந்த செயலாற்றல் உடைய நிருவாகி. இவர் கணிதப் பேராசிரியராயினும், தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியமொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கினார். இவர் பாட நூல்கள் எழுதுவதில் வல்லவர். 'முருகன் வாசகம்' என்பது இவர் எழுதிய பாடநூல்களுள் குறிப்பிடத் தக்கது. மேலும், நெப்போலியன், நெல்சன் போன்றோரின் வாழ்க்கை நூல்களையும் தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் பகவத்கீதையைத் தமிழில் பாடல் வடிவில் எழுதியதோடு, 'கபிலையின் கதை' என்னும் ஏட்டுச் சுவடியைப் பதிப்பித்தலையும் மேற்கொண்டார். இவர் கலைச்சொல்லாக்கக் குழுவில் உறுப்பினராகப் பணிபுரிந்துள்ளார்.

இவர் சிறந்த இலக்கியப் பேச்சாளர்; தமிழிசை வல்லுநர். தமிழிசை இயக்கம் தோன்றியபோது அதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுள் சேலம் முதல்வரும் ஒருவர். தேவாரம், திருவாய்மொழிப் பாடல்களின் பண்களெல்லாம் வடமொழிப் பெயர்களில் மறைக்கப்பட்டிருப்பதை அறிந்து, தமிழன் இசைக்கருவிகளுள் ஒன்றாகிய முழவினைப் பயிலத் தொடங்கினார். தம் மூத்த மகனுக்கும் அதனைப் பயிற்று வித்தார்.

இராமசாமி இளமையிலேயே சமயப் பற்று மிக்கவராகவும் முற்போக்குக் கருத்துகள் உடையவராகவும் விளங்கினார். இவர் ஈ.வெ.ரா. பெரியார் வழிநின்ற தம் துணைவியாரின் கருத்துரிமையிலோ, செயல் உரிமையிலோ தலையிடாது பெண்ணுரிமையைப் பேணினார். இவர் அனைத்துக் கல்லூரி ஆசிரியர் மாநாட்டை 1948-இல் கூட்டியதோடு, கல்லூரி ஆசிரியச் சங்கம் அமையவும் பெருமுயற்சி செய்தார். மேலும், இச்சங்கத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றும் பணி புரிந்தார்.

சிறந்த கணித அறிஞராகவும் தமிழ்ப் பற்றாளராகவும் முற்போக்குக் கருத்து உடையவராகவும் விளங்கிய இராமசாமி, 19.8.1950-இல் காலமானார்.

தி.வை.சொ.

**இராமசாமி சிவன்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசைத்தமிழ்ப் புலவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள வையைச் சேரியைச் சேர்ந்தவர். துரைசாமி அய்யரின் மகனாகிய இவர் பிரகசரண வகுப்பில் கௌண்டினிய கோத்திரத்தைச் சார்ந்தவர். இசைத்துறையில் புகழ் வாய்ந்த வைத்தியநாத அய்யர், சாம்பமூர்த்தி அய்யர், அப்பாசாமி அய்யர் ஆகியோர் உடன்பிறந்தோராவர். இவர் தம் தந்தையிடமும் மாநோன்புச் சாவடி வேங்கட சுப்பிரமணிய அய்யரிடமும் இசைப்பயிற்சி பெற்றார். தமிழில் சிலேடையாகப் பேசுவதில் திறமைமிக்கவர். இவருக்குத் திருவாவடுதுறை ஆதினத்தலைவரும், புதுக்கோட்டை மன்னரும் சிறப்புகள் பல செய்தனர்.

இவர் பெரியபுராணத்தைக் கீர்த்தனையாகப் பாடித் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் அரங்கேற்றினார். இவருடைய நூல்களுள் பார்வதி சரித்திரக் கீர்த்தனை, திருச்செந்தில் சந்தவிருத்தம், திருவையாற்றந்தாதி, மயூரகிரி இரட்டை மணிமாலை, திருவையாற்று நிரோட்டக யமக அந்தாதி , மகா வைத்தியநாத விசய சங்கிரகம், திருத்தொண்டர் போற்றிக் கலி வெண்பா, திருவையாற்றிரட்டை மணிமாலை ஆகியன குறிப்பிடத்தக்கன.

**இராமசாமி செட்டியார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். தந்தையார் பெயர் சா.ராம.முத்தைய செட்டியார். தனவணிகர் மரபில் தோன்றிய இவர் சிறந்த சிவநெறியினர். சிதம்பரம் நா. சிதம்பரசெட்டியாரிடம் தமிழ் இலக்கியம் கற்ற இவர் இயற்கையில் கவி இயற்றும் திறம் பெற்றிருந்தார். கருவூர்ப் பசுபதீசுவரர் மீது 'ஆநிலை வெண்பா' என்னும் நூலை கி.பி. 1893-ஆம் ஆண்டில் இயற்றியுள்ளார். மேலுமிவர் சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை (1882), பிள்ளைத் தாலாட்டு (1897), வடக்குப் பட்டிக் கந்தசுவாமி மீது தோத்திரக் கண்ணிகள் (1888) என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் ஆநிலைவெண்பா, கானாடு காத்தான் இராமசாமிச் செட்டியாரால் கி.பி. 1893 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது.

இராமசாமி செட்டியார்[2]: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி உறையூர் சௌக்கைத் தெருவில் வாழ்ந்த புலவர். தந்தையார் பெயர் வேங்கடகிருட்டிண செட்டியார். தே.ர. அரங்கநாதக் கவிராயர் இயற்றிய அருச்சுனன் தீர்த்த யாத்திரை என்னும் நூலுக்கு இவர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார்.

இராமசாமி செட்டியார்[3] : இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் விளங்கிய


புலவர்களுள் ஒருவர். இவருடைய ஊர் திருஎவ்வுளூர். இது இக்காலத்தில் திருவள்ளூர் என வழங்கப்படுகிறது; சென்னைக்கு அருகிலுள்ளது. தந்தையார் பெயர் வேங்கடாசலம் செட்டியார்; வணிக மரபினர், சரசாங்கி என்னும் நாடக நூல் எழுதிய சலசலோசனச் செட்டியாரின் தந்தையாராவார். இவர் திருத்தணிக்கைக் கந்தசாமியார்பால் கல்வி கற்று முத்தமிழ்ப் புலமை பெற்றார். நாடகத் தந்தை எனப் போற்றப்படும் சம்பந்த முதலியாரவர்களோடு இணைந்து பல்லாண்டுகள் நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்தார். இவரது பிள்ளைத் தாலாட்டு என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இது ஆண்பிள்ளைத் தாலாட்டு, பெண்பிள்ளைத் தாலாட்டு என இரண்டு பகுதியாக நீலாம்பரி இராகத்திலமைந்த இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது. திருவிடைமருதூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றக் கலம்பகம், சீகாளத்திக் கலம்பகம், திருஎவ்வுளூர்க் கலம்பகம், திருவிடைமருதூர் நலமுலையம்மைப் பதிகம், திருவாலங்காடு வீரமாகாளியம்மை பேரில் தோத்திரம் ஆகியன இவர் தம் நூல்களாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் காசி இரகசியம் என்னும் நூலிற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

இராமசாமி செட்டியார்[4] : இவர் இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்கு அருகிலுள்ள பலவான் குடியில் விளங்கிய புலவர். தந்தையார் பெயர் குமரப்பச் செட்டியார். சைவ சமயத்தில் ஆழமான பற்றுக் கொண்ட இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திட்டை என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலுக்குப் பல நூறாயிர உரூபாய் செலவில் திருப்பணிகள் செய்துள்ளார். இவர் தம்மூரில் திருவாசக மடம் ஒன்று அமைத்துள்ளார். சிவநேசன் இராமசாமிச் செட்டியார் என அழைக்கப்பட்ட இவர் வைரவன் கோயில் புராணத்தை உரைநடையில் வைரவன் கோயிற் புராணவசனம் என்னும் பெயரில் வெளியிட்டார். பொன்னம்பல சிவம் எழுதிய நூல்களுக்குச் சிறப்புப் பாயிரப் பாடல்கள் பாடியுள்ளார்.

**இராமசாமி தீட்சிதர்** கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இசை ஆசிரியர். இவர் கருநாடக இசை மும்மூர்த்திகளுள் ஒருவராகிய முத்துச்சாமி தீட்சிதரின் தந்தையாவார். காஞ்சிபுரத்தில் பிறந்த இவர் தம் 7 ஆம் வயதில் திருவிடை மருதூருக்குப் பக்கத்திலுள்ள கோவிந்தபுரத்தையடைந்தார். அங்கு வடமொழியையும் தெலுங்கு மொழியையும் கற்றார். பின்னர்த் தஞ்சைக்குச் சென்று இசை பயின்ற இவர், வீணையிலும் நல்ல பயிற்சிபெற்றார். இசையில் வல்லவரான இவருக்குத் தஞ்சை மன்னர் பல சிறப்புகள் செய்து பெருமைப் படுத்தினார். பின்னாளில் இவர் மணலி முத்துக்கிருட்டிண முதலியாரால் ஆதரிக்கப்பட்டார். இவர் இராக மாலிகைகள், சவுக்க வர்ணங்கள், தாளவர்ணங்கள், கீர்த்தனங்கள் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். அம்சத்தொனி இராகத்தினை அமைத்து, அதன் சஞ்சாரங்களை விளக்கி ஒரு பிரபந்தம் எழுதியுள்ளார்.

இராமசாமி தீட்சிதர்[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர். அகிலாண்டபுரத்தைச் சேர்ந்த இவர் வடமொழிப் பத்ம புராணத்தில் உள்ள சிவகீதையைத் தமிழில் 'சிவகீதை வசனம்' (1898) என்னும் உரைநடை நூலாக எழுதியுள்ளார். இந்நூல் 16 அத்தியாயங்களை உடையது. உபநிடதங்களின் கருத்துகளைத் தொகுத்துக் கூறுவது.

**இராமசாமி நாயுடு, சீ.** **(1901-1969)** இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிக்கு அண்மையில் உள்ள செங்கமல நாச்சியார் புரத்தில் சீனிவாச நாயுடுவுக்கும், நாச்சியாரம்மாள் என்ற இலட்சுமியம்மாளுக்கும் மூன்றாம் மகனாக 23.12.1901-இல் பிறந்தார்.



இராமசாமி நாயுடு, சீ.

இவர் சிரீவில்லிபுத்தூரிலும், சிவகாசியிலும் பயின்று 1918-இல் உயர்பள்ளிப்படிப்பை முடித்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரி, சென்னை இராசதானிக் கல்லூரி ஆகியவற்றில் பயின்று பி.ஏ. (ஆனர்சு) பட்டமும் பின்னர் பி.எல். பட்டமும் பெற்றார்.

மதுரையில் அரங்கசாமி நாயுடுவிடம் வழக்கறிஞர் பயிற்சிபெற்றுப் பின் சாத்தூரில் (1927-42) வழக்கறிஞராகப் பணியாற்றினார். பொருள் ஈட்டுவதில் நாட்டமின்றி, நீதிமன்றத்திற்கு வெளியிலேயே வழக்குகளைத் தீர்த்தல், கிராம மேம்பாடு, வேளாண்மை வளர்ச்சி, கிராம ஒற்றுமை போன்ற துறைகளில் மிகுதியும் கவனம் செலுத்தினார். இவர் 21.8.1928-இல் தாயம்மாள் என்பாரை மணந்தார். இவருக்கு நான்கு பெண்மக்கள்.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வழக்கறிஞர் தொழிலை 1942-இல் நிறுத்தி விட்டார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரப்பற்றுக் கொண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். சாத்தூர் வட்டாட்சிமன்றத் தலைவராக (Taluk Board President) 1933-இல் பொறுப்பு வகித்தார். கிராமச்சாலைகள், கல்வி, சுகாதாரம் ஆகிய சமூக சேவைகளில் ஈடுபட்டார். நாடு விடுதலை பெற்றதும் இடைக்காலப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து இந்திய அரசியலமைப்பு உருவாக உழைத்தார். சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக 1952 முதல் 1961 வரை நீடித்திருந்தார். பின்னர் 1954-58-ஆம்ஆண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவரானார் (District Board President). இவர் காலத்தில் ஐந்தாக இருந்த கழக உயர்நிலைப் பள்ளிகள் ஐம்பதாக வளர்ந்தன.சாத்தூர்க் கூட்டுறவு விற்பனை மையத்தின் தலைவராகவும், சாத்தூர் நிலவள வங்கியின் தலைவராகவும், இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் இயக்குநராகவும், வட்டார நூலக வளர்ச்சிக் குழுவின் இராமநாதபுர மாவட்டத் தலைவராகவும் இருந்து மக்களுக்குத் தொண்டாற்றினார். தேசிய வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பல கிராம மருத்துவ மனைகள் (Primary Health Centres) ஏற்பட உதவினார்.

இவர் மாணவப் பருவத்திலேயே உடன் பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவும் குணமுடையவராக விளங்கினார். ஆரம்பப்பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி போன்ற கல்வி நிறுவனங்கள் நடைபெற உதவினார். இவர் நல்ல எழுத்தாளரும் ஆவார். பல இதழ்களில் தலையங்கம், கதை முதலியன எழுதினார். இவர் தீவிர வைணவர்; நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நல்ல புலமையுடையவர். திருத்தண்கால் திருநின்ற நாராயணப் பெருமாள் கோவில் அறங்காவலராகவும் பணிபுரிந்தார்.

சாத்தூர்க் கூட்டுறவு நிலவள வங்கியின் தலைவர் என்ற முறையில் வேளாண்மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக உழைத்துக் கொண்டிருந்த போது 1.1.61 அன்று திடீரென உலக வாழ்வை நீத்தார். இவரது நினைவாகத் திருத்தண்காலில் ஓர் அரசினர் மேனிலைப்பள்ளியும், சாத்தூரில் ஒரு கலைக் கல்லூரியும் இயங்கிவருகின்றன. இவரைத் தமிழ்மக்கள் 'எஸ்.ஆர். நாயுடு' என அன்பாக அழைத்து மகிழ்ந்தனர். எஸ்.சீ.

**இராமசாமிப்பிள்ளை** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இவருக்கு ஞானசம்பந்தப்பிள்ளை என்ற வேறு பெயரும் உண்டு. இவர் திருவாவடுதுறை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர்; ஆறுமுக நாவலரின் நண்பர். இவர் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கற்றார். பாண்டித் துரைத் தேவருக்குத் தமிழாசிரியராக விளங்கினார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'ஆற்றூர்ப் புராணம்'' திருவாழ்கொளிப் புத்தூர்ப் புராணம்', 'விளத்தொட்டிப் புராணம்' ஆகிய நூல்களை எழுதுங்கால் உடனிருந்து உதவி புரிந்துள்ளார். ஆறுமுக நாவலர் தம் நூல்களைப் பதிப்பிப்பதற்குப் பொருள் வசதி இல்லாமல் இருந்தார்.அத்தருணத்தில் இராமநாதபுரம் பொன்னுசாமி தேவரிடம் நிலைமையை எடுத்துக்கூறி நாவலருக்குப் பொருளுதவி செய்யுமாறு வேண்டிப் பெற்றுத் தந்தார்.

இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் 'கம்பர் அந்தாதி', 'முல்லை அந்தாதி' முதலிய நூல்களை அவர்தம் உரையுடன் பதிப்பித்துள்ளார். மேலுமிவர் பரஞ்சோதியின் திருவிளையாடற்புராண முதற்காண்டத்துக்கு உரை எழுதியுள்ளார். இந்நூல் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய பாயிரத்தைக் கொண்டதாகும். மூவர் தேவாரங்களைத் தல முறைப் பதிப்பாக இவர் வெளியிட்டுள்ளார்.

**இராமசாமி முதலியார், ஆ. (கி.பி. 1887-1976)** அரசியல் அறிஞர்; நிருவாகத் திறன் மிக்கவர்; கல்வியாளர்; தொழில் அதிபர்; பொதுப் பணியாளர் எனப் பல்வேறு வகையில் பாராட்டப்பெற்றுப் புகழுடன் வாழ்ந்தவர். 'ஆர்க்காட்டு இரட்டையர்' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்களுள் மூத்தவர். இவர் 14.10.1887-இல் கர்நூல் மாவட்டத்தில் வைணவக் குடும்பத்தில் ஆர்க்காடு குப்புசாமி முதலியாருக்கும் சீத்தம்மாளுக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். இளையவர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார்.

இவர் கர்நூல் நகரவை உயர்நிலைப்பள்ளியில்

தொடக்கக் கல்வியினைப் பயின்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பட்டப் படிப்பினை முடித்த வுடன், சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து (1908-1911) சட்டப்படிப்பை முடித்தார். அக்கால கட்டத்தில் சென்னையில் புகழ்பெற்றிருந்த இரிச் மாண்டு (Richmond) என்பவரிடம் பயின்று வழக்கறி ஞராகச் சேர்ந்தார்.

இராமசாமி முதலியார் 1910-ஆம் ஆண்டு பெங்களூரைச் சேர்ந்த காமாட்சி அம்மாள் என்ப வரைத் திருமணம் செய்துகொண்டார். இவருக்கு ஆண்மக்கள் இருவரும் பெண்மக்கள் இருவரும் பிறந்தனர்.

இராமசாமி முதலியார் ஏழை எளியவர்களுக்குப் பணி செய்யும் பெரு விருப்பம் கொண்டிருந்த காரணத்தால் அரசியலில் நாட்டம் செலுத்தினார். டாக்டர் டி.எம். நாயர், பி. தியாகராய செட்டியார் போன்றவர்களால் 1917-இல் தொடங்கப்பெற்ற நீதிக்கட்சியின் (Justice Party) கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அக்கட்சியின் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். நீதிக்கட்சியின் வரலாற் றில் இராமசாமி முதலியார் தனியிடம் பெற்றார்.

இலண்டனில் 1919-இல் வெளியான மாண்டேகு செம்சுபோர்டு அறிக்கையினை எதிர்த்து நடை பெற்ற வழக்கு மன்றத்தில் நீதிக்கட்சியின் கொள்கை யினை இராமசாமி முதலியாரும் கே.வி. இரெட்டியும் முன் வைத்தனர். இராமசாமி முதலி யாரின் வழக்காடும் திறனைக் கேட்டு மாண்டேகு அவரைப் பாராட்டி, அறிக்கையினை மாற்றியமைக்க இசைந்தார். நீதிக்கட்சியின் பொதுச் செயலாள ராக 1920-இல் இருந்து சிறப்பாகச் செயலாற்றி னார்.

இராமசாமி முதலியார் 1920-ஆம் ஆண்டு சென்னை மேலவைக்கு நடைபெற்ற தேர்தலில் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து இருமுறை தேர்ந் தெடுக்கப்பெற்று, ஆறாண்டுக் காலம் (1920-1926) பணியாற்றினார். கல்வித் துறையின் மேம்பாடு கருதிப் பல மாற்றங்கள் செய்தார்; கல்வியின் இன்றி யமையாமை கருதித் தொடக்கக் கல்வியினைக் கட்டணமின்றிக் கட்டாயக் கல்வியாக்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்த ருக்கு முழுப் பொறுப்பு (ஆளுமை) அளிக்கும் சட்டம் இயற்றப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு வெற்றி யடைந்தார். தெலுங்குமொழி பேசும் மக்களுக் காகத் தனியே ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைய 1925-ஆம் ஆண்டு வழி வகுத்தார்.

தமிழகக் கோயில்களின் சீர்கேடுகளைக் களைய இந்து அறநிலையச் சட்டம் நிறைவேற 1926-ஆம் ஆண்டு பெருந்துணை புரிந்தார். பல்வகையிலும் சிறப்பாகப் பணியாற்றியும் 1926-ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில் தோல்வி அடைந்தார். 'நீதி' (Justice) என்ற செய்தி இதழை நிதிப் பற்றாக் குறையினின்று வெளியேற்ற அதன் நிருவாகப் பொறுப்பினை ஏற்றுத் திறம்படச் செயலாற்றி, அதன் விற்பனைத் திறனைப் பெருக்கினார்.

இராமசாமி முதலியார் 1928 முதல் 1930 வரை சென்னை மாநகராட்சியின் தலைவராகப் பணிபுரிந் தார். 'சைமன் குழு' (Simon Commission) முன் 1929-ஆம் ஆண்டு தம் கருத்துரைகளைக் கூறினார். தில்லி மேலவைக்கு 1930-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓராண்டு பணியாற்றியபொழுது இலண்டனில் வட்டமேசை மாநாடு நடைபெறக் காரணமாயிருந்தார். நீதிக் கட்சியின் சார்பாக மூன்று வட்டமேசை (1930, 31, 32) மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.

சென்னையிலிருந்து 1930-ஆம் ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலில் மத்திய சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். பின்னர், 1936-ஆம் ஆண்டு இலண்டனில் இந்தியக் குழு உறுப் பினராக ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். இராமசாமி முதலி யாரின் திறனை அறிந்த அரசப் பிரதிநிதி (Viceroy) இலின்லித்கோ பிரபு தமது செயற்குழுவில் (Viceroy's Executive Council) வணிகத்துறைப் பொறுப்பை ஒப்படைத்தார். இவருடைய பெருமுயற்சியினால் அறிவியல் மற்றும் தொழில் ஆய்வு நிலையம் அமைக்கப்பட்டு, இந்தியாவின் தொழில் வளர்ச்சி மேலோங்கியது. பின்னர், 1943 முதல் 1946 வரை திட்டம், வளர்ச்சித் துறை போன்றவற்றின் பொறுப் பேற்றார். இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துப் பிரதமர் வின்சுடன் சர்ச்சில் (Vinston Churchill) கீழ் அமைக்கப் பெற்ற போர்க்குழுவின் உறுப்பினராக இருந்தார்.

இராமசாமி முதலியார் 1945-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அவைக் (UNO) கூட்டத்திற்கு இந்தியக் குழுவிற்குத் தலைமையேற்றார். இரண்டு ஆண்டுகள் (1946, 1947) ஐ. நா. பொருளாதாரக் குழு, சமூகக் குழு போன்றவற்றின் தலைவராக இருந்தார். மைசூர் மாநிலத்தின் திவானாக 1946 முதல் 1949வரை இருந்து அம்மாநிலத்தை இந்தியாவு டன் இணைக்க உதவினார். ஐதராபாத்துநகரத்தை இணைக்க மறுப்பு எழுந்தபொழுது ஐ. நா. பாது

காப்பு அவையில் முறையிடச் சர்தார் வல்லபாய் பட்டேல், இராமசாமி முதலியாரைத் தேர்ந்தெடுத்துத் தம் செயலில் வெற்றி அடைந்தார்.

இராமசாமி முதலியார் திருவாங்கூர்ப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1951 முதல் 1961 வரை பணியாற்றினார்; மாநில அவையின் உறுப்பினராக 1951 முதல் 1962 வரை இருந்தார்; தொழில் துறையில் பெரும் ஈடுபாடு கொண்டார்; இந்தியத் தேசிய கப்பல் நிறுவனத்தின் தலைவராகப் பல்லாண்டுக் காலம் பணியாற்றினார்; இலாயிடு நிறுவனம் தொடங்கிய இந்தியக் கப்பல் துறைக்கு முதல் தலைவராக இருந்தார். இவர் இருபதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் நிருவாகப் பொறுப்பாளராக இருந்துள்ளார்.


இவர் திவான் பகதூர் (1930), சர் (1937), கே. சி.ஐ.இ. (K.C.I.E. 1942), இராமசந்திர சிந்தாமணி (1947), பத்ம விபூசன் (1967) போன்ற பட்டங்களைப் பெற்றார். மதிப்புப் பட்டங்களான டி. சி. எல். (D.C.L.) பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் (1946), துர்காம் பல்கலைக் கழகமும் (1953) வழங்கின; எல்.எல்.டி. (L.L.D.) பட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழகமும் (1957) உசுமானியப் பல்கலைக்கழகமும் வழங்கின.

புகழ்மிக்க இப்பெருமகனார் சென்னையில் 7.7.1976-இல் காலமானார். சி.பா.

**இராமசாமி ரெட்டியார், ஓ.பி,** இவர் தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனத்துக்கு அருகேயுள்ள ஓமந்தூர் என்னும் சிற்றூரில் முத்து ராம ரெட்டியாருக்கும் அரங்கநாயகி அம்மாளுக்கும் மூத்தமகனாக கி.பி. 1895-இல் பிறந்தார். தந்தையார் இறந்ததால் இவருடைய பள்ளிப் படிப்பு எட்டாம் வகுப்புடன் முடிந்தது. சிறிய தந்தையாருடைய வற்புறுத்தலால் சென்னைக்குச் சென்று ஓராண்டு படித்தார். பின்னர்த் தாயார் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டு குடும்பப் பொறுப்புகளை ஏற்றார்.

இவருக்கு 1910-இல் திருமணம் நடைபெற்றது. மனைவி 1920-இல் இறந்தார். இவர்கள்தம் மகன் சுந்தரம் 12-ஆம் வயதிலும் மற்றொரு பெண் குழந்தை பிறந்த சில நாட்களிலும் காலமாயினர். இவர் 1920 முதல் ஒரு துறவியாகவே வாழ்ந்து வந்தார்.

இவர் 1918-இல் அரசிலியல் நுழைந்தார். பொது வாழ்வில் இவருக்கு ஈடுபாடு ஏற்படச் செய்தவர்கள்



இராமசாமி ரெட்டியார், ஓ.பி.

ஆர். கே. சண்முகம் செட்டியார், வெங்கந்தூர் கணபதி சாத்திரி, பாலகங்காதர திலகர், இலாலா இலசபதிராய், சுரேந்திரநாத பானர்சி ஆகியோர். இவர் 1920-இல் நாகபுரி காங்கிரசுக்குச் சென்றார்; அன்னை பெசண்டை 1921-இல் சந்தித்தார்.

இவருடைய முயற்சியால் 1920-இல் தென்னார்க்காடு மாவட்டத்தின் முதல் அரசியல் மாநாடு விழுப்புரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவர் 1924-இல் கதர்த் துணிகளைச் சுமந்து மாவட்டமெங்கும் விற்றார். கள்ளுக்கடை, சாராயக் கடைகள்முன் மறியல் செய்தார். நண்பர் ஒருவருடன் சேர்ந்து திண்டிவனத்தில் தேசியப் பாடசாலை தொடங்கினார். இவர் 1920-இல் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக இயக்கத்தில் கைது செய்யப் பெற்றார். மொத்தம் நான்கு முறை இவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது இவர் தம்முடைய தமிழ், ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டார். தெலுங்கு மொழியில் நீதி நூல்களைக் கற்றுப் பயனடைந்தார்.

தமிழ்நாட்டில் 1937-இல் எல்லா நகராண்மைக் கழகங்களையும் காங்கிரசுக் கட்சி கைப்பற்றியது. அவற்றில் பதவி வகித்தவர்களுக்குக் கருத்துரை வழங்கவும் அவர்களைக் கண்காணிக்கவும் தமிழ்நாடு காங்கிரசு நியமித்த மூவர் குழுவில் இவர் இடம் பெற்றார். (ஏனையோர் குமாரசாமி ராசா, திரு. பக்தவத்சலம் ஆகியோர்.) இம்மூவரும் பிற்காலத்தில் முதல் அமைச்சர் ஆயினர்.

இராமசாமி ரெட்டியார் 1932-இல் தமிழ்நாடு காங்கிரசின் துணைத் தலைவராகவும் 1938-இல் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். காங்கிரசுக் கட்சிக்குள் இவர் மகாத்மாவின் தலைமையை ஏற்றுச் செயற்பட்டார். தனிப்பட்ட முறையில் சர்தார் வல்லபாய் பட்டேல், நேத்தாசி சுபாசு சந்திர போசு ஆகியோரிடம் இவர் பெரு மரியாதை காட்டி வந்தார்.

தமிழ் நாட்டில் 1. வேதாரணியம் சர்தார் அ. வேதரத்தினம், 2. மதுரை திரு ந.ம.ரா. சுப்பராமன், 3. கோவை திரு.தி.சு. அவினாசிலிங்கம் ஆகியோருடன் இணைந்து பல செயல்களில் ஓமந்தூரார் முன் நின்றார். இந்த நால்வருக்கும் அண்ணாச்சிமார் என்ற பெயர் வழங்கி வந்தது. இந்த நால்வரும் செல்வக் குடும்பங்களில் பிறந்து சொந்தப் பணத்தைப் பொதுப் பணிகளுக்குச் செலவிட்டவர்கள்; வாழ்நாள் முழுவதும் ஒரே கட்சியில் இருந்தவர்கள்; கட்சிக்குப் புகழ் சேர்த்தவர்கள்.

இவர் 1947 மார்ச்சு 23-இல் (ஆந்திரம், கேரளம் ஆகியவற்றின் பகுதிகள் உட்பட்ட) சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று 1949 ஏப்பிரல் 6-இல் அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

ஐதராபாத்து சமத்தானம் இந்தியாவுடன் இணைவதற்கு இவருடைய இராசதந்திரம் சர்தார் பட்டேலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

இளமையில் இரமண முனிவரிடமும், பிற்காலத்தில் வள்ளலாரிடமும் இவருக்கு அளவற்ற பற்றுதல் இருந்தது.

இவர் 1950-இல் வடலூரில் நிலம் வாங்கினார்; அங்கேயே போய்த் தங்கினார்; ஞான சபைக்குக் குடமுழுக்குச் செய்தார்; சுத்த சன்மார்க்க நிலையம் நிறுவினார்; நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திலிருந்து வடலூர்ப்பகுதிக்கு விலக்குப் பெற்றார்.

புதுச்சேரியை இந்தியாவுடன் இணைக்கக் கிளர்ச்சி நடத்தியவர்களுக்கு ஆதரவாக இருந்து ஆலோசனைகள் கூறினார். தம்முடைய வடலூர் நிறுவனங்களை 1961 இல் தொழிலதிபர் பொள்ளாச்சி திரு.நா. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

இவர் 1971 ஆகசுட்டு 25-ஆம் நாள் சென்னையில் காலமானார். சோமலெ.

**இராம செயத் திருப்புகழ்:** அருணகிரிநாதர் தமிழ் இலக்கிய உலகில் இணையற்ற புதுமையைத் தோற்றுவித்தார். தொல்காப்பியர் காலத்தில் நுண்ணுணர்வுடையோர்க்கே புலப்பட்ட வண்ணங்களைப் பாமரரும் உணரவும் சுவைக்கவும் இவர் திருப்புகழை அருளிச்செய்தார். இதனால், தமிழ் இலக்கியம் வளம்பெற்றது. அருணகிரிநாதர் இலக்கியத்தையே முதன்மையாய்க் கொண்டு கவிதைகள் புனைந்தார். இவருக்குப் பழந்தமிழர் மேற்கொண்டிருந்த நூற்றெட்டுத் தாளங்களும் உதவின.

அருணகிரி நாதர்க்குப் பின்னர், பலர் திருப்புகழ் பாடினார்கள். அவர்களுள் முதலிடம் பெறுபவர் பாலபாரதி. இவர் சீவில்லிபுத்தூரில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் இராமையங்கார். உத்தர காண்டத்தின் 370-ஆம் பாடல் உரையில் இவரைப் பற்றிய குறிப்புகள் வெளிப்படுகின்றன.

பாலபாரதி இராமாயணத்தின் ஆறு காண்டங்களையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனைப் பின்பற்றியே பாடியுள்ளார். உத்தரகாண்டத்தை வால்மீகியையும் அதனைத் தமிழில் பாடிய வாணிதாசனையும் முன் மாதிரியாகக் கொண்டு பாடியுள்ளார்.

இந்நூலுக்கு ஆசிரியர் வைத்த பெயர் இராம செயம் என்பதே. 'யாது நினைந்தாலும் அந்த வாழ்வுதரும் தியாக சிந்து இராமசெயம் பாட வந்து துணையாவாய்' என்றும், 'சுத்தகவி கம்பநாடன் முன் இனிதோதும் சொற்படி விளம்பு இராமசெயத்தினை நினைந்துளோர்' என்றும் உள்ள தொடர்கள் நூலின் பெயரைப் புலப்படுத்துகின்றன. புலவர் வழங்கிய பெயரை மாற்றிப் புலவர்களும் பொதுமக்களும் இராமசெயத் திருப்புகழ் என்றே வழங்கத் தொடங்கினர்.

இராமசெயத் திருப்புகழ் 370 பாடல்களைக் கொண்டது. இந்நூலுக்குப் பெயர் அறியப்படாத புலவர் ஒருவர் பொழிப்புரை எழுதியுள்ளார். இப் பொழிப்புரையில்லாமற் போனால் பல பகுதிகட்கு உரை காண்பது கடினம்.

இந்நூலின் பாடல்களின் முற்பகுதி தோத்திரம்; பிற்பகுதி இராம காதை. முன்பகுதியில் இவர் தம் குறைபாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்கிறார். சில பாடல்களில் அற்பர்களைப் பாடாது இராம

பிரானையே பாடும்பேறு வேண்டும் என்கிறார். சில பாடல்களில் மகளிர் அழகில் மயங்கிக் கெட்டேன் என்கிறார். சில பாடல்களில் உடலின் இழிவைக் குறிப்பிடுகிறார்.

இந்நூலாசிரியர் நம்மாழ்வார்பால் மிக்க ஈடுபாடு உடையவர். முதலில் காப்புக் கடவுளாக நம்மாழ்வாரையே எண்ணிப் பாடுகிறார். நம்மாழ்வாரைக் காசினிப் புலவர்க்கு அரசே என்றும், பொருநைத் துறையாளா என்றும், மகிழந்தொடைமாறா என்றும், அருட் கடவுள் துணைவோனே என்றும், மறைப் பொருள் சேரத் தமிழ் ஓராயிரத்தில் அமைந்திடுவோனே என்றும்,திருக்குருகைப் பெருமானே என்றும் பக்தியுடன் பாடுகிறார்.

இவருக்குத் திருவாய்மொழியின்பால் மிக்க ஈடுபாடு உண்டு. வடித்த சடகோபர் மொழிந்திடு தமிழ்ச் சுருதி என்றும், சடகோபர் ஆரண மொழியில் இழிந்திழிந்து என்றும் பாடும் பகுதி நினைக்கத் தக்கது.

முதலாழ்வார்கள் திருக்கோவலூரின் இடைகழியில் கண்ட காட்சியைத் தானும் காணப் பாலபாரதி நயமாக விண்ணப்பிக்கிறார். 'இடைகழிமாடே...... திருவோடும் இருசுடராம் ஆழி சங்கும் இசையோடு நீ கோயில் நின்ற இனிய பொன்மாமேனி கண்டு தொழுவேனோ' என்று ஆசையோடு பேசுகிறார்.

திருமங்கையாழ்வார் மணக்கோலத்துடன் வந்த இறைவனை மறித்து அணிகலன்களைப் பறித்ததையும், எட்டெழுத்து மந்திரத்தைப் பெற்றதையும் ஆசிரியர் நினைந்து உருகுகிறார். இறைவன் ஆழ்வாருக்குக் குருவாக வருகிறான். அப்பேறு தமக்கும் வேண்டும் என்கிறார் ஆசிரியர். 'குறைசெய் வானின் குறைகள் தீர உரைசெய் தாளும் இறையும் ஞான குருவும் ஆன உனது பாதம் அடைவேனோ' என்று நயமுறப் பேசுகிறார்.

ஆதிசேடன் இறைவனுக்குக் குடையாகவும் சிம்மாசனமாகவும் பாதுகையாகவும் தெப்பமாகவும் விளக்காகவும் உடையாகவும் தொண்டுபுரிவதைப் பொய்கை ஆழ்வார் ஒரு பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார். அதனைப் பாலபாரதி, 'ஆசனம் என அடங்கி நீள்குடை என விளங்கி, ஆடையதென வணங்கி – வளர்பாயல் ஆமென வுடன்விரிந்து பாதுகை என ஒடுங்கி ஆரிருள் கடியமுந்துச் சுடராகித் தேசுஅணி திருவனந்தன்' என்று விரித்துப் பாடுகிறார்.

முதல் திருவந்தாதி, சங்கரநாராயணரின் பெயர்கள் வாகனங்கள் முதலியவற்றைக் குறிப்பிடும். இப்பாசுரத்தைச் சிறு சிறு மாற்றங்களுடன் பாலபாரதி விவரிக்கிறார். 'விடைவெம் புட்கொடி: தீ பச்சைப் புயல் உருவம் கைப்படை வேல் பொற் சக்கரம்' என நயமுற விவரிக்கின்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாடல்கள் பலவற்றை ஆசிரியர் விரிவுபடுத்தியுள்ளார். இறைவன் ஆலந்தளிரையும் மலரையும் கயிலை மலையையும் விட்டு இராமனாக அவதரித்தான் என்று கம்பன் நயமுறப் பாடிச் சமய ஒற்றுமைக்கு வழிவகுத்தான். இப்பாசுரத்தைப் பயின்ற பாலபாரதி இறைவன் விடுத்து வந்த இடங்களைப் பலபடியாக விவரிக்கின்றார்.

ஆலிலை கிடக்கை தணிந்து, வேலையின் இருக்கை நிரம்பி, ஆதவன் இடத்தினும் இன்றி, அமரேசன்: ஆம் அரசு இருப்பு முனிந்து மாகயிலை வெற்பொடுகஞ்சம் ஆதியிடம் முற்றும் அகன்று, கரைகாணாக் கோலமறை உச்சிதுறந்து, மாதவர் மனத்தை நெகிழ்ந்து கோகனகை சொர்க்கம் இகழ்ந்து, வளர்பாயல் கோளரவை விட்டு விகங்க பூபதி (கருடன்) கழுத்தை மறந்து கோசலை வயிற்றிருந்த பெருமானே' என்று பாடிய பாரதியின் புலமைவளம் மறக்கத்தக்கதன்று.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் இராமபிரானின் இளம் பருவ விளையாட்டையும் கோலத்தையும் விவரிக்கவில்லை. அதன் காரணம் புலனாகவில்லை. இக்குறையைப் பாலபாரதி ஒருவாறு போக்கியுள்ளார். 5 பாடல்களில் இராமபிரானின் இளம்பருவத்தையும் விளையாட்டையும் கோசலையாக இருந்து நயமுறப் பாடுகின்றார். இராமபிரானைத் தண்டைகள் ஒலிக்கவும், அரைக்கிண்கிணிகள் பண்பாடவும், மணிகள் ஒலிக்கவும், மாலை தொங்கவும், உடுத்த ஆடை நழுவவும், நெற்றியில் வேர்வை தோன்றவும், தளிர் போன்ற பாதங்கள் பதறவும், தம்பிகளுடன் கோசலையின் முத்தங்கொள்ளத் தளர்நடையோடு வரும் பெருமானே என்று பாரதி பாடும் பகுதி நயம்மிக்கது. நாதமுறத் தண்டைகள் பல கீதமெழக் கிண்கிணி நாவசையத் தன் துளவளவிய மாலை, நாலவுடுக்கும் சிறு துகில் சோரமிழற்றும் குதலைகள் நாவுதரத் தும்பிகளுடன் மலர் சூடும், கோதை நெகச் சிந்துர நுதல் வேர்வைதரக் குண்டல ஒளிகூர .....முகத்தின் பிரபை எழ மறைநாலும், கூடிவரச் செந்தளிர் நடை கால்பதறத் தம்பியரொடு கோசலை முத்தங் கொளவரு 'பெருமானே என்று பாரதி பாடிய பாடலை இசையுடன் பாடின் கல்லும் உருகும்.

இராகவனைக் கண்டு காதல் கொண்ட

பிராட்டியின் விரகமொழிகளைப் பாரதி அடுக்கி அடுக்கிப் பாடுகிறார். 'காணவிடியாது கங்குல் கங்குல் பேணமுடியாது சங்கு சங்கு காதலறி யார்கள் பெண்கள் பெண்கள் ... ... நாணிசிலை தூணி கொண்டு கொண்டு தூரவொரு மேகம் நின்று நின்றென் நாணமுடன் ஆவியுண்டது உண்டது எனமாழ்கி நாடு மொரு சீதை' என்ற பகுதி கம்பநாடனின் கவிதையின் சாரம்.

பரசுராமனின் சீற்றக் கோலத்தையும் செயலையும் 'பருதி கோடி போல் எறிக்க மகுடவேணி தாழருத்ர பரமயோகி போல் அதட்டி' என்று சிறு தொடராலே ஆசிரியர் திறம்படப் பாடுகிறார்.

இராமபிரான் பிராட்டியுடன் வாழ்ந்த இல்லற வாழ்க்கையைக் கம்பன் விவரிக்கவில்லை. அக் குறையைப்பாரதி போக்கியுள்ளார். இங்குப் பிராட்டியின் சிறப்பை 'அருமறை மணக்குமேனியள் வர மலம் ஒத்தபாணியள் அமுதுகு சிவத்த வாயினள் அருள்மாறாப், பொறையுலகு பெற்ற பூரணி, பிரமனை யளித்த நாயகி புணரியில் உதித்த காரிகை, மறுநாடாப் புதுமதி முகத்தி சானகி' எனப் பக்திப் பரவசத்தோடு பாடுகிறார்.

பிராட்டி சிறையில் இலக்குவன் புனைந்த சாலையில் இருந்த பண்பையும், திரிசடை உதவியதையும், 'சேயெனும் இளவல் புரிந்த சாலையினொடு முன்வந்த தேரொடும் இனிது துவங்கி அநியாயத், தீயவன் இடும் சிறை கண்டு சாயலும் அழகும் இழந்து சீரையும் மருங்கும் எழில்கூரத், தாயென மதியி னுணர்ந்து வீடணன் உதவு மடந்தை தானடி தொழுது மிகுந்த துணையாகித், தாதளை அளிகள் புலம்பு சோலையின் நடுவண் அமர்ந்த சானகி நினைவி லிருந்த பெருமானே' என்று பலபல நயங்கள் விளங்கப் பாடிய ஆசிரியரின் திறமையை எவரும் வியப்பர்.

பிராட்டியின் சிறை மீட்சியை மிகமிகச் சுருக்கமாகப் பாடுகிறார். பெருமான் பிராட்டியைக் கொடுஞ்சொல் கூறியது நூலாசிரியர்க்கு வெறுப்பை விளைத்ததுபோலும்.

சீதையை என்முன் கொடேபோதி என்று அங்கு அருள வீறொடு கொணர்ந்ததோர் காலையின் பொங்கியெழு தீ முழுகி வந்து பாதார விந்தங்கள் பெறு திருநாளில் ... சானகியை எங்கள் மாதாவை இன்று அன்பினொடு கேண்மையுற முன்பு போல் மேவுக என்று அண்டர் புகல் சபை' எனச் சுருக்குகிறார் ஆசிரியர்.

இராமசெயத் திருப்புகழ் பக்திக் களஞ்சியம், கவிதைச் சுரங்கம், அன்பின் ஊற்று. இந்நூலைப் பயில்பவர்கள் பாலபாரதியை அருணகிரி நாதரின் மறுபிறப்பென்றே பகர்வர். எஸ்.கே.இரா.

**இராமதாசர், சமர்த்த (கி.பி. 1608–1682)** மகாராட்டிரத்தில் தோன்றி, சத்திரபதி சிவாசி மன்னனுக்கு அரசியல் – அருளியல் குருவாக விளங்கிச் சிறந்த சமய சமுதாய ஞானியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த ஒரு மகான். இவர் மகாராட்டிரத்தில் மராட்வாடாப்பகுதியைச் சேர்ந்த சம்பு (Jamb) என்னும் ஊரில் கி.பி.1608–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் 'குல்கர்னி' (Kulkarni) எனப்படும் அரசாங்க அலுவலராக விளங்கினார். தந்தை பெயர் சூர்யாசிபட்டு; தாயார் பெயர் இராணுபாய். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நாராயணன் என்பதாகும். இவர் தமையனார் பெயர் கங்காதர். இளமையிலிருந்தே இல்லற நாட்டம் இல்லாதிருந்த இவர், திருமணம் செய்து கொள்ளாது துறவியாகவே வாழ்ந்தார். இராம பிரானே இவருக்குக் குருவாக விளங்கினார் என்றும், அதனால் இவர் 'இராமதாசர்' எனப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. பிற்காலத்தில் இவருக்கு இப் பெயரே நிலைத்த பெயராக வழங்கலாயிற்று. ஆன்மிக நாட்டம் மிகுந்து விளங்கிய இவர், நாட்டிலுள்ள பல்வேறு தலங்களுக்கும் புனிதப் பயணம் செய்ய விரும்பி காசி, அயோத்தி, மதுரா போன்ற இடங்களுக்குச் சென்றார். இவர் பலகாலம் மலைப் பகுதிகளில் தனிமையில் வாழ்ந்துள்ளார். பஞ்சவடி என்னுமிடத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் இராமபூசை செய்தார்.

சத்திரபதி சிவாசி இவருடைய பெருமையை உணர்ந்து, இவரைக் காண விரும்பிப் பலமுறை சாப்பல் (Chaphal) பகுதிக்குச் சென்றும் காண இயலாது மீண்டார். இறுதியில் சிருங்கன் வாடி(Shringan wadi) என்னுமிடத்தில் இவரைக் கண்டு வணங்கினார். சிவாசி மன்னரின் வேண்டுகோளை ஏற்று, இவர் சத்தாராவிற்கு அருகிலுள்ள சச்சன்கடு (Sajjangad)என்னும் ஊரில் தங்கியிருந்தார். சத்தாரா மாவட்டத்திலுள்ள சாப்பல் என்னும் இடத்தில் மடம் ஒன்றினை நிறுவி, இராமச்சந்திர மூர்த்திக்கு ஓர் ஆலயத்தினை எழுப்பினார். நாட்டின் பலபகுதிகளில் மடங்களும் அனுமன் கோயிலும் அமைக்க ஏற்பாடுகள் செய்தார்.

சத்திரபதி சிவாசியின் குருவாக விளங்கிய இவர், நாட்டு மக்களிடையே சமய சமுதாயப் பற்றும் எழுச்சியும் ஓங்கி விளங்குமாறு தொண்டு புரிந்தார். இவரது அறிவுரையால் ஆன்மிக உணர்ச்சியும் சமயப் பற்றும், சமுதாய நாட்டமும் சிறந்து விளங்கிய

சிவாசி, ஆற்றல் மிக்கதோர் இந்துப் பேரரசினை உருவாக்கிச் சிறப்பொடு திகழ்ந்தார்.

இராமதாசர் சிவாசிக்கு எழுதிய ஒரு மடலில் 'துயர் துடைக்கும் கணபதியையும், அம்பிகை சரசுவதியையும், புனிதமிக்க அருளாளர்களையும், குடும்பத் தெய்வத்தையும், இராமபிரானையும் வணங்குவாயாக. அறிவாளியாக இருப்பவன் மகிழ்ச்சியுடன் விளங்குவான்; உன் உழைப்பும் முயற்சியும் ஆட்சியில் நற்பயன் அளிக்கும்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு சமயம் சிவாசி மன்னர் தம் ஆட்சிப் பெருமையெல்லாம் தம் குருவாகிய இராமதாசரையே சாரும் எனக்கூறி, ஆட்சியினை அவருக்கு அளிக்க முன்வந்தார். அதனை ஏற்க மறுத்த இராமதாசரின் அறிவுரைப்படி, அவர் அளித்த காவித்துணியினையே தம் கொடியாகக் கொண்டு சிவாசி நாட்டை ஆட்சி புரிந்தார் என்று கூறப்படுகிறது. ஒருவரை ஒருவர் காணும்போது 'இராம் இராம்' என்று கூறி வணங்கும் முறையினையும் இராமதாசர் உருவாக்கினார்.

இராமதாசர் தம்முடனேயே இருக்க வேண்டும் என விரும்பிய சிவாசி, அது இயலாது போகவே, சத்தாராவிற்கு 8கல் தொலைவிலுள்ள பரலி (Parali) என்னும் கோட்டையினை அவருக்கு அளித்தார். அதில் சில காலம் தங்கிய இராமதாசர் அங்கே மாருதிக்கு (அனுமனுக்கு) ஒரு கோயில் எடுப்பித்தார்.

ஆன்மிகம், அரசியல், சமயம், சமுதாயம் ஆகியன பற்றிச் சிறந்த அறிவுரை பகரும் பல நூல்களை இராமதாசர் எழுதியுள்ளார். அவருடைய நூல்களில் 'தாச போதம்' (Dasabodha) என்னும் நூல் தலைசிறந்ததாகும். இது 'இராமதாசர் வழங்கிய அறிவுரை' என்றும், 'ஓர் இறையடியார் வழங்கிய அருளுரை' என்றும் பொருள்படும். குரு சீடர் உரையாடல் வடிவில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் உணர்த்தும் அடிப்படைப் பொருள் தெய்வபக்தியாகும். சிவ, சீவ இயல்புகளும் பிற ஆன்மிகக் கருத்துகளும் இதில் விளக்கப்பட்டுள்ளன. இருபது அதிகாரங்களாக அமைந்துள்ள இந்நூல், மகாராட்டிரத்தில் பகவத்கீதைக்கு அடுத்தபடியாகச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

தம் வாழ்வின் இறுதி நெருங்குவதனை உணர்ந்த இராமதாசர் தம் மாணவர்களை அழைத்து, 'என் பூத உடல் அழியினும்,ஆன்மா அழியாது; எப்போதும் இங்கேயே இருக்கும்; நீங்கள் துயர் கொள்ள வேண்டாம்: என் நூல்களைப் படியுங்கள்; அவை முத்தி நெறியினைக் காட்டும். அழியும் உடம்பின் மீது ஆசையை அகற்றுங்கள், தீய வழிச் செல்லாதீர், உங்களுக்கு நற்கதி காத்திருக்கிறது. எப்பொழுதும் இராம நாமத்தினை ஒலித்துக் கொண்டே இருங்கள், என்று அறிவுரை கூறினார். இவர் 'இராம் இராம்' என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டே சச்சன்கடு என்னுமிடத்தில், கி.பி. 1682-ஆம் ஆண்டில் ஒரு நாள் நண்பகலில் காலமானார். சிவாசி மன்னர் இறந்த பின் இரண்டு ஆண்டுகள் கழித்து இராமதாசரின் இறப்பு நேர்ந்தது. இவருடைய உடல் பரலிக்கு அருகில் தீமூட்டப்பெற்றது. பின்னர் இவரது அத்தி சாப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஜி.க.

துணை நூல்கள்:

**Rawlinson, H.G.**,Shivaji the Maratha, Delhi, 1915.

**Sathiyanatha Iyer**, History of India,S. Viswanathan, Madras, 1976.

**Kincaid, C.A. & Parasnis, D.B.,** History of the Maratha People, Madras, 1931.

**இராமதாசர், பத்திராசலம்,** கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தெலுங்கு மொழியில் இசைப்பாடல் இயற்றுவதில் வல்லவராக விளங்கியவர். இவரது இயற்பெயர் கோபண்ணா. இவர் இராம பத்தியில் தலைசிறந்து விளங்கினார். இவர் தந்தை பெயர் இலிங்கண்ணா. இவர் காலத்தில் அரசாண்ட தானேசா என்னும் நவாபு மன்னன் இவரைக் கோல்கொண்டாவின் வட்டாட்சித் தலைவராகப் பணியமர்த்தினான். வைணவ சமயத்தில் மிக்க ஈடுபாடு கொண்ட இராமதாசர், இராமபிரானுக்குத் திருக்கோயில் கட்டுவதில் அரசாங்கக் கருவூலப் பணத்தினை மிகுதியாகச் செலவிட்டார். உண்மை உணர்ந்த மன்னன் இவரைச் சிறையிலடைத்தான். இராமலக்குவர் மானிடவடிவில் தோன்றி, அரசிற்குச் செலுத்த வேண்டிய தொகையினைச் செலுத்தி இராமதாசரை விடுதலை செய்யுமாறு செய்தனர் என்னும் செய்தி கூறப்படுகிறது. இராமபிரானிடத்தில் அளவற்றபத்தி ஈடுபாடு கொண்ட இவர் அவன்மீது எண்ணற்ற இன்னிசைப் பாடல்களைப் பாடினார். தெலுங்குமொழியில் அமைந்துள்ள அப்பாடல்களைத் தெலுங்குமக்களேயன்றி மற்றவர்களும் நெஞ்சினிக்கப்பாடி இன்புற்றனர். மக்கள் அனைவரும், இராமபத்தி மிக்குடைய இவரை, இராமதாசர் என்றே போற்றினர். இவருடைய வரலாறு தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய தென்னிந்திய மொழிகளில் நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது. இவர் 'பத்திராசல

தாசரதி சதகம்' என்னும் பெயரில் ஒரு சதகம் இயற்றியுள்ளார். தெலுங்கு மொழியிலுள்ள சதக இலக்கியங்களில், இது ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

**இராமதாசு, குரு (கி.பி.1534-1581)** என்பார் சீக்கிய சமயத்தின் நான்காம் குருவாவர். இவர் கி.பி. 1534-ஆம் ஆண்டில் இன்றைய பாகிசுத்தானிலுள்ள இலாகூர் என்னும் ஊரில் சூதி மரபில் பிறந்தார். சீக்கியர்களின் புனித நூலான ஆதிகிரந்தத்தில் குரு இராமதாசர் எழுதிய 679 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவருடைய அரும்பணியால் சீக்கியர் வலுப்பெற்றனர். பஞ்சாபு மாநிலத்திலுள்ள அமிருதசரசு என்னும் நகரில் பொற்கோயிலைக் கட்டியவரும் இவரே. இந்நகரம் சீக்கியர்களால் புனித நகரமாகக் கருதப்படுகிறது. இவர் மூன்றாம் குருவான அமர்தாசரின் மருமகன். இராமதாசு மொகலாயப் பேரரசர் அக்பரிடம் நல்லுறவினைக் கொண்டிருந்தமையால், அமிருதசரசில் 500 பிகா நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கினார். இராமதாசு இராமதாசப்புரம் என்னும் புதிய நகரமொன்றையும் கட்டினார். அமிருதசரசிலும் சந்தோக்சரிலும் இரு குளங்களை வெட்டும் பணியைத் தொடங்கினார். இத்தகைய சமயப் பணிகளுக்காகப் பொருள் திரட்ட இராமதாசு தம் பணியாளர்களை அனைத்து இடங்களுக்கும் அனுப்பினார். இவர்காலத்தில் சீக்கிய சமயம் பொதுமக்களால் பெரிதும் போற்றப்பட்டது. குரு இராமதாசு கி.பி. 1581-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மறைவுக்குப் பின், இவர் மூன்றாம் மகன் குரு அர்ச்சுனதேவர், ஐந்தாம் குருவாகத் தம் 18 ஆம் வயதில் பொறுப்பேற்றார்.

**இராமதேவர்.** மருத்துவம், சோதிடம் முதலியன வல்ல ஒரு சித்தர். இவர் நாகப்பட்டினத்தில் இருந்து புரிந்த சிவபூசைச் சிறப்பினால் சித்திகள் பல கைவரப் பெற்றார். இவர் மருத்துவம் வல்லவராய்ப் பல மருத்துவ நூல்களை இயற்றியுள்ளார். இவரது வைத்தியம் 'இராமதேவர்' வைத்தியம் என்றுவழங்கப்படுகிறது. காசியிலிருந்து சட்டை நாதப் பெருமானை நாகப்பட்டினத்திற்குக் கொணர்ந்து, அங்கே அவருக்குக்கோயில் அமைத்துள்ளார். இன்றும்அது சட்டையப்பர் கோயில் என்று வழங்கப்படுகிறது. இவர் பெயரால் பல மருத்துவ நூல்கள் அமைந்துள்ளன. இராமதேவர் அட்டாங்க பட்சிணி என்பது யோகம் பற்றிய நூல். கருக்கடைச் சுருக்கம் 500 என்னும் நூல் இரசவாதத் தொடர்பானது. கருமானசூத்திரம் 31, இராமதேவர் சூத்திரம் 380, இராமதேவர் சூத்திரம் 30, இராமதேவர் தண்டகம் ஆகியன இரசவாதம் பற்றியன. இராமதேவர் கேசரி, இராமதேவர் பட்சணி, இராமதேவர் விநோதப் பட்சணி, இராமதேவர் வைத்தியசூத்திரம் 81 ஆகியவை மருத்துவ நூல்கள். இராமதேவர் சோதிடம், இராமதேவர் சோசியம் முதலியன சோதிட நூல்கள். இராமதேவர் சோதிடம், இராமதேவர் நிகண்டு, இராமதேவர் பாடை முதலிய நூல்களும் இவர் பெயரில் அமைந்துள்ளன.

**இராமநாடகக் கீர்த்தனை** என்னும் விழுமிய இசைத்தமிழ் நூல், கி.பி. 1712-ஆம் ஆண்டில் தில்லையாடியென்னும் சிற்றூரிற் பிறந்து, அம்பலவாணக் கவிராயர்பாற் கற்றுச் சீர்காழியிற் பல காலம் வாழ்ந்த, அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டதாகும். தம் அறுபதாம் வயதில் இந்நூலை இயற்றித் திருவரங்கத்திலே அரங்கேற்றினார் கவிராயர்.

சீர்காழியை அடுத்த சட்டநாதபுரத்தைச் சார்ந்த கோதண்டராமய்யர், வேங்கடராமய்யர் என்னும் இசையறிஞர் இருவரின் வேண்டுகோட்கிணங்க இந்நூலியற்றப்பட்டதாகும். கம்பராமாயணத்தைக் கீர்த்தனை வடிவிலியற்றிய முதற்பாவலர் கவிராயரேயாவர்.

ஏற்றேரி அருணகிரி முதலியார், வேங்கட சுப்பராய பிள்ளை, வேங்கடாசலச் செட்டியார் ஆகிய வள்ளற் பெருமக்கள் இவரைப் புரந்த புலவலர்கள் என்பது நூலிலுள்ள பாராட்டுக் கீர்த்தனைகள் தரும் செய்தியாகும். புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை, தஞ்சை மன்னர் துளசேந்திரர், மணலி முத்துக்கிருட்டின முதலியார் ஆகியோரும் பாளையத்தலைவர் சிலரும் கவிராயருக்குச் சிறப்புச் செய்துள்ளனர்.

கம்பரின் கருத்துகளையும் தொடர்களையும் சொற்களையும் அடியொற்றிப் பாடப்பட்ட இந்நூல் கம்பராமாயணம் போலவே பாயிரமும் ஆறுகாண்டங்களும் கொண்டு விளங்குகிறது.

சரணங்கள் மட்டும் கொண்ட தோடயம் என்னும் உறுப்பு ஒன்றும், கண்ணிகளாக அமையும் திபதைகள் அறுபதும், பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் அமைப்புடைய தருக்கள் என்னும் கீர்த்தனைகள் நூற்றுத்தொண்ணூற்றேழும் கொண்ட இந்நூலில் இருநூற்று அறுபத்தெட்டு விருத்தங்களும், ஆறு கொச்சகங்களும், இரண்டு வெண்பாக்களும், ஒரு கலித்துறையும் ஓர் உரை நடையும் அடங்கியுள்ளன.

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்பத்தைந்து இராகங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் சாவேரி, மோகனம், மத்தியமாவதி, அசாவேரி, ஆனந்த பைரவி, தோடி ஆகியவை மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.

இதில் அமைந்த தாளங்கள் எட்டாகும். ஆதி தாளமும், அடதாளசாப்பும் மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.

நாடகப் பாங்குடைய, இன்றியமையாத கம்ப ராமாயணக் கதைப் பகுதிகட்கு மட்டுமே இசைப் பாட்டு வடிவம் தந்துள்ளார் கவிஞர். வருணனைப் பகுதிகளாக அமையும் படலங்களை விலக்கியுள்ளார். ஏனைய கதைப் பகுதிகளைக் கீர்த்தனை ஒவ்வொன்றிற்கும் முன்புள்ள விருத்தத்திலேயே தொகுத்துக் கூறியுள்ளார். இவ்விருத்தங்களே, அடுத்தடுத்து வரும் கீர்த்தனைகளில் இடம்பெறும் கதை நிகழ்ச்சிகளை உறவுபடுத்திக் கதையில் இடையறவின்றித் தடுக்க உதவுகின்றன.

கம்பர் போற்றிய மொழித் தூய்மையை இந்நூலில் காணமுடியவில்லை. வடசொற்களும் பேச்சு வழக்குச் சொற்களும் தடையின்றி ஆளப்பட்டுள்ளன. இராகத்திற்கும் தாளத்திற்கும் முதன்மை தந்து இயற்றப்பட்டதாதலின், தமிழ் மயக்க விதிகட்குப் புறம்பான சொல்லாட்சியினையும் காணமுடிகிறது.

எண்ணற்ற அழகிய உவமைகளையும், பொருள் செறிந்த பழமொழிகளையும் ஆசிரியர் இடமறிந்து ஆண்டிருப்பது இந்நூற்குச் சிறப்பளிக்கிறது.

இந்நூலின் கீர்த்தனைகள், அவை தோன்றிய காலத்திலேயே தமிழ் மக்களாற் போற்றப்பட்டன. இன்றும் அவை பாடப்படுகின்றன. சில கீர்த்தனைகள் நூலிற் குறிப்பிட்ட இராகத்தினும் வேறான இராகத்திலும் பாடப்படுகின்றன. தமிழிசை வரலாற்றில் இந்நூலுக்குத் தனியான இடமுண்டு. அ.த.

**இராமநாதக் கவிராயர்**, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் குறிச்சி என வழங்கப்பெறும் பண்ணை மாநகரினர். கவிதை படைக்கும் ஆற்றலால் இவர் கவிராயர் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவர் 'சிவ சைலப்பள்ளு' என்னும் சிற்றிலக்கியத்தினைப் படைத்துள்ளார். முக்கூடற்பள்ளு, வையாபுரிப்பள்ளு முதலிய பள்ளு என்னும் நாட்டுப்புறச் சிற்றிலக்கிய வகையில் அமைந்துள்ள இந்நூல், அந்த மரபில் தோன்றிய மக்களின் வழக்காற்றுச் சொற்களையும், பழக்க வழக்கங்களையும் அமைத்துப் பாடப்பட்டது. இவர் தம் காலத்தில் வாழ்ந்த ஆறை அழகப்ப முதலியார், சிவசைலம் திருக்கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகள், சிறப்பொடு பூசனை நிகழ்வதற்கு அமைத்துள்ள சுட்டளைகள் போன்றவற்றை இப்பள்ளு நூலில் பலவாறாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆறை அழகப்ப முதலியார் இவர் காலத்திலிருந்த நாயக்கர் படையில் தளபதியாக விளங்கியவர். இத்தளபதியும் கவிராயரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களாவர் என்பதனை இப்பள்ளு நூலால் அறிய முடிகிறது. இந்நூலாசிரியர் அழகப்ப முதலியாரால் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளார். சிவசைலப்பள்ளு, ஆறை அழகப்ப முதலியார் மரபில் வந்த சிவசைல முதலியாரால் 1918-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

**இராமநாதபுர மாவட்டம்**: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

**இராமநாதம் பிள்ளை, அ. (கி.பி. 1895 1960):** இவர் கி.பி. 1895 ஏப்பிரல் 6-ஆம் நாள் சிதம்பரத்துக்கு அண்மையிலுள்ள விளாகம் என்ற ஊரில் பிறந்தார். இவர் தந்தையார் அம்பலவாண பிள்ளை; தாயார் அம்மணி அம்மாள். தொடக்கக் கல்வியைச் சிதம்பரத்தில் முடித்தபின் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் (Intermediate Course) சேர்ந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் விலங்கியல் துறையில் பி.ஏ. ஆனர்சு பட்டம் பெற்றார். பின்னர்ச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்சிப் பட்டமும் பெற்றார். கல்வி முடிந்ததும் பள்ளித் துணை ஆய்வாளராக நியமனம் பெற்றார். சிறிது காலத்துக்குப் பின் அனந்தப்பூர் அரசினர் கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் விலங்கியல் துறையில் கூடுதல் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். அப்போது பல்கலைக்கழக மாணவர் படைப் பயிற்சிப் பிரிவுக்குத் (U.T.C.) தலைவராகிப் (Captain) பல அதிகாரிகளுக்குப் பயிற்சி தந்தார்.

பின்னர் 1942-இல் மங்களூரிலும் 1943-51 ஆண்டுகளில் கோவையிலும் அரசு கலைக் கல்லூரிகளின்



இராமநாதம் பிள்ளை, அ.

முதல்வராகப் பணி புரிந்தார். ஓய்வு பெற்றபின் பெரிய நாயக்கன்பாளையம் இராமகிருட்டிண சங்கக் கல்லூரியில் சிறிதுகாலம் மதிப்பு முதல்வராகப் பணி யாற்றினார். அதன்பின் 1952-56-ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் துணைவேந்தராக இருந்தபோது இவர் அவருக்கு உற்ற உதவித் துணை வேந்தராகப் பதவி வகித்தார். மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியின் தொடக்ககால முதல்வராக 1956-57 ஆண்டில் பணியாற்றினார். பின்னர் 1957-59 ஆண்டு களில் மதுரை தியாகராசர் கல்லூரியில் முதல்வராக அமர்ந்தார்.

தமது நீண்டகாலக் கல்விப் பணியில் இவர் குறிப் பிடத்தக்க பல கல்வித் தொண்டுகள் புரிந்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் ஆட்சிக்குழு,ஆளவைமன்றம், கல்விக்குழு, பாடத்திட்டக்குழு போன்றவற்றில் பல ஆண்டுகள் தொடர்ந்து அங்கம் வகித்து வழிகாட்டி யுள்ளார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ‘பொதுநல அரசு’ நாடுகளின் பல்கலைக் கழக மாநாட் டில் இவர் பங்குபெற்றார். இங்கிலாந்து, ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு கல்வி நிலையங்களையும் பார்வையிட்டுத் தாம் அங்குப் பெற்ற அனுபவத் தைத் தாய்நாட்டு உயர்கல்வித் துறையில் பயன் படுத்தினார். இவர் மூதறிஞர் இராசாசி அவர்களின் அன்புக்கு உரியவராக விளக்கினார். கடமையில் கண்டிப்பானவர்; அப்பழுக்கற்ற அதிகாரி; இளகிய மனம் உடையவர்; அனாதை விடுதிகளுக்கு உதவிய தோடு ஏழை மாணவர் பலருக்கும் படிப்புவசதிகள் ஏற்படுத்தித் தந்தார். ஆழ்ந்த சமயப் பற்றும் மக்கட் பண்பும் உடையவர். இவர் மனைவியார் பெயர் திருமதி செகதாம்பாள். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். இவர் 1960 மே 24-ஆம் நாள் மறைந்தார். சீ.ஞா.

**இராமநாத முனிவர்,** கி.பி. 16-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த அருட்செல்வர்களுள் ஒருவர். சமய ஈடுபாடுமிக்க இவர் இராமநாத பண்டாரம் எனவும் அழைக்கப்பட்டார். சேதுபுராணம் இயற்றிய நிரம்பிய அழகிய தேசிகர் இவர்பால் மிக்க அன்புடையவராக இருந்துள்ளார். அப்புராணம் பாடும்படி தேசிகருக்கு இவர் ஊக்க மிக அளித்தார். தேசிகர் இவர்பால் கொண்டிருந்த அன்பினைச் சேதுபுராணத்தின் இறுதிப்பாடலில் உள்ள ‘இராம நாத மாமுனிவன் நீடுழி வாழ்க மாதோ’ என்னும் வாழ்த்தினால் அறியலாம். தளவாய் சேதுபதி காத்த தேவர், அவர் மகன் கூத்தன் சேதுபதி ஆகி யோர் காலங்களில் வாழ்ந்தவர் இவர். இப்பெரு மக்களிடமிருந்து ஊர்கள், பொருள்கள் ஆகியவற் றோடு ஏவலர், காரியத்தலைவர் ஆகியோரையும் பெற்று இவர் இறைத் தொண்டில் ஈடுபட்டார்; இராமேச்சரத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார்; அங்கு நாள் வழிபாடும், சிறப்பு வழி பாடும் நடைபெற ஏற்பாடுகள் செய்தார்; மேலும் இறைவனுக்குப் பல அணிகலன்களும் வாகனங்களும் செய்தளித்து மக்கள் அனைவரும் மகிழுமாறு தொண்டு புரிந்தார்.

இராமேசுவர இறைவன் கட்டளைப் பூசைக்காகச் சேதுபதி காத்த தேவர், கருக்குளம் முதலிய எட்டு ஏந்தல்களை இராமநாத முனிவரிடம் அளித்த கொடையினை, கி.பி. 1605-இல் தோன்றிய ஒரு கல்வெட்டு விளக்குகிறது.

இராமநாத முனிவர் திருக்கோயிற் பணிகள் முடித்த செயலினை, ‘தருமாயிரத்தைந்து நூற்று முப்பால் செல் சகவருடத்து அருமாதவஞ் செய் முனி ராமநாதன் அமைத்தனனே’ என்று பாடல்கள் புகழ் கின்றன.

**இராமநாதன்,** கி.பி. 16-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். திருநெல் வேலி மாவட்டத்தில் திருப்புடைமருதூர்ச் சிவன் கோயிலில் அம்பிகை சந்நிதி மண்டபத்தில் அமைந் துள்ள கல்வெட்டுகளில் இவரைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. திருப்புடை மருதூர், மருதவனம் எனவும் வழங்கப்படும். இராமநாதனுடைய புலமைச் சிறப் பினையும் பக்தியையும் உணர்ந்த ஊர் மக்கள் ‘மருதவனக் கவிராசன்’ என்னும் சிறப்புப் பெய ரளித்துப் பாராட்டினர். மேலும், இவருக்கு நிலமனைகள், விழாக்காலங்களில் திருக்கோயிலில் பாடும் உரிமை முதலியனவற்றையும் நல்கினர். இச்செயல்கள் கி.பி. 1559-ஆம் ஆண்டு அள வில் நடைபெற்றனவென்று கல்வெட்டுகள் குறிப் பிடுகின்றன. சடையமாங்குளம் என்னும் வேறோர் ஊர்க் கல்வெட்டில் கி.பி. 1481-இல் மார்த்தாண்ட பணைக்காரன் என்னும் அரசன் இவருக்கு நிலம் வழங்கிய குறிப்பு உள்ளது. இவ்வரசன் திருவாங்கூர் மன்னருள் ஒருவனாகக் கருதப்படுகிறான். திருவாங் கூர் மன்னர்களாகிய வேணாட்டரசர்களும் தமிழைப் போற்றி வந்துள்ளனர் என்பதனை இவ்வரலாற்றி னால் அறிய முடிகிறது. வேறொரு கல்வெட்டில் இப்புலவரின் பெயர், ‘ரவிவர்மன் வேணாடு மருதூர்க் கவியாகிய இராமநாதன்’ என்று காணப்படுகிறது. இதனால், இக்கவிஞர் வேணாட்டு மருதூரைச் சார்ந் தவர் என்பதனை அறியலாம்.

**இராமநாதன் செட்டியார்** இராமநாதபுரம் மாவட்டத்தில் நகரத்தார் வகுப்பில் தோன்றிய தமிழ் அறிஞருள் ஒருவரர்வார். கி.பி. 1899-ஆம் ஆண்டில் பிறந்த இவர், தம் கல்விப் பயிற்சிக்குப் பின்னர், மலேசியா சென்று சிலகாலம் வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். சைவ சமய நாட்டமும் புலமையும் கொண்ட இவர், அரசியலை விட்டுச் சமயப் பணியில் ஈடுபடலானார். இவர் இலங்கை, பிலிப்பைன்சு, கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார். பிலிப்பைன்சு நாட்டில் 1964-இல் நடைபெற்ற கிறித்தவ இளைஞர் மாநாட்டில் இந்து சமயச் சார்பாளராகக் கலந்துகொண்டார். சைவத்தின் சிறப்பு, ஏன் பிறந்தோம், வாழ்க்கையும் சமயமும், ஆழமும் அகலமும், ஞானச்செய்தி, பார்ப்பது எது, மலேயா-இந்தியாப் பயணம், வேலன் விளையாட்டு ஆகிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் தம் 67-ஆம் ஆண்டில் காலமானார்.

**இராமநாதன், பொன்னம்பலம்,** இலங்கையில் தோன்றிய தமிழ் அறிஞர்களுள் ஒருவர். கொழும்பு நகரில் சிறந்து விளங்கிய பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 16.4.1851-இல் தோன்றினார். சிவ நடனம் (Dance of Siva) என்னும் அரிய ஆங்கில நூலை இயற்றிய டாக்டர் ஆநந்த குமாரசாமியின் நெருங்கிய உறவினர். தொடக்கக் கல்வியை இலங்கையிலுள்ள இராயல் அகாடமியிலும் (Royal Academy) உயர்கல்வியைச் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்ற இவர், தஞ்சையில் இலக்கணம் இராமசாமிப் பிள்ளையிடம் தமிழ் கற்றார். தாமே முயன்று வடமொழியையும் பயின்ற இவர் சொல்வன்மை பெற்று விளங்கினார். கொழும்பு நகரிலுள்ள உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதவியேற்று 14 ஆண்டுகள் பணி புரிந்தார். நீதிமன்றத் தீர்ப்புகளை இவர் சிறப்பாக வெளியிட்ட பாங்கினை அறிந்த இங்கிலாந்து நாட்டிலுள்ள கல்விக் கழகம் இவருக்குச் சட்டப் பேரறிஞர் (Barrister) பட்டத்தினைத் தேர்வின்றி அளித்துச் சிறப்பித்தது. பின்னர் இலங்கைச் சட்ட சபையின் தமிழர்ப் பேராளராக இவர் நியமிக்கப் பெற்றார். இவர் தம் ஆயுட்காலம் வரை அப்பதவியிலிருந்து நாட்டுப்பணி புரிந்தார். எல்லா மக்களும் பாராட்டும் வகையில் இவர் பணி அமைந்தது. இவர் பணிகளுள் யாழ்ப்பாணத்திற்கு இருப்புப் பாதை கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

உயர்நீதிமன்றச் சட்ட அறிஞர் நாயகப் பணியினை மேற்கொண்டிருந்தபோது, நாட்டு மக்களின் நலங்கருதிப் பல சட்டங்கள் உருவாகத் துணையாக விளங்கினார். இவருடைய தொண்டுகளுள் இலங்கையிலுள்ள புத்த சமய ஆலயங்களின் சொத்துப் பாதுகாப்புப் பற்றிய சட்டம் நிறைவேறச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஆசுத்திரேலியாவைச் சார்ந்த ஆரிசன் என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். மேலை நாட்டு வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருந்த இவர் தம் ஞானகுருவின் துணையால் தமிழர் பண்பாட்டுச் சிறப்புணர்ந்து, தமிழ் நாகரிக வாழ்வினை மேற்கொள்வாரானார். வேற்று நாட்டுப் பெண்ணை மணந்து வேற்று நாகரிகத்தில் ஈடுபட்டிருந்த இவர் தம்மையும் தம் குடும்பத்தையும் தமிழ் வாழ்வில் ஈடுபடுத்தித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு புரிய முற்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்பினதாகும்.

இவர் யாழ்ப்பாணத்து மக்களின் நலன் கருதி அங்குள்ள திருநெல்வேலியில் ஆண்கள் பயிலுவதற்குப் பரமேசுவரக் கல்லூரியும் மகளிர் பயிலுவதற்குச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியும் தோற்றுவித்தார். கொழும்பு கொச்சிக்கடையில் இவர் இலட்சக்கணக்கில் செலவு செய்து, பொன்னம்பல வாணேசர் திருக்கோயிலை உருவாக்கி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அமெரிக்க அறிஞர்களின் அழைப்பிற்கிணங்கி இவர் அங்குச் சென்று அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பிற சபைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இலங்கையில் முதன்முதலாக அமைந்த சட்ட சபைக்கு ஆங்கிலம் கற்றவர்களால் தேர்ந்தெடுக்கத்தக்க உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றார்.

இவர் தமிழில் பகவத்கீதை விரிவுரை, திருக்குறள் பாயிரம் இராமநாதீயம், செந்தமிழ் இலக்கணம், ஆத்திசூடி, மந்திரவிளக்கம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 'மேலை நாடுகளில் ஆன்ம வித்தை' (A Culture of the Soul among Western Nations) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இவர் இலங்கைத் தமிழர் நலங் காப்பதற்காகப் பன்முறை இங்கிலாந்து சென்று தொண்டாற்றித் திரும்பினார். ஆங்கில அரசினால் 'சர்' பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்ற இவர், இலங்கை மக்களுக்கு ஆற்றிய கல்வி, சமுதாய, அரசியல் தொண்டுகளை அரசு பாராட்டியது. இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னர் இவரது வெண்கலைச் சிலை நிறுவப் பெற்றுள்ளது. இவர் தம் 80-ஆம் வயதில் 26.4.1930 -இல் காலமானார்.

**இராமப்பையன் அம்மானை** வரலாற்றுத் தொடர்புடைய ஒரு நாட்டுப் புறப் பாடல் வகைச் சிற்றிலக்கியமாகும். இது இராமப்பையனின் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கதைப்படுத்திக் கூறும் நூலாகும். மதுரை மண்டலத்தை, கி.பி. 1623 முதல் 1656 வரை ஆண்ட திருமலை நாயக்க மன்னரிடம் தளவாயாகப் (படைத்தளபதி) பணி யாற்றினான் இராமப்பையன். இவன் மறையோரி னத்தில் பிறந்து வீரத்தில் விஞ்சிய சிறப்புடைய னாய் விளங்கினான். இவன் இராமநாதபுரம் பாளை யத்தை ஆண்ட சடைக்கத் தேவன் என்ற சேதுபதி மன்னன்மீது போர் தொடுத்து, அவனைப் புறங் கண்டு சிறைப்படுத்திய வீர வரலாற்றைக் கூறுவது இவ்வம்மானை நூலாகும். இதனை இயற்றிய புல வர் நாட்டுப்புற மக்கள் உடுக்கையடித்துக்கொண்டு பாடும் வழக்கில் எழுதியுள்ளார். அக்கால முறைக்கு ஏற்றபடி எளிய சொல்லாட்சியும், பேச்சு வழக்கு மொழியும், மரூஉவும், திரிபுச் சொற்களும் இடம் பெற்று இவ்வம்மானை விளங்குகிறது. மேலுமிது எதுகை, மோனை நலஞ்சிறந்து கேட்டார்ப் பிணிக் கும் எளிய நடையில் அமைந்துள்ளது. திரும்பத் திரும்பக் கூறல், அடுக்குச் சொல் மிகுதியாக இடம் பெறல் போன்ற நாட்டுப்பாடலின் இயல்புகள் இந் நூலில் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

இந்த இலக்கியம் செவிவழிச் செய்தியாகப் பாடப்பட்டு வழங்கி வந்த பின்னரே எழுத்து வடி வில் இடம் பெற்றிருக்கவேண்டும் எனத் தெரிகிறது. இதனைப் பாடிய புலவர் பெயர் அறிதற்கியல வில்லை. நாட்டுப்புறப் புலவர் ஒருவரால் இயற்றப் பட்டிருக்கக்கூடும் என எண்ணற்கிடமுளது. இந்நூல் தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்திலிருந்து 300 அடிகளைக்கொண்ட பிரதியாக அச்சாகி வெளியிடப் பட்டுள்ளது. இதில் சரிதம் முடிவு பெறவில்லை. சென்னை அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தில் இவ்வரலாறு முழுதும் அடங்கிய இரு பிரதிகள் உள்ளன.


இராமப்பையன் எழுபத்திரண்டு பாளையக்கா ரர்கள் துணைக் கொண்டு சேதுபதி மீது படையெடுப் பதும், அம்மன்னனை வெல்லப் பரங்கியர் துணை நாடுவதும் ஆராய்தற்குரியது. இவனது புகழ் இழப் பிற்குப் பரங்கியர் துணை நாடியது ஒரு பெருங் காரணம் எனக் கருதப்படுகிறது. மேலும், சேதுபதி அரசன் நாட்டுப் பற்றும் அஞ்சா நெஞ்சமும் கடவுள் பக்தியும் உடையவனாக விளங்கினான். சேதுபதியின் பண்பு நலன்களை உணர்ந்து, பரந்த நோக்குடைய திருமலை மன்னன் அவனைச் சிறைவீடு செய்து, அவன் இழந்த நாட்டை அவனிடமே ஒப்படைத் தான். இத்தகைய வீர வரலாறு கூறும் நூலாக இராமப்பையன் அம்மானை விளங்குகிறது. அக்காலத் தில் போருக்கு அனுப்பும்போது வெற்றிலை பாக்கு, பரிசு முதலியன வழங்கி அனுப்புதல் மரபாக இருந்த தென்பதும் அவ்வாறே போரில் வெற்றி பெற்று மீளும் போதும் அளிக்கப்பட்ட தென்பதும் இவ்வம்மானை வாயிலாக அறிய முடிகிறது. கி.கோ.

**இராமபாரதி** கி.பி. பதினெட்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர். பாகைப் புன்னைவன நாத முதலியார் என்பவரைப் பாராட் டித் தம் நூலில் இவர் பாடியுள்ளார். அப்புன்னை வன நாத முதலியார் ஒபபிலாமணி தேசிகரைக் கொண்டு சிவரகசியம் என்னும் நூலை இயற்றச் செய்தவராவார்.

இராமபாரதி[2]: இவர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; ஆத்திசூடி வெண்பா என்னும் நூலை இயற்றியவர். ஔவையாரின் ஆத்தி சூடி என்னும் சிறிய அறநூல் தமிழகத்தில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றது. ஆத்திசூடி புராணம் முதலிய பல நூல்கள் அதனை அடிப்படையாகக் கொண்டு தோன்றின. ஆத்திசூடி வெண்பா என்னும் நூல் இவ்வகையில் தோன்றியதாகும். இது ஆத்தி சூடியில் கூறப்பட்டுள்ள ஒவ்வோர் அறமும் ஒரு வெண்பாவின் ஈற்றடியில் அமையுமாறு அமைத்துப் பாடப்பட்டதாகும். வெண்பாவின் முற்பகுதி அதில் சுட்டப்பெறும் அறத்தினை விளக்கும் ஒரு புராணக் கதையினைக் குறிப்பதாக அமையும். ஆத்திசூடி வெண்பாவில் கூறப்படும் கருத்துகளை நோக்கி இதனை இயற்றிய ஆசிரியர் சைவ சமயத்தவராக லாம் என்று கருதப்படுகிறது.

**இராமபித்திகசு** என்பது ஒரு புதைவடிவ உயர் பாலூட்டிகளின் (Primate) பொதுவினம் (Genus) ஆகும். இவ்விலங்கினம் 'மையோசீன்' (Miocene) ஊழியின் (Epoch) பிற்காலத்திலோ, 'பிளியோசீன்' (Pliocene) ஊழியின் முற்காலத்திலோ வாழ்ந்ததாகும். இராம பித்திகசு (Ramapithecus) இக்கால மனிதனின் நேரடியானதும் பழமையானதுமான மூதாதையர் எனக் கருதப்படுகிறது. சி.இ. இலீவிசு (G.E. Lewis) 1932-ஆம் ஆண்டு முதன் முதலில் வட இந்தியாவிலி ருக்கும் சிவாலிக்குக் குன்றுகளில் (Siwalik Hills) இவ் விலங்கின் எலும்புத் துண்டுகளைக் கண்டெடுத்தார். இவ்விலங்கின் தாடை, பல் முதலானவற்றின் சிதை வுற்ற துண்டுகளே கிடைக்கப் பெற்றன. இதனைக் கொண்டு ஆய்வு செய்ததில் இராமபித்திகசின் மேல் தாடைத் துண்டு வாலில்லாக் குரங்கினைக் காட்டி லும் மனிதனையே பெரிதும் ஒத்திருக்கிறது என்பது கண்டறியப்பட்டது. தாடையின் சிறு துண்டு ஒன்றி

னையே அடிப்படையாகக் கொண்டு கணிப்பதற்குத் தொல்லுயரியலாளர்கள் (Palaeontologists) மறுப்புத் தெரிவித்தனர். மேரி இலீக்கேயும் (Mary Leakey) இலீவிசும் 1961-ஆம் ஆண்டில் மேல்தாடை, கீழ்த் தாடை ஆகிய இரண்டு தாடைகளையுமே கண்டறிந் தனர். இதன் காலம் 14,000,000 ஆண்டுகளுக்கு முற் பட்டது எனக் கணக்கிடப்பட்டது. ஆசியா, ஆப் பிரிக்கா, ஐரோப்பா முதலான கண்டங்களில் கண் டெடுக்கப்பட்ட தாடைகளும் பற்களும்இக்காலமனித னின் நேரடி மூதாதை எனக் கருதப்படும் இராம பித்திகசு என்பதனுடையவாகும் என முடிவு செய் தனர். இது 15,000,000 ஆண்டு முதல் 8,000,000 வரையிலான காலத்திற்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.



இராமபித்திகசு

பல், தாடை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இராமபித்திகசு உயர் விலங்கினத்தில் இடம்பெறும் நிலையை உடல்சார் மானிடவியலாளர்கள் (Physical Anthropologists) கணக்கிட்டுள்ளனர். மனிதனின் தாடை, சாய் மாலை வட்டமாகச் (Parabolic) சீராக வளைந்து காணப்படுவதாகும். வாலில்லாக் குரங்குகளின் தாடை அமைப்பு சதுர வடிவிலான 'U' வடிவத்தினைக் கொண்டுள்ளது. ஆனால், இராமபித்திகசுவின் தாடை ஏறக்குறைய வட்ட வடிவமாகக் காணப்படுவதால் இதனை வாலில்லாக் குரங்குடன் ஒப்பிடுவதைவிட மனிதனின் குடிவழியு டன் ஒப்பிடுவதே பொருத்தமாகும். இதனைக் காட் டிலும் கோரைப்பல்லின் வடிவத்தையும் உருவத்தை யும் ஒப்பிட்டுப் பார்த்தால் இராமபித்திகசின் நிலை மேலும் தெளிவுபெறுவதனை உணரலாம். வாலில் லாக் குரங்குகளில் கோரைப்பல் நீண்டும் கீழ்நோக்கி வளைந்தும் உள்ளதால், மாமிசத்தையும் உணவுப் பொருள்களையும் கிழிக்க ஏதுவாகிறது. ஆனால், மனிதனின் பல்வரிசையில் கோரைப்பல் தட்டையாக வும், குறுகியும் இருக்கிறது. அப் பல் மற்றப்பற் களைப் போல் கீழ்ப்புறமாகவோ பக்கவாட்டிலோ நீட்சி பெற்றிருக்கவில்லை. இதனாலேயே உணவினை அரைப்பதற்கும் மெல்லுதலுக்கும் ஏதுவாக உள்ளது. இராமபித்திகசின் கீழ்க் கோரைப்பல் சிறியதாகும். இதன் பல்சிப்பி(Tooth enamel)வாலில்லாக் குரங்கின் பல்சிப்பியைக் காட்டிலும் தடித்ததாகவும் காணப் படுகிறது. பல் அமைப்பில் இத்தகைய மாற்றங் களைக் கொண்டு இராமபித்திகசுக்கள் வேறுபட்டா லும்,வாலில்லாக்குரங்குகளைப் போன்றே தொடக்க காலத்தில் அவை காட்டிலேயே வாழ்ந்திருந்தன. பிற்கால இராமபித்திகசுக்கள் திறந்த புல்வெளிகளில் வாழ்ந்தன என்பதற்குப் போதுமான சான்றுகள் கிடைத்துள்ளன; புறச்சூழ்நிலையில் வாழ்ந்ததால் அழுத்தமானதும் கடினமானதுமான நாற்பொருள் கள் அடங்கிய உணவினை மிகுதியாக உண்ணும் நிலையினைப் பெற்றது. தாவீது பில்பீம் (David Pilbeam)எடுகோளின்படி இராமபித்திகசு பஞ்சாபிகசு (Ramapithecus Punjabicus) படிமலர்ச்சி வழியில் காட்டு மனிதன் (Orangutan) மூதாதையரைச் சார்ந் தது என்று கருதப்படுகிறது.

**இராமய்யர், கே.கே.** பாலக்காட்டில்பழைய கல்பாத்தி கிராமத்தில் கி.பி. 1892-இல் பிறந்தார். அங்கு விக்டோரியா கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் தேர்வு பெற்றார். பின்னர் எட்டையபுரம் வந்து தங்கித் தன் நிலைமையை மன்னரிடம்முறையிட்டு அலுவலகத்தில் எழுத்தராகச் சில மாதங்கள் பணியாற்றினார்.

கேரளத்தில் பிறந்து, மலையாள மொழியில் கல்வி கற்று, தமிழ் மொழியில் நன்கு பயிற்சி பெற்ற இராமய்யர் ஆங்கில மொழியில் உள்ள சேக்சுபியர் நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதி உள்ளார். பல புராணக் கதை களை நாடக வடிவில் எழுதியுள்ளார். எட்டையபுரத் தில் இராமய்யர் இருந்த காலத்தில்தான் மகாகவி பாரதியாரும் அதே தெருவில் வாழ்ந்திருக்கிறார். பின்னர் இராமநாதபுரம் மாவட்டம் இலுப்பையூர் கிராமத்தில் நாடார் சத்திரிய வித்தியாசாலையில் 1932 முதல் 1948 முடிய 16 ஆண்டுகள் தலைமை யாசிரியராகப் பணியாற்றினார்.

இலுப்பையூரிலிருந்து வெளியேறி1948-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் வடுவூரில் குடியேறி ஒரு நடு நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றி 1952-இல் ஓய்வு பெற்றார். தம் 60-ஆம் வயதில் வடுவூரில் நாடகத்தில் நடித்தார் என்றால், நாடகக் கலையில் இவருக்கு இருந்த ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை உணரலாம். மாணவர்களுக்கு ஆங்கிலப் போதனையை எவ்விதப் பயனும் கருதாது செய்தார் இவர் 22-4-1966-இல் காலமானார். இரா.கி.

**இராமர் அம்மானை** தமிழில் அமைந்துள்ள நாட்டுப்புற இலக்கிய வகை சார்ந்த அம்மானை நூல்களுள் ஒன்றாகும். இது சிரீ இராமர் அம்மானை என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கும் இராமாயணம் சிற்பமாய்ச் சித்திரமாய்க் காவியமாய் ஓவியமாய் அமைந்து, இந்தியப் பெருநாட்டையும் அதன் மக்களையும் மொழி சமயம் வேறுபாடு கடந்தும் பண்படுத்தி வந்துள்ளது. இவ்வகையில் தமிழில் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் ஒன்றான அம்மானை வடிவில், இராமர் அம்மானை உருவாகியுள்ளது. தொடக்க நிலையில் நாட்டுப்புற மக்களின் உள்ளங் களை நிலைக்களனாகக் கொண்டு, வாய் மொழி இலக்கியமாகத் திகழ்ந்த இராமர் அம்மானை காலப்போக்கில் ஏட்டில் இடம் கொண்டு, இன்று அச்சுவடிவம் பெற்றுத் திகழ்கிறது.

'கச்சி நகரார்க்குக் கண்ணான புத்திரனார் வரதன் சிறுவன் சொன்னான்' என இந்நூலில் வரும் பகுதியால், இதன் ஆசிரியர் பெயர் வரதன் என்பதும் இவர் கச்சி எனப்படும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்பதும் புலனாகின்றன. இவர் காலம் இதுவென அறியக்கூடவில்லை. தயரதன் தன் படைசூழ மிதிலை வந்தபோது அங்குத் 'தெள்ளு தமிழ் தெரிந்து செந்தமிழோர் பாடி' வந்தனர் என்றும், அசோக வனத்தில் அனுமன் சீதைக்குத் தன் வரவுணர்த்தும் பாங்கில் 'மின்னுமுகில் வேதியனார் வேதக் கவியனுமான், பன்னுதமிழ் தெரிந்து பாடலுற்றான்' என்றும் கூறும் பகுதிகள் இந்நூலாசிரியர்தம் தமிழ்ப் பற்றினைக் காட்டுகின்றன. 'கம்பனிட நாடன் தன் கதையில் மொண்டு கொண்டு சொல்ல லுற்றேன்' என்று இந்நூலாசிரியர் தாம் கம்பர்பால் கொண்ட நன்றியுணர்வைப் புலப்படுத்தியுள்ளார்.

இந்த அம்மானையில் திருமாலின் தசாவதார மாட்சி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. திருமால் சமயத்தினரான இந்நூலாசிரியர் முருகன் சிவன் ஆகியோரையும் சிறப்பித்துப் போற்றியிருப்பது, இவருடைய சமயப் பொறையினை விளக்குவதாக உள்ளது. பொதுவாக அம்மானை நூல்கள் ஆசிரியப் பாவினைப் போன்றதொரு பாடலில் நெடிதாய்த் தொடர்ந்து செல்லும் போக்குடையன. இந்நூலில் இடையிடையே சில சந்தவிருத்தங்களும் பாடி இணைக்கப்பட்டுள்ளன. இராமாயணக் கதையில் மட்டுமேயன்றிக் கம்பராமாயணச் செய்யுள்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தமையால், இந்நூலாசிரியர் சிற்சில இடங்களில் பொருத்தமான கம்பராமாயணச் செய்யுட்களையும் தம் நூலில் சேர்த்துக் கொண்டுள் ளார்.

**இராமராச பூடண கவி** கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசில் இணைந்திருந்த ஆந்திரப் பகுதியில் வாழ்ந்த தெலுங்கு மொழிக் கவிஞராவார். இவரது இயற்பெயர் பட்டு மூர்த்தி. இவர் பெனுகொண்டாப் பகுதியினை, கி. பி. 1570-இல் ஆண்ட முதலாம் திருமலைதேவராயரின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். அதனால், இவருடைய இயற்பெயர் மறந்து இராமராச பூடண கவி என்னும் சிறப்புப் பெயரே வழக்கில் நிலை பெறலாயிற்று. இவர் தெலுங்கு மொழிக் கவிதை உலகில் சிறப்பான இடத்தைப் பெற்றுப் பல்லாண்டு கள் ஒளிவீசித் திகழ்ந்தார். தெலுங்கு மொழியில் இவர் இயற்புலமையோடு இசைப்புலமையும் மிக்க வராய், இனிய தெலுங்கு இசைப்பாடல் இயற்றும் ஆற்றல் உடையவராய் விளங்கினார். இவர் இயற்றியதாகக் கூறப்படும் இசைப் பாடல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. இவர் இயற்றிய நரச பூபாலியம் என்னும் நூல் மிக்க சிறப்பு வாய்ந்தது. இந்நூல் வித்யாநாதரால் எழுதப்பெற்றுத் தொர கந்தி நரசராவிற்கு உரிமையாக்கப் பெற்ற 'பிரதாப ருத்திரீய' என்னும் நூலின் அடிப்படையில் அமைந் துள்ளது. இவர் இயற்றிய அரிச்சந்திர நளோ பாக்கியானம் என்னும் செய்யுள் நூல் முழுதும் சிலேடை நயமிக்கதாகும். எல்லாச் செய்யுள்களும் அரிச்சந்திரனுக்கும் நளனுக்கும் பொருத்தமுறச் சொற்களை அமைத்துச் சிலேடையாகப் பாடப் பட்டுள்ளன. வசு சரித்திரம் என்னும் இவரது நூல் மிக்க கலைத்திறமையோடு உருவாக்கப்பட்டதாகும். இந்நூல் எளிய கதையினை அரிய கலை நயங்கள் அமைய விரிவாக, வருணனைச் சிறப்போடு கூறுவ தாகும். கோலாகல மலைக்கும் சூக்திமதி என்னும் ஆற்றிற்கும் பிறந்த கிரிகா என்னும் இளவரசிக்கும், வசு என்னும் இளவரசனுக்கும் நிகழும் திருமணம் இக்காப்பியத்தின் கருவாகும். திறனாய்வாளர்கள் இந்நூலிலமைந்துள்ள செய்யுள்களின் சிறந்த இசை நலத்தையும், விரிவாக அமைந்துள்ள கற்பனை வளத்தையும் சிறப்பாகப் பாராட்டியுள்ளனர். இந் நூல் முதலாம் திருமலை காலத்தில் எழுதப்பட்டு.

அவருக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது. இந்த நூல் பின்னர் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

**இராமலிங்க அடிகள்**: சுத்த சன்மார்க்கம் எனச் சுருக்கமாக வழங்கும் 'சடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற வாழ்க்கை நெறியைத் தமிழகத்தில், கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரப்பியவர், திருவருட்பிரகாச வள்ளலார் எனச் சிறப்பிக்கப் பெறும் இராமலிங்க அடிகள் ஆவார். இவர் சாதி, குலம், இனம், மொழி, சமயம் என்ற எல்லைக்குட்பட்ட மாந்தர் கூட்டங்களை, அவற்றிலின்றும் விடுவித்து 'அகிலச் சகோதரர்கள்' ஆக்கி, 'மறுமை' என்று இதுவரை எண்ணப்பட்டு வந்த வாழ்வை, இம்மையிலேயே அடைய வழிகாட்டினார். பின்னர் வந்த எச். ஜி. வெல்ச (H.G. Wells) போல இவர் 'ஒருலகக் கொள்கை' உடையவர். மாந்தர், தமக்குள் மட்டுமன்றி, மற்ற உயிரினங்களுடனும் உடன்பிறப்பு உணர்வு கொண்டு வாழவேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி, அதற்கு 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' எனப் பெயரிட்டு, அதை அடைதலே சுத்த சன்மார்க்கத்தின் தலைமைக் குறிக்கோள் என வகுத்தார். மனிதன் இறப்பினை வெல்லலாம் என்றும், மனிதப் பிறப்பின் அடுத்த பரிணாம வளர்ச்சி, 'சீவகாருணிய விளக்கமுடைய உயர் மனித நிலை' என்றும் கூறி, அதனைத் தாம் அடைந்து வழிகாட்டியுள்ளார்.



இராமலிங்க அடிகள்

இராமலிங்க அடிகள் தமிழகத்தில், தென்னார்க் காடு மாவட்டம் சிதம்பரத்திற்குத் தென்மேற்கில் உள்ள மருதூரில், 5. 10. 1823. சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள், ஞாயிற் றுக்கிழமையன்று தோன்றினார். தந்தையார் இராமையாபிள்ளை; தாயார் சின்னம்மை. உடன் தோன்றிய சபாபதிப்பிள்ளை,பரசுராமப் பிள்ளை, உண்ணாமுலை, சுந்தரம்மாள் ஆகிய நால்வரும் இராமலிங்கர்க்கு மூத்தோராவர்.இவர் மழவிளங்குழ வியாயிருந்த பொழுதே தந்தையார் காலமானதால் மூத்தவரான சபாபதிப் பிள்ளை இக்குடும்பத்தைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார்.

இராமலிங்கர் பள்ளியில் மிகுதியாகக் கல்வி கற்கவில்லை. திருவருள் துணையுடன் தாமாகவே தமிழ், வடமொழிகளில் உள்ள பல நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். இவரது கல்வியின் ஆழத்தை இவர்தம் உரைநடை நூல்கள் நன்கு உணர்த்தும். காழிக் கண்ணுடைய வள்ளல் இயற்றிய ஒழிவி லொடுக்கத்தின் பாயிரத்திற்கு இராமலிங்கர் வரைந்த விருத்தியுரை இவரது கல்வியின் அகலத்தை உணர்த் தும். திருவருளால் இவர் கற்றார் என்பதனை, 'என்னுடைய துரையே நின்னுடைய அருளால், கற்ற தும் நின்னிடத்தே பின் கேட்டதும் நின்னிடத்தே' என்னும் இவரது வாக்கால் அறியலாம். இளமை தொட்டே பாமாலை புனைந்து இறைவனுக்குச் சாத்தி வரலானார். இளமைப் பருவத்தே இவர் உள்ளம் கவர்ந்த தெய்வம் முருகன். திருத்தணிகை மலையிலும் சென்னைக் கந்தகோட்டத்திலும் எழுந்தருளியுள்ள முருகன்மீது பாமாலைகள் பாடி னார். சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவபிரானை வணங்கிவரும் வழக்கத்தை மேற்கொண்டு, அப்பெருமான் மீதும் வடிவுடை மாணிக்கம் என்ற அம்பிகைமீதும் பனு வல்கள் பாடினார்.ஒழிவிலொடுக்கம்,தொண்டைமண் டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப் பித்தார். மனுமுறை கண்ட வாசகம் என்னும் உரை நடை நூலைச் சிறுவர்க்குரிய பாட நூலாக இயற்றி னார்.

இராமலிங்கர்க்குத் தனக்கோடியம்மை என்ற பெண்ணை மணம் செய்வித்தனர். எனினும், இவர் உள்ளம் இல்லறவின்பத்தில் செல்லவில்லை. மனைவி யார் சில்லாண்டுகளிற் காலமானார். இவர் பொருட் செல்வத்தில் நாட்டமின்றி அருள் நாட்டம் உடைய வராய் வாழ்ந்தார். பல மாணவர்கட்குப் பாடம் சொல்லியும், நூலாய்ந்தும், ஒற்றியூர் வழிபாடு செய் தும் வந்த இவர் 'சமரச வேத சன்மார்க்க' சங்கத்தை நிறுவினார்.

தம் 35-ஆம் வயது வரை சென்னையில் வாழ்ந்த இராமலிங்கர், பின்னர்ச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானிடம் பேரீடுபாடு கொண்டு, அங்குச் சென்று வழிபட்டார். இவர் கருங்குழி என்னும் சிற்றூரில் வேங்கடேசரெட்டியார் வீட்டில் தங்கிச் சிதம்பரத்திற்கு அடிக்கடி சென்று வழிபட்டார்; கருங்குழியில் பல்லாண்டுகள் தங்கியிருந்தார். அப் போது இவர் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டுப் பாமாலைகள் புனைந்தார். இவர்தம் பாடல்களை அன்பர் அருட்பா என வழங்கி அன்புடன் ஓதினர். அங்ஙனம் அருட்பாவென வழங்கக் கூடாதென்று சிதம்பரத்தில் அந்நாளில் புலமையொளி வீசித் திகழ்ந்த ஆறுமுகநாவலர் இராமலிங்கர் மீது வழக்குத் தொடர்ந்தார். நாவலர் இராமலிங்கரிடம் வைத்த மதிப்பைக் கண்ட நீதிபதி அவ்வழக்கினைத் தள்ளு படி செய்தார். இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு 'சுத்த சன்மார்க்க சங்கத்தை' நிறுவினார்.

வள்ளலார் வடலூரில் வாழ்ந்த காலத்தில் சென்னையில் இருந்த இவர்தம் மாணவர் இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலுமுதலியார் ஆகியோர் இவரது இசைவினைப் பெற்று, இவர்தம் பாடல்களைத் தொகுத்து, தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு, ஐந்து திருமுறைகளாக வகுத்துப் பதிப்பிக்கச் செய்து கி. பி. 1867-ஆம் ஆண்டு வெளியிட்டனர்.

இராமலிங்கர் தென்னார்க்காடு மாவட்டம் பார்வதிபுரம் என்ற ஊரை வடலூர் என்றும், 'உத்தர ஞான புரம்' என்றும் வழங்கி, அங்கு 23—5—1867-ஆம் நாள் 'சத்திய தருமச் சாலை'யை நிறுவினார். சுத்த சன்மார்க்கத்தில் இறைவழிபாடு சீவகாருணியத்தை அடிப்படையாகக் கொண்டமை யால், சீவகாருணியப் பணிகளுள் தலையாய பசி நீக்கும் தருமத்தைச் செய்வதற்கு இராமலிங்கர் நிறுவிய நிறுவனம் சத்திய தருமச் சாலை. அக் காலத்தில் சீவகாருணிய ஒழுக்கம் என்ற பெயரில் இவர் கட்டுரைகள் வரைந்து வெளியிட்டார். வடலூர்க்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் கி. பி. 1870-ஆம் ஆண்டு 'சித்தி வளாகம்' என்ற ஆசிரமத்தை நிறுவி அங்குத் தவம் இயற்றி னார். இறைவனைச் சோதி வடிவில் வழிபடுவதற் காக வடலூரில் சத்திய தருமச் சாலையை அடுத்து, கி. பி. 1872-ஆம் ஆண்டு சுத்த சன்மார்க்க சங்க அன்பர்களைக் கொண்டு சத்திய ஞான சபையை நிறுவினார். இச்சபை எண்கோண வடிவில் தென் முகமாக அமைக்கப் பெற்றது. அதனைச் சூழப் பெரு வெளி விடப்பெற்றுள்ளது. வடலூர்ப் பெருவெளி என்று இராமலிங்க அடிகள் இதனை வழங்குவர். வடலூர் வழிபாட்டுக் காலத்தில் இவர் தம் ஆன்மிகப்

பெருவெளியில் அருட்பெருஞ்சோதியைக் கண்டமைக்கு இந்தப் பெயரும் இடமும் ஞான சபையும் குறியீடுகள் ஆகும். சுத்த சன்மார்கத்தில் நிற்பவரும் இவ்வான்மிக அனுபவத்தை எய்தலாம்.

சத்திய ஞான சபையின் நடுவில் ஒரு விளக்கும், அதன் முன்னே ஒரு பெரிய கண்ணாடியும் உள்ளன. அதன் முன்னர் ஏழு வண்ணத் திரைகள் உள்ளன. ஆன்மாவை மறைக்கும் ஏழு சக்திகளின் குறியீடே இத்திரைகள். இத்திரைகள் விலக்கப் பெற்றுக் கண்ணாடியில் பெரிதுபடுத்திக் காட்டப்படும் விளக்கொளி தரிசனம் செய்விக்கப் பெறுகிறது. கண்ணாடி தூய மனத்திற்கும், ஒளி ஆன்ம சோதிக்கும் குறியீடாகும். ஆன்மாவிற்குள் ஒளிரும் இறைவன் ஞான ஒளியை உண்டாக்கித் திகழ்கிறான் என்பதை இக் குறியீடு உணர்த்தும். இக்காட்சியைப்பெறுவதற்கென இராமலிங்கர் தைத்திங்கள் பூசநாளைத் தேர்ந்தெடுத்தார். அன்று முழுநிலா நாள் ஆகும். ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு கதிர்களையும் ஒரே நேரத்தில் முறையே மேற்கிலும் கிழக்கிலும் கண்டு நடுவில், ஞானசபையில் சோதிக் காட்சி காண்பதற்குரிய நாள் இது. இந்தச் சோதி அக்கினியின் சோதி. அண்டத்தில் ஞாயிறு, திங்கள், அக்கினி ஆகிய மூன்று சுடர்களின் சோதியையும் ஒரே நேரத்தில் காண்பது, பிண்டத்தில் (உடலில்) சீவஒளி, மனஒளி, ஆன்மஒளி ஆகிய மூன்றையும் ஒருங்கே, ஒரே சோதியாகக் காண்பதற்குக் குறியீடாகும். இந்தச் சோதிக்குள் இறைவன் அருட்பெருஞ் சோதியாக அசைந்தாடுகிறான் என்று சோதிக் காட்சியினை வள்ளலார் விளக்கியுள்ளார்.

சத்தியஞான சபையின் தொடக்கத்தில் 25—1—1872-ஆம் நாள் விளம்பரம் ஒன்றினை வெளியிட்டார். அதில், "இனி இச்சீவர்கள் விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய நற்குணங்களைப் பெற்று, நற்செய்கை உடையராய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளம் கொண்டு சுத்த சன்மார்க்கமாகிய உண்மை விளக்கம் செய்கிற ஒரு ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து இக்காலம் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங் காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்' என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி. அருட்பெருஞ்சோதியராய்வீற்றிருக்கின்றார்" என்று குறித்திருக்கிறார்.

வள்ளலார் கருங்குழி, வடலூர் ஆகிய இடங்களில் வாழ்ந்தபொழுது தம்மை நாடிவந்த நோயாளிகள் பலருக்கும் மருந்தளித்து நோய் தீர்த்து அற்புதங்கள் பலவற்றைச் செய்தார். சிறப்பாக, ஞான சபைத் திருப்பணிக்காகச் சென்னையில் மரம் வாங்க ஓர் அன்பரை வள்ளலார் அனுப்பினார். அந்த அன்பர் கடைக்குச் சென்றபோது, வள்ளலார் அங்கு முன்னதாகவே சென்று, மரங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அதே நாளில் அவர் மேட்டுக் குப்பத்தில் இருந்தார் என்றும் அன்பர்கள் கூறினார்கள்.

வள்ளலாரை நிழற்படம் எடுக்க அன்பர்கள் பன்முறை முயன்றும், அவர் உருவம் படத்தில் பதியவில்லை இவர் சித்தி வளாகத் திருமாளிகையில் அருள் யோகத்தில் வீற்றிருந்தார். அங்கு கி. பி. 1873-ஆம் ஆண்டு சுத்த சன்மார்க்கக் கொடியை ஏற்றி வைத்து, ஒளி விளக்கு ஏற்றி, அதை எந்நாளும் அணையாமல் காக்குமாறு அன்பர்களுக்கு அறிவுறுத்தி அருட்பேருரை ஆற்றினார். மாளிகையின் ஓர் அறையினுள் தாம் புகுந்த பின்னர், அவ்வறையைத் திருக்காப்பிடச் செய்தார். யாரும் திறந்து பார்க்க வேண்டாம் என ஆணையிட்டார். தைமாதம் வெள்ளிக்கிழமை பூச நட்சத்திரத்தன்று (30-1-1874) அவர் உடம்பு ஞான உடம்பாக மாறியது. அது புறத்தில் யார் கண்ணுக்கும் தோன்றாததாயிற்று. வள்ளலாரின் பருவுடல் மறைந்த பின்பு, கி.பி. 1885-ஆம் ஆண்டு அவர் பாடல்களுள் முன்பு வெளியிடப்பட்டவை தவிர எஞ்சியவை ஆறாம் திருமுறையாக வெளியிடப்பட்டன. திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம், சுத்த சன்மார்க்க விண்ணப்பங்கள், உபதேசங்கள், வியாக்கியானங்கள், திருமுகங்கள் ஆகியன வள்ளலார் இயற்றிய நூல்களாகும்.

சுத்த சன்மார்க்கம்: வள்ளலார் சமயங்களை ஏற்றுக் கொள்ளாத இறை நெறியாளர். இவரது இறைநெறியாகிய சுத்த சன்மார்க்கம், சமுதாயச் சிந்தனையை உள்ளடக்கியது. சமுதாய முன்னேற்றத்திற்கான சேவையே இறைவனை அடைந்து நுகரும் வழி; எல்லையற்ற சமுதாயச் சேவையின் வழியாகப் பெறும் அருங்காட்சி வாயிலாக இறைவனை அறிந்து நுகரலாம் என்பது இவர்தம் இறைக்கோட்பாடு. சாதி, சமய, கோத்திர, குல, இன, மொழி, நிறவேறுபாடுகள் உள்ளிட்ட எவ்வகை வேறுபாடும் இல்லாத உலகச் சமுதாய அமைப்பே இவரது சமுதாயக் கோட்பாடு (Universal Religion and Universal Society).

இங்ஙனம் இறைநெறியும் சமுதாயச் சிந்தனையும் இணைந்த புதுநெறியாளர் வள்ளலார்.

சமயங்கள் வெற்றுச் சடங்காய்ப் போன நிலை இவர் கண்ட சமுதாயத்தில் இருந்தது. சாதி வளர்ப்பவரின் கைப்பாவையாக அவரால் பாதுகாக்கப்பட்ட சாதி வேறுபாடுகளுக்குஅரண் செய்யும்பொய்ம்மைக் கொள்கையாகச் சமயம் இருந்தது. சாதி உயர்வு தாழ்வுகள் தலைவிரித்தாடின. சாதிச் சண்டைகளும் தீண்டாமையும் பெருகிய அளவில் இருந்தன. சாதிக்குள்ளும் கோத்திர, குலப் பிரிவுகள் மக்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தின. இவற்றால் அலைவுதான் இருந்ததே தவிர வாழ்க்கை இல்லை; ஒற்றுமை இல்லை; மனப்பான்மை இல்லை; ஆதலின் முன்னேற்றம் இல்லை; மாறாகக் கலகமும் சண்டையும் பகைமையும் காழ்ப்பும் வளர்ந்தன. சமயமோ இதைத் தடுக்க வழியின்றி, வெறும் சடங்குக்குள் சிறைப்பட்டுத் தத்துவ வாதங்களுக்குள் முடங்கிக் கிடந்தது. வெறும் சடங்கு மூட்டையாகவும் தத்துவ வாதக் குப்பையாகவும் இருக்கும்வரை சமயம் மக்களுக்குப் பயன்படாது என்பதை வள்ளலார் உணர்ந்தார். இவர் சமயம் வாழ்க்கை நெறியாக, செயல் நெறியாக, செயலூக்கமாக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தார். சமயம் சடங்கு செய்யும் அல்லது செய்விக்கும் குருக்களின் அல்லது பூசாரியின்சொந்தச் சொத்தன்று. சடங்கைச் செய்துவிட்டு,சமயக்கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி, விருப்பம்போல் வாழ்வது குருட்டுத்தனம். படித்தவர் நிலையில் ஏதோ தத்துவ வாதங்களைச் சாத்திரப் பிடிப்பின் அழுத்தத்தோடு செய்துவிட்டால், ஆன்மாவின் தேவை முடிந்துவிட்டது என்று எண்ணி,தத்துவத்தின் நிழல் ஒன்றுகூடப் படியாமல் விருப்பம் போல் வாழ்வதும் குருட்டுத்தனமாகும். இவ்விரண்டாலும் பொருள் முதல் வாதந்தான் (Materialism)வளருமே அன்றி, உயிர் முதல் வாதம் (Spiritualism) நன்மை அடையாது; வளராது. சமயம் என்னும் சிறிய அளவுக்கு உள்ளே அடைபட்டிருக்கும் இறைநெறி, தத்துவம் என்ற இருட்டறைக்குள்ளே முடங்கிக் கிடக்கும் இறைநெறி அப்பெயருக்கே தகுதியில்லாததாய்ப் போய்விட்டது. அது மக்களுக்கு வாழ்க்கை நெறியாக வரவேண்டும். வந்தால் பேயாட்டம் ஆடுகிற சாதி, சமய, இன, குல, கோத்திர வேறுபாடுகள் எல்லாம் மறையும் என்னும் நோக்குடன் வள்ளலார் அக்காலச் சமுதாயத்தைச் சிந்தித்தார்.

பன்னெடுங்காலமாகக் கூறிவரும் வறுமை தம் காலத்திலும் அகலாமல் இருப்பதையும்,சமயங்களும் சாதிகளும் வறுமையுடன் போராடி அதை ஒழிக்க முற்படாமல் தமக்குள்ளேயே போராடி ஒன்றை ஒன்று ஒழிப்பதற்குச் கச்சை கட்டிக் கொண்டு இருப்பதையும் வள்ளலார் கண்டார். 'வறுமையாம் சங்கடப் பாவி'யின் கொடிய பிடிக்குள் சிக்கிக் காற்றினிற் சருகாய்ச் சீவனற்று நெளியும் மனிதப் புழுக்களோ இறைவனை அறிவார்கள்? அவர்களிடம் இறைவனைப் பற்றிக் கூறுவதும் பாவம் என்றார் விவேகானந்தர். அந்த ஏழைகளைப் பொருள் உடையவரின் உடன்பிறந்தார் என்று கூறினார் வள்ளலார். மேலுமிவர் அந்த உடன்பிறந்தோர்க்கு இரக்கம் காட்டி, பசி துடைத்துக் கண்ணீரை மாற்றுவதே உண்மையான இறை வழிபாடு என்றார். வறுமை தீர்ப்பது, பசி தீர்ப்பது மட்டும் அன்று. வளமாக வாழச் செய்வதேயாகும். பசி தீர்த்தல் முன்பு அறமாகக் கருதப்பட்டது. சமய நெறியில், ஒரே சமயத்தைச் சார்ந்த அடியார்க்கு அன்னம் இடுதல் சமய ஒழுக்கமாகக் கருதப்பட்டது. ஆனால் வள்ளலார், நாடு, பண்பாடு, சமயம், குலம் முதலிய எவ்வகை வேறுபாடும் பாராமல், கேளாமல் அனைவருக்கும், அவர் துன்பம் உறும்போது பசிதீர்க்க வேண்டும் என்கிறார். இந்த உடன்பிறப்பு உணர்விற்குத் தடையாய் இருந்து வரும் பழைய அமைப்புகளாகிய சாதி, சமய, கோத்திர அமைப்புகளை எதிர்க்கிறார். அன்பு மனிதருக்கு இயற்கைக் குணம். அது தடையின்றிப் பரவவேண்டும். ஆனால் இந்தப் பழைய அமைப்புகள் அன்புக்கு வேலி கட்டிவிட்டன. அன்பு வளர்ந்து, உலகம் முழுவதையும் அன்பால் நோக்கும் பார்வை வந்தால்தான், அதன்வாயிலாக இறைவனை உணரமுடியும். அதற்காக வள்ளலார் 'அகிலமாம் சகோதரத்துவம்' என்ற கொள்கையை எடுத்துக்கூறி, அதைப் பழைய அமைப்புகளுக்கு மாற்றாக, மக்கள் முன்பு வைத்தார். சாதியை விட்டவனே சன்மார்க்கன் என்றார். 'நம் குலம் எல்லாம் புழுக் குலம்' என்றார். 'சாதிப் பேச்சும் குலப் பூச்சும் இறவாமையைத் தருமா?' என்று கேட்டார். உயர் குலம் என்று இறுமாந்தவரும் இறக்கிறார். தாழ்குலம் என்று தள்ளப்பட்டவரும் இறக்கிறார். 'இறவாமைதான் வாழ்வில் அடுத்து நாம் எட்டிப்பிடிக்க வேண்டிய படி; அதனை அடைவதற்கு உங்கள் சாதியும் குலமும் சமயமும் மதமும் என்ன செய்யும்?' என்று வினவினார் வள்ளலார்.

சாதிகளற்ற சமுதாயம் உருவாக்கவும், சமுதாயச் சீர்திருத்தம் செய்யவும் வழி கூறியுள்ளார். அதன் நோக்கம், மனிதன் உயர் மனம் படைப்பது என்பதே ஆகும். அந்த உயர் மனம் யாது? ஆன்ம நேயம் கொள்வதே ஆகும். அந்த நேயம், அவனது இயற்கைப் பண்பாம் அன்பின் விளக்கம்; விரிவு; மலர்ச்சி; பெருக்கம் ஆகும். இறைவன் தந்த அந்த

இயல்பு வளர வேண்டும். மனிதன் அமைத்துக் கொண்ட சாதி சமய எல்லைக்கோடுகள், தடையாகி அந்த இயல்பை வளரவிடாது தடுத்து வருகையில், இறைவனை அறிவது எவ்வாறு? அடைவது எவ்வாறு? ஆதலால், இயற்கைப் பண்பிற்குச் செயல் வடிவம் கொடுத்துச் சீவகாருணியச் சேவை செய்வதே இறைவனை அறிய, உணர ஒரே வழி ஆகும் என்றார் வள்ளலார். சாதி வேறுபாடு கருதும் திரை விலகினால்தான் சமுதாயத்தில் பரவியிருக்கும் பொல்லா வறுமையுடன் போராட்டம் தொடுக்க முடியும். சாதிச் சங்கம் சாதி வறுமையை நீக்கும்: சமுதாய வறுமையை நீக்காது. சாதி பொய், சமுதாயம் உண்மை. சாதியால் தடை செய்யப்படாத கருணை வேண்டும். 'எங்கே கருணை இயற்கையில் உள்ளது அங்கே என்றருள் அருட்பெருஞ்சோதி' என்று வள்ளலார், தடையற்ற அருட்கருணையின் பெருக்கிற்கு-எல்லோர்க்கும் துன்பம்துடைக்க ஓடும் செயலுக்கு-முதன்மை கொடுத்துக் கூறியுள்ளார். வறுமையற்ற சமுதாயத்தை நோயற்ற சமுதாயத்தை உருவாக்க மனிதர்கள் உழைக்க வேண்டும். அதுவே இன்று தேவையான இறைநெறி. அதையே சுத்த சன்மார்க்கத்தின் முதன்மைப்படி என்று வகுத்தார் வள்ளலார். இச் சேவையின்விளைகனியாகக் கிடைப்பது ஆன்ம நேயம். நேயத்தால் விளைவது ஒருமைப்பாடு. இது நாடுகளிடையே வந்தால் உலகப் போர்கள் நிகழா; அணு ஆயுதங்கள்வளரா; வணிகச் சந்தைக்குப் போட்டிகள் வரமாட்டா.

இறைக் காட்சியை வெறும் சமயச் சடங்குகளால் பெறமுடியாது என்று உறுதியாகக் கூறுகிறார் வள்ளலார். அவை கலை உரைத்த கற்பனைகள். அவற்றிற்குப் பயன் இருக்கலாம். ஆனால் அவை முடிந்த பயனைத் தாரா. அவற்றைக் கடந்து செல்ல வேண்டும். அவற்றுள்ளேயே உழலுதல் கண்மூடி வழக்கம்.

இறையுருவத்தை வழிபாட்டின் முதற்படியாக வள்ளலார் கொண்டாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்கிறார். இவர் காட்டிய இறை அருட்பெருஞ்சோதி ஆகும். அருள்வெளியில், அதாவது உயிர் அருள் மயமாகி நிற்கும்போது, அதில் இறைவன், சோதியாகக் காட்சி தருகிறான். இது அகமுகக் காட்சி. வெளியே உள்ள சடங்கு, கோயில், பூசை, பொருள்கள் எல்லாம் புறக்காட்சி. இவற்றைக் கடந்து அகமுகமாகப் பார்க்கும் பார்வை வளர வேண்டும் என்றார் வள்ளலார். பூசை, திருவிழா, தேங்காய் உடைத்தல், கற்பூரம் காட்டல் எல்லாவற்றையும் ஒதுக்குகிறார். காவியுடை அணிவதை மறுக்கிறார். அது போராட்டத்தின் அறிகுறி என்றும், வெள்ளாடையே வெற்றியின் அறிகுறி என்றும் கூறுகிறார். புராணங்கள், கலை வடிவங்கள் எவற்றையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை எல்லாம் புறக்காட்சி. அகமுகக் காட்சி என்ற ஆன்மிக அனுபவத்தையே இவர் வற்புறுத்துகிறார்.

அந்த அகமுகக் காட்சி இறையருளால்தான் வாய்க்கும். அந்த அருளை, அதன் இனமாகிய மானுடக் கருணையால் தான் பெறமுடியும். கருணையால் சமுதாயச் சேவை செய்தால் இறையருள் கிடைக்கும். அது கிடைத்தால் இறை அன்பு பிறக்கும். அன்பால் அகமுகக் காட்சி, சிறிது முயற்சியிலேயே வாய்க்கும். அக்காட்சியால் 'அருள் வல்லமை' பெறலாம். அவ்வல்லமையால் பின்னும் பெருகிய அளவில் சீவகாருணியத் தொண்டு செய்தல் வேண்டும். இதற்கு எல்லையே இல்லை. செயல், செயல், செயல்-இதுவே என்றும் மனிதனின் நெறியாக இருக்க வேண்டும். அச் செயலால் மேலும் இறையருள் வாய்க்கும். இறைக் காட்சியும் இறைக் கலப்பும் வாய்க்கும். அதனால் மேலும் செயல் செய்தல் வேண்டும். அதனை வள்ளலார் கரும சித்தி முதலிய சித்திகள் என்று கூறுகிறார். இறைவனோடு ஒன்றிக் கலந்து நிற்கும் முத்தியின் பின்னும், சித்தி வாய்க்கும். அதாவது செயல் வல்லமை வாய்க்கும் என்கிறார். அவ்வல்லமையால் உலகம் எங்கும் சென்று, யாவருக்கும் தேவைப்பட்ட உதவிகளைச் செய்து, இறைவனையும் கலந்து, நுகர்ந்து, அந்நுகர்வும் செயலுமாக வாழ்வதே சன்மார்க்கம் என்கிறார் வள்ளலார். இறைவனுக்கும் எல்லை இல்லை. அவன் தரும் இன்பத்திற்கும் எல்லை இல்லை, அவனது கலப்பால் கிடைக்கும் வல்லமையால் செய்யும் செயலுக்கும் முடிவில்லை. இதுவே இறவாப் பெரு வாழ்வு என்பது சுத்த சன்மார்க்கக் கோட்பாடு. சுப.அ

**இராமலிங்க ஐயர்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் பிறந்தவர். அந்தணர் மரபில் தோன்றிய இவர் தமிழ்ப் புலமையோடு சோதிடப் புலமையும் மிக்கு விளங்கினார்: சந்தான தீபிகை என்னும் சோதிட நூலைத் தமிழில் இயற்றியுள்ளார்; சரசோதிமாலை என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

இராமலிங்க ஐயர்[2]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பாண்டிய நாட்டில் உள்ள இராமேச நல்லூர் என்னும் அறுகன் கூவிளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். தந்தையார் மகாதேவ ஐயர். சைவ அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் இலக்கண இலக்கியங்களைச் சோமநாத பாரதியாரிடம் கற்றார். தம் ஆசிரியர் இயற்றிய தேவி மான்மியம் என்னும்

நூலுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரம் இவரது நூலாகும்.

**இராமலிங்கத் தம்பிரான்** கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் புலிக்குட்டி இராமலிங்கத்தம்பிரான் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். திருவாவடுதுறை ஆதீனத்தின் 16-ஆம் தலைவராக விளங்கிய மேலகரம் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் இவருக்குச் சிவதீட்சை அளித்தார். இவர் தம்மைப் பகைத்தவர் மேல் விரைந்து வசை பாடும் திறம்பெற்றிருந்தார். இதனால் திருவாவடுதுறை மடத்திலிருந்த பலர் இவரை வெறுத்தனர். எனினும் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தியாகராசச் செட்டியார் ஆகியோர் அன்பினால் மடத்தில் தொடர்ந்து இருக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் பல வசைகவிகளும் தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

இராமலிங்கத் தம்பிரான்² கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; சொர்க்கபுரம் மடத்தைச் சேர்ந்தவர். இவர் இலக்கணநூல், செய்யுட்சாரம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**இராமலிங்கம், தி. அ. (கி.பி. 1881 - 1952)** என்பார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூரில் வாணிகத்தில் சிறப்புப் பெற்றிருந்த வேளாண் செட்டியார் குலத்தில் தோன்றியவர்; கோவை நகரின் பெருமைக்கு வித்திட்டவர்களுள் ஒருவர். இவர்தம் தந்தையார் அங்கப்பச் செட்டியார்; தாயார் மீனாட்சி அம்மையார். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாள்பிறந்தார். இளமையில் கோவையில் கல்விபயின்று, கி.பி. 1897-இல் 'மெட்ரிகுலேசன்' என்னும் பள்ளியிறுதிப் படிப்பில் தேறினார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியின் வழியாக 1901-இல் பி.ஏ. பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று 1904-இல் பி.எல். பட்டமும் பெற்றார்.

சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றபிறகு கோவையில் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினார். சட்டத்துறையில் இவர் கூர்மையான அறிவும் வாதத்திறமையும் பெற்றிருந்தார். இவர் 1905-முதல் 1936 வரை மிகப் புகழ்பெற்ற வழக்கறிஞராக இருந்தார்; அதே சமயத்தில் அவருடையபண்பாளுமை வேறுவேறு துறைகளிலும் விரிவடைந்தது.

கோவை நகர வளர்ச்சிப் பணிகளில் இவர் ஈடுபடத் தொடங்கினார். அக்காலத்தில் இருந்த 'கோவை மாவட்டக் கழகம்' என்னும் நிருவாக அமைப்பின் உறுப்பினராக அமர்ந்தார். அக்கழகத்தின் உதவித் தலைவராக 1914-இல் ஆனார். கோவை நகரசபைத் தலைவராக 1919-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது உதவித் தலைவராக இருந்தவர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் ஆவார். கோவை நகராட்சிப் பொறுப்பில் இவர் இருந்த காலத்தில் கோவைப் புறநகர் விரிவுத் திட்டங்கள், புதிய பள்ளிகள், மருத்துவ நிலையங்கள் அமைத்தல், சாலைகள் விரிவாக்கம் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தினார். இவருடைய பணிகளைப் பாராட்டி அக்காலத்தில் இராவ்பகதூர் திவான்பகதூர் ஆகிய பட்டங்கள் இவருக்கு அளிக்கப்பட்டன.

நகராட்சிப் பொறுப்புகளோடு, மாநிலச் சட்டமன்றப் பொறுப்புகளிலும் இவர் சீரிய பணியாற்றினார். சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு 1921-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1939 வரை உறுப்பினராகப் பணியாற்றினார். உழவர் கடன் நீக்கச் சட்டம் 1938-இல் இவருடைய முயற்சியால் உருவாகியது. இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சிச் சார்பில் 1945-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார். இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1951-இல் நாடாளுமன்றத்திற்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதி வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

தி. அ. இராமலிங்கம் ஆற்றிய பணிகளுள் தலையாயது. கூட்டுறவு இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டாகும். தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என்றே இவரைக் குறிப்பிடுவர். முதன் முதலில் கோவைக் கல்லூரி ஆசிரியர்கள் தொடங்கிய கூட்டுறவுப் பண்ட சாலையையும், கூட்டுறவு வங்கியையும் தொடங்கி அவற்றின் செயலாளராகப் பணியாற்றினார். பின்னர்க் கோவை நகரில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இவருடைய முயற்சியால் உருவாயின. கோவை மத்திய கூட்டுறவு வங்கி, கோவை நகர வங்கி, நில அடகு வங்கி, வீட்டு அடகு வங்கி, கோவைக் கூட்டுறவுப்பால் பண்ணைச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், கோவைக் கூட்டுறவு அச்சகம் ஆகியவை அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. கோவை நகரத்தோடு மட்டும் நிற்காமல் மாநில அளவிலும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிப் பொறுப்புகளில் பங்காற்றினார்; சென்னை மாநிலக் கூட்டுறவு வங்கி, கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கம், வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளிலும், மாநிலக் கூட்டுறவு மாநாடுகளின் தலைவர், அமைப்பாளர் பொறுப்பு

களிலும் இடம்பெற்று இவர் தொண்டாற்றினார். கூட்டுறவுத் துறையில் பயிற்சியளிக்கக் 'கூட்டுறவுப் பயிற்சிச் சாலை' ஒன்றைக் கோவையில் முதன் முதலாகத் தொடங்கினார். அது இன்றும் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. தம் இறுதிக்காலம் வரையிலும் கூட்டுறவு இயக்கத்தில் இவர் ஈடு பட்டிருந்தார்.

நாட்டின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த தி. அ. இராமலிங்கம், கோவைக் கல்லூரியின் செயலராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார். கோவையில் கிறித்தவ இலண்டன் தொண்டு நிறுவனத்தார் நீண்ட காலம் நடத்தி வந்த ஒரு பள்ளி 1934-இல் மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற் பட்டபோது, இவர் பொறுப்பேற்றுத் தொடர்ந்து நடத்தினார். அது இன்றும் சிறப்புற நடைபெறுகிறது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் செயற்குழு உறுப்பினராகவும் இவர் இருந்தார்.

கல்லூரியில் பயின்ற நாள்களில் தமிழ்மொழியின் மீது இவருக்கு மிகுந்த பற்றும் ஈடுபாடும் இருந்தன. அக்காலத்தில் தமிழுக்காக வழங்கப்பட்ட 'மூர்எடு' (Moorhead)பரிசு பெற்றுச் சிறப்படைந்தார். டாக்டர் உ.வே.சா., பரிதிமாற்கலைஞர் ஆகியோருடன் இவர் நெருங்கிப் பழகி வந்தார். 'தமிழ்ப்பழமை' (Tamilian Antiquary) இதழில் இவர் எழுதிய தமிழ் ஆய்வுக் கட்டுரைகளுள் 'பத்துப்பாட்டு'க் குறித்த கால ஆராய்ச்சிக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. பின்னாள்களில் கலைமகளில் பல இலக்கியக் கட்டுரைகள் எழுதி வந்தார். திருப்பதியில் கீழ்க் கலை மாநாட்டை இவர் 1939-இல் நடத்தியபோது, வடமொழி, வரலாறு, புதைபொருள் ஆய்வு போன்ற வழக்கமான பகுதிகளுடன், 'தமிழ்ப்பகுதி' ஒன்றை யும் மாநாட்டில் அமைத்தார்.

திருப்பதி அறங்காவல் குழு உறுப்பினராக இவர் பணியாற்றிய காலத்தில், மலைப்பாதை அமைப்பு, கோவில் வரலாறு வெளியீடு, வடமொழிக் கல்லூரி அமைப்பு போன்ற பல திட்டங்களைச் செயற் படுத்துவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். கோவைக் கருகில் பெருந்துறையில் மூச்சிருமல் நோய் நிலையம் (T.B.Sanatorium) அமைத்தது இவருடைய சிறப்பான பணியாகும். ஆயிரக்கணக்கான பிணி யாளர்களுக்கு வாழ்வு தரும் நலப்பணியில் இன்றும் அது சிறந்து நிற்கிறது. இவர் 1952-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 12-ஆம் நாள் மறைந்தார்.

இரா. ச.

**இராமலிங்கம் பிள்ளை. வே.** (நாமக்கல் கவிஞர்) இருபதாம் நூற்றாண்டில் விளங்கிய தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர்; 'நாமக்கல் கவிஞர்' என்று தமிழுலகிற்கு நன்கு அறிமுகமானவர். இவர் சேலம் மாவட்டம் மோகனூரில், வேங்கடராம பிள்ளைக் கும், அம்மணி அம்மாளுக்கும் எட்டாம் குழந்தை யாக 19.10.1888-இல் பிறந்தார். இவருக்குத் தந்தை வைத்த பெயர் இராமலிங்கம் என்பதாகும். தாய் சூட்டிய பெயர் கறுப்பண்ணன்.



இராமலிங்கம் பிள்ளை, வே.

இளம்பருவத்தில் 'பதுலாபீம்' என்ற முகமதிய மாதின் அன்பில் வளர்ந்த இவருக்குச் சாதி-சமய வெறி இல்லாமல் போயிற்று.

தம் தொடக்கக் கல்வியை நாமக்கல்லில் உள்ள நம்மாழ்வார் பள்ளியில் தொடங்கினார். முதன்முதல் இவருக்கு எழுத்தறிவித்த ஆசிரியர், பழனி வாத்தி யார் என்ற சண்முகம் பிள்ளையாவார். கோயம் புத்தூர்க் கல்லூரியின் கிளைப்பள்ளியில் உயர் நிலைக் கல்வியை முடித்த இவருக்குக் கணிதம் தவிர்ந்த பிற பாடங்களில் அதிக ஈடுபாடு உண்டு.

இவர் இயற்கையாகவே ஓவியப் புலமை பெற்றிருந்தார். இவ் வியற்கை அறிவு, கோவைக் கல்லூரி முதல்வர் ஈ.எச்.எலியடு அவர்கள் ஆதரவாலும், ஓவிய ஆசிரியர் கோபால்ராவ் அவர்களின் உதவியாலும் செழித்து வளர்ந்தது.

காட்டுப்புத்தூர்ச் சமீன்தார் உயர்நிலைப் பள்ளியில் 'பள்ளியிறுதிப்' படிப்பை முடித்தார். திருச்சி எசு.பி.சி. (S.P.G. College) கல்லூரியில் 'எப்.ஏ' வகுப்பில் சேர்ந்து படிக்கும்பொழுதே இவருக்குத் திருமணம் நடந்தேறியது.

இவர் முத்தம்மாள் என்னும் மங்கையை 1907-ஆம் ஆண்டு மணந்து பதினான்கு ஆண்டுகள் இல்லறம் நடத்தினார். எனினும் இவருக்குக் குழந்தைப் பேறே இல்லாது போயிற்று. முதல் மனைவி முத்தம்மாள் திடீரென மாரடைப்பால் இறந்துவிடவே, மனைவியின் தங்கை சவுந்தரத்தை இரண்டாம் மனைவியாக ஏற்று, மூன்று ஆண், இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையானார்.

கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட காதுவலி, இவர் படிப்பிற்குத் தடையாயிற்று. தம் மகன் அரசுப்பணியில் அமரவேண்டும் என விரும்பினார் தந்தையார். தந்தையின் எண்ணப்படி தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராக மூன்று திங்களும், நாமக்கல் போர்டு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராக மூன்று திங்களும் பணி செய்தார்.

பா.வெ. மாணிக்க நாயகரின் தூண்டுதலினால் அரியணையில் அமர்ந்திருக்கும் ஐந்தாம் சார்சு மன்னருக்குப் பாரத அன்னை முடிசூட்டுவது போன்ற படம் வரைந்து, தில்லியில் நடந்த பொருட்காட்சிக்கு அனுப்பித் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். இப்பரிசு 12.12.1912-ஆம் நாள் இவருக்குக் கிடைத்தது. இவரது ஓவியப் புலமையை உலகறியச் செய்த படம், இவர் வரைந்த நாமக்கல் ஆசிரியர் வி. இலட்சுமண அய்யரின் படமே எனலாம்.

மராமத்துத்துறைப் பொறியாளர் சிம்சன் துரையவர்களின்இறந்த குழந்தையின் படத்தை உயிருள்ளது போன்று வரைந்து முடித்து 675 ரூபாய் அன்பளிப்புப் பெற்றார். சிம்சன் அளிப்பதற்கு இசைந்திருந்த தொகை ரூபாய் ஐம்பதே.

இயற்கையாகவே கவியியற்றும் ஆற்றல் பெற்றிருந்த இவருக்கு நாடகக் கலைஞர் பலரின் நட்புப் பெரிதும் உதவியது. இளமையில் இவர் பாடிக் கொடுத்த மேடை நாடகப் பாடல்கள் பலவாகும். தூத்துக்குடியில் 1914-ஆம் ஆண்டில் நடந்த கவிதைப் போட்டியில் இவர் 'நாட்டுக்கும்மி' என்ற தலைப்பில் 100 பாடல்கள் எழுதிக் கலந்துகொண்டார். இப்போட்டியில் பரிசு கிடைக்கவில்லை என்றாலும், சேலம் விசயராகவாச்சாரியாரின் நட்புக் கிடைத்தது. அவர் இவரைப் புலவர் என்று பாராட்டினார்.

காரைக்குடியில் பாரதியாரைச் சந்தித்துத் 'தம் மரசைப் பிறர் ஆள' என்னும் மேடை நாடகப் பாடலைப்பாடிக் காட்டியபோது, 'பலே பாண்டியா! பிள்ளை நீர் ஒரு புலவன். ஐயமில்லை' என்னும் பாராட்டைப் பெற்றார்.

நாடு, மொழி, கலை, சமூகம், காந்தியம் போன்ற பல துறைகளில் இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் தொகுப்பில் அடங்கியுள்ளன. 'அவளும் அவனும்' முதலாகத் 'தமிழ்மணம்' இறுதியாக 32 நூல்களை இவர் எழுதியுள்ளார். தமிழ்த்தேன், கீர்த்தனங்கள், தமிழன் இதயம், சங்கொலி, கீதாஞ்சலி, காந்தியஞ்சலி என்னும் கவிதை நூல்கள் இவரால் எழுதப் பட்டன.

மோ.வெ. கோவிந்தராச ஐயங்காருடன் சேர்ந்து 1913-ஆம் ஆண்டில் 'லோக மித்திரன்' என்ற செய்தியிதழைத் தொடங்கி நடத்தினார்.

இராசாசி, ஈ.வே.ரா, பாரதியார், திரு.வி.க. போன்ற தலைவர் பலர் நட்பைப் பெற்ற இவர் கவிஞராக எழுத்தாளராக - பேச்சாளராக - செயல் வீரராகச் சிறந்து விளங்கினார்.

15.8.1949 முதல் தமிழக அரசவைக் கவிஞராகப் பொலிந்த இக் கவிஞர் 1972-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

மகா.வே.

**இராமலிங்கனார், கீ.** செங்கற்பட்டு மாவட்டத்தில் தொண்டை மண்டல வேளாளர் குலத்தில் கீழச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவர் தாயார் பாக்கியம்மாள்; தந்தையார் இரத்தின முதலியார். பிறப்பு 12.11.1899.

இவர் கீழச்சேரி மாதாகோவிற் பள்ளியிலும் இராயப்பேட்டை வெசிலி உயர்நிலைப் பள்ளியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று 1924-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இவரோடு தொடக்கப்பள்ளியில் ஒருசாலை மாணவராய் இருந்துள்ளார். தமிழ்ப் பெரியார் திரு.வி.க. வெசிலி உயர்பள்ளியில் இவர் கற்ற காலையில் தமிழாசிரியராகத் திகழ்ந்தார்.

கல்வி முடிந்து 1926-ஆம் ஆண்டு இவர் பதிவுத் துறையில் அலுவல் ஏற்றார். அப்போது

கட்டாயம் தெலுங்கு மொழி பயிலவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே, தெலுங்கு ஆசிரியர் ஒருவரை அமர்த்திக் கொண்டு தெலுங்கு பயின்றார். இவர் தமிழைத் தனிமுறையில் படித்துத் தமிழ் வித்துவான் தேர்வு எழுதித் தேறினார். பின்னர், சைதாப்பேட்டை நகராட்சி ஆணையராகப் பணியாற்றிய பொழுது, திருப்பாதிரிப் புலியூர்த் தவத்திரு ஞானியார் சுவாமிகள் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் நடத்திய சிவஞான போத வகுப்புகளில் கலந்து கொண்டும் சமய அறிவு கைவரப் பெற்றார். விழுப்புரம் நகராட்சி ஆணையராய் இருந்தபொழுது 1942-ஆம் ஆண்டில் தமிழ் எம். ஏ. தேர்வினைத் தனிமுறையில் படித்தெழுதித் தேர்வு பெற்றார்.

கீ. இராமலிங்கனார்க்கு 1923-இல் திருமணம் நிகழ்ந்தது. மனைவியார் சிவகாமு சுந்தரம். இவருக்கு மக்கள் இருவர்.

தமிழ் நாட்டின் பல ஊர்களில் பல்வேறு அரசுப் பணிகளை ஆற்றிய இப்பெரியார் 'பணியிலிருந்து ஓய்வுபெறும் வரை வீட்டில் ஒரு வானொலிப் பெட்டி வாங்கி வைக்க என்னால் முடியவில்லை' என்று தாம் தம் இறுதிக் காலத்தில் எழுதிய 'என் வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணும் பொழுது, இவர் வாழ்வின் நேர்மையும் செம்மையும் புலனாகின்றன. முப்பத்தைந்து இடங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்னையில் வந்து தங்கிய பொழுதுதான் மாநகராட்சி ஆணையர் உதவியால் ஒரு வீடு ஒதுக்கப்பட்டது. அது 'தமிழ் மணம்' எனப் பெயரிடப்பெற்றது.

பதிவுத்துறை அலுவலர், நகராட்சி ஆணையர், பங்கீட்டுத் துறை அலுவலர், தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர், தொழிலாளர் நல அலுவலர், ஆட்சிமொழித் தனி அலுவலர், தமிழறியார்க்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர், ஆட்சிமொழி ஆசிரியர், சட்ட ஆட்சிமொழி ஆணைய உறுப்பினர் எனப் பல்வேறு பணிகளைப் பாங்குற ஆற்றிய இப்பெரியார் 20—9—1986-இல் காலமானார்.

எண்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த இவர் தனித் தமிழ்ப் பற்றாளர். தமிழ்த் திருமணங்களை நடத்தி வைப்பதில் தனி ஆர்வங் காட்டினார். இவர் எந்தச் சொல்லிற்கும் தனித்தமிழ்ச் சொல் கண்டு மகிழ்ந்தார். ஆட்சித்துறைச் சொற்களில் கலப்படம் இல்லாமல் தூய தமிழ் மொழிச் சொற்கள் இடம் பெறப் பாடுபட்டு 'ஆட்சிச்சொற் காவலர்' என்னும் பட்டத்தினைப் பெற்றார். சைவ சித்தாந்த சமாசம், ஆட்சிமொழிக்குழு, சென்னைப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைச் சொல்லாக்கக்குழு முதலான பல அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை வளர்த்தார்.

இவர் எழுதிய நூல்கள், 'இசைச் சக்கரவர்த்தி நயினாப்பிள்ளை வரலாறு', 'உண்மைநெறி விளக்கம்', 'நகராட்சி முறை', 'தமிழ் ஆட்சிச் சொற்கள்', 'திருமுறைச் சமுதாயம்', 'ஆட்சிச் சொல் அகராதி', 'தொழிலாளர் சட்டத்தொகுப்பு' முதலியனவாகும். சி. பா.

**இராமன்** கம்பர் இயற்றிய இராமாயணக் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன். அயோத்தி வேந்தன் தசரதற்கு அவன் மனைவியர் மூவருள் கோசலையின் மகனாய்ப் பிறந்தவன். இளமைக் காலத்தில் வசிட்ட முனிவரிடம் கல்வி பயின்று முனிவர் முதலிய எல்லாரும் போற்றுமாறு விளங்கினான். தன் பெயருக்கேற்பப் பேரழகனாக, ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தானாகத் திகழ்ந்தான்.



இராமன்

கம்பர் இராமனைச் சுட்டுவதற்கு அண்ணல், அமலன், ஆண்டகை, ஆரியன், ஆழியான், இறைவன், ஐயன், கண்ணன், கொற்றவன், கோன், வரதன், வள்ளல், நம்பி, நாயகன் எனப் பல சொற்களைப் பயன்படுத்தினாலும் இராமன் என்னும் பெயரையே பெரும்பாலான இடங்களில் ஆளக் காணலாம். இப்பெயர் இராம காதையில் 279 இடங்களில் ஆட்சி பெற்றுள்ளது அறியத்தக்கது.

காப்பியத்தில் இராமன் இருவேறு நிலைகளில் குறிக்கப்படுகிறான். கதைமாந்தர் பலர் அவனைப் பரம்பொருளாகவே எண்ணுகின்றனர். முழுமுதற் கடவுள், மூவர்க்கும் முதல்வன் என்றெல்லாம் பலர் பாராட்டுகின்றனர். ஆனால், இராமனோ தன் சொல்லாலும் செயலாலும் ஒருபோதும் தன்னை இறைவனாகவே காட்டிக் கொள்ளவில்லை. மாறாக, நடைமுறை வாழ்வில் அவன் ஏனைய உலக மாந்தர் போலவே எளிய மனிதனாகக் காட்சி தருகிறான். தன் இயல்பான செயற்பாட்டு நிலையில் எளிய மனிதனாகவும், பிற காப்பிய மாந்தரின் நோக்கு நிலையில் இறைமைக் குணங்கள் சான்ற பரம் பொருளாகவும் விளங்கி, இருவேறு அடுக்கு நிலையில் தன் ஆளுமையை இராமன் வெளிப்படுத்துகிறான். ஒரே பாத்திரத்தை இவ்வாறாக இருநிலைகளில் காட்டுவது எக் கவிஞர்க்கும் அரிய செயலேயாம். அவ்வாறு காட்டினும் ஒன்றற்கொன்று விட்டிசைக் காமல் இணக்கமாய்க் காட்டுவது அரிதினும் அரிது. கம்பநாடரோ இதனை மிக எளிமையாகச் செய்து முடித்துவிடுகிறார்.

இராமனின் பெருவாழ்வு உலக மாந்தர்க்கு எடுத்துக்காட்டாய் இலங்கும் உயர்வாழ்வு. தந்தையின் சொல்போற்றும் தனயனாய், மனைவியுடன் உளம் ஒன்றிய காதலனாய், உடன்பிறந்தார் மாட்டு உழுவலன்பு காட்டும் உண்மைச் சகோதரனாய், அன்பினால் தன்னை நயக்கும் அயலாரிடத்துத் தன்னையே அடிமைதரும் நண்பனாய், பகைவரிடத்தும் இரக்கம் காட்டும் பண்புசால் மறவனாய், தீமையை ஒறுத்து நன்மையைத் திருவோலக்கம் ஏற்றும் இலட்சிய வீரனாய், மெய்த்திருப்பதம் மேவு எனினும் இத் திருத் துறந்து ஏகு எனினும் ஒத்திருக்கும் உள்ளம் கொண்ட உயர் மனிதனாய்வாழும் இராமனின் நிலையைப் பார்க்கும்போது, அவன் மனிதக்குலமே வியந்து போற்றும் ஒப்பற்ற மாமனிதன் (Super man) ஆகத் திகழ்கிறான்.

இராமனின் 'அவதார நோக்கம்' நல்லோரைக் காத்தலும் அல்லோரை அழித்தலும் ஆம். இராவண வதம் இராமனின் செயல்வாழ்வில் உச்ச நிலையாகத் திகழ்வது. அதற்குமுன் அவன் நிகழ்த்திய அருஞ் செயல்கள் மிகப்பல. அவற்றுள் அவன்றன் தறுகண் மையை எடுத்துக்காட்டும் செயல்களும் உண்டு; கருணை மறத்தைக் காட்டும் செயல்களும் உண்டு. தாடகையோடு நிகழ்த்தும் போரே இராமனின் கன்னிப்போராகும். விசுவாமித்திரரின் தவவேள்விக்கு இடையூறு விளைத்த தாடகையின் மக்கள் இருவருள் ஒருவனைக் கொன்று, மற்றொருவனைக் கடலுள் வீழ்த்துகிறான் இராமன். கார்த்தவீரியன் என்பானைத் தன் கோடரிப் படையால் கணநேரத்தில் வெற்றி கொண்டவனும், தனக்கு யாரும் இணையில்லை எனத் தருக்கித் திரிந்தவனுமான பரசுராமனை வலிமைகெட அழிக்கிறான். மான் வடிவில் வந்த மாரீசனை அம்பு தொடுத்து அடியோடு வீழ்த்து கிறான். கரன் முதலாய வீரர் தம் கடலனைய தானையொடு பொர முற்பட்டபோது தன் வில்லாண் மையால் அவரை வேரறக் கல்லுகிறான். இவை யனைத்தும் இராமனின் தோளாற்றலைத் துலக்கும் வீரச்செயல்கள்.

இராமன்பால் வீரம் மட்டுமன்று; ஈரமும் உண்டு. கௌதம முனிவரின் சாபத்தால் கல்லுருப் பெற்ற அகலிகை இராமனின் அடித்துகள் பட்டதும் பழைய வடிவை அடைகிறாள். அவள் நெஞ்சினால் பிழைப் பிலாதாள் என்னும் உண்மையைக் கௌதமர்க்கு உணர்த்தி, அவரொடு அவளைச் சேர்ப்பிக்கிறான் இராமன். கவந்தனோடு பொருவதன் மூலம் தன் திருமேனித் தொடர்பைக் கொடுத்து, அவன் சாப நீக்கம் பெற உதவுகிறான். தந்தையொடு கேண்மை கொண்டவன் என்பதால், கழுகின் வேந்த னாகிய சடாயுவையும் தன் தந்தையாகவே கருதி, அவன் இறந்த பிறகு இலக்குவனொடு ஈமக் கடன்கள் ஆற்றுகிறான். வீடணனை ஏற்றுக்கொள்வது விவேக மற்ற செயல் எனப் பலர் தடுத்தும், 'பூரியரேனும் தம்மைப் புகல்புகுந்தோர்க்குப் பொன்றா ஆருயிர் கொடுத்துக் காத்தல்' கடன் எனக் கூறி, அவனுக்கு அடைக்கலம் தருகிறான். வேடர் குலத்துக் குகனையும் விரும்பி ஏற்றுத் தன் குடும்பத்துள் ஒருவனாக ஆக்கிக் கொள்கிறான். இலக்குவன் தோழன் என்றும், சீதை கொழுந்தி என்றும் குகனுக்கு முறை கற்பிக்கிறான். இவையெல்லாம் இராமனின் அருள்பழுத்த பெருநெஞ்சத்தைப் புலப் படுத்தும் ஒப்பற்ற செயல்கள் ஆம்.

இராமனின் உள்ளம் உயர்திணை மக்களை மட்டுமன்றி, அஃறிணை உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி ஒத்துரிமை தருகிற ஆன்மநேய நிலையமாய்த் திகழ்கிறது. அவன் அன்புலகில் மனிதர், அரக்கர், குரங்கு, கழுகு, கரடி எல்லாம் ஒருபடித்தாகவே இடம் பெறுகின்றனர். அந்த உலகத்தில் அன்பே, அருளே அரசோச்சுகிறது; அங்கே வேறுபாடு இல்லை; பிணக்கு இல்லை. ஓடிவரும் நதிகளையெல்லாம் வாரி அடக்கிக் கொள்ளும் கடல் போன்ற பரந்த உள்ளமே இராமனின் உள்ளம் எனலாம்.

வைணவ உலகில் 'பிரபத்தி நெறி' என்று போற்றப்படும் சரணாகதித் தத்துவம் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பது. இராமாயணத்தைச் சரணாகதி சாத்திரம் என்றே வைணவர் போற்றுவர்.

தஞ்சம் வேண்டித் தன்னை அண்டுவோர் யாவரே யாயினும் அவரை ஏற்றுக்கொண்டு, அடைக்கலம் காத்தலே இராமனின் ஆளுமையில் காணலுறும் தனிப்பெரும் தலைமைக்கூறு எனலாம். இளவலொடும் சீதையொடும் இராமன் தண்டக வனத்துக்கு வந்த போது, அங்கிருந்த தவமுனிவோர் அவனை நெருங்கிக் குறையிரந்து நிற்கின்றனர். 'இரக்கமெனும் பொருளிலா அரக்கர் எம்மை வருத்தலாயினர்; அல்லும் பகலும் யாம் அல்லலுக்கு இலக்கானோம்: ஆதலின் ஓதல், ஓதுவித்தல் போன்ற அறவோர் தொழிலை அடியோடு மறந்தோம்; எம்மை நீயே காத்தருளல் வேண்டும்; யாம் நினக்குத் தஞ்சம்' என்று வேண்டுகின்றனர். செவிமடுத்த இராமன் அவ் அறவோரை நோக்கிப், 'பிறர்க்கென முயல்வதே பெருவாழ்வு; கவலற்க; தொல்லைதரும் தீயோரைத் தொலைப்பேன்; முருகனும் மாலும் திரிபுரம் எரித்த தேவும் அவர்களுக்குத் துணையாகவே வந்தாலும் நான் அவரை வேரொடு துணிப்பேன்; அஞ்சாதீர்' என்று தஞ்சம் அளிக்கிறான். அருள்கனிந்த இப் பெருமனமே வீடணனையும் ஆட்கொள்ளுகிறது. வீடணனை ஏற்பது குறித்து இராமன் தக்காரோடு கலந்தாலோசித்தபோது, சுக்கிரீவன், சாம்பன், தானைநாயகன், நீலன், மந்திரக் கிழவர் அனைவரும் 'அவனைச் சேர்த்துக் கொள்வது அடாது' என்றே எடுத்துரைக்கின்றனர். மாருதி ஒருவனே ஏற்கலாம் என்று இசைவு தெரிவிக்கிறான். அப்போது இராமன், 'வெற்றி பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க, பற்றுதல் அன்றி உண்டோ அடைக்கலம் பகர் கின்றானை' என்று தெளிவாகப் பேசுகிறான். அடைக்கலம் போற்றல் என்னும் இப் பண்புக் கூறே இராமனின் ஆளுமையில் சிகரமாய்ப் பொலிகிறது.

இராமனிடம் இயல்பாகப் பொருந்தியுள்ள ஏனைய பண்புக்கூறுகள் அவனை, எல்லோரையும் போன்ற எளிய மனிதனாகவே யார்க்கும் காட்டி நிற் கின்றன. தசரதனின் இறப்புச் செய்தியைக் கேட்ட போது, 'மாண்டு முடிவதல்லால் மாயா உடம்பிது கொண்டு ஆண்டு வருவது இனி யார் முகத்தே நோக்கவோ' என்று வாய்விட்டுப் புலம்புகிறான். தந்தையின் மீது இராமன் கொண்டிருந்த பாசம் அது; அவன் தன் இளவலிடத்தும் உள்ளம் கலந்த நேயம் கொண்டு ஒழுகினான்.

சடாயு உயிர் நீத்த பிறகு இராமனும் இலக்கு வனும் சீதையைத் தேடிக்கொண்டு செல்கின்றனர். அப்போது இராமனை ஓரிடத்தே அமரச் செய்து விட்டு நீர் கொணரச் சென்ற இலக்குவனை அயோ முகி என்னும் அரக்கி காம நோக்கால் உந்தப்பட்டுக் கவர்ந்து செல்கிறாள். நீண்ட நேரமாகியும் இளவல் திரும்பாமை கண்ட இராமன் உடம்பெல்லாம் வாயாக ஓவென்று அரற்றுகிறான். மற்றொரு சமயம், இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த காட்சியைக் காண நேர்ந்தபோதும், இந் திரசித்தன் விடுத்த பிரம்மாத்திரத்தால் அவன் இறுகப் பிணிக்கப்பட்ட போதும் இராமன் அளவிலா அதிர்ச்சி அடைந்து கவலையின் ஆழத்திற்கே சென்று விடுகிறான். 'இனி வாழேன்,' என்றும் பேசுகி றான்.

கணவன் என்னும் நிலையில் சீதையொடு அவன் கொண்டிருந்த காதல் நேயம் மலையினும் பெரிது; வானினும் உயர்ந்தது. கானகத்தே அவன் சீதையைப் பிரிய நேர்ந்தபோது, ஆற்றாமை மீதூர அவளுக்காக உருகுகிறான்: உள்ளம் துடிக்கிறான். அவனுக்குக் கானகம் முழுவதும் கண்ணின் நோக் குங்கால் சானகி உருவாகவே பொலிந்து தோன்று கிறது. சானகியின் உருவெளித் தோற்றங் கண்டு உள்ளம் நெகிழ்ந்த நிலையில் அவன் பேச்செல்லாம் காமம் மிக்க கழிபடர் கிளவியாகவே பொங்கிப் பெருகுகிறது. கவர்ந்து செல்லப்பட்ட நிலையில் சீதை கழற்றி எறிந்த அணிமணிகளைச் சுக்கிரீவன் முதலி யோர் கண்டெடுத்து வந்து இராமனிடம் காட்டிய போது, 'தன் கணவன் உயிருடன் இருக்கவும் அணி மணிகளைக் களைந்தெறிந்த பெண் வேறெங்கும் இருக்க முடியுமா?, என்று கேட்டு, 'அத்தகு தீவினைக்கு நான் காரணம் ஆகிவிட்டேனே' என்று கதறுகிறான். மாயாசீதையைக் கொன்றுவிட்டு, அயோத்தி நோக்கிப் போவதுபோல் இந்திரசித்தன் போக்குக் காட்டியபோதும், இராமன் நடந்த நாட கத்தை அறியாதவனாய், அனைத்தையும் உண்மை யென்றே நம்பி அரற்றுகிறான். இந்நிகழ்ச்சிகளெல் லாம் உணர்ச்சியலைகளால் அலைக்கழிக்கப்படும் ஓர் எளிய மனிதனே இராமன் என்னும் உண்மையைக் கற்போரிடத்தே நிறுவி நிற்கின்றன.

இராமன் தன்னைத் தானே வெறுத்துப் பேசிக் கொள்ளும் இடமும் உண்டு. தன்னையே வெறுக்கும் கழிவிரக்கம் கோழையாரிடத்தே மிகுதியாக இருக் கும். ஆற்றல் மிக்க அடலேறாம் இராமனிடத்தும் இக்கோழைமைத் தனத்தின் கூறுகள் அங்கங்கே மின்ன லிட்டு மறைகின்றன. கவந்தனின் பேருருவைக் கண்டு கலக்கமுற்ற போது, பழிக்கு ஆளாகி இருக்கும் நான் அது நீக்குமாறு கவந்தனிடம் பட்டு விளி தலே நன்று என்று வேதனையோடு பேசுகிறான். 'சன கனிடம் உம்மால் திருமணம் செய்து கொடுக்கப்பெற்ற நும்மகளாகிய சீதைஅரக்கர் மனையிடத்தே உள்ளாள் என்று சொல்லிக்கொண்டு என் வில்லையும் தூணியை

யும் சுமந்துகொண்டு எப்படிப் போய் அவர்முன் நிற்பேன்' என்று அவலிக்கிறான்.

இராமனின் ஆளுமையில் சிறப்பாகத் திகழ்ந் தொளிரும் மற்றொரு கூறு அவனது போரறு ஒழுக் கமே எனலாம். முதல்நாட் போரில் வீரமும் களத்தே போரிட்டு வெறுங்கையோடு நின்ற இராவணனை நோக்கி, 'இன்று போய் நாளை வா!' என இயம்புகிறான் இராமன். பகைவனுக்கும் அருளும் இப் பண்பினை எவ்வாறு பாராட்டுவது? மனை யாளைக் கவர்ந்துபோன மாற்றான் ஒருவனிடத்தும் இவ்வாறு கருணையோடு பேசுகிற பண்புடைமை வேறு யார்க்கே வாய்க்கும்? மேலும், மற்றோரிடத்தே மயக்கமுற்றுக் கிடக்கும் இராவணனைத் தேர்வலவன் மாதலி தேடிச்சென்று சுட்டிக்காட்டி, 'இவனை இப் போதே கொல்க: மயக்கம் தெளிந்து எழுந்தால் அது முடித்தல் அருமை' என்று கூறியபோது, 'அவ்வாறு செய்யேன்; அது போர்முறைக்கு முரணா னது; இப்போது என் மனம் போர் செய்வதையே முற்றும் விட்டிட்டுள்ளது' என்று இராமன் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மறுமொழி உரைக் கிறான். இறந்து கிடந்த இராவணனின் முதுகில் புண் இருந்தமையைத் தற்செயலாகப் புரட்டிக் கண்ட இராமன், 'புறமுதுகு காட்டி ஓடிய ஒருவனோடு போர் செய்ய நேர்ந்ததே' என்று நாணம் கொள் கிறான். இராவணன் முதுகில் எப்படி அப்புண் உண்டா யிற்று என்று வீடணன் விளக்கிய பின்னரே இராமன் நாணம் தவிர்க்கிறான். இராமனின் போரறு ஒழுக் கத்தைப் புலப்படுத்த இதனினும் பிறிதொரு சான்று வேண்டுமா?

இன்பத்தையும் துன்பத்தையும் ஒருபடித்தாக ஏற்கிற உள்ளம், ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கு கிற உள்ளம் ஒருவற்கு எளிதாக அமைவதன்று. ஒருவேளை அது வாய்க்கப் பெற்றாலும் தமக்குத் தீமை செய்தோரை ஒறுக்காமல் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அருள் உள்ளம் பலருக்கு இருக்காது. அது ஒரு சிலர்க்கே உண்டு. காப்பியத்தின் இறுதியில் தயரதன் வானுலகிலிருந்து திரும்பிவந்து இராமனை நோக்கி, 'நினக்கு வேண்டும் வரத்தைக் கேள்' என்று கூறியபோது, 'தீயள் என்று நீதுறந்த என் தெய்வமும் மகனும், தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' என்றே கேட்கிறான். எந்தக் கைகேயியின் தீத்திறத்தால் இராமன் அரசு துறந்து வனம் புகுந் தானோ, அந்தக் கைகேயியைத் தன் மனைவியல்லள் எனத் தசரதன் துறந்திருந்ததை மாற்ற வரம் கேட்டதோடு, அவளை 'என் தெய்வம்' என்று ஏற்றிப் போற்றவும் செய்கிறான் இராமன். எத்துணைப் பெரும்பண்பு அது!

இராமாயணத்தில் இராமன் மனிதனாகவே விவரிக்கப்பட்டாலும், கம்பர் பல இடங்களில் தம் கூற்றாகவும் கதைமாந்தர் கூற்றாகவும் அவனைப் பரம்பொருள் என்றே சுட்டிச் செல்கிறார் என்பது முன்னரும் குறிக்கப்பட்டது. சடாயு, 'முத்தேவரின் மூல முதற்பொருள்' என்றும், கவந்தன், 'மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ?' என்றும், சுக்கிரீவன், 'ஆழிமேல்ஆழிவாழ் கையன் நீ' என்றும், வாலி, 'மூவர் நீ! முதல்வன் நீ!' என்றும் பிறாண்டும் வியந்து கூறியிருப்பவை ஈண்டு நினைவு கூறத் தக்கவை. இராமனால் கொல்லப்பட்ட வாலியே சுக்கிரீவனிடம், 'மறைகளும் முனிவர் யாரும், மலர் மிசை அயனும் மற்றைத், துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் துணிவில் தூக்கி, அறை கழல் இராமன் ஆகிவந்தது' என்று உணர்த்து கிறான். இதேபோல் சொல்லின் செல்வனாகிய அனுமன் இராமனைப் பற்றி இராவணனிடம் கூறும் போதும் இக் கருத்தையே, 'மூலமும் நடுவும் ஈறும்' எனத் தொடங்கும் பாடலில் வலியுறுத்தியுள்ளான்.

கம்பராமாயணப் பெருங்காப்பியத்தில் இராமன் அடிமுதல் முடிஈறாகப் பேருருவம் (விசுவரூபம்) எடுத்து நிற்கும் ஓர் அற்புதப் பாத்திரம் ஆகும். அப்பாத்திரப் படைப்பில் அதன் நீள அகல உயர கனபரிமாணத்தில் கம்பன் காட்டியிருக்கும் திறமே திறம்! புடை ஓவியம் போல் உயிர்க்களையோடு பொலியும் அப் பாத்திரப் படைப்புக் கம்பனின் இலக்கிய மேதைமையைக் காலமெல்லாம் காட்ட வல்லது. மா.இரா.

## இராமன்பிள்ளை சி.வீ (கி.பி.1858-1922)

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த மலை யாள நாடக, புதின ஆசிரியராவார். இவர் திருவ னந்தபுரத்தில் பிறந்து அங்கேயே கல்வி பயின்றார். 'சந்திர முகீ விலாசம்' என்னும் நாடகத்தை இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டில் இயற்றினார். பழைய வடமொழி நாடகமரபை ஒட்டி, ஆங்கில நாடகங்களி லுள்ள சமுதாய விமரிசனப் பாங்கில் இந்நாடகம் அமைக்கப்பட்டது. நடிப்புத்திறன் வாய்ந்த இராமன் பிள்ளை, திருவனந்தபுரம் அரசர் கல்லூரி ஆசிரியர், மாணவர்கள் சில அதிகாரிகள் ஆகியோரோடுசேர்ந்து. தாம் எழுதிய இந்நாடகத்தில் நடிக்கவும் செய்தார். மலையாளத்தில் முதன்முதலாக நடிக்கப்பட்ட சமூக நாடகம் என்னும் சிறப்பும், உடன்காலச் சமுதாய வாழ்க்கையைத் திறனாயும் பாங்கில் அமைந்தது என்னும் சிறப்பும் இந்நாடகத்திற்குரியவாகும். இவர் கி.பி.1909-இல் 'குறிப்பில்லாக் களரி' என்ற ஒரு நகைச்சுவை நாடகத்தை இயற்றினார். இது ஆங்கில உரைநடை நாடக ஆசிரியர்களின் பாணியைப் பின்

பற்றி அமைக்கப்பட்டது. பின்னர்ப் 'பண்டத் தெப் பாச்சன்' (பழைய கறுப்பன்), 'கய்மளச்சன்றெ கடசிக்கை' (கைமளச்சனுடைய கடைசிக் கை) முத லான பல நகைச்சுவை நாடகங்களை இயற்றி யுள்ளார். இவர் தம் நூல்களுள் மார்த்தாண்ட வர்மா (1891), தர்மராசர் (1913), இராம ராசா பகதூர் (1920) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை கற்பனை கலந்த உண்மை கூறும் இயல்பின.

**இராமனதீச்சரம்** தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர், தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலத்திற்கு 5 கல் தொலை விலுள்ளது: திருநாவுக்கரசர் வீடுபேறெய்திய திருத் தலமாகிய திருப்புகலூருக்கு அண்மையில், முடி கொண்டான் ஆற்றினைக் கடந்து திருக்கண்ணபுரம் என்னும் வைணவத் தலத்திற்குப் போகும் வழியில் உள்ளது. ஈச்சரம் என்பது சிவன் கோயிலைக் குறிக் கும். இவ்வாறமையும் திருக்கோயிலின் பெயரே ஊர்க்குப் பெயராக வழங்குவதும் உண்டு. இது இராமன் சிவ பெருமானை வழிபட்ட தலம் என்று கூறப்படுகிறது. இராமன் வழிபட்ட சிவன் கோயில் உள்ள திருத்தலமாதலின் இது இராமனதீச்சரம் எனப்பட்டது. இறைவன் பெயர் இராமநாதன்; இறைவி பெயர் கருவார்குழலி. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் தேவாரப்பதிகம் உள்ளது. இங்குள்ள தீர்த்தம் இராமதீர்த்தம் எனப்படும்.

**இராமா கெமாங்கு** என்பவர் தாய்லாந்து நாட்டின் இடைக்கால அரசர்களுள் ஒருவர். இவர், கி.பி. 1275 முதல் கி.பி. 1317 வரை அரசராக இருந் தார். அக்காலத்தில் தாய்லாந்தைச் சுகோதாய் (Sukhothai) என்றனர். இராமா கெமாங்கு (Rama Khamheng) என்னும் சொல்லுக்கு மாவீரன் இராமன் என்பது பொருள். இவர் சுகோதாய் மரபின் முதல் அரசரான இந்திராதித்தியன் என்பாரின் இரண்டாம் மகன். இவர் தம் அண்ணனுக்குப் பின்னர் அரச ரானார். அரசரானதும் இவர் தம் தந்தையாரின் வெற்றிகளைத் தொடர்ந்தார்; அண்டையிலிருந்த அரசர்களைத் தம் உறுதுணைவர்களாக்கிக் கொண் டார்; அக்காலத்தில் சீனாவின் பேரரசராயிருந்த குப்ளாய் கான் (Kublai Khan) என்பாரிடம் தம் தூதுக்குழு ஒன்றினையும் பீக்கிங்கு நகரத்திற்கு அனுப்பிவைத்தார்.

இராமா கெமாங்கு, இராணுவ நடவடிக்கை யிலும் அரசியலிலும் திறமை பெற்றவராயிருந்த தோடு, தேரவாத புத்த சமயத்திலும் (Theravada Buddhism) கலைகளிலும் பேரார்வம் உடையவராக விளங்கினார். சீனாவிலிருந்து மட்பாண்டத் தொழி லாளர்களைச் சுகோதாய்க்குக் கொணர்ந்து செங்கற் சூளைகளை நிறுவிய பெருமை இவருக்குண்டு. இவரே தாய்லாந்தின் முதல் தாய் அகரவரிசையை (Thai Alphabet) உண்டாக்கியவர். இதனை இவர் அயல் எழுத்து வடிவங்களின் அடிப்படையில் உருவாக் கினார். இவர் காலத்தில் நாட்டில் பெருகிய வளத் தையும், நீதி நெறி தவறாது இவர் ஆட்சி நடத்திய பெருமையையும், கி.பி. 1292-இல் நாட்டப்பெற்ற கற்றூணிலமைந்த கல்வெட்டொன்று விளக்குகிறது. இக்கல்வெட்டில் காணப்படும் எழுத்தே தாய் மொழி யின் தொன்மையான எழுத்தாகும்.

**இராமா நந்தி** என்பது ஓர் இயக்கம். இதனை கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இராமா னந்தர் என்னும் பெரியார் தோற்றுவித்தார். இராமபிரான்மீதும் சீதையின்மீதும் கொண்டிருக்கும் காதலையும் பக்தியையுமே இராமானந்தர் வலியுறுத் தினார். இலக்குவன், அனுமன் ஆகியவர்கள்மீதும் அன்பும் பக்தியும் கொள்ள வேண்டுமென்று இவர் அறிவுறுத்தினார். இறைவனுக்கு முன்னர்ச் சாதி, சமயப் பூசல்கள் அனைத்தும் மறைந்துவிடக் கூடியவை என்று இவர் போதித்தார். இராமானந் தரின் தலையாய சீடர்கள் பன்னிருவருள் கபீர் முதன் மையானவர். இவரை முகமதியர் ஒருவர் வளர்த்த தாகக் கூறுவர்.

இராமாநந்திகளில் உள்ள துறவிகளைப் பைரா கிகள் என்றும், அவதூதர்கள் என்றும் கூறுகின்றனர். பைராகி என்பதற்கு ஆசைகளை அறுத்தவன் என்ப தும், அவதூதர் என்பதற்கு விடுதலையானவர் என்பதும் பொருள். இத்துறவிகள் வட இந்தியாவில் பல மடங்களை நிறுவினார்கள். இராமாநந்தர் எந்த ஓர் இயக்கத்தையும் உருவாக்க விரும்பவில்லை. அதனால், அவரை வழிபட்டவர்கள் இம்மடங்களில் மட்டும் இருக்கவில்லை. இராய்தாசர், சேனர் போன்றவர்கள் இராமானந்தரின் சீடர்களுள் சிலர்.

இராமானந்தர் மக்களின் தாய் மொழியையே பயன்படுத்தினார். இதன் விளைவாக கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் பக்திஇயக்கங்களில் பெரு மாற்றங்கள் நிகழ்ந்தன. துளசிதாசர் போன்ற கவிஞர் களும், மீராபாய் போன்ற பெண்பாற் புலவர்களும் இராமானந்தரின் இயக்கச் செல்வாக்கிற்குப் பின் தோன்றியவர்களே. இராமாநந்திகள் சாதி வேறு பாட்டில் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்களை இராமவதுக்கள் என்றும் கூறுவர்.

**இராமாமிர்த அரங்கநாதன் (கி.பி.1892-1972):** நூலகவியலில் தனிச் சிறப்புற்று விளங்கிய அரங்கநாதன் தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில்

உள்ள சீர்காழியின் அருகிலுள்ள உபயவேதாந்தபுரத்தில் (9.8.1892) பிறந்தார். இராமாமிர்த அய்யருக்கும் சீதாலட்சுமிக்கும் பிறந்த இவர், தம் ஆறாம் வயதில் தந்தையை இழந்து, பள்ளி ஆசிரியரான தம் பாட்டனாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.

அரங்கநாதன் அக்கால முறைப்படி இளமையிலேயே உருக்குமணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். உருக்குமணி அம்மையார் 1928-இல் இயற்கை எய்தினார். பின்னர்ச் சாரதா அம்மையாரை 1929-ஆம் ஆண்டு வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

அரங்கநாதன் சீர்காழியிலுள்ள சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளியில் 1908-ஆம் ஆண்டு வரை கல்வி பயின்றார். பின்னர், இவர் கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 1909-ஆம் ஆண்டு சேர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கினார். அரங்கநாதன் 1913-இல் பி.ஏ. பட்டப்படிப்பையும் 1916-இல் கணிதத்தில் பட்ட மேற்படிப்பையும் பயின்று தேர்ச்சி பெற்றார். பின்னர், இவர் 1917-இல் சென்னைச் சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலூரியில் கல்வி பயிற்றுவித்தலில் சான்றிதழைப் (Professional Certificate) பெற்றார். இவர் கணிதத்துறையில் பட்ட மேற்படிப்பை முடித்ததும் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியின் கணிதத் துறையில் 1921-ஆம் ஆண்டு உதவிப் பேராசிரியராகத் தம் ஆசிரியப் பணியினை மேற்கொண்டார்.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் நம் நாடு அன்னியர் ஆளுகையில் இருந்தது அவர்களுடைய கல்விக் கொள்கையின்படி சென்னையில் கி.பி.1857-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.. சென்னைப் பல்கலைக் கழகம் கி.பி. 1857-இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், 1907-இல் தான் அதற்கென்று தனி நூலகம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர்த் தக்க நூலகரை நியமிக்கப் பல்கலைக்கழகத்தார் எண்ணினர். அப்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அரங்கநாதனை, நூலகத் துறையில் சிறிதும் அனுபவமில்லாதவராகவிருந்த போதிலும், தக்கவர் இவரே எனக் கருதி, 1924-இல் சென்னைப் பல்கலைக்கழக நூலகராக நியமித்தனர். அரங்கநாதன் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் நூலகர் பணியைஏற்றுக்கொண்டதும்,இவர் தம்மை நூலகத்துறையில் தகுதிப் படுத்திக்கொண்டதால், அத்துறையில் முழுமையாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பும் தானாகவே கிட்டியது. நூலகத் துறையில் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பல்கலைக் கழகம் இவரைப் பயிற்சிக்கென்று இங்கிலாந்திற்கு அனுப்பியது. அதன்பின்னர்ப் பயிற்சியின் முடிவில் ஆனர்சு (Honours Certificate) சான்றிதழையும் பெற்றார்.

எல்லோராலும் 'நூலகமேதை' என்று அந்நாளில் போற்றப்பட்ட டபிள்யு. சி. பெர்விக்கு சேயர்சின் (W. C. Berwic Sayers) நூலகக் கருத்துகள் இவரை மிகவும் ஈர்த்தன. இவர் இங்லாந்தில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஏறத்தாழ நூறு நூலகங்களைப் பார்வையிட்டு, அவற்றின் அமைப்பு, செயல்திறன், படிக்க வருபர்களுக்கு ஆற்றிய தொண்டுகள் ஆகியவை குறித்து மிகவும் நுட்பமாக அறிந்து கொண்டார். அங்குள்ள கிராய்டன் பொது நூலகத்தில் நூலகப் பயிற்சியினையும் மேற்கொண்டார். அந்நூலகத்தில் நடைபெறும் பணியினையும் தெரிந்து கொண்டார்.

மேலை நாட்டு நூலகங்களின் சமுதாய உணர்வு இவரை மிகவும் ஈர்த்தது. இருப்பினும் அங்கும் பல்வேறுபட்ட பணிச் சிக்கல்கள், தொழில் முறை உத்திகள், வாய்ப்பு வசதிகள் முதலானவற்றில் குறைபாடுகள் இருத்தலை உணர்ந்தார்.

தாம் மேற்கொண்ட பணிக்குரிய பயணம் முடிந்து சென்னை திரும்பியபின் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தை முழுமையாகப் பயன்தரும் நூலகமாக மாற்றும் முயற்சியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார். நூலகத்துறையில் தாம் கற்ற அறிவையும், பெற்ற அனுபவத்தையும் ஆய்ந்து பார்க்கும் ஆய்வுக் கூடமாகச் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தைப் பயன்படுத்தி, மக்கள் நுகரும் நூலகமாக மாற்றினார்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் நூலகவியலுக்குரிய ஐந்து நூலகச் சட்டங்களை (Five Laws of Library Science) உருவாக்கிப் பின்னர், அவற்றை நூலாக வெளியிட்டார். மேலும் தொடர்ந்து நூல்களைப் பொருள்வாரியாகப் பாகுபடுத்தி அடுக்குவதற்காகக் கோலன் பகுப்பு முறையினையும் (1933) நூல்களைப் பட்டியலிடும் முறையினையும் (1934), நூலக ஆட்சிமுறையினையும் (Liberary Administration - 1935) இவர் நூலக்வியலுக்கு வழங்கினார்.

அரங்கநாதன் நூலகப் பயன்பாட்டுக்கு ஐந்து விதிகளை உருவாக்கினார். அவையாவன:

1. நூல்கள் படிப்பதற்கே (Books are for use).
2. ஆளுக்கு ஒரு நூல் (Every reader his/her book).
3. நூலுக்கு ஓர் ஆள் (Every book its reader).

4. வாசகர், நூலகப் பணியாளர் காலங் கருதுக (Save the time of the reader staff).
5. நூலகம் வளரும் ஓர் அமைப்பு (Library as Growing Organization).

அறிவியல் அடிப்படையில் அரங்கநாதன் உருவாக்கிய இந்த ஐந்து விதிகளின் செயல்முறையை அவரே தாம் பணியாற்றிய சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் செயற்படுத்தத் தொடங்கினார்.

அரங்கநாதனால் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட கோலன் பகுப்பு முறை நூலகத்துறையைச் சேர்ந்த பல மேநாட்டு அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒன்றாகும். இப்பகுப்புமுறை முன்பு கையாளப் பட்டிருந்த பகுப்பு முறைகளைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாகவும் தனித்தன்மையுடையதாகவும் விளங்கியது.

கோலன் பகுப்புமுறை பல்வேறு வகைப்பட்ட பொருள்களில் எழுதப்பட்ட நூல்களைப் பிரித்து, நூலகத்தில் அந்தந்தப் பொருளுக்குரிய இடத்தில் அந்தந்த நூல்களைச் சேர்த்து வைக்கவும், நூலகத்திற்கு வரும் படிப்பாளிகள் தாம் விரும்பும் பொருள் பற்றிய நூலை எளிதில் எடுத்துப் படிக்கவும், படித்து முடித்தபின் அந்த நூலுக்குரிய இடத்தில் அடுக்கி வைக்கவும், நூற்றொகை தயாரிப்பதற்கும் பெரிதும் உதவியாகஅமைந்தது. நூலகப் பொருட்பட்டி சீரிய முறையில் அமைய சங்கிலிக் சுட்டுமுறையும் (Chain Indexing) நூலகத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். கோலன் பகுப்புமுறை பற்றியும், சங்கிலிச் சுட்டு முறை பற்றியும் பல நூல்கள் எழுதியதோடு மட்டுமல்லாமல், பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னைப் புத்தகாலயச் சங்கம் 1928-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மூன்றாம் நாள் அறிஞர் பெருமக்களால் சென்னையில் நிறுவப்பட்டது. இச்சங்கத்தில் அரங்கநாதன் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

அரங்கநாதன் இந்திய நூலகக் குழுவின் தலைவராக 1944-ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். இக்கால கட்டத்தில் இவருடைய முயற்சியினால் சென்னைப் பொது நூலகச் சட்டம் (Madras Public Library Act) 1948-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும்,மக்களிடையே நூலக உணர்வினைத் தோற்றுவிக்கப் பல வழி முறைகளைக் கையாண்டார்.

வடஇந்தியாவில் காசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழக நூலகத்தின் நூலகராகவும், நூலகத்துறைத் தலைவராகவும் 1944-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை பணியாற்றினார். பின்னர்த் தில்லிப் பல்கலைக்கழக நூலகத்துறைத் தலைவராகவும் 1947-ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றினார். 1957-ஆம் ஆண்டு முதல் உச்சயினியில் உள்ள விக்கிரம் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகப் (Visiting Professor) பணியாற்றினார். இந்திய அரசு 1967-ஆம் ஆண்டு இவரை நூலகத் துறையின் தேசியப் பேராசிரியராக நியமித்துச் சிறப்பித்தது. பெங்களூரில் நிறுவப்பட்ட நூலக ஆராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பியற் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இந்தியப் பல்கலைக்கழக மானிய நிதிக் குழுவின் சார்பில் அரங்கநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டு நூலகத்துறைக்கு 1957-இல் பல்கலைக் கழகக் கல்லூரிக் குழு அமைக்கப்பட்டது. இவர் தலைமையிலமைந்த குழுவின் பரிந்துரையை முன் மாதிரியாக ஏற்றுக் கொண்டு பல்கலைக்கழக நூலகங்களும், கல்லூரி நூலகங்களும் சிறந்த முறையில் இயங்கத் தொடங்கின.

அரங்கநாதன் பேரரசு நூலகக் குழுவின் அங்கத்தினராக 1932-ஆம் ஆண்டு முதல் 1934-ஆம் ஆண்டுவரை இருந்தார். இவர் உலக அமைப்புகளான 'யுனெசுகோ' (UNESCO)நூலகச் சங்கங்கள் நிறுவனங்கள்(International Federation of Library Associations, International Standard Organizations) ஆகியவற்றிற்குத் தம் கருத்துரைகளை வழங்கியுள்ளார். ஐக்கிய நாடு(United Nations) நூலகக் கொள்கைளை உருவாக்கியதில் இவர் இன்றியமையாத இடத்தைப்பெற்றார். உலக ஆவணத்தர நிருணய முறைக்கு (International Standardisation of Documentation) இவர் பெரு முயற்சியுடன் உழைத்தார். உலக ஐக்கிய ஆவண அமைப்பில் (International Federation for Documentation) பல்வேறு அங்கங்களில் (FID, FID COUNCIL, FID COMMITTEE) துணைத்தலைவராகவும், மதிப்பியல் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார். இரண்டாம் உலகப் பகுப்பு ஆய்வுமாநாடு (Second International Conference on Classification Research) 1964-ஆம் ஆண்டு தென்மார்க் எசுக்கினோரில் (Denmark Eskinore) இவரை மதிப்பியல்தலைவராக ஏற்றுச் செயற் பட்டது.

அரங்கநாதனுக்கு, இந்திய அரசு 1935-இல் இராவ் சாகிபு (Rao Sahib) என்ற பட்டத்தினை வழங்கியது; தில்லிப் பல்கலைக்கழகம் 1948-இல் டி.லிட். (D.Litt) பட்டம் வழங்கியது; பீட்சுபர்கு (Pittusburg) பல்கலைக்கழகம் 1957-இல் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

மகாத்மா காந்தியின் காலத்தில் வாழ்ந்த அரங்கநாதன் உணவிலும் உடையிலும் காந்திய முறையைப் பின்பற்றினார். தம் வாழ்க்கையில் சிக்கனமாக வாழ்ந்து சேமித்த பணத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டார். 1925-இல் தாம் பயின்ற சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தம் கணிதப் பேராசிரியர் எட்வர்டு பிரோசு (Edward Bross) என்பவரின் பெயரால் கணித ஆய்வு மாணவருக்கான அறக்கட்டளையை (Mathematics Fellowship) ஏற்படுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா 1957-ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது பல்கலைக்கழகம் தன் பழைய மாணவர்களிடம் நன்கொடை வேண்டி அறிக்கை அனுப்பியது. அவ்வாறு அனுப்பப்பட்ட அறிக்கையினைப் பெற்ற டாக்டர் அரங்கநாதன் தம் வாழ்நாள் முழுவதும் சிக்கன வாழ்க்கையைக் கடைபிடித்துச் சேர்த்து வைத்த ஓர் இலட்சம் ரூபாயினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தம் மனைவி சாரதா அரங்கநாதன் பெயரில் அறக்கட்டளை நிறுவித் தனி நூலகத் துறையினை அமைக்க நன்கொடை அளித்தார். நிதியினைப் பெற்றுக் கொண்ட சென்னைப் பல்கலைக் கழகம் தனி நூலகத்துறையினை 1960-ஆம் ஆண்டு தொடங்கியது.

அரங்கநாதன் நூலகத்துறையைப் பற்றி ஒன்றுந் தெரியாத நிலையில் நூலகராகப் பதவி ஏற்று, நூலகத்துறையில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு, நூலகத் துறைக்குரிய எல்லாப் பிரிவுகளைப் பற்றியும் ஆராய்ந்து, பல அரிய நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். அவ்வாறு இவர் நூலகத்துறைக்கு வழங்கிய நூல்கள் நூலக அமைப்பு, நூலக ஆட்சி, பள்ளி கல்லூரி பல்கலைக்கழகங்களிலுள்ள நூலகங்களின் அமைப்பு முறை, நூலகப் புத்தகத் தேர்வு, குறிப்புதவி நூற்றொகை ஆகியன பற்றிச் சுமார் 50 நூல்களை எழுதியுள்ளார். நூலக இதழை 1956-ஆம் ஆண்டிலும் (Annals of Library Science) ஆவணச் சார்புடைய நூலக அறிவியல் இதழை (Library Science with a Slant to Documentation) 1965-ஆம் ஆண்டிலும் தொடங்கி, நூலக அறிவை எல்லோரிடமும் வளர்த்தார். அரங்கநாதன் வாழ்க்கையின் இறுதிக் காலம் வரை இளஞரைப் போலத் துடிப்போடு வாழ்ந்தார்; தமது 80-ஆம் பிறந்தநாளுக்குப்பின், 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம்நாள் காலமானர்.

பி.ஏ.மோ.

**இராமாயண அகவல்** பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரால் எழுதப் பெற்றது. இவர் தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தி லுள்ள பின்னத்தூரில் கி.பி. 1862-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர், அப்பாசாமி ஐயர், சீதாலட்சுமி அம்மையார் ஆவர். இவர் காலத்தவரான வேங்கடராமையர் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இராமாயண அகவல் நூல் எழுதப் பெற்றதாக இதன் முன்னுரையினாலும் உ.வே. சாமிநாத ஐயர் இந்நூலைச் சிறப்பிக்கும் முறையில் எழுதிய பாடலாலும் தெரிகிறது. இராம காதையை அகவற்பாவால் சுருக்கமாகக் கூறுகிறது இந்நூல். இதனுள் பாலகாண்டம் என்னும் பகுதியில், இராமன் பிறப்பு, வில்லொடித்தது, தயரதன்வருகை, சீதை திருமணம் ஆகியனவும், அயோத்தியா காண்டத்தில் காடேகல், தயரதன் இறப்பு, அந்திமக் கிரியை, பாதுகாபிடேகம் ஆகியனவும், ஆரணிய காண்டத்தில் பஞ்சவடியிருக்கை, சூர்ப்பணகை பங்கம், சீதையை எடுத்துச் செல்லல், பம்பையடைதல் ஆகியனவும் கூறப்பெற்றுள்ளன. கிட்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவன் முதலியோர் நட்பு, வாலி வதை, சேனைக் காட்சி, மயேந்திர மலையில் அனுமன் ஏறியமை முதலியனவும், சுந்தர காண்டத்தில் தேவியைக் காண்டல், அசோக வனம் அழிதல், இராவணனைக் காணல், கடற்கரை சார்தல் ஆகியனவும், யுத்த காண்டத்தில் வீடணன் சரணாகதி, இலங்கையை அடைதல், அதிகாயன் வதை, மேகநாதன் வதை, இராவண சங்காரம், முடிசூட்டல் ஆகிய பகுதிகளும் பேசப்பட்டுள்ளன. உத்தர காண்டத்தில் இராக்கதசரிதம், பழிச் சொற்கஞ்சுதல், இலவனாதியர் வதை, பரமபத வாழ்க்கை ஆகியன எளிய இனிய நடையில் அமைத்துக் கூறப்பெற்றுள்ளன. ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள உள்தலைப்புகள் ஒவ்வொன்றும் பதினெட்டு அடிகள் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. சிறிதே கற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் பாடல்கள் எளிமையாக அமைந்துள்ளன. வருணனை, கிளைக்கதைகள் ஆகியவற்றை நீக்கி நேரே கதையைக் கூறிச் செல்கிறார் ஆசிரியர். இந்நூல் 1914-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நற்றிணையின் உரையாசிரியரும் பதிப்பாசிரியருமாகத் திகழ்ந்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இதன் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ்வாசிரியர் 1914-ஆம் ஆண்டில் காலமானார்.

சு.சா.

**இராமாயணம்**, இந்தியத்துணைக்கண்டத்தின் தேசிய மரபு சான்ற கதையாகக் காலத்தை வென்று திகழும் இதிகாசமாகும். இது மக்களால் பன்னெடுங் காலம் தலைமுறை தலைமுறையாகக் கேட்கப்பட்டு வருகிறது. இக்கதை ஆசியாக்கண்டம் முழுவதும் பரவி, மொழி, பண்பாடு, நிலவியல் அடிப்படையில் வேறுபட்டுள்ள அவர்களை உணர்வு

அடிப்படையில் ஒன்றுபடுத்தியுள்ள பெருமைக்குரியது. அத்துடன் காலம், மொழி, இலக்கியம், சமயம், வயது, பொருளியல், கல்வி முதலிய உலகப் பொதுமைக் கூறுகளிலும் (Universal features) சிறந்து விளங்குகிறது.

இராமாயணக் கதை இலக்கியம், சமயம், தத்துவம், நாட்டுப்புறம் என்ற நான்கு நிலைகளில் வளர்ச்சி பெற்ற போக்குடையது. மக்களிடையே வழங்கி வந்த இராமன் கதைக்கு முதன்மை கொடுத்து, இலக்கியப்படுத்திப் பெரும் இதிகாசமாக உருவாக்கித் தந்தவர் வான்மீகி. முதலில் வட மொழியில் தோன்றிய இராமாயணம் காலப் போக்கில் பதினான்கு இந்திய மொழிகளிலும் காப்பிய வடிவமேற்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. இவை அனைத்தும் ஒரே இராம கதையைப் பேசினாலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தனிச்சிறப்புகளை உடையன. அதேசமயத்தில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறான பண்பாட்டுச் சூழலில் மாறுபட்ட சமயங்களைச் சார்ந்துதோன்றிய இவ்விராமாயணங்களிடையே சமுதாய, சமய, பாரம்பரிய வளர்ச்சி நிலையையும் காணமுடியும்.

வேதகால இராமாயணம்: முதன்முதலாக இராமாயணக் கதைக்குறிப்பு இருக்குவேதத்தில் காணப்படுகிறது. இந்திரனுக்கும் விருத்தாசுரனுக்கும் நடந்த போரினை விவரிக்கும் போது சீதை உழவர்களின் தேவதையாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள். இராமாயணக் கதை மாந்தர்களான இராமன், வசிட்டர், விசுவாமித்திரர், இட்சுவாகு, யயாதி, பரதன் ஆகியோர் பெயர்களும் இவ்வேதத்தில் சுட்டப்பட்டுள்ளன. ஆனால், இராமாயணக் கதை முழுமையாக அவ்வேதத்தில் காணப்படவில்லை.

சாதகக் கதைகளில் இராமாயணம்: புத்த மதத்தைப் பரப்பும் நோக்கில் பிராகிருத மொழியில் எழுந்த சாதகக் கதைகளிலும் இராமன் கதை காணப்படுகிறது. இந்தச் சாதகக் கதைகளின் காலம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று டாக்டர் வேபர் கருதுகிறார். அதாவது, வால்மீகியின் காலத்திற்கு முந்தியனவாகச் சாதகக் கதைகள் கணிக்கப்பட்டுள்ளன. 'தசரத சாதகம்' என்ற நூலே வால்மீகி ராமாயணத்திற்கு வித்தாக இருக்கவேண்டும் என்றும் டாக்டர் வேபர் கருதுகிறார். டாக்டர் தினேசு சந்திர சென் என்னும் ஆராய்ச்சி அறிஞரும் இதை ஒப்புக் கொள்கிறார். சாம சாதகம், வெசந்திர சாதகம், சம்புல சாதகம், இலங்காவதார சாதகம், தசரத சாதகம், அனமாக சாதகம், தசரதா கதனம் என்ற சாதகக் கதைகளில் இராமன் கதை கூறப்பட்டாலும் பின் மூன்று சாதகங்கள் இராமாயணத்துடன் மிகுந்த தொடர்புடையனவாகத் திகழ்கின்றன.

தசரத சாதகம்: 'பனாரசு' என்ற நகரை ஆட்சி செய்த தசரதன் என்ற மன்னனுக்கு இராமபண்டிதன், இலக்கனா குமாரன் என்னும் இரு ஆண்களும், சீதாதேவி என்னும் ஒரு பெண்ணும் தோன்றினர். தசரதன் பட்டத்தரசி இறந்தவுடன் இன்னொரு பெண்ணை மணக்கிறான். அவளுடைய மகன் பரதன். அவள் வேண்டுகோளின்படி பரதனுக்கு ஆட்சியும், இராமபண்டிதனுக்குப் பன்னிரண்டு ஆண்டு காடுறைவாழ்வும் கிடைத்தன. இராமபண்டிதனுடன் இலக்கனா, சீதா இருவரும் காட்டிற்குச் சென்றனர். இராமனை அழைத்துவரச் சென்ற பரதன் இராமபாதுகையுடன் திரும்பும்போது இலக்கனாவையும் சீதாதேவியையும் உடன் அழைத்து வந்தான். இராம பண்டிதன் காட்டில் இருந்து திரும்பி வந்தவுடன் சீதாவை மணந்துகொள்கிறான். இவ்வாறு கதை அமைந்துள்ள இத்தசரத சாதகத்தில் இராவணன் பற்றிய குறிப்பே காணப்படவில்லை.

அனமாக சாதகம்: இந்தச் சாதகத்தில் கதை மாந்தர்களின் பெயர் சுட்டப்படவில்லை. நாட்டை இழந்த அரசன் ஒருவன் காட்டில் வசித்தான் அப்பொழுது அவன் மனைவியை இழந்தான். குரங்குகளின் உதவியால் மனைவியைத் திரும்ப அடைந்து தன் நாட்டையும் பெற்றான். பின்னர் மக்கள் அவன் மனைவியின் கற்பில் ஐயங்கொள்ள, அவள் தன் கற்பை நிலைநாட்ட, பூமியை நோக்கித் தன்னை அழைத்துக் கொள்ளும்படி வேண்ட, பூமியும் அவளை அழைத்துக் கொண்டது.

தசரதா கதனம்: இதில் தசரதனுக்கு நான்கு மனைவியர்; நால்வருக்கும் முறையே இராமன், இராமனா, பரதன், சத்ருக்கனன் என்ற மக்கள் பிறந்தனர். மூன்றாம் மனைவிமேல் தசரதன் மிகுந்த ஆசை கொண்டிருந்தான். அவள் தன் மகன் பரதனுக்கு அரசைக் கேட்டாள். தசரதனும் அதை மறுக்கவில்லை. இராமனும் இராமனாவும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வசிப்பதற்காகச் சென்றார்கள். தன் மாமன் வீட்டிற்குச் சென்று திரும்பிய பரதன், தசரதன் மரணத்தை அறிந்தான். இராமன் காட்டிற்குச் சென்ற விவரம் அறிந்து தன் தாயை ஏசிய பரதன், காட்டிற்குச் சென்று இராமனை உடன்வருமாறு அழைத்தான். இராமன் மறுக்க, அவன் தோல் செருப்பை எடுத்து வந்து ஆட்சி செய்தான். இராமன் 12 ஆண்டுகள் கழித்து வந்து திரும்பவும் ஆட்சியை மேற்கொண்டான். இந்தச் சாதகக் கதையில் சீதை பற்றிய குறிப்பே இல்லை.

சமண இராமாயணம்: சமணர்கள் பிராகிருத மொழியில் இயற்றிய இராமாயண நூல்கள் புத்த சாதகக் கதைகள்போல் பழைமையுடையன அல்ல. விமலசூரி என்பவர் 'பவும சரித'த்தையும் (பத்ம சரிதம் என்று வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது), குணபத்திரர் என்பவர் 'உத்தர புராணத்தை'யும் இயற்றியுள்ளனர். இவ்விரு இராமாயணங்களிலும் இராமன், இலக்குவன், இராவணன் ஆகியோர் சமண மதத்தைச் சார்ந்தவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். பவும சரிதம் கி.பி.3-ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். இந்நூலில் இராவணன் ஒரு தலை உடையவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். இராவணன் அணிந்திருந்த வைரமாலை அவனைப் பத்துத்தலை உடையவனாகக் காட்டியதால், அதைக் கண்ட இராவணன் தந்தை அவனுக்குத் 'தசக்கிரீவன்' என்ற பெயரைச் சூட்டினான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்நூலில் அனுமன் இராவணனின் நண்பனாகச் சுட்டப்பட்டுள்ளான்.

உத்தர புராணம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினதாகக் கூறப்படுகிறது. இதில் சீதை இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்த மகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள். சீதை பிறப்பைக் கணித்த வானசாத்திர வல்லுநர்கள் அவளால் தீங்கு வரும் என்று கூற, அதைக் கேட்ட இராவணன் மாரீசனிடம் குழந்தையை ஒப்புவித்து நாட்டை விட்டு வெகுதூரத்தில் கொண்டு விட்டு வரச்சொல்ல, அவன் மிதிலையில் ஒரு சாக்கடையில் விட, சனகன் அவளைக் கண்டு எடுத்து வளர்த்தான் என்று கூறப்படுகிறது. இந்நூலில் இலக்குவன் கடுமையான காய்ச்சலினால் இறந்ததாகவும், அவன் நரகத்தைச் சென்றடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

சமணர்கள் வடமொழியிலும் இராமாயணக் காப்பியங்கள் செய்துள்ளனர். அவர்களுள் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இரவிசேனன் 'மகாராமாயண'த்தையும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஏமசந்திரன் 'திரிசட்டி சுலோகா புருட சரித'த்தையும், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தேவ விசயர் 'இராம சரித'த்தையும் எழுதியுள்ளனர்.

பௌத்த, சமண சமயங்களும் இந்து சமயமும் இராமாயணத்தைத் தங்கள் சமயம் பரப்பும் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன. சீதை இந்து சமயப்படி சனகரின் வளர்ப்புமகளும், சமண சமயப்படி இராவணன் மகளும், பௌத்த சமயப்படி தசரதன் மகளும் ஆவாள். சமயங்கள் தங்களுக்கென்று சில மரபுகளை ஏற்படுத்திக் கொண்டு, அம்மரபுப்படி இராமயணக் கதையை உருமாற்றிப் பயன்படுத்திக் கொண்டன.

வடமொழியில் இராமாயணம்:

வால்மீகிராமாயணம்: இராமன் கதை மக்களிடையே பரவக் காரணமாக இருந்தவர் வால்மீகி. முதலில் இராமன் கதைக்கு இலக்கிய வடிவம் தந்த இவரை 'ஆதிகவி' என்றும், இவர் இயற்றிய இராமாயணத்தை 'ஆதிகாவியம்' என்றும் போற்றுகின்றனர். ஆசியாக்கண்டம் முழுவதுமாகப் பரவியுள்ள இராமன் கதைக்கு வால்மீகிராமாயணமே அடிப்படையாகும். பிற்காலத்தில் வடமொழியில் பல காவிய, புராணங்களில் இராமன் கதை பேசப்பட்டாலும், இன்றளவும் எல்லா மொழியினரும் அறிந்து போற்றுவது வால்மீகிராமாயணமாகும்.

வால்மீகிராமாயணம் ஏழு காண்டங்களையும், 500 சருக்கங்களையும், 24,000 சுலோகங்களையும் கொண்டுள்ளது என்று வால்மீகியே பாலகாண்டம் நான்காம் சருக்கத்திலும், உத்தரகாண்டம் தொண்ணூற்று நான்காம் சருக்கத்திலும் கூறியுள்ளார். ஆனால், இன்று கிடைக்கும் மூன்று பதிப்புகளுள் தென்னிந்தியப் பதிப்பில் 643 சருக்கங்களும், கௌடியா பதிப்பில் 673 சருக்கங்களும், வடமேற்குப் பதிப்பில் 666 சருக்கங்களும் காணப்படுகின்றன. இவ்விராமாயணத்தை இராம சரிதம், சீதையின் சரிதம், பௌலஸ்தய வதம் (இராவணன் வதம்) என்னும் பல பெயர்களில் குறிப்பிடுகின்றனர். பொதுவாக, ஆய்வாளர்கள் வால்மீகிராமாயணம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டினதாக இருக்கும் என்று கருதுகின்றனர். வால்மீகி படைத்த இராமன் இட்சுவாகு குலத்தில் பிறந்த ஒரு வீறுசான்ற மனிதனே. வால்மீகிக்குப் பின்வந்தவர்களே அவனைத் திருமாலின் அவதாரமாக்கினர்.

வால்மீகிராமாயணத்தை வேதத்திற்குச் சமமானது என்னும் பொருளில் 'வேதசமா' எனக் குறிப்பிடுகின்றனர். வால்மீகி தம் இதிகாசத்தைத் 'த' என்று தொடங்கும் காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்தை வைத்து வரிசைப்படுத்தி ஓர் எழுத்துக்கு ஆயிரம் சுலோகங்களாக இருபத்துநான்கு எழுத்துகளுக்கு இருபத்துநாலாயிரம் சுலோகங்களை அமைத்துப் பாடியுள்ளார்.

மகாபாரதத்தில் இராமாயணம்: வியாசரின் மகாபாரதத்தில் மூன்றாம் பிரிவான 'வன பருவத்தில்' திரௌபதியை இழந்ததனால் வருந்திக் கொண்டிருக்கும் உதிட்டிரருக்கு மார்க்கண்டேய முனி கூறுவதாக 'இராமோபாக்கியானம்' (இராமன் பற்றிய கிளைக் கதை) அமைந்துள்ளது. இக்கதையில் இராமன் திருமாலின் அவதாரம் என்றும், சீதை சனகரின் சொந்த

மகள் என்றும் கூறப்பட்டுள்ளது. சீதை தன் கற்பை மெய்ப்பிக்கத் தீயில் புகுந்தமைபற்றி இக்கிளைக் கதையில் கூறப்படவில்லை. வால்மீகிராமாயண உத்தரகாண்ட நிகழ்ச்சிகளும் இதில் சுட்டப்படவில்லை. டாக்டர் சக்தன்கர் என்பவர் இக்கிளைக்கதை வால்மீகி ராமாயணத்தில் இருந்து தோன்றியிருக்க வேண்டும் என்கிறார். ஆனால், டாக்டர் ஆப்கின்சு, டாக்டர் ஏ. இலட்விக்கு என்ற அறிஞர்கள் இக்கதை வால்மீகிராமாயணத்திலிருந்துதோன்றியிருக்க வாய்ப்பில்லை; இது தனிப்பட்ட முறையில் தோன்றியிருக்க வேண்டும் என்கின்றனர். டாக்டர் சாக்கோபி முதலிய பிற அறிஞர்கள் இக்கருத்தை ஒப்புக் கொண்டு, வால்மீகிக்கு முற்பட்ட இராமாயணக் கதை இதற்கு அடிப்படையாக இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

வடமொழியில் வால்மீகிராமாயணம் தோன்றிய பின்னர்க் காவியம், புராணம், நாடகம் என்ற மூன்று வகையான இலக்கியங்களில் இராமன் கதை வளர்ச்சி பெறத் தொடங்கியது. இவை அனைத்திற்கும் வால்மீகிராமாயணம் அடிப்படையாக இருந்தாலும் அதிலிருந்து வேறுபட்டும் அமைந்துள்ளன.

காவிய இராமாயணங்கள்:

இரகுவம்சம் காளிதாசரால் இயற்றப்பட்டது. இதன் 9 முதல் 16 வரையிலுள்ள சருக்கங்கள் இராமன் கதையைப் பேசுகின்றன.வால்மீகி கதையை விரிந்த விடத்து இவர் குறுக்கியும், அவர் குறுக்கிய விடத்து இவர் விரித்தும், கருத்து வேறுபாடு வராமல் இருக்கச் சிலவிடங்களைத் தவிர்த்தும் கதை சொல்லப்பட்டுள்ளது.

பட்டி காவியம்: இதற்கு ‘இராவண வதம்’ என்ற பெயரும் உண்டு. பட்டி என்பவரால் எழுதப்பட்டது. இக்காப்பியத்தில் இராமன் கதை பிறப்பிலிருந்து அசுவமேதயாகம் வரை கூறப்பட்டுள்ளது. 22 சருக்கங்களும் 1625 சுலோகங்களும் உள்ளன. வடமொழியில் மிகச் சிறந்த மகாகாவியமாகப் போற்றப்படுகிறது.

சானகி அரனா குமாரதாசரால் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆறு காண்டங்களை உடையது. வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட நூல். ஆனால், சிற்சில இடங்களில் வால்மீகியிடமிருந்தும் வேறுபட்டுள்ளது. வால்மீகி அகலிகை சாம்பலானாள் என்று கூற, குமாரதாசர் கல்லானாள் என்று கூறியுள்ளது ஒரு சான்றாகும்.

இராமசரிதம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் அபிநந்தனால் எழுதப்பட்டது. வாலிவதத்திற்குப் பின்பு கார்காலம் வந்தது எனத் தொடங்கி இராவண வதம் முடிய இந்நூலில் கூறப்பட்டுள்ளது, இந்நூல் 40 சருக்கங்களை உடையது.

இராமாயண மஞ்சரி: இது சேமேந்திரன் என்பவரால் புராணநடையில் எழுதப்பட்டது; 6,000 சுலோகங்களைக் கொண்டுள்ளது.

தசாவதார சரிதம் காசுமீரில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செமேந்திரா என்பவரால் எழுதப்பட்டது. மிகச் சுருக்கமாக 294 பத்திகளில் இராமன் கதையை இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூல் இராவணன் செய்த கடுந்தவத்தையும், அதன் வாயிலாக அவன் பெற்ற வரங்களையும் கூறித் தொடங்குகிறது. சீதை இலக்குமியின் அவதாரம் என்றும், தாமரையில் பிறந்தவள் என்றும் சித்திரிக்கப்படுகிறாள். இராவணன் அவளைத் தன் வளர்ப்பு மகளாக்கிக் கொண்டான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இராமாயண பாரதம் கவிராசனால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இராமனின் பிறப்பு முதல் முடிசூட்டுதல் வரையிலான கதை இடம்பெற்றுள்ளது. இராமாயணக் கதை தொடர்ந்து அமையுமாறும், ஒவ்வொரு சுலோகத்திலும் பாரதக் கதை தோன்றுமாறும் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது.

இரகுவீர சரிதம்: மல்லிநாதரால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது 17 சருக்கங்களுடையது. இக்காப்பியத்தில் இராமன் காட்டில் முனிவர்களைக் காண்பது முதல் முடிசூடல் வரையிலான கதை இடம் பெற்றுள்ளது. பாலகாண்டக் கதை காட்டில் வாழும் முனிவர்களால் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டது. அனுமன் உரை மூலமாக இராம, இலக்குவரின் அங்க வருணனை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

உத்தரராகவ சகலியமாலா என்பவரால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலில் திருமாலின் அவதாரமாக இராமனும், ஆதிசேடன் அமிசமாக இலக்குவனும், சக்கரத்தின் அமிசமாகப் பரதனும், சங்கின் அமிசமாகச் சத்துருக்கனும் பிறந்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. தமிழில் கம்பரும் இவ்வாறு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இராமலிங்கமிர்தா அத்துவ்வைதா என்னும் புலவரால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. 18 சருக்கங்களைக் கொண்ட இந்நூலில் இராமனின் இளமைக்கால நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இராமன் தன் இறை உருவைக் கோசலைக்குக் காட்டியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இராவணனிடம் நாரதர் சீதையின் அழகை எடுத்துரைத்ததாக இந்நூல் கூறுகிறது.

தத்துவ சங்கிரகராமாயணம்: இது இராம பிரக்மானந்த சரசுவதி என்பவரால் எழுதப்பட்டது. இராமன் கதையைத் தத்துவ நோக்கோடு சமய உண்மைகளும் விளங்குமாறு எடுத்துரைப்பதால் இப்பெயர் பெற்றது. இதற்குத் 'தத்துவ சட்டிக ராமாயணம்' என்ற பெயரும் உண்டு.

இராமாயண சம்பூ: போசன் என்பவரால் எழுதப்பட்ட இந்நூல் சம்பூ காவிய வகையைச் சார்ந்தது. இந்நூல் 'போச சம்பூ' என்றும் 'சம்பூரண ராமாயணம் என்றும் வழங்கப்படும். காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

நாடக இராமாயணங்கள்: வடமொழி நாடகங்கள் பல இராமன் கதையைத் தழுவி எழுந்துள்ளன. பவபூதியின் 'உத்தரராமசரிதம்', 'மகாவீர சரிதம்', திங்நாகனின் 'குந்தமாலா', முராரியின் 'அநர்க்கராகவம்', சக்திபத்திரரின் 'ஆச்சரிய சூடாமணி', இராசசேகரரின் 'பாலராமாயணம்', பாசனின் 'பிரதிமா நாடகம்', 'அபிசேக நாடகம்', பீடனின் 'தூதாங்கதம்' அல்லது 'சாயா நாடகம்', அநுமானின் 'மகா நாடகம்' அல்லது 'அநுமந்நாடகம்', சயதேவரின் 'பிரசந்தராகவம்', இராமபத்திர தீட்சிதரின் 'சானகி பரிணயம்' முதலிய நாடகங்கள் இராமன் கதையைப் பின்பற்றி எழுந்தவையாகும்.

பவபூதியின் மகாவீர சரிதத்தில் சூர்ப்பணகை மந்தரையின் உடலில் புகுந்து, இராமனைச் சீதையுடனும் இலக்குவனுடனும் காட்டிற்கு அனுப்பும்படி சொல்லுகிறாள். மேலும், இந்நாடகத்தில் இராவணன் வேண்டுகோளின்படி வாலி தானாகவே இராமனிடம் போரிட்டு இறக்கிறான். 'ஆச்சர்ய சூடாமணி' நாடகத்தில் இராவணன் சீதையைத் தூக்கிப் போகும்போது அவன் இராமன் வடிவத்தில் வந்தான் என்பது கூறப்படுகிறது. சீதை தான் நல மாக மகப்பெற்றால் ஒவ்வொரு நாளும் குந்தமாலாவால் தங்கையை வழிபடுவதாக வேண்டிக்கொண்டாள் எனக் 'குந்தமாலா' நாடகம் கூறுகிறது. 'பிரதிமா' நாடகத்தில் கைகேயி தசரதனுக்கு முனிவர் இட்ட சாபத்தைப் போக்குவதற்காக இராமனைப் பதினான்கு நாட்கள் காட்டிற்குச் செல் எனக் கூற, அது வாய் தவறிப் பதினான்கு ஆண்டுகளாக வந்துவிட்டது என்பது கூறப்படுகிறது. 'சானகி பரிணயத்தில்' சீதையைத் தூக்கிப் போக வேண்டும் என்ற எண்ணத்துடன் விராதன் இராமவேடத்துடனும், இராமனைத் தூக்கிப் போகவேண்டும் என்று சூர்ப்பணகை சீதை வேடத்துடனும் வந்து, ஒருவரை ஒருவர் அறியாது இருவரும் பூக்கொய்யத் தொடங்கியபோது, சூர்ப்பணகை விராதன் கழுத்தில் ஏறிப் பூக்கொய்யத் தொடங்குகிறாள். இதை உண்மையான இராமனும் சீதையும் மலைமேல் நின்று பார்த்துப் பேசி மகிழ்கின்றனர். இவ்வாறு இந்நாடகங்கள் சில சுவையான மாறுபட்ட நிகழ்ச்சிகளை உள்ளடக்கியனவாகத் திகழ்கின்றன.

புராண இராமாயணங்கள்: வடமொழியில் தோன்றிய 18 மகாபுராணங்களிலும், 20 சிறுபுராணங்களிலும் இராமாயணக்கதை இடம்பெற்றுள்ளது. பதுமபுராணம், சிவபுராணம், சிவ மகா புராணம், சீமத் தேவி பாகவதம், நாரத புராணம், அக்கினி புராணம், கந்தபுராணம், கூர்ம புராணம், கருட புராணம், பிரமானந்த புராணம், பாகவதம் போன்ற நூல்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கன. இப்புராணங்களில் கூறப்படும் இராமகதைகள் வால்மீகி ராமாயணத்திலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றன. இம்மாறுபாட்டிற்குச் சமயத்தையும், வேறுபட்ட பண்பாட்டுச் சூழலையும் காரணமாகக் கூறமுடியும். பதுமபுராணத்தில் இராமன் அனுமனைக் கைலாய மலைக்கு அனுப்பி, கல் கொணர்வித்து சிவலிங்கம் உருவாக்கி வழிபட்டதாகவும்; சிவமகா புராணத்தில் சக்தி இராமனை ஆராய்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளன. பிரமானந்த புராணம் என்பது தான் அதியாத்ம ராமாயணம் என்று வழங்கப்படுகிறது. இதில் சிவன் பார்வதி உரையாடல் வாயிலாகக் கதை கூறப்படுகிறது. அற்புத ராமாயணம், சங்கிரக ராமாயணம், மந்திரராமாயணம், வசிட்டராமாயணம்போன்றனவும் புராண வகையைச் சாந்தனவே. இவற்றுள் ஆனந்தராமாயணம் ஒரு மாறுபட்ட குறிப்பு ஒன்றைத் தருகிறது. கோசலை தசரதனைத் திருமணம் செய்த காலத்து, இராவணன் அவளைக் கடத்திக் கொண்டு சென்றதாகவும் இராவணன் சீதை சுயம் வரத்திற்கு மிதிலை வந்ததாகவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு புராணங்களிலும் பல கதை மாறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழில் இராமாயணம்: தமிழில் தோன்றிய இராமாயணங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது கம்பராமாயணம். கம்பராமாயணத்திற்கு முன்பு இராமாயண நூல்கள் இருந்து அழிந்ததைப் பல்வேறு இலக்கணநூல் உரைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, இப்பகுதியைக் கம்பனுக்குமுன் இராமாயணம், கம்பராமாயணம், கம்பனுக்குப் பின் இராமாயணம் என்ற நிலையில் பிரித்துக் காணலாம்.

கம்பனுக்கு முன் இராமாயணம்: திருவள்ளுவமாலைச் சிறப்புப் பாயிரம் பாடிய பெருந்தேவனார், தமிழில் பாரதமும் இராமாயணமும் இருந்தமையைச்

சுட்டுகிறார். யாப்பருங்கல விருத்தி உரையால் பஃறொடைவெண்பாயாப்பில் இராமாயணம் ஒன்று இருந்ததை அறியமுடிகிறது. வீரசோழிய உரை வெண்பா யாப்பில் அமைந்த இராமாயணத்தையும், புறத்திரட்டில் இடம்பெற்றுள்ள ஆசிரியமாலை என்ற தொகை நூல் ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயணத்தையும் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பாக்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறும்போது, ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயண நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். சீபுராணம் என்னும் நூல் இராமசரித்திரம் விருத்தப்பாவிலும், ஆசிரியப்பாவிலும் இருந்தமையினைக் கூறுகிறது. தமிழில் சமண இராமாயணம் ஒன்று இருந்து அழிந்த குறிப்பும் அதில் சுட்டப்பட்டுள்ளது.

இவையேயன்றிச் சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் இராமாயண நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இராமன் குரங்கினத் தலைவர்களோடு கூடியிருந்து சூழ்ந்தபோது அவர்கள் அமர்ந்த இடத்திலிருந்த மரத்தின்மீது பறவையினங்கள் பேரொலி செய்தன; அப்பொழுது இராமன்தன் கடவுள் தன்மையால் அவற்றின் ஒலியை அடக்கினான் என்று அகநானூற்றுப் பாடலொன்று (70) கூறுகிறது. புறநானூற்றுப்பாடல் ஒன்றில் (378) அரக்கன் கவர்ந்து செல்லும் போது சீதையினால் நழுவவிடப்பட்ட அணிகலன்களைக் குரங்குகள் மாறி மாறி அணிந்துகொண்டு மகிழ்ந்தனவென்பது கூறப்பட்டுள்ளது. பரிபாடல் ஒன்று (19: 50–52) அகலிகையின் கதை திருப்பரங்குன்றக் கோயிலில் ஓவியமாக வரையப்பட்டிருந்த செய்தியினைக் கூறுகிறது. கலித்தொகையில் (38) இராவணன் இமயமலை எடுத்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

இராமன் அயோத்தியைவிட்டுப் பிரிந்துசென்றது போலக் கோவலன் புகாரை விட்டுச் சென்றான் என்று சிலப்பதிகாரம் (14:46–49) இராமன் கதையை உவமையின் மூலம் எடுத்துரைக்கிறது. இராமன் இராவணனை வெல்லும் பொருட்டுக் கடலை அடைக்க நினைத்தபோது, குரங்குகள் பெருமலைகளை எல்லாம் பெயர்த்து வந்து கடலுள் இட்டன என மணிமேகலை (17:9–12) சுட்டுகிறது. சிலம்பும் மேகலையும் இராமனை முறையே 'வேத முதல்வோன்' என்றும் 'நெடியோன்' என்றும் குறிப்பிட்டுத் திருமாலின் அவதாரமாகக் காட்டுகின்றன. தேவாரப் பாடல்களிலும் இராமாயணக் குறிப்பு உண்டு. திருஞானசம்பந்தர் தம் பதிகங்களின் எட்டாம் பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பைத் தந்துள்ளார். திருநாவுக்கரசர்பெரும்பாலானபதிகங்களின் இறுதிச் செய்யுளில் இராவணன் பற்றிய குறிப்பினைத் தந்துள்ளார். மேலும், அவர் திரு இராமேசுவரப் பதிகத்தில் இராமன் சிவனை வழிபட்ட செய்தியைக் கூறியுள்ளார். ஆழ்வார்களுள் பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர் இராமனின் அவதார மகிமையை விளக்கியுள்ளனர். இவர்களுள் பெரியாழ்வார் காகாசுரன் கதையையும் (வேலிக்கோல். பா.7) தொண்டரடிப் பொடியாழ்வார் அணில் இராமனுக்கு உதவிய சிறப்பையும் (திருமாலை.27) எடுத்துக்காட்டியுள்ளனர்.

கம்பராமாயணம்: சோழர் காலத்துப் புலவரான கம்பர் தம் இராமாயணத்தை ஆறு காண்டங்களில், 116 படலங்களில், 10436 பாடல்களில் இயற்றியுள்ளார். இராமனைத் திருமாலின் அவதாரமாகப் படைத்த இவர், தம் காப்பியத்திற்கு 'இராமாவதாரம்' என்ற பெயரையே நல்கினார். நாடகச்சுவை நோக்கிக் 'கம்ப நாடகம்' என்றும் இந்நூல் வழங்கப்படுகிறது. இன்றைய நிலையில் கம்பராமாயணம் எண்ணற்ற பாட பேதங்களையும், இடைச்செருகல்களையும் தாங்கி நிற்கிறது. கம்பர் தம் காப்பியத்திற்கு வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டாலும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்பக் கதையில் மாற்றங்களைச் செய்துள்ளார். பாலகாண்டத்தில் மிதிலைக் காட்சிப் படலம், சந்திரசயிலப் படலம், வரைகாட்சிப் படலம், பூக்கொய் படலம் ஆகியனவும், யுத்த காண்டத்தில் இரணிய வதைப் படலம், மாயா சனகப் படலம் ஆகியனவும் கம்பரின் தனிப்படைப்புகளாகும்.

கம்பனுக்குப் பின் இராமாயணம்: கம்பனுக்குப் பின்னும் சிலர் இராமன் கதையைத் தமிழில் வேறுபட்ட இலக்கிய வடிவங்களில் கூறியுள்ளனர். கம்பன் காலத்தவரான ஒட்டக்கூத்தர் 'உத்தரகாண்டம்' என்ற நூலை இயற்றியுள்ளார். கம்பருக்குப் பிற்காலத்தவரான அருணாசலக்கவி கீர்த்தனை வடிவில் இராமன் கதையைத் தந்துள்ளார். இது 'இராம நாடகக் கீர்த்தனை' என்று வழங்கப்படுகிறது. இராமலிங்க அடிகள் திருவருட்பாவில் 'ஸ்ரீராம நாம பதிகம்' பாடியுள்ளார். கோட்டையூர்ச் சுப்பிரமணிய அய்யர் 'இராமாயண வெண்பா' என்ற நூலை இயற்றியுள்ளார். இது ஆறு காண்டங்களையும், 9, 379 வெண்பாக்களையும் கொண்டுள்ளது. மதுரகவி சீநிவாச ஐயங்காரும் ஒரு 'இராமாயண வெண்பா' பாடியுள்ளார். சு. குமாரசாமிப் புலவர் 'இரமோதந்தம்' (Ramodantam) என்ற நூலையும், இராமசாமி அய்யர் 'இராமசாமியம்' என்ற நூலையும், அரங்கசாமி ரெட்டியார் 'இராமாயணத் திருப்புகழ்' என்ற நூலையும், வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் 'அகலிகை வெண்பா' என்ற நூலையும்,

கனகராசு அய்யர் 'இலங்கைப் பரணி' என்ற நூலையும், வேம்பு அம்மாள் 'இராமாயணக் கீர்த்தனை' என்ற நூலையும், முத்துசாமிக்கவிராயர் 'இராமாயணம்' என்ற நூலையும் தி.வேங்கடகிருட்டிணையங்கார் 'இராகவ காவியம்' என்ற நூலையும் இராமாயணத்தை ஒட்டிப் படைத்துள்ளனர். இவை தவிர, சங்கிரக ராமாயணம், சிரீராமாவதாராதி கால நிர்ணயம் என்னும் நூல்களின் கையெழுத்துப் படிகளும் கிடைக்கின்றன. இன்றைய கவிதை, நாவல், சிறுகதை, நாடகங்களும் இராமாயண நிகழ்ச்சிகளை அடியொற்றி எழுந்துள்ளன. நாட்டுப்புற வழக்கமாக மயில்ராவணன் கதை, தசகண்டராவணன் கதை, சிரீராமர் அசுவமேத யாகம், வாலி மோட்சம் ஆகிய கதைகளும் வழங்கி வருகின்றன.

தெலுங்கு இராமாயணம்: தெலுங்கு மொழியில் அரங்கநாதராமாயணம், பாசுகராராமாயணம், எர்ரன (Errana) ராமாயணம், அன்னமாசாரி ராமாயணம், கட்டவரதராசு ராமாயணம், மொல்லா ராமாயணம், கோபிநாதராமாயணம் எனப் பல இராமாயணங்கள் தோன்றியுள்ளன.

அரங்கநாத ராமாயணம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது அரங்கநாதரால் எழுதப்பட்டது என்றும், கோனாபுத்தரெட்டி என்பவரால் எழுதப்பட்டது என்றும் இருவேறு கருத்துகள் உண்டு. இந்நூல் 'திவிபதா' யாப்பில் 34,580 அடிகளில் அமைந்துள்ளது. அதனால், இது 'திவிபதாராமாயணம்' என்றும் குறிக்கப் பெற்றது. இவ்விராமாயணத்தில் இலக்குவன் கடவுளிடம் இரண்டு வரம் வேண்டிப் பெற்றான் எனக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று, தன் மனைவி ஊர்மிளை 14 ஆண்டுகள் உறங்கிக் கொண்டே இருக்கவேண்டும் என்பது. மற்றொன்று, தான் 14 ஆண்டுகளும் விழித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்பதாகும். இச்செய்தி பிற இராமாயணங்களில் காணப்படவில்லை.

பாசுகராராமாயணம் என்பதே காவியமாக எழுதப்பட்ட முதல் தெலுங்கு இராமாயணம். இது ஆறு காண்டங்களில் 6,081 பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இடையிடையே உரைநடை கலந்து வருகிறது. இக்காப்பியம் 'பாசுகரா' என்பவர் உட்பட்ட நால்வரால் எழுதப்பட்டது.

எர்ரன ராமாயணம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இது வால்மீகிராமாயணத்தை அடியொற்றியதாகும். இப்போது இந்நூல் கிடைக்கவில்லை. அன்னமாசாரி என்பவரால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது அன்னமாசாரிராமாயணம். இதற்கு 'இராமகதா' என்னும் பெயரும் உண்டு. இந்நூலும் இப்போது கிடைக்கவில்லை. ஆனால், இதன் ஏட்டுச்சுவடி ஒன்று தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் காக்கப்பட்டு வருகிறது. கட்டவரதராசு ராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்நூலும் திவிபதா யாப்பில் எழுதப்பட்ட மிகப் பெரிய நூல். அண்மையில் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இவை தவிர, பீமகவி 'இராகவ பாண்டவீயம்', 'சதகண்டராமாயணம்' என்ற நூல்களையும், சூரணர் 'இராகவ பாண்டவீயம்' என்ற நூலையும் இயற்றியுள்ளனர்.

கன்னட இராமாயணம்: கன்னட மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பொன்னன் என்ற கவிஞர் 'புவனைக இராமாப்யுதயம்' (இராமகதை) என்ற நூலை எழுதினார். இன்று இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்ல. நாகசந்திரன் என்பவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'இராமசரித புராணம்' என்ற பம்பராமாயணத்தை எழுதியுள்ளார். இது சமண ராமாயணமான விமலசூரியின் பவுமசரித த்தை அடியொற்றியதாக அமைந்துள்ளது. இந்நூல், கிட்கிந்தையில் வாழ்ந்தோர் மக்கள்; குரங்குகள் அல்லர்; குரங்குக் கொடியுடைய நன்மக்கள் என்றும், இராவணன் அரக்கன் அல்லன்; வானவூர்தியில் செல்லும் திறனுடைய, கொலை வேள்வியை எதிர்த்த நல்லரசன் என்றும் கூறுகிறது. குமார வால்மீகி 'தொரவெராமாயணம்' என்ற நூலை எழுதியுள்ளார். இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு. வால்மீகிராமாயணம் முழுவதையும் மொழிபெயர்த்த முதல் கன்னட காவியம் இதுவே. கன்னட மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ளது இந்நூல்.

முத்தணன் என்பவர் கி.பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'அற்புதராமாயணம்', 'இராம பட்டாபிசேகம்', 'இராமாசுவமேதம்' என்ற காவியங்களை இயற்றியுள்ளார். இவற்றில் அற்புதராமாயணம் உரைநடை நூலாகும். தூய தெளிவான பழங்கன்னடத்தில் எழுதப்பட்டது. இராம பட்டாபிசேகம் செய்யுள் நூலாகும். இந்நூலில் இராமனை எதிர்பார்க்கும் பரதனின் அன்புநிலை, உற்சாகம், ஆவல் போன்ற குணநலன்கள் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. 'இராமாசுவமேதம்' என்ற நூல் சேசராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டுள்ளது. சாலி இராமசந்திர ஐயர் 'இராமசரிதம்' என்ற காவியப் பகுதியை இந்நூற்றாண்டில் இயற்றியுள்ளார். இவை தவிர கனகதாசனின் 'இராமதான்ய சரிதம்' என்ற நூலும், நற்கண்டனின் 'குமாரராமசரிதம்' என்ற நூலும், ஆனந்த ராமாயணம், அனுமத் விலாசம், உத்தரராமாயணம் என்ற நூல்களும் இம்மொழியில் காணப்படுகின்றன.

மலையாள இராமாயணம்: தொடக்க கால மலையாள மொழிக் காப்பியமாகக் கிடைப்பதே 'இராமசரிதம்' என்பதுதான். இது 164 படலங்களை யும், 1,814 பாடல்களையும் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் சீராமன் என்று சிலரும், வேணாட்டு வீர இராமவர்மா என்று சிலரும் கருதுகின்றனர். இதன் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. கி.பி. 14-ஆம் நூற் றாண்டில் இராமபணிக்கர் 'கணசராமாயணம்' என்ற காவியத்தையும், எழுத்தச்சன் ''அத்யாத்ம ராமாய ணம்'என்ற காப்பியத்தையும் படைத்துள்ளனர். இதில் பின்னதே புகழ்பெற்றது. இது வடமொழி அத்யாத்ம ராமாயணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது. இதில் சீதை அயோத்திக்குத் திரும்பி வரும்போது குரங்குகளின் மனைவிகளைக்கண்டு அயோத்தி யில் நடக்கும் தங்கள் வெற்றிவிழாவில் கலந்து கொள்ளும்படி அழைத்தாள் என்பது கூறப்பட் டுள்ளமை சுவையான சித்திரமாகும். இதில் வாலி சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்து கொண்ட தாகக் காட்டப்படவில்லை. மாறாக வாலி சுக்கிரீ வன் மீது கொண்ட பகையே பெரிதுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. கேரளவர்மராமாயணம் என்ற நூலும் மலையாளத்தில் காணப்படுகிறது.

மராத்தி இராமாயணம்: மராத்தி மொழியில் புகழ்பெற்ற நூல் 'பாலவர்த்தராமாயணம்'. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஏகனாத்து என்பவரால் எழுதப்பட்டது. இந்நூல் வால்மீகிராமாயணம், அத் யாத்ம ராமாயணம், ஆனந்தராமாயணம் என்ற மூன் றையும் அடியொற்றி எழுதப்பட்டது. இந்நூற்றாண் டில் வாமன பண்டிதர் 'சீதா சுயம்வரம்' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார்.

ஒரியமொழி இராமாயணம்: ஒரிய மொழியில் புகழ்பெற்றது 'விசித்திர ராமாயணம்'. இது விசுவ நாத சூன்தியா என்பவரால் எழுதப்பட்டது. இந் நூலில் சீதை வேதவதியின் மறுபிறப்பாகக் கூறப் பட்டுள்ளாள். வேதவதியை இராவணன் தன் காமஇச் சைக்கு அடிபணியுமாறு வற்புறுத்தினான். அவள் அதை மறுக்க, இராவணன் வளைக் கொன்று விடுகிறான். நாடு திரும்பியபின் சிறிது காலம் கழித்து, இராவண னைப் பார்க்க வந்த நாரதர் இறந்த வேதவதியின் உடம்பு கேட்பாரற்றுக் கிடக்கிறது என்று கூறுகிறார். இராவணன் அவ்வுடம்பை எடுத்துவந்து மண்டோதரி யிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்கின்றான். சமைத்த அக்கறியை உண்ண விருப்பப்படாத இரா வணன் அதைக் கடலில் வீசிட, அது சீதையாக உரு வெடுக்கிறது. சனகர் அச்சீதையைக் கண்டு எடுத்து வளர்த்தார் என இந்நூல் கூறுகிறது. மேலும், இம் மொழியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சரளதாசர் என்பவர் விலங்காராமாயணமும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பலராமதாசர் ஓர் இராமாயணமும் இயற்றியுள்ளனர்.

குசராத்தி இராமாயணம்: நர்மத்து என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் 'இராமாயண சர்' என்ற நூலை எழுதினார். இதில் சீதை இராவணனை ஓவியமாக வரைந்தாள் என்பது கூறப்பட்டுள்ளது. இதனால் சினம் அடைந்த இராமன் சீதையைக் காட்டிற்கு அனுப்பினான் என்னும் செய்தி அமைந் துள்ளது.

இந்தி இராமாயணம்: சவுரசேனி அபபிரம்சம் (Shourseni Apabhramsha) என்ற தொடக்க கால இந்தி மொழியில் சுவயாம்புதேவர் என்னும் சமணர் 'பவும சரித' என்ற நூலை இயற்றினார். இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நூல் அவர் மகன் திரிபுவன தேவன் என்பவரால் முழுமைப்படுத் தப்பட்டது. பூபதி என்னும் கவிஞர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'இராமசரித ராமாயணம்' என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூல் இப்போது கிடைக்க வில்லை. கவி சூர்தாசு எழுதிய 'சூர் சாகர்' என்ற நூலுள் இராமகதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியை மட்டும் 'சூர் ராமசரிதம்' என்று குறிப் பிடுகின்றனர். இது வால்மீகியைப் பின்பற்றி எழுந்த நூலாகும். மேலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் முனிவர் 'இராம்பிரகாசு' என்ற நூலையும், கேசவதாசு 'இராமசந்திரிகா' என்ற நூலையும், சேனாபதி 'கவிதா ரத்னாகர்' என்ற நூலையும், துளசிதாசர் 'இராமசரித மானசு' என்ற நூலையும் எழுதியுள்ளனர். இவற்றுள் இராமசரித மானசு என் னும் துளசி ராமாயணம் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையே வாழும் பல கோடி மக்களைத் தன் பக்தி நலத்தாலும் எளிமையாலும் ஈர்த்த பெரு மைக்குரியது. இவ்விராமாயணம் சைவம், வைணவம் என்ற இருபெரு சமயங்களுக்கும் இணைப்புப் பால மாய் அமைந்துள்ளது. 'அவதி' என்று சொல்லப்படும் பேச்சு மொழியில் எழுதப்பட்ட இந்நூலில் இராமனும் அவன் பக்தர்களுமே முதன்மைப்படுத்தப்படுகின்ற னர். துளசிராமாயணம் கடல்கடந்தும் தன் பெரு மையை நிலை நாட்டியுள்ளது. 'யுனசுகோ' நிறுவனச் செய்தி அறிக்கை ஒன்று தெற்காசியாவின் சிறந்த புத்தகங்களுள் ஒன்றாகத் துளசிராமாயணத் தைக் குறிப்பிட்டுள்ளது.

பஞ்சாபி இராமாயணம்: குலோப்சிங் என்பவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அத்யாத்ம ராமா யணத்தையும், 19-ஆம் நூற்றாண்டில் பக்த காளிதாசர் ஓர் இராமாயணத்தையும் இயற்றியுள்

ளனர். இவ்விரண்டு மட்டுமே பஞ்சாபி மொழியில் இராமன் கதை பேசும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

வங்கமொழி இராமாயணம்: இராம கதையை வங்காள மொழியில் கூறியவர்களுள் முதன்மையானவர் கிருத்திவாச பண்டிதர். இவர் எழுதிய நூல் 'கிருத்திவாசராமாயணம்' என்றுகூறப்படுகிறது. மாலாதரர் என்பவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதிய சிகிருட்டிண விசயம் என்னும் நூல் இராமன் கதையையும் இணைத்துக் கூறுகிறது. மாதவசந்தர் என்பவரால் எழுதப்பட்ட இராமாயணத்துடன் சங்கர தேவர் என்பவர் 'உத்தர காண்டத்தை' இயற்றி அதனை முழுமைப்படுத்தியுள்ளார். பவானிநாதர் என்பவர் அத்யாத்மராமாயணத்தை அடியொற்றி ஒரு வரலாற்றுக் காப்பியம் இயற்றினார். நித்யானந்த ஆசாரியார் அற்புதராமாயணத்தை ஒட்டித் தம் இராமாயணத்தை இயற்றினார். இக்காப்பியத்தை இயற்றியதால் இவர் 'அத்புதாசாரியார்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

காசுமீரி இராமாயணம்: திவாகர் பிரகாசு என்பவர் காசுமீர மொழியில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் 'இராமாவதாரசரித்திரம்' என்ற நூலை எழுதியுள்ளார். இவ்விராமாயணம் வால்மீகி ராமாயணத்திலிருந்து மிகுந்த மாறுபாடுகளைக் கொண்டு திகழ்கிறது. இந்நூலிலும் சீதை இராவணனுக்கு மகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

மேலே குறிப்பிட்ட நூல்களைத் தவிர வேறு சில இராமாயணங்களும் இந்தியாவில் வழங்கப்பட்டு வருகின்றன. இலகுராமாயணம், பாரத்வாசராமாயணம், போதாயனராமாயணம், யோகவசிட்டராமாயணம், புசுண்டிராமாயணம், யாக்ஞவல்கியராமாயணம், சவனராமாயணம் என்னும் இராமாயணங்களின் வரலாற்றையும் தோற்றத்தையும் சிறப்பாக அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தியாவிற்கு வெளியே திபெத்தியன் இராமாயணம், இராம்கியான் (சியாம் நாட்டில் வழங்கப்படுவது), யாம் வீ (பர்மிய மொழி இராமாயணம்) போன்ற பல இராமாயண நூல்கள் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும்போது, இராமாயணக்கதை ஒன்றுதான் ஆசியநாட்டு மக்களை ஒட்டுமொத்தமாகக் கவர்ந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இராமன் கதை கேட்கவும் படிக்கவும் நடிக்கவும் சுவையானதாக அமைவதுடன், மிகப்பெரிய காப்பிய இலக்கிய வடிவிலும், சிறிய இலக்கிய வடிவிலும் எழுதுவதற்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இந்நெகிழ்வுத் தன்மை இராமாயண நூல் பெருக்கத்திற்கு மற்றொரு காரணமாக அமைகிறது.

இரா.பி.

**இராமாயண வெண்பா** வான்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழில் தோன்றிய இராமாயண நூல்களுள் ஒன்று. இராமாயண வெண்பா என்னும் பெயரில் கி.பி. 1930-ஆம் ஆண்டில் தோன்றிய இந்நூல் முழுதும் வெண்பா யாப்பில் அமைந்தது. இதன் ஆசிரியர். சு. சுப்பிரமணிய அய்யர். இவர் பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டையூரினர். கோட்டையூர் க.வீ. இராம.மு. இராமநாதன் செட்டியாரின் பொருளுதவியால் நூலாசிரியரின் முதல் மாணாக்கர் திரு.வேங்கடராம அய்யரால் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றது.

கம்பராமாயணத்தை அடியொற்றிக் காண்டப் பெயர்களும் படலப்பெயர்களும் அமைந்துள்ளன. இந்நூல் ஆறு காண்டங்களும், நூற்றுப்பதினைந்து படலங்களும், 9379 பாடல்களும் கொண்டது. கம்பராமாயணச் சொற்றொடர்களையும், எதுகை, மோனை, உவமைகளையும் இந்நூலின் பாடல் தோறும் காணலாம். யாப்பு ஒன்றுதான் மாறுபட்டுள்ளது. கம்பர் விருத்தத்தில் பாடியுள்ளார். இவர் வெண்பாவில் பாடியுள்ளார்.

கம்பர் திருமுடி சூட்டுப் படலத்தில் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் மரபில் வந்தவர்கள் திருமுடியினை எடுத்து, வசிட்டன் கையில் கொடுக்க அவர் அதனைப் பெற்று இராமனுக்கு முடிசூட்டினார் என்பர். இராமாயண வெண்பா ஆசிரியரும் தம் நூலில் முத்தையா மகனார் இராம வள்ளல் சார்ந்த முன்னோர் தந்த முடியை வசிட்டன் புனைந்தான் என்று கூறித் தன் நன்றியைப் புலப்படுத்தியுள்ளார்.

கம்பர் தாம் பிறந்த சோழ நாட்டை மறவாமல் வாய்ப்புள்ளபோது குறிப்பிடுவார். இராமன் அயோத்தியை விட்டு நீங்கியபோது 'காவிரி நாடன்ன கழனிநாடு ஒரீஇ' என்பர். இராமாயண வெண்பா ஆசிரியர் தாம் பிறந்த பாண்டிய நாட்டை அதே சூழ்நிலையில் குறிப்பிட்டுள்ளார். 'நன்னாடாம் வைகை புனை நாட்டை ஒத்த பொன்னாடு' என்று குறித்திருப்பது நினையத்தகும்.

கம்பராமாயணத்தில் சுவைத்து மகிழலாகும் சந்த வேறுபாடுகளை இராமாயண வெண்பாவில் காண இயலாது. செய்திக்கும் நிகழ்ச்சிக்கும் பாத்திரங்கட்கும் ஏற்ற வகையில் கம்பர் சந்தங்களை வேறுபடுத்திப் பாடியுள்ளார். ஆனால் இராமாயண வெண்பா ஆசிரியர்வெண்பா யாப்பில் பாடியுள்ளதால் சந்தவேறுபாடு காட்ட இயலவில்லை.

எல்லா வகையாலும் கம்பருக்கு இவர் கடமைப் பட்டிருந்தாலும் ஏறத்தாழப் பதினாயிரம் பாடல்கள் பாடுவது என்பது எளிய செயலன்று. அந்த அளவிற்கு நூலாசிரியர் சுப்பிரமணிய ஐயர் மக்கள் தம் பாராட்டிற்குரியவர்.

இனி இராமாயண வெண்பா என்ற பெயரில் ஒரு நூல் இருந்ததாகப் பேராசிரியர் மு.இராகவையங்கார் அவர்கள் (ஆராய்ச்சித் தொகுதி) குறிப்பிட்டுள்ளார். அக்நூல் கி.பி.15-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அந்நூல் கிடைக்கவில்லை. ஒரு சில பாடல்கள் மட்டில் பல திரட்டு என்ற சுவடியில் காணப்பெறுகின்றன என்பர். அ.வி.

**இராமானந்த சுவாமிகள்** ஒரு வேதாந்தி. இவர் அத்துவிதத்தில் நம்பிக்கையுடையவர். இறைவன் பற்றிய பிற கொள்கைகளை வன்மையாக மறுத்துரைக்கும் இயல்பினர். சங்கற்ப நிராகரணம் என்ற வேதாந்த நூலை இவர் இயற்றினார். இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்பர்.

இப்பெயரில் மற்றொரு சமயப் பெரியார் வாழ்ந்துள்ளார். இவர் 20-ஆம் நூற்றாண்டினர். இவர் பெயரில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில: சொரூப சித்தாந்த மாலை, மோட்ச சாதன விளக்கம் முதலியன.

நிச்சல இராமானந்த சுவாமிகள் என்ற மற்றொரு பெரியாரும் இந் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார்.

**இராமானந்தர்** கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சமயச் சீர்திருத்தப் பெரியார்களுள் ஒருவர். வட இந்தியாவில் வைணவ சமயத்தைப் பரப்பக் காரணமானவர்களுள் இவருக்குப் பெரும் பங்குண்டு. இவர் உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாது எனப்படும் பிரயாகையில் அந்தணர் குடும்பம் ஒன்றில் பிறந்தார்: பிரயாகையிலும் வாரணாசியிலும் கல்வி கற்றார்: வட இந்தியாவிலிருந்த அனைத்துப் புண்ணியத் தலங்களுக்கும் சென்று வைணவ சமயத்தைப் பரப்பப் பாடுபட்டார். இவர் இராமனையும் சீதையையும் வணங்கினார்; இராமனை விட்டுணுவின் அவதாரம் என்று கருதினார்; சாதி அமைப்பையும் உணவு உண்பதில் இருந்த தடைகளையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சாதி, சமய வேறுபாடின்றி அனைவரையும் தம் சீடர்களாக இராமானந்தர் ஏற்றுக் கொண்டார். காழ்ப்புணர்ச்சி சிறிதுமின்றி அனைத்துக் சாதி மக்களுக்கும் பக்தி இயக்கக் கொள்கைகளை இவர் போதிததார். இவருடைய சீடர்களுள் குறிப்பிடத்தக்கவர் பன்னிருவர். அவர்களுள் ஒருவர் நாவிதர்; ஒருவர் சக்கிலியர்; ஒருவர் இசுலாமிய நெசவுத் தொழிலாளி. இறைவன் முன்னர் அனைவரும் சமம் என்னும் கருத்தை இவர் விளக்கினார். தம் கொள்கைகளை எளிய மக்களுக்குப் போதிக்க இந்தி மொழியைப் பயன்படுத்திய முதல் சமயச் சீர்திருத்தவாதி இவரே ஆவார்.இதனால், இவரை எளிய மக்கள் விரும்பி ஏற்றனர். குறிப்பாகத் தாழ்ந்த வகுப்பு மக்களை இவர்தம் போதனைகள் பெரிதும் கவர்ந்தன. வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் தென் இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் பாலமாக அமைந்தவர் இராமானந்தர் ஆவார். வழிபாட்டை எளிமையாக்கி வாழையடி வாழையாக வந்த சாதிக் கட்டுப்பாடுகளிலிருந்து இடைக்காலத்தில் சமயச் சிக்கல்களைத் தீர்த்தது இவருடைய தலையாய நற்பணி என்று கூறலாம். இவருடைய சீடர்களுள் ஒருவரே கபீர்தாசர்.

**இராமானுச அய்யங்கார் (அரியக்குடி):** இவர் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த அரியக்குடி என்னும் ஊரில் 19.5.1891-இல் திருவேங்கடத்தையங்கார், நாச்சியார் அம்மாள் என்னும் செல்லத்தம்மாள் ஆகியோருக்கு மூன்றாம் மைந்தராகத்தோன்றினார். இளமையிலேயே இசையில் ஆர்வமுற்று விளங்கிய இவர் புதுக்கோட்டைத் திருமலையப்பர், நாமக்கல் நரசிம்ம அய்யங்கார், இராமநாதபுரம் அரசவைக் கலைஞர் பூச்சி சீனிவாச அய்யங்கார் ஆகியோரிடம் இசை பயின்றார்.

தொடக்க நிலையில் பூச்சி சீனிவாச அய்யங்காரோடு பாடி வந்த இவர், 1912-இல் தேவகோட்டையில் முதன் முறையாகத் தம் இசைநிகழ்ச்சியினைத் தனித்து அரங்கேற்றினார். திருவையாற்றுத் தியாகராசர் விழாவில் இவர் நீண்ட நேரம் பாட அனுமதிக்கப்பட்டார். ஒலிபெருக்கி இல்லாத அக்காலத்தில் இவர் அவையோர் பலரும் கேட்குமாறு பாடும் குரல் வளம் பெற்றிருந்தார். பல இசைச் சங்கங்கள் இவருக்கு 'சங்கீத ரத்னாகர', 'சங்கீதகலாநிதி' 'காயகசிகாமணி', 'காயகக்கண்டீவர' போன்ற பட்டங்களை வழங்கிப் பாராட்டின. இசை நிகழ்ச்சியில் தொய்வு இன்றிப் பாடும் இயல்பு கொண்ட இவரது குரல் நாகசுர ஓசை போன்று சிறந்து விளங்கும். 1947-இல் இந்தியக் கவின் கலை மன்றத்தினர் (Indian Fine Arts Society) 'சங்கீத கலாசிகாமணி' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கினர்.

இவர் 1952-ஆம் ஆண்டு சென்னை அருள்மிகு பார்த்தசாரதித் திருக்கோவிலில் திருப்பாவையை முதன் முறையாகத் தாமே இசை அமைத்து வருண மெட்டுடன் பாடினார். இசை உலகில் இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இந்திய அரசு 1952-ஆம் ஆண்டில் 'பத்மவிபூசன்' என்னும் சிறப்பு விருதினை வழங்கிச்சிறப்பித்தது. தமிழ்நாட்டுப் பாடகர்களுள் முதன் முறையாக இச்சிறப்பினைப் பெற்றவர் இவரே.

இவர் 1955-இல் முதன்முறையாகச் சென்னை வானொலியில் பாடினார். எளிய மக்களும் இசை இன்பம் பெற்று மகிழும்படி இசைத் தொண்டு புரிந்து வந்தார். தம்முடைய இசைத் திறமையால் கருநாடக இசையுலகில், 'அரியக்குடிப் பாணி' என்று சிறப்பித்துச் சொல்லும் அளவிற்குப் புகழ் பெற்றுத் திகழ்ந்தார். தோடி இராகமும், திருப்புகழ்ப் பாடல்களும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் இவர் தம் இசையரங்கங்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன. குரல் நலமும், இசை நுணுக்கமும் அமையப் பாடும் இவர், நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும் விளங்கினார்.

இவர் பொன்னம்மாள் என்பாரை மணந்து இல்லறம் நடத்தினார். கருநாடக இசைவல்லுநருள் ஒருவராக விளங்கி, இசைத் தொண்டு புரிந்த அரியக்குடி இராமானுச அய்யங்கார் 1967-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் காலமானார். இரா. கு.

**இராமானுச அய்யங்கார், தி.கி.** இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழறிஞர்களுள் ஒருவர். இவர் செந்தமிழ்ப் பத்திரிகையின் துணைப் பதிப்பாசிரியராக இருந்தார். அப்போது 1922 முதல் 1925 வரை பல திங்கள் ஐயம்பெருமாள் இயற்றிய புரூரவ சரிதையைப் படலம்படலமாக இதழ்களில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். புரூரவ சரிதை புரூரவ உற்பத்திப்படலம் என்றே தொடங்குகிறது. இந்நூலுக்குப் பாயிரம், நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவை இல்லை. இவர் பழனிக்கோவை என்னும் நூலினையும் செந்தமிழ்ப் பத்திரிகையில் 1938 சூலைத் திங்கள் முதல் எட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார். மேலுமிவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாப்பாவினம் என்னும் இலக்கண நூலினை நன்கு ஆராய்ந்து இலக்கணக் குறிப்புகள், பொருளகராதி ஆகியவற்றோடு பதிப்பித்துள்ளார். இந்நூலை மாறனலங்கார உரையாசிரியர் காரி இரத்தினக் கவிராயர் இயற்றினார் என்று சடகோப ராமானுசாச்சாரியார் தம் மாறனலங்கார வரலாற்றில் எழுதியுள்ளார். இவர் இதனைப் பல சான்றுகள் காட்டி மறுத்துத் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே பாப்பாவினம் என்னும் நூலை எழுதியவர் என்று தமது பதிப்புரையில் நிறுவியுள்ளார்.

**இராமானுசக் கவிராயர்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; பாண்டிநாட்டைச் சேர்ந்த இராமநாத புரத்தில் தோன்றியவர். பிற்காலத்தில் இவர் சென்னையில் வாழ்ந்து வந்தார். சிவஞான முனிவரின் மாணவராகிய இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளையிடம் தமிழ் பயின்றார். வைணவ அந்தணர் மரபில் தோன்றிய இவர், பல மேனாட்டுக்கிறித்தவ அறிஞர்களுக்குத் தமிழ் கற்பித்துள்ளார். அவ்வாறு இவர்பால் தமிழ் கற்ற மேலைநாட்டவர்களுள் துரு, தாம்சன் கிளார்க்கு, வின்சுலோ, இராசர்சு, போப்பையர் முதலியோர் அடங்குவர். கிறித்தவ சமயப் போதகர்களாக விளங்கி, இவர்பால் தமிழ் கற்ற மேனாட்டறிஞர் வேண்டுகோளுக்கிணங்கி இவர் நன்னூலுக்கு உரை எழுதினார்என்று தெரிகிறது. இந்நூல் முதன் முதலில் கி.பி. 1847-ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது இராமானுசவிருத்தி என்றும் காண்டிகை என்றும் வழங்கப்படுகிறது. சிறந்த உரையாசிரியராகிய இவர் திருக்குறள், நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களுக்கும் உரை வரைந்துள்ளார்.

இவர் பார்த்தசாரதிமாலை, திருவேங்கட அனுபூதி, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி, பச்சையப்ப வள்ளல் மீது பஞ்ச ரத்தின மாலிகை ஆகிய செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். இலக்கணச் சுருக்கம் என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார்.

ஆதி சங்கரர் 67 சுலோகங்களில் 'ஆத்மபோதம்' என்னும் பெயரில் வடமொழியில் எழுதியுள்ள நூலைத் தமிழில் 'ஆத்மபோதப் பிரகாசிகை'என்னும் பெயரில் மொழிபெயர்த்து, கி.பி.1840-ஆம் ஆண்டில் அச்சியற்றி வெளியிட்டார். வின்சுலோ உருவாக்கிய தமிழ் அகராதி நிறைவேறுதற்கு இவர் துணை புரிந்துள்ளார்.

போப்பையர், வின்சுலோ, சரவணப் பெருமாளையர், விசாகப்பெருமாளையர் முதலியோர் இவர்க்கு மாணவராவர். ஆசிரியராகவும் கவிஞராகவும் இலக்கண உரையாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கிய சிறப்பு இவருக்குண்டு.

**இராமானுச நாவலர், வே.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கவிஞருள் ஒருவர். இவர் கொங்கு நாட்டிலுள்ள கரடிவாவியைச் சேர்ந்தவர். தந்தையார் பெயர் வேங்கடப் பிரசங்கியார். இவர் தம் இருபத்தைந்தாம் அகவைக்கு மேல்

பல்வேறு இடங்களுக்கும் சென்று கற்று இலக்கண, இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றார். இவர் தாம் கற்றனவற்றைப் பிறர்க்கு அன்போடு வழங்கும் பெருமனம் படைத்தவர். காரமடைத் தல புராணம், சத்திரிய புராணம், சத்தியோபாய் சரித்திரம், சடா சன நியமனம் ஆகிய் நூல்களை இவர் எழுதியுள் ளார்.

இராமானுச நாவலர், வே.[2] கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப்புலவர்; புதுச்சேரியில் வாழ்ந்தவர். தந்தையார் பெயர் வேங்கடராம நாயுடு. இலக்கண இலக்கியப் பயிற்சியும், வடமொழிப் பயிற்சியுமுடைய இவர் வைணவ சமயத்தில் ஆழ மான பற்றுடையவர்.

இவர் சுதரிசன கிரி புராணம், திருச்சித்திரகூடப் புராணம் என்னும் இரண்டு புராண நூல்களைச் செய்துள்ளார். இச்செய்தி இவருடைய வரலாற்றுக் குறிப்பில் காணப்படுகிறது. சுதரிசனகிரி புராணம் 32 சருக்கங்களையும் 1068 பாடல்களையும் கொண்டது. வேதவியாச பரோக்தமாகிய வடமொழிப் புராண அடிப்படையில் எழுதப்பட்டது.

திருச்சித்திர கூடப் புராணம் 61 படலங்களையும் 4030 பாடல்களையும் கொண்டது. இது தில்லைத் திருச்சித்திர கூடத்தின் சிறப்புகளை எடுத்துரைக் கிறது. திருமுட்டபுராணம் என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். திருச்சித்திரகூடப் புராணம், திரு முட்டபுராணம் ஆகிய இரண்டும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் வலயமாதேவியிலுள்ள வேதநாராயணப் பெருமாள் கோயிலில் அரங்கேற்றப்பட்டன. சுதரி சனபுராணம் 1885-ஆம் ஆண்டில் திருக்கோவலூர்க் கண்ணன் திருக்கோயிலில் அரங்கேற்றப்பட்டது. 'சிரீ பாத மோத்திரம்' என்னும் வடமொழி நூலை இவர் மொழி பெயர்த்துள்ளார். தொண்டரடிப் பொடி யாழ்வார் பிரபாவம், பேரன் கூரத்தாழ்வான் பிர பாவம், ஆண்டாள் விசயம், வைணவ மங்கையர் வாழ்க்கைப்பாடு, சூர்ணவிளக்கம், அரிதூடண கபோல சபேடிகை, சச்சம்பிரதாய தரள மாலிகை, சாந்தபூடண சம்புடம், வைணவ கம்பீர சோதி, விலைமாதர் விளக்கம் முதலிய நூல் களை எழுதியுள்ளார். மேலுமிவர் புருடார்த்த தீபிகை, வைணவ தத்துவம், வைராக்கிய சூரியோ தயம், தேசிகன் திருப்பதிகம், மணவாள மாமுனிகள் திருப்பதிகம், எதிராச சதகம், நம்மாழ்வார் பஞ்ச ரத்தினம், பெருந்தேவித்தாயார் திருப்பதிகம், வரத ராசப் பெருமாள் திருமாலை, வரதராசப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி, பகவந்நாம சங்கீர்த்தனம். போற்றித் திருப்பதிகம் ஆகிய நூல்களையும் இயற்றி யுள்ளார். வைணவத்தத்துவம் என்னும் நூல் வைணவ சமய உண்மைகளை விளக்குவதாகும். இது அவ தாரிகையோடு ஆத்ம விவேகப் பிரகரணம் முதலான ஐந்து பிரகரணங்களையும் கொண்டுள்ளது.

**இராமானுச நூற்றந்தாதி**: தென் மொழி யையும் வட மொழியையும் நன்கு கற்ற இராமானுச ரால், உலகமும் உயிர்களும் இறைவனும் நித்தியம் என்னும் விசிட்டாத்துவிதம் மலர்ச்சி பெற்றது. இப் பெருமகனாரின் திருப்புகழை ஓதும் பிரபந்தமே இராமானுச நூற்றந்தாதி. இந்நூலின் திட்ப நுட்பம் கண்ட சான்றோர்கள் இதனை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற் சேர்த்தனர்.

இராமானுச நூற்றந்தாதி திவ்வியப் பிரபந்தத் தின் சாரமாக உள்ளது. இதனை உணர்ந்த வடிவழ கிய நம்பிதாசர், தமிழ் மறைகள் அனைத்தையும் வடித்த சாரத்து ஓங்கிய நூற்றந்தாதி என்று குரு பரம்பரையில் விவரித்தார்.

ஒருவன் அந்தணனாக வேண்டும் என்றால் காயத் திரி மந்திரத்தை முப்போதும் பயில வேண்டும். அது போல் ஒருவன் வைணவனாக வேண்டும் என்றால் இராமானுச நூற்றந்தாதியை அனுசந்திக்க வேண் டும். ஆதலால், இராமானுச நூற்றந்தாதியைப் பிர பந்த காயத்திரி என்று கூறுவர். 'எம்பெருமானார் திருநாமத்தில் முனிதந்த நூற்றெட்டு சாவித்திரி' என்று தனியன் பேசும். இதில் சாவித்திரி என்பது காயத்திரியைக் குறிக்கும்.

திருவரங்கக் கோவிலைப் பரம்பரையாகப் பாது காக்கும் உரிமை பெற்ற அணியரங்கத்தமுதனாரின் மகனாராகிய திருவரங்கத்தமுதனார் இந்த நூற்றந் தாதியை இயற்றினார். இவர் கி.பி. 13-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்தவராவார். இந்நூல் தெளிவும் ஒளியும் பெற்றுப் பொலிகிறது. பாடல்கள் ஒவ் வொன்றும் வைணவத் தத்துவத்தினை நுட்பமாகத் தெரிவிக்கும். இவ்வந்தாதி எம்பெருமானாரின் திரு வருட் பெருக்கையும், தத்துவ ஞானத்தையும், பெரு மிதத்தையும் பேசுகிறது.

வேதாந்த தேசிகர், 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று பாடியது இராமானுசரின் அனுபவ எதிரொலியே என்பதை அறிஞர் அறிவர். இக்கருத்தினைப் பலபடியாகத் திருவரங்கத்தமுத னார் இலக்கிய நயமுறப் பேசுகிறார். இவ்வந்தாதி யின் தொடக்கத்தில் இதனைத்தான் விளக்குகிறார்.

இராமானுசர் செல்வமாகவும் தாயாகவும் தந்தையாகவும் ஆசாரியனாகவும் திருமாலாகவும் திருவாய் மொழியைப் போற்றுபவர் என்பதனை

அமுதனார், 'உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும் வெளி தரு பூமகள் நாதனும் விளங்கிய சீர் நெறிதரு செந்தமிழ் ஆரணமே என்று அறிதர நின்ற இராமானுசன்' என்று நயமுறப் பாடுகிறார்.

இராமானுசர் திருக்குருகூரில் தோன்றிய நம் மாழ்வாரின் திருவாய்மொழியினைப் பத்தி என்னும் கருப்பக் கிருகத்தில் தெய்வமாக வைத்து வழிபாடு செய்பவர் என்பதனைத் தென் குருகைப் பிரான் என்னும் வேதப் 'பசுந்தமிழ் தன்னைத் தன் பத்தி என்னும் வீட்டின் கண் வைத்த இராமானுசன்' என்று பாடுவது நுட்பமானது.

'இராமாயணம் பயிலும் இடங்கள் தோறும் அனுமன் எழுந்தருளியிருப்பது போல, எங்கெல்லாம் திருவாய் மொழியின் மணம் உள்ளதோ அங்கெல்லாம் இராமானுசர் இருப்பார்' என்கிறார் அமுதனார்.

இராமானுசர் திருப்பாவையின்பால் கொண்ட ஈடுபாட்டினை 'அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமானுசர்' என்று நயமுறப் பாடுகிறார். இவர் போற்றிய ஆழ்வார்களைத் திருவரங்கத்தமுதனார் பத்திச் சுவை சொட்டக் குறிப்பிடுவது, ஆழ்வார்கள் வரலாற்றையும் அவர்களின் கால அடைவையும் உணர்த்தும் சான்றாக வுள்ளது.

வைணவ சமயம் தமிழ் மறையையும் வடமொழி வேதத்தையும் இரண்டு கண்களாகக் கருதிப் போற்றுவது. ஆதலால் வைணவ ஆசிரியர்களை உபய வேதாந்திகள் என்பர். அமுதனார், 'சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அற நெறி யாவும் தெரிந்தவன் இராமானுசன்' என்று குறிப்பிடுகிறார். இராமானுசரே! என் மனத்தைப் பொன் வண்டாக வளர்த்தேன். அது நும் திருவடித் தாமரையில் உள்ள தேனை அருந்த விரும்பிற்று. அதனைத் தங்கள்பால் விடுத்துள்ளேன். அதற்குத் திருவடித் தேனை வழங்குங்கள் என்று அமுதனார். வேண்டுவது பத்திச் சுவை நிரம்பியதாகும். அமுதனார் இராமானுசரை, செம்மை இராமானுசமுனி என்னும் மெய்யன் இராமானுசன் என்றும், புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி இராமானுசன் என்றும், உண்மை நன் ஞானம் உரைத்த இராமானுசன் என்றும், மெய்யைப் புரக்கும் இராமானுசன் என்றும், பேதைமை தீர்த்த இராமானுசன் என்றும் குறிப்பிடும் தொடர்கள் பத்தியின் விளைவுகளாகும்.

இராமானுச நூற்றந்தாதிக்கு மணவாளமா முனியும், பிள்ளைலோகஞ் சீயரும் விரிவுரை இயற்றியுள்ளனர். இந்த நூற்றந்தாதியை எறும்பியப்பரும், பிள்ளை லோகஞ் சீயரும் தம் நூல்களிலும் விரிவுரைகளிலும் மேற்கோள் காட்டுகின்றனர். திருவரங்கத்தில் மார்கழி மாதம் நடைபெறும் அத்தியயன விழாவின் இறுதியில் இராமானுச நூற்றந்தாதியைச் சேவிக்கும் மரபு இன்றும் உள்ளது. மறுநாள் அமுதனாரைப் பிரமரதத்தில் எழுந்தருளப் பண்ணி, வரிசைகளுடன் அவருடைய திருமாளிகையில் விட்டு வருவார்கள். வைணவ உலகில் இராமானுச நூற்றந்தாதி சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. எஸ்.கே. இரா.

**இராமானுசர்** சென்னைக்குத் தென்மேற்கே முப்பது கல் தொலைவிலுள்ள சீபெரும்பூதூரில் பூமிப் பிராட்டியாருக்கும் ஆசூரிகேசவப் பெருமாள் என்பாருக்கும் கி.பி. 1017-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள் மகவாகத் தோன்றினார். இவர் மனைவியின் பெயர் தஞ்சமாம்பாள். பூமி, கமலா என்போர் இவர் தம் சகோதரிகள்.

இவர் தம் தந்தை கேசவ சோமயாசியாரிடம் தொடக்கக் கல்வி பயின்றார். பின்னர், தம் தந்தையின் தோழர் திருக்கச்சி நம்பியிடம் பாடம் கேட்டார். அதன்பின் இவர் யாதவப் பிரகாசர் என்ற வேதாந்தியிடம் பயின்றார். ஆசிரியர் கொண்டொழுகிய அத்துவிதக் கொள்கை மாணவராகிய இராமாநுசரின் பக்திக் கொள்கைக்கு ஏலாது போகவே பிணக்கும் பகையும் ஏற்பட்டுப் பிரிந்தனர். பின்னர், இவர் பெரிய நம்பியிடம் பாடம் பயின்றார். திருவரங்கத்திலிருந்து பக்தி இயக்கத்தைப் பரப்பி வந்த ஆளவந்தாரைக் காணச் சென்று, அவர் காலமாகிய நிலையில், அவர் மூன்று விரல்கள் மடங்கியிருப்பதைக் கண்டு, அவர் பரப்ப நினைத்தவை மூன்று கொள்கைகள் என்று துணிந்து அவற்றைப் பரப்பும் செயலில் முனைந்தார்.

அக்கொள்கைகளாவன: வியாசமுனிவர் இயற்றிய பிரம்ம சூத்திரங்களுக்குப் பிரபந்தக் கொள்கைகளைப் பின்பற்றி வியாக்கியானம் செய்வது. 2) வியாசருக்கும் அவர் தந்தை பராசரருக்கும் நன்றிக் கடனாற்றுவது. 3) நம்மாழ்வாரைச் சிறப்பாக ஆழ்வார் குழாத்துப் பயிலச் செய்வது.

இவற்றைத் தெரிந்து கொண்டு, திருக்கோட்டியூர் நம்பியிடம் வைணவ மந்திரமாகிய மறை பொருளை அறிந்துகொள்ளச் சென்றார். அவர் இவரைப் பதினெட்டுத் தடவை சோதனை செய்து உயிர் போமளவில் ஏற்றுக் கொண்டார். திருக்கோட்டியூர் நம்பி, 'நமோநாராயணாய' என்னும் மந்திரத்தைச் செவிசாற்றியருளினார். அதனைக் கேட்ட இராமானுசர் அம்மந்திரப் பொருள் ஒரு சிலருக்கே

மறைபொருளாகி, அறிய அரிதாக இருத்தலை நோக்கித் தாம் அம்மறை பொருளைப் பலரறியக் கூறினால் நிரயம் வரும் என்ற கூற்றிற்கு மாறாக, தாம் நிரயம் புகுந்தாலும் எண்ணிறந்தோர் உய்யவிருக்கும் வாய்ப்பை உன்னிக் கோபுரத்தில் எறி எல்லோரும் அறியக் கூறி முழக்கமிட்டார்.

இவருக்கும் இவர் மனைவிக்கும் ஏற்பட்ட சாதியொழுக்கம் பற்றிய கருத்து மாறுபாட்டால் துறவியானார்.

இவருக்குச் சீடர் பலர்வாய்த்தனர்;அவர்கள்முதலியாண்டான், கூரத்தாழ்வான், யாதவப்பிரகாசர் (குருவே சீடரானார்), கோவிந்தன், அருளாளப் பெருமாள், நல்லான் சக்கரவர்த்தி, அகளங்க நாட்டாழ்வான், எச்சான், தொண்டையனூர்நம்பி, மருதூர் நம்பி, வில்லியாழ்வார், எம்பார், வடுக நம்பி, பொன்னாச்சி முதலியவராவர்.

இவர் திருக்கச்சி நம்பியிடம் கற்றனவாய ஆறு கொள்கைகளைக் கண்ணாகக் கொண்டு தாம் உணர்ந்த வைணவ சமயத்தைப் பரப்பினார். அவை, (1) திருமாலே பரம்பொருள். (2) சீவாத்துமாவிற்கும் பரமாத்துமாவிற்கும் உள்ள வேற்றுமையை உணர்வது. (3) சரணாகதியும் பரபத்தியுமே சிறந்த முத்தி என்றறிவது. (4) இறக்கும்போது மனத்தைக் கடவுளிடத்தில் ஒப்படைத்தலும் வேண்டாதது என்று கொள்வது. (5) உடல் அழியுங்கால் பாகவதர் உறுதியாக முத்தி பெறுவர் என்று நம்புவது. (6) பெரிய நம்பியைக் குருவாகக் கொள்வது ஆகியனவாம்.

இவர் திருவரங்கத்திலிருந்து செய்த பணிகள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கன, திருவரங்கக் கோயிலின் சிதைந்த மதில்களைச் செப்பனிட்டமை, வசந்தமண்டபங்கள், பூங்காக்கள் செப்பனிட்டமை, கோயில் வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்தியமை, மடப்பள்ளியில் காலம் தவறாது நிவேதன உணவுகளை அமைக்கவும் ஆராதனைக்கு ஆக்கவும் செய்தமை போன்றனவாகும். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைக் கோயில் வழிபாட்டுடன் இணைத்துப் பரப்பினார். இவர் இயற்றியனவாக உள்ள நூல்களுள் தலையாயது சீபாடியம். அது போதாயன விருத்தியை அடிப்படையாகக் கொண்டது.

இராமானுசரின் கொள்கை விசிட்டாத்துவிதமாகும். அது பிரமம் வேறு, ஆன்மா வேறு; ஆன்மா பிரமத்திற்கு உடலாக இருந்து, பிரமத்தின் சந்நிதான விசேடத்தால் மெய்யறிவு கைகூடப் பெற்று உலகினை முற்றத் துறந்து பிரமத்தின் மேல் பற்றுடைய தாய் வைகுண்டத்தை அடைந்து, பிரம்மசாரூபம் பெற்று இன்புற்றிருத்தலே முத்தி என்று கூறுவது.

உயிர்ப் பொருளையும் உயிரல்லாத பொருளையும் உடம்பாக உடைய பொருளின் அத்துவிதம் என்பதே விசிட்டாத்துவிதம் என்பதன் பொருளாகும். சித்து என்ற உயிர்ப் பொருளையும் அசித்து என்ற உயிரில்லாத பொருளையும் உடம்பாக உடைய பொருளல்லது பரம்பொருள் இரண்டில்லை; ஒன்றேயாகும் என்பதுவே விசிட்டாத்துவிதம் என்பதில் வரும் அத்துவிதத்திற்குரிய பொருளாகும். அதாவது, எல்லாம் ஒருங்கிணைந்த இரண்டற்றது என்பதாகும். அருளே இறைவன் வடிவம் என்பதும், அன்பே அடியவர்க்கு உரியது என்பதும் விசிட்டாத்துவிதத்தின் உட்பொருளாகும்.

இவரைப்பற்றி 'இராமானுசர் நூற்றந்தாதி' என்னும் நூலைத் திருவரங்கத்தமுதனார் என்பார் இயற்றியுள்ளார்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் வேதாந்ததீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாடியம், சரணாகதி சத்தியம், சீரங்க சத்தியம், சீவைகுந்த சத்தியம் என்பனவாகும்.

இவர் விக்கிரமசோழன் காலத்து வாழ்ந்தவர். இவர் நூற்று இருபது ஆண்டுகள் வாழ்ந்து வைணவ நெறியை நிலைபெறுத்தியவராவர். இவர் கி. பி. 1137-இல் மறைந்தார். காண்க: விசிட்டாத்துவிதம். கு.தி.

**இராமானுசர் தாலாட்டு:** மண்ணுலகில் வாழ்ந்த போதே பெரும்புகழ் பெற்றவர் இராமானுசர். இராமானுசரின் கருணைப் பெருக்கை ஞானிகளும் கவிஞர்களும் பக்தர்களும் பொதுமக்களும் உணர்ந்தனர். ஞானிகள் இராமானுசரின் மெய்நெறியைப் பின்பற்றி ஞானானுபவம் பெற்றனர். கவிஞர்கள் இராமானுசர் திருப்புகழைப் பிரபந்தங்களாவும் காவியங்களாகவும் இசைத்தனர். வடுக நம்பி இராமானுசரின் வரலாற்றை 'எதிராச வைபவம்' என்னும் வடமொழிக் காவியமாக இயற்றினார். திருவரங்கத்தமுதனார் அந்தாதி பாடினார். இராமானுசரின் திருப்புகழை உணர்ந்த மகளிர் தாலாட்டுகள் பாடிக் குழந்தைகளுக்குச் சாந்தமான உறக்கத்தை வருவித்தனர்.

மகளிர் இராமானுசர் தாலாட்டுப் பாடிய செய்தியைப் பின்பழகிய பெருமாள் சீயர், 'ஆறாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவத்தில்' பின்வருமாறு குறிப்பாகத் தெரிவிக்கிறார். 'ஒருநாள் கோவிந்தப் பெருமாள் எம்பெருமானார் அடியாள் வாசலிலே கால்ய

(கால) கர்மங்களையும் இழந்து நிற்கக் கண்டு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உடையவர் கோஷ்டியில் அத்தை வெளியிட, உடையவரும் கோவிந்தப் பெருமாளே நீர் அங்கே நிற்பானேன் என்ன, அவரும் தேவரீர் தாலாட்டு மதுரமாய் இசையேறிச் செவிக்கினிய செஞ்சொல்லாய் இருக்கத் தேவரீர் குணானுபவம் முன்னடி வலையக் கட்டப் போக்கடியற்று நின்றேன் என்று விண்ணப்பம் செய்ய ஸ்ரீவைஷ்ணவரும் தாலாட்டும் நடந்தது உள்ளது என்ன உடையவரும் இவர் பிராவண்யம் (பேரன்பு) இருந்தபடி ஏன் என்று உகந்தருளினார்' என்னும் பகுதி குருபரம் பரையில் காணப்படுகிறது.

மகளிர் பாடிய தாலாட்டு மறைந்துவிட்டது. ஆனால், அதன் சில தொடர்களைப் பன்னீராயிரப் படி குருபரம்பரை குறிப்பிடுகிறது. அவற்றுள் ஒன்று வருமாறு: 'அத்திரி சூழ் ஞாலம் அனந்தாவ தார மெனச் சித்திரையில் ஆதிரை நாள் வந்துதித்த தேசி கனோ.' எஸ்.கே.இரா.

**இராமானுசலு நாயுடு**, எசு.சி. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1886-இல் திருச்சியில் பிறந்தார். சீரங்கத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டார். இவர் தம் 18-ஆம் வயதிலேயே பாலபாசுகரன் என்னும் புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கினார். 'பிரசாநுகூலன்' என்னும் பெயரில் 1904-இல் ஒரு சொந்தப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். அதன் 25-ஆம் ஆண்டு நிறைவு விழாவினைச் சென்னையில் கொண்டாடினார். சேலம் நகரில்'திராவிடாபிமானி' என்னுமொரு பத்திரிகையை 1907-இல் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார். ஆனந்தகுண போதினி ஆசிரியராக 1926-இல் விளங்கினார். அப்பத்திரிகை பின்னர் 'அமிர்தகுண போதினி' எனப் பெயர் மாற்றம் பெற்றுச் சிறப்புற நடைபெற்றது. பணம், சரசுவதி என்னும் பெயர்களிலும் இவர் பத்திரிகைகள் நடத்தியுள்ளார். இவர் ஆனந்த கதாகல்பம், அதிசயசிந்தாமணி, கதிமோகனரஞ்சிதம், அமிர்தவல்லி போன்ற பல புதினங்களை எழுதியுள்ளார். கமலாபாய் கதை, பரிமளா, வித்தியாநவந்தம், சனகாமோகன சாதுரியம், நாகரிக பாரிசாதம், சுகுமாரதிலகம், ஆசையின் முடிபு, தகாதயுத்தி, காணாமற்போன ராகவலு, இரஞ்சித ரத்தினம், புராதன சரித்திர விவரங்கள் முதலியனவும் இவர் தம் நூல்களாகும். இவர் 1935-இல் திருவரங்கத்தில் காலமானார்.

**இராமேச்சுரக் கோவை** கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கோவைப் பிரபந்தங்களுள் ஒன்று. இராமேசுவரம் என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள இராமநாத சுவாமியின் மீது பாடப்பட்டது இச்சிற்றிலக்கியம். இதன் ஆசிரியர் கயாதர நிகண்டு என்னும் நூலை இயற்றிய கயாதரர் ஆவார். இராமேசுவரத்தினைச் சேர்ந்த இவர் அந்தணமரபில் தோன்றியவர்; சைவ சமயத்தவர்; வடமொழியிலும் தமிழிலும் புலமை நிரம்பியவர். இவர் கயாதர நிகண்டேயன்றி, தேவை அந்தாதி என்றொரு அந்தாதி நூலையும் இராமேச்சுரக் கோவை என்றொரு கோவை நூலையும் பாடிய செய்தியினைக் கயாதர நிகண்டின் இரு செய்யுட்களில் (402,566) குறிப்பிட்டுள்ளார். இவ்வந்தாதி அந்தாதி வகையிலமையும் பிரபந்தமாகவன்றி, ஒருவகை நிகண்டுத் தொகுப்பாக இருத்தல் கூடும் என்று கருதப்படுகிறது. தேவை என்பது இராமேசுவரத்தினைக் குறிக்கும் வேறு பெயர். இவ்வூர் இறைவன் மீது பாடப்பெற்ற இராமேச்சுரக் கோவை கயாதரச் செய்யுளில் 'தென் தமிழ்த் தேவை மன்னும் கோவை இராமீச்சுரக் கோவை' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையாகுமென்று எஸ். வையாபுரிப் பிள்ளை கருதுகிறார். இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

**இராமேசுவரம்** தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வங்கக் கடலில் அமைந்துள்ள இராமேசுவரம் என்னும் தீவில் அதன் வடபகுதியில் அமைந்துள்ள நகரம். இது இந்துக்களின் புனிதத் தலமாக விளங்கி வருகிறது. இந்நகரம் மதுரையிலிருந்து 144 கி.மீ. (90 மைல்) தொலையில் உள்ளது. இந்நகரைச் சென்னை — இராமேசுவரம் இருப்புப் பாதை வழிச் சென்றடையலாம். இத்தீவையும், தமிழகக் கரைப் பகுதியையும் பிரிக்கும் நீர்ப் பகுதியைக் கடக்கப்புகைவண்டி செல்லும் இருப்புப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. படகு செல்லுங்கால்திறந்து மூடும் பொறியியல் அமைப்புடைய அருமை கொண்டது இப்பாலம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்பையும் பெற்று விளங்குவது சேது என்று சிறப்பிக்கப்படும் இராமேசுவரம். இங்குள்ள கோயில் தொன்மையும் தெய்வத் தன்மையும் புகழும் மிக்கது ஆகும். இராமன் மனித வடிவம் எடுத்து இராம நாதரை நிலைநாட்டி வழிபட்ட தலம் இராமேசுவரம் எனக் கூறுவர். இராமன் இராவணனையும் அரக்கர்களையும் கொன்று, சீதையை மீட்டு வந்த போது அவர்களைக் கொன்ற பாவம் தீரச் சிவ வழிபாடு இயற்ற எண்ணிச் சிவலிங்கத்தைக் கோயில் கொள்ளுவிக்க, அனுமனைக் காசிக்கனுப்பி இலிங்கம் கொண்டுவர ஆணையிட்டான். அனுமன் திரும்பி வரக் காலக் கழிவு ஏற்பட்டதால் சீதையால் செய்



இராமேசுவரம் திருச்சுற்று மண்டபம்

யப்பட்ட இலிங்கத்தை நிறுவிப் பூசை செய்தான். அந்த இலிங்கமே இராமலிங்கம். இராமநாதர், அக் காரணத்தாலேயே இராமேசுவரர் எனப்பட்டார். அதன் காரணமாகவே இவ்வூருக்கு இராமேசுவரம் எனப் பெயர் வந்தது என்பது கூறப்படுகிறது.

இங்குள்ள இராமலிங்கசாமித் திருக்கோயில் இராமநாதபுரம் சேதுபதிகளால் கட்டப்பட்டது.இது கிழக்கு மேற்கில் 285 மீட்டர் நீளமும் தெற்கு வடக்கில் 215 மீட்டர் அகலமும் கொண்டதாக விளங்குகிறது. கோபுரம் அடித்தளம் முதல் உச்சிவரை கல்லாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. கிழக்கிலுள்ள ஏழுமாடக் கோபுரம் கி.பி. 1897-இல் தொடங்கப்பட்டு 1904-இல் கட்டி முடிக்கப்பெற்றதாகும். இக்கோவிலின் மேற்கு வாயில் 25 மீட்டர் உயரமுடையதாகவும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. இக்கோயிலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உத்திரங்கள் 49 அடி நீளமுள்ளவை. இவை கற்களினால் அமைந்தவை. கருவறை செதுக்கி மெருகிடப்பட்ட ஒருவகைக் கறுப்புக் கல்லால் அமைக்கப் பெற்றது. எல்லாவற்றிற்கும் மேலாக இக்கோயிலில் காணப்படும் சுற்று மதில்கள் 4000 அடி நீளமுள்ளவை. இந்தியாவிலேயே இக்கோயிலின் சுற்று மதில்களே நீளமானவை.

தலச்சிறப்பு: இராமலிங்கத்தைக் கோயில் கொள்ளுவிப்பதற்கு முன்னரே இராமேசுவரம் கந்தமாதான பருவதம் என்ற பெயரில் இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. முதல் சுற்றுமதிலில் அகத்தியலிங்கத்திற்கு எதிரிலுள்ள கந்தமாதானேசுவரர்என்ற இலிங்கம் இராமலிங்கத்திற்கு முன்னரே இருந்தது எனக் கூறுவாருமுளர். இராமேசுவரம் காசியைப் போன்று ஒரு புண்ணிய பூமி. இந்திய மக்கள் காசியையும் இராமேசுவரத்தையும் இணைத்தே பேசுவது நாடறிந்த ஒன்றாகும். காசிக்குப் போகும் பயணிகள் இராமேசுவரம் வருவதும் இராமேசுவரம் போகும் பயணிகள் காசிக்குப் போவதும் மரபாகும்.

சீக்கியர்களின் புனிதத்தலம் இராமேசுவரம். குருநானக்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இலங்கை செல்லும் வழியில் இங்குத் தங்கியிருந்ததற்கு அடையாளமாக ஒரு குருத்துவாரம் இங்குக் காணப்படுகிறது. இங்குக் கி.பி. 1885-இல் கட்டப்பெற்ற பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகத்தில் கிடைத்த கல்வெட்டொன்று இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவிற்கு வெளியிலுள்ள நேப்பாளமும் இராமேசுவரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இங்கு நேப்பாளிகளுக்கெனத் தனியே ஒரு புரோகிதர் இருந்து வருவதும், இக்கோயில் கருவறைக்குள் சென்று வழிபாடு செய்யும் உரிமை நேப்பாள நாட்டு மன்னருக்கு உண்டு என்பதும், நேப்பாளப் பிரதமர் குடும்பத்தைச் சார்ந்த திருமதி சாந்தினி இராமேசுவரம் கோயிலில் வாரக் கட்டளை நிறுவியுள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இங்கு 64 தீர்த்தங்கள் உள்ளன. இந்நாள் 54 தீர்த்தங்களே உள்ளன என்று கூறுவாருமுளர். சேது தீர்த்தம், அக்கினித் தீர்த்தம் இரண்டும் சிறப்பு வாய்ந்தவை எனக் கருதுகின்றனர். இராமன் இலங்கைக்குச் செல்லுங்கால் கடல் கடக்கக் கட்டிய அணை சேது எனப்படும். அவ்விடத்தில் அவன் தன் வில் முனையால் தோண்டிய தீர்த்தம் தனுக்கோடி என்று கூறப்படுகிறது. இது இராமேசுவரத்திலிருந்து தெற்கே சில கல் தொலைவில் உள்ளது. முன்பு இங்குச் செல்வதற்குப் புகைவண்டி வழி இருந்தது. மணல் மேவுதலிலிருந்து புகைவண்டி வழியினைக் காக்கும் அருமையாலும், புயலாலும் இப்பொழுது இங்கு இவ்வழி நீக்கப்பட்டது. பல கல் தொலைவு மணலில் நடந்து செல்வதன் அருமை நோக்கி இங்குத் தீர்த்த மாடச் செல்வது அருகியது. இராமேசுவரத்திலுள்ள இலிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இப்பதியினைப் போற்றிப் பாடித் தேவாரத் திருமுறைகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இறைவன் பெயர் இராமநாதர். இறைவி பெயர் பர்வதவர்த்தினி என்னும் மலை வளர் காதலி.

இராமேசுவரத்தில் அனுமன், சேதுமாதவர், பைரவர் போன்றோர்களுக்குத் திருக்கோயில்கள் உள்ளன. கிழக்குவாயில் வழியாகக் கோயிலுக்குள் நுழையும்போது காணப்படும் முதல் மண்டபம் சேதுபதி மண்டபமாகும். இதன் நீளம் 62 அடி; அகலம் 23 அடி; உயரம் 16 அடி. இதைக் கட்டி முடிக்க உரூபாய் 2,29,500 செலவாகியுள்ளது.இதில் 16 தூண்கள் உள்ளன. 64 திருவுருவங்கள் இவற்றில் காணப்படுகின்றன. பாசுகர சேதுபதியின் திருவுருவம் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது. அக்கினித் தீர்த்தக் கரையில் சிரீசங்கர மண்டபம் காணப்படுகிறது. இது காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளால் அமைக்கப்பட்டது. சுமார் 50 அடி உயரமுள்ள இம்மண்டபம் மூன்று தளங்களுடன் அமைந்துள்ளது. இம்மண்டபத்திற்கு எதிரில் உள்ள சுற்று மதிலினுள் நுழைந்ததும் தோன்றுவது ஆஞ்சநேயர் உருவமாகும். இந்தச் சிலை 500, 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. துவாதசி மண்டபத்தில் பாரத நாட்டிலுள்ள 12 சோதிலிங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. இராமேசுவரம் 12

சோதிலிங்கத் தலங்களுள் ஒன்றாகும். திருக்கோயிலின் மூன்றாம் சுற்று மதிலுக்குச் சொக்கட்டான் மண்டபம் என்பது பெயர். இதனைப் போன்ற மதில் உலகில் வேறு எங்கும் இல்லை. இதன் மொத்த நீளம் $\frac{3}{4}$ கல் ஆகும். இது உலக அதிசயங்களுள் ஒன்று. இது தமிழரின் கட்டடக் கலைக்குச் சிறந்த ஒரு சான்று. இதனைக் கட்டி முடிக்க 30 ஆண்டுகள் ஆயின. இம்மண்டபத்தில் 1212 தூண்கள் வரிசையாகப் பலரும் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு: இராமேசுவரம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதோர் பதியாகும். பல மன்னர்கள் இதன் மேல் படையெடுத்து இதனைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள விரும்பினர் என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 910-இல் இலங்கைச் சோழ மன்னனை வென்று, இராமேசுவரத்தைக் கைப்பற்றியதுடன் வெற்றித் தூணையும் நிறுவினான் என அவன் கல்வெட்டொன்று கூறுகிறது. கிருட்டிணேசுவரர் கோயிலையும் காண்டமார்த்தாண்டதித்யேசுவரர் கோயிலையும் அவன் கட்டினான் என உரிமை கொண்டாடியிருக்கிறார்கள். ஒய்சல நாட்டு மன்னனான விட்டுணுவர்த்தனன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இராமேசுவரத்தின்மீது படையெடுத்து வந்ததாகவும், பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனை மதுரை அரியணையில் அமர்த்துவதற்காகச் சிங்களப்படை இலங்கை தண்ட நாயகனின் தலைமையில் இராமேசுவரத்தில் இறங்கியதாகவும் ஆர்ப்பாக்கம் கல்வெட்டுக் கூறுகிறது. இலங்கையரசன் பராக்கிரமபாகுவின் மகன் நிசங்கமல்லா என்பவன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான் என்றும், அவன் இராமேசுவரத்தைப் புதுப்பித்தான் என்றும் செங்கற்பட்டுக் கல்வெட்டொன்று உறுதிப்படுத்துகிறது. இவன் இத்தலத்தைப் புதுப்பிக்கப் பெருந்தொகை செலவிட்டதால் இது நிசங்கமல்லேசுவரம் எனப் பெயர் பெற்றதென வரலாறு கூறுகிறது.

ஒய்சல நாட்டு மூன்றாம் வல்லாளன் இராமேசுவரத்தையடைந்ததுடன் பாலத்தின் நுழைவாயிலில் தூண் ஒன்றையும் நிறுவினான். இலங்கை வேந்தன் பராக்கிரமபாகு கி.பி. 1170-இல் பாண்டிய அரசனான பராக்கிரமனுக்கு உதவப் பெரும்படை திரட்டி வந்தான். அச்சமயம் சிவன் கோயில் ஒன்றைக் கட்ட இலங்கை மன்னன் ஏற்பாடு செய்தான் என்பதும், சிங்களப் படைவீரனான இலங்காபுரத்தண்டநாயகன் புத்தக் கோயிலும் அமைக்க அடிகோலினான் என்பதும் கூறப்படுகின்றன. மதுரையில் சுல்தானியர் ஆட்சியினைச் சிதறடித்து, இந்து அரசினை நிலைநிறுத்திய விசயநகரப் படைத்தலைவரான குமாரகம்பன்னன் கி.பி. 1371-இல் இராமேசுவரம் சென்று வணங்கினான் என வரலாறு கூறுகிறது. இவன் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புல்லாணி விட்டுணு ஆலயத்திற்கு நன்கொடை வழங்கியுள்ளான் என்றும் தெரியவருகிறது. பேரரசர் கிருட்டிண தேவராயர் வருகை தந்த புனிதப் பதிகளுள் இராமேசுவரமும் ஒன்று. ஏறத்தாழக் கி.பி. 1549-இல் போர்ச்சுகீசியர் இராமேசுவரத்திற்கருகில் மண்ணாலான கோட்டையொன்றை எழுப்பியதுடன் இந்துசமயப் புனிதப் பயணிகளை அவ்வாலயத்திற்குள் செல்லவிடாது தடையும் செய்துள்ளனர்.

இராமநாதபுரம் சேதுபதிகள் இவ்வாலயத்தின் பாதுகாவலர்களாக இருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் பல கோடி உரூபாயை வாரி வழங்கியுள்ளனர். அவர்கள் கி.பி.1606-ஆம் ஆண்டுச் செப்பேட்டின்படி இராமேசுவரத்திற்கு ஐந்து கிராமங்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். மேலும், அவர்கள் கி.பி. 1607-இல் பாம்பனுக்கருகில் கோயில் பூசை, படையல் முதலியவற்றிற்காக ஏழு கிராமங்களையும் வழங்கியுள்ளனர். திருமலை உடையான் சேதுபதி கி.பி. 1608-இல் கிடைத்த செப்பேடு ஒன்றில, சேதுவின் காவலன் என்றும் அறநிலையத்தின் பாதுகாவலனென்றும் தன்னைத்தானே குறிப்பிடுவது நோக்கத்தக்கது. இவன் காலத்தில்தான் இராமலிங்கேசுவரர் ஆலயம் பழுதுபார்த்தல், கோடிதீர்த்த மண்டபம் கட்டுதல் ஆகிய பணிகள் செவ்வனே நடைபெற்றன. இன்றும் அவர்கள் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

இத்தலத்திற்கு நிரம்ப அழகிய தேசிகரால் இயற்றப்பட்ட சேதுபுராணம் என்னும் ஒரு தல புராணம் உள்ளது. இத்தலம் இமயம் முதல் சேது வரை பரவி விளங்கும் பாரத நாட்டின் ஆன்மீக ஒற்றுமையை உணர்த்தி, நிறுவும் தலமாகத் திகழ்கிறது. க.பு.சீ.

**இராமையர்** என்பார் கி.பி. 1623-ஆம் ஆண்டு முதல் 1656-ஆம் ஆண்டு வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரிடம் தளவாயாக விளங்கியவர். இவர் மதுரையை அடுத்துள்ள கூத்தியார்குண்டு என்னுமூரில் பிறந்தார். அந்தண மரபினைச் சார்ந்த இவர் இராமையன், இராமப்பையன் எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் சேதுபதி சடைக்கத் தேவர் ஆவார். இச்சேதுபதி மீது திருமலை நாயக்கர் போர் தொடுத்த போது, இராமையர் சேனாதிபதியாக அணிவகுத்துச் சென்று, மன்னரைச் சிறைசெய்து கொண்டு வந்தார்

சேதுபதி, முன்னமே திருமலை நாயக்கருடைய சேனையை முறியடித்து வெற்றி கண்டவர். இருந்தும், இவர்மீது போர் தொடுக்க நாயக்கரிடமும், தன் தமையன் வைத்திய நாதனிடமும் இராமையர் அனுமதி கேட்டார். அவர்கள் முன்னர் மறுத்துப் பிறகு மிகவும் எச்சரித்து, அனுமதி வழங்கினார்கள்.

இராமையர், மதுரை மீனாட்சி அம்மையையும் சொக்கலிங்கப் பெருமானையும் வணங்கிப் பாளையக்காரர்களுடன் புறப்பட்டுச் சென்று, மானாமதுரையில் தங்கியிருக்குங்கால், இச்செய்தி அறிந்த சேதுபதி மிகச் சினந்து, தம் மருமகன் வன்னியனைப் படையுடன் அனுப்பினார். அரியாலூரிக் கோட்டையில் போர் நடந்தது. வன்னியன் படையே முதலில் வெற்றியடைந்தது. போகலூர்க் கோட்டைப் போரிலும் வன்னியனே வெற்றி பெற்றான். ஆனால், அயர்வுறாத இராமையர் அரியாசையாபுரத்தை முற்றுகையிட்டார். இதில் சேதுபதி காயமுற்று இராமேச்சுரத் தீவினை அடைந்தார்.

அப்போது திருமலை நாயக்கரிடமிருந்து வந்த ஓலையின்படி இராமையர் மதுரை அடைந்து, அவர் ஆணைப்படி வடக்கே விசயநகரத்தே இராயருக்கு உதவியாகப் படையுடன் சென்று, போர்புரிந்து, வெற்றி தேடித் தந்தார். பரிசுகள் பெற்று, மதுரை வந்து, மறுபடியும் சேது நாடு சென்று, போகலூர்க் கோட்டையை முற்றுகை இட்டார். அப்போது மன்னர் மகனைச் சித்திரவதை செய்து கொன்று விட்டார்.

பிறகு, இராமேசுவரத் தீவிற்கும் பாம்பனுக்கும் அணைகட்டி, வெள்ளையரின் உதவியுடன் இராமையர் போரிட்டார். அப்போது வன்னியனுக்கு அம்மை நோய் கண்டது. அதுகண்டு கோபமடைந்த சடைக்கன் அபிசார வேள்வி செய்து, இராமையருக்குப் பிளவை தோன்றச் செய்ததாகக் கூறப்படுகிறது.

இருந்தும், இராமையரும் அம்மை நோயுடன் வன்னியனும் போரிட்டனர். வன்னியன் வெற்றி பெற்று அரண்மனை சென்று உயிர்விட்டான். பிறகு சேதுபதி சடைக்கத்தேவர் இராமப்பையரிடம் சரணடைந்தார். இராமப்பையர் அவரைச் சிறை செய்து மதுரைக்குக் கொண்டுவந்தார். இதற்காக இராமையர் பரிசுகள் பெற்றார். சடைக்கன் சிறையில் கடவுளை வேண்டத் தளைகள் அறுபடக்கண்ட திருமலை நாயக்கர், அவரை விடுதலை செய்தார். சேதுபதி சடைக்கத்தேவர் மீண்டும் சேதுநாட்டிற்கு அரசரானார்.

இராமப்பையர் தாம் பிறந்த ஊரில் ஒரு சிவன் கோயில் கட்டியுள்ளார். இவரது உருவம் அச்சிவன் கோயில் கற்றூண் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது இவ்வரலாறு தஞ்சைச் சரசுவதி மகால் வெளியீடான 'இராமையன் அம்மானை' என்னும் நூலில் காணப்படுகிறது. வீ. சொ.

**இராமையா, பி.எஸ்.** அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டு என்னும் ஊரில் 1905-இல் பிறந்தார். தந்தையார் ஆத்தூர் சுப்பண்ணா என்ற சுப்பிரமணிய ஐயர்; தாயார் மீனாட்சி அம்மாள். மதுரைச்சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் கல்வி பயின்றார். ஒன்பதாம் வகுப்போடு படிப்பு முற்றுப் பெற்றது. 1921 முதல் 1930 வரை நிலையான வருவாய் தரும் ஏதேனும் ஒரு வேலையைத் தேடுவதே இவரது வேலையாயிற்று. எங்கும் நிலையின்றி அவ்வப்போது கிடைத்த அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டார். போராட்டம் மிக்க இவரது வறுமை வாழ்வு பல்வேறு வகையான அனுபவங்களை இவருக்கு வழங்கியது. அவ்வனுபவங்களின் சுவடுகளை இவர் தம் இலக்கியப் படைப்புகளில் நிறையக் காணலாம். துணிக் கடையில் வேலை பார்த்தல், சுங்கச் சாவடியில் கணக்கு எழுதுதல், இயந்திரங்களைப் பழுது பார்ப்போர்க்கு உதவுதல், உணவு விடுதியில் உணவு படைத்தல், வணிக நிலையத்தின் முகவராகப் பல்வேறு இடங்களுக்குச் சென்று வருதல், குதிரைப் பந்தயச் சூதாட்ட நிறுவனத்தில் வேலை செய்தல் போன்ற பலதரப்பட்ட அலுவல்களிலும் இவர் ஈடுபாடுபட்டார்.

இந்தியத்தேசிய இயக்கத்தின் எழுச்சியால் கவரப்பட்டுக் காந்தியடிகளின் கொள்கைகளிலும், போராட்டங்களிலும் ஈடுபாடு காட்டினார். வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகத்தில் (1930) இவர் பங்கு கொண்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றார். விடுதலை பெற்றதும் கதர்த்துணி விற்பனையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். காந்தியடிகளின் நிருமாணத் திட்டத்தின் வெற்றிக்கு இவர் பாடுபட்டார்.

அரசியல் ஈடுபாடு இவருக்கு இருந்தாலும், அதனினும் மேலாக இலக்கியத் துறையே இவரை ஆட்கொண்டது. 'ஆனந்த விகடன்' 1930-ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டி ஒன்றின் வாயிலாக இவர் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் ஆனார். அப்போட்டியில் இவர் எழுதிய 'மலரும் மணமும்' என்னும் சிறுகதை இரண்டாம் பரிசைப் பெற்றது. சங்கு சுப்பிரமணியன் இவரைத் தூண்டியதாலேயே இவர் அப்போட்டியில் கலந்து கொண்டார். அதன் பின் 'ஆனந்த விகடன்' 'கலைமகள்' போன்ற

இதழ்களில் இவர் படைப்புகள் வரத் தொடங்கின. கலைமகளில் வெளிவந்த 'நட்சத்திரக் குழந்தைகள்' என்னும் சிறுகதை அக்காலத்தில பலரையும் கவர்ந்த ஒப்பற்ற படைப்பாகும். வ.ரா.,கே. சீனிவாசன், டி.எசு . சொக்கலிங்கம் ஆகிய மூவரும் சேர்ந்து 1933-ஆம் ஆண்டு 'மணிக்கொடி' என்னும் வார இதழைத் தொடங்கினர். பி.எஸ். இராமையா அவர்களுடன் சேர்ந்து தம் எழுத்துப் பணியைத் தொடங்கினார். சிறிதுகாலத்திற்குப் பின் பி.எஸ். இராமையாவே அவ் விதழின் முழுப் பொறுப்பையும் ஏற்றார். தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இது காரணமாயிற்று. அக்காலத்தே புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா போன்ற எழுத்தாளர் பலர் அவ்விதழில் எழுதி வந்தனர். 'மணிக்கொடிக்குழு' என்று பின்னாளில் அழைக்கப்பட்ட இலக்கியப் படைப்பாளர்கள் மணிக்கொடிப் பண்ணையில் வளர்ந்தவர்களே யாவர்.

இவர் 1937க்குப்பின் இலக்கியத் துறையிலிருந்து திரைப்படத் துறைக்குள் நுழைந்தார். 'சித்திர வாணி' என்னும் திரைப்பட இதழை இயக்குநர் முருகதாசாவுடன் இணைந்து தொடங்கினார். இதழ் சில காலமே வெளிவந்தது. பின்னர் 'பூலோக ரம்பை' என்னும் படத்திற்குக் கதை, உரையாடலை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். 'மதனகாம ராசன்', 'பக்த நாரதர்' போன்ற படங்களைத் தயாரிக்கும் குழுவில் சில காலம் உதவியாளராகப் பணியாற்றினார். திரைப்படத் துறையில் இவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக 1949-ஆம் ஆண்டு அதைவிட்டு வெளியேறினார்; மீண்டும் இலக்கியத் துறைக்கே வந்தார்.

இவர் 1949 முதல் 1956 வரை 'தினமணிக்கதிர்', 'ஆனந்த விகடன்' போன்ற இதழ்களில் தொடர்ந்து எழுதினார். நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் 'பிரேம ஆரம்' போன்ற நாவல்களையும் இவர் எழுதினார்.

இவர் வாழ்வில் 1956-ஆம் ஆண்டில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. நடிகர் எசு .வி. சகசுரநாமத்தின் தொடர்பு இவருக்குக் கிட்டவே, 'சேவா அரங்கு' (Seva Stage) என்னும் அவரது அமைப்பின் மூலம் தம் நாடகங்களை அரங்கேற்ற விழைந்த இராமையா பற்பல நாடகங்களை விரைந்து படைத்தார். 'பிரசிடெண்ட்டு பஞ்சாட்சரம்', 'மல்லியம் மங்களம்', 'தேரோட்டி மகன்', 'போலீசுக்காரன் மகள்', 'பூவிலங்கு', 'தளவாய் குமாரப்பிள்ளை' முதலிய நாடகங்களை அவர் எழுதினார். அவற்றுள் பல நூல்வடிவிலும் வெளிவந்தன. நாடகத்துறை இவருக்குப் புகழையும் பொருளையும் தந்தது. தம் இலக்கிய உலக அனுபவங்களின் வெளிப்பாடாக இவர் எழுதிய 'மணிக் கொடிக் காலம்' என்னும் நூலுக்கு இந்திய அரசு 1982-ஆம் ஆண்டு 'சாகித்திய அகாடமி' பரிசு கொடுத்துச் சிறப்பித்தது. இராமையா 1983-ஆம் ஆண்டு மறைந்தார். மா.இரா.

***இராய் சரத் சந்திரர்*** **(கி.பி. 1871-1942):** இந்திய மானிடவியல் அறிஞரான இவர், இனப் பரப்பளவியல் சார்ந்த ஆய்வுகளைப் பெருமளவு மேற்கொண்டு இந்திய மானிடவியலின் வளர்ச்சிக்கு வித்திட்ட தொடக்ககால மானிடவியலாளர்களுள் ஒருவராவர். இவர் சமூக மானிடவியற் பரப்பிலேயன்றி, வரலாற்றுக்கு முன்னிலை வரலாற்றுப் (Prehistory) பரப்பிலும் பல ஆய்வுகளை மேற்கொண்டவராவர். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் பள்ளிப் படிப்பைக் கல்கத்தாவிலுள்ள நகரக் கல்லூரிப் பள்ளியிலும் (City Collegiate School), இளங்கலை ஆங்கிலப் பட்டப் படிப்பை கி.பி. 1892-இலும், முதுகலைப் பட்டப் படிப்பை கி.பி. 1893-இலும் பொது அவை நிறுவனத்திலும்(General Assembly Institute),இளஞ்சட்டவியல் (Bachelor of Law) பட்டத்தை கி.பி. 1895-இல் கல்கத்தாவிலுள்ள இரிப்பன் கல்லூரியிலும் பெற்றார். இராய் பகதூர் சரத் சந்திர ராய் (Rai Bahadur Sarat Chandra Ray) தம் வழக்குரைஞர் வாழ்க்கையை கி.பி. 1897-இல் தொடங்கினார். இவர் இராஞ்சியில் வழக்குரைஞராகப் பணியாற்றிய பொழுது, சோட்டா நாக்பூர்ப் பகுதி ஆதிக்குடிகளிடையே காணப்பட்ட வெளியாரின் சுரண்டல், அவர்கள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் முதலானவற்றைக் கண்டு ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். அதனாலேயே முண்டா ஆதிக்குடிகளின் மொழி, மரபுகள், நடத்தைகள், முறைமைகள் முதலானவற்றை முழுவதுமாகத் தெளிவுடன் அறியத் தம் முழு நேரத்தையும் செலவிட்டார். அந்த ஆய்வின் வெளியீட்டை 'முண்டாவும் அவர்கள் நாடும்' (Mundas and Their Country) என்னும் தலைப்பில் 1912-இல் வெளியிட்டார். இந்த இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnological) இந்திய மானிடவியலின் இனப்பரப்பியல், இன ஒப்பாய்வியல் ஆகிய இரண்டு பரப்பிலுமே நல்லதொரு தொடக்கத்தினை ஏற்படுத்தியது. இவர் 1915-இல் 'சோட்டா நாக்பூர் ஒரவர்கள்' (The Oraons of Chotanagpur) பற்றியும், 1925-இல் பிர்கர் (The Birhor) பற்றியும், 1928-இல் 'ஒரிசாவின் மலைப் பூயியாக்கள்' (The Hill-Bhuiyas of Orissa) பற்றியும்,1937-இல் காரியர் (The Kharias) பற்றியும் நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் 1921-ஆம் ஆண்டு 'இந்தியாவில் மனிதன்' (Man in

India) என்னும் காலாண்டு இதழினைத் தொடங்கினார். இன்று இந்த இதழ் இந்தியாவில் வெளியிடப்படும் மானிடவியல் பருவ இதழ்களுள் முதன்மையானதாகும்.

இவர் 1920-ஆம் ஆண்டு இலண்டன் நாட்டுப்புறவியல் கழகத்தில் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களின் சட்ட மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய மானிடவியலில் இவரது சிறந்த பங்கினைப் போற்றும் வகையில் 1941-ஆம் ஆண்டு இந்திய அறிவியல் கழகம் (Indian Science Congress) 'மானிடவியல் கட்டுரைகள்' (Essays in Anthropology) என்னும் ஒரு கட்டுரைத் தொகுப்பினை இவரது 70-ஆம் பிறந்த நாளன்று வழங்கி இவரைச் சிறப்பித்தது. இந்திய மானிடவியல் கழகத்தின் 1983-ஆம் ஆண்டுக் கூட்டத்தில் பேராசிரியர் டாக்டர் சே. எச். அட்டன் (Dr. J.H. Hutton) தம் தலைமை உரையின்போது, இந்திய முதுகுடிகளின் (Aborigines) வல்லுநர் எனப் பெயர் பெற்ற இவரை 'இந்திய இனக்குழு ஒப்பாய்வியலின் தந்தை' (Father of Indian Ethnology) எனச் சிறப்பித்தார். இவர் 1913-இல் 'கைசர்-இ-இந்து' (Kaiser-i-Hindu) என்னும் பட்டத்தையும், 1919-இல் தமது சமூகச் சேவைக்காகவும் எழுத்தாற்றல் மற்றும் ஆழ்ந்த புலமைக்காகவும் 'இராய்பகதூர்' (Rai Bahadur) என்னும் சிறப்புப்பட்டத்தையும் பெற்றார். இவர் 1942-ஆம் ஆண்டு ஏப்பிரல் 30-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**இராயல் மானிடவியல் நிறுவனம்:** இங்கிலாந்தில் கி.பி. 1843-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இனக்குழு ஒப்பாய்வியல் கழகத்திலிருந்து (Ethnological Society) தோன்றியதே இராயல் மானிடவியல் நிறுவனம் (Royal Anthropological Institute) ஆகும். இந்நிறுவனம் மனித சமுதாயத்தைப் பற்றி அனைத்துத் துறைகளிலும் ஆராயும் ஓர் உலக நிறுவனமாகக் கருதப்படுகிறது.

மானிடவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதலும், அவற்றைத் தொகுத்து வெளியிடுதலும், மானிடவியல் கல்வி அளித்தலும் இந்த நிறுவனத்தின் முதன்மையான நோக்கங்களாகும். இவை தவிர, திரைப்படங்களை வாடகைக்கு அளித்தல், பள்ளிகளுக்குக் கல்வி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், பல்வேறு அறக்கட்டளை நிதிகளைப் பேணுதல் ஆகியவையும் இந்நிறுவனத்தின் பணிகளுள் சிலவாகும். இந்நிறுவனம், தலைவர் ஒருவர், ஆறு துணைத்தலைவர்கள், ஓர் இயக்குநர், ஒரு பொருளாளர், அவை உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், தொடர்புடை உறுப்பினர்கள் (Corresponding Members), உள்நாட்டுச் செயலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது. இதன் நிருவாகம் தலைவர், துணைத்தலைவர், இயக்குநர், பொருளாளர், அவையின் இருபது பொது உறுப்பினர்கள் ஆகியோரால் நடத்தப்படுகிறது.

இந்நிறுவனத்தில் ஏறத்தாழ 2,250 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இராயல் மானிடவியல் நிறுவனத்தில் அடிப்படை உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், சார்புடைய உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், குறைந்த பங்களிப்புக் கட்டும் உறுப்பினர்கள் எனப் பலவகையினர் உள்ளனர். இந்நிறுவனத்தில் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் அவை உறுப்பினர்களாகவும் இந்நிறுவனத்தின் அலுவலர்களாகவும் இருக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர். பேரவை உறுப்பினர்கள் இந்நிறுவனத்தின் வெளியீடுகளை இலவசமாகப் பெறுகின்றனர். இவையன்றி நூல்கள், வரைபடங்கள், வெளியீடுகள் முதலியவற்றைப் பயன்படுத்தும் உரிமையையும்பெறுகின்றனர்.குறைந்த பங்களிப்பு உறுப்பினர்களான இருபத்தாறு வயதுக்குட்பட்டவர்கள் சில ஆய்விதழ்களைக் கட்டணமின்றியும், சிலவற்றைக் குறைந்த கட்டணத்துடனும் பெறுகின்றனர். நூலகத்தைப் பயன்படுத்தும் உரிமை அனைவருக்குமே உண்டு. இந்நிறுவனத்தின் நூலகத்தில் சுமார் ஓர் இலட்சம் நூல்கள் உள்ளன. நிறுவனத்திற்குக் கிடைக்கும் வருவாய், சொத்துகள் ஆகிய அனைத்தும் நிறுவனத்தின் நோக்கத்தினை உயர்த்துவதற்காகவே செலவிடப்படுகின்றன. எவ்விதமான பங்கீடும் நன்கொடையும் வெகுமதியாகவோ பணமாகவோ உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

தொடக்க காலத்தில் இந்நிறுவனம் 'இயற்கை பற்றிய நூல்' (The Book of Nature), 'மனிதனைப் பற்றிய நூல்' (The Book of Man) ஆகியவற்றை வெளியிட்டது. வாழ்வியல், உளவியல், உயிரியல் ஆகியவற்றைப் பற்றி 'முன்னோடி' (The Pioneer) என்னும் இதழையும் வெளியிட்டது. இராயல் மானிடவியல் நிறுவனத்தின் பருவ இதழ் முதலில் 'இராயல் மானிடவியல் நிறுவனமும் மனிதனும்' (The Journal of the Royal Anthropological Institute and Man) என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இவ்விதழ் 95-ஆம் தொகுதியுடன் நிறுத்தப்பட்டது. பின்னர், 1966-ஆம் ஆண்டிலிருந்து 'மனிதன்: இராயல் மானிடவியல் நிறுவனத்தின் ஆய்விதழ்' (Man: The Journal of the Royal Anthropological Institute) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஒரு மூத்திங்கள் இதழாகும். சிறிய, பெரிய கட்டுரைகளும் நூல்களைப் பற்றிய மதிப்புரைகளும், மானிடவியல்

ஆய்வினைக் குறித்த செய்திகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. இந்த இதழின் முதல் தொகுதி 1966-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந் தேதி வெளியிடப் பட்டது. மானிடவியலின் பிரிவுகளான சமூக மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), நாட்டுப் புறவியல், தொல்லியல் ஆகிய துறைகளைச் சார்ந்த ஆய்வுரைகள் இடம்பெறுகின்றன. இந் நிறுவனத் தின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'இராயல் மானிட வியல் நிறுவனத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய வெளியீடு கள்' (Proceedings of the Royal Anthropological Institute) என்னும் இதழ் ஆண்டு தோறும் வெளியிடப் படுகிறது. இதில் தலைவர் உரை, அக்சுலி (Huxley) நினைவுரை, என்றி மையர்சு (Henry Myers), கர்ல் (Curl) சொற்பொழிவுகள், கர்ல் பிரிவிற்கான கட்டுரைகள், ஆண்டு அறிக்கைகள், நிறுவனத்தின் நிதி விவரங்கள், நிறுவனத்தின் சுருக்க உரைகள், புதிய உறுப்பினர்களின் உரையாடல்கள் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. இதன் முதல் தொகுதி 1966-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஓர் ஆண்டில் சனவரி முதல் திசம்பர் மாதம் வரை தரப்படும் ஆய்வுரைகள் பருவ இதழின் ஒவ் வொரு தொகுதியிலும் இடம்பெறுகின்றன. இத் தொகுதிகளில் முகவுரையாக ஆண்டுக் கூட்டங்களில் தலைவர் ஆற்றும் உரை அளிக்கப்படுகிறது. இரண் டாம் தொகுதியில் கி.பி. 1895-ஆம் ஆண்டிற்கு முற் பட்ட கட்டுரைகளனைத்தும் புதிய இராயல் ஆக் டேவோ வரிசையில் (New Royal Octavo Series)இடம் பெற்றுள்ளன. மூன்றாம் தொகுதியில் 1900-ஆம் ஆண்டின் சனவரி-திசம்பர் மாதங்களுக்கிடையே அளிக்கப்பட்ட கட்டுரைகள் உள்ளன.

இந்நிறுவனம் இப்போது 'மனிதன்' (Man), 'இன்றைய மானிடவியல்' (Anthropology Today), 'மானிடவியல்சார் அட்டவணை' (Anthropological Index) ஆகிய மூன்று பருவ இதழ்களை வெளியிடு கிறது. இன்றைய மானிடவியல் என்னும் இதழ் இதற்கு முன்பு 'இரெயின்' (Rain) என்னும் பெயரில் வெளியிடப்பட்டதாகும். 'மனிதன்' என்னும் இதழ் முத்திங்களுக்கு ஒருமுறையும் 'இன்றைய மானிட வியல்' என்னும் இதழ் இருதிங்களுக்கு ஒருமுறையும் 'மானிடவியல்சார் அட்டவணை' என்னும் இதழ் முத்திங்களுக்கு ஒருமுறையும் வெளியிடப்படுகின்றன. இவை தவிர, ஆய்வுரைகளைத் தொகுத்தும் பல தொகுதிகளை இந்நிறுவனம் வெளியிடுகிறது.

சிறந்த மானிடவியல் ஆய்வுகளுக்கும், சிறந்த கட்டுரைகளுக்கும் மானிடவியலில் ஆற்றப்பட்டுள்ள பணிகளைக் குறித்த சிறந்த பகுப்பாய்வுகள் போன்ற வற்றிற்கும் இராயல் மானிடவியல் நிறுவனம் பரிசு களை அளித்து வருகிறது. கர்ல் பிகுவெசுடு (Curl Bequest) என்பார் பெயரில் ஒரு பரிசு அளிக்கப் படுகிறது. மறைந்த சர் என்றி எசு. வெல்கம் (Sir Henry S. Wellcome) என்பவரின் பெயரால் மருத்துவ மானிடவியலில் சிறந்த ஆய்வுக்குப் பரிசு அளிக்கப் படுகிறது. ஆண்டுக்கு இருமுறை 'இரேய் படப்பரிசு' (Rai Film Prize) ஒன்றையும் இந்நிறுவனம் அளித்து வருகிறது. பரிசிற்கான ஆய்வுகளைத் தேர்ந் தெடுக்கும் குழுவிற்கு இராயல் மானிடவியல் நிறு வனத்தின் தலைவரே தலைமைப் பொறுப்பேற் கிறார். இந்நிறுவனம் ஆய்வு ஊக்கத் தொகை யளிக்க நிதி நல்கைக் குழுவையும் கொண்டுள்ளது. இராயல் மானிடவியல் நிறுவனம் 'இரேய் படக் குழு', 'வடஅமெரிக்கக் குழு' (North America Committee), 'படத் தொகுப்புக் குழு' (Photographic Committee), 'கல்விக் குழு' (Education Committee) ஆகிய குழுக்கள் பலவற்றின் பணிகளை ஒருங் கிணைத்துச் செயற்பட்டுவருகிறது. ம.ந.பு.

துணை நூல்கள்:


The Journal of the Royal Anthropological Institute of Great Britain and Ireland, Vol.I, Kegan Paul, Trench Trubner and Company, London, 1872.

The Journal of the Royal Anthropological Institute of Great Britain and Ireland, Vol. XXIX (New Series Vol. II), Kegan Paul, Trench Trubner and Company, London, 1899.

Notes and Queries on Anthropology, Kemp Hell Press, Oxford, 1929.


***இராலே சர் வால்ட்டர்* (கி.பி. 1554-1618)** ஆங்கிலக் குடியேற்றங்களை நிலைநாட்டியவர்; எழுத்தாளர்; அரசவையாளர். இவர் வட அமெரிக் காவில் முதல ஆங்கிலக் குடியேற்றப் பகுதிகளை நிலைநாட்டும் திட்டத்தைத் தீட்டியவரும், அதனை ஊக்குவித்தவருமாவார்.

இராலே(Raleigh Sir Walter)இங்கிலாந்திலுள்ள தெவன்சயரில் (Devonshire) ஏய்சு பார்ட்டன்(Hayes Barton) என்னும் ஊரில் கி.பி. 1552-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டு ஓரியல் (Oriel) கல் லூரியில் கல்வி கற்றார். இவர் பிரெஞ்சு மறுப்புரை வாதிகளான 'இயூகனட்டு'களின் (Huguenots) படை யில் கி.பி. 1569-ஆம் ஆண்டில் பணிபுரிந்தார். இவர் மன்கண்டூர் (Moncontour) என்னுமிடத்தில் நடை பெற்ற போரில் ஈடுபட்டார் எனத்தெரிகிறது. இவ ருக்கு இங்கிலாந்து அரசவையொடு கி.பி. 1579-ஆம்

ஆண்டளவில் நெருங்கிய தொடர்பேற்பட்டது. இரண்டாண்டுகளுக்குள் இவர் இங்கிலாந்தின் அரசி முதலாம் எலிசபெத்துக்கு மிக வேண்டியவரானார். சாராய வாணிகம், துணிமணி வாணிகம் போன்ற வற்றை மேற்கொள்ள முற்றுரிமை கிடைத்தமையால் இவருக்குப் பெரும் பொருள்கிட்டியது. அடுத்தடுத்துக் கிடைத்த கொடைகளாலும் அரண்மனையிலேயே பெருஞ்செல்வந்தர்களுள் ஒருவராக இவர் கருதப் பட்டார். இவர் கி.பி. 1584-இல் வீரப்பட்டம் பெற் றார். அடுத்த ஆண்டில் இங்கிலாந்திலுள்ள தெவன் (Devon), கார்ன்வால் (Cornwall) பகுதிகளிலுள்ள தகரச் சுரங்கங்களின் காப்பாளராக இவர் அமர்த்தப் பட்டார். கார்ன்வாலின் இணைப் பிரபுவாகவும் கார்ன்வால், தெவன்பகுதிகளில் துணைக் கப்பற்படை அதிகாரியாகவும் எலிசபெத்து இவரை அமர்த்தி னார். இவர் கி.பி. 1587-இல் இராணியாரின் மெய்க் காவற்படைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

வட அமெரிக்காவைக் கண்டறிந்து அங்குக் குடி யேற்றங்களை நிலைநாட்டும் பொறுப்பை இராலே பெற்றதும் இச்சமயத்தில்தான். வட அமெரிக்காவின் கிழக்குக் கரையிலிருக்கும் வர்சீனியாவைக் கண்டறிய கி.பி. 1584, 1585, 1586, 1587, 1589 ஆகிய ஆண்டு களில் இவர் அதற்கான பயணங்களை மேற்கொண் டார். இவற்றில் இவர் நேரிடையாக ஈடுபடக் கூடாது என்று அரசியார் தடுத்திருந்த போதிலும், இவர் பயணம் செய்தார்.

இங்கிலாந்தில் நிலப்படைகளை கி.பி. 1588-ஆம் ஆண்டில் அமைத்து, இசுபானியரின் படையெடுப்பு அச்சத்தைப் போக்கியதில் இராலேயின் பங்கு பாராட்டுதற்குரியது. கடலில் நடைபெற்ற ஆர்மடாப் போரில் இவர் ஈடுபட்டார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. இசுபெயினுக்கு எதிராகப் பய ணம் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் இவர், கி.பி. 1591-இலும் 1592-இலும் பெருங் கப்பற்படை யொன்றைத் திரட்டிப் பெரும் புகழ் பெற்றார். தம் அரண்மனை ஊழியத்தில் ஈடுபட்டிருந்த நல்லொழுக் கம் வாய்ந்த எலிசபெத்து திராகு மார்ட்டன் (Elizabeth Throgmorton) என்னும் பெண்ணொருத்தியுடன் இவருக்கிருந்த தொடர்புணர்ந்து சினமுற்ற அரசியார், இவர் மேற்கொள்ளவிருந்த பயணத்தைத் தடுத்து விட்டார். சிறிதுகாலம் சிறையில் அடைக்கப்பட்டி ருந்த இவர் விடுதலை செய்யப்பட்டு, எலிசபெத்து திராகு மார்ட்டனையே மணந்துகொள்ள வேண்டிய வரானார். மீண்டும் கி.பி. 1597-ஆம் ஆண்டுவரை, இராலேவுக்குஅரசியாருடன் நல்லுறவேற்படவில்லை.

இதனிடையில் புத்துலக நாடுகளை ஆய்வு செய் யும் திட்டமொன்றை இராலே நிறைவேற்ற முனைந் தார். அமெரிக்காவிலிருப்பதாகக் கருதப்பட்ட மனோவா (Manoa) என்னும் ஊரை நோக்கிப் பய ணம் செய்யத் திட்டமிடப்பட்டது. அது செல்வங் கொழிக்கும் இடமென்று கருதப்பட்டது. இவர் ஐந்து கப்பல்களுடன் கி.பி. 1595-இல் புறப்பட்டுச் சென்று, மேற்கிந்தியத் தீவுகளுள் ஒன்றான திரினிடாடு (Trinidad) என்னும் தீவிலிருந்த சான் சோசபு (San Josef) என்ற இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு, 644 கி.மீ. நீளமுள்ள ஆரினாக்கோ (Orinoco) என்ற ஆற்றினையும் ஆராய்ந்தார். எனினும்,மனோவாவை இவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. பின்னர், இவர் ஆங்கிலத் தாக்குதல் மூலம் கோடீசையும் (Codiz) பாயல் (Fayal) என்னும் இடத்தையும் முறையே கி.பி. 1596, 1597-ஆம் ஆண்டுகளில் கைப்பற்றி, அரசி யாரின் ஆதரவை மீண்டும் பெற்றார். இவர் கி.பி. 1597-ஆம் ஆண்டு தோர்செட்டு (Dorset) நாடாளு மன்றத் தொகுதியின் உறுப்பினராக்கப்பட்டார். கார்ன்வாலின் (Cornwall) உறுப்பினராக, கி.பி. 1501-ஆம் ஆண்டில் பதவியேற்றார். செர்சி தீவின் (Jersey Island) ஆளுநராக இவர் கி.பி. 1600-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார்.

முதலாம் எலிசபெத்து அரசியார் கி.பி. 1603-ஆம் ஆண்டில் காலமானார். இராலேயின் செல்வாக்கிலும் மாறுதலேற்பட்டது. இவர் முதலாம் சேம்சு மன்னர் பதவியேற்பதை எதிர்க்கிறார் என்று இவர்தம் பகைவர்கள் பொய்ச் செய்தியைப் பரப்பினர். மன் னன் உடனடியாக இராலேயின் பதவிகள் அனைத்தை யும் பறித்துக் கொண்டதுடன், கி.பி.1603-சூலை 17-ஆம் நாள் இவரைஇலண்டன்சிறையிலும் அடைத்தார் இவர் மீது துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. கி.பி 1603-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் துரோகக் குற்ற விசாரணை நடைபெற்றது. போது மான சான்றுகள் இல்லாதபோதும் இராலே குற்ற வாளி என்று கருதப்பட்டு, திசம்பர் 11-ஆம் நாள் தூக்கிலிடப் படவேண்டுமெனத் தீர்ப்புக் கூறப்பட் டது. எனினும், திசம்பர் 11-ஆம் நாள் இவர் தூக்கி லிடப் படாமல் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு, தவர்(Tower)சிறையில் அடைக்கப்பட்டார். இவருக்கு அனைத்து வசதிகளும் கிட்டின. பதின்மூன்று ஆண்டு கள் இவர் அங்கு வாழ வேண்டியவரானார். மனைவி, மகன், பணியாட்கள் போன்றவர்கள் இவருடன் தங்க அனுமதிக்கப்பட்டார்கள். இவர் அறிவியல் பரி சோதனைகளைக் கற்றுப் பணியாற்றிக் கொண்டு வாழ்ந்தார். அரசு வாரிசாகக் கருதப்பட்ட இளவர சர் என்றியின் (Prince Henry) வேண்டுகோளின்படி, இராலே 'உலக வரலாறு' என்னும் தம் இலக்கிய நூலை எழுதத் தொடங்கினார். ஆங்கில மொழியில் முதன்முதல் உலக வரலாறு எழுதியவர் இவரே.

இறுதியாக, இராலே கி.பி. 1616-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். ஆரினாக்கோ ஆற்றுப் படுகையில் தங்கச் சுரங்கங்கள் உள்ளன என்று கூறியிருந்த இவருடைய கூற்றுக்கான சான்றுகளைக் கண்டுபிடித்து வரும் நோக்கத்தோடு, புதிய பயணம் ஒன்றை இவர் மேற்கொள்ள வேண்டும் என்று இவருக்குக் கட்டளை விதிக்கப்பட்டது. இசுபானியத் தூதர் இப்பயணத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டார். எனினும், முதலாம் சேம்சு (James I) மன்னர் பயணம் மேற்கொள்ள இவரைப் பணித்தார்.

இராலே சான் தாமசு என்னும் இசுபானிய நகரத்தைக் கைப்பற்றினாலும், இவரால் சுரங்கத்தைச் சென்றடைய முடியவில்லை. இவருடைய துணை ஊழியர்களும் இதைக் கைப்பற்றும் ஆர்வம் காட்டவில்லை. இராலே இங்கிலாந்து திரும்பிவந்த போது, இசுபானிய தூதர் நடவடிக்கை எடுத்து இவரைத் தூக்கிலிட வேண்டுமென வேண்டினார். அவ்வாறே இவர் கி.பி. 1618-ஆம் ஆண்டு அக்டோபர் 29-ஆம் நாள் பழைய மாளிகை முற்றத்தில் தூக்கிலிடப்பட்டார்.

**இராவண காவியம்** இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் தோன்றிய காவியங்களுள் ஒன்று. வான்மீகியின் வடமொழி இராமாயணம், கம்பரது தமிழ் இராமாயணம் ஆகிய இவற்றின் நோக்கம் என்ன? இக்காவியத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் எத்தகையவர்? இக்காவியங்களின் தொடர்ந்த பயிற்சியால் நாட்டில் ஏற்பட்ட விளைவுகள் யாவை? என்று பல கோணங்களில் பல நூல்களின் உதவி கொண்டு, தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டு மக்கள் நலநோக்கில் சிந்தித்து ஆராய்ந்து இராமாயணத்தைப் பற்றிய தம் கருத்துகளைப் பல நூல்களாக ஈ.வெ. இராமசாமி வெளியிட்டார். தமிழ் மண்ணில் மலர்ந்த இம் மறுமலர்ச்சியின் தாக்கமே 1946-இல் இராவண காவியமாக உருவெடுத்தது.

இதனை இயற்றியவர் புலவர் குழந்தை. இவர் கொங்குநாட்டினர்.

இக்காவியம் ஐந்து காண்டங்களாகிய பெரும் பகுப்புகளைக் கொண்டது. உட்பிரிவாக ஐம்பத்தேழு படலங்களையும், மூவாயிரத்து நூறு பாக்களையும் உடையது. இராவண காவியத்திற்கென்று தனிக்கதை இல்லை. இராமாயணக் கதையைக் கொண்டே இராவணனைக் காவியத் தலைவனாக்கிக் காவியத்துக்கு வேண்டிய உறுப்புகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்கும்படியாக இக்காவியத்தைப் படைத்துள்ளார். கம்பர் பாடிய கோணம் வேறு. புலவர் குழந்தை பாடியுள்ள கோணம் வேறு. இந்தக் கோண மாறுதலில் தம்முடைய குறிக்கோளை நுட்பமாக நுழைத்துக் காவியத்தைத் திறம்பட அமைத்துள்ளார்.

கம்ப இராமாயண அடிப்படை உத்திகளுள் ஒன்று, காவிய நாயகராகவும் உறுப்பினராகவும் காவியத்தில் அமைகின்றவர்களைக் காவியம் பயிலுவோர் தம்மிச்சையாக விரும்பவோ வெறுக்கவோ செய்யும்படியாகப் பாடிச் செல்வது. தமிழில் அமைந்த கம்பரது இராமாயணத்தின் இந்த உத்தியின் விளைவால் கம்பர் கண்ட இராமனும் சீதையும் அவதாரங்களாயினர். அவர்களைச் சார்ந்த மற்றவர்களும் போற்றத்தக்கவராயினர். அதனைப் போன்றே, இராவண காவியம் பயிலுவோர் இராவணனையும் அவனைச் சார்ந்தோரையும் தம்மிச்சையாகப் போற்றும் படியும், இராம இலக்குவர்களையும் மற்றவரையும் தன்னிச்சையாக வெறுக்கும் படியும் திறம்படப் பாடிச் சென்றுள்ளார்.

தமிழகக் காண்டம் கடல்கோள் படலத்தில், இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே ஆயிரங்கல் தொலைவு விரிந்து பரந்து கிடந்த வளமிக்க நிலப்பரப்புகள் கடல்கோளால் அழிவுற்ற செய்திக்கு இரங்கி, இராவண காவிய ஆசிரியர் பலமுகமாகப் பாடியுள்ளார். மேலும், பழிபுரி காண்டத்தின் உருக்குலைவுப் படலத்தில் இராவணன் தங்கை காமவல்லியைக் கொடுமைப் படுத்தி இறக்குமாறு செய்த இராம இலக்குவர்களின் கொடுமைக்கு மனமிரங்கி மக்களினம் வருந்துவதாகப் பலகோணத்தில் இவர் பாடியுள்ளார். இந்த இருவகையில் இவர் பாடியுள்ள பாக்கள் முடிதுறந்த இராமன், இலக்குவனும் சீதையும் பின் தொடரக் காட்டிற்குச் செல்லுவதைக் கண்ட நகரமக்கள் மனம் இரங்கிப் புலம்புவதாகப் பாடியுள்ள கம்பநாடரின் பாக்களை ஒத்து விளங்குகின்றன. காவிய மரபுக்குப் பொருந்தச் சூரியனின் தோற்றம்-மறைவு பற்றியும், அரசன் உலாவாகச் செல்லும் சிறப்புகள் பற்றியும் கூறுவதோடு இன்னும் பலவகையான காவிய அமைப்புக்கான வளங்களையெல்லாம் பெற்றும் இக்காவியம் விளங்குகிறது.

இராவண காவியத்தில் வெளிப்படையாகவும் உய்த்துணரும் வகையிலும் புலப்படும் செய்திகள் மிகுதியாகவுள்ளன. ஆரிய நாகரிகத்தின் தன்மைகளான, உயிர்வதை வேள்வி, வருண தரும வழியிலான வாழ்வு நடைமுறை, நாடோடித் தனமான வாழ்வு, ஆகியவை தெளிவாகின்றன. இதற்கு மாறாகத் தமிழர்கள்,

> 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர் செகுத் துண்ணாமை நன்று' (குறள்259)

என்றும்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'(குறள் 972) என்றும் வள்ளுவர் கூறியபடி வாழும் வாழ்வுடைய வராக உள்ளனர்.

இராவணன் தங்கை சூர்ப்பணகை இராமனை வலியச் சென்று அழைத்ததாக இராமாயணத்தில் வரும் செய்தி மனித இயற்கைக்கு மாறானது. காதல் செய்தியில் முதற்செயல் என்பது உயிரினங் களில் குறிப்பாகப் பாலூட்டிகளில் ஆணுக்குத் தான் உண்டு. கோழிகளும் குருவிகளும் அப்படித்தான் வாழ்கின்றன. ஒரு பெரிய அரசனின் தங்கை இயற் கைக்கு மாறுபட்டு எப்படி நடந்து கொள்ளுவாள்? இவ்வாறு கருதும் ஆசிரியர் தமது இராவண காவி யத்தில் இராவணனின் தங்கை காமவல்லியை இரா மன் வலியச் சென்று வற்புறுத்துவதாகப் பாடியுள் ளார்.

இராமனின் தம்பி அவளுடைய உறுப்புகளை அறுக்க, அவள் தன்னுடைய மான இழப்புக்கு மனம் வருந்தி அங்கேயே சாகிறாள். தங்கைக்கு இராம இலக்குவரால் நேர்ந்த அவமானத்துக்கு எதி ராக அவர்களுடன் போர் தொடுக்கும் நோக்கத் தால் தமிழர்களின் போர் முறைப்படி, முன்னர்ப் பெண்ணைக் கவர்ந்து தேரில் வைத்துக் கொண்டு இராவணன் செல்லுகிறான். மேலும் சீதைக்கு அவன் ஒரு துன்பமும் செய்யவில்லை- இவ்வாறு இக் காவியம்கூறுகிறது.

இராவணனுடைய குணநலன்கள் முழுவதையும் சீதை வாயிலாகவே ஆசிரியர் சொல்ல வைத்துள் ளார். நடந்தது நடந்து விட்டது. அதற்காகப் போரி டுவதில் பொருளில்லை. இராமன் முதலியோர் இங்கு வந்து தாங்கள் நடத்திய கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்டால், சீதையை விட்டு விடுவதாகச் சீதையிடம் இராவணன் கூறியபடி சீதை அனும னிடம் சொல்லி அனுப்புகிறாள்.

மறுமலர்ச்சி பெற்றுள்ள தமிழகத்தின் புதிய சமூக, அரசியல் விழிப்புணர்வுப் பின்னணியில் பிறந்த இக்காவியத்தை 2.6.1948-இல் தமிழக அரசு தடை செய்தது.

ந. இரா.

**இராவணன்** இராமாயணத்தில் காப்பியத் தலைவனாகிய இராமனுக்குச் சிறந்த எதிர்நாயக னாக விளங்குபவன். இராவணன் என்ற வட சொல்லுக்குக் கதறியவன் என்பது பொருளாகும். இனி இராவணன் என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு 'கரிய நிறத்தவன்' என்றுங் கொள்வர்.

இராவணன் பிரமன் வழிவந்த விசிரவசுவிற்குக் கேகசியினிடம் பிறந்தவன்: பத்துத் தலைகளைக் கொண்டிருந்தமையால் தசக்கிரீவன் என்றும் தச முகன் என்றும் அழைக்கப் பெற்றான். இவன் மனைவி பெயர் மண்டோதரி. இவனுக்கு மேகநாதன் என்று அழைக்கப்படும் இந்திரசித்து, அதிகாயன், அட்சயகுமாரன் ஆகிய பிள்ளைகள் உண்டு. இவனுக் குத் தம்பியராகப் பிறந்தவர்கள் கும்பகருணனும் வீடணனும் ஆவர்: தங்கை சூர்ப்பணகையாவாள்.

இராவணன் வீணைக் கொடியுடையவனாய்க் கடல்சூழ்ந்த இலங்கையைப் பெருமிதத்துடன் ஆண்டவன்; தன் பேராற்றலால் திக்குவிசயம் செய்த வன்; மூன்று உலகங்களையும் அடிபணிய வைத்த வன். வாழ்வின் உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுள் அறத்தினை இராமனும், பொருள் இன்பங்களை இராவணனும் தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டு விளங்கியவர் கள் என்பர்.

இராவணன் கடுந்தவம் புரிந்து நெடுங்காலம் வாழும் வரவலிமை பெற்றவன். 'முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள், எக்கோடியாராலும் வெல்லப்படா எனக் கொடுத்த வரமும் ஏனைத் திக்கோடு முலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியும்' (கம்பராமா-யுத்தகாண்-இராவணன் வதைப்: 196) உடையவன் எனப் போற்றப் பெறுபவன். தவத்தால் கிட்டிய வர வலிமையால் இராவணன் தன் நாட்டைப் பொன் கொழிக்கச் செய்தும் தேவர்களையடக்கியும் நின்ற திறத்தினைக் கம்பன், 'மரம டங்கலும் கற்பகம் மனையெலாங் கனகம், அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர், உரமடங்கிவந் துழையராய் உழல் குவர் ஒருவர், தரமடங்குவதன்றிது தவஞ்செய்த தவமால்' (சுந்தரகாண்; ஊர்தேடு. 10) என்ற கவிக் கூற்றால் புலப்படுத்துகிறார். உலகத்தில் பெரு வீரர்க்கு இருக்க வேண்டிய தன்மானவுணர்வு உடை யவன்.

இராவணன் சிவபிரானுக்கு அடியவனாகச் சிவ பூசை புரிந்த சிறப்புடையவன்; எனினும், ஒருமுறை தனக்குப் பல மேன்மைகள் தந்தருளிய சிவனது திருக்கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முனை கிறான். அப்போது நந்திகேசுவரர் கூறிய அறிவுரை யையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவரது சாபத்திற்கு ஆளாகிய நிலையில் கயிலையைப் பெயர்க்கும்போது உமையம்மையுடன் அம்மலையில் வீற்றிருந்த சிவன் தன் கால்விரல் நுனியால் சிறிதே அழுத்துகிறான். இராவணன் அதனால் அடர்ப்புண்டு தவிர்த்துப் புலம்புகிறான். அப்போது வேளைக்கேற்ற மதியுடன் தன் தலைகளுள் ஒன்றனை யெடுத்து வீணைக் குடுக்கையாகவும் தன் நரம்புகளையே வீணை

நரம்பாகவும் ஆக்கிக் கொண்டு சிவனுக்கு உவப்பான சாம கானம் வாசித்துக் கருணைக்கு ஏங்குகிறான். அவனது இசைக்கு இரங்கிய சிவன் அவனை அடர்த் தலினின்றும் விடுவிக்கிறான் என்பது புராணக் குறிப் பாகும். இந்தக் குறிப்பின் சிறப்பினை யுணர்ந்த சம்பந்தர் சிறப்பாகவும், அப்பரடிகள் ஓரளவும் தம் தேவாரத்துள் 'இராவணனுக்கு அருளிய சிவன் கருணை'யைத் தக்காங்குப் போற்றிச் செல்கின்றனர்; பிற சைவநூல்களிலும் இந்தக் குறிப்பினை ஏற் புடைய இடங்களில் எடுத்தாண்டுள்ளனர். தவறு செய்து திருந்துபவர்களுக்குப் படிப்பினையாக இது இருக்கத்தக்கது என்ற உணர்வினால், சமயச் சான் றோர்கள் சைவத் திருக்கோயில் பெருந்திருவிழாவில் 'கயிலாச வாகனம்' என்பதற்கும் இடந்தந்துள்ளனர் எனலாம்.

தெய்வநலப் பாங்குடைய சாமகானத்தின் பெருமை வடமொழி நூல்களில் பரக்கப் பேசப்படு கிறது. இராகங்களைச் சாமவேதத்தில் பொருத்திப் பாடும் முறைமையை யறிவிக்கும் 'இராவணீயம்' எனப் பெயரிய நூலினைக் கதிரைவேற்பிள்ளையின் 'தமிழ் மொழியகராதி' குறிப்பிடுகிறது.

இராவணன் காரணமாகக் கந்தருவர்களும் முனிவர்களும் அரமங்கையர்களும் மிகவும் துன்புற்ற னர் என்பது வான்மீகியின் கூற்று. அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தால் பிணித்துத் தென் னாட்டில் புகாதவாறு செய்தார் என்ற தமிழ்க் கதையும் தமிழர்களிடையே வழக்கில் இருந்து வரு கிறது. 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந ' (மதுரைக்காஞ்சி – 40–42) என்பதற்கு நச்சினார்க்கினியர், 'இராவண னைத் தமிழ்நாட்டை யாளாதபடி போக்கின கிட்டு தற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத் தியன்' என்று விளக்கங் கூறுவர். தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியரே 'பொதியிலின் கண்ணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி' என்றும் கூறுவது இயைபுடன் சிந்திக்கத் தகும் என்பர். இதனால், இராவணன் தென்னாட்டி னருக்குப் பகைஞனாதல் உணரலாம் என்பது மகா வித்துவான் இரா. இராகவையங்கார் கருத்தாகும். அய்யங்கார், 'மெய் சொல்லா விராவணனை மேலோடி ஈடழித்துப், பொய்சொல்லா துயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே' எனத்தேவாரத்துள் தெய்வத் தமிழ்ப் பெரியார் இவனைப் பழித்தல் காணலாம். இவனுட் பட்டோரை 'மாயஞ் செய்வாள வுணர்' (சிலப். வேட்டுவ.) என்ப. இத்தீய குணங்கள் பழந்தமிழர்க் கியையாமை நூல்களிற் கண்டு கொள்க. அகத்தியர் கந்தருவத்தாற் பிணித்தார் என்பது இசையாற் பிணித்தார் என்றவாறாம். தீங் கிழைக்கும் தீயவுள்ளத்தானாகிய இராவணன் அகத் தியர் முற்போந்து ஒரு கற்பாறையில்தங்கியபோது, அகத்தியர் அக்கல்லுருகப் பாடி அதனைக்குழைவித்து, அக்குழைந்த கற்சேற்றிலே அவன் உடற்பொறை அமிழும்படி செய்தவளவில், தம் இசையை நிறுத்தக் கற்பாறை இறுகி அவன் பிணிப்புண்டானாகப், பின் அகத்தியரை இரந்து மீண்டும் கல்லுருகப் பாடப் பெற்று உருகிய நிலையிலே புறம்போந்து வணங்கிப் போயினான் என்பர்' என்று தம் 'தமிழ் வரலாறு' (அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு – 1952) என்னும் நூலில் குறிப்பிட்டுச் செல்கிறார். அகத்திய ரிடம் இராவணன் பெற்ற தோல்விப் படிப்பினை அவன்தன் இசைக்கலைச் செருக்கால் விளைந்த விளைவாகும் எனலாம்.

இராவணன் தொடர்பாக 'இராவணாசுரம்' என்ற பெயருள்ள ஒருவகை வீணையும் (பரத. ஒழி பியல். 15), 'இராவணாத்தம்' என்ற பெயருள்ள ஒருவகைச் சிறு வீணையும் (தேங்காய் ஓட்டினாலும் நரம்புகளாலும் உருவாக்கப் பெற்றது) தமிழ்நாட் டில் வழக்கிற்கு வந்துள்ளன என்பர். இசைக்கலையில் சிறப்பாக, வீணைவாசிக்குங் கலையில்பெருந்தேர்ச்சி பெற்றிருந்தவன் இராவணன். இவனது கலைத் திறனை வழிவழி நினைவு கூரும் வகையில் இசைப் பயிற்சியில் தேர்ந்தவரை இன்றும் 'அசுர சாதகம்' செய்தவராகக் கூறி வருகின்றனர். இவ்வாறாக இசைப்புலமையும் புகழும் வாய்ந்த இராவணனது வீழ்ச்சியைக் 'கலைஞன் வீழ்ச்சி'யாகவே பலர் கருதுகின்றனர்.

நிரம்பிய கல்வியும், ஆயிரம் மறைப்பொரு ளுணர்ந்த அறிவு வித்தகமும், இசைத் தேர்ச்சியும் பேராற்றலும் கொண்டிருந்த இராவணன், இராமன் மனைவி சீதையைத் தன் தங்கை சூர்ப்பணகையின் தூண்டுதலால் வஞ்சகமாகக் கவர்ந்து செல்கிறான். இதனை நடுவழியில் அறிந்துகொண்ட முதிய கழு கரசன் சடாயு சீதையைக் காப்பாற்ற இராவணனை இடைமறிக்கிறான். ஆனால், இராவணனோ அவ னது சிறகினை வெட்டிக்கொன்று வீழ்த்துகிறான். கவர்ந்து சென்ற இராவணன் சீதையை அசோக வனத்தில் அரக்கியர் புடைசூழச் சிறை வைக்கிறான். கற்பின் செல்வியாகிய சீதையை விடுவிக்குமாறு வீடணன் முதலியோர் கூறுவதைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' போன்ற சூர்ப்பணகையின் சொல்லால் சீதையின் வனப்பில் மயங்கிய இராவணன் யார் சொல்லையுமே

செவிமடுத்துச் சிந்திக்க நினைக்கவில்லை. சீதையைக் கவர்வதற்கு உடந்தையாக மாட்டேன் என்று சொன்ன மாரீசனின் மனத்தை மாற்றி, அவனை மாயமானாகச் சீதைமுன் உலவவிட்ட தந்திரசாலி இராவணன். 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்ற நினைப்பில் உழலும் அவனை யாரும் அறிவுரை கூறித் திருத்த இயலவில்லை. திருந்துதற் குரிய நல்லூழும் அவனுக்கு இல்லை. ஒருத்தியின் விருப்பமில்லாமல் அவளை வலியப் புணர நினைப்பின் இராவணன் தலை சுக்குநூறாக வெடிக்கும் என்பது வேதவதியின்சாபம். அவ்வாறான எச்சரிக்கை இல்லா திருப்பின் சீதையைத்தன் இச்சைக்குட்படுத்தி மேலும் பல தீங்குகளுக்கு ஆளாகியிருப்பான் என்பதும் ஈண்டு நினைக்கத்தகும்.

பெருவீரனாகவும் கல்வி கேள்வியறிவு கொண்ட வனாகவும் விளங்கிய இராவணன், தன் ஆணவத் தால் தன் வலியை மாற்றார் வலிமையுடன் ஒப் பிட்டுப் பார்த்து, நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறான். கும்பகருணன் தன்குல அழிவி னின்றும் காப்பாற்ற எவ்வளவோ அறிவுரை கூறு கிறான். அவனை வீடணனுடன்சார்த்திக்கண்டவாறு ஏசுகிறான். கும்பகருணன் அவனுக்கு அறிவுரை கூறுகையில், 'காலினிற் கருங்கடல் கடந்த காற்று, போலவன் குரங்குள சீதை போகிலள், வாலியை உரங்கிழித்தேக வல்லன, கோலுள யாமுளேம் குறை யுண் டாகுமே?. (யுத்த. கும்பவதைப்: 87) என்று குறிப்பிடுகிறான். தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் சீர்தூக்கிப் பாராமையாலும் அற வழியிற் செல்லாமையாலும் இராவணனைச் சுட்டி, 'கெடுத்தனை நின்பெருங் கிளையும் நின்னையும்' (யுத்த.கும்ப.வதைப்: 83)என நொந்து இடித்துரைக்கி றான். எனினும், இராவணன் அவனது அறிவுரையை ஏற்கவில்லை. அதனையுணர்ந்த கும்பகருணன் செய்ந்நன்றிக் கடனைத் தீர்க்க இராம இலக்குவரை எதிர்த்து வீரப் போரிடத் துணிகிறான். அவ்வேளை யில், 'இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன, குற்றமும் உளவெனிற் பொறுத்தி கொற்றவ, அற்ற தால் முகத்தினில் விழித்தல் ஆரிய, பெற்றனன் விடை ...... ' (யுத்த. கும்ப. வதைப்: 97) எனக் கூறித் தன் அண்ணனிடம் பிரியாவிடை பெறுகிறான். அந்நிலையில் இராவணன் தன் தம்பி மீது கொண்ட பாசப்பிணைப்பு வெளிப்படுகிறது. கலங்காத நெஞ் சினனாகிய அவன் கண்ணீர் விட்டுக் கலங்கி நிற் பதை, 'அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும், செவ்வழிக் குருதி நீரொடும் தேக்கினான்' (யுத்த கும்ப. வதைப்:99) எனவிவரிக்கிறார் கம்பர். எதற்கும் இளகாத இலங்கைவேந்தன் பெருங்கலக்கமுற்று நிற் கிற இந்த நிகழ்ச்சி, அவனது அன்பழுத்தத்திற்கு எடுத் துக்காட்டாக அமையும்.

இராமனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள இயலாது என்பதனைச் சிந்தித்துப் புரிந்து கொள்ள எத்தனையோ வாய்ப்புகள் ஏற்பட்டன. பெரு வீரனாகிய தன்னையே வலிமையில் வென்ற வன் குரங்கினத்தரசன் வாலி என்பது இராவணனுக்கு நன்கு நினைவில் இருக்க வேண்டியதாகும். அத்தகைய வாலியையும் கொன்று அழித்தவன் அயோத்தி இராமன் என்பதனைக் கேள்விப்பட்டும், இராவணன் அவன் வலிமையைப் பொருட்படுத்த வில்லை; இகழ்ந்து ஒதுக்குதற்குரிய எளிய மானுட னாகவே கருதுகிறான்.

இராம தூதுவனாகிய அனுமன் இலங்கைக்குச் சென்று எத்தனையோ வகையில் தன் பேராற்றலைப் புலப்படுத்துகிறான். தூதுவனென்றும் பாராமல் அவனது வாலிற்கு வைத்த தீ, தனக்கு முன்னறிவிப் பாக இலங்கைக்கு வைத்த தீயாக மாறிவிடுதலைக் காண்கிறான். இராவணன் கண்டும் தன் மாற்றார் வலிமையைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு அவனது ஆணவம் இடங்கொடுக்கவில்லை.

மாயப்போர் புரிதலிலே வல்லவனாகிய இந்திர சித்தினைத் தன் மகனாகக் கொண்ட நிலையிலே இராவணனுக்குத் தன் சார்பில் மிகுந்த நம்பிக்கை யிருந்தது. 'வில்லாளரை எண்ணில் விரற்கு முன்னிற் கும் வீரன்' எனக் கம்பனால் பாராட்டுப் பெறும் மேகநாதனாகிய இந்திரசித்து, மந்திரப் படலத்தில் இராவணன்முன் காட்சியளிக்கிறான். ஆங்கு, வீடண னைத் தவிர, போர்மாட்சியால் அனுபவம் மிக்க சேனைத் தலைவர் முதல் இந்திரசித்து ஈறாக, இராம இலக்குவர்களைக் குறைத்தே மதிப்பிடுகின் றனர். அன்றுவரையில் போரிலே வெற்றியைத் தவிரத் தோல்வியைக் கண்டறியாதவர்களாதலின், தங்க ளைப் பற்றிய ஆணவம் தலைக்கேறித் தம் மன்ன னுக்கு நல்வழி காட்டத் தவறிவிடுகின்றனர். இதுவும் இராவணனது வீழ்ச்சியை உந்திச் செலுத்துகிறது.

இராவணனுடைய பகைவர்களே அவனது பெரு வீரத்தைக் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். இந்திரப் பெரும்பதம் இழக்கும் இராவணனைக் கண்டு, அளகாபுரியில் ஒளிந்து வாழும் குபேரன், எல்லாருடைய உயிரையுங் கவரும் அறக்கடவுளாகிய இயமன், இருளைப் போக்குவதற்குரியவனாகிய அரு ணன், கடல் தெய்வமாகிய வருணன் முதலியோர் அஞ்சியவர்களாய் நிலை தடுமாறி வாழ்கின்றனர். இந்தச் செய்தியை இராமனிடம் வீடணன் எடுத்துக் கூறி, இராவணனது பேராற்றலைப் புலப்படுத்து

கிறான். அனுமன் வாயிலாகவும் இராவணன் பெருமையும் பேராற்றலும் புலப்படுகின்றன.

போர்க்களத்தில் படைகளற்று நிலங்கவிந்து பார்க்கிற சூழலில், இராவணனை 'இன்று போய்ப் போர்க்கு நாளைவா' எனக் கூறுகிறான் இராமன். அப்போது இராவணன் தக்க படிப்பினையைப் பெற்றுத் திருந்தியிருக்கலாம். ஆனால், மானவுணர்வு போர் வெறியையே மேலும் தூண்டி நிற்கிறது. இத்தகைய இலங்கைவேந்தன் போர்க்களத்தில் மாண்டு மண்மேல் கிடக்கிறான். அவனை இராமன் ஊன்றிப் பார்க்கையில் முதுகில் புண்பட்டுக் கிடப்பது தெரிகிறது. உடனே தன் வீரத்தைத் தானே பழித்துக் கொண்டு, ''போர்ப்புறங் கொடுத்தோர் போன்ற ஆண்தொழிலோரில் பெற்ற வெற்றியும் அவத்தம்' என்று நொந்து கொள்கிறான். இதனைக் கேட்ட வீடணன் தாங்காது இராவணன் பெருவீர மாட்சியினை எடுத்து இயம்புகிறான். ஐயனே! கார்த்தவீரியனும் வாலியும் இராவணனை வென்று நின்றமை அவர்கள்தம் சொந்த வலிமையாலன்று; தேவர்களிட்ட சாபத்தால் விளைந்த பயனேயாகும். இனி இங்கு அவன் வீழ்ந்து கிடப்பதற்கும் காரணம் பிறன் மனை நயந்த பேதைமையாலாகும். அதற்கேற்பப் பொறையே வடிவமான நீயும் வெகுண்டனை. ஆதலின் அவனது அழிவு நெருங்கியது. யாராலும் வெல்லமுடியாத அவன் ஒரு காலத்தில் திக்கு யானைகளை வென்று அவற்றின் கொம்புகளை மார்பில் ஏற்று ஒடித்துக் கொண்டவன்; மீண்டும் அவற்றைக் களைந்தெறியாமல் மார்பிற்கு வீர அணிகலமாகக் கொண்டிருந்தான். மேலும், இப்போது அனுமன் குத்திய குத்துகளும் நீ எய்த அம்புகளும் அவற்றை மார்பினூடே உருவிச் செலுத்தின. அதுவே அவனது முதுகில் புண் உண்டாதற்குக் காரணமாகும் எனத் தெளிவுறுத்துகிறான்.

இந்திரன் கடுந்தவமும் சீதையின் கற்புத்திறமும் இராவணனது வீழ்ச்சிக்கு வழிகோலிச் செல்கின்றன. சீதையின் எழிலுருவினைச் சூர்ப்பணகை வருணிக்கையில் அதனைக் கேட்டவுடனே தன் இதயமாம் சிறையில் அவளை வைத்துக் கொள்கிறான்; இதனை 'மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட எயிலுடை இலங்கைநாதன் இதயமாஞ் சிறையில் வைத்தான், (ஆரணிய. மாரீசன் வதைப். 85) எனக் கம்பன் சித்திரிக்கிறார். அவ்வாறு நெஞ்சச் சிறையில் சிக்கிய சீதையை அசோகவனத்திலிருந்து மட்டும் விடுவித்தால் போதாது. எனவே, இராவணனது உடலை இராமனின் அம்புகள் துளைத்து நிற்குஞ் சூழலை உருவாக்கி, 'வெள்ளெருக்கஞ் சடை முடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங் கீழும், எள்ளிருக்கு மிடனின்றி உயிரிருக்கும் இடன்நாடி யிழைத்தவாறோ, கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையில் கரந்த காதல், உள்ளிருக்கு மெனக் கருதி யுடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி' (இராவணன் வதைப். 237) என மண்டோதரி வாக்கால் சீதையை இராவணன் நெஞ்சத்தினின்றும் விடுவிக்கிறார் கம்பன்.

இராவணனது வரலாற்றில் அவன் தங்கை சூர்ப்பணகையும் திருப்புமையத்தை ஏற்படுத்தி விடுகிறாள். தன் தங்கையின் மூக்கினை அரியக் காரணமாக இருந்த இராம இலக்குவர்களைப் பழிவாங்கத் துடிக்கும் மானவுணர்வு இராவணனது நெஞ்சத்தில் படிந்து நிற்கிறது. சூர்ப் பணகையின் பேச்சால் சீதையின் அழகைப் பற்றித் தெரிந்து கொண்டதும் அவன் பழிவாங்கும் உணர்விற்கு அது ஒரு பற்றுக்கோடாக அமைந்துவிடுகிறது.

பிறன் மனை நயந்த பழிகாரணமாக இராவணனுடைய பெருமைகளெல்லாம் வீழ்ச்சியுற்றன எனினும், கம்பன் இராவணனது வீழ்ச்சியிலும் ஒருவகை ஏற்றத்தினையளிக்க முந்துகிறார். போர்க்களத்தில் பரம்பொருளாகிய இராமனுடன் போரிட்டு மீண்ட இராவணன், 'நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையைப் பெற்றேன்' என்று கூறுவதால் அவன் பெருவீரத்திற்கும் பிடிவாதத்திற்குமிடையே அப்போதைய அறிவுஒளி-விவேகம்-பளிச்சிடுதலைக் காணலாம்; இதுவே அவனை ஓர் அவலத்தலைவன்(Tragic Hero) நிலைக்கு உயர்த்துகிறதென்பர்.

இராவணனை வான்மீகி கண்டு காட்டும் போக்கு வேறு; கம்பன் காட்டும் போக்கு வேறு. சமணர் முதலியோர் தம் இராமாயணங்களில் இராவணனைக் காட்டும் போக்கு வேறு. சமண இராமாயணங்களுள் சிறப்பினதாகிய பம்பராமாயனம் பொதுவாக வான்மீகி இராமாயணத்தை ஓரளவு ஒத்திருப்பினும் பல வேறுபாடுகள் கொண்டுள்ளது. தசரதன், சனகன், அனுமன் முதலியவர்களுடன் இராவணனும் சமண சமயத்தினனாகச் சித்திரிக்கப்படுகிறான். அனுமன் சுக்கிரீவன் முதலானோர் குரங்குக் கொடியுடையவர்களே தவிரக் குரங்கினத்தைச் சேர்ந்தவர்களல்லர்: அவர்களும் இராவணனும் வித்தியாதரர்களாகவும் நெருங்கிய உறவினர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இராவணனுக்குப் பத்துத் தலையில்லை: அவன் பத்து நாள் குழந்தையாக இருந்தபோது ஓர் அரக்கன் வியக்கத்தக்க ஓர் அணிகலனைக் கொணர்ந்து அணிவிக்கிறான். அதில் பதித்திருந்த ஒன்பது மாணிக்கங்களிலே குழந்தையின் தலை நிழலிடவே ஒன்பது தலை நிழல்கள் தெரிந்தன. அந்நிலையில் குழந்தையின் தலையோடு அந்நிழல்களையும்

சேர்த்துப் பத்துத் தலைகள் தோன்றின; அவனும் தசமுகன் ஆயினான் என்பது அந்தச் சமணக் காப்பியக் கூற்று. பொதுவாகச்சமணஇராமாயணங்களில் இராவணனுடைய பண்புகள் மிகப் போற்றத்தக்கனவாகும். கல்வி, கலைமேம்பாடு, வீரம், பெருந்தன்மை, பேரிரக்கம், தூய வொழுக்கம் முதலிய நற்பண்புகளுடன் இராவணன் காணப்படுகிறான்.

மெய்ப்பொருளியல் அடிப்படையில் சிந்திப்பவர்கள் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் சேர்ந்த பத்தும் இராவணனுக்குப் பத்துத் தலைகளாயின; அவையே அவனை அடிமையாக்கித் தகாத நெறியில் செலுத்தின என்பர். முக்குண வயத்தால் உயிர்கள் படும் பாட்டினை மக்கள் உணர்வதற்காகவே இராசச குணத்திற்கு இராவணனும், தாமச குணத்திற்குக் கும்பகருணனும், சத்துவகுணத்திற்கு வீடணனுமாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பர். எவ்வாறோ வான்மீகி, கம்பன் ஆகியோரால் அறத்தின் ஆழியாகிய இராமனுக்கு எதிர்நாயகனாகச் சித்திரிக்கப்பட்டமையின், இராவணனைத் தீமையின் மொத்த வடிவினன் என்றும், அவன் பெற்ற அவல முடிவு வஞ்சகனாகிய அவனுக்குத் தக்கதே யென்றும் தீமையை நன்மை வெற்றி கொண்டு அழிப்பதே அறத்தின் நியதியென்றும், இங்கு இராவணன் வீழ்ச்சியால் அவலமில்லை யென்றும், இதுவே உலகத்திற்கு நல்ல படிப்பினை யென்றும் சிலர் நினைக்கின்றனர். இதற்கேற்ப வடநாட்டிலே இராவணன், கும்பகருணன் போன்ற பெரிய உருவங்களைத் தட்டிகளாலும் வண்ணத்தாலும் செய்து கொளுத்தி விழாக் கொண்டாடுகின்றனர்.

இராவணன் தொடர்பாக 'இராவணாகாரம்' என்ற சொல் உருவாகி, அது அச்சுறுத்தும் வடிவம் எனப்பொருள் கொள்ளப் பெற்றது; தாயுமானவரும் இதனைக் கையாள்கிறார் (மௌன. 9). இது ஒரு புறமிருக்க, இராவணது மாட்சியையும் வீழ்ச்சியையும் திறனாய்வுக் கண்ணால் கண்டு, கட்டுரைகளாகத் தீட்டி மகிழ்கின்றனர். பட்டிமன்றங்களில் அவனது பேராற்றலை எடுத்து இயம்புகின்றனர். புலவர் குழந்தை எழுதியுள்ள 'இராவண காவியம்' இராவணனை மானமுள்ள பெருவீரனாக மிகவுயர்த்திப் புகழ்ந்து செல்கிறது. செ.வை.

**இரான்** மத்தியபிரதேசத்தில் சாகர் (Sagar) மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் பைனா (Bina) என்னும் துணை ஆறு, பேட்வா (Betwa) என்னும் ஆற்றுடன் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூர் பழங்காலத்தில் அயிராகினா (Airakina) என்று கூறப்பட்டது. இங்குக் குப்தர் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் பல உள்ளன. அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. 1874–75-ஆம் ஆண்டு இவ்வூரில் களஆய்வுகளை மேற்கொண்டு இவ்வூரின் பழைமைச் சிறப்பினை வெளிக்கொணர்ந்தார். அவரே அயிராகினா என்று சொல்லப்படுகிற தொன்மையான ஊர் இதுவேயாகும் எனக் குறிப்பிட்டார்.

இரானில் (Eran) 1960–61–ஆம் ஆண்டு சாகர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் கே.டி. பாசுபாய் (K.D. Bajpai), உதயவீர்சிங்கு (Udai Vir Singh) ஆகியோர் தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வின் மூலம் இவ்வூரில் நான்கு பண்பாட்டுக்கால மக்கள் வாழ்ந்தமை பற்றிய அடையாளங்கள் கண்டெடுக்கப்பட்டன. வெண்மை ஓவியம் தீட்டப்பட்ட கருப்பு, சிவப்பு மட்பாண்டங்களும், சிவப்பு மட்பாண்டங்களும் இரும்புப் பொருட்களும் அகழாய்வில் கிடைத்தன.

கிழக்கு மாளவப் பகுதியை ஆட்சி புரிந்த இந்திர குப்தன் என்ற அரசருடைய எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஈயத்தகடு ஒன்று இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்கில் கிடைத்தது. மௌரியப் பேரரசர் அசோகர் ஆட்சிக்குப்பின் இது, தர்மபாலர், இந்திர குப்தன் போன்றோரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. மூன்றாம் பண்பாட்டுக்கால மண்ணடுக்குகளில் இராமகுப்தரின் துளையிடப்பட்ட நாணயங்கள் பல கிடைத்தன. மேலும் நாகர்கள், இந்தோசசானிய நாணயங்கள் பலவும் இவ்வூரில் கிடைத்தன. இராமகுப்தரின் கருடன் வகை நாணயங்கள், இவ்வூரில் மட்டுமே கிடைத்துள்ளன. கசலட்சுமி (Gaja Lakshmi) உருவமும் எழுத்தும் பொறிக்கப்பட்ட முத்திரை ஒன்றும் இங்குக் கிடைத்தது. இம்முத்திரையில் 'அயிராகினா' என்ற நகரத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஊண அரசர் தோரமானரின் (Toramana) கல்வெட்டுகளும் இந்தோசசானிய நாணயங்கள் பலவும் இவ்வூரில் கிடைத்தமையால், இப்பகுதி ஊணர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதனை அறியமுடிகிறது.

**இரி,** எகிப்தின் பழைமையான சூரியக்கடவுள். இவர் இரா (Ra) என்றும் கூறப்படுகிறார். இரி (Re) எகிப்தியக் கடவுள்களுள் மிகச் சிறப்பானவராகக் கருதப்பட்டார். இத் தெய்வத்தின் வழிபாடு முதன் முதலாகக் கீழை எகிப்திலுள்ள எலியோபாலிசு (Heliopolis) என்னுமிடத்தில் தோன்றி, எகிப்து முழுமையும் சிறிது சிறிதாகப் பரவியது. எலியோபாலிசு நகரம் சூரியனின் நகரம் எனச் சிறப்பாகக் கூறப்பட்டது. எகிப்தின் ஏழாம் மரபினர் ஆட்சியின் பொழுது, இரி எகிப்து முழுவதிலுமிருந்த மக்களால் சூரியக் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.



இரி

எகிப்து மக்கள் தங்களை இரி கடவுளின் கால்நடைகள் (The Cattle of Re)எனக் கூறினர். எகிப்திய அரசர்களான பாரோக்கள் (Pharaohs), இத்தெய்வத்துடன் மிகுந்த தொடர்பு கொண்டனர். தங்களை இரி தெய்வத்தின் மக்கள் எனக் கூறிக் கொண்டனர். ஆமோன் இரி (Amon-Re), மாண்டு-இரி (Montu-Re), கனும்-இரி (Khnum-Re) போன்ற தெய்வங்கள் இரி கடவுளின் வழிவந்தவையாகும்.

**இரிச்சுமாண்டு மேரி எலன் (கி.பி. 1861-1978)** அமெரிக்க ஐக்கிய நாட்டின் அறக்கொடை ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் வரலாற்றில் சிறப்புமிக்கவராகக் கருதப்பட்டவர். இப்பெண்மணி வாழ்க்கைப் பின்னணி ஆய்வுக்கு முதன்முதலில் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்த சிறப்புடையராவார். இவர் இல்லினாய் மாநிலத்திலுள்ள பெல்லெவில்லில் (Belleville) பிறந்தார். பால்டிமார் அறக் கொடை நிறுவனத்தில் பொருளாளராகச் சேர்ந்த இவர், தம் நிருவாகத் திறமையால் பாராட்டப் பெற்று, கி.பி. 1891-ஆம் ஆண்டில் அந்நிறுவனத்தின் பொதுச் செயலராக அமர்த்தப்பட்டார்.

இரிச்சு மாண்டு மேரி எலன் (Richmond Mary Ellen), தொரெண்டோவில் கூடிய தேசிய அறக்கட்டளைச் சீர்திருத்த மாநாட்டில் புகழ்பெற்ற ஒரு சொற்பொழிவை ஆற்றினார். இம்மாநாட்டில் தொழில் முறைச் சமூகப்பணிக் கல்விக்கெனப் பயிற்சி நிலையங்களை நிறுவ அறைகூவல் விடுத்தார். 'ஏழைகள் நடுவில் நட்புடன் பயணம்' என்ற புகழ்மிக்க நூலை, கி.பி.1899-ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னர், கி.பி. 1900-ஆம் ஆண்டில் இவர் பிலடெல்பியா அறக்கட்டளை ஒருங்கமைப்பு நிறுவனத்திற்குப் பொதுச் செயலாளராக அமர்த்தப்பட்டார். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குச் சட்டத்தின் மூலம் தீர்வுகாணல், பென்சில்வேனியக் குழந்தைகள் நல மன்றத்தை நிறுவுதல், பொதுமக்கள் அறக்கட்டளை நிறுவனத்தைத் தோற்றுவித்தல், இளங்குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் ஏற்படுத்துதல், வீட்டு வசதிக்கழகம் நிறுவுதல், உளம் பிறழ்ந்த பெண்கள், மற்றும் குழந்தைகளுக்கு நிறுவனங்களின் மூலம் உதவுதல் போன்ற பலவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயற்பட்டுப் பெருமதிப்பிற்குரியவராகத் திகழ்ந்தார். மேலும் 'புதிய நகரத்தின் நல்ல உறவினர்' என்ற நூலை 1907-ஆம் ஆண்டில் வெளியிட்டு, அறக்கட்டளைக்கு மக்களிடத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்தினார்.

நியூயார்க்கு நகரத்தில் 1907-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசல் நிதிநிறுவனத்தின் அறக்கொடைத் துறைக்கு இயக்குநராக 1909-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார். மேலும், 1917-ஆம் ஆண்டில் புகழ் பெற்ற 'சமூகக் குறையறிதல்' (Social Diagnosis) என்னும் நூலையும், 1922-ஆம் ஆண்டில் வாழ்க்கைப் பின்னணி ஆய்வு என்பது என்ன? (What is Social Case Work) என்னும் நூலையும் இயற்றினார். சமூகப்பணிக்கும் குறிப்பாகத் தனியாள் சமூகப்பணிக் கல்வி வளர்ச்சிக்கும் இரிச்சுமாண்டு ஆற்றிய தொண்டு சிறப்புமிக்கதாகும்.

**இரிச்சு மார்கரட் எல்டன்(கி.பி.1884-1956)** வாழ்க்கைப் பின்னணி ஆய்வாளர்களுள் ஒருவர் ஆவார். இவர் குடும்பச் சமூகப் பணியில் 50 ஆண்டுகள் ஈடுபட்டிருந்தார்; 'குடும்பச் சமூகப் பணியின் வரலாறு' என்னும் நூலை இயற்றினார்.

இரிச்சு மார்கரட் எல்டன் (Rich, Margaret Elden) போர்ட்லாந்து என்னுமிடத்தில் பிறந்தார். இராடுகிளிப்புக் (Radcliff) கல்லூரியில் தம் பட்டப் படிப்பை 1907-ஆம் ஆண்டில் முடித்தார். பின்னர்ப் பாசுடன் அறக்கட்டளைக் கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளராகவும், 1915-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டு வரை நியூட்டன் குடும்பப் பணி மன்றத்தின் இயக்குநராகவும் பணியாற்றினார். இவர் 1919-ஆம் ஆண்டில், அமெரிக்கக் குடும்பப் பணி மன்றத்தில் பணி ஏற்றுப் பல ஆண்டுகள் பணியாற்றினார். இம்மன்றத்தில் இயக்குநராகவும், 'குடும்பம்' என்ற இதழின் பதிப்பாசிரியராகவும் பொறுப்பேற்ற பொழுது, குறிப்பிடத்தக்க தொண்டுகள் செய்தார், மில்போர்டு மாநாட்டு அறிக்கையை எழுத உதவி செய்தார். இவ்வறிக்கை வாழ்க்கைப் பின்னணி

பணிக்கோட்பாடுகளின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது. தாம் ஓய்வுபெறும் காலம்வரை பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்தார். இவர் ஓய்வு பெற்ற பிறகு, 1952-ஆம் ஆண்டில், அமெரிக்கக் குடும்பப் பணி நிறுவனம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடும்பப் பணி வரலாற்றை எழுதுமாறு கேட்டுக்கொண்டது. இவர் இவ்வரலாற்றைத் தாம் இறப்பதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பு எழுதிக் கொடுத்தார். இரிச்சு சமூகப் பணியில் காட்டிய ஈடுபாடு மிகுதியான பாராட்டுகளைப் பெற்றது.

*இரிசிகேசம்*, இமயமலைச் சாரலில் உள்ள புண்ணியத் தலங்களுள் ஒன்று. உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சார்ந்த இவ்வூர் தேராதூன் (Dehra-Dun) மாவட்டத்திலுள்ள அரித்துவாரத்துக்கு 32 கி. மீ. தொலைவில் அதன் வடக்கில் அமைந்துள்ளது. கங்கோத்திரியில் உற்பத்தியாகும் கங்கை ஆறு, இமயமலை இடுக்குகளில் ஓடி, இரிசிகேசத்தின் வழியாகப் பாய்ந்து, அரித்துவாரத்தில் சமவெளியை அடைகிறது. இரிசிகேசத்தில் தவத்திரு சிவானந்த சரசுவதியின் ஆசிரமம் உள்ளது. கங்கை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்த ஆசிரமத்தில் உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் சீடர்கள் தங்கித் தியானம், யோகம் போன்றவற்றைப் பயின்று ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வழிகாண முயற்சிசெய்கிறார்கள். இவ்வாசிரமத்தின் எதிர்க்கரையில் 'கீதாபவன்' என்னும் அமைப்பு பகவத் கீதையை உலகுக்கு எடுத்தோதுகிறது. கங்கையாற்றைக் கடக்க இங்கு அமைக்கப்பட்டுள்ள பாலம் சிறப்பானது. இதனைக் கயிற்று வழி என்றும், தொங்கு பாலம் என்றும் கூறுவர். இமயமலையில் அமைந்துள்ள பத்ரிநாதம், கேதாரம் போன்ற புனிதத்தலங்களுக்குப் பயணம் செய்வோர் இரிசிகேசத்தின் வழியாகச் செல்ல வேண்டும். கடுங்குளிருக்கு உறைவிடமான இவ்வூரிலுள்ள கம்பளிவாலா சத்திரத்தில் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து தருகிறார்கள். குளிரிலிருந்து காத்துக்கொள்ளக் கம்பளிப் போர்வைகளையும் இங்கு அளிக்கிறார்கள். இரிசிகேசம் ஒரு சிவத்தலம். இவ்வூரின் மக்கள் தொகை 29, 100 (1981) ஆகும்

*இரிட்டிரியா* வட எத்தியோப்பியா நாட்டிலுள்ள மாநிலம். இதன் பரப்பு 1, 24, 320 ச.கி.மீ. செங்கடலையொட்டியுள்ள வடகிழக்கு ஆப்பிரிக்காவில் இரிட்டிரியா (Eritrea) அமைந்துள்ளது. பண்டைக்கால ஆக்சும் என்னும் எத்தியோப்பிய அரசின் பகுதியாக, கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இரிட்டிரியா இருந்தது. பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை எத்தியோப்பியாவின் நேர் பார்வையில் இடையிடையே கட்டுப்பட்டிருந்தது. அதற்குப்பிறகு உதுமானியப் பேரரசு இரிட்டிரியாவின் பெரும்பாலான கடற்கரைப் பகுதியைக் கவர்ந்து கொண்டது. இரிட்டிரியாவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தன்னாட்சியின் கீழ் வைத்துக் கொள்ளும் பொருட்டு எத்தியோப்பியா எகிப்துடனும், இத்தாலியுடனும், மோதியது. இத்தாலி கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் இதன் கடற்கரைப் பகுதிகளைத் தனக்குரியதாக்கியது. பின் கி.பி.1890-ஆம் ஆண்டளவில் இரிட்ரியாவைக் குடியேற்றப் பகுதி போல் கருதுமளவு அதன் பகுதிகளைக் கட்டுப்படுத்தியது. எத்தியோப்பியாவை 1935-36-ஆம் ஆண்டுகளில் இத்தாலி வெல்வதற்கு இக்குடியேற்றப் பகுதியே அடித்தளமாக அமைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது கி.பி. 1941-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இரிட்டிரியாவைக் கைப்பற்றிக் கொண்டனர். போருக்குப் பின்னரும் இரிட்டிரியா ஆங்கிலேயர் கைவசமே இருந்து 1949- ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஐ.நா.வின் அறக்கட்டளைப் பகுதியாக நிருவகிக்கப்பட்டது. இரிட்டிரியா




இரிட்டிரியா

1952-ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவின் கூட்டாட்சிப் பகுதியாயிற்று. இரிட்டிரியாவின் பேரவை மன்றம் கி.பி.1869-ஆம் ஆண்டில் கூடியபோது கூட்டாட்சி முறைக்கு எதிராக வாக்களித்து இரிட்டிரியாவை எத்தியோப்பியாவுடன் இணைத்துவிட்டது. இவ்விணைப்பை எதிர்த்தவர்கள் 1962-ஆம் ஆண்டுக்குப் பின்னர் எத்தியோப்பியாவுடன் கொரில்லாப்

போரில் ஈடுபட்டுத் தம் எதிர்ப்பைக் காட்டினார்கள். இதன் மக்கள் தொகை 22,95,800 (1978) இரிட்டிரியாவின் தலைநகர் அசுமாரா (Asmara) என்பதாகும்.

**இரிவர்சு, வில்லியம் ஆல்சு இரிவர்சு (கி.பி. 1864-1922)** ஆங்கிலேய மருத்துவ உளவியலாரும் மானிடவியலாளருமாவார். இவர் இங்கிலாந்தில் கெண்ட்டு (Kent) மாவட்டத்தில் இலூட்டன் (Lutun) என்னுமிடத்தில் கி.பி. 1864-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாள் பிறந்தார். இரிவர்சு (Rivers, William Halse Rivers) மருத்துவம் பயின்று அதனையே வாழ்க்கைத் தொழிலாக அமைத்துக் கொண்டார். மருத்துவ வாழ்க்கையின் தொடக்க காலத்தில் இவர் உடலியங்கியல்சார் உளவியல் (Physiological Psychology) துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சாராயம், மருந்துகளின் தாக்கம், நிறப் பார்வையின் (Colour vision) தன்மை, மனச் சோர்வு (Mental fatigue) முதலான வற்றைச் செயற்படுத்தும் முறைகளையும் கண்டறிந்ததனால், இவர் சிறந்த உளவியலாராக மதிக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் முதல் உளவியல் சோதனைக் கூடத்தின் இயக்குநராக இவர் கி.பி.1897-ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அவ்வாண்டிலேயே கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக அமர்த்தப்பட்டார். சோதனைசார் உளவியல் (Experimental Psychology) துறையை நிறுவி, அதனை விரிவுபடுத்தப் பெரும் பணிபுரிந்தார். தாரசு நீர்ப் பிரிவு (Tores Strait) ஆய்வுப் பயணத்தை கி.பி. 1898-இல் மேற்கொண்ட கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகக் குழுவில் சேர்ந்து, மெலனீசியர்களின் (Melanesians) புலன்களின் செயல்களை (Sensory functions) ஆய்வ செய்தார். இந்த ஆய்வுப் பயணத்தால் இவர் மானிடவியலின் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். இவர் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தின் புனித யோவான் கல்லூரியின் (St. John's College) ஆய்வாளராகி, 1902-இல் பல்கணவர் மணமுறையினைக் கொண்டுள்ள தோடர் (Toda) பழங்குடிகளை ஆய்வு செய்தார். தோடர் குறித்த இவரது ஆய்வு மிக விரிவானதும் சிறப்பானதுமாகும். இரிவர்சு, பழங்குடிகளின் சமூகக் கூட்டமைப்பிலும், உறவுமுறைச் சொற்களிலும் காணப்படும் அமைப்புகளைக் கண்டறிய மீண்டும் மெலனீசியாவுக்குச் சென்றார். மெலனீசியரின் உறவுமுறை அமைப்புகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் கண்டறிந்து, அவற்றைத் தோடர் பழங்குடிகளின் பண்பாட்டுக் கூறுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தார்.

உறவுமுறையும் சமூகக் கூட்டமைப்பும் (Kinship and Social Organization-1914) என்னும் நூல் இன்றைய மானிடவியலாரால் ஒரு நல்ல வரலாற்றுப் பின்னணியுடையது எனப் பாராட்டப் பெற்றுள்ளது. தோடர் (The Todas - 1906), மெலனீசியர் சமுதாயத்தின் வரலாறு (History of Melanesian Society-1914), உறவு முறையும் சமூகக் கூட்டமைப்பும் (Kinship and Social Organization - 1914) முதலானவை, இரிவர்சு மானிடவியல் துறைக்கு அளித்த நூல்களுள் சிலவாகும்.

முதல் உலகப் போரின் பொழுது ஆங்கில அரசின் நரம்பியல் ஆலோசகராகப் பணியாற்றினார். இரிவர்சு தம் இறுதிக் காலத்தில் மருத்துவ உளவியல் துறையின் ஆய்விலேயே மிகுந்த கவனம் செலுத்தினார். இவர் 1922-ஆம் ஆண்டு சூன் நான்காம் நாள் கேம்பிரிட்சில் காலமானார். நே.தே.

**இரீவிசு சிம்** இருபதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய அமெரிக்க மெல்லிசைக் கலைஞர்களுள் ஒருவர் ஆவார். இரீவிசின் (Jim Reeves) ஆழமான இனிய குரல் வன்மையால் இவருக்கு உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் இருக்கிறார்கள். இவருடைய பாடல்கள் மனித உள்ளத்தின் மென்மையான உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பவில்லை. இவர் சமயப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவற்றுள் கிறித்துமசு பண்டிகைக் காலத்தில் பாடப்படும் 'கிறித்துமசு இசைக்கொத்து' (Christmas Carols) என்ற பாடல் தொகுதி இனிமையானது. இவற்றைத்தவிர, போருக்குச் செல்லும் ஓர் இளைஞனின் உள்ளக்குமுறலையும், அவன் தன் காதலியிடம் கூறும் கடமையுணர்ச்சி நிறைந்த சொற்களையும், 'தொலைவில் கேட்கும் முரசொலி' (Distant Drums) என்னும் பாடலில் கேட்கலாம். காதலியை நினைத்து ஏங்கும் காதலனின் ஏக்கத்தைப் பல பாடல்களில் காட்டியுள்ளார். இவற்றை 'உரோசாமலர் நிரம்பிய அறை' (Room Full of Roses) என்னும் பாடல் தொகுதியில் கேட்கலாம். நூற்றுக்கணக்கான பாடல்களினால் மக்களின் உள்ளம் கவர்ந்த இரீவிசு, தம் 46-ஆம் வயதில் 1966-ஆம் ஆண்டு புற்றுநோயினால் இறந்தார். மெல்லிசை உலகில் புகழ்பெற்ற இவர் தம் பாடல்கள் இன்று உலகெங்கிலுமுள்ள மக்களால் விரும்பிக் கேட்கப்படுகின்றன.

**இரு**, பிண்டாரிகளின் தலைவர்களுள் ஒருவன். பிண்டாரிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தினர். இரு (Hiru) அவர்களின் தலைவன். புரான் (Buran), சிட்டு (Chitu) வாசில் முகமது

(Wasil Muhammad), கரீம் கான் போன்றோர் ஏனைய தலைவர்கள். 'இவர்கள் போர்க்குணம் படைத்த தலைவர்கள்' ஆயினும் போராட விரும்பா தவர்கள். இவர்கள் கொள்ளையடிப்பதையே கண் ணும் கருத்துமாகச் செய்தனர். இவன் ஆங்கிலே யருக்குமிகுந்த தொல்லைகளைக் கொடுத்தான். பிண்டாரிகளை ஆங்கில அரசுப் பேராளரான ஏசு டிங்சு (Hastings) பிரபு அழித்தார்.

**இருக்கு வேதம்:** ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு முனிவர்களால் ஆக்கப்பட்டது. அது இருக்கு வேதம், யசுர்வேதம், சாமவேதம், அதருவண வேதம் என நால்வகைப்படும். அவற்றுள் இருக்கு வேதம் ஆரியர்களின் முதல் இலக்கியம். அது செய் யுள் வடிவில் அமைந்த மந்திரங்கள், உரைநடையில் அமைந்த பிராம்மணங்கள் என இரு வகைப்படும். மந்திரங்கள், வேள்விகள் நடைபெறும்போது இந்தி ரன், வருணன், அக்கினி முதலான தேவதைகளை விளித்துத் துதி செய்யப் பயன்படுவன. இவ்வாறு விளிக்கின்றவர் ஓதா எனப்படுவார். பிராம்மணங்க ளின் முதற்பகுதி மந்திரங்களின் பொருளையும் வேள் வியின் செயல் முறையையும் விளக்குவனவாகும்.

இரண்டாம் பகுதி வானப்பிரத்தர்களின் தருமத் தைக் கூறும். இது ஆரணியகம் எனப்படும். மூன்றாம் பகுதி ஆன்மாவின் தன்மையை ஆயும். இது உபநிட தம் எனப்படும்.

வேத வியாசர் நான்கு வேதங்களையும் நான்கு சீடர்களுக்கு உபதேசித்தார் என்றும், அச்சீடர்கள் தத்தம் வேதத்தைப் பல சாகை (கிளை) களாகச் செய்யும் போது அவை அவர்களின் பெயர்களால் வழங்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. மாபாடியம் எழுதிய பதஞ்சலி இருக்குவேதத்திற்கு இருபத் தொரு கிளைகள் இருந்தன என்று கூறியுள்ளார். இப்போதுள்ள சாகைகள் சாகலம், வாசுகலம் என்ற இரண்டே. இவ்வேதத்திற்குக் கந்தசுவாமி, வேங்கட மாதவர், சாயனர் ஆகியோர் உரை எழுதியிருக் கின்றனர்.

வேத மந்திரங்களின் தொகுப்பைச் சம்கிதை என்பர். இருக்குவேத சம்கிதை எட்டு அட்டகங் களாகவும், ஒவ்வோர் அட்டகமும் எட்டு அத்தியா யங்களாகவும், ஒவ்வோர் அத்தியாயமும் பல வருக் கங்களாகவும், ஒவ்வொரு வருக்கமும் பெரும்பாலும் ஐந்து இருக்குகளைக் கொண்டதாகவும் பிரிக்கப்பட் டுள்ளது. மற்றொரு வகையில் இவ்வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மண்டலமும் பல சூக்தங்களாகவும், ஒவ்வொரு சூக்தமும் பல இருக்குகளாகவும் பிரிக்கப்பட்டுள் ளது. இச்சம்கிதையில் 1029 சூக்தங்களும், 10415 இருக்குகளும் உள்ளன. ஒவ்வொரு சூக்தத்திலும் அதனை ஆக்கிய முனிவர், துதிக்கப்படும் தேவதை, ஆளப்பட்டிருக்கும் யாப்பு (சந்தம்) ஆகியவற்றின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை யில் மண்டலங்கள் 2 முதல் 7 வரை பழைமை யானவை எனவும், முதல் மண்டலத்தின் முற்பகுதி பிற்பகுதிகள், 8-ஆம் மண்டலம், சோம தேவதை யைப் பற்றிய 9-ஆம் மண்டலம், 10-ஆம் மண்டலம் ஆகியவை பின்னர்ச் சேர்க்கப்பட்டிருக்கக் கூடும் என வும் மேனாட்டாராய்ச்சியாளர் கூறுவர். இருக்குவேத சம்கிதை இன்றுவரை மாற்றமின்றி இருப்பதற்குக் காரணம் பதபாடம், கிரமபாடம், சடைபாடம், கனபாடம், பிராதிசாக்கியம், அனுக்கிரமணிகை முதலிய துணை நூல்களால் மந்திரங்கள் திட்ட வட்டமாக வரையறை செய்யப்பட்டிருப்பதேயாகும்.

இருக்குவேத மந்திரங்களால் போற்றப்படும் அக்கினி, இந்திரன், வருணன், சவிதா முதலான தேவதைகளுள் பெரும்பாலானவை இயற்கைச் சார்பு டையனவே என்று மேனாட்டார் கூறுவர். இத் தேவதைகள் அக்கினி, பிருதிவி போன்ற பூலோக தேவதைகள் என்றும், சூரியன், அசுவினி போன்ற தேவலோக தேவதைகள் என்றும், இந்திரன், வரு ணன் போன்ற இரண்டிற்கும் இடைப்பட்ட அந்தரிட்ச லோக தேவதைகள் என்றும் மூவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளனர்.

மாந்தரின் பண்புகள், பலமந்திரங்களில் தேவதை களுக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அக்கினி யைப் போற்றும் ஒரு முனிவர், 'ஓ அக்கினி தேவனே! தந்தை மகனிடம் பரிவு காட்டுவது போல் எளிமை யாக எங்களுடன் இருக்க வேண்டும். எங்களுக்குப் பொருளும் வளமும் வான் புகழும் வீர புத்திரர் களும் அருள்வீராக' என்று வேண்டுகிறார். உருத்தி ரனை வேண்டும்போது நோயைப் போக்கும் தலை சிறந்த மருத்துவர் என்று குறிப்பிட்டு, அவர்தம் அம்பு கள் தம்மைத் தவிர்த்து எதிரிகளைத் தாக்குவதாக என்று வேண்டுகின்றார்.

சில இருக்குவேத மந்திரங்களில் காவியச் சுவை யைக் காணலாம். விடியற்காலைப் பொழுதை 'உசசு' என்ற தேவதையாக ஆரியர்கள் வழிபட்டிருக்கின்ற னர். இத்தேவதையை எழில் மிக்க ஆரணங்காக உரு வகப்படுத்தி வருணிக்கிறார் ஒரு முனிவர். அவள் கடல் அலைகளைப் போல் வெண்மையான ஒளியுடன் மிளிர்கிறாள். அவளுடைய ஒளி வானை நோக்கிப் பிரிகிறது. எழிலார்ந்த மார்பகத்தைக் கொண்ட அவள் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொள்கி றாள். வில்லேந்திய வீரனைப் போல் எதிரியாகிற

இருளைத் துரத்தியடிக்கிறாள். தங்களுக்கு வளத்தைக் கொண்டு வந்து சேர்க்குமாறு முனிவர் அவளை வேண்டுகிறார் (மண்ட. 6. சூ. 64).

இருக்குவேதத்தின் இறுதிப் பகுதியான பத்தாம் மண்டலத்தில் உலகத் தோற்றம் குறித்து ஆராயப் புகுந்த மனிதனைக் காணலாம். தத்துவ விசாரணை அப்போதுதான் மெதுவாகத் தொடங்குகிறது. ஒருவர் எண்ணத்தொடங்குகிறார். உலகத் தொடக்க காலத்தில் எதுவுமே இல்லாத சூனிய நிலை. இன்மையும் இல்லை; காற்றும் இல்லை; விண்ணும் இல்லை; இறப்பும் இல்லை; அமுத நிலையும் இல்லை; காற்றினையும் உயிர்ப்புள்ள ஏதோ ஒன்று தான் மேலே தன்னந் தனியே இருந்தது. பிறிதொன்றும் இல்லை.'

இருக்குவேதத்தில் பின்னர்ச் சேர்க்கப்பட்டதாகக் கருதப்படும் முதல் மண்டலத்தில் 'ஒருவனே தேவன்' என்ற கொள்கை ஒரு சிலரிடையே மெதுவாக உருவாகிறது. தேவன் ஒருவனே, ஆயினும், புலவர்கள் அவனை இந்திரன், வருணன், மித்திரன், அக்கினி, இயமன், மாதரிச்சுவா என்றவாறு பல பெயரிட்டு அழைக்கின்றனர் (மண்ட. 1, சூ. 164, மந். 46).

பத்தாம் மண்டலத்தில்தான் உரையாடல் வகை (சம்வாதம்) இலக்கியம் காணப்படுகிறது. இதை ஆக்கியானம் என்றும் கூறுவர். பூவுலகில் வாழும் புரூரவசுக்கும் தேவகன்னிகையான ஊர்வசிக்குமிடையே ஏற்படும் காதலை மையமாகக் கொண்ட உரையாடல் (மண்ட10, சூ. 95) போல்வன சில இதில் காணப்படுகின்றன. மற்றோர் ஆக்கியானம் சூரியன் புதல்விக்கும் சோமனுக்கும் (சந்திரனுக்கும்) நடைபெறும் திருமணம் பற்றியது (மண்ட 10, சூ. 85). சூதாட்டத்தின் தீமையை நகைச்சுவையுடன் எடுத்துக் கூறுகிறது மற்றொரு பகுதி (மண்ட. 10, சூ. 34).

இருக்குவேத காலத்தில் அரசனும் கிராமத் தலைவனும் இருந்திருக்கின்றனர். மந்திரங்களை ஆக்கியோருள் சிலர் பெண்பாலராகவும் இருந்துள்ளனர். உழுதல், வேட்டையாடுதல், தச்சு, மருத்துவம் முதலான தொழில்கள் பின்பற்றப்பட்டன. வேள்வி இயற்றுதல் பரவலாக இருந்தது. வேள்வி இயற்றாத வேந்தர்களும் இருந்தனர். நால் வருணத்தாருடைய பெயர்கள் பத்தாவது மண்டலத்தில் புருட சூக்தத்தில் காணப்படுகின்றன. பெ.தி

**இருக்குவேளிர்**: தென்னிந்தியச் சிற்றரச மரபினருள் இருக்குவேளிரும் ஒருவர். கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை இவர்கள் ஆண்டுவந்ததால் கொடும்பாளூர் வேளிர் எனவும் குறிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் 18 வகை வேளிர்கள் ஆண்டுவந்தனர் என இலக்கியங்கள் கூறுகின்றன. சேர, சோழ, பாண்டிய, பல்லவ வேந்தர்கட்கு உட்பட்டு, சிறு நிலப் பகுதிகளை ஆண்டுவந்த வேளிர்கள் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றனர். இருக்குவேளிரும் தம் உழைப்பால் வரலாற்றில் முதன்மைத் தன்மை பெறுகின்றனர்.

இருக்குவேளிர் ஆட்சிபுரிந்த பகுதி கோனாடு என்று குறிக்கப்பட்டது. புதுக்கோட்டையை அடுத்த கொடும்பாளூர், அன்னவாசல், ஒல்லையூர் (ஒலிய மங்கலம்) ஆகிய மூன்று கூற்றங்களைத் தன்னகத்தே கொண்ட நிலப்பரப்பே கோனாடு ஆகும். இவர்கள் யாதவர் மரபினர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். கொடும்பாளூர் வேளிர் மன்னர்கள் இருக்குவேள் என்றும் இளங்கோவேள் என்றும் பட்டம் புனைந்து ஆண்டு வந்தனர். அரசனாகப் பதவியேற்று ஆட்சிபுரிந்தவர்கள் இருக்குவேள் என்னும் பட்டத்தையும், மற்றவர்கள் இளங்கோவேள் என்னும் பட்டத்தையும் பூண்டனர்.

இவர்கள் கி.பி.6,7,8–ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்களுடனும், பாண்டியர்களுடனும் அரசியல் தொடர்பு கொண்டிருந்தனர். இருக்குவேளிர் பாண்டியர், சோழர், முத்தரையர் என்ற அரச குலத்தவருடன் திருமண உறவு கொண்டிருந்தனர். இவர்களால் எடுப்பிக்கப்பட்ட கொடும்பாளூர்க் கோயிலில், கன்னடக் கல்வெட்டு ஒன்று காணப்படுவதால், இவர்கட்குக் கன்னட நாட்டுடன் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். விசயாலய சோழன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், வலிமைமிக்க முத்தரையரை வென்று, முத்தரையர் நாட்டைக் கைப்பற்றி, மீண்டும் சோழரின் ஆட்சியை நிலை நாட்டினான். இதற்குப் பேருதவி புரிந்தவர் இருக்கு வேளிரேயாவர். இவர்கள் தொடர்ந்து சோழரின் படைத்தலைவர்களாகவும் அரும்பணி ஆற்றிவந்தனர்.

இவர்தம் பழைமைபற்றியும், வரலாறு பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள நமக்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. இவர்களது குடிவழி பற்றி அறிந்துகொள்ளப் பூதிவிக்கிரம கேசரியின் கொடும்பாளூர் மூவர்கோயில் கல்வெட்டு மட்டும் பயன்படுகிறது. வடமொழியிலான இக்கல்வெட்டும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் தொடக்கமும் முடிவும் சிதைந்துள்ளன. இக்கல்வெட்டில் இவர்களது குடிவழி (Genealogy) கூறப்பட்டுள்ளது. இதில் இவர்கள்தம் இயற்பெயர்கள்

கூறப்படாமல், விருதுப்பெயர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. அவை பின்வருவன: யானைப்படையை முறியடித்தவன், அவனது மரபில் தோன்றிய ‘பரவீரசித்’, மழவர்நாட்டை அதிரடித்த வீரதுங்கன், அதிவீர அனுபவன், சங்ககிரிது, நிருபகேசரி, வாதாபியை வென்ற பரதுர்க்க மர்த்தனன் (எதிரிகளின் கோட்டைகளை அழிப்பவன்), சமராபிராமன்(போர் செய்வதில் மகிழ்பவன்), பூதிவிக்கிரமகேசரி (வீரத்தில் சிங்கம்போன்றவன்).

மூவர் கோயில் கல்வெட்டின் காலத்தைக் குறித்துப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் அண்மைக்கால ஆய்வுகளின் அடிப்படையில் இதன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முதல் காற் பகுதிக்குள் அமைந்தது என்று கருதலாம்.

**பரதுர்க்க மர்த்தனனும் சமராபிராமனும்(ஏறத்தாழ கி.பி. 850-880):** பரதுர்க்க மர்த்தனன் பூதிவிக்கிரமகேசரியின் பாட்டன். இவன் வாதாபியை வென்றதாக மூவர் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.

பரதுர்க்க மர்த்தனின் மகனும் பூதிவிக்கிரமகேசரியின் தந்தையுமான சமராபிராமன் அபிராசமங்கலப் போரில் சாளுக்கியரை முறியடித்தான் என மூவர் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சோழருடன் திருமண உறவு கொண்டிருந்த சமராபிராமன், விசயாலய சோழன் முத்தரையரிடம் தஞ்சையைக் கைப்பற்றப் பெரும்படையுதவி அளித்தான் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. விசயாலய சோழன், இவ்வுதவிக்குக் கைம்மாறாகச் சமராபிராமனுக்குப் பல விருதுகளையும் சிறப்புரிமைகளையும் அளித்திருத்தல் வேண்டும். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர்க் கொடும்பாளூர் வேளிர், சோழர்களின் சிற்றரசர்களாக மாறிவிட்டனர். இவர்கள் இருவரும் ஆதித்த சோழனின் ஆணைக்கு இணங்க இராட்டிரகூடருக்கு ஆதரவாக மேலைச் சாளுக்கியருடன் போரிட்டனர் போலும்.

**பூதிவிக்கிரம கேசரி (கி.பி. 880-930):** கொடும்பாளூர் வேளிர்களுள் தலையாயவனும் பெரும் புகழ்பெற்றவனும் பூதிவிக்கிரம கேசரியேயாவன். தென்னவன் இளங்கோ வேளான், மறவன் பூதியார், மின்னாமலா, மதுராந்தக இருக்குவேள் முதலான பெயர்களாலும் குறிக்கப்பெறும் இவ்வேந்தன், பெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தது மட்டுமன்றி, சமய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் பேராதரவு நல்கியவனாகவும் இருந்தான்.

பூதிவிக்கிரம கேசரி பல்லவர் மீது கொண்ட வெற்றியே, மூவர் கோயில் கல்வெட்டில் முதலில் குறிக்கப்பெற்றுள்ளது. கொங்கு நாட்டின் ஒரு பகுதியை (நாமக்கல், இராசிபுரம் பகுதி) ஆண்டு வந்த நுளம்ப-பல்லவரை, முதலாம் ஆதித்த சோழன் வென்றபோது, இவன் சோழனுக்கு உறுதுணை புரிந்ததையே கல்வெட்டு இவ்விதம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். அடுத்து, இவன் சோழருக்குத் துணையாகப் படைநடத்திச் சென்று வீரபாண்டியனையும் வஞ்சிவேளையும் வென்றுள்ளான். கருவூரில் (திருச்சி மாவட்டம்) வஞ்சி வேளடியானின் நடுகற்கல்வெட்டுக் கிடைத்துள்ளதால், விக்கிரமகேசரி வஞ்சிவேளைக் கருவூரில் வென்றான் எனக் கொள்ளலாம்.

பூதிவிக்கிரமகேசரி சோழருடன் மண உறவு கொண்டிருந்தான். இவன் தன் மகள் பூதி ஆதிச்சபிடாரியாரை, முதலாம் பராந்தகனின் மகன் அரிஞ்சய சோழனுக்கு மணம் செய்வித்ததும், பூதியின் மூத்த மகன் பூதிபராந்தகன், சோழ இளவரசியை மணந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கன. கொடும்பாளூர் மூவர் கோயில் இவனால் கட்டப்பட்டது. இவன் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்.

**செம்பியன் இருக்குவேளான பூதிபராந்தகன்:** பூதி விக்கிரம கேசரியின் மூத்த மகனான பூதிபராந்தகன், முதலாம் பராந்தகனது ஆட்சிக்காலத்தில் செம்பியன் இருக்குவேள் என்னும் பட்டத்துடன் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளான். இவன் சோழ இளவரசியை மட்டுமன்றி, முத்தரைய இளவரசியையும் வேறுசில பெண்களையும் மணந்தான். இவனைப் பற்றிய செய்திகள் முதலாம் பாராந்தகனின் 14-ஆம் ஆட்சியாண்டு வரையில்தான் கிடைக்கின்றன. இவன் திருக்கோயில்களுக்கு நிவந்தங்கள் சில விட்டுள்ளான். அந்தநல்லூர் சிவன் கோயிலை இவன் கட்டுவித்தான்.

**செம்பியன் இளங்கோவேளான பூதி ஆதித்திய பிடாரன்:** பூதி விக்கிரம கேசரியின் இளைய மகனான இவனுக்கு, ஆதித்தியவர்மன் என்னும் பெயரும் இருந்தது. இத்தலைவனைப் பற்றிய வேறு செய்திகள் கிடைத்தில.

**பராந்தகன் குஞ்சரமல்லனான வீரசோழ இளங்கோவேள் (ஏறத்தாழ கி.பி. 930-967)** செம்பியன் இருக்குவேள் மகனாகக் கருதப்படும் இவன், முதலாம் பராந்தக சோழனுக்குட்பட்டுக் கோனாட்டை ஆண்டவன். கல்வெட்டில் மகிமாலய இருக்குவேள் என்னும் பராந்தகன் வீரசோழன் என்னும் பெயரில் குறிக்கப் பெறுபவனும் இவனேயாதல் வேண்டும். சோழரது இலங்கைப் படையெழுச்சியில் பங்கு கொண்ட இவன், சுந்தரசோழனின் சகோதரியான வரகுணப் பெருமானாரை மணந்துகொண்டான்.

இலங்கைப் படையெழுச்சியை மேற்கொள்ளுமுன்பே, இவன் குடுமியான் மலைக்கோயிலுக்கு நிவந்தமளித்துள்ளான்.

பராந்தகன் இருங்கோளான் ஆன சிறிய வேளான்: பூதி பராந்தகனின் மகனான இவன், இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனின் படைத்தலைவன்; இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, சோழர்க்கு வெற்றி தேடித் தந்து போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவன். இவன் திருக்கற்றளிப் பிச்சன், வீர சோழ இருங்கோளார் முதலான பெயர்களாலும் குறிக்கப் பெறுகிறான். திருவிசலூரில் உள்ள இவனது வடமொழிக் கல்வெட்டு இவன் சிறப்பை எடுத்துக்கூறும்.

பிற்காலத்திய இருக்குவேளிர் தலைவர்கள்: முதலாம் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் மதுராந்தகன் அச்ச பிடாரன் (இராசராச இளங்கோ வேளான்) மும்முடிச் சோழ இளங்கோவேள் ஆகிய இருவரும் சோழருக்குத் துணைபுரிந்தனர். இராசராசனின் படைத்தலைவனாகப் பணிபுரிந்து, பாண்டிய நாட்டுப் படையெழுச்சியில் பங்கு கொண்ட மதுராந்தகன், வீரசோழ இளங்கோ வேளானின் மகனாவான். இவனுக்கு மதுராந்தகன் சுந்தரசோழனான இராசராச இளங்கோ வேளான் என்னும் பெயரும் உண்டு.

இராசேந்திர சோழ இருக்குவேளான் முதலாம் இராசேந்திர சோழனின் காலத்திலும், மதுராந்தகனான இராசாதிராச இளங்கோ வேளான் இரண்டாம் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்திலும், வீர சோழ இளங்கோ வேளான் அதிராசேந்திர சோழனின் காலத்திலும் கோனாட்டுத் தலைவர்களாக விளங்கினர். இரணசிங்கன் உத்தமசீலன் என்னும் மும்முடிச் சோழ இருக்குவேள், விக்கிரம சோழ இருக்குவேள் ஆகியோரும் கோனாட்டுத் தலைவர்களாகக் கல்வெட்டில் இடம் பெறுகின்றனர்.

வீழ்ச்சி: இருக்குவேளிர் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரையில் தமிழக வரலாற்றில் புகழ் பெற்று விளங்கினர். அதன்பின் இவர்கள் வீழ்ச்சியுற்றனர். இவர்கள் புகழ் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் உச்சநிலையிலிருந்தது.

சமயத் தொண்டு: இருக்குவேளிர் சைவ சமயத்தை ஆதரித்து, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் சிவனுக்குக் கோயில்கள் பல எடுக்கப்பெற்றன. மடங்கள் கட்டப்பட்டன. பார்ப்பனர்களுக்கு நிலக் கொடைகள் அளிக்கப்பட்டன. திருக்கோயில்களில் பூசனை குறைவற நடைபெற, இருக்குவேள் மன்னர்களும், தலைவர்களும் இளவரசிகளும், அரசிகளும் தானங்கள் பல அளித்துள்ளதனைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். பூதி விக்கிரமகேசரி காளாமுகச் சைவப் பெரியாரான மல்லிகார்ச்சுனருக்குப் பெரிய மடம் ஒன்று கட்டிக் கொடுத்ததுடன், 11 சிற்றூர்களையும் அளித்துள்ளான். இவர்கள் சைவ சமயத்தை ஆதரித்தபோதிலும், அதில் பெரும்பற்றுடையராய்ச் சமயவெறி கொண்டு பிற சமயத்தவர்க்குத் தீங்கிழைக்கவில்லை. இவர்கள் காலத்தில் கொடும்பாளூர்ப் பகுதியில் சமணமும் தழைத்திருந்தது என்பதனாலும் இவர்களின் சமயப் பொறையுடைமை புலனாகும்.

கலைத் தொண்டு: இவர்கள் கட்டடக் கலை சிற்பக் கலை வளர்ச்சிக்கு ஆதரவு நல்கினர் என்பதனை, இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களால் அறியலாம். இருக்கு வேளிர்களின் கலைச் சிறப்பினைக் கொடும்பாளூர், செட்டியபட்டி, திருக்கட்டளை, திருச்செந்துறை, அந்தநல்லூர் ஆகிய இடங்களில் இவர்கள் கட்டியுள்ள கோயில்களால் அறியலாம். கொடும்பாளூரில் பூதிவிக்கிரமகேசரி மூவர் கோயிலை எடுப்பித்தான். இவற்றுள் ஒன்றினைத் தன் பெயரிலும், மற்ற இரண்டினைத் தன் இருமனைவியரான கற்றளி, வரகுணா பெயர்களிலும் எடுத்துள்ளான். இக்கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கட்டப்பட்டு, இருக்குவேளிரின் கலையார்வத்தை நன்கு புலப்படுத்துகிறது. இது பண்டு திருப்பூதீச்சரம் என்றே சொல்லப்பட்டது. இம்மூவர் கோயிலைச் சுற்றிலும் 13 சிற்றாலயங்கள் கட்டப்பட்டிருந்தன. மூவர் கோயிலில் ஒன்று அழிந்துவிட்டது; இரண்டு கோயில்களே இன்று எஞ்சியுள்ளன. இக்கோயிலின் மூன்றுதள (முத்தள) விமானமும், விமானத்திலும் தேவகோட்டங்களிலும் இடம் பெற்றுள்ள சிற்பங்களும் அழகே உருவாக உள்ளன. கொடும்பாளூர் முசுகுந்தேச்சரம், ஐவர் கோயில் ஆகியனவும் இருக்குவேளிர் காலத்தனவேயாகும்.

திருச்சி மாவட்டம் திருச்செந்துறையில் உள்ள சந்திரசேகரர் கோயில் (சிவன் கோயில்) பூதிவிக்கிரம கேசரியின் மகள் பூதிஆதித்த பிடாரியாலும், திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் சிவன் கோயில் பூதிவிக்கிரம கேசரியின் மூத்த மகனான செம்பியன் இருக்குவேள் பூதி பராந்தகனாலும் கட்டப்பட்டன. அந்தநல்லூர் கோயிலுக்குப் பூதிபராந்தகன், பூதிபராந்தகனின் அரசியார், கன்னரதேவனின் அரசியார் ஆகியோர் தானமளித்துள்ளனர்.

குன்னாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செட்டியபட்டி (புலியூர் அருகில்) கோயில்

உருவில் சிறியதாயினும் அழகில் சிறந்துள்ளது. இருக்குவேளிர் கோயில்கள் பெரும்பாலும் முற்காலச் சோழர் கலைப்பாணியைக் கொண்டுள்ளன. இவற்றில் பல்லவரது கலைப்பாணியும் சிறிது கலந்துள்ளது. கொடும்பாளூர் முசுகுந்தேச்சரம் மகா மண்டபச் சிற்பங்கள் பல்லவர் சிற்பங்களை ஒத்துள்ளன.

ம. இரா. த.

**இரு காரணிக் கொள்கை:** மனிதர்களிடம் அமைந்திருக்கும் பண்புகளுக்கு விளக்கம் தரும் பல்வேறு கொள்கைகளுள் இரு காரணிக் கொள்கையும் (Two Factor Theory) ஒன்றாகும். அவர்களிடம் காணப்படும் நுண்ணறிவுக்கு அடிப்படையாக இரு காரணிகள் இருக்கின்றன என்பதே இக் கொள்கையின் முதற் கூற்று ஆகும். இக்கொள்கையினை முதன் முதலில் நுண்ணறிவுக் கோட்பாட்டின் விளக்கமாக எடுத்துரைத்தவர் இசுபியர்மன் (Spearman) என்னும் ஆங்கிலேய உளவியல் அறிஞர் ஆவார். நுண்ணறிவுச் செயல்களுக்கு அடிப்படையாக ஒரு பொதுக்காரணியும் (General Factor), அதைத் தவிர மக்களின் ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக ஒரு தனிப்பட்ட சிறப்புக் காரணியும் (Specific Factor) உள்ளன வென்று இசுபியர்மன் குறிப்பிட்டார். ஏதேனும் இரு செயல்களுக்கு இடையே இருக்கக்கூடிய தொடர்பு பொதுக் காரணியின் காரணமாக அமைகிறது என்றும் அவர் கூறினார். ஒரு செயலுடன் தொடர்புடைய இரு காரணிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தால், பொதுக்காரணி (G. factor) மிகுதியாக இருப்பதாக அறியலாம். சிறப்புக் காரணிகள் மிகுதியாக இருந்தால், பொது சிறப்பு ஆகியவற்றுக்கு இடையே தொடர்பு மிகுதியாக இல்லை என்பதை அறியலாம். இவ்வாறாக இருகாரணிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு நன்கு புலப்படும். இந்தப் பல்வேறுபட்ட தொடர்புகளைச் சோதனைகள்மூலம் இணைக்கமுடியும். ஏனென்றால், இவ்விரண்டும் பொதுக்காரணியுடன் (G) தொடர்பு கொண்டிருக்கின்றன. இவ்வாறு குறிக்கப்பட்ட சோதனையில் குறைவான பொதுக் காரணித் தொடர்பு உள்ளது. இதற்கும் மற்ற இரு சோதனைகளுக்கும் தொடர்பு மிகக் குறைவாக உள்ளது என்பதையே இது குறிக்கிறது.

ஒவ்வொருவரின் நுண்ணறிவிலும் பொதுக் காரணி எந்த அளவிற்கு அமைந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதே உளவியல் (நுண்ணறிவு) சோதனைகளின் நோக்கமாக இருக்க வேண்டும். பொதுக் காரணித் தொடர்பான செய்திகள் மிகுதியாக அமைந்த ஒரே சோதனையை மட்டுமே கொண்டு நுண்ணறிவை மதிப்பீடு செய்ய முடியும் என்று இசுபியர்மன் கூறினார். பல சோதனைகள் கொண்ட சோதனை அடுக்கு இதற்குத் தேவையில்லை என்றும் அவர் கருதினார்.

பொதுக் காரணியை மதிப்பீடு செய்வதற்காக இரேவன் (Raven) என்னும் ஆங்கிலேய உளவியல அறிஞர் முன்னோக்குச் சோதனைச் சிக்கல்களை (Progressive Matrices) அமைத்தார். இச்சோதனையில் 60 உருவரைகள் (Designs) இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் ஏதேனும் ஒரு பகுதி நீக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நீக்கப்பட்ட பகுதி விடைகளுள் ஒன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து ஆட்படுநர் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் 12 சிக்கல்கள் அடங்கிய ஐந்து பகுதிகள் இச்சோதனையில் அமைந்துள்ளன. தொடக்கப் பகுதிகள் எளிமையானவை. பிற்பகுதிகள் கடினமானவை. இச்சோதனையின் இரு எளிமையான எடுத்துக்காட்டுகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சோதனைக்குக் கால அளவு இல்லை. நூற்றுமானப் புள்ளிகள் (Percentile Scores) தரப்படுத்தப்பட்டுள்ளன. இப்புள்ளிகள் 1407 குழந்தைகள், இரண்டாம் உலகப்போரில் பங்கு கொண்டிருந்த 3665 இராணுவத்தினர், 2192 நாட்டு மக்கள் (வயது வந்தோர்) ஆகியவர்களிடம் சோதனை அளிக்கப்பட்டுக் கிடைத்த விடைகளை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் கிடைத்தவையாகும். இச்சோதனை, பண்பாட்டுச் சமநிலை படுத்தப்படவில்லை. ஆதலின் உலகெங்கிலுமுள்ள நாடுகளில் இச்சோதனையை எவ்வித மாற்றமும் இன்றி எடுத்துப் பயன்படுத்துதல் இயலாது. இச்சோதனையை மாற்றிப் புறத்தேற்றச் சோதனையாக மனிதர் வரைபடச் சோதனை என்னும் பெயரில் குட்இனபு, ஆரிசு (Goodenough & Harris) ஆகியவர்கள் அமைத்தனர். மனிதர் வரைச் சோதனையின் மதிப்பீடுகளும் அளவைகளும் வரையப்பட்ட படம் ஆண் அல்லது பெண் என்பதற்கு ஏற்ப வெவ்வேறாக இருக்கின்றன. காட்டெலின் பண்பாட்டுக் கட்டுப்பாடில்லா நுண்ணறிவுச் சோதனையும் (Cattell's Culture Fair Intelligence Test பொதுக் காரணியை மதிப்பீடு செய்யும் சோதனையாக அமைந்துள்ளது. இச் சோதனையின் அடிப்படையில் இக்காலத்தில் உலகெங்கிலும் பல நாடுகளிலும் நுண்ணறிவுச் சோதனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சோதனையின் சில பகுதிகள் எடுத்துக்காட்டுகளாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

காட்டெலின் பண்பாட்டுச் சமச் சோதனை—சில எடுத்துக்காட்டுகள்.

1. தொடர்ச்சி — அ. வரிசையை நிறைவு படுத்துவது எது?
2. பாகுபாடு — பொருந்தாதது எது?
3. சிக்கல்கள் — கொடுக்கப்பட்டுள்ள அமைப்பை நிறைவுபடுத்துவது எது?
4. நிலைமைகள் — அ. விலிருக்கும் புள்ளியைப் போன்று கொடுக்கப்பட்டுள்ள உருவங்களுள் எதில் புள்ளி வைத்தால் பொருந்தும்?

பொதுக் காரணி என்பது பல செயல்களிடையே காணப்படும் தொடர்பினை ஒருவர் அறிந்து கொள்வதற்கு உதவி செய்கிறது. சில திறன்களுக்குப் பொதுக்காரணி அதிகமாகவும் சிறப்புக்காரணி குறைவாகவும் தேவைப்படுகிறது. வேறுசில திறன்களுக்குச் சிறப்புக்காரணி மிகுதியாகவும் பொதுக் காரணி குறைவாகவும் தேவைப்படுகிறது. எடுத்துக் காட்டாகக் கணிதத்தில் தேர்ச்சியடைவதற்குச் சிறப்புக் காரணியைப்போல் பன்மடங்கு பொதுக்காரணி தேவை. ஆனால், ஓவியம் இசை போன்றவற்றில் திறன் பெறுவதற்குப் பொதுக்காரணியை விடச் சிறப்புக்காரணி மிகுதியாகத் தேவைப்படுகிறது. பொதுக்காரணி நுண்ணறிவு தேவைப்படும் எல்லாச் செயல்களுக்கும் தேவைப்படுகிறது. ஆனால், குறிப்பிட்ட தனிச் செயல்களில் மட்டுமே சிறப்புக்காரணிகளின் தேவை மிகுதியாக இருக்கிறது. ஆதலின் ஒவ்வொரு செயலும் ஒரு பொதுக்காரணி, அச்செயலுக்குரிய குறிப்பிட்ட ஒரு சிறப்புக்காரணி ஆகிய இரண்டின் தொடர்பு கொண்டு நடைபெறுகிறது. இதனைப் பின்வரும் சமன்பாட்டினால் சுருக்கமாக விளக்கலாம்.

செயல் = பொதுக்காரணி + சிறப்புக்காரணி

(அல்லது)

பொ + சி = செ

$G + S_1 = A_1 \qquad G+S_2 = A_2$

காரல் இசுபியர்மன், பொதுக்காரணி ஒருவன் பொதுவாக வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்குக் காரணமாக இருக்கிறது என்று கூறியுள்ளார். சூழ்நிலைகளின் அடிப்படையிலும் அனுபவங்களின் காரணமாகவும் ஒருவன் அடையும் திறன் உளவியலாரால் சிறப்புக்காரணி என்று கூறப்படும். மனிதனின் நுண்ணறிவு என்பது பொதுக்காரணி, சிறப்புக்காரணி ஆகியவற்றின் தொகுப்பாகும் என்று இசுபியர்மன் கூறுகிறார். எல்லாச்செயல்களிலும் ஒரு பொதுக்காரணியும் ஒன்றுக்கு மேற்பட்ட சிறப்புக் காரணிகளும் இடம்பெறுகின்றன.

இசுபியர்மனின் இருகாரணிக் கொள்கையை எதிர்த்தவர்களுள் எட்வர்டு தார்ன்டைக்கு (Edward Thorndike) என்னும் அமெரிக்க உளவியலறிஞர் முக்கியமானவராவார். தார்ன்டைக்கு பலகாரணிக் கொள்கையைத் (Multifactor Theory) தோற்றுவித்தார். நுண்ணறிவுக்குச் சில அடிப்படை உள ஆற்றல்கள் காரணிகளாக இருக்கின்றன என்று வேறு சில உளவியலறிஞர்கள் கூறினர். கல்போர்டு (Gulford) போன்ற உளவியலறிஞர்கள் மனிதனின் நுண்ணறிவு மூன்று அடிப்படைத் திறன்களில் அடங்கியுள்ளது என்று கூறினர். வெர்னன் (Vernan), சிரில் பர்ட்டு (Cyril Burt) போன்றவர்கள் நுண்ணறிவுச் சிறப்புத்திறன்கள், சிறப்புத்திறன்களின் தொகுதிகள் அல்லது குழு, பொதுத்திறன் என அடுக்கமைவாக உள்ளன என்று கூறினர். பியாசே (Piaget), எபு (Hebb) போன்ற உளவியலார்கள் நுண்ணறிவு பற்றிய பல ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

காண்க: உளவியல் சோதனை நுண்ணறிவு.

துணை நூல்:

Anastasi Anne, Psychological Testing, Colber Macmillan Publishers (International). New York, 1976.


**இருகால் நடைப்பழக்கம்** இரண்டு கால்களால் நடக்கும் முறையைக் குறிப்பிடுவதாகும். விலங்குகளில் பல வெவ்வேறு முறைகளிலும் வெவ்வேறு நிலைகளிலும் இருகாலியக்கத்தினைக் (Bipedalism) கொண்டிருக்கின்றன. பறவைகள், உயரின வாலில்லாக் குரங்குகள் (Great Apes), மனிதன் முதலான அனைத்தும் இம்முறையின. இருப்பினும், இவ்விலங்குகளிடம் அடிப்படையான மாறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளைக் கண்டறிய வாலில்லாக் குரங்கு முதல் மனிதன் வரையிலான தொகுதிவழித் தொடர்பினைப் (Phylogenetic Affinity) படிமலர்ச்சி நிகழ்வின் துணைக்கொண்டு அறிந்து, பறவைகளுக்கும் உயர் பாலூட்டிகளுக்கும் (Primates) இடையிலான தொடர்பு வளர்ச்சியினை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஏனெனில், உயர்பாலூட்டிகளும் பறவைகளும் தரையில் நகர்தல் (Terrestrial Locomotion) பண்

புடையனவாதலால். படிமலர்ச்சிவழி அமைந்த வளர்ச்சியினை ஒப்பிடுதல் இன்றியமையாததாகிறது.

இருகால் நடைப்பழக்கம் சிக்கலானதும் மேம்பட்ட திறனுடையதுமாகும். இந்த நடைப்பழக்கத்தைப் பெறச் சமநிலையும் (Balance), கட்டுப்பாடும் (Control), பின்புறம், இடுப்பு, கால்கள், பாதம் முதலான உறுப்புகளின் தசை ஆற்றலும் தேவைப்படுகின்றன. நேராக நிற்பதற்குப் புவியீர்ப்பு விசையின் கோடு, நிற்கும் உயிரியின் அடித்தளத்தின் பரப்பிலேயே விழவேண்டும். மனிதன் நிறைவுடைய இருகாலியக்கத்தினைத் தன் படிமலர்ச்சி நிகழ்வில் பெற்றான். விரைவான அசைவிற்கும் நகர்ச்சிக்கும் பின்கால்களே (Hind Limb) மிகவும் ஏற்புடையன. இவை பின்கால்களின் சிறப்புத் தன்மையாகும். இத்தன்மையே மனிதனை நாற்கால் நடைப்பழக்கத்திலிருந்து விடுவித்து அவன்தன் முன்கைகளால் பொருள்களைத் திறனாகக் கையாள வைத்தது. இதனால், ஆதிமனிதன் கற்கருவிகளைச் செய்து அதனைப் பயன்படுத்தும் அறிவினைப் பெற்றான்.

இன்று உயிர்வாழும் உயர்பாலூட்டிகள் நான்கு வகையான இருகாலியக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. அவை இருகால் தத்தல் (Bipedal Hopping) இருகால் ஓட்டம்(Bipedal Running) இருகால் நடத்தல் (Bipedal Walking), இருகால் நிற்றல் (Bipedal Standing) ஆகும். இருகால் தத்துதலும் இருகால் ஓட்டமும் பொதுவாக அனைத்து உயர் பாலூட்டிகளிடமும் காணப்படுகின்றன எடுத்துக்காட்டாக, மடகாசுகர் குரங்குவகை, பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்கக் குரங்கு, நாய்முகக் குரங்கு முதலானவை முட்டி-வளைந்த (Bent-knee) இருகாலால் ஓடும் பழக்கத்தைக் கொண்டுள்ளன. இவ்விலங்குகளின் நடைப் பழக்கத்தில் பின் கால்களுக்கும் இடுப்பெலும்புகளுக்கும் உள்ள தொடர்பு, நான்கு கால்களாலும் நிற்றல் அல்லது அசையும் நாற்காலியக்கத்தினைக் கொண்ட உயர்பாலூட்டிகளின் கிடைநிலையில் நடக்கும் (Pronograde) முறையைப் போன்றே இருக்க வேண்டும்.

இருகாலியக்கம், ஓமி (Home — மனிதன்) பான் (Pan — வாலில்லாக் குரங்கு) முதலான பொதுவினத்தில் (Genus) மட்டுமே காணப்படுகிறது. ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்குகள் முட்டி-வளைந்த நடையினை, இருகால்களால் நடக்கும்போது பெற்றிருக்கிறது. உண்மையான, நிமிர்ந்த இருகால்களால் நிற்கும் தன்மை ஓமோ (Homo) பொதுவினத்தில் மட்டுமே காணப்படுகிறது. ஏனைய உயர்பாலூட்டிகள், ஒரு சில நேரத்தில் மட்டும் நிமிர்ந்த இருகால் நடையினைக் கொண்டிருந்தாலும் அது இயல்பற்றதும், கணநேரமே நிலைக்கக் கூடியதுமாகும். இதன் இயல்பான நடைமுறை முட்டி-வளைந்த நடை வகையேயாகும்.




இடுப்பெலும்பின் படிமலர்ச்சி

மனிதனின் பாதம் (Foot) மிக்க தனித்தன்மை வாய்ந்த சிறப்புறுப்பாகும். மனிதன் நிற்கும்பொழுது கால்கள் முழுமையாக நீட்டப்பட்டு முழங்கால்களின் மூட்டு அடைபட்டிருக்கும். உயர்பாலூட்டிகளுள் மனிதன் (Homo sapien) மட்டுமே இந்நிலையில் குறிப்பிட்ட எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நிற்க முடியும். தரைமீது இருகாலால் நடக்கும் தகுதி பெற்ற மனிதனின் உள்ளங்கால் தட்டையானது: பதித்துநிற்கும் நிலை(Plantigrade Position)உடையது. அவன் உள்ளங்கால் தரைமீது நடக்கும்போது அதன் பரப்பு முழுவதும் தட்டையான நிலையில் தரையில் படுகிறது. இதனாலேயே மனிதனது நடைப்பழக்கத்தை இருகால் நடை, உள்ளங்கால் பதித்து நடக்கும் முறை (Plantigrade), விரைந்து தாவி நடக்கும் முறை (Propulsive Striding) எனக் கூறுவர். மனிதனின் நடைப்பழக்கத்திற்கு மிக அருகிலுள்ள இக்கால வாலில்லாக் குரங்குகள் பொருள்களைப் பற்றிக் கொள்ளும் தன்மை கொண்ட கால்விரல்களையும் பெருவிரல்களையும் (Great Toe) கொண்டுள்ளன. கால்பெருவிரல்களின் அமைப்பு உள்ளங்கால்களைத் தரையின் மீது தட்டையாக வைக்கும் நிலையினைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், தலைகீழான நிலை

யில் நிற்கும் அமைப்பைப் பெற்றுள்ளது. இக்குரங்கின் பாதம் வளைந்த பரப்பின்மீது படும்போது வேறுபாடுற்ற கால் பெருவிரல் பரப்பின் மேல் கவ்விக் கொள்ளாமல் எதிராகத் திரும்பும். ஏனைய கால் விரல்கள் பற்றும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. வாலில்லாக் குரங்குகளின் பாதத்திற்கும் மனிதனின் பாதத்திற்கும் ஒற்றுமையினைப் பார்க்கும்போது பல தொடர்புகள் தெளிவாகப் புலப்படினும், இரண்டும் தத்தம் நடைமுறைக்குத்தக அமைந்துள்ளன. இரண்டும் படிமலர்ச்சி வழியில் தனித்தனியாக நிற்பதால், அதனதன் நிலையிலேயே கருதுகோளையும் அறிய வேண்டும். இருகாலியக்கத்தின் தோற்றம் மனிதனை ஒத்த விலங்கு வழியில் வந்த புதை படிவ உயிரிகளின் பாத அமைப்புகளில் மட்டுமே காணப்படுகிறது. வாலில்லாக் குரங்குகளில் இந்நிலை காணப்படவில்லை.

நகர்ச்சியின் (Locomotion) செயற்பாட்டினை அறுதியிடும் உடற்கூற்றுத் தொகுதியில், முதுகெலும்புத் தண்டு முதன்மையான பாகமாகும். நாற்கால் நடைப்பழக்கம் கொண்ட விலங்குகளின் முதுகெலும்புத் தண்டு ஒரு வளைவு அல்லது வில்லைப் போலிருக்கும். இவ்வளைவின் மிகுந்த அளவு முதுகெலும்புத் தண்டின் நடுப்பகுதியில் காணப்படும். முதுகெலும்புத் தண்டின் நடுப்பகுதியில் எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்புத் தண்டு (Anticlinal vertebra) இருக்கிறது. எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்புத் தண்டு முள்ளந்தண்டு செயல்முறை அமைப்புடன் (Spinous Process) முதுகெலும்புத் தண்டிற்குச் செங்குத்தாக இருப்பதால், இந்த எலும்பு மிகுந்த அளவில் வளையக்கூடிய பகுதியாக இருக்கிறது. இவ்வித அமைப்பு நான்கு கால்களாலும் கிடைநிலையில் நடக்கும் (Pronograde) விலங்குகளில் மட்டுமே காணப்படுகிறது. நேராக நிற்கக்கூடியதும் நிமிர்ந்து நடக்கக் கூடியதுமான (Orthograde) உயர் பாலூட்டிகளில் எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்புத் தண்டு, நடுப்பகுதியிலோ புறப்பகுதிகளிலோ தெளிவாகக் காணப்படுவதேயில்லை. இந்த மாறுதல் பின்புறத் தசைகளின் அமைப்பை மாற்றி உடலை நேராக நிறுத்தச் செய்கிறது. நிமிர்ந்து நிற்கும் நிலை, (Orthograde posture) நிமிர்ந்து நின்று நாற்கால்களால் செல்லும் அமைப்பு (Orthograde Quadrupedal Locomotion), நிமிர்ந்து நடக்கும் போது கைகளைச் சுழற்றும் தன்மை (Orthograde Brachiation) முதலான




மனிதனின் நடைப்பழக்க முறை



இவ்வனைத்து அமைப்புகளும், பின்புறத் தசைகளின் ஆற்றலுடன் எலும்பின் தாங்கும் சக்தியினையும் மாற்றியமைப்பதாலேயே ஆகும். கிடைநிலையாகிய உடலமைப்பிலிருந்து நிமிர்ந்து நிற்கும் உடலமைப்பை அடைந்த படிமலர்ச்சியால் முதுகெலும்புத் தண்டு, அதன் இடத்தை மாற்றி, உட்புறமாக (Ventrally) நகர்ந்தது. உடலின் எடையைத் தாங்கும் அச்சாகிய முதுகெலும்பு, உடலின் ஈர்ப்புச் சக்தியின் மையப் பகுதியின் அருகில் உள்ளது. முதுகெலும்பின் இந்த இடமாற்றம் இதன் செயலமைப்பிலும் மாற்றத்தைப் பெற்று, உடலைத் தாங்கும் சக்தியையும் மிகுந்த பளுவை ஏற்றிச் செல்லும் தன்மையையும் பெற்றது.
கே. நி.

துணை நூல்கள்:

**Clark, W.E. Le Gros.,** The Antecedents of Man. Edinburgh University Press, Edinburgh, 1962.

**Hewes, G.W.,** Food Transport and the Origin of Hominid Bipedalism, American Anthro pologist, Vol- 63 -687, 1961.

**Hooton, E.A.,** Up From the Ape, Macmillan,. New York, 1947.

**இருங்கோவேண்மான்:** சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். இவனுடைய தனிப்பண்புகளை அறிதற்குரிய அகச்சான்றுகள் சங்கப் பாடல்களில் கிடைக்கவில்லை. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற ஏழு மன்னருள் ஒருவனாக இருங்கோவேண்மான் சுட்டப் பெறுகிறான். இவனை நக்கீரர், 'தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோவேண்மான்' என்று குறிப்பிட்டுள்ளார் (அகம்.36).

இன்றைய புதுக்கோட்டைக்கும் குடுமியான் மலைக்கும் இடையே உள்ள பகுதியே கொடும்பாளூரைத் தலைநகரமாகக் கொண்ட இருங்கோ வேண்மான் ஆண்ட பகுதியாகக் கருதப்படுகிறது. கொடும்பாளூர் வேளிர் பரம்பரையினர் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பெற்ற பத்திரங் களிலும் தங்கள் குலப்பெயர் உள்ளதாகவும், சங்க கால முதல் இன்று வரை இக்குடியினர் இருந்து வரும் பெருமை இருப்பதாகவும் இவர்கள் கூறுகிறார்கள்.
பி.தெ.

**இருங்கோவேள்** ஐம்பெரும் வேளிர்களுள் ஒருவன்; சங்க காலத்தில் துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சிற்றரசன். துவாரசமுத்திரம் மைசூர் நாட்டில் அளபீடு (Halabid) என இக்காலத்தில் வழங்கும் இடமாகும். இவனுக்குப் புலிகடிமால் என்னும் வேறுபெயரும் உண்டு. இவன் முன்னோர் வடபகுதி முனிவன் ஒருவனின் வேள்வித் தீயில் தோன்றியோர் என்பதும், இவன் துவார சமுத்திரத்தை ஆண்ட வேளிர் அரசருள் 49-ஆம் அர சன் என்பதும் கபிலர் பாடியுள்ள பாடலில் (புறம் 201) வரும், 'வடபான் முனிவன் றடவினுட் டோன்றி, உவரா வீகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த' என்னும் பகுதியால் தெரியவரு கின்றன. பாரி இறந்தபின் அவர்தம் இரண்டுமகளை யும் அழைத்து வந்து ஒப்புக்கொள்ளுமாறு கபிலர் இவனிடம் வேண்டினார். ஆனால், இவன் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. கபிலர் இவனைத் தாம் பாடிய இரண்டு பாடல்களிலும் (புறம் 201, 202) புலி கடிமால் என்று குறிப்பிட்டுள்ளார்.

துவரையை ஆண்டு வந்த ஒய்சளர் (Hoys-alar) என்னும் அரச மரபினைப் புலிகடிமால் என் னும் பெயர் குறித்தது. அம்மரபு இப்பெயர் பெற்ற மைக்குப் பின்வரும் வரலாறு கூறப்படுகிறது. தபங்கர் முனிவர் காட்டில் தவம் செய்யும்போது புலியொன்று அவர்மேல் பாய்வதற்கு வந்தது. அதனைக் கண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடி வந்த சளன் என் னும் யாதவ அரசனைப் பார்த்து 'ஒய்சள'(புலியினை அடி) என்று கூறினார். அவன் அப்புலியைத் தன் அம் பால் எய்து கடிந்தமையால் 'ஒய்சளன்' எனப்பட் டான். அப்பெயரே தமிழில் புலிகடிமால் என்று கூறப் பட்டுள்ளது. அதனால், இவன் மரபிற்கும் இப்பெயர் வந்தது. இம்மரபினர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்றிருந்தனர். இவர்கள் கட்டிய கோயில் சிற்பக்கலை உயர்விற்குச் சிறப்புமிக்க எடுத்துக்காட் டாகத் திகழ்கிறது. துவாரசமுத்திரத்தில் பதினெண் மரும் பதினெண் குடி வேளிரும் இருந்தனர் என்றும் அவர்களை அகத்திய முனிவர் அழைத்துச் சென்று பல இடங்களிலும் நிலைப்பித்தார் என்றும் நச்சி னார்க்கினியர் தம் தொல்காப்பியவுரையில் குறிப் பிட்டுள்ளார்.

**இருங்கோன் ஒல்லை ஆயன் செங் கண்ணனார்:** கடைச் சங்கப் புலவர்களுள் ஒரு வர். இவர் பெயர் இருங்கோன் செங்கண்ணனார் என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இவர் பெயர் லுள்ள ஆயன் என்பதனை இவரது குலப்பெயராக வும், செங்கண்ணனார்என்பதனை இயற்பெயராகவும் கருதுகின்றனர். ஒல்லை என்பது ஊர்ப் பெயர். இருங் கோனின் ஒல்லை என்னும் ஊரிலுள்ள ஆயன் என்ற பொருள் கொள்ளுதல் அமையும். ஒல்லை என்னும்

ஊர் அமைந்த இடம் பற்றிப் பலவாறு கூறப்படுகிறது. இது புதுக்கோட்டைக்கு அருகில் ஒலியமங்கலம் என இப்பொழுது வழங்கப்பெறும் ஊராகும் என்றும், தஞ்சை மாவட்டப் பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஊராகுமென்றும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமெய்யத்திற்கு அருகிலுள்ள ஊராகுமென்றும் கூறப்படுகிறது. இவருடைய ஒரே பாடல் அகநானூற்று 279-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் அமைந்துள்ள இப்பாடல், பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாக உள்ளது. உள்ளத்தில் தோன்றி அறிவினைச் சுடும் கவலையைத் தீயாகவும், இடையறா முயற்சியை அத்தீயினை அவிக்கும் மழையாகவும் உருவகஞ் செய்து 'உள்ளம் பொத்திய உரஞ்சுடு கூர் எரி, ஆள்வினை மாரியின் அவியா' என்று தலைவன் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

**இருசமய விளக்கம்:** விசயநகரப் பேரரசர் சிரீ கிருட்டிண தேவராயர் ஆட்சி புரிந்த காலத்தில் பெருமிதத்துடன் வாழ்ந்த புலவர் அரிதாசர். இவர் களப்பாளர் மரபிற் பிறந்தவர். இப்பெருமகனாரைப் பற்றிய பாடல் ஒன்றில் 'அரிதாதன் என்று ஓதும் நாமக் களப்பாளன் தானைத் தளங்கள் கரை கண்ட நாளில்' என்னும் தொடர் காணப்படுகிறது. இதனால், இவர் விசய நகரப் பேரரசில் சேனைத் தலைவராக இருந்ததை அறியலாம்.

அரிதாசர் சிறந்த வைணவர். திருமாலே பரம் பொருள் என்று நம்பி வழிபட்டவர். இவர் தம் கொள்கைக்கு எதிராக இருந்த சைவ சமயத்தை மறுப்பதைத் தம் கடமையாகக் கருதினார். இதற்காகச் சைவ புராணங்களையும் சைவ ஆகமங்களையும் நன்கு பயின்றார்.

அரிதாசர் சைவ சமயத்தைப் பற்றிப்பேச ஆகமவல்லியையும், வைணவ சமயத்தைப் பற்றிப் பேச ஆரணவல்லியையும் படைத்துக் கொண்டார். ஆரணவல்லியும் ஆகமவல்லியும் ஆரணி நதியில் நீராடிய பின், தங்கள் தங்கள் தெய்வங்களைத் துதிக்கின்றனர். ஆரணவல்லியின் துதிப்பாடல்களைக் கேட்ட ஆகமவல்லி நீ திருமாலைப் பரம் பொருள் என்றாய் அது புனைந்துரை என்கிறாள். ஆரணவல்லி நின் மொழி பொருந்தாது என்று மறுக்கிறாள். இவர்கள் சொற்போர் செய்யும்போது அங்கு அந்தணர் பலர் வருகின்றனர். அவர்களை நடுவர்களாக வைத்துக் கொண்டு, இருவரும் தங்கள் தங்கள் கொள்கைகளை விவரிக்கின்றனர்.

ஆகமவல்லி சிவபிரான் மூலத் தெய்வம்; திருமால் பரிவார தேவதை என்று கூறுகிறாள். இதை மறுக்கும் ஆரணவல்லி 32 சிற்பசாத்திரங்களும் ஊர் நடுவில் திருமாலைப் பிரதிட்டை செய்து, மற்றைய தேவதைகளைத் திசைக் கடவுளர்களாக ஊருக்குப் புறத்தில் அமைக்க வேண்டும் என்று கூறியதை விளக்குகிறாள். இங்கு 32 சிற்ப நூல்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. பிராமியம் என்னும் சிற்ப நூலின்கண் இரண்டாம் அத்தியாயமும் மூன்றாம் அத்தியாயமும் திருமாலுக்குச் சிவபெருமான் பிரமன் முதலான தேவர்கள் பரிவார தேவதைகளாகக் கூறுகின்றன என்று விளக்குகிறாள்.

உலகத்தை எவன் தன்பால் ஒடுக்குகின்றானோ அவனே பரம்பொருள்; சிவபிரானே சர்வ சங்காரக் கடவுள். ஆகையால் சிவபிரானே முதற்பெருந் தெய்வம் என்பது ஆகமவல்லியின் சித்தாந்தம். ஆரணவல்லி, திருமால் பிரமதேவனையும் சிவபிரானையும் தன்பால் ஒடுக்கிக் கொள்கிறான் என்று மகோபநிடதம் விளக்குகிறது என்று கூறுகிறாள்.

சைவ நூல்களில் பெருகப் பேசப்படுவன சிவபிரானின் அடியும் முடியும் ஆகும். திருமாலும், பிரமனும் பன்றியாகியும் அன்னமாகியும் தேடிக் காணாமல் தோற்றுப் போன செய்தியைப் பற்றிப் பேசாத சைவ நூல்கள் இல்லை. இதனை ஆகமவல்லி வலியுறுத்திப் பேசிச் சிவபிரானே பரம் பொருள் என்று கூறுகிறாள். இதனை மறுக்கும் ஆரணவல்லி, திருமால் உலகை அளந்த காலத்தில், சிவபிரானும் எல்லாவுலகங்களும் அவன் அடியின் கீழ் அடங்கியதைக் குறிப்பிடுகிறாள். மேலும், திருமால் பன்றியாக அவதரித்தது உலகங்களைத் தாங்குவதற்காகத்தான் என்று, எசுர் வேதத்தில் முதற் பிரிவில் உள்ள மூன்றாம் அனுவாகத்தில் கூறியுள்ளது என்று தெரிவிக்கிறாள்.

சிவபிரான் நஞ்சு உண்டு அமரரைப் பாதுகாத்தான். ஆதலால் அவனே பரம்பொருள் என்று ஆகமவல்லி கூறுகிறாள். இதுகேட்ட ஆரணவல்லி, இருக்கு வேதத்தில் எட்டாம் அத்தியாயத்தில் இருபத்து மூன்றாம் வர்க்கத்தில், சிவபிரான் என்னும் பாத்திரத்தைக் கொண்டு திருமாலே நஞ்சு உண்டான் என்று கூறியுள்ளதையும், கருடபுராணத்தில், சிவபிரான் நஞ்சை உண்ணும்போது கருடனைத் தியானித்ததாகக் கூறியுள்ளதையும் கூறி ஆகமவல்லியை மறுக்கிறாள்.

பிறகு முனிவரின் சாபத்தால், திருமால் பத்துப் பிறவி எடுத்ததை ஆகமவல்லி வற்புறுத்திப் பேசுகிறாள். ஆரணவல்லி திருமாலின் அவதாரங்கள் அருள் வயப்பட்டனவேயன்றி வினைவயப்பட்டன அல்ல என்று விளக்குகிறாள்.

காயத்திரி என்னும் மந்திரம் சிவபிரானையே குறிக்கிறது என்று ஆகமவல்லி பேசுகிறாள். ஆரண வல்லி, கௌசிக சங்கிதை காயத்திரியில் கூறப்படும் இறைவன் திருமாலே என்று கூறியதை நினைவூட்டு கிறாள்.

சைவசமயம் பஞ்ச சுத்திகளைச் சிறப்பாகப் பேசும். இச் சுத்திகளை இருசமய விளக்கம் காரணாகம வழி நின்று விளக்குகிறது. அவை, ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, இலிங்கசுத்தி, மந்திர சுத்தி ஆகும். பஞ்ச சுத்திகளைப் பேசும் பகுதி அரிதாசரின் சைவ ஆகமப் புலமையை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. அரிதாசர் பஞ்ச சுத்தியை மறுத்துப் பேசாது விட்டு விடுகிறார். இதனால், அரிதாசர் நல்லனவற்றை ஏற்றுக்கொள் பவர் என்பது தெரிகிறது. உயிர்க்கொலையை மறுத்த சமண புத்தமதங்களின் சிறந்த இயல்பைப் போற்றிய பண்பை வேறு ஒரு படலத்தில் காணலாம்.

அரிதாசர், சிற்ப நூல்கள், வேதங்கள், உபநிட தங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலியவற்றின் பெயர்களையும், அவற்றின் பகுப்புகளையும் குறிக் கும் திறம் பாராட்டாமல் இருக்க முடியாது. இரு சமய விளக்கத்தில் அற்புதமான உத்திகள் காணப் படுகின்றன. அவை ஆசிரியரின் திறமையைப் புலப் படுத்துகின்றன. ஆகமவல்லி, சிவன் திருமாலை வணங் கிப் பதவிபெற்றனன் என்றாள். அதை மறுக்கும் ஆரண வல்லி, சூரியன் மின்மினிப்பூச்சியைத் தியானித்து ஒளியைப் பெற்றது போல் உள்ளது என்று கூறுகி றாள். ஆரணவல்லி, ஆகமவல்லியின் கருத்தை ஆராய்ந்து பூ நார் இரண்டும் இல்லாமல் மாலை தொடுக்கவல்லாய் என்று நகைச்சுவையுடன் குறிக் கிறாள்.

காவியம் பாடும்போது கவிதைகள் நயமாக அமையும். தத்துவம் பேசும்போது கவிதையின் சுவை குறையும். ஆனால், தத்துவத்தையும் சமய மறுப்பை யும் கூறும் இந்நூல் கவிதை நயம் நிரம்பியுள்ளது. 2119 பாடல்களால் அமைந்த இந்நூல், படிப் பவர்க்குச் சலிப்புத் தராமல் இருக்கப் பலவிதமான சந்தப்பாடல்களைக் கொண்டுள்ளது.

சமயவாதம் கருத்து முதல்வாதம் ஆகும். ஆத லால் சமய வாதத்தில் விருப்பும் வெறுப்பும் முதலி டம் பெறும். ஆதலால் சமயவாதத்தை அடிப்படை யாகக் கொண்டு பிணங்குவது முறையன்று.

எஸ்.கே.இரா.

**இருசாது நாமா,** இசுலாமியத் தமிழ் இலக் கிய வகைகள் ஐந்தனுள் ஒன்றாகிய நாமா இலக்கிய வகையைச் சார்ந்த ஒரு நூல் ஆகும். காயற் பட்டினம் சுலைமான் இலெப்பை அவர்களின் மக னாகிய சாமுனா இலெப்பை அவர்களால் இயற்றப் பட்டது இந்நூல். இதனைக் காயற்பட்டினம் கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர் பார்வை யிட்டுச் சென்னை சாகுல் அமீதிய்யா அச்சகத்தில் 1912-ஆம் ஆண்டு பதிப்பித்தார்.

நூலின் மூன்றாம் செய்யுள் ஆசிரியர் பெயரை யும் அவர் இந்நாமாவை இயற்றுவதற்கான காரணத்தையும் கூறுகிறது.

சாமுனா இலெப்பை இருசாது நாமா வாயிலாக இசுலாத்தின அடிப்படைக் கொள்கை விளக்கங்களை அளித்துள்ளார். இருசாது என்பது அரபு மொழியில் உள்ள ஒரு நூலின் பெயராகும். அதனை அடி யொற்றியே சாமுனா இலெப்பையும் இருசாது நாமா என்ற பெயரில் இவ்விலக்கியத்தை 187 செய்யுட்களில் விரித்துரைத்துள்ளார். இருசாது நாமாவினைப் பயின்று பின்பற்றுபவர்கள் அடையும் நன்மையை, நூலின் இறுதியில் எடுத்துக்காட்டியுள் ளார். இருசாது நாமாவில் அறபுச்சொற் கலப்பு செய்யுள்தோறும் இடம்பெற்றுள்ளது. சி.ந.

**இருசிய சிருங்கர்** ஒரு பெரும் முனிவர். இவர் கலைக்கோட்டு முனிவர் என்றும் அழைக்கப் பெற்றார். இவர் பிறந்தபோது தலையில் மானின் கொம்பை ஒத்த கொம்போடு பிறந்ததால், இவருக்கு இப்பெயர் வழங்கிற்று. விபாண்டகர் என்னும் இவர் தந்தை நீராடச் சென்றபோது, அவ்விடத்துப் போந்த ஊர்வசியைக் கண்டு காமுற்றார். அதனால் அவர் வீரியம் நீரில் விழ, அதனை அவர் வளர்த்த மான் குடித்ததால், அதன் வயிற்றில் கலை என்ற மான் கோட்டோடு பிறந்த இவர், கலைக்கோட்டு முனிவர் என்று அழைக்கப்பெற்றார். விபாண்டகர் கொம்போடு பிறந்த மகனைப் பிறர் யாரும் காணா வகையில் மறைத்து வளர்த்தார். இருசிய சிருங்கர் தமக்குக் கோடுடைமையால், கோடில்லா மக்களை விலங்கென்று கருதி வாழ்ந்தார். தந்தைவழி வேத நெறிகளையும், யோகப் பயிற்சிகளையும் பெற்றுத் தலைசிறந்த முனிவராக வாழ்ந்தார்.

உரோமபாதன் நாட்டில் மழைபெய்யாது போக, சான்றோர்கள் இருசிய சிருங்கரை நாட்டிற்கு அழைத்தால் மழை பெய்யும் என்றனர். விபாண்டக முனிவரிடத்திருந்து இவரைப் பிரித்து நாட்டிற்குக் கொணரும் அருமையை நினைத்து உரோமபாதன் கவன்றபோது, அவன் நாட்டிலுள்ள விலைமாதர் சிலர் இம்முனிவரை அழைத்து வரச் சென்று, அவர் இருக்கும் ஆசிரமத்தின் புறத்தேயிருந்து, விபாண்டகர் இல்லாதபோது இவர்பால் சென்றனர். இவரும்

அம்மகளிரை மார்பில் கோடு பூத்த செறிதவ முனிவர்கள் என்று கருதிப் பெரிதும் பேணினார். இருசிய சிருங்கர் தமக்குச் செய்த தலையளியை ஏற்றுக் கொண்டு, அவர்களும் இம்முனிவருக்குப் பழங்கள், கிழங்குகள் முதலியன தந்து, தாம் வாழும் ஆசிரமத்துக்கு அழைத்து, அங்கிருந்து உரோமபாதன் நாடாகிய அங்கதேசம் வரை அழைத்துச் சென்றனர். முனிவன் அங்கநாடு சென்றதும் மழை பொழிந்தது. இருசிய சிருங்கர் தம்மை மகளிர் வஞ்சகமாக அழைத்ததை உணர்ந்து சினந்து அடங்கினர். உரோமபாதன் இம்முனிவரைப் பலவாறு பேணித் தன் மகள் சாந்தை என்பாளை மணம் செய்து கொடுத்தான்.

தயரதன் தனக்குப் பன்னெடுங்காலம் மகப்பேறில்லாது நொந்து வருந்தியபோது, வசிட்டன் போன்ற பெருமுனிவர்கள், இருசியசிருங்கரை அழைத்து, மகவேள்வி செய்தால் உறுதியாகத் தக்க மகப்பேறு வாய்க்கும் என்றனர். அதுகேட்டுத் தயரதன் உரோமபாதனுக்கு வேண்டுகோள் விடுக்க, அவ்வரசன் இருசிய சிருங்கரை அயோத்திக்கு அனுப்பிவைத்தான். முனிவர் இயற்றிய மகப்பேற்று வேள்வியில் பூதமொன்று தோன்றிச் சுதை நிகர் பிண்டம் ஒன்றைத் தந்தது. அதனை முனிவர் பெற்றுத் தசரதனிடம் கொடுத்து அவன் மனைவியர் உண்ணுமாறு செய்வித்தார். அவர்களும் அந்த அவிப் பொருளை உண்டு, இராமன் முதலியோரைக் கருவுற்று ஈன்றனர். பரம்பொருளாகிய இராமன், திருமால் தொழில் இயற்ற மனித வடிவில் பிறக்கக் காரணமானவர் இவர்.

உலகியலில், 'நீ ஒரு கொம்பு முளைத்த மனிதனோ'; 'அவனுக்குக் கொம்பு முளைத்துள்ளதோ' என்னும் வியத்தகு கேள்விகளெல்லாம் இக்கலைக் கோட்டு முனிவரை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே யாம். கு.தி.

**இருஞ்சோணாடு** கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டில் இருந்த ஓர் அரசியல் பிரிவு. இருஞ்சோணாட்டுப் பிரிவில் அர்ச்சுனாநதி, வைப்பாறு, கௌசிகமாநதி, உப்போடை ஆகியன பாயும் இன்றைய சாத்தூர் வட்டத்தின் கீழ்ப்பகுதியும், இதனை ஒட்டிய முதுகுளத்தூர், கோவில்பட்டி, விளாத்திகுளம் வட்டங்களில் சில பகுதிகளும் அடங்கியிருந்தன. இப்பிரிவில் இருப்பைக்குடி, கூடற்குடி, குளத்தூர், துழாயூர், வெளியங்குடி, ஆலங்குடி, நென்மலி முதலான நகரங்களும், முதலூர், மாறனூர், கொழுவூர், சாத்தனூர், சிறுபுத்தூர், கும்மண மங்கலம், இளவிருப்பை முதலான ஊர்களும் அடங்கியிருந்தன. இருஞ்சோணாட்டுப் பகுதி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், பாண்டிய நாட்டினை ஆண்டு வந்த சீமாற சீவல்லபனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 815-862), சாத்தூர்ப் பகுதியைப் பாண்டியனின் மேலாண்மைக்குட்பட்டு ஆண்டுவந்த இருப்பைக்குடி கிழவனின் அரும்பணியால் செழிப்புற்று விளங்கியது. இதற்கு முன்பு இப்பகுதி வறட்சியாகவே இருந்தது. ம.இரா.த.

**இருத்தல் கொள்கை:** இக்கொள்கை மேலை நாட்டில் அண்மைக் காலத்தில் புகழ்பெற்று விளங்குகிற தத்துவமாகும். இது செருமனியில் தோன்றிப் பிரான்சில் பரவியது. இரண்டு உலகப் போர்களினால் ஏற்பட்ட நாச விளைவுகள், குழப்பம், பாதுகாப்பின்மை, மரண பயம் ஆகியவை இதன் வளர்ச்சிக்குக் காரணங்களாகும். சுருங்கக் கூறின் இருத்தல் கொள்கை (Existentialism) சமுதாயத் தோல்வியின் வெளிப்பாடு ஆகும். இது அண்மையில் தோன்றியதெனினும், இக் கொள்கையின் கருவைச் சாக்கிரட்டீசு, பவுல், அகசுதீன், பாசுகல் முதலியோரின் தத்துவத்தில் காணலாம். கர்க்கிகார், கெய்டெக்கர், நீச்சே, சால்சுபர்சு, மார்சல், சார்த்துரே ஆகியோர் இக்கொள்கையை வளர்த்தவர்கள். பிரான்சு நாட்டுச் சார்த்துரே இதன் தலைமைக் குரு என்று கருதப்படுகிறார். அவர் தம் நாவல்கள், நாடகங்கள் மூலம் இதைப் பரவச் செய்தார்.

மற்ற மெய்ப்பொருளியல் கொள்கைகளைப் போல இக் கொள்கை வரையறைக் குட்பட்டதன்று. இதில் ஆத்திகர்களும் உண்டு; நாத்திகர்களும் உண்டு. சிலர் தம் தத்துவம் இருத்தல் கொள்கை அன்று என்றும் கூறுகின்றனர். எனினும் இந்தக் கொள்கையை இனம் கண்டு கொள்ளும்படியான சில பொதுவான கூறுகள் இருக்கின்றன. இதன் அடிப்படைக் கருத்து 'இருப்பு இயல்பிற்கு முற்பட்டது' (Existence Preceedes Essence) என்பதாகும்.

வாழ்க்கைதான் மனிதனின் பண்புகளை உருவாக்குகிறது. மரபுவழித் தத்துவம் பொதுமையான மனிதனை அறிய முயற்சி செய்தது. அது மனிதனை மனித குலத்திற்கான பொது இயல்புகளை உடையவனாக ஆராய்கிறது. ஆனால், இருத்தல் கொள்கை இதற்கு முரணானது. ஒவ்வொரு மனிதனும் தனியானவன். அவன் மனிதகுலப் புள்ளி விவரத்தில் மதிப்பற்ற வெறும் புள்ளியல்ல. பொதுவான மனிதன் (General Man) என்று யாருமில்லை. தனித்தனியாகவே மனிதன் (Individual Man) இருக்கிறான். எனவே மனிதனை பொதுமைக் கருத்துகளோடு பார்க்காமல், தனிமனிதனாக வாழ்க்கைப் போராட்டத்தில் தனியே எதிர் நீச்சல் அடித்துக்

கொண்டிருப்பவனாகக் காண வேண்டும். அவன் வெறும் கருத்தமைவு (Concept) அல்லன். உடலும் உணர்வுகளும் உடையவன். பிரச்சினைகளுக்கு நடுவில் வாழ்கிறவன். அதனால், மனிதனை அவன் சூழ்நிலையோடு சேர்த்து அறிய வேண்டும். ஒவ்வொரு மனிதனின் பிரச்சினைகளும் தனித்தனியானவை. சில பொதுவான பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றைத் தனியாக அவன் எப்படிச் சந்திக்கிறான் என்பதில் தான், அவன் வாழ்க்கையின் சிறப்பு அடங்கியிருக்கிறது.

இருத்தல் கொள்கையினரின் அறவியல் கருத்துகள் மரபுவழித் தத்துவங்களிலிருந்து மாறுபடுகின்றன. கருத்து முதற் கொள்கை (Idealism) என்ற மரபுவழித் தத்துவத்தின்படி மனித இனத்தின் பயன்களும் (Values), குறிக்கோள்களும் என்றும் மாறாதவை. இவற்றை நாடுவது தான் மனிதனின் கடமை, இயற்கைக் கொள்கை (Naturalism) யின்படி என்றும் மாறாத நன்மைகள், பண்புகள், கடமைகள் என்று எவையுமில்லை. இடம், காலம் முதலிய சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கொண்டே குறிக்கோள்களும் கடமைகளும் அமைகின்றன. நன்மையும் தீமையும் இயற்கையால் தீர்மானிக்கப்படுபவையே தவிர வெறும் அறிவால் மட்டுமல்ல. எனவே, ஒரு காலத்தில் அறம் என்று கருதப்பட்டது மற்றொரு காலத்தில் தீமையாகக் கருதப்படலாம். எனினும் அறவொழுக்க மாறுதல்கள் ஓர் ஒழுங்கமைப்புக்குட் பட்டவையே. அதை அறிந்து கொண்டால் எல்லோருக்கும் பொதுவான அறவொழுக்க விதிகளை எல்லாம் வகுத்துக் கொள்ள முடியும் என்று இயற்கைக் கொள்கை கூறுகிறது.

மேற்கூறிய இரண்டு மரபுகளையும் இருத்தல் கொள்கை எதிர்க்கிறது. பொதுவான அறவொழுக்க விதிகள் இல்லை. மனிதன் தனியானவன் (Alone). அவன் செய்வதோ செய்யத் தவறுவதோ ஒரு குறிப்பிட்ட தனிச் செயல். சுக்கானில்லாமல் அவன் இவ்வுலகில் தள்ளப்பட்டிருக்கிறான். தன் நிலைமைக் கேற்றவாறு அவன் செயற்பட வேண்டும். அவனது அறவொழுக்கத்திற்கு வழிகாட்டிகள் இல்லை. ஏனெனில் ஒருவருடைய வாழ்க்கையை இன்னொருவர் வாழ முடியாது. இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் செயற்படும் விதம், தன் குறிக்கோள் ஆகியவற்றை அவன் தானாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தானே தேர்ந்தெடுத்துச் செயற்படுவதனால் தன் பண்புகளைத் தானே உருவாக்கிக் கொள்கிறான்.

இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பான கருத்து செயலுரிமை (Freedom) என்பது. மனிதன் கட்டற்றவன், அதனால்தான் தான் செய்ய வேண்டியதைத் தானே தீர்மானிக்க முடிகிறது. சமூகத்தால் நிருணயிக்கப்பட்ட நீதி, தர்மம், கடமை முதலியவற்றைத்தான் அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. தனக்குச் 'சரியானது' என்று தோன்றுவதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை யிருக்கிறது. மற்ற அறிவியல் அறிஞர்களும் மனிதன் செயலுரிமை யுடையவன் என்று கூறுகின்றனரெனினும், இருத்தல் கொள்கையினர் இதை வற்புறுத்திய அளவுக்கு அவர்கள் வற்புறுத்தவில்லை. மனிதன் எல்லையற்ற செயலுரிமை உடையவன். செயலுரிமை எவ்வளவுக்கு இருக்கிறதோ அவ்வளவு பொறுப்பும் இருக்கிறது. அவனுடைய இருப்புக்குக் காரணம் எதுவுமில்லை. ஆகவே அவன் ஏன் ஒரு குறிப்பிட்ட காரியத்தைத் தேர்ந்தெடுத்தான் என்று அதை நியாயப்படுத்துவதற்கான காரணமும் இல்லை. எனினும், தன் செயல்களுக்குத் தானே பொறுப்பாளி. அதானல் செயலுரிமை அவனுக்கு மலைப்பைத் தருகிறது.

இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பான கருத்து இறப்பைப் பற்றியது. இறப்பு இருப்பின் இறுதி எல்லை. இவ்வுலகில் வேறெதுவும் உறுதியில்லை. இறப்பு ஒன்றே உறுதி. ஆனால், அது எப்போது ஏற்படும் என்று கூற முடியாது. அதனால் நாம் செய்ய வேண்டியவை அனைத்தையும்இறப்பை எதிர்நோக்கிய உணர்வுடனே செய்து தீர வேண்டும். ஆகவே ஒரு குறிக்கோள் அல்லது திட்டத்தின் அடிப்படையில் வாழ்க்கை அமைய முடியாது. திட்டமிட்ட வாழ்க்கை திடீர் இறப்பினால் பொருளற்றதாகி விடலாம். அதனால் ஒருவன் அடைய வேண்டியது அனைத்தையும் இன்றே, இப்பொழுதே அடைய முயற்சி செய்ய வேண்டும்.

வாழ்க்கையின் நிலையாமையும், தன் செயல்களுக்குத் தானே பொறுப்பு என்ற உணர்வும் ஒருவனுக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. வேதனை அல்லது கொடுந்துயரம் இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பியல்பாகும். விருப்பு, வெறுப்பு, அன்பு, பயம் முதலிய உணர்வுகள் ஒரு குறிப்பிட்ட பொருளை நோக்கியமைந்தவை. ஆனால், இருத்தல் கொள்கையினர் கூறும் கொடுத்துயரம் எந்தப் பொருளையும் பற்றியதன்று. இதையே அவர்கள் மொழியில் கூற வேண்டுமென்றால், வேதனைக்குக் காரணமான பொருள் வெறுமை (The Object of Augnish is 'nothing'). ஒருவனுக்கு மிக இன்றியமையாதவையாக, மேன்மையாகத் தோன்றியவை அனைத்தையும் இந்தக் கொடுந்துயர உணர்வு பொருளற்றவையாக வெறுமையாக்கி விடுகிறது. மனத்தை ஈர்த்து

எழுச்சி பெறச் செய்த சூழ்நிலைகளெல்லாம் இந்த வேதனையுணர்வு வந்த பிறகு கையறுநிலையைத் தருவதாக உள்ளன. உலகத்தைப் பார்க்கும் பொழுது சலிப்பும் அருவருப்பும் ஏற்படுகிறது.

கொடுந்துயரத்திலிருந்து தப்புதற்கு மக்கள் பல வழிகளைத் தேடுகிறார்கள். தம்முடைய தனித் தன்மையை மறைத்துக் கொண்டு பொதுமைப் போர்வைக்குள் பாதுகாப்புத் தேடிக் கொள்கி றார்கள். சமுதாய அல்லது மந்தை மனப்பான் மையை வளர்த்துக் கொள்கிறார்கள். மரபொழுக் கம், பொதுமைப் பண்புகள் என்ற முகமூடி அணிந்து கொள்கிறார்கள். தாம் பேசும் பேச்சுகள் கூடத் தம் அகத்தை வெளிப்படுத்தா வண்ணம் மிக்க எச்சரிக்கை யாக இருக்கிறார்கள். 'நான் அப்படி நினைக்கிறேன்', 'நான் செய்ய மாட்டேன்' என்பவற்றிற்குப் பதிலாக, 'அவர்கள் அப்படி நினைப்பார்கள்', 'சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ளாது', 'பொதுவாக இப்படிச் செய்ய மாட்டார்கள்', 'இதுதான் மரபு' என்று தம் பொறுப்பைத் தட்டிக் கழித்து மற்றவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அதைச் சுமத்துகிறார்கள். சுருங்கக் கூறின், போலி வாழ்க்கையின் மூலம் பாதுகாப்பு தேடிக் கொள்கிறார்கள். ஆனால், இருத்தல் கொள் கையின்படி மனிதன் செயலில் முழுமனத்துடன் ஈடு பட வேண்டும். அத்தகைய செயல்கள் மூலம் மனிதன் தன்னையே படைத்துக் கொள்கிறான். எனவே, இருத்தல் கொள்கை வெறும் ஏட்டளவில் ஆராயப் படுகின்ற கொள்கை அன்று. அது செயல் முறைத் தத்துவம், ஓர் இயக்கம் ஆகும். தன் உலகத்தைத் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும். தன் வாழ்க் கைக்குத் தானே தலைவன்.

கீர்க்கிகார்டு: கீர்க்கிகார்டு (Kierkegaard) இருத் தல் கொள்கையின் தந்தை என்று கருதப்படுபவர். இவரது கொள்கை 'இது அல்லது அது' (Either-or) என்னும் நூலில் மிகச் சிறப்பாக வெளிப்படுகிறது. இவர் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர். இவர் காலத்தில் செருமானியத் தத்துவ மேதை எகலின் கருத்துமுதற் கொள்கை மேலோங்கியிருந்தது. எகலின் கருத்துப்படி மனிதன் குடும்ப, சமூக, அரசி யல் அமைப்பில் ஓர் உறுப்பு. அந்த முறையில் தன் கடமைகளை நிறைவேற்றுதல் மூலந்தான் தன் உண் மையான ஆன்மாவை அவன் அறிய முடியும். ஓர் அமைப்பின் பகுதியாக விளங்காத தனிமனிதன் இல்லை. எகலின் கருத்து முறைத் தத்துவம் (Spe culative Philosophy) கீர்க்கிகார்டுக்கு உடன்பாடாக இல்லை.

கீர்க்கிகார்டு கொள்கையின்படி மனிதன் தனி யானவன்: பொது வழக்குச் சொற்கள் மூலம் அவனைப் புரிந்து கொள்ள முடியாது. சமுதாயத்தின் உறுப்பாக விளங்குவதிலும், அதன் குறிக்கோள் களையே தன்னுடையதாக்கிக் கொள்வதிலுந்தான் அவன் வாழ்க்கையின் குறிக்கோள் இருக்கிறதென்றும் கூற முடியாது. மனிதன் நிறைவடைந்த படைப்புப் பொருளல்லன் வாழ்க்கையின் பளுவைச் சுமக்கும் போது அவன் தன் பண்புகளைப் படைத்துக் கொள் கிறான். அவனே தனியாகத் தன் குறிக்கோளைத் தேர்ந்தெடுக்கிறான். அவன் தேர்ந்தெடுக்கும் முடிவு களுக்கு இறைவனோ வேறு எந்த உளவியலோ, அறிவியலோ காரணம் இல்லை.

கீர்க்கிகார்டின் இருத்தல் கொள்கைக் கருத்துகள் அவர்தம் கடவுள் கொள்கையில் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றன. கீர்க்கிகார்டு கிறித்தவச் சமயத் தில் ஆழ்ந்த நம்பிக்கை யுடையவர். அவர் மறுப்புரை யாளராகிய கிறித்தவர். அதனால், கிறித்தவ மதச் சபையின் கொள்கைகளை எதிர்த்தார். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் கடவுள் மனிதனாக அவதரித்தார் என்று கிறித்தவச் சமயம் கூறுகிறது. இந்த நம்பிக்கை அறிவினைப் பழிப்பதாக இருக் கிறது. இதன் உண்மையை அறிவால் நிலைநாட்ட முடியாது. எனினும் நான் இந்த நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன். கிறித்தவனாகப் பிறந்ததால் அல்லது மதச்சபை போதிப்பதால் ஏற் றுக் கொள்ளவில்லை. நானே உணர்ந்து முழு மனத் துடன் ஏற்றுக் கொள்கிறேன். ஏன் அதைத் தேர்ந் தெடுத்தேன் என்பதற்கான அறிவார்ந்த எக்காரண மும் இல்லை. இது நானே தனிமையில் எடுத்த முடிவு. இவ்வாறு கீர்க்கிகார்டு கூறுகிறார்.

எனவே, மனிதன் வெறும் சிந்தனை உடையவன் அல்லது அறிபவன் மட்டும் அல்லன்; உணர்வும் மன வெழுச்சிகளும் கொண்டவன்: பலவிதமாக மாறு கின்ற நிலைகளுக் கிடையில் வாழ்ந்து கொண்டிருப் பவன். அதற்கிடையில் தன் செயலுரிமையால் வேறு எந்தத் துணையுமின்றித் துணிகரமான முடிவுகளை எடுக்கிறான். இந்த முடிவுகளுக்கு அவனே முழுப் பொறுப்பு.

நீச்சே: 'சரதுட்டிரர் இவ்வாறு பேசினார்' (Thus Spoke Zarathustra), 'நன்மைக்கும் தீமைக்கும் அப் பால்' (Beyond Good and Evil) 'ஆற்றல் குறித்த செயலுறுதி' (The Will to Power) ஆகிய நீச்சேயின் (Neetzsche) நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. இவர்தம் கொள்கையின்படி பொதுமையான அறிவு, அடிப் படைப் பண்புகள், தன்னிலையில் உள்ள பொருள் என்று எவையுமில்லை. உள்ளனவெல்லாம் தனி மனி தர்கள், அவர்களுக்கு இடையிலுள்ள உறவுகள், தனிப் பொருள்கள், அவற்றுக்கு இடையிலுள்ள தொடர்பு

கள்அவை பற்றிய நம் விளக்கங்கள், மதிப்பீடுகள் முதலியவையே. அறிவு உண்மையைத் தர முடியாது, அது மக்களுக்குத் தேவையும் இல்லை. தனிப் பொருள்களுக்கு இடையிலுள்ள தொடர்புகளைத் தமக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வதுதான் பயன்படும் அறிவு. இவ்வாறு தாமே அமைத்துக் கொண்ட விதிகளைப் பிரபஞ்சத்தில் உண்மை என்று மரபுவழி மெய்ப்பொருளியலார் நம்புகின்றனர். அதனால் மாறுதல்கள், பரிணாமம், முரண்பாடுகள் முதலியவற்றைத் தோற்றம் அல்லது மாயை என்று கருதுகின்றனர். முற்றொருமை, முரணாமை, பொதுமை, ஒழுங்கமைப்பு முதலியவை தமக்குப் பயன்படுகிற அடிப்படை ஏற்புகள் என்பதை மறந்து அவையே முழு உண்மை என்று நம்புகின்றனர். தனி மனிதக் கோணத்திலிருந்துதான் பிரபஞ்சத்தைப் பார்க்க முடியும். தனிமனித உறவுகளைக் கடந்த நிலையிலிருந்து வெறும் கூடுகளைத்தான் பார்க்க முடியும்; வாழ்க்கையின் உயிரோட்டத்தைக் காணமுடியாது. வெறும் சிந்தனை மூலம் இருப்புப் பற்றி அறிய முடியாது.

அறவொழுக்கத்தில் இரண்டு நிலைகள் உண்டென்று நீச்சே கருதுகிறார். மரபு வழி அல்லது அடிமைகளின் ஒழுக்கம் (Slave Morality); மற்றொன்று மேம்பட்ட மக்களின் ஒழுக்கம் (Super man Morality). மரபு வழி ஒழுக்கத்தில் தனி மனிதனுக்குச் செயலுரிமையில்லை. சமூக நியதிகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். சமூகத்தைப் புறக்கணிக்கும் பொழுது குற்றவுணர்வு அல்லது தண்டனை பற்றிய பயம் ஏற்படுகிறது. இதையே மனச்சாட்சி என்று கூறுகின்றனர்.வலியோர் நலிந்தோரைத் தம் பிடியில் வைத்துக் கொண்டிருப்பதற்காகப் பயன்படும் குணங்களை நற்பண்புகள் என்றும், அதற்கு மாறானவற்றைத் தீமை என்றும் நிருணயித்தனர். அன்பு, அருள், இரக்கம் முதலியவை போராட்டத்தில் பணிந்தவர்களின் பண்புகளாகவும், மறப்பண்புகள் வெற்றியடைந்தவர்களின் பண்புகளாகவும் விளங்குகின்றன. மதத்தின் பெயரால் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட குருமார்கள், தோல்வியுற்றவர்கள் அதிருப்தியடைந்து மீண்டும் எழுச்சி பெற்றுவிடாமல் இருப்பதற்காகத், தாமே தம் துயரங்களுக்கெல்லாம் காரணம் என்றும், தம் தோல்வி தவிர்க்க முடியாததென்றும், பணிந்து வாழ்வதே சிறந்த பண்பு என்றும் போதிக்கின்றனர். மனிதன் மனமுடைந்து கையறு நிலையில் நின்று விடலாகாது. மரபுவழி அறவொழுக்கக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடவேண்டும். தன் செயலுரிமையை நிலைநாட்டுபவனே மேம்பட்ட மனிதன். அச்சமயத்தில் அவன் வெற்றிக்கு வழிகோலுபவையே தலையாய அறப்பண்புகள். எனவே, மனிதன் அறத்தைத் தாவே தீர்மானிக்கிறான். பண்புகளின் படைப்பிடம் தான் என்பதை உணர்கிறான். மேம்படும் மனிதன் தன்னையே சிறப்பித்துக் கொள்கிறான். அவன் நன்மை, தீமை ஆகிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன். எனவே, அடிப்படைப் பண்புகளைப் பற்றிய புதிய மதிப்பீடு செய்ய வேண்டும் என்று நீச்சே கூறுகிறார்.

கார்ல்சாசுபர்சு: காரல்சாசுபர்சு (Karl Jaspers) இருத்தல் மூன்று வகையானது என்கிறார். அவை புறநிலை இருப்பு (Being there),தனிநிலை இருப்பு (Being oneself), தன்னிலை இருப்பு (Being in itself). பொருள்கள் நிலையான தன்மையுடையவை. அதனால்,அவை குறித்த பொதுவான நிச்சயமான அறிவைப் பெறமுடியும். அவை பற்றிய உலகளாவிய விதிகளை (Universal) அறிய முடியும். அறிவியல், மனிதனையும் பௌதீகப் பொருள்களைப் போலப் புறநிலை இருப்புடையவனாக அறிய முற்படுகிறது. உளவியல் கூட மனிதனின் அகநிலையை (Subjectivity), ஆன்மாவை, 'நான்' என்று குறிப்பிடப்படும் பொருளை ஆராய்வதில்லை. அறிவியல்களின் குறிக்கோள் புறநிலை அறிவு (Objective Knowledge) பெறுவது. பொருள்களையும் அவற்றின் தொடர்புகளையும் சில விதிகளுக்குட்படுத்திவிட்டால், அவை மாறிவிடுமோ, அவற்றோடு எவ்வாறு பழக வேண்டுமோ என்ற ஐயப்பாடு, அச்சவுணர்வுகளுக்கு இடமில்லை. ஆனால், அறிவியல்கள் கருதுவது போல மனிதன் புறநிலை இருப்புடையவன் மட்டுமல்லன்; அவனுக்கு அகநிலை இருப்பும் இருக்கிறது. அது காரண காரிய நியதி என்ற அறிவியல் கட்டுப்பாட்டிற்குள் அடங்காதது. அவன் செயலுரிமையால் தனிநிலை இருப்பு உடையவன்.

அறிவியல்கள் சடப் பொருள்களைப் பற்றிய முழு அறிவையும் கொடுத்து விட்டதாகவும் கூற இயலாது. ஏனெனில் அறிவியல் முறையான தொகுப்பு வழியில் (Inductive Method) கிடைக்கும் அறிவு நிகழ்திறம் (Probability) படைத்ததே தவிர, உறுதியானது என்று அறுதியிட்டுக் கூறவியலாது. உலகத்தின் அடிப்படை உண்மை, எண்ணிக்கை, சடப் பொருள், ஆன்மா அல்லது சக்தி என்று எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. இந்தத் தோல்வியானது அறிவியலின் எல்லைக் கோட்டைக் காட்டுகிறது. அறிவியல்கள் கைவிட்டதை மெய்ப்பொருளியல் தொடர்கிறது. அது மனிதனின் அறிவைத் தொடக்க நிலையாகக் கொள்ளாமல் அவன் இருப்பிலிருந்து தொடங்குகிறது. மனிதன் தன் இருப்பு நிலையை உணரும்பொழுது பிற பொருள்களிலிருந்து வேறுபட்டு விளங்குகிறான். 'நான்' என்பது என் உடல், சமூகத்தில் நான் வகிக்கும் இடம், என் தொழில் அல்லது நடத்தையன்று;

இவையனைத்திற்கும் மூலமாக விளங்குகின்ற கட்டற்ற ஆற்றல்; என் உள்ளத்தின் உறுதி (Will). இதன் மூலம் உணர்வோடு கூடிய ஆன்மாவை நானே படைத்துக் கொள்கிறேன். ஆகையால், தனி நிலை இருப்புடையவனாக விளங்குகிறேன். என் செயலுரிமையைப் பயன்படுத்த வில்லையென்றால் எனக்கும் பொருள்களைப் போலப் புறநிலை இருப்பு மட்டுமே உண்டு. 'நான்' நானாகவிளங்காமல் 'அது' வாக இருப்பேன். எனவே தனிநிலை இருப்பில் நான் என் சொந்தப் படைப்பு.

தனிநிலை இருப்பில் விளங்குகின்ற ஆன்மா எல்லைக்குட்பட்டது. நம் பெற்றோர், நம் இளமைப் பருவம், சூழ்நிலை முதலியவை நம்மால் தீர்மானிக்கப்படுவனவல்ல. ஆனால், அவற்றை நாம் விரும்பி ஏற்றுக் கொள்ளலாம். அந்தச் சூழ்நிலைகளிலிருந்து தப்புவதற்கு முயற்சி செய்யாமல், அதன் அடிப்படையில் செயற்படலாம். அவ்வாறு ஏற்றுக்கொள்வது கையறு நிலை அல்லது தவிர்க்கவொண்ணாத நிலை காரணமாக அன்று. என்னை நான் நேசிப்பது போல இவற்றையும் விரும்பி ஏற்றுக் கொள்கிறேன். இவை தவிர இறப்பு, துன்பம், குற்றவுணர்வு முதலியவையும் மனிதனின் இருப்பை வரையறை செய்கின்றன. அவையும் இருப்பின் எல்லைகளைக் காட்டுகின்றனவே தவிர, அதற்கு முட்டுக்கட்டையாக விளங்கவில்லை. இந்த எல்லைக்கோடுகளில் தான் மனிதன் கடந்த நிலையிலுள்ள தன் ஆன்மாவை (Being-in-itself) உணர்கிறான்.

மார்ட்டின் எய்டெக்கர்: பொருள்களின் இருப்பு அவற்றின் பயனில் அடங்கியுள்ளது. 'பேனா' எழுதுவதற்குப் பயன்படும் கருவி. அதன் பயனிலிருந்து அதைப் பிரித்துவிட்டால் அதன் இருப்புக்குப் பொருள் இல்லை. ஆனால், மனிதனின் இருப்பு பயன்படும் காரணத்தால் அமைவதில்லை. 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு அடிப்படை உணர்வாகும். பொருளின் பண்புகள் அதன் இருப்பைத் தீர்மானிக்கின்றன. ஆனால், மனிதனின் பண்புகள் அவன் இருப்பிற்குப் பிறகே உருவாகின்றன. ஒரு பொருள் மற்றொரு பொருளாக முடியாது. ஏனெனில், அதன் பண்புகள் ஏற்கெனவே வரையறை செய்யப்பட்டவை. ஆனால், மனிதனின் பண்புகள் இதுவரை அவன் அடைந்த நிலைகளைக் குறிப்பிடும். இன்னும் பல புதிய பண்புகளை அவன் அடையலாம். அது அவன் இறக்கும் வரை நிகழக்கூடியது. மற்ற உயிரினங்களிலிருந்தும் மனிதன் வேறுபடுகிறான். தாம் இருக்கிறோம் என்பதை அவை உணர மாட்டா. மேலும் அவை காலம் இடம் போன்ற சூழ்நிலைகளின் அடிமைகள்; செயலுரிமையற்றவை; காரண காரிய நியதிக்குட்பட்டவை.

மனிதனையும் வரலாற்றுச் சூழ்நிலைத் தொடர்புகளிலிருந்து பிரிக்க முடியாது. அவன் விரும்பிப் பிறப்பதில்லை. சூழ்நிலைகளை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. அதில் அவன் தள்ளப்பட்டிருக்கிறான். ஆனால், அவன் வெறும் பார்வையாளனாக இருந்து விட முடியாது. அதில் அவன் பங்கேற்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் தன்னை முழுமையாக உணர முடியும். நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? என்பது நமக்குப் புரியவில்லை. பிறப்புக்கு முன்பும் இறப்புக்குப் பின்னும் என்ன என்பது தெரியவில்லை. வெறுமையிலிருந்து வெறுமை வரைதான் வாழ்க்கை. என் இருப்பு இன்றியமையாதது அன்று. நான் தோன்றாமலே இருந்திருக்கலாம். உறுதியற்ற வாழ்க்கையில் இறப்பு ஒன்றே உறுதி. இவ்வுணர்வு நமக்குப் பெருங்கவலையைத் தருகிறது. இருப்பைப் பற்றிச் சிந்திக்காதவர்களுக்குக் கொடுந்துயர் இல்லை. ஆனால், அவர்கள் பொய் வாழ்க்கை வாழ்கிறார்கள். கொடுந்துயரத்திலிருந்து விடுபடுவதற்காகச் சடப் பொருள்களைப் போல வாழ்கின்றனர்; அல்லது உலகைத் துறந்து கற்பனை வாழ்க்கையைமேற்கொள்கின்றனர். ஆனால் இறப்பை எதிர் நோக்கிய கொடுந்துயருடன் கூடியதே உண்மையான வாழ்க்கை. இவ்வாறு மார்ட்டின் எய்டெக்கர் (Martin Heidegger) விளக்கம் தருகிறார்.

கபிரியேல் மார்சல்: கபிரியேல் மார்சல் (Gabriel Marcel) கண்ட கொள்கை 'கிறித்துவ இருத்தல் கொள்கை' என்று கூறப்படும். மனிதனின் 'இருப்பு' புரியாத மறைச்செய்தி (Mystery) அல்லது தேவ இரகசியம் போன்றது. இதைப் புதிர் அல்லது சிக்கல் என்பதிலிருந்து பிரித்துணர வேண்டும். அறிவின் துணையால் சிக்கலுக்கு விடை காணலாம். சிக்கலின் பொருளை ஒருவன் புறநிலையில் வைத்துத் தெளிவு பெறலாம். அதில் அறிவோன், அறியப்படும் பொருள் என்ற வேறுபாடு உண்டு. ஆனால், மறைச் செய்தியை ஒருவன் அயலாக வைத்து அறிய முடியாது. அறிபவனையும் அறியப்படும் பொருளையும் அதில் வேறுபடுத்த முடியாது. இருப்புப் பற்றிய கேள்வியும் இத்தகையதே. இருப்பை ஒருவன் தனக்கு அயலாக இருந்து ஆராயவியலாது. எனவே, இருப்பு அறிவால் விளக்க முடியாத, வாழ்தலின் மூலம் மட்டும் உணர முடிந்த இரகசியம்.

இருப்புக்கும் (Being), உடைமைக்கும் (Having) வேறுபாடிருக்கிறது. உடைமை என்பது புறப் பொருள்களின்மேல் மனிதனுக்குள்ள உரிமையாகும். பொருள்களை வைத்துக் கொள்ளுதல் அல்லது விட்டுவிடுதல் செய்யலாம். பொருள்கள் நமக்குக் கட்டுப்பட்டவை. செயலுரிமையை மறந்த நிலையில்

மனிதன் தன் இருப்பு நிலையிலிருந்து கீழிறங்கி உடைமை நிலைக்கு அதாவது பொருள்களின் நிலைக்கு வருகிறான். அதே வேளையில், பொருள்களிலிருந்து வேறுபட்டு இருப்பு நிலையில் தனித்து நிற்பதும் இயலாது. இருப்பு நிலைக்கும் உடைமை நிலைக்கும் இடையிலுள்ள இந்த இறுக்கம் இயல்பானதும் இன்றியமையாததும் ஆகும். அதுவே வாழ்வின் உயிர்நாடி.

இருப்பில் மக்களுக்குள்ள நம்பிக்கை தம்மைப் போல மற்றவர்களும் இருப்புடையவர்கள் என்பதை உணர்த்துகிறது. இந்த நம்பிக்கை மூலம்தான் கடவுளின் இருப்பையும் உணர்கின்றனர். கடவுளின் இருப்பு அறிவியலால் மெய்ப்பிக்க முடியாது. கடந்த நிலையிலுள்ள அகவுணர்வு மூலம் இந்த நம்பிக்கை ஏற்படுகிறது. கடவுளுக்கும் மக்களுக்குமுள்ள உறவு, பொருள்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உள்ளது போன்றதன்று. கடவுளுக்கும் மக்களுக்கும் நடுவில் எந்தத் தடையுமில்லை. அது உடனடி அனுபவம்; மக்களுக்கும் அவன் நண்பனுக்குமுள்ள உறவு போன்றது; மறைவானது. இதில் தன்னைத்தானே ஒப்புவித்துக் கொள்கிறான். அப்பொழுதுதான் கடந்த நிலையிலுள்ள தன் ஆன்மாவின் மறைச் செய்தியை உணர்கிறான். அந்த அனுபவத்தினால்தான் துரோகம், இறப்பு, அச்சம் நிறைந்த இவ்வுலகில் நம்பிக்கை, அன்பு, அருள், பொறுமை முதலிய பண்புகளை வளர்த்துக் கொள்ள முடிகிறது.

சீன் பால் சார்த்துரே கொள்கைப்படி இருப்பு இரண்டு வகைப்படும். ஒன்று தன்னிலையில் இருப்பது (Being-in-itself) மற்றொன்று தனக்காக இருப்பது (Being-itself). தன்னிலை இருப்பு உணர்வற்ற நிலை. சடப் பொருள்களின் இருப்பு இத்தகையது. தனக்காக இருப்பது உணர்வுடன் கூடிய நிலை. உணர்வு எப்பொழுதும் ஒரு பொருளைச் சார்ந்திருக்கிறது. 'இது நாற்காலி, இது புத்தகம்' என்று பொருள்களைப் பற்றியது. உணர்வு கொண்டு மனிதனால் எதிர்மறைத் தீர்ப்புகளைக் கருத முடிகிறது. அதாவது தான் மற்றப் பொருள்களிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் வேறுபட்டவன் என்ற உணர்வு பெறுகிறான். மேலும் தான் அடைய வேண்டிய பண்புகள் அனைத்தையும் இன்னும் அடைந்து விடலில்லை, தான் முழுமை பெறவில்லை என்பதையும் அறிகிறான். சடப் பொருள்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகின்ற இவ்வுணர்வைச் சீன்பால் சார்த்துரே (Jean Paul Sartre) 'இடைவெளி' அல்லது வெறுமை என்று குறிப்பிடுகிறார். இந்த வெறுமையுணர்வு மனிதனின் இன்றியமையாத நிலை. அவன் தன் எண்ணங்களினாலும் செயல்களினாலும் வெறுமையை நிரப்பிவிட முனைகிறான்.

பொருள்களின் இருப்பு வரையறை செய்யப்பட்டது. அவை தாமாக, தாம் விரும்பியவாறு பண்புகளை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பில்லை. ஆனால், மனிதன் அவ்வாறு முழுமையாக உருவானவன் அல்லன். தன் குறிக்கோள்கள் அனைத்தையும் அடைந்தவன் அல்லன். அவன் தன் செயலுரிமையால் அடைய வேண்டியவை கணக்கிலடங்கா. வரையறை செய்யப்பட்ட மனிதப் பண்பு ஏதுமில்லாததனால் அவன் கட்டற்றவன். மரபுகள், பழக்க வழக்கங்கள், அறநெறிகள் எவையும் அவனைக் கட்டுப்படுத்தா.

எந்த மனிதனும் ஏதோ ஒரு குறிப்பிட்ட தொழில் புரிவதற்காகப் பிறவி எடுத்தவன் அல்லன். தொழில் அவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவன் இயல்புதான், அவன் அத்தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்பதில்லை. அதை நியாயப்படுத்துவதற்கான எக்காரணமும் இல்லை. அது போன்றனவே அவன் செயல்களும். செயல் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டது; அதனால், அதற்கு முழுப்பொறுப்பும் அவனே. எல்லையற்ற உரிமையும் அதனுடன் கூடிய மாபெரும் பொறுப்புணர்வும் மனிதனைக் கொடுந்துயரம் அடையச் செய்கின்றன. இதிலிருந்து தப்புவதற்காகத்தான் சுதந்திரமில்லாதவன் போன்றும், அச்செயலில் வழியின்றிக் கட்டாயத்தினால் ஈடுபட்டவன்போன்றும் நடிக்கிறான். போலிவாழ்க்கை வாழ்கிறான். இதனால், அச்செயலின் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள நினைக்கிறான். ஆனால், உண்மையான வாழ்க்கை செயலுரிமையால் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதிலும், அதற்கான பொறுப்பை ஏற்பதிலும் தான் இருக்கிறது.

நாம் இவ்வுலகில் மற்ற மனிதர்களுடன் வாழ்கிறோம். சடப்பொருள்களை நாம் எளிதாக வகைப்படுத்தி முத்திரையிட முடியும். ஆனால், நம்மால் மற்ற மனிதர்களை முழுமையாக அறிய முடியவில்லை. அவர்கள் நம் பிடியிலிருந்து நழுவி விடுகிறார்கள். அவர்களை நமக்கு அறிபொருளாக ஆக்கிக் கொள்ள முடியவில்லை. நான் எவ்வாறு மற்றொருவனை என் அறிபொருளாக்க முயற்சி செய்கிறேனோ அவ்வாறே அவனும் என்னை முழுதும் 'இவன் இவ்வளவுதான்' என்று அறிந்து கொள்ள முயற்சிசெய்கிறான். மற்றவர்களின் பார்வை என்னைப் பாதிக்கிறது. சார்த்துரே அதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருகிறார். சாவித்துவாரத்தின் வழியே அறைக்குள் பேசுவதை ஒருவர் வெளியிலிருந்து கூர்ந்து கவனிக்கிறார். இச்செயலில் தம்மை மறந்த நிலையில் அவர் ஈடுபட்டிருக்கும்பொழுது திடீரென்று

காலடிச் சத்தம் கேட்கிறது. இது அவரிடம் பெரிய மாறுதலை ஏற்படுத்துகிறது. இதுவரையில்லாத பயம், குற்றவுணர்வு, வெட்கம் முதலியவை ஏற்படுகின்றன. 'ஒட்டுக் கேட்பவர்' என்ற முத்திரை அவர் மேல் இடப்படுகிறது. மற்றவரின் பார்வையில் அவர் ஒரு சடப்பொருளாகி விட்டார். அதனால் மற்றவர் வாழும் இவ்வுலகம்அவருக்கு ஒருநரகமாகிறது.அடுத்தவரின் உரிமை அவர் உரிமையைப் பாதிக்கிறது.

சார்த்துரேயின் இருத்தல் கொள்கை மனிதத் தன்மைக் கொள்கையும் (Humanism) ஆகும். பொதுவாக மனிதத் தன்மைக் கொள்கையின்படி, மனிதன் தான் மனிதனின் இலட்சியம். ஆனால், சார்த்துரேயின் கொள்கை இதிலிருந்து சற்று மாறுபடுகிறது. சார்த்துரேயின் கருத்துப்படி, வரையறை செய்யப்பட்ட மனிதப் பண்புகள் இல்லை. மனிதன் தன் பண்புகளைத் தானே படைத்துக் கொள்கிறான். அவன் செயல்களுக்கு அவனே பொறுப்பு. மனிதனின் இருப்பை விளக்குவதற்குக் கடவுள் தேவையில்லை. கடவுள் நம்பிக்கையிருந்தால் அவனால் வரையறை செய்யப்பட்ட பண்புகள், என்றும் மாறாத அற விதிகள் முதலியவற்றையும் நம்ப வேண்டியிருக்கும். அதனால்,சார்த்துரே கடவுளை மறுக்கிறார். நானே சட்டங்களைப் படைக்கிறேன். ஆனால்,அது எனக்கு மட்டுமன்றி, என்னைப் போல் செயலுரிமையுடைய மற்றெல்லா மனிதர்களும் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த மாபெரும் பொறுப்பு என்னைத் துயரத்தில்ஆழ்த்துகிறது. இது தான் என் இருப்பு, இவ்வாறு சார்த்துரே கூறுகிறார். ஜெ.மு.

துணை நூல்கள்:

**Blackham, H.J.**, Six Existentialist Thinkers. Roultledge & Kegan Paul, London, 1978.

**Walter Kanfonann.**, Existentialism from Dostoyevstky to Sartre, Mevidian Books, New York, 1956.

**Fuller, B.A.G. and Mc Murrin Sterling M.**, A History of Philosophy (3rd ed.,), Oxford I&BH Publishing Co., Calcutta, 1969.

**Passmore**, J., A Hundred Years of Philosophy, Gerelad Duck worth & Co., Ltd, London, 1957.

**இருத்தல் கொள்கையும் கல்வியும்**: இருத்தல் கொள்கை என்பது 'மனிதனின் நிலையை அதன் முழுமையில் நேருக்குநேர் சந்தித்து, மனிதனுடைய இருத்தலின் அடிப்படைத் தன்மைகள் யாவை? அவன் அதனை எவ்வாறு அத் தன்மைகளிலிருந்து தானாகப் பொருள் கொள்ள முடிகிறது? என்று கேட்கும் ஒரு மெய்ம்மையியல் ஆகும்' என்று வில்லியம் பிரட்டு (William Breet – 1969) கூறுகிறார். 'இருத்தல் சாரத்திற்கு முந்தியது' (Existence is prior to Essence) என்பதே இச் சிந்தனையின் மையக் கொள்கையாகும். மனிதன் முதலில் இருக்கிறான்; பின்பு அவன் சுதந்திரமாக இருப்பதால், தனது சாரத்தை அவனே படைக்கிறான் என்னும் கருத்தை இச்சிந்தனை வலியுறுத்துகிறது. தனிமனிதனின் சிறப்பு, இக்கொள்கையில் பெரிதும் பேசப்படுகிறது. மேக்சு விங்கோ (Max Wingo) கூறுவது போல இருத்தல்கொள்கை, தனி மனிதனின் சிறப்பிடம் குறைக்கப்படுதற்குக் காரணமான மக்கள் சமுதாயம் (Mass Society), மக்கள் சமயம் (Mass Religion), மக்கள் கல்வி (Mass Education), மக்கள் தொடர்பு (Mass Communication) ஆகியவற்றை எதிர்த்தெழும் ஒரு சிந்தனையாகும். இச் சிந்தனையில் சமுதாயத்தைக் காட்டிலும் தனி மனிதனின் சிறப்பு மிகவும் உயர்வுபடுத்தப்படுகிறது. இந்த மெய்ம்மையியல், மனிதனுக்கு, மனித உணர்வுகளுக்கு, மனித வாழ்விற்குச் சொந்தமானது. இவ்வகையில் இக் கொள்கை அறிவு சார்ந்தது என்பதை விட மிக்க நடைமுறை அல்லது வாழ்வு சார்ந்தது என்பதே பொருந்தும்.

இருத்தல் கொள்கையாளர்களுள் குறிப்பிடத் தகுந்தோர், கீர்க்கிகார்டு (Kierkegaard), மார்சல் (Marcel), சாசுபர்சு (Jaspers) போன்ற இறை ஏற்பாளர்களும் (Theists) சார்த்துரே (Sartre) நீட்சே (Nietzche), எய்டகர் (Heidegger) போன்ற இறை எதிர்ப்பாளர்களும் (Atheists) ஆவர். இவர்களுள் கீர்க்கிகார்டு(1817-1855) என்ற தென்மார்க்குச் (Denmark) சிந்தனையாளர்தாம் இக்கொள்கையின் தந்தையாகக் கருதப்படுபவர்.சார்த்துரே(1905-1980) என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளர் இருபதாம் நூற்றாண்டு இருத்தல் கொள்கை மறுமலர்ச்சியின் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார்.

இக் கொள்கையாளர்கள் கல்வியின் சிக்கல்களை முறைப்படி அணுகவில்லை என்பதும் இருத்தல் கொள்கையானது நிறுவனப்படுத்தப்பட்ட கல்வி முறையை எதிர்க்கிறது என்பதும் ஏற்கப்பட்ட உண்மைகள். இருப்பினும் விரிந்த நோக்கில் அணுகும் போது மனிதனின் இருத்தல் நிலை, அதன் தன்மை, பொருள் ஆகியவை கல்வியின் சிக்கல்களாக அமைகின்றன. இச் சிக்கல்களைப்' பற்றி இருத்தல் கொள்கையாளர்களும் மிகுந்த ஆர்வம் செலுத்தியுள்ளனர். இந்த முறையில் கல்வியுடனான இருத்தல் கொள்கையின் தொடர்பை ஒருவரும் மறுக்க இயலாது. ஆனால், இக்கொள்கை, கல்வியின் சில்கல்

களுக்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட தீர்வுகளைத் தருவதில்லை.

இருத்தல் கொள்கைச் சிந்தனை, சமுதாயத்தில் இருக்கும் வாழ்க்கை முறை, கல்வி ஆகியவற்றை எதிர்த்துப் போராட்டம் செய்வதாக அமைகிறது. இக் கொள்கை வரைமுறைப்படுத்தப்பட்ட எந்தப் பயிற்சியையும் எதிர்க்கிறது. இப்போக்கில் இருத்தல் கொள்கை, முறை சாராக்கல்வி (Non-formal), முறை யில்லாக்(In-formal) கல்வி ஆகியவற்றை வரவேற்கும் இக்காலச் சிந்தனைக்கு உகந்ததாக அமைகிறது. இருத்தல் கொள்கையின்படி சுதந்திரத் தனிமனிதன் தன்வளர்ச்சியை இலக்காகக் கொள்வதன் மூலம் மட்டும்தான், பள்ளியின் இருத்தலைத் தேவை என்று காட்ட இயலும். இதன் பொருள்: அ) கூட்டத்தைப் தொடர்வதிலிருந்து தனிமனிதனை விடுவிப்பது ஆ) மனிதனை இவ்வுலகில் தனிமை, பாதுகாப்பற்ற தன்மை ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்குச் சுதந்திரமாக்குவது, இ) தன் சுதந்தரத்தை விருப்பப் படி பயன்படுத்துவதும், அதன் விளைவுகளை ஏற்ப தும் பற்றி, அவனைச் சுதந்திரமாக உணர வைப்பது, ஈ) எல்லாச் செயல்களுக்கும் மனிதன்தான் அடிப் படை என்ற சுதந்திர உணர்வு கொள்ள வைப்பது என்பனவாம்.

நெல்லரின் (Kneller) கருத்துப்படி, பள்ளி யின் சிறப்பான குறிக்கோள், ஒழுக்கம், சுதந்திரம் ஆகியவற்றை இருத்தல் கொள்கை வளர்க்கிறது. பள்ளியின் நோக்கம், இளம் குடிமக்களிடம் தற்சார்பை யும் தன்மானத்தையும் கூட்டுவது என்பார் கீர்க் கார்டு. இருத்தல் கொள்கைக் கல்வித்திட்டம் மனித உணர்வுகளுக்கான கல்வியாகும். பொதுவாக இச் சிந்தனையாளர்கள் கல்வித்திட்டத்தில் அறிவியலைக் காட்டிலும் வாழ்வியலுக்கு முதலிடம் தருகிறார்கள். மனிதனின் உள்ளுறையும் குற்றம், பாவம், துன்பம், வருத்தம், இறப்பு, வெறுப்பு, காதல் முதலான வற்றை வெளிப்படுத்துவதில் வாழ்வியல் சிறந்து விளங்குகிறது.எனவே சார்த்துரே,எய்டகர் போன்றோ ரின் கருத்துப்படி மனிதனின் இருத்தல் நிலை, அவனு டைய எல்லாப் பரிதாப குணங்கள் மூலமாகவும் மிகத் தெளிவாக வாழ்வியலில்தான் விளக்கப்படுகிறது. இயற்கை மற்றும் மனிதனுடனான தொடர்பு முறை யில், அறிவியலை உணர்வற்ற, தனித்த, பொருள் சார்ந்தததாகவும், நுண்ணறிவு சார்ந்த முயற்சியில் இதனை வெறும் புரியாச் சிந்தனையாகவும் காண் பதே இருத்தல் கொள்கையாளரின் அறிவியல் எதிர்ப் பாக அமைவதாக விங்கோ (Wingo) என்பவர் கூறு கிறார்.

இன்று, கணிப்பான் பொறிகள் பெருகிவிட்ட உலகில், மனிதன் உணர்வு குன்றிய நிலையில் வாழ் கிறான். ஆகவே, இக்கால மனிதனுக்கு மனித உணர் வுகளைக் கற்பிக்கும் இருத்தல் கொள்கைக் கல்வி யணுகுமுறை மிகவும் பொருத்தமுடையதாக அமை கிறது. கீர்க்கார்டு குறிப்பிடுவது போல, மனிதன் புறப்பொருள் தன்மை(Objectivity) என்ற மாயையில் இருக்கிறான். தன்னிலைத் தன்மை (Subjectivity) என்ற நிலையை அவனுக்கு மீட்டுத் தருவதே கல்வியின் பணியாகும். கல்வித் திட்டம் மனிதனின் அக நிலையை (Inwardness) வெளிக் கொணர்வதாய் இருக்க வேண்டும். இருத்தற் கொள்கைக் கல்வித் திட்டத்தின்படி, உண்மையான அறிவு என்பது, தன் னிலை (Subjective) சார்ந்ததாகும். தனி மாணவர் கற்பித்தல் (Individualised instruction) என்ற கற் பித்தலணுகு முறை இருத்தல் கொள்கைக்கு ஏற் புடையதாகிறது. இருத்தல் கொள்கையில், மாண வர்கள் இவ்வுலகில் தங்களின் சொந்தத் தெரிவு களைச் செய்யத் தனித்துச் சுதந்திரமாக விடப்பட் ருக்கின்றனர். ஆகவே, இப்படிப் பட்ட தனிமனிதனின் தெரிவு செய்யும் சக்தியை வளர்ப்பதே இருத்தற் கொள்கைபேசும் ஆசிரியர்களின் பணியாகும். இதனை அடைவதற்குச் 'சாக்ரடீசுமுறை'க் (Socratic method) கற்பித்தல் விரும்பப்படுகிறது. இதன்படி கற்றல், கற்பித்தல் முறையில் ஆசிரியர், மாணவரிடையே யான உரையாடல் முறை (Dialogue method) வலி யுறுத்தப்படுகிறது. கருத்துத் திணிப்பு (Indoctrin-ation) என்பது இருத்தல் கொள்கைக்கு எதிரானது. இச்சிந்தனைப்படி ஆசிரியர்கள் தங்கள் மாணவர் களுக்கு எதனையும் ஊட்டுதல் முடியாது. ஆனால் ஆசிரியர்கள், மாணவர்கள் அவர்களாகவே கற்பதற்கு அடித்தளம் அமைக்கின்றனர். இன்றைய கல்வி அறிஞர்கள், இம்முறையைப் பரிந்துரைக்கின்றனர். இருத்தல் கொள்கைப்படி, ஆசிரியர் மாணவனுக்குப் பலசிக்கலான நிலைகளை வெளிக்காட்டி, அவற்றிக்கு அவனாகவே தீர்வு காணுமாறு விடுதல் வேண்டும். ஆசிரியர் தம்மால் முடிந்தவரை வகுப்பறைச் செய் கைகளைக் கற்பவரின் சொந்த அனுபவமாகச் செய்ய விடுதல் வேண்டும். ஆசிரியர்-மாணவர் உறவு 'நான்-நீர்'' (I-thou) என்ற முறையில், நெருக்க மானதாகவும் ஈடுபாடுள்ளதாயும் அமைய வேண்டும்.

இக்கல்வி முறையில் ஆசிரியர், மாணவர்களின் இருத்தற் காரணம் பற்றிப் புரிந்து கொள்ளும்படி செய்வதற்குத்தளம் அமைக்கவே முடியும். ஆனால், உண்மையில் மாணவர்கள் தாங்களாகவே இதனைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இதைத்தான் கீர்க் கார்டு, மனிதன் தானாகவே தனது இருத்தலைப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். மாணவன் தானாகக் கற்றுக் கொள்ளும்போது மட்டுமே, அவன் தான் ஒன்றைச் சாதித்த உணர்வு கொள்ள முடியும்.

இருத்தற் கொள்கையின்படி மாணவர் தீய நம்பிக்கை நிலையில் இருக்கக் கூடாது. சார்த்துரே விளக்கப்படி தீய நம்பிக்கை என்பது ஒருவன், தான் கட்டாயத் தேவைகளினால் கட்டுண்டிருப்பதாகவும், தனக்குத் தெரிவு செய்ய வழியே யில்லை என்ப தாகவும் பாசாங்கு செய்வதில் அடங்கியிருக்கிறது.

மாணவன் தான் எதுவாக இல்லையோ, அது வாக இருக்கக் கூடாது. அவன் தன்னை முதலில் அறிந்து தன் இருத்தல், கூட்டத்தில் தன் தனி நிலைமை, சுதந்தரம், பொறுப்புகள் போன்ற மற்ற வற்றையும் அறிதல் வேண்டும். இக்கொள்கைப்படி மாணவர் தம் சமுதாயம், பெற்றோர் வேறேதாவது காரணிகள் ஆகியவற்றை விரும்புவதால் தங்கள் செய்கைகளைத் தெரிவு செய்யக் கூடாது. மாறாகத் தங்களது விருப்பப்படி தெரிவு செய்யும் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு. இச்சூழலில் இதனைப்பற்றிப் பிருபேக்கர் (Brubacher - 1962) கருத்துத் தெரிவிக் கும் போது, இப்படியாக இளைய தலைமுறையின் சில அமைதியற்ற ஆற்றல்கள், குறிப்பாகக் கல்லூரி களில், தங்களின் முரட்டுத்தனமான நடவடிக்கை களை இருத்தற் கொள்கையின்படி நேர்மைப்படுத் திக் காட்டுகின்றன என்கிறார். ஆனால், எதையும் செய்வதற்கான இவ்வகைச் சுதந்திரம், கட்டுப்பாடும் பொறுப்பும் கொண்டதாக அமைகிறது.

இருத்தல் கொள்கையாளர் சுதந்திரத்தைப் பற்றி வேறு முறையில் விளக்கந் தருகின்றனர். சார்த்துரேமனிதன் தானாகவே தன்னைச் செய்து கொள்கிறான் என்றும், அவன் சுதந்திரமாக இருப்ப தற்கு விடப்பட்டிருக்கிறான் என்றும் குறிப்பிடுகிறார். அதாவது, மனிதன் சுதந்திரத்தையும் அதே காலத்தில் அதனைப் பயன்படுத்துவதில் பொறுப்புணர்வையும் கொண்டுள்ளான். மனிதன் சுதந்திரக் கனியைத் தனது கருத்தின்படி, கசப்பானாலும் இனிப்பானா லும் தானே தன்னந்தனியாகச் சுவைக்க வேண்டும். இருத்தல் கொள்கைச் சுதந்திரம், கட்டுப் படுத்தப்பட்டதாய் அமைகிறது. இச் சிந்தனைப் படி புற ஆற்றல் எதுவும் மனிதன் மீது கட்டுப் பாட்டைத் திணிக்க முடியாது. மனிதன் தன் உள்ளி ருந்தே கட்டுப்படுத்தப்படுகிறான். தனது தெரிவுச் சுதந்திரத்தின் அடிப்படையிலான தன் செய்கை விளைவுகளின் எண்ணமே, அவனது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது. இருத்தல் கொள்கையின் படி மாணவரின் சுதந்திரம், பொறுப்புள்ள சுதந்திர மாயிருக்கிறது. தங்களின் பாடங்கள் செயல்திட்டங் கள் ஆகியவற்றைத் தெரிவு செய்வதிலும் மாணவர் களுக்குச் சுதந்திரம் தரப்பட வேண்டும். மேலும் மாணவர்களின் படைப்பாற்றல் வெளிப்பாடுகளுக்கு எல்லையற்ற சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஒரு மாணவனின் இத்தகைய சுதந்திரம் அடுத்த மாணவரின் சுதந்திரத்தைக் கெடுத்தல் கூடாது. கற்பித்தல் முறையில் கல்வியாளர்கள் தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டால் மட்டுமே பள்ளியில் சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் பேணிக் காக்க முடியும். பா. சோ. ச.

துணை நூல்கள்:

**Erubacher S. John**, Modern Philosophies of Education Tata - Macra - Hill Publishing Co., Pvt. Ltd, Bombay, 1962.

**Gurber C. Fredrick**, Historical and Contemporary Philosophies of Education, Thomas Y. Crowell Company, N. C. New York, 1973.

**Kneller F. George**, Existentiliasm and Education, John Wileys Sons, N.C. New York, 1958.

**Wingo Max. G.**, Philosophies of Education-An Introduction, D. C. Heath and Company, London, 1974.

**இருத்தல்நிலை உளவழி மருத்துவம்** என்பது உளக்கோளாறுகளுக்கு உளவழி முறையில் அளிக்கப்படும் மருத்துவத்தைக் குறிக்கும். இருத்தல் நிலைக் கொள்கையினர் மனிதனின் உயிர் வாழ்க் கைக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளனர். மரபுவழி வந்த பழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியன மறைந்து போவதற்குக் காரணமாக இருக்கும் சமுதாய மாற் றங்களை அவர்கள் விரும்புவதில்லை. மனித வாழ்க்கை எந்திரமாக மாறிவிட்டது. மனிதனின் தனித் தன்மைக்குச் சமூகத்தில் இடம் இல்லை. மனிதன் தன்னுடைய சமூகத்திலேயே தன்னை ஓர் அயலான் போன்று உணர்கிறான். மற்ற உயிரினங்கள் போலன்றி, மனிதன் மட்டுமே தன்னுடைய உயிர் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றுள் ளான். நாம் ஏன், எங்கு, எதற்காக உயிர் வாழ்கி றோம் என்பதை மனிதன் மட்டுமே எண்ணிப் பார்க்க முடியும்.

தனிமனிதனுக்குத் தன் வாழ்க்கையின் பயன், மதிப்புகளை உணர்ந்து, தன் வாழ்க்கைப் பாணியைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் வேண்டும். தன் உள்ளார்ந்த திறமைகளை முழுமையாகப் பயன் படுத்தித் தன்னிறைவு அடைவதற்கு வாய்ப்புகள் வேண்டும். இத்தகைய வாய்ப்புகளை நன்கு பயன் படுத்திக் கொள்ளாதவர்களும், சுதந்திர உணர்வு இல்லாதவர்களும், மிகையான சார்பு நிலைவயப்

பட்ட வாழ்க்கை நடத்துபவர்களும் உளக்கோளாறுகளுக்கு ஆளாகின்றனர். இருத்தல் நிலை உளமருத்துவர்கள் இத்தகைய உளநோயாளிகளிடம் வாழ்க்கையின் உட்கருத்து, பயன்மதிப்புப் பொருள் ஆகியவை குறித்து எடுத்துரைக்கின்றனர். நோயாளிகள் தாமே தம்முடைய அனுபவங்களையும், எண்ணங்களையும் தம் நிலையில் இருந்து உணர்ந்து கொள்ளுமாறு தூண்டப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு நோயாளி இருத்தல் நிலை உளமருத்துவரிடம், 'என் தந்தையிடம் நான் வெறுப்புக் கொண்டதைப் போல உன்னிடமும் வெறுப்புக் கொள்கிறேன்' என்று கூறினால், மருத்துவர், 'நான் உன் தந்தையல்லன், நான் உளமருத்துவர்; என்மீது நீ வெறுப்புக் கொள்வதற்கு எவ்வகைக் காரணமும் இல்லை' என்று நோயாளியிடம் உடனடியாகக் கூறுகின்றார். இதன் மூலம் அவர் நோயாளிக்கு மெய்ந்நிலை உணர்வு ஏற்படுமாறு செய்கிறார். இதுவே இருத்தல் நிலை உளவழி மருத்துவத்தின் (Existential Therapy) அடிப்படை அணுகு முறையாகும்.

சந்திரா என்னும் 22 வயதுப் பெண் 'நாட்பட்ட உளச்சிதைவு நோய்' (Chronic Schizophrenia) என்ற குறிப்புடன் ஓர் உளவழி மருத்துவரிடம் அனுப்பப்பட்டாள். உளவழி மருத்துவர் ஒரு பெண். சந்திரா மூன்று முறை மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு, அப்போதைக்கப்போது 'குணமாகி விட்டாள்' என்று வீட்டிற்கு அனுப்பப்பட்டவள். இம்முறை உளவழி மருத்துவரிடம் வந்தாள்.

சந்திரா பெண்களுடன் நல்ல உளத்தொடர்பு கொள்ளமுடியாதவள். ஆண்களுடன் நெருக்கமும் பாலுறவு சார்ந்த பழக்கமும் கொண்டவள். எதிர்காலத்தைப் பற்றிய அச்சமும், தன் மீது நம்பிக்கையின்மையும் கொண்டவள். உரத்தகுரலில் பேசி யாரேனும் மறுத்துப்பேசினால், அவர்களைச் சொற்களால் வசைமாரி பொழிந்து துன்புறுத்துவாள். எப்பொழுதும் கற்பனை உலகில் வாழ்ந்து வருபவள். முதல் முறையாக அவளுக்குப் பல பொறுப்புகள் தரப்பட்டன. இதனால், அவள் தன்னைவிடப் பெரியவர்களிடமும், தன்னைவிட வயதில்சிறியவர்களிடமும் பழகுவதற்குத் தெரிந்து கொண்டாள். அவளுடைய வாழ்க்கைக்குத் தகுந்த பயன்மதிப்புகள் பற்றி மருத்துவர் அவளிடம் உரையாடினர். அவள் 2 மாதங்களில் குணமாகி வீடு திரும்பினாள். இது இருத்தல் நிலை உளவழி மருத்துவத்தின் சிறப்பிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். என். மா.

துணை நூல்:

**Kolb & Brodie,** Modern Clinical Psychiatry, W.B. Saunders Co., London, 1982.

**இருத்தல் நிலை உளவியல்**: மனிதர்களுக்குத் தனித்தன்மை உண்டு; அவர்கள் வாழ்க்கையின் பயன்மதிப்புகளையும் அவற்றின் பொருளையும் அறிவதற்கு விரும்புகின்றனர்; தன்னிறைவையும் சுதந்திரத்தையும் நாடுகின்றனர் என்பன இதன் அடிப்படைக் கொள்கைகள் ஆகும். இக்கொள்கைகள் மனித இனநல உளவியலை (Humanistic Psychology) ஒத்திருக்கின்றன. சமூக, அறிவியல், அரசியல், அதிகார வளர்ச்சிகளினால் மனிதனின் தனித்தன்மை பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றது என்று இருத்தல்நிலை உளவியலார் கருதுகின்றனர்.

அ. வாழ்க்கையும் அதன் உட்பொருளும்: மனிதத் தன்மையை இழக்கச் செய்யும் திறன்களாகச் சமூகக் கட்டுப்பாடுகளும் அறிவியல் வளர்ச்சியும் அமைந்துவிடக் கூடும் என்பதே இருத்தல் நிலை உளவியலின் (Existential Psychology) மையக் கருத்தாகும். மனிதனின் அக அனுபவங்களின் அடிப்படையில் எழும் சிக்கல்களைத் தீர்வு செய்வதற்கு அறிவியல் வளர்ச்சி பயன்படாது என்றும் இருத்தல் நிலையினர் கருதுகின்றனர். பொருளமைந்த வாழ்க்கையினை வாழ்தலே மனிதனின் குறிக்கோளாகும். இத்தகைய வாழ்க்கையில் அவன் சமூகத்திற்குப் பயன்படும் செயல்களைச் செய்தல் வேண்டும்.

இருத்தல்நிலை உளவியலாரின் அடிப்படைக்கருத்துகள், எய்டகர்(Heidegger), சாசுபர்சு(Jaspers), கீர்க்கெகார்டு (Kierkegaard), சாத்தர் (Satre) போன்ற ஐரோப்பியத் தத்துவ அறிஞர்களின் கருத்துகளினின்றும், பால்தில்லிக்கு (Paul Tillich) போன்ற சமயச் சிந்தனையாளரின் கருத்துகளினின்றும் தோன்றியவை ஆகும். இலாங்கு (Laing R.D.), மே (May, Rollo) ஆகியோர் இருத்தல் உளவியலார்களுள் சிலர்.

உலகில் நாம் தோன்றுவது நம் விருப்பப்படி நிகழ்வதன்று. நம் பிறப்பில் நமக்கு அதிகாரம் இல்லை. நம் பிறப்பை நாமே கட்டுப்படுத்த முடியாது. ஆனால், பிறந்தபின் நம் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்கிறோம் என்பதில் நமக்குப் பெரும் பங்கு உண்டு என்பது இருத்தல் நிலை உளவியலின் அடிப்படைக் கருத்துகளுள் ஒன்று ஆகும். எடுத்துக்காட்டாக, இன்றைய இளந்தலைமுறையினருள் ஒருவன் தலைமுறை இடைவெளி காரணமாகத் தம் பெற்றோருடனோ வேறு பெரியவர்களுடனோ கருத்துவேறுபாடு கொள்ள, அதன் காரணமாக எதிர்ப்பு மனப்பான்மை அவனிடம் தோன்றினால், அவன் நீவிர் என்னைப்பற்றிக் கூறும் குற்றச்சாட்டுகள் எல்லாம் நன்றே. ஆனால், நான் பிறக்க வேண்டும் என்று விரும்பவில்லையே என்று சலித்

துக் கொள்வதைக் கேட்கிறோம். இருத்தல் நிலை உளவியலார் இத்தகைய சொல்லாடலின் உட்கருத்தை எதிர்க்கின்றனர். இளையோன் விரும்பியிருந்தாலும் விரும்பியிராவிட்டாலும் அவன் இவ்வுலகில் இப்பொழுது இருப்பது உண்மை. தன்னுடைய இருத்தலைப் (Existence) பயனுடையதாக்குவது அவன் பொறுப்பாகும். எவ்வகையான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது அவனைப்பொறுத்தே இருக்கிறது. அது பொருளற்ற, அழிவு நோக்கமைந்த வாழ்க்கையா? பொருள் பொதிந்த ஆக்கவழியமைந்த வாழ்க்கையா? என்பது அவன் கையில் இருக்கிறது.

இக்காலத்தில் சமூக மாற்றங்களின் காரணமாக மரபு வழியமைந்த பயன் மதிப்புகளும் நம்பிக்கைகளும் எதிர்க்கப்படுகின்றன. இத்தகைய சமூகத்தில் தனி மனிதன் தன் வாழ்க்கையைப் பொருளமைந்ததாக அமைப்பது எளிதன்று. இன்றைய சமூகத்தில் மனிதர்கள் தம் வாழ்க்கையின் பயன்மதிப்புகளை உணர்வதிலும் தம் வாழ்க்கையைப் பொருளமைந்ததாக அமைத்துக் கொள்வதிலும் பல உளச்சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் பல மனவெழுச்சிப் போராட்டங்களையும் உளமுரண்பாடுகளையும் ஆன்மிக அழுத்தங்களையும் அனுபவிக்க நேரிடுகின்றது. இந்தப் போராட்டங்களுக்கு நாம் இரு அணுகுமுறைகளில் தீர்வு காணலாம். ஒன்று, தன்னிறைவு தேடி அவற்றை விட்டொழித்துச் சமூகத்தில் பெரும்பான்மையினருடன் கண்மூடித்தனமாக இணைந்து, நம்மைச் சூழ்ந்த குழுவினருடன் நாம் ஒன்றிவாழ்தல். மற்றது, நம் வாழ்க்கையின் உட்பொருளை நாமே மறுமுறை திறனாய்வு செய்து, புதிய வரையறைகளைக் கண்டுபிடித்தல். இவ்விரண்டு அணுகுமுறைகளுள் பதற்ற நிலை மனக்குலைவு போன்ற கோளாறுகளுக்குக் காரணமாக அமையலாம் என்று கருதப்படுறது.

ஆ. **தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு, சுதந்திரம், வீரம்:** நம் வாழ்க்கையின் பயன்மதிப்புகள் நம் வாழ்க்கை முறையின் மீது பெரும் செல்வாக்குக் கண்டுள்ளன. ஆதலின், நம் பயன்மதிப்புகள் நம் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆதலின், நம் வாழ்க்கைக்கு நாமே காரணம் என்று கூறிவிடலாம்.சார்த்துரேஇதனை, ‘என் தேர்ந்தெடுப்புகளே நான்’ என்று விளக்குகிறார். எத்தகைய மனிதனாக இருக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதில் நாம் முழுச்சுதந்திரம் உள்ளவர்களாக இருக்கிறோம். நம் வாழ்க்கைக்கு நாமே சிற்பிகள் ஆகின்றோம். இதனை மாரிசு (Morris) என்னும் உளவியல் அறிஞர் பின்வருமாறு விளக்குகிறார்.

1. நான் தேர்ந்தெடுப்பவனாகவே இருக்கிறேன். தேர்ந்தெடுப்பதை என் வாழ்க்கை முழுவதும் நான் தவிர்க்க முடியாதவனாக இருக்கிறேன்.

2. என் வாழ்க்கையின் இலககுகளை அமைத்துக் கொள்வதில் எனக்கு முழுச் சுதந்திரம் இருப்பதால், நான் கட்டுப்பாடற்றவனாக இருக்கிறேன். என் தேர்ந்தெடுப்புகள் என் வாழ்க்கையை நான் எவ்வாறு வாழ்கிறேன் என்பதைத் தெரிவிக்கின்றன.

3. என் தேர்ந்தெடுப்புகளுக்கு நானே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலின், நான் ஒரு பொறுப்புடைய்வனாக இருக்கிறேன்.

தேர்ந்தெடுக்கும பொறுப்புகளும் அவற்றையொட்டிய சிக்கல்களும் வாழ்க்கையில் பல நேரங்களில் சுமையாகிவிடுகின்றன. சிக்கலான சூழ்நிலைகளில் நிறைவு தரும் பயன்மதிப்பு எது என்று கண்டுபிடிப்பது கடினமான செயலாகும். இதற்கு மிகுந்த மனவலிமையும் தளராமையும் தேவைப்படும். இக்காரணங்களினால் நம் வாழ்க்கையை நாமே தேர்ந்தெடுப்பதற்கும், அமைத்துக்கொள்வதற்கும் நமக்கு இருக்கும் சுதந்திரம் ஒரே நேரத்தில் நம்முடைய இன்னலாகவும் மாண்பாகவும் அமைந்துவிடுகிறது. சிலர் இத்தகைய சுதந்திரத்தை விரும்புவதில்லை. தன்னிறைவு அடைவதற்காகத் தாமே சுதந்திரமாக இயங்காமல், சமூகக் குழு அல்லது சமய அமைபபுபோன்ற ஏதேனும் ஒன்று தமக்கு அறிவுரை கூறி வழிகாட்டவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இத்தகைய சார்புநிலை காரணமாக இவர்கள் தம் வாழ்க்கையில் தன்னிறைவும் சுதந்திரமும் இழந்துவிட்டதை உணர்ந்து கொண்டால் அதற்காக எவரையும் பொறுப்பாக்கிவிட முடியாது. ஏனென்றால், தன்னுடைய சுதந்திரத்திலிருந்து தானே விடுதலை பெறுவதும், தன்னுடைய பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதும் வாழ்க்கையின் மீது நம்பிக்கையின்மையைக் குறிப்பனவாகும்.

இ. பொருள், பயன்மதிப்புகள், கடப்பாடுகள்: தம் வாழ்க்கைககு நிறைவு தரும் பயன்மதிப்புகளை உணர்ந்து, அவற்றின்வழித் தம் வாழ்க்கையைச் செலுத்துதலைப் பொருளறி விழைவு (Will-to-meaning) என்று இருத்தல் நிலை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதுவும் கடினமான செயலாகும். ஏனெனில், பொருள் பொதிந்தனவாக ஒருவரால் கருதப்படும் பயன்மதிப்புகள் வேறொருவருக்குப் பொருளற்றனவாக இருக்கக்கூடும். ஆதலின், ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக்கு உரிய பயன்மதிப்புகளையும், அவற்றுடன் தொடர்பு கொண்ட

வாழ்க்கை முறைகளையும் தெளிந்துணர்தல் வேண்டும். இருத்தல்நிலை உளவியலின் இத்தகைய கருத்து, சமூக அறநெறிக் கோட்பாடுகளை எதிர்ப்பதாகத் தோன்றலாம். மனிதர்களின் பயன்மதிப்புகளிடையே பெரும் வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய நிலை சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருக்கும். இயல்பு நிலை வாழ்க்கையைப் பயனுடைய முறையில் வாழ்பவர்களின் பயன்மதிப்புகளிடையே பெரும் வேறுபாடுகள் இருக்காட்டா என்பதே இருத்தல்நிலை உளவியலின் முடிவு. இருத்தல் நிலைக் கொள்கை கடப்பாடுகளுக்குச் சிறப்பிடம் தருகிறது. வாழ்க்கையிலிருந்து நாம் எதை அடைய முடியும் என்பது நம் தலையாய குறிக்கோள் அன்று. நாம் வாழ்க்கைக்கு எதனைக் கொடுக்க முடியும் என்பதே நம் குறிக்கோளாகும். சமூகத்திற்குப் பயனுடைய குறிக்கோள்களும் தேர்ந்தெடுப்புகளும் நம் வாழ்க்கையில் அமைந்திருந்தால்தான் நாம் தன்னிறைவு அடைய முடியும்.

ஈ) இருத்தல் நிலைவழிப் பதற்றமும் ஒன்றுமிலாமையை எதிர்நோக்குதலும்: இலாமை என்பது இருத்தல் நிலைஉளவியலின் கருத்துகளுள் ஒன்றாகும். இலாமையின் இறுதி வடிவம் இறப்பு ஆகும். மனிதர்கள் பட்டறிமை மரணத்தின் முழுமையான உணர்வுடன் வாழ்கின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் நாம் சாவு என்னும் இறுதிக்கட்டத்தின் அல்லது அழிவின்ஓரமாகவே சென்றுகொண்டிருக்கிறோம். இந்த உணர்வே இருத்தல் என்னும் நிலையின் முழுப்பொருளையும் நமக்கு உணர்த்துகிறது. இவ்வுணர்வு நம் வாழ்க்கைக்குப் புதிய பரிமாணத்தையும் கொடுக்கிறது. சாவு, இலாமை, அழிவு ஆகிய நிலைமைகள் பற்றிய உணர்வே 'இருத்தல்' நிலைப் பதற்றத்திற்குக் காரணமாகிறது. இருத்தல் நிலைப் பதற்றம் (Existential Anxiety) என்பது நாம் தன்னிறைவடைந்த, பொருளமைந்த வாழ்க்கையினை வாழ்கிறோமா என்ற கவலையைமிகுதியாகஏற்படுத்தும் உள நிலையாகும். வாழ்வதற்கு நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாய்ப்பினை வீணாக்கி விடாமல், அழிவுக்கு வெற்றி கிட்டாதவாறு பொருளுடைத்தாகிய வாழ்க்கையை வாழ்வதே. இத்தகைய பதற்றத்தை அகற்றும் வழியாகும்.

நரம்புவழிஉள நோயாளிகளுக்கு (Neurotics) இருத்தல் நிலை உளவழி மருத்துவம் செய்வோரும் இத்தகைய உணர்வினை நோயாளிகளின் உள்ளத்தில் தோற்றுவிக்கின்றனர். இத்தகைய அணுகுமுறையில் செய்யப்படும் உளவழி மருத்துவம் இருத்தல் நிலை உளவழிமருத்துவம் (Existential Therapy) என்று குறிப்பிடப்படுகிறது.

கே.வி.கா.

துணை நூல்:

**Buckley.W.**, Modern Systems Research for the Behavioural Scientist, Aldine, Chicago, 1968.

**இருதயநாத் குன்சுரு (கி.பி.1887-1959)** என்பார் தலைசிறந்த தேசபக்தர்; சமூகத்தொண்டர்: அரசியல் வல்லுநர். இவர் கி.பி.1887-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இந்திய ஊழியர் சங்கத்தின் (Servants of India Society) ஆயுள் உறுப்பினராக இருந்தார். மாநிலப் புனரமைப்புக் குழுவின் உறுப்பினராக இவர் 1956-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார். பல்வேறு கல்வி, சமூக அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றிய இவர், பல்லாண்டுகள் இந்திய நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்து அருந்தொண்டாற்றினார். அரசியல் கருத்துகளில் தமக்கென்று தனித்தன்மை கொண்டவர். இவர் 1959 ஆம் ஆண்டில் காலமானார்.

**இருதலைக் கொள்ளி வாதம்:** வழக்காடுவதில் இருதலைக் கொள்ளி வாதம் (Dilemma) என்பது ஒருமுறை. காண்கிற வழிகள் இரண்டுமே கேடு விளைவிப்பின், 'இருதலைக் கொள்ளியின் இடைப்பட்டது போல' என்று பொதுவாகக் கூறுவர். அவை நூல்களில் துணிபொருளுரையின் (Major Premise) எந்த வழியிலும் கேடு விளைக்கும் கருத்துகளிருப்பின், அத்துணிபொருளுரை இருதலைக் கொள்ளி வாதம் எனப்படும். இவ்வாதம் சொற்போரில் வெற்றி குறித்து நிகழ்வதாகும்.

இது தனியானது அல்லது சிக்கலில்லாதது (Simple) என்றும், பலபகுதிகளடங்கியது அல்லது சிக்கலானது (Complex) என்றும் இரு வகைப்படும்.

தனியான துணிபொருளுரைக்கண் வரும் காரணங்கள் இரண்டுமோ அல்லது காரியங்கள் இரண்டுமோ ஒன்றாயிருக்கும். பல பகுதிகள் அடங்கியதில் காரணங்களும் காரியங்களும் வெவ்வேறாக இருக்கும். தனியான தன்மையின் வாயிலாகத் துணியப்படும் சித்தாந்தம் நிரபேட்சை எனப்படும். பல பகுதிகளின் வாயிலாக அறியப்படும் சித்தாந்தம் விகற்பம் எனப்படும்.

துணிபொருளுரையால் கூறப்பட்ட பக்கப் பொருளுரையும் (Minor Premise) சித்தாந்தமும் உண்மை எனத் துணியுமாயின் அது ஆக்கமுறை (Constructive) எனப்படும். பக்கப் பொருள் காரியங்களை மறுக்க, சித்தாந்தம் காரணங்களை மறுக்குமாயின் அது அழிவுமுறை (Destructive) எனப்படும்.

சிக்கல் இல்லாத இருதலைக் கொள்ளி நிலையும், சிக்கலுள்ள இருதலைக் கொள்ளி நிலையும் ஆக்க முறை, அழிவு முறை என்னும் இரண்டோடும் உறழ்ந்தால், இருதலைக் கொள்ளி வாதம் நான்கு வகையாக அமையும்.

**சிக்கல் இல்லாத ஆக்க முறை:** ஒரு மனிதன் தன் தீர்ப்பின்படி நடந்தாலும் பிறர் கருத்துப்படி நடந்தாலும் குற்றம் சுமத்தப்படுவான். எப்படி நடந்தாலும் அவன் குற்றம் சுமத்தப்படுவான்.

**சிக்கல் இல்லாத அழிவு முறை:** நான் என்னுடைய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமாயின் என்னுடைய மாணவர்களை உடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆசிரியன் ஒருவன் தன்னுடைய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமாயின், புத்தகம் எழுத வேண்டும். அவன் மாணவர்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கவும் வேண்டும். அவ்வாறாயின் புத்தகம் எழுதமுடியாது. எனவே அவன்தன் திட்டத்தைச் செயற்படுத்த முடியாது.

**சிக்கலில் ஆக்க முறை:** புத்தகங்கள் திருக்குறளுடன் பொருத்தமாக இருந்தால் மேம்பட்டனவாக இருக்கும். திருக்குறளுடன் பொருத்தமின்றி இருந்தால் கேடு விளைவிப்பனவாக இருக்கும். புத்தகங்கள் திருக்குறளுடன் பொருத்தமாக இருக்கும் அல்லது பொருத்தமின்றி இருக்கும். எனவே அவை மேம்பட்டனவாக இருக்கும் அல்லது கேடு விளைவிப்பனவாக இருக்கும்.

**சிக்கலில் அழிவு முறை:** ஒருவன் தலைவன் கட்டளைக்குப் பணிவான் என்றால் கடமையைச் செய்வான். அவன் அறிவாளியாக இருந்தால் அவனுக்குப் புரியும். ஆனால், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டான்; அவனுக்கு ஒன்றும் புரியாது. எனவே, அவன் கடமையைச் செய்யமாட்டான். மேலும் அவன் அறிவாளியும் அல்லன்.

**இருதலைக் கொள்ளி வாதம் தவறு எனல்:** இவ்வாதங்களைக் காளையோடு ஒப்பிட்டு, அதன் கண் தோன்றும் இருதலைக் கொள்ளி வாதத்தை அதன் கொம்புகளாகக் கூறுவர். காளையை அடக்க நினைப்பவர் இரு கொம்புகளைப் பிடித்து அடக்குவதுபோல், இவ்விரு கருத்துகளையும் மறுத்துக் கூறுவதைக் 'கொம்பு பிடித்து அடக்கல்' என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, மணமாகாதவன் தன்னைப் பேணுவாரின்றி வருந்துதலும், மணமானவன் மனைவியைக் காப்பாற்றத் துன்புறுதலும் உலக நடைமுறைக்குப் பொருந்துமாறில்லை. இங்குக் காரணங்களை மேற்கொண்டு காரியம் தொடராமை கூறி, வாதியை மறுக்கிறோம்.

இருதலைக்கொள்ளி வாதத்திற்குரிய விகற்பக் காரணங்கள் சில குறைந்து இருக்க, அவை வாயிலாக வாதியை வெல்வது 'கொம்புகளிடைத் தப்பித்துக் கொள்ளுதல்' என வழங்கப்படும். எடுத்துக்காட்டாக, அதிகமாகப் படித்தால் உறக்கம் கெட்டு உடல் நலம் குன்றும். படிக்காமலிருந்தால் தேர்ச்சியுண்டாகாது. ஒன்று, முயன்று படித்தல்; மற்றொன்று, படிப்பைக் கைவிடல். இவை இரண்டும் தீர்ந்த காரணங்கள் எனப்படும். இவற்றிற்கு இடைப்பட்ட காரணம் அளவாகப் படித்தல். அளவான படிப்பால் உடல் நலமும் குன்றாது; தேர்ச்சியும் உண்டாகும்.

இந்த வாத முடிவிற்கு முரண்பட்ட முடிவைக் கொண்ட வேறு வாதத்தைக் காட்டுவது நிராகரணம் (Rebuttal) என்று கூறப்படும்.

இரு திறத்தினரும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற் போன்று, தத்தம் ஆதாரத்தை மாற்றிக் கொள்வர். எடுத்துக்காட்டாக, அரசியலில் புகுந்தவர்கள் அறவழியில் நடந்தால் அவர்களை மக்கள் வெறுப்பர்; அறவழி தவறினால் அவர்களைத் தெய்வம் வெறுக்கும்; எனவே வெறுப்புண்டாவது திண்ணம். அதனால், அரசியலில் புகவேண்டா என்பது ஒரு கருத்து. அரசியலில் புகுந்தவர் நீதியுடன் நடந்தால் தெய்வம் வெறுக்காது; தவறினால் மக்கள் வெறுக்க மாட்டார்கள்; அதனால் அரசியலில் புகலாம் என்பது மற்றொரு கருத்து. இங்கு இரு திறத்தாரும் வெறுப்பு என்ற ஒரே ஆதாரக் கொள்கையைத் தத்தம் கட்சியை வெற்றியடையச் செய்யத் திறமையாகக் கடவுள் வெறுப்பு, மக்கள் வெறுப்பு என்ற இரண்டையும் மாற்றுகின்றனர். ஆனால், சரியான முடிவு வர ஒரு வாதத்தில் ஒரு திட்டத்தைக் கையாளுதல் இன்றியமையாததாகும்.

மேற்கூறிய குற்றங்களை நீக்கித் தூய துணிபொருளுரைகளால் உய்த்துணர் முறைகளுக்குட்பட்டு வாதித்தால் உண்மையான முடிவு பெறலாம்.

இருதலைக் கொள்ளி வாதத்தை முற்றிலும் தவறு எனக் கருதலாகாது. தவறுகள் இதனைக் கையாளும் திறத்தால்தான் உண்டாகின்றன. எனவே, இதுவும் ஏனைய வாத வகைகளை நோக்கக் குறைபாடுடையது அன்று.

**இருதுசம்காரம்:** கவி என்பதற்குச் சுக்கிரன், பிள்ளையார், கவிஞன், சூரியன் என்று பொருள். கவி எந்தக் கருத்தையும் மனிதன் இயல்புக்கு அப்

பாற்பட்டு நோக்குபவன். கவியின் குரலே கவிதை. காப்பிய உலகில் கவி என்பான் ஒரு படைக்கும் கடவுள். கவி இயல்பாகக் கவிஞனாகவே பிறக்கிறான்

ஆன்மீகமும் புலமையும் அறிவு ஆராய்ச்சியுடன் அறிவுரை தரும். கவிதையோ காதலியின் கன்னல் மொழியில் மனவுணர்வுகளை அரவணைத்து அறிவு புகட்டும். கவிதையும் இசையும் இணைந்திருக்கும் பொழுது கருத்து இசைந்த நாட்டியமாகும். பரத முனிவர் காலத்தில் இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்தே இருந்தன. பிறகு வெவ்வேறாயின. இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்த காப்பியத்தைக் காண்பதரிது.

இருதுசம்காரம் என்பது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு முழுவதும் வருணனையாக இயற்றப்பட்ட ஒரு சிறு காப்பியம் ஆகும். இருதுசம்காரம் என்பதற்குப் பருவ வருணனைகளின் தொகுப்பாய் அமைந்த தனிக்காப்பியம் என்பது பொருள். இக் காப்பியம் நடை, கருத்து, தொனி, அணி, உவமை முதலியவற்றில் மேம்பட்டு விளங்குகிறது. இதில் உள்ள எளிய எடுப்பான சொற்கள், மிக அருமையான இயற்கை வருணனைகள், கவியின் மனவுணர்வு வெளிப்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காளிதாசரே இதனைப் படைத்தவர் எனப் பலர் கருதுகின்றனர். இந்நூலைக் கற்ற விக்டர் என்னும் மேனாட்டறிஞர் காளிதாசரைத்தவிர வேறு எந் நாட்டுக் கவிஞனாலும் ஆண், பெண் காதலைப் பற்றி இவ்வளவு கவினாகப் பாடியிருக்க முடியாது எனக் கூறுகிறார்.

இந்நூலில் பருவகாலங்களின் இன்றைய முறை மாறி, கோடை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் என்ற முறையில் அருமையான இயற்கை வருணனைகள் அமைந்துள்ளன. இதில் ஆறு சருக்கங்களும் 153 செய்யுள்களும் பல்வகை யாப்பில் உள்ளன. இன்பம் நுகர்வோரும் நாடகம், திரைப்பட அரங்கங்கள் அமைப்போரும் படித்தறிய வேண்டிய நூல் இது. இந்நூலில் பருவக்கால வருணனைகள் படிப்போரை இன்புறுத்தும் வகையில் புனையப்பட்டுள்ளன. கோடைக் கால இரவுப் பொழுதில் வானம் தெளிவாக உள்ளது. எங்கும் அமைதி நிலவுகிறது. நிலவு தண்ணொளியை வீசிக் கொண்டிருக்கிறது. இவ் வேளையில் மாளிகையின் நிலாமுற்றத்தில் இளங் காதலர் இருவர் காதல் விளையாட்டில் களித்திருக்கின்றனர். தாமரை மணம் வீசும் எழில் முகமுடைய காதலி வீணை மீட்டுகிறாள். அது காதலனின் கருத்து, செவி, கண் ஆகியவற்றிற்கு இனிமை அளிக்கிறது. கோடை வெயிலைத் தாங்காத பாம்பு புற்றினுள்ளிருந்து வெளியேறி, தோகை விரித்தாடும் மயிலின் நிழலில் பதுங்கி ஒதுங்குகிறது. அதனருகே ஒரு தவளை படுத்திருக்கிறது. இது இந்நூலில் கூறப்பட்டுள்ள கோடை வருணனையுள் ஒன்று.

கூதிர் கால வருணனைகள் இருது சம்காரத்தில் இயற்கைச் செழிப்பினை வெளிப்படுத்துகின்றன. கரிச்சான் குஞ்சுகள் கீச்சிடுகின்றன. தடாகத்தில் தாமரை மலர்கள் தேன் சிந்துகின்றன. அதனை மாந்தி வண்டினம் முரல்கின்றன. இயற்கை எழிலில் இன்புற்றவாறே அழகிய இளம்பெண் ஒருத்தி நடனம் ஆடுகின்றாள்; தம்முருவம் தடாகத்தில் தெரியவே, வேறொருத்தி நடனம் ஆடுவதாக மயங்கி, மனக் காழ்ப்புக் கொள்கிறாள். இவை போன்று இளவேனில், முதுவேனில் போன்ற பருவங்களின் வருணனைகள் சிறப்பாகப் புனைந்துரைக்கப் பட்டுள்ளன.

என்.எஸ்.தா.

**இருதுணை மணம்**: கணவன், மனைவி இருவரும் உயிருடன் இருக்கும்போது, அவர்களது மண உறவு சட்டப்படி விலக்கு ஆகாத நிலையில், அவருள் ஒருவர் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதற்கு இரு துணை மணம் (Bigamy) என்பது பெயர்.

இருதுணை மணம் அந்த இனத்தவரின் சட்டப்படி செல்லத்தகாததாயின், இருதுணை மணம் புரிந்தவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார். அதற்கு உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்படத் தக்கவராவர். குற்றமாகக் கருதப்படும் இருதுணை மணத்திற்கு முதல் கணவனோ முதல் மனைவியோ இசைவு அளித்திருந்தாலும் அந்த இசைவுக்குப் பயனில்லை. 'ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்' என்ற கோட்பாடு இல்வாழ்க்கையில் இருக்க வேண்டும் என்பதற்காகவும், இந்தியப் பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் மேற்படி இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இந்துக்கள், முகமதியர், கிறித்தவர் என்ற மூன்று முக்கிய இனத்தவர் உள்ளனர்.

இந்துக்களின் நிலை: பழைய சட்டப்படி இந்து சமயத்தைச் சேர்ந்த ஆண்மகன் ஒரே சமயத்தில் பல பெண்களை மணக்கும் உரிமை பெற்றிருந்தான். முற்காலத்தில் அச்சமய உட்பிரிவைச் சேர்ந்த பெண்கள் ஒரே சமயத்தில் பல ஆண்களை மணக்கும் பழக்கம் இருந்துவந்தது. இப்பழக்கம் காலப்போக்கில், சமூக மாற்றங்களின் காரணத்தால் மிகவும் குறைந்தது. அதாவது, ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் கிடைப்

பதே அரிதானதும் இந்தப் பழக்கம் மறையத் தொடங்கியது.

இருதுணை மணம் என்ற பழக்கத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் முதன் முதலில் பம்பாய் மாநிலமானது 1946-ஆம் ஆண்டில் இந்து இருதுணை மணச் சட்டத்தை (Bombay Prevention of Hindu Bigamous Marriage Act of 1946) இயற்றியது. அதைத் தொடர்ந்து, சென்னை இந்து இருதுணை மணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் (The Madras Hindu Bigamy Prevention and Divorce Act, 1949) தமிழ் நாட்டில் 1949-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அதைப் பின்பற்றி, இந்து இருதுணை மணத்தைத் தடுக்கும் சௌராட்டிரச்சட்டம் (The Saurashtra Prevention of Hindu Bigamous Marriage Act Vol. 1950) 1950-ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இந்த மூன்று சட்டங்களின்படி, மேற்படி மூன்று மாநிலங்களைச் சேர்ந்த இந்துக்கள் (இரு பாலாரும்) இருதுணை மணம் செய்தால், இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின் படி குற்றவாளி ஆவர்.

பின்னர், 1955-ஆம் ஆண்டில் இந்துத் திருமணச் சட்டம் (Hindu Marriage Act, 1955) இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. சம்மு-காசுமீர் மாநிலத்தைத் தவிர, இந்தியாவில் உள்ள எல்லா இந்துக்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். முந்தைய சட்டங்களுக்கும் இந்தச் சட்டத்துக்கும் முரண்பாடு யாதேனுமிருந்தால், இந்துத் திருமணச் சட்டமே பொருந்தும். இருதுணைமணம் புரிபவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின்படிக் குற்றவாளியாவார் என்று 1955-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் 17-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு இதன் வரம்புக்குட்பட்ட எந்த இந்துவும் இருதுணை மணம் செய்யமுடியாது. இந்த 1955-ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டம் புத்த, சைன, சீக்கிய மதத்தினருக்கும் பொருந்தும் என்பது அந்தச் சட்டத்திலேயே கூறப்பட்டுள்ளது.

முகமதியர் நிலை: முகமதியர் இனச் சட்டப்படி ஒரு முகமதிய ஆண் ஒரே சமயத்தில் நான்கு மனைவியரைத் திருமணம் செய்து கொள்ளலாம். எனவே, முகமதிய ஆண் இருதுணை மணத்தைச் சட்டப்படிச் செய்யலாம். ஆனால், ஒரே சமயத்தில் நான்கு மனைவியர் என்ற வரையறையை மீறக் கூடாது. இருதுணை மணம் புரியும் உரிமை ஒரு முகமதியப் பெண்ணுக்குக் கிடையாது. எனவே, அவள் சட்டப்படி இருதுணை மணம் செய்ய முடியாது.

மேலும், 1954-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசு சிறப்புத் திருமணச் சட்டத்தை (Special Marriage Act of 1954) இயற்றியது. எந்த இனத்தவரும் இந்தச் சட்டத்தின்கீழ்ப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். இருதுணை மணம் இந்தச் சட்டத்தின் படி குற்றமாகும். தன் இனச் சட்டத்தின்படி ஒரு முகமதியர் ஒரே சமயத்தில் நான்கு மனைவிகள்வரை திருமணம் புரியலாம்;என்றாலும் அவர் தமது எந்தத் திருமணத்தையாவது மேற்படி சிறப்புச் சட்டத்தின் படி செய்வாராயின், அவரது உரிமை பெரிதும் பாதிக்கப்படுவதாகும்.அவர் தம் முதல் மனைவியை மேற்படி சிறப்புச் சட்டத்தின்படி திருமணம் செய்திருந்தால், சட்டப்படி அவர் இருதுணை மணம் செய்ய முடியாது. முதல் மனைவியைத் தமது இனச் சட்டப்படி ஒரு முகமதியர் மணம் செய்திருந்தால் இருதுணை மணத்தைச் சிறப்புச் சட்டத்தின்படி பதிவு செய்ய முடியாது.

கிறித்தவரின் நிலை: கிறித்தவரின் மதக் கோட்பாட்டிலும் கி.பி.1872-ஆம்ஆண்டு மத்திய அரசால் இயற்றப்பட்ட இந்தியக்கிறித்தவத்திருமணச் சட்டத்தின்படியும் (Indian Christian Marriage Act of 1872) இருதுணை மணம் தடை செய்யப்பட்டுள்ளது. (இந்தச் சட்டத்தின் 60-ஆம் பிரிவைப் படிக்கவும்) எனவே இந்தியக் கிறித்தவர்கள் சட்டப்படி இருதுணை மணம் புரிய முடியாது.

**இருந்தவளமுடையார்** என்பது இருந்த கோலத்தில் விளங்கும் திருமாலினைக் குறிக்கும் பெயராகும். மாதரி என்னும் ஆயமகள் ஆய்ச்சியர் குரவை முடிந்த பின்னர், வையைக் கரையில் விளங்கிய திருமாலை வழிபடுதற்குச் சென்றாள். இச் செய்தி சிலப்பதிகாரத்தில் துன்ப மாலை என்னும் பகுதியில், 'நீடுநீர்வையை நெடுமால் அடியேத்தத், தூவித்துறை படியப் போயினாள்' என்னும் அடிகளில் கூறப்பட்டுள்ளது, (சிலப். துன்பமாலை. 4,5). 'வையை நெடுமால்' என்பதற்கு அரும்பத உரையாசிரியர், 'சிறீ இருந்தவளமுடையார்' என்றும், அடியார்க்குநல்லார், 'அந்தரவானத்து எம்பிரான்' என்றும் விளக்கம் தந்துள்ளனர். இவ்விரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் சிறப்புடைய திருமால் கோயில் இப்போது மதுரை மாநகரில் காணப்படாமையினை உணர்ந்த மு. இராகவையங்கார், இப் பெயரிலமைந்த திருமால் மதுரைக்கு அருகிலுள்ள கூடலழகரே யாவார் என்று ஆராய்ந்து விளக்கியுள்ளார். மேலும் அவர் 'சிறீ இருந்தவளமுடையார்' என்னும் பெயர் கூடலழகருக்கு இன்று வழங்காவிட்டாலும், அவரது இருந்த திருக்கோலம் கண்டார்க்கு இன்பம் மிகுவிக்கும் சிறப்புடையதாகத் திகழ்வதால்,

இப்பெயர் அவரையே சுட்டும் என்றும் விளக்கியுள்ளார்.

திருமால் இருந்தகோலத்தில் விளங்கும் திருப்பதி இருந்தவளம் என்றும், அத்திருப்பதியில் விளங்கும் திருமால் இருந்தவளமுடையார் என்றும் கொள்ளுதல் கூடும். 'இருந்தையூர் அமர்ந்த செல்வ' என்னும் பரிபாடல் (திரட்டு)அடியில் குறிப்பிடப்படும் இருந்தையூர் மதுரைக்கு அருகே வையைக் கரையில் உள்ள ஓரூர் என்றும், அங்குத் திருமால் கோயில் கொண்டுள்ளார் என்றும், அவரையே அரும்பத உரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் குறிப்பிட்டனர் என்றும் அறிஞர் கருதுகின்றனர். மதுரைக்கு அருகில் இருந்தையூர், இருந்தவளம் என்னும் பெயரில் அமைந்த ஊர் இன்று காணப்படாமையால், இவற்றால் சுட்டப்படும் ஊர் கூடலழகர் கோயில் கொண்டுள்ள பகுதியேயாகும் என்பது ஆய்வாளர் கருத்து. அங்ஙனமாயின், 'அந்தர வானத்து எம்பெருமான்' என்று அடியார்க்குநல்லார் கூறிய பெயர், கூடலழகர் திருக்கோயிலின் மேல் விமானத்தில் திருமால் கிடந்த கோலத்தில் எழுந்தருளும் நிலை கருதியதாகும். 'அந்தரவானத்து எம்பெருமான்' என்பது திருமால் பரவாசு தேவ நிலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கருதிக் கூறப்பட்டது என்று கூறுவாருமுளர்.

**இருந்தையூர்க் கருங்கோழி மோசியார்:** இவர் இடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பதனை முதன்முதலாக இறையனார் களவியலுரை உணர்த்துகிறது. இறையனார் களவியல் முதல் நூற்பா உரையில் முச்சங்க வரலாறு கூறப்படுகிறது. அதில், 'இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், கிரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப' என்றமைந்த இடைச்சங்கம் பற்றிய பகுதியில் இவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

சிலப்பதிகார உரைப்பாயிரத்திற்கு அமைந்த அடியார்க்கு நல்லார் உரையிலும் இம்மோசியார் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும் ...... என்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர்' என்னும் உரைப்பாயிர உரைப்பகுதியில் அடியார்க்கு நல்லார் மோசியார் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு உரையாசிரியர்கள உரைகளிலும் அமைந்துள்ள புலவர் வரிசைகளில் மோசியார் வைத்தெண்ணப்படும் முறைமையிலிருந்தே இவர் ஒருசீரிய புலவராகத் திகழ்ந்தவர் என்பது புலப்படுகிறது. இடைச்சங்க நூல்களுள் பெரும்பான்மை கடல்கோளால் மறைந்தபோது, இவர் நூல்களும் அழிந்திருக்க வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் வட்டத்தில் 'இருந்தை' என்னும் ஓர் ஊர் உள்ளது. இதுவே 'இருந்தையூர்' என்று வழங்கப்பட்டதனைப் பரிபாடல் திரட்டு, 'இருந்தையூர் அமர்ந்த செல்வநின், திருந்தடி தலையுறப் பரவுதும் தொழுது' என்னும் வரிகளில் குறிப்பிடுகிறது. இதனைத் தவிர இவர் பாடல் வரலாறு பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை. ஈ.வே.மா.

**இருந்தையூர்க் கொற்றன் புலவன்** கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கொற்றன் என்பதாகும். இவர் ஊர் இருந்தையூராக இருந்தமையால் இருந்தையூர்க் கொற்றன் புலவன் என்று அழைக்கப்பட்டார்.

இப்புலவர் பாடிய பாடல் குறுந்தொகை 335-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தலைவி இற்செறிக்கப்படுதலை உணர்த்திய தோழி, 'அவள் ஊர் வெற்பிடை நண்ணியது' என்றும், அவள் 'வல்விற் கானவன் தங்கை' என்றும் கூறி, இரவுக்குறி பெறுதற்கரிது என்பதைத் தலைவனுக்குப் புலப்பட வைக்கிறாள்.

மலைவளமும் சுனைவளமும் மகளிர் நீர் விளையாட்டும் மந்திகள் குட்டிகளோடு செய்யும் தந்திரச் செயல்களும் இப்பாடலில் சுவைபடப் புனையப்பட்டுள்ளன. ஊர் வெற்பிடை நண்ணியது என்றதனால் தலைவி அடைதற்கரிய இடத்தினில் உள்ளாள் என்பதையும், கொடிய கானவர் தங்கை யென்றமையால் அக்கானவர் அறியின் தீங்கு நிகழும் என்பதையும் தலைவனிடம் தோழி குறிப்பாற் புலப்படுத்தி, வரைவு கடாவும் திறம் பாராட்டத்தக்கதாகும். ஈ.வே.மா.

**இருநலக்கோடு** கேரள மாநிலத்தில் அமைந்துள்ள ஓர் ஊர். இது கட்டடக்கலை சிறப்புப் பெற்றது. இங்குள்ள குகைக் கோயிலில் உள்ள சிவ தட்சிணாமூர்த்தியின் புடைச்சிற்பம் நான்கு கைகளுடன் காலின் மேல் கால் வைதது அமர்ந்த நிலையில் உள்ளது. சடைமுடியும் உடலைச் சுற்றிய பாம்பும் நன்கு செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் ஒவ்வோரமைப்பும் மிக்க வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளுள் இரண்டில் புத்தகமும் செப



தட்சிணாமூர்த்தி, இருநலக்கோடு

மாலையும் உள்ளன. மற்றைய இரண்டு கைகளுள் ஒன்று காலின் மீதும் மற்றொன்று அழைப்பது போலவும் உள்ளன. தட்சிணா மூர்த்தியைச் சுற்றி அவரது காலடியில் நான்கு முனிவர்கள் அமர்ந்துள்ளனர். உயர்ந்த மெய்ப்பொருளைத் தட்சிணாமூர்த்தி விளக்குவதைக் கேட்கும் ஆவலுடன் அமர்ந்திருப்போர் போன்று இம்முனிவர்கள் செதுக்கப்பட்டுள்ளனர். இப்புடைச்சிற்பம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கேரளாவில் காணப்படும் தட்சிணாமூர்த்திச் சிற்பங்களுள் இருநலக் கோட்டிலுள்ள(Irunalak kode) இச்சிற்பமே பழைமையும் சிறப்பும் பெற்றதாகும்.

**இருநாட்டுக் கொள்கை:** ஆட்சியாளர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட மக்களை இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரித்து ஆள நினைப்பது இயல்பு. இரண்டு பிரிவுகளுள் ஒரு பிரிவினர் ஆட்சியாளர்களை ஆதரிப்பர்; பிறிதொரு பிரிவினர் ஆட்சியாளர்களை எதிர்ப்பர். பாராளுமன்ற முறை மக்களாட்சி நிலவக்கூடிய நாடுகளில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தபோது அவர்கள் கடைப்பிடித்த கொள்கை பிரித்தாளும் கொள்கையாகும் (Divide and Rule). ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சியை நிலைநாட்டுவதற்கு இக்கொள்கை அவர்களுக்கு மிகவும் பயன்பட்டது. ஆங்கிலேயர்கள் இக்கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையேல் 1947-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்திருக்க முடியாது.

இந்தியாவில் இந்துக்கள், முகமதியர் ஆகியோர் பெரும்பான்மையோராகவாழ்கின்றனர்.இவர்களைத் தவிர, கிறித்தவர், சீக்கியர் போன்ற பிரிவினரும் வாழ்கின்றனர். இவ்வாறு பல பிரிவினர்களைக் கொண்டு இந்தியா திகழ்ந்தாலும், இந்துக்கள் முகமதியர் ஆகியோர் தத்தம் தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல் வாழ முயற்சிசெய்ததன் விளைவே இருநாட்டுக் கொள்கையாகும். இந்தியா அயல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதில் அனைத்துப் பிரிவினரும் தொடக்க காலத்தில் ஒற்றுமையாகத்தான் செயலாற்றினர். எல்லா மக்களும் தேசிய உணர்ச்சியினால் உந்தப்பட்டனர். தொடக்க காலத்தில் எவ்வித வேறுபாடுமின்றிச் செயற்பட்டாலும், நாளடைவில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கப்படுவதுபோல் உணர்ந்தமையால் இருநாட்டுக் கொள்கை (Two Nation Theory) உருவெடுத்தது.

ஆங்கிலேய அரசு பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டதென்பது வரலாற்றில் உண்மையாகும். இயல்பாகவே வேறுபாடு கொண்ட பிரிவினரை நிலையாகவே பிரித்து ஆளுவதை மெக்கியவல்லியின் தத்துவமாகக் கருதக் கூடாது என்று இங்கிலாந்தின் பிரதமர் டிசுரேலி (Disraeli) கூறியுள்ளார். ஆனால், இக்கூற்றுக்கு மாறாக அவரே இது இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட உதவுமென்று இந்து - முசுலீம் வேறுபாடு குறித்துக் கூறியுள்ளார். இதுவே பின்னால் வந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாயிற்று.

இந்துக்கள் பெரும்பான்மையோராக இந்தியாவில் உள்ளனர். முகமதியர் சிறுபான்மையோராக உள்ளனர். இந்துக்களுடைய பெரும்பான்மை நிலையால் முகமதியரின் சமயமும் நலனும் பாதிக்கப்படக் கூடுமென அவர்கள் உணர்ந்ததால், முசுலீம் சமயத்தின் தனித்தன்மையைக் காக்கவும், முகமதிய மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும் அவர்கள் முயற்சி செய்தனர். இதனால், 1916-ஆம் ஆண்டு ஏற்பட்ட இலக்குமணபுரி ஒப்பந்தத்தின்படித் தனித் தேர்தல் தொகுதிகள் முகமதியர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இவ்வொதுக்கீடு முகமதியரின் நலன்களைப் பேணும் வகையில் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் முகமதியர்களுக்கு ஒதுக்கப்படாத பொதுத் தொகுதி

கள், முகமதியருக்கல்லாத தொகுதிகள், இந்து தொகுதிகள் என்ற மாயை வளரத் தொடங்கியது. பின்னாளில் இதுவே இருநாட்டுக் கொள்கையாக மலர்ந்தது.

தேசியப் போராட்டத்தில் முனைந்து இருந்த பொழுது இந்து, முசுலீம் என்ற வேறுபாட்டிற்கு இடமில்லாமலிருந்தது. காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் நடத்திய தீவிரவாதப் போராட்டத்தில் முசுலீம்கள் பாதிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் காங்கிரசுக் கட்சியின் தலைமையில் இந்துக்களுடைய மேலாதிக்கம் இருந்தாலும், இந்து-முகமதியத் தலைவர்களுக்கிடையே தனிநபர் வேறுபாட்டுணர்ச்சி சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது.

முகமதியர் நலன்களைக் காக்க அகில இந்திய முசுலீம்லீகு 1909-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது படிப்படியாக முசுலீம்களுக்குச் சில நன்மைகளுக்காகப் போராடிக்கொண்டே வந்தது. மாநிலங்களுக்கு 1935-ஆம் ஆண்டைய சட்டம் சுயாட்சியை வழங்கியது. இதற்குப் பின்னர் வெளிப்படையாக முகமது அலி சின்னா இருநாட்டுக் கொள்கையைப் பரப்பத் தொடங்கினார். அவருடைய முயற்சியினால் 1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கராச்சியில் நடைபெற்ற சிந்து முகமதியர் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பரந்த இந்த இந்தியக் கண்டம் அமைதியோடு இருக்கவும், கலாச்சார வளர்ச்சிக்கும், பொருளாதார, சமூக மேம்பாட்டிற்கும், அரசியல் சுயநிருணயத்திற்கும் இந்து, முசுலீம் ஆகிய இரு நாடுகள் தேவை என்று அத்தீர்மானம் கூறியது. மேலும் முசுலீம்களுக்கு சட்டப்படியான, தகுதியும் மரியாதையும் வழங்கக்கூடிய அரசியலமைப்புப் பற்றி முசுலீம் லீகு தீர்மானிக்க வேண்டுமென்றும், அந்த அரசியலமைப்பில் முசுலீம்கள் முழுச்சுதந்திரத்தோடு இயங்க வேண்டும் என்றும் அத்தீர்மானம் விளங்கியது. இந்திய அரசுச் சட்டம் (1935) வழங்கிய கூட்டாட்சித் தகுதியைச் செயற்படுத்த வேண்டாமென்றும், இந்தத் தகுதி முகமதியர்களின் நலனைப்பாதிக்குமென்றும் அத்தீர்மானம் வலியுறுத்தியது. எனவே முசுலீம், இந்து என வெளிப்படையாகப் பேசக்கூடிய நிலை உருவாகியிற்று.

இலாகூரில் 1940-ஆம் ஆண்டு, மார்ச்சு 22-ஆம் நாளில் நடைபெற்ற அகில இந்திய முசுலீம் லீகு மாநாட்டில் முகமது அலி சின்னா இருநாட்டுக் கொள்கையை மிகவும் தெளிவாக விளக்கினார். முகமதியர் என்போர் சிறுபான்மையினர் அல்லர். அவர்களே ஒரு நாடு என வரையறுக்கலாம் என்று அவர் கூறினார். இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ வேண்டுமாயின் இந்தியாவைச் சுதந்திரமான இரு தேசிய நாடுகளாகப் பிரிக்க வேண்டும்; அப்போதுதான் மக்கள் மகிழ்வோடு வாழ முடியும்; தேசிய நாடுகள் ஏற்பட்டுவிட்டால், இத்தேசிய நாடுகள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருக்குமென ஏன் நம்பவேண்டும்; மாறாகப் பன்னாட்டு ஒப்பந்தங்கள் மூலமாக இந்தத் தேசிய நாடுகள் நல்லெண்ணத்தோடும் அமைதியோடும் வாழமுடியும்; ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினரை ஆதிக்கம் செலுத்தும் நிலை மறையலாம் என்று இருநாட்டுக் கொள்கையின் நன்மை பற்றி அவர் விளக்கினார்.

சின்னா இலாகூர் மாநாட்டில் ஏன் இருநாட்டுக் கொள்கை அவசியமென்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கினார். இந்துசமயம், முசுலீம் சமயம் ஆகியவற்றின் உண்மையான நிலைமையை ஏன் என்னுடைய இந்து நண்பர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர் என்பதை அறிய முடியவில்லை. இந்து, முசுலீம் என்பவற்றை சமயங்கள் என்று சொல்ல முடியாது. இவை இரண்டும் மாறுபட்ட இரண்டு சமூகங்கள். இந்த இரண்டு சமூகங்களும் பொதுவாகச் சேர்ந்து இயங்கக்கூடிய காலம் கடந்துவிட்டது. இரண்டும் சேராமல் இயங்குவதுதான் இன்றைய பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணம். இதனால், நாடு கூட அழிந்துவிடலாம். எனவே, இதனைத் தக்க நேரத்தில் திருத்தி அமைக்க வேண்டும். இந்துக்கள், முசுலீம்கள் ஆகியோர் மாறுபட்ட சமயத் தத்துவத்தையும், சமூகப் பழக்கவழக்கங்களையும், இலக்கியங்களையும் கொண்டவர்கள். இவர்களுக்கிடையே திருமண உறவுகளோ சேர்ந்து உண்ணும் பழக்கமோ இல்லை. இவர்கள் வெவ்வேறு கருத்துகளையும் கோட்பாடுகளையும் கொண்ட இரண்டு மாறுபட்ட நாகரிகத்தினர். இவர்கள் வாழ்வு முறை வேறுபட்டது. ஒரு சமயத்தின் தலைவர் மற்றொரு சமயத்திற்கு எதிரி. இவர்களை ஒன்றாகவைத்தால், அதாவது, சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் ஆதிக்கத்தில் விட்டால், நாடு சிதறுண்டு போகுமென்று தலைமையுரை நிகழ்த்தினார் முகமது அலி சின்னா. இம்மாநாடு முகமதியர்களுக்குத் தனி நாடு வேண்டுமென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இதுதான் பாகிசுத்தான் தீர்மானம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், இத்தீர்மானத்தில் பாகிசுத்தான் என்று ஒரு சொல் கூட இடம்பெறவில்லை.

இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டதால் ஆங்கிலேய அரசு முசுலீம் லீகு, முகமதியர், முகமது

அலி சின்னா ஆகியோர்களை மிகவும் நம்பியது. இவர்களது ஆதரவு தேவையென்பதை உணர்ந்து, தங்களது பிரித்தாளும் கொள்கைக்கு இவர்களைப் பக்கபலமாகக் கையாண்டது.

கிரிப்சு தூதுக்குழு (1942) இந்தியாவிற்கு வந்து வெளியிட்ட அறிக்கைகளைக் காங்கிரசு, முசுலீம் லீகு ஆகிய இரண்டுமே எதிர்த்தன. இதனையடுத்து 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைக் காங்கிரசுக் கட்சி நிறைவேற்றியது. அதற்காகப் பேரியக்கமே நடைபெற்றது. காங்கிரசுத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். முசுலீம் லீகு இதில் கலந்து கொள்ளவில்லை. ஆங்கிலேயர் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்தால் அது காங்கிரசுக்கு வரும்; எனவே காங்கிரசு ஆட்சி அதாவது இந்துக்கள் ஆட்சி ஏற்படும்; அதனால் முசுலீம் மக்கள் பாதிக்கப்படுவர் என்று முசுலிம் லீகினர் கூறினர். இந்து-முசுலீம் வேறுபாட்டை முசுலீம் எழுத்தாளர்கள் அதிகமாக வளர்த்தனர். இவர்களுக்குச் சமீல் உத்தீன் அகமது என்பவர் (Jamil-ud-Din Ahmad) தலைவர். இந்துக்கள் உருவ வழிபாடு செய்வோர், முசுலீம்கள் அதற்கு எதிரானோர். ஒரே தெய்வம் என்ற நம்பிக்கையுடையோர் முசுலீம்கள், அதற்கு மாறானோர் இந்துக்கள். இந்துக்கள் சாதி முறையை விரும்பக்கூடியவர்கள், முசுலீம்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர் என்று வேறுபாடுகளை முசுலீம் எழுத்தாளர்கள் கூறி, வேற்றுமைகளை வளர்த்தனர்.

முகமது அலி சின்னா மகாத்மாகாந்தியை ஓர் இந்துவென்றும், இந்துக்களுக்காகவே போராடுபவர் என்றும், இதனால் முசுலீம் மக்கள் பாதிக்கப்படுவர் என்றும் புதுதில்லியில் 1943–ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ந்தேதி நடைபெற்ற அகில இந்திய முசுலீம் லீகு கூட்டத்தில் கூறினார். மகாத்மா காந்தி அடிகள் 1921-ஆம் ஆண்டு அக்டோபர் 12–ஆம் நாள் 'இளைய பாரதம்' (Young India) என்ற பத்திரிகையில் எழுதியதை முகமது அலி சின்னா சுட்டிக்காட்டி விளக்கினார். 'நான் வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் ஆகியவற்றை நம்பும் சனாதானி இந்து; வருண ஆசிரம தருமத்தை நம்புபவன்; பசுவைத் தெய்வமாக வணங்கும் நம்பிக்கையுடையவன்; உருவ வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவன் அல்லன்' என்பவை காந்தியடிகள் இளைய பாரதத்தில் எழுதியவை. தேர்தல்களில் முகமதியருக்கு வாக்களிக்கவில்லையேல், முகமதியர் இந்துக்களுக்கு அடிபையாகத் தாழ்வுறுவர் என்றும் முகமது அலி சின்னா எச்சரித்தார். எனவே, முசுலீம் தலைவர்கள் முசுலீம்கள் தனியே வாழ வேண்டுமென்பதில் தீவிர அக்கறை கொண்டனர். இந்தியா, பாகிசுத்தான் என்னும் இருநாடுகளாக இந்தியாவைப் பிரிப்பதாகிய இராசகோபாலாச்சாரியார்த் திட்டத்திற்கு மகாத்மா காந்தி அடிகள் ஆதரவளித்தார். இராசகோபாலாச்சாரியார் 1944–ஆம் ஆண்டு ஏப்பிரல் 8-ஆம் நாள் இதனைச் சின்னாவுக்குத் தெரிவித்தார்.

இராசகோப்பாலாச்சாரியார்த் திட்டத்தில் சொல்லியிருந்த இந்தியாவோடு சேர விரும்புவோரைக் கணிக்க முசுலிம் பகுதிகளில் வாக்கெடுப்பு எடுப்பதைச் சின்னா உடன்படவில்லை. காந்தி-சின்னா பேச்சு வார்த்தை நடைபெற்றது. பலன் ஏதும் ஏற்படவில்லை. பின்னர் 1945–ஆம் ஆண்டின் இடைக்கால அரசாங்கத்தில் இந்துக்களும் முசுலீம்களும் பங்கு பெற வாய்ப்பளிக்கும் இலியாகத்து – தேசாய் ஒப்பந்தத்தையும் முகமது அலி சின்னா ஏற்றுக்கொள்ளவில்லை. தனிநாடு முசுலீம்களுக்கு வேண்டுமென்ற கொள்கையைச் சின்னா தளரவிடவேயில்லை.

அமைச்சரவைத்தூதுக்குழு (Cabinet Mission)பாகிசுத்தான் கோரிக்கையை மறுத்தது. அந்தத் தூதுக்குழுவின்படி சவகர்லால் நேரு இடைக்கால அரசாங்கத்தை 1946,ஆகசுட்டு, 16-இல் அமைத்தார். முசுலீம் ஆட்சி செலுத்திய வங்காளம், சிந்துப் பகுதிகளில் பொதுவிடுமுறையாக அறிவித்தது முசுலீம் அரசு. இதனால், பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இனக் கலவரங்கள் தோன்றின. வன்முறை தலைதூக்கித் தொடர்ந்தது. இதனால், ஆங்கிலேய அரசு சூன் 1948க்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கும் உறுதியை அளித்தது. மௌண்ட்பாட்டன் பிரபு தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார். காங்கிரசு, முசுலீம் லீகின் தலைவர்களோடு பேசினார். பின்னர் இந்தியாவை இந்தியா, பாகிசுத்தான் என்று இரண்டாகப் பிரிக்கும் கொள்கையை வெளியிட்டார். அதன்படி இரண்டு நாடுகள் உருவாக்கப்பட்டன.

இரு நாட்டுக் கொள்கை தானாகவே மனதில் உதித்ததெனினும், அது அயல் ஆங்கிலேயே அரசாங்கம், முசுலீம் தலைவர்கள் ஆகியோரின் விடாமுயற்சியால் வெற்றியடைந்தது. தலைவர்களிடம் விட்டுக்கொடுக்கும் தன்மையிருந்தால் ஒருவேளை இந்து-முசுலீம் ஒன்றாக வாழ இந்நேரம் பழகியிருப்பர். இருநாடுகள் தோன்றியிருக்கா. எம்.ப.

**இருநிறமயக்கம்** என்பது இரு நிறங்களின் வேறுபாட்டினை உணர முடியாத நிலையைக் குறிக்கும். இது பிறக்கும் பொழுதே ஏற்படும் நிறக்காட்சிக் குறையாகும். இருநிறமயக்கத்திற்கு (Dichromatism) மருத்துவம் எதுவும் இல்லை. இவர்கள் பெரும்பாலும் பச்சை, சிவப்பு நிறங்களைப் பிரித்தறிய முடியாதவராக இருக்கின்றனர். இது மரபுவழி வரும்

பார்வைக் குறையாகும். இது 23-ஆம் பாலணுக் களின்வழி அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவர்களுக்குப் பச்சை, சிவப்பு ஆகிய நிறங்கள் வெளிர் நீலமாகத் தோற்றமளிக்கின் றன. இயங் எமோல்டிசு (Young Helmholtz) என் பார் பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களின் கலப்பினால் மஞ்சள் நிறம் கண்ணுக்குத் தெரிகிறது என்றும், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களைத் தனித்தனியே அடையாளம் கண்டு கொள்ளமுடியாதவர்கள் மஞ் சள் நிறத்தை மட்டும் அடையாளம் கண்டுகொள் கின்றனர் என்றும் கூறுகிறார். ஒரு பட்டுப்பூச்சியின் நிறம் இருநிறமயக்கமுடையோரின் (Dichromates) கண்களுக்கு எவ்வாறு தெரிகிறது என்பதைக் கேட்டு அறியலாம். மனிதர்களின் இயல்பான நிறக்காட் சித்திறன் மூன்று நிறக்காட்சித் திறன் (Trichromatic Vision) என்று குறிப்பிடப்படுகிறது. பார்வைக் குறைகள் எதுவும் இல்லாதவர்கள் இயல்பாகக் கருமை, வெண்மை, ஆகியஇரு நிறங்களைப் பிரித்து உணர்வதோடன்றி, நீலம்,சிவப்பு. பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களின் பலநிலைகளையும் பிரித்தறியக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

1. பட்டுப்பூச்சியின் இயல்பான நிறம்
2. இருநிற மயக்கமுடையோருக்கு அது தெரியும் விதம்

ஆகியவற்றை இருநிறமயக்கச் சோதனை மூலம் காணலாம்.

இத்தகைய நிறவேறுபாடுகளை உணரமுடியாத வர்களும் இருக்கின்றனர். இவர்கள் நிறக்குருடர்கள் (Colour Blinders ) என்று குறிப்பிடப்படுகின்றனர். நிறக்குருடு உடையவர்களிடம் பார்வைக்குறைகள் எதுவும் இருப்பதில்லை. ஆனால், சில நிறங்களை மட்டும் இவர்களால் வேறுபடுத்தி உணரமுடிவ தில்லை. நிறக்குருடு ஆண்களிடம் மட்டுமே காணப் படுகிறது. உலகில் உள்ள ஆண்களின் மொத்த எண் ணிக்கையில் இரண்டு விழுக்காட்டினர் இத்தகைய நிறக்குருடுடையவர்களாக இருக்கின்றனர் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. வெளிர்ப்பச்சையும் வெளிர்ச் சிவப்பும் இருநிறக் குருடு உடையவர்களுக்கு (Dichromates) ஒரு நிறம் போலக் காட்சியளிக்கின்றன. இரண்டும் வெளிர் மஞ்சளாகத் தெரிகின்றன. இவர் களுள் சிலர் வெளிர் சிவப்பு நிறத்தை மட்டுமே கண்டுகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இத்தகையோர் 'புரடனோபியா' (Protanopia) உடையோர் என்று கூறப்படுகின்றனர். வேறுசிலர் வெளிர்பச்சை நிறத்தை மட்டுமே கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றனர். இவர்கள் 'தியுடரனோபியா' (Deuteranopia) உடையோர் என்று குறிப் பிடப்படுகின்றனர். 'புரடனோபியா' உடையோர் பச்சை, மஞ்சள் ஆகிய இரண்டு நிறங்களுக்குள் வேறு பாடு உணரமுடியாதவர்களாகவும், 'தியுடரனோ பியா' உடையோர் வெளிர் சிவப்பு, வெளிர் பச்சை ஆகிய இருநிறங்களுக்குள் வேறுபாடு காண முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகைய நிறக்குருடுக்கு மாறாக, ஒரு நிறக்குருடுடையோர் (Monochromates) வெண்மை, கருமை ஆகிய இரு நிறங்களின் பல நிலைகளைத் தவிர வேறு நிறங் களைக் காணமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

**இருப்புக் காரணம்** என்பது ஒரு பொருள் இருப்பதற்கான காரணம் அல்லது மெய்ப்பிப்பு (Reason or Justification) என்ற பொருளைத் தரு வது. எடுத்துக்காட்டாக, 'கிழக்கிந்திய வாணிகக் குழுவின் வலிமைக்கு உரிய காரணம் மூன்றுவகை யாகக் கையாளப்பட்ட அதனுடைய கொள்கைச் செயலே ஆகும்' என்று மார்லிபர்க்கு என்னும் ஆசிரி யர் கூறுகிறார். ஏதேனும் ஒரு நிறுவனம் இருப்பதற் குரிய நோக்கம் நடைமுறையில் செயற்படாமல் போகுமாயின், அந்நிறுவனத்தின் இருப்புக்காரணமும் இல்லாமற் போய்விடுகிறது.

இருப்புக்காரணம் என்ற கருத்து இக்கால அறிவி யலில் ஓர் ஆதாரமான அல்லது அடிப்படையான கொள்கையாகக் கையாளப்படுகிறது. இந்தக் கருத்தைத் தத்துவ இயலிலிருந்து (Metaphysics or Philosophy) பிரித்தெடுத்து, ஆராய்ந்து இக்கால உலகுக்கு வழங்கி, அரியதொண்டு செய்தவர் இம்மானுவல் காண்ட்டு (Immanual Kant) என்ற செருமானியத் தத்துவ அறிஞராவார். அவர் கி.பி. 1724-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1804-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். அவர் இலெப்னிசு (Leibniz), உல்பு (Wolff), ஐசக்கு நியூட்டன் (Isac Newton), சான் இலாக்கு(John Locke), தாவீது இயூம் (David Hume), உரூசோ (Rousseau) போன்ற ஆசிரியர்களு டைய கருத்துகளை ஆராய்ந்தார்.

மனிதனுடைய புலன்களால் காணப்படும் உலகப் பருப்பொருள்கள் எல்லாம் அவை புலன்களால் அறி யப்படும் வடிவத்திலில்லாமல், அவற்றுக்குரிய தன் மையை ஒட்டி வேறொரு வடிவில் இருக்கின்றன என்று அவர் உணர்ந்தார். பொருள்களின் உண்மை வடிவை அறிவதற்குத் தருக்கமுறை ஏற்றதன்று. தருக்கமுறை அறிவை முறைப்படுத்துவதற்குத்தான் உதவுகிறதே தவிர, ஒரு பொருளைப்பற்றிய உண்மை யான அறிவுத்திரட்சி வளருவதற்கு உதவிசெய்ய வில்லை என்று அவர் கூறினார். அறிவு என்பது செயல்முறை என்ற அனுபவத்திலிருந்துதான் பெறப் படுகிறது. தத்துவம் என்பது வாழ்வின் கடைசி

உண்மைநிலையை (Ultimate Real) ஆராய்ந்து காண வில்லை. தத்துவத்தினால் செய்யக்கூடிய ஒரே வேலை மனிதருடைய அறிவையும், ஆற்றலின் தன்மையை யும், வரம்புகளையும் அறியுமாறு செய்தலே ஆகும். புலன் ஆற்றலும் (Power of the Senses), அறியும் ஆற்றலும்(Power of the Reason) வெவ்வேறானவை. அறிவின் அமைப்பு புலன்களின் அமைப்பினின்று வேறா னது; சிறப்பானது. ஒரு பொருளைப் பற்றிய இடமும் (Space) காலமும் புலன்களால் உணரக்கூடியவாறு அமைந்த புலன்வடிவங்களே. இங்குக் காணப்படும் உலகத்தின் தோற்றம் புலன்களாலறியப்படுவதாக உள்ளது. உலகத்தின் உண்மையான தன்மை மனித அறிவாற்றலினாலும், ஆராயும் திறத்தினாலும் அறியப்படுகிறது. காணப்படும் உலகத் தோற்றமும், ஆராயப்படும் உலகத்தின் தன்மையும் வெவ்வேறா னவை. இக்கருத்துகளை அவர் கி.பி. 1770-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட 'புலனுக்கும் அறிவுக்கும் தோன்றும் உலகத்தின் வடிவமும் கொள்கை களும்' (On the Form and Principles of the Sensible and Intelligible World) என்ற நூலில் வெளி யிட்டுள்ளார்.

புலன்களுக்குப் பொருட்கள் எவ்வாறு தோன்று கின்றனவோ அவ்வாறே அவைகளைப் புலன்கள் மனிதர்க்குக் காட்டுகின்றன. பொருட்களைப் பற்றிய அறிவாராய்ச்சியினால் உண்டாகும் கருத்துகள் பொருட்கள் எவ்வாறு உண்மையில் இருக்கின்ற னவோ அவ்வாறே அவற்றைக் காட்டுகின்றன. காண்ட்டு கணிதம், இயற்பியல் ஆகியவற்றின் ஆதா ரக் கொள்கைகளை ஒப்புக்கொண்டார். மனித அறி வாற்றல் ஒவ்வொரு பொருளின் அளவு, பண்பு தொடர்பு, வழி, மறு வடிவங்கள் முதலியவற்றை அறிய உதவுகின்றன; புலன்களும் அறிவும் சேர்ந்து ஒரு பொருளைப் பற்றிய செயலறிவு அல்லது அனு பவம் ஏற்படுதற்கு முன்னரே, அதைப் பற்றிய தொகுப்பான கருத்தைத் தருகின்றன; இவ்விரண்டும் தரும் கருத்துத்தான் ஒரு பொருளைப் பற்றிய உண் மையான கருத்து என்று அவர் 'பகுத்தறிவுக் கோட் பாட்டைப் பற்றிய ஒரு திறனாய்வு' (A Critique of Pure Reason) என்ற தமது நூலில் கூறியுள்ளார்.

காண்ட்டு கூறிய கருத்துகள் தத்துவ இயலில் இவ ருக்கு முற்பட்டோருடைய கருத்துக்களை மறுத்தன வாயினும், அவை பிற்காலத்தில் அறிவியல் துறையில் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயனுள்ள நம்பக மான ஆதாரங்களை அளித்தன. ஆகையால் ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய உண் மையான அல்லது இருப்புக் காரணத்தைக் கூறுதல் வேண்டுமாயின். அந்நிகழ்ச்சியை அல்லது பொரு ளைப் பற்றிய புறத்தோற்றத்தையும், அதனுடைய உண்மையான தன்மையையும் அல்லது இயல்பையும் அறிதல் வேண்டும்.

துணை நூல்கள்:

**Weldon, T.D.,** Kant's A Critique of Pure Reason, Oxford, 1945.

**Bird Graham,** Kant's Theory of Knowledge, London, 1962.

**Ross, W.D.,** Kant's Ethical Theory, Oxford, 1954.

**இருப்புகளும் பங்குகளும்**: ஒரு கூட்டுப் பங்கு நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனத் தொகையில் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியையும் அதற்குரிய உரிமைகளுடனும், பொறுப் புகளுடனும் தன்னகத்தே கொண்டவை 'பங்குகள்' (Shares) எனக் கூறப்படுகின்றன. இப்பங்குகளின் வகைகள், வெளியீட்டு முறை, பங்குதாரரின் உரிமை, பொறுப்பு, பங்கு மாற்றம், பங்கினுடைய ஆதாயம் போன்ற செய்திகள் யாவும் 1956-இல் ஏற்பட்ட கூட்டுப்பங்கு நிறுவனங்களின் சட்டத்தில் காணப்படு கின்றன. இச்சட்டம் பங்குகளை முன்னுரிமைப்பங்கு கள் (Preference Shares), ஒப்புரவுப் பங்குகள் (Equity Shares) என இருவகைப்படுத்துகிறது.

முன்னுரிமைப் பங்குகள்: இவ்வகைப் பங்கு களுக்குச் சிறப்பாக இரண்டு முன்னுரிமைகள் உண்டு. (1) நிறுவனத்தின் ஆதாயத் தொகையினை ஒப்புரவுப் பங்குதாரருக்குப் பிரித்துக்கொடுக்கும் முன்னர், ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஆதாயத்தை முன்னுரிமைப் பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ளும் முன்னுரிமையை யுடையது. (2) ஒரு நிறுவனம் கலைக்கப்படும்போது அதனுடைய சொத்துகள், வருமானங்கள் ஆகியவற் றிலிருந்து முன்னுரிமைப் பங்குதாரர்கள் தங்களது மூலதனத் தொகையினைத் திரும்பப் பெற்றிடும் முன்னுரிமையும் உடையது. முன்னுரிமைப் பங்கு களில் ஏழு வகையான உட்பிரிவுகள் உண்டு.

1) குவிந்திடும் முன்னுரிமைப் பங்கு: இவ் வகையான பங்குகளுக்குக் குறிப்பிடப்பட்ட ஆதாய விழுக்காடு குவிந்து கொண்டே (Cumulative) வரும். அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்கு முன்னுரிமைப் பங்கு தாரருக்கு அவ்வப்போது முழுமையாகக் கொடுக்கப் படாவிடின், அவை குவிந்து கொண்டே செல்லும். பின்வரும் ஆண்டுகளில் பிற பங்குதாரர்களுக்கு ஆதாயத்தைப் பிரித்துக் கொடுக்குமுன், குவிந் திடும் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு முன்னரே குவியப் பெற்ற ஆதாயப் பங்கினை முத

லில் கொடுக்க வேண்டும். ஆனால்,கூட்டுப் பங்கு நிறுவனம் போதுமான ஆதாயத்தை ஈட்டாவிடின், ஆதாயப் பங்கினை அறிவிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

2) குவிந்திடாத முன்னுரிமைப் பங்கு : இவ்வகைப் பங்கு முன்சொல்லப்பட்ட குவிந்திடும் முன்னுரிமைப் பங்கிற்கு நேர் மாறானது. ஆதாயப் பங்கு குவிந்து கொண்டே செல்லும் முறை இதனிற் கிடையாது. கூட்டுப்பங்கு நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளில் காணப்படும் கருத்துகளுக்கு ஏற்ப, ஆதாயப்பங்கு குவியும் பிரிவினைச் சேர்ந்ததா, குவியாப் பிரிவினைச் (Non Cumulative) சேர்ந்ததா என முடிவு கட்ட இயலும். குறிப்பாக எவ்விதக் கருத்தும் குழு அமைப்பு விதிகளில் காணப்படாவிடின் அவை யாவும் குவியும் முன்னுரிமைப் பங்குகளாகவே அமையும்.

3) பங்கேற்கும் முன்னுரிமைப் பங்கு: வழக்கமாக அறிவிக்கப்பட்ட ஆதாயத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விழுக்காடு முன்னுரிமைப் பங்குகளுக்கு ஆதாயப் பங்காக வழங்கப்படும். பின்னர் அறிவிக்கப்பட்ட விழுக்காட்டின்படி ஒப்புரவுப் பங்குதாரர்களுக்குரிய ஆதாயப் பங்கு கொடுக்கப்படும். அதன் பின்னரும் மிகுதியாக எஞ்சிய ஆதாயம் இருப்பின், அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட விகிதப்படி பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும், ஒப்புரவுப் பங்குதாரர்களுக்கும் பிரித்து வழங்கப்படும். இவ்வகையில் மிகுதியான ஆதாயப் பங்கில் பங்குகொள்ளும் உரிமையினையுடைய பங்கு முன்னுரிமைப் பங்கு (Participating Preference Shares) எனப்படுகிறது.

4) பங்கேற்க இயலா முன்னுரிமைப் பங்கு: முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும் ஒப்புரவுப் பங்குதாரர்களுக்கும் அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கிலிருந்து ஒப்புக்கொண்ட முறைப்படி ஆதாயப் பங்கு வழங்கப்பெற்ற பின், எஞ்சிய ஆதாயத்தில் பங்கேற்கும் உரிமை இவ்வகைப் பங்குதாரர்களுக்குக் கிடையாது. இத்தகைய பிரிவு, பங்கேற்க இயலா முன்னுரிமைப் பங்கு (Non-Participating Preference Shares) எனப்படுகிறது.

5) மாற்றத்தக்க முன்னுரிமைப் பங்கு: இவ்வகைப் பங்குதாரர்கள் (Convertible Preference Shares)தங்களின் பங்குகளை ஒப்புரவுப் பங்குகளாக மாற்றிக் கொள்ளத்தக்க உரிமையினைப் பெறுகின்றனர். இவ் உரிமையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்திட வேண்டும்.

6) மாற்ற முடியா முன்னுரிமைப் பங்கு: இவ்வகைப் பங்குதாரர் (Non-Convertible Preference Shares) தங்களின் பங்குகளை ஒப்புரவுப் பங்குகளாக மாற்றிக் கொள்ளும் உரிமை இல்லாதவராக இருப்பர்.

7) திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்கு: நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், அவ் அனுமதியின்படி இவ்வகைப் பங்குதாரர்கள் (Redeemable Preference Shares)தமது பங்கு மூலதனத்தைத் திரும்பப்பெறும் உரிமையுடையவராவர். இப்பங்கு மூலதனத்தைத் திரும்பப் பெற்றிடக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாவன: (அ) திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்குகளுக்குச் செலுத்தப்படவேண்டிய முழுப் பங்குத்தொகையும் நிறுவனத்திற்குக் கட்டப்பட்டு இருக்க வேண்டும். (ஆ) திரும்பக் கொடுக்கப்படும் பங்கு மூலதனம் ஒரு குறிப்பிட்ட கூட்டுப்பங்கு நிறுவனம் தான் ஈட்டிய ஆதாயத்தில் அறிவிக்க இருக்கும் ஆதாயப் பங்கிலிருந்துமட்டுமே கொடுக்கப்பட வேண்டும். (இ) பங்கு மூலதனத் தொகையினைத் திரும்பக் கொடுத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன், இதற்கெனப் புதியதாக வெளியிடப்பட்ட பங்கு மூலதன உள்வரவுத் தொகையினின்று கொடுக்கப்படும். (ஈ) ஈட்டப்பெற்ற ஆதாயத்திலிருந்து திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்கின் மூலதனத் தொகையினைத் திருப்பிக் கொடுக்கும்போது அத்தொகைக்கு ஈடான சம தொகையினைத் தனியாக ஒரு கணக்குத் தொடங்கி அதனில் வரவு வைத்துக் காத்திடல் வேண்டும். இப்புதிய கணக்கு 'மூலதனத் திரும்ப ஒதுக்கீட்டுக் கணக்கு' (Capital Redemption Reserve Accounts) எனச் சொல்லப்படும்.

இரண்டாம் முக்கிய பங்கு ஒப்புரவுப் பங்கு ஆகும். இப்பங்கு வெளியீட்டினால் ஒரு நிறுவனம் பேரளவு மூலதனத்தைப் பெற முடிகிறது. இப்பங்குதாரர்கள் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனத்தின் உரிமையாளர் ஆவர். நிறுவனம் சில காலத்தில் அல்லலுற நேரிடலாம். அக்காலங்களில் இப்பங்குதாரர்களுக்கு எவ்வித ஆதாயப் பங்கும் கிடைக்காமற் போகக் கூடும். அதே நிறுவனம் வளமும் நற்பேறும் பெற்றிடும் காலங்களில் அதன் பெரும் பயனைப் பெறுபவர்கள் இப்பங்குதாரர் ஆவர். இடர்தாங்கல்களினால் (Risk takings) ஏற்க வேண்டிய இன்னல்கள் பல இருப்பினும், அதனால் பெறக்கூடிய வளமும் மிகுதியாக ஒப்புரவுப் பங்கில் உண்டு. வாணிக மொழியில் இக்கருத்தினைத்'தாங்கிட வேண்டிய இழப்பைவிட ஆதாயம் மிகுதியாகக் கிடைத்திடப் பெரும் வாய்ப்புண்டு' எனக் கூறுவர்.

ஒப்புரவுப் பங்குகளின் சிறப்பியல்புகள் பல: (1) இப்பங்குதாரர்களின் பொறுப்புகள் வரையறைக் குட்பட்டவை. தாங்கள் ஏற்க வேண்டிய பொறுப்

பின் அளவு, அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஒப்புரவுப் பங்குகளின் தொகையினை மிஞ்சாது. (2) இப்பங்கு தாரர் தம் பங்குகளையும், அதன் உரிமைகளையும் மற்றவருக்கு மாற்றிக் கொடுக்கும் உரிமை உடையவ ராவர். (3) நிறுவனத்தின் வளர்ச்சி அல்லது இன்னல் களுக்கு ஏற்ப இப் பங்குகளின் உள்மதிப்பு உயரும் அல்லது குறையும். (4) இப்பங்குகளின் மூலதனத் தொகையினைக் குறைவான வருவாய் உடையோ ரும் தமது சேமிப்பினின்று சிறுகச் சிறுகச் செலுத்திப் பெறலாம். இப்பங்குகளின் முகமதிப்பு ௳. 10,50,100 எனப் பல்வேறு வகையினில் வெளியிடப்படும்.

பங்குகள் வெளியிடும் முறை: கூட்டுப்பங்குப் பொது நிறுவனம் தனக்கு அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைத் திரட்டத் தகவல் தொகுப்பு அறிக்கையினை ஓர் அழைப்பிதழாகப் பொதுமக்களுக்கு வெளியிடும். இதனை வெளியிடும் முன், நிறுவனம் முன்னெச்சரிக்கை யாகக் கீழ்க்காணும் கருத்துகளை மனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். (1) நிறுவனம் தன் பங்கு களை மூலதன அங்காடியில் இருப்பு மாற்றகம் (Stock Exchange) வழியாக விற்பனை செய்திடுமுன் பங்குகளுக்கு நிலவிவரும் தேவையினையும், முதலீடு செய்திட முன்வரும் மக்களின் மனப்பாங்கினையும், அரசினரின் நாணய வருவாய்க்குரிய கொள்கைகளை யும் கவனத்தில் கொண்டு அறிதல் வேண்டும். (2) மூலதன வெளியீட்டுச் சட்டம் (கட்டுப்படுத்துதல்) 1947-இன்படி அனைத்துக் கூட்டுப்பங்கு நிறுவனங் களும் பொதுமக்களுக்குப் பங்குகளை விற்பனைக்கு வெளியிடுமுன், மூலதன வெளியீட்டுச் செயலினை ஒழுங்குபடுத்துபவரின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். (3) பங்குகளை வெளியிடும் கூட்டுப்பங்கு நிறுவனம் தனது வங்கியுடன் ஒப்பந்தம் செய்து, அவ்வங்கி முதலீடு செய்ய விரும்பும் மக்களிடமிருந்து விண்ணப்பப் பணம் பெற்று, அதற்கெனத் தனியே ஒரு கணக்கினைத் தொடங்கி, அதிலிருந்து பெறப்படும் பணத்தினை வரவு வைத்துக் காத்திடும் பொறுப்பி னைச் செம்மையாகச் செய்யவேண்டும்.(4)செலுத்தப் பெறும் விண்ணப்பப் பணம் வெளியிடப்பெற்ற பங் கின் முகமதிப்பினில் 5 விழுக்காட்டிற்குக் குறை யாமல் இருக்கவேண்டும். (5) விண்ணப்பித்திடக் குறிப்பிட்ட இறுதிநாள் முடிந்தவுடன் பங்குகளுக்குரிய விண்ணப்பப் பணம் பெறுவது நிறுத்தப்பட்டு, அச் செய்தி விளம்பரக் கருத்தாகச் செய்தித் தாள்களில் கொடுக்கப்படவேண்டும்; அல்லது கடைசி நாள் முடி வடையும் முன்னரே, வெளியிட்ட பங்குகளுக்கு மேல் பங்குகளைக் கேட்டு விண்ணப்பங்கள் வருமாயினும், மேலே சொன்ன விளம்பரக் கருத்து நாள் ஏடுகளில் இடம்பெற வேண்டும். (6) பங்குகளை விண்ணப்ப தாரர்களிடையே ஒதுக்கீடு செய்திட, நிறுவனத்தின் இயக்குநர்கள் முடிவுகளை நிறைவேற்ற வேண்டும். அதனையடுத்துப் பங்குகளுக்கு முழுமையாக ஒதுக்கப் பட்ட விவரம், அல்லது முழுமையின்றிப் பகுதியாக ஒதுக்கப்பட்ட விவரம் ஆகியவற்றை விண்ணப்பம் செய்தவர்களுக்குக் கடிதம் வழியாகக் கால தாமதம் இன்றி அறிவித்திட வேண்டும். இத்தகைய கடிதம் 'ஒதுக்கீட்டு மடல்' (Letter of Allotment) எனப்படும். பங்குகளுக்கு நிறுவன இயக்குநர்களால் எவ்வித ஒதுக் கீடும் செய்யப்படாவிடின், அச்செய்தியும் பங்கு கேட்டு விண்ணப்பம் செய்தவருக்குக் கடித வழி யாக அறிவிக்கப்பட வேண்டும். இக்கடிதம் 'இய லாமை மடல்' (Letter of Regret) எனச் சொல்லப் படுகிறது.

பங்குகளை முகமதிப்பினின்றும் கூடுதல் தொகைக்கு அல்லது கழிவுத்தொகைக்கு வெளியிடு தல்: கூட்டுப்பங்கு நிறுவனம் தான் ஈட்டிய புகழ், நற்பெயர், தனது உழைப்புத் திறன், தான் அறிவித்த ஆதாயப்பங்கு ஆகியவற்றைப் பக்கபலமாகக் கொண்டு, இவற்றின் மதிப்பினில் ஆதாயம் அடைந் திட வெளியிட்ட பங்குகளை அதன் முகமதிப்பி னின்று கூடுதல் தொகையினையும் சேர்த்து மிகுதி யான தொகைக்குப் பொதுமக்களுக்கு வெளியிடுவ துண்டு. எடுத்துக்காட்டு: ஒரு ஒப்புரவுப் பங்கின் முகமதிப்பு ௳பாய் 10 – ஆனால், நிறுவனம் தான் ஈட்டிய நற்பெயரினைக் கொண்டு கூடுதல் தொகை யாக ஒவ்வொரு பங்கிற்கும் ௳பாய் 2 -ஐச் சேர்த்து மொத்த விலைத்தொகை ௳பாய் 12-க்கு வெளி யிடக் கூடும். இதற்கு நேர்மாறாக, நிவறுனங்களின் சட்டம் 1956, பிரிவு 79-இன்படி ஒரு நிறுவனம் தன் உறுப்பினர்கள் கூட்டத்தில் தேவையான முடிவுகளை (Decisions) நிறைவேற்றியும், நிறுவனச் சட்டக் குழுவின் அனுமதி பெற்றதும் பங்குகளை அதன் முகமதிப்பினின்று விலையைக் குறைத்து, கழிவுத் தொகையினில் வெளியிட வழி வகுக்கிறது ஆனால், நடைமுறையில் பெரும்பாலும், ஒரு நிறுவனம் தன் பங்குகளைக்கழிவுத் தொகையில் வெளியிட முடியாது.

பங்குச் சான்றிதழ்: ஒதுக்கீடு செய்யப்பெற்ற பங்குகளுக்குக் குறிப்பிட்ட முதலீட்டாளர் பங்கு தாரர் ஆகிறார். பங்குகள் ஒதுக்கீடு செய்த நாளி லிருந்து மூன்று மாதக் காலத்திற்குள் ஒவ்வொரு பங்குதாரர்க்கும் பங்குச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும். அப்பங்குச் சான்றிதழில் பின்வரும் செய்திகள் எழுதப்பட்டு, நிறுவனத்தின் முத்திரை பதிக்கப்பெறும். அ. நிறுவனத்தின் பெயர், முகவரி, பதிவு அலுவலக முகவரி; ஆ. சான்றிதழின் தொடர் வரிசை எண்; இ. பங்குதாரரின் பெயர், முகவரி;

ஈ. பங்குகளின் எண்ணிக்கை, எவ்வகையான பங்கு;
உ. பங்குகளுக்கெனக் கொடுக்கப்பட்ட சிறப்பு எண்;
ஊ. பங்கின் முகமதிப்பு, செலுத்தப்பட்ட தொகை;
எ. பங்குச் சான்றிதழ் வெளியிடப்பட்ட தேதி.

பங்குப் பண அழைப்பு முறை: பங்குதாரர்கள் தாங்கள் வாங்கிக் கொண்ட பங்குகளின் மொத்த விலைத் தொகையினைச் சிறு சிறு தொகையாக நிறுவனத்திற்கு வங்கி மூலம் செலுத்தும் வசதியினைப் பெற்றிட, ஒவ்வொரு பங்கின் மொத்த விலைத் தொகையும் பின்வரும் முறையில் பிரிக்கப்படுகிறது. 1. பங்கு விண்ணப்பத் தொகை; 2. பங்கு ஒதுக்கீட்டுத் தொகை; 3. பங்கின் முதல் பண அழைப்பு; 4. பங்கின் இரண்டாம் பண அழைப்பு; 5. பங்கின் இறுதிப் பண அழைப்பு. ஒவ்வொரு பண அழைப்பிற்கும் முன்பாக, அதற்கு முடிவுகள் நிறுவனத்தில் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு பங்குதாரர்க்கும் அவரவர் செலுத்த வேண்டிய தொகை குறிக்கப்பெற்றுப் பண அழைப்பு மடல் அனுப்பி வைக்கப்படும்.

பங்குப் பறிமுதல்: இம் மடலில் குறிக்கப்பட்ட தொகையினை நிறுவனத்தின் வங்கி மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் பங்குதாரர் செலுத்த வேண்டும். அவ்வாறு உரிய தொகையினைப் பங்குதாரர் செலுத்தத் தவறினால்,அவரால் பண அழைப்புச் செலுத்தப் பெறாத பங்குகளை மட்டும் பறிமுதல் (Forfeiture of Shares) செய்திடும் உரிமையை ஒரு நிறுவனம் பெறுகிறது. பங்கு பறிமுதல் சட்ட விதிகளின்படி செயற்படுவதால், இச்செயல் தண்டனை வழங்கும் வழியாக அமைகிறது. பங்கு பறிமுதல் செய்யுமுன், அச் செய்தியைக் கடிதம் மூலம் நிறுவனம் பங்குதாரருக்கு அனுப்பி வைக்கும். இதன் பின்னரும் பங்குதாரர் பங்கு அழைப்புப் பணம் செலுத்தத் தவறினால், அவருக்குரிய பங்குகளில் கட்டப்படாத பங்குகள் மட்டுமே பறிமுதல் செய்யப்படும்.

பங்கு மீது பற்றூண் உரிமை: பங்குதாரர் நிறுவனத்திற்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன், ஏற்றுக்கொண்ட பொறுப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றிடத் தவறினாலும், நிறுவனம் தனது குழு அமைப்பு விதிகளின்படிப் பங்குதாரர்களின் பங்குகளின்மீது முதல் பற்றூண் உரிமை (Lien on share) பெறுகிறது. இப் பற்றூண் உரிமையின் விளைவாக, நிறுவனம் பங்குமீது கொடுக்க வேண்டியிருக்கும் ஆதாயப்பங்கு போன்றவற்றை முடக்கி வைத்திடும் உரிமையைப் பெறுகிறது.

பங்குச் சரணடைவு: பங்குதாரர் தம் பங்குகளின் அழைப்புப் பணத்தொகையினைத் தம்மால் செலுத்த முடியாத நிலைமையை உணர்ந்து, குழு அமைப்பு விதிகளில் கூறப்பட்ட முறையில் முழுமையாகச் செலுத்த முடியாத பங்குகளை நிறுவனத்திடம் சரணடைவு செய்திட வழி உண்டு. பங்குகளை நிறுவனம் பறிமுதல் செய்திட வாய்ப்பு ஏற்படும் காலத்தில் மட்டுமே, இச் சரணடைவு ஏற்கப்படும். மற்ற காரணங்களால் செய்த பங்குச் சரணடைவு சட்டப்படி செல்லாது.

பங்குகளின் உரிமை மாற்றீடு: அசையும் சொத்துகளின் உரிமையை அதன் உரிமையாளர் மற்றொருவருக்கு உரிமை மாற்றீடு செய்து கொடுக்க முடியும். அத்தகைய முறையைப் பின்பற்றிப் பங்குதாரர் தமது பங்குகளையும் பிறருக்கு உரிமை மாற்றீடு செய்திட முடியும். உரிமை மாற்றீட்டு ஆவணத்தில் உரிமை மாற்றீடு செய்பவரும் செய்யப்படுபவரும் கையொப்பம் இட்டுத் தேவையான முத்திரையும் ஒட்டி மாற்றுதலுக்குரிய பங்குச் சான்றிதழ்களுடன் நிறுவனத்திடம் சேர்க்க வேண்டும். உரிமை மாற்றீடு செய்பவர் பெயர், முகவரி யாவும் பங்குப்பதிவு ஏட்டினிலிருந்து நீக்கப்பட்டு, உரிமை மாற்றீடு செய்யப்பட்டவரின் பெயர், முகவரி முதலானவை பதிவு செய்யப்படும்.

பங்குகளின் ஒப்படைப்பு மாற்றீடு: பங்குதாரர் இறந்துவிட்டால் அல்லது தகுதியற்றவர் என முடிவு செய்யப்பட்டால் பங்குகளின் ஒப்படைப்பு மாற்றீடு (Transmission of Shares) நிகழ்ந்திடச் சட்டம் வழிவகுக்கிறது. ஒப்படைப்பு மாற்றீடு என்பது இறந்துபோன பங்குதாரரின் சட்டபூர்வமான வாரிசு உரிமையாளரிடம் அப்பங்குகளின் உரிமையினை ஈந்து, அந்த வாரிசு உரிமையாளரையே பங்குதாரராக மாற்றும் வழி முறையாகும்.

பங்கு உரிமைச் சீட்டு: பங்குதாரர்கள் தங்களின் பங்குச் சான்றிதழ்களை மற்றொருவர் கையினில்கொடுத்து, உடனடியாக அதன் உரிமையையும் மாற்றிக் கொடுத்திடும் வசதியினைப் பெற்றிடப் பங்கு உரிமைச் சீட்டு ஆவணம் (Share Warrant) நிறுவனத்தால் வழங்கப்படும். முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே நிறுவனத்திடம் கொடுத்து, அவற்றிற்குப் பதிலாகப் பங்கு உரிமைச் சீட்டு என்ற ஆவணத்தைப் பெற முடியும். இப்பங்கு உரிமைச் சீட்டு நிறுவனத்தின் முத்திரையினைக் கொண்டிருக்கும். ஆனால்,பங்குதாரர் பெயரும் முகவரியும் குறிக்கப்படமாட்டாது. மேலும் பங்கு உரிமைச் சீட்டாகத் தமது பங்குகளை மாற்றிக் கொண்டவர் பெயரும் பங்குப் பதிவு ஏட்டிலிருந்து நீக்கப்படும். இப்பங்கு உரிமைச் சீட்டினை வைத்திருப்பவரே அதனிற் குறிக்கப்பெற்ற பங்கு எண்ணிக்கைக்கும்.

ஆதாயப் பங்கைப் பெற்றுக் கொள்ளுதற்கும் உரிமை உடையவராகக் கருதப்படுவார்.

**மிகை ஊதியப் பங்கு:** ஒரு கூட்டுப்பங்கு நிறுவனம் ஒவ்வோராண்டு முடிவிலும் தான் ஈட்டிய முழு ஆதாயத்தையும் ஆதாயப் பங்காக அறிவிக்காது. அறிவித்த ஆதாயப்பங்கு வழங்கப்பட்டபின் எஞ்சியுள்ள ஆதாயத்தை நிறுவனம் தனது ஒதுக்கீட்டுக் கணக்கினில் வரவு வைத்து அதனைப் பாதுகாக்கும். நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளின்படி, நிறுவனம் தனது ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள வரவுத் தொகையினைப் பங்கு மூலதனமாக மாற்றிட வழியுண்டு. இவ் ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள தொகைக்கு ஏற்ப, பங்குப் பதிவேட்டில் பதிவுபெற்ற பங்குதாரர்களுக்கு 'மிகையூதியப் பங்கு'(Bonus Share) என்ற முறையில் பங்குகளை வெளியிடும். இம்முறையில், ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள வரவினை நிறுவனம் தனது பங்கு மூலதனமாக மாற்றி, மிகையூதியப் பங்குகள் எனப் பெயரிட்டுத் தனது பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. இதன் மூலம் எஞ்சிய ஆதாயம் நிறுவனத்தின் மூலதனமாக மாறுகிறது.

**முற்படு விலைக்கோள் உரிமை:** நிறுவனம் தனது புதிய பங்குகளை மூலதனச் சந்தையினில் பொதுமக்களுக்கு வெளியிடுமுன், பங்குப் பதிவேட்டினில் பதிவுபெற்ற பங்குதாரர்களுக்கு அப்புதிய பங்குகள் மீது முற்படு விலைக்கோள் உரிமை (Pre-emptive Right) கிடைக்கிறது. முற்படு விலைக்கோள் உரிமை என்பது பங்குதாரர் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள பங்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெளியிட இருக்கும் புதிய பங்குகளைத் தாங்களே வாங்கிடும் உரிமையினைக் குறிப்பதாகும். இவ்உரிமையைப் பயன்படுத்தி வாங்கப்பெற்ற பங்குகளை முற்படு உரிமைப்பங்கு எனக் கூறுவர். இவ் உரிமையைப் பங்குதாரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தாவிடின், அப்புதிய பங்குகள் பொது மக்களுக்கு வெளியிடப்படும்.

**இருப்பு:** முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை ஒன்று சேர்த்துக் கிடைக்கும் கூட்டுத்தொகைக்குரிய பங்குச் சான்றிதழ்களை நிறுவனத்திடம் ஒப்படைத்து, அதற்கு ஈடாக ஒரே சான்றிதழ்-இருப்புச் சான்றிதழைப்-பெற்றுக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டு: ஒரு பங்குதாரர் ஒரு பங்கின் முகமதிப்பு உரூபாய் 10 என ஆயிரம் பங்குகளுக்குரிய பங்குச் சான்றிதழ்களை நான்கு சான்றிதழ்களாக வைத்துள்ளார். ஒவ்வொரு சான்றிதழும் உரூபாய் 2500 மதிப்புடையதாகவோ வெவ்வேறு மதிப்புடையதாகவோ அமைக் கூட்டுத் தொகை உரூபாய் 10,000 ஆக இருந்திட வாய்ப்புண்டு. தன்னிடம் உள்ள உரூபாய் 10,000 மதிப்பிற்குரிய நான்கு சான்றிதழ்களையும் நிறுவனத்திடம் ஒப்படைத்து, அதற்குப் பதில் சான்றிதழாக ஒரு இருப்புச் சான்றிதழ் உரூபாய் 10,000க்குப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பங்குச் சான்றிதழ்கள் யாவற்றையும் இணைத்து அதன் மொத்தக் கூட்டுத்தொகையினை ஓர் இருப்புச் சான்றிதழாக மாற்ற முடியும். இம்முறையில் பங்குகளை இருப்பாக மாற்றிட, ஒப்படைக்கப்படும் பங்குகள் யாவும் முழுமையாகப் பணம் செலுத்தப்பட்டிருத்தல் இன்றியமையாதது ஆகும். பங்குகள் இருப்புகளாக மாற்றப்பட, அப்பங்குகளின் மீது செலுத்தப்பட வேண்டிய முழுத் தொகையும் செலுத்தப்பட்டது என நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் இருப்புகளாக மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே இருப்புகளாக மாற்ற முடியும். பங்குதாரருக்கு இருக்கும் ஆதாயப்பங்கு பெறுவதற்கான சிறப்பு உரிமை, நிறுவனக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமை ஆகிய யாவும் இருப்புகளாக மாற்றப்பட்டு, அதனை வைத்திருக்கும் இருப்புதாரரே பெறுவார்.

**இருப்பிற்கும் பங்கிற்கும் உள்ள வேறுபாடுகள்:** (1) பங்கிற்குக் குறிப்பிட்ட முகமதிப்பு உண்டு; இருப்பிற்குக் குறிப்பிட்ட முகமதிப்பு இல்லை. (2) இருப்பு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒரு பங்கின் அல்லது பல பங்குகளின் கூட்டுத் தொகையாகும்; ஆனால் பங்கு முழுமையாகச் செலுத்தப்பட்டதாகவோ இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை இருக்க, பகுதி மட்டும் செலுத்தப் பெற்ற பங்குகளாகவோ இருக்க முடியும். (3) ஒவ்வொரு இருப்பினையும் முழுமையாகவோ சிறு சிறு பகுதியாகவோ பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும்; ஆனால், பங்குகளை வைத்திருக்கும் பங்காளர் மாற்றீடு செய்யும் காலத்தில் ஒவ்வொரு பங்கையும் முழுமையாகத்தான் கொடுக்க முடியும். எடுத்துக்காட்டு: இருப்புதாரர் தாம் கொண்டுள்ள உரூபாய் 1000 இருப்பினில் உரூபாய் 545 மதிப்புள்ள இருப்பினை மட்டும் பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும். ஆனால், பங்குதாரர் தாம் வைத்துள்ள உரூபாய் 1000 பங்குகளில் (ஒன்றின் முகமதிப்பு உரூபாய் 10 ஆகும்) $54\frac{1}{2}$ பங்குகளை-மதிப்பு உரூபாய் 545 பிறருக்கு மாற்றித் தர இயலாது. முழு எண்களான 10, 12, 27, 50, 75 பங்குகள் என்ற எண்ணிக்கையில் மட்டுமே பங்குதாரர் தமது பங்கினைப் பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும் (4) பங்குகளை வைத்திருப்பவர் பங்குதாரர் எனவும், இருப்புகளை வைத்திருப்பவர் இருப்புதாரர் எனவும் சொல்லப்படுகின்றனர். (5) ஒவ்வொரு பங்கிற்கும் அதனதன் பங்குச் சான்றிதழில் தனித்தனிச் சிறப்பு எண் கொடுக்கப்படும்; ஆனால், ஒவ்வொரு

இருப்புக்கும் தனித்தனி எண் கிடையாது. (6) ஒரு நிறுவனம் வெளியிட்ட பங்கின் முகமதிப்பு ஒரே சீரான மதிப்புடையதாக விளங்கும்; ஆனால், ஒவ்வொரு இருப்பின் முகமதிப்பும் மாறுபட்ட தொகையுடைய தாய் விளங்கும். (7) பங்குகள் கூட்டுப்பங்கு நிறுவனத்தால் பொதுமக்களுக்கு நேரடியாக மூலதன அங்காடி வழியாக வெளியிடப்படும். ஆனால், இருப்புகள் நேரடியாக வழங்கப்பட மாட்டா.

இத்தகைய பலதரப்பட்ட முன்னுரிமை ஒப்புரவுப் பங்குகளையும் இருப்புகளையும் வாங்கி, விற்றிடுதல் பேரம் பேசிடுதல் செய்வதற்கு ஒரு மாற்றகம் அல்லது அங்காடி உள்ளது. இதனை இருப்பு மாற்றம் எனக் குறிப்பர். இவ் விருப்பு மாற்றகம் இந்தியாவில் பெருநகரங்களான பம்பாய், கல்கத்தா, சென்னை, அகமதாபாது, தில்லி, ஐதராபாது, இந்தூர், பெங்களூர் ஆகிய இடங்களில் மட்டுமே அமைந்துள்ளது. ஒவ்வொரு தனி மனிதனும் தான் சேமிக்கும் சேமிப்பினை இத்தகைய பங்குகளையும் இருப்புகளையும் வாங்கி முதலீடு செய்திட இவ் விருப்பு மாற்றகம் தகுந்த வசதிகளை அளிக்கிறது. மக்கள் தங்கள் சேமிப்பினின்று செய்திடும் பங்கு, இருப்பு முதலீடுகள் நிறுவனத்தின் தொழில் வளர்ச்சிக்கு உற்ற துணையாய் அமைந்து, இறுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. காண்க: இருப்பு மாற்றகம். சி. பா.

துணை நூல்கள்:

Kapoor, N.D., Company Law and Secretarial Practice 1980, Sultan Chand and Sons, New Delhi,1983.

Bhalla, V.K., Investment Management - 1983, S. Chand and Company Limited, New Delhi, 1983.

**இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை**: இது அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தணிக்கை முறையாகும். பலவித ஆராய்ச்சிகளாலும் தொழில் நுணுக்க முறை கண்டுபிடிப்பாலும் தொழிற்றுறை வளர்ச்சி பெற்று வருகிறது. இவ்வளர்ச்சி நிலைகளுக்கேற்பப் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் செயற்படுகின்றன. பலவிதமான மின் இயந்திரங்களின் மூலம் பணிகள் குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்த்தவாறு செவ்வனே செயற்படுகின்றன. இத்தகைய அமைப்புகளில் இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை (Balance Sheet Audit) இன்றியமையாததாக விளங்குகிறது. இத்தணிக்கை முறையில் தணிக்கை இருப்புநிலைக் குறிப்புடன் தொடங்கிப் பின்னர், முதற் பதிவேடுகள், ஆவணங்கள் முதலியவற்றிற்குத் தொடரும். இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கையில் சான்றாய்வு, கூட்டல், சரிபார்த்தல் போன்ற பணிகள்மேற்கொள்ளப்படுதலில்லை. எல்லா நடவடிக்கைகளுமே இயந்திரங்கள், மின்சாரக் கருவிகள், கணிப்பொறிகள் (Computers) மூலம் பதிவு செய்யப்படுகின்றன. தணிக்கையர்கள் பொதுவாகப் பிற தணிக்கை முறைகளில் அனைத்து நடவடிக்கைகளையும் சரிபார்ப்பதில்லை. அவர்களது அனுபவத்தின் அடிப்படையில் சில ஆய்வுச் சோதனைகளைச் செய்து மனநிறைவு அடைந்துவிடுகின்றனர். பெரிய நிறுவனங்களில் அகச்சீராய்வு (Internal check) முறை பின்பற்றப்படும்.

இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை ஒரு குறைந்த அளவு தணிக்கைச் செயன்முறையைக் கொண்டது. இருப்புநிலைக் குறிப்பில் கண்ட அனைத்துக் கணக்குகளும் சரிபார்க்கப்படுகின்றன. ஆதாய இழப்புக் கணக்குகளுக்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் தொடர்புள்ள இனங்கள் மட்டும் தணிக்கை செய்யப்படுகின்றன. அதாவது, தேய்மானம், வாராக்கடன், பாதுகாப்பு (Maintenance) போன்ற சொத்துகளுடன் தொடர்பான இனங்கள் மட்டிலுமே தணிக்கை செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு அகக் கண்காணிப்பு சரிவரச் செய்யப்பட்டு வந்துள்ளதா என்று தணிக்கையர் ஆராய்ந்து பார்ப்பதுண்டு ஆண்டு இறுதியிலுள்ள மாதங்களின் கணக்குகளை நுணுக்கமாகப் பகுத்தாய்வு செய்வது இத்தணிக்கையின் சிறப்புக் கூறாகக் கருதப்படுகிறது.

நல்ல சீரான அகக்கட்டுப்பாடு (Internal Control), அகச் சீராய்வு முறை போன்றவற்றை மேற்கொண்டுள்ள நிறுவனங்களில் மட்டிலுமே இந்தத்தணிக்கை சிறப்பாக அமையும். தணிக்கையர் இவ்வாறு கணக்கு விவரங்களைப் பல புதிய முறைகளில் ஆராய்கிறார். சிறப்பாக, அவர் ஆதாய இழப்புக் கணக்கிற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் தொடர்புள்ள இனங்களை ஆராய்கிறார். பலவிதமான விகிதங்கள் (Ratios), பொதுவான வளர்ச்சி (Trend) முதலியவை துல்லியமாக ஆராயப்படுகின்றன. நிறுவனத்தின் முடிவுற்ற ஓராண்டு நிலையுடனோ அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடனோ ஒப்பிடும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இன்னும் எந்த வகையில் தூண்டுகோல் அல்லது கவனம் தேவை என்பதைச் சுட்டிக் காட்ட இந்தத் தணிக்கை உதவுகிறது.

பி. இரா.

துணை நூல்கள்:

Tandon, B.N., A Handbook of Practical Auditing, S. Chand & Company, Madras 1970.

**Kamal Gupta**, Contemporary Auditing, Mc Graw-Hill Publishing Company Limited, Revised Edition, New Delhi, 1977.

**இருப்புப் பட்டியல்**: நடவடிக்கைகளின் சிறந்த கூறுகளான வரவும் செலவும் முதலில் குறிப்பேட்டில் எழுதப்பட்டு, பின்னர்ப் பேரேடுகளில் எழுதப்படுகின்றன. கணக்குப் பதிவியலின் அடிப்படைத் தேவையை இது நிறைவு செய்கிறது. ஒரு வணிகர் தம்முடைய தொழிலின் முன்னேற்றத்தை ஆண்டுக்கு ஒரு முறை அறிந்துகொள்வது இன்றியமையாத தாகும். முடிவுபெற்ற ஆண்டின் ஆதாயம், இழப்பு ஆகியவற்றை அடுத்தஆண்டு தொடங்குவதற்கு முன்னர் அறிந்து கொள்வது மிகவும் தேவை. மேலும், பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான சொத்துகள் உள்ளனவா என்றும் அறிய வேண்டும். பல்வேறு பேரேடுகளிலிருந்து இவற்றை அறிந்து கொள்ளலாம். கொள்முதல், விற்பனை, செலவுகள், வருவாய் போன்றவற்றைப் பற்றிய விவரங்களுக்குத் தனித்தனிப் பேரேடுகள் உள்ளன. ஆனால், அவை வணிக முடிவுகளையும் நிதி நிலைமையையும் தெளிவாக ஒரே பார்வையில் அறிந்து கொள்ள உதவுதலில்லை. இப்பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கணக்குகளின் கூட்டுத் தொகையைக் கணக்கிட்டு இறுதிநிலையை அறிவது மிகக் கடினம். இதற்காக இருப்புப் பட்டியல் (Trial Balance) உருவாக்கப்படுகிறது.

பல்வேறு பேரேடுகளிலிருந்து ஒருபட்டியல் உருவாக்கப்படுகிறது. இரட்டைப் பதிவு முறையின் (Double Entry System) கோட்பாடுகள் பேரேடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றமையால், ஒவ்வொரு பற்று இருப்புக்கும் ஒத்த வரவு இருப்பு இருக்கும். பேரேடுகளின் செலவு இருப்பை இருப்புப் பட்டியலின் இருப்புப் பக்கத்திலும், வரவு இருப்புகளை வரவுப் பக்கத்திலும் எழுத வேண்டும். பின்னர் இரு பக்கக் கூட்டுத் தொகையும் சரியாக இருந்தால் இருப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் துல்லியமாக உள்ளன என அறியலாம். எனவே, இருப்புப் பட்டியல் என்பது கணக்குகளைத் துல்லியமாக, மதிப்பீட்டுக்கான பல்வேறு பேரேடுகளிலிருந்து எடுக்கப்படும் இருப்புகளின் சுருக்க முறை அறிக்கையாகும். ஆனால், இதுவே இறுதியான முடிவன்று.

வேறு முறையிலும் இருப்புப் பட்டியலை உருவாக்கலாம். அதாவது, பேரேடுகள் கொடுக்கப்படாமல் அவற்றின் இருப்புகளை மட்டும் கொடுத்தாலும், அவற்றிலிருந்து இருப்புப் பட்டியல் உருவாக்கலாம். செலவு, இழப்பு, சொத்து ஆகியவற்றுக்குரிய கணக்குகளை (இருப்புகளை) இருப்புப் பட்டியலின் செலவுப் பக்கத்திலும், ஆதாயம், வருவாய், பொறுப்பு ஆகியவற்றுக்குரிய கணக்குகளை இருப்புப் பட்டியலின் வரவுப் பக்கத்திலும் எழுத வேண்டும். அவ்வாறு எழுதப்பட்டு இரு பக்கங்களின் கூட்டுத் தொகைகளும் ஒத்ததாக இருந்தால், இருப்புப் பட்டியல் துல்லியம் எனக் கொள்ளப்படுகிறது. ஆனால், இங்கும் எண் அளவில் துல்லியம் மட்டுமே ஆய்வு செய்யப்படுகிறது. இதுவும் இறுதியான முடிவன்று.

பேரேடுகளின் மொத்தத் தொகையையும் இருப்புகளின் மொத்தத் தொகையையும் ஆய்வு செய்து, உண்மையை அறிய இருப்புப் பட்டியல் உதவுகிறது. மிகையான வணிக நடவடிக்கைகள் நிகழும் சூழ்நிலைகளில் தவறுகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. அத் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்திட இது பயன்படுகிறது. இருபக்கக் கூட்டுத் தொகையும் ஒத்ததாக இல்லாமல் வேறுபட்டால் அதற்குரிய காரணத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது. இருப்புப் பட்டியல் உருவாக்கிய பின்னரே நிறுவனத்தின் இறுதிக் கணக்குகளை உருவாக்க முடியும். ஆதாயம் அல்லது இழப்பு என்ற உண்மை நிதி நிலைமையை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். கணக்குப் பேரேடுகளின் எண்ணிக்கையை இது குறைக்கிறது. பொதுவாகக் கடனாளிப் பேரேடு, கடனீந்தோர் பேரேடு, பொதுப் பேரேடு என்ற மூவகைப் பேரேடுகள் மட்டும் பெரும்பாலும் உருவாக்கப் படுகின்றன. முதல் இரண்டுவகைப் பேரேடுகளிலிருந்தும், கடனாளிகளிடமிருந்தும் எவ்வளவு பணம் வர வேண்டும் என்றும், கடனீந்தோருக்கு எவ்வளவு மீதி கொடுக்க வேண்டும் என்றும் ஒரு வணிகர் அறிந்து கொள்வார். எனவே, எல்லாக் கடனாளிகளின் தொகையையும், எல்லாக் கடனீந்தோரின் தொகையையும் மொத்தமாக இருப்புப் பட்டியலில் காட்டிவிடலாம். தனிப்பட்ட கடனாளி-கடனீந்தோர் தொடர்பான விளக்கம் தேவையானால், அவர்களின் தனிப்பட்ட பேரேட்டைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். எனவே, கடனாளி-கடனீந்தோர்களின் பட்டியல்களை உருவாக்க வேண்டும். இப்பட்டியல்கள் கடனாளி - கடனீந்தோர் பேரேடுகளின் இறுதியில் காணப்படும். இருப்புப் பட்டியலில் கடனாளிகளின் மொத்தம் 'பல்வகைக் கடனாளிகள்' என்றும், கடனீந்தோர் மொத்தம் 'பல்வகைக் கடனீந்தோர்' என்றும் காட்டப்படும்.

**இருப்புப் பட்டியலில் காணப்படும் தவறுகள்**: இருப்புப் பட்டியலின் இருபக்கமும் ஒத்ததாக இருந்தால் அதில் தவறே இல்லை என்பது பொருளன்று. பின்பற்றப்படும் இலக்கங்களின் சீர்மையை மட்டும்தான் அது காட்டுகிறது. இருப்புப் பட்டியல் சில தவறுக

ளைக் காட்டும்; சில தவறுகளைக் காட்டாது. இரு பக்கங்களின் கூட்டுத் தொகைகள்வேறுபட்டால்அவற்றைக் கண்டுபிடித்துவிடலாம். அவையாவன: (1) துறை ஏடுகளின் மொத்தத் தொகை தவறாக இருத்தல்; விற்பனை ஏட்டில் பணத் தொகையைக் குறைத்தும், வாடிக்கையாளர் கணக்கைச் சரியாகவும் எழுதினால் இவ் வேறுபாட்டை இருப்புப் பட்டியல் காட்டிவிடும். (2) தவறான தொகையை எழுதி விடுதல்; சான்றாகக் கடனாளிப் பகுதியில் உரூ. 540க்குச் சரக்கு விற்று விட்டுக் கணக்கில் உரூ. 450/–பற்று எழுதினால் இருப்புப் பட்டியல் வேறுபடும். (3) தவறான பக்கத்தில் எழுதி விடுதல்; கொள்முதல் நடவடிக்கையில் கடனீந்தோர் கணக்கில் வரவு வைத்து விட்டுக் கொள்முதல் கணக்கில் சரியாக எழுதப்படாவிட்டாலும் இருப்புப் பட்டியல் வேறுபாட்டைக் காட்டும். (4) பேரேட்டுக் கணக்குகளில் ஒரு தொகையை எழுதாது விடல்; சரக்கு அளிப்போருக்குச் செலுத்தப்பட்ட தொகையைக் கெட்டிப்பண ஏட்டில் (Cash Book) எழுதிவிட்டு, அவரது கணக்கில் எழுதாமல் விட்டுவிட்டாலும் இருப்புப் பட்டியல் ஒத்திராது. (5) இருப்புப் பட்டியலிலேயே ஒரு தொகையை எழுதாமல் விடல். ஓர் இருப்புத் தொகையை இருப்புப் பட்டியலில் எழுதாமல் விட்டாலும் அது வேறுபாட்டைக் காட்டும்.

இருப்புப் பட்டியல் ஒத்திருந்தாலும் சில தவறுகள் நிகழும். அவையாவன: (1) ஒரு பதிவை அறவே எழுதாது விடல். ஒருவருக்கு விற்ற சரக்கை அவர் கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் எழுதாமல் விட்டுவிட்டால் இருப்புப் பட்டியல் அத்தவற்றை வெளிக்காட்டாது ஒத்திருக்கும். (2) தவறான தொகையை எழுதிவிடல்; ஒருவருக்கு விற்ற சரக்குத் தொகையை அவர் ஏட்டிலும், விற்பனை ஏட்டிலும் எழுதிவிட்டாலும் இருப்புப்பட்டியல் இத்தவற்றை வெளிக்காட்டாது ஒத்திருக்கும். (3) தவறானவர் கணக்கில் சரியான பக்கத்தில் எழுதுதல். ஒருவருக்கு விற்ற சரக்குத் தொகையை அவர் கணக்கில் கடனாக வைத்தல். இத் தவற்றையும் காட்டாமல் இருப்புப் பட்டியலின் இரு பக்கக் கூட்டுத் தொகையும் சரியாக இருக்கும். (4) ஈடுகட்டும் பிழைகள்: இப்பிழையில் இரு கணக்குகளும் ஒன்றையொன்று ஈடுகட்டிக் கொள்ளும். ஒருவருக்கு உரூ. 300/–க்குச் சரக்கு விற்றால் அவர் கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் உரூ 350/–அல்லது உரூ. 400/– கடனோ, வரவோ செய்தாலும் இருப்புப் பட்டியல் எவ்வித வேறுபாட்டையும் காட்டாது. (5) கணக்கியல் கோட்பாட்டுப் பிழைகள். இவை கணக்குப் பதிவியலில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளைப் புறக்கணிப்பதால் ஏற்படும் பிழைகளாகும். ஒரு சொத்தைச் செலவாகக் கருதியும், ஒரு செலவைச் சொத்தாகக் கருதியும், ஒரு பொறுப்பை வருவாயாகக் கருதியும் எழுதுவதால் இப்பிழைகள் ஏற்படுகின்றன. பழுதுபார்த்தலை இயந்திரக் கணக்கில் எழுதுவதும், வீட்டுக்கு வேண்டிய பொருள் வாங்கியதை அலுவலகச் செலவுக் கணக்கில் எழுதுவதும், கடன் தொகையை விற்பனைக் கணக்கில் எழுதுவதும் இப்பிழைக்கு எடுத்துக்காட்டுகள்.

இவ்வாறு, இருப்புப் பட்டியல் எண் அளவில் கணக்கின் துல்லியத்தை ஆராயவும், ஆதாயம் அல்லதுஇழப்பு, நிதி நிலைமை போன்றவற்றை அறியவும், பிழைகளை அறிந்து திருத்தவும் மிகவும் பயன்படுகிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

**Jamshed Batliboi, R.**, Advanced Accountancy, The India Printing Works, Bombay, 1962.

**Suryaprakasam, P.**, Advanced Accountancy, Bharathi Press, Rajamundry, 1970.

**இருப்புப்பாதைச் சொத்துச் சட்டம் (சட்ட விரோத அனுபோகம்)** : இருப்புப் பாதைச் சொத்துகளைச் சட்ட விரோத அனுபோகத்தில் வைத்திருப்பது தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் திருத்துவதற்கும் உரியதே இருப்புப்பாதைச் சொத்துச் (சட்ட விரோத அனுபோகம்) சட்டம் (The Railway Property Unlawful Possession Act, 1966) ஆகும்.

திருடப்பட்டிருப்பதாகவோ சட்ட விரோதமாகப் பெறப் பட்டிருப்பதாகவோ நியாயமாக ஐயப்படுகிற இருப்புப்பாதைச் சொத்து எதையும் அனுபோகத்தில் வைத்திருப்பவர் எவரும், தாம் அக்குற்றச்சாட்டினின்று விலக்குறுவதற்கு அச் சொத்துத் தம்முடைய அனுபோகத்திற்குச் சட்ட முறைப்படியாக வந்தது என மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அவர் மெய்ப்பிக்கத் தவறினால், சட்ட விரோதமாக இருப்புப் பாதைச் சொத்தை வைத்திருந்த குற்றத்திற்காக ஐந்து ஆண்டுக்கால அளவிற்குச்சிறைப்படுத்தியோ அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படப்பெறுவார்.

இந்தச் சட்டத்திற்கு விரோதமான குற்றம் ஒன்றுக்கு வேண்டுமென்றே மறைமுக ஆதரவு தருகிற நிலம் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும், அல்லது அந்த நிலத்தின் அல்லது கட்டிடத்தின் மேலாண்மையைத் தம் பொறுப்பில் கொண்டிருக்கின்ற எவரும், அல்லது

அவர்தம் முகவர் எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது அவை இரண்டையும் சேர்த்துப் பெறுவார்.

இந்தச் சட்டத்தின்படியான குற்றம் கைது செய்தற்குரியது அல்லாதது (Non-Cognisable)ஆகும். ஆயினும், இருப்புப்பாதைப் பாதுகாப்புப் படையின் மேல் நிலை அலுவலர் அல்லது உறுப்பினர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் ஒன்றில் தொடர்புடையவரை அல்லது தொடர்பு இருப்பதாக நியாயமான ஐயப்பாட்டிற்கு உரியவரை நடுவர் ஒருவரின் கட்டளையோ பிடியாணையோ இல்லாமல் கைது செய்யலாம்.

இச் சட்டத்தின்படி செய்யப்படுகிற சோதனைகள் மற்றும் கைதுகள் அனைத்தும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வகை முறைகளுக்கிணங்கச்செயற்பட வேண்டும்.

**இருப்பு மாற்றகம்**: கடன் ஆவணங்களை வாங்குதல், பங்கு ஆவணங்கள் முதலியவற்றை விற்றல் ஆகியவை தொடர்பான பிற வாணிகப் பணிகளில் உதவுவதற்காகவும், இவ்வாணிகங்களை நெறிப்படுத்துவதற்காகவும், நிறுவப்பட்ட இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்பெறாத அமைப்பு அல்லது தனிப்பட்டவர் தொகுப்பு இருப்பு மாற்றகம் (Stock Exchange) எனப்படுகிறது. இருப்பு மாற்றகத்திற்குப் பங்கு அங்காடி, கடன் ஆவணங்கள் அங்காடி, இருப்பு அங்காடி என்ற பல பெயர்கள் உண்டு.

கடன் ஆவண அங்காடியை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அ) முதன்மை அங்காடி அல்லது புதிய வெளியீடுகள் அங்காடி: புதிய கூட்டுப்பங்கு நிறுவனங்களின் புதிய கடன் ஆவணங்களையும், ஏற்கனவே உள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களின் புதிய கடனுறுதிச் சீட்டுகளையும் வாங்கும், விற்கும் அங்காடி.

ஆ) இருப்பு மாற்றகம் அல்லது பங்கு இருப்பு மாற்றகம்: ஏற்கனவே உருவாக்கப்பட்டு இரண்டாம்-கை நிலையில் உள்ள கடன் ஆவணங்களை வாங்கும், விற்கும் அங்காடி.

அடிப்படை நோக்கம்: சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளவர்களை அணுகும் முறைகளைக் கண்டுபிடித்து, அதன் வழியாக ஆதாயம் தரத்தக்க வழிகளில் முதலிடும் நோக்கத்துடன், அவர்களின் சேமிப்புகளையெல்லாம் திரட்டிப் பலதரப்பட்ட முதலிட விரும்புவோரின் பணத்தேவைகளை நிறைவேற்றிடும் நோக்கத்துடன் இருப்பு மாற்றகங்கள் செயற்படுகின்றன.

பொருளாதார அமைப்பும், இருப்பு மாற்றகமும்: உடைமைப் பொருளாதாரத்தில் உற்பத்தி, மாற்று, பகிர்வு நடவடிக்கைகளைத் தனிப்பட்டவர் மேற்கொள்வர். பெருமளவில் முதலிடுவதும், அதற்காக நுகர்வைக் கட்டுப்படுத்திச் சேமிப்பதும், இவற்றின் விளைவாகத் தோன்றும் சொத்துகளைத் தங்கள் சொந்த உடைமையாக்கிக் கொள்வதும், இவ்வகைப் பொருளாதாரத்தின் இயல்பாகும். இவ்வகைத் தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில்தான், இருப்பு மாற்றகம் இயங்குதல் இயலும். அரசே எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதாய பொதுவுடைமைப் பொருளாதாரங்களில் இருப்பு மாற்றகம் இயங்க வாய்ப்பில்லை. அரசும் தனியாரும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கலப்புப் பொருளாதாரத்தில், இருப்பு மாற்றக நடவடிக்கைகள் முழு அளவில் தன்னியல்புடையனவாக இல்லாமல் ஓரளவுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கும்.

இருப்பு மாற்றக இயல்புகள்: இருப்பு மாற்றகம் நன்கு சீரமைக்கப்பட்ட அங்காடி வகையைச் சேர்ந்தது. இதில் பயன்படும் ஆவணங்களுக்குப் போக்குவரத்துச் செலவும் இல்லை; விரைவில் அழியத்தக்க தன்மையும் இல்லை. மாறாக, இவ் ஆவணங்கள் யாவும் முற்றிலும் நிறைவான முறையில் தரப்படுத்தப்பட்டவையாகும். இருப்பு மாற்றக நடவடிக்கைகள் யாவும் வங்கி இருப்பு மற்றும் பலவகைப்பட்ட கடன் ஆவணங்களின் அளிப்பு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகின்றன. இருப்பு மாற்றகத்தில் பயன்படும் பலவகையான கடன் பத்திரங்களின் அளவு எப்போதும் குறைவதில்லை.

பணிகள்: இருப்பு மாற்றகப் பேரங்களில் ஈடுபடும் பலர் மிகக் குறுகிய கால அளவில் பெருஞ்செல்வர்களாகவும், பலர் எதிர்பாராத அளவுக்குப் பேரிழப்புகளுக்கு ஆளானவர்களாகவும் மாறுதலைக் கண்டு, இம்மாற்றகப் பணிகள் பற்றியும், இம் மாற்றகம் பற்றியும் பெரும்பான்மையோர் ஐயுறுவர். ஆனால், இவ்வேற்றத்தாழ்வுகள் இவ்வங்காடியில் மேற்கொள்ளப்படும் ஊக வாணிகத்தால் தோன்றுபவை, ஊக வாணிகம் அளவுக்கு மிஞ்சினால் சமுதாயம் கேடுறும். ஆனால், ஊக வாணிகம் ஓரளவுக்காவது இருந்தால்தான் வாணிகம் உயிரோட்டமுள்ளதாக இருக்கும். எனவே, இருப்பு மாற்றகப் பணிகள் சமுதாயத்திற்கு நன்மை விளைவிக்கத் தக்கவையே.

பங்கு இருப்பு, கடன் ஆவணங்களுக்கு நிலையான அங்காடியை அமைத்துத் தருகிறது. கடன் பொறுப்பு வரையறை செய்யப்பட்ட கூட்டுப் பங்கு நிறுவனங்களின் தோற்றம், புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட விழைபவர்களுக்கு நல்ல வாய்ப்பாகும். இந்நிறுவனங்களின் பங்குகளை வாங்கும்போது நிறுவனங்களின் உரிமையையும் பெற இயலுகிறது. கடன் பொறுப்புகளும் வரையறுக்கப் பட்டுவிடுகின்றன. எனவே, தயங்காமல் இந் நிறுவனங்களின் பங்குகளையும், கடன் ஆவணங்களையும், வாங்குதல், விற்றல், மாற்றல் ஆகிய பணிகளை இம்மாற்றகம் செய்வதால் இவ்வகை ஆவணங்களுக்கு உறுதியான, நிலையான அங்காடி கிடைக்கிறது.

இருப்பு மாற்றகம் முதலீட்டிற்கு நீர்மையைத் தருகிறது. சொத்தின் மதிப்புக் குறையாமல் பணமாக மாற்றத்தக்க தன்மையே நீர்மைத் தன்மை. அங்காடியில் அவ்வப்போது நிலவும் நிலைமைகளையும், கடன் ஆவணங்களின் விலைகளையும் மற்றும் பல செய்திகளையும் ஆய்ந்து, அறிக்கைகளை இவ்வகம் வெளியிடுவதால் கடன் ஆவணங்களின் நீர்மைத் தன்மை மிகுந்திருக்கிறது.

கடன் ஆவணங்களை இம்மாற்றகம் மதிப்பிடுகிறது. ஒவ்வோர் ஆவணத்திற்கும் தோற்ற மதிப்பு, அங்காடி மதிப்பு, உண்மை மதிப்பு எனப் பல மதிப்புகள் உண்டு. மிகக் குறுகிய கால அளவில் மலிவான முறையில் பல ஏடுகள் மூலம் இம்மாற்றகம் மதிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. முதலிடுபவர்கள் தங்கள் பத்திரங்கள், சொத்துகள் ஆகியவற்றின் உண்மையான மதிப்புகளை அறிந்து செயற்பட இம் மதிப்பீடுகள் மிகவும் துணை செய்கின்றன.

பாதுகாப்பை இம்மாற்றகம் உறுதிப்படுத்துகிறது. கடன் பத்திரங்கள் (ஒப்பந்தங்கள்) நெறிப்படுத்தும் சட்டத்தின் அடிப்படையில் இருப்பு மாற்றகப் பணிகளும் நடைமுறைகளும் நெறிப்படுத்தப்படுவதால் இம்மாற்றக நடவடிக்கைகள் பாதுகாப்பாக உள்ளன. ஏமாற்று வேலைகளும், தவறான நடவடிக்கைகளும், ஊக வாணிக முனைப்பான நடவடிக்கைகளும் களையப்படுகின்றன.

மூலதனத் திரட்சிக்கு இது உதவுகிறது. ஆக்கத்திற்கு மூலதனம் இன்றியமையாதது. மூலதனத்தின் தோற்றுவாய் சேமிப்பு. அளவிறந்த மக்களிடம் சிறு சிறு துளிகள் போல் உள்ள இச் சேமிப்புகளைத் திரட்டித்தான் முதலிட முடியும். பணத்தைக் கொடுப்பவர் பாதுகாப்பையும் அதன் மூலம் வருவாயினையும் நாடுவர். இவற்றை உருவாக்கித் தருவது இருப்பு மாற்றகம்.

நேர்மையான மூலதனப் பங்கீட்டிற்கு இது உதவுகிறது. மூலதனம் திரளுவதோடு தகுதியாகப் பயன்படவும் வேண்டும். ஒரே தொழிலில் உள்ள பல தொழிற்கூடங்கள், ஒரே நாட்டிலுள்ள பல தொழில்கள், ஒரே நாட்டிலுள்ள பல பகுதிகள், உலகிலுள்ள பல பகுதிகள் ஆகியவற்றிடையே நேர்மையான மூலதனப் பங்கீட்டிற்கு இருப்பு மாற்றகம் துணை செய்கிறது. திட்டமிட்ட வளர்ச்சிக்கும் இது இன்றியமையாததே.

சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் இம்மாற்றகம் பல வழிகளில் உதவுகிறது. இவ்வகையில் மாற்றகம் ஆற்றும் சிறப்புப் பணிகள் பல. இது உரிமையைப் பரவலாக்குகிறது. பல நிலைகளிலும் உள்ள மக்களுக்கு முதலிடும் கலையை இது திறம்பட விளக்குவதால், மிகுதியாகப் பணம் வைத்திருப்போர் உந்தப்பட்டுத் தம் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் ஆக்கப் பணி விரிவடைகிறது. இதனால் சமுதாயமும் பயன்பெறுகிறது. சேமிப்பைத் திரட்டும் பணியை வருவாய் ஈட்டும்பணியுடன் இணைத்துச் செயற்படுவதால், மக்கள் மென்மேலும் சேமிக்கவும், அதனை முதலீடு செய்து செல்வத்தைப் பெருக்கவும் இது துணை செய்கிறது. இது முதலிடுபவர்களுக்கு உதவுகிறது. இம்மாற்றகம் சேமிப்பின் நீர்மைத் தன்மை, ஆதாயம் ஈட்டும் தன்மை இரண்டையும் பெற விழைவோர், சேமிப்பை மிகுத்துப் பயன்பெற உதவுகிறது. இது கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கு உதவுகிறது. புதிய புதிய முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்க விரும்பும்போது மூலதனத்தேவையும் பன்டமங்கு பெருகுகிறது. இது அரசுக்கு உதவுகிறது. தற்கால அரசுகள் வெறும் காவல் அரசுகள் அல்ல; மக்கள் நலம் நாடும் நல அரசுகள். நலம், வளர்ச்சிப் பணி ஆகியவற்றிற்கென அரசின் பணத் தேவை பல மடங்கு பெருகியுள்ளது. இத்தேவையை நிறைவுசெய்ய அரசுகள் கடன் ஆவணங்களை வெளியிட்டு மாற்றகம் மூலம் பணத்தைப் பெறுகின்றன.

உறுப்பினர்கள்: தகுதி வாய்ந்தவரே இருப்பு மாற்றக உறுப்பினர்களாக முடியும் (தனி மனிதர்களையும், பதிவு செய்யப்பெற்ற நிறுவனங்களையும் 'தனி ஒருவர்' என்ற சொற்றொடர் குறிக்கிறது). மாற்றகத்தின் பல விதிகளுக்குக் கட்டுப்பட்டு உறுப்பினர்களாகும் இவர்கள் மட்டுமே மாற்றகப்பேரங்களில் ஈடுபட இயலும். ஒரு சில மாற்றகங்களில் உறுப்பினர் அல்லாதோரும் பேரங்களில் ஈடுபடுவர் என்றாலும்

அவர்தம் கடமை, பொறுப்பு, உரிமை, சலுகை எல்லாம் குறைவே.

நிருவாகம்: உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் குழுக்கள் இருப்பு மாற்றக நிருவாகத்தை மேற்கொள்கின்றன. நிருவாகக் குழு தவிர, அதற்குத் துணையான வகையில் தவறிழைப்போரை 'மேற்பார்வையிடும் குழு', 'வரிசைப்படுத்தும் குழு', 'நடுவர் குழு' போன்ற பல சிறப்புக் குழுக்களும் பணியாற்றுகின்றன.

வாங்குபவர்கள்: அங்காடியில் நுகர்வோர் போல, இருப்பு மாற்றகத்தில் பங்கு இருப்புகளையும், கடன் ஆவணங்களையும், பிறவகை ஆவணங்களையும், தனி மனிதர்களும் கூட்டுப் பங்கு நிறுவனங்களும் வாங்கும். விற்பவர்கள்: தம் பணத் தேவைக்காகப் பங்கு இருப்புகளையும், கடன் ஆவணங்களையும், கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசுகளும் விற்கும். ஆவணங்கள், இருப்பு மாற்றகத்தில் கூட்டுப்பங்கு நிறுவனங்களின் முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகள், கடன் ஆவணங்கள், அரசு வெளியிடும் கடன் ஆவணங்கள், கடன் ஆவணங்களின் மீதான உரிமைகள் விற்கவும், வாங்கவும்படுகின்றன.

அங்காடியில் செயற்படுவோரின் பல பெயர்கள்: முன்னோக்கிய பேரங்களில் ஈடுபடும் வாணிகர்களைப் பலவகைப் பெயர்களில் குறிப்பிடுவதுண்டு. கரடிகள் (Bears): எதிர்காலத்தில் விலை உயருமெனக் கருதி இப்போது வாங்குபவர்கள். காளைகள் (Bulls): எதிர்காலத்தில் விலை குறையுமெனக் கருதி இப்போது விற்பவர்கள். நொண்டி வாத்துகள் (Lame Ducks): தமது பேரத்தை முடித்து வைக்க முடியாத நிலையில் திணறிக் கொண்டிருப்பவர்கள்–கரடிகள். கலைமான்கள் (Stags): கரடிகள போன்றோ காளைகள் போன்றோ அல்லாமல் நல்ல எதிர்கால வாய்ப்புகள் உள்ள புதிய கம்பெனிகளின் கடன் ஆவணங்களின் பேரங்களில் ஈடுபடுபவர்கள்.

நிறைவிலா உறுப்பினர்கள்: மாற்றகத்தின் முழு அளவிலான உறுப்பினர்களாக இல்லாமல் வெறும் தரகர்களாக மட்டும் இருப்பவர்கள். இவர்கள் தங்கள் பெயரில் பேரங்களை நிகழ்த்த இயலாது; மற்றவர்களுக்காகத் 'தரகு மனிதர்களாகச்' செயற்படுவர்.

இசைவாணை பெற்ற உதவியாளர்கள்: இவர்கள் மாற்றகத்தின் முழுமையான உறுப்பினர்களாக இல்லாமல், மிகுந்த அளவில் வாணிகம் செய்பவர்களால் அவர்தம் உதவிக்கென அமர்த்தப்படுபவர்கள். இவர்கள் தம் பெயரால் வாணிகம் செய்தல் இயலாது; உறுப்பினர்களின் இசைவாணை பெற்றவர்களாகப் பணியாற்றுவர்.

தாராவானி வாலாக்களும் தரகர்களும் (Taravanı walas): அயல் நாடுகளில் அமைந்திருக்கும் மாற்றகங்களில் உள்ள உறுப்பினர்களைப் பணி செய்வோர், தரகர் என இருவகைப்படுத்தலாம். அதைப் போன்றே இந்தியாவில் தாராவானி வாலாக்கள், தரகர்கள் என இருவகையினர் உண்டு. மற்ற உறுப்பினர்களுக்காகவோ, பொதுமக்களுக்காகவோ செயற்படாமல், தம் கணக்கில் தமக்காகவே ஆவணப் பேரங்களில் ஈடுபடுவர் தாராவானி வாலாக்கள், பிறர் தரகர்கள். இந்தியாவில் இருவருக்குமிடையே வேறுபாடு அதிகமில்லை.

வாணிகம் நடைபெறும் முறை :இருப்பு மாற்றக வாணிகம் இருவகைப்படும். முதலாவது, உடனடிப் பட்டுவாடா ஒப்பந்தங்கள் அல்லது உடனடிப்பட்டுவாடா வாணிகம். இரண்டாவது, முன்னோக்கிய பட்டுவாடா ஒப்பந்தங்கள்.

இருப்பு மாற்றகம் முறைப்படுத்தப்பட்ட சீரிய அங்காடியாதலால் அதன் பேரங்களில் பயன்படும் ஆவணங்களை யாரும் பார்வையிடுவது இல்லை. கூட்டுப்பங்கு நிறுவனங்களின் பெயர்களையும் இம் மாற்றகத்தில் மிகச் சுருக்கமாகவே குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, 'டாடா, இரும்பு உருக்குத் தொழில்நிறுவனம்(இலிமிடெட்)' என்பதைத் திசுகோ (Tisco) என்பர். ஆவணங்களை வாங்க, விற்க விரும்புவோர் தரகரிடம் தமது விருப்பத்தைச் சொல்லிப் பேரம் பேசுவர். அதனடிப்படையில் எந்தவிதமான ஆவணங்களை, எந்த அளவுக்கு வாங்க, விற்க வேண்டும் என்ற ஓர் ஆணையைத் தரகர் பெற்றுக்கொண்டு மாற்றக அரங்கிற்குச் செல்வார். அவர் பெறுவது கீழ்வரும் ஆணைகளில் ஏதாவதொன்றாக இருக்கும்.

நிலையான ஆணை: குறைந்த அளவு விலையை வரையறை செய்து கொள்பவர் விற்கும்போது இவ்விலைக்குக் குறைத்து விற்கக் கூடாது; மிகுதியாக விற்கலாம். வாங்கும்போது இவ்விலைக்கு மிகுதியாக வாங்கலாம்; குறைத்து வாங்கக்கூடாது. கட்டுப்படுத்தப்பட்ட விலை ஆணை: உச்ச அளவு, மிகக் குறைந்த அளவு ஆகிய விலைகளைக் குறிப்பிட்டு அதற்குள் பேரம் நிகழ்த்தலாம்.

பேரவிலை ஆணை: மாற்றக நிலைக்கேற்பத் தரகர்கள் தாங்களே விலையை வரையறுத்துக் கொள்ள அனுமதிக்கும் ஆணை.

உடனடி அல்லது தள்ளுபடி ஆணை: உடனடியாகப் பேரத்தை நிகழ்த்த அனுமதிக்கவும், அவ்வாறு நிகழாவிட்டால் பேரத்தைத் தள்ளுபடி செய்வதற்கும் வகை செய்யும் ஆணை.

மாற்றக அரங்கில் வணிகர் வாங்குவதற்கான ஒரு குறைந்த விலையையும் விற்பதற்கான ஒருமிகுந்த விலையையும் உரக்கச் சொல்லுவர். தரகர், வியாபாரி விலைகள் ஒத்துப் போனால் பங்குகளின் எண்ணிக்கை, ஒப்புக்கொள்ளப்பட்ட விலை, விற்பவர் வாங்குபவர் பெயர்கள் போன்றவற்றைக் குறித்துக் கொள்வர். இவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட விலைகள், இருப்பு மாற்றகத்தில் உள்ள அறிக்கைப் பலகையில் குறிக்கப்பெறும். பின்னர் இவையே, அதிகார முறையிலமைந்த பட்டியல் விலையாகிறது. தரகர் குறிப்பிடும் விலையும் வணிகர் குறிப்பிடும் விலையும் ஒத்துப் போகாவிட்டால் தரகர் இன்னொரு வணிகரிடம் பேரம் நிகழ்த்துவார். உடனடிப் பட்டுவாடா நடவடிக்கையாக இருந்தால் உடனடியாகவும், முன்னோக்கிய பட்டுவாடா நடவடிக்கையாக இருந்தால் காலம் தாழ்த்தியும் பேரம் தீர்வடைகிறது.

உடனடிப் பட்டுவாடா ஒப்பந்தம் பம்பாய் இருப்பு மாற்றகத்தில் 7 நாட்களுக்கு மிகாமலும், கல்கத்தா இருப்பு மாற்றகத்தில் 3 நாட்களுக்கு மிகாமலும், பொதுவாக ஒரு வாரக் காலத்திற்கு மிகாமல் பேரம் தீர்வடைகிறது. ஒரேயொரு பேரம் என்றால், ஆவணங்களைப் பரிமாற்றிக் கொண்டு பணத்தைப் பெறுவர், செலுத்துவர். பல பேரங்கள் இருந்தால், நிகர வேறுபாடுகள் மட்டும் கழிவகங்கள் மூலம் தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.

முன்னோக்கிய பேரங்கள் ஊக வாணிக அடிப்படையில் அமைந்தவை. பத்திரங்கள் வாங்கப்படவோ விற்கப்படவோ மாட்டா. வேறுபாடுகளை மட்டும் கழிவகங்கள் மூலம் தீர்த்துக் கொள்வர். முன்னோக்கிய பேரத்தில் விருப்பப் பேரம், இறுதி நிலை வாணிகம், நடுநிலை, மறைப்பு விற்பனை, மூலை அடக்கம் (Cornering), பின்னிருந்து முடக்குதல், குறுகிய விற்பனை, எதிர்காலப் பயன்களையும் கொண்ட பேரம், முடிவுற்ற பலன்களையும் கொண்ட பேரம் எனப்பல வகைகள் உண்டு.

ஆவணங்களை வரிசைப்படுத்துதல்: முதலிட விரும்பும் பொதுமக்கள், கடன் ஆவணங்களை வெளியிடும் நிறுவனம் ஆகியவற்றின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் வெளியிடும் கடன் ஆவணங்களை இருப்பு மாற்றகம் வரிசைப்படுத்தலாம். இது ஒரு சிறப்புப் பணி. எல்லா நிறுவனங்களின் ஆவணங்களையும் வரிசைப்படுத்தப்பட வேண்டிய தேவை இல்லை. ஆனால், இவ்வாறு வரிசைப்படுத்தும் ஆவணங்கள் நீர்மைத்தன்மை, உடனடியாக விற்பனையாதல், மாற்றுதல், விலை தொடர்ந்து இருக்கும் நிலை போன்ற பல சிறப்புத் தகுதிகளைப் பெறுகின்றன. இவ்வாறு வரிசைப்படுத்தப்படும் ஆவணங்கள் தூய்மைப்படுத்தப்பட்ட ஆவணங்கள், தூய்மைப்படுத்தப்படாத ஆவணங்கள் என இருவகைப்படும்.

இந்தியாவில் இருப்பு மாற்றகம்: இந்தியத் துணைக் கண்டத்தில் இருப்பு மாற்றகம் 1933-இல் பம்பாய், கல்கத்தா, அகமதாபாத்து ஆகிய முப்பெரு நகர்களில் மட்டுமே இருந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் விரைவான வளர்ச்சியைப் பெற்றது இம் மாற்றக எண்ணிக்கை. ஆனால், திட்டமில்லா வளர்ச்சியின் விளைவாகக் குழப்பமும் வீழ்ச்சியும் தோன்றின. இவற்றைத் தவிர்க்க 1947-இல் டாக்டர் பி.டி. தாமசு அவர்களை மாற்றகங்களின் செயற்பாடு குறித்து ஆய்வு செய்ய இந்தியப் பேரரசு அமர்த்தியது. அவர் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏ. டி. கோர்வாலா அவர்கள் தலைமையில், 1951-இல் ஒரு புதிய குழுவை அரசு அமர்த்தியது. ‘கடன் ஆவண ஒப்பந்தம், இருப்பு மாற்றகங்கள் நெறிப்படுத்தும் உத்தேசச் சட்டக் குழு’ என்ற பெயருடன் அமைந்த இக்குழுவின் பரிந்துரைகள் பல. அவற்றுள் சிறப்பானவை: (அ) இருப்பு மாற்றகத்திற்கு அரசு ஒப்புதல் தரும் முறையை மேற்கொள்ள வேண்டும். (ஆ) ஊக வாணிகத் தீமைகளைக் களைய, ஒப்பந்தங்களை நெறிப்படுத்த வேண்டும். (இ) நிலையான ஓர் இருப்பு மாற்றகக் குழுவை அமர்த்த வேண்டும். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு ‘1956-ஆம் ஆண்டின் கடன் ஆவணங்கள் (ஒப்பந்தங்கள்) நெறிப்படுத்தும் சட்டத்தை’ அமைத்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் பம்பாயைத் தலைமையகமாகவும், கல்கத்தாவையும், தில்லியையும் கிளைகளாகவும் கொண்ட ஓர் இருப்பு மாற்றகச் சிறப்பு இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டது. இப்போது இந்திய அரசின் ஒப்புதல் பெற்றுள்ள இருப்பு மாற்றகங்களின் எண்ணிக்கை ஒன்பது. அவையாவன:

1) பம்பாய் இருப்பு மாற்றகம் (1957).
2) அகமதாபாத்து பங்கு, இருப்புத் தரகர்களின் கழகம் (1957).
3) கல்கத்தா இருப்பு மாற்றகக் கழகம் (1957).
4) சென்னை இருப்பு மாற்றகம் (1957).
5) தில்லி இருப்பு மாற்றகக் கழகம் வரையறுக்கப்பட்டது (1957).
6) ஐதராபாத்து இருப்பு மாற்றகம் வரையறுக்கப்பட்டது (1958).
7) இந்தூர் பங்குத் தரகர்கள் கழகம் (1958).

8) பெங்களூர் இருப்பு மாற்றகம் (1963).

9) கொச்சி இருப்பு மாற்றகம் (1979).

இவற்றுள் பம்பாய் இருப்பு மாற்றகத்திற்கு மட்டும் நிலையான ஒப்புதல் உண்டு. மற்றவற்றின் ஒப்புதல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

**Bhalla, V.K.**, Investment Management, S. Chand & Company, New Delhi, 1983.

**Doodhan, Kersi. D.**, Stock Exchanges in a Developing Economy, University of Bombay, Bombay, 1962.

**Garg, K.L.**, Stock Exchanges in India, N.R. Agarwal & Company, Agra, 1964.

**Gifford, Charles & Stevens, J.A.**, Making money on the stock Exchange, Mac Gibbon & Kee. 1960.

**Gupta Umrao Lal**, Working of Stock Exchange in India, Thompson Press, New Delhi, 1972.

**Kapoor, N.D.**, Company Law and Secretarial Practice, Sultan Chand and Sons, New Delhi, 1980.

**Rajan Nair, N.**, Marketing, Sultan Chand and Sons, New Delhi, 1982.

**இருப்பைக்குடிக் கிழவன்**: பாண்டியச் சிற்றரசனும் அரசியல் அதிகாரியுமான இவன் சீமாற சீவல்லவன் (கி.பி. 815-862), இரண்டாம் வரகுண பாண்டியன் (கி.பி. 862-890) ஆகிய இரு பாண்டிய வேந்தர்களின்கீழ்ப் பணிபுரிந்தவன். இவன் எட்டிச் சாத்தான் எனவும் சத்துரு பயங்கர முத்தரையன் எனவும் அழைக்கப்பட்டான். இருக்கன்குடியைத் தலைநகராகக் கொண்டு, சாத்தூர்ப் பகுதியை இவன் ஆண்டு வந்தான். இப்பகுதி இருஞ்சோணாடு எனவும் சொல்லப்பட்டது. இவன் தன் வாழ்நாளின் பெரும்பகுதியினை நாட்டின் நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதில் செலவிட்டான். இவன் எண்ணிறந்த குளங்களையும் ஏரிகளையும் வெட்டி அவற்றைப் பழுது பார்த்து, வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்துள்ளான். வறட்சிக்குப் பெயர் பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியான, இருஞ்சோணாட்டை வளப்பம் மிக்க பகுதியாக மாற்றிய பெருமை இவனைச் சாரும்.

ஆதாரங்கள்: இருப்பைக் குடிக் கிழவனின் நீர்ப்பாசனப் பணிகள், கோயிற் பணிகள் மற்றும் பிற பணிகளைப் பற்றி அறிந்து கொள்ள, இருக்கன்குடிப்பாறைக் கல்வெட்டு, நென்மேனி கண்மாய்க் கல்வெட்டு, சின்ன கொல்லப்பட்டிக் கல்வெட்டு, இருக்கன்குடியில் உள்ள நீண்ட அகவல் பாடல் கல்வெட்டு ஆகியன பெருந்துணை புரிகின்றன.

நீர்ப்பாசனப் பணிகள்: இவனது நீர்பாசனப் பணிகள் நான்கு வகைப்படும். அவையாவன: 1. புதிய ஏரிகளை வெட்டுதல். 2. பழைய குளங்களை ஆழப்படுத்திக் கரையை உயர்த்தி, அவற்றில் மடை அமைத்தல். 3. பெரிய குளங்களில் உள்ள கரைகளை இடித்து நீண்ட, உயர்ந்த கரைகளை அமைத்தல். 4. பழைய மடைகளைப் புதுபித்தல்.

புதிய ஏரிகளை வெட்டுதல்: இவன் தென் வெளியங்குடி, கும்மணமங்கலம், இருப்பைக்குடி, கொழுவூர் போன்ற ஊர்களில் ஏரிகளை வெட்டுவித்தான். முதலிரண்டு ஊர்களில் வெட்டப்பட்ட ஏரி இவனது பேரால் கிழவனேரி என்று பெயர் பெற்றது. இருப்பைக் குடியில் திருமாலேரியை வெட்டினான். கொழுவூரில் சீமாறன் சீவல்லபன் பெயரில் மாறனேரி ஒன்றையும், புகழ்நெறி நடை ஏரி, புகழ் மலி ஏரி என்னும் பெயர் கொண்ட இரு ஏரிகளையும் வெட்டினான். சிறீவல்லபமங்கலம் என்னும் ஊரில் இவன் திருநாராயணன் ஏரியை வெட்டி, அதற்குக் குளவாயோடு மடையும் அமைத்தான்.

பழைய குளங்களைச் சீரமைத்தல்: கொழுவூரில் உள்ள செங்குளத்தையும், அரசங்குளத்தையும் இவன் செப்பனிட்டான். ஆலங்குடிப் பெருங்குளம் இவனால் சீர்படுத்தப்பட்டு, மடையும் புதிதாக அமைக்கப்பட்டது.

பழைய கரையை இடித்துப் புதுக்கரையமைத்தல்: இவன் பல பழங்குளங்களில் இருந்த பழைய, பழுதுபட்ட கரைகளை இடித்து, புதுக்கரைகளைக் கட்டினான். அவற்றுள் சிலவற்றுக்குக் 'கிழவனேரி' எனப் பெயர் மாற்றினான். இவற்றுள் இருப்பைக்குடி வள்ளைக்குளம், நென்மலிப்பெருங்குளம், சிறுபுத்தூர் பாழிக்குளம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

மடைகளைப் புதுப்பித்தல்: இவன் சாத்தனூரில் பெருங்குளம், புதுக்குளம் ஆகியவற்றைச் சீர்திருத்தி மடைகளை அமைத்தான். சில குளங்களை இவன் கற்கள் கொண்டு பலப்படுத்தினான்.

பிறபணிகள்: நீர்ப்பாசனத்தைப் பெருக்க ஏரிகளையும் குளங்களையும் வெட்டிய இத்தலைவன், கோயில் கட்டுவதிலும் மண்டபம் கட்டுவதிலும் அப்

பலம் அமைப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தான். எம்மதமும் சம்மதம் என்னும் பரந்தகொள்கையைக் கடைப்பிடித்த இவன், முதலூரிலும் தென் வெளியங்குடியிலும் சிவன் கோயில்கள் அமைத்தான். இருப்பைக்குடியில் சமணப் பெரும்பள்ளி ஒன்றினையும் அமைத்தான்.

அக்காலத்தில் ஊர்ச்சபையினர் அம்பல மண்டபங்களில் கூடியிருந்து ஊரின் நிருவாகத்தைக் கவனித்து வந்தனர். ஊர்த் தொடர்பான எந்தச் செய்தியும் இவ்வம்பலத்தில்தான் பேசப்படும். உள்ளாட்சி நிருவாகத்தில் ஈடுபாடு கொண்ட இருப்பைக்குடிக் கிழவன், இருஞ்சோணாட்டின் பல பகுதிகளில் அம்பலமண்டபங்களைக் கட்டினான். இவற்றுள் சில கருங்கற்களால் அமைக்கப்பட்டன. இக்கிழவன் கட்டிய அம்பலங்களுள் இருப்பைக்குடி, தென்வெளியங்குடி, நென்மேலி, கும்மணமங்கலம் முதலான ஊர்களில் அமைக்கப்பட்டவை மிகவும் குறிப்பிடத்தக்கவை.

பாண்டிய நாட்டைச் சோழ நாடு போன்று செழுமையாக்கிய இச்செயல் வீரன், 'சத்துருபயங்கர முத்தரையன்' எனவும் குறிக்கப்படுவதால், எதிரிகளை வென்ற மாவீரனாகவும் விளங்கினான் என்றறியலாம். இவன் சீமாற சீவல்லபனின் ஆணத்தியாகவும் பணிபுரிந்தான்.

இருப்பைக்குடிக் கிழவன் மேற்கொண்ட நீர்ப்பாசனப் பணிகள் இன்றும் பயனளிப்பதால் (எடுத்துக்காட்டு. இருப்பைக்குடியில் உள்ள மேலமடைப் பெரிய குளம், ஆலம்பட்டிக்குளம்) இவனது பெரும் பணி போற்றுதற்குரியது.

ம.இரா.த.

**இருபதாம் நூற்றாண்டு மொழியியல்:** மொழியில் கால ஓட்டத்தில் நிகழும் மாற்றங்களை விளக்குவதைக் கருப்பொருளாகக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியல் இயங்கிவந்தது. வேறு முறையில் கூறப்போனால், மொழியின் வரலாற்றை விளக்குவதே மொழியியலாகக் கருதப்பட்டது. ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகளை ஒப்பிட்டு ஆராய்வதும் மொழியியல் ஆய்வாக அமைந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்த அறிஞர்கள் மொழிகளின் ஒப்பீட்டையும் அவற்றின் வரலாற்றையுமே மொழியியலாகக் கருதினார்கள்.

**சமதளப் பார்வையும் வண்ணனை மொழியியலும்:** சசூர் (Ferdinand de Saussure) என்ற அறிஞரின் நுழைவு மொழியியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. வரலாற்றோடும் ஒப்பீட்டோடும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட மொழியியலுக்கு வேறொரு கோணத்தை இவர் அறிமுகப்படுத்தினார் மொழியை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் மொழியின் அமைப்பைச் சமதளப் (Synchronic) பார்வையில் பார்க்கின்ற அணுகுமுறையை முதலில் வளர்த்தாக வேண்டுமென்று இவர் வலியுறுத்தினார். மொழியின் வரலாற்றைப் புரிந்து கொள்ள முதற் கட்டமாக மொழியின் அமைப்பைச் சமதளப் பார்வையில் விளங்கிக் கொள்ள வேண்டும். பல்வேறு கால கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு காலகட்டத்தின் மொழி அமைப்பையும் முதலில் தெளிவுற விவரிக்க வேண்டும். இவ்வாறு மொழியை அணுகி விவரிக்கின்ற மொழியியல் ஆய்வை வண்ணனை மொழியியல் (Descriptive Linguistics) என்று மொழியியலார் குறிப்பிடுகின்றனர். பல்வேறு கால கட்டங்களில் விவரிக்கப்பட்ட மொழியின் அமைப்பை ஒப்பிடும்பொழுது மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் நன்கு தெரியவருகின்றன. தருக்க அடிப்படையில் வண்ணனை மொழியியல் வரலாற்று மொழியியலுக்கு முந்தியது வண்ணனை மொழியியல் அடிப்படையில் மொழியின் பல்வேறு காலகட்டங்களின் இலக்கணங்களைத் தாம் வரலாற்று மொழியியல் ஒப்பிட்டு, மொழியின் வரலாற்றை உருவாக்குகிறது. இக்கால மொழியியலின் முதன்மையான பாதிப்பு மொழியைச் சமதளப் பார்வையில் அணுகி மொழியின் அமைப்பை விளக்குவது.

**பேச்சும் மொழிக்கிடங்கும்:** மொழியின் தன்மையை விளக்கியதில் சசூரின் பங்கு முக்கியமானது. மக்கள் ஒவ்வொருவரும் பேசும்பொழுது தனித்தனியாக வெளிப்படுகின்ற மொழியின் வடிவைப் பேச்சு (Parole) என்றும், மொழியைப் பேசுகின்ற அனைவருக்கும் பொதுவாக அமைந்துள்ள மொழிக்கூறுகளை மொழிக்கிடங்கு (Language) என்றும் அவர் பாருபாடு செய்தார். சமூகவியல் அறிஞர் தர்க்கைம் (Durkheim கி.பி. 1858 -1917) என்பவரின் செல்வாக்குச் சசூரை மிகவும் பாதித்தது. சமுதாயச் செய்திகள் (Social facts) அறிவியல் செய்திகளைப் போன்றவை; ஆகையால் அவற்றை இயற்கை அறிவியல் செய்திகளைப் போன்றே அணுக வேண்டும். தனி மனிதனின்மேல் சமுதாயச் செய்திகளும் இயற்கை அறிவியல் செய்திகளும் புறக் கட்டுப்பாட்டை விதிக்கின்றன. தனி மனிதன் சமுதாயத்தின் உறுப்பினனாக இருக்கும் பொழுது இக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும். இக்கட்டுப்பாடுகள் சமுதாயம் முழுமைக்கும் பொதுமையானவை. சசூர் மொழியைச் சமுதாயச் செய்திகளில் ஒன்றாக நோக்கினார். ஆகையால், சமுதாயம் முழுமைக்கும் பொதுமையான மொழிச் செய்திகளை ஆய்வதில் மொழி

ஆராய்ச்சி தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சசூர் வலியுறுத்தினார். இந்நோக்குச் சசூருக்கு மொழியை முற்றிலும் மாறுபட்ட கோணத்திலும் புதிய கோணத்திலும் பார்க்க உதவியது.

இரட்டை அமைப்பு: அமைப்பு மொழியியல் (Structural Linguistics) உருவாகுவதற்கு வித்திட்டவர் சசூர் என்று கூறலாம். இவர் கூறிய கருத்துகள் பின்னர்ப் பலராலும் பல்வேறு வகைகளில் வளர்க்கப்பட்டன. அமைப்பு என்ற கருத்து இக்கால கட்டத்தில் வளர்ந்த மொழி ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்தது. மொழியின் முக்கியமான இயல்பு இரட்டை அமைப்பு (Duality of Structure); ஒன்று, ஒலியனியல் நிலையிலான அமைப்பு (Phonological Structure); மற்றொன்று, இலக்கண அமைப்பு (Grammatical Structure). ஒவ்வொரு நிலையும் அந்நிலையில் அலகுகள் (Units) கொண்டு விவரிக்கப்படுகின்றது. ஒலியனியல் நிலையில் ஒலியன் (Phoneme) என்பது அடிப்படை அலகு. ஒலியனியலின் அமைப்பு ஒலியன்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றது. இலக்கண நிலையில் உருபன் (Morpheme) என்பது அடிப்படை அலகு. இலக்கண அமைப்பு உருபன்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றது. ஒலியன்களைக் கொண்டும் உருபன்களைக் கொண்டும் மொழியின் அமைப்பு விவரிக்கப்பட வேண்டும் என்றால், ஒலியன்களையும் உருபன்களையும் கண்டுபிடிக்கின்ற வழிமுறைகளை முதலில் வரையறுக்க வேண்டும்.

சேர்க்கைப் பரிமாணமும் இணைவுப் பரிமாணமும்: கண்டுபிடிக்கப்பட்ட ஒலியன்களையும் உருபன்களையும் கொண்டு எவ்வாறு ஒலியனியல் அமைப்பையும் இலக்கண அமைப்பையும் விளக்குவது? அமைப்பு என்றால் என்ன? அலகுகள் ஒவ்வொரு நிலையிலும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பை அமைப்பு என்று வரையறுக்கலாம். இரு பரிமாணங்களில் இத்தொடர்பை வரையறுப்பதாகக் கூறலாம். ஒன்று, சேர்க்கைப் (Paradigmatic)பரிமாணம்; மற்றொன்று, இணைவுப்(Syntagmatic)பரிமாணம்; மாற்றீட்டு முறையை(Substitution Method) அடிப்படையாகக் கொண்டு அலகுகளுக்கிடையிலான சேர்க்கைப் பரிமாணத் தொடர்பு வரையறுக்கப்படுகிறது. வா- என்பதன்முன் ல், ள், ழ், ஆகியவற்றைப் பயன்படுத்தி வால், வாள், வாழ் போன்ற சொற்களை உருவாக்கலாம். இங்கு, ல், ள், ழ் ஆகிய ஒலியன்கள் சொல்லின் இறுதியில் குறிப்பிட்ட ஒரு சூழலில் தங்களுக்குள் ஒருவிதத் தொடர்பைச் சேர்க்கைப் பரிமாணத்தில் ஏற்படுத்திக் கொள்கின்றன. எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் இணைந்து வருவதில்லை. சில ஒலியன்கள் சில ஒலியன்களோடு மட்டும்தாம் இணைந்து வரும். இவ்வாறு ஒலியன்கள் இணைந்து வருகின்ற முறைமைதான் ஒலியனியல் நிலையில் காணும் இணைவுப் பரிமாணத் தொடர்பு. பையன்களை என்ற சொல்லை இலக்கண நிலையில் எடுத்துக் கொண்டால், இச்சொல்லில் மூன்று உருபன்கள் இருக்கின்றன. அவை: பையன், கள், ஐ. பையன் என்ற உருபன் முதலில் வருகிறது. கள் என்ற உருபன் பையன் என்ற உருபனையும் ஐ, என்ற உருபன் கள் என்ற உருபனையும் அடுத்து வருகின்றன. இவ்வாறு வருகின்ற உருபன்கள் தங்களுக்குள் ஒருவிதத் தொடர்பை இணைவுப் பரிமாண நிலையில் ஏற்படுத்திக்கொள்கின்றன. இதுவரை விளக்கிய இவ்விரு பரிமாணங்களின் அடிப்படையிலேயே மொழியின் இலக்கணம் உருவாக்கப்பட்டது.

சமத்துவப் பார்வை: அமெரிக்க நாட்டில் மானிடவியலாளர்கள் பழங்குடி மக்களின் பண்பாட்டை ஆராய முற்பட்டபொழுது மொழி ஒரு தடையாக இருந்தது. மேலும், பண்பாட்டின் அங்கங்களுள் ஒன்றாக மொழி நோக்கப்பட்டது. மொழியின் இலக்கண அமைப்பும் சொற்களும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டை ஓரளவு வெளிப்படுத்துவன. ஆகையால் பண்பாட்டு ஆய்வின் பகுதியாக மொழியாய்வு கருதப்பட்டது. ஆகையால், மானிடவியலாளர்கள் மொழிக்கு இலக்கணம் எழுதுகின்ற நெறிமுறைகளைக் காண முற்பட்டனர். மானிடவியலின் செல்வாக்கையும் இக்காலகட்டத்தில் மொழியியலில் காணலாம். பண்பாடுகளுக்கும் ஏற்றத்தாழ்வைக் கற்பிப்பது தவறானது. ஒவ்வொரு குழுவின் பண்பாடும் அக்குழுவின் அமைப்பையும் பயன்பாட்டையும் ஒட்டி அமைந்தது. இதன் பின்னணியில் மொழியும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபொழுது சில கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது ஒவ்வொரு மொழியும் அதற்கென்று தனித்த ஓர் அமைப்பை உடையது என்றகருத்து வலியுறுத்திக் கூறப்பட்டது. அமைப்பின் அடிப்படையில் மொழிகள் எல்லாம் சமமானவை என்பதும், ஒவ்வொரு மொழியும் அதன் சமுதாயத் தேவைகளைச் சிறப்பாகவே நிறைவேற்றுகின்றது என்பதும் வலியுறுத்தப்பட்டன. மொழிகள் தங்களுக்குள் வரையறுக்க இயலாத முறைகளில் வேறுபடலாம். மொழிகளுள் சிலவற்றை வளர்ந்த மொழிகள் என்றும் வேறு சிலவற்றை வளராத மொழிகள் என்றும் கூறுவது அமைப்பு அடிப்படையில் பொருள் அற்றது. மொழியின் அமைப்பே பொதுவாகச் சிக்கலானது. மொழிகள் அனைத்தும் சமமானவை என்று பார்க்கின்ற பார்வை இந்நூற்றாண்டில் வளர்ந்த


மொழியியலின் குறிப்பாக அமைப்பு மொழியியலின் பாதிப்பினால்தான் என்று கூறலாம். சமுதாயங்களுக்குள் ஏற்றத்தாழ்வை நாடிச் சமுதாயங்கள் அனைத்தும் சமமானவை என்று நோக்குகின்ற தத்துவத்திற்கு அமைப்பு மொழியியல் பக்க பலமாக நிற்கிறது.

**பேச்சின் முதன்மை:** இன்னொரு சிறந்த கண்ணோட்டத்தையும் இது வளர்த்தது. பல சமுதாயங்களில் மொழி பேச்சு வழக்கில் மட்டும் இருப்பதைக் காணலாம். எழுத்து வழக்கில் இல்லாத மொழிகள் உலகில் எவ்வளவோ இருக்கின்றன. வரலாற்று நோக்கில் பார்க்கும் பொழுது எழுத்து வழக்கு என்பது பேச்சு வழக்கிற்குப் பிந்தியது. பேச்சு வழக்கில் உள்ள மொழிதான் உயிருள்ள மொழி. பேச்சு வழக்கிழந்த மொழியை இறந்த மொழி என்று கூட மக்கள் கூறுவார்கள். ஆகையால், பேச்சு முதன்மையானது. எழுத்து வழக்கில் உள்ள மொழிக்குமட்டும் இலக்கணம் எழுதுகின்ற நிலைமை மாறியது. பேச்சு மொழியும் ஓர் ஒழுங்கிற்கு உட்பட்டு அமைந்துள்ளது என்றும் அதற்கு இலக்கணம் எழுத முடியும் என்றும் இருபதாம் நூற்றாண்டு மொழியியல் வலியுறுத்தியது. இப்பின்னணியில்தான் பேச்சுமொழி மொழியியலில் முதன்மை பெறத் தொடங்கியது.


**பேச்சின் இயல்பைமட்டும் விவரித்தல்:** மொழியியலின் அடிப்படையில் எழுதப்படுகின்ற இலக்கணங்களின் நோக்கத்திற்கும் பள்ளிகளில் கற்பிக்கப்பயன்படுத்தும் இலக்கணங்களின் நோக்கத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடொன்று உண்டு. மொழியியலின் முதல்நோக்கம் மக்கள் மொழியை எவ்வாறு பேசுகிறார்கள் என்பதை விவரிப்பது. ஆகையால், மொழியியலின் கோட்பாட்டில் உருவாக்கப்பட்ட இலக்கணம் மக்கள் பேசும் விதத்தை விவரிக்கின்றது. மக்கள் இப்படித்தான் பேசவேண்டுமென்று இலக்கணங்கள் விதிகளை விதிப்பதில்லை. பேச்சின் இயல்பை உள்ளவாறு விவரிப்பதோடுமட்டும் அவை நின்றுவிடுகின்றன. இது மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாகும் இலக்கணங்களின் தன்மை.

மொழியியல் கோட்பாடுகள் மொழியின் ஒலியனியல் அமைப்பையும், சொற்களை அடிப்படையாகக் கொண்ட உருபியலையும் (Morphology) வெற்றிகரமாக விவரிக்கப் பயன்பட்டன. தொடரியலை விளக்க எழுந்த பல்வேறு கோட்பாடுகளில் மாற்றிலக்கணக் கோட்பாடு (Transformational Generative Grammar) இந்நூற்றாண்டு மொழியியல் வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அமைப்பு மொழியியல் முன்வைத்த இரு பரிமாணங்களுடன் இது மூன்றாம் பரிமாணத்தையும் உள்ளடக்கியது.


தொடரியல் வாக்கியத்தின் அமைப்பை விளக்க முற்பட்ட மாற்றிலக்கணம் படிமநிலை (Hierarchical Structure) அமைப்பு என்ற மூன்றாம் பரிமாணத்தை அறிமுகப்படுத்தியது. மொழி அமைப்பு இதுவரை சேர்க்கைப் பரிமாண அடிப்படையிலும் இணைவுப் பரிமாண அடிப்படையிலும் விளக்கப்பட்டது. வாக்கியத்தில் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதன் அடிப்படையில் மட்டும் அமைப்பை விளக்க முடியாது. சொற்கள் ஒன்று சேர்ந்து செயற்படுகின்ற தொகுதி முறையையும் விளக்க வேண்டும். வாக்கியத்தால் உணர்த்தப்படுகின்ற பொருள் சொற்கள் தொகுதிகளாகச் செயற்படும் முறையையும் பொறுத்தது. சான்றாக, புதிய மாணவர் சங்கம் என்ற தொடரை எடுத்துக்கொண்டால் இது மாணவர்கள் புதியவர்கள் என்ற பொருளையும் சங்கம் புதியது என்ற பொருளையும் அளிக்கிறது. இதை,




என்றும்




என்றும் காட்டலாம். வாக்கியத்தையும் தொடரையும் விளக்கும்பொழுது இவற்றை இரண்டு இரண்டு பகுதிகளாகச் சொற்கள் நிலைவரை பிரிக்கலாம். இவ்வாறு பிரிக்கும்பொழுது தொடருக்குரிய குறியீடுகளையும் இலக்கணப் பகுப்புகளுக்குரிய குறியீடுகளையும் பயன்படுத்தலாம். சான்றாக, ஆசிரியர்கள் நிதியமைச்சரைச் சந்தித்தார்கள் என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டு, இதை,



என இவ்வாறு காட்டலாம். தன்னுடைய ஆய்வைத் தீவிரப்படுத்திய மாற்றிலக்கணம் மொழியாய்வில் படிமநிலை அமைப்பின் அவசியத்தைத் தெளிவுபடுத்தியதோடு, வாக்கியத்திற்கு அக அமைப்பு என்ற ஒரு நிலையையும், புற அமைப்பு என்ற ஒரு நிலையையும் வலியுறுத்தியது. மாற்றிலக்கணம் தொடரியலை விளக்க முற்பட்ட முயற்சி மொழியியலில் புரட்சியையும், உளவியல், மானிடவியல், தத்துவம் போன்ற துறைகளில் ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தியது. தொடரியலை விளக்கியதோடுமட்டுமன்றிப் பொருண்மையியல் ஆய்வுநெறிமுறைகளுக்கும் ஒரு வழி கோலியது மாற்றிலக்கணம்.

மொழிப் பொதுமைகள்: தனி மொழியின் அமைப்பை விவரிப்பதிலிருந்து மொழிகளின் பொதுமைகளைக் (Language Universals) காணும் முயற்சியில் மாற்றிலக்கணம் ஈடுபட்டது. இவ்வாறு ஆய்வுகளின்மூலம் வெளிப்படுத்தப்பட்ட மொழிப் பொதுமைகளுக்கும், மனித மனத்திற்கும் உள்ள தொடர்பின் இயல்பை ஆராய வேண்டும் என்று மாற்றிலக்கணம் வற்புறுத்தத் தொடங்கியது மனத்தின் இயல்பை மொழிவழி அறியலாம் என்ற அணுகுமுறையை மாற்றிலக்கணம் வற்புறுத்தியது. உளவியலும் மொழியியலும் ஒன்றுகூடி உளமொழியியல் என்னும் துறை வளர வகைசெய்தது. மாற்றிலக்கண அறிமுகத்திற்கு முன்பே அறிஞர்கள் இத்துறையில் ஈடுபட்டிருந்தாலும், தீவிரமான ஆய்வு மாற்றிலக்கணத்தின் பாதிப்பால் ஏற்பட்டது.

மொழியும் சமுதாயமும்: இதுகாறும் விளக்கப்பட்டுள்ள ஆய்வுகளில் எல்லாம் மொழி அது பேசப்படும் சமுதாயச் சூழலிலிருந்து பிரித்து விவரிக்கப்பட்டது. ஒவ்வொரு மொழியும் அது பேசப்படுகிற சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. மொழியின் பயன்பாட்டிற்கும் மொழியின் அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை அறிஞர்கள் வலியுறுத்தினார்கள். மொழியின் பயன்பாட்டை ஆராய முற்படும்பொழுது அது பயன்படுத்தப்படுகிற சமுதாயத்தின் அமைப்பும் பின்னணியும் தேவைப்படுகின்றன. மொழிக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய வேண்டும். சமுதாய மாற்றம் மொழியைப் பாதிக்கிறது. மேலும், சமுதாய வேறுபாடுகளும் அமைப்பு முறைகளும் மொழியின் அமைப்பிலும் வெளிப்படுவதைக் காணலாம். இதன் பின்னணியில் பேச்சு வழக்கை இரண்டு விதமாகப் பிரித்தார்கள். ஒரு மொழியைப் பேசுகின்ற மக்கள் பரந்த நிலப்பரப்பில் வாழும்பொழுது, அவர்களுக்கிடையே உள்ள தொடர்பின் நெருக்கம் குறைவாக இருக்கும்பொழுது, அவர்களுடைய பேச்சில் வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படலாம். இதற்கு நேர்மாறாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் பேச்சில் ஒற்றுமை அதிகமாக இருக்கலாம். நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு மொழி வழக்கை ஆய்கின்ற ஆய்வை வட்டார வழக்கு ஆய்வு என்று குறிப்பிடுகிறார்கள். மொழி வழக்கை இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள் தங்களுக்குள் தொடர்பு கொண்டிருந்தாலும் தங்களுடைய பேச்சு வழக்கில் வேறுபாடுகளைக் காட்டுகிறார்கள். அந் நிலப் பரப்பில் வாழும் மக்கள் பொருளாதார அடிப்படையிலேயோ சாதி அடிப்படையிலேயோ வேறுபட்டிருக்கலாம். இத்தகைய சமுதாய வேறுபாடுகள் அவர்கள் பேசுகிற பேச்சு வழக்கில் வெளிப்படுகின்றன. இவ்வாறு மக்கள் சமுதாய அடிப்படையில் வேறுபடும் பேச்சு வழக்கைச் சமுதாய வழக்கு என்னும் தலைப்பில் ஆய்வு செய்யமுற்படுகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டு மொழியியல் இங்கு முழுமையாக விவரிக்கப்பட்டதாகக் கூற முடியாது. குறிப்பாகப் பல்வேறு நாடுகளில் வளர்ந்த கோட்பாட்டு மொழியியல் சிந்தனைகளை இங்கு விளக்க முடியவில்லை. மொழியியலில் பயன்படுத்தப்படும் மற்ற அறிவுத்துறைகளைப் பற்றி இங்கு ஒன்றும் குறிப்பிடவில்லை. கோட்பாட்டு மொழியியல் வளர்ச்சி, மொழிக்கும் மனித மனத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கும் உளமொழியியல் ஆய்வு, மொழிக்கும் அது பேசப்படும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கும் சமுதாய மொழியியல் ஆய்வு ஆகியவை இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.அ.

துணை நூல்கள்:

**Lyons**, J., Introduction to Theoretical Linguistics, Cambridge, University Press, Cambridge, 1968.

**Rangan**, K., Some Remarks on the Goals and Methods of Taxonomic Linguistics, Transformational GenerativeGrammar and Sociolinguistics in IJDL.

**இருபா இருபஃது** என்னும் நூல் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை விளக்கும் பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றாகும். வெண்பாவும் ஆசிரியப் பாவும் மாறி மாறி வந்து வகைக்குப் பப்பத்துப் பாக்களாக இருபது பாடல்களில் இந்நூல் அமைந்துள்ளது. அதனாலேயே இந்நூலுக்கு ‘இருபா இரு

ப∴து'என்னும்பெயர் ஏற்பட்டது. இது அந்தாதித் தொடையால் அமைந்தது.

சித்தாந்த சைவ சமயத்தில் மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் என்னும் நால்வர் சந்தான குரவர் எனப்பெறுவர். அவர்களுள் அருணந்தி சிவாச்சாரியாரே சிவஞானசித்தியாரையும் இருபாஇருபதையும்இயற்றினார். இவர் மெய்கண்டாரின் மாணவர்; ஆதி சைவ மரபினர். முதலில் திருத்துறையூரிலும் பின்னர்ச் சீர்காழியிலும் வாழ்ந்த இவர் இறுதிக் காலத்தில் மீண்டும் திருத்துறையூரில் வாழ்ந்து இறப்புற்றார். சிவஞானசித்தியார் மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு விளக்கவுரை போன்றது. சைவ சித்தாந்தச் சார்பான சில வினாக்களை ஆசிரியர் தாமே எழுப்பி அவற்றிற்கு விடை அளிக்கும் பாங்கில் இவ்விருபா இருபது அமைக்கப்பட்டுள்ளது.

முதற்பாட்டில் 'சிவபெருமானே மெய்கண்டாராக இவ்வுலகில் தோன்றினார்; அவரைப் போற்றுபவர் ஞானக்கண் பெறுவர்' எனக் குருவணக்கம் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் பாட்டில் கேள்விகள் கேட்பதுபோல் கேட்டு, அவற்றிற்குரிய விடைகளை அமைத்து, மக்களுக்குச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்குகிறார். இறைவன் உயிர்க்கு அருளும் முறை எது? எனக் கேட்டு, அவன் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருந்து அருள்வன் என விடையும் இறுத்துள்ளார். பின், அவ்வாறு அருள்வது எப்போது? என வினவி, உயிர் பக்குவம் எய்தும்போது அருள்வான் என்று கூறுகிறார். மேலும், இறைவன் தன் கருணையினால் உயிர் பக்குவம் அடைதற் பொருட்டு அதற்குப் பல பிறப்புகள் அருளி, இன்பம், துன்பம் முதலியவற்றை நுகரச் செய்கிறான் என்னும் விடையும் கூறியுள்ளார். இது போன்று பாக்களுள் பல வினாவாகவும் சிலவிடையாகவும் அமைந்துள்ளன. இந்நூல் சைவ சித்தாந்தம் பற்றிய ஐயம் திரிபுகளை நீக்கித் தெளிவு பெறச் செய்யவல்லது.

இறைவன், உயிர், தளை என்னும் மூன்றும் என்றும் நிலையானவை. இறைவன் அறிவு வடிவினன். உயிர் அவன் உணர்த்த உணர வல்லது. அது இறையோடு கூடியவழி இன்புறுதலையும், தளையோடு கூடியவழித் துன்புறுதலையும் பெற்றுச் சார்ந்ததன் வண்ணமாய் அமையும் தன்மையுடையது. தளை என்பது உயிரிடத்து எப்பொழுதும் படிந்துள்ள ஆணவமலம் முதலியனவாகும். இறைவன் அருளால் ஆணவச்சேட்டை ஆற்றலற்று அமைய, அவ்வமயம் உயிருக்குப் பேரானந்தம் கிட்டும் என்பதே இந்நூலின் முடிந்த முடிபாகும்.

உயிர் இறையருள் பெறக் குருவின் திருவருள் மிகவும் வேண்டத்தக்கது என்பதனையும் சில பாடல்கள் கூறுகின்றன.

இந்நூலில் திருமுறைக் கருத்துகள், திருக்குறள் முதலிய முன்னோர் நூலின் கருத்துகள் நிறைந்துள்ளன. மெய்கண்டார் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டாதலின் இந்நூலாசிரியர் காலமும் அதுவே. அருணந்தி சிவாச்சாரியாருக்குச் சகலாகமபண்டிதர் எனவும் பெயருண்டு. இவ்விருபா இருப∴துக்குச் சீர்காழித்தத்துவநாதர், மதுரைச் சிவப்பிரகாசர், நமச்சிவாயத் தம்பிரான் முதலியோரும், பிற்காலத்தவர் சிலரும் உரைகள் எழுதியுள்ளனர். இரா.ச.

**இருபாலார் இணைக் கல்வி:** இது சிறுவர், சிறுமியருக்கும் அல்லது ஆண், பெண் இருபாலாருக்கும் சேர்ந்து, ஒரே வகுப்பறையில் ஒரே முறையான கல்வித் திட்டத்தைக் கற்பிக்கும் முறையாகும். பெண்களும் ஆண்களுக்கு இணையானவர்கள்; ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இக்கல்வி வழங்கப்படுகிறது. அமெரிக்கக் குடியரசில் உள்ள பெரும்பாலான பொதுப் பள்ளிகளில் இருபாலார் இணைக் கல்வி (Co-education) முறையே உள்ளது. ஆயினும், கிறித்தவ ஆலயப் பொறுப்பிலுள்ள பள்ளிகளும் தனியார் பள்ளிகளும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகக் கல்வி கற்பிக்கின்றன. பெரும்பாலான நாடுகளில், குறிப்பாக உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயிலுவது இன்றும் அரிதாகத்தான் இருந்து வருகிறது.

பெண்கள் பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலுவதைப் பலரும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் எதிர்த்தே வந்தனர். இந்நாட்களில் அமெரிக்கக் குடியரசில் உள்ள பெருமக்கள் பள்ளிகளில் பெண்கள் சேர்ந்து பயிலுவது என்பது இயலாத நிலையாக இருந்தது. சில பள்ளிகளில் ஆண்கள் இல்லாத மதிய வேளையிலோ அல்லது மாலை நேரத்திலோ மட்டும் பெண்கள் கல்வி கற்றனர். ஆண்களுக்கு நிகரான உரிமை கேட்டுப் பெண்கள் நடத்திய போராட்டத்தின் விளைவால், பள்ளிகளும் கல்லூரிகளும் பெண்களுக்காகக் கல்விக் கதவைத் திறந்தன.

ஒகியோ (Ohio) மாநிலத்தில் உள்ள ஓபர்லின் நகரில் (Oberlin) அமைந்த ஓபர்லின் கல்லூரியே (Oberlin College) அமெரிக்கக் குடியரசின் முதல் இருபாலார் இணைக் கல்வி வழங்கிய கல்லூரியாகும். மூன்று பெண்கள் இக்கல்லூரியில் பயின்று கி.பி. 1841-ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றனர்.

இருபாலார் இணைக் கல்வி அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத்து நாடு, கனடா, இசுகாட்லாந்து, தென்மார்க்கு, நார்வே, சுவீடன், இத்தாலி, பிரான்சு முதலிய நாடுகளில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கிலாந்து, செருமனி, கிரீசு முதலிய நாடுகளில் தொடக்கப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இக்கல்விமுறை நிலவுகிறது. பல்கலைக் கழகங்களில் பெரும்பாலும் பொருளாதார நிருவாகக் காரணங்களை முன்னிட்டு, இருபாலார் இணைக் கல்வி இருந்து வருகிறது. பல போராட்டங்களுக்குப் பின்னரே பெண்கள் ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப்பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கும் உரிமை பெற்றனர்.

இந்தியாவில் வேதகாலத்தில் இருபாலாரும் இணைந்து கல்வி கற்கும் முறை இருந்தபோதிலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை அம்முறை சிறப்பு அடையவில்லை. இராசாராம் மோகன்ராய் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் முயற்சியினால் மக்கள் பெண்களையும் ஆண்கள் பள்ளிக்கு அனுப்ப முன்வந்தனர். இந்திய நாடு விடுதலைபெற்ற பின்பும் இருபாலார் இணைக் கல்வி வரவேற்கத்தக்க வகையில் வளர்ச்சியடையவில்லை. இன்று கேரளம், மகாராட்டிரம், பஞ்சாபு முதலிய மாநிலங்களிலும் தில்லியிலும் இருபாலார் இணைக்கல்வி சிறப்பாக நடைபெறுகிறது.

இந்தியாவில் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் பாலுணர்ச்சியில் பக்குவமடையாத சிறுவர்களும் சிறுமியரும் இணைந்தே கல்வி பயிலுகின்றனர். ஆயினும், ஒரு சில உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் மட்டுமே இருபாலார் இணைக் கல்வி முறை நடைமுறையில் உள்ளது. பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பாலுணர்ச்சி தோன்றும் குமரப் பருவத்தில் (Adolescence) உள்ள மாணவர்களும் மாணவிகளும் தனித்தனியாகவே கல்வி பயின்று வருகின்றனர். இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பாலுணர்ச்சியில் முதிர்ச்சியும் பக்குவமும் அடைந்த ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்கின்றனர்.

தமிழ் நாட்டில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் தனிப் பள்ளிக்கூடங்களில் படிக்க வாய்ப்பில்லாமல் இருந்தால் மட்டும், இணைந்து படிக்கலாம் என்ற சட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதன் முதலாக ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயின்ற கல்லூரி என்ற பெருமை நாகர்கோயிலிலுள்ள இசுகாட்டு கிறித்தவக் கல்லூரி (Scott Christian College) யைச் சேரும்.

இருபுறங் கேட்டல் வழக்கில் இரு பிரிவினர்களுக்கும் அவர்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க உரிய வாய்ப்பளிக்க வேண்டும். வழக்கைக் கேட்காமல், விசாரிக்காமல் தீர்ப்புக் கூறக் கூடாது; இது இயற்கை நீதியின் முதலாம் விதியாகும். இருபுறங் கேட்டல் (Andi Alterum Pattem) விதியை வழக்கொன்றில் நடைமுறைப்படுத்தும் போது,

1. பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிப்பு (Notice) அனுப்புதல், அறிவிப்பில் அவர்மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் (Charges) தெரிவித்தல்.

2. எதிர் வாதம் செய்ய (Defence) நியாயமான காலம் (Reasonable Time) வழங்குதல்.

3. எதிராகப் பயன்படுத்தக்கூடிய முழுச் சான்றுப் பொருண்மைகளையும் (Evidential facts) ஆவணங்களையும் (Documents) ஒவ்வொரு பிரிவினருக்கும் தெரிவித்தல்.

4. சான்றுரைக்க ஒருவருடைய சாட்சிகளை (Witnesses) அழைத்துவர வாய்ப்பளித்தல்; எதிராகச் சான்று கூறுபவர்களைக் குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய வாய்ப்பளித்தல்.

5. வழக்குரைஞரைக் கொண்டு வழக்கினை எடுத்துரைக்கப் போதுமான வாய்ப்பளித்தல்.

6. நியாயமான தீர்ப்பளித்தல் (Reasoned Judgement).

7. மேல் முறையீடு (Appeal) செய்யும் உரிமை வழங்குதல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**இரும்பல் காஞ்சி** புறத்திரட்டு என்னும் தொகை நூலால் பெயரளவில் அறியப் பெற்ற ஒரு தமிழ் நூலாகும். இந்நூலைச் சார்ந்தன என்று அத்தொகை நூலால் அறியப்படும் மூன்று பாடல்களும் (5,601,1475), தக்கயாகப் பரணி உரையால் அறியப்படும் இரண்டு செய்யுட்பகுதிகளும் தவிர வேறொன்றும் இப்போது கிடைக்காமையால், இந்நூல், இதன் ஆசிரியர் பற்றிய செய்திகளை அறியஇயலவில்லை. புறத்திரட்டின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் 'நீலநெடுங் கொண்மூ' எனத் தொடங்கும் ஒரு வெண்பா

உள்ளது. இது முருகக் கடவுள் வாழ்த்தாக அமைவதனால், இந்நூலாசிரியர் முருக வழிபாட்டினராதல் வேண்டுமெனக் கருதலாம். புறத்திரட்டில் உள்ள பாடல்கள் வெண்பாக்களாகவும், தக்கயாகப் பரணி உரையில் காணப்படும் பகுதிகள் ஆசிரியமாகவும் இருப்பதால் இந்நூல் ஒரே வகைப்பாவால் அமையாது பல்வகைப் பாக்களால் ஆகியது என்பது தெரிகிறது. புறத்திரட்டுப் பாடல்களுள் ஒன்று 'வலியறிதல்' கூறுவதாகவும் (601), மற்றொன்று (1475) தொண்டையர்கோனைப் புகழ்வதாகவும் உள்ளன. இவை புறப்பொருள் தொடர்பினவாக அமைந்துள்ளமையால் இந்நூல் புறப்பொருள் பற்றியதாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

காஞ்சி என்னும் புறத்திணை நிலையாமை உணர்த்துவது என்றும், உட்காது எதிரூன்றுவதனைக் கூறுவது என்றும் இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன. காஞ்சித் திணையிலமைந்த பல்வேறு துறைப் பொருளின் மாட்சியினை விளக்குவதாக இந்நூல் அமைந்திருக்க வேண்டும். நூலின் பெயரிலுள்ள இரும், பல் என்னும் சொற்கள் இந்நூலின் பெருமையையும் விரிவையும் உணர்த்துவனவாக உள்ளன. கிடைத்துள்ள பாடலில் தொண்டையர் பற்றிய குறிப்புள்ளமையால், தமிழக அரசியல் வரலாற்றில் இவர்கள் சிறப்புப் பெற்றிருந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம். சிறந்த கேள்வி ஞானம் பெறாதவர்களுடைய செவித்துளைகள், 'எய்த அம்பு விழுந்தமையால் ஏற்பட்ட துளைகளேயாகும்' என்று கேள்விச் செல்வத்தின் சிறப்பினை இந் நூற்பாடலொன்று குறிப்பிடுகிறது. வலியறிந்து செயற்படும் வேந்தன் கடல் நடுவே சென்று போர்செய்தும் வெற்றி கொண்டு, புகழெய்துவான் என்று இந்நூல் இயம்புகிறது.

**இரும்பிடர்த்தலையார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இயற்பெயர் அறியஇயலவில்லை. ஒருவர் பாடிய பாடலில் அமைந்துள்ள சிறப்பான தொடரால் அப்புலவரைக் குறிப்பிடுவது சங்க நூல்களுள் காணும் மரபாகும். இவர் பாடிய பாடலில் அமைந்துள்ள 'கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற் பெருங்கையானை இரும்பிடர்த்தலையிருந்து' என்னும் பகுதியிலுள்ள 'இரும்பிடர்த்தலை' என்னும் தொடரின் பொருள் நயங்கருதி, இவர் இப்பெயரால் அழைக்கப்பெற்றார் எனத் தெரிகிறது. இரும்பிடர்த்தலை என்பதனைச் சிலர் ஊரின்பெயர் என்றும் கருதுகின்றனர். இவர் கரிகாற் சோழனுக்கு அம்மான் முறையினராவார். அரசியலில் அம்மன்னனுக்குப் பெருந்துணையாக விளங்கியுள்ளார். இச் செய்தியைச் 'சுடப்பட்டுயிருய்ந்த சோழன் மகனும் பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால் செயிரறு செங்கோல் செலீஇனான்' என்னும் பழமொழிப் பாடற்பகுதியாலும் அதன் பழைய உரையாலும் உணரலாம்.

இப்புலவர் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்னும் பாண்டிய மன்னனைப் பாடாண்டிணையில், செவியறிவுறுத்துப் பாடியுள்ளார். இதில் இம்மன்னனைக் 'கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி' என்றே குறிப்பிட்டுள்ளார். இப்பெயரை நோக்கும்போது, இத்தொடர்ச் சிறப்பால் இப்பாண்டிய மன்னன் இந்தப் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். வழுதி என்பது பாண்டியரைக்குறிக்கும் பொதுவான சொல்லாகும். இவருடைய ஒரே பாடல் புறநானூற்றில் நான்காம் பாடலாக அமைந்துள்ளது. இதன்கண் பாண்டி மன்னனை விளித்து, 'நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்' என்று அறிவுறுத்தியிருப்பது சிறப்பாக உள்ளது. பாடியவர் பாடப்பட்டவர் ஆகிய இருவரின் இயற்பெயரும் அறியமுடியாத நிலையில், தம்மிடம் அமைந்துள்ள தொடர்களால் அவர்களுக்குப் பெயர் வழங்கிய பெருஞ்சிறப்புடையது இப் பாடல்.

**இரும்புக் கனி ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு:** இரும்புக் கனி ஏற்றுமதி செய்யும் நாடுகளிடையே ஒத்துழைப்பு நிலவ ஓர் அமைப்பு உருவாகுதற்கு 1975-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் செனிவாவில் (Geneva) ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதே ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் இரும்புக் கனி ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (Association of Iron Ore Exporting Countries, AIEC) உருவாக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. ஒப்பந்தத்தை உருவாக்கிய இரும்புக்கனி ஏற்றுமதி செய்யும் நாடுகளுள் பல 'கார்புல்' என்னும் வணிக முற்றுரிமை நிறுவனத்தைப் போல இவ்வமைப்பும் செயற்பட வேண்டும் எனவும், உற்பத்தியிலும் விலை உறுதி செய்வதிலும் கட்டுப்பாடுகளைப் புகுத்தவேண்டும் எனவும் விரும்பின. ஆனால், ஆசுதிரேலியாவும் (Australia) சுவீடனும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததனால், இவ்வமைப்பு ஓர் அறிவுரை வழங்கும் அமைப்பாகச் செயற்படலாயிற்று.

குறிக்கோள்கள்: 1) இரும்புக் கனி ஏற்றுமதி செய்யும் நாடுகள், இரும்புக் கனி உற்பத்தி செய்தல், சுத்தம் செய்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றில் கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் தங்களுக்கிடையே அளித்தல், 2) இந்நாடுகளுக்கிடையே இரும்புக் கனித் தொடர்பான தொழில் நுட்ப அறிவு, வாணிக முன்


வெற்றம், இரும்புக் கனி உற்பத்தி அளவு ஆகியவற்றை மேம்படுத்துதல், 3) இவ்வமைப்பு இரும்புக் கனித் தொழில் தொடர்பான ஆலோசனைகளுக்கும் செய்திப் பரவலுக்கும் ஒரு பன்னாட்டு மையமாக விளங்குதல் ஆகியவை இவ்வமைப்பின் சிறப்புக் குறிக்கோள்களாகும்.

அமைப்பு: இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் ஜெனிவாவில் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள்மாநாடு நடைபெறுகிறது. ஆளுநர்க் குழுவும் செயலகமும் அமைப்பின் மேலாண்மைத்தொடரும் பணிகளைப் பொறுப்புடன் கண்காணிக்கின்றன. செயலகத்தின் இப்போதைய பொதுச் செயலாளர் பி.கே. சன்யால் (P.K. Sanyal) ஆவர். இப்போதைய உறுப்பு நாடுகளாவன: அல்ஜீரியா, ஆசுதிரேலியா, இந்தியா, சைபீரியா, மாரிட்டானியா, பெரு, சீரா லீயோன் (Sierra Leone), சுவீடன், வெனிசூலா ஆகும்.

பணிகள்: இக்கூட்டமைப்பு இரும்புக் கனித் தொழில் தொடர்பானவற்றில் பல ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறது. ஆய்வு முடிவுகள் அறிக்கைகளாகவும், புள்ளிவிவரங்களாகவும், அறிவுரைகளாகவும், பரிந்துரைகளாகவும் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய வெளியீடுகள் பல 1980-ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இரும்புக் கனிப் புள்ளிவிவரத் தொகுப்பு (Bulletin) தனியாகத் தொடர்ந்து இவ்வமைப்பால் வெளியிடப்படுகின்றது.

**இரும்புக்காலம்**: உலக வரலாற்றில் கி.மு. 1500க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்ட காலம் இரும்புக்காலம் எனக் கூறப்படுகிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைத் (Pre history) தொல்லியல் அறிஞர்கள் மனிதனின் தொழில் நுட்ப வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு மூன்று காலங்களாகப் பிரித்துள்ளனர். அவை, 1. கற்காலம் (Stone Age), 2. செம்புக்காலம் (Copper Age), 3. இரும்புக்காலம் (Iron Age) என்பனவாம். மனிதன் இரும்பினைப் பற்றி கி.மு. 3000 ஆண்டளவிலேயே அறிந்திருந்தான். எனினும் அதனுடைய பெரும்பயன்பாட்டை கி.மு. 1500 ஆண்டளவில்தான் முழுவதுமாக அறிந்தான். இக்காலத்தில் உலகம் முழுவதும் இரும்பின் பயன்பாடு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தது என்றே சொல்லலாம்.

அர்மினியாவில் மிடானி (Mitanni) என்ற அரசுக் காலத்தில் இரும்பினைப் பெருமளவில் பயன்படுத்தினர். இரும்பு பயன்பாட்டை இட்டைட்டுகள் (Hittites) கி.மு. 1370-இல் மிடானியரின் பகுதியைக் கைப்பற்றியபொழுது அறியலாயினர். இட்டைட்டுப் பேரரசர் மூன்றாம் ஆட்டுசிலிசு (Hattusilis III) என்பவர் (கி.மு. 1348-1339) எகிப்திய அரசர்துதங்கமன் (Tutankhamen) என்பவருக்கு இரும்பினாலான வாள் ஒன்றை அன்பளிப்பாக அளித்தார் என்று சொல்லப்படுகிறது. எகிப்திலுள்ள துதங்கமன் கல்லறையை அகழாய்வு செய்த பொழுது ஒரு பெரிய இரும்பு வாள் ஒன்று கிடைத்தது. அவ்வாளே இட்டைட்டுப் பேரரசர் பரிசாக அளித்ததாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். இட்டைட்டுகளுக்கும் எகிப்தியர்களுக்கும் ஏற்பட்ட போர்களின் விளைவாக இரும்பின் பயன்பாடு பிற இடங்களுக்கு எளிதில் பரவத் தொடங்கியது. இரும்பு வேலை செய்யும் கருமார், கருங்கடலின் தெற்குக்கரைப்பகுதியில் வாழ்ந்தனர் எனக் குறிப்புகள் உள்ளன. இட்டைட்டுகளின் வரலாற்றுக் குறிப்பேடுகளில் இரும்பினைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இரும்புப் போர்க் கருவிகளைப் பயன்படுத்திய இட்டைட்டுகள் அவற்றைச் செய்யும் முறைகளை யாருக்கும் தெரியாமல் வைத்திருந்தனர். இரும்பினை முற்றுரிமை பெற்ற ஒரு பொருளாக இவர்கள் அறிவித்தனர். இட்டைட்டுகளின் வீழ்ச்சிக்குப் பின்னரே இரும்பின் பயன் பிற பகுதிகளில் மிக விரைவில் பரவியது.



இரும்பு அரிவாள் (நார்வே-கி.மு. 500)

கிரீசிலும் (Greece), கிரீட்டிலும் (Crete) உள்ள பிணக்குழிகளில் அகழாய்வுகள் செய்தபொழுது, இரும்புக் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இக்கருவிகள் கி.மு. 1100 ஆம் ஆண்டைச் சார்ந்தவை எனக் கணித்துள்ளனர். இத்தாலியிலிருந்த வில்லநோவன் (Villanovan) மக்கள் கி.மு. 900 ஆம் ஆண்டில் இரும்புப் பொருள்களைப் பயன்படுத்தினர்.

ஆசியாமைனரில் குடியேறிய எட்ருசுகர்களின் (Etruscans) மூலமே இரும்பின் பயனை இவர்கள் அறிந்தனர் என மரபுவழிச் செய்திகள் குறிக்கின்றன. ஆசுத்திரியாவிலுள்ள ஆல்சுடாட்டு (Hallstat) நகரமே இரும்பு உற்பத்தியில் தலைசிறந்த நகரமாக அக் காலத்தில் விளங்கியது. இதனால், அப்பகுதியில் ஒரு புதிய நாகரிகமே ஏற்பட்டது. ஆல்சுடாட்டு, சால்சு பர்க்குப் (Salzburg) பகுதிக்கு அருகில் உள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் இரும்பினால் செய்யப்பட்ட மிக நீளமான கத்தியைப் பயன்படுத்தினர். கெல்ட்டு இன மக்களின் வெற்றிக்கு மிகச் சிறப்பான காரண மாக விளங்கியது அவர்கள் பயன்படுத்திய இரும்புப் போர்க்கருவிகளே.

னாக இராணுவத்தின் வலிமை பெருக்கப்பட்டது. நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் இரும்புக் காலத் தில் நிலையான இடங்களில் வாழ முற்பட்டு, நாகரிக வளர்ச்சியடைந்ததுடன் பொருளாதார வளர்ச்சியும் அடைந்தான். நாடோடிகளாகத் திரிந்த பாரசீகர், பிரிசியர் (Phrygians), சித்தியர் (Scythians), கெல்ட்டு கள் (Celts), எட்ருசுகர் (Etruscans), கிரேக்கர், உரோ மானியர் போன்றோர் புதிய அரசுகளை இரும்புக் காலத்தில்தான் உருவாக்கினர். இரும்பு உற்பத்தி செய்வதில் குறைந்த செலவும் மிகுந்த பயன்பாடும் ஏற்பட்டது. இரும்பினால் கோடரிகளும் கலப்பைக் கொழுவும் செய்யப்பட்டன. இதனால் வேளாண்மை வளர்ச்சியுற்றது. உலக வரலாற்றில் செம்பினால்



இரும்பு வாள் (ஆசுத்திரியா-கி.மு. 700)

செருமனியிலும், இசுகாண்டி நேவியாவிலும் இரும்பு பற்றி, கி.மு. 500-ஆம் ஆண்டளவில் அறிந்தி ருந்தனர். ஆப்பிரிக்காவில் நூபியாவிலுள்ள (Nubia) மிரோ (Meroe) பகுதியில் வசித்த மக்கள் கி.மு. 700-ஆம் ஆண்டில் இரும்பைப் பயன்படுத்தினர். இங்கி ருந்து எகிப்திற்கும் இரும்பின் பயன் பரவியது. இந் தியாவில் இரும்பு பற்றி வேதகால ஆரியர்கள் அறிந் திருந்தனர். கி.மு. 2000-ஆம் ஆண்டுக்கு இடைப் பட்ட காலத்தில் ஐரோப்பாவிலிருந்து காகசசு (Caucasus) மலைதொடர் வழியாக இந்தியாவிற்கு வந்த ஆரியர் இரும்பின் பயனை அறிந்திருந்தனர். இந்தியாவில் நடந்த அகழ்ாய்வுகளில் இரும்புப் பொருள்கள் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மண்கலன்களுடன் (Painted Grey Ware) கிடைத்துள் ளன. இவற்றின் காலம் கி.மு. 900க்கும் கி.மு. 800க் கும் இடைப்பட்ட காலம் ஆகும். சீனமக்கள் இரும்பு பற்றி, கி.மு. 6-ஆம் நூற்றாண்டளவில் அறிந்தனர்.

இரும்புக் காலத்தில் மக்களின் பண்பாடு பெரு மளவு வளர்ச்சியடைந்திருந்தது. இரும்பு பெரு மளவில் கிடைத்ததால் எளிய மக்களும் இரும்புப் பொருள்களைப் பயன்படுத்தினர். இரும்பின் பய

கலப்பைக் கொழு செய்யப்பட்டதற்கான சான்று நமக்கு இதுவரை கிடைத்திலது. கப்பல் கட்டவும் மரம் அறுக்கவும் இரும்புக் கருவிகள் பயன்பட்டன. இரும்புக்காலம் மனிதனின் வளர்ச்சியில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது.

**இரும்புச் சட்டம்**: பிரிட்டனின் ஆட்சியில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இருந்த காலத்தில், அவற்றின் இரும்பு வார்ப்புத் தொழிலைப் பிரிட்டன் தனது தொழிலுக்குத் தடையாக இல்லாதபடி, அத னைக் கட்டுப்படுத்தும் பொருட்டுச் செய்த சட்டம் இரும்புச் சட்டம் (Iron Act) எனப்படும். இது கி.பி. 1750-ஆம் ஆண்டில் பிரிட்டன் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரிட்டனின் வாணிக, கப்பல் தொழில் சட்டங்களுள் (British Trade and Navigation Acts) ஒன்று. அமெரிக்கக் குடியேற்ற நாடு களின் இரும்புத் தொழில் வளர்ச்சியைத் தடுப்பதன் வழியாகப் பிரிட்டன் தனது தொழிலுக்கு ஏற்படக் கூடிய போட்டியைத் தவிர்க்கும் பொருட்டுச் செய்து கொண்ட சட்டமே இது.

பிரிட்டனின் தொழில் வளர்ச்சிக்குத் தேவை

யான வார்ப்பிரும்பையும் (Pig Iron) இரும்புப் பாளங்களையும் சுங்கவரி இல்லாமல் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கு இச்சட்டத்தின் மூலம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு வழி உண்டாயிற்று. மேலும், இச்சட்டம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் எஃகு உலைகளும், இரும்பைக் கீறும் ஆலைகளும், முலாம்பூசும் உலைக் களங்களும் (Plating Forges) நிறுவுதலையும், இரும்புக் கருவிகளைச் செய்தலையும், பிரிட்டன் பேரரசுக்கு (Empire) வெளியிலுள்ள நாடுகளுக்குக் குடியேற்ற நாடுகளிலிருந்து இரும்பை ஏற்றுமதி செய்தலையும் தடை செய்தது. தமது இரும்புத் தொழில் வளர்ச்சிக்கு இவ்வாறு தடை விதித்த இரும்புச் சட்டத்தை அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சில சமயங்களில் எதிர்த்துக் கீழ்ப்படிய மறுத்தன.

இச்சட்டத்தின் விளைவாக, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் இரும்புத் தொழில் மிகவும் வளர்ச்சி குன்றிப் போயிருந்தது என்ற கருத்தை வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பிரிட்டன் அப்போது பிரஞ்சு நாட்டோடு போர் செய்து கொண்டிருந்ததாலும், இந்தியாவில் அது தனது பேரரசை விரிவாக்கிப் பாதுகாக்கும் பணியில் தனக்கு ஏற்பட்ட பெரும் எதிர்ப்பை அடக்க வேண்டியிருந்ததாலும், பிரிட்டனால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இரும்புச் சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டிருக்குமாறு கட்டாயப்படுத்த இயலவில்லை. ஆகையால், சூழ்நிலையின் காரணமாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இரும்புச் சட்டத்தின் முழு விளைவையும் ஏற்கவில்லை. நாளாவட்டத்தில் இந்நிலை மாறிற்று. பிரஞ்சு நாட்டோடு நடைபெற்ற போரும், இந்தியாவில் நடைபெற்ற போர்களும் ஓய்ந்தபின்னர், பிரிட்டன் இரும்புச் சட்டத்தையும், ஏனைய வாணிகக் கப்பல் தொழில் சட்டங்களையும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது கடுமையாகக் கையாண்டது. அதன் விளைவாகத் தேயிலை இறக்குமதியை அமெரிக்கர் வன்மையாக எதிர்த்துக் கலகம் செய்தனர். அமெரிக்க விடுதலைப் போர் (War of American Independence, கி.பி. 1755-1783)மூண்டது; இறுதியில் அமெரிக்கர் வெற்றி பெற்று, தடைச் சட்டங்களைத் தகர்த்தெறிந்து விடுதலை பெற்றனர்.

**இரும்புச் சட்டம்²** அல்லது செல்வச் சிறுகுடி ஆட்சியைப் பற்றிய இருப்புச் சட்டம் என்பது (Iron Law of Oligarchy) அதிகாரிகள் ஆட்சிமுறையிலே (Bureaucracy) காணப்படுகிற ஒரு புதிய வகையான இக்காலப் போக்கைக் குறிப்பிடுவதாகும். அரசியலமைப்புகளையெல்லாம் (Constitution), முடியாட்சி (Monarchy), உயர் குடியாளராட்சி அல்லது பிரபுக்களாட்சி (Aristocracy), சமூக நலத்துக்கான குடியாட்சி (Polity) என மூன்று தூய வகைகளாகவும் (Pure Forms), இவையே ஆளுவோரின் தன்னலத்துக்காகச் செயற்படுமானால் அவற்றை முறையே ஒற்றை ஆளின் சருவாதிகார ஆட்சி (Tyranny), செல்வச் சிறு குடியாட்சி(Oligarchy),குடியாட்சி (Democracy) என்ற சிதைந்த வடிவங்களாகவும் (Corrupt Forms) வகைப்படுத்திக் காட்டினார் பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர் அரிசுடாட்டில் (Aristotle) என்பார். இக்காலத்தில் சமூகத்தில் சிறுபான்மையோராக உள்ளசெல்வர் வகுப்பு ஆட்சியைக் கைப்பற்றி, தங்களுடைய நலனையும், வளர்ச்சியையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, சமூகத்தில் மற்றச் சாதாரண வகுப்பாரைத் தமது நோக்கத்துக்கிணங்க அரசியலதிகாரத்தைக் கையாளுமாயின் அவ்வகையான ஆட்சி செல்வச் சிறுகுடி ஆட்சி (Oligarchy) எனப்படும். குடியாட்சி வடிவத்தில் செல்வச் சிறுகுடி ஆட்சி நடைபெறுதலும் உண்டு. ஆகையால், செல்வச் சிறுகுடியாட்சியின் முக்கிய இயல்புகள், அதிகாரம் மிகச் சிறிய எண்ணிக்கை உள்ளவர்களால் கையாளப்படுதல் (Small), அதுவும் அச்சிறு பான்மையோருடைய நலனுக்காகவே கையாளப்படுதல் (Selfish), ஆளுவோர் தன்னலமிக்கோராய், மற்றையோரைப் புறக்கணித்தல் (Exclusive) என்பனவாம். அதிகாரிகள் ஆட்சி என்பது (Bureaucracy), பயிற்சியும் (Training), திறமையும் மிக்க (Skilled), நிலையான (Permanent), ஊதியம் பெறுகிற (Paid) அதிகாரிகளைப் (Officers)பல தரங்களில் (Grades) ஒன்றிற்குக் கீழ் ஒன்றாக அமைத்து, ஒவ்வொரு தரத்திலுள்ள அதிகாரிகளும் தமக்கு அடுத்த மேல்தரத்திலுள்ள அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு (Controlled), அவர்களுடைய ஆணையை நிறைவேற்றி, அவர்களுக்குப் பொறுப்பாகப் (Responsible) பணி செய்யும் ஆட்சி முறை என்று பொருள்படும். இவ்வதிகாரிகள் ஆட்சிமுறையில் கீழ்த்தர அதிகாரிகளிலிருந்து, மேல்தர அதிகாரிவரை எவரும் தமது செயலுக்கு, மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல் - மக்களுடைய நலனைக் கருத்திற் கொள்ளாமல் தமக்கு அடுத்த மேல்நிலை அதிகாரிக்கே பொறுப்பு உடையவராகப் பணி செய்கிறார். எல்லோருக்கும் மேல்நிலையிலுள்ள அதிகாரியும் மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல், அரசாங்கக் கொள்கைகளைத் தாமே உருவாக்கி, அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தக்க செயல் ஆணைகளை (Executive Orders) தாமே விடுத்து, செயல்களைத் தமக்குக் கீழ்ப்பட்டநிலை அதிகாரிகளின் வாயிலாக நிறைவேற்றுகிறார் எனவே, அதிகாரிகள் ஆட்சிமுறை திறமாக இயங்குவதற்கு அதிகாரிகள் பலதரங்களில் அமைக்கப்பட்ட அடுக்குமுறை (Hierarchy of Offi

ers) இன்றியமையாதது. இந்த அடுக்கு முறையில் அமைந்த அதிகாரிகளினாட்சிக்கு ஒரு பொருத்தமான எடுத்துக் காட்டு, இந்தியாவில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட ஆட்சி அமைப்பு ஆகும். அப்போது ஓரளவு நடுவண், மாகாண மட்டத்திலும், முழுஅளவில் உள்ளாட்சி நிறுவனங்களிலும் இந்திய மக்களுக்குப் பங்கு இருந்தாலும், ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலம் முழுவதும், அவர்களுடைய ஆட்சி அதிகாரிகளாட்சியாகவே இருந்தது; அது மக்களுக்குப் பொறுப்புள்ள குடியாட்சியாக இல்லை. அதிகாரிகள் ஆட்சிமுறை என்பதில், (1) துறையின் பணி பல அங்கங்களாக அல்லது பிரிவுகளாகப் பிரிக்கப்படுதல், (2) துறை அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல், (3) ஒவ்வொரு பதவிக்குமுரிய அலுவலும், பொறுப்பும் மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்டிருத்தல் முதலியவை இருத்தல்வேண்டுமென்று மாக்சு வீபர்(Max Weber) என்ற செருமானிய சமூக இயலார் (German Sociologist) குறிப்பிடுகிறார். ஒவ்வோர் அதிகாரியும் தனது பதவிக்குரிய அலுவலை வரையறுக்கப்பட்ட விதிகளின் எல்லைகளுக்குள் செய்தல் வேண்டும். இதில் கீழ்நிலைப்பணியாளர் மீதுள்ள கட்டுப்பாட்டையும் மேல்நிலை அதிகாரி விதிகளை ஒட்டியே கையாளுதல் வேண்டும். எனவே, வீபரின் கொள்கைப்படி அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் முறையை நன்கு அறிந்தவருடைய கையில் அதிகாரிகளின் ஆட்சி முறையானது, சிறந்த ஒரு கருவியாகும். வீபரின் காலத்திற்குப் பிறகு (கி.பி. 1864-1920), இக்கால சமுதாயமானது மிகவும் கூடுதலான அளவில் அதிகாரிகளின் ஆட்சியின் இயல்பைப் பெற்றுவருவதையும், மேற்கத்திய, கிழக்கத்திய நாடுகளிலெல்லாம் சருவாதிகார ஆட்சிகள் (Totalitarian Regimes) ஏற்பட்டு வருவதையும் கண்ணுற்ற இராபர்ட்டு மிக்கல்சு என்ற இன்னொரு செருமானியச் சமூக இயலார்(Robert Michels, கி.பி. 1876-1936) அதிகாரிகளின் ஆட்சி முறையானது செல்வச் சிறுகுடி ஆட்சியின் இயல்பை மிகுதியாகவுடைய (Oligarchic Tendencies) அரசியலாதிக்க அமைப்பு என்று ஆராய்ந்து கூறுகிறார். இவர் வகுத்தது புதிய அடுக்காட்சி முறைக் கோட்பாடு.

'செல்வச் சிறு குடியாட்சி பற்றிய இரும்புச் சட்டம்' (Iron Law of Oligarchy): இச் சட்டம் இவருடைய கோட்பாட்டின்படி அதிகாரிகளாட்சி முறைக்கு வீபரின் கோட்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்த ஒரு கருவி என்ற நிலை மாறிவிடுகிறது. இக்காலத்தில் சமூகமானது முதலாளித்துவ இயல்புடனும் இல்லை, சமூகச் சமநிலையிலும் (Socialist) இல்லை. இத்தகைய புதிய வகைச் சமூகத்திலே அதிகாரிகளாட்சிக்கு முன்புஇருந்த ஒரு கருவி என்ற நிலைமை மாறி, அது சமூகத்தில் ஒரு தலைமை அதிகாரி (Master) என்ற நிலையை, அல்லது அரசியலாதிக்கமுள்ள குழு என்ற நிலையைப் பெறுகிறது. இக்காலச் சமூகத்தில் காணப்படுகிற செல்வச் சிறுகுடியாட்சி இயல்பை (Oligarchic Tendencies), அதிகாரிகளாட்சியோடு இணைத்து, இராபர்ட்டு மிக்கல்சு தமது இரும்புக் கோட்பாட்டை வகுக்கிறார்.

இக்கால அரசியல், பொருளாதார, சமுதாய அமைப்புகளெல்லாம் பழங்காலத்தைப் போல எளிய முறையில் அமையாமல் மிகவும் சிக்கல் நிறைந்து (Complex), அதிகாரிகளாட்சி இயல்போடு இருக்கின்றன. அந்த ஒவ்வோர் அமைப்பிலும் எல்லா அதிகாரங்களும் மேல் மட்டத்தில்தான் (Top) குவிக்கப்பட்டிருக்கின்றன (Concentrated). அவை மேல் மட்டத்தில் அறிவும் திறமும் மிக்க வல்லுநர்களிடம் (Elite) குவிக்கப்பட்டுள்ளன. அவ்வல்லுநர்களும் ஆளப்படும் சமூக மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல், தம் கருத்துக்கும் விருப்பத்திற்கும் ஏற்பவே சருவாதிகாரப் போக்கில் ஆளுகின்றனர். இவ்வல்லுநர்கள் தம் அதிகாரிகளைக் கொண்டு நடத்தும் சருவதிகார ஆட்சியும் ஆளுவோருடைய நோக்கங்களுக்கும், ஆளப்படுவோரின் நோக்கங்களுக்குமிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கிறது. திறமைமிக்க, அதிகாரம் செலுத்துகின்ற வல்லுநரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், இது சிறுகுடி ஆட்சியாகவும், இவர்கள் எவருக்கும் பொறுப்பாக இல்லாமல், தமது விருப்பம்போல் ஆளுதலால் இது செல்வராட்சியாகவும், தன்னலமிக்க ஆட்சியாகவும், பெரும்பான்மையிலுள்ள எளியமக்களைப் பொறுத்த வரைவெறுக்கத்தக்ககடுமையுடையதாகவும்இருக்கிறது. இதுவே இவர் வகுத்த செல்வச் சிறு குடியாட்சி பற்றிய இரும்புக் கோட்பாடு ஆகும். இராபர்ட்டு மிக்கல்சு செருமனியில் தோன்றிய சமநிலைச் சமுதாயக் கட்சியினமைப்பை (Socialist Party) ஆராய்ந்தே தமது கோட்பாட்டை வகுத்தார். இக்காலத்தில் தோன்றியுள்ள பல சிக்கல்களும் (Problems) எண்ணிக்கையில் பெருகியும், இயல்பில் சிரமம் நிறைந்தும் காணப்படுதலால், அவற்றுக்குத் தீர்வுகள் (Decisions) காண்பதில் சாதாரண மக்கள் பங்கு கொள்ளுதல் இயலாதென்பதும், சிக்கல்களை நன்கு ஆராயுமளவுக்குத் திறமான அறிவு பெற்ற வல்லுநர்கள் பங்கு கொள்ளுதல் இயலுமென்பதும் உண்மையே. இதனாலும், சட்ட மன்ற உறுப்பினர் பலருக்கு இக் கேள்விகளில் ஈடுபாடு இல்லாததனாலும், மேல்நிலை அதிகாரிகள் கேள்விகளைப் பற்றிய முழுச் செய்திகளையும் அறிந்து கொள்ளுவதற்கு வசதியாகச் செய்தித் தொடர்புகளெல்லாம் அவர்களுடைய பதவிகளில் குவிக்கப்பட்டிருப்பதனாலும், அவர்களுடைய கருத்துகளும், அவர்கள் எடுக்கும் முடிவுகளும் பிற

ரால் எளிதில் மறுப்புக்கு உட்படாமலிருக்கின்றன. மேலும், வல்லுநராகிய மேலதிகாரி, தமது பாது காப்புக்கு ஏற்றவாறு செய்திகளை மாற்றவும், தமது போட்டியாளர்களுக்கு எதிராகச் செய்தி களைப் பரப்பவும் கூடிய நிலையிலிருக்கிறார். அவர் தம் பணிகளைச் செய்வதில் சிறப்பான அறிவையும் திறமையையும் பெறுகிறார். அத் தகைய வல்லுநரை ஆட்சி அமைப்பினின்றும் நீக்குதல் இயலாது. இவ்வாறு இதில் ஆட்சியாளர் இருக்கும் அமைப்பும், ஆளப்படுவோரின் அறியா நிலையும் சேர்ந்து, அதிகாரத்திலுள்ளவருடைய தலைமை நிலைக்கும், எளிய ஆளப்படுவோருக்கு மிடையே இணக்கமில்லா நிலைமையை ஏற்படுத்து கின்றன. இத்தகைய போக்குகள் அரசியற் கட்சி களில் மிகுந்து காணப்படுவதால், குடியாட்சி முறைக்கு நல்ல எதிர்காலம் இல்லை என்று மிக்கல்சு கருதுகிறார். வேறுசில சிந்தனையாளருடைய கருத் தின்படி, மிக்க செல்வமுடையாரையும் வறியோர் நிலைக்குத் தாழ்த்துகின்ற இக்கால அரசாங்கங் களின் செயல்களே, குடியாட்சி நிறுவனங்களைத் தழைக்கவிடாமல் செய்கின்றன.

**இரும்புத் திரை**: இரண்டாம் உலகப் போரை அடுத்த காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட தொடர் இரும்புத்திரை (Iron Curtain) என்பதாகும். சோவி யத்து ஒன்றிய உருசிய நாடு, தனக்கும் தன்னைச் சார்ந்துள்ள கிழக்கத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளோடும், மற்றப் பொதுவுடைமை அல்லாத நாடுகளோடும் தடை இல்லாத, வெளிப்படையான தொடர்பு ஏதும் ஏற் படாதபடி தடுத்து மூடிவிடுவதற்குச் செய்த முயற்சிகளே ‘இரும்புத்திரை’ என்பதாகும்.

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளுக் கும், சோவியத்து உருசிய நாட்டிற்கும் இடையே ஒற்றுமை உணர்வும் ஒத்துழைப்பும் நிலவின. ஆனால், போர் முடிந்த பின்னர் இந்நிலை மாறியது. உருசிய நாடு பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் தனது அரசியல் தலைமைக்கும் பாதுகாப்பாக, மேற்கத்திய நாடுகளுக்கெதிராகத் தனது படை வலிமையை இக் கால முறையில் பெருக்கியது; தனது அண்டை நாடு கள் தனக்கு ஆதரவாக இருக்குமாறு பல வழிகளைக் கையாண்டது. உருசியாவின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராகப் பொதுவுடைமைக் கோட்பாடு பரவு வதைத் தடுக்கும் பொருட்டும், தங்களுடைய தன்னு ரிமை அமைப்புகளைப் பாதுகாத்தற் பொருட்டும், மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் எதிர் முயற்சிகளைச் செய்யலாயின. இவ்வாறு இரு வல்லரசுகளுக்குமிடையே (ஐக்கிய அமெரிக்கா, சோவியத்து உருசியா முதலியவை) தத்தம் சமூக, பொருளாதார, அரசியலமைப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டு, அவை எடுத்துக்கொண்ட ஒன்றுக்கொன்று எதிரான முயற்சி களே கெடுபிடிப்போர் (Cold War) எனப்படும். கெடு பிடிப் போரின் விளைவாகத் தோன்றியவையே, மேற்கு ஐரோப்பிய நாடுகளமைத்துக் கொண்ட வட அட்லாண்டிக்கு இராணுவக் கூட்டு ஒப்பந்தமும், (N.A.T.O) சோவியத்து உருசியாவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அமைத்துக் கொண்ட வார்சா இராணுவ ஒப்பந்தமும் (Warsaw Pact) ஆகும்.

மேற்குப் பெர்லின் நகரப்பகுதிக்கும், கிழக்குப் பெர்லின் நகரப்பகுதிக்குமிடையேயும், மேற்குச் செருமனிக்கும், கிழக்குச் செருமனிக்குமிடையேயும் தொடர்புகள் சோவியத்து அரசாங்க அலுவலர் இசைவு அளித்தாலல்லாமல் நடைபெறமாட்டா. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டிசுப் போர்க்காலத் தலைமை அமைச்சரா யிருந்த வின்சுட்டன் சர்ச்சில் (Winston Churchill) ஐக்கிய அமெரிக்க நாட்டில் புல்டன் நகரத்தில் (Fulton), வெசுட்டு மினிசுட்டர் கல்லூரியில் (Westminster College), 1946-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் நாள் ஆற்றிய உரையில், ‘கிழக்குச் செருமனியில் பால்ட்டிக்குக் கடற்கரையிலுள்ள இசுட்டெட்டின் துறைமுகத்திலிருந்து (Stettin) தெற்கே ஏட்ரியாட் டிக்குக் கடற்கரையிலுள்ள திரியசிட்டே (Trieste) துறைமுகம் வரையிலும் ஐரோப்பியக் கண்டத்தின் குறுக்காக ஓர் இரும்புத் திரை போடப்பட்டு விட்டது’ என்று முதன் முதலாக இத்தொடரைக் குறிப்பிட்டார். இரு வல்லரசுகளும் படைக்குறைப்பு, பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, அமைதி முத லிய ஆதாரமான துறைகளில் ஒத்துழைப்பு ஏற்பட இயலாதவாறு இத்தகைய தடைகள் இருந்தன.

உருசிய நாட்டின் சருவதிகாரியாகிய இசுட்டா லின் (Stalin) கொண்டுவந்த இந்தத் தனித் திருக்கும் கொள்கை. அல்லது ஒதுங்கியிருக்கும் கொள்கை, அவர் ஆட்சியிலிருக்கும் வரையில் மிகவும் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. அவர் 1953-ஆம் ஆண்டில் இறந்த பின்னர், இரும்புத் திரைக் கொள்கை மிகுதியாகத் தளர்த்தப்பட்டுவிட்டது. இரு கூட்டு நாடுகளுக்குமிடையே வாணிகத் தொடர்புகளும், கலை, இலக்கியத் துறையில் தொடர்புகளும் இப்பொழுது பெருமளவில் ஏற்படுத் தப்பட்டுள்ளன. எனினும், சோவியத்து உருசியாவும்,

அதன் பிடியிலுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இரும்புத்திரை நாடுகள் என்று சொல்லப்படுகின்றன.

சோவியத்து உருசியாவைப் போலவே பொதுவுடைமை நாடாகிய சீனாவும் 1949-இல், தன்னை மற்ற நாடுகளின் தொடர்பினின்றும் தனித்து வைத்துக் கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடித்தது. சீனாவின் தனித்திருக்கும் கொள்கை மூங்கில் திரை (Bamboo Curtain) எனப்பட்டது.

**இரும்புத் தூண்** மெகரொலி என்ற (Mehurli) இடத்தில் குவ்வாதுல் - இசுலாம் மசூதியின் (Quwwatu'l Islam Mosque) சுற்று வெளியிடத்தின் நடுவில் அமைந்துள்ளது. இத்தூணில் வடமொழியில் ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த குப்தர் காலத்திய எழுத்து வடிவத்தைக் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இத்தூணைச் சந்திரா என்ற (Chandra) மன்னன், திருமாலுக்காக விட்டுணுபாத (Vishnupada) மலையின்மேல் நாட்டியதாக அறியக் கிடக்கின்றது. சந்திராவைப் பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்த போதிலும், பெரும்பாலானோர், இவர் கி. பி. 375 முதல் கி. பி. 413 வரை ஆட்சி செய்த குப்த மரபைச் சார்ந்த இரண்டாம் சந்திரகுப்தரே (Chandragupta II) என்று கருதுகின்றனர்.



இரும்புத்தூண்

இரும்புத் தூணின் உச்சியில் (Capital) ஓர் ஆழமான துளை உள்ளது. இத்தூணின் தலையையொட்டித் திருமாலின் வாகனமான கருடன் இருந்திருக்க வேண்டும். அது இப்போது காணப்படவில்லை. தூணின் அடிப்பகுதியில் சிறுசிறு இரும்புத் துண்டுகள் இணைந்திருக்கின்றமையால் புடைப்புகள் நிறைந்ததாக உள்ளது. மண்ணில் புதைந்துள்ள பகுதி ஈயத் தகட்டால் போர்த்தப்பட்டுள்ளது. 7.20 மீட்டர் உயரம் கொண்ட இத்தூண் 93 செ. மீ. ஆழத்தில் புதைந்துள்ளது. இன்றும் துருப்பிடிக்காத நிலையிலுள்ள இவ்விரும்புத்தூண், உலோகத் தொழிற்கலையில் நம் முன்னோர்கள் கொண்டிருந்த தேர்ந்த அறிவினை நன்கு புலப்படுத்துகிறது.

இத்தூண் பிரதிகார மரபினரின் கீழ்க் குறுநில மன்னர்களாக ஆட்சிபுரிந்துவந்த தோமர் மரபைச் (Tomar) சார்ந்த அனங்பால் (Anangpal) என்ற மன்னரால், கி.பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டளவில் தில்லிக்குக் கொண்டுவரப்பட்டது. ஆயினும், இது எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பதை யாரும் அறிந்திலர். கே.இரா.

**இரும்பூளை** தேவாரப் பாடல்பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இது இப்பொழுது ஆலங்குடி என்று வழங்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளார். அதன்கண் இத்தலத்தினை, 'எழிலார் இரும்பூளை' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் பெயர் காசி ஆரணியேசுவரர்; இறைவி பெயர் ஏலவார் குழலி. பூளை என்னும் செடியின் பெயரால் இத்தலம் இரும்பூளை என்னும் பெயர் பெற்றது. இத்திருக்கோயிலுள்ள ஆலமர் செல்வனாகிய தட்சிணாமூர்த்திக் கூடம் சிறப்பு மிக்கதாகும். வியாழக்கிழமைகளில் இங்கு வழிபாடு நிகழ்த்துதல் மிக்க சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. விழாக்காலத்தில் தட்சிணாமூர்த்தித் திருமேனியைத் தேரில் எழுந்தருளச் செய்வர்.

**இரும்பை மாகாளம்** தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது புதுச்சேரிக்கு வடமேற்கில் 5 கல் தொலைவிலுள்ளது. மாகாளர் வழிபட்ட தலம் என்று கூறப்படுகிறது. இறைவன் பெயர் மாகாளேசுவரர்; இறைவி பெயர் குயில்மொழியம்மை. திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் பாடிப் பரவியுள்ளார். 'இறைவன் எங்கள் பெருமானிடம் போலிரும்பைதனுள் மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே' என்று இவர் பாடியுள்ளமையால், ஊரின் பெயர் இரும்பையென்றும் அதன்கண் இறைவன் திருக்கோயில் மாகாளம் என்றும் பெயர்

பெற்றிருந்தமையினை அறியமுடிகிறது. இருபெயரும் இணைந்த இரும்பை மாகாளம் என்னும் தொடர், ஊர்ப் பெயராக அமைந்தது. இது இப்பொழுது இரும்பை என்று வழங்கப்படுகிறது. இக்கோயிலின் திருச்சுற்றில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமாள் கோயில் சிறப்பு வாய்ந்தது. இங்குப் பங்குனி உத்திர நாளில் காவடி எடுக்கும் விழா சிறப்பாக நடைபெறும்.

**இருமுக வாணிக ஒப்பந்தம்**: பொருள்களை ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்ய இரு நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற வாணிக ஒப்பந்தம் இருமுக வாணிக ஒப்பந்தம்(Bilateral Trade Agreement)எனப்படும். உற்பத்தியையும் விலைகளையும் ஏற்றுமதி இறக்குமதி அளவுகளையும் ஒரு நிலைப்படுத்தும் நோக்கத்தோடு இத்தகைய ஒப்பந்தங்களைச் செயற்படுத்துகின்றனர். ஒரு நாடு மற்றொரு நாட்டோடு மேற்கொள்ளும் வாணிகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் சமநிலையை அடையவும், இத்தகைய வாணிக ஒப்பந்தங்கள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் மிகுதியாகத் தேயிலை, முந்திரிப் பருப்பு, சணல் ஆகியவை உற்பத்தியாகின்றன. செருமனியில் உற்பத்தியாகிற எந்திரங்கள் இந்தியாவிற்குத் தேவைப் படுகின்றன. இந்தியாவும் செருமனியும் இந்தப் பொருள்களை எவ்வகையில் எவ்வளவு ஏற்றுமதி, இறக்குமதி செய்வதென ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இந்த ஒப்பந்தம், ஒருவகையில் பண்டமாற்று முறையில் (Barter System) அமையும். இந்தியா மிகுதியாக ஏற்றுமதி செய்தால் அதன் மதிப்பினை உரூபாயில் பெறுவதா, செருமனி மார்க்கில் பெறுவதா? மிகுதியாக இறக்குமதி செய்தால் எப்படிப் பணத்தைப் பெறுவது என்பன ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டுக் குறிக்கப்படும்.

ஒரு நாடு அயல்நாட்டு வாணிகத்தில் (Foreign Trade) கட்டுப்பாடற்ற வாணிகக் (Free Trade) கொள்கையைப் பின்பற்றலாம். அந்நிலையில் அந்நாட்டு வணிகர்கள், கட்டுப்பாடுகளின்றிப் பிற நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி (Export) செய்வதிலும், இறக்குமதி (Import) செய்வதிலும் தன்னிச்சையுடன் ஈடுபடுவார்கள். தடையிலா வாணிகத்தில் பல நாடுகளோடு வாணிகம் நடைபெறும். இதன் விளைவாக மொத்த ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட மிகுதியாக இருக்கலாம். அல்லது மொத்த இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விட மிகுதியாக இருக்கலாம். இதனால், உள்நாட்டு வாணிகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படலாம். இது நாட்டுப் பொருளாதாரத்தில் சாதகமான (Favourable) அல்லது பாதகமான (Unfavourable) விளைவுகளை ஏற்படுத்தும்.

பல நாடுகளோடு வாணிகம் நடைபெறும் பொழுது ஒரு சில நாடுகளிலிருந்து மிகுதியாக இறக்குமதி செய்யலாம். வேறு சில நாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யலாம். மிகுதியாக இறக்குமதி செய்திருக்கும் நாடுகளுக்கு அந்நாட்டுப் பணம் தர வேண்டும். அப்பணம் இல்லாதபொழுது தங்கமாகக் கொடுக்க வேண்டும். அதற்காக ஏற்றுமதிகளைப் பெற்றுக்கொண்ட நாடுகளிடமிருந்து பணத்தைத் தங்கமாகப் பெற வேண்டும். இவ்வாறு ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் சமநிலைப் (Balance) படுத்த முயலுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இவற்றைத் தவிர்க்க வாணிக ஒப்பந்தங்களின் மூலம் ஒரு நாடு மற்றொரு நாட்டோடு வாணிகம் செய்து, ஏற்றுமதி இறக்குமதிகளைச் சமநிலைப்படுத்தலாம்.

தடையிலா வாணிகத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிவகையாக வாணிக ஒப்பந்தங்கள் அமைகின்றன. இத்தகைய வாணிக ஒப்பந்தங்கள் இரு வகைகளில் அமையலாம். ஒன்று, ஒரு நாட்டின் அரசு மற்றொரு நாட்டு அரசோடு செய்து கொள்கிற ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஒரு பொருளை எந்த அளவு ஏற்றுமதி செய்து அதற்கு ஈடாக வேறு எந்தப் பொருளை எந்த அளவு இறக்குமதி செய்வதென்று முடிவு செய்வார்கள். இது ஒரு வகைப் பண்டமாற்று முறை போல் அமையும். மற்றொரு முறை, ஒரு நாட்டிலுள்ள வாணிக நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து, மற்றொரு நாட்டிலிருக்கும் வாணிக நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துகொள்வதாகும். இத்தகைய ஒப்பந்தங்களை அரசின் ஆதரவின்றிச் செயற்படுத்த இயலாது.

முதல் உலகப் போருக்குப்பின் பல ஐரோப்பிய நாடுகள், தங்களுக்குள் வாணிக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. எடுத்துக் காட்டாக, 1930க்குப் பின் பிரேசிலுக்கும் (Brazil) செருனிக்கும்(Germany) நடந்த வாணிக ஒப்பந்தத்தின் மூலம் செருமனி பிரேசிலுக்கு ஒன்பது மிலியன் மார்க்கு மதிப்புள்ள நிலக்கரியை அனுப்பி, அதற்கு ஈடாகப் பிரேசிலிடமிருந்து அதே மதிப்புள்ள காப்பியைப் பெற்றது. இதேபோலச் செருமனி எகிப்தோடும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி செருமனி உரத்தைக் கொடுத்து, எகிப்திடமிருந்து பருத்தியைப் பெற்றது. இத்தகைய வாணிக ஏற்பாடுகள் பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

பல நாடுகள் இணைந்து வாணிகச் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில் ஒப்பந்தம் செய்து கொள் வதைப் பன்முக வாணிக ஒப்பந்தம் (Multilateral Trade Agreement) என்பர். ஒரு நாடு தனக்குத்தானே

மற்றைய நாடுகளின் ஒப்புதல் பெறாமல், எந்தெந்த நாடுகளோடு ஏற்றுமதி, இறக்குமதி செய்வது, எவ் வகைப் பொருள்களில் செய்வது என முடிவு எடுத்துச் செயற்படலாம். இவ்வாறு செயற்படும் வாணிகம் ஒருமுக (Unilateral) அணுகுமுறை என்று கூறப்படும்.

இருமுக வாணிக ஒப்பந்தங்களில் உள்ள விதி முறைகள் ஒன்றுபோல் இருக்கவேண்டுமென்பதில்லை. ஒப்பந்தம் செய்து கொள்கிற நாடுகளையும், அவை ஏற்றுமதி, இறக்குமதி செய்கிற பொருள்களையும் சார்ந்து, மாற்று விகிதங்கள் (Exchange Rate)வரை யறுக்கப்படும். இதனால், இத்தகைய ஒப்பந்தங்களில் மிகுதியான வேறுபாடுகள் காணப்படலாம். பெரு மளவில் ஏற்றுமதி, இறக்குமதி செய்கிற இரு நாடுகள் செய்து கொள்கிற வாணிக ஒப்பந்தங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன என்று கருதுகின்றனர்.

பன்முக வாணிக ஒப்பந்தங்களைவிட இருமுக வாணிக ஒப்பந்தங்கள் எளிதாகச் செயற்படுகின்றன. பன்முக வாணிக ஒப்பந்தங்களில் பல நாடுகள், பல பொருள்களில் வாணிகம் செய்வதை முடிவு செய்ய வேண்டியுள்ளதால், நடைமுறையில் பல சிக்கல்கள் எழுவதுண்டு. பல நாடுகள் பல பொருள்களை ஏற்று மதி, இறக்குமதி செய்ய விரும்பும்போது, எந்தெந்த நாடுகளோடு என்னென்ன பொருள்களை எந்த மாற்று வீதத்தில், எந்தெந்த அளவில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதென்று முடிவு செய்வது மிகவும் சிக்கல் நிறைந்த பணியாகும். இருமுக வாணிக ஒப் பந்தத்தில் இத்தகைய சிக்கல்கள் இல்லை. இரு நாடு கள் தங்கள் உற்பத்தி வாய்ப்புகளையும் நாட்டின் தேவைகளையும் கணக்கிட்டு, எளிதாக வாணிக ஒப் பந்தத்தைச் செய்து கொள்ளலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் ஏற்றுமதி செய் கிற பொருள்களைப் பற்றிய விவரங்களை இரு நாடு களும் முன்கூட்டியே அறிவதால், உற்பத்தி தங்கு தடையின்றி நடைபெறும். அங்காடி உறுதி செய்யப் பட்டுவிடுவதால் திட்டமிட்டு உற்பத்தியைப் பெருக் கலாம். குறிப்பாக, வேளாண்மை போன்ற துறை களில் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட இது தூண்டுதலாக அமைகிறது. மிகுதியாக ஒரு பொருளை உற்பத்தி செய்யும் நாட்டிற்கு இருமுக வாணிக ஒப் பந்தத்தின் மூலம் புதிய அங்காடி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இது தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை யாக உதவுகிறது.

அயல்நாட்டுச் செலாவணி எவ்வளவு கிடைக்கு மென்று இருமுக வாணிக ஒப்பந்தத்தில் முன்கூட்டியே திட்டவட்டமாக அறிய முடிகிறது. அதற்கு ஏற்றாற் போல் பொருள்களை எவ்வளவு இறக்குமதி செய்வ தென்று முடிவு செய்ய இயலும். இறக்குமதி செய் கிற நாடுகளுக்கு, குறிப்பிட்ட விலையில் எவ்வளவு பொருள்கள் கிடைக்குமென்பது திட்டவட்டமாகத் தெரியும். ஆதலால், அவற்றை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கவலை இல்லை. எப்பொழுது பொருள்கள் இறக்குமதியாகும் என்பதை வரை யறுத்து விட்டால், உள்நாட்டு அங்காடியில் பொருள் களின் விலைகளை ஒருநிலைப் படுத்த இயலும்.

சில பொருள்கள் உலக அளவில் பற்றாக்குறை யாக இருக்கலாம். அவை ஒரு நாட்டின் பொருளா தார வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத தேவையாகவும் இருக்கலாம். இருமுக வாணிக ஒப் பந்தங்கள் அத்தகைய பொருள்கள் கிடைக்குமென் பதை உறுதி செய்கின்றன. இதனால், திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இய லும்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் வாணிகச் செலுத்துநிலை எளிதாகச் சமநிலைப்படுத்தப்படுகி றது. ஏற்றுமதி, இறக்குமதி அளவுகளை வறையறுத் துக் கொடுக்கல் வாங்கலில் சமப்படுத்தல் நிகழ்கிறது. இருமுக வாணிக ஒப்பந்தம் அதில் ஈடுபடும் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் நிலையில் அமை கிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டின் பொருளா தார வளர்ச்சிக்கு உதவி, அதன் மூலம் தானும் வளர வாய்ப்புப் பெறுகிறது.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் சில குறைகளும் உள்ளன. இருமுக வாணிக ஒப்பந்தத்தின் இயல் பினைத் தெளிவாக அறிய அவை உதவுகின்றன. ஏற்றுமதி செய்ய ஒப்புக் கொண்டிருக்கும் பொருள் களின் உற்பத்திச் செலவு கூடினால், ஏற்றுமதி செய் யும் நாட்டிற்கு மிகுந்த இழப்பு ஏற்படும். விலையை முன்கூட்டியே வரையறுத்து ஒப்பந்தம் செய்யப்படு கிறது. ஆனால், உற்பத்திச் செலவை ஒரே நிலை யாக வைத்திருக்க முடியுமென்று கூற இயலாது. குறிப்பாகப் பணவீக்கக் காலத்தில் உற்பத்திச் செலவு கூடும். இதனால், இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடி யாது. உற்பத்திச் செலவு குறையுமானால் ஏற்றுமதி செய்கிற நாட்டிற்கு மிகுந்த ஆதாயம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்குமா, இழப்பு ஏற்படுமா என்பதை முன் கூட்டியே ஊகிக்க முடியாது. இந்த உறுதிப் பாடின்மையான இடர்தாங்கலை (Risk bearing) ஏற்றுமதி செய்யும் நாடு ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. அதே காலத்தில் இறக்குமதி செய்யும் நாடும் ஒப்பந்த விலையிலிருந்து நடைமுறை அங்காடி விலை கூடினாலோ குறைந்தாலோ ஏற் படக் கூடிய விளைவுகளை ஏற்றுக் கொள்ளவேண்

டும். இதிலும் ஒருவகை இடர்தாங்கல் இருப்பதைக் காணலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் ஈடுபடும் நாடுகள், பிற நாடுகளை வேறுபடுத்திப் பார்க்கின்றன. பிற நாடுகளோடு செய்யக்கூடிய வாணிகம் தடைபடுகிறது. இதனால், பிற அரசியல் உறவுகளும் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படலாம். இருமுக ஒப்பந்தம் செய்கிற நாடுகளுள் ஆற்றல் மிக்க நாடு தனக்குச் சாதகமான முறையில் ஒப்பந்தத்தை அமைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பலமற்ற நாடு அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கலாம். குறிப்பாக, வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குப் பேரம் செய்கிற ஆற்றல் (Bargaining power) குறைவு. பொருள்களை நீண்டகாலம் வைத்துக் கொண்டு காத்திருக்க முடியாதாகையால் தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு அவை கட்டுப்பட வேண்டியுள்ளன. பொதுவாக இருமுக வாணிக ஒப்பந்தம் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குப் பாதகமாக அமைகிறது.

இருமுக வாணிக ஒப்பந்தத்தின் விளைவாக உள்நாட்டு அங்காடியில் ஓர் உள்ளார்ந்த நிலையற்ற தன்மை ஏற்படுகிறது. ஒப்பந்தத்தில் ஈடுபட்ட நாடு, ஒப்பந்தப்படி பொருள்களை எற்றுமதி செய்ய உள்நாட்டு அங்காடியில் பொருள்களை வாங்கலாம். ஒப்பந்த விலை,முன்பு நாட்டில் நிலவிய விலையின் அடிப்படையில் அமைந்திருக்கும். பின்னர் ஏற்றுமதிக்காகப் பொருள்களைக் கொள்முதல் செய்கிற பொழுது உள்நாட்டு விலையில் மாறுதல் ஏற்படும். உள்நாட்டு விலைகளை நிலைப்படுத்துதல் என்பது சிக்கலான பணியாகிவிடும். இதனால், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஒரு நிலையற்ற தன்மை ஏற்படலாம். இருமுக ஒப்பந்தங்களைப் பொதுவாகக் குறுகிய கால அடிப்படையிலேயே செய்கின்றனர். நீண்டகால வாணிக ஒப்பந்தங்களில் ஆண்டுதோறும் சில குறிப்பிடத்தக்க விதிமுறைகளை மாற்றியமைக்க வழிவகை செய்திருப்பார்கள். ஆதலால், இத்தகைய வாணிக ஒப்பந்தங்களை நம்பி ஒரு நாடு அடிப்படைப் பொருளாதார மாற்றங்களைச் செய்ய இயலாது.

முதன்மைப் (வேளாண்மைப்) பொருள்களை ஏற்றுமதி செய்பவர்களின் உண்மையான வருவாயை இருமுக வாணிக ஒப்பந்தங்களின் மூலம் நிலைப்படுத்த முடியுமென்று கூற முடியாது. ஏனென்றால் ஒப்பந்த விலைகளை, இரு நாடுகளின் பேரம் பேசும் ஆற்றல்களையும், வெளி அங்காடியில் நிலவும் விலைகளையும் ஒட்டியே முடிவு செய்கின்றனர். பொருள்களை உற்பத்தி செய்ய ஆகின்ற செலவைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலைகளை வரையறுத்தால், உற்பத்தியாளர்களின் உண்மையான வருவாய் கூடும். இருமுக வாணிக ஒப்பந்த விலைகளை ஆய்வின் அடிப்படையில் முடிவு செய்யாமல் பொதுவான கண்ணோட்டத்தில் முடிவு செய்கின்றவர். இவ்வாறு வரையறுக்கப்பட்ட விலைகள், நீண்டகால விலைப் போக்கிலிருந்து மாறுகிறபொழுது, நாட்டின் உற்பத்திக் காரணிகளைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்தும் போக்கில் மாறுதல் ஏற்படும். இதனால், நாட்டின் மொத்த உற்பத்தி குறைகிற நிலை ஏற்படலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தம் ஒரு நாட்டின் அயல் நாட்டு வாணிகத்தை வரையறுக்கிறது. பல நாடுகளோடு வாணிகம் செய்கிற பொழுது பலவகையான பொருள்களை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் வாய்ப்புகள் இருக்கும். இருமுக வாணிக ஒப்பந்தப்படி வாணிகம் நடைபெறுகிற பொழுது அயல்நாட்டு வாணிகப் பொருள்களின் எண்ணிக்கையும் அளவும் குறைகின்றன. இதனால் உலகின் மொத்த வாணிகம் குறையும் போக்குத் தோன்றலாம். இது உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதன்று என்று சிலர் கருதுகின்றனர்.

இன்று உலக நாடுகளுக்கிடையில் குழு மனப்பான்மை வளர்ந்திருக்கிறது. அரசியல் கொள்கை, அங்காடி வாய்ப்பு, உள்நாட்டுச் சிக்கல்கள், வெளிநாட்டு உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் குழுக்களாகப் பிரிந்துள்ளன. இதனால், வாணிக உறவுகளையும் ஒவ்வொரு நாடும் சில குறிப்பிட்ட நாடுகளோடு மட்டும் வைத்துக் கொள்ள விரும்புகின்றன. இந்தச் சூழ்நிலையில் இருமுக வாணிக ஒப்பந்தங்கள், இயல்பான பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளாக மாறி வருகின்றன. சீரான ஆய்வின் அடிப்படையில், உள்நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படாமல் செய்து கொள்கிற இருமுக வாணிக ஒப்பந்தங்களை வரவேற்கலாம். மா.பா.கு.

**இருமைக் கொள்கை:** இறைவன் வேறு, உயிர்கள் வேறு; இறைவனே அனைத்து வல்லமையும் பெற்ற தன்னிகரற்ற தலைவன்; உயிர்கள் அவரது ஆணைக்குட்பட்டு, அவனைப் பக்தி செய்தல் மூலமே உய்ய முடியும் என்ற கோட்பாட்டினை, உலகு உய்ய அளித்துப் புகழுற்றவர் மத்துவர். அவர் கருநாடக மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள மங்களூரை அடுத்த உடுப்பி அருகில் உள்ள பாசகசேத்திரம் என்னுமிடத்தில் பிறந்தார். துவைத வேதாந்தம் என்றும் தத்துவவாதம் என்றும் வடமொழியில்

பெயர்பெற்ற அவரது இருமைக் கோட்பாடு, சங்கரரின் அத்துவைத வேதாந்தத்திற்கு எதிர்மறையானதாகும். முற்பிறப்புகளில் அனுமனாகவும் பீமனாகவும் பிறந்து, இறைவனின் செயல்களுக்குத் துணை இருந்த வாயுபகவான் உலகில் இருமைக் கோட்பாட்டினை நிலைநிறுத்த மத்துவராகப் பிறந்தார். வாசுதேவன் என்பது அவரது இயற்பெயராகும். ஆனந்ததீர்த்தர், அனுமான தீர்த்தர், சுகதீர்த்தர், பூரணபிரஞர் என்பன அவர்தம் புகழ்ப் பெயர்களுள் சில.

மத்துவர் இளமையில் பெற்றோரால் இனிமையுடனும் அன்புடனும் வளர்க்கப்பட்டார். அவர் பற்பல அற்புதங்களை இயற்றினார். ஒரு சமயம் அவர் ஒரு பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு ஊருக்கு வெளியே சென்றுவிட்டார். பெற்றோர் மகனைக் காணாது பல இடங்களில் தேடி மனம் வருந்திய நிலையில், அவர் மீண்டும் பசுவின் பின்னே வந்து சேர்ந்தார். தாய் 'குழந்தாய் எங்குச் சென்றிருந்தாய்?' எனக் கேட்க, தான் இறைவனைக் கண்டு வருவதாக அவர் கூறினார். பிறிதொரு காலத்தில் தந்தைக்குக் கடன் அளித்திருந்த வணிகன் தான் கொடுத்த கடனைத் திரும்பப் பெற அவரது மனைக்கு வந்தபோது, தந்தை பொருள் வசதி இன்மையால் வாங்கிய கடனை எவ்விதம் திரும்பச் செலுத்துவது எனக் கலங்கினார். அப்போது மத்துவர் மழலை பேசி அவ்வணிகனிடம் கைநிறையப் புளியங்கொட்டைகளை அளிக்க, இறையருளால் அக்கொட்டைகள் அனைத்தும் பொற்கழஞ்சுகளாயின. வணிகனும் கடனுக்கு மேலேயே பொருள் வந்த திருப்தியுடன் மனை ஏகினான். இளமையில் இவ்வாறு பற்பல அற்புதங்களைப் புரிந்த மத்துவர், அச்சுத பிரேசர் என்ற துறவியை அணுகித் தீட்சைப் பெற்று, பரம அமிச பரிபுராசாகர் என்ற பெயரில் மனைவாழ்வைத் துறந்து துறவியானார்,

ஒரு சமயம் மத்துவர் ஒரு நாத்திகரை எதிர்கொள்ள நேரிட்டது. மறைகள் மற்றும் மந்திரங்கள் முதலானவை பொய்யுரைகள் என வழக்காடிய அவரிடம், அவை உண்மையே எனக் கூறினார். மேலும், அவர் சிறிது நீரைக் கையில் எடுத்து ஒரு மாங்கொட்டையை அதில் வைத்துச்சில மந்திரங்களை முனகினார். அம் மாங்கொட்டை உடனே மாஞ்செடியாக மாறியது. அக்காலத்தில் வடக்கே சென்ற மத்துவர் கங்கை நதித் தண்ணீரில் படகு உதவியின்றித் தம் கால்களாலேயே தவவலிமையின் உதவியால் நடந்து அக்கரையில் இருந்த இராம் நகரை அடைந்தார். பின்னர் அவர், அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த முசுலீம் அரசனிடம், அவனது தாய்மொழியான உருது மொழியிலேயே பேசி, அவ்வரசனைப் பெருமகிழ்ச்சிக்கு உள்ளாக்கி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

மத்துவர் பத்திரிநாத்து என்னும் புனிதத் தலத்தை அடைந்தார். அங்கு அவர் வேதவியாசரைக் கண்டு வணங்கி, அவரிடம் தாம் இயற்றிய கீதாபாடியம் என்ற நூலைப் பணிவுடன் வழங்கினார். அந் நூலைக் கண்டு மகிழ்வுற்ற வேதவியாசர், அதில் மத்துவர் தான் 'சக்திக்கேற்றவாறு' (சக்திதகா), என்று எழுதியிருந்ததை எளிமையாக (இலேசதகா) எனத் திருத்தித் தமது ஒப்புதலை அளித்தார். இவ்விதம் திருத்தியதன் மூலம் வேதவியாசர் மத்துவரின் பெரும் அறிவாற்றலை உலகிற்கு வெளிப்படுத்தினார் எனக் கொள்வர். பின்னர்ப் பாரத நாடு முழுவதும் இருமைக் கோட்பாட்டினை நிலை நாட்டுதல் வேண்டும் என்ற வியாசரின் ஆணையைத் தலைமேற் கொண்டு, இந்தியத் துணைக் கண்டம் எங்ஙனும் பலமுறை சுற்றுப்பயணம்செய்து தமது கொள்கையை நிலை நாட்டினார்.

சோபனபட்டர் என்ற புகழ்பெற்ற வடமொழிப் புலவரை வாதத்தில் தோற்கடித்து, அவரைத் தம் சீடராக ஏற்றுப் பத்துமநாபத்தீர்த்தர் எனப் பெயரளித்து அவரைத் துறவியாக்கினார். திரு விக்கிரம பண்டிதாச்சாரியார் என்ற அத்துவைதப் பெரும் புலவரையும் வாதத்தில் மத்துவர் வென்று, அவரையும் தம் சீடராக்கிக் கொண்டார். இவ்விருவரும் பிற்காலத்தில் மத்துவரின் பல நூல்களுக்கு விளக்கவுரைகள் இயற்றினர். எருதின் உருவத்தில் இருந்து மத்துவரிடம் பாடம் கற்ற இந்திரன், பிற்காலத்தில் செயதீர்த்தராக அவதரித்து, அவர் எழுதிய அனுவியாக்கியானம் என்ற நூலிற்கு இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினர்களாலும் புகழப்படும் 'நியாயசுதா' என்ற தெளிவுரையை வழங்கினான்.

தென் கன்னடத்தில் உடுப்பியில் எட்டு மடங்களை நிறுவிய மத்துவர், அங்குப் பெருமை வாய்ந்த கண்ணன் திருக்கோயிலை எடுப்பித்து கண்ணன் திருவுருவை நிறுவினார். எட்டு மடங்களின் துறவிகள் முறையாக இரு மாதங்களுக்கு ஒருமுறை, மாறி மாறி இறைவன் கண்ணனைப் பூசை செய்து வழிபடுதல் வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தினார். இவ்வழிபாடு பின்னர்ச் சோதே மடத்தைச் சார்ந்த வாதிராசவெதிகள் காலத்தில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றப்பெற்றது.

மத்துவர் துவைத வேதாந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு 37 சிறந்த நூல்களை

இயற்றியுள்ளார். அவர்தம் அறிவுசான்ற ஆக்கப்பணிகள் அளவிறந்தன. அவர் நூல்கள் பொதுவில் சருவ மூலம் எனப்படுகின்றன.அவர் பிரம்ம சூத்திரங்களுக்கு நான்கு விளக்கவுரைகளும், பகவத் கீதைக்கு இரண்டு விளக்கவுரைகளும், பத்து உபநிடதங்களுக்கு விளக்கங்களும், இருக்கு வேதத்தின் நாற்பது மந்திரங்களுக்கு விரிவாக்கங்களும் எழுதியுள்ளார். மேலும், அவர் பாரதத்தை மகாபாரத தாத்பரிய நிருணயம் என்றும், பாகவதத்தைப் பாகவத தாத்பரிய நிருணயம் என்றும் இயற்றியுள்ளதோடு, தம் மதக் கோட்பாடுகளுக்குத் தசப்பிரகரணங்களின் மூலம் செம்மையான வடிவம் அளித்துள்ளார். துவாதச தோத்திரத்தையும் வேறொரு தோத்திரப்பாடலையும் மத்துவர் இயற்றியுள்ளார். அவர் கிருட்டிண செயந்தி விழாவைக் கொண்டாடும் முறை பற்றிச் ‘செயந்தி நிருணயம்’ என்னும் நூல் இயற்றியுள்ளார். பெண்கள், துறவிகள், இல்லறத்தார், பிரமசாரிகள் ஆகியோர் எங்ஙனம் வாழ்வு நடத்துதல் வேண்டும் என்பது பற்றிய செய்திகளை மத்துவர் மூன்று நூல்களில் விளக்கியுள்ளார். தந்திரசாரம், மடக்கணிச் சொற்களினால் ஆன ‘இயமகபாரதம்’ முதலிய நூல்களும் மத்துவரால் இயற்றப்பெற்றவையே.

மத்துவரின் இருமைக் கொள்கை பின்வருமாறு:

1. இறைவன் (விட்டுணு)
2. அனைத்து உயிர்கள்
3. இயற்கை

1. அனைத்து உயிர்களும் இயற்கையும் இறைவனாகிய விட்டுணுவின் மேலாணைக்கு உட்பட்டவையே. விட்டுணு குறைவற்ற, இணையற்ற உயர் பண்புகளை உடையவன். எவ்விதக் கட்டுகளும் அற்ற நிறை சுதந்திரம் உடையவன். அனைத்து உயிர்களும் அவனது ஆணைக்குட்பட்ட குடிமக்கள்.

2. மத்துவர் ஐந்து விதமான, என்றும் அழிவற்ற வேற்றுமைகளைக் கூறுகிறார். அவை,

1. உயிர்களுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
2. உயிர்களுக்கும் உயிர்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
3. உயிர்களுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள வேற்றுமை.
4. இயற்கைக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
5. இயற்கைக்கும், இயற்கைக்கும் இடையே உள்ள வேற்றுமை.

அனைத்து உயிர்களும் அறியாமை காரணமாக உலக வாழ்க்கை அல்லது பிறவி என்கிற சிறையில் அடைபட்டுச் செய்வது அறியாது துன்புறுகின்றன. இந்த அறியாமை காரணமாக உண்டாகும் வாழ்க்கைத் திரை ஆண்டவனின் உண்மை உருவத்தை மறைத்து, அதனை உயிர்கள் அறிய முடியாதவாறு தடைசெய்கின்றது. இந்தத் திரை எல்லா உயிர்களுக்கும் இயற்கையாகவே உள்ளது. இதற்குத் தொடக்கம் இல்லை. ஆனால், நீக்கம் அல்லது அழிவு உண்டு. இதன் காரணமாக உயிர்கள் பிரமத்தின் குணநலன்களை அறிய முடிவதில்லை. இதன் காரணமாகத் தமக்கும் இறைவனுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பிரித்து உணரமுடியாது உயிர்கள் அல்லல் அடைகின்றன. உயிர்கள் அறியாமை காரணமாக அழியக்கூடிய உடலே அனைத்தும் என்று நினைத்து, உடலைப் பேணுதலே தமது தலையாய கடமையாகக் கொண்டு, உடலின்பத்தை நாடி எங்கணும் அலைந்து, இறைவனை அறவே மறந்து முடிவற்ற துன்பத்தை அடைகின்றன. இக்கொடிய பிறவிச் சிறையிலிருந்து விடுதலை அடைவதற்கும் துயரக் கலப்பற்றதும் நிலையானதும் இன்புருவானதுமான மேல்நிலை அல்லது வீட்டினை அடைவதற்கும் இறைவனான நாராயணனின் அருள் மிக மிகத் தேவை. முழுமுதற் கடவுளான விட்டுணு ஒருவனாலேயே உயிர்களுக்கு வீடுபேறு அருள இயலும். அவனருள் பெறுவதற்கு உயிர்கள் அவனைப் பக்தி செய்தல் வேண்டும்.

பக்தி செய்தலுக்கு உயிர்கள் இறைவனின் பெருமை முழுவதும் உணர்தல் வேண்டும். இறைவனின் பெருமையை உணர்வதற்கு, உயிர்கள் ஒரு சிறந்த ஆசிரியர்வழி மறைநூல்களை ஓதி உணர்தல் வேண்டும். உயிர்களுக்கு நன்னடத்தையும், ஆசிரியர் பால் பணிவன்பும் இருத்தல் வேண்டும். நல்லாசிரியர் மற்றும் மறை நூல்களின் வழிகாட்டுதலுடன் உயிர்கள் இறைவனை மனத்தூய்மையோடு வழிபட்டால், பக்திமுற்றி, இறைவனின் மனம் இரங்கிஅவன் அருள் கிட்டும். இறைவனது அருள் பெற்றால், பிறவிக் கட்டிலிருந்து விடுதலை பெற்று, அவன் திருவடிகளை அடைந்து, மேன்மேலும் அவனது அருள் சுரத்தலால் வீடுபேறு என்ற மேல்நிலை அடையலாம். வீடுபேறு அடைந்த நிலையிலும் உயிர்கள் இறைவனது ஆணைக்குட்பட்டவையே. இவ்வாறு மத்துவர் இருமைக் கொள்கைகளை விளக்குகிறார். பி.நா

**இருமொழி அகராதி** என்பது ஒரு மொழியிலுள்ள சொற்கள் பிறிதொரு மொழிச் சொற்களால் விளக்கம் பெறும் வகையில் இரண்டு மொழிகள் இடம் பெறும் அகராதி (Bilingual Dictionary) யாகும். பொதுவாக இருமொழி அகராதி, பிறமொழி

யினையும் (Other Tongue) அம்மொழி நூல்களையும் புரிந்துகொள்ளும் வகையில் அமையும். இவ்வகராதியில், அகரவரிசைப்படுத்தப்பெற்று அமையும் சொற்கள் எந்த மொழியில் அமைகின்றனவோ அந்த மொழி அடிப்படை மொழி (Source Language) எனப்படும். அகராதியில் இடம்பெறும் சொற்களுக்கு இணைச்சொற்கள் ( Equivalent Words) அல்லது விளக்கங்கள் கொடுக்கப் பயன்படுத்தப்படும் மொழி இலக்குமொழி (Target Language) எனப்படும்.

இருமொழி அகராதிகள் இருமொழியினருக்குப் பயன்படும் வகையிலும், அடிப்படை மொழியினர் அல்லது இலக்குமொழியினருக்குப் பயன்படும் வகையிலும் அமையும். இருமொழியினருக்கும் ஒரே சீராகப் பயன்படும் வகையில் இருமொழி அகராதி அமைதல் இல்லை.

படிப்பவர் (Reader), நோக்கம் (Purpose) ஆகிய இரண்டின் அடிப்படையில் இருமொழி அகாராதிகளை இருவகைப்படுத்தல் இயலும். முதல்வகை இருமொழி அகராதி, அடிப்படைமொழி பேசுவோருக்கு இலக்குமொழிச் சொற்கள் பயன்படும் முறையினை விளக்கும் வகையில் அமையும். இரண்டாம் வகை அகாராதி, இலக்குமொழி பேசுவோர்க்கு அடிப்படை மொழியினைப் புரிந்துகொள்வதற்கும், அம்மொழி நூல்களை விளங்கிக் கொள்வதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் பயன்படும் வகையில் அமையும்.

இருமொழி அகராதி எளிய மக்கள், அறிஞர்கள், மாணவர்கள் போன்றோரின் பயன்பாட்டிற்கேற்ப அமையும். மேலும், இருமொழி அகராதி அதன் தன்மையினைப் பொறுத்து, சொற்பிறப்பு வரலாற்று அகராதியாகவோ (Etymological Dictionary) வரலாற்று அகராதியாகவோ (Historical Dictionary) கிளைமொழி அகராதியாகவோ (Dialect Dictionary) அமையும்.

எந்த மொழியினருக்குத் தேவையோ அந்த மொழியினரின் தேவைக்கேற்பப் படிப்போர் வழிகாட்டியும் (Readers' guide) முன்னுரையும் (Introduction) இருமொழி அகராதியில் இடம்பெறும். மொழி பெயர்ப்பிற்குப் பயன்படும் இருமொழி அகராதியில் சொற்கள் மிகவும் குறைவாகக் காணப்பெறும். இத்தகைய அகராதி பார்வைக்குப் (Reference) பயன்படுவதால் நிகழ்காலச் சொற்களையும் உள்ளடக்கியதாக அமைதல் நல்லது. முழுமையான இணைச் சொற்கள்பொருளாக அல்லது விளக்கமாகக் கொடுக்கப் பெறும் நிலையில்தான் இருமொழி அகராதி சிறப்பாக அமையும். ஏ.ஆ.

**இருமொழி இலக்கணம்:** இருமொழிகளை ஒருவர் மாறிமாறிப் பயன்படுத்தும் மொழிப் பயன்பாட்டு முறையினை 'இருமொழியம்' எனலாம். இருமொழிகளை ஒருவர் பயன்படுத்தும் சூழலில் அவருடைய பேச்சில், ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு மொழியில் கலந்து வழங்குகின்றன. அவ்வாறு வந்து வழங்கும் பிறமொழிக் கூறுகளை 'மொழிக் குறுக்கீடு' (Interference) என்பர். இரு மொழிகளுக்கிடையே தொடர்பு நீண்டகாலம் நிலைத்திருந்தால் அம்மொழிகளுள் ஒன்று மற்றொன்றால் அல்லது இரு மொழிகளுமே தாக்கத்திற்குட்படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும்போது, பிறமொழிக் கூறுகள் குறுக்கீடாக அல்லது கடனாக (Borrowing) மொழிப் பயன்பாட்டில் இடம்பெறும். அவற்றை மொழி அமைப்பின் அடிப்படையிலும் சமுதாய நிலையிலும் விளக்கலாம்.

மொழி அடிப்படையில் விளக்கத் தொடர்பு கொள்ளும் மொழிகள் இரண்டிற்கும் 'இருமொழி இலக்கணம்' எழுதப்பட வேண்டும். இவ்விலக்கணம் விளக்க மொழியியல் அடிப்படையில் (Descriptive Linguistics), ஒப்பிலக்கணமாகவோ (Comparative Grammar) உறழ்ச்சி இலக்கணமாகவோ (Contrastive Grammar) அமையும். மொழித் தொடர்பில் இடம்பெறும் மொழிகள் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருந்தால், அவற்றை ஒப்பிட்டு, அதன் வாயிலாக மொழிக் கூறுகள் எவ்வாறெல்லாம் ஒத்தும், வேறுபட்டும் பயன்பாட்டில் அமைந்துள்ளன என்பதை விளக்க முடியும். மாறாக, இருமொழிகளும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தனவாக இருப்பின், உறழ்ச்சி இலக்கணமே அம்மொழிகளுக்குள் உள்ள வேற்றுமைகளை எளிதில் வெளிக் கொணரும் வகையில் அமையும். எடுத்துக்காட்டாக, தமிழையும் ஆங்கிலத்தையும் கூறலாம். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆங்கிலம் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில், செருமன் உட்பிரிவைச் சேர்ந்தது.

தமிழ் ஆங்கில இருமொழியத்தில் உறழ்ச்சி இலக்கணமே வகுக்க வேண்டும். இவ்விலக்கணம் இம்மொழிகளில் ஒலியியல், ஒலியனியல், உருபொலியனியல், உருபனியல், சொற்றொடரியல், சொல்லடைவு ஆகிய பகுதிகளை முறையாக ஒப்பிட்டு, அவை எவ்வாறு முரண்படுகின்றன; எங்கெல்லாம் மொழிக் குறுக்கீடு ஏற்படுவதற்கு ஏற்ற அமைப்பு இடைவெளி உள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டும். எடுத்துக்காட்டாக, ஒலியியல் பகுதியை எடுத்துக்கொண்டால், தமிழ் - ஆங்கில உறழ்ச்சி இலக்கணம் இம்மொழிகளில் வழங்கும் ஒலிகள், அவை

ஒலியன்களாக அமையும் முறை, சொல்லில் அடுத்து வரும் முறை, ஒலிப்புமுறை ஆகியவற்றை அட்டவணைகள் மூலம் விளக்கியபின், இரண்டிற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் யாவை; ஒற்றுமையிருப்பின் அவை யாவை என்பதையும் விளக்கும். மேலும், அமைப்பு – வெற்றிடத்தைக் காட்டி அங்கு ஏற்படவிருக்கும் குறுக்கீடுகள் எத்தன்மையன; முறையாகக் கற்காவிட்டால் அதனால் நிகழும் கேடுகள் யாவை ஆகியவற்றையும் விளக்கும்.

தமிழ் மெய்யொலியன்கள்: க், ச், ட், த், ப் - தடையொலியன்கள், இவற்றிற்கு மாற்றொலிகளாக இவை வருமிடத்திற்கேற்பக் குரல் ஒலிப்புடைய ஒலிகளும் (Voiced Sounds), உரசொலிகளும் (Fricatives) வரும். ஆங்கில மொழியில் உள்ள உரசொலிகளான f, h, s, x, z போல்வன தமிழில் இல்லை. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இவ்வொலிகளை முறையாகக் கற்றால் தவறு ஏற்படாது. இல்லையெனில், இவற்றை ஒலிப்பதற்கு ஈடாகத் தம் தாய்மொழியிலுள்ள (அமைப்பு வெற்றிடமாக இருப்பதால்) பிற ஒலிகளை ஒலித்து ஈடு செய்ய முயல்வர்.

'Father' (fa: z) என்ற ஒலிப்பிற்குத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர் (fa: d∧r) என ஒலிப்பார். (ð) என்ற ஒலி தமிழில் இல்லை; ஆனால், /த்/ ஒலியனுக்கும் மாற்றொலியாக (d) (மெல்லினத்தை அடுத்து வந்து வழங்கும்) இருப்பதால் அதனை ஈடாக ஒலிக்க முயல்கின்றனர். மேலும், அச்சொல்லில் இறுதியில் உள்ள 'r' என்ற எழுத்தை மனத்தில் கொண்டு அதனையும் ஒலிக்கிறார். தமிழ் வரிவடிவில் ஒலிக்கப்படாத எழுத்து இல்லை. ஆகவே, அதன் அடிப்படையில் ஆங்கிலத்தையும் ஒலிக்கிறார். இவ் வேறுபாடுகளை உறழ்ச்சி இலக்கணம் (இருமொழி இலக்கணம்) விளக்குகிறது. மேலும், நாமடி ஒலியான டகரம் (ṭ) ஆங்கிலத்தில் இல்லை. ஆங்கிலத்தில் உள்ள முன் அண்ண ஒலி (t) தமிழில் இல்லை. இந்த அமைப்பு வெற்றிடம் காரணமாக மொழிக் குறுக்கீடு ஏற்பட்டு ஒலியமைப்பில் தாக்கம் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் butter என்ற சொல்லின் ஒலிப்பு [b∧tə] என்பதாகும். இதன் தமிழ் ஒலிப்பு d∧ṭṭ∧r ஆகும். (t) என்ற ஆங்கில ஒலிக்கு ஈடாகத் தமிழில் டகரம் (ṭ) ஒலிக்கப்படுகிறது. இவை ஒரு சில எடுத்துக்காட்டுகளே. இவ் வடிப்படையில் எல்லா ஒலிகட்கும் விளக்கம் இருமொழி இலக்கணத்தில் இடம் பெற்றிருக்கும்; எல்லா இயல்களுக்கும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆதலால், இருமொழி இலக்கணத்தின்மூலம் தொடர்பு கொண்ட மொழிகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தாக்கத்திற்குட்படுகின்றன என்பதை நன்கு அறியலாம். மேலும், ஒருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு எவ்வெச் சொற்கள் அல்லது மொழிக்கூறுகள் கடனாக வந்து வழங்குகின்றன என்பதையும் கண்டறிய முடியும்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் பலசொற்கள் கடன் வாங்கப்பட்ட சொற்களாக வந்து வழங்குகின்றன. தாக்கத்தின் காரணமாகப் புதுச் சொற்களும், கருத்துகளும் கூடத் தோன்றிவிடுகின்றன. சுற்றுலா, சுற்றறிக்கை, கலைக்களஞ்சியம் போன்ற சொற்கள் உருவாக ஆங்கில மொழியின் தொடர்பால் ஏற்பட்ட பின் விளைவுகளே காரணமாகும். பழந்தமிழ்ச் சொற்கள் புதிய பொருளைப் பெற்று வழங்குவதையும் காணலாம்.

'ஊசி' என்ற சொல் துணியைத் தைக்கப் பயன்படும் கருவியைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது நோயுற்றவர்க்கு மருந்தை உடம்பில் உட்செலுத்தப் பயன்படுத்தும் கருவியையும் 'ஊசி' என்றே குறிக்கிறார்கள். 'ஒரு ஊசி போட்டுக் கொண்டேன்' என்ற சொற்றொடரில் உள்ள ஊசி குறிக்கும் பொருள் 'மாரியம்மனுக்குச் செடல் ஊசி' போடுவதினின்றும் வேறல்லவா! இவ்வாறே 'முள்' என்ற சொல்லும் புதிய பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. கடிகாரத்தில் நேரம் காட்டும் கைகளைப் 'பெரியமுள், சிறியமுள்' என்று கூறும்பொழுது அதில் உள்ள பொருள் புதியதல்லவா! ஆதலால், இருமொழி இலக்கணம், அமைப்பிலும் தன்மையிலும் வேறுபட்டதாகும். வழக்கமான ஒரு மொழியின் இலக்கணத்திற்கும், இத்தகைய இலக்கணத்திற்கும் அடிப்படை அமைப்பிலும், அவை உருவாக்கப்படும் நோக்கத்திலும் முறையிலும் வேறுபாடுகள் உள்ளன என்பதைக் காணலாம். கோ.சீ.

துணை நூல்கள்:

Einer **Hangen**, Bilingualism in the Americas, Pub. American Dialect Society, 1956.

**Kelly (Ed.)**, Description and Measurement Bilingualism, Toronto, 1969.

**Weinreich**, **Uriel**, Languages in Contact, Mouton & Co., The Hague, 1960.

**இருமொழியம்:** கருத்துப் பரிமாற்றத்திற்காகவும் சமூகத்தோடு இனங்காட்டி இணைத்துக் கொள்வதற்காகவும் மொழி ஒரு கருவியாக மக்களுக்குப் பயன்படுகிறது. இரு வேறு மொழி பேசுவோர் சந்திக்கும்போது அவர்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் நிகழ வேண்டுமானால் ஒருவரின் மொழியை மற்றவர்

அறிந்திருக்க வேண்டும். அல்லது பொதுவான ஒரு மொழியினை இருவரும் அறிந்திருக்க வேண்டும். ஒரு மொழியினை மட்டும் அறிந்துள்ளவர்களைத் தனி மொழியாளர் (Monolinguals) என்றும் இருமொழி களை அறிந்து, பேசும் சூழலுக்கு ஏற்ப அவற்றைத் தனித்தனியே பயன்படுத்துவோரை இருமொழியா ளர் (Bilinguals) என்றும் குறிப்பர். இரண்டு மொழிகளும் பயன்படும் சமுதாய-மொழியற் சூழலை இருமொழிச்சூழல் (Bilingual Situation) என்றும், இது பற்றிய ஆய்வினை இருமொழியம் (Bilingualism) என்றும் குறிப்பிடுவர். பொதுவாக, இரண்டிற்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் பயன்பட்டு வரும் நிலையினைப் பன்மொழி நிலை (Multi-lingual-situation) என்று கூறுவர். ஆயினும், இருமொழியம் என்னும் பொதுத் தலைப்பின்கீழ், பெரும்பாலும் கோட்பாட்டளவில் ஒத்துப் போகும் இருமொழி நிலையையும் பன்மொழி நிலையையும் இணைத்து மொழியியலார் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வர்.

இந்திய நாட்டில் பல்வேறு மொழிபேசுவோர் வாழ்கின்றனர். இங்கு, 1961-ஆம் ஆண்டு நடை பெற்ற மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 1951 தாய் மொழிகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி பரவலாக எல்லோரா லும் பேசப்பட்டாலும், பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பலர் வாழ்கின்றனர். வேற்றுமொழிபேசும் அரசர்களின் ஆட்சி மாற்றங்க ளும், ஒரு மொழிபேசுவோர் வேறுமொழி பேசும் இடத்திற்குக் குடிபெயர்ந்து சென்று தங்கி விடுத லும் பன்மொழி பேசும் சூழலுக்கான சில காரணங் களாகும்.

தமிழ் நாட்டில் உருது, கன்னடம், மலையாளம், தெலுங்கு, சௌராட்டிரம், மராத்தி போன்ற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்கள் வட்டார மொழியான (Regional Language) தமிழ்மொழி யினைக் கற்றுத் தேறித் தாய்மொழி போலத்தமிழி லும் பேசும் திறன் படைத்தவர்களாகவும் உள்ளனர் இத்தகைய இருமொழிநிலையோடு ஆங்கிலம் கற்ற தமிழர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகிற இருமொழிநிலையும் உள்ளது. மேலும், தமிழ்நாட்டின் எல்லையோரப் பகுதிகளிலும் இத்தகைய இருமொழி நிலை காணப் படுகிறது. தமிழ்நாடு- கருநாடக மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள ஒசூர் போன்ற இடங்களில் கன்னடம்-தமிழ் இருமொழிநிலை நிலவு கிறது. அவ்வாறே தெலுங்கு-தமிழ், மலையாளம்-தமிழ் ஆகிய இருமொழிநிலை தமிழ்நாட்டின் மற்ற எல்லையோரப் பகுதிகளில் உள்ளன. எல்லையோரப் பகுதிகளில் தமிழர்கள் மற்ற மொழிகளான கன்னடம் தெலுங்கு ஆகியவற்றையும் அங்கு வாழும் கன்னடி யரும் தெலுங்கரும் தமிழ் மொழியையும் கற்றறிந்து ஒருவருக்கொருவர் ஏதேனும் ஒரு மொழியில் சூழ லுக்கு ஏற்றவாறு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். ஆனால், உள்நாட்டுப் பகுதிகளில் வாழும் தெலுங்கர்கள் வீட்டுச் சூழலில் தெலுங்கு மொழியினையும் மற்றவர்களுடன் தமிழையும் பயன் படுத்துகின்றனர். தமிழர்கள் கன்னடமும் தெலுங் கும் கற்று அவர்களுடன் பேசுவதில்லை. இதனால், நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் நிலவும் இரு மொழி நிலைக்கும் (Border Bilingualism), உட் பகுதிகளில் நிலவும் இருமொழி நிலைக்கும் (Inland-Bilingualism) மிகுந்த வேறுபாடு உள்ளது.

தாய்மொழி அல்லாது பிற மொழியினை இரண் டாம் மொழியாக ஒருவர் தம் குழந்தைப் பருவத்தி லிருந்து அல்லது பள்ளிப்பருவம் தொடங்கியதி லிருந்து அல்லது வயதானபிறகு கற்றுக்கொண்டு இருமொழியாளராகலாம். சான்றாக, தமிழகத்தின் உட்பகுதிகளில் வாழும் தெலுங்குமொழி பேசும் குடும்பத்தினரின் குழந்தை வீட்டுச் சூழலில் தெலுங் கையும் வெளிப்புறச் சூழலில் தமிழையும் கற்றுக் கொள்ளும். இதனை மழலை தொடங்கிய இரு மொழி நிலை (Infant Bilingualism) என்பர். தமி ழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகள் பள்ளியில் ஆங்கிலம் கற்றுப் பின்னர்த் தமிழைப் போலவே ஆங்கிலத்தில் எழுதவும் படிக்கவும் பேச வும் திறன் படைத்தவர்களாக விளங்குகிற நிலை சிறுவயது தொடங்கிய இருமொழிநிலை (Childhood Bilingualism) எனப்படும். வயதான பின்னர் வேற்று மாநிலங்களுக்குச் சென்று தாய்மொழியல்லாத அம் மாநிலத்து மொழியினைக் கற்றுக் கொண்டு, பின் னர் அதில் பேசும் திறன் பெற்று விளங்கும் நிலை வயது தொடங்கிய இருமொழிநிலை (Adolescent-Bilingualism) எனப்படும். இலேம்பர்ட்டு (Lambert), இசுடார்க்கு (Starck) போன்ற அறிஞர்கள் இம் மூன்று வேறுபாடுகளையும் விரிவாக ஆய்ந்துள்ளனர்.

ஒருவர் தம் தாய் மொழி தவிர்த்து, இரண் டாம் மொழியில் தாய்மொழிக்கு நிகரான மொழித் திறன் (Language Competence) பெற்றிருக்கலாம், அல்லது ஓரளவு கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன் படுமளவு மட்டும் பேசும்திறன் பெற்றிருக்கலாம். புளூம்பீல்டு (Bloomfield) போன்ற அறிஞர்கள் தாய் மொழிக்கு நிகரான மொழித்திறனை இரண்டாம் மொழியில் பெற்றிருப்பவரே இருமொழியாளர் எனக் கருதலாம் என்று குறிப்பிடுகிறார்கள். ஆரன்பி

(Hornby) முதலியோர் இருமொழிகளைச் சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகின்றவர்களே இருமொழியாளர்கள் என விளக்கம் தருகிறார்கள். இது போன்ற கருத்து வேறுபாடுகள் இருமொழியாளர்களிடம் நிலவும் மொழித்திறன் அளவினைக் (Scale-of language competence) குறித்து எழுந்தனவேயன்றி ஒருவர் இருமொழியாளராக இல்லையா என்ற அடிப்படைப் பண்பினைத் தீர்மானிக்க எழுந்தனவாகக் கருத வாய்ப்பில்லை,

இருமொழியாளர்களிடம் நிலவும் இருமொழி நிலையினை வெயின்ரிச்சு (Weinrich) என்னும் அறிஞர் இணைந்த இரு மொழியம் (Compound Bilingu-alism) என்றும், கூட்டு (சேர்ந்த) இருமொழியம் (Co-ordinate Bilingaulism) என்றும் வகைப்படுத்தியுள்ளார். இருமொழிகளிலும் பொருளியல் (Seman-tics) அடிப்படையில் சொற்களைப் பயன்படுத்தும் முறையால் இத்தகைய வகைபாடு எழுந்துள்ளது. ஒரு பொருளைக் குறிக்க இரண்டு சொற்கள் (இருமொழிகளிலிருந்தும்) மாற்றிணைகளாக வருவதைக் கூட்டு இருமொழியம் என்பர். ஆங்கிலத்தில் 'House' என்றும், தமிழில் 'வீடு' என்றும் மாற்றிணைகளாக மக்களின் குடியிருப்பு இடத்தினைக் குறிப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம். மாறாக, மொழிவாரியாகச் சொல்லையும் அது குறிக்கும் பொருளையும் பிரித்து வேறுபடுத்திப் பயன்படுத்துவதைக் கூட்டு இருமொழியம் எனக் கருதலாம். ஆசுகுடு (Oosgood) என்னும் அறிஞர் இணைந்த இருமொழியாளர்களை விடக்(Compound Bilinguals) கூட்டு இருமொழியாளர்களிடையே மொழிக் குறுக்கீடு சிறிது குறைவாக உள்ளது என்று கருதுகிறார். மழலைப்பருவத்தில் ஒரே சமயத்தில் இருமொழிகளையும் ஒன்றாகக் கற்கும் சூழல் இணைந்த இருமொழிநிலையினை உருவாக்கும் என்றும் ஒரே நேரத்தில் இருமொழிகளை ஒன்றாகக் கற்காது வீட்டில் தமிழும் பள்ளியில் ஆங்கிலமும் கற்பது போன்ற நிலை கூட்டு இருமொழி நிலைக்கு வழிவகுக்கும் என்றும் தைலர் (Taylor) என்னும் அறிஞர் கருதுகிறார்.

ஒரு தமிழர் இரண்டாம் மொழியாகக் கன்னடத்தை அறிந்து கொள்கிறார். பின்னர் வேலை செய்யும் சூழல் காரணமாகத் தெலுங்கு கற்க வேண்டி வருவதாக வைத்துக் கொண்டால், அந்தச் சூழலில் அவர் கன்னடமொழியினை மறக்காது, அதனையும் தக்கவைத்துக் கொண்டு, தெலுங்கு மொழியினைக் கற்றுக் கொள்ளலாம், அல்லது கன்னட மொழியினை நாளடைவில் மறந்த வண்ணம்தெலுங்கினைக் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறு உருவாவதே முன்னர்க் கூறிய நிலைக்குக் கூட்டு இருமொழியம்(Additive Bilingualism)என்றும், பின்னர்க் கூறிய நிலைக்குக் கழிவு இருமொழியம் (Substractive Bilingualism) என்றும் கூறுவர். ஆனால், இவ்விரு நிலைகளும் இரண்டாவது மொழி எது என்பதில் வேறுபடுகிறதேயன்றி இருமொழி நிலையில் வேறுபடாது நிலைபெற்ற இருமொழி நிலைக்குச் (Stable Bilingual situation) சான்றாக விளங்குகின்றன

இருமொழிநிலையில், இரண்டு மொழிகளையும் ஒருவர் அறிந்திருப்பதால் மொழியாளர்களின் பேச்சில் 'மொழிக்குறுக்கீடு' நிகழ்கிறது. குறுக்கீடு என்பது ஒரு மொழியில் பேசும்போது அம்மொழிக்குரிய இலக்கண வரம்பிலிருந்து விலகி, அயல் மொழிக்கூறுகள் வந்து கலந்து வழங்குவதாகும். இக்குறுக்கீடுகள் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் ஏற்படும். மேலும், அத்தகைய குறுக்கீடுகள் மொழியின் ஒலியியலிலும், உருபனியியலிலும் தொடரியலிலும் சொற்களிலும் காணப்படும். தொடக்கத்தில் குறுக்கீடுகளாகக் கலந்த பிற மொழிக்கூறுகள் காலப்போக்கில் தனி மொழியாளர்களாலும் பயன்படுத்தப்பட்டு, பின்னர் மொழியில் நிலைபேற்றாக்கம் கொள்ளும் நிலையில் இவற்றைத் தனி மொழியாளர்கள் தம் மொழிக் கூறுகளாகவே எண்ணிப் பிரித்தறிய முடியாமல் மயங்குவர். வாசனை என்னும் வடசொல் பேச்சு மற்றும் எழுத்துத் தமிழில் பெருமளவு பயன்படுத்தப்பட்டு, மணம் என்னும் தமிழ்ச்சொல்லின் பயன்பாட்டினை அருகிடச் செய்துள்ள நிலையினை இதற்குச் சான்று காட்டலாம்.

இருமொழியாளர்களிடையே ஒரு மொழி பேசும்போது மற்ற மொழியின் ஒலிக்குறுக்கீடு (Phonetic Interference) மிகவும் அதிகமாக ஏற்படுகிறது என்று வெயின்ரிக்குரி என்னும் அறிஞர் கருதுகிறார். ஆங்கில ஒலியனியல் அமைப்பில் உள்ள மெய்யொலியன்களான f,h,s,x,z போன்ற உரசொலியன்களை ஒலிப்பது சற்றுக் கடினமாகும். நாம் /θ/ என்னும் ஒலியனைத் தமிழில் உள்ள /t/ என்னும் ஒலியாக ஒலித்துவிடுகிறோம். (எடுத்துக்காட்டு: (θIn) (tIn) 'thin') மொழிக்குறுக்கீடு தொடரியல் (syntax) நிலையிலும் ஏற்படுவதுண்டு. ஆங்கிலத்தில் 'have', 'known' என்னும் வினைகள் தொடர் நிகழ் காலத்தில் வருதலில்லை. ஆயினும், நாம் பேசும்போது, 'என்னிடம் இரண்டு ரூபாய் உள்ளது' என்னும் பொருளில் 'I am having two rupees now' என்று கூறுவது தமிழ் மொழியின் குறுக்கீட்டால் எனக் கருத வாய்ப்புண்டு. மொழித் தொடர்பால் ஏற்படும் எல்லாக் குறுக்கீடுகளிலும் மிக எளிதாக அறியக் கூடியதும் நன்கு புலப்படக் கூடியதும் சொல் குறுக்கீடேயாகும். மொழிக் கலப்பு நேரும்

போது மொழியின் எல்லா நிலைகளும் ஒரேமாதிரி யாகப் பாதிக்கப்படுவதில்லை. மொழிக் குறுக்கீடுகள் முதலில் சொற்களிலும், பின்னர் ஒலியியல் நிலை யிலும் பின்னர்த் தொடரியலிலும் ஏற்படுகின்றன. மொழியின் அரணாக விளங்கும் உருபனியலில் மொழிக் குறுக்கீடு இறுதியாக அமைந்துள்ளது என்று தௌசத்து (Dauzat) கருதுகிறார். பேராசிரியர் தெ. பொ.மீ. அவர்களும் சொற்களே மிக எளிதாக வெளிச் செல்வாக்குகளுக்கு வளைந்து கொடுக்கும் பரப்பாகும் எனக் குறிப்பிடுகிறார். 'லாட்டரி', 'லிட்டர்', 'கிலோ', 'மீட்டர்' முதலியன இன்று தமிழில் மிகவும் எளிதாகப் பயன்பட்டு வரும் சொற்களாகும். முள் என்னும் சொல் கால வளர்ச்சிக்கு ஏற்ப இன்று பேனாமுள், கடிகாரமுள் என்னும் பொருளில் பயன் படுகிற நிலையும் பிற மொழிக் குறுக்கீட்டின் காரண மாக நிகழ்ந்ததாகும்.

இருமொழி நிலை சமுதாயம் தழுவிய நிலையில் மட்டுமல்லாது நாடு தழுவியதாகவும் விளங்கலாம். தமிழ்நாட்டில் சிறுபான்மை மொழியாக உள்ள கன்னடம், கருநாடக நாட்டின் பெரும்பான்மை மொழியாக விளங்குகிறது. இங்குக் கன்னடம், தமிழ் இருமொழியாளர்கள் உள்ளது போலவெ, கருநாட கத்தில் தமிழர்கள் இருமொழியாளர்களாகவும் இருக்கின்றனர். ஒரு சமுதாயத்தில் இருமொழியம் நிலையானதாகவோ அடிக்கடி மாறும் தன்மையுடை யதாகவோ அமைந்திருக்கலாம். கனடா நாட்டில் ஆங்கிலம்-பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் நிலை யான இருமொழியத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தி யாவில் காலத்திற்குக் காலம் இருமொழியம் மாறிக் கொண்டே வந்துள்ளது. தமிழ் நாட்டில் முன்னர் வடமொழியும், பின்னர் (மொகலாயர் ஆட்சி காலத்தில்)உருது மொழியும், அதற்குப் பின்னர்த்(நாயக்கர் காலத்தில்) தெலுங்கும், (மராத்தியர் காலத்தில்) மராத்தியும்,(ஆங்கிலேயர் காலத்தில்) ஆங்கிலமும் என அயல் மொழிகள் இரண்டாம் மொழியாக வழங்கி இருமொழியம் நிலைபெற வகை செய்தன என்று சீனிவாசவர்மா குறிப்பிடுகிறார்.

மொழி ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் குறி யீடாக (Symbol) விளங்குகிறது. அவ்வாறாயின் இரு மொழி பேசுவோர், இருமொழிகளுக்கும் உரிய பண் பாட்டினை ஓரளவு பெற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலம் கற்ற தமிழர்கள் ஆங்கிலேயர் போன்று உடை உடுத்தலும், ஒருவரையொருவர் சந்திக்கும்போது கைகுலுக்கிக் கொள்வதும் ஆங் கிலப் பண்பாட்டுத் தாக்கத்தினை உணர்த்துகிறது அல்லவா? அவ்வாறே, தஞ்சாவூரில் வாழும் மராத்தி யர்கள் தங்கள் மராத்தியப் பண்பாட்டுடன் தமிழ்ப் பண்பாடுகளையும் பின்பற்றுகின்றனர்.

இருமொழிநிலை தொடர்ந்து நீடிக்கும் இரு மொழி பேசுவோரிடையே காணும் மொழித்திறமை, மொழிப்பயன்பாட்டு முறைகள், மொழிகளைக் கற்றுக் கொண்ட காலம், கற்போரின் வயது, கருத்துப் பரிமாற்றத்திற்குஅவற்றைப் பயன்படுத்தும் முறை, மொழி பேசுவோருக்கு அம் மொழியின், இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் உள்ள ஈடுபாடு மற்றும் அரசியல் சமூகச் சூழல்கள் முதலியன காரணிகளாக அமைகின்றன. தமிழ் மராத்தி மொழி யாளர்கள் தம் தாய் மொழியான மராத்தியை வீட்டுச் சூழலிலும், குடும்பத்தினரிடையேயும், நெருங்கிய உறவினர்களுடனும், தமிழ் மொழியை வெளிப்புறச் சூழல்ல் நண்பர்களுடனும், பொது இடங்களிலும் பயன்படுத்துவதோடு ஆங்கிலம் கற்ற வராக இருப்பின், ஆங்கிலத்தை அலுவலகச் சூழலில் பயன்படுத்துபவர்களாகவும் உள்ளனர். தமிழ் மொழி யில் இருவழக்கு நிலை (Diglossia) இருப்பதனைப் பர்கூசன் (Ferguson) என்னும் அறிஞர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். தமிழ்மக்கள் கல்விக் கூடங்கள், மேடைப்பேச்சு முதலிய சூழல்களில் பேசும்போதும் எழுதும்போதும் செம்மொழியைப் பயன்படுத்துகின் றனர். மாறாக வீட்டுச் சூழலிலும் நண்பர்களிடமும் சிறுவர்களிடமும் பேசும்போது பேச்சுத் தமிழினைப் (Spoken Tamil) பயன்படுத்துகின்றனர். இத்தகைய இருவகைப்படுத்தப்பட்ட மொழி வழக்கு ஒரே, மொழிக்குள் அடங்கியது என்றும், இருமொழியம் போன்று கொள்கையளவில் உள்ளது என்றும் பிசுமன் (Fishman) கருதுகிறார். அவர் இருமொழியம் மற்றும் மொழியின் இருநிலை வழக்கு ஆகியவற்றை நன்கு ஆய்ந்து அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்தியுள்ளார்.

இருமொழியாளர்கள் இருவேறு பண்புகளுள்ள சமுதாயங்களுடன் உறவாடவும், அவற்றை அறிந்து பயன்படுத்தவும், தம் கருத்தை இருமொழிகளின் மூலம் எடுத்துரைக்கவும் முடிவதால் பெரும் நன்மையே ஏற்படுகிறது. இது கருத்துப் பரிமாற்றத் திற்குப் பெருமளவு உதவுகிறது. வளர்ந்து வரும் செய்தித் தொடர்பு, போக்குவரத்து, பன்மொழிக் கல்வி, வெளிநாட்டுத் தொடர்பு முதலியன நாளுக்கு நாள் இருமொழியத்திற்குப் பெரும்பான்மையான மக்களை உட்படுத்துகின்றன. இருமொழியம் பெரு கிட அதன் வழி நன்மைகளும் பெருமளவு பெருகி வருவதைக் காணலாம்.

**இருமொழி வழிக் கல்விமுறை:** இரண்டு மொழிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பித்தல் இருமொழி வழிக் கல்வி முறை (Bilingual Education) எனச் சொல்லப்படும்.

இம்முறையிலான கற்பித்தலில், இரு மொழிகளையும் ஒரே கல்வி ஆண்டில் ஆசிரியர் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. மாறாக, முதலாண்டில் ஒரு மொழியிலும், அடுத்த ஆண்டில் இன்னொரு மொழியிலும் பாடங்களைக் கற்பிப்பது கூட இரு மொழி வழிக்கல்வி முறையில்தான் அடங்கும். மேலும், பாடம் கற்பிக்கப் பயன்படும் இரு மொழிகளையும் மாணவர்கள் ஏற்கனவே பள்ளியில் சேருவதற்கு முன்பே பேசவோ அறிந்தோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இக்கல்வி முறையில் இல்லை. மாணவர்களின் தாய்மொழி தவிர்த்து, ஏதாவது ஒரு மொழியை மட்டும், ஆசிரியர் பள்ளிக் கல்வி முழுவதும் பயன்படுத்துவாரேயானால், அது இருமொழி வழிக் கல்வி முறையின்பாற்படாது. இதேபோல், மாணவர்களின் தாய் மொழியை மட்டும் பயன்படுத்தி, ஆசிரியர் பள்ளிப் பாடத்தை எல்லாம் நடத்திவிட்டு, ஏதாவது ஒரு அயல் மொழியை ஒருபாடமாக மட்டும் கற்பிப்பதும் இரு மொழி வழிக் கல்வி முறையில் வாராது.

தமிழகத்தில் பெரும்பாலான பள்ளிகளில் கற்பித்தல் இருமொழி வழி முறையில் நடைபெறுகிறது. பள்ளி இறுதி வரை தாய் மொழியான தமிழில் பாடம் கற்பிக்கப்படுவதும், பின்பு மேல்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் அயல்மொழியான ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்கப்படுவதும் இரு மொழி வழிக் கல்விக்கு எடுத்துக்காட்டாகும்.

செருமனி நாட்டில் தங்கியுள்ள துருக்கி பேசும் குழந்தைகட்குச் செருமன் மொழி மட்டுமே கற்பிக்கப்படுகிறது. இது இருமொழி வழிக் கற்பித்தலில் வாராது.

நைசீரியா (Nigeria) நாட்டில் பல இனமொழிகள் உள்ளன. ஆனால், அங்கு ஆங்கில மொழிதான் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் மும்மொழித் திட்டம் (Three-language formula) பள்ளிகளில் உள்ளது. நைசீரிய நாட்டுக் குழந்தைகள் தங்கள் ஒன்பது வயது வரை தத்தம் தாய்மொழியிலேயே பள்ளிக் கல்விப் பாடங்களைக் கற்கின்றனர். ஒவ்வொரு நைசீரியக் குழந்தையும் இன்னுமோர் இன மொழியையும் கற்க வேண்டும். மேலும், இந்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆங்கில மொழியின் அடிப்படைகள் கற்பிக்கப்படுகின்றன. ஒன்பது வயதுக்குப் பின், ஆங்கிலமே தலையாய பயிற்றுமொழியாகப் பள்ளிகளில் பயன்படுத்தப்படுகின்றது.

கனடா (Canada) நாட்டில் பிரெஞ்சு மொழியும், ஆங்கில மொழியும் அலுவலக மொழிகள். இந்நாட்டில் கனடா மொழி பேசுவோரும் பிரெஞ்சு மொழி பேசுவோரும் பெருமளவு உள்ளனர். பிரெஞ்சு மொழி பேசுவோரின் குழந்தைகள் ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளில் முறையே ஆறு, ஏழு, எட்டு வயதுகளில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்தியே எல்லாப் பாடங்களையும் கற்கின்றனர். இருந்தபோதிலும், அக்குழந்தைகள் இரண்டு, மூன்று, நான்கு, வகுப்புகளில் முறையே ஏழு, எட்டு, ஒன்பது வயதுகளில் கற்பித்தலில் 20 விழுக்காடு நேரம் மட்டுமே ஆங்கில மொழி கற்கின்றனர். பின்பு, தொடர்ந்து ஆங்கில மொழி கற்பிக்கும் நேரம் அதிகரிக்கப்படுகிறது. தொடக்கப்பள்ளிக் கல்வி இறுதியில், பள்ளிப் பாடங்களில் 40 விழுக்காடு ஆங்கிலத்திலும், 60 விழுக்காடு பிரெஞ்சு மொழியிலும் கற்கின்றனர். இம்முறைக் கல்வியின் வழியே, பிரெஞ்சு மொழி பேசும் குழந்தைகள், பிரெஞ்சுப் மொழியில் திறமையைப் பெறுவதோடு மட்டுமன்றி, இரண்டாவது மொழியாகிய ஆங்கிலத்தில் எழுதும், படிக்கும் பேசும் திறனையும் பெறுகின்றனர். இவ்வகைக் கல்வி, நிறுவன இருமொழிக் கல்வி (Institutional Bilingualism) எனச் சொல்லப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அலுவலக மொழி என்று எதுவும் சட்டப்படி இல்லையென்றாலும், ஆங்கிலம் நடைமுறையில் அலுவலக மொழியின் சிறப்பைப் பெற்றுவிட்டது. இக்குடியரசில் பெரும்பாலான பெருமக்கள் பள்ளிகளில் (Public Schools) ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக உள்ளது. சிறுபான்மை மொழி பேசும் இனக் குழந்தைகளுக்கு, திறம்பட ஆங்கிலம் வழியே கல்வி தர இயலாததால் மாநிலங்களில் சிறுபான்மை மொழி பேசும் குழந்தைகள் உள்ள பள்ளிகளில் இருமொழி வழிக் கல்விமுறை பின்பற்றப்படுகிறது. இக்கல்வி முறை, 1963-ஆம் ஆண்டு புளோரிடா (Florida) வில் உள்ள மியாமி (Miami) நகரில் தொடங்கப்பட்டது. இங்கு இசுபானிசு மொழி பேசும் குழந்தைகள் முதலில் இம்மொழியிலேயே கற்பிக்கப்பட்டுப் பின்னர் ஆங்கில மொழியிலும் கற்பிக்கப்படுகின்றனர்.

குழந்தைகளின் பள்ளிப் பாடங்களை முதலில் தாய்மொழியிலும் பின்னர் இரண்டாம் மொழியான அயல்மொழியிலும் கற்பதனால், இரு மொழிகளிலும் மாணவர்கள் திறன்பெறுகின்றனர் என்பது, பல இன மொழிகளைக் கொண்ட சிறுபான்மை மக்கள் வாழும் நாடுகளில் காணப்படும் இருமொழி வழிக் கற்பித்தல் முறையிலிருந்து அறியமுடிகின்றது. மேலும், சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்களின் மொழியே குழந்தைகளின் தாய்மொழியாக இருப்பின், முதலில் இரண்டாம் மொழியான அயல் மொழியில் பாடங்களையும் மேல்வகுப்புகளில் தாய் மொழியின் வழியே பாடங்களையும் கற்பித்தால்,

இருமொழி வழிக் கற்பித்தல் திறம்பட அமையும் என்பது கல்வியாளர்களின் கருத்து.

துணை நூல்கள்:

**Fishman J.A.**, Bilingual Education: An International Sociological Perspective, Newbury House, Rowley, Massachusetts, 1976.

**Hartford. B.** and **Valdman A**, (Eds) Issues in International Bilingual Education: The Role of the Vernacular, Plenum, Newyork, 1982.


**இருவர் போட்டி**: போட்டி அடிப்படையில் வகைப்படுத்தப்படும் அங்காடிகளுள் இதுவும் ஒன்று. சில்லோர் போட்டி (Oligopoly) யினின்று சற்றே வேறுபட்டு, இருவரை மட்டும் கொண்டு அமையும் அங்காடி இருவர் போட்டி (Duopoly) யாகும். பொருளியல் வல்லுநர்களான அகசுதின் கோர்னே யும் (Augustin Cournot) எட்சுவோர்த்தும் (Edgeworth) இதனை முழுமையாக ஆராய்ந்துள்ளனர். நடைமுறை உலகில் இத்தகைய அங்காடி அமைவது அரிதாயினும் பிற அங்காடிகளின் செயற்பாட்டை விளக்கவும், சில அடிப்படை அங்காடிப் பொருளியல் கோட்பாடுகளை உருவாக்கவும் இதன் ஆய்வு பயனுள்ளதாயிருக்கிறது.

இருவர் போட்டியில் இரு விற்பனையாளர்களே இருப்பர். இவர்கள் இரு உற்பத்தியாளர்களாகவோ இரு தொழிற்கூடத்தினராகவோ (Firm) இருக்கலாம். இவ்விருவருக்கிடையில் மட்டுமே போட்டியிருக்குமாகையால் ஒருவர் நடவடிக்கையால் மற்றவர் பாதிக்கப்படுவார். ஒருவர் எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்காணித்து அடுத்தவர் செயற்படுவார். பின்னர்த் தொடர்ந்து மாறி மாறிக் கருத்துடன் செயற்பட்டுத் தங்கள் விற்பனையைப் பெருக்குவதன் மூலமோ விலையை உயர்த்துவதன் மூலமோ ஆதாயத்தைப் பெருக்குவதில் அக்கறை காட்டுவர். விற்பனைக்கான பொருள்களின் அளவைக் கூட்டியும், குறைத்தும், விலையில் மாற்றங்கள் செய்தும், அங்காடியை இருவரும் தம்பக்கம் இழுப்பர். விளம்பரம் போன்ற பிற வாணிக நுட்பங்களையும் பின்பற்றுவர். ஊகத்தின் அடிப்படையில் எத்தகைய முறைகளை ஒருவர் பின்பற்றக்கூடும் என ஊகித்துப் போட்டியை மேற்கொள்ள முயல்வர்.

இருவருக்கிடையிலும் போட்டி கடுமையாகத் தொடர்ந்து நிகழும். ஆனால், ஒரு கட்டத்தில் போட்டியினால் ஒருவருக்கொருவர் தீங்கையே பெறுவதாக உணரும் நிலை வரும். விற்பனையிலும் ஆதாயத்திலும் முன்னேற்றமின்றி இருவரும் இழப்பை அனுபவிக்கவும் நேரிடும். எனவே அவற்றைத் தவிர்த்து, இருவரும் அழிந்து போகாமல் பயன்பெறும் நோக்குடன் ஒத்துழைப்பு, ஏற்பு (Acceptance), ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் செயற்பட முன் வருவர்; விலை வரையறையிலும் விற்கும் பொருளின் அளவிலும் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை மேற்கொள்ள இசைவர்; விற்பனை இடங்களையும் பங்கிட்டுக் கொள்வர்; விளம்பரத்தின் மூலம் தங்களை வேறுபடுத்தி அங்காடியில் தங்கள் ஆதாயத்தை மிகுதியாக்க முயல்வர். நுகர்வோரைத் தம் பக்கம் இழுப்பது அவரவருடைய விளம்பரத் திறமையில் ஏற்படும் போட்டியைப் பொறுத்து அமையும். எனினும் இத்தகைய இருவர் போட்டியின் உண்மை நிலையை அறிவது கடினம்.

கோர்னே கோட்பாடு: பிரஞ்சு நாட்டு அகசுதின் கோர்னே கி.பி. 1838-ஆம் ஆண்டு வெளியிட்ட இருவர் போட்டிப் பகுத்தாய்வு இரு எடுகோள்களைக் (Assumptions) கொண்டது. (1) இருவர் போட்டியிலுள்ள இரு விற்பனையாளர்களுக்கும் விற்பனைக்கு அளிக்கப்படும் பொருளின் அளவு எவ்வளவு என்பது தெரியும். (2) விற்பனையில் இந்த அளவு மாறாதிருக்கும் என இருவரும் எதிர்பார்க்கின்றனர். இவ்விரு எடுகோள்களின் அடிப்படையில் இருவர் போட்டி செயற்படுவதைக் கோர்னே விளக்குகிறார். எடுத்துக்காட்டாக, இருவர் போட்டியில் இரண்டு கனிம ஊற்றுகளை (Mineral Springs) இருவர் (A&B) சொந்தமாக வைத்துள்ளனர். ஊற்றுகள் ஒன்றுக்கொன்று அருகிலுள்ளன. அவற்றிற்கு உற்பத்திச் செலவு எதுவும் இல்லாமையால் சராசரிச் செலவும் (Average Cost - AC), இறுதிநிலை உற்பத்திச் செலவும் (Marginal Cost of Production - MC) பூச்சியம் அல்லது வெறுமை (Zero).

வரைபடத்தில் உள்ளவாறு ஊற்றுக்கான தேவை அளவு $DD_1$. அதற்கான இறுதிநிலை வருவாய் வளைகோடு $DD_2$. தொடக்கத்தில் A மட்டுமே அங்காடியிலிருந்த விற்பனையாளர். எனவே 'A' உச்ச ஆதாயம் பெறும் வகையில் PQ விலையில் உற்பத்தி செய்த அளவு OQ மட்டுமே. OQ இல் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சீராகவுள்ளது (MR=MC). A-இன் உச்ச வருவாய் OQPR. B அங்காடியில் நுழைந்தவுடன், A-இன் உற்பத்தி OQ அளவிலேயேயிருக்கும் என எதிர்பார்க்கிறான் (இது கோர்னேயின் எடுகோள்). அவனுடைய, தேவைக்கோடு $PD_1$ என் இயல்பாகவே எண்ணி, தன்னுடைய உற்பத்தி அளவு OQ என முடிவு செய்கிறான். அதன்படி B, $QQ_1$ அளவு உற்பத்தி செய்து $P_1$ $Q_1$ என்ற விலையில் $QQ_1$ $P_1M$ மதிப்பு உச்ச ஆதாயத்தைப் பெற முயற்சி செய்கிறான்.




படம் 1


B யின் விலை $PQ_1$ என்பதால், A யும் இப்போது அதே விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. B உற்பத்தி செய்த $QQ_1$ அளவிலேயே B யின் உற்பத்தி அளவு இருக்கும் எனக் கருதுகிறான். தன்னுடைய அங்காடித் தேவையும் இப்போது $OD_1$ இலிருந்து $OQ_1$ ஆக மாற்றமடைந்திருப்பதை உணருகிறான். வரைபடம் 2-இல் உள்ள




படம் 2

வாறு தன்னுடைய புதுத் தேவைக்கோடும் இறுதி நிலை வருவாய் வளை கோடும் (Marginal Revenue Curve) $D_4Q_1, D_4D_5$ என்று கருதிச் செயற்படுகிறான்.

A உச்ச ஆதாயம் பெற முடிவு செய்யும் உற்பத்தியின் அளவு $OQ_2$ ஆகக் குறைகிறது. இது $OQ_1$ இல் பாதி அளவாகும். இவ் உற்பத்தி அளவில் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சீராக உள்ளது (MR=MC). A வரையறுக்கும் விலை $OR_2$ ஆகவும் ஆதாயம் $OQ_2\ NR_2$ஆகவும் உள்ளன. இப்போது B அங்காடி நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நோக்குகிறான். அங்காடியில் தன் பங்கு ஏற்றமடைந்து $Q_2\ D_1$ அளவாக உள்ளதை அறிகிறான். உடனே தன்னுடைய உற்பத்தி அளவை $Q_2D_1$ இல் பாதியாக வரையறுக்கிறான். இவ்வகையில் A இன் அங்காடி பாதிக்கப்பட்டு B க்குத் துணையான நிலை அமைகிறது. இருவரும் மாறி மாறித் தங்கள் உற்பத்தி அளவையும் விலையையும் மாற்றி, இருவர் பங்கும் சீராகும் (Equal share) வரை போட்டி நடவடிக்கையில் ஈடுபடுவர்.





படம் 3

வரைபடம்-3-இல் உள்ளபடி இறுதியில் $OR_5$விலையில் A, $OQ_4$ அளவு உற்பத்தி செய்தும், B, $Q_4Q_5$ அளவு உற்பத்தி செய்தும் சமன்பாட்டு நிலையை (Equilibrium level)அடைவர்; $OQ_4 = Q_4\ Q_5$. இருவருடைய வருவாயும் சீரானதாக அமையும். A இன் வருவாய் $OQ_4\ LR_5$ ஆகவும், Bஇன் வருவாய் $Q_4\ Q_5\ P_5\ L$ ஆகவும் நிலைபெறும். இருவர் போட்டி அங்காடியின்

உற்பத்தி அளவு $OQ_5$ ஆகும். இது போட்டி உற்பத்தியின் (Competitive Output) அளவு $OD_1$-ஐ விடக்குறைவானதாக இருந்தாலும், முற்றுரிமை உற்பத்தி OQ-வைவிட மிகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எட்சுவோர்த்துக் கோட்பாடு: எட்சுவோர்த்தின் கோட்பாடு இருவர் போட்டி அங்காடியிலுள்ள இரு விற்பனையாளர்களின் விலையும் நிலையானது என்ற எடுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது. வரைபடம்-4 மூலம் எட்சுவோர்த்தின் கருத்தை விளக்கலாம். இரு படங்கள் இங்கு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.




படம் 4

படம்-4-இல் உள்ளபடி A, B என்போரின் இருவர் அங்காடியில் A-இன் தேவைக்கோடு $DD_1$ ஆகும்; B இன் தேவைக்கோடு $DD_2$ ஆகும். இரு தேவை வளைகோடுகளும் சீராக அமைவது மொத்த அங்காடித் தேவையை இருவரும் சீராகப் பங்கிட்டுக் கொள்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. இருவரும் ஒரே அளவான OQ, $OQ_1$ ($OQ = OQ_1$) அளவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். A முதலில் அங்காடியிலிருந்தால் முற்றுரிமை அளவான OM அளவு உற்பத்தி செய்து OP விலையில் விற்பான். அதனால் அவன் பெறும் உச்ச அளவு ஆதாயம் OMRP ஆகும். B அங்காடியில் நுழையும்போது A தன் விலையை மாற்றமாட்டான் எனக் கருதிச் செயற்படுவான். இது எட்சுவோர்த்தின் எடுகோள். B விலையைக் குறைத்து $OQ_1$ அளவு உற்பத்தி செய்து விற்பான். A-இன் அங்காடி பாதிக்கப்படுவதை A அறிந்து B தன் விலையை மாற்றமாட்டான் எனக் கருதித்தன் விலையைக் குறைத்து $OQ_1$ அளவு உற்பத்தி செய்து விற்பான். B-இன் அங்காடி பாதிக்கப்படுவதை B அறிந்து முன்போல் மீண்டும் தன் விலையைக் குறைப்பான். இவ்வாறு இருவராலும் விலைக் குறைப்பு (Price cutting) நடவடிக்கை மாறி மாறி, விலை $OP_E$ நிலையை அடையும்வரை நடைபெறும். $OP_E$ விலையில் இருவரும் உச்ச அளவு உற்பத்தி செய்து விற்பனை செய்வதையும், ஒரே சீரான ஆதாயத்தைப் பெறும் கட்டத்தையும் அடைவர். A-இன் ஆதாயப் பங்கு $OQSP_E$ ஆகவும், B-இன் ஆதாயப்பங்கு $OQ\,SP_E$ ஆகவும் சமன்பாட்டு நிலையை ($OQ\,SP_E = OQ\,S_1\,P_E$) அடையும்.

எட்சுவோர்த்தின் ஆய்வு விலைகளின் ஏற்ற இறக்கங்களினால் ஏற்படும் நிலையற்ற தன்மையையும், கோர்னேயின் ஆய்வு உற்பத்தியின் அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களையும் கொண்டுள்ளமையால் அவை நடைமுறைக்குகந்த கோட்பாடுகளாக அமையவில்லை. மேலும் இருவரின் கோட்பாடுகளும் நடைமுறைக்கப்பாற்பட்ட (Unrealistic) எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பின்னர் வந்த பொருளியல் வல்லுநர்களான எரால்டு (Herold), சேம்பர்லின் (Chamberlin), சுவீசி (Sweezy) போன்றோர் நடைமுறைக்குகந்த நிலையான இருவர் போட்டி, சில்லோர் போட்டி ஆகிய அங்காடிக் கோட்பாடுகளை உருவாக்க முற்பட்டனர். எனினும் இருவர் போட்டி அங்காடியின் எளிதான அடிப்படைத் தத்துவ விளக்கத்திற்குக் கோர்னே எட்சுவோர்த்து ஆகியோரின் கோட்பாடுகளே சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

**இருளர்** தமிழ்நாட்டில் வாழும் தொன்மையான பழங்குடிகளுள் ஒருகுடியினர் ஆவர். இம்மக்கள் நீலகிரி, கோவை, திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களில் மிக்க எண்ணிக்கையிலும், செங்கற்பட்டு, கருநாடக மாநிலத்தில் சில பகுதிகள் கேரள மாநிலத்தில் பாலக்காடு சார்ந்த பகுதிகள், ஆகியவற்றில் பரவலாகவும் காணப்படுகின்றனர்.

இருளர்களை (Irular) வெல்லன் (Vellan), பூசாலி (Poosali), பூசாரி (Pujari), இரளிகா (Iraliga), இருளிகன் (Iruligan), காடு பூசாரி (Kadu Pujari), இருளிகர் (Iruligar) என்னும் பல பெயர்களில் குறிப்பிடுவர். இருளர் கறுத்த நிறத்தைப் பெற்றிருப்பதால் 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்று தர்சுடனும் (Thurston), இலூயிசும் (Luiz) கூறுவர். இருளர்களைப் பற்றிய தொன்மைக் கதைப்படி இருளர்கள் 'இருள்' (Irul) என்னும் மரத்திலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறப்படுகிறது. இதனாலேயே 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்பதும் ஒரு வழக்கு.



இருளப் பெண் சோளம் காயவைத்தல்



இருளர்

தமிழகத்தில் இருளர்களின் எண்ணிக்கை 89,025 ஆகும். இருளர் நீக்கிரிட்டோ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பி. எசு. குகாவும் (B. S. Guha) இருளர் ஆசுத்திரேலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என ஆடன் (Haddon) எசு. எசு. சர்க்கார் (S. S. Sarkar) போன்றோரும் கூறுகின்றனர். தமிழகப் பழங்குடிகளில் இன்றளவும் அடர்ந்த காட்டுப் பகுதியில் உணவு சேகரித்துப் பொருளீட்டும் ஒருசில பழங்குடிகளுள் ஒருவராக இருளர் காணப்படுகின்றனர். இருளர் 12 முதல் 15 வரை வீடுகளைக் கொண்ட சிதறலான வாழிடப்பகுதியைக் கொண்டிருக்கின்றனர். மலைப் பகுதிகளில் சமமான இடத்தில் காணப்படும் இவர்களின் வீடுகள், கோரைப் புற்களாலும் மூங்கில்களாலும கட்டப்பட்ட சிறிய குடிசைகளாகக் காணப்படுகின்றன. ஊர்த்தலைவனுக்கான குடிசை, குழந்தை பெறும்பொழுது அமைக்கப்படும் சிறிய குடிசை, கால்நடைகளுக்கான குடிசை, கோயில் முதலானவற்றிற்கு அமைக்கப்படும் குடிசைகள் ஆகியவை வாழிடக் குடிசைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இருளர்கள் பழந்தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய 'இருள' என்னும் கிளைமொழியைப் பேசுகின்றனர். இருப்பினும் பல்வேறு மாவட்டங்களிலும் மாநிலங்களிலும் வாழும் இவர்களின் கிளைமொழியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருளர்கள் இரு பெரும் பொதுமரபினையுடைய இரு குலக் குழுவாகப் பிரிந்துள்ளனர். இக்குலககுழுவில் குப்பெ, சம்பெ, தேவனெ, கல்கட்டி, கொடுவெ, புங்கெ, குறுநாக, பேராத என்னும் எட்டுக் கால்வழிகளுண்டு.

அம்மாவின் தம்பி மகளை மணப்பதே பெரும்பான்மையான திருமண் முறையாகும். இரு குடும்பங்களுக்கிடையே மகளைப் பரிமாற்றம் செய்யும் முறையும், பல்மனைவி பெறும் திருமண முறையும் காணப்படுகின்றன. பெரும்பான்மையான திருமணங்கள் பெற்றோர்களால் நடத்திவைக்கப்பட்டாலும் தான் விரும்பியவளை அடைய 'உடன்போக்குத் திருமணமும்' இவர்களிடையே காணப்படுகிறது. இது தவிர்த்து, தான் மணக்க இருக்கும் பெண்ணின் வீட்டில் பணி செய்து மணக்கும் முறையும் திருமணத்திற்கு முன்னர் மணமகளும் மணமகனும் சிலகாலம் சேர்ந்து வாழ்ந்து அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பின்னர் நடத்தும் 'தேர்வுத் திருமணமும்' இக்குடிகளிடையே காணப்படுகிறது. இருளர் சமூகம், திருமண விலக்கையும் விதவைத் திருமணத்தையும் கொண்டுள்ளது.

இருளர்களின் பொருளாதாரம் அரைநாடோடி வாழ்க்கையைச் சார்ந்ததாகும். காட்டுப் பொருள்களைச் சேகரித்தும், சாமை, தினை, கேழ்வரகு, சோளம் முதலான பொருள்களை விளைவித்தும், கால்நடைகளை வளர்த்தும் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தும் வாழ்கின்றனர்.

இருளர்கள் தேன் சேகரிப்பதிலும் பாம்பு பிடிப்பதிலும் வல்லவர்கள்.

இக்குடிகளிடையே அரசியல் அமைப்பு சிக்கலற்ற முறையானது. சிதறிக் காணப்படும் பல குடியிருப்புகளை ஒரே பிரிவாகக் கொண்டு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர் 'மூப்பன்' எனக் கூறப்படுவர். இவருக்கு உதவியாக ஒவ்வொரு சிற்றூரிலும் 'பஞ்சாயத்துக் குழு' அமைக்கப்பட்டு, அது இவர்களது சமூக வாழ்வில் இயற்றப்படும் முடிவுகளையும் ஏற்படும் சிக்கல்களையும்கண்காணிக்கிறது. பன்னிரண்டுக்கும் மேற்பட்ட இந்துமதக் கடவுள்களை வழிபடுகின்றனர். இவற்றில் பெரும்பான்மையானவை தாய்த் தெய்வங்களாகும். முன்னோர் வழிபாடு இவர்களிடையே இன்றளவும் காணப்படுகிறது. இடுகாட்டின் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் குடிசையில் பல்வேறு உயர அளவில் காணப்படும் கற்களை நட்டு வழிபடுகின்றனர். உயரமான கற்களை முதியோர் இறந்ததையும் சிறிய கற்களைக் குழந்தைகள் இறந்ததையும் நினைவிற்கொள்ள அமைக்கின்றனர். இயற்கை வழிபாட்டையும் ஆவிகளின்பால் நம்பிக்கையையும் கொண்டுள்ளனர். இருளர் வாழ்க்கையில் விழாக்களுக்கும் சடங்குகளுக்கும் முதலிடம் உண்டு. திருமண விழா, குழந்தைக்குப் பெயரிடும் விழா, பூப்பு நீராட்டும் சடங்கு போன்றவற்றை முதன்மையாகக் கூறலாம். இறந்தவர்களைச் சதுரமான அல்லது வட்ட வடிவிலான குழியில் புதைப்பர். இவ்விடத்தைச் சில காலம்வரை காட்டு விலங்குகள் அணுகாமலிருக்கக் கள்ளிச் செடிகளைப் புதைகுழிக்கு மேல் வைப்பர்.

இருளர்கள் இந்து சமயத்தைத் தழுவித் தீண்டத்தகாதவர் சாதிக் குழுக்களின் நிலையினை அடைந்திருக்கின்றனர் எனலாம். சமவெளிச் சாதிக் குழுக்களின் பண்பாட்டுக் கூறுகளைத் தம்முள் ஏற்றுத் தம் பழங்குடித் தன்மையிலிருந்து மாறி வருகின்றனர்.

**இரெட்டியப்பட்டிசுவாமிகள் (கி.பி.1856-1923):** திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுள வட்டம் நாகலாபுரத்தை அடுத்த இரெட்டியப்பட்டியில் வேளாளர் மரபில், வீரபத்திரப்பிள்ளைக்கும் ஆவுடையம்மாளுக்கும் ஏழாம் மகனாக கி.பி. 1856 செப்டம்பர் 16-ஆம் நாள் பிறந்தவர் சுப்பிரமணியம் ஆவார். இவரே பின்னர் இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்று பலராலும் வணங்கிப் போற்றும் அருள்நிலையைப் பெற்றவர். இவர் பள்ளியில் படித்த கல்வி சிறிதேயாயினும் இளமையிலேயே அருளுணர்வும் அருட்சித்தியும் இயல்பாகப் பெற்று விளங்கினார். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட பொழுது இவர் கால்பட்ட நிலங்கள் மிகுதியாக விளைவைக் கொடுத்தன அவ்வட்டாரத்தில் ஏழைகளுக்கு உணவுப்பொருள்கள் நியாய விலைக்குக் கிடைப்பதில்லை. அதனால் அவர்களுள் பலர் சில சமயங்களில் பட்டினியும் கிடக்க நேரிட்டது. அவர்கள் துயரைத் தீர்க்க இவர் தூத்துக்குடி நகருக்குச் சென்று பண்டங்களை வாங்கி வந்து அடக்க விலைக்கே ஏழைகளுக்குப் பகுத்துக் கொடுத்தார். அது பயனற்ற வேலை என்று பெற்றோர் கண்டித்தனர். அதனைப் பொறாது இவர் யாரும் அறியாமல் வீட்டை விட்டு வெளியேறினார்.



இரெட்டியப்பட்டி சுவாமிகள்

சுவாமிகள் திருச்செந்தூர் சென்று முருகனை வழிபட்டு, அங்கிருந்து மதுரைக்குக் கால்நடையாக வந்து அன்னை மீனாட்சியிடம் அடைக்கலமானார். அந்நகரில் பெரிய வணிகரான ஒரு முகமதியரின் அங்காடியில் கணக்கு எழுதும் பணியை மேற்கொண்டார். இவர் அங்குப் பணியை ஏற்ற நாள் முதல் அங்காடி வாணிகம் பெருகிற்று. நாள்தோறும் விடியுமுன் வைகை நதிக்குச் சென்று ஓடுகாலில் நீராடித் திருக்கோயிலில் மீனாட்சி-சொக்கரை வழிபட்ட பின்பே அங்காடிக்குச் செல்வார். எந்தநேரத்திலும் எப்பணியில் ஈடுபடினும் இவர் சிந்தை இறை நினைவிலேயே ஒன்றியிருந்தது. மகன் மதுரையில்

இருப்பதை அறிந்து பெற்றோர் அங்கு வந்து அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். இவரோ இல்லறத்திலும் ஒரு பற்றற்ற துறவியாகவே வாழ்க்கை நடத்தினார்.

ஒருநாள் இவர் வழக்கம்போல் வைகையில் நீராடி இறைவனைத் துதித்துப் பாடி நிற்கும் பொழுது, வானளாவிய ஒரு பெரும் சோதி இவர்முன் தோன்றியது. மெய்ம்மறந்த நிலையில் அச்சோதியை மார்புடன் அணைத்துக் கொண்டார். நினைவு பெற்றபொழுது தம் கழுத்தில் ஒரு மாலையையும் கைகளில் விநாயகர் கற்சிலை ஒன்றையும் கண்டார்; ஆடிப்பாடி மகிழ்ந்தார். நண்பர்களின் உதவியுடன் வைகை ஆற்றின் தென் கரையில் இரயில் பாலத்திற்கு மேற்கில் ஒரு கோயில்அமைத்து, அதில் அவ் விநாயகர் சிலையை எழுந்தருளச்செய்து குடமுழுக்கும் நடத்தினார். அக்கோயில் இன்று பரிபூரண விநாயகர் கோயில் என்னும் பெயரில் மதுரைமீனாட்சி கோயில் நிருவாகத்திலுள்ளது.

அங்காடிப் பணியாக இவர் பம்பாய் சென்று சில காலம் இருந்தார். எனினும், மனம் மதுரை மீனாட்சி அன்னையையே நாடியது; அருளாற்றல் பெற வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி நின்றது. மதுரை திரும்பினார். மக்கள் இவரைச் சுவாமிஎன்றே பணிந்து வந்தனர். திடீரென்று பேசா விரதத்தை மேற்கொண்டார் இவர் செயல்களைக்கண்டு எல்லோரும் வியப்புற்றுத் திரள் திரளாக இவரது இருப்பிடத்திற்கு வரத் தொடங்கினர். அதனால் இவருக்கு மன அமைதிக் குறைவு ஏற்பட்டது. ஒரு நாள் யாரும் அறியாமல் மதுரையை விட்டு அகன்று குற்றாலம் சென்றடைந்தார். அங்கு மலைமேல் உள்ள சண்பகாடவி அருவிக்கு அருகில் ஒரு குகையில் அமர்ந்து ஊண் உறக்கமின்றித் தவம்புரியலானார். தம் அன்னையின் இறுதி நாளைத் திருவருள் உணர்த்தவே, சுவாமிகள் இரெட்டியப் பட்டி வந்து அன்னைக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துமுடித்தார். பின்னர் மீளவும் குற்றாலம் சென்று தொடர்ந்து பத்தாண்டுகள் அருந்தவம் புரிந்தார்.

ஒருநாள் அவருக்குப் பரிபூரணர் காட்சி கிடைத்தது. 'தவம் செய்தது போதும், மக்களுக்கு அருள் வழியைக் காட்டச்செல்க' என்ற ஆணையும் கிடைத்தது. சீடர்களுக்குப் பரிபூரணர் அருள்கிட்டும் என்ற அருள்வாக்கும் பெற்றார்.

நாடெங்கும் அன்பர்களை நாடிச் சென்று தாம் கண்ட அருள்நெறியை அருட்சட்டங்கள் என்று கூறி விளக்கி, அவற்றைப் பின்பற்றச் செய்தார். சீடர்கள் எண்ணிக்கை பெருகிற்று. அவர்களிடையே இவர் நடமாடும் தெய்வமாகவே விளங்கினார். பலருக்கு இடுக்கண் வந்த பொழுதெல்லாம் நேரிலோ கனவிலோ தோன்றி அருள் பாலித்தார்.

தாம் மேற்கொண்ட பணிகளை இனித் தொடர்ந்து சீடர்களே செய்து வருவர் என்ற நிலை ஏற்பட்டதும், இரெட்டியப்பட்டி சென்று தாம் பிறந்த இடத்திலேயே 1923-இல் வீடுபேறு அடைந்தார்.

சுவாமிகள் வீடுபேறு அடைந்து திருக்காப்பிட்ட இடத்தில் ஒரு பெருங்கோயில் அடியார்களால் எழுப்பப்பெற்றுள்ளது. அடியார்கள் சிலர் இரெட்டியப்பட்டியில் அறக்கூடங்கள் பல அமைத்துள்ளனர். அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்களுக்கும் நாடெங்குமிருந்து திரளாக மக்கள் பக்தியுடன் வந்து கலந்து கொள்கின்றனர்.

சுவாமிகளின் அருட்சட்ட நெறிகளில் சில வருமாறு: 1. நாள்தோறும் இருவேளை விடியுமுன்னும் மாலையிலும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். 2. குளிக்கவோ குடிக்கவோ வெந்நீரைப் பயன்படுத்துதல் கூடாது. 3. நீராடியபின் அவரவர் மதத்திற்கு உரிய முறையில் இறைவனை வழிபட வேண்டும். 4. சிறிது திருநீறும் துளசியும் நீரிலிட்டுப் பருகவேண்டும். 5. புலால் உண்ணல், புகைபிடித்தல் முதலிய தீய பழக்கங்கள் கூடா. 6. நோய் காணின், மருந்து உட்கொள்ளாது இறைவனையே நம்பியிருத்தல் வேண்டும். 7. வைத்தியம், சோதிடம், மந்திரம் இவற்றில் நம்பிக்கை வைத்தல் கூடாது. 8. வாரம் ஒருநாள் ஒருவேளையாவது உணவருந்தாதிருத்தல் வேண்டும். 9. இறந்தவர்களைச்சமாதியாகவே அடக்கம் செய்தல் வேண்டும். 10. எல்லாம் இறைவன் செயல் என்று எதனையும் கருதுதல் வேண்டும். கி.ப.

**இரெம்பிராண்டு (கி.பி. 1606-1669)** ஐரோப்பாவின் புகழ்பெற்ற ஓவியக்கலைஞர்களுள் ஒருவர். இவர் நெய் ஓவியக்கலை, அரிச்சித்திரக் கலை போன்ற முறைகளைத் திறம்படப் பயன்படுத்திப் புகழ்பெற்ற பல அழகிய ஓவியங்களைப் படைத்துள்ளார். இவர் 1400 சித்திரங்களையும் 600 நெய் ஓவியங்களையும் 300 அரிச்சித்திரங்களையும் வரைந்துள்ளார்.

இரெம்பிராண்டு (Rembrandt) 1606-ஆம் ஆண்டு நெதர்லாந்தில் இலீடர் (Leider) என்னும் ஊரில் பிறந்தார். 1624-ஆம் ஆண்டு ஆமிசுடர்டாமில் குடியேறிச் சேகப் வான் சுவானன்பர்கு (Jacob van

Svanenburgh) என்பவரிடம் ஓவியம் பயின்றார். இவருக்கு முதன்முதலில் பெரும்புகழை ஈட்டித்தந்த ஓவியம் டாக்டர் துலிப்பின் உடற்கூற்றுப் பாடம் (The Anatomy Lesson of Dr. Tulip) என்னும் குழுச் சித்திரம் ஆகும். இதனை அடுத்துப் படைத்தலைவர் பானிங்காக்கின் நண்பர்கள் (Sortie of the company of Captain Banningcocq) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். ஒளிமிக்க ஓவியமாகத் தீட்டப்பட்ட இதில் எதிர்பாராத வகையில் புகை படிய நேரிட்டது. இதனால் ஓவியத்தின் வண்ணம் மங்கியது. ஆனால், இச்சித்திரம் இரவுக்காவல் (The Night Watch) என்னும் பெயரில் மிகுந்த புகழ் பெற்றது.

இரெம்பிராண்டு தம் வாழ்க்கையின் பிற்பகுதியில் வறுமையில் வாடினார். இவர் மனைவி சாகியா இறந்தபின், இவர் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக ஆயிற்று. இவருடைய கலைத் திறனுக்கு ஏற்ற புகழும் பெருமையும் இவருக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் தச்சு (Dutch) நாட்டில் இருந்த மியுடென் சங்கம் (Muden Circle) என்னும் செல்வாக்குடையோர் சங்கத்தில் இரெம்பிராண்டு உறுப்பினராக ஆகவில்லை. அதனால் இவருக்குச் செல்வர் ஆதரவு குறைந்தது.

வரலாற்றுப் புகழ்பெற்றவர்கள், விவிலியக் காட்சிகள் ஆகியவைகள் இரெம்பிராண்டின் ஓவியங்களில் பெரும் பங்கு கொண்டன. சுய சித்திரங்களையும் இரெம்பிராண்டு தம் வாழ்க்கையின் இறுதி வரையில் தீட்டி வந்தார். முதுமைக் காலத்தில் தாம் எத்தகைய தோற்றமளித்தார் என்பதைச் சற்றும் பிறழாமல் ஓவியமாக வடித்துள்ளார். குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ச்சியடைந்த பருவங்களிலும் தம் மகன் தைடசை (Titus) ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். இவர் தம் உறவினர்களையும் பல ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். இவர் 1631-ஆம் ஆண்டு தீட்டிய 'படிக்கும் முதியவள்' (Old Woman Reading) என்னும் புகழ்பெற்ற ஓவியம், இவருடைய அன்னை தம் முதுமைக்காலத்தில் தலை குனிந்து விவிலியம் படித்துக் கொண்டிருந்த காட்சி ஆகும். இவருடைய ஓவியங்களுள் புகழ்பெற்றவை யூதமணப்பெண் (The Jewish Bride), ஓமர் சிலை கண்டு அரிசுடாட்டிலின் சிந்தனை (Aristotle comtemplating the Bust of Homer), நோயாளியைக் குணப்படுத்தும் இயேசு கிறித்து, மனந்திருந்திய மைந்தன் வீடு திரும்புதல் (Return of the Prodigal Son) போன்றவை ஆகும். இரெம்பிராண்டு அரிச்சித்திரம் (Etching) என்னும் ஓவிய முறையை நன்கு பயின்று, அதில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவருடைய அரிச்சித்திரங்களுள் பல உலகப் புகழ்பெற்றவை.

**இரெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம்:** செருமானிய நாட்டவரான இவர் உலகிலேயே முதன்முதல் செயற்பட்ட கூட்டுறவு இயக்கத்தை கி.பி. 1818-ஆம் ஆண்டில் தோற்றுவித்தார், பல செருமானிய நகரங்களில் நகரத் தந்தையாகக் (Mayor) கி.பி. 1845 முதல் 1865 வரை பணியாற்றினார். செருமானிய வேளாண்மைத் துறையில் கி.பி. 1846-47-ஆம் ஆண்டுகளில் பெரும் இழப்புகள் ஏற்பட்டு மந்தநிலை காணப்பட்டது. இந் நெருக்கடி நிலையை இரெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம் (Raiffeisen Friedrich Wilhelm), கூட்டுறவு முறையில் வேளாண்மையினருக்குக் கடன் வழங்குவதன் மூலம் சீர் செய்யலாம் எனக் கருதி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இத் திட்டத்தை நிறைவேற்ற முதலில் தன் சொந்த நிலத்தையும் அதனுடன் சார்ந்த சொத்துகளையும் பயன்படுத்தினார். அவ்வாறு இரெய்பீசனின் தனிப்பட்ட முயற்சியில் தொடங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் வங்கி நாளடைவில் வளர்ச்சி பெற்று கி.பி. 1872-ஆம் ஆண்டில் வட்டாரக் கூட்டுறவுக் கடன் வங்கியாக (Regional Co-operative Credit Bank)உருவானது. தொடர்ந்து வளர்ச்சியடைந்த பல சிறு கூட்டுறவுக் கடன் வழங்கும் இயக்கங்களை ஒருங்கிணைத்து கி.பி. 1877-ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் ஒன்றியத்தை (Co-operative Credit Union) நிறுவினார்.

**இரேனார் (கி.பி. 1841-1919)** கற்பனை ஓவியங்களை இயற்கையான தோற்றத்துடன் படைக்கும் ஆற்றல் கொண்ட பிரெஞ்சு ஓவியக் கலைஞர் ஆவார். இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு இலிமோகே (Limoges) என்னும் ஊரில் பிறந்தார். இளம்பருவம் முதல் இரேனார்(Renoir) ஓவியக் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் இளம்பருவத்தில் 'இரெம்பிராண்டு' என்று கேலியாக அழைக்கப்பட்டார். இவர் 1862-ஆம் ஆண்டு பிரெஞ்சு கலைக் கல்லூரியில் (Ecole de Beaux-Arts) சேர்ந்து பயின்றார். கல்லூரியின் ஆசிரியர்கள் பிரெஞ்சுக் கலைமரபுக் கோட்பாடுகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டு, ஓவியங்கள் தீட்டுமாறு இரேனாரிடம் கூறினர். இத்தகைய மரபுவழிச் சட்டதிட்டங்கள் தம் படைப்பாற்றலுக்குத் தடைகளாக இருப்பனவாக இரேனார் எண்ணினார். இவரின் கற்பனை உள்ளம் தம் காலத்தில் விளங்கிய ஓவியக்கலைஞர்களைத் தம் சிந்தனைத் திறனுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாகக் கருதிற்று.

இரேனார் தொடக்க காலத்தில் தாம் வரைந்த ஓவியங்களைத் தரம் குறைந்தவை என எண்ணி அழித்துவிட்டார். இவர் தீட்டிய 'தயானா' (Diana)

என்னும் ஓவியம், பிரெஞ்சு ஓவியக் கலை விதிகளுக்கு உட்பட்டதாகத் தோற்றமளிக்கிறது. இது வாசிங்டன் நகரத்திலுள்ள தேசியக் கலைக் கூடத்தில் (National Gallary of Arts) வைக்கப்பட்டுள்ளது. இரேனார் பிரெஞ்சு ஓவியக்கலை மரபினின்று மாறுபட்டுத் தனிப்பட்ட முறையில் ஓவியங்களைத் தீட்டிய காரணத்தால், பிரெஞ்சு அரசின் உதவி இவருக்குக் கிடைக்கவில்லை. இவர் தம்முடைய தேவைகளுக்காகத் தம் ஓவியங்களை விற்க வேண்டியதாயிற்று. இவர் கி.பி. 1883-ஆம் ஆண்டு வத்திகனுக்குச் சென்று அங்கு இராபேல் தீட்டிய ஓவியங்களைக் கண்டார். இதற்குப் பின்னர் இவர் தீட்டிய ஓவியங்களில் இத்தாலிய ஓவியங்களின் தாக்கம் காணப்பட்டது.

வாழ்க்கையின் இறுதி நாள்களில் இரேனார் பக்கவாத நோயால் துன்புற்றார். இந்நிலையிலும் இவர் தம் ஓவியக்கலையில் தொடர்ந்து ஈடுபட்டார். இவருடைய இறுதிக்கால ஓவியங்களுள் ஒன்று பிரெஞ்சு அரசுக் கலைக்கூடத்தில் இடம்பெற்றது. இம் மகிழ்ச்சியுடன் இரேனார் 1919-ஆம் ஆண்டு இறந்தார்.

**இரேணுகை** இரேணுவின் மகள். இவளை வருமராசன் பெண் எனவும் கூறுவர். இவள் சமதக்கினி முனிவரின் மனைவி. இவள் கங்கைக்கு நீராடச்செல்லும்போது, வான்வழிச் சென்ற சித்திரசேனன் என்ற கந்தருவன் வடிவினை நீரில் கண்டு மனம் குலைந்து நிற்ப, அதனை முனிவர் அறிந்து, தம் மகன் பரசுராமனை நோக்கி அவளைக் கொலை செய்யுமாறு பணித்தார். அவனும் தந்தை சொன்னவாறு தாயைக் கொன்று மனம் கவன்றிருந்தான். தந்தை மகன் கவலையைப் போக்க, அவன் வேண்டும் வரம் தர முன்வந்தார். அவ்வரத்தால், தாயைக் கொல்ல மறுத்தமையால், தந்தையின் சாபம் பெற்று ஒறுக்கப்பெற்றிருந்த தன் தமையன்மார்களை மீட்டுத் தாயை உயிரெழுப்பியதோடு, தன்னை மகன் கொன்றான் என்ற உணர்வு அவளுக்கு இல்லாதிருக்குமாறும் செய்தான்.

இரேணுகை மகன் பரசுராமன் கார்த்த வீரியார்ச்சுனனைக் கொன்றான். எனவே கார்த்த வீரியார்ச்சுனன் மக்கள் சமதக்கினியைக் கொன்றனர். இதைக்கண்டு இரேணுகை அங்கே வர, அவர்கள் அவளையும் இருபத்தோர் அடி அடித்து, குற்றுயிராக்கிவிட்டுச் சென்றுவிட்டனர். அவள் தன் மகன் பரசுராமன் வருமளவும் உயிர்விடாதிருந்து, நடந்தது கூறி இறந்தனள். தாய் இருபத்தொரு முறை சத்திரிய அரசன் மக்களால் அடியுண்டதால் இருபத்தோர் அரசுவழி முறைகளைக் கொன்று, அவர்தம் குருதியைக் குளமாகத் தேக்கி, அதில் இருபத்தொரு முறை மூழ்கிப் பெற்றோர்க்கு நீத்தார்கடன்செய்தான். நீத்தார்கடன்செய்து கொண்டிருந்த ஐந்தாம்நாள் ஒரு புலியைக் கனவில் கண்டு அஞ்சி,'அம்மா அம்மா'என்று அலறினான். எனவே அக்கடன் முற்றுப் பெறாததால் தாய் தலை மட்டுமுடையவளாக வெளிப்பட்டாள். அதுகண்ட பரசுராமன் தத்தாத்திரேயர் என்ற முனிவரிடம் உடலின்றித் தலையளவில் தாய் வெளிப்பட்ட காரணம் கேட்டபோது, அவர் கருமம் முற்றுப்பெறாத நிலையில் அழைத்ததால் உனது தாய் தலையளவில் வெளிப்பட்டாள் என்று அவர் கூறினார்.பரசுராமன் அம்முனிவர் வழிப்படுத்தியவண்ணம் கடன் முடித்தான். பின்னர் அம்முனிவர் இரேணுகையைக் கிராமங்கட்குச் சென்று, அங்குள்ளோர் துன்பங்களை நீக்கித் தலையளவிலேயே தெய்வமாயிருக்கும்படி பணித்தார். அவளும் அவ்வாறே தெய்வமானாள்.கிராமங்களில் மாரி,முத்துமாரி என்னும் பெயர்களில் அமைந்து, அம்மை நோய் முதலியன தீர்த்து விளங்கும் சிறுதெய்வமாகக் கருதப்படுவது இத்தெய்வமேயாகும் என்று கூறப்படுகிறது. கு.தி.

**இரேவண சித்தர்** கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர். இவர் இரேவணாத்திரியர், இரேவணாத்தியர் எனவும் வழங்கப்பெற்றார். வேளாளர் மரபில் தோன்றிய இவரது ஊர் சிதம்பரம் என்றும், பேரளம் என்றும் கூறப்படுகிறது. இவர் பேரளத்தில் பிறந்து, பின்னாளில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். சிதம்பர இரேவணசித்தர் என்பதில் சிதம்பரம் என்பது இவர்தம் தந்தையாரைக் குறிக்கும் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். இவர்தம் நூலில் தம்மைப் 'புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தன்' என்றும், 'மேழித் துவசன் விளங்கிய புலியூர்வாழ் நற் சிதம்பர ரேவண சித்தன்' என்றும் சுட்டியுள்ளார். இத்தொடர்களை ஆராய்ந்தால், இவற்றில் அமைந்துள்ள புலியூர் என்பது ஊரைக் குறிக்க, அடுத்துள்ள சிதம்பரம் என்பது தந்தை பெயரைக் குறிக்கலாம் என்னும் கருத்துப் பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

இவர் வடமொழி, தென்மொழிகளிற் புலமை நிரம்பியவர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர்; வீரசைவ சமயத்தவர் என்றும் கூறப்படுகிறார். இவர் அகராதி நிகண்டு, திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப்புராணம், திருமேற்றளிப்புராணம், சிவஞானதீபம் என்னும் நூல்களை இயற்றியுள்ளார். சிவஞானதீபம், சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவுற விளக்கும் செய்யுள் நூலாகும். இவர் இயற்றிய புராணங்கள் கிடைக்கவில்லை. இவர் எழுதிய அகராதி, 'அகராதி நிகண்டு', 'சூத்திர அக

ராதி' 'இரேவணாத்திரையர் சூத்திரம்' என்னும் பெயர்களால் வழங்கப்பெறுகின்றது. இவர் கி.பி. 1594–ஆம் ஆண்டில் இதனை இயற்றினார் எனத் தெரிகிறது. தமிழில் அகராதி என்னும் பெயரை முதன்முதலில் உருவாக்கியவரும், அம்முறையில் அகராதி நூலினை இயற்றியவரும் இவரேயாவர். இக்கால அகராதிகளுக்கு இவரது நூல் முன்னோடியாக அமைந்துள்ளது. இந்நூலில் சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டிருப்பதோடு, ஒரு பொருட்சொல், இரு பொருட்சொல் எனப் பொருள் பற்றியும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துத் தொகுதியாக அமைந்த இந்நூலில் 3368 நூற்பாக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. எனினும் அச்சிட்ட நூலில் 3331 நூற்பாக்களே காணப்படுகின்றன. தமிழ் அகராதி வரலாற்றில் இவருடைய நூல் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

**இரேனியசு ஐயர்** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் மேலைநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்து கிறித்தவச் சமய ஊழியம் புரிந்த கிறித்தவத் தொண்டர்களுள் ஒருவர். இவர் அன்றைய செருமனி நாட்டிலிருந்த பிரசியா பகுதியைச் சேர்ந்த கிராவுடென்சு கோட்டை என்னுமிடத்தில் 1790–ஆம் ஆண்டில் பிறந்தவர். இராணுவத்தில் பணிபுரிந்த இவர் தந்தையார், இவரது இளமைப் பருவத்திலேயே காலமானார்.

இரேனியசு ஐயர் இளமையில் தாய்மொழிக் கல்வி கற்றார். அதில் நல்ல தேர்ச்சி பெற்று, அரசுப் பணியில் ஈடுபட்டார். எனினும் இவரது உள்ளம் சமயப் பணி புரிவதிலேயே நாட்டம் மிகக் கொண்டிருந்தது. எனவே, அரசுப் பணியை விடுத்துப் பெர்லின் நகரில் கிறித்தவச் சமய ஊழியப் பயிற்சி பெற்றார். தம் 22–ஆம் அகவையில் அத்துறையில் குருப்பட்டம் பெற்றார். பிறகு இங்கிலாந்து சென்று ஒன்றரை ஆண்டுக் காலம், சமய ஊழியத் தொண்டில் சிறப்புப் பயிற்சி பெற்றுத் தேர்வுற்றார். இவர்தம் 24–ஆம் அகவையில் (கி.பி. 1814) வெளிநாடுகளில் சமய ஊழியம் புரியப் பணிக்கப் பெற்றுச் சென்னை வந்தடைந்தார். ஐயர் தரங்கம்பாடிக்குச் சென்று, தமிழ் நாட்டில் சமய ஊழியத்தை மேற்கொள்ள உதவும் வகையில் தமிழ் மொழியினைப் பயின்றார். மீண்டும் சென்னை திரும்பிக் கிறித்தவச் சமய ஊழியச் சங்கச் சார்பில் அச்சமயத் தொண்டு புரியத் தொடங்கினார்.

இவர் கி.பி. 1820-இல் பாளையங்கோட்டையை அடைந்து, அங்கிருந்து நெல்லை மாவட்டத்திலுள்ள பல ஊர்களுக்கும் சென்று சமய ஊழியம் புரிந்தார். அப்போது பல இந்துக்களைக் கிறித்தவராக்கினார்.

இரேனியசு ஐயர் திருநெல்வேலித் திருப்பாற்கடல் நாதன் கவிராயரிடமும் சென்னையிலிருந்த முகவை இராமானுசக் கவிராயரிடமும் பல ஆண்டுகள் தமிழ் இலக்கண இலக்கியங் கற்றார். இவரது தமிழ்ப் புலமையை, மற்றொரு தமிழ் வல்ல கிறித்தவச் சமய ஊழியராகிய டாக்டர் போப்பையரவர்கள் சிறப்பாகப் பாராட்டியுள்ளார்.

இரேனியசு ஐயர் தம்மால் மதமாற்றம் செய்யப் பட்ட மக்கள் வாழ்வதற்காகப் புதிய ஊர்கள் பலவற்றை உருவாக்கினார். பாளையங்கோட்டைக்குத் தெற்கே 25 கல் தொலைவில் விளங்கும் தோனாவூர் (Donavur) இவரால் உருவாக்கப்பட்டதே. தோனா என்னும் செருமானியச் செல்வர் அளித்த பெரும் பொருளுதவியால் இவ்வூரை உருவாக்கி, அப்புரவலரின் நினைவாகத்தோனாவூர் என்று பெயரிட்டார். திருநெல்வேலி மாவட்டத்தில் சாந்தபுரம், சந்தோடபுரம் போன்ற பன்னிரண்டு ஊர்களைப் புதிதாகத் தோற்றுவித்தார்.

பாளையங்கோட்டையில் மகளிர் பள்ளி ஒன்றினை நிறுவினார். விதவையர் நலங் காக்கச் சங்கம் ஒன்று அமைத்தார். தரும சங்கம் என ஒரு சங்கம் நிறுவி, அதன் வாயிலாகப் பள்ளிகள், வீடுகள், கோயில்கள் போல்வன கட்டுதற்கு நிலங்கள் வாங்கிக் கொடுத்தார். நூல் இயற்றும் சங்கம் ஒன்றை உருவாக்கினார். பல நூல்கள் அதன் வழி வெளியாயின. இவர் தம் 48–ஆம் அகவையில் காலமானார். இவரது நல்லுடல் முருகன் குறிச்சியில் அடக்கம் செய்யப் பட்டது.

இவர் இயற்றிய நூல்கள் வருமாறு:– ஞான போசன விளக்கம் (1825), வேதப்பொருள் (1832), பூமி சாத்திரம் (1832), இலக்கண நூற் சுருக்கம் (1832), மோட்ச மார்க்கம் (1834), வேத உதாரணத் திரட்டு (1835), வேத சாத்திரச் சுருக்கம் (1825), பல வகைத் திருட்டாந்தம். பெப்பிரீசியசு என்பார் தமிழில் எழுதிய 'புதிய ஏற்பாடு' என்னும் கிறித்தவ வேதாகம நூலைச் செப்பம் செய்து அச்சிட்டு வெளியிட்டார். மேலும் கிறித்தவ சமயச் சார்பான வெளியீடுகள் பலவற்றை வெளியிட்டார். இவர் புதுக்கி அமைத்த 'புதிய ஏற்பாடு' நூலின் மொழி பெயர்ப்பு உள்ளவாறமையாமல் கூட்டியும் குறைத்தும் இருப்பதாக உணர்ந்த சென்னை விவிலிய சங்கம், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

**இரைதாசர்** கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயத்தலைவர்களுள் ஒருவர். இவர் சக்கிலியர் குடும்பம் ஒன்றில் பிறந்த மெய்யடியார். இவர் வாரணாசியில் தோல் தொழிலாளியாகப் பணி

யாற்றினார். இடிபாடுகளுடன் நொடிந்திருந்த குடிசையில் வாழ்ந்த இரைதாசர் (Raidas), செருப்புகளைப் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர் எளிய வாழ்வு வாழ்ந்து, போதுமென்ற மனத்துடன் அறவாழ்வு வாழ்ந்தவர். இந்து சமயத்தையும் இசுலாம் சமயத்தையும் ஒன்றுபடுத்த விழைந்த இரைதாசர், இறைவனைப் பற்றிய தத்துவங்களிலோ அவரைக் குறித்துப் பாடும் அழகான கவிதைகளிலோ ஈடுபாடில்லை. இவருடைய கருத்துகள் மனிதத் தன்மையை வலியுறுத்துவன. மறுபிறப்பையோ நாம் வாழும் உலகம் இறைவனின் விளையாடுமிடம் என்னும் கருத்தையோ இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இறைவனிடத்தில் முழுமையான ஒப்படைப்பு ஒன்றையே இரைதாசர் வலியுறுத்தினார். 'அரியே அனைத்தும், அனைத்தும் அரியே' என்பது இரைதாசரின் சிறந்த கோட்பாடாகும்.பக்தி இயக்கம் இந்தியாவில் சிறந்து விளங்கிய காலத்தில் அவ்வியக்கத்தின் ஞானியருள் ஒருவராக இவர் திகழ்ந்தார்.

**இரையிசு சேகப்பு ஆகசுட்டு** (கி.பி. **1848-1914)** அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆர்லெம் (Harlem) என்று குறிப்பிடப்படும் நீக்கிரோ மக்களின் குடியிருப்புப் பகுதியின் முன்னேற்றத்திற்காகப் பல பணிகளைச் செய்தவர் ஆவார். சமூகத்தில் தாழ்த்தப்பட்டோரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட இவர், 'நியூயார்க்கு நகரத்தின் பயனுள்ள குடிமகன்' என்று அமெரிக்காவின் அதிபராக இருந்த தியோடர் உரூசுவெல்ட்டினால் பாராட்டப்பட்டவர் மக்கள் நெருக்கமுள்ள ஆர்லெம் மக்களின் வாழ்க்கை பற்றி இதழ்களில் எழுதிய குறிப்புகள், பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. இரையிசு சேகப்பு ஆகசுட்டுவின் (Riis, Jacob August) கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் அமெரிக்க நகரங்களில் வாழ்ந்த ஏழை மக்களின் பொருளாதார மறுவாழ்விற்கு வழி வகுத்தன.

இரையிசு தென்மார்க்கிலுள்ள இரிபி (Ribe) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தார். இவர் கி.பி.1870-ஆம் ஆண்டு தென்மார்க்கிலிருந்து ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார். இரையிசு சேகப்பு, நியூயார்க்கு நகரக் காவல் துறையின் செய்தியாளராகப் பணியாற்றினார். அப்பொழுது இவருக்கு ஆர்லெம் மக்களின் வாழ்க்கைமுறையை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் பின்னரே இவர் எழுத்தாற்றல் வளரப்பெற்று, ஆர்லெம் மக்களின் சிக்கல்களைப் பற்றி நூல்கள் எழுதத் தொடங்கினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டு 'மறுபாதி மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர்' (How the other Half lives) என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் ஆர்லெம் மக்களின் நிலைமைகள் பற்றி விரிவாக விளக்குகிறது. இது அரசியல் வட்டாரத்தில் ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அமெரிக்க நீக்கிரோக்கள் முன்னேற்றத்திற்குப் பல திட்டங்களைத் தீட்ட வழி வகுத்தது. வீடுகள் கட்டிக் கொடுத்தல், பூங்காக்கள் அமைத்தல், சுகாதார இல்லம், கல்வி நிலையங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அரசாங்கத்திடம் வேண்டினார். வறுமை காரணமாகக் குழந்தைகள் பொருளீட்டும் வேலைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குப் பாடுபட்டார்.

இவர் மல்பெரி வளைவுப் பகுதியிலிருந்த நெருக்கக் குடியிருப்பை ஒழித்து, அங்கிருந்த மக்களுக்கு வசதியான வீடுகள், மனமகிழ் மன்றம், உடல் நலக் காப்பகம் ஆகியவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கப் பாடுபட்டார். மல்பெரி வளைவுப் பூங்காக் குடியிருப்புப் பகுதிக்கு இவருடைய பெயர் வைக்கப்பட்டுள்ளது. இவர் நியூயார்க்கு நகரத்தின் காவல் துறை அதிகாரியாக கி.பி. 1895 முதல் 1897 வரை பணியாற்றினார். தாம் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்ப் பொதுமக்களுக்குக் கடற்கரை மனமகிழ் திடல் அமைக்க வேண்டும் என்று நியூயார்க்கு நகர நிருவாகத்தினரிடம் இரையிசு வேண்டினார். தீவிலுள்ள (Long Island) பூங்காவிற்கு 1933-ஆம் ஆண்டில் இவர் பெயர் வைக்கப்பட்டது.

**இரைன் ஆறு** ஐரோப்பாக் கண்டத்தில் பாயும் புகழ்பெற்ற ஆறுகளுள் ஒன்றாகும். இந்த ஆற்றின் நீளம் 1335 கி.மீ. இரைன் ஆறு (Rhine River) சுவிட்சர்லாந்து, செருமனி ஆகிய நாடுகளின் வழியாகப் பாய்ந்து வடகடலில் கலக்கிறது.

இரைன் ஆறு சுவிட்சர்லாந்து ஆல்பிசு மலையின் மையப்பகுதியில் தோன்றுகிறது. இந்த ஆறு வோர்டர் இரைன் (Vorder Rhine), இண்டர்ரைன் (HinterRhine)என்னும் இரு பெரும் நீரோடைகளாகப் பாய்ந்து, சுவிட்சர்லாந்தின் சூர் (Chur) நகரில் ஒன்றாக இணைகிறது. பல்வேறு மூலங்களில் தோன்றும் ஆல்பிசு இரைன் ஏறத்தாழ 2300 மீட்டர் ஆழமான பள்ளத்தின் வழியாகப் பாய்ந்து, சுவிட்சர்லாந்தும் இலிச்சிடென் இசுடீனும் சந்திக்கும் இடத்தில் உள்ள பள்ளத்தாக்கில் ஓடுகிறது. இங்கிருந்து வடக்காகத் திரும்பிச் சுவிட்சர்லாந்துக்கும் ஆசுதிரியாவுக்கும் எல்லையாக அமைந்து, கான்சுடான்சு ஏரியில் (Constance Lake) நுழைகிறது. இந்த ஏரியின் மேற்கு முனையிலிருந்து விடுபட்டு இரைன் பாய்ந்து ஓடும்போது, பல நீர்வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்றான இரைன் நீர்வீழ்ச்சி(RhineFalls



இரைன் ஆறு

நிகாசன் (Neuhausen) என்னுமிடத்தில் உள்ளது. இதன் தென்கரைத் துணையாறான ஆர் (Aare)ஆறு இதனுடன் இணைகிறது. இந்தத் துணையாறு சுவிட்சர்லாந்து, செருமானிய நாடுகளின் எல்லை யாகப் பேசல் (Basel) நகர் வரை பாய்கிறது.

பேசல் நகரில் இரைன் ஆறு நேர் வடக்காகத் திரும்பிப் பிளவுப் பள்ளத்தாக்கு ஒன்றின் வழியாகப் பாய்ந்து செல்கிறது. வோசுகாசு மலைகள் (Vosges Mountains) மேற்கிலும், கருங்காடுகள்(Black Forest) கிழக்கிலும் இந்த ஆற்றுக்கு எல்லையாகஉள்ளன.

இரைன் ஆறு வடக்காக 320 கி.மீ. பாய்ந்து மெயின்சு (Mainz) நகரைத் தொடுகிறது. மேற்கூறிய 320 கி.மீ. தொலைவில் இதன் பாதித் தொலைவு செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளின் எல்லையாக வும் மற்றைப்பாதித் தொலைவு செருமானிய ஆறா கவும் மாறிவிடுகிறது. பிரான்சுப் பகுதியிலிருந்து வரும் இல் (Ill) ஆறும, செருமனி நாட்டுப்பகுதியி லிருந்து வரும் நெக்கர் (Neckar), மெயின் (Main) ஆறுகளும் இரைனின் துணையாறுகளாக இணை கின்றன.

மெயின் ஆறு இரைனுடன் கலக்கும் இடத்திலி ருந்து இரைன் மேற்காகத் திரும்புகிறது. அங்குள்ள மலைத்தொடர்கள் இதன் முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன. பின்சென் (Bingen) என்னும் நகரில் மலைகளை அறுத்துக் கொண்டு இரைன் பாய்ந்து செல்கிறது. இப்பிரிவைத்தான் இரைன் கெவிப்பள்ளம் (Rhine Gorge) என்பர். இக்கெவிப்பள்ளம் 160 கி.மீ. நீளம் கொண்டது. இம் மலையின் செங்குத்தான மலைச்சரிவுகளில் திராட்சைத் தோட்டங்களையும் பல கோட்டைகளையும் கண்டு களிக்கலாம். கோப லன்சு (Coblenz) நகருக்கருகில் இரைனின் பெரும் துணையாறுகளான மோசல் (Moselle) மேற்கிலிருந் தும், இலான் (Lahn) கிழக்கிலிருந்தும் பாய்ந்து வந்து இதனுடன் இணைகின்றன.

இரைன் ஆறு பான் (Bonn) நகருக்குத் தெற் கிலுள்ள குன்றுகளிலிருந்து வெளிப்பட்டுப் பாய்ந்து வருகிறது. இங்கிருந்து செருமானிய, தச்சு (Dutch) எல்லை வரை இரைன் ஆறு தாழ்நில ஆறாகிச் சுழன்றும் வளைந்தும் பல்வேறு மாநகரங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் இடையில் பாய்ந்தோடுகிறது. எல்லையைத் தொடுவதற்கு முன்னர் உரூர் (Ruhr), இலிப்பி (Lippe) என்னும் இரு துணையாறுகள் இரைனுடன் சேர்கின்றன.

இந்த ஆற்றின் இறுதிக்கட்டநீளமான 120 கி.மீ. இதன் கழிமுகமாக மாறுகிறது. தி ஏக்கு (The Hague) நகருக்கு அண்மையில் இரைன் ஒருகாலத்தில் கடலில் கலந்ததாகக் கூறுவர். இந்நகருக்கு அருகி லுள்ள நீர்வழி யொன்றைப் பழைய இரைன் (Old Rhine) என்று இன்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாற் றின் போக்கும் இப்போது தெற்காக மாறியுள்ளது. இக்காலத்தில் செருமானிய, தச்சு எல்லைக்கருகில்

இரைன், இரண்டு கிளையாறுகளாகப் பிரிகிறது. வடக்குக் கிளையாற்றை இலேக்கு (Lek) என்று கூறுவர். இக்கிளையாறு ஆன்கெம் (Arnhem) இராட்டர் டாம் (Rotterdam) நகரங்களின் வழியாகப் பாய்ந்து வடகடலில் கலக்கிறது. தென் பாகக் கிளையாற்றை வால் (Waal) என்பர். இது மிகப் பெரியது. இக்கிளையாறு நிசுமேகன் (Nijmegen) நகர் வழியாக ஓடி, மாசு (Maas) ஆற்றுடன் இணைந்துவிடுகிறது. இந்த ஆற்றையும் இராட்டர்டாம் நகரையும் இணைக்கும் கால்வாய்கள் உள்ளன.

இரைன் ஆறு ஆண்டு முழுதும் நீர் உடையது. கோடைக் காலத்தில் பனி உருகி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இதன் துணையாறுகளும் பெருமளவு நீரைக் கொண்டுவருவதால், ஆற்றில் எப்போதும் நீர் ஓடிக் கொண்டிருக்கும். பனிக்கட்டியால் சில நாள்கள் கப்பற்போக்குவரத்திற்குத் தொல்லைகள் ஏற்படுவது முண்டு. இந்த ஆறு கப்பற்போக்குவரத்திற்கு நன்கு பயன்படுகிறது. வெள்ளம், நீர்வீழ்ச்சி, கடினமான வழி போன்றவற்றைக் கட்டுப்படுத்திச் செப்பனிட்டுப் போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்படும் ஆறாக இதனை அண்மைக் காலத்தில் மாற்றிவிட்டார்கள்

நெக்கர் துணையாற்றில் பேசல் நகரிலிருந்து இசுடாரசுபர்க்கு வரையிலும் அமைக்கப்பட்டுள்ள கால்வாய்கள் போக்குவரத்துக்கு நன்கு பயன்படுகின்றன. இக்காலத்தில் ஈரோப்பா (Europa) என்னும் கால்வாய் மூலமும் மெயின் ஆறு மூலமும் இரைனையும் தான்யூப்பு ஆற்றையும் இணைத்துள்ளார்கள். இரைன் ஆற்றுப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தவை பாறைகளும் நீர்வீழ்ச்சிகளும் மட்டுமல்ல. உரோமானியரின் காலம் முதல் இவ்வாற்றைக் கடப்பவர்கள் சுங்கம் செலுத்த வேண்டியவ ராயினர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி வரை 60க்கும் மேற்பட்ட வரிகளைத் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் வாங்கின. இன்று இவ் ஆற்றின் கரையில் காணப்படும் கோட்டைகள் சுங்கச் சாவடிகளாக இருந்தவையே. வரிகள் காலப் போக்கில் குறையலாயின. வியன்னா மாநாடு (1815) இந்த ஆற்றில் அனைத்து நாடுகளுக்கும் வரியின்றிச் செல்லும் சுதந்திரத்தை வழங்கியது. படிப்படியாக இவ்வுரிமை இவ்வாற்றின் பல பாகங்களுக்கும் கொடுக்கப்பெற்று, இன்று சுதந்திர ஆறாக இது விளங்குகிறது.

இரைன் ஆற்றின் மூலம் போக்குவரத்து மிகுதியாக நடைபெறுகிறது. இரும்புத்தாதுக்கள், நிலக்கரி, பெட்ரோலியப் பொருள்கள் போன்றவை இவ்வாற்றின் மூலம் ஐரோப்பாவின் பல பாகங்களுக்கும் ஏற்றிச் செல்லப் படுகின்றன. இந்த ஆற்றின் கழிமுகத்தில் உள்ள இராட்டர் டாம்-ஈரோபுரூட்டுத் (Rotterdam-Europroot) துறைமுகம் சிறப்பானது. உள்நாட்டுத் துறைமுகங்களுள் துயிசுபர்கும் (Duisburg) உரூரும் (Ruhr) முதன்மையானவை.

இந்த ஆறு ஐரோப்பாவின் பண்பாடு, பொருளாதாரவளம் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவுகிறது. இருப்பினும் இது பாயுமிடங்கள் ஒரு குடையின்கீழ் என்றும் இருந்தது இல்லை. இந்த ஆறு சுவிட்சர்லாந்தில் தொடங்கி ஆலந்தில் முடிவுறுகிறது. எனினும் இதைக் குறித்துப் பிரான்சும் செருமனியும் மோதிக் கொண்டுள்ளன. இப்பகுதியில் வரும் அல்சேசு-உலொராயின் பகுதிக்காகப் பிரான்சும் செருமனியும் போர் புரிந்தன.

இந்த ஆறு சுற்றுலாப் பயணிகளுக்குப் பெரிதும் உதவுகிறது. இதன் கரையிலுள்ள பல நகரங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

**இரோசிமா** என்பது சப்பான் நாட்டிலுள்ள ஒரு நகரம். இரண்டாம் உலகப் போரின்போது 1945 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாள், நேச நாடுகளைச் சார்ந்த அமெரிக்கா இந்நகரத்தின் மீது உலகிலேயே முதன்முதலாக அணுக்குண்டை வீசியது. இரோசிமா (Hiroshima) இந்தப் பெயர் கொண்ட மாநிலத்தின் தலைநகர். இது சப்பானின் தென்மேற்கிலுள்ள ஆன்சு (Honshu) தீவிலுள்ளது. இரோசிமா விரிகுடாவில் அமைந்துள்ள இந்நகரம் வாணிகச் சிறப்புப் பெற்றது. ஆடைகள், தோப்பி (Sake), கப்பல் கட்ட உதவும் துணைப் பொருள்கள், பேருந்துகள், இயந்திரங்கள், தட்டுமுட்டுப் பொருள்கள், தளவாடங்கள், தகர அடைப்புகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் போன்ற பொருள்களின் தொழிற்சாலை மையமாக இந்நகர் விளங்குகிறது. வேளாண்மைப் பொருள்கள், கடலில் கிடைக்கும் பொருள்கள் போன்றவற்றின் சந்தையாகவும் இரோசிமா விளங்குகிறது. இந்நகரம் ஏறத்தாழ கி.பி. 1594-ஆம் ஆண்டில் ஓட்டா (Ota) ஆற்றுக் கழிமுகத்தில் அமைக்கப்பெற்ற கோட்டை நகரமாய் அமைக்கப்பட்டது. இங்குப் பாயும் ஆறு இரோசிமாவை ஏழு வாயில்களாகப் பிரிப்பதால் இது ஆறு தீவுகளாகப் பிரிந்துள்ளது. இவ்வேழு கிளைகள் 81 பாலங்களால் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போரின்போது இரோசீமாவின் மீதுதான் முதன்முதலாக அணுக்குண்டு வீசப்பட்டது. மக்கள் நிறைந்திருந்த ஒரு பகுதியின்மீது இத்தகைய அச்சமூட்டும் குண்டு வீசப்பட்டதால், நொடிப் பொழுதில் ஏறத்தாழ 1,30,000 மக்கள்



அமைதி நினைவுப் பூங்கா-இரோசிமா

கொல்லப்பட்டோ காயமடைந்தோ காணாமற் போயோ மறைந்த வரலாற்றுக் கொடுமை, 1945 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-நாள் நடைபெற்றது. 90 விழுக்காடு நிலம் தரைமட்டமாகியது. மீண்டும் அணுக்குண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு நாகசாகி (Nagasaki) என்னும் மற்றொரு சப்பானிய நகரம் மீது வீசப்பட்டபோது, ஏறத்தாழ 75,000 மக்கள் காயம்பட்டோ கொல்லப்பட்டோ போனார்கள். 1985-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாள் சப்பானிய மக்கள் அணுக்குண்டு போடப்பட்ட நாற்பதாம் ஆண்டு நிறைவு நாளை நினைவுறுத்தி மறைந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**இல்துத்மிசு (கி.பி 1211 1236):** முகமது கோரியின் நம்பிக்கைக்கு உரியவரும், அவருடைய அடிமைகளுள் ஒருவருமாகிய குத்புத்தீன் ஐபக்கு (Qutb-ud-din Aibak) அடிமைகள் வமிசம் என்று கூறப்பட்ட ஆளும் வமிசத்தை கி.பி. 1206-ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தியாவிற்கு வெளியே தலைநகரை வைத்துக்கொண்டு இந்தியாவை ஆட்சி செய்த நிலை மாற்றப்பட்டது. இந்தியாவைத் தம் தாயகமாகக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கிய அடிமைகள் தில்லிச் சுல்தானியத்தைத் தோற்றுவித்தார்கள்.

அடிமை வமிசத்தை உருவாக்கிய குத்புத்தீன் ஐபக்கு நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் கி.பி. 1210-ஆம் ஆண்டு இறந்தவுடன் அராம் சா (Aramshah) எட்டு மாதங்களே ஆட்சிக் கட்டிலில் இருந்தார். நாட்டை ஆளுவதற்குத் தகுதி எதுவும் இல்லாத அராம்சா எளிதாகத் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அராம் சாவிற்குப் பின்னர் அரசராகப் பதவியேற்றவர் இல்துத்மிசு.

இல்துத்மிசு மத்திய ஆசியாவில் காணப்பட்ட இல்பாரி (Ilbari) இனத்தைச் சார்ந்தவராவார். இவருடைய தந்தை இலாம்கான் (Ilam Khan) அவ்வினத்தின் தலைவர். இவர் இளமையிலிருந்தே புத்திக் கூர்மையும், செயல்திறனும் உடையவராகத் திகழ்ந்தார். இவர் சகோதரர்கள் பொறாமை உணர்வினால் தூண்டப்பட்டு இவரை வீட்டிலிருந்து வெளியேற்றி அடிமை வாணிகர் ஒருவருக்கு விற்று விட்டனர். சமாலுத்தீன் (Jamal-ud din) என்ற அவ்வணிகரால் இளைஞரான இல்துத்மிசு கசினிக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கிருந்து இவர் தில்லிக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டாம் முறையாகக் குத்புத்தீனுக்கு விற்கப்பட்டார். இவர் தம்முடைய தகுதி, திறமையால் படிப்படியாக வாழ்வில் உயர்ந்தார். அரசரின் வேட்டைக்கூட்டத்திற்குத்(Amir-i-Shikari)தலைவரானார். குவாலியர் கைப்பற்றப்பட்டபின் அக்கோட்டையின் பொறுப்பையேற்றார். பின்னர்ப் புலந்த்சகரின் (Bulandshar) ஆளுநராக உயர்த்தப்பட்டார். குத்புத்தீனின் மகளை மணந்து கொண்ட இவர், பின்னர்ப் பதோனின் (Badaun) ஆளுநராக நியமிக்கப்பட்டார். கக்கர்களை (Khokkors) கி.பி. 1205 06-இல் அடக்குவதற்குத் தம்முடைய திறமையை வெளிப்படுத்திய இவர், அதற்கு வெகுமதியாக அடிமை நிலையினின்றும் விடுவிக்கப்பட்டார். ஐபக்கு இறந்தவுடன் அராம் சா கி.பி. 1210 11 வரை அரசோச்சினார். அராமைவிட திறமையான ஒரு அரசரே அப்போதைய தில்லிக்குத் தேவை என்பது உயர்குடி மக்களின் விருப்பமாக இருந்தது, இல்துத்மிசு அராமைத் தோற்கடித்து கி.பி. 1211-இல் அரியணை யேறினார்.

இல்துத்மிசு அரசராகப் பதவியேற்றபோது தில்லிச் சுல்தானியம் என்ற ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. வங்காளம், அல்மர்தன் கில்சியின் கட்டுப்பாட்டிலிருந்தது. இல்துத்மிசு தில்லிக்கும் அதைச் சுற்றியிருந்த பகுதிகளுக்கும் அரசரானார். குபாச்சா (Qabacha) முல்தான் பகுதி மீது ஆதிக்கம் செலுத்தி வந்தார். இலாகூரைக் குபாச்சாவும் இல்திசும் (Yildiz) மாறிமாறிக் கைப்பற்றினர். இராசபுத்திரத் தலைவர்கள் சலோர் (Jalor), இராந்தம்பூர்(Ranthambhor), ஆசுமீர் (Ajmer), குவாலியர் (Gwalior) போன்ற இடங்களில் தம் உரிமையை நிலைநாட்டியிருந்தனர். இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே இவர் தில்லி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் அரசரானார். ஐபக்

கின் மருமகனான இவரை அரியணையைப் பறித்த வர் (Usurper) என்று சில வரலாற்றறிஞர்கள் கருது கின்றனர். ஆனால், துருக்கியர்கள் மரபுரிமையை முழுவதும் ஏற்றுக் கொள்ளாத நிலையில், திறமை வாய்ந்தவர்கள் அரசுரிமையைப் பெறுவது வழக்க மாகக் காணப்பட்டது.

இல்துத்மிசிற்கு எதிரான இரு வலிமையான போட்டியாளர்களாகத் திகழ்ந்தவர்கள் இல்திசும், குபாச்சாவுமாவர். குபாச்சா பஞ்சாபில் தம் ஆதிக் கத்தைப் பரப்ப முயன்றார். படிண்டா (Bhatinda), குரம் (Kuram), சரௌசுத்தி (Sarausti) போன்றவற் றைக் கைப்பற்றியிருந்தார். மற்றொருவரான தாசுத் தீன் இல்திசு கசினியைப் பெற்றதுடன் 'நான் இந்தியா முழுவதற்குமே அரசனாவேன்' என்று கூறி. முகமதுகோரி இந்தியாவில் வெற்றி கொண்ட பகு திகளுக்குத் தாமே உரிமையுடையவர் என்ற பழைய உரிமையைப் புதுப்பித்துக் கொள்ள முற்பட்டார். வங்காள ஆளுநராக கி.பி. 1296 இல் நியமிக்கப்பட்டி ருந்த அலிமர்தன் குத்புத்தீன் இறந்தபிறகு, தில்லிச் சுல்தானியத்தைப் புறக்கணித்துத் தம்மைச் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டார். 'சுல்தான் அலா வுதீன்' என்று தம்மை அறிவித்துக்கொண்டார். சுதந் திரம் பறிபோன நிலையில் மனக்குறை கொண்டி ருந்த சிற்றரசர்கள் பலர் அடிபணிய மறுத்தனர். குவாலியர், சலோர், இராந்தம்பூர் ஆகியவை பழைய மன்னர்களால் மீட்கப்பட்டுவிட்டன.ஆசுமீர், தோஆபு (Doab) ஆகிய பகுதிகளும் துருக்கிய ஆதிக்கத்தைக் களைந்தெறிந்தன. இல்துத்மிசின் தொல்லைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் தில்லியின் அமீர்கள் அராம் சாவின் கட்சியுடன் சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். மங்கோலியர்களின் படையெடுப்புப் பற்றிய அச்சமும் வடமேற்கு எல் லைப் பகுதிகளைப் பற்றியது. எனவே, இல்துத்மிசு வலிமையான ஆட்சியைப் பெறவில்லை. அதற்குப் பதிலாக இராணுவ சாகீரையே (Military Jagir) பெற் றிருந்தார். இந்நிலையை வெல்லத்திறமையும் வலிமை யும் ஒருங்கே அமையப்பெற்ற அரசராலேயே முடியும் என்ற நிலை காணப்பட்டது. இல்துத்மிசு தம் வலிமை, கூர்த்த மதி ஆகியவற்றின் காரணமாக இறுதியில் வெற்றி பெற்றார்

இல்துத்மிசு முதலில் அமீர்களின் கிளர்ச்சியை அடக்கினார். பின்னர்ப் பதான், அயோத்தி, காசி, சிவாலிக்கு ஆகிய தில்லியைச் சார்ந்த அரசுகளை அடக்கினார்; துருக்கியப் பாதுகாவலர்களையும் கட் டுப்படுத்தினார். இதற்குள்ளாக இல்திசு, குபாச் சாவை இலாகூரிலிருந்து விரட்டியடித்துவிட்டுப் பஞ் சாபின் பெரும் பகுதியைத் தம் வசப்படுத்திக் கொண்டார். இல்திசைத் தரைன் (Tarain) போரில் கி.பி. 1215-இல் இல்துத்மிசு தோற்கடித்தார். இந்த வெற்றியால் தில்லி அரசு கசினியின் பிடியிலிருந்து முற்றிலும் விடுபட்டது.

இவருடைய ஆட்சிக் காலத்தில் மங்கோலியர்கள் சிந்து ஆற்றங்கரையில் தோன்றிச் செங்கிசுகான் (Genghiz Khan) தலைமையில் விரைந்து மத்திய ஆசியா, மேற்கு ஆசியா நாடுகளின்மீது படையெ டுத்துத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். காவாரிசம் (Khwarizm) பேரரசைத் தாக்கி அதனைக் கைப்பற் றினர். அப்பேரரசின் சா சலாலுதீன் மங்கபர்னி (Jalaludin Mangbarni) பஞ்சாபிற்கு ஓடினார். அங் கிருந்து அவர் இல்துத்மிசின் உதவி கோரி தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார். அயல் உறவுக் கொள் கையின் கண்ணோட்டத்தில் அவருடைய வேண்டு கோளை இல்துத்மிசு புறக்கணித்தார். மனிதாபி மானமற்ற செய்கையாக இது கருதப்பட்டபோதிலும் தம்முடைய அரசைச் செங்கிசுகானின் கோபத்திலி ருந்து பாதுகாக்கப் பெரிதும் பயன்பட்டது. சலாலு தீனைச் சிறைபிடிக்கும் பணியைத் தம் உதவியாளர் களிடம் ஒப்படைத்துவிட்டுச் செங்கிசுகான் நாடு திரும்பினார். பஞ்சாபின் வெப்ப நிலையினால் மங் கோலியர்கள் இந்தியாவின் உட்பகுதிக்கு வாராது திரும்பிச் சென்றனர். தோற்கடிக்கப்பட்ட சலாலு தீன் கக்கர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டு குபாச்சாவைத் தாக்கினார். அவர் கி.பி. 1224-இல் பாரசீகத்திற்குச் சென்றபொழுது அங்குக் கொலை யுண்டார். இல்துத்மிசின் கூர்த்த மதியினால் மங்கோ லியப் படையெடுப்பிலிருந்து இந்தியா தப்பியது. பின் னர் நடைபெற்ற மங்கோலியப் படையெடுப்புகளின் விளைவாகத் தில்லி சுல்தான்கள் பிற்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

முகமது கோரியின் அடிமைகளுள் ஒருவரான குபாச்சா பெருஞ் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந் தார். இல்துத்மிசு குபாச்சாவிற்கு எதிராக இரு முனைத் தாக்குதலை மூல்தான் சிந்துவின் மீதும் நடத்தினார். குபாச்சா பக்கார் (Bhakkar) கோட்டை யில் ஒளிந்து கொண்டார். இல்துத்மிசின்படை உச்சுக் (Uch) கோட்டையை முற்றுகையிட்டு கி.பி. 1227-இல் அதனைக் கைப்பற்றியது. சரணடைய வேண் டிய நிலையில் இருந்த குபாச்சா மனச்சோர்வுற்றுத் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் படகில் ஏறிச் செல்கையில், படகு கவிழ்ந்து சிந்து ஆற்றில் மூழ்கி இறந்தார்.

வங்காளத்தில் அலிமர்தன்கான் கில்சி தம்முடைய உரிமையை நிலைநாட்டிக்கொண்டார். அவர் கி.பி.

1212-இல் இறந்ததும் அசாமுதீன் இவாசை (Husam-ud-din Ewaz) அரியணையில் அமர்த்தினர். பீகாரைக் கைப்பற்றிய அவர் அருகிலிருந்த செய்நகர் (Jainagar), திர்குடு (Tirhut), காமரூபம் (Kamarupa) போன்ற பகுதிகளில் கப்பம் பெற்றார். வடமேற்கு எல்லைப் பகுதிகளில் தம்முடைய கவனம் முழுவதையும் இல்துத்மிசு செலுத்தியமையால் வங்காள நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது. இல்துத்மிசு கி.பி. 1225-இல் தமக்கு எதிராகப் படையெடுக்க ஆயத்தங்களை மேற்கொண்டபோது, கியாசுத்தீன் அவருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முன் வந்தார். மாலி சானி (Mali Jhani) என்பவரைப் பீகாரின் ஆளுநராக நியமித்தார். இல்துத்மிசு பீகாரை விட்டு நீங்கியவுடன் மாலிசானியைப் பீகாரிலிருந்து விரட்டி விட்டு, மீண்டும் தம் ஆட்சியை ஏற்படுத்தினார். அயோத்தியின் (Oudh) ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த நசீருத்தின் முகமதுசா (Nasir ud-din Mahmud) கியாசுத்தீனை எதிர்த்தார். இலக்னாவுதி (Lakhnauti) முழுவதையும் நசீருத்தின் கி.பி. 1226-இல் கைப்பற்றினார். கியாசுத்தீன் கொலையுண்டு இறந்தார். நசீருத்தின் கி.பி. 1229-இல் இறந்தவுடன் மாலிக் இக்தியாருத்தீன் பல்கா கல்சி (Malik Ikhtiyar-ud-din Balka Khalji) என்பவர் தம்முரிமையை வங்கத்தில் நிலைநாட்டினார். இல்துத்மிசு கி.பி. 1229-இல் அவரைத் தோற்கடித்துக் கொன்றார். வங்காளமும் பீகாரும் மீண்டும் தில்லிச் சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டன.

இராசபுதனத்தில் கி.பி. 1226-இல் இல்துத்மிசு போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இராந்தம்பூர், மண்டோர் (Mandor), சலோர், பயானா (Bayana), தங்கிர் (Thangir), ஆசுமீர், நகௌர் (Nagaur) போன்ற இடங்களில் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டினார். தோஆபுப் பகுதியில் படௌன், கனோசி, பகாரய்ச்சு (Baharaich), கேடேகார் (Kadehar) காசி முதலிய இடங்களிலும் தம் அதிகாரத்தை ஏற்படுத்தினார். மாளவத்திற்கெதிராக கி.பி. 1234-35-இல் படையெடுத்துப் பில்சா, உச்சயினி ஆகிய நகரங்களைச் சூறையாடினார், துருக்கியச் சுல்தானியத்தால் இழக்கப்பட்ட அரசுகளை மீண்டும் கைப்பற்றிய இல்துத்மிசு இராசபுத்திரர்களை முழுமையாக அடக்காவிட்டாலும் அவர்களுடைய ஆதிக்க வலிமையைச்சிதறச் செய்தார்.

இல்துத்மிசு கி.பி. 1228-இல் பாக்தாதில் ஆட்சி புரிந்த கலிபாவிடமிருந்து கௌரவ ஆடையையும், இல்துத்மிசு வெற்றிகொண்ட 'கடல் நிலப்பரப்பு யாவற்றிற்கும்' அரசனாக்கிச் 'சுல்தான்-இ-அசாம்' என்ற பட்டத்தினையும் பெற்றார். சுல்தானுடைய அதிகாரத்தை வலுப்படுத்தும் சக்தியாக இச்செயல் விளங்கியது. சுல்தானின் அதிகாரத்தைச் சட்டப்படியாக்கியது. ஓயாது உழைத்த வாழ்க்கையின் விளைவாகச் சைபுத்தீனுக்கு (Saifuddin) எதிரான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இவர் கி.பி. 1236-இல் இறந்தார்.

இடைக்கால இந்தியாவை ஆண்ட அரசர்களுள் சிறந்த ஒருவராக இல்துத்மிசு கருதப்படுகிறார். குழந்தைப் பருவ நிலையிலிருந்த துருக்கிய அரசு அழிந்து படாமல் இவர் காப்பாற்றினார். இவரது காலத்திலிருந்து தான் இந்தியாவில் முசுலிம்கள் ஆதிக்கம் உண்மையில் தொடங்கிற்று. இவர் நாட்டிற்குத் தலைநகரம் ஒன்றை உருவாக்கினார். தில்லி சுல்தானியத்தை உறுதியாக நிலைநாட்டினார். ஐபக்கின் அடிமையாகத் தம் இளம்பருவ வாழ்வைத் தொடங்கிய இல்துத்மிசு பிற்காலத்தில் துருக்கியத் தலைவர்களுள் ஒருவரானார். தளராத ஊக்கமுடைய வராகவும், பகைவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவராகவும் விளங்கிய இவர், இறுதிவரை போர்ச்செயல்களில் தீரமுடன் ஈடுபட்டார். இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரசியல் நிலை குழப்பம் மிகுந்ததாகவும் அரசின் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுத்துக் கூற இயலாத நிலையிலும் இருந்தன.

இல்துத்மிசு கலைகளையும் கல்வியையும் ஆதரித்தார். கட்டிடப் பணி அழகில் சிறந்து விளங்குகின்ற குதுப்மினார் (Kutub-Minar) இன்றளவும் இவரது பெருமைக்கு ஒரு தலைசிறந்த நினைவுச் சின்னமாக விளங்குகிறது. மின்கசு-உச்-சிராசு (Minhaj-uj-Siraj) என்ற வரலாற்றறிஞர் இவருடைய தனிப்பட்ட குண இயல்புகளைப் பெரிதும் பாராட்டிக் கூறியுள்ளார். 'இவரைப் போல் நம்பிக்கையையும், இரக்கஉணர்வையும், சமயச் சான்றோர் மீது கொண்டிருந்த அளவில்லாத பற்றையும் உடைய அரசர் வேறு எவருமில்லை' என்பது அவர் கூற்று. இவர் காலத்திய சாசனங்கள் சில இவரைக் 'கடவுளின் நிலப்பாதுகாவலன்', 'கடவுளின் ஊழியர்களைப் பாதுகாப்பவன்' என்று குறிப்பிடுகின்றன. இவருடைய ஆட்சிக் காலத்தில் தில்லி நகரம் நாகரிகத்தின் மையமாக விளங்கியது. இந்திய மரபினையொட்டி நின்ற ஓர் அரசினை இவர் உருவாக்கினார்.

இல்துத்மிசு சொந்த வாழ்க்கையில் மிகச் சிறந்த பக்திமானாக விளங்கினார். இரவில் நெடுநேரம் வரை தொழுகையிலும் தியானத்திலும் ஈடுபட்டார். சேக் குத்புத்தீன் புக்தியார் காசி (Sheik Gutbudin Bukthiar Kazi), காசி அமீதுத்தீன் நாகூரி (Kazi Hami duddin Nagouri), சேக் சலாலுத்தீன் தபரிசி

(Sheik Jalaluddin Tabrizi) போன்ற சூபி (Sufi Saints) ஞானிகளிடம் மரியாதை உடையவராகத் திகழ்ந்தார். அரசவையில் அடிக்கடி சமய விவாதங் களை நடத்தி உலேமாக்களுக்கு (Ulemas) ஆதரவு அளித்தார். தம்முடைய சமயக் கருத்துகளைப் பிறர் பொருட்டு மாற்றியமைத்துக் கொள்ளவில்லை. இவருடைய கொள்கைகளின் விளைவாக இவருக்குப்பின் பதவியேற்ற அரசர்களின் நிலை பெருமளவு உறுதியாக அமைக்கப்பட்டது. எஸ்.அ.

துணை நூல்:

**Majumdar, R.C., Ray Chaudry & Dutta,** An Advanced History of India, Macmillan, Madras, 1982.

**இல்பர்ட்டு (கி.பி. 1841-1924)** என்பார், இரிப்பன் பிரபு இந்தியாவின் அரசப்பேராளராக இருந்தபோது அவருக்கு உதவிய ஓர் ஆங்கிலேயர். இவருடைய முழுப்பெயர் சர் கோட்டினே பிரிக்ரைன் இல்பர்ட்டு என்பதாகும். இவர் பிரிக்ரைன் ஆர்தர் இல்பர்ட்டு என்ற சமயகுருவுக்கும் உரோசு அண்ணி என்ற அம்மையாருக்கும் தெவன்சயர் என்னும் மாவட்டத்திலுள்ள கிங்சு பிரிட்சு என்னுமிடத்தில் கி.பி. 1841-ஆம் ஆண்டு சூன் திங்கள் 12-ஆம் நாள் பிறந்தார். இவருக்கு உடன்பிறந்தவர்கள் ஐவர். தெவன்சயர் மாவட்டத்தின் மிகப் பழங்குடியே இல்பர்ட்டின் வமிசமாகும். இவருடைய மூதாதையர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பவிரிங்சுலெளி, ஆர்சுவெல் பகுதிகளில் மிகுதியான நிலச் சொத்துகளைப் பெற்றிருந்தனர்.

இல்பர்ட்டு கி.பி. 1852-ஆம் ஆண்டில் கல்வி பயிலப் பார்வ்பரோ நகருக்கு அனுப்பப்பட்டார். எட்டு ஆண்டுகள் அந்நகரில் தங்கி, சார்சு எட்வர்டு வின்சு காட்டன், சார்சு கிரன்வில்லி பிராட்லி ஆகிய தலைமை ஆசிரியர்களின் கண்காணிப்பில் சிறக்கக் கல்வி பயின்று, கி.பி. 1861-ஆம் ஆண்டில் பொதுக் கல்விக்கான பட்டத்தையும், கி.பி. 1867-ஆம் ஆண்டில் சட்டக் கல்விக்கான பட்டத்தையும் பெற்றார். பின்னர்ப் பாலியால் கல்லூரியில் பணிபுரிந்து, கி.பி. 1871-ஆம் ஆண்டு முதல் 1874-ஆம் ஆண்டு வரை அக்கல்லூரியின் தொடர்பைப் பெற்று இலக்கிய அறிவையும் பெற்றார். அதே ஆண்டில் வின் சார்லசு பிராட்லி என்ற சமய குருவின் மகளாகிய செசி என்பவரை மணந்தார். இவருக்கு ஐந்து பெண் மக்கள் பிறந்தனர்.

இல்பர்ட்டுக்கு கி.பி. 1896-ஆம் ஆண்டிலேயே வழக்குரைஞர் பதவிக்கு அழைப்பு வந்தது. அந்நேரத்தில்தான் இங்கிலாந்து நாடாளுமன்றம் தன்னுடைய மசோதாக்களை வரைவு செய்யத் தொடங்கியது. அதற்காகச் சர் என்றி, திரிங்கு ஆகியவர்களின் தலைமையிலே தனியாக ஒரு துறையே தொடங்கப்பட்டது. இச்சட்டத் துறையில் இல்பர்ட்டு ஓர் உதவியாளராகச் சேர்க்கப்பட்டுத், தம் விசாலமான சட்ட நுட்பத்தைப் பயன்படுத்தினார். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டின் சட்ட நீதித் திருத்தத்திற்கும், கி.பி. 1883-ஆம் ஆண்டில் குற்ற இயல் சாராத சட்டத் தொகுப்பை உருவாக்குவதற்கும் பெரும் பணியாற்றினார்.

ஆர்டிங்டன் பிரபு கி.பி. 1882-ஆம் ஆண்டில் இந்தியச் செயலராகப் பதவியேற்றபோது, தலைமை ஆளுநர் சபையில், இல்பர்ட்டையும் சட்டத்துறையில் ஓர் உறுப்பினராக அமர்த்தினார். தொடக்கத்தில் இல்பர்ட்டு சற்றுத் தயங்கினார் என்றாலும் இந்தியரின் மனவளம் அவரைப் பெரிதும் கவர்ந்தகாரணத்தால் இறுதியில் இப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

இரிப்பன் பிரபு இந்தியாவில் அரசப் பேராளராக கி.பி. 1880-ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்தியர்களுக்குப் பல்லாற்றானும் நன்மை பயக்க எண்ணினார். அவர் கி.பி. 1873-ஆம் ஆண்டில் குற்றவியல் சட்டப்படி தலைமை மாநிலம் தவிர, ஏனைய மாநிலங்களில் ஓர் ஆங்கிலேயக் குற்றவாளியை ஓர் இந்திய நீதிபதி விசாரிக்கக் கூடாது என்பதை அடியோடு வெறுத்தார். அச்சமயத்தில் உயர் பதவிகளிலிருந்த இந்தியர்களும், 'இந்திய நீதிபதிகளுக்கும் ஆங்கிலேய குற்றவாளிகளை விசாரிக்கும் உரிமை வேண்டும்' என்று கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே சட்டத்தை நிலைமைக்கு ஏற்றாற்போல் இந்தியர்களுக்குச் சாதகமாக உருவாக்கும் பொறுப்பு இல்பர்ட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. 'இல்பர்ட்டு மசோதா' 1883-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதும், ஆங்கிலேயர்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். எனவே, இம்மசோதாவை அமுலாக்குவது முற்றிலும் கைவிடப்பட்டது. நிலச்சுவான்தாரர்களுக்கும் நிலக் குத்தகைக்காரர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைச் சீர்திருத்தி அமைப்பதற்காக 'வங்காளக் குத்தகைச் சட்டம்' கொண்டு வந்தவரும் இவரே.

இல்பர்ட்டு கி.பி. 1886-ஆம் ஆண்டின் இறுதிக் காலத்தில் இங்கிலாந்து திரும்பினார். அங்கு கருவூலத்தில் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் உதவியாளராகப் பணியில் அமர்ந்தார். இந்தியச் சட்டத் தொகுப்பில் பெரும் அக்கறை கொண்ட இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் வாரன் ஏசுடிங்சு காலத்திலிருந்து இந்தியச் சட்டங்களை விளக்கும் வகையில்

'இந்திய அரசு' என்ற நூலையும் வெளியிட்டார். பின்னர் கி.பி. 1899 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் தலைவரானார். அதன் பின்னர்க் கருவூலத்தின் கருத்துரையாளரானார். இல்பர்ட்டு 1902-இல் 'பொதுமக்கள் மன்ற'த்தின் கணக்கரானார். சட்ட மன்ற நடவடிக்கைகளை நன்கு அறிந்தவராகையால, எளிதில் அனைத்து உறுப்பினர்களிடமும் நற்பெயரை ஈட்டினார். தம் பதவியை 1921-ஆம் ஆண்டில் துறந்து, காமன்சு அவையால் பாராட்டப்பெற்றார்.

இல்பர்ட்டு 1901-ஆம் ஆண்டில் 'சட்ட மன்றச் செயல் முறைகள்', 1911-ஆம் ஆண்டில் 'நாடாளுமன்றம் - அதன் வரலாறும் அமைப்பும் நடைமுறைகளும்',1919-ஆம் ஆண்டில்'சட்டமியற்றுவதில் நுணுக்கங்கள்' ஆகிய நூல்களைப் படைத்தார். இல்பர்ட்டு ஓர் அறிவாளி; எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை உடையவர்; தெளிய வைக்கும் பண்புடையவர்; புரட்சிகரமான கருத்துடையவர்; இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட இல்பர்ட்டு 1924-ஆம் ஆண்டில் மே திங்கள் 14-ஆம் நாளன்று தம் சொந்த ஊரில் பக்கிங்காம்சயரிலுள்ள திரவுட்ருவல்சு பென் என்ற இடத்தில் காலமானார்.

பொன்.சு.

துணை நூல்கள்:

**Sathianathier**, **R.**, History of India, Vol. III, P. Viswanathan & Co, Madras, 1982.

**Majumdar**, R.C., & others, An Advanced History of India, Macmilan & Co., Madras, 1982.

**இல்பரி துருக்கர்** துருக்கிசுத்தானில் (Turkestan) வாழும் புகழ்மிக்க மரபினருள் ஓரினத்தவர். தில்லி சுல்தானிய வமிசங்களுள் ஒன்றான அடிமை வமிசத்தைச் சார்ந்த பால்பன் இல்பரி துருக்கிய (Ilbari Turk) இனத்தைச் சார்ந்தவர். இல்பரி துருக்கர் இந்தியாவை ஏறத்தாழ எண்பதாண்டுகள் (கி.பி.1206 1290) ஆண்டனர். எனினும் அவர்தம் ஆட்சியின்போது தில்லி அரசு ஒன்றிணைக்கப்பட்ட அரசியல் குழுவாகத் திகழவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவை ஆண்ட இல்பரி துருக்கியச் சுல்தான்களின் ஆட்சி ஆக்ரா, அயோத்தி, பீகார், குவாலியர், சிந்து, மத்திய இந்தியாவில் சிலபகுதிகள், இராசபுதனம் போன்ற பகுதிகளில் மட்டுமே பரவியிருந்தது. வங்காளமும் இவர்களுடைய ஆட்சிக்குட்பட்டதாயினும், அதனை ஆண்ட ஆளுநர்கள் பெரும்பாலும் சுதந்திர அரசர்கள் போன்றே செயற்பட்டார்கள். பஞ்சாபிலும் இவர்களுடைய ஆட்சியை மங்கோலியர்கள் தாக்கும் அச்சநிலை நிலவியிருந்தது. தில்லியைச் சுற்றிக் கொடுக்கப்பட்டிருந்த மானிய நிலங்களில் இல்பரி துருக்கியரின் இசுலாமியச் செல்வாக்கு ஓங்கியிருந்தாலும், உள்ளூர்க் குறுநில மன்னர்கள் பலர் சுதந்திரமானவர்களாக இருந்தனர். இவர்களின் ஆட்சியால் ஒரு சிறிதும் பாதிக்காத குடிமக்கள் மத்திய அரசின்அதிகாரத்தை எப்போதும் எதிர்க்கத் தலைப்பட்டனர். இல்பரி துருக்கிய மன்னர்களும் வலுவான ஆட்சியை நிலைநாட்டக் கொடுஞ்செயல்களில் ஈடுபட்டார்கள்.

இல்பரி துருக்கர் மரபில் வந்த அரசர்களுள் பால்பன் போன்றவர்கள் ஒழுக்கம் மிக்கவர்கள். தம்மை எதிர்த்த குறுநில மன்னர்களை இவர்கள் ஒறுத்து அடக்க முயற்சி செய்தாலும், தமக்கு அடங்கிப் போனவர்களை இல்பரி துருக்கிய அரசர்கள் இராணுவப் பணியிலும் உள்நாட்டுப் பதவிகளிலும் அமர்த்தினார்கள். இவர்கள் ஆட்சி நேர்மையானதாகவும், மனிதத் தன்மையை மதிப்பதாகவும் இருந்தது என்பது வரலாற்றாசிரியர்கள் கருத்து.

**இல்பொருளுணர்வு**: இல்லாத பொருள்களைப் புலனுணர்வினால் காண்பது, கேட்பது அல்லது நுகர்வது போல்வன இல்பொருளுணர்வு (Hallucination)எனப்படும். இது பெரும்பாலும், ஒரு வகையான புலன்காட்சிச் சீர்கேடு (Perceptual Disorder) என்னும் பொருள்பட வழங்கப்படுகிறது. ஒரு பொருள் இருப்பதற்கு அல்லது ஒரு நிகழ்வு நடைபெறுவதற்கு ஏற்ற தூண்டல் இன்றியே அதற்கான துலங்கல் ஏற்படுவதை இல்பொருளுணர்வு என்று கூறுகிறோம். இது திரிபுணர்வுடன் தொடர்புடையதாக அமையலாம் அல்லது இல்லாத பொருளை உணர்பவனிடம் தான் காண்பது,கேட்பது அல்லது நுகர்வது மெய்யானதே என்னும் உறுதிப்பாடு அமையப் பெறாமலும் இருக்கலாம். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலோர் இல்பொருளுணர்வு நிலையை எய்துகின்றனர். ஆனால், இடைவிடாத தீவிரமான இல்பொருளுணர்வு அனுபவங்கள் உளக் கோளாறு, உளப்பிணி ஆகியவற்றின் அறிகுறியாகும்.

தனிமனிதனின் நிறைவேறாத ஆசைகள் ஆழ்மன ஒடுக்கல்களாக மாறி, அவற்றின் காரணமாகவும் இல்பொருளுணர்வு ஏற்படலாம். தனிமனிதனின் குறிப்பிட்ட சில நிறைவேறாத ஊக்கிகளும் அடைய முடியாத உந்துகளும் நனவிலியில் தள்ளப்பட்டு, எப்பொழுது நனவு நிலையை அடையலாம் என்று காத்திருக்கின்றன. இவ் உந்துகள் நனவு நிலையை அடையும் வழிகளுள் இல்பொருளுணர்வும் ஒன்றாகும். ஆதலின், இல்பொருளுணர்வு ஓர் உளப்படைப்பாகும். உடல்சார் தூண்டல்களினாலும் இல்பொரு

ளுணர்வு ஏற்படலாம். ஒரு மனிதனுடைய பெரு மூளைப் புறப்பகுதிகளில் அதிர்ச்சி ஏற்படுத்தினால், அவன் ஓர் ஒளிக்கீற்றைக் காண்கிறான். இதைப் போன்றே உடலில் நச்சுப் பொருள்கள் மிகுதியானால் உடல்சார் இல்பொருளுணர்வுகள் தோன்றுகின்றன. அறிதுயில் முறையில் துயிற்றப்படுவோர் கருத்தேற்றல்களினால் இல்பொருளுணர்வு நிலையை அடைகின்றனர்.

இல்பொருளுணர்வை நாம் திரிபுணர்வு, கானல் நீர் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தி அறிய வேண்டும். கானல் நீர் என்பது பாலைவனத்தில் ஒரு சில தூண்டல்களின் காரணமாகத் தோன்றுவதாகும். இது திரிபுக் காட்சியினுள் அடங்கும். இல்பொருளுணர்வால் எவ்விதத் தூண்டல்களும் இன்றியே ஒருவன் புதுமையான காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் இவ்வாறே காண்கிறான்; பலவித சுவைகளை அனுபவிக்கிறான்; பல்வேறு நறுமணங்களையும் நுகர்கிறான். உளவியல் அறிஞரான பிராய்டின் கருத்துப்படி, நாம் காணும் கனவுகளும் ஒருவகையான இல்பொருளுணர்வுகளேயாகும். நாம் காணும் பகற்கனவுகள் நம்முடைய கற்பனையின் அடிப்படையில் எழுபவை. இல்பொருளுணர்வுகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி அறியலாம். இவ்வகைப்படுத்துதல் இல்பொருளுணர்வுகள் தோன்றும் புலன்களின் அடிப்படையில் அமையும்.

1) கேள்வி இல்பொருளுணர்வு: உளக்கோளாறுகள் உடையவன் குழப்பமான பலவித ஒலிகளையும் குரல்களையும் கேட்கிறான். சில வேளைகளில் இக்குரல்கள் இடும் கட்டளைப்படியும் அவன் நடக்கிறான். பெரும்பாலும் இத்தகையோர் தம்முடைய குரலையே கேட்கிறார்கள் என்பது கருதப்படுகின்றது.

2) காட்சி இல்பொருளுணர்வு: உளக்கோளாறு உடையோன் பலவிதமான காட்சிகளையும் ஒளி, நிறம் ஆகியவற்றையும் காண்கிறான். சில வேளைகளில் இறந்துபோன மனிதர்கள் தம்முன் நிற்பதாகவும் முன்பின் தெரியாத ஒருவர் பலகணி வழியே எட்டிப் பார்ப்பதாகவும் உணர்கிறான். இத்தகையவர்களே பேய், பிசாசுகளைக் கண்டதாகவும், அவைகளுடன் தாம் பேசியதாகவும் கூறுகின்றனர்.

3) சுவை இல்பொருணர்வு: இத்தகைய இல்பொருளுணர்வினர் எப்போதும் பல்வேறு சுவைகளை உணர்கின்றனர். தாம் உண்ணும் உணவு நச்சுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் உணர்கின்றனர். இத்தகையோர் ஐயமிக்கவராக இருக்கின்றனர்.

4) முகர் இல்பொருளுணர்வு: இத்தகைய உணர்வுடையோர் பலவிதமான நாற்றங்களை உணர்கின்றனர். தாம் இருக்கும் இடத்தில் ஏதோ ஒரு நச்சுப்புகையின் மணம் வீசுவதாகவும் அதனால் மூச்சுத்திணறுவதாகவும் உணர்கின்றனர். இந்த உணர்வு ஆழ்ந்த குற்ற மனப்பான்மையின் காரணமாக ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது.

5) மெய்சார் இல்பொருளுணர்வு: இத்தகைய உணர்வினர் தம் உடல் மீது பூச்சிகள் ஊர்ந்து செல்வதாக உணர்கின்றனர். இவ்வுணர்வு மிகையான குடிப்பழக்கத்தின் காரணமாக ஏற்படும் உளப்பிணியின் அறிகுறியாகவும் இருக்கலாம். உளவியலாரின் கருத்துப்படி இல்பொருளுணர்வினர் தம் உளப்போராட்டங்களுக்குப் புறத்தோற்றமுறையில் தீர்வுகாண விழைகின்றனர்; தம் முயற்சியில் தோல்வியும் அடைகின்றனர்.

ஆழ்ந்த உறக்கநிலையிலிருந்து எழுந்திருப்பவருக்கும் அரைத் தூக்க நிலையில் இருப்பவருக்கும் காட்சி இல்பொருளுணர்வு ஏற்படுகிறது. மெசுகலைன்(Mescaline), எல்.எசு.டி (L.S.D.) போன்ற போதை மருந்துகளும் காட்சி இல்பொருளுணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. போதை மருந்துண்பவர்கள் தமக்கு இல்பொருளுணர்வுகள் ஏற்படுவதை அறிகிறார்கள். ஆனால், உளக்கோளாறுடையவர்கள் தமக்கு ஏற்படுவது உண்மையான அனுபவம் என்று உணர்கிறார்கள்.

குடிப்பழக்கத்தின் காரணமாக ஏற்படும் உளப்பிணியாகிய உடல்உள நடுக்க நிலையை (Delerium Tremens) அடைந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு வகைகளான இல்பொருளுணர்வுகளை அனுபவிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் உடல்சார் இல்பொருளுணர்வுகளை அனுபவிக்கின்றனர். தம் உடல்மீது சிறு பூச்சிகள் ஊர்வதைப் போன்ற இல்பொருளுணர்வு இவர்களுக்கு ஏற்படுகிறது. மற்றவர்கள் கூறும் கருத்துப் பகர்வுக்கு ஏற்ப, இல்லாத பொருள்களை இவர்கள் காண்கின்றனர். மிகையான குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் குடியை ஓரிரு நாள்கள் நிறுத்திவிட்ட குறுகிய இடைவெளிக் காலத்தில் மற்றவர்களின் சொற்களால் தூண்டப்பெற்று, வன்முறை, கொலை போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். சில நேரங்களில் இவர்கள் இல்லாத பொருள்களைக் கண்டு அஞ்சி நடுங்குவதும் உண்டு.

கடுமையான உள நடுக்க நிலையை அடைந்தவர்கள் கேள்வி இல்பொருளுணர்வுகளை அனுபவிக்கிறார்கள். இவர்களுடைய ஆழ்மன ஒடுக்கல்களில் இருக்கும் அச்சங்கள், குறைபாடுகள் போன்றவை


மற்றவர்களால் பேசப்படுவதாக உணர்கிறார்கள். உளக்கோளாறுகளின் விளிம்பு நிலையில் இருப்பவர்கள் குடிப்பழக்கம் காரணமாக உடல்உள நடுக்க நிலையை அடைந்தால் இத்தகைய இல்பொருளுணர்வுகளால் கடுமையான தொல்லைக்கு உள்ளாகின்றனர்.

காட்சி இல்பொருளுணர்வு மீத்தொளி வடிவத்தினின்றும் (Eidelic Image) வேறுபட்டது. முன் அனுபவத்தையொட்டித் துல்லியமாக ஏற்படும் காட்சி வடிவங்கள் மீத்தொளி வடிவங்கள் ஆகும். இத்திறன் குழந்தைகளிடம் மிகையாகவும் வயது ஏற ஏறக் குறைவாகவும் காணப்படும். குழந்தைகளிடம் அச்சத்தினன் காரணமாக ஏற்படும் இல்பொருளுணர்வுகள் காரணமாகப் பொய் இல்பொருள் உணர்வுகள் ஏற்படும். இவை நிலையாக இருப்பதில்லை. இவை தோன்றி மறையும் தன்மையுடையன.

**இல்லம்**: மனிதன் இயற்கை மாறுபாடுகளிலிருந்தும் சுற்றுச் சூழல்களின் வேறுபாடுகளிலிருந்தும் காற்று, மழை, வெப்பம் முதலியவற்றிலிருந்தும் தப்பிப் பாதுகாப்பாக இருப்பதற்கு நிலையான கூரையின்கீழ் வாழ முற்பட்டான். அவன் வாழ்வதற்கு அமைத்த இடமே இல்லமாகும். இவ்வில்லத்தின் அமைப்புக் கற்கால மனிதன் குகைகளில் வாழத் தொடங்கியது முதல் பலதளக் குடியிருப்பு வீடுகள் வரை பல நிலைகளில் படிமலர்ச்சி அடைந்துள்ளது. பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) பல கூறுகளுள் ஒன்றான இல்லம் புவியமைப்பு, சுற்றப்புறம், சூழ்நிலை, காலநிலை, வாழ்க்கை முறை, தொழில் நுட்பம், பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிக் காட்டுகின்றது. மனிதன் தான் வாழ அமைக்கும் இல்லத்தில் மேற்கூறிய அனைத்துப் பண்புகளும் வெளிப்படக் காண்பதைக் கொண்டு, ஆதிக்குடிகள் முதல் நகரச் சமூகம் வரையிலான அனைத்து வகையான மக்களிடமும் இல்லத்தின் அமைப்பு முறைகளைக் கண்டறிய முடிகிறது.

உலகம் முழுவதிலும் வெவ்வேறான இயற்கையமைப்புகளுடன் வாழும் மக்கள் குழுக்களிடையே அவரவர் வாழும் குடியிருப்புப் பகுதியின் அமைப்புப் பற்றி ஆராயும்போது பல கருத்துகள் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு மக்கள் குழுவும் தம் வாழ்க்கைத் தொழிலிற்கு ஏற்பத் தம் குடியிருப்புப் பகுதியை அமைத்துக் கொண்டிருக்கிறது. வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடி மக்கள் பெரும்பாலும் காடு சார்ந்த மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருவதால், இவர்களது குடியிருப்புப் பகுதி மலைசார்ந்த இடங்களில் காணப்படுகிறது. இதைப் போன்றே பாலை நில மக்கள் பாலை சார்ந்த பகுதிகளிலும், மீன்பிடி மக்கள் கடல் சார்ந்த பகுதிகளிலும், அடுக்கு நில வேளாண்மை (Terrace Cultivation) செய்வோர் மலைப்பகுதிகளிலும், நிலையாக வேளாண்மை (Settled Agriculture) செய்வோர் நீர்வளமிக்க சம நிலைப் பகுதிகளிலும் குடியிருப்புப் பகுதியைக் கொண்டிருக்கக் காணலாம். கால்நடைகளை வளர்த்தும் உணவு சேகரித்தும் வாழும் நாடோடிகள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் நிலையற்ற எளிய குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். புவியமைப்பு, இயற்கைச் சூழ்நிலை, ஒவ்வொரு சமூகத்தின் வாழ்க்கைப் பொருளாதாரம் (Subsistence Economy) ஆகியன அனைத்தும் மக்கள் வாழிடப் பகுதியைத் தேர்வு செய்வதில் தலையான பங்கினைப் பெற்றுள்ளன.


குடியிருப்புகளின் அமைப்பு: குடியிருப்புப் பகுதிகளின் அமைப்பும் அளவும் பல்வேறு காரணிகளால் வரையறுக்கப்படுகின்றன. சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் முதலான வடிவங்களில் குடியிருப்புப் பகுதிகள் காணப்படுகின்றன. பல குடியிருப்புகள் குறிப்பிடத்தக்க வடிவமில்லாமலும் காணப்படுகின்றன.




தோகன் குடியிருப்பு

ஆப்பிரிக்கத் தோகன் (Dogan) மக்களின் குடியிருப்புப் பகுதியின் அமைப்பு மாறுபட்டதும் உற்று நோக்கத் தக்கதுமாகும். இவர்களது குடியிருப்பில் காணப்படும் வீடுகள், பெண்கள் வீடுகள், ஆண்கள் கூடும் வீடுகள், கருமான் பட்டறை, எண்ணெய் எடுக்கும் கல், பலிபீடங்கள் ஆகிய யாவும் மனித உடலில் பல்வேறு உறுப்புகள் பெற்றிருக்கும் இடத்தின் அமைப்போடு தொடர்புற்றவையாகக் காணப்படுகின்றன. கருமான்பட்டறை குடியிருப்புப் பகுதியின் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தெற்கில் ஆண்கள் கூடும் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. இது தலைப் பகுதியாகக் கருதப்படுகிறது. குடியிருக்கும் இல்லங்கள் மார்பகப் பகுதியிலும் இதற்குச் சற்றுக்கீழ் கையின் நுனிப் பகுதியில் பெண்கள் இல்லங்களும் இதற்குத் தெற்கில் எண்ணெய் எடுக்கும் கல்லும் கிராமப் பலிபீடமும் அமைந்துள்ளன. முன்னது (எண்ணெய் எடுக்கும் கல்) பெண்ணின் இனப் பெருக்க உறுப்பையும் பின்னது (கிராமப் பலிபீடம்) ஆணின் இனப் பெருக்க உறுப்பையும் குறிப்பதாக அமைந்துள்ளன. கிராமத்தின் தெற்குப் பகுதியில் பலி மேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை கால் பகுதியைக் குறிப்பன வாகும். (தோகன் மக்களின் குடியிருப்புப் பகுதியைப் படத்தில் காணலாம்) தெற்கு ஆசுதிரேலிய ஆதிக் குடிகள், அந்தமான் தீவினர், மடகாசுகரின் தனாலா (Tanala) ஆதிக்குடிகள் முதலானோரின் இல்லங்களின் அமைப்புகள் மாறுபட்டவையும் உற்று நோக்கத் தக்கனவும் ஆகும். (காண்க: ஆதிக்குடிகளின் இளையர் கூடங்கள்) மலிநோவுசுக்கியின் (Malinowski) தலைசிறந்த மானிடவியல் ஆய்வுகள் திரோபிரியாண்டுத் (Trobriand) தீவினரைப் பற்றியனவாகும். நீயு கினியாவின் (New Guinea) கிழக்கு முனையினை அடுத்துக் காணப்படும் கிரிவினா (Kiriwina) என்னும் திரோபிரியாண்டுத் தீவினரின் குடியிருப்பு அமைப்பு வட்ட வடிவமானதாகும்.

படத்திலுள்ளபடி திரோபியாண்டுத் தீவினரின் வீடுகள் இரண்டு வட்டங்களில் பெரும்பாலும் அமையப் பெற்றுள்ளன. வெளி வட்டத்தில் இலிசிகா (Lisiga) என்னும் குடியிருக்கும் வீடுகளும் (Dwelling Houses), புனிதத் தன்மைமிக்க உள்வட்டத்தில் வள்ளிக்கிழங்கு மற்றும் இதர வகைகளைப் பாதுகாக்கும் வாய்மா (Bwayma) என்னும் வீடுகளும் அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு வரிசைகளுக்கும் இடையில் காணப்படும் பகுதியே தெருவாகும். உள்வட்டத்தினுள் காணப்படும் பரந்த பகுதியின் வடபகுதியில் நடனமாடுமிடமும், இதற்குத் தெற்கில் திரோபிரியாண்டுத் தீவுப் பழங்குடிகளின் தலைவனுடைய கிழங்கு சேகரித்து வைக்கும் இல்லமும், இதற்குத் தெற்கில் இடுகாடும், இதற்கும் தெற்கில் பழங்குடித் தலைவனின் இல்லமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஈராக்கு நாட்டில் பாயும் யூபரிடிசு, தைகிரிசு (Tigirs) ஆறுகளின் சதுப்புநிலப்பகுதியில் அமைந்திருக்கும் 60,000 சதுர மைல் பரப்புள்ள மாதன் (Madan) குடியிருப்புப் பகுதி, மாறுபட்ட அமைப்பினைக் காட்டுகிறது நாணற்புல் மிகுந்த இப்பகுதியில் ஒவ்வொரு வீடும் தனித்தனித் தீவாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு வீடும் அதன் அருகில் எருமைகள் தங்கச் சிறு குடிசையும் இதர பயன்பாடுகளுக்காக வேறொரு சிறு குடிசையும் அமைக்கப்பட்டு, மூன்று இல்லங்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகக் காணப்படுகிறது. இக் குடியிருப்புப்பகுதியில் வாழும் ஒவ்வொரு வீட்டினரும் அண்டைய குடியிருப்புகளுக்குச் சென்றுவரப் படகுகளைப் பயன்படுத்துகின்றனர்.




திரோபிரியாண்டுத் தீவு - குடியிருப்பு

பிரேசில் நாட்டுப்பொரோரோ இந்தியர்களின் (Bororo Indians) குடியிருப்பு அமைப்பும் நைசீரியா (Nigeria) நாட்டுத் திவ் (Tiv) பழங்குடிகளின் குடியிருப்பு அமைப்பும் குறிப்பிடத்தக்கவை. வட்ட வடிவில் காணப்படும் இவர்களது குடியிருப்புப் பகுதி, கிழக்கு மேற்காகப் பாதியாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாதியில் அச் சமூகத்தின் அரைக்குழுவும் (Moiety) மறுபாதியில் வேறொரு அரைக்குழுவும் வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். இரண்டு குழுக்களும் அமைத்திருக்கும் வீடுகள் வட்டமாக ஒரே வரிசையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வட்டத்தில் ஒவ்வொரு கால்வழியினரும் அடுத்த கால்வழி

யினருடன் சற்று இடைவெளியிட்டு, வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். நடுவிலுள்ள திறந்த இடத்தின் மையத்தில் ஆண்கள் கூடும் இல்லம் அமைக்கப்பட்டிருக்கிறது. யாரேனும் ஒரு குழுவினர் நடனத் தளத்தை அமைத்துக் கொள்கின்றனர். இப் பழங்குடிகளுள் ஒவ்வொரு கால்வழியினரும் தனித் தனியான வாழிடப் பரப்பைக் கொண்டுள்ளமை கவனிக்கத் தக்கது.

ஆதிக்குடிகள் முதன்முதலில் அமைத்த வீடு காற்றுத் தடுப்பே (Wind Break) யாகும். இந்த முறை யில் அமைக்கப்பட்ட வீடுகள் சிறு குச்சிகளாலும் ஓலைகள், இலைகள் முதலானவற்றைக் கொண்டு வேயப்பட்ட தடுக்குகளாலும் கட்டப்பட்டவையா கும். இவைபோன்ற வீடுகள் வேட்டையாடி உணவு சேகரிக்கும் அந்தமான் தீவினர், ஆசுதிரேலியர், தாசுமேனியர் (Tasmanian) முதலான பழங்குடி களிடையே மிகுந்து காணப்படுகின்றன.


ஆதிக்குடிகளின் இல்லங்கள் பல செயற்பாடு களுக்காகக் கட்டப்பட்டவையாகும். இம் மக்க ளிடையே நிலையாகக் குடியிருக்கும் வீடுகள், இளை யர்கூடங்கள் (Dormitory), காவல் குடில்கள்(Watch Houses), தானியக் கூடங்கள், கால்நடை இல்லங் கள், பூப்படையும் இல்லங்கள் (Puberty Houses), வேட்டையாடும் இல்லங்கள் ஆகியவற்றைக் காண லாம். இதன் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் ஏற்ற வாறு அதன் அமைப்பும் மாறுபடுகிறது. பொதுவாக, குடியிருக்கும் வீடுகள் தனித்தனியாகவும் சில ஆதிக் குடிகளிடையே பொதுவானவையாகவும் காணப் படும். இதைப்போன்றே மணமாகாத இளைஞர்களும் மணமாகாத பெண்களும் ஒன்றுகூடியோ தனித்தனி யாகவோ தத்தம் கூடங்களில் இரவுப் பொழுதினைக் கழிப்பர். முரியர் (Muria), சுபர், நாகர் (Naga), ஆசுதிரேலிய, ஆப்பிரிக்க, அமெரிக்க, பிலிப்பைன்சு, போர்னியோ முதலான ஆதிக்குடிகளின் இளையர் கூடங்களின் அமைப்பையும் செயல்முறைகளையும் உற்று நோக்கும்போது பல்வேறு முறைகளைக் காண லாம். அந்தமான் தீவினர் வேட்டைக் காலங்களில் மூன்று வகையான குடிசைகளை அமைக்கின்றனர். (காண்க: ஆதிக்குடிகளின் இளையர்கூடங்கள்). ஆதிக்குடியினரிடையே காவல் குடில்கள் சிறப்பிடம் பெற்றவை.

மேடு பள்ளங்கள் நிறைந்த மலைப் பகுதியில் பயிர் செய்யும் பழங்குடியினரும் அடுக்கு நிலப் பயிர் முறை செய்யும் பழங்குடியினரும் தம் பயிர்களை விலங்குகள், கால்நடைகள் முதலானவற்றின் அழிவி லிருந்து காப்பாற்ற நிலப்பரப்பின் நடுவில் அல்லது தகுதியான இடங்களில் மரத்தின் உச்சியில் கிளைகள் நிறைந்த இடத்தில் சிறு குடிசையை அமைத்து, அதி லிருந்து பயிர்களைக் கண்காணிக்கின்றனர். இது போன்ற அமைப்பு, குக்கிசு (Kukis), கேரோ (Garo) ஆகிய வடஇந்தியப் பழங்குடிகளிடையேயும் தென் னிந்தியப் பழங்குடியினராகிய கணிக்கர்களிடையே யும் காணப்படுகிறது. பழங்குடிகளின் வீடுகள் சிறியனவாகக் காணப்படுகின்றமையால் கால்நடை களையும் தானியம், விறகுகள், காட்டுப் பொருள் கள் முதலானவற்றையும் குடியிருக்கும் சிறு பகுதியில் வைப்பதில்லை. வீட்டை ஒட்டியோ தனியாகவோ இவற்றிற் கென்று தனித்தனிக் குடிசைகள் அமைத்து அவற்றில் வைப்பர். பச்சைமலை, கல்ராயன், ஏலகிரி, சவ்வாது முதலான மலைகளில் வாழும் மலையாளி கள் (Malaiyalis) தமிழ்நாட்டுப் பழங்குடிகளுள் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். இவர்கள் வேளாண் மையை முதன்மையாகக் கொண்டுள்ளதால் உணவு சேகரித்து வைக்கும் இல்லம் தேவைப்படுகிறது. இவர்கள் வீட்டின் அருகில் வட்ட வடிவமான சிறு தானியக் களஞ்சியத்தைக் கட்டிக்கூம்பாகக் கூரை வேய்ந்து பாதுகாக்கின்றனர்.

பனிக் கண்டத்தில் வாழும் எசுகிமோ (Eskimo) மக்களின் இல்லங்கள் மிகவும் வேறுபாடானவை. உலகத்தின் முதுகுடி இனங்களிலேயே (Aboriginal races) மிகவும் தனித்து வாழும் இவர்களின் இயற்கையோடிணைந்த தகவமைப்பு உலக மக்க ளிடையே இவர்களுக்குத் தனிப் பண்பினை ஏற்படுத்தி யுள்ளது. வடகிழக்குச் சைபீரியாவிலும் ஏனைய ஆர்க்டிக்குத்தீவுப் பகுதிகளிலும் வாழும் இவர்களின் இல்லங்களுள் பெரும்பான்மையானவை பனிக் கட்டிகளாலும் பனிப்பாறைகளாலும் கட்டப்பட்ட வையாகும். இக்லூ (Igloo) எனப்படும் எசுகிமோ வின் அரைவட்ட வீடுகள் ஒரு சிறிய நுழைவா யிலைக் கொண்டிருக்கின்றன. இந் நுழைவாயில் காற்றோட்ட வசதியினைத் தருகிறது. பெரும் பான்மையாகப் பனிப்பாறையில் சாளரம் போன்ற திறப்பினை அமைப்பர். எசுகிமோவினர் பனிக்கட்டி கள், பனிப்பாறைகள் முதலான பனிப்பொருள்களைக் குறிப்பதற்கு 100க்கும் மேற்பட்ட சொற்களைக் கையாளுகின்றனர்.

நீலகிரி மலையில் வாழும் தோடர்களின் இல் லம் மானிடவியலாரிடையே சிறப்பிடம் பெற்ற தாகும். இவர்களது வீடு அரை நீள் உருளையைப் போன்றதாகும்.

கால்நடை வளர்க்கும் ஆயர்குடி மக்களும் நாடோடி வாழ்க்கை நடத்துவோரும் தோலால் கூடாரம் அமைத்து வாழ்வர். சைபீரிய மக்கள்




பொரோரோ இந்தியர் குடியிருப்பு

மரப்பட்டையைக் கொண்டே கூடாரம் அமைக்கின் றனர்.

வீடுகளின் அமைப்பு: நியூகினிப் (New Guinea) பழங்குடிகளும் மெலனீசியப் (Melanesia) பழங்குடி களும் அமைக்கும் இல்லங்களில் தூண்களின் அமைப் புப் புதுமையானது. தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதி களில் அமைக்கப்படும் இவ்வீடுகளுக்கு மிக நீளமான பருத்த தூண்களை அமைத்து அதற்குமேல் வீட்டைக் கட்டுகின்றனர். நான்கு வரிசைகளாக இத்தூண்கள் நடப்படுகின்றன. வெளிப்புற இருவரிசை தூண்க ளும் ஆண் உருவத்தில் செதுக்கப்பட்டிருக்கும். வழி பாட்டு இல்லங்களில் பெண் உருவத் தூண்கள் நடப் படுவதில்லை. உலகின் பல்வேறு நாட்டுப் பழங்குடி களிடையேயும் வீட்டின் தூண்களில் பல உருவங் களைச் செதுக்கி வைக்கும் மரபு காணப்படுகிறது. பப்புவா நியுகினி , திரோபிரியாண்டுத் தீவினர், நாகர் (Naga), மயோரி (Maori), சமோவா (Samoa) முதலான ஆதிக்குடியினர் இல்லங்கள், இளையர் கூடங்கள், சமய வழிபாட்டு இல்லங்கள் ஆகியவற் றில் சிற்ப வேலைப்பாடுகள், வண்ணம் தீட்டல், ஓவியம் தீட்டல் ஆகியன செய்து அழகுபடுத்துகின் றனர். ஆதிக்குடியினர் வீடுகள் அமைப்பதில் தனித் திறன் கொண்டுள்ளனர்.

பெரும்பாலான பழங்குடிகள் தங்கள் குலக்குறி யினை (Totem) இல்லங்களின் வெளியேயும் உள்ளே யும் பல வண்ணங்களில் வரைந்து வைப்பர். ஒருசில பழங்குடியினர் வீட்டின் எதிரிலோ தம் குடியிருப்பின் மையத்திலோ குலக்குறிக் கொம்பினை (Totem pole) நட்டு வைப்பர்.

மயோரிகளின் வேரி வகெய்ரோ (Whare Whai-kairo) என்னும் பழங்குடி ஆட்சிக்குழு இல்லம் (Council House), உரொங்கோ பாய் (Rongo Pai) என்னும் பொழுதுபோக்கிடம், பட்டகா (Pataka) என்னும் சேமிப்புக்கூடம் போன்ற அனைத்தும் மிகச் சிறந்த முறையிலும் அழகுணர்வோடும் கட்டப்படு கின்றன. மயோரிகளின் இளையர் கூடமான கோட்டுல் (Ghotul), நாகரின் இளையர் கூடமான

மொருங்கு (Morung) போன்றவையும் பல தொழில் நுட்பத்தைக் காட்டுவனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன.


போர்னியோத் (Borneo) தீவில் வாழும் பழங்குடிகள் கட்டும் வீடுகள் இருநூறு முதல் முந்நூறு பேர் தங்குவதற்கேற்ப ஐந்நூறு அடிநீளமும் இருபது முதல் முப்பதடி அகலமும் உடையனவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரே கூரையினையுடைய இவ்வித நீண்ட வீடுகள் தடுப்புச் சுவர்களால் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் பல இரத்த உறவுடைய குடும்பங்கள் ஒன்றாக வாழ்கின்றனர். அந்தமான் தீவில் வாழும் சாரவாப் (Jarawa) பழங்குடிகளின் இல்லங்கள் அறுபதடி விட்டம் கொண்ட வட்ட வடிவிலானவை.

**இல்லரி எட்மண்டு** உலகின் மிக உயரமான எவரசுடு மலையின் சிகரத்தை முதன் முதல் அடைந்த இருவருள் ஒருவர் ஆவார். இவருடன் எவரசுட்டை அடைந்த மற்றவர் தென்சிங்கு நார்கே என்னும் நேபாள நாட்டினர் ஆவார். இல்லரி எட்மண்டு (Hillary Edmund) நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1953–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள்தென்சிங்கு நார்கேயுடன் எவரசுட்டுச்சிகரத்தில் அடியெடுத்து வைத்தார்.

இல்லரி நியுசிலாந்து அண்டார்டிகா பயணத திற்கு இவர் 1958–ஆம் ஆண்டு தலைமை தாங்கினார். தம்முடன் பயணம் செய்த தென்சிங்கு என்னும் சேர்பா (Sherpa) மலைவாசியின் மீது மிகுந்த அன்பும் ஈடுபாடும் கொண்டு, சேர்பா மலைவாசிகளுக்கென மருத்துவ விடுதிகள் பயிற்சிப்பள்ளிகள், மலைச்சரிவுப்பாலங்கள் போன்றவற்றை உருவாக்கினார். மலைமீது ஏறுபவர்களுக்குப் பயிற்சி தரும் பள்ளிகளில் தம் அனுபவங்களை எடுத்துரைத்து, அந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

**இல்லீரிகம்** உரோமானியப் பேரரசுப் பகுதிகளுள் ஒன்று. இக்காலத்தில் இப்பகுதியை யூகோசுலேவியா என்பர். பேரரசர் தயோகிளீசியன் (Diocletian) என்பார் கி.பி. 293–ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசை நான்கு பகுதிகளாகப் பிரித்தார். அவற்றுள் ஒன்றை இல்லீரிகம் (Illyricum) என்பர். இப்பகுதியிலிருந்து பிற்காலத்தில் அரசாண்ட பேரரசர்கள் பலர். உரோமானியப் படைக்குப் படைவீரர்கள் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியும் இதுதான்.

**இல்லீரியா** பால்கன் முந்நீரகத்தின் மிகத் தொன்மையான பகுதி. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழியின் வட்டார மொழியைப் பேசிய இனமக்கள் ஏட்ரியாடிக்கு (Adriatic) என்னும் கடலின் வடக்கு, கிழக்குக் கடற்கரைகளின் மீது படையெடுத்தனர். தால்மாட்டியர் (Dalmatians), பன்னோனியர்(Pannonians) போன்ற பிற்கால இனமக்கள் இல்லீரிய மக்களைச் சார்ந்தவர்களே. பன்னோனியர் வாழ்ந்த அனைத்து இடங்களையும் சில வேளைகளில் இல்லீரியா என்பர். அல்பேனியாவின் (Albania) வடக்கில் ஏட்ரியாடிக்குக் கடற்கரைப் பகுதியையே இல்லீரியா (Illyria) என்று கூறுவது வழக்கம். இது தினாரிக்கு ஆல்ப்சு(Dinaric Alps) மலைத் தொடருக்கு மேற்கில் உள்ளது.




இல்லீரியா

இக்கடற்கரையில் கி.மு.6-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நகரங்கள் நிலைநாட்டப்பட்டன. எனினும் அவை நீடித்திருக்கவில்லை. மாசிடோனியாவின் (Macedonia) மன்னரான இரண்டாம் பிலிப்பும் Philip II) பின்னர் வந்த ஐந்தாம் பிலிப்பும் (Philip V) கிரேக்கர்களுக்கெதிராகப் போரிட்டனர். எனினும் அப்போர்களினால் நிலையான பலன்கள் எவையும்

ஏற்படவில்லை. இல்லீரியாவில் உரோமானியர் கி.மு.168-167-ஆம் ஆண்டுகளில் தம்முடைய மிகத் தொன்மையான குடியேற்றத்தை நிலைநாட்டினர். பல போர்களின் மூலம் தால்மாட்டியா (Dalmatia) முழுவதையும் வென்று, இக்குடியேற்றப் பகுதி விரிவாக்கப்பட்டது. தெற்கு இல்லீரியர்கள் இறுதியாகக் கி.மு.35-34 ஆம் ஆண்டுகளில் அகசுடசு (Augustus) என்பவரால் தோற்கடிக்கப்பட்டனர். பன்னோனியர் கி.மு.12-11-ஆம் ஆண்டுகளில் பெற்ற வெற்றிகளால் இல்லீரியாவை மேலும் விரிவாக்கினர்.

விரிவாக்கப்பட்ட இல்லீரியா, கி.பி. 6-9 ஆம் ஆண்டுகளில் தால்மாடியா, பன்னோனியா என இரு மாநிலங்களாகப் பிரிந்தது. உரோமானியர் இதற்கு இல்லீரிகம் (Illyricum) எனப் பெயரிட்டனர். பின்னர் ஏட்ரியாடிக்குக் கடலின் வடபாகத்தையும் பால்கன் முந்நீரகத்தின் பெரும் பாகத்தையும் இல்லீரிகம் உள்ளடக்கியிருந்தது. முதலாம் நெப்போலியன் கி.பி. 1809-ஆம் ஆண்டில் ஏட்ரியாடிக்குக் கடலின் வடபாகத்தையும், இன்றைய கிழக்கு யூகோசுலாவியாவையும் தம் பேரரசுடன் இணைத்துக் கொண்டபோது, இல்லீரியா மாநிலங்கள் என்னும் பெயரே மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதே பகுதி கி.பி. 1816-49 வரை இல்லீரிய அரசு என்னும் பெயரில் ஆசுதிரியாவின் நிருவாக மாவட்டமாக அமைந்திருந்தது.

**இல்லுறை தெய்வம்**: மாந்தர்தம் அகவாழ்வுச் சிறப்பிற்கு உரியவர் மகளிர்; புறவாழ்வுப் புகழுக்கு உரியவர் ஆடவர். புறவாழ்வில் வீரம் காட்டிப் புகழுடம்பு அடைந்தவர்க்கு நடுகல் நட்டனர். கணவரைத் தெய்வமாகக் கொண்ட மனைவியர் நடுகல்லில் தம் கணவன்மார் தெய்வமாக உறைவதாகக் கொண்டு வழிப்பட்டனர். அன்னார் கல்லுறை தெய்வமாயினர். அகவாழ்வில் இல்லற மாண்புகளிற் சிறந்து, கணவர் இறப்பதற்கு முன் இறந்த மங்கல மடந்தையர் வீடுகளில் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர். அன்னார் இல்லுறைதெய்வங்களாயினர்.

செல்வ வளமுள்ள இல்லத்தில் செல்வத்திற்குரிய திருமகளும், கல்வியும் கலையும் நிலவும் இல்லத்தில் கலைமகளும் உறைவர் என்பது மரபு. இத்தெய்வங்கள் கோவிலில் உறைவதோடு இல்லுறை தெய்வங்களுமாயின.

இல்லுறை தெய்வங்கள் பெரும்பாலும் பெண்பாலாக அமைந்தன. இவை இல்லத்தையும் இல்லத்தாரையும் தீங்கின்றிக் காக்கும்; துன்பக் காலத்தில் துணை நிற்கும்; தோன்றாத் துணையாகும்; நலமும் வளமும் அருளும் என நம்பினர். சீவகனைப் பிரிந்து துன்புற்ற கேமசரி என்பாளை, 'இல்லுறை தெய்வம் நோக்கி இரங்கிநின் றுரைக்கும்' (சீவக. 1527) என இல்லுறை தெய்வம் ஆறுதல் கூறிப் பேசியதாகப் பாடப்பட்டுள்ளது. அவள் வண்டுகளைப் பார்த்து, 'இறந்துபடுவேனது துயரந்தீரும்படி என் மனைதன்னுள் தெய்வ மாவீராக' (சீவக. 1531 உரை) என்றாளாம். இவை காப்பியப் பாங்கில் கூறப்பட்டவை.

பொதுவாகத் துன்பம் தீரவும், வளமும் நலமும் பெருகவும், சிறப்பாக இரவுப் பொழுது இடரின்றி இன்பமாகவும் இல்லுறை தெய்வங்களைப் போற்றி வழிபட்டனர் என அறிகிறோம். இவ்வழிபாடு நாள் வழிபாடாகவும், அவ்வக் காலங்களில் சிறப்பு வழிபாடாகவும் நிகழ்த்தப்பட்டது.

இல்வழிபாட்டை வீட்டின் அகத்தே அவ்வவ் வில்லத்து மங்கல மகளிர் நிகழ்த்துவர். அந்திப் பொழுதில் 'அரும்பவிழ் முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த மாலை மணிவிளக்கங் காட்டி' (சிலம்பு. 9:3) என்று இளங்கோவடிகள் பாட, அடியார்க்கு நல்லார், 'முல்லையினது ஒளிமலரை நெல்லோடே தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கி மாணிக்க விளக்கை மைவிளக்கோடே எடுத்து' என்று விளக்கியபடி இல்லுறை தெய்வத்திற்காக முல்லை மலருடன் நெல்லைக் கலந்து தூவி, விளக்கேற்றி வழிபட்டதை அறிகிறோம். 'மனைக்கு விளக்காயினள் மன்ற' (ஐங். 405:2) என்றபடி மடவாரை மனைக்கு விளக்கமாகக் கொள்வர். எனவே, இல்லுறை தெய்வத்தின் சின்னமாக விளக்கு கொள்ளப்பட்டது. வளத்தின் அறிகுறியாக நெல்லும், கற்பின் அறிகுறியாக முல்லையும் போற்றிப் பொருள்களாகக் கொள்ளப்பட்டன.

குடும்ப இல்லங்களில் மட்டுமன்றி, வணிக இல்லங்களிலும் இல்லுறை தெய்வ வழிபாடு இவ்வாறு நிகழ்த்தப்பட்டதை நெடுநல்வாடை (40-44) அறிவிக்கிறது. செல்வவளங்கொண்ட வணிக இல்லங்களைத் திருமகள் இருக்கையாகக் கொண்டு இவ்வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

சிறப்பு வழிபாடு பின்வருமாறு நடந்தது. இல்லத்தில் இல்லுறை தெய்வத்திற்கென அமைந்த அறையிடத்தே முன்னர் வழிபட்டுச் சிதறிக் கிடந்த பூந்துகள்களைத் துடைத்துப் போக்கினர். 'மங்கல வெள்ளை' எனப்படும் சந்தனத்தால் தரையை மெழுகினர். பூப்பலி செய்து வழிபட்டனர். (சீவக. 1477). இவ்வாறாக இல்லுறை தெய்வங் கொள்ளு

வதும், இல்லுறை தெய்வ வழிபாடும் பண்டைக் காலத்தில் நடைமுறையில் இருந்தமையை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. காலப்போக்கில் இந்நடைமுறைகள் வேறுபட்டாலும் வழிபாடு மரபாக நிலைத்தது. இக்காலத்தில் அவை பண்டைப் பாங்கின் நிழலாட்டமாக நிகழ்கின்றன; அருகியே நிகழ்கின்றன.

ஒவ்வொரு இல்லத்திலும் சாமி அறை என்றோர் அறை உண்டு. அங்குக் கிழக்குப் பார்வையான சுவரின் அடிப்பக்கத்தை மஞ்சளால் பூசி மெழுகுவர். தரை ஆவின் சாணத்தால் மெழுகப்படும். அந்திப் போதில் அங்கு விளக்கேற்றி அதற்கு முல்லைப் பூச் சூட்டுவர்; வணங்குவர்; வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலுமுள்ள மாடப்புரைகளில் விளக்கேற்றுவர். வணிக இல்லங்களில் இப்பழக்கம் நிறைவாக இல்லையென்றாலும், எந்தவகையான விளக்கேற்றப்பட்டாலும் உடன் வணக்கம் செலுத்தும் பழக்கம் உள்ளது. இது இல்லுறை தெய்வ வழிபாட்டு மரபின் சின்னமாகும்.

சிறப்பு வழிபாடாக ஆண்டுதோறும் மாங்கலிய வழிபாடு (சுமங்கலிப் பிரார்த்தனை) நிகழ்த்தப்படுகிறது. இது செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நிகழ்த்தப்படும். ஆடி வெள்ளி, தை வெள்ளி சிறப்பாகக் கொள்ளப்படும். இறந்த மங்கல மகளிரின் நினைவாகப் புத்தாடை எடுத்துப் படையலிட்டு வழிபடுவர். நினைவு நாளில் மட்டுமன்றி இல்லத்தில் திருமணம், பூப்பு நீராட்டல் போன்ற மங்கல நிகழ்ச்சி காரணமாகப் புத்தாடைகள் வாங்கப்படும் காலத்தும் அவற்றை வைத்து விளக்கேற்றி வழிபடுவர்.

ஆண்டு தோறும் புரட்டாசித் திங்களில் கொண்டாடப்படும் கலைமகள் விழாவும் ஒரு வகையில் இல்லுறை தெய்வ வழிபாடாகும்.

காலப்போக்கில் மற்றொரு பழக்கம் உண்டாயிற்று. மகளிர் கூடிக் கொழுக்கட்டை வழிபாடொன்று மேற்கொண்டனர். தலைக்கு ஒருபடி நெல்லும் ஒரு தேங்காயும் இரண்டு பணமும் கொடுப்பர். ஆடி அல்லது தைச் செவ்வாய்க் கிழமையில் நள்ளிரவில் ஒரு வீட்டில் கூடுவர். நெல்லைக் குற்றியிடித்து மாவாக்கித் தேங்காய்த் துருவலிட்டு மண் சட்டியில் புளி, புன்கு, அரச இலைகளையிட்டு நீர்விட்டு மாவால் பல உருவங்களில் செய்யப்பட்ட கொழுக்கட்டைகளை அவிப்பர். இதற்கு உப்பிடுவதில்லை. கொழுக்கட்டைகள் விளக்கு, தாலி, அம்மிக்குளவி, பாடை, சாப்பறை, சட்டி முதலிய உருவங்களில் செய்யப்படும். இவ்வுருவங்களை நோக்கினால், இவை மங்கல மகளிர்க்கு உரியவையும், அன்னார்க்குச் செய்யப்பட்ட இறுதிக் கடன்களின் சின்னங்களுமாக இருப்பதை உணரலாம். இவற்றைப் படைப்பதற்கு ஓர் உரு வேண்டுமென்று ஆவின் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்துப் படையலிடுவர். எனவே, இக்கொழுக்கட்டையும் நிகழ்ச்சியும் 'செவ்வாய்ப் பிள்ளையார் கொழுக்கட்டை' எனப்பட்டது. மங்கல மகளிர் அல்லாத முதிய மகளிர் இவ்வழிபாட்டின்போது அமைந்து கதை சொல்லுவர். அறிவிற் சிறந்து விளங்கிய அவ்வையார் பற்றிய கதையாக அது அமையும். ஆண்குழந்தைகளைக் கூட இந்நிகழ்ச்சியின்போது இருக்கச் செய்யார். அக்கொழுக்கட்டையை ஆடவர் தின்னத் தரமாட்டார். ஆடி, தைச் செவ்வாய்களில் செய்யாது விட்டால் 'மறந்தது மாசியில்' என்று சொல்லி மாசிச் செவ்வாயில் நிகழ்த்துவர். இவ் வழிபாட்டுப் பழக்கம் இக்காலத்தில் சில மரபினரிடம் அருகியே காணப்படுகிறது.

செவ்வாய்க் கிழமை மங்கலக் கிழமை. செவ்வாய்க் கோளுக்கு 'மங்கலன்' என்பது ஒரு பெயர் (பிங்.230). 'மங்கலக்கிழமை தன்னில் கைப்பலி கொடுத்து' என்று யசோதர காவியமும் (2:58) அறிவிக்கிறது. எனவே மங்கல மகளிர்க்கு உரிய இவ்வழிபாட்டிற்குச் செவ்வாய்க் கிழமையைக் கொண்டனர்.

இல்லுறை தெய்வ வழிபாடுகள் இவ்வாறெல்லாம் நிகழ்ந்தாலும், இதன் அடித்தளம் மறைந்த மங்கல மகளிரது நினைவைப் போற்றி, அவர்தம் இல்லற மாண்புகளை நினைந்து வழிபடுதலேயாகும்.

கோ. இ.

**இலக்கணக்கூறுகள்**: ஒரு மொழியின் இலக்கண அமைப்பில் (Grammatical system) காணப்பெறும் நான்கு உட்பிரிவுகளுள் ஒன்று இலக்கணக் கூறு (Grammatical core) ஆகும். இலக்கணக்கூறுகள் ஒரு மொழியில் காணப்பெறும் பெயர் (Noun), வினை (Verb) போன்ற வடிவங்களின் இலக்கணப் பொருளைக் (Grammatical meaning) குறிக்கும் வகையில் அமையும். இவை சொற்களை வகைப்படுத்துவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

சான்றாக எண்வேறுபாட்டினைக் குறிப்பிடலாம். எண்வேறுபாடு காரணமாகப் பெயர், வினைகளை ஒருமை, பன்மை வடிவங்களாகப் பகுத்தல் இயலும். இதனைப் போன்றே இடவேறுபாடு காரணமாகத் தன்மை, முன்னிலை, படர்க்கை எனப் பெயர், வினைகளை வகைசெய்தலுமுண்டு. இலக்கணக்கூறுகள் எப்போதும் இலக்கணப் பொருளைச் சுட்டி அகரா

திப்பொருள் (Lexical meaning) தரும் வடிவங்களின் பொருளைச் சிறப்பித்து நிற்கின்றன.

ஒரு மொழியின் தெரிவுக்கூறுகள்(Selective categories), சொல்திரிபுக்கூறுகள் (Inflected categories) அனைத்தும் இலக்கணக் கூறுகளாகச் செயற்படும். ஆங்கில மொழியில் பெயர்களைப் பொறுத்தமட்டில் பால்வேறுபாடு ஒரு தெரிவுக்கூறாக அமைந்துள்ளது.

இலக்கணக்கூறுகளை அவற்றின் பயனடிப்படையில் பொதுவகை இலக்கணக்கூறு (Generic grammatical category) எனவும், சிறப்புவகை இலக்கணக் கூறு (Specific grammatical category) எனவும் பாகுபாடு செய்தல் இயலும். தமிழில் பால் ஒரு பொது வகை இலக்கணக்கூறாகும். ஈண்டு ஆண்பால், பெண் பால் போல்வன சிறப்புவகை இலக்கணக்கூறாகும். சிறப்புவகை இலக்கணக்கூறு பொதுவகை இலக்கணக்கூற்றின் ஓர் உறுப்பாக அமையப்பெறும்.

பால் (Gender), எண் (Number), இடம் (Person), வேற்றுமை (Case), காலம் (Tense), கருத்தாவின் வினைச்செய்கை (Voice), வினைப்பொருள் (Mood), வினைமை (Aspect) போல்வன ஒரு மொழியின் இலக்கணக்கூறுகளாகக் கருதப்பெறும்.

பால்வேறுபாடு பெயர், வினை வடிவங்களில் காணப்பெறும் ஒரு கூறாகும். சில மொழிகளில் பெயரடை (Adjective)வடிவங்களிலும் பால்வேறுபாடு காணப்பெறுகிறது. வேறு சில மொழிகளில் பெயர்ச் சொற்கள் மட்டுமே பால்வேறுபாடு உடையனவாக அமைந்துள்ளன. இன்னும் சில மொழிகளில் பால் வேறுபாடு முழுமையாகக் காணப்பெறவில்லை. தச்சு, இசுகாண்டிநேவியன் மொழிகளில் இருவகையான பால்வேறுபாடு காணப்படுகிறது. செருமன், இலத்தீன், கிரீக்கு, வடமொழி போன்ற மொழிகளில் ஆண்பால் (Masculine gender), பெண்பால் (Feminine gender), அஃறிணைப்பால் (Neuter gender) என்னும் மூவகைப் பால்பாகுபாடு அமையப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் காணப்பெறும் மூவகைப் பால்பாகுபாட்டினை எழுவகைப் பாகுபாடாக விரித்துக் காண்பதும் உண்டு. உருசியன், செருமன், ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒருமையில் மட்டுமே பால் வேறுபாடு காணப்படுகிறது. தமிழ்மொழியின்கண் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்(Neuter singular) பலர்பால் (Epicene plural), பலவின்பால் (Neuter plural) என ஐந்து வகையான பால வேறுபாடு அமைந்துள்ளதாக மரபிலக்கணங்கள் (Traditional grammars) குறிப்பிடுகின்றன. இவ்வைந்தனுள் ஒன்றன்பால்-பலவின்பால் வேறுபாடும், பலர்பால் வேறுபாடும் எண்வேறுபாடுகளாக அமையப் பெறுவதால் தமிழில் பால் வகைகளை மூன்றாகக் கருதவியலும்.

ஆண்பாலைக் குறிக்க 'ன்' உருபும் (அவன்), பெண்பாலைக் குறிக்க 'ள்' உருபும்(அவள்), ஒன்றன் பாலைக் குறிக்கத் 'து' உருபும் (அது), பலர்பாலைச் சுட்ட 'ர்' உருபும் (அவர்), பலவின்பாலைக் குறிக்க 'ஐ', 'அ' என்னும் உருபுகளும் (அவை, வந்தன) பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தமிழில் பெயர், வினை வடிவங்கள் பால் காட்டுவனவாக அமைந்துள்ளன. பால் காட்டும் உருபுகள் அனைத்தும் சொல்திரிபு உருபுகள் (Inflectional affixes) ஆகும். தமிழில் பெயர், வினை வடிவங்கள் தொடரில் செயற்படும்போது பால் ஒத்திசைவு (Concord) கட்டாயமாக அமையப்பெறுதல் வேண்டும்.

எண்வேறுபாடு பெயர், வினை வடிவங்களைப் பாகுபாடு செய்யப் பெரிதும் துணைபுரிகிறது. பெரும்பான்மையான மொழிகளில் ஒருமை (Singular), பன்மை (Plural) என்னும் இருவகை எண்வேறுபாடு காணப்படுகிறது. கிரீக்கு, சமசுகிருதம் போன்ற மொழிகளில் ஒருமை, இருமை (Dual), பன்மை என்னும் மூவகைப் பால் வேறுபாடு காணப்படுகிறது. பிசியனில் (Figian) ஒருமை, இருமை, சில (A few), பல (Many) எனவும் வேறு சில மொழிகளில் ஒருமை, இருமை, மும்மை (Trial), பன்மை எனவும் நால்வகை எண் வேறுபாடு காணப்பெறுகிறது. தமிழில் ஒருமை, பன்மை என்னும் இருவகை எண்வேறுபாடு அமையப்பெற்றுள்ளது. ஆண்பால் பெண்பால், ஒன்றன்பால் ஆகியன ஒருமையிலும் பலர்பால், பலவின்பால் ஆகியன பன்மையிலும் அமையப்பெறும். உயர்திணையில் 'ன்', 'ள்' உருபுகளும் (வந்தான், வந்தாள்), அஃறிணையில் 'து' உருபும் (வந்தது) ஒருமை எண்ணினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. 'ர்' உருபு உயர்திணைப் பன்மைக்கும் (கேட்டனர்) 'அ', 'ஐ' உருபுகள் அஃறிணைப் பன்மைக்கும் (ஓடுகின்றன, அவை) உருபுகளாகச் செயற்படுகின்றன.

இக்காலத்தமிழில் 'ர்' உருபு உயர்வு ஒருமையில் (Honorific singular) பயன்படுத்தப்படுகின்றமையால் (அமைச்சர் வந்தார்), பலர்பாலில் இரட்டைப்பன்மை (Double plural) உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன. (அவர்கள் வந்தார்கள்). பால், எண் இரண்டினையும் சுட்டுவதற்குப் பெரும்பாலும் தமிழில் ஒரே உருபு தான் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகச் 'செய்தாள்' என்ற வினைச்சொல்லில் 'ள்' என்னும் உருபே பெண்பாலையும் ஒருமை எண்ணையும் குறிக்கிறது.

தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் ஒப்புமையாக்

கத்தால் ஆண்பால் பன்மை (Masculine plural), பெண்பால் பன்மை (Feminine plural) வடிவங்கள் (அவனுக, அவளுக) தோற்றம் பெற்றுள்ளன. அன்றியும் பால்-எண் ஒத்திசைவிலும் பிறழ்ச்சி (அப்பா சொல்லிச்சி; மாடுகள் வந்தது) காணப்பெறுகிறது.

பெரும்பான்மையான மொழிகளில் தன்மை (First person), முன்னிலை (Second person), படர்கை (Third person) என்னும் மூன்று வகையான இடவேறுபாடு காணப்படுகிறது. எசுகிமோ மொழியில் படர்க்கையில் அண்மை (Proximate), இன்மை (Obviative) வேறுபாடு காணப்படுகிறது.

தமிழ் மொழியில் தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் எண்வேறுபாடு மட்டுமே காணப்படுகிறது. படர்க்கையில் மட்டும் பால்-எண்வேறுபாடு உண்டு. தன்மை ஒருமையினைச் சுட்ட 'ஏ' உருபு (வரு-வ்-ஏ-ன்) பெரிதும் கையாளப்படுகிறது. தன்மைப்பன்மையில் உளப்படுத்தும் தன்மைப்பன்மை (Inculsive plural), உளப்படுத்தாத் தன்மைப்பன்மை (Exclusive plural) என்ற பாகுபாடு உண்டு. இக்காலத் தமிழில் பதிலிப்பெயர்களில் (Pronouns) 'நாம்' என்பது உளப்படுத்தும் தன்மைப் பன்மைக்கும் 'நாங்கள்' என்பது உளப்படுத்தாத் தன்மைப்பன்மைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. வினைச்சொற்களில் 'ஓ' என்னும் உருபு தன்மை இடக்குறியீடாகப் (வரு-வ்-ஓ-ம்) பயன்படுத்தப்படுகிறது. முன்னிலையில் 'ஆ', 'ஈ' என்னும் வடிவங்கள் முறையே ஒருமையிலும் (காண்-ப்-ஆ-ய்), பன்மையிலும் (பார்-ப்-ஈ-ர்) முன்னிலைக் குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

படர்க்கையில் ஆண்பால் (அவன்), பெண்பால் (அவள்), ஒன்றன்பால் (அது), பலர்பால் (அவர்), பலவின்பால் (அவை) என்னும் ஐந்துவகையான பால் வேறுபாடு காணப்படுகிறது. வினைச் சொற்களில் படர்க்கை இட உருபாக 'ஆ/அ' என்னும் வடிவம் (செய்-கிறு-ஆ-ன்; செய்-த்-அ-து) பயன்படுத்தப்படுகிறது.

தொடரியல் நிலையில் பெயர், வினைச்சொற்களுக்கிடையே காணப்பெறும் இலக்கண உறவே வேற்றுமை எனப்படும்.

ஒவ்வொரு மொழிக்கேற்ப வேற்றுமையின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது. வெவ்வேறு மொழிகளில் வேற்றுமையின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு முதல் முப்பதுவரை காணப்பெறுகிறது. சில மொழிகளில் வேற்றுமை உறவினைக் குறிக்கும் வடிவங்கள் பெயர்களுக்கு முன்னும் வேறு சில மொழிகளில் பெயர்களுக்குப் பின்னும் அமையப் பெறுகின்றன. மரபிலக்கண நூல்கள் தமிழில் எட்டு வேற்றுமைகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வேற்றுமை உறவினைப் புலப்படுத்தும் வகையில் கையாளப் பெறும் உருபுகள் வேற்றுமை உருபுகள்(Case suffixes) எனப்படும். வேற்றுமை உருபுகள் அனைத்தும் சொல் திரிபு உருபுகளாகும். இவை தொக்கு வருதலும் உண்டு. வேற்றுமை உருபுகள் தொக்கு வருவது வேற்றுமைத் தொகை எனக் குறிப்பிடப் பெறும்.

முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை (Nominative case) எனப்படும்; இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் உறவு எழுவாய் பயனிலை உறவாக அமையும். இவ்வேற்றுமைக்கு எவ்வித உருபும் கிடையாது (சீதை நடந்தாள்). இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் வேற்றுமை (Accusative case) எனப்படும். இவ்வேற்றுமையில் பெயர்-வினை உறவு செயப்படுபொருள்-பயனிலை உறவாக அமையும். இரண்டாம் வேற்றுமையின் உருபாக 'ஐ' என்னும் வடிவம் (மாலையை அணிந்தான்) பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாம் வேற்றுமை கருவிப்பொருளையும் (Instrumental) உடனிகழ்ச்சிப் பொருளையும் (Sociative) சுட்டும். கருவிப்பொருளை உணர்த்த 'ஆல்' உருபும் (பேனாவால் எழுதினாள்) உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்த 'ஓடு/ஒடு' உருபும் (நாயோடு நடந்தான், அவனொடு சென்றாள்) பயன்படுத்தப் பெறுகின்றன. மூன்றாம் வேற்றுமையின் பெயர், வினைக்கிடையே காணப்படும் உறவுகள் முறையே கருவி-பயனிலை, உடனிகழ்வு-பயனிலை என்ற வகையில் அமையப்பெறும். இக்காலத்தில் கருவி, உடனிகழ்வு ஆகிய இரு பொருண்மைகளும் தனித்தனி வேற்றுமைகளாகக் கருதப்படுகின்றன.

நோக்குப் பொருண்மையினைச் சுட்டும் நான்காம் வேற்றுமையின் (Dative case) உருபு 'கு' (தாலிக்குப் பொன்) என்பதாகும். ஈண்டுப் பெயர் வினை உறவு நோக்கு-பயனிலை என்ற முறையில் அமையும். ஐந்தாம் வேற்றுமையாகிய ஒப்புப் பொருள் வேற்றுமையின் (Comparative case) உருபு 'இன்' (அவனின் நல்லன்) என்பதாகும். காலப் போக்கில் இவ்வேற்றுமை நீக்கற் பொருளினைக் குறிக்கும் வகையில் (மலையின் வீழ் அருவி) நீங்கற்பொருள் வேற்றுமையாக (Ablative case) மாற்றம் பெற்றுள்ளது. இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் இலக்கண உறவு நீங்கல்-பயனிலை என்ற வகையில் அமையப் பெற்றுள்ளது.

ஆறாம் வேற்றுமையாகிய உடைமைப் பொருள் வேற்றுமை (Genitive case) பெயர்களுக்கிடையே காணப்படும் உறவினைக் (நாயினது கால்) சுட்டும். இவ்வேற்றுமை வேற்றுமை இலக்கணத்தினின்றும் வேறுபட்டு வருவதால் இதனைச் சிலர் ஒரு வேற்றுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏழாம் வேற்றுமையாகிய இடவேற்றுமையின் (Locative case) உருபுகளாக 'இல்', 'கண்' போன்ற வடிவங்கள் (காட்டில் வாழ்கிறது) செயற்படுகின்றன. இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் உறவு இடம்-பயனிலை என்னும் முறையில் அமையும்.

எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை (Vocative case) பெயரின் திரிபினைச் (நெஞ்சு→நெஞ்சே; இராமன்→இராமா) சுட்டும் வகையில் அமையும். இவ்வேற்றுமையினைச் சிலர் எழுவாய் வேற்றுமையின் வகையாகக் கருதுகின்றனர்.

இக்காலத்தமிழில் சுமார் இருபத்து மூன்று வகையான வேற்றுமைகளை மொழியியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வேற்றுமைகள் அனைத்தையும் ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற வேற்றுமைகளுக்குள் அடக்கிக் காணுதல் இயலும். சில வேற்றுமைகளில் வேற்றுமை உருபேற்றபெயர்ச் சொற்களுக்குப் பின்னர் வரும் வினைச் சொற்கள் காரணமாக அடிப்படைப் பொருளில் மாற்றம் காணப் பெறுகிறது. இத்தகைய பொருள் வேறுபாட்டினைத் (Semantic change) தனித்தனி வேற்றுமைகளாகக் கொள்ளவேண்டியதில்லை. இவற்றைக் குறிப்பிட்ட வேற்றுமையின் பொருள்வகையாகக் கொள்ளலாம். ஒரு வேற்றுமையின் இத்தகு பொருள் வேறுபாட்டினை மறைகூறுகள் (Covert categories) என்பர் அறிஞர்.

தொழில் நிகழ்வின் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு காலம் அமையப்பெறும். சில மொழிகளில் இரு வகையான கால வேறுபாடு காணப்பெறுகிறது. பெரும்பான்மையான மொழிகளில் மூவகைக் காலவேறுபாடு அமையப்பெற்றுள்ளது. இன்னும் சில மொழிகளில் அண்மை (Immediate), சேய்மை (Remote) அடிப்படையில் மூன்றிற்கு அதிகமான கால வேறுபாடுகள் சுட்டப்பெறுகின்றன.

தமிழில் இறந்த காலம் (Past tense), நிகழ்காலம் (Present tense), எதிர்காலம் (Future tense) என்னும் மூன்று வகையான கால வேறுபாடு காணப்படுகிறது. இறந்த காலத்தினைக் குறிக்க 'த்', 'ற்', 'இன்', 'ந்த்' போன்ற உருபுகளும், நிகழ்காலத்தினைக் குறிக்க 'கிறு', 'கின்று' போன்ற உருபுகளும், எதிர்காலத்தினைக் குறிக்க 'ப்', 'வ்' ஆகிய உருபுகளும் சொல்திரிபு உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வினைநிகழ்வில் கருத்தாவின் ஈடுபாட்டினைஅடிப்படையாகக் கொண்டு வினைச்செய்கை அமையப்பெறுகிறது. இலத்தீன் மொழியில் இருவகை வினைச்செய்கைகளும், கிரீக்கு, சமசுகிருத மொழிகளில் மூவகைவினைச் செய்கைகளும் காணப்பெறுகின்றன. கருத்தாவின் வினைச்செய்கை ஒவ்வொரு மொழிக்கேற்ப எண்ணிக்கையில் வேறுபடுவதுமுண்டு. தமிழில் கருத்தாவின் வினையீடுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு வினைகளைச் செய்வினை (Active verb), செயப்பாட்டு வினை (Passive verb), செயப்படு பொருள் குன்றிய வினை (Intransitive verb), செயப்படு பொருள் குன்றாவினை(Transitive verb), இயக்கு வினை (Causative verb), எதிர்மறைவினை (Negative verb), பிரதிபலிப்பு வினை (Reflexive verb) என வகைப்படுத்துதல் இயலும்.

செய்வினையில் (கண்ணன் பாடத்தைப் படித்தான்) காணப்பெறும் எழுவாய் (Subject) செயப்பாட்டு வினையில் (பாடம் கண்ணனால் படிக்கப்பட்டது) மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகும். செய்வினையிலுள்ள செயப்படுபொருள் செயப்பாட்டு வினையில் எழுவாயாக மாற்றம்பெறும். ஈண்டுப் 'படு', 'பெறு' என்னும் துணைவினைகளை(Auxiliary verbs) முதல்வினையோடு (Primary verb) சேர்க்கப் பெறும் நிலையில் செய்வினைகளிலிருந்து செயப்பாட்டு வினைகள் ஆக்கம் பெறுகின்றன.

செயப்படுபொருளை ஏற்றுவாரா வினைகள் செயப்படு பொருள் குன்றிய வினைகள் (நடந்தான்: ஓடினான்) எனவும், செயப்படு பொருளை ஏற்று வரும் வினைகள் செயப்படுபொருள் குன்றா வினைகள் (படித்தார்: கேட்டார்) எனவும் கருதப்பெறும். செயப்படுபொருள் குன்றா வினைகளை அதன் அமைப்பு அடிப்படையில் ஆக்கச் செயப்படுபொருள் குன்றா வினைகள் (Derived transitives), இயல்பு செயப்படுபொருள் குன்றா வினைகள் (Inherent transitives) என இருவகைப்படுத்தலாம். இயல்பு செயப்படுபொருள் குன்றா வினைகளில் இவ்வினைப் பொருண்மையினைக் குறிக்க எவ்வகைக் குறியீடும் (Sign) காணப்பெறுவதில்லை. ஆக்கச் செயப்படு பொருள் குன்றா வினைகள் செயப்படு பொருள் குன்றிய வினைகளுடன் சில உருபுகளைச் சேர்ப்பதன் வாயிலாகவோ அடிச்சொல்லில் (Stems) சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாகவோ ஆக்கம் பெறுகின்றன. தமிழில் செயப்படுபொருள் குன்றிய வினையிலுள்ள அடிச்சொல்லை இரட்டிப்பதன் வாயிலாகவும் (ஆகு→ஆக்கு). செயப்படுபொருள் குன்றிய வினையின் அடிச்சொல்லில் காணப்பெறும் மெல்லொலியை வல்லொலியாக மாற்றுவதன் வாயிலாகவும் (அடங்கு→அடக்கு), சில விகுதிகளைச் சேர்ப்

பதன் வாயிலாகவும் (நிகழ்+து→நிகழ்த்து) செயப்பாட்டு வினை வடிவங்கள் ஆக்கம் பெறுகின்றன.

கருத்தா தொழிலைப் பிறர் வாயிலாகச் செய்யும் நிலையில் அமையப்பெறும் வினைகள் இயக்கு வினைகள் எனப்படும். தமிழில் 'வி', 'பி' போன்ற உருபுகள் இயக்குவினைகள் அமையத் (செய்வித்தான்; கேட்பித்தான்) துணை புரிகின்றன. தமிழில் சில செயற்படுபொருள் குன்றா வினைகள் இயக்கு வினைகளாக அமையப் பெற்றுள்ளன.

எதிர்மறை வினையினையும் கருத்தாவின் வினைச் செய்கையாகக் கருதுவதுண்டு. ஈண்டு வினைவடிவம் தொழில் நிகழ்வின் எதிர்மறுத்த நிலையினைச் சுட்டும் வகையில் அமையப்பெறும். எதிர்மறைப் பொருண்மை சொல்லியல் நிலையிலும் (Morphological level) தொடரியல் நிலையிலும் (Syntactic level) சுட்டப்பெறும். தமிழில் 'இல்', 'அல்', 'மாட்ட' என்பன எதிர்மறை அடிச்சொற்களாகவும் (இல்லை, அல்ல, மாட்டேன்), 'ஆ' என்பது எதிர்மறை உருபாகவும் (வாராது) செயற்படுகின்றன. மேலும் பிரதிபலிப்பு வினையினையும் சிலர் கருத்தாவின் வினைச் செய்கை வகையாகக் கருதுகின்றனர். ஈண்டு இப் பொருண்மை 'கொள்' என்னும் துணை வினையினை முதல் வினையோடு இணைப்பதன் வாயிலாகப் (அடித்துக் கொண்டனர்) பெறப்படுகிறது.

வினைநிகழ்வின்கண் கருத்தாவின் உளநிலைக்கேற்ப வினைப்பொருள் அமையப்பெறும். வினைப் பொருளின் எண்ணிக்கையில் மொழிக்குமொழி வேறுபாடு காணப்படுகிறது. மெனோமினி மொழியில் ஐந்து வகை வினைப்பொருள்கள் காணப்பெறுகின்றன. பாக்சு மொழியில் எட்டிற்கும் மேற்பட்ட வினைப்பொருள்கள் காணப்பெறுகின்றன. தமிழில் நிலைவினைப் பொருள் (Indicative mood), ஏவல் வினைப்பொருள் (Imperative mood), வியங்கோள் வினைப்பொருள் (Optative mood) நிபந்தனை வினைப்பொருள் (Conditional mood), செயவெனச்ச வினைப்பொருள் (Infinitive mood), அனுமதி வினைப் பொருள் (Permissive mood), ஆற்றல் வினைப் பொருள் (Potential mood), வாய்ப்பு வினைபொருள் (Probability mood), கட்டாய வினைப் பொருள்கள் (Obligatory mood) போன்ற வினைப் பொருள்கள் காணப்பெறுகின்றன.

செயல்நிகழ்வின் நிலையினை நிலை வினைப் பொருளும் (அவன் பாடுகிறான்), முன்னிற்பானை ஒரு செயலைச் செய்யச் சொல்லும் வகையில் ஏவல் வினைப்பொருளும் (நீ பாடு), கூறுவோன் விருப்பினைச் சுட்டும் வகையில் வியங்கோள் வினைப்பொருளும் (ஆசிரியர் வாழ்க) அமையப்பெறும். ஏதேனும் ஒரு செயலின் நிபந்தனையினைக் குறிக்கும் வகையில் நிபந்தனை வினைப்பொருளும் (நீ வந்தால் தருவேன்), ஒரு செயலின் எஞ்சு நிலையினைக் குறிக்கும் வகையில் செயவெனெச்ச வினைப்பொருளும் (பார்க்கச் செல்வாள்), அனுமதிப் பொருளைச் சுட்டும் வகையில் அனுமதி வினைப்பொருளும் (தங்கை வரலாம்) அமையப் பெறுகின்றன. செயல்நிகழ்வின் திறனைக் குறிக்கும் வகையில் ஆற்றல் வினைப்பொருளும் (அவனால்படிக்க முடியும்), செயல் நிகழ்வின் வாய்ப்பினைச் சுட்டும் வகையில் வாய்ப்பு வினைப்பொருளும் (இன்று மழை வரலாம்), செயல்நிகழ்வின் கட்டாயத்தினைச் சுட்டும் வகையில் கட்டாய வினைப் பொருளும் (நீ போக வேண்டும்) அமையப்பெற்றுள்ளன. ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற வினைப்பொருள் தவிர்ந்த வேறு பிற வினைபொருள்களும் தமிழ் மொழியின்கண் காணப்பெறுகின்றன.

செயல்நிகழ்வின் நிலையினை அடியொற்றியே ஒரு மொழியின் வினைமை அமையப் பெறும். வினை நிகழ்வின் வேறுபட்ட வகைகளை அல்லது நிலைகளைக் குறிக்கும் வகையில் வினைமைகள் செயற்படுகின்றன. வினைமைகளின் எண்ணிக்கையும் மொழிக்கேற்ப அமைந்துள்ளது. வினைமைகள் சில மொழிகளில் சொல்லமைப்புகளாலும் வேறு சில மொழிகளில் தொடரமைப்புகளாலும் உணர்த்தப்பெறுகின்றன. பெரும்பாலும் தமிழ் மொழியில் வெவ்வேறு துணைவினைகள் வாயிலாகவே வினைமைகள் உணர்த்தப் பெறுகின்றன. முதல் வினையுடன் பல் வேறுபட்ட துணைவினைகள் சேர்க்கப்பெறும் நிலையில் வினைமை வேறுபாடு சுட்டப்பெறுகிறது.

தமிழ் மொழியில் செயல்முடிவு (Perfect), செயல் தொடர்ச்சி (Progressive), உறுதிப்பாடு (Definitive), முயற்சி (Trial), செயல் முழுமை (Completive), வழக்கம் (Habitual), வெறுப்பு (Contemptive), செய்து காட்டுதல் (Demonstrative) போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட வினைமைகள் காணப்பெறுகின்றன.

செயலின் நிறைவு நிலையினைக் குறிக்கும் வகையில் செயல்முடிவு வினைமையும் (வந்திருந்தார்), செயல் நிகழ்வின் தொடர் நிலையினைக் குறிக்கும் வகையில் செயல் தொடர்ச்சி வினைமையும் (வந்து கொண்டிருக்கிறாய்), செயல் நிகழ்வின் உறுதிப்பாட்டினைக் குறிக்கும் வகையில் உறுதிப்பாடு வினைமையும் (வந்துவிடுவான்), முயற்சி செய்யும் நிலையில் அமையும் வினைநிகழ்வினைக் குறிக்கும் வகையில் முயற்சி வினைமையும் (செய்து பார்), செயல்நிகழ்வின் முழுமை நிலையினைக் குறிக்கும் வகையில் செயல்

முழுமை வினைமையும் (வந்துவிட்டான்), செயல் நிகழ்வின் வழக்கத்தினைக் குறிக்கும் வகையில் (நாங்கள் கேட்டு வருகிறோம்), வினைநிகழ்வின் வெறுப்பு நிலையினைக் குறிக்கும் வகையில் வெறுப்பு வினைமையும் (செய்து தொலைத்தான்), வினை நிகழ்வினைச் செய்துகாட்டுகின்ற வகையில் செய்துகாட்டுதல் வினைமையும் (நடித்துக் காட்டினார்) அமையப் பெறும்.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற இலக்கணக்கூறுகள் தவிர்த்த சில கூறுகள் பிற மொழிகளில் காணப்பட்ட போதிலும், இங்கே தமிழ்மொழியின் கண்ணுள்ள இலக்கணக்கூறுகள் மட்டுமே சுட்டப்பெற்றுள்ளன.

காலப்போக்கில் மொழியின் இலக்கணக்கூறுகளில் மாற்றங்கள் நடைபெறுதலுண்டு. இலக்கணக் கூறுகளில் நடைபெறும் அனைத்து மாற்றங்களும் இலக்கண மாற்றங்கள் (Grammatical changes) எனப்படும்.

இக்காலப் பேச்சுத் தமிழில் ஒப்புமையாக்கத்தின் காரணமாக ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை என்னும் பால்களின் தோற்றம் காணப்படுகிறது. வேற்றுமையினைப் பொறுத்தமட்டில் பண்டைக் காலத்தில் ஒப்புப்பொருள் வேற்றுமையாகச் செயற்பட்ட ஐந்தாம் வேற்றுமை காலப்போக்கில் நீங்கற் பொருள் வேற்றுமையாக மாற்றம் பெற்றுள்ளது. '-காரன்' என்னும் சொல்லாக்க விகுதியினைக் (Derivative suffix) கடன் பெற்றமையால் தமிழில் 'வீட்டுக்காரன்', 'தோட்டக்காரன்' போன்ற சொல் வடிவங்கள் தோன்றியுள்ளன. ஆங்கில மொழியின் ஆதிக்கம் காரணமாகத் தமிழில் புதிய வினைப் பொருள், வினைமையினைச் சுட்டும் வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. இத்தகு மாற்றங்கள் அனைத்தும் இலக்கணக்கூற்றில் நடைபெறும் இலக்கண மாற்றத்திற்கு முறையான சான்றுகளாகும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Gleason, Hentry A.Jr.,** An Introduction to Descriptive Linguistics, New York, 1955.

**Hockett, C.F.,** A Course in Modern Linguistics, Oxford and IBH Publishing Co., New Delhi, 1976.

**Harris, Z.S.,** Methods in Structural Linguistics, Chicago, 1951.

**Lyons, J.,** Introduction to Theoretical Linguistics, Cambridge, University Press, Cambridge, 1968.

**Malmberk Bertill,** New Trends in Linguistics, Stokholm, Sweden, 1967.

**இலக்கணக் கொத்து** தொல்காப்பியம் முதல் இலக்கண விளக்கம் வரையுள்ள நூல்களிற் காணப்படும் இலக்கண நுணுக்கங்கள் சிலவற்றைத் தொகுத்துணர்த்தும் நூலாகும். இலக்கண நுணுக்கங்களைத் தொகுத்துணர்த்துவதால் இலக்கணக் கொத்து எனப்பெயர் சூட்டியதாக இதன் ஆசிரியர் சாமிநாத தேசிகரே உரைத்துள்ளார். இந்நூல் எழுந்த காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இதுவரை இலக்கண ஆய்வு நூல் ஒன்று கூடத் தோன்றவில்லை. இக்குறையைப் போக்க எழுந்த முதல் ஆய்வுநூல் இது; வடமொழியும் தென்மொழியுமாகிய இருமொழியிலக்கண ஒப்பீட்டு நூலாகும்.

இதன் குறிக்கோள் தென்றமிழ் நாட்டில் வழங்கும் ஆரியமும் தமிழுமாகிய இரு மொழிகளுக்கும் இலக்கண வகையிற் சில வேறுபாடுகள் இருப்பினும் குறியீடுகள், சொல் இலக்கணம், பாகுபாடுகள், தொகையும் தொடருமாகிய மொழிநடை., பொருளமைதி முதலான பலவகையில் இம்மொழிகள் ஒரு நோக்குடையனவே என்பதையும், பெயரளவில் காணப்படும் வேறுபாடு மொழி வேறுபாட்டால் அமைந்தனவே என்பதையும் சுட்டிக்காட்டி, 'இலக்கணம் ஒன்றே' என்பதை நிறுவுகிறது. நூல் எழுந்த காலம், அதன் மொழியமைப்பு, கருதுகோள் ஆகிய இவற்றைக் கவனியாமலே உரையாசிரியர்கள் தத்தம் காலச்சூழலுக்கும் கருத்து வளர்ச்சிக்கும் ஏற்ப உரை எழுதினர். இலக்கிய ஆட்சிகளை எடுத்துக்காட்டினார். அதனால், கருத்து மாற்றங்களும் தவறுகளும் புகுந்தன. நூலாசிரியனே உரையும் உதாரணங்களும் பின்னணியான ஆதரவு இலக்கியங்களும் இவை இவைதாம் என்று காட்டிவிட்டால் அத்தகைய பெருந்தவறு நிகழாதே என்று கருதி, இந்நூலாசிரியரே உரையையும் எழுதினார். இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய முயற்சி.

வடமொழியில் தோன்றிய சத்த சாத்திரம் எனப்படும் வியாகரண நூல் சொல்லிலக்கணம் ஒன்றையே கூறுவதுபோல, இந்நூலும் சொல்லிலக்கணம் பற்றிய ஆய்வுக் குறிப்புகளையே தொகுத்து அளிக்கிறது என்பர் சிலர். சொல்லுக்கு முதல் எழுத்தாதலானும், சொற்கள் பொருட்பாகுபாடுகளைத் தாங்கியே இயங்குவதாலும், இப்பொருட் கோட்டை செய்யுளேயாதலானும், அவை அணிபெற அமைக்க வேண்டிய சூழலாலும் ஐந்திலக்கண ஆய்வு நுணுக்கங்களையும் ஆங்காங்குச் சொல்லிச் செல்வ

தையும் காணலாம். ஆகவே, இலக்கணக் கொத்தும் அதன் உரையும் ஐந்திலக்கண ஆய்வுப் பெட்டகமு மாகிறது என்பதை இடையிடையே காணும் இலக் கணங்கள் காட்டும்.

பகுப்பும் அமைப்பும்: இந்நூல் பாயிரம், வேற்றுமையியல், வினையியல், ஒழிப்பியல் என்ற நான்கு பகுப்புகளையுடையது.

பாயிரப்பகுதி சிறப்புப் பாயிரமும் நூற்பாயிரமு மாக இரு வகையால் உணர்த்தப் பெறுகிறது.

சிறப்புப் பாயிரம் எவ்வெந் நூல்களையும் உரை களையும் துணையாகக் கொண்டு, உலக வழக்கு, செய் யுள் வழக்கு இரண்டிலுமாக அரிய விதிகளும் இலக் கணக் குறியீடுகளும் தொகுக்கப்பெற்றன என்பதை யும், ஆசிரியரின் கல்வித் தரத்தையும் வரலாற்றையும் சுருக்கிச் சொல்கிறது. இந்நூலுக்குப் புறமாக-புற வுரையாக இருந்து நூலையே சிறப்பித்தலின் இதனை இயற்றியவர், ஆசிரியரின் மாணாக்கராகிய சங்கர நமச்சிவாயப் புலவராக இருக்கலாம் என்று, ‘தன்’ மாணாக்கன் ...... பாயிரம் இயம்புதல் கடனாதலின் கருதலாம். வடநூல் மரபு நூலாசிரியனே பாயிரமும் சொல்லுதல் உண்டு ஆதலின் நூலாசிரியரே நூலுக் குப் புறவுரையாக இதனைச் செய்தார் எனலும் ஆம்.

அடுத்தது வணக்கமும் அதிகாரமும் கூறும் நூற் பாயிரமாகும். இது இந்நூலுக்கு முகமாகவே அமைந்துள்ளது. இப்பகுதி கடவுள் வணக்கம், ஞான குரு, மொழியாசிரியர்கள் வணக்கம் கூறுவதால் இவருடைய தமிழ் ஆசிரியர் திருநெல்வேலி மயிலே றும் பெருமாள் பிள்ளை என்பதும், வடமொழி யாசிரியர் செப்பறைப் பதிவாழ் சிவப்பிராமணர் கனகசபாபதிக் குருக்கள் என்பதும் அறியக் கிடக் கின்றன. இது அகப்பாயிரமேயாதலால் ஆசிரியர் செய்ததேயாகும்.

அடுத்தது அவையடக்கம்: இது இருமொழிக் கண்ணும் உள்ள இலக்கண நூல்களிடையே காணப் பெறும் பலவகையான வேறுபாடுகள், உரையாசிரியர் கள் நூலமைதியையும், நூற்போக்கையும், நூல் எழுந்த காலச்சூழலின் நடையையும், பொருள மைதியையும் நோக்காமல், தத்தமக்கு உகந்த வண்ணம் உரை செய்வதால் விளையும் ஒருவரையறை யின்றி ஒருவிதிக்குப் பல பெயரும், பல விதிக்கு ஒரு பெயரும் ஆக அவரவரும் முக்குணவசத்தால் முறை மறந்து அறைதலும், அவத்தை வயப்பட்டு அறியா மல் உரைத்தலும். விதிவசத்தால் தடுமாறிச் சொல்லுதலும் முதலான பல குறைகள் நேருகின் றன என்பதை எடுத்துக்காட்டிக் குறைகள் அனைத் தையும் தொகுத்துச் சொல்ல தம்மால் இயல வில்லை; ஒருசிலவற்றையே சிறுவர்களுக்காகச் சொல்கிறேன். தம்முரையில் இலக்கிய எடுத்துக் காட்டுகள் குறைவு. உலக வழக்குத்தான் மிகுதி. இது தமிழறிவு ஒன்றுமேயுடையாரையும் இருமொழி யிலக்கணப் புலமை உடையராக்கும் என ஆசிரியர் கூறுவதாக முடிகிறது. அவையடக்கம் ஒருவரியி லிருந்தாலும், நூல் எழுச்சிக்குக் காரணமும் இன்றி யமையாமையும் பலவரிகளால் காட்டப்பெற்றுள்ளன.

அடுத்து, இந்நூலை ஊன்றியதற்குரிய பத்துக் கருவிகள் கூறப்படுகின்றன. பின்பு இந்நூலுக்கும் பிற நூல்களுக்கும் பொதுவான பத்துப் பத்துக் கருவி கள் கூறப்படுகின்றன. சிறப்பிற் சிறப்பாகத் தமக்கு விளங்காத பகுதிகளைத் தவறு என்று சாதிக்கிற சிறுபிள்ளைத் தனத்தை ஒட்ட ‘விளங்காதவற்றைப் பலமுறை ஆய்ந்து சிந்தித்துப்படி; பல்காற் பழகினும் தெரியாவுளவேல் தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும்; ஆண்டினும் இலையேல் வடமொழி வெளிபெற வழங்கும்’ என்று ஆசிரியர் அறிவுரை வழங்கியுள்ளார்.

அடுத்து, படிக்கும்மாணவர், படிப்பிக்கும் ஆசிரி யர் தகுதியும் தன்னடக்கமும் இலராயின் அதனால் நேரும் கேடுகளை விரித்துரைக்கிறது. இந்நூல் இயற் றியதன் காரணத்தையும் இதனைப் பயிலுதற்குரி யார் தகுதிகளையும் விரித்துப் பன்னிரண்டு நூற்பாக் களால் பாயிரம் நிறைவெய்துகிறது.

1. வேற்றுமையியலில் வேற்றுமைகள் இத்தனை என்பதும், காரக இலக்கணமும், மூவகை வேற்றுமை களும், இவற்றில் உருபுகள் நிலையும், இடவுரு புக்கு மட்டும் சிறப்பு விதிகள் சிலவும் உருபு அல்லன வும் உருபுகள் போலத் தோன்றுவன சிலவும், வேற் றுமை என்பது எவ்வெற்றிற்குப் பெயராதல் கூடும்? ஏன்? என்பதும், உருபினை ஏற்ற சொல்லும் நோக் கிய சொல்லும் எங்ஙனம் பல பொருள்படுகின்றன என்பதும், வேற்றுமையும் உருபும், உருபும் பொரு ளும், உருபுகள் தோன்றும் இடமும் ஆகிய பதின் மூன்று வேற்றுமைக்குப் பொதுவான இலக்கணங்கள் உணர்த்தப் பெறுகின்றன.

2. முறையே எழுவாய் வேற்றுமை உருபு பற்றிய நுணுக்கங்களும், சொல்லுருபுகளும், வினைமுதல் தோன்றும் இடங்களும், இரண்டு வினைமுதலை யுடைய ஒருவினைச் சொல்லும், மூவகை வினை முதல்களும், கூறிப் புறனடையும் சொல்லி எழுவாய்

வேற்றுமை எனப்படும் வினை முதலைப் பற்றிய குறிப்புகளை விதந்து கூறி விளக்குகிறது.

பின்னர் விளியை ஒரு நூற்பாவாற் கூறி, முறையே இரண்டு முதல் ஏழீறான ஆறு வேற்றுமைகளுக்கும் அவற்றின் பொருள்களுக்கும் இலக்கணமும் புறனடையும் கூறி முடிக்கிறது.

பிறகு வினைமுதல், செயப்படுபொருள், கருவி, கொள்வோன், நீக்கம், குறை, இடம் ஆகிய இப் பொருள்களில் தம் உருபேயன்றிப் பல உருபுகள் பெறுதலையும் அவ்வுருபுகளின் பொருள்தரும் வரையறைகளையும் கூறுகிறது.

அடுத்து எழுவாய், செயப்படுபொருள், மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய உருபுகள் தத்தம் பொருளையன்றி மயங்கி வேறு வேற்றுமையின் பொருள் தருதலைக் கூறுகிறது. பின்னர் உருபும் பொருளும் மயங்கி வருதலும், உருபுகள் தடுமாறி வருதலும் கூறப்பட்டுள்ளன. இறுதியாக உருபு நோக்கிய சொல் மூவகைப்படுதலையும் பல பொருள் படுதலையும் கூறிப் புறனடையுடன் இவ்வியல் முற்று கிறது.

ஆக வேற்றுமையும், உருபும், அவைகாட்டும் பொருளுமாகிய முத்திற வேறுபாட்டால் வேற்றுமை யின் இலக்கணம் பலதிறப்படுதலை இரு மொழிகளி லும் உள்ள நிலைகளைக் கொண்டு 52 நூற்பாவால் விளக்குவது வேற்றுமையியல்.

இதில் ஏனைய தமிழ் இலக்கணங்களில் காண இயலாத இரண்டு குறியீடுகள் வடமொழியிலிருந்து தமிழிலக்கணத்திற்குக் கொண்டுவரப் பெறுகின்றன.

ஒன்று 'காரகம்'. மற்றொன்று 'குறை'. இவை யிரண்டுமே தமிழ் வழக்கிலும் நடைமுறையிலும் உள என்பதை இவை காட்டும் மேற்கோளே சொல் கின்றன. ஆயினும், இலக்கணம் இயல்பாகவே அமைந் திருந்தும் பெயரில்லாத தனிக்குறையிருந்தது. வட மொழியிலிருந்து கொணர்ந்து அதனை மொழி பெயர்த்துத் தமிழுக்காக்கித் தமிழினை வளர்த்தது இந்நூலும் உரையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

காரகம்: எழுவாய், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடியு மாயின் அவை காரகம் எனப் பெயர் பெறும் என் பது வடநூன்மரபு. அதனை அப்படியே தமிழ்வழக் கிலும் பொருத்திப் பார்த்துப் புதுமையையும் பழமை யையும் கலக்கச் செய்தனர். விளி, குறையிரண்டையும் விட்ட வேற்றுமைகள் வினையான் முடிவது காரகம் என்பர். ஒரே செய்யுளில் அமைத்து எடுத்துக்காட்டுச் செய்யுளும் காட்டுவர். அதில் எழுவாய் முதல் எல்லா வேற்றுமைகளும் வினை கொண்டு முடி வதைக் காணலாம்

ஆறாம் வேற்றுமையும் ஓரிரு இடங்களில் வினை கொண்டு முடிந்து தமிழுக்கு உதவியாகிறது. இது அரிய வழக்கு. எழுத்திகாரம் என்பது எழுத்தினது அதிகரித்தலையுடையது-வினை கொண்டு முடிந்தது என்று சிவஞான சுவாமிகள் தம் முதற்சூத்திர விருத்தியில் குறிப்பிடுள்ளார்.

எல்லைப்பொருட்டாகிய இன்னுருபும், ஆறனுரு பாகிய அது என்னும் உருபும் பெயர் கொள்ளுமாத லின் அவற்றிற்குக் காரகம் எனப் பெயர் சூட்டிய தால் விளையும் நன்மைகளை விலக்கிலர்.

அங்ஙனமே ஆறாம் வேற்றுமைக்குக் குறை என்ற பெயரைக் கொணர்ந்து கூட்டி கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல் தமிழிலும் வழங்க வைக்கிறது இந்நூல். ஆறாம் வேற்றுமைக்குக் குறை யென்னும் பெயர் வேறு தமிழிலக்கணங்களில் யாண்டும் வழங்க வில்லை. வடமொழிப் பாணினீய வியாகரணத்தில் குறையெனப் பொருள்படும் சொல்லால் ஆறாம் வேற்றுமை குறிக்கப்படுவது கொண்டு, குறை என்று இதன் பெயர் அமைந்திருக்கலாம்.

இங்ஙனமே ஏனைய வேற்றுமைகளுக்குப் பொருள் கூறும் போது கூறப்படும் பொருள்களின் வகைக்கும், கொண்டு முடியும் வினைகளின் வேறுபாட்டிற்கும். வேற்றுமை கொள்ளும் பொருள்களின் இயல்புக்கும் ஏற்ப வேற்றுமைப் பொருளை விரித்து வகுப்பது இலக்கணக் கொத்து.

இலக்கணக்கொத்து கூறும் வேற்றுமைப் பொருள் களும் அதன் வகைகளும் உலக வழக்கிலுள்ள தொடர்களிலிருந்தே காணப்பெற்றனவாயினும், செய்யுள் மரபிற்கும் பொருந்த இருக்கின்றமையால் இவர் தொகுக்கும் முறையும் இடஞ்சுட்டி எடுத்துக் காட்டும் முறையும்மிக நுணுக்கமானவை; இன்றியமை யாதவை; இருமொழியிலும் ஒத்த உணர்வை உண் டாக்குபவை.

வினையியல்: வினை எனப்படுவன பொருளின் புடைபெயர்ச்சியை உணர்த்தும் சொற்களேயாதலா னும் பொருள்களைச் சார்ந்தே வேற்றுமைகளுக்குச் செயப்படுபொருள், கிழமை, இடம் முதலான பொருள்கள் அறியப்படுதலானும் வேற்றுமைகள் அனைத்தும் பெயரும், பெயரது விகாரமுமே யாதலா னும் வேற்றுமையியலை யடுத்து வினையியல் அமைந் துள்ளது.

வினை புடைபெயர்ச்சியை யுணர்த்தும் முதனிலைகளையன்றிப் பெயர், இடை, உரிச்சொற்களையும் அடியாகக் கொண்டு பிறக்கும். வினைகள் தனிவினை, தொடர்வினை என இருவகைப்படும். நட, வா, போ, இரு முதலியன தனிவினைகள். தனிவினை என்றால் விகுதி, இடைநிலை முதலியவற்றோடு புணராது வினைப்பகுதி மட்டும் தனித்திருப்பதாம். தொடர்வினையாவது வினைப்பகுதிகளும் பெயர், இடை, உரிச்சொற்கள், விகுதி முதலியவற்றோடு இணைந்தேயியங்குவதாம். திணை, பால், எண், இடங்களையும் உணர நிற்பதாம். மொழிகளைத் தனிமொழி, தொடர்மொழி என்பது போல வினைகளையும் சொல்லலாம் என ஒருமரபைப் புனைவர். அளி, எடு, கொடு, இடி முதலான தனிவினைகளே தொழிற்பெயர்விகுதி, முற்று, பெயரெச்ச வினை, எச்ச விகுதிகளோடு கூடித் தொழிற்பெயர், வினைமுற்று, வினையெச்சம்பெயரெச்சம் முதலான வினை வேறுபாடுகள் அனைத்துமாதலுண்டு. இவை போன்ற வியத்தகு நுணுக்கங்கள் பல.

'வேண்டும்', 'தகும்', 'படும்' என்பன மூன்றையும் பற்றி உரையாசிரியர்கள் எச்சமாயும், முற்றாயும், இவற்றிற்குப் பொதுவாகிய செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினையாகவும் கருதி ஆங்காங்குத் தெளிவின்றி கூறிப்போயினராக, இந்நூலாசிரியர் மிக எளிமையில், 'செய்வினை ஆஅதும் என்னும் அவர்', 'ஒளிமாழ்கும் செய்வினை ஓஒதல் வேண்டும்' என்ற குறட்பாவில், அவர் ...... வேண்டும். அங்ஙனமே 'யான் போகல் வேண்டும்' 'நீ உணர்தல் வேண்டும்' என்ற வழக்காற்றைப் பாருங்கள்! வேண்டும் தகும் படும் என்பன பல்லோர்படர்க்கை. முன்னிலை தன்மையிற் செல்லாதாகும் செய்யும் என் முற்றே என்ற மரபுக்கு மாறி வந்திருக்கின்றனவே! ஆதலால், அவை செய்யுமென் முற்றாதல் யாங்ஙனம்? என்ற முடிபையும், இவை மூன்றுமே தேற்றப் பொருளவாய் 'வேண்டுவது', 'தக்கது', 'படுவது' எனத் தொழிற் பெயராய் நிற்கும் என்று ஐய முடிச்சை யவிழ்த்துத் தவறான இலக்கணக் கொள்கையை நீக்குகிறது. இங்ஙனமே 'வேறு' 'இல்லை', 'உண்டு' என்பவற்றின் விளக்கமும் ஆகும்.

தொல்காப்பியனார் 'இன்மைசெப்பல்', 'வேறு' என்பனவற்றைப் பொதுவினை என்றனர் (சொல். 224). அவர் காலத்தில் 'உண்டு' என்பது ஒன்றன்பால் வினையாக இருந்தது. பிற்காலத்தில் அது பொதுவினையாயிற்று. அங்ஙனமே தொல்காப்பியனார் காலத்து உயர்திணைப் பொதுக்குறிப்பு வினையும் படர்க்கைக்கே வந்த வியங்கோளும் பிற்காலத்தில் பொதுவினையாயின. இவையனைத்தையும் நுனித்துக் கண்ட இந்நூலாசிரியர் 'வேறு இல்லை' முதலான பத்தினையும் பொதுவினை என்றார்.

இங்ஙனம் காலந்தோறும் இலக்கியப் பரப்பில் வழக்கால் மாறும் இலக்கண நுணுக்கங்களையும் மாற்றங்களையும் கண்டு காட்டியுள்ளார்.

வினைகள் மனம், மொழி, மெய், அறிவு ஆகிய நான்கன் அசைவாலும் அசைவின்மையாலும் பல்வகையால் நல்வினை, தீவினை, வேறுவினைகளாகி இத்தகைய மூவகை வினைகளும் அறிந்தும், அறியாமலும், அறிவற்ற நிலையிலும் செய்யப்படுவதாலும் மூவகைப்பட்டு, நல்வினையாவன சில தீவினை எனப்பட்டும், தீவினை எனப்படுவன சில நல்வினைப் பட்டும், பல இலக்கணங்களைப் பெற்றுவரும் என்பர். இவ்வேறுபாடுகள் அனைத்தும் மெய்ப்பொருளியலறிவும் புராண இலக்கியங்களும் தந்தவை. இவற்றாலும் இலக்கண வேறுபாடு என்பதைக் கண்டு காட்டிய பெருமை இந்நூலாசிரியரையே சேரும். த.ச.

**இலக்கண தீபம்** கற்றாரிடையே வழக்கில் இல்லாத இலக்கண நூல்களுள் ஒன்று. தனி நூலாக இதுவரை இது அச்சேறவில்லை. 'செந்தமிழ்' இதழில் 1916-ஆம் ஆண்டில் இது வெளிவந்துள்ளது. இரா. இராகவையங்கார் வைத்திருந்த ஒரே பிரதியைப் பெற்றுப் பதிப்பித்ததாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. நூல் தோன்றிய காலமும் அறியமுடியவில்லை.

பன்னிரு சீர்கள் கொண்ட பதினான்கு விருத்தங்களால் ஆயது இச்சிறுநூல். சிதைந்த நிலையில் உள்ள இறுதிப் பாடல் உள்ளவாறே அச்சிடப்பெற்றுள்ளது. பிற இலக்கண நூல்கள் போல இலக்கணம் கூறாமல், எண்ணிக்கை விவரம் மட்டும் கூறுவது இந்நூல். காட்டாக, புறத்திணை பற்றிய எட்டாம் பாடல், புறப்பொருள் வெண்பா மாலை கூறும் திணை, துறைகளின் எண்ணிக்கையை 'ஏய்ந்தவிரி வெட்சியினிலிருபது கரந்தையினி லீரேழு வஞ்சிமூவேழிகற்காஞ்சியிருபத் திரண்டிருப தோடென்ப தெழிலுழிஞை நொச்சியொன்பான்' எனப் பாடலாக்கித் தருகிறது. இவ்வாறே அனைத்துப் பாடல்களிலும் தொகை வகை எண்ணிக்கைகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் ஆறு பாடல்களில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பற்றிய செய்திகளும், ஏழாம் பாடலில் அகத்திணைச் செய்திகளும், எட்டாம் பாடலில் புறத்திணைச் செய்திகளும், ஒன்பதாம் பாடலில் அணிநூற் செய்திகளும், பத்தாம் பாடலில் பாட்டியற் செய்திகளும், பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்றாம் பாடல்களில் முச்சங்க வரலாற்றுச் செய்தி

களும் பேசப்படுகின்றன. பதினான்காம் பாடல் சிதைந்துள்ள போதிலும் உரை வரலாறு கூறுவதாக உள்ளது.

இறையனார் களவியல் உரை கூறும் தமிழ்ச்சங்க வரலாற்றுச் செய்திகளுக்கும், இவ் இலக்கண தீபம் கூறும் வரலாற்றுச் செய்திகளுக்கும் ஒரு சில வேறு பாடுகள் காணப்பெறுகின்றன. முதற்சங்கம் இருந்த புலவர் தொகை 549 என்று களவியல் உரை கூற 449 என்று இந்நூல் குறிக்கும். இடைச்சங்க, கடைச்சங்கப் புலவர் தொகையிலும் வேறுபாடு காணப்படுகிறது.

கவிதை இயற்ற விரும்புவர்கள் எல்லா இலக் கணங்களையும் நன்கு அறிந்து இலக்கணம் தவறாது கவிதை பாடுவராயின் அவர்கள் கவிதைகள் 'இலக் கணக் கவிதைகள்' ஆம் என்றும், அல்லாதார் செய் யும் கவிதைகள் 'அவலக்கணக் கவிதைகள்' ஆம் என்றும் இந்நூல் மொழிகிறது.

> 'அறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
> தவலக்க ணக்கவிதையே'

என்று பெரும்பாலான பாடல்களின் இறுதியில் மகுடம் அமைந்துள்ளது குறிக்கத்தக்கது.

இலக்கணம் கூறாது வெறும் எண்ணிக்கை மட் டுமே கூறுதல் இந்நூலைப் பலரும் போற்றாமைக் குரிய காரணங்களில் ஒன்றாதல் கூடும். அ.வி.

**இலக்கணப் போலி:** போலி என்பது போல அமைந்தது; உண்மை அல்லாதது என்னும் பொருளி னைப் பொதுவாகக் கொண்டது. இலக்கண நூலில் அது தனக்கெனச் சிறப்பானதொரு பொருள் கொண்டு விளங்குகிறது. மொழி அமைப்பிலிருந்து ஓர் உறுப்பு முன்பின்னாக மாறி அமைந்தாலும், ஒரு பகுதியோ முழுவதுமோ மருவி அமைந்தாலும் குழப்பமின்றி உரிய பொருளை, மக்கள் மொழியை வழங்குகின்ற மரபின் ஆற்றலால் தருதலைப் போலி என்று இலக்கண நூலார் வழங்குகின்றனர். காட் டாக, ஞாத்த, புறநகர் என்பனவற்றைச் சுட்டலாம். நகர, யகரங்கள் தமிழில் தனித்தனி ஒலியன்கள். யகரமுள்ள இடத்தில் ஞகரத்தையோ ஞகரமுள்ள இடத்தில் நகரத்தையோ இட்டு எழுதினால் பொருள் மாறிவிடும். ஆனால் மிக அருமையாக வழக்கின் ஆற்றலால் சிற்சில இடங்களில் சிற்சில எழுத்துகள் மாறிவரினும் பொருள் கெடுதல் இல்லை. 'யாத்த', 'ஞாத்த' என்ற சொற்களில் உள்ள யகர, ஞகர எழுத்துகளின் மாற்றங்களால் பொருள் மாறவில்லை. இப்படியே, நகரினது புறம் என்ற பொருளில் நகர்ப் புறம் என்னும் தொடர் 'புறநகர்' என முன்பின் னாக மாறி அமைகிறது. எனினும் பொருளில் குழப் பம் ஏற்படவில்லை. ஆனால் நகரினது புறம் என் னும் ஆறன்தொகைபுறத்தின்கண் நகரம் என ஏழன் தொகையாக மாறி அமைகிறது. இப்படி இலக்கண மாற்றம் ஏற்படினும் பொருளில் மாற்றம் ஏற்பட வில்லை. இத்தகைய சொல் தொகை அமைப்பு களையே அதாவது ஓர் எழுத்துக்கு மற்றோர்எழுத்து அமைந்து பொருள் மாறா நிலையினையும் ஒரு தொகை முன்பின்னாக மாறி அமைந்தும் பொருள் மாறா நிலையினையும் போலி என்பதாகத் தமிழ் அறிஞர் குறித்தனர்.

இவ்விரு வகை மொழிப் போலிகளில் சொற்கள் முன்பின்னாக அமைந்து இலக்கணமரபில் மாறுபட் டாலும் வழக்காற்றலால் உரிய பொருளை வழங்கு தலால் புறநகர் முதலியவற்றை இலக்கணப்போலி என்றனர்.இதனை,'தகுதியும் வழக்கும்' என்னும் நூற் பாவில் (தொல். சொல். 17) வழக்கின்கண் அடக்கித் தொல்காப்பியனார் கூறுவதாக இளம்பூரணரும் கல்லாடனாரும் குறிப்பர். அவர்கள் இதனை இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கு என்பர்.

பவணந்தியார், நன்னூல் 267-ஆம் நூற்பாவில் வழக்கு இன்னது என்று விளக்கும்போது இலக்கணப் போலியினைக் குறிப்பிடுகின்றனர். நன்னூல் விருத்தி யுரை ஆசிரியர் சிவஞானமுனிவர் இதனைத் தெளிவு படுத்தும் வகையில், 'இலக்கண நெறியால் வருவ தனை இலக்கணமுடையது என்றும் இலக்கணமுடை யதன்றிப் படைப்புக்காலத்து இலக்கணமுடைய தோடு ஒருங்கு படைக்கப்பட்டது போலத் தொன்று தொட்டன்றி இடையே வருவதனை இலக்கணப் போலி என்றும், தொன்றுதொட்டன்றி இடையே இலக்கணஞ்சிதைந்து மரீஇயதனை மரூஉ என்றும்...' என்று குறிப்பிடுவர்.

'நகர்ப்புறம் என்பதனைப் 'புறநகர்' என்றும், 'புறவுலா' என்பதனை 'உலாப்புறம்' என்றும்,'கண்மீ' என்பதனை 'மீகண்' என்றும்,'கோவில்' என்பதனைக் 'கோயில்' என்றும்,'பொதுவில்' என்பதனை 'பொதி யில்' என்றும் வழங்கும் இத்தொடக்கத்தன இலக்கணப் போலி' என்று எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குவர். எனவே, இலக்கணம் இல்லாததாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்படுவது இலக்கணப்போலி என்று கூறலாம். தே.ச.

**இலக்கணம்:** இக்கால மொழியியலார், 'இப் படியிருக்கவேண்டுமென்று சிலர் விதித்துக் கூறுவதை விட, இவ்வாறு மொழி உள்ளது என்று விளக்குவதே

இலக்கணம்' என்று கூறுகின்றனர். இலக்கணம் என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட மொழி வழக்குகள், சொற்றொடர்களில் உள்ள கூறுகளின் உறவுகள் ஆகியவற்றைப் பற்றியதாகும். அண்மைக் காலம் வரை இலக்கணம் பிழையற்ற வழக்கு நிலையையே வற்புறுத்தி வந்துள்ளது. ஆயின், இக்காலத்தில் பேச்சு வழக்குகளுக்கு முதன்மை கொடுப்பதால் வழுவமைதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மொழியின் அமைப்பும், பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்ட மொழி வழக்குகள் பற்றிய விதி முறைகளும், கோட்பாடுகளும் இலக்கணமாகும் என்று மொழியியல் அகராதிகள் விளக்கும். இக்கால மொழியியலாரிடையே இலக்கணத்தை வரையறுப்பதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் மொழியினை ஒழுங்கு படுத்த எண்ணிய அறிஞர் கண்ட அமைப்பு முறையே மரபு இலக்கணம் எனலாம்.

இலக்கணம் என்னும் தமிழ்ச்சொல் 'இலட்சணம்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு என்று சிலர் கூறுவர். ஆனால், வடமொழியில் 'இலட்சணம்' என்னும் சொல் குறிக்கும் பொருளைத் தமிழில் இலக்கணம் என்னும் சொல் குறிக்கவில்லை. தமிழில் இலக்கணம் என்னும் சொல் குறிக்கும் பொருளை உணர்த்த வடமொழியில் 'வியாகரணம்', 'சப்தசாத்திரம்' என்னும் சொற்களைப் பயன்படுத்துவர்.

தொல்காப்பியத்தில் 'இலக்கணம்' என்னும் சொல் காணப்படுகிறது. தமிழ் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பாகுபாடுகளையுடையதென்றும், இம்முத்தமிழுக்கும் முன்னோர் இலக்கணம் கண்டனர் என்றும், இன்று கிடைக்காத அகத்தியம் முத்தமிழ் இலக்கணம் என்றும் கூறுவர். ஆயின், இயற்றமிழ் இலக்கணமே இலக்கணம் என்னும் பெயர்க்குத் தனியுரிமை பூண்டதாய் விளங்குகிறது.

உரோம் நாட்டில் வாரோ (Varro) எழுதிய இலக்கண நூல் (De Lingina Latina) கிரேக்க இலக்கணத்தைப் பின்பற்றியது. குவிண்டலியன் (கி.பி. 35-90), தோனாட்டசு (கி.பி. 4-ஆம் நூற்.), பிரிசுகியன் (கி.பி. 6-ஆம் நூற்.) ஆகியோர் இலத்தீன் மொழி இலக்கணம் எழுதினர்.

வடமொழியில் இலக்கணம்: வடமொழியில் வேதத்தை மையமாகக் கொண்டு இலக்கண நூல் தோன்றியது. யாசுகரின் நிருத்தம் என்பதே மிகப் பழைய இலக்கணநூல் என்பர். அடுத்துப் பாணினியின் அட்டாத்தியாயி சிறந்த இலக்கண நூலாகக் கருதப்படுகிறது. இதனையடுத்துக் கார்த்தியாயனரின் வார்த்திகமும் பதஞ்சலியின் மாபாடியமும் இடம்பெறுகின்றன.

இத்தகைய உலக இலக்கண மரபில் எழுத்து, சொல், பொருள் என்னும் அமைப்பில் பொருளுக்கும் இலக்கணம் வகுத்தது புதிய மரபாகும். தமிழில் பொதுவாக ஐந்திலக்கணம் உள்ளதாகக் கூறப்படும். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன அவை. எழுத்து, சொல் இலக்கணங்கள் மொழி பற்றியவை; ஏனையவை இலக்கியம் பற்றியவை.

தமிழில் எழுந்துள்ள இலக்கண நூல்களை இரண்டாகப் பிரிக்கலாம். முதல் வகையுள் ஐந்திலக்கணமும் கூறுவனவும், இரண்டாம் வகையுள் தனித்தனி இலக்கணம் கூறுவனவும் அடங்கும்.

ஐந்திலக்கணம்: தமிழில் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்பனவாம்.

தொல்காப்பியமே தமிழ்மொழியில் கிடைக்கும் முதல் நூலாகும். அதனை ஐந்திலக்கணம் கூறும் நூல் என்பர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என மூன்றாகப் பகுக்கப்பட்டாலும், ஐந்திலக்கணம் மட்டுமன்றி அதற்கும் மேலாக மெய்ப்பாட்டைப் பற்றியும் அகராதி பற்றியும் நூலமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. வீரசோழியம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரரால் எழுதப்பட்டது. ஐந்திலக்கணம் என்னும் மரபில் எழுந்த முதல் நூல் இது என்பர். இலக்கண விளக்கம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வைத்திய நாத தேசிகரால் எழுதப்பட்டது. இது 'குட்டித் தொல்காப்பியம்' எனக் கூறப்படும். தொன்னூல் விளக்கம் கி.பி. 1730-இல் வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. முத்துவீரியம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உறையூர் முத்துவீரப்ப உபாத்தியாயரால் எழுதப்பட்டது. சுவாமிநாதம் 19-ஆம் நூற்றாண்டில் சுவாமிநாத கவிராயரால் எழுதப்பட்டது.

ஏனைய இலக்கண நூல்கள்: மொழியின் இலக்கணத்தை மட்டும் உரைப்பவை பிரயோகவிவேகம், நன்னூல், நேமிநாதம், இலக்கணக் கொத்து ஆகியவை. எழுத்து, சொல் இலக்கணங்களைக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பவணந்தியார் நன்னூலில் விளக்குகிறார். நேமிநாதம் சமண சமயத்தைச் சார்ந்த குணவீரபண்டிதரால் எழுத்து, சொல் இலக்கணங்களைச் சுருக்கி எழுதப்பட்ட

நூல். சின்னூல் என்றும் இது வழங்கப்படும். இலக் கணக் கொத்து வடமொழிக் கருத்தினைத் தொகுத்துச் சாமிநாத தேசிகரால் எழுதப்பட்டது. பிரயோகவிவேகம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வடநூலார் கொள்கையைப் பின்பற்றி எழுதப் பட்டது.

பொருளிலக்கணத்துள் அகப்பொருளுக்குரிய இலக்கண நூல்களாக இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், களவியற் காரிகை, மாறனகப் பொருள், தமிழ்நெறி விளக்கம் ஆகியவை தோன்றியுள்ளன. இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் எழுந்தன. அகப்பொருள் விளக்கம் என்னும் அகப் பொருளுக்குரிய இலக்கண நூல் நாற்கவிராச நம்பி யால் எழுதப்பட்டது. இறையனாரகப் பொருளை அடியொற்றி எழுந்தது இந்நூல். இதன் ஆசிரியர் சமண சமயத்தவர் என்று கருதுவர். இது அகத் திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழி பியல் என்று ஐந்து பகுப்புகளுடன் உள்ளது. இந் நூல் முதன்முதலாக 1901-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்டது. களவியற்காரிகை எசு. வையாபுரிப்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட அகப்பொருள் இலக்கண நூல். தமிழ்நெறி விளக்கம் (கி.பி. 12-ஆம் நூற்.) ஐந்திலக்கணம் கூறும் நூல் எனக் கூறப்பட்ட போதிலும், இன்று அந்நூல் கூறும் அகப்பொருள் இலக்கணம் மட்டுமே கிடைக்கிறது.

புறப்பொருள் இலக்கணம் கூறும் நூல்களாகப் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன கூறப்படும். பன்னிருபடலம் நூல் கிடைக்க வில்லை. புறப்பொருள் வெண்பாமாலை ஐயனாரி தனாரால் எழுதப்பட்டது. புறப்பொருள் இலக் கணத்தைக் கூறும் இலக்கிய மேற்கோளாக வெண் பாக்களையும் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. பன்னிரண்டு படலங்களையும் இறுதியில் ஒழிபியலையும் கொண்டுள்ளது. மாகறலூர்க்கிழார் சாமுண்டிதேவநாயகர் இந்நூலின் உரையாசிரியர் ஆவார்.

யாப்புப் பற்றித் தமிழில் பல நூல்கள் தோன்றி யுள்ளன. அவை யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியம், மாறன் பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, விருத்தப்பாவியல், அவிநயம், அமுதசாகரம், இந்திர காளியம், திருவலங்கல் திரட்டு முதலியனவாகும்.

யாப்பருங்கலம்: யாப்பிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்களுள் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல் முதல் நூலாக அமைகிறது. அமுதசாகரர் எனவும் அமிதசாகரர் எனவும் அழைக்கப்படுபவர் இதன் ஆசிரியர். இந்நூலின் விருத்தியுரை வாயிலாக அவிநயம், காக்கை பாடினியம், நாலடி நாற்பது, பல்காயம், மயேச்சுரர் யாப்புப் போன்ற பல யாப் பிலக்கண நூல்களின் சில நூற்பாக்களும் அவை பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன.

யாப்பருங்கலக்காரிகை: இந்நூல் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பிலக்கண நூல். யாப்பருங்கல ஆசிரியர் அமுதசாகரராலேயே எழுதப் பட்ட இந்நூற்கு உரை குணசாகரரால் எழுதப் பட்டுள்ளது.

காக்கை பாடினியம்: இந்நூல் 89 நூற்பாக் களைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியரான காக்கை பாடினியார் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கும் முற் பட்டவராவார். யாப்பிலக்கண நூல்களுள் இது சிறப்பிடம் பெறத்தக்கது. உரைகளில் மேற் கோளாகக் காட்டப்பட்ட நூற்பாக்கள் தொகுக்கப் பட்டுப் புலவர் இரா. இளங்குமரனால் 1947-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

காக்கை பாடினியாருக்குப் பின்னே அப்பெய ருடன் மற்றொருவரும் விளங்கினார். அவரும் யாப் பிலக்கணம் செய்தார். இருவருக்கும் வேறுபாடு விளங்கச் சிறுகாக்கை பாடினியார் எனப் பின்னவர் வழங்கப்பட்டார். அவரது நூல் சிறுகாக்கை பாடி னியம் என வழங்கப்பட்டது.

அவிநயம்: அவிநயனார் இந் நூலைத் தவிர, அவிநயனார் யாப்பு, அவிநயப்புறநடை, அவிநயனார் களவியல் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி. பி. ஐந்து முதல் ஆறாம் நூற் றாண்டு என்பர். அமுதசாகரம் ஆசிரியர் அமுதசாக ரர். இந்திரகாளியம் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. திருவலங்கல் திரட்டு பாம்பன் சுவாமிகளால் பாடப் பட்டது.

யாப்புப் பற்றியும் இலக்கிய வகைகள் பற்றியும் கூறும் பாட்டியல் நூல்கள் தமிழில் தோன்றின. அவை பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், பிரபந்த மர பியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்த தீபிகை முதலி யன ஆகும். பன்னிரு பாட்டியல் ஆசிரியர் தெரிய வில்லை. இதனைக் கி.பி. 17-ம் நூற்றாண்டிற்கு முற் பட்டதாகக் கூறுவர். இது இலக்கிய வகை பற்றிக் கூறுகிறது. இந்நூல் எழுத்துகளை வருண அடிப் படையில் பகுப்பது புதியதாகும்.

வெண்பாப்பாட்டியல் ஆசிரியர் குணவீர பண்டிதர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

வெண்பா யாப்பால் ஆன இந்நூலில் 103 வெண்பாக்கள் உள்ளன.

நவநீதப்பாட்டியல் நவநீதநடன் என்னும் வைணவரால் இயற்றப்பட்டது. கலித்துறை யாப்பால் ஆன இந்நூல் 'கலித்துறைப் பாட்டியல்' எனவும் பெயர் பெறுகிறது.

வரையறுத்த பாட்டியல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'சம்பந்தப் பாட்டியல்' என்றும் இது சொல்லப்படும். மங்கலப் பொருத்தத்தினை மட்டுமே இது வரையறுப்பதால் இப்பெயர் பெற்றது.

பிரபந்த மரபியல் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். இதன் ஆசிரியர் இன்னார் என்பது தெரியவில்லை. பிரபந்த தீபிகை, பாப்புவையர் எனப்படும் முத்துவேங்கடசுப்பையரால் பாடப்பட்டது. இந்நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சிதம்பரப்பாட்டியல் பிற பாட்டியலிலிருந்து வேறுபட்டது. இது பரஞ்சோதியாரால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

தமிழில் அணியிலக்கணம் பற்றிய நூல்கள் தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம் முதலியன ஆகும். தண்டியலங்காரம் வடமொழி அலங்கார நூலை மொழிபெயர்த்துத் தண்டி என்பவரால் எழுதப்பட்டதாகும். இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மாறன் அலங்காரம் திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் எழுதப்பட்டது. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குவலயானந்தம் என்பதன் நூலாசிரியர் மாணிக்கவாசகர் ஆவார். இந்நூல் 299 நூற்பாக்களைக் கொண்டது; வடமொழி நூலை முதல்நூலாக உடையது. இந்த அணியிலக்கண நூல் வடமொழி நூலான குவலயானந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதனைச் சங்கரநாராயண சாத்திரிகள் என்னும் வடமொழி அறிஞர் மொழிபெயர்த்துள்ளார். சந்திராலோகம் என்பது வடமொழித் தனிநூலாகிய சந்திராலோகத்தின் மொழிபெயர்ப்பாகும். இது முத்துசாமி ஐயங்காரால் இயற்றப்பட்டது. இது 1909-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் பதிப்பிக்கப்பட்டது.

ஐந்திலக்கணத்தோடு புலமை இலக்கணத்தையும் சேர்த்து அறுவகை இலக்கணம் என்னும் பெயரில் தண்டபாணி சுவாமிகள் ஓர் இலக்கண நூல் எழுதியுள்ளார். ஏழாம் இலக்கணமும் அவரால் எழுதப்பட்டதென்பர். தண்டபாணி சுவாமிகளின் வண்ணத்தியல்பு, குலாம்காதிறு நாவலரின் பொருத்த விளக்கம், ஸ்ரீனிவாசராகவாசாரியாரின் யாப்பொளி ஆகியவை இக்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்கள்.

இலக்கண நூல்கள் மட்டுமன்றி இலக்கண உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர், ஆறுமுகநாவலர், இராமானுசக் கவிராயர், சடகோப இராமானுசாச்சாரியார், களவியலுரைகாரர் ஆகியோரும் மூல இலக்கண நூல்கள் பல தோன்ற முன்னோடிகளாய் அமைந்துள்ளனர். யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், களவியற்காரிகை, வீரசோழியம், நேமிநாதம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய சான்றோர்களும் உரையாசிரியர் வரிசையில் குறிப்பிடத் தக்கவர்கள்.

தமிழில் காலந்தோறும் மொழியின் வளர்ச்சிக்கேற்ப இலக்கண நூல்கள் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன. வழாநிலைகளும் வழுவமைதிகளும் சமுதாய வளர்ச்சிக்கேற்ப மொழியினையும் இலக்கியத்தையும் ஓரளவு நெகிழ்ந்து கொடுக்கச் செய்யும் வகையில் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன.

தமிழிலக்கண வளர்ச்சியில் சமணசமயத்தாருக்கும் பிற சமயத்தாருக்கும் பெரும் பங்குண்டு. கிறித்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பும் சமய அறிஞர்களுக்கென்று பற்பல இலக்கணங்களை எழுதினர். வீரமாமுனிவர் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழிலக்கணம், கிளாவிசு என்னும் இலக்கண நூல் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

தொல்காப்பியரது உரியியலைப் பின்பற்றித் தமிழில் எழுந்த நிகண்டுகளும் அகராதிகளும் குறிக்கத் தக்கவையாகும்.

தமிழ் இலக்கணம் மொழி, இலக்கிய மரபுகளைக் காக்கும் வேலிகளாகப் பயன்பட்டு வந்துள்ளன. ஒருசில வெறும் பழமைச் சின்னங்களாக மட்டுமே கருதப்படும் நிலையும் காணப்படுகிறது. நா.செ.

## இலக்கணம் சிதம்பரநாத முனிவர்

சிவஞான முனிவரின் மாணவர்; திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம் பாடியவர்; சீர்காழி ஆலயப் பொறுப்பில் இருந்தவர். இவரோடு கல்வி கற்ற பெரியவர் தில்லையாடி அருணாசலக் கவிராயர். அவர்பால் முனிவர் மிகுந்த மதிப்பும் நட்பும் கொண்டிருந்தார். ஒருமுறை வணிகத்தின் பொருட்டுக் கவிஞர் சீர்காழிக்கு வந்தபோது, கட்டளை விசாரணையில் சுவாமிகள்

இருத்தலை அறிந்து களிப்படைந்தார். சீர்காழி மீது ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கி முடிவுறாதிருக்கிறது; அதனை முடித்துத் தரவேண்டும் என்று முனிவர் கவிராயரிடம் கேட்டதாகத் தெரிகிறது. அதனால் முனிவரும் புலமையுடையவர் எனலாம். கவிராயர் நண்பர் விரும்பியவாறே பிரபந்தம் பாடி முடித்தார். அதனை ஒருவரிடம் கொடுத்தனுப்பி விட்டு வெளியூர் சென்று விட்டார். கவிராயரை எவ்வாறேனும் தம்முடன் தங்கவைக்க வேண்டும் என்று முனிவர் விரும்பினார். சீர்காழியில் ஒரு வீடு தேர்ந்து, கவிராயரின் குடும்பத்தை வரவழைத்து அதிற்குடியமர்த்தினார். வெளியூர் சென்று வந்த கவிராயர் தம் குடும்பம் சீர்காழியில் இருப்பதை அறிந்து வியந்தார். அந்த அளவிற்குத் தனிப்பற்றும் பேரன்பும் கொண்டு திகழ்ந்தவர் சிதம்பரநாத முனிவர். முனிவர் விரும்பியவாறே காழிப்பள்ளு, காழியந்தாதி, காழிப்புராணம் போன்ற நூல்கள் உருவாயின. இராமாயணக் கீர்த்தனை முனிவர் ஆதரவில் தோன்றியதா அன்றா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருந்தாலும் கி.பி. 1712-முதல் 1779 வரை வாழ்ந்த அருணாசலக் கவிராயரின் அன்புக்குரிய நண்பர் இவர் என்று தெளிவாகக் கூறலாம்.

தே.ஆ.

**இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான்** சீர்காழித் தேவத்தானத்தில் கட்டளை விசாரணையாக இருந்து பணியாற்றியவர். சீர்காழித் தல வரலாறு என்னும் பெயருடன் 1942-இல் வெளிவந்த நூல் இவரது முகவுரையோடு அமைந்தது. சிவஞானபோத மாபாடியம் இவரது குறிப்புரையுடன் 1921-இல் அச்சேறியது. அக் குறிப்புரையின் சிறப்பை நோக்கும்போது, இவர் சித்தாந்த நூல்களில் புலமை மிக வுடையவர் என்பது தெரிகிறது. தருமபுரத்தில் மெய்கண்டார் சித்தாந்த மாநாடும் திருமுறைத் திருநாளும் 1941 ஆவணித் திங்களில் நடைபெற்றது. அந்நாள் கருத்தரங்கச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து நூலாக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப் பட்டது. தருமைக் கல்லூரி 1948-ஆம் ஆண்டில் தோன்றியபோது அக்கல்லூரியில் இவர் ஆசிரியராகப் பொறுப்பேற்கவில்லை என்றாலும் தண்டியலங்காரம், நன்னூல், யாப்பு முதலிய இலக்கணப் பாடங்களைச் சிறப்பு வகுப்பு என்ற முறையில் மாணவருக்குக் கற்பித்து வந்தார். எனவேதான் இவரை இலக்கண சுவாமிகள் என்றழைப்பது வழக்கமாயிற்று. கல்லூரியில் இங்ஙனம் மூன்றாண்டுகள் சிறப்பு வகுப்பு நடத்திய தம்பிரான், இறுதியில் ஆதீனத்தின் ஆதரவில் இருந்தார் என்பதைவிட அறிஞர் பலரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார் என்பது பொருத்தமாகும். அந்த அளவிற்கு அறிஞர் பலருடைய நட்பு இவருக்கு இருந்தது. இவர்தம் இலக்கணப் புலமையும் இனிய நட்பும் பதிப்பாசிரியர்ப் பணியில் மேற்கொண்ட தமிழ்ப் பற்றும் பாராட்டிற்குரியவை.

தே.ஆ.

**இலக்கண மாற்றம்** என்பது இலக்கண அமைப்பின் ஒரு பகுதியாகிய இலக்கண மையத்தில் (Grammatical core) காலப்போக்கில் ஏற்படும் மாற்றம் ஆகும். இலக்கண அமைப்பு என்பது மொழியின் அக அமைப்புப் பிரிவுகளாகிய ஒலியனியல் அமைப்பு (Phonological system), இலக்கண அமைப்பு (Grammatical system), உருபொலியனியல் அமைப்பு (Morphophonemic system) என்ற மூன்றனுள் ஒன்று.

சொல்வகை (Parts of Speech), சொற்றொடர்கள் (Constructions), இலக்கணக் கூறுகள் (Grammatical categories), செயலிகள் ஆகிய உட்கூறுகளால் அமையப்பெற்றது இலக்கண மையம் ஆகும். இலக்கண மையத்தின் இந்த உட்கூறுகளில் ஏற்படும் மாற்றமே இலக்கண மாற்றமாகக் (Grammatical change) கருதப்பெறும்.

பழந்தமிழில் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள் வேற்றுமையாகச் செயற்பட்டது. பிற்காலத்தில் இது நீங்கற்பொருள் வேற்றுமையாகச் செயற்பட்டு வருகிறது. இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகிய வேற்றுமையில் ஏற்படும் மாற்றம் இவண் இலக்கண மாற்றமாகக் கருதத்தக்கது. மேலும், படர்க்கைப் பலர்பால், இக்காலத் தமிழில் ஆண்பால் பன்மை (அவனுக), பெண்பால் பன்மை (அவளுக) என வழங்கப்பெறுவதும் இலக்கண மாற்றத்தின் பாற்படும்.

வடமொழியிலிருந்து 'காரன்' என்னும் விகுதி கடன் வாங்கப்பெற்று 'வீட்டுக்காரன்', 'தோட்டக்காரன்' எனப் புதிய ஆக்கச் சொற்கள் தமிழில் வழங்குகின்றன. செயலிகளின் ஒரு உட்கூறாகிய 'காரன்' என்னும் சொல்லாக்க விகுதியைப் (Derivational suffix) பயன்படுத்திப் புதிய சொல்லாக்கம் அமையப்பெறுவதும் இலக்கண மாற்றமாகும். ஏ.ஆ.

**இலக்கண விளக்கச் சூறாவளி** என்பது சிவஞான முனிவர் இயற்றிய ஒரு மறுப்பு நூலாகும். தொல்காப்பியத்தைப் பின்பற்றித் தோன்றிய இலக்கண நூல்களுள் 'இலக்கண விளக்கம்' என்பதும் ஒன்று. இதனை இயற்றியவர் வைத்தியநாத தேசிகர். இந்நூலுக்கு மறுப்பாக எழுந்ததே 'இலக்கண விளக்கச் சூறாவளி' இலக்கணம், சமயம் ஆகிய

நுறைகளில் ஒருவர் சொல்லிய கருத்தை மறுத்து ரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் 'சூறாவளி', 'சண்ட மாருதம்' முதலியனவாகும். இந் நூலாசிரியர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர்; 'திருவாவடுதுறை ஆதீனம் தந்த தமிழ்ச் செல்வம்' எனப் போற்றப் பெறுபவர். நுண்மாண் நுழைபுலமிக்க இவர் மறுப்பெழுதுதலிலும் நிகரற்றவராய் விளங்கினார். 'இலக்கண விளக்கச் சூறாவளி' எழுந்ததற்குப் பின்வரும் காரணம் சொல்லப்படுகிறது.

'இலக்கண விளக்கம்' இயற்றிய வைத்தியநாத தேசிகர் தரும புர ஆதீனத்தைச் சேர்ந்தவர். எனவே இவரெழுதிய இந்நூலினைத் தாழ்வுபடுத்த விரும்பிய திருவாவடுதுறை ஆதீனத்தார், சங்கரநமச்சிவாயரைக் கொண்டு நன்னூலுக்கு ஒரு விருத்தியுரையும், மாதவச் சிவஞான முனிவரைக் கொண்டு இலக்கண விளக்கச் சூறாவளியும் எழுதுவித்தனர் என்பது கூறப்படுகிறது. ஆதீனங்களுக்கிடையே நிகழ்ந்த உயர்வு தாழ்வுப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ் இலக்கண உலகில் புதியதொரு மறுப்பு நூல் தோன்றியது எனலாம்.

ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவர் சைவ சித்தாந்த சாத்திர நூலாகிய சிவஞானபோதத்திற்கு மாபாடியம் கண்டது போல், இலக்கண நூல்களுக்கும் விரிவான உரை விளக்கம் செய்துள்ளார். அத்தகைய நூல்களுள் சிறப்புடையன நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி என்பனவாகும்.

இம்மறுப்பு நூல் அளவில் சிறிதேயாயினும் பொருளில் மேம்பாடுடையது. இது இலக்கண விளக்கத்திலுள்ள எழுத்து, சொல் என்னும் இரண்டு அதிகாரங்களிற் காணப்படும் குற்றங்களை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. முற்பகுதியில் நாற்பத்திரண்டும் பிற்பகுதியில் நாற்பதுமாக எண்பத்திரண்டு இடங்களில் இவரது மறுப்புரை காணப்படுகிறது.

மறுப்பின் பல்வேறிடங்களில், 'தொல்காப்பியப் பாயிர விருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டு காண்க' என்று சுருக்கமாகக் கூறுதல் இவரது இயல்பு. ஆசிரியர் தொல்காப்பியனார்பால் அளவிறந்த ஈடுபாடும் மதிப்பும் கொண்டவர் இவர் என்பதனைத் 'தொல்காப்பியனார் வரைந்தோதியிருப்ப'; 'ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங் கருத்து' என்று கூறுவன கொண்டு தெளியலாம். இவரது மறுப்புரையை ஊன்றி நோக்கினால், நன்னூலார், பரிமேலழகர், சேனாவரையர் ஆகியோரிடத்து இவர் கொண்டுள்ள பற்றுப் புலனாகும்.

அவரறிந்திலர் போலும்; தமக்குத் தோன்றிய வாறே உரைத்தார்; பயனில் கூற்றாமென்க; வழுவா மாறறிக; பழுதுபடக் கூறினார்; நூல்திறனறியாமையி னென்க; அது போலியுரை யென்க என்றெல்லாம் வைத்தியநாததேசிகரைப்பொதுவாக மறுத்துரைக்கும் இவர், இங்ஙனம் முன்னொடு பின் மயங்கக் கூறுதல் அவரியல்பென்க, அவருக்கு மயக்கமு மறவியும் இயல் பென்றற் கிதுவே சான்றாத லறிக; தொல்காப்பியத்திற் கிடந்தவாறே படியெடுத்தெழுதித் தமதறியாமையை விளக்கினாரென வறிக என்னுங் கடுஞ் சொற்களால் அவரைச் சாடவுஞ் செய்கிறார்.

வைத்தியநாத தேசிகர் கூறியன பலவும் குற்றமுடையன என்பது முனிவர் கருத்து. ஒவ்வொன்றையும் ஆராயப் புகுந்தால், இச் சூறாவளி விரிந்து செல்லுமாதலின் விரித்துரைக்கவில்லை என்ற பொருளில், 'இன்னுமிவ்வியல் (பதவியல்) முழுவதினும் இவர் கூறியவற்றுட் குற்றங்களை விரிக்கப் புகின், விளையாட்டு மகளிரட்ட மணற் சோற்றிற் கல்லாராயப் புகுதலோ—டொக்கு மென்றொழிக!' எனக் கூறிச் செல்கிறார்.

இலக்கண விளக்கப் பெயரியலில் வரும் 'உயர்திணை என்மனார்' என்னும் நூற்பாவில், 'திணை என்பது ஒழுக்கம்' என்று கூறிப் போந்தார் வைத்தியநாத தேசிகர். இதனைச் சிவஞான முனிவர் 'திணை யென்பது சாதி என்றார். அஃறிணையு ளுயிரில்லன வற்றிற்கு ஒழுக்கமின்மையின் அது பொருளன்று. இவை யுயர் சாதி, இவை யிழிசாதியென உலகத்துப் பொருளையெல்லாம் இருவகைச் சாதியாய்ப் பகுத்துக் கூறலே ஆசிரியர் கருத்தாகலானும், திணை யென்னும் பல பொருளொரு சொல் ஈண்டுச் சாதியுணர்த்தி நின்றதெனக் கொள்க!' என்றுரைத்து மறுத்துள்ளார்.

இங்ஙனம் இவர் கூறும் மறுப்புரை கற்றுவல்ல புலவர்க்குப் பெருவிருந்தாயமைதல் கூடும். எனினும் இவர் எழுதிய மறுப்பு நீதியற்றது என்று கருதியவர்களும் இருந்தனர் என்பதைச் சி.வை. தாமோதரம் பிள்ளை, 'இலக்கண விளக்கச் சூறாவளியென்று ஓர் அநியாய கண்டனம்' என்று கூறுவது கொண்டு தெளியலாம்.

ச.சா.

**இலக்கண விளக்கம்** ஐந்திலக்கணங்களையும் விளக்கிக் கூறும் தமிழ் இலக்கண நூல். இதன் ஆசிரியர் வைத்தியநாத நாவலர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருவாரூரைச் சேர்ந்தவர். தொல்காப்பியப் பயிற்சி குறைந்து வந்த போது, அந்நெறியைத் தெளிவுபடுத்தி யாவரும்

எளிதில் உணரும் வகையில் இந்நூலை இவர் இயற்றினார். மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் விளங்கிய தலைவரும் சிறந்த புரவலரும் புலவரு மாகிய மாதைத் திருவேங்கடநாதன் என்பார் வேண்டிக்கொள்ள, இவர் இந்நூலை இயற்றினார். இந்நூலின் சிறப்புணர்ந்த அறிஞர் இதனைக் 'குட்டித் தொல்காப்பியம்' என்று போற்றுவாராயினர்.

இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாக ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரமும் தனித்தனி ஐந்து இயல்களைக் கொண்டது. இந்நூல் நூற்பா யாப்பினால் ஆகியது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் ஆகிய இயல்களை 158 நூற்பாக்களாலும், சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல், பொதுவியல் ஆகிய இயல்களை 214 நூற்பாக்களாலும் விளக்குகின்றன. பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் ஆகிய இயல்களை 569 நூற்பாக்களால் கூறுகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிகளாகிய செய்யுளியலும் உவமவியலும் காலப்போக்கில் வளர்ச்சியுற்று யாப்பு, அணி எனத் தனித்த பிரிவுகளாகித் திகழலாயின. இதனால் 'ஐந்திலக்கணம்' எனக் கூறும் மரபு தோன்றியது. இந்த நிலையில் உருவாகிய இந்நூல் ஐந்திலக்கணங்களையும் கூறிய போதிலும் யாப்பு, அணி ஆகியவற்றைத் தொல்காப்பியம் போலப் பொருளதிகாரத்திலேயே அடக்கிக் கூறுகிறது. இந்நூலின் எழுத்து, சொல் ஆகிய அதிகாரச் செய்திகள் தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றையும், பொருளதிகாரத்தமைந்த அகத்திணையியல் நம்பியகப்பொருள், இறையனாரகப் பொருள் ஆகியவற்றையும், புறத்திணையியல் புறப்பொருள் வெண்பாமாலையையும், அணியியல் தண்டியலங்காரத்தையும், செய்யுளியல் யாப்பருங்கல விருத்தியையும், பாட்டியல் இதற்கு முன்தோன்றிய பாட்டியல் நூல்களையும் தழுவி அமைக்கப்பட்டுள்ளன. இந்நூல்களின் கருத்திற்கு மாறாகப் புதிய கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் தொல்காப்பியம், நன்னூல் போன்ற முன்னூல்களிலுள்ள நூற்பாக்கள் சிலவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டும், சில நூற்பாக்களைச் சிறிது மாற்றம் செய்து ஏற்றுக் கொண்டும் அமைந்துள்ளது. எழுத்திலக்கணம் கூறும் நூல்கள் பலவும் சார்பெழுத்துகளின் தொகை கூறுவதில் மாறுபடுகின்றன. இந்த நூல் சார்பெழுத்துகள் 240 என்று வகுத்துள்ளது. இந்த எண்ணிக்கையை உடன்பட்டே, தமிழ் விடுதூதின் ஆசிரியர், தமிழைக் குறிப்பிடும் போது, 'சார்பு இருநூற்று நாற்பதெழுத்தாய் நனி சிறந்தாய்' என்று கூறியுள்ளார்.

இந்நூலாசிரியராகிய வைத்திய நாத தேசிகரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். இந்நூலின் அணியியலிலுள்ள சொல்லணிகள் பற்றிய பகுதியும் பாட்டியல் பகுதியும் அவற்றின் உரைகளும் இந்நூலாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்பது கூறப்படுகிறது. சொல்லணிப் பகுதி இந்நூலாசிரியரின் முதல் மகன் சதாசிவ தேசிகராலும், பாட்டியற் பகுதி இந்நூலாசிரியரின் இரண்டாம் மகன் தியாகராச தேசிகராலும் இயற்றப்பட்டன என்னும் செய்தி, 'பொன்மலை நின்று தென்மலை யுற்ற' எனத் தொடங்கும் இந்நூற் பதிகத்தால் புலனாகிறது. இவ்விரு பகுதிகளும் நூலாசிரியரின் குடும்பத்தவரால் எழுதப்பெற்றன வாயினும், இவற்றையும் சேர்த்தே 'இலக்கண விளக்கம்' என்னும் இந்நூல் நிறைவுறுகிறது. மற்றவர்கள் எழுதிய பகுதிகளும் இடம்பெற்றபோதிலும் இந்த நூலின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் என்றே பொதுவாகக் கூறப்படுகிறது.

இந்நூலை யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கி.பி. 1889-ஆம் ஆண்டில் முதன் முதலாக வெளியிட்டுள்ளார். தஞ்சையிலுள்ள சரபோசி மன்னரின் சரசுவதி மகால் நூலகம் இந்நூல்முழுவதையும் பல ஆய்வுக் குறிப்புகளோடு வெளியிட்டுள்ளது; தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும் பதிப்பித்துள்ளனர்.

இந்நூலாசிரியரின் காலத்தில் விளங்கிய சிவஞான முனிவர் இந்நூற் கருத்துகள் பலவற்றை, அவற்றின் பொருந்தாமையினை எடுத்துக் காட்டி மறுத்து, 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் மறுப்பு நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

**இலக்கணை** என்பது ஒரு பொருளைக் காட்டற்குரிய சொல்லை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது ஆகும். பொதுவாகச் சொல் ஒன்று பொருள் இரண்டாகக் கூறப்படுவதை இலக்கணை என்று கூறலாம். சொல் குறிப்பாக ஒரு பொருளையும் வெளிப்படையாக ஒரு பொருளையும் சுட்டக் கூடியது. இலக்கணை என்னும் சொல்லைப் பிரித்துக் கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ளலாம்.

இலக்கணை என்பதை இலக்கு, அணை என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு கூட்டுச் சொல்லாகக் கொண்டால் மட்டுமே இவ்விளக்கம் பொருந்தும். கழகத் தமிழகராதியில் இலக்கு என்னும் சொல்லிற்கு இலட்சியம் என்றும் குறிப்புப்பொருள் என்றும்

நாடிய பொருள் என்றும் பொருள் தரப்பட்டுள்ளது. அணை என்பதற்குப் பல பொருள் தரப்பட்டிருப்பினும், அது இலக்கு என்பதுடன் சேர்ந்து கரை, பாலம் முதலிய பொருளைத் தருவதாக அமைகிறது. ஆக, 'இலக்கணை' என்பது ஒருவன் அல்லது ஒரு கவிஞன் தான் நாடிய பொருளை அல்லது குறிக்கோளாக-இலட்சியமாகக் கொண்ட பொருளை வெளிப்படையாகக் கூறாமல் அதனைத் திசை திருப்பிக் குறிப்பாக மற்றொரு பொருளின் மீது ஏற்றிக் கூறுவது எனலாம். 'அணை' என்ற சொல்லை இலக்கு என்ற சொல்லுடன் சேர்த்து இலக்கணை என்று சொல்லியிருக்க வேண்டும். காரணம், அணை (கரை) என்பது நீரோட்டம் மிகுந்த நதி அல்லது ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டு, நதியின் இயல்பான ஓட்டத்தைத் தடுத்து, அதைத் திசை திருப்பி அல்லது குறைத்து விடுவதாகும். அதுபோலக் கவிஞன் ஒருவன் தான் இயல்பாகக் கூறவந்த ஒரு பொருளைக் காட்டக்கூடிய சொல்லைக் கூறாமல், அச்சொல்லைத் திசை திருப்பி மற்றொரு பொருளுக்குத் தந்துரைக்கிறான்.

வடநூலார் சொற்பொருளை வாக்கியம், வியங்கியம், இலக்கணை என மூன்று வகையாகக் கூறுவர். இலக்கணையை வியங்கியத்துள் அடக்கிச் சொற்பொருள் இரண்டெனவும் கூறுவர். வாச்சியம் என்பதுவெளிப்படையாகப்பொருளைக்கூறுவது. ஆனால், வியங்கியம் என்பது குறிப்பாகப் பொருளைக்கூறுவது. இலக்கணை என்பதோ ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருளினுக்குத் தந்துரைப்பது என்பர். இதை விட்டஇலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூன்று வகைப்படுத்துவர். தே.ச.

**இலக்கியத் திறனாய்வு:** வாழ்க்கையைப் படித்த கலைஞனின் அனுபவ வெளிப்பாடு இலக்கியம். இலக்கியத்தைப் படித்த திறனாய்வாளனின் அனுபவ வெளிப்பாடு திறனாய்வு. நுண் கலைகளுள் சிறப்பு மிக்கது இலக்கியம். அது படிக்குந்தோறும் இன்ப நுகர்ச்சியைப் படிப்பவரிடம் ஏற்படுத்துவது; சிந்தனையைத் தூண்டிவிடுவது; உணர்வுக்கு இடமாவது; வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் தருவது. இன்புறுத்தலும் அறிவுறுத்தலும் இலக்கிய நோக்கம். இதனைக் கண்டறிவதே ஆய்வின் நோக்கம்.

இலக்கியம் பிறந்த போதே திறனாய்வும் பிறந்துவிட்டது. இப்படிச் சொல்லியிருப்பதைவிட இப்படிச் சொல்லியிருக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்ட போதே திறனாய்வு தோன்றிவிட்டது என்பர்.

திறனாய்வு சொல் விளக்கம்: திறனாய்வு என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லான 'Criticism'என்பது 'Kritiks' என்னும் கிரேக்கச்சொல்லிலிருந்து வந்ததாகும்.இதன்பொருள்ஒரு படைப்பைப்பகுத்துப்பார்த்து அது பற்றித் தீர்ப்புச் சொல்வது ஆகும். திறனாய்வு, விமரிசனம் என்பன ஒரு பொருட் சொற்கள். பின்னது வடமொழியினின்றும் பெறப்பட்டது. பழந்தமிழ் நூல்களில் விமரிசனம், விமரிசம் என்னும் சொற்களைக் காண முடிகிறது. விமரிசனம் என்னும் சொல் பிரித்தல் எனப் பொருள்படும். திறனறிதல் என்ற சொல்லாட்சியும் உண்டு. 'திறனறிந்து சொல்லுக', 'திறனறிந்தான் தேர்ச்சித் துணை' (குறள் 644,635) 'திறவோர் காட்சியில் தெளிந்தனம்' (புறம். 102) போன்ற வழக்காறுகள் தமிழில் இருப்பினும், திறனாய்வு என்னும் சொல் புதிய வழக்கேயாகும்.

இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு இவை மூன்றும் ஒன்றையொன்று தழுவி அமைந்தவை. ஒன்றை அறிய மற்ற இரண்டின் துணை இன்றியமையாததாகும். இலக்கியப் படைப்புகளை அவை தோன்றிய கால வரிசையில் கூறிச் செல்வது இலக்கிய வரலாறு. ஒரு கால நிலையில் தோன்றிய படைப்புகளை ஆராய்ந்து, சில பொது விதிகளை வகுப்பது இலக்கியக் கொள்கை. தொல்காப்பியர் ஓர் இலக்கியக் கொள்கையர் ஆவார். அகப்பாடல்களில் தலைவன் தலைவியரின் இயற்பெயர் சுட்டிக் கூறக் கூடாது என்பது அவர் கண்ட இலக்கியக் கொள்கைகளுள் ஒன்று. ஓரிலக்கியத்தின் தனித் தன்மைகளை (Individualities) ஆராய்ந்து மதிப்பிட்டு முடிவு கூறுவது இலக்கியத் திறனாய்வு. மேல்நாட்டுத் திறனாய்வாளர் ஆபர் குரோம்பி இலக்கியத் திறனாய்வைப் பொதுவாக இலக்கியங்களைப் பற்றியது (Theory of Literature), குறிப்பிட்ட இலக்கியத்தைப் பற்றியது (Criticism Proper) என இரண்டாகப் பிரித்துக் காட்டிப் பின்னதே சிறப்புடையது என்பர்.

திறனாய்வின் பணிகள்: திறனாய்வு என்பது ஒன்றன் திறத்தை (நிறை குறைகள்) அறிவது எனப் பொருள்படும். இலக்கியப் படைப்பின் நோக்கங்கள் பலவாகும். படைப்பாளி 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்திலோ வாழ்க்கைக்கு உதவுங் கருத்திலோ இலக்கியத்தினைப் படைக்கலாம். எனவே, எடுத்துக் கொண்ட இலக்கியப் படைப்பை அணுகுவதற்கான நெறிகளை வகுப்பதே திறனாய்வின் தொடக்கப் பணியாகும். திறனாய்வு படைப்பின் நோக்கத்தை வெளிப்படுத்தும்;படைப்பாளியின்தனித்தன்மைகளைச்சான்றுகளுடன் எடுத்துக்காட்டும்; படைப்பாளிகளின் விருப்பத்

திற்கேற்பவும் அவனை மீறியும் நூலிற் காணும் கருத்துகளை, சிறப்புகளை, குறைபாடுகளை நுணுகி ஆராய்ந்து புலப்படுத்தும். மேலும் அது இலக்கியம் தன்னுடைய குறிக்கோளை உணர்த்துவதில் வெற்றி பெற்றிருக்கிறதா என்பதனையும் எந்த அளவுவெற்றி பெற்றுள்ளது என்பதையும் மதிப்பிடும்; இலக்கிய அழகையும், அதன் அடிப்படையினையும் சுட்டிக் காட்டி இலக்கிய நுகர்ச்சியை மேம்படுத்தும்; படிப்ப வனைச் சுவைஞன் ஆக்கும்.

ஓர் இலக்கியப் படைப்பின் மையமான கருத்து அல்லது வாழ்க்கை நோக்கம், பல்வகைச் சுவைகள், ஆகியவற்றை அந்தப் படைப்பு வெளிப்படுத்தும்; உத்திச் சிறப்பு, மொழித்திறன், நூலின் தனித்தன்மை, தற்காலிகத் தன்மை, காலத்தால் அழியாத கூறுகள், நூல் இலக்கிய உலகில் பெறும் இடம் ஆகிய அனைத்தையும் திறனாய்வு வெளிப்படுத்தும். எனவே, திறனாய்வு என்பதனைக் கலைப் படைப்புகளை முழுமையாக விளக்கித் தெளிவாக்கி அழகுணர்வுகளைச் செம்மைப்படுத்தும் சிறந்த பணி எனலாம். சுருங்கச் சொன்னால் ஓர் இலக்கியத்தைப் பகுத்தல்(Analysis), விளக்குதல் (Interpretation), நலம் பாராட்டுதல் (Appriciation), மதிப்பிடுதல் (Evaluation), முடிவு கூறுதல் ஆகியன திறனாய்வாகும். எனவே, ஒரு படைப்பை நடுநிலை நின்று, அறிவு நிலையில் மதிப்பிட்டு எவை எவை சிறப்புக் கூறுகள், எவை எவை வீழ்ச்சிக் கூறுகள் எனக் கண்டறிந்து, காரணங்களுடன் அப்படைப்பின் மதிப்பையும்(Value)அது பெறும் இடத்தையும் (Rank) எடுத்துக் கூறுவது திறனாய்வின் முடிந்த பணியாகும்.

திறனாய்வும் திறனாய்வாளரும்: இலக்கியம் மகிழ்ச்சி தரும் பொழுது போக்குச் சாதனம் மட்டும் அன்று; வாழ்க்கை வழிகாட்டியுமாகும். எனவே, இன்றைய வாழ்க்கைக்குரிய அறிவியற் சாதனங்கள், அவற்றின் இயக்கம் ஆகியவற்றைப் பற்றிய அறிவு திறனாய்வாளருக்கு இன்றியமையாத் தேவையாகும். சான்றாக, கணிப் பொறியை மையமாக வைத்துப் புனைகதைகள் எழும் காலத்தில் கணிப்பொறி பற்றிய அறிவு ஆய்வாளனுக்கு அமைதல் வேண்டும். இலக்கிய மரபுகள், கொள்கைகள் ஆகியவை நாட்டுக்கு நாடு மொழிக்கு மொழி மாறுபடும். திறனாய்வாளர் இம்மரபுகளை நன்கு உணர்ந்தவராக இருக்க வேண்டும். உண்மை, தன்மை, நன்மை, அழகு என்பன தமிழ் இலக்கிய மரபு என்பதை உணர்ந்து இலக்கிய மதிப்பீடுசெய்ய வேண்டும். அளவுகோல் தவறானால் முடிவுகள் பிழையாகும். ஒரு நூலினை அந்த நூல் அளவில் நின்று ஆராய்வது சிறப்பான திறனாய்வாகாது. ஒப்பீடு செய்யும் போதுதான் உண்மை முழுமை பெறும்; வலிமையுறும். எனவே, ஆய்வாளர் நிரம்பிய இலக்கியப் பயிற்சி உள்ளவராக விளங்க வேண்டும். மேலும் வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், மானிடவியல், அரசியல், உளவியல், அழகியல் போன்ற பல்துறை அறிவும் ஓரளவு உடையவராக இருந்தால் ஆய்வு மிகுதியும் பாராட்டப் பெறும்.

திறனாய்வாளன் தெளிந்த சிந்தனையாளனாக இருந்தால் இலக்கியத்தைப் பலநிலைகளில் ஊடுருவி அணுகலாம். அதனால், ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காணமுடியும். படைப்பின் முதன்மைத் தன்மைகளைப் பிரித்து விளக்க இயலும். நிலையான கூறுகள் இவை, நிலையற்ற கூறுகள் இவை என வகுத்துக் காட்டலாம். மறைந்துள்ள உண்மையை வெளிப்படுத்திக் குறிப்பாக உள்ளதை விளக்கப்படுத்த முடியும். படைப்பின் நீதிகளைத் தெளிவுபடுத்தலாம்; நூலின் பல விரிவுகளிடையே ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பினையும் விளக்கலாம். திறனாய்வாளன் பன்னூற் புலமையும் பன்மொழி அறிவும் உடையவனாக இருத்தல் சிறப்பு; ஒப்பிட்டு மதிப்பிட முன்னது உதவும்; ஒரே காலத்தில் வெவ்வேறு மொழி இலக்கியப் படைப்பாளரிடம் ஒத்த கருத்தோட்டம் இருந்ததை அறியப் பின்னது பயன்படும். தன் கருத்திற்குச் சான்று தேடுபவனாக ஆய்வாளன் இருத்தல் கூடாது. காலச் சூழலோடு இலக்கியப் படைப்பை ஆராய்வது உண்மை காண உதவும். குறை மட்டுமே காணும் குறுகிய நோக்கம் இருத்தல் கூடாது. இலக்கியத்தின் சிக்கலான பகுதிகளை எளிமைப்படுத்தி விளக்கம் தருவது வரவேற்கப்படும். படைப்பாளனின் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவைச் சான்றுகளுடன் நிறுவுவது ஏற்கப் பெறும். சுருங்கச் சொன்னால் விழிப்புள்ளவனாக, நுண்ணிய நோக்குடன் உள்ளுணர்வுகளை விரைவில் உணர்ந்து தெளியும் ஆற்றல் உடையவனாக, சொல்லப்பட்ட உட்கருத்துகளைச் சொல்லப்பட்ட விதத்திலேயே புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவனாகத் திறனாய்வாளன் விளங்கினால் அவன் திறனாய்வு எல்லாத் தரப்பினராலும் மதிக்கப்பெறும்.

இலக்கியக் கொள்கையும் இலக்கியத் திறனாய்வும்: இலக்கியத் திறனாய்வு சிறக்க இலக்கியக் கொள்கைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி உரைப்பதனை டாக்டர் கைலாசபதி ‘இலக்கியமும் திறனாய்வும்’ என்ற நூலில் சுட்டிக் காட்டுகிறார். அவை 1. அவயவிக் கொள்கை. 2. அறவியற் கொள்கை 3. உணர்ச்சிக் கொள்கை 4. அழகியற் கொள்கை 5. சமுதாயக் கொள்கை என்பனவாகும். அவயவிக் கொள்கை: இலக்கியத்தைப் பொருள், வடிவம் என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. இரண்டும்

இசைவுபட்டே இலக்கியம் பிறக்கிறது. (எ-டு) சங்க இலக்கியங்கள். அறவியற் கொள்கை: இலக்கியப் பொருளை முதன்மைப்படுத்துவது இக்கொள்கை. புலமையும் ஒழுக்கமும் உடையவரே இலக்கியம் படைக்க முடியும் என்பது இக்கொள்கையாளர் கருத்து. (எ-டு) கீழ்க்கணக்கு நூல்கள். உணர்ச்சிக் கொள்கை: இது அறவியற் கொள்கைக்கு எதிர் விளைவாகத் தோன்றியது. படைப்பாளி தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை அதே அளவு படிப்பவனுக்கும் புலப்படுத்தியிருக்கிறானா என்று ஆராய்வது. (எ-டு) பக்தி இலக்கியங்கள். புலப்படுத்தும் உணர்ச்சியில் தூய்மை, ஒழுங்கு, இசைவு, இன்பம் இருக்க வேண்டும் என்ற நியதி இவர்களுக்கு இல்லை. அழகியற் கொள்கை: இன்று மிகுதியும் செல்வாக்குப் பெற்றுள்ள கொள்கை. அழகு என்பது காண்டலும், கற்பனை அனுபவமுமே என்பது இவர் கருத்து. இலக்கியத்தில் தூய்மை, ஒழுங்கு, இசைவு, இன்பம் ஆகியன இருக்க வேண்டியது இன்றியமையாததாகும் என்பர் இவர். (எ-டு ) கலிங்கத்துப் பரணி போன்ற சிற்றிலக்கியங்கள். உணர்ச்சிக் கொள்கைக்கும் இதற்கும் ஓரளவு ஒத்த தன்மைகள் உண்டு. சமுதாயக் கொள்கை: இன்று செல்வாக்குப் பெற்ற கொள்கை. சமுதாயத்தை மீண்டும் இலக்கியப் பொருளாக்கி இழந்த மெய்ம்மையைத் திரும்பவும் அடைவதே இக்கொள்கையின் குறிக்கோள்.

எளிமையும் தெளிவும் இசை இன்பமும் உடைய மொழியால் உயர்ந்த கருத்துகளைச் சொல்வது பண்டைத்தமிழ் இலக்கியக் கொள்கையாகும். ‘இழுமென் மொழியால் விழுமியது நுவலல்’ எனத் தொல்காப்பியமும், ‘சுருங்கச் சொல்லல்’ முதலான பத்து அழகுகளாக நன்னூலும், ‘அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே’ எனத் தண்டியலங்காரமும் இதனைக் குறிப்பிடுகின்றன.

திறனாய்வு வகைகள்: திறனாய்வின் வகைகள் பல. படைப்பிற்கேற்பவும் ஆய்வாளருக்கு ஏற்பவும் இவை மாறுபடும்.

1. படைப்புவழித் திறனாய்வு: ஓர் இலக்கியத்தை அந்த இலக்கியத்தின் அடிப்படை அமைப்புகளைக் கொண்டே ஆராய்வது. காட்டாக, கம்பராமாயணத்தை ஆராய்பவர், அந்நூலின் அமைப்பிலும் நோக்கிலும் உள்ள அடிப்படைத் தன்மைகளை முதலில் அறிந்து பின் மதிப்பிடுவது. படைப்புக்கு முதன்மை தருவது இவ்வாய்வு முறை. அந்த நூலினைப் பலமுறை படித்துத் தரமான புலமை பெற்றவராலேயே இவ்வகையில் சிறக்க முடியும். (எ-டு.) டாக்டர் மு. வரதராசனாரின் மாதவி, டாக்டர் வ.சுப. மாணிக்கத்தின் வள்ளுவம்.

2. மரபுவழித் திறனாய்வு, முன்னோர்களால் வகுக்கப்பட்ட இலக்கண இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு படைப்புகளை ஆராய்வது; சங்க இலக்கியத்தைத் தொல்காப்பிய இலக்கணம் கொண்டும், காப்பியங்களைத் தண்டி இலக்கணம் கொண்டும் மதிப்பிடுவது. பழமைக்குப் பாராட்டும் புதுமைக்குப் புறக்கணிப்பும் இதன் பண்புகள். பாரதி தாசன் பாடல்களைத் தொல்காப்பிய நெறி நின்றும், இராவண காவியத்தைத் தண்டி இலக்கணம் கொண்டும் ஆராய்வது பொருந்தா அளவுகோல் அல்லவா?

3. வரலாற்று முறைத் திறனாய்வு: நாட்டு வரலாற்றினை அறிதல்: இலக்கியம் எழுந்த காலத்தைக் கவனத்திற் கொண்டு படைப்பினை ஆராய்தல்-படைப்பாளியின் காலச் சமூக, அரசியல், பொருளாதாரத் தாக்கம் படைப்பில் காணப்படும். (எ-டு) பாரதியின் ‘பாஞ்சாலி சபதத்தை’ விடுதலைக் காலப் பின்னணியோடு ஆராய்ந்தால் உண்மை புலனாகும். காலத்துக்குக் காலம் சமூகக் கொள்கைகள் மாறி வருவதை இவ்வகை ஆய்வால் உணரலாம்.

ஆசிரியர் வரலாற்றினை அறிதல்: படைப்பாளனின் வாழ்க்கை வரலாற்றின் வழிப் படைப்பினை அணுகுதல். இலக்கிய மதிப்பீட்டுக்கு இது ஓரளவே உதவும். (எ.டு.) செயகாந்தன், தி. சானகிராமன், போன்ற புனைகதை ஆசிரியர்களின் படைப்புகளை ஆராய்பவர் அவர்தம் வாழ்க்கைக்கும் படைப்புக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டிக்காட்டுவர்.

4. முருகியல் முறைத் திறனாய்வு: இது நேரடித் திறனாய்வு எனவும் கொள்கையியல் திறனாய்வு எனவும் சொல்லப்பெறும். இதில் படைப்பின் சொற்சுவை, பொருட்சுவை, உணர்ச்சி, கற்பனை, வடிவம் முதலிய அழகு அமைப்புகள் ஆராயப்படும். (எ-டு ) இரசிகமணி டி. கே. சிதம்பரநாதனின் ஆராய்ச்சி.

5. விதிமுறைத் திறனாய்வு: இலக்கியம் எங்ஙனம் அமைதல் வேண்டும் என இலக்கணம் வகுக்கும் நெறிமுறைகளை அளவுகோலாகக் கொண்டு அமைவது. இன்ன வகையான கலை நுணுக்கம், இன்ன வகையான நடை படைப்பில் அமையவேண்டும் எனப் படைப்பாளனைக் கட்டுப்படுத்துவது. மொழியின் ஒழுங்கமைப்பைப் பாதுகாக்க இது உதவும். ஆனால், காலத்திற்குக் காலம் மாறிவரும் இலக்கியத்தை, மாறாத விதிகள் கொண்டு ஆராய்வது பிழையானதாகும்.

6. பகுப்பு முறைத் திறனாய்வு: இலக்கியம் பொருளுக்கேற்பவும், பொருள் தொடர்ச்சிக்கேற்பவும்

பல பிரிவுகளாகப் பகுத்து அமைக்கப்படுவது. எனவே, ஒவ்வொரு பிரிவையும் ஆராய்ந்து பிரிவுகள் ஒன்றோடொன்று பொருந்தும் வகையினைக் காண்பது.

7. விளக்கமுறைத் திறனாய்வு படைப்பின் பல்வகைக் கூறுகளையும் விளக்கமான முறையில் ஆராய்வது. இன்று பலராலும் பின்பற்றப்படுவது; தமிழ்த்துறை ஆய்வுகள் பல இவ்வகையினவே.

8. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு ஓரளவு பொதுத்தன்மை உள்ள படைப்புகளை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டு முடிவுகூறுவது. இதற்குப் பன்மொழி அறிவு இன்றியமையாதது. (எ-டு) இரகுநாதனின் 'பாரதியும் செல்லியும்', எசு. இராமகிருட்டிணனின் 'கம்பனும் மில்டனும்'. ஒப்பீடு பலவகைகளில் அமையலாம். 1. ஒரே மொழியில் ஒரே காலத்தில் எழுந்த ஒற்றுமையுடைய இரு படைப்புகளை ஒப்பிடலாம். 2. ஒரு காலத்தின் இலக்கியப் போக்கினை மற்றொரு காலத்தின் இலக்கியப் போக்குடன் ஒப்பிடலாம். 3. ஒரு நாட்டின் குறிப்பிட்ட இலக்கிய வகையை மற்றொரு நாட்டின் அதே இலக்கிய வகையோடு ஒப்பிடலாம். 4. வழி நூல் அல்லது மொழிபெயர்ப்பு நூலினை மூல நூலுடன் ஒப்பிடலாம். எவ்வாறாயினும், ஒப்பிடுவதற்கும் ஒப்பிடப்படுவதற்கும் ஒருவகைப்பொதுத்தன்மை இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

9. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் தன்மையினையும் தகுதியினையும் மதிப்பீடு செய்வது. இது விளக்கமுறைத் திறனாய்வினின்றும் சிறிதளவே வேறுபட்டது. இவ்வகை ஆய்வாளர்க்கு ஒப்பியல் நோக்கும் வரலாற்று நோக்கும் இன்றியமையாதன.

10. மூலபாடத் திறனாய்வு பல்வேறு காரணங்களால் பாடவேறுபாடுகள் மிகுந்து கருத்துச் சிக்கல் ஏற்படும் நிலையில், இன்ன பாடந்தான் படைப்பாளனால் பயன்படுத்தப்பட்டது எனக் கண்டறிந்து, காரணம் காட்டி மூலநூலின் அமைப்பினை முடிவு செய்வது.

11. பாராட்டு முறைத் திறனாய்வு: இலக்கியத்திற் காணப்படும் சிறந்த கூறுகளை ஆழ்ந்து சிந்தித்து வெளிப்படுத்துவது. (எ-டு) உரையாசிரியர்களின் திறனாய்வு.

திறனாய்வு அணுகுமுறைகள்: இலக்கியத்தின் பொருள், வடிவம், வெளியீட்டு முறை போன்றவை காலத்திற்குக் காலம், படைப்பிற்குப் படைப்பு மாறுபடுகின்றன. எனவே இலக்கியத்திற்கேற்ப அணுகு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். அணுகு முறைகள் அறிவியல் பார்வையுடன் இருப்பின் போற்றப்படும். அறிவியல் துறை அணுகுமுறை இலக்கியத் துறைக்கு முற்றிலும் ஒத்துவராது. அறிவியல் ஆராய்ச்சியில் துணைக் கருவிகள் பல உண்டு. எனவே, ஆய்வு முடிவுகள் ஒத்துச் செல்லும். ஆனால்,திறனாய்வில் மனம் என்ற கருவியையும் அறிவு என்ற நடுநிலையையுமே நம்பிச் செயற்பட வேண்டியுள்ளது. எனவே ஆய்வு முடிவுகள் ஒத்திருக்கும் என உறுதி கூற முடியாது. அளவை முறைகள், புள்ளி விவரம் (Statistics), விளக்க அட்டவணை (Chart), வரைபடம் (Graph) போன்றவை ஓரளவு பயன்தரும். இலக்கிய ஆய்வாளர் அணுகு முறைகளை ஐந்தாகப் பகுத்துள்ளனர்.

1. அறவியல் அணுகுமுறை: கிரேக்க நாட்டு அரிசுடாட்டில், பிளேட்டோ, உரோமானிய ஆரசு ஆகியோர் இக்கொள்கையினர். இலக்கியத்தின் தலையாய கடமை அறிவுறுத்தல் என்னும் அடிப்படையில் இலக்கியங்களை ஆராய்வது. பண்டைத் தமிழ் ஆசிரியர்களும் அறத்தின் மாட்சி கூறுவர். அறநெறி கூறுதல் சில வேளைகளில் சமயச் சார்பாகவும் சில வேளைகளில் தத்துவச் சார்பாகவும் அமையும். கலை கலைக்காகவே என்ற கொள்கையாளர் இதனை மறுப்பர். ஏனெனில் அறவியல் அணுகுமுறையினர் (Ethical or Moral Approach) கலை நுணுக்கத்தைப் பொருட்படுத்துவதில்லை.

2. உளவியல் அணுகு முறை: இலக்கியம் உளவியலோடு நெருங்கிய தொடர்புடையது. பிராய்டு என்பவரின் கருத்துகளே இவ்வணுகுமுறைக்கு அடிப்படையாக அமைந்தவை. இக்கொள்கை படைப்பில் அடங்கியிருக்கும் குறியீடுகள் பற்றி நுட்பமாக ஆராய்ந்து, புதிய செய்திகளைப் புரிந்து கொள்ளப் பயன்படுகிறது. மனிதனின் பெரும்பாலான நடவடிக்கைகள் அவனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மன ஆற்றல்களால் இயக்கப்படுவன என்றார் பிராய்டு. இன்றைய புதின இலக்கியங்களில் கையாளப்படும் 'நனவோடை உத்தி'யினைப் பிராய்டு வழிச் சிந்தனை மலர்ச்சி என்பர். படைப்பாளன் உளவியல், படைப்பாக்க உளவியல் என்றெல்லாம் பிரித்துக் காட்டுவர். இந்த அணுகு முறையாளர் இலக்கியக் கருப்பொருளையும் முருகியல் அனுபவத்தையும் புறக்கணித்து விடுவர். தாமறிந்த உளவியல் அறிவை இலக்கியங்களில் பொருத்திப் பார்க்க விரும்புகின்றனர்; உளவியல் அரை குறையாய்த் தெரிந்தவர்களுள் சிலர் தவறான முடிவுக்கு வருகின்றனர். எனவே, தமிழில் இம்முறை சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது எனலாம்.

சமூகவியல் அணுகுமுறை: இலக்கியம் தனிமனிதனின் சிந்தனையில் தான் பிறக்கிறது. ஆனால் அவன் மனத்தை இயக்கும் ஆற்றல் சமுதாயச் சூழ்நிலையிலிருந்தே உருவாகிறது. எனவே, இலக்கியத்தை அது தோன்றிய சமுதாயச் சூழல், பொருளாதார நிலை, அரசியற் பின்னணி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால் புதிய விவரம் கிடைக்க வாய்ப்புண்டு. இம்முறை ஆய்வாளனை இலக்கியச் சமூகவியலாளன் (Literary Sociologist) என்பர். சமூகக் கூட்டமைப்பால் தனி மனிதன் தாக்கப்படுவதை, படிப்படியாகவோ திடீரென்றோ சமூக மாற்றம் ஏற்படுவதை இலக்கியங்கள் வழிக் கண்டறிவது இவ்வணுகு முறையின் இயல்பு. இவ்வணுகுமுறையைப் பின்வருமாறு பிரித்துக் காட்டுவர்: 1. இலக்கியத்தை அவ்விலக்கியம் எழுந்த சமுதாயச் சூழல், அது காட்டும் சமூக அமைப்பு, சமூக உறவு எனப் பகுத்தாராய்வது. 2. படைப்பாளியின் சமுதாயச் சூழல் எவ்வாறு படைப்பைப் பாதித்தது எனக் கண்டறிவது. 3. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் குறிப்பிட்ட இலக்கியப் படைப்பு குறிப்பிட்ட சமுதாயப் பிரிவினரால் எப்படி வரவேற்கப்பட்டது என ஆராய்வது. பிரெஞ்சு ஆய்வாளர் தாயின் (Taine) சமூகவியல் அணுகுமுறை பொழுது (Moment), இனம் (Race), சூழல் (Milien) ஆகிய மூன்று கூறுகளின் சேர்க்கை அடிப்படையில் ஆராயப்படும் ஒன்று என்பர்.

இன்று உலக நாடுகளில் பெருகி வரும் மார்க்சியக் கண்ணோட்டம் இவ்வணுகு முறையின் சிறப்பான பிரிவாகும். இது படைப்புமுறை என்ற நான்காம் கூற்றையும் உள்ளடக்கியது. தமிழ்த் திறனாய்வுலகின் இப்பிரிவில் பேராசிரியர் நா. வானமாலை, டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி, எசு. இராமகிருட்டிணன், கேசவன், தமிழவன் போன்றோர் குறிப்பிடத்தக்க நூல்களைப் படைத்துள்ளனர்.

4. வடிவவியல் அணுகுமுறை: இம்முறை உலக நாடுகள் அனைத்திலும் பரவலான வளர்ச்சி பெற்ற அணுகு முறையாகும். இலக்கியத் திறனாய்வை இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட செய்திகளைக் கொண்டு நிகழ்த்துவது பொருந்தாது என நம்பினர் இக்கொள்கையாளர். இலக்கியம் கொண்டே இலக்கியத் திறனாய்வை நிகழ்த்த வேண்டும். படைப்பாளன் மீது, அவன் சார்பின் மீது, அவன் காலத்தின் மீது சிந்தனை செலுத்தாமல் படைப்புக் கூறுகளின் மீதே கவனம் செலுத்த வேண்டும் என்றனர். இம்முறையின் வாயிலாக இலக்கியப் பொருளையும் கட்டமைப்பையும் விளக்கினர். அமெரிக்காவில் இதனைப் புதிய திறனாய்வு (New Criticism) என்றனர். படைப்பின் வடிவம் என்ன? அதன் பயன் என்ன? எனக் காண்பதே இவர்கள் கொள்கை. சொற்கள், தொடர்கள், பத்திகள், பகுதிகள் கொண்டு சுவைநலம் தேர்வர். சொற்களின் நேர் பொருளையும் குறிப்புப் பொருளையும் சுட்டிக் காட்டுவர். வடிவமும் பொருளும் பிரிக்க முடியாதவாறு ஒருமையுடையது என உணர்ந்து ஆய்வு நிகழ்த்தினர். எனவே, குறிப்பிட்ட உள்ளடக்கத்தை நேர்த்தியான கலை நுட்பத்துடன் அமைத்தலே வடிவம் எனப்படும். அதனைப் பாங்குடன் கண்டறிவதே இவ்வணுகு முறையின் நோக்கமாகும். தமிழில் கலை கலைக்காகவே என்ற கோட்பாடுடைய க.நா. சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா போன்றோர் இவ்வகை அணுகுமுறையினர் எனலாம்.

5. தொன்மவியல் அணுகுமுறை: தொன்மம் என்னும் சொல் சமயம், நாட்டுப்பாடல், மானிட இயல், சமூக இயல், உளவியல், கலை ஆகியவற்றோடு தொடர்பு கொண்ட பொருள் பொதிந்த சொல்லாகும். புராணங்கள் போன்ற சமய இலக்கியங்களில் காணப்படும் கதைகள் சில பொதுத் தன்மைகளைக் குறித்துக் காட்டும் வகையில் அமைந்தவை என்ற நோக்கத்தோடு, இலக்கியத்தை அணுகும் முறையைத் 'தொன்ம இயல் வழி அணுகுமுறை' என்பர். இவ்வுலகின் படைப்பு, படைப்பிலே உள்ள உயிர்கள், அவற்றின் பண்புகள், பண்புகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள், இவ்வொற்றுமையை எதிரொலித்துக் காட்டும் மூல உருக்கள் (Archytypes) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இலக்கியத்தை ஆராய்வதும் தொன்ம இயல் அணுகுமுறை எனப்படும். கலைஞனைத் தொன்மப் படைப்பாளியாகக் கண்டு படைப்பில் வெளிப்படையாகத் தெரியும் பொருள், தெரியும் மொழிஆகியவற்றிற்கு அப்பால் உள்ள ஆழமான மறை பொருள்களை இறுதி எல்லை வரை சென்று கண்டறிவது இவ்வணுகு முறையின் நோக்கமாகும். இம்முறை வரன்முறையான அளவிற்கு எதிரானது; உள்ளுணர்வால் (Intuition) உருவாவது; குழப்பமும் சிக்கலும் மிகுந்தது. தமிழ்த் திறனாய்வுத் துறையில் மேற்கொள்ளப்படாத முறை இம்முறையே.

திறனாய்வின் பயன்கள்: படிப்பவனின் அறிவாற்றலைவிடப் படைப்பவனின் அறிவாற்றல் மிகுதி. இவர்களுக்கிடையே இணைப்புப் பாலமாகத் திகழ்வது திறனாய்வு. எப்படி இலக்கியத்தைச் சுவைப்பது என்பதைப் படிப்பவர்க்கும், எப்படி இலக்கியத்தை மேன்மேலும் செம்மைப்படுத்தி மெருகூட்டலாம் என்பதைப் படைப்பாளிக்கும் எடுத்துக்கூறி, இருசாரார்க்கும் பயன்தருவது திறனாய்வு. இது குறுகிய காலத்

தில் சிறந்த நூல்களைப் பற்றிய நுணுக்கமான விவரங்களைத் தருகிறது; நொடிக்கு நொடி அச்சாகும் பல நூறு படைப்புகளில் சிறந்ததைக் கண்டு காட்டுகிறது. மேலும், தாய்மொழி இலக்கியங்களை மட்டுமன்றிப் பிறமொழி இலக்கியங்களையும் அறிய வாய்ப்பாக இருக்கிறது. அடிப்படை நூல்களை முறையாகப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

**திறனாய்வின் வளர்ச்சி:** இலக்கியக் கொள்கை வகுக்கும் தொல்காப்பிய நூற்பாக்களில் திறனாய்வுக் கூறுகள் உண்டு. இலக்கிய நோக்கங்களையும் மரபுகளையும் அணிநலன்களையும் வெளிப்படுத்திய உரையாசிரியர்களிடம் நிறைகளை மட்டுமே காணும் 'பகுதித் திறனாய்வு' உண்டு. ஆனால், இன்று தனித்துறையாகக் கருதப்படும் திறனாய்வு 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உருவானது எனலாம். ஆங்கிலக் கல்வியால் வெளியுலகத் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த புதுவரவே திறனாய்வு. புத்திலக்கியப் பெருக்கத்தின் மற்றொரு விளைவே திறனாய்வு. தமிழில் திறனாய்வு இன்றுவரை இரண்டு போக்குகளில் செயற்பட்டு வந்திருக்கிறது: மிகுதியான பழமை விருப்பும், மிகுதியான புதுமை விருப்பும் தமிழ்த் திறனாய்வாளர்களின் தன்மையாக இருந்து வருவதைக் காண முடிகிறது. ஜி. செல்வக் கேசவராய முதலியார் கி.பி. 1897-ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் குறித்தும் கம்பராமாயணம் பற்றியும் ஆங்கிலத்தில் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் தமிழ்த் திறனாய்வு வளர்ச்சி வரலாற்றில் முதலிடம் பெறுபவராகப் பலராலும் சுட்டப் பெறுபவர் வ.வே.சு. ஐயர் ஆவார். இவர் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்னும் சிறப்பினையும் பெற்றுள்ளார். இவர் 1920-ஆம் ஆண்டளவில் வெளியிட்ட 'கம்பராமாயணரசனை' என்னும் நெடிய கட்டுரையும், 'கவிதை' என்னும் கட்டுரையும் குறிப்பிடத் தக்கன. உலகக் காப்பியங்களை நன்கு கற்ற இவர், அவற்றோடும் வான்மீகி இராமாயணத்தோடும் ஒருங்கு வைத்து ஆராய்ந்து, கம்பராமாயணமே தலையான உலகக் காப்பியம் என முடிவு கூறியுள்ளார். அழகியல் நோக்கில் சுவை நிறைந்த திறனாய்வு செய்த இவரைத் 'தமிழில் இலக்கியத் தரமான விமரிசனத்திற்கு வழி வகுத்தவர்' எனப் பாராட்டுவர் சி.சு. செல்லப்பா. பாரதியும் சில ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை வ.வே.சு. ஐயர் வழியில் நின்று, சுவை நுகர்ச்சிக்கு முதலிடம் தந்து, நிறைகளை மட்டும் எடுத்துக் காட்டியவர்; இலக்கியத்தில் கலையழகு, குறிப்பாற்றல், நிலையான தன்மை, உலகப்பொதுமை ஆகியவற்றைக் காண வேண்டும் என்றவர்; உண்மை இயல்பை அறிதலைவிட இன்புறுதலையே முதன்மையாகக் கருதியவர். இரசிகமணி டி.கே. சிதம்பரநாதன் கருத்தைவிடச் சொல்லும் முறைக்கே முதன்மை அளித்தவர், உணர்ச்சி, பாவம் இரண்டையும் அளவுகோலாகக் கொண்டவர். இவருடைய 'வட்டத்தொட்டி' பல இலக்கிய ஆய்வாளர்களின் கூட்டுக் களிக் கூடமாக விளங்கியது. நீதிபதி மகாராசன், சோமு போன்ற சொல்லும் முறைக்கே முதலிடம் தந்த திறனாய்வாளர்களின் எண்ணிக்கை பெருக இவரே காரணமாக அமைந்தார். சிறுகதையாசிரியர்கள் புதுமைப்பித்தன், கு.ப.ரா. ஆகிய இருவரும் திறனாய்வில் ஓரளவு கவனம் செலுத்தியர்கள். பின்னவரின் பங்கு கூடுதலானது. இவர்கள் காலம் வரை திறனாய்வு கவிதைத் துறையில் மட்டுமே பேரளவில் நிகழ்ந்து வந்தது. தனி நூல்களைப் பற்றியோ தனி ஆசிரியரைக் குறித்தோ ஆய்வு நூல்கள் வரவில்லை.

திறனாய்வு வளர்ச்சியில் இரண்டாம் நிலையினைத் தொடங்கி வைத்தவர் க.நா. சுப்பிரமணியம் எனலாம். இவர் சிறுகதை, புதினப் படைப்பாளர்: பிற மொழி இலக்கிய அறிவு ஓரளவு உடையவர். பழங்கால இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் பயிற்சி இல்லாதவர். இவரது வீச்சு 1950-60 என்ற கால எல்லையில் மிகுந்திருந்தது. உலக இலக்கிய அளவுகோல் கொண்டு தமிழில் இலக்கியத் திறனாய்வு செய்ய முயன்றவர். ஆனால், அடிமனத்தில் மேனாட்டு இலக்கியமே சிறந்தது என்ற எண்ணம் உடையவர். சொந்த விருப்பு வெறுப்பிற்கிணங்க இலக்கியத்தைச் சுவைத்தவர். உருவ வாதமே இவரின் அடிப்படையான கொள்கை எனலாம். ஒரு தலையான முடிவுகளைக் கூறிவந்தவர். விரும்பும் எழுத்தாளர்களைப் பட்டியலிடுவதும், பட்டியல்களை அடிக்கடி மாற்றிக் கொள்வதும் இவர் இயல்பு. புதிய சுவை முறையாளர் என்று இவரை அடையாளம் காட்டுவர் டாக்டர். கைலாசபதி. 'விமரிசனக்கலை', 'இலக்கிய விசாரம்' என்னும் பெயரில் 1959-ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களும், 1963 முதல் சில ஆண்டுகள் இவர் நடத்திய இலக்கிய வட்டம் என்ற சிற்றிதழும், 'விமரிசன நோக்கு', 'விமரிசனத்தின் எல்லை' ஆகிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. தத்துவ அடிப்படையான அறிவியல் பாங்கில் திறனாய்வு முறையைப் பயன்படுத்தியவர் சிதம்பர ரகுநாதன். 'உள்ளடக்கத்தைவிட உருவமே சிறந்தது', 'இலக்கியத்தில் நேரடி விளம்பரம் கூடாது', 'எளிமை வேறு, தெளிவு வேறு' என்பன இவர் தம் திறனாய்வுக் கொள்கைகள். இவரது 'இலக்கிய விமரிசனம்' (1948) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. சி.சு. செல்லப்பாவும் சுவை மனப்பான்மை கொண்ட ஆய்வாளர் ஆவார். இலக்கியத்தின் நோக்கம் இன்பப் பரிமாற்றம் என்பது இவர் கொள்கை. படைப்புக்

கேற்பப் பார்வை வேறுபட வேண்டும் என்றும், 'கலைப்படைப்பின் முழுமையை, கலைஞனின் வெற்றியைமதிப்பிட்டு எடுத்துக்காட்ட வேண்டும்' என்றும் இவர் கூறியுள்ளார். இவர் கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டின் வழி வந்தவர். தனித் திறனாய்வு நூலில் வரலாற்றுமுறை, மனப்பதிவு முறை, நெறிமுறை, ஆய்வு முறை ஆகியவை பற்றி விளக்கம் அளித்துள்ளார். 'தமிழில் இலக்கிய விமர்சனம்' (1974) என்னும் இவரது நூல் குறிப்பிடத்தக்கது.

வெங்கட்சாமிநாதன் இன்று கவனத்திற்குரிய புதிய திறனாய்வாளர்; இலக்கியத்தை ஓவியம், திரைப்படம், இசை போன்ற கலைகள் உள்ளிட்ட பிற துறைகள் வழியாக அணுகி ஆராய்பவர்; க.நா. சுப்பிரமணியத்தின் மரபில் வந்தவர்; கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டினர்; உருவத்தைப் பெரிதும் பாராட்டுபவர்; உள்வெளி வட்டப் பார்வை உடையவர்; இலக்கிய விமரிசனத்திற்கு வேதாந்தத்தை அடிப்படையாகக் கொள்பவர். இவர்தம் 'பாலையும் வாழையும்', 'கலை வாழ்க்கை அனுபவம்', 'வெளியீடு', 'ஓர் எதிர்ப்புக் குரல்' ஆகிய நூல்கள் தனித்தன்மை உடையவை.

திறனாய்வு வளர்ச்சியின் மூன்றாம் நிலையினைத் தொடங்கி வைத்தவராகப் பேராசிரியர் நா.வானமாமலையைக் குறிப்பிடலாம். இவர் சமூகவியல் அணுகுமுறையில் இலக்கியப் படைப்புகளை ஆராய்ந்தார். பொருள் முதற்கொள்கைத் திறனாய்வு நோக்குடைய இவரது வழியில், முற்போக்கு உணர்வுடன் சமூகவியல் நோக்குடைய திறனாய்வாளர்களாக டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி, சீவானந்தம், தி.க. சிவசங்கரன், ஞானி, கேசவன், செந்தில்நாதன், தி.சு. நடராசன், தோத்தாத்திரி, தமிழவன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் சிலர் திறனாய்வு குறித்துத் தனி நூல் எழுதியுள்ளனர். இந்நூல்களில் மேனாட்டுத் திறனாய்வுக் கருத்துகள் நிரல்படக் கூறப்பட்டுத் தமிழ் இலக்கியச் சான்றுகள் பொருத்திக் காட்டப்பட்டுள்ளன. டாக்டர் மு.வ.வின் 'இலக்கியத் திறன்', அ.ச. ஞானசம்பந்தனின் 'இலக்கியக்கலை', சி.இ. மறைமலையின் 'இலக்கியத் திறனாய்வு', டாக்டர் பாலசந்திரனின் 'இலக்கியத் திறனாய்வு', டாக்டர் ஞானமூர்த்தியின் 'இலக்கியத் திறனாய்வியல்' ஆகிய நூல்கள் இவ்வகையின. மேலும், டாக்டர் முத்துச் சண்முகத்தின் 'இலக்கியக் கோட்பாடுகள்', டாக்டர் கைலாசபதியின் 'இலக்கியமும் திறனாய்வும்', 'ஒப்பியல் இலக்கியம்'; டாக்டர் தமிழண்ணலின் 'ஆய்வியல் அறிமுகம்', 'ஒப்பிலக்கிய அறிமுகம்; டாக்டர் சான் சாமுவேலின் 'இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்', டாக்டர் பிச்சமுத்தின் 'இலக்கிய இயக்கங்கள்', பேராசிரியர் கேசவனின் 'இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை', 'இயக்கமும் இலக்கியப் போக்குகளும்' என்பனவும் கவனத்திற்குரியன.

தனித்தனித்துறைகளில் வந்துள்ள திறனாய்வு நூல்களைக் கருதும்போது சங்க இலக்கியம் குறித்து டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் 'தமிழ்க்காதல்'; காப்பியம் குறித்து வ.வே.சு. ஐயரின் 'கம்பராமாயண ரசனை'; அ.ச. ஞானசம்பந்தனின் 'கம்பன் – புதிய பார்வை'; புதினம் குறித்துக் கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்'; டாக்டர் இரா.தண்டாயுதத்தின் 'சமூக நாவல்கள்'; சிறுகதை குறித்து டாக்டர் சிவத்தம்பியின் 'தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்'; வேதசகாயகுமாரின் 'தமிழ்ச் சிறுகதை வரலாறு'; கவிதை குறித்து டாக்டர் க.ப.அறவாணனின் 'கவிதையின் உயிர் உள்ளம் உடல்'; புதுக்கவிதை குறித்துப் பாலாவின் 'புதுக்கவிதை – ஒரு புதுப்பார்வை'; நாடகம் குறித்து டாக்டர் ஏ.என்.பெருமாளின் 'தமிழ் நாடகம் – ஓர் ஆய்வு'; 'ஒப்பிலக்கியம் குறித்துக் கைலாசபதியின் 'ஒப்பிலக்கியக் கோட்பாடுகள்'; டாக்டர் இராமகிருட்டிணனின் 'கம்பனும் மில்டனும்; தமிழண்ணலின் 'ஒப்பிலக்கிய அறிமுகம்' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. காப்பியம் நாடகம் பற்றிய துறைகளில் ஓரளவிலும் கவிதை, சிறுகதை,புதினம் ஆகிய துறைகளில் பேரளவிலும் திறனாய்வு நூல்கள் தோன்றியுள்ளன. நூல்கள் குறித்தும் ஆசிரியர்கள் குறித்தும் தனித்தனித் திறனாய்வு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பாரதி பற்றிய திறனாய்வு நூல்கள் நூற்றுக்கும் மிகுதியாக எழுதப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

**திறனாய்வின் இன்றைய நிலை:** பரந்த உலகத் தொடர்பும், புதிய சமுதாயத்தை விரும்பும் மக்களின் மன நிலையும், சமூகச் சூழல்களும் திறனாய்வுப் பார்வையை இன்று கூர்மையடையச் செய்துள்ளன. திறனாய்வுத் தளம் பெருகி வருகிறது.

சிறு இதழ்களான 'படிகள்', 'யாத்ரா', 'கொல்லிப் பாவை', 'தாமரை', 'செம்மலர்', 'கணையாழி' போன்றவற்றில் தனிநூல் குறித்துத் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன. படிப்போர் கடிதங்களிலும் திறனாய்வுப் பார்வை ஆளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறைகளில் மிகப்பலர் புதிய இலக்கியங்கள் குறித்துத் தனித்தும் ஒப்பிட்டும் ஆய்வு நூல்கள் எழுதி வருகின்றனர். வளர்ந்துள்ள திறனாய்வு முறைகளும், தத்துவங்களும், மொழியியல், சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல் போன்ற சமூக அறிவியல் துறைகளும் இன்றைய

கலை இலக்கியத் திறனாய்வுக்கு உறுதுணையாக உள்ளன. புதிய துறை பற்றிய ('எக்ஸிஸ்டென்சிய லிசம்', 'சர்ரியலிசம்') அறிமுக நூல்களும் எழுதப் பட்டு வருகின்றன. திறனாய்வாளர் பலநோக்கும் போக்கும் உடையவர்களாக – பல்துறை அறிவுடை யவர்களாக விளங்கி ஆய்வை ஆழப்படுத்தி வருகின் றனர். சுருங்கச் சொன்னால், மிகுதியான பழமைப் பிடிப்புடன் இலக்கிய நயம் மட்டுமே காணும் பழைமையானமரபு குறைந்து வருகிறது. அழகியற் பார்வையில் இலக்கியங்களை அணுகும் முருகியல் திறனாய்வாளர்களின் தொகையும் குறிப்பிடத் தக்க அளவில் குறைந்து வருகிறது. ஆகவே, எதிர் காலத்தில் தமிழ்த் திறனாய்வுலகில் திறனாய்வுப் புலமை (Critical Scholarship) ஏற்பட்டு, அதன் காரணமாக இலக்கியத்தின் வளத்தையும், வரலாற் றையும், குறையையும் நிறையையும் கணக்கெடுக்கும் திறனாய்வுக் கோட்பாடு வளரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. பழ.மு.

துணை நூல்கள்:

வரதராசன், மு., இலக்கியத் திறன், தாயக வெளியீடு. சென்னை, 1965.

ஞானசம்பந்தம் அ.ச. இலக்கியக்கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1964.

பாலசந்திரன் சு., இலக்கியத் திறனாய்வு, அணி யகம், சென்னை, 1978.

கைலாசபதி, சி., இலக்கியமும் திறனாய்வும், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.

கைலாசபதி, சி., திறனாய்வுப் பிரச்சினைகள், புக் கவுசு, சென்னை, 1980.

**இலக்கிய நடை** : நீண்டகாலமாக எழுத்து வழக்கில் உள்ள மொழிகளில் பொதுவாக இலக்கிய நடை என்ற ஒன்றும், மனைச்சூழல் நடை' என்ற வேறொன்றும் காணப்படுகின்றன. எழுத்து வழக்கு அற்ற மொழிகளில் இந்த நடை வேறுபாடுகள் பொதுவாகக் காணப்படுவதில்லை.

எழுத்து வழக்கினைப் பெற்று விளங்கும் பெரும் பாலான மொழிகளில் மனைச்சூழல் நடை (Informal style) பேச்சு மொழியிலும் இலக்கிய நடை (Formal style) எழுத்து மொழியிலும் இடம் பெறு கின்றன. எழுதப் படிக்க நாம் பயன்படுத்தும் மொழிநடையை இலக்கியநடை எனலாம். ஒவ் வொரு துறையிலும் நூல்கள் எழுதப் பெறுவது பொதுவாக இந்த நடையில்தான். இலக்கியநடை. பெரும்பாலும் படித்தவர்களாலேயே பயன்படுத்தப் படுகிறது.

மனைச்சூழல் நடை படிக்காதவர்கள், படித்தவர் கள் ஆகிய இருசாராராலும் பயன்படுத்தப்படுகிறது. மனைச்சூழல் நடை நெருக்கமானவர்கள், அயலார் கள் என எல்லோருடனும் உரையாடுவதற்காகப் பேச்சு மொழியில் அமைந்த ஒன்றாகும். படித்தவர் களது மனைச்சூழல் நடை படிக்காதவர்களுடைய மனைச்சூழல் நடையிலிருந்து வேறுபட்டுக் காணப் படும். படிக்காதவர்தம் மனைச்சூழல் நடை வட்டார, சமூகக் கிளைமொழிக் கூறுகளை மிகுதியும் தாங்கிக் கொச்சையாகக் காணப்படலாம்.

தமிழ், சிங்களம், அரேபியம், கிரேக்கம் போன்ற இருநிலை மொழிகளில் (Diglossic Languages), இலக் கியநடை, மனச்சூழல் நடை ஆகியவற்றிற்கிடையே காணக்கிடக்கும் வேறுபாடுகள், மற்ற இருநிலை அல்லாத மொழிகளில் (Non Diglossic Languages) உள்ள வேறுபாடுகளைவிட மிகுந்தே காணப்படுகின் றன. இருநிலை மொழிகளில் இந்நடை வேறுபாடு பொதுவாகச் சொல்வடிவம், உருபனியல் நிலை, தொடரியல் நிலை எனப் பல்வேறு மொழிநிலை களில் காணப்படுகிறது.

இலக்கியநடை பல மொழிகளில் சில சமூகச் சூழல்களுக்கு மட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. இருநிலை மொழியான தமிழில் உள்ள இலக்கிய நடை கல்வி கற்க, நூல் எழுத மாத்திரமல்லாமல் வேறு சில சமூகச் சூழல்களான அரசியல், இலக்கிய மேடைச் சொற்பொழிவு, வானொலி, தொலைக் காட்சி அறிவிப்புகள் (Announcements), வரலாற்றுக் கதை கொண்ட திரைப்படம், நாடகம் ஆகியவற்றி லெல்லாம் பயன்படுத்தப்படுகிறது. வி.ஞா.

**இலக்கியம்**: இலக்கு அல்லது குறிக்கோள் மனித எண்ணங்களில் இலங்கிய வடிவம் பெற்றதால் இலக்கியம் முகிழ்த்தது. இலக்கியத்திற்கு இதுதான் இலக்கணம் என்று வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. ஆயினும், இலக்கியத்தின் கூறுகளைச் சுட்டிக் காட்ட லாம். இலக்கிய வகைகளைப் பகுத்துக் காட்ட இயலும்.

எல்லா மொழிகளிலும் இலக்கியம் எவ்வாறு தோன்றி வளர்ச்சியுற்றது என்பதை அறிஞர்கள் ஆராய்ந்தனர். அத்தகைய ஆய்வில்கொண்ட கருத் தும் கண்ட முடிபும் இலக்கியத் தோற்றத்தை உய்த்துணரவும், இலக்கிய வளர்ச்சியைக் கணிக்கவும் பயன்பட்டன.

வாய்மொழி இலக்கியம்: ஒப்பீட்டாய்வாளர்கள் இலக்கியத்தின் தோற்றத்தை ஆராயத் தலைப்பட்டார்கள். இலக்கியத்தை எழுத்து வடிவத்தில் கண்டு பழகியவர்களுக்கு அது தொடக்க நிலையில் வாய்மொழியாய் விளங்கியது என்னின் வியப்பாக இருக்கும். எழுத்து வடிவத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு தற்செயலாக நேர்ந்த ஒன்றாகும் என்று அறிஞர் சாடுவிக்கு (Chadwick) கூறுவர். மேலும், தொடக்க நிலையில் தோன்றிய வினைநவில் கவிதைகள் (Poetry of Action) பெரிதும் நாநவில் திறமுடையன (OralComposition) என்பது ஒப்பிலக்கியம் கண்ட உண்மையாகும்.

மொழி நூலறிஞர் மொழியின் தோற்றத்தைக் குறித்துப் பலகாலம் ஆராய்ந்தனர். அவர்கள் தம் ஆய்வின் பயனாக, மொழி முதன்முதலாக உரை நடையில் தோன்றவில்லை; காதல் களியிசையில் கால்கோள் கொண்டது என்பதனைக் கண்டார்கள். ஈடும் இசைவும் அமைந்த காதற்களிநடனப் பாக்களில் ஒலிக் குறிப்பால் பொருட் குறிப்பு உணர்த்தப் பட்டிருக்கும். இதனால், 'பாடுதல் இயற்கை; எழுதுதல் அல்லது உரைத்தல் செயற்கை' என்பது புலனாகும். எல்லா மொழிகளிலும் இலக்கியம் வாய்மொழி வடிவம் எய்திய நிலை இலக்கியப் படிநிலை வளர்ச்சியில் முதல் நிலை எனலாம்.

இலக்கிய விளக்கம்: இலக்கியக் கருத்துப் பொருளுக்கு விளக்கம் தருதற்குத் திறனாளிகள் பலர் முன்நின்றார்கள். அழகு, கவிதை, கற்பனை, குறிக்கோளியல் முதலியவற்றை எங்ஙனம் துல்லியமாக விளக்க இயலாதோ அவ்வாறே இலக்கியத்தையும் விளக்க இயலாது என்பர் சி.டி. வின்செசுடர் (C.T.Winchester.).

இலக்கியமாவது சிறந்த கருத்துகள் அடங்கிய நூலாகும் என்பர் எமர்சன் (Emerson). தன்கண் அமைந்த நுவல்பொருளும் அதனை விளக்கும் முறையும் பொதுவாக மக்களைக் கவரும் முறையில் அமைந்து, வடிவம் இன்றியமையாததாகி, அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியமாகும் என்று அட்சன் கூறுவர். இவ்வாறு மேனாட்டு அறிஞர் பலர் இலக்கியத்திற்கு விளக்கம் கூறியுள்ளனர். இத்தகைய விளக்கங்கள் முழுமை ஆகா.

பழங்காலத்தில், பொதுவாக இலக்கியத்தைச் செய்யுள் என்ற சொல்லால் தமிழில் குறித்தனர். தொல்காப்பியச் செய்யுளில் முதல் நூற்பா மாத்திரை முதலாவதாக இழைபு ஈறாக உள்ள 34 கூறுகளை விளக்கிச் செல்கிறது. இவ்விளக்கம் இலக்கியத்தின் ஒரு வடிவமாகிய செய்யுளுக்கு அமைந்ததாகும்.

நன்னூல் செய்யுளின் விளக்கத்தினை, பல்வகைத் தாதுக்களினால் அமைந்த உடல் உயிருக்கு இடமாக அமைந்துள்ளது; அதுபோலப் பல்வகைச் சொற்களின் சீரிய பொருளுக்கு இடமாக அமைந்து, உணர்ச்சியோடு இலக்கியப் படைப்பில் வல்லுநர்களாக விளங்குபவர்களால் அணிநலம் அமையப் படைக்கப்படுவது செய்யுளாகும் என்பதனை, 'பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினில், வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்' என்னும் நூற்பாவில் தருகிறது.

இலக்கியத்தின் கூறுகள்: உணர்ச்சி: பொதுவாக நூல்கள் மனக்கோட்டம் தீர்க்கும் சால்புடையன; அறிவு நல்கும் திறமுடையன. இலக்கியம் அறிவோடு உணர்ச்சியை இழைத்துக் குழைத்துப் பண்படுத்தித் தரும் ஆற்றலுடையது. உணர்ச்சிகள் இடம் பெறாத அறிவியல் கருத்துகள் பொருள் மாறா இயல்புடையன. கவிஞனின் உணர்ச்சியை வெளிப்படுத்துவதும் அதனைப் படிப்பவர் உள்ளங்களில் உணர்ச்சியைப் பெருக்கெடுக்கச் செய்வது மாகிய அவனது இலக்கியம் மனித வாழ்க்கையின் உண்மையான வரலாறாகும் என்ற வின்செசுடர்க் கூற்று இங்கு நினைவுகூரத் தக்கதாகும். நூலாசிரியரின் நுவல்பொருள் உணர்ச்சியினால் அவர் தம் ஆளுமையைப் புலப்படுத்தும் தன்மை இலக்கியத்திற்குச் சிறப்பாக உண்டு. இலக்கியம் உணர்ச்சியை மையமாகக் கொண்டிலங்கும் பெற்றியுடையது. உணர்ச்சியே இடம்பெறாது நூலிருக்குமாயின் அதனை இலக்கியமாகக் கொள்ள இயலாது. அது அறிவியலாகவோ வேறு நூலாகவோ இருக்கலாம்.

அறிவியல் உள்ளதை உள்ளவாறு கூறும்; ஆயின், இலக்கியமோ உள்ளதை உணர்ந்தவாறு உரைக்கும். எனவே, அறிவியலுக்கும் இலக்கியத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நுண்கலைகளும் உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றன. இசை, ஓவியம், சிற்பம் என இன்ன பிற நுண்கலைகள் உணர்ச்சிக் கருவூலங்கள். இசை இலக்கியக் கூறுகளுள் ஒன்றாகும். எந்த இடத்தில் இசை இலக்கிய உணர்ச்சிக் கருத்துகளிலிருந்து பிரிந்து, ஓசை ஒன்றையே இடனாகக் கொண்டு உணர்ச்சியைப் பிழிந்து தருகிறதோ, அந்த இடத்தில் இசை இலக்கியத்தினின்று வேறுபடுகின்றது; பாடுபவனின் குரல் இனிமையால் உணர்ச்சி ஊட்டும் தன்மை பெறுகிறது. பாடுபவனின் குரல் காற்றில் மறைந்ததும், அதன்கண் தோன்றிய உணர்ச்சியும் மறைந்து போகிறது. இசையோடு சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கருத்து

அமையும்போது அவ்விசை இலக்கியமாகச் செழிக்கிறது.

கற்பனை: வாழ்க்கையின் கண்ணாடியாக விளங்கும் இலக்கியத்தில் உணர்ச்சி முதலிடம் பெறுகிறது என்றால், கற்பனை அவ்வுணர்ச்சிக்கு இணையான தொரு பங்கு பெறுகிறது. அறிவியல் முதல் இலக்கியம் வரை அமையும் மனிதனின் செல்நெறி கற்பனைக்கு ஏற்றவாறு செயற்படும் சீர்மை பெறுவதைக் காணலாம். அறிவியலில் கற்பனைச் சிந்தனைகள் வாயிலாகத்தான் சிற்சில கருதுகோளினை உருவாக்கிப் பல சமயங்களில் அவற்றை மெய்ப்பிக்கவும் நடைமுறைப்படுத்தவும் செய்து புதிய கண்டுபிடிப்புகளை உண்டாக்குகின்றனர். இலக்கியக் கற்பனைகளிலோ படைப்பாசிரியனின் எண்ணங்கள் கற்பனைகளில் மிதந்து பல்வேறு சொல்லோவியங்களைச் சித்திரிக்கின்றன. திறனாளியர் புலவர்தம் கற்பனைகளைக் காட்சிப் பொருள் என்றும் கருத்துப் பொருள் என்றும் இருவகையாகப் பிரிப்பர்; கருத்துப் பொருளில் உள்ளதுபுனைதல், இல்லதுபுனைதல் என இருவகை உண்டு; உள்ளதாயினும் இல்லதாயினும் கற்பனையில் ‘புனைவு’ என்னும் கூறு இலக்கிய இன்பம் பயப்பதற்கு வழி வகுப்பதாகும்.

நுண்கலைகளும் கற்பனைக்கு ஏற்றவாறு பொலிவடைவதனைக் காணலாம். நுண்கலைகள் வடிவம் பெறும்போது அவற்றின் கற்பனை ஓட்டம் இற்றெனக் காட்டி இதுவெனச் சுட்டி அமைவதைக் காணலாம். பா என்னும் வடிவமோ உரைநடை என்ற பிரிவோ இலக்கியக் கலை வடிவம் பெற்றிலங்கும்போது, அதில் காட்டப்பட்டுள்ள கற்பனைகள் இவைதாம் என்று வரையறுத்துக் காட்டல் இயலாததாகும். இலக்கியங்கள் தொட்டனைத்தூறும் மணற்கேணி போலக் கற்பனை வளம் பெற்று மேலும் மேலும் சுவையூட்டம் பெறுவதைக் காணலாம். இதனாலன்றோ பல படைப்பாளிகளின் எழுத்திற்கு உரைநயம் காணலும் கலைத்திறன் சுட்டலும் வளர்ந்து கொண்டே செல்கிறது.

நுண்கலைகள் கற்பனையைப் பெற்றாலும் அவை எந்த ஊடகத்தின் வழி உருவாக்கப் பெற்றுள்ளனவோ அவ்வூடகம் அழியும்போது தாமும் அழிந்துபடுதல் கண்கூடாகும். சான்றாக அழகிய உருவத்தை உருவாக்க முற்படும் சிற்பி சிறந்த கல்லினைத் தேர்ந்தெடுத்து, அக்கல்லில் உருவாக்கும் உருவத்தைத் தன் மனக்கண்ணில் எழுதிப் பின்னர்ச் சிலையாக வடித்தெடுக்கிறான். அங்ஙனம் உருவாக்கப்பட்ட சிற்பம் கவிஞன் கருதிய உணர்ச்சியைச் சிறப்பாகவும் குறிப்பாகவும் காட்டுவதாக அமையலாம். ஆயினும் காலத்தின் கோலத்தினால் அச்சிற்பம் உருவாக்கப்பட்ட கல் தன்னியல்பை இழக்கும்போது சிற்பம் உணர்த்தும் உணர்ச்சி மங்கி மறைந்துவிடும் நிலை அடைவதைக் காணமுடிகிறது. ஆனால், மொழியை ஊடகமாகக் கொண்டிலங்கும் இலக்கியம் பல ஆயிரம் ஆண்டுகளாயினும், உணர்ச்சியும் கற்பனையும் மங்கி மாண்டுபோகாமல் அவற்றில் தங்கி, மனித உள்ளங்களைப் பயன்படுத்திப் பொங்கி எழுவதை என்றும் உணர்தல் கூடும்.

வடிவம்: உலகில் உள்ள பொருள்களுக்கெல்லாம் நீள அகல உயரங்கள் உண்டு. பொருள் பொதிந்த இலக்கியங்களுக்கும் வடிவம் (Literary form) உண்டு. மொழியில் இலக்கியம் கருக்கொள்ளும் பொருட்செறிவிற்கேற்ற வடிவம் அமைகிறது. கற்பனையின் நீட்சியும், உணர்ச்சியின் அகலமும், அறிவுத் திறனின் ஆழமும் இல்க்கியத்தைப் பிற கலைகளினின்று வேறுபடுத்துகின்றன. காலத்தை ஆட்சி கொள்ளும் திறன் பிற பொருள்களுக்கு இல்லை எனலாம். உலகத்தில் உள்ள ஒரு பொருளினைக் கொண்டு காலத்தைக் கடந்து எதிர்நோக்கியோ பின்னோக்கியோ செல்லுதல் இயலாது. இலக்கியம் ஒன்றுதான் கடந்த காலத்திற்கும் ஒருவனை அழைத்துச் செல்லும் ஆற்றலுடையது. அரசியல், சமுதாயம் இன்ன பிற வரலாறுகள் மக்களைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்லும் பெற்றியுடையன என்று எண்ண இடமுண்டு. ஆயின், அத்தகைய எழுத்து வடிவங்கள் நாள்களையும் ஆண்டுகளையும் மட்டுமே உண்மையாகக் காட்டுகின்றன. மனிதம் என்னும் மாண்பினை அவை மெய்ப்பிக்கின்றனவா என்றால் இல்லை என்றே விடைகூற வேண்டியிருக்கும்.

இலக்கியத்தின் வடிவத்தில், ஒருவன் உணர்வில் செல்லும்போது, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதன் என்ன எண்ணினான் என்பதை அறிதல் கூடும். உணர்ச்சியும் கற்பனையும் மனித எண்ணங்களின் வடிவங்களாகும். பா இன வடிவங்கள், உணர்ச்சி, கற்பனை என்னும் இவற்றின் வடிகால்கள் ஆகும். இலக்கியம் பயில்வோரை எதிர்காலத்திற்கும் இட்டுச் செல்கிறது. மிகப் பழங்காலத்தில் மனிதன் என்னென்ன உணர்ச்சிகள் பெற்றிருந்தானோ அவ்வுணர்ச்சிகளும் கற்பனைகளும் இன்றும் மக்களிடையே உண்டு; அவை உருவான சூழல்கள் தாம் வேறானவை.

இலக்கிய வடிவங்கள் காலங்கடந்து நின்று படைப்பாளிகளின் எண்ணங்களைப் படிப்பவர் மனத்தில் குன்றாமல் குறையாமல் மிகுவிக்கும் நோக்கினையும் உடையவை.

அறிவுத்திறன்: உணர்ச்சிகளுக்கும் கற்பனைகளுக்கும் இடனாக உள்ள இலக்கிய வடிவத்தில் அறிவுத் திறன் என்னும் கூறு இன்றியமையாததாகும். அறிவியல் உண்மைகளோடு இலக்கிய அறிவுத் திறனை ஒப்பிடுதல் இயலாததாகும். ஆயினும், அறிவியல் கருத்துகளுக்கு முரணானவற்றை இலக்கியப்படுத்துதல் நன்றன்று. அவ்வாறு படைப்பாளி எழுத முற்படுவானாகில் அவன் இயற்றுவனவற்றை நியாயப் படுத்த வேண்டியிருக்கும். உலகம் உருண்டையானது என்று புலவன் பாடுதல் சாலநன்று. ஆயினும் உலகத்தைத் தட்டை எனக் கூறும்போது, குட்டை மனம் படைத்தோர்க்கு உலகம் தட்டையான தோற்றம் கொண்டது என நியாயப்படுத்த வேண்டியிருக்கும். அறிவியலில் உண்மைகளை நியாயப்படுத்த இயலாது; அறிவியல் உண்மைகள் மெய்ப்பிக்கப்படல் வேண்டும்.

நடப்பியல் உண்மைகள் (Realism) இலக்கியத்தில் நடைமுறை (Reality) உண்மைகள் அல்ல. உண்மைகளை உணர்ந்தவாறு காட்டுவதே நடப்பியல் உண்மைகளாகும்.

எல்லாக் காலங்களுக்கும் பொதுவான மானிட உண்மைகள் படைப்பாளிகளின் அறிவுத்திறன் என்னும் கூற்றின் வழியாகப் புலனாக்கப்படுதல் இலக்கியத்தின் தனித்தன்மையும் தலைமைத் தன்மையும் ஆகும்.

இலக்கிய வகைகள்: இலக்கியத்தின் பொதுத் தன்மைகளைக் கூறும்போது அதன் சிறப்புத் தன்மையைக் காட்ட வேண்டும். இலக்கிய வகை (Genre) இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற மாறுதலைப் பெறுகிறது. உலக இலக்கிய வகைகளை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று, பாடுபொருளினால் ஏற்படும் இலக்கிய வகை. பிறிதொன்று, பாவினத்தால் தோன்றும் இலக்கிய வகை ஆம். பாட்டு அல்லது கவிதை என்னும் இலக்கிய வடிவமே காலத்தால் முற்பட்டது. முருகியல் இன்பக் கூறுபாட்டை மிக எளிய இனிய வடிவத்தில் கவிதை உணர்த்தும் திறன் பெற்றது. கவிதைக்குப் பின்னர்த் தோன்றிய உரை நடை அல்லது கட்டுரை இலக்கியங்களில் சுயசரிதைகளும், வாழ்க்கைக் குறிப்புகளும், நினைவுக் குறிப்புகளும், கடிதங்களும் இலக்கியம் என்னும் உயர்நிலை எய்தின. பல தத்துவ நூல்கள் இலக்கியமாகக் கருதப்படும் அளவிற்குத் திறத்தால் உயர்ந்தன. சொல்வன்மையைப் புலப்படுத்தும் பொழிவுகளும் தரத்தால் இலக்கிய மதிப்பினைப் பெற்றன. அகம், புறம் என்னும் வகையாக்கம் தமிழ் மொழி உலக இலக்கிய வகைக்கு விடுக்கும் செய்தியாகும்.

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொளி (Reflection) என்ற கருத்து மாறுதல் பெற்று, இன்று மனிதனின் வாழ்வியல், இலக்கியம் என்னும் ஊடகத்தின் மூலம் ஊடுருவிச் செல்லும்போது பல்வேறு கோணங்களில் (Refraction) பிரிந்து செல்கிறது என்ற கருத்து நிலவுகிறது. இத்தகைய இலக்கியக் கோணங்களை அளந்து உண்மைகளை நிறுவ ஒப்பீட்டறிஞர் ஈடுபட்டுள்ளனர். கதிர்.ம.

துணை நூல்கள்:


**Butcher, S.H.**, Aristotle's Theory of Poetry and Fine Arts, Translated with Critical notes, 1951.

**Chadwick, H.M. and Chadwick (NK)**, Growth of Literature Vol. I & II, Cambridge University Press, 1932 & 1936.

**Hudson, W.H.**, An Introduction to the Study of Literature, 1957.

**Rene Wellek & Austin Warrn**, Theory of Literature, 1966.

**Winchester, C.T.**, Some Principles of Literary Criticism, 1950.


**இலக்குமணப்பிள்ளை, தி. (கி.பி. 1864-1951)** ஒரு சிறந்த இசைப் பேரறிஞர். தந்தை திரவியம் பிள்ளை; தாய் வள்ளியம்மை. இவர் 3.5.1864-இல் திருவிதாங்கூரில் பிறந்தார்.

இளங்கலைப் பட்டம் (பி.ஏ.) பெற்ற இவர் தொடக்கத்தில் பாப்புப்பிள்ளையிடமும் பின்னர் வேலுப்பிள்ளையிடமும் இசையை முறையாகக் கற்றார். ஐயா பாகவதரிடமும் சாத்து பாகவதரிடமும் வீணைப்பயிற்சி பெற்றார். இவர் தம் இசைப்பயிற்சிகளை முடித்துத் திருவனந்தபுரம் அரசின் பலதுறைகளில் பணிபுரிந்து படிப்படியாய் முன்னேறி இறுதியில் அரசுக் கருவூலப் பெரும் அலுவலர் ஆகி, இறைபற்றுடனும் நாட்டுப் பற்றுடனும் பணிபுரிந்து, பலரின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார்.

இசைப்பணிகள்: இசைக்கலையை வளர்க்கக் 'கான சமரசம்' என்னும் கழகத்தை அமைத்தார். அதில் நண்பர்கள் பலரும் இசையரங்குகள் நிகழ்த்த வாய்ப்புகள் அளித்தார்; இசை வல்லுநர்களை அழைத்துப் பாடுதற்கு ஏற்பாடுகள் செய்தார். திருவனந்தை அரசவை இசைவாணர்களைக் கொண்டு தம் நண்பர்களுக்கும் எளிய மாணவர்களுக்கும் இசை கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார். தம்முடைய தமிழ்க் கீர்த்தனைகளைப்பல மாணவர்களுக்குக் கற்றுத் தந்து

எங்கும் பரப்பினார். அம்மாணவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் அரங்கநாத ஐயரும் தாணு சாத்திரியாரும் ஆவார்கள். தம்முடைய தமிழிசைப் பாடல்களைத் திருவனந்தபுரம் அரசவையில் அரசர் முன்னிலையில் அடிக்கடி பாடிக்காட்டி அரசவைப் புலவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். அரசவையில் சில சமயங்களில் இவர் பண்களின் நுணுக்கங்களை விளக்கிக் கூறுவதுண்டு. அரசு வேண்டுகோட்கிணங்கிப் பண்களின் இலக்கணக் குறிப்புகள், இசை வரலாற்றுக் குறிப்புகள் முதலியவற்றை எழுதி அரசுக்குக் கொடுத்தார்.

அண்ணாமலைச் செட்டியார் தமிழ்நாட்டில் தமிழிசையியக்கம் தொடங்கியபோது இவருடைய பாடல்கள் பெருஞ்செல்வாக்குப் பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவர்க்கு 'இசைத்தமிழ்ச் செல்வர் என்ற பட்டமீந்தது. இவர் பாடல்கள் இசையரங்குகளில் பலர் பாடும் வண்ணம் சுரப்படுத்தி வெளியிடப் பட்டுள்ளன.

மதுரையில் 1942-இல் கூடிய மாபெரும் முத்தமிழ் மாநாட்டின் இசைத்தமிழ்ப் பகுதிக்கு இவர் தலைமையேற்றார். இவர் நாஞ்சில் நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் பல திறக்க ஏற்பாடுகள் செய்தார். நண்பர்களுக்குத் தமிழ் ஆர்வமும் தமிழ்ப் பற்றும் ஊட்டுவதற்குத் 'தமிழர் சங்கம்' என்ற அமைப்பைச் சட்ட திட்டங்களுடன் உண்டாக்கினார்.

திருநெல்வேலியில் 'அறிவுநூற்புலவர் மாநாடு 1935-ஆம் ஆண்டு சிறப்புற நடைபெற்றது. இவர் அந்த மாநாட்டின் தலைவராக விளங்கி வழிகாட்டினார். இவர் தம் தலைமைப் பேருரையில், 'தமிழ்ச் சொல்லாக்கக் கழகங்களை' நாடு முழுவதும் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தித் தமிழ்ச் சொல்லாக்க நெறிகளையும் முறைகளையும் விளக்கிக் கூறினார். கலைச் சொற்களால் தமிழ் வளம் பெருக்குதலின் இன்றியமையாமையை வற்புறுத்தினார். கலைச் சொல்லாக்கும் துறையில் இவர் பல ஆண்டுகள் ஆர்வமுடன் உழைத்தார்.

இவர் சத்தியவதி நாடகம், இலீலா நாடகம், இரவி வர்ம நாடகம், அருமையாள் நாடகம் ஆகியவற்றை இயற்றியுள்ளார். ஞானானந்தன் அடிமாலை, நினைவாட்சி, கீர்த்தனை நூல், ஆங்கிலக் கட்டுரைத் திரட்டு, தமிழ்க் கட்டுரைத் திரட்டு ஆகியவை இவர்தம் பிற நூல்களாகும். இவர் 1950-இல் காலமானார்.

வீ.பா.க.சு.

**இலக்குமண பாரதியார்** கொங்கு நாட்டிலுள்ள மடவளாகம் எனப் பெயரிய ஊரில் தோன்றிய புலவர்; சைவ அந்தணர் மரபினர். மார்க்கண்டேய கோத்திரத்தினைச் சேர்ந்த இவர் தந்தையார் பெயர் தேவராசப் பண்டிதர்; தாயார் பெயர் நஞ்சுண்டம்மாள். இரட்டையராக கி.பி. 1768-இல் பிறந்த இருவருள் இவர் இளையவர். ஆதலால், இவர் இலக்குமணன் எனப்பெயர் சூட்டப் பெற்றார். தமையனார் இராமன் எனப்பட்டார். இவர்தம் தந்தையார் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் விளங்கினார். இவர் குழந்தைப் பருவத்திலேயே தந்தையார் இறந்தமையால் செல்வாக்கு மிக்க இவரது குடும்பம் மிக்க துன்பமுற்றது. தாய்வழி உறவினர்கள் இவர்களைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்றனர். இவர் சிலகாலம் திருவாவடுதுறை மடத்தில் தங்கிக் கல்வி பயின்றார். வடமொழி தென்மொழிகளில் இவர் நல்ல புலமை பெற்றார். மேலும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், அரபு ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றார். தாய்மாமனது ஊரில் வாழ்ந்தபோது, சக்திவழிபாட்டினரான உத்தண்ட வேலாயுதசாமி என்பவரிடம் பக்தி பூண்டிருந்தார். தேவியின் திருவருள் பெற்றஇவர், பல நோய்களைப் போக்கினார் எனவும் கூறப்படுகிறது. சந்தப் பாடல்களை இன்னிசையோடு பாடவல்ல இவர், ஆடல், பாடல் போன்ற கலைகளில் ஆர்வங் கொண்டிருந்தார். இயற்கையாகக் கவிதை புனையும் ஆற்றல் இவரிடம் அமைந்திருந்தது.

இராமநாதபுரம் சேதுபதிமன்னர்பால் சென்று தம் புலமைத் திறங்காட்டி அவரால் சிறப்பிக்கப் பெற்றார். அம்மன்னர் இவருக்குப் பாரதி என்னும் பட்டம் நல்கினார். அவர் இவருக்குப் படியில் முத்தினை அளந்து பரிசாக வழங்கினார் என்றும், அவற்றைச் சிவன்மலை இறைவன் திருக்கோயிலில் அட்டபந்தனஞ் செய்யுங்கால் பீடத்தினடியில் இட்டார் என்றும் கூறப்படுகிறது.

இசைத்தமிழ்ப் புலமை மிக்க இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். கொங்கு நாட்டுப் பகுதியில் பல திருக்கோயில்களுக்குச் சூர்ணிகை, எச்சரிக்கை, அம்மானை, அட்டகங்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளார். சிவன்மலை இறைவன் மீது சிவன் மலைக் குறவஞ்சி பாடியுள்ளார். இச்சிவன் மலை கொங்கு நாட்டுப் பகுதியில் காங்கேயத்திற்கு வடக்கே 3 கல் தொலைவில் உள்ளது. இக்குறவஞ்சியில் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை இணைத்துள்ளார். இக்குறவஞ்சி 1918-இல் திருச்செங்கோடு தி.அ. முத்துச்சாமி என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஒருசமயம் கரூர் முதல் பேரூர் வரை உள்ள பகுதியில் விளங்கும் 64 திருக்கோயில்களின் நிலங்களை அரசாங்கம் வரிக்காகப் பறிமுதல் செய்தபோது அத

னோடு வாதாடி, அவற்றை மீட்டுத் தந்தார். இவர் 90 ஆண்டுகள் வாழ்ந்து காலமானார்.

**இலக்குமி** திருமாலின் மனைவி. திருமகள் எனப்படுவாள். காண்க: திருமகள்.

இலக்குமி[2] இரேவந்தன் ஏறியிருந்த குதிரையின் அழகில் ஈடுபட்டு, விட்டுணுவின் வினாவிற்கு விடை கூறாதிருந்தாள். அவரால் சபிக்கப்பெற்று, இரமை, சஞ்சலை என்னும் பெயர்களையும், பெண் குதிரை வடிவினையும் பெற்றுப் பூமியில் பிறந்து தவம் புரிந்தாள். 'திருமால் ஆண்குதிரை வடிவில் வந்து அழைத்துச் செல்வார்' என்று சிவபெருமான் அருளிச் செய்தார். அவ்வாறே திருமால் ஆண்குதிரையாக வந்து இவளைக் கூடி அழைத்துச் சென்றார்

இலக்குமி[3] இரவிவன்மன் என்பவனுக்கு அமுதபதியிடம் பிறந்தவள். இவள் தாரை, வீரை ஆகியோரின் உடன்பிறந்தவள். இராகுலன் என்னும் இவள்கணவன் திட்டிவிடம்எனும் பாம்பால் இறக்கத் தீக்குளித்து உயிர் துறந்தாள். மறுபிறவியில் மணிமேகலையாகப் பிறந்து, புத்த சமயம் சார்ந்து, அச்சமய நல்லறம் கேட்டாள்.

இலக்குமி[4] ஒரூழிக் காலத்தில் கண்ணுவ முனிவரின் சாபத்தினால் மான் உருவடைந்து காட்டில் திரிந்தாள். காட்டில் தவமியற்றிய திருமாலைக் கண்டு காமுற்று, ஒரு பெண் குழந்தையினைப் பெற்று மறைந்தாள். பின்னர், அக்குழந்தை வேடர்களால் வளர்க்கப்பட்டது.

இலக்குமி[5] தருமன் என்னும் பெயருடைய ஒரு மன்னனின் மனைவி.

**இலக்குமி தோத்திரம்:** தமிழகத்தில் சக்தி வழிபாடு பெருகிய காலத்தில் கலைமகள், திருமகள், கொற்றவை போன்ற பெண் தெய்வங்களின் மீது, போற்றிப் பாடல்கள் இயற்றி வழிபடும் மரபு வளர்ந்தது. இவ்வகையில் ஐந்து பாடல் கொண்ட பஞ்சகம் எட்டுப் பாடல் கொண்ட அட்டகம், பத்துப் பாடல் கொண்ட 'பத்து' போன்ற சிறிய துதி நூல்கள் பலவாகத் தோன்றலாயின. துதிவகையில் தனித்து ஆக்கப்பெற்ற இச்சிறு நூல்களேயன்றி, புராணம் போன்ற பெரிய நூலின் இடையே துதி வகையாக இடம் பெற்ற சில பாடல்களை எடுத்துத் தனியாக அமைக்கப்பட்ட துதி நூல்களும் தோன்றின. இவ்வகையில் அமைந்த நூல்களுள் ஒன்று இலக்குமி தோத்திரம்.

இச்சிறு தோத்திர நூல், காசிக்காண்டம் என்னும் தமிழ் நூலிலிருந்து தனியே எடுத்து அமைக்கப்பட்டது. இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர் ஆவார். இவரது காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

இச்சிறு நூலின் பாடல்கள் காசிக்காண்டத்தின் ஐந்தாம் பிரிவாகிய அகத்தியர் விந்தத்தை அடைந்த அத்தியாயத்தைச் சேர்ந்தனவாகும். காசியில் இறைவனை வழிபட்ட அகத்தியர் தெற்கு நோக்கி வருங்கால், தம்மைப் பணிந்த விந்திய மலைக்கு வாழ்த்துக் கூறி மேலும் செல்லுவாராயினார். அவர் காசியை மனத்தே நினைந்து வணங்கிக் கொல்லாபுரம் என்னும் ஊர்சேர்ந்து அங்குள்ள இலக்குமிதேவியின் மீது ஐந்து பாடல் இயற்றி வழிபட்டார். அப்பாடல்கள் அந்த அத்தியாயத்தின் 27 முதல் 31 முடிய அமைந்த பாடல்களாக உள்ளன. 'கொழுதி இசை அளிமுரலும்' எனத் தொடங்கும் பாடல் இதன் முதற்பாடலாக அமைந்துள்ளது. இதனைத் தனி நூலாகப் பதிப்பிக்கும்போது, 'மூவுலகும் இடரியற்றும்' எனத் தொடங்கும் முந்திய பாடலையும், 'என்றினைய பல கூறி' எனத்தொடங்கும் பிந்திய பாடலையும் சேர்த்து ஏழு பாடல்களில் இத்துதிநூலை உருவாக்கியுள்ளனர். 'கர கமலம் முகிழ்த்து நாளும், கழிபெருங் காதலில், தொழுவோர் வினைதீர அருள் கொழிக்கும் கமலக்கண்ணாய்' என்று இலக்குமியை விளித்து இந்நூலாசிரியர் வேண்டுவது சிறப்பாக உள்ளது. இறுதியில் இத்துதியினைப் பயில்வோர் பெரும் போகம் நுகர்ந்திடுவர் என்றும், இத்துதிப் பாடல் பொறிக்கப்பட்ட ஏட்டினைக் கொண்டுள்ள வீட்டில் வறுமை இராது என்றும் கூறப்பட்டுள்ளது. செல்லூர்க் குமாரசாமி முதலியார் தாம் பதிப்பித்த 'இலக்குமி புகழ்மாலை' என்னும் நூலில் இத்துதியினையும் சேர்த்து அச்சிட்டுள்ளார். இத்துதிநூல் சென்னை அரசினர் கீழ்த்திசைக் கலைகள் சுவடி நிலையத்தில் உள்ளது. இலக்குமி தோத்திரம் என்னும் பெயரில் அமைந்த பிற துதி நூல்களும் உள்ளன.

**இலக்குமொழி:** மொழி கற்றல் - கற்பித்தல் துறையிலும், மொழிபெயர்ப்புத் துறையிலும் பயன்படுகின்ற சொற்றொடரே, இலக்குமொழி ஆகும்.

குழந்தைப் பருவத்தைக் கடப்பதன் மூலமே குழந்தை தனது முதன்மொழியைத் தாய்மொழியாகக் கற்றுக் கொள்கிறது. மொழியைத் தாய் மொழியாகக் கற்றுக் கொள்ளுதலும் கற்பித்தலும் ஒருவகை. தாய்மொழி அல்லாத பிறமொழியைக் கற்றுக் கொள்ளுதலும் கற்பித்தலும் மற்றொரு வகை.

தாய்மொழி அல்லாதவர்களுக்காக வகுப்பறை போன்ற திட்டமிடப்பட்ட சூழல்களில் (Formal Situations) கற்றுக் கொடுக்கின்ற – கற்றுக் கொள்கின்ற தாய்மொழி அல்லாத எந்த ஒரு மொழியுமே இலக்கு மொழிதான் (Target Language). எடுத்துக்காட்டாக, தமிழைத் தாய்மொழியாகப் பேச, எழுதக் கற்றுக் கொண்டவர்கள் இந்திமொழி கற்கிறார்கள் என்றால் இந்தி இலக்குமொழியாகிறது; தாய்மொழி தமிழ் மூலமொழி (Source Language) ஆகிறது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்படும்போது தமிழ் இலக்கு மொழியாகிறது; தாய்மொழி இந்தி மூலமொழியாகிறது. வேறுவிதமாகச் சொன்னால், குழந்தைப் பருவத்தில் கற்ற அந்த முதன் மொழி – தாய்மொழி மூலமொழியாகிறது; அதன் பின்னர்க் கற்கிற ஒவ்வொரு மொழியுமே இலக்குமொழியாகிறது.

இலக்குமொழி என்பதனையே பிறமொழி என்றும், இரண்டாம் மொழி என்றும், அயல் மொழி என்றும் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

பிறமொழி கற்பிக்கும்போது மூலமொழிக் கூறுகளையும் (அதாவது கற்பவரது தாய்மொழிக் கூறுகளையும்) இலக்குமொழிக் கூறுகளையும் (அதாவது புதிதாகக் கற்பிக்கப்படப்போகும் பிறமொழிக் கூறுகளையும்) ஒப்பிட்டு, இரண்டு மொழிகளுக்கும் இடையே மொழி அமைப்பில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு கொள்வர். இச்செயல் முறை ஒப்பு மொழியியலின் பாற்படும்.

பிறமொழி கற்கும்போது, முன்பே கற்றுத் தெளிந்திருக்கும் முதன்மொழியின் (மூலமொழி) மொழிக் கூறுகள் குறுக்கிட்டு, பிறமொழி கற்றலில் தொல்லை விளைவிக்கலாம். இலக்கு மொழியில் மூலமொழியின் மொழிக்கூறுகள் குறுக்கீடுகளாகத் தோன்றலாம். எடுத்துக்காட்டாக, இந்திமொழியில் குறில்-நெடில் வேறுபாடு எகரத்திலும் ஒகரத்திலும் கிடையாது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் கற்கும்போது, தொடக்க நிலையில் தமது தாய்மொழியில் இயல்பாக அமைந்துள்ள இம்மொழிக் கூறுகளின் குறுக்கீட்டால், தமிழ்ச் சொற்களான எலி, பெட்டி என்பவற்றைத் தவறாக *ஏலி, *பேட்டி எனவும், தமிழ்ச் சொற்களான ஒன்று, தொங்கு என்பவற்றை தவறாக *ஓன்று, *தோங்கு எனவும் ஒலிக்கலாம்; எழுதலாம்.

இந்தி மொழியில் இரண்டாம் வேற்றுமைக்கும் நான்காம் வேற்றுமைக்கும் பொதுவாக உள்ள வேற்றுமை உருபு 'கோ' என்பதாகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் கற்கும் தொடக்க நாள்களில் இலக்குமொழியான தமிழைப் பேசும்போதும் எழுதும்போதும் மூலமொழியான இந்தி மொழியின் இம் மொழிக் குறுக்கீட்டால், எந்தத் தமிழ் வாக்கியங்களில் நான்காம் வேற்றுமை உருபான 'கு' வைப் பயன்படுத்துவது, எந்தத் தமிழ் வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' யைப் பயன்படுத்துவது என்பது புரியாமல் தடுமாறிப் பின்வரும் இலக்கணப் பிழையான வாக்கியங்களைப் பேசவும் எழுதவும் நேரிடலாம்.

* நான் அவனுக்குப் பார்த்தேன்
* நான் அப்பாவைக் கொடுத்தேன்

பிறமொழி கற்பிக்கும்போது அம்மொழியில், அதாவது இலக்கு மொழியில், நேரிடுகின்ற இவை போன்ற குறுக்கீடுகள் நடைமுறைச் சிக்கல்கள் ஆகும். இந்நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் கற்பவரது தாய்மொழி (மூலமொழி) உதவுகிறது. மொழி கற்பவர்தம் பிழைகள் இலக்குமொழியில் காணப்படும்போது அப்பிழைகளுக்கான காரணத்தை, மூலத்தையும் மூலமொழிக்கூறுகளையும் ஒப்பிட்டு நோக்குவதால் எளிதில் கண்டுபிடிக்க முடிகிறது. காரணம் கண்டுபிடிக்கப்படும்போது பிழை நீக்க ஒலிப்பு முறைப் பயிற்சி (Remedial Pronounciation Drill), பிழை நீக்க வாக்கியப் பயிற்சி (Remedial Structural Drill) போன்றவற்றைக் கொடுக்கவும்; இப்படிப்பட்ட பிழைநீக்கப் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் இலக்குமொழியைச் செவ்வையாகக் கற்பிக்கவும் முடிகிறது.

மூலமொழியில் உள்ள நூல்களை எந்த மொழியில் மொழி பெயர்க்கிறோமோ அந்த மொழியையும், ஒரு மொழியில் உள்ள சொற்களைக் கடன் வாங்கி எந்த மொழியில் பயன்படுத்துகிறோமோ அந்த மொழியையும் இலக்குமொழி என்பர். வி.ஞா.

துணை நூல்கள்:

**Lado, Robert**, Language Teaching: A Scientific Approach, Tata McGraw - Hill Publishing Co., Ltd, New Delhi, 1964.

**Thirumalai, M.S.**, Learning Theories and Linguistics: An Introduction, Tamil Nuulagam, Madras, 1977.

**இலக்குவன்** தசரதச் சக்கரவர்த்தியின் நான்கு புதல்வர்களுள் ஒருவன்; மூன்றாமவன்; சுமத்திரையின் மகன். இவன் உடன்பிறந்தவன்

சத்துருக்கன் ஆவன். இவனுக்கு மூத்தவர் இராமனும் பரதனும் ஆவர். ஆயில்ய நல்லோரையில் கடக ராசியில் இவன் தோன்றினன் எனக் கம்பர் குறித்துள்ளார்.

இலக்குவன் என்னும் பெயர் 'லக்சுமண' என்னும் வடமொழிப் பெயருக்கு ஈடாகக் கம்பர் படைத்த தமிழ் வடிவாகும். வான்மீகி முனிவர் 'செல்வத்தான்' என்னும் பொருளில், அதாவது இலட்சுமியை உடையோன் என்னும் பொருளில் இச்சொல்லை அமைத்துள்ளார். அறிவுச் செல்வம், ஆன்மிகச் செல்வம் எனப் பல செவங்கள் உள. அச்செல்வங்களுள் 'வழுவிலா அடிமை செய்யும்' கைங்கரியச் செல்வத்தை உடையவன் என்னும் பொருளில் இப்பெயரை வான்மீகி முனிவர் வழங்கியுள்ளதாகக் கோவிந்தராசர் உரை விளக்குகிறது.



இலக்குவன்

'விலக்குதற்கரிய ஆற்றல் உடையோன்' என்னும் குறிப்பில் இலக்குவன் என்னும் பெயரிட்டதாகக் கம்பர் கூறுவார். 'இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி' யெனச் சுமித்திரை பெற்றெடுத்த இலக்குவனை 'இளையவன்' என்ற சொல்லாலேயே கம்பர் முதன்முதல் அறிமுகப்படுத்துகிறார். இராமனைப் பிரியாது என்றும் உடனிருந்து தொண்டு செய்யும் பேறு இலக்குவனுக்கே வாய்த்ததனால் இராமனுக்கு வாய்த்த தம்பியர் பிறரினும் சிறப்புக்குரிய தம்பி இலக்குவனே என்று குறிப்பது போல 'இளையவன்' என்ற சொல்லால் கம்பர் பல இடங்களில் இலக்குவனைக் குறிக்கிறார்.

'சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம்' எனத் திருமாலோடு என்றும் உடனிருந்து எப்படி எப்படியெல்லாமோ அப்பெருமானுக்குத் தொண்டு செய்துவரும் ஆதிசேடனே இலக்குவனாகத் தோன்றினான் என்ற குறிப்பும் உண்டு.

இலக்குவன் அன்பன், அறவோன், ஆற்றல் வல்லான், அறிஞன் ஆவான். இவன் இராமனுக்கு உகந்தன எல்லாம் செய்தலையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டான். இறைவன்பால் கொள்ளும் பேரன்பிற்கு இலக்குவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவான்.

இவன் இராமன் நினைந்த போதெல்லாம், நினைந்தவாறெல்லாம் தவறாமல் செயற்பட்டனன். இதனைக் கம்பர் பலவாறு உணர்த்துகிறார். வேள்விப் படலத்தில் விசுவாமித்திரன் அருளிய தேவர் படைகளெல்லாம் 'இராமா! இளையவன் போல நின்னைப் பிரியாது நீ ஏவியவாறெல்லாம் வினை செய்து உனக்குத் துணையாக நிற்போம்!' எனக் கூறும்; இக்கூற்றில் இலக்குவனின் தொண்டுநிலை தெளிவாக விளங்குகிறது.

அண்ணன் இராமன் நலத்தையே தன்னலமாக நினைந்து மகிழ்பவன் இலக்குவன். அவ்வாறே இராமன் கேட்டைத் தன் கேடாக எண்ணிப் பெரிதும் வருந்துபவனும், அக்கேட்டுக்குரிய இடர்களை எதிர்த்துச் சீற்றங் கொள்பவனும் இவனே யாவான். கைகேயி பெற்ற இருவரத்தைக் கேட்டு அவளை இகழ்ந்து இவன் போர்க்கோலம் கொண்டான். 'கொடியோர்களை அழித்து இராமனைக் கோமானாய்ச் செய்வேன்' என்று கொதித்தெழுந்தான். வில்லை வளைத்து நாணைத் தெறித்தான்; அவ்வொலி கேட்டு இராமன் ஓடோடிவந்து இவன் சீற்றத்தை ஆற்றினான்.

தன்னோடு கானகத்திற்குத் தொடரும் இலக்குவனைத் தடுக்கும் இராமன்பால் இலக்குவன் கூறும் உரை இருவருக்குமுள்ள இன்றியமையாத் தொடர்பை எடுத்துரைக்கும். உயிராகிய மீனும் நெஞ்சாகிய மலரும் நீர்மையாகிய நீர் இருந்தால் தான் வாழும். நீயிருந்தால்தானே, உன் அன்பு எனக்கு உடன் இருந்தால்தானே நானும் என்

உயிரும் வாழ்வோம் என்ற இவனது கூற்றிலிருந்து இதனை உணரலாம்.

இலக்குவனை ஒருவகையில் 'வன்தொண்டன்' என்றும் கூறலாம். இராமன் கூற்றினை மறுத்தும் அவனுக்குப் பணிசெய்துள்ளான். கானகத்திற்கு உடன் வராதே என்று கூறியபோது, இராமனை மறுத்து உடன் சென்று பதினான்கு ஆண்டுகள் உதவினான்.

திருமாலின் உடைமைகளாகிய ஆதிசேடனே இலக்குவனாகவும், - சங்குச் சக்கரங்களே பரத சத்ருக்கர்களாகவும் இராமனுடன் உடன் பிறந்தன என்பது இதிகாச உண்மை. இறைவனுக்குச் சேடனாகப் (அடிமையாக) பணிசெய்தலில் முதன்மைக்கு உரியவன், அதாவது முதன்மையான, முதலாமவனான அடிமை ஆதிசேடன் ஆகிய இலக்குவன் ஆவன். இதனை அவன் எப்போதும் மறந்ததில்லை. அவன் மறந்தாலும் உண்மையை மறவாத அவன்தாய் சுமித்திரை அவனுக்கு அவ்வப் பொழுது நினைவூட்டி வந்தாள். சுமித்திரையின் கோயிலை இராம இலக்குவர் அடைந்தபோது இராமனின் கதிகண்டு சுமித்திரை கலங்கிச் சோர்ந்தாள். அப்போது ஆங்குக் கைகேயியின் ஏவலர் மரவுரி எடுத்து வந்தளித்தனர். அம்மரவுரியை ஏற்று இலக்குவன் இராமனுக்குமுன் தான் அணிந்து கொண்டான். சுமித்திரையும் தன் மகன் இலக்குவனை நோக்கி 'உடன்செல்' எனப் பணித்தாள். அவள் சொல்லை – இராமனோடு உடன் செல்லுதற்கு வாய்த்த அந்தச் சொல்லை-ஏற்ற இன்பத்தில் இராமனுக்கு முன்னே விரைந்து செல்லும் இலக்குவனை நோக்கிச் சுமித்திரை, 'மகனே! எப்போதும் முன்செல்லாதே, இராமனைப் பின் தொடர்ந்து செல்; தம்பி என்னும் உரிமை பாராட்டாதே. அடியாரைப்போலப் பணி செய்து கிட. இராமன் மீண்டால் திரும்பி வா. அவன் மீள இயலாதவாறு அவனுக்கு ஏதும் கேடு நேரின் நீ முன்னர் முடிதல் வேண்டும்' என்று பணித்தாள். அன்னை கூறிய இந்த அரும்பணியை இலக்குவன் மறக்கவில்லை. கவந்தன் வாயினுள் நுழைந்து இராமன் சாவேன் எனக்கூறியபோது . 'முன்னே ஆருயிரோடும் முடிவேன்' என்று இலக்குவன் உயிர் விடத் துணிகிறான்.

தன்னியல்புக்கேற்பத் தாய் சுமித்திரையின் எண்ணத்திற்கியைய அடியவனாய் அன்பனாய் இராமனுக்குப் பணிசெய்து காத்து வருவதலையே கடனெனக் கொண்டவன் இலக்குவன். மேலுமிவன் கங்கைக் கரையிலே இராமனும் சீதையும் உறங்கிய போது வரிவில் ஏந்தி வைகறைவரை இமைக்காது காத்துநின்றான். இயமுனைக் கரையைக் கடப்பதற்குத் தெப்பம் அமைத்து இருவரையும் அதில் இருத்திக் கடக்குமாறு உதவித் தான் இருகையால் நீந்தி அதனைக் கடந்தான்.

சித்திரகூடப் பருவத்திலே இராமனும் சீதையும் தங்கி வாழக் குடிசையொன்று அமைத்துத் தந்தனன். குங்குமச்சேறு கொண்டு, தரளம் அப்பி, மயில்பீலி விதானம் அமைத்து, அழகிய மூங்கில்களால் பின்னி, மலர்தூவி அமைத்த அந்தக்குடில் தலைவன் தலைவியர்களாகிய இராமன் சீதை ஆகியோரின் நெஞ்சத்தைக் கவர்ந்தது.

இராமன் அறத்தின் நாயகன். அறத்தை நிலை நாட்டுதற்கே தோன்றியவன். அத்தகு அறங்காத்தலில் இராமனுக்கு இணையாகவும் துணையாகவும் இலக்குவன் அமைந்துள்ளான். அதனால்தான் கிட்கிந்தை நோக்கி வந்த இராமஇலக்குவர்களைக் கண்டபோது அனுமன், 'இவர்களே தருமமாவார்' என்று எண்ணினான். சுக்கிரீவனும் 'அன்று தொட்டு இன்றுவரை உலகம் செய்த புண்ணியமெல்லாம் திரண்டு இரு வடிவு கொண்டு இராம இலக்குவர்களாக இங்குத் தோன்றியதோ' என்று வியந்தான். கண்ணை இமை காப்பது போல வேள்வியை இராமனும் இலக்குவனும் காத்ததன் நுண்பொருள் இதுவே.

தன்உயிர் தந்தேனும் தன்னைச் சார்ந்தவர் உயிரைக் காக்கும் பெரும்பண்பினன் இலக்குவன். இதனைப் பின்வரும் நிகழ்ச்சி புலப்படுத்துகிறது. தன் படைபலம் வீடணனால் அழியக்கண்ட இராவணன், தம்பி என்றும் பாராது யாற்றாரை அழித்து மீளும், மயன் கொடுத்தவேல் ஒன்றினை வீடணன் மேல் வீசி எறிகிறான். அப்போது 'இது என் உயிரை அழிக்கும்' என்று செய்வதறியாது கையற்ற நெஞ்சினனாய் வீடணன் கலங்குகிறான். அவ்வேலைத் தடுத்து நிறுத்த இலக்குவன் எய்த அம்புகளும் பிற படைக் கலங்களும்பயனின்றி அழிந்தொழிகின்றன. 'வீடணன் அழிந்தான், பிழைக்க வழியில்லை' என்று தேவர்கள் கலங்கினர். அப்போது 'அடைக்கலம் வந்தடைந்த வீடணனைக் காத்தல் என்கடன்; அவனைக் கைவிடின் நெடும்பழி வந்து தொடரும். அழிவேன் எனினும் அழியாப் புகழ் பெறுவேன். அறம் வாழும்' என்று கூறி அனைவரையும் விலக்கித் தன் மார்பில் அந்த வேலினை ஏற்கிறான் இலக்குவன். இவ்வாறு தன்னுயிரைப் பொருட்படுத்தாது தமர் உயிர் காக்கத் துணிந்த இலக்குவனைப் போற்றிப் 'புறாவின் பொருட்டாகப் புண்ணுறத் தன் உடலை அரிந்த அச்சிபியும் நினக்கு ஒப்பாகான்' என்று இராமன் பாராட்டுகிறான்.

இலக்குவன் பேரழகினன். எனினும் பெண்கள் முகத்தை ஏறெடுத்துப் பாராத பேராண்மைச் சான்றோனாகத் திகழ்ந்தான். தன் அண்ணி சீதையின் அணிகலன்களைச் சுக்கிரீவன், குரங்குகள் பொறுக்கித் தந்தனவாகக் கொடுத்த போது, அவற்றுள் காலணிகளை மட்டும் அடையாளங்கண்ட இலக்குவனின் சீர்மையினை இலக்கியங்கள் பலவாறு பாராட்டும். இவன்பால் அமைந்துள்ள இப்பண்பின் மேம்பாட்டைக் கிட்கிந்தைப் படலத்தில் கம்பர் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார். சீதையைப் பிரிந்து வருந்தும் இராமனது துயரைப் பொறானாகி, சொன்னவாறு வந்துதவாமல் உண்டும் குடித்தும் பெண்களோடு உறைந்தும் கடமையை மறந்த சுக்கிரீவன்பால் சீற்ற முற்று, கிட்கிந்தைக் கோட்டைக் கதவைத் தகர்த்து வாயிலுள் நுழைந்துவருகிற இலக்குவனைத் தடுத்து நிறுத்த அனுமன் தாரையினை அனுப்புகிறான். தாரை தன்ஏவல் மகளிர்பலர் புடைசூழ வாயிலை அடைத்துக் கொண்டு வருகிறாள். முன்வரும் பெண்டிரைக் குறிப்பினால் உணர்ந்த இலக்குவன் நிமிர்ந்து நோக்க அஞ்சித் தலைசாய்த்து வில்லினைத் தரையில் ஊன்றியபடி முன் செல்லாமல் தயங்கி நிற்கிறான். அவ்வாறு தயங்கி நிற்கிற இலக்குவனைப் பார்த்து 'அப்பா! அறத்தின் நாயகனாகிய இராமனின் திருவடி பிரியாது தொண்டு செய்கிற நீ அவனைத் தனியே விடுத்து இங்கு வந்தது ஏன்' என்ற தாரையின் உருக்கக் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்து நோக்கிக் கைம்பெண் தோற்றத்தில் நின்ற அவள் காட்சியைக் கண்டு தன் தாயாரை நினைந்து வருந்தினான்.

இலக்குவன் வீரமும் வெற்றியும் அனைவரது புகழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரியனவாக அமைந்துள்ளன. தலைவனாகிய இராமபிரான் 'என்தம்பி கொதித்திடுமேல் எண்ணாயிரம் கோடி இராவணரும் விண்ணாடரும் ஒரு மூவரும் இவன்முன் நிற்க வல்லார் அல்லர். சீதையின் சிந்தனையைப் போற்றித் தான் கொல்லாது, நான் கொல்வதற்காக இராவணனை விட்டு வைத்துள்ளான்' என்று இலக்குவனின் ஆற்றலைப் பாராட்டியுள்ளான்.

இவன்தன் பேராற்றல் பகைவீரர்களாலும் பாராட்டப் பெறுகிறது. அஞ்சா நெஞ்சினனாகவும் அன்பு வீரனாகவும் விளங்கும் கும்பகருணன் 'திரிபுரம் எரித்த சிவனும் இவனுமே போரில் ஒரு வில்லாளர் ஆவர்' என்று பாராட்டுகிறான்; வீடணனை இராவணனிடமிருந்து காக்கவல்ல ஒருவன் இலக்குவனே என்றும் குறிப்பிடுகிறான்.

அனுமன் அங்கதர் தோள்களில் அமர்ந்து இந்திரசித்துவை எதிர்த்து இராம இலக்குவர் போர் தொடங்கி, இமைப்பதன் முன்னம் இராக்கதர் வெள்ளங்களை அழித்தொழிக்கின்றனர். அதனைக்கண்டு இந்திரசித்தன் 'எங்கும் இம்மனிதர் என்பார் ஒருவரே கொல்' என்று இராம இலக்குவரின் போர்த்திறனை வியக்கிறான்.

இராவணனோடு பன்முறை போர் செய்து படைகளைக் காக்கிறான். கும்பகருணன் படைகளை அழித்து அவன் ஆற்றலை மெலிவிக்கிறான். தாருகனையும் அதிகாயனையும் அழிக்கிறான். கும்பகருணனுக்குப் பிறகு தன் ஆற்றலுக்கும் அன்புக்கும் உரியவனாய் இராவணன் போற்றிய இந்திரசித்தனைக் கொன்று தீர்க்கிறான். இறுதிநிலையில் தந்தை தயரதன் இலக்குவனைத் தழுவி இவன் போர் ஆற்றலைப் புகழ்ந்து 'நீ இந்த உலகில் வெம்பகை துடைத்து அறம் நிறுத்தினை' என்று பாராட்டுகிறான்.

இலக்குவன் கூர்த்த அறிவினன். மாரீச மான் முன் இராமன் மயங்கியது போலத் தான் மயங்காத தெளிவினன். மாரீசன் எழுப்பிய மாயக்குரல் கேட்டுச்சீதை போல் கலங்காமல்'இராம பிரானை அழிக்க வல்லார் உலகில் எவருமில்லை' என்ற உறுதியான நம்பிக்கை கொண்டனன். குகனைக் கண்ட அளவிலேயே அவன்தன் கரியபெரிய புறத்தோற்றத்தைக் கடந்து, அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்த கொடிய கூரிய படைஞர்களை மறந்து, 'இவன் உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்' என்று அவனது அகப்பண்பினை ஒரு நொடியில் உணர்ந்து இராமனுக்கு அறிமுகம் செய்தான்.

இராமன் குறிப்பறிந்து, தாங்கள் காட்டுக்கு வந்த காரணத்தைச் சடாயுவுக்குச் சுருக்கமாக உரைத்த திறத்தினன். சடாயுவைச் சுற்றிக்கிடந்த படை பல கண்டு அவனோடு போரிட்டோர் பலரென இராமன் கருதியபோது, 'இல்லை பல தலைகளோடும் பல கைகளோடும் போரிட்டவன் ஒருவனே. அவன் இராவணனே' எனத் தெளிந்து கூறியவன் இலக்குவனே.

வாலி எழுப்பிய பல எதிர்ப்புரைகளுக்கு இராமன் தக்க மறுப்புரைகள் வழங்குகிறான். இறுதியில் 'எதிர்நின்றுபோரிடாமல் புதரில் மறைந்து வேட்டுவன் விலங்குகளைக் கொல்வது போல், மறைந்திருந்து என்மேல் அம்புவிட்டது நின் வீரத்திற்கும் மரபிற்கும் எவ்வாறு பொருந்தும்?' என்று கேட்கிறான் வாலி. இதற்கு இராமன் விடைகூறவில்லை. இலக்குவன் தக்கஉரைகூறி, வாலியின் மனநிலையை மாற்றி, இராமன்பால் அன்புடையவனாக அவனை ஆக்குகிறான்.

அவ்வுரை வருமாறு:- 'வாலி! நின்தம்பி சுக்கிரீவன் முன்புவந்து அண்ணலின் திருவடியை அடைக்கலமாக அடைந்து வேண்டினான். அவன் வேண்டுகோளை ஏற்று, நின்னை எமனுலகிற்கு அளிப்பதாக வரமளித் தனன். இப்போது நின்முன் அண்ணல் தோன்றி யிருந்தால் உயிரின்பாலுள்ள ஆசையால் நீயும் அண் ணலை அடைக்கலமாக அடைந்திருப்பாய். அப் போது சுக்கிரீவனுக்குக் கொடுத்தவாக்கைக் காப் பாற்றமுடியாத குறை வந்துசேரும். எனவேதான் மறைந்து நின்று அம்பு எய்தான்'.


மாயாசீதையை அழித்து அயோத்தி செல்வ தாகப் போக்குக் காட்டி, அனுமனை ஏய்த்து, நிகும் பலையில் வேள்வி ஒன்று இயற்ற வேண்டி இந்திர சித்தன் மறைகிறான். அனுமன் அரற்றியவாறு அயோத்தி நோக்கி இந்திரசித்தன் ஏகியதாக இரா மன்பால் வந்து கூறுகிறான். அப்போது இராமன் அயோத்திக்கு விரைந்து செல்ல உபாயம் யாது எனக் கேட்டுக் கலங்குகிறான். இலக்குவனோ, 'அய்யா இராவணன் வேலுக்கும் பிரமாத்திரத்திற் கும் மயங்கிய என்னைப் போன்ற மெலியனோ பரதன்; இந்த இந்திரசித்து அல்ல எவர்வரினும் மூன்று உலகத்தையும் அழித்து எதிர்த்தவனையும் அவன்தன் இனத்தையும் ஒழித்து நிற்கும் பரதனை அயோத்தி சென்றால் நீங்கள் காணலாம்' என்று பரதனின் ஆற்றலைத் தக்க இடத்தில் எடுத்துரைத்து இராமனின் கலக்கத்தைப் போக்குகிறான்.

இவ்வாறு, அன்பிலும் ஆற்றலிலும் பண்பிலும் பயனிலும் அறத்திலும் திறத்திலும் சிறந்தோங்கிய வன் இலக்குவன். வைணவ மரபின்படி 'கைங்கரிய சம்பத்துக்கு' உரியன் இவன்; ஆண்டவனுக்குப் பக்தி செய்து பணியாற்றும் நெறியினைக் கற்பித்துக் கொடுத்த முதல் பாகவதனும் இவனே.

பொன்.செள.

**இலக்குவனார், சி.**: இவர் தஞ்சாவூர் மாவட் டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் வாய்மேடு என்னும் சிற்றூரில் 17-11-1910-இல் பிறந்தார். மு. சிங்கார வேலுத் தேவர், அ. இரத்தினம்மாள் ஆகிய பெற்றோர்க்கு இலக்குவனார் மூன்றாம் மகனாவார்.

இவர் 1936-ஆம் ஆண்டில் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். சாமி சிதம்பரனார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, சுப்பிரமணிய சாத்திரியார் முதலிய தமிழ் அறிஞரிடம் பாடம் கேட்டார். இவர் 1936 முதல் 1943 வரை பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமைத் தமிழாசிரிய ராகப் பணி புரிந்தார். பின்னர், 1945 முதல் 1965 வரை நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி, விருதை செந்திற்குமாரநாடார்கல்லூரி, மதுரை தியாகராசர் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்த் துறைத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றினார்.



இலக்குவனார், சி.

தமிழ்நாட்டில் 1965-இல் நடந்த இந்தி எதிர்ப் புப் போராட்டத்தில் கலந்தமையால் சிறைப்படுத்தப் பட்டார். பின்னர் இரண்டாண்டுக்காலம் அரசியல் ஈடுபாடும் மொழிக்காப்பு முனைப்பும் கொண்டு எழுதியும் பேசியும் வந்தார். மாத இதழாகத் தாம் நடத்தி வந்த 'குறள்நெறி' ஏட்டை 'நாளிதழ்' நிலைக்கு உயர்த்தினார்.


அறிஞர் அண்ணா முதலமைச்சரானபோது சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைமைப் பதவி இவருக்குக் கிடைத்தது. ஓராண்டு (1967-68) அப்பதவியில் இருந்தார். பின்னர், ஐதரா பாத்து உசுமானியப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக இரண்டாண்டுகள் (1968-70) பணிபுரிந்தார்.

இலக்குவனார் தம் பணிக்காலத்தில் ஆசிரியப் பணியோடு அமையாது பல்கலைக்கழகக் கல்வி அமைப்புகளிலும் இடம்பெற்று விளங்கினார். சென்னை, அண்ணாமலை, உசுமானியா ஆகிய பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டக்குழுவின் உறுப் பினராகிப் பணிபுரிந்துள்ளார். சென்னை, உசு மானியா ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் விளங்கினார். தமிழ்நாடு பல்

கலைக்கழக ஆசிரியர் அமைப்பின் துணைத்தலைவ ராகவும் இருந்திருக்கிறார். தமிழகப் புலவர் குழு வின் செயலராகவும் தொண்டாற்றியுள்ளார்.

இலக்குவனார் தம் வாழ்க்கைப் போரின் நடுவே தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த நூல்கள் பல இயற்றியுள்ளார். தமிழ்த் தொண்டையே தம் வாழ் நாட் பணியாக ஏற்று வாழ்ந்த பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் 3-9-1973-இல் மதுரை அரசு மருத்துவமனையில் காலமானார். வீ. மு.

**இலக்சம்பர்க்கு** ஐரோப்பாவின் மிகப் பழமை யானதும், சிறியதுமான சுதந்தர நாடுகளுள் ஒன்று: வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளது. இது மேற்குச் செருமனி, பிரான்சு, பெல்சியம் போன்ற நாடுகளின் இடையில் உருவாகியுள்ள சிறு நாடு.




இலக்சம்பர்க்கு

பரப்பு: இலக்சம்பர்க்கின் பரப்பளவு 2586 ச.கி.மீ. இதன் மேற்கில் பெல்சியமும், தெற்கில் பிரான்சும், கிழக்கில் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு எனப்படும் மேற்குச் செருமனியும் எல்லை களாக உள்ளன. இது கடல்களால் சூழப்படாத உள்நாட்டுச் சிறுநாடு.

மக்கள்தொகை: இலக்சம்பர்க்கின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 3,64,000 ஆகும். இலக்சம்பர்க்கு நகாமே இந்நாட்டின் தலை நகருமாம். இந்நகரத்தின் மக்கள்தொகை 79,000.

மக்கள்: இலக்சம்பர்க்கு மக்களுக்குப் பெல்சியம், பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாட்டு மக்களோடு நெருங்கிய தொடர்புண்டு. எனினும், இவர்கள் தமக்கென்ற சுதந்தர உணர்ச்சியுடன் வாழ் கிறார்கள் என்பதும் உண்மை. வளமான நல்வாழ்வு வாழும் இவர்கள் சிறந்த உணவு, வாழ வசதியான வீடு, வீட்டுக்குதவும் பல்வகை எந்திரக் கருவிகள் முதலியவற்றைக் கொண்டு வாழ்கிறார்கள். பன்றி இறைச்சி, மீன் போன்றவை இவர்கள் சுவைத்து உண்ணும் உணவு வகைகள். பீர், திராட்சைச் சாற் றில் உருவாகும் சாராயம் இவர்களின் குடிவகைகள். மக்கள் அழகான கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களின் பேச்சு மொழி இலெட்சுபர்க்கிசு என்னும் செருமானியக் கலப்பு மொழியாகும்.

நிலம்: இலக்சம்பர்க்கில் ஆர்டன்சு (Ardennes), பான்பேய்சு (Bonpays) என்று பிரிக்கப்படும் இரு வகை நிலப்பிரிவுகளைக் காணலாம். ஆர்டன்சு பிரிவு இலக்சம்பர்க்கின் வடபகுதியின் மூன்றில் ஒரு பங்கை ஆட்கொண்டுள்ளது. 'பான்பேய்சு' என்றால் நன்னிலம் என்று பொருள்படும். ஆர்டன்சில் உள்ள புர்க்பிளாட்சு 559 மீ. உயரமுள்ள மலையுச்சியாகும். இந்நாட்டின் மிக உயர்ந்த பகுதியும் இதுதான். பான்பேய்சு நிலப்பிரிவில் பாயும் ஆறுகளின் பலனாக இங்குப் பண்ணைகள் உள்ளன.

தட்பவெப்பநிலை: இலக்சம்பர்க்கின் பெரும் பகுதி குளிர்ந்த, ஈரக்கசிவான தட்ப வெப்பநிலை யைக் கொண்டது. தென்மேற்கு இலக்சம்பர்க்கில் 100 செ.மீ. வரையிலும், தென்கிழக்கில் 30 முதல் 40 செ.மீ. வரையிலும் மழை பொழிகிறது.

பொருளாதார நிலை: இரும்புத்தாதுவே இலக் சம்பர்க்கின் விலைமதிப்பற்ற உலோகமாகும். தென் பகுதிச் சுரங்கங்களில் இரும்புத் தாதுக்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. தொழிலர்ளர்களுள் மூன்றில் ஒரு பங்கு மக்கள் உருக்கு ஆலைகளில் பணி யாற்றுகின்றனர். பான் பேய்சில் உள்ள உழவர்கள் ஓட்சு, உருளைக்கிழங்கு, கோதுமை போன்ற பயிர் வகைகளைப் பயிரிடுகின்றனர்.

வரலாறு: இலக்சம்பர்க்கின் வரலாறு கி. பி. 963-ஆம் ஆண்டில் தொடங்கியது. ஆர்டினசைச் சார்ந்த சிக்பிரிடு பிரபு முதன்முதல் இலக்சம்பர்க்கு நகரம் இருக்குமிடத்தில் கோட்டையொன்றைக்

கட்டினார். என்றி என்பாரின் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1308-ஆம் ஆண்டில் இலக்சம்பர்க்குச் சிறப்புப் பெற்றது. என்றியின் பேரர் நான்காம் சார்லசு இதனை ஒரு பெருங்குடி மக்கள் ஆட்சிப்பகுதியாக (Duchy) மாற்றினார். இது கி. பி. 1443 வரை அவர்கள் கைவசம் இருந்தது. பின்னர், இலக்சம்பர்க்கு நெதர்லாந்தின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. ஏறத்தாழ 450 ஆண்டுகள் அவர்களின் ஆட்சியில் இருந்தது.

வியன்னா மாநாடு கி.பி. 1815-ஆம் ஆண்டில் கூடியது. அது இலக்சம்பர்க்கை நெதர்லாந்தின் ஆட்சிக்குட்படுத்தியது. இலக்சம்பர்க்கு கி.பி. 1839-ஆம் ஆண்டில் தன்னாட்சி பெற்றது. எனினும், தச்சு அரசர்கள் கி. பி. 1890-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஆண்டார்கள். வில்கெல்மினா என்ற தச்சு அரசியார் காலத்தில் தச்சிய(The Dutch) ஆட்சி இங்கு முடிவுற்றது.



இலக்சம்பர்க்கு நகரம்

மீண்டும் பெண்ணொருத்தி 1912-ஆம் ஆண்டில் அரசியாக ஆட்சி செய்யும் சட்டமாற்றம் செய்யப் பட்டது. கார்லெட்டு என்பாரின் ஆட்சி 1964 வரை நடைபெற்றது. பின்னர், இளவரசர் சீன் (Prince Jean) என்பார் புகழ் பெற்ற கோமகனாகப் (Grand Duke) பதவி ஏற்றார்.

முதல் உலகப் போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் செருமானியர்கள் இலக் சம்பர்க்கைக் கைப்பற்றிக்கொண்டனர். வரலாற்றுப் புகழ் பெற்ற, 1944-45-ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற வளைவுப் போர் (Battle of the Bulge) வட இலக்சம்பர்க்கில்தான் நடைபெற்றது. இப்போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் ஆம் (Hamm) என்னுமிடத்தில் புதைக்கப்பட்டனர். இலக் சம்பர்க்கு 1945-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாயிற்று. பென்லக்சு (Benelux) எனப்படும் பெல்சியம், நெதர்லாந்து, இலக்சம்பர்க் குப் பொருளாதார ஒன்றியத்தில் இந்நாடு 1948-இல் சேர்ந்தது. வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை இயக்கத்திலும் இந்நாடு 1949-இல் சேர்ந்து கொண் டது. இந்நாடு 1950-இல் ஐரோப்பிய நிலக்கரி உருக்குக் குழுவின் உறுப்பு நாடாகியது. மேற்கூறப் பட்ட மூன்று இயக்கங்களும் 1967-இல் இணைந்து உருவானதுதான் ஐரோப்பியப் பொருளாதாரக் குழு (EEC) என்பதாகும். இக்குழுவின் நீதிமன்றம் இலக்சம்பர்க்கில் உள்ளது.

**இலக்சம்பர்க்கு நாட்டில் கல்வி**: இலக்சம் பர்க்கு நாட்டில் மழலையர் கல்வியுடன் பள்ளிக்கல்வி தொடங்குகிறது. மழலையர் கல்வியின் தலையாய நோக்கம், மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சியளித்துத் தொடக்கக் கல்விக்கு அவர்களை ஆயத்தப்படுத்து வதேயாகும். நான்கு வயதில் கூட மழலையர் பள்ளி களில் குழந்தைகள் சேரலாம். ஆனால், குழந்தை கள் தங்கள் ஐந்து, ஆறு வயதுகளில் மழலையர் பள்ளி களில் சேர்ந்து பயிலுவது இந் நாட்டில் கட்டாய மாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் குழந்தைகள் குறிப்பாகப் படிக்கவும் எழுதவும் கணக்கிடவும் பழகு கின்றனர். 7,500 குழந்தைகள் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, மழலையர் பள்ளிகளில் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். இலக்சம்பர்க்கு (Luxembourg) மொழியே இப்பள்ளிகளில் கற்பித்தல் மொழியாகும்.

இந்நாட்டில் 541 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ 28,000 மாணவர்கள் பயிலு கின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். ஏழு வயது நிறைந்த குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் சேர்ந்து, பன்னிரண்டு வயதில் ஆறாம் வகுப்பினை முடிக்கின் றனர். செருமானிய மொழியை முதல் வகுப்பிலிருந்து குழந்தைகள் கற்கத் தொடங்குகின்றனர். இரண்டாம் வகுப்பு முடியும் தறுவாயில், குழந்தைகளுக்குப் பிரெஞ்சு மொழி கற்பிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வி அளவில் குழந்தைகள் இரு அயல் மொழிகளைக் கற்கின்றனர். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:16 என்ற அடிப்படை யில் உள்ளது.

பிரெஞ்சு, செருமன், இலக்சம்பர்க்கு ஆகிய மூன்று மொழிகள் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. பிரெஞ்சு மொழிதான் அலுவலக நிருவாக மொழியாகும். மிகுதியாகப் பேசப்படும் மொழி இலக்சம்பர்க்கு ஆகும். எனினும், தொடக்கப் பள்ளிகளில் மிகுதியாகக் கற்பிக்கப்படுவது செருமானிய மொழியாகும். தொடக்கப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் பதின்மூன்று வயதில் இடைநிலைப் பள்ளிகளிலோ (Secondary School) தொழில்நுட்பப் பள்ளிகளிலோ சேர்ந்து பயிலுகின்றனர்.

இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்கள் பொதுக் கல்வியினை ஏழாம் வகுப்பிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை (Grades 7 to 13 ) பயிலுகின்றனர். முதல் வகையில், இயந்திரவியல் (Mechanics), மின்நுட்பவியல் (Electro Technology), கட்டடப் பொறியியல் (Civil Engineering ) போன்ற பாடங்களைத் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Institute of Technology) ஏழாம் வகுப்பிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை மாணவர்கள் பயிலுகின்றனர். இரண்டாம் வகைத் தொழில்நுட்பப் பள்ளிகளில் இதே போன்ற பாடங்களை மாணவர்கள் கற்றபோதிலும், இறுதி இரண்டாண்டுகள் மட்டும் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்காகப் (Trade) பயிற்சி பெறுகின்றனர். மூன்றாம் வகைத் தொழில்நுட்பப் பள்ளிகளில் ஏழாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை உள்ளன. இவ்வகைப் பள்ளிகளில் இறுதி மூன்றாண்டுகள் மட்டும் மாணவர்கள் வாழ்க்கைத் தொழிற்கல்வி (Vocational Education) பயிலுகின்றனர். இந்நாட்டில் கல்வியானது ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நிறுவனத்தில் (Institute of Technology) பொறியாளர்களும் கல்வியியல் நிறுவனத்தில் (Pedagogical Institute) ஆசிரியர்களும் பயிற்சியளிக்கப்படுகின்றனர். இப் பயிற்சிகளும் பல்கலைக்கழகக் கல்வியும் இந் நாட்டு உயர்கல்வியுள் அடங்கும். இலக்சம்பர்க்கு நாடு அன்றி, பெல்சியம் (Belgium), பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா ஆகிய நாட்டுப்பல்கலைக் கழகங்களிலும் மிகுதியான மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

வயது வந்தோர் கல்வி: இக் கல்வித் திட்டம் இலக்சம்பர்க்கிலும் நடைபெற்று வருகிறது. மொழிகளைப் பயில வருவோர் எண்ணிக்கை இக் கல்வி வகுப்புகளில் சற்றுப் பெருகி வருகிறது. கல்வி அமைச்சகமும் தனியார் நிறுவனங்களும் இக் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. வயது வந்தோர் கல்வி பயிலுவோர்களுள் குறைந்தது ஐந்து பேராவது இடைநிலைக் கல்வி, வாழ்க்கைத் தொழிற் கல்வி பயிலத் தயாராக இருப்பார்களேயானால், கல்வி அமைச்சகம் அவர்களுக்காகவும் வகுப்புகளை நடத்தி வருகிறது. 100 விழுக்காடு மக்களும் கல்வி அறிவு பெற்றுள்ள சிறப்பை இந் நாடு 1983-ஆம் ஆண்டுக் கணக்கின்படி பெறுகிறது.

நிருவாகம்: கல்வி அமைச்சகமே கல்விக்கான அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றி வருகிறது. மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் பாடத் திட்டம், கற்பித்தல் ஆகியவற்றுக்கு ஆய்வாளர் குழு (College of Inspectors) பொறுப்பேற்கிறது. இடைநிலைப் பள்ளிகளில் உள்ள ஒவ்வொரு பாடத்திட்டத்தையும் தேசியக் குழுக்கள் (National Commissions) கண்காணிக்கின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தேசியக் குழு பொறுப்பேற்கிறது. இக் குழுக்களில் திறமைமிக்க பேராசிரியர்கள் உள்ளனர். இப் பேராசிரியர்கள் பாடத் திட்டங்களை உருவாக்குதல், பாடநூல்களை அறுதியிடுதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

அரசின் வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கான நிதி பதினான்கு விழுக்காடாகும். இதனுள் ஆசிரியர்களின் ஊதியமும் அடங்கும். திறமைமிக்க மாணவர்கள் சிறப்பு உதவித்தொகைகள் பெறுகின்றனர்.

தேர்வு முறை: இலக்சம்பர்க்குப் பள்ளிகளில் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் மூன்று பருவங்கள் உண்டு. ஒவ்வொரு மாணவர்க்கும் ஆசிரியர்கள் மதிப்பெண்கள் வழங்குகின்றனர். இம் மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். தொடக்கப்பள்ளி, இடைநிலைப் பள்ளி இறுதிகளில் மட்டும் கல்வி அமைச்சகம் நடத்தும் தேர்வுகளை மாணவர்கள் எழுதியாக வேண்டும். தொழிற்கல்விப் பள்ளித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழோ (Certificate) பட்டயமோ (Diploma) வழங்கப்படுகிறது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: இலக்சம்பர்க்கில் உள்ள கற்பித்தல் கல்வி நிறுவனம் (Pedagogical Institute) மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சியின் கால அளவு 1982-ஆம் ஆண்டு வரை ஈராண்டுகள். இப்பொழுது இக்கால அளவு மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இடைநிலைப் பள்ளித் தேர்வில் மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்களின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் நாற்பதிலிருந்து ஐம்பது மாணவர்கள் மட்டிலுமே இந் நிறுவனத்தில் பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இடைநிலைப்பள்ளி


ஆசிரியராவதற்கு ஒருவர் நாலாண்டுக் கல்வியும், ஓராண்டு ஆசிரியர் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

கற்பித்தல் கல்வி நிறுவனத்தில் கல்வியாய்வு மேற்கொள்ளப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்விச் சிக்கல்களில்தாம் மிகுதியான ஆய்வுகள் செய்யப் படுகின்றன. மொழியைக் கற்றுக் கொள்வதில் வெளி நாட்டுக் குழந்தைகள் அடையும் இடர்ப்பாடுகள் குறித்தும் தரமான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**இலங்கணி** இராமாயணக் கதைமாந்தருள் இடம்பெறும் ஒரு பெண். இவள் மதில் சூழ்ந்த இலங்காபுரிக் கோட்டை வாயிலைக் காவல் பூண்டி ருந்தவளாவாள். கம்பன் இலங்காதேவி என்று இவள் பெயரைக் குறிப்பிட்டுள்ளான். சீதையைத் தேடிக் கடலைத் தாண்டி இலங்கை அடைந்த அனுமான் அந்நகரக் கோட்டைமதிலின் பெருமையையும் அதன் காவல் திறத்தையுங் கண்டு வியந்து, அவ்வாயில் வழியே உட்செல்ல விரும்பாது மதிலைத்தாண்டி உள்புக முயன்றான். அப்போது இலங்கணி 'யாரடா' என்று இடைமறித்து வினவினாள். இலக்கணிக்கும் அனுமனுக்கும் நடந்த போரில் இவள் அவன் மீது சூலத்தினை ஏவினாள். அப்படையினை அனுமன் முறித்துச் சிதைத்தான். இவள் தொடர்ந்து ஏவிய படைகள் அனைத்தையும் பற்றி, விண்ணில் எறிந்த அனுமன் பெண்ணைக் கொல்லுதல் பழியாம் என் றெண்ணி, இவள் மார்பில் ஓர் அடி அடித்தான். அவ் வளவில் இவள் தளர்ந்து தரையில் வீழ்ந்து, பின், எழுந்து அனுமனிடம் தன் வரலாறு கூறினாள். தன் பெயர் இலங்கைமாதேவி என்பதாகவும், பிரமன் ஏவலால் இலங்கை நகரைக் காப்பதாகவும், தன் கடமைக்கு ஊறு நேர்ந்தமையால் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் கூறி மன்னிக்க வேண்டினாள். 'ஒரு குரங்கு வந்து உன்னைக் கையால் தீண்டும் காலம்வரை நீ இக்காவல் தொழில் புரிய வேண்டும்' என்பதும், 'அதற்குப் பின் இந்நகரம் அழிவது உறுதி' என்பதும் பிரமன் தனக்கிட்ட சாபம் என்பதையும் கூறினாள். பின்னர், அனுமன் இலங்கையுள் புகுந் தான்.

இலங்கணி எட்டுத் தோள்களும், நான்கு முகமும், உலகினைத் தொட்டு மீளும் மார்பும், சுழலும் கண்களும், கூற்றுவனை ஒத்த வலிமையும் உடை யவள் என்று கம்பன் கூறுகிறான். மேலும், வேல், வாள், சூலம், கதை, பாசம் முதலிய படைக்கலன் களைக் கையிற் கொண்டவள் என்றும், திங்களைப் பிளந்து வைத்தது போன்ற எயிற்றினை உடையவள் என்றும், கண்டால் காலனும் நடுங்கும் சினமுடை யவள் என்றும் இவளைக் குறிப்பிட்டுள்ளான். இராம நாடகம் எழுதிய அருணாசலக் கவிராயர், இவளைக் குறிப்பிடும் போது, 'தாரம் உள்ள அரக்கி இலங்க கணிதான், ஆல காலம் என் வடவாசற் காவற்காரி' என்று சித்திரித்துள்ளார். இவள் அனுமனுடன் புரிந்த போரினையும் அதன் முடிவினையும் 'ஆரடா என்றதட்டி வந்தாள் அனுமான் கையால் அறை கொண்டாள் கொண்டளவே தறை கண்டாளே' என்று நயமுறக் காட்டியுள்ளார்.

**இலங்காசுடர்** வடமேற்கு இங்கிலாந்திலுள்ள தொரு நகரம்; இலங்காசயர் மாவட்டத்தின் தலை நகரம். இலண்டன் நகருக்கு 370 கி.மீ. வடமேற்கில் உள்ள இந்நகரம் இலூனே ஆற்றங்கரையொட்டி அமைந்துள்ளது.




இலங்காசுடர்

இலங்காசுடர் (Lancaster) நகரம் உரோமானி யக் கோட்டையாக இருந்தது. நார்மானிய வெற்றி யின்போது இது பாய்ட்டோ உரோசர் என்பாரின் வசமிருந்தது. பின்னர், கி.பி.1266-இல் மூன்றாம் என்றி அரசரின் சொத்தாக இருந்த இம்மாநகர், அவர் மகன் எட்மண்டுக்குச் சொந்தமாயிற்று. சான் காண்ட்டு என்பார் கி.பி.1362-இல் சாசனம் பெற்று இங்குக் கூட்டங்கள் நடத்தும் சிறப்புரிமைகளைப் பெற்றார். இலங்காசுடர் தியூக்கு (Duke) என்றி என்பாருக்கு இங்கிலாந்தின் அரசுரிமையை உறுதிப் படுத்தப் பாராளுமன்றம் கி.பி.1399-இல் சட்டமியற் றியது. அவரே நான்காம் என்றி என்னும் பட்டத் துடன் இலங்காசுடர் மரபின் முதல் அரசரானார். அவர் கி.பி.1399-இலிருந்து 1461 வரை இங்கிலாந்தை அரசாண்டார். நான்காம் என்றியின் மகனும், பேர னாகிய ஐந்தாம் என்றியும், ஆறாம் என்றியும்

இலங்காசுடர் மரபினைச் சார்ந்த இருவரும் இங்கிலாந்தின் முடிமன்னர்களாக ஆண்டனர். ஆறாம் என்றியின் மகன் இலங்காசுடர் மரபின் இறுதி அரசராவார். அவர் உரோசாப்பூச் சின்னப் போரின் போது கொல்லப்பட்டார்.

இலங்காசுடர் ஆற்றங்கரைத் துறைமுகம் செய் தொழில் உற்பத்தி மையம் அமையப்பெற்ற நகரம். பருத்தி, இரயான், பட்டுத் துணிகள் ஆகியவை இந்நகரில் உற்பத்தியாகும் சிறப்புப் பொருளாகும். இலைனோலியம், மரச்சாமான்கள், பீர், புத்தகத்துணி, பாய், பின்னல் ஆடைகள் போன்ற பிற பொருள்களும் இங்கு உற்பத்தியாகின்றன. இலங்காசுடரின் மக்கள்தொகை 1,20,914 ஆகும் (1981).

இலங்காசுடர் என்னும் பெயரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான பென்சில்வேனியாவில் பிறிதொரு நகரம் உள்ளது. இந்நகரம் கோனெசுதோகா (Consetoga) ஆற்றங்கரையை ஒட்டியுள்ளது; பிலடெல்பியா நகருக்கு 104 கி.மீ. மேற்கில் அமைந்துள்ளது. இதுவும் அமெரிக்காவிலுள்ள இலங்காசுடர் மாவட்டத்தின் தலைநகரமாகும்.

இப்பகுதியில் செருமானியர், மோரோவியர், ஆங்கிலேயர், இசுகாட்டியர், வேல்சியர், அயர்லாந்தார் போன்றோர் முதன்முதலில் குடியேறினர். இங்கிலாந்திலிருந்த இலங்காசுடர் நகரத்தின் நினைவாக இதனை இலங்காசுடர் மாவட்டம் (கவுண்டி) என்னும் பெயரில் கி.பி.1729-இல் அமைத்தனர்.

செல்வச் செழிப்புமிக்க கிராமங்களைச் சுற்றிலும் கொண்ட இலங்காசுடர், பல வகையான வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. புகையிலை, கோதுமை போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்கள். கிழக்கில் உருவாகியுள்ள பெருமைமிக்க பெரும் கால்நடைச் சந்தையாக இந்நகர் கருதப்படுகிறது.

இலைனோலியம், தக்கை, கடிகாரங்கள், தொலைக்காட்சிக் குழல்கள், பொம்மைகள் போன்றவை செய்தொழிற் பொருள்கள். கோளத் திரளமைப்புகள், இயந்திரங்கள், கற்கண்டு, பருத்தி, பட்டு, உரோம ஆடைகள் போன்றவை ஏனைய உற்பத்திப் பொருள்கள். இலங்காசுடர் பகுதியின் மொத்த விற்பனைக் கூடமாகவும் சில்லறை வாணிகக் கூடமாகவும் இந்நகரம் விளங்குகிறது.

குடியரசுத் தலைவர் சேம்சு புசானன் என்பாரின் வீட்லாந்து என்னும் வீடு இலங்காசுடரில் நினைவுச் சின்னமாக இருக்கிறது. இங்குப் பல கல்லூரிகளும் உள்ளன. இந்நகரின் மக்கள் தொகை 54,725 ஆகும்.

**இலங்கை** தெற்கு ஆசியாவிலுள்ளதொரு சுதந்திர நாடு. இது ஒரு தீவு. இதனைச் சிரீலங்கா (Sri Lanka) என்பர். இது இந்தியக்குடியரசின் தென் கோடியில் அமைந்துள்ளது. இது1972-ஆம் ஆண்டில் குடியரசாயிற்று.

இலங்கையை மன்னார் வளைகுடாவும் பாக்சு நீர்ப்பிரிவும் இந்தியாவினின்றும் பிரிக்கின்றன. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்நாடு கிழக்கில் வங்காள விரிகுடாவின் பாகத்தையும் கொண்டுள்ளது.




இலங்கை

இலங்கைத் தீவின் பரப்பு 65,610 ச.கி.மீ. ஆகும். மக்கள்தொகை 1,52,50,000 (1982-ஆம் ஆண்டு மதிப்பீடு). இந்நாட்டு மக்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மத்தியப் பகுதியில் உயர்ந்த மலைகள் உள்ளன. அவை இயற்கை எழிலுக்கு எடுத்துக்காட்டானவை. மலைத்தொடர்கள் ஏறத்தாழ 2700 மீட்டர் உயரமுடையவை. இம்மலைத்தொடர்களின் கிழக்கு, தெற்கு, மேற்கு விளிம்புகளில் குறுகிய கடற்கரைச் சமவெளியைக் காணலாம். வடபகுதியில் பரந்த தாழ்நிலங்கள் உள்ளன. மத்திய மலைப்பகுதிகளிலிருந்து ஆறுகள் அனைத்துத் திக்குகளிலும் பாய்ந்து ஓடி கடலைச் சென்றடைகின்றன.

இலங்கை உலக நடுக்கோட்டிற்கு அண்மையிலுள்ளதால் இதன் தட்பவெப்பநிலை வெப்பமண்டலத்தைச் சார்ந்ததாக உள்ளது. தாழ்நிலப் பகுதிகளில் ஆண்டு முழுவதும் வெப்பம் மிகுந்து காணப்படு

கிறது. வடக்கில் வெப்பநிலை 100° பாரன்கீட்டு வரை உயரும். இலங்கை மழைக்குப் பெரும்பாலும் பருவக் காற்றுகளையே நம்பியுள்ளது. வடகிழக்குப் பருவக்காற்று இலங்கைக்குப் போதுமான மழையைக் கொடுக்கிறது. தென்மேற்குப் பருவ மழையாலும் இத்தீவு பயன்பெறுவதுண்டு.

பொருளாதாரம்: இலங்கையின் பொருளாதாரம் வேளாண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. பணப் பயிர்களான தேயிலை, தேங்காய், இரப்பர் போன்றவை ஏற்றுமதிக்கு ஏற்றவை. எனவே, ஏற்றுமதிக்கேற்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் இந்நாடு கருத்தாகவுள்ளது. மேற்கூறிய மூன்று பணப் பயிர்களின் விளைச்சலில் ஏறத்தாழ 90 விழுக்காடு ஏற்றுமதியாகின்றன. கோகோ, காபி, இலவங்கப் பட்டை, ஏலம், மிளகு, கிராம்பு, சாதிக்காய், புகையிலை போன்றவையும் ஏற்றுமதியாகின்றன. நெல், பழவகைகள், காய்கறிகள் போன்றவை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப விளைவிக்கப்படுகின்றன. அமார்பசு கிராபைட்டு (Amorphous Graphite) என்னும் கனிம உற்பத்தியில் இலங்கை உலகிலேயே முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இதன் தொடர்பான தொழிலே சிறப்பாக இந்நாட்டில் நடைபெறுகிறது. இந்நாட்டில் கிடைக்கும் இரும்புத்தாதுவைப் பயன்படுத்த முயற்சிகள் நடைபெறவில்லை. வேளாண்மைப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களின் மையமாகவே இந்நாட்டின் தொழில்கள் உள்ளன. தேயிலை, இரப்பர், கொப்பரை போன்ற பணப்பயிர்கள் இவற்றில் சிறப்பானவையாகும். நுகர்வோருக்குப் பயன்படும் பல்வேறு பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்கிறார்கள்.

கொழும்பு மாநகரம் இலங்கையின் தலைநகர். இலங்கை நாட்டின் அனைத்து இருப்புப் பாதைத் தொடர்களும் பெரும்பாலான சாலைகளும் கொழும்பில் முடிவடைகின்றன. கொழும்புத் (Columbo) துறைமுகத்தின் வழியாகவே பெரும்பாலான அயல் நாட்டு வாணிகம் நடைபெறுகிறது. சிரீலங்காவின் மக்கள்தொகையில் ஏறத்தாழ 69 விழுக்காடு மக்கள் சிங்களவர்கள்; அவர்கள் ஈனயான புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். இந்து சமயத்தைச் சார்ந்த தமிழர் ஏறத்தாழ 23 விழுக்காடு மக்கள். எஞ்சியோர் மூர் இன முசுலிம்கள், யூரேசியர்கள், தச்சியர்(The Dutch), போர்ச்சுகீசியத் தொடர்பால் தோன்றியவர்கள் ஆகியோராவர்.

சிங்களமொழி ஆட்சிமொழியாகும். தமிழ் இரண்டாம் மொழியாகும். ஆங்கிலமொழி பரவலாகப் பேசப்படுகிறது. பல்கலைக்கழக மட்டம் வரை கல்வி இலவசம். இந்நாட்டில் படித்தவர் 80 விழுக்காடு மக்களாவர்.



இலங்கைக்கடற்கரை

வரலாறு: தமிழ்நாட்டு மக்கள் இலங்கையை ஈழம் என்றனர். வட மொழியில் இதனைச் சிங்களத் தீவம் என்றார்கள். கிரேக்கரும் உரோமானியரும் 'தாப்ரோபரனே' என்றனர். தாமிரபரணி என்பது இதன் பொருள். போர்ச்சுகீசியர் இதனைச் சைலோன் என்றமையால் அதிலிருந்து சிலோன் (Ceylon) என்ற சொல் தோன்றியது. வேடர்கள் (Veddar) என்னும் மக்களே இலங்கையின் பழங்குடிகள். இன்றும் ஏறத் தாழ 3000 வேடர்கள் மலைப்பகுதிகளில் வாழ்கிறார் கள். இலங்கையில் மக்கள் குடியேறிக் கட்டுப்பாடான சமூக வாழ்க்கையை, கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தொடங்கியதற்கான சான்றுகள் உள்ளன. இராமா யணக்கதை இந்திய-இலங்கை உறவினைச் சுட்டிக் காட்டுகிறது. வட இந்தியாவிலிருந்து வந்த இந்திய-ஆரிய இனத்தைச் சார்ந்த பழங்குடிமக்கள் இலங்கை யின் வடக்கு நடுச் சமவெளிகளிலும், தென்கிழக்குக் கடற்கரையிலும் குடியேறினர். இம்மக்கள் அடுத்த நூற்றாண்டில் இலங்கை வாழ் மக்களுடன் உறவு கொண்டு சிங்கள மக்களாக உருவாயினர்; வட இந்தியாவிலுள்ள வங்கத்தினின்றும் வந்த விசயன் என்பானே இலங்கையின் முதல் அரசனென இலங்கை நூல்கள் கூறுகின்றன. இந்திய-ஆரியப் பேச்சு மொழியுடன் கலந்த சிங்களமொழியும் உருவாக்கப் பட்டது. வேளாண்மையின் அடிப்படையில் எழுந்த அரசியலமைப்பினையும் இவர்கள் உருவாக்கியதுடன், இலங்கையில் வடக்கு நடுப்பகுதியில் ஆற்றுப் பாசன வெளிகளில் தம் நாகரிகத்தையும் நிலைநாட்டினர். அக்காலத்தில் அநுராதபுரம் இவர்களின் தலைநகர மாய்த் திகழ்ந்தது.

சிங்கள மக்களுக்குப் புத்த சமயத்துடன் நெருங் கிய தொடர்பேற்பட்டு, கி.மு. 3-ஆம் நூற்றாண் டில் பௌத்தர்களாகச் சமயம் மாறியதும் இவ் விணக்கம் மேலும் வலுவடைந்தது. மௌரியப் பேரரசர் அசோகர் பௌத்த சமயத் துறவிகளை அனுப்பிய வரலாற்றைக் கல்வெட்டுகள் புலப்படுத்து கின்றன. சிங்கள மன்னரான தேவனாம்பிய திசா (Devanampia Tissa) என்பவரே முதன் முதலாகப் புத்த சமயத்தை ஏற்றுக் கொண்டவராவர். சிறிது காலத்திற்குள் அனைத்துச் சிங்களவரும் புத்த சம யத்தை மேற்கொண்டனர். புத்த சமயமே சிங்கள மக்களின் நாட்டுச் சமயமாகி அரசர்களின் அரவ ணைப்பினையும் பொதுமக்களின் ஆதரவினையும் பெற்றது. துட்டகாமனு என்னும் அரசன் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். அவன் பல பௌத்தத் தூபிகளை நிறுவினான்.

சிங்களவருக்கும் தென் இந்தியாவில் வாழ்ந்த தமி ழர்களுக்கும் இலங்கையில் குடியேற்றங்கள் தொடங்கிய பண்டைக் காலத்திலிருந்தே தொடர்பு ஏற்பட்டது. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே ஒருசில தமிழ்க் குடியேற்றங்களும் படை யெடுப்புகளும் தொடக்க காலத்திலேயே ஏற்பட்டி ருந்தபோதிலும், பெரும் எண்ணிக்கையிலான தமிழர் குடியேற்றங்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை எனலாம். இடைப்பட்ட காலத்தில் சிங்களவருக்கும் தமிழர் அரசுகளுக்கு மிடையே மிக நெருக்கமான அரசியல், பண்பாட்டுத் தொடர்புகள் நிலவின.



இரப்பர்ப் பால் எடுத்தல்



தேயிலை பறித்தல்



புத்தர் சிற்பம் - பொலனருவை, இலங்கை

தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் தமிழ்நாட்டுச் சேரமன்னரான செங்குட்டுவனுக்கும் இலங்கை மன்னர் முதலாம் கயவாகு என்பாருக்கும் இருந்த உறவு வெளிப்படுகிறது. பத்தினித் தேவிக்குக் கோயில் எடுத்தபோது சேர மன்னனின் அழைப்பினை ஏற்று முதலாம் கயவாகு வந்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தைக் கணிக்க இச்சந்திப்புப் பயன்படுகிறது.

பின்னர், வட இந்தியாவை ஆண்ட குப்த மன்னர்களுள் ஒருவரான சமுத்திரகுப்தனின் உதவியை மேகவருணன் என்னும் இலங்கையரசன் பெற்றதை வரலாறு காட்டுகிறது. பொலனருவைக்கு அண்மையிலுள்ள சிகிரியா மலையில் இன்றும் 16 ஓவியங்கள் மலைப்பகுதியின் சாரலில் தீட்டப்பட்டுள்ளதைக் கண்டுகளிக்கலாம். இவ்வோவியங்களுக்கும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அசந்தாவின் சில குகைகளுக்குள் தீட்டப்பெற்றுள்ள வண்ண ஓவியங்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். அந்த நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கு வருகைபுரிந்த சீனப்பயணிகளுள் ஒருவரான பாகியான் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற கடல் வாணிகத்தைப் பற்றித் தம் குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார்.

பல்லவ மன்னரான முதலாம் நரசிம்மவருமன் இருமுறை கடற்படைகளின் உதவியால் மானவருமன் என்பானை இலங்கை அரியணையில் அமர்த்தினார் என்றும், இப்படையெடுப்புகள் மாமல்லபுரத்திலிருந்து நிகழ்ந்தன வென்றும்யுவான் சுவாங்கு என்னும் பிறிதொரு சீனப்பயணி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையும் சோழப் பேரரசர்களும்: முதலாம் பராந்தகச் சோழ மன்னர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இலங்கையின்மீது படையெடுத்தாலும் வெற்றி பெறவில்லை. பின்னர், இராசராச சோழன் எட்டுத் திக்குகளிலும் படையெடுத்து ஈழ மண்டலத்தைக் கைப்பற்றினான். தஞ்சாவூர்ப்பெரிய கோவிலைக் கட்டிய இராசராசன் இலங்கையிலிருந்து பல சிற்றூர்களை அக்கோயிலுக்கு மானியமாக வழங்கினான் என்னும் குறிப்பைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறும். இராசராசன் காலத்தில் அரசனாக இலங்கையை ஆண்டவன் ஐந்தாம் மகிந்தன் என்பதும்,அவனே முதலாம் இராசேந்திர சோழனின் ஆட்சிக்காலத்திலும் இலங்கையை ஆண்டான் என்பதும் வரலாற்றால் அறியக்கிடக்கின்றன. மகாவம்சம் என்னும் சிங்களநூல் இராசராசனின் படையெடுப்பைக் குறிப்பிடவில்லை. இராசராசனின் படையெடுப்பால் இலங்கையின் தொன்மையான தலைநகராயிருந்த அநுராதபுரம் அழிக்கப்பட்டதென்றும், பொலனருவை (Polannaruwa) சோழர்களின் தலைநகராக்கப்பட்டதென்றும் வரலாறு கூறுகிறது. இலங்கையின் வடபகுதி இராசராசனால் கைப்பற்றப்பட்டதாக வரலாற்றாசிரியர் கூறுவர்.

முதலாம் இராசேந்திர சோழன் ஈழமண்டலம் முழுவதையும் வென்றமையை அவருடைய கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். ஈழமண்டலப் படையெடுப்பு இராசேந்திரன் முடிசூட்டிக் கொண்ட ஐந்தாம் ஆண்டில் (கி.பி. 1017-18) நிகழ்ந்தது. இராசேந்திரன் இலங்கை முழுவதையும் கைப்பற்றியதுடன் இலங்கை அரசனின் மணிமகுடத்தையும், அவனுடைய அரசியார்களின் மணிமகுடங்களையும் கொண்டுவந்தான் என்பதும் சொல்லப்படுகிறது. இராசேந்திர சோழன் இலங்கையைப் பெரும்படையின் உதவியால் வென்றதையும் அதன் பகுதிகளைக் கைப்பற்றியதையும் அரசனின் மணிமகுடம், அரசியார் மணி மகுடம், அரசனின் மகள், செல்வம் ஆகிய அனைத்தையும் கவர்ந்து கொண்டதையும் கரந்தைச் செப்பேடுகள் செப்புகின்றன.

இராசேந்திரனின் மகனான இராசாதிராசனின் காலத்திலும் இலங்கையுடன் போர் மூண்டதாகவும், பின்னர் வந்த வீரராசேந்திரன் காலத்திலும் சோழர்களுக்கும் இலங்கைக்கும் போர் நிகழ்ந்ததாகவும் தெரிகிறது. ஆனால், முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக்காலத்தில் விசயபாகு என்னும் இலங்கை இளவரசன் இலங்கையின் சுதந்திரத்தை நிலைநாட்டினான். பின்னர் வந்த பராக்கிரம பாகுவின் ஆட்சிக் காலத்தில் சோழர்களின் ஆட்சி நலியத் தொடங்கியது. பராக்கிரமபாகு தென்னிந்தியாவின் மீது படையெடுத்தான் என்றும் வரலாறு கூறும்.

இலங்கையை மீட்ட சிங்கள மன்னர்கள் சீரிய பண்பாட்டை உருவாக்கி நிலைநாட்டினர். நெல் உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினர். பொலனருவைக்கண்மையில் பராக்கிரமபாகுவின் பெயரால் பெரும் ஏரியொன்றை வெட்டி நீரைத் தேக்கிப் பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தை உருவாக்கினர். இதனை இன்றும் 'பராக்கிரமபாகு சமுத்திரம்' என்பர்.

சிங்கள அரசர்கள் புத்த சமயத்திற்குப் பேராதரவு நல்கினார்கள். புத்த சமயத்தைப் பரப்ப இவ்வரசர்கள் பெருந் தொகைகளைச் செலவிட்டனர். பல பௌத்த மடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் துறவிகள் தங்கிப் பாலி, வடமொழி, சிங்களமொழி போன்ற மொழிகளில் புத்தசமயத் தத்துவத்தையும், சமய சித்தாந்தங்களையும் கற்றுத் தேர்ந்தனர். இம் மடங்களுக்கு அரசர்கள் பெருமளவில் மானியங்களைக்

கொடுத்ததுடன் புத்த சமயக் கோயில்களையும், வழிபாட்டுத் தலங்களையும் அமைத்தார்கள். புத்த சமயத்தின் புகழ் ஓங்கி வளரலாயிற்று. மீண்டும் அநுராதபுரமும் பொலனருவையும் புத்தசமயப் பெரு மையங்களாயின. தெற்காசியாவில் புத்த சமயத் தைப் பரப்பும் பணியில் இந்நகரங்கள் அருந்தொண்டாற்றின. இந்நகரங்கள் சுமத்திரா, சாவா (Java), பர்மா, தாய்லாந்து போன்ற பகுதிகளிலிருந்த புத்த சமயக் கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டன. ஒவ்வொரு சிற்றூரிலும் விகாரங்கள் அமைக்கப் பட்டன. புத்த சமயத் துறவிகளுக்கு இவ்விகாரங் களில் வழிபாட்டுத் தலம், சமய விளக்கம் செய்ய மண்டபம், வாழுமிடம் போன்றவையும் அமைக்கப் பட்டன. புத்த சமயத் துறவிகள் நல்லாசிரியர்களா கவும், அறங் காவலர்களாகவும் இருந்து பொதுமக் களுக்கு வழிகாட்டினர்; பலர் அரசர்களின் அறிவுரை யாளர்களாயும், புத்தசமயத்தைக் காக்கும் காவலர் களாயும் விளங்கினர்.

சிங்களவர்களின் பண்பாடு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நலிவடையத் தொடங் கியது. தென் இந்தியாவிலிருந்து அடிக்கடி தாக்குதல் கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து நிகழ்ந்தன. சோழமன்னர்கள் இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றித் தம் பேரரசுப் பகுதியாக்கிக் கொண்ட னர். கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிங்கள வர் தம் ஆட்சியை மீட்டனரெனினும், தென் இந்தி யப் படையெடுப்புகள் தொடர்ந்து நிகழ்ந்தமையால் நாட்டின் வருமானம் வீணாயிற்று. தென் இந்தியப் படையெடுப்பாளர்கள் இலங்கையிலேயே குடியேறி, சிங்கள அரசிளங்குமரிகளை மணந்துகொண்டு நிலை யாகத் தங்கலாயினர். அரண்மனையில் அவர்களின் செல்வாக்கும் வலிமையும் ஓங்கியிருந்தமையால், அரி யணையைக் கைப்பற்றி ஆட்சியையே தம் கட்டுப் பாட்டின்கீழ்க் கொணர்ந்தனர். சிங்களவர்கள் தெற் கிலும் தென்மேற்கிலும், தாம் குடியேறிய பகுதிகளில் சிறுசிறு அரசியல் மையங்களை நிலைநாட்டிக் கொண்டனர். தலைநகரங்களும் அடிக்கடி மாறலா யின. குருணகேலா (Kurunagale), கம்போலா (Campola), இரயிகாமா (Rayigama), கோட்டி (Kotte), கண்டி (Kandy) போன்ற நகரங்கள் தலைநகரங்க ளாயின. வடக்கில் தமிழர்கள் தம் சொந்த அர சினை, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிலைநாட்டினர். அங்கு ஆட்சி செய்யத் தொடங்கிய அரச மரபினர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள். யாழ்ப்பாணம் (Jaffna) அவர்களின் தலைநகராயிற்று.

அரசியலில் ஏற்பட்ட கொந்தளிப்புகளும், நிலை யற்ற தன்மைகளும் வடக்கு, நடுச் சமவெளிகளில் நடைபெற்ற வேளாண்மை முறையை மிகுதியும் பாதித்தன. நீர்ப்பாசனத் திட்டங்களைத் தூர் எடுத்துப் பழுதுபார்த்துக் காப்பாற்றும் அளவுக்கு அரசு திறனற்றதாய்க் காணப்பட்டது. அடிக்கடி நடை பெற்ற போர்களாலும் இத்திட்டங்கள் நாசமாக்கப் பட்டன. இதன் விளைவாகச் சமவெளிகளுக்குப் போதுமான பாசனவசதி குறைந்தமையால் உற்பத்தி யும் நலிவடையலாயிற்று. வாழும் வகை தேடிய இலங்கைவாழ் மக்கள் தாம் வாழ்ந்த பகுதிகளை விட்டு, மழைபெறும் பகுதிகளான தெற்கிலும், தென்மேற்கிலும் குடியேறலாயினர். இரு நூற்றாண்டு களுக்குள், செழுமையால் வளங்கொழித்த வட பாகத்து வயல்கள் காடுகளாக மாறின; நீர் தேங்கிக் கிடந்த சதுப்பு நிலங்கள் நோய் பரப்பும் களங்களாயின.

சிங்களவர்கள் பருவக்காற்று மழையைப் பெறும் தென்பாகத்திலும், தென்மேற்குப் பகுதியிலும், நடு மேட்டு நிலங்களிலும் குடியேறி வாழ்ந்தனர். இப் பகுதிகளில் நிலவிய தட்பவெப்பநிலை, நிலவியல் போன்றவை வடக்கு நடுச்சமவெளிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தன. எனவே, வேறு வகையான சாகுபடி முறைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நெல் சாகுபடி தொடர்ந்துசெய்யப்பட்டாலும், அதுமுந்தைய நிலை யைப் போன்று உற்பத்தி செய்யப்பட முடியவில்லை. ஏனைய உணவுப் பயிர்களையும் பயிரிட்டு நெல் விளைச்சலை ஈடுகட்டலாயினர். இத்தருணத்தில் நடைபெற்ற வேளாண்மை உயிர்வாழப் போதுமான அளவில் தான் இருந்தது. வாணிகம் அரசமரபினரின் முற்றுரிமையாய் இருந்தது. ஏனெனில், அதன்மூலம் தான் அவர்களுக்குத் தேவையான வருமானம் வந் தது. அப்போது இலவங்கப் பட்டை, மிளகு, ஏலம் போன்ற நறுமணப் பொருள்கள் வாணிகப் பொருள் களாயின. அவ்வாணிகத்தை,முன்னின்று நடத்திய அராபியர்கள் நேரடியாக அரசு அலுவலர்களுடன் செய்து கொண்டனர்.

வலிமை குறைந்த அரசாட்சியாலும், வறுமை யால் வாட்டமுற்ற மக்களாலும், பண்பாட்டு மரபுகளைக் காக்கும் திறன் குறைந்தமையால், பண் பாட்டுத் துறையில் சாதனைகள் மிகவும் குறைந்து மெலிந்தன. சமய நிறுவனங்களுக்கு முன்னர் வெகு வாக வழங்கிய மானியத்தைப் போன்று அரசர்க ளால் அப்போது மானியம் வழங்க இயலவில்லை. புத்தசமயம் தொடர்ந்து மக்களால் போற்றப்பட்டா லும், அக்கால கட்டத்தில் எழுப்பப் பெற்ற வழி பாட்டு இடங்கள் முந்தைய காலத்தைப் போன்று பெரியவையாக அமையவில்லை. புத்த சமய வழி

பாடு இந்து சமயத்தின் தாக்கத்திற்காளாகியது. சிங்கள மொழியும் இலக்கியமும் தமிழ்மொழியின் செல்வாக்கிற்கு ஆட்படலாயின. இலங்கையின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் இந்துசமயம் வலுவாக நிலைநாட்டப்படலாயிற்று. இப்பகுதிகளில்தான் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் குடியேறி வாழ்ந்தனர். இந்து சமயக் கோயில்கள் கட்டப்பட்டதுடன், பார்ப்பனக் குருக்கள் சமயச் சடங்குகளை நிறைவேற்றுவான் வேண்டித் தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர்.

இலங்கையில் முதன்முதலாகக் காலடி வைத்தஅந்நியர் போர்ச்சுகீசியரேயாவர். அவர்கள் கி. பி.–1505 ஆம் ஆண்டில் கொழும்பில் கரையிறங்கினார்கள்; இலங்கையின் வாணிகச் சிறப்பையும் அது அமைந்துள்ள இடத்தின் மதிப்பையும் உணர்ந்தார்கள். போர்ச்சுகீசியர் சிங்கள அரசருடன் கி.பி. 1518–ஆம் ஆண்டில் கோட்டியில் (Kotte) உடன்படிக்கை செய்துகொண்டார்கள். கோட்டி அரசு சிதறும் நிலையிலிருந்ததாலும், உள்நாட்டுப் போர்களாலும் இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலை தங்களுக்குத் துணையாக இருப்பதை அறிந்த போர்ச்சுகீசியர் மேற்குக் கடற்கரையில் தம் அரசியல் அதிகாரத்தை விரிவாக்கிக் கொண்டனர். தங்களிடம் இருந்த உயர்ந்த கப்பற்படை, இராணுவ நுட்பங்கள் போன்றவற்றின் துணையால் போர்ச்சுகீசியர், சிங்களவர்களின் எதிர்ப்பை முறியடித்துவிட்டு அவர்களின் அரசை கி.பி. 1597–ஆம் ஆண்டு தம்அரசுடன் இணைத்துக் கொண்டனர். கண்டி ஒன்றில் மட்டும் சிங்களவர்களின் சுதந்திர ஆட்சி நிலவியது. கண்டியையும் கவர்ந்துகொள்ளப் போர்ச்சுகீசியர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில முயற்சிகளைச் செய்தனர்; மத்திய மேட்டு நிலங்களிலும் தம் ஆட்சியைப் பரப்ப முயன்றனர். ஆனால், இம்முயற்சியில், அவர்கள் தோற்றார்கள். கண்டியின் அமைப்பும் கண்டி சிங்கள மன்னரின் எதிர்ப்பும் இம்முயற்சியைத் தோற்கடித்தன. ஆனால், கி.பி. 1619–ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்த தமிழர் அரசைப் போர்ச்சுகீசியர் கைப்பற்றிக் கொண்டனர். எனவே, மத்திய மேட்டு நிலங்களையும், கிழக்குக் கடற்கரையிலிருந்த சில பகுதிகளையும் தவிர்த்து, இலங்கையின் ஏனைய பகுதிகள் போர்ச்சுகீசியரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

போர்ச்சுகீசியர் கோவாவைத் தம் தலைமையிடமாகக் கொண்டு அரசப் பேராளர் ஒருவரின் மூலம் ஆட்சி செய்தனர். இலங்கையைக் கோவாவின் அரசப் பேராளருக்குக் கட்டுப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் ஆண்டுவந்தார். போர்ச்சுகீசிய அலுவலர்கள் பெரும்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். தாழ்நிலைப் பணிகளுக்குச் சிங்களவரும் தமிழரும் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் போர்ச்சுகீசியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயிருத்தல் வேண்டும். சிங்களவர் நிலமானிய அமைப்பு முறையில் ஆட்சி செய்த அமைப்பினைப் போர்ச்சுகீசியர்கள் ஏற்றுக்கொண்டதுடன், வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக்கொண்டனர். சாதிமுறையையும் அவர்கள் காத்தனர். சாதிகள்அரசுக்குச்செலுத்த வேண்டிய கடமைகளும் வரையறுக்கப்பட்டன. இலவங்கப் பட்டை, யானை போன்றவற்றின் வாணிகம் அரசின் முற்றுரிமையாக்கப்பட்டன. போர்ச்சுகீசியர் மிளகு, பாக்குக்கொட்டை வாணிகத்தில் கண்ணுங்கருத்துமாய்க் கவனம் செலுத்தினர்.

போர்ச்சுகீசியரின் ஆட்சியில் கத்தோலிக்கர்களின் சமயக் கொள்கைப் பரப்பு மிகுதியாக இருந்தது. பிரான்சிசுகன், 'செசுயூட்டு', 'தொமினிகன்', 'அகசுடீனியர்' போன்ற கத்தோலிக்க இயக்கங்கள் இலங்கையில் நிலைநாட்டப்பட்டன. போர்ச்சுகீசிய நிருவாகம் அவர்களுக்குத் தேவையான பொருளுதவியைச் செய்தது. பௌத்த, இந்து சமயங்களின் கோயில் நிலங்கள் பறிக்கப்பட்டுக் கத்தோலிக்கப் பாதிரிகளுக்குக் கொடுக்கப்பட்டன. சிங்கள நிலக்கிழார்கள் கிறித்தவர்களாக மதம் மாற்றப்பட்டுப், போர்ச்சுகீசியப் பெயர்களை ஞானத்தானத்திற்குப் பின்னர்ச் சூட்டிக் கொண்டனர். மேற்கு, வடக்குக் கடற்கரைகளில் வாழ்ந்த பரதவ இனத்தவர் அனைவரும் மதமாற்றம் செய்யப்பட்டனர். கத்தோலிக்கத் திருச்சபைகளும் பள்ளிகளும் ஆங்காங்கே தோற்றுவிக்கப்பட்டன. மேல் சாதிக்காரர்கள் போர்ச்சுகீசிய மொழியைப் பயன்படுத்துவதில் திறமைமிக்கவர்களாயினர்.

தச்சியக்கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இலங்கையில் இலவங்கப்பட்டை வாணிகத்தில் அக்கறை காட்டினர். இலங்கை உலகப் படத்தில் அமைந்திருந்த முறையும் அவர்களைக் கவர்ந்திழுத்தது. தச்சியர் கி.பி. 1638–ஆம் ஆண்டில் கண்டி அரசருடன் உடன்படிக்கை செய்துகொண்டு, போர்ச்சுகீசியரை இலங்கையை விட்டு விரட்ட உறுதிபூண்டனர். அடுத்தடுத்து கி.பி. 1638க்கும் 1658க்கும் இடையில் நிகழ்ந்த கடற் சண்டைகளாலும், இராணுவ மோதல்களாலும் கண்டி அரசர்களின் உறுதுணையாலும் போர்ச்சுகீசியர் வசமிருந்த அனைத்துப் பகுதிகளையும் தச்சியர் வென்றனர். போர்ச்சுகீசியர் விரட்டப்பட்டபோதிலும், விரைவில் தச்சியரும் கண்டியரும் தாம் வென்ற பகுதிகள் குறித்துச் சச்சரவிட்டுக் கொண்டனர். கடற்கரை

பகுதிகளில் தம் ஆட்சியை நிலைநாட்டத் தச்சியர் (The Dutch) முயன்றனர். கண்டியர் மலைப் பகுதிகளிலேயே நிலைக்க வேண்டியவராயினர்.

தச்சியர் இலங்கையை ஆளுநர் ஒருவர் மூலமும், கொழும்பில் தங்கி வாழ்ந்த குழுவொன்றின் மூலமும் ஆண்டனர். சாவாவின் தலைநகரான பட்டேவியாவில் இருந்த அரசப் பேராளருக்கும் அவருடைய நிருவாகக் குழுவுக்கும் இலங்கையின் நிருவாகம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆசியாவில் தச்சுப் பேரரசின் தலைமையிடம் பட்டேவியா (Batavia) வேயாகும். யாழ்ப்பாணத்திலும் (Jaffna) காலி (Galle) யிலும் இருந்துகொண்டு படைத்தலைவர்கள் முறையே வடபகுதியையும் தென் பகுதியையும் ஆட்சி செய்தனர். அவர்கள் ஆளுநருக்குக் கட்டுப்பட்டவர்கள். போர்ச்சுகீசியர்களைப் போன்று தச்சியரும் பெரும் பொறுப்புகளைத் தச்சியருக்கும் தாழ்நிலைப் பதவிகளைச் சிங்களவருக்கும் தமிழருக்கும் கொடுத்தனர். அவர்கள் தச்சியரின் நம்பிக்கைக்கு உரியவர்களாயிருத்தல் வேண்டும். நிலமானியத்திலும், அதன் அடிப்படையில் எழுந்த பணியமைப்புகளிலும் தச்சியரும் போர்ச்சுகீசியரையே பின்பற்றினர். தம் வாணிகத்தைப் பெருக்கிக் கொள்ள, எந்தெந்தச் சாதி மக்கள் பயன்படுவரோ அவரவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். பல வாணிகப் பொருள்களின் முற்றுரிமையைத் தம் மகத்தே கொண்டு இலங்கையின் வாணிகம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டிற்குள் இருந்த துறைமுகங்களின் வழியாகவே இயக்கினர். இவ்வகையாகத் தொன்றுதொட்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிகழ்ந்த வாணிகத்தில் குறுக்கிடவே, வாணிகம் நலிந்ததால் இலங்கை பற்றாக்குறை நாடாக மாறியது. தச்சியர் காப்பித் தோட்டங்களை ஏற்படுத்திப் பணப் பயிர்களுக்கு ஊக்கமளித்தனர். மேலும், மிளகு, இலவங்கப் பட்டை, ஏலம் போன்ற பொருள்களும் விளைவிக்கப் பட்டன.

தச்சியர் இலங்கையில் நன்கு உருவாக்கப்பெற்ற நீதிமுறையை நிலைநாட்டினர். அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி போன்ற இடங்களில் மூன்று தலைமை நீதிமன்றங்களை அமைத்தனர். சிற்றூர்களில் வாழும் மக்களின் உள்ளூர் வழக்குகளை விசாரிக்க 'இலாண்டு ராடு' (Land Raad) எனப்படும் கிராமப்புற நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. உரோமானிய-தச்சியச் சட்டம் புகுத்தப்பட்டது. தமிழர் சட்டங்கள் தொகுக்கப்பட்டன. இச்சட்டங்கள் வடக்குப் பகுதியிலிருந்த நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்டன. தச்சியர் மறுப்புரையாளர் (Protestant) சமயத்தைப் புகுத்தினர். போர்ச்சுகீசியரால் நிலைநாட்டப் பெற்றிருந்த கத்தோலிக்கத் திருச்சபைகள் மறுப்புரையாளர் திருச்சபைகளாக மாற்றப் பட்டன. இத்திருச்சபைகள் சிங்கள மொழியிலும், தமிழிலும் தொடக்கக் கல்வியைப் போதித்தன.

தச்சியரையடுத்து ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்குழு கி.பி. 1796-ஆம் ஆண்டு இலங்கையின் கடல் வாணிகத்தைக் கைப்பற்றியது. இத்தருணத்தில் ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சியால் தோன்றிய போர்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. சென்னையிலிருந்து கொண்டு வணிகக் குழுவின் நிருவாகத்தை நடத்தி வந்த ஆங்கில அலுவலர்கள், இலங்கை வாழ் சிங்களவரைத் தாறுமாறாக நடத்தியதுடன் மரபுவழியாக இயங்கிவந்த இயக்கங்களையும் மதிக்கத் தவறினார்கள். எனவே, ஆங்கிலேயர் இலங்கையைக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் நிருவாகத்திலிருந்து விடுவித்து, ஆங்கில அரசின் நேரடி ஆட்சியை, கி.பி. 1802-ஆம் ஆண்டில் நிலைநாட்டினர். இலங்கை, இங்கிலாந்துப் பேரரசின் நேராட்சிப் பகுதியாக (Crown Colony) ஆகியது. ஆங்கிலேயர்கள் கண்டி அரசரையும் கவிழ்த்துவிட்டு கி.பி. 1818-ஆம் ஆண்டளவில் கண்டிப் பகுதியையும் தம் அரசுடன் இணைத்துக் கொண்டனர். அதனால், இலங்கைத் தீவு முழுதும் மேலைநாட்டு அயலாராட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களைச் செய்தனர். இலங்கை முழுவதும் செய்திப் போக்குவரத்து வசதிகள் பெருகின. நாடு முழுவதிலும் ஒரே நிருவாக அமைப்பு நாட்டப்பெற்றது. தொண்டின் அடிப்படையில் நிலை நாட்டப்பெற்றிருந்த மானிய முறைகளும், அனைத்து முற்றுரிமைகளும், பொருள்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திய அனைத்துத் தடைகளும், மக்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திய தடைகளும் நீக்கப்பட்டன. இதன் விளைவாக ஆங்கிலேயர் இலங்கையில் முதலீடு செய்ய நல்வாய்ப்புகள் கிட்டின. தொழில் முனைவோருக்கு நிலம் மிகுந்த அளவில் வழங்கப் பட்டது. பணப் பயிர்களை விளைவிக்க கி.பி. 1830-ஆம் ஆண்டு முதல் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இலங்கையின் மத்திய மேட்டு நிலப்பகுதிகள் இத்தகைய பணப்பயிர்களை விளைவிக்கும் தோட்டங்களாக்கப்பட்டன. தொடக்கத்தில் காப்பியும் பின்னர்த் தேயிலையும் இரப்பரும் பயிராக்கப்பட்டன. இத்தகைய தோட்டங்களில் சிங்களவர் கூலிவேலை செய்ய விரும்பாதவர்களாய் இருந்தமையால், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். தேயிலை, இரப்பர் உற்பத்தி கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் இலங்கையின் சிறப்பான

ஏற்றுமதிப் பொருள்களாயின. பின்னர்த் தேங்காயும், கொப்பரையும் கூட ஏற்றுமதிப் பொருள்களாயின. தோட்டத் தொழில் பெருக்கத்தினால் போக்கு வரத்து, வங்கி, துறைமுகம் ஆகியவை வளர்ச்சிபெற்றன.

கோல்புரூக்குக் குழு (Colebrooke Commission) கி.பி. 1833-ஆம் ஆண்டில் பல முற்போக்குச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது. அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுவது இலங்கைக்கென தனித்ததொரு சட்டமன்றத்தையும், நிருவாகக் குழுவையும் ஏற்படுத்தியதுதான். ஆங்கிலக் கல்வியும் புகுத்தப்பட்டது. ஆங்கிலம் கற்ற சிங்களவர் சீரிய அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு செல்வாக்குப் பெற்றவர்களாகி அரசியலையும் பாதிக்கும் வண்ணம் செயற்பட்டார்கள். அத்தகையோர் சட்டமன்ற மேலவைக்கும், தல ஆட்சி அமைப்புகளுக்கும் நியமனம் பெற்று அரசு அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். சட்டமன்றத் தேர்தல் இலங்கையில் 1920-ஆம் ஆண்டிலும், பிரதிநிதித்துவ அரசு 1924-இலும் செயற்படத் தொடங்கின. சட்டமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் தொடங்கப்பட்டது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்னும் முறை 1931-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. தான்மோர் (Danmore) பிரபுவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி ஓரளவு தன்னாட்சியும் வழங்கப்பட்டது. உள்நாட்டு விவகாரங்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி நடத்தத் தேர்ந்தெடுக்கப் பட்ட அமைச்சர் குழுவொன்று நிருவாகத்தைக் கண்காணிக்கவும் செய்தது. ஆளுநர் அனைத்து நிருவாகங்களுக்கும் பொறுப்பேற்றார். நிதி, சட்டம், உள்ளாட்சி (Civil Service) போன்ற துறைகளைப் பொறுப்பாகக் கவனிக்க மூன்று ஆங்கில அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர்.

தேசியத் தலைவர்களுக்கும், ஆங்கில அரசுப் பேராளர்களுக்குமிடையே அரசியலமைப்பினை மாற்ற நேர்ந்த காலங்களில் எல்லாம் நல்லுறவும் இணக்கமும் ஏற்பட்டமையால், சுதந்திரத்திற்காகப் பேரியக்கம் ஒன்றும் இலங்கையில் தோன்றவில்லை. எனினும், இலங்கை மக்கள் 1919-ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரசு (Ceylon National Congress) என்னும் இயக்கத்தை நிறுவினர். ஆனால், சில ஆண்டுகளிலேயே இவ்வியக்கம் மறைந்து போய்விட்டது; சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே எழுந்த மனக்கசப்புத்தான் இதற்குக் காரணம். தான்மோர் அரசியல் அமைப்புத் திட்டம் நன்றாகச் செயற்பட்டதாலும், இலங்கை அமைச்சர்கள் இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துக்குக் கொடுத்த ஒத்துழைப்பாலும், இலங்கை சுதந்திரத்திற்குத் தகுதியானதென ஆங்கிலேயர் எண்ணினர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் இலங்கை அரசியல் தலைவர்களும் சுதந்திரம் வேண்டுமெனக் கோரினர். உள்நாட்டில் முழுமையான தன்னாட்சியை வழங்கலாம் என் 1945-ஆம் ஆண்டில் கூட்டப்பெற்ற அரசியலமைப்புக் குழுவின் பரிந்துரையின்பேரில், பாதுகாப்புத் துறை, வெளிநாட்டுறவுத்துறை நீங்கலாக - ஏனையவை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டன. மேற்கூறப்பட்ட இருதுறைகளையும் ஆங்கில அரசே கவனித்துக் கொண்டது. விரைவில் இத்தடைகளும் நீக்கப்பெற்று 1947-ஆம் ஆண்டு இலங்கைச் சுதந்திரச் சட்டத்தின்படி இலங்கை சுதந்திர தொமினியனாக்கப்பட்டது. பின்னர், 1948-பிப்பிரவரி 4-ஆம் நாள் இலங்கை காமன்வெல்த்து நாடுகளுள் ஒன்றானது.

இலங்கையின் சுதந்திர அரசியலமைப்பு இங்கிலாந்து அரசியல் அமைப்பை எடுத்துக்காட்டாகக் கொண்டது. நாட்டின் தலைவராக அரசப் பேராளர் பெயரளவுக்குப் பொறுப்பேற்றார். அரசப் பேராளர் இங்கிலாந்து அரசரால் நியமிக்கப் பெற்றார். நிருவாக அதிகாரம் தலைமை அமைச்சரிடமும், அவருடைய அமைச்சரவையினரிடமும் ஒப்படைக்கப்பட்டது. தலைமை அமைச்சரும், அமைச்சர்களும் ஈரவைச் சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்.

தான் இசுடீபன் சேனநாயகே(Don Stephen Senanayake) என்பார் முதல் தலைமை அமைச்சரானார். பல்வேறு வகுப்புகளின் தலைவர்களையும், நலன்களையும் கருத்திற்கொண்டு சேனநாயகே ஐக்கிய தேசிய கட்சியை (United National Party) உருவாக்கினார். முற்போக்குக் கருத்துகளின் அடிப்படையில் இக்கட்சிக்கு ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொடுத்தார். தான் சேனநாயகே 1952-இல் காலமானதும், அவர்தம் மகன் தட்லிசேனநாயகே (Dudley Senanayake) தலைமை அமைச்சரானார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அவர் பதவி விலகினார். அவர்தம் நெருங்கிய உறவினரான சர் சான் கொத்தலவேலா (Sir John Kotelawela) என்பார் தலைமை அமைச்சரானார். அரசியல் பொருளாதார அதிகாரங்கள், ஆங்கிலம் கற்ற முதலாளித்துவ முனைவோர், நிலக்கிழார்கள் போன்ற சிறு குழுவொன்றிடம் இருந்தன. இலங்கா சம சமாசக் கட்சியும் (Lanka Sama Samaja Party), பொதுவுடைமைக் கட்சியும் எதிர்க்கட்சிகளாயின. சாலமொன் வெசுட்டு இரிட்சுவே தியசு பண்டாரநாயகே (Solomon West Ridgeway Dias Bandaranaike) தல ஆட்சி அமைச்சராயிருந்தவர் பதவியைத் துறந்துவிட்டு புதுக் கட்சியொன்றை 1951-ஆம் ஆண்டில் உருவாக்கினார். இதனைச்

சிரீலங்கா சுதந்திரக் கட்சி [Sri Lanka Freedom Party -SBFP ] என்பர். இக்கட்சி நூற்றுக்கு நூறு தேசிய வாதிகளின்கட்சி; பரம்பரைப் பண்பாட்டைப் பேணி, இலங்கையின் அரசியலிலும் பண்பாட்டு வாழ்விலும் இருந்த மேலை நாட்டுச் செல்வாக்கை ஒழிக்க வேண்டுமென இக்கட்சி பாடுபட்டது. இக்கட்சி 1956 -ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றுக் கூட்டணி அமைச்சரவையொன்றை நிலைநாட்டியது. பண்டார நாயகே தலைமை அமைச்சரானார். இக்கூட்டணி அரசினை மக்கள் ஐக்கிய முன்னணி என்றனர்.

மக்கள் ஐக்கிய முன்னணி பல சீர்திருத்தங்களைச் செய்தது. ஆங்கிலத்திற்கு மாறாகச் சிங்கள மொழி ஆட்சிமொழியாக்கப்பட்டது. புத்த சமய-சிங்களப் பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு இவ்வமைச்சரவை பேராதரவு நல்கியது. பேருந்துப் போக்குவரத்தும், கொழும்புத்துறைமுகமும் நாட்டுடைமையாக்கப்பட்டன.

மக்கள் ஐக்கிய முன்னணியின் சிங்களமொழி ஒன்றே ஆட்சிமொழி என்னும் கொள்கையைத் தமிழர்கள் வன்மையாக எதிர்த்தனர். தமிழர்கள் கூட்டாட்சிக் கட்சி (Federal Party) யை உருவாக்கித் தமிழுக்கும் ஆட்சிமொழித் தகுதியைக் கொடுக்க வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். இதனால், 1958 -இல் வகுப்புக் கலவரம் மூண்டது. தொழிலாளர் நெருக்கடியும், புத்த சமயத்தார்களிடையே ஏற்பட்ட மோதலும் பண்டாரநாயகேவின் கொலையில் முடிவுற்றன.

தகாநாயகே (Dahanayake) என்பார் தலைமை அமைச்சரானார். அடுத்து வந்த தேர்தலில் தட்லி சேனநாயகே வெற்றிபெற்றுத் தனிப் பெருங்கட்சியின் தலைவரானார். மீண்டும் சில மாதங்களில் வந்த தேர்தலில் பண்டார நாயகேவின் மனைவி திருமதி சிரிவாமோ பண்டாரநாயகே தலைமை அமைச்சரானார். பொதுவுடைமைக் கட்சியுடன் திருமதி பண்டாரநாயகே கொண்டிருந்த உறவினால் கட்சியில் பிளவேற்பட்டது. மீண்டும் 1965-இல் நடை பெற்ற தேர்தலில் தட்லி சேனநாயகே பெரும் வெற்றி பெற்றுத் தலைமை அமைச்சரானார். தமிழுக்கும் தமிழருக்கும் இவர் காட்டிய ஆதரவால் குழப்பம் அடங்கிய சூழ்நிலை தோன்றியது. சிரீலங்கா சுதந்திரக் கட்சியும், மார்க்சியக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியை (United Left Front-ULF) உருவாக்கின. மீண்டும் திருமதி பண்டார நாயகே 1970-இல் தலைமை அமைச்சரானார்.

திருமதி பண்டாரநாயகே பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். நிலச் சீர்திருத்தங்கள் 1972-இல் கொண்டுவரப்பட்டன. அயல்நாட்டினருக்குச் சொந்தமாயிருந்த தோட்டத் தொழில்களை 1975-இல் இவர் நாட்டுடைமையாக்கினார். புதிய அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்று 1972-மே மாதம் 22-ஆம் நாள் செயற்பட்டபோது சிரீலங்கா சமதருமக் குடியரசு நாடாகியது (Socialist Republic of Sri Lanka). திருமதி பண்டாரநாயகே தலைமை அமைச்சரானார். கடைசி அரசப் பேராளராயிருந்த கோபல்லவா (William Gopallawa) என்பார் குடியரசுத் தலைவரானார்.

கூட்டணித் தலைவர்களுக்கிடையே மூண்ட கருத்துவேறுபாடுகளினால், கட்சி பிளவுற்றது. பெரும்பான்மை பலத்தை இழந்த திருமதி பண்டாரநாயகே 1977-சூலை மாதத்தில் தேர்தலுக்கு ஆணையிட்டார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி (UNO) பெரும்பான்மையான இடங்களை வென்று கைக்கொண்டது. அரசியல் அமைப்புச் சட்டம் 1977 அக்டோபரில் திருத்தப் பெற்று, குடியரசுத் தலைவரே நிருவாகத் துறையின் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் இருக்க வேண்டும் என்று முடிவாயிற்று. சூலியசு செயவர்த்தனே (Julius Jayawardene) என்பார், இப்புதிய பொறுப்பை 1978 பிப்பிரவரி மாதத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற பொறுப்புடன் ஆறு ஆண்டுக் காலத்திற்கு ஏற்றுள்ளார்.

**இலங்கைத் தமிழர் சிக்கல்:** தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள வடக்கு, கிழக்கு மாநிலங்களை இணைத்துத் தனித்தமிழ் ஈழம் வேண்டுமென்னும் கோரிக்கையால் இலங்கையில் கொந்தளிப்பான சூழ்நிலை நிலவுகிறது. இந்திய அரசு தமிழர் இனச் சிக்கலைத் தீர்க்க அரும்பாடுபட்டு வருகிறது. சிரீலங்கா இராணுவத்திற்கும், ஈழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழர் அமைப்புக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நீடித்து வருகின்றன.

**இலங்கைப் பல்கலைக் கழகம்**, கி.பி. 1780-இல் நிறுவப் பெற்ற இலங்கை மருத்துவக் கல்லூரியும், 1921-இல் நிறுவப் பெற்ற இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியும் சேர்ந்து உருவாயிற்று. இப்பல்கலைக் கழகம் 1942-இல் அமைக்கப்பட்டது. இலங்கையில் இருந்த நான்கு பல்கலைக் கழகங்களும் கட்டுப்பெட்டி (Kattubedde) நகரில் இருந்த ஒரு தொழில் நுட்பவியல் கல்லூரியும் 1972-ஆம் ஆண்டு இதனுடன் இணைக்கப்பட்டன. இப் பல்கலைக் கழகத்தின் பெரும்பகுதி, கண்டி நகருக்கு அருகே உள்ள பேராதினியா (Peradiniya) என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் அரசு நிருவாகத்திலுள்ளது. இங்குக் கீழை நாட்டுக் கல்வி,

கலையியல், கல்வியியல், கால்நடை, மருத்துவம், நூலகவியல், சட்டவியல், வேளாண்மை, அறிவியல் மருத்துவம், பல்மருத்துவம், பொறியியல் ஆகிய பாடத்துறைகளில் பட்டப்படிப்பும் பட்ட மேற்படிப் பும் கற்பிக்கப்படுகின்றன. இங்கு 1973-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 14,000 மாணவர்கள் கல்வி பயின்றனர். காண்க: இலங்கையில் கல்வி.

***இலங்கையில் கல்வி:*** ஆசிய நாடுகளுக்குள் இலங்கையில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதியாக உள்ளனர். இந்நாட்டில் இவர்களின் விழுக்காடு அறுபதிலிருந்து எண்பதுவரை உள்ளது. இதற்குக் காரணம், இந்நாட்டில் நல்ல பள்ளிகளும், கல்வியின் மீது மக்களுக்கு இருக்கும் பேராவலும் ஆகும்.

இலங்கையில், தொடக்கப்பள்ளிகளும் உயர் நிலைப் பள்ளிகளும் சேர்ந்து ஏறக்குறையப் பத்தாயி ரம் உள்ளன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ இரண்டரை மிலியன் மாணவர்கள் சேர்ந்து கல்வி பயின்று வரு கின்றனர். மொத்தம் ஓர் இலட்சம் ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையில் உள்ள இலங்கை நாட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்பிக்கப்படுகிறது. இந்நாட்டில் கல்வி அமைச்சகமே, பள்ளிக் கல்விப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது. பள்ளியை நிருவகிப்பதில் அந் தந்த வட்டாரங்களில் உள்ள அறிவுரைக் குழுக்கள், கல்வி அமைச்சகத்துக்குத் துணையாக உள்ளன.

இலங்கையில் தொடக்கப்பள்ளிக் கல்வி என்பது முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலுள்ள கல்வியினைக் குறிக்கிறது. இந்நாட்டில் பதினான்கு வயது வரையில் மாணவர்கள் தொடக்கப்பள்ளிக் கல்வி பெறுகின்றனர். இக்கல்வியை முடித்தபின், மாணவர்கள் நான்காண்டுக் காலம் நீடிக்கும் உயர் நிலைப் பள்ளிகளில் அல்லது இலங்கைத் தொழிற் கல்லூரியில் சேருகின்றனர். ஆங்கில அரசு விட்டுச் சென்ற கல்வி முறையே இலங்கையில் பெரும்பாலும் நிலவிவருகிறது. பள்ளிகளில் பாட அறிவுக்கு மிகுந்த முதலிடம் தரப்படுவதால், உயர்நிலைப் பள்ளிக் கல்வி மிக்க அளவில் அலுவலர்களை மட்டும் உரு வாக்குவதோடு நின்றுவிடுகிறது. மாணவர்களிடம் தொழிற்பயிற்சிக்குச் சிறிதளவே ஊக்கமளிக்கப்படு கிறது. ஆதலால், தொழிற்பயிற்சி பெற்றவர்கள் இங்கு மிகக் குறைவு. இந்நாட்டிலுள்ள பல பணி களுக்குத் தொழிற்பயிற்சி பெற்றவர்களின் தேவை மிகுந்துள்ளது.

இலங்கையில் இருந்த நான்கு பல்கலைக் கழகங் களையும் கட்டுப்பெட்டி (Katubedde) நகரில் இருந்த ஒரு தொழில் நுட்பவியல் கல்லூரியையும் இணைத்து, 1972-ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் உரு வாக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் கண்டி நகருக்கு அருகே உள்ளபேராதினியாவில் அமைந் துள்ளது. இங்குக் கீழைநாட்டுக் கல்வி, கலையியல், கல்வியியல், கால்நடை மருத்துவம், நூலகவியல், சட்டவியல், வேளாண்மை, அறிவியல், மருத்துவம், பல்மருத்துவம், பொறியியல் ஆகிய பாடத்துறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கொழும்பு நகருக்கு அருகில் இரண்டு பிரவீணாப் பள்ளிகள் (Pirivenas) உள்ளன. இவற்றின் தலையாய பணி, பௌத்த சமயத்தில் பயிற்சியளித்துத் துறவி களை உருவாக்குதல் ஆகும். இவ்விரண்டு பள்ளி களுக்கும் 1959-இல் பல்கலைக் கழக நிலை (University Status) நல்கப்பட்டது. அவை வித்தியாலங்காராப் பல்கலைக் கழகம் (Vidyalankara University), வித்தியோதயாப் பல்கலைக் கழகம் (Vidyodaya University) எனச் சொல்லப்படுகின்றன. இவை யிரண்டும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பிரிவு களாகச் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் தத்து வம், பௌத்த சமயம், மொழி, கலை, அறிவியல் ஆகியனவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டப் புலத்திற்குத் (Faculty of Law) தொடர்பேதுமின்றி, கொழும்பு நகரில் ஒரு சட்டக்கல்லூரி தனித்துச் செயற்பட்டு வரு கிறது. இக்கல்லூரியில், உயர்நீதி மன்றத்தில் வழக் கறிஞராகப்பணிபுரிய விழைபவர்கள் மட்டும் பயின்று தகுதி பெறுகின்றனர். கொழும்பு நகரில் உள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பொறி யியல், தொழிற்கல்வி, வணிகவியல் ஆகிய துறைகள் உள. ஆனால், இக்கல்லூரியில் தரப்படும் கல்வியின் தரம், பல்கலைக் கழகத் தரத்தைவிடச் சற்றுக் குறைந்த அளவிலேயே உள்ளது.

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளும் பள்ளிகளில் பயிற்று மொழியாக உள்ளன. உயர்கல்வியிலும் இம்மொழிகளே பயிற்று மொழியாக உள்ளன. சில பாடத்துறைகளுக்கு ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாக உள்ளதால், பல்கலைக் கழக அளவில் மாணவர்கள் திறம்படப் பயில்வதற்கு இடையூறாக உள்ளது. எனவே, தமிழ், சிங்களம், ஆகிய மொழி வழியே பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள், உயர்கல்வியில் தரப்படும் ஆங்கில மொழியைப் புரிந்துகொள்ள இயலாமல், பாடங்களில் தோல்வி அடைகின்றனர்.

**இலங்கோப்** பழங்குடியினர் ஆப்பிரிக்காவில் உகாண்டா நாட்டில் பரந்து கிடக்கும் சவான்னாப் பகுதியில் வாழ்பவர்களாவர். கியோகா (Kioga) ஏரியிலிருந்து நடு உகாண்டா முழுவதும் காட்சியளிக்கும் சவான்னாப் பகுதியில் (Savanna Region) புதர்களும் குன்றுகளும் மண்டிக்கிடக்கின்றன. இப்பகுதியில் நீண்டுவளரும் யானைப்புல் அதிகமாகக் காணப்படுகிறது. இலங்கோவினரின் (Lango) வீடுகள் வட்ட வடிவில் கட்டப்பட்டிருக்கின்றன. வீட்டின் கூரை அடுக்கடுக்காக யானைப் புற்களால் (Elephant Grass) வேயப்பட்டதாகும்.

இலங்கோ சமூகத்தினர் வாங் டிக்கு (Wang tic) என்றும் அழைக்கப்படுவர். விளை நிலங்கள் இச்சமூகத்தினரிடையே பொதுவாகக் கண்காணிக்கப்படுகின்றன. வாங் டிக்கு ஒரு தலைமையின் கீழ் இயங்குவதால் இவர்களின் பணிகளை இக்குலத் தலைவனே முன்னின்று நடத்திச் செல்கிறான். இலங்கோவினரின் அடிப்படைப் பொருளாதாரம் அரை–ஆயர் வாழ்க்கையைச் சார்ந்ததாகும். கால்நடை வளர்த்தலும் தோட்டப்பயிரிடுதலுமே முதன்மையான தொழில்களாகும். மக்காச்சோளம், சோள வகைகள் முதலானவற்றைப் பயிரிட்டாலும் பணப்பயிரான பருத்தியை அதிகம் பயிரிடுகின்றனர். வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் இவர்களின் துணைத் தொழில்களாகும். இலங்கோவினரது வேட்டைத் தொழில் சமய நம்பிக்கையைச் சார்ந்ததாகும். வேட்டையைத் தொடங்குமுன் பல்வேறான சடங்குகளை மேற்கொள்கின்றனர். பயிர்த்தொழிலைக் கூட்டமாகச் சேர்ந்து செய்வதைப் போன்றே வேட்டையையும் கூட்டாக மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு கால்வழியினரும் தனித்தனியான வேட்டைப் பகுதியைக் கொண்டிருக்கின்றனர்.

இக்குடிகளில் மது அருந்துதல் முதன்மையான சமூக நிகழ்ச்சியாகும். வாங் டிக்கில் பணி முடித்தவுடன் அந்நிலத்தின் உரிமையாளர் அனைவருக்கும் மது கொடுப்பார். இலங்கோ சமூகம் புறமணத் தந்தைவழிக் குழுக்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் வேற்றுக் குழுவிலிருந்தே மணம் கொள்ள வேண்டும். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருப்பினும் பெரும் பான்மையோர் ஒருதார மணமுறையையே பின்பற்றுகின்றனர். பல இயற்கை இறந்த ஆற்றலை இவர்கள் வழிபடுகிறார்கள். சோக்கு (Jok) என்னும் ஆற்றல் உலகைத் தோற்றுவித்தது என நம்புகின்றனர். இதன் வழிவரும் பல ஆற்றல்கள் இவர்களின் வாழ்க்கையை ஆட்கொள்கின்றன என எண்ணுவதால் யமோ (Yamo), திப்பு (Tipu) முதலானவற்றையும் வழிபடுகின்றனர்.

வாங் டிக்குக் குழுவினர் பொருளாதாரச் செயற்பாட்டில் ஒன்றிக் காணப்படுவதால் அரசியல் அமைப்பில் கால்வழிக் குழுக்கள் முதன்மையான பங்கினைப் பெறுகின்றன. பெருங்கால்வழிக் குழுக்களும் தலைமையமைப்பில் செல்வாக்குப் பெறுகின்றன.

**இலஞ்ச ஊழல்** என்ற சொற்றொடர், ‘இலஞ்சம்’, ‘ஊழல்’ ஆகிய இரண்டையும் தனித் தனியே பிரித்துக் குறிப்பதாகச் சட்டமுறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். பொய், களவு, கள், காமம், கொலை ஆகிய பெருங்குற்றங்களின் பட்டியலில் இலஞ்சம் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், ‘பழிதீர் செல்வமொடு’ என்ற சொற்றொடர் தொல்காப்பியத்திலிருப்பதிலிருந்தும், ‘தீது இன்றி வந்த பொருள்’, ‘அறம் நோக்காது ஈட்டிய ஒண் பொருள்’, ‘சலத்தால் பொருள் செய்து’, ‘தாழ்வு இலாச்செல்வரும்’, ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு’, ‘கைம்மாறு வேண்டா கடப்பாடு’ ஆகிய சொற்றொடர்கள் திருக்குறளிலிருப்பதிலிருந்தும், ‘அறத்தின் ஈட்டிய ஒண்பொருள்’ என்று மணிமேகலையிலிருப்பதிலிருந்தும், ‘இலஞ்சம்’ போன்ற தகாத முறையில் பொருளீட்டிய நிலை, தமிழ்நாட்டிலும் பழங்காலத்தில் ஓரளவு இருந்திருக்கக்கூடும் என்பதை உய்த்துணரலாம். வட இந்தியாவில் கி.மு.3–ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சந்திரகுப்த மௌரிய மன்னரின் அமைச்சரான சாணக்கியர், தாம் வட மொழியில் எழுதியுள்ள அருத்தசாத்திரத்தில் அக்காலத்தில் பல்வேறு வகைகளில் நிலவிய இலஞ்ச ஊழலை விவரித்துள்ளளார் என்ற குறிப்பு, ஊழல் தடுப்புப்பற்றி இந்திய அரசிற்கு 1964–இல் கொடுக்கப்பட்ட சந்தானம் குழுவின் அறிக்கையில் உள்ளது. குறிப்பிட்டுக் கண்டிக்க வேண்டிய அளவில் ‘இலஞ்ச ஊழல், தமிழகத்தின் பண்டைய சமுதாயத்தில் பரவலாக இருந்திராவிட்டாலும், இதுபோன்ற கூடா ஒழுக்கச் செயல்கள் இருந்தமையினாலேயே ஒழுக்க நெறி, அறநெறி, பழி அஞ்சுதல் ஆகியவை பற்றிய அறிவுரைகளும் ‘இலஞ்ச ஊழல்’ பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்துள்ளது என்பதற்கான சான்றுகளும் இந்திய நாட்டின் வரலாற்றிலேயே உள்ளன.

‘இந்தியாவில் காரியம் சாதித்துக்கொள்ளச் செல்லும் யாரும் வெறுங்கையுடன் செல்வதில்லை’ என்று கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் சாசகான் (Shah Jahan) ஔரங்கசீபு (Aurangzeb) ஆகிய முகலாய மன்னர்களின் அரசவைக்கு வந்து சென்ற பிரான்சு நாட்டுப் பயணியான பெர்னியர் (Bernier) எழுதியுள்ளார். இந்தியாவில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுக் கிழக்கு இந்திய வணிகக்குழுவுக்கும். ஆங்கிலக் கிழக்கு இந்திய வணிகக்குழுவுக்குமிடையே, கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் போட்டி ஏற்பட்டதைத் தொடர்ந்து

இலஞ்ச ஊழல் மிகுதியாயிற்று. இரு வணிகக் குழுக்களும் அக்காலத்திலிருந்த மன்னர்களுக்கும் நவாபுகளுக்கும் பொருளைக் கொடுத்து, அவர்களிடமிருந்து சில பயன்களைப் பெற்றன. அதுபோலவே, மன்னர்களும் நவாபுகளும், வணிகக் குழுக்களுக்குப் பரிசுகள் (Rewards) கொடுத்து, வணிகக் குழுக்களின் ஆதரவைத் தேடிக்கொண்டார்கள். வங்காள நவாபு சிராசு-உத்-தவுலாவுக்கு (Siraj-Ud-Daula) எதிராகக் கி.பி. 1756-அளவில் மீர்சாபரை (Mir Jafar) ஆதரித்து, அவரை நவாபு ஆக்கியதற்கு, ஆங்கிலேய வணிகக்குழு 24 பர்கானாக்களைப் பெற்றதோடல்லாமல், ஆங்கில வணிகக்குழுவின் நிருவாகக் குழுவினர்களும் இராபர்ட்டுக் கிளைவும் மிகுதியான பரிசுகளைப் பெற்றார்கள் என இந்திய வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இதேபோல், தட்சிண நவாபு வடசர்க்கார் என்ற நிலப்பகுதியைப் பிரஞ்சு வணிகக் குழுவுக்கு அளித்திருக்கிறார். அரசப் பேராளராக கி.பி. 1775 முதல் 1785 வரை இருந்த வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) மீது இலஞ்ச ஊழல் புகார் ஏற்பட்டதும், இந்த இலஞ்ச ஊழல் புகாருக்குக் காரணமாயிருந்த இராசா நந்தகுமார் தூக்கிலிடப் பட்டதும், பிறகு, வாரன் ஏசுடிங்சு பேரில் இங்கிலாந்து மக்கள் அவை (House of Commons) அரசியல் குற்றச்சாட்டு நடவடிக்கை (Impeachment) எடுத்ததும் உலகச் சிறப்புப் பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளாகும். ஆங்கில வணிகக்குழுவினர் இலஞ்சம் பெற்றதன் காரணமாக வணிகக்குழுவின் நிருவாகத்தில் முறைகேடுகள் நடைபெற்றதால் வணிகக்குழுவின் நிருவாகப் பொறுப்பினைப் பிரிட்டிசு அரசு கி.பி. 1784-இல் ஏற்றுக்கொண்டதும், அதைத் தொடர்ந்து இந்திய அரசப் பேராளராக வந்த கார்ன்வாலிசு பிரபு (Lord Cornwallis) இந்தியாவில் வணிகக்குழு ஊழியர்கள் முறைகேடான முறையில் ஆதாயம் தேடி வந்ததை நிறுத்த நடவடிக்கை எடுத்ததும் இந்திய நிருவாக வரலாற்று உண்மைகளாகும்.

இவ்வாறு பரிசுகள், கைம்மாறு போன்ற பெயர்களில் இந்திய அரசியலில் கடந்த இரண்டுமூன்று நூற்றாண்டுகளுக்கு முன் காணப்பட்ட இலஞ்ச ஊழல் மேன்மேலும் வளர்ந்தது.

இந்நூற்றாண்டின் முற்பகுதி வரையில் அரசுப் பணியாளர்களிடத்தேதான் இலஞ்ச ஊழல் மிகுதியாக இருந்தது. இதைத் தடுக்கும் நோக்கத்துடன், அரசுப் பணியாளர்களின் நடத்தையைக் கட்டுப் படுத்தக் கடந்த நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டிலும், அரசுப்பணியாளர்களின் நடத்தை விதிகள் (Government Servants Conduct Rules) பல மத்திய மாநில அரசுகளால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் குற்றங்கள் புரியும் பொது ஊழியர்களைத் (Public Servants) தண்டிக்க, கி.பி. 1860-ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்தில் (The Indian Penal Code) தனிப் பிரிவுகள் (Sections) உள்ளன. தவறுகள், முறைகேடான நடத்தை, இலஞ்ச ஊழல் ஆகியவற்றில் ஈடுபடும் அரசுப் பணியாளர்களைத் தண்டிக்கவும் (Punishment), சிறிதுகாலம் பதவி நீக்கம் செய்யவும் (Suspension), வேலையிலிருந்து நீக்கவும் (Removal or Dismissal), கட்டாய ஓய்வில் அனுப்பவும் (Compulsory Retirement) நடவடிக்கை எடுக்கவும் அரசு விதிகள் வழிவகுத்தன.

கடந்த இரண்டாம் உலகப் போர்க்காலத்தில், இந்தியாவில் எடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளும் அப்போர் முடிந்த சில ஆண்டுகளில் இந்தியா விடுதலை பெற்று அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல், நிருவாக மாற்றங்களும், சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகளும், இலஞ்ச ஊழல் மிகுதியாகப் பரவுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தின. இதனால், மேலும் தீவிரமான இலஞ்ச ஊழல் தடுப்பு நடவடிக்கை தேவையென அரசு உணர்ந்து, புதிய சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் கொண்டுவந்தது. இதன் தொடர்பான 1947-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம் முக்கியமானதாகும். மேலும், பொது ஊழியர் என்ற பிரிவில், அரசுப் பணியாளர்களோடு இன்னும் பல்வேறு துறைகளிலும் நிறுவனங்களிலும் கழகங்களிலும் பணிபுரிபவர்கள் சேர்க்கப்பட்டனர். மத்திய அரசும், மாநில அரசும் இந்தியத் தண்டனைச் சட்டம், 1947-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின் பிரிவுகளையும் இணைத்து, இலஞ்ச ஊழல் குற்றம் புரிந்த பொது ஊழியர்கள் பேரில் எடுத்த நடவடிக்கைகள், இலஞ்ச ஊழலைச் சிறிதளவு கட்டுப்படுத்தின.

இந்தியா 1950 சனவரியில் குடியரசு நாடாகிய பின், மக்களின் பேராளர்கள் ஆட்சிப் பொறுப்பில் முழுமையாக இடம்பெறவும், அரசுத் துறைகள் அளவிலும் எண்ணிக்கையிலும் விரிவடையவும், பல புதிய நிருவாக அமைப்புகள் ஏற்படவும், சமத்துவ வளர்ச்சிக்காகக் கட்டுப்பாடுகளும் வரையறைகளும் நிறைந்த சட்டதிட்டங்களையும் நிருவாக நடைமுறைகளையும் அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பொதுமக்கள், அரசுகளையும் பொது ஊழியர்களையும் அரசியலாளர்களையும் பெருமளவிற்குச் சார்ந்திருக்க வேண்டியவராயினர். இச்சூழ்நிலையில், இலஞ்ச ஊழல், பொது ஊழியர்களிடத்து மட்டுமன்றி, ஆட்சிப் பொறுப்பேற்ற பொது

மக்களின் பேராளர்கள், அரசியலாளர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் ஆகியோரிடத்தேயும் பரவலாயிற்று. இத்தகைய நிலை உலக நாடுகள் பலவற்றில் பல ஆண்டுளுக்கு முன்பு ஏற்படவே, பொதுவாழ்வு தூய்மை பெற வேண்டி, 'ஆம்பூட்சுமென்' (Ombudsman) என்ற பெயரில், தக்க அதிகாரத்துடன், பொதுக்கடமை செய்வோர்மீது வரும் இலஞ்ச ஊழல் குற்றங்களை விசாரணை செய்வோரடங்கிய ஓர் அமைப்பு, சுவீடன் நாட்டில் கி.பி. 1809-இலும், பின்லாந்து நாட்டில் 1919-இலும் தென்மார்க்கு (Denmark) நாட்டில் 1953-இலும், நார்வே நாட்டில் 1963-இலும் இங்கிலாந்தில் 1967-இலும் ஏற்படுத்தப் பட்டது. அது போன்றதொரு நடவடிக்கை மேற்குச் செருமனி, போலந்து, யூகோசுலேவியா, உருசியா, சப்பான், ஆசுத்திரேலியா நாடுகளிலும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் இந்தியாவிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தக்க பரிந்துரைகளைச் செய்ய 1962-இல், மத்திய அரசினால் 'சந்தானம் குழு' அமர்த்தப்பட்டது. அக்குழு 1964-இல் கொடுத்த அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை ஏற்று, மத்திய, மாநில அரசுகள் கண்காணிப்புக் குழுக்களை அமர்த்தி அவற்றின் மூலம், இலஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துகின்றன. அரசுத் துறைகளும் அரசு அலுவலகங்களும் பிற நிருவாக அமைப்புகளும் நேர்மையாகவும் திறமையாகவும் இயங்குகின்றனவா என்பதையும் அக்கண்காணிப்புக் குழுக்கள் கவனித்து வருகின்றன. மேலும், அரசுகளின் கண்காணிப்புக் குழு கொடுக்கும் ஆண்டு அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஒட்டி, அலுவலக நடைமுறைகள் அவ்வப்போது சீராக்கப்பட்டும் வருகின்றன.

இருப்பினும், நம் நாட்டில் இலஞ்ச ஊழல் ஒரு பெரிய சமுதாய, நிருவாகச் சிக்கலாகவே தொடர்ந்திருந்து வருகிறது. இலஞ்ச ஊழல் பற்றியும், அதை அகற்றுவது பற்றியும் எங்கும் அடிக்கடி பேசப்படுவதிலிருந்து, இலஞ்ச ஊழல் நாளுக்கு நாள் பெருகி வருவது புலனாகிறது. இலஞ்ச ஊழல் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது; இலஞ்ச ஊழலை ஓர் உலக நிகழ்ச்சி என்று குறிப்பிட்டு, அதனால் அது சமூக வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டதாகக் கருதப்படும் மனநிலை, எல்லாப் பிரிவினர்களிடத்தேயும் காணப்படுகிறது. ஒருவர் தமக்கு வேண்டியதைச் செய்துகொள்ள மற்றவருக்குப் பணம் அல்லது பொருள் கொடுக்கும் கடப்பாடு இல்லாதிருந்தும் அதனைக் கொடுத்தும் வேறு வகைகளிலும் மன நிறைவு படுத்துவது இலஞ்ச ஊழல் எனச் சுருங்கச் சொல்லலாம். அதனால், இலஞ்ச ஊழல், தனி [illegible]ன் செய்யும் குற்றம் என்று மட்டும் கருதக் கூடாது. இக்காலத்தில், இலஞ்ச ஊழல் எல்லாத் துறைகளிலும், எல்லாப் பிரிவினர்களிடத்தும், எல்லா நிலையினரிடத்தும் பெருகியுள்ளது. சமுதாயமே இக்குற்றத்திற்கு உள்ளாகியுள்ளதால்தான், வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் இலஞ்ச ஊழல் ஊடுருவி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மிகுதியான விலைக்கு விற்கும் வணிகர், பொருள்களைப் பதுக்கும் வணிகர், கலப்படம் செய்யும் வணிகர், போலிப் பொருள்களை விற்கும் வணிகர், ஒழுங்கான வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்ளாத வணிகர், மிகுதியாகப் பணம் கேட்கும் மருத்துவர், நல்ல முறையில் வேலைசெய்து கொடுக்காத பொறியாளர், மிகுதியான பணம் கேட்கும் வழக்குரைஞர், கல்விப் பயிற்சியை நல்ல முறையில் கல்வி நிலையங்களில் அளிக்காமல் தனிப் பயிற்சி(Tuition) கொடுத்துக் கூடுதல் ஊதியம் பெறும் ஆசிரியர், உழைப்பிற்குத் தகுந்த ஊதியத்தில் மன நிறைவு பெறாத தொழிலாளி, நேர்மையற்ற பொது ஊழியர், அளவுக்கு மீறி வாடகை கேட்கும் வீட்டுக்குரிமையாளர், நிலம், வீடு முதலிய பொருள்களைப் பெருத்த விலைக்கு விற்பவர், கொள்ளைப் பணம் பெற்று நடிக்கும் நடிகர், நடிகை, மிகுதியான பணம் கேட்கும் இசைவாணர், மிகுதியான பணம் கேட்கும் மற்றைய கலைஞர்கள், நேர்மையற்ற பணிகளில் ஈடுபடும் அரசியலாளர், பொதுவாழ்வுப் பணியில் ஈடுபட்டுப் பின்னர், ஆதாயம் கருதிக் கட்சி மாறும் அரசியலாளர்கள், பொது நலனைக் கருதாது செயல் செய்பவர், பொருளாசையோடு எந்த வேலையையும் செய்பவர், எதிலும் மிகுதிப் பலனடைய விரும்புபவர், கடமை உணர்வற்றவர் ஆகிய எல்லோருமே இலஞ்ச ஊழல் புரிபவர்கள். மேலே கூறியவற்றில் பல இப்பொழுதுள்ள சட்டங்களின்படி இலஞ்ச ஊழல் குற்றமாகாமலிருக்கலாம். ஆனாலும் அவை எல்லாம் நேர்மையற்ற, முறைகேடான பழிச் செயல்கள் என்ற உண்மை யாவராலும் உணரப்பட்டால், இலஞ்ச ஊழலைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கை பற்றித் தெளிவு ஏற்படும். இலஞ்ச ஊழலினால், கருப்புப் பணம் உண்டாகிறது; கருப்புப் பணத்தினால் இலஞ்ச ஊழல் ஊக்குவிக்கப்படுகிறது. இவ்விரண்டு தீங்குகளினால், விலைவாசி உயர்வும் பணவீக்கக் கேடுகளும் ஏற்படுகின்றன. இன்றைய சமூகத்தில் எந்தப் பிரிவிலாவது அல்லது சாதாரண நிலையில் உள்ள எந்த மனிதருக்காவது பணப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால், அதற்குச் சமுதாயத்தில் மேலே விளக்கப்பட்டுள்ள ஒழுக்கக் கேடான நிலை சிறப்பான காரணமாகும்.

பொது ஊழியர்கள் பெரும் எண்ணிக்கையில் ஆட்சி நிருவாகத்தில் பங்கு கொண்டுள்ளனர். அதனால், அவர்களின் ஒழுக்கக் குறைவான நடத்தை

மக்களை நேரடியாகவும் கடுமையாகவும் பாதிக்கிறது. ஊதியக் குறைவினால்தான் பொது ஊழியர், இலஞ்சம் வாங்குகிறார் என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. பெருத்த ஊதியம் பெறுபவர்களும், வசதி படைத்தவர்களும் இலஞ்சம் வாங்குகிறார்கள். ஒருவருடைய தோராய வருவாய்க்கு (Per capita income) மிகுதியாகவே பொது ஊழியர்கள் ஊதியம் பெறுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களோடு ஒப்பிடும்போது, பொது ஊழியர்களின் பொருளாதார நிலை எவ்வளவோ மேலாக இருக்கிறது. அங்ஙனமிருந்தும், சமூகத்தில் ஒழுக்கமும் நேர்மையும் குறைந்து கொண்டு வருவதால், பொது ஊழியர்களின் கடமை உணர்ச்சியும் நேர்மையும் குறைந்துவிட்டன என்றறியலாம். அத்தாழ்வினால் அவர்கள் இலஞ்ச ஊழல் செயல்களில் தயக்கமின்றித் தன்மானமின்றி ஈடுபடுகிறார்கள். மேற்பார்வைப் பொறுப்பிலுள்ளவர்களிடத்தும் இக்குறைகளிருக்கின்றன. முன்போல உயர் அதிகாரிகள். விரிவாகச் சுற்றுப் பணயம் செய்து தணிக்கை செய்வதில்லை; பொதுமக்களோடு போதிய தொடர்பும் கொள்வதில்லை. அந்தந்த நிலையில் உள்ளவர்கள், தங்கள் கடமைகளை நேர்மையாகவும் திறமையாகவும் சட்ட விதிகளுக்கேற்பக் குறித்த காலத்தில் நிறைவேற்றித் தங்கள் கீழ் உள்ளவர்களும் அவ்வாறு வேலை செய்கிறார்களா என்று கூர்ந்து கவனித்துத் தவறிழைப்பவர்கள் மீது அச்சமின்றி உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தால், நிருவாகம் சீராக நடைபெறும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டுடன் இருந்து தம் கீழ் உள்ளவர்களும் கட்டுப்பாட்டுடன் அக்கறையுடன் பணி செய்யுமாறு செய்ய வேண்டும். பொது ஊழியர் சட்ட விதிகளைத் தவிர வேறு எதற்கும் அஞ்சக் கூடாது. அத்தகைய மனவலியையும் ஏனைய நற்குணங்களையும் நல்லொழுக்கத்தையும் நன்னடத்தையையும் நியாய உணர்வையும் ஒவ்வொரு பொது ஊழியரும் பெற்றால்தான், நிருவாகம் தூய்மையாக இருக்கும்.

இதேபோல் அரசியலாளர்களும் பொதுவாழ்வில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களும் அரசியல் கட்சிகளும், ஒழுக்க நெறியோடு பணிசெய்து அவர்களின் கீழ் உள்ள நிருவாக இயந்திரம் நடு நிலையிலிருந்து, சட்டவிதிகளின்படி நேர்மையாக, விரைவாகத் திறமையாக இயங்குமாறு செய்யவேண்டும். இவர்களுக்கும் சட்டவிதிகள்தாம் வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசியலாளர்கள்மீது வரும் இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகளையும் ஆய்வு செய்யத் தனி அமைப்புத் தேவை. அந்த ஆய்வின் பேரில் இலஞ்ச ஊழல் செய்தவர்கள்மீது தக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று மத்திய மாநில அரசுகள் உணர்ந்துள்ளன. மத்திய அரசைப் பொறுத்த வரையில், 'உலோக் பால்' (Lok pal) என்ற பெயருடன் உள்ள பதவியாளரை அமர்த்த வகைசெய்யும் சட்டமுன் வடிவு, அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, நாடாளுமன்றச் சிறப்புக்குழுவின் (Select Committee) ஆய்விற்கு விடப்பட்டுள்ளது. மாநில அரசு 'உலோக் அயுக்தா' (Lok Ayukta) என்ற பெயருடன் ஒரு பதவியாளரை அமர்த்தலாமா என்பது பற்றிச் சிந்தித்து வருகிறது.

முன்பே உள்ள சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளும், இனிமேல் வரக்கூடிய சட்டங்களின் கீழ் ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசியலாளர்கள், பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொறுப்புகளை ஏற்பவர்கள் ஆகியோர்மீது எடுக்கக் கூடிய நடவடிக்கையும் இலஞ்ச ஊழலைக் கட்டுப்படுத்தலாம். இந்த நடவடிக்கைகளோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்திலிருக்கும் அனைத்துப் பிரிவினர்களும் நன்னெறி உணர்வினையும், வினைத் திட்பத்தையும் பெற ஆவன செய்யப்படவேண்டும். தீ நெறி வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இந்த உணர்வுகளை மக்கள் சமுதாயம் கொள்ள வேண்டும். மக்களுக்குப் பணி செய்பவர்கள், மக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறவேண்டும். மக்கள் சமுதாயத்தின் கருத்து மிகவும் ஆற்றல் வாய்ந்தது. விழிப்புடன் இருக்கும் மக்களின் பொதுக் கருத்தினை யாரும் ஒதுக்கித்தள்ள முடியாது. அத்தகைய மக்கள் கருத்து எதிலும் உறுதியாகத் தோன்றவேண்டும்.

ஒருவர் மற்றொருவரைக் குறைகூறும் குணம் சமூகத்தில் மிகுதி. இதை விட்டு, ஒவ்வொருவரும் அவரவர் துறையில், பணியில், ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்து, நியாயமான கொள்கைகளின் அடிப்படையில் கடமைகளை விரைவாக நிறைவேற்றினால் இலஞ்ச ஊழலுககு இடமிருக்காது. யு.சு.

**இலஞ்சி உலா**, இலஞ்சியென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற உலாப் பிரபந்தமாகும். இதனை மேலகரம் பண்டாரக் கவிராயர் இயற்றியுள்ளார். இவர், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலத் தல புராணம் முதலியவற்றை இயற்றிய மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயரின் முதல் மகனாவார். பண்டாரமென்பது முருகக் கடவுளின் பெயர்களுள் ஒன்று. இவர் வேறு நூல் இயற்றியதாகத் தெரியவில்லை. இலஞ்சி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத்திற்கு

வடக்கே அமைந்துள்ள முருகன் தலமாகும். இவ்வூர், திருக்குற்றாலத்திற்குரிய பரிவாரத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு இருவாலுகநாயக ரென்னும் பெயரில் சிவபெருமான் கோயில் கொண் டுள்ளார். இப்பெருமான் திருவுரு, அகத்தியரால் அமைக்கப் பெற்று வழிபடப் பட்டதாகும். இத்தலம் பிரமதேவர் முதலியவர்கள் பூசித்துப் பேறு பெற்றது என்பது கூறப்படுகிறது. இத்தலத்தினை அருணகிரி நாதர் தம் திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார். இத்தலத்திற்குரிய தலமரம் மகிழ மரமாகும். இலஞ்சி என்பது மகிழ மரத்தினைக் குறிக்கும் பெயர். பொய்கைகள் நிறைந்தமையானும் இவ்வூர் இப்பெயரினைப் பெற்றது என்பர். இந்நூல் தொடக் கத்தில் 2 காப்புச் செய்யுளையும் இறுதியில் ஒரு வாழ்த்துச் செய்யுளையும் கொண்டு 460 கண்ணி களால் எளிய இனிய நடையில் அமைந்துள்ளது.

உலாவுக்குரிய இலக்கணங்களைப் பெற்று விளங்கும் இந்நூல், இத்தலம் முருகவேளால் படைக்கப்பட்டது, பழமையுடையது, தென்னாரிய நாட்டைச் சார்ந்தது, கந்தர்சட்டியில் திருத்தேர் விழா நடைபெறும் சிறப்புடையது, சித்திராநதி யினைக் கொண்ட பெருமையுடையது என்பவ போன்ற பல செய்திகளைக் கூறுகிறது. விழாக் காலங்களில் 7 நாள் நடைபெறும் தேர்த்திரு நாளில் முருகன் பிரம தேவராகவும், திருமாலாகவும். உருத்திரமூர்த்தியாகவும், மகேசுவரராகவும், சதா சிவமூர்த்தியாகவும் திருக்கோலங் கொண்டு உலா வரும் செய்திகள் இதனுள் கூறப்பட்டுள்ளன.

மடந்தைப் பருவத்தில் முருகவேளைத் துதித்து யாழ் வாசித்த செய்தி கூறுமிடத்தே, இசைநூற் செய்திகளும் காந்தாரி, காம்போதி, கல்யாணி, தேவ காந்தாரி, மோகனம், முராரி முதலிய 15 இராகங்களின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. தெரிவைப் பருவத்தில் முருகனுக்குரிய மலை கந்த மாதனம், நாடு தென்னாரிய நாடு, நகர் இலஞ்சி, ஆறு சித்திராநதி, யானை ஐராவணம், படை வேல், கொடி சேவல், முரசு மும்முரசு, மாலை கடம்பு, ஆணை குமரன் துணையென்னும் ஆணை ஆகியன தசாங்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. பேரிளம் பெண் பருவத்தில், இப்பருவப் பெண் கடம்பமரக் கன்று ஒன்றினைக் கொணர்ந்து நட்டு அதற்கு முருகக் கடவுளின் பெயரிட்டு வளர்த்து, அது மலர்ந்த பிறகு அம்மலரை முருகவேளுக்குச் சூட்ட எண்ணினாள் என்னும் செய்தி காணப்படுகிறது. இந்நூலுள் காணப் பெறும் 'பாவனைத்தும், வாசிதீர் காசுபெற மண்டலத்தில் சொன்னவனை' (151-2) என்பது போன்ற பகுதிகளால் முருகக் கடவுளே திருஞான சம்பந்தராகத் தோன்றினார் என்னும் கொள்கை யுடையவர் பண்டாரக் கவிராயர் என்பது தெரி கிறது.

திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் (66), கந்தரனுபூதி இயற்றிய அருணகிரிநாதர் (205) ஆகி யோரைப் பற்றியும், கந்தபுராணத்தைப் பற்றியும் (113) அமைந்த செய்திகள் பல இந்நூலுள் காணப் படுகின்றன. கதிர்காமம், கந்தமாதனம், குன்று தோறாடல், சோலைமலை, திருச்செந்தூர், திருத் தணிகை, திருப்பரங்குன்று, திருமலை, திருவாவினன் குடி, திருவேரகம், வள்ளியூர், வேள்விமலை ஆகிய முருகன் தலங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் கூறப் பட்டுள்ளன. இந்நூல் டாக்டர் உ.வே. சாமிநாதைய ரால் 12.1.1935-இல் ஏட்டுப் பிரதியிலிருந்து பதிப் பிக்கப் பெற்றது.

**இலட்சத் தீவுகள்** இந்தியாவின் நேராட்சிப் பகுதிகளுள் ஒன்று. இந்திய ஒன்றியம் 22 மாநிலங்க ளாகவும் ஒன்பது நேராட்சிப் பகுதிகளாகவும் பிரிக் கப்பட்டுள்ளது. ஒன்பது நேராட்சிப் பகுதிகளுள் ஒன்றுதான் இலட்சத் தீவுகள்.

இருப்பிடம்: இலட்சத் தீவுகள், அரபிக்கடலில் கேரளாவின் மேற்குக்கரையில் அமைந்துள்ள 27 தீவு களின் கூட்டமாகும். இங்குள்ள தீவுகளுள் பதினேழு தீவுகளில் மட்டிலுமே மக்கள் வாழ்கிறார்கள்.

இலட்சத் தீவுகளின் மக்கள் தொகை 40,249 (1981). இதன் தலைநகரம் கவரட்டி; இங்குச் சட்ட மன்றம் கிடையாது. மக்களின் பேச்சு மொழி மலையாளம். மொத்தப் பரப்பு 32 ச.கி.மீ. வட கோடியில் உள்ளது அமின்திவி (Amindivi) தீவாகும். ஏனைய தீவுகளை இலட்சத் தீவுகள் என்பர். இதில் மினிகாய் (Minicoy) தீவும் அடங்கும். அந்தராத்துத் (Androth)தீவு இவற்றுள் ஒன்று. இதன் பரப்பளவு 4.8 ச.கி.மீ. இதுதான் கேரளாவிற்கு அண்மையிலுள்ளது. இந்தியாவின் நேராட்சிப் பகுதியான இது கேரளா வின் உயர்நீதி மன்றத்தின் கண்காணிப்பிலுள்ளது.

இலட்சத் தீவுகளின் சிறப்பான வேளாண்மைப் பயிராகக் கருதப்படுவது தென்னைதான். இதைத் தவிரப் பால்பண்ணைத்தொழிலும் கோழிப்பண்ணைத் தொழிலும் இங்கு நடைபெறும் பிற தொழில்களா கும்.

மீன்பிடித்தல் மக்களின் சிறப்பான தொழிலாகும். துனா, சுறா போன்ற மீன் வகைகள் இத்தீவுகளை யடுத்துள்ள கடல்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. இந்தியாவிலேயே மீன் உற்பத்தியில் இத்தீவுகள் முதலிடம் வகிக்கின்றன. கயிறு திரித்தல், கயிற்

நெசவு போன்ற தொழில்களும் சிறப்பானவை. நார் உரித்தல் தொழிலைக் கொண்ட இரு ஆலைகளும், நூல் நூற்பு ஆலையொன்றும் இங்குள்ளன.

வாசுகோட காமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி இத்தீவுகளை கி.பி.1498-ஆம் ஆண்டில் கண்டுபிடித்து, அங்குப் போர்த்துகீசிய ஆட்சியையும் நிலைநாட்டினார். இது கி.பி.1545 வரை நீடித்தது. பின்னர் அங்குள்ள மக்கள் போர்ச்சுகீசிய ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். அதனால், இத்தீவுகள் கண்ணனூர் அரசரின் ஆளுகைக்குள்ளாயின. சீரங்கப் பட்டண உடன்படிக்கை கி.பி.1792-இல் ஏற்பட்டது. அதன்படி இத்தீவுகளின் தென்பகுதி மாப்பிள்ளை தலைவர் ஒருவரின் ஆட்சியின்கீழ் வந்தது. அவர் ஒவ்வோராண்டும் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டவேண்டுமென்றும் முடிவாயிற்று. எஞ்சிய தீவுகள் ஆங்கிலேயர் வசமாயின. தென் பகுதித் தீவுகளும் கி.பி.1877-ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர் கைவசம் வந்தன. இந்நிலை 1956-ஆம் ஆண்டு வரை நீடித்தது. இலட்சத் தீவுகள் அனைத்தும் 1956 -இலிருந்து இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதிகளாயின.

தானிய வகைகள், பருப்பு, வாழை, காய்கறிகள் போன்றவை இங்கு விளைகின்றன. கொப்பரைத் தேங்காயைத் தந்து கேரளாவில் அரிசியைப் பெறுகின்றனர்.

இலட்சத் தீவுகளுள் கவரட்டி (Kavaratti), மினிகாய் (Minicoy), கில்ட்டன் (Kiltan), செட்லத்து(Chetlat), அகாத்தி (Agatti), அந்தராத்து (Androth), கல்பேனி (Kalpeni), அமினி (Amini), கடமட்டு (Kadmat) என்பன குறிப்பிடத்தக்கவை.

இலக்கத்தீவு, மினிகாய்,அமின்திவித் தீவுகள் என்னும் பெயர், 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாளன்று இலட்சத் தீவுகள் என்று மாற்றப்பட்டது.அரசு திருத்தியமைத்த ஆண்டான 1956 அக்டோபர் வரை இவை சென்னை மாநிலத்தின் பகுதியாக இருந்தன. இலட்சத் தீவுகள் 1956 நவம்பர் முதல் நாளன்று, இந்திய ஒன்றியத்தின் தனிப் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**இலட்சியம்**: சைவ சித்தாந்தத்தில் ஆன்மா எவ்வாறு வீடுபேறு அடைகிறது என்பது இலட்சியத்தின் வாயிலாக உணரப்படுகிறது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றுமே மும்மலம் எனப்படும். மேற்கூறப்பட்ட மும்மலங்களிலிருந்து ஆன்மா அல்லது உயிர் விடுபட்டுச் செல்வதற்கு இலட்சியம் ஒரு வழியாக உள்ளது.

இந்த இலட்சியத்தை அடைய அல்லது இறைவனின் அருளைப் பெற நான்கு வழிகள் உள்ளன. அவை 1. சரியை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம் என்பன.

இறைவன் கோவில்களை அலகிடுதல், மெழுகுதல், சுத்தம் செய்தல், இறைவன் புகழைப் பாடிக் கொண்டே பூமாலை தொடுத்தல், விளக்கு ஏற்றி வைத்தல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களின் குறிப்பு அறிந்து அவர்களுடைய பணிகளை நிறைவேற்றுதல் முதலிய பணிகள் சரியை என்ற முதல் பிரிவில் அடங்கியுள்ளன. இவ்வழியில் சிவனை வழிபடுவோர் சிவன் வாழும் உலகத்தில் (சாலோகம்) இன்புற்றிருக்குமாறு அருளப்பெறுவர்.

கடவுள் வழி பாட்டில் நிகழும் செயல்களைக் குறிப்பிடுவது கிரியை எனச் சொல்லப் படுகிறது. அகத்தொடு புறமும் கலந்த பயிற்சியே கிரியை. அதாவது உடல் உறுப்புகளாகிய கைகளைக் கொண்டு இயற்றப் பெறும் வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுகிறது. பூதசுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி ஆகிய ஐந்து சுத்திகள் செய்யப் பெறுகின்றன. முழுமுதல் கடவுள் எழுந்தருள்வதற்காக இடம் (ஆசனம்), நினைத்த உருவம் (மூர்த்தி), அவ்வுருவத்தின் உள்ளீடாக உள்ள இறையொளி (மூர்த்திமானம் சோதி) ஆகியன உள்ளத்தால் கருதப் பெறுகின்றன (பாவித்தல்). இவ்வாறு மெய்யன்போடு அருச்சனை செய்து, பரவிப் போற்றுதலுடன் எரி ஓம்பல் நாள்தோறும் செய்வோர், இறைவனுக்கு அருகில் (சாமீபம்) உள்ளோர் ஆவர். இதைத் திருஞான சம்பந்தர், 'நறைமலி தருமலி...' என்னும் தேவாரப் பாடலில் குறிப்பிடுகிறார்.

ஐம்பொறிகளை ஒடுக்கி அல்லது அடக்கி மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களின் உள் வழிகளை அறிந்து, அவ்விடங்களில் பொருந்தித் தியானித்து (பாமந்திர), சந்திர மண்டலத்திலுள்ள அமுதத்தை உடல் முழுவதும் நிரப்பி, முழுச் சோதியை நினைந்திருந்து, வினைகள் கெடுதற்குரிய யோக நெறியைக் கடைப்பிடித்தவர் சிவனது உருவத்தை யோக மூலமாகப் (சாரூபம்) பெறுவர்.

ஞானத்தினால்தான் வீடு பேறு அடைய முடியும் எனச் சித்தாந்தம் குறிப்பிடும். அஞ்ஞானத்தினால் கட்டு (பாசம்) ஏற்படுகிறது. மெஞ்ஞானத்தால் அக்கட்டு நீங்கும். ஞானபூசை செய்து ஞான வழியை அடையலாம். ஞான நூல்களை ஓதுதல், அவற்றைப் பிறருக்கு ஓதுவித்தல், அவற்றின் பொருளைத் தக்க ஆசானிடம் கேட்டல், தக்கவர்களுக்குத் தான் உரைத்தல், அவற்றின் பொருளைத் தான் சிந்தித்தல்

என்னும் ஐந்து வகையான செயல்களை ஞானபூசை எனக் கூறுவர்.

ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு நிலைகளைக் கொண்டதா கும். நிட்டையை நன்றாகப் பொருந்தியவர்கள் வீடு பேறடைவர்.

இருவினையொப்பு என்பது நல்வினை தீவினை களினால் பிறப்பு, இறப்பு அல்லது விருப்பு, வெறுப்பு அற்ற நிலை ஆகும். இம்மனப்போக்குக் கைகூடப் பெற்றால்தான் இறைவனின் அருளைப் பெற முடியும் எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. மேலும், சரியை கிரியை, யோகம் என்பவற்றால் உயிர் ஞான நெறி யிற் செல்லும் பக்குவம் அடைகிறது. இந்நிலையில் நிகழ்வன இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் என்பனவாகும்.

குரங்குக்குட்டி தாயை இறுகப் பற்றிக் கொள் வது போன்று உயிர் வீடுபேறு அடைவதற்கு இறை வனை இடையறாத பக்தியால் பற்றிக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு பற்றிய உயிர்களை, 'பூனை தன் குட்டியைக்கௌவித் தூக்கிச் செல்வது போன்று' இறைவனும் விடாதுபற்றி அருளுவான்.

**இலட்சுமணசாமி முதலியார்** (கி.பி 1887-1974) 'ஆர்க்காடு இரட்டையர்' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்களுள் இளையவர். டாக்டர் இராம சாமி முதலியார் மூத்தவர். இவர் கர்நூல் மாவட்டத் தில் ஆர்க்காடு குப்புசாமி முதலியாருக்கும் சீத்தம் மாளுக்கும் 14.10.1887-இல் மகனாகப் பிறந்தார்.

குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை இழந்த இவர், நன்கு படித்துப் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் எப்.ஏ., தேர்வில் வெற்றி பெற்றார். தமது 22-ஆம் வயதில் மாநில மருத்துவப் பணியில் சேர்ந்து பழநி யில் மருத்துவப் பணியினைத் தொடங்கினார். பின் னர், 1914-ஆம் ஆண்டு பி.ஏ., பட்டத்தையும் 1922 -ஆம் ஆண்டு எம்.டி., பட்டத்தையும் பெற்றார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் 1916-ஆம் ஆண்டு இராதாபாய் என்பவரை மணந்துகொண் டார். இவர் மக்கள் நால்வர். மூவர் ஆண்கள்; ஒரு வர் பெண்.

சென்னையில் ஏழைகளுக்கென்று ஒதுக்கப்பட்டு, கஞ்சித் தொட்டி மருத்துவமனை என்று சொல்லப் பட்ட இராயபுரம் மருத்துவமனையில் இவர்தம் சீரிய பணி தொடங்கியது. எழும்பூர் அரசினர் பெண்



இலட்சுமணசாமி முதலியார்

கள் மருத்துவமனை, சென்னைப் பொது மருத்துவ மனை ஆகியவற்றில் பணியாற்றினார். எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனையின் கண்காணிப்பாள ராகப் பொறுப்பேற்றுச் சிறந்த பணிபுரிந்தார். சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரானார். மகப்பேறு மருத்துவத்தில் உலக வல்லுநர்களுள் ஒரு வராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய மருத்துவ நூல் கள் இன்றும் போற்றப்படுகின்றன.

கட்சிச் சார்பின்றி இவர் ஆற்றிய அரசியல் பணி குறிப்பிடத் தகுந்தது. சென்னை மேலவையில் 1946 -ஆம் ஆண்டு முதல் இவர் உறுப்பினராகஇருந்தார். எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது ஆளுங் கட்சியின் நிருவாகத்தை ஆக்க முறையில் இடித்தும் பாராட்டியும் வந்தார். ஆளுங்கட்சி இவருடைய நடு நிலையான கருத்துரைகளுக்கு மதிப்பளித்தது.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக 1942-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப் பதவியில் 27 ஆண்டுகள் சிறப்பாகப் பணிபுரிந்தார். இவருடைய நிருவாகத்தின்கீழ்ப் பல கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவை தொடங் கப் பெற்றன. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, சிற்பம், நகர அமைப்பு ஆகியவற்றிற்கான

கல்வி நிறுவனம், கணித மேதை இராமானுசம் கணக்கியல் கழகம், அடிப்படை மருத்துவ அறிவியல் ஆய்வுக் கழகம், செருமானிய உதவியுடன் சென்னையில் இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னையில் அமைந்துள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் ஆகியன அவற்றுள் சில.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, பெருஞ்சான்றிதழ் வகுப்புகளுக்குப் பல்வேறு புதிய துறைகள் தொடங்கப் பெற்றன. மனையியல், செவிலியர்துறை, வணிகவியல், தொழில் வணிக நிருவாக இயல், இசைக் கல்விக்கு உரிய பட்டப்படிப்பு, உளவியல், மானிடவியல், தொல்பொருளியல், உயிர்ப்பு வேதியியல், பிற வேதியியல், சட்டம், நூலகவியல், கட்டடவியல், சமூகவியல், இதழியல், இந்தி, உருசிய மொழி போன்றவை அவற்றுள் சில. இவர் பல்கலைக் கழக நிதி உதவிக் குழு ஏற்படப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அக்குழு தொடங்கப்பெற்றபொழுது அதன் உறுப்பினராகக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணனால் நியமிக்கப்பட்டார். பின்னர், உயர்நிலைப் பள்ளிக் குழுவின் தலைவராகவும் இருந்து நடைமுறைக்கு உகந்த பரிந்துரைகளைச் செய்தார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரை அரசு 1928-29-ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களையும் மருத்துவமனைகளையும் நேரில் பார்த்து வரும்படி அனுப்பி வைத்தது. மருத்துவக் கல்விக் குழுவின் துணைத் தலைவராக இலண்டன், சிகாகோ சென்று வந்தார். உலக உடல்நல அமைப்பிற்கு(World Health Organization) இந்தியாவின் பேராளராக 1948-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1949-50-ஆம் ஆண்டில் அவ் அமைப்பின் நிருவாகக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். உலக நாடுகளின் கல்வி, கலை, அறிவியல் கழகத்தின் (UNESCO) நிருவாகக் குழு உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் இருந்த காலங்களில் கூட்டங்களில் கலந்துகொள்ளப் பாரிசு, செனிவா, தென் அமெரிக்கா, கனடா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு வழங்கப்பட்ட மதிப்புப் பட்டங்களுள் எல்.எல்.டி.யை (L.L.D.) இலங்கைப் பல்கலைக் கழகம் (1942), கிளாசுகோப் பல்கலைக் கழகம் (1951), மெக்கில் பல்கலைக் கழகம், கனடா (1958), மைசூர்ப் பல்கலைக் கழகம் (1960), ஆங்காங்குப்பல்கலைக் கழகம் (1961), இலண்டன் பல்கலைக் கழகம் (1963), மதுரைப் பல்கலைக் கழகம் (1967) ஆகிய பல்கலைக் கழகங்கள் வழங்கின; டி.எஸ்சி. (D.Sc.) பட்டத்தை ஆந்திரப் பல்கலைக் கழகம் (1943), இலக்னோப்பல் கலைக் கழகம் (1944), கல்கத்தாப்பல்கலைக் கழகம் (1957), சென்னைப் பல்கலைக் கழகம் (1961) ஆகிய பல்கலைக் கழகங்கள் வழங்கின; டி.சி.எல்.(D.C.L.) என்ற பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் (1948), டி.லிட்., (D.Litt.) பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் வழங்கின.

ஆங்கில அரசு இவருக்கு இராவ்பகதூர், திவான்பகதூர், 'சர்' பட்டம் போன்றவற்றை அளித்தது. எடின்பரோ பல்கலைக் கழகத்தின் மருத்துவ நிலைக்கு (F.R.C.P.) 1966-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்திய அரசாங்கம், 1954-ஆம் ஆண்டு 'பத்ம பூசன்' விருதும், 1963-ஆம் ஆண்டு 'பத்ம விபூசன்' விருதும் அளித்துப் பெருமைப்படுத்தியது. இவர் 14.4.1974-இல் காலமானார். சி.பா.

**இலட்சுமணபுரி** இந்தியாவின் மிகப்பெரும் மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் தலைநகரமாகும். இலட்சுமணபுரியை இலக்குனோ (Lucknow) என்று சொல்வர். இலக்குனோ என்னும் பெயரில் மாவட்டம் ஒன்றும் இயங்குகிறது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 2528 ச.கி.மீ. ஆகும்; மக்கள்தொகை 20,14,574 (1981).

இலட்சுமணபுரி கங்கையாற்றின் துணையாறுகளுள் ஒன்றான கோமதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தில்லி மாநகருக்குத் தென் கிழக்கில் 435 கி.மீ. தொலைவிலும், கான்பூர் மாநகருக்கு வடகிழக்கில் 77 கி.மீ. தொலைவிலும் உள்ள இவ்வூர், மாபெரும் வாணிக மையமும் பண்பாட்டு மையமுமாகும். கங்கையாற்றுப் பள்ளத்தாக்கின் நடுவில் அமைந்துள்ள இம்மாநகரம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இந்நகரில் இந்துப் பெருங்குடி மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தாலும், இசுலாமியர்களும் இங்குக் கணிசமான தொகையினராய் உள்ளனர்.

இலட்சுமணபுரியின் தொடக்கத்தைப் பற்றியோ உருவாக்கத்தைப் பற்றியோ திட்டவட்டமான செய்திகள் கிடைத்தில. இந்நகரம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறப்புற்று விளங்கலாயிற்று. இவ்வூர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அயோத்தி நவாபுகளின் தலைநகராயிற்று. அவர்கள் இங்குக் கட்டிய அழகான மாளிகைகள், மசூதிகள், ஏனைய கட்டடங்கள் போன்றவை நவாபுகளின் காலம் தொட்டுக்கட்டப் பெற்று வந்துள்ளன. ஆங்கிலேயர் அயோத்தியைத் தம் ஆட்சியுடன் இணைத்துக் கொண்டது (கி.பி. 1856) வரை இலட்சுமணபுரி நவாபுகளிடமே இருந்தது. ஆசப்-உத்-தௌலா (Asaf-ud-Daula) என்பார்

இமாம்பரா என்னும் மாளிகையைப் பளிங்குக் கற்களால் கட்டியுள்ளார். இது குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சின்னமாகும். இதனை அவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டினார். இம்மாளிகையின் நடுவில் பெரும் மண்டபம் ஒன்று, பெரிய வில்வடிவான படிமேடை, மசூதி, தூபிகள் ஆகியன உள்ளன. ஆங்கில அரசாங்கத்தின் தலைமை அதிகாரியின்வீடும் இங்குக் கட்டப் பட்டிருந்தது. ஆனால்,கி.பி 1857-58-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெருங்கலகம் எனப்படும் முதல் விடுதலைப் போரின்போது இக்கட்டடம் சீர்குலைந்தது. அதன் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

இலட்சுமணபுரியில் தேசிய தாவரவியல் தோட்டம், விலங்கியல் தோட்டம், பூங்கா, பொதுநூலகம், அரசு அருங்காட்சியகம், இலக்குனோப் பல்கலைக் கழகம், பலவகைக் கல்லூரிகள், பல்விதமான அரசு ஆய்வுக் கூடங்கள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் இந்தியாவிலேயே மக்கள்தொகை மிகுந்த மாநிலமாகும். அத்தகைய மாநிலத்தின் மொத்த வாணிக மையமாகத் திகழும் இலட்சுமணபுரி, குறிப்பாக உணவுப் பொருள்கள் வாணிகத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. எனினும் இந்நகரில் தொழில்கள் குறைவு. மத்திய அரசின் இருப்புப்பாதைப் பணிமனைகளும் மிகப்பெரிய பருத்தி, காகிதம், சர்க்கரை ஆலைகளும் இங்குள்ளன. இம்மாநகரத்தில் இந்தியத் தேசிய காங்கிரசின் ஆண்டு மாநாடுகள் பலமுறை நடைபெற்றுள்ளன.

இலக்குனோ ஒப்பந்தம் இங்குக் கையெழுத்தாயிற்று. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்த ஒப்பந்தம் கி. பி. 1916-இல் இந்து-முசுலிம்களிடையே கருத்து வேறுபாடுகளைக் களைய வேண்டும் என்னும் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தமக்குள் நிலவிய வேறுபாடுகளை மறந்து இரு வகுப்பினரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதே இலக்குனோ ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும். எனினும், இந்த நோக்கம் நீண்டகாலம் நீடிக்கவில்லை. நாட்டின் ஒருமைக்கு மாறாகப் பிரிவினைக்கு விதையூன்றியதும் இவ்வொப்பந்தமேயாகும். பாகிசுத்தான் பிரிவினைக்கு இவ்வொப்பந்தமே வழிகாட்டியது என்று குறை கூறுவோரும் உண்டு. இவ்வொப்பந்தம் முழுவதையும் ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ளாமல், வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை மட்டும் ஏற்றுக்கொண்டு இந்து-முசுலிம் ஒற்றுமைக்குத் தடைசெய்தது. கூட்டுப் பிரதிநிதித்துவத்தைக் காங்கிரசு கேட்டபோதிலும், அதனை ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ளாமையால் இத்திட்டம் தோல்வியுற்றது. இலட்சுமணபுரி புரட்சிவாதிகளின் முதன்மையான மையமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலட்சுமணபுரியின் மக்கள்தொகை 10,06,538 (1981). இது இந்தியாவின் 11-ஆம் பெருநகரமாகும்.

**இலட்சுமிபாய், சான்சி இராணி (கி.பி. 1835-1858)** இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் என்னும் இந்திய விடுதலைப் போரில் பங்கு கொண்ட 'வீராங்கனை' உயிர்த் தியாகம் செய்த நாட்டுப்பற்றுடையவர்.

இலட்சுமிபாய் (Lakshmi Bai) கி.பி. 1835-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் உத்தரப் பிரதேசம் வாரணாசியில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் மணிகர்ணிகா (Manikarnika) என்பதாகும். இவர் தம் தந்தையார் மோரோபந்து தாம்பே (Moropant Tambe); கணவர் இராசா கங்காதரராவ். தம் கணவர் காலமானதும் அவர் ஆட்சி செய்த சான்சி அரசின் (Jhansi State) பேராளராக ஆண்டார். அதனால், இலட்சுமிபாய் சான்சி இராணி என அழைக்கப்படுகிறார்.

ஆங்கிலேயர் இலட்சுமிபாயை அரசியாக ஏற்க மறுத்தனர்; அவர்தம் ஏற்புமகன் தாமோதர ராவையும் அரசராக ஏற்க அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. தம் அரசைப் பறித்துக்கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சிக்கெதிராக இலட்சுமிபாய் வாளேந்தினார். சான்சியில் இருந்த ஆங்கிலப் படையைத் தாக்கி அவர்களை, கி.பி. 1857-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் விரட்டியடித்தார். மவுராணிப்பூர் (Mauranipur), பர்வாசாகர் (Barwasagar) போன்றவிடங்களிலும் ஆங்கிலப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அதன் விளைவாக, கி.பி. 1857-ஆம் ஆண்டுநிகழ்ந்த பெரும் கலகத்தின் தனிப்பெரும் தலைவியாக, திறன்மிக்க வீராங்கனையாகக் கருதப்பட்டார்.

பன்பூர் (Banpur), சாகர் (Shahgarh) போன்ற பகுதிகளின் அரசர்கள் இலட்சுமிபாயுடன் இணைந்து கொண்டமையால் அவருடைய படை பலம் மேலும் பெருகி வளர்ந்தது. இப்பகுதிகள் பண்டேல்கண்டைச் சார்ந்தவை. ஆங்கிலப் படைகள் சர் இயூகு ராசு (Sir Hugh Ross) என்பாரின் தலைமையில் இலட்சுமிபாயைத் தாக்க முற்பட்டபோது, அவர் சிறிதும் அஞ்சாமல் எதிர்த்துப் போரிட்டார். இரு வாரங்கள் இடையறாது நிகழ்ந்த இப்போரினைத் தாக்குப்பிடிக்க முடியாத ஆங்கிலேயப் படையின் அழுத்தத்தால், இலட்சுமிபாய் கால்பி (Kalpi) என்னும் ஊருக்குத் தப்பிச் செல்லவேண்டியவரானார்.

இராவ்சாகிபு (Rao Saheb), தாத்தியா தோப்பே (Tatya Tope) ஆகியோரின் படைகள் கால்பியில் இவருடன் இணைந்துகொண்டன. அவர்களின் கூட்டுப்படைகள் கூஞ்சு (Koonch), கால்பி போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கடுமையாகப் போரிட்டன.

இலட்சுமிபாய் குவாலியருக்குச் சென்று பேசுவாவின் அதிகாரத்தை அங்கு நிலைநாட்டினார். அவரைப் பின்தொடர்ந்து ஆங்கிலப்படை சென்றது. அவர் ஆண் உடை தரித்துத் தம் படைவீரர்களுக்குத் தலைமை தாங்கிப் படைகளை வழிநடத்தினார். படைப்பலத்திலும், திறமையிலும் தம்மை விடச்சிறந்திருந்த ஆங்கிலப் படைகளை வீரமாகவும் தீரமாகவும் எதிர்த்துச் சாடினார். குவாலியரில் கோட்டா-கி-சராய் (Kota-Ki-sarai) என்னும் பகுதியில் கி.பி. 1858-சூன் மாதம் 18-ஆம் நாள் நடைபெற்ற போரில் இலட்சுமிபாய் வீரமரணமுற்றார். இப்பகுதிக்கு அண்மையில் இருந்த பாபா கங்கா தாசு (BabaGanga Das) என்பாரின் தோட்டத்தில் இலட்சுமிபாயின் உடல் எரியூட்டப்பட்டது. அந்த இடம் இக்காலத்தில் 'பூல் பாக்' எனப்படுகிறது. மலர்ப் பூங்கா என்பது அதன் பொருள். இந்தியா 1947-இல் விடுதலை அடைந்தபின் இலட்சுமிபாயின் வீரதீரச் செயல்களையும் தியாகத்தையும் போற்றிப் பாராட்டும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்று கட்டப்பெற்றுள்ளது.

**இலடாக்கியர்** இந்தியாவின் வடபாகத்திலுள்ள இலடாக்குப் (Ladakh) பகுதியில் வாழும் மக்களாவர். சம்மு-காசுமீர் (Jammu and Kashmir) மாநிலத்தின் கிழக்குப் பகுதி மாவட்டமான இலடாக்கு உலகத்தின் மிக உயர்ந்த பகுதியாகும். இலடாக்கின் வடபகுதி சின்கியாங்கு (Sinkiang) என்னும் சீனப் பகுதியாலும் கிழக்குப் பகுதி திபேத்து (Tibet) எனும் சீனப் பகுதியாலும் சூழப்பட்டுள்ளது. 1,17,000 சதுர கி.மீ. பரப்புடைய இலடாக்குப் பகுதி உயர்ந்த சமவெளிகளையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் கொண்டிருக்கிறது. இலடாக்கின் கிழக்குப் பகுதி உயர்ந்த சமவெளிகள் நிறைந்த பகுதியாகவும் மேற்காகச் செல்லச் செல்லச் சமவெளிகளற்ற பகுதியாகவும் காணப்படுகிறது. 13, 500 அடி உயரமுள்ள தென்கிழக்கு இலடாக்குப் பகுதி பெரிய உவர் ஏரிகளால் சூழப்பட்டுள்ளது. சிந்து, சசுகர் (Zaskar) ஆகிய ஆறுகள் இலடாக்குப் பகுதியில் பாயும் முதன்மையான ஆறுகளாகும். வட பாகிசுத்தானின் சையாக்கு ஆற்றின் (Shyok river) முகப்பிலிருந்து சீனாவின் திபேத்துப் பகுதி வரை நீண்டுஉயர்ந்து நிற்கும் காரகோரம் (Karakoram) மலைத் தொடர் இலடாக்குப் பகுதி வழியாகச் செல்கிறது. இப்பகுதி இலடாக்கு மலைத்தொடர் என்று கூறப்படுகிறது.

இமயத்தின் பனிப்பகுதியில் வாழும் இலடாக்கியரைப் பற்றிய செய்திகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப்பட்டன. சீன யாத்திரிகரான பா-கியான் (Fa-Hian) இப்பகுதிக்கு கி.பி. 400-இல் சென்றபோது இம் மக்களைப்பற்றிய செய்திகளைத் தொகுத்து வெளியிட்டார். இலடாக்குப் பகுதியில் வாழும் 50,000க்கும்மேற்பட்ட மக்கள் பண்பாட்டாலும் இனப்பண்பாலும் திபேத்து நாட்டவரையே பெரிதும் ஒத்திருக்கின்றனர். இலடாக்கியர் ஒரு படித்தான மக்களினமாகக் காணப்பட்டிலர். ஆரிய மொழி பேசும் தார்து (Dard) மக்களே இப்பகுதியில் குடியேறிய மிகப் பழமையான மக்களாவர். தார்து மக்கள் குழுவினர் புரோக்பா (Brokpa) என்ற வட்டாரப் பெயர்கொண்ட சித்ரல் (Chitral) மக்களுடன் தொடர்புடையவர்கள். இலடாக்குப் பகுதியில் வாழும் மற்றொரு சிறுபான்மை இனத்தவர் மான் (Mon) எனப்படுவர், இவர்கள் காசுமீரத்திலிருந்து முற்காலத்தில் குடியேறிய புத்த மதத்தினராவர். உடலமைப்பாலும் பண்பாட்டாலும் இன்றைய இலடாக்கியர் மங்கோலிய இனத் திபேத்து நாட்டவராகவே காணப்படுகின்றனர்.

இலடாக்கியர் நீண்ட கம்பளி ஆடைகளையே விரும்பி அணிகின்றனர். இலடாக்கியரின் வாழிடப் பகுதி சாய்வு குறைந்த மலைப் பகுதியில் அமைந்திருக்கின்றது. தட்டையான கூரை அமைப்புடைய இவர்கள் வீடுகள் மூன்று தளம் வரை கட்டப்பட்டுள்ளன. விறகுகள் எளிதில் கிடைக்காத இப்பகுதியில் வீடுகளில் எண்ணெய் விளக்குகளும் சாணத்தை எரிப்பதிலிருந்து கிடைக்கும் வெளிச்சமுமே ஒளி கொடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இலடாக்கின் காலநிலை தானிய வகைகளை விளைவிக்கச் சாதகமாக உள்ளது. மழை குறைந்த இப்பகுதியில் ஆற்று நீரை உபயோகித்துப் பார்லி, கோதுமை, பட்டாணி, முள்ளங்கி, கடுகு, எண்ணெய்வித்துகள் போன்றவற்றைப் பயிர் செய்கின்றனர். இலடாக்கியரின் சமூகத்தில் பயிர்த்தொழிலில் இருபாலரிடத்தும் தொழிற் பகுப்புக் காணப்படுகிறது. ஆண்கள் நிலத்தை உழுதலில் ஈடுபடுவர். எஞ்சிய பணிகளைப் பெண்களே மேற்கொள்வர். ஆண்கள் வாணிகம் செய்ய வெளியே செல்லும்போது பெண்களே பெரும்பான்மையான பணிகளைக் கண்காணிக்கின்றனர். ஒவ்வொரு குடியானவரின் சொத்தின் மதிப்பு அவர் கொண்டிருக்கும் குதிரைகள், ஆடுகள், எருதுகள் போன்றவற்றின் எண்ணிக்கையையும், தானியக் களஞ்சியத்தின் அள

வினையும் பொறுத்து அமையும். நிலத்தில் வேலை செய்வோருக்குக் கூலியாகப் பணம் தருவது மிகக் குறைவேயாகும். கூலி பெரும்பாலும் தானியமாகவே கொடுக்கப்படுகிறது. உழைப்புப் பரிமாற்றம் (Man-power exchange) இலடாக்கியரின் உழுதல் பண்பாட்டின் ஒரு சிறப்புக் கூறாகும்.

வேளாண்மை, வாணிகம் முதலிய தொழில்கள் போன்றே ஆயர் தொழிலும் இலடாக்கியருக்கு முதன்மையானதாகும். உப்பு, கம்பளி, தேயிலை, கால்நடை, தானிய வகைகள் போன்ற வாணிகம் செய்கின்றனர். பெண்கள் பொருளாதாரம், பாலுறவு போன்றவற்றில் சுதந்திரமும் மிகுதியான உரிமையும் பெற்றுள்ளனர். அவர்கள் தாமாக வாணிகம் செய்து தமக்கெனத் தனியாகப் பணம் சேர்த்து வைக்கும் உரிமையைக் கொண்டுள்ளமையும், குடும்பச் செயற்பாடுகளைத் தனித்துக் கவனிக்கும் பண்புகளும் நோக்கத்தக்கது. சொத்துரிமை ஆண்கள் வழியே செல்லும். ஆண் குழந்தைகளில்லாக் குடும்பங்களில் பெண்ணின் கணவனைப்பெண் வீட்டிற்கே அழைத்து வாழ்க்கை நடத்துவர். இவ்வகையான அமைப்பில் பெண்களே சொத்துரிமையைப் பெறுவர். பெரும்பான்மையான பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களைக் கொண்டிருக்கின்றனர். மூத்தவரின் மனைவியுடன் இளைய சகோதரர்கள் உடலுறவு கொண்டாலும் பிறக்கும் குழந்தைக்குத் தந்தை உரிமை மூத்தவனுக்கே கிடைக்கும். இலடாக்கின் மக்கள் தொகையில் சம விழுக்காடு ஆண்கள் புத்தத் துறவிகளாக மடத்திலேயே வாழ்கின்றனர். இவர்கள் கொம்பா (Gompa) எனப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையோர் நையிங்மப்பா (Nyingmapa) பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிவப்பு ஆடை அணிவதால் சிவப்புப் பிரிவினர் (Red. Sect) என்றும் கூறப்படுவர். சிறுபான்மையான எண்ணிக்கையினர் செலுக்பா (Gelugpa) அல்லது மஞ்சள் பிரிவினர் (Yellow Sect) என்று கூறப்படுவர். புத்த சமயத்தைச் சார்ந்துள்ள இலடாக்கியர் திபேத்து மொழியின் கிளைமொழியைப் பேசி வருகின்றனர்.

**இலண்டன்** இங்கிலாந்தின் தலைநகரம். அந்நாட்டின் தொன்மையான நாடாளுமன்றம் இங்குக் கூடுகிறது. இன்று இது மாபெரும் தொழிற் சிறப்புப் பெற்ற நகரம். பன்னாட்டுச் செல்வத்தின் மையம்; மிகப் பெரிய துறைமுக நகரம்; உலகிலேயே மூன்றாம் பெருநகரம்.

இலண்டன் என்னும் பெயரைக் கேட்டவுடனே எல்லோர் மனக்கண்முன் வருவன இலண்டன் கோபுரம் (Tower of London), வெசுட்டுமினிசுட்டர் மடம் (West minister Abbey), பிக்காடில்லி வட்டம் (Piccadilly Circus), 10 தவுனிங்கு சாலை, பிரிட்டன் அருங்காட்சியகம், திரபால்கர் சதுக்கம் (Trafalgar Square), பாராளுமன்ற அவைகள் (Houses of Parliament) பெருமணிக்கூண்டு (Big Ben), பக்கிங்காம் அரண்மனை போன்றவையே. இவற்றுடன் இலண்டன் மாநகர்க் காவல்காரர் (London Bobby), இரட்டை



தேம்சு நதிக்கரையில் அமைந்துள்ள இலண்டன்

மாடிப் பேருந்து, இசுகாட்டுலாந்து யார்டு (Scotland Yard), எனப்படும் இலண்டன் காவல்துறை நிலையம் போன்றவையும் நினைவுக்கு வரும்.

இலண்டன் தேம்சு ஆற்றின் நீர்ப்போக்குடன் இணைந்தாற்போல் தென்கிழக்கு இங்கிலாந்தின் வேளாண்மைப் பண்ணைகளின் மையத்தில் அமைந்துள்ளது. இந்த ஆற்றுக் கழிமுகத்தின் தலைப்பில் வடகடலிலிருந்து 64 கி.மீ. தொலைவில் இம்மாநகர் அமைந்துள்ளது. இங்கிலாந்துச் சமவெளியில் விளையும் பொருள்கள் இவ்வாற்றின் வழியாகத்தான் வெளியே செல்கின்றன. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்குள் செல்லவும் இதுதான் முதன்மையான வாயிற்படியாகும்.

தொடக்க காலம்: இங்கிலாந்தை உரோமானியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் கைப்பற்றிய போது இலடு குன்று (Lud Hill) என்னும் பெயர் கொண்ட சிற்றூர் ஒன்று தேம்சு ஆற்றின் கழிமுகத்திலிருந்து 96 கி.மீ. தொலைவில் முன்னரே நிலைத்திருந்தது. இச்சிற்றூருக்குக் கீழிருந்த கடற்கரை சதுப்பு நிலமாயிருந்தது. இலடு குன்றுப் பகுதியிலுள்ள தரை உறுதியாக இருந்தமையால் கப்பல்கள் தங்கவும் சரக்குகளைக் கப்பல்களிலிருந்து இறக்கவும் வசதி இருந்தது. இங்குள்ள ஆற்றங்கரைகள் மிகக் குறுகலாக இருந்தமையால் இங்குப் பாலம் அமைத்துக் கடப்பது எளிதாயிருந்தது. இலடு குன்றின் மேலேயே உரோமானியர்கள் கி.பி. 43-ஆம் ஆண்டில் இலண்டினியம் (Londinium) என்ற நகரைக் கட்டினார்கள். அதனைச் சுற்றித் தேம்சு ஆற்றங்கரை வரை வலிமையான சுவர்களை வளையம் போலக் காட்டினார்கள். இலண்டினியமே காலப்போக்கில் இலண்டன் என்றாயிற்று. ஏறத்தாழ கி.பி. 61-ஆம் ஆண்டளவில் வந்த தேசிடசு (Tacitus) என்னும் உரோமானிய வரலாற்றாசிரியர் அக்காலத்திலேயே இக்குடியேற்றம் வாணிகர்களின் பெருங்கூட்டத்தைக் கொண்டிருந்ததாக விவரித்துள்ளார். அவர்கள் இலண்டன் பாலம் (London Bridge) எனப்படும் முதல் பாலத்தையும் ஆற்றின் குறுக்காகக் கட்டி வடக்கிலும் தெற்கிலும் செல்லப் பாதையும் அமைத்தார்கள். ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் பிரிட்டன் உரோமானியரின் மாநிலமாயிருந்தது.

மதிற் சுவருக்குள் அமைந்திருந்த தொன்மையான இலண்டன் நகருக்கு வடபால் 2 கி. மீ. தொலைவில் தேம்சு ஆற்றங்கரையில் வெசுட்டுமினிசுடர் நகரம் (City of Westminster) தோன்றலாயிற்று. இங்கு இங்கிலாந்து மன்னர்கள் வாழ்ந்தார்கள்; பாராளுமன்றம் கூட்டப்பெற்றது; முடிசூட்டுத் திருச்சபையான வெசுட்டுமினிசுட்டர் மடமும் இங்கு அமைந்திருந்தது. ஆற்றின் நீர்ப்போக்கை ஒட்டியுள்ள இவ்விரு நகரங்களுக்கு இடையில் உள்ளபகுதியைத்தான் இசுட்ராண்டு (Strand) என்பர். 'இசுட்ராண்டு' என்பதற்குக் கரை என்பது பொருள். இங்கு அடுக்கடுக்காக அரண்மனைகளும் தோட்டங்களும் உருவாயின. தேம்சு ஆற்றுக்கு வடக்கே மேட்டுநிலத்தில் வீடுகள் எழுந்தன. பின்னர், தெற்கே இருந்த தாழ்நிலப் பகுதியிலும் வீடுகள் அமைந்தன. இதனைச் சௌத்வார்க்கு (Southwark) என்பர். இப்பகுதி இலண்டன் பாலத்திற்குத் தென்கோடியில் உள்ளது.

இலண்டன் மாநகர் தொடக்க காலத்திலேயே கைவினைஞர், வணிகர் போன்றோர்தம் கழகங்களின் தாயகமாயிற்று. வெசுட்டுமினிசுடர் அரசர்கள் இந்நகருக்கு ஓரளவு உரிமையைக் கொடுத்திருந்தார்கள், அதனைப் பொன்னேபோற் காத்தது இந்நகரம்.

உரோமானியர் இலண்டனை விட்டகன்றதும், இதன் வரலாறு சில காலம் மங்கியிருந்தது. எனினும், இதன் சிறப்பு கி.பி. 604-ஆம் ஆண்டில், அதன் முதல் மதகுருவான மெல்லிடசு (Bishop Mellitus)என்பவரால் மீண்டும் பரவத் தொடங்கியது. மகா ஆல்பிரடு என்னும் மன்னரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு)இலண்டனின் கோட்டை, கொத்தளங்கள் பாதுகாக்கப்பட்டன.

வெற்றிவீரர் வில்லியமும் அவருடைய நார்மானியக் குடிமக்களும் பிரான்சிலிருந்து கி.பி. 1066-ஆம் ஆண்டில் வந்தபோது மீண்டும் இலண்டனில் பெரிய நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. ஓர்செசுட்டரின் (Worecestor) மதகுருவாக வந்த குண்டுல்பு (Gundulf) என்பவர் வில்லியத்தின் கருத்திற்கிணங்க கி.பி. 1078-இல் வெண்கோபுரம் (White Tower) ஒன்றைக் கட்டும்படி பணித்தார். இது இலண்டன் கோபுரத்திலுள்ள மிகத் தொன்மையான பகுதி. இது கோட்டையாகவும் அரண்மனையாகவும் சிறைக்கூடமாகவும், நீதிமன்றமாகவும் பயன்பட்டது. வெற்றிவீரர் வில்லியம் இலண்டனுக்குப் பட்டயம் (Charter) ஒன்றையும் வழங்கினார்.

இடைக்காலம்: இங்கிலாந்தின் அரசரான முதலாம் இரிச்சர்டு (Richard I) சிலுவைப் போர்களில் பங்குபெற்று இங்கிலாந்து திரும்பியபோது புதிய முறையில் கோட்டை கொத்தளங்களை அமைக்கும் முறையை இலண்டனில் தொடங்கினார். சுற்றிச் சுற்றி வரும் சுவர்களையும், இடையிடையே கோபுரங்களையும் இணைத்தார் இவர். இரிச்சர்டு மன்னரால் தொடங்கப்பட்ட பணி மூன்றாம் என்றி

(Henry III) மன்னர் காலத்தில் முழுமை பெற்றது. இலண்டன் கோபுரத்தில் ஒவ்வொரு மன்னரும் தத்தம் காலத்தில் எழுந்த கட்டடக் கலையைக் காட்டும் வகையில் புதுப்புது இணைப்புகளைக் கட்டினார்கள். முதலாம் சேம்சு (James I) மன்னரின் காலம் வரை இலண்டன் கோபுரத்தில்தான் மன்னர்கள் வாழ்ந்தார்கள். அன்றியும் அவர்தம் அக்கசாலை (Royal Mint), அரசு விலங்குக் காட்சியகம்(RoyalMenagerie), பொது ஆவணக் காப்பகம், வானாராய்ச்சி நிலையம், படைக்கலச்சாலை போன்றவையும் இருந்தன. இலண்டன் கோபுரச் சிறைச் சாலையில் பலர் கழு வேற்றப்பட்டனர். அரசாங்கக் கைதிகள் இங்குச் சிறை வைக்கப்பட்டிருந்தனர். சிறைச்சாலையில் முதன் முதல் (கி.பி. 1101) அடைக்கப்பெற்றவர் தர்காம் (Durham) மதகுரு ஆவார். இறுதியாகச் சிறைவைக்கப்பட்டவர் நாசி செருமானியத் தலைவர்களுள் ஒருவரான உருடால்பு எசு (Rudolph Hess) என்பவராவர். இவர் இரண்டாம் உலகப் போரின் போது இங்குச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இங்கு அரச மணி மகுடத்தை அலங்கரித்த விலை மதிப்பற்ற மணிகளும், ஆங்கிலப் படைக்கலன்களும் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருந்தன.

முதலாம் என்றி கி.பி. 1135-இல் காலமானபோது, இலண்டன் நகர மக்களேஅடுத்த ஆங்கில அரசரான இசுடீபன் (Stephen) என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏறத்தாழ கி.பி. 1136-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் தீயினால் (Great Fire) மரவீடுகள் அழிந்து போயின. அழிந்தவற்றுள் புனித பால் திருச்சபையும் (St. Pauls Cathedral) அடங்கும். இலண்டன் மாநகர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டபோது, கல்வீடுகளும் ஓட்டுவீடுகளும் கட்டப்பட்டன. அன்றியும், சாலைகள், கழிவுநீர் போக்கும் சாக்கடைகள் போன்றவை புதிதாக அமைக்கப்பட்டன.

இலண்டன் நகரில் தேனியக் குடியேற்றப் பகுதி (Danish Settlement) யொன்று பெருகி வளர்ந்திருந்தது அப்பகுதியினருள் பெரும்பாலோர் வணிகர்கள். ஆனால், கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செருமானியர் அவர்களை விஞ்சிவிட்டனர். காசுகனியர், பிளமியர், வட இத்தாலியர் போன்றோர் ஏனைய வணிகக் குழுக்களுள் சிறப்பானவர்கள். வட இத்தாலியர் இலண்டனில் வங்கிகளை உறுதியான அடிப்படையில் நிலைநாட்டினர்.

செல்வச் செழிப்பற்ற வாணிகக் கழகங்கள் பொருள் முட்டுப்பாட்டினால் தொல்லைக்காளாகி மன்னர்களிடம் பல சலுகைகளைப் பெற்றன. பின்னர், தன்னாட்சியையும் இவ்வாணிகக் கழகங்கள் இலண்டனில் நிலைநாட்டின. இலண்டனின் முதல் நகரத் தந்தையாகக் (Mayor) கருதப்பட்ட என்றி பிட்சுஎயில்வின் (Henry Fitzailwin) என்பவர் ஏறத்தாழ கி.பி. 1192-ஆம் ஆண்டளவில் பதவி ஏற்றார். இலண்டனில் பொதுக்குழு (Common Council) ஒன்று கி.பி. 1332-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டதாகத் தெரிகிறது. நாட்டில் நிலவிய குழப்பமான சூழ்நிலை இலண்டனையும் பாதித்தது. எனினும், இலண்டன் மக்கள் எப்போதும் வலுவான, கட்டுப்பாடான அரசையே ஆதரித்தனர்.

அரசியலமைப்பு வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்கள் இலண்டன் மாநகரைப் பற்றி நினைக்கும் போது அவர்கள் சிந்தனையில் பின்வரும் வரலாற்று நிகழ்ச்சி இடம்பெறும்.

இங்கிலாந்தின் பாராளுமன்றம் உலக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. வரலாற்றிலேயே முதன்முறையாக, நகரத்தொகுதியின் பிரதிநிதிகள் மாவட்டப் பிரதிநிதிகளாகிய வீரத்திருத்தகைகளுடன் (Knights) அடுத்தடுத்து அமர்ந்து, பாராளுமன்றத்திற்கு ஒரு முழுமையைத் தந்து விளங்கிய புகழ்பெற்ற 1265-ஆம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றம் இலண்டன் மாநகரில் கூடியது.

இடைக்கால இலண்டனில் இசுடீபன் அரசர் தம் பெயரில் வெசுட்டுமினிசுட்டர் அரண்மனையில் புனித இசுடீபன் ஆலயத்தைக் கட்டினார். இங்கிருந்த வெசுட்டுமினிசுட்டர் மண்டபம் கி.பி. 1299-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீயினால் அழிந்தது. இதனை இரண்டாம் இரிச்சர்டு மன்னர் கி.பி. 1400-ஆம் ஆண்டளவில் புதுப்பித்தார். இம்மண்டபத்தின் அழகான மரக் கூரைகள் இம்மன்னரால் வேயப்பட்டன. இதனுடன் அழகான தேவதைகளின் உருவச் சிலைகள் இணைக்கப்பட்டன.


**எலிசபெத்துக் காலம்:** வாணிக வளர்ச்சியாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலண்டன் பெருகி வளரலாயிற்று. மக்கள்தொகை கி.பி. 1530க்கும் 1600க்கும் இடைப்பட்ட காலத்தில் மும்மடங்காகப் பெருகியது. எட்டாம் என்றி (Hentry VIII) மன்னர் காலத்தில் சமயச் சீர்திருத்தத்தால் பறிக்கப்பட்ட மடாலய நிலங்களில் வீட்டுவசதியற்ற மக்களுக்குப் புகலிடம் அளிக்கப்பட்டது. மடாலயங்கள் கலைக்கப்பட்டமையால் வறியோர்க்கு உதவும் சமய அறக்கட்டளைகள் அற்றுப்போயின. அவற்றை ஈடுசெய்யும் நோக்குடன் கி.பி. 1547-இல் வறியோர்க்கு உதவும் மையங்கள் இலண்டனில் நிலைநாட்டப்பட்டன. மருத்துவ மனைகள், தானியக் கூடங்கள் போன்றவை அருந்தொண்டாற்றின. இக்காலத்தில் தனியார் அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தப்பட்

டன. அவை இன்றும் தொடர்ந்து பணியாற்றுகின்றன. மாசுக்கோவி வாணிகக்குழு (1555), துருக்கி வாணிகக்குழு (1581), கிழக்கிந்திய வாணிகக்குழு (1600) போன்றவை எலிசபெத்து அரசியாரின் காலத்தில் நிலைநாட்டப்பெற்றவை. முதலாம் எலிசபெத்து அரசியாரின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்திலேயே இலண்டன் உச்சநிலையை எய்திவிட்டது எனலாம்.

இசுடுவர்டு (Stuart) மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இலண்டன் மாநகர் இரு பெரும் இடர்களுக்கு உள்ளாயிற்று. முதலாவது, கி.பி. 1665-இல் தோன்றிய பெருங்கொள்ளை நோய் (Plague) ஆகும். இரண்டாவது, கி.பி. 1666-இல் ஏற்பட்ட பெருந்தீ அது மாநகரையே அழித்துவிட்டதெனலாம். எனினும், விரைவாக இவ்விடர்களிலிருந்து இலண்டன் மீண்டது. சர் கிறிசுதோபர் இரென் (Sir Christopher Wren) என்ற திருச்சபை கட்டும் சிற்பியின் அயராத பணியினால் இந்நகரின் தொன்மையான பல திருச்சபைகள் மீண்டும் கட்டப்பட்டன. இலட்கேட்டுக் குன்றில் (Ludgate Hill) கட்டப்பட்டுள்ள புனிதப் பால் திருச்சபை இவரது திறமைக்கு எடுத்துக்காட்டாகும். இப்பெரும் திருச்சபையின் குவிமாடம் (Dome) இன்றும் இலண்டனின் உயர மிக்க இடமாகும்.

இலண்டன் மாநகரின் மக்கள்தொகை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஐந்து இலட்சத்திலிருந்து பத்து இலட்சமாகப் பெருகி வளர்ந்தது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இதுவே மக்கள்தொகையிலும் செல்வச் செழிப்பிலும் உலகிலேயே முதன்மையான நகரமாக விளங்கலாயிற்று. மேற்கு முனையில் (West End) அழகான வீடுகள் வெசுட்டுமினிசுட்டரைச் சுற்றிலும் கட்டப்பட்டன. பழைய நகரம் (Old City) பொருள் வளத்தால் உலக மையமாயிற்று. தேம்சு ஆற்றில் அனைத்து நாட்டுக் கப்பல்களும் அனைத்துப் பொருள்களையும் கொண்டு வந்தன இங்கிலாந்தில் ஓடும் இருப்புப்பாதைகள் எல்லாம் இலண்டனிலேயே முடிவுற்றன. இங்கிருந்து அனைத்துத் திசைகளுக்கும் பெருஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. அந்நகர் வாணிகத்தால் உலகில் முதன்மையான இடத்தைப் பெற்றதுடன், செய்பொருள்களின் மையமாகவும் சிறப்புற்றுள்ளது. அன்றியும், ஆடை அணிகள், உணவுப் பொருள்கள், தட்டுமுட்டுப் பொருள்கள், இயந்திரக்கருவிகள், இன்னும் பல்வேறு பொருள்களின் உற்பத்தி மையமாகவும் இது விளங்கியது.

இரண்டாம் உலகப்போரின்போது குண்டு வீச்சால் இலண்டன் மிகுந்த சேதமுற்றது. செருமானியக் குண்டு வீச்சாளர் 1940 முதல் 1944 வரை இந்நகரை வீ-குண்டுகளால் (V-Bombs) கடுமையாகத் தாக்கினர். இத்தருணத்தில் இலண்டன் வாழ் மக்கள் தரைக்கடியில் வெட்டப்பட்டிருந்த சுரங்கங்களில் தூங்க வேண்டியவராயினர். பல்லாயிரவர் கொல்லப்பட்டனர்.




இலண்டன் பெருநகர்ப் பிரிவுகள்

இன்றைய இலண்டன்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்க் கடந்த 40 ஆண்டுகளில் இலண்டன் மாநகர் பல திருத்தங்களுடன் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

'இலண்டன்' என்றவுடன் இலண்டன் நகர் (The City of London)அல்லது இலண்டன் பெருநகர் (Greater London) இவற்றுள் ஒன்றே நம் நினைவுக்கு வரும். இலண்டன் நகர் என்பது 'ஒரு சதுர மைல்' பரப்புடையது. இதன் மக்கள்தொகை 5893 (1981). இங்குப் பெரும் வங்கிகள் உள்ளன. 6.77 ஏக்கர் பரப்பைக் கொண்ட இப்பகுதியில் நாள்தோறும் பணிபுரிய ஐந்து இலட்சம் மக்கள் வந்து செல்கிறார்கள்.

இலண்டன் பெருநகர் என்பது நகரையும் அதனைச் சார்ந்துள்ள மாவட்டங்களையும் குறிக்கும். இது 32 பெருநகர்ப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 1600 ச.கி.மீ. ஆகும். சாரிங்குக் கிராசு (Charing Cross) என்னும் பகுதியை மையமாகக் கொண்டு எல்லாத் திசைகளிலும் 19 முதல் 26 கி.மீ. வரை இலண்டன் பெருநகர் பரந்து விரிந்துள்ளது. இலண்டன் பெருநகர்க் குழு (The Greater London Council) என்னும் அமைப்பு பெரு நகருக்கான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.

இலண்டனில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்:

சாரிங்கு கிராசு (Charing Cross): இது இலண்டன் மாநகரின் மையம் எனக் கருதப்படுகிறது. இப்பகுதி இலண்டனை மேற்கு முனை, கிழக்கு முனை என்று இரண்டாகப் பிரிக்கின்றது.

திரபால்கர் சதுக்கம் (Trafalgar Square): இது இலண்டனின் புகழ்மிக்க நினைவுச் சின்னமாகும். நெல்சன் பிரபு திரபால்கரில் பெற்ற மாபெரும் வெற்றியை இது நினைவுகூரும். இங்கிருந்து சிவப்பு நிற மாடிப் பேருந்துகளில் இலண்டனின் எப்பகுதிக்கும் பயணம் செய்யலாம். இங்குச் சுரங்க இருப்புப் பாதையின் மூன்று நிலையங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இசுட்ராண்டு (Strand): சாரிங்குக் கிராசிலிருந்து வடகிழக்கில் உள்ளது இசுட்ராண்டு சாலை. இப்பகுதியில் எண்ணற்ற திரையரங்குகளும் உணவகங்களும் அலுவலகக் கட்டடங்களும் உள்ளன.

பிளீட்டுச் சாலை (Fleet Street): இசுட்ராண்டு சாலை முடிவுறும்போது வருவது பிளிட்டுச் சாலை. இங்கு இங்கிலாந்து நாட்டின் செய்தித்தாள்கள் பல அச்சாகின்றன. இலண்டனின் பெரும் நாளிதழ்களின் அலுவலகங்கள் இங்கு உள்ளன.

புனிதப் பால் திருச்சபை (St. Paul's Cathedral) பிளீட்டுச் சாலை இலட்கேட்டு வட்டாரத்தில் முடிவுறும்போது சாலையின் பெயர் இலட்கேட்டுக் குன்று (Ludgate Hill) என்று மாறுகிறது. இக்குறுகிய சாலை புனிதப் பால்திருச்சபைக்குச் செல்கிறது. இது ஓர் அழகான திருச்சபையாகும். இதன் குவிமாடத்தின் விட்டம் 34 மீ. இம்மாடத்தின் மீது வைக்கப் பட்டுள்ள சிலுவை மிகவும் உயரமானது.

இங்கிலாந்து வங்கி (The Bank of England): சீப்சைடு (Cheapside) என்னும் சாலைக்கு அண்மையிலுள்ள சதுக்கத்தில் இங்கிலாந்து வங்கிக் கட்டடம் அமைந்துள்ளது. இது உலக வங்கிகள் தாயகம் என்றால் அது மிகையாகாது.

இலண்டன் கோபுரம் (The Tower of London): இலண்டன் நகருக்குக் கிழக்கில் தேம்சு ஆற்றங்கரையில் உள்ளது இலண்டன் கோபுரம் என்னும் தொன்மையான கோட்டை. இது ஒரு வரலாற்று நினைவுச் சின்னம். பல நூற்றாண்டுகள் இது அரசாங்கச் சிறைக்கூடமாக இருந்தது. இக்காலத்தில் இது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது. இது 13 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மன்றச்(White Hall)சாலை:வெள்ளை மன்றச் சாலை சாரிங்குக்கிராசுக்கு அருகில் உள்ளது. தேம்சு ஆறு வளைந்து செல்லும் இடத்திற்குத் தெற்கில் பாராளுமன்றக் கட்டடம் உள்ளது. இதன் வடமுனையில் பல அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. இதனை யொட்டியே தவுனிங்குச் சாலை (Downing Street) உள்ளது. இங்குள்ள 10-ஆம் எண்ணுள்ள வீடு தலைமை அமைச்சர்களின் இருப்பிடம் ஆகும். தென் முனையில் இருப்பதைப் பாராளுமன்றத் தெரு என்பர். வெள்ளைமன்றத்தின் நடுவில் செனடாபு (Cenotaph) என்னும் சதுக்கத்தில் இரு உலகப் போரிலும் நாட்டுக்காக உயிர் துறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் உள்ளது. இதற்கு அருகில் இசுகாட்லாந்து யார்டு (Scotland Yard) என்னும் புகழ்பெற்ற காவற்படையின் தலைமையகம் உள்ளது.

பாராளுமன்றத் தெரு: வெள்ளை மன்றத்தின் தென் முனையிலுள்ள பாராளுமன்றச் சாலையில் பாராளுமன்றச் சதுக்கமும் வெசுட்டுமினிசுட்டர் மடமும் உள்ளன. இப்பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்தது. வெசுட்டு மினிசுட்டர் மடமும் பாராளுமன்ற இரு அவைகளும் பாராளுமன்றச் சதுக்கத்தின் எதிரிலுள்ளன.

பெரும் மணிக்கூண்டு (Big Ben): பாராளுமன்றக் கட்டடத்தின் வட முனையில் 107 மீ. உயரமுள்ள மணிக்கூண்டு உள்ளது. இங்குப் பெருமணி எனப்படும் கடிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மணியின் எடை 13½ கண்டிகள் (Tons). மணியின் உயரம் ஏறத்தாழ 2½ மீ. அதன் வாயின் விட்டம் 3 மீ. இங்குள்ள மணி நேரம் தவறாமைக்குப் புகழ் பெற்றது. இம்மணிக்கூண்டு 4 முகங்களைக் கொண்டது. மணிகாட்டும் கடிகாரத்தின் முகப்பு ஏறத்தாழ 8 மீ. விட்டமுடையது.

வெசுட்டுமினிசுட்டர் மடாலயம் கோதிக்குக்(Gothic) கலைப் பாணியில் கட்டப்பெற்ற திருச்சபையாகும். மேற்கு முனைக் கட்டடங்களில் இது வரலாற்றுச் சிறப்புமிக்கது. இங்கிலாந்து அரசர்களும் அரசியரும் இங்கு முடிசூட்டப்பெற்றனர். சிலர் இங்குப் புதைக்கப்பட்டுள்ளனர். இங்கு முதல் உலகப் போரில் உயிர் நீத்த வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட பெயர் தெரியாப் போர்வீரனின் (Unknown Warrior) நினைவுச் சின்னம் உள்ளது.

வெசுட்டுமினிசுட்டர் மடாலயத்திலிருந்து விக்டோரியா சாலை மேற்கு நோக்கி வெசுட்டுமினிசுட்டர் திருச்சபைக்குச் செல்லும். இத்திருச்சபை இங்கிலாந்திலுள்ள மிகச் சிறப்பான உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையாகும்.

பக்கிங்காம் அரண்மனை: சாரிங்குக் கிராசிலிருந்து மால் சாலை (The Mall) வழியாகத் தென்மேற்கில் பக்கிங்காம் அரண்மனையுள்ளது. இங்கு இன்றைய அரச மரபினர் வாழ்கின்றனர். இவ்வரண்மனைக்கு முன்னால் விக்டோரியா அரசியார் நினைவுக் கூடம் உள்ளது. இது பளிங்குக் கற்களாலானது.

மால் தெருவின் தென்பக்கத்தில் புனிதச் சேம்சு பூங்கா (St. Jame's Park) உள்ளது. இங்கு மிகப் பரந்த ஏரி ஒன்றும் உள்ளது.

பக்கிங்காம் அரண்மனையில் முன்பு பக்கிங்காம் பிரபு வாழ்ந்தார். அதனை மூன்றாம் சார்சு (George III) மன்னர் விலைக்கு வாங்கித் திருத்திக் கட்டினார். விக்டோரியா பேரரசியார் வாழ்ந்த இடம் இதுவே. இன்றும் அரசியார் ஊரில் இருக்கும் நாள்களில் காலை 10.30 மணிக்குக் காவல்காரர்கள் மாறுகிறார்கள். மாறும் சமயம் பாண்டு வாத்தியம் இசைக்கிறது. இவ்வரண்மனை 40 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் பக்கம் பச்சைப் பூங்கா (Green Park) அமைந்துள்ளது. இவ்வளாகத்தில் உள்ள அய்டு பூங்கா (Hyde Park) புகழ்மிக்கது. இதுவே இலண்டன் மாநகரின் மிகமிக நெரிசலான மையம். அய்டு பூங்கா முற்காலத்தில் அரசர்களின் கேளிக்கை இடமாகவும் வேட்டையாடும் காடாகவும் இருந்தது. இப்போது இது பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கு அருகில் கென்சிங்டன் தோட்டம் (Kensington Garden) அமைந்துள்ளது. இது 600 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

அய்டு பூங்காவிற்குக் கிழக்கில் மேபேர்ப் (Mayfair) பகுதி உள்ளது. இங்கு ஆங்கில நிலக்கிழார்கள் பெருமளவில் வாழ்கிறார்கள்.

பிக்காடிலி வளாகம் (Piccadilly Circus): மேபேருக்குத் தெற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது பிக்காடிலி வளாகம். இது இலண்டன் வாழ் மக்களின் பொழுதுபோக்கு இடம். இன்பமாகப் பொழுது போக்க விரும்பும் மக்கள் இங்குக் கூடுகிறார்கள்.

அருங்காட்சியகங்கள் (Museums): புளூம்சுபரி (Bloomsbury) யிலுள்ள பிரிட்டன் அருங்காட்சியகம் மிகத் தொன்மையான தேசிய அருங்காட்சியகங்களுள் ஒன்று. இங்குள்ள காட்சிப் பொருள்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவன. பல்வேறு வகைப் பொருள்களைக் கொண்டுள்ள இக்காட்சியகம் கருத்துக்கு விருந்தாகும்.

தேசிய கலைக்கூடம் (National Gallery): இது திரபால்கர் சதுக்கத்தில் உள்ள சிற்பக் கூடமாகும். இதன் அருகில் தேசிய உருவப்படக்கலைக் கூடம் (National Portraits Gallery) உள்ளது. கென்சிங்டனில் விக்டோரியா–ஆல்பர்ட்டு அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

பிரிட்டன் அருங்காட்சியகத்திற்கு அருகில் இலண்டன் பல்கலைக்கழகத்தின் தலைமையிடம் உள்ளது. இப் பல்கலைக்கழகம் 60 கல்லூரிகள், சிறப்புப் பள்ளிகள், பல்வேறு துறைகள் போன்றவற்றைப் பெருநகர் முழுவதிலும் கொண்டுள்ளது.

இலண்டன் துறைமுகம் உலகிலுள்ள பெருந் துறைமுகங்களுள் ஒன்று; வாணிகச் சிறப்புமிக்கது. உலகின் அனைத்து நாடுகளின் கப்பல்களும் இங்கு வந்து செல்கின்றன.

இலண்டனுடன் இணைத்துப் பேசப்படுவது தேம்சு ஆறு. இதன் மீது இலண்டன் பெருநகரில் மட்டும் 15 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ‘இலண்டனில் சலிப்பேற்பட்டுவிட்டதாக எவரேனும் கூறினால், அவர் வாழ்விலும் சலித்துவிட்டார் என்பது பொருள்’ (When a man is tired of London, he is tired of life) என்பது சாமுவேல் சான்சன் (Samuel Johnson) என்பாரின் கருத்தாகும். இந்நகரின் இன்றைய மக்கள் தொகை 67,54,500 (1983). சை.வே.சி.

**இலத்தீன் அமெரிக்கா** என்பது புதிய உலகமென்று கருதப்படும் வட, தென் அமெரிக்காக் கண்டங்களைச் சார்ந்த இருபது சுதந்திரக் குடியரசு நாடுகளைக் குறிக்கும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகள் 1. பிரேசில், 2. ஆர்செண்டீனா, 3. கொலம்பியா, 4. பெரு, 5. வெனிசுவேலா, 6. சிலி, 7. கியூபா, 8. ஈக்வடார், 9. குவாட்டிமாலா, 10. பொலீவியா, 11. அய்டி, 12. தொமினிகன் குடியரசு, 13. எல் சால்வடார், 14. உருகுவே, 15. அண்டுராசு, 16. பராகுவே, 17. நிக்கரகுவா, 18. கோசுட்டாரிகா, 19. பனாமா, 20. மெக்சிகோ என்பனவாகும். இந்நாடுகளின் மொழி, சமயம், கலை, பழக்கவழக்கங்கள் ஆகியவை இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு போன்ற நாடுகளின் அடிப்படையில் பிறந்தவை. இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு ஆகிய நாடுகளின் நாகரிகங்கள் பண்டைய உரோமானிய நாகரிகத்தின் அடிப்படையில் எழுந்தவை. உரோமாபுரியை இலாட்டியம் (Latium) என்பர். இதனை இலத்தீன் என்றும் கூறுவர். எனவே, இத்தகைய இலத்தீன் பண்பாட்டைப் பின்பற்றும் மக்களை இலத்தீனியர் என்றும் அவர்கள் வாழும் பகுதியை இலத்தீன் அமெரிக்கா (Latin America) என்றும் குறிப்பர்.

பிரேசில், அய்டி என்னும் இரு நாடுகளில் போர்ச்சுகீசிய மொழியையும் பிரெஞ்சு மொழியையும் முறையே பேசுவர். ஏனைய பதினெட்டு நாடுகளிலும் இசுபானிய மொழி பேசப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள இருபது நாடுகளும் உலக உருண்டையின் மேற்குப் பாதியின் 95 விழுக்காட்டுப் பகுதியை உள்ளடக்கியுள்ளன. மெக்சிகோவின் வட எல்லையிலிருந்து தென் அமெரிக்காக் கண்டத்தின் தென் கோடி வரையில் பரவியுள்ளது இலத்தீன் அமெரிக்கா.

இலத்தீன் அமெரிக்காவின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டில் 25 கோடியாக இருந்தது. இதில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பிரேசில் நாட்டிலும், ஐந்திலொரு பங்கு மக்கள் மெக்சிகோவிலும் வாழ்ந்து வருகின்றனர். எஞ்சியவர்கள் ஏனைய பதினெட்டு நாடுகளிலும் வாழ்கின்றனர்.

மேற்கூறிய இருபது நாடுகளுக்குமிடையே சில பொதுத்தன்மைகளைச் சுட்டிக் காட்டலாம். இந்நாடுகள் நீண்டகாலம் சுதந்திரமாக இயங்கியவை. இங்கு உரோமானியக் கத்தோலிக்கச் சமய மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. மத்தியதரைக் கடலையொட்டியுள்ள உரோமானிய மரபுகளின் அடிப்படையில் எழுந்த பண்பாட்டை இவை கொண்டுள்ளன. இங்கிருந்துதான் இந்நாடுகளை ஆய்வு செய்தவர்களும் வென்றவர்களும் குடியேற்றவாதிகளும் வந்தடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், இப்பொதுத்தன்மைகளை விட இந்நாடுகளில் தென்படும் வேறுபாடுகள் மிகுதியானவை என்று கூறுபவர்களும் உளர். மக்கள்பல்வேறு இனத்தவர்களாய் வேறுபடுகின்றனர். பொருளாதார நிலையிலும் பெருத்த வேறுபாடு உண்டு. பஞ்சமும் பட்டினியும் வாட்டி வதைக்கும் மக்களையும், வாழ்க்கைத் தரத்தில் மிக உயர்ந்த வசதிகளோடு வாழும் மக்களையும் இங்குக் காணலாம். அதேபோல் அரசியல் அமைப்பு முறைகளும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. கொடுங்கோலாட்சி முதல் அரசியல் முறைமைக்குட்பட்ட மக்களாட்சி வரையிலான பல்வேறு அரசியல் அமைப்புகளையும் இங்குக் காணலாம்.

இலத்தீன் அமெரிக்காவில் வாழும் மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. மேட்டுநிலப் பகுதிகளில் வாழ்வோர், 2. சமவெளிப் பகுதிகளில் வாழ்வோர், 3. தாழ்நிலப் பகுதிகளில் வாழ்வோர்.

**இலத்தீன் இலக்கியம்** என்பது கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் உரோமாபுரியின் மொழியாக அமைந்து, வளர்ச்சியுற்று, உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாய் விளங்கிய இலத்தீன் மொழியிலமைந்த இலக்கியங்களைக் குறிக்கிறது. உரோமாபுரி வளர்ச்சியடைந்த காலத்தில் பாதுகாப்பினை முன்னிட்டுப் பல்வேறு கிளை மொழி பேசும் மக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டது. இதனையொட்டி அங்கு வழங்கிய இலத்தீன் மொழியும் முழுவளர்ச்சி பெற்றது. உரோமானியரின் அரசியல் மேலாண்மை, இலத்தீன் மொழியின் கலை, இலக்கியப் பெருமைகள் ஆகியவற்றாலேயே பிறநாட்டினர் இதனைத் தங்கள் மொழியாக ஏற்றுக் கொண்டனர். தங்கள் மொழியினை எக்காலத்திலும் எவர்மீதும் திணிக்காத முறையிலமைந்த உரோமானியரின் மொழிக் கொள்கையும் இம்மொழி வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்றாகும் என்பார் எர்னசுடு புல்கிராம் என்னும் அறிஞர்.

உரோமானியப் பேரரசின் தொடக்க காலத்தில் இலத்தீன் மொழி பேச்சுமொழியாக மட்டுமே இருந்தது. கிரேக்க மொழியில் இருந்ததைப் போன்ற கலை, இலக்கியச் செல்வங்கள் இலத்தீன் மொழியிலும் உருவாக வேண்டும் என்ற நினைப்புடன் கிரீசிலிருந்து புலவர்களையும் அறிஞர்களையும் உரோமாபுரிக்குக் கொணர்ந்தனர். போர்களில் வெற்றி அடைந்தபோது பொன்னையும் பொருளையும் திறையாகக் கேட்காமல் நூல் நிலையங்களைத் திறையாகக் கேட்டனர். கலை, இலக்கிய வளம் குறித்து உரோமானியர் கொண்டிருந்த இவ்வேட்கையினால்

கிரேக்க மொழியின் சொற்களும் கிரேக்கரின் பழக்க வழக்கங்களும் உரோமானியரிடையே மிகுதியாகக் கலந்தன.

இலத்தீன் இலக்கிய வரலாற்றைக் குடியரசுக் காலம், அகசுடசுக் காலம், பேரரசுக் காலம் என்னும் மூன்று பெரும் பகுப்புகளில் இலக்கிய வரலாற்றாசிரியர் அடக்குகின்றனர்.

குடியரசுக் காலம்: கி.மு. 240 முதல் 27 வரையுள்ள காலப்பகுதி குடியரசுக் காலம் எனப்படுகிறது. கி.மு. 146 வரை உரோமாபுரி பல்வேறு போர்களில் ஈடுபட்டு வலிமை வாய்ந்த பேரரசாக உருவாகிக் கொண்டிருந்தது. எனினும், உள்நாட்டுப் போர்கள் வகுப்புவாதக் கலவரங்களால் உரோமாபுரியின் சமூக வாழ்க்கை அமைதி குறைந்ததாகவே காணப்பட்டது. மேலோட்டமான பார்வைக்கு இது ஒரு குடியரசாகத் தோன்றினாலும், உண்மையில் இது செல்வர்களாலும் நிலப்பிரபுக்களாலும்தான் ஆளப்பட்டு வந்தது. இந்தக் கால கட்டத்தில் நாடகம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், அங்கத நூல்கள், தத்துவ நூல்கள், சொற்பொழிவுக் கலை நூல்கள், வரலாற்று நூல்கள் என்ற இலத்தீனின் இலக்கிய வளம் பெருகியது. இவற்றுள் அங்கத இலக்கியம் தவிர பிற அனைத்தும் கிரேக்க இலக்கியத்தின் தழுவல்களாகவே அமைந்தன.

தொடக்ககால இலத்தீன் இலக்கிய ஆசிரியர்களுள் உலூசியசு இலிவியசு ஆண்ட்ரோனிக்கசு (Lucius Livius Andronicus), ஞாகசு நீவியசு (Gnacus Naevius), குவிண்டசு என்னியசு (Quintus Ennius) என்னும் மூவரும் மூன்று வளர்ச்சி நிலைகளைக் காட்டுபவர்களாக அமைகின்றனர். இவர்கள் மூவருமே நாடக ஆசிரியர்கள். கிரேக்கரான இலிவியசு ஆண்ட்ரோனிக்கசு உரோமாபுரிக்கு ஒரு கைதியாகக் கொண்டு வரப்பட்டார். கி.மு. 272-இல் இவர் 'ஒடிசி' காப்பியத்தை இலத்தீனில் மொழிபெயர்த்தார். இலத்தீன் மொழியில் முதல் இலக்கியப் படைப்பாக இது கருதப்படுகிறது. கி.மு. 240-இல் 'லுடி', 'ரோமனி' என்ற நாடகங்களையும் படைத்த இவர் இலத்தீன் மொழியின் முதல் நாடகாசிரியராகவும், காப்பிய, நாடகத் தந்தையாகவும் கருதப்படுகிறார்.

இலத்தீன் மொழியின் இரண்டாம் நாடக ஆசிரியராகவும் கவிஞராகவும் மதிக்கப்படுகின்ற நீவியசு ஏறத்தாழ 41 நாடகங்கள் எழுதியுள்ளார். எனினும், இவையனைத்தும் இன்று கிடைக்கவில்லை. 'பெல்லம் போனிகம்' என்ற காப்பியத்தையும் இவர் படைத்துள்ளார். இதில் ஓமரின் காப்பிய உத்திகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. 'சைபீரியன் இலியதம்' என்னும் காப்பியமும் இவரால் பாடப்பெற்றது.

மூன்றாமவரான என்னியசு துன்பியல் நாடகங்கள், இன்பியல் நாடகங்கள், திட்பவுரைகள் (Epigrams), நீதி நூல்கள் போன்ற இலக்கிய வகைகளைப் படைத்தார். இவர்தம் படைப்புகளுள் சில பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவையனைத்தும் கிரேக்க இலக்கிய வடிவங்களை முன்மாதிரியாகக் கொண்டவை. இவருடைய படைப்புகளுள் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுவது 'அன்னல்கள்' (Annals) என்ற பெயரிலமைந்த வரலாற்றுக் காவியமாகும். சில பகுதிகள் மட்டும் கிடைத்துள்ள இக்காப்பியத்தில் கிரேக்கக் காப்பிய வடிவத்தைக் கையாண்டு உரோமானிய உள்ளடக்கத்தையும் உணர்வையும் பாடியிருக்கிறார். உரோமானியரின் ஓமராகத் தம்மைக் கருதிக் கொண்டவர் இவர். உரோமானியரின் தேசியக் காப்பியமாக இது திகழ்ந்தது. மேனாட்டின் முதல் முழு இலக்கியவாதி என்று இவர் புகழப்படுகிறார்.

மேற்காட்டப்பெற்ற மூவருடன் தைதசு மேக்கியசு பிளாட்டசு (Titus Maccius Platus) என்பாரும் சேர்த்துக் கருதப்படுகிறார். இவர் ஏறத்தாழ 45 நாடகங்கள் எழுதியிருக்கிறார். கிரேக்க நாடகாசிரியரான மெனந்தரின் நாடகங்களை இவர் மிகுதியாகப் பின்பற்றியிருக்கிறார். இவருடைய நாடகங்கள் ஆள் மாறாட்ட அடிப்படை, சூழ்ச்சி அடிப்படை, குணச்சித்திர அடிப்படை, கண்டுகொள்வகை என்ற நான்கு வகையினவாக அமைந்துள்ளன.

இவருடைய நாடகங்களில் கிரேக்க உரோமானியக் கூறுகளின் கலப்பு, செறிவான கதைப்பின்னல், எளிய புலப்பாட்டுத்தன்மை மிக்க நடை ஆகியவை பொதுக்கூறுகளாகக் காணப்படுகின்றன.

மேற்காட்டப்பெற்ற நான்கு புலவர்களுடன் இலத்தீன் இலக்கியத்தின் தொடக்கப்பகுதி அமைகிறது. கிரேக்க இலக்கியத்தைப் பின்பற்றி இலக்கியத் தோற்றம், இலக்கிய வகைமைகள், விரிவடைதல், புதிய இலக்கிய வகைகளை (உரோமானியருக்கே உரிய) உருவாக்குதலும் கிரேக்க இலக்கிய மரபை இலத்தீனுடன் இணைத்தலும், எளியநடை வளர்ச்சி ஆகிய நான்கு நிலைகளைக் காட்டுவனவாக இவர்களின் படைப்புகள் அமைந்துள்ளன.

மேற்கூறப்பெற்ற நால்வரையும் அடுத்துத் தோன்றிய பப்ளியசு தெரன்சியசு ஆபர் (Publius Terentius Afer) என்னும் நாடகாசிரியர் நாடக இலக்கிய வகையில் ஒரு மாற்றத்தை உருவாக்கினார். இவர் பல நாடகங்கள் படைத்தார். 'ஆண்ட்ரோசுப்

பெண்கள்' (The Women of Andros), 'சுய தண்டனையாளன்'(The Self Tormentor), 'யூனிச்சு போர்மியோ', 'சகோதரர்கள்', 'மாமியார்' என்பன அவை. நிச்சயமில்லாத திருமணம் இவர்தம் நாடகங்களின் கருவாக அமைகின்றது. உரையாடல் மூலம் கதைமாந்தர் பண்பை விளக்கும் முறையை இவர் பின்பற்றினார். இவருக்கு முந்திய நாடகாசிரியர்களை விடவும் இவர் மிகுதியான தத்துவ நோக்குடையவராகக் காணப்படுகிறார். எளிய தூயநடையை இவர் பயன்படுத்தியது இலத்தீன் இலக்கிய வளர்ச்சியில் ஒரு மைல் கல் கிரேக்கப் பண்பாட்டுக் கூறுகளை மிகுதியாகப் பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்ட சிசிப்பியோ ஆபிரிகானசு குழுவினருள் தெரன்சியசும் ஒருவர். எனவே, மெனந்தரின் தத்துவங்களை இவர் தம் படைப்புகளில் மிகுதியாகத் தழுவினார். பொது மக்களுக்குக் கூறப்படுவனவாக அல்லாமல் ஓரளவு கல்வியறிவுடையவர்களுக்கே கூறப்படுவனவாக இவர் படைப்புகள் அமைந்தன. இவர் 'ஆர்கனேடிகா' என்ற கிரேக்கக் காப்பியத்தை இலத்தீனில் மொழி பெயர்த்திருக்கிறார்.

துன்பியல் நாடகங்கள் எழுதியவர்களுள் பசுவியசு (Pacuvius) குறிப்பிடத்தக்கவர். இவர் 'அடிமை ஓரெசுடு', 'இலியோனா', 'நிபத்ரா' போன்ற நாடகங்களைப் படைத்தார். நாடகச் சூழலைத் திறம்பட உருவாக்குதல், ஆற்றல்மிக்க சொல்லாட்சி, தத்துவ நோக்கு ஆகியவை இவர்தம் நாடகங்களின் தனித்தன்மைகள்.

கிரேக்க நாடகாசிரியரான அக்கியசு (L. Accius) என்பவர் யூரிப்பிடிசின் நாடகங்களைத் தழுவித் துன்பியல் நாடகங்கள் படைத்தவர் (கி.மு. 140).

**அங்கத நூல்கள்:** இலத்தீன் மொழியின் தனிச் சிறப்புடைய இலக்கிய வகை அங்கதம். அங்கத இலக்கியத் தந்தை எனப்படும் உலுசிலியசு (Gaius Lucilius) இனத்தீனில் மிகுதியான அங்கத நூல்களை எழுதியவர் ஆவர். இவர் 30 நூல்கள் படைத்திருப்பினும் இப்போது கிடைப்பன 1300 வரிகள் மட்டுமே. இவர் தம் நூல்களுக்கு 'அறவுரைகள்' என்ற பொருள்படும்படி, 'செர்மோன்' என்று பெயரிட்டார். பொதுவான சமூகத் தீமைகளைக் கண்டிக்கும் முறையிலும் பொது மக்களுக்குக் கூறும் முறையிலும் இவர் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

**தத்துவ நூல்கள்:** கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமானியக் குடியாட்சி முறையில் சரிவும், புலப்பாட்டு நெறிக் கலையில் வளர்ச்சியும் ஏற்பட்டன. இந்நிலை கவிதைக் கலையின் போக்கில் தனது முத்திரையைப் பதித்தது.

இக்காலகட்டத்தில் சிசரோ 'பெனோமினா' என்ற நூலை மொழி பெயர்த்தார். இந்நூலின் தாக்கம் உலுக்கிரீசியசு (Titus Lucretius Carus) என்பார் எழுதிய 'பொருள்களின் இயற்கை' என்ற நூலிலும் காணப்பட்டது. மொத்தம் 7415 வரிகளையுடைய இந்நூலில் அணுக்கொள்கை, ஆன்மா, சமயம், நீதி போன்றவற்றைப் பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. எம்பெடோக்கிளிசு (Empedocles), எபிகூரசு (Epicurus) போன்ற கிரேக்கத் தத்துவவாதிகளின் தாக்கம் இந்நூலில் காணப்படுகிறது.

**தன்னுணர்ச்சிப் பாடல்கள்:** கி.மு. 48-31 காலகட்டத்தில்-உலுக்கிரீசியசின்'பொருள்களின்இயற்கை' எழுதப்பட்ட காலத்திலேயே உருவாகி வந்த புதிய தலைமுறைக் கவிஞர்கள் கவிதையின் போக்கு மாறுவதற்குக் காரணமாக இருந்தனர். மிகவும் செறிவான ஒழுங்கான வடிவமைப்பினைப் பெற்ற கவிதைகளை எழுதவும், இவ்வகையில் கிரேக்க மாதிரிகளைப் பின்பற்றவும் இவர்கள் முனைந்தனர். இலிசினியசு கல்வசு (Licinius Calvus), எல்வியசு சின்னா (Helvius Cinna -157 B.C.), பியூரியசு பிபாகுலசு (M. Furius Bibaculus), மெம்மியசு (C. Memmius), கார்னிபிகசு (Q. Cornificus), வலேரியசு சாட்டோ (Valerius Cato), வலேரியசு காட்டுலசு (C. Valerius Cattulus) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் வலேரியசு காட்டுலசின் கவிதைகள் மட்டுமே மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன.

காட்டுலசு கிரேக்கக் கவிதைகளின் தாக்கத்திற்கு அதிகமாக ஆட்பட்டவர். இவருடைய படைப்புகளுள் 160 கவிதைகள் கிடைத்துள்ளன. ஒரு குறுங்காப்பியம், ஐந்து கையறுநிலைப்பாடல்கள், இரண்டு திருமணக் கவிதைகள் ஆகியனவும் அவற்றுள் அடங்கும். காதல, நலம்புனைந்துரைத்தல், கையறுநிலை ஆகியவை இவர் தம் பாடல்களின் பாடுபொருள்களாகும். தன்னுணர்ச்சிப்பா வடிவத்தில் புதுமை புகுத்திய இவர் இலத்தீனின் முப்பெரும் தன்னுணர்ச்சிப் பாவலர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார்.

சொற்பொழிவுக் கலை:

சிசரோவின் 'புருட்டசு' நூலிலிருந்து அக்காலத்துச் சொற்பொழிவுக் கலை பற்றி மிகுதியாக அறிந்துகொள்ள முடிகிறது. இலத்தீன் சொற்பொழிவாளர்களுள் போர்சியசு சாடோ (Porcius Cato), டி.கிராச்சசு (Ti. Gracchus), சி.கிராச்சசு (C.Gracchus), எம். அமிலியசுகாரசு (E.Aemilius Scaurus), சி.தைட்டசு (C. Titus) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிசரோவின் இளமைக்காலத்தில் அவருடன் தொடர்பு கொண்டிருந்த அண்டோனியசு

(M. Antonius), இலிசினியசு கிராசசு (L. Licinius Crassus) ஆகியோரும் இப்பட்டியலில் அடங்குவர். சொற்பொழிவுகளை நூலாக வெளியிடும் வழக்கம் போர்சியசு சாடோவினால் கொண்டுவரப்பட்டது.

சிசரோ(கி.மு. 106-43) சொற்பொழிவுக்கலை, அரசியல், ஒழுக்க நெறிமுறைகள், இறையியல் கொள்கைகள் ஆகிய பல்வேறு பொருள்கள் பற்றி நூல்கள் எழுதியுள்ளார். கடித வடிவிலும் உரையாடல் வடிவிலும் இவர் எழுதிய நூல்கள் கலைப்படைப்புகள் என்ற வகையிலும் வரலாற்று மூலங்கள் என்ற வகையிலும் சிறப்புடையனவாக இன்றளவும் கருதப்படுகின்றன. இவருடைய சொற்பொழிவுகள் தொகுக்கப்பெற்ற நூல்களாக வெளிவந்தன.

சிசரோவின் படைப்புகளில் மிக உன்னத நடையமைப்பினைக் காணலாம்.

வரலாறு:

உரோமாபுரியின் தொடக்க காலத்தில் வரலாற்றாசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள் கிரேக்க மொழியில் எழுதினர். பேபியசு பிக்டர் (Q.Fabius Pictor கி.மு. 216 ),சின்சியசு அலிமண்டசு (L.Cincius Alimentus), போசுதுமியசு அல்பினசு (Postumius Albinus கி.மு.151), அசிலியசு (C. Acilius) ஆகியோர் கிரேக்க மொழியில் வரலாற்று நூல்கள் எழுதினர். கிராச்சிய காலகட்டத்தில்தான் (Gracchian Era) வரலாற்று நூல்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப் பெற்றன.

கடந்த கால வரலாறே பெரிதும் எழுதப்பெற்றதெனினும் சமகால வரலாற்றை (Historiae) எழுதுவதிலும் இக்கால கட்டத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள் ஆர்வம் காட்டினர். பழைய வரலாற்றைப் பற்றி எழுதியவர்களுள் குவாடிரிகாரியசு (Quadrigarius), அண்டியாசு (Valenius Antias) ஆகியோரும் சமகால வரலாற்றாசிரியர்களாக கொர்னேலியசு (L. Cornelius Sisenna கி.மு. 118-67) முதலியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சூலியசு சீசர் (கி.மு. 100-44) இலத்தீன் வரலாற்றாசிரியர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுபவர். தமது அரசியல் வாழ்க்கையில் இலக்கியத்தை ஒரு பிரச்சாரக் கருவியாகவே இவர் பயன்படுத்தி வந்தார். இவர்தம் நூல்களுள் 'உள்நாட்டுப்போர் பற்றிய கருத்துகள்', 'கல் (Gall) படையெடுப்புப் பற்றி' ஆகியன குறிப்பிடத்தக்கன.

சல்லசுடு (கி.மு. 86-34) முழுமையான வரலாற்றாசிரியர்; கலைப்படைப்பினை உருவாக்கும் உணர்வுடன் இவர் வரலாற்று நூல்களை எழுதியதாகக் குறிப்பிடுவர். துசிடைட்டசினைப் பின்பற்றும் பாணி இவருடைய படைப்புகளில் காணப்படுகிறது. 'சுகார்த்தாப் போர் பற்றி ...', 'வரலாறு' ஆகிய இவர்தம் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

வற்றோ (கி.மு.116-27) அங்கதக் கவிஞராகவும் வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தவர். 600 அல்லது 700 நூல்கள் இவர் படைத்தார் என்று கூறப்படுகின்றதெனினும் அவை முழுவதும் கிடைக்கவில்லை. இலத்தீன் மொழியையும் நாட்டினையும் பற்றி எழுதப்பட்ட இரண்டு நூல்களும், 'மெனிப்பியன் அங்கதம்' என்ற நூலின் சில பகுதிகளும் மட்டுமே கிடைத்துள்ளன. நெபோசு (Cornellius Nepos கி.மு. 99-24), பாம்போனியசு அட்டிகசு (T. Pomponius Atticus (கி.மு. 109-32) ஆகியோர் சில வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர்.

அகசுதசு காலம் (கி.மு. 27-கி.பி.14):

சூலியசு சீசரின் இறப்பு உரோமாபுரியில் உள்நாட்டுப் போர்களுக்கும் அரசியல் குழப்பங்களுக்கும் வித்திட்டது. இந்நிலையில் கி.மு.27-இல் உரோமாபுரியில் குடியரசினை நிறுவப் போவதாக ஆக்டேவியசு சீசர் அறிவித்தார். எனினும், சாகும்வரை ஒரு பேரரசனாகவே அவர் இருந்தார். நாட்டில் அமைதியை நிறுவியதுடன் பல்வேறு சீர்திருத்தங்களையும் புகுத்தினார். பிறநாடுகள் சிலவற்றையும் உரோமாபுரியுடன் இணைத்தார். இதனால், இவருக்கு 'அகசுடசு' என்று பட்டப் பெயரும் கிடைத்தது. நாட்டில் நிலவிய அமைதிமிக்க சூழ்நிலையினால் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. முழுநேர எழுத்துப் பணியில் ஈடுபடுதல் மரியாதைக்குரிய பணியாகவும் கருதப்பட்டது. கடந்த காலத்தின் பெருமைகள் உணரப்படவும் சிறப்பான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை வளரவும் வாய்ப்பேற்பட்டது. அமைதியும் ஒய்வும் மிக்க இந்தக் காலகட்டத்தில் இலக்கியப் படைப்புமுறைகள், உத்திகள் பெருகவும் முதன்மை பெறவும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

கவிதை வடிவம் இந்தக் காலகட்டத்தின் முதன்மையான இலக்கிய வடிவமாயிற்று. அரசியல் முரண்பாடுகள் குறைந்தமையினால் பேச்சுக்கலையின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது. காப்பியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள் போன்றவை இக்கால கட்டத்தில் செழித்த இலக்கிய வகைகள். இந்தக் காலத்து இலக்கியங்கள் அனைத்திலும் மன்னனைப் புகழ்ந்துரைப்பது ஒரு பொதுக் கூறாகக் காணப்படுகிறது.

மாசினாசு, வலேரியசு மெசலா, அசினியசு போல்லியோ போன்றோர் இலக்கியப் படைப்பில் ஈடுபட்டிருந்தனர். அரசவைப் பாடல்கள் (Court Poetry)

என்ற மன்னனின் செயல்களைப் புகழ்ந்துரைக்கும் பாடல்கள் பல இந்தக் காலகட்டத்தில் தோன்றின. அகசுடசு காலத்தில் உரைநடை மிகுதியான வளர்ச்சியை அடையவில்லை. ஒருசில நூல்கள் எழுதப்பட்டன. விட்ருவியசு போலியோ (Vitruvius Pollio) என்னும் இராணுவப் பொறியியலாளரால் ஒரு நூல் எழுதப்பட்டது.கேசியசுசெருவரசு(Cassius Serverus), இலபினசு (Labienus) ஆகியோர் இந்தக் காலகட்டத்தின் சொற்பொழிவாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். அன்னியசு செனெகா(L.Annaeus Seneca) சொற்பொழிவுக்கலை பற்றி ஒரு நூல் எழுதினார். துன்பியல் நாடகங்கள் அசினியசு போல்லியோ (Asinius Pollio) என்பவரால் எழுதப்பட்டன.

வலேரியசு மெசலா (M.Valerius Messala) அறிவியல், தத்துவம், பழமையான மரபுகள் பற்றிய ஆய்வு ஆகிய துறைகளில் ஈடுபட்டிருந்தார்.

காப்பியம்

வெர்சில் (கி.மு.70-19 ) இலத்தீன் மொழியின் தலைசிறந்த காப்பியப் புலவர்களுள் ஒருவர். இவருடைய 'ஏனியிடு' (Aeneid) காப்பியம் ஓமரின் காப்பிய முறையைப் பின்பற்றியமைந்தது. உரோமானியப் பேரரசின் சிறப்பான வரலாற்றுப் பின்னணியைக் கூறும் முறையில் இக்காப்பிய நோக்கம் அமைகிறது.

கவிஞர் வெர்சில் ஒரு காப்பியப் புலவராகவே உலகில் கருதப்படினும் அவர் தொடக்க காலத்தில் பாடியவை-அவருக்கு மிகுந்த புகழை ஈட்டித்தந்த 'எகலோகசு' (Ecologues)என்ற முல்லைநிலப் பாடல்களாகும். பின்னர்ப் பாடியது நீதிநூல் பாணியில் அமைந்த சியார்சிக்சு, (Georgics) என்ற குறு முல்லைப்பாடல். 'சியார்சிக்சு'ப் பாடல் நாட்டுப்பற்றை ஊட்டும் வகையிலும் ஆக்டேவியசு மன்னனைப் புகழும் வகையிலும் பிரச்சாரப்பாடல் போலத் தோன்றினாலும் சிறந்த கலைப்படைப்பாகத் திகழ்கிறது. எளிய கிராம வாழ்க்கையை மிகுதியாகப் புகழும் அமைப்பு இதில் காணப்படுகிறது.

தன்னுணர்ச்சிப் பாடல்கள்:

ஓரேசு (கி.மு.65-8)அங்கதப் பாடல்கள் பாடியுள்ளார். அவற்றை இவர் 'செர்மோன்'கள் என்றழைத்தார். 'எபோட்சு' என்ற தலைப்பில் 17 பாடல்கள் பாடியுள்ளார். போற்றிப் பாடல்கள் (Odes) 103 பாடியுள்ளார். இவை மட்டுமல்லாமல் விழாக்காலங்களில் பாடுவதற்குரிய பாடல்கள் (Jubilee Hymns), கவிதையியல் பற்றிய நூல் ஒன்று, கடித வடிவில் அமைந்த கவிதையியல் பற்றிய நூல்கள் இரண்டு ஆகியவை இவர்தம் படைப்புகள்.

ஒரு தத்துவவாதி என்ற முறையில் வரன்முறையான சிந்தனைகள் ஓரேசின் நூல்களில் காணப்படவில்லை. எளிய கிராம வாழ்க்கையைப் போற்றுதல் இவர்தம் படைப்புகளின் பொதுப் பண்பாகும். பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களை இவர் கையாண்டிருப்பினும் அவையனைத்திலும் அங்கதக் கூறு கலந்து நிற்கிறது.

கையறுநிலைப் பாடல்கள்: கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களில் கையறுநிலை என்பது பாடுபொருளால் பெயர் பெறாமல் 'எலிசியாக்கு' என்ற யாப்பமைதியினால் பெற்ற பெயராகக் காணப்படுகிறது. இலத்தீன் மொழியில் கார்னிலியசு கல்லசு(Cornellius Gallus) கையறுநிலைப்பாடல் வகையைத் தொடங்கி வைத்தார். திபுல்லசு, புரொபெர்டியசு, ஓவிடு போன்றோர் கையறுநிலைப் பாடல் பாடியவர்களாகக் காணப்படுகின்றனர்.

திபுல்லசு (கி.மு.54-18 )நான்கு நூல்கள் படைத்திருக்கிறார். 'தெலியா', 'நெமசிசு' என்பன இவர்தம் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

புரொபெர்டியசு (கி.மு. 50-16) சிந்தியா என்ற பெண் மீது கொண்ட காதலைப் பற்றிப் பாடியனவாகப் பல பாடல்கள் அமைந்திருக்கின்றன. தனித்தன்மைகள் மிக்க கவிஞரான இவர் நான்கு அல்லது ஐந்து நூல்கள் பாடியிருக்கிறார். சமயச்சடங்குகள், இடப்பெயர்கள், ஆக்டியம் போர், உரோமானியச் சீமாட்டி ஒருத்தியின் இறப்பு ஆகியவை இவர்தம் பாடல்களின் பாடுபொருள்கள்.

ஓவிடு (கி.மு. 43 - கி.பி. 17) காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம் போன்ற இலக்கிய வகைகளைப் படைத்தவர். 'காதல்', 'காதல் கலை', 'காதல் பரிகாரம்', 'தலைவியர்' போன்ற காதல் கரு அமைந்த பாடல்களையும்,'மாற்றங்கள்'என்னும் பொருள்படும் காப்பியம் ஒன்றையும் படைத்துள்ளார். இக் காப்பியம் இவர் படைப்புகளுள் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. அகசுடசு சீசரால் நாடு கடத்தப்பெற்றுத் தோமி என்ற இடத்தில் ஒன்பதாண்டுகள் வாழ்ந்தபோது 'உரோமானியக் காலண்டர்', 'இபிசு', 'துன்பப் பாடல்கள்', 'கருங்கடலிலிருந்து கடிதங்கள்' போன்ற நூல்களைப் படைத்தார். ஆழமான பார்வை, உளவியல் நோக்கு, சரளமான நடை ஆகியவற்றின் அடிப்படையில் ஓவிட்டின் கவிதைகள் மிகவும் போற்றப்படுகின்றன.

இலிவி (கி.மு.59 - கி.பி.17) தம் வாழ்க்கையின் பெரும்பகுதியை வரலாறு எழுதுவதிலேயே கழித்தார். உரோமாபுரி நிறுவப்பெற்ற காலத்திலிருந்து

கி.பி 9 வரை உள்ள வரலாற்றைக் கூறுகின்ற 'அன்னல்கள்' என்ற நூலை எழுதினார். உரோமாபுரியின் பெருமைகளைக் கற்போர் மனம் மகிழுமாறு எடுத்துரைப்பது இந்நூல். இவரது வரலாற்று நூலில் ஒரு கவிஞனின் உள்ளத்தைக் காணமுடிகிறது. அசினியசு போல்லியோ என்பாரும் இக்காலப் பகுதியில் வாழ்ந்த வரலாற்றாசிரியராவார்.

பேரரசுக் காலம் (கி.பி. 14-476) அகசுதசு சீசரின் காலத்திற்குப்பின் உரோமானியப் பேரரசின் நிலை குன்றத் தொடங்கியது. பின்வந்த பல மன்னர்கள் சர்வாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். மார்கசு அரேலியசு (Marcus Aurelius) காலத்திற்குப்பின் நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் நிலைகள் மிகக் கீழான நிலையை அடைந்தன. பிறநாட்டினர் படையெடுப்பு, உரோமாபுரி நகரம் எரிந்தமை போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கு ஏற்ற வகையில் இலக்கிய நிலையும் அமைந்தது.

கி.பி.14 முதல் உள்ள காலகட்டத்தை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் சிலர் பேரரசுக் காலம், அகசுதசுக்குப் பிந்திய காலம் என்று குறிப்பிடுவர். சிலர் இக்காலகட்டத்தை இரண்டாகப் பகுத்து கி.பி.14 முதல் 117 வரையுள்ள காலத்தை 'வெள்ளிக் காலம்' என்றும், கி.பி.117க்குப் பிந்திய காலத்தைட் 'பிற்காலம்' என்றும் குறிப்பிடுவர். இக்காலகட்டத்தில் உரைநடைகள் மிகுதியாகத் தோன்றின. சொற்பொழிவுக்கலை, கடிதம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, கதைகள் போன்ற பல்வேறு இலக்கிய வகைகளும் உரைநடையிலேயே எழுதப்பெற்றன. சிற்சில கவிதை நூல்களும் தோன்றின. இலக்கியப் படைப்புகள் மிகுதியாகத் தோன்றினாலும் மக்களின் தேசீய வாழ்க்கையில் அவை மையமான இடத்தைப் பெறவில்லை.

துன்பியல் நாடகங்கள்: செனெகா (Lucius Annaeus Senaca),கி.மு. 3 – கி.பி. 65) நீரோ மன்னனுக்கு ஆசிரியராக இருந்தவர். இவர் ஒன்பது துன்பியல் நாடகங்கள் எழுதியுள்ளார். அவை அனைத்தும் கிரேக்கத் துன்பியல் நாடகங்களின் மறு வடிவங்களாக உள்ளன. 'பைத்தியக்கார எர்குலசு', 'திராய் நகரத்துப் பெண்கள்', 'பொனீசியப் பெண்கள்', 'மிடியா' 'பேட்ரா' ஆகிய நாடகங்கள் யூரிப்பிடிசு என்னும் கிரேக்க நாடகாசிரியரின் நாடகங்களை அதே தலைப்புகளுடன் தழுவியவை. கிரேக்க நாடகாசிரியரான சோபாக்கிளிசின் நாடகத்தைத் தழுவி 'ஓடிப்பசு' என்ற நாடகத்தையும், 'அக்குமன்மான்', 'தியெசுடசு' 'ஒடெவில் எர்குலசு' என்ற நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். இந்நாடகங்கள் படிப்பதற்காக அல்லாமல் பொது இடங்களில் நடித்துக்காட்டுவதற்காக எழுதப் பட்டவை.

செனெக்கா தத்துவம் தொடர்பான நூல்கள் பலவற்றை உரைநடையில் எழுதியுள்ளார். உரையாடல் அமைப்பில் பத்து நூல்கள், ஒழுக்க நெறி முறைகள் பற்றிக் கடித வடிவில் இரண்டு நூல்கள், நீதி நூல்கள், இயற்கை அறிவியல் நூல்கள், அங்கத நூல்கள் ஆகியவற்றையும் இவர் படைத்திருக்கிறார்.

அங்கத நூல்கள்: இக்கால கட்டத்தில் ஓரளவுக்குத் தனித்தன்மையைக் காத்துக் கொண்ட இலக்கிய வகையாக அங்கதம் திகழ்கிறது. இக்காலத்து அங்கத இலக்கியங்கள் பெரிதும் பேச்சு மொழி நடையையே கொண்டிருந்தன. பெட்ரோனியசு, மார்சியசு, பெர்சியசு, சூவெனல் ஆகிய அங்கதக் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெட்ரோனியசு: (கி.பி.65) நீரோ மன்னனின் காலத்தவர். இவர் கவிதை இடைவிரவிய உரைநடையிலமைந்த கதைநூல் ஒன்றை எழுதியிருக்கிறார். இந்நூல் கவிதை, சொற்பொழிவுக்கலை ஆகியவற்றின் வீழ்ச்சி, உரோமானிய உள்நாட்டுப் போர் ஆகியவற்றைப் பற்றி அங்கத முறையில் எடுத்துரைக்கிறது.

பெர்சியசு பிளாக்கசு (கி.பி. 34-62) ஆறு அங்கத நூல்கள் யாத்துள்ளார்.

மார்சியல் (கி.பி.40-102): கையறுநிலைப் பாடல் தொகுதி ஒன்றை வெளியிட்டார். 1200 திட்ப வுரைகள் (Epigrams) கொண்ட நூல் ஒன்றும் படைத்தார்.

சூவனெல் (கி.பி.60-140) 16 அங்கத நூல்கள் எழுதியுள்ளார். இவர் தம்காலத்திய சமூகக் கொடுமைகள், அப்போதைய அமைச்சர்கள், போர் வீரர்களின் தீய நடத்தைகள் போன்றவற்றைக் கிண்டல் செய்து பாடியிருக்கிறார். அணி செய்யப் பெறாத உண்மைகளை அப்பட்டமாக எடுத்துரைப்பதே கலையின் நோக்கம் என்பது இவரது கோட்பாடு.

காப்பியம்: பேரரசுக் காலத்துக் காப்பியங்களில் வெர்சிலின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. வெர்சிலை அடுத்துக் குறிப்பிடத்தக்க காப்பியக் கவிஞர் சிலியசு இத்தாலிகசு. இரண்டாம் பெனிசியன் போரை மையமாக வைத்து 'மியூனிகா' என்ற காப்பியம் படைத்தார்.

உலுகான் (கி.பி.39-65) நீரோ மன்னனின் காலத்தவர். இவர் 'பார்சலியா (Pharsalia)அல்லது உள்நாட்டுப்போர்' என்ற சமகால வரலாற்றுக் காப்பி

யத்தைப் படைத்தார். இவர் 'பெல்லம் சிவிலி' என்ற காப்பியமும் யாத்தார்.

இதே காலத்தவரான வலேரியசு பிளாக்கசு என்பார் கிரேக்கக் கவிஞரான அப்பலோனியசின் 'ஆர்கனேடிகா' காப்பியத்தைப் பின்பற்றி அதே பெயரில் தம் காப்பியத்தை யாத்தார்.

இசுதேசியசு (கி.பி.40-96)தெபிசை எதிர்த்த எழு வரைப்பற்றித் 'திபெய்ட்டு' என்ற காப்பியமும், 'அக் கிலசு' என்ற காப்பியமும் படைத்தார். மேலும், ஓர் அடிமையின் இறப்பு, உலுகானின் பிறந்த நாள் ஆகிய பாடுபொருள்களை வைத்துச் சூழ்நிலைக் கவிதைகள் (Occasional Poems) பலவற்றை ஐந்து நூல்களாகப் ப்டைத்தார்.

இவரது காலகட்டத்தில் ஓமரின் இலியது காப்பிய மொழிபெயர்ப்பாக 'இலியசு வேட்டினா' என்ற காப்பியமும் தோன்றியது.

கி.பி.2-ஆம் நூற்றாண்டில் குவிண்டியசு கார்டி யசு எழுதிய 'அலெக்சாண்டர்', கி.பி.3-ஆம் நூற் றாண்டில் எழுந்த 'சுவன்கசு' ஆகியனவும் இவ் வகையில் நினைக்கத்தக்கன.

## இயற்கை வரலாறு

மூத்த பிளினி (கி.பி.23-79) 'இயற்கை வரலாறு' என்ற மிகப் பெரிய நூல் ஒன்று (37 தொகுதிகள்) எழுதினார். வரலாறு, இலக்கணம், சொற்பொழிவுக் கலை ஆகிய பல்வேறு துறைகளிலும் இவர் தொண் டாற்றியுள்ளார்.

முல்லைப் பாடல்கள்: நீரோ மன்னனின் காலத் தவரானகல்பூர்னியசு சிகுலசு(Calpurniis Siculus)என் பார் 'யூகலாக்சு' (Eclogues) எனப்படும் முல்லைப் பாடல்களைப் பாடினார். இவரைத் தொடர்ந்து நெமிசியனசு (Namisianus) என்பவரும் முல்லைப் பாடல்கள் யாத்தார்.

## கடிதங்கள்

இளைய பிளினி:(கி.பி.62-113)திறனாய்வாளரான குவிண்டிலியனிடம் பயின்றவர். உரோமானியர்களின் வாழ்க்கைமுறைகளை விளக்கும் வகையில் 'கடிதங் கள்' என்ற தலைப்பில் இவர் 9 நூல்கள் படைத்தார். இவை சிசரோவின் கடிதங்களை முன்மாதிரியாகக் கொண்டவை. நீதிமன்ற நிகழ்ச்சிகள், இலக்கியம், புவியியல், சமகாலத்து நிகழ்ச்சிகள் என்றவாறு ஒவ் வொரு கடிதமும் ஒரு பொருள் பற்றியமைந்தது.

## இலக்கிய வரலாறு

குவிண்டிலியன்: (கி.பி. 30-95) ஆசிரியராகவும் வழக்குரைஞராகவும் திறனாய்வாளராகவும் இலக்கிய வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தார். 'பேச்சாளரா கப்பயிற்சி பெறல்' என்ற பொருளில் 12 நூல்கள் எழு தினார்.

## வரலாறு, வாழ்க்கை வரலாறு:

தசிட்டசு (கி.பி. 55-117) 'சொற்பொழிவுக்கலை பற்றிய உரையாடல்' என்ற நூலில் தம் காலத்திய சொற்பொழிவுக்கலையின் போக்குகள் பற்றிக் குறிப் பிட்டுள்ளார். 'அக்ரிகோலா' (Agricola) என்ற வாழ்க்கைவரலாற்று நூலையும் 'செருமனி' (Germany)என்ற மக்கள் வரலாற்று நூலையும், 'வரலாறு' (Histories) என்ற உரோமானிய வரலாற்று நூலை யும் இவர் படைத்திருக்கிறார். எதனையும் அதிகார முறையில் கூறும் தன்மை இவர்தம் நூல்களில் காணப்படுகிறது.

கிரெமுடியசு கார்டசு (A.Cremutius Cordus), வெல்லியசு படெர்குலசு (C.Veilius Paterculus) ஆகி யோரும் இக்கால கட்டத்தைச் சேர்ந்த வரலாற்றா சிரியர்களே.

சூடோனியசு (கி.பி.75-140) சிறந்த வாழ்க்கை வரலாற்றாசிரியர். இவர் 'சீசர்களின் வாழ்க்கை', 'உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை' என்ற நூல்களின் ஆசிரியர். முதல் நூலில் சூலியசு சீசர் முதல் தொமிட் டியன் வரையுள்ள மன்னர்களின் வாழ்க்கை வரலா றும், இரண்டாம் நூலில் தெரன்சு ஓரேசு போன்ற புலவர்களின் வாழ்க்கை வரலாறும் கூறப்பட்டுள்ளன

பிற: இரெம்மியசு பாலெமொன் (Remmius Palaemon) 'ஆர்சு கிராமட்டிகா' என்ற இலக்கண நூலொன்றை யாத்தார். இதே கால கட்டத்தில் சூனியசு மாடரேட்டசு (Junius Moderatus) என்பார் வேளாண்மை பற்றியும், சூலியசு பிராண்ட்டியசு (Julius Frontius) என்பார் நீர்ப்பங்கீடு பற்றியும், கார்னிலியசு செல்சசு (A.Cornelius Gelsus) என் பார் கலைக்களஞ்சியம் ஒன்றையும் எழுதினர்.

உரைநடை: அபிலியசு (கி.பி. 125) உரைநடை நூல்கள் பல எழுதியவர். இவர்'மாற்றங்கள்' (Transformations), 'பேச்சாற்றலின் மலர்கள்' (Flowers of Eloquence), 'பிளோட்டோவின் கொள்கைகள்', 'இவ்வுலகைப் பற்றி ...'ஆகிய நூல்களைப் படைத் தார்.

பேரரசுக் காலகட்டத்தின் பிற்பகுதியில் கி.பி. 117 க்குப் பின் இலத்தீன் இலக்கியப் போக்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டில்

இருந்ததை விடவும் இலக்கிய வட்டம் பரந்துபட்ட நிலையை அடைந்தது. இந்தக் காலப் புலவர்கள் அகசுடசு காலத்து இலக்கியங்களில் மாதிரி வடிவங்களைத் தேடினர். செவ்வியற் காலத்திற்கு முந்திய காலத்து இலக்கியங்களை நோக்கித் திரும்புதல் இந்தக் காலகட்டத்தின் பொது உணர்ச்சியாகக் காணப்பட்டது.

கிறித்தவ எழுத்தாளர்கள்: மிகுதியாகக் கிறித்தவ இலக்கியங்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றின. தொடக்ககாலக் கிறித்தவ இலக்கிய ஆசிரியர்கள் என்ற முறையில் மினுசியசு பெலிக்சு (Miuncius Felix), தெர்டுலியன்(Tertullian), புனித சைப்ரியன் (St.Cyprian), இலாக்டாண்ட்டியசு (Lactantius)போன்றோர் காணப்படுகின்றனர். மிக்க சிறப்பு வாய்ந்தவர்களாகப் புனித செரோம் (St. Jerome 340-420 A.D.), புனித அகசுடின் (St. August tine 354-430 A.D.),பேதியசு(Baethius 475-525 A.D.) போன்றோர் காணப்படுகின்றனர். இந்தக் காலகட்டத்தில் கிறித்தவ எழுத்தாளர்கள் இலத்தீன் இலக்கியத் தொடர்ச்சியைப் பேணி வந்தனர்.

புனித செரோம் பல கிறித்தவ முனிவர்களின் வாழ்க்கை வரலாறுகள், கடித இலக்கியம், கிறித்தவ இலக்கியத்தின் சுருக்கமான வரலாறு, உரைகள் போன்றவற்றைப் படைத்துள்ளார். புனித அகசுட்டினும் இதேபோல் பல நூல்களைப் படைத்தார்.

கி.பி. நான்காம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தில் மாக்ரோபியசு தியோடோசியசு (Macrobius Theodosius 400A.D.), அம்மியனசு மார்சில்லினசு (Ammianus Marcellinus), சுல்பிகசு செவரசு(Sllpicus Severes), பாலசு ஒரோசியசு (Paulus Orosius) போன்றோரின் சில இலக்கிய நூல்களும் வரலாற்று நூல்களும் தோன்றின. அலியசு தோனதசு (Aelius Donatus) இக்காலகட்டத்தின் தலைசிறந்த இலக்கண நூலாசிரியர்.

ஆப்டேடியனசு போர்பிரியசு (Optatianus Porfyrius 326-3350), மாக்னசு அசோனியசு (Magnus Ausonius), கிளாடியசு கிளாடியனசு (Claudius Claudianus), ஔரேலியசு புருடெண்டியசு (Aurelius-Prudentius 404A.D.),உருட்டிலியசு கிளாடியசு (Rutilius Claudius), ஔரேலியசு அகசுட்டினசு (Aurellius Agustinus 354-430 A.D.), சொல்லியசு அப்போலினரிசு (Sollius Apollinaris), புளோசியசு அமிலியசு (Blossius Aemilius Dracontius 484-496) ஆகியோர் குறிப்பிடத் தகுந்த கலை, இலக்கியப் படைப்பாளிகளாகத் திகழ்ந்தனர்.

ம.தி.

**இலதா** என்பது தென் குசராத்தைக் குறிக்கும். மாகி (Mahi), நருமதை ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியை இலதா (Lata)என்பர். பாலி வரலாற்றுக் குறிப்பேடுகளில் இலலா (Lala) என்றும் சோழர்களின் கல்வெட்டுகள் சிலவற்றில் இலாட (Lada) என்றும் இது குறிக்கப்பட்டுள்ளது. தாலமி இதனை அறிந்திருந்தார்.

**இலபயத்து (கி.பி. 1757-1834)** புகழ்மிக்க பிரெஞ்சு மாவீரர்; அமெரிக்கப் புரட்சியிலும், பிரெஞ்சுப் புரட்சியிலும் இணையாகப் பங்கு கொண்டவர்; அமெரிக்கப் புரட்சியில் வாசிங்டனுக்கு அடுத்தபடியாக எண்ணத்தக்கவர்; பிரெஞ்சுநாட்டவராயினும் அவர் தம் வாழ்வையும் வாய்ப்புகளையும் அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கு மகிழ்ச்சியாகக் கொடுத்தவர். இவர் பண்டைய பிரெஞ்சுக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். மிண்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் கி.பி. 1759-ஆம் ஆண்டில் இவர்தம் தந்தையார் கொல்லப்பட்டார். இவர்தம் தந்தையார் இலபயத்திற்கு (Lafayette) விட்டுச் சென்றவை இரண்டு. ஒன்று கோட்டை போன்ற வீடு. மற்றொன்று மார்குவிசு என்னும் விருதுப்பட்டம். தாய்வழியிலும் இவருக்குப் பெருஞ்செல்வம் கிட்டியது. தம்முடைய 16-ஆம் வயதில் இவர் பிரான்சில் புகழ்மிக்க குடும்பமொன்றில் பிறந்த இளம் கன்னியொருத்தியைத் திருமணம் செய்துகொண்டார்.



இலபயத்து

தம் பத்தொன்பதாம் வயதில் இலபயத்து பிரெஞ்சுப் படையின் தலைவராகப் பதவியேற்றிருந்தபோது, பிரான்சின் பகை நாடான இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்னர் விடுதலை பெற்ற செய்தி வந்தது. இப்போராட்டம் இலபயத்திற்கு

உணர்ச்சியூட்டியது. தம் அரசரின் ஆணையை மீறியும், தம் மாமனாரின் கடுஞ் சினத்திற்கு ஆளாகியும் கப்பலொன்றை விலைக்குவாங்கிப் பல இன்னல்களுக் கிடையில் கி. பி. 1777-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்குக் கடற் பயணம் மேற்கொண்டார். ஊதியம் வாங்கிக் கொள்ளாமல் பணியாற்ற ஆயத்தமான இவருக்கு அமெரிக்கச் சட்டமன்றமான காங்கிரசு 'மேசர் செனரல்' (Major General) என்னும் பொறுப்பைக் கொடுத்தது. வாசிங்டன் இவர்தம் உற்ற நண்பரானார்.

திறமை வாய்ந்த அலுவலராகவும், கூர்த்தமதி கொண்ட அறிவுரையாளராகவும் இருந்தார் இலபயத்து. இவர் கி.பி. 1777 செப்தம்பர்த் திங்களில் பிராண்டிவைன் என்னுமிடத்தில் நடைபெற்ற முதல் போரில் சிறுகாயமடைந்தார். அடுத்து நடைபெற்ற போர்களில் இவர் திறமையாகப் போரிட்டுப் பலரின் போற்றுதலையும் பெற்றார். இவர் கி.பி. 1778-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் குடியேறியவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு பிரெஞ்சு அரசரைத்தூண்டினார். இவ்வுடன் படிக்கைக்கு உதவுதற்காக கி.பி.1779-ஆம் ஆண்டில் இலபயத்து பிரான்சிற்குத் திரும்பினார். எனினும், இவர் விரைந்து அமெரிக்கா சென்று வர்சீனியா படையெடுப்பிலும், கி.பி. 1781-இல் யார்க்டவுனில் கார்ன்வாலிசு பிரபு சரணடைந்த நிகழ்ச்சியிலும் அமெரிக்காவில் குடியேறிய மக்கள் படைகளுக்குத் தலைமை ஏற்று நடத்தினார்.

இலபயத்து விடுதலை வேட்கை மிக்கவர். இவர் கி.பி. 1789-இல் பிரான்சில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்த பிரபுக்களுடன் இணைந்துகொண்டார். இவர் பிரெஞ்சு சட்டமன்றமான 'எசுடேட் செனரலின்' உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமெரிக்கச் சுதந்திர அறிவிப்பின் அடிப்படையில் மக்களின் உரிமைகளை உருவாக்கிக் கொடுத்தார் 'பாசுடைல்' சிறை தாக்கப்பட்டபோது இவர் பிரெஞ்சுப் புரட்சியைப் பாதுகாத்தற்கு அமைக்கப்பட்டிருந்த புதிய தேசியக் காவல் படைக்குத் தலைமை தாங்கினார்.

கலகக்காரர்கள் கி.பி. 1789 அக்டோபர் 5 ஆம் நாள் வெர்சே மாளிகையைத் தாக்கிய போது, இலபயத்து அரசியார் மேரி அந்தாயினட்டைக் (Marie Antoinette) காப்பாற்றினார். மேலும், இவர் பிரான்சை விட்டுத் தப்பியோட முயன்ற பதினாறாம் உலூயி மன்னரைத் தடுத்து நிறுத்தும் ஆணையைப் பிறப்பித்தார். இலபயத்து பிரெஞ்சுப் புரட்சியாளரின் கொடூரமான கொலை வெறியைக் கண்டு மனம் நொந்தார். இவர் அரசியல் திட்டத்திற்குட்பட்ட முடியாட்சிக்கு ஆதரவு அளித்தமையால், நாட்டுத் துரோகி என்று குற்றஞ்சாட்டப்பட்டார். இவர் கைது செய்யப்பட்டுக் 'கில்லட்டில்' என்னும் பொறியில் இவரது தலையைத் துண்டிக்குமாறு தண்டிக்கப்பட்டார். ஆனால், இலபயத்துத் தப்பித்துப் பெல்சியத்திற்கு ஓடினார். அங்கு ஆசுதிரியர்கள் இவரைக் கைதுசெய்தனர். இவர் ஐந்தாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு, முதலாம் நெப்போலியனால் விடுவிக்கப்பட்டார்.

இலபயத்து நெப்போலியனின் தன்போக்கு ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, இவர் அவனது வீழ்ச்சிக்காலம்வரை பொது வாழ்வில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தார். இவ்வாறே இவர் பூர்பன் அரசரின் மீட்சியின்போது அரசியலிலிருந்து விலகியிருந்தார். எனினும், ஆட்சியாளரின் கொடுங்கோன்மையைப் பொறாதவராகி, இவர் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த எதிர்க்கட்சிகளைத் தலைமை தாங்கி நடத்தினார். இவர் கி.பி. 1830-ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியிலும் பங்கேற்றார். இலபயத்து தேசியக் காவல் படையின் படைவீரர்களுக்குத் தலைமையேற்று, பத்தாம் சார்லசு மன்னரைப் பிரான்சிலிருந்து விரட்டிவிட்டு, உலூயி பிலிப்புவை அரியணையில் அமர்த்தினார்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது புரட்சியரசு இலபயத்தின் சொத்துகளைப் பறிமுதல் செய்தது. ஆனால், அமெரிக்க அரசு 2,00,000 தாலர்கள் நன்கொடையாக வழங்கி இவரை ஈடேற்றியது. இத்தகைய அருஞ்செயல்கள் ஆற்றிய இலபயத்து கி.பி. 1834-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

**இலபாயர் முறை**: குழந்தை பிறக்கும் பொழுது முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையின் அனுபவத்தைப் பெறுகின்றது. இந்த அனுபவம் இளங்குழவிக்குப் பிறப்புக்கால உளத்தாக்குதலாக (Birth Trauma) அமைந்துவிட வாய்ப்புகள் மிகுதியாக இருக்கின்றன. இத்தகைய உளத்தாக்குதல்களிலிருந்தும், குறுகிய காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றத்தினால் இளங்குழவிக்கு ஏற்படக் கூடிய உடல் ஊறுகளிலிருந்தும் அதனைக் காப்பாற்றுவதற்கு இலபாயர் என்பவர் 1975-ஆம் ஆண்டு ஒரு பேறுகால முறையைக் கையாண்டார். இது இலபாயர் முறை (Leboyer Method) எனப்படுகிறது. இதனை இலபாயர் 'வன்முறையற்ற பிறப்பு' (Birth Without Violence) என்று கூறிப்பிட்டார்.

பிறக்கும் பொழுது இளங்குழவி தன் தாயின் வயிற்றினுள் கருப்பையில் உள்ள தட்ப வெப்ப நிலை

யிலிருந்து திடீரென்று வெளியில் முற்றிலும் மாறுபட்ட தட்பவெப்ப நிலைக்கு வருகிறது. இந்த மாறுதல் இளங்குழவிக்குப் பெரும் அதிர்ச்சியாகும். பிறக்குமுன் குழந்தை தன்னுடைய மூச்சுக் குழாய் சுவாசப்பைகளின் உதவியுடன் மூச்சுவிடாமல் இதயத் துடிப்புடன் மட்டும் இருக்கிறது. பிறந்தவுடன் சுவாசப் பை மூலம் அது மூச்சு விடத் தொடங்குகிறது. பிறக்குமுன்அதுகருப்பையின் நீரில்மிதக்கிறது. பிறந்தவுடன் உலர்ந்த இடத்தில் வாழத் தொடங்குகிறது. பிறக்குமுன் அது வெளிச்சத்தைத் தன் கண்களால் பார்த்தது இல்லை. பிறந்தவுடன் வெளிச்சம் அதன் கண்களின்மேல் விழுகிறது. மூடிக்கொண்டிருந்தாலும் அதன் கண்கள் ஒளிக்குக் கூசுகின்றன. இரத்த ஓட்டமும் கழிவு நீக்கமும் தாயின் வயிற்றுடன் ஒட்டிய குருதிக் குழாய் (Placenta) மூலம் நிகழ்ந்து வந்தது. இப்பொழுது அந்தக் குருதிக் குழாய் திடீரென்று துண்டிக்கப்பட்டு விடுகிறது. குழந்தை எல்லாத் தொடர்புகளும் அற்ற ஒரு புத்தம் புதிய சூழ்நிலைக்கு வந்து விடுகிறது. இந்த நிலைக்குத் தன்னை அது ஆயத்தப்படுத்திக் கொள்ளச் சில நாள்கள் ஆகின்றன.

குழந்தையின் பிறப்புக் காலம் அதற்குத் துன்பம் தரும் அனுபவமாக இராமல் மெல்லமெல்ல மாற்றங்களை அடையும் இனிய அனுபவமாக இருக்க வேண்டும்என்று இலபாயர் கூறினார். அதற்கான வழிமுறைகளை அவர் கூறினார். தாம் எழுதிய 'வன்முறையற்ற பிறப்பு' என்னும் நூலில் இலபாயர் இக் கருத்துகளை விரிவாக எழுதியுள்ளார். குழந்தையின் தொப்புள் கொடியை (Umbilical Chord) மருத்துவர்கள் விரைவில் வெட்டிவிடுகின்றனர் என்றும் இச்செயல் குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையே உள்ள உடல் தொடர்பை அறுத்துவிடுவதோடு குழந்தை தனியே மூச்சுவிடும் நிலைக்கும் விரைவாகத் தள்ளப் படுகிறது என்றும் இவர் கூறினார்.

குழந்தை வெளிவந்த பிறகு சில நிமிட நேரத்திற்குப் பின்னர்த் தொப்புள் கொடியை வெட்டுதல் நல்லது. அதற்குப் பின்னர்அந்தக் குழந்தையை ஓரிரு நிமிடங்கள் தாயின் வயிற்றின் மீது குப்புறப்படுக்க வைக்க வேண்டும். அதன்பிறகு குழந்தையை அதன் தாய் தன் கையினால் மெல்ல வருடிக் கொடுக்க வேண்டும். பின்னர்க்கருப்பை நீரின் (Amniotic Fluid) வெப்பநிலையில் அமைக்கப்பட்ட நீரில் சிறிது நேரம் குழந்தையை அது நீரினுள் மூழ்கிவிடாத வகையில் வைக்கவேண்டும்.

பிறப்புக் காலத்தில் மருத்துவர்களும் பிறப்பைக் கவனிக்கும் மற்றவர்களும் காட்டும் விரைவும் குழந்தையின் பிறப்புக்கால உளத்தாக்குதலுக்குக்(Birth Trauma) காரணமாகின்றன என்று இலபாயர் கூறுகிறார்.

இலபாயர் 1918-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாரிசுப் பல்கலைக்கழகத்தில் (University of Paris) பட்டம் பெற்றார். 1954-ஆம் ஆண்டுஅப்பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறைக்குத்தலைவரானார். இவர் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகளின் பிறப்புக் கால மருத்துவப் பணியைச் செய்துள்ளார். தம்முடைய அனுபவங்களின் அடிப்படையில் இவர் 'வன்முறையற்ற பிறப்பு' என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலில் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

துணை நூல்:

**Leboyer, F.**, Birth Without Violence, Alfred A. Knopf, New York, 1975.

***இலம்பாடிகள்*** ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கருநாடகம் முதலிய மாநிலங்களில் வாழும் நாடோடிப் பழங்குடிச் சமூகத்தினராவர். இலம்பாடிகள் (Lambadis) தென்னிந்தியப் படையெடுப்பின் போது முகமதியர்களுக்குப் போர்க் கருவிகளை வட இந்தியாவிலிருந்து எருதுகளின் மீது சுமந்து வந்தவர்களாவர். முகமதியரின் வீழ்ச்சிக்குப் பின்னர்த்தெலுங்கானாப் பகுதியில் குடியமர்ந்து உப்பு விற்கும் தொழிலை மேற் கொண்டனர். இதனால் 'இலமானா' அல்லது 'இலம்பாடி' (இலமானா=உப்பு) என இவர்கள் பெயர் பெற்றனர். இதன் பின்னர் இலம்பாடிகள் உப்பு வணிகத்தை விடுத்து, ஆயர் நாடோடி (Pastoral nomad) வாழ்க்கையை மேற் கொண்டனர். இவ்வகையிலான வாழ்க்கைப் பொருளாதாரத்தில் பசு மந்தைகளைக் கொண்டிருந்ததால், இவர்கள் 'சுகாலி' (சுக்வால=பசு மந்தை உடையவன்) எனக் குறிக்கப்பெற்றனர். இலம்பாடிகளுள் ஒரு பிரிவினர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பு உணவுப் பொருள் வணிகம் செய்து வாழ்ந்தனர். இதனால், இவர்கள் 'பஞ்சாரா' (வணிகர்) எனப் பெயர் பெற்றனர்.

இலம்பாடிகள் மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். 20,000க்கு மேற்பட்ட இவ்வின மக்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் முகமதியரின் படையெடுப்பின்போது ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் முதலிய மாநிலங்களுக்கு ஓடிவந்தனர் என்று, இவர்களைப் பற்றிய இனக்குழு வரலாறு (Ethnohistory) கூறுகிறது. பிறகு நாளடைவில் தமிழகத்திலும் இலம்பாடிகள் பரவினர். மகாராட்டிரத்திலும் ஆந்திராவிலும் இவர்கள் பழங்குடியினராகவும், கருநாடகத்



இலம்பாடிப் பெண்



இலம்பாடி முதியவர்

தில் ஆதிதிராவிட வகுப்பினராகவும், தமிழ்நாட்டில் சிறிது காலத்திற்கு முன்வரை பழங்குடியினராகவும் கருதப்பட்டனர். தமிழகத்தில் இப்போது இலம்பாடிகள் பின்தங்கிய வகுப்பினராகக் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

தொடக்க காலத்தில் கடற்கரையிலிருந்து உப்பினையும் உள்நாட்டிலிருந்து தானியங்களையும் எருதுமேல் ஏற்றி கொண்டு சென்று வணிகம் செய்தனர். இதன் பின்னர்ப் பெரும் புல்வெளிகளில் வாழிடத்தையமைத்து, கால்நடைகளைப் பெருக்கி வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டு நிரந்தரமான வாழ்க்கையை மேற்கொண்டனர். இலம்பாடிகளுள் ஒருபிரிவினர் குற்ற வகுப்பினராகக் கருதப்படுகின்றனர்.

இலம்பாடிகள் நல்ல உயரமும், உடல் வலிமையும், சிவந்த நிறமும், அழகிய முகவெட்டும், நீண்ட மூக்கையும் உடையவர்களாய் நார்டிக்கு (Nordic) இனத் தோற்றத்துடன் காணப்படுகின்றனர்.

இவர்களின் ஆடைகள் சிறந்த மரபினைக் கொண்டவை. மகளிரின் வண்ணப் பாவாடைகள், தலை மேலாடைகள் ஆகியவை தனித்தன்மை உடையனவாய் ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் தமிழ்நாட்டிலும் ஒரே தன்மையாக உள்ளன. வயது முதிர்ந்த இலம்பாடியப் பெண்கள் தங்களின் அழகிய மரபு உடைகளைச் சிவப்பு, பச்சை நிறத் துண்டுகளைக் கொண்டு கையினாலேயே நகைக்கற்கள், மணிகள், சோழிகள், கண்ணாடித் துண்டுகள் ஆகியவற்றை இணைத்து வண்ண வண்ண நூல்களில்

கோத்துத் தைக்கின்றனர். தமிழ்நாட்டில் வடாற்காடு மாவட்டச் செங்கம் பகுதியிலும் தருமபுரி மாவட்டத் தேன்கனிக் கோட்டைப் பகுதியிலும் உள்ள இலம்பாடிப் பெண்கள் மற்றக் கிராமியப் பெண்களைப் போன்றே மேற்சட்டையையும் சேலையையும் விரும்பி அணிகின்றனர். ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள இலம்பாடி ஆடவர்களும் கிராமிய ஆடவர்களைப் போன்றே சட்டையையும் அணிகின்றனர்.

இவர்கள் இலம்பாடி மொழியைப் பேசி வருகின்றனர். இது ஒரு கிளை மொழியாகும். இந்தியச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் இக்கிளை மொழியில் கலந்துள்ளன. தெலுங்குச் சொற்கள் மிகுதியாகக் காணப்பட வில்லை. இலம்பாடிகள் வாழும் மாநிலத்திலும் இக்கிளைமொழி ஒரே தன்மையாகப் பேசப்படுகிறது. தமிழ்நாட்டு இலம்பாடிக் கிளை மொழியில் உருது, தெலுங்கு, தமிழ், ஆங்கிலச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. ஆந்திரம், கருநாடகம், தமிழ்நாடு ஆகியவற்றில் வாழ்ந்து வரும் இலம்பாடிகள் காலப்போக்கில் அந்தந்த மக்களுடன் பழகுகின்றமையால், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளையும் தெளிவாகப் பேசுகின்றனர்.

இலம்பாடிகள் ஆந்திர மாநிலத்தில் அனந்தப்பூர், பெல்லாரி, சித்தூர், கர்நூல், குண்டூர், கிருட்டிணா, கோதாவரி ஆகிய பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். தமிழ்நாட்டில் வடாற்காடு மாவட்டச் செங்கம் பகுதியிலும், தருமபுரி மாவட்டத் தேன்கனிக்கோட்டைப் பகுதியிலும் மிகுதியாகக் காணப் படுகின்றனர். இவர்களின் வாழிடம், கிரா



இலம்பாடிகள்

மத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனிமைப்படுத்தப் பட்ட இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் அமைந் துள்ள வட்டவடிவமான குடிசை வீடுகள் கொண்ட தாகும். இது 'தண்டம்' எனக் கூறப்படும்.

கர்நூல் வட்ட இலம்பாடிகள் தங்கள் கால்நடை வளர்ப்பில் மிக்க கவனம் செலுத்துகின்றனர். இவர் கள் அண்டை மக்களுடன் உண்மையுள்ளவர்களாக வும் அன்புடையவர்களாகவும் வாழ்கின்றனர். தமிழ் நாட்டு இலம்பாடிகளுள் ஒரு பிரிவினர் வளமாக வும் வாழ்ந்து வருகின்றனர்; சிலர் ஏழ்மையிலும் உள்ளனர். வேளாண்மை இவர்களின் முதன்மையான தொழிலாகும். நெல், சாமை, கேழ்வரகு, கம்பு, சோளம், நிலக்கடலை ஆகியவற்றைப் பயிரிடுகின்ற னர். விறகு வெட்டி விற்றல், வேட்டையாடுதல் ஆகி யவை இவர்களுடைய துணைத்தொழில்களாகும். சிலர் நிலக்கிழாரிடம் ஆண்டிற்கு ஓராயிரம், இரண் டாயிரம் முன்பணம் வாங்கிக் கொண்டு பண்ணை யாட்களாக வேலை செய்கின்றனர்.

சமயச் சார்பில் இருவகை இலம்பாடிகள் உளர். செங்கம் வட்டத்தில் (வடஆர்க்காடு மாவட்டம்) வாழும் ஒருவகையினர் தம்பூரு எனப்படும் முகமதிய ராவர். இவர்கள் முகமதியரின் வழிபாட்டு முறையி னைக் கொண்டுள்ளனர். மற்ற வகையினர் இந்து இலம்பாடிகளாவர். இவர்கள் இந்துத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

தமிழ்நாட்டு இலம்பாடிகளின் குடும்பம் இரு வகைப்படும். ஒன்று 'மீட்டு' என்றும், மற்றது 'புக் கையா' என்றும் சொல்லப்படும். மீட்டு வகையைச் சேர்ந்த இலம்பாடிகள் இரத்த உறவுடையவர்கள். இவர்களைப் போன்றே புக்கையா என்னும் பிரிவி னரும் இரத்த உறவுடையவர்கள். ஆகையால், மீட்டுப் பிரிவினரும் புக்கையாப் பிரிவினரும் தத்தம் குழு வுக்குள் பெண் கொள்ளுதல் இலர். வேற்றுக் குழுவி லேயே மணவுறவு கொள்வர்.

திருமண முறைகளில் மற்றப் பழங்குடியினரைப் போன்றே ஒருதார மணம், பலதார மணம், விதவை மணம், காதல் மணம், திருமண விடுதலை, மறு மணம் ஆகிய திருமண முறைகள் இவர்களிடமுண்டு. ஆனால், மணமகன் வீட்டார் மணமகளுக்குரிய பரிசப் பணமாகச் சிறு தொகையைக் கொடுக்கின்றனர். திருமணத்திற்குப் பிறகு மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது, சீதனமாகப் பெற்ற எருது மீது மணப்பெண்ணை உட்காரவைத்துப் பாட்டுப்பாடி அழைத்துச் செல்வது இவர்கள் மரபு. திருமணமான இலம்பாடிப் பெண் திருமண அடை யாளமாக வளையல்களை மிகுதியாக அணிந்திருப் பாள். மேலும், காதில் ஒரு வளையமும் சங்கும் அணிவாள்; இது தாலி போன்றதாகும். இக்காலத் தில் பொட்டுத்தாலியும் கட்டுகின்றனர். திருமண மாகாத வயதுவந்த பெண்கள் யாவரும் முழங்கையில் கைவளையல்களை அணிவர். இவர்கள் தயாரிக்கும் வண்ணக் கைக்குட்டை, சிவப்புக் கைவளையல்கள் வேலைப்பாடு நிறைந்தவை. இவர்கள் திருமணத்தில் பல சடங்குகள் இடம்பெறுகின்றன. இக்கால இலம் பாடி மாணவர்கள் கல்வி பெற்றுப் பல்வேறு அரசுத் துறைகளில் பணி புரிகின்றனர். நே.தே.



இலம்பாடி குடியிருப்பு

**இலம்பையங் கோட்டூர்** தொண்டை நாட்டிலுள்ள, தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவிற்கோலம் எனப்படும் கூவளத்திற்கு அரு கில் உள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வழியாகக் கூவளத்திற்குச் சென்று, கூவம் ஏரிக்கரை வழி நடந்து சென்று இத்தலத்தினை அடையலாம். ஏரியில் நீரில் லாதபோது ஏரியினுள்ளே குறுக்காக நடந்து சென் றடையலாம். இப்பொழுது இவ்வூரில் கிறித்தவ மக் கள் மிக்குள்ளனர். திருக்கோயிலுக்கு எதிரே குளம் உள்ளது. இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றது. இத்தலத்தினை இவர், 'இருமலர்த்தண் பொய்கை இலம்பையங்கோட்டூர்' என்று குறிப்பிட் டுள்ளார். இறைவன் பெயர் சந்திரசேகரர்; இறைவி பெயர் கோடேந்து முலையம்மை. இது அரம்பையர் வழிபட்டதலம் எனக் கூறப்படுகிறது.

**இலவ்சாய் ஓவன்** மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த சமூகப்பணியாளர். இவர் மிச்சிகனில் உள்ள

சேம்சுடவுனில் பிறந்தார். இவர் குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவதைக் கடுமையாக எதிர்த்தார்; மெதடிசுடுத் திருச்சபையாளராக (Methodist Minister) இருந்தார்; திருச்சபைப் பதவியை விட்டு விலகி, குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவதை எதிர்த்துப் போராடி வந்த ஒரு குழுவிற்குத் துணை இயக்குநராகப் பதவியேற்றார். 1907-ஆம் ஆண்டில் இக்குழு தேசியக் குழந்தைத் தொழில் ஒழிப்பு அமைப்பு ஒன்றை நிறுவியது. அந்த அமைப்பின் பொதுச் செயலராக 1926-ஆம் ஆண்டுவரை இலவ்சாய் ஓவன் (Lovejoy, Owen R.) பணியாற்றி வந்தார். இவர் 1927-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை நியூயார்க்கிலுள்ள குழந்தைகள் நல நிறுவனத்தில் (Children Aid Society) செயலராகப் பணியாற்றினார். மேலும், பல நிறுவனங்களில் பணியாற்றிய பின்னர் அமெரிக்கச் சமூகப் பணியாளர்கள் சங்கத்தின் இரண்டாம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இலவங்கத் தீவுகள்** என்பது இந்தோனேசியா நாட்டைச் சார்ந்த மொலுக்கசு தீவுக்கு இடப்பெற்றுள்ள வேறொரு பெயர். மொலுக்கசு (Moluccas) ஒரு தீவுக்கூட்டம்; இந்தோனேசியாவின் மாநிலங்களுள் ஒன்று. இதன் பரப்பு 83, 675 ச.கி.மீ. ஆகும். இத்தீவுகள் கிழக்கு இந்தோனேசியாவில் செலிபீசுத் (Celebes) தீவுக்கும் நியூகினித் (New Guinea) தீவுக்கும் இடையில் அமைந்துள்ளன. இத்தீவுக் கூட்டம் எரிமலைத் தொடர்புடைய மலைப்பாங்கானதும், செழுமைமிக்கதும், ஈரக்கசிவான தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளதுமாக உள்ளது. இங்கேயே சாதிக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்கள் விளையத் தொடங்கின. இதனாலேயே இத்தீவுகளை இலவங்கத் தீவுகள் என்றனர். கொப்பரை, வனப்பொருள்கள் போன்றவை ஏனைய நறுமணப் பொருள்களாகும். இத்தீவுக்கூட்ட மக்களின் அடிப்படை உணவு சவ்வரிசி (Sago) ஆகும்.

இத்தீவுக்கூட்டத்தை கி.பி. 1511-12-ஆம் ஆண்டில் மெகல்லன் என்னும் ஐரோப்பிய மாலுமி முதலில் ஆய்வு செய்தார். பின்னர் இது போர்த்துகீசியரின் குடியேற்றப் பகுதியாயிற்று. தச்சுக்காரர்கள் இதனை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றிக் கொண்டனர். இலவங்க வாணிகத்தின் முற்றுரிமையையும் அவர்களே பெற்றுக்கொண்டனர். ஆங்கிலேயர் இத்தீவுகளைக் கைப்பற்ற இருமுறை முயன்றும் பயனில்லை. தச்சுக்காரர்கள் இதனை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலையாகக் கைக்கொண்டனர். இத்தீவுகளைச் சப்பானியர் இரண்டாம் உலகப் போரின்போது கைப்பற்றி, 1945-ஆம் ஆண்டுவரை சப்பானியப் பேரரசின் பகுதியாக்கியிருந்தனர். ஆனால், போருக்குப்பின்னர் இந்தோனேசியா 1945-ஆம் ஆண்டு ஆகசுட்டு 17-ஆம் நாள் சுதந்திரக் குடியரசானது. இக்காலத்தில் இதனை மலூக்கு (Maluku) என்னும் பெயரில் அழைக்கிறார்கள். இதன் மக்கள் தொகை 14,11,006 (1980).

**இலவசச் சட்ட உதவி:** மனித இனம் தோன்றிப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயின. மனிதன் தோன்றிய காலத்தில் மக்கள் நாகரிகமற்ற முறையில் விலங்குகளோடு விலங்காகக் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காகத் தங்களுக்குள் போட்டியும் போராட்டமுமாக வாழ்ந்து வந்தார்கள்.

மக்கள் நாகரிகம் அடைய அடையப் பலரும் கூடி வாழ்கிற சமாதான வாழ்வுக் கொள்கை இடம் பெறலாயிற்று. மன்னர்களாலும் கொடுங்கோலர்களாலும் ஆளப்பட்டு வந்த இந்தியர், தமக்கென ஒரு மக்களாட்சி-குடியரசு நாடாகப்பாரத நாட்டை உருவாக்கிக் கொண்டுள்ளனர். இந்த நாட்டின் அரசியல் அமைப்பு டாக்டர் அம்பேத்கர், சர் அல்லாடி கிருட்டிணசாமி போன்ற சட்ட வல்லுநர்களாலும், தன்னலம் கருதாப் பெரும் தலைவர்களாலும் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பின் 14-ஆம் பிரிவு 'சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்' என்று கூறுகிறது. மக்களின் வாழ்க்கைக்கும், தனி மனிதச் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளிப்பது அரசின் கடமை என்று 21-ஆம் பிரிவு கூறுகிறது.

மக்களுக்காக மக்களால் ஆளப்படும் இந்த மக்கள் அரசாங்கம் தனியொரு மனிதனுக்கு மேலே கூறப்பட்ட அடிப்படை உரிமைகளைத் தருவதாகச் சொன்னால் மட்டும் போதாது; அவர்கள் அவற்றை அடையும்வகையில் செயற்படுத்துவதோடு, சட்டம் சார்ந்த ஒழுங்கைக் கட்டிக் காப்பதும் இன்றியமையாததாகும். மக்கள் பால் எழும் சமுதாய, சமயப் பிரச்சினைகளும், ஏனைய பிரச்சினைகளும் தீர்தற்கு அவர்கள் சட்டத்தின் உதவியை நாடித் தங்கள் உரிமைகளைப் பெறவும், அடைந்திட்ட உடைமைகளைப் பாதுகாக்கவும் வேண்டிய நிலை இன்றியமையாததாகும். நீதிமன்றம் செல்ல இயலாத நிலையில், வறுமையின் பிடியில் சிக்கி உழல்வோர் தங்களின் நியாயமான உரிமைகளையும் உடைமைகளையும் இழந்து நின்ற அவல நிலை இப்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் மிக உயர்ந்த நீதி அமைப்பான உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகளான பி.என். பகவதி, வி.ஆர். கிருட்டிணய்யர், ஓ. சின்னப்ப ரெட்டி ஆகியோர் தம்முடைய தீர்ப்புரைகளில் அரசியல் அமைப்பு மக்களுக்கு வழங்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படை உரிமைகளை அடையச் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென அடிக்கடி எடுத்துரைத்து வந்தார்கள். அதன் விளைவாக அரசியல் அமைப்பின் 39-ஆம் பிரிவில், 39-அ என்ற புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளது. 'இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சமநீதியும் சம உரிமையும் கிடைக்கச் செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆதலால், பொருளியல் முறையிலும் மற்ற வகைகளிலும் பின்தங்கியுள்ள ஏழை எளிய மக்களுக்கு இலவசச் சட்ட உதவி அளித்திட வேண்டும் என்பது அப்புதிய விதியாகும். கைது செய்யப்பட்டு, உயிர் மற்றும் தனி மனித சுதந்திரத்தை இழக்கும் அபாயத்தில் உள்ள எந்த ஏழையும் அரசியலமைப்புச் சட்டம் '39-அ'-இன்படி மட்டுமன்றி, 14-ஆம் பிரிவின்படியும் இலவசச் சட்ட உதவி (Free Legal Aid) பெறுதல் ஓர் அடிப்படை உரிமையாகும்.

சட்டமென்பது சமூக நல்வாழ்விற்காக அதன் இயைபில் பொது அல்லது தனி மனித உரிமைகள், கடமைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை குறித்து, காலப்போக்கில் தேவைக்கு ஏற்ப விதிகளை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவது. ஆகையால் சட்டம் ஒவ்வொரு தனி மனிதனை மட்டுமன்றிச் சமுதாயம், நாடு, வாழ்க்கை, நன்மை, தீமை, முயற்சி, வளர்ச்சி போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கிறது. எனவே, சட்டமும் அதன் தேவைகளும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றன. அவ்வளர்ச்சியில் பல புதிய திருப்பங்கள், முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள், நுண்ணிய ஆய்வுகள் முதலியன பொதிந்து கிடக்கின்றன.

அரசியல் அமைப்பு 39-அ விதிப்படி இலவசச் சட்ட உதவிக் கழகம் 1977-ஆம் ஆண்டு ஏப்பிரல், திங்களில் இந்தியா முழுவதும் தோற்றுவிக்கப்பட்டுத் திறம்படச் செயல்புரிந்து வருகின்றது. தமிழ்நாட்டுக்கெனத் தனியாக இலவசச் சட்ட உதவிக்கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனம் ஆகும். மாநில ஆளுநர் இக்கழகத்தின் தலைவர் ஆவார். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சிறப்பு ஆதரவாளர். சட்ட அமைச்சர் ஓர் ஆதரவாளர். செயற்குழுவில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் முறையே தலைவர், துணைத் தலைவர் ஆக இருக்கின்றனர். பதவியில் இருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஆலோசகராகவும் உள்ளார். மற்றத் துறைகளின் தலைவர்கள் பதவிவழி உறுப்பினராகவும் இருக்கின்றனர்.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் நிதி உதவியைத் தமிழக அரசே முற்றிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறது ஏழைகளுக்காக வழக்காடவும், எதிர் வாதிடவும், மற்றும் அவர்களுக்கு ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் தக்க ஆலோசனை நல்கிடவும் வழக்கறிஞர்களுக்கு உரிய ஊதியத்தை அரசு அளித்து வருகிறது. கழகம் வைத்திருக்கும் வழக்கறிஞர் பட்டியலில் அனுபவ முதிர்ச்சி பெற்ற வழக்கறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர். வழக்குகளின் தகுதிக்கேற்ப அவர்கள் அமர்த்தப்படுகின்றனர்; திறம்பட வாதிடுகின்றனர். மேலும், இக்கழகம் சமாதானத்தையே அடிப்படையாகக் கொண்டது.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் குறிக்கோள்:

அ) வறியவர்களுக்குச் சட்ட உதவியும் ஆலோசனையும் கூறுவது.

ஆ) சமூகத்தில் இயலாத நிலையில் இருப்பவர்களுக்கு, மைய, மாநில அரசுகளால் நேரடியாகவும் அவற்றின் உதவியாலும் நடைமுறையில் உதவுவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் பல்வேறு திட்டங்களைப் பற்றி அறிமுகம் செய்து, அவற்றின் பயனை அவர்கள் அடையும்படிச் செய்தல். இதேபோல் ஏனைய பொது மக்களின் நலனுக்காகவும், எல்லாப் பிரிவினர்க்காகவும் வகுக்கப்பட்ட திட்டங்களைப் பற்றி அவர்களுக்கு அறிவுரை கூறிப் பயனடையச் செய்தல்.

இ) சமூகத்தில் தாழ்த்தப்பட்ட, நிலையில் இருப்பவர்களுக்கு அறிவுரை கூறுதல். குறிப்பாகப் பல்வேறு சட்டங்களினால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளையும் நன்மைகளையும் அவர்கள் அறிந்து கொள்ளும்படியாகச் செய்தல்.

ஈ) தமிழக மக்களிடையே சட்ட அறிவைப் பரப்புதல்.

உ) சமூகத்தில்மிகவும்தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் முன்னேற்றத்திற்காக நடைமுறையில் இருக்கும் சட்டங்களை, குறிப்பாக வேளாண்மைச் சீர்திருத்தங்கள், மிகக் குறைந்த அளவு ஊதிய விகிதங்கள், தொழிலாளர் நலன், உழவர்கள் நலன், பெண்-சிறுவர்கள் நலன், கொத்தடிமை ஒழிப்பு, கிராமப்புறக் கடன்சுமைக் குறைப்பு, சமூகப் பொருளாதார இனஉரிமைச் சீர்திருத்தங்கள் இவற்றை

அடிப்படையாகக் கொண்ட சட்டங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்தலும் அவசியமான நிலையில் தக்க சட்ட உதவி செய்தலும்.

ஊ) நீதிமன்றம் செல்லுமுன் ஏற்படும் செலவினங்களைக் கட்டுப்படுத்தல் வேண்டி முறையான சமரச முயற்சிகளை மேற்கொண்டு, அவர்களுக்கு முறையானதும் ஆக்கபூர்வமானதுமான உரிமைகளையோ உடைமைகளையோ அடையும் வண்ணம் செய்தல்.

சாதனைகள்: சென்ற எட்டு ஆண்டுகளில் இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் இல்லாதோர்க்கும் இயலாதோர்க்கும் சட்ட உதவி அளித்து, அவர்களும் சமநீதியைப் பெற உதவி புரிந்துள்ளது. குறிப்பாக,அபலைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திக்கற்றோர், ஊன முற்றோர், ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்கள், இராணுவத்தில் பணி புரிவோரின் குடும்பத்தினர் நலன் மற்றும் ஏழை எளியோர்களுக்குக் கீழ்க் காணும் உதவி அளித்துள்ளது.

அ) உரிமையியல் மன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களில் வழக்குகளை நடத்துதல்:

1) ஏழை எளிய மக்கள் உரிமை இயல் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் முன்பு உரிமை வழக்குகளைத் தொடரவும் தொடரப்பட்ட வழக்குகளில் எதிர் வழக்குரைக்கவும் அவ்வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பைத் திருத்துவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கும் அல்லது அதைச் சீராய்வு செய்வதற்கும் அவர்களுக்கு உதவியளித்துள்ளது. இதுகாறும் மாநில உயர்நீதிமன்றம், இந்திய உச்ச நீதிமன்றம் வரை ஏழை எளியோர்களுக்காக வழக்குத் தொடர்ந்துள்ளது.

2) கணவன்மாரால் கைவிடப்பட்ட பெண்கள், வரதட்சணைக்காகக் கொடுமைப்படுத்தப்பட்டோர், நிலம், வீடு, வீட்டு வாடகைப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோர் இக்கழகத்தின் உதவியால் உரிமையியல் நீதிமன்றங்களின் முன்பு வழக்குத் தொடர்ந்து நன்மையடைந்துள்ளார்கள்.

3) நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ்ப் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு உபரி நில ஒதுக்கீட்டில் எழுந்த தகராறில் இக்குழு நல்ல உதவி செய்துள்ளது.

4) நில உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள உபரி நிலம் ஒப்படைக்கப்பட்டவர்கள் தொடர்புடைய வழக்குகளில் அதிகாரம் பெற்ற அதிகாரி பிறப்பித்த உத்தரவை எதிர்த்தோ வருவாய் அதிகாரி பிறப்பித்த நில ஒப்படை ஆணையை எதிர்த்தோ மேல் முறையீடுகள் அல்லது மறுவிசாரணை மனுக்கள் அல்லது நீதிப்பேராணைகள் தொடரப்பட்டிருப்பின், அரசு அந்த வழக்கில் பிரதிவாதியாக இருந்து பிரச்சனைக்குரிய ஆணை சரியே என்று வாதிட வேண்டுமென்றும், மேலும் நிலம் ஒப்படைக்கப்பட்டவரும் அவ்வழக்கில் ஒரு கட்சிக்காரராக ஆக்கப்படவேண்டுமென்றும், அவர்களுக்கு இக்கழகம் உதவி அளிக்கும் என்றும் அரசுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது.

5) மேற்கண்ட கருத்தினை அரசு முழுமையாக ஏற்று, சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர், தம்கீழ்ப் பணிபுரியும் அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

6) இக்கழகம் ஏழை, எளிய மக்கள் தங்கள் வழக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு போவதற்குமுன் இரு தரப்பினரையும் வரவழைத்து, பட்டியலில் உள்ள அனுபவமும் ஆற்றலும் கொண்ட அறிவார்ந்த வழக்கறிஞர்களைக் கொண்டு அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறி, இரு தரப்பினர்க்கும் ஏற்றாற்போன்று சமரசம் செய்து பெரும்பாலான வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றது. இதனால், மக்களுக்கு நீதிமன்றத்திற்கு அலையவேண்டிய நேரமும் பணமும் மிச்சமாகின்றன. வழக்காடுபவர்களிடையே சுமுகமான உறவு நீடிக்கிறது. இது இக்கழகத்தின் செயற்பாட்டில் சிறப்புக் கூறாகும்.

7) நீதிமன்றத்தில் தீர்ப்புக் காலம் நீடித்தால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் எப்போதும் ஏழை மக்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு இக்கழகத்தின் உதவி பெற்றவர்களின் வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து முதலில் விசாரிக்க வேண்டுமென்றும், இது போன்ற வழக்குகளில் காரணமின்றி வாய்தா கேட்டுக் காலத்தை நீட்டித்து, ஏழை, எளிய மக்களை அலைக்கழிக்காதவாறு உடனடியாக நடத்தி முடிக்குமாறும் அரசு நீதிமன்றங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. நீதிமன்றங்களும் அவ்வேண்டுகோளுக்கு இணங்க வழக்குகளை விரைவில் தீர்ப்புச் செய்து வருகின்றன.

8) வழக்கறிஞரை வைத்து வாதிட இயலாத நிலையில் உள்ள ஏழை, எளிய மக்கள் தயங்காமல் இக்கழகத்தின் உதவியை நாடலாம்.

ஆ) அதிகாரிகளிடமிருந்து தக்க பரிகாரங்களை அடைதல்: 1) முதியோர்கள், விதவைகள், ஊனமுற்றோர் போன்றவர்களிடமிருந்து வரும் மனுக்களை

ஏற்றுப் பரிந்துரை செய்து அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கச் செய்துள்ளது.

2) ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தினருக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வுத் தொகை, பணிக்கொடைத் தொகை (Gratuity), சேமிப்புத் தொகை போன்றவை உரிய காலத்தில் கிடைக்குமாறு மாநிலக் கணக்கு ஆய்வுத் தலைவருடன் (Accountant General) தொடர்பு கொண்டு விரைவில் பணம் பட்டுவாடா செய்யப்படும்படியாக உதவியுள்ளது. மற்றும் காவல்துறை, கல்வித்துறை மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றிற்கும் முயன்று மக்களுக்குத் தக்க உதவி செய்துள்ளது. பிற வங்கிகளிடமிருந்து தொழிலைத் தொடங்கவும் கால் நடைகளைவாங்கி வளர்க்கவும், ஏழை எளிய மக்களுக்குக் கடன் உதவி அளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

இ. பேருந்து வாகன விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி: 1. சாலை விபத்துகள் தமிழகத்தில் குறிப்பாக மற்ற மாநிலங்களைவிட அதிகமாக உள்ளது. ஏழை மக்கள்தாம் அதிகமாக இவ் விபத்துக்களுக்கு உள்ளாகிறார்கள். விபத்தினால் இறந்தவர் குடும்பத்திற்கு அல்லது ஊனம் அடைந்தோர்க்கு இழப்பீடு பெறச் சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது. குற்றம் சாராப் பொறுப்பு (No Fault Liability) - இன்கீழ் விபத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) உம், நிரந்தர ஊனமுற்றோருக்கு ரூ. 7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு) உம் தீர்ப்பாயங்கள் கொடுக்கின்றன. ஆனால் இழப்பீட்டுத்தொகையைப் பெறுவதில் ஏழை, எளியவர்கட்கு இருக்கும் சிக்கல்களைப் பயன்படுத்திக் கொண்டு, முழு இழப்பீட்டுத் தொகையும் அவர்கள் கைக்கு எட்டாதவாறு இடைத் தரகர்களும்,தன்னலக்காரர்களும் தலையிடுகின்றனர். இந்த அவல நிலையைத் தடுக்கும் வகையில் சட்ட உதவிக் கழகம் தீர்ப்பாயங்களை அணுகித் தீர்ப்பாயத்தின் நீதிபதிகள், இழப்பீட்டுப் பணத்தை உயிர் நீத்தோரின் குடும்பத்தினருக்கு நேரில் பட்டுவாடா செய்யவும், அவ்வாறு செய்யும் பொழுது உயிரிழந்தவரின் சிறு குழந்தைகளின் நலனைக் காக்கும் பொருட்டு இழப்பீட்டுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியை வங்கிகளில் ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்கு வைப்பீடு செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்கிறது. தீர்ப்பாயங்களும் ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவ்வாறு இழப்பீட்டுத் தொகையைப் பட்டுவாடா செய்து வருகின்றன.

2. வாகனங்கள் இடித்துவிட்டு ஓடும் வழக்குகளில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமற் போவதாலும், ஈட்டுத் தொகைக்காக நீதிமன்றத்திற்குச் செல்லக்கட்சிக்காரருக்கு இடையூறாக இருப்பதாலும், அந்த வழக்குகளுக்கும், குற்றம் சாராப் பொறுப்பின்கீழ் விபத்தில் இறந்தோருக்கும், நிரந்தரமாக உடல் உறுப்பு இழந்தோருக்கும் இழப்பீடு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துமாறு அரசுக்குக் கழகம் பரிந்துரை செய்தது. போக்குவரத்து ஆணையரும் அக்கருத்துக்கு ஒப்புதல் அளித்ததன் பேரில் அரசு அப்பரிந்துரையை ஏற்று அத்திட்டத்தை விரிவு படுத்தியுள்ளது.

3) பேருந்து விபத்துகளில் உயிர் இழந்தோர், காயமுற்றோர்க்கு இழப்பீடு வேண்டி பேருந்து விபத்துக்கோருமுரிமைத்தீர்ப்பாயங்கள் முன்பு வழக்குகளைத் தொடர்ந்துள்ளது. இதுவரை தமிழகத்தில் பேருந்து வாகன விபத்துத் தீர்ப்பாயங்கள் இழப்பீட்டுத் தொகையாக ரூ. 3,01,59,289.72-ஐ இறந்தோர் குடும்பத்திற்கும் காயமுற்றோர்க்கும் அளித்துள்ளது.

4) தீர்ப்பாயங்களில் கோருரிமை மனுக்கள் விரைவில் தாக்கல் செய்யப்பட்டு விபத்துக்குள்ளானவர்களும், அவர்கள் குடும்பங்களும், இழப்பீட்டுத் தொகையை விரைவில் அடைய வேண்டும் என்ற நோக்குடன், இக்கழக இயக்குநர், புலனாய்வு காவல் துறை இயக்குநரை விபத்துப் பற்றிய விவரங்களை உடனடியாக அண்மையிலுள்ள சட்ட உதவிக்குழுவிற்கு அனுப்பி வைக்க, அவர்களுடைய சார்நிலை அதிகாரிகளைப் பணிக்குமாறு கேட்டுக் கொண்டார். போக்குவரத்துப் புலனாய்வு காவல்துறை இயக்குநரும் அவ்வேண்டுகோளை ஏற்று, எல்லா மாவட்டக் காவல்துறைக்கண்காணிப்பாளர்களுக்கும்,சென்னைக் காவல்துறை ஆணையருக்கும் விபத்தின் முழு விவரங்களையும் அருகில் உள்ள இலவசச் சட்ட உதவிக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளார்.

5) இவ்வாணையின்படி காவல்துறை அதிகாரிகள் விபத்து பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள குழுவிற்கு அனுப்பி வைக்கின்றனர். விவரங்கள் கிடைத்தவுடன், அக்குழு தக்க மேல் நடவடிக்கைகளை எடுத்துப் பட்டியலில் உள்ள வழக்கறிஞர்கள் மூலம் தீர்ப்பாயங்களில் கால தாமதமின்றி உரிமை மனுக்களைத் தாக்கல் செய்கின்றது.

ஈ. பிற விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி: தொழிற்சாலைகளில் பணிபுரியும் காலங்களில் விபத்துகள் ஏற்படின், அவைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நிருவாகத்திடம் இழப்பீடு பெறவும், பேரிடர் விளைவிக்கக்கூடிய தொழில்களான கழிவுநீர்ப் பெருங்குழாய்களில் பணிபுரியும் நக

ராட்சி மன்றப் பணியாளர்கள் விபத்தில் இறப்பினும், வயல்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் இரசாயனப் பொருள்களையும் தெளிக்கும் தொழிலாளர்கள் அவ்விதம் பணிபுரியும்போது பாம்பு, சரமண்டலம் போன்ற நச்சு உயிரினங்களால் தீண்டப்பட்டு இறப்பினும், அவர்கள் எல்லோரும் பொதுநிதியிலிருந்து நிதி உதவி பெறவும், பாசனக் கிணறுகளைத் தோண்டும் அல்லது ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், பனை, தென்னை மரங்களில் கள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் ஆகியவர்கள் விபத்துக்குள்ளாகி உயிர் துறப்பினும், மின் சக்தியால் எவரேனும் தாக்குண்டு விபத்தில் இறப்பினும், அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தால் தரப்படும் இழப்பீட்டுத் தொகையைப் பெறவும், அதில் ஏதும் காலதாமதம் அல்லது சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டால் இக்குழு தொடர்புடைய அலுவலகங்கள், தீர்ப்பாயங்கள் போன்றவற்றை அணுகி, அவற்றை விரைவாகப் பெறவும் வழிவகை செய்கிறது.

உ. தொழிலாளர்கள் சட்டப்படி பெற வேண்டிய உரிமைகளை அடைய உதவி செய்தல்: 1) தொழிலாளர்களுக்குக் குறைந்தஅளவுக் கூலி நிருணயச் சட்டப்படி கூலி கொடுக்காத பணியாண்மையாளர்களிடமிருந்து அவர்கள் முறையான கூலி பெறவும், தகுந்த காரணமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டு வேலையில்லாமல் இன்னலுறும் தொழிலாளர்கள் வழக்குகளை நடத்தவும், மீண்டும் அவர்களை வேலையில் அமர்த்தவும், பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த காலத்தில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம், பஞ்சப்படி ஆகியவற்றை முறையே பெறவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து தருகிறது.

ஏழை உழவர்கள், நிலமற்றோர் போன்றோர் பெரும் செல்வர்களின் பிடியில் சிக்கித் துன்புற்று, சட்டத்தின் பலன் அவர்களுக்குக் கிடைக்காதவாறு இருட்டடிப்புச் செய்யப்படும் சூழ்நிலைகளைக் களைந்து, அவர்கள் ஆவன பெறவும், அவர்களின் நியாயமான உரிமைகள் பறிக்கப்படா வண்ணம் சட்டத்தின் துணைக்கொண்டு அவர்களைக் காத்து அவர்கள் மேம்பாட்டிற்கு ஏற்ற வழிவகைகளையும் உடனுக்குடன் செய்தும் தருகிறது. கடன் சுமையிலிருந்தும் ஒரு நிலவுடைமையாளரின்கட்டாயக் கெடுபிடி வசூல்களிலிருந்தும் ஏழை உழவர்களை மீட்டு, அவர்கள் நிம்மதியாக வாழ வழி செய்கிறது.

2) தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்படும்பொழுது பணியாண்மையர் மூன்று மாத முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். தவறின் மூன்று மாத ஊதியமும் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சேம நிதி, பணிக்கொடை முதலியனவும் கொடுத்தல் வேண்டும். இவை கொடுக்கப்படாத போது, இக்கழகம் இவற்றிற்காகவும் தொழிலாளர் தம் வேலைக்கு உத்திரவாதம் பெற்றுத்தரவும் முன் வருகிறது.

ஊ) பெண்கள் மண வாழ்வு உரிமை-குழந்தைப் பாதுகாப்பு உரிமை முதலியன: 1) மண வாழ்வு உரிமைகளுக்கு நேர்ந்த தீங்கிற்குத் தீர்வழி வேண்டும் வழக்குகள், குழந்தைகள் காப்புப் பொறுப்பைப் பெறக்கோரும் உரிமை வழக்குகளில் கணவன் மனைவி இருவரையும் நேரில் வரவழைத்து, பட்டியலிலுள்ள வழக்கறிஞர்களைக் கொண்டு அறிவுரை வழங்கி முறையான உடன்பாடு செய்து, பிணக்குகளைத் தீர்த்து அவர்களை ஒன்று சேர்த்து வைத்து, அவர்கள் மீண்டும் நல்வாழ்வு வாழ இக்கழகம் வகை செய்கிறது. உடன்பாட்டிற்கு அவர்கள் இணங்காவிடில் நீதி மன்றங்களை அணுகி, அவர்களின் உரிமைகளுக்குத் தீர்வு காண உதவி செய்கிறது.

2) ஆதரவற்ற குழந்தைகள், கட்டுக்கடங்காத குழந்தைகள் தொடர்பாகப் பெற்றவர்களோ மற்ற உறவினர்களோ இக்கழகத்தின் உதவியை நாடும் பொழுது, அச்சிறார்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, இளைஞர் நீதிமன்றங்களின் மூலம் அவர்களைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பி, அங்கு அவர்களுக்கு ஒரு கைத்தொழிலைப் பயிற்றுவிக்கச் செய்து, அவர்களை வருங்கால நற்குடிமக்களாக்குகிறது. குற்றம் செய்த இளஞ்சிறார்கள் சீர்திருத்தப் பள்ளியில் தண்டனைக் காலத்தை அனுபவிக்கும் பொழுது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களைக் காப்பு விடுப்பில் வெளிக்கொணர்ந்து, அவர்களின் குடும்பத்தினரிடம் அவர்களை ஒப்புவித்து மறுவாழ்வு அளிக்கிறது.

3) இக்கழகம் பெண்களை நீதிபதிகளாகக் கொண்ட குடும்ப நல நீதிமன்றங்களை அமைத்து, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளுதவி, குழந்தைகளுக்குக் காப்பாளர் போன்ற பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றும் அவ்வழக்குகள் நீதிபதியின் தனி அறையில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வழக்குகளில் தீர்வுகாண அம்மன்ற நீதிபதிக்கு உளநோய் மருத்துவரையும் மனித சமுதாய வளர்ச்சி இயல்பு-சட்டங்கள் ஆகியவை பற்றிய ஆய்வாளர்களையும் (Sociologists), வட்டார அமைப்புகளையும் தொடர்பு கொள்ள அதிகாரம் அளிக்க வேண்டும் என்றும் அரசுக்குப் பரிந்துரை செய்தது. அரசும் அவ்வேண்டுகோளை ஏற்றுக் குடும்ப நல நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது.

எ) கைது செய்யப்பட்டவர்களுக்குக் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து மேலமை நீதிமன்றங்களில் மேல் முறையீட்டுக்காலம் வரையில் உதவி:

1) சிலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்படுகின்றனர். சிலர் குற்றச் செயலில் ஈடுபடாதிருந்தும் ஐயத்தின் பொருட்டுக் காவல் துறையினரால் கைது செய்து காவலில் வைக்கப்படுகின்றனர். இக்கழகத்தின் பட்டியலிலுள்ள வழக்கறிஞர்கள் சிறைச்சாலைக்கு அடிக்கடி சென்று, அவ்வாறு காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் முழு விவரங்களையும் அறிந்து, அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அம்மனுக்களைத் தாக்கல் செய்து, உடனடியாக அவர்களைப் பொறுப்படைவில் வெளிக்கொணர நடவடிக்கைகள் எடுக்கின்றனர். அவ்வாறு பிணையில் எடுக்கப்பட்டவர்தம் வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி அவர்களுக்கு உதவி செய்கின்றனர். தண்டனை விதிக்கப்பட்டால் அதன்பேரில், தக்க வழக்குகளில் மேல்முறையீடு செய்யவும் இக்கழகம் தொடர்ந்து உதவி செய்கிறது.

2) அமர்வு நீதிமன்றங்களால் மட்டுமே விசாரிக்கப்படும் வழக்குகளான கொலைக்குற்றம், கொலை செய்ய முயற்சி, வன்புணர்ச்சி போன்ற குற்றமுறு செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு, அமர்வு நீதிபதிகளின் வேண்டுகோளின்படியும் பிற குற்றங்களுக்குக் குற்றவியல் நடுவர்களின் வேண்டுகோளின்படியும் அவர்களுக்காக வழக்காடவும் அவர்களது கட்சியினை எடுத்து வாதிடத் திறமைபெற்ற வழக்கறிஞர்களை அமர்த்தி, வழக்குகளை நடத்தவும் இக்கழகம் உதவி புரிகிறது.

3) பெண்கள் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் காவற் சிறையில் காவலில் வைக்கப்படும்பொழுது அவர்கள் பெண் காவலர்களின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்றும், அவர்கள் பெண் காவலர்களின் துணை கொண்டுதான் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் தனிச் சிறைகளில் வைக்கப்பட வேண்டும் என்றும் காவல்துறையினரை இக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

4) இக்கழகம் சீர்திருத்தப்பள்ளி, மகளிர் மறுவாழ்வு இல்லம் முதலிய அமைப்புகளுக்குப் பட்டியலில் உள்ள ஆண், பெண் வழக்கறிஞர்களைச் சான்றிதழோடு அனுப்பி, அங்குள்ள ஆண், பெண் இருபாலாரான கைதிகளுக்குத் தக்க சட்ட உதவியும் ஆலோசனையும் கூறி வருகிறது.

5) இலவசச் சட்ட உதவிக்கழகம் குற்ற இயல் நடைமுறை விதித்தொகுப்புப் பிரிவு 41(அ)-இன் கீழ் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களைச் சிறையில் வைப்பதும், அவர்களின் மீது நன்னடத்தை நடவடிக்கைகள் எடுப்பதும் குற்றஇயல் நடைமுறைச் சட்டம் 167-ஆம் பிரிவுக்குப் புறம்பானது என்பதைச் சகன்னாத்து-எதிர்-தமிழக அரசு என்ற வழக்கில் உயர் நீதிமன்ற கவனத்திற்குக் கொணர்ந்து, அவ்வாறு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையும் பெற்றுள்ளது.

6) மேற்கண்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாகச் சிறையில் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைந்து வருகிறது. மேலும் இதன் பொருட்டு அரசுக்கு ஏற்படும் செலவினங்களும் குறைந்து வருகின்றன.

ஏ) கைதிகளுக்குக் குற்றத் தீர்ப்பு அன்னியில் மற்றப் பிரச்சினைகளுக்கு உதவி: 1) பெரும்பாலான கைதிகள் குடும்பத் தலைவராகவும், அவர்களது வருவாய் ஒன்றனையே நம்பிக் குடும்பம் நடந்து வருவதாலும், தலைவனை இழந்து குடும்பம் அலைகடல் துரும்பென அவதியுறும் சூழ்நிலைகளில் அதனைத் தவிர்த்திட வேண்டிய உதவிகள் நல்கிடவும், துயர்களைக் களைந்திடவும் நல்ல முனைப்போடு இக்கழகம் செயலாற்றி வருகிறது.

2) குடும்பத் தலைவர் சிறைத்தண்டனை பெற்றிருக்கும் காலத்தில் அவர் வீட்டில் இல்லாததைப் பயன்படுத்திக்கொண்டு, மற்றவர்கள் அவரின் உடைமைகளைக் கவர்ந்து கொள்ள முயற்சி செய்கின்றனர். அக்குடும்பத்தினர் இக்கழகத்தின் உதவியை நாடும் பொழுது அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறி அவர்களது உடைமையைப் பாதுகாக்க உதவியளித்து வருகிறது.

ஐ) பிற உதவிகள்: பெண்கள், ஆதி திராவிடர்கள், மலை வாழ் மக்கள், இராணுவத்தில் பணிபுரிவோரின் குடும்பத்தினர் மற்றும் ஏழை எளிய மக்கள் ஆகியவர்களுக்கு முன்னுரிமை அளித்து உதவி செய்து வருகிறது.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்துவதில் ஏற்படும் இடர்களைப் போக்கவும், திட்டத்தை விரிவு படுத்தவும், இக்கழகத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் தமிழக அரசுக்கு விவரித்துரைத்து, அரசின் ஆணையைப் பெற்று ஏழை, எளிய மக்கள் சம நீதியைப் பெற ஆவன செய்து வருகிறார்கள். துணைத் தலைவர், அமெரிக்க ஐக்கியக் குடியேற்ற நாடுகள் போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள வழக்கு

களுக்குத் தீர்வு காணும் முறைகளை அறிந்து நம் நாட்டிற்கு ஏற்றாற்போல் செயற்படுத்தத் திட்டங் களை வகுத்துத் தருகிறார்.

இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் தமிழகம் முழுவதும் 152 குழுக்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றது. மக்கள் இக் கழகத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நன்கு புரிந்து கொள்ளும்படியாக இக்கழகம், சிற்றூர் களுக்குச் சென்று சட்ட உதவி முகாம்களை நடத்தி வருகிறது. இக்கழகத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

கடந்த எட்டு ஆண்டுகளாக இக்கழகம் வாழ்வில் நலிந்தோர், துயருற்றோர், துன்பமடைந்தோர், வெறுத்து ஒதுக்கப்பட்டோர், வாழ்வில் இன்ன லுற்றோர் ஆகியவகளுக்கு எல்லாம் இனம், மொழி, வேறுபாடின்றி ஆதரவோடு அவர்களை அர வணைத்து அவர்கள் துயர் நீங்கி மேம்பாடு அடைய வேண்டும், பீடு நடை போட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கடமையாகக் கொண்டு சீரிய தொண்டாற்றி வருகிறது. இந்திய நாட்டிற்கு வருகை தந்த அமெரிக்க நாட்டுச் சட்டக் கல்லூரிப் பேராசிரியர் மேரிகேலண்டரும், தென் கொரிய நாட்டுச் சட்டப் பேரறிஞர் தாய்-எங்-லியும் இக் கழகத்தின் தொண்டினையும், செயல் முறைகளையும் அணுகு முறைகளையும் பாராட்டிச் சென்றுள்ளனர். இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி. என். பகவதி இலவசச் சட்ட உதவிக் கழகம் மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் ஏழை எளிய மக்கட்குச் சிறந்த தொண்டு ஆற்றி வருகிறது என்று அண்மையில் பாராட்டியுள்ளார்.

தமிழக அரசு நிதி மற்றும் எல்லாவிதமான உதவிகளையும் இக் கழகக்திற்கு அளித்து வருகிறது. அரசின் பல்வேறு துறையிலும் உள்ள அரசு அதிகாரி களும் தங்கள் சீரிய ஒத்துழைப்பை நல்குகின்றனர்.

வி. என். இரா.

**இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன் மாறன்** சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு பாண்டிய மன்னன். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்று புறநானூற்றில் குறிக்கப்பட்டுள் ளான். இலவந்திகை என்பதற்கு இயந்திர வாவி என்றும், வாவியைச் சூழ்ந்த வசந்த சோலை என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. மூதூர்ப் பொழில் என்பது இலவந்திகைச் சோலை என்றும், இலவந்திகை என்பது 'நீராவியைச் சூழ்ந்த வயந்த சோலை; அது அரசனும் உரிமையும் ஆடும் காவற் சோலை' என்றும் அடியார்க்கு நல்லார் விளக்கந் தந்துள்ளார். செங்குட்டுவன் தன் தேவியுடன் இல வந்திகை மாடத்திருந்தபோது மலைவளம் காணச் செல்லும் முடிவினை மேற் கொண்டான் என்று சிலப்பதிகாரம் (காட்சி 3-8) கூறுகிறது. இதனால் அரசுத் தலைநகர்களை அடுத்துப் புறத்தே, இயந்திர வாவி சூழ்ந்த வசந்த சோலை மாடத்தோடு அமைந்திருந்தது என்பதும், அதில் அரசனும் தேவி யும் இன்பமாகப் பொழுது போக்கினர்என்பதும் தெரி கின்றன. இத்தகு இலவந்திகைப் பள்ளியில் இருக்கும் போது மன்னன் இறக்க நேர்ந்தால், 'இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய' என்னும் அடைமொழி கொண்டு அவன் வழங்கப்படுவான். பாண்டியன் நன்மாறன், இவ்வாறு இலவந்திகைப் பள்ளியில் இறந்தமையால் இவ்வடைமொழியோடு பெயர் பெற்றுள்ளான். நன் மாறன் எனப் பெயரிய வேறொரு பாண்டிய மன்ன னின்றும் பிரித்தறிய இவ்வாறு பெயர் அமைக்கப் பட்டது.

இம்மன்னனை மதுரை மருதன் இளநாகனார், (55) ஆவூர் மூலங்கிழார் (196), வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் ஆகிய புலவர்கள் தம் புறநா னூற்றுப் பாடல்களில் சிறப்பித்துள்ளனர். தமிழக மூவேந்தர்களுள்ளும் இவன் சிறந்து விளங்கியமை யினைச், சிவபெருமானது நெற்றிக்கண்ணை உவமை காட்டுவதன் மூலம் மருதன் இளநாகனார் குறிப் பிட்டு, ஆண்மையும், சாயலும் வண்மையுங் கொண்டு வாழ்கவென அறிவுறுத்தியுள்ளார். தமக்குப் பரிசில் வழங்கக் காலந்தாழ்த்தமை கண்டு ஆவூர் மூலங் கிழார், 'நோயிலராக நின் புதல்வர்.................... செல்வல் அத்தை சிறக்க நின்நாளே' என்று கூறி இம்மன்னனின் நீங்கிச்சென்றார். வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் பரிசில் கடாநிலைத் துறையில், இம்மன்னனைப், 'பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும், நீண்டுயர் வானத்து உறையினும் ...............நீடு வாழிய நெடுந்தகை' என்று வாழ்த்தியுள்ளார்.

**இலவல் பியரீ** (கி.பி. 1883-1945) என்பார் பிரெஞ்சு அரசியல் வாதிகளுள் ஒருவர். இவர் தலை சிறந்த வழக்குரைஞராகவும் நுண்ணறிவு மிகுந்த அரசியல் வாதியாகவும் விளங்கினார். இவர் படிப் படியாக முன்னேறி, 1931-ஆம் ஆண்டில் வெளியுறவு அமைச்சராகவும் ஆனார். இரண்டாம் உலகப் போர் மூளும் வரை (1939) இவர் பல பதவிகளைப் பெற்றி ருந்தார். செருமனி பிரான்சின்மீது படையெடுத்து அதனைச் சரணடையச் செய்தது. பிரான்சு செரு மனியுடன் சேர்ந்துகொள்வதால், பல நன்மைகள் பிறக்கும் என்று இவர் நினைத்தார். ஆனால் பெரும் பாலான பிரான்சு மக்கள் இவர் கருத்துகளை ஏற்க

மறுத்துவிட்டனர். முதல் உலகப் போரின்போது அவர்கள் பட்ட சொல்லொணாத் துயர்களைப் பலர் நினைவு கூர்ந்தனர். செருமானியர்களை அவர்கள் வெறுத்தார்கள்.

இலவல் பியரீ (Laval Pierre) தலைமை அமைச்சராக 1942 முதல் 1944 வரை ஆட்சி நடத்தினார். இதனை விச்சி அரசு (Vichy Government) அல்லது செருமானியர்களுடன் சேர்ந்து கொண்ட பிரெஞ்சு அரசு என்று குறித்தனர். இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் இலவல் கைதுசெய்யப்பட்டுத்துரோகக் குற்றத்திற்காக விசாரனை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

**இலாக்கு,அலைன்**(கி.பி.1886-1954)அமெரிக்க நாட்டுக் கல்வியாளர். ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் வாழ்க்கை நடத்திய இவரே, தம் நீக்கிரோ இனத்து மக்கள் இசை, கலை, இலக்கியம் ஆகியவற்றில் தலைசிறந்து நிற்பதை அமெரிக்க மக்களுக்கு முதன் முதலாக எடுத்துரைத்தவர்.

அலைன் இலாக்கு (Alain Locke) நீக்கிரோ இனத்தில் பிறந்தவர். இலாக்கு பிறந்த நகரம் பிலடெல்பியா (Philadelphia). இவர் தாய், தந்தை இருவருமே பள்ளி ஆசிரியர்கள். இலாக்கு, மருத்துவம் படிக்க வேண்டும் எனப் பெற்றோர் விரும்பினர். இவரோ கல்வியியலில் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றுவிட்டார். ஆர்வார்டு (Harvard) ஆக்சுபோர்டு, பெர்லின் ஆகிய பல்கலைக் கழகங்களில் சேர்ந்து, தொடர்ந்து தத்துவம் படித்தார்.

இங்கிலாந்தில் படிப்பை முடித்தபின் 1912-இல் அமெரிக்கா திரும்பிய இலாக்கு, வாசிங்டனிலுள்ள ஓவார்டுப்(Howard)பல்கலைக்கழகத்தில்ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். இதே பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராக முப்பத்தாறு ஆண்டுகள் (1918-54) பணியாற்றினார்.

பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே, நீக்கிரோ இன மக்களின் கலை வாழ்க்கை, பண்பாடு ஆகியன குறித்து நூல்கள் எழுதினார். இந்நூல்களில் நீக்கிரோ இனப்பண்பாடு,அமெரிக்க மக்களின் வாழ்க்கையோடு ஒட்டியுள்ள தன்மைகளைச் சுட்டிக்காட்டினார். இவருடைய முதல் நூல் 'புதிய நீக்கிரோ' (The New Negro) 1925-இல் வெளியாயிற்று.தொடர்ந்து 'அமெரிக்காவில் நீக்கிரோ' (1933), 'நீக்கிரோவும் அவர் இசையும்'(1936),'கலைகளில் நீக்கிரோ' (1941) என்னும் நூல்களை வெளியிட்டார். இவை நீக்கிரோ மக்களின் கலை, பண்பாடு, இசைகளைத் தெரிந்து கொள்ள உதவும் மிகச் சிறந்தநூல்களாகக் கருதப்படுகின்றன.

**இலாக்கு, (கி.பி. 1632-1704)**; மேலை நாடுகளின் மெய்ப் பொருளியலில் குறிப்பிடத்தக்க அனுபவ வழிக் கொள்கையாளர், இலாகு, சான் (poc'':e, Pohn) ஆவார். இவர் இங்கிலாந்தில் முதலாம் சார்லசு அரசரின் காலத்தில் கி.பி. 1632-ஆம் ஆண்டு ஆகசுட்டு 29-ஆம் நாள் இரிங்குடன் சோமர்செட்சைர் (Wrington, Somer Setshire) என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெரும் நிலக்கிழாரும் இராணுவத்தில் பணியாற்றியவரும் ஆவார்

இவர் தமது உயர் தரக் கல்வியை வெசுட்டுமினிசுட்டர் (West Minister) பள்ளியில் பயின்று, பின்பு கி.பி. 1652-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

இவர் மருத்துவம், மெய்ப்பொருளியல், கல்வி, அறிவு ஆராய்ச்சியியல், அரசியல், சமூகவியல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கினார். தமது இளங்கலைப் பட்டப் படிப்பை மருத்துவவியலில் பெற்று மருத்துவராகச் சிலகாலம் பணியாற்றினார். சில மருத்துவ அறிஞர்களின் அறிவுரைகளை மருத்துவப் பணிப்பயிற்சிக்காகக் கேட்டறிந்தார்.

இரண்டாம் சார்லசு அரசர் காலத்தில் இலாக்கு சான் (Locke, John) ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றதோடு பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். கி.பி. 1668-ஆம் ஆண்டு இயற்கை அறிவை வளர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கழகத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இவர் அறிவியல், மருத்துவ இயல் தொடர்பான நூல்களை வெளியிட்டுள்ளார்; கி.பி. 1689-ஆம் ஆண்டு ஆலந்து (Hollend) நாட்டிலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பி வந்து, தமது கடைசிக் காலத்தில் எழுத்துப்பணியில் ஈடுபட்டு, அரசியல், சமயம், அறிவு ஆராய்ச்சியியல், மெய்ப்பொருளியல் ஆகியவை தொடர்பான கருத்துகளை மக்களுக்கும், அசாங்கத்திற்கும் நல்கி வந்துள்ளார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கது, 'மனிதனது அறிவாற்றல் குறித்த கட்டுரை' (Essay Concerning Human Understanding) ஆகும்.

சமயக் கருத்துகள் (Ideas on Religion): இலாக்கு சான் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர். கடுந்தூய்மைக் கட்சியாளர் கோட்பாடு என்பது கிறித்தவ சமயத்தின் ஒரு பிரிவு. கி.பி.1695- ஆம் ஆண்டு சமய நம்பிக்கையின் கருத்துகள் பல சமயங்களோடு ஒப்பிடப்பட்டு, வேறுபடுகையில் கடுந்தூய்மைக் கட்சியாளர்களின் கருத்துகள் (Puritanism) புதியனவாகக்

காணப்பட்டன. கிறித்தவ சமய நூலான விவிலியத்தில் (Bible) கூறிய கருத்துகளுக்கு வேறானது ஏதும் இல்லை என்று மக்களிடத்துப் போதித்து வந்துள்ளனர் சம காலத்திய கிறித்தவ அறிஞர்கள். கிறித்தவச் சமயம் என்பது புரியாத சமயம் அன்று. அது தெளிவானது என்றும், வரையறை செய்யப்பட்ட கட்டுக்கோப்புக்குள் இயங்கும் மனிதர், தம்மால் செயற்படக் கூடிய எல்லைக்குள் மட்டுமே செயற்படுவர்; அதற்கு அப்பாலுள்ள செயல்களை மீறிச் செயற்படுவோர் மனிதர் அல்லர் என்றும் இவர் குறிப்பிட்டார்.

தெய்விக அருள் நிகழ்ச்சியின் அமைப்பு இயேசு கிறித்துவினால் ஏற்படுத்தப்பட்டது. மனிதன் கடவுளால் வரையறை செய்யப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும், அறநெறி ஒழுக்கங்களுக்கு உட்பட்டும் நன்முறையில் வாழ வேண்டும் என்று நீதி வாசகங்களையும் பேருரைகளையும் இயேசு கிறித்து வெளிப்படுத்தியுள்ளார். மனிதர்கள் பின்பற்ற வேண்டும் என இயேசு கிறித்து குறிப்பிட்டதை இலாக்கு சான் வெளிப்படுத்தினார்.

இயற்கைச் சட்டம் எல்லாக் கூறுகளிலும் அமைந்துள்ள கடவுளின் சட்டத்துடன் பொருந்தியுள்ளது. மனிதன் கடவுளின் உயர் நிலையை அடையப் பகுத்தறிவின் வாயிலாக முயற்சி செய்துள்ளான்.

இலாக்கு சான் கி.பி. 1664-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் (Oxford University) ஒழுக்க நெறிமுறைக் கண்காணிப்பாளராக இருக்கையில், இயற்கையின் விதிமுறைகளைப் பற்றி விரிவுரையாற்றினார். இவ்விரிவுரைகள் 1954-ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பட்டன. தனி மனிதனின் தன்னுரிமைப் பாதுகாப்பும், சுதந்திர முறையான வரையறையும் இயற்கைச் சட்டத்தில் உள்ளன. இச்சட்டம் கடவுளின் விழைவாற்றலிலிருந்து அளக்கப்படுகின்றது என்று கருதினார்.

மனிதனுடைய பகுத்தறிவுத் தன்மையும், மனிதத்தன்மையும் இயற்கைச் சட்டத்திற்கு இணங்கச் செயற்பட்டு வருகின்றன. இவ் இயற்கைச் சட்டத்தை யாவராலும் மீறுதல் இயலாது. இவ் இயற்கைச் சட்டம் நிலையான ஒன்று. இயற்கைச் சட்டம் கடவுளால் அமைக்கப்பட்டது; அற ஒழுக்க நெறிப் பண்பு நடைமுறையுடன் கூடிய ஒன்று.

கல்விக் கருத்து: இலாக்கு சான் குழந்தைகளின் கல்வி நலனில் அக்கறை கொண்டவராவர். கல்வியில் மொழியின் உபயோகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், மொழி முக்கியமான பங்கை வகிக்கிறது. மொழியின் அமைப்பு மொழி அறிவியல் அறிவுக்குக் கருவியாகப் பயன்படுகிறது; இம்மொழியை மற்ற எழுத்தாளர்கள் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. மொழிப் பகுப்பாய்வு சிறந்த ஒன்றாகும். இதன் வாயிலாகச் சொல்லின் விளக்கத்தை அறிதல், மொழியின் பயன்பாடு, மொழியின் பயனற்ற கருத்துகள் இவை எனக் கருதுதல் அனைத்தும் எளிதாக அறிய முடியும்.

அற ஒழுக்கநெறிகள் கொண்டவர்களாகக் குழந்தைகளை ஒழுகச் செய்தல், குழந்தைகளின் திட்டமுறை, வாழ்க்கையின் வளர்ச்சிமுறை, சுகாதாரத்தைப் பற்றிய விளையாட்டுச் செயல்கள், குழந்தை உடல் அமைப்பின் நிலைமாற்றம், குழந்தைகளின் பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிமுறைகள் பற்றிய கருத்துகள் கொண்ட ஒரு நூலைத் தம் நண்பரின் வாயிலாக கி.பி. 1693-ஆம் ஆண்டு எழுதி வெளியிடச் செய்தார். கல்வியினைப் பற்றிய எண்ணங்கள் (Some Thoughts on Education) என்ற நூலும் இவரால் எழுதப்பட்டது. ஒழுக்கம், இயற்கைச் சட்டம் ஆகியவை கல்வியின் கருத்துகளில் முக்கியமானவை. சமூகவியல், அரசியல், தத்துவம் ஆகியவற்றின் அமைப்பில் கல்வியின் கருத்தை அமைத்துள்ளார். இவர் கல்வியின் கருத்துகளுக்கு முதன்மை தாராமல் கல்வி கற்பதன் முறைகள், ஒழுக்க நெறியின் அடிப்படைகள் முதலியனவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்.

அறிவு ஆராய்ச்சியியல் கொள்கை (Theory of Knowledge): புலன் கடந்த மெய்ப்பொருளியலில் தோன்றும் பொருள்களைப்பற்றி விளக்குமிடத்து ஒவ்வொரு பொருளும் இரண்டு வகையான குணங்களைப் பெற்றுள்ளது. ஒன்று முதல் தரமானது (Primary Qualities); மற்றொன்று இரண்டாம் தரமானது (Secondary Qualities). பொருளின் முதல் தரமான குணங்கள் எண் (Number), பரப்பு(Extension), உருவம் (Shape), இயக்கம்(Motion)முதலியன. இரண்டாம்தரமான குணங்கள் நிறம் (Colour),சுவை (Taste), மணம் (Smell), ஒலி (Sound) முதலியன. ஆக ஒவ்வொரு பொருளிலும் இரு வகையான தன்மைகள் உள்ளன என்றார். தொடக்க காலத்தில் மனிதனது மூளை வெறும் எழுத்தில்லாப் பட்டிகை (Tabularasa) போன்றது. எண்ணங்கள் புலன்களின் வாயிலாகவும் சிந்தனைகளின் வாயிலாகவும் மனத்தினுள் பதிவாகின்றன.

மக்களின் எண்ணங்கள் அனைத்திற்கும் பிறப்பிடமாக விளங்குவது அனுபவமேயாகும்; அனுபவத்தின் வாயிலாக அறிவு உண்டாகிறது; தோன்றக் கூடிய எல்லா எண்ணங்களும் (Ideas) அனு

பவத்தால் பெறப்படுகின்றன. சிந்தனைகளின் வாயிலாகப்பெறப்படும் எண்ணங்கள் அகக் காட்சி (Intros pection ) எனச் சொல்லப்படுகின்றன. புலன்களின் வாயிலாகப் பெறப்படும் அறிவுகள் புலக்காட்சி எனக் குறிக்கப்படுகின்றன. நினைவு கூர்தல், ஒப்புமை காணுதல் ஆகியவை உள் மனத்தின்கண் எழுபவை ஆகும். நிறம், ஒலி, மணம், எண், பரப்பு, வடிவம், நிலை, இயக்கம் ஆகியவை புலன்களில் எழுபவையாகும் என அறிவு ஆராய்ச்சி மொழியியலில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கருத்துகள்: அரசு அமைப்பு முறையில் தனிமனிதனின் உரிமைகள் காக்கப் பெற வேண்டும். இவர்தம் அரசியல் கருத்துகள் ஆப்சு தாமசு (Hobbes Thomas) என்பவரின் அரசியல் கருத்துக்கு முரண்பட்டிருந்தன. இவர்தம் அரசியல் கருத்துகள் அக்காலத்தில் எழுந்த இயக்கங்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன. அரசியல் சமுதாய ஒப்பந்த அமைப்பில் மக்களின் தெய்விக உரிமையியலின் கருத்தை இவர் எதிர்த்தார். மனிதர்களின் தன்னுரிமையாட்சியும், அவர்களுடைய உரிமைகளும் இயற்கைச் சட்டத்தின் விதிகளால் பாதுகாக்கப்படுகின்றன; மனிதன் இயற்கையிலேயே ஒழுக்க நெறிகள் கொண்டவன்; அரசு நிருவாகம் (Executive), நீதித்துறை (Justice), சட்டசபை (Legislative) ஆகிய அமைப்புகளைக் கொண்டதாக அமைய வேண்டும்; மக்கள் இயற்கைச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயற்பட வேண்டும்; இச்சட்டமே தலையானது என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசியல், தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றிருந்த இவர் கி.பி. 1704-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் ஓட்டிசு (Oates) என்னுமிடத்தில் காலமானார்.

**இலாகி ஆண்டு** மொகலாயப் பேரரசர் அக்பரால் தொடங்கப்பட்டதாகும். தீன்-இலாகி என்னும் தெய்விக மதத்தை அக்பர் உருவாக்கியபின்னர், இலாகி ஆண்டு செயற்படலாயிற்று. இசுலாமுடன் தொடர்பு கொண்ட இசிரா (Hejira) ஆண்டை நீக்குமுகத்தான் இப்புதிய ஆண்டைப் புகுத்தினார் என்பர். இவ்வாண்டு அக்பர் அரியணை ஏறிய ஆண்டான கி.பி. 1556, பிப்பிரவரி 14-ஆம் நாளிலிருந்து கணக்கிடப்படுகிறது. இலாகி ஆண்டு சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பெற்றது. அதன் மாதங்களும் நாள்களும் பண்டைய ஈரானிய ஆண்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாகும். இவ்வாண்டுமுறை அக்பர், சகாங்கீர் ஆகிய பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்டது. சாசகான் இதனை மாற்றி மீண்டும் இசிரா ஆண்டையே நடைமுறைப்படுத்தினார்.

**இலாகிசு** விவிலிய நூலில கூறப்பட்டுள்ள நகரம். இது பாலசுத்தீனத்தில் யூதேய (Judaean) மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதாக விவிலிய நூல் கூறுகிறது. தெல்-எல்-எசி (Tell el-Hesi) என்னும் இக்கால நகரமே அக்கால இலாகிசு (Lachish) நகரம் எனச் சர். பிளிண்டர்சு பெட்ரி (Sir Plinders Petrie) என்பவரும், பிரடரிக்கு செ.பிளிசு (Frederick J.Blis) என்பவரும் கருதுகின்றனர். வில்லியம் எப்.ஆல்பிரைட்டு (William F. Albright) என்பவர் 1929 இல் தெல்-எட்-துவீர் (Tell-ed-Duweir) என்னும் நகரமே விவிலிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இலாகிசு நகரமாகும் என்று கூறினார். தெல்-எட்-துவீர் இசுரேலில் செருசலத்திலிருந்து 40 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது. இதனை உறுதி செய்யும் முகத்தான் தெல்-எட்-துவீரில் அகழாய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. வெல்கம்மார்சுட்டன்(Welcome Marston) என்பவர் சான் எல்.இசுட்டார்க்கி (John L.Starkey) என்பவரின் மேற்பார்வையில் அகழாய்வினை இப்பகுதியில் நடத்தினார்.

அகழாய்வில் பல அரிய பழஞ்சின்னங்கள் கிடைத்தன. இப்பகுதியில் முதன்முதலில் குகைவாழ்மக்கள் வாழ்ந்துள்ளனர். கி.மு. 27-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.24-ஆம் நூற்றாண்டு வரை இவர்கள் இலாகிசில் வாழ்ந்தனர். அகழாய்வில் கி.மு. 1700-ஆம் ஆண்டைச் சார்ந்த செவ்வக வடிவிலமைந்த மண் கோட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோட்டையை ஐக்சாசு (Hyksos) என்னும் நாடோடி மக்கள் கட்டினர். யோசுவா (Joshua) என்னும் அரசர் இந்நகரைக் கைப்பற்றி யூதா (Judah) என்பவரிடம் ஒப்படைத்தார். இரெகுபோம் (Rehoboam) என்னும் அரசர் இந்நகரைச் சுற்றி இரண்டு மதிற்சுவர்களைக் கொண்ட அரண்களைக் கட்டினார். அமேசையா (Amaziah) என்னும் மன்னர் இந்நகரில் அடைக்கலம் அடைந்தபொழுது கொல்லப்பட்டார்.

இந்நகரின் கோட்டை வாயிற் பகுதியில் அகழாய்வு நடத்தியபோது, 1500 மனிதர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை போரினால் இறந்த வீரர்களுடையன எனக் கருதப்படுகின்றன. சென்னா செரிபு (கி.மு.704-681, Sennacherib) என்ற அரசரின் நினிவேன் (Nineven) அரண்மனையில் காணப்படும் புடைப்பகழ்வுச் செதுக்குச் சிற்பங்கள் சென்னாசெரிபின் இலாகிசு நகரத் தாக்குதலையும் அதைக் கைப்பற்றியதையும் குறிப்பிடுகின்றன தொல்லியல் அறிஞர்கள் சென்னாசெரிபு இலாகிசு

நகரைத் தாக்கிய பொழுது அவரை எதிர்த்த நகரக் காவல் வீரர்களின் எலும்புக்கூடுகளே இவை எனக் கூறுகின்றனர். இரண்டாம் இராமாசெசு மன்னரின் வண்டு வடிவத் தாயத்து ஒன்றும், எழுத்துகள் பொறிக்கப்பட்ட கிண்ணம் ஒன்றும் அகழாய்வில் கிட்டின. இவ்வெழுத்துகளின் தன்மையைக் கொண்டு இக் கிண்ணம் மெர்னெப்டா(Merneptah,கி.மு. 1223-1211) என்னும் அரசரின் 4-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்தது என்பதுகண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாம் நெபுகாத்நேசர் இந்நகரத்தை கி.மு. 598-இல் எரித்து அழித்தார். புதுப்பிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கி.மு. 587-இல் தரைமட்டமாக்கினார்.

இசுடார்க்கி என்னும் அறிஞர் 1935-இல் மையினால் எழுத்துகள் எழுதப்பட்ட 18 மட்பாண்டங்களைக் கோட்டை வாயிலில் அமைந்துள்ள காவலறையில் அகழ்ந்தெடுத்தார். 1938-ஆம் ஆண்டில் மேலும் எழுத்துகள் உள்ள மட்பாண்டங்கள் மூன்று கண்டுபிடிக்கப்பட்டன. ஒசையா (Hoshaiah) என்னும் புறக்காவல் அதிகாரி இலாகிசுவில் இருந்த இயோசு (Yaosh)என்னும் இராணுவ அதிகாரிக்கு எழுத்துகள் கொண்ட மட்பாண்டங்களைக் கடிதங்களாக அனுப்பியுள்ளார். இவ்வெழுத்துகள் உள்ள மட்பாண்டக் கடிதங்கள் கி.மு. 889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எழுதப்பட்டன. இவற்றுள் ஆறு மட்பாண்டங்கள் உடையாதவண்ணம் நல்ல நிலையில் உள்ளன. இவற்றில் பொறிக்கப்பெற்றுள்ள சொற்றொடர்கள் விவிலிய நூலின் சொற்றொடர்களையும் சில பெயர்களையும் கொண்டுள்ளன. தொல்லெழுத்தியல் முறைப்படி இவ்வெழுத்து மட்பாண்டங்கள் எரேமியா (Jeremiah) என்னும் அரசர் காலத்தைச் சார்ந்தவை எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இந்நகரம் அழிவுக்குப்பின் மீண்டும் புதுபிக்கப்படவில்லை. அழிந்துபட்ட பகுதியில் பின்னர்ப் பாரசீக மாவட்ட ஆளுநர் வாழும் கோட்டை கட்டப்பட்டது. இக் கோட்டை கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 4-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தது.

1932-இல் இந்நகரில் தொடங்கப்பட்ட அகழாய்வு 1938-இல் சே.எல். இசுடார்க்கி கொலை செய்யப்பட்டதால் கைவிடப்பட்டது.

**இலாகுல்-இசுபிட்டி** என்பது இமாசலப் பிரதேச மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டமாகும். அம்மாநிலத்திலுள்ள 12 மாவட்டங்களில் இலாகுல்-இசுபிட்டி (Lahaul & Spiti) மாவட்டமே பரப்பளவில் பெரியது. இது இமாசலப் பிரதேசத்தில் மக்கள் தொகை குறைந்த மாவட்டம். இம்மாவட்டத்தின் கிழக்கில் சீனாவின் பகுதியான திபெத்து அமைந்துள்ளது. வடக்கில் சம்மு-காசுமீர மாநிலம் இதன் எல்லைபோல் உள்ளது.

இலாகுல்-இசுபிட்டியின் பரப்பளவு 13,835 ச.கி.மீ; மக்கள் தொகை 32,100 (1981). இம்மாவட்டம் முழுவதும் இமயமலையின் பகுதியாக அமைந்துள்ளது. இங்குப் பனியாறுகளும் பனி மூடிய வயல்களும் உள்ளன. இங்குள்ள மலையுச்சிகள் பல 6,000மீ. உயரத்தைத் தாண்டியவை. தாழ்ந்த பள்ளத்தாக்குகளில் பார்லி விளைகிறது. இங்குப் பல புத்தசமய மடாலயங்கள் உள்ளன. இம்மாவட்டத்தின் தலைநகரம் கேலாங்கு (Keylong) என்பதாகும்

**இலாகூர்** பாகிசுத்தான் நாட்டுப் பஞ்சாபு மாநிலத்தின் பெருநகரங்களுள் ஒன்று. சிந்து ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்றான இரவி ஆற்றின் இடக்கரையில் இந்தியாவின் எல்லைக்கு அண்மையில் இலாகூர் அமைந்துள்ளது. கராச்சிக்கு அடுத்த நிலையில் பாகிசுத்தானின் மிகப் பெரிய நகரம் இலாகூர். கங்கைச் சமவெளியிலிருந்தும் சிந்து வெளியிலிருந்தும் காசுமீரத்திலிருந்தும் வரும் வழித்தடங்கள் இங்குக் கூடுவதால் இலாகூர் சுறுசுறுப்பான நகராக விளங்குகிறது. தொழில்வளம், வாணிகம், பண்பாடு போன்றவற்றின் மையமாக இந்நகரம் திகழ்கிறது.

இலாகூர் மிகத் தொன்மையான நகரமாகும். இந்நகரம் கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டுகளில் செல்வச் செழிப்பில் திளைத்திருந்தது. பின்னர், கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை மொகலாயர்கள் ஆண்டபோதும் இலாகூர் பெருமைபெற்ற நகரமாக விளங்கிற்று. சிலபோது இந்நகரம் மொகலாயப் பேரரசின் தலைநகர் போன்றும் அமைந்திருந்தது. இது கி.பி.18-ஆம் நூற்றாண்டில் சிறப்பிழந்து நலிவுற்றது. ஆனால் கி.பி.1775-ஆம் ஆண்டிலிருந்து முதன்மையிடமாக மாறியது. ஆங்கிலேயர்ன் காலத்தில் கி.பி.1849-இல் அவர்கள் வசமாயிற்று. அப்போதுதான் இலாகூர் பஞ்சாபின் தலைநகராயிற்று. இந்தியா-பாகிசுத்தான் பிரிவினைக் காலம்வரை இந்நிலையே நீடித்தது. இவ்வூரில் இரு பெரும் மசூதிகள் உள்ளன. வசீர் கான் மசூதி அவற்றுள் ஒன்று. இது கி.பி.17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாகும். வைசாகி மசூதி இரண்டாவதாகும்; இது மிகப் பெரியது; பரந்தது. இது கி.பி.17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இலாகூருக்குச் சில கி.மீ. தொலைவில் அதன் கிழக்கில் கி.பி.1637-இல் உருவாக்கப்பட்ட சாலிமார்த் தோட்டங்கள் அமைந்துள்ளன.

பருத்தி ஆடைநெய்தல், உணவுத்தானியத் தயாரிப்பு ,எண்ணெய் எடுத்தல், பழங்களைப் புட்டிகளில் அடைத்தல், பொறியியல் பணிபுரிதல், இரசாயன

மரச்சாமான்கள், சினிமாப் படம் தயாரித்தல் போன்றவை இலாகூரின் சிறப்பான தொழில்களாகும். தோல்பொருள்கள், பட்டு, பீங்கான், இரும்பு போன்றவையும் இவ்வூரில் தயாராகின்றன. கச்சாப் பருத்தி, எண்ணெய் விதைகள், கோதுமை, சர்க்கரை, அரிசி போன்றவை பெரும் பரப்பில் விளைகின்றன. இலாகூரின் மக்கள்தொகை 13,00,000 ஆகும்.

**இலாகேசு** சுமேரியாவில் தென் பாபிலோனியப் பகுதியில் அமைந்துள்ள தொன்மையான ஊர். ஊர் (Ur) என்னும் பழமையான சிறப்புப் பெற்ற நகரத்திற்கு வடக்கே இலாகேசு (Lagash) அமைந்துள்ளது. இன்று தென்கிழக்கு ஈராக்கில் உள்ள தெல்லோ (Telloh) என்னும் சிற்றூரே அன்றைய இலாகேசு ஆகும். இங்குப் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த தி. சார்செக்கு (De-Sarzec) என்பவர் அகழாய்வினை மேற்கொண்டார். இவ்வகழாய்வின்மூலம் தொன்மையான சின்னங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வூரில் கி.மு. 3000-இல் ஒரு சிறந்த நகர நாகரிகம் இருந்துள்ளது. இந்நாகரிகம் பின்னர்ச் செமிட்டிக்கு இன அக்காடு (Akkad) மரபினைச் சார்ந்த சார்கோன் (Sargon) என்னும் மன்னரின் ஆட்சியின் மூலம் அழிக்கப்பட்டது. இவ்வூரில் மீண்டும் நாகரிகமும் பண்பாடும் ஊர் (Ur) நகரை ஆண்ட 3-ஆம் மரபினர் காலத்தில் தோன்றின. குறிப்பாகக் குடியா (Gudea) என்னும் ஆளுநரின் ஆட்சியின் கீழ் இந்நகரத்தின் நாகரிகம் பெருவளர்ச்சியடைந்தது. அகழாய்வில் 30,000க்கும் மேற்பட்ட ஆப்பு வடிவ எழுத்துகள் பொறிக்கப்பட்ட தகடுகள் இங்குக் கிடைத்தன. பெயர் பொறிக்கப்பட்ட பிணந்தின்னிக் கழுகு ஒன்றின் சிலையும், குடியாவின் உருவச்சிலையும், வெள்ளியால் செய்யப்பட்ட குடுவையும் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டன. இக்குடுவையில் மரபுரிமைச் சின்னம் தாங்கிய மேலங்கி பொறிக்கப்பட்டுள்ளது. கல்லினால் செய்யப்பட்ட பொருள்களும் வெண்கலப் பொருள்களும் அகழாய்வில் கிடைத்தன.

**இலாங்டன், இசுடீபன்** (கி.பி.1150-1228) இங்கிலாந்தில் காண்டர்பரித் தலைமைக் குருவாக (Archbishop) இருந்தவர். இலாங்டன் (Langton Stephen) பாரிசுப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்; அங்குப் படித்த காலத்தில் மூன்றாம் இன்னசெண்டு என்னும் போப்பாண்டவரின் நண்பரானார். அங்கேயே தொடர்ந்து தங்கிக் கற்பித்த இலாங்டன் உரோமாபுரி சென்று கி.பி. 1206-ஆம் ஆண்டு வரை கற்பித்தார். போப்பாண்டவர் மூன்றாம் இன்னசெண்டு இவருக்குக் 'கார்டினல்' (Cardinal) என்னும் பதவியை அளித்துக் காண்டர்பரிக்கு அனுப்பினார். அடுத்த ஆண்டில் இவர் தலைமைக்குருப் பதவியில் அமர்த்தப்பட்டார். அப்போது இங்கிலாந்தின் அரசராக இருந்த சான் அரசர் (King John) காண்டர்பரித் தலைமைக்குருவாகச் சான் டி கிரே(John de Grey) என்பாரை அமர்த்த விழைந்தபடியால் இலாங்டனை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்த மறுத்துவிட்டார். சினங் கொண்ட போப்பாண்டவர் இங்கிலாந்துகிறித்தவச் சமய நாடாக இருப்பதற்குத் தடைவிதித்தார்; சான் மன்னர் சமய விலக்கம் செய்யப்பெற்றார்; அவரைப் பதவியிலிருந்து விலக்கப் போவதாகவும் அச்சுறுத்தினார். இறுதியில் அரசர் போப்பாண்டவருக்குப் பணிந்துவிட்டார். இலாங்டன் கி.பி. 1213-ஆம் ஆண்டில் தம் பதவியை ஏற்க இங்கிலாந்துக்குச் சென்றார்.

அங்கு கி.பி. 1213-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் கலகஞ் செய்த பிரபுக்களுடன் இலாங்டன் இணைந்து கொண்டர். அப்பிரபுக்கள் கி.பி. 1215-ஆம் ஆண்டில் மகா சாசனம் (Magna Carta) என்னும் பட்டயத்தில் சான் மன்னரைக் கையொப்பமிடும்படி வற்புறுத்தினர். அரசருக்கும் போப்பாண்டவருக்கும் நடைபெற்ற இப்போராட்டத்தின் பின்விளைவாக இலாங்டனைப் போப்பாண்டவர், தலைமைக்குரு பதவியிலிருந்து நீக்கினார். இவர் பிரபுக்களுடன் இணைந்து கொண்டதைப் போப்பாண்டவர் விரும்பாததேஇதற்குக் காரணம். பதவியை இழந்த இவர் கி.பி. 1218-ஆம் ஆண்டுவரை உரோமாபுரியிலேயே வாழ்ந்து வந்தார். மூன்றாம் என்றி (Henry III) இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக் கொண்ட இரண்டாண்டுகளுக்குப் பின் மீண்டும் இலாங்டன் தலைமைக்குருவாக இங்கிலாந்து திரும்பினார். அடுத்த பத்தாண்டுகள் இலாங்டன், பிரபுக்களும் முடியரசரும் இணைந்து செயற்பட அரும் பணியாற்றினார். போப்பாண்டவரின் தலையீட்டைத் தடுத்து, ஆங்கிலத் திருச்சபையின் தன்னுரிமையை நிலைநாட்ட இவர் பெரிதும் முயன்றார். ஆசுனி திருச்சபைக் கூட்டத்தில் (Synod of Osney) 'அரசியலமைப்புத் திட்டங்கள்' என்னும்பெயருடன் இவர் கி.பி. 1222-ஆம் ஆண்டில் வெளியிட்ட சட்டங்கள் ஆங்கிலத் திருச்சபைச் சட்டத்தின் (English Canon Law) சிறப்பான பகுதியாக அமைந்துள்ளன. அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவராகவும் சமயத் தத்துவஞானிகளுள் ஒருவராகவும் இலாங்டன் கருதப் பெறுகிறார். விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டிற்கு இலாங்டன் எழுதிய பரந்த விளக்கங்கள் சிறப்பானவையாகும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் இயல் பிரிவினைகள் இவரால் ஏற்படுத்தப்பட்டவை என்று கூறுகிறார்கள்.

பிசப்புகளின் அதிகாரங்கள் பற்றியும் இவர் எழுதியுள்ளார்.

இசுடீபன் இலாங்டன் கி.பி. 1228-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் இங்கிலாந்து சசெக்சியிலுள்ள (Sussex) சிலிண்டன் (Slinden) என்னுமிடத்தில் காலமானார்.

**இலாசரசு** தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த இந்தியக் கிறித்தவராவார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். கிறித்தவச் சமயக் கோட்பாடுகள் அடிப்படையில் பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார். இலாசரசின் மொழிப் பணிகளுள் இவர் தம் நன்னூல் ஆங்கில மொழிபெயர்ப்பு, திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு, மாணவர்க்காக எழுதப்பட்ட ‘தமிழ் இலக்கணம்’ ஆகியவை குறிப்பிடத்தக்கன.

பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் முப்பகுதிகளைக் கொண்ட நன்னூலில் பாயிரத்தைப் பவர் (Rev. H.Bower, D.D.) என்பவர் மொழி பெயர்த்தார். எழுத்து, சொல்லதிகாரங்களை இலாசரசு மொழிபெயர்த்தார். இந்நூலின் முன்னுரையில் இலாசரசு தம்மைச், ‘சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பட்டதாரி’(A Tamil Graduate of the Madras University) என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முதற் பதிப்பு 1878-இல் சென்னைக் கோபார்ட்டு அச்சகத்தில்அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்பு 1884-இல் வெளிவந்துள்ளதாக அறியப்படுகிறது. பவரின் நன்னூல் பாயிர ஆங்கிலமொழி பெயர்ப்பை 1972-இல் வெளியிட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் இலாசரசின் எழுத்து, சொல்லதிகாரங்கள் கொண்ட மொழிபெயர்ப்பை 1977-இல் வெளியிட்டது. இந்நன்னூல் மொழிபெயர்ப்புக்கு டாக்டர் போப்பும் டாக்டர் கால்டுவெலும் மதிப்புரைகள் தந்துள்ளனர்.

இலாசரசின் வழிகாட்டியாகத் திகழும் டாக்டர் துரூ (Rev. W.H. Drew) திருக்குறளில் முதல் 63 அதிகாரங்களை ஆங்கில உரைநடையில் மொழிபெயர்த்தார். இறுதி 70 அதிகாரங்களை இலாசரசு மொழி பெயர்த்து உதவியுள்ளார். டாக்டர் துரூவின் மொழிபெயர்ப்பு அடங்கிய திருக்குறளின் முதற்பகுதி 1840-ஆம் ஆண்டிலும், இரண்டாம் பகுதி 1852-ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. பின்னர் இவ்விருவரின் திருக்குறள் ஆங்கில உரைநடை மொழிபெயர்ப்பை டாக்டர் போப்பின் மொழிபெயர்ப்போடு சேர்த்துக் கழகம் வெளியிட்டுள்ளது.

இலாசரசு நன்னூலை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழி இலக்கணத்தை ஆங்கில விளக்கங்களுடன் எளிய-இனிய நடையில் எழுதியுள்ளார். இந்நூல் பள்ளி, கல்லூரி மாணவர்க்காகவே எழுதப்பட்டது என்ற குறிப்பையும் ஆசிரியர் கூறுகிறார். இந்நூல் 1878-இல் சென்னை அடிசன் அண்டு கம்பெனியரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதாக அறியப்படுகிறது.

மேற்கண்ட நூல்கள் தவிர, தமிழ்ப் பழமொழிகளின் அகராதித் தொகுப்பும் இவர் பணிகளுள் சிறப்பிடத்தைப் பெறுகிறது. பல திங்கள் ஏடுகளில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தம்முடைய நூல்களுக்கு இவர் எழுதியுள்ள முகவுரைகளின் அடியில், ‘L.M. Institution, Madras’ என்னும் முகவரி காணப்படுவது அறியத்தக்கது.

19-20 நூற்றாண்டுகளில் வாழ்ந்த இப் பெருமகனார் 1925-ஆம் ஆண்டு காலமானார். ஆர்.செ.

**இலாசா** திபெத்தின் தலைநகர். இந்நகரம் திபேத்து நாட்டின் தென்பகுதியில் 3600 மீட்டர் உயரத்தில் உள்ளது. கியி ஆற்றின் வடகரையில் இருமருங்கிலும் 5500 மீட்டர் உயரமுள்ள மலைப்பள்ளத்தாக்கில் இது அமைந்துள்ளது.

உயரம் மிகுந்த நகரமாக இலாசா(Lhasa) இருந்தாலும், இதன் தட்பவெப்ப நிலை வாழ வசதியானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் இருக்கிறது. குளிர் காலத்தில் பனி உறையும் நிலையை விடத் தாழ்ந்த அளவு வெப்பமும் கோடைக் காலத்தில் மிதமான வெப்பமும் கொண்டு இந்நகரம் விளங்குகிறது. ஆண்டில் மழை 380 மில்லிமீட்டர் வரை பொழிகிறது. இம்மழை சூன் முதல் அக்டோபர் மாதம் வரை பெய்கிறது. எனவே இங்குப் பனி பெய்வது அருமை. சனவரி முதல் ஏப்பிரல் வரை புழுதி நிறைந்த பலமான காற்று வீசுவதால், தட்பவெப்பநிலை சீர்கெடுகிறது.

இலாசா ஏறத்தாழ 2.5 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது.இந்நகரின் மையத்தில் சோகாங்கு (Jokang) என்னும் வழிபாட்டிடம் உள்ளது. இதனைச் சுற்றிலும் மக்கள் வீடுகளில் வாழ்கிறார்கள். இக்கோயில் மிகப் புனிதமானதாகக் கருதப்படுகிறது. இந்தச் சோகாங்குக் கோவிலில் புத்தரின் திருவுருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை கி.பி. 642 ஆம் ஆண்டில் சீன இளவரசி ஒருத்தியால் கொண்டுவரப்பெற்றதாக வரலாறு கூறும். இவ்விளவரசி சாங்ட்சென் காம்போ (Songtsen Gampo)என்ற அரசரின் மனைவி. இந்த அரசரே திபேத்திற்குப் புத்த சமயத்தைக் கொண்டுவந்தவர். அணிகலன்கள் பூட்டப்பட்டிருக்கும் இச்சிலைக்கு முன்னால் தூய தங்கத்தாலான



இலாசாவில் உள்ள தலாய்லாமாவின் அரண்மனை

பெரிய அழகியநெய் விளக்குகள் படிநிலைமுறைப்படி வைக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்கு எதிரிலுள்ளஅகன்ற தெருவில் மூன்று மாடிக் கற்கட்டடங்கள் மொட்டைத் தளங்களுடன் வெள்ளையடித்த நிலையிலுள்ளன. இங்குள்ள சாளரங்கள் கறுப்பு நிறமானவை. இக்கட்டடங்கள் முன்னர்த் திபேத்தியப் பெருங்குடிமக்களுக்குச் சொந்தமாயிருந்தவை. கீழ்த் தளத்து முன் அறைகள் கடைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. கோயில் சதுக்கத்திற்குப் பின்னால் ஒழுங்காகக் கட்டப்பெறாத, குறுகிய சந்துபொந்துகளில் உள்ள வீடுகளில் பிரபுக்களும் வணிகர்களும் வாழ்கிறார்கள். இவற்றைத் தவிரச் சிறப்பான சமயக் கட்டடங்களும் உள்ளன. இவை பல்லாண்டுகளுக்குமுன் கட்டப்பட்டவை.

இலாசா திபேத்து நாட்டின் ஆன்மிக மையமாகும். இது திபேத்தின் தலைநகரமாக கி.பி. 1642-ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டது. அப்போது ஐந்தாம் தலாய் லாமாவாய் இருந்தவர் அரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இந்நகருக்கு ஒன்றரைக் கி.மீ. தொலைவில் கட்டப்பட்டிருக்கும் போட்டாலா மாளிகை (Potola Palace) இவருடைய தூண்டுதலால் கட்டப்பட்டதாகும். பளிச்சிடும் வெண்ணிறக் கற்களையும் சிவப்பு வண்ணக் கல்முடிகளையும் கொண்ட இம்மாளிகை ஏறத்தாழ 300 மீட்டர் அகலமுள்ள குன்றுப் பாறையின் உச்சியில், பள்ளத்தாக்கிலிருந்து 120 மீட்டா உயரத்தில் எழிலுடன் நிற்கிறது. இம்மாளிகை பல்வேறு சிறப்புகளைக் கொண்டது. உருவ அமைப்பிலும் படிநிலை அமைப்பிலும் வேறுபாடுகள், வண்ணங்கள், மாடிகள், சாளர வரிசைகள், வளைந்து வளைந்து செல்லும் மாடிப்படிகள் இறந்துபட்ட முன்னாளைய தலாய் லாமாக்களின் பளபளக்கும் கூரைகளைத் தாங்கிய கல்லறைகள் ஆகியவை மயிர்க் கூச்செறியும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. தலாய் லாமா தங்கும் அறைகளுடன் வியப்பூட்டும் பல முற்றங்கள், மன்றங்கள், வழிபாட்டிடங்கள், கல்லறைகள், படிநிலை மண்டபங்கள், மாடிப்படிகள் போன்றவற்றையும் இம்மாளிகைக்குள் கண்டுகளிக்கலாம். குன்றின் அடிவாரத்தில் சோ (Sho) என்னும் சிற்றூரும், அச்சுக்கூடம் ஒன்றும், ஆயுதச் சாலையொன்றும், சிறைச்சாலை யொன்றும் அமைந்துள்ளன.

இதன் அண்மையில் இரும்புக் குன்று ஒன்றும் (Iron Hill) சுற்றிச் சுற்றிச் செல்லும் கோபுரக் கோயில் உச்சியில் உள்ளது. இங்குத்தான் நோய்களைக் குண மாக்கும் புத்தரின் (Healing Buddha) ஆலயமுள்ளது. இதற்கும் மேற்கில் குண்டலிங்கு மடாலயம் (Kundeling Monastery)அமைந்துள்ளது. இங்கிருந்து மாநக ரின் கிழக்கு எல்லை வரையிலுள்ள வட்ட வடிவப் பாதையைப் பயணியர் சாலை என்பர். இது பத்துக் கி.மீ. நீளமுள்ளது. இறைப்பற்றுள்ள அன்பர்கள் நாள்தோறும் இதனை வலம் வருவர்.

சீனர்களின் ஆட்சிக்கு முன்: இலாசாவின் மக்கள் தொகை 1951-ஆம் ஆண்டுக்கு முன்னர் 25,000 என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இம்மக்கள்தொகையுள் இலாசாவுக்கருகில் அமைந்துள்ள இரு மடாலயங் களில் வாழும் 15,000 புத்த பிக்குகள் அடங்கார். திரிபாங்கு (Drepang), சேரா (Sera) என்னும் பெயர் களைக் கொண்ட இம்மடாலயங்கள் இலாசாவின் கோயிலிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளவை. இம் மடாலயங்களில் வாழும் புத்த பிக்குகளின் வலிமை யான செல்வாக்குக்கு இங்குள்ள சமயச் சார்புள்ள அரசு பணிகிறது.

ஒவ்வோராண்டும் பிப்பிரவரி-மார்ச்சு மாதங் களில் புத்தாண்டு வழிபாட்டிற்காக ஆயிரமாயிரம் பிக்குகளும் பயணிகளும் இலாசாவில் திரளுகிறார் கள். இத்திருவிழா இரண்டு வாரங்களுக்கு நடை பெறுகிறது. அதனை அடுத்துப் பண்டைய படைக் கலங்களை ஏந்திய குதிரைவீரர்களின் அணிவகுப் புகள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் ஆங் கில அரசின் பேராளர்கள் 1936 முதல் 1947 வரையி லும், பின்னர் இந்தியாவின் பேராளர்கள் 1962-ஆம் ஆண்டு வரையிலும் கலந்துகொண்டு அவற்றைச் சிறப்பித்தனர். தேசிய சீனாவின் பேராளர்கள் 1935 முதல் 1950 வரையிலும் கலந்து கொண்டனர். நேபாள நாடும் பேராளர்களை அனுப்பி வந்தது

சீனாவின் பொதுவுடைமைக் கட்சியினர் திபேத்தை 1951-இல் கைப்பற்றிக் கொண்டனர். அதுவரை இலாசா நகர் இக்கால நகரமாக மாற வில்லை. இங்கு மின்வசதிகள், குழாய்நீர், சாக்கடை வசதி, சாலைகளைத் துப்புரவு செய்யும் பணி,வாகன வசதி, காவல் படை போன்றவை இல்லை. எனினும் இது சுறுசுறுப்பான ஒரு வணிகமையமாக உள்ளது. கோவேறு கழுதைகளின் மீது சுமந்து கொண்டுவரப் பட்ட செங்கல், தேயிலை, பட்டுப் போன்றவை சீனாவிலிருந்தும், துணிமணிகள், உலோகப்பொருள் கள், பல்வேறு தட்டுமுட்டுப் பொருள்கள் போன் றவை இந்தியாவிலிருந்தும், அரிசி பூட்டான் பகுதி களிலிருந்தும் இந்நகருக்கு வருகின்றன. மயிர், கால்நடைகளின் பதனிடப்படாத தோல்கள், புனுகு, பொன்துகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்களா கும்.

சீனர்களின் ஆட்சி 1951-இல் ஏற்பட்டது. சீனப் படைவீரர்களும் அலுவலர்களும் திபேத்து வந்துற்ற போது பெரும் மாற்றங்கள் விளைந்தன. இலாசா விற்குப் புதியசாலைகள் போடப்பட்டன. நகருக்கு அண்மையிலிருந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டி னார்கள். இராணுவப் பாடி வீடுகளும் அலுவலர் குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டன. மருத்துவ மனைகள், நகரமன்றம், சிறுசிறு தொழிற்சாலைகள் போன்றவை இங்கு அமைக்கப்பட்டன. புதிய கட்ட டங்களைத் தலத்திலே கிடைத்த பொருள்களைக் கொண்டு அமைத்தார்கள். பின்னர்ப் பெருங்கற் களால் கட்டப்பெற்ற கட்டடங்களும் நீர்மின் ஆலையும் எழுந்தன.

அயலார் ஆட்சியை எதிர்த்து 1959-இல் பொது மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆனால், அதனைச் சீன அரசு நசுக்கிவிட்டது. தலாய் லாமா இந்தியா வில் தஞ்சம் புகுந்தார். இதன் பின்னர்ச் சீன அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. திபேத்திய அரசும் சமயமும் சமூகமும் அழிக்கப்பட்டுக் கலைக் கப்பட்டன. இராணுவ ஆட்சி நிலைநாட்டப்பட்டது. மடாலயங்கள், பெருங்குடி மக்கள் போன்றோரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. சமயத் தொடர்பான கட்டடங்கள் சமயத் தொடர்பில் லாப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இங் கிருந்த கட்டடங்களுள் புகழ் பெற்றிருந்த ஒரு சிலவே வரலாற்றுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டன. கம்பளத் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட்டது. போதுமான அளவு மின்சக்தியை உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சாலை களைத் துப்புரவு செய்யும் பணி தொடங்கப்பட்டா லும் குழாய்வழி நீர்வழங்குதல், பாதாளச் சாக கடைகள் போன்றவை இன்றும் செய்து தரப்பட வில்லை.

இலாசாவில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டி ருப்பதாகக் கூறுகிறார்கள். இதன் பரப்பு இருமடங் காகப் பரந்துள்ளது. மக்கள் தொகையும் பெருகி யுள்ளது. புதிய பள்ளிகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவை கட்டப்பட்டுள்ள னவாகக் கூறுகிறார்கள். ஆனால், 1962-ஆம் ஆண்டுக் குப் பின்னர் அயலார் இந்நகரத்திற்குள் அனுமதிக் கப்படாமையால் சரியான செய்தியை அறிந்து கொள்வது எளிதன்று .1966-67-இல் ஏற்பட்ட பண் பாட்டுப் புரட்சியின்போது செங்காவலர்கள் அத்து மீறி நடந்து, இலாசாவிலிருந்த புத்த சமயக் கோயி

லைச் சீர்குலைத்ததுடன், புத்தசமயச் சுவடுகள் கூட இல்லாமல் அழித்துவிட்டார்கள். அயல் நாட்டு வாணிகம் 1959-ஆம் ஆண்டுக்குப் பின்னர், நின்று விட்டது. இக்காலத்தில் பெருமளவில் சீனர்கள் இங்கு வந்து குடியேறியுள்ளதாகத் தெரிகிறது.

இலாசாவின் மக்கள்தொகை ஏறத்தாழ 1,00,000 (1975).

**இலா சால் (கி.பி. 1643-1687)** என்னும் பிரெஞ்சுக்காரர் புது நாடுகளைக் காணச் சென்ற ஆய்வாளர்களுள் ஒருவர். இவர் வட அமெரிக்காவில் மிசிசிப்பி ஆற்றின் தொடக்கத்தை ஆராய்ந்தவர்.

இலா சால் (La Salle) பிரான்சு நாட்டில் உரூவன் என்னும் நகரில் கி.பி. 1643-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் நாள் பிறந்தார். இவருடைய தொடக்க காலப் பெயர் இரேனே இராபர்ட்டு கவிலியர் (Rene Robert Cavelier) என்பதாகும். வணிகக் குடும்பம் ஒன்றில் பிறந்த இவர், உரூவன் நகரிலிருந்த ஏசு கல்லூரியில் (Jesuit College) கல்வி கற்று, ஏசு சங்கத்தில் பயிற்சி பெறாத இளைஞராகச் சேர்ந்தார். ஏசு சங்கத்தின் உறுப்பினராக கி.பி. 1660 அக்டோபர் 10-ஆம்நாள் தீட்சை பெற்றார்.

ஏசு பள்ளிகளில் கற்பித்துக் கொண்டே ஆறு ஆண்டுகள் இவர் தம் கல்வியை மேற்கொண்டார் இவருடைய தடுமாற்றக் குணங் காரணமாக இவர் தம் உறவினர்களும் நண்பர்களும் இவரை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். மேலும் இவர் சார்ந்திருந்த ஏசு சங்கத்தின் நடைமுறைகள் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டவை. இவற்றை ஏற்று நடக்கவும் இவரால் இயலவில்லை. இறுதியாக இவர் கி.பி.1667-இல் ஏசுசங்கப் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றார். பின்னர்இவர் ஏசு சங்கத்தினரைக் கடுமையாகக் குறை கூறினார்.

இவர் தம் உடன்பிறப்பாளரான அபிசீன் கவலியர் என்பாருடன் கி.பி. 1667-இல் கனடாவிலுள்ள மாண்ட்ரியால் நகரிலுள்ள கல்விக்கூடத்தில் சேர்ந்தார். மாண்ட்ரியாலுக்கு அருகிலிருந்த இலா சின் (Lachine) என்னும் ஊரில் மென்மயிர் வணிகராக வாழ்வைத் தொடங்கினார்.

இலா சாலின் ஆய்வுப் பயணம்: உலூயி சோலியட்டு (Louis Jolliet) என்பாரும் மார்குவெட்டு பாதிரியாரும் (Father Marquette) மிசிசிப்பி ஆற்றை அர்க்கன்சா ஆறு வரை கண்டுபிடித்திருந்தார்கள். இலா சால் கி.பி. 1677-இல் மிசிசிப்பி ஆற்றை அதன் முகத்துவாரம் வரை கண்டறியும் உரிமையைப் பெறுவதற்காகப் பிரான்சு நாடு சென்றார். பிரான்சு அரசர் பதினான்காம் உலூயி (Louis XIV) கி.பி. 1678-ஆம் ஆண்டு மே மாதத்தில், வட அமெரிக்காவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளில் கோட்டைகளை நிலைநாட்டும் உரிமையை வழங்கினார். இலாசால் பெருந்தொகையை முதலீடு செய்வதற்காகக் கடன் வாங்கினார். ஆண்டாரியோ (Ontario), ஈரி (Erie) ஏரிகளில் பயணம் செய்யக் கப்பல்களை விலைக்கு வாங்கினார். மியாமி (Miami), இல்லியனாய் ஆறுகளில் வாணிகப் பற்றிடங்களை நிலைநாட்டினார். பிராண்டிநாக்குப் பிரபுவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இல்லியனாய்ப் பகுதியில் மென்மயிர் வாணிகத்தைத் திருட்டுத்தனமாக மேற்கொண்டார்இலா சால். பிரான்சு நாட்டு மென்மயிர் வணிகரான என்றி டி தோண்டி (Henri de Tonti) என்னும் பயணியுடனும், இன்னும் பலருடனும் கி.பி. 1682-ஆம் ஆண்டில் மிசிசிப்பி ஆற்று முகத்துவாரம் வரை சென்றார். அவ்வாண்டு ஏப்பிரல் 9-ஆம் நாள் தாம் கண்டுபிடித்த பெரும் பகுதியைப் பிரான்சு நாட்டுக்கு உரிமையாக்கி அப்பகுதிக்கு இலூசியானா (Louisiana) என்று பெயர் சூட்டினார். இலூயி மன்னரின் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது.

இலாசால் கி.பி. 1682-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இல்லியனாய் ஆற்றின் போக்கிலிருந்த செங்குத்தான பகுதியில், புனித உலூயி கோட்டையைக் கட்டினார். மிசிசிப்பி ஆற்றின் முகத்துவாரத்தில் குடியேற்றப் பகுதியொன்றை நிலைநாட்ட விழைந்தார்.

பிரான்சிலிருந்து இலாசால் கி.பி. 1684-ஆம் ஆண்டு கப்பற் பயணம் மூலம் மெக்சிகோ வளைகுடாவுக்கு நான்கு கப்பல்களுடனும் 300குடியேறுபவர்களுடனும் சென்றடைந்தார். எனினும், இப்பயணம் மிசிசிப்பியைச் சென்றடையவேயில்லை. ஏனெனில் இலாசால் தவறுதலாக வேறு ஆறு ஒன்றில் பயணம் சென்று வழி தவறிவிட்டார். இவர் கி.பி. 1685-இல் குடியேற்றம் ஒன்றை நிறுவி அதற்குப் புனித உலூயி கோட்டை எனப் பெயரிட்டார். இது மிசிசிப்பிக்கு மேற்கிலுள்ளது.

ஏற்கனவே அங்கு வாழ்ந்து வந்த செவ்விந்தியர் இலாசாலின் புதிய குடியேற்றத்தை அழித்துவிடப் போவதாக அச்சுறுத்தினர். மேலும், குடியேற வந்தவர்களுள் பலர் நோய்வாய்ப்பட்டு மடிந்தனர். இக்குடியேற்றப்பகுதி நீடித்து நிலைக்க கி.பி. 1687-இல் உடனடியாக உதவிகள் தேவைப்பட்டன. இலா சாலும் இவருடைய துணைவர்கள் பலரும் தரை வழியாக மிசிசிப்பியின் முகத்துவாரத்தைக் காணக் கனடாவிலிருந்து பயணம தொடங்குவதெனத் திட்டம் தீட்டினர். எனினும் இவர்களால் அந்த ஆற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இலாசாலின்

துணைவர்களுள் சிலர் கலகம் செய்தனர். முதலில் இலா சாலின் உடன்பிறந்தாரின் மகனையும் பின்னர் இலா சாலையும் கொன்று விட்டனர். இலாசால் கி.பி. 1687-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ஆம் நாள் தெக்சாசு (Texas) என்னுமிடத்தில் கொல்லப் பட்டார். இப்பயணத்தில் பங்கு பெற்றவர்களுள் அறுவரைத் தவிர ஏனையோர் மடிந்தனர். பின்னர்ப் பிரான்சு அரசு இலா சாலின் உரிமையின் அடிப் படையில், அமெரிக்காவில் உலூசியானாவை நிலை நாட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் இலா சாலின் பெயரில் நகரங்கள் உள்ளன.

**இலாசியம்** என்பது இந்திய நடன வகை களுள் ஒன்றாகும். இந்திய நடனம் இலாசியம், தாண்டவம் என்னும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் ஆடும் நடனம் தாண்டவ நடனவகையைச் சேர்ந்தது. தாண்டவம் ஏழு பெரும் பிரிவுகளும் 108 வகைகளும் உடையது. இலாசியம் மென்மையான நடனத்தைக் குறிக்கும். உமையவள் இலாசிய நடனம் ஆடியதாகப் புராணங் கள் கூறுகின்றன. நாட்டிய சாத்திரம் இலாசிய நடனத்தை, ஒரு நடனக்கலைஞர் மட்டும் தனித்துப் பல்வேறு நடனப் பகுதிகளை ஆடும் முறை என்றும், இதில் பத்து உறுப்புகள் அடங்கியுள்ளன என்றும் கூறுகிறது.இந்தப் பத்து உறுப்புகளிலும் நடனக் கலை ஞர் பல்வேறு மனவெழுச்சிகளை வெளிப்படுத்தி ஆடு வர். இவற்றினின்று பிற்காலத்தில் முக அபிநயங்கள் தோன்றின என்று கருதப்படுகிறது. இலாசிய நடனத்தில் அபிநயம் தலையாய இடம் பெறுகிறது. இக்காலத்தில் சதிர் நாட்டிய முறையில் ஆடப்படும் பரத நாட்டியம் இலாசிய நடன வகையைச் சேர்ந்த தாகும். இலாசிய நடனத்தில் பதம் என்னும் பகுதி யில் மிகுதியான அபிநயங்களைக் காட்டும் வாய்ப்பு உள்ளது. இந்திய நடனங்களுள் மணிபுரி நடனம் இலாசிய நடனமாகவே அமைந்துள்ளது. காண்க: அபிநயம்; இந்திய நடனங்கள்.

**இலாசுகி எரால்டு சோசபு(கி.பி.1893-1950)** ஆங்கில அரசியல் அறிவியலாருள் ஒருவர்; இவர் ஒரு சமூகவியலாரும் ஆவார். இவர் கி.பி.1893-ஆம் ஆண்டு மான்செசுட்டரில் பிறந்தார்.ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இவர் கானடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளின் பல் கலைக் கழகங்களில் 1914-க்கும் 1920-க்கும் இடைப் பட்ட ஆண்டுகளில் உரையாற்றிப் புகழ்பெற்றார். மாக்கில் (McGill), ஆர்வர்டு (Harward), ஏல் (Yale) போன்ற பல்கலைக் கழகங்கள் அவற்றுள் சில. இவர் இலண்டன் பொருளாதார இயல் பள்ளியில் 1920 ஆம் ஆண்டில் கற்பிக்கத் தொடங்கினார். அங் கேயே 1926-இல் இவர் அரசியல் துறைப் பேராசிரிய ரானார்.

இலாசுகி எரால்டு சோசபு (Laski, Herald Joseph) சிறந்த சொற்பொழிவாளர். மாணாக்கர் இவரை உளமாரப் போற்றிப் புகழ்ந்தனர். இங்கி லாந்து தொழிற்கட்சியின் நிருவாகக் குழுவில் உறுப் பினராக இருந்து, 1936 முதல் 1949 வரை பணியாற் றினார். இவர் கி.பி. 1945 முதல் 1946 வரை தொழிற்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் எழுதிய சிறப்பான நூல்கள் பின்வருவன: அரசியற் கலை இலக்கணம் (A Grammer of Politics 1925), இக்கால அரசுகளில் உரிமை (Liberty in the Modern State - 1930), அமெரிக்கக் குடியரசுத் தலைவர்முறை (The American Presidency - 1940), அமெரிக்க மக்களாட்சி முறை (The American Democracy-1948), அரசியல் அமைப்புத் திட்டம் பற்றிய ஆய்வுகள் (Reflections on the Constitution-1951). இவர் காலமான பின்பு இவர்தம் இறுதிச் சொற் பொழிவுகள் வெளியிடப்பட்டன. சென்னைப் பச்சையப்பன் கல்லூரி முதல்வராகவும் பொருளா தாரப் பேராசிரியராகவும் இருந்த இராசேசுவரன் இலாசுகியின்மாணவர்களுள் ஒருவர்.

**இலாசுகோ குகை** பிரான்சு நாட்டில் விசிர் (Vezere) பள்ளத்தாக்கில் மாண்டிக்நாக்கு (Montig nac), தோர்தோகன் (Dordogne) என்ற இடங் களுக்கு அருகில் அமைந்துள்ள குகை. இது பழங்கற் காலக் குகைகளுள் புகழ்பெற்றது. உலகப் புகழ் பெற்ற கடைக்கற்கால (கி.மு.35,000-கி.மு.8,000) ஓவியங்கள் இக்குகையில் காணப்படுகின்றன. கி.பி. 1940-ஆம் ஆண்டு இக்குகை 4 சிறுவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இச் சிறுவர்களுடன் வந்த நாய் தவறுதலாக இக்குகையினுள் சென்றுவிடவே அந் நாயைத் தேடும் பொருட்டு இச்சிறுவர்கள் இக்குகை யினுள் சென்றனர்.

இலாசுகோ குகையினுள் (Lascaux) பல அடித் தள அறைகள் காணப்படுகின்றன. இவ்வறைகளை வழி ஒன்று இணைக்கிறது. ஓவியங்களும் செதுக்கு வேலைகளும் காணப்படும் பகுதி குகையின் இறுதியில் இருட்டான பகுதியில் உள்ளது. இக்குகையில் விலங்குகளின் ஓவியங்கள் காணப்படுகின்றன. விலங்குகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன. விலங்குகள் இயற்கையான முறையிலும் அவற்றின் செயல்கள் சிறந்த முறையிலும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. பல விலங்குகள் உடலில் அம்பும் ஈட்டியும் தைத்த நிலையில் தீட்டப்பட்டுள்ளன. காட்டெருது, பன்றி, குதிரை, மான், காண்டா மிருகம், ஓநாய் போன்ற விலங்குகள் இவ்வோவியங்

களில் உள்ளன. கலைமான் கூட்டம் ஒன்றின் தலைப் பகுதி மட்டும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது. இது மான்கள் ஆற்றைக் கடந்து நீந்திச் செல்வது போல் வரையப்பட்டதாக இருக்கலாம். மனிதர்களின் கூட்டம் ஒன்று காண்டாமிருகத்தையும் காட்டெருதையும் சுற்றி இருப்பது போல் வரையப் பட்டுள்ளது. இவை இரண்டும் காண்பவரின் கருத்தைக் கவர்வனவாக உள்ளன. ஓவியங்கள் சிவப்பு, மஞ்சள், காவி, கறுப்பு வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன.

இக்குகை ஓவியங்களின் காலத்தை கார்பன்-14 முறைப்படி கணக்கிட்டதில் இவ்வோவியங்கள் கடை ஆரிக்னேசியன்(Late Aurignacian), பெரிகோர்டியன் (Perigordian) காலங்களைச் சார்ந்தன எனக் கண்டறியப்பட்டன. முதலில் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இக்குகை ஓவியங்களில் பூஞ்சை படரத் தொடங்கியது. எனவே இக்குகை 1963-ஆம் ஆண்டு மூடப்பட்டது.

**இலாட்டிமர் (கி. பி. 1485—1555)** என்பார் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மறுப்புரை (Protestant) சமயச்சீர்திருத்தக்கொள்கையக்கொள்கைகளுக் காகப் போராடித் தம் உயிரை ஈந்தவர்.

இலாட்டிமர் (Latimer) கி.பி. 1485-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் இவரைக் கற்பதற்காகக் கேம்பிரிட்சுக்கு கி.பி. 1506-இல் அனுப்பி வைத்தார். இவர் வாழ்வியல் கல்வியில் முதுகலைப் பட்டத்தை கி.பி. 1514-இல் பெற்றார்; பின்னர்ச் சமய குருவானார். தொடக்கத்தில் கத்தோலிக்கரான இவர், தம் நண்பர் தாமசு பில்னி (Thomas Bilney) என்பாரின் செல்வாக்கினால் மறுப்புரைச் சமயத்தில் நம்பிக்கை கொண்டவரானார். தம் சம காலத்தவரான இங்கிலாந்து அரசர் எட்டாம் என்றியின் ஆதரவைப் பெற்ற இலாட்டிமர், மேற்கு கிங்டன் (West Kington) என்னும் பகுதியை கி.பி. 1531-இல் கொடையாகப் பெற்றார்.

தாமசுகிராம்வெல் (Thomas Cromwell), தாமசு கிரான்மர் (Thomas Cranmer) என்னும் இருவர் இலாட்டிமருக்கு நண்பா ஆயினர். இவர்களுள் முன்னவர் பிற்காலத்தில் அரசரின் தலைமை அமைச்சரானார். பின்னவர் காண்டர்பரித் தலைமைக் குரு ஆனார். இலாட்டிமர் சமயங்களுக்கு மாறான கருத்துகளைப் போதித்தவர் என்னும் குற்றச்சாட்டு வந்தபோது, இவருடைய நண்பர்களால் இவரைக் காப்பாற்ற இயலவில்லை. இவரை விசாரிக்க வந்தவர்கள் சமயங்களுக்கு மாறான கருத்துகளைப் போதிக்கக் கூடாது எனக் கூறியபோதும் இவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். அதனால் இவர் சமயநீக்கம் செய்யப்பட்டதுடன், கி. பி. 1532-ஆம் ஆண்டு ஏப்பிரலில் சிறையிலும் அடைக்கப்பட்டார். பின்னர்த் தாமசு கிராம்வெல்லின் செல்வாக்கினால் இலாட்டிமர் கி.பி. 1535-இல் வொர்செசுடர் குருவின் ஆட்சிப் பகுதியின் தலைவராக உயர்த்தப்பட்டார். சமயச் சீர்திருத்தத் தலைவர்களுள் ஒருவராக கி.பி. 1536-ஆம் ஆண்டளவில் இவர் கருதப்பட்ட போதிலும், திருச்சபைக் கோட்பாடுகளில் மாற்றம் வேண்டி இவர் யாதொரு பணியையும் செய்ய வில்லை. எனினும் சமய குருமார்களின் குருட்டு நம்பிக்கைகளைக் கடுமையாகச் சாடியும், திருச்சபையின் பணியால் உயர்த்தப்பட வேண்டியவர்களின் வறுமையைத் திருச்சபையின் செல்வ வளத்தோடு ஒப்பிட்டும் இவர் ஆற்றிய உரைகள், நாட்டில் விழிப் புணர்ச்சியை உண்டாக்கின. இலாட்டிமர் கி.பி. 1536-ஆம் ஆண்டில் தம் பொறுப்பை விட்டு விலகுமாறு வற்புறுத்தப்பட்டார். இதற்குக் காரணமாய் அமைந்தது இங்கிலாந்தில் வைதிக கத்தோலிக்கச் சமயத்துக்கு அப்போது ஏற்பட்ட ஆதரவுதான். கிராம்வெல் கி.பி. 1540-இல் வீழ்ச்சியுற்றார்.

இலாட்டிமரின் வாழ்வு எட்டாம் என்றி மன்னரின் எஞ்சியிருந்த ஆட்சிக்காலத்தில் இருள் சூழ்ந்ததாக இருந்தது. சமய எதிர்ப்பாளர் என்னும் ஐயப்பாட்டின் விளைவாக இலண்டன் கோபுரச் (Tower) சிறையில் சிறிது காலம் இவர் அடைக்கப்பட்டார். எட்டாம் என்றியின் ஆட்சிக்கால இறுதி மாதங்களில் இவர் மிகத் துன்புறுத்தப்பட்டார். ஆறாம் எட்வர்டு கி.பி. 1547 சனவரியில் முடி சூட்டிக் கொள்ளும்வரை இத்தொல்லை நீடித்தது. இப்புதிய அரசரின் ஆட்சிக் காலத்தில் மறுப்புரைக் கிறித்தவச் சமயம் பெரும் செல்வாக்கடைந்தது. இலாட்டிமருக்குத் தம் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிட்டியது. குரு (Bishop) ஆட்சிப் பகுதியின் பொறுப்பினை ஏற்க மறுத்த இவர், சுதந்திரமாகச் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பேச முற்பட்டார். இவருடைய சொற்பொழிவுகளை மக்கள் பெரும் கூட்டமாகக் கூடிக் கேட்டனர். அரண்மனையிலும் இவரை ஆதரிப்போர் உளராயினர். ஆனால் ஆறாம் எட்வர்டின் ஆட்சி முடிவுற்றபோது இவருடைய சமயச் சீர் திருத்தக் கருத்துகளை அரியணை ஏறிய மேரி தியூடர் (Tudor) அம்மையார் ஆதரிக்கவில்லை. அரசியார் ஒரு கத்தோலிக்கச் சமயச் சார்பாளராக இருந்தமையால் இவருக்குத் தொல்லைகள் தொடர்ந்தன. இவர் கி.பி. 1553-ஆம் ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக ஆக்சுபோர்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு கி.பி. 1555-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் நாள் மற்றொரு

சமயச் சீர்திருத்தக்காரரான நிக்கோலசு இரிட்லி என்பாருடன் எரிக்கப்பட்டு உயிர்துறந்தார்.


**இலட்டிரான் உடன்படிக்கைகள் (1929)** இத்தாலிய அரசுக்கும் போப்பாண்டவருக்குமிடையே ஏற்பட்டன. இத்தாலியப் படைவீரர்கள் கி.பி. 1870-ஆம் ஆண்டில் உரோமாபுரியில் நுழைந்தமையால், போப்பாண்டவருக்கும் இத்தாலிய அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இலட்டிரான் உடன்படிக்கைகள் (Lateran Treaties) இம்மோதலை முடிவுக்குக் கொணர்ந்தன. இவ்வுடன்படிக்கைகளின் பயனாக, வத்திகன் (Vatican) மாநகரம் தனியொரு சுதந்திர நாடாக அமைய வழிபிறந்தது. வல்லாண்மைக் கட்சி (Fascist) அரசு உரோமனியக் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இத்தாலிய அரசுக்கும் இடையே நல்லுறவு உடன்படிக்கையை உறுதி செய்தது. இத்தாலிய அரசு கி.பி. 1870-ஆம் ஆண்டில் கைப்பற்றிக்கொண்ட போப்பாண்டவர் ஆட்சிப் பகுதிக்கு ஈடாகப் பெரும் தொகை ஒன்றினை, 1922-29-ஆம் ஆண்டுகளில் போப்பாண்டவராயிருந்த பதினோராம் பயசு என்பார் பெற்றுக்கொண்டார். வத்திகனின் சிறைக் கைதிபோல் இருந்த போப்பாண்டவரின் நிலையும் இதனால் மாற, அவருக்குரிய மதிப்பும் உயர்ந்தது. இவ்வுடன்படிக்கைகள் 1929 - ஆம் ஆண்டில் ஏற்பட்டன.

**இலாட்வியா** முன்னர்ச் சுதந்திர நாடாக இருந்து, இப்போது உருசியாவின் குடியரசுகளுள் ஒன்றாகி உள்ளது.

எல்லைகள்: மேற்கில் பால்டிக்குக் கடலும், வடக்கில் எசுதோனியாவும் பைலோருசியாவும், கிழக்கில் உருசியக் கூட்டாட்சிச் சோவியத்துக் குடியரசும் (Russian SFSR), தெற்கில் இலிதுவேனியாவும் இலாட்வியாவின் (Latvia) எல்லைகளாகும்.

இலாட்வியா 1918 முதல் 1940 வரை சுதந்திரக் குடியரசாக இருந்தது. 1940-இல் இது பொதுவுடைமைக் குடியரசுகளின் கூட்டாட்சி ஒன்றியத்தின் (U.S.S.R.) ஒரு பாகமாக இணைக்கப்பட்டது. இவ்விணைப்பை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் வேறு சில நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இலாட்வியாவின் தலைநகர் இரீகா (Riga) என்னும் நகரமாகும். இந்நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த மாநகரும் துறைமுகமும் ஆகும். பால்டிக்குக் கடற்கரையில் இரீகா வளைகுடாவில் அமைந்துள்ளது. இலாட்வியாவின் பரப்பு 63,700 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 23,65,000 (1970).

நிலம்: இலாட்வியாவின் நிலம் பெரும்பாலும் தாழ்நிலப் பகுதியாகும். குன்றுகளும் மலைப்பள்ளத்




இலாட்வியா

தாக்குகளும் ஆங்காங்கே அமைந்துள்ளன. பால்டிக்குக்கடலையும், இரீகா வளைகுடாவையும் பெரும்பாலும் மென்மணலையும், தாழ்ந்த களிமண் கடற்கரைகளையும் எடுப்பான உப்பங்கழிகளையும் மணல் மேடுகளையும் கொண்டு விளங்குகிறது இலாட்வியா. இங்குப் பல சிறு ஏரிகளும் சதுப்பு நிலங்களும் உள்ளன. இந்நாட்டின் மொத்த நிலத்தில் 40 விழுக்காடு காடுகளாகும். நடு இலாட்வியாவிலுள்ள இந்நாட்டின் மலையுச்சி 312 மீட்டர் உயரமுள்ளது.

ஆறுகள்: மேற்குத் தீவினா இலாட்வியாவின் சிறப்பான ஆறாகும். இது வடமேற்கில் பைலோருசியாவின் குறுக்காக ஓடி, நடு இலாட்வியாவில் பாய்ந்து, இரீகா வளைகுடாக் கடலில் கலக்கிறது. இலாட்வியாவிற்கு 472 கி.மீ. நீளக் கடற்கரை உள்ளது. கடற்கரைப் பகுதிகளில் பல தங்குமிடங்கள் உள்ளன.

தட்பவெப்பநிலை: இலாட்வியா மித வெப்ப மண்டலத்தில் உள்ள குடியரசாகும். இங்கு ஆண்டொன்றுக்கு 50 முதல் 80 செ.மீ. மழை பொழிகிறது.

பொருளாதாரம்: இலாட்வியாவின் முக்காற்பங்கு வருவாய் செய்தொழில்களின் மூலம் கிடைக்கிறது. சோவியத்து அரசு அனைத்துத் தொழிற்சாலைகளையும் கட்டுப்படுத்துகிறது. மின்சாரக் கருவிகள், வீட்டுக்குப் பயன்படும் கருவிகள், இயந்திரங்கள்,

பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள், பேருந்து கள், இருப்புப்பாதை வண்டிகள், உருக்கு போன்ற வையும் உற்பத்திசெய்யப்படுகின்றன.

வேளாண்மையால் இக்குடியரசு ஐந்திலொரு பங்கு வருவாயைப் பெறுகிறது. பார்லி, பிளாக்சு, ஓட்சு, உருளைக்கிழங்கு, 'ரை' போன்றவை விளை பொருள்கள். பால்பண்ணை, கால்நடைப்பண்ணை போன்ற தொழில்களிலும் பல குடியானவர்கள் ஈடுபட்டுள்ளனர். சோவியத்து உருசியாவின் அரசு இலாட்வியாவின் பண்ணைகளைக் கூட்டுறவுப் பண்ணை முறையில் நடத்துகிறது. குடியானவர்கள் பண்ணையில் உற்பத்தி செய்யும் பொருளில் ஒரு பங்கைப் பெறுகிறார்கள்.

வரலாறு: இலாட்வியாவின் வரலாறு, செருமானி யச் செல்வாக்கில் இலாட்வியர் இருந்தகாலம் என வும், சோவியத்து உருசியாவின் செல்வாக்கில் வந்த காலம் எனவும் இருவகைப்படும். செருமானியச் செல்வாக்கில் இலாட்வியா இருந்த காலமான 13-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டுவரை யிலான காலகட்டம் கிறித்தவச் சமயம் புகுத்தப் பட்ட காலமாகும்.

சோவியத்து உருசியாவின் செல்வாக்கில் வந்த காலம் 18-ஆம் நூற்றாண்டாகும். இக்காலகட்டத் தில் 22 ஆண்டுகள் இலாட்வியா சுதந்திர நாடாக விளங்கியது.

இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்குவதற் குச் சற்று முன்னர், உருசியாவும் செருமனியும் கிழக்கு ஐரோப்பாவைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளும் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இலாட்வியாவை வற்புறுத்தி, அந்நாட்டில் இராணு வத்தளங்களை அமைத்துக் கொள்ளும் உடன்படிக் கையை உருசியா செய்துகொண்டது. உருசியாவின் படைகள் 1940, சூன் மாதத்தில் இலாட்வியா வைக் கைப்பற்றிக் கொண்டன. இலாட்வியாப் பொதுவுடைமைக் கட்சி அரசாங்கத்தை நடத்த லாயிற்று. அதே ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் இலாட் வியா சோவியத்து உருசியாவின் பகுதியாயிற்று.

செருமானியப் படைகள் இலாட்வியாமீது 1941-இல் படையெடுத்தன. இலாட்வியா செருமானியர் வசம் 1944 வரை இருந்தது. அந்த ஆண்டில் சோவி யத்துப் படை வீரர்கள் இலாட்வியாவை மீண்டும் கைப்பற்றிக்கொண்டார்கள். அப்போது இலாட்வியா வைக் கைப்பற்ற வந்த உருசியர்களைப் பல இலாட் விய மக்கள் தடுத்தனர். ஆனால் சோவியத்துப் படை வீரர்கள் தடுத்தவர்களைக் கொன்று நவித்தோ நாடு கடத்தியோ எதிர்ப்பை அடக்கினர்.

உருசியர்களின் ஆட்சியின் விளைவாக இலாட் வியாவில் வாழ்க்கை பெரும் மாறுதலடைந்துள்ளது. அங்கு வலிமை மிக்க பொதுவுடைமை அரசாங்கத்தை உருசியா நிலைநாட்டி, அனைத்து நிலங்களையும் தொழிற்சாலைகளையும் நாட்டுடைமையாக்கியது. மேலும் எண்ணற்ற உருசியர்கள் இலாட்வியாவில் குடியேறி அதன் பண்பாட்டையும் மொழியையும் பெருமளவு மாற்றிவிட்டார்கள். எனினும் பல இலாட்வியர்கள் உருசியரின் ஆட்சியை எதிர்த்துப் போராடிவருகிறார்கள்.

**இலாடப் பேரரையன்** இலாடர் குலத் தலைவன்; முதலாம் இராசராசப் பெருமன்னனின் குறுநில மன்னன். இவன் வீரசோழன் இலாடப் பேர ரையன் எனக் குறிக்கப்பெறுகிறான்

தொண்டை மண்டலத்தில் படுவூர்க் கோட்டத் தில் உள்ள பெருந்திமிரி (இக்காலத்திய ஆர்க்காட்டுப் பகுதி) நாட்டை ஆண்டு வந்த அரசக் குடியினர் இலாடர் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின் றனர். பராந்தக சோழன் ஆட்சிக்கால முதலே இலாடர் சோழ மரபினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

வீரசோழன் இலாடப் பேரரையன் இலாடராசன் புகழ்விப்பவர் கண்டன் என்பானின் மகனாவான். முதலாம் இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டில் இலாடப் பேரரசன் தன் அரசியாரின் வேண்டு கோளுக்கு இணங்கச் சில வரிகள் மூலம் வரும் பொருளைச் சமணப் பள்ளிக்கு வழங்கினான்.

இராசராசனின் மனைவியருள் ஒருத்தியான இலாடமாதேவி என்பாள் இலாடர் மரபினள் என் பது குறிப்பிடத்தக்கது.

**இலாடின்** ஐரோப்பாவில் கி.மு. 5-ஆம் நூற் றாண்டில் இருந்த இரும்புக் காலப் பண்பாடு. இலாடின் (Latene) பண்பாடு ஆல்சுடாட்டு (Halls tatt) பண்பாட்டு மக்களான கெல்டுகளிடம் வளர்ந் தது. இப்பண்பாடு கி.மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் உரோமானியர்கள் காலம் வரை நிலவியது. கெல்டு கள் இரைன் (Rhine) பகுதியின் மையப்பகுதிகளிலும் பிரான்சிலுள்ள மாரன் (Marne)பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். மது வகைகளை ஏற்றுமதி செய்து மத்திய தரைக்கடல் பகுதியில் தங்கள் நாகரிகத்தையும் புகுத்தினர். இதன் விளைவாக மக்கள் பயன்படுத்தும் பொருள்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. உருளை நான்குகொண்ட வண்டியைப் பயன்படுத்திய மக்கள்

இலாடின் பண்பாட்டின் விளைவாக 2 உருளை வண்டிகளையே பயன்படுத்தினர்.

இலாடின் பண்பாடு ஓர் உயர்குடி மக்களின் பண்பாடாக விளங்கியது. இவர்கள் பயன்படுத்திய பொருள்கள் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டன. வீட்டுச்சாமான்கள், கேடயங்கள், கண்ணாடிகள், காப்புகள், உயர்ந்த களிமண்ணால் செய்யப்பட்ட மட்கலன்கள் போன்றவற்றை இவர்கள் பயன்படுத்தினர். மட்கலன்களில் அழகுமிக்க பூப்பின்னல் வேலைப்பாடுகளை இவர்கள் செய்தனர். இலாடின் பண்பாட்டு மட்கலன்களில் குறிப்பிடத்தக்கதாக இப் பூப்பின்னல் அமைந்தது. இவ்வணி வேலைப்பாடுகள் ஆல்சுடாட்டுப் பண்பாட்டு மக்களிடமிருந்தே வளர்ந்தன. மட்கலன்களில் விலங்கின உருவங்கள் பல பொறிக்கப்பட்டன. இது சைத்தியர்களின் (Scythian) விலங்கின உருவமைப்பிலிருந்து பெறப்பட்டிருக்கலாம். இலாடின் பண்பாட்டு மக்கள் இரும்பினால் பொருள்களை மிக நேர்த்தியான முறையில் அணி வேலைப்பாட்டுடன் செய்தனர். இம் மக்கள் நீளமான கத்தியையே பயன்படுத்தினர். இம்மக்கள் சிற்றூர்களில் அல்லது பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர். போரிடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்த இம்மக்கள் கெல்டிக்குப் பழங்குடியினரின் பழக்கவழக்கங்களையே கொண்டிருந்தனர். இலாடின் பண்பாட்டு மக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தங்களின் மலைக் கோட்டைகளை வலிமையாகவும் விரிவாகவும் கட்டினர். பவேரியாவிலுள்ள (Bavaria) மான்சிங்கு (Manching) என்னும் இடத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் நகரமொன்று இவர்களால் கட்டப்பட்டது. இவ்வகை நகரங்களில் தொழிற்சாலைகளும் இருந்தன. மட்கலன்கள் வனைதல், உலோகத் தொழில் போன்றவை சிறப்பான தொழில்களாக விளங்கின. இவர்களிடையே சமுதாய ஒருங்கிணைப்புக் காணப்படவில்லை. கெல்டிக்கு மக்களின் கடவுள்களும் வழிபாடுகளும் தொடர்ந்து இலாடின் பண்பாட்டு மக்களிடமும் வெளிப்பட்டன. இவர்கள் பொருள்கள் பல செய்து கடவுளுக்குப் படைத்து வழிபாடு நடத்தினர். இப் பொருள்களுள் இரும்பினால் செய்யப்பட்ட பெரிய கத்திகளும் செம்பால் செய்யப்பட்ட கத்தியுறைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இலாடின் பண்பாடு கி.மு. 5-ஆம் நூற்றாண்டிற்கும் 4-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவின் பெரும் பகுதிகளில் வளர்ச்சி அடைந்தது. இக் காலத்தில் இப்பண்பாட்டு மக்கள் உரோமாபுரியைத் தாக்கியும் இத்தாலி மீது படையெடுத்தும் சூறையாடியும் ஆங்காங்கே குடிபெயரவும் தொடங்கினர். கிழக்கு ஐரோப்பாவில் இவர்கள் குடியேறியதுடன் அனடோலியாவிலுள்ள கலாடியாப் (Galatia) பகுதியிலும் குடியேறத் தொடங்கினர். இங்கிலாந்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் குடியமர்ந்த இம்மக்கள் ஒரு புதிய இலாடின் பண்பாட்டை இப்பகுதியில் ஏற்படுத்தினர். இங்கிலாந்தில் ஏற்பட்ட இப்பண்பாடு இரும்புக்காலம்-ஆ (Iron Age - B) எனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டுக் கால மக்கள் தோர்செட்டிலுள்ள (Dorset) மெய்டன் காப்பரணைப் பெரும் மதிற்சுவர்களுடன் கட்டினர். இன்றளவும் இக்காப்பரண் நிலைத்துள்ளது. இக் காப்பரணைப் பெரும் மதிற்சுவர்களுடனும் அதன் மேல் எதிரிகளை உள்ளிருந்து தாக்கப் பெரும் மேடைகளுடனும் கட்டினர். இங்கிலாந்தின் மீது இவர்கள் நடத்திய படையெடுப்புகளும் குடியேற்றங்களும் கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குள் நலிவுறத் தொடங்கியன. இக்கால கட்டத்தில் ஐரோப்பாவிலும் உரோமானியர்களின் ஆளுமை வளரத் தொடங்கியதால், இலாடின் பண்பாடு சிறிது சிறிதாக அழிவுறலாயிற்று. கெல்ட்டுகள் இங்கிலாந்தில் மட்டும் தொடர்ந்து பிரிட்டனி, வேல்சு, அயர்லாந்து ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

**இலாடு வில்லியம்** (கி.பி.1573-1645) காண்டர்பரித் தலைமைக் குருவாக (Archbishop) இருந்தவர்; இங்கிலாந்து திருச்சபை தூய்மை வாதிகளின் செல்வாக்கின்கீழ் வருவதைக் கடுமையாக எதிர்த்தவர். இலாடு (Laud) கி.பி. 1573-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7-ஆம் நாள் இரீடிங்கு (Reading) என்னும் ஊரில் பிறந்தார். ஆக்சுபோர்டில் தூய யோவான் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் அங்கேயே கி.பி. 1593-இல் ஆய்வாளரானார். இங்கிலாந்து திருச்சபையின் சமய குருவாக இவர் கி.பி. 1601-இல் பொறுப்பேற்று ஆக்சுபோர்டிலேயே பல்லாண்டுகள் கழித்தார். தூயயோவான் கல்லூரியின் தலைவராக கி.பி. 1611-இல் பதவியேற்றார். இவர் கி.பி. 1616-இல் கிளவுசுட்டர் கோயில் குருவாகப் (Dean of Gloucester) பதவியில் அமர்ந்தபோது தூய்மைவாதத் தத்துவங்களையும் திருச்சபைச் சட்டங்களையும் மாற்றும் கொள்கைகளை எதிர்த்தார்.

இசுடுவேர்ட்டு (Stuart) மரபின் அரசரான முதலாம் சேம்சு (James I) இவரை கி.பி. 1621 இல் புனித தாவீது ஆட்சிப் பகுதியின் குருவாக அமர்த்தினார். இவருடைய நியமனத்தைத் தூய்மைவாதிகள் எதிர்த்தனர். இலாடு கி.பி. 1622 இல் தம்மை உண்மையான ஆங்கிலத் திருச்சபையைச் சார்ந்தவர் என்று கூறிக்கொண்டார். இருப்பினும் உரோமானியக் கத்

தோலிக்கத் திருச்சபையின் தவறுகளைச் சுட்டிக் காட்ட மறுத்ததைக் கண்ட தூய்மைவாதிகள் அச்ச மடைந்தனர்.

முதலாம் சார்லசு மன்னர் கி.பி. 1626-இல் இவரைத் தூயதாவீதிலிருந்து பாத்து (Bath), வேல்சு (Wales) திருச்சபை மாவட்டங்களுக்கு மாற்றிவிட்டார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இவரை இலண்டனுக்கு மாற்றினார். இலாடு காண்டர்பரித் தலைமைக்குருவாக கி.பி. 1633-ஆம் ஆண்டுவரை பதவியுயர்வு பெறவில்லையாயினும், ஆங்கிலத் திருச்சபை நடவடிக்கையில் இவருடைய செல்வாக்கு மிகுதியாக இருந்தது.

தலைமைக் குருவாகப் பதவி பெற்றதும் பொது வழிபாட்டு நூலைப் பயன்படுத்தல், இதுவரை நிலைநாட்டப்பெற்றிருந்த திருச்சபை சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் போன்றவற்றைச் செயற்படுத்தும்படி இலாடு வலியுறுத்தினார். இலாடின் நடவடிக்கைகளுக்கு அரசர் ஆதரவு நல்கியதுடன், சமய ஒறுப்பிலும் பேரார்வம் காட்டியபோது இவரைத் தூய்மைவாதிகளும் ஏனையோரும் வெறுத்தனர்.

அரசர்கள் வலியுறுத்திய தெய்விக உரிமைக் கொள்கையை இலாடும் பெரும்பாலான குருமாரும் ஏற்று முதலாம் சேம்சுக்கும் முதலாம் சார்லசுக்கும் ஆதரவு கொடுத்தனர். இதன் விளைவாக இங்கிலாந்து திருச்சபை வல்லாட்சியில் நாட்டம் கொண்டிருந்த முடிமன்னர்களின் கைப்பாவையாகி வருகிறது என்று இவருடைய பகைவர்கள் உறுதியாக நம்பினர். இலாடு இசுகாட்லாந்தில் தம் திருச்சபைத் திட்டத்தைச் செயற்படுத்த முயன்றபோது, கி.பி. 1637-இல் நாட்டில் பெரும் குழப்பம் தோன்றலாயிற்று.

பாராளுமன்றக் கட்சியின் செல்வாக்கு மிகுதியாக வளர்ந்திருந்த கி.பி. 1640-ஆம் ஆண்டில் திருச்சபை தூக்கி ஏறியப்படும் நிலையும் உருவாகியது. பல குருமார் கைதாயினர். உயர் நீதிமன்றக் குழு அழிக்கப்பட்டது. இங்கிலாந்தில் குழப்பத்தைப் படிப்படியாக விளைவிக்கும் மாற்றங்களைத் தூய்மைவாதிகள் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினர். தலைமைக்குரு கி.பி. 1641-இல் இலண்டன் கோபுரச் (Tower) சிறையில் அடைக்கப்பெற்றார். எனினும் இவரை கி.பி. 1644-ஆம் ஆண்டுவரை விசாரணைக்கும் கொண்டுவரவில்லை. இதனிடையில் இங்கிலாந்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே உள்நாட்டுப்போர் மூண்டது. இலாடுவைத் தூக்கிலிட்டுக் கொல்லவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் கி.பி. 1645-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் இலண்டனிலுள்ள கோபுரக் குன்றுச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

## இலாத்ராபு சூலியா கிளிப்போர்டு

**(1858-1932)** சமூகப் பணியாளரும், சிகாகோ மக்கள் நலக் கல்லூரியை (Chicago School of Civics and Philanthropy) நிறுவியவர்களுள் ஒருவரும், ஐக்கிய அமெரிக்கக் குழந்தைகள் மன்றத்தின் முதல் தலைவரும் ஆவார். இவர் இல்லினாய் மாநிலத்திலுள்ள இராக்கோர்டு என்னுமிடத்தில் பிறந்தார்; இலாத்ராபு (Lathrope Julia Clifford) கி.பி. 1880-ஆம் ஆண்டில் பல சமூகப் பணிகளைச் செய்தார். சிகாகோவிலுள்ள அறக்கொடைக் கூட்டமைப்பை ஏற்படுத்துவதில் மிகக் கடுமையான முயற்சி மேற்கொண்டார். இல்லினாயின் அறக்கொடை மன்றத்தில் பல ஆண்டுகள் உறுப்பினராக விளங்கி, அனாதை இல்லங்களுக்குச் சென்று பல சிறந்த பணிகளைச் செய்துள்ளார். இவர் அனாதை இல்லங்களிலிருந்த மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தனியாக இல்லங்கள் ஏற்படுத்த முயன்றார்.

தேசிய மனநலக் குழுவில் இவர் உறுப்பினராக இருந்தார். சிகாகோ மனநலத் துணைக் குழுவை உருவாக்க உதவினார். இளங்குற்றவாளிகளின் நலத்திற்காகப் பாடுபட்டு, அவர்களுக்கென கி.பி.1899-ஆம் ஆண்டில் இளங்குற்றவாளிகள் நீதிமன்றத்தை இல்லினாயில் நிறுவக் காரணமாக இருந்தார். இதுவே அமெரிக்க ஐக்கியநாட்டின் முதல் இளங்குற்றவாளிகள் நீதிமன்றமாகும். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இளங்குற்றவாளிகளின் மனநோய் நிறுவனத்தை உருவாக்க உதவினார். இதுவே குழந்தைகளின் மனநலத்தைக் காக்க உருவாக்கப்பட்ட முதல் மருத்துவமனை ஆகும்.

சூலியா 1912-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கியக் குழந்தைகள் மன்றத்திற்குத் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறந்த பணியாற்றினார். இதற்குத் தலைவராக இருந்த ஒன்பது ஆண்டுகளில் குழந்தைகளின் சமூக, பொருளாதார நிலைகள், குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துதல் போன்றவை பற்றி ஆய்வு செய்தார். மேலும் குழந்தை இறப்பு, பேறுகாலத்தில் தாயின் இறப்பு, குழந்தை வளர்ச்சி போன்றவற்றிலும் ஆய்வு செய்து, பல முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தினார். ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு குழந்தைகள் நலப் பணி பற்றித் திட்டமிடப் பல நாடுகளுக்கு உதவி புரிந்தார்.

இவர் பெண்களுக்கு ஓட்டுரிமை பெற்றுத்தரப் போராடினார். இல்லினாயின் ஓட்டுரிமை பெற்ற பெண்களின் கூட்டமைப்புக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டுநாடுகளின் (League of Nations) குழந்தைகள் நலக் குழுவிற்கு 1925-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரை ஆசோசனை கூறுபவராகவும் இருந்தார்.

**இலாப்ரெடார்** வட அமெரிக்கக் கண்டத்தில் கனடா நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ளதொரு முந்நீரகம். அட்லாண்டிக்குப் பெருங்கடலுக்கும் அட்சன் விரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ள இலாப்ரெடாரின் (Labrador) பரப்பு 13,00,000 ச.கி.மீ. இலாப்ரெடாரின் மேற்குப் பகுதி குயூபெக்கிற்குச் சொந்தமானது. இலாப்ரெடாரின் கிழக்குக் கடற்கரை நியூபௌண்டுலாந்தின் பகுதியாகும். இலாப்ரெடாரின் நியூபௌண்டுலாந்து பகுதியின் பரப்பு 2,92,218 ச.கி.மீ. ஆகும்.

பிரெஞ்சு மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மென்மயிர் (Fur) கொண்ட விலங்குகளையும், கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் கிடைத்த மிகுதியான மீன்களையும் தேடி முதன் முதலில் இங்குக் குடியேறினர். இரும்புத்தாதுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர் கி.பி. 1895 இல் சுரங்கத் தொழில் மென்மயிர் வாணிகத்தை விடச் சிறப்பானதாகக் கருதப்பட்டது.



இலாப்ரெடார்க் கடற்கரை

இலாப்ரெடார் நீண்டதும் கடுமையானதுமான குளிர்காலத்தைக் கொண்ட நிலப்பகுதி. ஒவ்வோர் ஆண்டிலும் செப்டம்பர் மாதத்திலிருந்து அடுத்த சூன் மாதம் வரை நிலம் பனியால் மூடப்பட்டிருக்கும். இத்தகைய தட்பவெப்ப நிலை வேளாண்மைக்குப் பயன்படுவதில்லை. சிலவிடங்களில் காய்கறிகள் பயிராகின்றன. எனவே, இப்பகுதியில் வாழும் மக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கனடாவின் பிற பகுதிகளிலிருந்து பெறுகிறார்கள்.

நிலம்: இலாப்ரெடார் பண்டைய பாறைகளாலான மேட்டுநிலத்தில் அமைந்துள்ளதெனலாம். அட்லாண்டிக்குக் கடலில் கலக்கும் ஆறுகள் இம்மேட்டு நிலத்தை அறுத்துப் பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன. இலாப்ரெடாரின் மிக நீண்ட சர்ச்சில் நீர்வீழ்ச்சியிலிருந்து நீர்மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்மேற்கு இலாப்ரெடாரின் பல பகுதிகளில் ஏரிகளைக் காணலாம். இதன் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் இலாப்ரெடாரின் மிக உயர்ந்த மலைத்தொடர்கள் உள்ளன. மாண்ட்டுடி இப்பர்விலி என்னும் மலையுச்சியே இதன் மிக உயர்ந்த பகுதியாகும். இது 1646 மீ. உயரமுள்ளது.

இலாப்ரெடாரைத் திட்டவட்டமாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும் அதற்கென்ற சிறப்பான பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. 1. கடற்கரை இலாப்ரெடார், 2. மேற்கு இலாப்ரெடார் என்பன அவ்விரு பகுதிகள்.

கடற்கரை இலாப்ரெடாரின் பொருளாதாரம் வளமான மீன் பிடித்தலையும் மென்மயிர் உடைய விலங்குகளை வேட்டையாடுதலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கு இலாப்ரெடார் மிகுதியான இரும்புத்தாதுக்களைக் கொண்டு விளங்கும் செல்வப் பகுதியாகும். கடுங்குளிரையும் தரையமைப்பையும் கொண்டுள்ள காரணத்தால் இரும்புத்தாதுக்களைக் கண்டுபிடிக்கும் பணி பல்லாண்டுகள் தடைப்பட்டிருந்தது. மேலும் குடியேற வந்தவர்களும் இங்குத் தங்க விழைந்தார்களில்லை.

இலாப்ரெடாரில் 88,100 ச.கி.மீ. பரப்பில் விலைமதிப்புமிக்க மரக்காடுகள் உள்ளன. இசுபூருசு, பால்சம்பர், பிர்ச்சு போன்றவை சிறப்பான காட்டு மரங்களாகும். எண்ணற்ற காட்டு விலங்குகளும் இப்பகுதியில் நடமாடுகின்றன. அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சால்மன், காடு, எர்ரிங்கு, சீல், திரௌட்டு போன்ற மீன் வகைகளைக் கடற்கரையையொட்டியுள்ள கடல்களில் பிடிக்கிறார்கள். பருவந்

தோறும் குடிபெயர்கின்ற பல பறவையினங்கள் ஆண்டுதோறும் இலாப்ரெடாருக்கு வருகின்றன.

தட்பவெப்பம்: தட்பவெப்பநிலை பற்றிய விவரங்கள் கடற்கரைப் பகுதியிலிருந்தே கிடைக்கின்றன. ஏனெனில், உள்நாட்டில் வாழும் மக்கள் மிகமிகக் குறைவாகவே உள்ளனர். ஆண்டுமுழுதும் இலாப்ரெடாரில் பனி உறையும் குளிர்ச்சியைக் காணலாம். உள்நாட்டுப் பகுதிகளும், வட கடற்கரைப் பகுதிகளும் கடும் குளிருக்குப் பெயர் பெற்றவை. கோடைக்காலத்தில் ஆர்க்டிக்குப் பெருங்கடல் பகுதியிலிருந்து வீசும் பனிக்காற்றினால் கடற்கரைப் பகுதியிலும் கடுங்குளிர் வீசுகிறது. அப்போது உள்நாட்டுப்பகுதி வெதுவெதுப்பாகவிருக்கும்.

இலாப்ரெடாரில் உருகும் பனியையும் உள்ளிட்டு ஆண்டொன்றுக்கு 76 செ.மீ. மழை பொழிகிறது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 380 செ.மீ. பனிமழை பொழிகிறது. கடற்கரையில் புயல்கள் வீசுவதுமுண்டு.

மக்கள்: இலாப்ரெடாரின் மக்கள்தொகை 33,052 (1976). இவ்வூர்களில் செவ்விந்தியர்களும் எசுகிமோக்களும் பத்து விழுக்காட்டினர். எஞ்சிய பெரும்பாலோர் குடியேறிய வெள்ளையர். அவர்கள் மேற்கில் சுரங்கத் தொழிலாளர்களாகவும், மீன்பிடிக்கும் செம்படவர்களாகவும் வாழ்கிறார்கள்.

இலாப்ரெடாரில் அட்லாண்டிக்குச் சால்மன், எர்ரிங்கு, திரௌட்டுப் போன்ற மீன்களும், சீல் என்னும் கடல் நாயும் மிகுதியாகக் கிடைக்கின்றன. காடு என்னும் மீன் பெருமளவில் கிடைப்பதால் அதன்மூலம் மிகுதியான வருமானம் கிடைக்கிறது. மீன்பிடிக்கும் பருவம் சூன் மாதத்தில் தொடங்கிச் செப்டம்பரில் முடிவுறும். மென்மயிர் எடுத்தல் பன்னெடுங்காலம் சிறப்பான தொழிலாக இருந்தது. ஆனால், 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இத்தொழில் பெரிதும் நலிவடைந்துவிட்டது. கூசு விரிகுடாவைச் சுற்றியுள்ள பகுதியிலும், பெல்லித் தீவு நீர்ப்பிரிவையொட்டியுள்ள இடங்களிலும் உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, பீட்கிழங்கு, தர்னிப்புப் போன்றவை உற்பத்தியாகின்றன.

இலாப்ரெடாரின் மேற்குமூலையில் நீண்ட குறுகலான பள்ளம் ஒன்றுள்ளது. இது இரும்புத் தாதுக்களுக்குப் பெயர் பெற்றது.

இலாப்ரெடார் மாநகர், 'ஏப்பிவேலி' (Happy valley), வாபுசு (Wabush), சர்ச்சில் நீர்வீழ்ச்சி வடமேற்கு ஆற்றுப்பகுதி போன்ற இடங்களில் மக்கள் நெருக்கம் மிகுதி.

வரலாறு: வைகிங்குக்கடல் ஆய்வாளர்கள் கி.பி. 950-க்கும் 1050க்கும் இடையில் இலாப்ரெடாருக்கு முதன்முதலாக வந்தார்கள். இங்கிலாந்து நாட்டிற்குத் தொண்டு செய்ய வந்த இத்தாலியரான சான் காபட்டு (John Cobat) என்பார் 1500 ஆண்டுக்கு முன்னர் இலாப்ரெடாருக்கு வந்தார்.

எசுகிமோக்களும் செவ்விந்தியர்களுமே கி.பி. 1700-ஆம் ஆண்டு வரை இங்கு வாழ்ந்து வந்தனர். இலாப் ரெடாரில் முதன்முதலாகக் குடியேறிய வெள்ளையர்கள் பிரான்சிலிருந்து வந்தவர்களே. அவர்கள் மென் மயிரின் பொருட்டும், சீல் என்னும் கடல்நாய்களை வேட்டையாடவும் வந்தார்கள். பிரிட்டன் கி.பி.1759-இல் இலாப்ரெடாரைப் பிரெஞ்சியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டது. ஆங்கிலேயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் குடியேறி நிலையான வீடுகளைக் கட்டிக் கொண்டனர். அட்சன் விரிகுடா வணிகக்குழு கி.பி. 1840-ஆம் ஆண்டளவில் இலாப்ரெடாரின் உட்பகுதிகளைக் கண்டறிய முயன்றது.

வில்பிரடு டி. கிரென்பெல் என்னும் கிறித்தவப் பாதிரியார் கி.பி. 1892-ஆம் ஆண்டில் ஆங்கில மருத்துவராக வந்தபோது, இலாப்ரெடாரில் வாழ்ந்தவர்கள் பெரும் தொலலைக்காளாகியிருந்தனர். மருத்துவப் பாதிரியார் இம்மக்களின் தொல்லைகளை வெளியுலகுக்கு எடுத்துக் கூறி, மருத்துவமனைகள், பள்ளிகள், திருச்சபைக் குழுக்கள் போன்றவற்றை அமைக்கப் பெரும் பொருள் திரட்டினார்.

நியூபௌண்டுலாந்தும் குயூபெக்கும் இலாப்ரெடாரைச் சொந்தம் கொண்டாடிப் போரிட்டுக் கொண்டன. ஆங்கிலப் பிரிவுக் கவுன்சில் 1927-இல் இன்றைய எல்லைகளை நியூபௌண்டுலாந்துக்குச் சாதகமாகப் பரிந்துரைத்தது.

இரண்டாம் உலகப் பெரும்போரின்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு, இலாப்ரெடாரைப் போர்த் தளமாக்கியது. நியூபௌண்டுலாந்து 1949-இல் கனடாவின் மாநிலங்களில் ஒன்றாக்கப்பட்டது.


**இலாப்லாந்து** ஐரோப்பாவின் வடகோடியில் ஆர்க்டிக்கு வட்டத்திற்கு மேலே அமைந்துள்ள நிலப்பகுதி. இலாப்புகள் (Lappas) என்னும் மக்களின் தாயகமாகையால் இது இலாப்லாந்து (Lapland) என்னும் பெயர் பெற்றது. இலாப்பின மக்கள் குள்ள

மாகவும் உடலுறுதி மிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள். இவர்களின் உயரம் சராசரி 150 செ.மீ.

இலாப்லாந்து தனித்ததொரு நாடாகக் கருதப்படுவதில்லை. நார்வே, சுவீடன், பின்லாந்து, உருசியா போன்ற நாடுகள் இதனைப் பகிர்ந்துகொண்டுள்ளன.

இலாப்லாந்து குளிர் மிகுந்த பகுதியாகும். இங்கு ஆண்டொன்றில் ஒன்பது மாதங்கள் குளிர் காலம்; எஞ்சிய மூன்று மாதங்கள் கோடைக்காலம். எனவே, மிதமான குளிர் இருக்கும். வடகோடியில் அமைந்துள்ள பகுதியாகையால், இலாப்லாந்தில் கோடைக் காலத்தின் இருமாதங்களில் இரவு ஏற்படுவதேயில்லை. குளிர்காலத்தில் இரு மாதங்களுக்குச் சூரியன் அடிவானத்திற்குமேல் கிளம்புவதில்லை.

அமைவிடமும் பரப்பளவும்: இலாப்லாந்தின் பரப்பளவு 3,88,000 ச. கி. மீ. வடநார்வேயின் முழுப்பகுதி, சுவீடனின் நார்பாட்டன் மாநிலம் நார்லாந்தின் ஒரு பகுதி, வட பின்லாந்தின் முழுப் பகுதி, உருசியாவிற்குச் சொந்தமான கோலா தீபகற்பம் ஆகியவை இப்பகுதியில் அடங்கும். இலாப்லாந்தின் தென்பாகத்திற்குத் திட்டவட்டமான எல்லை கிடையாது. நார்வீசியக் கடல், பாரண்டுசுக்கடல், வெண்கடல் போன்றவை இதன் வடக்கில் அமைந்துள்ளன.




இலாப்லாந்து

நிலம்: இலாப்லாந்து வறண்ட பகுதியாகும். இங்கு மரங்கள் மிகக் குறைவு. தென்படும் மரங்கள் மெல்லியவை; பயிர்பச்சைகள் தடைப்பட்ட வளர்ச்சியுடையவை; மரங்களுள் பிர்ச்சு, பைன், பர் போன்றவை எப்படியோ பிழைத்துள்ளன. குளிரான தட்பவெப்பத்தால் மரங்கள் குட்டையாகவே வளருகின்றன. கலைமான்கள் இங்குத் தென்படும் ஒரு சில பயிர்பச்சைகளைத் தின்று உயிர்வாழ்கின்றன. கலைமான்கள் சுற்றித்திரிகின்றன. அவற்றை வேட்டையாடுவோரும் உண்டு. கலைமான்கள் உணவுக்கும் பயன்படுகின்றன.

இலாப்லாந்தில் இரும்பு, நிக்கல் போன்ற தாதுப் பொருள்கள் அடிப்படை உலோகங்களாகும். இரும்பு, சுவீடிய இலாப்லாந்திலும், நிக்கல் உருசியாப் பகுதியிலும் படிந்துள்ளன.

மக்கள்: இலாப்லாந்தியரின் எண்ணிக்கை 34,000. இவர்களுள் 2500 பேர் பின்லாந்திலும், 10,000 பேர் சுவீடனிலும், 20,000 பேர் நார்வேயிலும், 1500 பேர் உருசியாவிலும் வாழ்கிறார்கள். ஐரோப்பாவில் வாழும் மக்களுள் இலாப்பிய மக்களே மிகச் சிறுபான்மையினராவர். இவர்கள் சீனர்களைப் போலவும், சப்பானியரைப் போலவும் தோற்றமளிக்கிறார்கள். இவர்கள் குறுகிய நெற்றியையும், நீண்ட தாடை எலும்புகளையும், நீண்ட கரிய முடியையும், சற்றேறக்குறைய மஞ்சள்நிறத்தையும் கொண்டவர்கள். இவர்கள் பரந்து தட்டையான மூக்கையும், நேரான மெல்லிய உதடுகளையும் கொண்டவர்கள். இவர்களுள் பலர் சுவீடிய, பின்னிய (Finns), நார்வேயப் பெண்களை மணம்புரிந்து கொண்டுள்ளார்கள். அதனால், இவர்கள் உடற் கூறு மாறுபட்டு வருகிறது.

இவர்கள் பெரும்பாலும் நாடோடிகள். இவர்கள் கலைமான் கூட்டங்களை வேட்டையாடியும் மீன்பிடித்தும் வாழ்ந்து வருகிறார்கள். விலங்கு மயிராலும் கலைமான் தோல்களாலுமான துணிகளை ஆடையாக உடுத்துகிறார்கள்.

மொழி: இலாப்லாந்தியரின் மொழி பின்லாந்தில் பேசப்படும் மொழியுடன் தொடர்பு கொண்டது. இலாப்லாந்தின் பல பகுதிகளில் வாழும் இவர்கள் பல்வேறு பேச்சுமொழிகளில் பேசுவர். இவர்களுள் பலர் கல்வி அறிவில்லாதவர்கள்.

சமயம்: சமானியம் என்னும் செப்பிடு வித்தையை அண்மைக்காலம் வரை அனைத்து இலாப்பியரும் நம்பிவந்தனர். சமான் (Shaman) என்பது 'மருத்துவ மனிதன்' எனப்பொருள்படும். அம்மருத்துவ மனிதர்கள் தப்பட்டையொலியெழுப்பி வருங்காலத்தை முன்கூட்டியே அறிவிக்கிறார்கள். இக்காலத்தில் இவர்களுள் பெரும்பாலோர் கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றி உலூதரின் கோட்பாடு



இலாப்லாந்துக் கலைமான்
பொருள்களை இழுத்துச் செல்லல்

களையோ கீழ்த்திசை வைதிகத் திருச்சபைக் கோட்பாடுகளையோ பின்பற்றுகிறார்கள். திருமணத்தின் போதும் இறந்தவர்களைப் புதைக்கும்போதும் எவ்வளவு தொலைவாயினும் அதனைப் பொருட்படுத்தாமல் திருச்சபைகளுக்குச் செல்கின்றனர். உண்ணும் உணவைப் பெறும் அடிப்படையில் இவர்களை மலைவாழ் இலாப்பியர், கடல்வாழ் இலாப்பியர், ஆறுவாழ் இலாப்பியர், காடுவாழ் இலாப்பியர் என நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். மலைவாழ் இலாப்பியர் நாடோடி வாழ்க்கை வாழ்கிறார்கள். கலைமான் மந்தைகளோடு இவர்கள் இடம்விட்டு இடம் பெயர்கிறார்கள். மந்தைகளுக்குப் போதுமான பயிர்பச்சைகள் கிடைக்கும் இடங்களில் இவர்கள் தம் கூடாரங்களை அமைத்துக் கொள்கிறார்கள். கூம்பு வடிவான ஒரே கூடாரத்தில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து வாழ்கிறார்கள். கலை மான்களின் இறைச்சி, பால், பாலாடைக்கட்டி போன்றவற்றை உண்டு உயிர்வாழ்கின்றனர்.

கடல்வாழ் இலாப்பியர் கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் குடிசைகளில் வாழ்கிறார்கள். இக்குடிசைகள் மரத்தாலானவை. இவர்கள் பெரும்பாலும் மீன்பிடித்தே வாழ்கிறார்கள். கடல்வாழ் இலாப்பியர் மலைவாழ் இலாப்பியர்களைவிட நாகரிக முதிர்ச்சி பெற்றவர்கள். கடல்வாழ் இலாப்பியர் கூட்டங்கூட்டமாகத் தம் குடிசைகளை அமைத்துக் கொண்டு மீன்பிடிக்கும் மரபினரைப் போல் வாழ்கின்றனர்.

ஆறுவாழ் இலாப்பியர் ஆற்றங்கரைகளில் தம் குடியிருப்புகளை அமைத்து வாழ்கின்றனர். இலாப்லாந்திலேயே இவர்கள்தாம் மிகுந்த முன்னேற்ற முற்றமக்களாவர். இவர்கள் சமூகமாக இணைந்துவாழ்வதுடன், சிறிதளவு பண்ணைத் தொழிலையும் செய்கிறார்கள். ஆறுவாழ் இலாப்பியர் மீன்பிடித்தும், வேட்டையாடியும், கலைமான்கள், கால்நடைகள், ஆடுகள் போன்ற விலங்குகளை வளர்த்தும் வாழ்கிறார்கள்.

காடுவாழ் இலாப்பியர் நிலையான குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு கலைமான், கால்நடை போன்றவற்றை வளர்த்து வாழ்கிறார்கள்.

வரலாறு: இலாப்பிய இனமக்கள் நடு ஆசியாவிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சென்றிருக்க வேண்டுமென்பது மானிடவியலாரின் நம்பிக்கையாகும். பின்லாந்து வணிகர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் இலாப்பியர்களுடன் வாணிகம் செய்தார்கள். சுவீடிய அரசர்கள் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இலாப்பிய அரசர்களாகக் கருதப்பட்டார்கள். எனினும், இவர்கள் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. இவர்களிடம் சமூகக் கட்டுக்கோப்போ அரசாங்கக் கட்டுப்பாடோ இல்லை.

**இலா பிளாட்டா** அர்செண்டினா நாட்டின் நகரங்களுள் ஒன்று. இது போனசு அயர்சு (Buenos Aires) மாநிலத்தின் தலைநகரமாகும். இலா பிளாட்டா (La Plata) நகரம் போனசு அயர்சிலிருந்து 56 கி.மீ. தென்கிழக்கில் அமைந்துள்ளது. போனசு அயர்சு தலைசிறந்த வணிக மையமாகச் சிறப்புப் பெற்றுள்ளது. இறைச்சியைத் தகரப் பெட்டிகளுள் அடைத்தல், எண்ணெயைத் தூய்மைப்படுத்துதல், மரமறுத்தல், மாவரைத்தல், கைத்தறி நெசவு போன்ற தொழில்கள் இந்நகரில் நடைபெறுகின்றன. இவ்வூருக்கு 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள என்சிநாடாவில் (Ensenada) துறைமுகமுள்ளது. துறைமுகத்திற்கும் நகருக்குமிடையே இருப்புப் பாதைத் தொடர்பும், பெருங்கடலில் செல்லும் கப்பல்கள் இந்நகருக்கு வந்துசெல்லும் நீர்வழித் தொடர்பும் உள்ளன. மயிர், பெட்ரோல் ஆகியவையும், உறைந்த பனியால் பதப்படுத்தப்பட்ட இறைச்சியும், கோதுமையும்,பாம்பாசுப் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட ஏனைய தானிய வகைகளும் இத்துறைமுகத்தின் வழியாகவே ஏற்றுமதியாகின்றன. பண்பாட்டு அடிப்படையில் இந்நகரம் போனசு அயர்சுடன் போட்டியிடுகிறது. தேசிய பல்கலைக் கழகம், வானநூல் ஆராய்ச்சிக் கூடம், விலங்கியல் பூந்தோட்டம், தேசிய நூலகம், மாநில நுண்கலைப் பொருள்களின் அருங்காட்சியகம், திருச்சபைகள், கலையரங்குகள், குதிரைப் பந்தய வளாகம் போன்றவை இந்நகரில் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆர்செண்டினா குடியரசின் மாநாட்டிற்குப் பின்னர், கி.பி. 1880-ஆம் ஆண்டில் போனசு அயர்சு தேசியத் தலைநகராக அறிவிக்கப்பட்டது. ஆனால், மாநிலச் சட்டமன்றம் புதிய நகர் ஒன்றை மாநிலத் தலைநகராக அமைப்பதென முடிவெடுத்தது. அம்முடிவின்படி கி.பி. 1881-ஆம் ஆண்டில் இலா பிளாட்டா தலைநகராயிற்று. கட்டடங்களைக் கட்டும் பணி கி.பி. 1882-ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. இலா பிளாட்டா வாசிங்டன் மாநகரத்தைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அரசு மாளிகை, சட்டமன்றம், நீதிமன்றம், மாநகர் மன்றம் போன்றவை தென் அமெரிக்காக் கண்டத்திலேயே தலை சிறந்தவை என்று கருதப்படுகின்றன.

இந்நகரின் பெயர் ஈவா பெரான் (Eva Peron) என்னும் அம்மையாரின் நினைவாக 1952-இல் மாற்றப்பட்டது. இந்த அம்மையார் அர்செண்டினாவின் எதேச்சாதிகாரியாக விளங்கிய சுவான் பெரான் (Juan Peron) என்பவரின் மனைவி. சுவான் பெரான் 1955-இல் வீழ்ச்சியுற்றபோது, இந்நகரின் பழைய பெயரான இலா பிளாட்டாவே திரும்ப வைக்கப்பெற்றுவிட்டது. இதன் மக்கள் தொகை 4,55,000 (1980).

**இலா பூர்தோனே (கி.பி. 1699-1753)** என்பவர் பிரான்சு நாட்டின் கப்பற்படை அலுவலர். இவர் பிரான்சில் செயிண்ட்டு மாலோ (St.Malo) என்னும் ஊரில் கி.பி. 1699-ஆம் ஆண்டு பிறந்தார். இலாபூர்தோனே (La Bourdonnais) பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழுவில் ஊழியராகச் சேர்ந்தார். கி.பி. 1724-ஆம் ஆண்டளவில் தலைவராகப் (Captain) பதவியுயர்வு பெற்றார். இவர் கி.பி. 1726-இல் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இருந்த மாகியைக் (Mahe) கைப்பற்றினார். பின்னர்ச் சிறிதுகாலம் இவர் போர்ச்சுகீசியர்களுக்குப் பணியாற்றினார். இவர் கி.பி.1735-இல் இல் டி பிரான்சு, இல் டி பூர்பன் என்னும் தீவுகளின் ஆளுநராகப் பதவியேற்றம் பெற்றார். இந்தியக் கடல்கள் பகுதியில் இருந்த பிரெஞ்சுக் கப்பற்படையின் தலைவராக இருந்தபோது கி.பி.1741-இல் மாகியை முற்றுகையிலிருந்து விடுதலையடையச் செய்தார். இவர் கி.பி. 1745-இல் பிரெஞ்சுக் கவர்னர் தூப்ளேய்க்கு (Dupleix) உறுதுணையாக அமர்த்தப்பெற்றார். இத்தருணத்தில் புதுச்சேரியை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர். இவர் கி.பி. 1746-இல் சென்னையை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினார். இதற்குப் பின்னர்த் தூப்ளேயுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக இவர் சுமத்திராவுக்கு (Su Matra) அனுப்பப்பட்டார். தம்மிடம் எஞ்சியிருந்த படைவீரர்களுடன் மோரிசுத் தீவுக்குச் (Ile De France) சென்றபோது தமக்கு மாறாக வேறொருவரை ஆளுநராக தூப்ளே அமர்த்தியிருந்ததை அறிந்தார். இவர் கி.பி.1748-இல் பிரான்சுக்குத் திரும்பினார். நிருவாகக் குறைகளுக்காக இவர் கைது செய்யப்பட்டுப் பாசுடைல் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டார். இரிச்சிலியூ (Richelieu), வால்டேர் (Voltaire) என்பவர்கள் இவர் குற்றமற்றவர் என மெய்ப்பித்தனராதலின் கி.பி. 1754-இல் விடுதலை செய்யப்பட்டார். இவருடைய விடுதலையைக் கேள்வியுற்ற பொதுமக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். இதனிடையில் நோய்வாய்ப்பட்ட இவர் தம் சொத்துகளை இழந்தார். இவர் கி.பி. 1753-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாள் காலமானார். இவர் வாழ்க்கைக் குறிப்புகளை இவர் தம் பேரர் கி.பி. 1827-இல் தொகுத்து வெளியிட்டார்.

**இலாபோர்டே (கி.பி. 1807-1869)** பிரான்சு நாட்டைச் சார்ந்த பழம்பொருள் திரட்டுபவரும், சுவடிக்கூடம் காப்பவரும் (Antiquarian and Archivist) ஆவர். இவர் பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசில் கி.பி. 1807-ஆம் ஆண்டு பிறந்தார். இலா போர்டே (Laborde) கி.பி. 1827-28-இல் உரோமாபுரியிலும், பின்னர் கி.பி. 1831 வரை இலண்டனிலும் பிரெஞ்சுத் தூதரின் செயலராகப் பதவி வகித்தார். இவர்தம் தந்தையார் சோசப்பு-டி-இலாபோர்டே (Joseph de Laborde)யுடன் அராபியா, சிரியா, அனடோலியா (Anatolia), எகிப்து போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்தார்.

'அராபிய பிட்ரியா பயணம்', 'சிரியாவின் பயணம்', 'ஆசியா மைனர் பயணம்', என்னும் நூல்களைச் சில எழுத்தாளருடன் சேர்ந்து எழுதினார். ஏதென்சு நகரில் கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சுப் பண்பாட்டில் அச்சுச்கலை, செதுக்குக் கலை ஆகியவற்றின் தோற்றம் பற்றிய செய்திகளை வெளியிட்டார். இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டில் தம் தந்தையாருக்குப் பின் சட்டப் பேரவையின் உறுப்பினரானார். அடுத்த ஆண்டு கல்வெட்டியல் கழகத்தின் பேராசிரியரானார். இலூவார் அருங்காட்சியகக் காப்பாளராக கி.பி. 1845-இல் இவர் அமர்த்தப்பட்டார். பின்னர் கி.பி. 1857-இல் 'இம்பீரியல்' சுவடிக்கூடத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இப்பொறுப்பில் இவர் அரசு ஆவணங்கள் பலவற்றையும்பல தொகுதிகளாக வெளியிட்டார். ஆளவை மன்றத்தில் கி.பி. 1868-இல் உறுப்பினராக இருந்தார். இவர் இடைக்காலம் பற்றிய அருஞ்சொல் விளக்கக் கோவை (Glossary) ஒன்றை எழுதினார். இலாபோர்டே கி.பி. 1869-ஆம் ஆண்டு மார்ச்சு

மாதம் 26-ஆம் நாள் பான்டெயின்புளு (Fontaine-bleau) என்னுமிடத்தில் காலமானார்.

**இலாமா** திபேத்திய புத்த சமயத் தலைவர். திபேத்திய மொழியில் இதனைப் பிலாமா (Blama) என்பர். இலாமா (Lama) என்னும் சொல்லுக்கு மிக உயர்ந்தவர் அல்லது முதன்மையானவர் என்பது பொருள். இலாமாக்களுள் சிலர் அவதாரங்களாகக் கருதப்படுகின்றனர். உயர்ந்த ஆன்ம மெய்யுணர்வைப் பெற்றவர்களாதலால் இவர்கள் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களானார்கள். இலாமாக்கள் முழுத் துறவிகள் இவர்களை அடுத்து மூன்று படி நிலைகளில் புத்த சமயச் சார்பாளர் அமைந்துள்ளனர். குடும்பப் பொறுப்பேற்று நடக்கும் பௌத்தர்கள் கடைநிலையைச் சார்ந்தவர்கள். திபேத்திய மக்கள் ஆட்சித் தலைமையுடைய சமயத் தலைவரைத் தலாய் இலாமா (Dalai Lama) எனக் குறிப்பிடுகின்றனர்.

புத்தசமயம் திபேத்திற்கு வருவதற்கு முன்னர்த் திபேத்திய மக்கள் பான் (Bon) என்னும் ஒருவகைச் சமயத்தைப் பின்பற்றினார்கள். இந்தப் பண்டைய சமயத்தைப் பற்றி விவரங்கள் கிடைத்தில. புத்த சமயம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர் நேபாளத்திலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அப்போது திபேத்தின் மன்னராயிருந்தவர் சாங்சென் காம்போ (Song-tsen Gam-po) என்பவராவார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருக்கு மனைவியர் இருவர். அவர்களுள் ஒருவர் நேபாள இளவரசி; மற்றவர் சீன இளவரசி. அவ்விருவரும் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். திபேத்தின் புதிய தலைநகரான இலாசா (Lhasa)வுக்குப் புத்த சமய நூல்களையும், புத்தரின் படிமங்களையும் கொண்டுவந்தவர்கள் அவர்களே. பான் சமயத்தைச் சார்ந்தவர்கள் புத்த சமயத்தைக் கடுமையாக எதிர்த்து அதன் முன்னேற்றத்தைத் தடுத்ததுடன், அதை வளரவிடாமலும் அடக்கி வைத்தனர். புத்த சமய வரவினால் திபேத்து பெற்ற பெரியதொரு சாதனை அவர்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் அமைந்ததுதான். அதை வடமொழியிலிருந்து உருவாக்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதன் விளைவாக இந்தியாவிலிருந்து வந்த புத்த சமய நூல்களைத் தாம் வடிவமைத்த மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து ஆயிரக்கணக்கான நூல்களை உருவாக்கிக் கொண்டார்கள். இம்மொழியே பின்னர்த் திபேத்தின் இலக்கிய மொழியாயிற்று. எனினும்,புத்த சமயம் வளர்ந்து முன்னேறவில்லை.

ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், புத்த சமயம் மீண்டும் தலையெடுத்தது. அப்போதைய திபேத்திய மன்னரான தி-சாங் தீ-சென் (Ti-song De-sen, ஏறக்குறைய கி.பி. 740-786) என்பார் புத்த சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இந்த மன்னர் காலத்தில்தான் இந்தியாவிலிருந்த நாலந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்து மகாயான புத்த சமய அறிஞரான சாந்திரக்சிதர் (Santiraksita) திபேத்து நாட்டின் அழைப்பின்பேரில் அங்குச் சென்று, புத்த சமயத்தை நிலைநாட்டினார். அவரே திபேத்தின் புத்த சமயத் தலைவருமானார். அவருடைய பரிந்துரையின்பேரில் பத்மசம்பவர் (Padmasambhava) என்னும் பெயர்கொண்ட இந்தியப் புத்த சமய நல்லாசிரியர் திபேத்திற்கு அழைக்கப்பட்டார். அவர் யோகக் கலையிலும், மந்திரம், தந்திரம், பக்தி போன்றவற்றிலும் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். அவர் திபேத்திய குருமார்களைப் பயிற்றுவிக்கும் நோக்குடன், மடாலய முறையில் அமைக்கப்பெற்ற பாடத்திட்டத்தைச் செயற்படுத்தினார்.

பத்மசம்பவரும் சாந்திரக்சிதரும் இணைந்து கட்டியதே முதல் புத்த மடாலயமாகும். இதை அவர்கள் கி. பி. 749-ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்கள். இந்த முதல் மடாலயம் நியுங்-மா-பா (Nying-ma-pa) என்று கூறப்படுகிறது. பத்மசம்பவரின் சீடர்கள் இந்தியாவிலிருந்து வந்த பல புத்த சமய நூல்களைத் திபேத்திய மொழியில் பெயர்த்துக் கொடுத்தார்கள்.

புத்த சமயம் பெருகி வளரவே, ஏனைய மடாலயங்கள் கட்டப்பட்டதுடன் பிற மடாலய அமைப்புகளும் தோற்றுவிக்கப் பெறலாயின. அதீசர் (Atisha) என்னும் பெயர்கொண்ட இந்தியப் புத்தசமயத் துறவியொருவர் கி. பி. 1039-ஆம் ஆண்டு திபேத்துக்கு வந்தார். அவர் அமைத்த மடாலய முறை க-தம்-பா (Ka-dam-pa) எனப் பெயர்பெற்றது. இது ஒரு சீர்திருத்த இயக்கமாகும். இந்நிறுவனம் மடாலயக் கட்டுப்பாடு, கள்ளுண்ணாமை, பிரமசரியம் போன்றவற்றை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டது. அதீசர் வடமொழியில் 'துறவற நிறைவுக்கு வழிகாட்டும் ஒளி' (Lamp on the path to saintly perfection) என்னும் நூலை இயற்றினார். இதன் திபேத்திய மொழிபெயர்ப்பும் புகழ்பெற்றது. சில ஆண்டுகளுக்குப் பின்னர்க் க-குயூ-பா (Ka-gyu-pa) என்னும் மடாலய முறையைத் திபேத்திய இலாமாவான மார்-பா (Mar-pa) என்பார் நிலைநாட்டி, தாந்திரியக் கொள்கைகளைத் (Tantric doctrines) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில சீடர்களுக்கு அறிவுறுத்தினார். அவர் இக்கொள்கைகளை இந்திய ஆசிரிய

ரான நரோப்பா (Naropa) என்பாரிடமிருந்து கற்றுக் கொண்டார். மார்-பாவின் தலைமைச் சீடரான மிலரீபா (Milarepa) என்பாரே திபேத்திய வரலாற்றில் தலைசிறந்த புத்தசமயத் துறவியாகக் கருதப் படுகிறார். சாக்ய-பா(Sakya-pa) மடாலயம் கி. பி. 1071-இல் உருவாக்கப்பட்டு, இந்தியப்புத்தசமய நூல்களை ஆழ்ந்த புலமையுடன் திபேத்திய மொழியில் மொழிபெயர்க்கும் பணியைச் சீரிய முறையில் செய்தது. சாக்யலாமா பாக்-பா (Pak-pa) என்பாரே, திபேத்தின் முதல் இலாமாவாகக் கி. பி. 1270-ஆம் ஆண்டில் சீனாவை ஆண்ட மங்கோலியப் பேரரசரான குப்லேகான் (Kublai Khan) என்பவரால் அமர்த்தப்பட்டார்.

தொசாங்-கா-பா (Tsong-Kha-pa) என்பார் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரை இரண்டாம் புத்தர் என்று போற்றினர். இவரும் அதீசரைப் பின்பற்றிப் பல அரும் சீர்திருத்தங்களைச் செய்தார். இவரும் இவர்தம் சீடர்களும் இலாசா கான்-தன் (Lhasa-gan-den) என்னும் மடாலயத்தை கி. பி. 1409-இலும், திரே-புங் (Dre-pung) என்னும் மடாலயத்தை கி. பி. 1416-இலும், சே-ரா (Se-ra) என்னும் மடாலயத்தை கி. பி. 1419-லும் கட்டி முடித்தனர். இம்மூன்று மடாலயங்களில் 16,500 இலாமாக்கள் தங்கியிருந்தார்கள். தொசாங்-கா-பா என்பாரே கி. பி. 1409-ஆம் ஆண்டில் கே-லூக்-பா (Ge-luk-pa) மஞ்சள் தொப்பி இயக்கத்தைத் (Yellow-Hat Order) தொடங்கினார். இக்குழுவினரே ஆட்சியையும் நடத்துகிறார்கள். முதல் தலாய் லாமா பிறந்தது கி. பி. 1474-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த்தான் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவருக்குப் பின்னர் வந்த 14-ஆம் தலாய் லாமா 1950-ஆம் ஆண்டில் முழுப் பொறுப்பைப் பெற்றார். அந்த ஆண்டில்தான் சீனா திபேத்தின்மீது படையெடுத்தது. திபேத்தியர்கள் சீனர்களின் வல்லாட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். தலாய் லாமா 1959-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இந்தியாவுக்கு ஓடி வந்தார். அவர் இன்றும் இமயமலைச் சாரலிலுள்ள முசோரியில் தங்கி வாழ்கிறார்.

புத்த சமய நூல்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 13-ஆம் நூற்றாண்டு வரை இந்தியப் புத்த சமய நூல்களிலிருந்து திபேத்திய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. அவை 225 தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

திபேத்திய முறையில் எழுந்த புத்த சமயத்தை மங்கோலியா (Mongolia), மஞ்சூரியா (Manchuria), சிக்கிம் (Sikkim), பூட்டான் (Bhutan) போன்ற பகுதிகளிலும், ஓரளவு நேபாளத்திலும், வட இந்தியாவிலும், வடக்கு, மேற்குச் சீனாவிலும், சோவியத்து ஒன்றியத்தின் சில பகுதிகளிலும் இன்றும் காணலாம்.

**இலாயிடு சார்சு, தாவீது(கி.பி. 1863-1945)** இங்கிலாந்தின் தலைமை அமைச்சராயிருந்தவர். இலாயிடு சார்சு கி.பி. 1863-ஆம் ஆண்டில் மான் செசுட்டரில் பிறந்தார் இவர் வழக்குரைஞராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டில் இலிபரல் கட்சியின் சார்பாகக் கார்னார்வன் பாராளுமன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தொகுதியில் உறுப்பினராக இவர் ஐம்பத்தைந்து ஆண்டுகள் பதவி வகித்தார். தென் ஆப்பிரிக்காவிலிருந்த போயர்களுக்கு ஆதரவு காட்டியவர் என்பதாக இவர் குறை கூறப்பட்டார். எனினும், தீவிரவாதிகளின் பேராளராக இருந்தமையால் இவர் அமைச்சரவையில் வணிக வாரியத்தின் தலைவராக 1905-ஆம் ஆண்டில் அமைச்சரானார். பின்னர் 1908-ஆம் ஆண்டில் கருவூலத் தலைவராகப் (Chancellor of the Exchequer) பொறுப்பேற்றார்.

இலாயிடு சார்சு (Lloyd George) சமூகச் சீர்திருத்தங்கள் பலவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிப் புகழ்பெற்றார். மக்கள் வரவு செலவுத் திட்டம் 1909-ஆம் ஆண்டு வெளியாயிற்று. அத்திட்டத்திற்கு இவரே பொறுப்பானவர் என்று சொல்லலாம். அவ்வாண்டில் வந்த மிக உயர்ந்த வரியும், நில மதிப்பு வரிகளும் பிரபுக்கள் அவையால் நீக்கப்பட்டன. இதன் விளைவாகப் பொதுமக்கள் அவைக்கும் பிரபுக்கள் அவைக்குமிடையே பெரும் மோதல் நிகழலாயிற்று. இம் மோதலைத் தவிர்க்க வந்ததுதான் 1911-ஆம் ஆண்டைய பாராளுமன்றச் சட்டமாகும். முதல் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில்(1915-இல்) ஆசுகுவித்து என்பாரின் தலைமையில் இயங்கிய கூட்டாட்சியில் படைத்தளவாடங்களின் அமைச்சராக இலாயிடு சார்சு நியமிக்கப் பெற்றார். ஆனால், பழமைப்பற்றாளர் (Conservative) கட்சியுடன் இவர் இணைந்துகொண்டு ஆசுகுவித்தின் அரசை 1916-ஆம் ஆண்டு திசம்பரில் கவிழ்த்தார். இலாயிடு சார்சு பின்னர்த் தலைமை அமைச்சராகி 1922-ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். போர்க் காலத் தலைவராக ஆற்றல் மிக்கவரென அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்ற இவர், தாமே நேரடியாகப் பாரிசு அமைதி மாநாட்டில் பங்கு கொண்டார். அயர்லாந்தில் ஏற்பட்ட சிக்கலும் இவரால் தீர்த்துவைக்கப்பட்டது. இவரது கூட்டாட்சி அரசு பழமைப் பற்றாளர்களின் கைப்பாவையாயிற்று. முந்தைய இலிபரல் ஆட்சி நண்பர்கள் இவரை நம்ப

மறுத்தனர். சனக் நெருக்கடியின் போது (Chanak Crisis) இவருடைய ஆட்சி கவிழ்ந்தது. இவர் 1945-இல் காலமானார்.

**இலார்க்கானா** பாகிசுத்தான் நாட்டில் சிந்து மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம்; இலார்க்கானா (Larkana) என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டது. சிந்து ஆற்றிற்கு மேற்கில் கார் கால்வாயின் (Ghar Canal) கரையில் இலார்க்கானா உள்ளது. இதனருகில் வாழும் இலாராக்கு (Larak) மரபு மக்களின் பெயரிலிருந்து இலார்க்கானா என்ற சொல் உருவாயிற்று. இந்நகரின் மையத்திலுள்ள இருப்புப் பாதைச் சந்திப்பு இதனை இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. கிழக்குப் பகுதியில் உள்ளது பழைய நகரம். மேற்கில் இலாகோரி (Lahori) என்னும் சிற்றூரும் அரசாங்க அலுவலகங்களும் உள்ளன. இலார்க்கானா கி.பி. 1855-ஆம் ஆண்டில் நகராட்சியாக மாற்றப்பட்டது. இந்நகரம் உணவு தானியச் சந்தையினையுடைய வாணிக மையமாகும். இங்குப் பித்தளையும் ஏனைய உலோகப் பொருள்களும் சிறப்பாகக் கிடைக்கின்றன. கால்ஹரர்கள் (Kalhoras) ஆட்சியின்போது இது சிந்து மாநிலத்தின் தலைநகராக இருந்தது. இங்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பல கட்டடங்களும் கல்லறைகளும் அழிந்த நிலையிலுள்ள கோட்டையும் உள்ளன. நகராட்சிக் கழகம் நிருவகிக்கும் பூந்தோட்டமொன்றும், சிந்துப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இரு கல்லூரிகளும் இந்நகரிலுள்ளன.

இலார்க்கானா மாவட்டத்தின் பரப்பு 7423 ச.கி.மீ. இது மாவட்டமாக 1901-இல் உருவாக்கப்பட்டது. இங்குள்ள வளமான சமவெளியைச் 'சிந்துவின் பூந்தோட்டம்' (Garden of Sind)என்பர். இதன் மேற்குப் பகுதியாயுள்ள கிர்தார் மலைத்தொடர் இப்பூந்தோட்டத்தில் அடங்காது. கால்வாய்ப் பாசனத்தால் இச்சமவெளியில் கரும்பு, கோதுமை, நெல், பருப்பு, 'ரேப்' விதை, மாம்பழம், பேரிச்சை, கொய்யா போன்ற பழவகைகள் பயிரிடப்படுகின்றன. ஒட்டகங்கள் பெருமளவில் இங்கு வளர்க்கப்படுகின்றன. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள், சாயக் கூடங்கள் போன்றவை இங்கு மிகுதியாகச் செயற்படுகின்றன. பதப்படுத்தாத உப்பும் வெடியுப்பும் எளிதாகக் கிடைக்கின்றன. சிந்துவெளி நாகரிகத்தின் முதன்மையான தொல்லியல் மையமான மொகஞ்சதாரோ, இலார்க்காவுக்கு 24 கி.மீ. தெற்கில் அமைந்துள்ளது இந்நகரின் மக்கள் தொகை 48,008 (1972);மாவட்டத்தின் மக்கள்தொகை 9,21,000 ஆகும்.

பாகிசுத்தானின் தலைமை அமைச்சராக இருந்த சுல்பிகர் அலி புட்டோ (Zulfikar Ali Bhutto) இவ்வூரில்தான் பிறந்தார். இவர் தூக்கிலிடப்பட்ட பின்னர் இவர் உடல் இங்குத்தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

**இலார்சு தார்ண்டைக்குச் சோதனை** என்பது கல்வி நிலையங்களில் கல்வி ஆராய்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வித் திறனை அறிவதற்காவும் பயன்படுத்தப்படும் நுண்ணறிவு மதிப்பீட்டு முறை ஆகும். இலார்சு-தார்ண்டைக்குச் சோதனை (Lorge - Thorndike Test) இர்வின் இலார்சு, தார்ண்டைக்கு ஆகிய இருவராலும் அமைக்கப்பட்டது. இச்சோதனை பல மாறுதல்களுக்கு உட்பட்டு இக்காலத்தில் பல பகுதிகளைக் கொண்ட சோதனையாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சோதனையில் மூன்றாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்புவரையுள்ள மாணவர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய எட்டுச் சோதனைப் பகுதிகள் உள்ளன. இவற்றுள் ஐந்து சொற்சோதனைகளும் மூன்று சொல்லிலாச் சோதனைகளும் அடங்கியுள்ளன. தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு நான்கு கிளைச் சோதனைகள் அடங்கிய அறிதல் திறன் சோதனை (Cognitive Abilities Test) கொடுக்கப்படுகிறது. இதில் சொல்தொகுதி, படம் பாகுபாடு செய்தல், தொடர்புக் கருத்துகள், எண்ணிக்கைக் கருத்துகள் என்னும் நான்கு கிளைச் சோதனைகள் உள்ளன. சோதனைகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கப்படவேண்டும். எட்டுச் சோதனைகளும் 62 நிமிடங்களில் முடிக்கப்பட வேண்டும்.

இலார்சு-தார்ண்டைக்குச் சோதனை குறுகிய காலத்தில் பல்வேறு வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வகையில் அமைக்கபடும். எடுத்துக்காட்டாக, ஐந்தாம் வகுப்பு மாணவன் ஒருவன் மிக எளிதில் தவறின்றி முடித்துவிடக் கூடிய சோதனைப் பகுதிகள் அவனுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இதற்கு மாறாக அவனுக்குக் கடினமாக இருக்கும் பகுதிகள் கொடுக்கப்படுகின்றன. இப்பகுதிகளை அவன் எந்த அளவில் முடிக்கிறான் என்பதை அவன் வகுப்பைச் சேர்ந்த அறிவுத்திறன் மிகுந்த, சராசரி அறிவுத்திறனுடைய, பின்தங்கிய மாணவர்களின் விடைகளுக்குக் கொடுக்கப்பட்ட இச்சோதனை மதிப்பெண்களுடன், இந்த மாணவனின் விடைகளுக்கான மதிப்பெண்கள் ஒப்புநோக்கப்படுகின்றன. ஒருவேளை இந்த மாணவன் சோதனைப் பகுதியின் இந்தக் கடினமான பகுதிகளுக்கு விடையளிக்க முடியாமல் மிகக் குறைவான புள்ளிகள் பெற்றிருந்தால், இவனுக்கு முன்புதந்ததைவிட எளிமையான அதற்கு முந்திய சோதனைப் பகுதிகள் கொடுக்கப்படுகின்றன. இம்முறையினால் பெரும்பாலும் சோதனைகளில்

நிகழக்கூடிய காலம் வீணாதல் தவிர்க்கப்படுகிறது. அதாவது, பெரும்பாலான உளவியல் சோதனைகள் மிக்க எளிமையான பகுதிகளிலிருந்து தொடங்கி மிக்க கடினமான பகுதிகள் வரையில் செல்கின்றன. இவற்றில் மிக்க எளிமையானவற்றை ஒரு குறிப் பிட்ட வயதுப்பகுதியைச் சேர்ந்த அல்லது பள்ளி வகுப்பைச்சேர்ந்த எல்லா ஆட்படுநர்களும் தவறின் றிச் செய்து முழுமையான புள்ளிகளை எடுப்பர். ஆதலின், இத்தகைய சோதனைப் பகுதிகள் மிகுதி யாகத் தேவையில்லை. இலார்சு தார்ண்டைக்குச் சோதனையில் இவை நுட்பமான முறையில் தவிர்க் கப்படுகின்றன.

**இலார்டி (கி.பி.1801-1873)** இக்காலத் தொல்லு யிரியலுக்கு வித்திட்டவர். தொல்லுயிரியலில் சிறந்து விளங்கிய இவர் பழங்கற்காலத்தை ஆய்வு செய் வதிலும் பேரார்வம் கொண்டவர். இலார்டி (Lartet, Edouart) பிரான்சில் செர்சுப் (Gers) பகுதியிலுள்ள கைரால்டு(Guirauld)என்னும் இடத்தில் கி.பி. 1801-ஆம் ஆண்டுபிறந்தார். சட்டக்கல்வி பயின்ற இவர் புதைபடிவ ஆய்வில் முதன்முதலில் ஆர்வம் கொண்டு, சான்சன் (Sanson) சீமோர்ப் பகுதிகளில் புத்துயிரூழி யின்முற்பிரிவின் மூன்றாங்காற் கூறுகளின்(Miocene) புதைபடிவப் படுகைகளில் பல்வேறு உயிரினவகைகள் உள்ளதாகக் கூறினார். அவற்றில் மனிதக் குரங்கு, பிலிபிதிகாசு ஆண்டிகாசு (Plipithecus Antiquus) போன்ற விலங்குகளின் புதைபடிவங்களும் இருப்ப தாகக் கண்டறிந்தார். தென்பிரான்சில் பெரிகோர்டு (Perigord) பகுதியிலுள்ள தார்தோகன் (Dordogne) செரிரி(Zerere)பள்ளத்தாக்குகளில் உள்ள குகைகளில், என்றி கிறிசுடி (Henry Christy) என்பவர் துணையு டன் குகை அகழாய்வுகளை மேற்கொண்டார். இவர் சேகரித்த பல்வேறு பழஞ்சின்னங்களைத் தூய செர்மெயின் (Saint Germain) அருங்காட்சியகத்திற்கு அளித்தார். தொல்லுயிரியலின் பேராசிரியராகச் சார்டண்டிசு பிளேண்டிசு (Jardin des plantes) அருங் காட்சியகத்தில் சில ஆண்டுகள் பணியாற்றினார். பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்ட இவர், கி.பி.1871-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 28 -ஆம் நாள் இறந்தார்.

**இலார்டில்** ஆசுத்திரேலியாவின் மிகத் தொன் மையான பழங்குடியினருள் ஓரினத்தவர். இவர்கள் ஆசுத்திரேலியாவின் குவின்சுலாந்து மாநிலத்தின் வடக்கிலுள்ள மார்னிங்டன் தீவில் (Mornington Island) வாழ்கின்றனர். எண்ணிக்கையில் 1000க்கும் சற்றுக் குறைவான இலார்டில் (Lardil) பழங்குடி யினர் மேற்கத்திய பண்பாட்டின் தாக்கத்தாலும், ஆசுத்திரேலியாவின் நகர மக்களின் தாக்கத்தாலும் பாதிக்கப்படாமலிருப்பதால் மிகத் தொன்மையான பழங்குடித்தன்மைகளை இன்றளவும் கொண்டிருக் கின்றனர். இலார்டில் பழங்குடியினர் கருமை நிறத் தோல், அலை அலையான சுருண்ட மயிர், உயர்ந்த முன் நெற்றி, பருத்த புருவங்கள், பழுப்பு நிறக் கண் கள், அகன்ற தாடை எலும்பு, அகன்ற நாசித் துவாரம், நடுத்தர உயரம் முதலான உடலமைப்பு களைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஆசுத்திரேலிய (Australoid) இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இலார்டில் குடிகள் முப்பது தந்தைவழிக் குலக் குழுக்களாகக் (Clan)காணப்படுகின்றனர். ஒவ்வொரு குலக் குழுவினரும் பொதுவான நிலப்பரப்பினைக் கொண்டிருக்கின்றனர். ஒருவர் மற்றவரின் பகுதியில் வேட்டையாடலாம். எனினும், வேட்டையில் கிடைத்தவற்றில் அக்கால்வழிக் குழுவினருக்கு ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும். இலார்டில் குடி களின் அடிப்படைப் பொருளாதாரம் வேட்டையாடு தலும் மீன்பிடித்தலுமாகும். ஏனைய ஆசுத்திரேலியப் பழங்குடியினரைப் போன்றே இக்குடிகளிலும் வளை தடி (Boomerang), எறி ஈட்டி (Harpoon) முதலான கருவிகள் காணப்படுகின்றன. இவர்களின் வளைதடி இருவகையானதாகும். முதல்வகை வளைதடியா னது விலங்கினை அடித்தபின் மீண்டும் வேட்டை யாளனிடமே வரும். இரண்டாம் வகை வளைதடி போர்ச் செயல்களில் ஈடுபடுத்துவதாகும். இவ்வித வளைதடி எதிரியை தாக்கிய பின் எறிந்தோனிடம் திரும்பாது.

இலார்டில் குடிகளின் கடல் வேட்டை குறிப் பிடத்தக்கது. இவர்கள் துல்கோ (Dulho) என் னும் மீனையும் கடல் ஆமைகளையும் விசித்திரமான முறையில் பிடிக்கின்றனர். துல்கோ மீன் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மட் டுமே மார்னிங்டன் தீவின் கடற்கரையோரத்தில் காணப்படுகிறது. இம்மீன் தோன்றும் காலநிலையைப் பல்வேறு உத்திகளைக் கொண்டு கணிக்கின்றனர். வடதிசைக் காற்று பலமுடன் வீசுதல், கம்பளிப் புதர் (Wool Bush) வளரத் தொடங்குதல் முதலான வற்றை முன்னறிகுறிகளாகக் கொண்டுள்ளனர். இறுதியில் கீழ்த் திசையில் பௌர்ணமி தோன்றும் பொழுதே இம்மீன் வெளிப்படும் என்று நம்புகின் றனர். கீழ்த்திசையில் பௌர்ணமி தோன்றும் பொழுது இலார்டில் குடிகளனைவரும் ஒன்று கூடு கின்றனர்பின்னர்ச்சந்திரன்தோன்றும்திசைக்குஎதிர்த் திசையில் ஈட்டிகளை நட்டுவைப்பர். தாழலை வீசும் காலத்தில் (Low tide) இம்மீன் தோன்றுவதால் இடுப்பளவு வரை கடலில் சென்று வலைவிரித்து மீனைப் பிடித்து விடுகின்றனர். பிடித்த மீனைப்

பெருவிரல் நகத்தைக் கொண்டு பக்க வாட்டில் இருக்கும் துடுப்பருகே முக்கோணமாகக் கிழித்துக் கொழுப்புச் சத்தையும் முட்டைப் பையையும் எடுத்து விடுவர். பின்னர் அதை நெருப்பில் சுட்டுக் கால்வழிக் குழுக்களிடையே பகிர்ந்து கொள்வர். இம்மீனின் எலும்பை உடைத்தால் தம் குடியினருக்குத் துன்பம் நேரும் என்றும் எதிர்காலத்தில் இம்மீன் கிடைக்காது என்றும் கருதுகின்றனர்.

இலார்டில் பழங்குடிகளிடையே கடல் ஆமை வேட்டையும் குறிப்பிடத்தக்கது. ஈட்டியுடன் தயார் நிலையில் இருக்கும் இவர்கள் ஆமை முட்டையிடக் கரைவரும் பொழுது ஈட்டியைப் பாய்ச்சிக் கைப்பற்றுகின்றனர். மார்னிங்டன் தீவில் வசிக்கும் இலார்டில் பழங்குடிகள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபடுவதுடன் இலீவார்டு மக்கள் (Leward People) எனவும் வின்வார்டு (Windward) மக்கள் எனவும் பிரிக்கப்படுகின்றனர். போர்க்காலத்தில் வடபகுதியில் வாழும் இலீவார்டு மக்களும் தென் பகுதி வின்வார்டு மக்களும் வட்டார நோக்குடன் ஒருங்கிணைந்து போரிடுகின்றனர். இக் குடிகளிடையே சடங்குகளும் நடன நிகழ்ச்சிகளும் மிகுந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு கால்வழியினரும் நடனப் போட்டிகளையும் நடத்துவர். இயற்கைச் சூழ்நிலையாலும் இவர்கள் பழங்குடித்தன்மையில் ஆழ்ந்து உழன்று நிற்பதாலும் முதுபழங்குடியினராகவே திகழ்கின்றனர்.

**இலாரன்சு, தாமசு எட்வர்டு (கி.பி. 1888-1935):** இவர் அராபிய இலாரன்சு என்றும் கூறப்படுவார். ஆக்சுபோர்டு ஏசு கல்லூரியில் பட்டப் படிப்பு மாணவராக இருந்தபோதே, இலாரன்சு ஆர்வம் மிகுந்த தொல்லியல் ஆய்வாளராக இருந்தார். இவர் சிரியா, மெசபடோமியா போன்ற பகுதிகளில் 1910 முதல் 1914 வரை அகழாய்வினை மேற்கொண்டார். இலாரன்சு (Lawrence) அராபியர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். எனவே, இவர் செட்டா (Jedda) விலுள்ள உசேன் மன்னருடன் இணைந்து, துருக்கியருக்கு எதிராகக் கலகம் நடத்த அராபியர்களின் அணி ஒன்றைத் திரட்டினார். தமாசுகசு-மெதீனா (Damascus-Medina) இருப்புப் பாதைகளின் மீது தாக்குதல் நடத்தவும், எகிப்தில் நிலைநாட்டப்பட்டிருந்த நேசநாடுகளின் தளங்களுடன் தொடர்பு கொண்ட மையங்களை வெற்றி காணவும் இவருடைய இராணுவப் படையெடுப்புகள் உதவின. இவர் 1917-18-ஆம் ஆண்டில் ஆலன்பியின் பாலசுத்தீனப் படையெடுப்புகளில் அராபியர்களை வழிநடத்திச்சென்றார். அப்படையெடுப்பு 1918-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமாசுகசு நகரில் நிகழ்ந்தது. முதல் உலகப் போருக்குப் பின்னர் முடிவு செய்துகொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கைகள் அராபியர்களின் குறிக்கோள்களுக்குத் துரோகம் செய்துவிட்டன என்பது இவர் கருத்தாகும். எனவே, பொதுமக்களின் கவனம் தம் மீது திரும்பாவண்ணம் இவர் இங்கிலாந்து ஆகாய விமானப்படையில் சேர்ந்துவிட்டார். இவர் தம் பெயரையும் டி. ஈ. சா (T. E. Shah) என்று மாற்றி வைத்துக்கொண்டார். எனினும், இது 1927-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. சிறிதுகாலம் இவர் பீரங்கிப் படையிலும் பணிபுரிந்தார். தோர்செட்டு(Dorset) என்னும் ஊரில் நிகழ்ந்த சாலை விபத்தொன்றில் 1935-ஆம் ஆண்டு இலாரன்சு உயிரிழந்தார். அராபியர்களின் கலகம் குறித்து இவர் அறிவின் ஏழு தூண்கள் (Seven Pillars of Wisdom)என்னும் நூலை 1919-20-ஆம் ஆண்டுகளில் எழுதி முடித்தார். தனியார் பயன்பாட்டிற்காக இந்நூல் 1926-இல் வெளியிடப்பட்டது. பின்னர், இது அனைவரும் படிக்கும் வண்ணம் 1935-இல் வெளியிடப்பட்டது.

**இலாரியே, சர்வில்பிரிடு (கி. பி. 1841-1919)** என்பார் பிரெஞ்சுக் கனடியர்; கனடாவின் தலைமை அமைச்சராக கி.பி. 1896 முதல் 1911 வரை பதவி வகித்தவர். இவர் பாராளுமன்றத்தில் 45 ஆண்டுகள் உறுப்பினராய்த் திகழ்ந்தார்; முற்போக்குக் கட்சியின் (Liberal Party) தலைவராக 32 ஆண்டுகள் விளங்கினார்.

பிரெஞ்சு மொழி பேசும் கனடியர்களையும் ஆங்கில மொழி பேசும் கனடியர்களையும் இணைக்க இவர் அரும்பாடுபட்டார். ஆங்கிலப் பேரரசிடமிருந்து கனடா விடுதலைபெற வேண்டுமாயின் அந்நாடு இங்கிலாந்துடன் நெருங்கிய உறவினை வைத்துக்கொள்ளக்கூடாது என்னும் கருத்தினை உருவாக்கியவரும் இவரே இலாரியே (Laurier, Sir Wilfrid) கனடாவின் தலைமைஅமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் கனடா செல்வச் செழிப்பில் திளைத்து விளங்கியது. மேற்குக் கனடா பற்றிய சிக்கல் 1905-ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தபோது ஆல்பர்ட்டா (Alberta), சசுகட்சுவான் (Saskatchuwan) என்னும் இரு புதிய மேலை பிரெய்ரி மாநிலங்கள் உருவாயின.

இவர் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் தங்குதடையின்றித் தெளிவாகப் பேசவல்லவர்; கனடா நாட்டுத் தலைசிறந்த பேச்சாளர் என்று புகழ்பெற்றவர்.

இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு கனடா நாட்டின் குயுபெக்கு மாநிலத்திலுள்ள செயிண்ட்டு இலின்

(St.Lin) என்னும் சிற்றூரில் பிறந்தார். செயிண்ட்டு இலின் அக்காலத்தில் இலாரென் டைடிசு (Laurentides) எனக்குறிப்பிடப்படுகிறது. இவர்தம் மூதாதையர்கள் பிரான்சிலுள்ள நார்மண்டியிலிருந்து கனடா வந்தவர்கள். அவர்களுள் ஒருவரான பால் டி சாமிடே (Paul de Chomedey) என்பவர் கி.பி. 1642-இல் மாண்ட்ரியால் நகரை உருவாக்கினார். அவர் ஒரு படைவீரர்.

இவர் அன்னையாரின் பெயர் மேரி மார்சல் மார்ட்டினே (Marie Marcelle Martineau Laurier). இவர் ஆறு வயதுக் குழந்தையாக இருந்த போது இவர் தாயார் காலமானார். கரோலுசு இலாரியே (Carolus Laurier) இவர் தந்தையார். அவர் அடிலெய்ன் ஈதியர் (Adelaine Ethier) என்பவரைப் பின்னர் மணந்துகொண்டார்.

கரோலுசு இலாரியே ஒரு குடியானவர்; முற்போக்குக் கருத்துடைய இவர், தம் மகனை ஆங்கிலக் குடும்பமொன்றில் சேர்த்து ஆங்கில மொழியையும் ஆங்கில வாழ்க்கை வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தார். குயுபெக்கிலிருந்து பிரெஞ்சுக்கனடியக் கல்லூரியொன்றில் இலாரியே கல்வி கற்றார். பொது மேடைப் பேச்சுக்கலையில் தேர்ந்தவரான இவர், அங்குப் பட்டி மன்றம் (Debating Society) ஒன்றையும் நிறுவினார்.

மாண்ட்ரியாலிலிருந்தமெக்கில் (Megill) பல்கலைக் கழகத்தில் இவர் சட்டம் பயின்று, கி.பி. 1864-ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

இவர் மாண்ட்ரியாலில் வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கினார். இவர் கி.பி. 1866-இல் நுரையீரல் நோய்வாய்ப்பட்டார். நண்பர் ஒருவரின் கருத்துப்படி, குயுபெக்கில் அர்த்தபாசுகாவில்லி (Arthabaskaville) என்னும் புதிய குடியிருப்பொன்றில் தம் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். இங்கு இவர் புகழ்பெற்ற வழக்குரைஞராகப் போற்றப்பட்டார்.

இவர் கி.பி. 1868-மே 13-ஆம் நாள் மாண்ட்ரியாலைச் சார்ந்த சோ இலாபாண்டெயின் (Zoe Lafontaine)என்பவரை மணந்து கொண்டார். இவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்கும் வரையில் இவர்கள் அர்த்தபாசுகாவில்லியிலேயே வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குக் குழந்தை இல்லை.

குயுபெக்குச் சட்டமன்றத்தின் உறுப்பினராக, முற்போக்குக் கட்சியின் சார்பாக இலாரியே கி.பி. 1871-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர்க் குயுபெக்கிலிருந்த துருமாண்டு-அர்த்தபாசுகா (Drummond Artha-baska) என்னும் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பாராளுமன்றத்தில் இவருடைய முதற் சொற்பொழிவே அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

கனடாவின் தலைமை அமைச்சராகவிருந்த அலெக்சாந்தர் மக்கன்சி (Alexander Mackenzie) என்பார் இலாரியேவைத் தம்முடைய அமைச்சரவையில் சேருமாறு அழைப்புவிடுத்தார். உள்நாட்டு வருவாய்த்துறை அமைச்சராகப் பதவியேற்ற இவர், ஓராண்டுக்காலம் கூட அப்பொறுப்பினை வகிக்கவில்லை. ஏனெனில், முற்போக்குக் கட்சி கி.பி. 1878-ஆம் ஆண்டுத் தேர்தலில் தோற்று விட்டது. அடுத்த 18 ஆண்டுகள் இவர் எதிர்க்கட்சி உறுப்பினராக மக்களவையில் இருந்தார். அலெக்சாந்தர் மக்கன்சியை அடுத்து எட்வர்டு பிளேக்கு (Edword Blake) என்பார் முற்போக்குக் கட்சியின் தலைவரானார். இலாரியே அவருடைய உறுதுணைவராகக் குயுபெக்கு அணியினரின் தலைவரானார்.

சசுகட்சுவான் கலகத்தில் பிரெஞ்சுக் கனடியர்களுக்கும் ஆங்கிலக் கனடியர்களுக்குமிடையே சிக்கல் மூண்டது. இரியல் (Riel) என்பார் பிரெஞ்சுக்கனடியர்களின் தலைவராக இக்கலகத்திற்குத் தலைமை தாங்கினார். அவரை மாவீரன் என்று அவர்கள் புகழ்ந்து போற்றினர். ஆனால், ஆங்கிலக் கனடியர்கள் அவரை நாட்டுத்துரோகி என்றும், அவர் கழுவேற்றப்படல்வேண்டும் என்றும் கோரினர். அப்போது தலைமை அமைச்சராயிருந்த சர்.சான்.ஏ. மாக்டொனால்டு என்பார் ஆங்கிலக் கனடியரின் கருத்தையே ஏற்றுக் கொண்டமையால் இரியல் தூக்கிலிடப்பட்டார்.

பிரெஞ்சுக் கனடியர்கள் இரியல் தூக்கிலிடப்பட்டதை எதிர்த்து மாண்ட்ரியாலில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இலாரியேயும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டார். பிளேக்கும் இவருடன் சேர்ந்து கொண்டார். எனினும், குயுபெக்கிற்கு வெளியில் வாழ்ந்த முற்போக்குக் கட்சியினரே தம் தலைவர்களைப் பின்பற்ற மறுத்துவிட்டனர். அவர்களை எதிர்த்த பழைமைப் பற்றாளர் கட்சியினர் கி.பி. 1887-ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். முற்போக்குக் கட்சி மும்முறை தொடர்ந்து தோல்வியுற்றமையால், பிளேக்கு அக்கட்சியின் தலைமைப் பதவியை விட்டுவிலகினார். இலாரியே கி.பி. 1887-சூன் மாதம் 7-ஆம் நாள் முற்போக்குக் கட்சியின் தலைவரானார்.

அடுத்துவந்த தேர்தலில் இலாரியே மாக்டொனால்டிடம் தோற்று விட்டார். மாக்டொனால்டு கி.பி. 1891-ஆம் ஆண்டு காலமானார். அடுத்த ஐந்தாண்டுகளில் பழைமைப் பற்றாளர் கட்சி மக்களின் ஆதரவை இழக்கலாயிற்று. இவ்வாண்டுகளில் இக்கட்சியைச் சேர்ந்த நால்வர் தலைமை அமைச்சர்களானார்கள். மனிடோபா பள்ளிபற்றி நடைபெற்ற (Manitoba School Issue) கருத்துவேறுபாடுகளின் அடிப்படையில் நிகழ்ந்த அடுத்த தேர்தலில் முற்போக்குக் கட்சியினர் வென்றனர்.

வில்பிரிடு இலாரியே தம் 54-ஆம் வயதில் கனடா நாட்டின் தலைமை அமைச்சராக கி.பி. 1896-ஆம் ஆண்டு சூலை மாதம் 11-ஆம் நாள் பதவியேற்றார். பழைமைப் பற்றாளர் (Conservative) கட்சியைச் சார்ந்த சர் சார்லசு தப்பர் (Sir Charles Tupper) என்பாரை அடுத்து, இலாரியே தலைமை அமைச்சரானார். மனிடோபா பள்ளி மொழிச்சிக்கலும் ஒருவாறு தீர்க்கப்பட்டது.

இலாரியே தலைமை அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் நடந்த இரு சிறப்பான நடவடிக்கைகளால் கனடாவின் செல்வவளம் பெருக வழிபிறந்தது. முதலாவது. வெளிநாடுகளிலிருந்து இருபது இலட்சம் பேர் கனடாவுக்கு வரவழைக்கப்பட்டுப் பிரெய்ரி மாநிலங்களில் குடியேற்றப்பட்டனர். இவர் கோதுமையை விளைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருஞ் செல்வத்தைப் பெற வழிவகுத்தார். இரண்டாவது, வட கனடா இருப்புப் பாதையையும் 'கிராண்டு டிரங்கு பசிபிக்கு இருப்புப்பாதை'யையும் (Grand Trunk Pacific Railways) அமைக்க இவர் அரசு பெரும் உதவி செய்ததால்கோதுமையை ஏற்றிச் செல்ல வழி ஏற்பட்டது. இவ்விரு நடவடிக்கைகளினாலும் கனடா செல்வம் கொழிக்கும் சீரிய நாடாக மாறியது. முற்போக்குக் கட்சியினர் தொடர்ந்து மும்முறை தேர்தலில் வெற்றிபெற்றனர். விக்டோரியா அரசியார் இலாரியேவுக்கு விருது வழங்கி, கி.பி. 1897-ஆம் ஆண்டில் பாராட்டினார்.

செல்வச் செழிப்பு பிரெஞ்சு, ஆங்கிலக் கனடியர்களிடையே இருந்த கசப்புணர்வைக் குறைத்ததெனலாம். ஆனால், கனடா அரசு 1905-ஆம் ஆண்டில் சசுகட்சுவான், ஆல்பர்ட்டா என்னும் பெயரில் இரு புது மாநிலங்களை உருவாக்கியது. இவ்விரு மாநிலங்களும் மனிடோபாவுக்கும் பிரிட்டிசு கொலம்பியாவுக்கும் இடைப்பட்டிருந்தன. இலாரியே இப்புதிய மாநிலங்களில் உரோமானியக் கத்தோலிக்கப் பள்ளிமுறையை அமைத்திட அனுமதித்தார். சமயம், கல்வி ஆகியவை குறித்து மீண்டுமொரு புயல் கிளம்பியபோதிலும், அது விரைவில் தணிந்துவிட்டது.

இதனிடையில் கனடாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த உறவுமுறையில் தொல்லை ஏற்பட்டது. இதிலும் பிரெஞ்சுக் கனடியர்களும் ஆங்கிலக் கனடியர்களும் வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார்கள். பிரிட்டன் போரில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், கனடா எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துச் சிக்கல் தோன்றியது.

பிரிட்டிசுக் குடியேற்றப் பகுதிகளின் செயலராக இருந்த சோசப்பு சேம்பர்லேன் (Joseph Chamberlain) என்பார் கி.பி. 1897-இல் பிரிட்டிசுப் பேரரசிலுள்ள அனைத்து உறுப்பு நாடுகளிடையேயும் நெருங்கிய பொருளாதார உறவு இருக்கவேண்டுமென்னும் கருத்தை வெளியிட்டார். பிரிட்டிசுப் பொருள்களின் மீது விதிக்கப்பெற்றிருந்த சுங்கவரியை அவ்வாண்டில் குறைப்பதென இலாரியேயின் அரசு ஒப்புக்கொண்டது. ஆனால், பிரிட்டனையும் பிரிட்டிசுக் குடியேற்றப் பகுதிகளையும் ஒரே பொருளாதார அமைப்பின்கீழ்க் கொணரும் முறையை இலாரியே எதிர்த்தார். பிரிட்டிசுப் பேரரசு ஒரே பொருளாதார அடிப்படையில் இயங்க வேண்டும் என்னும் கருத்துக்கு கி.பி.1897, 1902, 1907, 1911 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நான்கு பேரரசு மாநாடுகளிலும் (Imperial Conferences) தம் எதிர்ப்பினைத் தொடர்ந்து இவர் தெரிவித்து வந்தார்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்த போயர்(Boers) களுடன் பிரிட்டன் கி.பி. 1899-ஆம் ஆண்டில் போருக்குச் சென்றது. ஆங்கிலக் கனடியர்கள் கனடா நாடு பிரிட்டனை ஆதரித்து அதற்கு உறுதுணை நிற்கப் படைகளை அனுப்பவேண்டும் என்று கூறினர். ஆனால், பிரெஞ்சுக் கனடியர்கள் உதவி கொடுக்கக் கூடாதென எதிர்த்தனர். பெரும்பாலான மக்கள் கொண்ட கருத்தின் அடிப்படையில் இலாரியே ஆப்பிரிக்காவுக்குப் படைகளை அனுப்பினார். பிரெஞ்சுக் கனடியர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். அமைச்சரவையில் தமக்கு அடுத்த நிலையில் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த என்றி பவுரசா (Henri Bourassa) என்பவர்கூட, இக்கொள்கையை எதிர்த்துக் கலகம் செய்தார். இத்தருணத்திலிருந்து பிரெஞ்சுக் கனடியர்களும் ஆங்கிலக் கனடியர்களும் பிரிட்டிசுப் பேரரசில் கனடாவின் செயற்பாடு குறித்து இருவிதமான கருத்துகளைக் கொண்டவராய்ப்பிரிந்து வாழலாயினர்.

செருமனியுடன் போரில் இறங்கவேண்டிய அச்சுறுத்தல் 1910-ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கு ஏற்பட்டது. போர் மூண்டால் பிரிட்டனுக்கு உதவவேண்டும் என்னும் நோக்குடன் கனடாவின் கப்பற்படையைத்

திரட்டுவது என்று இலாரியே முடிவுசெய்தார். கனடாப் பாராளுமன்றம் 'கப்பற்படைப்பணி மசோதா' (Naval Service Bill) என்னும் சட்ட முன் வரைவினை ஏற்றுக்கொண்டது. ஆனால், இதைக் கனடியர்களுள் பலர் எதிர்த்தனர். பிரெஞ்சுக் கனடியர்களுள் சிலர் இலாரியேயை 'ஆங்கில ஆதரவாளர்' என்றும், ஆங்கிலக் கனடியர்களுள் சிலர் 'பிரெஞ்சு ஆதரவாளர்' என்றும், எண்ணினர்.

அமெரிக்க ஐக்கிய நாடு 1911-ஆம் ஆண்டில் கனடாவிற்கு ஒருசில வாணிக ஒப்பந்தங்களை வழங்கியது. இலாரியே அவற்றை ஏற்றுக்கொண்டார். இவ்வொப்பந்தங்கள் இருநாடுகளுக்கும் இணையான வாய்ப்புகளை நல்கின. ஆனால், கனடியர்களுள் பலர் இவ்வாய்ப்புகளால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் செல்வாக்குப் பெருகும் என்று அஞ்சினார்கள். அலாசுகாவுடன் 1903-இல் செய்துகொண்ட உடன்படிக்கையையும் பலர் வெறுத்தனர். இவற்றின் விளைவாக 1911 செப்டம்பரில் நடைபெற்ற தேர்தலில் முற்போக்குக் கட்சி தோல்வியுற்றது. புவரசா (Bourassa)வே இலாரியேவுக்கு எதிராகப் பழைமைப் பற்றாளர் கட்சிக்கு ஆதரவு நல்கி அவரைத் தோற்கடிக்கக் காரணமானார். இராபர்ட்டு எல். போர்டன் (Robert L. Borden) என்பார் பழைமைப் பற்றாளர் கட்சியின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார்

வில்பிரிடு இலாரியே தம்முடைய எஞ்சிய ஆண்டுகளில் முற்போக்குக் கட்சியின் தலைவராகவே தொடர்ந்து பணியாற்றினார். முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டில் மூண்டபோது, பிரிட்டனுக்குப் போரில் உதவப் பழைமையாளர் கட்சிக்கு இலாரியே ஆதரவு நல்கினார். முதல் உலகப்போர் தொடர்ந்து நடைபெற்றுவந்தது.கனடாவின் தலைமை அமைச்சர் ஆண்களின் கட்டாய இராணுவச் சேவையைக் கொண்டுவர முடிவுசெய்தார். அத்துடன் பழைமைப் பற்றாளர் கட்சியும்முற்போக்குக்கட்சியும் இணைந்து இம்முடிவை ஏற்றுக்கொண்டால் நல்லதெனக் கண்ட போர்டன், இலாரியேயையும் அமைச்சராகச் சேர வற்புறுத்தினார். ஆனால், இலாரியே ஏற்க மறுத்துவிட்டார். குவிபெக்குப் பகுதியில் தம் செல்வாக்குப் பறிபோய்விடும் என்ற அச்சத்தால்தான் இலாரியே இம்முடிவுக்கு வந்தார். புவரசாவும் அவர்தம் துணைவர்களும் கட்டாய இராணுவச் சேவையைக் கடுமையாக எதிர்த்தனர். இலாரியேயின் ஆங்கிலக் கனடியத் துணைவர்களும், இவரைவிட்டு விலகிப் போர்டனுடன் இணைந்துகொண்டனர். குயுபெக்கில் இவர் நலத்தைவிடத் தேசிய நலனில் மிக்க அக்கறை காட்டவில்லை என்று ஆங்கிலக் கனடியர்களும் இலாரியேயை எதிர்த்தனர்.

ஆங்கிலக் கனடியர்களும் 1917-திசம்பரில் போர்டனின் ஐக்கிய அரசுக் கோரிக்கையை ஏற்றுப் பெருமளவில் வாக்களித்தனர். போர்டன் பதவியில் நீடித்தார். ஆனால், பிரெஞ்சுக் கனடியர்களுள் பெரும்பாலோர் ஐக்கிய அரசையும் கட்டாய இராணுவச் சேவையையும் எதிர்த்து வாக்களித்தனர்.

ஆங்கிலக் கனடியர்களுக்கும் பிரெஞ்சுக் கனடியர்களுக்குமிடையே தோன்றிய இப்பிரிவினையால் இலாரியே பெரும் வருத்தமுற்றார். பாராளுமன்றத்தில் நுழைந்த நாளிலிருந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக இவ்விரு குழுக்களையும் இணைக்க இவர் அரும்பாடுபட்டும் பயன் ஏற்படவில்லை. ஆனால், இவ்விரு குழுக்களையும் வி.எல். மக்கன்சிகிங்கு (V.L. Mackenzie King) என்பார் இணைத்துப் புகழ் பெற்றார். எனினும், இவ்விணைப்பு இலாரியே 1919-இல் காலமான பின்னர்த் தான் ஏற்பட்டது.

இவர் 1919-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மனைவி1921-ஆம் ஆண்டில் காலமானார். இலாரியேயின் வீட்டைக் கனடா அரசு அருங்காட்சியகமாக மாற்றியுள்ளது. இலாரியேயின் பிறந்த ஊரான புனித இலின் வரலாற்றுச் சிறப்புமிக்க தேசிய சின்னமாக இன்றும் கருதப்படுகிறது.

**இலாரெலும் ஆர்டியும்:** இலாரெல், ஆர்டி என்னும் இரு நகைச்சுவை நடிகர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகெங்கிலும் புகழ் பெற்று விளங்கினர். இலாரெல் (Stan Laurel கி.பி. 1895-1965) கி.பி. 1895-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். இவர் 1915-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று அங்குப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகராக விளங்கிய சார்லி சாப்ளினிடம் மாணவராகச் சேர்ந்தார். ஆர்டி(Oliver Norvelle Hardy, கி.பி.1892-1954) கி.பி. 1892-ஆம் ஆண்டு அமெரிக்காவில் சார்சியா மாநிலத்தில் பிறந்தார். இவ்விருவரும் தனித்தனியே ஆலிவுட்டில் பல ஆண்டுகள் நடித்து வந்தனர். இலியோ மக்காரி (Leo McCarey) என்னும் திரைப் படத் தயாரிப்பாளர் 1926-ஆம் ஆண்டு இவ்விருவரையும் இணைந்து நடிக்கச் செய்து திரைப்படம் தயாரித்தார். இலாரெல் மெலிந்த உயரமான உடலமைப்புக் கொண்டவர். ஆர்டி பருத்த உடலமைப்புக் கொண்டவர். இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு, உடல் அசைவு, முகபாவம் ஆகியவை காண்பவரிடையே சிரிப்பை வரவழைக்கும். இது கோமாளி நகைச்சுவை (Slapstick Comedy) என்று குறிப்பிடப் படுகிறது. இந்த நகைச்சுவை முறையில் இலாரெலும் ஆர்டியும் அனைத்துலகப் புகழ்பெற்றனர். இலாரெல் ஏதேனும் ஒரு சிறுபிள்ளைத்தனமான செயலைச் செய்து விட்டு அதன் விளைவுகளைக்

கண்டு தம் உச்சந்தலையின்மீது விரல்களால் சொறிந்து கொண்டு நிற்கும் காட்சி எல்லா வயதினரிடையேயும் சிரிப்பை வரவழைத்தது. ஆர்டியின் முகத்தோற்றமும் பார்வையும் காண்போரைத் தம் கவலையை மறந்து சிரிக்கச் செய்தன. இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு, உரையாடலின் மூலம் நகைச்சுவையை வரவழைக்கும் முறையினின்றும் மாறுபட்டதாகும். ஆர்டி 'அலி பேபு' (Ollie Babe) என்று இரசிகர்களால் செல்லமாகக் குறிப்பிடப்பட்டார். இவர்கள் இருவரும் 1926-ஆம் ஆண்டிலிருந்து 1940-ஆம் ஆண்டு வரை இணைந்து நடித்து வந்தனர். பின்னர்த் தனித்தனியே '20-ஆம் செஞ்சுரி பாக்சு', எம்.சி.எம். ஆகிய இரு திரைப்பட நிறுவனங்களில் நடித்து வந்தனர். இவர்கள் 1945- ஆம் ஆண்டு நடிப்பதை நிறுத்திவிட்டுப் பிரிட்டிசுத் தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர். ஆர்டி 1954-ஆம் ஆண்டு இறந்தார். அதற்குப் பின், இலாரெல் சில ஆண்டுகள் வரையில் திரைப்படங்களுக்காக நகைச்சுவைக் காட்சிகளை எழுதி வந்தார். இலாரெல் 1965-ஆம் ஆண்டு காலமானார்.

இலாரெலும் ஆர்டியும் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தனர். இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு முறை இலட்சக்கணக்கானவர்களால் விரும்பப்பட்டது. இம்முறை இலாரெல் ஆர்டி மரபு (Laurel & Hardy Formula) என்று வழங்கப்பட்டது. இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை எல்லோராலும் விரும்பிக் கண்டுகளிக்கப்பட்டது. இவர்களுடைய நகைச்சுவையில் பால் கவர்ச்சி, காமத் தூண்டுதல் போன்ற விரும்பத்தகாத காட்சிகள் இடம் பெறாமல், மக்கள் மனத்தை மகிழ்விக்கும் திறன் இருந்ததே இவர்களுடைய அழியாப் புகழுக்குக் காரணமாகும். இவர்கள் நடித்த படங்களும் படப்பகுதிகளும் இன்னும் உலகின் பல நாடுகளில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. இலாரெலும் ஆர்டியும் இணைந்து நடித்த முதற்படம் 'ஆலிவுடு குறிப்புகள்' (Minutes from Hollywood) என்பதாகும். இவர்கள் இணைந்து நடித்த இறுதிப் படம் 'அடால்-கே இராபின்சன் குருசோ,' உடோபியா (Atoll-K, Robinson Crusoe, Utopia) என்ற பல்வேறு பெயர்களைக் கொண்ட படமாகும். இப்படம் 1950-இல் வெளிவந்தது.

**இலால்பகதூர் சாத்திரி (1904-1966)** சுதந்திர இந்தியாவின் இரண்டாம் தலைமை அமைச்சர். உருசிய நாட்டைச் சார்ந்த தாசுகண்டில் (Tashkent) பாகிசுத்தானுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்ட நாளில் மாரடைப்பால் உயிர் துறந்தவர்.



இலால்பகதூர் சாத்திரி

இலால்பகதூர் சாத்திரி (Lal Bahadur Shastri) 1904-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் உத்தரப் பிரதேசம் மொகல்சராய்(Mughalsarai)என்னுமிடத்தில் பிறந்தார். இந்த ஊர் வட இந்தியாவில் இருக்கும் பெரும் இருப்புப்பாதைச் சந்திப்புகளுள் ஒன்று. இவ்வூர் வாரணாசிக்கு 12 கி.மீ. தொலைவில் உள்ளது. சாத்திரி காயசுத்தர் என்னும் பிராமணரல்லாதார் வகுப்பொன்றில் பிறந்தார். காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-இல் இவர் பிறந்தது குறிப்பிடத்தக்கது. பள்ளி இறுதிவரை படித்ததும், இவர் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் 1921-ஆம் ஆண்டு பங்கு கொண்டு சிறை சென்றார். சிறையிலிருந்து விடுதலையானதும் காசி வித்தியாபீடம் என்னும் கல்வி நிலையத்தில் மீண்டும் மாணவராகிப் பட்டம் பெற்றார். பட்டம் பெற்றதும் தொடர்ந்து தேசிய அரசியலில் குதித்தார். மக்கள் ஊழியர் கழகம் (Servants of People Society) என்னும் தொண்டு இயக்கத்தில் சேர்ந்து நாட்டுப் பணியில் ஈடுபட்டார் இலால் பகதூர் சாத்திரி. சாத்திரியின் நேர்மையையும் ஆக்கப்பணியையும் உத்தரப் பிரதேச மக்கள் பெரிதும் பாராட்டினர். அதன் பயனாக இவர் உத்தரப்பிரதேசக் காங்கிரசுக் குழுவின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்தின் உறுப்பினராக இவர்

1937-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பெற்றார்; 1947-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலத்தின் உள்துறை-போக்குவரத்துத் துறை அமைச்சரானார். அனைத்திந்தியத் தேசிய காங்கிரசு இயக்கத்தின் பொதுச் செயலாளராக இலால்பகதூர் சாத்திரி 1951-ஆம் ஆண்டிலும், அடுத்த ஆண்டில் இந்திய நாடாளுமன்ற மேலவையின் (Rajya Sabha) உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய அமைச்சரவையில் பண்டித சுவகர்லால் நேருவின் தலைமையில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டார். தமிழ்நாட்டைச் சார்ந்த அரியலூர் என்னுமிடத்தில் நேர்ந்த இருப்புப்பாதை இடர் ஒன்றில் பலர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிர்துறந்தனர், அந்த இடருக்குத் தாமே பொறுப்பேற்று இலால்பகதூர் சாத்திரி தம் பதவியிலிருந்து விலகினார். மீண்டும் சாத்திரி இந்தியாவின் உள்துறை அமைச்சராக்கப் பட்டார். ஆனால், காமராசர் திட்டத்தின்படி இவர் பதவியைத் துறந்தார். துறைப் பொறுப்பில்லா அமைச்சராக1964-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் மீண்டும் அமைச்சராக்கப்பட்டார். அப்போது இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்தவர் பண்டித சவகர்லால் நேரு. பண்டித நேரு 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் காலமானார். அவரையடுத்து இலால்பகதூர் சாத்திரி இந்தியாவின் தலைமை அமைச்சரானார். இப்பதவியை இவர் தாம் இறக்கும் காலம் வரை வகித்தார்.

இலால் பகதூர் சாத்திரி தலைமை அமைச்சராகப் பதவி வகித்தபோது 1965-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிசுத்தானுக்கும் இடையே போர் மூண்டது. அப்போது பாகிசுத்தானின் அதிபராயிருந்த அயூப்கான் என்பார் பஞ்சக்கச்ச வேட்டி கட்டிய இந்தியாவின் தலைமை அமைச்சரான இவரைத் தரக்குறைவாகத் தாக்கிப்பேசினார். போரில் பாகிசுத்தானே வெற்றிபெறப் போவதாக அயூப்கான் கனவு கண்டார். ஆனால், 1965-ஆம் ஆண்டுப் போரில் இந்தியப் படையினர் பாகிசுத்தானை எதிர்த்துத் தாக்கி இச்சோகில் கால்வாய் வரை பாகிசுத்தான் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். இப்போரில் இந்தியா பெரும் வெற்றிகண்டது. பாதுகாப்புப் போருக்கு மாறாகப் பாகிசுத்தானை எதிர்த்துத் தாக்கும் இராணுவ முறையை இந்தியா கடைப்பிடித்தது. உலக நாடுகள் வற்புறுத்தியதன் காரணமாக இந்தியா போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டது.

இந்தியா-பாகிசுத்தான் உடன்படிக்கை 1966-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் சோவியத்து ஒன்றியத்தைச் சேர்ந்த தாசுகண்டு என்னும் மாநகரில் உருசியாவின் தலைமையில் நடைபெற்றது. இரு நாடுகளும் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டதுடன், போருக்கு முன்னர் இருந்த இடங்களை அவரவருக்குத் திருப்பிக் கொடுப்பதெனவும் இவ்வுடன்படிக்கை உறுதி செய்தது. இந்தியா-பாகிசுத்தான் உடன்படிக்கை கையெழுத்தான சில மணிக்குள் இந்தியாவின் தலைமை அமைச்சர் இலால் பகதூர் சாத்திரி 1966-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் நள்ளிரவில் தாசுகண்டில் தாம் தங்கியிருந்த மாளிகையில் மாரடைப்பால் காலமானார். நல்லொழுக்கம், நேர்மை, தன்னலமற்ற தேசபத்தி போன்ற குணங்களின் இருப்பிடமான இலால் பகதூர் சாத்திரிக்கு இந்திய அரசு, அவர் மறைந்த பின்னர், 'பாரத இரத்தினம்' என்னும் விருது கொடுத்துப் பாராட்டியது. அரி கிருட்டிண சாத்திரி என்பார் இலால் பகதூர் சாத்திரியின் மகன். சாத்திரியின் துணைவியார் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

## இலாலா இலசபதி ராய் (கி.பி. 1865-1928)

'பஞ்சாபின் சிங்கம்' என்று போற்றப்பட்ட தேச பக்தர். இந்திய விடுதலைக்காகப் பல இன்னல்களை அஞ்சாது எதிர்நோக்கிய வீரர். இலாலா இலசபதி ராய் (Lala Lajpat Rai) கி.பி. 1865-ஆம் ஆண்டு பஞ்சாபு மாநிலத்தைச் சேர்ந்த உலூதியானா மாவட்டத்திலுள்ள சாக்ரான் (Jagraon) என்னும் ஊரில் பிறந்தார். இலசபதிராய் கி.பி. 1888-ஆம் ஆண்டில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார். இந்தியத் தேசிய காங்கிரசின் கருத்துக் கோட்பாட்டை எடுத்துக் கூற இவர் 1905-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஆங்கில அரசு 1907-ஆம் ஆண்டு பர்மாவிலுள்ள மாண்டலே என்னும் ஊரில் இவரைச் சிறையிலடைத்தது. மீண்டும் இலசபதிராய் 1914-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் புறப்பட்டுச் சென்று 1920-ஆம் ஆண்டுவரை தங்கி இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்டார். இந்தியாவுக்குத் திரும்பிய இராய் சுயராச்சியக் கட்சியில் சேர்ந்து தொண்டாற்றினார். மக்கள் ஊழியர் கழகம் (Servants of People Society) என்னும் இயக்கத்தை இவர் அமைத்தார். இலாலா இலசபதி ராய் பாலகங்காதரதிலகரின் தீவிரவாதக் கருத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு, திலகர் அரசியற் கருத்துப் பள்ளியையும் தொடங்கினார். தேசிய உணர்ச்சியைப் பரப்பும் நோக்குடன் இலாகூரில் தேசியக் கல்லூரியையும் இவர் உருவாக்கினார். பஞ்சாபு தேசிய வங்கி என்னும் பெயரில் நிதி நிலையம் ஒன்றை அமைத்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு. 'வந்தே மாதரம்' 'மக்கள்' என்னும் இதழ்களை வெளியிட்டுப் பதிப்

பித்த இவர் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'நாடு கடத்தப்பட்ட என் வரலாறு' (The History of my Deportation), 'ஆரிய சமாசம்' (Arya Samaj), 'இந்தியாவில் இங்கிலாந்தின் கடன்' (England's Debt in India), 'இளம் இந்தியா' (Young India) போன்ற நூல்களை இவர் எழுதினார். சைமன் குழுவுக்கு எதிராக இலாகூரில் நடைபெற்ற கிளர்ச்சியில் குடிமக்களின் அணிவகுப்பொன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்ற இவர் காவல் துறையினரின் தடியடிக்கு ஆளானார். இந்நிகழ்ச்சி 1928-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் அவ்வூரில் நிகழ்ந்தது. இதன் விளைவாக நோய்வாய்ப்பட்ட இலாலாஇலசபதி ராய் அதே ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் உயிர்துறந்தார். 'இந்திய வானில் சூரியன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வரை இலாலாசி போன்ற பெருமக்கள் சாவதில்லை' என்று காந்தியடிகள் இவருக்குப் புகழாரம் சூட்டினார்.

**இலாலேசுவரி** என்பவர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் காசுமீரத்தில் வாழ்ந்த இசைப் புலவராவார். அக்காலத்தில் காசுமீரத்தில் வாழ்ந்த மக்களிடையே இவ்வம்மையார் சிவ பக்தியைப் பரப்பினார். இவர் சிவபெருமானைப்பற்றிப் பல பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். இவருடைய பாடல்கள் எளிதில் மக்களுக்குப் புரியும் வகையில் அமைந்திருந்தன. ஆதலின், இவர் பாடல்கள் காசுமீரத்திலும் அதனையடுத்த இடங்களிலும் வாழ்ந்த மக்களைப் பெரிதும் கவர்ந்தன. காசுமீர மொழியில் இவர் இயற்றிய பாடல்கள் அங்குள்ள மக்களால் இன்றும் பாடப்பட்டு வருகின்றன. இலாலேசுவரி தம் மாமியாரால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார். இவர் இல்வாழ்க்கையை வெறுத்துத் துறவறம் பூண்டார். தேவையான உணவும் இருக்க இடமுமின்றி இவர் பல ஆண்டுகள் காடுகளிலும் பல ஊர்களிலும் சுற்றித் திரிந்தார். இவருடைய பாடல்கள் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றியனவாகும்.

**இலாவோசு** தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்று. நீண்டு நெடிதுயர்ந்த மலைகளும் அடர்ந்த பருவக்காற்றுக் காடுகளும் கொண்டது இலாவோசு நாடு. இலாவோசு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திறன்மிக்க அரசரால் ஆளப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இப்பேரரசு நலிந்து மெலிந்



இலாவோசு நீர்வழி

தது. இலாவோசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரான்சின் குடியேற்றப் பகுதியாகி, 1953 வரை விடுதலை பெறவில்லை. இந்தோசீனாவில் போர் நடைபெற்றபோது இலாவோசும் அதில் பங்கு பெற வேண்டியதாயிற்று. முடியாட்சி நாடாக 1975 வரை விளங்கிய இலாவோசின் ஆட்சியைப் பொதுவுடைமைக் கட்சி கைப்பற்றியது. மக்கள் சனநாயகக் குடியரசு என்னும் பெயரில் 1975 திசம்பர் 2-ஆம் நாள் இலாவோசின் (Laos) ஆட்சி நிலைநாட்டப்பெற்றது.

எல்லை: இலாவோசின் வடக்கில் சீனாவும், கிழக்கில் வியட்நாமும், தெற்கில் கம்போடியா எனப்படும் கம்பூச்சியாவும், மேற்கில் தாய்லாந்தும் பர்மாவும் எல்லைகளாகவுள்ளன.

பரப்பு: இலாவோசின் பரப்பு 2,36,800 ச.கி.மீ.

மக்கள் தொகை: இங்கு 35,20,000 மக்கள் (1979) வாழ்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

நிலம்: இந்தோசீனா தீபகற்பத்தின் உள்ளே கரடுமுருடான மலைத் தொடர்களுடன் அமைந்திருப்பது இலாவோசு நாடாகும். அன்னாமிய மலைத் தொடருக்கும் மீகாங்கு ஆற்றுக்கும் இடையிலுள்ள மீகாங்கு வடநிலத்தில் இருக்கும் இலாவோசில் கரடுமுருடான பீடபூமிகளும் மலைத்தொடர்களும் உள்ளன. கிழக்கு எல்லையோர மலைத்தொடர் 150 முதல் 1200 மீட்டர் வரை உயரமுள்ளது. நடு இலாவோசில் உள்ள பியா மலை உச்சி (Mount Bia) 2817 மீட்டர் உயரமுள்ளது. இதுவே இந்நாட்டின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்.

மீகாங்கு ஆறும் அதன் துணையாறுகளும் பாயும் தாழ்நிலங்களை அடுத்துள்ள பண்ணைநிலம் செழுமை மிக்கதால் அங்குச் சிறப்பாகப் பல பொருள்கள் விளைகின்றன. பொன், கிளிஞ்சல், ஈயம், வெள்ளி, தகரம், துத்தநாகப் படிவங்கள் இலாவோசில் மிகுதியாக உள்ளன. இந்நாட்டுக் காடுகளில், தேக்கு மரங்களும் விலை மதிப்புள்ள ஏனைய மரங்களும் கிடைக்கின்றன.

மே முதல் செப்டம்பர் மாதம் வரை தென் மேற்குப் பருவக்காற்றால் மாதம் 25 செ.மீ. மழை பொழிகிறது. நவம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை மாதம் 2.5 செ.மீ. மழைபொழிகிறது. வெப்பநிலை 22° செண்டிகிரேடிலிருந்து 28° செண்டிகிரேடு வரை உள்ளது.

பொருளாதாரம்: வளர்ச்சியுறாத பொருளாதாரத்தைக் கொண்டு இலாவோசு விளங்குகிறது. இந்நாட்டின் கனிமப் பொருள்கள் போதுமான அளவு வளர்ச்சியுறாமையால், செய்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலைகள் மிகக் குறைவு. வேளாண்மையே இலாவோசு நாட்டில் முக்கியத் தொழிலாகும். ஆயினும், தொன்மையான உழுபொருட் கருவிகளும் முறைகளும் சாகுபடியை உயர்த்தவில்லை.

அரிசியே இலாவோசின் சிறப்பான உற்பத்திப் பொருளாகும். காப்பி, தானியம், பருத்தி, புகையிலை போன்றனவும் உற்பத்தியாகின்றன. இலாவோசியர்களுள் சிலர் அபினியை வளர்த்து ஏற்றுமதி செய்து பெரும்பொருள் திரட்ட முற்படுகிறார்கள். இது சட்டத்திற்கு மாறான நடவடிக்கையாகும்.



இலாவோசுப் பெண்கள்

மீகாங்கு ஆறும் அதன் துணையாறுகளுமே இலாவோசின் மிகச் சிறப்பான போக்குவரத்து வழிகளாகும். நாட்டில் பயன்படுத்தப்படும் சாலைகளில் பெரும்பாலானவை கோடைக்காலத்தில் மட்டும் போக்குவரத்திற்குப் பயன்படுபவை. பல பகுதிகளில் வானவூர்திகள் மூலமாக மட்டுமே உள்நாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. இலாவோசில் உள்ள இருப்புப்பாதைத் தொடர் ஒன்று, நாங்காயை (Nong Khai) மீகாங்கு ஆற்றின் குறுக்காக வியண்டியானேவுடனும் தாய்லாந்து நாட்டின் தலைநகரமான பாங்காக்குடனும் இணைக்கிறது.

வரலாறு: தாய் மக்களின் மூதாதையர்களான இலாவோ, கி.பி. 9-ஆம் நூற்றாண்டளவில் இலாவோசிற்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் சிறுசிறு அரசுகளை நிலைநாட்டினர். அவற்றை இளவரசர்கள்

ஆண்டனர். முவாங்கு சுவா (இக்காலத்தில் உலுவாங் பிரபாங்கு) என்னும் ஊரின் அரசர் கி.பி.1353-இல் இன்றைய இலாவோசுப் பகுதிகளை இணைத்து ஒன்றாக்கினார். இலாவோசு என்ற பெயர் வரும் முன்னர் இதனை இலான் சாங்கு(Lan Xang)என்றனர். இலான் சாங்கு என்பது, பத்து இலட்ச யானைகளைக் கொண்ட நாடு என்று பொருள்படும். இலாவோசில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தனித் தனியாக இயங்கிய மூன்று முடியாட்சி அரசுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அவை உலுவாங் பிரபாங்கு, வியண்டியானே, சம்பாசக்கு என்பனவாம். இலாவோசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சு நாட்டின் காப்பாளர் ஆட்சிக்குட்பட்டு இந்தோசீனாவின் பகுதியாயிற்று.

இலாவோசு விடுதலைக்குழு, மூன்று இளவரசர்களான பிட்சரத்து (Phetsarat), சுவன்ன பூமா (Souvanna Phouma), சவுபனவுவாங்கு (Souphanouvang) என்பவர்களின் தலைமையில், 1947-இல் முதல் அரசியல் அமைப்புத்திட்டத்தை உருவாக்கப் பிரான்சுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியது. பிரான்சு ஒன்றியத்துடன் இணைந்த சுதந்திரத்தைஇலாவோசு 1949-ஆம் ஆண்டில் பெற்றது. ஆனால், இளவரசர்கள் தமக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் பிரிந்து பிளவுற்றனர். சவுபனவுவாங்கு வடகிழக்கு இலாவோசுப் பக்கம் சென்று ஓ-சி-மின் என்னும் வட வியட்நாமியப் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த தலைவருடன் தொடர்புகொண்டார். அதன் விளைவாக எழுந்ததுதான் பாதட்டு இலாவோ இயக்கமாகும்.

ஓ-சி-மின்னின படையினர், 1954-இல் பிரெஞ்சுக்காரர்களைத் தியன். பியன் பூ (Dien Bien Phu) என்னுமிடத்தில் தோற்கடித்தனர். இந்தஇடம் வியட்நாமில் உள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டிலிருக்கும் செனிவாவில் கூட்டப்பெற்ற அமைதி மாநாடு இலாவோசை நடுநிலைமை வகிக்கும் நாடாக நிலைநாட்டியது. பொதுவுடைமை நாடான வடவியட்நாமுக்கும் பொதுவுடைமைச் சார்பற்ற தாய்லாந்திற்கும் இடையில் இலாவோசு இருந்தது. இலாவோசு 1955-இல் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாகியது. அரசுகள் பல இலாவோசை 1954க்கும் 1960க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஆண்டன.

இலாவோசியப் படைத் தலைவரான காங்குலீ (Kong Le) என்பார் 1960-ஆம் ஆண்டில் மேலை நாடுகளுக்குத் துணை நின்ற அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து விட்டு, நடுநிலைமை அரசாங்கத்தை நிலைநாட்டும் கோரிக்கையை விடுத்தார். இதன் பயனாக இலாவோசில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. காங்குலீயும் பாதட்டு இலாவோ இயக்கத்தினரும் வட இலாவோசு முழுவதையும் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கைப்பற்றிக் கொண்டனர். போர் நிறுத்த ஒப்பந்தமொன்று இருசாராருக்குமிடையே 1964-இல் கையெழுத்தாயிற்று. எனினும் போர் தொடர்ந்தது. இலாவோசில் கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமென 1962-இல் 14 நாடுகளின் மாநாடு ஒன்று செனிவாவில் கூடி முடிவு செய்தது. சுவன்ன பூமா நடுநிலைமையாளராக இலாவோசின் தலைமை அமைச்சரானார். இளவரசராகிய பவுன் ஓம் என்னும் பெயர் கொண்ட பொதுவுடைமைக்கட்சி எதிர்ப்பாளரும், இளவரசர் சவுபனவுவாங்கு என்பாரும் அமைச்சரவையில் அமைச்சர்களாயினர். பன்னாட்டுக் குழு ஒன்றின் மேற்பார்வையில், இலாவோசின் நடுநிலைமையை உறுதிப்படுத்தச் செனிவா உடன்படிக்கை வழிவகை செய்தது. இவ்வுடன்படிக்கை இலாவோசில் இருந்த அயல்நாட்டுப்படைகள் அனைத்தும் வெளியேற வேண்டுமெனக் கட்டளையிட்டது.

சவுபனவுவாங்கு 1963-இல் அரசாங்கத்தை விட்டு வெளியேறினார். மீண்டும் பாதட்டு இலாவோவினருக்கும் அரசாங்கப் படைவீரர்களுக்குமிடையே போர் மூண்டது. பாதட்டு இலாவோவினருக்குச் சீனா, உருசியா இராணுவ ஆலோசகர்களும் ஆயிரக்கணக்கான வட வியட்நாமியப் படைவீரர்களும் உதவி செய்தனர். தாய்லாந்து, தென் வியட்நாம் படைவீரர்களும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆலோசகர்களும் இலாவோசு அரசாங்கத்திற்கு உதவினர். பூமாவின் அரசாங்கப் படைவீரர்கள் 1970-ஆம் ஆண்டு அளவில் மேற்கு இலாவோசுப் பகுதிகளை மட்டும் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தனர். பாதட்டு இலாவோவின் படைவீரர்கள் சவுபனவுவாங்கின் தலைமையில் கிழக்கு இலாவோசைக் கைப்பற்றிக் கொண்டனர்.

வியட்நாமியப் போரின்போது இலாவோசிலிருந்த வட வியட்நாமியர் ஓ-சி-மின்னின் படைவீரர்களையும் கம்பூச்சியாவின் படைவீரர்களையும் தளவாடங்களையும் தென் வியட்நாமுக்கும் அனுப்பினர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விமானங்கள் தென் வியட்நாமுக்குள் வந்த படைகளையும் இலாவோசின் பிற பகுதிகளையும் குண்டுபோட்டுத் தாக்கின. தென்வியட்நாமியப் படைவீரர்கள் 1971-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குண்டுகளேந்திய விமானங்கள், எலிகாப்டர் விமானங்கள் ஆகியவற்றின் துணையால் இலாவோசின்மீது படையெடுத்துத் தாக்கிப் பொதுவுடைமை நாடுகளிலிருந்து வந்த தளவாடங்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

இலாவோசிய அரசாங்கமும், பாதட்டு இலாவோவினரும் 1973-இல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். மீண்டும் கூட்டு அரசாங்கத்தை உருவாக்கவும் இணங்கினர். சுவன்ன பூமாவைத் தலைமை அமைச்சராகவும் சவுபனவுவாங்கை ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் கொண்ட புதிய அரசாங்கம் 1974-இல் பதவியேற்றது. பொதுவுடைமைக் கட்சிக்கு 1975-இல் ஆதரவு கொடுக்கும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. அதன் விளைவாகப் பொதுவுடைமைக் கட்சிச் சார்பற்ற அரசாங்க அலுவலர்கள் பலர் பதவிகளைத் துறக்கவே, அவர்களிடத்தில் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் அமர்த்தப்பட்டனர். அரசாங்கம் பொதுவுடைமைக் கட்சியின் கீழ் வந்தது. அதே சமயம், பாதட்டு இலாவோவினரும் பெருமளவில் நிலங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர்.

வியட்நாம் போர் 1975-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் முடிவுற்றது. அதன் விளைவாகத் தென்வியட்நாம் பொதுவுடைமைக் கட்சியின் கீழ் வந்தது. அதே மாதத்தில் கம்போடியா எனப்பட்ட கம்பூச்சியாவிலும் பொதுவுடைமை ஆட்சி வந்தது. பாதட்டு இலாவோவினர் 1975-இல் இலாவோசைக் கைப்பற்றிக் கொண்டனர். திசம்பர் மாதத்தில் கூட்டு அரசாங்கம் அகற்றப்பட்டது. முடியரசும் ஒழிந்தது. இலாவோசு பொதுவுடைமை நாடாகத் திகழ்கிறது.

**இலாவோசு நாட்டில் கல்வி**: இலாவோசு நாட்டுக் கல்வி அமைப்பு, மழலையர் பள்ளிக் கல்வி, தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி (Lower Secondary), மேல்நிலைப் பள்ளிக் கல்வி (Upper Secondary), பல்கலைக் கழகக் கல்வி அல்லது தொழில் நுட்பக் கல்வி என்ற நிலைகளில் அமைந்துள்ளது.

மழலையர் பள்ளிகளில் மூன்றிலிருந்து ஆறு வயது வரை உள்ள குழந்தைகள் சேருகின்றனர். தொடக்கப்பள்ளிகளில் ஏழு வயதிலிருந்து பதினொரு வயது வரை உள்ள மாணவர்களும் உயர்நிலைப்பள்ளிகளில் பன்னிரண்டு வயதிலிருந்து பதினான்கு வயது வரை உள்ள மாணவர்களும் சேர்ந்து கல்வி பயிலுகின்றனர். மேல் நிலைப் பள்ளிகளில் பதினைந்து வயதிலிருந்து பதினேழு வயது வரை உள்ள மாணவர்கள் சேருகின்றனர். பல்கலைக் கழகங்களில் பதினெட்டு வயதில் நுழைகின்றனர்.

இலாவோசில் 1983-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 29 விழுக்காடு மாணவர்கள் பள்ளியிலும், 48 விழுக்காடு மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலும், 23 விழுக்காடு மாணவர்கள் மேல்நிலைப் பள்ளியிலும் சேர்ந்து பயின்றனர். பள்ளிகளில் சேர்ந்து பயிலும் பெண்களின் விழுக்காடு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

வயது வந்தோர் கல்வி: இலாவோசில் பல முறைகளில் வயது வந்தோர் கல்வி வழங்கப்படுகிறது. வியண்டைன் (Vientaine) நகரில் தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் கல்வி மையங்கள் உள்ளன. மாநில, மாவட்ட அளவில் முதியோர் கல்வி மையங்கள் செயற்படுகின்றன. சிறுபான்மை இனக்குடியின் (Ethinic Minorities) இளைஞர்களுக்கென்றே கல்வி மையங்கள் உள்ளன.

வயது வந்தோர் கல்வி மையங்களில் கல்வியறிவு பெறாத அனைவரையும் சேர்த்துக் கொள்வதில்லை. இருபதிலிருந்து ஐம்பது வயதுக்குட்பட்ட சிறந்த புரட்சி வீரர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துக் கல்வி வழங்கப்படுகிறது. இவர்கள் படிக்கும் காலத்தில், உணவு, உறைவிடம் ஆகிய அடிப்படை வசதிகளை அரசு செய்து தருகிறது.

வயது வந்தோர் கல்வித் திட்டத்தில், தொடக்கப் பள்ளிக் கல்வியும் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்வி பெற்ற தொழிலாளர்கள், தங்களது கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு முறையான தொழிற்கல்விப் பள்ளிகளில் சேர்ந்து கொள்ளலாம்; இவர்கள் மேற்படிப்பாகத் தொழில் நுட்பக் கல்வியும் பயிலலாம்.

நிருவாகம்: கல்விக்கு ஆகும் அனைத்துச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது.

தொடக்கப் பள்ளி நிருவாகம் ஊராட்சியின் பொறுப்பிலும், உயர்நிலைப் பள்ளி நிருவாகம் வட்டார அலுவலர்கள் (Commune Authorities) பொறுப்பிலும், மேல்நிலைப் பள்ளி நிருவாகம் மாவட்ட அலுவலர் பொறுப்பிலும் உள்ளன. தொழிற் கல்வி நிருவாகத்தை மாநில அலுவலர்(Provincial Authorities) கண்காணிக்கின்றனர்.

தேசிய அளவில் கல்வி அமைப்பில் புகுத்தப்படும் மாற்றங்கள், சீர்தூக்கல், தேர்வு போன்ற அனைத்துக் கல்விப் பொறுப்புகளையும் கல்வி அமைச்சகம் (The Ministry of Education) செயற்படுத்தி வருகிறது. பல்கலைக் கழகம், ஆசிரியர் பயிற்சி, சிறப்புக் கல்வி நிறுவனங்கள் (Specialized Institutes) ஆகியவையும் கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் உள்ளன.

இலாவோசில் (Laos) தனியார் பள்ளிகளே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர் தேர்வு: தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைத் தலைநகர் நீங்கிய நாட்டுப்புற அதிகாரிகள் (Provincial Authorities) தேர்ந்தெடுக்கின்றனர். உயர்நிலைப் பள்ளிக்கும் அதற்கு மேல் நிலையில் உள்ள கல்வி நிலையங்களுக்கும் உரிய ஆசிரியர்களைக் கல்வி அமைச்சகம் தேர்ந்தெடுக்கிறது.

ஆசிரியர் பயிற்சி: 15 வயது நிறைந்த, தொடக்கப் பள்ளிக் கல்வி முடித்த இளைஞர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஆசிரியர் பயிற்சிக் காலம் மூன்றாண்டுகள். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சிக்கு உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்றாண்டுப் பயிற்சியினை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பெறுகின்றனர். மேல் நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு, அக் கல்வித் தகுதி படைத்தவர்களுக்கு, நான்கு ஆண்டுகள் வியண்டின் நகரில் உள்ள உயர் பயிற்சி மையத்தில் (Ecole Superieure de Pedegogie) பயிற்சி அளிக்கின்றனர்.

இலாவோசு நாட்டுக் கல்வியில் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. ஆய்வக வசதியின்மை, சோதனைகள் செய்ய வேதிப் பொருள்கள் (Chemicals) பற்றாக்குறை, கல்வி கற்பித்தலுக்கு உதவும் நூல்களும் துணைக் கருவிகளும் இல்லாமை ஆகிய குறைகள் இலாவோசில் உள்ளன.அயல்நாட்டு மொழிகளைத் திறம்படக் கற்கச் சரியான கல்வித் திட்டமோ பாடநூல்களோ இங்கு இல்லை. மேல் நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேரும் வேகம் மிகுந்துவிட்டது. அதனால் அக்கல்வி கற்றோரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. கல்வித் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க அரசானது, தனது 1981-85 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சித் திட்டத்தில் முதலிடம் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

**இலான்சுடவுன் பிரபு** (கி.பி. 1845-1927) என்பார் கி.பி. 1883 முதல் கி.பி. 1888 வரை கனடாவில் இங்கிலாந்தின் அரசப் பேராளராகப் பணியாற்றியவர். இவர் ஆட்சிக்காலத்தில், கனடா-பசிபிக்கு இருப்புப்பாதைத் தொடர் அமைக்கப்பட்டது. இலான்சுடவுன் (Lansdowne) இந்தியாவின் அரசப் பேராளராக (Viceroy) விளங்கியதுடன், இங்கிலாந்து அமைச்சரவையில் பொறுப்பும் வகித்தார். வெளியுறவுத் துறையின் செயலராக இருந்தபோது, 1902 -ஆம் ஆண்டில் சப்பான் நாட்டுடனும், 1904-இல் பிரான்சு நாட்டுடனும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள உறுதுணையாக இருந்தார். இவர் 1927 ஆம் ஆண்டு காலமானார்.

**இலான்சுபரி, சார்சு** (கி.பி. 1859-1940) என்பார் பிரிட்டிசு சமதரும வாதிகளுள் ஒருவர்; சப்போக்கில் (Suffolk) பிறந்தவர்; போ (Bow) பாப்லர் (Poplar) போன்ற ஊர்களில் தல ஆட்சியில் பெரும் பங்கு வகித்தவர். இலான்சுபரி சார்சு (Lansbury, George) 1910 முதல் 1912 வரை தொழிற்கட்சியின் சார்பாகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். வாக்குரிமை கேட்ட பெண்களுக்குப் பரிந்து பேசியதாலும், போர்க்காலத்தில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியதாலும் இவர் 1922-ஆம் ஆண்டு வரை பொதுமக்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப் படாமலேயே இருந்தார். தெய்லி ஏரால்டு (Daily Herald) என்னும் நாளிதழில் இவர் தலைசிறந்த எழுத்தாளராக இருந்தும், இவரால் தேர்தலில் வெற்றி பெற இயலவில்லை. தொழிற்கட்சி அரசாங்கத்தில் 1929-31 ஆம் ஆண்டுகளில் அமைச்சராக இருந்தபோதிலும், மக்டொனால்டு பால்டுவின் கூட்டாட்சி அமைச்சரவையில் சேர இவர் மறுத்துவிட்டார். இவர் 1931-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தொழிற் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற அமைச்சர் அல்லாத உறுப்பினர்களுள் ஒருவர். இவர் தொழிற்கட்சியின் தலைவராக இருந்து 1932-35 வரை ஆட்சி நடத்தினார். எனினும், இவருடைய அன்பின் வழியாக வந்த கிறித்தவச் சமதருமக் கொள்கையின் விளைவாகப் பல தொழிற்சங்கத்தினரின் ஆதரவை இவர் இழந்தார். இவரை ஆதரிக்க மறுத்தவர்களுள் பெவினும் (Bevin) ஒருவர். தொழிற் கட்சித் தலைவர் பதவியைத் துறந்துவிட்டு, 1937-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இவர் இட்லரைச் சந்தித்து, ஆங்கிலச் செருமானிய உறவை வலுவூட்ட முயன்றும் வெற்றி பெறவில்லை. இவர் 1940-ஆம் ஆண்டில் காலமானார்.

**இலான்பிராங்கு**, இங்கிலாந்திலிருக்கும் காண்டர்பரி தலைமைக் குருவாக இருந்த பெரியார். இலான்பிராங்கு கி.பி.1005-ஆம் ஆண்டில் இத்தாலியிலுள்ள பேவியா (Pavia) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் சொந்த ஊரிலேயே சட்டம் பயின்று வழக்குரைஞராகப்பணியாற்றினார். இத்தாலியை விட்டகன்று நார்மண்டியிலுள்ள அவரான்சசு (Avaranches) என்னுமிடத்தில், கி.பி. 1039-42-ஆம் ஆண்டுகளில் இவர் பள்ளியொன்றை நிறுவி நல்லாசிரியராகப் பெரும்புகழ் படைத்தார். உருவன் (Rouen)என்னும் நகருக்கு அண்மையிலிருந்த பெக்கு (Bec) என்னும் ஊரில் பெனிடிக்டிய மடத்தில் (Benedictine Abbey)

கி.பி. 1042-ஆம் ஆண்டில் சேர்ந்தார்.இவர் கி.பி. 1045-ஆம்ஆண்டில் அம்மடத்தின் தலைவரானார் (Prior). இங்கு இவர்தம் மாணவர்களுள் ஒருவராக இருந்த பாகியோவைச் (Baggio) சார்ந்த ஆன் செல்மோ என்பார், குறிப்பிடத்தக்கவர். பிற்காலத்தில் இந்த ஆன்செல்மோ இரண்டாம் அலெக்சாந்தர் என்னும் பெயரில் போப்பாண்டவராக இருந்தவர். இலான் பிராங்குக்கு நார்மண்டியில், நார்மண்டிப் பிரபுவான இரண்டாம் வில்லியத்துடன் தொடர்பு ஏற்பட்டது. இவரே பின்னர் இங்கிலாந்தின் அரசர் முதலாம் வில்லியம் (William I) என்றழைக்கப்பெற்றார். நார்மண்டிப் பிரபு வில்லியம் பிளாண்டர்சுப் (Flanders) பகுதியைச் சேர்ந்த மாடில்டா (Matilda) என்பவளை கி.பி. 1053-இல் மணந்தபோது, இலான்பிராங்கு (Lanfranc) அத்திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஆயினும் இவருக்கும் வில்லியத்திற்கும் நல்லுறவு ஏற்பட்டதன் விளைவாக இருவரும் உற்ற நண்பர்களாயினர். வில்லியம் வெற்றி வீரர் (William the Conqueror) என்னும் பட்டப் பெயருடன் அரசரான போது, இலான் பிராங்கைக் காண்டர்பரியின் தலைமைக் குருவாக்கினார்.

இங்கிலாந்து திருச்சபையைத் திருத்தியமைத்த பெருமை இலான்பிராங்கைச் சாரும். போப்பாண்டவரின் சிறப்புரிமையை இவர் ஏற்றுக்கொண்ட போதிலும், ஆங்கிலத் திருச்சபை முழுச் சுதந்திரத்துடன் இயங்க வேண்டுமென்னும் நோக்குடன் வில்லியத்திற்கு இவர் உறுதுணையாக இருந்தார். எனினும், அரசரின் தலையீட்டிலிருந்தும் உலகியல் செல்வாக்குகளிலிருந்தும் திருச்சபையை இவர் காத்தார். அரசும் திருச்சபையும் தனித்தியங்கும் பொறுப்புகளையும் சிறப்புரிமைகளையும் கொண்டிலங்க வேண்டும் என்னும் கருத்துடன் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம், திருச்சபை நீதிமன்றங்களையும் உலகியல் நீதிமன்றங்களையும் பிரிக்க வழிவகை செய்தமைக்கு, இவரே மூலகாரணமாவார்.

யார்க்கு தலைமைக்குருவாயிருப்பவர் காண்டர்பரி தலைமைக்குருவிற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டுமென்பதை இவர் வலியுறுத்தி நிலை நாட்டினார். இதன்பயனாக இங்கிலாந்துத் திருச்சபை முழுவதற்கும் இவரே தனிப்பெரும் சமயத் தலைவராகக் கருதப்பெற்றார். ஆங்கிலக் குருமார்களுக்கு மாறாக நார்மானியக் குருமார்களை அமர்த்தியதும், இங்கிலாந்தில் நார்மானிய ஆட்சி உறுதிப்பட வழிவகை செய்ததும், ஊழலுக்கிலக்காகியிருந்த ஆங்கிலத் திருச்சபையையும் மடாலய நிறுவனங்களையும் தூய்மைப்படுத்த இவர் மேற்கொண்ட முயற்சிகளும் இவருடைய சாதனைகளாகும். திருச்சபைக் குருமார்கள் திருமணம் செய்து செய்துகொள்ளுதல் கூடாது என்பதில் இவர் பேரார்வம் காட்டினார். அதற்குமுன் குருமார்கள் திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். எனினும், ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டிருந்தவர்கள் மேற்கூறிய தடையிலிருந்து விலக்களிக்கப்பட்டனர். இலான்பிராங்கு கி.பி. 1067- இல் தீக்கிரையான காண்டர்பரித் திருக்கோயிலை நார்மானியப் பாணியில் கட்டி முடித்தார். காண்டர்பரிக்கு அருகில் புனித சான் (St. John) மருத்துவமனையினையும் இவர் அமைத்தார். ஆர்பில்டவுன் (Harbledown)என்னுமிடத்தில் புனித நிக்கோலசு தொழுநோய் இல்லம் ஒன்றையும் கட்டினார். வெற்றி வீரர் வில்லியம் காலமானபோது, கி.பி. 1087-இல் இங்கிலாந்தின் அரசராக இரண்டாம் வில்லியத்திற்கு இலான்பிராங்கு முடிசூட்டினார். இவர் கி.பி. 1088 -இல் ஏற்பட்ட கலகத்தின்போதும் இரண்டாம் வில்லியத்திற்கே ஆதரவு கொடுத்தார்.

திருமாறுபாட்டுக்கோட்பாடு (Transubstantiation)என்னும் கத்தோலிக்கத் திருச்சபைச் சடங்கு குறித்து எழுந்த வாத எதிர் வாதத்தில் இலான் பிராங்கு தீவிரமாகப் பங்குகொண்டார்.இது குறித்து பின்னர் ஆய்வுக் கட்டுரையொன்றை வெளியிட்டுப் புகழ்பெற்றார். இடைக்காலம் முழுவதிலும் கிறித்தவர்களின் வைதிக நெறியைப் போற்றிப் பாதுகாக்கும் சீரிய இலக்கியமாக இவ்வாய்வுக் கட்டுரை நிலைத்தது. இவர் கி.பி. 1089-இல் காலமானார்.

**இலிக்தன் இசுடைன்** தென்-நடு ஐரோப்பாவில் அமைந்துள்ளதொரு சிறு நாடு. இது சுவிட்சர்லாந்துக்கும் ஆசுத்திரியாவுக்கும் இடையிலமைந்துள்ளது. இந்நாட்டு மக்களுக்குச் சுவிட்சர்லாந்து மக்களுடன் நெருங்கிய தொடர்புண்டு. இவர்கள் செருமானியத் திசைமொழியொன்றைப் பேசுகிறார்கள். இவர்களின் பழக்கவழக்கங்கள், சுவிட்சர்லாந்து நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களைப் போன்றுள்ளன. இலிக்தன் இசுடைன் (Liechtenstein)சுவிட்சர்லாந்தின் நாணயத்தையே கையாளுகிறது. சுவிட்சர்லாந்து நாடு, இந்நாட்டின் அஞ்சல், தொலைவரி, தொலைபேசி போன்ற துறைகளை இயக்குகிறது. இந்நாட்டின் தூதர்கள், வாணிகத் தொடர்புகள் போன்றவற்றையும் சுவிட்சர்லாந்தே கையாள்கிறது.

ஐரோப்பாவில் நடைபெற்ற பல போர்களின் போதுகூடச் சுவிட்சர்லாந்தைப் போல் இலிக்தன்

இசுடைனும் நடுநிலைக்கொள்கையைக் கையாண்டது. இந்நாடு கி.பி. 1866-ஆம் ஆண்டுக்குப்பின் எந்தவொரு போரிலும் ஈடுபடவில்லை. இது கி.பி. 1806-ஆம் ஆண்டிலிருந்து சுதந்தர நாடாகவே இருந்து வந்துள்ளது.

வதுசு (Vaduz) என்னும் சிறு நகரமே இதன் தலைநகராகும். இதன் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 4980.

எல்லைகள்: இலிக்தன்இசுடைன் கிழக்கில் ஆசுத்திரியாவையும் மேற்கில் சுவிட்சர்லாந்தையம் எல்லைகளாகப் பெற்றுள்ளது. இதன் பரப்பு 160 ச.கி.மீ. மக்கள்தொகை 26,130 (1981).

மக்கள்: ஆசுத்திரியர்களையும் சுவிட்சர்லாந்து மக்களையும் போல் இலிக்தன் இசுடைனின் மக்களும் செருமானிய மரபிலிருந்து வந்தவர்கள். இவர்கள் அமைதியான எளிமை வாழ்வு வாழ்கிறார்கள். இந நாட்டின் பெரும்பாலான மக்கள் நாட்டுப்புறச் சிற்றூர்களில் வாழ்கிறார்கள். பண்ணைகளில் 1930-ஆம் ஆண்டுவரை பணியாற்றிய இம்மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் சிறு தொழிற்சாலைகளிலோ கைவினைஞர்களாகவோ பணியாற்றுகிறார்கள். மேலும், ஐந்தில் ஒரு பகுதியினர் பண்ணைகளில் பணி செய்கிறார்கள்.

இந்நாட்டு மக்கள் மரத்தாலான வீடுகளில் வாழ்கிறார்கள். இவர்களின் வீடுகளுக்குப் பின்புறத்தில் குதிரை இலாயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவர்கள் மரபுவழியாக உடுத்தி வந்த ஆடைகளையே இன்றும் உடுத்தி மகிழ்கிறார்கள்.

மக்கள் அனைவருமே உரோமானியக் கத்தோலிக்கர்கள். தொடக்கக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் இன்றும் இலவசம். குழந்தைகள் எட்டாண்டுகளுக்குப் பள்ளி செல்லவேண்டும். ஏறத்தாழ மக்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். வதுசில் உள்ள உலகப்புகழ்பெற்ற அருங்கலைக் காட்சியகம் இளவரசரின் சொந்தச் சொத்தாகும்.

நிலம்: இந்நாட்டின் மேற்கெல்லையில் இரைன் ஆறு பாய்கிறது. ஆற்றின் போக்கையொட்டிக் குறுகலானதும் தட்டையானதுமான பண்ணைநிலம் காணப்படுகிறது. பெரும்பாலான மக்கள் இப்பகுதியில்தான் வாழ்கிறார்கள். மலைச்சரிவுகளில் பைன் மரக்காடுகளையும் அழகான மேய்ச்சற்றரைகளையும் காணலாம்.

இந்நாட்டைச் சுற்றி மலைகள் சூழ்ந்துள்ளமையால் இங்குத் தட்ப வெப்பநிலை மிதமானது. கோடைக் காலத்தில் நல்ல பழவகைகள் விளைகின்றன. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 90 செ.மீ. மழை பெய்கிறது.

இலிக்தன் இசுடைனின் பண்ணை வாழ் மக்கள் தோல்பொருள்கள், மட்பாண்டங்கள் போன்றவற்றைச் செய்வதுடன், சிறு தொழிற்சாலைகளில் பணிபுரிந்து பருத்தி ஆடைகள், வெப்பம் கொடுக்கும் அடுக்களைக் கருவிகள், மருந்து மாத்திரைகள், நுண் கருவிகள் போன்றவற்றைச் செய்கிறார்கள். குடியானவர்கள் இறைச்சிக்கும் பாலுக்கும் உதவும் கால்நடைகளை மேட்டு நிலப்புற்றரைகளில் மேய்க்கிறார்கள். திராட்சை, மற்றும் ஏனைய பழவகைகள் ஆகியவற்றை மலைச் சரிவுகளில் பயிரிடுகிறார்கள் உணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, ஏனைய காய்கறிகள் ஆகியவற்றை இரைன் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் விளைவிக்கிறார்கள்.

அயல்நாட்டு வணிகர்கள் இந்நாட்டில் தம் வாணிக மையங்களை அமைத்துக்கொண்டு வாணிகம் செய்கிறவர்களிடம் வரிவசூல் செய்து, அரசாங்கத்திற்குப் பொருள் சேர்க்கிறார்கள்.

இலிக்தன் இசுடைன் கி.பி. 1719-இல் புனித உரோமானியப் பேரரசின் பகுதியாயிற்று. ஆனால், நெப்போலியன் போனபார்ட்டு இப்பேரரசை அழித்து விட்டார். இந்நாடு கி.பி. 1806-இல் சுதந்திர நாடாகியது. செருமானியக் கூட்டாட்சியுடன் கி.பி. 1815-இல் இது சேர்ந்தது. இருப்பினும், இதன் தனித்தன்மை காக்கப்பட்டது. பின் கி.பி. 1866-இல் கூட்டாட்சி முறையும் கலைக்கப்பட்டது. இதற்குப் பின்னர், இந்நாடு கி.பி. 1868-இலிருந்து நடுநிலைக் கொள்கையை ஏற்றுப் படைபலம் இல்லாமலேயே இருந்து வருகிறது.

ஆசுத்திரியா, அங்கேரி ஆகிய நாடுகளுடன் இந்நாட்டிற்குப் பொருளாதாரத் தொடர்புண்டு. முதல் உலகப் போருக்குப்பின்னர், ஆசுத்திரியாவுடன் இருந்த தொடர்பை இந்நாடு துண்டித்துக் கொண்டது. பின்னர், 1924-இல் சுவிட்சர்லாந்துடன் உடன்பாட்டைச் செய்துகொண்டது.

## இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்புகள்

**இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்புகள்:** இரென்சிசு இலிகர்ட்டு, மிசிகன் பல்கலைக்கழகத்தின் சமூக ஆய்வுப்பகுதியில் பல ஆண்டுகள் ஆய்வுகள் நடத்தியுள்ளார். இவர் சமூக ஆய்வுகள் பெரும்பாலும் நிறுவனங்களில் தலைமை என்னும் பொருள் பற்றியதாகவே அமைந்திருந்தன. இவ்வாராய்ச்சி

களின் விளைவாக இவர் நான்கு தலைமைக்குறை களைக் கண்டு பிடித்துள்ளார். இந்தமுறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

அமைப்பு-4: மேலாண்மையினர் தம் பணியாள ரிடம் முழுஅளவில் நம்பிக்கை கொண்டுள்ளனர். முடி வெடுத்தலில் எல்லாருக்கும் பங்கு உண்டு. செய்தித்

| அமைப்பு 1 | அமைப்பு 2 | அமைப்பு 3 | அமைப்பு 4 |
|---|---|---|---|
| சமயோசித அதிகாரப் பாங்கு | நலம்விழை அதிகாரப் பாங்கு | கருத்து விழை-உரிமை வழங்கும் பாங்கு | பங்குகொள்-உரிமை வழங்கும் பாங்கு |

அமைப்பு-1: இம்முறையில் மேலாண்மையினர் முடிவெடுக்கும்போது தம் கீழ்ப்பணியாற்றுவோரைக் கலந்து ஆலோசிப்பதில்லை. மேலாண்மையாளர் தாமே முடிவெடுத்துப் பணியாளர்களை அச்சுறுத்தி வேலை வாங்குகின்றனர். மேலாளரும் பணியாளரும் ஒருவர் மீது மற்றொருவர் நம்பிக்கையின்றி இயங்கு கின்றனர்.

அமைப்பு-2: மேலாளர் பணியாளரிடம் இரக்கம் காட்டுகின்றனர். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் முடிவெடுக்கும உரிமைகள் பணியாளருக்கும் வழங்கப் படுகின்றன. தண்டனைகளும் ஊக்கிகளும் கொடை களும் ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. பணி யாளர் மேலாண்மையிடம அச்சம் கொண்டு நடக் கின்றனர். இம்முறையில் அமைப்பிலா நிறுவனம் உரு வெடுக்கிறது. ஆனால், அது அமைப்புசார் நிறுவனத் துடன் (Formal Organisation) ஒன்றி இயங்குகிறது.

அமைப்பு-3: மேலாண்மையினர் பணியாளரிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். பெரிய அளவிலான முடிவுகள் மேலாண்மையினரால் எடுக்கப் பட்ட போதிலும் சில முடிவுகள் பணியாளரால் எடுக்கப்படுகின்றன. இவர்களிடையே இருவழிச் செய்தித் தொடர்பு இருக்கிறது. இத்தகைய அமைப் பில் அமைப்பிலா நிறுவனம் (Informal Organisation) உருவெடுத்தால், அது அமைப்புசார் நிறுவனத்தின் இலக்குகளுக்கு எதிராகப் பெரும்பாலும் இயங்குவ தில்லை.

தொடர்பு தடையின்றி அமைந்திருக்கிறது. உயர்நிலை அதிகாரிகளுக்கும் அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரிகளுக்கும் இடையே நட்பும் நம்பிக்கையும் நிறைந்த உறவு நிலவுகிறது. இம்முறையில் உரு வெடுக்கும் அமைப்பிலா நிறுவனம் அமைப்புசார் நிறுவனத்துடன் வேறுபாடின்றி ஒன்றிவிடுகிறது.

அமைப்பு 1, அமைப்பு 4 ஆகியவை முறையே மக்கிரிகரின்(McGregor) எக்சுக் கோட்பாடு (Theory X) ஒய் கோட்பாடு (Theory Y) ஆகியவற்றுடன் இணைந்தனவாக இருக்கின்றன. நிறுவனத்தலை மையை மதிப்பீடு செய்வதற்கு இரென்சிசு இலிகர்ட்டு (Rensis Likert) ஓர் அளவையைக் கண்டுபிடித் துள்ளார். இந்த அளவையைப் பயன்படுத்தி மேலாண்மையினரின் தலைமைப் பண்புகளையும் தகுதிகளையும் மதிப்பீடு செய்ய இயலும். இந்த அளவையில் இடைவினைச் செல்வாக்கு, முடி வெடுத்தல், இலக்கமைத்தல், கட்டுப்பாடு, செயல் திறன், செய்தித்தொடர்பு ஆகிய நிறுவன மாறி களைத் தீர்மானிக்கும் 51 உருப்படிகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பொறுப்பிலும் ஓர் உயர் அதிகாரி எந்த அளவு மேலாண்மைத் திறன் கொண்டிருக்கிறார் என்பதை இந்த அளவை மதிப்பீடு செய்கிறது. எடுத்துக்காட்டாக ஓர் அளவை இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

| | இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்பு அளவை | | | |
|---|---|---|---|---|
| நிறுவனமாறி | அமைப்பு 1 | அமைப்பு 2 | அமைப்பு 3 | அமைப்பு 4 |
| **பயன்படுத்தப்படும் இயங்கு முறைகள்:** அதிகாரிகள் பணியாளர் மீது எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளனர்? | பணியாளர் மீது அறவே நம்பிக்கை இல்லை. | உடைமையாளர்-வேலையாளர் போன்ற ஆதரவு கலந்த நம்பிக்கை. | ஓரளவுக்கு நம்பிக்கை இருக்கிறது. முடிவெடுத்தலில் மேலாண்மைக்கட்டுப்பாடு இருக்கிறது. | எல்லாப்பணிகளிலும் முழுமையான நம்பிக்கையும்உறுதியும் இருக்கின்றன. |
| **ஊக்குவிப்புத் திறன்களின் இயல்பு:** அடிப்படை ஊக்கிகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன? | உடல்சார் தேவைகள், காப்புணர்வு, பொருளாதாரத் தேவைகள், ஏற்ற நிலைத்தேவைகள். | பொருளாதாரத்தேவைகள் தன்முனைப்பு ஊக்கிகள் ஓரளவு நிறைவு பெறுதல். எ-டு. ஏற்ற நிலைத்தேவை, அடைவு இணைப்புத் தேவைகள். | பொருளாதாரத்தேவைகள்-தன்முனைப்பு உந்துகள் ஓரளவு நிறைவு பெறுதல். எ-டு. புதிய அனுபவம் அடைவதில் ஆர்வம். | பொருளாதாரத் தன் முனைப்புப் போன்ற அடிப்படை உந்துகளைப் பயன்படுத்தல் - குழு இலக்குகளை அடைதல். |
| **செய்தித்தொடர்பு இயங்கு முறையின் இயல்பு:** நிறுவனக் குறிக்கோள்களை அடைவதில் எந்த அளவு செய்தித் தொடர்பும் இடையீடும் நிலவுகின்றன? | மிகக் குறைந்த அளவு நிலவுகிறது. | இல்லை. | பெரும அளவில் நிலவுகிறது. | தனிமனிதர்களுக்கும் குழுக்களுக்கும் இடையே பெருமளவில் நிலவுகிறது. |
| **இடையுறவு இயங்குமுறையின் இயல்பு:** எந்த அளவு இடையுறவு நிலவுகிறது? | இடையுறவு மிகக் குறைவு. அச்சமும் நம்பிக்கையின்மையும். | இடையுறவு மிகக் குறைவு. ஆனால்,மேலதிகாரிகளின் ஆதரவும் பணியாளர்களின் அச்சமும். | நம்பிக்கையுடன் கூடிய இடையுறவு ஓரளவிற்கு உண்டு. | நட்புசார் இடையுறவும் நம்பிக்கையும் மிகுதியாக உண்டு. |

 இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| முடிவெடுத்தல் இயங்குமுறையின் இயல்பு: நிறுவனத்தில் எந்த அளவிற்கு முடிவுகள் அமைப்புசார் முறையில் எடுக்கப்படுகின்றன? | பெரும்பான்மையான முடிவுகள் மேலாண்மையாளரால் எடுக்கப்படுகின்றன. | கொள்கையளவில் மேலாண்மைக் கட்டுப்பாட்டோடு, குறிப்பிட்ட வரையறைக்குள் சில முடிவுகள் கீழ்மட்ட அளவில் எடுக்கப்பட்டு அவை செயற்படுத்தப்படுமுன் மேலாண்மையினரால் கட்டுப்படுத்தப்படுகின்றன. | அடிப்படைச் செயல்விதிகள் மேல்மட்டத்திலும் மற்ற முடிவுகள் பணியாளராலும் எடுக்கப்படுகின்றன. | நிறுவனம் முழுவதும் முடிவெடுத்தலில் ஏதேனும் ஒரு விதத்திலாவது பங்கு கொள்கிறது. |
| இலக்கமைத்தல் மற்றும் ஆணையிடுதலின் இயல்பு: எம்முறையில் செயற்படுகிறது? | ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறன. | ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆணைகளைப்பற்றிய கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்புகள் இல்லை. | பணியாளருடன் கலந்தாலோசித்த பின்னர் இலக்குகள் அமைக்கப்பட்டு, அதற்குப்பின் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. | பணியாளரின் பங்கு கொள் முறையிலேயே இலக்குகள் அமைக்கப்படுகின்றன. (நெருக்கடி நேரங்களைத் தவிர.) |

உற்பத்தித்திறன்மிக்க நிறுவனங்கள் அமைப்பு 4-இல் இயங்குவதாகவும் உற்பத்தித்திறன் குறைபாடுடைய நிறுவனங்கள் அமைப்பு 1-இல் இயங்குவதாகவும் இலிகர்ட்டு கூறுகிறார். அவர் நடத்தியுள்ள சில ஆய்வுகள் இந்த முடிவுகளை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

துணை நூல்:

**Richard M. Hodgetts**, Management: Theory, Process & Practice, Saunders Co., Philadephia, 1979.

**இலிங்கபுராணக் குறுந்தொகை** திருநாவுக்கரசர் இயற்றிய தேவார ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ள ஒரு பதிகம். ஐந்தாம் திருமுறை முழுவதும் திருக்குறுந்தொகைப் பதிகங்களால் ஆகியது. கலிவிருத்தம் குறுந்தொகை எனப்படும். இலிங்கம் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியாகும். புராணம் தொன்மையைக் குறிக்கும். எனவே இலிங்க புராணக் குறுந்தொகை என்பது, சிவபெருமானின் தொன்மைச் சிறப்பினை உணர்த்தும் பதினொரு கலிவிருத்தச் செய்யுட்களால் அமைந்த ஒரு பதிகத்தினைக் குறிப்பதாகும். திருமாலும் பிரமனும் தம்முள் யார் முதன்மையானவர் என்பதில் மாறுபாடு கொண்டு, ஒவ்வொருவரும் தாமே முதன்மையானவர் என்று செருக்குற்றுச் சிவபெருமானுடைய அடியினையும் முடியினையும் முறையே காண முற்பட்டனர். திருமால் வராக உருக்கொண்டு சிவன் அடியினையும், நான்முகன் அன்ன உருக்கொண்டு முடியினையும் தேடிக் காண முற்பட்டுக் காண இயலாது மீண்டனர். காதலாகிக் கசிந்துருகித் தேடும் அடியார்முன்பு சிவபெருமான் எளிதாகச் சிவலிங்கத் திருமேனியில் வெளிப்பட்டருளினார். சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றியருளுவதாக அமைக்கப்படும் திருக்கோலம் இலிங்கோற்பவமூர்த்தி எனப்படும். இது சிவபெருமானுடைய முதன்மையான கோலங்களுள் ஒன்றாகும். தொன்மைமிக்க சிவன் கோயில்களில் இலிங்கத்திருமேனி விளங்கும் கருவறைக்குப் பின்புறம் அமைந்த சுவரின் வெளிப்புறத்தின் மத்தியிலுள்ள மாடக்குழியில் இலிங்கோற்பவமூர்த்தி சுவரிலேயே புடைச்சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கும். சிவபெருமான் அகந்தையோடு தேடுவார்க்கு அரியனாகவும், அன்பால் தேடுவார்க்கு எளியனாகவும் விளங்குபவன் என்னும் சைவ சமய உண்மையினை உணர்த்தி நிற்பது இலிங்கபுராணக் குறுந்தொகை என்னும் பதிகமாகும்.

இப்பதிகத்தின் முதற் பத்துப்பாடல்களிலும் நான்முகனும் நாரணனும் சிவபெருமானிடம் அன்பு கொண்டு, சரியை கிரியை அடிப்படையில் பூவும் புனலும் சொரிந்து வழிபடாமல், செருக்குற்று முனைப்பினாற் காண முற்பட்ட செய்தி கூறப்படுகிறது. 'புக்கணைந்து புரிந்தலர் இட்டிலர்' என்றும், 'மிக்குக் காணலுற்றார் அங்கிருவரே' என்றும் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். மேலுமவர் பதினோராந் திருப்பாட்டில், 'செங்கணானும் பிரமனும் தம்முளே, எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலர், இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்' சிவபெருமான் என்று இலிங்க புராணக் கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார். 'இலிங்கபுராணக் குறுந்தொகை' என்னும் பெயரில் உள்ள இலிங்க புராணம் என்பது புராணஏட்டினைக் குறிக்காமல் சிவபெருமானின் தொன்மைக் கோலங்களுள் ஒன்றன் வரலாற்றினைக் குறித்து நிற்கிறது.

**இலிங்க புராணம்** வியாசர் இயற்றிய பதினெண் புராணங்களுள் ஒன்று; சிவபுராணங்கள் பத்தினுள் சிறந்து விளங்குவது; ஈசன் மகிமைகளை எடுத்துக் கூறுவது. இதன் பூர்வ பாகம் நூற்றெட்டு அத்தியாயங்கள் கொண்டது; உத்தர பாகம் ஐம்பத்தைந்து அத்தியாயங்களைக் கொண்டது: பதினொராயிரம் சுலோகங்களை உடையது. இவ்வடமொழி இலிங்க புராணத்திற்கு நீலகண்டரின் மாணாக்கர் கணேசர் என்பவர் 'சிவதோடணி' என்னும் வியாக்கியானத்தை இயற்றினார்.

இவ்விலிங்க புராணத்தைச் சடைய வர்மன் அதிவீரராம பாண்டியர் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் ஆட்சிக் காலம் கி. பி. 1564 முதல் 1604 வரை. ஆகையால் இது மொழிபெயர்க்கப்பட்ட காலமும் இதுவே. இனி, இது குலசேகர வரதுங்கராம பாண்டியரால் மொழிபெயர்க்கப்பட்டது என்னும் கருத்துமுண்டு.

இந்நூல் பூர்வ காண்டம், உத்தர காண்டம் என்னும் இரு காண்டங்களையும், நூற்றைம்பத்து நான்கு அத்தியாயங்களையும், இரண்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்தாறு பாடல்களையும் கொண்டது; சென்னைத்தண்டையார் பேட்டையில் ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டது. இப்பொழுது கிடைத்தற்கரியது.


இந்நூலில் சிவலிங்கத்தின் பெருமையும், பதினோர் உருத்திரர்கள், இலிங்க வடிவம், பூசை, மந்திரம், உருத்திராவதாரம், பஞ்சாட்சரி, உருத்திராட்ச மகிமை, சிவராத்திரி, பிரதோடம் முதலியனபற்றிய சிறப்பும் கூறப்பட்டுள்ளன. அரிய தோத்திரங்களும், வசிட்டபுத்திரர் சத்தி என்பவரின் சரித்திரமும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

வடமொழியிலுள்ள இலிங்கபுராணத்தில் தண்டி என்பவரின் சிவசகசரநாமமும் மற்றொரு சகசரநாமமும் கூறப்பட்டுள்ளன.

இவ்விலிங்க புராணக் கருத்துகளை நினைவூட்டும் வகையில் திருநாவுக்கரசர் இலிங்க புராணக் குறுந்தொகை என்னும் பதிகம் பாடியுள்ளார்.

ச. சு.

**இலிங்கராசர் கோயில்** ஒரிசாவின் தலைநகரான புவனேசுவரத்திலுள்ள கோயில்களுள் ஒன்று. கோனாரக்கு (Konarak), பூரி செகந்நாதம் போன்ற



இலிங்கராசர் கோயில்

ஊர்களிலுள்ள கோயில்களைப் போன்று இக்கோயிலும் புகழ்மிக்கது. இக்கோயில் கி.பி. 1000-ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. இது கீர்த்திவாசர் கோயில் என்றும் கூறப்படும். இக்கோயிலைக் கட்டியவரைப் பற்றிய விவரம் தெரியவில்லை. எனினும் இக்கோயிலைச் சனமேசயர் என்னும் அரசர் கட்டியதாகக் கருதுகின்றனர். இலிங்கராசர் கோயில் பஞ்சரதம் என்னும் கோயில் அமைப்பை உடையது. இக்கோயிலின் சிகரம் மிக உயரமானது. இக்கோயில் கருவறையையும் மண்டபத்தையும் மேலும் இருபெரும் மண்டபங்களையும் கொண்டு விளங்குகிறது. நரசிம்மர், அனங்கபீமர் போன்ற அரசர்களால் நாட்டிய மண்டபமும் உணவுக்கூடமும் பிற்காலத்தில் இக்கோயிலினுள் கட்டப்பட்டன. கோயிலின் மூலப் பகுதி இளஞ்சிவப்புநிற மணற்கல்லினால் கட்டப்பட்டது. கோயிலின் மாடக்குழிகளில் கணேசர், பார்வதி, கந்தன் போன்ற தெய்வச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள விலங்குகள், பறவைகள், இளந்தம்பதிகள் போன்ற சிற்பங்கள் மிக்க அழகு வாய்ந்தவை. சிகரத்தின் கீழ்ப்பகுதி 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. திக்குப்பாலகர்களும் இக்கோயிலில் உள்ளனர். சிகரத்தின் தளங்கள் பிற கோயில்களைவிட உயரமாகக் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள சகமோகன் என்னும் மண்டபம் ஏறத்தாழ 30 மீ. உயரமுடையது. மண்டபத்தின் மேற்கூரையில் கண்களைக் கவரும் காட்சிகள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கட்டடக் கலைத்திறன் இந்தியாவின் சிறப்புமிக்க கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

**இலிங்க ரெட்டியார்** கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிவ பக்தர். இவர் புலவரைப் போற்றும் புரவலராகவும் விளங்கினார். இவர் திருச்சி மாவட்டத்தில் உள்ள துறைமங்கலத்தைச் சேர்ந்தவர்; தெலுங்கு ரெட்டி வகுப்பினர். இவர் திருவெங்கனூரில் சிவன் கோயில் ஒன்றினைக் கட்டினார். இவர் கோயில் கட்டிய செய்தி அக் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. அக் கல்வெட்டால் இரண்டாம் வேங்கடபதி என்னும் விசயநகர மன்னன் காலத்தில் இவர் வாழ்ந்தவர் என்பது தெரிகிறது இவர் சிவப்பிரகாச சுவாமிகளை ஆதரித்து வந்தார். அதனால் சிவப்பிரகாசர் தாம் இயற்றிய திருவெங்கை உலாவில் ‘பண்டை அறத்தின் படிவமிது வென்னவுருக் கொண்ட இலிங்கையன்’ என இவரைப் பாராட்டியுள்ளார்.

**இலிங்க வழிபாடு**: சிவ இலிங்க வழிபாடு இலிங்க வழிபாடு எனச் சொல்லப்படுகிறது. அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வு செய்தபோது அங்கு அட்டபந்தனம் பூசப் பெற்ற இலிங்கங்கள் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து இலிங்கத்திற்கும் வீர சைவம், சைவ சமயம் ஆகியவற்றிற்கும் தொடர்பு உண்டு எனத் தெரிகிறது.

பழங்கால மக்கள் இயற்கைத் தெய்வங்களை வழிபட்டனர். அவையாவன: நீர், காற்று, நெருப்பு, மரம், கல் முதலியன. வீரர்களுக்குக் கல்நாட்டி வழிபடும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர், ‘காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று, இரு மூன்று வகையின் கல்லொடு புணர’ என்று கூறுகிறார்.

இருக்கு வேத பாடலில் ‘சிசனதேவா’ என வரும் குறிப்புக்குப் பிறவிக்குக் காரணமான ஆண் உறுப்பு என விளக்கங் கூறி, அதன் மூலம் இலிங்க வழிபாடு என்பது ஆண் உறுப்பு வழிபாடு என்று கருதியுள்ளார் பேராசிரியர் மெக்டனால். இலிங்கம் ஆரியர்களல்லாதவரான தசுயூக்களுடையது. தசுயூக்கள் நாகரிகமற்றவர்கள்; ஆதிகால மனிதரை ஒத்தவர்கள். நாகரிகமும் விரிந்த நோக்கும் இன்மையால் அவர்கள் தாங்கள் பிறப்பதற்குக் காரணமான தங்கள் தாய் தந்தையரை வழிபட வேண்டும் என்ற எண்ணத்தில் தந்தை உறுப்பையும் தாய் உறுப்பையும் இணைத்து வழிபாடு செய்தார்கள். இலிங்கம்

என்பது இவ்விரு உறுப்புகளின் இணைப்பே என்ற ஒரு கருத்தும் நிலவி வந்துள்ளது.

இலிங்கம் என்பது தூய்மையான அக்கினியைக் குறிக்கும். வேள்வியின் உயிர்நாடியாக விளங்கிய அந்தத்தீ, பின்னர்க் கோயிலில் உயிர்நாடியாக விளங்கும் மூர்த்தமாக அமைந்தபோது, அம்மூர்த்தத் திற்கும் அதுவே பெயராக அமைந்தது. இவ்வகையில் இலிங்கம் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப் படுகிறது.

சைவ தத்துவ நூல்களில் அருவத்தையும் உருவத் தையும் இணைக்கும் அருவுருவ வடிவமே இலிங்கம் எனக் கூறப்படுகிறது. இலிங்கம் என்ற சொல் ஆரிய மல்லாத மொழியிலிருந்து–ஆசுட்ரோ – எபியாடிக்கு (Austro – Abiatic) மொழியிலிருந்து வந்திருக்கிறது எனச் சீன் பரிலங்கி கூறுகிறார். இலிங்கம் சிவ லிங்கம், இட்டலிங்கம், மகேசுவர இலிங்கம் எனப் பலவாறு பாகுபடுத்திக் கூறப்படும்.

தொடக்க காலம் முதற்கொண்டு மனித முன் னோர்கள் பேணி வளர்த்த செல்வங்களுள் கோயி லும் ஒன்று. புனித வாழ்க்கை மூலம் வளர்ச்சி பெறுவதற்கான வழி முறைகளையெல்லாம் கோயில் கள் வகுத்துத் தந்துள்ளன. சிவபெருமான் திருக் கோயில்களில் முதன்மையான தெய்வமாகத் திகழ் கிறார். சிவபெருமான் பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர்களுள் ஒருவராக இருந்துவிடாமல், அவர் களுக்கு மேல் நிலையிலிருந்து அவர்களை இயக்குபவ ராகிய பரம்பொருளாவர். இவ்வுண்மையைக் ‘காந்தம் சிவமதத்தைவம் சாதுர்த்தம்’ என மாண்டூக்கியம் போன்ற உபநிடதங்களும், ‘மூவர் கோனாய் நின்ற முதல்வன்’ என மாணிக்கவாசகர் போன்ற சமய ஆசிரியர்களும் எடுத்துக் காட்டுவதி லிருந்து தெரிந்து கொள்ளலாம். சிவபெருமானுக்கு உருவமோ பெயரோ இல்லை. இருப்பினும் தம் அடியார்களுக்குக் கருணைபுரியும் முறையிலும் இவ் வுலகினைத் திருத்தும் முறையிலும் அவர் எத்தகைய உருவத்தையும் தாங்கிக் காட்சியளிக்க வல்லவராக உள்ளார். அம்பலக் கூத்தர், சந்திரசேகரர் போன்ற மூர்த்தங்கள் உருவ நிலையை விளக்குவதைக் காண லாம்.

இம் மூர்த்தங்கள் அருவத்தைக் கடந்து உருவத் தைக் கொண்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, அருவத்தையும் உருவத்தையும் கொண்டுள்ள சிவலிங் கத்தின் அமைப்பை அறிந்து கொள்வது முறை யாகும். கண்ணால் காண முடியாத அருவத்தையும் கண்ணால் காணும் உருவத்தையும் ஒரே சமயத்தில் ஒரே அமைப்பில் காட்டும் அடையாளம் சிவலிங்கம் என்பதைப் பெரியபுராணத்தால் உணரலாம். ‘காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம், நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்’ என்று சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில் குறிப்பிடுகிறார்.

சிவலிங்கம் என்னும் சொல் தெரிவித்தல் என்னும் பொருளைக் கொண்ட ‘லிக்’ என்பதி லிருந்து வந்தது எனவும், ஒவ்வொரு பொருளும் சிவபெருமானிடமிருந்து தோன்றி அவரிடம் ஒடுங்கு வதைச் சிவலிங்கம் காட்டுகிறது எனவும் சிலர் கருதுவதுண்டு. கடவுள் நாத தத்துவர் ஆதலினால், நாதத்திலிருந்து விந்து தத்துவம் தோன்றிற்று எனவும், நாதம், விந்து ஆகியவை பிறைச் சந்திர வடிவம் அல்லது அரைவட்டவடிவமாகக் குறிக்கப் படுவதால், இவ்விரண்டும் சேர்ந்து சிவலிங்க வடி வத்தை அமைக்கின்றன எனவும் அறிஞர் சிலர் கருது கின்றனர். மேலும் சிவலிங்கத்தின் உள் அமைப்பும் வெளியமைப்பும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிப்பதாகத் திருமூலர், ‘இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம், இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம், இலிங்கத் துள்வட்டம் நிறையு முகாரம், இலிங்க மகாரம் நிறை விந்து நாதமே’ எனக் கூறுகிறார்.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் படைக்கும் தெய்வ மாகிய பிரமனுக்கு உரியது எனவும்; இரண்டாம் பாகம் அல்லது நடுப்பாகம் எட்டுப் பாகங்களைக் கொண்டதாய், இவ்வகையில் எட்டுச் சத்திகளையும் மற்றும் ஒரு சத்தியாகிய ஒன்பதாம் சக்தியையும் சேர்த்து, நவசக்திகளாய்த் திருமாலாகிய காக்கும் தெய்வத்திற்கு உரியது எனவும்; மேலுச்சிப் பாகம் பெருங்கருணைப் பேராளராகிய சிவபெருமானுக்கு உரியது எனவும் சொல்லப்பெறுகிறது.

காமிக ஆகமம், சுப்பிரபாத ஆகமம், மகுடா கமம், ஆகிய ஆகமங்கள் மிகுதியான அளவில் சிவலிங்கத்தைப் பற்றிக் கூறுகின்றன. புராணங்கள் காஞ்சிபுரத்தில் உமையம்மையார் மூல லிங்கவடிவில் வழிபாடு புரிந்ததாகவும், திருமாலும் பிரமனும் திரு வண்ணாமலையில் சிவலிங்க வழிபாடு செய்ததாக வும், கணேசர் மூகாசுரனை வென்ற பின்னர்த் தஞ்சை மாவட்டத்துத் திருச்செங்காட்டங்குடியில் சிவலிங்க வழிபாடு நிகழ்த்தியதாகவும், முருகப் பெருமான், சூரபதுமன் முதலியோர்களை வென்ற பின் திருச்செந்தூரில் இத்தகையதொரு வழிபாடு இயற்றியதாகவும், இராவணனை வென்றபின்னர் இராமர் இராமேசுவரத்தில் சிவலிங்க வழிபாடு

செய்ததாகவும் கூறுகின்றன. இராவணன் தான் சென்ற இடங்களிலெல்லாம் எப்போதும் வழிபடுவதற்காகப் பொன்லிங்கம் ஒன்றைக் கொண்டு சென்றான் என்பதும் புராணத்தா லறியப்படுகிறது.

கந்தழி என்பது சிவலிங்கத்தைக் குறிப்பதாக ஒரு சிலர் கருதுகின்றனர். திருவிளையாடற் புராணத்தின் இறுதி நிலைப் பாடல்களில், அகத்தியர் நிறுவிய சிவலிங்கத்தில் சிவபெருமான் மறைந்தார் என்னும் செய்தி கூறப்படுகிறது. திருவிளையாடற் புராணத்தில் காணப்படும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் ஒன்று 'வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த திருவிளையாட'லாகும். ஒரு கிணற்றின் அருகில் வன்னிமர நிழலில் இருந்த சிவலிங்கம், சான்றளித்தற் பொருட்டு அக்கிணற்றோடும் வன்னி மரத்தோடும் நீதிமன்றத்தில் காட்சியளித்ததாக 'வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம்' விரிவாகக் கூறுகிறது. அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சதாசிவலிங்கம் என்னும் பாகுபாட்டின் கீழ்ச் சிவலிங்க தத்துவத்தை விளக்குகிறார் திருமூலர். அண்டலிங்கம் என்பது ஆகாயம். ஆகாயம் அந்த இலிங்கத்தின் மேற்பகுதியாகவும் அதன் கீழ் உள்ள பேருலகம் அதன் கீழ்ப் பகுதியாகவும் அமைகின்றன. பேருலகமும், மரம், செடி, கொடி, மனிதன், ஆகியவையும் இக்கீழ்ப் பகுதியில் அடங்கியுள்ளன. பிண்டலிங்க தத்துவத்தில் மாந்தராதி பிண்டமாகிய உடல் சிவலிங்கமாகக் கருதப்படுகிறது. ஆன்மலிங்கம் என்பது மெய்யடியார்களின் ஆன்மாவே சிவலிங்கமாகக் கருதப்படுவது. ஞானலிங்கம் என்பது ஞானிகள் ஞானத்தையே சிவலிங்கமாக வழிபடுவதைக் குறிக்கும். சதாசிவலிங்கம் என்பது சிவபெருமான் ஐந்தெழுத்து மந்திர வடிவில் மெய்யடியார்களுக்கு நன்மை பயப்பதைக் குறிப்பது. கோயிலின் கோபுரம், கொடி, கருப்பக் கிரகம் ஆகியவையும் சிவலிங்கங்களாக வழிபடத் தக்கன. சில கோயில்களில் நூற்றெட்டுச் சிவலிங்கங்கள் உள்ளன. சில கோயில்களில் 1008 சிவலிங்கங்கள் உள்ளன. நம் நாட்டின் வட கோடியில் கேதாரலிங்கமும்தென் கோடியில் இராமேசுவரலிங்கமும் மேற்கில் சோமநாதர்லிங்கமும் சற்றுக் கிழக்கில் சிரீசைலத்து மல்லிகார்ச்சுனலிங்கமுமாக நான்கு திக்கிலும் அமைந்திருப்பதிலும் ஒரு சிறப்பு உள்ளது.

நாசிக் பஞ்சவடிக்கு அண்மையில் திரியம்பகலிங்கமும் உச்சயினில் மகாகாளேசுவர லிங்கமும், நருமதை நதிக்கரையில் ஓங்கார ஈசுவரலிங்கமும், பூனாவை அடுத்த மலைப்பகுதியில் உள்ள பீமசங்கர் லிங்கமும், குங்குமப்பூப் போன்ற மேனியர் என மராத்திய மொழிப்பெயரைக் கொண்டுள்ள குருட்ணேசுவரலிங்கமும், எல்லோராக் குகைக்கருகிலும் சௌண்டி, பர்கனி ஆகிய இரயில் நிலையங்களுக்கு அருகிலும் உள்ள நாகநாதலிங்கமும் வைத்தியநாதலிங்கமும், கங்கைக் கரையில் காசியில் உள்ள விசுவநாதலிங்கமும் பன்னிரு சோதிலிங்கங்கள் எனப்படும். இப்பன்னிரு சோதிலிங்கங்களைத் தரிசனம் செய்யவும், சிந்து, காவிரி, கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவரி என்னும் ஏழு புண்ணிய நதிகளிலும் நீராடவும் அடியார்கள் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர்.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட மகேந்திரவர்ம பல்லவ அரசன், தான் சிவலிங்க வழிபாடு செய்து உயர்ந்ததாகத் திருச்சி மலைக்கோட்டைச் சிகரத்தில், தான் நிறுவிய வடமொழிக் கல்வெட்டு ஒன்றில் தெரிவித்துள்ளான்.

சிவலிங்க வழிபாடு தென்னாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் இருந்து வந்துள்ளது என்பதை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார் இவ்வழிபாடு எகிப்து, சிரியா, பாரசீகம், ஆசியா மைனர், கிரீசு, இத்தாலி ஆகிய நாடுகளில் வளர்ச்சியடைந்திருந்தது என்கிறார். இவ்வழிபாடு இப்போதும் இந்தியாவிலும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் பல பகுதிகளிலும் வலிவுடையதாக இருந்து வருகிறது. இசுபெயின் நாட்டினர் அமெரிக்கநாட்டை முதன் முதலில் கண்டுபிடித்தபோது, அங்குச் சிவலிங்க வழிபாடு புனித வழிபாடாகக் கொண்டாடப் பெற்றதை அவர்கள் கண்டார்கள். இவ்வழிபாடு, மனித இனத்திற்கே மிக உயர்ந்த கோட்பாடாகவும் மதிப்பிடத்தக்க உணர்வளிப்பதாகவும் கருதப்பட்டது.

சுயம்புலிங்கம் என்பது தானாகவே தோன்றும் இலிங்கம் எனப் பொருள்படும். ஏதோ ஒரு காலத்தில் அன்பர்கள் வழிபட்டு உய்ய வழி வகுக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான் ஒரு கல்லில் எழுந்தருளுகிறார். அதுவே சிவலிங்கமாக மக்கள் காண்கிறார்கள்; வழிபடுகிறார்கள். திருவான்மியூரில் உள்ள இலிங்கம் இத்தகைய சுயம்புலிங்கமாகும். இது ஒரு வகையான சிவலிங்க வழிபாடாகும். மு.மு.

**இலிங்கன் ஆசரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை** என்பது குழந்தைகளுக்கான உளவியல் சோதனைகளுள் ஒன்றாகும். இச்சோதனை 1923-ஆம் ஆண்டு உருசியாவில் அமைக்கப்பட்டது. இது எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படக் கூடிய முறையில் அமைக்கப்பட்டது. இது பற்றிய கருத்து பிற ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுப்பயன்படுத்தப்பட்டு வந்தது. இச்சோதனை மன

வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் (Mentally Retarded Children) பெரும்பாலும் பயன் படுத்தப்படும் முறையில் மாற்றியமைக்கப்பட்டது. பேச்சுக் கோளாறுகள், இயக்கக் குறைவுடைமை (Motor Retardation) வேறு வகைகளான மூளை வளர்ச்சி குன்றிய நிலைகள் ஆகியவற்றையுடைய குழந்தைகளுக்கு ஏற்றவாறும் இச்சோதனை திருத்தியமைக்கப்பட்டது.

இச்சோதனையில் பல பகுதிகள் அடங்கியுள்ளன. சோதனைக் கருவிகளும் விரிவாக அமைக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிராமல் சிறுகுச்சிகள், கட்டைகள், காகிதம், கயிறு, பெட்டிகள், பந்து போன்ற பொருள்களைக் கொண்டுள்ளன. இச்சோதனையின் திருத்தம் 1955-ஆம் ஆண்டு இலிங்கன் அசரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை (Lincoln Oseretsky Motor Development Scale) என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இச்சோதனையில் குழந்தைகளின் சமூக முதிர்ச்சியும் (Social Maturity) மதிப்பீடு செய்யப்படுவதற்கான பகுதிகள் அடங்கியுள்ளன.

**இலிங்கன், ஆபிரகாம்** (**கி.பி. 1809-1865**) அமெரிக்க ஐக்கிய நாட்டின் பதினாறாம் குடியரசுத் தலைவர். இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 12-ஆம் நாள் கெண்டகி (Kentucky) என்னும் ஊரில் பிறந்தார். இலிங்கனின் (Lincoln) தந்தையார் தாமசு (Thomas) என்பார் தச்சராகவும் உழவராகவும் தொழில்புரிந்தார். தாயார் நான்சி ஏங்சு இலிங்கன் (Nancy Hanks Lincoln) என்பவராவர். இலிங்கன் ஆபிரகாமின் தாயார் கி.பி. 1818-ஆம் ஆண்டு காலமானார். இலிங்கனின் தந்தையார்



இலிங்கன், ஆபிரகாம்

திருமதி சாரா புசுசான்சுட்டன்(Mrs. Sarah Bush Johnston) என்பவரை இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார். இந்த அம்மையார் இலிங்கனையும் அவர்தம் தங்கையையும் அன்பாக நடத்தினார்.

ஆபிரகாம் இலிங்கனுக்குப் பள்ளியில் படிக்கும் வாய்ப்புக் குறைவாகவே கிட்டியது. இதற்குக் காரணம் இவர் பிறந்த கெண்டகியிலும், வளர்ந்த இந்தியானாவிலும் பள்ளிக்கூடங்கள் குறைவாக இருந்தமையேயாகும்.

தாமசு இலிங்கனின் குழந்தைகள் (ஆபிரகாம் உட்பட)கட்டணம்செலுத்திப் படித்தார்கள். உரக்கக் கத்திப் படிக்கும் பள்ளியொன்றில்தான் இவர் சேர்ந்து படித்தார். இத்தகைய படிப்புமுறை பழைய முறைகளுள் ஒன்று.

இவருக்கு 21 வயது நிரம்பியபோது, கி.பி. 1830-ஆம் ஆண்டில் இவர்தம் குடும்பத்தினர் இந்தியானாவிலிருந்து இல்லியனாய்க்குக் குடியேறினர். தாமசு ஆபிரகாம் அம்மாநிலத்தில் குடியேறியபோது ஆபிரகாம் இலிங்கன் நியூ ஆர்லியன்சு நகரில் தட்டைப் படகு ஒன்றைக் கட்டும் பணியில் சேர்ந்தார். அப்பணியை முடித்து ஊர் திரும்பியதும் இவர் இசுபிரிங்குபீல்டு (Springfield) என்னும் இடத்திற்கு அண்மையிலிருந்த நியூசேலம் (New Salem) என்னும் ஊரில் பணியில் சேர்ந்தார். சிறிது காலம் அஞ்சலகத் தலைவராகவும் சிறிது காலம் கண்காணிப்பாளராகவும் பணி புரிந்தார்.

இவர் கடின உழைப்பாளி; நேர்மையானவர்; அதன் விளைவாக இவர் விரைவாக எல்லோராலும் விரும்பப்பட்டார். இவர் 2 மீட்டருக்கு மேல் உயரமானவர்; உடற்கட்டுள்ளவர். இவருக்கு மற்போர் செய்வதில் பேரார்வமுண்டு. கோடரியைத் திறமையாகப் பயன்படுத்தவும் தெரிந்திருந்தார்.

இல்லறம்: நியூசேலம் என்னும் ஊரில், இளைஞரான இலிங்கன் இரு இளம் பெண்களுடன் தொடர்பு கொண்டார். ஆன் இரட்லட்சு (Ann Rutledge), மேரி ஓவன்சு (Mary Owens) ஆகிய இவ்விருவரும் இவரிடம் அன்பு பாராட்டினார்கள். ஆனால், ஆன் இரட்லட்சு கி.பி. 1835 ஆம் ஆண்டில் காலமானார். அவர் காலமான ஓராண்டுக்குப் பின்னர், இவர் மேரி ஓவன்சு மீது காதல் கொண்டாரெனினும் அப்பெண் இவரை மணக்க மறுத்துவிட்டாள்.

இவர் கி.பி. 1842-ஆம் ஆண்டு கெண்டகி, இலெக்சிங்டனைச் சார்ந்த மேரி ஆன் டாடு (Mary Ann Todd) என்ற பெண்ணை இசுபிரிங்குபீல்டில்

திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவருக்கும் நான்கு ஆண்மக்கள் பிறந்தனர். இராபர்ட்டு, எட்வர்டு, வில்லியம், தாமசு என்னும் பெயர் கொண்டவர்கள் .

வழக்கறிஞர்: நியூ சேலத்தில் இவர் சட்டம் பயின்று கி.பி. 1836-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு இசுபிரிங்குபீல்டு சென்று அங்கு, சான் டி. இசுடூவர்ட்டு (John T. Stuart) என்பாருடன் இணைந்து வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் இல்லியனாயின் தலைசிறந்த வழக்கறிஞரான இசுடீபன் உலோகன் (Stephen T. Logan) என்பாருடன் இணைந்து பணியாற்றினார். அதன் பின்னர், கி.பி. 1844-ஆம் ஆண்டில் வில்லியம் எச். ஏர்ன்டன் (William H. Herndon) என்பவரைத் துணைவராகச் சேர்த்துக் கொண்டு சொந்தமாகச் சட்ட நிறுவனமொன்றைத் தொடங்கினார்.

இவர் பேச்சில் வல்லவர்; விரைந்து சட்டத்தைப் புரிந்து கொள்ளும் கலையை அறிந்தவர். எனவே, சட்டப்பணியில் சிறந்து, வாகை சூடினார். ஓய்ந்த வேளைகளில் இவர் அரசியல் பற்றியும் பேசலானார்.

இல்லியனாய் நடுவண் இருப்புப்பாதைக் குழு, ஏனைய இருப்புப்பாதை நிறுவனங்கள், வங்கிகள், ஆயுட்காப்பீட்டுக் குழுக்கள், செய்பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு வாதாடியதால் இவர் வழக்கறிஞர் பணி பெருகிவளர்ந்தது.

அரசியல் பங்கு: இவர் நியூசேலத்தில் வாழ்ந்த காலத்தில் (கி.பி. 1831 – 37) அரசியலில் ஈடுபாடு கொண்டு பொதுப்பணியில் இறங்கினார். இல்லியனாய்ச் சட்டமன்றத்தின் வேட்பாளராக கி. பி. 1832-இல் இவர் தேர்தலில் நின்றார். தேர்தலைக் கவனிக்காமல் வட இல்லியனாயிலும் விசுகான்சினிலும் நடைபெற்ற போரில் பங்கு கொண்டார். எனவே, தேர்தலில் தோற்றுவிட்டார். எனினும், போரில் ஈடுபட்டது பிற்காலத்தில் இவருக்குப் பலனளித்தது. இவர்தம் நண்பர்கள் இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு இவர் வெற்றிபெற்றார். தொடர்ந்து மும்முறை தேர்ந்தெடுக்கப் பெற்ற இவர் மீண்டும் கி.பி. 1854-இல் தேர்ந்தெடுக்கப் பட்டார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் அவைக்கும் கி.பி. 1847-49-ஆம் ஆண்டுகளில் விக்குக் கட்சியின் உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். இரண்டு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேலவைக்கும் (Senate) போட்டியிட்டுத் தோற்றார். இவர் மேலவைக்கு முதன் முறையாக கி.பி. 1854-55-ஆம் ஆண்டில் முயன்றார். ஆனால், வேறு ஒருவரை மாநிலச் சட்டமன்றம் தேர்ந்தெடுத்துவிட்டது.

இலிங்கனும் திரம்புல் (Trumbull) என்பாரும் அடிமை முறையை அமெரிக்க ஐக்கிய நாட்டில் விரிவுபடுத்துவதை எதிர்த்தார்கள். அதனால், இவ்விருவரும் குடியரசுக் கட்சியின் உறுப்பினர்களாயினர். இல்லியனாய் மாநிலத்தில் இவ்வேளையில்தான் (கி.பி. 1856) இக்கட்சி அமைக்கப் பெற்றது. அடிமை முறையை எதிர்த்தவர்களுள் பெரும்பாலோர் இக் கட்சியின் ஆதரவாளர்களாயிருந்தனர். அவர்களுள் சிலர் அடிமை ஒழிப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு, உடனடியாக அடிமை முறை அகற்றப்பட வேண்டுமெனக் கோரினர். இலிங்கனும் திரம்புல்லும் கூட்டாட்சி அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் பகுதிகளில் அடிமை முறையைப் பெருக விடாமல் தடுப்பதே உரியவழி என்று நம்பினர்.

இப்பகுதிகளில் கி.பி. 1857-ஆம் ஆண்டளவில் அடிமைமுறை பற்றிய சிக்கல் குழப்பமான நிலையில் இருந்தது. இச்சமயத்தில் நாட்டின் சட்டமன்றங்களான காங்கிரசு, நாட்டுப் பகுதிகளில் அடிமைகளை விலைக்கு வாங்குவதைத் தடுக்க முடியாதென அமெரிக்க ஐக்கிய நாட்டின் உச்ச நீதி மன்றம் தீர்ப்புக் கூறியிருந்தது. நாட்டின் பகுதிகளில் அடிமை முறையைக் கட்டுப்படுத்தும் பொறுப்புக்காங்கிரசிடம் இருக்குமானால், உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பை மாற்றிக் கொள்ள வேண்டும்; இல்லையேல் அரசியல் அமைப்புத் திட்டத்தை உரிய முறையில் மாற்றியாக வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியிருந்தது.

மேலவைக்கு உறுப்பினராக இலிங்கன் கி.பி. 1855-ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக முயன்றார். அப்போது மக்களாட்சிக் கட்சியின் சார்பில் இசுடீபன் ஏ. தக்லசு (Stephen A. Douglas) என்பார் மூன்றாம் முறையும் தேர்தலில் நின்றார். இல்லியனாய்க் குடியரசுக் கட்சி மாநாடு இலிங்கனை வேட்பாளராக நியமித்தது. அம் மாநாட்டில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இவர் உரை நிகழ்த்தினார். அடிமை முறையை ஆதரிக்கக்கூடாது என்பது இவருடைய அறிவுரையாகும். தக்லசு பேசிய போது மக்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். இவர் பேசிய கூட்டங்களில் பெருந்திரளாக மக்கள் கூடவில்லை. ஆயினும், தக்லசு பேசிச் சென்ற ஊர்களுக்கெல்லாம் இவரும் சென்று அடிமை முறைக்கெதிராகப் பேசி வந்தார். தக்லசின்

செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார் இலிங்கன் என்று பலர் குறை கூறினர்.

இச்சிக்கலைத் தீர்க்கத் தம்முடன் வாதமிடத் தக்லசு வரவேண்டுமென்று இவர் அறைகூவல் விடுத்தார். தக்லசு இவர் அறைகூவலை ஏற்றுக் கொண்டார். ஏழு ஊர்களில் இவ்விருவரும் இவ்விவாதத்தில் பேசுவதென முடிவாயிற்று. ஆட்டாவா, பிரிபோர்ட்டு, சோன்சுபரோ, சார்லசுடன், கேல்சுபர்க்கு, குவின்சி, அல்ட்டன் என்பன அவை. இவ்வூர்களில் பெருந்திரளான மக்கள் திரண்டு தேர்தல் பிரசாரத்தை விரும்பிக் கேட்டனர். இலிங்கன் 60 கூட்டங்களிலும் தக்லசு ஏறத்தாழ 100 கூட்டங்களிலும் பேசினார்கள்.

இலிங்கனும் தக்லசும் பெரும்பாலான சிக்கல்களைத் தீர்ப்பதில் ஒத்த கருத்துடையவர்களாகவே இருந்தனர். இருவரும் அடிமை முறைக் கெதிராகவும், அடிமை முறையை ஆதரிக்கும் மாநிலங்களை அமெரிக்க ஒன்றியத்தில் சேர்க்கக் கூடாதெனவும் கருதினார்கள். இப்பகுதிகளில் அடிமை முறையையே அனுமதிக்கக் கூடாதென்று இலிங்கன் கூறினார். அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களே அடிமைமுறை குறித்துத் தீர்மானிக்க வேண்டும் என்று தக்லசு கூறினார். இக்கருத்தறியும் முறையைத் தக்லசு 'பொதுமக்கள் ஆளுமை' (Popular Sovereignty) என்று குறிப்பிட்டார்.

அடிமை முறைக்கெதிராகப் பேச மறுத்துவிட்டார் தக்லசு. அவர் மக்களாட்சிக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர். அக்காலத்தில் அக்கட்சியின் ஆதரவாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாடு முழுவதிலும் பரவியிருந்தனர். அடிமை முறை ஒழிப்பிற்கெதிராகப் பேசினால் தேசியக் கட்சியான மக்களாட்சிக் கட்சி உடைந்துவிடுமோ என்று தக்லசு அஞ்சினார். ஏனெனில், குடியரசுக் கட்சி வடவரின் சுதந்திரநாடு வேண்டும் கட்சி; அடிமை நிலையை ஆதரிக்காத கட்சி. தென்பாகத்தில் இருந்த மாநிலங்கள் அடிமை முறையை ஆதரித்தன. எனவே, அவை குடியரசுக் கட்சியை வெறுத்ததுடன் அதனைக் கண்டு அஞ்சவும் செய்தன. தக்லசு குடியரசுத் தலைவராக வர விரும்பினார். ஆதலின், மக்களாட்சிக் கட்சி பிளவு படாமல் இருப்பதே நலம் எனவும், பிளவுபட்டால் வெற்றிவாய்ப்புக் கிட்டாது எனவும் அவர் கருதினார்.

ஆனால், இலிங்கன் மக்களாட்சிக் கட்சிக்குள் நிலவிய கருத்து வேற்றுமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். தக்லசு தென் மாநிலங்களின் ஆதரவையிழந்ததுடன் மக்களாட்சிக் கட்சியும் பிளவுண்டது. இல்லியனாய்த் தேர்தல் பிரசாரம் கி.பி 1858 இல் மக்களாட்சிக் கட்சியின் வெற்றியில் முடிவுற்றது. தக்லசும் இதே மேலவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுக் கட்சியினர் பெருமளவு வாக்குகள் பெற்றனர். எனினும், மிகுதியான இடங்களைப் பெறவில்லை. மேற்கூறிய வாதவிவாத உரையாடல்களினால் இலிங்கன் அனைவருக்கும் தெரிந்தவரானார்; மக்கள் இவரை மதிக்கலாயினர். மேலவைக்கு கி.பி. 1858-இல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பாரேயாயின், கி.பி. 1860-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் பதவிக்கு இவர் போட்டியிடாமல் இருந்திருக்கக் கூடும். உண்மையிலேயே இவர் ஆசைப்பட்டதெல்லாம் மேலவை உறுப்பினராக வேண்டுமென்பதே. மேலவைக்கு வாய்ப்புக்கிட்டாமையான், இவர் வேறு வழிகளைப் பற்றிச் சிந்திக்கலானார்.

குடியரசுத் தலைவர்: இலிங்கன் கி. பி. 1859-ஆம் ஆண்டின் இறுதியில் ஒகையோ, விசுகான்சின், கான்சாசு, நியூயார்க்கு மாநகர், நியூ இங்கிலாந்து ஆகிய மாநிலங்களில் குடியரசுக் கட்சியின் சார்பாக அரசியல் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். நியூயார்க்கு மாநகரத்தில் கி.பி. 1860-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள் இலிங்கன் ஆற்றிய சொற்பொழிவு குறிப்பிடத்தக்கது. நியூயார்க்கிலிருந்த பல முக்கியக் குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள் இவருடைய சொற்பொழிவால் ஈர்க்கப்பட்டார்கள். இல்லியனாய் மாநிலம் இவரைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்திருந்தது. நியூயார்க்குச் சொற்பொழிவினால் வடமாநிலத்தைச் சார்ந்த குடியரசுக் கட்சியினரும் இலிங்கனையே தம் கட்சியின் சார்பாக நிறுத்தலாம் என்று கருதினார்கள்.

இல்லியனாய்க் குடியரசுக் கட்சியினர் இவரைத் தம் கட்சியின் சார்பில் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்தனர். குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு கி.பி. 1860-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாள் சிகாகோவில் கூடியது. வில்லியம் எச். சீவார்டு (William H. Seward) என்பாரும் இலிங்கனும் குடியரசுத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பாக நின்றார்கள். முதற் சுற்று வாக்குகள் சீவார்டுக்கு இலிங்கனை விட மிகுதியாகக் கிடைத்தன. எனினும், அவரால் வெற்றிபெற முடியவில்லை. மூன்றாம் சுற்று வாக்கெடுப்பில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக இலிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குடியரசுத் தலைவர் தேர்தல் கி.பி. 1860-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் நாள் நடைபெற்றது. தேர்தலில் நான்கு கட்சிகள் சார்பாக நால்வர் போட்டியிட்டனர். மக்களாட்சிக் கட்சி இரண்டாக

உடைந்ததால் வடமாநில மக்களாட்சிக் கட்சிப் பிரிவினர் தக்லசைக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தெரிந்தெடுத்தனர்; தென் மாநிலத்தவர்கள் கெண்டகியைச் சார்ந்த சான் சி. பிரக்கின்ரிட்சு (John C. Breckinridge) எனபாரைத் தெரிந்தெடுத்தனர். அரசியலமைப்பு ஒன்றியக் கட்சி (Constitutional Union Party) மேலவையாளர் சான் பெல்(John Bell) என்பாரை நிறுத்தியது. வாக்காளர்கள் பிரிந்திருந்த நிலையால் இலிங்கன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். எனினும், இவருக்குப் பத்தில் நால்வரே வாக்களித்திருந்தனர் என்பதைக் குறிப்பிடல்வேண்டும். அடிமை வாணிக முறையை ஆதரித்த மாநிலங்களிலிருந்து இவருக்கு ஒருவரும் வாக்களிக்கவில்லை. ஆனால், சுதந்திர மாநிலங்கள் அனைத்தும் இவரை ஆதரித்தன. இலிங்கனுக்கு 180 தேர்தல் வாக்குகளும் (Electoral Votes) இவரை எதிர்த்த மூன்று வேட்பாளர்களுக்கும் கூட்டாக 123 வாக்குகளும் கிடைத்தன. குடியரசுத் தலைவருக்கு இலிங்கன் போட்டியிட்ட காலத்தில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம் செய்யும் பழக்கம் இல்லை. இவர் இசுபிரிங்குபீல்டில் அப்போது தம் வீட்டில் தங்கியிருந்தார்; சொற்பொழிவு ஏதும் இவர் ஆற்றவில்லை. நாட்டைச் சூழ்ந்திருந்த சிக்கல்களைப் பற்றி இவரிடம் கேட்டபோது, தாம் குடியரசுக் கட்சியினை ஆதரிப்பதாக இவர் பதில் இறுத்தார்.

பகுதிகளில் அடிமை முறையை எதிர்த்தல், அமெரிக்காவின் தொழிற் சாலைகளுக்குப் பாதுகாப்பு, சுங்கவரிக்கு ஆதரவு, பொதுநிலங்களில் குடியேறியவர்களுக்கு இலவசப் பண்ணைகளுக்கு வகை செய்யும் சட்டமியற்றல், அரசு உதவியுடன் பசுபிக்குப் பெருங்கடல் கடற்கரை வரை இருப்புப் பாதைகள் அமைக்கும் திட்டம் போன்றவற்றிற்கு இலிங்கன் ஆதரவு நல்கினார். இவர் குடியரசுத் தலைவராகத். தேர்ந்தெடுக்கப்பட்டதும் மேற்கூறிய கோரிக்கைகள் சட்டமாக்கப்பட்டன.

இலிங்கன் நவம்பரில் தேர்தெடுக்கப்பட்டாலும் அடுத்தாண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் நாள் அதாவது நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர்த்தான் பதவியேற்றார். இத்தகைய இடைவெளியினால் பல தொல்லைகள் நேர்ந்தன. அடுத்த பதவிக்கு வருகிறவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், இடைக்காலத்தில் குடியரசுத் தலைவராய் இருந்தவர் செய்யும் நடவடிக்கைகள் தமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளவேண்டியவரானார். இலிங்கன் இவ்வாறு காத்துக் கொண்டிருந்த இடைக்காலத்தில், சேம்சு புச்சானன் (James Buchanan) என்னும் பெயர் கொண்ட குடியரசுத தலைவர் குடியரசுக் கட்சியின் வெற்றியால் பல சிக்கல்களைத் தாங்கமுடியாமல் தத்தளித்தார்.

தென்மாநிலங்கள் பிரிந்துபோதல்: இலிங்கனின் தேர்தலுக்குப் பின்னர் அடிமை முறை பற்றிய சிக்கல் தலைதூக்கியது. அடிமை முறையை ஆதரித்த தென்மாநிலங்கள் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரேயாயின், ஒன்றியத்திலிருந்து பிரிந்து போய்விடுவதாக அச்சுறுத்தின. இலிங்கனும் ஏனைய குடியரசுக் கட்சித் தலைவர்களும் தென்மாநிலங்கள் வீணே பிதற்றுகின்றன என்றே நம்பினர். ஆனால், கி. பி. 1860-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 20 ஆம் நாள் தென்கரோலினா பிரிந்து சென்றபோது அமெரிக்க ஐக்கியத்திற்குப் பேராபத்து வந்துவிட்டதென்பது தெளிவாயிற்று. இலிங்கன் குடியரசுத் தலைவராக கி. பி. 1860-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் நாள் பதவியேற்கும் முன் ஏழு தென் மாநிலங்கள் பிரிந்து போய்விட்டன. அவை அமெரிக்கக் கூட்டிணைப்பு மாநிலங்கள்(Confederate States of America) என்னும் பெயருடன் தனி அரசினை அமைத்துக் கொண்டன. மிசிசிப்பியைச் சார்ந்த செபர்சன் தேவிசு (Jefferson Davis of Mississippi) என்பாரை அம்மாநிலங்கள் குடியரசுத் தலைவராக அறிவித்தன. தென் கரோலினா, மிசிசிப்பி, புளாரிடா அலபாமா, சார்சியா, இலூசியானா, தெக்சாசு, என்பவை அமெரிக்கக் கூட்டிணைப்பு மாநிலங்களாகும்.

அமெரிக்க ஐக்கியத்தைப் பேணிக்காக்கவும், சிக்கலைத் தவிர்க்கவும் பல திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன. கெண்டகியைச் சார்ந்த மேலவையாளர் சான் சே. கிரிட்டெண்டன் (John J. Crittenden) என்பார் தாம் கூறிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், அமெரிக்க ஐக்கியம் பிரியாமல் நிலைத்திருக்கும் என்றார். அந்த நோக்குடன் அவர் கி. பி. 1860-ஆம் ஆண்டில் அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்தப் பல திருத்தங்களைக் கூறி, இரண்டு கட்சிகளும் இணக்கத்திற்கு வர வழிகோலினார்.

1. 36,30 என்னும் குறுக்குக் கோட்டிற்கு வடக்கிலுள்ள பகுதிகளில் அடிமை முறையை விலக்கிவிடவேண்டும். அக்கோட்டிற்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் அம்முறை பாதுகாக்கப்படவேண்டும். 2. அடிமை முறை நிலவும் மாநிலங்களில் இருக்கும் ஏனைய கூட்டாட்சிச் சொத்துகள் போன்றவற்றில் அடிமைத் தளையை அகற்றும் அதிகாரத்தைக் காங்கிரசு பெறக்கூடாது. 3. கொலம்பியா மாநிலத்தில் (வாசிங்டன் டி. சி) அடிமைத்தளையை நீக்கும் அதிகாரத்தைக் காங்கிரசு பெறக்கூடாது. அடிமை

களின் சொந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்காமல் இதைச் செய்தல் கூடாது. அதேபோல் மேரிலாந்து, வர்சீனியா, கொலம்பியா போன்ற மாவட்டங்களைச் சார்ந்த மக்களின் இசைவில்லாமல் அடிமைத் தளை அகற்றப்படுதல் கூடாது. 4. அடிமைகள் இருக்கும் மாநிலங்களுக்கும் பகுதிகளுக்கும் இடையில் அடிமை வாணிகத்தைத் தடுக்கவோ தடைசெய்யவோ காங்கிரசுக்கு அதிகாரம் இல்லை. 5. திரும்பக் கைப்பற்ற முடியாமல் தப்பியோடிய அடிமைகளுக்குக் கூட்டாட்சி அரசு நட்ட ஈடாகப் பொருள் கொடுக்க வேண்டும்.

சுதந்திர மாநிலத்தின் மேலவை உறுப்பினர்களின் மேலவைக் குழுவும், அடிமை முறையைச் செயற்படுத்திய மாநிலங்களும், இரு அரசியல் கட்சிகளும் மேற்கூறிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

அடிமை முறையை விரிவாக்கும் எந்தவொரு திட்டத்தையும் தாம் அனுமதிக்கப்போவதில்லையென்றும், இதில் சமரசத்திற்கே வழிகிடையாது என்றும் இலிங்கன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார். கிரிட்டெண்டன் கோரிக்கைகளின் அடிப்படையில் சமரசம் வராவிட்டால் போர் மூளும் என்பதை இலிங்கனோ குடியரசுக் கட்சியினரோ உணரவில்லை.

குடியரசுத் தலைவர் பதவியேற்றல்: இசுபிரிங்குபீல்டிலிருந்து வாசிங்டன் டி. சிக்கு இலிங்கன் கி. பி. 1861-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 11-ஆம் நாள் புறப்பட்டார். இவர் இசுபிரிங்குபீல்டு நண்பர்களிடம் பேசும்போது நாட்டைச் சூழ்ந்துள்ள பேரிடர்களைச் சுட்டிக் காட்டினார்.

வாசிங்டன் போய்ச் சேர இவருக்கு 12 நாள்கள் பிடித்தன. வழியெல்லாம் மக்கள் அமெரிக்காவின் ஐக்கியத்தை எதிர்நோக்கியிருந்த அச்சம் குறித்து என்ன பேசுகிறார்கள் என்பதை இலிங்கன் கவனிக்க இப்பயணம் வாய்ப்பளித்தது. புதிய குடியரசுத் தலைவரை நேருக்கு நேர் காணவும், அவர்தம் உரையைக் கேட்கவும் மக்களுக்கு இது பயன்பட்டது.

அமைச்சரவைக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொரு குடியரசுத் தலைவருக்கும் தொல்லைகள் இருந்தன. இலிங்கன் தம் அமைச்சரவை உறுப்பினர்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுத்தார். குடியரசுக் கட்சிக்குள் நிறைய நண்பர்களைக் கொண்டிருந்த ஆட்களையே இவர் அமைச்சராகத் தேர்ந்தெடுத்தார். அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எழுவருள் நால்வர் குடியரசுத் தலைவர் பதவிக்கே கட்சியின் நியமனத்தைப்பெற எதிர்பார்த்தவர்கள். உறுப்பினர்கள் வெவ்வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள். இருவர் அடிமை முறையை ஆதரித்த தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் சிலர் குடியரசுக் கட்சிக்காரர்களாவர் முன்னர் விக்குக்கட்சியில் இருந்தவர்கள். சிலர் மக்களாட்சிக் கட்சிக்காரர்கள். ஒருவர் சுதந்திர நிலம் (Free Soiler) கோரும் குழுவினர்.

இலிங்கனின் அமைச்சரவைக் குழுவின் வெளியுறவு அமைச்சராக இருந்த வில்லியம் எச்.சீவார்டு பொது வாழ்வில் இலிங்கனைவிட அனுபவம் மிக்கவர். குடியரசுத் தலைவரிடம் தம் செல்வாக்கு மிகுதியாக இருக்குமென்று அவர் எண்ணினார். புதிய நிருவாக அமைப்பில் எவற்றையெல்லாம் எப்படியெப்படிச் செய்யவேண்டுமென்னும் தம் கருத்துகளைச் சீவார்டு இலிங்கனிடம் கூறியதுடன், அதற்குத் தேவையான முடிவுகளையும் செய்வதெப்படி என்று அறிவித்தார். குடியரசுத் தலைவரான தமக்குச் செய்ய வேண்டுவனவற்றைத் தீர்மானிக்கத் தெரியும் என்று இலிங்கன் பதிலளித்தார். நிதி அமைச்சர் சால்மன் பி.சேசு Salmon P. Chase), போர்த்துறை அமைச்சர் சைமன் காமரூன்(Simon Cameron), கப்பற்படை அமைச்சர் கிடான் வெல்சு (Gideon Welles) போன்றவர்கள் ஏனைய முக்கிய அமைச்சர்கள்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் சிக்கல் நாட்டு மக்களையும் புதிய குடியரசுத் தலைவரையும் எதிர்நோக்கியது. குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது இலிங்கன் ஆற்றிய தொடக்கவுரையில், மாநிலங்களின் ஐக்கியம் நிலையானதென்றும் நாட்டின் ஐக்கியத்தை விட்டு எந்தவொரு மாநிலமும் சட்டப்படி விலக முடியாது என்றும் அறிவித்தார். எனவே, நாட்டின் ஐக்கியம் உடைக்கப்படக் கூடாததென்றும், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த அனைத்து மாநிலங்களையும் நேர்மையுடன் காக்கும் அரசியலமைப்புக் கடமை தமக்கிருக்கிறதென்றும் தெளிவாக்கினார். அதனைக் காக்கும் பொருட்டுக் குருதி சிந்துவதோ வன்முறையோ தேவையற்றது என்றும், அத்தகைய தேவை ஏற்படாதென்றும், அமெரிக்கத் தேசியத்தின் அதிகாரத்தை எதிர்த்துத் தம்மீது திணித்தாலன்றி அது ஏற்படாதென்றும் இவர் பேசினார். அரசுக்குச் சொந்தமான சொத்துகளையும் இடங்களையும் காத்து, கைக்கொண்டு நிருவகிக்கும் பொறுப்புத் தாம் ஏற்றிருக்கும் பதவியின் கடமையாகும் என்றும் இவர் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டாட்சிக்குரிய வரிகள் வசூலிக்கப்படும் என்றும் இவர் அறிவித்தார். அடிமை முறையொன்றுதான் வழக்கின் ஒரே சிக்கல் என்றார்.

இவர். எங்கெல்லாம் அடிமை முறை வழக்கில் இருந்து வருகிறதோ அங்கெல்லாம் தலையிடப்போவதில்லை என்று தென் மாநிலங்களுக்கு இவர் வாக்குறுதியளித்தார். எனவே அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பது அனைவரின் கடமையாகும் என்று வேண்டுகோள் விடுத்து இவர் தம் உரையை முடித்தார்.

உள்நாட்டுப் போர்: தென்கரோலினாவிலுள்ள சார்லசுட்டன் (Charleston) துறைமுகத்திற்குள் அடங்கியிருந்த சம்டர்கோட்டை ஐக்கிய அமெரிக்காவிற்குச் சொந்தமானது. அதன் கதி என்னவாகும் என்ற வினாவிற்கு இவர் பதில் கொடுக்க வேண்டியவரானார். போரா? சமாதானமா? என்பதே இதன் விடை என்பதும் தெளிவாயிற்று. தென் கரோலினா இக்கோட்டையை அதனிடம் ஒப்படைக்குமாறு கோரியது. அதனுடன் நில்லாமல் கோட்டைக்கு வந்த தளவாடங்களையும் அது தடுத்து நிறுத்தியது. சம்டர் கோட்டையை எவ்விலை கொடுத்தாயினும் காப்பது என்று இவர் முடிவு செய்தார்; அதன்படி கி.பி. 1861 ஏப்பிரல் 8-ஆம் நாள் சம்டர் கோட்டையைக் காக்கத் துணைப்படையொன்றை அனுப்பினார்.

சார்லசுட்டன் துறைமுகத்தில் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்குமாயின், அது தென்கரோலினா கூட்டாட்சிப் படைகளின் கோட்டையைத் தாக்கிய தற்கொப்பாகும் என்பது இவர்தம் கணிப்பு. அமெரிக்க ஐக்கியத்தைக் காப்பது என்று திட்டமிட்டார் இவர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் படைவீரர்களுக்குப் போரில் இறங்கவேண்டிய அச்சம் இருக்காது என்றும் இவர் நம்பினார். ஆனால், சம்டர் கோட்டையைத் தாக்கிய தென்மாநிலப் படைகள் போரைத் தொடங்கின.

சம்டர் கோட்டையை கி.பி. 1861-ஆம் ஆண்டு ஏப்பிரல் 14-ஆம் நாள் தென்மாநிலத்தவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அடுத்த நாள் இலிங்கன் 75,000 தொண்டர்கள் மூன்று மாதங்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமெனக் கட்டளையிட்டார். சில நாட்களுக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பற்படையினைப் பிரிந்துபோகும் மாநிலங்களின் கடற்கரையை முற்றுகையிடும்படி இவர் ஆணையிட்டார். நிலையான படைகளின் எண்ணிக்கையையும் இவர் பெருக்கிக்கொண்டார். மேலும் மூன்றாண்டுகள் இராணுவத் தொண்டு செய்ய மேலும் 42,000 வீரர்களைத் திரட்டினார்.

படைகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் அதிகாரம் அரசியலமைப்புப்படி காங்கிரசுக்கு இருந்ததேயன்றிக் குடியரசுத் தலைவருக்கு இல்லை. இதை இலிங்கன் நன்கு அறிந்திருந்தார். ஆனால் அடுத்துக் கூடிய காங்கிரசு இவர் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்து ஏற்றுக்கொண்டது. தாம் எடுக்கும் நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பானவை என்பதையும் இவர் உணர்ந்திருந்தார். எனினும் நாட்டின் ஐக்கியத்தைத் காப்பது அரசியலமைப்புத் திட்டத்தின் கோட்பாடுகளைக் காப்பதை விட முக்கியமானது என்று இவர் எண்ணினார்.

அடிமை முறையை ஆதரித்த 15 மாநிலங்களுள் 8 பிரிந்து போகாமல் இருந்த நிலையில் அமெரிக்காவின் ஐக்கியத்தைக் காப்பது கடமை என்று கி.பி. 1861-ஏப்பிரலில் இவர் மேலும் படைவீரர்களைத் திரட்டினார். இந்நிலையில் பிரிந்துபோகாதிருந்த எட்டு மாநிலங்கள் ஐக்கியத்திற்காகப் போராடுவதா, ஏற்கனவே பிரிந்துபோயிருந்த ஏழு மாநிலங்களுடன் இணைந்துவிடுவதா என்னும் சிக்கலை இவருடைய படை திரட்டும் முயற்சி தோற்றுவித்தது. வர்சீனியா, அர்க்கன்சா, வடகரோலினா, தென்னசி என்னும் நான்கு மாநிலங்கள் அடிமை முறையை ஆதரித்த ஏழு மாநிலங்களுடன் இணைவதென முடிவு செய்தன. மேரிலாந்து, தெலாவர், கெண்டகி, மிசூரி ஆகிய எஞ்சிய நான்கு மாநிலங்கள் ஐக்கியத்துடன் இணைவது என்று முடிவு செய்தன.

இசுடீபன் ஏ. தக்லசு கி.பி. 1861-ஆம் ஆண்டு சூன் மாதம் 3-ஆம் நாள் காலமானார். போர் மூண்டிருந்த நிலையில் தக்லசு அமெரிக்க ஐக்கியத்தைப் பாதுகாப்பது இன்றியமையாத கடமையெனக் கொண்டு இலிங்கனுக்கு ஆதரவு நல்கினார். தேசபக்தர்களா? தேசத்துரோகிகளா? என்பதே ஆராயத்தக்கது; கட்சிகளன்று என்பது அவருடைய திண்ணமான கருத்து. தக்லசு மக்களாட்சிக் கட்சியின் தலைவர்; பொதுமக்களால் கவரப்பட்டவர். அத்தகைய தலைவர் காலமானது ஐக்கியத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அடிமை முறை ஒழிப்பு: அமெரிக்காவின் ஒருமையைக் காக்க மாநிலங்களுக்கிடையே போர் மூண்டது. அடிமை முறையை ஒழிப்பதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டால், அமெரிக்காவின் ஒருமையைக் காக்கும் கருத்துக்குப் பேராதரவு கிட்டும் என்ற சூழல் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோது தெளிவாயிற்று. அப்படியாயின் அடிமை முறையை ஒழிப்பதற்குப் போர்க்கால அதிகாரங்களைப் பயன்படுத்துவதென்று இலிங்கன் முடிவு செய்தார்.

தென்மாநிலப் படைகள் கி.பி. 1862-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேரிலாந்தின்மீது படையெடுத்தபோது, சார்ப்சுபர்க்கு என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் அவை விரட்டியடிக்கப்பட்டன. இவ்வெற்றி பெற்ற ஐந்து நாள்களுக்குப் பின்னர், அமெரிக்க ஒருமைக்கு எதிராகக் கலகம் செய்யும் அடிமை முறையை ஆதரிக்கும் தென்மாநிலங்களில் வாழும் அடிமைகளும் கி.பி. 1863-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாள் சுதந்திரம் பெறுவர் என்று குடியரசுத் தலைவர் அறிவித்தார். அமெரிக்க ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த எல்லைப்புற மாநிலங்களில் வாழும் அடிமைகளை இந்நடவடிக்கை விடுதலையாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேரிலாந்து, மிசூரி போன்ற மாநிலங்களில் வாழ்ந்த அடிமைகள் அடிமைகள் ஒழிப்புச் சட்டம் வரும்வரை காத்திருக்க வேண்டியவர்களாயினர். தெலாவர், கெண்டகி மேற்கு வர்சீனியா போன்ற மாநிலங்களில் வாழ்ந்த அடிமைகள்13-ஆம் அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேறும்வரை காத்திருந்தார்கள். இத்திருத்தம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அடிமை ஒழிப்பை ஏற்றுக்கொண்டது. இது கி.பி. 1865-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.

அடிமை ஒழிப்புப் பற்றிய தம் அறிக்கையை இலிங்கன் உரிய காலத்தில் எச்சரிக்கையாக வெளியிட்டார். இவ்வறிக்கையை வெளியிடும் முன் இவர் படைத்தலைவர்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் அவசரப்படக்கூடும் என்னும் காரணத்தாலேயே இவர் இப்பணியை அவர்களிடம் ஒப்படைக்கவில்லை. தம்மை மீறி அடிமை ஒழிப்பு ஆணைகளைப் பிறப்பித்த இரு படைத்தலைவர்களின் ஆணையை இவர் தள்ளுபடி செய்துவிட்டார்.

குடியரசுத் தலைவரின் இந்த நடவடிக்கைகளைக் கண்டு அடிமை ஒழிப்பு ஆதரவாளர்கள் சினம் கொண்டனர். அடிமையொழிப்பு ஆதரவாளர்களை மகிழ்விக்க எண்ணினால் அடிமைகளைக் கொண்டுள்ள எல்லைப்புற மாநிலங்களைப் பகைத்துக்கொள்ள வேண்டிவரும்; அவை அமெரிக்க ஐக்யத்தை நம்பியவை. அவர்களின் ஆதரவு அமெரிக்க ஐக்கியத்திற்குப் பெரிதும் தேவைப்பட்டது. அதற்கு மாறாக அடிமைகளைக் கொண்டுள்ள எல்லைப்புற மாநிலங்களை மகிழ்விக்க எண்ணிணால்,அடிமையொழிப்பு ஆதரவாளர்களைப் பகைத்துக்கொள்ளும் சூழ்நிலை தோன்றக்கூடும். அமெரிக்காவின் ஒருமையைக் காத்துப் போரை வெல்லவேண்டுமாயின் அவர்ளின் ஒத்துழைப்பு மிகத் தேவை என்பதையும் தெளிவாக உணர்ந்திருந்த இலிங்கன் தம் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தி இரு குழுவினரையும் மகிழ்விக்க விரும்பினார்.

புதிய சட்டங்கள்: இலிங்கனின் நிருவாகத்தின் போது பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை போர் தொடர்பானவையல்ல. அச்சட்டங்களுள் சில இன்றும் நடைமுறையிலுள்ளன.

நாணயச் செலாவணிச் சட்டம் கி.பி. 1862-இல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி காகிதப் பணம் செலாவணிக்கு வந்தது. காகிதப் பணத்தை அமெரிக்காவில் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்ற இயலாது. இக்காகிதப் பணத்தின் மதிப்புக் கூட்டாட்சி அரசின் மதிப்பைப் பொறுத்திருந்தது. போருக்குப் பின்னர்க் காகிதப் பணம் பெரும் அரசியல் கொந்தளிப்புக்கு அடிகோலியது.

மனையகச் சட்டம் கி.பி. 1862-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இதன்படி ஐந்து ஆண்டுகள் பொது நிலத்தில் குடியேறி அங்கு நிலையாக வாழ்ந்து அதனை உருப்படியாக வளர்த்து முன்னேற்றம் செய்திருந்தால் அவர் 160 ஏக்கர் வரையுள்ள நிலத்தை மனையகத்திற்காக வைத்துக்கொள்ள வழிவகை செய்தது இம்மனையகச் சட்டம் (The Homestead Act). போருக்கு முன்னர் அடிமை முறை நிலவி வந்த மாநிலங்களின் இடையறாத எதிர்ப்பினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் தோல்வியுற்றது. இவ்வாறு குடியேறியவர்கள் அடிமை முறை இல்லாத மாநிலத்தவர்களாக இருந்தமையால், சுதந்திர மாநிலங்கள் மிகுதியாகும் என்ற அச்சத்தால் தென்மாநிலங்கள் இதனை எதிர்த்தன. காங்கிரசிலிருந்து பிரிந்துபோன மாநிலங்கள் அகன்றுவிட்டபடியால், இச்சட்டம் எளிதாக நிறைவேற்றப்பட்டது.

அட்லாண்டிக்குப் பெருங்கடல் முதல் பசிபிக்குப் பெருங்கடல் வரை இருப்புப் பாதை அமைக்கப்படல்: காங்கிரசு கி.பி. 1862-இல் 'யூனியன் பசிபிக்கு இருப்புப்பாதை'(Union Pacific Railroad) என்னும் நிறுவனத்திற்கும் கி.பி. 1864-இல் மத்திய பசிபிக்கு இருப்புப் பாதை நிறுவனத்திற்கும் பட்டயம் வழங்கியதால், கிழக்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடற் கரையிலிருந்து மேற்கில் பசிபிக்குப் பெருங்கடற்கரை வரை இருப்புப்பாதைகள்போடப்பட்டன (1869). கண்டங்கடக்கும் இப்பெரும் இருப்புப் பாதையை அமைக்கப் பொது நிலங்களும் ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டன.

மோரில்நிலமானியச்சட்டம்(கி.பி.1862):பெருமளவு நிலத்தை மேலவையினரின் எண்ணிக்கைக்குத்தக

மானியமாக வழங்கி, வேளாண்மையையும் தொழில் நுட்பக் கலைகளையும் வளர்க்க உதவி செய்தது.

தேசிய வங்கிச் சட்டம் (1863) பிறிதொரு முக்கியச் சட்டமாகும். இதன்படி நாடெங்கும் நம்பிக்கை வாய்ந்த வங்கிகள் உருவாக்கப் பெற்றன. இவ்வங்கிகள் காகிதப்பணத்தைச் செயற்படுத்தின. கூட்டாட்சி அரசின் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. தேசிய வங்கிச் சட்டம் போருக்குத் தேவையான பொருளைத் திரட்ட உதவியது.

போரின்போது இரு புதிய மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவையாவன: (1) மேற்கு வர்சீனியா (2) நெவாடா (Nevada), மேற்கு வர்சீனியா கி.பி. 1863-ஆம் ஆண்டிலும், நெவாடா கி.பி. 1864-ஆம் ஆண்டிலும் ஒன்றியத்துடன் இணைந்தன.

அடிமை ஒழிப்புச் சட்டத்திற்காக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நாலில் மூன்று பங்கு மாநிலங்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இப்புது மாநிலங்கள் அவ்வாறு வாக்களித்தமையால், அரசிலமைப்புத் திருத்தம் கி.பி. 1865-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**இரண்டாம் முறை குடியரசுத் தலைவராக இலிங்கன்:** ஆபிரகாம் இலிங்கன் தென்மாநிலத்தவர்களின்பால் கனிவாகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டிக் குடியரசுக் கட்சியின் 'தீவிரவாதிகள்' குழு இவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது. தென்மாநிலத்தவர்களை நடத்தும் விதத்தைத் தீர்மானிப்பது காங்கிரசுதான், குடியரசுத் தலைவரல்லர் என்பது அவர்கள் கருத்து. எனவே மீண்டும் தேர்தலுக்கு இலிங்கன் நிறுத்தப்பட்டால் இவரை எதிர்ப்பது என்று அத்தீவிரவாதிகள் முடிவுசெய்தனர். ஓகையோ மாநிலத்தைச் சார்ந்த கிளீவ்லாந்து நகரில் 1864-ஆம் ஆண்டு மே 31-இல் நடைபெற்ற மாநாட்டில் மிசூரியைச் சார்ந்த சான் சி.பிரிமாண்ட்டு (John C.Fremont) என்பவரைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனஞ்செய்தனர். கட்சி இவ்வாறு உடையுமாயின் மக்களாட்சிக் கட்சி வெற்றி வாய்ப்பைப் பெற்றுவிடும் என்று கருதிய பிரிமாண்ட்டு தேர்தலிலிருந்து விலகிக் கொண்டார்.

குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு பால்ட்டிமோரில் (Baltimore) கூடி இலிங்கனையே இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தேர்ந்தெடுத்தது. மக்களாட்சிக் கட்சி சார்சு பி. மக்கிளிலான் (George B. McClellan) என்பாரைத் தெரிந்தெடுத்தது. தேர்தல் நடைபெற்ற போது இலிங்கன் வெற்றிபெறுவாரா என்ற ஐயம் நிலவியது. போரைப் பலர் வெறுத்தனர். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைகள் போரில் பல குறிப்பிடத்தகுந்த வெற்றிகளை இத்தருணத்தில் பெற்றமையால் இலிங்கனின் புகழ் ஓங்கியது. போர் விரைவில் முற்றுப்பெறும் என்று மக்கள் நம்பினர். தேர்தலில் இலிங்கன் 212 தேர்தல் வாக்குகளைப் பெற்று இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எதிர்த்த மக்கிளிலான் வெறும் 21 தேர்தல்வாக்குகளே பெற்றுப் படுதோல்வியுற்றார்.

**போரினால் ஏற்பட்ட தொல்லைகள்:** குடியரசுத் தலைவராக இலிங்கன் பணியாற்றிய காலத்தில் இவர் போரில் ஈடுபடும் பெரும் பணியில் இருந்தார். போர் புரிந்து பழக்கப்படாத பண்ணையாட்கள், தொழிற்சாலைப் பணியாட்கள் போன்றவர்களுக்குப் போர்ப்பயிற்சி கொடுத்துத் துப்பாக்கிகள், தளவாடங்கள் போன்றவற்றைத் தவறாமல் பயன்படுத்தச் செய்யவேண்டும். தொல்லைகள் நிறைந்த இக்கால கட்டத்தில் வட பகுதியின் ஒற்றுமையையும் சீர்குலையாமல் காக்கவேண்டும். ஏனெனில், சில வேளைகளில் ஐக்கியப் படைகள் தோல்வியையும் கண்டன.

தமக்கு உறுதுணையாக நின்ற பெருமக்களுடன் சச்சரவிட்டுக் கொள்ளாமல் அமைதியான முறையை இலிங்கன் கைக்கொள்ள வேண்டியவரானார். அமைச்சரவையிலிருந்த உறுப்பினர்கள் தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டவர்களாயிருந்தனர். போர்த்துறை துரோகம் செய்வதையறிந்து இலிங்கன் அத்துறையின் அமைச்சரை மாற்றியமைத்தார். இசுடாண்டன் என்னும் பெயர் கொண்ட அவ்வமைச்சர் நேர்மையாக நடந்து கொண்டார்.

போரினால் ஏற்பட்ட சாவுகளையும் அழிவுகளையும் கண்டு இவர் கலங்கினார். கெட்டிசுபர்குக் கல்லறையை நாட்டுக்கு உரிமைப்படுத்தியபோது, இலிங்கன் இரண்டு மணித்துளி நேரம் பேசினார். இவ்வுரை 'கெட்டிசுபர்குப் பேருரை' (Gettysburg Address) எனப்படும். இது அமெரிக்க வரலாற்றில் சிறப்பிடம்பெற்ற பேருரையாகும் (கி.பி.1863 நவம்பர் 19-ஆம் நாள்).

இலிங்கனின் மிகப் பெரிய தொல்லை இராணுவம் பற்றியதாகும். அமெரிக்க ஐக்கியத்தின் சார்பாகப் போராடிய படைத்தலைவர்களைவிடத் தென்மாநிலப் படைத்தலைவர்கள் திறமையானவர்களாய் இருந்தனர். படைத்தலைவர்கள் நியமிக்கப்பட்டா

லும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. இறுதியாக கி.பி. 1864 மார்ச்சு மாதத்தில் யுலிசசு எசு. கிராண்ட்டு (Ulysses S. Grant) என்பாரை ஐக்கியப் படைகள் அனைத்தின் படைத்தலைவராக இலிங்கன் நியமித்தார். அவர் வெற்றிபெற்றார். தென் மாநிலப் படைகள் தோற்கத் தொடங்கின.

போரின் முடிவு: ஆபிரகாம் இலிங்கன் கி.பி. 1865-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் குடியரசுத் தலைவராக இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவிப்பொறுப்பை ஏற்றபோது, உள்நாட்டுப் போர் முடியும் தறுவாயில் இருந்தது. ஒருமைக்காகப் பாடுபட்ட மக்களின் பெரும் எண்ணிக்கையும், பெருமளவில் கிடைத்த படைத்தளவாடங்களும் போரின் வெற்றிக்குக் காரணமாயின. கிராண்ட்டு, செருமன் (Sherman), செரிடன் (Sheridan) போன்றவர்கள் விழுமிய படைத்தலைவர்கள். தென்மாநிலப் படைத் தலைவர்களை விட இவர்கள் வல்லவர்களாயிருந்தனர். இரண்டாம் முறை குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது இலிங்கன் ஆற்றிய உரையின் இறுதிச் சொற்கள் உலகப் புகழ் படைத்தவை. இலிங்கன் தம் இறுதிச் சொற்களைப் பேசி முடித்த போது போரும் பெரும்பாலும் முடிவுக்கு வந்திருந்தது. இவர் அமைதிக்கான திட்டங்களைத் தீட்டி வந்தார். மீண்டும் தென் மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைய வேண்டுமென விரும்பிய இலிங்கன் அவற்றை இணையுமாறு வரவேற்றார். போரினால் ஏற்பட்ட மனக்கசப்பை மறந்துவிடும்படியும் இவர் வேண்டினார்.

தென் மாநிலங்களின் படைத்தலைவரான இலீ (Lee) கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9-ஆம் நாள் சரணடைந்தார். அவருக்குப்பின் மற்றவர்களும் சரணடைந்தனர். ஒருவாறாகப் போர் முடிவுற்றது.

இலீ சரணடைந்ததையும், தம் தலைமையின் கீழ் அமெரிக்க நாட்டின் ஒற்றுமை காக்கப்பட்டதையும் இலிங்கன் உயிருடன் இருக்கும்போதே அறிந்து மகிழ்ந்தார். போர்டு கலையரங்கத்தில் நடைபெற்ற நாடகம் ஒன்றைப் பார்க்க இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14-ஆம் நாள் சென்றார். மனநிறைவோடு நாடகத்தைக் கண்டுகளித்திருந்த போது சான் வில்கீசு பூத்து என்னும் கொடியவன் இலிங்கனைச் சுட்டான். காயமுற்ற இலிங்கன் உணர் விழந்து கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ஆம் நாள் உயிர்துறந்தார்.

துணை நூல்கள்:

**Thomas, Benjamin, P.**, Abraham Lincoln, Knopf, 1952.

**McCarthy, Charles H.**, Lincoln's Plan of Reconstruction, AMS Press, 1960.

**Angle, Paul M., A** Shelf of Lincoln Books, Rutgers University Press, 1955.

**இலிங்காயத்துகள்**: வீர சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் இலிங்காயத்துகள் எனச் சொல்லப் படுவர். இவர்கள் கருநாடகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் இலிங்க வழிபாட்டை மேற்கொண்டவர்கள்.

சிவன் கோயில்களில் இலிங்கம் மூன்று பகுதிகள் கொண்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கும். இலிங்கத்தில் பீடம் என்ற அடிப்பகுதி உண்டு. அதற்கு மேல் கோமுகம் என்ற அமைப்புள்ள பகுதி நடுப்பகுதி ஆகும். குழவி என்ற அமைப்புடைய பகுதி மேலே அமைக்கப்பட்டிருக்கும். இம்மூன்று பகுதிகளும் ஒரு சேர அமைந்துள்ள வடிவந் தான் சிவலிங்கம் எனச் சொல்லப்படுகிறது.

குடமுழுக்கு விழாவின் போது எண்வகை மருந்துகளால் செய்யப்பட்ட 'அட்டபந்தனம்' என்ற மருந்துப் பொருளை இலிங்கத்தின் அடிப்பகுதியில் பதியப் பூசுவார்கள். வீர சைவர்கள் அட்டபந்தனம் என்பது எண்வகை முறைகளில் இணையும் அட்டசயிலம் என்ற இணைப்பு முறை என்றும், அது உயிரும் இலிங்கமும் இணைக்கப்பட்டு மறைக்கப்பட வேண்டும் என்ற தத்துவத்தை விளக்குகிறதென்றும் கூறுவர்.

மேலும் வீரசைவர்கள் கோயிலிலுள்ள சிவலிங்கத்தை வழிபடமாட்டார்கள். அவர்கள் வழிபடும் இலிங்கம் அட்டபந்தனத்தால் எல்லாப் பகுதியையும் மூடிக் கொண்டிருக்கும். குழவி வேறு பீடம் வேறு என்று தெரிந்து கொள்ள முடியாத வகையில் அட்டபந்தனத்தை நிறைவு செய்திருப்பார்கள். பார்த்தவுடன் அதை இலிங்கம் என்று தெரிந்து கொள்ள முடியாது. இதனையே வீரசைவர்கள் வழிபடுவார்கள். இலிங்கத்தின் எல்லாப் பகுதியையும் முழுமையாக மூடிக்கொண்டிருக்கும் ஒரு கட்டை போன்ற குண்டலத்தைக் கழுத்தில் அணிந்திருப்பார்கள்.

கோயில்களில் விசேட காலங்களில் எண்வகையான மருந்துகளால் செய்யப்பட்ட அட்டபந்தனம் என்ற கலவையை இரண்டு இடங்களில் இணைப்புக்காக வைப்பார்கள். அவ்விடங்களுள் ஒன்று குழவியும் பீடமும் பொருந்தும் இடம்; மற்றொன்று இலிங்கமும் தரையும் இணைகின்ற இடம்.

பழங்காலத்தில் அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழாய்வு செய்ததின் விளைவாக மிகச் சிறிய இலிங்கங்கள் கிடைத்தன. அந்த இலிங்

கங்களில் அட்டபந்தனம் முழுவதுமாக வைத்து நிறைவு செய்யப் பெற்றிருந்தது. எனவே, வீர சைவர்கள் கழுத்தில் அணிந்து கொள்ளும் இலிங்கங் கள் போலவே அவை உள்ளன. அகழாய்வு அறிஞர் கள் அதை உறுதி செய்துள்ளனர்.

வீரசைவர்கள் சிவலிங்கத்தை ஞானமாகவும் தெய்வமாகவும் நினைந்து வணங்குவார்கள். இவர் கள் சாதி, சமய வேறுபாட்டை எதிர்ப்பவர்கள்; மாற்றான் மனைவி, செல்வம் ஆகியவற்றின் மீது ஆசை கொள்ளாதவர்கள்; பிற உயிருக்குத் தீங்கு செய்யக் கூடாது என நினைப்பவர்கள்; மற்றவர்களு டன் உடன் பிறப்பு நேயத்துடன் பழகுந் தன்மை உடையவர்கள். திருடுவதையும் உயிர்ப்பலியிடுவதை யும் அறவே வெறுப்பவர்கள். உலகில் வாழும் எல்லா மக்களிடத்திலும் இரக்க உணர்ச்சி கொண்டவர்க ளாக ஒழுகுபவர்கள். அரப்பா, மொகஞ்சதாரோ அக ழாய்வுகளில் கிடைத்த இலிங்கங்கள் வீரசைவ சம யத்தினர் அணியும் இலிங்கங்களோடு தொடர்புடை யன என்பது தெரிய வருகிறது. மு.மு.

**இலிங்கோற்பவர்** இருபத்தைந்து சிவமூர்த் தங்களுள் ஒருவராய்த் திகழ்பவர். சோழர்களால் கட்டப்பெற்ற சிவன் கோவில்களில் கருவறையினை அடுத்துள்ள உட்சுற்றில் மேற்குப் பக்கத்து அமைக் கப்பட்ட மாடத்தில் இவரது திருவடிவம் அமைக்கப் பட்டுள்ளது. மேற்குப் பக்கத்தில் அமையும் இம்முறை முதலாம் இராசராசன் காலமுதல் மாறியும் வந்துள் ளது. கருவறையினை அடுத்துள்ள உட்சுற்றில் வலம் வரும்பொழுது இம்மூர்த்தியை வழிபடலாம். இவ்வி லிங்கோற்பவரின் இருமருங்கிலும் நான்முகனையும் திருமாலையும் கூப்பிய கரங்களுடன் அமைத்திருப் பார்கள்.

இத் திருவடிவத்தைச் சிற்பிகள் பின்வருமாறு அமைப்பர். முதலில் இலிங்கத்தை உருவாக்கி அதை நான்கு பகுதிகளாகப் பிரித்து, மேலே ஒரு பகுதியும் கீழே ஒருபகுதியும் நீக்கி, நடுவிலுள்ள இரு பகுதி களையும் எடுத்துக் கொள்வார்கள். இலிங்கத்தின் முற்பக்கத்தில் இவ்விரு பங்குகள் உள்ளடங்கக் கூடியவாறு, அண்டவடிவினதாகக் கீறி வகுத்துக் கொள்வார்கள். இலிங்கத்தின் மேற்பக்கத்தினையும் கீழ்ப் பக்கத்தினையும் பிறை போன்று வளைந்திருக் கச் செய்வார்கள். இதன் நடுவே சிவன் திருவுரு வத்தை அமைப்பார்கள். இத்திருவுருவத்திற்கு நான்கு திருக்கரங்களை அமைப்பர். நெற்றியிலிருந்து முழந்தாள் வரையுமுள்ள பகுதி மட்டும் வெளியில் தெரியும்படி அமைத்து, இருகரங்களில் மானும் மழு வும் இருகரங்களில் அபயவரதமும் அமைக்கப்படும்.



இலிங்கோற்பவர்

குண்டலம், ஆரம், கேயூரம், முத்து ஆகிய அணிகலன் களைத் திருவடிவத்தில் அமைப்பார்கள். அதன் வலப் பக்கத்தின்மேல் பறக்கும் நிலையில் அன்னத்தையும், இடப் பக்கத்தின் கீழே நிலத்துள் சாய்ந்த பாவனை யில் பன்றியையும் சித்திரிப்பார்கள். அன்னத்திற்கு மேல் தாழை மடல் கீழே விழுதல் போல் அமைத்த லுமுண்டு. இத்திருவடியைக் குறித்த செய்திகள் ‘ஆலய சிற்ப இரகசியம்’, ‘சிவராத்திரி புராணம்’, ‘இலிங்கபுராணம்’, ‘கந்த புராணம்’, ‘அருணாசல, புராணம்’ ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

யார் பரம்பொருள் என்பது குறித்துத் திரு மாலுக்கும் நான்முகனுக்கும்போட்டி நிகழ்ந்தது. சிவ பெருமான் அவ்விருவருக்குமிடையே அக்கினித் தம்ப மாய் மாறி அமர பக்கச் சதுர்த்தசியில் தோன்றி னார். இத்தம்பத்தின் அடியும் முடியும் அறிந்தவரே பெரியவர் என்று வான் ஒலி (அசரீரி) கூறிற்று. பிர மன் அன்னவடிவு கொண்டு வானில் பறந்து சென் றார். திருமால் பன்றி உருவமெடுத்து நிலத்தை அகழ்ந்து பாதாளம் சென்றார். இருவராலும் அடி முடிகளைக் காண இயலவில்லை. இருவரும் வணங்கி வழிபட்டனர். இச்சிவபெருமான் திருவடிவே இலிங் கோற்பவ வடிவமாகும். இவ்விலிங்கோற்பவரை வழி படுவோர் நல்லுடலையும் நல்லாயுளையும் பெறுவர் எனச் சிவாகம நூல்கள் கூறுகின்றன. சு.சு.

**இலிசுட்டு** (கி.பி. 1811-1886) அங்கேரி நாட்டைச் சேர்ந்த இயலிசைப் புலவராவார். இவர் குழந்தைப் பருவத்திலேயே இசையில் சிறந்து விளங்கினார். இவர் செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று இசை வல்லுநர்களிடம் இசை பயின்றார். இறுதியில் இலிசுட்டு (Liszt) சுவிட்சர்லாந்தில் தங்கினார். இவர் செருமனி நாட்டின் இசைக் கழகத்திற்குச் சில காலம் தலைவராக இருந்தார். அக்காலத்தில் புகழ்பெற்ற இசை வல்லுநர்கள் இவருடைய மாணாக்கர்களாக இருந்தனர். இவர் ஐரோப்பாவெங்கும் சுற்றி இசை நிகழ்ச்சிகள் நடத்தினார். இவர் பியானோ இசைப்பதில் பெரும் புகழ் பெற்றார். இவர் காலத்திற்குப் பின்னர் ஓர் இசைக் கலைஞர் மட்டும் தனித்துப் பியானோ இசை நிகழ்ச்சி நடத்தும் முறை ஏற்பட்டது. இவர்தம் பியானோ இசைப் பாடல்களுள் 'ஆழ்நிலை ஆய்வுகள்' (Transcendental Studies)'அங்கேரியன் நாட்டுப்பாடல்கள்' (Hungarian Rhapsodies) போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றைத் தவிர இலிசுட்டுபல இசைக்கருவிக் குழுப் பாடல்களையும் இசைப்பாடல்களையும் இயற்றி இசையமைத்துள்ளார். இறுதிக்காலத்தில் இவர் இயற்றிய இசைப் பாடல் ஒத்திசை முறையில் அமைந்திருந்தன.

**இலிடா** கிரேக்கப் புராணங்களில் கூறப்படும் தலைவி. இவள் தந்தை எயிடோலியா(Aetolia) வின் அரசர் திசுடியசு (Thsetius). இலிடா (Leda) தைண்டாரியசு (Tyndareus) என்பவனை மணந்தாள். சியூசு (Zeus) என்ற கடவுள் ஒரு நாள் அன்னத்தின் வடிவம் கொண்டு இவள் முன் தோன்றி இவளோடு கூடியமையால் இவள் தியோசுகுரி, (Dioscuri) எலன் (Helen) என்ற இருவரை ஈன்றெடுத்தாள். இலிடாவிற்குப் போலக்சு (Pollux), எலன் ஆகிய இருவரும் சியசு மூலம் பிறந்தவர்கள் என்றும், கேசுடர், கிளைடெம்னசுட்ரா (Clytemnestra) என்ற இருவரும் தைண்டாரியசு மூலம் பிறந்தவர்கள் என்றும் ஒரு மரபுக்கதை வழங்கிவருகிறது.

**இலிண்டன், இரால்பு** (கி.பி. 1893-1953) அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலாராவர். இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மானிடவியல் துறையின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களுள் இவரும் ஒருவர். இரால்பு இலிண்டன் (Ralph Linton) கி.பி. 1893-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 27-ஆம் நாள் பிலடெல்பியாவில் (Philadelphia) பிறந்தார். இவர் பென்சில்வேனியாவில் இசுவார்த்மோர் (Swarthmore) கல்லூரியில் இளம்பட்டப்படிப்பையும், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1916-ஆம் ஆண்டு தொல்லியல் முதுகலைப்பட்டத்தையும், ஆர்வர்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் 1925-ஆம் ஆண்டு டாக்டர் பட்டத்தையும் பெற்றார். டாக்டர் பட்டம் பெறும்போது தலைசிறந்த மானிடவியல் வல்லுநர்களுள் ஒருவரான பிரான்சு போவாசு (Franz Boas) என்பவரின் தொடர்பினை இவர் பெற்றார். அவரோடு கொண்ட தொடர்பிற்குப் பிறகு சமகாலத்திய பண்பாடுகளை அறிவதில் இவர் ஆர்வம் செலுத்தினார். இவர் 1922-ஆம் ஆண்டு சிகாகோவிலுள்ள இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் வட அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய சேகரிப்புகளுக்கு உதவிக் காப்பாட்சியராகப் பொறுப்பேற்றார். இதன் பின்னர் விசுகான்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்குப் பணியாற்றும்போது இவர் எழுதிய 'மனிதனைப் பற்றிய ஆய்வு' (The Study of Man, 1936) என்னும் நூல் சமூகவியல், உளவியல், உயிரியல், வரலாற்றியல் ஆகிய நான்கு துறைகளில் புதிய கொள்கைகளை ஒருங்கிணைத்து மனிதனைப் பற்றிய அறிவியலுக்குப் புதிய அணுகுமுறையை உருவாக்கியது. இவரது படைப்புகளுள் இதுவே தலையாயது. இதனையடுத்து இவர்தம் ஆய்வுகள் சமுதாயத்தின் அமைப்பினைத் 'தகுதி' (Status), 'செயற்பாங்கு' (Role) என்னும் கோட்பாடுகளோடு ஒவ்வொரு தனிமனிதனையும் சமுதாயத்தையும் முழுவதுமாக இணைத்து ஆராய ஓர் அணுகுமுறையை உருவாக்கின.

இவரது மற்றுமொரு சிறந்த வெளியீடு 'பண்பாட்டின் வளர்ச்சி'யாகும்(The Tree of Culture-1955). இவரது மறைவுக்குப்பின் வந்த இவ்வெளியீடு, ஒவ்வோர் உயிரியையும் அது சமூகத்தில் கொண்டுள்ள நடத்தைகளையும் பிணைப்பினையும், உயிரியல்சார் அடிப்படையில், மனிதன் உயர் பாலூட்டிகள் (Primates) ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி விளக்குகிறது. இவர்தம் வெளியீடுகளுள் முதன்மையானது 'தனலா: மடகாசுகர் மலைவாழ் பழங்குடி' (The Tanala: A Hill Tribe of Madagaskar, 1933), 'ஏழு அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடையே பண்பாட்டுப்பேறு' (Accultaration in Seven American Indian Tribes,1940), 'ஆளுமையின் பண்பாட்டுப் பின்னணி' (The Cultural Background of Personality, 1945) ஆகியவையாகும். இவர் 1953-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 24-ஆம் நாள் காலமானார்.

**இலிண்டுமன், எட்வர்டு** (கி.பி. 1885-1953) அமெரிக்க ஐக்கிய நாட்டில்இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தத்துவஅறிஞராகவும் சமூகச்சீர்திருத்தக்காரராகவும் சமூகப்பணியின் முன்னோடியாகவும் விளங்கியவர்களுள் ஒருவராவார். எளிய குடும்

பத்தில் பிறந்த இவர் ஒகையோவிலிருந்த (Ohio) ஒரு குடியானவரிடம் பணி செய்து வந்தார். அக் குடியானவர் இலிண்டுமன் (Lindmann) கல்வி கற்ப தற்கு ஊக்கமளித்தார். இவர் தம்முடைய சொந்த முயற்சியால் கல்லூரிப் படிப்புக்குத் தகுதியானவரா னார். பின்னர், மிச்சிகன் வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்து வேளாண்மைத் துறையில் பட்டம் பெற் றார். பிறகு மிச்சிகன் வேளாண்மைக் கல்லூரியின் விரிவாக்கத் திட்டத்தின் இயக்குநராகவும், சிகாகோ விலுள்ள சியார்சு வில்லியம் கல்லூரியில் ஊரகச் சமூகவியல் பயிற்சியாளராகவும், 1920-ஆம் ஆண்டில் வட கரோலினாப் பெண்கள் கல்லூரியில் பேராசிரிய ராகவும் பணியாற்றினார். இவர் கால இதழ்களுக் குக் கட்டுரைகள் எழுதினார்; கல்லூரிகளில் பல சொற்பொழிவுகளும் ஆற்றினார்.

மேரி பார்க்கர் போலெத்து (Mary Parker Follett) என்பவருடன் இவருக்குக் கிடைத்த தொடர்பு கார ணமாகச் 'சமூகக் கண்டுபிடிப்பு: செயல் முறைக் குழுக்களை ஆய்வு செய்யும் முறை' என்ற நூலை எழுதினார். இவர் 1924-இல் நியூயார்க்குச் சமூகப் பணிக் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்து தம் ஓய்வுக்காலம் வரை அங்குப் பணியாற்றினார். தம் ஓய்வுக் காலத்திற்குப் பிறகு பல்வேறு பல்கலைக் கழ கங்களிலும் சமூக ஆய்வுக்கூடங்களிலும் இவர் விரி வுரையாற்றினார்.

இவர் முதியோர் கல்வி, முன்னேற்றக் கல்வி, வீட்டு வசதி, குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்து வதை ஒழித்தல், சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய பலவற்றிற்குப் பாடுபட்டார். சமூகப்பணித் தத்துவம், சமூகக் கல்வி, சொத்தும் பண்பாடும் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**இலி, திரிக்வி ஆல்வ்தன் (கி.பி. 1896-1968)** நார்வே நாட்டைச் சார்ந்த அரசியலறிஞர்; ஐ.நா. வின் முதல் பொதுச் செயலாளராகப் பணியாற்றி யவர். இவர் ஆசுலோவில் (Oslo) கி.பி. 1896-ஆம் ஆண்டு பிறந்தார். நாடாளுமன்ற உறுப்பினராவ தற்கு முன் வழக்குரைஞராக விளங்கினார். இவர் சமதரும மக்களாட்சிக் கட்சியைச் (Social Democrat) சார்ந்தவர். இவர் 1935 முதல் 1939 வரை நார்வே அரசின் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். பின் னர், 1939-40-ஆம் ஆண்டில் வணிக வளர்ச்சி அமைச் சராகவும் 1940 முதல் 1945 வரை நார்வே அரசின் சார்பாக இலண்டனில் வெளியுறவு அமைச்சராகவும் பணியாற்றினார். இப்பொறுப்பில் இவர் பெற்ற அனுபவமே இவர் ஐ.நா. அவையின் பொதுச் செய லாளர் பதவி ஏற்றபோது இவருக்கு உறுதுணையாய் அமைந்தது. இப்பதவியை இலி (Lie, Trygve Halvdan) 1946-ஆம் ஆண்டு சனவரி மாதம் 29-ஆம் நாள் பெற்றார். அப்போது ஐ.நா. பொது அவைக்கூட் டம் இலண்டன் வெசுட்டுமினிசுட்டரில் (Westminster) கூடியது. இவருடைய பணியாற்றும் செயல் திறமை யைக் கண்ட உறுப்பினர்கள், இவரை இரண்டாம் முறையாகவும் 1950-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தனர். இவ ரும் அதனை ஏற்றுக்கொண்டார். உலக அமைதிக் காக இருபதாண்டுத் திட்டமொன்றையும் அப்போது இவர் அவையின் முன் வைத்தார். மூன்று வாரங் களுக்குப் பிறகு, தென் கொரியாவின் மீது வட கொரியா தாக்குதல் நடத்தியதையொட்டி, வட கொரியாவின் மீது பன்னாட்டு நாடுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஐ.நா.உறுப்பினர்களால் இவர் வற்புறுத்தப்பட்டார். அப்போது சோவியத்து ஒன்றியம் பாதுகாப்பு அவையைப் புறக்கணித்து வந் தது. அதன் விளைவாகப் பொதுவுடைமைக் கருத்து களின் அடிப்படையில் உருவாகியிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை இலி இழக்க வேண்டியவரானார். இவர் 1952-ஆம் ஆண்டு நவம் பர் மாதத்தில் பதவி விலகப் போவதாக அறிவித் தார். ஐந்து மாதங்களுக்குப் பின்னர், தாக் ஆமர் சோல்டு (Dag Hammarshold) என்பார் ஐ.நா.வின் பொதுச் செயலாளரானார். நார்வே திரும்பிய இலி அந்நாட்டின் அரசியலில் பங்கு கொண்டார். இவர் 1963-64-இல் தொழில் அமைச்சராகவும், 1964-68 -இல் கடல் கடந்த வாணிகத் துறை அமைச்சராக வும் பதவி வகித்தார். இவர் 1968-ஆம் ஆண்டு திசம் பர் 30-ஆம் நாள் நடு தென் நார்வேயிலுள்ள கியிலோ (Geilo) என்னும் ஊரில் காலமானார்.

**இலிதுவேனியா** பால்டிக்குக் கடலின் கிழக் குக் கடற்கரையில் அமைந்துள்ள ஐரோப்பிய நிலப் பகுதியாகும். இந்நாடு 1918 முதல் 1940 வரை சுதந் தர நாடாக இருந்தது. பின்னர்ச் சோவியத்து உருசி யாவினால் கைப்பற்றப்பட்டது. இன்று இது சோவி யத்து உருசியாவின் பதினைந்து குடியரசுகளுள் ஒன்றாக இலிதுவேனியச் சோவியத்துச் சமதருமக் குடி யரசு என்னும் பெயரில் வழங்குகிறது. எனினும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இன்னும் சில நாடு களும் இலிதுவேனியாவைத் தனிநாடெனவே கருதி வருகின்றன.

எல்லைகள்: இலிதுவேனியாவின் மேற்கில் பால் டிக்குக் கடலும், வடக்கில் இலாட்வியாவும் போலந் தும், தென்மேற்கில் உருசியக் குடியரசுகளுள் ஒன் றான உருசிய சோவியத்துக் கூட்டாட்சிச் சமதருமக் குடியரசும் (Russian Soviet Federal Socialist Repu




இலிதுவேனியா

blic - RSFSR), கிழக்கிலும் தெற்கிலும் பைலோருசியாவும் இதன் எல்லைகளாகும். வில்னா என்னும் வில்னியசு இலிதுவேனியாவின் தலைநகராகும்.

பரப்பு: இலிதுவேனியாவின் பரப்பு 65,200 ச.கி.மீ. ஆகும்.

மக்கள்தொகை: இக்குடியரசின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 31,66,000 ஆகும்.

மக்கள்: இலிதுவேனியாவின் மக்களுள் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் இலிதுவேனியர்களாவர். இவர்கள் தனித்ததொரு தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள்; இவர்களுக்கென்றமைந்த பழக்கவழக்கங்களும் மொழியும் இன்றும் வழக்கிலுள்ளன. ஏறத்தாழ 9 விழுக்காட்டினர் உருசியர்கள். போலந்து மக்களும் பெருமளவில் உள்ளனர். ஒரு விழுக்காட்டினர் யூதர்கள். இரண்டாம் உலகப் பெரும்போருக்கு முன்னர் இங்கு ஏறத்தாழ 8 விழுக்காட்டு யூதர்கள் இருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் போரின்போது செருமானிய நாசிகளால் கொல்லப்பட்டனர்.

பெரும்பாலான இலிதுவேனியர்கள் கத்தோலிக்கக் கிறித்தவர்கள். சிறுபான்மையினர் உலூதரின் திருச்சபையைச் சார்ந்த மறுப்புரையாளர்கள் (Protestants). இன்றுள்ள பொதுவுடைமை அரசு சமயவிருப்பு வெறுப்பற்றது.

நாட்டுப்புறச் சமூக அமைப்பைக் கொண்டிருந்த இலிதுவேனியா உருசியாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபின்னர், தொழில்மயமாகி வருகிறது. நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. சிறு பண்ணைகளுக்கு மாறாக அரசு மயமாக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்று மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேருக்கு மேல் நகரப் புறங்களில் வாழ்கிறார்கள். உருசியர்கள் பலர் இக்காலத்தில் இலிதுவேனியாவில் குடியேறிப் பெரும்பதவிகளை வகித்து, இதன் தலைவிதியைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

நிலம்: இலிதுவேனியாவின் தென்கிழக்கு, உயரம் மிகுந்த பகுதி. நடுத் தாழ்நிலங்களில் நிலம் சரிந்து மேற்கில் உயருகிறது. கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் மணற்குன்றுகள் உள்ளன. அவை மக்கள் வாழுமிடங்களாகவும் உருமாறி வருகின்றன.

இக்குடியரசில் ஏறத்தாழ 3000 சிறு ஏரிகளும் நூற்றுக் கணக்கான ஆறுகளும் உள்ளன. ஏரிகள் இலிதுவேனியாவில் $1\frac{1}{2}$ விழுக்காடு பரப்புடையன. நீமன் என்னும் ஆறு இக்குடியரசின் மிக்க நீளமான ஆறாகும். இந்த ஆறு பைலோருசியாவில் தொடங்கி, தென்கிழக்கில் பாய்ந்து இலிதுவேனியாவுக்குப் பெரிதும் பயன்பட்டுப் பால்டிக்குக் கடலில் கலக்கிறது.

இங்குக் கனிமப்படிவங்கள் குறைவு. களிமண், மணல், மருந்துக்காரை உப்பு, (Gypsum) சுண்ணாம்புக்கல், நிலக்கரி, சுண்ணாம்புப்பாறைவகை (Dolomite) போன்ற இயற்கைச் செல்வங்களைக் கொண்டுள்ளது. காடுகள் இந்நாட்டின் கால்பங்கு நிலத்தைக் கொண்டுள்ளன. மேற்கு இலிதுவேனியாவில் சிறிதளவு பெட்ரோல் கிடைக்கிறது.

தட்பவெப்பம்: சனவரி இலிதுவேனியாவில் மிகக் குளிரான மாதமாகும்; சூலை வெப்பம் மிகுந்த மாதமாகும். ஆண்டொன்றுக்கு இந்நாட்டில் 53 செ.மீ. முதல் 86 செ.மீ. வரை மழை பொழிகிறது.

பொருளாதாரம்: இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னர்ச் சோவியத்து அரசு பல தொழிற்சாலைகளைக் கட்டி இதன் பொருளாதாரத்தை உயர்த்த முயன்று வருகிறது. இலிதுவேனியாவில் 1940க்கு முன்னர், தொழிற்சாலைகள் மிகக் குறைவு. இன்று பொருளாதார வருவாயில் மூன்றிலிரண்டு பங்கு தொழிற்சாலைகளால் பெறப்படுகிறது. இன்று அனைத்துத் தொழிற்சாலைகளையும் அரசு ஏற்று

நடத்துகிறது. அதனால், மக்களின் வருவாய் மிகுதியாக உயர்ந்துள்ளது.

இரசாயனப் பொருள்கள், கட்டுமானக் கருவிகள், மின்சாரச் சாதனங்கள், உணவு பதப்படுத்துதல், இயந்திர உற்பத்தி, உலோகப் பணிகள் போன்றவை இலிதுவேனியத் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

இலிதுவேனிய வேளாண்மையில் பால்பண்ணைப் பொருள்களும் இறைச்சி உற்பத்தியும் குறிப்பிடத் தக்கவையாகும். இலிதுவேனியப் பொருளாதாரத்தில் காற்பங்கு வருவாய் வேளாண்மையால் வருகிறது. பண்ணைநிலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமானவை.

வரலாறு: தொன்று தொட்டே இலிதுவேனியாவில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். உரோமானிய வரலாற்று அறிஞரான தாசிடசு (Tacitus) என்பார் கி.பி. 100-ஆம் ஆண்டு அளவில் பால்டிக்குக் கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்களை முதன் முதலாக சுட்டிக் காட்டியுள்ளார். இலிதுவேனிய மக்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினிறுதியில் ஒரு நாட்டினமாக இணைந்தார்கள். அரசரான மிண்டாகாசு (Mindaugas) கி.பி. 1251-இல் இலிதுவேனியர்களின் முதல் மாமன்னர் ஆனார். அவரைப் பிரபுக்கள் கி.பி. 1263-இல் கொன்றுவிட்டனர்.

தியூடானிய வீரர்கள் என்னும் செருமானியக் குழு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இலிதுவேனியாவைக் கைப்பற்றும் நோககுடன் முயன்றபோது, இலிதுவேனிய மக்கள் அவர்களை எதிர்த்தனர். இந்நாடு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அதன் எல்லைகளை விரிவாக்கிக் கொண்டது. அதன் எல்லை கிழக்கில் மாசுகோ நகருக்கு அண்மைவரையிலும், தெற்கில் பால்டிக்குக் கடல்வரையிலும் பரவிற்று.

இலிதுவேனியரான சோகைலா (Jogaila) என்பார் கி.பி. 1386-இல் இலிதுவேனியாவைப் போலந்து நாட்டுடன் இணைத்தார். தொடக்கத்தில் இவ்விரு சுதந்தர நாடுகளின் கூட்டிணைப்பாயிருந்த இது, கி.பி. 1569-இல் ஒன்றாக இணைந்து ஒரே நாடாயிற்று. எனினும், இலிதுவேனியா-போலந்து அரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிதைந்தது. இலிதுவேனியா கி.பி. 1795-இல் உருசியாவின் சார் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டது. உருசிய ஆட்சியை கி.பி.1831-இலும் அடுத்து கி.பி.1863-இலும் எதிர்த்து, இந்நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்து கலகம் விளைவித்தனர். எனினும், அவர்களால் சுதந்தரம் பெற முடியவில்லை. சார் மன்னர் இலிதுவேனியாவில் உருசியாவின் செல்வாக்கை வளர்க்கப் பெரிதும் முயன்றார். இலிதுவேனிய மொழியில் அச்சிடப் பெற்ற நூல்களைத் தடைசெய்யும்படியும் இலிதுவேனியப் பள்ளிகளை மூடும்படியும் சார் அரசர் ஆணைகள் பிறப்பித்தார். எனினும், இலிதுவேனிய மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி புகட்டித் தம் தேசியப் பண்பாட்டை வளர்த்தனர். இக்காலத்திலும் அதற்குப் பின்னரும் பல இலிதுவேனியர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.

இலிதுவேனியா விடுதலை இயக்கம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்டது



இலிதுவேனியா-தலைநகர் வில்னியசு

இலிதுவேனிய மக்களால் 1905-ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாநாட்டில், உருசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தன்னாட்சிக் கோரிக்கையை வெளியிட்ட னர். உருசியர்கள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டனர். முதல் உலகப் பெரும் போரின்போது செருமானியப் படைகள் இலிதுவேனியாவைக் கைப் பற்றிக் கொண்டன. உருசியா, செருமனி ஆகிய நாடுகளின் பிடியிலிருந்து 1918-ஆம் ஆண்டு பிப்பிர வரி மாதம் 16-ஆம் நாள் விடுவித்துக் கொண்ட முதல் பால்டிக்குக் கடல் நாடு இலிதுவேனியாதான். இலிதுவேனியாவில் மக்களாட்சி அரசு மலர்ந்தது. இவ்வரசு நிலச் சீர்திருத்தத்தைக் கொணர்ந்து. பெரும் பண்ணைகளைப் பிரித்து, நிலமற்ற ஏழை, களுக்குப் பகிர்ந்து கொடுத்தது. இவ்வரசு கல்லூரி களையும் பல்கலைக் கழகத்தையும் நிறுவியது.

முதல் உலகப் பெரும்போர் முடிந்த பின்னரும் இலிதுவேனியாவில் போர் தொடர்ந்தது. உருசியா இந்நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்தது. ஆனால், இலிதுவேனியர்கள் உருசியரைத் தோற்கடித்தார்கள். இருநாடுகளுக்குமிடையே 1920-ஆம் ஆண்டில் அமைதி உடன்படிக்கையொன்று கையெழுத்தாயிற்று. இலிது வேனியாவின் தலைநகரான வில்னியசு நகரத்தை 1920-இல் போலந்து கைப்பற்றி, 1939-ஆம் ஆண்டு வரை அந்நகரத்தைத் தன் வசம் வைத்திருந்தது.

இலிதுவேனியாவின் ஆட்சியை 1926-ஆம் ஆண்டில் ஒருசில படைத்தலைவர்களும் அரசியல் வாதிகளும் கைப்பற்றிக் கொண்டனர். செருமனி இலிதுவேனியாவின் ஒரு பகுதியை 1939-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கைப்பற்றிக் கொண்டது. மக்க ளாட்சியை நிலைநாட்ட அரசியல் கட்சிகள் முயன் றும் பயன் ஏற்படவில்லை. செருமனியும் உருசியாவும் 1939-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உடன்படிக்கை செய்து கொண்டபோது, பால்டிக்குப் பகுதி உருசி யாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. உருசியர்கள் இலிதுவேனியாவில் பல இராணுவத் தளங்களை அமைத்தனர்.

உருசியர்கள் 1940-ஆம் ஆண்டில் அனைத்து இலிதுவேனியப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு, அங்குப் பொதுவுடைமைக் கட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த சோவியத்துக் குடியரசினை நிலைநாட்டினர். செருமானியர்கள் 1941-இல் உருசி யாவின்மீது படையெடுத்த போது, தன்னாட்சி வேண்டி இலிதுவேனியர்கள் உருசிய ஆட்சியாளர் களுக்கு எதிராகக் கலகம் செய்தனர். ஆனால், செர் மானியர்கள் இலிதுவேனியாவை வென்று, 1944-ஆம் ஆண்டு வரை தம்மிடம் வைத்திருந்தனர். இலிது வேனியா 1944-இல் மீண்டும் உருசியா வசமாயிற்று.

இலிதுவேனிய அதிரடிப்படையினர் 1944-இலி லிருந்து 1952 வரை உருசியர்களுடன் போரிட்டனர். போரில் பல்லாயிரவர் கொல்லப்பட்டனர். உருசியர் களும் 3½ இலட்சம் இலிதுவேனியர்களைச் சைபீரி யாவிலுள்ள தொழிலாளர் பாசறைகளில் தள்ளித் தண்டித்தனர்.

இலிதுவேனியாவில் பெருகி வளர்ந்திருந்த உரோ மானியக்கத்தோலிக்கத் திருச்சபையின் செல்வாக்கை ஒழிக்கவும் உருசிய அரசு முயன்றது. எனினும், மக்களின் சமய உணர்வு குன்றவில்லை.

பதினேழாயிரம் இலிதுவேனியர்கள் சமய சுதந் திரத்தை நிலைநாட்டக் கோரி 1972-இல் விண்ணப் பம் ஒன்றைக் கையெழுத்திட்டு ஐக்கிய நாடுகளின் அவைக்கு அனுப்பினர். அதேயாண்டில் பல மாண வர்களும் இளம் தொழிலாளர்களும் சோவியத்து அரசுக்கெதிராகப் போராட்டம் நடத்தினர். பலர் தீக்குளித்து உயிர் துறந்தனர். இன்றும் இலிதுவேனிய மக்கள் விடுதலை வேட்கை மிக்கவர்களாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இலிப்மன், வால்டர் (கி.பி. 1889-1974)** இவர் நியூயார்க்கு மாநகரத்தில் கி.பி. 1889-ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தம் தாய் தந்தையர் யூதர்கள்; பெருஞ்செல்வமுடையவர்கள். இவர் படிப் பில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார்; ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் படித்து 1910-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார்.

பகுத்தறிவின் அடிப்படையில் சிந்தித்துச் செயற் படுவதன் சிறப்பை இலிப்மன் (Lippmann, Walter) தம் கட்டுரைகளில் வலியுறுத்தி எழுதியுள்ளார். அரசி யலறிஞர்கள் தம் முடிவுகளை அரசியல் அடிப்படையில் சிந்திக்காமல் வருங்கால மக்களுக்கு அவை எவ்வாறு பயன்படும் என்னும் அடிப்படையில் சிந்தித்துச் செய லாற்ற வேண்டுமென இவர் தூண்டினார். அக்கால நடப்புகள் குறித்து இவர் எழுதிய கருத்துகள் உலகத் திலுள்ள பல அரசியல் தலைவர்களைக் கவர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த பல குடியரசுத் தலைவர்கள், உலகத்தில் காணப்படும் பல்வேறு சிக் கல்களுக்கு இவர் கூறிய கருத்துரைகளையும் அறிவு ரைகளையும் செவிமடுத்துச் செயற்பட்டதுண்டு.

இவர் 'நியூயார்க்கு எரால்டு திரிபியூன்' (New York Herald Tribune) என்னும் அமெரிக்க ஆங்கில

நாளிதழில் 1931 முதல் 1967 வரை 'இன்றும் நாளையும்' என்னும் தலைப்பில் கட்டுரைகளை எழுதினார். இந்த நாளிதழில் வந்த கட்டுரைகளை உலகத்தில், 200க்கு மேற்பட்ட நாளிதழ்கள் அச்சிட்டுப் பெருமை பெற்றன. தாம் எழுதிய கட்டுரைகளுக்காக இவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார். பன்னாட்டுச் செய்திகளைச் சீரிய முறையில் வெளியிட்டவர் என்ற காரணத்திற்காகப் புலிட்சர் விருதை 1962-ஆம் ஆண்டு இவர் பெற்றார்.

இவர் 'நியூயார்க்கு உலகம்' (New York World) என்னும் இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக 1921-இல் சேர்ந்தார். 'உலகம்' (World) என்னும் இதழின் ஆசிரியராக 1929-இல் பதவியேற்று 1931 வரை பணியாற்றினார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் வெளியிட்ட 14 அம்சத் திட்டத்தை உருவாக்குவதில் அவருக்கு இவர் உறுதுணையாக இருந்தார். அத்திட்டமே உலகப் போர் முடிவுற்றபோது அமைதி உடன்பாட்டிற்கு அடிப்படையாக அமையும் என்று உட்ரோ வில்சன் நம்பினார்.

இலிப்மன் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அரசியல் கலை அறிமுகம் (A Preface to Politics, 1913 ), பொது மக்கள் கருத்து (Public Opinion, 1922), பொதுத் தத்துவம் (The Public Philosophy, 1955 ) என்பன சிறப்பான நூல்களாகும். அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையைக் குறித்தும் பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இவர் புகழ்பெற்ற அமெரிக்க இதழாசிரியர்; தம்முடைய அரசியல் கட்டுரைகளுக்காக உலகம் முழுவதும் பாராட்டப் பெற்றார். இவர் கட்டுரைகளைத் தெளிவாகவும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் எழுதிய திறம் படைத்த இலக்கிய ஆசிரியராவர். இவர் 1974-ஆம் ஆண்டு நியூயார்க்கில் காலமானார்.

**இலி பான் கசுடாவு (கி.பி.1841-1931)** சமூகஉளவியல் அறிஞர் ஆவார். இவர் மானிடவியல், தொல்லியல், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். இவர் தாம் எழுதிய 'கூட்டம்' (The Crowd) என்னும் நூலின் மூலம் புகழ்பெற்றார். இவர் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா போன்ற இடங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தம் அனுபவங்களின் அடிப்படையில் பல நூல்களை எழுதினார். குறிப்பாக 'மக்கள் உளவியல்' (The Psychology of People), 'உளவியல் சார் அரசியல்', (Psychologic Politique), 'சமதரும உளவியல்' (Psychology of Socialism) 'புரட்சிசார் உளவியல்' (Psychology of Revolution) போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

இலி பான் (Le Bon) ஒரு கருத்து எவ்வாறு நிலைத்திருக்கிறது என்பதைப்பற்றி விளக்கும் பொழுது, கருத்துகள் உண்மையானவை என்ற காரணத்தால் மட்டில் நிலைத்திருப்பதில்லை; அவை திரும்பத் திரும்பச் செயற்படுத்தப்படுதல் போன்ற பல உளக்காரணிகளால் நிலைத்திருக்கின்றன என்று கூறுகிறார். உளவியல் காரணிகள் நனவிலியில் ஊடுருவிச் சென்று கருத்துகளை நனவிலியின் பகுதியாக ஆக்குகின்றன என்பது இவர் கருத்து. கற்றலும் இவ்வாறே நிகழ்கிறது என்றும் கருதுகிறார்; 'நனவை நனவிலி நிலைக்குக் கொண்டு செல்லவேண்டும்' என்று இவர் கருதுகிறார்.


மூளையின் வேறுபாடுகளின் அடிப்படையில் இவர் இனங்களை வரிசைப்படுத்துகிறார்; எடுத்துக்காட்டாக, ஆங்கிலோ-சாக்சன் (Anglo-Saxon) இன மக்கள் இலத்தீன் (Latin) இனமக்களை விட அறிவிற் சிறந்தவர்களாக இருக்கின்றனர் என்று குறிப்பிடுகிறார்; இதற்குப் பல சான்றுகளைத் தம் சுற்றுப் பயணத்தின் போது சேகரித்துள்ளார்.

இவர் எழுதியுள்ள 'கூட்டம்' என்னும் நூலில் கூட்டத்தின் இயல்புகளைப் பற்றி விளக்கியுள்ளார். தனிமனிதன் கூட்டத்தில் இருக்கும் பொழுது அவன் நடத்தைகள் கூட்டத்தின் தன்மைக்கேற்ப மாறுகின்றன. அவன் அக்கூட்டத்தில் தானாகச் செயற்படும் தன்மையை இழந்து எந்திரம்போல் ஆகி விடுகிறான் என்கிறார்.

கூட்டங்களின் உளப்பண்புகளை இவர் மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். அவை மனம் ஒருங்கிணைந்த ஒருமுகப்போக்கான தன்மை, உணர்ச்சி வயப்பட்ட தன்மை, இயந்திரம் போன்ற செயல் வகைப்பட்ட தன்மை எனப்படும். இவற்றுள் மனம் ஒருங்கிணைந்த ஒரு முகப் போக்குக் கோட்பாடு மிகுந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கற்றுத் தரப்படுகிறது.

**இலிபியா** வட ஆப்பிரிக்கக் கடற்கரையை யொட்டியுள்ள சுதந்திர அராபிய நாடுகளுள் ஒன்று. வடக்கில் மத்திய தரைக் கடலும், தெற்கில் நைசரும் சாடும், கிழக்கில் எகிப்தும், தென்கிழக்கில் சூடானும், மேற்கில் அல்சீரியாவும், வடமேற்கு மூலையில் துனீசியாவும் இலிபியாவின் (Libya) எல்லைகளாம். இந்நாட்டின் 90 விழுக்காடு நிலத்தில் சகாராப் பாலைநிலம் பரவியுள்ளது.

இலிபியா 1960-ஆம் ஆண்டு வரை வறியநாடாக விருந்தது. இது திடீரெனப் பொருள் வளம் படைத்த நாடாக உருமாறத் தொடங்கியமைக்கு, அங்கு 1959-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பெட்ரோலிய எண்ணெய்ப் பொருள்களே காரண மாகும்.




இலிபியா

திரிப்போலி (Tripoli) இலிபியாவின் தலை நகரும் மிகப்பெரும் நகரமுமாகும். அராபிய மொழி இந்நாட்டின் ஆட்சிமொழி.

பரப்பு: இலிபியாவின் பரப்பளவு 17,59,540 ச.கி.மீ. ஆகும்.

மக்கள் தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 35 இலட்சமாகும் (1982).

இலிபியாவின் மக்கள் சிறப்பாக அராபிய, பெர்பர் இனங்களைச் சார்ந்தவர்கள். மேற்கூறிய இரு இனங்களைத் தவிர இத்தாலியர்கள், கிரேக்கர்கள், மால்ட்டினியர்கள் ஆகியோர் சிறுசிறு குழுக்களாக இந்நாட்டில் வாழ்கின்றனர். அராபியர்கள் இங்கு வந்து குடியேறுவதற்கு முன்னர், இந்நாட்டில் பெர்பர் இன மக்கள் வாழ்ந்தனர். அராபியர்கள் படையெடுத்து வந்து குடியேறியவர்கள். இக்காலத்தில் பெர்பர் மக்களும் அராபியரும் இரண்டறக் கலந்து விட்டனர்.

கிழக்கு இலிபியாவில் பெரும்பாலோர் அராபிய வழி வந்தோர்கள். ஏனைய பகுதிகளில் கலப்பின மக்கள் வாழ்கிறார்கள். இலிபியாவில் ஏறத்தாழ 4000 யூதர்கள் வாழ்கிறார்கள். மக்கள் தொகையில் சற்றேறக்குறைய முக்கால் பங்கினர் வடமேற்கில் மத்திய தரைக்கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்கிறார்கள். எஞ்சியவர்களுள் ஏறத்தாழக் கால்பங்கினர் வடகிழக்குக் கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். ஒருசில இலிபியர்கள் பாலைநிலப் பசுஞ்சோலைகளில் வாழ்கின்றனர். எஞ்சியோர் மேய்ச்சல் தரைகளை நாடித் தத்தம் ஆடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள் போன்றவற்றுடன் சுற்றித் திரியும் நாடோடிகளாக உள்ளனர்.

தட்பவெப்பநிலை: இலிபியாவின் தட்பவெப்பநிலை அதன் உயரத்தைப் பொறுத்தும் கடலுக்கடுத்திருக்கும் தன்மையைப் பொறுத்தும் மாறுபடுகிறது. நாட்டின் பெரும்பாலான பகுதி பாலைநிலத் தட்பவெப்பநிலையைக் கொண்டுள்ளது. கோடைக்காலம் மிகுந்த வெப்பத்துடன் மழையில்லாமல் விளங்குகிறது. குளிர்காலத்தில் மழை சில வாரங்கள் மட்டும் பொழிகிறது. கோடைக்காலத்தில் சகாராப் பாலைநிலத்திலிருந்து வெப்பமானதும் வறண்டதுமான மணலோடு கூடிய காற்று வீசுகிறது. அக்காலத்தில் தட்பவெப்பநிலை மிகுதியாக உயர்ந்துவிடுவதால் பயிர்கள் அழிந்துவிடுகின்றன.

நிலம்: வடமேற்குக் கடற்கரைச் சமவெளியும், வடகிழக்கு மேட்டு நிலங்களும் இலிபியாவின் வளமான பகுதிகளாம். சகாரா உலகிலேயே மிகப் பெரிய பாலைநிலமாகும். பாலைநிலத்தில் பல பசுஞ்சோலைகள் உள்ளன. தென்கிழக்கிலுள்ள அல்கூப்ரா ஏரி நாட்டில் பெரும் பரப்பில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகிறது. பெட்டி சிகரம் (Bette Peak) என்பது இலிபியாவின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்; அதன் உயரம் 2286 மீ.

திரிப்பொலிட்டேனியா, சைனயீக்கா, பெசான் என இலிபியாவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

நகரங்கள்: திரிப்போலியும் பென்காசியும் இலிபியாவின் சிறப்பான நகரங்கள். பீய்டா (Beida), தெர்னா (Derna), தோப்ரூக்கு (Topruk) ஆகியவை ஏனைய நகரங்களாம்.

பொருளாதாரம்: எண்ணெய் ஊற்றுகள் 1959-இல் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கு முன்னர், இலிபியா மக்களின் வருமானம் அராபிய நாடுகளிலே



இலிபியா திறந்தவெளி அங்காடி

மிகக் குறைவாக இருந்தது. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் பொருளுதவியை இலிபியா அரசு நாடி வந்தது. இன்று இந்நாட்டின் வருமானத்தில் 80 விழுக்காடு பெட்ரோலியப் பொருள்களிலிருந்து கிட்டுகிறது. பெருகிவரும் வருமானத்தை மின் பெருக்கத்திற்கும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இன்னபிற பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். இக்காலத்தில் இலிபியா பிற நாடுகளுக்குக் கடன் கொடுத்தும் பெருமளவில் படைத்தளவாடங்களை இறக்குமதி செய்தும் வசதியாக வாழ்கிறது. எண்ணெய்க் கிணறுகளிலிருந்து இறைக்கப்படும் பெட்ரோலியப் பொருள்கள் குழாய்கள் மூலம் மத்தியதரைக்கடல் துறைமுகப்பட்டினங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. எண்ணெய் எடுக்கும் தொழிலில் இலிபியாவுடன் வெளி நாட்டுக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

நிலத்தை நம்பியே 80 விழுக்காடு மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், 8 விழுக்காடு நிலத்தில் மட்டுமே பண்ணைகள் உள்ளன. பெரும்பாலான பண்ணை நிலம் காலநடைகளுக்கான மேய்ச்சற்றரைகளாக உள்ளது. குடியானவர்களுக்கு வருமானத்தின் பெரும் பகுதியைக் கால்நடைச் செல்வமே கொடுக்கிறது.பார்லி, எலுமிச்சம்பழம், பேரீச்சை; ஒலிவம், வேர்க்கடலை, தக்காளி, கோதுமை போன்றவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்கள்.

வரலாறு: திரிப்போலிடேனியா கி.மு. ஏழாம் நூற்றாண்டில் கார்த்தேசின் ஆளுகைக்குட்பட்டது. கிரேக்கர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சைரனியிக்காவில் குடியேறினர். திரிபோலிடேனியாவும் சைரனியிக்காவும் ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுக் காலம் உரோமானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

வாண்டல்களும் பைசாண்டியர்களும் கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் திரிப்போலிடேனியாவின் மீதும் சைரனியிக்கா மீதும் படையெடுத்து அவற்றை அழித்துப் பாழ்படுத்தினர். அராபியர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை திரிப்போலிடேனியாவையும் சைரனியிக்காவையும் ஆண்டனர். அதன் விளைவாக அனைத்து இலிபியர்களும் அராபிய மொழி பேசத் தொடங்கி, இறுதியில் முசுலிம்களாகி விட்டனர்.

இலிபியா கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை உதுமானியப் பேரரசின் பகுதியாகித் துருக்கியின் கீழ் இருந்தது. ஆனால், இலிபிய அரசர்கள் பெரும்பாலும் சுதந்திரமாகவே செயற்பட்டனர். இக்காலத்தில் பார்பரிக் கடற் கொள்ளைக்காரர்கள் மத்தியதரைக் கடல் பக்கம் வரும் ஐரோப்பிய, அமெரிக்கக் கப்பல்களைச் சூறையாடினர். இதனை எதிர்த்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர் புரிந்தது.

இலிபியாவை 1912-ஆம் ஆண்டில் இத்தாலி கைப்பற்றியது. அது பெருஞ்செலவில் சாலைகளையும் நகரங்களையும்நீர்ப்பாசனத் திட்டங்களையும் இலிபியாவில் அமைத்தது. அங்கு ஒன்றரை இலட்சம் இத்தாலியர்களும் குடியமர்த்தப்பட்டனர். இரண்டாம் உலகப்பெரும்போரின் போது இத்தாலி தோல்வியுற்று இலிபியாவை இழந்தது. இலிபியா சுதந்திர நாடென ஐக்கிய நாடுகள் அவை 1951-இல் அறிவித்தது. முகமது இட்ரிசு என்பார் அரசராகப் பொறுப்பேற்றார். இது 1951 முதல் 1963 வரை முடியாட்சி நாடாகிய போதிலும், பெசான், திரிப்போலி ஆகியவை தனித்து இயங்கும் தன்மை பெற்றிருந்தன. ஆதலின், தேசிய ஒருமைப்பாடு தடைபடுகிறது என்று பல தலைவர்கள் கருதினர்; மாநிலங்கள் 1963-இல் நீக்கப் பெற்றன. மத்திய அரசால் அது கண்காணிக்கப்படும் முடியாட்சியாகச் செயற்படத் தொடங்கியது.

படைத்தலைவர்கள் இட்ரிசு மன்னரை 1969-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பதவியிலிருந்து விலக்கி விட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். மும்மர் எல். கடாபி என்பார் தலைமையேற்று, அரசாட்சியையும்

கைப்பற்றிக் கொண்டார். கடாபி 1970-இல் இலிபியாவையும் ஏனைய அராபிய நாடுகளையும் ஒருங்கிணைக்க முயன்று தோல்வியுற்றார். அதனால், பிற அராபிய நாடுகளுடன் இருந்த உறவு சீர்கெடலாயிற்று.

**இலிபியா நாட்டில் கல்வி**: உற்பத்தியைப் பெருக்கவும், வேளாண்மை, மீன்பிடித்தல், சுற்றுலா ஆகிய தொழில்களை வளர்க்கவும் இலிபியா நாட்டில் கல்வி ஒரு கருவியாகக் கருதப்படுகின்றது. பெட்ரோலியத் தொழிற்சாலைகள் மூலம் கிடைக்கும் மிகுந்த வருவாய், இந்நாட்டில் பதினான்கு வயது நிறைந்த அனைவருக்கும் இலவசக்கல்வி வழங்கும் வாய்ப்பினை அரசுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.

இலிபியாவில் (Libya) பெரும்பாலும் அரசுப் பள்ளிகளே உள்ளன. தனியார் இசுலாமியக் குர்ரான் பள்ளிகளும் (Islamic Koranic Schools) உண்டு. ஆனால், இவை இசுலாமியச் சமயத் தொடர்பான பாடங்களில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

மழலையர் பள்ளிகள் இந்நாட்டில் பெருமளவில் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சில மழலையர் பள்ளிகள் உண்டு. தொடக்கப்பள்ளிகள் இங்கு மிகுதி. தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். இக் கல்வி மாணவர்களுக்கு இலவசம் மட்டுமன்றிக் கட்டாயமும் ஆகும்.

தொடக்கப் பள்ளிக் கல்விக்குப் பின், மாணவர்கள் பொதுக் கல்வியோ தொழிற் கல்வியோ பெறுகின்றனர். பொதுக் கல்வியில் மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், மூன்றாண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் அடங்கும். தொழிற் கல்வியில் உயர்நிலைப் பள்ளிக் கல்வித் தரத்தில் நான்கு ஆண்டுகளும், மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தரத்தில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளும் மாணவர்கள் பயிலுகின்றனர். வணிகத் தொழில், வேளாண்மை, இயந்திரத் தொழில் நுட்பம் போன்ற பாடங்கள் தொழிற்கல்வியில் பயிற்றுவிக்கப்படுகின்றன. பொதுக் கல்வியில் மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதி பெற்ற மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில முடியும்.

வீட்டு வசதியின்றி நாடெங்கும் சுற்றித்திரியும் பழங்குடியினரின் குழந்தைகள் (Nomadic-Children) தங்கிப் படிப்பதற்கு வசதியாக விடுதிகளை அரசு செய்து தந்துள்ளது. சிற்றூர்களிலும் நகரை விட்டு மிகவும் ஒதுங்கிய பகுதிகளிலும் வாழும் குழந்தைகளும் இவ் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றனர்.

இங்கு 85 விழுக்காடு மாணவர் தொடக்கப் பள்ளிகளிலும் 40 விழுக்காடு மாணவர்கள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் 1970-ஆம் ஆண்டுக் கணக்கின் படி பெயர்களைப் பதிவு செய்திருந்தனர்.

நிருவாகம்: கல்வி அமைச்சகம் இந் நாட்டுக் கல்வித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துகிறது. கல்வி மாவட்டங்களில் (Educational Zone) இருக்கும் அலுவலர்களும், கல்வி நெறியாளரும் (Director of Education) கல்வி அமைச்சகத்தின் கல்விச் செயல்களில் துணையாக நிற்கின்றனர். எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து அரசுப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவி செய்து வருகிறது. மேலும், உயர்கல்வி, சில தொழிற் பயிற்சி ஆகியவை பெறும் மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது. இந்நாட்டு மாணவர்களன்றி, இத்தாலிய மாணவர்கள் மிகுதியாகப் பயிலும் சில தனியார் பள்ளிகளும் இந்நாட்டில் உண்டு. ஆனால், இப் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து பெறும் கட்டணங்களின் மூலமே நடைபெற்று வருகின்றன.

பாடத்திட்டம், தேர்வுகள்: தொடக்கப் பள்ளிகளில் கணக்கு, இயற்கை அறிவியல், உடல் நலம், ஓவியம் வரைதல், கைத்தொழில், உடற்கல்வி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. தொடக்கப் பள்ளியின் இறுதி ஆண்டில் பள்ளிகளே தேர்வு நடத்துகின்றன. தொடக்கப் பள்ளிப் பாடங்களைப் போன்றே உயர்நிலைப் பள்ளிகளிலும் பாட அமைப்புகள் உள்ளன.

மேல்நிலைப் பள்ளிப் பொதுக் கல்வியில் இலக்கியம், அறிவியல் பாடங்களோடு ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, அரபு ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளி இறுதி ஆண்டில் தேர்வுகள் உண்டு.

ஆசிரியர், ஆசிரியர் கல்வி: ஆறாண்டு தொடக்கப் பள்ளிக் கல்வி பெற்றவர்கள், நான்காண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர். மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றவர்கள் நான்காண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்று, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர். இலிபியா பல்கலைக் கழக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் மாணவர்கள், மேல்நிலைப் பள்ளி ஆசிரியராகின்றனர்.

ஆசிரியர் பயிற்சியில் பெண்களுக்கு அரசு முதலிடம் தருகிறது. இதற்காகப் பெண்களுக்குக் கல்வி வசதிகள் பலவற்றுடன் கல்வி மையங்களை அரசு திறந்து வருகிறது.

இலிபியாவில் தகுதி பெற்ற ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். அரேபிய நாடுகளில் இருந்து தகுதியான ஆசிரியர்களைத் தருவித்து, ஆசிரியர் பற்றாக்குறையை இலிபிய அரசு தீர்த்து வைக்கிறது. ஆயினும், தகுதியான இலிபியன் ஆசிரியர் கிடைக்கும் வேளையில் பிற நாட்டு ஆசிரியர்களை நீக்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

**இலி பிளே, பிரடெரிக்கு, (கி.பி. 1806-1882)** பிரான்சு நாட்டைச் சார்ந்த சமூகவியல் அறிஞராவார். ஐரோப்பாவில் சமூகவியல் சிந்தனையாளர்களின் கருத்துகளில் குறிப்பாகக் கி.பி. 1860-இலிருந்து 1940 வரை இவருடைய கருத்துகளின் தாக்கம் இருந்து வந்தது.

இவர் நார்மண்டி (Normandy) என்னுமிடத்தில் பிறந்தவர். இவர் எழுதிய புத்தகங்களுள் 'ஐரோப்பாவின் வேலைக்காரி' (Les Ouvriess Europeans, 1855) என்ற நூல் புகழ்பெற்ற ஒன்றாகும். இவர் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இலி பிளேயின் (Le Play Frederic) சமூகவியல் கருத்துகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சமூகக் கட்டுப்பாடு, சமூக மாற்றம், சமூக ஆய்வு முறை என்பனவாம். இவர் குடும்பத்தைத் தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal family), நிலையில்லாத குடும்பம் (Unstable family), தண்டுக் குடும்பம் (Stem family) என மூன்றுவகைகளாகப் பிரிக்கலாம் என்று கருதினார். தந்தையாட்சிக் குடும்பத்தில் தந்தையே எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். எல்லோரையும் வேலை வாங்குபவரும் பெறுகின்ற செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவரும் தந்தையே. இக்குடும்பத்தின் சொத்துகள் பொதுமையாக உள்ளன. இத்தகைய குடும்பங்கள் அக்காலத்தில் உருசியாவிலிருந்த விவசாயக் குடும்பங்களிடத்தும், மைய ஐரோப்பியக் குடும்பங்களிடத்தும் காணப்பட்டன. இரண்டாம் பிரிவினதாகிய நிலையில்லாத குடும்பம் இன்று மக்களிடையே உள்ள தனிமைப்படுத்தப்பட்ட தனிக் குடும்பங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான குடும்பங்கள் நிலைத்திருக்க முடியாமைக்குக் காரணம், பொருளாதாரச் சிக்கல்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாததாகும். இது தொழிற்சாலை சார்ந்த உழைப்பாளர் குழுவை சார்ந்தக் குடும்பங்களைக் குறிப்பதாகும். இவ்வகைக் குடும்பங்களில் திறமையுள்ளவர்கள், வெற்றி பெற்று முன்னேறுகின்றனர். மூன்றாம் பிரிவினதாகிய தண்டுக் குடும்பம் முதல் இரண்டு வகைக் குடும்பங்களின் தன்மையையும் பெற்றிருக்கிறது.

இவர் தம் சமூக மாற்றக் கோட்பாடுகளில் சமூகக் கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் சிறப்பிடம் கொடுத்தார். ஆனால், தொழில்நுட்பமாற்றம் தேவை என்றும் கருதினார். எல்லாவகை மக்களும் சமூகத்தின் ஒழுங்கையும் ஒற்றுமையையும் நிலை நாட்டப் பத்துவகையான கட்டளைகளை ஏற்று நடக்கின்றனர் என்று கருதினார். இந்தப் பத்துக்கட்டளைகளின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறையத் தொடங்கினால் சமூகம் சீரழியத் தொடங்கி விடும் என்றும் கருதினார். சமய எதிர்ப்புக் கருத்துகள் சமூகச் சிதைவின் அறிகுறிகளாகும் என்பது இவர் கருத்து.

சமூக அறிவியல் துறையில் ஆய்வுமுறையில் தனி வரைவுமுறை அல்லது ஒரு பொருள் பற்றிய வரைவு முறை (Monograph Method) இலி பிளேயின் தனிச் சிறப்பு வாய்ந்த கருத்தாகும். இம்முறை இரண்டு தன்மைகளினால் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இம்முறை நேரடியாகச் சேகரிக்கப் பட்ட புள்ளி விவரங்களிலிருந்து தொடர்பு கொண்டு நோக்க வேண்டும் என்பதாலும், செய்திகளைச் சேகரிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையைத் தனிவரைவுமுறை கொண்டிருப்பதாலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**இலிம்போபோ ஆறு** தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் பாயும் சிறப்பான ஆறாகும். இதன் நீளம் ஏறத்தாழ 1770 கி.மீ. இந்த ஆறு தென் ஆப்பிரிக்க மேட்டு நிலங்களில் உற்பத்தியாகி, தென் ஆப்பிரிக்கக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்றான பிரான்சுவால் மாநிலத்தைப் போட்சுவானா (Botswana) விலிருந்தும் சிம்பாபுவே (Simbabwe) யிலிருந்தும் பிரிக்கிறது. பின்னர், மொசாம்பிக்கின் (Mozambique) குறுக்காகப் பாய்ந்து இந்தியப் பெருங்கடலில் கலக்கிறது. இதனை முதலை (Crocodile) ஆறு என்றும் கூறுவர். இலிம்போபோ (Limpopo) ஆறு கோடைக் காலத்தில் சொட்டுச் சொட்டாக விழும் சிற்றாறாகவும், மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து இரைச்சலுடன் பாயும் ஆறாகவும் மாறுகிறது. ஒலிபாண்ட்சு ஆறு (Olifants River) இந்த ஆற்றின் முதன்மையான துணையாறாகும்.

இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் கி.பி. 1498-ஆம் ஆண்டில் வாசுகோடாகாமா என்னும் போர்ச்சு

கீசிய மாலுமி நங்கூரம் பாய்ச்சித் தங்கினார். இதற்கு அவர் இரியோ தோ எசுபிரிட்டு சாண்டோ (Rio do Espiritu Santo) என்று பெயரிட்டார். இதன் கீழ்ப் போக்கினை (Lower Course) புனித வின்செண்டு வொயிட்செட் எர்சுகின் (St. Vincent Whiteshed Erskine,1868-69) என்பார் ஆய்வுகள் மூலம் கண்டறிந்தார்.

இலிம்போபோ ஆற்றின் கீழ்ப்பகுதி செழுமை யானது. எனவே, இப்பகுதியில் மக்கள் தொகையும் மிகுதி.

**இலியனார்டோ டா வின்சி** என்பவர் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலி நாட்டில் வாழ்ந்த தலைசிறந்த சிற்பி; ஓவியர்; கட்டடக் கலைஞர். இவர் பாலங்களுக்கும் நெடுஞ்சாலைகளுக்கும் ஆயுதங்களுக்கும் ஆடைகளுக்கும் அறிவியல் கருவிகளுக்கும் வடிவமைப்புச் செய்துகொடுத்த மாபெரும் வல்லுநர்.

இலியனார்டோ டா வின்சி (Leonardo da Vinci) கி.பி. 1452-ஆம் ஆண்டில் இத்தாலியைச் சார்ந்த வின்சி என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் தந்தையார் ஓர் அரசு ஊழியர். இலியனார்டோ பிள்ளைப் பருவத்தைத் தம் குடும்பப் பண்ணையிலேயே கழித்தார். சுற்றியிருந்த கழனிகளையும் பாய்ந்தோடும் அருவிகளையும் சுதந்திரமாக ஆய்ந்த இவர், இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவற்றின் மேல் பெரும் ஈடுபாடு கொண்டார். பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைக் கண்டறிவதில் இவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். கூடுகளில் அடைபட்டிருந்த பறவைகளைச் சந்தைகளில் விலை கொடுத்து வாங்கி, அப்பறவைகளைக் கூடுகளிலிருந்து வெளியே பறக்க விட்டுப் பார்த்து மகிழ்ந்தார். பறவைகள் கூடுகளில் அடைபட்டுக் கிடப்பதைக் காணப் பொறுக்காமையினாலும் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதைக் கற்றுக் கொள்ளவும் இவர் அப்படிச் செய்தார் என்று கூறுவர்.

இலியனார்டோ கி. பி. 1469-ஆம் ஆண்டளவில் தம் தந்தையாருடன் பிளாரன்சு நகருக்குச் சென்றார். அங்கு ஆன்ரி தெல் வெராக்கியோ (Andrea del Verrocchio) என்பவரிடம் பயிற்சியாளராகச் சேர்ந்தார். வெராக்கியோ சிறந்த ஓவியரும் சிற்பியுமாவார். அவரிடம் இவர் ஏழாண்டுகள் கற்றார். அவருடைய கற்பனை வளம் மிக்க சிற்பங்கள் இவரை மிகவும் கவர்ந்தன. இவர்கி.பி.1472-ஆம் ஆண்டளவில் ஓவியர் குழுவின் தலைமை ஓவியராகப் பொறுப்பேற்றார். சிலஆண்டுகளுக்குப் பின்னர் இவர் அழகுமிகு தேவதை ஒன்றின் ஓவியத்தை வரைந்தபோது ஓவியம் வரைவதில் இவரது இணையிலாத் திறமையைக் கண்டு வியந்து வெராக்கியோ ஓவியப் பணியையே கைவிட்டு விட்டார்.



இலியனார்டோ டா வின்சி

தலைசிறந்த ஓவியர் என்று பாராட்டும் படி இவர் விளங்கினார். 'அரசர்களைப் போற்றுதல்' (Adoration of the Kings) என்னும் ஓவியத்தை இசுகோபேட்டோ (Scopeto) விலிருந்து சமயக் குருமார்களுக்கென வரைந்தார். அவ்வோவியம் இளம் ஓவியக் கலைஞர்களுக்கு முன்னோடியாக இருந்தது. கன்னிமேரி ஓவியத்தை நீண்டதொரு இயற்கைக் காட்சியுடன் வரைந்தார். அந்த ஓவியத்தில் கன்னி மேரியும் மூன்று அரசர்களும் முதன்மையாகத் தெரியும்படி அழகாக வரைந்து, அதில் புதியதொரு முறையைக் கையாண்டார். இப் படம் முழுமை பெறாததொன்றாகவே கி.பி. 1481-இல் கைவிடப்பட்டது.

இவர் கி.பி.1482-ஆம் ஆண்டில் பிளாரன்சு நகரை விட்டு மிலான் சென்றார். அங்கு இவர் இலோடோவிகோ இசுபார்சா (Lodovico Sforza) என்பாரிடம் சேர்ந்தார். அங்கு இவர் அரண்மனைப் படங்களை வரைந்தும் விழாக் காட்சிகளைக் கண்காணித்தும், பல வண்ண உடைகளுக்கு வடிவம் கொடுத்தும், போர்க் கருவிகளை அமைப்பதற்கு வழி காட்டியும், மாளிகையில் மைய வெப்பமூட்டும் சாதனத்தை உருவாக்கியும் தம் அரிய காலத்தைச் செலவிட்டார். இவர் யாழ் போன்ற இசைக்கருவியை இசைத்ததாகவும், மிலான் பிரபுவையும் அவர்தம் நண்பர்களையும் இசையால் மகிழ்வித்ததாகவும் கூறுவர்.



மோனோலிசா

மிலானில் வாழ்ந்தபோதுதான் இவர் தம்முடைய புகழ் மிக்க ஓவியமான 'இறுதி இரவு உணவு' (The Last Supper) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். இவ்வோவியத்தை இவர் மெல்ல மெல்ல ஈரமான சுவரில் வண்ணங்களில் வரைந்தார். இவ்வோவியம் மிகவும் சிதைந்த நிலையிலும் தலைசிறந்ததெனக் கருதப்படுகிறது.

மனித உடலுறுப்புகளை ஆராய் இவர் மேற் கொண்ட ஆர்வத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தொடக்கத்தில் இவரும் ஏனைய கி.பி.15-ஆம் நூற் றாண்டுக் கலைஞர்களைப் போல், உடலமைப்பின் புறத்தோற்றத்தையே நுட்பமாக ஆராய்ந்தார். பின் னர், உடலுறுப்புகளின் உள் தோற்றத்தின்பால் மிக்க ஆர்வம் கொண்டவராய், பிணங்களை அறுத் துப் பார்த்து உடலுறுப்புகள் எப்படி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதில் கருத் தூன்றிச் செயற்பட்டார். இருதயத்தைப் பற்றிய இவருடைய ஆய்வுகள் மிகுந்த முற்போக்கானவை. மனிதனை எங்ஙனம் நோக்கினாரோ அதேபோல் செடி கொடிகளையும் விலங்குகளையும் இவர் ஆய்ந் தார். செடி கொடிகளின் வளர்ச்சி குறித்தும் இவர் பல கண்டு பிடிப்புகளைச் செய்தார்.

மிலான் வந்து குடியேறியதும், தம்மைக் கவர்ந்த பொருள்களைப் பற்றிய குறிப்புகளை இவர் எழுதத் தொடங்கினார். இவருடைய குறிப்புப் புத்தகங்களைப் படித்தால் அதில் இவர் பல்வேறுபட்ட பொருள் களைப் பற்றி, வேறு யாரும் கூறாத செய்திகளை அறிவியல் நோக்கத்துடன் குறித்துள்ளதைக் காண லாம். தாம் விளக்க முற்பட்ட கோட்பாடுகளுக்கு இவர் மிக அழகானதும் திட்டவட்டமுமான வரை படங்களை வரைந்து விளக்கிக் காட்டியுள்ளார். இயந்திரங்களைப் பற்றி இவர் எழுதிய வரைபடங் களை ஆய்ந்த இருபதாம் நூற்றாண்டுப் பொறி யாளர்கள், இக்காலப் பொருள்களுக்கேற்ற திட்ட வட்டமான முன்மாதிரிகளைச் சரியானபடி உரு வாக்கியுள்ளார் என்று கூறியுள்ளனர். இவருடைய குறிப்புப் புத்தகங்களைப் படிப்பது கடினம். ஏனெனில், இவர் அதைத் தலைகீழாகவும், இடப் புறமிருந்து வலப் புறமாகவும் எழுதியுள்ளார். அதைக் கண்ணாடி யில் பார்த்துத் தான் படிக்க வேண்டும். இதைக் கண்ணாடி எழுத்துமுறை (Mirror writing) என்பர். தம் கருத்துகளை ஒருவரும் திருடக்கூடாது என்னும் காரணத்திற்காக இவர் அம்முறையைக் கையாண் டார்.

பிரெஞ்சுப் படை கி.பி. 1499-ஆம் ஆண்டில் மிலான்மீது படையெடுத்ததால் இவரது மிலான் வாழ்க்கை இடையில் தடையுற்றது. இவரை ஆதரித்த புரவலரான இலோடோவிகோ சிறை செய்யப்பட்டார். ஆதலின் இவர் வெனிசுக்கு ஓடி னார். அடுத்த ஆண்டு மீண்டும் இவர் பிளாரன் சுக்குத் திரும்பி வந்தார். அப்போதும் அந்நகரம் கலைகளுக்கான சீரிய மையமாக இருந்தது.அனன்சி யாடா (Annunziata) என்னும் திருச்சபையின் பலி பீடத்தை அமைப்பதற்கான ஓவியத்தை வரைய இவர் பணிக்கப்பட்டார். கன்னிமேரியும் அவள் பெற்ற பிள்ளையும் முழு அளவில் ஓவியமாகத் தீட்டப்பட்டு அது மக்களின் பார்வைக்கு வந்தபோது மக்கள் அதைக் கண்டுகளித்துப் போற்றினர்.

சிறிது காலம் இவர் உரோமாபுரியில் சீசர் போர்சியா (Cesare Borgia) என்னும் இளவரசரின் இராணுவப் பொறியாளராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1503-ஆம் ஆண்டில் பிளாரன்சு திரும்பி னார். இக்காலகட்டத்தில் இவர் வரைந்ததுதான் மோனோ லிசா என்னும் உலகப் புகழ்பெற்ற ஓவிய மாகும். இவ்வோவியம் மென்மைக்கும் அழகான முகத்திற்கும் அதன் பின்னணியில் வரையப்பெற்ற மலைத் தோற்றத்திற்கும் பெரும்புகழ் பெற்றது. பிளாரன்சில் இருந்த காலத்தில் பேலசோ விக்கியோ (Palazzo Vecchio) விலுள்ள பெருமன்றத்தின் சுவரில் போராடும் காட்சியொன்றை வரையுமாறு பணிக்கப் பெற்றார். மீண்டும் இவர் புதிய பரிசோதனை ஒன்றை மேற்கொண்டார். இம்முறை இவர் மெழுகி னால் ஓவியம் தீட்ட முற்பட்டார். இப்பணி நிறை

வேறுவதற்கு முன்னரே மெழுகு உருகத் தொடங்கி விட்டது. இதைக் கண்ணுற்ற மைக்கேலாஞ்சலோ கண்ணீர்விட்டுக் கதறினார். அந்த ஊர்ப் பெருமக்கள் துயரத்திலாழ்ந்தனர். இலியனார்டோவும் ஏக்க முற்றார். அறிவியல் அறிஞரான இவர், பரிசோதனை வெற்றிபெறாமல் போவதுமுண்டு என்பதையும், பரிசோதனைகள் தோற்கக்கூடும் என்பதையும் மக்கள் அறியவேண்டுமென்று விரும்பினார்.

மெடிசி குடும்பத்தைச் சார்ந்த கியூலியானோ (Giuliano de Medici) என்பார் கி.பி. 1513–ஆம் ஆண்டு இவரை உரோமாபுரிக்கு அழைத்தார். கியூலியானோ அப்போது போப்பாண்டவராயிருந்த பத்தாம் இலியோ என்பாரின் சகோதரர். அங்கும் இவர் தம் பரிசோதனைகளைத் தொடர்ந்தார். இவர் கி.பி. 1516 – ஆம் ஆண்டளவில் இத்தாலியை விட்டுப் பிரான்சு மன்னரின் அழைப்பினையேற்று அம் மன்னரின் முதன்மை ஓவியராகவும் பொறியாளராக வும் பணியேற்றார். அப்போது பிரான்சின் முடி மன்னரான முதலாம் பிரான்சிசு என்பார், அம்பாய்சு (Ambosie) என்னுமிடத்திற்கருகில் மாளிகையொன் றைக் கொடுத்துச் சோதனைகளைத் தம் விழைவின் படி நடத்துமாறு வேண்டினார்.

பிரான்சில் வாழ்ந்த காலத்தில் இவர் பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டு கி.பி. 1519-இல் கால மானார்.

**இலியாது** ஓமர் என்னும் கிரேக்கக் கவிஞரால் எழுதப்பட்ட மிகச் சிறந்த வீரகாவியம்(Epic) ஆகும். இருபத்து நான்கு பகுதிகளைக் (Books) கொண்ட இக்காவியம், கி.மு. 8–ஆம் நூற்றாண்டில் கிரேக்கர் களுக்கும் (Greeks) திரோசன்களுக்கும் (Trojans) இடையே நடைபெற்ற நெடும் போரைப் பற்றிக் கூறுகிறது. இப்போர் திராய் (Troy) என்னும் நகரத் தில் நடைபெற்றமையால் திரோசன் போர் (Trojan War) என்று குறிப்பிடப்பட்டது. திராய் நகருக்கு இலியம் (Iliam) என்ற வேறொரு பெயரும் உண்டு அதனால், இலியம் நகரில் நடைபெற்ற போரைக் கருப்பொருளாகக் கொண்ட இந்நூல் இலியாது(Iliad) என்னும் பெயர் பெற்றது. அந்நகரம் ஆசியாக் கண்டத்தினைச் சார்ந்த துருக்கி நாட்டின் இசார்லிக்கு (Hissarlik) என்னும் பகுதியில் நிலத் திற்குள் புதையுண்டு கிடப்பதாக அகழாராய்ச்சி யாளர் கூறுகின்றனர்.

திராய் போருக்குப் பின்னணியாக அமைந்த கதை பின்வருமாறு கூறப்படும். திராய் நாட்டு மன்னன் பிரையம் (Priam) என்பானின் மகன் பாரிசு (Paris) என்பான் கிரேக்கத்தைச் சார்ந்த இசுபார்ட்டா (Sparta) என்னும் நாட்டுக்கு விருந்தினனாகச் சென்று, சிறிது காலம் தங்கித் திரும்புங்கால், அந் நாட்டு அரசன் மெனிலாசு (Menelaus) என்பவனின் மனைவியாகிய பேரழகி எலன் (Helen) என்பவளைத் தன் நாட்டிற்குக் கவர்ந்து வந்தான். அதனையறிந்த கிரேக்கர்கள் தங்கள் அரசியை மீட்கும் பொருட்டு ஆயிரம் கப்பல்களிற் புறப்பட்டுச் சென்று திராய் நகரை முற்றுகையிட்டார்கள். பத்தாண்டுகள் நீடித்த இம் முற்றுகையில் பெரும் போர்கள் நிகழ்ந் தன. இறுதியில் கிரேக்கர்கள் வெற்றி பெற்றுத் தங்கள் அரசி எலனை மீட்டுத் திரும்பினார்கள்.

நெடுங்காலமாக இக்கதை நாட்டுப் பாடல் வடிவில் கிரேக்க மக்களிடையே வாய்மொழியாக நிலவி வந்தது. ஓமர் அதனைக் காவியமாக இயற்றி னார். இக்காவியம் கி.மு. 8–ஆம் நூற்றாண்டில் கிரேக்க மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய வாழ்க்கையினையும் குறிப்பாக அவர்களின் போர்முறைகளையும் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகக் கருதப்படுகிறது. எளிய கட்டுக் கோப்பில் (Simple structure) அமைந்துள்ள இக் காவியம் போரினால் விளையும் துன்பங்களை விரித் துரைக்கிறது. இக் காவியத்தை 'ஒரு துன்பத்தின் கதை' (A story of suffering) என்று கூறுவர். ஒரு வீர காவியத்தின் விழுமிய பண்புகளாகிய உயர்ந்த கருத்து (Lotfy thought), சிறந்த சொல்லாட்சி (Good diction) ஆகியவற்றைக் கொண்டு அமைந்த இந்நூல் உலகின் முதற் பெரும் வீரகாவியமாகத் திகழ்கிறது.

திராய் போர் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் நடைபெற்றாலும், இக்காவியம் அப்போரின் பிற் பகுதியில் சற்றேறக்குறைய ஐம்பது நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையே கருப்பொருளாகக் கொண்டுள்ளது. போரின் ஒரு குறிப்பிட்ட நிலையில் கிரேக்க வீரன் அகிலீசு(Achilles)என்பான் கொண்ட சினத்தையும் அதன் விளைவுகளையும் மையமாக வைத்து இக்காவியம் புனையப்பட்டுள்ளது.

காவியத்தின் அத்தியாயப் பகுப்புப் பின்வருமாறு: திராய் முற்றுகையில் ஈடுபட்டிருந்த மைசினே (Mycene) நாட்டு மன்னன் ஆகமெனான் (Agame- non) என்பானுக்கும் மற்றொரு கிரேக்க வீரன் அகிலீசு என்பானுக்கும் பிரிசெய்சு (Briseis) என்னும் பெண்போர்க்கைதியை நடத்துவது பற்றிப் பிணக்கு மூண்டது. ஆகமெனானின் ஆணவத்தைக் கண்டு சினமுற்ற அகிலீசு போர்க்களத்தினின்று நீங்கித் தன் பாசறைக்குச் சென்றுவிட்டான். இதனையறிந்த

கடல் தெய்வமாகிய (Sea Goddess) அவன் தாய் தெட்டிசு (Thetis) என்பாள், சீயசு (Zeus) என்னும் முதன்மைத் தெய்வத்தை (Chief of Gods) அணுகி, தன் மகன் அகிலீசின் பெருமையையும் இன்றியமை யாமையினையும் அவன் இனத்தவராகிய கிரேக்கர் களுக்கு உணர்த்தும் பொருட்டுப் போரில் அவர் களுக்குப் பெரும் இழப்புகளை உண்டாக்குமாறு வேண்டினாள். அங்ஙனமே சீயசின் தலையீட்டால் கிரேக்கர் பக்கத்தில் தோல்விகள் பல உண்டாயின. அகிலீசு போர்க்களத்திலிருந்து நீங்கிச் சென்றதா லேயே அவ்விழப்புகள் ஏற்பட்டன எனவுணர்ந்த கிரேக்கப் படைத்தலைவன் அகிலீசுக்குத் தூது போக்கி, அவனைப் போரில் ஈடுபடுமாறு வேண்டி னான். அகில்சு மனம் நெகிழ்ந்தாலும், போருக்குச் செல்லாமல் உறுதியுடன் விலகியிருந்தான். கிரேக்கப் படைகளுக்கு மேலும் தோல்விகள் தொடர்ந்தன. இவ்வீழ்ச்சியினைக் காவியத்தின் முதல் ஒன்பது பகுதி கள் விவரிக்கின்றன. 10-ஆம் பகுதி ஓடீசியசு (Odys seus), தயமீடு (Diamed) ஆகிய கிரேக்க வீரர்கள் பங்கேற்ற போர்களைக் குறிக்கிறது. 11 முதல் 17 வரையுள்ளபகுதிகள், கிரேக்கர்கள் மேலும் அடைந்த தோல்விகளையும், அகிலீசின் நண்பன் பாட்ரோ கிலசு Patroclus என்பான் போரில் பங்கு பெற்ற மையினையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. சிறந்த வீரனாகிய அவன் அகிலீசின் இசைவுடன் அவனது கவசத்தை அணிந்து கொண்டு களம் சென்று, வீரத்துடன் போரிட்டு, இறுதியில் எக்டர் (Hector) என்னும் திராய் வீரனாற் கொல்லப்பட் டான். அகிலீசின் அன்னை தெட்டிசு அவனது கூடாரத்துக்குச் சென்று சோர்வுற்றுக் கிடக்கும் தன் மகனைத் தேற்றுவதனை 18-ஆம் பகுதி விளக்கு கிறது. அகிலீசு தன் தாயின் சொற்கேட்டுப் புத்து ணர்வு பெற்றுப் போருக்குச் செல்ல முடிவெடுத் தான். எபேசுடசு (Aephastus) என்னும் கொல்லன் அகிலீசுக்குப் புதிய கவசம் செய்து கொடுத்தான். அகிலீசு ஆற்றிய வீரப்போரினை 19 முதல் 24 முடிய உள்ள பகுதிகள் விதந்தோதுகின்றன. தன் நண்பன் பாட்ரோகிலசைக் கொன்றமைக்காக எக்டரைப் பழி தீர்க்கும் பொருட்டுக் களத்தில் புகுந்து போரிட்டு இறுதியில் அவனைக் கொன்றான். மாண்ட பாட் ரோகிலசின் நினைவாக வீர விளையாட்டுகள் நடை பெற்றன. அவற்றில் கிரேக்க வீரர்கள் பங்கு பெற் றார்கள். அதன்பின் பாட்ரோகிலசின் உடல் அடக் கம் செய்யப்பட்டது. அகிலீசு எக்டரின் உடலைச் சிதைத்து அதனை அவனுக்குத் தந்தையும் திராய் மன்னனுமாகிய பிரையத்திடம் ஒப்படைத்தான்.

காவிய ஆசிரியர் பத்தாண்டுகள் நடைபெற்ற போரின் கடைசி ஐம்பது நாட்களில் மட்டும் நடை பெற்ற நிகழ்ச்சிகளை எடுத்தாண்டதன் வாயிலாகத் தம் காப்பியக் கருப்பொருளுக்குச் சிறந்ததொரு கட்டுக்கோப்பினைச் சேர்த்துள்ளார். பல்வேறு காலங்களில் பலர் எழுதியவற்றின் தொகுப்பே இக் காவியம் என்பாரும் உளர். ஆனால், காவியத்தில் அமைந்துள்ள நிகழ்வு ஒருமைப்பாடும் (Unity of action) கட்டுப்கோப்பும் (Structue)இக்கூற்றைப் பொய்ப் பித்துக் காவியம் முழுவதனையும் ஓமர் ஒருவரே எழுதினார் என்பதனை நிறுவுகின்றன. எனினும், காவியத்தினை இருபத்து நான்கு பகுதிகளாகப் பகுத்தமை பிற்காலத்தில் செய்யப்பட்டதாகும் காவிய ஆசிரியர் இலக்கிய நோக்கம் கருதிக் காவி யத்தின் கதை நிகழ்ச்சிகளைச் சுருக்கியும் பெருக்கி யும் மாற்றங்கள் செய்துள்ளார். எடுத்துக்காட்டாக, ஒன்பது நாட்கள் நடைபெற்ற ஒரு போர் முப்பது வரிகளில் கூறப்பட்டிருப்பதனையும், ஒரு நாளின் நிகழ்ச்சி நூற்றுக் கணக்கான வரிகளில் விவரிக்கப் பட்டிருப்பதனையும் குறிப்பிடலாம்.

கதை மாந்தர்கள்: ஓமரின் மற்றொரு வீரகாவி யமாகிய ஓடிசு (Odyssey) பாத்திரப் படைப்பில் விஞ்சி நிற்பினும், இலியது என்னும் காவியமும் சிறந்த கதை மாந்தர்களைப் பெற்று விளங்குகிறது. சினமும் செருக்கும் வீரமும் சான்ற அகிலீசு, செருக் கும் கொடுமையும் நிறைந்த ஆகமெனான், அறிவும் ஆற்றலும் மிக்க முதியவர் நெசுதர் (Nestor), முரட்டுத்தனம் நிறைந்த ஏசாக்சு (Ajax), அடக்க மும் அறிவுக் கூர்மையும் மிக்க ஓடிசியசு, துன்பத் தைக் கண்டு துவளாத தயமீடு, நட்புக்கினிய பாட் ரோகிலசு, முதுமை நிறைந்த போனிக்சு (Phoenix) ஆகியோர் கிரேக்கரிடையே சிறந்து விளங்குகின் றனர். அங்ஙனமே திரோசன்களிடையே முதிய வீரனான பிரையம், மாவீரன் எக்டர், அவன் தாய் எக்யுபா, நம்பிக்கைக்குரிய ஆண்டிரமாக்கசு (Andromachus), எழிலரசி எலன் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்களாகத் திகழ்கின்றனர்.

இக்காவியத்தில் அகிலீசும் எக்டரும் எதிரிகளா யினும் துன்பியல் மாந்தர்களாகவே (Tragic heroes) படைக்கப்பட்டுள்ளனர். எக்டர் ஒரு பெருவீரனாயி னும் ஒரு சராசரி மனிதனுக்குரிய பண்பியல்புகள் படைத்தவனாகவே திகழுகிறான். மனைவி மக்க ளாலும் உற்றார் பெற்றோர்களாலும்சூழப்பட்டுள்ள அவன் போரில் தோல்வி கிடைக்குமென்று தெரிந் திருந்தும் முன்னரே நிச்சயிக்கப்பட்ட தன் முடிவை (Toredoomes end) நோக்கிச் செல்கிறான் அகி லீசின் துன்பம் எக்டரின் துன்பத்திலும் ஆழமானது. அவன் அன்புக்கு வயப்படுபவனாகவும், பிறர் துன்பம்

..ண்டு இரங்குபவனாகவும் காணப்படுகிறான். இருப்..னும், அவனும் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகி இறப்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

இந்நூல் போர்க்களத்தின் வெறிச் செயல்களைப் படம் பிடித்துக் காட்டும் வீரகாவியமாக மட்டும் அமையாமல், மானுடத்தின் வாழ்வியற் கண்ணோட்டத்தை வடித்துக் கொடுக்கும் உயர்பெருங்காப்பியமாகவும் திகழுகிறது. ஓமருக்கு விதியின் (Fate) வலிமை பற்றித் திட்ட வட்டமான கருத்து இல்லையெனினும், மனிதனுடைய இறப்பின் தவிர்க்க முடியாமையை இக் காவியத்தில் அவர் வலியுறுத்துவதை உணரலாம். இதன் ஆறாம் பகுதியில் 'இப் பூவுலகில் வாழும் உயிர்களுள் மிகவும் இரக்கத்திற்குரியது மனிதனைவிட வேறொன்றுமில்லை' என்கிறார். மனிதன் அவ்வப்போது இன்பங்களைத் துய்த்தாலும், பொதுவாக அவன் வாழ்வு துன்பமயமானது என்பது ஓமரின் கருத்தாகும். இம் மாபெரும் காவியத்தின் கடைசி வரியினைக் 'குதிரைகளினும் குன்றியவனாக எக்டரை அவர்கள் புதைத்தனர்' என்று சோகத்தில் தோய்ந்து எழுதியிருப்பது நோக்கற்பாலது. இக்காவியத்தின்கண் ஆங்காங்கே ஏறத்தாழ இருநூறு இடங்களில் இன்பக் காட்சிகள் இடைவைத்துப் பின்னப்பட்டிருப்பினும், அவை துன்பியலை மிகுக்கவும் ஆழப்படுத்தவுமே பயன்படுகின்றன என்பர். கடவுளர்களின் களிமிக்க செயல்கள் அனைத்தும் மனிதர்களின் துன்பங்களுக்குப் பின்னணியாக அமைந்து, அவற்றை மேலும் மிகுவிப்பதனைக் காணலாம். மனிதனுக்குச் சாவு வந்தே தீருமெனினும் அவன் அச்சாவினைத் துணிவுடன் சந்திக்கும்போது அதனை வெற்றி கொள்கிறான். போர் என்பது மன்பதையால் தடுக்க முடியாதது; கொடுமைகளையும் பேரழிவுகளையும் விளைவிப்பது. எனினும், ஓமரின் கண்ணோட்டத்தில் அது மனிதனை உயர்த்தி அவனிடம் உள்ள வருத்தத்திலும் செம்மையுணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. திராய் போரின் முடிவில், வெற்றி வீரனான அகிலீசும் தோல்வி கண்ட பிரையமும் தங்கள் பகைமையினைக் கடந்தவர்களாகவும், துன்பத்தில் உழன்றவர்களாகவும், அதே போழ்து துன்பத்தை வென்று செம்மாந்து நிற்பவர்களாகவும் காட்டப் பெற்றுள்ளனர். இத்தகைய செம்மாப்பு சாவினையறியாத கடவுளர்க்குக் கிட்டுவதில்லை என்பது உணர்தற்பாலதாகும். கடவுளரும் மனிதர்களுக்குச் சார்பாகப் போரிடுதலை இக்காவியத்தில் காணலாம். ஆனால், அக்கடவுளராலும் மனிதனின் துன்பங்களைத் துடைத்திடமுடிவதில்லை. அக்கடவுளரை ஓமர் மானிட இயல்பினராக ஆக்கிக் காவியத்தில் இடங்கொடுத்தமை, கிரேக்க மக்களின் மானுட உணர்வுக்கும் (Humanism) நாட்டுணர்வுக்கும் (Nationalism) அவர் கொடுத்த உயர்வினுக்குச் சான்று பகர்கிறது. வீ.இரா.அ.

**இலியூ சாவ்-சி (கி.பி. 1898-1974)** என்பார் 1959 முதல் 1969 வரை சீன அரசின் தலைவராயிருந்தவர். இவர் ஊனான் (Hunan) என்னும் நகரில் கி.பி. 1898-ஆம் ஆண்டு பிறந்தார். மாசுகோவில் 1920-21-ஆம் ஆண்டுகளில் கல்வி கற்ற இவர், சாங்கையிலும் (Shanghai) காண்டனிலும் (Canton) பொதுவுடைமைக் கட்சி அமைப்பாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1927-ஆம் ஆண்டில் இவர் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழுஉறுப்பினரானார். இலியூ சாவ்-சி (Liu Shau-chi) 1935-ஆம் ஆண்டளவில் சீனாவில் பொதுவுடைமைக் கோட்பாட்டின் தலைசிறந்த சிந்தனையாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அக்காலத்தில் மாசேதுங்கின் கருத்துகளைவிட இவருடைய கருத்துகளையே மக்கள் மிகுதியாக அறிந்திருந்தார்கள். மக்கள் குடியரசு நாடாகச் சீனா 1949-ஆம் ஆண்டு அக்டோபரில் நிலைநாட்டப்பட்டபோது, இவர் கட்சியின் முதன்மைத் துணைத் தலைவரானார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் இவர் சீனக்குடியரசின் தலைவராக அமர்த்தப்பட்டார். எனினும், மையக் குழுவின் தலைவரான மாசேதுங்கிற்கு அடுத்தபடியாகவே இவருடைய பதவி கருதப்பட்டது. பண்பாட்டுப் புரட்சியின்போது (Cultural Revolution) 1966-இல் இவர் கடுமையாகக் குறை கூறப்பட்டார். அதற்குக் காரணம், தொழிற்சாலை ஊழியர்களே சமூக அமைப்பில் முதலிடம் பெறவேண்டும் என்னும் கருத்தினை இவர் ஆதரித்தார் என்பதேயாகும். ஆசியாவில் குடியானவர்களே முதலிடம்பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்பது மாசேதுங்கின் கருத்தாகும். ஐரோப்பாவில் இது நேர்மாறாக இருந்தது. அங்கு ஆலைத் தொழிலாலர்கள் முதன்மையிடம் பெற்றிருந்தார்கள். மையக் குழுவின் கூட்டம் 1968-ஆம் ஆண்டு அக்டோபரில் கூடியபோது, இலியூவைக் கருங்காலி, கட்சி மாறி, துரோகி என்று தூற்றினார்கள். இதன் விளைவாக இவர் அரசுப் பணிகள் பெறத் தகுதியற்றவர் எனறு கருதப்பட்டார். எனினும், அரசியலமைப்பின் அடிப்படையில் இவருடைய தலைவர் பதவியைப் பறிப்பது அவ்வளவு எளிதான செயலன்று என்பது தெளிவாயிற்று. எனவே, இவரைத் தூற்ற மேற்கொண்ட முயற்சி பயனற்றதாகிவிட்டது. இவர் 1974-ஆம் ஆண்டில் காலமானார்.

**இலியோகரசு** கிரேக்க நாட்டில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்பி; ஏதன்சு நகரைச் சார்ந்தவர். ஒலிம்பியாவிலும் (Olymbia) தெல்பியிலும் (Delphi) இவர் சிற்பியாக விளங்கினார். மகா

அலெக்சாந்தர் அவையில் இடம் பெற்றிருந்த இவர், அலெக்சாந்தரின் அழைப்பிற்கிணங்க ஒலிம்பியாவிலுள்ள பிலிப்பியம் கோயிலைத் தம் சிற்பத்திறன் மூலம் அழகு படுத்தினார். பிலிப்பியம் (Philippeum) கோயில் மகா அலெக்சாந்தரின் தந்தையார் பிலிப்பிற்காகக் கட்டப்பட்டது. இலியோகரசு (Leochares) அலெக்சாந்தரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களை இக் கோயிலில் சிற்பமாக வடித்தார். இவர் எலிகார்னசசுவிலும் சில சிற்பங்களைச் செதுக்கியுள்ளார். இவர் வடித்த சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கது அப்போலோ பெல்விடர் சிற்பமாகும்.

**இலியோனிதாசு** (கி.மு. 490-480) என்பார் பண்டைய இசுபார்ட்டா என்னும் கிரேக்க நாட்டின் அரசர். பாரசீகப் பேரரசர் முதலாம் செர்சீசு (Xerxes I ) கி.பி.480-ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டின் மீதுபடையெடுத்தபோது,தெர்மோபைலே(Thermo pylae) என்னுமிடத்தில் குறுகலான கணவாய் ஒன்றின் வழியாக, மையக் கிரேக்க நாட்டை நோக்கிப் பின்வாங்கிய கிரேக்கர்களின் மூலப்படையைத் துரத்திச் சென்றார். அங்கு இவர் எதிர்பாராத தடை ஒன்று இருக்கக் கண்டார். கணவாயை வழிமறித்து 300 இசுபார்ட்டாவின் படைவீரர்கள் வரும் இடரினைக்கண்டு அஞ்சாதவராய் அமைதியாகப் பாரசீகப் படையின் வருகையை எதிர்நோக்கியிருந்தார். இசுபார்ட்டா (Sparta) வீரர்களுக்குத் தலைமை தாங்கியவர் இலியோனிதாசு என்னும் பெயர் கொண்ட அரசராவர். தம் படையைச் சார்ந்த முன்னணிப் படை வீரர்களை உடனே எதிர்த்துத் தாக்கும்படி பாரசீகப் பேரரசர் முதலாம் செர்சீசு ஆணையிட்டார். இதன் விளைவாகக் கடும் போர் மூண்டது. அலை அலையாகப் பாரசீகப்படை வீரர்கள் அனுப்பப்பட்டனர். உறுதி குலையாது இசுபார்ட்டாவின் வீரர்கள் அவர்களைக் கொன்று குவித்தனர். பொழுது சாயும் சமயம் இலியோனிதாசும் அவர்தம் படைவீரர்களும் கொல்லப்பட்டனர்

**இலிவர்ப்பூல்** இங்கிலாந்து நாட்டின் இரண்டாம் பெருந் துறைமுகப் பட்டினம். இலண்டனின் முதற் பெருந்துறைமுகம். இலிவர்ப்பூல் நகரைக் 'கப்பல்களின் மாநகர்' (City of Ships) என்று குறிப்பிடுகின்றனர்.

இலிவர்ப்பூல் (Liverpool) நகரம் இலங்காசயரில் இருக்கும் மெர்சி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது: ஐரிசுக் கடலிலிருந்து 5 கி.மீ. உள்நாட்டில் உள்ளது. இலங்காசயர்ப் பகுதியில் உற்பத்தியாகும் பருத்தியாடைகள், இயந்திரங்கள் போன்றவை இலிவர்ப்பூல் துறைமுகத்தின் வழியாகத்தான் வெளி நாடுகளுக்கு உணவுப் பொருள்களுக்கு ஈடாக அனுப்பப்படுகின்றன. இறைச்சி, புகையிலை, இலங்காயருக்குத் தேவையான கச்சாப்பொருள்கள், பருத்தி, உரோமம், தோல்கள், இரப்பர், மரம் போன்றவை இறக்குமதிப் பொருள்களாகும்.



இலிவர்ப்பூல் துறைமுகம்

இலிவர்ப்பூலின் கப்பல் துறை 11 கி.மீ. தொலைவிற்கு ஆற்றின் உள்ளே சென்றுள்ளது. இங்குள்ள கப்பலில் சரக்கு ஏற்றி இறக்குமிடம்(Quay) 64 கி.மீ. நீளமுள்ளது. பயணிகளின் கப்பல்கள் ஆற்றையொட்டியுள்ள துறையில் கரையிறங்க வசதியாக நிற்கும். சுழல் அச்சில் இயங்கும் பாலங்கள் இறங்குதுறையையும் ஆற்றுச் சுவரையும் இணைக்கின்றன. ஆற்றின் மேற்குப் பக்கத்தில் கப்பல் துறைகளும் சரக்கு ஏற்றி இறக்குமிடங்களும் அமைந்துள்ளதால் இப்பகுதி சுறுசுறுப்பாக இயங்கும். இதனைப் பர்க்கென்கெடு துறைமுகம் (Birkenhead) என்பர். இது செசயரில் (Cheshire) உள்ளது.

இலிவர்ப்பூல் துறைமுகம் மெர்சி ஆற்றின் மணலால் அடிக்கடி மூடிவிடக்கூடிய நிலையில் உள்ளது. எனவே, தொடர்ந்து மணல்வாரும் இயந்திரங்களை முடுக்கித் துறைமுகத்தைத் தூர் எடுக்கிறார்கள்.

ஆற்றின் கரையிலிருந்து படிப்படியாக நிலம் உயர்ந்து செல்கிறது. நகரின் வாணிகப் பகுதியில் அழகான கட்டடங்களும், வாணிகக் கழகங்களும் இயங்குகின்றன. மக்கள் வாழும் பகுதிகளில் நன்கு கண்காணிக்கப்படும் பழைய வீடுகளைக் காணலாம். இலிவர்ப்பூல் பல்கலைக்கழகம் 1903-ஆம் ஆண்டில நிறுவப்பட்டது. இங்குள்ள வெப்பமண்டல மருந்துகள் சிறப்புமிக்கன. வாக்கர் கலையரங்கில் (Walker

Art Gallery) பல புகழ்பெற்ற ஓவியங்களைக் காண லாம். இங்கு கி.பி. 1854-இல் கட்டப்பெற்ற புனித சார்சு மன்றம் மிக்க அழகான கட்டடமாகக் கருதப் படுகிறது. இக்கட்டடம் ஏதென்சு நகரில் இருக்கும் பார்த்தினான் கலைப்பாணியைப் பின்பற்றிக் கட்டப் பெற்றதாகும்.

இந்நகரில் இருபெரும் மாதாகோவில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றான இலிவர்ப்பூல் திருச் சபைக் கோயிலைக்கட்ட 1904-ஆம் ஆண்டில் எலிச பெத்து இளவரசி அடிக்கல் நாட்டினார். அவரே பின்னர் 1949-இல் இரண்டாம் எலிசபெத்து அரசியா னார். அக்கட்டடம் புதிய கோதிக்குக் கலைப்பாணி யில் கட்டப்பட்டுள்ளது. இங்கிலாந்திலேயே மிகப் பெரிய ஆங்கிலத் திருச்சபை அதுதான்.

பிரிட்டன் நாட்டின் மிகப்பெரும் இரசாயனத் தொழிற்கூடங்கள் இலிவர்ப்பூலிலும் அதைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் குவிந்துள்ளன. மெர்சி ஆற்றின் இருமருங்கிலும் இங்கிலாந்தின் பெரும் மாவு ஆலை கள் அமைந்துள்ளன. கப்பல் கட்டும் தொழில், கப்பல் செப்பனிடும் தொழில், கப்பல் பொறியியல் பணிகள், எண்ணெய் எடுத்தல், எண்ணெய் ஆலைகள், புகை யிலை, சர்க்கரை தூய்மை செய்தல், தோல் பதனிடும் தொழில், இரப்பர், உணவுப் பதப்படுத்தும் தொழில், ஆடைநெய்தல் போன்றவை இங்கு நடைபெறும் ஏனைய தொழில்களாகும். பர்க்கன்கெடு என்னும் பகுதியில் இலேயர்டு கப்பற் கட்டும் தொழிற்சாலை யுள்ளது. அங்குச் சிறப்பான போர்க்கப்பல்கள் பல கட்டப்பட்டன. பின்னர்ப் பர்க்கன்கெடிற்கும் இலி வர்ப்பூலுக்கும் இடையில் குவின்சுவே சாலைச் சுரங்கம் கட்டி இரு பகுதிகளையும் இணைத் துள்ளார்கள்.

இந்நகர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் வாணிக மையமாகத் தொடங்கியது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இலங்காசயரில் விசைத்தறிகள் தொடங்கப் பெற்றதால் அது உலகப் புகழ்பெற்ற பருத்திநூல் நூற்கும் மையமாகத் திகழலாயிற்று. இலிவர்ப்பூல் இலங்காசயரின் சிறப்பான துறைமுக மாயிற்று. இரண்டாம் உலகப் போரின்போது இம் மாநகரம் செருமானியர்களின் குண்டுகளுக்கு இரை யாகிப் படுநாசமுற்றது. இலிவர்ப்பூலின் மக்கள் தொகை 5,10,306 (1981).

**இலிவி(தைட்டசு இலிவியசு - கி.மு.59- கி.பி.17)** பெரும் புகழ்பெற்ற பண்டைய உரோமா னிய வரலாற்றறிஞர். இவருடைய இயற்பெயர் தைட்டசு இலிவியசு (Titus Livius). இலிவி (Livy) பட்டாவியம் (Patavium)என்னும் ஊரில் பிறந்தவர். பட்டாவியத்தை இக்காலத்தில் பாடுவா (Padua) என்கிறார்கள். உள்ளூரிலேயே இவருக்குச் சிறந்த கல்வி கற்கும் வாய்ப்பிருந்தது. கிரேக்க உலகில் பய ணம் செய்யவும் அரசியலில் பங்கு பெறவும் உரிய வாய்ப்பினை இவர் பெறவில்லை. கிரேக்க, இலத் தீன் இலக்கியங்களை இவர் விரிவாகக் கற்றவர். சிசரோ (Cicero) என்பாரின் இலக்கியம் இலிவியைப் பெரிதும் கவர்ந்தது.

இளைஞராக இருந்தபோதே இவர் வரலாற்றை எழுதும் பேரார்வத்தால் உந்தப்பட்டவரானார் நல்வினைப் பயனாக இவருக்கு உரோமாபுரியின் முதல் பேரரசரான அக்டேவியனுடன் தொடர்பு ஏற்பட்டது. அக்டேவியனை அகசுடசு சீசர் என்றும் கூறுவர். அக்டேவியன் இலிவிக்குப் பேராதரவு காட்டி கி.மு. 753 முதல் கி.மு. 9 வரையுள்ள உரோமானிய மக்களின் வரலாற்றை எழுதும்மாபெரும் திட்ட மொன்றை அமைத்துத் தரும்படி தூண்டினார்.

இவர் எழுதிய வரலாறு, 'அப் உர்பி கண்டிதா' (Ab Urbe Condita)எனப்பட்டது. 'மாநகர்(உரோமா புரி) நிலைநாட்டப் பெற்றதிலிருந்து' (From the Foundation of the City) என்று அதனைக் கூறுவர். அந்நூல் 142 தொகுதிகளைக் கொண்டது. உரோமா புரி வரலாறு பற்றிய இவருடைய முதல் தொகுதி கி.மு. 27-25-ஆம் ஆண்டுகளில் வெளியாயிற்று. அடுத்த தொகுதிகள் அதற்குப் பின்னர் விரைந்து வெளியாயின.

இலிவியின் 1 முதல் 10 வரையிலான நூல் தொகுதி கள் கி.மு. 753 முதல் கி.மு. 293-ஆம் ஆண்டு வரையி லான காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை யும், 21 முதல் 45 வரையிலான தொகுதிகள் கி.மு. 219 முதல் கி.மு.167-ஆம் ஆண்டு வரையிலான வர லாற்றையும் குறிப்பன. மேற்கூறிய 45 தொகுதிகளும் இன்றும் அழியாமல் நிலைத்துள்ளன. இலிவி, 142 தொகுதிகளின் சுருக்கத்தையும் எழுதியுள்ளார். அவற்றுள் ஒரு தொகுதிக்கான சுருக்கத்தைத் தவிர ஏனையவை இன்றும் உள்ளன. இலிவியின் நூற்றொ குப்புகள் பொதுவாக ஐந்தைந்து தொகுதிகளைக் கொண்ட தொகுப்பாக வெளியிடப்பட்டன. தொடக் கத்தில் இவர் கி.மு. 31-ஆம் ஆண்டு வரையிலான தொகுதிகளையே வெளியிட எண்ணியிருந்தார். அவ்வாண்டில் நடைபெற்ற ஆக்டியப்போரில் (Battle of Actium) அகசுடசு வெற்றி பெற்றுப் பேரரசில் அமைதியை நிலைநாட்டினார். இவர் எழுதிய வர லாறு 133 தொகுதிகளுடன் முடிவடைந்திருந்தது. 134 முதல் 142 வரையிலுமான தொகுதிகள் கி.மு

9-ஆம் ஆண்டு வரையிலான வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளன. அகசுடசு உயிருடன் இருந்த காலத்திலேயே 120 தொகுதிகள் வரை வெளியிடப்பட்டன. 121 முதல் 142 வரையிலான தொகுதிகள் அகசுடசு இறந்த ஆண்டான கி.பி. 14-ஆம் ஆண்டு வரை வெளியிடப்படவில்லை. இத்தொகுதிகள் கி.மு. 42 முதல் கி.மு. 9-ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தைச் சேர்ந்தவையாகையால் இத்தொகுதிகளில் அகசுடசுக்குத் தொல்லை கொடுக்கும் செய்திகள் இருந்திருக்கக்கூடும் என்றும், அதனால்தான் அவை வெளியிடப்படவில்லை என்றும் கருதுகிறார்கள்.

இலிவியின் நூல் தொகுதிகளை இன்றைய கணக்குப்படி பதிக்க வேண்டுமாயின், தொகுதி ஒன்று 300 பக்கங்கள் கொண்டதாக 24 தொகுதிகளாகப் பதிக்கலாம். இதிலிருந்து இலிவியின் பணியின் பெருமையையும் சிறப்பையும் உணரலாம்.

முதல் இருபது தொகுதிகளுக்குச் சான்றுகள் குறைவாக இருந்தமையால் அவை 535 ஆண்டுகளின் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. ஆனால், 21 முதல் 30 வரையிலான தொகுதிகள் 18 ஆண்டு வரலாற்றை-அதாவது இரண்டாம் பியூனியப் போர் வரையிலான வரலாற்றை விளக்குகின்றன. பின்னால் வெளியான தொகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோராண்டில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை மட்டும் குறிக்கிறது.

உண்மையான அரசியல் அறிவையோ இராணுவ நுணுக்கத்தையோ இலிவி பெற்றிருக்கவில்லை. ஆனால், இவருக்குக் கதை கூறும் ஆற்றல் மிகுந்து இருந்தது. இவர் தாம் எழுதிய வரலாற்றுத் தொகுதிகளை உரைநடைக் காவியமாக எழுதியுள்ளார். இவருடைய நூல் இலக்கிய நடையைவிட அற உணர்வைக் கற்பிக்கும் ஆற்றல் கொண்டது.

தாம் எழுதிய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இலிவிக்குப் போதுமான சான்றுகள் கிடைத்தில. அதனால், அவை திறனாய்வு என்னும் உரைகல்லால் உரைத்துப் பார்க்கப்படாதவை. எனவே, குற்றங்குறைகள் இருப்பது தவிர்க்க முடியாததாகும். தவறான செய்திகளும் கவனக் குறைவால் ஏற்படும் பிழைகளும் இவருடைய நூலில் காணப்படுவது இயற்கை. தாம் வாழ்ந்த காலத்திற்கு முந்தைய கால நிகழ்ச்சிகளையும் நிறுவனங்களையும் பழக்க வழக்கங்களையும் தம் காலத்துச் சமூக நிலையோடும் அரசர்களோடும் ஒப்பிட்டு எழுதி, வரலாற்றில் பிழை செய்துவிட்டார் இலிவி என்று சாடுபவர்களும் உண்டு. இதனால், சில வேளைகளில் இவருடைய வரலாற்றுக் கூற்றுகள் கட்டுக்கதைகளாகவும் மாறிவிட்டன. நாட்டுணர்ச்சியின் விளைவாகத் தம் சாலத்தவர்களின் குற்றங்குறைகளைச் சொல்லாமல் விட்ட குறையும் இவரிடம் உண்டு.

சான்றுகள் போதுமானவையாக இருக்கும் கால கட்ட வரலாற்று நிகழ்ச்சிகளில் மேற்கூறிய குறைகள் குறைவாகவேயுள்ளன. இரண்டாம் பியூனியப் போர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சிறப்பானவை எனலாம். இதற்குக் காரணம் போலிபயசின் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அவை எழுதப் பெற்றமையேயாகும்.

இலிவிக்குச் சுதந்திரம், சட்டம், மானம், நாட்டுணர்ச்சி போன்ற கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றிருந்தது. எனவே, இவரிடம் அறஞ் சார்ந்த மனச்சான்று குடிகொண்டிருந்ததெனலாம். உரோமாபுரியின் பெருமையைப் பாதுகாத்த பெருமை இவருடைய வரலாற்றுக்குண்டு. இவருடைய இலக்கிய நடையும் அழகுமிக்கது. வரலாற்று நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவதில் இவர் மிக வல்லவர்.

இவர் மொழி தூய்மைக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது. இவருடைய வரலாற்றோவியம் அகசுதசின் பொற்காலத்தைப் படம்பிடித்துக் காட்டும் அரும்பெரும் நினைவுச் சின்னம் என்றும், இன்றும் நிலைத்துள்ள அழியாத சொல்லோவியம் என்றும் கூறலாம்.

இலிவி தம் வாழ்நாளின் பெரும் பகுதியை உரோமாபுரியிலேயே கழித்தாலும் பட்டாவியத்தில் கி.பி. 17-ஆம் ஆண்டில் காலமானார்.

**இலிவிங்சுடன், தாவீது** (கி.பி. 1813-73) இசுகாட்லாந்தைச் சார்ந்த கிறித்தவ சமயப் போதகரும் புது நாடுகளை ஆய்வு செய்த ஆய்வாளருமாவார். இலிவிங்சுடன் (Livingstone, David) கி.பி. 1813-ஆம் ஆண்டில் இலானார்க்சயரிலுள்ள இலோபிளாண்டயர் என்னும் ஊரில் பிறந்தார்; பிள்ளைப் பருவத்தையும் இளமையையும் பஞ்சாலையொன்றில் பணியாற்றிக் கழித்த இவர் போதுமான அளவிற்குப் பொருளைத் திரட்டிக் கொண்டு கிளாசுகோ நகர் சென்று, அங்கு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். இவர், கி.பி. 1840-ஆம் ஆண்டு மருத்துவக் கல்வியில் பட்டம் பெற்றார். இலண்டன் சமய போதகக் கழகம்(London Missionary Society) இவரை ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள பெச்சுவானாலாந்திற்கு மருத்துவ உதவி செய்யும் நோக்குடன் அனுப்பியது. அங்கு நோய் வாய்ப்பட்டவர்களைப் பேணிக் காத்ததுடன்

அடிமைத் தளையைக் அகற்றவும் இவர் அரும் பாடுபட்டார்.

இவர் கி.பி 1849 முதல் 1856வரை நகாமி (Nagamin) ஏரியையும் விக்டோரியா நீர்வீழ்ச்சியையும் கண்டறிந்ததுடன், சாம்பெசி ஆற்றையும் ஆய்வு செய்தார். பின்னர், இவர் பிரிட்டனுக்குத் திரும்பினார். பதினெட்டு மாதங்களைப் பிரிட்டனில் கழித்த பிறகு, இவர் மீண்டும் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். இவருடைய மூன்றாம் ஆய்வுப் பயணத்தின்போது (கி.பி. 1858 முதல் 1861 வரை) சாம்பெசி ஆற்றின் துணையாறுகளையும் நியாசா ஏரியையும் கண்டறிந்து, நூலொன்றை எழுதுவதற்கான செய்திகளைத் திரட்டிக் கொண்டார். அந்நூல் வாயிலாகப் போர்ச்சுகீசியர் அடிமை வாணிகத்தில் செய்த அட்டூழியங்களை உலகறியச் செய்தார். அரசர் நிலவியல் கழகம் (Royal Geographical Society) தந்த பேரார்வத்தின் விளைவாக கி.பி. 1866-ஆம் ஆண்டு நைல் ஆற்றின் உற்பத்தி இடத்தைக் கண்டறியும், ஆய்விற்குப் பணிக்கப்பட்டுச் சென்றார். ஆனால் அடுத்த ஐந்தாண்டுகளில் அவரைப் பற்றிச் செய்தி ஒன்றுமே தெரியவில்லை. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமிருந்த பொதுமக்கள் கவலைப்படவே, 'நியூயார்க் ஏரால்டு' (New York Herald) என்னும் நாளிதழ், என்றி மார்ட்டன் இசுட்டான்லி (Henry Morton Stanley, 1841-1904) என்பாரை இலிவிங்சுடனைத் தேடும் பணியில் ஈடுபடுத்தியது. அவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இலிவிங்சுடனைத் தங்கனீக்கா ஏரிக்கரை ஊரான உசிசி (Ujiji) என்னுமிடத்தில் கண்டார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் ஆய்வுப் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த இலிவிங்சுடன் சாம்பியாவிலுள்ள இலாலா (Ilala) என்னுமிடத்தில் கி.பி. 1873 மே மாதம் முதல் நாள் காலமானார்.

இவரை ஆப்பிரிக்கர்கள் மதித்துப் போற்றினர். அதுபோல் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் கூட இவருடைய தொண்டுகளை அன்புடன் பாராட்டினர். இவர் கிறித்தவச் சமயத்திற்கும் மருத்துவத் தொழிலுக்கும் ஆக்கமும் ஊக்கமும் காட்டிப் பெருந்தொண்டு செய்த பெரியவராவார்.

**இலிவோவு, சார்சி யுவசினிவிச்சு (கி.பி. 1861-1925)** என்பவர் முற்போக்குக் கருத்துக் கொண்ட உருசிய அரசியல் தலைவர். இவர் 1917-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உருசியாவில் உருவாக்கப்பெற்ற இடைக்கால அரசின் முதலமைச்சராக இருந்தார். இலிவோவு (Lvov, Georgi Yevgenievich) கி.பி. 1861-ஆம் ஆண்டு துலா (Tula) என்னும் ஊரில் பிறந்தார். இவரை இளவரசர் இலிவோவு (Prince Lvov) என்றும் கூறுவர். இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டில் மாசுகோ (Moscow) பல்கலைக் கழகத்தில் சட்டவியலில் பட்டம் பெற்றார். பின்னர், சார் மன்னரின் அரசுப் பணியாளராகச் சேர்ந்தார். சமூகப் பணியையும் பொதுப்பணிகளையும் செய்யும் நோக்குடன் கி.பி. 1893-இல் தம் பதவியை விட்டு விலகினார். பின்னர்த் துலா என்னும் ஊரில் தல ஆட்சிக் குழுவின் தலைவராகவும் அனைத்து உருசிய ஒன்றியத் தல ஆட்சிக் குழுக்களின் தலைவராகவும் பணியாற்றினார்.

இலிவோவின் தீவிரமான அரசியல் வாழ்க்கை 1906-ஆம் ஆண்டில் தொடங்கியது. இவர் முற்போக்கு அரசியலமைப்பு மக்களாட்சிக் கட்சியில் (Kadet) சேர்ந்து, உருசிய நாடாளுமன்றமான தூமா (Duma) விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசுவின் ஆட்சி 1917-இல் ஒழிக்கப்பட்டபின், புதிய இடைக்கால அரசின் அமைச்சரவைக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். இரண்டு மாதங்கள் ஆட்சியை நடத்திய பின், 1917-சூலை மாதம் 21-ஆம் நாள் ஆட்சியை அலெக்சாந்தர் கெரன்சுகி (Alexander Kerensky) என்பாரிடம் ஒப்படைத்துவிட்டுப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

போல்சுவிக்குகள் (Polsheviks) 1917 நவம்பரில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டவுடன் இலிவோவு கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பெற்றார். ஆனால், இவர் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார். பின்னர், 1919-இல் உருசியப் போல்சுவிக்குக் கட்சியின் பகைக் குழுத் தலைவராகிப் பாரிசில் வாழ்ந்தார். வெர்சே (Versailles)அமைதி மாநாட்டில் இவர் உருசியாவின் பேராளர் ஆவதற்கு முயன்று தோல்வியுற்றார். இவர் 1925-இல் பாரிசில் காலமானார்.

**இலின்பியாவோ (1907-1971)** சீனாவின் பாதுகாப்பு அமைச்சராக 1959 முதல் 1971 வரை பதவி வகித்தவர். மாசேதுங்கை அடுத்துச் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக இலின்பியாவோ (Lin Piao) வரக்கூடியவர் என்று பல அரசியல் வல்லுநர்கள்நம்பினார்கள். ஆனால், இவர் 1971-ஆம் ஆண்டில் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார். வானவூர்தி நொறுங்கி விழுந்து மங்கோலியாவில், 1971-ஆம் ஆண்டில் இவர் இறந்துவிட்டார் என்னும் செய்தியைச் சீனா 1972-இல் வெளியிட்டது. மாசேதுங்கைக் கொன்றுவிட்டு, அரசைக் கவிழ்க்க இவர் முயற்சி செய்து தோல்வியுற்றார் என்றும்,

பின்னர் உயிர் தப்பச் சீனாவை விட்டுச் செல்ல முயன்றபோது இவர் விமான விபத்தில் உயிர் துறந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது மக்கள் விடுதலைப் படையின் தலைவராக இலின் பணியாற்றினார். மாசேதுங்கை ஆதரிக்கும் செங்காவலர்களின் தலைவராகவும் இவர் சிறிதுகாலம் செயலாற்றினார்.


இலின், உப்பே (Hupeh) என்னும் மாநிலத்தில் 1907 – இல் பிறந்தார். இவர் வாம்போ (Whampao) படைக்கழகத்தில் சியாங்கேசேக் (Chiang Kai-Shek)கின் கீழ் மாணவராக இருந்தார். பட்டப் படிப்பை முடித்த பின்னர், மாசேதுங்கின் பொதுவுடைமைப் படையில் சேர்ந்தார். இவர் சீனாவின் மீது படையெடுத்துவந்த சப்பானியப் படைகளைத் தோற்கடித்துப் பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. இது 1930–ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. சீனாவின் உள்நாட்டுப் போரின்போது, தேசிய சீனப் படைகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டவர் இவர் என்றும் கூறுவர். இவர் 1971–இல் மங்கோலியாவில் காலமானார்.

**இலினாய்** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இருபத்தோராம் மாநிலமாக கி.பி. 1818–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 3– ஆம் நாள் இணைந்தது. மக்கள் தொகையில் இது அமெரிக்க ஐக்கிய நாடுகளுள் ஐந்தாமிடத்தைப் பெறுகின்றது. இம்மாநிலத்திலுள்ள சிகாகோ மாநகரமே அமெரிக்காவின் இரண்டாம் பெரு நகரமாகும். இலினாய் (Illinois) மக்கள் தம் மாநிலத்தை இலிங்கனின் நிலம் என்று அன்பாகக் குறிப்பிடுவர். ஆபிரகாம் இலிங்கன் இம் மாநிலத்தில்தான் தம் வாழ்வின் பெரும்பங்கைக் கழித்தார். இதன் தலைநகர் இசுபிரிங்குபீல்டு நகரமாகும். இங்குத்தான் இலிங்கன் அடக்கம் செய்யப் பெற்றார்.

பரப்பு: இலினாயிலின் பரப்பு 1,46,075 ச.கி.மீ. அதில் 1689 ச.கி.மீ. பரப்பில் உள்நாட்டு நீர்நிலைகள் அடங்கும்.

மக்கள்தொகை: இம் மாநிலத்தின் மக்கள் தொகை 1,14,18,461 (1980). சிகாகோ, மக்கள் தொகைப் பெருக்கம் மிகுந்த, சிறந்த தொழிற்சாலை நகரம்.

எல்லைகள்: இம் மாநிலத்திற்கு வடக்கில் விசுகான்சினும், வட கிழக்கில் மிச்சிகன் ஏரியும், கிழக்கில் இந்தியானாவும், தென்கிழக்கில் ஒகையோ ஆறும், மேற்கில் மிசிசிப்பி ஆறும் எல்லைகளாக அமைந்துள்ளன.




இலினாய்

நிலப்பிரிவுகள்: இம் மாநிலத்தை மூன்று நிலப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, மத்திய சமவெளிகள், சானிக்குன்றுகள், வளைகுடாக் கடற்கரைச் சமவெளி என்பனவாம்.

மத்திய சமவெளிகள் வளமான உள்நாட்டுச் சமவெளிகளின் பகுதியாக மத்திய மேற்கு மாநிலங்களில் பெரும்பாலானவற்றை அடைத்துக் கொண்டுள்ளன. மத்திய சமவெளியின் பகுதியான பெரும் ஏரிச் சமவெளிகளில்தான், தொழிற்சாலைகளுக்கும் கப்பற்கட்டும் தொழிலுக்கும் பெயர் பெற்ற சிகாகோ நகரம் அமைந்துள்ளது. காற்றுப்போக்கற்ற பகுதி

எனப்பெறும் (Driftless Area) பிரிவில் உயர்ந்த மலைத் தொடர்களையும் ஆழ்ந்த பள்ளத்தாக்கு களையும் காணலாம். சார்லசு மாண்டு (Charles Mound) இம் மாநிலத்தின்மிக உயர்ந்த மலையுச்சியா கும். இதன் உயரம் 376 மீ. மாநிலத்தின் நடுவில் தில் சமவெளிகளும் (Till Plains) பல தோட்டங்களும் உள்ளன.

சானிக் குன்றுகள் பகுதியைச் சில வேளையில் இலினாய் ஓசார்க்சு என்றும் குறிப்பிடுவர். இப் பகுதி 91 மீட்டர் முதல் 325 மீட்டர் வரை உயர முள்ளது. இங்குச் சமவெளிகள், காடுகள், ஆற்று முகடுகள், காடுகள் கொண்ட குன்றுகள் போன்றவை யுள்ளன.

வளைகுடாக் கடற்கரைச் சமவெளி, இலினாய்ச் சமவெளியின் வடவோரத்தில் அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் உயரம் குறைந்த பகுதியை இங்குக் காணலாம்.



சிகாகோ கடற்கரைப் பகுதி

தட்பவெப்பநிலை: இலினாய்த் தட்பவெப்ப நிலை பருவத்திற்குப் பருவம் மிகவும் மாறுபடுகிறது. கடுங்குளிரும் கடுங் கோடையும் இங்குத் தென்படும். நாளுக்குநாள் தட்பவெப்பநிலை மாறுவதுமுண்டு. வடபகுதி குளிர் மிகுந்த பகுதி. மெக்சிகோ வளை குடாவிலிருந்து வீசும் காற்றுகள் இம் மாநிலத்திற்கு மழையைக் கொண்டு வருகின்றன.

வேளாண்மை: வேளாண்மையின் அடிப்படையில் இம் மாநிலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, பருத்தி விளையும் தென்கோடிப் பகுதி, வைக்கோல், பால்பண்ணைப் பொருள்கள் கிட்டும் வடக்குக் குறுகிய பகுதி, மக்காச்சோளம் விளையும் பகுதி, கோதுமை விளையும் பகுதி என்பனவாம்.

கனிவளம்: மென்மையான நிலக்கரிப் படிவங்கள், இம்மாநிலத்தின் மூன்றில் இரண்டு பகுதிகளில் பரவி யுள்ளன; பெட்ரோலும் இங்குக் கிடைக்கிறது. கல் வகைகள் மிகுதியாக உள்ளன. இயற்கை வாயுவும் கிடைக்கிறது.

தொழில்வளம்: சிகாகோ பகுதியில் உருக்குத் தொழிற்சாலைகள் மிகுதி. வேளாண்மைத் தொழி லுக்குத் தேவையான இயந்திரங்கள் சிகாகோ, பயோரியா, மோலின், சோலியட்டுப் போன்ற நகரங் களின் பட்டறைகளில் உற்பத்தியாகின்றன. புனித உலூயிக்கு அருகில் இரசாயனப் பொருள்கள் உற் பத்தியாகின்றன. அச்சிட்டு வெளியிடும் தொழில், மின் இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனக் கருவிகள், பெட்ரோலைத் தூய்மைப்படுத்துதல் போன்ற தொழில்கள் இம்மாநிலத்தின் சிறப்பான தொழில்களாகும். இறைச்சியைப் பிப்பாய்களில் அடைத்து அனுப்புதல், மக்காச்சோளத்தைப் பதப் படுத்துதல் போன்ற தொழில்களைச் செய்யும் தொழிற்சாலைகளை ஆர்கோ, பெசின், கிரானைட்டு மாநகரம் போன்ற இடங்களில் காணலாம். சோயா பீன்சு, கிப்சன்சிடி, சாம்பெயின், சிகாகோ போன்ற நகரங்களில் பதப்படுத்தப்படுகிறது. புனித உலூயி, பயோரியா, இராக்போர்டு ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன.

போக்குவரத்து: இம்மாநிலத்தில் 22 சிறப்பான இருப்புப்பாதைத் தொடர்களும், சீரிய சாலை அமைப்புகளும் உள்ளன. வானவூர்தி நிலையங்களும் பல உள்ளன.

வரலாறு: இலினாயில் கி.பி. 17–ஆம் நூற்றாண் டின் இறுதியில் பிரெஞ்சு ஆய்வாளர்களும், வணிகர் களும் குடியேறினர். ஏழாண்டுப் போரின் விளைவாக இப்பகுதி ஆங்கிலேயர் வசம் வந்தது. சுதந்திரப் போராட்ட காலத்தில் இங்கும் போர் நடைபெற் றது. பின்னர், இம்மாநிலம் அமெரிக்க ஐக்கிய நாடு களின் பகுதியாயிற்று.

**இலினாய் உள மொழியியல் திறன் சோதனை** என்பது குழந்தைகளின் மொழித் திறனை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்ட உளவியல் சோதனை ஆகும். இரண்டு வயது முதல்

பத்து வயது வரையுள்ள குழந்தைகளின் மொழித் திறனை இச் சோதனை மூலம் அறிய முடியும். ஆசுகுடு (Osgood) என்பவர் அமைத்த கருத்துப்பரி மாற்றச் சோதனையின் அடிப்படையில் இலினாய் உளமொழியியல் திறன் சோதனை (Illinois Test of Psycholinguistic Abilities) அமைக்கப்பட்டுள்ளது. இச்சோதனை பின்வரும் பகுதிகளைக் கொண்டதாகும்.

வழிகள் (Channel): கேட்டுச் சொல்லுதல், பார்த்தறிதல்.

செயல் இயங்குமுறைகள் (Processes): (பெற்றுக் கொள்ளுதல்) சொற்களையும் படங்களையும் பார்த்து அறிதல்.

ஒருங்கிணைத்தல்: முன்னறிந்தவற்றுடன் புதிய அறிவை இணைத்தல்.

உணர்த்துதல்: கருத்துகளைச் சொற்களாலும் செய்கைகளாலும் தெரியப்படுத்துதல்.

நிலைகள் (Levels): மொழிச் சின்னங்களைப் பயன்படுத்துதல், புலன்காட்சி வேகம், மனப்பாடம் செய்யும் வேகம், படித்ததை நினைவிலிருத்தல் போன்ற பழக்கமான முறைகளைப் பயன்படுத்துதல்.

இச்சோதனைக்கு எடுத்துக்காட்டாக, உணர்த்துதல் என்னும் பகுதியின் சோதனை பின்வரும் முறையில் அமைதலைக் காணலாம். குழந்தைகளுக்குப் பழக்கமான எழுதுகோல், ஊதல், கரும்பலகை, பம்பரம் போன்ற பொருள்களைக் காட்டி 'இவற்றை என்ன செய்யலாம், என்று கேட்கப்படுகிறது. குழந்தைகள் இக்கேள்விக்குத் தம் செய்கைகள் மூலம் விடை கொடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. வேறொரு சோதனைப்பகுதியில் குழந்தைகளுக்கு 'இங்கே ஒரு பையன் இருக்கிறான் அங்கே மூன்று . . .' என்பது போன்ற முடிவுறாச் சொற்றொடர்களுக்கு இயைபுள்ள படங்கள் காட்டப்படுகின்றன. குழந்தைகள் இப்படங்களைப் பார்த்துப் பொருத்தமான முழுச் சொற்றொடர்களைக் கூற வேண்டும். இத்தகைய சோதனைகளின் மூலம் பொது இயக்கத்திறன் வளர்ச்சி, புலனியக்கத்திறன் ஒருங்கிணைவு, புலன்காட்சித்திறன், மொழியறிவு, அறிதல் திறன், சமூக முதிர்ச்சி போன்ற பல திறன்களை மதிப்பீடு செய்ய முடியும். இலினாய் மொழியியல் சோதனையையொட்டி வேறு பல மொழியியல் சோதனைகள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சோதனைகள் குழந்தைகளின் மொழி நாட்டத்தினைக் கண்டுபிடிக்க உதவி செய்வதோடு, கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் கருவிகளாகவும் பயன்படுகின்றன.

இச்சோதனைகளை உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளிலும் அந்த நாடுகளில் வழங்கும் மொழிகளில் அமைத்துப் பயன்படுத்துதல் வேண்டும்.

**இலீகாக்கு, இசுடீபன் பட்லர் (கி.பி. 1869-1944)** கனடா நாட்டைச் சார்ந்த சிறந்த நகைச்சுவை எழுத்தாளர்; அரசியல் கலை அறிஞர்; முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய இலக்கியப் பேரறிஞர்.

இவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆம்ப்சயரிலுள்ள (Hampshire) சுவான்மோர் (Swanmore) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் பெற்றோர்கள் இவர் ஆறாம் வயதில் கனடா நாட்டில் குடியேறினர். இவர் தொராண்டோ பல்கலைக் கழகத்தைச் (Toronto University) சேர்ந்த மேலைக் கனடாக் கல்லூரியில் (Upper Canada College) கல்வி கற்று, அப்பல்கலைக் கழகத்தில் 1903-ஆம் ஆண்டில் டாக்டர் (Ph.D) பட்டம் பெற்றார். அதே ஆண்டில் மாண்ட்ரியால் (Montreal) பல்கலைக்கழகத்தில் இவர் ஆசிரியரானார். பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளின் தலைவராக இலீகாக்கு (Leacock, Stephen Butler) 1908-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். பல்வேறு கலைகளைப் பற்றி ஏறத்தாழ 20 நூல்களை இவர் எழுதியிருந்தாலும், இவரை நகைச்சுவை மன்னர் என்றே கூறுவர்.

இவர் கீழ்க்காணும் நூல்களை எழுதிப் புகழ் பெற்றார். அரசியற்கலை மூலபாடம் (Elements of Political Science), பிரிட்டன் பேரரசு, கனடா போன்றவை இவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்று பகரும் நூல்கள். புனிதமாலோ என்னும் மாலுமி (The Mariner of St.Malo), மார்க்கு துவைன் (Mark Twain), சார்லசு திக்கன்சு (Charles Dickens) போன்றவை இவர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்களாகும். இவருடைய நகைச்சுவை நூல்கள் உலகப் புகழ் படைத்தவை. இலக்கியத் தவறுகள் ( Literary Lapses), பொருளற்ற புதினங்கள் (Nonsense Novels), சிற்றூரின் சூரியவொளித்துணுக்குகள் (Sunshine Sketches of a Little Town), பணக்காரச் சோம்பேறிகளின் அர்க்கேடிய துணிவுப் பயணங்கள் (Arcadian Adventures of the Idle Rich), போதும் இக்கல்லூரிகள் (Too much College) போன்றவை நகைச்சுவை நூல்கள். மேலும் 'நகைச்சுவைக் கொள்கையும் உத்தியும்' (Humour: Its Theory and Technique) என்னும் இந்நூலில் இவரது நகைச்சுவை பற்றிய உரையாடல்

களைக் காணலாம். 'எனக்குப்பின் யான் விட்டுவந்த பையன்' (The Boy I left Behind me) என்னும் வாழ்க்கை வரலாற்று நூல், முடிவுறாத நிலையிலேயே உள்ளது.

இவர் 1944-இல் கனடா நாட்டிலுள்ள தொராண்டோவில் காலமானார்.

**இலீகே, இலூயிசு சைமூர் பாசட்டு (1903-1972)** மானிடவியல், தொல்லுயிரியல், தொல்லியல் முதலான துறைகளில் சிறந்த ஆய்வுகளை மேற் கொண்ட அறிஞர்; ஆப்பிரிக்காவின் வரலாற்றுக்கும் முந்தைய மனித நிலைகளை முதன் முதலாக ஆய்ந்தவர். இவர் கென்யா நாட்டில் நைரோபியின் அருகிலுள்ள கபெட்டி என்னுமிடத்தில் 1903-ஆம் ஆண்டு பிறந்தார்.



இலீகே

முதல் உலகப் பெரும் போராலும், கென்யா நாட்டில் தாய் தந்தையர் குடியேறியிருந்தமையாலும், தம் தாய்நாடான இங்கிலாந்தில் தொடர்ச்சியாகப் பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் மேற்கொள்ள இயலாமற் போயிற்று. கென்யாவில் இருந்த காலத்தில் இலீகே (Lewis Seymour Bassat Leakay) கிக்கூயு கிளை மொழியையும், 1923-ஆம் ஆண்டில் கனடா நாட்டின் தொல்லுயிரியலார் டபுள்யு. இ. குட்லருடன் ஆய்வுப் பணியில் உதவி புரியும்பொழுது சுவாகிலி என்னும் கிழக்கு ஆப்பிரிக்கக் கிளை மொழியையும் கற்றார். இப்பணியின் பொழுதே தொல்லுயிரியலில் மிகவும் ஆர்வங் கொண்டு புதைபடிவங்களை ஆராய்வதில் மூழ்கினார்.

இதன் பின்னர், கிழக்கு ஆப்பிரிக்கத் தொல்லியல் ஆய்வுக் களப்பணிகளை 1926, 1927, 1928-29, 1931-32 ஆகியஆண்டுகளில் மேற்கொண்டார். இந்த ஆய்வுப் பணியே, கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் தொல்லியல், தொல்லுயிரியல் ஆகியவற்றின் அறிவினை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தது. தான் சானியாவில் ஒல்டுவாய் சார்சு (Olduvai George) என்னும் இடத்தில் தனது ஆய்வைத் தொடங்கினார். இவ்விடமே இவரது புகழ்பெற்ற கண்டுபிடிப்புகளுக்கு அமைவிடமாய் இருந்தது. இங்குக் கிடைத்த ஓமினிடு (Hominid) மண்டை ஓடுகளை ஆராய்ந்து அவற்றிற்குச் சின்சேன்திரபசு (Zinjanthropus) எனப் பெயரிட்டார். இதனை இக்காலத்தில் ஆத்திரலோபித்திகசு என அறுதியிட்டுள்ளனர். எனினும் இலீகே, சின்சேன்திரபசுவை மனிதனின் நேரான மூதாதையர் அல்லர் என முடிவு செய்தார். இக் காலத்திலேயே சின்சேன்திரபசுவிற்கு இணையாக வாழ்ந்திருக்கும் என ஊகிக்கும் ஓமோ ஏபிலிசு (Homo Habilis) என்னும் மண்டையோட்டைக் கிழக்கு ஆப்பிரிக்காவில் இலீகே கண்டெடுத்தார். இது சின்சேன்திரபசுவைக் காட்டிலும் வளர்ச்சி பெற்ற இக்கால மனிதனுக்கு ஓரளவு நெருங்கிய மூதாதையராக இருக்க முடியும் எனக் கூறினார். பெரும்பாலான அறிஞர்கள் இக் கருத்தை ஏற்கவில்லையாயினும் இவர்தம் ஆய்வுகள், இக்கூற்றை ஆராய அடித்தளமாக அமைந்ததை அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

இவ்வாய்வுக்குப் பின் இவர் கேம்பிரிட்சு, எடின்பரோ, பர்மிங்காம் முதலான பல்கலைக் கழகங்களில் ஆய்வாளராகவும் சிறப்பு விரிவுரையாளராகவும் பணியாற்றினார். இக்காலங்களில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் திரட்டே, 1961-ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட 'ஆப்பிரிக்காவில் மனிதனின் முன்னேற்றமும் படிமுறை வளர்ச்சியும்' ஆகும். இந்த வெளியீட்டுக்குப் பின்னர், அடுத்தடுத்துக் கலிபோர்னியா, ஏல், இலினாய், கார்னல், நைரோபி முதலான பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளராகவும் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றி

இத்துறைகளில் தொடர்ந்து முன்னோடி ஆய்வுகளை மேற்கொண்டார்.

இவரது ஐம்பது ஆண்டுக்கால ஆராய்ச்சியினால் இன ஒப்பாய்வியல், உயிரினவியல், வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய தொல்லியல், தொல்சூழ்நிலையியல் (Palaeoecology) முதலான துறைகளில் ஆய்வுகள் மிகுந்தன. பல முன்னோடிக் கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட இவருக்குப் பல சிறப்புப் பட்டங்கள் அளிக்கப்பட்டன.

**இலீப்சிக்குப் போர்** (கி.பி. 1813) முதலாம் நெப்போலியனுக்கும் நான்காம் கூட்டிணைப்பு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற போர். ஆசுத்திரியர், உருசியர், பிரசியர் ஆகியோர் படைகள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னேறி, இலீப்சிக்கு (Leipzig) வந்தடைந்தன. அவர்களிடம் இருந்த படைவீரர்களின் எண்ணிக்கை நெப்போலியனிடம் இருந்த படைவீரர்களின் எண்ணிக்கையைவிட இருமடங்கு பெரிதாக இருந்தது. முதல் நாள் நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றிபெற்றார்கள். போர் அவர்களுக்குச் சாதகமாக அமைந்த போதிலும் அதில் மிகப் பலர் உயிரிழந்தனர். இதுவரை நெப்போலியனுடன் இணைந்து போரிட்ட சாக்சானியர்கள், கி. பி. 1813-ஆம் ஆண்டு அக்டோபர் 18-ஆம் நாள் எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டனர். நெப்போலியனுக்குப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலை யேற்பட்டது. பிலெசி (Pleisse) ஆற்றைக் கடக்க ஒரே ஒரு பாலம் மட்டுமேயிருந்தது, சொல்லொணா இடர்களை விளைவித்தது. இறுதியாக இவர் 70,000 படைவீரர்களுடனே பின்வாங்கி, இரைன் ஆற்றுப் பக்கம் சென்றார். அவர்களுள் பலர் நச்சுக் காய்ச்சலுக்கு ஆளாயினர். இதனால், நெப்போலியனுக்குத் தோல்வி ஏற்பட்டது. இலீப்சிக்குப் போர், செருமனியின் விடுதலையை உறுதிப்படுத்தியது. இப்போரைப் பின்னர் வந்த செருமானிய வரலாற்றறிஞர்கள் 'நாடுகளின் போர்' (Battle of the Nations) என்றனர். இலீப்சிக்கு, இன்று கிழக்குச் செருமனி நாட்டில் உள்ளது.

**இலீ, போர்ட்டர் இரேமாண்டு** (கி.பி. 1870-1938) அமெரிக்க ஐக்கிய நாட்டில் சமூகப் பணிக் கல்வியை ஒரு தனித்துறையாக ஆக்கியவர்களுள் முன்னோடியாகக் கருதப்படுபவர். கார்னல் பல்கலைக்கழகத்தில் (Cornell University) கல்வி கற்கும் காலத்தில் இலீ போர்ட்டர் (Lee, Porter Raymond) சமூகப் பணியில் ஈடுபாடு கொண்டார். அக்காலத்தில் இந்நிறுவனம் ஒன்றுதான் மாணவர்களுக்குச் சமூகப் பணியில் தனிப்பட்ட பயிற்சி கொடுத்து வந்தது.

இவர் கல்வியாளராக இருந்ததோடு சமூகப் பணியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் அமெரிக்காவிலுள்ள அறக்கட்டளை நிறுவனத்தில் பல ஆண்டுகள் பணி செய்து வந்தார். இவர் மற்றக் கல்வித்துறைகளுக்கும் சமூகப் பணித் துறைக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, சமூகப்பணிக்கல்வியின் வளர்ச்சியில் ஈடுபட்டார். அமெரிக்கச் சமூகப்பணிக் கல்வி நிறுவனம் 1919-ஆம் ஆண்டில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர்.

தனியாள் சமூகப் பணி (Social Case Work) என்னும் துறை பற்றிய கோட்பாடுகளையும் செய்முறையையும் உருவாக்கியவர் இவரேயாவர். இவர் இயற்றிய 'சமூகப்பணி: காரணிகளும் செயல் முறையும்' (Social Work : Causes and Function) என்னும் நூல் சமூக மறுவாழ்விற்கும் சமூகப் பணிக்குமுள்ள தொடர்புகளையும் வேறுபாடுகளையும் விளக்குகிறது.

பொதுநலநாட்டு நிதித்திட்டத்தின் உதவியுடன் குழந்தைகள் வழி காட்டு நிலையத்தை (Child Guidance Bureau) ஏற்படுத்தினார். இந்நிலையம் இளங்குற்ற நடத்தையைத் தவிர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனப் பணி தனியாள் சமூகப் பணிமுறையைப் பயன்படுத்துகிறது. இந்நிலையத்தில் தனியாள் உளமருத்துவ முறை, சமூகப் பணிப்பயிற்சி பெற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது. சமூகப் பணிக் கல்வியில் இவர் புதிய மாறுதலைக் கொண்டுவந்தார். சமூகப் பணியில் எந்தக் குறிப்பிட்ட துறைக்கோ பணிக்கோ பயிற்சி கொடுத்தாலும் சமூகப்பணிக் கோட்பாடுகள் பொதுவானவையே என்று வலியுறுத்தினார். இதன் காரணமாகவே முதலாண்டில் பொதுவான சமூகப் பணி முறைகளையும், அடுத்த ஆண்டில் குறிப்பிட்ட துறைக்குத் தனிப்பயிற்சி முறையையும் சமூகப் பணிக் கல்வியில் புகுத்தினார்.

**இலீலாவதி** என்பது கன்னடப் புதினங்களுள் ஒன்று. நேமிச்சந்திரர் என்னும் சமணர் இந்நூலை எழுதினார். இது கி.பி. 1170-ஆம் ஆண்டில் எழுதப் பட்டதாகும். இலீலாவதி (Lilavati) என்னும் இப் புதினம் வாசவதத்தை என்னும் வடமொழி நூலின் படி போல் இருப்பதாகக் கூறுவர். இவ்வடமொழி நூலாசிரியர் சுபந்து என்பவராவர்.

**இலூசான்** ஐரோப்பாவில் மேற்குச் சுவிட்சர்லாந்திலுள்ள வாடு (Vaud) என்னும் மாவட்டத்திலுள்ள ஒரு நகரம். செனீவா ஏரியின் வடகரையை எதிர்நோக்கி மூன்று குன்றுகளின் மலைச்சரிவில் இலூசான் (Lausanne) அமைந்துள்ளது. இம்மலைக்

குன்றுகளின் உச்சியில் திருச்சபைகள் பல கட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 12, 13, 14-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை.


இந்நகரம் சிறந்த வணிக மையம். இந்நகரக்குச் சாலை இணைப்புகளும், இருப்புப் பாதைத் தொடர்புகளும் உண்டு. இங்குள்ள ஏரிக்கரைக் குடில்கள் கோடையிலும் குளிரிலும் வாழ வசதி மிக்கவை. எனவே, எப்போதும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்தவண்ணம் இருக்கிறார்கள். வணிகம், வங்கி, ஆயுள் காப்பீட்டுப்பணி, உணவகம் போன்றவை இங்குப் பெருகியுள்ளன. கடிகாரத்தின் உறுப்புகள் செய்தல், உணவுப் பொருள்கள் விளைவித்தல் ஆகியவை மூலமும் இந்நகருக்கு நிறைய வருவாய் கிடைக்கிறது.

இதனை உரோமானியர் லௌசானா (Lous sanna) என கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டனர். அவெஞ்சசு சமய குரு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தம் தலைநகரை இவ்வூருக்கு மாற்றினார். அதனால், கி.பி. 1434-ஆம் ஆண்டு வரை இது சமய குருமார்களின் சட்டதிட்டங்களுக்குட்பட்ட நகரமாயிற்று. இக்காலத்தில் பேரரசின் தலைநகர் போன்ற நிலை இந்நகருக்குக் கிட்டியது. இது கி.பி. 1536 முதல் 1795 வரை பெர்ன் மாவட்டத்தின் பகுதியாகி, மறுப்புரையாளர் (Protestant) சமயச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாயிற்று. வாடு (காண்டன்) மாவட்டத்தின் தலைநகராய் கி.பி. 1803-இலிருந்து நீடிக்கும் இலூசான், சுவிட்சர்லாந்தின் தலைமை நீதிமன்றத்தின் தலைமையிடமாகவும் திகழ்கிறது. இதுவே பன்னாட்டு ஒலிம்பிக்குக் குழுவின் தலைமைப் பீடமாகவும் இருந்து வருகிறது. இவ்வூரில் தங்கியிருந்துதான் கிப்பன் (Gibbon) என்னும் உலகப் புகழ்பெற்ற வரலாற்றுப் பேரறிஞர் தம்முடைய 'உரோமானியப் பேரரசின் நலிவும் வீழ்ச்சியும்' (Decline and fall of the Roman Empire) என்னும் நூலின் பெரும்பகுதியை எழுதி முடித்தார்.

இத்தாலி நாட்டிற்கும் துருக்கி நாட்டிற்குமிடையே 1912-இல் கையெழுத்தான அவுச்சி உடன்படிக்கையும் (Treaty of Ouchy, 1912) துருக்கி நாட்டிற்கும் அதன் நேசநாடுகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையும் இங்கேதான் கையெழுத்திடப் பெற்றன.

ஆடைகள் நெய்தல், வானொலிப் பெட்டிகள் செய்தல், இரசாயனப் பொருள்கள், உணவும் புகையிலையும் பதப்படுத்தும் தொழில்கள், திராட்சைச் சாராய வாணிகம் போன்றவை இங்கே நடைபெறும் சிறப்பான தொழில்கள். இலூசானின் மக்கள் தொகை 1,50,000 (1980). இவர்கள் பெரும்பாலும் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள்.

**இலூசியானா** அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. இது தென்மேற்கு நடு




இலூசியானா

அமெரிக்காவில் அமைந்துள்ளது. பிரான்சு நாட்டு அரசரான பதினான்காம் உலூயியின் (Louis XIV) நினைவாக இப் பெயரிடப்பட்டுள்ளது. வடக்கில் ஆர்க்கன்சாவும் (Arkansas), கிழக்கில் மிசிசிப்பியும் (Mississippi), மெக்சிகோவும் (Mexico), தெற்கில் மெக்சிகோ வளைகுடாவும், மேற்கில் தெக்சாசுப் (Texas) இதன் எல்லைகளாகும். இலூசியானாவின் (Louisana) பரப்பளவு 1,25,675 ச.கி.மீ. இதன் தலைநகர் பாட்டன் ரூசு (Baton Roouge).

மிசிசிப்பியின் கீழ்ப்பகுதி புளோரிடா (Florida) வின் ஒரு பகுதியென்ற கருத்தில் இசுபானியர்கள், அப்பகுதியில் குடியேற்றங்களை ஏற்படுத்த விரும்பினர். ஆனால் தங்கம், வெள்ளி போன்ற சுரங்கங்கள் எவையும் காணப்படாமையால், இசுபானியர்கள் அப்பகுதிகளில் குடியேற்றங்கள் ஏற்படுத்தும் முயற்சியைக் கைவிட்டனர். அதன் பின், கி.பி. 1682-ஆம் ஆண்டிலிருந்து பிரான்சு, மிசிசிப்பிச் சமவெளியில் குடியேற்றங்கள் அமைப்பதில் முயற்சிகள் பல எடுத்த போதிலும், கி.பி. 1714-ஆம் ஆண்டுதான் அப்பகுதிகளில் குடியேற்றத்தை அமைத்து, சீன் பாப்டிசு டெலேமொயின் (Jean Baptistele Moyne) என்பவரை அதன் ஆளுநராக அமர்த்தியது. அவர் நியூ ஆர்லியன்சு (New Orleans) நகரை உருவாக்கி, கி.பி. 1722-ஆம் ஆண்டு அதனை இலூசியானாவின் தலைநகராக்கினார். அப்பகுதியில் குடியேறிய பிரெஞ்சுக்காரர்கள் அரிசி, புகையிலை, கரும்பு போன்றவற்றைப் பயிர் செய்தனர்.



நியூ ஆர்லியன்சு நகரம்

ஏழாண்டுப் போரின்போது இசுபெயின் பிரான்சிற்கு உதவி செய்ததால், பிரான்சு இசுபெயினுக்கு இலூசியானாப் பகுதியைப் பரிசாக அளித்தது. இதற்குக் குடியேற்ற மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் நெப்போலியன், இசுபெயினிடமிருந்து இலூசியானாவை மீட்டார். வலிமையான ஓர் ஐரோப்பிய அரசு மேற்கு எல்லைப்பகுதியில் ஆதிக்கம் பெற்றால், அது அமெரிக்காவின் முன்னேற்றத்தையும் வாணிகத்தையும் பாதிக்குமென்று எண்ணிக் குடியரசுத் தலைவர் செபர்சன் (Jefferson), இலூசியானாவைப் பிரான்சிடமிருந்து கைப்பற்ற எண்ணினார். ஆனால், வட அமெரிக்காவில் பேரரசை நிறுவ உறுதி கொண்டிருந்த நெப்போலியன், பிரிட்டனுடன் மீண்டும் போர்தொடுக்கும் நிலையிலிருந்ததால், அமெரிக்காவுக்கு அதனை 150 இலட்சம் தாலருக்கு (Dollar) கி.பி. 1803-ஆம் ஆண்டு விற்றார். செபர்சன் அங்குக் கிளைபோன் (Claiborne) என்பவரை ஆளுநராக அமர்த்தினார். இசுபெயினிடமிருந்து மிசிசிப்பியின் கிழக்குப் பகுதியைப் பெற்ற பின், கி.பி. 1812-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8-ஆம் நாள் இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒரு மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் தலைநகர், நியூ ஆர்லியன்சிலிருந்து கி.பி. 1828-ஆம் ஆண்டு தோனால்சன் வில்லிக்கு (Donaldson Ville) மாற்றப்பட்டது. பின்பு, அங்கிருந்து கி.பி. 1849-இல் பாட்டன் உருசுக்கு மாற்றப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது ஐக்கியக் கூட்டிணைப்பிலிருந்து பிரிந்து, நேசக் கூட்டிணைப்புடன் இம்மாநிலம் சேர்ந்தது. சிறிது கால இராணுவ ஆட்சிக்குப் பின், கி.பி. 1868-ஆம் ஆண்டு இலூசியானா மீண்டும் ஐக்கியக் கூட்டிணைப்புடன் இணைக்கப்பட்டது. உலகப் போரின்போது இது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு இராணுவ உதவி செய்தது. எஸ். இரா.

**இலூரி ஆரி இலாரன்சு (கி.பி. 1892-1973)** அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் சமூகப்பணிக் களஞ்சியத்திற்குப் பதிப்பாசிரியராக 1965-ஆம் ஆண்டில் பணியாற்றினார். பின்னர், இவர் சமூகப்பணி ஆண்டு நூலுக்கும், பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். இவர் 60 ஆண்டுக் காலம் பல்வேறு துறைகளில் பணியாற்றினார். இலூரி ஆரி (Lourie Aurie) பொருளியல், சமூகவியல், சமூகப்பணி போன்ற துறைகளில் ஆசிரியராகவும் நல நிறுவனங்களிலும், ஆய்வு நிறுவனங்களிலும் நிருவாகியாகவும் பணியாற்றினார். இவர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இலேட்டியாவில் இவர் 1892-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பெற்றோர் 1898-ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினர். மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் இவர் உயர்நிலைக் கல்வி

கற்றார். தேசிய நாடிழந்தோர் பணி அமைப்பை (National Refugee Service) உருவாக்க உதவிய இவர் 1930-ஆம் ஆண்டில், யூதர்களின் தேசிய சமூக ஆய்வுக் கழகத்தின் (Bureau of Jewish Social Research) இயக்குநராகப் பதவியேற்றார். இதன் பிறகே இவரது பணி குறிப்பிடத் தகுந்ததாகக் கருதப்படுகின்றது. இந்த ஆய்வுக் கழகம், யூதர்களின் தேவை, அவர்களுடைய தொல்லைகள் ஆகியவற்றை உலகினுக்குத் தெரியப்படுத்தியது; யூதர் சமுதாயத்தை ஒருங்கிணைப்பது பற்றியும் ஆய்வு செய்தது; பல நிறுவனங்களுக்குச் சமூக ஒருங்கமைப்பு, திட்டமிடல், பொருளாதாரத் திட்டமிடல் போன்றவற்றைப் பற்றியும் அறிவுரை கூறியது. இந்த ஆய்வுக் கழகம், 'யூதர்கள் கூட்டமைப்பும் நலநிதியும்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது. இவர் தலைமை ஏற்ற பிறகு 200க்கும் மிகுதியான யூதர்கள் கூட்டமைப்புகளை ஏற்படுத்தினர்.

இலூரி ஐக்கிய யூதர்கள் மேல் முறையீட்டுக் கழகம் (United Jewish Appeal) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இது ஒரு தனியார் அமைப்பாகும். இது உலகிலுள்ள பல பெரிய மனிதவின முன்னேற்ற நிறுவனங்களுள் ஒன்றாகும். மேலும், 'தேசிய யூதர்கள் சமுதாயத் தொடர்பு ஆலோசனை மன்றம்', 'யூதர்கள் தொழில் துறை மன்றம்', 'அமெரிக்க யூதர்கள் கல்வி நிறுவனம்' போன்ற அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கு இவர் காரணமாக இருந்தார்.

இவர் இயற்றிய 'மரபின் உறுதிப்பாடு'(A Heritage Affirmed) என்னும் நூலில் இவர்தம் கொள்கைகளைக் குறிப்பிட்டுள்ளார். தெட்ராய்டிலுள்ள மெரில்-பாமெர் (Meril Palmer) கல்லூரியில் சமூகவியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்திலும் நியூயார்க்குச் சமூகப்பணிக் கல்லூரியிலும் மேலும் பல பல்கலைக் கழகங்களிலும் விரிவுரையாற்றினார். சமூகப் பணிக் கல்வி மன்றத்திற்காகச் சமுதாய ஒருங்கிணைப்பு என்னும் பாடத்திற்குப் பாடத்திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

இவரைச் சிறப்பிக்கும் பொருட்டு யூதர்கள், சமுதாயப் பணியின் தேசிய மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கினர். இவர் கட்டுரைகள், இன்றைய சமூகப்பணி, மருத்துவமனை, சமூகச் சேவை, குழந்தை நலம், சமூகச் சேவை மறு ஆய்வு, பள்ளியும் வீடும், யூதர்கள் சமூக ஆய்வு, அமெரிக்க யூதர்கள் ஆண்டுமலர் போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன.

**இலூ விசு, ஆசுகார்** (1914-1970) தலைசிறந்த அமெரிக்க மானிடவியலாளருள் ஒருவரும் வறுமை நிலைப் பண்பாட்டுக் (Poverty of Culture) கோட்பாட்டை வகுத்தவருமாவார். ஆசுகார் இலூவிசு (Oscar Lewis) 1936-ஆம் ஆண்டு கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று முதுகலைப் பட்டம் பெற்றார். இவர் மைத்துனர் ஆபிரகாம் எச். மாசுலோவின் (Abraham H. Maslow) தூண்டுதலால், உரூத் பெனிடிக்டு (Ruth Benedict) என்னும் மானிடவியல் பேராசிரியையின் மாணாக்கராகி, 1940-ஆம் ஆண்டில் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியலில் டாக்டர் (Ph.D) பட்டம் பெற்றார்.

'கம்பள வணிகத்தின் பங்கைப் பற்றிய சிறப்புக் குறிப்புகளுடன் வெள்ளையர் தொடர்பால் பிளாக்புட் மக்களின் பண்பாட்டில் ஏற்பட்ட தாக்கம், (The Effects of White contact upon Blackfoot culture: With special referene to the role of the Fur Trade) என்னும் தலைப்பில் செய்த இவரது ஆய்வு, அமெரிக்க நாட்டுத் தத்துவக் கழகத்தின் (American Philosophical Society) பரிசினைப் பெற்றது. அமெரிக்க நாட்டு நிதித் துறையில் விளம்பரப் பகுப்பாளராகவும் (Propaganda Analyst) பின்னர், ஏல் (Yale) பல்கலைக் கழகத்துடன் இணைந்து, மனித உறவுப் பகுதிக் கோப்புத் திட்டத்திலும் (Human Relations Area Files)1942-இல் பணிபுரிந்தார். இவர் 1943-இல் மெக்சிகோ சென்று, நாட்டுப்புற முன்னேற்றத் திட்டத்தில் பணியாற்றிய பின்னர்த் தெப்போசுட்லான் குடியானவர்களைப் (Peasants of Tepoztlan) பற்றி ஆய்வு செய்தார். இலினாய்சுப் (Illinois) பல்கலைக் கழகத்தில், 1948- ஆம் ஆண்டு மானிடவியல் துறையினைத் தொடங்கினார்.

இவர் இந்தியக் கிராம வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து 'வட இந்தியாவில் கிராம வாழ்க்கை' (Village Life in Northern India) என்னும் நூலை எழுதினார். இது இந்தியக் கிராம வாழ்க்கையை விவரிக்கும் ஒரு சிறந்த நூலாகும். ஆ.செ.

**இலெசப்சு, பெர்டினாண்டு டி** (கி.பி. **1805-1894**) என்பார் பிரான்சு நாட்டைச் சார்ந்த அரசியல் வல்லுநர்; சூயசுக் கால்வாய்த் திட்டத்தை உருவாக்கியவர். இவர் கி.பி. 1805-ஆம் ஆண்டு வெர்சேயில் (Versailles) பிறந்தார். தம் தந்தையார் செய்துவந்த தொழிலினைப் பின்பற்றி இவரும் தூதரகப் பணித் துறையில் அலுவலராக 1928-ஆம் ஆண்டு சேர்ந்தார். இலெசப்சு (Lesseps), எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவில் பிரெஞ்சுத் தூதராக கி.பி. 1833 முதல் 1838 வரை பணியாற்றினார். அந்நாட்டில் இருந்தபோது செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் இணைக்கும் கால்வாய்

அமைக்கும் கருத்தைப் பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர்கள் வெளியிட்டதை அறிந்து, அதில் ஆர்வம் காட்டினார். இதனிடையில் கி.பி. 1849-ஆம் ஆண்டு இலெசப்சு தூதரகப் பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு வற்புறுத்தப்பட்டார். உரோமானியக் குடியரசினைப் பிரெஞ்சுப் படைவீரர்களுக்குச் சரணடையுமாறு இவர் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதே இவர் பதவி துறக்கக் காரணமாயிற்று.

தம் பழைய நண்பரும் எகிப்திற்கு வருகை புரிந்திருந்த புதிய தூதருமான சையது பாட்சா என்பாரைத் தூண்டி, சூயசுக் கால்வாய்க் குழுவிற்கு நிதி உதவியளிக்க வேண்டுமென கி.பி. 1854-ஆம் ஆண்டில் கேட்டுக்கொண்டார். இக்குழு கி.பி. 1858-ஆம் ஆண்டில் இவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. சூயசுக் கால்வாயைத் தோண்டும் பணியும் கி.பி. 1859-இல் தொடங்கப்பட்டது. ஆனால், இப்பணி இடையில் கி.பி. 1863 வரை தடைப்பட்டது. சையது பாட்சாவை அடுத்து, அப்பதவிக்கு வந்தவர் அதை நிறுத்திவிட்டார். ஆனால் பிரான்சு நாட்டின் பேரரசராக இருந்த மூன்றாம் நெப்போலியன் கால்வாய் வெட்டும் பணியைத் தொடங்கி முடிக்க வேண்டுமென வற்புறுத்தியதன் பேரில் மீண்டும் அப்பணி தொடங்கியது. சூயசுக் கால்வாய் கி.பி. 1869-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அதன் விளைவாகக் கீழை நாடுகளிலிருந்து கப்பற் பயணம் செய்வோரின் பயணத் தூரம் பெரிதும் குறைந்தது. இலெசப்சை அனைவரும் போற்றினர் இவருக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டன.

இலெசப்சு கி.பி. 1873-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பல புதுத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். புதிய உலகமான வட, தென் அமெரிக்கக் கண்டங்களுக்குக் குறுக்காகப் பனாமாவில் ஒரு கால்வாயை வெட்ட, கி.பி. 1879-இல் ஒரு திட்டம் தீட்டினார். அத்திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பிருந்தது. எனினும், இவர் அனைத்து எதிர்ப்புகளையும் தாங்கி நின்றார். இலெசப்சு பெருங்கடல் கால்வாய்க் குழு என்னும் நிறுவனத்தை கி.பி. 1881-இல் நிலைநாட்டினார். அதன் தொடர்பாக, கி.பி. 1885-இல் பெருந்தொல்லைகள் எழுந்தன. போதுமான நிதி வசதியின்மையாலும், பொறியியல் தொடர்பான தொல்லைகளாலும், அலுவலகக் கண்காணிப்பு ஆய்வுத் தொல்லைகளாலும் கி.பி. 1889-இல் இக்குழு வழக்குக்குட்பட்ட சொத்தாகக் கருதப்படலாயிற்று. இக்குழுவின் தலைவரான இலெசப்சும் இவர்தம் மகன் சார்லசு என்பாரும் வங்கியை மோசடி செய்த குற்றத்திற்காக கி.பி. 1893-இல் ஐந்தாண்டுத் தண்டிக்கப் பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், மேல் முறையீட்டு நீதிமன்றம் அத்தண்டனையை நீக்கிவிட்டது. இவர் கி.பி. 1894-இல் காலமானார்.

**இலெசோத்தோ** ஆப்பிரிக்காக் கண்ட நாடுகளுள் ஒன்று. முன்னர், இதனைப் பசுட்டோலாந்து என்று குறிப்பிட்டனர். இந்நாடு உயர்ந்த மலைகளையும், அமைதியான பள்ளத்தாக்குகளையும் கொண்டது. இலெசோத்தோ (Lesotho) ஒரு முடியாட்சி நாடு. மசேரு (Maseru) என்னும் நகரம் இந்நாட்டின் தலைநகர்.

இருப்பிடம்: இது தென் ஆப்பிரிக்கக் குடியரசில் கிழக்கில் நடுவே அமைந்துள்ளது. இந்நாட்டின் மேற்குப் பகுதி தாழ்நிலமாகும். இப்பகுதியின் உயரம் 1500 முதல் 1800 மீ. வரை உள்ளது. இந்நாட்டின் வேளாண்மைத் தொழில் இங்குத்தான் நடைபெறுகிறது.




இலெசோத்தோ

தட்பவெப்பநிலை: இந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் 100 செ. மீ. மழையைப் பெறுகின்றன. அக்டோபர் முதல் ஏப்பிரல் வரை மழைக்காலம். மழை எல்லா மாதங்களிலும் பெய்கிறது. ஆயினும், பெய்யும் மழைநீர் இந்நாட்டிற்குப் பயன்படாமல்

ஓடிவிடுகிறது. தாழ்நிலப் பகுதிகளில் வெப்ப நிலை சீராக அமையாமல் கோடைக்காலத்தில் 32 பாகை செல்சியசு வரையிலும், குளிர் காலத்தில் 7 பாகை செல்சியசு வரையிலும் குறைந்து காணப்படும். குளிர்கால வெப்பநிலை 0 பாகையை விடத் தாழ்ந்தும் காணப்படுகிறது.

பயிர் பச்சைகள்: மரங்களற்ற இந்நாட்டில் தாழ்நிலப் பரப்புகளில் புல்வெளிகளையும், உயரம் மிகுந்த மலைப்பாங்கான பகுதிகளில் மேய்ச் சற்றரைகளையும் காணலாம். இந்நாட்டின் பெரும் பாலான பகுதிகள் மேய்ச்சல் நிலங்களே; உயரம் மிகுந்த பகுதிகள் கோடைக்காலத்தில் மட்டும் பயன்படுகின் றன. மேற்குக் கரையையடுத்துத் தாழ்நில விளிம் புகளில் ஓரளவு வேளாண்மை நடைபெறுகிறது. மக் காச்சோளம் உணவுப் பயிர்களுள் சிறப்பானது. சிறிதளவு சோள வகைப் பயிர்களும் பயிரிடப்படு கின்றன. உழுது பயிரிடத் தகுதி வாய்ந்த நிலங்க ளும், மேய்ச்சல் தரைகளைக் கொண்ட நிலங்களும் மண் அரிப்பால் பேரிழப்பிற்கு ஆளாகின்றன.

பரப்பு: இலெசோத்தோவின் பரப்பு 30,340 ச. கி. மீ.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 13 இலட்சம் (1980). இந்நாட்டின் மக்களுள் ஒரு சில ரைத்தவிர ஏனையோர் ஆப்பிரிக்கர்களே. சிலர் ஐரோப்பிய வழி வந்தவர்கள். அவர்கள் பெரும் பாலும், அரசாங்கப் பணியாளர்களாகவும், வணிகர் களாகவும், கிறித்தவச் சமயப் போதகர்களாகவும் கைவினைஞர்களாகவும் உள்ளனர். இந்நாட்டின் மக்களுள் பெரும்பாலோர் பாசோத்தோ எனப்படு வர். அவர்கள் பண்டு இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பேசும்மொழியைச் செசோத்தோ என்பர். இந்நாட்டின் ஆட்சிமொழியாக ஆங்கிலமும் செசோத் தோவும் விளங்குகின்றன. உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்வி நிலையங்களில் ஆங்கிலமும் தொடக்கப்பள்ளிகளில் செசோத்தோவும் கற்றுத் தரப்படுகின்றன.

இந்நாட்டில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு மக்கள் ஆங்கிலத்தையோ செசோத்தோவையோ எழுதவும் படிக்கவும் அறிந்துள்ளமையால் இந்நாட்டின் கற் றோர் வீதம் ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே உயர்ந்த தாகக் காணப்படுகிறது. நாட்டின் பெரும்பாலான பள்ளிகள் சமயக்குழுக்களால் நடத்தப்பெறுவதால், அரசாங்க உதவியைப் பெறுவதில்லை. போட்சு வானா, இலெசோத்தோ, சுவாசிலாந்து நாடுகளின் பல்கலைக் கழகம் உரோமா என்னும் ஊரில் அமைந் துள்ளது. இந்நகரம் தலைநகரான மசேருவி ருந்து 35 கி. மீ தொலைவிலுள்ளது. மூன்று அரசு களும் இப்பல்கலைக் கழகத்திற்குப் பொருளுதவி செய்கின்றன.

மக்கள் வாழ்க்கை: இந்நாட்டு மக்களுள் பெரும் பாலோர் உழவர்களாகவோ இடையர்களாகவோ இருக்கின்றனர். நிலம்யாவும் மரபு வழியாக இனத் தலைவர்களுக்குச் சொந்தமானவை. இக்காலத்தில் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக அரசர் விளங் குகிறார். அவர்களும் நிலத்தில் உழுது பயிரிடலாமே யன்றிச் சொந்தம் கொண்டாட முடியாது. குடும் பத்தின் எண்ணிக்கைக்குத் தகவும், தேவைக்கேற் பவும் நிலம் வழங்கப்படுகிறது.

மரபு வழிக் கலைகள் அண்மைக்காலத்தில் வளர்க்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இவர்கள் கூம்பு போன்றதொரு தலைக்குல்லாயை உருவாக்கு கிறார்கள். அதை இவர்கள் புல்லினால் பின்னு வர். அது இந்நாட்டின் தேசிய கொடியிலும் சின் னமாக அமைக்கப்பெற்றுள்ளது. ஆண்கள், பெண் கள், குழந்தைகள் ஆகியோர் வண்ணப் போர்வை களைத்தாம்அவர்கள் உடுத்தும் மேலைநாட்டு ஆடை களுக்கு மேல் அணிந்து கொள்வர். கோடையையும் குளிரையும் காக்க இப்போர்வைகள் உதவுகின்றன.

பொருளாதாரம்: உரோமமும், ஆட்டுரோமத் தால் செய்யப்படும் மோகேர் (Mohair) என்னும் துணிவகையும் இலெசோத்தின் தலைசிறந்த செய் பொருள்களாம். மோகட்லாங்கு என்னும் ஊருக்கு வடக்கேயுள்ள சுரங்கங்களில் வைரம் வெட்டி யெடுக்கப்படுகிறது. உரோமம், மோகேர் துணிவகை கள், வைரம், கால்நடைகள் போன்றவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்கள். இலெசோத்தோ, போட் சுவானா, சுவாசிலாந்து நாடுகள், தென் ஆப்பிரிக்கக் குடியரசுடன் பொதுவான சுங்கவரி ஆயத்துறைத் தீர்வைகளைக் கொண்டுள்ளன.

வரலாறு: பாசோத்தோ மக்கள் ஒருங்கிணைந்து உருப்பெற்றது கி.பி. 1818-ஆம் ஆண்டிலிருந்துதான். அக்காலத்தில் தலைவராயிருந்த மோசூசு (Moshoe- shoe)பிரிந்து வாழ்ந்த மக்களை ஒன்றாக இணைத்துத் தம்மாட்சியின் கீழ் ஒன்றுபடுத்தினார். பாசோத்தோ மக்களுக்கும் ஆரஞ்சுச் சுதந்திர நாட்டு மக்களான போயர்களுக்குமிடையே கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பல போர்கள் மூண்டன. இப் போர்களின் விளைவாகப் பாசோத்தோ மக்கள் தம் நாட்டின் பெரும் பகுதியை இழந்தார்கள். போயர் குடியரசினால் தம் நாட்டிற்கு ஏற்படும் தொல்லை களைக் கூர்ந்து கவனித்த மோசூசு ஆங்கிலே யரின் உதவியை நாடினார். பல கலவரங்களுக்குப் பின்னர், இந்நாடு ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குட்

படுத்தப்பட்டது. இலெசோத்தோவின் சட்டமன்ற, நிருவாக அதிகாரங்களை கி.பி. 1884 முதல் 1959 வரை ஆங்கில உயர் ஆணையர் ஒருவர் கவனித்து வந்தார். இந்நாட்டுக்கு அதன் முதல் அரசியல் உரிமைச் சட்டம் 1959 இல் கொடுக்கப்பட்டது. தேசிய உணர்வு எழுந்ததே இதற்குக் காரணமாகும். இந்நாடு 1966 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் நாள் சுதந்திர நாடாயிற்று.

இலெசோத்தோ, அரசியல் அமைப்புக்குட்பட்ட அரசருடைய ஆட்சியைக் கொண்டுள்ளது. இதன் அரசர் இரண்டாம் மோசூசூ என்பார் அங்கு 1970 இல் ஏற்பட்ட நெருக்கடியால் நாட்டை விட்டு வெளியேறினார். அவ்வாண்டின் இறுதியில் அவர் மீண்டும் நாடு திரும்பினார். புதிய அரசியலமைப்புத் திட்டப்படி தலைமை அமைச்சரை அரசர் நியமிக்கிறார். தேசிய சட்டமன்றம், அமைச்சரவை ஆகியவை உண்டு. நாடாளுமன்றம் இரு அவைகளைக் கொண்டது. இலெசோத்தோ நாட்டின் நாணயம் மாலாட்டி (Maloti) எனப்படும்.

**இலெசோத்தோ நாட்டில் கல்வி**: கல்வியானது அரசு, தேவாலயங்கள் ஆகிய இரண்டின் கூட்டு முயற்சியால் தான் இன்னும் இலெசாத்தோ (Lesotho) நாட்டில் வழங்கப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் 97 விழுக்காடும், உயர் நிலைப் பள்ளிகளில் 86 விழுக்காடும் தேவாலயங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தேவாலயம் நடத்தும் பள்ளிகளின் மேற்பார்வை, ஆசிரியர் ஊதியம், ஆசிரியர் பணியிடைப் பயிற்சி, தொடக்கப் பள்ளிகளுக்கு நிதியுதவியளித்தல் ஆகிய அனைத்தும் அரசே செய்து வருகிறது. மூன்று விழுக்காடு பள்ளிகளை மட்டுமே அரசு தம் பொறுப்பில் நடத்தி வருகிறது.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் ஏழு ஆண்டுகள். ஒன்று முதல் ஏழாம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. இந் நாட்டின் தாய்மொழியாகிய செசாத்தோ (Sesotho) மொழியில் முதல் நான்காண்டுகள் வரை கல்வி வழங்கப்படுகிறது. அதற்குப் பின், பயிற்று மொழி பெரும்பாலும் ஆங்கில மொழியாகும். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:49 என்ற அடிப்படையில் உள்ளது.

உயர் நிலைப் பள்ளியில் (Junior Secondary School) எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளி(Senior Secondary School) யில் பதினொன்று, பன்னிரெண்டு ஆகிய வகுப்புகள் உள்ளன. இப் பள்ளிகளில் பயிற்று மொழி ஆங்கில மொழி மட்டுமே. 108 பள்ளிகளில் 24,000 மாணவர்கள் 1980 ஆம் ஆண்டுக் கணக்கின்படி சேர்ந்து பயின்றனர். பதின்மூன்று வயதில் உயர் நிலைப் பள்ளியில் சேரும் மாணவர்கள் பதினேழு வயதில் மேல்நிலைக் கல்வியினைப் பெற்றவர்களாகின்றனர். இப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:21 என்ற அடிப்படையில் இருந்தது

தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர் நிலைப் பள்ளிக் கல்வி ஆகியவற்றுக்குப் பின், வாழ்க்கைத் தொழிற் கல்வி (Vocational Education) பயிலும் வாய்ப்பும் இந்நாட்டில் உண்டு. தொழிற்சாலை சார்ந்த தொழில் நுட்பத் திறன்களை உயர்நிலைப் பள்ளித் தரத்தில் உள்ள 13 பள்ளிகளில் மாணவர்கள் பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளித் தரத்தில் உள்ள 5 பள்ளிகளில் மாணவர்கள் தொழிற் கல்வியில் பயிற்சி பெறுகின்றனர். அனைத்துப் பள்ளிகளும் அரசு உதவியுடன் செயற்பட்டு வருகின்றன. வேளாண்மைக் கல்வி, ஆறு உழவர் பயிற்சி மையங்களிலும் வேளாண்மைக் கல்லூரியிலும் வழங்கப்படுகிறது.

இந் நாட்டின் கல்வி அமைச்சகம், இலெசாத்தோ தொலைதூரக் கற்பித்தல் மையம்(Lesotho Distance Teaching Centre) மூலமாக, முறைசாராக் கல்வியினைப் பெரும்பாலும் வழங்கி வருகிறது. இக் கல்வியை மக்களுக்கு வழங்குவதில் வேளாண்மை, நல்வாழ்வு, உள்துறை, ஊரக வளர்ச்சி ஆகிய நான்கு அமைச்சகங்களும் ஓரளவு ஈடுபடுகின்றன. இலெசாத்தோ தேசியப் பல்கலைக் கழகமும், முறைசாராக் கல்வியைப் பரப்பி வருவதோடு, தேவாலயங்கள், தனியார் பொதுநல நற்பணி மன்றங்கள்' (Voluntary Organizations) ஆகியனவும் இப் பணியில் ஈடுபடுகின்றன.

இலெசாத்தோ தொலைதூரக் கற்பித்தல் மையம், முறைசாராக் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைத் தயாரித்து உதவி வருகிறது. இம் மையம், மக்களிடம் வானொலி பயன்படுத்தும் பழக்கம், செய்தித்தாள்கள் எண்ணிக்கை, கல்வியறிவு நிலைகள் (Literac Levels) ஆகியவை பற்றிக் கணக்கெடுப்புச் (Survey) செய்துள்ளது. இம் மையம், 750 பள்ளிப் புற மாணவர்களுக்குக் கல்வியறிவுப் பாட வகுப்புகளை நடத்தி வருகிறது.

இலெசாத்தோ தேசியப் பல்கலைக் கழகம். 1975 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று உயர் கல்வியில் பெரும்பணி ஆற்றி வருகிறது. வாழ்வியல், சமூக அறிவியல் பாடங்கள். கல்வியியல், சட்டவியல், உயிரியல் பாடங்கள் ஆகியன இப் பல்கலைக் கழகத்தில்

கற்பிக்கப்படுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில் 1979-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 1,150 மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். பல்கலைக் கழகங்களில் சேர்ந்த அனைத்து மாணவருக்கும் அரசு கடன் வழங்கி உதவி செய்கிறது.

நிருவாகம்: இந்நாட்டின் கல்வியும் நிருவாகச் செலவும் அரசு, பெற்றோர், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பாகும். கல்விக்காக அரசு 1975-76-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், 25 விழுக்காடு செலவு செய்தது. பாடநூல்களை மாணவர்களே வாங்கிக் கொள்கின்றனர். அரசே, ஆசிரியர்களுக்கு 1974-ஆம் ஆண்டிலிருந்து நேரடி ஊதியம் வழங்கி வருகிறது.

பாடத் திட்டம்: தேசிய கல்வித் திட்ட வளர்ச்சி மையம் (National Curriculum Development Centre) இலெசோத்தோவில் இயங்கி வருகிறது. இம் மையம் தொடக்கப் பள்ளிக் கல்வித் திட்டத்தை முழுமையாக ஆய்வு செய்து புதிய கல்வித் திட்டத்தை உருவாக்கி வருகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வித் திட்டத்தில், தாய் மொழியாகிய செசாத்தோ (Sesotho) ஆங்கிலம், கணக்கு, சமூக அறிவியல், உடல்நல அறிவியல், வேளாண்மை ஆகியன உள்ளன. மேல்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்தில் பொதுக் கல்விப் பாடங்களோடு, வேளாண்மை, மரவேலை, சமையற்கலை தையற்கலை, ஓவியம் வரைதல் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: இலெசோத்தோவின் தலைநகரான மாசெரு (Meseru) நகரில் 1975-ஆம் ஆண்டு தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (National Teacher Training College) திறக்கப் பெற்றது. இங்குத் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். நுண்திறன் கற்பித்தல் (Micro - Teaching) முறையில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இலெசோத்தோப் பல்கலைக் கழகத்தில் உள்ள கல்வியியல் புலத்தில் ஆசிரியர் பயிற்சி பெறுகின்றனர். ஆசிரியர் கல்வியானது ஈராண்டுப் பட்டப் படிப்பும், ஈராண்டுக் கல்வியியல் பட்டப் படிப்பும் இணைந்ததாக உள்ளது. கல்வியியலில் பட்டப் படிப்பும் பட்ட மேற்படிப்பும் தனியாகவும் உள்ளன.

இலெசோத்தோ நாடு ஆசிரியர் பயிற்சி, கல்வித் திட்டம், முறைசாராக் கல்வி, மேற்பார்வை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது. படித்த, படிக்காத இளைஞர்கள் வேலை வாய்ப்புத் தேடி அண்மையிலுள்ள நாடுகளுக்குக் குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்து விடுவதால், இந் நாட்டுக் கல்வியானது, தேசிய வளர்ச்சிக்கு உரிய பங்கினைச் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

## இலெட்சுவொர்த்து வில்லியம் பிரயோர்

(கி.பி. 1823-1910) தேசிய அறக்கட்டளையும் குற்றத் திருத்த அமைப்பும் (National Conference of Charities and Correction) உருவாகுதற்கு அடிகோலியவர். இவ் அறக்கட்டளை அமைப்பு ஏழைக் குழந்தைகளுக்குத் தனியாகப் பாதுகாப்பு மையங்களை உருவாக்குதல், மனநிலை பிறழ்ந்த (பைத்தியம்) குழந்தைகளுக்கும் காக்கை வலிப்பு நோயுள்ள குழந்தைகளுக்கும் பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பாடுபட்டு வந்தது. இலெட்சு வொர்த்து (Letchworth, William Pryor) நியூயார்க்கிலுள்ள பிரான்சுவில் (Bronzville) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தம் 15-ஆம் வயதிலேயே வாணிகத்தில் ஈடுபட்டு இரும்பு உற்பத்தித் தொழிலில் சிறந்தவரானார். மனித இனத்திற்குச் சேவை செய்வதில் இவர் கொண்டிருந்த ஆர்வத்தால் பெருமதிப்பிற்குரியவராக எல்லோராலும் போற்றப்பட்டார்.


நியூயார்க்கிலிருந்த அறக்கட்டளை அமைப்பில் இவர் உதவித் தலைவராகவும் பின்னர்த் தலைவராகவும் பணி புரிந்தார். இவர் ஏழை இல்லங்களிலிருந்த குழந்தைகளின் நிலையை ஆய்ந்து, பொதுமக்கள் அக் குழந்தைகளிடம் பரிவு காட்டும்படி செய்தார். இதன் விளைவாக நியூயார்க்கு அரசின் சட்டமன்றம், 3 முதல் 16 வயது வரையிலுள்ள குழந்தைகளை ஏழை இல்லங்களிலிருந்து தனி இல்லங்களுக்கு மாற்றுமாறு ஆணையிட்டது.

இவர் இளங்குற்றவாளிகள், பைத்தியம் பிடித்த ஏழைகள் ஆகியோருக்கு மருத்துவமளித்துக் காப்பதில் ஆர்வம் கொண்டார். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டில் ஐரோப்பா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மனநிலை பிறழ்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ முறையை ஆய்வு செய்தார். அதன் விளைவாக 'அயல்நாடுகளில் மனநிலை பிறழ்ந்தவர்கள்' ('The Insane in Foreign Country') என்ற நூலை இயற்றினார். நியூயார்க்கில் கிரெய்கு காலனி (Craig Colony) என்ற நிறுவனத்தைக் காக்கை வலிப்புடையவர்களுக்காக முதன்முதலில் ஏற்படுத்தினார்.

இவர் நியூயார்க்கு அரசிற்கு 1000 ஏக்கர் நிலத்தைப் பூங்கா அமைப்பதற்காக வழங்கினார். நியூயார்க்கு அரசு 1909-ஆம் ஆண்டில் மன வளர்ச்சி


குன்றியவர்களுக்காக (Feeble-minded) ஏற்படுத்திய நிறுவனத்திற்கு இவர் நினைவாக 'இலெட்சுவொர்த்துக் கிராமம்' எனப்பெயரிட்டுச் சிறப்பித்தது.

**இலெப்டிசு மக்னா** வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள இலிபியாவில் ஓம்சு என்னும் பகுதிக்கு அருகிலுள்ள தொன்மையான நகரம். இது இலெப்டிசு என்றும் கூறப்பட்டது. இந்நகரம் திரிபோலியிலிருந்து 100 கி.மீ. தென்கிழக்காக அமைந்துள்ளது. இக்காலத்தில் இது இலப்தா (Labdah) என்று கூறப்படுகிறது. இலெப்டிசு மக்னா (Leptis magna) பினீசியர்களின் காலத்திலும் உரோமானியர்களின் காலத்திலும் பெரும் புகழ்பெற்று விளங்கியது. பினீசியர்கள் கி.மு. 600-இல் இங்கு வாழ்ந்தனர். இது கி.மு.2-ஆம் நூற்றாண்டில் நுமிடிய அரசின் (Numidian Kingdom) சிறந்த பகுதியாகத் திகழ்ந்தது. உரோமானியர்கள் கி.மு. 46- இல் இதனை ஆட்சிபுரிந்தனர். மத்திய தரைக்கடல் பகுதியில்இந்நகரம்அமைந்துள்ளதால் அக்காலத்திலேயே இது சிறந்த வாணிகத் தலமாக விளங்கி வந்தது. உரோமானியர்கள் இங்குப் பல அழகு வாய்ந்த கட்டடங்களைக் கட்டினர். இந்நகரம் மணலினால் புதையுண்டு அழிந்தது. இப்புதையுண்ட நகரத்தில் 1920-இல் இத்தாலியத் தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வினை மேற்கொண்டனர் அதன் பின்னர்ப் பல்வேறு காலங்களில் மேலும் பல்வேறு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மணலில் புதையுண்ட பல சிறப்பான கட்டடங்கள் அகழாய்வினால் வெளிக் கொணரப்பட்டன. அரசக் குடும்பத்தினரின் நீராடும் மண்டபம் பேரரசர் ஆட்ரியன் காலத்தில் கட்டப்பட்டது. பேரரசர் செப்டிமியசு செவிரசு (Septimius Severus) இந்நகரத்தில் பிறந்தார். தாம் பிறந்த ஊரில் அழகு வாய்ந்த பல கட்டடங்களை அவர் கட்டினார். அவற்றில் அவர் கட்டிய துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. மேலும், அரைவட்ட அரங்கமும் நீண்ட சதுரமான தூண் மண்டபம் இணைந்த ஒரு கட்டிடமும், இருபக்கமும் தூண்கள் வரிசையாக அமைத்து அமைக்கப்பட்ட சாலையும், சிற்பங்கள் உள்ள வெற்றிவிழா வளைவும் இவர் காலத்தைச் சார்ந்தவை. இந் நகரம் கி.பி. 300-ஆம் ஆண்டு திரிபோலிடானியா (Tripolitania) வின் தலைநகரமாக விளங்கியது. நாடோடிக் கூட்டத்தினர் இந்நகரை கி.பி. 365-இல் சூறையாடினர். பலமுறை இந்நகரம் மணலால் அழிவுற்றது. மணல் மூடிய நகரத்தின்மீது பைசாண்டியப் பேரரசின் போது (Byzantine Empire) மீண்டும் பல திருச்சபைகளும் சுவர்களும் கட்டப்பட்டன.



இலெப்டிசு மக்னா குளியல் அறை

**இலெபனான்** ஆசியாக்கண்டத்தில் உள்ள சுதந்திர நாடுகளுள் ஒன்று; மத்தியதரைக்கடலின் கிழக்குக் கடற்கரைக் கோடியில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 216 கி.மீ. நீளமும், 32முதல் 56 கி.மீ. வரை அகலமும் கொண்ட இந்நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் சிரியாவும், மேற்கில் மத்தியதரைக் கடலும், தெற்கில் இசுரேலும் எல்லைகளாக உள்ளன.




இலெபனான்

உலகப் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் மையமாகக் கடந்த 4000 ஆண்டுகளாக இலெபனான் (Lebanon)இருந்து வந்துள்ளது. இங்குள்ள பெய்ரூட்டு ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் வாயிலாக அமைந்துள்ளது.

இது ஒரு மலை நாடு. இரு மலைத்தொடர்கள் இந்நாட்டை அடைத்துக் கொண்டு நிற்கின்றன. இந்நாட்டிற்கு மிகப் பழமையான வரலாறும் உண்டு. இதன் மலைச்சாரல்களில், சிடார் என்னும் தேவ தாரு மரங்கள் வளர்கின்றன. இந்நாட்டில் பினீசியர்களின் அழிந்த துறைமுகங்களின் சின்னங்கள், உரோமானியக் கோயில்கள், சிலுவைப்போர்களின்போது கட்டப்பெற்ற கோட்டை. கொத்தளங்கள் போன்றவற்றை இன்றும் காணலாம்.

பரப்பு: இலெபனானின் பரப்பு 10,400 ச.கி.மீ.

மக்கள் தொகை: இதன் மக்கள் தொகை 26,87,000(1981).

பெய்ரூட்டு (Beirut) இதன் தலைநகர். மக்கள் தொகை 7,02,000. திரிப்போலி சாலே (Zahle) சைதா (சிடான்), தயர் (Tyre) ஆகியவை ஏனைய நகரங்கள்.

ஆட்சிமொழி அராபிய மொழி; பிரெஞ்சும் ஆங்கிலமும் அலுவலகங்களிலும் வாணிக வட்டாரங்களிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இலெபனான் அராபிய நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வாழும் மக்களுள் பாதிப்பேர் கிறித்தவர்கள். எஞ்சியோருள் பெரும்பாலோர் முசுலிம்கள். கிறித்தவர்களுள் பெரும்பாலோர் மரோனியத் திருச்சபையைச் சார்ந்தவர்கள். இத்திருச்சபை உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஏனையோர் கிரேக்க வைதிகத் திருச்சபை, கிரேக்கக் கத்தோலிக்கத் திருச்சபை, ஆர்மீனியத் திருச்சபை, மறுப்புரையாளர் (Protestant) திருச்சபை ஆகியவற்றைச் சார்ந்தவர்கள். முசுலிம்களுள் பெரும்பாலோர் சுன்னிப் பிரிவைச் சார்ந்தவர்கள். ஏனையோர் சீயாப்பிரிவினர். துருசுகள் என்னும் இரகசியக் குழுவினரும் ஏறத்தாழ 7000 யூதர்களும் இலெபனானில் வாழ்கின்றனர்.

இலெபனானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர், பெய்ரூட்டைப் போர்க்களமாகக் கொண்டுள்ளது.

மலைச்சரிவுகளில் அழகுபொலியும் பண்ணைகளைக் கொண்ட சிற்றூர்களைக் காணலாம். கரடு முருடானவர்களாய்க் கடும் உழைப்பில் ஈடுபட்டுள்ள உழவர்கள் இன்றும் வண்ணமில்லா மேற்சட்டைகளையும் பைபோன்ற காலுறைகளையும் அணிகிறார்கள். வெண்மையான சுண்ணாம்புக்கற் சுவர்களையும், நீண்டுயர்ந்த சிவந்த கூரையோடுகளையும் கொண்ட வீடுகளில் இவர்கள் வாழ்கிறார்கள்.

இலபான் (யோகர்ட்), தட்டைரொட்டி, பழங்கள், பர்கல் (உடைக்கப்பட்ட முழு கோதுமை), ஆட்டிறைச்சி, காப்பி போன்றவை இந்நாட்டு மக்களின் வழக்கமான உணவாகும்.

ஏறத்தாழ 90 விழுக்காடு மக்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும். அமெரிக்க, பிரெஞ்சிய கிறித்தவப் பாதிரியார்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து பல பள்ளிகளை நடத்துகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த மறுப்புரையாளர் (Protes

tants) கி.பி. 1866-இல் பெய்ரூட்டில் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவினர். பிரெஞ்சு ஏசு சங்கத்தினர் கி.பி.1881-இல் புனித சோசப்புப் பல்கலைக் கழகத்தை நிலைநாட்டினர். பல்வேறு கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் கொண்ட பெய்ரூட்டில் அராபியப் பல்கலைக் கழகம் ஒன்றும் உள்ளது. இது எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகத்தின் கிளையாகச் செயலாற்றுகிறது. இலெபனான் பல்கலைக் கழகமும் இயங்குகிறது.

நிலம்: மத்தியதரைக் கடலுக்கும் இலெபனான் மலைத் தொடருக்கும் இடையில் குறுகலான கடற்கரைச் சமவெளி ஒன்றுண்டு. இது செழுமையானது; வளம் மிக்கது. இலெபனான் மலைத் தொடர் கடற்கரையை ஒட்டிச் செல்கிறது. இம்மலைத்தொடர் 3000 மீட்டர் உயரமுள்ளது. செங்குத்தான பக்கங்களைக் கொண்ட பெரும் பள்ளத்தாக்குகள் மலை முகடுகளையொட்டி உள்ளன.

கிழக்கு இலெபனானில் உள்ள மற்றொரு மலைத் தொடரை இலெபனானின் எதிர் மலைத் தொடர் என்கிறார்கள் (Anti-Lebanon Mountains). இது சிரியா நாட்டின் எல்லையில் உள்ளது. இத் தொடரில் உள்ள மலையுச்சியை எர்மன் மலையுச்சி (Mount Hermon) என்பர். இதன் உயரம் 2814 மீ. இரண்டு மலைத் தொடர்களுக்கிடையில் அல் பிகா (Al-Biga) என்னும் சமவெளியுள்ளது. அல்பிகாவிலிருந்து இரண்டு ஆறுகள் தொடங்குகின்றன. ஓரண்டசு (Orantas) என்னும் பெயர் கொண்ட ஆறு வடக்காகச் சிரியாவில் பாய்கிறது. இலிட்டானி என்னும் ஆறு தெற்காகவும் பின்னர் மேற்காவும் பாய்ந்து தயர் நகருக்கருகில் மத்தியதரைக்கடலில் விழுகிறது.

மலைப்பக்கங்களில் ஓக்கு, பைன், சைம்பிரசு தேவதாரு ஆகிய மரங்கள் வளருகின்றன. அகாசியா, ஆல்மண்டு, பேரீச்சை, பாப்லர், சைகாமூர் மரங்கள் கடற்கரைச் சமவெளிகளில் செழித்து வளருகின்றன.

மழை: கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுக்கு 39 செ.மீ. மழை பொழிகிறது. அல் பிகாச் சமவெளி 64 செ.மீ. மழையைப் பெறுகிறது. நீண்டுயர்ந்த மலைப் பகுதிகளில் 130 செ.மீ. மழையும் பனியும் பெய்யும். சனவரி குளிர்ந்த மாதம்; ஆகசுட்டு வெப்பம் மிகுந்தது.

பொருளாதாரம்: வாணிகமே இலெபனானின் சிறப்பான வருவாய்க்கு வழி வகுக்கின்றது. பெய்ரூட்டிலும், திரிப்போலி (Tripoli) யிலும் இந்நாட்டின் சிறந்த துறைமுகங்கள் உள்ளன.

எந்திரங்கள், செய்பொருள்கள், பேருந்துகள், மாவு, கோதுமை, எண்ணெய் போன்ற பொருள்கள் பிரான்சு, இங்கிலாந்து, சிரியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்குச் செருமனி போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. பழவகைகள், கொட்டைகள், தானியம், காய்கறிகள், பருத்தி நூல் போன்றவற்றை இந்நாடு இங்கிலாந்து, ஈராக்கு, சோர்டான், குவைத்து, சவுதி அரேபியா, சிரியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேற்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் பணத்தைக் கடன் கொடுத்துதவும் மையமே இலெபனான்தான் என்பர். இந்நாட்டில் நூறு வங்கிகள் உள்ளன. அவற்றுள் பல வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளாம்.

வேளாண்மைத் தொழிலின் மூலம் இலெபனானின் 60 விழுக்காடு வருவாய் கிட்டுகிறது. திரிப்போலி எனப்படும் தரப்புலசு (Tarapulus) என்னும் நகரத்திற்கும் தயர் (Tyre) என்னும் நகருக்கும் இடையிலுள்ள கடற்கரையையொட்டி எலுமிச்சம் பழங்கள், காய்கறிகள், வாழைப்பழம், புகையிலை போன்றவை விளைகின்றன. மலைப்பக்கங்களிலுள்ள மாடிப்படி போன்று அமைந்துள்ள பண்ணைகளில் ஒலிவம், முசுக்கட்டை, திராட்சை, அத்தி, ஆப்ரிகாட்டு, பீச்சு, ஆப்பிள், உருளைக்கிழங்கு போன்றவை பயிராகின்றன. அல்பிகாச் சமவெளியில் உழவர்கள் இக்கால எந்திரங்களைப் பயன்படுத்தி உணவுக்குப் பயன்படும் கூலவகைகள், பருத்தி போன்றவற்றை உற்பத்தி செய்கிறார்கள். மலையூற்றுகள் நீர்ப்பாசனத்திற்கு உதவுகின்றன. மேற்காசியாவில் தொழிற்சாலை வளம் மிக்க நாடாக இந்நாடு விளங்குகிறது. தொழிற்சாலைகளின் மூலம் நாட்டில் ஐந்திலொரு பங்கிற்கும் குறைவான வருவாய் கிட்டுகிறது. கட்டடப் பொருள்கள், உணவைப் பதப்படுத்துதல், மரப் பொருள்கள், மிதியடிகள், தோல்பொருள்கள் போன்றவை இங்குள்ள தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன.

இயற்கை அழகும், மிதமான தட்பவெப்பநிலையும், பினீசிய உரோமானியர், சிலுவைப் போர்க்கால அழிவுச்சின்னங்கள் போன்றவையும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஆற்றல் பெற்றவை. பயணியர் தங்கும் உணவுச்சாலைகள், பொது ஆடரங்கம், நீச்சல் குளங்கள். உணவு விடுதிகள், பனியில் சறுக்கி விளையாடும் இடங்கள் போன்றவற்றைச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலெபனானியர் கட்டியுள்ளனர்.

வரலாறு: கடலோடிகளான பினீசியர்கள் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னர், இந்நாட்டில் குடியேறினர். படிப்படியாக அவர்கள் வாணிகப்பெரும்பேரரசு

ஒன்றை நிறுவினர். உரோமானியர்கள் கி.மு. 64-ஆம் ஆண்டில் இந்நாட்டைக் கைப்பற்றினர். உரோமானியர் கட்டிய கலையரங்குகளையும் கோயில்களையும் பைபுலோசு, பால்பெக்கு என்னுமிடங்களில் இன்றும் காணலாம். உரோமானிய ஆட்சிக் காலத்திலேயே கிறித்தவ சமயம் இந்நாட்டில் பரவத் தொடங்கியது. அராபியர் இசுலாம் சமயத்தை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இங்குக் கொணர்ந்தனர். இலெபனான் கிறித்தவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து வந்த சிலுவைப் போர் வீரர்களை வரவேற்றனர். சிலுவைப் போர் வீரர்களுக்கு அவர்கள் வழிகாட்டிகளாகவும் செய்தி சொல்வோராகவும் படை வீரர்களாகவும் இருந்து சிறப்பான சலுகைகள் பலவற்றைப் பெற்றனர். இலெபனானிலிருந்த மாரோனிய கிறித்தவர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் சிலுவைப் போர்களின்போது மரபு வழியான உறவு தொடரலாயிற்று. இலெபனான் கி.பி. 1516-ஆம் ஆண்டில் உதுமானியத் துருக்கர்களின் வசமாயிற்று; அப்பேரரசின் பகுதியுமாயிற்று.

முதல் உலகப் பெரும் போரில் துருக்கி தோல்வியுற்றபோது உதுமானியப் பேரரசு அழிந்தது. சர்வதேசச் சங்கம் இந்நாட்டில் அப்பொழுது பிரெஞ்சு ஆட்சியை நிலைநாட்டியது. முழுச் சுதந்திரம் கொடுக்கப் போவதாகப் பிரான்சு 1941-இல் இந்நாட்டுக்கு உறுதியளித்தது. எனினும், 1943 வரை சுதந்திரம் கொடுக்கப்படவில்லை.

இலெபனானின் சுதந்திரம் பெற்ற புதிய அரசில் முசுலிம்களைவிடக் கிறித்தவர்கள் பெரும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். மேலும், இலெபனானியக் கிறித்தவர்கள் முசுலிம்களைவிடப் பொருளாதார மேம்பாடுற்றவர்களாயிருந்தனர். இந்நாட்டைச் சார்ந்த முசுலிம் அராபிய தேசியவாதிகள் 1958-இல் அரசுக்கெதிராகக் கலகம் செய்தனர். இந்நாட்டு அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டிடம் உதவி கேட்டது. அமெரிக்க ஐக்கிய நாடு 10,000 கடற்படை வீரர்களை இந்நாட்டுக்கு அனுப்பியது. படைவீரர்களின் துணைக் கொண்டு அரசு அமைதியை நிலைநாட்டியவுடன் கப்பற்படை வீரர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டனர். இந்நாட்டின் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை.

இலெபனானியத் தலைவர்கள் 1958க்குப் பின்னர், அரசில் முசுலிம்களுக்கு நிறைய இடங்களை ஒதுக்கினர். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் முயன்றனர். குறிப்பாக முசுலிம்களும் கிறித்தவர்களல்லாத குடிமக்களும் இதனால் பெரும் பயனடைந்தனர். இச்சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும் இந்நாட்டு மக்களிடையே அமைதியின்மையே நீடிக்கலாயிற்று. முசுலிம்களும் கிறித்தவர்களல்லாத குடிமக்களும் பொருளாதாரத்திலும் அரசியல் அதிகாரத்திலும் பெரும்பங்கைக் கோரினர். மேலும், 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலெபனானில் குடியமர்த்தப்பட்ட பாலசுத்தீன ஏதுமிலிகளுள் (அகதிகள்) $3\frac{1}{2}$ இலட்சம் பேர் அமைதியின்மையை மேலும் வளர்க்கும் தூண்டு கோலாயினர். இலெபனானுக்குத் தென்பால் அமைந்திருந்த இசுரேலில் தான் பாலசுத்தீனர்கள் முன்னர் வாழ்ந்த நிலப் பகுதிகள் இருந்தன. பாலசுத்தீன அதிரடிப்படைகளும் இசுரேலியப் படைவீரர்களும் 1960-இலிருந்து 1970 வரை இந்நாட்டில் கொரில்லாப்போரில் இறங்கினர். பெருகிய அதிகாரம் கோரிய இலெபனானிய முசுலிம்களுடன் பல பாலசுத்தீனியர்கள் இணைந்து கொண்டனர்.

இலெபனானியக் கிறித்தவர்களுக்கும் இலெபனானிய முசுலிம்களுக்குமிடையே 1975-ஆம் ஆண்டு குருதி சிந்தும் உள்நாட்டுப்போர் மூண்டது. இப்போரின் விளைவாக இந்நாட்டில் பல்லாயிரவர் கொல்லப்பட்டதுடன் பெருஞ்சொத்துகளும் அழிந்தன. இந்நாட்டின் எல்லையிலிருந்த சிரியா: 1976-இல் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவான் வேண்டிப் பல்லாயிரப் படைவீரர்களை அனுப்பியது. இலெபனானில் நிகழ்ந்த போர் 1976-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெரும்பாலும் முடிவடையும் நிலைக்கு வந்தது. ஆயினும், கிறித்தவர்களுக்கும் முசுலிம்களுக்கும் இடையே போர் நீடித்து வந்தது.

தென் இலெபனானில் 1967-இல் பாலசுத்தீன விடுதலை இயக்கம் பல தளங்களை அமைத்தது. இத்தளங்களிலிருந்து பாலசுத்தீன விடுதலை இயக்கத்தினர் இசுரேலைத் தாக்கினர். பாலசுத்தீன விடுதலை இயக்கப் பயங்கரவாதிகள் 1978-இல் இசுரேலின் மீது தாக்குதல் நடத்திப் பலரைக் கொன்றனர். இதை எதிர்க்க இசுரேல் இலெபனானில் அமைக்கப்பெற்றிருந்த தளங்களைத் தாக்கும் நோக்குடன் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியது. தென் இலெபனானின் பல இடங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது. இசுரேலின் தாக்குதலையடுத்து ஐக்கிய நாடுகள் அமைதிக்காவல் படையொன்றை அப்பகுதிக்கு அனுப்பியது. எனினும், இசுரேலுக்கும் பாலசுத்தீன விடுதலை இயக்கத்தினருக்குமிடையே அவ்வப்போது மோதல்கள் தொடர்ந்து நீடித்தன. இலண்டனிலிருந்த இசுரேலியத் தூதரை 1982, சூன் மாதத்தில் கொல்ல நடைபெற்ற முயற்சியையடுத்து இசுரேலியப் படைகள் மீண்டும் தென் இலெபனானின் மீது படையெடுத்தன. பெரும்படையுடன் சென்ற

இசுரேலியப் படைவீரர்கள் இந்நாட்டைச் சூறையாடிப் பெய்ரூட்டு நகரத்தின் மீது குண்டுமாரி பொழிந்தனர். பாலசுத்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரும் படைவீரர்களும் 1982 செப்டம்பர் மாதத்தில் பெய்ரூட்டை விட்டகன்றனர். பசீர் கெமயல் என்பார் 1982 ஆகசுட்டு 23-ஆம் நாள் இலெபனானின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் செப்டம்பர் 14-ஆம் நாள் கொலை செய்யப்பட்டார். அதன்பின் அவருடைய தம்பி அமின்கெமயல் குடியரசுத் தலைவராக 1982 செப்டம்பர் 21-ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இலெபனான் நாட்டில் கல்வி** இலெபனான் நாட்டுக் கல்வி அமைப்பில் பள்ளி முன் தொடக்கக் கல்வி (Primary Education) முதல் படியாகும். குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் இரண்டாண்டுகள் பயிலுகின்றனர். இப் பள்ளிகளில் குழந்தைகள் நான்கு வயதில் சேர்ந்து ஐந்து வயதில் பள்ளி முன் தொடக்கக் கல்வியை முடிக்கின்றனர்.

ஆறு வயதில்தான் குழந்தைகள் தொடக்கப் பள்ளிக் கல்வியில் சேருகின்றனர். பதினொரு வயதில் தொடக்கப் பள்ளியில் கல்வி பெற்று வெளியேறுகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் மொத்தக் கால அளவு ஆறாண்டுகளாகும்.

தொடக்கப்பள்ளிக் கல்வி குழந்தைகளுக்குக் கட்டாயம் என்ற சட்டம் இலெபனானில் (Lebanon) இன்னும் இயற்றப்படவில்லை. தொடக்கப் பள்ளிக் கல்வி பெற்ற மாணவர்கள் பன்னிரண்டு வயதில் உயர்நிலைப் பள்ளிகளில் (Junior High School) சேர்ந்து நான்காண்டுகள் பயிலுகின்றனர். பின்பு இவர்கள் பதினாறு வயதிலிருந்து பதினெட்டு வயது வரை மேல் நிலைப் பள்ளிகளில் (Senior High School) பயிலுகின்றனர்.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முடித்த பதினெட்டு வயது நிறைந்த மாணவர்களே பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்றனர்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் ஆண், பெண் மாணவர்கள் விகிதத்தில் வேறுபாடு இல்லை. ஆண்களும் பெண்களும் சமமாகக் கல்வி பயிலுகின்றனர். பல்கலைக் கழகக் கல்வி நிலையில் 40 விழுக்காடு பெண்கள் பயிலுகின்றனர்.

மொழிக்கு முதலிடம்: இலெபனான் நாட்டுக் கல்வியின் சிறப்புக் கூறு மொழியைக் கற்றலுக்கு முதலிடம் கொடுத்திருப்பதாகும். பள்ளிக்கல்வியில் மாணவர்கள் இரு மொழிகளைக் கற்கின்றனர். அலுவலக மொழியான அராபிய மொழியினை மாணவர்கள் தாய்மொழியாகக் கற்கின்றனர். இரண்டாவதாகப் பிரெஞ்சு மொழியோ ஆங்கில மொழியோ கற்பிக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியினை மொத்தம் 75 விழுக்காடு பள்ளி மாணவர்கள் கற்கின்றனர்; மொத்தம் 25 விழுக்காடு மாணவர்களே ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கின்றனர். மூன்றாம் மொழியையும் மாணவர்கள் பதினொரு வயதிலிருந்தே கற்பதும் பள்ளிகளில் உண்டு. இந்நாட்டில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் இருமொழி பேசுபவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நிருவாகம்: கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அரசு நிறுவனங்கள் அல்ல; தனியார் கல்வி நிறுவனங்களும் இலெபனானில் உண்டு. தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் பெறுகின்றன. தனியார் பள்ளிகளில் பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களின் குழந்தைகளே கல்வி பயிலுகின்றனர். ஏழை மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகள் இடமளிக்கின்றன.

கல்வி அமைச்சகமே அனைத்து நிலைக் கல்விக்கும் முழுப் பொறுப்பாகும். கல்விக் கொள்கைத் திட்டம், பாடத் திட்டம் ஆகியவை தேசிய அளவில் நடைபெறும். தேர்வு, அரசுப் பள்ளிகள், இலெபனானியப் பல்கலைக் கழக நிருவாகம் ஆகிய அனைத்தும் கல்வி அமைச்சகத்தால் கண்காணிக்கப்படுகின்றன. தேசிய கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி மையம் (Centre for Educational Research and Development) கல்வி அமைச்சகத்தின் பணிகளில் உதவி புரிகிறது. தனியார் பள்ளிகள் தாங்களாகவே இயங்கிக் கொண்டாலும் தேசிய பாடத்திட்டத்தைப் (National Curricula) பின்பற்றுகின்றன. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு நடத்தும் தேர்வுகளை எழுத வேண்டும்.

மதப் பள்ளிகள்: அரசு, தனியார் பள்ளிகளைத் தவிர்த்து, தொடக்கப் பள்ளிக் கல்வி நிலையில் மட்டும் பிற நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளும் உண்டு. இந்நிறுவனங்களுக்கு அரசு ஊக்க உதவித் தொகை (Subsidy) அளிக்கிறது. இப் பள்ளிகளில் மிகவும் ஏழை மாணவர்களும் மதக் கல்வி பெற விரும்பும் மாணவர்களும் மட்டுமே சேர்ந்து பயிலுகின்றனர்.

உயர்கல்வி: இலெபனானின் தலைநகரான பெய்ரூட்டிலும் மற்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 15 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் அராபி, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய ஏதாவதொரு மொழியே பயிற்று மொழியாக

உள்ளது. இப்பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு மதப்பிரிவோடும் வெவ்வேறு நாட்டோடும் இணைந்து இயங்கி வருகின்றன.

வயது வந்தோர் கல்வி: இலெபனான் 1943-இல் சுதந்திரம் பெற்றது. அன்றிருந்து முறைசாராக் கல்வியும் இந்நாட்டில் வளரத் தொடங்கிவிட்டது. சமூக நலத் துறையும் (Ministry of Social Affairs) இதனோடு இணைந்த மற்ற நிறுவன அமைப்புகளும் அரசிடம் பண உதவி பெற்று, முறைசாராக் கல்வித் திட்டத்தை நடத்தி வருகின்றன. முறைசாராக் கல்வித் திட்டத்தில் தனியார் முயற்சி பெரும்பங்கு பெறுகிறது. தனியார் பல்கலைக் கழகங்கள், தொழிற் பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள் (Benevolent Associations) ஆகியவை முறைசாராக் கல்வியினை முனைப்புடன் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தில் மாணவர்களுக்கு அயல்மொழி கற்பிக்கப்படுகிறது; தொழில் திறனை உயர்த்த உதவும் கருத்து விளக்கக் கல்வி (Theoretical Knowledge) கற்பிக்கப்படுகிறது; வேலை வாய்ப்புப் பெற உதவும் வகையில் தகுதி மேம்படுத்தப்படுகிறது; கவின் கலை, பொழுதுபோக்குத் துறை ஆகியவற்றில் அறிவு விளக்கம் அளிக்கப்படுகிறது; உடல் ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பது எப்படி என்றும் சொல்லித் தரப்படுகிறது; அதனோடு, குடும்ப நலம் பற்றிய சிந்தனையும் ஊக்குவிக்கப்படுகிறது.

உதவித் தொகை: மாணவர்களுக்கு உதவித் தொகை பொதுவாக வழங்கப்படுவதில்லை. ஆனால், இலெபனானியப் பல்கலைக் கழகத்தில் மட்டும் தேசிய உதவித் தொகைத் திட்டம் உள்ளது. தனியார் பல்கலைக் கழகங்களில் மிகக் குறைந்த மாணவர்களுக்கே உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: பொதுவாக, இலெபனானில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லை; எனினும், பாதிக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் முழுத்தகுதியும் பெற்றவர்கள் அல்லர் (Underqualified).

மழலையர் பள்ளி ஆசிரியர்களும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் தேசிய கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியுடைய ஆயிரத்திலிருந்து மூவாயிரம் வரையுள்ள மாணவர்கள் 10 மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர்.

உயர்நிலைப் பள்ளியில் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் 10 மாதப் பயிற்சியோடு மேலும் ஈராண்டுச்சிறப்புப் பயிற்சியும் பெறுகின்றனர்.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் பல்கலைக் கழகக் கல்வியியல் புலத்தில் ஈராண்டு பயிற்சி பெறுகின்றனர். இத் தகுதி பெற்ற ஆசிரியர்களே மேல் நிலைப் பள்ளிகளில் பாடம் கற்பிக்கின்றனர். ஓராண்டுக்கு ஏறத்தாழ 400 ஆசிரியர்களே இவ்வாறு பயிற்சி பெறுகின்றனர். கல்வி அமைச்சகம் நடத்தும் தொழிற் கல்வி நிறுவனங்களில் தொழிற்கல்வி ஆசிரியர் பயிற்சி உண்டு.

பாடத் திட்டம்: கல்விப் பாடத் திட்டத்தை அரசே முடிவு செய்கிறது. இதில் கல்வி வல்லுநர்களின் கருத்துரைகளை அரசு விரும்பிக் கேட்கிறது. அரசு தரும் பாடத் திட்டமே நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

பொதுவாகப் பாடநூல்களைப் பள்ளி ஆசிரியர்களும் பல்கலைக் கழக ஆசிரியர்களுமே எழுதிக் கொள்கின்றனர். அரசின் பொறுப்பிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான பாடநூல்களைத் தேசிய கல்வி ஆய்வு வளர்ச்சி மையம் உருவாக்கித் தருகிறது.

தேர்வு முறை: ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு மாணவர்களை அனுப்புவதைப் பொதுவாக ஆசிரியர்களே செய்கின்றனர். இருப்பினும், மாணவர்கள் தங்களின் 15,17,18 ஆகிய வயதுகளில் முறையே உயர் நிலைப்பள்ளி இறுதி ஆண்டிலும், மேல்நிலைப் பள்ளியின் இரண்டு ஆண்டிலும் அரசுத் தேர்வை எழுதியே வெற்றி பெறுதல் வேண்டும். இவ்விரு தேர்விலும் வெற்றி பெற்ற மாணவர்களே பல்கலைக் கழகக் கல்வியில் சேர இயலும்.

கல்வியியல் ஆய்வு: பல்கலைக் கழகக் கல்விப் புலம் வழக்கமான கல்வியியல் ஆய்வுகளைச் செய்து வருகிறது. பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்கள் பயிற்சி, கல்வி உளவியல் போன்ற பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப் படுகின்றன. இப்பொழுது, தேசிய கல்வி ஆய்வு வளர்ச்சி மையத்தின் உதவியுடன் நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் கல்வியியல் ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

இந்நாட்டின் கல்விச் சிக்கல்களாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். நாடு சுதந்திரமடைந்த பின்னர்க் கூடத் திட்டமிடப்பட்ட அணுகுமுறை இன்னும் இல்லாத காரணத்தால், நாட்டின் சமுதாயப் பொருளாதாரத் தேவைகளைக் கல்வியால் நிறைவு செய்ய இயலவில்லை. சான்றாக, இன்று நாட்டில் நிறையத் தொழில் திறம் பெற்றோர் (Technicians) தேவையாயிருந்தும், தொழிற் கல்வி கற்றோரின் விகிதம் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. அரசுப் பள்ளிகளில்

இன்னும் கல்வித் தரம் தாழ்ந்தே உள்ளது. அறிவியல் பாடங்கள் அனைத்தும் அயல்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. ஆனால், அந்த மொழியில் அனைதது மாணவர்களும் திறன் பெற்றவர்களாக இல்லை. இந்நாட்டுக் கல்வித் திட்டம் இன்னும் மாற்றப்படாமல் பழையதாகவே இருந்து வருகிறது.

**இலெமார்க்கு** பிரெஞ்சு நாட்டு இயற்கையியலாருள் முதன்மையானவர். உயிரினங்களின் வளர்ச்சியை விளக்கும் படிமலர்ச்சிக் கோட்பாடுகள் வலுப்பெறத் துணை நின்ற கோட்பாடுகளுள், செவிலியர் தி சீன் பாப்திசுது பியரி அண்டாய்னி தி மோனெட்டு இலெமார்க்கு(Chevalier De Jean Baptiste Pierre Antoine De Monet Lamark) கொள்கைகள் முதன்மையானவையாகும்.

இலெமார்க்கு பிரெஞ்சு நாட்டில் பிக்கார்டி (Picardy) என்னுமிடத்தில் கி.பி. 1744- ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பெற்றோரின் 11 குழந்தைகளுள் இவரே இளையவர். கத்தோலிக்கப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த இவர் தந்தையின் மறைவிற்குப்பின் இராணுவத்தில் கி.பி.1761-68 வரை பணிபுரிந்தார். உடல் நலமின்மையால் இராணுவத்திலிருந்து விலகிப் பாரிசுக்குச் சென்று மருத்துவம், தாவரவியல் ஆகியவற்றைப் பயின்றார். இங்குப் பயின்று கொண்டிருந்தபோது பிரெஞ்சுத் தாவரவியல் அறிஞர் சார்டின் து இராய் (Jardin du Roi) அவர்களுடன் தொடர்பு கொண்டு 'இராயல்' தாவரவியல் பூங்காவில் பணியாற்றினார். இவர், தம் கள ஆய்வுப் பட்டறிவினைத் தொகுத்து கி.பி.1778-ஆம் ஆண்டு 'பிரெஞ்சு நாட்டின் தாவரங்கள்' (French Flora) என்னும் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட்டார். இந்த வெளியீடு தாவரவியலுக்கு மிகுந்த பயனுடைய கையேடாக அமைந்தது. இதன்பின்னர், இலெமார்க்கு ஐரோப்பாவின் பல்வேறு அருங்காட்சியகங்களுக்கும் தாவரவியற் பூங்காக்களுக்கும் சென்று ஆய்வு செய்தார். திதரோத்து (Diderot)தொடங்கிய முறையியற் கலைக் களஞ்சியப் (Methodic Encyclopaedia) பணியினை அவரது மறைவிற்குப்பின் தொடர்ந்து பல தொகுதிகளை வெளியிடும் பொறுப்பையும், அரசு உலர்தாவரக் கூடத்தின் (Royal Herbarium) காப்பாட்சியர் பொறுப்பையும் ஏற்றார்.

அருங்காட்சியகச் சீரமைப்பில் இவரது பங்கு தலையானது. 'இயற்கை வரலாற்றில் அருங்காட்சியகம்' (Museum d'Historic Naturelle) தொடங்கப்பட்டபோது முதுகெலும்பில்லாப் பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்று அரிய விலங்கினங்களைச் சேகரித்து வகைப்படுத்தி வைத்தார். இதன் பயனாய் விலங்கினங்களையும் தாவரங்களையும் வகைப்படுத்தும் அறிவியல் துறையில் ஈடுபட்டார். படிமலர்ச்சி பற்றிய இலெமார்க்கின் 'பயனுண்மை-பயனின்மை விதி' (Law of Use and Disuse), 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியிலமைவதாகும்' (Inheritance of Acquired Characters) என்னும் இரண்டு கொள்கைகளுமே படிமலர்ச்சியியலில் குறிப்பிடத்தக்க வாதத்தைத் தொடங்கின. இவர் செருமானிய மொழியில் எழுதி கி.பி.1809-ஆம் ஆண்டு வெளியிட்ட 'விலங்கியல்தத்துவம்' (Zoological Philosophy) என்னும் நூலில் இக்கோட்பாடுகளைக் குறிப்பிட்டார்

விலங்குகளும் தாவரங்களும் தாம் வாழும் சூழ்நிலைகளின் அமைப்பிற்கேற்றவாறு தகவமைந்து அச்சூழலின் பண்புகளை ஏற்று வாழ்கின்றன. இவ்வாறு ஒரு புதிய சூழலின் பண்பினை ஏற்று வாழும் போது பழைய சூழலில் தான் கொண்டிருந்த தகவமைப்பை மாற்றிக் கொள்கிறது. இதனால் உறுப்புகளும் அதன் தன்மைகளுக்கேற்ப மாற்றம் பெறுகின்றன. தேவையுள்ள உறுப்புகள் வளம் பெற்றும் தேவையற்ற உறுப்புகள் வலுவிழந்தும்விடுகிறது என்பதே இலெமார்க்கின் 'பயனுண்மை விதியாகும்'. இந்த விதியினை நிலைநிறுத்த இலெமார்க்கு பல எடுத்துக்காட்டுகளைக் காட்டியுள்ளார். முற்காலத்திய ஒட்டகச் சிவிங்கி குட்டையான முன்னங்கால்களையும் குட்டையான கழுத்தினையும் கொண்டிருந்தது. அப்போது இவ்விலங்கு புற்களையும் தாழ்ந்த இடத்திலுள்ள செடிகொடிகளையுமே உண்டுகொண்டிருந்தது. காலப் போக்கில் இவ்விலங்கின் வாழிடச் சூழலில் புற்களும் தாழ்வுஇடச் செடிகொடிகளும் குறைந்து விட்டதால்ஒட்டகச்சிவிங்கி மரக்கிளைகளை நாடிச் சென்றது. உயரத்திலிருந்த தழைகளை மேயக் கழுத்தை நீட்டியும், முன்னங்கால்களை தூக்கியும் செயற்பட்டு வந்ததால் காலப்போக்கில் மிக நீண்ட கழுத்தினையும் நீண்ட முன்னங்கால்களையும் பெற்றுவிட்டது.

இலெமார்க்கின் இரண்டாம் கொள்கை 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியமைவதாகும்' என்பது. உயிரிகளின் வாழிடச் சூழலில் மாற்றம் ஏற்படும் போது அப்புதிய சூழ்நிலையில் வாழ வேண்டிய தேவை ஏற்படுகிறது. இப் புதிய சூழலில் வாழ்க்கை அமைப்பை மேற்கொள்ளப்புதிய தகவமைப்புத்தேவையாகும் போது அதனால் ஏற்படும் மாற்றங்கள் மரபுவழி அமையப் பெறுகின்றன என்பது இலெமார்க்கின் வாதமாகும். முன்கூறப்பட்ட எடுத்துக்காட்டின்படி, நீண்டகழுத்தையும் நீண்ட முன்னங்கால்களையும் பெற்ற ஒட்டகச் சிவிங்கியின் வழித் தோன்றல்களிடத்திலும் இப்பண்பு காணப்படும் என்றார்.

இலெமார்க்கின் கொள்கைகளை ஆதரித்தவர்களுள் கோப்ரே செயிண்ட் இலேயர்(Geoffroy Saint Hilaire), குவியர் (Cuvier) ஆகியோர் முதன்மையானவர். இவர்கள் இருவரும் இலெமார்க்கின் கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. விலங்குகளின் உறுப்புகளில் ஏற்படும் மாற்றம் சூழ்நிலைத் தாக்குதலினாலேயன்றிப் பயனுண்மை - பயனின்மை விதியைப் பொறுத்து அன்று என்பார் இலேரி. குவியர் இலெமார்க்கின் கொள்கையை ஆதரித்தாலும் சில மாற்றுக் கருத்துகளையும் கொண்டுள்ளார். சிறப்பினங்கள் (Species) புதிய சூழலில் முதலில் மாறும் தன்மையைக் கொண்டாலும், பின்னர் எதிர்த்து நிற்கும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன என்பார் இவர்.

இலெமார்க்குக் கொள்கையை எதிர்த்தவருள் ஆகசுட்டு விசுமான் (August Weisman) முதன்மையானவர். இவர் கருத் திசு ஊன்நீர்மத் தொடர்ச்சிக் கோட்பாடு (Theory of Continuity of Germplasm) என்னும் தம் கோட்பாட்டை முன்வைத்து உயிரினங்களிடையே 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழி அமையா' என வாதிட்டார். உயிரியின் ஒவ்வோர் உட்கருவிலும் (Nucleus) மரபுப் பொருள் உள்ளது. இதனை உயிரிகள் புதிதாக உருவாக்க இயலாது. புறச் சூழலின் மாற்றம் ஒவ்வோர் உயிரியின் கருத் திசு ஊன்நீரின் தன்மையை மாற்றுவதில்லை. ஆகவே உட்கருவிலுள்ள கருத் திசு ஊன்நீரின் தொடர்ச்சி மாற்றமின்றி மரபுவழியாகச் செல்லும் தன்மையது.

இலெமார்க்கின் உயிரியல் ஆய்வுகள் இத்துறையில் பெருந்திருப்பத்தினை உண்டாக்க வித்திட்டது. இவர் இயற்பியல் செயல்முறைகளுக்கும் (Physical Process) வேதியியல், மண்ணியல், காலநிலை வாழ்க்கை முதலானவற்றிற்கும் உள்ள தொடர்பினை ஆழ்ந்தறிந்து இரண்டு தொகுதிகளை வெளியிட்டார். இவரது படைப்புகளுள் 'முதுகெலும்பற்ற உயிரிகளின் அமைப்பு' (System of Invertebrate-Animals, 1801), 'நீரகமண்ணியல்' (Hydrogeology, 1802), 'முதுகெலும்பற்ற உயிரிகளின் இயற்கை வரலாற்றியல்' (Natural History of Invertebrate-Animals, 1815-1822) முதலானவையும் குறிப்பிடத்தக்கனவாம்.

**இலெய்பாக்குமாநாடு (கி.பி. 1821)** ஐரோப்பாவில் நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின்னர் முடியாட்சியையும் பிற்போக்குக் கொள்கைகளையும் வலியுறுத்தி நிலைநாட்ட நடைபெற்ற பல மாநாடுகளுள் இலெய்பாக்கு மாநாடும் (Laibach Congress) ஒன்று. திரோப்பா (Troppau) மாநாட்டின் தொடர்ச்சியே இலெய்பாக்கு மாநாடென்பர். திரோப்பா மாநாட்டிற்கும் இலெய்பாக்குமாநாட்டிற்கும் இடைப்பட்ட மூன்று மாத இடைவெளியில் ஆசுத்திரியர்கள் 80,000 பேர் கொண்ட பெரும் படையைத் திரட்டி, அமைதி குலைந்திருந்த இத்தாலிய நாட்டுப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட முற்பட்டனர். உருசியர்களும் தம் படைகளை அனுப்பி முடியாட்சிக் கெதிராக நடைபெற்ற கலகங்களை முறியடிக்க முயன்றனர். இம்மாநாட்டில் உருசியா, ஆசுத்திரியா, பிரசியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்ட பிளவு மேலும் விரிவடைந்தது. முற்போக்குக் கருத்துகளை வலியுறுத்தி ஆசுத்திரியாவின் கருத்துகளை ஏற்க மறுத்த பிரிட்டன், இம்மாநாட்டு முடிவினை எதிர்த்துக் குரலெழுப்பியதுடன் மாநாட்டிலிருந்தே விலகிக் கொண்டது. இதனிடையில் கிரேக்கநாட்டில் ஏற்பட்ட கலகமும், இசுபெயின் நாட்டில் மோசமடைந்து வந்த சூழ்நிலையும், இத்தாலியைத் தவிர ஏனைய பகுதிகளில் இராணுவ நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தன. மீண்டும் கி.பி.1822-ஆம் ஆண்டில் வெரோனாவில்(Verona) பிறிதொரு மாநாட்டைக் கூட்டுவதென முடிவாயிற்று. இலெய்பாக்கு மாநாடு கி.பி. 1821-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கூடியது. இலெய்பாக்கு மாநாடு தன் முயற்சியில் வெற்றி பெறவில்லை. புனிதக் கூட்டுறவில்(Holy Alliance) இணைந்த நாடுகள் இம்மாநாட்டில் பிளவுண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**இலெயிட்டர் அனைத்துலகச் செயற்சோதனை** என்பது உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் விளங்கும் பண்பாட்டுச் சூழமைவுகளுக்குப் பொருந்துமாறு அமைக்கப்பட்ட நுண்ணறிவுச் சோதனையாகும். இச்சோதனை பல ஆண்டுகளாகப் பல இனங்களைச் சேர்ந்த மக்களிடம் கொடுக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டுத் தரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சோதனையில் எந்தக் குறிப்பும் கொடுக்கப்படுவதில்லை. சோதனை அளிக்கப்பட்டவுடன் அதில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிந்துணர்தலும் சோதனையின் ஒரு பகுதியாகும். இச்சோதனைகளில் பல அட்டைகளும் 'அவை பொருந்தக் கூடிய சட்டமும் கொடுக்கப்படுகின்றன. ஆட்படுநர் அதைப்பார்த்தவுடன் சட்டத்தில் அட்டைகள் பொருந்தக் கூடிய இடங்களில் அவற்றைப் பொருத்தவேண்டும். இலெயிட்டர் அனைத்துலகச் செயற்சோதனையில் (Laiter International Performance Scale)பல பகுதிகள்கிளைச் சோதனைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பொருத்தமான நிறங்களை இணைத்தல், பல தரப்பட்ட சாம்பல் நிற அட்டைகளை இணைத்தல், உருவங்களைப் பொருத்துதல், படங்களை இணைத்தல், சதுரக் கட்டத்திலுள்ள

உருவத்தைப் பார்த்து வரைதல், இடம் நிறைவு செய்தல், எண் மதிப்பீடு, ஒற்றுமை காணல், வரிசை நிறைவு செய்தல், காற் சுவடு அடையாளம் காட்டுதல், வரிசை நினைவிலிருத்தல், சூழமைவுக்கேற்ப விலங்குகளைப் பாகுபாடு செய்தல் போன்ற சோதனைகளை இலெயிட்டர் சோதனையின் சில பகுதிகளாகக் குறிப்பிடலாம்.

**இலெவலாசியன் நுட்பம்** முதற் கற்காலத்தின் இடைப்பட்ட காலப்பகுதியில் ஐரோப்பாவில் கற்கால மனிதனால் கற்கருவிகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் பெயர். பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு நகரின் புறநகர்ப் பகுதியில் இலெவலாசியசு (Levalloisias) என்ற இடத்தில் முதன்முதலில் இவ்வகை நுட்பம் கொண்டு செய்யப்பட்ட சில்லுக்கருவிகள் (Flake) கிடைத்தமையால் இப்பெயர் தரப்பட்டது.

பொதுவாகக் கற்கால மனிதன் தான் பயன்படுத்தும் கருவிகளை மூலக்கல்லில் (Core) இருந்து செய்தான். இத்தொழில் நுட்ப முறைப்படி முதலில் சில்லுகள் மூலக்கல்லிலிருந்து எடுக்கப்படும். இதன் நடுவில் சில்லுகள் எடுக்கப்படாத பகுதி ஆமையோடு போல இருக்கும். இதனால் அக்கருவி சில சமயங்கள் ஆமையோடு போன்றது என்று (Tortoise Core) சொல்லப்படும். இதனை மூலக்கல்லிலிருந்து பெயர்த்து எடுக்கும் பொருட்டு, மிகவும் நுட்பமான முறையில் மூலக்கல்லின் மீது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட அளவு வலிமையுடன் அடிக்கும்பொழுது சில்லுவடிவில் கருவி பிளந்து வெளிப்படும். இங்ஙனம் இக்கருவி செய்யும் முறை முன்பு பயன்படுத்திய, அதாவது மூலக்கல்லையே கருவியாக மாற்றும் நிலையினின்றும் மாறுபட்டு, மூலக்கல்லின் ஒரு சில்லையே உருவாக்கிக் கருவியாக்கிப் பிரித்தெடுத்தலேயாகும். இம்முறைக்கு இலெவலாசியன் நுட்பம் (Levolloisian Technique) என்று பெயர். இது அக்காலத்திய கற்கால மனிதனின் நுட்ப அறிவின் வளர்ச்சியைப் பறைசாற்றுகிறது. இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்கோடரிகளைத் தவிர, பட்டைக் கத்திகளும் (Blades) முனைகளும் (Points) செய்யப்பட்டன. கே. இரா.

**இலெவின்** (கி.பி. 1890-1947) செருமனியைச் சேர்ந்த முழுமைக் கோட்பாட்டு உளவியலறிஞர் (Gestalt Psychologist). குர்ட்டு இலெவின் (Kurt Lewin) பெர்லின் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று அப்பல்கலைக்கழகத்திலேயே உளவியல் பேராசிரியராகவும் பணியாற்றினார். இவர் 1933-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று அங்குக் கார்னெல் (Cornell) அயோவா(Iowa)போன்ற பல்கலைக் கழகங்களில் உளவியல் பேராசிரியராக இருந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்தபின் இலெவின் மசாசுசெட்சு தொழில்நுட்ப நிலையத்தில் (Massachusetts Institute of Technology) குழு இயங்கியல் ஆய்வு மையத்தின் (Research Centre For Group Dynamics) இயக்குநரானார்.

இலெவின் முழுமை உளவியலின் விதிகளையும் கோட்பாடுகளையும் சமூக உளவியலுக்குப் பயன்படும் முறையில் அமைத்தார்; உளவியலில் களக் கோட்பாட்டினை (Field Theory) உருவாக்கினார். மனிதர்களின் நடத்தைகளை அவை நிகழும்பொழுது அவற்றின் சூழமைவுகளுடனும் அவை நிகழ்வதற்குக் காரணமாக இருக்கும் இயங்குமுறைகளுடனும் பொருத்தப்படுத்தி ஆராய்தலே களக்கோட்பாடாகும். இக்கோட்பாட்டிற்கு இலெவின் இடவியல் (Topology) துறையின் கொள்கைகளைப் பயன்படுத்தினார். இவர் எழுதிய நூல்களுள் ஆளுமையின் இயக்கக் கோட்பாடு (Dynamic Theory of Personality), இடவியல்சார் உளவியல் விதிகள் (Principles of Topological Psychology), சமூக அறிவியலில் களக் கோட்பாடு (Field Theory in Social Science) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

**இலென்பர்கு** (1921-1975) மொழியறிவுக்கும் மூளையின் இயங்கு முறைக்கும் இடையே உள்ள தொடர்பினைப் பற்றி ஆய்வு செய்த உளவியலறிஞர். எரிக்கு இலென்பர்கு(Eirc,H. Laneberg)மருத்துவம், நரம்பியல் ஆகிய துறைகளைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் உளவியல் பேராசிரியராக இருந்தார். அக்காலத்தில் இவர் உளமொழியியலில் (Psycholinguistics) ஆர்வம் கொண்டு பல மொழியியல் ஆய்வுகளைச் செய்தார். 'மொழியின் உயிரியல் அடிப்படைகள்' (Biological Foundation of Language)என்னும் நூலை இயற்றினார். இந்நூல் மொழியியல் ஆய்வாளர்களுக்கு மிக்க பயனுடையதாக அமைந்தது. இலென்பர்கு மானிடவியல், உளவியல், நரம்பியல், மொழியியல், பரம்பரையியல், உடலியல் போன்ற துறைகளில் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள கருத்துகளைப் புலத்திடை ஆய்வு செய்தவர்களுள் சிறந்தவராகக் கருதப்படுகிறார். உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள மொழியியல் வல்லுநர்கள் இலென்பர்கின் ஆய்வுகளையும் கட்டுரைகளையும் ஆர்வத்துடன் படிக்கின்றனர். மூளையில் பேச்சுத் திறனுக்குரிய பகுதி, பேச்சுக் கோளாறுகள், குழந்தைகளின் மொழியறிவு முதிர்ச்சி போன்ற துறைகளிலும் இலென்பர்கு பல ஆய்வுகளைச் செய்துள்ளார்.

**இலெனின்** இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோவியத்து ஒன்றியத்தை நிறுவியவர்: மார்க்சும் ஏங்கல்சும் கற்பித்த பொதுவுடைமைக் கொள்கையைச் சோவியத்து அரசாங்கக் கொள்கையாக்கி அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர். காரல் மார்க்சு (Karl Marx) கொள்கையைக் கண்டார். இலெனின் (Lenin) அக்கொள்கை ஆளும் நாட்டைக் கண்டார். அக்கொள்கைக்காகச் சோவியத்துப்பொதுவுடைமைக்கட்சியைஉருசியாவில்நிறுவி, உழவர்களையும் ஆலைத் தொழிலாளர்களையும் அதன் உறுப்பினர்களாக்கி, அவர்களை ஆயுதமேந்தச் செய்து அக்டோபர்ப் புரட்சியை நடத்தி வெற்றி கண்டார். சோவியத்து ஒன்றியத்தை அழிக்க மற்ற ஐரோப்பிய நாடுகள் முனைந்தபோது அவற்றுடன் கடும்போர் நிகழ்த்தி அதனைக் காத்தார். உருசிய நாட்டிலும் அதன் சார்பு நாடுகளிலும் முடியாட்சி, சமய ஆட்சி ஆகியவற்றையும் தொழிலதிபர்கள், நிலப்பிரபுக்கள், குலாக்குகள் எனப்படும் வட்டிக் கடைக்காரர்கள் போன்றவர்களின் ஆதிக்கத்தையும் அடியோடு அழித்தார். இவர் உலகின் முதல் பொதுவுடைமைப் புரட்சிக்காரர்.



இலெனின்

இலெனின் என்பது இவருடைய புனைபெயர்களுள் ஒன்று. சைபீரியாவில் ஓடும் இலேனா (Lena) என்ற ஆற்றின் நினைவாக இலெனின் என்ற பெயரை இவர் புனைபெயராகக் கொண்டார். இவருடைய முழுப் பெயர்விளாடிமிர் இலியிச் உலியானவ் என்பதாகும்.

இவர்தம் தந்தை இலியா நிக்கலாயெவிச் உலியானவ்; தாய் மரீயா அலெக்சாந்திரவ்னாவ். இவர்தம் தந்தை பள்ளிகளின் பார்வையாளராகப் பணியாற்றியவர். இவர் குடும்பம் வருவாய் குறைந்த குடும்பம். விளாடிமிருடன் (இலெனின்) பிறந்தவர்கள் ஐந்து பேர்.

இலெனின் வோல்கா ஆற்றங்கரையில் உள்ள சிம்பீர்கு நகரில் கி.பி. 1870 ஏப்பிரல் 10–ஆம் நாள் பிறந்தார்.

இலெனின் சிம்பீர்கு உயர்நிலைப்பள்ளியிலும் கசான் பல்கலைக் கழகத்திலும் தங்கப்பதக்கம் பெறும் அளவுக்குச் சிறப்பாகப் பயின்றார்; சட்டப் படிப்பைத் தனியாகப் படித்துத் தேர்ந்தார்.

உருசியச் சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்ட மாணவர்களுள் இலெனினின் அண்ணன் அலெக்சாந்தரும் ஒருவர். தந்தையோ அதற்கு முன்னமேயே நோயால் இறந்தார். தலைவனின்றியும் பொருளின்றியும் குடும்பம் தவித்தது. வீடு விற்கப்பட்டது. காசான் நகரில் குடும்பம் குடியேறியது.

இலெனின் காலத்தில் உருசியப் பேரரசில் மக்கள் பெரும் கொடுமைக்கு உள்ளாகியிருந்தனர். வயல்களிலும் தோட்டங்களிலும் பண்ணைகளிலும் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் படைகளிலும் உழைப்பாளிகள் இரக்கமின்றித் துன்புறுத்தப்பெற்றுச் சுரண்டப் பெற்றனர். போதுமான உணவு, உடை, இருக்கை, மருத்துவ வசதிகளின்றி மக்கள் அடிமை வாழ்வு நடத்தினர். சார் எனப்பட்ட உருசிய அரசனும் பிரபுக்களும் நிலக்கிழார்களும் மதகுருக்களும் கிராமப்புறங்களில் வாழ்ந்த குலாக்குகள் எனப்பட்ட வட்டிக்காரர்களும் மக்களைப் பிழிந்தெடுத்தனர். சாரிடம் 1905–ஆம் ஆண்டு சனவரி மாதம் 9–ஆம் நாளன்று தங்களுடைய துன்பங்களை முறையிடுவதற்காகச் சென்று வழியில் வழிபாட்டுப் பாடல்களைப் பாடியபடி வந்த தொழிலாளர்களின் ஊர்வலம் மீது, அரண்மனையின் முன் அரசனின் கட்டளைப்படி துப்பாக்கிச் சூடு நடந்தது. தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தனர். நாட்டின் நிலைமையை இளமையிலிருந்தே இலெனின் கூர்ந்து கவனித்தார்.

இலெனின் நிறையப் படித்தார். புசுக்கின், இலேர்மந்தன், கோகல், தூகானிவ், நெக்ரா சவ், சல்திகோவ், கவுண்ட்டுலியோ தால்சுதாய் ஆகியவர்களுடைய நூல்களை ஆழ்ந்து பயின்றார். புரட்சிக்காரர்களான பெலின்கய், கெர்ட்சன் போன்றவருடைய

படைப்புகளை விரும்பினார். செர்னிசேவ்கியின் 'என்ன செய்வது' என்ற நூல் இவருடைய சிந்தனை களைப் பெரிதும் உருவாக்கியது. ஆனால், இவ ருடைய வாழ்க்கை முழுவதையும் ஆண்டுகொண்டது கார்ல் மார்க்சின் பொதுவுடைமைத் தத்துவம் தான். இவர் பொதுவுடைமைத் தத்துவத்தை ஆழ்ந்து கற்கலானார். பலதடவை படித்து அதனை ஆராய்ந்து, அந்தத் தத்துவம்தான் மனிதகுலத்துன்பங் களைப் போக்க வல்லது என்ற உறுதியான முடி விற்கு இவர் வந்தார்.

பொதுவுடைமைத் தத்துவம் (Communism) புரட்சிகரமான கொள்கையாகும். தொழிலாளி வர்க் கத்தையும், ஏனைய உழைப்பாளிகளையும் தனியுடை மையின்-மூலதனத்தின் அதாவது முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டும். உழைப்பாளி கள் சுரண்டப்படுவது நிறுத்தப்படவேண்டும். இன் றைய சமூக ஏற்பாடுகள் அனைத்தும்-அரசாங்கம், மதம், கல்வி போன்றவை-இச்சுரண்டலுக்கே கருவி கள். அரசாங்கத்தை உழைப்பாளிகளே எடுத்துக் கொண்டால்தான் இச்சுரண்டல் நிற்கும். அதற்கு உழைப்பாளிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டும். இவ்வாறு பாட்டாளி மக்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படும் போராட்டம் முடிவில் சமதருமத்திற்கு இட்டுச் செல்லும்; பாட்டாளிகளின் சர்வாதிகாரம் ஏற்படும்.

உருசியாவில் மார்க்சீயத்தை முதலில் பரப்பிய வர் நாடு கடத்தப்பட்ட புரட்சிக்காரர் பளென் கானவ். இவர் மார்க்சின் நூலை உருசிய மொழியில் பெயர்த்தார். நாட்டில் மார்க்சியக் கழகங்கள் தோன்றின.

இலெனின் கி.பி. 1892-ஆம் ஆண்டு சமாராவில் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். முதலாம் மார்க்சிய வட்டத்தை அமைத்தார். மற்ற மார்க்சியவாதிகள் அனைவருடனும் தொடர்பு கொண்டார். உழவர்கள், தொழிலாளர்களுடன் கலந்து பழகி, அவர்களுடைய சிக்கல்களை அறிந்தார். 'குடியானவர்களின் வாழ்க்கையில் பொருளாதார இயக்கங்கள்' என்ற கட்டுரை எழுதினார்.

இலெனின் கி.பி. 1893-ஆம் ஆண்டு பீட்டர்சு பர்கு வந்தார். மற்ற மார்க்சியவாதிகளுடன் சேர்ந்து மார்க்சியத் தொழிலாளர் கட்சி அமைக்க முனைந் தார். மிதவாதிகளான நரோத்னிக்குகளும், பிற் போக்கு வாதிகளான பொருள்முதல்வாதிகளும் தொழிலாளர்களுக்கு வருவாயில்தான் கண், அவர்கள் நாட்டினை ஆள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்று சொன்னார்கள். அவர்களை, இலெனின் கடுமையாக எதிர்த்தார். குடியானவர்களும் தொழிலாளர்களும் புரட்சியின் இரு கண்கள் என்று வலியுறுத்தி, இரு சாராரையும் ஒரு கட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்.

நதேசுதா குரூப்சுகாயா என்ற புரட்சிப் பெண் கி.பி. 1894 ஆம் ஆண்டு இலெனினுக்கு அறிமுக மானார். பின்னர் இருவரும் திருமணம் புரிந்து கொண் டனர். இலெனினின் புரட்சிகரமான வாழ்க்கைக்கு இவர் பேருதவி புரிந்தார்.

மாபெரும் அக்டோபர்ப் புரட்சிக்கு உருசிய மக் களைத் தயார் செய்ய இலெனின் கட்டுரைகள் வெளி யிடுதல், நூல்கள் வெளியிடுதல், பத்திரிகைகள் வெளியிடுதல், பொதுவுடைமைக் கட்சிக் கிளைகளைத் தொழிலாளர், மாணவர், உழவர் ஆகியோரிடையே நிறுவுதல், நாடாளு மன்றமாகிய தூமாசுக்குக் கட்சி உறுப்பினர்களை அனுப்பிவைத்தல், வேலை நிறுத் தங்களுக்கு ஏற்பாடு செய்தல், படைகளிடையே மார்க்சின் புரட்சிக் கருத்துகளைப் பரப்பல், பிற் போக்குக் குழப்பவாதிகளின் பிடியிலிருந்து நாட்டி னரை விடுவிக்கக் கடும் பிரசாரம் செய்தல் ஆகிய ஆக்க பூர்வமான வழிகளைக் கையாண்டார்.

கருத்துகளைப் பரப்ப இலெனின் பல நூல்களை எழுதினார். மக்களின் நண்பன், உருசியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, உருசிய சமூக மக்க ளாட்சிவாதிகளின் கடமைகள், என்ன செய்வது?, நாட்டுப்புற ஏழை மக்களுக்கு, ஓரடி முன்னே இரண்டடி பின்னே, புரட்சியிற் பிற்போக்குவாதி களின் போர்த் தந்திரங்கள், சோசியலிசமும் போரும் என்னும் முக்கிய நூல்களையும், ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும், கடிதங்களையும் இலெனின் எழுதினார். தொழிலாளரின் செயற்பாடு கள், தீப்பொறி, புதுவாழ்வு, நட்சத்திரம், சிந்தனை, பிராவ்தா முதலிய பத்திரிகைகள் இவரால் நடத்தப் பட்டன. இவருடைய நூல்களும், தீப்பொறி (இசுக்ரா) பத்திரிகையும் வெளிநாடுகளில் அச்சிடப் பட்டு உருசிய நாட்டிக்குள் மறைமுகமாகக் கொணரப்பட்டன.

பலமுறை இலெனின் சிறைத்தண்டனை அடைந் தார். பீட்டர்சுபர்குச் சிறைச்சாலையில் பலமாதங் கள் இருந்தார். சைபீரியாவிற்கு நாடுகடத்தப் பட் டார்; சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நார்வே, சுவீடன், பிரிட்டன், பிரான்சு, செருமனி, ஆசுத்திரியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் உருசியாவிலிருந்து தப்பிச் சென்று மனைவியுடன் வாழ நேர்ந்தது. அங்கு நிறையப் படித்துச் சிந்தித்து எழுதினார். உருசியப் புரட்சிக்காரர்கள் இவரிடம் வந்து திட்டங்களையும் கருத்துரைகளையும் பெற்றுச் சென்றனர். வெளி

நாட்டு இரகசியக் காவல்காரர்களும் இவருக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்தனர். முதல் உலகப்போர் தொடங்கியபோது ஆசுத்திரிய நாட்டுக் காவலர் இவரைச் சுடவிருந்தனர். ஆனால், அந்நாட்டுப் புரட்சிக்காரர்கள் இவரைக் காப்பாற்றினர். பற்றாக்குறையினால் வெளிநாடுகளில் இவர் துன்புற்ற போதிலும், வெளியிலிருந்து வரும் புரட்சிக்காரர்களுக்கு இவர் பேருதவி செய்தார். வெளிநாடுகளில் கட்சி மாநாடுகள் பலவற்றை வெற்றியுற நடத்தினார். கட்சிக்குள்ளே வம்புசெய்த மென்சுவிக்குகளை (சிறுபான்மையினரை) இவர்தம் கூட்டணியான போல்சுவிக்குகள் (பெரும்பான்மையினர்) அடக்கி வெளியேற்றினர்.

முதல் உலகப் போரில் உருசியா பெருந்துன்பம் அடைந்தது. போருக்கு எதிரான பிரசாரங்களை இலெனின் புரிந்தார். போல்சுவிக்குக் கட்சியின்-இலெனின் கட்சியின் – அழைப்பிற்கு இணங்கி, 1917-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் பெத்ரோகிராத்து நகரில் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் போரை எதிர்த்து வேலை நிறுத்தம் நடத்தினர். சார் சக்கரவர்த்தியின் படைகளும் தொழிலாளர்களுடன் சேர்ந்துகொண்டன. மார்க்சிசுட்டுக் கட்சியால் தலைமையேற்று நடத்தப்பெற்ற தொழிலாளர்களும் உழவர்களும் வென்றனர். முடியரசு அகற்றப்பட்டது. ஆனால், பிற்போக்குவாதிகளான பூர்சுவாக்கள் கையில் அரசாங்கம் வீழ்ந்துவிட்டது. இவ்வாறு நாட்டில் பூர்சுவா சர்வாதிகாரம், பாட்டாளிச் சர்வாதிகாரம் என இரட்டையாட்சி ஏற்பட்டது. ஏப்பிரல் மாதம் 16-ஆம் நாள் இலட்சக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே இலெனின் நாடு திரும்பினார். புரட்சிக்குத் தலைமை தாங்கி அக்டோபர் மாதம் பிற்போக்குவாதிகளிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார். இலெனினைக் கொல்வதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் பலிக்கவில்லை. அரோரா என்னும் போர்க்கப்பல் பிற்போக்கு அரசாங்கம் தங்கியிருந்த பனிக்கால அரண்மனையைத் தாக்கிப் புரட்சியை வெற்றியுறச் செய்தது. பாட்டாளிகள் இலெனின் தலைமையில் உலகின் மாபெரும் பொதுவுடைமைப் புரட்சியில் வெற்றி பெற்றனர்.

முதல் சோவியத்து அரசாங்கத்தை இலெனின் உறுதியான அடித்தளத்தில் காலமெல்லாம் நிலைத்திருக்கும் வகையில் அமைத்தார். செருமானியருடன் அமைதி உடன்பாடு செய்துகொண்டு முதல் உலகப் போரிலிருந்து சோவியத்து ஒன்றியத்தை விடுவித்தார். போரைத் தொடர்ந்து வந்த பெரும் பஞ்சத்தினைத் திறமையாகச் சமாளித்து நாட்டினைக் காப்பாற்றினார். பொதுவுடைமைச் சோவியத்து ஒன்றியத்தை அழிக்க அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள் உருசியாவிற்குள் படைகளை அனுப்பி, உள்நாட்டுப் போரினை உண்டாக்கி, பெருத்த ஆபத்தினை ஏற்படுத்தியபோது, இலெனின் திறமையாகப் போராடி அவர்களை விரட்டினார். இவருடைய நம்பிக்கையான தலைமையின் கீழ் சோவியத்து மக்கள் மாவீரத்துடன் போராடினர். சோவியத்துநாடு காப்பாற்றப்பட்ட பிறகு, இலெனினின் அரசாங்கம் அதை நன்கு வளர்த்தது. உழவர்கள் ஆலைத்தொழிலாளர்களின் ஒற்றுமை வளர்க்கப்பட்டது. சோவியத்து நாட்டில் குழந்தைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. நிலம் உழுபவர்கள் அதிகாரத்தின்கீழும், ஆலைகள் தொழிலாளிகளின் அதிகாரத்தின்கீழும் வந்தன. உழைப்பாளிகள் தாங்கள் உற்பத்தி செய்ததன் பலன்களை நன்கு அனுபவித்தார்கள். சுரண்டுபவர்கள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். நாடு முழுவதும் மின்சார மயமாக்கப்பட்டு, கனரகத் தொழில்களும் அறிவியல் அடிப்படையில் வேளாண்மையும் பெருகின. சோவியத்து ஒன்றியம் வல்லரசாகியது.

இலெனினின் ஆட்சிக்காலத்தில் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பல ஏற்பட்டன. உருசியப்புரட்சிக்குப்பின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட இலெனினை நடு உருசியாவைச் சார்ந்த பெருநகரங்கள் ஆதரித்தன. ஆனால், தொலைவிலிருந்த பகுதிகளில் உள்நாட்டுப் போர் மூண்டது. இலெனின் 1918-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் பெருஞ்சேனையை நிறுவி, அதற்கு உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் செங்கொடியின் நினைவாகச் செஞ்சேனை எனப் பெயரிட்டார். செஞ்சேனையை எதிர்த்தவர்களை வெள்ளையர் (Whites) என்றனர். புரட்சிக்காரர்கள், மக்களாட்சிக்காரர்கள், உருசியத் தேசியவாதிகள், பழைய அரசை விழைந்தவர்கள், மாற்றம் எதனையும் விரும்பாதவர்கள் போன்றோர் வெள்ளையருள் அடங்கியிருந்தனர். எனினும் வெள்ளையரிடம் கருத்து ஒற்றுமை உருவாகவில்லை; அவர்களால் எதிர்ப்பு அணியையும் செம்மையாக அமைக்க இயலவில்லை. போல்சுவிக்குகள் 1920-ஆம் ஆண்டளவில் அனைத்துப் போர்களிலும் வெற்றி பெற்றனர். உள்நாட்டுப்போர் 1922-ஆம் ஆண்டில் முடிவுற்றது.

இதனால் உருசியாவின் பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது. தொழிற்சாலைகளில் உற்பத்தி எதுவும் நடைபெறவில்லை. வேளாண்மைச்சாகுபடி பயங்கரமாக வீழ்ச்சியுற்றது. நகரமக்கள் வறுமையால் வாடினர். பல இலட்சக்கணக்கான உருசிய மக்கள் இறந்தார்கள்; ஆயிரக்கணக்கானோர் வெளிநாடுகளுக்கு ஓடினர். எனினும் பொதுவுடைமை அரசு தப்பிப் பிழைத்தது.

சீர்கெட்டிருந்த பொருளாதார நிலையைச் சீர்படுத்த இலெனின் பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவர் 1921-ஆம் ஆண்டு மார்ச்சில் புதிய பொருளாதாரக் கொள்கைத் (New Economic Policy) திட்டத்தைத் தொடங்கினார். ஆட்சியின் தொடக்கத்தின்போது தொடங்கப்பட்ட சமதர்ம நடவடிக்கைகளை இத்திட்டம் மாற்றியமைத்தது. சிறு வணிகர்கள் குறிப்பிட்ட நடவடிக்கைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இலவசச் சில்லறை வாணிகம் மீண்டும் அனுமதிக்கப்பட்டது. அயல்நாட்டு முதலாளிகள் உருசியாவில் முதலீடு செய்ய அழைக்கப்பட்டார்கள். குடியானவர்கள் தனிப்பட்ட வாடிக்கைக்காரர்களுக்கு உணவுப்பொருள்களை விற்க அனுமதிக்கப்பட்டார்கள். அமெரிக்காவின் அகதிகள் பாதுகாப்புக் குழுவினர் அனுப்பிய உணவுப்பொருள்கள் பல இலட்சம் உருசியர்களைப் பஞ்சத்திலிருந்து காத்தன. இக்குழுவின் தலைவர் எர்பர்ட்டு ஊவர் எனப்படுவார். இப்புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தத் தொடங்கியதும் ஐரோப்பிய நாடுகள் சோவியத்து ஒன்றியத்தை அங்கீகரித்து, அரசியல்துறைத் தொடர்பான உறவினை ஏற்படுத்திக்கொண்டன.

இலெனினை முதலாளிகளின் கூலிக்காரி ஒருத்தி கிரெம்ளினில் சுட்டுப் படுகாயப்படுத்தினாள். ஆனால் அந்தக் கொலை முயற்சியிலிருந்து இலெனின் தப்பினார். காயங்கள் குணமாகி இவர் பிழைத்தார். நாடு இவர் மீது அந்தச் சமயத்தில் அன்பைப் பொழிந்தது. இலெனின் 1924-இல் காலமானார். இவர் கிரெம்ளினில் அடக்கம் செய்யப்பட்டார். இப்போது அச்சமாதியில் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்கள் மரியாதை செலுத்துகின்றனர்.

இலெனின் எளிய குடும்பத்தில் பிறந்தவர்; எளிய பழக்க வழக்கங்கள் கொண்டவர்; உணவு, உடை, இருக்கை யாவும் எளியவை. இவர் குடும்பம் உணவுப் பங்கீட்டுப் பொருளைப் பெற்று உண்டு வாழ்ந்தது. தலைவர் என்பதற்காகத் தனிச் சலுகைகள் எதையும் அவர் பெறவில்லை. பஞ்சக் காலத்தில் நாட்டுத் தொழிலாளர்கள் அன்புடன் அனுப்பிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் இலெனின் குழந்தைகளுக்கு அளித்து மகிழ்ந்தார். உழவர்கள், தொழிலாளர்கள் கூறுவதை மிகவும் பொறுமையுடன் கேட்டு அரசாங்கச் சட்டங்கள் செய்தார்; அவர்களுள் ஒருவராகவே பழகினார். ஒருதடவை இவர் மாணவர்களுடன்சேர்ந்து விடியற்காலைப்போதிலேயே மாசுக்கோவில் மரக்கட்டைகளைச் சுமந்து சிரமதானம் செய்தார்; சுய விளம்பரத்தை அறவே வெறுத்தார். தம் ஐம்பதாம் ஆண்டுவிழாக் குறித்து இவர்மிகவும் நாணி அதைக் கண்டித்தார். நிழற்படம் எடுப்போருக்கு இவர் இடம் தருவதில்லை. ஆனால், குழந்தைகளை உயிருக்குயிராக நேசித்தார். 'எல்லோரும் இந்நாட்டில் சமம்தான். ஆனால், குழந்தைகளுக்கு யாரும் சமம் இல்லை' என்றார். நாட்டில் கடுமையான பஞ்சம் வந்தபோது, குழந்தைகளுக்கு மட்டும் முழுப் பங்கீடு தரச் செய்தார்.

இலெனின் விடிய விடியப் படிப்பார்; எழுதுவார். அச்சமின்றி மாறு வேடங்கள் புனைந்து காவலரை ஏமாற்றி உலாவுவார். காலை மாலை உலாவுவதையும் சதுரங்கம் ஆடுவதையும் பியானோ இசை கேட்பதையும் இவர் ஓய்வாகக் கருதினார்.


இவருக்கு உயிரான கருத்துகள் இரண்டு; போர் மனிதக் குலத்தின் பயங்கர எதிரி. அதை அடியோடு ஒழிப்பதற்குப்பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தினால் தான் முடியும் என்று கருதினார். சே. சு. இரா.

**இலெனின்கிராடு** சோவியத்து உருசியாவிலுள்ள மாநகரங்களுள் ஒன்று. முன்பு புனிதபீட்டர்சுபர்கு என்ற பெயருடன் உருசியப் பேரரசின் தலைநகராக இருந்தது. இதனைப் பீட்ரோகிராடு என்றும் கூறுவர். இலெனின் பெயரால் இன்று இந்நகரம் இலெனின்கிராடு (Leningrad) எனப்படுகிறது.

இலெனின் கிராடை உருவாக்கியவர் மகாபீட்டராவர். மகாபீட்டர் கி.பி. 1703-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டுடன் போரிட்டுப் பின்லாந்து வளைகுடாவில் சதுப்புநிலப் பகுதிகள் சிலவற்றை வென்றார். அந்த ஆண்டிலேயே அவர் பீட்டர்சுபர்குத் துறைமுகத்தைக் கட்டத் தொடங்கினார். ஐரோப்பாவைக் காணும் சாளரம் என்று இந்நகரைப் பீட்டர் பெருமிதத்தோடு கூறினார். அப்பகுதியில் அடிக்கடி வெள்ளப்பெருக்கும், நல்வாழ்வுக்கு ஏற்றதாக அமையாத தட்பவெப்பமும் குடிகொண்டிருந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாது, உழவர்களையும் கைதிகளையும் அங்குப் பணியாற்றத் திட்டம் தீட்டிச் செயற்படுத்தினார். உருசியா நாட்டைச் சார்ந்த குடும்பங்களை அங்குக் குடியேறச் செய்தார். பணியாளர்களுள் பலர் பிணியால் பீடிக்கப்பட்டு உயிர் துறந்தனர். மாசுக்கோ நகருக்கு மாறாக கி.பி.1712-இல் பீட்டர்சுபர்கைப் பீட்டர் தம் தலைநகராக்கினார்.

பீட்டரின் வழித்தோன்றல்கள் புனித பீட்டர்சுபர்கை ஒரு முதன்மையான துறைமுகமாகவும், தொழிற் சாலைகளின் மையமாகவும் மாற்றினார்கள். பிரபுக்கள் தத்தம் மாளிகைகளில் பகட்டாக வாழ்ந்தனர். ஏழைகள் வறுமையால் வாடி வதங்கினர். கப்பற்கட்டும் தொழிற்சாலைகள், உலோகப்

பணிமனைகள், நெசவாலைகள் போன்றவை அங்கு மிளிர்ந்தன. தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்திற்குக் கடுமையாக உழைத்தனர். இங்கு ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு தெற்றென வெளியாயிற்று. அதன் விளைவாக எழுந்ததே 1917-ஆம் ஆண்டைய உருசியப் புரட்சியாகும்.



னின்கி டு

முதல் உலகப் போரின்போது உருசியா, செருமனிக்கு எதிராகப் போரிட்டது. பல இலட்சக்கணக்கான படைவீரர்கள் கொல்லப்பட்டோ படுகாயம் அடைந்தோ போர்க் கைதிகளாகச் சிறைப்படுத்தப்பட்டோ அல்லலுக்காளாயினர். பீட்ரோகிராடு மக்கள் 1917, மார்ச்சு மாதத்தில் அரசருக்கெதிராகக் கலகஞ் செய்தனர். அவர்கள் சாலைகளில் பெருங் கூட்டமாகக் கூடி, உண்ண உணவும் அமைதியான வாழ்வும் வேண்டினர். இதுதான் உருசியப் புரட்சியின் தொடக்கமாகும். மாசுக்கோ 1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உருசிய நாட்டின் தலைநகரானது. பீட்ரோகிராடு 1924-இல் இலெனின்கிராடு என்று பெயர் சூட்டப்பெற்றது.

இரண்டாம் உலகப் போரின்போது 1941-ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில் செருமானிய நாசிகள் சோவியத்து உருசியாவின்மீது படையெடுத்தனர். ஆகட்டு மாத அளவில் அவர்களின் திறன்மிக்க படைவீரர்கள் இலெனின்கிராடை முற்றுகையிட்டனர். இம்முற்றுகை இரண்டரை யாண்டுகள் தொடர்ந்தது. எனினும் செருமானியர்களால் இந்நகரைக் கைப்பற்ற முடியவில்லை. இந்நகரம் கடும் சோதனைகளுக்காளானது. பல்லாயிரவர் பட்டினியால் இறந்தனர். 1944, சனவரியில் இந்நகர் விடுவிக்கப்பட்டது.

இன்று இலெனின்கிராடு வரலாற்றுச் சிறப்புமிக்க சுறுசுறுப்பான மாநகரமாகும். இந்நகரின் மக்கள்தொகை 46,76,000 ஆகும் (1981). இது சோவியத்து உருசியாவின் தலைசிறந்த துறைமுகமாக இன்று விளங்குகிறது. பின்லாந்து வளைகுடாவில் கலக்கும் நீவா ஆற்றின் கழிமுகத்தில் இலெனின்கிராடு அமைந்துள்ளது. இந்நகரம் உலக நடுக்கோட்டிற்கு 60 பாகை வடக்கில் இருப்பதால், குளிர்காலத்தில் கதிரவன் பிற்பகல் 3 மணிக்கே மறையும். பகல் நேரம் மிகக் குறைவு. கோடைக்காலத்திலோ இரவு நேரமே பெரும்பாலும் தோன்றுவதில்லை.

உருசிய, பிரெஞ்சு, இத்தாலியக் கட்டடக் கலைஞர்கள் இந்நகரில் அழகான சதுக்கங்களையும், அகன்ற சாலைகளையும், பூங்காக்களையும், பெரும் மாளிகைகளையும் அமைத்தற்குக் கட்டட வரைபடங்கள் எழுதித் தந்தனர். சார் மன்னர்களும் பிரபுக்களும் நூற்றுக்கணக்கான அறைகளைக் கொண்டு விளங்கிய மாளிகைகளில் பகட்டாக வாழ்ந்தனர். உருசியப் புரட்சிக்குப் பின்னர் இக்கட்டடங்கள் அரசுடைமையாக்கப்பட்டன

முதன்மையான சாலையாகக் கருதப்படும் நெவ்சுகி பிராசுபெக்டு என்னும் சாலையின் இருமருங்கிலும் கடைகளும், ஓர் அறை வீடுகளும், திருச்சபைகளும் இருக்கின்றன. அட்மிரால்டிக்கட்டடத்திற்கு முன்னால் காணப்படும் சதுக்கத்துடன் நெவ்சுகி பிராசுபெக்டு இணைகிறது. இதன் அருகில் புனித ஈசாக்குத் திருச்சபைக்கோயில் பொன்னிறப் பொலிவுடன் காணப்படுகிறது. அங்குள்ள பெருஞ் சதுக்கத்தைக் கடந்தால் 'எர்மிட்டேசு' (Hermitage) என்னும் உலகப் புகழ் பெற்ற அருங்காட்சியகத்தைக் காணலாம். அதனை அடுத்துள்ள குளிர்கால மாளிகை (Winter Palace) என்னும் அரண்மனையில் 1917-ஆம் ஆண்டுவரை சார் மன்னர்கள் வாழ்ந்து வந்தனர். இம்மாளிகைக்குப் பின்னால் நீவா ஆறு பாய்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பல பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. மாமன்னர் பீட்டரின் வெண்கலச் சிலையொன்று பாய்ந்தோடும் நிலையிலுள்ள குதிரையின்மீது இருப்பதை ஆற்றுக்கு அப்பால் காணலாம். அதன் அருகில் புனித பீட்டர், புனித பால் திருக்கோயில்கள் அமைந்துள்ளன.

குழந்தைகள் இலெனின்கிராடைப் பெரிதும் விரும்புவர். அங்குள்ள குழந்தைகள் விளையாடும் பூங்காக்களையும், பொம்மலாட்டக் காட்சி அரங்

கங்களையும் அவர்கள் கண்டு களிப்பர். குழந்தைகளுக்கான திரையரங்குகளும் விலங்குக் காட்சி வட்டரங்குகளும் உள்ளன. இங்குள்ள அரண்மனை ஒன்றைக் குழந்தைகளின் முன்னோடி மனையாக மாற்றி, அங்குப் பணிமனைகள், கலைத் தொழிலகங்கள், விளையாட்டுத் திடல்கள், நடன அறைகள் முதலியவற்றை அமைத்துள்ளனர். அங்குள்ள திரையரங்கம் ஒன்றில் குழந்தைகள் தம் சொந்த நாடகங்களை நடித்துக் காட்டுகிறார்கள்.

**இலே** சம்மு-காசுமீர மாநிலத்திலுள்ள இலடாக்கு மாவட்டத்தின் செயற்பாட்டுத் தலைநகரமாகும். இம் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் இலடாக்கு(Ladakh)மாவட்டமும் மாவட்டத்தின் மையத்தில் இலேயும் (Leh) அமைந்துள்ளன. சம்மு-காசுமீர மாநிலம் இந்தியாவின் வடகோடி மாநிலமாகும். முற்காலத்தில் இலே நகரம் ஒட்டகப் பயணிகள் கூடுமிடமாக இருந்தது. ஆசியாக் கண்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஒட்டகப் பயணிகள் இலே நகரத்திற்கு ஒப்பந்தச் சாலை (Treaty Road) வழியாகவே வந்து சென்றனர். இச்சாலை மேற்கில் சிரீநகரையும் (Srinagar), தென்கிழக்கில் திபெத்தைச் சார்ந்த தெம்சாக் (Demchok)கையும் இணைக்கிறது. உலகக் கூரை எனப்படும் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள இலே நகரம், 3520 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்நகரைச் சுற்றிலும் மிக்க உயரம் கொண்ட மலைகள் பல சூழ்ந்துள்ளன. உலகிலேயே இத்துணை உயரத்தில் நிலையான குடிமக்களைக் கொண்டு விளங்கும் நகரங்களுள் இலேயே முதன்மையானது இது ஒரு வணிக மையம். பழ உற்பத்தியும் வேளாண்மையுமே இந்நகரின் சிறப்பான பொருளாதாரம்

இலடாக்கு அரசர்களின் அரண்மனை ஒன்றும் சங்கர மடமும் இந்நகரத்தை எதிர்நோக்கியுள்ளன. இலேயின் மக்கள் தொகை 5506 (1971).

**இலேபாட்சி** ஆந்திரப்பிரதேச அனந்தப்பூர் மாவட்டத்தில் இந்துப்பூரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர். இவ்வூர் கோயிற் கட்டடக்கலைக்கும் ஓவியங்களுக்கும் புகழ்பெற்றது. இவ்வூர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் சிறந்த வாணிக நகரமாகவும் புண்ணியத்தலமாகவும் விளங்கியது. விசயநகரப் பேரரசர் சதாசிவராயரின் காலத்தில் அவரது ஆட்சியின்கீழ் இருந்த நாயக்கக் குறுநில மன்னர்களான வீரண்ணா, விருப்பண்ணா ஆகியோர் இவ்வூரில் உள்ள பாபனேசுவரர் கோயிலை விரிவாக்கினர். இக்கோயிலில் சதாசிவராயரின் கல்வெட்டொன்று உள்ளது. அதன்படி மூன்று தெய்வங்களுக்கான மூன்று கோயில்கள் கட்டப்பட்டதெனத் தெரிய வருகிறது. பாபனேசுவரர் கோயிலின் கோபுரங்கள் வடக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ளன. இக்கோயில் சிற்பக் கலைச் சிறப்புடையது. ஒரே கல்லினாலான நாகலிங்கம், பெருவடிவிலான கணேசர் ஆகியன இங்குள்ள சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. கோயிலில் உள்ள நந்தி ஒரே கல்லினாலானது. இந்த நந்திதான் தென்னிந்தியாவில் காணப்படும் பெரிய நந்திகளுள் முதன்மை வாய்ந்தது எனக் கருதப்படுகிறது. கண்ணைக் கவரும் சிற்பங்கள் பல இக்கோயிலின் நடனசாலையில் உள்ள தூண்களில் காணப்படுகின்றன இவற்றுள் இசைக்கலைஞர்கள், நடனமாடுவோர், அரம்பையின் நடனம், நடராசரின் ஆனந்தத் தாண்டவம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.



இலேபாட்சிக் கோயில்

இக்கோயிலில் காணப்படும் ஓவியங்கள் புகழ் பெற்றவை. ஓவியங்களுள் சில அழிந்துபட்ட நிலையில் இருப்பினும், பல இன்றும் அழகு மிக்கதாகவும் அழிவுறா வண்ணம் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. ஓவியங்களுள் திருமாலின் பத்து அவதாரமும், வீரபத்திரருடைய மிகப் பெரிய ஓவியமும் குறிப்பிடத்தக்கவை. இந்த ஓவியங்களின் வண்ணங்கள் கருத்தையும் கண்களையும் கவருவன.


**இலேலாந்து, சான்** இங்கிலாந்து நாட்டின் தொல்பொருள்களைச் சேகரித்த அறிஞர். இவர் இலண்டனில் 1506-ஆம் ஆண்டு பிறந்தார். இங்குள்ள புனிதபவுல் பள்ளியில் கல்வி கற்றபின், கேம்பிரிட்சு, ஆக்சுபோர்டு, பாரிசுப் பல்கலைக்கழகங்களில் பட்டம்

பெற்றார். இங்கிலாந்து அரசர் எட்டாம் என்றியின் நூலகக் காப்பாளராக இலேலாந்து (Leland John) அமர்த்தப்பட்டார். இவர் அரசக் குடும்பத்தின் சமயக் குருவாகவும் விளங்கினார்; கி.பி. 1533-இல் அரசரின் தொல்பொருள் ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்து முழுவதும் சுற்றித் தொல்பொருள்களையும் பல்வேறு ஆவணங்களையும் சேகரித்தார். தாம்சேகரித்த தொல்பொருள்கள், ஆவணங்கள் பற்றி ஆய்வுரை ஒன்றினை 1545-இல் வெளியிட்டார். இது இங்கிலாந்தின் தொல்பொருள்களையும் ஆவணங்களையும் அறிந்துகொள்ளப் பேருதவியாய் இருந்தது. இலேலாந்து, 'ஆர்தூரியன் மரபுகளின்' (Arthurian legends) வரலாற்றுச் சிறப்பினை வெளிப்படுத்தியதால், அவற்றின் பாதுகாவலர் எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறார். இவர் கி.பி. 1550-இல் பைத்தியம் பிடித்து 1552-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18-ஆம்நாள் இலண்டனில் காலமானார்.

**இலேன்-பூல், இசுடான்லி எட்வர்டு** (**கி.பி. 1854-1931**) ஆங்கில வரலாற்றறிஞரும் தொல்லியல் அறிஞருமாவார். இலேன்-பூல் (Lane - Poole, Stanley Edward) இங்கிலாந்து நாட்டில் இலண்டன் மாநகரில் கி.பி. 1854-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் பிறந்தார். இவர் கி.பி. 1877-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு கார்ப்பசு கிறித்துக் கல்லூரியில் (Corpus Christ College) படித்துப் பட்டம் பெற்றார். பின்னர்ப் பிரிட்டிசு அருங்காட்சியகத்தில் நாணயத் துறையில் (Coin Department) கி.பி. 1892 வரை பணி செய்தார். எகிப்திய அரசுக்காகக் கெய்ரோ மாநகரில் தொல்லியல் ஆய்வாளராக கி.பி. 1895 முதல் 1897 வரை பணிபுரிந்தார். பின்னர் கி.பி. 1898 முதல் 1904 வரை இவர் தப்ளின் (Dublin) நகரிலுள்ள திரினிட்டிக் கல்லூரியில் (Trinity College) அராபி மொழிப் பேராசிரியராகப் பணியாற்றினார். இசுலாமியப் பேரரசின் தொடக்க வரலாறு. பண்பாடு ஆகியவற்றில் இலேன்-பூல் வல்லுநராக இருந்தார். இவருடைய பாட்டனார் கி.பி. 1876-இல் காலமானார். அதன் பின்னர்த் தம் பாட்டனார் முடிக்காமல் விட்டுச் சென்றிருந்த அராபிய-ஆங்கிலப் பேரகராதியை (Arabic-English Lexicon) முடிக்கப் பல்லாண்டுகள் இவர் செலவிட்டார். இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவை 1. பிரிட்டிசு அருங்காட்சியகக் கிழக்கத்திய இந்திய நாணயங்கள் பற்றிய 14 தொகுதிகள் கொண்ட அட்டவணை, (Catalogue of Oriental and Indian Coins in the British Museum, 14 Vols., 1875-92), 2. இசுபெயினில் மூர்கள் (The Moors in Spain, 1887), 3. துருக்கி (Turkey, 1888), 4. பார்பரிக் கொள்ளைக் கப்பல்கள் (Barbary Corsairs, 1890), 5. இந்துசுத்தான் மொகலாயப் பேரரசர்களின் வரலாறு (The History of Moghul Emperors of Hindustan, 1892), 6. இடைக் காலத்தில் எகிப்தின் வரலாறு (A History of Egypt in the Middle Age, 1901), 7. இடைக் கால இந்தியா (Mediaeval India, 1902), 8. கெய்ரோவின் கதை (The Story of Cairo, 1902) என்பன வாகும். இலேன்-பூலின் நூல்கள் அறிஞர்களாலும் நூல் ஆர்வங் கொண்ட பொதுமக்களாலும் பெரிதும் போற்றிப்படிக்கப்படுவனவாகும். தலையாய ஆங்கிலேயர் பலரின் வாழ்க்கை வரலாறுகளையும் இவர் எழுதியுள்ளார்.

**இலைபீரியா** நாடு வடமேற்கு ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ளது. இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் மிகப்பழமையான கறுப்பர் நாடு. அமெரிக்காவிலிருந்து விடுதலைபெற்ற நீக்கிரோ அடிமைகளைக் கொண்டு இலைபீரியா (Liberia) கி.பி. 1822 ஆம் ஆண்டில் நிலைநாட்டப்பெற்றது. இந்நாட்டை ஓர் அமெரிக்க அறநிறுவனம் உருவாக்கி, விடுதலை பெற்ற அடிமைகளுக்குப் புகலிடமளித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியால் ஐரோப்பியக் குடியேற்றவாதிகளாலும், ஆப்பிரிக்க மரபு பழங்குடியினங்களாலும் ஏற்பட்ட எதிர்ப்புகளை இந்நாடு சமாளித்தது. இலைபீரியக் குடியேற்றவாதிகள் கி.பி. 1847-ஆம் ஆண்டில் தாம் விடுதலை பெற்றுவிட்டதாக அறிவித்தனர்.

எல்லை: இலைபீரியா உலக நடுக்கோட்டிற்கு அண்மையில் அதன் வடபால் அட்லாண்டிக்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. இதன் வடக்கில்




இலைபீரியா

கினி நாடும், கிழக்கில் ஐவரி கோசுட்டு (Ivory Coast) நாடும், வடமேற்கில் சீராலோனும் இதன் எல்லைகளாகும். இதன் மேற்கு எல்லையாக 560 கிலோ மீட்டர் நீளமுள்ள அட்லாண்டிக்குக் கடற்கரை அமைகிறது. உட்பகுதியில் இலைபீரியா நிம்பா மலைத் தொடர்வரை நீண்டுள்ளது.

பரப்பு: இலைபீரியாவின் பரப்பளவு 1,1 2,600 ச.கி.மீ.

மக்கள்தொகை: இலைபீரியாவின் மக்கள்தொகை ஏறத்தாழ 19,00,000 (1981).

மக்கள்தொகையில் நாலில் ஒருபங்கைவிடக் குறைந்த அளவினர் அமெரிக்க இலைபீரியர்கள். அவர்கள் பெரும்பாலும் மன்ரோவியாவிலும் (தலைநகர்) கடற்கரையை அடுத்துள்ள நகரங்களிலும் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் மறுப்புரையாளர் கிறித்தவர்கள். ஆங்கிலம் அவர்களின் பேச்சு மொழி. ஆட்சிமொழியும் இந்நாட்டில் ஆங்கிலமே. வாழ்க்கை முறையில் அவர்கள் ஐரோப்பியர்களைப் பின்பற்றினாலும், ஆப்பிரிக்கப் பழக்க வழக்கங்களிலும் அவர்கள் ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இலைபீரிய மக்கள் ஏறத்தாழ 21 குழுக்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் இந்நாட்டின் உட்புறங்களில் வாழ்கிறார்கள். பசா (Bassa), இக்ரு (Kru), கெப்பிலி (Kpelle), கியோ (Gio), உலோமா (Loma), கோலா (Gola), கபண்டி(Gbandi), மண்டிங்கோ (Mandingo), வை (Vai) போன்றவை அவற்றுள் சிறப்பான குழுக்களாகும். அவர்கள் பல மொழிகளில் பல்வேறு வகைகளில் பேசுவர். எனினும் ஆங்கிலமே ஆட்சி மொழியாகும். குழந்தைகள் இக்காலத்தில் அரசுப் பள்ளிகளிலும் கிறித்தவப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டு வருகிறார்கள்.

அம்மக்களுள் சிலர் பல நூற்றாண்டுகளாக முசுலிம் சமயத்தைச் சார்ந்தவர்களாயும், ஏனையோர் தொன்மையான ஆப்பிரிக்கப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்டவர்களாயும் திகழ்கிறார்கள். அண்மைக் காலத்தில் பலர் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக் கொண்டனர்; இரகசியச் சங்கங்களை அமைத்துக் கொண்டு சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். பொரோ (Poro) ஆண்களின் இரகசியச் சங்கம், சந்தே (Sande) பெண்களின் இரகசியச் சங்கம் ஆகியவை இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுகின்றன.



மன்ரோவியா நகரம்

மகளிர் இலப்பா என்னும் ஆடையை வழக்கமாக அணிவர். ஒரு மீட்டர் நீளமுள்ள பருத்தித் துணியால் ஆன இதனை நாட்டுத் துணி என்பர். இதை அவர்கள் விதவிதமாக இடுப்பில் சுற்றிக் கொள்வர். மார்புச்சட்டையின் மேலும் இதைச் சுற்றிக் கொள்வதுண்டு.

ஆண்கள் பை போன்ற காலுறைகளை அணிவர். முசுலிம் ஆண்கள் துருக்கித் (Fez) தொப்பியை அணிந்து கொள்வர். பெண்கள் வண்ணத் துணியாலான குட்டையால் தலையை மூடிக் கொள்கிறார்கள். குழந்தைகள் பிறந்தமேனியாக இருப்பதுண்டு: குறைந்த ஆடைகளை அணிவதுமுண்டு. விழாக் காலங்களில் நல்லாடைகள் உடுப்பர். கால்களுக்குச் செருப்புகளை அணிந்து கொள்வர்; அணியாத வழக்கமும் உண்டு.

தட்பவெப்ப நிலை: இலைபீரியாவில் வெப்ப மண்டலப் பருவக்காற்றுத் தட்ப வெப்பநிலை நிலவுகிறது. ஆண்டு முழுவதும் இந்நாடு வெப்பமாகவே இருக்கும். குளிர்காலமும் வறண்ட காலமும் மாறி மாறி வருகின்றன. கடற்கரைப் பகுதியில் மிகப் பலத்த மழை பொழிகிறது; 380 செ.மீ. அளவு மழை பெய்கிறது. உள்நாட்டில் மழை சராசரியாக 190 செ. மீ. அளவு பொழிகிறது. குளிர் காலத்தில் மழை மிகுதியாகப் பொழிகிறது. புனித பவுல்(St Paul), உலோபா (Lofa), செசு (Cess) ஆகியன முதன்மையான ஆறுகள். இவை வடக்கிலிருந்து பாய்ந்து அட்லாண்டிக்குக் கடலில் கலக்கின்றன.

நகரங்கள்: இலைபீரியாவின் தலைநகரமும் பெருநகரமும் மன்ரோவியா (Monrovia) ஆகும். இந்நகரில் ஏறத்தாழ 4 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு இக்காலப் புதுமைகளுடன் விளங்கும் சிறந்த துறைமுகம் உளது. புனித பவுல் ஆற்றங்கரை நகரான இது சிறந்த அங்காடி மையமாகும். இலைபீரியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் மன்ரோவியத் துறைமுகத்தின் வழியாகவே அனுப்பப்படுகின்றன. இந்நகரம் கல்விக்கும் பண்பாட்டிற்கும் சிறந்த இடமாகும்.

புச்சானன் (Buchanan), ஆர்ப்பர் (Harper) கிரீன்வில் (Greenville) போன்றவை கடற்கரைச் சிறு நகரங்கள். வோன்சமா (Voinjama), கபர்ன்கா (Gbarnga), சனீகுவிலி (Sanniequeillie), கோலாஅன் (Kolahun) போன்றவை உள்நாட்டு நகரங்கள்.

பொருளாதாரம்: பெரும்பாலான மக்கள் நிலத்தை நம்பியே வாழ்கிறார்கள். அரிசி முதன்மையான உணவுப் பொருள். காடுகளைத் திருத்தி அமைக்கப் பெற்றிருக்கும் சிறு பண்ணைகளில் நெல் பயிராகிறது. பெண்கள் மலைச் சரிவுகளில் பாத்தி கட்டி நெல்பயிரிட்டு அறுவடை வரை காவல் புரிகின்றனர்.

இலைபீரியர்கள் மரவள்ளிக் கிழங்கையும் மீனையும் விரும்பி உண்கின்றனர். இரும்புத் தாது இலைபீரியாவின் முதன்மையான ஏற்றுமதிப் பொருள். காப்பி, பனங்கொட்டை, கோகோ, இரப்பர் போல்வனவும் இங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

வரலாறு: இலைபீரியாவில் அறிவியல் அறிஞர்கள் புதுமையான கல் வட்டங்களையும் ஏனைய பண்டைக் கைவினைப் பொருள்களையும் கண்டுபிடித்துள்ளார்கள். எனினும் அப்பகுதியில் வாழ்ந்த தொன்மைக்கால மக்களைப் பற்றி நமக்குப் போதிய சான்றுகள் கிடைத்தில. இப்பகுதியில் கி.பி. 15,16 ஆம் நூற்றாண்டுகளில் முசுலிம் பழங்குடி மக்கள் குடியேறியிருக்க வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அமெரிக்கக் குடியேற்றவாதிகளின் கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நீக்கிரோக்களை ஆப்பிரிக்காவில் தங்கவைக்கும் நோக்குடன் தொடங்கப்பட்டது. இக்கழகம் பழங்குடி மக்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கி, இலைபீரியாவை உருவாக்கியது. இலைபர் என்னும் இலத்தீன் சொல் 'விடுதலை' என்று பொருள்படும். விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நீக்கிரோக்களின் நாடு என்பதே இலைபீரியா என்னும் சொல்லின் பொருளாகும்.

அமெரிக்கக் கறுப்பர்கள் 19-ஆம் நூற்றாண்டு முழுவதும் இலைபீரியாவில் குடியேறினர். குடியேற்றவாதிகள் கழகம் அந்தக் குடியேறியவர்களின் சொந்தச் செயல்களில் தலையிடாமல் அவர்களைச் சொந்தக்காலில் நிற்க வைத்தது. கறுப்பர்கள் கி.பி. 1838 இல் தமக்கெனச் சட்டமன்றத்தை நிறுவினர். குடியேறியவர்களுக்கும் கழகத்திற்குமிடையே கி.பி. 1840 இல் பூசல்கள் எழுந்தன. அதன் விளைவாகக் குடியேற்றவாதிகள் 1847 இல் இலைபீரியாவைச் சுதந்திர நாடாக அறிவித்தார்கள். அவர்கள் சோசப் செங்கின்சு இராபர்ட்சு என்பாரைக் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

தொடக்கத்தில் இலைபீரியாவின் பெரும்பாலான நிலம் கடற்கரையை ஒட்டியே இருந்தது. படிப்படியாகப் பழங்குடிமக்களின் நிலங்களை விலைக்கு வாங்கி நாட்டின் பரப்பைப் பெருக்கிக் கொண்டார்கள்.

முதல் உலகப் போரின்போது இலைபீரியாவின் படை வீரர்கள் பிரான்சில் போரிட்டனர். இரண்டாம் உலகப் போரின்போது மன்ரோவியாவுக்கு அண்மையில் பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அமைத்தது. ஐரோப்பா, மத்திய கிழக்குப் போர் முனைகளுக்கு நேசப்படைகளின் படைக்கலங்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டன. போருக்குப்பின்னர் இலைபீரியா ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாகியது.

வில்லியம் தப்மன் குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் (1944-1971) பல சமூக, பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அனைத்து மக்களையும் இணைக்க அவர் அரும்பாடு பட்டார். அமெரிக்க-ஐரோப்பிய நிறுவனங்களை வரவழைத்து நாட்டின் இயற்கைச் செல்வங்களைப் பெருக்க வழிவகை செய்தார். ஆப்பிரிக்க நாடுகளுடனும் பொருளாதார-பண்பாட்டுக் கூட்டுறவை ஏற்படுத்த தப்மன் பெரிதும் முயன்றார். அவருக்குப்பின் குடியரசுத் தலைவரான வில்லியம் தோல்பர்ட்டும் தப்மனின் கொள்கைகளைத் தொடர்ந்து செயலாற்றினார்.

இலைபீரியாவின் அரசுத் தலைவர்கள் பெரும்பாலும் அமெரிக்க-இலைபீரியர்களேயாவர். படைவீரர்களின் சிறு குழு ஒன்று 1980 இல் கலகம் செய்து தோல்பர்ட்டைக் கொலை செய்து இராணுவ ஆட்சியை நிலைநாட்டியது.

***இலைபீரியாவில் கல்வி***: மனித ஆற்றல்களை நாட்டில் வளர்ப்பதும், ஊர்ப் புறங்களில் சமூக உறவுப் பள்ளிகளைப் (Community Schools) பெருக்குவதும், நாட்டின் தேவைகளை ஒட்டிய கல்வியை வழங்குவதும் இலைபீரிய (Liberia) நாட்டுக் கல்வியின் உயர்ந்த குறிக்கோள்களாகக் கருதப்படுகின்றன.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். முதல் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளியில் உள்ளன. தொடக்கப் பள்ளிக் கல்விக்கு முன்பாக மழலையர் கல்வி வழங்கும் பள்ளிகளும் இங்கு உண்டு. தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 6 வயதிலிருந்து 11 வயது நிறைந்த மாணவர்களின் எண்ணிக்கை 36 விழுக்காடு.

இந்நாட்டில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி (Junior High School Education) மூன்று ஆண்டுகள். மேல்நிலைப் பள்ளிக் கல்வி (Senior-High School Education) யும் மூன்று ஆண்டுகளே. இலைபீரியாவில் 1980 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, ஏறத்தாழ 1,700 தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும் இருந்தன. ஆங்கிலமே பள்ளிகளில் பயிற்று மொழியாகும். இங்கு அரசுப் பள்ளிகள் மட்டுமன்றித் தனியார் பள்ளிகளும் உள்ளன. தொடக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளிகளில் 35 விழுக்காடு பள்ளிகள் தனியாருக்குச் சொந்தமானவை.

இலைபீரியக் கல்வி அமைச்சகத்தின் கண்காணிப் பின்கீழ், வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்பப் பள்ளிகள் (Vocational and Technical Schools) செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 1,300 மாணவர்கள் (1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி) பயின்றனர். இவற்றில் இயந்திரத் தொழில்நுட்பக் கல்வியிலிருந்து வேளாண்மைக் கல்வி உட்படச் செயலகப் பணிக் கல்வி (Secretarial Science) வரை கற்பிக்கப்படுகின்றன. இவை தவிர, நாட்டிலுள்ள பல தொழிற்சாலைகளுடன் இணைந்த தொழிற் பயிற்சிப்பள்ளிகளும் உள்ளன.

சோரார் (Zorror), ககாதா (Kakata) ஆகிய இடங்களில் மொத்தம் இரண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இங்குச் சேருபவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சியோ உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியோ பெறலாம். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுபவர்களுக்கு மட்டும் கணிதம், அறிவியல் பாடங்களில் அல்லது மொழி சமூகவியல் பாடங்களில் பயிற்சி பெறும் வசதியும் உண்டு.

உயர் கல்வியைப் பொறுத்தவரை இலைபீரியா இன்னும் முன்னேறவில்லை. இந்நாட்டு மக்கள் தொகையுள் 1974-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான மாணவர்களே கல்லூரியிலோ பல்கலைக் கழகத்திலோ சேர்ந்து பயின்றனர். இலைபீரியப் பல்கலைக் கழகம் (University of Liberia), கட்டிங்டன் பல்கலைக் கழகக் கல்லூரி (Cuttington University College) ஆகிய இரண்டிலும் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை நானூறு மாணவர்களுக்கும் சற்றுக் குறைவே. உயர் கல்வியில் வணிகவியல் தொடர்பான பாடங்களில் 40 விழுக்காடு மாணவர்களும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், கல்வியியல், வேளாண்மை மற்றும் வனவியல் (Forestry) போன்ற புலங்கள் ஒவ்வொன்றிலும் 10 விழுக்காடு மாணவர்களும் சேர்ந்து பயின்றனர். சட்டவியல், மருத்துவம், சமூக அறிவியல் பாடங்கள், செவிலிப் பணியியல் (Nursing), இறையியல் போன்ற புலங்கள் அனைத்திலும் 30 விழுக்காடு மாணவர்களே சேர்ந்திருந்தனர்.

வயது வந்தோர் கல்வி: இந் நாட்டின் முறைசாராக் கல்வியை விரிவுபடுத்தும் முயற்சிகள், ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் எடுக்கப்பட்டன. இப் பள்ளிகள் வேளாண்மைத் தொடர்பான பணித்திறன்கள், குடும்பவாழ்க்கைப் பொருளியல், கலைப் பொருள், கைத்தொழில்கள் போன்றவற்றில் பயிற்சி தருகின்றன. இவற்றுடன் இப் பள்ளிகள் வழக்கமான பள்ளிப் பாடங்களையும் நடத்தி வருகின்றன.

இலைபீரியாவில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் தொகை (1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 70.5 விழுக்காடு; எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்கள் 58.4 விழுக்காடும் பெண்கள் 12.1 விழுக்காடும் ஆகும். இலைபீரியா தேசிய வயது வந்தோர் கல்விக்கழகம் (Liberian National Adult Education Association) 1977-ஆம் ஆண்டில், தொடங்கப் பெற்றது. இக் கழகம் வயது வந்தோர் கல்விப் பணிகளைச் செயற்படுத்துவதில் கல்வி அமைச்சகத்துக்கு உதவியாக இருந்து வருகிறது. வயது வந்தோர்க்குக் கல்வி கற்பிக்க 300 ஆசிரியர்களும், கல்வி பயில்வோர் 6,000க்கு மேற்பட்டோரும் உள்ளனர். ஒவ்வொரு மாவட்ட அளவிலும் (Counties) பணியமர்த்தப்பட்ட பல மேற்பார்வையாளர்கள் இப் பணியில் உள்ளனர்.

உலக வங்கி வயது வந்தோர் கல்விப் பணிப் போக்குவரத்துக்காகப் பயன்பாட்டு ஊர்திகள் (Jeeps) வாங்க நிதியுதவி செய்துள்ளது; மேலும், வயது வந்தோர் கல்வி பற்றி இந் நாட்டில் ஆய்வு செய்வதற்கும் அவ்வங்கி ஆய்வுதவித் தொகைகளையும் (Fellowships) வழங்கியுள்ளது.

நிருவாகம்: இலைபீரியாவின் கல்வி அமைச்சகமே கல்விச் செயல்களுக்கான உயர் அலுவலகமாகும். இந்நாட்டில் பொதுக் கண்காணிப்புச் செயலகம் (Bureau of General Supervision) ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான கல்விப் பொறுப்புகளை மேற்பார்வை செய்து வருகிறது. வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொழில் நுட்பக் கல்விச் செயலகம் (Bureau of Professional and Technical Education) மேற்பார்வை செய்து வருகிறது. இலைபீரிய அரசு 1980-ஆம் ஆண்டுக்கணக்கின்படி கல்விக்காகத் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 12 விழுக்காடு நிதி மட்டுமே ஒதுக்கியுள்ளது. கல்விக்காகக் குறைந்த செலவு செய்யும் நாடுகளுள் இலைபீரியாவும் ஒன்று.

தொடக்கப் பள்ளிக் கல்வியும், 1972-ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் இந்நாட்டில் இலவசமாக்கப்பட்டுவிட்டன. பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடநூல் வாங்குதல், கல்விக் கட்டணம் போன்றவற்றிற்கும் அரசு நிதியுதவி செய்கிறது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: தொடக்கப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 9,000 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். ஆசிரியர் பட்டத்திற்கென்று உயர் கல்வி நிறுவனங்கள் 1979-ஆம் ஆண்டு வரை தொடங்கப் பெறாத காரணத்தால், இங்குப் பணிபுரியும் ஆசிரியர்கள் பலரும் ஆசிரியர் கல்வித்தகுதி பெறாதவர்களே. இப்போது இலைபீரியப் பல்கலைக் கழகம், கட்டிங்டன் பல்கலைக் கழகக் கல்லூரி ஆகியன மாணவர்களுக்குச் சிறிய அளவில் ஆசிரியர் கல்வியியலில் பயிற்சி அளித்து வருகின்றன.

கல்வித் திட்டம்: இலைபீரியநாட்டின் தேவைகளை ஒட்டிக் கற்பித்தலைச் சீர்திருத்தும் திட்டம் ஒன்று 1973-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. புதிய கல்வித் திட்டம் தொடக்கப் பள்ளிகளில் 1980-ஆம் ஆண்டிலிருந்தும் மேல்நிலைப்பள்ளிகளில் 1981-ஆம் ஆண்டிலிருந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டது. கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கென்றே இந் நாட்டில் பதினான்கு கல்வித் திட்ட மையங்கள் (Curriculum Centres) செயற்பட்டுவருகின்றன.

தேர்வு முறை: தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு அனுப்புவதை ஆசிரியர்களே முடிவு செய்கின்றனர்; உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் குழு இதை முடிவு செய்கிறது. ஒன்பதாம் வகுப்பிலும் பன்னிரண்டாம் வகுப்பிலும் மாணவர்கள் தேசிய அளவில் நடைபெறும் தேர்வுகளை எழுதுகின்றனர். இத் தேர்வுகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் உயர்கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கல்வியாய்வு: இந் நாட்டில் கல்வியாய்வுகள் மிகக் குறைந்த அளவிலேயே இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சமூக உறவுப் பள்ளிகளைப் (Community Schools) பற்றிய ஆய்வும், வயது வந்தோர் கல்வி பற்றிய ஆய்வு மட்டுமே இதுவரை நடந்த ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கன.

இலைபீரியக் கல்வி அமைப்பில், சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பப் பள்ளிகள் பெருகவில்லை. பள்ளிகளின் எல்லா நிலைகளிலும் பயிற்சி பெறாத ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். கல்வியாளர்களுக்கு ஊதியம் குறைவாகத் தரப்படுகிறது. இங்கு வாழும் பழங்குடியினர் தகுந்த தாய் மொழி அறிவோடு பள்ளியில் சேர்ந்த

போதிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருப்ப தால், மாணவர்கள் ஒரே வகுப்பில் ஓராண்டுக்கு மேலே பயில வேண்டிய நிலை இன்றும் இலைபீரி யாவில் உள்ளது.

**இலோயிலோ** என்பது பிலிப்பைன்சு நாட் டின் தலையாய துறைமுகங்களுள் ஒன்று. இந்நகரம் பனாய்த்தீவின் (Panay Island) தென்கிழக்குக் கடற் கரையில் அமைந்துள்ளது. இலோயிலோ (Iloilo) மணிலாவிற்கு ஏறத்தாழ 470 கி.மீ தெற்கில் உள் ளது. இதன் குறுக்காக இலோயிலோ ஆறு பாய்வ தால் இங்குள்ள துறைமுகம் சிறப்பானதாகக் கருதப் படுகிறது. இதன் அண்மையிலுள்ள நீக்கிரோசுத் தீவிற்கு (Negros Island) இந்நகரின் துறைமுகமே ஏற்றுமதி இறக்குமதிக்குப் பெரிதும் பயன்படுகிறது. பட்டு நூலினாலும் அன்னாசி இலைகளாலும் பின் னப்பட்ட கைத்தறி ஆடைகளுக்கு இலோயிலோ பெயர் பெற்றது. இவ்வாடைகள் மென்மையானவை. இந்நகரின் மக்கள்தொகை 2,44,827 (1980).

பிலிப்பைன்சு நாட்டின் மாநிலம் ஒன்றின் பெய ரும் இலோயிலோ என்பதே. இதன் தலைநகரம் இலோயிலோ நகரமாகும்.

**இவான்சு, சர் ஆர்தர் சான் (கி.பி.1851-1941)** இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர். இவான்சு (Evans, Sir Arthur John) கி.பி. 1851-ஆம் ஆண்டு சூலை மாதம் 8-ஆம் நாள் எர்ட்போர்டுசையரிலுள்ள (Herdfordshire) நாசு மில்சு (Nasu Mills) என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் சர் சான் இவான்சு. ஆரோ (Harrow), ஆக்சுபோர்டு, கோட்டிங்கன் (Gottingan) பல்கலைக்கழகங்களில் இவர் கற்றார். பல ஆண்டு கள் பால்கனில் வாழ்ந்த இவர், 1882-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டுக்குத் திரும்பினார். அங்கு 1884-இல் ஆசுமோலியன் அருங்காட்சியகக் காப்பாளரானார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் 1909-இல் வர லாற்றுக்கு முந்தைய கால வரலாற்றைக் கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவான்சு முதலில் நாணயவியலிலும் முத்திரை களில் காணப்படும் எழுத்துகளைப் படிப்பதிலும் ஆர் வம் காட்டினார். கிரீட்டு (Crete) நகரைப் பற்றி 1894-ஆம் ஆண்டு ஆய்வு செய்தார். மத்தியதரைக் கடற் பகுதியில் இருந்த மைசீனிய நாகரிகம் (Mycenean Civilization) கிரீட்டில்தான் முதன்முதலில் தோன்றியது என்னும் கருத்தினை இவர் வெளி யிட்டார். கிரீட்டிலுள்ள நாசசில் (Knossas) 1899 இல் தமது சொந்தச் செலவில் அகழாய்வினை மேற் கொண்ட இவர், அங்கு மினோசு அரசரின் அரண் மனையைக் கண்டுபிடித்தார். அவ்வரண்மனை 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்தது. திசியசு என்பவர் தமது நூலில் கூறும் மினோசு என்ற அரசர் கட்டிய வியத்தகு அரண்மனை இதுவே என்று இவர் கரு தினார். இங்கு நடத்தப்பட்ட அகழாய்வு தொடர்ந்து 25 ஆண்டுகள் நடைபெற்றது. அகழாய்வில் செப்புக்காலப் பண்பாட்டின் கூறுகள் பெருமளவில் கிடைத்தன. நாசசில் 3,000-க்கும் மேற்பட்ட எழுத்துகள் உள்ள களிமண் பட்டிகைகளை (Teblets) இவர் கண்டெடுத்தார். இவ்வெழுத்துகளைப் படிக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்ற போதிலும், இவ்வெழுத்துகள் கிரேக்க மொழியைச் சார்ந்த வரிவடிவ எழுத்து (Lenear B) என்ற கூற் றினை இவர் வலியுறுத்தினார். இந்தக் காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் சித்திர எழுத்துகளையும் பயன்படுத்தியுள்ளனர் என இவர் கூறினார். மினோவன் நாகரிகம் கி.மு. 2,000-இல் திடீ ரென்று அழிவுறும் வரை, இப்பகுதியில் மக்கள் நாக ரிக வளர்ச்சி பெற்று வாழ்ந்து வந்தனர் என இவர் கூறினார்.

இவான்சு 1914 முதல் 1919வரை பழம் பொருள் ஆய்வுக் கழகத்தின் தலைவராகவும் 1916 முதல் 1919 வரை பிரிட்டிசுக் கழகத்தின் தலைவராகவும் இருந்தார். 'மினோவா எழுத்துகள்' (Scripta Minoa, Vol. I, 19-9, Vol. 2, 1952 ed by J.C.Myres), மினோசின் அரண்மனை (The Palace of Minos-1930-1931) போன்ற நூல்கள் இவரால் எழுதப்பட் டவை. ஐரோப்பிய, கீழ் மத்தியதரைக்கடல் நாடு களின் வரலாற்றுக்கு முந்தைய கால வரலாற்றை அறிய இவரது ஆய்வுகள் பெரிதும் உதவிபுரிகின்றன. இவான்சின் தொல்லியல் பணியைப் பாராட்டி 1911-ஆம் ஆண்டு பண்பார் பெருந்தகை (Knight) என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவான்சு 1941 -ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11-ஆம் நாள் ஆக்சு போர்டுக்கு அருகில் உள்ள இயோல்பரியில் (Youlbury) காலமானார்.

**இவான்சு பிரிட்சர்டு, எட்வர்டு இவான் (1902-1973)** இங்கிலாந்தில்மானிடவியலின் வளர்ச்சிக் குக் காரணமானவர்களுள் ஒருவர். இங்கிலாந்தின் சசக்சு (Sussex) மாநிலத்தில் குரோபரோ (Crowborough) என்னுமிடத்தில் பிறந்தார். வின்செசுட்டர் (Winchester), எக்சீடர் (Exeter) ஆகிய கல்லூரிகளில் பயின்று, பின்னர் வரலாற்றில் இளங்கலைப் பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பெற்றார். அதன் பின் இளங்கலை மானிடவியல் பட்டத்தை இலண்டன் பொருளியல் பள்ளியில்

பயின்று, 1927-ஆம் ஆண்டு இப்பள்ளியிலேயே மானிட வியலில் டாக்டர் பட்டத்தினைப் பெற்றார். 1928 முதல் 1936 வரை இலண்டன் பொருளியல் பள்ளியில் மானிடவியல் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டார்.

எத்தியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பணியாற்றி, மீண்டும் 1945-ஆம் ஆண்டு இங்கிலாந் துக்குத் திரும்பி வந்து கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் இணைப் பேராசிரியராகப் பணியாற்றினார்; பின்னர், 1946-ஆம் ஆண்டு இத் துறையின் பேராசிரியரானார். 1970-இ ' ஓய்வு பெற்றார். 1971-இல் இங்கிலாந்து அரசின் வீர விரு தைப் (Knight) பெற்றார்.

இவான்சு பிரிட்சர்டு அசாந்தே குடிகளையும், நூயர் குடிகளையும் மிக விரிவாக ஆராய்ந்தார். இவர்தம் படைப்புகளில் மிகச் சிறந்தது எனக் கருதப் படுவது நுயர் (1940) ஆகும். போர்டசு (Fortes) என் பவருடன் இணைந்து வெளியிட்ட ஆப்பிரிக்க அர சியல் முறைகள் (African Political System), இவரது அன்னுவக்கு அரசியல் நிறுவனங்கள் (Annuak Political Institution) போன்ற ஆய்வுகள், ஆப்பிரிக்கக் குடி களைப் பற்றிய சமூக மானிடவியல் ஆய்வுகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தன.

நூயர் குடிகளின் தலைமையற்ற சிறுகால் வழிக் குழுக்களின் (Segmented Acephallous Lineages) அரசி யலமைப்பு முறைகளை இவர் கண்டறிந்தார். நூயர் சமயத்தை ஆராய்ந்து, அதனைத் தர்க்கைம் கோட் பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டினார். இவான்சு பிரிட்சர்டு தம் அணுகுமுறையில் ஒரு செயற் பாட்டியலாராக (Functionalist) இருந்தார். இவர் இரட்கிளிப் பிரௌன் அமைப்பியல் செயற்பாட்டியல ராக (Structural-Functionalist) இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவான்சு பிரிட்சர்டு மானிடவியல் ஆய்வில் வரலாற்றுப் பின்னணியின் தேவையை வலியுறுத்திக் கூறினார். இப்பின்னணியால் ஒரு சமூகத்தைப் பற்றி உண்மையாக அறியமுடியும் என்பது இவரது கருத் தாகும். இதனாலேயே இங்கிலாந்துச் சமூக மானிட வியலின் அணுகுமுறை, வரலாற்று வரைவியல் (Historiography) அடிப்படையிலானதாக அமைய வேண்டும் என எண்ணினார். இருப்பினும், இங்கி லாந்து மானிடவியலில் பணிபுரிந்த பிந்தையோர் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் 1973-இல் காலமானார்.

**இழப்பீடு** என்பது ஒருவருக்கு ஏற்படும் இழப் பினை ஈடு செய்வதற்காகக் கொடுக்கப்படும் பணத் தொகை. தீங்கியல் சட்டத்திலும் ஒப்பந்தச் சட்டத் திலும் பாதிக்கப்பட்டோருக்குக் கொடுக்கப்படும் தீர் வழி இழப்பீடாகும்.

வாதிக்கு உற்ற தீங்கிற்கு ஈடாக நீதிமன்றம் விதிக்கும் தொகை இழப்பீட்டுத் தொகை. தொழி லாளர் நலச் சட்டத்திலும் பணியாளர்க்கு ஒரு சில சூழ்நிலைகளில் இழப்பீடு வழங்கப்படுகிறது. ஓர் ஒப்பந்தத்தில் இழப்பீடாக அறுதியிட்டு ஒப்பிய தொகை அறுதியிட்ட இழப்பீடு (Liquidated Damages) எனப்படும். ஒப்பந்தத் தரப்பினர் முன்னதாகவே அறுதி செய்து கொள்ளாத இழப்பீடு 'அறுதியிடா இழப்பீடு' (Unliquidated Damages) எனப்படும்.

ஒப்பந்தச் சட்டவியலில் ஒப்பந்த முறிவிற்கு இரண்டு வகையான தீர்வழிகள் வழங்கப்படுகின்றன. 1) பொதுச் சட்டத்தீர்வழி (Common Law Remedy). 2) நேர்மை நோக்கில் உரியதான தீர்வழி (Equitable Remedy). பொதுச் சட்ட விதியின்படி, ஒப்பந்த முறிவினால் ஒருவருக்கு இழப்பு ஏற்படின் ஒப்பந் தத்தை நிறைவேற்றினால் அவர் எவ்வளவு தொகை பெறுவாரோ அவ்வளவு தொகை அவருக்கு அளிக்கப் படவேண்டும். பல சூழ்நிலைகளில் பொதுச் சட்டத் தீர்வழியான இழப்பீடே ஒப்பந்த முறிவிற்காக வழங்கப்படுகிறது.

ஒப்பந்தச் சட்டவியலின்படி இழப்பீடு நான்கு வகைப்படுகிறது. அவையாவன:

1. பொது இழப்பீடு அல்லது சாதாரண (சரி நிகர்) இழப்பீடு அல்லது கணிசமான இழப்பீடு (General or Ordinary or Substantial Damages).

2. சிறப்பு (தனி முறை) இழப்பீடு (Special Damages).

3. பழிவாங்கும் நோக்கத்திற்கான இழப்பீடு அல்லது தண்டிக்கும் நோக்கத்திற்கான இழப்பீடு அல்லது எச்சரிக்கை இழப்பீடு (Vindictive or Puni tive or Examplary Damages).

4. பெயரளவு இழப்பீடு (Naminal Damages).

சாதாரண இழப்பீடு ஒப்பந்த முறிவினால் ஒரு வருக்கு என்ன இழப்பு ஏற்பட்டதோ, அவ்விழப்பின் அளவிற்கு மட்டும் பணவடிவில் ஈடு செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் ஒரு மூட்டை அரிசி ரூ. 70/- வீதம் 100 மூட்டைகள் முன்பு ஒருநாளில் கொடுப்ப தாக ஒப்பந்தம் செய்திருக்கும் போது, கொடுக்கப்

பட வேண்டிய நாளில் அங்காடி விலை ரூ.71/- என்று இருந்து, 'அ' அரிசி மூட்டைகளைக் கொடுக்க மறுத்தால், வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை, ஒப்பந்த முறிவு செய்த நாளில் இருந்து அங்காடி விலைக்கும் ஒப்பந்த தொகைக்கும் உள்ள வேறுபாடு, அதாவது ஒரு மூட்டைக்கு ரூ. 1/- வீதம் 100 மூட்டைகளுக்கு ரூ. 100/- இழப்பீடு கொடுக்கப் பட வேண்டும். உண்மையில் ஏற்பட்ட இழப்புக்கு ஈடாகக் கொடுக்கப்படுவது சாதாரண இழப்பீடு எனப்புடுகிறது.

சிறப்பு இழப்பீடு: ஆதாயத்தினை இழந்ததற்காக வேண்டும் இழப்பீடு சிறப்பு இழப்பீடு எனப்படுகிறது. இது வழக்கில் மெய்ப்பிக்கப்படும் தனிச் சூழ்நிலைக்கேற்ப வேண்டப்படும் இழப்பீடாகும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஓர் ஆலையின் அதிபர். அவர் ஓர் இயந்திரத்தின் ஒரு பகுதியைப் பழுது பார்ப்பதற்காக அனுப்புகிறார். அங்குத் தாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக ஆலை ஓடவில்லை. அதற்காக, 'அ' என்பவர் ஆதாயம் இழந்தேன் என வேண்டும் இழப்பீடு இதில் அமையும்.

பழிவாங்கும் நோக்கத்திற்கான இழப்பீடு: ஒருவரைத் தண்டிக்கும் எண்ணத்துடன் கேட்கும் இழப்பீடு இது. பொதுவாக, இது ஒப்பந்தச் சட்டவியலில் இடம் பெறுவதில்லை. தீங்கியல் சட்டத்தின்படிதான் இவ்வகையான இழப்பீடு வழங்கப்படுகிறது. இப்பொதுவிதிக்கு விலக்குகள்: 1. திருமணம் செய்வதாகக் கூறிய ஒப்பந்தத்தை முறித்தாலும், 2. வாடிக்கையாளரின் கணக்கில் பணம் இருக்கும்போது வங்கியாளர் அவரது காசோலையினை மதிக்க மறுத்தாலும் இவ்வகையான இழப்பீடு வேண்டலாம்.

பெயரளவு இழப்பீடு: சட்டப்படியான உரிமைகள் மீறப்பட்டால், உண்மையில் இழப்பு ஏதும் இல்லாதிருப்பினும் இத்தகைய இழப்பீட்டினை வேண்டலாம். ஈட்டுத் தொகையின் அளவு பெயரளவில் உள்ள இழப்பீடு இது. இதனை ஏன் பெயரளவு இழப்பீடு எனக் கூறுகிறார்கள் என்றால், இதன் அளவு ஓர் உரூபாயாகவோ ஒரு பைசாவாகவோ கூட இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஒரு மோட்டார் கார் விற்பனையாளரிடம் கார் வாங்குவதாக ஒப்பந்தம் செய்தபின்பு ஒப்பந்தத்தை முறித்துக் கார் வாங்கவில்லையாயின், கார் விற்பனையாளர் 'அ' என்பவர் ஒப்பந்தத்தை முறித்ததற்காக அவர் மீது பெயரளவு இழப்பீடு வேண்டலாம்.

சாதாரணமாக, இழப்பீடு நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்படுகிறது. சில சூழநிலைகளில், ஒப்பந்தம் ஏற்படுத்தும் பொழுதே இரு சாராரும் இழப்பீட்டின் அளவினை வரையறை செய்து ஒப்பந்தத்தின் ஒரு பிரிவாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இது அறுதியிட்ட இழப்பீடு என்று சொல்லப்படும். வீடு, நில விற்பனை ஒப்பந்தங்களில் ஒரு நிபந்தனையாக மிகச் சாதாரணமாக இது எழுதப்படுகிறது.

தீங்கியல் சட்டத்தின்படி, இழைக்கப்பட்ட தீங்கிற்குப் பெறக் கூடிய தீர்வழிகள் இரண்டு உள. 1. சட்டத்தினால் நிலைபேறாக்கப்பட்ட தீர்வழி (Judicial), 2. தனது சொந்தச் செயல்களினால் பெறக் கூடிய தீர்வழி (Extra Judicial).சட்டத்தினால் நிலைபேறாக்கப்பட்ட தீர்வழிகள்; இழப்பீடு வழங்குதல், உறுத்துக் கட்டளை பிறப்பித்தல், சொத்தினை மீட்டுப் பெறுதல் ஆகியன. ஒரே தீங்கிற்கு உறுத்துக் கட்டளையும் இழப்பீடும் சேர்த்துப் பெறலாம். ஒருவருக்கு மற்றவரது செயலினால் நேரடியாகவும் உடனடியாகவும் ஏற்படக்கூடிய இழப்பிற்கு மட்டுமே இழப்பீடு வேண்டலாம்.

தீங்கியல் சட்டத்தில் 'அறுதியிடா இழப்பீடு' மட்டும் பெற முடியும் தீங்கியல் சட்டத்தின்படி இழப்பீடு நான்கு வகைப்படும். அவையாவன: 1. அற்ப இழப்பீடு (Contemptuous Damges), 2. பெயரளவு இழப்பீடு (Nominl Damages), 3. கணிசமான அல்லது சாதாரண (இயல்பு) இழப்பீடு (Substantial or Ordinary Damages),4. எச்சரிக்கும் நோக்கத்திற்கான அல்லது பழிவாங்கும் நோக்கத்திற்கான அல்லது தண்டிக்கும் நோக்கத்திற்கான இழப்பீடு (Exemplary or Vindictive or Retributary or Punitive Damages).

அற்ப இழப்பீடு: கொண்டு வந்திருக்க வேண்டியது அன்று என்று கருதப்படும் வழக்கில், வேண்டா வெறுப்பாக மிகச் சிறிய அளவில் அளிக்கப்படுவது.

பெயரளவு இழப்பீடு: ஈட்டுத் தொகையின் அளவு பெயரளவில் உள்ளது.

கணிசமான அல்லது சாதாரண (இயல்பு) இழப்பீடு: உண்மையில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும்படி வேண்டுவது. இதனை ஈடுசெய்யும் இழப்பீடு (Compensatory Damages) என்றும் குறிப்பிடலாம். எதிர்வாதியின் செயலால் இயல்பான அல்லது நிகழக்கூடிய விளைவிற்குத் தக்க ஈடு என்றும் சொல்லலாம்.

எச்சரிக்க அல்லது தண்டிக்க அல்லது பழிவாங்க வேண்டப்படும் இழப்பீடு: இது ஒரு தீங்கினால் பேரிடர் விளையுமானால், அத்தீங்கிற்காகப் பெறப்படுவது. சமுதாய நலனுக்காகவும் தீங்கிழைத்தோரைத் தண்டிப்பதற்காகவும் வேண்டப்படுவது.

இவ்வாறு தீங்கியல் சட்டத்தின்படி, பாதிக்கப் பட்டோருக்குத் தீர்வழியாக இழப்பீடு வழங்கப் படுகிறது.

தொழிலாளர் நலச் சட்டங்களில் தகராறுச் சட்டத்தின் கீழும், பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழும் பணியாளர்க்கு இழப்பீடு வழங்கப்படு கிறது.

தொழில் தகராறுகள் சட்டத்தின்படி (Industrial Disputes Act) நான்கு சூழ்நிலைகளில் பணியாளர்க்கு இழப்பீடு கொடுக்கப்படுகிறது. பணியாளரைத் தளர்ச்சிப் பருவத்துக்குள்ளாக்கும் போதும், ஆட்குறைப்புச் செய்யும்போதும் தொழிலகத்தின் மேலாண்மை அல்லது உரிமை மாற்றப்படும்போதும் தொழிலகம் மூடப்படும்போதும் இவ்விழப்பீடு வழங்கப்படுகிறது.

தளர்ச்சிப் பருவ இழப்பிடு (Lay of Compensation): தொழில்தகராறுகள் சட்டத்தின் 2(K K K) என்ற பிரிவு தளர்ச்சிப் பருவத்தை வரையறுக்கிறது. எரிபொருள், சக்தி மூலப்பொருள் ஆகியவற்றின் பற்றாக்குறைவினாலோ உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மிகுந்து போவதாலோ இயந்திரங்கள் பழுதடைந்து போவதாலோ இயற்கைக் கோளாறினாலோ வேறு ஏதேனும் தொடர்புடைய மாற்றங்களினாலோ பணியாளர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்ற, ஆட்குறைப்புச் செய்யப்படாத பணியாளருக்குப் பணி அளிக்கத் தவறுதல், மறுத்தல், இயலாமை ஆகியவை தளர்ச்சிப் பருவம் எனப்படும்.

பதவிப் பணியாளராகவோ தற்செயல் பணியாளராகவோ அல்லாத ஒரு தொழிலகத்தில் ஓராண்டு தொடர்ச்சியாகப் பணியில் இருந்து, பெயர்ப் பட்டியலில் இடம்பெற்ற பணியாளரைத் தொடர்ந்தோ இடையிடையோ தளர்ச்சிப் பருவத்துக் குள்ளாக்கினால் அவர் தளர்ச்சிப் பருவத்துக்கு உள்ளாக்கப்பட்ட நாட்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று (தொழில் தகராறுகள் சட்டம்) 25 என்ற பிரிவு கூறுகிறது. அவருக்குக் கொடுக்கப்படும் அடிப்படை ஊதியம் உரூ. ஐம்பது வீதமும் அகவிலைப்படி உரூ. நூறு. வீதமும் இழப்பீடாக வழங்கப்படுகிறது. ஆனால், பணியாளரும் பணியளிப்பவரும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தப்படி, ஒரு பணியாளர் பன்னிரண்டு மாதங்களில் நாற்பத்தைந்து நாட்களுக்கு மேல் தளர்ச்சிப் பருவத்துக்குள்ளாக்கப்பட்டால், நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த பின்பு இழப்பீடு வேண்ட முடியாது. ஆகவே, அந்த நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்தவுடன் அப்பணியாளரை ஆட்குறைப்பிற்காக நீக்கிவிடலாம். 25 E என்ற பிரிவின்படி ஒரு பணியாளர் தளர்ச்சிப் பருவத்துக்குள்ளாக்கப்படும் போது அவருக்கு அதே தொழில் உற்பத்தியோ அதே உரிமையாளருக்கு உரிமையான அதே இடத்திலோ அவ்விடத்திலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ள இடத்திலோ உள்ள தொழிலகத்தில் மாற்றுப் பணி கொடுக்கும்போது, அம்மாற்றுப் பணிக்குத் தனித்திறமையோ அல்லது முன்னனுபவமோ வேண்டா திருந்தால், அப்பணியாளர் அம்மாற்றுப் பணியினை ஏற்க மறுத்தால், அவர் தளர்ச்சிப் பருவத்திற்கான இழப்பீடு வேண்ட முடியாது.

ஒரு நாளில் ஒரு முறையேனும் தளர்ச்சிப்பருவத்துக்கு உள்ளாக்கப்பட்ட பணியாளர் பணியிடங்களில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பணிக்கென வரவில்லையாயின் இழப்பீடு வேண்ட முடியாது.

தொழிலகத்தின் ஒரு பகுதியில் பணிபுரியும் பணியாளர்கள் உற்பத்தி செய்வதில் வேகம் குறைவதாலோ வேலை நிறுத்தம் செய்வதாலோ, அதன் காரணமாக மற்றொரு பகுதியில் உள்ள பணியாளர்கள் தளர்ச்சிப் பருவத்திற்கு உள்ளாக்கப்பட்டால் இழப்பீடு பெறமுடியாது.

ஆட்குறைப்பு இழப்பிடு (Retrenchment Compensation): 25 F என்ற பிரிவின்படி ஒரு பணியாளர் ஆட்குறைப்புச் செய்யப்பட்டால், ஆட்குறைப்புச் செய்யப்படுவதற்கு முன்பே இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும். ஆகவே இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பது ஆட்குறைப்பிற்கான ஒப்பந்தங்களுள் ஒன்று. ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளருக்கு ஒவ்வொரு முடிவடைந்த ஆண்டுத் தொடர்ச்சிப் பணிக்காகப் பதினைந்து நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும். தொடர்ச்சிப் பணி ஆறு மாதத்திற்கு மேற்பட்டு இருக்குமானால், சராசரி ஊதியத்தில் ஒரு பங்கு வீதம் இழப்பீடாக வழங்கப்படும்.

மாறுதல் இழப்பிடு (Transfer Compensation): தொழிலகத்தின் உரிமையோ மேலாண்மையோ, ஒப்பந்தப்படியோ சட்டப்படியோ மாற்றப்பட்டால் ஓராண்டுத் தொடர்ச்சிப் பணி புரிந்த ஒவ்வொரு பணியாளருக்கும் அறிக்கையும் இழப்பீடும் கொடுக்கப்படவேண்டும் என்று தொழில் தகராறுகள் சட்டத்தின் 25-ஆம் பிரிவு கூறுகிறது. பணியாளர்களின் பணி நீட்டிக்கப்பட்டால் புதிய மேலாளரின்கீழ்ப் பணிபுரியும் அப்பணியாளருக்குப் பணி ஒப்பந்தங்களில் மாற்றம் இல்லாதிருந்தால், அப்பணியாளர் மாறுதல் இழப்பீடு வேண்ட முடியாது. ஆட்குறைப்பு இழப்பீடு வேண்டினாலும் மாறுதல் பெறமுடியாது ஓராண்டுத் தொடர்ச்சிப் பணிக்குப் பதினைந்

நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும்.

பணியாளர் தாமாக ஓய்வு பெற்றால் அல்லது தகுந்த வயது வந்தவுடன் ஓய்வு பெற்றால் அல்லது தொடர்ந்து உடல் நலமின்மையால் பணி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் காரணமாகத் தண்டிக்கும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டால் அன்றி, வேறு ஏதேனும் காரணத்திற்காக ஒரு பணியாளர் பணி நீக்கப் செய்யப்பட்டால் அது ஆட்குறைப்பு ஆகும் (தொழில் தகராறுச் சட்டம்(2(00)).

மூடுதல் இழப்பிடு (Closure Compensation): ஏதேனும் ஒரு காரணத்திற்கு ஒரு தொழிலகம் நிலையாக அடைக்கப்பட்டால், அத்தொழிலகத்தில் ஓராண்டிற்குக் குறையாமல் தொடர்ச்சியாகப் பணி புரிந்த பணியாளருக்கு மூடுவதற்கு முன்பே இழப்பீடும் அறிக்கையும் அளிக்க வேண்டும். ஓராண்டுத் தொடர்ச்சிப் பணிக்குப் பதினைந்து நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும். பணியளிப்பவரின் கட்டுக்கடங்காத தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் ஒரு தொழிலகம் அடைக்கப்பட்டால், அதில் பணிபுரிந்த பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீடு அவர்களது மூன்று மாத சராசரி ஊதியத்திற்குமேல் இருக்கக் கூடாது.

சுரங்கங்களில் தொழில் புரியும் பணியாளருக்கு சுரங்கப் பொருள் தீர்ந்துவிட்ட பின்பு வேறு பணி அளிக்கப்பட்டால், பணியில் தடையில்லாதிருக்குமானால் இழப்பீடு வழங்கப்பட வேண்டியதில்லை. அதைப்போன்று, கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், அணைகள் போன்றவை கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தொழிலகம் இரண்டாண்டுகளுக்குள் பணிமுடிந்து அடைக்கப்படுமானால், அதில் பணிபுரிந்த பணியாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டிய தேவையில்லை. இரண்டாண்டுகளுக்குமேல் பணி தொடருமானால் இழப்பீடும் அறிக்கையும் வழங்க வேண்டும் (பணியாளர் இழப்பீட்டுச்சட்டம்).

பணியாளர் இழப்பீட்டுச் சட்டம் (1923) விபத்தில் பணியாளர்க்கு ஏற்படும் காயங்களுக்காக இழப்பீடு வழங்க வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும்.

பணியாளர் பணி செய்து கொண்டிருக்கும்போது எழுந்த விபத்தின் காரணமாக இறந்துவிட்டால், பணியளிப்பவர் அவரைச் சார்ந்தோருக்கு (Dependants) இழப்பீடு வழங்க வேண்டும். அத்தகைய விபத்தில் காயமுற்றாலும் பணியளிப்பவர் இழப்பீடு வழங்க வேண்டும். சில சூழ்நிலைகளில் சட்டம் பணியளிப்பவரை அத்தகைய கட்டுப்பாட்டினின்றும் விலக்குகிறது. அதாவது, ஒரு பணியாளர் பணி செய்து கொண்டிருக்கும்போது, பணியினின்றும் எழுந்த விபத்தினால் காயமுற்று, அக்காயம் மூன்று நாட்களுக்குள் ஆறிப் போகுமானால் இழப்பீடு வேண்ட முடியாது. பணியாளர் போதைப் பொருள் உட்கொண்டிருந்ததாலோ குடித்திருந்ததாலோ விபத்து ஏற்பட்டுக் காயமுறுவாரானால், இழப்பீடு பெறத் தகுதியற்றவராகிறார். பணியாளரின் பாதுகாப்பிற்கெனக் கொடுக்கப்பட்ட ஆணையினையோ விதியினையோ வேண்டுமென்றே மீறியதால் விபத்து ஏற்பட்டாலும் இழப்பீடு பெற முடியாது. பணியாளரின் பாதுகாப்பிற்கென அளிக்கப்பட்ட கருவிகளை வேண்டுமென்றே அணியாது அகற்றியதால் விபத்து ஏற்பட்டுக் காயமடைந்தாலும் இழப்பீடு வேண்டத் தகுதி கிடையாது.

விபத்தில் இறந்து விட்டால் பணியளிப்பவர் இழப்பீடு கொடுத்தே ஆகவேண்டும். விலக்குகள் காயமடைந்தால் மட்டும் உதவிக்கு வரும். இச்சட்டத்தின்படி இயலாமைக்காகக் (Disablement) கொடுக்கப்படும் இழப்பீடு இறத்தலுக்காகக் கொடுக்கப்படும் இழப்பீட்டை விட மிகுதியாக இருக்கும். நான்காம் அட்டவணைப் பட்டியலில் எவ்வளவு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. மாத ஊதியத்தின் அடிப்படையில் இழப்பீடு குறிக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகை அமர்த்தப்பட்ட ஆணையாளரிடம் கொடுக்கப்படலாம். குறைந்தது உரூ.10/- இழப்பீடாக வழங்கப்படும். இறப்பு விபத்துச் சட்டத்தின்படி (Total Accident Act) விபத்தில் இறந்தவர்களின் வழிமுறையினருக்கு இழப்பீடு வழங்கப்படும். இவ்வாறு பணியாளருக்குச் சட்டத்தின்படி இழப்பீடு வழங்கப்படுகிறது. ஒப்பந்தச் சட்டப்பிரிவிலும் தீங்கியல் சட்டவியலிலும் பாதிக்கப்பட்டோருக்குத் தீர்வழியாக இழப்பீடு வழங்கப்படுகிறது. அ.பி.பொ.

**இழிபொருட்பேறு** என்பது ஒருசொல் உயர்பொருளிலிருந்து இழிபொருளைப் (Degradation) பெறுவது. ஒரு மொழியிலுள்ள சொற்கள் தம் பொருளை இழப்பதும் புதிய பொருளைப் பெறுவதும் தம் இயல்பான பொருளிலிருந்து மாற்றம் பெறுவதும் இயல்பு. இவ்வாறு சொற்களின் பொருளில் ஏற்படும் மாற்றம் சொற்பொருள் மாற்றம் (Semantic Change) எனப்படும். ஒரு சொல் உயர்வான பொருளில் கையாளப்பெற்று, காலப்போக்கில் இழிவான பொருளில் கையாளப்பெறுவதும் உண்டு.

இழிபொருட்பேறு, சொற்பொருள் மாற்றங்களின் வகைகளுள் ஒன்று.

தமிழ் மொழியில் 'நாற்றம்' என்னும் சொல் நறு மணத்தைக் குறிக்கப் பயன்படுத்த பெற்றுப், பின் னர்த் தீநாற்றத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்று வருகிறது. இதனைப் போன்று இறை வனுக்குப் பணிபுரியும் பெண்ணைக் குறித்த 'தேவ தாசி' என்னும் சொல் இக்காலத்தில் விலைமக ளிரைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்று வருகிறது.

சொற்களுள் சில இழிபொருளைப் பெறுவதற்குச் சமுதாய நிலையே காரணமாக அமைகிறது. இல்லற வாழ்வினைத் துறந்து இறை பணிக்குத் தங்களை ஒப்படைத்த தேவதாசிப் பெண்கள் தவறான வழியில் செல்வதற்குச் சமுதாயம் காரணமாக அமைகிறது. இவ்வாறான தவறான முறைக்குப் பயன்படுத்தப் பட்டமையால், தேவதாசி என்னும் சொல் விலைமக ளிரைக் குறிக்கவும் பயன்படலாயிற்று. ஈண்டுத் 'தேவ தாசி', 'விலைமகளிர்' என்னும் இரு சொற்களுக் கிடையே காணப்பெறும் பொருள் ஒப்புமை (Similarity of Sense) காரணமாகத் 'தேவதாசி' என்னும் சொல் 'விலைமகளிர்' என்ற பொருளையும் பெற்றுப் பொருண்மை நிலையில் மாற்றம் பெறுகிறது.

ஏ. ஆ.

துணை நூல்கள்:

**Reddy, G.N.**, A Study of Telugu Semantics, Sri Venkateswara University, Tirupati, 1966.

**Ullmann, S.**, Semantics—An Introduction to the Science of Meaning, Blackwell, Oxford, 1962.

**இளங்கண்டீரக்கோ** சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளலும் அரசனுமாக விளங்கிய கண் டீரக்கோப் பெருநள்ளியின் தம்பி. இவனும் இள விச்சிக்கோவும் ஒன்றாகச் சேர்ந்திருந்தபோது, அங்கு வந்த பெருந்தலைச் சாத்தனார் இவனைத் தழுவிக் கொண்டு, இளவிச்சிக்கோவைத் தழுவாது விடுத்தார். தன்னைத் தழுவாதது ஏன் என வினவிய இளவிச்சிக் கோவிடம் புலவர் பின்வருமாறு கூறினார்:- 'ஆட வர்கள் வெளியே சென்றிருந்த போதிலும், வந்த இரவலருக்குப் பிடி முதலியன ஈந்து பேணும் கொடை மாண்பு மிக்க மகளிரை உடைய அரச மரபினைச் சேர்ந்தவனாதலால் இளங்கண்டீரக்கோவைத் தழுவி னேன். நீ பெண் கொலை புரிந்த நன்னன் மரபில் வந்தவன் ஆதலாலும், இரவலர்க்கு அடைத்த கத வினையுடைய அரசன் மரபில் வந்தவன் ஆதலாலும், உன்னைத் தழுவலாமாயினும், தழுவாது விடுத்தேன்' (புறம்.157). இளங்கண்டீரக்கோ வள்ளல் மரபில் வந்தவன்; புலவர் பாடும் புகழ் உடையவன்.

**இளங்கீரந்தையார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். கீரன் தந்தையார் என்பது கீரந்தை என மருவி வழங்கும். கீரந்தையார் என மருவிய நிலை யில் இப்பெயரே ஒரு புலவருக்கு இயற்பெயராக அமைந்திருத்தலும் கூடும். இளங்கீரந்தையார் என் பது கீரந்தையாரின் இளவலைக் குறிக்கும் பெயராக வும் உள்ளது. இவருடைய ஒரே பாடல் குறுந்தொகை 148-ஆம் பாடலாக அமைந்துள்ளது. முல்லைத்திணை யில் தலைவி கூற்றாக அமைந்துள்ள இப்பாடலில், செல்வக் குடிச் சிறுவர்கள் அணிந்துள்ள கிண்கிணி என்னும் காலணியின் முகப்புத் தவளை வாயினைப் போல உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் கீரந்தை என இறைய னார் களவியலுரையும், கீரந்தையார் என அடி யார்க்கு நல்லார் உரையும் குறிப்பிடுகின்றன. திரு வள்ளுவமாலையில் 19-ஆம் பாடலும், பரிபாடலின் இரண்டாம் பாடலும் கீரந்தையாரால் பாடப்பட்ட னவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் வேறு வேறு புலவர்கள். இவர்களுக்கும் இளங்கீரந்தை யாருக்கும் உறவு இருப்பதாகத் தெரியவில்லை.

**இளங்கீரனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர், இளங்கீரனார், எயினந்தை மகன் இளங்கீரனார். பொருந்தில் இளங்கீரனார் ஆகிய மூன்று பெயர்கள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. இம்மூவரும் ஒருவரா வெவ்வேறானவரா என்பது புலப்பட வில்லை. எனினும், இம்மூவர் பெயரிலும் சுட்டப்படும் பெரும்பாலான அகம் தழுவிய பாடல்கள், 'தலை மகன் தன் நெஞ்சுக்குச் சொல்லும்' துறைப் பாடல் களாகவே அமைந்திருத்தலைக் கொண்டு, மூவரும் ஒருவரே எனத் துணியலாம். மூவரும் வெவ்வேறான வர் என்னும் கருத்தும் உண்டு. 'எயினன்' என்பது வேட்டுவர் சாதியைக் குறிக்கும் சொல்லாகவும் 'பொருந்தில்' என்பது ஊரைக் குறிக்கும் சொல்லா கவும் புலவரின் பெயரோடு சேர்ந்து இடம் பெற்றி ருக்கலாம். அகநானூற்றில் பதினொன்றும் (3,19, 225, 239, 289, 299, 351, 361, 371, 395, 399) புற நானூற்றில் ஒன்றும்(53), குறுந்தொகையில் ஒன்றும் (116), நற்றிணையில் ஆறுமாக(3, 62, 113, 269, 308, 346) மொத்தம் 19 பாடல்கள் இளங்கீரனார் பெயரில் காணப்படுகின்றன. இவற்றுள் அகநானூற்றின் 19, 351 ஆகிய பாடல்கள் பொருந்தில் இளங்கீரனார் என் னும் பெயரிலும், 361-ஆம் பாடல் எயினந்தை மக னார் இளங்கீரனார் என்னும் பெயரிலும் காணப்படு கின்றன. இக்கால இலக்கிய உரையாடல்களில் மிகுதி யாகக் கையாளப்பெறும்'விரிப்பின் அகலும்; தொகுப்

பின் எஞ்சும்' (புறம். 53:6)என்ற நயமுள்ள தொடரையும் கவிதைத் திட்பத்தை உணர்த்தும் 'செறுத்த செய்யுள்' (புறம். 53:11) என்ற தொடரையும் ஆக்கிய புலவர் இளங்கீரனார் ஆவர்.

**இளங்குமணன்** புகழ் பெற்ற சங்க கால வள்ளல்களுள் ஒருவனாகிய குமணனின் தம்பி. சூழ்ச்சித் திறத்தால் குமணனின் நாட்டைக் கைப்பற்றி அவனைக் காட்டில் கரந்து வாழச் செய்தவன். அண்ணன் மறைந்து வாழ்வதனையும் பொறாமல் அவனைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியவன். குமணன் புகழ்பாடிப் பலவேளைகளில் பரிசில் பெற்ற பெருஞ்சாத்தனார் என்னும் புலவர் குமணனின் கொடைமடத் தன்மையை இளங்குமணனிடம் எடுத்துக் கூறுவதாக ஒரு புறப்பாடல் (புறம்.165) அமைந்துள்ளது. குமணன் சால்பினை எடுத்துக் கூறி, இளங்குமணனின் மனத்தினை மாற்றுவதற்குப் புலவர் மேற்கொண்ட முயற்சியாக அப்பாடற் கருத்தைக் கொள்ளலாம். இப்பாடலிற் சுட்டிய சிறு நிகழ்ச்சி ஓர் ஓரங்க நாடகமாக இக்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது.

**இளங்குழவி இறப்பு** என்பது ஒரு வயதுக்கும் குறைவான இளங்குழந்தைகளின் இறப்புத் தன்மையாகும். ஓராண்டில் பிறக்கும் 1000 குழந்தைகளுள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இளங்குழவி இறப்பு (Infant Mortality) வீதம் கணக்கிடப்படுகிறது. இவ்வீதம் குறைவாக உள்ள நாடுகளிலும் சமூகங்களிலும் கருவளம் (Fertility) குறைந்து காணப்படும் எனவும், இளங்குழவி இறப்பு மிகுதியான சமூகங்களில் கருவளம் மிகுந்து காணப்படும் எனவும் பொதுவாகக் கருதப்படுகிறது.

பிறக்கும் குழந்தைகளின் இறப்பு பிறந்த சில மணித்துளிகள், சில மணி நேரம்,நாட்கள், வாரம், மாதம் என்ற வாழ்வுக்காலத்தில் மிகுந்து கொண்டே செல்கிறது. இளங் குழந்தைகளின் வாழ்க்கைத் தொடக்க நிலையிலும் அதன் பிற்பட்ட நிலையிலும் ஏற்படும் இறப்புகள் குறிப்பிட்ட அளவில் மாறுபடுகின்றன. எனவே,இளங்குழவி இறப்பை மிகவும் கவனமாக, ஆய்வு முறையில் இறப்பு நிகழும் வயதை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரித்துள்ளனர். முதல் வகை, நான்கு வார கால வாழ்வைக் கடக்கு முன்பே இறந்து போகும் இளங் குழந்தைகளைக் கொண்டது. இக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் இறப்பு வீதம், பிறப்பின் முந்தைய இறப்பு வீதம்(Neo natal Mortality Rate)எனப்படும். இரண்டாம் வகை 28 நாட்கள் முதல் 365 நாட்களுக்கிடையில் இறந்த இளங் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். இக்காலத்தின் மீதான இறப்பு வீதம் பிறப்பின் பிந்தைய இறப்பு வீதம் (Post Neo Natal Rate) எனக் கூறப்படுகிறது.

அண்மைக் காலத்தில் உலகமெங்கும் பொது இறப்பு வீதம் வியக்கத்தக்க அளவில் குறைந்துள்ளது. இது அனைத்து வயதுப் பிரிவினருக்கும் பொதுவானது. ஆனால், அதன் அளவு பல்வேறுபட்ட வயதுகளில் பலவாறாக வேறுபடுகிறது. இளம் வயதுப் பிரிவினரின் இறப்பு, குறிப்பிடத் தக்க வகையில் குறைந்துள்ளது. இளங்குழவி இறப்பு வீதத்தின் குறைந்த அளவானது பொது இறப்பு நிலையின் குறைந்த அளவோடு தொடர்பு கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் (United Nations) வெளியிட்ட உலக நாடுகளின் இளங்குழவி இறப்பு வீத அட்டவணையிலிருந்து 1970-ஆம் ஆண்டுகளின் இறுதிக் காலத்தில் நிலவிய இளங்குழவி இறப்பு நிலையை அறியலாம்.

அட்டவணை–1

| | இளங்குழவி இறப்பு வீதம் | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | நாடுகள் | | ஆண்டு | வீதம் |
| | ஆசியா | | | |
| 1 | இசுரேல் | (Israel) | 1977 | 17.8 |
| 2 | ஆங்காங்கு | (Hong Kong) | 1977 | 13.5 |
| 3 | சப்பான் | (Japan) | 1977 | 8.9 |

| | | | |
|---|---|---|---|
| 4 | பிலிப்பைன்சு (Phillippines) | 1974 | 58.9 |
| 5 | தாய்லாந்து (Thailand) | 1976 | 25.5 |
| 6 | ஆசுத்திரேலியா (Australia) | 1977 | 12.5 |
| | ஆப்பிரிக்கா | | |
| 7 | இலைபீரியா (Liberia) | 1970 | 137.3 |
| 8 | எகிப்து (Egypt) | 1975 | 89.2 |
| 9 | கானா (Ghana) | 1970 | 59.4 |
| 10 | துனீசியா (Tunisia) | 1974 | 52.1 |
| | ஐரோப்பா | | |
| 11 | ஆசுத்திரியா (Austria) | 1976 | 18.2 |
| 12 | செக்கோ சுலோவேகியா (Chekhoslovakia) | 1976 | 21.0 |
| 13 | பல்கேரியா (Bulgaria) | 1976 | 23.5 |
| 14 | பிரான்சு (France) | 1976 | 12.5 |
| 15 | யூகோசுலேவியா (Yugoslavia) | 1975 | 39.7 |
| | தென் அமெரிக்கா | | |
| 16 | சிலி (Chile) | 1974 | 65.2 |
| 17 | பெரு (Peru) | 1972 | 75.5 |
| 18 | வெனிசூலா (Venezuela) | 1975 | 43.7 |
| | வட அமெரிக்கா | | |
| 19 | எல் சால்வடார் (El Salvador) | 1976 | 55.2 |
| 20 | ஐக்கிய அமெரிக்க நாடு (United States of America) | 1975 | 16.1 |
| 21 | கவுதிமாலா (Gautimala) | 1972 | 79.0 |
| 22 | கோசுடர்ரிகா (Costa Rica) | 1976 | 33.2 |
| 23 | தோமினிகன் குடியரசு (Dominican Republic) | 1975 | 43.5 |
| 24 | புரீடோரிகோ (Pureto Rico) | 1977 | 20.1 |
| 25 | மெக்சிகோ (Mexico) | 1975 | 52.8 |

வளர்ச்சி பெற்ற நாடுகளில் (சப்பான் தவிர்த்து) 1950-1975-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 4 முதல் 5 விழுக்காடு அளவு வரையில் இளங்குழவி இறப்பு குறைந்துள்ளது. அக்காலத்தில் இளங்குழவி இறப்பு வீதம் சப்பானில் 7 முதல் 8 விழுக்காடாகவும் அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து ஆசுத்திரேலியா ஆகிய நாடுகளில் 2 முதல் 2.5 விழுக்காடாகவும் இருந்தது என இதன் தொடர்பான புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இவற்றைக் குறித்த புள்ளி விவரங்களைப் பதிவு செய்யும் முறை, முழு விவரங்கள், காரணங்கள், காலம் ஆகியவை முழுமையற்றனவாகவும் முறையற்றனவாகவும் நாட்டுக்கு நாடு வேறுபட்டவையாகவும் காணப்படுவதால், தெளிவான ஒப்பீட்டுவிளக்கங்களை அறிய இயலாத நிலை காணப்படுகிறது. எதிரிடையான நிகழ்ச்சிகள் (Unfavourable Events), இயற்கையின் கொடுமைகள் (Natural Calamities), சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகள் ஆகியவற்றின் காரணமாகச் சில நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதம் உயர்ந்து, ஏற்றத்தாழ்வுகள் (Fluctuations) ஏற்பட்டிருக்கின்றன.

வங்காள தேசத்தில் 1970-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையினால் இளங்குழவி இறப்பு அக்காலத்தில் மட்டும் மிகவும் உயர்ந்து காணப்பட்டது. பிரேசில் நாட்டில் 1960-70-ஆம் ஆண்டுக் காலங்களில் காணப்பட்ட உயர்ந்த 48 விழுக்காடு இளங்குழவி இறப்பிற்கும், அக்காலத்தில் நிலவிய மிகக் குறைந்த உண்மை ஊதிய (Real Minimum wage) நிலைமைக்கும் தொடர்பு உள்ளது எனக் கருதப்படுகிறது.

இளங்குழவி இறப்பு வீத மதிப்பீட்டின்படி (Estimates) அவ்வீதம் உயர்வாக உள்ள இடங்களில் ஒரு வயதிற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் (Child Mortality Rate) உயர்வாக இருப்பதற்கான இடர்ப்பாடுகளும்(Risks) வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன எனக் கூறப்படுகிறது. அதற்கு அவ்விடங்களில் பொதுவாக நிலவும் ஊட்டச்சத்துக் குறைவும் தொற்றுநோய்ப் பரவலும் வயிற்றுப்போக்கும் குறிப்பிடத்தக்க காரணங்களாகும். ஆப்பிரிக்காவில் உலகிலேயே பேரளவிலான இளங்குழவி இறப்பு நிகழ்வதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. அங்குப் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 40 குழந்தைகளே ஓராண்டுக்கு மேல் உயிர் வாழ்கின்றன; எஞ்சியவை இறக்கின்றன. இக் கணக்கீடு வளர்ச்சியடைந்த நாடுகளின் வீதத்தைவிட 40 மடங்கு மிகுதியானது.

இளங்குழவி இறப்பிற்கான காரணிகள் இரு வகைப்படும். அவை அகக் காரணிகள், புறக் காரணிகள் எனப்படும். அகக் காரணிகள் உயிரியல் சார்ந்தனவாகவும், புறக்காரணிகள் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளைச் சார்ந்தனவாகவும் பகுத்தாராயப் பட்டுள்ளன. இவ்விரு காரணிகளுக்கும் உள்ளார்ந்த செயல் விளைவுகள் பெருமளவில் இருப்பதால், இவ்வகைப் பாகுபாடு செயற்கையானதாகவே விளங்குகிறது. சமூகப் பொருளாதார நிலைக் காரணிகளில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாக உயிரியல் காரணிகளில் சில மாற்றங்களை உண்டாக்க இயலும்.

அகக் காரணிகள்: இக்காரணிகள் கருப்பையிலிருக்கும் கருவின் (Foetus)அமைப்போடு (Congenital) தொடர்பு கொண்டதாகவும், குழந்தை பிறக்குமுன் (Pre Natal) தேவைப்படும் கவனம் செலுத்தாமை தொடர்பானதாகவும், குழந்தைப் பிறக்கும்போது (Birth Process)தேவையான கவனக் குறைவு தொடர்பானதாகவும் இருக்கும். இறப்புகளானதால் இவை உயிரியல் காரணிகளாகும். கரு, பிறப்பின் முந்தைய நிலை ஆகியவற்றினால் ஏற்படும் இளங்குழவி இறப்புகளுக்குத் தலையாய காரணிகளாக விளங்குவன: (1)தாயின் வயது (2) பிறப்பின் எண்ணிக்கை வரிசை (3) பிறப்புகளுக்கிடையேயான கால இடைவெளி (4) கரு முதிர்ச்சியின்மை (5) பிறக்கும் குழந்தையின் எடை (6) ஒன்றுக்கு மேற்பட்ட பிறப்புகள் போன்றவை. இவற்றுள்ளும் தாயின் வயது, தாய்மையின் வரிசை எண், பிறப்பின் வரிசை எண் ஆகியவை மிகவும் ஆழ்ந்து பகுத்தறியப்பட்டுள்ளன. பிறப்பின் முந்தைய இறப்பு வீதங்கள் தாயின் இளம் வயதில் மிகுந்து காணப்படுவது புள்ளி விவரங்களுடன் அறியப்பட்ட உண்மையாகும். இவ் இறப்பு வீதங்கள் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட தாய்மையின் முதல் தடவையிலும், முதல் பிறப்பிலுமே பொதுவாக நிகழ்கின்றன. படிப்படியாக வயது ஏற ஏற 29 வயது வரையில் குறைந்து வருகின்றன. இவ்வாறாகவே இரண்டாம் மூன்றாம் பிறப்பு வரிசைகளில் குறைந்தும், பின்னர் மறுபடியும் தாயின் வயது, தாய்மையின் வரிசை எண், பிறப்பின் வரிசை எண் போன்றவை உயர உயர இறப்பு வீதமும் உயர்கிறது. இக்காரணிகளின் அடிப்படையில் நிகழும் இறப்பு வீதப் புள்ளிவிவரங்களை வரைகட்டத் தாளில் (Graph Sheet) குறித்து வரைந்தால் அது 'U' வடிவ வளைகோடாகத் தோற்றமளிக்கும்.

பிறப்பின்போது இளங்குழந்தையின் முதிர்ச்சியும் எடையும், பிறப்பின் முந்தைய இறப்பிற்கும் பிந்தைய இறப்பிற்கும் முதன்மையான காரணிகளாகக் கூறப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1960-ஆம் ஆண்டு வாக்கில் பிறந்த குழந்தைகளின் எடை மிக

வும் குறைவாயிருந்ததாலேயே பிறப்பின் முந்தைய இறப்புகளில் மூன்றில் இரண்டு பங்களவுக்கு இறந்துள்ளன. குழந்தைகளின் எடை கூடுவதால் குறிப்பிடத்தக்க வகையில் உயிர் வாழ்வதற்கான வாய்ப்புகள் கூடியுள்ளதாகவும், 3501 முதல் 4000 கிராம் வரையான எடையே குழந்தை உயிர் வாழ்வதற்கு உகந்த எடையாகவும் கண்டறிந்துள்ளனர். பன்மைப் பிறப்புகளில் செத்துப் பிறத்தலின் வீதமும், பிறப்பின் முந்தைய இறப்பு வீதமும் மிகையானது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆனால், இவை பெரும்பாலும் மரபுவழிக் காரணிகளால் ஏற்படுகின்றன என்பதை அறியவேண்டும்.

புறக் காரணிகள்: இளங்குழவி இறப்பில், குறிப்பாகப் பிறப்பின் பிந்தைய கால இறப்பில் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுச் சூழ்நிலைக் காரணிகள் சிறப்பான பங்கேற்கின்றன. தவறான பாலூட்டும் முறையினாலும், ஊட்டச்சத்துக் குறைவினாலும், தூய்மைக் கேடுகளின் காரணமாகவும் இவ் இறப்புகள் நிகழ்கின்றன. நெருக்க மிகுதியுடன் (Density) தூய்மைக் கேடு வாய்ந்த சூழ்நிலையைக் கொண்டு, காற்றோட்ட வசதியற்றதும், போதுமான சூரிய ஒளியைக் கொண்டிருக்காததுமான குடியிருப்புகளில் சூழ்நிலைக் காரணிகளின் செயலாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. அறியாமை, கல்வியறிவின்மை, சமுதாய மூடப்பழக்க வழக்கங்கள், சமூகப் பண்பாடுகள், மதச் சடங்குகள் சார்பான காரணிகளும் புறக் காரணிகளுள் அடங்கும். கல்வியறிவு பெற்ற பெண்களின் குழந்தைகளிடையே பிறப்பின் முந்தைய மற்றும் பிந்தைய இறப்பின் வீதம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

சட்ட முறைப்படியல்லாத (Illegal) பிறப்புகள் மிகுதியான இளங்குழவி இறப்புக்கு முதல் காரணங்களாகின்றன. சட்டப்படியான மற்றும் சட்டப்படியல்லாத இளங்குழவி இறப்பு வீதங்களுக்கிடையான வேறுபாடுகள் மிகவும் மிகுந்து காணப்படுகின்றன. இதற்கான காரணமும் வெளிப்படையான ஒன்றே. ஒரு பெண்ணுக்குத் திருமணத்திற்கு முன்பே குழந்தை பிறந்தாலும், தாய் தந்தை உறவுகளில் சிக்கல்கள் இருந்தாலும், அக் குழந்தையைத் தாயும் சமூகமும் கூடப் பெரும்பாலும் விரும்புவதில்லை. அதன் விளைவாக அக்குழந்தைக்குத் தேவையான கவனமும் ஊட்டச்சத்தும் பிற வசதிகளும் கிடைக்கப் பெறாமல் இறந்து போவது உண்மையே.

இந்தியாவில்: இந்தியாவிற்கான இளங்குழவி இறப்பு வீதங்கள் பல்வேறு கால அளவுகளுடன் கீழ்க் காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உதவியுடன் இறப்பின் போக்கையும் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 2

| இந்தியாவின் சராசரி ஆண்டு இளங்குழவி இறப்பு வீதம் (1881—91 : 1961—71) | | | |
|---|---|---|---|
| இளங்குழவி இறப்பு வீதம் (1000 குழந்தைகளுக்கு இறப்புகள்) | | | |
| பத்தாண்டுகள் (Decades) | ஆண் | பெண் | இருபாலரும் |
| 1881—1891 | 272.6 | 239.9 | 256.2 |
| 1891—1901 | 285.4 | 258.8 | 272.1 |
| 1901—1911 | 290.0 | 284.6 | 287.3 |
| 1911—1921 | ... | | |
| 1921—1931 | 248.7 | 232.3 | 240.5 |
| 1941—1951 | 190.0 | 175.0 | 182.5 |
| 1951—1961 | 153.5 | 138.3 | 145.9 |
| 1961—1971 | 135.0 | 130.0 | 132.5 |

இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் மிகவும் உயர்ந்து காணப்பட்டது. அட்டவணையில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் 1931-ஆம் ஆண்டு வரை உயிரோடு பிறந்த 1000 குழந்தைகளில் 200க்கும் அதிகமான குழந்தைகள் ஒரு வயதைக் கடக்குமுன்பே இறந்துள்ளன. இந்தியாவில் 1901-1911-இல் இருந்த 287.3 என்ற அளவே மிக உயர்ந்த இளங்குழவி இறப்பு வீதமாகும். இது 1983-இல் 122 ஆகக் குறைந்துள்ளது. முந்தைய காலங்களோடு ஒப்பிடும்போது இளங்குழவி இறப்பு வீதம் 100 விழுக்காடுக்கும் மேலாக குறைந்திருந்தபோதிலும், இப்பொழுது காணப்படும் இளங்குழவி இறப்பு வீதத்தைக் குறைந்ததென்று மதிப்பிடலாகாது. ஏனெனில், வளர்ச்சியடைந்த நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதமானது 30க்கும் குறைவானதாகும். இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் இந்த அளவிற்காவது குறைந்திருப்பது மருத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும், அதன் காரணமாகப் பெருமளவில் இளங்குழவி இறப்பிற்குக் காரணமான நோய்கள் அழிக்கப்பட்டதும், சத்துள்ள உணவுகளைக் குழந்தைகளுக்கு அளிக்க வகை செய்ததும், சுற்றுப்புறச் சுகாதாரத்திற்கும் உடல்நலத்தைப் பேணிக்காப்பதற்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டதும் ஆகிய காரணங்களினாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில்: தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதம் உயர்ந்து காணப்பட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் 1921-25 -இலிருந்து 1966-70 வரை ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் சராசரி ஆண்டு இறப்பு வீதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இளங்குழவி இறப்புப் பற்றிய விவரங்கள் அவ்வளவு போதுமானதாகவும் நம்பத் தகுந்ததாகவும் இல்லாதபோதுங்கூட, கிடைக்கப்பெற்ற விவரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும்போது, தமிழ் நாட்டில் இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் உள்ள காலங்களில் (1921-25 , 1936-40) இளங்குழவி இறப்பு வீதம் மிகவும் உயர்ந்திருந்தது. ஆனால், போருக்குப் பிறகு மருத்துவத்திலும் மற்றும் ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் அடைந்ததன் காரணமாக இளங்குழவி இறப்பு வீதமானது, 1941-45-இல் 171-இலிருந்து 1966-71-இல் 63-க்கு மிகவும்

அட்டவணை 3

தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதங்கள் (1921—25—1966—71)
(Infant Mortality Rates in Tamil Nadu)

| காலம் (Period) | இளங்குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate) |
|---|---|
| 1921—25 | 176 |
| 1926—30 | 180 |
| 1931—35 | 182 |
| 1936—40 | 161 |
| 1941—45 | 171 |
| 1946—50 | 131 |
| 1951—55 | 113 |
| 1956—60 | 103 |
| 1961—65 | 78 |
| 1966—70 | 63 |

விரைவாகக் குறைந்திருக்கிறது. இந்தச் சரிவு 100 விழுக்காட்டிற்கும் மிகுதியானதாகும். ஆகையால் தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதம் அண்மைக் காலங்களில் மிகவும் சரிந்து வருவது தெளிவாகிறது.

இளங்குழவி இறப்பு வீதம் மிகக் குறைவான அளவில் இருக்கும் நாடுகளில் மூன்றுக்கு இரண்டு பங்குக்கும் மேலான இறப்புகள் பிறப்பின் முந்தைய நிலைகளில் ஏற்படுவதேயாகும். ஏனெனில் அந்நாடுகள் தத்தம் பொருளாதார முன்னேற்றத்தால் இறப்புகளுக்குக் காரணமான சூழ்நிலைக் காரணிகளை முழு அளவிற்குத் தவிர்த்துவிட்டன. எனவே, இந்நாடுகளில் இளங்குழவி இறப்புக்கான முதன்மைக் காரணங்களாகக் கருதப்படுபவை மரபு வழி அல்லது உயிரியல் காரணிகளே. இதற்கு மாறாக இளங்குழவி இறப்பு மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் பெரும்பாலும் இவ் இறப்புகள் சூழ்நிலைக் காரணிகளால் பிறப்பின் பிந்தைய நிலைகளில் ஏற்படுகின்றன.

துணை நூல்கள்:

**Chandrasekhar**, S., Infant Mortality – Population Growth and Family Planning in India, George Allen and Unwin, London, 1972.

**Donald Bogue, J.**, Principles of Demography, John Wiley and Sons, New York, 1969.

**Henry Shrycock et. al.**, The Methods and Materials of Demography, Bureau of Census, Washington. 1971.

Census of India-1961, Demography and Vital Statistics, Government of India, Madras, 1969.

**Agarwala**, S.N., India's Population Problem, Tala Mc Graw Hill Publishing Company Limited, New Delhi. 1977.


***இளங்குழவி உளவியற் சோதனைகள்***: பிறந்ததிலிருந்து 18மாதங்கள் வரையில் குழந்தைகள் இளங்குழவிப் பருவத்தினராக இருக்கின்றனர். இப்பருவத்துக் குழந்தைகளுக்குச் சோதனைகளை (Psychological Tests for Infants)உளவியல் முறையில் அமைப்பது கடினமாகும். ஏனெனில், குழந்தைகள் இப்பருவத்தில் பிறர் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். ஒரு வயது முடிவடையும் வரையில் இளங்குழவிகளின் இயல்பான நடத்தைமுறைகளைக் கவனித்து ஆராய முடியும். குழந்தையின் இரண்டாம் வயதில் ஒரு சில செயற் சோதனைகளைக் கொடுக்க முடியும். இலின்பர்ட்டு ஈரோசுலர் அளவை (Linfert Hierhozler Scale) என்னும் இளங்குழவிச் சோதனை குழந்தையின் நுண்ணறிவைப் பின்வருவன போன்ற நடத்தைக் கூறுகளில் மதிப்பீடு செய்யலாம் என்று கூறுகிறது.

அ) ஒரு பந்தைக் குழந்தையின் எதிரில் உருட்டிவிட்டுக் குழந்தை எவ்வாறு அப்பந்து செல்லும் பக்கம் நோக்கித் தன் பார்வையைத் திருப்புகிறது என்பதைக் கவனித்தல்.

ஆ) இரண்டாம் வயதில் குழந்தை எவ்வாறு உணவை எடுத்து உண்ணுகிறது என்பதை மதிப்பிடுதல்.

சார்லட்டு பூலர் (Chorlotte Buhler) என்பவர் அமைத்த இளங்குழவிச் சோதனையில், குழந்தை எவ்வாறு-எத்தகைய தூண்டல்களுக்குச் சிரிக்கிறது என்பதையும் குழந்தையின் முன் வைத்திருந்த பொம்மை மறைக்கப்பட்டவுடன் குழந்தை அதனை எவ்வாறு தேடுகிறது என்பதையும் கவனித்தல் அடங்கியுள்ளன. இத்தகைய சோதனைகளை முழுமையாகக் குழந்தையின் நுண்ணறிவினைச் சோதிப்பனவாக ஏற்றுக் கொள்ள முடியாது. குழந்தையின் உள நிலையும் விரைவில் மாற்றங்களை அடைகிறது. மேலும், இளங்குழவியின் வளர்ச்சி விகிதம் எப்பொழுதும் ஒன்று போல் இருப்பதில்லை. பிறந்தது முதல் ஆறு மாதங்கள் வரையில் விரைவாக வளர்ச்சி நிலைகளையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட இயக்கத்திறன்களையும் அடைந்துவரும் குழந்தை எட்டு மாதங்கள் நிரம்பியவுடன் வளர்ச்சி விகிதக் குறைவை அடைகிறது. வரைபடத்தில் மூன்று குழந்தைகளின் நிற்கக் கற்றுக் கொள்ளும் திறன், மூன்று வயது வரையில் எவ்வாறு விகித மாற்றங்களை அடைகிறது என்பது கீழ்வரும் வரைபடத்தின் மூலம் ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

இளங்குழவிப் பருவத்தில் காணப்படும் இயக்க வளர்ச்சி விகிதம், நுண்ணறிவு வளர்ச்சி விகிதம் ஆகியவற்றுக்கும் பள்ளிப் பருவ வளர்ச்சி விகிதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எண்ண முடியாது. ஆனால், குழந்தை தன் வயதுக்கேற்ற இயக்கத்திறனை அடைந்துள்ளதா என்பதைச் சோதனைகளின் உதவியால் அறிய முடியும். பியாகே (Piaget) என்னும் உளவியல் அறிஞர் தம்முடைய ஆராய்ச்சிகளின் விளைவாக இளங்குழவி இப்பருவத்தில் கற்றுக் கொள்ளும் திறன் கருத்துப் பெறல் ஆகும் என்று கூறுகிறார். குழந்தை ஒரு பந்தைப் பின் தொடர்ந்து தவழ்ந்து செல்லும் பொழுது அப்பந்தினை ஒரு திரைக்குப்பின் மறைத்து விட்டால் குழந்தை அப்பந்து அங்குத் திரைக்குப் பின் இருக்




மூன்று குழந்தைகளின் நிற்கும் திறன் வளர்ச்சியைக் காட்டும் படம்

கிறது என்ற கருத்தைப் பெறுகிறது. இதனைப் பொருள் நிலைப்பு (Object Permanence) என்று பியாகே கூறுகிறார். திரைக்குப்பின் இருக்கும் பந்தை எடுத்து ஒரு துணியில் மறைத்து மேசை மீது வைக்கும்பொழுதும் குழந்தை பந்து திரைக்குப் பின் இருப்பதாக நினைக்கிறது. இப்பருவத்தில் குழந்தை இணைத்தல் அறிவுத் திறனையும்பெறுகிறது. உனக்கு ஓர் இனிப்பு, உன் தாய்க்கு ஓர் இனிப்பு எனக்கு ஓர் இனிப்பு என்று கூறி மூன்று இனிப்புகளைக் குழந்தையின் முன் வைத்தால், அது இனிப்புகளையும் தன் அருகில் இருப்பவரையும் மாறிமாறிப் பார்த்து ஒவ்வொருவருக்கும் ஓர் இனிப்பு இருக்க முடியுமா? என்று இணைத்தறியக் கற்றுக் கொள்கிறது. இதனைப் போன்றே ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது நிலைத்த கவனத்தைச் செலுத்தக் குழந்தை கற்றுக் கொள்கிறது. இத்தகைய கவன நிலைப்பையே பினே(Binet) என்னும்உளவியல் அறிஞர்நுண்ணறிவுச் சோதனைகளை அமைக்கும்பொழுது குழந்தைகளிடம் மதிப்பீடு செய்யக் கூடிய திறனாகக் கருதினார். குழந்தை தன் கையில் எடுக்கும் பொருளைத் திருப்பித் திருப்பிப் பார்த்து அப்பொருளின் முழுமையான தோற்றத்தை அறிய முயற்சி செய்கிறது. இதுவும் ஒரு திறனாகும் என்று பியாகே கருதினார்

இளங்குழவிகளுக்கான உளவியல் சோதனைகளுள் கெசெல் பட்டியலும் (Gesell Schedule), காட்டெலின் (Cattell) அளவையும் குறிப்பிடத்தக்கவை. காட்டெல் அளவை இசுடான்போர்டு பினே சோதனையின் (Stanford Benet Test) அடிப்படையில் அமைந்துள்ளது. கெசெல் பட்டியல் குழந்தைகள் இப்பருவத்தில் எச் செயல்களை இயல்பாகச் செய்கின்றனர் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. இச்சோதனைகளைப் பலஉளவியலறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், இச்சோதனைகள் தரப்படுத்தப்படுதல் மிகவும் சிக்கலானது. காட்டெலின் சோதனையை இசுகாட்டு (Scott), பால் (Ball) ஆகிய இருவரும் பகுத்தாய்வு செய்துள்ளனர். இளங்குழந்தைகளுக்காக அமைக்கப்பட்ட சோதனைகளுள் நான்சி பெய்லி (Nancy Bayley) என்பவர் அமைத்த பெயிலி அளவையும் (Bayley Scale) குறிப்பிடத்தக்கதாகும். இச்சோதனை ஒரு மாதக் குழந்தையிலிருந்து 30 மாதக் குழந்தை ($2\frac{1}{2}$ வயது) வரையிலான குழந்தைகளுக்குக் கொடுக்கப்படக் கூடிய சோதனைகள் அடங்கியதாகும். இசுகாட்டு, பால் ஆகியவர்கள் பெயிலிச் சோதனையையும் காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) செய்துள்ளனர். இச்சோதனையில் முதல் ஆறு மாதம் வரையில் குழந்தை பின்வரும் திறன்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. அ) குழந்தையின் முன் ஒரு சிறு வளையத்தை வைத்தால் அதன் மீது குழந்தையின் கவனம் எந்த அளவுக்கு நிலைத்திருக்கிறது? ஆ) ஒரு பொருளை நகர்த்திக் கொண்டே போனால் அதன் பக்கம் குழந்தைப் பார்வையும் கவனமும் எந்த அளவிற்குத் தொடர்கிறது? இ) மகிழ்ச்சியின்மையைக் குழந்தை வெளியில் தெரியப்படுத்தும் முறை. ஈ) தன் உருவத்தை அல்லது வேறு உருவத்தைக் கண்ணாடியில் கண்டு சிரித்தல்,

இந்த நான்கு வகைத்திறன்களும் குழந்தைக்கு 6 மாதம் முடியும் வரையிலும் தொடர்ந்து கொடுக்கப்படலாம். ஆறிலிருந்து பன்னிரண்டு மாதம் வரையில் சொல், கருத்து இவை உருவாதல், சிறு கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் போன்ற திறன்களையும் மதிப்பீடு செய்யலாம். பெயிலி அளவையில் (6 முதல் 12 மாதங்கள் வரை) பின்வரும் சோதனை முறைகள் அடங்கியுள்ளன. அ) ஒரு கனசதுரத்தைக் குழந்தையின் கையில் கொடுத்து அதனை ஒரு கிண்ணத்தினுள் போடச் சொன்னவுடன் குழந்தை அதனைச் செய்தல். ஆ) ஒரு கரண்டியால் குடுவையைப் பெரியவர்கள் கிளறுவதைப் போல் தானும் செய்தல். இ) எழுதுபொருள் கொண்டு எழுதுவதைப் போல இயங்குதல். ஈ) நிற எழுது கட்டியை (Crayon) கையில் எழுதும் முறையில் பிடித்தல். உ) இயல்பான கிறுக்கல்கள். ஊ) குழந்தையின் சட்டை, காலணி அல்லது பொம்மை போன்றவற்றைக் குறிப்பிட்டு

'எங்கே?' என்று கேட்டதும் அதனைக் குழந்தை சுட்டிக் காட்டுதல். எ) குழந்தை பொம்மையை 'வை, எடு, என்னிடம் கொடு' போன்ற கட்டளை களைக் கொடுத்தவுடன் அவற்றை நிறைவேற்றுதல். இத்திறன்களை இந்த வரிசையிலேயே மதிப்பீடு செய்யும் முறையில் சோதனைகள் அமைக்கப்பட்டுள் ளன. வேறு சோதனைகளில் குழந்தை எத்தனைச் சொற்களைக் கேட்டுத் திரும்பக் கூறுகிறது என்ப தைப் போன்ற பகுதிகள் காணப்படுகின்றன.

உசுகிரிசு (Uzgiris), அண்டு (Hunt) ஆகியவர்கள் அமைத்த உளமுதிர்ச்சியின் அளவை வரிசைகள் (Ordinal Scales of Psychological Development) என் னும் சோதனை முறையில் 2 வாரக் குழந்தையிலி ருந்து 24 வாரங்கள் நிறைந்த குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய சோதனைப் பகுதிகள் அடங்கியுள் ளன. இச்சோதனைகளுக்குக் குழந்தைகளின் துலங்கல் களை ஆராய்ந்ததில் அவை பின்வரும் ஆறு பகுதி களில் அடங்கின.

1. பொருள் நிலைப்பு. 2. பொருளை அடைவதற் குத் தானே துணைக் கருவிகளை நாடுதல்: குச்சி, கை, கம்பி போன்றவற்றைப் பிடித்துக் கொண்டு வேண் டும் பொருளை அடைய முயற்சி செய்தல். 3. கேட் டுச் சொல்லுதலும் பார்த்துச் செய்தலும். 4. காரண மறிதல் (எ-டு. சாவியைத் திருப்பினால் பொம்மை ஓடும் என்று அறிதல்). 5. பொருளை எப் படி எங்கு வைத்தால் விழாமல் இருக்கும் என்று உணர்தல். 6. பொருள்களைத் தொட்டுத் திருப்பி எறிந்து கீழே போட்டு அவற்றின் தன்மைகளை அறி தலும் பொருள்களுடன் தொடர்புடைய செயல்க ளைச் செய்தலும் (பொம்மை உந்து ஒன்றைப் பார்த் தவுடன் உந்து ஓட்டும் செயலைக் காட்டுதல், சதுரக் கட்டைகளை எடுத்தவுடன் அடுக்குதல், மணிமாலை யைக் கண்டவுடன் அதனை அணிதல், பொம்மை களுக்குப் பெயரிட்டுச் சுட்டிக் காட்டுதல் போன்ற இயைபுச் செயல்கள்).

இச்சோதனைகள் 84 குழந்தைகளுக்குக் கொடுக் கப்பட்டுத் தரப்படுத்தப்பட்டன. சோதனைப் பகுதி களின் மதிப்பீட்டுப் புள்ளிகள் கணித முறையில் குறி யீட்டு எண்ணுக்குக் (Index) கொண்டு வரப்பட்டன. பல்வேறு சோதனைகளின் குறியீட்டு எண்கள் 802-இலிருந்து 991-வரையில் காணப்பட்டன.

இத்தகைய இளங்குழவிச் சோதனைகள் அமெ ரிக்க ஐக்கிய நாட்டைத் தவிர, இங்கிலாந்திலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் அந்தந்த நாட் டுப் பண்பாட்டுச் சூழமைவுக்கு ஏற்ப அமைக்கப்பட் டுள்ளன. இந்தியாவின் பண்பாட்டுச் சூழமைவுக்கு ஏற்ப இச்சோதனைகள் அமைக்கப்பட்டுப் பயன்படுத் தப்படவேண்டும்.

துணை நூல்:

**Anne Anastasi**, Psychological Testing, Collier Mac-millan Internation, New York, 1976.

**இளங்குழவிப் பருவத்தனிமை நோய்** என்பது பிறந்ததிலிருந்து 2½வயது வரையிலான குழந்தைகளிடம் காணப்படும் உளநோய்களுள் ஒன் றாகும். இப்பருவக் குழந்தைகளிடம் பேச்சுத் திறன், இயக்கத்தின் புலன் காட்சித்திறன், புலனியக்க ஒருங்கமைவு, மனவெழுச்சி ஆகியவை குன்றிய நிலையில் காணப்படின் குழந்தைக்குப் பெரும்பாலும் இளங்குழவிப் பருவத் தனிமை நோய் (Infantile Autism) இருப்பதாக அறியலாம். இந்நோ யுடைய குழந்தைகளிடம் மனவளர்ச்சி குன்றியமை (Mental Retardation) காணப்படுவதில்லை. குழந்தையிடம் இந்நோயின் அறிகுறிகள் யாவும் ஒருங்கே காணப்பட்டாலன்றி இந்நோய் இருப்பதாகக் கருதமுடியாது. உளநலமுடைய குழந்தைகளிடமும் சில நேரங்களில் இத்தகைய அறிகுறிகள் ஏதேனும் ஒரு சில காணப்படுவதுண்டு. அவை சில காலத்திற் குப் பின் மறையக்கூடும். ஆதலின் இந்நோயின் அறி குறிகள் குழந்தையின் நடத்தையைப் பெருமளவு பாதிப்பனவாகக் காணப்பட்டால் மட்டுமே இந்நோய் இருப்பதாகக் கருத முடியும். எடுத்துக்காட்டாக, மூளையில் நீர் மிகுதியாகச் சுரப்பதனால் (Hydroce-phaly) ஏற்படும் புலனியக்கக் குறைவை இளங்குழ விப் பருவத் தனிமை நோயின் அறிகுறியாகக் கருத முடியாது. மேலும் உளவளர்ச்சி குன்றிய குழந்தை களிடமும் புலனியக்கக் குறைகள் காணப்படுகின்றன. கானர் (Kanner) என்பவர் இந்நோயின் அறிகுறிக ளைப் பற்றி ஆராய்ந்து அவற்றை வரையறுத்துள் ளார். இரட்டர் (Rutter) என்பவர் இளங்குழவிப் பருவத் தனிமை நோயினைக் கண்டு பிடிப்பதற்குக் குழந்தையின் மன வயதைக் கண்டு பிடிப்பது இன்றி யமையாததாகும் என்று கருதுகிறார். எடுத்துக்காட் டாக, 4 வயதுக்குழந்தை 6 மாதக் குழந்தையின் உள வயதைக் கொண்டிருந்தால் அக்குழந்தையிடம் நான்கு வயதுக்கேற்ற மொழித் திறமும் மன வெழுச்சி முதிர்ச்சியும் காணப்படமாட்டா. குழந்தை தனிமையை மிகுதியாக நாடுவதும், கண்களின் வழியே மனவெழுச்சிகளை வெளிப்படுத்தாமையும் தனிமை நோயின் முதன்மையான அறிகுறிகளெனக் கொள்ளலாம். இளங்குழவிப் பருவத்தில் ஏற்படும்

இயக்கமிகுதி (Hyperkinesis), செவிட்டுத்தன்மை, பார்வையின்மை, வளர்ச்சியின்மை, காரணமிலாச் சோர்வு, குழந்தைப் பருவத் தூண்டல்களின் தாயன்பு இல்லாமை, கொடுமையாக நடத்தப்படுதல், மொழித் தடங்கல், உளவளர்ச்சி குன்றியமை, வளர்ச்சி நிலைத்தாமதம், மூளை நோய்கள், உயிர்ப் பொருளாக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), குழந்தைப் பருவத்து உளச் சிதைவு நோய் (Childhood Schizophrenia), பிறப்புக் காலத்தில் ஏற்படும் தட்டம்மை (Reusella), புலனியக்கக் கோளாறுகள் ஆகிய கோளாறுகளினாலும் தனிமை நோய் நடத்தைக் கூறுகள் காணப்படும்.

இரட்டன்பர்கு (Ruttenberg)என்பவர் 1978-ஆம் ஆண்டு தனிமைநோய், இயல்பு பிறழ்வு ஆகியவற்றின் அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளின் நடத்தைகளை மதிப்பீடு செய்யும் அளவையைக் (Behaviour Rating Instrument for Autistic and A typical Children) கண்டு பிடித்தார். இந்த மதிப்பீட்டு முறையில் குழந்தைகளின் நடத்தைகள் எட்டுப் பிரிவுகளுள் அடங்கும். 10 வகைகளான செயல் முறைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தனிமை நோய்க் குழந்தைகள் இந்த மதிப்பீட்டு முறையில் அதிகமான புள்ளிகள் எடுக்கின்றனர். தனிமைநோய் உளநோய்களின் வரிசையில், இறுதி நிலையில் உளச் சிதைவுநோயும் தொடக்க நிலையில் தனிமைநோயும் அமைந்துள்ளன என்பதை இந்த மதிப்பீட்டு முறை காட்டுகிறது. இம்மதிப்பீட்டு முறையில் தொடர்பு (Relationship), கருத்துப் பரிமாற்றம் (Communication), செவ்விய திறனடைதலில் ஆர்வம், பேச்சுத் திறன், ஒலியுணர்தல், சமூகத்துலங்கல், உடலசைவு, உளம் சார் உயிரியல் செயற்பாடுகள் ஆகிய எட்டுப் பிரிவுகள் அடங்கியுள்ளன.

தனிமைநோய்க் குழந்தைகளிடம் இயக்க மிகுதி காணப்படுகிறது. இத்தகைய குழந்தைகளிடம் கவனக் குறைவும், மனம் போன வழியில் செயற்படுதலும், இயக்கக் குறைவும், அமைதியிலா இயக்கமும், மனவெழுச்சிக் குறைவும் காணப்படுகின்றன. இந்த அறிகுறிகள் குழந்தைக்கு மூன்று வயதானவுடன் தெளிவாகத் தெரிகின்றன. சில நேரங்களில் இப்பருவத்துக் குழந்தைகளிடம் இயல்பாகக் காணப்படும் விரைவுச் செயற்பாடுகளும், நிலையிலாமையும், மிகுதியான ஓட்டம், குதித்தல் போன்ற இயக்கங்களும் இயக்க மிகுதியைப் போலத் தோற்றமளிக்கின்றன. இத்தகைய இயக்கங்கள் கொண்ட குழந்தையிடம் இயல்பான மனவெழுச்சிகளும், சொல் திறன், சமூகத் தொடர்பு ஆகியவையும் காணப்படின் இவர்களைத் தனிமை நோயுடையவர் என்று கருத முடியாது. இளங்குழவிப் பருவத்தில் குழந்தை பெரியவர்களால் கொடூரமாக நடத்தப்பட்டால் குழந்தையிடம் இனம்புரியாத தவிப்பு நிலையும் இயக்கமிகுதியும் காணப்படலாம். இதனைத் தெளிவாகக் கண்டு பிடிப்பதற்காக மருத்துவர்கள், தெக்சுடிரோ ஆம்பிடமைன் (Dextro amphetamine) மெதில்பினைடேட்டு (Methylphenidate) போன்ற மருந்துகளைச் சிறிய அளவில் இக்குழந்தைகளுக்குக் கொடுத்து அதன் விளைவாக இக்குழந்தையிடம் இயக்க மிகுதி மேலும் அதிகமாகக் காணப்பட்டால், அது தனிமை நோயின் அறிகுறியாகும் என முடிவு செய்கின்றனர்.

தனிமைநோயின் அறிகுறியாகக் குழந்தைகளிடம் செவிட்டுத் தன்மை காணப்படலாம். இவர்கள் உண்மையான செவிக்கோளாறுடைய குழந்தைகள் அல்லர் என்பதைக் கேள்வியளவைச் சோதனைகளின் மூலம் (Audio metric Tests) தெரிந்து கொள்ளலாம். பிறப்பிலேயே செவிட்டுத் தன்மையுடன் இருக்கும் குழந்தையின் செவிக்கோளாறும் பேச்சுத் திறனின்மையும் தனிமைநோயுடைய குழந்தையின் செவிட்டுத் தன்மையினின்று வேறுபட்டு இருக்கின்றன. இதனைப் போன்றே தனிமை நோயுடைய குழந்தையிடம் காணப்படும் புலன்காட்சிக் குறையும் பிறப்பிலேயே காணப்படும் பார்வையின்மையினின்றும் வேறுபட்டு இருக்கிறது.

தனிமைநோயுடைய மழலையர் தாம் உண்ட உணவைச் சிறிது சிறிதாக வாயில் கொண்டுவந்து அசைபோடுகின்றனர். இந்தக் கோளாறு ஒரு வயது நிரம்பிய குழந்தையிடம் காணப்படலாம். இப்பழக்கத்தைக் குழந்தைப் பருவத்து இயல்பான தூண்டல்களை அளிப்பதன் மூலம் குணப்படுத்தலாம். இதனை உடனே கவனிக்காவிட்டால் குழந்தை உடற்கரைவு (Marasmus) என்னும் ஊட்டச் சத்துக் குறைவு நோயின் காரணமாக இறக்கலாம். குழந்தைக்குத் தேவையான அன்பு, அரவணைப்பு, கவனிப்பு ஆகியவை மறுக்கப்பட்டாலோ இவை முறைதவறி அல்லது எதிர்மறையாகக் கொடுக்கப்பட்டாலோ குழந்தையிடம் இப்பழக்கம் உளக் கோளாறாகத் தோன்றலாம். இதனால், குழந்தையின் எடை குறைகிறது. சில குழந்தைகள் உணவேற்க முடியாத நிலையை அடைகின்றன அல்லது உணவை மறுக்கின்றன. இவை யாவும் குழந்தைக்கு இளங்குழவிப் பருவத்தூண்டல்களான தாயின் அரவணைப்பு, அன்பு ஆகியவை தக்க முறையில் கிடைக்காத காரணத்தினால் தோன்றுகின்றன. தாயன்பு தாயைத் தவிர, தாயின் இடத்தை அல்லது பொறுப்பை ஏற்கும்

தந்தை அல்லது வேறு எவரிடமிருந்தும் குழந்தைக்குக் கிடைக்கலாம். ஆறு மாதம் நிறையும் வரையில் குழந்தை தன் தாயிடமிருந்து மற்றவர்களை வேறுபடுத்தி உணர்வதில்லை. குழந்தைக்குத் தேவையான அன்பு, கவனிப்பு, அரவணைப்பு ஆகியவற்றைக் கொடுப்பவர் எவராக இருப்பினும் அவரைக் குழந்தை ஏற்றுக் கொண்டு அவரிடமிருந்து பெறும் தூண்டல்களுக்குத் துலங்குகிறது.

தனிமை நோயின் காரணமாகப் பெரும்பாலும் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. தனிமைநோயுடைய குழந்தைகள் பெரியவர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் விலகித் தனித்து இருக்கின்றனர். ஆனால், இவர்கள் விளையாட்டுப் பொருள்கள் போன்ற தூண்டல்களுக்குத் துலங்குகின்றனர். இவர்கள் மனிதர்களுடைய தூண்டல்களுக்குத் துலங்காமையும் மனிதர்களுடன் இயல்பான தொடர்பு கொள்ளாமையுமே இத்தகைய குழந்தைகளின் சிக்கல்கள் எனக் கூறலாம். ஆனால், பெரியவர்கள் 'வா' என அழைக்கும் பொழுது அல்லது இரு கைகளையும் நீட்டும் பொழுது இக்குழந்தைகள் தம் இரு கைகளையும் நீட்டி அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய நடத்தையை மனவெழுச்சிக்குறை எனக்கொள்ளலாம். இது தனிமை நோயின் அறிகுறியாகும். தனிமை நோயுடைய குழந்தைகள் பிறந்தது முதல் தமக்கு உணவு, அன்பு, கவனிப்பது ஆகியவற்றைக் கொடுத்து வந்தவர் எக்காரணம் பற்றியேனும் குழந்தையை விட்டு விட்டுச் சில காலமோ, முற்றிலுமாகவோ சென்றுவிட்டால், உணவு ஏற்பதை நிறுத்தி விடுகின்றனர். தம் தாய் அல்லது அந்த இடத்தைக் கொண்டிருந்தவர் திரும்பி வந்தால் இத்தகைய குழந்தைகள் திரும்பவும் உணவேற்கத் தொடங்குகின்றனர். இல்லையேல் இவர்கள் உணவின்றி இறந்து விடுகின்றனர், அல்லது உடற் கரைவு நோயை அடைகின்றனர். இக்குழந்தைகள் ஆறு அல்லது ஏழு மாதம் நிரம்பியபின் இவர்கள் தம் தாய் அல்லது தாயின் இடத்தைக் கொண்டிருப்பவர்களிடமும் இவர்களின் துலங்கல்கள் மெல்ல மெல்ல நின்று விடுகின்றன. உணவு உட்கொண்டபோதிலும் மனவெழுச்சிக் குறைவு காணப்படுகிறது.

கவனிப்பு மறுக்கப்பட்ட, கொடூரமாக நடத்தப்பட்ட, கைவிடப்பட்ட குழந்தைகளிடம் தனிமை நோயின் அறிகுறிகள் காணப்படுவதில்லை என மருத்துவ இயல் ஆய்வுகள் கூறுகின்றன. குழந்தைக்குத் தேவையான தட்ப வெப்பநிலையில் அதனை வைத்திருக்காமல் அது குளிரில் நடுங்கும் பொழுது அதற்குத் தேவையான போர்வை கொண்டு அதனுடைய குளிரை நீக்காமல் இருத்தல், குழந்தை வயிற்று வலியினாலோ காய்ச்சலினாலோ வேறு உடல் ஊறுகளினாலோ அல்லற்படும்பொழுது அதனைக் கையிலெடுத்து அரவணைப்புக் கொடுக்காமல் விட்டுவிடுதல்; குழந்தையை முரட்டுத்தனமாகத் தூக்குதல், அதற்கு உடலில் ஊறு ஏற்படும் வண்ணம் அதனை எறிதல், அதற்குப் பசிநேரத்தில் உணவு கொடுக்காமல் அது பசியில் அழுது உறங்கிய பின் எப்பொழுதேனும் குழந்தையை வன்மையாக உலுக்கி எழுப்பி உணவை விரைவாக உட்கொள்ளச் செய்தல், கழிவுகளினின்று குழந்தையை உடனே துப்புரவு செய்யாமல் அதனை அந்த நிலையிலேயே நீண்ட நேரம் விட்டு விடுதல், குழந்தைக்குப் பசியில்லாத நேரத்திலும் அதனைக் கட்டாயப்படுத்தி உணவு உட்கொள்ளச் செய்தல், குழந்தையை அடித்துத் துன்புறுத்தல், வன்மையான குரலில் அதன் மீது எரிந்து விழுதல் போன்ற நடத்தைகள் இளங்குழவிக் கொடுமை (Infant Abuse) எனப்படும். இத்தகைய நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள் நல்ல தூண்டல்களுக்காக ஏங்கும் கண்களுடன் எப்பொழுதும் காணப்படுகின்றனர். நல்ல தூண்டல்கள் கிடைக்கப் பெற்றவுடன் இக்குழந்தைகள் இயல்பான மனவெழுச்சியுடையவராக மாறிவிடுகின்றனர். இளங்குழவிக் கொடுமை பற்றி ஆய்வுகள் நிகழ்த்திய ஆர்னிட்சு, இரித்துவோ (Ornitz &Ritvo) ஆகியோர் இக்கருத்தை வலியுறுத்துகின்றனர். இளங்குழவிப் பருவத்தில் குழந்தையை அடிப்பதனால் ஏற்படும் ஊறுகளினால் குழந்தையின் மூளை பாதிக்கப்பட்டிருந்தால் குழந்தையிடம் தனிமை நோய் போன்ற உளநோய்கள், உளவளர்ச்சி குன்றுதல் ஆகியவை ஏற்பட வாய்ப்பு உண்டு. குழவிப் பருவத்தில் வேளைக்கு உணவு கிடைக்காத குழந்தைகளும் ஊட்டச் சத்தற்ற உணவுமட்டும் உண்டு வளரும் குழந்தைகளும் உளவளர்ச்சி குன்றியவர்களாகவும் தனிமை நோயின் அறிகுறிகள் உடையவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

தனிமை நோயுடைய குழந்தைகள் பேச்சுத்திறன் குறையுடையவர்களாக இருக்கின்றனர். இவர்களின் பேச்சுத்திறன் குறைவினைப் பெருமூளை பாதிக்கப்பட்டிருப்பதாலும், உளக்கூறுகளினாலும் வேறு பல காரணங்களினாலும், பேச்சுக் கோளாறுடைய குழந்தைகளின் பேச்சுத் திறன் குறைவினின்றும் வேறுபடுத்தி அறிதல் வேண்டும். பெருமூளைப் பாதிப்பு, உளக்கூறு போன்ற அடிப்படைகளில் பேச்சுத்திறன் குறை ஏற்பட்ட குழந்தைகள் தம் செய்கைகளினால் பேச முயற்சி செய்வர். இவர்களிடம் மனவெழுச்சி மழுங்கிய நிலை (Blunted Affect) காணப்படுவதில்லை. இக்குழந்தைகள் ஒரு சொல்லைப் பயன்

படுத்துவதற்கு மாறாக வேறு சொற்களைப் பயன் படுத்த முயற்சி செய்கின்றனர். ஆனால், உளவளர்ச்சி குன்றியமை காரணமாகவோ தனிமைநோய் காரண மாகவோ பேச்சுத் திறன் குறையுள்ள குழந்தைகள், செய்கை அல்லது கண்கள் மூலம் தம் மனவெழுச்சி களை வெளிப்படுத்துவதில்லை. இக்குழந்தைகளின் செய்கை மொழித்திறனும் மிகக் குறைவே. தனிமை நோயுடைய குழந்தைகள், உடல் வளர்ச்சி நிலையின் படிநிலைகளை (Mile stones) உரிய காலத் தில் அடைகின்றனர். இவர்களிடம் நினைவுத்திறனும் கூட்டமைப்புத்திறனும் (Skill of Assembling) குறை வதில்லை. ஆயினும், இளங்குழவிகளுக்கான நுண் ணறிவுச் சோதனைகளில் (Infant Intelligence Test) இக்குழந்தைகள் இயல்பான குழந்தைகளின் நுண் ணறிவுஈவை (IQ) எட்டுவதில்லை. உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஆளுமைச் சோதனை கள் கொடுக்கப்பட்டு அவற்றிலிருந்து கிடைத்த மதிப் பீட்டுப் புள்ளிகளையும் (Scores), ஆளுமைக் கூறு களையும் (Personality Traits), தனிமை நோயுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆளுமைச் சோதனைகளிலிருந்து கிடைத்த மதிப்பீட்டுப் புள்ளி களையும், ஆளுமைக் கூறுகளையும் (Personality Traits), ஒப்பு நோக்கும்பொழுது, உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளிடம் எண்ணியவற்றைச் சொல் வழி வெளிப்படுத்தல், சமூகத் தொடர்பு, ஆர்வம் போன்ற பண்புக்கூறுகள், தனிமைநோயுள்ள குழந்தை களிடம் இருப்பதைக் காட்டிலும் மிகுதியாக இருக் கின்றன என்பதைக் காணலாம். இத்தகைய சோதனைகளை உல்பு (Wolf), இரட்டர் (Rutter) போன்றவர்கள் செய்துள்ளனர். உயிரணுக்கோல் கோளாறுகள் (Chromosomal Disorders), உயிர்ப் பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders) ஆகிய காரணங்களைத் தவிர வேறு பல காரணங் களினாலும் தனிமைநோய் ஏற்படலாம். அத்தகைய காரணங்களாகப் பினைல்கெடோனூரியா, (Phenyl-ketonuria), இசுடிடைனூரியா (Histidinuria), அர்லர் கண்ட நோய்க்குறி ஒத்திசைவு (Hurler's syndrome), இளங்குழவிச் சுண்ணாம்புச் சத்து மிகுதி (Infantile Hypercalcemia) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிறப்புக்கால ஆபத்துகளின் (Birth Trauma) காரணமாகவும் பிறப்பு ஊறுகளின் காரணமாகவும் தனிமை நோய் ஏற்படலாம். இக் குழந்தைகளிடம் சமூகத் தொடர்புக்கோளாறுகள், மற்றவர்கள் பேசு வதைப் புரிந்துகொள்ளும் திறன்குறைவு, இயக்கக் குறைவு, நுண்ணறிவுத்திறன்குறைவு, கற்றல்திறன் குறைவு, ஆளுமைக் கோளாறுகள், உளப்பிணிகளின் தொடக்கநிலை போன்ற அறிகுறிகள் காணப்படு கின்றன. இக்குழந்தைகள் இரண்டு அல்லது மூன்று வயதடையும் காலத்தில் தம்முடைய தேவைகளை நிறைவேற்றி வருபவரை (தாய், தந்தை, அல்லது அந்தப் பொறுப்பை ஏற்றவர்) விட்டுப்பிரிய மறுக் கின்றனர். இந்த மறுப்பு மனவெழுச்சி ஈடுபாட்டின் காரணமாக ஏற்படுவதில்லை. இந்த மறுப்பினை இணை வாழ்வு. உளப்பிணி (Symbiotic Psychosis) என்று குறிப்பிடுகின்றனர்.

இளங்குழவித்தனிமை நோய் உளச்சிதைவு நோயின் (Schizophrenia) தொடக்கநிலை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. உளச்சிதைவுநோயின் அறிகுறிகள் 5 வயதான பின்னரே நன்கு புலப்படத் தொடங்கும். மேலும், உளச்சிதைவு நோயுடைய குழந்தைகளின் உடலமைப்பும் உளக்கூறுகளும் நடத்தைகளும் தனிமைநோயுடைய குழந்தைகளின் உடல் உளக்கூறுகளினின்று வேறுபட்டுக் காணப்படும். உளச்சிதைவு நோயுடைய குழந்தைகளின் துலங்கல் கள் இயல்பு பிறழ்ந்தனவாக இருக்கின்றன. ஆதலின், தனிமைநோயுடைய குழந்தைகளை உளச்சிதைவு நோயுடையவர் என்றோ உளச்சிதைவு நோயின் அறிகுறிகள் உள்ளவர் என்றோ முடிவெடுப்பது தவறாகும். இளங்குழவிப் பருவத்துத் தனிமை நோய், குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் உளச் சிதைவு நோயாக மாறுவது என்பது மிகச் சிலரிடம் மட்டுமே காணக்கூடியதாகும்.

துணை நூல்கள்:

**Rulter, M.**, Diagnosis & Definition of Autism, Journal of Autism & Childhood Schizophrenia, 1978.

**Coleman, M.**, Neonatal Neurology, University Park press, Baltimore, 1980.

**இளங்குற்ற நடத்தை**: சிறுவர்களும் இளை யோரும் குற்ற நடத்தையில் ஈடுபடுவது இளங்குற்ற நடத்தை என்று குறிப்பிடப்படுகிறது. உலகெங்கிலும் இளங்குற்ற நடத்தை சமூகச் சிக்கலாகக் கருதப்படு கிறது. பல நாடுகளில் இளங்குற்றவாளிகள் தனிப் பட்ட சில பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். பொதுவாகச்சமூகம் ஏற்றுக் கொள்ளாத செயல்களில் ஈடுபடும் இளையோரும், சிறுவர்களும் இளங்குற்ற வாளிகள் எனப்படுகிறார்கள்.

சிறுவர்கள் பல்வேறுவகைப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இக்குற்றங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. கெய்ரோ (Cairo) நகரத்தில் சிறு வர்கள் தெருவில் புகையிலைச் சுருட்டுத் துண்டுகளைப்

பொறுக்குகின்றனர். ஆங்காங்கு (Hogkong) நகரத்தில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். சட்ட விரோதமான வணிகம் செய்ததற்காகச் சிறுவர்கள் குற்றவாளிகளாகப் பிடிக்கப்படுகின்றனர். இலாகோசு (Lagos), நைசீரியா (Nigeria) போன்ற நாடுகளில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாத சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுகின்றனர். இவற்றுக்கு மாறாக வேறு சில நாடுகளில் சிறுவர்கள் குற்றம் புரியும் குழுக்களாக அமைந்து குற்ற நடத்தைகளிலும், சமூக எதிர்ப்புச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். போலந்து, கனடா, தாய்லாந்து, அர்சண்டைனா, அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற நாடுகளில் சிறுவர்கள் பல்வேறு குற்ற நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கணக்கெடுப்பின்படி உலகில் பொருளாதார முன்னேற்றமடைந்த நாடுகளில் இளங்குற்ற நடத்தை மிகுதியாகவும், பொருளாதார முன்னேற்ற மடையாத நாடுகளில் இளங்குற்ற நடத்தை குறைவாகவும் இருக்கிறது.

சமூகக் காரணங்கள்: அமைதியில்லாத குடும்பச் சூழ்நிலை, வறுமை, பெற்றோர்களால் கைவிடப்படுதல், பெற்றோர்களின் குற்ற நடத்தை, வேலையில்லாத்திண்டாட்டம், வீடுகளில் மக்கள் நெரிசல், பெற்றோர்களின் அரவணைப்பும் அன்பும் இல்லாமை போன்ற காரணங்களால் சிறுவர்கள் குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றனர். சில குடும்பங்களில் காணப்படும் மிகையான கட்டுப்பாடும் தண்டனையும் கூட இளையோர் குற்றம் புரியக் காரணமாகின்றன. சிதைந்த குடும்பம் குற்ற நடத்தைக்கு ஒரு தலையாய காரணமாகும். சிதைந்த குடும்பத்தில் குழந்தைகளுக்குத் தேவையான அன்பும் பாதுகாப்புணர்வும் கிடைப்பதில்லை. குடும்பப் பொறுப்புகளும், ஒழுங்குமுறைகளும் இல்லாத சூழமைவு குழந்தைகளின் உள்ளத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்துகிறது. இந்த வெற்றிடம் குற்றநடத்தைக்கு வித்திடுகிறது. தாயன்பு கிடைக்காத சிறுவர்களும் குற்றம் புரிகின்றனர். பெற்றோர் தமக்குள் சண்டை, மனவேறுபாடு போன்ற காரணங்களால் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருப்பினும் மணவிலக்கு வேண்டிப் பிரிந்திருப்பினும், பெற்றோர்கள் ஒழுக்க மில்லாதிருப்பினும் இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடக்கூடும். குழந்தைகளின் உளநலத்திற்குப் பெற்றோர்களிடையே ஒற்றுமையும், பெற்றோர்களின் அன்பும் பாதுகாப்பு உணர்வும், இன்றியமையாதவையாகும்.

பொருளாதாரக் காரணங்கள்: வறுமையின் காரணமாக இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடுவதாகக் கூறிவிட முடியாது. ஏனென்றால், வறுமை மட்டுமே குற்ற நடத்தைக்குக் காரணமாகாது. சமுதாயத்தில் ஒரு பிரிவினர் மிகுந்த செல்வத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது, மறு பகுதியினர் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், வறுமையில் வாடிக்கொண்டிருப்பவர்களுக்கு உணவும் உடையும் கிடைத்த போதிலும், செல்வர்களின் சுகபோக வாழ்க்கைக்கும், தங்களுடைய நம்பிக்கையற்ற வாழ்க்கைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை உணரும் இளந்தலைமுறையினர் சலிப்பு அடைகின்றனர். மேலும், சமூகத்தில் பல பெருங்குற்றங்களைச் செய்யும் பெரியவர்கள் சட்டத்தினின்று தப்பித்து வாழ்வதைப் பார்க்கும் இளையோர், தாமும் அவ்வழியில் சென்று செல்வர்களாகி விடவேண்டும் என்ற எண்ணத்தினாலும், கையாடல், கள்ளக்கடத்தல், கள்ள வாணிகம் முதலிய சமூக விரோத நடத்தைகள் செல்வர்களிடையே குற்றங்களாகக் கருதப்படுவதில்லை என்ற எண்ணத்தினாலும் இளையோர் குற்ற நடத்தையை மேற்கொள்கின்றனர். மேலும், பல்வேறு குற்றங்கள் புரியும் பெரியவர்கள் கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைச் செய்திருந்தாலும் செல்வாக்கின் காரணத்தினால் தண்டனைக்குத் தப்பிக் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டிருப்பதே, இளந்தலைமுறையினர் குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு முக்கியக் காரணமாகும்.

உளவியல் காரணங்கள்: ஒரே அறையில் ஒரு குடும்பத்தினர் அனைவரும் வாழ்வது குழந்தைகளின் உளநலத்தைக் கெடுக்கிறது. பெற்றோர்களுக்குத் தேவையான தனிமை இருப்பதில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் இளம் பருவத்திலேயே பால் முதிர்ச்சியடைகின்றனர். இவர்களின் மனவெழுச்சிச் சமநிலை பாதிக்கப்படுகிறது. சிறுவயதிலேயே பால் நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். முறைதவறிய பால் நடத்தைகள் இத்தகைய ஒற்றை அறைக் குடும்பங்களில் தான் காணப்படுகின்றன. இளையோர் பல்வேறு மனப்போராட்டங்களுக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக இவர்களின் ஆளுமை பாதிக்கப்படுகிறது. இவர்கள் குற்ற நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

மேலும், தகுந்த ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் பெரும்பாலான குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. பொழுதுபோக்கு இடங்கள், விளையாட்டு அரங்குகள், திடல்கள் முதலியன இல்லாத காரணத்தினாலும், சிறுவர்களை ஒருங்கே கூட்டி விளையாட்டு, பொழுதுபோக்குப் போன்றவை அமைப்பதற்குத் தேவையான பொருள்களும், ஒருங்கமைப்பாளர்களும் இல்லாத காரணத்தினாலும் சிறுவர் தங்கள்

ஓய்வு நேரத்தில் குற்றங்கள் புரிகின்றனர். திரைப் படங்களிலும் இந்த நடவடிக்கைகளைப் பற்றிய விரிவான முறையில் கதைகளும் காட்சிகளும் அமைக்கப் படுகின்றன. இதனால், திரைப்படங்களும் இளங் குற்ற நடத்தைக்கு மறைமுகக் காரணங்களாக அமைகின்றன. உடல் ஊனமுற்ற குழந்தைகள் மற்றக் குழந்தைகளால் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அதனால், இத்தகைய குழந்தைகளும் குற்றக் குழுக்களில் சேர்ந்து விடுகின்றனர்.

சமூகத்தில் குற்றக்கிடங்குகள் இருக்கின்றன. இவற்றைச் சேர்ந்தவர்கள் சிறு குழந்தைகளைத் திருடியும் பிடித்தும் ஏமாற்றி அழைத்து வந்தும் குற்றங்கள் செய்வதற்குப் பயிற்சி கொடுக்கின்றனர். இத்தகைய குழந்தைகள் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். இவர்கள் பிச்சையெடுத்துப் பணம் சேர்த்துக் குற்றக் குழுவின் தலைவனிடம் கொடுத்து விடுகின்றனர். கள்ளக் கடத்தல் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். சிறு திருட்டுகள் செய்தல், பயணம் செய்வோரின் சட்டைப் பையிலிருந்து பணம் திருடுதல், கள்ளச் சாராயம் விற்றல், போதை மருந்துப் பொருள்களைச் சட்டவிரோதமாக விற்றல், பரத்தைத் தொழிலுக்கு வாடிக்கைக் காரர்களை அழைத்து வருதல், முறையில்லாப் பால் நடத்தையில் ஈடுபடுவது போன்ற குற்றங்களைச் செய்வதற்குச் சிறுவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஆதலின், குற்றக் குழுக்களே இளங்குற்ற நடத்தையின் பிறப்பிடங்கள் ஆகும். இளங்குற்ற நடத்தை, மரபியல் காரணமாகவும் சில நேரங்களில் ஏற்படுகிறது. உயிர்ப்பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), இளங்குழவிப் பருவத்தில் ஏற்படக் கூடிய சில நோய்கள், மூளைக் காயச்சல் மரபணுப் பிறழ்வுகள் போன்ற காரணங்களும் சில நேரங்களில் குழந்தைகளிடையே குற்ற நடத்தையைத் தோற்றுவிக்கின்றன.

இந்தியாவில் பல மாநிலங்களில் இளம்பருவத்தினரின் நலனுக்காகச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இச்சட்டங்கள் இளம்பருவத்தினரைச் சமூகத் தீங்குகளிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடனும், அவர்கள் சமூக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் இயற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் பெண்கள் குழந்தைகள் விபசாரத் தடைச்சட்டம் (Suppression of Immoral Traffic in Women & Children Act), குழந்தைகள் சட்டம் போனறவை (Children Act) இளம்பருவத்தினரின் நலனைக் கருதி இயற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு உட்படப் பல மாநிலங்களில் குற்றமிழைத்த இளம் பருவத்தினரும், குற்றத்தில் ஈடுபடுத்தப்பட்ட இளம்பருவத்தினரும் திருந்தி மறுவாழ்வு பெறும் பொருட்டு இளங்குற்றவாளிகள் வழக்கு மன்றங்களும், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிரப் பல மாநிலங்களில் குழந்தைகள் நல வாரியங்கள், மீட்பு இல்லங்கள் (Rescue Homes), குறுகிய காலக் காவல் இல்லங்கள் (Remand Homes) போன்ற அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 93 இளங்குற்றவாளிகள் வழக்கு மன்றங்களும், 102 சீர்திருத்தப் பள்ளிகளும் உள்ளன.

இளங்குற்றவாளிகளின் மறுவாழ்வு: இக்காலத்தில் இளங்குற்ற நடத்தை ஒரு குற்றமாகக் கருதப்படுவதில்லை. அது ஒரு சமூக நோயின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. இளங்குற்றவாளிகள் குற்றமிழைத்தவர் என்ற நோக்கில் ஆராயப்படுவதில்லை. குற்றமிழைப்பதற்குநேரடியாகவோ மறைமுகமாகவோ தூண்டப்படுகின்றனர் என்று கருதப்படுகிறது. ஆதலின், இளங் குற்றவாளிகளைச் சிறையிலடைப்பதில்லை. அவர்களுக்குச் சீர்திருத்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இத்தகைய சீர்திருத்தப் பள்ளிகள் பல மாவட்டங்களில் உள்ளன. இளங்குற்றவாளிகள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டவுடன் குறுகிய காலக் காவல் இல்லங்களில் வைக்கப்படுகின்றனர். பின்னர், இவர்கள் இளங்குற்றவாளிகள் வழக்கு மன்றத்தில் விசாரணை செய்யப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் இத்தகைய வழக்கு மன்றங்கள் குழந்தைகள் வழிகாட்டு அமைப்பு (Juvenile Guidance Bureau) என்ற பெயரில் இயங்குகின்றன. இந்த மன்றத்தில் நீதிபதியைத் தவிர ஒரு சமூகப் பணியாளரும், உளவியல் வல்லுநரும் இருக்கின்றனர். இவர்கள் குழந்தையின் வயது, மனநிலை, உள முதிர்ச்சி, மனவயது போன்றவை பற்றிய சுருக்கமான அறிக்கை தயாரிக்கிறார்கள். இந்த விவரங்களின் அடிப்படையில் குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், பால விகார் போன்ற மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இல்லத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். உளமுதிர்ச்சி உடையவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உளக்கோளாறு அல்லது உளப்பிணி உடையவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். உடல் ஊனமுற்ற குழந்தைகளாக இருந்தால் அவர்களுக்கென இயங்கும் பள்ளிகளுக்கும், பயிற்சிக் கூடங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

இளங்குற்றவாளிகளின் மீது சமூகம் தவறான எண்ணமும் அணுகுமுறையும் கொள்வதால் இளங் குற்றவாளிகளின் மனத்தில் தங்களுக்கு மறுவாழ்வு கிடைக்க வழி இல்லை என்ற எண்ணம் உருப்பெற்று விடுகிறது. இந்த எண்ணம் இவர்களைத் திரும்பவும் குற்றம் புரியத் தூண்டுகிறது. மேலும், குற்றக்குழுக் களின் செல்வாக்கினால் இளங்குற்றவாளிகள் விடு விக்கப் பட்டும், தப்புவிக்கப்பட்டும் திரும்பவும் குற்றத் தொழிலிலேயே ஈடுபடுத்தப்படுகின்றனர். சீர் திருத்தப் பள்ளியிலிருந்து திரும்பி வந்த குழந்தை களைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாமையால் அவர்கள் திரும்பவும் குற்றமிழைக்கின்றனர். இளங்குற்றவாளி கள் வாழ் நாள் முழுவதும் 'பழியை'ச் சுமந்தே வாழ் கின்றனர். இந்நிலை திருந்தினால் இளங்குற்ற நடத்தை கட்டுப்படுத்தப்படும்.

இளங்குற்றவாளிகளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உளவியல் சோதனைகள் அளிக்கப்பட்டு அவர்களின் ஆளுமையும் உளவளர்ச்சியும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவர்களுக்குக் குழு உளவழி மருத்துவம் (Group Psychotheraphy) அளிக்கப்படு கிறது. தனியார் சமூகப் பணி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் வேறுபலரும் இளங்குற்றவாளி களைப் பண்டிகைநாட்களில் வந்து பார்வையிட்டு அவர்களுடன் உரையாடிப் பரிசு கொடுத்து மகிழ்விக் கின்றனர். சமூகப் பணிக் கல்லூரிகளிலுள்ள மாண வர்கள், இளங்குற்றவாளிகளுக்கென விளையாட்டுப் போட்டி, மனமகிழ் திட்டங்கள் ஆகியவற்றை அமைத்து நடத்துகின்றனர். இளங்குற்றவாளிகளை அவர்களின் வயது, உளமுதிர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவினருக்குப் ஏற்ற கலந்துரையாடல்களை நிகழ்த்துகின்றனர். மேலும், வாழ்க்கைப் பின்னணி ஆய்வு (Case Work) என்னும் முறையில் இளங்குற்றவாளிகளின் கடந்தகாலக் குடும்பச் சூழமைவு, சமூகப் பின்னணி, பள்ளிச் சூழ மைவு ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அக் குழந்தைகளுக்கு ஏற்ற மறுவாழ்வுத்திட்டங்களையும் அமைத்துக் கொடுக்கின்றனர். இளங்குற்றவாளிகளின் மறுவாழ்வுக்கு முழுமையான உணர்வுடன் பாடுபடுப வர்களுள் சமூகப் பணிக் கல்லூரிகளின் மாணவ மாணவியரைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடாதவாறு தடுப்பதற்காகக் காவல்துறையினரின் ஒத்துழைப் புடன் 'சிறுவர் ஊர்' (Boys Town) எனப்படும் அமைப்புகள் தமிழ் நாட்டின் பல இடங்களில் காணப்படுகின்றன. இந்த அமைப்புகளில் சிறுவருக் கான ஓய்வு நேர விளையாட்டுகளும், நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. நீந்துதல், ஓடுதல் போன்ற விளையாட்டுத் துறைகளில் சிறுவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தகைய அமைப்புகள் இளங் குற்ற நடத்தையைத் தடுப்பதற்காகப் பாடுபடுகின் றன. ஆர்.கே.பா.

துணை நூல்கள்:

**Mukerjee, K.**, The Sociology & Social change in India Today, Prentice Hall of India, New Delhi, 1965.

**Mehr, J.**, Abnormal Psychology, Holt, Rineharl 2 Rinehalt winston, New York, 1983

***இளங் குற்றவாளி***: நீதிமன்றத்தால் குற் றம் செய்தவனாக முடிவு செய்யப்படும் இளவய தினன் (Young Person) இளங் குற்றவாளியாகிறான் (Juvenile Offender). பெரும்பான்மையான இளம் வயதினர் குற்றவாளிகளாக மாறுவதற்கு அவர்களே காரணமாயிருக்க மாட்டார்கள். பெற்றோர் அல்லது காப்பாளர் இல்லாத நிலையினாலும் அவர்களை கைவிட்டதினாலும், அவர்கள் தீய ஒழுக்கத்தில் ஊறியிருப்பதாலும், தீயவர்களுடைய நட்பு ஏற்படு வதனாலும் இளம் வயதினன் குற்றவாளியாக மாறும் நிலை ஏற்படுகிறது.

முற்காலத்தில் இளங் குற்றவாளிகள் வயது வந்த குற்றவாளிகளுக்குச் சமமாகப் பாவிக்கப்பட்டு வந்தார்கள். எடுத்துக்காட்டாக, இளம் வயதினன் ஒருவனும், வயது வந்த ஒருவனும் கூட்டாக ஒரு குற்றத்தைச் செய்தால் அவ்விருவரும் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டு ஒரே தன்மையான தண்டனைக்குட்படுத்தப்பட்டு வந்தனர். இந்நிலை யில் குற்றவியல் சம்பந்தமாகப்புதிய கருத்துகள் தோன்றத் தொடங்கின. குற்றம் நிகழாமல் தடுக்கத் தண்டனை விதித்தால் மட்டும் போதாது; குற்ற வாளியையும் சீர் திருத்திச் சமூகத்தில் பயனுள்ள வனாக வாழச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் காலப்போக்கில் தோன்றிப் பரவத் தொடங்கியது. அதையொட்டி வயது வந்த குற்றவாளிகளைப் பொறுத்துப் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இளங் குற்றவாளிகளைப் பொறுத்த மட்டிலும் இவர் களை வயது வந்த குற்றவாளிகளிடமிருந்து பிரித்துக் குற்றப்பாதையிலிருந்து மாற்றும் முயற்சி தொடங் கப்பட்டது. முக்கியமாக இவர்களுக்குத் தண்டனை விதிக்காமல் சீர்திருத்தப்பள்ளிகளில் தங்க வைப் பதற்கு வகை செய்யப்பட்டது. அப்பள்ளிகளில் கல்வி, தொழிற்கல்வி போன்றவை போதிக்கப் படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள நியூயார்க்கு நகரத்தில் முதன் முதலாக கி.பி. 1824-ஆம் ஆண்டில் இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி நிறுவப்பட்டது. அங்குள்ள பாசுட்டனில் (Boston) கி.பி. 1870-ஆம் ஆண்டில் இளங் குற்றவாளிகளைத் தனியாக விசாரணை நடத்த நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. மேலும், அந்நகரத்தில் 1938 இல் இளவயதினர் நீதிமன்றச் சட்டம் (Juvenile Courts Act) இயற்றப்பட்டது. அதாவது குற்றம் சாட்டப்பட்ட இளவயதினரை விசாரணை செய்வதற்கென்று தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

இந்தியாவில் சில மாநிலங்களில் இளங்குற்றவாளிகளைப் பொறுத்த மட்டிலும் தனித்தனியாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தமிழ் நாட்டில் 1920 ஆம் ஆண்டில் குழந்தைகள் சட்டம் (Tamil Nadu Childran Act 1920) இயற்றப்பட்டது. அது 1958 -ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. வங்காளத்தில் 1922 இலும், பம்பாயில் 1924-இலும் மத்திய மாநிலங்களில் 1928-இலும், ஆந்திராவில் 1951-இலும், அசாமில் 1969-இலும், பீகாரில் 1970-இலும் குழந்தைகள் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியக் குடியரசானது 1960-ஆம் ஆண்டில் குழந்தைகள் சட்டத்தை (The Children Act 1960) இயற்றியது. இச்சட்டம் இந்திய யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் செல்லத் தக்கது இளம் குற்றவாளிகளைத் திருத்த வேண்டும் என்ற அடிப்படையான கருத்து மேற்கூறிய எல்லாச் சட்டங்களிலும் உள்ளது. இளம் வயதினரைத் தனியாக விசாரணை செய்து தண்டனைக்குட்படுத்தாமல் சீர் திருத்தப் பணி செய்யும் அமைப்புகளுக்கு இவர்களை அனுப்ப வேண்டும் என்ற கருத்து அச்சட்டங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மட்டும் செல்லத்தக்கது (இனி வரும் இக்கட்டுரையில் இச்சட்டம் மட்டில் விளக்கப் படும்). 14 வயதுக்குக் கீழ் உள்ளவன் குழந்தை என்றும், 14 வயதுக்கு மேற்பட்டும் 18 வயதுக்குக் கீழ்ப் பட்டும் உள்ளவன் இளம் வயதினன் (Young Person) என்றும். 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவன் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்தவனாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும்போது அவன் இளம் குற்றவாளியாகிறான் (Youthful Offender) என்றும் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இளம் குற்றவாளியின் குறைந்த வயது என்னவென்று இச் சட்டத்தில் சொல்லப்படவில்லை. 7 வயதுக்கு மேற் படாத குழந்தையைத் தான் செய்யும் செய்கையின் விளைவுகளை அறிய முடியாத காரணத்தால் குற்றம் செய்தவனாகக் கருதமுடியாது என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, 7 வயதுக்கு மேற்பட்டவனும் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவனுமான இளம் வயதினன் நீதி மன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படும்போது தமிழ்நாடு குழந்தைகள் சட்டப்படி அவன் இளம் குற்றவாளியாகிறான். 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் குற்றம் செய்திருந்தாலும் குற்றவாளி என முடிவு செய்யும் நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்டிருந்தால் அவனை இளம் குற்றவாளிப் பட்டியலில் சேர்க்க முடியாது. தண்டம் மட்டும் விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்திருந்தாலும் அவனை இளம் குற்றவாளி எனக் கூறமுடியாது.

குற்றம் சாட்டப்படும் இளம் வயதினரை விசாரணை செய்யத் தனிப்பட்ட நீதிமன்றம் ஏற்படுத்த இச்சட்டத்தின் 36-ஆம் பிரிவில் வகை செய்யப் பட்டுள்ளது. அவ்வாறான தனிப்பட்ட நீதிமன்றம் கொலையுட்பட எல்லா வகையான குற்றங்கள் தொடர்பாகவும் விசாரணை செய்யலாம். அவ்வாறு தனிப்பட்ட நீதிமன்றம் அமைக்கப்படாவிட்டால் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து ஏனைய நீதி மன்றங்களில் விசாரணை செய்யலாம். எந்த நீதி மன்றமாயிருந்தாலும் இளம் வயதினனை விசாரணை செய்யும்போது நீதிவிசாரணை நடப்பது போல் அல்லாமல் ஏறத்தாழ ஒரு குடும்ப விசாரணை நடப்பது போன்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். மேலும், வயது அடைந்த எதிரியுடன் சேர்த்து இளம் வயதினனை விசாரணை செய்யக் கூடாது. அவ்விருவரும் சேர்ந்து ஒரு குற்றத்தைச் செய்ததாக இருந்தாலும் இருவரையும் தனித்தனியாக விசாரணை செய்ய வேண்டும்.

இளம் குற்றவாளியைக் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து நடத்த வேண்டும். மன்னித்து விடுதலை செய்யலாம்; பெற்றோர் அல்லது காப்பாளர் அல்லது அவர்களின் உறவினர் பிணைப்பத்திரம் எழுதிக் கொடுத்து இளம் குற்றவாளியின் நன்னடத்தைக்குப் பொறுப்பேற்றால், அவர்கள் பாதுகாப்பில் இளம் குற்றவாளி குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்படைக்கப்படலாம். இளம் குற்றவாளியைப் பாதுகாக்க எவரேனும் முன்வந்தால் அவர் பாதுகாப்பிலும் ஒப்படைக்கலாம். அவ்வாறு மற்றவர் பாதுகாப்பில் ஒப்படைக்கும்போது, இளம் குற்றவாளியை நன்னடத்தை அலுவலர் கண்காணிப்பிலும் வைக்கலாம். ஒறுப்புக் கட்டணம் குற்றத்திற்கு விதிக்கப்பட்டதாயின் இளம் குற்றவாளியின் சார்பில் அவன் பெற்றோர் அல்லது காப்பாளர் அதனைக் கட்ட வேண்டும் என்று ஆணையிடலாம். இளம் குற்றவாளியைப் பாதுகாப்

பதில் தாங்கள் எவ்விதத்திலும் தவறு இழைக்க வில்லை என்று மெய்ப்பித்தால் அவர்கள் அந்த ஒறுப்புக் கட்டணத்தைக் கட்ட வேண்டியதில்லை. சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாயிருந்தால் 12-உம் அதற்கு மேற்பட்ட வயதுமுடைய இளம் குற்றவாளியை முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிக்கு (Senior Approved School) அனுப்பலாம்; 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளம் குற்றவாளியை இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு (Junior Approved School) அனுப்பலாம் அப்பள்ளிகள் அரசால் நடத்தப்படுகின்றன. அங்குக் கல்வி, தொழிற்கல்வி, நல் ஒழுக்கம் ஆகியவை போதிக்கப்படும்.

18 வயது வாராத இளம் குற்றவாளிக்கு எக்கட்டத்திலும் மரண தண்டனை விதிக்கக் கூடாது. 14 வயதுக்குக் குறைந்த இளம் குற்றவாளிக்கு எக்கட்டத்திலும் சிறைத்தண்டனை விதிக்கக் கூடாது. ஆனால், 14 - வயதுக்குமேற்பட்டு 18 வயது அடையாத இளம் குற்றவாளி மிக மோசமான நடத்தையுள்ளவனாக இருந்தால், சிறைத்தண்டனை விதிக்கலாம். குற்றம் மிகக் கடுமையானதாக இருந்து சட்டத்தின்படி விதிக்கக்கூடிய தண்டனை போதுமானது அன்று என்று முடிவு செய்தால், அவ்வாறான இளம் குற்றவாளி குறித்து நீதிமன்றம் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்பலாம். அந்த இளம் குற்றவாளி புரிந்த குற்றத்துக்குச் சட்டப்படி விதிக்கக்கூடிய சிறைத்தண்டனை காலத்துக்கு நீடிக்காமல் இளம் குற்றவாளியை உசிதம்போல் தக்க பாதுகாப்பில் வைக்க மாநில அரசு உத்தரவிடலாம்.

குற்றம் ஏதும் புரியாத நிலையிலும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கீழ்க்காணும் காரணங்களுக்காக இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்ப இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. நிலையான குடியிருப்பு இல்லாமல் ஊர் சுற்றித் திரிதல், பெற்றோரோ காப்பாளரோ இல்லாமல் திக்கற்ற நிலையில் இருத்தல், பெற்றோர் அல்லது காப்பாளர் இருந்தும் சிறுவனைப் பாதுகாப்பதில் போதுமான கவனம் செலுத்தாதிருத்தல், பெற்றோர் சிறையிலிருப்பதால் சிறுவன் திக்கற்றவனாக இருத்தல், பெற்றோர் அல்லது காப்பாளர் தீய ஒழுக்கம் காரணமாகச் சிறுவனைத் தங்கள் வசம் வைத்திருக்கத் தகுதியில்லாதிருத்தல், பொது இடங்களில் சிறுவன் பிச்சை எடுத்தல், எல்லோருக்கும் திருடன் எனத் தெரிந்தவனுடன் சிறுவன் நட்புக் கொண்டிருத்தல், ஒழுக்கம் கெட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வீட்டில் சிறுவன் வசித்தல், விபசாரத்துக்காகப் பயன்படுத்தக்கூடிய சூழ் நிலையில் சிறுவன் இருத்தல் முதலியனவையாகும்.

கட்டுக்கடங்காத குழந்தை அல்லது இளம் வயதினனைப் பெற்றோர் அல்லது காப்பாளரது கோரிக்கையின் அடிப்படையில் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்ப இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுபவன் அங்கு இரண்டாண்டுக் காலத்துக்குக் குறையாமல் தங்க நேரிடும். ஆனால், அங்குத் தங்க வேண்டிய காலம் 18 வயதை அடையும் காலத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது. முதுநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டால் இரண்டு ஆண்டுக்குக் குறையாமலும் ஐந்து ஆண்டுக்கு மேற்படாமலும் தங்க வேண்டும். ஆனால், 21 வயதை அடைந்தவுடன் அங்குத் தங்கக் கூடாது. (இக்கட்டுரையில் வரும் சிறுவன், இளம் வயதினன், இளம் குற்றவாளி என்ற சொற்கள் இருபாலாரையும் குறிக்கும்). எஸ்.நா.

**இளங்கோ முத்தரையன்** முத்தரைய வேந்தருள் விடுதலை பெற்றுத் தனித்தாண்ட வேந்தன். இவனது ஆட்சிக்காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவ்வேந்தன் தன் கல்வெட்டுகளில் தன் ஆட்சியாண்டை மட்டுமே குறித்துள்ளான். மற்ற முத்தரைய வேந்தர்களைப் போன்று, தன் தலைவனான பாண்டிய மன்னனின் ஆட்சியாண்டையோ பல்லவ மன்னனது ஆட்சியாண்டையோ இவன் குறிப்பிடவில்லை, எனவே, இவன் தனியுரிமை பெற்ற வேந்தன் என்பது தெளிவு. இவன் கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை, நியமம் கோயிலடி, திருக்கோடிகாவல், திருச்சாத்துறை, திருச்சென்னம்பூண்டி, கீரனூர் முதலான இடங்களில் காணப்படுகின்றன. பல்லவர் ஆட்சி சீர்குலையத் தொடங்கியபோது, இவன் தன் மேலாண்மையை விரிவுபடுத்தினான்.

முத்தரைய மன்னர் வரிசையில் இவன் தனக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளான் இவனது ஆட்சிக்காலத்தில் முத்தரையர் நாடு கிழக்குப் பகுதியில் (கும்பகோணம் வட்டம்) விரிவடைந்தது. முத்தரைய வேந்தருள் பரந்துபட்ட அரசினை ஆண்ட பெருமை இவனுக்கு உண்டு.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருக்கோடிகாவலில் உள்ள திருக்கோடீசுவரர் கோயிலில் காணப்படும் இவ்வேந்தனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், இக்கோயிலுக்கு ஆடுகள் தானமளிக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இவ்வேந்தனது கீரனூர்க் கல்வெட்டு, இவனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் கீரனூர்ச் சபையாரும் தளியாரும் இவ்வூர் உத்தமதானீசுவரத்துப் பெரு

பாலவடிகள் கோயிலில் திருவிழா நடத்த நிலதானம் செய்ததைக் குறிப்பிடுகிறது. இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த இவ்வேந்தனது திருச்சென்னம்பூண்டிக் கல்வெட்டு, இவன் இக்கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்கப் பொன் தானமளித்ததைக் குறிப்பிடுகிறது. திருச்சாத்துறைக் கல்வெட்டொன்று, இவன் தன் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் இறைவர்க்கு 'உத்தமதானி' பெயரில் நந்தா விளக்கெரிக்க நிலதானம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. 'உத்தமதானி' என்பது இவனது விருதுப் பெயராகும். திருக்கோடி காவல் திருக்கோடீசுவரர் கோயிலில் காணப்படும் இவ்வேந்தனது பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொன் தானத்தையே குறிப்பதாக உள்ளது. தஞ்சை மாவட்டம் நியமத்தில் காணப்படும் 18 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இவனது இறுதியாண்டுக் கல்வெட்டாகத் தெரிகிறது. எனவே, இவன் குறைந்தது 18 ஆண்டுகள் ஆண்டான் எனலாம்.

நியமத்து மாகாளக்குப் பிடாரிக்கு அறக்கொடை விட்டுள்ள இவன், 'தென்னவன் இளங்கோ முத்தரையன்', 'கோ இளங்கோ முத்தரையன்' முதலான பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளான். கீரனூர் உத்தமதானீசுவரம், கீழத்தானியம் உத்தமதானீசுவரம் ஆகியன இவ்வேந்தனது நினைவாகவே எடுக்கப்பெற்றன போலும். திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் மேலப்பழுவூர்க் கல்வெட்டு 'உத்தமதானிச் சதுர்வேதி மங்கலம்' பற்றிச் சுட்டுகிறது. உத்தமதானி, உத்தமதானீசுவரம், உத்தமதானிச் சதுர்வேதி மங்கலம் ஆகியன இவ்வேந்தனை நினைவுபடுத்துகின்றன.

இளங்கோ முத்தரையன் யாருக்கு மகன் என்பதும் முத்தரையர் குடிவழிப்பட்டியலில் இவனது இடம் யாது என்பதும் புதிராக உள்ளன. வரலாற்றறிஞர் சிலர் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனே (இளங்கோ வதியரையனான மாறன் பரமேசுவரனின் மகன்) இவன் எனக் கூறுவர்.

இளங்கோவதியரையன் என்ற இவன் தந்தையின் சுருக்கப் பெயரே இளங்கோ என இவன் பெயருக்கு முன்னர் அமைந்துள்ளது. வேறு சிலர் சாத்தன் பழியிலி (விடேல்விடுகு முத்தரையனான குவாவன் சாத்தன் மகன்) என்பவனே இவன் எனக் கூறுவர். மற்றும் சிலர் விடேல் விடுகு முத்தரையனான குவாவன் சாத்தனே இவன் என்றனர். இவையனைத்தும் பிழையானவை. இளங்கோமுத்தரையன் இளையதலைமுறையைச் சார்ந்தவன் என்பதும் இவன் குணிபன்னனே என்பதும் உறுதி.

க. ப.

## இளங்கோவடிகள்

**இளங்கோவடிகள்** சிலப்பதிகாரத்தை இயற்றியவர். இவர் சேரமன்னன் குடக்கோ நெடுஞ்சேரலாதனின் மகன்; சேரன் செங்குட்டுவனின் தம்பி. இவர் தாய் சோழன் மகள் நற்சோணை. இவர் கடைச்சங்க காலத்தவர். இளங்கோ இளமைப்பருவத்தில் தம் தந்தை, தமையனோடு அரசவையில் இருந்தபொழுது நிமித்திகன் ஒருவன், இளங்கோவடிகளுக்கு அரசு கட்டில் ஏறும் இலக்கணம் உண்டெனக் கூறினான். அதனைக் கேட்ட சேரன் செங்குட்டுவன் மனம் வாடக் கண்ட இளங்கோ, நிமித்திகனை வெகுண்டுரைத்துத் தம் தமையன் மனம் வருந்தாதிருக்க அன்றே துறவு பூண்டார்.

சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயில்கட்டி விழாவெடுத்தபோது, கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் வாயிலாகக் கேட்டு, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் எனச் சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. சிலப்பதிகாரம், புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று நகரங்களை மையங்கொண்டு சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்பினை இணைத்து, முத்தமிழ் தழுவிய காவியமாக விளங்குகிறது. சமணம், சைவம், வைணவம் ஆகிய முச்சமயங்களையும், அருகன், முருகன், திருமால் ஆகிய முக்கடவுளரையும் வாழ்த்தும் சிறப்புடைய சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்களுக்குப்பின் தோன்றிய முதல் தொடர்நிலைச் செய்யுள்; முதற் காப்பியம். தமிழில் காப்பிய இலக்கணங்கள் தோன்றுவதற்கு முன்பே இக்காப்பியம் தோன்றியது.

சங்க காலப் பெருமன்னர்கள் தம்முள் பகைமை கொண்டு போரிட்டுக் கொண்டிருந்ததைப் புறநானூற்றின் வாயிலாக அறியலாம். முப்பெரு வேந்தரையும், முப்பெரு நாட்டையும் இணைத்துப் பார்க்கும் நோக்கில் இளங்கோவடிகள் சிலம்பினைப் பாடியுள்ளார். குடிமக்களைப் பாட்டுடைத் தலைவர்களாக வைத்துப் பாடிய புதுமைக் காப்பியமாகவும் சிலம்பு விளங்குகிறது.

இளங்கோவடிகள் ஒப்புயர்வற்ற சான்றோர். பிறரை இழித்துக்கூறும் மனப்பான்மை இவரிடம் இல்லை. சுடுசொற்களை இவருடைய காவியத்தில் காணமுடியாது. தாம் கூறவந்த கருத்துகளை மிக இன்னலைத்துடன் கூறுவதில் வல்லவர். தம்வாழ்வையே பறித்துக் கொண்ட மாதவியைக்கூட, கண்ணகி பழித்துக் கூறியதாகச் சிலம்பில் யாரும் காண இயலாது. சமண சமயத்தினர் பெண்களைப் பொருட்படுத்துவதில்லை. மாறாக, அவர்களை இழித்துக் கூறும் மனப்பான்மை உடையவர்கள். ஆனால், இளங்கோவடிகள்

அதற்கு மாறானவர். பெண்களுக்கு ஏற்றம் தந்த பெரியார்களுள் இவரை முதன்மையானவராகக் கொள்ளலாம். சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தைமை இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்நிலை இளங்கோவடிகளின் மனத்தைத் தொட்டிருக்கலாம். எனவே, தாம் படைத்த சிலப்பதிகாரத்தில் மாதவி என்னும் ஓர் ஒப்பற்ற பாத்திரத்தைப் படைத்து, கணிகையர் குலத்தில் பிறந்தவளாயினும் நல்வாழ்வு நடத்த முடியும் என்பதை அவள் மூலமாக மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். பெண்கள் கற்புக்கு அறிகுறியாக அணிவது முல்லை மலர். கண்ணகி அம்முல்லைமலரைச் சூடியிருந்தாள். இளங்கோவடிகள் மாதவிக்கும் முல்லை மலரை அணிவித்துச் சிறப்பித்துள்ளார்.

அரசக் குடும்பத்தில் பிறந்தவராதலின் இவர் பல கலைகளையும் கற்றறிந்திருத்தல் வேண்டும். மாதவி அறுபத்து நான்கு கலைகளையும் கற்றறிந்தவள் எனக் கூறுகிறார். தமிழ்நாட்டு அணிகலன்கள் பலவற்றை இவர் தம் நூலில் கூறியுள்ளார். இவையன்றி அரங்கேற்று காதையில் அரங்க அமைப்பு, நாடக ஆசிரியர், புலவன், இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், தோரிய மடந்தையர் ஆகியோரையும், அவர்களுக்குரிய இலக்கணங்களையும் இவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்; மாதவியாடிய பதினோராடல்களையும் தெரிவிக்கிறார்.

கானல்வரிப் பாட்டில் ஆசிரியர் இளங்கோவடிகளின் இசைப் புலமையை நன்குணரலாம். கானல்வரிப்பாட்டுச் சொல், பொருள், இசையழகு, குறிப்புப்பொருள் பொருந்தியது. சிறந்த இசைக்கலையில் மட்டுமன்றி, நாட்டுப்புறப் பாடல்களிலும் இவர் மனம் தோய்ந்திருந்ததை இவர்தம் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி முதலியவற்றால் அறியலாம். இவற்றால் இவர் பல்வேறு கலைகளையும் கற்றறிந்த கலைஞர் என்பது புலனாகும்.

இவர் இந்திர விழவூரெடுத்த காதையில் புகார் நகரச் சிறப்பினையும், ஊர்காண் காதையில் மதுரை மாநகரச் சிறப்பினையும், வஞ்சிக்காண்டத்தில் சோநாட்டுப் பெருமையினையும் படிப்போர் கண்முன் நிறுத்திக்காட்டுகிறார். ஊழ்வினையின் பயனை யாரும் தவிர்க்க இயலாது என்ற கொள்கையினை இவர் பலவிடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். தம் காவியத்தில் திருப்பு மையமாக ஊழ்வினையினையே இவர் பயன்படுத்துகிறார். 'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்ததாகலின்' கோவலன் மாதவியைப் பிரிந்து சென்றான் எனக் கூறுகிறார். 'செய்பா வினைப் பயன்' என வினைப் பயனை விலக்க இயலாதென்று எடுத்துரைக்கிறார். கண்ணகியிடம் மதுராபதித் தெய்வம், கோவலன் இறந்ததற்கு அவன் ஊழ்வினையே காரணம் என எடுத்துரைப்பதும் இவர் ஊழ்வினைபால் கொண்ட நம்பிக்கையைத் தெரிவிக்கும்.

இவர் தம் காப்பியத்தில் ஆங்காங்கே பல கிளைக் கதைகளைக் கூறுவதைக் காணலாம். தேவந்தியின் வரலாறு, குரங்குக்கை கொண்ட தேவன் வரலாறு, கீரிப்பிள்ளையினைக் கொன்ற பார்ப்பனி வரலாறு, பொற்கைப் பாண்டியன் வரலாறு, பத்தினிப் பெண்டிர் எழுவர் வரலாறு முதலியன சான்றாகும். இவை காப்பியத்துக்குக் கூடுதல் சுவையைத் தருவதோடு பழைய மரபுகளை அறிந்து கொள்ளவும் துணைபுரிகின்றன

இவர் சமயப் பொதுநோக்குடையவர். சமயக் காழ்ப்பு இவரிடம் சிறிதும் இல்லை. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது சிலம்பின் நூல் வாயிலாகப் பெறப்படும். பொதுவாகச் சமணர்கள் பிற சமயத்தைப் பழித்துக் கூறுவது இயல்பு. ஆனால், இவர் தம் மதக் கோட்பாடுகளை எடுத்தியம்புவதோடு நில்லாமல் பிற சமயங்களின் வெற்றியையும் பாராட்டும் சால்பினராக விளங்குகிறார். கவுந்தியடிகள் என்னும் பாத்திரம் மூலம் சமண சமயக் கருத்துகளை மிக நயமாக எடுத்துரைக்கிறார். திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் அரங்கனை இவர் வருணிக்கும் திறமும், திருவேங்கடத்தில் நின்ற கோலத்துடன் காட்சி தரும் வேங்கடவனை வருணிக்கும் திறமும் இவரது சமய சமரச உணர்வைக் காட்டுவன. ஆய்ச்சியர் குரவையில் இவர் பாடும் பாக்கள் ஆழ்வார்கள் பாடலோடு ஒப்பிடத் தக்கன.

மேலும், வேட்டுவ வரியிலும் குன்றக் குரவையிலும் முருகனையும், அவன் எழுந்தருளியுள்ள குன்றங்களையும் நயம் தோன்றப்பாடுகிறார். சிவபெருமானைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனப் பாராட்டுகிறார். இவர் கொல்லாமை விரதத்தை மேற்கொண்டவராயினும், காளிக்குப் பலியிடுவதையும் புனைந்துள்ளார். யார் யார் எந்த விதமாக அவரவர் கடவுளைத் தொழுகின்றனரோ அதனை அட்டியின்றி ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர் இவர். இவர்சிறந்த அறவோர். தம்முடைய காப்பியத்தில் ஆங்காங்கே நல்வினையின் நன்மையையும் தீவினையின் தீமையையும் இவர் எடுத்துக்காட்டுகிறார்.

இளங்கோவடிகள் தம் காப்பியத்தின் இறுதியில் பொதுமக்களை விளித்துத் 'தெளிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்; பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்: ... ... செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்' எனக் கூறும் அறவுரைகள் சிலம்பிற்கே முடிமணியாக, ஒளி விளக்காக அமைந்தனவாகும். இதனைச் சிலம்பின் ஒலி என்றும், சிலம்பின் சாரம் என்றும் கூறலாம். இளங்கோவடிகள் தலைசிறந்த நல்லிசைப் புலவர்: சிறந்த அருங்கலைஞர்; ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; பெண்கள் விடுதலைக்கு வித்திட்டவர்: தேசிய ஒருமைப்பாட்டாளர். நா.சி.

***இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன்*** ஒரு முத்தரைய வேந்தன். இவன் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன். இவனைப் பற்றிச் செந்தலைக் (தஞ்சை மாவட்டம்) கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் செந்தலையை அடுத்துள்ள நியமத்தைத் தலைநகராகக் கொண்டு முத்தரையர் நாட்டினை ஆண்டவன்.

முதலாம் பெரும்பிடுகு முத்தரையனான குவாவன் மாறனின் மகன் இவன். இதனைக், 'குவாவன் மாறன் மகன் இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன்' என்று செந்தலைக் கல்வெட்டு குறிப்பிடுவதினின்றும் அறியலாம். மாறன் என்னும் சொல் இவன் தந்தையைக் குறிப்பதாகவும், பரமேசுவரன் என்பது இவன் தலைவனான பல்லவ வேந்தன் முதலாம் பரமேசுவரனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

பல்லவரது மேலாண்மைக்குட்பட்டு, முத்தரையர் நாட்டினை ஆண்டு வந்த இவன். சோழரது எழுச்சியைத் தடை செய்து வந்ததுடன், பாண்டியர். பல்லவர்க்குட்பட்ட சோழநாட்டில் ஊடுருவா வண்ணம் தடுத்தும் வந்தான். க.ம.

***இளங்கோவதியரையனான விக்கிரம பூதி*** என்பான் வேளிர் மரபினன்: கோனாட்டையாண்ட கொடும்பாளூர்ச் சிற்றரசன், இவன் பல்லவர்க்கு உட்பட்டவன்: கி.பி. 9-ஆம் நூற்றாண்டினன்.

தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவலூர் வட்டம் கீழூரில் உள்ள மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, விடேல் விடுகு இளங்கோவதியரையனான விக்கிரம பூதியின் மகளான சாத்தன் மறவனின் தேவி திருக்கோவலூர் இறைவற்குப் பொன்தானம் அளித்ததைக் குறிக்கிறது. இதனால், மூன்றாம் நந்திவர்ம பல்லவனது ஆட்சிக் காலத்தில் கொடும்பாளூரை ஆண்டு வந்த தலைவர்களுள் இளங்கோவதியரையனான விக்கிரம பூதி குறிப்பிடத்தக்கவன் என்பது விளங்கும். 'விடேல்விடுகு' என்னும் பட்டம் பூண்டுளதால் இவன் பல்லவனுக்குட்பட்டவன் என்பது தெளிவு. க.ம.

***இளங்கோவேண்மாள்***, சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் சேரமன்னன் செங்குட்டுவனின் மனைவி. இவள் கோப்பெருந்தேவியாக விளங்கியவள். சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரிலுள்ள இலவந்திகை வெள்ளிமாடத்தில் இளங்கோவேண்மாளோடு வதிந்தபோது, மலைவளம் காண விரும்பி அரண்மனைக் குழுவினரோடு பேரியாற்றங் கரையினை அடைந்தான், அப்போது குன்றக் குறவர்கள் காணிக்கைப் பொருளொடு வந்து கண்டு, கண்ணகி தன் கணவனுடன் வானகம் சென்ற காட்சியினைக் கூறக் கேட்டான். பாண்டிமாதேவி, கண்ணகி ஆகிய இரு பத்தினியருள் நம்மால் போற்றத்தக்கவர் யார் என்று செங்குட்டுவன் தன் மனைவி இளங்கோவேண்மாளிடம் கேட்க, அவள் கருத்துப்படி, கண்ணகிக்குச் சிலையமைக்கக் கல் வேண்டி வடநாடு சென்றான்.

இளங்கோ வேண்மாள், இளங்கோ வேளிர் மரபினைச் சேர்ந்தவள் என்றும், இருக்குவேள், இளங்கோவேள் என்பன பிற்காலச் சோழர் காலத்தில் விளங்கிய கொடும்பாளூர்ச் சோழர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள் என்றும், அதனால் செங்குட்டுவன் மனைவியாகிய இளங்கோவேண்மாள், இவ்வேளிர் மரபினைச் சார்ந்தவளாதல் வேண்டும் என்றும் மு. இராகவையங்கார் கூறியுள்ளார்.

இவளைச் சிலப்பதிகாரம், இளங்கோவேண்மாள் என்றும், வதுவை வேண்மாள் மங்கல மடந்தை என்றும் குறிப்பிடுகிறது. மேலும், செங்குட்டுவன் வடநாடு சென்று எதிர்த்த மன்னர்களைப் போரில் வென்று, கண்ணகிக்குச் சிலை கொண்டு வஞ்சி நகரடைந்தபின், வஞ்சி மாநகர் அரண்மனை நிலா முற்றத்தில் செங்குட்டுவனும் இளங்கோவேண்மாளும் மணியரங்கில் இருந்து சாக்கைக் கூத்தினைக் கண்டு களித்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

***இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி*** என்பது இளங்காடு என்ற ஊரில் உள்ள பெருமானைப் பற்றி மாதவச் சிவஞான முனிவர் பாடிய ஒரு தோத்திர நூலாகும். இளசை என்பது இளங்காடு என்னும் பெயரின் மரூஉ மொழி. இவ்வூர் காஞ்சி

புரத்திற்கு அருகிலுள்ளது. இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் அகத்தீசுவரர்; இறைவி பெயர் பிரதான நாயகி. பத்துப் பத்துப் பாக்கள் ஒவ்வொரு சந்தத்தில் அமையுமாறு (பதிற்றுப்பத்து) நூறு பாக்களில், பத்து வேறு சந்த அமைப்புகளில், முதல் பாட்டின் ஈற்றுச் சொல்லோ, தொடரோ, அசையோ, சீரோ அடுத்த பாட்டின் முதலாக வரும் நிலையில், தம்முள் மண்டலித்து வருமாறு அமைக்கப்படும் நூலுக்குப் பதிற்றுப் பத்தந்தாதி என்பது பெயராகும். இந்நூல் முதலில் விநாயகர் வணக்கம், பின்னர்ப் பஞ்சாக்கர தேசிகர் வணக்கம், நூல் ஆக 102 பாக்களைக் கொண்டுள்ளது.

இந்நூலாசிரியர் சிவஞான முனிவரின் இளமைப் பெயர் முக்களாலிங்கர் என்பது. தென்பாண்டி நாட்டில் பாவநாசப் பதியை அடுத்துள்ள விக்கிரமசிங்க புரத்தில் ஆனந்தக் கூத்தர், மயிலம்மை என்னும் பெற்றோருக்குத் தவமகனாய்ப் பிறந்தார். இளமையிலேயே துறவிகள் சார்பு பெற்றுத் திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்து, அங்கு ஞானச் செங்கோல் ஓச்சிய வேலப்ப தேசிகரிடம் தீட்சை பெற்றார். பின்னரே இவருக்குச் சிவஞானம் என்னும் தீட்சா நாமம் வாய்த்தது. இவர் வடமொழி, தென்மொழிகளை நன்கு பயின்று, தன்னிகரற்ற புலமை வித்தகரானார், சைவ சித்தாந்த சாத்திரப் புலமையில் மேம்பட்டு விளங்கினார். இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம் முதலிய பலவேறு துறைகளில் 26 நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ளார். அவற்றுள் தலைசிறந்தது சிவஞான போதமா பாடிய உரையாம். இவரியற்றிய இலக்கிய நூல்கள் பதின்மூன்று ஆகும். அவற்றுள் ஒன்று இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

இவர் காஞ்சிபுரத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தார். அவ்வமயம் அதன் அண்மையிலுள்ள பல ஊர்களுக்கும் சென்று அங்கங்குள்ள பெருமானை வழிபட்டு நூல்கள் பாட வாய்ப்பு நேர்ந்தது. அம்முறையில் காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள இளசையில் கோயில் கொண்ட பெருமானைப் பற்றி இந்நூல் தோன்றியது.

இளங்காட்டிலுறையும் ஈசனைத் தொழாதவர்கள் 'வறிதே பொற் கொழுக் கொண்டு வாகிலுக் கேர் உழுவாரே' (20) என்றும், 'பிரதான நாயகியால் சிறந்து வாழ் இளங்காட்டகத்தியீச் சரன் தாள் சேர்ந்து நின்று' (100) பல்பேறும் பெறுக என்றும் கூறும் இந்நூல், பல அறிவுரைகளையும் சமய நுட்பங்களையும் கொண்டுள்ளது.

இவருக்கு மாணவர் பன்னிருவர் இருந்தனர். அவர்கள் ஒப்பற்ற மணிகளாய் விளங்கிச் சிவஞான முனிவர் பெருமையை மிகவும் மேலோங்கச் செய்தனர். இறுதியில் இவர் கி.பி. 1785 இல் சித்திரை ஆயிலிய நாளில் காலமானார். இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி இவர்தம் இலக்கிய இலக்கணப் புலமையையும், சமய ஈடுபாட்டையும், சாத்திர நுண்ணுணர்வையும் எடுத்துக்காட்டி விளங்கும் அரிய நூலாகத் திகழ்கிறது. இ.ப.அ.

**இளஞ்சேட்சென்னி** சங்ககாலச் சோழ மன்னர்களுள் ஒருவன்; சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி என்று வழங்கப்படுவான். இவன் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்குத் தந்தை. இச்செய்தியினை முடத்தாமக் கண்ணியார் தாம் இயற்றிய சிறுபாணாற்றுப் படையில் 'வென்வேல் உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்' என்னும் பகுதியிற் குறிப்பிட்டுள்ளார். 'வென்ற வேலினையுடைய, அழகினையுடைய பல தேரினையுடைய இளஞ்சேட்சென்னியுடைய புதல்வன்' என்று இத்தொடருக்கு நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். இத்தொடரிலுள்ள 'உருவப்பல்தேர் இளையோன்' என்னும் பகுதி இவ்வரசன் பெயர்க்காரணத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. இவன் அழுந்தூர் வேளிர் மகளை மணந்தவன். இதனை நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் (தொல். அகப். 30 ந) சுட்டிக்காட்டியுள்ளார். வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய இம்மன்னனைப் பரணர் (புறம். 4) பெருங்குன்றூர்க் கிழார் (புறம்.266) பாடலையும், பரிசில்கடா நிலைத் துறையில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். பரணர் இம்மன்னனின் பெயர்க் காரணத்தை 'நீயே அலங்குளைப் பரீஇ இவுளிப், பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி' என்னும் அடிகளில் (புறம் 4 : 13, 14) குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். இடைக்குன்றூர் கிழார் இம்மன்னனை 'நீர்திகழ்கழனி நாடு கெழுபெருவிறல், வான்தோய் நீள்குடை வயமான் சென்னி' என்று இவனுடைய வீரமும் ஈரமும் புலப்படுமாறு குறிப்பிட்டுள்ளார் (புறம்.266:6.7).

**இளஞ்சேரல் இரும்பொறை** பதிற்றுப்பத்தால் அறியலாகும் சேர வேந்தருள் ஒருவன். குடக்கோ இருஞ்சேரல் இரும்பொறை என்றும் குறிக்கப்பட்டுள்ளான். பதிற்றுப் பத்தினால் அறியப் பெறும் சேர வேந்தர் உதியஞ்சேரல் மரபினர், இரும்பொறை மரபினர் என இருவகைப்படுவர். இம்மன்னன் இரும்பொறை மரபினைச் சேர்ந்தவனாவான். இவனைப் பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தில் பாடிப் பாராட்டு

யுள்ளார். இவர் தம் பாடலொன்றில் (பதிற்.88.5.14) இவ்வரசனின் முன்னோருள் அறுவரை அவர்தம் சிறப்புச் செயலாற் சுட்டி, அந்நுவையோர் மரபில் வந்தவன் எனச் சிறப்பித்துள்ளார். இவன் தந்தை பெயர் குட்டுவன் இரும்பொறை; தாயின் பெயர் மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை. இம்மன்னன் பரிசில் நல்கக் காலம் நீட்டித்தமை அறிந்து, இவர் தாம் வருந்திச் செல்வதாகப் புறநானூற்றுப் பாடலில் (புறம். 210) குறிப்பிட்டுள்ளார்.

இம்மன்னன் படையொடு சென்று எதிர்த்த விச்சி என்பானையும் ஏனைய இருபெரு வேந்தரையும் கொன்று, ஐந்து அரண்மனைகளைக் கைப்பற்றினான். கோப்பெருஞ்சோழனையும் இளம்பழையன் மாறனையும் தான் கூறிய வஞ்சினம் பிழையாதவாறு வென்று, கைக்கொண்ட பொருள்கள் அனைத்தையும் தன் தலைநகராகிய வஞ்சி நகருக்குக் கொணர்ந்து, பற்றவர்களுக்கு வழங்கினான். தன் அமைச்சனான மையூர்கிழானைப் புரோகிதனினும் மேலாக அறநெறி அறிபவனாக மதித்தான். சதுக்கப் பூதங்களைக் கொணர்ந்து தன் நகரில் நிறுவி, அவற்றிற்குக் களவேள்வியால் சாந்தி செய்தான். இவை பதிகத்தாலறிந்தவை.

இம்மன்னன் தன்மீது பாடப்பெற்ற பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பத்துப் பாடல்களுக்காக அவற்றைப் பாடிய பெருஞ்சாத்தனாருக்கு 32 ஆயிரம் காணம் பொன் அளித்தான். அவருக்குத் தெரியாமல் ஊர், வீடு, அணிகள் ஆகியவற்றை நல்கினான். இம்மன்னன் 16 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான்.

**இளந்தத்தன்** சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர். ஒருகால் இவர் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து உறையூருக்குச் சென்றார். உறையூர் வந்த இப்புலவரை நலங்கிள்ளியின் ஒற்றராவார் எனத் தவறாகக் கருதி, உறையூரிலிருந்த நெடுங்கிள்ளி கொல்ல முற்பட்டான். இதனை உணர்ந்த கோவூர் கிழார் இளந்தத்தன் ஒற்றரல்லர் என்னும் உண்மையை அரசனுக்கு எடுத்துக்கூறிக் கொல்லாது தடுத்துப் புலவரைக் காத்தார். இச்செய்தி புறநானூற்று 47 ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ளது. கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறியதாக அமைந்த பாடலில் பரிசில் வாழ்க்கையினராகிய புலவர்களின் வாழ்க்கைச் செம்மையும், மேம்பாடும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. 'வடியா நாவின் வல்லாங்குப் பாடிப், பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி, ஓம்பாது உண்டு கூம்பாது வீசி, வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை' என்னும் பகுதி புலவர் வாழ்க்கையின் செம்மையையும், 'நும் மோரன்ன செம்மலும் உடைத்தே' என்னும் பகுதி அதன் மேம்பாட்டையும் உணர்த்துவனவாக உள்ளன.

**இளந்திரையம்** என்பது இறையனாரகப் பொருள் என்னும் இலக்கண நூலின் உரையால் அறியப் பெறும் தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூல் இக்காலத்தில் இறந்துபட்டது. அதனால் இதனைப் பற்றிய விவரம் அறியக்கூடவில்லை. நூலுக்குப் பெயர் அமையும் வகையினை விளக்குங்கால் இறையனாரகப் பொருள் உரை செய்வித்தானால் பெயர் பெற்ற நூல்களுக்கு எடுத்துக்காட்டாக இளந்திரையம், சாதவாகனம் என்னும் இருநூற் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. இதனால் இந்நூல் இளந்திரையன் என்பவனால் செய்விக்கப்பட்டதாகும் என்னும் செய்தியினை உணரமுடிகிறது. நூல்பெயர் பெறும் வகைகளுக்கு எடுத்துக்காட்டாக அவ்வுரை குறிப்பிட்டுள்ள பிறநூல்களைக் காணுங்கால், அவை இலக்கண நூலாகவோ நிகண்டு நூலாகவோ கருதப்படுகின்றன. அதனால், இளந்திரையமும் ஒரு இலக்கண நூலாகவோ நிகண்டு நூலாகவோ இருந்திருத்தல் வேண்டும். இதனை இலக்கண நூலாகக் கொள்வது பொருத்தமாகும். இந்நூலைச் செய்வித்தோனாகிய இளந்திரையன் புலவரைப் போற்றிப் பேணிய புரவலன் என்பதன்றி, வேறு ஒரு செய்தியும் அறியக்கூடவில்லை.

பெரும்பாணாற்றுப்படையின் தலைவனாவ தொண்டைமான் இளந்திரையனும், புறநானூறு (185), நற்றிணை(94, 96, 106) ஆகிய தொகை நூல்களின் ஆசிரியர்களுள் ஒருவராகக் காணப்படும் இளந்திரையனாரும், இந்நூலின் ஆசிரியரும் ஒருவரே என்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் கருதியுள்ளார். இதற்குப் பெயரொப்புமை தவிர வேறு சான்றில்லை. சங்க கால இளந்திரையன் வழிவந்த ஒரு புரவலராக-மன்னராக-இந்நூலை இயற்றுவித்த இளந்திரையனார் இருந்திருத்தல் கூடும். இந்நூல் இறையனார் களவியலுரையின் காலத்திற்கு முற்பட்டதாகும்.

**இளந்திரையன்** சங்க காலத் தமிழ் அரசர்களுள் ஒருவன். தொண்டை நாட்டினை ஆண்டமையால் இவன் தொண்டைமான் இளந்திரையன் எனவும் வழங்கப் பெற்றான். தொண்டை, பல்லவம் என்பன ஒரு பொருட் சொற்களாதலின் தொண்டையர் என்பது பல்லவரைக் குறிக்கும் என்றும், கிழக்குக் கடற்கரையிலுள்ள தொண்டியிலிருந்து வந்தமையால் தொண்டியோர் என்றும் பெயர் தொண்டையர் என ஆகியிருக்கலாம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர் திரையன் என்பதும் இவனுக்குரிய

பெயராகும். திரையன் என்னும் பெயர்க் காரணம் 'அந்நீர்த் திரைதரு மரபின் உரவோ னும்பல்' (31) என்னும் பெரும்பாணாற்றுப்படை அடியினால் விளங்கும். திரையன் என்னும் பெயர்க் காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் நச்சினார்க்கினியர்: 'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்து வாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வேன் என்ற பொழுது தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன் கூற, அவளும் அவன் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின், திரையன் என வழங்கப்பட்டான்.' காட்டூர்கிழார் மகனார் கண்ணனார், நக்கீரர் ஆகியோர் பாடிய இரு அகநானூற்றுப் பாடல்களில் (அகம். 85, 340) திரையனைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. திரையன் வென்வேல் கொண்டவன் என்றும் வேங்கடமலை இவனுக்குரியதென்றும் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார் (அகம். 85-19) கெடாத புகழையும் அழகிய பூண்களையும் கொண்ட இவன், பவத்திரி என்னும் கடற்கரை ஊரினைக் கொண்டிருந்தான் என்று நக்கீரர் (அகம். 340. 6-7) குறிப்பிட்டுள்ளார்.

இவன் கவிஞனாகவும் விளங்கியுள்ளான். இவன் பாடியனவாகப் புறநானூற்றில் ஒன்றும் (185) நற்றிணையில் மூன்றும் (94, 99, 106) இடம்பெற்றுள்ளன. அவற்றுள் புறநானூற்றுப் பாடலும் நற்றிணையில் 106-ஆம் பாடலும் தொண்டைமான் இளந்திரையன் என்னும் பெயரிலும், நற்றிணை 94, 99-ஆம் பாடல்கள் இளந்திரையனார் என்னும் பெயரிலும் அமைந்துள்ளன. இளந்திரையன், தொண்டைமான் இளந்திரையன், இளந்திரையனார் ஆகிய மூன்று பெயர்களும் ஒருவரையே குறிக்கும் என்பது கருதப்படுகிறது. மூன்று பெயர்களும் வெவ்வேறானவர்களைக் குறிக்கும் என்று கருதுபவர்களும் உளர்.

இவன் பாடிய புறநானூற்றுப் பாடல் (185) தன்னையொத்த பிற மன்னர்களுக்கு அரசியல் நுணுக்கத்தை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வரசன், நாட்டையாளும் அரசன் தெளிந்த அறிவுடையோனாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நாட்டை ஊறின்றிக் கொண்டு செல்ல முடியும் என்பதை, 'காவற் சாகாடுகைப்போன் மாணின், ஊறின்றாகி யாறினிது படுமே' என்று குறிப்பிட்டுள்ளான். இளந்திரையம் என்னும் நூலையும் இவன் இயற்றியுள்ளான் எனக் கருதுகின்றனர்.

இவன் பெயரில் திரையனூர் என ஓரூர் இருந்ததாக நன்னூல் மயிலைநாதர் உரை குறிப்பிடுகிறது. இவன் 'ஆதொண்டைச் சக்கரவர்த்தி' எனத் திருமுல்லை வாயிற்புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளான்.

இவன் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையின் தலைவனாக விளங்குபவன். மேலும் இவனை 'ஆழியிழைப்ப' எனத் தொடங்கும் வெண்பாவால் பொய்கையார் என்னும் புலவர் பாராட்டியுள்ளார்.

**இளந்தேவனார்** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். தேவன் என்பது இவர் இயற்பெயர். தேவனார் எனப் பெயரிய பிற புலவர்களின் வேறறிய இவர் இளந்தேவனார் எனப்பட்டார் போலும். இளந்தேவன் என்பதே இவர்தம் இயற்பெயராக அமைந்திருத்தலும் கூடும். நற்றிணை 41-ஆம் பாடல் இப்பெயரில் அமைந்துள்ளது. அகநானூற்றிலுள்ள மூன்று பாடல்களின் (அகம்.58, 298, 328) ஆசிரியர் பெயர் மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் என்று காணப்படுகிறது. இந்நான்கு பாடல்களையும் இளந்தேவனார் பெயரிலேயே பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை பதிப்பித்துள்ளார். உரையாளராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இவ்விரு பெயரும் ஒரு புலவரையே குறிக்கும் எனக் கொண்டு புலவர் வரலாறெழுதியுள்ளார். இவற்றால் இளந்தேவனார் மதுரையைச் சேர்ந்த புலவர் என்பதும், வணிகமரபில் தோன்றியவர் என்பதும், பண்ட (பலசரக்கு) வணிகத்தைத் தொழிலாகக் கொண்டிருந்தவர் என்பதும் புலனாகின்றன. இவர்தம் பாடல்களுள் அகநானூற்றுப் பாடல்கள் மூன்றும் குறிஞ்சித் திணையில் தலைவி கூற்றாகவும், நற்றிணைப்பாடல் (41) பாலைத்திணையில் தோழி கூற்றாகவும் அமைந்துள்ளன.

**இளநாகனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். நாகன் என்பது இவர் இயற்பெயர். நாகனார் எனப் பெயரிய பலரினின்றும் வேறுபடுத்தி உணர இவர் இளநாகனார் என அழைக்கப்பட்டனராதல் வேண்டும். இளநாகன் என்னும் பெயரே இயற்பெயராகவும் வழங்கப்பட்டிருக்கலாம். இவர்தம் மூன்று பாடல்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன (151,205,231). அவற்றுள், குறிஞ்சித் திணையில் அமைந்த பாடல் (151) இரவுக் குறியில் சிறைப்புறமாகத் தோழி கூறுவதாக உள்ளது. அதில் கடுவனால் புணரப்பட்ட பெண் குரங்கு, புணர்ச்சியால் உற்ற வேறுபாட்டினைத் தன்னுடைய சுற்றம் அறியாமைப் பொருட்டுச் சுனை நீரில் கவிழ்ந்து

நோக்கிக் கலைந்த தன் உச்சி முடியினைத் திருத்திக் கொள்ளும் காட்சியினைக் கவினுறக் காட்டியுள் ளார். பாலைத் திணையிலமைந்த பாடல் (205) செலவழுங்கும் தலைவன் தன் நெஞ்சோடு கூறியதா கவும் செலவழுங்குமாறு தலைவன்பால் கூறியதாக வும் அமைந்துள்ளது. இதன்கண் மலைப்பக்கத்தில் புலியால் அடிக்கப்பட்ட வலிய யானையை ஆளி என்னும் விலங்கு இழுத்துச் செல்லும் காட்சியினைக் குறிப்பிட்டுள்ளார். தோழி சிறைப்புறமாகத் தலை வனிடம் கூறி, வரைவு கடாவும் பாங்கிலமைந்த நெய்தல் திணைப்பாடலில் (231) கரிய அடிமரத்தை யுடைய புன்னைமரத்தின் பேரரும்பு மலர்ந்துள்ள மைக்கு, மலையிலுள்ள ஊர்க்குருவியின் முட்டையை உடைத்தாலமையும் தோற்றத்தை உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கதாகும்.

**இளம்பல் கோசர்** என்பவர்கள் வீரர் மரபி னைச் சேர்ந்தவர்கள். எட்டுத்தொகை நூல்கள் இவர்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளன. மேலும் 'கொங்கிளங் கோசர்' என்று சிலப்பதிகார உரை பெறு கட்டுரைப் பகுதியிலும், 'கடந்தடு வாய் வாள் இளம்பல் கோசர்' என்று மதுரைக்காஞ்சியிலும் (509, 773) வந்துள்ளன. காண்க: கோசர்.

**இளம்புல்லூர்க் காவிதி** சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் அறியக் கூடவில்லை. இளம்புல்லூர் என்பது இவர்தம் ஊராகும். காவிதி என்னும் சொல்லுக்கு (1) வேளாளருக்குப் பாண்டி யர் கொடுத்த ஒரு பட்டம் என்றும், (2) வைசிய மாதர் பெறும் பட்டவகை என்றும், (3) அமைச்சர் என்றும், (4) கணக்கர் சாதி என்றும் (5) வரிதண் டும் அரசாங்கத் தலைவர் என்றும் சென்னைப் பல் கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் தந்துள் ளது. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாரா யணசாமி ஐயர் இவர் உழுவித்துண்ணும் வேளாள ராவார் என்று கூறியுள்ளார். காவிதி என்னும் பெய ரொடு 'ஆலூர்க் காவிதிகள் சாதேவனார்' என்னும் மற்றொரு சங்கப்புலவரும் உள்ளார். இளம்புல்லூர்க் காவிதியின் ஒரே பாடல் (89) நற்றிணையில் இடம் பெற்றுள்ளது. முல்லைத் திணையில் தோழி கூற் றாக அமைந்துள்ள இப்பாடல், பிரிந்து சென்ற தலைவன் பொருள் தேடி மீண்டான் எனக் கேள்வி யுற்ற தோழி மகிழ்ந்து தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. காய்கள் நிரம்பிய உழுந்துச் செடி யின் இலைகள் சிதையுமாறு வீசித் துன்புறுத்தும் வாடைக்காற்றின் வருகைக்கு உவமையாக, அயர்ந்த யானையின் பெருமூச்சினைக் காட்டி, 'அல்கலும் அலைக்கும் நல்கா வாடை... பருமம் யானை அயா உயிர்த்தாங்கு, இன்னும் வரும்' என்று கூறியிருப் பது நயமிக்கதாக உள்ளது.

**இளம்பூதனார்** கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். பூதனார், பூதன் தேவன், பூதம் புல்லன் என்னும் பெயர்களில் சங்க காலத்தில் புலவர் பலர் இருந்தனர். இவர் பூதனார் என்னும் புலவரின் வேறாவார் என்பதறிய இளம்பூதனார் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 334-ஆம் பாடலாக அமைந்துள்ளது.

அப்பாடல் தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே யுள்ள நெருக்கத்தைப் புலப்படுத்துகிறது. இப்பாட லில் 'தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்தால் நீ ஆற்றும் வன்மை உடையையோ?' என்று தோழி தலைவியிடம் வினவத் 'தலைவன் பிரியின் என் உயிர் போம்' என்று தலைவி மறுமொழி கூறுகிறாள்.

ஈ.வே.மா.

**இளம்பூரணர்** தொல்காப்பிய உரையாசிரியர் களுள் ஒருவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் உரை யாசிரியர்கள் தனியிடம் பெறுகிறார்கள். தொன்மை வாய்ந்த இலக்கண நூல்கள் அழிந்துபடாமல் காக்கப்பட்டமைக்கும், அவற்றின் நிலைபேற்றிற்கும் அவர்தம் உரைகளே காரணமாயின.

தொல்காப்பியத்திற்குப் பலர் உரை கண்டுள்ள னர். அவர்களுள் பெயர் தெரிந்த உரையாசிரியர் களாக அறுவர் உள்ளனர். இளம்பூரணர், பேராசிரி யர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், கல்லாடனார் என்னும் அவ்வறுவருள் இளம்பூரணர் ஒருவரே தொல்காப்பியம் முழுமைக் கும் உரைகண்டுள்ளார். கிடைத்துள்ள உரைகளுள் இவரது உரையே காலத்தால் முற்பட்டதாகவும் கருதப்படுகிறது. ஆயினும் இளம்பூரணருக்கு முன் னும் தொல்காப்பியத்திற்கு உரை இருந்திருக்க வேண்டுமென்பது இவர் உரையால் தெரிகிறது. 'ஒரு சாரார்', 'ஒருசார் ஆசிரியன் உரை', 'ஒரு திறத் தார்', 'இரு திறத்தார் ஆசிரியர்' 'என்பாரும் உளர்', 'இனி ஒரு கருத்து', 'உரைப்பாரும் உளர்', 'எழுது வாரும் உளர்' போன்ற வாய்பாடுகள் இளம்பூரண ருக்கு முன் இருந்த உரைமரபுகளைக் குறிக்கின்றன. இவை வெறும் வாயுரைகளைச் சுட்டுகின்றன என்று கொள்ளுதற்கில்லை; எழுத்து வடிவ உரைகள் இருந் தமையினைக் குறிப்பிடுகின்றன என்று கொள்ளுதற்கு இடமுண்டு. 'குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி' (தொல். சொல். 56) என்னும் நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறும் உரை அவ்வுண்மையை நன்கு

விளக்கும். ஆயினும், அத்தகைய உரைகள் எல்லாம் கிடைக்காத நிலையில் இளம்பூரணர் உரையே முழுமையான முதல் உரையாக இன்றளவுங் காணப்படுகிறது.

இவர், பிற உரையாசிரியர்களாகிய சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்றோரால் 'உரையாசிரியர்' என்று அழைக்கப்படுகிறார். அடியார்க்கு நல்லாரும் மயிலை நாதரும் 'இளம்பூரணர்' என்றே சுட்டுவர். 'உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள்' என்று இவர் சுட்டப்படுவதால் 'இளம்பூரணர்' என்பது இவரது இயற்பெயர் என்றும், உரையாசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்றும் கூறலாம். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றினுக்கும் இவர் உரை எழுதியிருந்தமையால் இவரை உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயரால் அழைத்தனர். அச்சிறப்புப் பெயரே பின்னர் இவருக்கு இயற்பெயராகி, உரையாசிரியர் என்றாலே இளம்பூரணரைச் சுட்டுகிற அளவிற்கு இயற்பெயர் போல் அமைந்துவிட்டது. இப்பொழுது கிடைக்கிற ஓலைச்சுவடிகள் கூட 'உரையாசிரியருரை முற்றும்' என்னும் அளவில் தான் காணப்படுகின்றன.

இவர் சோழநாட்டைச் சேர்ந்தவர் என்பது இவர் உரையால் அறியக்கிடக்கிறது. நும்நாடு யாது என்பதற்குத் 'தமிழ்நாடு என்றல்' (தொல். சொல். 13) என்பதனை விடையாகக் காட்டியுள்ளார். பின்னர்ச் செந்தமிழ்நாடு என்பதனைச் சோழநாடு என விளக்கியுள்ளார் (தொல். சொல். 392). இவற்றை நோக்குங்கால் இவர் சோழநாட்டினரா வர் என்று கருதக் கூடும். 'கருவூர்க்கு வழியெது?' (தொல். சொல். 13), 'உறையூர்க்குச் செல்லாயோ?' (தொல். சொல். 15), 'இருவிளக்கொற்றன்' (தொல். எழுத்து. 217) எனச் சில எடுத்துக்காட்டுகள் காட்டியுள்ளார். இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள் சோழ நாட்டைச் சேர்ந்தனவாக இருப்பது கொண்டும் இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவராகலாம் என்று உறுதி கூறலாம்.

இவர் தம் உரையுள் யாப்பருங்கல விருத்தியின் (கி. பி. 1010-1040) மேற்கோட் பாடல்களை மிகுதியும் எடுத்து ஆள்கிறார். வீரசோழியத்தில் (கி. பி. 1063-1070) காணப்படும் உடம்படுமெய் பற்றிய நூற்பாக் கருத்தை (வீரசோழியம்.7) இவர் தம் உரையுள் (தொல். எழுத்து. 141) எடுத்தாண்டுள்ளார். இளம்பூரணரை 'உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள்' என்று அழைக்கும் அடியார்க்கு நல்லாரின் காலம் கி. பி. 1150 ஆகும். எனவே இவரது காலம் வீரசோழியத்திற்கும் அடியார்க்கு நல்லாருக்கும் இடைப்பட்ட காலமாகும். பிற்காலச் சோழர்களுள் விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1118-1136) அமைச்சனாக இருந்த 'மறையவன் கண்ணன்' என்பவனைப்'பார்ப்பான் கண்ணன்' (தொல். சொல். 41)என இளம்பூரணர் தம் உரையுள் சுட்டுவர். எனவே, இக்கருத்துகளை நோக்கும் பொழுது இவரது காலம் கி. பி. 1118-1150 என்று கொள்ளலாம்.

இவரை'அடிகள்' என்று கூறுவதால், இவர் சமண சமயத்தைச் சார்ந்த துறவி என்று கூறுவர். தொல்காப்பிய முதற் நூற்பா உரையில் 'னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான்' பின்வைக்கப்பட்டது என்று இவர் கூறுவதைக் கொண்டு, இவர் சமணர் என்ற கருத்து வலியுறுகிறது என்பர். அவ்வாறாயின் இக் கருத்தையே ஏற்றுக் கொண்டாற் போல, 'வீடு பேற்றிற்குரிய ஆண்மகனை உணர்த்துஞ் சிறப்பான் னகரத்தைப் பின் வைத்தார்' என்று எடுத்து மொழிந்த நச்சினார்க்கினியரையும் சமணர் என்றே கொள்ளவேண்டியிருக்கும். இளம்பூரணர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கான சான்றுகள் இல்லை.

இருப்பினும் உரைச் செய்திகளை நோக்கும் பொழுது அருகிய சிலசெய்திகள் இவரைப்பற்றி அறியத் துணை நிற்கின்றன. பொருளதிகாரத்துள் (நூ. 193) ஒரு நூற்பாவிற்கு அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக்காட்டி உரை எழுதியுள்ளார். 'மணிமிடற்றந்தணன் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே' என்பதற்கு 'மணிமிடற்றந்தணனது சிவானு பூதியிற் பேருலகம் தங்கிற்று' என்று சைவ சித்தாந்தமுதன்மைக் கோட்பாட்டை விளக்கும் வண்ணம் உரைகூறியுள்ளார். மேலும் தொகை நூல்களில் காணப்பெறும் சைவக் கடவுளர் பற்றி அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பலகாலும் தம் உரையில் மேற்கோள் காட்டுகிறார். சிவபெருமான் பற்றிய பாடல்களை இரண்டிடத்திலும் (தொல். பொருள். 193, 399), முருகப் பெருமான் பற்றிய பாடல்களை ஏழு இடங்களிலும் (தொல். பொருள். 274, 277, 320, 357, 360, 384, 409) மேற்கோளாகத் தருகிறார். முருகப் பெருமான் பாடலை எடுத்துக் காட்டி விளக்கும் பொழுது 'இதனுள் குறித்த பொருள் முருகவேள் காப்ப உலகம் காவற்பட்டது' (தொல். பொருள். 384) என்று கூறுவர். இவற்றால் இளம்பூரணர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்று கொள்ளுதற்கு வாய்ப்புண்டு.

இவர் தொல்காப்பியத்திற்கு அன்றி வேறு எந் நூலுக்கும் உரை எழுதியதாக இவர்தம் உரையி

னின்றும் அறிய இயலவில்லை. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையைத் தனித்தனி நோக்கினால் சில வேறுபாடுகளையும், ஒரு நோக்கில் கண்டால் சில உண்மைகளையும் காணவியலும். எழுத்ததிகார உரை தொடக்கவுரை என்பதால் அமைப்பில் தெளிவுடையதாகவும் நூற்பாவிற்குரிய நேர்ப்பொருளை ஆற்றொழுக்காகத் தருவதாகவும் அமைந்துள்ளது. சொல்லதிகாரவுரை அமைப்பில் சிதைவுடையதாகவும், முறையற்ற அமைப்புடனும் காணப்படுகிறது. பொருளதிகார உரை எழுத்ததிகார உரை அமைப்போடு ஒத்துக் காணப்பட்டாலும், விளக்கப்படாத பகுதிகள் மலிந்து காணப்படுகின்றன. எழுத்து, சொல் உரையைக் காட்டிலும் பொருளதிகார உரை விரைவு கருதி அமைக்கப்பட்டது போன்று அமைந்துள்ளது.

பிறர் பெயர் சுட்டாது உரை கூறும் மரபு இளம்பூரணரிடம் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. ஐயப்பாடுடைய கருத்துகள் இருப்பின் தாமே அவற்றின்மேல் முடிவுக்கு வாராது பயில்வோரின் முடிவுக்கு விடுகின்ற சிறப்பு இவரிடம் காணப்படுகிறது. உரை கூறும் போக்கில் முன்னோக்கியும் பின்னோக்கியும் நினைவு கூர்ந்து உரை கூறும் தன்மை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இலக்கணக் கருத்துக்குரிய எடுத்துக்காட்டை மட்டும் கூறாது, அக்கருத்தை எடுத்துக்காட்டோடு பொருத்திக் காட்டும் தனிச்சிறப்பு இவரது உரையின் 'நெறி'யாகவே காணப்படுகிறது. இவர்தம் உரை நெறிகளையே பின்வந்த உரையாசிரியர்கள் போற்றிக் கொண்டுள்ளனர்.

இவர் எழுதிய உரையில் தம் காலத்துச் சமுதாய அமைவுகளை இயலும் இடங்களிலெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். இவர் காலத்தில் பல்வேறு சாதிப் பிரிவுகள் இருந்தமை (தொல். பொருள். 90), பிறப்பால் உயர்வு தாழ்வு கருதப்பட்டமை (தொல். தொல். 41), சாதிகளுக்குள் ஒவ்வாமை நிலவியமை (சொல். பொருள். 256) போன்ற செய்திகள் இவர் தம் உரையில் தெளிவாகக் காணக் கிடக்கின்றன. 'கணிகை குலத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுதல்' (தொல். பொருள். 149) போன்ற பல கருத்துகள் இவர் உரையுள் காணப்படுவதால் இவர் காலத்துச் சமுதாய நிலை நன்கு புலனாகிறது.

இவர் நூற்பாவிற்கு உரை எழுதுகிற பல்வேறு நிலைகளில் பல அரிய இலக்கணக் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய இலக்கணக் கொள்கைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றால் அத் தொகுதியே ஓர் இலக்கண நூலாக அமையும். எடுத்துக்காட்டாக 'ஒரு சொல் முன் ஒரு சொல் வருங்கால் தொகை நிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும் பயனிலை வகையான் வருதலும் என மூன்று வகையான் அடங்கும்' (தொல். சொல். 1) என்பதையும், 'மிக்க எண்ணொடு குறைந்த எண் வருங்கால் உம்மைத் தொகையாகவும், குறைந்த எண்ணொடு மிக்க எண் வருங்கால் பண்புத் தொகையாகவும் கொள்க'(தொல். எழுத்து. 480) என்பதையும் கூறலாம்.

இவர் உரையில் காணப்படும் சொற்பொருள் விளக்கங்கள் சிறப்புடையனவாக உள்ளன. சொற்பொருள் கூறும் தன்மை இளம்பூரணர்பால் அரிய கலையாகவே அமைந்துள்ளது. தமக்கு முன்னிருந்த இறையனார் களவியல் உரை, மணக்குடவர் உரை போன்றவற்றில் நல்லனவற்றை எடுத்தாளும் தன்மை இவர்பால் சிறப்பாகக் காணப்படுகிறது.

இளம்பூரணர் உரையைப் பின்பற்றியே பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்திருக்கிறார். உரைக் கருத்துகளை முழுமையாகவும் பகுதியாகவும் ஏற்று நூற்பாவாக்கியுள்ளார். பொதுவாக நன்னூலுக்கு இளம்பூரணர் உரை ஓர் உரை மூலமாக விளங்கியது.

எளிமையும் தெளிவும் உடையதாய் உள்ள இளம்பூரணர் உரை தொல்காப்பியத்திற்குச் சீரிய திறவு கோலாய் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

சா.கி.

**இளம்பெருஞ்சென்னி** சங்க காலத்தில் வாழ்ந்த சோழ மன்னர்களுள் ஒருவன். இவன் சோழர் குடியில் பிறந்தவன் என்பதனைச் சென்னி என்னும் பெயர் புலப்படுத்துகிறது. இளம் வயதிலேயே பேரறிவும் வீரமும் மிக்கவனாக இருந்தமை பற்றி இப்பெயர் அமைந்திருத்தல் கூடும். இடையன் சேந்தங் கொற்றனார் என்னும் புலவர் இவனை அகநானூற்று 375-ஆம் பாடலில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இம் மன்னன் தம் குடி காக்கும் கடமையால், யானைப் படை கொண்டு சென்று, போர் செய்து பகைவராக விளங்கிய வடுகரின் மதில் சூழ்ந்த பாழி என்னும் அரண்மனையினை அழித்தான். அப்போது அவன் யானைகள் அவ்வடுகர்களின் தலைகளைத் தம் கொம்பினால் குத்திச் சிதைத்தன. அதனால் அவற்றின் கொம்புகள் குருதிக் கறை படிந்து சிவந்து தோன்றின. இதனை உவமையாக்கிப் புலவர் அரிய பாலைக் காட்சி ஒன்றினைத் தம் பாடலில் சித்திரித்துள்ளார். ஆறலைகள்வர் அம்பினால் இறந்துபட்ட வழிச் செல்வோர் உடலங்களின் மீது அமர்ந்துண்டமையால், கழுகுகளின் கால்களில் குருதிக் கறை படிந்தது. அக்கழுகுகள் உட்கார்ந்

தமையால் செந்நிறமுற்றுக் காணப்படும் வெள்ளிய ாமரத்தின் கிளைகளுக்கு, சென்னியின் குருதிக் கறை படிந்த யானைக் கொம்புகளை உவமையாக்கிக் கூறி யுள்ளார். இம்மன்னன் பகைவரின் பாழியினை அழித்த செயலைப் புலவர் 'வினைவிறல், எழூஉத் திணி தோள் சோழர் பெருமகன், விளங்கு புகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி, குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார், செம்புறழ் புரிசைப் பாழி நூறி' என்று குறிப்பிட்டுள்ளார் (அகம். 375: 10-13).

**இளம்பெருமானடிகள்** பதினோராந் திரு முறையின் ஆசிரியர்களுள் ஒருவர். பெருமானடிகள் என்னும் பெயர் சிவபெருமானை உணர்த்தும் பெயர் களுள் ஒன்று எனக் கொண்டு, திருஞானசம்பந்தர் தம் திருக்கடவூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இளம்பெருமானடிகள் என்னும் பெயர் முருகப் பெருமானுக்குரிய பெயர்களுள் ஒன்று என்றும், அப்பெயர் பின்னர் மக்களுக்கும் இட்டு வழங்கப்பட்டதென்றும் கருதப்படுகிறது. இவர் வர லாற்றைப் பற்றிய பிற செய்திகள் ஒன்றும் அறியக் கூடவில்லை. இவர் பதினோராந் திருமுறையில் 'சிவபெருமான் திருமும்மணிக் கோவை' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் வெண்காட்டடிகள், அதிரா அடிகள் ஆகியோர் நூல்களுக்கு முன்னே இத்திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளதால், இவரது காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியும், பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகும் என்று கொள்வது பொருந்தும். இத்திருமுறையின் இருபத்து நான்காம் பிரபந்தமாக அமையும் இவரது நூல் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்கள் 30 கொண்டு அமைந்துள்ளது. இதில் அகத் துறை சார்ந்த பாடல்களும் உள்ளன. இதன் பாடலை வீரசோழிய உரையாசிரியர் தம் உரையுள் மேற் கோளாக எடுத்தாண்டுள்ளார்.

**இளம்பெருமானார்** கி.பி. எட்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவராகக் கருதப் படுகிறார். கல்வெட்டில் 'கோட்டாற்று இளம்பெருமா னார்' என்று இப்புலவர் பெயர் காணப்படுவதால், இவர் ஊர் கோட்டாறு என்பது புலனாகிறது. கோட்டாறு என்பது இப்போதைய நாகர்கோயிலின் ஒரு பகுதியாகும். இப்பெயருள்ள ஊர் தஞ்சை மாவட்டத்திலும் உள்ளது. திருச்சியை அடுத்துள்ள செந்தலை என வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரிலுள்ள சிவன்கோயிலில் காணப் படும் கல்வெட்டில் இப்புலவர் பெயரும் இவரது பாடலும் காணப்படுகின்றன. பாடல் சிதைவுற் றுள்ளது. பல்லவ வேந்தரின் கீழ்ச் சாமந்தர்களாய் ஆண்டு வந்தவர்கள் முத்தரையர் ஆவர். அவர்கள் திருச்சி தஞ்சைப் பகுதிகளை ஆண்டுவந்தனர். அவர் களுள் 'பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன்' என்னும் அரசனின் வெற்றி பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்கள் முற்குறிப்பிட்ட சிவன்கோயில் தூண்களின் கல்வெட்டுகளில், 'பெரும்பிடுகு முத்தரை யனாயின சுவரன்மாறன்; அவன் எடுப்பித்த பிடாரி கோயில்; அவன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும், அவனைப் பாடினோர் பெயர்களும் இத்தூண்கள் மேல் எழுதிய இவை' எனத் தொடங்கிக் குறிப்பிடப் பட்டுள்ளன. இப்புலவருடைய பாடலில் இப்பொழுது தெளிவாகக் கிடைக்கும் பகுதி வருமாறு: 'சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக் கடியரணம், மூட்டின சீற்றமுன் சென்றது பின்பு பகட்டினத் தோர்....'. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட மன்னன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

**இளம்பெருவழுதி, கடலுள் மாய்ந்த** சங்க காலப் புலவர்களுள் ஒரு பாடலால் உயர்ந் தோருள் இவரும் ஒருவர்; 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறப்பாடலைப் (182) பாடியவர். இவர் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தகை மைக்குச் சிறந்த இலக்கிய வடிவம் கொடுத்துப் பாடி யுள்ளார். இவர் பெயருடன் வழுதி என்ற பெயரும் சேர்ந்திருப்பதால் இவர் பாண்டியர் குடியினராக இருத்தல் வேண்டும்.

**இளம்பெருவழுதியார்** பரிபாடலில் 15-ஆம் பாடலைப் பாடியவர். இவரும் புறப்பாடலைப் பாடிய இளம்பெரு வழுதியும் ஒருவராய் இருத்தல் கூடும் என்பார் உ. வே. சாமிநாதையர். பரிபாட லில் இவர் திருமாலைச் சிறப்பித்துப் பாடியிருப்பதில் வெளியாகும் சமயச் சார்பும், இரண்டு பாடல்களி லும் அமைந்த மொழி நடை, இலக்கியக் கட்டுக் கோப்பு ஆகியவற்றால் அறியலாகும் வேறுபாடும் இருவரையும் தனித்தனிப் புலவராகவே காட்டு கின்றன.

**இளம்போதியார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். போதி என்பது அரசமரத்தினைக் குறிக்கும். புத்தர் பெருமான் இம்மரத்தினடியில் தவமியற்றிப் போதம் – மெய்யறிவு – பெற்றமையால், இம்மரம் போதிமரம் என வழங்கப்பட்டது; புத்த சமயத்தி னர்க்கு இம்மரம் போற்றிப் பேணுதற்குரிய புனிதத் தன்மையுடையதாயிற்று. புத்தர் பெருமானும் போதியார், போதி, மாதவன் என்னும் பெயர்களால் அழைக்கப் பெற்றார். இக்கருத்துகளை உளங் கொண்டு ஆய்வாளர்கள் இளம்போதியார் என்னும் சங்கப்புலவர் புத்த சமயத்தவராக இருத்தல் கூடும்

என்று கருதுகின்றனர். சங்க காலத்தில் தமிழகத்தில் புத்த சமயம் இடம்பெற்றிருந்தது என்பார் கருத்திற்கு அரணாக அமையும் ஏதுக்களில் இப்பெயரும் ஒன்றாகும். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 72-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பழந்தமிழரின் அகப்பாட்டு நெறியில் அமைந்துள்ளமையால் பாடலிலிருந்து இவர்தம் சமயம் பற்றிய குறிப்பு ஒன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை. பாடல் நெய்தல் திணையில் தோழி தலைவியிடம் சிறைப்புறங்கூறும் பாங்கில் உள்ளது. இதில் தோழிக்கும் தலைவிக்கும் இடையிலுள்ள நட்பினை 'உயிர் ஓரன்ன செயிர்தீர் நட்பு' என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

**இளவிச்சிக்கோ** விச்சி எனப்படும் மலைக்குத் தலைவனான விச்சிக்கோ என்னும் சங்ககால மன்னனின் இளவல். அடுத்த நிலையில்-அரசு மேற்கொள்ளுதற்குரிய நிலையில் உள்ளமையால், இளவரசு என்னும் குறிப்பில் இளவிச்சிக்கோ எனப்பட்டான். இப்பெயருக்கு 'இளவச்சிரக்கோ' என்றொரு பாடபேதம் உள்ளது என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் புறநானூற்றுப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஒருகால் இவனும் கண்டீரக்கோ என்பவனின் இளவலான இளங்கண்டீரக்கோவும் ஒருங்கே மகிழ்ந்திருந்தனர். அப்போது அங்கு வந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் இளங்கண்டீரக் கோவைத் தழுவி, இளவிச்சிக்கோவைத் தழுவாது புறக்கணித்தார். தன்னைத் தழுவாது விடுத்தமைக்குக் காரணம் யாதென வினவிய இளவிச்சிக்கோவிற்குக் கூறுவதாக இப்புலவர் பாடியுள்ள பாடல் புறநானூற்றின் 151-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலில், 'இளங்கண்டீரக்கோ, ஆடவர் வெளியே சென்ற போதும் இல்லத்திற்கு வந்த இரவலர்க்குப் பிடியினைப் பரிசளித்து ஓம்பும் ஈகைப் பண்புமிக்க பெண்களை யுடைய கண்டீரக் கோவின் தம்பியாதலின் தழுவிக் கொண்டேன்' என்றும், 'இளவிச்சிக்கோ தழுவிக் கொள்ளத்தக்கவனாயினும் பெண் கொலை புரிந்த நன்னன் மரபில் வந்தமையானும், இரவலர்க்கு ஈயாது அடைத்த கதவினை உடைய அரசன் மரபில் வந்தமையானும் தழுவாது விடுத்தேன்' என்றும் பெருஞ் சாத்தனார் விளக்கியுள்ளார்.

**இளவெயினனார்** சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரிலமைந்துள்ள எயினன் என்னும் சொல் இவர் எயின மரபினராக - வேட்டுவக் குடியினராக இருக்கலாம் என்பதனைத் தெரிவிக்கிறது. இவர் பாடலொன்று நற்றிணையில் (263) அமைந்துள்ளது. இது உள்ளுறை நயமிக்க பாலைத்திணைப் பாடலாகும். இதில் 'கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு, முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்' என்னும் பகுதியில் வயலிலே தங்கிய பேடைக்குச் சேவல் கடல்மீனைக் கொண்டு வந்து கொடுத்துதவுதல் போலத் தலைவியைத் தம் இல்லத்தே கொண்டு வைத்துத் தாமும் பொருளைத் தேடி வந்து கொடுத்து, அவளுடன் இன்பமான இல்வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என்னும் கருத்தினைத் தோழி தலைவியிடம் கூறும் பாங்கில் தலைவனுக்குக் குறிப்பால் அறிவுறுத்துவது நயமுடையதாகும்.

**இளவெளிமான்** சங்ககாலத்தில் வாழ்ந்த சிறந்த வள்ளலாகிய வெளிமான் என்பானின் தம்பி. புவவர்களைப் போற்றும் பண்பும் அவர்கட்கு வழங்கும் பண்பும் குறைந்தவன். ஒரு கால், வறுமையிலும் செம்மை சான்ற புலவராகிய பெருஞ்சித்திரனார் பரிசில் விரும்பி வெளிமானிடம் சென்றார். இறக்கும் நிலையிலிருந்த அவ்வள்ளல் தன் தம்பியாகிய இவனைப் பரிசில் கொடுக்குமாறு பணித்தான். இவனைப் புலவர்க்குச் சிறிதே கொடுக்க, அதனைப் பெறாது நீங்கிக்குமணன்பால் சென்று பாடிப் பெற்ற யானைப் பரிசிலை, வெளிமான் ஊர்க்கு வந்து, அவனுடைய காவன் மரத்தே கட்டி விடுத்துச் சென்றார் (புறம். 163. அடிக்குறிப்பு). அப்போது, 'இரவலர் புரவலர் நீயும் அல்லை; புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர், இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு ஈவோருண்மையும் காணினி' என்று இகழ்ந்து பாடிச் சென்றார். வெளிமான் இறந்த பின்னர் இளவெளிமானிடம் இப்புலவர் சென்றபோதும் இவன் சிறிதே கொடுக்க, அதனைக் கொள்ளாது, 'புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின் எலிபார்த்து ஒற்றாதாகும்' எனத் தம் பெருமை புலப்படப் புகன்று மீண்டார். பிறிதோரமையம், வெளிமான் சிறிது கொடுக்கக் கண்டு அதனைப் பெறாது புலவர், 'அகம் நக வாரா முகன் அழி பரிசில், தாள் இலாளர் வேளார் அல்லர்' என்றும், 'பெரிதே உலகம் பேணுநர் பலரே' என்றும், தம் மானவுணர்வும் தம்போன்றோரை மதித்துப் போற்றும் புரவலர் உண்மையும் தோன்றக் கூறிச் சென்றார் (புறம். 207).

**இளவேட்டனார்** மதுரையில் பிறந்த இவர் தமிழில் சிறந்த புலவர். இப்பெயரால் இவர் வணிகருள் இளவேட்ட மகரிசி கோத்திரத்தவர் என்று தெரிய வருகிறது. இவர் ஆடைவிற்கும் வணிகக் குலத்தவராயிருக்கலாம். இப்புலவரை மதுரை அறுவை வாணிகர் இளவேட்டனார் என்றும் சிலர் கூறுவர். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் இவர் இயற்றியதாக ஒரு பாடல் உள்ளது. கீழ்காற்றால் உதிர்க்கப்பட்ட காந்தள்மலர் பாறையின் மேல் குவிந்து கிடப்பது பாம்பு படம் ஒடுங்கிக் கிடப்பது போல் உள்ளது என்ற அழகிய உவமையை, 'பாம்பு பை யவிந்தது போலக் கூம்பிக், கொண்டலிற் றொலைந்த வொண் செங் காந்தள், கன்மிசைக் கவியும் நாடற்கு' (குறுந். 185) என்னும் வரிகளில் சுவைபட விளக்குகிறார்.

இவர் பாடியுள்ள ஆறு பாடல்கள் அகநானூற்றில் இடம் பெறுகின்றன. செவிலியர் பாராட்டப் பொலஞ் செய் கிண்கிணி நலம்பெறு சேவடி மணல் மலி முற்றத்து நிலம் வடுக் கொளாமல் விளையாடு ஆயத்துச் சிறாரைத் தலைவி காணுந்தொறும், தன்னை நினைந்து வருந்துவாள் என்று வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக அகநானூற்றுச் செய்யுளொன்றில் (254-ஆம் பாடல்) பாடியுள்ளார்.

நற்றிணையில் இவர் பாடிய பாடலொன்று காணப்படுகிறது. அதில் இவர் தலைவியின் மெய்ப் பாட்டுணர்வாகிய அழுகையை மிக உருக்கமாக விவரித்துள்ளார். வானிலவு ஒளி வீச, ஊரில் விழா அயர,காடுகளிலும் சோலைகளிலும்,வண்டுகள் துணையொடு இன்புற்று வருகின்றன. தலைவியோ கண்ணுறக்கமின்றி அவல நெஞ்சத்துடன் இரவு முழுவதும் கழிக்க வேண்டியுள்ளது என்று ஏங்குகிறாள். 'யானே புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு, கனையிருங் கங்குலுங் கண்படை இலனே, அதனால், என்னொடு பொருங்கொல் இவ் உலகம், உலகமொடு பொருங்கொல் என் அவலமுறு நெஞ்சே' (நற்-348) என்பன தலைவியின் ஏக்கத்தைப் புலப்படுத்தும் வரிகளாகும்.

திருவள்ளுவ மாலையில் இவர் பாடியுள்ள ஒரு பாடலில் திருக்குறளை 'வள்ளுவர் வாயுறை வாழ்த்து' என்று பாராட்டியுள்ளார். புறநானூற்றிலும் இவர் யாத்த பாடலொன்று இடம் பெற்றுள்ளது(329). ச.வே.மா.

**இளைஞர் இயக்கம்**: பல்வகையான திட்டமிட்ட போராட்ட வகைகளால் அரசியல் செல்வாக்குத் தேடும் கருத்தொருமித்த இளைஞர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பே இளைஞர் இயக்கம் (Youth Movement)எனப் பெயர் பெறலாயிற்று. முதல் உலகப் போருக்குப் பின்னர், இச்சொற்றொடர் வழக்கில் வந்தது. ஐரோப்பாவில் இத்தாலிய வல்லாண்மை அரசும் பொதுவுடைமை அரசும் இளைஞர் இயக்கங்களை நடத்தியதோடு, மிகுதியான இளைஞர்களையும் அவ்வியக்கங்களில் சேர்த்து வந்தன. இந்தியாவில் அசாம் (Assam) மாநிலத்தில் 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைத்து அசாம் மாணவர் சங்கம் (All Assam Students Union) இளைஞர் இயக்கத்திற்கு ஓர் எடுத்துகாட்டாகும். இச்சங்கம் பொது மக்களைப் பாதிக்கும் விவகாரங்களுக்கும், அசாம் மாநிலப் பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் விவகாரங்களுக்கும், அரசியல் வழியில் நின்று போராட்டங்களை நடத்தி, அவற்றிற்கு 1985 ஆம் ஆண்டு அரசியல் தீர்வு கண்டது. மேலும் பொதுத் தேர்தலில் (1985, திசம்பர்) போட்டியிட்டு, அதன் தலைவர் மாநில முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். காண்க: இளைஞர் கழகங்கள்.

**இளைஞர் கழகங்கள்**: ஒன்றுபட்ட கருத்துகளைக் கொண்ட இளைஞர்கள் சமுதாயப் பணிகளுக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒன்று சேர்ந்து கழகங்களை அமைக்கும் வழக்கம் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே ஏற்பட்டது. முதன் முதலில் நிறுவப்பட்ட இளைஞர் கழகங்கள் (Youth Associations) சமயச் சார்புள்ளனவாகவே இருந்தன. இக்காலத்தே சமயச் சார்பற்ற பல்வேறு நோக்கங்களையும் செயல்முறைகளையும் கொண்ட இளைஞர் கழகங்கள் உலகெங்கும் உள்ளன.

அனைத்து நாட்டு இளைஞர் கழகங்களில் கிறித்தவ இளைஞர் கழகம் (Young Men's Christian Association), கிறித்தவ இளைய மகளிர் கழகம் Young Women's Christian Association) ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

கிறித்தவ இளைஞர் கழகம் கி.பி. 1844-ஆம் ஆண்டு சார்சு வில்லியம் (George William) என்ற இளைஞரால் இலண்டன் நகரில் நிறுவப் பெற்றது. கிறித்தவச் சமயத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்ட இக் கழகம் உலகெங்கும் பரவியுள்ளது. இதில் எச்சமயத்தினரும் உறுப்பினர் ஆகலாம். சமயப் பணி, சமுதாய முன்னேற்றம், கல்வி வளர்ச்சி ஆகிய மூன்று துறைகளிலும் இளைஞர்களைப் பயிற்றுவித்து, அவர்களுடைய உடல், உள்ளம், ஆன்மா வளர்ச்சிகளுக்கு உதவுவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது இக்கழகம். பெருநகர்களில் உள்ள இக் கழகத்தின் கிளைகளில் நூலகம், படிப்பகம், சொற்பொழிவு மன்றம், விளையாட்டு வசதிகள், உடற் பயிற்சிக் கூடம், உணவகம் ஆகியவை உள்ளன. சில இடங்களில் இளைஞர் விடுதிகளும் உண்டு. இக் கழகத்தின் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள செனிவா (Geneva) நகரில் உள்ளது

கிறித்தவ இளைய மகளிர் கழகத்தின் நோக்கங்களும் கிறித்தவ இளைஞர் கழகத்தின் தன்மையைப் போன்றவையே. இக்கழகம் கி.பி.1855-ஆம் ஆண்டு இலண்டனில் நிறுவப் பெற்றது. இது கிறித்தவ இளைஞர் கழகம் செய்யும் பணிகளுடன், மகளிர்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் செய்து தருகிறது.

இந்தியாவில் இந்து இளைஞர் கழகமும் (Young Men's Hindu Association), இந்திய இளைஞர் கழகமும் (Young Men's Indian Association) குறிப்பிடத்தக்கவை. இக் கழகங்களும் கிறித்தவ இளைஞர் கழகங்களைப் போலவே பணிகளைச் செய்து வருகின்றன.

பொழுது போக்குக் கழகங்கள் (Clubs) வாயிலாக இளைஞர்கள் ஒன்று கூடித் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க முற்படும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உள்ளது. தொழிற்சாலைகளில் உழைத்துக் களைத்த சிறுவர்களின் பொழுது போக்கிற்காக இவை முதலில் தொடங்கப்பட்டன. சிறுவரும் சிறுமியரும் வெவ்வேறு கழகங்களை அமைப்பதே பொதுவான வழக்கமாக இருந்து வந்தபோதிலும், இருபாலரும் ஒன்று கூடி ஓய்வு நேரத்தைக் கழிக்க ஏற்ற கழகங்களும் உள்ளன. அவை சமயச் சார்பும் அரசியல் தொடர்பும் அற்றவை. நாடு முழுவதும் உள்ள சிறு சிறு கழகங்கள் அனைத்தும் ஒன்று கூடித் தேசிய இளைஞர் கழகத்தை நிறுவும். இத் தேசிய இளைஞர் கழகம், கிளைக் கழகங்களின் பணியைக் கட்டுப்படுத்தி, அவற்றின் திட்டத்தை முடிவு செய்யும்.

சாரணர் இயக்கமும் அனைத்து நாடுகளின் அடிப்படையில் நிறுவப் பெற்ற இளைஞர் இயக்கம் ஆகும். செஞ்சிலுவைச் சங்கம், புனித யோவான் மருந்து வண்டி (St. John's Ambulance) ஆகிய இரண்டிலும் இளைஞர் பிரிவுகள் உண்டு. இம் மூன்று கழகங்களும் இளைஞர்களுக்குக்குறிப்பிட்ட வகையான பயிற்சியை அளிப்பதோடு சமுதாயப் பணியிலும் ஈடுபடுகின்றன. இவை இளைஞர்களின் பொழுது போக்கிற்கும் உடற்பயிற்சிக்கும் வசதி செய்து தந்துள்ளன. மற்றைய கழகங்களைப் போலவே விடுமுறைகளில் சுற்றுலாப் போகவும் இவை ஏற்பாடு செய்கின்றன.

குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்ட இளைஞர் அமைப்புகளும் உண்டு. இளைஞர்களைக் கூட்டுறவு முறையில் பயிற்றுவித்து ஒன்றுபடுத்தும் கூட்டுறவு இளைஞர் கழகமும், இளம் உழவர் கழகமும், நாடகப் பயிற்சி அளிக்கும் இளைஞர் நாடகக் கழகமும் சில எடுத்துக் காட்டுகளாகும்.

அனைத்து நாட்டு இளைஞர்களையும் ஒன்று திரட்ட, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடன் உலகக் குடிமைக் கல்விக்கழகம் (Council for Education in World Citizenship) நிறுவப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கும் இளைஞர் கழகங்களும் உண்டு. இதற்கு இந்தியச் சோவியத்து நட்புறவுக் கழகம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

உலக சனநாயக இளைஞர் பேரவை என்ற அமைப்பு 1945-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டிற்குப் பின் அமைக்கப்பட்டது. உலக ஒற்றுமையை ஓங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஒருமைப்பாடு, சமாதானம், அமைதி, நட்புறவு ஆகிய கொள்கைகளை இளைஞர் சமுதாயத்திற்கு வலியுறுத்தவே உலக இளைஞர் பேரவை பாடுபடுகிறது. முதலாம் உலக இளைஞர் விழா 1947-ஆம் ஆண்டில் செக்கோசுலோவாகியாவின் தலைநகரான பிராகில் (Prague) நடைபெற்றது. ஏறத்தாழ 71 நாடுகளைச் சார்ந்த 17,000 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

சோவியத்து நாட்டின் தலைநகரான மாசுகோவில் 12-ஆம் உலக இளைஞர் விழா, 1985-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 27 முதல் ஆகசுட்டுத் திங்கள் 3 வரை கொண்டாடப்பட்டது.

சோவியத்து நாட்டில் இசுபுட்னிக்கு (Sputnik) என்ற பெயரில் உலக இளைஞர் சுற்றுலாக் கழகம் இயங்கி வருகிறது. இக் கழகம் ஆண்டுதோறும் இளைஞர்களும் இளம்பெண்களுமாக ஏறத்தாழ 40 இலட்சம் பேர் சோவியத்து நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்திலும் இளைஞர் கழகப் பிரிவுகள் உள்ளன. அவை அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்படுகின்றன. இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் இளைஞர் பிரிவுகள் உள்ளன. சோவியத்து நாட்டிலுள்ள காம்சாமால் என்னும் இளைஞர் கழகம் மிகப்பெரியதாகவும் சக்திவாய்ந்ததாகவும் விளங்குகிறது.

இளைஞர்களுக்குச் சரியான பொழுதுபோக்கு வசதிகளையும் ஒன்றுகூடும் வாய்ப்பையும் அளிப்பதன் இன்றியமையாமையை உணர்ந்த இக்கால அரசுகள், திறமையாக நடத்தப் பெறும் கழகங்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கின்றன.

**இளைஞர் சீர்திருத்தப் பள்ளிக் கல்வி**: சந்தர்ப்ப வயத்தால் வாழ்வில் இடறி விழுந்த

பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட இளையோர்களுக்கு வாழ்வில் வளம் சேர்க்கவும், வழிகாட்டவும் தமிழகத்தில் உருவான அரசுத் துறையைச் சார்ந்தவை சீர்திருத்தப்பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை ஆகியவையாகும். இந்திய நாட்டில் தமிழகத்தில் 1920-ஆம் ஆண்டு முதன் முதலாகத் 'தமிழ்நாடு குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. அதன்படியே இத்துறை செயற்பட்டு வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கும் சீர்திருத்தப் பள்ளிகள் பரவலாகப் பொதுமக்களால் சிறுவர் சிறைச்சாலை என்றும் தவறுதலாகச் சொல்லப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் அனுமதிக்கப்படும் மாணவர்களுள் பெரும்பாலோர் காவலர்களால் பிடிபட்டு நீதி மன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டவர்களானாலும், விடுதியில் தங்கிப் பள்ளியில் பயிலும் சாதாரண மாணவர்களைப் போன்றே பயின்று வருகின்றனர்.

இளநிலைச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் 'ஆதரவில்லாமல் சுற்றித்திரிதல்' என்னும் வழக்கின் கீழ் விசாரணைக்குப் பின் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள். இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் களவு, பிற குற்றங்கள் காரணமாகப் பிடிபடும் இளங்குற்றவாளிகள் முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

மாணவர்களுக்கென எட்டுப் பள்ளிகளும் மாணவிகளுக்கென ஒரு பள்ளியும் ஆக ஒன்பது சீர்திருத்தப் பள்ளிகள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் முதலில் தோன்றிய சீர்திருத்தப் பள்ளி அரசினர் செங்கற்பட்டு முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளியேயாகும்.

இப்பள்ளிகளை இயக்கும் தலைமையகம் சென்னையில் 'சீர்திருத்தப் பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம்' என்னும் பெயரில் இயங்கி வருகிறது. சந்தர்ப்பவயத்தாலும் பிற காரணங்களாலும் திசைமாறிய மகளிர் குற்றத்திற்கு (நடத்தை தவறுதல்) ஆளாகும்போது, இளைஞர்களுக்குக் கொடுக்கும் அதே மறுவாழ்வு மகளிர்க்கும் கொடுக்கப்பட வேண்டியிருப்பதாலும், அவர்களையும் சீர்திருத்திச் சமுதாயத்தில் நன்மக்களாக உருவாக்க வேண்டியிருப்பதாலும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையும் இளையோர் சீர்திருத்தப் பள்ளியோடு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் சிறுவர் சிறுமியருக்கென விசாரணைக்கால வரவேற்பில்லங்களும் நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்றபின் பயிற்சிக்கு ஆணையிடப்பட்ட மாணவர்களுக்கென முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள் (Senior Approved Schools), இளநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள் (Junior Approved Schools), சிறுமியர் சீர்திருத்தப் பள்ளிகள் (Girls Approved Schools), மாணவர் பிற்காப்பில்லங்கள், மகளிர் பிற்காப்பில்லங்கள், மகளிர் காப்பகங்கள், மகளிர் விழிப்புப்பணி இல்லங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் செவ்வனே செயற்பட்டு வருகின்றன.

தமிழகம் முழுவதற்கும் உள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் ஏறக்குறைய 2,500 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். மகளிர்க்கெனத் தனியாகச் சென்னையில் மட்டும் எட்டாம் வகுப்பு வரை ஒரு சீர்திருத்தப் பள்ளி இயங்கி வருகின்றது. செங்கற்பட்டுப் பள்ளியில் மட்டும் பத்தாம் வகுப்பு வரை உள்ளது. மற்ற எல்லாப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் ஏறக்குறை 20 அல்லது 30 மாணவர்கள் இருப்பார்கள். உறவினர்களும் பெற்றோர்களும் கண்காணிப்பாளர் அனுமதிபெற்றுப் பார்த்துச் செல்வதற்கான வழக்கம் நடைமுறையில் உள்ளது. இங்குத் தவறு செய்யும் மாணவர்களுக்குக் கௌரவ நீதிமன்றம் (Court of Honour) என்னும் அமைப்புச் செயற்பட்டு வருகிறது. இல்லத்தாசிரியர் (House master) ஒருவர் தலைமையில், 5 மாணவர்கள் உறுப்பினர்களாக விளங்க, வழக்கு விசாரிக்கப்பட்டு, அம் மாணவர்களின் ஆலோசனைப்படி தண்டனை வழங்கப்படுகிறது. தண்டனைகள் பெரும்பாலும் 400 அல்லது 500 தோப்புக்கரணங்கள் போடுதல், அவன் தங்கியுள்ள இல்லத்தைச் சுற்றிச் சுத்தம் செய்தல் போன்றவையாகும்.

பொதுவாக இங்குக் கற்பிக்கப்படும் கல்வி வெறும் ஏட்டளவில் அமைந்துவிடாமல் அவர்களது வாழ்விற்குத் தேவையான அடிப்படைக் கல்வியாக அமைந்துள்ளது. பாடநூல் கல்வியோடு வாழ்க்கைத் தொழிற்கல்வியும் (Vocational Education) ஒருசேரக் கற்பிக்கப்பட்டு வருகிறது. எட்டாம் வகுப்புப் படித்து முடித்து இப்பள்ளியைவிட்டு ஒரு மாணவன் வெளியேறும் போது, ஏதாவது ஒரு தொழிற்கல்வியில் முறையான பயிற்சி பெற்று அதற்கான சான்றிதழையும் பெற்றுச் செல்கிறான். அரசு நடத்தும் தொழிற் கல்வித் தேர்வுகளிலும் இம்மாணவர்கள் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றுச் சான்றிதழ் பெறுகின்றனர். குறிப்பாக, புத்தகக் கட்டுத் தேர்வு, தையல் தொழில் தேர்வு, ஓவியம் வரைதல் தேர்வு போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுகின்றனர். இவ்வாறு தகுதிபெற்றுச் செல்லும் மாணவர்கள் வாய்ப்புகளின் அடிப்படையில் இத்துறையிலும் பணிபுரிய அரசு உரிய வழிவகை செய்துள்ளது. இதன்படியே இப்பள்ளியின் பல முன்னாள் மாணவர்கள் இத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் மாவட்டந் தோறும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இவர்கள் வேலைவாய்ப்புப் பெறத் தகுதிக்

கேற்பத் தனியான இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பட்டதாரிகள்.

மாணவர்கள் தொழிற்கல்வி கற்பதற்கு வசதியாகப் பல தொழிற்கூடங்கள் உள்ளன. மாணவர்களின் ஊர்ச்சூழலில் உள்ள தொழிலின் தன்மைக்கேற்பவும், மாணவர்கள் தொழிலின்மேல் உள்ள நாட்டத்திற்கேற்பவும் மாதம் ஒரு முறை நடைபெறும் உளநூல் கல்விமையத்தின் (Psychology Study Circle) மூலம், மாணவர்கள் உரிய தொழிற்கூடங்களுக்குப் பிரித்து அனுப்பப் பெறுகின்றனர். இப்பள்ளியில் புத்தகம் கட்டும் தொழிற்கூடம், தச்சுத் தொழிற்கூடம், மின்தச்சுத் தொழிற்கூடம், தையல் தொழிற்கூடம், மின்தையல் தொழிற்கூடம், கருமார் தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், பாய் நெசவுத் தொழிற்கூடம், வாத்தியத் தொழிற்கூடம் போன்ற தொழிற் கூடங்களும் உள்ளன. தோட்ட வேலை, கொத்துவேலை போன்ற பணிகளையும் மாணவர்கள் பயின்று வருகின்றனர். தகுதிபெற்ற தொழிலாசிரியர்கள் மூலம் இவர்கள் இங்குப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இம்மாணவர்களின் உளநலத்தை வளர்ப்பது போலவே உடல்நலத்தைப் பேணவும் இப்பள்ளிக்கு என முழுநேர மருத்துவ அதிகாரி ஒருவர் பணிபுரிகிறார். இம்மாணவர்களை முழுப் பொறுப்பேற்றுப் பாதுகாத்திடக் கண்காணிப்பாளர், உதவிக் கண்காணிப்பாளர், பலதரப்பட்ட நிருவாகப் பணியாளர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். மனத்தில் குற்றவாளிகள் என்ற எண்ணம் எழாதிருக்கக் காவலாளிகள் காவலர் உடையில் இருப்பதில்லை.

மேலும் சனிக்கிழமைகளில் அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்தச் சமயத் தலைவர்கள் இப்பள்ளிக்கு வந்து சமயத் தொடர்பான கருத்துகளை எடுத்துரைக்கின்றனர். இந்து சமய மாணவர்கள் வியாழனன்று இந்துக்கோவிலுக்கும், முகமதியர்கள் வெள்ளியன்று பள்ளிவாசலுக்கும், கிறித்தவர்கள் ஞாயிறன்று கிறித்தவக் கோவிலுக்கும் சென்று வருகின்றனர். இங்கு மாணவர்கள் சாதி, சமய இன வேறுபாடின்றி ஒற்றுமையாகப் பயின்று வருகின்றனர். மாணவர்கள் ஒவ்வொருவரும் 'இந்தியன்' என்ற உணர்வுடனும் இந்நாட்டுக் குடிமகன் என்ற உள்ளார்ந்த தேசிய ஒருமைப்பாட்டு உயர் நோக்குடனும் வளர்க்கப்படுகின்றனர்.

மாணவர்கள் நன்னெறியில் நடக்க வாரம் தோறும் திங்களன்று 'திருக்குறள் வகுப்பு' என்னும் நிகழ்ச்சி பள்ளிக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் நடைபெற்று வருகிறது. இதில் 1 முதல் 5 வகுப்புகள் வரை உள்ள மாணவர்களுக்கு ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற பாடல்களையும் அவற்றின் பொருள்களையும் கூறுவர். ஆறு, ஏழு, எட்டு ஆகிய வகுப்பு மாணவர்கள் திருக்குறள் பாடலொன்றைக் கூறி அதன் பொருளை எடுத்து விளக்குவர். மாதம் ஒருமுறை நடைபெறும் இலக்கிய மன்றக் கூட்டங்கள் மூலம் வெளியிலிருந்து உரையாற்ற வரும் அறிஞர்களின் உயரிய கருத்துகளை இம்மாணவர்கள் பெறுவதோடு, தங்களது பேச்சாற்றலையும் வளர்த்துக் கொள்கின்றனர். வெளியில் நடக்கும் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, குறள் ஒப்பித்தல் போட்டி போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளும் பெற்றுச் சிறக்கின்றனர்.

இளநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் நீதிமன்றத்தின் மூலம் ஆணையிடப்பட்ட பயிற்சிக் காலம் முடியாதிருப்பின், தொடர்ந்து உயர் கல்வி பெறச் செங்கற்பட்டு முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சிக் காலம் முடிந்த பின்னரும் படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்கள் ஆதரவற்றவர்களாக இருப்பின், இயக்குநர் அவர்களின் ஆணையின்படி கல்லூரி, தொழிற்சாலைசார் பயிற்சி நிறுவனம் (I.T.I.) போன்றவற்றில் சேர்ந்து கல்விபெறும் வாய்ப்பையும் பெற்று வருகின்றனர். செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை, சென்னை ஆகிய நகர்களில் உள்ள தொழிற்பயிற்சிக் கூடங்களில் இம்மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீடு அரசினரால் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் அறிவை வளர்ப்பதுபோலவே உடல் வலுவை வளர்க்க உடற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் நூலகம் ஒன்றும் உண்டு. இந்நூலகம் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. பொழுதுபோக்கிற்காக மாதம் ஒரு முறை திரைப்படத்திற்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆண்டு விடுமுறையில் சிறு அளவிலான சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மு.இரா.

**இளைஞர் வேலையின்மையும் கல்வியும்**: பதினைந்து வயதிலிருந்து இருபத்துநான்கு வயது வரை உள்ள இளைஞர்களே வேலையின்மையால் மிகுதியும் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர் வேலையின்மைக்குக் (Youth Unemployment) கூறப்படும் காரணங்கள் பல. இளைஞர்களுக்கு வேலை

கிடைப்பது அரிதாக இருப்பதற்குக் கூறப்படும் முதல் காரணம், அவர்கள் பணித்திறன் உடையவர்களாக இல்லாதிருத்தலேயாம். இப் பணித்திறன்களை இளைஞர்கள் பெறாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் போதிய பணிப்பயிற்சியும் கல்வியும் பெறாமையேயாகும். எனவே இளைஞர் வேலையின்மைச் சிக்கலைத் தீர்வு செய்தில் முதலிடம் பெறுவது கல்வி என்பது தெளிவு.

வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 20 மிலியன் (200 இலட்சம்) இளைஞர்கள் 1982-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வேலையின்றி இருந்தனர். இந் நாடுகளில் வேலையில்லாத இளைஞர்கள் நாற்பதிலிருந்து ஐம்பது விழுக்காடு ஆவர். இசுபெயின், இத்தாலி போன்ற நாடுகளில் ஐந்து இளைஞர்களுள் ஒருவர் வேலையின்றி இருக்கிறார். செருமானியக் குடியரசு (Federal Republic of Germany), சுவீடன் போன்ற நாடுகளில் வேலையில்லாத இளைஞர்கள் 10 விழுக்காட்டுக்கும் குறைவே. சோவியத்து நாட்டில் வேலையில்லாத படித்த இளைஞர்கள் இல்லை. இந் நாட்டில் இருந்த கடைசி வேலைவாய்ப்புத் தேடித் தரும் அலுவலகம் 1929-ஆம் ஆண்டிலேயே மூடப்பட்டு விட்டது. இந்தியாவில் படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. இந் நாட்டில் ஏறத்தாழ 10 மிலியன் படித்த இளைஞர்கள் வேலையின்றி இருக்கின்றனர். கல்லூரிப் பட்டம்பெற்ற இளைஞர்களுள் மட்டும் 1982-ஆம் ஆண்டுக் கணக்கின்படி வேலையில்லாதவர்கள் 27 விழுக்காடாகும் வேலையில்லாமல் இருக்கும் இந்தியர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் படித்த இளைஞர்கள் ஆவர்.

வேலையின்மையால் இளைஞர்களை விட இளம் பெண்களே மிகுதியான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். பிரான்சு, இத்தாலி, இசுபெயின் போன்ற நாடுகளில் வேலையின்மையால் 40 விழுக்காட்டுக்கும் மேலான இளம் பெண்கள் அல்லலுறுகின்றனர்.

கல்வியின் பங்கு: பொருளாதார வளர்ச்சியின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், 'பணித்திறன் மிக்க கல்வியின்மை, வேலையின் மீது இளைஞர்கள் கொண்டுள்ள சுய விருப்பு வெறுப்புகள் ஆகியவை வேலையின்மையின் முதன்மையான காரணங்களாகக் கூறப்படுகின்றன. வேலையின்மையை ஒழிப்பது கல்வியும் பயிற்சியும் (Education and Training) தாம் என வளர்ச்சியடைந்த நாடுகள் கருதுகின்றன. உயர் கல்வி அளித்தல், கல்வியின் தரத்தை உயர்த்துதல், தொழிற்பயிற்சி அளித்தல் ஆகிய மூவகைக் கல்வித் திட்டத்தின் மூலம் இளைஞர்களின் பணித்திறனை (Employability) உயர்த்த முடியும். இப் பணித்திறனே இளைஞர்களிடம் வேலையின்மையை ஒழிக்க உதவும்.

பொதுவாக, உயர்கல்வி பெற்றவர்களுள் வேலையின்மை விகிதம் குறைந்தே காணப்படுகிறது. உயர் கல்வியானது வேலையைப் பெறுவதற்கான வாய்ப்புகளை மிகுதிப்படுத்துகிறது. அனைத்துக் கல்வியும் வேலை வாய்ப்புகளைத் தேடித் தந்துவிடுவதில்லை. எவ்வளவு காலம் ஒருவன் பள்ளியில் இருந்தான் (Schooling) என்பதைவிடப் அவன் பள்ளியில் என்ன கற்றான் (Learning) என்பதே வேலைவாய்ப்புகள் அடைவதை உறுதிப்படுத்துகிறது. பள்ளியில் பெறப்படும் பொதுக் கல்வி யாரையும் ஒரு குறிப்பிட்ட வேலைக்கு முழுத் தகுதியுடையவராக (Finished Product) ஆக்கிவிடுவதில்லை. ஒவ்வொரு தொழிலுக்கென்றும் உரிய சிறப்புத் திறன்களைப் (Specific Skills) பயிற்சி பெறுவதன் மூலம் அடைய இயலும்.

பள்ளியோ தொழில் நிறுவனமோ மட்டும் தனித்து நின்று வேலையின்மையை ஒழித்து விட இயலாது. இவ்விரண்டும் இணைந்து திட்டமிட்டுச் செயற்படும் போதுதான் இளைஞர் வேலையின்மைச் சிக்கலை ஒழிக்க இயலும். பள்ளியும் தொழில் நிறுவனமும் இணைந்து திட்டமிடுதல் சோவியத்து நாட்டில் நடைமுறையில் உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கல்வியானது இளைஞர்களின் தகுதிகளையும் பணித்திறன்களையும் உயர்த்த உதவுவதோடு, ஆர்வம், விருப்பம், திறன் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான தொழில் வகைகளை அவர்களே தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதலுக்கும் (Guidance) தொழில் மீது நல்ல மனப்பான்மையை வளர்ப்பதற்கும் உதவி செய்கிறது.

**இளைய இத்தாலியர் சங்கம்:** சோசப்மாட்சினீ என்னும் இத்தாலியத் தேசியவாதியால் கி.பி. 1831-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பிரான்சிலுள்ள மார்செயில்சு நகரில் இச்சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தைப் போன்ற பல சங்கங்கள் இத்தாலியில் இதற்கு முன்னரே அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மிகவும் சிறப்பானது கார்போனரியாகும். அது ஓர் இரகசியக் கழகமாகும். இத்தாலி கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. அந்நாடுகளுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டிருக்கவில்லை. மக்களிடம் தேசிய உணர்ச்சி தோன்றவில்லை. இத்தாலியின் பெரும் பகுதி அயலார் ஆட்சியின் கீழ் இருந்தது. இத்தாலிய நாடு

களை ஆண்டு வந்தவர்கள் அனைவருமே வல்லாட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். ஒருசில பகுதிகளில் மட்டிலுமே குடியரசு அமைக்கப்பட்டிருந்தது. அந்நிலை கி.பி. 1870-ஆம் ஆண்டிற்குள் மாற்றப்பட்டு விட்டது. அயல் ஆட்சியாளர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். எல்லாப் பகுதிகளும் ஒரே ஆட்சியின் கீழ்க்கொண்டுவரப்பட்டன. இந்த நிலை ஏற்படுவதற்கு உறுதுணையாக இருந்த பல்வேறு ஆற்றல்களுள் ஒன்றே இளைய இத்தாலியர் சங்கமாகும். இதனுடைய தோற்றம் இத்தாலிய மறுவாழ்வு (Risorgimento) இயக்கத்தின் ஒரு திருப்புக்கட்டமாக அமைந்துள்ளது.

மாட்சினீ கி.பி. 1827-இல் கார்போனரியின் உறுப்பினராகச் சேர்ந்தார். அதன் சார்பில் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் பங்கு கொண்ட காரணத்தால் அவர் சிறைபுக நேர்ந்தது. அவர் சிறை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தபோதுதான் அவருடைய அரசியல் கருத்துகள் முதிர்ச்சியடையத் தலைப்பட்டன. அப்போதுதான் கார்போனரிக்கு வேறு பல இரகசியக் கழகங்களின் குறிக்கோள், பணிகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறியக்கூடிய வாய்ப்பும் நேரமும் கிடைத்தன. அப்போது இரகசியக் கழகங்களின் தோல்விக்குரிய காரணங்கள் அவருக்குப் புலப்பட்டன. முதலாவதாக, அவற்றின் உறுப்பினர்கள் ஒருசில வகுப்புகளைக் (குறிப்பாக உயர்குடியைச்) சார்ந்தவர்களாக இருந்தனர். அவை அறிவாளிகளின் கழகங்களாகச் செயற்பட்டனவேயன்றிப் பாமர மக்களுடைய கழகங்களாகக் காட்சியளிக்கவில்லை. இரண்டாவதாக, அவற்றின் தலைவர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். தலைவர் தேர்தலில் ஒருவருடைய திறமைக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை. மாறாக அவருடைய சமுதாய நிலை, அவர் உறுப்பினராகப் பணியாற்றிய காலம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன. மூன்றாவதாக, அவற்றிற்கு உயரிய நோக்கம் ஏதும் இல்லை. கொடுங்கோலாட்சியை ஒழிப்பதே அதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றித் தொழிற் சுதந்திரம், ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டத்தொகுதி, கல்விமுறை ஆகியவற்றைப் பெறுவது அவற்றின் நோக்கமாக இருந்தது. அவைதவிர ஆக்க முறையிலமைந்த திட்டம் எதனையும் அவை அறிவிக்கவில்லை. நான்காவதாக, அவை கையாண்ட முறைகளும் சரியாக அமையவில்லை. புரட்சியின் வாயிலாக அவை அவற்றின் திட்டத்தை நிறைவேற்ற எண்ணின. ஆனால் அப்புரட்சி எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் ஒரே தலைமையின் கீழ் நடத்தப்பெறவில்லை, அவற்றின் நோக்கத்தில் ஒற்றுமை இருந்தது எனினும், அதனை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளுவதில் அவற்றிற்கிடையே ஒற்றுமையில்லை. ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டிருந்த ஆட்சிக்கு எதிராகச் சமயச் சூழ்நிலைக் கேற்ப அவை கிளர்ச்சிகளை நடத்தின. அவற்றைப் பிற் போக்குச் சக்திகள் ஒன்றன் பின் ஒன்றாக அடக்கி விடுவதில் எந்த விதமான இடைஞ்சலையும் எதிர் கொள்ளவில்லை. எனவே, இக்குறைகள் அனைத்தும் நீக்கப்பட்ட ஒரு மாற்றுச் சங்கம் அமைத்தாலன்றி இத்தாலிக்கு மறுவாழ்வு கிடைக்காது என்று மாட்சீனீ உணர்ந்தார். புரட்சிக் கருத்துகளைக் கைவிட மறுத்தமையால் அவர் நாடு கடத்தப்பட்டார். நாடு கடத்தப்பட்ட அவர் முதலில் பிரான்சில் வாழ நேர்ந்தது. அங்கிருந்தபோதுதான் இளைய இத்தாலியர் சங்கத்தை நிறுவினார்.

இளைய இத்தாலியர் சங்கம் என்ற பெயருக்கேற்ப அச்சங்கத்தில் இளைஞர்கள் பெரும்பான்மையினராகச் சேர்க்கப்பட்டனர். மாட்சீனீக்கு இளைய தலைமுறையினரிடம் அளவுகடந்த நம்பிக்கையுண்டு. அவர்களுடைய இதயங்களில் பொதிந்துள்ள வலிமையின் இரகசியத்தை அறிந்தவர் அவரேயாவார். புரட்சிக்குத் தலைமை தாங்க இளைஞர்களே தகுதி பெற்றவர்கள் என்பது அவர் கருத்து. நாட்டில் பெரியதொரு பங்கு அவர்களுக்கு உண்டு என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். இளைஞர்களே வலிமை பெற்றவர்கள் என்றவாறு பேசி, இத்தாலியின் பெரிய எதிரியான ஆசுத்திரியாவின் பக்கம் அவர்களைத் திருப்பிவிட்டால், அயலார் ஆட்சி இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்று மாட்சீனீ எண்ணினார். மேலும், அவர் தாம் கற்பனை செய்திருந்த கருத்துகளைப் பரப்ப இளைஞர்களே தகுதியானவர் என்று உணர்ந்தார். இளைஞர்களின் குரலில் தோன்றும் மந்திர ஆற்றலுக்கு அடிமையாகாதவர் எவரும் இருக்கமுடியாது என்பது அவர் தம் கருத்து. அவர் இளைஞர்கள் தாம் கொள்கையில் பற்றுறுதியுடன் இருக்க இயலும்; அவர்களாலேயே எல்லாச் சோதனைகளையும் இன்னல்களையும் நன்கு தாங்கிக்கொண்டு செயலாற்ற இயலும்; தாம் மேற்கொண்ட பணிக்குத் தேவையான அயரா உழைப்பையும் அவர்களிடம்தான் காணமுடியும்; நாட்டுப்பற்று அவர்களுடைய இதயங்களில்தான் கொழுந்துவிட்டெரியும் என்று எண்ணினார். மாட்சீனீயின் நம்பிக்கை வீண் போகவில்லை. சாதாரணக் குடும்பங்களைச் சார்ந்த ஒருசில இளைஞர்கள், ஊர்பேர் தெரியாத இளைஞர்கள், வசதியற்ற இளைஞர்கள், வெகு விரைவில் பல அரசுகளை எதிர்க்கும் அளவிற்கு வலிமை பெற்றுவிட்ட இளைய இத்தாலியர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றனர். பல்வேறு பகுதிகளைச் சார்ந்த 60,000 பேர்

இச்சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். செனோவாவில் உருப்பினீயும், தசுகனியில் (Thscany) கொர்ராசியும், உரோமாக்னாவில் பரீனீயும், அம்பிரியாவில் குவார்டலூசியும் தலைமைப் பொறுப்பேற்றார்கள். அச்சங்கத்தினர்கள் கல்வியறிவற்ற மக்களிடம் தேசிய உணர்ச்சியை வளர்க்க மேற்கொண்ட இன்னல்கள் பல. மலைகளைக் கடந்து இத்தாலியின் ஒவ்வொரு மூலைமுடுக்குக்கும் சென்று தம் கொள்கையைப் பரப்பினர். தொழிற்கூடங்களுக்குச் சென்று தொழிலாளர்களுடைய உணவைப் பகுத்துண்டனர். அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு நினைவுபடுத்தினார்கள். இதுவரை அவற்றைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்க எவரும் முன்வரவில்லை. அவர்களுடைய முந்தைய பெருமையையும், இப்போது அயலார் பிடியில் சிக்கி அவர்கள் அடைந்துள்ள அவல நிலையையும் ஒப்பிட்டுக் காட்டும்போது, தங்களை அறியாமலேயே அவர்களிடம் நாட்டுப்பற்று மேலிட்டெழுந்தது. நாட்டுக்காக எந்தவிதக் கொடையினையும் தரத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டனர். அது மட்டுமன்றி, இதுகாறும் தனித்தனியே வாழ்ந்து வந்த இத்தாலியர் உள்ளத்தில் ஒற்றுமை உணர்ச்சியும் வளர்ந்தது. அவ்வளவிற்கும் முதற்காரணமாக விளங்கியவை அதில் பங்கேற்ற இளைஞர்களின் துடிப்பான செயல்களேயாகும். இரண்டாவதாக, அதனைத் தோற்றுவித்தவரின் மாசற்ற நடத்தையைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக, அவருடைய நாவன்மையையும் எழுத்துவன்மையையும் கூறலாம். நாட்டிற்கு வெளியே இருந்துகொண்டே தமது இலக்கியப் படைப்புகளின் வாயிலாக மக்களை ஊக்கிய பெருமை அவரைச் சாரும். அது மட்டுமன்றி அவர் இளைய இத்தாலி என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அவருடைய கருத்துகளைப் பரப்ப அது ஒரு பெருங் கருவியாகத் திகழ்ந்தது.

ஏனைய இரகசியக் கழகங்களைப் போன்றே இளைய இத்தாலியர் சங்கமும் இரகசியமாகச் செயற்பட்டு வந்தது. வெளிப்படையாக அது செயற்படத் தொடங்கியிருப்பின் பிற்போக்கு ஆற்றல்கள் அதனை நசுக்கிவிட்டிருக்கும். அதே காலத்தில் அது ஒரு தீங்கு செய்யும் குழுவாக மட்டும் விளங்கக் கூடாது என்று மாட்சீனீ கருதினார். எனவே, அதன் உறுப்பினர்கள் கண்மூடித்தனமாக யாருக்கும் கீழ்ப்படிந்து நடக்கலாகாது என்றும், அதனுடைய கொள்கையில் தாமாகவே நம்பிக்கை வளர்த்துக் கொண்டவர்களே அதில் சேரவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

இளைஞர் இத்தாலியர் சங்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருடைய சங்கம்அன்று; அறிவாளிகள் மட்டும் அடங்கிய சங்கமும் அன்று. எளிதில் சென்றடைய முடியாத சிற்றூர் மக்கள் முதல் பெரிய நகரங்களில் பணிபுரியும் தொழிலாளிகள் வரை எல்லா வகைக் கல்வியறிவற்ற மக்களும் அதன் கொள்கையில் பற்றுக் கொண்டனர். சுருங்கக்கூறின், அது கல்வியறிவற்ற மக்களுடைய இயக்கமாகச் செயற்பட்டது. புரட்சிகள் மக்களால் மக்களுக்காக நடத்தப்பட்டாலொழிய, அவை வெற்றி பெற இயலா என்பது மாட்சீனீயின் திடமான கருத்தாகும். இளைய இத்தாலியர் சங்கத்தின் வாயிலாக இத்தாலிய விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றியமைத்த பெருமை அவருக்கே உரியதாகும்.

இளைஞர் இத்தாலியச் சங்கத்தின் திட்டத்தைச் சங்க விதிகளில் மாட்சீனீ தெளிவாக விளக்கியுள்ளார். அந்த விதிகள் அவருடைய கட்டுரைத் தொகுப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவான குடியுரிமையோ தேசியநாடோ தேசியக் கொடியோ பெற்றிராத இத்தாலிய மக்களை ஒரு தேசிய இனமாக அமைப்பது அச்சங்கத்தின் நோக்கமாகும். ஒரு நாட்டினுடைய வலிமை அதனுடைய மக்களின் ஒற்றுமையில்தான் அடங்கியிருக்கிறது. ஆகவே மக்கள் தங்களிடம் ஏற்பட்டிருந்த வேறுபாடுகளைக் களைந்துவிட்டு ஒரே இனமாகச் செயற்பட வேண்டும் என்று மாட்சீனீ கூறினார். இத்தாலியில் ஒரு கிராம மக்கள் மற்றொரு கிராம மக்களை அயலாராகக் கருதி வந்த காலத்தில் அவர்கள் அனைவரையும் ஒரு தேசிய இனமாக அமைக்கமுடியும் என்று முதல் முதலில் கற்பனை செய்து பார்த்தவர் மாட்சீனீ யாவார். இத்தாலி ஒரு தேசிய நாடாக மாற விரும்புகிறது. என்றேனும் ஒருநாள் அது தேசிய நாடாக மாறப்போகிறது என்று அழுத்தம் திருத்தமாக முதன்முதலில் அறிவித்தவர் அவரேயாவார். கற்பனையில் தாம் கண்ட ஒன்றுபட்ட இத்தாலியின் உருவத்தை எல்லா மக்களின் இதயங்களிலும் பொறித்து வைக்க இளைய இத்தாலியர் சங்கம் பெரிதும் உதவியது. அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் இத்தாலியத் தேசிய இனத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதாக உறுதிமொழி தந்தனர். அவர்களுடைய எண்ணங்களும் செயல்களும் அந்தக் குறிக்கோளையடையச் செலவிடப்படும் என்றும் உறுப்பினர்கள் உறுதியளித்தனர். இத்தாலி என்ற பெயர் தவிர வேறெந்தப் பெயரிலும் எழுச்சி கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது.

அடுத்தது, இத்தாலியைச் சுதந்திர நாடாக மாற்றி அமைப்பதாகும். அச்சுதந்திரத்திற்கு இடையூறாக நிற்பது ஆசுத்திரிய நாடாகும். ஆகவே அதனுடன் போராட மக்கள் தங்களை ஆயத்தப் படுத்

திக் கொள்ளவேண்டுமேயொழிய அயலாருடைய உதவியை எதிர் பார்க்கக்கூடாது என்பது அறிவிக்கப்பட்டது.

இளைய இத்தாலிய சங்கத்தின் மற்றொரு நோக்கம், இத்தாலியை ஒரு தேசியக் குடியரசாக அமைப்பதாகும். கடவுள் உண்டாக்கிய மக்கள் யாவரும் சுதந்திரமாகவும், சம உரிமை பெற்றவர்களாகவும், உடன்பிறப்பு மனப்பான்மை கொண்டவர்களாகவும் வாழவேண்டும் என்பது கடவுளுடைய ஆணை. அத்தகைய சமத்துவ நிலையைக் குடியரசில் தான் பெறமுடியும். ஆகவே அச்சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கை கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல், குடியரசுத் தத்துவத்தைப் பரப்புவதாகவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அதேநேரத்தில் அக்கொள்கையை மக்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க மாட்சீனீ விரும்பவில்லை. இத்தாலியில் பல முடியரசுகள் நடைமுறையில் இருந்தன. மேலும் பியட்மாண்டின் அரசர் விடுதலை இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டார். ஆகவே குடியரசுக் கோட்பாட்டினை வலியுறுத்துவதன் வாயிலாக இத்தாலிய ஒற்றுமை கைகூடாமற் போகக்கூடாது என்பதனாலும், மக்கள் உரிமையில் தமக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தமையாலும் மாட்சீனீ குடியரசுத் தத்துவத்திற்கு மிகுதியான மதிப்பை அளிக்கவில்லை. நாட்டை ஒற்றுமைப்படுத்திய பிறகு மக்கள் தாங்கள் விரும்பிய ஆட்சியைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று அவர் கூறினார். நாட்டு மக்களுடைய ஒருமித்த முடிவிற்கேற்பத் தனிப்பட்டவர்களுடைய கருத்து மாற வேண்டும் என்ற கோட்பாட்டில் மாட்சீனீ அசையா நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். ஐக்கிய இத்தாலியில் கி. பி. 1871-இல் மன்னராட்சி நிறுவப்பட்டது என்பது ஈண்டுக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும்.

இளைய இத்தாலியர் சங்கம் கூட்டாட்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை. இத்தாலியைச் சுற்றிலும் வலிமை வாய்ந்ததும் பொறாமை நிறைந்ததுமான நாடுகள் இருந்தன. அவற்றை எதிர்கொள்ள ஒரு வலிமையான அரசு தேவைப்பட்டது. ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் நாட்டின் வலிமை குறைந்துவிடும். ஆகவேதான் அச்சங்கம் ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சியை ஆதரித்தது.

இத்தாலியைப் பிணைத்திருந்த அடிமை விலங்கை அகற்றி, அதனை ஒரு தேசிய நாடாக அமைப்பது மட்டும் இளைய இத்தாலியர் சங்கத்தின் நோக்க மன்று. அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு, கல்வியறிவற்ற மக்களின் சமுதாய நிலையை உயர்த்த வேண்டும். அவர்களிடமிருந்து அறியாமையை அகற்றவேண்டும் என்பது அறிவிக்கப்பட்டது. மக்களுடைய ஆன்மிக உணர்வுகளைத் தட்டி எழுப்ப அது முற்பட்டது. அறமுறை சார்ந்த சக்தியாகவும் சமய நிறுவனமாகவும் அது செயற்பட்டது. கடவுட் பற்றுக்கும் மனிதாபிமான உணர்ச்சிக்கும் பெருமதிப்பளிக்கப்பட்டது. சீரழிந்துள்ள இத்தாலியச் சமுதாயத்தை மீட்டுப் பெறுவது மட்டும் அதன் நோக்கமன்று. உலகில் உள்ள எல்லா மக்களையும் சீர்குலைவிலிருந்து காப்பாற்றவேண்டும் என்பதும் அச்சங்கத்தின் நோக்கமாகும். எனவேதான் அச்சங்கத்தின் நோக்கங்களைக் கடவுள், மக்கள், இத்தாலி என்னும் மூன்று சொற்களில் அடக்கிவிடலாம் என்று கூறுகின்றனர். உலக மக்களின் மீட்புப் பணியில் இத்தாலியின் பங்கு எதுவாக அமையவேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இந்த வகையான பணியினைத் தங்கள் நாட்டில் இத்தாலியர்கள் முதலில் தொடங்கி வைக்கவேண்டும். பிறகு அதனை அண்டைநாடுகளில் தொடங்கவேண்டும். அவ்வாறு செய்யின் இத்தாலியின் சிக்கல் உலகச் சிக்கலாக மாறும். அதன் காரணமாக இத்தாலியின் மதிப்பும் உயரும். இத்தாலியை உலக மக்கள் தங்கள் வழிகாட்டியாகக் கொள்வார்கள். பண்டைய காலத்தில் உரோமாபுரி பேரரசின் மையமாகத் திகழ்ந்தது. இடைக் காலத்தில் போப்பின் அதிகாரம் ஐரோப்பா முழுவதும் பரவியபோது, அவர் வாழ்ந்துவந்த உரோமாபுரி மீண்டும் செல்வாக்குப் பெற்றது. இப்போது தன் முயற்சியால் இளைய இத்தாலியர் சங்கம் இத்தாலியர்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டிய பின்னர், ஏனைய மக்களையும் தேசிய சமுதாயங்களாக மாற்றியமைக்க முயற்சி செய்யவேண்டும். அந்தத் தேசிய சமுதாயங்களின் ஒத்துழைப்பைப் பெற்று மனித இனத்தையே இழி நிலையிலிருந்து மீட்க வேண்டும். அவ்வாறு செய்து முடிப்பின் மனித இனம் எல்லையற்ற முன்னேற்றப்பாதையில் சென்று, தெய்வத் தன்மை பொருந்திய ஒரு சமுதாயமாக மாறும். அந்த நிலை ஏற்படும்போது உரோமாபுரி மீண்டும் மனித இனத்தினரிடையே செல்வாக்குப் பெறும் என்பது அச்சங்கத்தின் கருத்தாகும். மேற்கூறியவற்றிலிருந்து இளைய இத்தாலியர் சங்கம் வெறும் அரசியல் நோக்குடன் அமைக்கப்பட்ட சங்கம் அன்று என்பதும், இத்தாலியின் முன்னேற்றத்திற்காக மட்டும் அமைக்கப்பட்ட சங்கம் அன்று என்பதும், மனித இனத்திற்கே மறுவாழ்வு அளிக்க ஏற்படுத்தப்பட்ட சங்கம் என்பதும் தெளிவாகும். அது ஒரு சமய நிறுவனமாகத் திகழ்ந்தது என்று கூறின், அக்கூற்று மிகையாகாது. தி. அர. இரா.

**இளையபெருமாள், மா.**: இவர் 1924-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 29-ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தாழக்குடியில் மாணிக்கவாசகம்பிள்ளை, மாரியம்மாள் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவர் சே. இ. பா. உயர் நிலைப் பள்ளியிலும் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கற்று பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றார். கேரளப் பல்கலைக் கழகத்தில் இவர் டாக்டர் பட்டத்தையும் பெற்றார். கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1954-இல் ஆராய்ச்சி உதவியாளராகச் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுப் பேராசிரியராகி, 1984-இல் ஓய்வு பெற்றார்.

இவர் தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல ஆய்வு நூல்களை இயற்றியுள்ளார். தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் ஆகியவற்றைத் தமிழிலிருந்து மலையாள மொழியிலும், லீலாதிலகம், கேரள பாணினீயம், குண்டர்ட்டின் மலையாள மொழி, நாராயண குரு அடிகளாரின் தேவாரப் பாடல்கள், வள்ளத்தோள் படைப்புகள் ஆகியவற்றை மலையாளத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்த்துள்ளார்.

பாரதீய ஞானபீட விருதுத் தேர்வுக்குழு, தென்னாட்டுப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழு, தமிழ்நாடு அரசுத் தேர்வுக் குழு, திராவிட மொழியியல்கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் போன்றவற்றில் இவர் உறுப்பினராக இருந்தார். அ.அ.

**இளையபெருமாள் பிள்ளை, சொ.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள குறிச்சி என்பதாகும். சொக்கலிங்கம் பிள்ளைக்கு மகனாகத் தோன்றிய இவர், இளமையில் கல்வி பயிலத் தொடங்கி, குறுகிய காலத்தில் நூல் பல பயின்று புலமை மிக்குக் கவிபாடும் திறம் பெற்றுத் திகழ்ந்தார். இவருடைய ஆசிரியர்கள் திருநெல்வேலிக் குறிச்சிக் கந்தசாமி உபாத்தியாயரும் சாந்தப்பக் கவிராயரும் ஆவர் என்னும் செய்தியினை இவர் தாம் இயற்றிய நூலில் கூறியுள்ளார். இவரது புலமையறிந்த அறிஞர் சிலர் தமதூராகிய விட்டிலாபுரத்திற்குத் தல புராணம் முதலியன இயற்ற வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளினை ஏற்று, இவர் விட்டிலாபுரத் தல புராணம், விநாயகர் பதிகம், சுப்பிரமணியர் பதிகம், முத்துமாலையம்மன் பதிகம், அறுபத்து நாற்சீர் ஆசிரிய விருத்தம், முத்தரச குலநாதன் பதிகம் ஆகிய ஆறு நூல்களையும் இயற்றி, அவற்றைத் தக்கவர்கள் அவையில் அரங்கேற்றினார். விட்டிலாபுரம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடாரம் பகுதியில் சாத்தூருக்குக் கிழக்கில் உள்ள ஊராகும். இவ்வூருக்கமைந்த தலபுராணம் விட்டிலாபுரத் தலபுராணமாகும். இது சிறப்புப்பாயிரம், நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், காவேரி நகரச் சருக்கம், தனவைசியர் குலச் சருக்கம், பாத தரிசனம் பெற்ற சருக்கம், மடக்கு மாணிக்கம் கோத்த சருக்கம், தனவைசியர் காவேரி நகரை விட்டு நீங்கிய சருக்கம், திருவவதாரச் சருக்கம், கலங்காத கண்ட பாண்டியனுக்குச் சரப்பளியளித்த சருக்கம், இராமசாமிப் பாண்டியனுக்கு நிரையளித்த சருக்கம், சங்கரவேலுப் பாண்டியனுக்கு மகளளித்த சருக்கம், சிவபூசைச் சருக்கம் எனப் பல சருக்கங்கள் கொண்டு அமைந்துள்ளது.

முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு செய்யுட்களைக் கொண்ட இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறப்புற்றுத் திகழ்கிறது. இதற்கு இந்நூலாசிரியரின் ஆசிரியர்களான சின்ன நட்டாத்தி சாந்தப்பக் கவிராயரும், குறிச்சிக் கந்தசாமி உபாத்தியாயரும் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் பாடியுள்ளனர். இது கி.பி. 1898-ஆம் ஆண்டு மதுரைப் பாண்டியன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

**இளைய மக்கள் தொகை**: ஒரு நாடு தன் மக்கள் தொகையில் குழந்தைகள், குமரப் பருவத்தினர் (Adolescents), இளைஞர்கள் (Young adults) ஆகியோரை மிகுதியாகக் கொண்டிருப்பின், அந்நாட்டை இளைய மக்கள் தொகையைக் கொண்ட நாடு எனலாம். இம் மக்கள்தொகை குறைவான இடைநிலை வயதைக் (Median age) கொண்டு வளரக்கூடிய ஆற்றல் மிக்கதாயிருக்கும்.

மக்கள் தொகையில் குழந்தைகளின் விகிதம் குறைவாகவும் முதியோர் விகிதம் மிகுதியாகவும் இருப்பின் இம் மக்கள்தொகை முதிய மக்கள் தொகை எனப்படுகிறது. இந்தியா, எகிப்து, சீனா முதலான வரலாற்றுத் தொன்மையுடைய நாடுகள் இளைய மக்களை மிகுதியாகப் பெற்றுத் திகழ்கின்றன. இங்கிலாந்து, பிரான்சு, இசுவீடன் (Sweden), அமெரிக்கா போன்றவை முதிய மக்களை மிகுதியாகக் கொண்டுள்ளன.

**இளையான்குடிச் செப்பேடு** இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான் குடியில் தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் கண்டெடுத்த

செப்பேடாகும். இச்செப்பேடு இவ்வூரிலுள்ள இராச பட்டர் என்பவரிடமிருந்து பெறப்பட்டது. இச்செப் பேடு 11.3 அங்குல நீளமும் 6.9 அங்குல அகலமும் உடையது. விசயரகுநாத பெரிய உடையார் தேவர் என்பவர் இச்செப்பேட்டைக் கைலாச நம்பி யார் மகன் சுப்பிரமணிய நம்பியாருக்கு கி.பி. 1733–இல் வழங்கினார். திருக்கை நாட்டு இந்திரா அவதார நல்லூரான இளையான்குடியில் உள்ள இராசேந்திர சோழீசுவரர் கோயிலிலும், மனம் மகிழீசுவரர் கோயிலிலும் பூசனையும் நைவேத்திய மும் செய்வதற்குத் திருவுடையாபுரம் என்னும் ஊரினைக் கொடையாகச் சுப்பிரமணிய நம்பியா ருக்கு வழங்கியதைத் குறிப்பதே இச்செப்பேடு. இச் செப்பேட்டில் இவ்வூர் ‘துகவூர்க் கூற்றத்தில் காடர் திருக்கை நாட்டில் இந்திராவதார நல்லூரான இளையான்குடி’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால், இவ்வூரிலுள்ள கல்வெட்டுகளோ இதனை ‘வடவல்லத் திருக்கை இளையான்குடியான இந்திரா வதார நல்லூர்’ என்று குறிப்பிடுகின்றன. இச்செப் பேட்டினைக் கொண்டு விசய ரகுநாத உடையார் ஈழ நாட்டையும் கொங்கு நாட்டையும் இசுலாமி யரையும் வென்ற, சேதுவம்சத்தைச் சேர்ந்தவர் என்பதனை அறியலாம். ம.இரா.த.

**இளையான்குடி மாற நாயனார்** பெரிய புராணத்தில் சிறப்பிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். பெரிய புராணத்தில் இவரது வரலாறு கூறும் பகுதி 27 பாடல்கள் கொண்டமைந்துள்ளது. இவர் வரலாறு, ‘அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க்கு அமுது படைக்கும்’ திருத்தொண்டின் பெருமையை உணர்த்துகிறது.

இவ்வடியவர் வாய்மை தவறாத குலத்தில் அக் குலம் செய் தவத்தால் தோன்றினார்; ஏர்த் தொழிலால் வளம் பெருக்கி, எல்லையில்லாச் செல் வம் படைத்தார்; அச்செல்வத்தை அடியார்க்கு அமுதூட்டப் பயன்படுத்தினார். இவர் சிவனடியார் யாவராயினும் அவரை அன்புடன் வரவேற்றுக் கை கூப்பித் தொழுது இனிய முகமன் கூறுவார்; மனைக் குள் அழைத்துச் சென்று, திருவடிகளை விளக்கி, நல்லாசனத்திடை இருத்தி, அறுசுவை உணவினைப் படைப்பார். செல்வச் செழுமையின் காரணமாக இவர் குபேரன் எனச் சிறப்புடன் வாழ்ந்தார்.

செல்வம் மேவிய காலத்தில் இத்தகைய தொண்டு செய்வது எளிது. அல்லல் நல்குரவினை அடைந்த போதும் இத்தொண்டினைத் தொடர்ந்து செய்யும் வல்லமை உடையார் இவர் என உலகிற்கு அறிவிக்கச் சிவபெருமான் திருவுள்ளத் தெண்ணினார். அத னால், நீடிய செல்வம் மெல்ல மறைந்தது. செல்வ வளம் சுருங்கியபோதும், வழங்கும் மனம் சுருங்காத இளையான்குடி மாறனார் தக்காரிடம் கடன் பெற்றும்சிவத்தொண்டினைத் தொடர்ந்தார். இவரது பெருமையை உலகத்தார்க்கு உணர்த்த இறைவன் நற்றவ வேடங்கொண்டு வந்தான்.

மாரிக்காலத்து இரவில் வந்த தவ வேடத்தி னரை இளையான்குடி மாறனார் பண்புற எதிர் கொண்டார். மழை பெய்து கொண்டிருந்தது. மாறனார் வந்த விருந்தினரின் ஈரமேனியைத் துடைத்தார்; மனைவியிடம் அடியார் அமுதுண்ணச் செய்யவேண்டும் என்றார். தமக்குணவில்லை யாயி னும் அடியாரை உண்பிக்கும் கடமை அவர்களின் முன் நின்றது. வீட்டிலும் உணவில்லை. கடன் தரு வாரும் இலர். வேறு எங்கும் செல்லவும் இயலாத மாரிக்கால இரவு. ஆகவே பகலில் வயலில் வித்திய செந்நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அமுதாக்க லாம் என மாறனார் மனைவி கூறினார்.

நள்ளிருள் வேளை. காரிருட் கணம் கட்டுவிட்டு உருகுவது போல உலகம் இருண்டு கிடந்தது. புள்ளும் உறங்கும் அவ்வேளை வள்ளல் மாறனார் தம் வயலை அடைந்தார். முன்பெல்லாம் சென்ற பயிற்சி யினால் காலினால் தடவிச் சென்று, கைகளால் அரிதின் முயன்று சாலிவெண் நெல்லை அரிதின் கொணர்ந்தார். மனைவியார் சேறுநீங்க அதனைக் கழுவி எடுத்தார். செந்தழல் மூட்ட விறகில்லை. வீட்டின் முற்றத்தே இருந்து முறித்தவற்றை விற காக்கி இன்னடிசில் ஆக்கினார். கறியமுது வேண்டும் எனக் கருதிப் பாசக் குழி முதல் பறிப்பார் போலப் பல்வேறு பயிர்களைப் பறித்தார். மனமகிழ் கறி களை மனைவியார் ஆக்கித்தர, இணையிலாத் தவ முடையாரை அமுது செய்விப்போம் என எண்ணி, உறங்கும் அடியவரை எழுப்பச் சென்றார். அடியவர் உரை கேட்ட இறைவன் சோதி வடிவாகத் தோன்றி னான். ஏலவார் குழலியொடு இடப வாகனத்தில் தோன்றிய இறைவன், ‘அன்பனே நீ என்பெரும் உல கம் எய்துவாய். இருநிதிக் கிழவன் எனச் சிறப்புறு வாய்’ என வாழ்த்தி அருளினான்.

பெரிய புராணப் பதிப்பாசிரியராகிய ஆறுமுக நாவலர் இவரது புராணத்தைப் பற்றித் தம் கருத்தா கப் பின்வருமாறு கூறியுள்ளார். ‘சிவபூசையிலும் சிறந்தது மகேசுர பூசை. இத்துணைப் பெருஞ் சிறப்பானதாகிய மகேசுர பூசையை எந்நாளும் சிறிதாயினும் தவறாது சிவாகம விதிப்படி மெய்யன் போடு செய்தமையால் பெருஞ்சிறப்புற்றவர் இவ் விளையான்குடி மாற நாயனார். தாம் நல்லோர்க்கு

வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின் பொருட்டே என்பதையும், அந்நயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியம் செய்த எமக்குக் கடவுள் இடர் தந்தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும் சர் வான்மாக்களும் உணர்ந்து உய்யும் பொருட்டுப் பரம சிவன் இவர்கட்கு வறுமையைக் கொடுத்து இவர் களது செயற்கரும் செய்கையை வெளிப்படுத்தினார்.

ஜி.ஆர்.கி.

**இளையோர் உளவியல்**: மனிதர்களின் வளர்ச்சிப்பருவங்களுள் 12 வயது முதல் 20 வயது வரையிலான நிலை இளையோர் பருவம் (Adolescence) எனப்படும். இப்பருவத்தில் இளையோரிடையே காணப்படும் நடத்தைகளின் காரணங்களை ஆராய்ந்து அவற்றுக்கான விளக்கங்களைக் கொடுக் கும் உளவியல் துறை இளையோர் உளவியல் (Ado lescent Psychology) எனப்படும். இளையோர் பரு வத்தைப் பூப்புநிலை, இளநிலை இளையோர் பருவம், முதுநிலை இளையோர் பருவம் என மூன்று நிலை களாகப் பிரித்து ஆராய்தல் வேண்டும். பூப்புநிலை என்பது 12 வயது முதல் 14 வயது வரையிலும், இள நிலை இளையோர் பருவம் என்பது 15 வயது முதல் 17 வயது வரையிலும், முதுநிலை இளையோர் பரு வம் என்பது 18 வயது முதல் 20 வரையிலும் நீடிக் கின்றன. இந்நிலைகள் இருபாலாருக்கும் ஒரே வகை யாக அமைந்த போதிலும், வயது அடிப்படையில் ஒரு சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பூப்பு நிலையை ஆணைவிடப் பெண் விரைவில் எய்து கிறாள். மனவெழுச்சி முதிர்ச்சி நிலையையும் ஆணை விடப் பெண் விரைவிலும் மாறுபட்ட வகையிலும் அடைகிறாள்.

இளையோர் பருவத்தின் அடிப்படை உளவியற் கூறுகள் பூப்பு நிலையிலேயே இளையோரிடம் காணப் படுவதால், இளையோர் உளவியலைப்பற்றித் தெளிந்த அறிவு பெறுவதற்குப் பூப்புநிலை பற்றிய அறிவு தேவைப்படுகிறது. இளையோர் பருவம் வயது வந்தோர் பருவத்திற்கும் குழந்தைப் பருவத்திற்கும் இடைப்பட்ட மாறும் காலம் ஆகும். இப் பருவத்தில் இளையோர் குழந்தையாகக் கருதப்படுவதில்லை; பெரியவனாகவும் கருதப்படுவதில்லை. வயதுவந்தோ ரைப் போல் எல்லா வகைகளிலும் இளையோர் நடந்து கொண்டால் அதனைச் சமூகம் ஏற்பதில்லை. இதனால் இளையோரிடம் உளமுரண்பாடும் போராட்டமும் தோன்றுகின்றன.

பூப்பு நிலையின் தொடக்கத்தில் 'பூப்பு வயதை யடைந்த குழந்தை' எனக் குறிப்பிடப்படும் இளை யோன் பால் உறுப்புகள் முழுமையாக வளர்ச்சி யடைந்த பிறகு 'இளநிலை இளையோன்' என்று குறிப் பிடப்படுகிறான். பூப்புப்பருவத்தில் இளையோனிடம் ஏற்படும் மாறுதல்கள் மிக விரைவாக ஏற்படுகின் றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்க் குழந்தையாக இருந்தவன் திடுமென வளர்ந்து இளையோனாகக் காட்சியளிக்கிறான். பூப்புநிலையின் முழுமையான வளர்ச்சி பெண்ணுக்கு விரைவாக ஏற்பட்டு விடு கிறது. பூப்பு நிலையைக் கீழ்க்கண்ட மூன்று பகுதி களாகப் பிரிக்கலாம்.

குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவத் திற்கு வரும் நிலை 'முன்பூப்பு நிலை' எனப்படும். இந்நிலையில் குழந்தையாக இருந்தவனிடம் இரண் டாந்தரப் பாலியல்புகள் வளர்ச்சியடைகின்றன. ஆனால், பால் உறுப்புகள் வளர்ச்சி அடைவதில்லை. இதற்கு அடுத்த நிலை 'பூப்புநிலை' எனப்படும். இந் நிலையில் பால் உறுப்புகளின் வளர்ச்சி ஏற்படுகிறது. பெண் மாதவிலக்கு அடைகிறாள். ஆணிடம் உறக் கத்தில் அல்லது இரவில் விந்து வெளிப்படும் நிலை ஏற்படுகிறது. இத்துடன் ஆண்பெண் இருவரிடமும் இரண்டாந்தரப் பாலியல்புகள் மேலும் வளர்ச்சி யடைகின்றன. இந்த இயல்புகளின் வளர்ச்சி ஆண் பெண் இருபாலாரின் உடலிலும் வெளித்தோற்ற மாறு தல்களை ஏற்படுத்துகிறது. பாலுறுப்புகளில் பால் அணுக்கள் தோன்றுகின்றன. முழுமையான பாலியல்பு வளர்ச்சியும் பால்உறுப்பு வளர்ச்சியும் ஏற்பட்ட பின், இளையோன் பூப்புநிலையிலிருந்து இளமைப்பரு வத்தில் அடியெடுத்து வைக்கத் தயாராக இருக்கி றான். இந்நிலை 'பின்பூப்பு நிலை' எனப்படுகிறது. இம் மூன்று பருவங்களும் இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஏற்பட்டு விடுகின்றன. பூப்பு நிலை யில் பெண் தன் உடலிலும் உடையிலும் ஏற்படும் மாறுதல்களை உணர்கிறாள். சமூகத்தில் முன்போலத் தான் குழந்தையாகக் கருதப்படுவதில்லை என்ற உணர்வும் ஏற்படுகிறது. பெற்றோர் தனது குழந் தைப் பருவத்தில் தன்னுடன் பழகிய முறையில் இப் பொழுது பழகுவதில்லை என்பதையும், தன் தம்பி தங்கைளும் இப்பொழுது தன்னிடம் முன்பிருந்ததைக் காட்டிலும் வேறுபாடான முறையில் பழகுவதையும், குடும்பத்தில் சிறியவர்களுக்கு என விதிக்கப்பட்டிருக் கும் கட்டுப்பாடுகள் தனக்குப் பொருந்துவதில்லை என்பதையும் அப்பெண் உணர்ந்து கொள்கிறாள். உடலில் இருக்கும் நாளமிலாச் சுரப்பிகளே பெண் பூப்பு நிலையை அடைவதற்குக் காரணமாக இருக் கின்றன. பூப்பு நிலை தொடங்குவதற்கு ஐந்து ஆண்டு களுக்கு முன்னரே உடலில் இயக்குநீர் (Hormones) சுரக்கத் தொடங்குகின்றது. பூப்பு நிலையில் இது

மிகுதியாகச் சுரக்கின்றது. மூளையில் இருக்கும் மூளை யடிச் (Pituitary gland)சுரப்பியும் பால் சுரப்பிகளுமே ஆண்பெண் இருவரிடமும் பால் இயல்புகளைத் தோற்றுவித்துப் பாலுறுப்புகளையும் வளர்ச்சியடை யச் செய்கின்றன. மூளையடிச் சுரப்பி இருவகை யான இயக்குநீரினைச் சுரக்கின்றது. வளர்ச்சிக்குரிய இயக்குநீர் குழந்தையின் உடல், உயரம், பருமன் ஆகியவற்றுக்கு உதவி செய்கின்றது.

பால் இயக்குநீர் பாலுறுப்புகளை வளரச் செய்து பெண்ணைப் பூப்புநிலைக்குக் கொண்டு வருகின்றது. பாலுறுப்புகளின் வளர்ச்சிக்கு அடிமூளைச் சுரப்பி தூண்டுகோலாக இருக்கிறது. பாலுறுப்புகளின் செயல்நிலைக்கும் அடிமூளைச்சுரப்பிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களின் காரண மாகவும், மூளையில் ஏற்படும் காயத்தின் காரண மாகவும் அடிமூளைச் சுரப்பி பாதிக்கப்படலாம். அடி மூளைச் சுரப்பி பால்சுரப்பிகளுக்குத் தேவையான இயக்கு நீரினை இனப்பெருக்கப்பருவம் முழுவதும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. முதுமையில் இந்த உற்பத்தி நின்றுவிடுகிறது. பூப்புப்பருவத்தில் ஆண் பெண் ஆகிய இருபாலாரும் பெரும்பாலும் தனிமையை நாடுகின்றனர். தம் உடலில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றி மற்றவருடன் உரையாட விரும்புவதில்லை. இப்பருவத்தில் ஆண் தன் உடல் மீது ஆராய்வூக்கம் கொண்டிருப்பதாலும் நண்பர் களின் உறவு காரணத்தாலும் தற்பால் நடத்தையில் ஈடுபடுகிறான். இதுவரையில் தனக்கு மனமகிழ்வு தந்த குழந்தை விளையாட்டுகளை வெறுக்கிறான். மனவெழுச்சி வயப்படுகிறான். இதன் காரணமாகப் பூப்புப் பருவத்தில் இளையோர் பள்ளிப் பாடத்தில் ஈடுபாடற்றவராகக் காணப்படுகின்றனர். அவர் களுடைய மதிப்பெண்களும் குறைகின்றன. இந்நிலை சிறிதுகாலம் மட்டுமே நீடிக்கிறது. உடலில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு நடை உடைகளை மாற்றியமைக்க முடியாமல் தொல்லைக்குள்ளாகின்ற னர். பூப்புப்பருவத்தில் இளையோரிடம் எதிர்மறை இயல்பு காணப்படுகிறது. மற்றவர்களைக் கடுமை யான சொற்களால் தாக்குவதும் பெரியோரிடம் கீழ்ப்படியாமையும் இப்பருவத்தினரிடம் காணலாம். இனம் புரியாத மனக்கவலை, தவிப்பு, முன்கோபம், சோர்வு ஆகிய மனநிலைகளை இவர்களிடம் காண லாம். எளிய வினாக்களுக்கும் எரிந்து விழுகின்றனர். மனவெழுச்சி வயப்பட்டவராக இருக்கின்றனர். எளிதில் துயர்வயப்படுகின்றனர். தன்னம்பிக்கை இழக்கின்றனர். மற்ற எல்லாப் பருவத்தினரைக் காட்டிலும் பூப்புப் பருவத்தினர் மிகுதியான கூச்சம் உடையவராக இருக்கின்றனர். குறிப்பாக மற்றவர் கள் முன்னிலையில் தம் உடையைக் கழற்றவோ தம் உடலின் பகுதிகளை வெளிக்காட்டவோ உறுதியாக மறுக்கின்றனர். தம் உடல் தோற்றத்தைப் பற்றி மற்றவர்கள் ஏதேனும் சுட்டிக்காட்டி விடுவரோ என்று அஞ்சுகின்றனர்.

பூப்புப்பருவத்தினரை விரைவில் பூப்பு எய்துபவர், உரிய காலத்தில் பூப்புஎய்துபவர், மெதுவாகப் பூப்பு எய்துபவர் என மூன்று வகையினராகப் பிரிக்கலாம். இவ் வகையினருள் முதல், கடை வகையினர் தம் ஒப் பாருடன் பொருத்தப்பாடின்றி அல்லற்படுகின்றனர். ஒப்பார் குழுவில் பெரும்பாலானவர்கள் உடல் வளர்ச்சியின்றி இளமைப்பருவம் எய்தாமல் இருக்கும் பொழுது, ஒருவன் மட்டும் வளர்ச்சியடைந்து இரண் டாந்தரப் பாலியல்புகளும் கரகரத்த குரலும் கொண்டவனாக இருந்தால் அவனை அக்குழுவினர் ஏற்பதில்லை. அவன் வளர்ந்துவிட்ட 'தந்தை' என்று கேலிப் பெயர் சூட்டப்படுகிறான். மற்றப் பையன்கள் இவனைத் தம் விளையாட்டில் சேர்த்துக் கொள்வ தில்லை. இதனைப் போன்றே மெதுவாகப் பூப்பு எய்துபவன் தன் ஒப்பார் குழுவில் எல்லோரும் வளர்ச்சியடைந்த இளையோராக இருக்கும் பொழுது, தான் மட்டும் வளர்ச்சியடையாத சிறிய உடலும் மெல்லிய குரலும் கொண்டவனாக இருப்பதை உணர்ந்து மற்றவர்களிடமிருந்து ஒதுங்குகிறான். மற்றவர்களுடன் சேர்ந்து அவன் விளையாட விரும்பி னாலும் குழுவினர் அவனை ஏற்றுக்கொள்வதில்லை அவனுக்குப் 'பொடியன்' என்ற கேலிப் பெயர் சூட்டப்படுகிறது. விரைவில் பூப்பு எய்தும் பெண்ணும் மெதுவாக அல்லது காலம் தாழ்ந்து பூப்பு எய்தும் பெண்ணும் இத்தகைய சூழ்நிலைக்கு ஆளாகின்றனர் பூப்புப் பருவம் நிறைவு பெற்றபின், பெண் தன் உடல் அமைப்பு, முகத்தோற்றம் இவை குறித்துப் பெருமளவு அக்கறை கொள்கிறாள். இப்பருவத்தில் ஏற்படும் பிறழ்வுகள் இருபாலாரையும் வாழ்நாள் முழுவதும் பாதிக்கின்றன. நாளமிலாச் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகள், உயிர்ப்பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), 'அடிசன்' நோய் (Addisons Disease), 'ஆல்செமியர்' நோய் (Alzemiers Disease) போன்ற உடற்கூறுகளால் பூப்புப் பருவத்தில் தக்க வளர்ச்சி ஏற்படாமல் போவதுண்டு. இத்தகைய நிலை இளையோருக்குப் பெரும் போராட்டம் நிறைந்த காலமாக இருக்கிறது. மேலும், இளையோர் பூப்புப்பருவத்தில் பால் உறவு, பால் உந்து போன் றவை பற்றித் தகுந்த முறையில் அறிவு பெறவேண் டும். இத்தகைய அறிவு அவர்களைத் தம் பருவ மாற் றத்தினை நல்ல முறையில் ஏற்று வாழ்வதற்குத் தயா

ராக்குகிறது. இதற்கு மாறாகப் பூப்புப் பருவத்தில் தீயவர்களுடன் தொடர்பு, தகாத முறையில் பால் உறவு பற்றிய அறிவு, கற்பழிப்பு, தற்பால் நடத்தை, பெரியோர்களின் ஏற்பிலாமை, பெற்றோரின் வெறுப்பு தகாத பால்உறவு போன்றவை ஏற்படின் இளையோர் மனவெழுச்சிச் சமநிலையை இழக்கின்றனர். அவர்களுடைய ஆளுமை வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்படுகிறது. தம்மைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் இளையோரிடையே இழிவான எண்ணம் உருவாகிறது. இதுவே பிறழ்வு நடத்தை, குற்ற நடத்தை, போதை மருந்துப் பழக்கம் ஆகியவற்றுக்குக் காரணமாகிறது. ஆதலின் பூப்புப் பருவத்தில் இரு பாலாருக்கும் பெற்றோரின் அன்பும் பாதுகாப்பும் தேவைப்படுகின்றன. அவர்களுக்குக் காப்புணர்ச்சி ஏற்பட்டால் பூப்புக் கால உளப்போராட்டங்களை வென்று, இளமைப் பருவத்திற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்கின்றனர். அவ்வாறு இல்லையென்றால் இருபாலாரும் தமக்கெனச் சமூகம் வைத்திருக்கும் பொறுப்புகளை ஏற்க இயலாதவராகின்றனர். பெண் தன்னுடைய சமூகப்பங்கு என்ன என்பதையும் ஆண் தன்னுடய சமூகப்பங்கு என்ன என்பதையும் அறிந்து நடப்பதற்குப் பூப்புக்கால மனவெழுச்சிச் சமநிலை இன்றியமையாததாகும்.

**இளையோர் பருவம்:** பூப்புநிலை நிறைவு பெற்றபின் இளையோன் இளமைப் பருவத்திற்கு வருகிறான். இளையோர் பருவம் பல சிக்கல்கள் நிறைந்தது. இப்பருவத்தில் இளையோன் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் சமுதாயத்திலும் தன் பங்கு என்ன என்பதைத் தேடுகிறான். இப்பருவத்தில் அவர்கள் பல எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. தாம் அடையும் கல்வி தம் வாழ்க்கைக்கு ஏற்றதா, தமக்கு வேலைவாய்ப்பு உள்ளதா, எத்தனை ஆண்டுகள் வேலைக்காக அலையவேண்டும், எங்கு வேலை கிடைக்கும், எப்படி வாழ்க்கை அமையும் என்பன போன்ற பல்வேறு உளப்போராட்டங்கள் அவர்களை எப்பொழுதும் வாட்டுகின்றன. இவற்றையன்றி, இளையோர் பொறுப்பில்லாதவர், குற்ற நடத்தைகளில் ஈடுபடக் கூடியவர், ஆரவாரம் மிக்கவர், ஆழ்ந்த சிந்தனையற்றவர் என்பன போன்ற பட்டப்பெயர்கள் அவர்களுக்குப் பெரியவர்களால் இடப்படுகின்றன. இத்தகைய பெயருக்கு ஏற்ற நடத்தைகளில் ஈடுபடாமல் நல்ல பெயரை அடைய வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உள்ளது. மிகச் சிறிய அளவில் கீழ்ப்படியாமை, எதிர்மறை இயல்பு, ஆரவாரம் ஆகியவை இவர்களிடம் காணப்பட்டாலும் இவர்கள் சமூகத்தினரால் பல்வேறு வகைகளில் பெயரிடப்படுகின்றனர்.

மேலும், இளையோர் பருவத்தில் உடல் வளர்ச்சி காரணமாக மிகுதியான உடல் திறனும் ஊக்கமும் இளையோரிடம் காணப்படுகின்றன. இத்திறன்கள் நன்கு செலவிடப்படுவதற்கான நல்ல வடிகால்களைக் கல்வி நிலையங்களும் சமூகமும் குடும்பமும் அமைத்துக் கொடுக்கவேண்டும். அதற்கு மாறாக, இளையோரின் திறமைகளும் தகுந்த வடிகால்களின்றித் தேங்கிக் கிடக்கின்றன. உள்ளார்ந்த திறன்கள் தேங்கிக் கிடப்பதால் அவை ஆழ்மன ஒடுக்கல்களாகவும் மனக்குலைவுகளாகவும் வன்முறைகளாகவும் உருவெடுக்கின்றன. இவையே இளைஞர் சமுதாயத்தினரிடையே காணப்படும் அமைதியின்மைக்குக் காரணமாகின்றன. இப்பருவத்தில் இளையோர் தாம் கற்ற ஒழுங்குமுறைகளுக்கும் நடைமுறையில் காணப்படும் ஒழுங்கு, உண்மை, நீதி ஆகியவையற்ற சமூக நிலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைக் கண்டு திகைக்கின்றனர். பின்னர்த் தாமும் இத்தகைய சமுதாயச் சூழலில் ஒரு மனிதனாக இயங்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற துணிவை அடைகின்றனர்.

இளையோர் பருவத்தில் அடையும் ஆளுமைச் சமநிலையும் காப்புணர்வுமே அவர்களை அறநெறியும், ஒழுங்குணர்வும், கட்டுப்பாடும், பொறுப்பும் ஒருங்கமையப் பெற்ற பொறுப்பான மக்களாக உருவாக்குகின்றன.

இளையோர் பருவத்தில் ஒப்பார் குழுவின் தாக்கம் பெருமளவில் இளையோனால் உணரப்படுகிறது. இளையோன் உடை, முடியலங்காரம், காலணி, பேச்சுமுறை, பொழுதுபோக்குகள், படிக்கும் நூல்கள், பார்க்கும் திரைப்படங்கள் யாவும் ஒப்பார் குழுவினருடன் இயைபு கொண்டே அமைகின்றன. பூப்பு நிலையில் இருந்த தனிமை மாறுகிறது. குழந்தைப் பருவத்திலிருந்த கூட்டக்குழு மாறி இரண்டு மூன்றுபேர்கள் அடங்கிய சிறிய ஒப்பார் குழு உருவெடுக்கிறது. இளையோரிடம் சமூக எதிர்ப்பு இயல்பும் வன்முறையும் காணப்பட்ட போதிலும், அவர்கள் சமூக ஏற்புடைமையைப் பெரிதும் விரும்புகின்றனர். குழந்தைப்பருவத்தில் பொருளாதார நிலைக்குச் சிறப்பாகக் கவனம் செலுத்தாமல், கூட்டக் குழுவில் வறியர், செல்வர் ஆகிய எல்லாக் குழந்தைகளும் இடம் பெறுகின்றனர். ஆனால், இளையோன்றன் ஒப்பார் குழுவில் விருப்பு வெறுப்புகளுக்கும், பொழுது போக்குகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இளையோர் குழுவினருள் மிகுந்த ஒற்றுமையும் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மையும் மிகுந்து காணப்படுகின்றன. தம் உடைமைகளைப் பங்கிட்டு அனுபவிக்கின்றனர். சுற்றுலாச்

செல்லும் பொழுதும் கல்வி நிலையங்களிலும் உணவு வேளையிலும் தம் உணவை மற்றவருடன் தாராள மாகத் தன்னலமின்றிப் பகிர்ந்து கொள்கின்றனர். இவர்களிடையே தலைவர்கள் தாமே உருவாகின்ற னர். பொதுவாக, இளைஞர் குழுத் தலைவன் பொருளாதார வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறான்.

ஆசிரியர்கள் மீது மதிப்பு, பெரியோர் மீது மரி யாதை, சமய ஈடுபாடு போன்ற உணர்வுகள் இக் குழுக்களிலேயே உருவாகின்றன. ஆதலின் இளை யோர் பருவத்தில் குழுக்களின் செல்வாக்குக் காரண மாக நன்னடத்தையோ தகாத நடத்தையோ உரு வாகலாம். எத்தகைய நடத்தை உருவாகிறது என் பது இளையோன் எத்தகைய குழுவில் சேர்ந்திருக் கிறான் என்பதைப் பொறுத்திருக்கிறது. எத்தகைய குழுவில் இளையோன் சேருகிறான் என்பது இளை யோனுக்குத் தன் குடும்பத்தில் எந்த அளவுக்கு அன் பும் சுதந்திரமும் கட்டுப்பாடும் பாதுகாப்புணர்ச்சி யும் தரப்படுகின்றன என்பதைப் பொறுத்திருக்கிறது. மிகுதியான கட்டுப்பாடு, சுதந்திரமின்மை, அன்பி லாமை, வெறுப்பு, ஏற்பிலாமை, குடும்பச் சண்டை, பெற்றோரிடையே மனவேறுபாடு, எந்த நேரத்திலும் இளையோனிடம் குற்றம் காணும் பெற்றோர் மனப் பாங்கு, ஒப்பார் குழுவினரின் முன் இளையோனை இகழ்ச்சியாகப் பேசுதல், ஒப்பார் குழுவினர் எவரே னும் வீட்டிற்கு வந்தால் அவனை இகழ்ச்சிப் படுத் தல், இளையோனின் உடல் தோற்றத்தை இகழ்ந்து கூறல், இளையோனின் பிறப்புப் பற்றிய முறைகேட் டைச் சுட்டிக்காட்டுதல், பெற்றோரின் குற்ற நடத்தை, குடிப்பழக்கம் போன்ற பல்வேறு காரணங் களால் இளையோன் குற்றக்குழுவில் சேர்ந்து விட வும்கூடும். இதன் விளைவாக இளையோன் குடிப் பழக்கம், போதைப்பொருள் பழக்கம், தற்பால் நடத்தை போன்ற தீய வழிகளில் ஈடுபடுகிறான்.

இளையோர் பருவத்தில் அறநெறி பற்றிய வன் மையான கருத்துகள் உருவாகின்றன. சட்டமும் சமூகமும் எவற்றை ஏற்புடையன என்று குறிப்பிடு கின்றனவோ அச்செயல்களைத் தாமும் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் தமக்கெனத் தனிப்பட்ட அறநெறி ஒழுக்கங்களை அமைத்துக் கொள்கின்ற னர்.

துணை நூல்:

**Hurlock Elizabeth**, Developmental Psychology, Tata McGraw Hill, New Delhi, 1980.

**இறக்க விதி**: இசுலாமியச் சட்டத்தில் ஒருவர் உயில் எழுதி வைக்காமல் இறந்துவிடும் போது அவர் சொத்துகள் இசுலாமிய வாரிசுரிமைச் சட்டப்படி வாரிசுகள், பங்குதாரர்கள், எஞ்சியவர்கள், தூரத்து உறவினர்கள் ஆகியோரைச் சென்றடையும். பங்கு தாரர்கட்குக் குறிப்பிட்ட பங்கு போக எஞ்சியுள்ளது எஞ்சியவர்களுக்குக் கொடுக்கப்படும். எஞ்சியவர்கள் இல்லாதபோது எஞ்சியுள்ளது மூன்றாம் வகுப்பின ரான தூரத்து உறவினருக்குச் செல்லாமல் பங்குதார ருக்குஅவரது பங்கின் விகிதப்படி பிரித்துக்கொடுக்கப் படும். இவ்வாறு எஞ்சியுள்ளது பங்குதாரரையே மீண்டும் வந்தடைவது இறக்க விதிக் கொள்கை (Doctrine of Return) எனப்படுகிறது. இதனை மீட்டளிப்புக் கொள்கை எனவும் கூறலாம்.

இசுலாமியச் சுன்னிப் பிரிவுச் சட்டப்படி இறக்க விதிக்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அதன்படி கணவன் அல்லது மனைவிக்கு மீட்டளிப்பில் பங்கு கிடையாது. காரணம், அவர்கள் திருமணத்தினால் உறவினர்கள்; அவர்களையன்றி ஏனைய பங்குதாரரும் இறக்கவிதி யில் பங்கு கொள்வர்.

எடுத்துக்காட்டு: 1. ஒரு முசுலிம் பெண் தன் கணவன், மகள் இருவரையும் விட்டு விட்டு இறக்கும் போது பங்கு விகிதம் அடியிற்கண்டவாறு அமையும்.

கணவன் = 1/4 பங்கு

மகள் = 1/2. மிஞ்சிய 1/4 பங்கும் சேர்த்து = 3/4 பங்கு

2. ஒரு முசுலிம் ஆண் தன் விதவை, உடன்பிறந் தாள் இருவரையும் விட்டு விட்டு இறந்து விடும் போது அவர்களின் பங்கு விகிதம் அடியிற் கண்ட வாறு அமையும்.

விதவை = 1/4 பங்கு

உடன் பிறந்தாள் = 1/2

மிஞ்சிய 1/4 பங்கும் சேர்த்து = 3/4 பங்கு

3. ஒரு முசுலிம் தன் தந்தை, தாய், மகள் மூவ ரையும் விட்டுவிட்டு இறந்து விடும்போது, அவர்களின் பங்கு விகிதம் அடியிற்கண்டவாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| தந்தை | = 1/6 | இறக்கவிதிப்படி | = 1/5 |
| தாய் | = 1/6 | இறக்கவிதிப்படி | = 1/5 |
| மகள் | = 3/6 அல்லது 1/2 | இறக்கவிதிப்படி | = 3/5 |
| | 5/6 | | 5/5 |

சியாச் சட்டப்படி இறக்கவிதிக்கு மூன்று விதி விலக்குகள் உண்டு. அவை: 1. கணவன் அல்லது விதவை மீட்டளிப்பில் பங்கு பெற மாட்டார்கள். 2. தந்தை, மகள் ஆகியோரோடு இரு உடன் பிறந்த சகோதரர்கள் அல்லது ஒரு சகோதரன், இரு சகோதரிகள் அல்லது நான்கு சகோதரிகள் இருந்தால், தாய் மீட்டளிப்பில் பங்கு பெற மாட்டாள். 3. உடன் பிறந்த சகோதரியிருந்தால் தாய்வழிச் சகோதர சகோதரிகட்கு மீட்டளிப்பில் பங்கு கிடையாது.

இ.ப.

**இறக்கும் தறுவாய் நன்கொடை**: எவ்வித மறுபயனையும் எதிர்நோக்காமல் ஒருவர் மற்றொருவருக்குத் தன் பொருளைக் கொடுக்கும் செயல், அதாவது சொத்துரிமை மாற்றம் நன்கொடை என்று சொல்லப்படுகிறது. நன்கொடைப் பொருள் அசையும் அல்லது அசையாப் பொருளாக இருக்கலாம். நோயுற்ற ஒருவர் தன் இறுதிக் காலத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் செய்யும் நன்கொடையை உராமானியச்சட்டம் 'இறக்குந் தறுவாய் நன்கொடை' (Donatio Mortis Causa) என்று குறிப்பிடுகிறது. அதை இசுலாமியச் சட்டம் மர்சுல் மாத்து (Marz-Ul-Maut) என்று குறிப்பிடுகிறது. அவ்வாறான நன்கொடைக்கு இக்கட்டுரையில் இறக்கும் தறுவாய் நன்கொடை என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

சொத்துரிமை மாற்றல் தொடர்பான சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) கி.பி. 1882-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்டது. இந்தியாவில் சொத்துரிமை மாற்றம் இச்சட்டப்படிதான் நடைபெற வேண்டும். உரிமை வயது அடைந்தவனும் நல்ல மனநிலையிலுள்ளவனும் இச்சட்டத்தின்படி தன் அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் நன்கொடையாக அளிக்கலாம். உரிமை வயது என்பது 18 வயதுநிறைவுற வேண்டும். நீதிமன்றக் காப்பாளர் இருந்தால் 21 வயது நிறைவுற வேண்டும். இந்த வயது வரையறை இந்து, முகமதியர், கிறித்தவர் முதலிய எல்லா இனத்தவருக்கும் பொருந்தும். கொடையாளி உயிருடன் இருக்கும் போதே, அதுவும் நன்கொடை கொடுக்கக்கூடிய தகுதி இருக்கும்போதே பெறுபவர் கொடையை ஏற்றுக் கொண்டால்தான் அந்த நன்கொடை செல்லத் தக்கது என்பது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அசையாப் பொருளை நன்கொடையாகக் கொடுக்க வேண்டுமானால், கொடையாளியும் குறைந்தது இரண்டு சாட்சிகளும் கையெழுத்திட்டுப் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மிக இன்றியமையாதது என்பதும், அசையும் பொருளாக இருந்தால் அவ்வாறான ஆவணத்தின் மூலமோ கொடையைப் பெறுபவருக்குச் சுவாதீனம் கொடுப்பதன் மூலமோ நன்கொடையளிக்கலாம் என்பதும் மேற்படி சொத்துரிமை மாற்றல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. அதாவது, இச்சட்டப்படி ஆவணத்தின் மூலந்தான் அசையாப் பொருளை நன்கொடையாக அளிக்கலாம். அதற்குச் சுவாதீனம் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அசையும் பொருள் சம்பந்தமாக இச்சட்டப்படி இரண்டு வகைகளில் நன்கொடை அளிக்கலாம். வாய்மொழியாகச் சுவாதீனம் கொடுப்பதன் மூலம் அளிப்பது முதல் வகை. இதற்கு ஆவணம் ஏதும் தேவையில்லை. மேற் கூறியவாறு ஆவணத்தின் மூலம் நன்கொடை அளிப்பது இரண்டாம் வகை. இதற்குச் சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

நன்கொடைத் தொடர்புடைய சொத்துரிமைச் சட்டத்தில் உள்ள அத்தியாயமானது இசுலாமியச் சட்டத்தைப் பாதிக்காது என்றும் அசையும் பொருள் சம்பந்தமான இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு அந்த அத்தியாயம் செல்லத்தக்கது அன்று என்றும் அச்சட்டத்தின் 129-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, ஓர் இசுலாமியனால் அளிக்கப்படும் நன்கொடையைப் (இறக்கும் தறுவாய் நன்கொடை உட்பட) பொறுத்தமட்டில் இசுலாமியச் சட்டத்துக்கும் சொத்துரிமைச் சட்டத்துக்கும் முரண்பாடு இருந்தால், சொத்துரிமைச் சட்டத்தில் உள்ள முரண்பாடு செயற்படத்தக்கது அன்று. வேறு இனத்தவரைப் பொறுத்தமட்டிலும், அந்த வேறு இனத்தவர் அளிக்கும் அசையும் பொருள் தொடர்பான இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு மட்டும் சொத்துரிமைச் சட்டத்திலுள்ள நன்கொடை தொடர்பான அத்தியாயம் செல்லத்தகாதது ஆகும். அதாவது, இறக்கும் தறுவாய் அல்லாத அசையும் பொருள் நன்கொடைக்கும், எந்த நிலையிலும் ஏற்படும் அசையாப் பொருள் நன்கொடைக்கும், அவை ஓர் இசுலாமியரைத்தவிர வேறு இனத்தவரால்வழங்கப்படுமானால், மேற்கூறிய சொத்துரிமைச் சட்டம் செல்லத்தக்கது ஆகும்.

இசுலாமியர் வழங்கும் இறக்கும் தறுவாய் நன்கொடை: கொடையாளிக்குப் பிணியினால் இறந்து விடுவோம் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும் என்றும், முடிவில் அப்பிணியினால் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் 'இறக்கும் தறுவாய்' என்ற நிலைகுறித்து இசுலாமியச் சட்டத்தில் விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. சில நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, இறக்கும் தறுவாய் நன்கொடை வழங்குவதற்குக் கொடையாளி கீழ்க்காணும் உடல் நிலை

யும் மனநிலையும் உடையவராக இருக்க வேண்டும். 1. இறப்பு அபாயம் மிக அருகில் இருப்பது. 2. இறந்து விடுவோம் என்ற எண்ணம் கொடையாளிக் குத் தோன்றியிருத்தல். 3. கொடையாளியின் கவலைக்கிடமான நிலையைக் காட்டக்கூடிய வெளிப் படையான அடையாளங்கள். தன் சுய தேவைகளைத் தானே செய்து கொள்ள முடியாத நிலை ஒரு முக்கிய மான வெளிப்படையான அடையாளமாகும்.

அசையும், அசையாப் பொருள் தொடர்பாக இறக்கும் தறுவாய் நன்கொடையை ஓர் இசுலாமிய ஆண் அல்லது பெண் வழங்குவதற்கு, உரிமை வயது அடைந்தவராகவும் நல்ல மனநிலையில் உள்ளவரா கவும் இருக்க வேண்டும். நன்கொடை வழங்குவ தாகக் கொடையாளி அறிவிக்க வேண்டும். கொடை யைப் பெறுபவர் அல்லது அவரது சார்பில் எவரா வது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடையை ஏற்றுக் கொள்ள வேண்டும். கொடைப் பொருள் பெறுபவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஒப்படைப்பு முடிந்தவுடன் கொடை நிறைவுறுகிறது. நன்கொடைக்கு அது அசையாப் பொருள் தொடர்பு டையதாயிருந்தாலும்கூட ஆவணம் ஏதும் தேவை யில்லை. சுவாதீனம் கொடுப்பதன் மூலம் கொடை நிறைவுற்றவுடன் நீதிமன்ற ஆணையைத் தவிர வேறு எவ்விதத்திலும் கொடையை நீக்குதல் செய்ய முடியாது. மேலும் கீழ்க்காணும் காரணங் களிருந்தால் சட்டப்படி நிறைவடையும் நன் கொடையை எவரும் நீக்குதல் செய்ய முடி யாது. 1. கணவன் மனைவிக்கு அல்லது மனைவி கணவனுக்குக் கொடுக்கும் நன்கொடை. 2. கொடை பெறுபவர் கொடையாளிக்குத் தடுக்கப் பட்ட முறை யில் உறவினராயிருத்தல். 3. கொடை பெறுபவர் இறப்பது. 4. கொடை பெற்றவர் கொடைப் பொருளை சொத்துரிமை மாற்றல் செய்து விடுவது. 5. கொடைப்பொருள் அழிந்து விடுவது அல்லது காணாமல் போவது. 6. கொடைப் பொருளின் மதிப்பு அதிகமாகிவிடுவது. 7. அடையாளம் காண முடியாத அளவுக்குக் கொடைப் பொருள் உரு மாறிப் போவது. 8. நன்கொடைக்கு மாற்றாகக் கொடையாளி ஏதாவது பொருளைப் பெற்றிருப்பது. கொடையாளி இறந்தபின் அவரது வாரிசுகள் கொடையை நீக்குதல் செய்ய முடியாது.

ஆனால், ஓர் இசுலாமிய ஆண் அல்லது பெண் வழங்கும் இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு இரண்டு கட்டுப்பாடுகள் உள்ளன. இறுதிச் சடங்கு கள் செய்வதற்கு ஆகும் செலவு, கடனை அடைப்ப தற்கு ஆன தேவை போக, எஞ்சியுள்ள கொடையா ளியின் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டும் இறக்கும் தறுவாய் நன் கொடையாகக் கொடுக் கலாம். மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு அதிகமாகக் கொடுக்கப்படும் நன்கொடை செல்லத்தகாதது ஆகும். ஆனால், கொடையாளி இறந்தபின் அவர்தம் வாரிசுகள் ஏற்றுக் கொண்டால், மேற்படி மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான பங்கைப் பொறுத்தமட்டி லும் கூட நன்கொடை செல்லத்தக்கது ஆகும். கொடையாளியின் சொத்துக்கு வாரிசுரிமையை எதிர்பார்க்கும் வாரிசுக்கு வழங்கும் நன்கொடை (அதவாது, கொடையாளி இறக்கும் காலத்தில் கொடையைப் பெறுபவர் வாரிசாக இருந்தால்), முழுமையாகச் செல்லத்தக்கது அன்று. கொடையாளி இறந்தபின்னர் ஏனைய வாரிசுகள் ஏற்றுக் கொண் டால் அந்த நன்கொடை செல்லத்தக்கது ஆகும். வாரிசுகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேற்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இறக் குந்தறுவாய் அல்லாத நிலையில் வழங்கப்படும் நன் கொடைக்கு மேற்கூறிய இரண்டு கட்டுப்பாடுகளும் பொருந்தா.

இந்து வழங்கும் இறக்கும் தறுவாய் நன் கொடை: சொத்துரிமை மாற்றுச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்னர், இந்துச் சட்டப்படி அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் வாய் மொழியாகவே சுவாதீனம் கொடுப்பதன் மூலம் நன் கொடை வழங்கலாம். அதற்கு ஆவணம் ஏதும் தேவையில்லை. இறக்கும் தறுவாய் நன்கொடையைப் பழைய இந்துச் சட்டம் ஒப்புக் கொண்டிருந்தது. சொத்துரிமை மாற்றுச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், ஓர் இந்து தனது அசையாப் பொருளை இறக்கும் தறுவாயின் நன்கொடையாக வழங்க விரும்பினால், ஏற்கனவே கூறியவாறு பதி யப்படும் ஆவணத்தின் மூலம்தான் கொடையை அளிக்க வேண்டும். சுவாதீனம் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. அசையும் பொருளைப் பொறுத்த மட்டில் இறக்கும் தறுவாயில் ஓர் இந்து வாய் மொழியாகச் சுவாதீனம் கொடுப்பதன் மூலம் நன் கொடையை வழங்கலாம். அதற்குப் பதியப்பட்ட ஆவணம் ஏற்படுத்தினாலும் அசையும் பொருளைச் சுவாதீனம் கொடுக்கவேண்டியது இன்றியமையாதது. ஏனெனில் பழைய இந்துச் சட்டப்படி சுவாதீனம் கொடுப்பது முக்கியத் தேவையாகும். நிறைவுற்ற அசையா இறக்குந்தறுவாய் நன்கொடை நீக்கத்தக் கது அன்று. ஆனால், ஏமாற்றி அல்லது பொய் சொல்லி அல்லது பயமுறுத்தி அல்லது தகாத செல் வாக்கைப் பயன்படுத்திப் பெறப்பட்ட இறக்குந் தறு வாய் அசையாப் பொருள் நன்கொடையை நீக்கு தல் செய்யலாம். இறக்குந் தறுவாய் அசையும் பொருள் நன்கொடையைப் பொறுத்த மட்டிலும்,

கொடையாளி பிணியிலிருந்து மீண்டெழுந்தாலோ அல்லது கொடையாளிக்கு முன்னர்க் கொடைபெற்றவர் இறந்து விட்டாலோ அக்கொடை இல்லாநிலையது ஆகும்.

கிறித்தவர் இறக்கும் தறுவாயில் வழங்கும் நன்கொடை: ஒரு கிறித்தவர் அசையாப் பொருளை இறக்கும் தறுவாயில் நன்கொடை கொடுக்க விரும்பினால், அதைச் சொத்துரிமை மாற்றல் சட்டப்படி செய்ய வேண்டும். அதாவது, ஆவணம் எழுதி அதில் கொடையாளியும் குறைந்தது இரண்டு சாட்சிகளும் கையெழுத்திட்டுப் பதிவு செய்வதன் மூலம் அந்த நன்கொடையைச் செய்ய வேண்டும். கொடை பெறுபவரும் கொடையாளி நல்ல மனநிலையிருக்கும் போதே அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்நிலையில் சுவாதீனம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு நிறைவடையும் நன்கொடை, ஏமாற்றியோ பொய் சொல்லியோ பயமுறுத்தியோ தகாத செல்வாக்கைப் பயன்படுத்தியோ வாங்கப் பட்டிருந்தாலொழிய நீக்குதல் செய்யத்தக்கது அன்று.

ஒரு கிறித்தவர் அசையும் பொருளை இறக்கும் தறுவாயில் நன்கொடை செய்ய விரும்பினால், அதை 1925-ஆம் ஆண்டைய இந்திய வாரிசுரிமைச் சட்டம் 191-ஆம் பிரிவில் சொல்லியுள்ளபடி செய்யலாம். உயில் மூலம் அந்த அசையும் பொருள் கொடுக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். கொடைப்பொருளைச் சுவாதீனம் கொடுக்க வேண்டும். கொடையாளி இறந்த பின்னர்த்தான் கொடை செயற்படும் என்ற நிபந்தனையோடு கொடுக்க வேண்டும். கொடையாளி நோயினின்றும் மீண்டால் கொடைப்பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். கொடையாளிக்கு முன்னர்க் கொடை பெற்றவர் இறந்துவிட்டாலும் கொடைப் பொருளைக் கொடையாளி திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இக்கொடையானது வாய்மொழியாக ஏற்படலாம். எழுத்து மூலம் ஏற்பட்டாலும் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற தேவையில்லை. வாய்மொழி அல்லது எழுத்து மூலமாக ஏற்பட்டாலும், சுவாதீனம் கொடுப்பது மிகத் தேவையானது.

தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்துடன் கொடுக்கும் நன்கொடை இறக்கும் தறுவாய் நன்கொடையாகாது. இந்தக் கோட்பாடு எல்லா இனத்தவருக்கும் பொருந்தும்.

**இறக்குமதி**: பன்னாட்டு வாணிகத்தில், ஒரு நாடு பிற நாடுகளிலிருந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் செயல் இறக்குமதி (Import) எனப்படும். நாட்டு வருவாய், அயல்நாட்டுச் செலுத்து நிலை போன்ற புள்ளி விவரங்களிலும் ஆய்வுகளிலும் இறக்குமதி விரிவான பல கூறுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டிற்கு அயல் நாட்டிலிருந்து கிடைக்கும் பணிகளும் இறக்குமதியைச் சார்ந்ததே. அண்மைக் காலங்களில் வாணிக முறையில் பிற நாடுகளிலிருந்து வாங்கப்படும் பொருள்கள், பயணம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, அயல்நாடுகளில் ஆகும் இராணுவச் செலவு, உரிமங்கள், உரிமைத் தொகை, அயல்நாட்டு மூல தனத்திலிருந்து கிடைக்கும் ஆதாயம் ஆகியன யாவும் இறக்குமதியெனக் கருதப்படுகின்றன.

ஒரு நாட்டின் இன்றியமையாத் தேவையான விளைபொருள், மூலப் பொருள், உற்பத்திப் பொருள் ஆகியவை பற்றாக்குறையாயிருப்பின், பிற நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி மூலம் பெற வேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. பற்றாக்குறை மட்டுமன்றி, இப் பொருள்களை உள்நாட்டில் பெறக் கூடிய விலையைவிடக் குறைந்த விலையில் இறக்குமதி மூலம் பெற இயலுமாயினும் இறக்குமதி விரும்பப் படுகிறது. நாடுகளின் பொருளாதார நிலையும் வாணிகக் கொள்கையும் அரசியல் அமைப்பும் இறக்குமதியை வரையறை செய்கின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து தொழில்நுட்பம் விறுவிறுப்பாகப் பரவினமையாலும், வாணிகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையாலும் பயணமும், செய்தித் தொடர்புகளும் பெருகி, நாடுகளின் இறக்குமதி மிகுந்தது. இக்காலத்தில் வாணிகச் சிக்கல்கள் தாமாகவே தீர்க்கப்பட்டு, அரசுகளின் ஈடுபாடுகளும் கட்டுப்பாடுகளும் மிகக் குறைந்த அளவே இருந்தமையால், உலக வாணிகம் சிறந்து செழித்தோங்கியது. பன்னாட்டு வாணிகத்தில் 1970-ஆம் ஆண்டுவாக்கிலிருந்து பாதுகாப்பு வரிகளும் கட்டுப்பாடுகளும் மிகுந்து, இறக்குமதிகள் பாதிக்கப்பட்டன. உலக வாணிகமும் செழிப்பிலிருந்து சரிந்து வாட்டநிலையில் உள்ளது.

வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகள், தங்கள் வேளாண்மை, தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டுப் பொருள்களின் குவிப்பால் ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதற்கும், அயற் செலாவணி இருப்பைப் பாதுகாப்பதற்கும் இறக்குமதிகளின் மேல் முன்னுரிமைகளின் அடிப்படையில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தன. இந்நாடுகள், குறைந்த விலைக்கு வெளிநாட்டிலிருந்து

பொருள்களை இறக்குமதி செய்வனவாக இருந்தாலும் அவை உள்நாட்டில் செய்யக் கூடியவையாயின், அத்தகைய பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடைசெய்கின்றன. அகக் கட்டுமானத் தொழில்களுக்குத் தேவையான பொருள்கள், எந்திரங்கள், மூலப் பொருள்கள், இன்றியமையாத மருந்து, உணவு, இராணுவப் பொருள்கள் ஆகியவை மட்டும் இறக்குமதி செய்ய உரிமம் வழங்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதியாவதும் அனுமதிக்கப்படுவதில்லை.

சில நாடுகளின் அரசியல் அமைப்பும் அவை பின்பற்றும் கொள்கையும், இறக்குமதியைப் பிற நாடுகளைச் சார்ந்து விடுதலையை இழக்க வைக்கக்கூடிய சின்னம் எனக் கருதி அதை அறவே ஒழிக்கப் பாடுபடுகின்றன. ஆனால், அது செயல்முறையில் ஏற்றுமதியையும் பாதித்து உலகில் ஒதுக்கப்பட்ட நிலைக்குச் செலுத்துமாதலால் நடைமுறையில் செயற்படாதிருக்கிறது. வளர்ச்சியடைந்ததும் பின்தங்கியதும் ஆகிய இருவகை நாடுகளிலும், இறக்குமதி மிகும் பொழுது அது வேலைவாய்ப்பு நிலையைப் பாதிக்கிறது. வேலை வாய்ப்பு நிலையை நிலை நாட்டவும், வேலைவாய்ப்புகளை உண்டாக்கவும் பெருக்கவும் இறக்குமதியைக் குறைப்பதும் தவிர்ப்பதுமே சிறந்த வழி. இறக்குமதியினால் பெறக்கூடிய பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வது அல்லது அதற்கு ஈடான மாற்றுப் பொருள்களைக் கண்டுபிடிப்பது சாலச் சிறந்ததாகும். இறக்குமதி உள்நாட்டுப் பொருள்களின் விலையையும் பாதிக்கும். மொத்த ஏற்றுமதியைவிட மொத்த இறக்குமதி கூடுதலாகும் போது நாட்டுச் செலாவணியின் மதிப்பும் கீழிறங்கும்.

நடைமுறையில் எப்பொருள், ஒரு நாட்டின் வளம், ஆற்றல் ஆகியவற்றிற்கு மிகவும் ஏற்றதோ, அப் பொருளாக்கத்திற்கு அந்நாடு சிறப்பாக ஈடுபடுகிறது; எப்பொருள்களை உற்பத்தி செய்தல் கடினமாக இருக்கிறதோ அப்பொருள்களை இறக்குமதி செய்கின்றது. சில நாடுகளில் புவியியல் அமைப்பின் காரணமாக அந்நாடுகளில் தனிப்பட்ட வளம் மிகுந்து (எடுத்துக்காட்டு: எண்ணெய்) அதைச் சார்ந்த தொழில் நடவடிக்கைகள் மட்டுமே செம்மையாக நடைபெற முடியும். ஆசிய வளைகுடா நாடுகள் (Gulf countries) எண்ணெய் சார்ந்த உற்பத்திக்கு மட்டிலுமே உகந்ததாயுள்ளன. அத்தகைய நாடுகள், பிற பொருள்களின் தேவை அனைத்திற்கும் இறக்குமதியையே நாடுகின்றன. ஒரு தனிப்பட்ட பொருளின் இறக்குமதியை மட்டும் கருதாமல், ஒரு நாடு இறக்குமதியினால் தாக்கப்படும் பிற கூறுகளையும் ஆராய்ந்து, தன் கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

இறக்குமதிகளுக்குத் தீவிரக் கட்டுப்பாடுகள் விதிப்பதும், இறக்குமதிப் பதிலீடு பண்டங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதுமே இந்திய இறக்குமதிக் கொள்கையாக விளங்குகிறது. நாடு விடுதலையடைந்தவுடன், பொருளாதாரத் தேவையினிமித்தமும் அயற் செலாவணிக் கையிருப்பும் மிகுந்திருந்ததால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறைந்த அளவிலிருந்தன. இரண்டாம் ஐந்தாண்டுக் காலத்திலிருந்து கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. கட்டுப்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக 1956-57-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கொள்கை, இறக்குமதிக்குத் தடைசெய்யப்பட்டவை, கட்டுப்படுத்தப்பட்டவை, நெறிப்படுத்தப் பட்டவை, பொது திறந்த உரிமம் (Open General Licence) பெறுபவை எனப் பொருள்களை வகைப்படுத்தியது. இறக்குமதிகள், 1977-78-ஆம் ஆண்டுகளில் முன்னுரிமைகள் அடிப்படையில் சிறிது தளர்த்தப்பட்டன. ஏற்றுமதிக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும் இறக்குமதிப் பதிலீடு பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும் அவற்றிற்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டது. தடை செய்யப்பட்டிருந்த பொருள்கள் 59-இலிருந்து 17-ஆகக் குறைக்கப்பட்டன. பொது திறந்த உரிமம் பெறும் பண்டங்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் இறக்குமதி உரிமங்களை இலகுவாகப் பெற 1983-84-ஆம் ஆண்டுக் கொள்கை அறிக்கையில், திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பயன்படுத்தப்பட்ட எந்திரங்கள், மின் சக்தியை உருவாக்கும் எண்ணெய் எந்திரங்கள் (Diesel Generators), பொருள்களைப் பாதுகாக்கும் பொருள்கள், கட்டும் பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். அயல் நாட்டிலுள்ள இந்தியர்கள், தங்கள் சேமிப்பை இந்தியாவில் முதலீடு செய்யத்தக்கமுறையில் எந்திரம் போன்ற பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப் படுகின்றனர். பொது திறந்த உரிமம் பெறும் பண்டங்களின் எண்ணிக்கை 144ஆக உயர்ந்துள்ளது. திட்டமிடப்பட்ட கட்டுப்பாடான இறக்குமதிக் கொள்கையினால், இந்தியா உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும் அயல்நாட்டைச் சார்ந்திருக்கும் தன்மையைக் குறைக்கவும் வழி வகுத்திருப்பதைப் பட்டியலின் மூலம் அறியலாம்:

இந்தியாவில் மதிப்பிடப்பட்ட மொத்த அளிப்பில் இறக்குமதியின் பங்கு

(விழுக்காடு விகிதத்தில்)

| வ.எண் | 1950-51 | 1955-56 | 1965-66 | 1972-73 |
|---|---|---|---|---|
| 1) உணவுப் பொருள்கள் | 5.9 | 1.7 | 9.7 | 0.8 |
| 2) பருத்தி | 27.8 | 12.3 | 10.9 | 6.7 |
| 3) பருத்தி ஆலை எந்திரம் | — | 67.6 | 37.9 | 19.1 |
| 4) எந்திரக் கருவிகள் | 89.8 | 84.8 | 61.8 | 41.1 |
| 5) இரும்பு, எஃகு | 25.2 | 39.9 | 16.7 | 19.6 |
| 6) அலுமினியம் | 72.8 | 68.5 | 25.6 | 1.0 |
| 7) மிதிவண்டிகள் | 62.5 | 22.4 | | |
| 8) தையல் எந்திரங்கள் | 41.1 | 11.2 | 0.7 | 0.3 |
| 9) அம்மோனியம் சல்பேட்டு | 88.9 | 34.1 | 67.0 | 14.8 |
| 10) செயற்கை நூல் | | 20.7 | 6.0 | 5.4 |

**இறங்கு குடிக் குன்றநாடன்** சங்க காலத்துப் புலவர்களுள் ஒருவர். குன்றநாடன் என்பது இயற்பெயராகவும், இறங்குகுடி என்பது புலவர்தம் ஊர்ப் பெயராகவும் கருதப்படுகின்றன. இவரது ஒரே பாடல் அகநானூறு 215-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் அமைந்துள்ள அப்பாடல் பிரிந்து செல்லும் தலைவனைச் செலவு அழுங்குவித்துத் தோழி கூறும் பாங்கில் அமைந்துள்ளது. பாலை நிலத்தில் வேட்டுவர் தாம் தொடுத்த அம்பு குறி தவறி விடுமாயின், அதனைச் செலுத்திய தம் கைவிரலைச் சினந்து பல்லாற் கடித்துக் கொள்ளும் இயல்பு நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவன் செல்லவிருக்கும் பாலைநிலத்தே, கொடிய மறவர் அம்பு விடுதலால் இறந்துபட்ட வழிப்போவார் உடலங்களை மூடிய கற்குவியலின் மேல், ஆண் கழுகுகள் அமர்ந்து, தம் விரல் நகத்தால் இறந்தோரின் கண்களைக் குடைந்து எடுத்துச் சென்று, தம் பெண் பருந்துகளுக்கு ஊட்டும் கொடுமை மிக்க காட்சியினைப் புலவர் அப்பாடலில் அழகுறக் காட்டியுள்ளார்.

**இறந்த மொழி** என்பது ஒரு காலத்தில் பெருவழக்கினைப் பெற்றிருந்ததோடு, குறிப்பிட்ட ஒரு சமுதாயப் பிரிவினர்க்குத் தாய்மொழியாகவும் (Mother tongue) அமையப் பெற்றிருந்தது. காலப் போக்கில் அது தாய்மொழி என்ற சிறப்புத் தகுதியினை இழந்து, குறிப்பிட்ட சில சமுதாயப் பணிகளை (Social functions) நிறைவேற்றுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் மொழியாக மாறியது. அதாவது, மொழிப் பயன்பாட்டில் பெருவழக்கினைக் கொண்டதாகவும் தாய்மொழியாகவும் தகுதி பெற்றிருந்த ஒரு மொழி, காலப்போக்கில் அதன் பேச்சு வழக்கினை முழுமையாக இழந்த நிலையில், எழுத்து வழக்கில் மட்டுமே நிலவி, சில சமுதாயப் பணிகளுக்காக மட்டில் பயன்படுத்தப்படும் நிலையினை உடையதாகிறது.

எடுத்துக்காட்டாக, தொல் கிரேக்கம், பழைய ஆங்கிலம், இலத்தீன், வடமொழி போன்ற மொழிகள் ஒரு காலத்தில் பெருவழக்கினைப் பெற்றிருந்த மொழிகளாக மிகுந்த செல்வாக்குப் பெற்று வழக்கில் இடம்பெற்றிருந்தன. ஆனால், பெரும்பாலான இம்மொழிகள் பெருவழக்கினையும் பேச்சுவழக்கினையும் ஒருசேர இழந்து, இன்று சமயப் பணிகளுக்காகவும், கோயிற் பணிகளுக்காகவும், மொழி மற்றும் பிற ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மட்டிலுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலத்தீன் மொழி, கிறித்தவக் கோயில்களில் வழிபாட்டிற்கும், மொழி ஆய்விற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சூழலில்

இறந்த மொழியின் நிலையினைப் பெற்றுள்ளது. இம்மொழி, இன்றைய சமூகத்தில் எப்பிரிவினருடைய தாய்மொழியாகவும் பயன்படுத்தப்படவில்லை. இதே போன்று இந்தோ-ஆரிய மொழியான வடமொழி இந்து சமயப் பணிகளுக்கும், இந்துக்களின் கோயில் வழிபாட்டிற்கும் மற்றும் இந்தோ-ஆரிய, இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்புமை ஆய்விற்கும் (Comparative Linguistic Study) மட்டுமே பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், ஈபுரு (Hebrew) என்ற மொழி ஒருகாலத்தில் யூதர்களின் தாய்மொழி யாகவும் பெருவழக்கினைக் கொண்ட எழுத்துமொழி யாகவும் வழங்கி வந்து, காலப்போக்கில் அது இறந்த மொழியின் நிலையைப் பெற நேர்ந்தது. ஆனால், மிகச் சிறப்பான முறையில் 'மொழித் திட்டமிடுதல்' (Language Planning) எனச் சமுதாய மொழியில் ஆய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக, இம் மொழி இப்போது மீண்டும் உயிர்பெற்று ஒரு வாழும் மொழியாகவும் (Living Language) யூதர்களின் தாய் மொழியாகவும் விளங்குவதோடு, எல்லா நிலைகளி லும், எல்லாச் சமுதாயப் பணிகளிலும் பயன்படுத் தப்பட்டு வருவதையும் இன்று மொழி வரலாறு காட்டுகிறது. கி.க.

**இறந்தவர் வரிச் சட்டம்**: இயற்கை எய் திய ஒருவர் சொத்துகளில் ஒரு பகுதியை வரியாக வசூலிப்பது, மேல்நாடுகளில் நடைமுறையில் இருந்து வரும் வழக்கமாகும். இந்தியாவில் இறந்தவர் சொத்து வரிச்சட்டம் (Estate Duty Act) 6.10.1953-ஆம் நாள்முதல் நடைமுறையில் உள்ளது. பெரிய அளவில் உள்ள நிலச் சொத்துகளின் மதிப்பைக் குறைப்பதன் மூலம், அரசாங்கம் வருவாயைப் பெருக்கி சமூகப் பொது உடைமைப் பாணியை நடை முறையில் கொண்டு வருவதே இதன் நோக்கமெனக் கூறலாம். இச்சட்டம், 15.10.1953க்குப் பிறகு இயற்கை எய்திய அனைவருக்கும் ஏற்புடையதாகும்.

இறந்த நாளன்று ஒருவர் வைத்திருந்த சொத்து களின் அடிப்படையில் இறப்பு வரி விதிக்கப்படுகிறது. இதை மத்திய அரசு விதிக்கிறது. பொதுவாக இந்தி யாவில் குடியிருந்து இயற்கை எய்திய ஒருவருடைய அனைத்துச் சொத்துகளின் (வெளிநாட்டிலுள்ள அசையாச் சொத்துகள் நீங்கலாக) மீதும், வெளிநாட் டில் குடியிருந்து இயற்கை எய்திய ஒருவருக்கு இந்தி யாவிலுள்ள அனைத்துச் சொத்துகளின் மீதும் இறந்த வர் சொத்துவரி-இறப்புவரி விதிக்கப்படுகிறது. வெளி நாட்டிலுள்ள அசையாச் சொத்துகளைப் பொறுத்த வரையில் இந்தியாவில் இவ்வரி விதிக்கப்பட மாட் டாது. சொத்து என்பது இறக்கும் தறுவாயில் அவர் பெயரில் உள்ள சொத்துகளுடன் அவர் தம் வாழ் நாளில் அனுபவிக்கும் உரிமை பெற்ற பொறுப்பாட்சிச் (Trust) சொத்துகளையும், இறப்பதற்கு முன் இரண்டு ஆண்டுகளுக்குள் கொடுக்கப்பட்ட நன் கொடைச் சொத்துகளையும் மற்றும் சில இனங்களை யும் குறிக்கும். இறப்பை எதிர்பார்த்து இவ்வரியைத் தவிர்க்கும் நோக்கத்துடன் சொத்துகள் மாற்றப்படு வதைத் தவிர்க்க இத்தகைய பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இச் சட்டத்தில் 'சொத்து' என்பதற்குரிய விளக் கம் கொடுக்கப்பட்டுள்ள போதும், அதன் தன்மை யைத் தெளிவாகக் கூற இயலாது. பொதுவாகக் கீழ்க் காணும் இனங்களை இறப்புவரிச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் சொத்துகளாகக் கருதலாம்.

1. சாதாரணமாக அனைவராலும் உணரப் படும் அசையும், அசையாச் சொத்துகள், நிலம், கட்டடம், வாணிகப் பொருள்கள், நல்லெண்ணம் (Good Will), பிற வாணிகப் பொருள்கள், கையில் உள்ள தொகை, வங்கிகளில் உள்ள வைப்புத் தொகைகள், நிறுவனப் பங்குத் தொகைகள் அரசாங்கப் பத்திரங்கள், தளவாடங்கள், நகை கள் போன்றவை. 2. அசையா, அசையும் சொத்துகளின் மீது ஒருவருக்குரிய உரிமை: எடுத்துக் காட்டாக, பெந்தகக் கடன், இந்துக் குடும்பத்தின் சொத்தில் அக்குடும்பத்தில் ஒருவருக்குள்ள பங்கு உரிமை ஆகியவற்றைக் கூறலாம். 3. மேலே கூறிய உரிமையை விற்பதால் கிடைக்கும் தொகை, அத் தொகை ஈடுபடுத்தப்படும் வைப்புத் தொகைகள் போன்றவை. 4. ஓர் உருவத்திலிருந்து மற்றோர் உருவத்திற்கு மாற்றப்படும் சொத்துகள்: எடுத்துக் காட்டாக வீட்டினை விற்றுப் போடப்படும் வங்கி வைப்புத் தொகைகள். 5. இறக்கும் தறுவாயில் ஒரு வருக்கு வரவேண்டிய கடன் தொகைகளின் மதிப்பு. 6. காப்பீட்டுத் தொகை, ஆண்டுக் காப்பீட்டுத் தொகை. 7. உடனடிப்பணமாக மதிப்பிடக்கூடிய இதர அனைத்து விதமான உரிமைகள்.

மேலே கூறப்பட்ட விளக்கங்கள் 'சொத்து' என்ற சொல்லின் தன்மையை விளக்குவதற்காகக் கூறப் பட்டனவே தவிர இவற்றை முழுமையான விளக்க மாக எண்ணக் கூடாது. மேலும், மேலே கூறப் பட்டது போன்று அமைந்துள்ள பிற பொருள்களை யும் சொத்துகளாகக் கருத வேண்டும்.

மேலே கூறப்பட்டது போல், ஒருவருக்கு உரிமை யான சொத்துகளைத் தவிர வேறு சில சொத்து களும் மரணவரிச் சட்டத்தைப் பொறுத்தமட்டில்

அவருடைய சொத்தாகக் கருதப்பட்டு (அச்சொத்து அவருக்கு உரிமை உடையதாக இல்லாத போதிலும்) அதன் மீது இவ்வரி விதிக்கப்படும். இறப்பை எதிர் பார்த்துச் சொத்துகள் பிரிக்கப்பட்டு மரணவரி குறைக்கப்படுவதைத் தவிர்க்க இத்தகைய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய பிரிவுகளைக் கீழ்க் காணுமாறு வகைப்படுத்தலாம். 1. இறந்தவர், மாற்றும் உரிமை பெற்ற சொத்துகள். 2. இறக்கும் வரை இறந்தவர் உரிமை பெற்ற சொத்துகள். 3. இறப்பை எதிர்பார்த்து மாற்றப்படும் சொத்துகள். 4. இறந்த நாளுக்கு முன்னால் ஆறுமாதங்களுக்குட் பட்டு அறச் செயல்களுக்காகக் கொடுக்கப்பட்ட நன்கொடை. 5. இறந்த தேதிக்கு முன்னால் இரண்டு ஆண்டுகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட பிற நன் கொடைகள். 6. உண்மையாக இல்லாமல் சில உரிமைகளைத் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு வழங்கப்படும் நன்கொடை (இத்தகைய நன்கொடை களுக்கு மேற்கூறிய காலவரையறை பொருந்தாது). 7. இறக்கும் வரை இறந்தவர் உரிமை பெற்ற சொத் துகள். மேலே கூறப்பட்ட 4,5,6 விதிகளின் கீழ் நன் கொடையாக வழங்கப்படும்போது சொத்தின் மதிப்பு. 8.இருவர் மீது உள்ள சொத்து: ஒருவர் மரண மடைந்ததன் காரணமாக மற்றொருவருக்கு 'எச்ச உரிமை 'முறையில் வந்தடையும்போது அத்தகைய சொத்தின் மதிப்பு. 9. தமக்காகவோ மற்றவர்களுக் காகவோ எடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகைக்காகச் செலுத்தப்பட்ட தொகை. 10. தாமாகவோ மற்றவர் மூலமாகவோ வாங்கப்பட்ட பணத்தின் (Annuity) உரிமை மதிப்பு. 11. தம் நிருவாகத்தின் கீழ் உள்ள நிறுவனத்துக்குச் சொத்து மாற்றப்பட்டால் அந்த நிறுவனத்தின் சொத்துகளில் அவருக்குரிய பங்கு.

மேலே கூறப்பட்ட பல்வேறு பிரிவுகளில் 4,5,6 பிரிவுகளே பெரும்பாலும் பயன்படுபவையாகும்.

நீக்கம் செய்யக் கூடிய பரிமாற்றங்கள் (நன் கொடை, உடன்படிக்கைகள் போன்றவை) மூலமாக ஒருவருக்குள்ள உரிமையும் இறப்புவரிச் சட்டத்தின் கீழ்ச் சொத்தாகக் கருதப்படும். அந்த உரிமையை அவர் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டா லும் இவ்விதி பொருந்தும். மேலும், ஓர் இந்துக் குடும்பத்தில் அதன் உறுப்பினருக்குள்ள பங்கின் மதிப்பு, இறப்பினால் ஒருவருக்கு மாறக் கூடிய பொருளின் மதிப்பு, குறிப்பிட்ட கால வரம்புக்குள் வழங்கப்பட்ட நன்கொடையின் மதிப்புப் போன்றவை யும் இச்சட்டத்தின் கீழ் வரிக்குட்பட்டவையாகும். பொதுவாக, ஒருவருடைய இறப்பின் பொருட்டுச் சொத்துகளில் ஏற்படும் அனைத்து உரிமை மாற்றங் களுக்கும் இவ்வரி உண்டு. இறந்தவருக்கு ஒரு சொத்தின் மீது முழு உரிமையில்லாமல் சீவனாம்ச பாத்தியம் மட்டும் இருந்தாலும், அந்தச் சீவனாம்ச பாத்தியமும் சொத்தாகக் கருதப்பட்டு, அச்சொத் தின் மதிப்பிற்கு வரி விதிக்கப்படும்.

இச்சட்டத்தில் விற்பனைக்கில்லாத புத்தகங்கள், கலைப்பொருள்கள் ஓவியங்கள் முதலிய சொத் துகள் இவ்வரி விலக்கிற்கு உரிய சொத்துகளாகும். பிறவற்றிற்கு வரிவிகிதத்தை உறுதி செய்துள்ளனர்.

இவ்வரி செலுத்த நேரிடுபவர், இறந்தவர் தொடர்பாக, அடக்கம் செய்தல், ஈமச் சடங்கு, சொத்துகள் தொடர்பான கடன்கள் போன்றவற்றிற்குரிய செலவுகள் ஆகியவற்றை வரிக் குட்படும் சொத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம்.

இப்போது நடைமுறையிலுள்ள இறப்புவரியின் விகிதங்கள் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| | முதல் | 1,50,000 | வரை | -- |
| 1,50,000 | முதல் | 2,00,000 | வரை | 10% |
| 2,00,000 | முதல் | 3,50,000 | வரை | 15% |
| 3,50,000 | முதல் | 5,00,000 | வரை | 25% |
| 5,00,000 | முதல் | 10,00,000 | வரை | 30% |
| 10,00,000 | முதல் | 15,00,000 | வரை | 40% |
| 15,00,000 | முதல் | 20,00,000 | வரை | 50% |
| 20,00,000க்கு மேல் | | | | 85% |

சில சமயங்களில் குடும்பங்களில் அடுத்தடுத்து ஏற்படும் மரணம் காரணமாக ஒரே சொத்துக்கு உடனுக்குடன் இறப்பு வரிசெலுத்த நேரிடும். இதைத் தவிர்ப்பதற்காக, இரண்டு இறப்புகளுக்கிடையே உள்ள காலத்தையொட்டி இறப்பு வரியில் சலுகை அளிக்கப்படுகிறது.

இறப்புவரி அலுவலரின் வரிவிதிப்பு முறையை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்காகத் தனிப் பட்ட விதிமுறைகள் இச்சட்டத்தில் வகுக்கப்பட் டுள்ளன.

இறப்பை எதிர்பார்த்துச் செலுத்த நேரிடும் இறப்பு வரியை அரசாங்க வைப்புக் கணக்கில் வைத்துக் கொள்ள வசதியுண்டு. மேலும், இதற்காகத் தனிப்பட்ட காப்பீட்டுப் பாலிசியும் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்படும் தொகைக்கு இறப்புவரியும் (குறிப்பிட்ட விதிமுறை

களுக்குட்பட்டு) கிடையாது. இறப்பு வரியினைத் தவணை முறையிலும் செலுத்தலாம்.

இச்சட்டத்தின் கீழ், உரிய விண்ணப்பத்தை அனுப்பத் தவறுதல், சொத்துகள் தொடர்பான அல்லது வரி விதிப்புக்குத் தப்பிவிட்ட சொத்துகள் தொடர்பான விவரங்களைக் கொடுக்கத் தவறுதல், அறிவிப்புக்குப் பதிலளிக்கத் தவறுதல், சொத்துகள் தொடர்பான விவரங்களை மறைத்தல் அல்லது தவறான விவரங்களைக் கொடுத்தல், இறப்பு வரியைச் செலுத்தத் தவறுதல் போன்ற குற்றங்களுக்கு ஒறுப்புக்கட்டணம் தண்டனையாக விதிக்கப்படுகிறது.

இந்த மரண வரியானது 1985-ஆம் ஆண்டில் மத்திய அரசால் நீக்கப்பட்டுவிட்டது.

**இறப்பின் போக்கு:** ஒரே காலத்து இறப்பு வீதத்தின் மூலம், இறப்பு நிலையையும் குறிப்பிட்ட பல்வேறு காலங்களின் இறப்பு வீதங்களால் இறப்பின் போக்கை (Mortality Trend) யும் அறியலாம்.

**இறப்பின் நிலையும் அதன் போக்கும்:** உலக நாடுகளின் அண்மைக் கால இறப்பு நிலை: உலகம் முழுவதுமான 1950-55 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 1000 மக்களுக்கு 18. 5 ஆக இருந்த இறப்பு வீதம், 1975-80-இல் 11. 5 ஆகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக மனிதன் பிறக்கும்போது எதிர்பாக்கப்படும் சராசரி ஆயுட்காலம் (Average Expectation of life at Birth)47. 2 ஆண்டுகளிலிருந்து 57. 4 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது.

இறப்பு நிலையையும் அதன் போக்கையும் பொறுத்த மட்டில் கண்ணுக்குப் புலனாகிற வேறுபாட்டை, வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கிடையே காணலாம். வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தமட்டில் இறப்பு வீதத்தில் வியக்கத்தக்க மாற்றமெதுவும் நிகழவில்லை. 1950-55க்கிடையே 1000க்கு 10. 1 ஆக இருந்த இறப்பு வீதமானது, 1975-80-இல் 9. 4 என்றாகியுள்ளது. ஆனால், வளர்ச்சி குன்றிய நாடுகளைப் பொறுத்தமட்டில் மிகவும் வியக்கத் தக்க வகையிலே இறப்பு வீதம் குறைந்துள்ளது. அதாவது 1950-55க்கிடையே 1000க்கு 22. 6 ஆக இருந்த இறப்பு வீதம், 1975-80-இல் 12. 2 ஆகக் குறைந்துள்ளது.

இறப்பு வீதம் குறைந்ததன் விளைவாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் 1950-55க்கிடையே 65. 2 ஆண்டுகளாக இருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம், 1975-80 இல் 71. 9 ஆண்டுகளாக மிகுந்துள்ளது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் இதே கால கட்டத்தில் 42. 5 ஆண்டுகளாயிருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம் 51. 1க்கு உயர்ந்துள்ளது.

உலகிலேயே ஆப்பிரிக்கக் கண்டத்தில்தான் மிகுந்த இறப்பு வீதம் காணப்படுகிறது (1975-80 இல் 1000க்கு 17. 1 இறப்புகள்). மனிதனின் சராசரி ஆயுட்காலமும் மற்றக் கண்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஆப்பிரிக்காவில் மட்டுமே குறைந்து காணப்படுகிறது. (1975-80-இல் மனிதனின் சராசரி ஆயுட்காலம் 48.7 ஆண்டுகள் ஆகும்). ஆப்பிரிக்காக்கண்டத்திற்கு அடுத்தபடியாக ஆசியாக் கண்டம் மிகுந்த இறப்பு வீதத்தைப் பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளும் ஓசனியாவும் இறுதியில் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளும் இடம் பெறுகின்றன. ஆகையால் இறப்புவீதக் குறைப்பில் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகள் முன்னாகவும் ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகள் பின்னாகவும் உள்ளன. உலகிலேயே தெற்கு ஆசிய நாடான குவைத்து, தெற்கிந்தியக் கிழக்கு நாடான புருணை (Brunei), ஓசியானியாத்தீவுக் கூட்டத்திலுள்ள பிசி (Fiji), மத்திய அமெரிக்காவிலுள்ள கோசுடாரிகா (Costa Rica) ஆகிய நாடுகளில் மிகக் குறைந்த அளவிலான இறப்பு வீதமும் மேற்கு ஆப்பிரிக்க நாடான கேம்பியா (Cambia) வில் மிக உயர்ந்த இறப்பு வீதமும் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மனிதனின் சராசரி ஆயுட் காலம் ஆப்பிரிக்க நாடான கேம்பியாவில் குறைந்தும் மற்ற நாடுகளில் உயர்ந்தும் காணப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய பத்தாண்டுகள், உலகம் முழுவதுமான இறப்பின் அளவில் ஏற்பட்ட மாறுதல்களைத் தெளிவுறப் புலப்படுத்தும்.

அட்டவணை (1) இல் காட்டப்பட்டுள்ள பிரிவுகள் முதலில் உலகம் முழுமைக்குமான போக்கினை உணர்த்துவதோடு, வளர்ச்சியடைந்த வளர்ச்சி குன்றிய நாடுகளைப் பற்றி மிகவும் விரிவான முறையில் விளக்குகிறது. வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கிடையேயான அண்மைக் காலப் போக்குகளையும் எதிர்கால நிலையினையும் தெளிவுற உணர்த்துகிறது. அட்டவணையில் கொடுக்கப் பட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் மதிப்பிடப்பட்டதாகையால் இவை செம்மையற்றிருப்பதற்கான வாய்ப்பைக் கொண்டவையே. மேலும், இங்கு வளர்ச்சியடைந்த நாடுகள் என்பது சோவியத்து ஒன்றியம், கனடா, வட அமெரிக்காவிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாடு,

அட்டவணை – 1

உலகின் பெரும் நிலப்பகுதிகளுக்கான செப்பமற்ற இறப்பு வீதமும் பிறப்பின்போது வாழ எதிர்பார்க்கப்படும் காலமும் (மதிப்பிடப்பட்டது) 1950-55, 1975-80, 1995-2000

| நாடுகள் | செப்பமற்ற இறப்பு வீதம் | | | பிறப்பின் போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப்படும்காலம் | | |
|---|---|---|---|---|---|---|
| நிலப் பகுதிகள் | 1950-1955 | 1975-1980 | 1995-2000 | 1950-1955 | 1975-1980 | 1995-2000 |
| உலகம் | 18.5 | 11.5 | 8.8 | 47.2 | 57.4 | 64.4 |
| வளர்ச்சியடைந்த நாடுகள் | 10.1 | 9.4 | 10.1 | 65.2 | 71.9 | 73.6 |
| வளர்ச்சி குன்றிய நாடுகள் | 22.6 | 12.2 | 8.4 | 42.5 | 55.1 | 63.0 |
| ஆப்பிரிக்கா | 27.1 | 17.1 | 10.6 | 37.4 | 48.7 | 57.9 |
| இலத்தீன் அமெரிக்கா | 14.5 | 8.4 | 6.0 | 52.0 | 63.4 | 69.7 |
| வட அமெரிக்கா | 9.4 | 9.0 | 9.8 | 69.0 | 73.2 | 74.3 |
| கிழக்கு ஆசியா | 19.2 | 8.6 | 7.8 | 47.5 | 64.7 | 70.6 |
| தென் ஆசியா | 24.8 | 14.1 | 8.8 | 39.4 | 51.8 | 61.0 |
| ஐரோப்பா | 10.9 | 10.6 | 10.7 | 65.4 | 71.9 | 74.2 |
| ஓசியானியா (Oceania) | 12.4 | 9.0 | 8.5 | 60.8 | 65.7 | 69.8 |
| சோவியத்து நாடு | 9.2 | 8.9 | 10.0 | 61.7 | 69.6 | 71.4 |

மூலம்: ஐக்கிய நர்ட்டுச் சபை, 1980.

ஆசியாவிலுள்ள சப்பான், இசுரேல், ஓசியானியாவிலுள்ள ஆசுத்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவையாகும். மற்றப் பகுதிகளான அனைத்து ஆப்பிரிக்க நாடுகள், இலத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஓசியானியாவிலுள்ள குறிப்பிடப்படாத மற்ற நாடுகள் ஆகிய அனைத்தும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் அடங்குகின்றன.

உலகம் முழுவதுமான இறப்பு வீதம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை, மிக உயர்ந்தும் அடிக்கடி ஏறியும் இறங்கியும் வந்துள்ளது. இதற்கான சிறப்புக் காரணங்களாகச் சொல்லப்படுவன: 1. உணவுப் பற்றாக்குறை அதன் காரணமாக ஏற்பட்ட பஞ்சமும் ஊட்டச்சத்துக் குறைவும், 2. கொள்ளை நோய்கள் (Epidemic Diseases), 3. அடிக்கடி நிகழ்ந்த போர்கள் (Recurrent Wars), 4. மிகக் குறைவான சுற்றுப்புறத் தூய்மை ஆகியன.

1. பஞ்சமும் உணவுப் பற்றாக்குறையும்: எல்லா வகையிலும் பின்தங்கியிருந்த தொழிற்காலத்திற்கு முந்தைய காலங்களில், வேளாண்மைத் துறையில் போதுமான வளர்ச்சி இல்லை. பஞ்சங்கள் அடிக்கடி தோன்றலாயின. நல்ல விளைச்சல் இருந்த சில காலங்களிலுங் கூட உணவைப் பாதுகாப்பதற்குப் உணவுப் பொருள்களைப் பற்றாக்குறையுள்ள இடங்களுக்குக் கொண்டுபோவதற்கும் போதிய போக்குவரத்து வசதிகளும் இல்லை. மேற்கு ஐரோப்பாவில் மட்டும் கி.பி. 1000-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1882-ஆம் ஆண்டிற்குள், 450 முறை பஞ்சங்கள் நிகழ்ந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆசியாவில் மேலும் மோசமாயிருந்தது. சீனாவில் மட்டும் கி.மு. 108-ஆம் ஆண்டிலிருந்து 1911-ஆம் ஆண்டு வரை 1828 முறை பஞ்சங்கள் ஏற்பட்டன. இப்படிப் பட்ட பஞ்சங்களினால் மக்களுக்குப் போதுமான சத்

துணவு கிடைக்காமல் உடல் நலம் குன்றி எண்ணற்ற நோய்கள் உண்டாயின.

2. கொள்ளை நோய்கள்: வரலாற்றின் தொடக்க காலம் முதற்கொண்டே மனிதக்குலம் கொடுமையான நோய்களின் பாதிப்புக்குள்ளாகியது. பித்த வாதக் காய்ச்சல் (Typhoid), வயிற்றுப் போக்கு, அம்மை, மலேரியா, காசநோய், மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever), குழந்தைகள் தொற்று நோய்கள் போன்றவை பெரும் எண்ணிக்கையிலான உயிர்களைக் கொள்ளை கொண்டன. மக்கள் தொகை நெருக்கமான பகுதிகளில் இத் தொற்று நோய்கள் நேரடித் தொடர்பு (Personal Contacts), தூய்மையற்ற தண்ணீர், உணவு, மக்கள் இடப்பெயர்வு, ஈக்கள் ஆகியவற்றின் மூலம் மிக எளிதில் பரவின. ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னால், இந் நோய்களைப் பற்றிய அறிவு மக்களுக்குப் போதுமானதாயில்லை. மேலும், மக்கள் பொதுவாக மருத்துவ வசதி பெறாமலிருந்தனர்.

(3) அடிக்கடி நிகழ்ந்த போர்கள்: மக்கட் குலத்தின் வரலாறு முழுமையிலும் மக்கள் தொகை அளவைப் பாதிப்பதில் போர்கள் மிகச் சிறந்த பங்கேற்றன. இப் போர்களின் விளைவாக இருவித இறப்புகள் நிகழ்ந்தன. பெருமளவில் போர் வீரர்கள் போர்க்களத்திலேயே மாண்டனர். சிலர் போரின் விளைவாக ஏற்பட்ட நோய்களால் உயிர் இழந்தனர். சில போர்கள், நோய்களைப் பரப்புவதன் மூலம் குடிமக்களின் உயிர் இழப்பிற்குக் காரணமாக இருந்தன. எடுத்துக்காட்டாக, கி.பி. 1870-71-ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரசியப் போரைக் (Franco-Prussian War) குறிப்பிடலாம்.

(4) மிகக் குறைவான சுற்றுப்புறத் தூய்மை: சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதைப் பற்றிய அறிவு அவ்வளவாக இல்லை. மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்திருந்தது. மனிதனின் தனித் தூய்மை நிலையும் போதுமானதாக இல்லை. சுற்றுப்புறத் தூய்மை வசதிகளும் நிறைவளிப்பதாயில்லை. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து சுற்றுப்புறத் தூய்மைக்கு ஊறு விளைவித்தன. இதன் காரணமாகப் பலதரப்பட்ட நோய்கள் தோன்றிப் பலர் மடிந்தனர். மேலும் வீட்டுச் சூழல் (Housing Condition), பணியிடச்சூழல் (Working Condition) ஆகியவை தூய்மைக் கேட்டை விளைவிப்பனவாகவேயிருந்தன.

வளர்ச்சியடைந்த நாடுகளான மேலை நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, வேளாண்மைப் புரட்சி ஆகியவற்றால் உற்பத்தி பெருகி, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு, அந்நாடுகளின் இறப்பின் அளவு வெகுவாகக் குறைந்தது. பொதுநலவழி நடவடிக்கைகளாகப் பல தூய்மைச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு மக்களிடையே தூய்மை உணர்வுகளும் மேலோங்கின. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நோய்த்தடுப்புமருத்துவம் (Immunology) ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி, இறப்பின் அளவைக் குறைத்தது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பொது நலவழி முறைகளும் நோய்க் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து அறிந்து கொள்ளப்பட்டன. இதன் விளைவாக இந்நாடுகளில் ஏற்பட்ட ஓரளவு பொருளாதார முன்னேற்றமும் இறப்பின் அளவைக் குறைத்தது. வெளிநாட்டு இறக்குமதியில் மிகச் சிறப்பான நோய் எதிர்ப்பு மருந்துகளான 'பெனிசிலின்' (Penicillin), அம்மை எதிர்ப்பு ஆற்றல் மருந்து (B.C.G.) போன்றவை அடங்கும். அறிவியல் தொடர்பு (Scientific Communication), பன்னாட்டு ஒற்றுமை ஆகியவற்றின் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து மிகவும் குறைந்த விலையில் மருத்துவத் தொழில்நுட்பங்களைப் பெற்று, அவை பொது நலவழித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. உலக நலவழி நிறுவனத்தின் (World Health Organisation) உதவியால் மிக்க அளவில் மக்களை மாய்க்கும் மலேரியா, அம்மை போன்ற நோய்கள் அடியோடு ஒழிக்கப்பட்டன. இதன் காரணமாகவே வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இறப்பின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது.

இந்தியாவில் இறப்பின் போக்கு (Mortality Trend in India): இந்திய மக்கள் தொகை வளர்ச்சியின் வரலாற்றை, 1921-ஆம் ஆண்டுக்கு முன், இறப்பை எதிர்த்துப் போராடிய வரலாறு என்றே சொல்லலாம். இந்திய நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி 1921-ஆம் ஆண்டு வரை இறப்பைப் பொறுத்திருந்தது. இப் பேரளவான இறப்புகளுக்குப் பஞ்சமும் கொள்ளை நோய்களுமே காரணங்களாய் அமைந்தன. நாடு முழுவதும் பரவலாக ஏற்பட்ட இயற்கையின் சீற்றங்களாலும் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாயின.

இந்தியாவில் இறப்பின் போக்கைக் காட்டும் இந்த அட்டவணையிலிருந்து சிறப்பாக இரு கருத்துகள் புலனாகும். முதலாவதாக, 1921-ஆம் ஆண்டுக்கு முன்பாக இந்தியாவில் இறப்பு வீதம் மிகவும் உயர்ந்திருந்தது. (1000 மக்களுக்கு இறப்பு 40க்கும் 50க்கும் இடையிலிருந்தது). இரண்டாவதாக, 1921-

| இந்தியாவில் சராசரி ஆண்டு இறப்பு வீதம் (மதிப்பிடப்பட்டது) (1881 - 1981) | |
|---|---|
| பத்தாண்டு | சராசரி ஆண்டு இறப்பு வீதம் (1000 மக்களில் இறப்புகள்) |
| 1881—1891 | 41.3 |
| 1891—1901 | 44.4 |
| 1901—1911 | 42.6 |
| 1911—1921 | 48.6 |
| 1921—1931 | 36.3 |
| 1931—1941 | 31.2 |
| 1941—1951 | 27.4 |
| 1951—1961 | 22.8 |
| 1961—1971 | 18.9 |
| 1971—1981 | 16.7 |

ஆம் ஆண்டுக்குப் பிறகு இறப்பு வீதம் குறைந்து வந்துள்ளது. மிகக் கொடுமையான சளிக் காய்ச்சல் கொள்ளைநோய் (Influenza Epidemic) 1911-1921 என்ற இவ்விரண்டு ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்து ஆண்டுகளில் அதுவும் குறிப்பாக 1918-ஆம் ஆண்டில் இந்தியாவில் பேரழிவினை உண்டாக்கியதெனச் சொல்லலாம். இக் கொடுமையான நோய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்துக்கும் மிகுதியான உயிர்களைக் கொள்ளை கொண்டதாகக் கிங்சிலி தாவீது (Kingsly David) என்பார் கணக்கிட்டுள்ளார். இக் காரணமாகவே இக் குறிப்பிட்ட பத்தாண்டில் சராசரி இறப்பு வீதம் மற்ற ஆண்டுகளின் இறப்பு வீதங்களைக் காட்டிலும் மிக உயர்ந்து காணப்படுகிறது. இந்தியா இறப்பை எதிர்த்துப் போராடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவின் ஆண்டுச் சராசரி இறப்பு வீதம், 1911-21-ஆம் ஆண்டிலிருந்து 1961-1971-ஆம் ஆண்டு வரையான 50 ஆண்டுகளில் 48.6இலிருந்து 18.9க்குக் குறைந்துள்ளது. இக் குறைவு, 61 விழுக்காட்டிற்கும் மிகுதியானதாகும். இந்தியாவில் காணப்படும் பல்வேறு மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் மிக உயரளவு இறப்பு வீதத்தையும், கேரளா மிகக் குறையளவு இறப்பு வீதத்தையும் பெற்றுள்ளன.

**இந்தியாவில் பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் சராசரி ஆயுட்காலம்:** இது இறப்போடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. இறப்பின் போக்கை இதன் உதவியோடும் அறிந்துகொள்ள முடியம். எடுத்துக் காட்டாக, பிறக்கும் போது மனிதன் சராசரியாக வாழ எதிர்பார்க்கப்படுங் காலம் உயர்ந்துகொண்டே போகுமானால், அது இறப்பின் போக்குக் குறைந்து வருவதைக் காட்டும். ஒரு மனிதன் அவன் பிறக்கும்போது வாழ எதிர்பார்க்கப்படும் சராசரி ஆயுட்காலத்தை, ஆயுள் அட்டவணையின் உதவியால் கணிக்க இயலும். பின் வரும் அட்டவணையில் மனிதனின் சராசரி ஆயுட் காலம் வெவ்வேறு காலங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதல் இரண்டு பத்தாண்டுகளில் மிக மோசமான இறப்பு நிலையின் காரணத்தால் மனிதனின் சராசரி ஆயுட்காலம் மிகவும் குறைந்து காணப்பட்டது. சராசரி ஆயுட்காலம் 1911-1921-இல் ஆண்களுக்கு 19.4 ஆண்டுகளாகவும் பெண்களுக்கு 20.9 ஆண்டுகளாகவும், இருபாலருக்கும் சேர்த்து 20.1 ஆண்டுகளாகவும் இருந்தது. இந் நிலை உலகின் எப்பகுதியிலும் காணப்பட முடியாத மிகக் குறைந்த அளவாகும்.

அட்டவணை-2

இந்தியாவில் மனிதன் பிறக்கும்போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப் படுங் காலம் (மதிப்பிடப்பட்டது) -1901-1910; 1961-1970.

| பத்தாண்டு | பிறக்கும்போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப் படுங் காலம் | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | இருபாலருக்கும் |
| 1901—1910 | 22.6 | 23.3 | 22.9 |
| 1911—1920 | 19.4 | 20.9 | 20.1 |
| 1921—1930 | 26.9 | 26.6 | 26.8 |
| 1931—1940 | 32.1 | 31.4 | 31.8 |
| 1941—1950 | 32.5 | 31.7 | 32.1 |
| 1951—1960 | 41.9 | 40.6 | 41.3 |
| 1961—1970 | 47.1 | 45.6 | 46.4 |

மூலம்: C.I.C.R.E.D. 'The Population of India' World Population Year Series 1971.p.36.

அட்டவணை (2)-இல் காணப்படுவதைப் போல, 1901-1910-இல் 22.9 ஆண்டுகளாயிருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம், 1961-1970-இல் 46.4 ஆண்டுகளாய் மிகுந்துள்ளது. இது இறப்புப் போக்குக் குறைந்து வருவதைக் காட்டுகிறது. முதல் இரண்டு பத்தாண்டுகளில் பெண்களின் சராசரி ஆயுட்காலத்தைவிடக் குறைந்து காணப்பட்ட ஆண்களின் சராசரி ஆயுட்காலம், அடுத்துவரும் ஒவ்வொரு பத்தாண்டுகளில் பெண்களின் ஆயுட்காலத்தைக் காட்டிலும் உயர்ந்து காணப்படுகிறது. இது ஆண்களின் இறப்பு, பெண்களின் இறப்பைக் காட்டிலும் குறைந்து வருவதைக் காட்டுகிறது. மிகுதியான இளங்குழவி இறப்பு வீதத்தின் (Infant Mortality Rate) காரணத்தால், இந்தியாவில் மனிதன் வாழ எதிர்பார்க்கப்படும் காலம் குறைவாயுள்ளது. காண்க: இளங்குழவி இறப்பு.

எடுத்துக்காட்டாக, 1901-1911-இல் உயிரோடு பிறந்த ஆயிரம் ஆண்குழந்தைகளில் 290 இளங்குழவிகளும், பெண் குழந்தைகளில் 284.6 இளங்குழவிகளும் ஓர் ஆண்டைக் கடக்குமுன்பே இறந்துள்ளன. அதாவது நான்கில் ஒருபங்கு இளங்குழவிகள் ஒரு வயதைக் கடப்பதற்குள் இறந்துவிடுகின்றன. இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மொத்த இறப்பில் இளங்குழவி இறப்பின் விழுக்காடு மிகுதியான அளவில் காணப்படுவதால், மொத்த இறப்பு வீதம் பெரிதும் உயர்ந்து காணப்படுகிறது. ஆகவே, நாட்டின் மொத்த இறப்பு வீதத்தைக் குறைக்க வேண்டின் முதலில் இளங்குழவி இறப்பு வீதத்தைக் கட்டுப் படுத்த வேண்டியது இன்றியமையாத ஒன்றாகிறது.

இந்தியாவில் 1931-ஆம் ஆண்டு வரை உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுள் 200க்கும் மிகுதியான குழவிகள் ஒருவயதைக் கடக்கு முன்பே இறந்தன. இது 1983-இல் 122க்குக் குறைந்தது. இளங்குழவி இறப்பு வீதம் இவ்வாறு பெருமளவில் குறைந்துள்ள போதிலும், இது வளர்ச்சியடைந்த நாடுகளின் இறப்பு வீதத்தைக் காட்டிலும் மிகுதியானதேயாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதம் 30க்கும் குறைவானது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. எஸ்.இரா.

துணை நூல்கள்:

**Agarwala, S.N.**, India's Population Problem, Tata Mc Graw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

**Chandrasekhar** ,S., Infant Mortality, Population Growth and Family Planning in India, George Allen and Unwin, London, 1972.

**Donald Bogue,J.**, Principles of Demography, John Wiley and Sons, New York, 1969.

**இறப்பு நிலை:** மக்கள்தொகை மாற்றத்துக்கான மூன்று கூறுகளுள் ஒன்று இறப்பு எனப்படுவது. இது கருவளம் (Fertility), இடப்பெயர்வு (Migration) ஆகிய மற்ற இரு கூறுகளுடன் இணைந்து, மக்கள் தொகையின் அளவு, வயது, பால் ஆகியவற்றின் அடிப்படையில், அதன் அமைவு, இனம் சார்ந்த பண்புகள், எதிர்கால மக்கள் தொகை வளர்ச்சிக்கான ஆற்றல் ஆகியவற்றை முடிவு செய்கிறது. ஐக்கிய நாடுகளின் உலக நலவாழ்வு நிறுவனம் (United Nations World Health Organisation) இறப்புக்கான விளக்கத்தைப் பின்வருமாறு கூறுகிறது. 'இறப்பென்பது பிறப்புக்குப் பின்னர் உயிர் இருப்பதற்கான அனைத்து அறிகுறிகளும் நிலையாக மறைந்து போவதே'. ஆகவே இறப்பு (Mortality) உயிருடன் பிறந்ததற்குப் பின்னால் நிகழக் கூடிய ஒன்று. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலம் வாழுங் காலமாகும்.

இறப்புத் தொடர்பான புள்ளி விவரங்கள் சட்ட முறைப்படி அமைந்த இறப்புப் பதிவின் துணைப் பொருள்களாகும். இவ்விவரங்கள், மக்கள் தொகை வளர்ச்சியை மதிப்பிடுதல், மக்கள் தொகைத் தெரிவைத் தயாரித்தல் (Population Projection), நல்வாழ்வுச் சிக்கல்களை அறிவித்தல், பொதுநல வழிக்குத் திட்டமிடல், நல்வாழ்வின் வளர்ச்சியை மதிப்பிடுதல், நோய்களின் இயற்கை வரலாற்றை அறிதல் ஆகியவற்றுக்குப் பயனுடையனவாய் அமைகின்றன.

இறப்பின் முழுமையான எண்ணிக்கை, இறப்பின் காரணத்தால் நிகழும் மக்கள் தொகை மாற்றத்தை அறியப் பயன்படும் ஒரு நேரடி அளவையாகும். இருப்பினும், பகுத்தாய்வதன் நோக்கத்தால் இறப்பு விவரங்கள் பொதுவாக விகித அமைப்பில் பயன்படுத்தப்படுகின்றன. ஒழுங்கு முறைப்படி கணிக்கப்பட்ட இறப்பு வீதம், இடர்தாங்கு மக்கள்தொகையின் மீதான இறப்புத் தன்மையின் ஆற்றலைப் புலப்படுத்தும்.

இறப்பு வீதத்தின் வகைகள்: செப்பமற்ற இறப்பு வீதம் (Crude Death Rate) மொத்த அல்லது பொது இறப்பு வீதம் (General Death Rate) எனப்படும். இது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அல்லது கால கட்டத்தில் ஒரு பகுதியின் 1000 மக்களுள் எத்தனை சாவுகள் நிகழும் என்பதைக் கூறுகிறது. ஏனெனில், இப்போது இறப்பு வீதம் வயது, பால், நிறம், மக்கள் தொகை ஆகியவற்றின் அமைவின்படி நிறையிடப்பட்ட சில மாறிகளின் (Variables) வழியால் கணிக்கப்படும் இறப்பு வீதங்களின் சராசரியாகும். எடுத்துக்காட்டாக, இளைய மக்கள்தொகையைக் கொண்ட ஒரு பகுதி குறைந்த பொது இறப்பு வீதத்தையும். முதியமக்கள்தொகையைக் கொண்ட பகுதி மிகுதியான பொது இறப்பு வீதத்தையும் கொண்டிருக்கும். இவ்விரு பகுதிகளுக்குமான வயது சார் இறப்பு வீதங்கள் (Age Specific Death Rate) ஒன்றாயிருப்பினும் இந்நிலையே காணப்படும். வயது, பால் அல்லது மற்ற மக்கள் தொகையியல் மாறிகளின் படி அமைந்த வேறுபாட்டு இறப்பைக் (Differentia Mortality) கருத்திற் கொண்டு, குறிப்பிட்ட மக்கள் தொகைக்குப் பொதுவாக இறப்பு வீதம் கணிக்கப்படுகிறது. வயது சார் இறப்பு வீதம் இவ்வகையிலேயே கணிக்கப்படும். சிலவற்றில் மக்கள் தொகை அமைவின் வேறுபாடுகள் சரிசெய்யப்பட்டு அதன்மூலம் கணிக்கப்படும் இறப்புவீதம் ஒப்பீட்டுக்கு (Comparison) அடிப்படையாய் அமைகிறது. இருமக்கள் தொகைகளின் வயது அமைவுகளின் (Age Compositions) வேறுபாட்டால் இறப்பு வீதம் தரப்படுத்தப் படுமெனில் (Standardisation) இது வயது சரிசெய்த இறப்புவீதம் (Age Adjusted Death Rate) எனப்படும்.

ஆயுள் அட்டவணை இறப்பு வீதம் சிறப்புமிக்க ஒருவகையாகக் கருதப்படுகிறது. இது இடப்பெயர்வு அல்லது பிறப்புகளால் மாற்றம் பெறாத, வாழும் மக்கள் தொகையின் இறப்பு நிலை தொடர்பாகச் சில எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு கருத்தியல் இறப்பு வீதத் தொகுப்பு (A Hypothetical Set of Derived Death Rates) ஆகும்.

ஆயுள் எதிர்பார்ப்பு. ஆயுள் அட்டவணையின் சிறப்புமிக்க பணிகளுள் ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட வயதை வந்தடைந்தஓர்எண்ணிக்கையர்சராசரியாக எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக உயிர் வாழ முடியும் என்பதை இது விளக்குகிறது. பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் (Life Expectancy) என்பது. 100,000 எண்ணிக்கை கொண்ட ஒரு குழுமத்தின் அத்தனை பேருடைய சராசரி இறப்பு வயது ஆகும். இவர் அனைவரும் ஆயுள்

அட்டவணைப்படி ஒரே காலத்தில் உயிர் வாழத் தொடங்கியவர்களாவர்.

ஆயுள் அட்டவணையின் அடுத்த பயன்மிகு பணியாகக் கருதப்படுவது உயிர்வாழ் வீதம் (Survival Rate) ஆகும். குறிப்பிட்ட வயதினர் குறிப்பிட்ட காலத்துக்கு (பொதுவாக ஓர் ஆண்டுக்கு) உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவைக் (Probability) கூறுகிறது. காண்க : ஆயுள் அட்டவணை.

இறப்புச் சான்றிதழ்களில் கொடுக்கப்படும் மருத்துவ விவரங்கள் இறப்புப் புள்ளி விவரத்தின் சிறப்புக் கூறுகளாகும். இறப்புக்கான காரணங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கடந்தகாலப் பொது நல வாழ்வுத் திட்டங்களுக்குப் பெருமளவில் உதவி வந்துள்ளன.

இறப்புக்கு நேரடியாக வழிகோலும் நோய்களும் தீங்குகளும் இறப்புக்கான அடிப்படைக் காரணங்கள் என்ற கூற்றால் இப்போதைய புள்ளி விவரங்களில் சேர்க்கப்படுகின்றன. விபத்து அல்லது கலவரம் தொடர்பாக இறப்பு நிகழுமெனில், அதன் நிகழ்வுச் சூழ்நிலைகளும் சேர்த்தெழுதப்படுகின்றன. இப் புள்ளி விவரங்கள் கடந்தகாலப் பொது நலவாழ்வுத் திட்டங்களுக்குப் பல வகைகளிலும் துணைபுரிந்துள்ளன. இருப்பினும், இறப்புக்கான அனைத்துக் காரணங்களும் 'இறப்புக்கான அடிப்படைக் காரணங்கள்' என்ற வகைப்பாட்டில் வருவதற்கில்லை. ஆகவே, இவ்வாறு அறியமுடியாக் காரணங்களால் நிறைவற்ற இப்புள்ளி விவரம் முழுப் பயனையும் தருவதாகஇல்லை என்பது ஒருகுறையாகவே உள்ளது.

இவ்வாறே பன்னாட்டு இறப்புப் புள்ளி விவர ஒப்பீடும் சிக்கலான ஒன்றாகும். பல நாடுகளின் இறப்பு விவரங்களும் முழுமையின்றி வேறுபாடுகளுடன் காணப்படுவதால் இவ் ஒப்பீடு கடினமாய் அமைகிறது. ஆக, கண்டிப்பான, நிறைவுமிக்க பன்னாட்டு இறப்புக் காரணப் புள்ளி விவர ஒப்பீடு நடைமுறையில் இயலாத ஒன்று. இந்நிலையில் நாடுகளுக்கிடையே தோன்றும் வீதங்களின் சிறுவேறுபாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கக் கூடாதென்பதை அறிய வேண்டுவது இன்றியமையாதது.

**இறவு சுல்கூல் படைப்போர்** காப்பிய இலக்கணங்கள் அமையப் பெற்ற ஓர் இசுலாமியத் தமிழ் இலக்கியமாகும். இது சல்காப் படைப்போர் எனவும் சொல்லப்படுகிறது. இதனை இயற்றியவர் குஞ்சு மூசு லெப்பை காசி ஆலிம் புலவராவார். இவ்விலக்கியம் இசுலாத்தை எதிர்த்த இறவுசுல்கூல் என்பவனுக்கும், அவனை எதிர்த்து இசுலாத்தை நிலைநாட்டிய கற்புநாயகி சல்கா என்னும் பெயர் கொண்ட உலோகதாய் அமர் செய்யதுக்கும் நடைபெற்ற போரினை விவரிக்கிறது. இதன் காலம் கி.பி. 1818.

இக்காவியத்தின் தொடக்கத்தில் இரண்டு காப்புச் செய்யுட்கள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் இடம் பெறத் தவறிய இரண்டு செய்யுட்கள் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இக்காவியம் இயற்றப்பட்ட நாளினை இச்செய்யுட்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இறவுசுல்கூல் படைப்போரில் 2383 திருவிருத்தங்கள் 45 படலங்களில் அமைந்துள்ளன. வாழ்க்கை வரலாறு கூறும் ஏனைய காப்பியங்களில் உள்ளது போன்று கடவுள் வாழ்த்து, நாட்டு நகர வருணனையைத் தொடர்ந்து மூதாதையர் பற்றிய படலம் ஆகியவை இக்காப்பியத்தில் இல்லை. தாம் கூற வந்த வரலாற்றுடன் தொடர்புடைய போர் நிகழ்ச்சியை ஆசிரியர் பாடியுள்ளார்.

இறவுசுல்கூல் படைப்போர்க் காவியம் பெயருக்கேற்ப வீரச் செயல்களின் வருணனையை மிகுதியாகக் கொண்டுள்ளது. அடுத்த நிலையில் இயற்கை வருணனை இடம்பெறுகிறது. இக்காவியத்தில் குறிப்பிடத்தக்க மற்றோர் இயல்பு பெண்பாத்திரப் படைப்பாகும். இறவுசுல்கூல் படைப்போரின் காவியத் தலைவி ஒரு பெண்ணாக இருப்பினும், இக்காவியத்தில் இரண்டு பெண் பாத்திரங்களே இடம் பெற்றுள்ளன. காவியத்தலைவி சல்கா அம்மையாரும் ஒரு முதியவளுமே அப்பாத்திரங்களாவர்.

அல் குர்ஆனின் கருத்துகளைக் காவியக் கருத்தோட்டத்திற்கேற்ப நூலாசிரியர் எடுத்தாண்டு விளக்கியுள்ளார். அவர் பல அருஞ்சொற்களைக் கையாண்டுள்ளார். 'இரிஞன்' என்பது பகைவன் என்ற பொருளிலும், 'உபாயிகள்' என்பது உபாயஞ் செய்பவர்கள் என்ற பொருளிலும், 'உறவி' என்பது எறும்பு என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளன. இறவுசுல்கூல் படைப்போரில் ஓசைநயமும் சந்தமும் சிறப்புற அமைந்துள்ளன. சி. ந.

**இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம்**: இறவு சுல்கூல் படைப்போர் என்பது படைப்போர் என்னும் இசுலாமியச் சிற்றிலக்கிய வகை சார்ந்த ஓர் இலக்கியமாகும் (காண்க: இறவு சுல்கூல் படைப்போர்). இதனை மூலநூலாகக் கொண்டு உரைநடையில் எழுதப்பட்ட நூல் இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம். இதனைக்

காயற்பட்டினம் மகுதூம் முகம்மது புலவர் இயற்றினார்.

இந்த வசன காவியத்தின் ஒன்பதாம் பதிப்பு சென்னை சாகூல் அமீதியா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்திய பதிப்புகள் பற்றிய விவரம், நூலின் அரங்கேற்றம் பற்றிய கருத்துகள் ஆகியவற்றைத் தெளிவாக அறிய முடியவில்லை. இந்நூல் 358 பக்கங்கள் கொண்டது. இதற்கு அரபு மொழியில் மூலநூல் ஒன்றுள்ளது. பல பகுதிகளில் மூல நூலின் மொழிபெயர்ப்பைக் காணலாம். இவ் வசன காவியம் 42 சருக்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் சல்கா என்னும் அம்மையார் இறவு சுல்கூலுடன் போராடி வெற்றி பெற்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது. வரலாற்று அடிப்படையில் அமைந்த இக்காவியத்தில் மூலநூலில் உள்ளது போன்ற முனாசாத்துக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. சி.ந.

**இறுதி எச்சரிக்கை:** ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எழுத்து மூலம் கொடுக்கப்படுவதுதான் இறுதி எச்சரிக்கை (Ultimatum)என்பது. இறுதி எச்சரிக்கை கொடுத்தபின்போ கொடுக்காமலோ போர் தொடங்கலாம். இறுதி எச்சரிக்கை கொடுப்பதனால் இரு நாடுகளுக்கிடையேயுள்ள கருத்து வேற்றுமைத் தொடர்புடைய சுமுகமான பேச்சு வார்த்தைகள் முற்றுப்பெறுகின்றன. பிற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றால் எந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது இறுதியாகத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதி எச்சரிக்கை என்பது இரண்டு வகைப்படும். சாதாரண இறுதி எச்சரிக்கை (Simple Ultimatum) என்பது ஒரு வகை; நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கை (Qualified Ultimatum) என்பது மற்றொரு வகை. அதை அனுப்பும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியுள்ளது என்பது சாதாரண இறுதி எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்காது. என்ன நடவடிக்கைகள் எடுப்பதற்கு எண்ணப்பட்டுள்ளன என்பன நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். எதிர்வாதம் (Retortion), அமைதியாக மறியல் செய்தல் (Pacific Blockade), எதிர்ப்பு நடவடிக்கைகள் (Reprisals), நிலப்பரப்பை ஆக்கிரமித்தல் (Occupation of Territory), போர் ஆகியவை தாம் இந்த நடவடிக்கைகள். சாதாரண இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்தோ போர் தொடங்கப்படும் என்று குறிப்பிடப்படாத நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்தோ எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவது முறையாகாது. இறுதி எச்சரிக்கைக்குக் குறைந்த பட்ச காலவரையறை கிடையாது. ஒரு சில மணி நேரங்களில்கூட இறுதி எச்சரிக்கை பயன்படுத்தப்படலாம்.

நடுச்சாமத்திற்கு முன் பெல்சியத்தின் (Belgium) நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது நிறுத்தப்படும் என்று உறுதியளிக்காவிட்டால், பெல்சியத்தின் நடுநிலைமையைப் பாதுகாப்பதற்காகத் தமது சக்திக்கேற்ற நடவடிக்கைகள் யாவற்றையும் தமது அரசாங்கம் எடுக்க நேரிடும் என்று எழுதப்பட்ட இறுதி எச்சரிக்கை ஒன்றைப் பெர்லினில் இருந்த பிரிட்டனின் தூதுவர் 4-8-1914-இல் செருமன் வெளிவிவகார அமைச்சகத்திடம் (German Foreign Ministry) அளித்தார். இரண்டாம் உலகப் போரின்போது ஆங்கில அரசாங்கம் இரண்டு இறுதி எச்சரிக்கைகளைச் செருமானிய அரசாங்கத்திற்கு விடுத்தது. போலந்திற்கு (Poland) எதிரான போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தித் தம் படைகளைப் போலந்திலிருந்து திரும்ப அழைக்காவிட்டால் போலந்திற்குரிய தம் கடமைகளைச் செய்வதற்காகத் தமது அரசாங்கம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று 1-9-1939-இல் பிரிட்டிசு அரசாங்கம் செருமானிய அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுத்தது. மேற்கூறியவை செய்யப்படும் என்ற உறுதியான தகவல் ஆங்கில அரசாங்கத்திற்குக் காலை பதினொரு மணிக்குள் கிடைக்காவிட்டால், அந்த நேரத்திலிருந்து இருநாடுகளிடையே போர் தொடங்கப்படும் என்று கருதலாம் என்ற இறுதி எச்சரிக்கையொன்று 3-9-1939 காலை ஒன்பது மணிக்குச் செருமன் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பதில் ஏதும் கிடைக்காததால், இரு நாடுகளிடையே காலை 11 மணியிலிருந்து போர் மூண்டுவிட்டது என்று இங்கிலாந்திலுள்ள செருமன் தூதருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

காலம் சென்ற கென்னடி (Kennedy) அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த பொழுது இறுதி எச்சரிக்கை ஒன்று சோவியத்து ஒன்றியத்துக்கு அளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள நாடு அல்லது உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்ட நாடு அமைதியான முறையில் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதை விடுத்து, இறுதி எச்சரிக்கை விடுப்பது பன்னாட்டுச் சட்டத்தை மீறுவதாகும் என்று பேராசிரியர் ஆப்பன்காம் (Professor Oppenheim) கூறுகிறார். இறுதி எச்சரிக்கை வாயிலாகப் போர்

தொடுக்கப்படும் என்ற அச்சுறுத்தல் முறையற்ற தாகும். போர் தொடுப்பதில்லை என்ற தேசியக் கொள்கைக்கு இது முரணானது. இறுதி எச்சரிக்கை கொடுக்காமலும் போர் தொடங்கலாம்.

**இறுதித் தணிக்கை**: நிறுவனக் கணக்குகளின் தணிக்கை அது தொடங்கியது முதல் முடியும் வரை விடாமல் தொடர்ந்து செய்யப்படுகிறது. கணக்கு ஆண்டு முடிவு பெற்ற பின் தணிக்கை பெரும்பாலும் தொடங்கப்படும். நிதியாண்டு முடிவுற்றவுடன் நிறுவனக்கணக்குகளின் இருப்புகள் சரிகட்டப்பட்டு, இருப்புச் சோதனை, இலாப நட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்புப் போன்றவை தயாரிக்கப்படும். இக் கணக்குகள் தயாரிக்கப்பட்டவுடன் இறுதித் தணிக்கை (Final Audit) தொடங்குகிறது. சில நேரங்களில், இவ்வகைக் கணக்குகள் முழுவதுமாகத் தயாரிக்கப்படுவதற்கு முன்பும் கூட நிதியாண்டு முடிந்தவுடன் இறுதித் தணிக்கை தொடங்கப்படுவதுண்டு.

பொதுவாக, இறுதித் தணிக்கை ஒரு முழுமையான விளக்கமிக்கதோர் ஆய்வாக அமைகிறது. ஆகவே, இதனை முழுமையான தணிக்கை (Complete Audit) என்றும் கருதுவர். ஒவ்வோர் ஆண்டும் கணக்கு ஆண்டு முடிந்தவுடன் இத்தணிக்கை தொடங்கப்பெற்று நடைபெறுவதால், இதனைக் 'காலத் தணிக்கை' (Periodical Audit) என்றும் கூறுவர். இத்தணிக்கை ஒரே மூச்சில் தொடங்கப்பெற்று முடியும் வரை நடைபெறுகிறது. அதுதான் இறுதித் தணிக்கையின் சிறப்பு. அதன் காரணமாகத் தணிக்கையர் எல்லாக் கணக்கு ஏடுகளையும் ஒருங்கே பெற்று நன்றாக ஆய்ந்திட முடிகிறது. தணிக்கையாண்டின் எல்லா விவரங்களும் தணிக்கையருக்கு ஒரு கோவையாகத் தங்கு தடையின்றிக் கிடைக்கிறது. இவ்வகைத் தணிக்கையில் தணிக்கையர் நிறுவனத்திற்குச் சென்று, தணிக்கையைத் தொடங்கி முடியும் வரை தங்கிச் செயற்படுகிறார்.

தணிக்கையருக்குத் தொடர்ச்சித் தணிக்கையில் (Continuous Audit) உள்ள வசதிகள் இறுதித் தணிக்கையில் இல்லை. ஒரு தணிக்கையருக்குப் பல வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். எல்லா நிறுவனங்களுக்கும் அவரால் முடிந்தபொழுது, அவர்தம் உதவியாளர்களைக் கொண்டு நிறுவனங்களின் தணிக்கையைப் பகுதி பகுதியாகச் செய்து முடிப்பார். அவ்வுதவியாளர்களுக்கு ஆண்டுமுழுவதும் வேலை கொடுத்திடவும், அனைத்து நிறுவனங்களின் தணிக்கையைச் செய்து முடித்திடவும் தொடர்ச்சித் தணிக்கை பெரிதும் உதவும்.

ஆனால், இறுதித் தணிக்கையில் தணிக்கை தொடங்கினால், அது முடியும் வரை தொடர்ந்து நடைபெற வேண்டும். கணக்குகளை மாற்றி எழுதுதல், திருத்தி மோசடி செய்தல் போன்ற வாய்ப்புகள் இத்தணிக்கையில் மிகவும் குறைவு. அவ்வகையில் தணிக்கையர் தம் வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்க இறுதித் தணிக்கை பெரிதும் உதவுகிறது. மேலும், இறுதித் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையர் பெருமளவில் உதவியாளர்களை வைத்திருக்க வேண்டிய தேவையில்லை.

இறுதித் தணிக்கையை முழுமையான தணிக்கை என்றும் கருதுவதுண்டு. ஆனால், இத்தணிக்கையில் அனைத்து நடவடிக்கைகளும் விடுபடாமல் ஆய்வு செய்யப்படுகின்றன என்று சொல்ல முடியாது. ஆகையால், முழுமையான தணிக்கை என்று இதனைக் கூறுவது அவ்வளவு பொருந்தாது.

பொதுவாக, இறுதித் தணிக்கை சிறிய நிறுவனங்களில் மட்டில் திறம்படச் செயற்பட முடிகிறது. பெரிய நிறுவனங்களுக்கு இவ்வகைத் தணிக்கை அவ்வளவு சிறப்புடன் அமையாது. ஏனெனில், தணிக்கை முடிய காலம் மிகுதியாகும். முக்கியமாகக் கம்பெனித் தணிக்கையில் தணிக்கை முடிந்து ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் (Annual General Meeting) மட்டிலுமே பங்குதாரர்களுக்கு எவ்வளவு பங்காதாயம் (Dividend) என்பது முடிவு செய்யப்படுகிறது. தணிக்கை முடிய அதிக நாள் பிடித்தால், பங்குதாரர்கள் (Share-Holders) பங்காதாயம் அடைய நீண்ட நாள் காக்க வேண்டி வரும். அது கம்பெனியின் வளர்ச்சிக்கு அவ்வளவு நல்லதன்று. ஆகையால், இறுதித் தணிக்கை சிறிய நிறுவனங்களுக்குப் பொருந்தும் அளவுக்குப் பெரிய நிறுவனங்களுக்குப் பொருந்தாது. பி. இரா.

துணை நூல்கள்:

**Tandon, B.N.**, A Hand Book of Practical Auditing, S. Chand and Company, Madras, 1970.

**Kamal Gupta**, Contemporary Auditing, Tata Mc Graw Hill Publishing Company Limited, New Delhi, 1977.

**இறுதிநிலை உற்பத்தித் திறன்**: பொருளியலில் பகிர்வு ஒவ்வோர் உற்பத்திக் காரணிக்கும் கிடைக்கும் பங்கையும் அது பெறும் ஊதிய அளவையும் ஆய்கிறது. உற்பத்திக் காரணிகளின் ஊதியத்தை இறுதி நிலை ஆக்கத்திறன் (Marginal Productivity) கோட்பாடு விளக்க முனைகிறது. உற்பத்திக் கார


ணிகளின் விலையானது தூய போட்டி, முழு வேலைநிலை (Full Employment) முதலியவற்றால் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதைப் பகிர்வு முறையில் இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு பகுத்தாய்கிறது.

இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு: சே.பி. கிளார்க்கு (J.B.Clark), விக்சுடீடு(Wicksteed) ஆகியோர் இக்கோட்பாட்டை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கினர். உற்பத்திக் காரணியின் திறனுக்கேற்ப அதன் விலை வரையறுக்கப்படும். காரணியில் உற்பத்தித் திறன் உயர்ந்ததாக இருந்தால் அதன் விலையும் உயரும். உற்பத்திக் காரணியின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் விலையும் குறையும். இதுவே பகிர்வின் பொதுக் கோட்பாடு (General Theory of Distribution) என்றும், நாட்டு வருவாய்ப் பகிர்வுக் கோட்பாடு (National Dividend Theory of Distribution) என்றும் கூறப்படுகிறது.

இக்கோட்பாடு நுண் பொருளியல் (Micro Economics) கோட்பாட்டைச் சார்ந்ததாகும். இது மேலும் நிறைவுப் போட்டி, முழுவேலையுடைமை, நீண்டகாலம் குறைந்துசெல் விளைவு விதி, உச்ச ஆதாய நோக்கம், காரணி அலகுகளின் ஒரியலான தன்மை, பகுபடுந் தன்மை, தடையற்ற பெயர்ச்சி, விளைவுகளைக் கணக்கிட இயலும் தன்மை ஆகிய எடுகோள்களைக் கொண்டது.

உற்பத்திக் காரணியின் ஊதியம் (மதிப்பு விலை) அதன் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கேற்ப அமைகிறது என்பது இக்கோட்பாட்டின் அடிப்படை விளக்கமாகும். ஓர் உற்பத்திக் காரணியின் அளவை மட்டும் (பிற காரணிகளின் அளவு மாறாதிருக்கும் போது) மாற்றும்போது ஏற்படும் விளைவுகள் மாறும் காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் எனப்படும். அக்காரணியின் உள்ளீட்டு (Input) அலகைத் தொடர்ந்து மிகுதியாக்கினால் தோன்றும் இறுதிநிலை உற்பத்தி முதலில் உயர்ந்தும் பின்னர் நிலையாகவும் இறுதியில் குறைந்தும் செல்லும். ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் உறுதியாகக் குறையத் தொடங்கிவிடும். இதனைக் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Diminishing Marginal Utility) எனக் குறிப்பிடுகின்றனர்.

இறுதிநிலை அலகின் விளைவு இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (Marginal Physical Product-MPP)எனப்படுகிறது. இறுதிநிலை உற்பத்திப் பொருளினால் பெறப்படும் வருவாய் 'இறுதிநிலை வருவாய் உற்பத்தி' (Marginal Revenue Product) எனப் படுகிறது. உற்பத்திக் காரணியின் இறுதிநிலை வருவாய் உற்பத்தி மிகுதியாகவும் அக்காரணிக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவாகவும் இருந்தால், அக்காரணியை மேலும் பயன்படுத்தி ஆதாயத்தைப் பெருக்கத் தொழில் முனைவோர் முயல்வர். தொடர்ந்து இந்நிலை நீடித்தால், அக்காரணியின் உற்பத்தித் திறன் குறைந்து, ஒரு குறிப்பிட்ட நிலையில் காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறனும் அதற்கு வழங்கப்படும் ஊதியமும் (விலை) ஒப்பானதாகும். அந்நிலையில் தொழில்முனைவோன் உச்ச ஆதாயத்தைப் பெறுவான். அவ் உற்பத்திக் காரணியின் அங்காடி விலைக்கு ஒத்ததாக அதன் இறுதிநிலை வருவாய் உற்பத்தி இருக்கும்.




ANRP — சராசரி நிகர வருவாய் உற்பத்தி

MRP — இறுதிநிலை வருவாய் உற்பத்தி

AFC — காரணியின் சராசரி வருவாய்

MFC — காரணியின் இறுதிநிலை விலை

N — சமநிலை

OM — காரணி அளவு

NM — (=OP) காரணியின் விலை

நிறைவுப் போட்டி அங்காடியில் விலை வரையறுக்கப்படுவதை வரைபடம் விளக்குகிறது. இக் கோட்பாடு மூன்று கருத்துகளை வலியுறுத்துகிறது (1) உச்ச ஆதாயம்; (2) அதை அடைவதற்காகத் தொழில் முனைவோர் செலவு மிகக் குறைவான

(Least Cost) உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துதல். (3) அந்தத் தெரிவு (Choice of Least Cost Combination) இச்சமன்பாடுகளின் மூலம் பெறப்படுதல்.

$$(i) \quad P = MP_f$$

$$(ii) \quad \frac{MP_A}{P_A} = \frac{MP_B}{P_B} = \frac{MP_N}{P_N}$$

P = விலை, f = காரணி, MP = இறுதிநிலை உற்பத்தித் திறன், A,B,N = காரணிகள்.

இக்கோட்பாடு, நடைமுறையில் செயற்படாத நிறைவுப் போட்டி அங்காடி, உண்மைக்குப் புறம்பான பல எடுகோள்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நடைமுறையில் உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியம் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கு மாறாக உள்ளது. உற்பத்தியில் தனியாக ஒரு காரணியின் பங்கையும் அதன் உற்பத்தி அளவையும் கணக்கிட இயலாது. ஓர் அலகை நீக்கி விடுவதால் ஒரு வேளை உற்பத்தியே நின்று விடும் நிலைக்குள்ளாகும் உற்பத்தி முறைகளும் காணப்படுகின்றன. பேரளவு உற்பத்தியில் ஓர் அலகினால் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. பேராசிரியர் கீன்சு (J.M.Keynes) கருத்துப்படி, இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கேற்ப உற்பத்திக் காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை. உற்பத்தியில் காரணிகளின் பங்கு அக் காரணிகளால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் பயன்களைப் பொறுத்தது. அதற்கேற்ப அதன் விலை அமையும். எஸ்.பெ.

**இறுதிநிலை உற்பத்திப் பொருள்:** மாறும் உற்பத்திக் காரணிகளில் கூடுதலாக ஓர் அலகு சேர்க்கப்படுவதனால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாறுதலை, உற்பத்திப் பொருளின் அலகு அடிப்படையில் அளவிடுவது, இறுதிநிலைப் பொருள் உற்பத்தி எனப்படும்.

இறுதிநிலைப் பொருள் உற்பத்தியை, அதன் இறுதிநிலை வருவாயைக் (Marginal Revenue) கொண்டு பெருக்கினால் கிடைப்பது இறுதிநிலை வருவாய் உற்பத்தி (Marginal Revenue Product-MPP) ஆகும்.

$$MPP \times MR = MRP$$

$$\text{எனவே } MRP = MPP \times MR$$


இறுதிநிலைப் பொருள் உற்பத்தியை அதன் மதிப்புக்கு ஈடான விலை அல்லது சராசரி வருவாயைக் கொண்டு பெருக்கினால் கிடைப்பது இறுதிநிலைப் பொருள் மதிப்பு(Value of Marginal Product --VMP) எனப்படும். அதாவது இறுதிநிலைப் பொருள் மதிப்பு

$$VMP = MPP \times P(AR)$$


P = விலை

AR = சராசரி வருவாய்

தூய போட்டியில்
படம் 1




நிறைகுறைப் போட்டியில்
படம் 2




இ.பொ.உ. = இறுதிநிலைப் பொருள் உற்பத்தி
இ.வ.உ. = இறுதிநிலை வருவாய் உற்பத்தி

அட்டவணை-1

தூய போட்டியிலும் நிறைகுறைப் போட்டியிலும் இறுதிநிலைப் பொருள் உற்பத்தியும் இறுதிநிலைப் பொருள் மதிப்பும்

| காரணியின் அலகு | மொத்த உற்பத்தி | இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (MPP) | பொருளின் விலை | இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (VMP) | மொத்த வருவாய் | இறுதிநிலை வருவாய் உற்பத்தி (MRP) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 25 | 25 | 2 | 50 | 50 | 50 |
| 2 | 70 | 45 | 2 | 90 | 140 | 90 |
| 3 | 110 | 40 | 2 | 80 | 220 | 90 |
| 4 | 145 | 35 | 2 | 70 | 290 | 70 |
| 5 | 172 | 27 | 2 | 54 | 344 | 54 |
| 6 | 191 | 19 | 2 | 38 | 382 | 38 |
| 7 | 199 | 8 | 2 | 16 | 398 | 16 |
| 8 | 199 | 0 | 2 | 0 | 398 | 0 |

தூய போட்டியில் முற்றிலும் நெகிழ்ச்சியுடைய தேவை (Perfectly Elastic Demand) வளைகோடு காணப்படுமாகையால், அங்கு விலையும் இறுதிநிலை வருவாயும் (MR) சீராக (Equal) இருக்கும். படம்-1 இதனைவிளக்குகிறது. முற்றுரிமைகளிலும்(Monopoly-நிறைகுறைப் போட்டிகளிலும் (Imperfect Competi) tion) சராசரி விலை (தேவை வளைகோடு) கீழ் நோக்கிச் செல்லும். அதன் கீழ் இறுதிநிலை வளை கோடு செல்லும். அதனால், விளையும் இறுதிநிலை வருவாயும் சீராக இருப்பதில்லை (Not Equal). இவ் அங்காடிகளில் விலை இறுதிநிலை வருவாயை விடக் கூடுதலாக இருக்குமாகையால், இறுதிநிலைவருவாய் உற்பத்தி வளைகோடும்(MRP)இறுதிநிலைப் பொருள் மதிப்பு வளைகோட்டிற்குக் கீழ்ச் செல்லும். தூய போட்டியில் இறுதிநிலைப் பொருளின் மதிப்பும் இறுதிநிலை வருவாய் உற்பத்தியும் ஒரே பொருளை அளிக்கும். இவை நிறைகுறைப் போட்டியில் அவ்வா றில்லாமல் மாறுபடுகின்றன. இவற்றை இங்குக் கொடுக்கப்பட்டுள்ள படம்-1 & 2, அட்டவணை-1 ஆகியவை தெளிவாக விளக்குகின்றன. எஸ்.பெ.

**இறுதிநிலைக் கணக்குகள்** : ஒரு நிறு வனத்தின் வரவு செலவுகளைக் கணக்கிட்டு ஓராண்டு இறுதியில் உருவாக்கப்படும் புள்ளி விவரங்களுக்கு இறுதிநிலைக் கணக்குகள் (Final Accounts) என்பது பெயர். தொழில் என்பது தொடர்ச்சியாகச் செயற் படும் பண்பையுடையதாகும். வணிகர் வைத்திருக்கும் கணக்குப் பதிவுகள் ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் ஏற்படும் ஆதாயம், இழப்புப் போன்றவற்றைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. ஆதாயம் அல்லது இழப்பைக் கண்டுபிடிக்க ஓராண்டுக் காலம் இன்றிய மையாத தேவையாகும். அக்காலத்தில் ஏற்படும் ஆதாயம், இழப்புப் போன்றவற்றைக் கண்டுபிடிக்க வும் நிதிநிலையைக் காணவும் கணக்குகள் பயன் படுகின்றன.

இறுதிநிலைக் கணக்குகளை வணிகர் வைத் திருக்கும் கணக்குப் பதிவுகளைக் கொண்டு உருவாக் கலாம். இவற்றை உருவாக்க எடுக்கும் முதல் நட வடிக்கை இருப்புப் பட்டியல் (Trial Balance) ஆகும். எல்லாவகைக் கணக்குகளையும் ஒருங்கிணைப்பது இந்த இருப்புப் பட்டியல்தான். எனவே, இருப்புப் பட்டியல் இல்லாமல் இறுதிநிலைக் கணக்குகளை உருவாக்க இயலாது.

இறுதிநிலைக் கணக்குகள் வருவாய்க் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு என இரண்டு வகைப்படும்.

வருவாய்க் கணக்கு வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்கு என இருவகைப்படும். வாணிகக் கணக்கு ஒரு வணிகரின் மொத்த ஆதாயத்தையும் மொத்த இழப்பையும் கண்டுபிடிக்க உண்டாக்கப் படுகிறது. ஒருவருடைய நிகர ஆதாயத்தையும் நிகர இழப்பையும் காண ஆதாய - இழப்புக் கணக்கு உண்டாக்கப்படுகிறது. அதேபோல் அவருடைய சொத்துகளையும் (Assets) பொறுப்புகளையும் (Liabilities) அடிப்படையாக வைத்து, வணிகரின் நிதிநிலையை அறிந்திட இறுதிநிலைக் குறிப்பு உருவாக்கப்படுகிறது.

வாணிகக் கணக்கு: ஒரு வணிகர் உருவாக்கும் வாணிகக் கணக்கு அவருடைய சரக்குக் கொள் முதல், விற்பனை ஆகியவற்றின் மொத்த ஆதாயம் அல்லது இழப்பு எவ்வளவு என்ற முடிவைக் கூறு கிறது. மொத்த ஆதாயம் என்பது விற்பனை மதிப்பு, சரக்கின் அடக்கவிலை, நேர்முகச் செலவு ஆகியவற் றின் கூட்டுத்தொகையை விட மிகுதியாக இருக்கும் போது ஏற்படுவதாகும். அதேபோல் விற்பனை விலை குறைவாக இருந்தால் மொத்த இழப்பு ஏற்படும். பொதுவாக இக்கணக்கு அது உருவாக்கப்படும் காலத்தைக் குறிக்கும். இக்கணக்கின் செலவுப் பக்கத்தில் தொடக்கச் சரக்கிருப்பு, நிகரக் கொள் முதல், நேர்முகச் செலவுகளான கப்பல் துறை வரி, சுங்க வரி, இறக்குமதி வரி, வாடகை, உள்தூக்குக் கூலி, தொழிற் செலவுகள், எரிபொருள், உற்பத்திச் செலவுகள் போன்றவற்றை எழுத வேண்டும். வரவுப் பக்கத்தில் நிகர விற்பனை, இறுதிச் சரக் கிருப்பு போன்றவற்றை எழுத வேண்டும்.

வாணிகக் கணக்கு மொத்த ஆதாயத்தையும் அல்லது மொத்த இழப்பையும் காட்டுகிறது; விற்பனை விலையை வரையறை செய்திடப் பயன் படும் மொத்த ஆதாய விகிதத்தைக் கணக்கிட உதவு கிறது; நேர்முகச் செலவிற்கும் மொத்த ஆதாயத் திற்கும் உள்ள விகிதத்தைக் கணக்கிடவும் உதவு கிறது. நேர்முகச் செலவிற்கும் மொத்த ஆதாயத் திற்கும் உள்ள விகிதத்தால் தேவையற்ற செலவு களைத் தவிர்க்க இது பயன்படுகிறது. இந்த ஆண்டின் கொள்முதல், விற்பனை, சரக்கிருப்பு, மொத்த ஆதாயம் போன்றவற்றைச் சென்ற ஆண்டுத் தொகைகளுடன் ஒப்பிடவும் இக்கணக்கு உதவுகிறது.

உற்பத்திக் கணக்கு: வணிகர்கள் தொழிலை இரண்டு வகையில் நடத்தலாம். அவை பொருள்களை அவர்களே உற்பத்தி செய்தல் அல்லது முன்பே வேறொருவர் உற்பத்தி செய்த பொருள்களை வாங்கி விற்றல் ஆகும். முதல் வகையில் உற்பத்திக் கணக்கும் இரண்டாம் வகையில் வாணிகக் கணக்கும் உருவாக்கப்படுகின்றன. எனவே, வணிகர் மூலப் பொருள்களை முழுமையடைந்த பொருள்களாக உற்பத்தி செய்யும்போது உற்பத்திக் கணக்கை எழுது கிறார். அதனுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களின் உற்பத்திச் செலவைக் கணிப்பதாகும். இவ்வுற்பத்திச் செலவை அங்காடி விலையோடு ஒப்பிட்டு விற்பனை விலையை அவர் வரையறை செய்கிறார். இது ஒரு கணக்கு வடிவத்தில் உருவாக்கப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட கால நடவடிக்கையின் முடிவைக் காட்டு வதால் அக்காலத்தைக் குறிப்பிட வேண்டும்.

இக் கணக்கின் செலவுப் பக்கத்தில் மூலப் பொருளின் தொடக்க இருப்பு, முற்றுப் பொருளின் தொடக்க இருப்பு, மூலப் பொருளின் கொள்முதல், தொழிற்சாலைக் கூலி, விளக்குச் செலவு, ஆற்றல் செலவு, வாடகைத் தேய்மானம் போன்ற அனைத்து உற்பத்திச் செலவுகளும் எழுதப்படுகின்றன. வரவுப் பக்கத்தில் மூலப் பொருள் இறுதியிருப்பு, முற்றாப் பொருள் இறுதி இருப்பு போன்றவை எழுதப்படு கின்றன. இரு பக்கங்களின் கூட்டுத் தொகையில் காணப்படும் வேறுபாடு உற்பத்திச் செலவாகும். இது வாணிகக் கணக்கின் செலவுப் பக்கத்திற்கு மாற்றப்படுகிறது. சிறிய நிறுவனங்களில் வாணிகக் கணக்கு என்ற ஒரு கணக்கு மட்டும் உருவாக்கப் படுகிறது.

உற்பத்திக் கணக்கு மூலப்பொருள் உற்பத்திச் செலவுகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. ஆனால், வாணிகக் கணக்கு முழுமையடைந்த பொருள்களையும் நேர்முகச் செலவுகளையும் கொண் டுள்ளது. உற்பத்திக் கணக்கு மொத்த உற்பத்திச் செலவுகளையும் கொண்டுள்ளது. வாணிகக் கணக்கு, மொத்த ஆதாயம் அல்லது இழப்பைக் காட்டுகிறது உற்பத்திக் கணக்கின் விளைவு அல்லது முடிவு வாணிகக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

ஆதாய-இழப்புக் கணக்கு: இதனை வாணிகக் கணக்கு உருவாக்கப்பட்ட பின்னர் உருவாக்க வேண் டும். வாணிகக் கணக்கிலிருந்து மொத்த ஆதாயத் தையும் இழப்பையும் இங்கு மாற்றி எழுத வேண்டும். இக்கணக்கில் முழுமையாகப் பெயரளவுக் கணக்கு மட்டில் எழுதப்படுவதால் செலவுப் பக்கத்தில் செல வும் இழப்பும் எழுத வேண்டும். வரவுப் பக்கத்தில் ஆதாயம், வருவாய் ஆகியவற்றை எழுதவேண்டும். நேர்முகச் செலவு போக மீதமுள்ள செலவுகள் அனைத்தையும் இங்கு எழுதவேண்டும். அன்றியும் எல்லா ஆதாயத்தையும் வருவாயையும் இங்கு எழுத

வேண்டும். இக்கணக்கின் வரவுப் பக்கக் கூட்டுத் தொகை மிகுதியாக இருந்து, செலவுப் பக்க மொத் தம் குறைவாக இருந்தால் நிகர ஆதாயம் ஏற்படு கிறது. இந்நிலைமை மாறுபட்டிருந்தால் நிகர இழப்பு ஏற்படும். இக்கணக்கும் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதி யின் முடிவைக் காட்டுவதால், அக்காலத்திற்குரிய ஆதாய இழப்புக் கணக்கு என்று எழுத வேண்டும்.

இக்கணக்கின் செலவுப் பக்கத்தில் மொத்த இழப்பு, விற்பனைச் செலவுகள், நிருவாகச் செலவு கள், பாதுகாப்புச் செலவுகள், நிதித் தொடர் பான செலவுகள் முதலியன எழுதப்படுகின்றன. சரக்குத் தூக்குங் கூலி, விளம்பரம், பயணர் கழிவு, கட்டுமானச்செலவு போன்றவை விற்பனைச் செலவு களாகும். ஊதியம், எழுது பொருள், விளக்குச் செலவுகள், வாடகை, வரி, அஞ்சற் செலவு, தொலை பேசி, காப்பீடு போன்றவை நிருவாகச் செலவாகும். கடன்மீது வட்டி, தள்ளுபடி,வங்கிக் கட்டணம் போன்றவை நிதியியற் செலவாகும். சட்டக்கட்டணம் சட்டச் செலவு, தணிக்கைக் கட்டணம், தேய்மானம் போன்றவை பிறவகைச் செலவாகும். ஆதாய இழப்புக் கணக்கின் வரவுப்பக்கத்தில் மொத்த ஆதாயமும் எல்லா வகையான வருவாய்களும் ஆதாயமும் எழுதப்படுகின்றன. ஆனால், இம்மூன்று வகைக் கணக்குகளிலுமே மூலதனச் செலவுகளை எழுதக் கூடாது.

வாணிகக் கணக்கு வருவாய்க் கணக்கின் முதற் பகுதியாகும். இது வாணிக முடிவை மட்டில் காட்டு கிறது. ஆனால், ஆதாய இழப்புக் கணக்கு வருவாய்க் கணக்கின் இரண்டாம் பகுதியைக் காட்டுகிறது. தொழிலின் இறுதிநிலையையும் இது காட்டுகிறது.

வாணிகக் கணக்கு மொத்த ஆதாயம் அல்லது மொத்த இழப்பைக் காட்டுகிறது. ஆனால், ஆதாய-இழப்புக் கணக்கு நிகர ஆதாயம் அல்லது நிகர இழப் பைக் காட்டுகிறது. வாணிகக் கணக்கில் உற்பத்திச் செலவு, நேர்முகச் செலவுகள் முதலியன எழுதப் படுகின்றன. ஆனால், ஆதாய-இழப்புக் கணக்கில் விற்பனை, நிருவாகச் செலவுகள் மட்டில் எழுதப் படுகின்றன. ஆதாய-இழப்புக் கணக்கில் அனைத்து வருவாயும் இழப்பும் எழுதப்படுகின்றன. ஆனால், வாணிகக் கணக்கில் இவை எழுதப்படுவதில்லை.

இருப்புநிலைக் குறிப்பு: தொழில் முனைவோ ரின் சொத்துகளையும் பொறுப்புகளையும் மதிப் பிடவும், ஒரு தொழில் நிறுவனத்தின் நிதிநிலையைக் காணவும் இது உருவாக்கப்படுகிறது. எனவே, சொத்துகளும் பொறுப்புகளும் தகுந்த முறையில் மதிப்பீடு செய்யப்படவேண்டும். அதிக மதிப்பீடோ குறைவான மதிப்பீடோ உண்மையான மதிப்பீட் டைக் குறைக்கும். நிலைச் சொத்துகளுக்கும் நடை முறைச் சொத்துகளுக்கும் தேவையான தேய்மானம் எழுதப்படவேண்டும். இது வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்கு போன்றவற்றைத் தயா ரித்த பின்னர் உருவாக்கப்பட வேண்டும். பெயரள வுக் கணக்குகளை முதலில் கூறப்பட்ட இரு கணக்கு களிலும் எழுதிவிட்டமையால், மிஞ்சியுள்ள ஆள்சார் -சொத்துக் கணக்குகளை இங்கு எழுத வேண்டும். இதன் பக்கத்தைப் பொறுப்புப் பக்கம் என்றும் சொத்துப் பக்கம் என்றும் எழுத வேண்டும். வணி கர் அல்லது வணிக நிறுவனத்தின் பெயர், தேதி ஆகியவற்றை தலைப்பில் எழுத வேண்டும். இருப்புநிலைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட தேதியில் எழுதப்படுவதால் அதனை 'அக்காலத்தின் இருப்பு நிலைக்குறிப்பு' என்று எழுத வேண்டும்.

வழக்கமாகப் பொறுப்புகள் இடப் பக்கமும் சொத்துகள் வலப் பக்கமும் எழுதப்படுகின்றன. சொத்துகள் அவற்றின் பண நீர்மைத்(Liquid Cash) தன்மை, நிலையான தன்மை ஆகியவற்றைக் கொண்டு எழுதப்படுகின்றன. கையில் பணத் தொகை, வங்கியில் பணத்தொகை, முதலீடு, வரவு, உண்டியல், மொத்தக்கடனாளி, இறுதிச் சரக்கிருப்பு, மனைத்துணைப் பொருள், எந்திரம், நிலம், கட்ட டம், முன்செலுத்திய செலவு என்ற வரிசையில் முறையாக எழுதுவது சொத்துகளை எளிதில் பணமாக்கும் தன்மையில் எழுதுவதாகும். இதையே நிலம், கட்டிடம், எந்திரம், மனைத்துணைப் பொருள், இறுதிச் சரக்கிருப்பு. பல்வகைக் கடனாளி கள், வரவு உண்டியல், முதலீடு, வங்கியில் பணத் தொகை, கையில் பணத் தொகை, முன்செலுத்திய செலவு என்ற வரிசையில் எழுதுவது சொத்துகளின் நிலையான தன்மையில் எழுதுவதாகும்.

பொறுப்புகளை முடிவு செய்யும் வரிசையில் எழுத வேண்டும். அதாவது, உடனடிக் கடன்களை முதலில் எழுத வேண்டும். கடனீந்தோர்கள், பிற வகைக் கடனாளிகள், செலுத்து உண்டியல்கள், கடன்கள், காப்பும் மிகுதியும் முன்காட்டிப் பெற்ற வருவாய், முதல் என்று பொறுப்புகளை வரிசைப் படுத்தி முறையாக எழுத வேண்டும்.

பண நீர்மைத் தன்மை வரிசையைத் தனி வணி கர், கூட்டு வாணிகம் செய்வோர் ஆகிய இருசாரா ரும் பின்பற்றுகின்றனர். நிலையான தன்மை வரி சையை நிறுவனங்கள் பின்பற்றுகின்றன. கம்பெனி யின் இருப்பு நிலைக் குறிப்பு எவ்வாறு உருவாக்கப்

பட வேண்டும் என்பதனை 1956-ஆம் ஆண்டு இந்திய நிறுவனச் சட்டம் வரையறுத்துள்ளது.

இருப்புப் பட்டியலும் இருப்பு நிலைக் குறிப்பும்: இருப்புப் பட்டியல் வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்குப் போன்றவற்றை உண்டாக்குவதற்கு முன்னர் உருவாக்கப்படுகிறது. ஆனால், இருப்புநிலைக் குறிப்பு அவற்றுக்குப் பின்னர் உருவாக்கப்படுகிறது. இருப்புப் பட்டியல் எல்லா இருப்புகளின் பட்டியல். ஆனால், இருப்புநிலைக் குறிப்பு சில இருப்புகளின் அறிக்கையாகும். இருப்புப் பட்டியலின் நோக்கம் கணக்குகளின் மொத்தத் தொகைச் சமன்பாட்டைக் காட்டுவதாகும். ஆனால், ஒருவரின் நிதி நிலையைக் காட்டுவது இருப்பு நிலையின் நோக்கமாகும். இருப்புப் பட்டியலில் செலவு-வரவு இருப்புகள் முறையே இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் எழுதப்படுகின்றன. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் இடப்பக்கம் பொறுப்புகளும் வலப்பக்கம் சொத்துகளும் எழுதப்படுகின்றன. இருப்புப் பட்டியலில் இருப்புகளை எழுதிடக் குறிப்பிட்ட வரிசை முறை இல்லை. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துகள், அவற்றின் பண நீர்மைத் தன்மை, நிலையான தன்மை ஆகியவை முறையே எழுதப்படுகின்றன. இருப்புப் பட்டியலில் தொடக்கச் சரக்கிருப்பு மட்டுமே எழுதப்படுகிறது. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் தொடக்கச் சரக்கிருப்பும் இறுதிச் சரக்கிருப்பும் எழுதப்படுகின்றன.

இறுதிநிலைக் கணக்குகள் கணக்குப் பதிவியல் முறையில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது தெளிவாக விளங்குகிறது. எனவே, தனி வணிகம், கூட்டு வணிகம், நிறுவனம், பிற வகை நிதி ஈடுபாடுள்ள நிறுவனம் ஆகியவை இறுதிநிலைக் கணக்குகளை உருவாக்குவது மிகவும் தேவையாகும். ஒரு தொழில் நிறுவனத்தின் ஆதாய-இழப்பையும் நிதி நிலைமையையும் இறுதி நிலைக் கணக்கின் மூலமே அறிந்திட முடியும். கே. என். இரா.

துணை நூல்கள்:

**Hrishikesh Chakraborty,** Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

**Balasubramaniam,** M., Simplified Accountancy, Rochouse and Sons Private Limited, Madras, 1970

***இறுதிநிலைச் செலவு:*** உற்பத்தி அளவின் இறுதிநிலைச் செலவு என்பது, ஓர் அலகைக் கூடுதலாக உற்பத்தி செய்வதால் ஏற்படும் மொத்தச் செலவின் மிகுதியாகும்.

இறுதிநிலை அலகை உற்பத்தி செய்வதால் ஏற்படும் செலவு இறுதிநிலைச் செலவு ஆகும்.

$$MC = TC_n - TC_{n-1}$$

MC — இறுதிநிலைச் செலவு;

TC — மொத்தச் செலவு;

n — அலகுகளின் எண்ணிக்கை.


இறுதிநிலைச் செலவின் சிறப்பு: கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு தனிப்பட்ட தொழில் நிறுவனத்தின் போக்கை அறிந்துகொள்ள இறுதிநிலைச் செலவு உதவியாக உள்ளது. ஒரு தொழில் நிறுவனத்தின் இன்றியமையாக் கொள்கை ஆதாயத்தை உச்ச நிலைப்படுத்துவது ஆகும். இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் ஒரே நிலையிலிருக்கும்போது தொழில் நிறுவனம் உச்ச ஆதாயத்தை அடைகிறது

இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்குக் குறைவாக இருந்தால் ஆதாயம் உச்சநிலையில் இருக்காது. அதுபோன்றே இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்கு மிகுதியாக இருந்தால் இழப்பு ஏற்படும். எனவே, உற்பத்தி குறைய வேண்டும். எனவே, இறுதிநிலைச் செலவு = இறுதிநிலை வருவாய் என்ற நிலையில் ஆதாயம் உச்சநிலையை அடைகிறது.

நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனத்தின் இறுதி நிலை வருவாயும் விலையும் ஒப்பானதாக இருக்கும். ஆகவே, இறுதிநிலை வருவாய் = இறுதிநிலைச் செலவு = விலை என்ற ஓர் உறவு இந்நிலையில் ஏற்படுகிறது.

சராசரி ஆக்கச் செலவும் இறுதிநிலை உற்பத்திச் செலவும் நீண்டகாலத்தில் எல்லா நிறுவனங்களுக்கும் ஒப்பானதாக (Equal) நிறைவுப் போட்டியில் (Perfect Competition) இருக்கும்.

சராசரிச் செலவுக்கும் இறுதிநிலைச் செலவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சராசரிச் செலவு நேர் கோடாக இருந்தால் இறுதிநிலைச் செலவுக் கோடு அத்துடன் இணையும். சராசரிச் செலவு மிகுந்தால் இறுதிநிலைச் செலவு அதைவிட மிகுதியாகும். சராசரிச் செலவு குறைந்தால் இறுதிநிலைச் செலவு அதைவிட வேகமாகக் குறையும். இவற்றை வரைபடத்தில் காணலாம்.




சராசரிச் செலவு குறைநது பின் மிகுந்தால், இறுதிநிலைச் செலவும் வேகமாகக் குறைந்து பின்பு அதிக அளவில் உயர்கிறது. நிறுவனம் சமநிலையை அடையும் நிலையில் இறுதிநிலைச் செலவுக்கோடு சராசரிச் செலவுக்கோட்டைக் கீழிருந்து மேல்நோக்கி வெட்டிக் கொண்டு செல்லும். சராசரிச் செலவுக்கும் இறுதிநிலைச் செலவுக்கும் உண்டான உறவு குறைந்த காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் பொருந்தும்.

எஸ்.பெ.

**இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம்:** இது ஒரு பொருளின் நிலையான உற்பத்தி அளவில் மாறுதல்கள் ஏற்படாவண்ணம், உற்பத்திக் காரணிகளை இறுதிநிலையில் பதிலீடு செய்யும் நுட்ப வீதத்தைக் குறிக்கும். ஒரு ‘X’ என்னும் காரணிக்குப் பதிலீடாக உற்பத்தியின் அளவு நிலையாயிருக்கும் போது, எவ்வளவு ‘Y’ காரணியின் அலகுகள் மாற்றீடு (Replaced) செய்யப்படுகின்றனவோ அது இறுதிநிலைத் தொழில் நுட்பப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Technical Substitution) ஆகும். பட்டியல்-1 இதைத் தெளிவாக விளக்குகிறது. ஒரு காரணியின் இறுதிநிலை அலகைப் பெறுவதற்காகக் கொடுக்கப்படும் மற்றொரு காரணியின் அளவு இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம் எனப்படுகிறது.

A,B,C,D,E என்ற உள்ளீடுக் காரணிச் சேர்க்கையின் (Input Factor Combinations) உற்பத்தி நிலைகளில் உற்பத்தியின் மொத்த அளவு நிலையாக உள்ளது. Y காரணிச் சேர்க்கையிலிருந்து B-க்கு மாறும்போது 4 ‘Y’ அலகுகள் மாற்றீடு செய்யப்படுகின்றன. இங்கு இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் 4 ஆகும். பின்னர் ‘B’ காரணிச் சேர்க்கைகளிலிருந்து ‘C’க்கு மாறும்போது 3 ‘Y’ அலகுகள் மாற்றீடு செய்யப்படுகின்றன. மொத்த உற்பத்தியின் அளவில் மாறுதல்கள் எதுவுமின்றி இறுதிநிலைப்பதிலீட்டுவீதம் இப்போது 3 ஆகும். தொடர்ந்து இதே வகையில் ‘C’-யிலிருந்து காரணிச் சேர்க்கைக்கு மாறும் போது இறுதிநிலைப் பதிலீட்டுவீதம் 2 ஆகவும், ‘D’- இலிருந்து ‘E’க்கு மாறும்போது 1 ஆகவும் காணப்படுகிறது.


வரைபடம் - 1 இல் கொடுக்கப்பட்டுள்ள சம உற்பத்தி வளை கோட்டின் (Equal Product Curve) சரிவின் புள்ளியிலிருந்து இறுதிப் பதிலீட்டு வீதத்தைப் பெறலாம். சம உற்பத்தி வளைகோடு P, A-யிலிருந்து B-க்கு வலப்புறமாகக் கீழ்நோக்கிச் செல்கிறது

இறுதிநிலைப்பதிலீட்டு வீதம்

| வரிசை எண் | காரணி சேர்க்கைகள் | காரணி X | காரணி Y | X-க்கான Y இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம் |
|---|---|---|---|---|
| 1 | A | 1 | 12 | |
| 2 | B | 2 | 8 | 4 |
| 3 | C | 3 | 5 | 3 |
| 4 | D | 4 | 3 | 2 |
| 5 | E | 5 | 2 | 1 |

வரைபடம் – 1

சம உற்பத்தி வளைகோடு




அதில் Y காரணியின் அளவு AC($\triangle$Y) X காரணியின் அளவு CB ($\triangle$X)-க்காக மாற்றீடு செய்யப்படுகிறது. எனவே, சம உற்பத்தி வளைகோட்டு $P_1$ இன் சரிவுப்

புள்ளி $\frac{\triangle Y}{\triangle X}$ க்குச் சீராகச் சரி சமமாக (Equal)

உள்ளது என அறியப்படுகிறது.

இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம்

$$= \text{சரிவுப்புள்ளி } A = \frac{\triangle Y}{\triangle X}$$

சம உற்பத்தி வளைகோடு கீழே நகர்வது ஒரு சிறிய அளவு காரணி Y ஐக் குறைத்துக் கொண்டு, அதற்கு ஈடாக ஓர் அளவு உழைப்பைக் கூட்டிக் கொள்வதுதான். இது சம உற்பத்தி வளைகோட்டின் இலக்கணப்படி, ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனி வரை ஒரே உற்பத்தியைக் காட்டுவதாகும். எனவே, கூடுதல் X காரணியால் ஏற்படும் ஆதாயமும் சிறிதளவு குறைந்த Y காரணியால் ஏற்படும் இழப்பும் சீராக (சமமாக) இருக்கும்.

இக்காரணிகள் X, Y ஐ உழைப்பு முதல் (Capital) C என எடுத்துக் கொண்டால், கூடுதல் உழைப்பினால் 'L' கிடைக்கும் உற்பத்திப் பெருக்கத்தை, அதன் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தியைக் கொண்டு (MPPL) பெருக்கினால் கிடைக்கும். அதாவது $\triangle L \times MPPL$. இதில் $\triangle L$ என்பது கூட்டப்பட்ட உழைப்பின் (Labour) அளவு. $\triangle C \times MPPC$ முதல் $\triangle C$ குறைக்கப்படுவதால் ஏற்படும் இழப்பை முதலின் இறுதிநிலை உற்பத்தியைக் கொண்டு (MPPC) பெருக்கினால் கிடைக்கும். அதாவது $\triangle C \times (MPPC)$ இதில் C என்பது குறைக்கப்பட்ட முதலின் அளவு.

எனவே.

$$\text{சரிவு} = \text{இறுதிநிலைப் பதிலீட்டு வீதம்}$$

$$= \frac{\triangle C}{\triangle L}$$

உற்பத்தி இழப்பு = உற்பத்தி ஆதாயம்

$$\triangle C \times MPPC = \triangle C \times MPPL$$

$$\frac{\triangle C}{\triangle L} = \frac{MPPL}{MPPC}$$


இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் பதிலீடு செய்யப்படும் காரணிகள் (X, Y) இறுதிநிலை உற்பத்தி விகிதத்திற்குச் சமமாக உள்ளது என்பது இக் கோட்பாட்டின் சிறப்புக் கூறு ஆகும். எஸ்.பெ.

**இறுதிநிலை வருவாய்:** உற்பத்தியில் வருவாய் வளைகோடுகள் சிறப்பிடம் பெறுகின்றன. நிறுவனத்தின் சமநிலையை வரையறுக்க உற்பத்தியாளன் வருவாய் செலவு வளைகோடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஒரு தொழில் நிறுவனம் தன்னுடைய உற்பத்திப் பொருள்களை அங்காடியில் விற்றுப் பெறக்கூடிய பணமே அதன் வருவாய் எனப்படும். வருவாயை இறுதிநிலை வருவாய் (Marginal Revenue) மொத்த வருவாய், சராசரி வருவாய் என மூவகைப்படுத்தலாம்.

இறுதிநிலை வருவாய் என்பது கூடுதலாக விற்கின்ற பொருளிலிருந்து பெறுகின்ற கூடுதலான வருவாயாகும். அதாவது ஓர் அலகை விற்பதனால் மொத்தவருவாயில் ஏற்படும் கூடுதலாகும். ஒரு நிறுவனம் 10 அலகு பொருள்களை விற்று உரூபாய் 500 மொத்த வருவாய் பெறுகிறது. அந்நிறுவனம் விற்பனையை 1 அலகு அதிகரித்து 11 அலகுகளை விற்று உரூபாய் 540 வருவாய் பெற்றால், மொத்த வருவாயில் ஏற்பட்ட அதிகப்படியான உரூபாய் 40 இறுதிநிலை வருவாய் ஆகும். இறுதிநிலை வருவாய் = மொத்த வருவாய்-மொத்த வருவாய்- 1 அலகு $MR = TR_n - TR_n - 1$ (n என்பது அலகுகள்)

| உற்பத்தி அலகுகள் | மொத்த வருவாய் | சராசரி வருவாய் | இறுதிநிலை வருவாய் |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 19 | 9.5 | 9 |
| 3 | 27 | 9.0 | 8 |
| 4 | 34 | 8.5 | 7 |
| 5 | 40 | 8.0 | 6 |
| 6 | 45 | 7.5 | 5 |


மேற்கண்ட அட்டவணையின் மூலம் ஒரு நிறுவனம் அதிக அலகு பொருள்களை விற்றால், அதன் மொத்த வருவாய் ஒவ்வோர் அலகுக்கும் மிகுகின்றது. உற்பத்தி அலகுகளின் விற்பனை மிகுதியாக மிகுதியாகச் சராசரி வருவாயும் இறுதிநிலை வருவாயும் குறைகின்றன. சராசரி வருவாயும் இறுதிநிலை வருவாயும் குறையும்போது இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயைவிட வேகமாகக் குறைகிறது.




சராசரி வருவாய்க்கும் இறுதிநிலை வருவாய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

வரைபடம் 1,2 சராசரி, இறுதிநிலை வருவாய்களைகோடுகளின் உறவுகளை விளக்குகின்றன.

உற்பத்தி பெருகினால் சராசரி வருவாயும், இறுதிநிலை வருவாயும் குறையும்; இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயை விட வேகமாகக் குறையும். சராசரி வருவாய் (AR) நேர்கோடாக அமைந்தால் இறுதிநிலை வருவாயும் (MR) நேர்கோடாக அமையும். சராசரி வருவாய்க் கோடு கீழ் நோக்கிச் சரிந்தால் இறுதிநிலை வருவாய்க் கோடும் சராசரி வருவாய்க் கோட்டுக்குக் கீழ்ச் சரிந்து செல்லும். சராசரி வருவாய் நேர்கோடாக இருந்தாலோ கீழ் நோக்கிச் சரிந்தாலோ இறுதிநிலை வருவாய்க் கோடு ஒய் (Y) அச்சிலிருந்து செங்குத்தாகச் செல்லும் சராசரி வருவாய்க் கோட்டைப் பாதியில் வெட்டும்.




இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சீராக இருக்கும் நிலையில் தொழில் முயல்வோன் உயர்ந்த ஆதாயத்தைப் பெறுவதால், அவ்வெல்லையில் தன் உற்பத்தியின் அளவை வரையறுப்பான்.

எஸ்.பெ.

**இறை** என்பது அரசனுக்குச் செலுத்தப்படும் வரியாகும். பண்டைய நாளில் மன்னர்க்குரிய வருவாய்களுள் முதன்மையானது நிலவரியே. நில வருவாயின் ஒருபகுதியை வரியாக அரசனுக்குச்

செலுத்த வேண்டும். இந்நிலவரியையே முதலில் இறை என்றனர். பின்னர், மற்ற வரிகளும் இறை எனக் குறிக்கப்பட்டது.

தொழில் செய்பவர்களும் இறை செலுத்த வேண்டும். இது இந்நாளில் உள்ள தொழில் வரியை ஒத்தது. இவ்வரி தறி இறை, செக்கிறை, மனையிறை, மாவிறை என்றும் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. தறி இறை என்பது நெசவுத் தொழில் புரிவோரிடம் பெறப்பட்ட வரியாகும். இது போல் செக்கிறை என்பது எண்ணெய் வணிகர்க்கு விதிக்கப்பட்ட வரி.

இறை கொடாதார் நிலங்களைப் பறிமுதல் செய்ய அரசுக்கு அதிகாரம் இருந்தது. பல ஊர்களில் இறை செலுத்த இயலாமல் குடிமக்களுள் பலர் ஊரையும் நாட்டையும் விட்டுவிட்டு ஓடிவிட்ட செய்திகளும் காணக்கிடைக்கின்றன. சொ.சா.

**இறைக் கொள்கை**: உலகுக்கெல்லாம் அடிப்படை மூலகாரணமான ஒரு பரம்பொருள் உண்டு என்றும், அதுவே மேலான மெய்ப்பொருள் என்றும் நிலைநாட்டும் கோட்பாடு இறைக் கொள்கை எனப்படும். இப்பரம்பொருள் மூலகாரணம் என்பதால் அதற்கு மேலான ஒரு காரணம் இல்லை என்பதாகும். இம்முழு முதற்காரணத்தைத் தான் கடவுள் என்று பல மதத்தினரும் கூறுகின்றனர். இறைக் கொள்கைக்கு (Theism) எதிராக எழுப்பப்படும் ஒரு கேள்வி, விருப்பு வெறுப்பற்றவனாகவும் உயிர்களிடத்தில் இரக்கம் உடையவனாகவும் உள்ள கடவுள் ஏன் உயிர்களை ஏற்றத் தாழ்வுடன் கூடிய இன்பதுன்பங்களுக்கு ஆளாக்க வேண்டும் என்பது. இதற்குத் தரப்படும் விடை, இறைவன் அந்தந்த உயிருக்கு அவை செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே அவற்றை அருளுகிறான்; சொந்த விருப்பு வெறுப்புகளால் அல்ல என்பதாகும்.

அத்துவைதம், விசிட்டாத்துவைதம் முதலான வேதாந்த மதங்கள் பரம்பொருள் உண்டு என்பதைக் காட்சி, கருதல் அளவைகளால் உறுதியாக நிறுவுதற்கு இயலாமையால், வேதம் முதலான உரை அளவையால் நிறுவுகின்றன.

நியாய நெறியாளர் உலகம் தோன்றிய பொருளாதலால் அதனைத்தோற்றுவிக்கக்கருத்தா ஒருவன் வேண்டும்; அவனே இறைவன் என்று கருதளலவையால் கடவுள் உண்மையை நிலைநாட்டுவர். வைசேடிகரும் யோக நெறியாளரும் கருதல், உரை ஆகிய இரு அளவைகளாலும் இக்கருத்தை நிலைநாட்டுவர். யோக நெறியாளர் ஆளும் அளவை முறை வருமாறு: உயிர்களுக்கிடையே அறிவு, அழகு, ஆற்றல் முதலானவற்றுள் ஏற்றத்தாழ்வுடன் கூடிய படி நிலைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்தால் அனைத்து நிலைகளிலும் குறைவிலா நிறைவாகிய ஒரு பொருள் இருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. அப்பொருளே கடவுள் என்பர்.

சைவசித்தாந்திகள் கடவுள் உண்டு என்பதை நிலை நிறுத்துவதற்கு ஆகமங்களைச் சான்று காட்டுவதோடு கருதலளவையையும் மேற்கொண்டனர். பானை தானாகத் தோன்றிவிடாது. அதைச் செய்கின்றவன் ஒருவன் வேண்டும். குயவன் களிமண்ணை மூலப் பொருளாகக் கொண்டு சக்கரம் தண்டம் ஆகியவற்றைக் கருவிகளாகக் கொண்டு பானையை உண்டாக்குவது போல, பல்வேறுபட்ட இவ்வுலகைப் படைப்பதற்கு அது பற்றிய முற்றறிவைக் கொண்ட பேராற்றல் படைத்த ஒருவன் இருத்தல் வேண்டும். அவனே கடவுள். அவன் மாயையை மூலப் பொருளாகவும் சக்தியைத் துணையாகவும் கொண்டு உலகைப் படைக்கிறான். மேலும், உயிர்கள் பல பிறவிகளில் இன்ப துன்பங்களைத் தத்தம் வினைப்பயனுக்கேற்ப நுகர்கின்றன. அந்தந்த உயிர் செய்த வினைப் பயன்கள் அறிவற்ற பொருளாதலால் தாமே சென்று அந்தந்த உயிரோடு பொருந்த மாட்டா. அப்படிப் பொருந்துமாறு செய்வதற்குப் பேராற்றலும் பேரறிவும் கொண்ட ஒரு பொருள் வேண்டும். அதுவே கடவுள் என்பர் சைவசித்தாந்திகள். பெ.தி.

**இறைச்சி**: அகத்திணை மாந்தரின் பேச்சாக அமைந்த சொற்கள் தமக்குரிய பொருளினின்று சிறிது வேறுபட்டு இசைத்தல் செய்யுள்நெறி மரபாகும். இவ்வாறு பொருள் வேறுபட்டிசைப்பினும் சொல்வடிவம் திரிவதில்லை. அம்முறைமை பற்றிக் காதல் காரணமாகத் தோன்றும் மக்களின் இன்ப துன்ப உணர்வுகளை அஃறிணைப் பொருள்களிடம் சார்த்திப் பேசுவது செய்யுள் மரபாகும்.

இவ்வாறு பேசும் பேச்சில் திணை உணர்வதற்குத் துணையாக விலங்கு, பறவை முதலிய கருப்பொருள்களின் பண்பையும் செயலையும் புனைந்து பேசுதலே இறைச்சியாகும். 'இறைச்சி' என்னும் சொல்லின் பொருள், அகத்திணை மாந்தர் பேசும் சொற்களுள் திணை விளக்கத்திற்குரிய பொருள் தங்கியிருத்தல் என்பதாம். இறை–தங்குதல்; சி – தொழிற்பெயர் விகுதி. இதனை இறைச்சிப் பொருள் என்றும் வழங்குவர். இதன்கண் வேறு குறிப்புப் பொருள் தோன்றின் அது இறைச்சியிற் பிறக்கும் பொருள் எனப்படும்.

இவ்விறைச்சி அமைந்து தோன்றுதற்கு அடிப் படைப் பொருள் பெரும்பான்மையும் மா, மரம், புள், நீர், நிலம், பூ முதலியவாக ஐவகை நிலத்தி லும் தோன்றும் கருப்பொருள்களாகும். இறைச்சியை அமைத்துப் பேசுங்கால், இத்தகைய அஃறிணைப் பொருள்களுக்கு உயர்திணையாகிய மக்களின் பண் பும் செயலுமாகிய ஒழுகலாறுகளைச் சார்த்திப் பேசுதல் இலக்கண மரபாகும்.

இனி, இறைச்சியானது செய்யுளில் கருப்பொரு ளைச் சிறப்பித்துப் புனைந்துரையாக வருதலேயன்றி, சில இடங்களில் கூறுவோரது உள்ளக் குறிப்பினை உள்ளுறையாகக் கொண்டும் வரும். இங்ஙனம் இறைச்சிப் பொருள் பற்றித் தோன்றும் உள்ளுறைக் குறிப்பினை உள்ளுறை வகையுள் 'உடனுறை' என்னும் உள்ளுறை வகையாகக் கூறுவர் தொல் காப்பியர்.

இறைச்சியிற் பிறக்கும் உள்ளுறைப் பொருள், கருப் பொருள்களின் புனைவாகக் கூறப்படுவனவற் றின் பண்பொடும் செயலொடும் ஒன்றுபட்டு உட னாகி நிற்றலின் 'உடனுறை' எனப்பட்டது.

இவ்வுள்ளுறைப் பொருள் பெரும்பான்மையும் காதல் பற்றியதாகவே அமையும். இறைச்சியுள் குறிப்புப் பொருளை அமைத்துச் செய்யுளியற்று வதும் அவ்வுள்ளுறைக் குறிப்பைத் தெரிந்துணர்வதும் அறிஞர்க்கே இயல்வதாகும். உள்ளுறை உவமம் வேறு; இறைச்சியிற் பிறக்கும் பொருளாகிய உட னுறை என்பது வேறு.

தலைவர் சென்ற வழியில் பெண் யானை களின் பசியைப் போக்கும் பொருட்டு, நீண்ட தும்பிக் கையைக் கொண்ட ஆண் யானைகள் மென்மை யான கிளைகளோடு நிற்கும் யாமரப் பட்டை களை உரித்துக் கொண்டிருக்கும் அன்புடையன வாம் என இடைச்சுரத்தில் உள்ள கருப்பொருள் களின் செயலைச் சுட்டும் வருணனை, 'நின்பால் விருப்பமுடைய தலைவர் விரைவில் மீள்வார்' என் னும் தோழியின் விருப்பத்தைப் புலப்படுத்தி நிற்ப தையறியலாம். குறுந்தொகைப் பாடலில் (37) 'யானை யாமரத்தின் பட்டைகளை உரிக்கும் என்ற இறைச்சியாகிய கருப்பொருட் புனைவு யானையின் காதலன்பினைச் சுட்டி, தலைவர் விருப்பம் மிக வுடையராதலால் விரைவில் மீண்டு வருவார்' எனக் கூறித் தலைவியை ஆற்றியிருத்தல் வேண்டுமெனத் தோழி வற்புறுத்தியமை காணலாம். இதில் உள்ளுறை உவமம் கோடற்குரிய குறிப்பு ஏதுமின்றி, அவ்விறைச்சிப் பொருள் பாலைத்திணையை விளக்கி நிற்பதை அறியலாம். ச.பா.

**இறைநிலைச் செயல்:** குற்றவியல் சாராத தும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படாததுமான ஒரு வனுக்கு இழைக்கப்படும் தவற்றைத் தீங்கு என்று சட்டம் கூறும். இழப்பீடு (Damages) கேட்பதுதான் அவ்வாறான தீங்கிற்குப் பரிகாரமாகும். ஆங்கில நாட்டில் பொது நிலைச் சட்டத்தின் (Common Law) கோட்பாட்டின்படி, தீங்கியல் சட்டம் (Law of Torts) செயற்பட்டு வருகிறது. இக்கோட்பாடு இந்தி யாவிலும் செயல் முறையில் இருக்கிறது. தீங்கியல் சட்டம் இதுவரை இந்தியாவில் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை.

தீங்கியல் சட்டத்துக்குச் சில விதி விலக்குகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, இறை நிலைச் செயல் (Act of State) ஆகும். இதைச் சிலர் அரசின் தனிச் செயல் என்றும் கூறுவர். தீங்கிழைத்த செயல் உண்மையாகவே இறை நிலைச் செயலாக இருந் தால், அதற்காக அந்த அரசின் மீது வழக்குத் தொடர முடியாது. இறை நிலைச் செயல் என்ன என்று விளக்குவதற்குமுன், ஆங்கில நாட்டில் ஆதி யிலிருந்த நிலையைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அரசன் தவறு ஏதும் செய்ய முடியாது என்பது ஆங்கில நாட்டுக் கோட்பாடு. அவன் நேரடியாகச் செய்யும் செய்கைகள் தவறாக இருக்க முடியாது என்று சட்டம் அனுமானிக்கிறது. அவனது சட்டப் புறம்பான ஆணையின் அடிப்படையில் அவன் பணி யாள் தீங்கிழைத்தால், அவனது ஆணையைச் சட்டப் படியான ஆணையாகக் கருதமுடியாது. எனவே, ஆங்கில நாட்டில் அரசன் தீங்கியல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்தான். இந்த நிலை பின் னர் மாற்றப்பட்டுவிட்டது. முடியரசு நடவடிக்கை கள் சட்டம் (Crown Proceedings Act, 1947) ஆங்கில நாட்டில் 1947-ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது. இச்சட்டத்தின்படி சில கட்டங்களில அரசு ஊழியர்கள் இழைக்கும் தீங்குக்கு அரசன் மீது வழக்குத் தொடர வகை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கிந்திய வாணிகக் குழு (The East India Company) இந்தியாவை ஆட்சி செய்த போது, அதற்கு இரண்டுவிதத் தோற்றங்கள் இருந்தன. ஒன்று, வாணிகக் குழுவாக இயங்கிய செயல்; மற் றொன்று, இந்தியாவில் அது கைப்பற்றிய பகுதிகளை ஆங்கில அரசின் சார்பாளராக இருந்து ஆட்சி புரிந்த செய்கை. தீங்கியல் சட்டத்திலிருந்து ஆங்கில அரச னுக்கு அளிக்கப்பட்டிருந்த முழு விதிவிலக்கு கிழக் கிந்திய வாணிகக் குழுவிற்கு அளிக்கப்படவில்லை. கி.பி. 1858 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சி உரிமையை ஆங்கில அரசு கிழக்கிந்திய வாணிகக் குழுவிட

மிருந்து நேரடியாக ஏற்றபோது, அதன் மீது எந்த நிலையில் தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியுமோ, அந்த நிலையில் இந்திய அரசு மீதும் வழக்குத் தொடரலாம் என்று வகை செய்யப்பட்டுள்ளது. இந்தியா குடியரசானபின்னும், இந்திய அரசியல் திட்டம் 300-ஆம் பிரிவில் அதே வகையில் இந்திய அரசு மீது வழக்குத் தொடர வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தீங்கியல் சட்டத்திலிருந்து ஆங்கில அரசனுக்கு அளிக்கப்பட்டிருந்த முழுமையான விதிவிலக்கு இந்திய அரசுக்குக் கிடையாது.

பொதுவாக, அரசின் ஊழியர்கள் தங்களது சொந்த முறையில் செய்யும் தீங்கிற்கு (Offence) அரசு பொறுப்பாகாது. அரசு ஊழியர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்போது ஏற்படும் தீங்கிற்கு மட்டில், குறிப்பிட்ட நிலையில் அரசு பொறுப்பாகும். தீங்குக்குக் காரணமான செய்கை அரசால் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அச் செய்கை இறை நிலைச் செயல் என்ற பிரிவில் வருமானால், அதற்கு அரசு பொறுப்பாகாது.

அரசின் செய்கைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். உள்நாட்டுச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட செயல்கள் முதல்வகை; உள்நாட்டுச் சட்டத்துக்கு உட்பட்ட செயல்கள் இரண்டாம் வகை. முதல் வகைச் செயல்கள்தாம் இறைநிலைச் செயல்களாகும். இரண்டாம்வகைச் செயல்கள் தீங்கியல் சட்டத்துக்கு உட்பட்டவை.

அரசு மற்றொரு நாட்டுடன் போர் தொடுப்பது, மற்றொரு நாட்டுடன் சமாதான உடன்படிக்கை செய்வது, மற்றொரு நாட்டின் எல்லையைத் தன்னுடைய எல்லையுடன் சேர்ப்பது ஆகியவை முதல் வகையைச் சேர்ந்தவை. அச்செய்கைகள் சம்பந்தமாக அந்த அரசு மீது தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியாது. அயல்நாட்டு எதிரிக்கு எவ்விடத்திலும் இழைக்கப்படும் தீங்குச் செயல் முதல் வகையாகும். அதுபோல், அயல்நாட்டில் அயலவனுக்கு இழைக்கப்படும் தீங்குச் செயல் முதல் வகையாகும். உள்நாட்டில் வசிக்கும் அயல்நாட்டு நண்பனுக்கும் உள்நாட்டுக் குடிமகனுக்கும் இழைக்கப்படும் தீங்கு இரண்டாம் வகையில் சேரும். ஆனால், அச் செயல் போர்க்காலத்தில் செய்யப்பட்டிருந்தால், அது முதல் வகையைச் சேர்ந்துவிடும்.

அரசுச் செயல் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஒரு செய்கை அரசு ஊழியனால் செய்யப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதாவது, மேற்கூறிய முதல் வகையைச் சேர்ந்த செய்கையா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு சோதனை முறை உள்ளது. குறிப்பிட்ட செய்கையை அரசு தனியாள் மூலம் அல்லாது, தன் ஊழியன் மூலம்தான் செய்ய வேண்டிய நிலை இருந்ததா என்பதுதான் அச்சோதனை முறையாகும். தன் ஊழியனைத் தவிர்த்து வேறு யார் மூலமும் அச்செய்கையை நிறைவேற்ற முடியாது என்பதாயின், அச்செய்கை தீங்கியல் சட்டத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

சில வழக்குகளில் செய்யப்பட்ட முடிவுகள் இனிக் குறிப்பிடப்படும். இசுபெயின் (Spain) நாட்டைச் சார்ந்த குடிமகன் ஒருவன் ஆங்கில ஆட்சிக்குட்படாத ஆப்பிரிக்காக் கண்டப் பகுதியில் நடத்தி வந்த அடிமைகளின் குடியேற்றத்தை (Colony) ஆங்கிலக் கப்பற்படைத் தளபதி ஒருவன் அழித்து விட்டான். அச் செய்கையை ஆங்கிலத் தளபதியின் மேலிடம் ஏற்றுக் கொண்டது. ஆங்கில நாட்டில் அந்த ஆங்கிலத் தளபதி மீது இசுபெயின் நாட்டுக்காரன் தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியாது என்றும், ஆங்கிலத் தளபதியின் செயல் இறை நிலைச் செயல் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. போர்ப் பயிற்சிக்காகக் குண்டு வீசிப் பழகிய செய்கை இறை நிலைச் செயல் என்று ஒரு வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சிற்றூர்தியை (Jeep) அரசால் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர் பணிமனையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு ஓட்டி வரும் வழியில், நடந்து சென்ற ஒருவர் மீது மோதிக் கொன்று விட்டார். மாநில அரசு மீது தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டது. ஓட்டுநரின் செய்கை இறை நிலைச் செயல் அன்று என்று முடிவு செய்யப்பட்டது.

இராணுவப் பயிற்சிப் பள்ளிக்குத் தேவைப்பட்ட இயந்திரத்தை இராணுவத்தைச் சேர்ந்த ஓட்டுநர் பணிமனையிலிருந்து இராணுவப் பயிற்சிப் பள்ளிக்கு இராணுவப் பேரூர்தியில் (Lorry) கொண்டுவரும் வழியில் கவனக் குறைவால் ஒருவர் மீது மோதிக் கொன்று விட்டார். அச்செய்கை இறை நிலைச் செயல் அன்று என்று முடிவு செய்யப்பட்டது. இராணுவத்தில் இல்லாத ஒருவர் மூலம்கூட அவ்வியந்திரத்தை எடுத்து வர ஏற்பாடு செய்திருக்க முடியும் என்பதால், அது இறை நிலைச் செயல் அன்று என்று அவ்வழக்கில் முடிவு செய்யப்பட்டது.

ஓர் அரசாங்க மருத்துவமனையில் பிறந்த குழந்தை அம் மருத்துவமனையில் பணிபுரியும் ஊழி

யர்களின் கவனக் குறைவால் காணாமல் போய்விட்டது. அச்செய்கைக்கு இந்திய அரசு பொறுப்பாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் முடிவு செய்தது. பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து பொது மக்களின் நலனுக்காக மருத்துவமனை நடத்தப்படுவதாகவும், வணிக நோக்கத்துடன் மருத்துவமனை நடத்தப்படவில்லை என்றும், எனவே, அவ்வாறான மருத்துவமனையை நடத்தும் செய்கை இறை நிலைச் செயல் என்றும், அவ்வாறான மருத்துவமனையில் ஏற்பட்ட தீங்கியலுக்கு அரசு பொறுப்பாகாது என்றும் முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனையைத் தனியாட்கள்கூட நடத்த முடியும் என்பதால் மட்டில் அம்முடிவை மாற்றுவதற்கில்லையென்றும் சென்னை உயர்நீதிமன்றம் அவ்வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளது.

துணை நூல்:

**Ratanlal, R. and Dhirajlal, K.T.**, The Law of Torts, Wadhwa Sales Corporation, Nagpur, 1973.

**இறைமை உறைவிடம்**: மக்கள், நிலப்பரப்பு, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கும் உடையதே அரசு எனப்படும். இவற்றுள் மக்கள், நிலப்பரப்பு, அரசாங்கம் ஆகிய மூன்றையும் வெளிப்படையாகப் பார்த்து விடலாம். ஆனால், இறைமையை (Sovereignty) மட்டில் வெளிப்படையாகப் பார்க்க முடியாது. ஓர் அரசின் தன்மையை இறைமையின் மூலமாகத்தான் கணிக்க முடியும். இறைமை என்பது உயர்ந்த அதிகாரம் (Supreme Power) எனப் பொருள்படும். இந்த உயர்ந்த அதிகாரத்தை வைத்துத்தான் ஓர் அரசு சுதந்திரமாகச் செயற்படுகிறதா? மற்றொரு அரசின் துணை அரசாக உள்ளதா என்பதைத் தீர்மானிக்க முடியும். இறைமையில்லாமல் அரசு இருக்க முடியாது. இறைமை என்னும் கருத்து பழைமையானது. பழங்காலக் கிரேக்கர்களும், உரோமானியர்களும் இது பற்றித் தெளிவாக அறிந்திருந்தனர். ஆனால், இன்றைய நாளில் இச்சொல்லுக்குப் பொருள் கொள்வது போல் பொருள் வரையறை செய்தவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுச் சட்ட அறிஞர் சான்பொதின் (Jean Bodin) என்பவர் ஆவார். சட்டத்தின் கட்டுப்பாடின்றிக் குடிமக்கள் அனைவர் மீதும் அரசுக்கு இருக்கும் உச்ச அதிகாரமே இறைமை என்று இறைமைக்கு அவர் விளக்கந் தந்தார். அரசு தனது விருப்பத்திற்கேற்ப மக்களைக் கட்டாயப்படுத்திப் பணிய வைக்கும் சக்திதான் இறைமையெனப் பேராசிரியர் இலாசுகி கூறியுள்ளார். ஆகவே, இறைமை என்பது ஒரு நாட்டில் இருக்கக்கூடிய சங்கங்கள், மக்கள் ஆகிய அனைவருக்கும் மேலான அதிகாரம் படைத்தது. இது எல்லோருக்கும் ஆணையிட உரிமை கொண்டுள்ளது. ஆனால், இறைமையை யாரும் ஆணையிட முடியாது. இறைமை அடிபணிந்தால் அரசு என்பது இல்லை என்று பொருள். வெளிநாடுகளின் கட்டுப்பாடுகள் இல்லாமல் தன்னிச்சையாக இயங்குவதே இறைமை ஆகும்.



இறைமையின் தன்மைகள் பின் வருவன: இறைமையானது உள்நாட்டில் வரம்பற்ற அதிகாரம் கொண்டது. இறைமையை விட உயர்ந்த அதிகாரம் உள்நாட்டில் கிடையாது. வெளிநாடுகளும் இதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்காது. இறைமையின் அதிகாரம் அந்நாட்டில் இருக்கக்கூடிய அனைவருக்கும் பொருந்தும். இறைமையிலிருந்து யாரும் விதிவிலக்குப் பெற முடியாது. இறைமை நிலைபேறானது; அழியாத் தன்மை கொண்டது. இறைமையைப் பிரிக்க முடியாது. இறைமையைப் பிரித்தால் இறைமை அழியும். இறைமையை மாற்றியமைக்க முடியாது. இறைமை தனிப்பட்டவர்களிடமோ சங்கங்களிடமோ பிறவகை அமைப்புகளிடமோ இருக்க முடியாது. இறைமை அரசு ஒன்றிடம்தான் இருக்கமுடியும். இறைமைக்கு எல்லோரும் பணிந்தாக வேண்டும் என்பது ஆசுட்டின் என்பவருடைய கருத்து.

இறைமையானது இத்தன்மைகள் கொண்டதெனினும், இறைமையின் உறைவிடம் எங்குள்ளது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. பொதுவாக எழுதப்பட்ட அரசியலமைப்புக் கொண்ட நாடுகளில் இறைமை என்பது அரசியலமைப்புகளில் காணப்படுவது என்று சொல்லலாம். ஆனால், எழுதப்பட்ட அரசியலமைப்புகளிலே வரையறுக்கப்பட்ட ஆட்சித்துறைகள் பயன்படுத்துகின்ற அதிகாரத்தை வைத்துத்தான் இறைமை எங்கு உள்ளது என்று முடிவு செய்ய வேண்டும். இறைமையைப் பயன்படுத்துகின்ற அதிகாரத்தை வைத்து, நடைமுறையிலான இறைமை(Defacto Sovereignty), பெயரளவிலான இறைமை(Dejure Sovereignty) என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இந்தியக் குடியரசுத் தலைவர், இங்கிலாந்தின் அரசியார் ஆகிய இருவரும் பெயரளவிலான இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்களுடைய பெயரில்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றனவென்றாலும், அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவது தலைமை அமைச்சர் தலைமையில் இயங்கும் அமைச்சரவையே ஆகும். எனவே இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடு

களில் இறைமையின் உறைவிடம் அந்தந்த நாடுகளின் அமைச்சரவை என்று சொல்லிவிடலாம். அதேநேரத்தில் பாராளுமன்றந்தான் அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கிறது. ஆகவே, அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இயங்க வேண்டும். பாராளுமன்றம் அமைச்சரவையை உருவாக்கவும் அதனை நீக்கவும் அதிகாரம் உடையதாகும். மேலும், பாராளுமன்றம் இயற்றும் சட்டவரையறைகளில் குடியரசுத் தலைவர் கையொப்பமிடவில்லையேல் அவை சட்டங்களாகா. ஆகவே, ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமானால் பாராளுமன்றம் அதற்குரிய சட்ட வரையறையைக் கொண்டு வந்து, அங்கு விவாதித்து நிறைவேற்றிய பின்னர், அச்சட்ட வரையறைக்குக் குடியரசுத் தலைவர் அல்லது அரசின் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அரசின் தலைவர் ஒப்புதல் அளிக்காவிடின் சட்டங்களை இயற்ற முடியாது. பாராளுமன்றம் இல்லாமல் சட்ட வரையறைகளை நிறைவேற்ற முடியாது. எனவே இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இறைமையின் உறைவிடம் அரசுத் தலைவரும் பாராளுமன்றமும் கலந்த இணைப்பாகும். இந்த இரண்டிலும் சேர்த்துத்தான் இறைமை உறைந்திருக்குமே தவிர, தனித்தனியாக அது இருக்காது.

இறைமை எப்போதும் மக்களாட்சியில் மக்களிடம்தான் உள்ளது. ஆனால், மக்கள் தங்கள் அதிகாரங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தங்கள் பேராளர்களிடம் ஒப்படைக்கின்றனர். மக்கள்தம் பேராளர்களால் இயங்கக்கூடியவை சட்டமன்றங்கள் (Legislatures) ஆகும். இவைதாம் நடைமுறை இறைமை அதிகாரம் கொண்டவையெனச் சொல்லலாம். இவை வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் இறைமையின் தலைவர்களான மக்களைக் கூட மீறி நடக்கலாமென்பதற்காகச் சட்ட மன்றங்களோடு அரசுத் தலைவரும் இணைக்கப்பட்டிருக்கிறார். இது பிரதிநிதித்துவ முறையிலான மக்களாட்சி முறையில் உள்ளது. மக்கள் தங்கள் அதிகாரங்களைத் தங்கள் பேராளர்களிடம் ஒப்படைக்காமல் மக்களே நேரடியாக ஆட்சி செலுத்தக் கூடிய முறையும் இருக்கிறது. இது நேரடி மக்களாட்சி முறை எனப் பெயர் பெறும். இம்முறை சுவிட்சர்லாந்து நாட்டில் செயற்பட்டு வருகின்றது. சுவிட்சர்லாந்து நாட்டில் மக்கள் இறைமை (Popular Sovereignty) என்னும் முறையே நேரடி மக்களாட்சி முறையாகச் செயற்படுகிறது. இந்நாட்டிலும் சட்ட வரையறைகளைச் சட்ட மன்றந்தான் இயற்றுகிறது. ஆனால், மக்கள் வேண்டுகின்ற தேவைகளைத் தாம் சட்ட வரையறைகளாகச் சட்டமன்றம் வரையவேண்டும். சட்டமன்றம் இயற்றிய சட்ட வரையறைகளுக்கு மக்களின் ஆதரவும் (Referendum) தேவை. மக்கள் ஒரு சட்ட வரையறையை ஆதரிக்கவில்லையேல் அது சட்டமாக நிறைவேறாது. பொதுமக்களின் ஆதரவின்படியேதான் சட்ட வரையறைகள் சட்டங்களாகின்றன. மக்களின் பேராளர்கள் மக்களுக்கு எதிராகச் செயற்படுவார்களேயாயின் அவர்களைத் திரும்ப அழைக்கும் (Recall) அதிகாரத்தையும் மக்கள் கொண்டுள்ளனர். எனவே, சட்டங்கள் இயற்றுகின்றபோது சட்டமன்றம் கவனமாக மக்களின் மனநிலைகளை அறிந்து சட்டங்களை இயற்றுகிறது. எனவே, சட்டங்கள் வேண்டுமெனக் கோருவது, சட்டங்களுக்கு ஆதரவு நல்குவது, தங்களுக்கு எதிராகப் பேராளர்கள் சென்றால் அவர்களைத் திரும்ப அழைப்பது ஆகிய எல்லா அதிகாரங்களும் மக்களிடம் இருப்பதால், சட்டங்களை மக்களுக்கு எதிராக இயற்ற முடியாது.

---

கூட்டாட்சி அரசியலமைப்புகளில் இறைமை எங்கு உறைந்துள்ளதென்று கூறுவது கடினம். ஏனெனில் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என இரண்டுவகை அரசாங்கங்கள் கூட்டாட்சியில் இடம்பெறுகின்றன. இவற்றில் எந்த அரசாங்கத்தில் இறைமை உள்ளது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. இரண்டு அரசாங்கங்களிலும் இறைமை அதிகாரம் பொதிந்துள்ளது. எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமாயின், மத்திய, மாநில அரசாங்கங்கள் சேர்ந்துதான் திருத்த வேண்டும். தனிப்பட்ட வகையில் மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ அரசியலமைப்பைத் திருத்த முடியாது. மத்திய அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்தச் சட்டம் கொண்டு வந்தாலும், மாநில அரசாங்கங்களின் இசைவில்லாமல் சட்டம் நிறைவேறாது. ஆகவே, மத்திய அரசாங்கமே அரசியலமைப்பைத் திருத்த முடியாது. இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் அரசியலமைப்பு மூன்று வகையாகத் திருத்தப்படுகின்றது. மத்திய பாராளுமன்றம் தன் பெரும்பான்மை ஆதரவின் மூலமாகச் சில அரசியலமைப்புத் திருத்தங்களைச் செய்யலாம். சில திருத்தங்களைப் பொறுத்தவரையில், மத்திய பாராளுமன்றம் அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர், பாதிக்குக் குறையாத மாநிலங்கள் அதற்கு இசைவளித்தால்தான் அந்த அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேறும். மாநிலச்சட்டமன்றங்களின் எண்ணிக்கையை மாற்றுவதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தை மக்கள் முயற்சி மூலமாக (Initiative) மாநிலங்கள் கொண்டுவர, அதனைப் பாராளுமன்றம் ஒப்புக்கொண்டால், அது குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுடன் சட்டமாக நிறைவேறும். இவ்வாறு மூன்று விதங்களாக இந்திய அரசியல

மைப்பைத் திருத்தலாம். எனவே, இறைமை அதிகாரம் இந்த அரசாங்கத்தில் தான் உறைந்துள்ளதென்று சொல்ல முடியாமல் பகிர்ந்து இருக்கின்றது. இறைமையைப் பிரிக்க முடியாது. பிரித்தால் இறைமை அழிந்துவிடும் என்ற மரபார்ந்த இறைமைக் கோட்பாடு முறியடிக்கப்படுகிறது. ஆகவே, கூட்டாட்சி நாடுகளில் இறைமை அதிகாரத்தை இரண்டு அரசாங்கங்களும் பொதுப்படையாகச் செயற்படுத்தப் பொறுப்புக் கொண்டுள்ளன.

சோவியத்து உருசியாவில் இறைமை அதிகாரம் வேறுபட்ட முறையில் உறைந்துள்ளது. இறைமை பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் அமைந்துள்ளது போல், சோவியத்து உருசியாவிலும் சட்டமன்றத்திலும் அரசின் தலைவரிடமும் இணைந்தே காணப்படுகிறது என்று சொல்லலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் இறைமை இருக்கின்றதென்றாலும், சட்டமன்றம் அரசின் தலைவராக இருக்கக் கூடிய 'பிரசிடியம்' சொல்லக்கூடிய சட்டங்களை இயற்றுவதாலும், சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்குப் பிரசிடியத்தின் 'இசைவு' தேவையென்பதாலும், இறைமை சட்ட மன்றத்திலும் அரசின் தலைவரிடமும் உறைந்துள்ளதெனலாம். இருப்பினும், சோவியத்து 'பிரசிடியத்தையும்' சட்ட மன்றத்தையும் இயக்கக் கூடியது சோவியத்து நாட்டின் பொதுவுடைமைக் கட்சிதான். இக்கட்சி சோவியத்து அரசியல் சட்டதிட்டத்திற்குள் இயங்குகிறது. இது சோவியத்து மக்களின் முன்னணிப்படை. மக்கள் அனைவரிடமிருந்தும் பிரிக்க முடியாத, மக்களது பெரும் உணர்வு மிக்க முற்போக்கான பகுதி அது. கட்சியின் நெஞ்சத்தில் மக்களின் நலனன்றி வேறெந்த நலனுக்கும் இடம் கிடையாது. எனவே, பொதுவுடைமைக் கட்சியின் மத்திய குழுவும் 'போலிட்பீரோ' என்ற உயர்நிலைக் கட்சி அமைப்பும் சோவியத்து அரசியலமைப்பைச் செயற்படுத்துகின்றன. மொத்தத்தில், சோவியத்து நாட்டின் உண்மையான அரசியல் அமைப்பு அந்நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்பே என்று அரசியல் அறிஞர் எர்மன் பைனர் (Herman Finer) கூறுவதால், சோவியத்து உருசியாவின் இறைமை பொதுவுடைமைக் கட்சியில்தான் உள்ளதென்பது தெளிவாகிறது. சி.ஞா.

**இறையனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் சிவபெருமானைக் குறிக்கும் தெய்வப் பெயராகிய இறையனார் என்னும் பெயரைத் தம் இயற்பெயராகப் பெற்றவர். இவருடைய ஒரே பாடல் குறுந்தொகை இரண்டாம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த இப்பாடல் இயற்கைப் புணர்ச்சியிற் கூடிய தலைவன், தன் அன்பு நலம் தோன்றத் தலைவியின் நலம் பாராட்டுவதாக உள்ளது. தும்பியினை விளித்துக் கூறும் இப்பாடலில் அதனைக் 'கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத்தும்பி' என்று குறிப்பிட்டமை நயமிக்கதாக உள்ளது. திருவிளையாடற் புராணம் 'இறையனார்' என்பது மதுரையில் கோயில் கொண்டு விளங்கும் சிவபெருமானை–சோமசுந்தரப் பெருமானைக் குறிக்கும் பெயர் என்றும், அவர் தருமிக்குப் பொற்கிழி கிடைக்கச் செய்யும் பொருட்டு இப்பாடலைப் பாடித் தந்தார் என்றும் கூறுகிறது. இப்பாடலைத் தருமி பாண்டியன் அவையிற் கூறிப் பரிசு பெறும் பொழுது நக்கீரர் இதன்கண் குற்றம் உள்ளது என்று கூறிப் பரிசு வழங்காது தடுத்தார் என்றும், அதனால் தருமி முறையிடச் சிவபெருமானே புலவர் உருவில் வந்து நக்கீரரொடு வாதிட்டாரென்றும், இறுதியில் இறைவனால் சாபமும் பின்னர்ச் சாபநீக்கமும் பெற்றார் என்றும் அப்புராணம் கூறுகிறது. அப்புராண வரலாறு எவ்வாறாயினும், 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் ஓர் அகப்பாடலும் அதன் ஆசிரியரும் பற்றி, பக்தி இயக்கக் காலத்திலும் அதனை அடுத்துத் தோன்றிய புராண காலத்திலும் வாழ்ந்த சமயப் புலவர்கள் கொண்ட வளமான கற்பனையின் விளைவு இது எனக்கொண்டு பயன் கொள்வது ஏற்புடையதாகும்.

இறையனார்[2] இறையனார் அகப்பொருள் என்றும் இறையனார் களவியல் என்றும் வழங்கப் பெறும் அகப்பொருள் பற்றிய இலக்கண நூலைச் செய்தவர். இந்நூலிற்கு அமைந்த உரையில் இது தோன்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. பொருளதிகாரம் வல்லாரைக் காணப்பெறாது வருந்தி வேண்டிய பாண்டிய மன்னனின் குறைதீர்க்க விரும்பி, ஆலவாய் அண்ணலாகிய சிவபெருமானே அறுபது நூற்பாக்களில் அகப்பொருள் இலக்கணத்தை அமைத்து, அம்மன்னனுக்குக் கிடைக்கச் செய்தார் என்று அவ்வரலாறு கூறுகிறது. இங்கும் இறையனார் என்னும் பெயர் கொண்ட ஒரு புலவரே இந்நூலை இயற்றினார் என்று திறனாய்வாளர் கருதுகின்றனர்.

இறையனார்[3] : திருவள்ளுவ மாலையில் 'என்றும் புலராது' எனத் தொடங்கும் வெண்பாவினை இயற்றியவர் பெயர் இறையனார் என்று காணப்படுகிறது.

இறையனார், உருத்திரனார் என்னும் சங்க காலப் பெயர்களைப் போலப் பிற்காலத்திலும், சிவ

பெருமானின் பெயர்களைக் கொண்ட புலவர்கள் இருந்துள்ள செய்தியினைப் பின்னர்த் தோன்றிய நூல்களால் உணர முடிகிறது. மயேச்சுரர் என்றும் பிறைமுடிப் பெருமான் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்றும் இவரை யாப்பருங்கல உரைநூல் குறிப்பிடுகிறது.

**இறையனார் அகப்பொருள்** என்னும்நூல் அகப்பொருள் இலக்கணங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுகிறது. இது இறையனார் களவியல் என்றும் பெயர் பெறும். இறையனாரால் இயற்றப் பெற்றதால் இந்நூல் இறையனார் அகப்பொருள் என வழங்கப்பெறுகிறது. இது சங்ககாலத்தைச் சார்ந்த நூலாகும் என்று கருதப்படுகிறது. இது தோன்றிய வரலாற்றினை இந்நூல் முதல் நூற்பா உரை குறிப்பிடுகிறது. பஞ்சம் நீங்கித் தம் நாடு திரும்பிய புலவர்களுள் பொருளதிகாரம் அறிந்த புலவர் ஒருவரும் இல்லையே எனப் பெரிதும் கவலை கொண்ட பாண்டிய மன்னனுக்குச் சிவபெருமான் இரங்கி, அகப்பொருள் இலக்கணத்தைக் குறிக்கும் அறுபது நூற்பாக்களை மூன்று செப்பேடுகளில் எழுதித் தம் பீடத்தின் கீழே வைத்தார். மறுநாள் இறைவனுக்குப் பூசனை புரியும் அந்தணன் அச்செப்பேடுகளைக் கண்ணுற்று அவற்றை எடுத்துச் சென்று மன்னனிடம் கொடுத்தான். மன்னன் மகிழ்ந்து, தன் குறையைத் தீர்த்த சிவபெருமானைப் போற்றினான். இந்நூலின் பெருமையை உணர்த்துதற்கு இக்கதை புனையப்பட்டிருக்கலாம். இறையனார் என்ற பெயர் கொண்ட ஒரு புலவரால் இந்நூல் செய்யப்பட்டதெனக் கொள்வது பொருத்தமாகும்.

இந்நூலின் அறுபது நூற்பாக்களுள் முதல் முப்பத்து மூன்று நூற்பாக்கள் களவொழுக்கத்தின் இலக்கணத்தையும், எஞ்சிய இருபத்தேழு நூற்பாக்கள் கற்பொழுக்கத்தின் இலக்கணத்தையும் கூறுகின்றன.

அன்பினாலாய ஐந்திணைக் களவு கந்தருவ வழக்கந்துக்கு ஒப்பாகும். ஒருவனும் ஒருத்தியும் தாமே தற்செயலாய் எதிர்ப்பட்டுக் காதல் வயத்தவராய்க் கூடுவர். இது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். பின்பு பாங்கன் குறியிடமறிந்து சொல்லத் தலைவன் தலைவியை எதிர்ப்படுதலும், தானே சென்று அவளை எதிர்ப்படுதலும் உண்டு. அடுத்துத் தோழியைக் குறையிரந்து தலைவியை எய்த முயல்வான்; அல்லது தோழி தலைவியோடு இருக்குங்கால் ஊரும் பெயரும் பிறவும் வினாவித் தன் காதலைக் குறிப்பாக உணர்த்துவான். தலைவன் தலைவியர் இயற்கைப் புணர்ச்சியைத் தோழி பலவகையிலும் ஆய்ந்து உணர்வாள். தன்னிடம் வந்து குறையிரக்கும் தலைவனோடு தோழி பலவாறு உரையாடி நகைத்து அவன் தலைவியை அடைவதற்கான வேட்கையை மிகுவிப்பாள். பகற்குறியிடத்தும் இரவுக்குறியிடத்தும் தலைவன் தலைவியர் சந்திப்பர். தலைவன் தலைவியர் களவொழுக்கங்குறித்து ஊரில் அம்பலும் அலரும் தோன்றும். தோழி செவிலிக்குத் தலைவன் தலைவியர் களவொழுக்கத்தைத் தெரிவிப்பாள்; செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தைக்கும் ஐயன்மார்களுக்கும் அறிவிப்பாள். இது அறத்தொடு நிற்றல் எனப்படும். தலைவி தலைவன் பிரிவை ஆற்றாது அரற்றுதலும் காப்பு மிகுதியின் கண் அவள் செயலற்றுக் கூறும் மொழிகளும் ஆகிய இவை போன்றவை வரைதல் வேட்கையைக் குறிக்கும். இது இந்நூல் கூறும் களவொழுக்க இலக்கணத்தின் சுருக்கம்.

இனிக் கற்பொழுக்க இலக்கணத்தின் முக்கிய குறிப்புகள் பின்வருமாறு: தலைவன் கல்விக்காகவும் நாடுகாத்தற்கும் இரு பகையரசர்களைச் சந்து செய்வித்தற்கும் அரசனுக்கு உற்றுழி உதவுவதற்கும் பொருள் ஈட்டுதற்கும் பரத்தையர் பொருட்டும் பிரிவான். கல்விக்காகவும் நாடுகாத்தற்கும் பிரிதல் அந்தணர், அரசர் ஆகிய இரு திறத்தார்க்கும் உரியது. வேந்தர்க்கு உற்றுழி உதவுவதற்காகவும் பொருளுக்காகவும் பிரிதல் வணிகருக்கும் வேளாளருக்கும் உரியது. பரத்தையர் பொருட்டுப் பிரிதல் நான்கு திறத்தார்க்கும் உரியது. நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியும் தலைவன் இன்ன நாள் அல்லது இன்ன திங்களுக்குள் வருவதாகச் சொல்லிப் பிரிதல் வேண்டும். மனைவிக்குப் பூப்புத் தோன்றிய நாள் முதல் பன்னிரு நாட்கள் தலைவன் அவளை அகன்றுறைதல் அறமாகாது. வாயில்களான தோழி, பார்ப்பான், பாணன், பாடினி முதலியோர் தலைவன் பிரிவின்கண் தலைவியை ஆற்றுவிப்பர்.

இறுதியாக, அகப்பொருளுக்குப் பொதுவாகத் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், எச்சம், மெய்ப்பாடு, பயன், பொருள்கோள் ஆகிய பத்தையும் இந்நூல் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் விளக்கியுள்ளது. அகப்பொருள் இலக்கணத்தைத் தெளிவுபட உணர்தற்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாகும்.

தா.ஏ.ஞா

**இறையனார்அகப்பொருள்உரை** தமிழ் இலக்கண நூல்களுக்கமைந்துள்ள பழமையான உரைகளுள் ஒன்றாகும். இறையனார் அகப்பொருளின் அறுபது நூற்பாக்களுக்கும் அமைந்துள்ள இவ்வுரை மிகவும் விரிவானதும் தெளிவானதுமாகும். இவ்வுரையை

எழுதியவர் நக்கீரராவர். இவ்வுரை தோன்றிய வரலாறு இந்நூலின் முதல் நூற்பா உரையில் கூறப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் வரங்கிடந்து வேண்டிக் கொண்டதற்கு இரங்கிய சிவபெருமான் உப்பூரிகுடி கிழார் மகன் உருத்திரசன்மனைக் கொண்டு இந்நூலுக்குச் சிறந்த உரையினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு அருளிச் செய்தார். உருத்திரசன்மன் ஐந்து வயதுடைய ஊமை. சங்கப் புலவர்கள் அவனை ஆசனத்தின் மீதிருத்தித் தாங்கள் கீழிருந்து ஒவ்வொருவரும் நூற்பாக்களுக்குத் தாமியற்றிய உரையினைக் கூறினர். பலர் கூறிய உரைகேட்டு வாளா விருந்த உருத்திரசன்மன் சிலர் கூறிய உரைகேட்டுச் சிறிதே கண்ணீர் வடித்தான். நக்கீரர் பொருளுரைத்த போது பதந்தொறும் கண்ணீர் பெருக்கினான். இந்நூலிற் கமைந்த நக்கீரர் உரை மிகவும் சிறப்புடையது என்பதை உணர்த்துதற்கு இக்கதை புனையபட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நூற்பாவின் உரையும் மிகவும் விரிவாக உள்ளது. 'அன்பின் ஐந்திணைக்களவெனப் படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள் கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்' என்ற இந்நூலின் முதற் நூற்பா உரையில் உரையை நேரடியாகக் கூறுதற்கு முன்பு, ஒரு நூலுக்குப் பாயிரத்தின் இன்றியமையாமை, பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவற்றின் இலக்கணம், முச்சங்க வரலாறு, களவியல் தோன்றிய வரலாறு, அந்நூலுக்கு உரை கண்ட வரலாறு, இவ்வுரை வழிவழியாகக் கூறப் பட்டு வந்த முறை, களவியல் என்றதன் காரணம், முதல், வழி, சார்பு நூல்கள் பற்றிய விளக்கம், நூல் என்றதன் பொருள் ஆகியவை தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. உரையின் தொடக்கங்கருதி இவ்விளக் கங்கள் முதலில் இடம் பெற்றுள்ளன எனலாம். பின்பு நூற்பாவின் உரை கூறுமிடத்து அதன் கருத்து, பதவுரை, பொழிப்புரை ஆகியன கூறப்பட்டுள்ளன. அடுத்து நூற்பாவின் ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் விளக்கம் விரிவாகத் தரப்பட்டுள்ளது. சான்றாக, மேலே குறிப்பிட்ட முதற்நூற்பா விற்கு அன்பு, ஐந்திணை, முதல், கரு, உரிப்பொருள் கள், திணை என்பதன் பொருள், ஐந்திணைக் களவு, எண்வகை மணம் ஆகியன பற்றிய விளக்கங்கள் மிகவும் தெளிவுபட உரைக்கப்பட்டுள்ளன. இதினின்றும் இந்நூலிலுள்ள நூற்பாக்களுக்குப் பொதுவாக உரை அமைந்துள்ள போக்கினை உணரலாம். உரையாசிரியர் தம் கருத்தை நிறுவுவதற்குப் பொருந்திய இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களைச் சான்றாகக் காட்டியுள்ளார். நூற்பாக்கள் கூறும் இலக்கணங்களை விளக்குதற்கு உரையாசிரியர் நற்றிணை, குறுந் தொகை போன்ற சங்க இலக்கியப் பாடல்களையும் கட்டளைக் கலித்துறைப் பாக்களில் அமைந்த கோவைப் பாடல்களையும் மேற்கோள் செய்யுட் களாகத் தந்துள்ளார். இவற்றுள் மிகுதியாகக் கோவைப் பாடல்களே இடம் பெற்றுள்ளன. இப் பாடல்கள் 'பாண்டிக் கோவை'யைச் சார்ந்தன என்று கருதப்பெறுகின்றன.

நக்கீரர் வாழ்ந்த சங்க காலத்தில் கோவை நூல்கள் தோன்றவில்லை. கோவைகள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் அமைந்தவை. சங்க காலத்தில் இத்தகைய யாப்பமைந்த பாடல்கள் இல்லை. தொல்காப்பியத்திலும் இதற்கு இலக்கணம் இல்லை. மேலும், முதல் நூற்பா உரையில் 'நக்கீரனாரால் உரை கண்டு குமாரசுவாமியால் கேட்கப்பட்டது என்க' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நக்கீரர் உரை செய்திருப்பின் தாமே தம் பெயரைக் கூறுவரோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதனால் இது நக்கீரர் உரைதானோ என்னும் ஐயங் கொள்ளுதற்கு இடந்தருகிறது. முதலில் நக்கீரரால் செய்யப் பட்ட உரை பலகாலம் வழிவழியாக உரைக்கப்பட்டு வந்துள்ளதென்பதை முதல் நூற்பா உரை கூறுகிறது. இதனால் ஒருவர் இன்னொருவரிடமிருந்து கேட்கும் ஒவ்வொரு முறையும் உரையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு, இறுதியாகக் கேட்டவர் ஏட்டில் எழுதிய காலத்தில் உரையில் கட்டளைக் கலித் துறைப் பாடல்களையும் மேற்கோள் செய்யுட்களாகத் தந்திருக்கலாம். எவ்வாறாயினும் இவ்வுரை மிகச் சிறந்த உரை என்பதில் ஐயமில்லை.

இறையனாரால் இயற்றப்பட்ட இவ்வுரை பல தலைமுறை வாய்மொழியாக ஆசிரிய மாணவ முறையில்-கற்பிக்கப் பெற்று வந்தது என்றும், இறுதியில் முசிறியாசிரியர் நீலகண்டனார் என்பவர் இதனை ஏட்டில் எழுதிவைத்தார் என்றும் தெரிகிறது.

இவ்வுரை 'யாப்பதிகாரம் வல்லார்' என்று குறிப்பிடுவது தமிழிலக்கண மரபு வளர்ச்சியில் அமைந்துள்ள ஒரு நிலையினை உணர்த்துவதாக உள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தினையும் தொகுத்துக் குறிப்பிடும் 'ஐந்திலக்கண மரபு' தோன்றுவதற்கு முன்னர், எழுத்து, சொல், பொருளொடு யாப்பும் சேர்ந்து நான்காக நின்ற நிலை இவர் காலத்தில் இருந்துள்ளது என்பது புலனாகிறது. யாப்பதிகாரம் தொல்காப்பியச் செய்யுளியல் கூறுஞ்செய்திகளையும் அதற்குப் பின்னர்த் தோன்றிய பாட்டியல் செய்திகளையும் கொண்டமைந்ததாகலாம். இவ்வுரையாசிரியர் முச்சங்க வரலாறு பற்றி விரிவாகக் கூறியுள்ளார். இச்

செய்திகளை ஏற்று, அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார வேனிற்காதை உரையில் தந்துள்ளார்.

இவ்வுரையாசிரியர் அந்தணர் மன்றல் வகையான பிரமம் முதலிய எட்டினையும் அவற்றிற்குரிய தமிழ்ப் பெயரொடு கூறி விளக்கியுள்ளார். அப்பெயர்கள் அறநிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள்வினை, இராக்கதம், பேய்நிலை என்னும் எட்டுமாகும். நூல்வகை கூறுமிடத்து 'எதிர்நூல்' என்னும் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதற்குத் 'தன்கோள் நிற்கப் பிறர்கோள் மறுப்பது எதிர்நூல் என்ப ஒரு சாராரே' என்று மேற்கோளும் காட்டியுள்ளார்.

உரையின் இடையே விழாக்களைக் குறிப்பிட நேர்ந்தபோது, 'மதுரை ஆவணி அவிட்டம், உறையூர்ப் பங்குனி உத்திரம், கருவூர் உள்ளி விழா' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் கண் பழந்தமிழகத்தில் விளங்கிய மூவேந்தர்தம் தலைநகரங்களிலும் நடைபெற்ற சிறந்த விழாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தம் உரையின் பலவிடங்களில் தக்க உவமைகளை மேற்கொண்டு, செய்திகளை விளக்கிச் செல்வது இவ்வுரையாசிரியரின் இயல்பாகும். தாரகை நடுவண் தண்மதி, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி, புனல் ஓடு வழிப் புற்சாய்தல், வேலேறுபடத் தேளேறு மாய்தல், குன்றம் உருண்டால் குன்றி வழியடையாகாமை ஆகியன இவர்தம் உவமைகளுள் சிலவாகும். இவர் தம் உரையில் பல வடசொற்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் சில வருமாறு: ஏகதேசம், ஆசாரம், இராக்கதம், காரணிகன், பைசாசம், கலியாணம், பிராமணம்.

இவ்வாசிரியரின் உரைநடை எளிமையும் இனிமையுங் கொண்டு கவிதைத் தன்மையுடையதாக அமைந்துள்ளது. அதனால் இந்நூல் தமிழ் கற்பார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து வந்துள்ளது. இதன்கண் அமைந்துள்ள வருணனைப் பகுதிகள் எதுகைமோனை எழில்மிக்கனவாய், ஓசைநலஞ்சான்ற செய்யுள் போலவே அமைந்து கற்போரை இன்புறுத்துவனவாக உள்ளன. 'இறையனார்' எனப்படும் நூலாசிரியர் பெயரைக் குறிப்பிடுங்கால், 'மால்வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயில், பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள்' என்று சுட்டியுள்ளார். ஒரு தொடரின் ஈற்றிலமைந்த முற்றினை எச்சமாக்கி, அதனையே அந்தாதியாகப் பயன்படுத்தி அடுத்த தொடரினைத் தொடங்கி எழுதிச் செல்வார். இதனை 'இறந்துபட்டான் எனக்கருதிக் கனன்று நோக்கினாள்; நோக்கி உண்மை கண்டாள்; கண்டாட்குக் கெடுத்துத்தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற்போலப் பெரியதோர் உவகை ஆயிற்று; ஆயின உவகை ஒரு மூரல் முறுவலைத் தோற்றியது; தோற்றவே, 'எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேன்' என ஆற்றாளாயினாள்' என்னும் பகுதியால் உணரலாம். 'பரவை அல்குல் துயிலசையப் பைம் பொற்றோடு மின்னுப்புடைப்ப, அரவ வண்டறையும் தாமரை அகவிதழ் புரையும் அஞ்செஞ் சீறடிமேல் செம்பொற் சிலம்பு அரற்ற, அன்னம் போல மென்மெல ஒதுங்கிக் காமவல்லிக் கொடியும் கற்பகக் கொழுந்தும் நடப்பதென நடந்து சென்று ... .. இருந்தாள்' என்பது இந்நூலாசிரியரின் கவிதை நலஞ்சான்ற உரைநடையினை உணர்த்துமோர் எடுத்துக்காட்டாகும்.

தா.ஏ.ஞா.

**இறையனாராற்றுப்படை** பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரால் இயற்றப்பட்டது. இவர் தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்திலுள்ள பின்னத்தூரில் பிறந்தவர். இவர் சிறுகூற்றம் என்னும் ஊரில் பிறந்ததாகக் கூறுவாரும் உளர். இவரது காலம் கி.பி. 1862 முதல் 1914 வரை ஆகும். இவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலருடைய மருகராகிய பொன்னம்பலப்பிள்ளையிடம் தமிழ் கற்றுச் சிறந்த நினைவாற்றலுடன் விளங்கினார்.

இவர் இவ் விறையனாராற்றுப்படையேயன்றி, பிரகசன நாடகம், இடும்பாவன புராணம், நீலகண்டேச்சுரக்கோவை, சிவபுராணம், சிவகீதை, நரிவிருத்தம், மாணாக்கராற்றுப் படை, இயன்மொழி வாழ்த்து, தென்தில்லை (தில்லைவளாகம்) உலா, தென்தில்லைக்கலம்பகம், பழையது விடுதூது, செருப்பு விடுதூது, மருதப்பாட்டு, தமிழ்நாயக மாலை, வீரகாவியம், களப்பாழ்ப் புராணம், அரதைக் கோவை, இராமாயண அகவல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். மேலும், நற்றிணைக்கு மிகச் சிறந்ததோர் உரையொன்றும் எழுதியுள்ளார்.

வள்ளல்களிடத்திலோ அரசரிடத்திலோ பெருஞ்செல்வத்தைப் பெற்றுவந்த புலவர், கூத்தர், பாணர் முதலானோர் தம்மொத்த புலவர், கூத்தர், விறலியர், பாணர், பொருநர் முதலானோரை இவ்வாறு சென்று இவ்வாறு பாடி, இவ்வாறு பரிசில் பெறுக என வழிப்படுத்துவது 'ஆற்றுப்படை'யாம். இவ்வாறு எழுந்த நூல்களுள் இவ்விறையனாராற்றுப் படையும் ஒன்று. இந்நூல் இப்போது கிடைக்கப் பெறாமையால் இதிற் கூறப்பட்ட செய்திகளைப் பற்றி அறிய இயலவில்லை.

வீ.சொ.

**இறையாண்மைக் கோட்பாடு;** இக்காலத்தில் அரசு அல்லது நாடு (State) என்னும் சமுதாய அமைப்புக்குக் கொடுக்கப்படும் அரசியல் இலக்கணம் அதன் நான்கு இயல்புகளைக் குறிப்பிடுகிறது. அது குறிப்பிடும் நான்கு இயல்புகளான நிலம் (Territory), மக்கள் (Population), அரசாங்கம் (Government), இறையாண்மை அல்லது இறைமை (Sovereignty) ஆகியவற்றுளெல்லாம் இறைமை என்பதுதான் மிகவும் இன்றியமையாத இயல்பு ஆகும். ஒவ்வொரு முழு வளர்ச்சிபெற்ற அல்லது தன்னாட்சி பெற்ற (Independent) நாட்டிலும் ஒரு தலைமையான அதிகாரி (Supreme Authority) இருக்கிறா ரென்பதும், அவருடைய ஆணைக்கு எதிராக மேல்முறையீடு (Appeal) செய்து கொள்ளுதற்குரிய அதிகாரி எவரும் இல்லை என்பதும் இறையாண்மை என்பதன் பொருளாகும். ஆகையால் ஒரு குறிப்பிட்ட அரசியல் சமுதாயத்துக்கு (Political Community) அரசு எனக் கூறப்படுவதற்குரிய தகுதி அல்லது நிலை இருத்தல் வேண்டுமானால், அது மற்றெந்த நாட்டினாலும் ஆளப்படாமல் தன்னைத் தானே ஆண்டுகொள்ளக்கூடிய தன்னுரிமையைப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதும், அவ்வாறன்றி, அது மற்றொரு நாட்டினுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்குமானால் அதற்கு நிலப்பரப்பும், மக்களும், அரசாங்க அமைப்பும் இருந்தாலும், அது அரசு என்றுசொல்லப்படும் தகுதி உடையது அன்று என்பதும் இறையாண்மை என்ற சொல்லினால் உணர்த்தப்படுகின்றன. தலைமையான அதிகாரம் இருந்தால்தான் தன்னாட்சி உரிமையும் அதாவது அதிகாரமும் இருத்தல் இயலும். இத்தகைய தலைமை அதிகாரத்தின் விளைவான அரசு, தன்னிடத்தில் உள்ள எந்த ஒருவரும் எந்த ஒரு கழகமும் தனதாணையை மீறாதவாறு செயற்படுத்தவும், மற்ற எந்த நாட்டின் அல்லது நாடுகளின் கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் அது செயலாற்றவும் சட்ட வகையான அதிகாரம் (Legal Authority) பெற்றுள்ளது. ஆகையால் பன்னாட்டு ஒப்பந்தங்களும், பன்னாட்டு வழக்கங்களும் (International Agreements and International Conventions) சட்ட வகையாகப் பார்க்குமிடத்து இறைமை அரசுகளைக் கட்டுப்படுத்தமாட்டா. பன்னாட்டு ஒப்பந்தங்களையும் பன்னாட்டு வழக்கங்களையும் இறைமையுடைய அரசுகள் (Sovereign States) தங்களுடைய நலன்கருதியே மதித்துச் செயற்படுகின்றன. இன்றைய ஐக்கிய நாடுகள் கழகத்தில் (United Nations Organisation) உறுப்பு நாடுகளாக உள்ள 150க்கும் மேற்பட்ட இறைமை அரசுகளின் நிலையும் சட்டவகையாகப் பார்க்குமிடத்து (Legally) இவ்வாறாகவே உள்ளது; இவ்வுறுப்பு நாடுகள் கழகத்தில் உறுப்பினராய்ப் இருபதும் அதன் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் தங்களுடைய விருப்பத்தின் பேரிலேதான் இருக்கிறதே தவிர, சட்டவகையான அதிகாரம் எதுவும் அவற்றைக் கட்டுப்படுத்தவில்லை என்பது தெளிவு. மற்ற நாடுகளின் உரிமைகளை ஒவ்வொரு நாடும் மதித்துப் பாதுகாத்தால்தான், அதனுடைய உரிமைகளுக்கு மதிப்பும் பாதுகாப்பும் கிடைக்குமென்ற உணர்வின் காரணமாகவே அவை ஒப்பந்தங்களின் வாயிலாகவும் கழக உறுப்பினர் பதவி வாயிலாகவும் மற்ற நாடுகளின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கின்றன.

இறைமையின் வரலாறு: பண்டைய கிரேக்க நாட்டில் இப்பொழுது காணப்படுவதுபோல் நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் பெரிய அரசுகள் இல்லை; ஒவ்வொரு மக்கட்கூட்டத்தாரும் ஒரு நகரத்தில் (Polis) தன்னாட்சி உரிமையோடியிருந்ததனால் இறைமையுடைய நகரரசுகள் (City States) தோன்றின. இவற்றைக்கண்டு அரிசுடாட்டில் (Aristotle, கி.மு. 384-கி.மு. 322) ஒவ்வோர் அரசும் தன்னாட்சி உரிமைபெற்றிருத்தல் வேண்டுமென்றும், அத்தனி உரிமையைக் காக்கவல்ல முழு அதிகாரம் அதற்கு இருத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார். அரசாங்கம் என்ற கருவியின் வாயிலாகப் பொது மக்களின் நலனுக்காக இறைமை அதிகாரம் கையாளப்படுமாயின் அவ் ஆட்சி முடியாட்சி என்றும் (Monarchy), உயர்குடிமக்களாட்சியாயின் உயர்குடியாட்சி என்றும் (Aristocracy), பொது மக்களுடைய ஆட்சியாயின் பொது மக்களாட்சி என்றும் (Polity) சொல்லப்படும். இவை தூய ஆட்சி எனப்படும். மேற்கூறிய ஆட்சிகள் பொதுமக்களுடைய நலனுக்காக அல்லாமல் ஆளுவோர் நலனுக்காகக் கையாளப்படுமாயின், அவை முறையே கொடுங்கோலாட்சி (Tyranny) என்றும், செல்வச் சிறுகுடியாட்சி என்றும் (Oligarchy) கும்பலாட்சி (Mobocracy) என்றும் சொல்லப்படுமென அரிசுடாட்டில் கூறினார். கிரேக்கரைப் பின்பற்றி உரோமானியர்கள் அரசின் இறைமை அதன் மக்களிடத்தில் இருப்பதாகக் கருதி, மக்களாட்சிக் குடியரசை (Republican Democracy) நிறுவினர். உரோமானிய நகரரசு பேரரசாக வளர்ந்தபின் உரோமானியப் பேரரசரிடமே இறைமை அதிகாரம் இருப்பதாகக் கருதப்பட்டது. உரோமானியப் பேரரசு மறைந்தபின் இடைக்காலத்தில் (Middle Ages, அதாவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை) இக்காலச் சமுதாய அமைப்பாகிய அரசு என்பது உருவாகவில்லை. கிறித்தவத் திருச்

சபையின் தலைவராகிய போப்பு (Pope) திருச்சபையின் மீது மட்டுமல்லாமல், கிறித்தவ நாடுகளின் மீதும் தலைமை அதிகாரம் செலுத்தும் உரிமையைக் கோரினார். அதனால், அவரை எதிர்த்த புனித உரோமானியப் பேரரசருக்கும் அவருக்குமிடையே பூசல்கள் விளைந்தன. மேலும் நிலங்களை அரசரிடமிருந்து மானியங்களாகப் பெற்ற பிரபுக்களும் நிலங்களோடு அரசியலதிகாரங்களையும் பொறுப்புகளையும் (அதாவது படைகளை வைத்திருத்தல், நீதி வழங்குதல் முதலிய ஆட்சிப் பொறுப்புகளையும்) பெற்று ஆட்சி செய்ததனால், தலைமையான முழு அதிகாரமுடைய அரசருடைய ஆட்சியின்கீழ் இறைமையுடைய அரசு உருவாவது சிறிது காலத்துக்குக் கடினமாக இருந்தது. ஆனால் கி.பி.15-ஆம் நூற்றாண்டளவில் நிலமானியமுறை சிறிதுசிறிதாக மறையத்தொடங்கியதால், வரம்பற்ற அதிகாரங்கொண்ட அரசர்களுடைய ஆட்சியின்கீழ் இங்கிலாந்து, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல் முதலியவை இறைமை அரசுகளாக ஆயின; கி.பி. 18,19,20-ஆம் நூற்றாண்டுகளில் பல இறைமை அரசுகள் உலகமெங்கணும் தோன்றின. ஆங்கில அரசியல் சிந்தனையாளர் ஆப்சு (Hobbes) என்பவர் ஆளுபவருடைய (அரசருடைய) அதிகாரம் முழுமையானதும் வரம்பற்றதுமாகுமென்று ஒரு கொள்கையை வகுத்தார். இதைப்போலவே இங்கிலாந்தை ஆட்சி செய்த இசுடுவர்ட்டு குடும்பத்தைச் சேர்ந்த அரசர்கள் (Stuart Dynasty), அரசர்கள் கடவுளால் அமர்த்தப்பட்டவராகையினால் அவர்கள் தம் குடிமக்களுக்குப் பொறுப்புடையவரல்லரென்றும், அவர்களை மக்களோ பராளுமன்றமோ தட்டிக்கேட்கக் கூடாதென்றும், அரசர்களுடைய அதிகாரம் முழுமையான, வரம்பற்ற அதிகாரமாகுமென்றும் கூறி, தெய்விக அரசுரிமைக் கொள்கையை (The Divine Right Theory) வகுத்தனர். இதனை மறுத்து சான் லாக்கு (John Locke) என்ற ஆங்கிலச் சிந்தனையாளர் மக்களுடைய உயிர், உரிமை, உடைமை முதலியவற்றைப் பாதுகாக்க அவர்களால் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக நிறுவப்பட்டவர்தாம் அரசர் அல்லது அரசாங்கம் ஆகும் என்றும், ஆகையால் அரசருடைய அதிகாரம் வரம்புக்குட்பட்டதென்றும், அவர் மக்களுக்குப் பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் அவரை நீக்கிவிட்டு வேறொருவரை அமர்த்த மக்களுக்கு உரிமை உண்டென்றும் கூறினார். இதே கருத்தை வலியுறுத்தி மக்களே இறைமை உடையவர்களென்றும், அவர்கள் செய்யும் சட்டங்களை நிறைவேற்றுதல் ஒன்றுதான் அரசாங்கத்தின் பணி ஆகுமென்றும் பிரெஞ்சு நாட்டுச் சிந்தனையாளர் உரூசோ (Rousseau) என்பவர் கூறினார் இவர் வகுத்த மக்கள் இறைமைக் கொள்கையே (Theory of Popular Sovereignty) 1789-ஆம் ஆண்டுப் பிரெஞ்சுப் புரட்சிக்கும் இக்காலத்திய குடியாட்சி அரசாங்க முறைக்கும் வித்திட்டது. இந்த மக்கள் இறைமைக் கொள்கையின் அடிப்படையில் தான் சுவிட்சர்லாந்து நாட்டில் சட்டமன்றம் செய்யும் சட்டங்களை ஒப்புக் கொள்ளவும் தள்ளுபடி செய்யவும் கூடிய அதிகாரத்தையும் (Referendum), தாங்களே சட்டமுன் வரைவுகளை வரைந்து சட்டமன்றத்துக்கு அளிக்கும் அதிகாரத்தையும் (Initiative) வாக்காளக் குடிமக்கள் கையாளுகின்றனர்.

இறைமைக்குக் கொடுக்கப்படும் இலக்கணங்கள் (Definitions): 'குடிமக்கள் மீது செலுத்தப்படுவதும் சட்டவரம்புக்கு உட்படாததுமாகிய தலைமை அதிகாரமே இறைமை எனப்படும்' என்று போதின் (Bodin) என்ற கி.பி. 16-ஆம் நூற்றாண்டைய பிரெஞ்சு அரசியல் சிந்தனையாளர் இறைமை அதிகாரத்துக்கு இலக்கணம் வகுக்கிறார். குரோசியசு (Grotius) என்ற டச்சுச் (Dutch) ,சிந்தனையாளர், 'எவருடைய செயல்கள் மற்றொருவருடைய கட்டுப்பாட்டுக்கு உட்படாமலும் மற்றொருவரால் மீறப்படாமலும் இருக்கின்றனவோ, அவரிடத்தில் இருக்கின்ற தலைமையான அரசியலதிகாரமே இறைமை அதிகாரம் ஆகு' மென்று குறிப்பிடுகிறார். துகுயி (Duguit) என்ற இக்காலப் பிரெஞ்சு ஆசிரியர், 'இறைமை என்பது அரசின் ஆணைவிடுக்கும் அதிகாரம் ஆகும்; அது ஓர் அரசில் முறையாக அமைக்கப்பட்டுள்ள ஒரு தேசிய இனத்தாருடைய விருப்பம் ஆகும். அரசின் நிலப்பகுதியிலுள்ள எல்லோருக்கும் கட்டுப்பாடுகளில்லாமல் ஆணைகளை வழங்குவதற்கு உள்ள உரிமையும் இறைமை ஆகும்' என்று கூறுகிறார். பர்கசு(Burgess) என்ற அமெரிக்க ஆசிரியர் இறைமையை, 'குடிகள் மீதும் குடிகளை உடைய எல்லாக் கழகங்களின் மீதும் செலுத்தப்படுகின்ற முதன்மையான (Original), முழுமையான, வரம்பற்ற அதிகாரம்' என்று குறிப்பிடுகிறார். 'தன்னை மாற்ற இயலும் விதிகளுக்கு உட்படாததும், பிறரிடம் ஒப்படைக்கப்படாததும், சிறிதுகாலத்துக்கு மட்டுமன்றி நிலையாக இருப்பதுமாகிய அதிகாரமே இறைமை எனப்படும்' என்று ஆசிரியர் போலக்கு (Pollock) என்பவர் இலக்கணம் வகுக்கிறார். 'இறைமை என்பது அரசினுடைய தலைமையான விருப்பமே (Supreme Will) ஆகு' மென்று ஆசிரியர் வில்லோபி (Willoughby) என்பவர் குறிப்படுகிறார். 'ஒரு குறிப்பிட்ட மனித உயர்அதிகாரியானவர் தம்மை ஒத்த வேறொரு உயர் அதிகாரிக்குக் கீழ்ப்படியும் நிலையில் இல்லா

மல், ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் வழக்கமாகத் தம தாணைகளுக்குக் கீழ்ப்படிகின்ற (அல்லது கட்டுப் படுகின்ற) நிலையைப் பெறுவாராயின், அந்தக் குறிப் பிட்ட உயர் அதிகாரி அந்தச் சமூகத்தில் இறைமை அதிகாரி ஆவார்; மேலும் (அவ்வுயர் அதிகாரியோடு கூடிய) அந்தச் சமூகமும் அரசியல் தன்மையும் தன் னாட்சி உரிமை உடையதாகும் என்று சான ஆசுட்டின் (John-Austin) என்ற ஆங்கிலச் சட்ட இயலறிஞர் சட்ட இயல் வாயிலாக இறைமையின் பண்புகளை விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறு கிறார். இதுவே அரசியல் நூலில் இறைமை என்ப தற்கு ஒரு சிறந்த இலக்கணமாகக் கொள்ளப் படுகிறது.

இறைமையின் பண்புகள் ஐவகைப்படும். அவை யாவன: இறைமை அல்லது உயர் அதிகாரமானது, அ) வரம் பற்றது, முழுமையானது (Absolute); ஆ) எல்லாவற்றையும் உட்படுத்தும் தன்மையுடையது (Universality); இ) மாற்ற இயலாத தன்மை உடை யது (Inalienability); ஈ) நிலையான தன்மையுடை யது (Permanence); உ) பகுக்கப்பட இயலாத தன் மையுடையது (Indivisibility). இறைமை அதிகார மானது நாட்டிற்கு உள்ளும் புறமும் வேறெந்த அதிகாரத்தாலும் வரம்புபடுத்தப்பட இயலாதது. நாட்டினுள்ளே இருக்கும் எல்லா மக்களும் கழகங் களும் அதற்குப் கட்டுப் பட்டவர்களே ஆவர். நாட்டி னுள்ளே இருக்கும் வரம்புகளெல்லாம் அது தனது விருப்பத்தின் பேரில் தானே ஏற்றுக் கொண்டவை களாகையினால், அவற்றை அரசு சட்டவாயிலாக நீக்குதலும் இயலும். அயல்நாடுகளைப் பொறுத்த வரையிலும் அரசினுடைய இறைமை அதிகாரமானது மற்ற அரசுகளின் கட்டாயத்துக்கு உட்படாமலும் அவற்றின் தலையிடுதலுக்கு உட்படாமலும் தனித்து இருக்கிறது. அரசு மற்றநாடுகளோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள், பன்னாட்டு வழக்கங் கள் முதலியவை எல்லாம் அரசின் இறைமை அதி காரத்தை அழிப்பதில்லை; எவ்வாறெனில், இவ் வொப்பந்தங்களுக்கும் பன்னாட்டு வழக்கங்களுக்கும் சட்டவகையான செயற்படுத்தும் அதிகாரம் (Legal Sanction) கிடையாது; இவ்வொப்பந்தங்களையும் பன்னாட்டு வழக்கங்களையும் இறைமை அரசு மதித்து நடக்கும் வரையில்தான் அவை செல்லுபடி ஆகும். பன்னாட்டு நீதிமன்றங்களால் பன்னாட்டுச் சட்டத்துக்கு விளக்கமளிக்க இயலுமே தவிர அத னைச் செயற்படுத்த இயலாது. இறைமை அதிகாரத் தின் மற்றப்பண்புகள் அதனுடைய வரம்பற்ற தன் மையிலிருந்தே பெறப்படுகின்றன. அரசினுடைய இறைமை அதிகாரமானது அரசினுள்ளே இருக்கும் எல்லா மக்களையும் மக்களால் அமைக்கப்பட்ட கழ கங்களையும் கட்டுப்படுத்த வல்லது. அரசு சில பொருளின்மீது தனது அதிகார எல்லையைக் கையாளாமல் நிறுத்தி வைக்கலாம்; ஆசிரியர் கில்கிரைசுட்டு (Gilchrist) இதற்கு ஒரு நாட் டில் தங்கும் வேற்றுநாட்டுத் தூதுவரையும் அவருடைய அலுவலர்களையும் குறிப்பிடுகிறார். வேற்றுநாட்டுத் தூதுவரும் உடன் அலுவலரும் தமது நாட்டுச் சட்டங்களுக்கே கட்டுப்பட்டிருப்பவராவர். எந்த நாட்டில் பணிசெய்கிறாரோ அந்த நாட்டின் சட்டங்களுக்கு அவர்கள் கட்டுப்படாமலிருக்கும் உரிமையை, அவர் பணி செய்யும் நாடு அவர்களுக் குப் பன்னாட்டு இணக்கம் அல்லது நடத்தை நயத் தின் (International Courtesy) காரணமாக வழங்கு கிறது; அந்நாடு இவ்வுரிமையை மறுக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. ஒரு நாடு தனது இறைமை அதிகாரத் தைத் தன்னிடமிருந்து பிரித்து எடுத்து வேறொரு நாட்டிற்குக் கொடுத்துவிட இயலாது; அவ்வாறு செய்தால் அது ஒரு தன்னாட்சி நாடு என்ற தகுதி யையே இழந்துவிடும். ஆகையால் அரசு என்ற ஒரு சமூக அமைப்பு இறைமை என்ற பண்பை அல்லது இயல்பை நிலையாகப் பெற்றுள்ளது என்று தெளி வாகத் தெரிகிறது. நாட்டை ஆளும் அரசரோ ஆட்சியாளரோ இறந்தாலும் அல்லது பதவி துறந் தாலும் அவரோடு இறைமையும் மறைந்துவிடாது. இறைமை அதிகாரம் வேறொருவரால் கையாளப் படுகிறது என்பதுதான் பொருள். அரசாங்கம் மாறும் போது இறைமை அதிகாரம் கைமாறுகிறதே தவிர, அது அழிந்து விடுவதில்லை. அரசாங்கம் மாறினா லும் இறைமை அரசு நிலையாக இருக்கிறது. இறைமை முழுமையாக இருக்கின்றகாரணத்தினால், அது பகுக்கப்பட இயலாததாகும். ஆர்.சி. கெட்டல் என்பவர் (R. G. Ghettell), ‘இறைமை அதிகாரம் முழுமையாக (வரம்பற்றதாக) இல்லாவிட்டால் எந்த ஓர் அரசும் இருத்தல் இயலாது; இறைமை அதிகாரமானது பகுக்கப்படுமானால் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் தோன்றும்’ என்று கூறுகிறார். பன்மைக் கோட்பாட்டாளர்கள் (Pluralists) இறைமை அதிகாரமானது வரம்பற்றது, பகுக்கப்பட இயலாதது என்ற கருத்துகளை வன்மையாக மறுத்து, இறைமை அதிகாரத்துக்கு நாட்டினுள்ளே சமூக, ஒழுக்க இயல் கருத்துகளும், நாட்டிற்கு வெளியே மற்றநாடுகளின் இறைமை அதிகாரங்களும் வரம்பு களாக அமைந்துள்ளன என்றும், இறைமை அதிகார மானது, அரசுக்கும் அதனுள்ளே இருக்கும் குடும்பங் கள், திருச்சபை முதலிய சமய நிறுவனங்கள், தொழி லாளர் சங்கங்கள் ஆகிய அமைப்புகளுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதென்றும், இந்த

அமைப்புகளே அரசினால் நிறைவேற்ற இயலாத மனித வாழ்வுத் தேவைகளை நிறைவேற்றுகின்றன என்றும் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட வரம்புகளெல்லாம் அரசினால் தனது இசைவின் வாயிலாக ஒப்புக் கொள்ளப்பட்டவையே தவிர, வேறெந்த அதிகாரியாலும் ஏற்படுத்தப்படவில்லை. சமூக நிறுவனங்களின் நிலையும் இத்தகையதே. ஐக்கிய அமெரிக்க நாடு போன்ற கூட்டாட்சி நாடுகளில் நடுவண, மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப்பகிர்வு அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகச் செய்யப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏ. எல். உலோவல், (A.L. Lowell), பிரைசு பிரபு (Lord Bryce) முதலிய ஆசிரியர்கள் சட்டவகையான இறைமை அதிகார மானது கூட்டாட்சி நாடுகளில் நடுவண அரசாங்கத் துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாகக்கூறுகின்றனர். ஆனால் ஆசிரியர் கால்கன் (Calhoun) என்பவர் இதனை மறுத்து, பகுக்கப்பட இயலாத ஒரே கூறாக உள்ள இறைமை என்பது கூட்டாட்சி நாட்டில் ஒரு சில பொருள் களைப் பொறுத்த வரையில் நடுவண் அரசாங்கத்தின் வாயிலாகவும், வேறுசில பொருள்களைப் பொறுத்த வரையில் மாநில அரசாங்கங்களின் வாயிலாகவும் வெளிப்படுகிறது என்பதுதான் அதிகாரப் பகிர்வு என்பதன் பொருளே தவிர, இறைமை பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது அதன் பொருளன்று என்றும், இறைமை என்பது முழுமையான ஒன்று என்றும் அதைப் பகுப்பது அல்லது பிரிப்பது என்பது அதை அழிப்பதே ஆகும் என்றும் கூறுகிறார்.

இறைமையின் வகைகள்: இறைமை அதிகாரம் கையாளப்படுபவருடைய நிலையைப் பொறுத்து, 1. பெயரளவிலான இறைமை அதிகாரம் (Titular or National Sovereignty), 2. சட்டப்படியான இறைமை (Legal Sivereignty), 3. அரசியல்வகை இறைமை (Political Sovereignty), 4. மக்கள் இறைமை (Popular Sovereignty), 5. சட்டஇயல் இறைமை, நடைமுறை இறைமை (De Jure Sovereignty De Facto Sovereignty) எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஒருகாலத்தில் இறைமை அதிகார மனைத்தையும் அரசர் அல்லது அரசியார் செலுத்தி வந்தனர். ஆனால், நெடுநாட்களுக்கு முன்னரே இறைமை அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையே செலுத்தத்தொடங்கிற்று; அரசியார் பெயரால் அமைச்சர்கள் ஆளுகின்றனர்; ஆகையால் அரசியார் பெயரளவிலான இறைமை அதிகாரி ஆவர். அரசில் தலைமையான சட்டம் இயற்றும் அதிகாரத்தை எவர் கையாளுகிறாரோ, அவரே சட்டப் படியான இறைமை அதிகாரி ஆவார். இங்கிலாந்தின் அரசியலமைப்பின்படி, அந்நாட்டின் உயர்தரச் சட்டமியற்றும் அதிகாரி பாராளுமன்றத்தில் அரசர் (அல்லது அரசியார்) ஆவர். ஆகையால் அந்நாட்டின் சட்டப்படியான இறைமை அதிகாரம் பாராளுமன்றத் திலுள்ள அரசரிடம் (King-in-Parliament) இருக்கிறது. சான் ஆசுட்டின் என்ற ஆசிரியரின் கருத்துப் படி, சட்ட வகையான இறைமை அதிகாரமானது முழுமையானது, வரம்பற்றது, திட்டவட்டமானது; அது ஒருவரிடத்திலோ பலரிடத்திலோ இருப்பது; அது சட்டத்தினால் ஒபபுக்கொள்ளப்படுவது; அது ஒன்றே அரசினுடைய விருப்பத்தைச் சட்டவடிவத் தில் வெளிப்படுத்துவது. அதன் ஆணைகளை மீறுதல் சட்டங்களை மீறிய செயலாகக் கருதப்பட்டுத் தண் டிக்கப்படும். உரிமைகள் அதனிடமிருந்தே தோன்று கின்றன. சட்டப்படியான இறைமைக்கு மாறாகக் காணப்படுவது அரசியல் வகை இறைமை ஆகும். ஒரு குடியாட்சி நாட்டில், சட்டங்களை இயற்றும் உயர்தர அதிகாரம் நாட்டின் சட்ட மன்றத்திலிருந் தாலும், அத்தகைய உயரிய சட்டமியற்றும் அதி காரத்துக்குத் தோற்றுவாயாக இருப்பது மக்களு டைய விருப்பமே ஆகும். மக்களுடைய விருப்பமே தலைமையானதாகவும் அதற்கெதிராக வேறெவருக் கும் மேல் முறையீடு எதுவும் செய்ய இயலாததாக வும் இருப்பதால், மக்களுடைய விருப்பமே (Will of the People) குடியாட்சி நாட்டில் அரசியல்வகை இறைமை ஆகும். 'எவருடைய (அல்லது எந்தக் குழுவின்) விருப்பத்துக்கு அரசின் மக்களெல்லாரும் இறுதியாகக் கட்டுப்படுகிறார்களோ, அவரே (அல்லது அந்தக் குழுவே) அரசியல்வகை இறைமை ஆவர்' என்று ஆசிரியர் தைசியும், 'நாட்டில் சட்டத்திற் குப் பின்னால் காணப்படுகின்ற ஆதிக்கங்களின் தொகுப்பே அரசியல்வகை இறைமையாகு' மென்று ஆசிரியர் கில்கிரைசுட்டும் விளக்கம் தருகின்றனர். அரசியல் வகை இறைமையோடு நெருங்கிய தொடர் புடையதே மக்கள் இறைமை ஆகும். இவ்வகை இறைமைக்கு வடிவம் கொடுத்து உயர்த்தியவர் பிரான்சின் உரூசோ என்னும் கி. பி. 18-ஆம் நூற் றாண்டு அரசியல் சிந்தனையாளராவர். குடியாட்சி நடைபெறும் எல்லா நாடுகளிலும் மக்களே தலை மையான அரசியல் அதிகாரம் உடையவர்களென்றும், அவர்களுடைய விருப்பங்களுக்கு மாறாகச் சட்டப் படியான இறைமை அதிகாரி நீடித்து ஆட்சியில் இருத்தல் இயலாது என்றும் கோட்பாடுகள் நிலவு கின்றன. மக்களுடைய விருப்பத்துக்கு மாறாகச் சட்டப்படியான இறைமை அதிகாரி பதவியில் நீடித்து இருந்தால், மக்கள் வேறு வழியின்றி வன் செயல் புரட்சி வாயிலாக அவரை நீக்கிவிட்டு,

வேறொரு புதிய அரசாங்கத்தை நிறுவுவதற்கு உரிமை உடையவராவர். மக்களுடைய இறைமை அதிகாரமென்னும் கருத்து மிகவும் கிளர்ச்சி தரு கின்ற, கவர்ச்சியான கருத்தேயாயினும் நுணுகி அதனை ஆராயுமிடத்து, திட்டவட்ட வடிவமான அமைப்பில் இல்லாத மக்கள் திரளை (Unorganised Indeterminate Mass) இறைமை அல்லது தலைமை அதிகாரமுடையவர்களென்று சொல்லுதல் பொருந் தாது என்பதும், 'பொது மக்கள் கருத்தே' (Public Opinion) மக்கள் இறைமை எனப்படுமா னால், பொதுமக்கள் கருத்து என்பது எத்தகைய ஆற் றலுடையதாயினும் அது சட்டவடிவம் கொடுக்கப் படாத வரையிலும் அதனை மக்கள் இறைமை என்று குறிப்பிடுதல் பொருந்தாது என்பதும் தெரியவருகின் றன. இவ்வாறு மக்கள் இறைமை என்ற கருத்துக்கு இலக்கணம் வகுப்பதில் பல இடர்ப்பாடுகள்இருந்தா லும், அக் கருத்து பல பயனுள்ள முடிவுகளை அளிக் கிறது; 1) அரசாங்கம் என்பது மக்களுடைய நலனுக் காக இருக்கிறதே தவிர, ஆட்சி செய்பவர் நலனுக்காக இருப்பதன்று; 2) மக்களுடைய கருத்துகள் அல்லது விருப்பங்கள் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுமா னால் வன்முறைப் புரட்சி தோன்றுதல் கூடும்; 3) பொது மக்கள் கருத்து வெளிப்படுத்தப்படுவதற்கான சட்டவடிவான வழிகள் இருத்தல் வேண்டும்; 4) அடிக்கடி பொதுத் தேர்தல்கள் நடத்துதல், குடி யொப்பம் (Referendum), மக்கள் தொடக்கம் (Initiative), திரும்ப அழைத்தல் (Recall - அதாவது வாக் காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப் புத் தவறும் போது அவர்களைப் பதவி நீக்கம் செய் தற்கு வாக்காளர்களுக்கு இருக்கும் உரிமை) முதலிய முறைகளையும் கையாளுதல் ஆகியவற்றின் வாயி லாக அரசாங்கமானது மக்களுக்கு நேரடிப் பொறுப் புடையதாக இருத்தல் வேண்டும்; 5) அரசாங்கமா னது நாட்டின் சட்டங்களுக்கு இணங்கவே அதிகாரத் தைக் கையாளுதல் வேண்டுமேயன்றி, அது தன் விருப்பம்போல் அதிகாரத்தைக் கையாளுதல் கூடாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரை (Preamble) ' இந்தியா ஓர் இறைமையுள்ள குடி யாட்சி அரசாங்கத்தையுடைய குடியரசு' என்றும் அதன் பிரிவு 326, 'நடுவண பாராளுமன்றத்தின் கீழ்ச் சபைக்கும் (House of the People), மாநிலச் சட்டமன்றத்தின் கீழ்ச்சபைக்கும் (Legislative Assembley) உறுப்பினர்கள் வயது வந்தோருக்கு வாக் குரிமை (Adult Suffrage) என்ற அடிப்படையில் இந் தியக் குடிமக்களுள் சில தகுதிகளை உடையவரால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்' என்றும் கூறுகின் றன. இந்திய அரசியலமைப்பின் இந்த இரு பகுதிக ளும் (முன்னுரையும், பிரிவு 326-உம்) மக்கள் இறைமைக் கோட்பாட்டையே சுட்டிக் காட்டுகின் றன. வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற கோட் பாடே மக்கள் இறைமைக் கோட்பாட்டின் செயல் வடிவமாகும். சட்ட இயல் இறைமையும் நடைமுறை இறைமையும் இரு வகையான இறைமை அதிகாரங் களைக் குறிப்பிடுகின்றன. சட்ட இயல் இறைமை என் பது சட்டத்தின் வாயிலாகத் தலைமை அதிகாரியாக ஒப்புக் கொள்ளப்பட்டவரையும், நடைமுறை இறைமை என்பது எந்த அதிகாரிக்கு மக்கள் இறுதி யாக நடைமுறையில் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அந்த அதிகாரியையும் குறிக்கின்றன. நடைமுறை இறைமை அதிகாரி சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப் பட்டோ ஒப்புக்கொள்ளப்படாமலோ ஓர் இராணு வத் தளபதியாகவோ ஒரு சமயத் தலைவராகவோ இருத்தல் கூடும். இறைமை என்பது மற்றவர் தனக் குக் கீழ்ப்படியுமாறு கட்டாயப்படுத்தும் அதிகாரமா கையினால், அதனைச் சட்ட இயல்பு உடையது என் றும், சட்ட இயல்பு அற்றது என்றும் பிரிப்பது சரி அன்று; அது தவறு என்று சான் ஆசுட்டின் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சட்டத்தின் வாயிலாகத் தலைமை அதிகாரியாக ஒப்புக்கொள்ளப்பட்டவரே இறைமை அதிகாரமுடை யவரென்றும், சட்டவகை இறைமையானது முழுமை யானது, வரம்பற்றது, திட்டவட்டமாக அதன் இருப் பிடம் காணப்படக் கூடியது; அதனுடைய ஆணை களே சட்டங்களாகுமென்றும் சான் ஆசுட்டின் என்ற ஆசிரியர் கூறுகிறார். இவருடைய கருத்துகளைப் பன் மைக்கோட்பாட்டாளர் (Pluralists) மறுக்கின்றனர். ஆயினும் நாட்டிலுள்ள பல்வேறு நோக்கங்களுக்காகச் செயற்படுகின்ற பல்வேறு கழகங்களும் ஒன்றோ டொன்று மாறுபாடு கொள்ளாமல், ஒன்றோ டொன்று இணைந்து செயற்படுமாறு செய்யும் பொருட்டு அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தவல்ல தலைமைஅதிகாரம் அரசினிடம்இருக்கத்தான் வேண்டு மென்னும் கருத்தைப் பன்மைக் கோட்பாட்டாளரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆகையால், சான் ஆசுட்டின் இறைமைக் கோட்பாட்டுக்குச் சட்டவடிவத்தில் கொடுத்துள்ள இயல்புகளைப் பன்மைக்கோட்பாட் டாளரும் ஏனையோரும் எவ்வாறுதான் மறுத்தா லும் அவர் கூறும் இறைமைப் பண்புகளே அரசியல் அறிவாளரால் (Political Scientists)ஒப்புக் கொள்ளப் படத் தக்கவை என்பது நன்கு தெரிகிறது. கி.ர.அ.

துணை நூல்கள்:

**Austin, John**, Lectures on Jurisprudence, Murray, 1832.

Bryce, J., Studies in History and Jurisprudence Oxford, 1901.

Green, T.H., Lectures on the Principles of Political Obligation, Longmans, 1921.

Laski, H.J., A Grammar of Politics, Allen & Unwin, 1952.

***இறையியல்*** என்பது இறைவனுடைய இயல்புகள், அவனுக்கும் உயிருக்கும் உலகிற்குமிடையேயுள்ள தொடர்பு, மேலும் அவனைப் பற்றிய கருத்துகள் அனைத்தையும் ஆய்தலைக் குறிக்கும். சமயநெறிகள், சமயக் கோட்பாடுகள் ஆகியவை பற்றிய ஆய்வும் இதில் அடங்கும். இறையியல் (Theology) ஆய்வின் பயனாகத் தத்துவக் கொள்கைகள் உருவாக்கப் படும். இறையனுபவம் வாய்க்கப் பெற்றவர்களின் உள் உணர்வாலும், அறிவியல் அடிப்படையில் அமைந்த ஆராய்ச்சியாலும் இறைக் கோட்பாடுகள்உருவாகின் றன.

வேதகாலத்தில் ஒரு சமயம் இந்திரன் முதலான கடவுளர்க்கும் மக்களுக்கும் வேள்வியின் வாயிலாக நெருங்கிய தொடர்பு இருந்தது. உபநிடதக் காலத் தில் குறியும் குணமும் அற்ற பிரமமே மெய்ப்பொருள் குணங்களும் ஆற்றலும் நிரம்பிய பிரமமே மெய்ப் பொருள்என்ற இருவகைக்கருத்துகளும் இடம் பெற்றி ருந்தன. சங்கரர் முன்னதை மேலான நிலையில் உள்ள மெய்ப் பொருளாகவும் இரண்டாவதை அடுத்த படி நிலையில் உலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் தொழில் புரிகிற, மக்களால் பக்தியுடன் வழிபடத் தக்க ஈசுவரனாகவும் கண்டார். அவர், காணப்படு கின்ற உலகம் அவனது மாயையால் ஏற்படும் தோற் றமே என்றும் குணம் குறியற்ற மெய்ப்பொருள் என் றும் கொண்டார்.

இராமானுசர் உயிரும் உலகமும், எல்லாநன்மைக் குணங்களையும் பெற்ற இறைவனான நாராயண னுக்கு உடல் போல்வன ஆதலின் மூன்றுமே மெய்ப் பொருள்கள் என்று கொண்டார். மத்துவர் கருத்து இறைவன் ஒருவனே சுதந்திரன்; உயிரும் உலகும் அவனை நோக்க மாறுபட்ட இயல்பை உடையவை; அவனருள் இல்லாமல் அவை இயங்கமாட்டா என்ப தாகும்.ஆயினும், மூன்றுமே உண்மைப் பொருள்கள் தாம் என்று இவரும் கருதினர். சைவ சித்தாந்திகள் கடவுளுக்குக் குணம்குறிகள் கடந்த நிலையும் குணங் குறிகளோடு கூடிய நிலையும் உண்டெனவும், இரண் டுமே ஒரே மெய்ப்பொருளின் நிலையெனவும் கருது வர். இவர்களும் உலகு, உயிர், கடவுள் மூன்றுமே மெய்ப்பொருள் என்று கொண்டனர்.

யோக நெறியாளர் கடவுளை உலகத்தைப் படைப் பவனாகவோ முக்தியை அளிப்பவனாகவோ கருதார். அவர்கள் கடவுள் மற்ற உயிர்களைக்காட்டிலும் சிறப்புடைய ஒருவர்; ஆன்மா கட்டுண்ட நிலையிலி ருந்து முத்திநிலை எய்துகிறது; ஆனால், கடவுளுக்கு என்றுமே கட்டுண்டநிலை இருந்ததில்லை என்பர்.

நியாய நெறியாளரின் கருத்துப்படி மற்ற உயிர் களைப் போல் இறைவனும் ஓர் ஆன்மா தான். ஆனால்,அவன் எல்லாம் வல்லவன்; ஆன்மாக்கள் அத் தகையனவல்ல. இந்நெறியாளர் கூறும் பதினாறு மூல பதார்த்தங்களைக் கொண்டு உலகைப் படைப்பது அவனுடைய தொழில். ஆகவே, நியாய நெறியாளர் அவனைப் பரமான்மா என்பர். மற்ற உயிர்களைப் போலல்லாமல் இறைவன் உடல், மனம் ஆகியவற் றின் தொடர்பின்றியே எல்லாவற்றையும் அறியவும் செய்யவும் வல்லவன்.

பெ. தி

***இறையிலி*** என்பது வரி நீக்கம் செய்யப் பெற்ற நிலங்களைக் குறிக்கும். இவ்வகை நிலங்கள் யாவும் கோயில்ககள், மடங்கள், அறநிலையங்கள், மருத்துவச் சாலைகள் போன்றவற்றிற்குக் கொடை யாக வழங்கப் பட்டவையாகும். சில காலங்களில் அரசு அலுவலர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாக வழங்கப்பட்ட நிலமும், கோயிற் பணியாளர்கள், தேவரடியார்கள், நாட்டிய, இசைக் கலைஞர்கள் தேவார ஓதுவார்கள் போன்ற பல பிரிவினர்களுக்கும் வரிநீக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட நிலமும் இறையிலி எனப்பட்டது.

கோயில்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலங்களுள் தேவதானம் என்பது சிவன்கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தையும், திருவிடையாட்டம் என்பது திருமால் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத் தையும், பள்ளிச் சந்தம் என்பது சமண, பௌத்தக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தையும் குறிக் கும். மடங்களுக்கு வழங்கப்பட்ட நிலம் மடப்புறம் எனவும், அந்தணர்கள், சிவனடியார்கள் போன் றோர்க்கு உணவளிக்கும் அறச்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் சாலாபோகம் எனவும் பெயர் பெற்றன. இறையிலியாக நிலம் பெற்றவர்கள் அரச னுக்கோ ஊர்ச்சபைகளுக்கோ எவ்வித வரியும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், இவர்களிட மிருந்தும், 'இறையிலிக்காசு' என்னும் சிறுவரி ஒன்றை அரசு வசூலித்தது என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

அரசர், அரசியல் தலைவர், ஊர்ச்சபையார் தவிர பிற தனிப்பட்ட செல்வர்கள் தானமாக

வழங்கும் நிலங்களுக்கு இறை உண்டு. இத்தகைய செல்வர்களிடம் அரசிறை செலுத்துவதற்காக ஊர்ச் சபையார் முதற்பொருள் பெற்று அதில் வரும் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் சபையோரே இறை செலுத்துவர். இங்ஙனம் சபையாரால் பெறப்படுவது இறைகாவல் எனப்படும். தேவதான, பிரமதேய நிலங்களுக்குப் பொதுமக்கள் தம் ஊரில் தமக்கு உரிய பங்கின்படி அரசிறை செலுத்துவதாக ஒத்துக் கொண்டு ஆண்டு தோறும் செலுத்தி வருதல் உண்டு. இத்தகைய தேவதான, பிரமதேய நிலங்கள் 'ஊர்க்கீழ் இறையிலி' என்று கூறப்பட்டு வந்தன. சொ.சா.

**இறையிலிக் கொள்கை**: சிலர் பொறிகள் வாயிலாக அறியப்படுவனவே உண்மை என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர். கண்களுக்கு உடல் தெரிகிறது, உலகமும் தெரிகிறது. ஆகவே, இவை உண்மைப் பொருள்கள். உயிரையும் இறைவனையும் கண்ணால் காண முடியாது. ஆகையால் கடவுள், உயிர் என்பன இல்லை. குடத்தை வனைகின்ற ஒரு குயவன் இருப்பது போல் உலகத்தைப் படைக்க இறைவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று கருதல் அளவையால் (அநுமானத்தால்) இறைவன் உண்டு என்று கூறுகின்ற மதங்கள் உண்டு. ஆனால் கருதல் அளவையை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களுடைய கொள்கை உயிரற்ற உலகே மூலப்பொருள் என்ற அடிப்படையில் அமைந்ததாகையால் இவர்கள் உலகாயதர் எனப்படுவர். இவர்கள் சாருவாகர் எனவும் கூறப்படுவர்.

சமணர் சித்தாகிய உயிர் (சீவன்), சடமாகிய உயிரல்லாத பொருள் (அசீவன்) என்ற இரண்டும் அடங்கியது உலகம்; இவை இரண்டும் என்றும் உள்ள பொருள்கள் என்பர். இவற்றிற்கு அப்பால் மூன்றாவதாக இறைவன் உண்டு என்ற வேறு சில மதத்தினரின் கூற்றை இவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. வேறு சில மதத்தினர் கூறுவது போல, உயிர் அதனதன் வினைப்பயனை நுகர்கிறது என்று இவர்கள் ஏற்றுக் கொண்டாலும், வினைப்பயனை அனுபவிக்கச் செய்ய இறைவன் தேவை இல்லை என்று கூறுவர். இறைவன் அருள் இன்றியே உயிர் தன் முயற்சியாலேயே முத்தியைப் பெற இயலும் என்பர்.

இறைவன் உண்டு எனக் கூறுவோர் வேதம் முதலானவற்றை உரை அளவையாகக் (சத்தப்பிரமாணமாகக்) கொள்வர். பௌத்தர்கள் காண்டல், கருதல் என்ற இரண்டு அளவைகளையே ஏற்றுக் கொண்டனர். உரை அளவையை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆதலால் அவர்கள் நிரீசுரவாதிகள் எனப்பட்டனர். சமணரைப் போலவே பௌத்தரும் வினைப்பயன் தானே உயிரைச் சாரும்; இறைவன் தேவையில்லை எனக் கொண்டனர்.

சாங்கியர் உயிரில்லாப் பொருளாகிய உலகிற்குக் காரணமாக அறிவுடைய பொருளான இறைவன் இருக்க முடியாது என்றும், உலகைப் படைப்பதற்கு உயிர்களின் (புருடனின்) முன்னிலையே போதுமான காரணம், இறைவன் தேவையில்லை என்றும், தருக்க முறையில் இறைவன் இருக்கிறான் என்பதை நிலை நிறுத்த முடியாதென்றும் கூறுவர்.

பிற்காலத்து வந்த குமாரிலபட்டர் முதலான மீமாம்சகர்கள் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்ட போதிலும், மீமாம்சகர்களுள் முதன்மையானவரான சைமினி இறைவனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பண்டை மீமாம்சகர் வேதத்தை மேலான அளவையாகக் கொண்டிருந்த போதிலும், வினைக்கே (கருமம்) முதலிடத்தைக் கொடுத்து இறைவன் தேவையில்லை என்று கருதினர். பெ.தி.

**இறைவழி உரிமைக் கொள்கை**: அரசு என்ற சமுதாய அமைப்பு எவ்வாறு, எப்போது தோன்றிற்று என்ற கேள்விக்கு அல்லது ஆராய்ச்சிக்கு விடைகாணும் முயற்சிகளுள் முதன் முதலில் தோன்றிய கொள்கைதான் இறைவழித் தோற்றக் கொள்கை ஆகும். அரசைப் பற்றிய இந்தத் தெய்விக வகையான கருத்து அரசு (State) என்ற சமுதாய அமைப்பு உருவான காலத்திலேயே தோன்றிற்று. இந்த இறைவழித் தோற்றக் கொள்கையானது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இறைவழி உரிமைக் கொள்கையாக (The Theory of Divine Right of Kings) மாறிற்று.

இறைவழித் தோற்றக் கொள்கையின் சாரம்: 1. இறைவனுடைய அல்லது கடவுள் விடுத்த ஓர் ஆணையின் விளைவாகத் தோன்றியதே அரசு ஆகும். 2. அரசை ஆளுபவர்கள் இறைவனால் அமர்த்தப் பட்டவர்களே ஆவர். 3. அரசர்கள் கடவுள் ஒருவருக்குத்தாம் தங்களுடைய செயல்களுக்குப் பொறுப்புடையவர்களே தவிர, வேறொருவருக்கும் மக்களுக்கும் கூட, அரசர்கள் பொறுப்புடையவர்களல்லர். இக் கொள்கை பண்டைக்காலத்திய மக்கட் சமுதாயங்களிலே பரந்து காணப்பட்டது. அரசருடைய ஆளும் அதிகாரத்துக்கு ஆதாரம் எது என்பதனை எவரும் காணவோ உணரவோ இயலாது என்ற கருத்து பண்டைக் காலத்திலிருந்தது. இக்காலத்தில் இறைவழித் தோற்றக் கொள்கையும் (The Divine Origin Theory) இறைவழி உரிமைக் கொள்கையும் கி.பி. 18-

ஆம் நூற்றாண்டு வரையிலும் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தன. பண்டைக்காலத்தில்யூதமக்கள் கடவுளே அரசர்களை அமர்த்தவும் நீக்கவும் கொல்லவும் கூடிய அதிகாரங்களைக் கையாண்டார் என்று கருதினர். புனித பவுல் என்னும் கிறித்தவஞானி உரோமானிய மக்களை நோக்கி, 'ஒவ்வொருவரும் மேல்நிலை அதிகாரிகளுக்குச் கட்டுப்பட்டு நடப்பாராக; ஏனெனில், கடவுளைத் தவிர வேறு எந்த ஓர் அதிகாரியும் கிடையாது. இப்பொழுது நடைபெறுகின்ற ஆட்சிகள் அல்லது அரசாங்கங்களெல்லாம் கடவுளின் ஆணையால்தோன்றியவையே. ஆகையால்,எவரொருவர் நடைமுறை அரசாங்கத்தை எதிர்க்கிறாரோ அவர் கீழ்ப்படிய மறுப்பவரே ஆவர்; அவ்வாறு கீழ்ப்படிய மறுப்பவர் தண்டனை பெறுவார்' என்று அறிவுறுத்தியதாக ஒரு குறிப்பு கிறித்தவச் சமய நூலாகிய விவிலியத்தில் காணப்படுகிறது. பண்டைக் காலத்தில் கிறித்தவத் திருச்சபையை ஒழுங்குபெற அமைத்த பெரியோர்கள் (Church Fathers) புனித அறிவுரையை ஆதாரமாக வைத்துத் திருச்சபையை வலுவாக்கினார்கள். பழங்காலத்தில கிரேக்கர்களும் உரோமானியர்களும் மறைமுகமாகத்தான் அரசு தெய்விக இயல்புடையதென்று கருதினர். இடைக் காலத்தில் திருச்சபைத் தலைவர்களான போப்புகளுக்கும் (Popes), புனித உரோமானியப் பேரரசர்களுக்குமிடையே (Holy Roman Emperors) 'எவர் உயர்ந்த அதிகாரி'? என்ற கேள்வி எழுந்து, பூசல் விளைந்தபொழுது சில அரசியற் சிந்தனையாளர், இறைவழித் தோற்றக் கொள்கைக்குப் புதியதொரு விளக்கம் கொடுத்து, அரசை விடத் திருச்சபையே மேலான அதிகாரம் உடையது என்றும், வேறு சில அரசியற் சிந்தனையாளர், திருச்சபையைவிட அரசு தான் உயர்ந்த அதிகாரம் உடையது என்றும் விளக்கங்கள் கொடுத்தனர். உலகத்தில் இயற்கை நிலையில் குழப்பமும் நிறைந்திருந்த பழங்காலத்தில் துன்புற்ற மக்கள் இறைவனை அணுகி, 'இறைவா! ஒரு தலைவன் இல்லாமல் நாங்கள் துன்புறுகிறோம். எங்களைப்பாதுகாக்க வல்ல ஒரு தலைவரைத் தந்தருளும்', என்று முறையிட, இறைவன் இரங்கி, அவர்களை ஆளும்பொருட்டு மனுவை அமர்த்தினாரென்று இந்திய இதிகாசமாகிய மாபாரதம் (சாந்தி பருவம்) கூறுகிறது. ஆகையால், கடவுளுடைய விருப்பமானது, இந்நிலவுலகில் அவருடைய சார்பாளர்களாக (Vice-regents) அமர்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படுமென்றும், அவர்களிடமிருந்து மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும், அரசினுடைய ஆணைக்குக் கீழ்ப்படிதலென்பது சட்டவகையாக மட்டுமன்றிச் சமய வகையாகவும் ஒரு கடமை ஆகுமென்றும் யாவரும் நம்பினர். அரசுக்குக் கீழ்ப்படிய மறுத்தல் இறைவனுக்கு இழைக்கப்படும் குற்றமாகக் கருதப்பட்டது.

கிறித்தவத் திருச்சபையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதர் என்பவரால் சீர்திருத்த இயக்கம் (Reformation Movement) நடத்தப்பட்டபோது, இறைவழித்தோற்றக் கொள்கைக்கு ஆதரவு வலுவாயிற்று. அரசாங்க அதிகாரத்துக்கு யாதொரு மறுப்பும் தெரிவிக்காமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும், அரசாங்கத்தை எவரும் எதிர்த்தல் கூடாதென்றும் பலரும் கருதினர். இச்சூழ்நிலையில்தான் இறைவழித் தோற்றக் கொள்கையானது இறைவழி உரிமைக் கொள்கையாகத் திட்டவட்டமான வடிவம் பெற்றது. இறைவழி உரிமைக் கொள்கையை ஒரு நூல் வடிவில் முதன்முதலில் வகுத்த அரசர் இங்கிலாந்தை கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட இசுடூவர்ட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த முதலாம் சேம்சு (King James I) ஆவார். அவர் தாம் எழுதிய 'சுதந்திர முடியாட்சிகளைப் பற்றிய உண்மையான சட்டம்' (The True Law of Free Monarchies) என்னும் நூலில், 'அரசர் தமது அதிகாரத்தைக் கடவுளிடமிருந்து பெறுகிறார். எனவே, அவர் மக்களையும் சட்டத்தையும்விட உயர்ந்த நிலையிலுள்ளவர் அவர் தம் செயல்களுக்குத் தம் மனச்சான்றுக்கும், இறைவனுக்கும் மட்டுமே பொறுப்பானவர் சட்டவகையாக அரசர் மக்களுக்குக் கடமைப்பட்டவரல்லர். மக்களுக்கு நல்லாட்சி வழங்குதலுக்கு மட்டுமே அவர் கடவுளுக்கு ஒழுங்கு முறைப் பொறுப்புடையவர். அரசர்கள்தாம் சட்டங்களைச் செய்கிறார்களே தவிர, சட்டங்கள் அரசர்களைத் தோற்றுவிக்கவில்லை. குடிமக்கள் ஒவ்வொருவரையும் வாழவைக்கவும் கொல்லவும் கூடிய முழு அதிகாரம் படைத்த ஒரு தலைவராக அரசர் இருக்கிறார்' என்றெல்லாம் எழுதியுள்ளார். வரிவிதிப்பு, சமயக்கோட்பாடு, அயல் நாட்டுக் கொள்கை முதலிய சிக்கல்களிலே ஆங்கிலப் பாராளுமன்றமானது தம்மோடு பூசலிட்டபோது சேம்சு அரசர் அதை நோக்கி, 'அரசர் என்பவர் ஒருபோதும் கொடியவராகவும் தீயவராகவும் இருத்தல் இயலாது. அப்படியே ஓரரசர் தீயவராக இருந்தாலும், மக்களுடைய தீவினைகளுக்காக அவர்களை ஒறுக்கும் பொருட்டுக் கடவுளால்அனுப்பப்பட்டவரே அத்தீய அரசர் என்பதுதான் பொருளாகும்; ஆகையால், கடவுளால் மக்கள் மீது சுமத்தப்பட்ட அரசர் என்னும் சுமையை மக்கள் உதறி எறிந்துவிட முயலுதல் சட்டத்துக்கு மாறான செயலாகும். மக்கள் தங்களுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்ட கொடிய சாபத்தினின்று விடுதலை பெறுதற்கு, பொறுமைப்பண்பை வளர்த்தலும், இடைவிடாமல்

இறைவனை வழிபாடு செய்தலும், தங்களுடைய வாழ்க்கை முறைகளைக் குற்றங்களினின்று நீங்கிய செம்மை நெறியாக ஆக்குதலுமே சட்டத்துக்குகந்த வழிகளாகும் என்று அறிவுறுத்தி விரிவுரை செய்தார்.

இறைவழி உரிமைக் கொள்கை நான்கு முடிபுகளைச் சுட்டிக்காட்டுகிறது என்று ஆசிரியர் சி.பி. கூச்சு (G.P. Gooch) என்பவர் கூறுகிறார். 1. முடியாட்சி என்பது இறைவனுடைய ஆணையால் தோன்றிற்று. 2. பரம்பரை அரசுரிமையானது மறுக்கப்படமுடியாத ஒன்று. 3. அரசர்கள் தங்கள் செயல்களுக்காகக் கடவுள் ஒருவருக்குத்தான் பொறுப்புடையவர்களாவர். 4. ஒரு சட்டப்படியான அரசரை எதிர்ப்பது தீவினையே ஆகும். கடவுளால் முதலில் படைக்கப்பட்ட மனிதராகிய ஆதாமின் பின்தோன்றல்களே அல்லது வழிவந்தவர்களே இக்கால அரசர்களென்று இராபர்ட்டு பில்மர் என்ற ஆசிரியர் தமது பாட்ரியார்க்கா என்னும் நூலில் குறிப்பிடுகிறார். பிரான்சில் எல்லா அதிகாரங்களையும் தம்கையில் வைத்துக்கொண்டு, எவருக்கும் பொறுப்பில்லாமல் தம் மனம்போனவாறு சீர்கேடான ஆட்சி செய்த எதேச்சாதிகார அரசராகிய பதினான்காம் லூயியும் இறைவழி உரிமைக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை உடையவரே. சுருங்கக் கூறின் இறைவழி உரிமைக் கொள்கை எதேச்சா திகாரமான முடியாட்சிக்கு (Tyranny) வழிவகுத்தது. ஆங்கிலப் பாராளுமன்றம் கி.பி. 1688-ஆம் ஆண்டிலும், பிரஞ்சுப் புரட்சி கி.பி. 1789-ஆம் ஆண்டிலும், இதற்குப் பிற்பட்ட காலங்களில் ஆசுத்திரியா, செருமணி, உருசியா ஆகிய நாடுகளும் எதேச்சாதிகார முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே, இறைவழி உரிமைக் கொள்கையும், அரசின் தோற்றத்தையும், அரசாங்கத்தின் தோற்றத்தையும் அறிவியலுக்கு ஒத்தவகையில் விளக்கும் ஓர் கொள்கை என்று எவராலும் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒழிந்தது. மக்களே அரசின் அதிகாரங்களுக்கெல்லாம் தோற்றுவாயாவர் என்றும், எனவே மக்களுக்குப் பொறுப்பாகத்தான் அரசு இருத்தல் வேண்டும் என்றும் குடியாட்சி அரசியற் கருத்துகள் தோன்றின. மேலும், சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு ஓரளவேனும் அரசின் அல்லது அரசாங்கத்தின் தோற்றத்தைச் சரியாக விளக்குவதற்குத் தோன்றியதாலும், உலகியலதிகாரத்தினின்று ஆன்மிக அதிகாரத்தையும், திருச்சபையினின்று அரசையும் பிரித்து வரையறை செய்கின்ற போக்குத் தோன்றியதாலும், குடியாட்சிக் கோட்பாடு எதேச்சாதிகார முறைக்கு ஒரு மறுப்பாகத் தோன்றியதாலும் இறைவழி உரிமைக் கொள்கை மறைந்தது எனலாம். இந்தக் கொள்கையை மறுத்த ஆசிரியர்கள் குரோசியசு (Grotius), ஆப்சு(Hobbes), இலாக்கு (Locke) முதலியோர் ஆவர்.

இறைவழி உரிமைக் கொள்கை எதேச்சாதிகார ஆட்சிக்கு வழி செய்ததனால், இப்போது கைவிடப்பட்டபோதிலும், அதற்குச் சில மதிப்பீடுகள் உண்டு. 1. மக்கள் சமுதாயம் இக்காலத்தில் ஓர் உலகியல் ஆட்சியாளருக்கு (Secular Ruler) அல்லது தனக்குத்தானே விதித்துக் கொண்டுள்ள சட்டமுறைக்குக் (Self imposed Law) கீழ்ப்படிந்து வாழும் நிலையில் இருக்கிறது; ஆனால், அமைப்பு ஒன்றுமில்லாமல் நாகரிகமற்ற நிலையில் மக்கள் இருந்தபோது, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கு ஒரு வலுவான காரணியாக இருந்தது இறைவழித் தோற்றக் கொள்கை அல்லது இறைவழி உரிமைக் கொள்கைதான். 2. மேலும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் போற்றும் இயல்பு மனிதனிடம் இயற்கையாகவே உள்ளது என்ற கருத்தை இறைவழி உரிமைக்கொள்கை எடுத்துக்காட்டுகிறது. 3. எல்லாவற்றிற்கும் மேலாக அரசியலமைப்புக்கு ஆதாரமாக இருப்பது ஒழுக்க இயல் கருத்தே (Moral basis of Political Order) என்ற உண்மையை இக்கொள்கை வலியுறுத்துவதால் இது மதிப்பு உடையதாகவே கருதப்படுகிறது. அரசாங்கம் என்பது ஆளப்படுவோரின் நலனுக்காகவே இருக்கிறதென்றும், எதேச்சாதிகார ஆட்சியாளரும் தனது அதிகாரத்தைக் கையாளும் முறையைப் பொறுத்தமட்டில் கடவுளுக்கு ஒழுக்க இயலில் பொறுப்பு உடையவர் என்றும் இக்கொள்கைக்குப் பொருள் விளக்கம் கூறப்படுகிறது.

துணை நூல்கள்:

**Ghettel, R.G.**, Introduction to Political Science, Ginn, 1933.

**Willoughby, W.W.**, The Ethical Basis of Political Authority, Macmillan, 1930.

**இறைவன்**: இறைவன் எங்கும் நிறைந்தவன். இறை என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் இறைவன் (God) எனப் பெயர் பெற்றது.

நறுமணத்தை யாரும் நாவினால் அறிய முடியாது. சுவையை நாவினால் அறிதல் வேண்டும். அதுபோல சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தையும், நாக்கு, கண், உடம்பு, செவி, மூக்கு என்னும் கருவிகளால் அறிய வேண்டும். இறைவன் இந்த ஐந்துக்கும் அப்பாற் பட்டவன். அவனை இந்தக் கருவிகளால்

அறியத் தலைப்படுவது அறிவுடைமையாகாது. அவனை மனத்தாலும் அறிய முடியாது. நூல்களைப் படித்து அதனால் வரும் நூலறிவாலும் உணர முடியாது. இறைவன் அறிவு வடிவமானவன். அறிவே வடிவாய ஆண்டவனை அறிவு என்ற ஒன்றினாலேயே அறிதல் வேண்டும். அநுபவத்தால் உண்டான (வாலறிவு) மெய்யுணர்வு மூலம் இறைவனை அறிய முடியும். திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் இதனை உணர்த்துகிறார்.

திருவள்ளுவரைப் பின்பற்றி உமாபதி சிவம் என்னும் சைவ சித்தாந்த ஆசிரியர் திருவருட்பயன் என்னும் நூலில் இக்கருத்தை 'அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம், உருவம் உடையான் உளன்' என்பதால் விளக்குகிறார். அறிவு நிலையடைந்த அறிஞர் தாம் இவ்வுண்மையை உணர்வர். அவ் அறிவு நிலையை அடையாதவர்களை அறிவு நிலையை அடைய இருக்கும் முதல் படியினர் என்றும் சைவம் கூறும். இத்தகைய நிலையில் உள்ளவர்களுக்குத் தான் இறைவன் உருவம், அருவம், அருவுருவம், என்னும் நிலைகளில் காட்சி தருகின்றான்.

உருவம் என்பது கண்ணால் பார்க்கக் கூடிய பிழம்பு. உலக மக்களுக்கு உதவி புரியும் இருபத்தைந்து திருஉருவங்களை இறைவன் என அறிந்தோர் கூறுவர். இவை கோர வடிவு, போக வடிவு, யோக வடிவு என்பவற்றில் அடங்கும். கோர அல்லது வேக வடிவு என்பது மக்களுடைய வினையைப் போக்குவதற்கு இறைவன் எடுக்கும் வடிவு. காமாரி என்னும் காமனை அழித்த உருவத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். போக வடிவு என்பது சிவனும் சக்தியுமாய் இணைந்து உயிர்கள் குடும்ப வாழ்வு நடத்த முன்னோடியாக உள்ள நிலை. சோமாசுகந்த வடிவத்தை (உமா தேவி முருகப் பெருமானுடன் சிவபிரான் உள்ள நிலை) இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தென் முகக் கடவுள் யோக வடிவில் இருந்து உயிர்கள் ஞானம் பெற உதவுதல் யோக வடிவத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

வைணவ சமயத்தில் இறைவனைப் பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை என்று ஐந்து நிலைகளில் வைணவர் வணங்குவர். பரம் மேலான நிலை. வியூகம் உலகத்தைப் படைத்துக் காத்து அழித்தற்கு இறைவன் மேற்கொள்ளும் நிலைகள். விபவம் என்பது கட்டில் சிக்கியிருக்கும் உயிர்கள் விடுதலை பெற இறைவன் தம் உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி எடுக்கும் இராமன், கிருட்டிணன் போன்ற அவதாரங்கள். அந்தர்யாமி என்பது எல்லா உயிர்களிலும் ஊடுருவி நின்று உயிர்களுக்கு உதவுந்தன்மையைக் குறிப்பதாகும். அர்ச்சை என்பது திருவரங்கம், காஞ்சி, திருப்பதி முதலிய தலங்களில் உருவ வடிவில் இருந்து உயிர்களுக்கு அருள் வழங்கும் தன்மையாகும். ஆகவே, சைவம், வைணவம் என்னும் இரு சமயங்களிலும் உருவ வழிபாடு இன்றியமையாத இடம் பெறுகிறது.

உருவ வழிபாடு என்னும் தொடரை உருவத்தில் வழிபடுதல், உருவத்தை வழிபடுதல் என்று இரு வகையில் பிரிக்கலாம். உருவத்தில் வழிபடுதல் என்று ஏழாம் வேற்றுமை உருபு விரித்துப் பொருள் கொள்ளுதல் உருவ வழிபாட்டின் தத்துவச் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ளது. உருவத்தில் வழிபடுதல் என்னும்போது வழிபடப்படுவது பரம்பொருள், உருவமானது பரம் பொருளை வழிபடுவதற்குக் கருவியாக உள்ளது என்னும் கருத்து விளங்குகிறது. உருவத்தை வழிபடுதல் என்பது உருவத்தை மட்டும் வழிபடுதல் என்னும் பொருளைத் தரும். ஆகவே, உருவத்தில் வழிபடுதல் என்னும் தொடர் எங்கும் இருக்கும் இறைவனை அவ்வாறு உள்ளவாறு அறிந்து, திருவுருவத்தில் வழிபடுதல் என்பதைக் குறிக்கும்.

தேன் நன்கு சுவையாக உள்ளது. ஆயின் அந்தச் சுவையைக் கருப்பு, சிவப்பு எனக் கூற முடியாது. தேனின் சுவையை எப்படி இயம்புவது? சுவை கண்டவனுக்குத் தெரியாது; உண்டவனே உணர்வான். அது போல ஞானப் பொருளாக, அநுபவப் பொருளாக விளங்கும் இறைவனை அநுபவத்தால் தான் உணர முடியும். வேறு வகைகளால் இறைவனை முழுமையாக உணர முடியாது.

இறைவனை அறிவதற்குப் பகுத்தறிவை எந்த அளவிற்குப் பயன்படுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். திருஞானசம்பந்தர் துன்பம் நீங்க வேண்டுமானால் இறைவனிடம் மனத்தைச் செலுத்தி, அறவாழ்க்கை வாழ வேண்டும். கடவுளை ஒருவர் சோதிக்கலாம். பகுத்தறிவின் எல்லை கொண்டு கடவுளைச் சோதிக்கும் போது ஓர் எல்லை மீறிப் போகக் கூடாது என்பதை உணர்த்தவே 'மிக்குச் சோதிக்க வேண்டா' என்று கூறுகிறார். ஆகவே, பகுத்தறிவினால் இறைவனைக் காணுதல் என்பது இயலாததொன்றாகும்.

சா.க

**இறைவாச நல்லூர்ப் புராணம்,** புராணத் திருமலை நாதர் இயற்றிய ஒரு தல புராணம். இந் நூல் 'இறைவாச நல்லூர்த் தல புராணம்' என்னும் பெயரில் அச்சிடப் பெற்றுள்ளது. இறைவாச நல்லூர் என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்ட உளுந்

தூர்ப்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. உளுந் தூர்ப் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில் மேற்கே 7 கல் தொலைவு சென்று இவ் வூரினை அடையலாம். இவ்வூர் முதலாம் இராச ராசன் காலத்திற்கு முன்பிருந்தே, சிவத்தலங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது. இறைவாச நல்லூர் என்னும் பெயர் இலவானாசூர் என்று மருவி, இக் காலத்தே எலவானாசூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு இறையானறையூர், அரசவனம், மூங்கில் வனம், இறையாபுரி, நீரேற்றபுரி முதலிய பல வேறு பெயர்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இங்குள்ள திருக்கோயில் மாடக்கோயில் அமைப் புக் கொண்டது. இறைவன் திருப்பெயர் இக்கோயி லில் உள்ள கல்வெட்டுகளில் 'அமர புயங்கர தேவர்', 'ஊர் பாகங் கொண்டருளிய மகாதேவர்', 'ஊர் பாகங் கொண்டருளிய நாயனார்' என்று காணப்படு கிறது. இலக்கியங்களில் இறைவன் பெயர் சிகர சிகா மணி நாதர், அரசவனத் திறை, மங்கையொரு பாகன், சோதிலிங்க நாதன், அரசவனத்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அம்பிகையின் பெயர் பெரிய நாயகி.

இவ்வூர்க்குத் தலபுராணம் பாடியவர் 'புராணத் திருமலை நாதர்' ஆவார். இவர் பெயரிலமைந்த 'புராணம்' என்னும் அடைமொழி, சிறப்பான பல புராணங்கள் பாடியமையால் அமைந்தது என்றும், புராணச் சொற்பொழிவு ஆற்றுவதில் வன்மை பெற் றிருந்தமையால் அமைந்தது என்றும் கூறுகின்றனர். இவரது காலம் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் முற் பகுதியாகும். இவர் மெய்கண்ட சந்தான மரபினைச் சேர்ந்த திருவண்ணாமலைச் சத்தியஞான தரிசினி கள் என்பவரின் சீடராவார். சிதம்பரப் பாட்டியலை இயற்றிய பரஞ்சோதியார் இவருக்கு மகனாவார்.

இறைவாச நல்லூர்ப் புராணம், சென்னையி லுள்ள டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலை யத்தாரால் 1984–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 374 விருத்தப்பாக்களால் ஆகியது. 'வேகமா நெறி' எனத் தொடங்கும் விநாயகர் வணக்கமும், 'வேதன் நாவிலும்' எனத் தொடங்கும் கலைமகள் வணக்கமும் ஆகிய இரண்டு கலிவிருத்தங்களும் நூலின் முதலிரு பாடல்களாக அமைந்துள்ளன. இவ் விருபாடல்களும், வேறு நூல்களுக்குரியனவாகும். இப் புராணம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட் டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, காருண்டன் உற்பவச் சருக்கம், தெய்வீகராசன் உற்பவச் சருக்கம், காருண் டன் வதைச் சருக்கம், நீரேற்ற சருக்கம் ஆகிய எட்டுப் பிரிவுகள் கொண்டு அமைந்துள்ளது. நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ள இரு விருத்தங்கள் நூலின் வரலாறும் அமைப்பும் பற்றிக் குறிப்பிடுகின் றன. இந்நூலாசிரியர் சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி மிக்கவராதலின், நூலினுள் சைவ சித்தாந்தக் கருத்துகள ஆங்காங்கே காணப்படுகின்றன. சிவ பெருமானைக் குறிப்பனவாக, 'ஆருயிர்கள் முத்தி யினை அடைந்திடுமாறு அருளிச்சை ஆயினான்', 'சாரும் உயிர் கருமத்தின் அளவறிந்து நிற்பான்', 'தக்க காலம் சேர வினை அருத்துவிக்கும் செயலான்,' 'மலங்கள் தனைச் சிதைத்து நேசம் கூரவரு முத்தி யினைக் கொடுப்பான்' எனவரும் தொடர்கள் நூலாசிரியர்தம் சைவசித்தாந்த சாத்திரப் புலமை யினையும் ஈடுபாட்டினையும் உணர்த்துவனவாக உள்ளன. பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டன.

இப்புராணத்திற்கு ஒரு பழைய உரை உண்டு. அவ்வுரை திருமுதுகுன்றம் வீரசைவ சுப்பராய தேசி கர் என்பவரால் இயற்றப்பட்டது. இச்செய்தி 'விட லரிய உரை என்னும் நெய்த் தீபம் கவிஞர் சபை மேவ வைத்தான், திடமுது குன்றினின் மருவு சுப்பு ராயக் கவிஞன் செகத்தின் மீதே' என நூலின் இறு தியிலமைந்துள்ள செய்யுட் பகுதியால் புலனாகிறது. இவ்வுரை வடமொழித் தொடர் மிக்குள்ளதாயினும் பாடற்பொருளை இனிது விளக்கப் பேருதவியாக அமைந்துள்ளது.

**இன் ஆறு** நடு ஐரோப்பாவிலுள்ள தான்யூபு ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்று. சுவிட்சர்லாந்தில் கிராபவுண்டன் (Graubunden) மாநிலத்திலுள்ள இலோங்கினோ (Longhino) ஏரியிலிருந்து தொடங்கி, வேகமாகப் பாய்ந்தோடும் மலையருவியாக ஓடும் இந்த ஆறு, வடகிழக்காக ஓடிச் சிறுசிறு ஏரிகளாக உருமாறிவிடுகிறது. சுவிட்சர்லாந்தின் புகழ்மிக்க நகரங்களுள் ஒன்றான புனித மார்டிசு (St. Mortiz), இன் ஆற்றின் ஏரிக்கரை ஒன்றில் அமைந்துள்ளது.

இன் ஆறு (Inn River) வடகிழக்காகப் பாய்ந்து ஆசுத்திரியாவில் நுழைந்து, இன்சுபர்கு (Innsburg), குப்சுடீன் (Kufstein) போன்ற நகரங்களை ஒட்டி னாற்போல் ஓடுகிறது. பின்னர்ச் செருமனியில் பவேரிய-ஆல்ப்சு (Bavarian Alps) மலைத்தொடர் வழியாகப் பாய்ந்து, முல்டார்பு (Muhldorf) என்னு மிடத்திற்கருகில் சிழக்காகத் திரும்பி, பாசா (Passau) என்னும் ஊருக்கு அருகில் தான்யூபு (Danube) ஆற் றுடன் இணைகிறது. இந்த ஆறு ஏறத்தாழ 515 கி.மீ. நீளமுடையது. வேகமாகப் பாய்ந்து ஓடி வருவதால் இந்த ஆறு கப்பல் போக்குவரத்திற்குப் பயனற்றது. இவ்வாற்றின் வடபகுதிகளில் பல நீர்


மீன் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆற்றின் தாழ்நிலப் பள்ளத்தாக்குகள் அகன்றும் செழித்துமுள்ளன.

**இன்கா நாகரிகம்** தென் அமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டுகளில் வளர்த்த உயரிய நாகரிகமாகும். இன்காப் பேரரசு (Inca Empire) மிகப் பரந்ததும் செல்வச் செழிப்பு மிக்கதுமான பேரரசுகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது. இப் பேரரசு ஏறத்தாழ கி.பி.1438-ஆம் ஆண்டிலிருந்து விரிவடையத் தொடங்கியது. பெரு நாட்டின் தெற்கில் அமைந்துள்ள தலைநகரான கூசுக்கோ (Cuzco) என்னும் ஊருக்கு இரு மருங்கிலும் இன்கா நாகரிகம் பரவியிருந்தது.

இன்காப் பேரரசு ஏறத்தாழ 4000கி.மீ. தொலைவிற்குத் தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் ஆர்செண்டினா (Argentina), பொலீவியா (Bolivia), பெரு (Peru), ஈக்வெடார்(Ecuador), கொலம்பியாவின் (Colombia) சில பகுதிகள் முதலானவற்றில் பரவியிருந்தது. இப் பேரரசு கி.பி. 1532-ஆம் ஆண்டளவில் வீழ்ச்சியுற்றது. இதனை இசுபானியர்கள் வென்று கைக்கொண்டனர்.

இன்காப் பேரரசர்கள் பரந்துவிரிந்திருந்த தம் பேரரசைச் சிக்கல் நிறைந்ததோர் அரசியல் முறைப்படி அரசாண்டார்கள். இவர்கள் தம் படை பலத்தால் பல பகுதிகளைக் கைப்பற்றினார்கள். பேரரசரின் நடுவண் ஆட்சியையும் எண்ணற்ற தலச் சிற்றரசர்களையும் இணையாகச் சமன் செய்யும் அளவிற்கு இவர்களின் அரசியல் முறை அமைக்கப்பட்டிருந்தது. இன்கா என்னும் பெயர் தொடக்கத்தில் பேரரசனின் விருதுப் பெயராக இருந்தது. இவரால் ஆளப்பட்ட மக்கள் பல்வேறுபட்ட பெயர்களைக் கொண்டிருந்தனர். இசுபானியரின் வெற்றிக்குப் பின்னர், அனைத்து மக்களும் இன்கா என்னும் பெயரிலேயே அழைக்கப்பட்டனர்.

இன்கா மக்கள் பொறியியல் கலையிலும், கைத்திறம் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்வதி



கூசுக்கோ நகர வீதி

லும் நிகரற்றவர்கள். இவர்கள் நல்ல நெடுஞ்சாலைகளை அமைத்துப் பேரரசின் தொலைவிலிருந்த பகுதிகளுடன் நல்லிணைப்பினை உருவாக்கினர். கட்டடக் கலையின் மூலம் இவர்கள் பெருங் கட்டடங்களைச் சிறந்த அமைப்பு முறையில் கட்டிமுடித்தனர். பொன், வெள்ளி, ஏனைய பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு பல அழகான பொருள்களைக் கைத்திறம் வாய்ந்த தொழிலாளர்கள் உருவாக்கினார்கள். இவர்கள் பருத்தி ஆடை, கம்பளம் போன்றவற்றை நெய்தார்கள்.

கூசுக்கோ நகரம் சூரியதேவனுக்குரியது. இதுவே இன்காப் பேரரசின் தலைநகரமாகும். கூசுக்கோ என்னும் சொல்லுக்கு இன்கா மொழியில் கொப்பூழ் (Navel) அல்லது மையப்பகுதி என்று பொருள். இந்நகரத்தின் மையத்திலிருந்த புனித சதுக்கத்திலிருந்து பிரியும் நான்கு சாலைகள் பேரரசின் நான்கு மாநிலங்களையும் இணைத்தன. தலைநகரம் எப்போதும் பயணிகள் நிறைந்ததாய்க் காணப்பட்டது. அவர்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்தனர்.

தொல்லியல் தொடர்பான சின்னங்கள் இன்கா நாகரிகத்தை அறிய உதவும் சிறப்பான சான்றுகளாகும். இன்கா மக்களுக்கு எழுத்து வடிவம் தெரிந்திருக்கவில்லை. எனவே, இலக்கியச் சான்றுகள் கிடைத்தில. எனினும் அறிவியல் வல்லுநர்களும், வரலாற்றறிஞர்களும் பெரு நாட்டில் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுவரும் தொல்லியல் சின்னங்களிலிருந்து இவர்களின் வாழ்க்கை முறையைத் தொகுத்துக் கூறியுள்ளார்கள். இசுபானியர் வெற்றிக்குப் பின், அவர்கள் இன்கா மக்களைப்பற்றி எழுதிய செய்திகளும் இவர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.

ஏரினைப் (Plough) பயன்படுத்தாமலேயே உணவுப் பொருள்களை மிகுதியாக விளைவிக்கப் பல முறைகளை இன்கா மக்கள் கையாண்டனர். கடற்கரையை அடுத்திருந்த பாலைநிலத்தில் பல நீர்ப்பாசனத்திட்டங்களை ஏற்படுத்தினர். மண் அரிப்பைத் தடுக்க மேட்டு நிலங்களில் மாடிகளைப்போன்று வெட்டி நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினர். இம் மக்கள் தம் நிலங்களை மூவகையாகப் பிரித்தனர். நிலத்தின் ஒருவகையில் அறுவடையான பொருள்கள் உள்ளூர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. மற்ற இரு வகை நிலப் பொருள்கள் அரசுக்கும் சமயத் தொடர்பான செயல்களுக்கும் உதவின.

உணவுத்தானியம், பருத்தி, உருளைக்கிழங்கு, உண்ணுவதற்கேற்ற வேர் போன்றவை சிறப்பான பயிர்வகைகள். உணவுத் தானியத்திலிருந்து இவர்கள் ஒருவகை பீர் என்னும் மதுவை உற்பத்தி செய்தார்கள். இது பொது மக்களால் விரும்பிக் குடிக்கப்பட்டது.

இன்காப் பேரரசு மக்கள் பலவகைப்பட்ட உடைகளை உடுத்தி மகிழ்ந்தனர். மேட்டுநிலப் பகுதி வாழ் மக்கள், கம்பள ஆடைகளையும் கடற்கரையையொட்டியுள்ள பகுதிவாழ் மக்கள் பருத்தி ஆடைகளையும் விரும்பினர். பெருங்குடி மக்கள் விலை மதிப்புமிக்க ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்திருந்தனர். ஆண்கள் ஆடையையும் உள்ளாடையையும் குளிர்போக்க உதவும் மேலாடைகளையும் உடுத்திக் கொண்டனர். பெண்கள் நீண்ட ஆடைகளையும் சதுர வடிவமான போர்வைகளையும் அணிந்தனர். ஆண்-பெண் இருபாலாரும் மிதியடிகளையும் வண்ணக் கச்சைகளையும் அணிந்தனர்.

பல தலைமுறைகளைச் சார்ந்த இன்கா மக்கள் குடும்பங் குடும்பமாக வாழ்ந்தனர். பெருங்குடி மக்கள் பரந்ததும் ஒப்பனை செய்யப்பெற்றதுமான அரண்மனைகளில் வசித்தனர். எளியோர் கூரை வேயப்பெற்ற சிறு வீடுகளில் வாழ்ந்தனர்.

சமூகத்தரத்திற்குத்தக இன்கா மக்களின் குடும்ப வாழ்க்கை அமைக்கப்பட்டிருந்தது. பேரரசருக்கு ஆற்றும் அரும் தொண்டின் அடிப்படையில் சமூகத் தரங்கள் முடிவாக்கப்பட்டன. உறவின் அடிப்படையிலும், நிலச் சொந்தத்தின் அடிப்படையிலும் மக்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இக்குழுக்கள் அய்லசு (Ayllus) எனப்பட்டன. ஒவ்வோர் அய்லு (Ayllu) வைச் சார்ந்த உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு பொதுநிலம் ஒதுக்கப்பட்டது. அய்லுத் தலைவர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான உணவு உற்பத்தி செய்து கொள்ளுமளவு நிலம் ஒதுக்கினார்.


பெருங்குடியைச் சார்ந்த ஆண்கள் பல பெண்களை மணந்து கொண்டனர். திருமணங்கள் பல அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டன. பேரரசருக்கு அருந்தொண்டாற்றிய ஆண்கள் சில வேளைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களைப் பெறும்படி பேரரசர்கள் உதவினர். இவ்வாறு அரசு அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிகள் அழகிற்கும் அறிவிற்கும் பெயர் பெற்றவர்களாயிருந்தனர். பெருங்குடி மக்கள் தம் தரத்திற்குக் குறையாத நிலை உடையவர்களுடனேயே மண உறவு கொண்டனர். எளிய மக்கள் அய்லுக்குள்ளேயே மணம் செய்துகொள்ள வேண்டியவர்கள். கணவனும் மனைவியும் கழனியில் வேலை செய்யும்போதும்,

ஏனைய பணிகளைச் செய்யும் போதும் ஒருவருக் கொருவர் உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள்.

இன்கா மக்களின் குழந்தைகளுக்குப் போதுமான ஓய்வு கிட்டவில்லை; ஏனெனில், அவர்களின் பெற் றோர்கள் அவர்களைப் பல்வேறு பணிகளில் ஈடுபட வைத்தனர். நடக்கக் கற்றுக்கொண்டதும் பெரும் பாலான குழந்தைகள் குடும்பப் பணியில் ஈடுபடுத்தப் பட்டார்கள். 14 வயது கடந்த ஆண்மகன் வயது வந்த மனிதனாகக் கருதப்பட்டான். மாதவிடாய்க்குப் பின் னர்ப் பெண்மகவு வயதுவந்த பெண்ணாகக் கருதப் பட்டாள். வயது வந்தவர்களாக மதிக்கப் பெற்ற ஆண்-பெண் பிள்ளைகள் வேறு பெயரால் அழைக்கப் பட்டனர். எனினும், திருமணம் ஆகும்வரை இளை ஞர்கள் வயதுவந்தோராகக் கருதப்படவில்லை.

இன்கா மக்களின் சமயம்: இன்கா மக்களின் பொது வாழ்க்கையிலும், தனி வாழ்க்கையிலும் சமயம் சீரிய இடத்தைப் பெற்றிருந்தது. வீரகோச்சா (Viracocha) என்னும் அவர்களின் பெருந் தெய்வமே இயற்கையை உருவாக்கியதாக அம்மக்கள் நம்பினர். சூரிய தெய்வ மான இண்டி (Inti)யை அரசக் குடும்பங்கள் வழி பட்டன. நிலமும் கடலும் சிறப்பான பெண் தெய்வங்கள். உய்த்துணருந் தன்மையால்(Divination) கடவுள்களின் இச்சைகளைத் தெரிந்துகொள்ள முடி யும் என்றும், கண்களுக்குப் புலனாகாத அவரைத் தந்திரக் குறிகள் மூலம் அறிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபடலாம் என்றும் இவர்கள் நம்பினர்.

இவர்கள் பல்வேறு இடங்களையும் பொருள் களையும் புனிதமாகக் கருதினர். இறந்தோரின் பத மாக்கப்பட்ட உடல்கள், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், கோயில்கள், புனிதமானதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான இடங்கள், ஊற்றுகள், கற்கள், மலையுச்சிகள் போன்றவை புனிதப் பொருள் களாகும். ஒவ்வொரு வீட்டிலும் சிறுசிறு புனித உருவச் சிலைகள் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. உய்த்துணரும் ஆற்றலினால் தாம் பெரியதும் சிறியதும் ஆன முடிவுகளை மேற்கொண்டனர். அரசு அலுவல்களின் முடிவுகளையும், நாற்று நடுதல், போருக்குச் செல்லுதல், நாள் பார்த்தல் போன்ற வற்றையும் உய்த்துணரும் ஆற்றல் மூலமே முடிவு செய்தனர். விலங்குகளின் உறுப்புகள், தீச்சுடர்கள், விலங்குகளின் நடமாட்டம் போன்றவை மூலம் சகுனங்களை அறிந்தனர். இவர்கள் சமயச் சடங்குகள் பலவற்றை மேற்கொண்டனர். சடங்குகளின்போது நடனம், விருந்து, விளையாட்டு, பாடல், அணி வகுப்புப் போன்றவையும் நிகழ்ந்தன.



இன்கா அரசர் மேடை

வழிபாடு செய்யும்போது தியாகம், காணிக்கை போன்றவை போற்றப்பட்டன. தானியங்களும், இலாமா விலங்குகளும் காணிக்கையாகத் தரப் பட்டன. சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு நரபலியும் கொடுக்கப்பட்டது. நரபலி கொடுக்கத் தேர்ந் தெடுக்கப்படுவதை இவர்கள் பெரும்பேறாகக் கொண்டனர்.

சமயச் சடங்குகளில் பூசாரிகளின் பங்கு அள விடற்கரிது. பூசாரிகளும் காணிக்கை செலுத்தினர். கோயில்களைப் பாதுகாப்பது அவர்களின் கடமை. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மக்கள் சமயச் சடங்கு களுக்கான உணவு வகைகளை ஆயத்தப்படுத்தினர். இப்பெண்மணிகள் அரச குடும்பத்தினருக்கும் பூசாரி களுக்கும் நரபலி கொடுக்கப்படும் ஆளுக்கும் அழகான ஆடைகளை நெய்து கொடுத்தனர்.

இன்கா பூசாரிகள் சடங்குகள் மூலம் நோய் தீர்த்தனர். மூலிகை, செடிகொடிகள் மருந்தாயின. அறுவை சிகிச்சையையும் அறுவை மருத்துவர்கள் செய்தனர். மண்டையோட்டில் துளையிடும் அறுவை மருத்துவம் (Trephining) செய்யப்பட்டது.

இறந்தோரை அடக்கம் செய்வதும் புனிதமாகக் கருதப்பட்டது. சாவுக்குப் பின்னர் மக்கள் சுவர்க்கத் திலோ, நரகத்திலோ வாழ்கிறார்கள் என்று இவர் கள் நம்பினர். பெருமக்கள் கல்லினால் தரையின் மேற்பரப்பில் கட்டப்பெற்ற கல்லறைகளில் புதைக் கப்பட்டனர். ஏனையோர் குழிகள், குகைகள் பிற வகை சமாதி ஆகியவற்றில் புதைக்கப்பட்டனர்.

வாணிகம்: இன்கா நாகரிகத்தைச் சார்ந்த மக்களுக்கு நாணய முறை தெரிந்திருக்கவில்லை. துணிமணிகள் நாணயம்போல்பயன்படுத்தப்பட்டன; அவை நன்கொடைகளாகவும் வழங்கப்பட்டன. அரசே பெரும்பாலான வாணிகத்தை நடத்தியது; குறிப்பாக உலோகங்கள், விலைமதிப்புள்ள கற்கள், அரிதாகக் கிடைக்கும் செடிகொடிகள், விலங்குகள் மற்றும் ஏனைய அருமையாகக் கிடைக்கும் பொருள் கள் போன்றவை அரசின் கட்டுப்பாட்டின் கீழிருந் தன. செய்தொழில் பொருள்கள், உணவுப்பொருள் கள், துணிமணிகள் போன்றவற்றை உள்ளூர்ச் சந்தை களில் எளிய மக்கள் விற்றனர்.

போக்குவரத்து: இன்காப் பேரரசுப் பகுதிகள் அனைத்தும் நன்கு அமைக்கப் பெற்ற சாலைகளால் இணைக்கப்பட்டன. ஆறுகள், ஆற்றுக் குடைவுகள் போன்றவற்றின் குறுக்காகத் தொங்கு பாலங்கள் கட்டப்பட்டன. அவர்கள் விட்டுச் சென்ற சாலைகள், பாலங்கள் போன்றவற்றின் சில பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன.

மக்கள் கால்நடையாகவே பயணம் செய்தனர். மனிதர்களும், இலாமா என்னும் விலங்குகளும் பொதி சுமந்தன. பெருங்குடிமக்கள் பல்லக்குகளில் பயணம் செய்தார்கள். அவற்றை மனிதர்கள் தம் தோள்களின் மீது சுமந்து சென்றார்கள். பெரும் ஆறுகளையும், ஏரியையும் கடற்கரையையொட்டி யுள்ள இடங்களையும் கடக்க இன்கா மக்கள் படகுகளையும் கட்டுமரங்களையும் பயன்படுத்தினர்.

அரசு: இன்காப் பேரரசினை அரச மரபினைச் சார்ந்த உறுப்பினர் ஆண்டனர். பேரரசரைச் சபா இன்கா (Sapa-Inca) என்று கூறினர். அவர் தம் சகோதரியையே மணந்து கொள்வது மரபு. தம் சகோதரியாகிய மனைவிக்குப் பிறந்த ஆண்பிள்ளை களுள் ஒருவர் அவருடைய வாரிசாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். பேரரசருக்கு உதவிபுரியப் பெருங்குடி மக்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அவர்களே ஆளுநர்களாகப் பேரரசுக்குட்பட்ட மாநிலங்களில் பணியாற்றினர். தலைமைப்பூசாரியும் பேரரசரின் உறவினரே. படைத் தலைவர்களும் பேரரசரின் உற வினர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரரசையும் அதன் குடிமக்களையும் காப்பது பேரரசரின் பொறுப்பாகும். பேரரசை நன்கு விரி வாக்குவதும் சமயச் சடங்குகளைச் சரியானபடி மக்கள் பின்பற்றுமாறு கண்காணிப்பதும் அவருடைய கடமைகளாகும். பெருங்குடி மக்கள் எளியவர்களைத் தம் சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வ தைத் தடுப்பதும் அவருடைய கடமையாகும்.

இன்கா மக்கள் பிறிதொரு பழக்கத்தையும் கைக்கொண்டிருந்தனர். சிற்றரசர்களை வென்ற பின்னரும் அவர்கள் சுதந்திரமாக ஆளும்படி விட்டு வைத்தார்கள். கலகம் விளைவிக்காத வரை அவர் கள் தம்மிச்சைப்படி ஆளவும் வகைசெய்தனர். உணவுப் பொருள்களைப் போதுமான அளவு கிடங்கு களில் சேமித்துவைத்தனர். இவற்றின் பயனாகப் பேரரசுக்குள் உறுதியான கட்டுப்பாட்டையும் உறவு களையும் பேரரசர் பாதுகாத்தார்.

எளிய மக்கள் அரசுக்குப் பணியாற்றுவதன்மூலம் வரி கட்டினார்கள். அதனுடன் தாம் விளைவித்த உணவுப் பொருள்கள், வளர்த்த கால்நடைகள், பிடித்தமீன் போன்றவற்றின் ஒரு பகுதி ஆகிய வற்றையும் அரசுக்கு வழங்கினர். பெண்கள் அரசுக் காகக் குறிப்பிட்ட அளவு துணி நெய்துகொடுக்க

வண்டியவராயினர். கட்டுமானப் பணிகள், சுரங்கங்களில் பணியாற்றல், இராணுவத் தொண்டு போன்றவற்றை ஆண்கள் செய்தனர். வரி கட்டுவதைக் கண்காணிக்கக் கண்காணிப்பாளர்கள் அமர்த்தப்பட்டனர்.

இன்கா மக்கள் குச்சுவா (Quechua) என்னும் மொழியைப் பேசினர். பேரரசில் வாழ்ந்த வெவ்வேறு மக்கள் பல்வேறு இந்திய மொழிகளைப் பேசினர். எழுத்து வடிவத்தை அவர்கள் அறியாததால் மக்கள் பேசியே தம் கருத்தை விளங்க வைத்தனர். சாலைகளில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த தூதர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்; தீ, புகை போன்ற குறிகளையும் செய்திகளைக் கூறப் பயன்படுத்தினர்.

இவர்கள் விண்மீன்களையும், கோள்களையும் பற்றி அறிந்திருந்தனர். அவற்றின் துணைக்கொண்டு பருவங்களை முன்கூட்டி அறியும் திறன் பெற்றிருந்தனர். கட்டடம், சாலை, வயல்கள் போன்ற அமைப்புகளிலிருந்து கணக்கியல் பற்றிய அவர்தம் திறமையினை உணரமுடியும். கயிறுகளை முடிச்சுப் போட்டுப் பலவகை நீளங்களிலும் வண்ணங்களிலும் ஆவணங்களைப் பாதுகாக்கச் சிறப்பு அலுவலர்கள் இருந்தனர். ஒவ்வொரு வண்ணமும் முடிச்சும் விதவிதமான விவரங்களைக் கூறின. முடிச்சுகளின் விதவிதமான அளவுகளின் மூலம் எண்களை அறிந்தனர்.

பெற்றோர் செய்யும் பணியைப் பார்த்துப் பிள்ளைகளும் அதுபோலவே செய்ய முற்பட்டனர். முதியோர் கூறும் கதைகளை அவர்கள் கேட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிகளும் பெருங்குடி மக்களின் ஆண் பிள்ளைகளும் ஓரளவு கல்வி கற்றார்கள். கூசுக்கோ நகரப் பள்ளிக்குப் பெருங்குடி மக்களின் ஆண்மக்கள் நான்காண்டுகள் கல்வி கற்கச் சென்றனர்; இன்கா மொழி, வரலாறு, சமயம் போன்ற பாடங்களையும் முடிச்சிடும் ஆவணக் காப்புமுறையையும் கற்றனர்; போர்செய்யும் பயிற்சியும் பெற்றனர். ஆசிரியர்கள் அமாதசுகள் (Amautas) எனப்பட்டனர். இவ்வாசிரியர்கள் மரபு வழிக் கதைகள், கவிதைகள் மூலம் வரலாற்றுக் குறிப்புகளை மனப் பாடம் செய்து ஒப்பித்தார்கள்.

இன்கா மக்கள் கலைத்திறன் படைத்தவர்கள். வழிபாட்டு உருவச் சிலைகள், பெருங்குடி மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் பல்வேறு பொருள்கள் போன்றவற்றை இவர்கள் அழகுடன் செய்தார்கள். இவர்கள் வலுவான கற்கோயில்களைக் கட்டிப் புகழ்பெற்றார்கள். சிமெண்டுக் கலவையைப் பயன்படுத்தாமலேயே கற்களை அழகுற அறுத்து இணைத்தார்கள். இவர்கள் கவின்மிகு மட்பாண்டங்களைச் சிறப்பாக வனைவதில் வல்லவர்கள். அவற்றின் மீது பல வண்ணப்படங்களை வரைந்தார்கள். இவர்கள் இசைக் கருவிகள் சிலவற்றை இசைக்கவும் கற்றிருந்தனர்.

வரலாறு: இன்கா மக்களின் தொடக்க கால வரலாற்றை அறியச் சான்றுகள் அரிது. அவர்களின் தந்தையான சூரியன் தம் ஆண்மக்களையும் பெண் மக்களையும் பூமிக்கு அனுப்பி, அவர்களுக்கு ஆளவும் வாழவும் கற்றுத் தந்தார் என்று மரபுவழிக்கதைகள் கூறுகின்றன. இவர்கள் ஓரினமாகவோ இனங்களைக் கொண்ட குழுக்களாகவோ தொடக்கத்தில் வாழ்ந்தார்கள். இவர்கள் கி. பி. 1200–ஆம் ஆண்டளவில் விரிவடைந்து அண்டையில் வாழ்ந்த குழுக்களையும் ஆண்டனர்.

பேரரசு கி. பி. 1438–இல் நிலைநாட்டப்பட்டது. அப்போது பச்சக்குத்தி (Pachacuti) என்னும் அரசர் சங்காக் கூட்டணியின் (Chanca Confederacy) படையெடுப்பை முறியடித்தார். இவர் இன்கா பேரரசின் ஒன்பதாம் அரசர். இவர் சிறந்த படைத்தலைவரும் நிருவாகியும் ஆவார். கூசுக்கோ நகருக்குத் தென்பால் இருந்த பல பகுதிகளை வென்று, பேரரசின் மையத்தில் தலை நகரை மீண்டும் திருத்தியமைத்து, இன்கா அதிகார நினைவுச்சின்னம் ஒன்றையும் நிலைநாட்டினார். இவர் அரசியல், சமூக வாழ்க்கையையும் திருத்தியமைத்தார். அதன் மூலம் திறமையான ஆட்சிக்கு இவர் வழிவகுத்தார். பச்சக்குத்தியின் மகன் தோப்பா இன்கா யுபான்க்யு (Topa Inca Yupanqui). இவர் இன்காவின் அதிகாரத்தைத் தெற்கில் மேற்கு பொலீவியா, வடமேற்கு அர்செண்டினா ஆகிய இடங்களிலும் வடக்கில் மேலை ஈக்வடார் போன்ற பகுதிகளிலும் விரிவுபடுத்தினார். இவருடைய மகன் உவாயுனா காபக்கு (Huayna Capac) அனைத்துப் பகுதிகளையும் ஒன்று படுத்தினார். உவாயுனா கி.பி.1527–இல் காலமானார். பின்னர் நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் மூண்டது. இவர்தம் இரு ஆண்மக்கள் இக்குழப்பத்திற்குக் காரணமானார்கள். அவர்களுள் ஒருவரான உவாசுகர் (Huascar) பேரரசின் வாரிசாக அமர்த்தப்பட்டவர்; அதவால்பா மற்றொருவர். அவர் ஈக்வடாரில் பெரும் படையொன்றைக் கட்டுப்படுத்தினார். இருவரையும் ஆதரித்தவர்களிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. அதன் விளைவாகப் பேரரசு பெரிதும் நலிவுற்றது. இப்போரில் அதவால்பா இறுதியில் உவாசுகரை கி.பி.1532–ஆம் ஆண்டில் தோற்கடித்தார்.

இத்தருணத்தில்தான் இசுபானியர் இப்பகுதியை வென்றனர். பிரான்சிசுகோ பிசாரோ (Francisco Pizarro) என்னும் ஆய்வுப் பயணி அதவால்பாவைத் தோற்கடித்தார். அவரைச் சிறைப்படுத்தினார். பெருந்தொகையைப் பிணயப்பணமாகப் பெற்ற பின்னரும் இசுபானியர்கள் அவரைக் கொன்றார்கள். பிணயப் பணமாக ஓர் அறை நிறைய பொன்னையும் அதைப்போல் இருமடங்கு வெள்ளியையும் பெற்றார்கள். உவாசுகரும் கொல்லப்பட்டார். அதவால்பாவுக்குப்பின் உரிய தலைவர் இன்மையால் இன்கா பேரரசை இசுபானியர் கைப்பற்றிக் கொண்டனர்.

இன்கா நாகரிகச் சின்னங்களை இன்றும் காணலாம். இசுபானியர்கள் அந்நாகரிகத்தைப் பூண்டோடு அழிக்க முயன்றும் முழு வெற்றி பெறவில்லை. இன்றும் பெரு நாட்டு மலைப்பகுதிகளிலும் வேறு சில தென் அமெரிக்க நாடுகளிலும் இன்கா மக்களின் பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன.

இன்கா மக்கள் நேர்மையான ஆட்சியாளர்கள்; எனினும் கடுமையானவர்கள். அவர்கள் தலையில் இலந்து (Llantu) என்னும் வண்ணத் தொப்பியை அணிந்திருந்தனர். சோம்பலும் பொய்யும் தண்டனைக்குரிய குற்றங்கள் எனக் கொண்டனர். மக்களுக்குத் தனிச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அங்கு வேலையில்லாத் திண்டாட்டமே இல்லை. நோய்வாய்ப்பட்டோர், ஏழைஎளியோர், முதியோர் ஆகியோர் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்கள் சிறந்த உழவர்கள். அவர்கள் கட்டிய கோயில்களுள் ஒன்று சூரியன் கோயில்; இதனைக் கூசுக்கோவில் அவர்கள் கட்டினார்கள். அதன் சுவர்கள் பொன் தகடுகளால் வேயப்பட்டன. இன்கா வழிவந்தோரை இன்றும் ஆண்டிசு மலையுச்சிகளில் காணலாம். அவர்களின் பழக்கவழக்கங்களும் சிறிதும் மாறவில்லை. ஏ.சு.

**இன்கார்டன், உரோமன்** போலந்து நாட்டு இயற்காட்சியாளர். இவர் கிரேகோ (Cracow) என்ற இடத்தில் கி.பி.1893-ஆம் ஆண்டு பிறந்தார். இலோவி (Lovy), காட்டின்சென் (Gottingean), பிரெய்பர்கு (Freiburg) ஆகிய இடங்களில் கல்வி பயின்று, சிறிது காலம் போலந்து நாட்டில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் அசுரல் (Heasserl) என்பவரின் இயற்காட்சிப் (Phenomenology) பள்ளி உறுப்பினராக இருந்து, அறிவு ஆராய்ச்சியியல் (Epistemology), உள்ளதன் இயல் (Ontological), அழகியல் சிக்கல்கள்(Aesthetic Problems) ஆகியவற்றைப் பற்றி ஆராய்ந்துள்ளார்.

இவர் ஓர் எழுத்தாளர். போலந்து, செருமன ஆகிய இரு மொழிகளிலும் பல நூல்கள் எழுதினார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை கருத்து முதற்கொள்கை (Idealism), உண்மைக் கொள்கை (Realism) ஆகியவையாகும்.

இவரது தத்துவம் அழகியல் (Aesthetics), உள்ளதன் இயல் (Ontology) ஆகியவை பற்றியது. இவர் அசுரலின் மொழிப் பகுப்பாய்வின் முடிவுகளையும் இயற்காட்சி முறையின் அமைப்பையும் ஏற்றுக் கொண்டு, கடந்த நிலைக் கருத்து முதற் கொள்கையை (Transcendental Idealism) மறுக்கிறார். இயற்காட்சிமுறை உண்மைக் கொள்கைக்கு(Realism) எவ்வாறு நடத்திச் செல்கிறது என்பதை இவர் விளக்கியுள்ளார்.

**இன்கிராம் சான் கெல்சு (கி.பி.1824-1907)** அயர்லாந்து பொருளியல் வல்லுநர்களுள் தலையான இடம்பெற்றவர். இவர் ஆங்கில வரலாற்றுப் பள்ளியில் (British Historical School) சிறப்பிடம் பெற்றிருந்தார். இவருடைய படைப்புகளுள் 1878-இல் வெளியான 'இப்போதைய அரசியல் பொருளியலின் நிலைமையும் வளமையும்' (The Present Position & Prospects of Political Economy) என்ற நூலும் 'அரசியல் பொருளியலின் வரலாறு' (A History of Political Economy) என்ற நூலும் புகழ்பெற்றவை. அரசியல் பொருளியலின் வரலாறு வரையறுக்கப்பட்ட சிறப்பு நூலாகக் கருதப்பட்டுப் பல பதிப்புகள் வெளியாயின. இவர் காலத்திற்குப் பின்பும் 1915-ஆம் ஆண்டில் வில்லியம் எ. இசுகாட் (William A. Scott) என்பவரின் முன்னுரையுடன் புதிய பதிப்பு வெளியாயிற்று.

'இப்போதைய அரசியல் பொருளியலின் நிலைமையும் வளமையும்' என்ற நூல் ஆங்கில அறிவியல் வளர்ச்சிக் கழக மாணவர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அக்காலப் பொருளியல் கோட்பாடுகளுக்கு எதிரான இன்கிராமின் (Ingram John Kells) அறிவியல் கருத்துகள் இந்நூலின் வாயிலாக வெளிவந்தன. அவை இன்றும் முடிவு காணாத 'அறிவியல் என்றால் என்ன?' 'பொருளியல் அறிவியலைச் சார்ந்ததா?' என்ற ஆய்வுகளுக்கு மூலக் கருத்துகளை வழங்கியுள்ளன.

**இன்சினிரோசு, சோசு (கி.பி.1877-1925)** அர்செண்டினா நாட்டிலுள்ள பியோனோசு எரியசில் (Buenos Aries) கி.பி.1877-இல் பிறந்தார். இவர் மருத்துவம், உளவியல், மதிப்பீட்டியல், புலன் கடந்த மெய்ப் பொருளியல் (Meta Physics) போன்ற துறைகளில் பயின்று தேர்ச்சி பெற்றார். இவர் சிறந்த

இயற்கைக் கோட்பாட்டாளர் (Naturalist); உறுதிக் கோட்பாட்டாளர் (Determinist); புரட்சிக் கருத்துடையவர்.

இன்சினிரோசு, சோசு(Ingenieros, Josh)சில காலம் செருமனியிலும் சுவிட்சர்லாந்திலும் வாழ்ந்தார். இவர் மருத்துவம், தத்துவம் ஆகிய இருதுறைகளிலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். எனினும் இவர்தம் தத்துவக் கருத்துகளே இவரை உலகறியச் செய்தன. இவர் தத்துவத்தில், குறிப்பாகப் புலன்கடந்த மெய்ப்பொருளியற் கோட்பாட்டில் ஆழ்ந்த கவனம் செலுத்தி, அதன் உட்பொருளை அறிய முயன்றார்.

மனித அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட கடவுள், ஆன்மா, இறவாப் பெருவாழ்வு போல்வன பற்றி விளக்குவதே புலன்கடந்த மெய்ப்பொருளியல். மனித அறிவும் ஆற்றலும் வரையறைக்குட்பட்டவை என்றும் கடவுள், ஆன்மா போல்வன வரையறைக் குட்படாதவை என்றும் இது விளக்குகிறது. கடவுள், ஆன்மா போல்வன மனித அறிவிற்கும் சோதனைக்கும் அப்பாற்பட்டவை எனக் கூறப்படுகின்றமையால், அவற்றைப் பொருளற்றவை எனக் கொண்டு சோசு மறுக்கிறார். இம்மெய்ப் பொருளியல் மூடநம்பிக்கையற்றது; ஆய்வுக்கு அடிப்படையானது; குறைவில்லாதது; சார்பற்றது; இது நிலையில்லா மாயக் கருத்துகள் உடையது; இக்கருத்துகள் மனித வாழ்க்கையை நன்கு நெறிப்படுத்த உதவுகின்றன என்பது இவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை.

கடந்த உயிரியல் (Meta Biology), கடந்த உளவியல் (Meta Psychology), கடந்த பிரபஞ்சவியல் (Meta Cosmology) ஆகியவற்றோடு புலன்கடந்த மெய்ப்பொருளியலை ஒப்பிட்டும் உறழ்ந்தும் ஆய்ந்து புகழ்பெற்ற இவ்வறிஞர் 1925-ஆம் ஆண்டு காலமானார்.

**இன்சுகேப்புப் பாறை** என்பது இசுகாட்லாந்து கடற்கரையையொட்டி வடகடலில் உள்ள கடற்கரைப் பாறைத் தொடராகும். தாய் கடற்கழியிலிருந்து (Firth of Tay) இதன் நுழைவாயில் 26 கி.மீ. தொலைவிலுள்ளது. இசுகாட்டிய மரபுவழிக் கதையொன்றின்படி, இப்பாறையின் அருகே வருகிறவர்களை எச்சரிக்க மிதவை மணியொன்றைத் துறவியொருவர் வைத்துச் சென்றார். கடற்கொள்ளைக்காரன் ஒருவன் அம்மணியைத் துண்டித்துவிட்டான். பின்னர் அவனுடைய கப்பலே இப்பாறையின்மீது மோதி மூழ்கிவிட்டது. இதைத்தான் இன்சுகேப்புப் பாறை (Inchcape Rock) என்பர். இப்பாறையைப் பற்றி கி.பி.1774 முதல் 1843 வரை வாழ்ந்த இராபர்ட்டு சதே (Robert Southey) என்னும் ஆங்கிலக் கவிஞர் நாட்டுப்புறப் பாடலாக (Ballad) 'இன்சுகேப்புப் பாறை' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். இன்சுகேப்புப்பாறையினை மணிப்பாறை (Bell Rock) என்றும்கூறுவர்.

**இன்சுபர்க்கு** தென்மேற்கு ஆசுத்திரியாவிலுள்ள தைரோல் என்னும் மாநிலத்தின் தலைநகரம். இந் நகரம் இன் (Inn) என்னும் ஆற்றங்கரை நகரம். கோடைக்காலத்திற்கும் குளிர்காலத்திற்கும் உகந்த வாசத்தலம். இங்குப் பல தொழிற்சாலைகள், வாணிகத் தலங்கள் உள்ளன. பருத்தி ஆடைகள், உலோகப் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், அச்சுப் பொருள்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கிழக்கு ஆல்ப்சு மலைத் தொடரின் பகுதியாகப் பலரின் கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ள இன்சுபர்க்கு, ஆல்ப்சு மலைப்பகுதிகளின் சீரிய வாணிகத் தலமாகிச் சிறப்புப் பெற்றது. இது அரணால் சூழப்பெற்ற நகரமாக கி.பி. 1180-ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றது. நகருக்கான உரிமைகளை கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நகரம் பெற்றது. கி.பி. 1809-ஆம் ஆண்டில் தைரோலியக் (Tyrol) குடியானவர்கள் பிரெஞ்சுப் படைகளையும், பவேரியப் படைகளையும் இன்சுபர்க்கு நகருக்கருகில் எதிர்த்து நின்று வீரமாகப் போர் புரிந்தனர். நகருக்குள் இருக்கும் நினைவுச் சின்னமொன்று இந்நிகழ்ச்சியை நினைவு கூர்கிறது. ஆப்கிர்ச்சு (Hofkirche) என்னும் பிரான்சிசுத் திருச்சபை கி.பி. 1553-63-ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது. இங்குப் பேரரசர் முதலாம் மாக்சிமிலியன் என்பாருக்குப் பெரும் நினைவுச் சின்னமொன்று உள்ளது. முதலாம் மாக்சிமிலியன் பெரும்பாலும் இன்சுபர்க்கிலேயே வாழ்ந்தவர். பர்சுடென் பர்க்கு என்னும் கோட்டையும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுதான். இந்நகரத்தில் பல அருங்காட்சியகங்களும் தாவர இயல் தோட்டமும் அமைக்கப் பட்டுள்ளன. இத் தோட்டத்தில் ஆல்ப்சு மலையைச் சார்ந்த செடிகொடிகள் மிகப்பெரிய அளவில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. குளிர்கால ஒலிம்பிக்கு விளையாட்டுப் போட்டிகள் 1964-இலும் 1976-இலும் இன்சுபர்க்கில் நடைபெற்றன. இன்சுபர்க்கின் மக்கள் தொகை 1,16,100 ஆகும் (1981).

**இன்சுலின் மயக்க மருத்துவம்** என்பது உளப்பிணிகளைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த முறைகளுள் ஒன்றாகும். இக்காலத்தில் மின் அதிர்ச்சி மருத்துவம், மின் மூளை கிளர் மருத்துவம், வலிப்பு மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. மின் வலிப்பு மருத்துவம் (Electro Convulsive Theraphy)

கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் இன்சுலின் மயக்க மருத்துவம் (Insulin Coma Therapy) பயன்படுத்தப் பட்டது. இது இன்சுலின் அதிர்ச்சி மருத்துவம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இம்மருத்துவ முறையை 1930 -ஆம் ஆண்டு சாகெல் (Sakel) என்னும் போலந்து நாட்டு உள மருத்துவர் கண்டுபிடித்தார். இவர் உளப்பிணியாளர்களின் மைய நரம்பு மண்டலத்தில் மிகுதியான மாங்காய்ச் சுரப்பிநீர் (Adrenal) காணப் படுவதால் அவர்களிடம் நடத்தை மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்று கருதினார்.

மார்பைன் போதைப் பழக்கத்திற்கு அடிமை யானவர்கள் அப்பழக்கத்தை நிறுத்தும் பொழுது அவர்களிடம் தோன்றும் மிகைச்செயல் நோயை இன்சுலின் மருந்தை மிகுதியாகக் கொடுத்துக் குணப் படுத்தலாம் என்று சாகேல் கருதினார். கிளர் நிலையில் (Agitated) இருக்கும் உளச்சிதைவு நோயாளி களையும் இன்சுலின் மருத்துவத்தின் மூலம் குணப் படுத்தலாம் என்று சாகேல் கூறினார். மூளை பழச் சர்க்கரை உற்பத்திப் பொருள்களை மெதுவாக உயிர கத்துடன் (Oxidise) இணைவுறச் செய்கிறது. புரதம் கொழுப்புப் பொருள்களை விரைவில் உயிரகத்துடன் இணைவுறச் செய்கிறது. குருதியில் இன்சுலின் மிகுதி யானால் சர்க்கரைப்பொருள் குறைகிறது. மூளையில் இயல்பு நிலைக்குக் கீழாக (Hypoglycemia) குருதிச் சர்க்கரையின் மட்டம் வருகின்றது. இதனால் நோயாளி மயக்க நிலையை அடைகிறான். மூளையின் திசுக்களுக்கு உயிரகம் (Oxygen) கிடைப்பதில்லை. இதன் விளைவாக மூளையில் உயிர்ப்பொருள் ஆக்கத் திறன் (Metabolic Process) குறைகிறது.

நோயாளியின் உடலில் ஒவ்வொரு நாளும் 15 -இலிருந்து 25 அலகு வரையில் தசைவழி மருந்தேற்றப் படும் (Intra muscular Injection). அவருக்கு மயக்க நிலை வாராவிட்டால் தொடர்ந்து மருந்தேற்றப் படும். மயக்க நிலை விரைவில் வந்துவிட்டால் மருந்தின் அளவு குறைக்கப்பட்டு நிறுத்தப்படும். மயக்க நிலையில் நோயாளி அதிக அளவு 50 மணி நேரம் வரையில் இருக்கலாம். அவரை அந்நிலையி லிருந்து நனவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு பழச் சர்க்கரை உற்பத்திப் பொருள்கள் அவருக்குக் குடிப் பதற்கோ ஊசி மூலமாகவோ கொடுக்கப்படுகிறது. இம்முறையில் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் இரத்தச் சர்க்கரைக்குறைவு மாறுகிறது. பழச்சர்க்கரைப் பொருள் உணவு சில நாள்கள் தொடர்ந்து கொடுப் பதனால் அவருக்கு ஏற்படக் கூடிய வைட்டமின் உயிர்ச்சத்து பி, சி ஆகியவையும் கொடுக்கப்படு கின்றன. இன்சுலின் மயக்க மருத்துவமுறை இதய நோய், சிறுநீரகநோய், சர்க்கரை நோய், நாளமிலாச் சுரப்பி நோய் (Endocrinal Disorders), மண்டை யோட்டுக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட 16 வயதுக் குட்பட்டவர், 45 வயதுக்கு மேற்பட்டவர் ஆகியவர் களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகும். இம் முறையைத் திறமைமிக்க மருத்துவரே பயன்படுத்த முடியும். பொதுவாக இன்சுலின் மயக்கமருத்துவ முறை மிகுந்த ஆபத்தானது. இம்மருத்துவ முறை யினால் நோயாளியின் உடல்நிலை பெருமளவு பாதிக்கப்படுகிறது. மயக்க நிலையில் வலிப்பு வந்த பொழுது பல நோயாளிகள் இறந்து விட்டனர். இந்த ஆபத்தைக் தடுக்க மெட்ரசால் (Metrazol) என்னும் மருந்தைப் பயன்படுத்தினர். ஆயினும் வலிப்பு வருவது குறையவில்லை. ஆதலின் இன்சுலின் மயக்க மருத்துவம் பல ஆண்டுகளுக்கு முன்னரே கைவிடப்பட்டுவிட்டது. இதற்கு மாறாக மின் மூளை வலிப்பு மருத்துவ முறை (ECT) பயன்படுத்தப்படு கிறது. மேலும், அதிர்ச்சி மருத்துவ முறைகளினால் உள நோய் குணமடையப் பெற்றவரைக் காட்டிலும், மற்ற மருத்துவ முறைகளினால் உளநோய் குண மடையப் பெற்றவர் நீண்டகாலம் நோயின் மறு தாக்குதல் (Relapse) இன்றி இருக்கின்றனர் என்பது உள மருத்துவ ஆய்வுகளின் மூலம் தெரியவருகிறது.

என். மா.

**இன்பகவிப் புலவர்** கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணப்பாடு என்னும் ஊரினர்; மீனவர் வகுப்பைச் சேர்ந்தவர். தந்தை பெயர் தாமசு என்றிலேயோன். இவர் இயற்பெயர் சவியார் என்றிலேயோன். இவர் தம் இளம் பருவத்திலேயே தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து விரைந்து செய்யுள் இயற்றும் திறம் பெற்றார். இவர்தம் செய்யுட்கள் கேட்பவர்களை யும் படிப்பவர்களையும் இன்பமுறச் செய்தன. அத னால் இயற்பெயர் மறைய, இன்பகவி என்னும் காரணப்பெயரால் அழைக்கப் பெற்றார். இவருக்குச் சிங்கராய பரத பண்டிதக் கவிராயர் என்னும் வேறு பெயரும் உண்டு. இவர் எண்வகை நினைவாற்றல் கலையில் சிறந்தவராகத் திகழ்ந்தார். அதனால், இவரை அட்டாவதானி என்றும் அழைப்பர். சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்த இவர், செல்வர்களைப் பாடிப் பரிசுபெறும் வாழ்க்கையை மேற்கொண்டார். இவரைத் தூத்துக்குடி மீனவர் தலைவன் தொன் கபிரியேல் வாசுகோமேசு அன்பு காட்டி ஆதரித் தான். இவர் இலங்கை முதலிய பலவிடங்களுக்கும் சென்று செல்வர்களைப் பாடிச் செல்வமும் புகழும் பெற்றார்.

ஒரு சமயம் எட்டையபுரத்திலுள்ள பெருநிலக் கிழார் ஒருவரைக் காணச் சென்றபொழுது அவரும்

அவர்தம் தலைமைக் கணக்காயரும் மற்றவரும் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். ஆனால், இவர் மட்டும் இருக்கையில்லாமல் நிற்க வேண்டியதாயிற்று. அவ்வேளை பெருநிலக்கிழாரைப் பார்த்து, 'கங்கை குலத்தில் உதித்த' என்று தொடங்கி 'இன்ப கவிக் கெங்கே இடம்' என்று முடியும் ஒரு வெண்பாவி னைப் பாடினார். இதனைக் கேட்டு மகிழ்ந்த பெரு நிலக்கிழார் இவருக்கு இருக்கை கொடுத்துப் பரிசும் அளித்தார். பிறகு, தஞ்சாவூர் சென்று சரபோசி மன்னரைக் கண்டார். அவர் அவையிற் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் செய்யுளாகவே விடையளித்தார். இதனைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் இவருக்குப் பரிசு கொடுத்துச் சிறப்பித்தார். இவர் காலப்போக்கில் குடிப்பழக்கத்திற்கு ஆளானார். ஆனால், இவர் குடித் திருக்கும்பொழுதும் நன்றாகப் பாடும் திறன் பெற்றி ருந்தார். யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பர் வீட்டிற்குச் சென்று தங்கியபோது நன்கு குடித்து மகிழ்ச்சியாக இருந்தார். அப்போது அங்கு வந்த அறிஞர் ஒருவர் குடிபோதையிலும் இவர் பாடும் திறமையை அறிய விரும்பி 'மை' என்று தொடங்கி 'மயிர்' என்று முடியுமாறு ஒரு பாடல் பாடும்படி கேட்டுக் கொண் டார். உடனே இவர் 'மையினமோ' என்று தொடங்கி 'இவள் கொண்டை மயிர்' என்று முடித்து ஒரு வெண்பாப் பாடினார். இதனைக் கண்டு அங்கி ருந்த பலரும் வியப்புற்றனர். யாழ்ப்பாணத்து நல் லூர்க் கந்தசாமி கோயிலில் நடககும் விழாவிற்குச் சென்ற இவர், அங்கு முருகப் பெருமான் அலங்கரிக் கப்பட்டு மயிலூர்தியின் மேல் விளங்கிய காட்சி கண்டு மகிழ்ந்து, 'மயில் வாகனங் கொண்டாண்டி, நல்லூர்க் கந்தசாமி மயில் வாகனங் கொண்டாண்டி' என்னும் இசைப் பாடலைப் பாடினார். பாடலைப் பாடி முடித்தபிறகு, கிறித்தவராகிய நாம் இந்துக் கடவுளைப் பாடினோமோ என்று உளம் வருந்தி னார் என்பது கூறப்படுகிறது. இவர் பிலிப்பு ரேட் ரிகோ முத்துக் கிருட்டிணர் மீது குறவஞ்சியும், தூத் துக்குடி பணியமாதா பேரில் பதிகமும் பாடியுள் ளார். இவற்றுள், பதிகம் அன்னை மரியின் புகழி னைப் பாடுவதாக அமைந்துள்ளது. இவர் ஏசுநாதர் மீது இசைப்பா ஒன்றும் கிறித்தவச் சமயத்தைப் பற் றிச் சில நூல்களும் எழுதியுள்ளார்.

**இன்ப துன்பச் சம நோக்காளர்** கிரேக்க நாட்டின் முற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள் ளனர். இவர்கள் கூர்மையான அறிவு, சுருங்கக்கூறி விளங்க வைக்கும் சொல்லாற்றல், சமுதாயத்தில் படிந்திருந்த இன்னல்களையும் மூடப்பழக்க வழக்கங் களையும் ஊடுருவிப் பற்றி, அவற்றைச் சுட்டிக்காட் டும் வாதத் திறமை போன்ற இயல்புகளினால் கிரேக்க மக்களைத் தம்பால் ஈர்த்து, சமுதாய அர சியல் அமைப்புகளில் புரட்சி (கி.மு. 500) உருவாகத் தூண்டுகோலாக விளங்கினர். இன்ப துன்பச் சம நோக்காளர் (Stoics) ஏதென்சு நகரில் அமைந்த குடி யரசு அமைப்பில் முனைந்து ஈடுபட்டனர்.

கிரேக்க நாட்டில் அமைதியற்ற அரசியலும் பகுத்தறிவிற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களும் மண்டியிருந்த காலகட்டத்தில் இன்ப துன்பச் சம நோக்குக் கோட்பாடு தோன்றிச் செல்வாக்குற்றது. இக்கோட்பாட்டு அறிஞர்கள் எதையும் ஆழ்ந்து ஆராய்ந்த பின்னரே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும், இவ்வாராய்ச்சிக்குப் பொருள்களை விரிவாக அறியத் தூண்டவல்ல ஐயக்கொள்கை (Scepticism) இன்றியமையாதது என்றும் வலியுறுத்தினர். இவர் கள் தனிமனிதனின் தகுதியையும் உரிமையையும் மிகைப்படுத்தி, அவனுக்குத் தன்னம்பிக்கையை ஊக் கும் வகையில் மனித அறிவுக்கு அப்பாற்பட்டது யாதும் இல்லை என்றனர். மனிதனின் பிறப்பு, இறப்புப் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளில் சடங்குகள் புகுத்துதலைக் கண்டித்தனர். மனிதனின் பகுத்தறிவே முதன்மையானது; அறவியல் என்பது ஒவ்வோர் ஆடவராலும் பெண்டிராலும் கடைப்பிடிக்க இயலும் நடத்தையே; மனிதன் நல்லவனாகவும் தீயவனாக வும் ஒழுகுவது அரசாட்சியின் இயல்பைப் பொறுத் தது; எனவே, அரசாட்சியின் வலிமைக்கேற்பவே சமுதாய அமைப்புகளும் வலிமையுடன் விளங்கும் என்று இவர்கள் எடுத்துரைத்தனர்.

இன்ப துன்பச் சம நோக்காளரின் எழுச்சியால் கருத்து முதற்கொள்கை (Idealism) செல்வாக்குக் குன்றியது. மக்களிடையே புதிய அறிவியல் அணுகு முறை மேலோங்கியது. புலன்வழிக் கொள்கை (Empricism), பயன்கருது கொள்கை (Utilitarianism) ஆகியன புத்துணர்ச்சி பெற்றன. மக்கள் விழிப் படைந்து சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இன்ப துன்பச் சமநோக்காளர்களுள் புரோட்டோ கோரசு (Protogorus), கார்கியசு (Gorgias), ஆண்டி கோன் (Antigone), திராசிமாக்கசு(Throycymachues), காலிகிள்சு (Callicles), சாக்கிரட்டீசு (Socrats), பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle) ஆகி யோர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் தம் அறிவா லும் கருத்துகளை எடுத்துரைக்கும் ஆற்றலாலும் உலகப் புகழ் பெற்றனர்.

இக்கோட்பாடு இதனை எடுத்துரைத்தோரிடையே அமைந்துகிடந்த தன்னலமிகுதி, வரம்பற்ற வெற்று வாக்கு வாதம் போன்றவற்றாலும் அதனால் உரு

வான சமுதாயப் பிரிவுகளாலும் நாளடைவில் செல்வாக்கு இழந்தது.

**இன்பநிலைக் கொள்கை** இன்பம்தான் வாழ்வின் குறிக்கோள் என வலியுறுத்துகிறது. இன்பநிலைக் கொள்கை (Hedonism) தன்னல இன்பநிலைக் கொள்கை (Egoistic Hedonism), புதிய இன்பநிலைக் கொள்கை (Modern Hedonism), பயன்பாட்டு இன்பநிலைக் கொள்கை (Utilitarian Hedonism) என மூவகைப்படும். தனது நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் செயலாற்றுவதே இன்பம் எனத் தன்னல இன்பநிலைக் கொள்கை கூறுகிறது. ஆனால், புதிய இன்ப நிலைக் கொள்கை பிறர் நலம் பேணுதலாகிய தொண்டாற்றுவதன் மூலமே உண்மையான உயர்ந்த இன்பத்தைப் பெறுதலியலும் எனக் கூறுகிறது. பயன்பாட்டு இன்பநிலைக் கொள்கையின்படி நற்செயல்களே மிகுதியான இன்பத்தைப் பெரும்பான்மையான மக்களுக்கு அளிக்கவல்லன.

பண்டைக் கிரேக்கத்தில் 'எப்பிகியூரசியம்' (Epicureanism), 'சிரீனிசியம்' (Cyrenaicism) என்னும் இரு வகை இன்பநிலைக் கோட்பாடுகள் வழங்கின. 'எப்பிகியூரசியம்', உடலால் பெறுகிற இன்பத்தினும் மனத்தால் பெறுகிற இன்பமே சிறந்தது எனக் கூறுகிறது. இக்கோட்பாடு இன்பத்திற்குப்பின் துன்பம் உண்டு என்பதன் அடிப்படையில் இன்பத்திற்கு விளக்கம் தருகிறது. ஆனால், சிரீனிசியம் எதிர்விளைவுகளை நோக்காமல் செய்யும் செயலால் பெறும் இன்பமே சாலச் சிறந்தது எனக் கூறுகிறது.

**இன்பியல் இசைநாடகம்** என்பது இசையும் கதையும் உரையாடல் பகுதிகளும் நடனமும் கொண்ட நிகழ்ச்சியைக் குறிக்கும். இது இசைக் கதைகள் (Musicals) என்ற வகையினைச் சேர்ந்ததாகும்; இன்பியல் நாடகத்தினின்று(Comedy) வேறுபட்டதாகும். இன்பியல் இசைநாடகங்கள் (Musical Comedies) அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றின. இவை உலகெங்கிலும் மக்களால் வரவேற்கப்படுகின்றன.

இன்பியல் இசைநாடகங்களின் முன்னோடியாகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சான் கே (John Gay) என்பவரால் எழுதப்பட்ட 'இரப்போனின் இசைநாடகம்' (The Beggar's Opera) என்னும் இசை நாடகத்தைக் குறிப்பிடலாம். ஐரோப்பாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மெல்லிசைப் பகுதிகளையும் நகைச்சுவை உரையாடல்களையும் கொண்ட குறுகிய கால இசை நாடகங்கள் (Operettas) மக்களிடையே வரவேற்புப் பெற்று வந்தன. இவற்றில் நாட்டுப பாடல்களும் இடம் பெற்றன. இக்காலத்தில் இன்பியல் இசை நாடகங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயற்றப்பட்ட நையாண்டிக் கதைகளைக் கொண்டவையாகவும் சமூக அடிப்படையில் அமைந்த கதைகளைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. சில இசை நாடகங்கள் ஐரோப்பிய நாடோடி மக்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளன. இவற்றில் உள்ள நாடோடி இசையும் நகைச்சுவை நிறைந்த உரையாடல்களும் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இவை நாடோடி இசைநாடகங்கள்(Gypsy Operas)என்று குறிப்பிடப்படுகின்றன.

புகழ்பெற்ற மேடை இசை நாடகங்கள் திரைப் படங்களாக எடுக்கப்பட்டன. இத்தகைய இசை நாடகங்கள் இன்பியல் இசைக் கதைகள் (Musical Comedies) அல்லது இசைக்கதைகள் (Musicals) என்று குறிப்பிடப்படுகின்றன. 'மன்னனும் நானும்' (The King & I),'என் இனிய மங்கை'(My Fair Lady) ஆகிய இசைக்கதைகள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டன. இவற்றைக் காட்டிலும் புகழ்பெற்ற இன்பியல் இசைக்கதையாக 'இசையின் ஒலி'(The Sound of Music) என்னும் திரைப்படத்தைக் குறிப்பிடலாம். இத்திரைப்படம் 1963-ஆம் ஆண்டு எடுக்கப்பட்டுப்பெரும்பாலான நாடுகளில் திரையிடப்பட்டு ஏறக்குறைய 20 கோடி மக்களால் கண்டுகளித்துப் புகழப்பட்டதாகும். இத்திரைப்படக் கதை இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் வியன்னா நகரத்தில வாழ்ந்து வந்த ஆசுத்திரியா நாட்டின் படைத்தலைவர் ஒருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் உண்மைக் கதையாகும். செருமானியப் படைகள் வியன்னாவைச் சூழ்ந்து கொண்ட பொழுது, அப்படைத்தலைவரும் அவருடைய குடும்பத்தினரும் ஐரோப்பாவை விட்டுத் தப்பியோடி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர். அங்கு அப்படைத்தலைவர் 1954-ஆம் ஆண்டு வரையில் 'குடும்ப இசைக்குழு' (Family Music Group) என்னும் புதிய முறையில் அமைக்கப்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். பெரியவர்கள் முதல்சிறு குழந்தைகள் வரையில் ஒரு குடும்பத்தினர் அனைவரும் இசை நிகழ்ச்சியில் ஒரே நேரத்தில் பங்கு கொண்டு பாடல்களைப் பாடியும் இசைக்கருவிகளை இசைத்தும் நீண்டநேர இசை நிகழ்ச்சிகளை நடத்துவது 'குடும்ப இசைக்குழு' எனப்படுகிறது. 'இசையின் ஒலி' என்னும் படம் இத்தகைய குடும்ப இசைக்குழு உருவானதை இசை நாடக வடிவில் தருகிறது.

இதனைப்பின்பற்றி 1970-ஆம் ஆண்டுக்குப்பின் 'சனிக்கிழமை இரவு உணர்வு'(Saturday Night Fever)

'அப்பா' (Abba) போன்ற இசைக் கதைகள் திரைப் படங்களாக வெளிவந்து, மக்களால் பெருமளவில் வரவேற்கப்படுகின்றன. இளந்தலைமுறையினரையும் அவர்களுள் குறிப்பாக இளம் மாணவர்களையும் பெரிதும் கவர்ந்த இன்பியல் இசைக் கதையாகக் கிரீசு (Grease) என்னும் படத்தைக் குறிப்பிடலாம். இப்படத்தில் பள்ளி மாணவமாணவியரின் ஆரவாரம் மிக்க இறுதியாண்டு வாழ்க்கை ஆடல் பாடல்களுடன் சித்திரிக்கப்படுகிறது.

இன்பியல் இசைக்கதைகளில் இருபதுக்கு மேற் பட்ட பாடல்கள் இடம் பெறுகின்றன. இசை அமைப் பாளர் புதிய இசையமைப்பினைப் பாடல்களுக்குக் கொடுக்கின்றனர். சில படங்களில் புகழ்பெற்ற இய லிசைப் புலவர்களின் இசையும் இடம்பெறுகிறது. இக்கால நடனங்களுள் விரைவு நடனங்கள் பெரும் பாலும் இடம் பெறுகின்றன. மேடை நாடகங்களாக இவை நிகழ்த்தப்படும்பொழுது, பல மாதங்கள் ஒரே அரங்கில் தொடர்ந்து நிகழ்த்தப்படுகின்றன. புகழ்பெற்ற இன்பியல் இசைக்கதைகள் நியூயார்க்கு நகரத்திலுள்ள பிராட்வே என்னும் அரங்கில் நடை பெறுகின்றன. நாளேடுகளும் தொலைக்காட்சியும் இந்த நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து திறனாய்வு செய்து விட்டால் இந்த நிகழ்ச்சிகள் பல மாதங்கள் வரை தொடர்ந்து நடைபெறும்.

**இன்மை அறிவு**: இன்மை அறிவு வடமொழி யில் 'அனுபலப்தி' என வழங்கப்படுகிறது. இதனை ஆறாம் பிரமாணமாகக் கருதுகின்றனர். பிரமாணம் என்பதற்கு ஏற்புடைய அறிவு அல்லது ஒரு பொரு ளைப் பற்றிய உண்மையான அறிவு என்பது பொருள். பிரமாணங்களைப் பத்து வகையாகப் பிரித்துள்ளனர். ஆனால், ஒவ்வொரு பிரமாணம் பற்றிய கருத்தையும் சில தத்துவப் பிரிவுகள் ஏற் றுக் கொள்கின்றன; சில தத்துவப் பிரிவுகள் அப்பிர மாணம் கூறும் அறிவு சரியானதென்று ஏற்றுக் கொள்வதில்லை.

இங்குப் பத்துப் பிரமாணங்களும் அவற்றின் பொருளும் அப்பிரமாணத்தின் கருத்தை ஏற்றுக் கொண்ட தத்துவப் பிரிவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. இன்மை அறிவு (Non-Cognition) என்பதைக் குமா ரிலபட்டர் அறிவு ஆராய்ச்சியியலில் எவ்வாறுவிளக்கு கிறார் என்பதை ஓர் எடுத்துக்காட்டின் வாயி லாகக் கூறலாம்.'இங்கே பானை இல்லை' என்பதில் 'இன்மை'பார்க்கப்படுவதன்று. ஆகையினால், காட்சிப் பொருள்களுக்குப் பதிலாக அனுபலப்தியைப் பிர மாணமாகக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, பானை இருக்கும்போது அதனைக் காண்பதைப் போல, அது இல்லை என்பதைப் பார்த்தறிவதேயா தலின், அதனைக் காட்சியளவையில் வைத்து ஏற் புடைய அறிவாக ஏற்றுக்கொள்ளலாம் என்று இந் தியத் தத்துவ அறிவு ஆராய்ச்சியியலில்குறிப்பிடுகின் றார்.

**இன்லாந்துக் கடல்** பசிபிக்குப் பெருங்கட லில் கால்வாய் போன்று அமைந்துள்ளது. இதன் நீளம் 9505 கி.மீ. இது தென் சப்பானில் ஆன்சு சிகோகுகியூசுஆகியதீவுகளுக்கிடையில் உள்ளது. இது சப்பான் கடலுடன் குறுகிய கால்வாய் ஒன்றின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ஆழம் குறைந்த இக் கடலில் 950 தீவுகளுக்குமேல் படத்தில் புள்ளி வைத் தாற்போல் உள்ளன. இன்லாந்துக் கடலின் (Inland

| | | |
|---|---|---|
| 1. பிரத்தியட்சம் | — (காட்சி) | — உலகாயதர் |
| 2. அனுமானம் | — (கருதல்) | — பௌத்தர்,வைசேடிகர் |
| 3. சப்தம் | — (உரை) | — சாங்கியர் |
| 4. உவமானம் | — (ஒப்பு) | — நையாயிகர் |
| 5. அருத்தாபத்தி | — (பொருள்) | — பிரபாகரர் |
| 6. அனுபலப்தி | — (இன்மை) | — குமாரிலபட்டர் |
| 7. பாரிசேடம் | — (ஒழிபு) | |
| 8. சம்பவம் | — (உண்மை) | |
| 9. ஐதிகம் | — (மரபுவழிப் செய்தி) | — பௌராணிகர் |
| 10. சுபாவலிங்கம் | — (இயல்பு) | |

Sea) கடற்கரைகளில் மக்கள் தொகை மிகுதி. இதுவே சப்பானின் தொழிற்சாலைகள் மிகுந்த வட்டமாகும். இன்லாந்துக் கடல் இயற்கை எழிலுடன் புகழ்பெற்று விளங்குகிறது.

## இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்

இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டு, 1955-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் தேதியில் செயல் முறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இச் சட்டம் செல்லத் தக்கது.

இன்றியமையாப் பண்டங்களை வழங்குவதைச் சீரான நிலையில் வைத்திருப்பதற்கு அல்லது அதிகரிப்பதற்கு அல்லது நியாயமான விலையில் பங்கீடு செய்வதற்கு அல்லது இந்தியாவின் தற்காப்புக்கும் சிறப்பான முறையில் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கும் அப்பண்டங்களைச் சேகரிப்பதற்கு, இந்தியக் குடியரசு விரும்பினால் உகந்த வகையில் ஆணைகள் பிறப்பிக்கலாம்.

இச்சட்டப்பிரிவு 3, உட்பிரிவு (1), 1. இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்கு உரிமம்,அனுமதிச்சீட்டு அல்லது அவைபோன்றவற்றை அளித்தல், 2. உணவுப் பொருள்உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தரிசாக இருக்கும் அல்லது வேளாண்மை செய்யத்தக்க நிலத்தை வேளாண்மை செய்ய ஏற்பாடு செய்தல், 3. இன்றியமையாப் பண்டங்களை விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் ஆன விலையைக்கட்டுப்படுத்துதல், 4. விற்பனைக்குக் கொண்டுவராமல் பதுக்கும் செயலைத் தடுத்தல், 5. இன்றியமையாப் பண்டங்களைக் குவித்து வைப்போர், உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர், வாங்குவோர் ஆகியோரிடமிருந்து முழுமையாகவோ பகுதியாகவோ மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது அந்த அரசுகளின் பேராளர் அல்லது அந்த அரசுகளால் நடத்தப்படும் கடிதங்களுக்கு அல்லது அந்த அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கழகங்களுக்கு விற்பனை செய்ய வைத்தல், 6. பொது மக்களின் நலனைப் பாதிக்கக் கூடிய முறையில் உணவுப் பொருள்கள் அல்லது பருத்தித் துணிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வாணிகம் அல்லது தொழில் முறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல், 7. மேற்கூறிய காரியங்களைத் தடைசெய்யும் அல்லது ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடன் தகவல் அல்லது புள்ளிவிவரம் சேகரித்தல், 8. இன்றியமையாப் பண்டங்களை உற்பத்தி செய்தல், மக்களுக்கு வழங்குதல், பங்கீடு செய்தல், வாணிகஞ் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களைக் கணக்கு வைத்திருக்கச் செய்தல், தேவைப்பட்ட தகவல் கொடுக்க வைத்தல், 9. உரிமம், அனுமதி வழங்குவதற்குக் கட்டணம் வசூலித்தல், மேலும் உரிமம், அனுமதி ஆகியவற்றில் அடங்கியுள்ள நிபந்தனைகளை நன்கு கடைப்பிடிக்கச் செய்வதற்காகப் பிணையப் பணம் வசூல் செய்தல், 10. மேற்கூறிய செய்கைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளை மீறும் செய்கைகளைக் கண்டு பிடிப்பதற்காகச் சோதனை நடத்துவதற்கும், அவ்வாறான அத்துமீறிய செய்கைகளில் தொடர்புடைய இன்றியமையாப் பண்டங்கள், அவற்றை எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் வாகனங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தற்கும் கைப்பற்றுதற்கும் அதிகாரம் வழங்குதல்.

மேற்கூறியவாறு இச்சட்டத்தின் 3-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள ஆணைகளைப் பிறப்பிக்க மத்திய அரசு தன் அதிகாரிகளுக்கும், மாநில அரசுகளுக்கும், மாநில அரசின் அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கலாம். இவ்வாறு மத்திய அரசால் அளிக்கப்படும் அதிகாரத்தின் அடிப்படையில்தான் நெல்கொள்முதல் செய்தல், நெல்லை ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு எடுத்துச் செல்வதைத் தடை செய்தல், இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் மக்களுக்குப் பங்கீடு செய்தல் ஆகிய காரியங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அரசுகளால் ஆணைகள் (Orders) பிறப்பிக்கப் படுகின்றன.

மேற்கூறிய 3-ஆம் பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகளில் தகவல்மற்றும் புள்ளிவிவரம் சேகரிப்பது, உற்பத்தியாளர், வாணிகம் செய்வோர் ஆகியோரைக் கணக்கு வைத்திருக்கச் செய்வது ஆகிய காரியங்களை நிறைவேற்றுவதற்காகப் பிறப்பிக்கப்படும் ஆணைகளை மீறும் குற்றத்துக்காக ஓராண்டுக் காலம் வரை சிறைத் தண்டனையும், ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். ஏனைய ஆணைகளை மீறும் குற்றத்துக்காக ஏழாண்டுக்காலம் வரை சிறைத் தண்டனையும், ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். மேலும், அச் சிறைத் தண்டனை மூன்று மாதக் காலத்துக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு ஆணைகளை மீறும் குற்றத்தைக் கண்டுபிடிக்கும் போது அக்குற்றத் தொடர்புடைய பண்டங்களையும்,அவற்றை எடுத்துச் செல்லப் பயன்படுத்திய வண்டிகள், விலங்குகள் ஆகியவற்றையும் கைப்பற்றி விசாரணைக்குப் பின் அவற்றைப் பறிமுதல் செய்யவும் இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இன்றியமையாப் பண்டங்கள் பட்டியலில் கீழ்க் காணும் பண்டங்கள் அடங்கியுள்ளன. அவையாவன, 1. கால்நடைத் தீவனம் (இதில் பிண்ணாக்குகள், வேறு செறிவுத் தீனிகள் உள்ளடங்கும்), 2. நிலக்கரி (இதில் கல்கரியும் வேறு வழிப் பொருள்களும் அடங் கும்), 3. பேருந்து வண்டிகளின் உறுப்புகள், துணைக் கருவிகள், 4. பருத்தி, கம்பளித் துணிகள், 5. மருந்துப் பொருள்கள், 6. உணவுப் பண்டங்கள் (இதில் உண்ணத்தக்க எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும் அடங்கும்), 7. இரும்பு, எஃகு ஆகிய வற்றிலிருந்து செய்யப்பட்ட பொருள்கள், 8. காகிதம் (இதில் பத்திரிகைக் காகிதம், காகித அட்டை, வைக்கோல் அட்டை ஆகியவை அடங்கும்,) 9. பெட் ரோலியமும் அதைச் சார்ந்த பொருள்களும், 10. பயன்படுத்தப்படாத பருத்தி (இதில் கொட்டை நீக்கப்பட்டதும் நீக்கப்படாததும் அடங்கும்), 11. பருத்திக்கொட்டை, 12. பண்படுத்தப்படாத சணல், சிமெண்டு ஆகியவையும், இந்திய அரசியலமைப்பு- அட்டவணை ஏழு-பட்டியல் மூன்று-பதிவு 33-இல் நாடாளுமன்றம் சட்டம் இயற்றத்தக்கதாகச் சொல் லப்பட்டுள்ளவை எவையும், மத்திய அரசு அறிவிப் புச் செய்யும் காலத்தில் இன்றியமையாப் பண்டங் களாகக் கருதப்படும்.

**இன்னசெண்ட்டு பதின்மூவர் (போப் பாண்டவர்)**: இயேசு கிறித்துவின் பன்னிரண்டு சீடர்களுள் ஒருவரான பீட்டர் முனிவர் கி.பி. 60 -ஆம் ஆண்டளவில் கிறித்தவச் சமயத்தைப் பரப்புவ தற்காக உரோமாபுரியில் இருந்த நிறுவனத்தை, பிற் காலத்தில் கிறித்தவ உலகம் முழுவதையும் ஆட்சி செய்யப் போப்பின் தலைமைத் திருச்சபையாக மாற்றினார். பீட்டர் முனிவரே அத்திருச்சபையின் முதல் போப்பாவர். போப்பு ஏழாம் கிரிகரியின் (கி.பி. 1073-1085) காலத்திலிருந்துதான் உரோமானி யத் திருச்சபையின் தலைமை மதகுரு போப்பு என்று சொல்லப்படுகிறார். அதற்கு முன்னிருந்தவர்கள் சமய வட்டத் தலைவர் (Bishop) என்றே சொல்லப் பட்டனர். எனினும், பீட்டர் முதல் அனைவருமே போப்புகளாகவே கருதப்படுகின்றனர். ஏனெனில், உரோமாபுரியிலுள்ள திருச்சபையைத் தலைமைத் திருச்சபையாகக் கிறித்தவ உலகம் ஏற்றுக்கொண் டுள்ளது.

**இன்னசெண்ட்டு முதலாம் (ஆ.ஆ.401-417)**: முதலாம் இன்னசெண்ட்டு போப்பு, முதலாம் அனசு டேசியசின் மகன் ஆவார். இவர் காலத்தில் உரோமா புரி விசிகோத்துகளின் தலைவர் அலரிக்கு என்பவ ரால் கி.பி. 408-இல் முற்றுகையிடப்பட்டது. அல ரிக்கு உண்மையிலேயே நல்ல பண்பாளர்; கிறித்தவ சமயத்தைத் தழுவியவர். அவரைச் சார்ந்த விசி கோத்துகளும் கிறித்தவர்களேயாவர். வீரதீரச்செயல் களில் வல்லவராகிய அலரிக்கு உரோமாபுரியிலிருந்த பெருஞ்செல்வத்தைக் கொள்ளையடிக்க உரோமானி யப் பேரரசின்மீது பலமுறை படையெடுத்தார்.

பேரரசர் கொனோரியசு இத்தாலியின் மீது இத்தகைய தாக்குதல்கள் அடிக்கடி நிகழும் எனக் கருதி, தம் தலைநகரத்தை உரோமாபுரியிலிருந்து இத்தாலியின் வடகிழக்கிலுள்ள இராவென்னாவுக்கு மாற்றிவிட்டார். அலரிக்கு கி.பி. 409-ஆம் ஆண்டில் உரோமாபுரியில் முற்றுகையை வலுப்படுத்தினார். இக்காலத்தில் போப்பு உரோமாபுரியில் தங்கியிருக்க வில்லை. பேரரசரான கொனோரியசு பணித்த சம யப்பணி காரணமாகப் போப்பு உரோமாபுரி நகரை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. கொனோரியசு வாளாவிருப்பது கண்டு, பொறுமையிழந்த அலரிக்கு தம் படைகளுக்கு உரோமாபுரியைச் சூறையாடும்படி ஆணையிட்டார். வரலாறு காணாத முறையில் உரோமாபுரி கொள்ளையடிக்கப்பட்டது. தெருக்களில் பிணக்குவியல்கள் நிரம்பின. தங்கம், வெள்ளி, விலை யுயர்ந்த நவரத்தினங்கள், அணிகலன்கள் ஆகியவை மூட்டை மூட்டைகளாகக் கட்டப்பட்டுக் குதிரை களின் மீது எடுத்துச் செல்லப்பட்டன.

மதத் தொடர்பான எல்லா வழக்குகளிலும் போப்பாண்டவர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது என்பதைக் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் மக் கள் யாவரும் உணருமாறு, போப்பு முதலாம் இன்ன செண்ட்டு செய்திருந்தார். பெலேசியசு என்பவரால் கி.பி. 417-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ‘தொல் லைத் தீவினை இல்லை’ என்னும் கோட்பாட்டால் ஏற்பட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டார். கார்த்தேசு நகரில் கூடிய மதகுருமார்கள் அவையில் ஒப்புக் கொள்ளப்பட்ட கிறித்தவச் சமய ஒழுக்க நெறியின் அடிப்படையில் மேற்கூறிய சிக்கல்களுக்குத் தீர்வு கண்டார். இவர் கி.பி. 417-ஆம் ஆண்டில் காலமா னார்.

**இன்னசெண்ட்டு, இரண்டாம் (ஆ.ஆ.1130-1142)** பிறப்பால் இவர் ஓர் உரோமானியர்; திறமையான வர்; தூய வாழ்க்கையை மேற்கொண்டவர். அரசியல் முறையில் கூட இவருக்குத் தொடர்புகள் மிகுதி. அதனால்தான் இவர் மிகக் குறுகிய காலத்தில் உயர்ந்த நிலையை அடைந்தார். இவர் தூதுவராக வும் அரசியல் வல்லுநராகவும் இன்னும் பல நிலை களிலும் பணியாற்றியவர். பிரான்சில் கி.பி. 1123-இல் இவர் போப்பின் சமயப் பேராளராக வேலை செய்

தார். இளமைப் பருவத்தில் இவர் பாபரசி (Papareschi) என்று அழைக்கப்பட்டார்.

இரண்டாம் கொனோரியசு கி.பி.1130-பிப்பிரவரி 13-ஆம் நாள் இறந்திடவே, பாபரசி போப்பு ஆனார். இவர் தம் பெயரை இரண்டாம் இன்னசெண்ட்டு என்று மாற்றிக் கொண்டார். இவர் ஆட்சிக் காலத் (Papacy) தொடக்கத்தில் பல இன்னல்களைச் சந்தித்தார். இவருக்குப் போட்டியாகப் பீர்லியோனிலாவைச் (இரண்டாம் அனாக்கிளிடசு) சில கத்தோலிக்கச்சமய மத குருமார்கள் போப்பாக அமர்த்தினார்கள். இன்னசெண்ட்டால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இவர் கி.பி. 1130 சூன் மாதத்தில் பிரான்சு செல்ல வேண்டியதாயிற்று. கிளாயிர்வாக்சின் (Clair Vaux) மதகுருவான பெர்னார்டு இன்னசெண்ட்டிற்குப் பேருதவியாக இருந்தார். பெர்னார்டின் முயற்சியின் விளைவாக இன்னசெண்ட்டு இங்கிலாந்து அரசரான முதலாம் என்றியைச் சார்ட்டர்சு என்னுமிடத்தில் சந்தித்தார். உரோமாபுரியில் ஏற்பட்டிருந்த இக்கட்டான நிலையைப் பற்றி அவரிடம் பேசினார். இன்னசெண்ட்டு கி.பி. 1131 மார்ச்சு மாதத்தில் செருமனி நாட்டு அரசர் இலொதையர் என்பவரை இலீசு (Liege) என்னுமிடத்தில் சந்தித்து, அவரை அனாக்கிளிடசை எதிர்த்துப் படைகளை அனுப்புமாறு வேண்டிக் கொண்டார். இவர் வேண்டுகோளுக்கிணங்கச் செருமானியப் படைகள் கி.பி. 1132 ஆகசுட்டுத் திங்களில் உரோமாபுரியைப் பிடித்துக்கொண்டன.

ஆனால்,இலியோனைன் (Leonine) நகரத்தை மட்டும் அவர்களால் வெற்றிகொள்ள இயலவில்லை. அந்நகரம் அனாக்கிளிடசின் கீழ் இருந்தது. எனினும் இலொதையர் புனித உரோமானியப் பேரரசின் பேரரசரானார். இன்னசெண்ட்டு கவுண்டசு, மடில்லா முதலிய பகுதிகளைப் பேரரசரிடம் ஒப்படைத்தார். ஆனால், திருச்சபைக் குருமார்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் உரிமையை மட்டும் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் இருவருக்குமிடையே மனக் கசப்பு ஏற்பட்டது. இத்தருணத்தில், இன்னசெண்ட்டு யாரிடமிருந்தும் உதவி பெறவில்லை. போப்பு பிசாவிற்குச் சென்று ஆலோசனை அவை ஒன்றைக் கூட்டினார். இக் கூட்டத்தில் அனாக்கிளிடசைக் கண்டனம் செய்தார்கள்.

இலொதையர் இரண்டாம் முறையாக கி.பி. 1136-37-இல் இத்தாலியின் மீது போர் தொடுத்தார். ஆனால்,அவர் உரோமாபுரியை முற்றுகையிடவில்லை. அனாக்கிளிடசு கி.பி. 1138 சனவரித் திங்களில் இறந்து விட்டார். அனாக்கிளிடசிற்குப் பிறகு நான்காம் விக்டர் போப்பு ஆனார். ஆனால் இரண்டு திங்களுக்குப் பிறகு அவர் போப்புப் பதவியைத் துறந்ததால், கி.பி. 1139-இல் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டாம் இன்னசெண்ட்டு தாம் போப்பு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமைதியற்ற சூழ்நிலையால் போப்பு உரோமானிய உள்ளாட்சிப் பிரிவுடன் (Commune) மோத வேண்டியதாயிற்று. உள்ளாட்சிப் பிரிவு சுதந்திரமான ஆளவை மன்றம் (Senate) ஒன்றை ஏற்படுத்தியது. இப்படிப் பல சிக்கல்களைச் சந்தித்த இரண்டாம் இன்னசெண்ட்டு கி.பி. 1142-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, மூன்றாம் (ஆ.ஆ. 1198,1216): இவர் கி.பி. 1160/1161-இல் தம் தந்தைக்குச் சொந்தமான கவிக்னானோ (Gavignano) கோட்டையில் பிறந்தார். தம்முடைய தாயார் மூலமாக இவர் உரோமாபுரியில் வசிக்கும் பல பிரபுக்களுக்கு உறவினராக விளங்கினார். இளமையில் இவரை இலொதையர் என்றழைத்தனர். இவர் பாரிசு நகரத்தில் சமயப் படிப்பினை முடித்தார்; பொலோக்னா நகரில் சமயத் தொடர்பான சட்டங்களைப் (Canon Law) படித்து முடித்தார். இவர் தலைமை மதகுருவாக இருந்தபொழுது, கி.பி. 1215-இல் இலேடரன் என்னுமிடத்தில் ஆலோசனை அவையைக்கூட்டினார். இதனை நான்காம் இலேடரன் ஆலோசனை அவை என்று கூறுவர். அந்த அவையைக் கூட்டியதால் போப்பின் செல்வாக்கு உயர்ந்தது. பல கட்டளைகளை (Decrees) போப்பு அவ்வவையில் பிறப்பித்தார். அப்பமும் மதுவும் முறையே ஏசுவாகவும் அவரது இரத்தமாகவும் மாறுவதை (Transubstantiation) மறுக்கக் கூடாத கொள்கையென இவ் அவையில் அறிவித்தார். கிறித்தவச் சமயக் குருமார்களைச் சீர்திருத்துவதற்குப் பல சட்டங்களை நிறைவேற்றினார். இதன் விளைவாக அடுத்த முந்நூறு ஆண்டுகள் கிறித்தவத் திருச்சபைகளில் பெரிய சிக்கல்கள் கூட எளிமையாயின.

பிரான்சிசு முனிவர் (ஆ.ஆ. 1182-1186) நகரங்களில் கிறித்தவச் சமயக் கொள்கைகளை விளக்கிக் கொண்டும், பிறசமயக் கொள்கைகளை எதிர்த்துச் சொற்பொழிவு செய்து கொண்டும் சென்றபொழுது அவருடைய அமைப்பில் பலர் சேர்ந்தனர். அவர்கள் 'பிரான்சிசுகள் திரிதுறவிகள்' என்றழைக்கப்பட்டனர். இவ்வமைப்பைப் போப்பு மூன்றாம் இன்னசெண்ட்டும் ஏற்றுக்கொண்டார்.

இன்னசெண்ட்டு தாம் போப்புப் பதவி ஏற்றதிலிருந்து ஒவ்வோராண்டும் பதவி ஏற்றுக்கொண்ட

நாளில் பல அறிவுரைகளை வழங்கினார். அரசியல் சிக்கல்களிலும் தம் வலிமையைக் காட்டினார். செருமனியில் இவர் தனிப்பட்ட உரிமைகளைப் பெற்றிருந்தார். இதற்குக் காரணம், செருமனி நாட்டு அரசர்தாம் புனித உரோமானியப் பேரரச ராகவும் விளங்கினார். அரசியலில் மட்டுமல்லாது சமயத்துறையிலும் போப்பு தம்முடைய வலிமை யைக் காட்டினார்.

இவர் காலத்தில் மூன்று முக்கியச் சிக்கல்கள் எழுந்தன. 1. போப்பாண்டவருடைய ஆட்சிக்குட் பட்ட இத்தாலிய மாநிலங்களில் போப்பின் இறை மைக்குப் (Sovereignty) பாதுகாப்பு இல்லாமல் இருந் தது. 2. செருமனியில் இரட்டிப்புத் தேர்தல் முறை (Double Election) நிலவியது. 3. பிரெஞ்சுக்காரர் களுக்கும் ஆங்கிலேயருக்கும் போர்கள் ஏற்பட்டன.

முதல் சிக்கலில் போப்பு வெற்றிகொண்டார். போப்பின் அதிகாரம் போப்பாண்டவரின் ஆட்சிக் குட்பட்ட இத்தாலிய மாநிலங்களில் வலுவடைந்தது, ஆயினும் இந்த வெற்றி சிறிதுகாலமே நீடித்தது. அம் மாநிலங்களில் மக்களின் அன்பையும் மதிப்பையும் போப்பு பெற்றார்.

செருமனியில் ஏற்பட்ட இரட்டிப்புத் தேர்தல் முறையில் புனித உரோமானியப் பேரரசரைத் தேர்ந்தெடுப்பதில் இரு கட்சிகள் தோன்றலாயின. ஒரு கட்சியினர் சுவாபியா பிரபுவை (Duke of Swabia) ஆதரித்தனர். மற்றொரு கட்சியினர் பிரன்சு விக்குப் பிரபுவை (Duke of Brunswick) ஆதரித்த னர். இவர் நான்காம் ஆட்டோ என்றழைக்கப் பட்டார். போப்பும் இவரை ஆதரித்தார்; அரியணை யிலும் அமர வைத்தார். ஆயினும் ஆட்டோ, போப் பின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைப் பதில் ஈடுபட்டார்; மேலும் செருமனியையும் சிசிலியை யும் இணைப்பதில் தீவிரமாகச் செயற்பட்டார். இச் செயலைப் போப்பு வெறுத்தார். பேரரசரைக் கிறித் தவ உலகத்திலிருந்து தைரியமாகத் தள்ளியும் வைத் தார். போப்பு கி.பி. 1216-இல் இரண்டாம் பிர டரிக்கைப் பேரரசராகத் தேர்ந்தெடுத்தார். பிரிட ரிக்கு போப்பின் எண்ணப்படி செருமனியையும் சிசிலி யையும் இணைக்கப் போவதில்லை என்னும் உறுதி மொழியைத் தந்தார். அந்நாடுகள் எப்போதுமே பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தையும் போப்பு கொண்டிருந்தார்.

மூன்றாம் சிக்கலில் மூன்றாம் இன்னசெண்ட்டு முழு வெற்றி அடைந்ததாகத் தெரியவில்லை. இரண்டாம் பிரடரிக்கு பிரான்சு நாட்டு அரசர் இரண்டாம் பிலிப்பு அகசுடசின் உதவியுடன், நான் காம் ஆட்டோவையும் அவர் நேச அரசரான சான் (இங்கிலாந்து அரசர்) என்பவரையும் வெற்றிகொண் டார். இன்னசெண்ட்டு பிரான்சு, இங்கிலாந்து நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போரினை நிறுத்த முடிவு செய்தார். ஆனால், போர் கடுமையாக நடந்த படியால் அவரால் போரினை நிறுத்தமுடியவில்லை.

இங்கிலாந்து அரசர் சான் என்பவரைப் போப்பு கிறித்தவ உலகத்திலிருந்து தள்ளிவைத்தார். இதற் குக் காரணம் போப்பின் எண்ணப்படி அமர்த்தப் பட்ட காண்டர்பரித் தலைமைக் குருவை (Archbishop) அவர் ஏற்றுக் கொள்ளாததேயாகும்.

இங்கிலாந்து அரசர் ஆங்கிலேயரின் உரிமைகளை ஏற்றுக்கொண்ட மகா சாசனத்தில் (Magna Carta) கி.பி. 1215-இல் கையெழுத்திட வேண்டிய கட்டா யத்திற்கு ஆளாக்கப்பட்டார். இதைப்பற்றிப் போப் பிற்குத் தெரிவித்தபோது, இன்னசெண்ட்டு அதை ஆங்கிலேயர்களுக்கு உரிமைகளே இல்லாத சாசனம் என்று கருதி நீக்குதல் செய்தார்.

போப்பு மூன்றாம் இன்னசெண்ட்டின் காலத்தில் தான் நான்காம் சிலுவைப் போர் மூண்டது. போப் பின் முயற்சியினால் எகிப்திலுள்ள இசுலாமிய அரச ரைத் தாக்குவதற்காகப் பெரும்படையொன்று புறப் பட்டது. ஆனால், இப்படையினால் எகிப்தையோ செருசலத்தையோ கைப்பற்ற முடியவில்லை. மாறா கக் கிழக்கு உரோமானியப் பேரரசர் தங்களுக்கு உதவி செய்யவில்லையென்று அப்படைகள் கான்சுடாண்டிநோபிளைத் தாக்கிக் கொள்ளையடித் தன. போப்பு கிழக்கு உரோமானியப் பேரரசரைத் தம் அதிகாரத்திற்கு உட்படுத்தியதே நான்காம் சிலுவைப் போருக்கு முக்கியக் காரணமாகும். திருச் சபையின் வலிமையை ஆணித்தரமாக நிலைநாட்டிய போப்புகளுள் மூன்றாம் இன்னசெண்ட்டு குறிப்பிடத் தக்கவர். ஐந்தாம் சிலுவைப் போருக்காக மாபெரும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த தருணத்தில் கி. பி. 1216-ஆம் ஆண்டு சூலை 16-ஆம் நாள் மூன் றாம் இன்னசெண்ட்டு காலமானார்.

**இன்னசெண்ட்டு, நான்காம் (ஆ.ஆ. 1243-1254):** இளமையில் சினிபால்டோ (Sinibaldo) என்றழைக் கப்பட்ட இவர் பொலோக்னாவில் சமயத் தொடர் பான சட்டங்களைப் படித்து வல்லுநர் ஆனார். ஒன்பதாம் கிரிகரிக்குப்பின் நான்காம் செலசுடைன் போப்பு ஆனார். அவர் பேரரசரின் நெருங்கிய நண்ப ராவார். அவர்காலத்தில் எந்தச் சிக்கலும் எழ வில்லை. நான்காம் இன்னசெண்ட்டு கி. பி. 1243-ஆம் ஆண்டில் போப்பானார். இவர் பதவி ஏற்ற

வுடனே பிரடரிக்கின் அதிகாரத்தைக் குறை கூறினார். சினங் கொண்ட பிரடரிக்கு நான்காம் இன்னசெண்ட்டை உரோமாபுரியிலிருந்து விரட்டியடித்தார். போப்பு பிரான்சிலுள்ள இலியோன் (Lyons) நகரத்திற்கு ஓடினார்; அங்கே திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் கூட்டமொன்றைக் கூட்டி, பிரடரிக்கை மதவிலக்கம் செய்து, அவர் தொடர்ந்து பேரரசராக இருக்க உரிமை இல்லாதவரென அறிவித்தார். படையைக் கொண்டே போர்க்களத்தில் மன்னரைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால், அதற்குள்ளாக கி. பி. 1250-ஆம் ஆண்டில் இரண்டாம் பிரடரிக்கு இறந்து விட்டார். மன்னர் இறந்தபின்னரும், பேரரசுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட போராட்டம் மட்டும்தீர்வதாக இல்லை. அது மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்தது. இந்தப் பலத்த போராட்டத்தைச் சந்திப்பதற்கு நான்காம் இன்னசெண்ட்டுக்கு அளவிறந்த பணம் தேவைப்பட்டது. ஏற்கெனவே ஒன்பதாம் கிரிகரி கருவூலத்திலிருந்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டார். பலவந்தப்படுத்திப் பணம் வசூலிக்கும் முறையில் நான்காம் இன்னசெண்ட்டு ஈடுபட்டார். உறவினர்களுக்கு அளவிறந்த சலுகைகளைக் காட்டினார். இவருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

நான்காம் இன்னசெண்ட்டு மதகுருமார்களுக்குச் சிவப்புத் தொப்பிகளை அளித்து அவற்றைச் சிறந்த அடையாளப் பொருள்களாக மதிக்கவைத்தார். இன்றும் மதகுருமார்கள் அவற்றை அணிகிறார்கள். மங்கோலியர்களைக் கிறித்துவமதத்திற்கு மாற்றி அவர்கள் உதவியுடன் இசுலாமியருடன் போரிட முயன்றார். ஆனால் இவர் கி. பி. 1254-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, ஐந்தாம் (ஆ.ஆ. 1276): தொமினிகன்(Dominican)திருக் கூட்டத்தைச் சார்ந்த முதல் போப்பு இவரே ஆவார். பாரிசுப் பல்கலைக் கழகத்தில் படித்துச் சமயப் பிரிவில் பட்டத்தைப் பெற்ற இவர் போப்பு ஆவதற்கு முன்பு பல நிலைகளில் பணியாற்றினார். பீட்டரின் தீர்ப்புகளுக்கு இவர் பல விளக்கவுரைகளை எழுதிப் பெரும் புகழ் அடைந்தார். மற்ற மதகுருமார்களுடன் சேர்ந்து தொமினிகன் திருக்கூட்டத்திற்கு விதி முறைகளை வகுத்தார். கிரேக்கர்களுடன் ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும், இத்தாலியர்களை அமைதிப்படுத்துவதிலும் ஐந்தாம் இன்னசெண்ட்டு பெருத்த ஆர்வங் காட்டினார்.

இன்னசெண்ட்டு ஆறாம் (ஆ.ஆ. 1352-1362) சிவில் துறையில்(Civil Department) பேராசிரியராகத் தூலோசில் (Toulouse) பணியாற்றிப் பிறகு அந்நகரத்தில் தலைமை நீதிபதிப் பொறுப்பை ஏற்றார். சமயத் துறையில் கூட இவர் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார். இவர் கி. பி. 1352-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மதகுருமார் ஒருவர் பல பதவிகளை வகிப்பதை இவர் தடை செய்தார். மதகுருமார்கள் பணி செய்யுமிடங்களிலேயே வசிப்பது முறையானது என்னும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமையப் பகட்டான வாழ்க்கையை இவர் குறைத்துக்கொண்டார். செருமன் நாட்டு அரசர் நான்காம் சார்லசிடம் நல்லுறவு முறையை ஏற்படுத்திக்கொண்டார். உயர்ந்த ஆணையை(Golden Edict) கி. பி. 1356-ஆம் ஆண்டில் பிறப்பித்துச் செருமானியப் பேரரசரைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையில் சில விதிகளை உருவாக்கினார். பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் கி. பி. 1360-இல் அமைதி ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுப் பிரிடிக்னி (Bretigny) உடன்படிக்கை ஏற்படச் செய்த பெருமை இவரையே சாரும்.

இன்னசெண்ட்டு, ஏழாம் (ஆ.ஆ. 1404-1406) சமயத் துறையில் பல நிலைகளில் பணியாற்றிப் போப்பு நிலையை அடைந்தவர். பானிபேசுக்குப் (Boniface) பிறகு இவர் போப்பு ஆனார். இவரைப் போப்பாகத் தேர்ந்தெடுத்தபொழுது எதிர்ப்புகள் இல்லை. ஆனால் சில நாட்களில் உரோமாபுரியில் இவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. நேப்பிள்சு நாட்டுப் படைகளின் உதவியுடன் உரோமாபுரியில் ஏற்பட்ட கொந்தளிப்பை இவர் அடக்கினார். மேலும் சமயச் சார்பான பொதுக்குழுவைக் கூட்டும் முயற்சிகளை மேற்கொண்டார். மறுப்புரையாளர்களுக்கும் (Protestants) கத்தோலிக்கர்களுக்குமிடையே இருந்த கசப்புணர்வைக்குறைப்பதுஇவர் கொள்கையாக இருந்தது. ஆனால், இவர் திட்டமிட்டப்படி பொதுக்குழுவைக் கூட்டவில்லை. இவர் கி.பி. 1406-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்டு, எட்டாம்(ஆ.ஆ. 1484-1492): நான்காம் சிக்சுதசுக்குப் (Sixtus IV)பிறகு எட்டாம் இன்னசெண்ட்டு போப்பு ஆனார். இசுலாமை எதிர்த்து முசுலிம்களுடன் போரிட இவர் கிறித்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். ஆனால், இவருடைய அறைகூவலை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் இத்தாலிய அரசியலில் ஈடுபட்டார்; அதிலும் வெற்றி பெறவில்லை. நேபிள்சு அரசர் பெர்டினாண்டு பல ஆண்டுகளாகப் போப்பிற்குக் கப்பம் செலுத்தவில்லை

என்னும் காரணத்தால்அவரைப் பதவியிலிருந்து நீக்கினார். போப்பின் படைகள் நேப்பிள்சுக்கு அனுப்பப்பட்டுத் தோற்றுப் போயின.

இவர் நேபிள்சை உரோமாபுரியுடன் சேர்க்க முயன்ற திட்டமும் கைகூடவில்லை. தனி வாழ்க்கையில் ஒழுக்கங்கெட்டவரெனக் கருதப்பட்டஇவர்போப்பாண்டவர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் குழப்பங்கள் ஏற்பட்ட நிலையில் பதவியைத் துறந்தார்; இவர் கி.பி. 1492-ஆம் ஆண்டு சூலை 26-ஆம் நாளில் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, ஒன்பதாம் கி.பி.1591-இல் இரண்டு மாதங்கள் மட்டும் போப்பாகப் பதவியில் இருந்தார். இவர் கி.பி. 1566-இல் வெனிசில் போப்பாண்டவரின்பேராளராக அமர்த்தப் பட்டார். உரோமாபுரியில் பதின்மூன்றாம் கிரிகரி இவரைப் பல நிலைகளில் அமர்த்தி, கி.பி. 1583-இல் போப்பாண்டவரின் மன்ற உறுப்பினர் (Cardinal) என்னும் பதவியையும் கொடுத்தார். போப்பாண்டவர் பதினான்காம் கிரிகரி நோயுற்றிருந்த காலத்தில், ஒன்பதாம் இன்னசெண்ட்டு அனைத்துச் சமயப் பணிகளையும் கவனித்து வந்தார். இவர் பிரான்சு நாட்டிலிருந்த கத்தோலிக்கச் சங்கத்தையும் இசுபெயின் நாட்டை ஆட்சி செய்த இரண்டாம் பிலிப்பையும் ஆதரித்தார். பிலிப்பின் ஒத்துழைப்புடன் பதினான்காம் கிரிகரியைப் போப்பாண்டவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு இவர் போப்பு ஆனார். ஆனால், இரண்டு மாதத்திற்குள் உரோமாபுரியிலேயே காலமானார்.

இன்னசெண்ட்டு, பத்தாம்(ஆ.ஆ.1644-1655): இவர் கி.பி. 1644-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள்போப்பாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்ஆட்சிக் காலத்தில், ஐரோப்பாவில் ஏற்பட்ட வெசுட்பேலியா உடன்படிக்கை (1648) குறிப்பிடத்தக்கதாகும். முப்பதாண்டுப் போரும் வெசுட்பேலியா உடன்படிக்கையும் இக்கால ஐரோப்பிய வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெறும் நிகழ்ச்சிகளாகும். சமயப்போர்களில் இதுவேகடைசியானதாகும்.மறுப்புரையாளர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையேஒருபோராகத்தொடங்கிய இந்த நிகழ்ச்சி, பொருளாதார, அரசியல் சிக்கல்களின் அடிப்படையில் நிகழ்ந்தது என்பதை மறந்துவிடமுடியாது. இறுதிக்கட்டத்தில் இது ஆப்சுபர்குகளுக்கும் பூரன்களுக்குமிடையே ஒரு பெரிய ஆதிக்கப் போட்டியாக உருவெடுத்தது. சமயத்துறையைப் பொறுத்தவரை இந்த உடன்படிக்கையும் ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்ததாகும். இவ்வுடன்படிக்கையால் கால்வீனியச் சமயம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. கத்தோலிக்கர், உலூதரின் பிரிவினர், கால்வினியர் போன்றவர்களுக்குச் சம உரிமைகள் அளிக்கப்பட்டதன் மூலம் ஐரோப்பாவில் எழுந்த சமயச் சிக்கலுக்கு நிலையான தீர்வு ஏற்பட்டது. எனினும், பத்தாம் இன்னசெண்ட்டு வெசுட்பேலியா உடன்படிக்கை பயனற்றதென்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.

பத்தாம் இன்னசெண்ட்டை மைத்துனி ஒலிம்பியா மெய்தல்சினி என்பாள் ஆட்டிப் படைத்தாள். ஒலிம்பியா மெய்தல்சினி (Olimpia Maidalchini) போப்பாண்டவர்உலகச் சிக்கல்களில் ஈடுபடக்கூடாது என்ற கொள்கையைஉடையவள். ஆனால் பொருள் திரட்டுவதில் ஒலிம்பியா பேராசை கொண்டவளாக இருந்தாள். இதனால் போப்பின் மதிப்புக் குறையலாயிற்று. மேலும் செசுயூட்டுகளுக்கும் சென்செனிசுடுளுக்குமிடையே ஏற்பட்ட பூசல்களில் போப்பு ஈடுபட்டுத் தம் செல்வாக்கையும் மதிப்பையும் இழந்துவிட்டார். பத்தாம் இன்னசெண்ட்டு கி.பி. 1655-ஆம் ஆண்டு சனவரி மாதம் 7-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, பதினோராம் (கி.பி. 1676-1689) சமயத் துறையில் பல நிலைகளில் பணியாற்றியவர். பதினான்காம் உலூயி மன்னர் எதிர்த்த போதிலும், கி.பி. 1676-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள் இவர் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேர்மையானதெனத் தோன்றியதைச் செய்து காட்டும் பண்பினை உடையஇவர், வலிமையும் மனத்திண்மையும் கொண்டவர்; பொருளை வீண்செலவு செய்யாதவர்; சிக்கனத்துக்குப் பெயர் பெற்றவர்.

முதலில் மன்னர் பதினான்காம் உலூயி போப்பை எதிர்த்தார். பின்னர்க் கத்தோலிக்கக் கொள்கையை எதிர்த்தவர்களை ஒழிப்பதையே இவர் நோக்கமாகக் கொண்டார். உலூயி கி.பி. 1682-ஆம் ஆண்டு ‘கேலிகன் சுந்தரம்’ என்ற ஓர் அறிக்கையை விடுத்தார். இதன்படி சமயத் தொடர்பான செய்திகளில் போப்புக்கும் பிரான்சில் உரிமையும் அதிகாரம் உண்டென்றும், ஆனால் அரசரைப் பதவியிலிருந்து விலக்கவோ குடிகளை அரசருக்குக் கீழ்ப்படியக் கூடாதென்று ஆணை பிறப்பிக்கவோ அவருக்கு அதிகாரமில்லையென்றும், சமயத்தில் போப்பின் அதிகாரமும் அவருடைய ஆலோசனைச் சபையின் முடிவிற்குக் கட்டுப்பட்டது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பதினோராம் இன்னசெண்ட்டு கத்தோலிக்கத் திருக்கோயில் கட்சியின் உறுப்பினர்களுக்கு(Jansenists) ஆதரவைத் தெரிவித்தார். அறத்தொடர்பான பல ஆட்சிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த பெருமை இவரைச் சாரும். இவர் ஒழுக்கசீலர். இவர்

கி.பி. 1689-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 12-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, பன்னிரண்டாம் (கி.பி. 1691-1700): இவர் கி.பி. 1681-இல் பதினோராம் இன்னசெண்ட்டால் பதவியில் அமர்த்தப்பட்டார். போப் பாண்டவர் பதவி கிடைத்த பிறகு, பதினோராம் இன்னசெண்ட்டை வழிகாட்டியாகக் கொண்டு இவர் பணியாற்றினார். உறவினர்களுக்குப் பதவி கொடுத்தோ தனி உரிமை கொடுத்தோ ஆதரிக்கும் முறையை வெளிப்படையான ஆணைகளைப் பிறப்பித்தே கண்டித்தார். போப்பின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் நடுநிலைமையில் நின்று நீதியை நிலை நாட்டிய பெருமை இவரையே சாரும். பிரான்சுடன் கி.பி. 1693-இல் நல்லுறவு மலர்ந்தது. அதேபோல் இவர் காலத்தில் கத்தோலிக்கத் திருக்கோயில் கட்சி உறுப்பினர்களுக்கும் ஏசுசபையினருக்கும் (Jesuit) இடையே நல்லுறவு ஏற்பட்டது. இவர் கி.பி. 1700-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, பதின்மூன்றாம் (கி.பி. 1721-1724): இவர் போலிப் (Poli) பகுதியை ஆட்சி செய்த சீமோனின் மகன். இக்குடும்பத்தினர் பலர் போப்புகளாகத் திகழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மூன்றாம் இன்னசெண்ட்டும் பதின்மூன்றாம் இன்னசெண்ட்டும் ஆவார்கள்.

இவர் பல நிலைகளில் பணியாற்றியவர். இவர் கி.பி. 1721-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் பதின்மூன்றாம் இன்னசெண்ட்டு என்னும் பெயருடன் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறாம் சார்லசை கி.பி. 1722-ஆம் ஆண்டு நேப்பிள்சு நாட்டுப் பேரரசராக நியமித்த பெருமை இவரையே சாரும். இசுட்டுவர்ட்டு அரசராகப் போட்டியிட்ட சேம்சை இங்கிலாந்தின் அரசராக இவர் ஏற்றுக்கொண்டார். இங்கிலாந்தில் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் நிலைநாட்டும்படி அவருக்குக் கட்டளை விடுத்து, அவருக்கு உதவுவதாக உறுதிமொழி அளித்தார். இவர் கி.பி. 1724-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இல.இரா.

**இன்னம்பர்** சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இன்னம்பூர் என இக்காலத்தில் வழங்கப் பெறும் இவ்வூர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. கும்பகோணத்திற்கு அருகே உள்ள புளியஞ்சேரி என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து வடக்காகச் சென்று இவ்வூரினை அடையலாம். இத்தலத்தின் அருகில் சிவக்கொழுந்து தேசிகர் ஊராகிய கொட்டையூர் உள்ளது. இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் நான்கு பதிகங்களும், திருஞான சம்பந்தர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இறைவன் பெயர் எழுத்தறி நாதர். இவர் எழுத்தறி நாதேசுவரர் எனவும் தான்தோன்றீசர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் கொந்தார் பூங்குழலியம்மை. திருநாவுக்கரசர் இத்தல இறைவனை, 'இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனார்' என்று குறிப்பிட்டுள்ளார். இது அகத்தியர் வழிபட்ட தலம் எனக் கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தல இறைவனை வழிபட்ட செய்தியினைச் சேக்கிழார், 'ஏரின்மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர் கழல்வணங்கி' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

**இன்னம்பூர் நாடு**: சோழ நாட்டில் இருந்த பல நாட்டுப் பிரிவுகளுள் இன்னம்பூர் நாடும் ஒன்று. இக்காலத்திய தஞ்சை மாவட்டத்தின் கும்பகோண வட்டமும் பாபநாச வட்டமும் அடங்கிய நிலப்பரப்பே பண்டு இன்னம்பூர் நாடு எனச் சொல்லப்பட்டது. இதன் தலைமை சான்ற நகரம் இன்னம்பூர் (இன்னம்பர்) ஆகும். இதன் ஏனைய பகுதிகள் அசூர் (அசுகர்), ஆதனூர், சத்தியமங்கலம், ஏரகம் (மும்முடி சோழ மங்கலம்), கருப்பூர், காட்டூர், கோனூர், கோட்டையூர், மருத்துவக்குடி, மேலக்காவேரி, பெரியன்குடி, வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம், பராந்தக சதுர்வேதி மங்கலம், திருவைகாவூர் ஆகியன ஆகும்.

**இன்னா நாற்பது** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந் நூலின் ஆசிரியர் கபிலதேவர் என்பவராவர். சங்ககாலக் கபிலரின் வேறானவர் இவர். இவர்தம் சமயம் குறித்தும், வாழ்ந்த காலம் குறித்தும் அறியத்தகும் புற-அகச் சான்றுகள் கிடைத்தில. இந் நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகியோர் குறிக்கப் பெறுவதால் இதன் ஆசிரியர் சமயப் பொது நோக்குடையவராக இருந்திருக்கலாம் என்பது புலனாகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்ப. மாந்தர் தம்வாழ்வில் மேற்கொள்ளத்தகாத பண்புகள் எவை என்பதை நினைந்து, அவற்றைப் பாடல் தோறும் நான்கு கருத்தாகப் பகுத்து, நாற்பது வெண்பாக்களில் கூறியுள்ளார். இவையிவை இன்னாதவை என்று ஆசிரியர் தம் பாடல் ஒவ்வொன்றிலும் கூறுவதால் அச்சொல்லே நூலுக்கும் பெயராக அமைந்தது. இந் நூலில் ஒரு கருத்தே ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்

களில் வருகிறது. கருத்தின் ஆழம் குறித்தும், அழுத்தம் குறித்தும் ஆசிரியர் மீண்டும் கூறுவதாக அத்தகைய இடங்களைக் கொள்ளலாம். இந்நூலுக்குச் செறிவான பழைய உரை ஒன்று உள்ளது. இது முந்து நூல் மரபுணர்ந்து அமைக்கப்பட்ட உரையாக அமைந்துள்ளது. 'ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா; நாற்றம் இலாத மலரின் அழகின்னா' என்பன போல இந்நூலிற் கூறப்படும் கருத்துகள் அமைந்துள்ளன.

**இன்னிசை:** இந்திய இசையில் பெரும்பாலும் வழங்கிவரும் இசை முறை இன்னிசை எனப்படும். இதனை மேனாட்டு இசை வல்லுநர்கள் இன்னிசை (Melody)என்று குறிப்பிடுகின்றனர். இன்னிசையில். ஒற்றைச்சுரங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக இசைக்கப்படுகின்றன. இந்தச் சுரங்கள் இராகங்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. இந்துசுத்தானி இசையிலும் இன்னிசை முறையே பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இசை வல்லுநர்கள் பாடும் பொழுதோ இசைக்கருவிகளை இசைக்கும் பொழுதோ நாம் உற்றுக் கவனித்தால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏதேனும் ஒரு சுரத்தைத் தான் கேட்க முடியும். ஒரு சில நேரங்களில் மட்டும் இசை நிகழ்ச்சிகளில் இசைக்கருவியாளர் மேல் ஒலி எல்லையிலும் (உச்சத்தாயி) கீழ் ஒலி எல்லையிலும் (கீழ்த் தாயி) சில சுரங்களை ஒரே நேரத்தில் இசைக்கின்றனர். இது இசைபாடுவோரின் குரல் வளத்திற்கு நயமும் வன்மையும் ஊட்டுவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. (காண்க: இசை)

**இன்னிசை இருநூறு** அரசஞ்சண்முகனார் என்னும் புலவர் இயற்றிய ஒரு நீதி நூல். இது இருநூறு இன்னிசை வெண்பாக்களால் ஆகியது. வாழ்த்து, அறம், இல்வாழ்க்கை, கூடாவொழுக்கம், நல்வினையாட்சி முதலாக இந்நூலுள் அமைந்துள்ள 20 அதிகாரங்களும் தனித்தனியே பத்துப் பாடல் கொண்டுள்ளன. இந்நூலாசிரியர் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்திலுள்ள சோழவந்தான் ஊரில் கி.பி. 1868-ஆம் ஆண்டு தோன்றினார். பெற்றோர் அரசப்பப்பிள்ளை; பார்வதி அம்மை ஆவர். இவர் சோழவந்தான் கிண்ணிமடத் தலைவராக விளங்கிய சிவப்பிரகாச சுவாமிகளிடம் இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த நூல்களையும் பயின்று சிறந்த புலவராக விளங்கினார். மதுரை நகரிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர்த் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கல்லூரியிலும் சில ஆண்டுகள் பணி புரிந்த இவர் 1925-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மாலைமாற்றுமாலை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

இந்நூலாசிரியர் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்களைத் திரட்டி அதிகார அடைவு செய்து இன்னிசை இருநூறு என்னும் பெயரில் நூலாக உருவாக்கியவர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆவார். இந்நூலின் பல பாக்கள் திருக்குறட் கருத்துகளை விளக்குவனவாகவே அமைந்துள்ளன. சிலபாக்களின் ஈற்றடிகளாகத் திருக்குறள் அமைந்துள்ளது. 'கற்பன கல்லா' எனத் தொடங்கும் வெண்பாவின், பின்னிரண்டடிகளாக, 'அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம், அவாவுண்டேல் உண்டாம் சிறிது' என்னும் திருக்குறள் அமைந்து விளங்குகிறது. 'முல்லை குறிஞ்சி முறையில் திரிந்துபெயல் இல்லாமை யாற்பாலை என்னப் படிவமுறும்' என்னும் செய்யுட்பகுதி, 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல் பிழந்து, நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும்' என்னும் சிலப்பதிகாரப் பகுதியினை அடியொற்றி அமைந்ததாகும். 'எண்ணுதூஉம் பொன்னிறத்து மால்விடைப் புத்தேள் இடம் பிரியா, அன்னை சிறுவர் அடி' என்னும் கடவுள் வாழ்த்து வெண்பாவில் இவர் திருமால், சிவன், உலகம்மை, விநாயகர், முருகன் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்துக் கூறியிருப்பதனால், சைவ வைணவ வேறுபாடில்லாத இறைநெறியாளர் என்பது புலனாகிறது. மேலும் இவ்வாசிரியர் வாழ்த்துப் பகுதியில், 'நூலினைப் போற்றுதும் நூலினைப் போற்றுதும்' என்று நூலுக்குப் போற்றி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, தாய் தந்தை ஆசான், ஆகியோரையும் அறம், அன்பு ஆகியவற்றையும் வாழ்த்தியிருப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நூலின் செய்யுள்கள் மட்டும் முதன்முதல் 1913-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றன. இந்நூலினுக்குப் புலவர் ஆ. பொன்னுசாமிப் பிள்ளை பொழிப்புரையும் குறிப்புரையும் எழுதி 1975- ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். வெ.ப.

**இன்னிசை வெண்பா** தமிழிலுள்ள முதன்மையான பாக்களில் அடங்கும் வெண்பாவின் வகையுள் ஒன்று. செப்பலோசை உடையதாய், ஈற்றடி மூன்றுசீர் கொண்டதாய், ஏனைய அடி நாற் சீராய் வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்தளை பொருந்திப் பிறதளையும் சீரும் விரவப் பெறாமல், காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் முடிவது என்பது வெண்பாவின் பொதுவிலக்கணம். இப் பொதுவிலக்கணத்தோடு, நான்கு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தா

லும்வந்து, தனிச்சொல் இல்லாமல் அமையும் வெண்பா இன்னிசை வெண்பாஎனப்படும். அன்றியும், வெண்பா வின் பொதுவிலக்கணத்தோடு, நான்கு அடிகளில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றாம் அடி யின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற் பத்தால் வருவனவும், பல விகற்பங்கொண்டு ஒவ் வோரடியிலும் ஒருஉத் தொடை பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு நான்கடி யாக வருவனவும் இன்னிசை வெண்பாவில் அடங் கும். மூன்றடியாலமையும் சிந்தியல்வெண்பா, இன் னிசை வெண்பாவுக்குரிய இலக்கணம் பெற்றமையு மாயின் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

**இன்னிலை** பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பெயரில் தொகுக்கப்பெற்றுள்ள நூல்களுள் ஒன்றா கக் கருதப்பெறுகிறது. இத்தொகுப்பில் 'கைந் நிலை'யை ஒரு நூலாக ஏற்று 'இன்னிலை'யைத் தவிர்ப்பாரும் உளர். 'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம், இன்னிலை காஞ்சியுட னேலாதி யென் பவே, கைந்நிலைய வாங் கீழ்க் கணக்கு' என்னும் செய்யுள், இத்தொகுப்பில் அமைந்த நூல்கள் அனைத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இச் செய்யு ளுக்குப் பாட வேறுபாடுகள் பல உண்டு. அவற்றுள் 'இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பதூஉம், கைந்நிலையுமாங் கீழ்க்கணக்கு' என்பது ஒன்று.

முன்னர்க் குறிப்பிட்ட செய்யுள் 'இன்னிலை' யைக் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகச் சுட்டுகிறது. அடுத்துக் காட்டியுள்ள பாடவேறுபாடு 'கைந் நிலை'யை ஒரு நூலாகக் குறிக்கிறது. 'இன்னி லை'யை ஒரு நூலாக ஏற்றால் 'கைந்நிலைய வாங் கீழ்க்கணக்கு' என அடைமொழியாகக் கொள்ளல் வேண்டும். 'கைந்நிலை'யை ஒரு நூலாக ஏற்றால் 'இன்னிலை' மறைந்து 'இனிய நிலைமையவாகிய காஞ்சி' என அடைமொழியாகும். எனவே கீழ்க் கணக்கு நூல்களுள் பதினெட்டாம் நூல் இன்னிலையா கைந்நிலையா என்ற ஐயம் ஏற்படலாம். இவற்றில் கீழ்க்கணக்கு வரிசையைச் சேர்ந்த நூல் எது என்ப தில் ஐயமிருப்பினும் இவ்விரு பெயர்களிலும் இரு வேறு நூல்கள் அச்சிற்பதிப்பிக்கப் பெற்றுள்ளன என் பது உண்மை. 'இன்னிலை'யை வ.உ.சிதம்பரம் பிள்ளையும், 'கைந்நிலை'யை அனந்த ராமையரும் பதிப்பித்துள்ளனர்.

இன்னிலையின் ஆசிரியர் பொய்கையார் என்று வ.உ.சிதம்பரம் பிள்ளை பதிப்பித்துள்ளார். நாலாயி ரத் திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள முதல் திருவந்தாதி, களவழி நாற்பது, புறநானூற்றில் 'கோதை மார்பிற் கோதையானும்' என்றும் 'நாடெ னென்கோ ஊரனென்கோ' என்றும் தொடங்கும் செய்யுட்கள், பன்னிரு பாட்டியலில் பொய்கையார் என்னும் பெயரோடு காணப்பெறும் சூத்திரங்கள், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் பொய்கையார் என்னும் குறிப்போடு காட்டியுள்ள தனிச் செய்யுட் கள் ஆகிய அனைத்தையும் இயற்றியவர் பொய்கை யார் என்ற பெயருடைய ஒரே புலவர் என்று சிலர் கருதுகின்றனர்.

முதல் திருவந்தாதி, இன்னிலை ஆகியவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்காட்டியும், திருவந்தாதி பாடிய பொய்கையார் தமது திருமால் ஈடுபாட்டினைப் புலப்படுத்தியிருப்பது போல இன்னி லைச் செய்யுட்களிலும் திருமால் பெருமை பேசப் பெற்றிருப்பதைச் சுட்டியும் இவ்விரு நூல்களையும் செய்த பொய்கையார் ஒருவரே எனவும், களவழி நாற்பது, இன்னிலை ஆகிய இருநூல்களிற் காணப் படும் வேறுபாட்டினை எடுத்துரைத்து இவ்விரு நூல் களையும் செய்தவர் வெவ்வேறு பொய்கையாரே ஆவர் எனவும் வ.உ.சிதம்பரம் பிள்ளை தம் பதிப் பில் சுட்டியுள்ளது சிந்திக்கத்தக்கது.

'இன்னிலை' என்னும் நூலினைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என்றும் இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவ னார் என்றும் அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

நூலின்கண் 45 வெண்பாக்களும் கடவுள் வாழ்த் தாக அமைத்த ஆசிரியப்பா ஒன்றும் உள்ளன. அறப் பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் என் பன நூலின் பகுதிகள். அறப்பால் பத்து வெண்பாக் களையும், பொருட்பால் ஒன்பது வெண்பாக்களையும் இன்பப்பால் பன்னிரண்டு வெண்பாக்களையும், வீட் டுப்பால் இல்லியல், துறவியல் எனப் பகுக்கப் பெற்று முன்னையது எட்டு வெண்பாக்களையும், பின்னையது ஆறு வெண்பாக்களையும் கொண்டுள் ளன.

இந்நூல் அளவில் சிறிதாகத் தோன்றினாலும், ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கியுள்ள பொருள் களின் அருமை பெருமைகளால் சிறப்பு மிக்கதாகும்.

இந்நூலின் சொற்றொடர்களையும் பொருள் களையும் திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளதாகக் கூறும் வ.உ. சிதம்பரம்பிள்ளை, தம் பதிப்பில் பல மேற்கோள்களைக் காட்டுகிறார்.

இதன் வெண்பாக்களை இளம்பூரணர் தம் உரையில் மேற்கோளாகக் காட்டியுள்ளதாக வ.உ. சிதம்பரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணத்தை நோக்க அவ்வுரையில் இந்நூலின் ஒருபாடலேனும் காணப்படவில்லை; எனவே முன்னைய பதிப்புகளிலிருந்து பின்னர் அவை விடுபட்டனவோ என ஐயுறும் நிலை உள்ளது என்று தி.சங்குப்புலவர் தம் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் வெண்பாக்களைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய தொல்காப்பிய உரையாசிரியர்களும் யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் எடுத்தாண்டுள்ளனர். வெ.ப.

**இன அழிப்பு:** இன உணர்வு என்பது வரலாறு, பொருளாதாரம், அரசியல், மன இயல் போன்ற காரணிகளைப் பொறுத்தது. எந்த இனம் பிற இனத்திலிருந்து தனக்கு வேறுபட்ட உயர்ந்த பண்பாடும் சமுதாயப் பழக்க வழக்கங்களும் உள்ளன என்று கருதி அவற்றில் பெருமை கொள்கிறதோ அந்தத் தனியுணர்வு இன உணர்வு எனப்படும். இந்த இன உணர்வு பிற இனத்தை அல்லது இன உணர்வைக் கருதாமல் அல்லது மதிப்பிற்குரியது என்று நினையாமல் இருக்கச் செய்கிறது. இச் செயலே இனப் போர்களை உருவாக்குகிறது. இது நீடிக்கப்படும்போது இன அழிப்புக்கு வழி கோலுவதால் இது இன அழிப்பு (Genocide) எனச் சொல்லப்படுகிறது. இதன் விளைவுகள் மிகக் கொடுமையானவை; நெடுங்காலம் நீடித்து நிலைக்கக் கூடியவை. இதனால் சமூகத்தின் ஓரினமே அழிக்கப்படும் அபாயக் கூறுகள் மிகவுள்ளன. சில சமயங்களில் அமெரிக்காவில், மேற்கு ஆப்பிரிக்காவில், வியட்நாமில், கொரியாவில் நடப்பதுபோல் நாகரிகம் அடைந்த இனம் நாகரிகமற்ற குழு என அது கருதும் வேறொரு குழுவின் மீது கொள்ளும் அடக்குமுறைப் போராட்டமும் இனப் போர்தான். ஒரே நாட்டைச் சேர்ந்த (இந்தோனேசியா, இசுரேல்) பல குழுக்களிடையே ஏற்படும் சமூகச் சண்டைகளும் இனப் போர்தான். ஆனாலும் இவை இன அழிவில் முடிவதில்லை.

முதலில் கூறியதுபோல் இன உணர்வு மேலோங்கி நிற்கும் ஓர் இனம், அதே நாட்டைச் சேர்ந்த மற்றோர் இனத்தை இழிவு படுத்தும்போதும் தாழ்வாக நடத்தும்போதும் அரசியல் சமூக உரிமைகளை மறுக்கும்போதும் ஏற்படும் இனப்போர் அழிவை உண்டாக்குகிறது. மனித உரிமைகள் மறுக்கப்படுவது மிக இழிந்த செயலாகும்.

கம்பூச்சியாவில் (இக்காலக் கம்போடியா) 1985 ஏப்பிரல் முதல் நடைபெற்ற கலவரங்கள் மனிதக் குல நாடி நரம்புகளைத் துடிக்க வைக்கும் அஞ்சத்தக்க செயல்களாகும். கியுசாம்பான் அரசு கவிழ்ந்தபின் அமைந்த அமெரிக்க அடிமை அரசக்குல சிரோனக்கு அரசைக் கவிழ்த்துப் பால்-பாட்டுக் குடியரசு ஏற்பட்ட பின்பும், பொதுவுடைமையாளர் அரசைக் கைப்பற்றிய பின்னரும் கெமர் எனப்படும் அந்நாட்டு இனத்தவர் இத் தகைய ஆட்சிப் போர்களினால் அழிக்கப்படுவது மிகுதியாகியுள்ளதே தவிரக் குறையவில்லை. நல்லாட்சியின்மையும் நீதிக்கேடும் தலைவிரித்தாடும் ஒரு பிணக்காடாகக் கம்பூச்சியா மாறிவருகிறது. வெளிநாட்டு உயர் கல்வி, தொழிற் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றைப் பயின்றவர் தேவையில்லை என்று பொதுவுடைமையாளர் முடிவுசெய்தது நேர்மையற்றதாகும். நகரங்களில் வசிப்பவர்கள் கிராமங்களுக்குத் துரத்தப்பட்டு வயல்களில் இழிவான நிலைகளில் வேலை செய்யும்படி வற்புறுத்தப்படுகின்றனர். இத்தகைய துன்புறுத்தல்களால் எண்ணற்ற மக்களும் குழந்தைகளும் பசி, பட்டினி, நோய், வெட்டு, கொலை முதலியவற்றிற்கு ஆளாகி மனித நாகரிகமே மறைந்து போகும் நிலை உருவாகிவிட்டது.

அமெரிக்காவும் உருசியாவும் வியட்நாமும் சீனாவும் இந்த நாட்டில் போரிட்டுக் கொண்டதன் விளைவே இத்தகைய கொடுமைகள் என்பது நன்கு புலனாகிறது. இதுபோன்ற அரசியல் பலப்போட்டிகளால் அந்நாட்டின் மக்கள் தொகையின் 1/3 பங்கை அந்நாட்டு மக்களே அழித்துக் கொண்டு வருகின்ற செயல், அந்நாட்டிற்கு மட்டுமன்று மனித இனத்திற்கே சீர்கேட்டைப் பயப்பதுதான்.

இனி, சிரீலங்காவை எடுத்துக் கொண்டால் அங்கே இப்போது நடைபெற்றுவரும் - இனியும் நடைபெறப்போகும் - தமிழ் இன அழிப்பு, காலம் காலமாக அதாவது 1956-58-இலிருந்து சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே நடைபெற்று வந்திருக்கும் இனப்போரின் விளைவேயாகும். இந்தத் தீவு ஆங்கிலக் குடியேற்ற நாடாக இருந்தது. சுதந்திரம் அடைதற்பொருட்டுச் சிங்களவரும் தமிழரும் சேர்ந்து போராடினர்; ஆயினும் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் தமிழ் இனத்தார்களுக்குக் குடியுரிமை, வாக்குரிமை போன்ற உரிமைகள் பெறுவதற்குக் கூடச் சில கட்டுப்பாடுகளை அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தினர். ஒரு சாராருக்கு நன்மையாக அமைந்த இந்த அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது அதன் விளைவை அறியாத தமிழர்கள், ஆங்காங்கே உரிமைகள் மறுக்கப்

பட்டுச் சலுகைகள் பெற முடியாதபோதுதான் தமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் பற்றி அறிந்தனர். உயர் நிலையிலுள்ள சிங்களவரே 1955 வரை ஆட்சியிலிருந்ததால், அவர்களே அரசியலிலும் தேர்தலிலும் பங்கு கொண்டதால் இனச்சிக்கல் ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தது. புதிய உயர் வேலை வாய்ப்புகள், வாக்குரிமை முதலியவை மறுக்கப்பட்டாலுங் கூட ஏற்கனவே உயர் பணிகளில் இருந்தவர்கள் சிங்கள அரசால் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலிருந்தார்கள். ஆனால், 1956க்குப் பிறகு சிங்கள உயர்நிலை அரசு, கீழ் நிலை மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சிக்கு ஒரு வகையில் காரணமாயிற்று. அரசியலில் கீழ்நிலைச் சிங்களவரும், புத்த மகா சங்கத்தினரும் பங்கேற்கும் நிலை உருவாகியது. அவர்கள் பெரும்பான்மையினராக இருந்ததால் சிங்கள அரசு சிறுபான்மையினரான தமிழினத்தின் மேல் கடுமையான கொள்கைகளை விரைந்து திணிக்கத் தொடங்கியது. ஒடுக்கப்படத் தொடங்கியதும் தமிழினம் தன் உரிமைகளைப் பெறப் போராட்டத்தைத் தொடங்கிற்று.

தமிழினத்தின் இத்தகைய போராட்டம் அவ்வப்போது அடக்கி நசுக்கப்பட்டு வந்தது. தமிழ் விடுதலைப் புலிகள் என்னும் இளைஞர் தீவிர இயக்கம், 1973 க்குப் பிறகு தீவிரமாகப் போராடத் தொடங்கிற்று. இதன் விளைவு, சிங்கள மேட்டுக் குடியினர் இராணுவத்தையும் புத்த மகா சங்கங்கள், கீழ் நிலையிலுள்ள சிங்களவர் ஆகியோரின் பேராற்றலையும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாயினர். சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துமே இந்தத் தாக்கத்தை உணரவே, இன்று அங்கே இரு இன மக்களுக்கிடையே நடக்கும் போர் இன அழிப்புக்கு வழிகோலி விட்டது.

தமிழ்நாடும் இந்தியத் துணைக்கண்டமும் இந்த முயற்சிகளுக்கு ஊக்கமும் படைக்கலமும் பயிற்சியும் அளிப்பதாகச் சிங்கள அரசு உலகெங்கும் அறிவித்துக் குற்றஞ்சாட்டி, அதனால் இசுரேலிய மொசாட்டு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் படை உதவியை நாடி, அவர்களின் மூலம் தமிழினத்தை அழித்து வருகிறது. இதை இந்தியா ஐ.நா.விற்கு எடுத்துச் சென்றால் அது அனைத்துலகச் சிக்கலாகித் தீர்வு காண இயலாத ஒன்றாகி விடும் என்று தயங்குகிறது. சமாதானப் பேச்சுகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் மட்டுமே இதற்குத் தீர்வு என்று ஒன்றைக் காண இயலும். அ.சி.

**இனஒதுக்கல்**: குறிப்பிட்ட சில மக்களினங்களைச் சட்டத்தின் மூலமாகவும் சமூக மரபுகள் மூலமாகவும் தனிமைப்படுத்தப்படுதலே இன ஒதுக்கலாகும். இன ஒதுக்கலுக்குட்பட்ட மக்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வாழிடத்திலேயே வாழவும், ஒதுக்கப்பட்ட ஒரு சில பள்ளிகள், திருச்சபைகள் (Churches), பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் முதலானவற்றையே பயன்படுத்தவும் வேண்டியவராக இருப்பர். அதிகாரம் மிகுந்த ஆட்சியாளர்கள் தம் பொருளாதார, சமூகத் தகுதிகளின் இடைவெளியைப் பாதுகாக்கப் பல விதிகளை இனஒதுக்கக் குழுக்களின் மீது திணிக்கின்றனர். இனங்களுக்கிடையேயும் மக்கள் குழுக்களிடையேயும் இனஒதுக்கல் முறை (Racial Segregation) காணப்படுவது, பல வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையிலானதாகும். மேற்கு ஆப்பிரிக்காவின் ஆங்கிலேய, பிரெஞ்சுப் பகுதிகளில் இனஒதுக்கல், சமூக வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் கட்டாயப்படுத்தப்பட்ட அமைப்பாக மாறிவிட்டது. நடு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா முதலான நாடுகளில் ஒரே பகுதியில் பல்வேறு இனச் சமூகங்கள் பெருமளவில் வாழ்ந்து வருவதால், இன்றும் இன ஒதுக்கல் காணப்படுகிறது. தென்னாப்பிரிக்க, பிரிட்டோரிய அரசின் இனஒதுக்கல் கொள்கை நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டதாகும் (காண்க: இன ஒதுக்கீட்டுக் கொள்கை). பிற ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளிலும் இனஒதுக்கல் சமூக, அரசியலமைப்புகளில் ஆழ்ந்து வேரூன்றிக் காணப்படுகிறது.

சமூகத் தடைகளையும் சட்டத் தடைகளையும் கைவிடாது செயற்படுத்தும் வெள்ளையர்களே இன ஒதுக்கக் கொள்கையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றனர். இருப்பினும், ஆசிய மங்கோல்கள் (Mongols), ஆப்பிரிக்கப் பண்டுக்கள் (Bantus), அமெரிக்க அசுதெக்குகள் (Aztec) ஆகியோரும் மக்களை வேறுபடுத்தி நடத்தும் இனஒதுக்க முறையினைச் செயற்படுத்தியவர்களாவர்.

மனிதர்களையும் மனிதக் குழுக்களையும் ஒதுக்கிவிடுவது ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டைப் பாதிப்பதில்லை. பாகுபடுத்தப்படும் அல்லது ஒதுக்கப்படும் குழுக்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்தியச் சாதி முறையில், செய்யும் தொழிலையும் பிறப்பையும் அடிப்படையாகக் கொண்டமைந்த சாதிகள் படிநிலையைப் பார்க்கும் போது, ஒவ்வொரு சாதிக் குழுவும் தான் கொண்டுள்ள இடைவெளி, சமய மதிப்பீடுகளினால் (Religious Values) ஆனதாகும். இதன்வழி ஒவ்வொரு சாதிக் குழுவும் ஒரு தெளி

வான எல்லையைக் கொண்டு, சமூகத்தின் சமூக, சமய, பொருளாதார, அமைப்புகளில் வேறுபாடு களுடைய பிணைப்புகளைப் பெற்றிருக்கிறது.

பழங்குடிகளிடையே காணப்படும் ஒதுக்கல் முறையானது சற்று மாறுபட்டதாகும். பண்பாடு, மொழி, சமயம், பொருளாதாரம் முதலிய அமைப்பு களில் ஒன்றுபட்ட ஒவ்வொரு பழங்குடியினரும் தனித்தனி இனக்குழுக்களாகவே (Ethnic Group) வாழ்ந்து வருகின்றனர். எனினும், பழங்குடிகளின் இன்றைய நிலை மாறுபட்டு வருகிறது. தொழிற் புகுத்தலாலும், பழங்குடி மறுவாழ்வுத் திட்டங்களா லும், பழங்குடிகள், ஏனைய மக்களுடன் கலந்துவாழ வகைசெய்யப்படுகின்றனர். குடியேற்ற நாடுகளி லும் இதே நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் பல்வேறு இனச் சமூகங்களும் இனக் கலப்பு (Racial Amalgamation) அடைகின்றன.

அவாய் (Hawaii), பிரேசில் முதலான நாடுகளில் குடியேற்றம் பெற்ற சமூகங்களிடையே இனக்கலப்பு மிகுந்துவிட்டதால் எப்போதாவது ஒருசில காலங் களில் மட்டுமே இனவேறுபாட்டுணர்ச்சி நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. எனினும், சட்டத்தின் மூலம் மக் களை ஒதுக்கி வைக்கும் (Legal Segregation) முறை இல்லை.

அமெரிக்காவில் இனஒதுக்கல் முறை, இனம், இனத்தின் பூர்வீகம், சமயம், பண்பாடு முதலியவற் றால் அமையப் பெற்ற கலப்புக் கூறுகளால் ஆனதா கும். அமெரிக்க நாட்டின் வெள்ளை அமெரிக்கர் களுக்கும் கறுப்பின நீக்ரோவினருக்கும் காணப்படும் வகுப்பு வேறுபாடுகள், சமூகத்தின் பல செயற்பாடு களிலும் வெளிப்படுவனவாகும். இனவேறுபாட் டுணர்ச்சி (Racial Prejudice) வலுப்பெற்றபோது அமெரிக்க நீதிமன்றம் அப்போதைய அதிகார வருக் கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட 'ஒதுக்கு ஆனால் சம நிலையளி' (Seperate but Equal) என்ற கருத்தைப் பல மாறுதல்களுக்கு உட்படுத்தியது.

இன ஒதுக்கலின்பால் உள்ள பல்வேறு கருத்து களை அரசியலாரும் உலக மக்களும் 1960 க்குப் பிறகு ஆழ்ந்து சிந்தித்தனர். பல்வேறுபட்ட இனக் குழுக்களிடையே இணக்கமும் ஒருமைப்பாடும் 1960 முதலே உருவாக்கப்பட்டன. உணவகங்கள், கடை கள் முதலான இடங்களில் ஒதுக்கலை நடைமுறைப் படுத்தும் சட்டங்களை அமெரிக்க அரசு விலக்கி, முன்னோடியாகத் திகழ்ந்தது. இதன்பிறகு நீக்கி ரோக்கள் வாக்குரிமை பெறும் சட்டத்தை இயற்றிய தும் அது இனக்குழுக்களிடையே இணக்கமும் ஒரு மைப்பாடும் நிலவ வழிகோலியது.

**இன ஒதுக்கீட்டுக் கொள்கை**: வெள்ளை யரின் ஆதிக்கத்திலுள்ள தென்னாப்பிரிக்கா அரசு அந்நாட்டிலுள்ள வெள்ளையரல்லாத மக்களிடம் கடைப்பிடிக்கும் இனக் கொள்கை 'இன ஒதுக்கீட்டுக் கொள்கை' என்று சொல்லப்படுகிறது. அக் கொள்கை கி.பி. 1652-ஆம் ஆண்டு வெள்ளையர்கள் தென் ஆப்பிரிக்காவில் குடியேறத் தொடங்கிய நாளிலிருந்து தோன்றியது எனக் கூறலாம். தென் ஆப்பிரிக்கா அரசு அமைக்கப்பட்ட 1910-ஆம் ஆண் டிலிருந்து அக்கொள்கை, அரசின் அடிப்படைக் கொள்கையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆட்சியில் 1948-ஆம் ஆண்டிலிருந்து இருக்கும் ஆப் பிரிக்கத் தேசியக் கட்சியும் (Afrikaner Nationalist Party), எதிர்க்கட்சியும் ஒன்றோடொன்று போட்டி யிட்டுக் கொண்டு இன ஒதுக்கீட்டுக் கொள்கையை வலியுறுத்தி வருகின்றன. பல பெயர்களினால் கூறப்பட்டு வந்த அக்கொள்கை 1940-ஆம் ஆண் டிற்குப் பிறகு 'இனஒதுக்கீடு' (Apartheid) என்ற பெயரால் அறியப்பட்டு வந்தது. இப்பொழுது இன ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தென் ஆப்பிரிக்கா அரசு 'தனி வளர்ச்சிக் கொள்கை' (Policy of Separ- ate Development) எனக் குறிப்பிடுகிறது.

இன ஒதுக்கீட்டுக் கொள்கை நாட்டு மக்களை இனவாரியாகப் பிரித்துத் தனித்தனியாகக் குடிய மர்த்த வேண்டுமென வற்புறுத்துகிறது. அவ்வாறு தனித்தனியாகக் குடியமர்த்துவதற்குச் சில இன, சமூகக் காரணங்கள் உண்டு என அக்கொள்கையின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். மனிதக் குலம் இனவாரியாகப் பிரிந்துள்ளது; ஒவ்வோர் இனத்திற் கும் அதற்கே உரித்தான தனிப் பண்பு உண்டு; அதனை முழுமையாக வளர்க்க வேண்டுமாயின் ஒவ்வோரினமும் தனித்தனியாக வாழ வேண்டும்; மாறாக, பல இனங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பொதுச் சமுதாயமாக வாழ்ந்தால் அதிலுள்ள ஒவ் வோரினத்தின் வளர்ச்சியும் குன்றிப் போய்விடும் என்பது அவர்களது கூற்றாகும்.

வெள்ளையர்கள் இன ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வலுவான பொருளாதா ரக் காரணங்களும் உண்டு. வெள்ளையர்களின் பண் ணைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். வெள்ளையரல்லாதவர்களை நசுக்கி, எவ்வித உரிமைகளும் இல்லாத நிலையில்

வைத்திருந்தால்தான் அது இயலுவதாகும். எனவே தான் ஆலை, பண்ணை முதலாளிகள் இன ஒதுக்கீட்டுக் கொள்கையை முழுமூச்சுடன் ஆதரிக்கின்றனர்.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படை நோக்கம் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதேயாகும். அந்நாட்டின் மக்கள் தொகையில் வெள்ளையர்கள் 19% மட்டுமே உள்ளனர். அச்சிறுபான்மையினர் மீதியுள்ள 81% பெரும்பான்மை (நீக்ரோக்கள் 68%, ஆசியர்கள் 3%, கலப்பினத்தவர்கள் 10%) மக்களைக் கொத்தடிமைகளாக நடத்துவதன் நோக்கம் இதுவேயாகும். அக்கொள்கையின் விளைவாக வெள்ளையரல்லாத மக்கள் மிக்க தொல்லைகளுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமையும் கிடையாது. அரசாங்கம், இராணுவம், காவல்துறை ஆகியவற்றிலுள்ள பதவிகள் எல்லாம் வெள்ளையருக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. துப்பாக்கிப் போன்ற கருவிகளை வைத்திருக்கவோ எடுத்துச் செல்லவோ கறுப்பர்களுக்கு உரிமையில்லை. வெள்ளையருக்கும் வெள்ளையரல்லாதவர்களுக்குமிடையே பாலுறவும், திருமணமும் சட்ட முறையில் தடை செய்யப்பட்டுள்ளன. வெள்ளையரல்லாதோர் வெள்ளையர் வாழும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு வருவதற்கும், அங்குத் தங்குவதற்கும் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டும். இன ஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்க்கும் எல்லாக் கட்சிகளும், நிறுவனங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. காரணமின்றிக் காலவரையின்றிக் கறுப்பர் தலைவர்களைக் காவலில் வைக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. வெள்ளையர்களின் பகுதியில் சொந்த நிலம் வாங்கவும், அதை வைத்திருக்கவும் வெள்ளையரல்லாதவர்களுக்கு உரிமையில்லை. இருபிரிவினருக்கும் தனித்தனிக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் அமைக்கும் உரிமையும் வெள்ளையரல்லாதோர்க்கு மறுக்கப்பட்டுள்ளது. அவர்களின் குலமரபுத் தலைவர்களை (Tribal Chiefs) நியமிப்பதற்கும், அவர்களைப் பதவி நீக்கம் செய்வதற்குமுள்ள அதிகாரம் வெள்ளையர் அரசாங்கத்திற்கு உண்டு.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் காரணமாகத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் வெள்ளையரல்லாதவர்களுக்குத் தனி நிலப்பகுதிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ளையர் வாழும் நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து தொலைவான இடங்களிலுள்ள அந்நிலப் பகுதிகளுக்குப் 'பாண்டு தாயகங்கள்' (Bantu Homelands) என்பது பெயர். அப்படிப்பட்ட 8 தாயகங்களை உருவாக்க வேண்டுமென்பது தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தின் குறிக்கோளாகும். அத்தாயகங்கள் வெள்ளையரல்லாதோரின் அரசியல் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பேணி வளர்க்க உதவும் என்று வெள்ளையரின் அரசாங்கம் கூறிக் கொள்கிறது. ஆப்பிரிக்க மக்களின் இன மரபுச் சட்டங்களின் (Tribal Customary Laws) படி அவற்றில் அரசாங்கங்கள் செயற்படுகின்றன. அத்தாயகங்கள் சுயாட்சியுடைய அமைப்புகள் என்றும், காலப்போக்கில் ஒவ்வொரு தாயகத்தையும் 'ஓரின அரசு' (Uni Racial State) ஆக வளர்ச்சியடையச் செய்வதுதான் தென் ஆப்பிரிக்க அரசின் நோக்கம் என்றும் வெள்ளையர்கள் கூறி வருகிறார்கள். ஆனால், நடைமுறையில் அத்தாயகங்கள் கிராமியச் சேரிகளாகக் காட்சியளிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கம், கல்வியறிவு இன்மை ஆகியவற்றிற்கு அத்தாயகங்களின் வளர்ச்சியைப் பற்றி வெள்ளையர் அரசாங்கத்திற்குள்ள அக்கறையின்மையே முக்கிய காரணமாகும். வரிச்சுமை, வறுமை ஆகியவற்றின் காரணமாக அத்தாயக மக்களுள் பெரும்பாலோர் வெள்ளையர்களின் ஆலைகள், பண்ணைகள் ஆகியவற்றில் வேலை தேடி அலையும் கூலிகளாக இருக்கின்றனர். நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 13% நிலம் மட்டும் தான் பாண்டுத் தாயகங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நிலம் முழுவதும் வெள்ளையரின் கையிலேயே இருக்கிறது.

பாண்டுத்தாயகங்கள் எந்த அளவிற்குச் சுயாட்சியுடைய அமைப்புகளாக விளங்குகின்றன என்பதற்கு 'திரான்சுகேய்' (Transkei) ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பாண்டுத்தாயகங்களில் மிகப் பெரிதான அந்நிலப்பகுதிக்குத் தலைமை அமைச்சரும், ஓர் அமைச்சரவையும் உண்டு; 110 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட மன்றமும் உண்டு; அதில் 65 உறுப்பினர்களைத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் நியமனம் செய்கிறது. மீதி 45 உறுப்பினர்களைக் கறுப்பர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்; அச்சட்ட மன்றத்தின் தீர்மானங்கள் இறுதியானவையல்ல. அவற்றை நீக்கக் கூடிய அதிகாரம் தென் ஆப்பிரிக்கக் குடியரசுத் தலைவருக்கு உண்டு. திரான்சுகேய் உட்பட எல்லாப் பாண்டுத் தாயகங்களும் தென் ஆப்பிரிக்க அரசின் இறைமைக்கு உட்பட்டே செயற்பட வேண்டும். 1963-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அந்தத் திரான்சுகேய்த் தாயகத்தை, 1976-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்க அரசு ஒரு 'சுதந்திர' நாடென அறிவித்தது. தொடர்ந்து மேலும் மூன்று பாண்டுத்தாயகங்களுக்கும் 'சுதந்திர' நாடுகள் என்ற தகுதியைத் தென் ஆப்பிரிக்க அரசு வழங்கியது. ஆனால், தென் ஆப்பிரிக்காவைத் தவிர வேறு எந்த நாடும் அவற்

றைச் 'சுதந்திர நாடுகள்' என ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டன.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாகத் தான் தென் ஆப்பிரிக்கா பாண்டுத்தாயகங்களுக்குச் 'சுதந்திரம்' வழங்கியுள்ளது. பாண்டுத்தாயகங்களைச் சார்ந்த மக்களின் பெரும்பகுதியினர் அத்தாயகங் களுக்கு வெளியேயுள்ள வெள்ளையர்களின் ஆலை கள். பண்ணைகள் ஆகியவற்றில் வேலை தேடித் திரியும் கூலிகளாக வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர் களுக்குத் தென் ஆப்பிரிக்காவில் குடியுரிமை இல்லா மல் செய்வதற்காகத்தான் வெள்ளையர் அரசு பாண்டு தாயகங்களைச் 'சுதந்திர' நாடுகளென அறிவித்தது.

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக் கொள் கையினால் பாதிக்கப்பட்ட மக்களில் அந்நாட்டில் வாழும் இந்தியர்களும் உட்படுவர். இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கெதிராகக் காந்தி அடிகள் ஓர் அறப் போராட்டத்தைத் தொடங்கி இந்தியர்களின் உரிமைகளை நிலைநாட்டப் பாடுபட் டார். இந்தியர்கள் அதிகமாக வாழும் தர்பன் (Durban) போன்ற நகரங்களிலிருந்து அவர்களை வெளியேற்றித் தனிப்பகுதிகளில் குடியமர்த்துவதற் காக 'இனப் பகுதிகள் சட்டத்தை' (Group Areas Act) வெள்ளையர் அரசு இயற்றி மிகவும் தீவிரமாக அமுல்படுத்தி வருகிறது.

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக் கொள் கைக்கு எதிராக இந்தியா கடந்த அரை நூற்றாண் டாக உலக அரங்கில் அரசியல் முறையில் போராடி வருகிறது. ஐ.நா. நிறுவனத்தினுடைய பொதுச் சபை (General Assembly) 1946-ஆம் ஆண்டு முதன் முதலாகக் கூடிய போது தென் ஆப்பிரிக்காவில் இந் தியர்கள் நடத்தப்படும் முறை பற்றி இந்தியா குறை கூறியது. தென் ஆப்பிரிக்காவின் கொள்கை ஐ.நா. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கும், மனித உரிமைகளுக்கும் முரணானதாகும் என இந்தியா தென் ஆப்பிரிக்காவின் மீது குற்றம்சாட்டியது. இந்தி யர் சிக்கல் ஓர் உள்நாட்டு விவகாரம் என்றும், அதில் தலையிடுவதற்கு ஐ.நா. நிறுவனத்திற்கு உரிமை இல்லையென்றும் தென் ஆப்பிரிக்கா கூறி வருகிறது. ஆயினும், இந்தியாவின் குற்றச்சாட்டிற்குப் பரவ லான ஆதரவு சபையில் காணப்பட்டது. அதன் விளைவாக, இந்தியர்களை ஐ.நா. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப நடத்தப்படவேண்டும் என பொதுச்சபை ஒரு தீர்மானத்தின் மூலம் தென் ஆப்பிரிக்கா அரசைக் கேட்டுக் கொண்டது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக இந்தியா 1952-ஆம் ஆண்டு எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டில் அங்கு நீக்கிரோக்கள் நடத்தப்படும் முறையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பின்னர், ஒவ்வோராண் டும் பொதுச்சபை தென்ஆப்பிரிக்காவின் கொள்கை யைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியது. அத் தீர் மானங்கள் அனைத்தையும் தென்ஆப்பிரிக்கா புறக் கணித்துக் கொண்டே வந்துள்ளது.

ஐ.நா. நிறுவனத்திலும், பொதுநல நாடுகளின் அமைப்பிலும், 1957-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் எண்ணிக்கைகூடியதால், தென் ஆப்பிரிக்காவின் கொள்கை கடுமையான எதிர்ப் புக்குள்ளாகியது. தென் ஆப்பிரிக்காவின் கொள்கை மனித உரிமைகளை மீறுவதும், உலக அமைதிக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதும் ஆகுமென ஐ.நா. நிறு வனத்தின்பாதுகாப்புக் குழு (Security Council) 1960-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவைக் கண்டித்தது. 1961-ஆம் ஆண்டு, தன் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க இயலாமல் தென் ஆப்பிரிக்கா, பொதுநல நாடுகளின் அமைப்பை விட்டு வெளியேறி யது.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கைவிடத் தென் ஆப்பிரிக்காவை கட்டாயப்படுத்தும் பொருட்டு 1962-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐ.நா. வின் பாதுகாப்புக் குழு பல தீர்மானங்களை இயற்றியது. அத்தீர்மா னங்கள், தென் ஆப்பிரிக்காவுக்கு ஆயுதத் தளவாடங் களையும், இராணுவ முக்கியத்துவமுடைய பொருள் களையும் ஏற்றுமதி செய்யக் கூடாது என ஐ.நா. உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டன. ஆனால், தென் ஆப்பிரிக்காவிற்கு ஆயுதங்களை அதிகமாக ஏற்றுமதி செய்யும் பிரிட்டனும், பிரான்சும் அத்தீர் மானங்களை ஏற்க மறுத்து விட்டதோடல்லாமல், தொடர்ந்து ஆயுதங்களை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்தும் வருகின்றன.

உலக நாடுகளின் கருத்து, ஐ.நா. நிறுவனத்தின் தீர்மானங்கள் ஆகியவற்றைச் சிறிதும் மதிக்காமல் தென் ஆப்பிரிக்கா அதனுடைய இன ஒதுக்கீட்டுக் கொள்கையை இன்றும் கடைப்பிடித்து வருகிறது. தென் ஆப்பிரிக்காவுக்கு மேலை நாடுகளின் மறை முக ஆதரவு, சுதந்திர நாடுகளாக மலர்ந்துள்ள மற்ற ஆப்பிரிக்க நாடுகளின் பலக்குறைவு, ஒற்றுமை யின்மை ஆகியவையே இந்த மனிதாபிமானமற்ற கொள்கை இன்றும் நடைமுறையிலிருப்பதற்குள்ள முக்கியக் காரணங்களாகும். எஸ்.மு.

துணை நூல்கள்:

**Mahajan, V.D.**, International Relations, since 1914, Chand & Co. Ltd, New Delhi, 1980.

**Murphy**, R.J. **and Elinsow**, **H.**, Problem & Prospects of the Negro Movement, Belmont Calif, Wadsworth, 1966.

***இனக்கலப்பு***: பல்வகைப்பட்ட இன மக்கள் தம் இனத்தாரை விடுத்து வேறோர் இனத்தாரை மணந்து கொள்வதால் இனக் கலப்படைந்து வருகின்றனர். இந்த இனக்கலப்பு (Miscegenation) வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே பல நிலைகளில் நிகழ்ந்து வருவதொன்றாகும். மனிதர்கள் புவியமைப்பாலும் பண்பாட்டாலும் உடற்கூற்றாலும் வேறுபட்டுப் பல்வேறு இனக்குழுவினராகக் (Ethnic Group) காணப்படுகின்றனர். ஒவ்வோர் இனக்குழுவிற்குள்ளும் பொருளாதாரம், தகுதி, தொழில் முதலான பல சமூகப்படிகள் எழுப்பப்பட்டு மேலும் பல உட்குழுக்கள் காணப்படுகின்றன. இக்குழுக்களே, திருமண அமைப்பில் இனப்பெருக்க மக்கள் தொகையாகவும் (Breeding Population) மாற்றம் பெறுகிறது.

எந்த ஓர் இனக்குழுவும் சிறந்த பண்புகளை மட்டும் கொண்ட மரபணுத் (Gene)தொகுதியினைப் பெற்றிருக்கவில்லை. இதைப் போன்றே எந்த ஓர் இனக்குழுவும் சிறப்பற்ற மரபணுக்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அனைத்துக் குழுவினருமே சிறந்த மரபணுக்களையும், இயல்பான மரபணுக்களையும், சிறப்பற்ற மரபணுக்களையும் கொண்டுள்ளனர். கருவளமுற்ற வெவ்வேறு இனத்தவர்கள் கலப்புறும்போது இவ்விரண்டு இனத்தின் பண்புகளுக்கும்மேல் புதிய பண்புகளும் தோன்றுகின்றன. இனக்கலப்பில் சிறப்பற்ற பண்புகள்தோன்ற வாய்ப்புண்டானாலும், பரந்த நோக்கில் காணும்போது உயர்ந்த பண்புகளைப் பெற்ற மக்கள் குழுக்கள் பெருமளவில் தோன்றலாயினர். இனக்கலப்பு நிகழ்வினாலேயே மனித இனத்தில் வெவ்வேறான பண்புகளைக் கொண்ட பெருமளவிலான மனிதக் குழுக்கள் தோன்றியுள்ளன என எப்.ஏ. ஆன்கின்சு (F.A. Hankins) கூறுகிறார்.

இனக்கலப்பினால் உடற்கூற்றில் இணக்கமற்ற பண்புகள் தோன்றுகின்றன என்ற முற்கால அறிஞர்களின் கருத்தினை 20-ஆம் நூற்றாண்டின் மரபியலாரும் மானிடவியலாரும் உயிரியல்சார் அடிப்படையில் மறுத்துள்ளனர்.

சீன-பிரெஞ்சுக் கலப்பினத்தவர்களும், சீன-செருமானியக் கலப்பினத்தவர்களும் சீன-வெள்ளையர் கலப்பினத்தவர்களும் உடல்சார் பண்புகளில் சிறப்பாகக் காணப்படுகின்றனர் என இவர்களை ஆராய்ந்த பிளெமிங்கு (Fleming) கூறுகிறார்.

இன்றுள்ள உலக மக்கள் தொகை பன்னெடுங் காலமாகத் தொடர்ந்து இனக்கலப்படைந்து வந்துள்ளது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படினும் சில பண்பாடுகளில் இனக்கலப்பு அனுமதிக்கப்படுவதில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள பல மாநிலங்களில் பல்வேறு இனங்களுக்கிடையில் கலப்பு மணத்திற்குத் தடை விதிக்கும் சட்டம் அரசியலமைப்பு முறையிலமைந்ததன்று என அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் 1967-ஆம் ஆண்டு அறிவித்தது. தென் ஆப்பிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கை கலப்பினத் திருமணத்திற்குத் தடை விதிப்பதாகும். பி.டபிள்யு. போத்தா (P.W. Botha) அரசு இத்தடையை 36 ஆண்டுகளுக்குப் பின், 1985-ஆம் ஆண்டு விலக்கிய மறுநாள், அமெரிக்க வெள்ளைப் பெண்ணிற்கும் தென் ஆப்பிரிக்கக் கறுப்பருக்கும் திருமணம் நடைபெற்றது.

***இனக்குழு அறிவியல்***: மொழிக்கும் பண்பாட்டின் பிற பகுதிகளுக்குமிடையே நிலவிவரும் தொடர்பினைப் பற்றிய ஆய்வு, நெடுங்காலமாகவே மானிடவியலாளர்களின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. இதனால், முகிழ்த்த ஒரு மானிடவியற் பிரிவே இனக்குழு அறிவியல் (Ethnoscience) எனப்படும். சில மானிடவியல் கோட்பாட்டினர் பண்பாட்டில் மொழி வகிக்கும் உறுதியான இடத்தை விளக்கவும் முயற்சி செய்துள்ளனர். 'ஒருவன் தாய்மொழியினுடைய இலக்கணமும் பொருளனின் அமைப்பும் அவனுடைய சில சிந்தனைக் கோலங்களை உறுதிப்படுத்துகின்றன' என்னும் சப்பீர் ஒர்புக் (Sapir Whorf) கோட்பாட்டினை இதற்குச் சான்றாகக் கூறலாம். எந்த ஒரு தனி மனிதனாலும் தன் மொழி கொண்டு இயற்கையினை முழுவதும் விருப்பு வெறுப்பின்றி விளக்க இயலாது என்று ஒர்பு கூறியுள்ளார். தன்னுரிமையுடன் ஒருவன் சிந்திக்கும்போது சிலவகை விளக்கங்களால் தடை செய்யப்படுகிறான். எனினும், மொழி, பண்பாடு ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களுள் பலர் ஒர்பின் கருத்தை முழுமையாக மறுக்கும் நிலை இப்போது காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில், அமைப்பியல்சார் மொழியியல் (Structural Linguistics) பற்றி நன்கறிந்த மானிடவியல்சார் மொழியியலார், மொழிப் பரப்புக்குப் புறம்பேயும் மொழியின் அமைப்பினை விளக்கும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றனர். இதுவே இனக்குழுவியல் பொருளின் விளக்க விரிவுக்குக் (Semantic Description) காரணமாகும். இத்தகைய கோட்பாட்டினர், இனக்குழுவியல்

(Ethnography) என்பது வெறும் விளக்கவுரை என்னும் கூற்றை ஏற்க மறுக்கின்றனர். இதற்கு மாறாக இனக்குழுவியல் உண்மையான கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பொதுவாக, இவ்வணுகுமுறையைக் கொண்ட பரப்பே இனக்குழு அறிவியல் எனக் கூறப்படுகிறது. இது 'புதுஇனக் குழுவியல்' (New Ethnography) எனவும் சொல்லப் படுகிறது. இது இனக்குழுவியலில் நம்பும் நிலை (Reliability), ஏற்புடைமை (Validity), மிகு விளக்கம் (Exhaustiveness) ஆகியவற்றைக் கொண்டுள்ள மானிடவியல் துறையின் பல்வேறு அணுகுமுறைகளை வளம் பெறச் செய்யும்.

இந்தத் துறைத் தொடர்பாகப் பொருளன் பகுதி (Semantic Domain) என்னும் சிறப்புச் சொல் வழக்கொன்று தோன்றியுள்ளது. பிற தொகுதிகளிலிருந்து மாறுபடும் வண்ணம் தமக்கே உரித்தான சில பண்புகளைக் கொண்ட பொருள்களின் வகையினை இச் சொற்றொடர் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, 'இருக்கை' என்பது நாற்காலிகள், சாய்விருக்கைகள், சாய்வு மேடைகள், மேசைகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். இதில் 'சாம்பர்' மான் (Sambar) ஆகியவற்றைச் சேர்க்கவியலாது. படிநிலை முறையில் இத்தொகுதியினைப் பல உட்பிரிவுகளாக வகைப் படுத்தலாம். தாம் ஆராயும் மொழிகளின்கண் உள்ள அமைப்புமுறைக் கொள்கை நெறிகளையும் வகைபாட்டினையும் ஆராய்ந்து வெளிப்படுத்துதலே இனக் குழு அறிவியலாளரின் பணியாகும். ஏனெனில், பட்டறிவுகளை வகைபாடு செய்யும் நிலையில், ஒவ்வொரு பண்பாடும் ஏனைய பிற பண்பாடுகளிலிருந்து மாறுபடுகிறது எனக் கருதப்படுகிறது. இதனால், 'இனக்குழு அறிவியல்' என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்குரிய புலமையையும் அறிதல் தன்மையையும் (Cognition) குறிக்கக் காணலாம். இங்ஙனம் சில பண்பாட்டிடையே (Cross-Cultural) வரன் முறைகளுக்கு மாறாகப் பண்பாட்டுப் பட்டறிவிலிருந்து முகிழ்த்த வகைபாடுகள் (Taxonomies) விவரிக்கப்படுகின்றன. மக்கள் தங்களுடைய பட்டறிவு உலகத்தைப் பற்றிப் பரக்கப் பேசும் முறை, அவர்கள் அவற்றை எங்ஙனம் பொருள் கொள்கின்றனர், அவை நிலவுவதை எவ்வாறு புலப்படுத்துகின்றனர் என்பனவற்றை இனக்குழு, அறிவியலாளருக்குத் தெளிவுபடுத்துகிறது. தூண்டுதலால் விளையும் மறுமொழி பற்றிப் பேசும் உளவியல்(Stimulus-Response Psychology) போலன்றி, இனக்குழுவியல் 'பண்பாட்டுக்குத் தக்க நடத்தைக்குரிய விதியினை வரையறுத்துள்ளது' என்கிறார் பிரேக்கு (Frake). மேலும், ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டுள்ள பண்பாட்டைச் சார்ந்த மக்களின் மனங்களில் இழையோடும் எண்ணங்களையும் உய்த்துணர வேண்டும் என்றும் இவர் அறிவுறுத்துகிறார்.

இசுடீபன் தைலர் (Stephen Tylor) இனக்குழு அறிவியலைப் பற்றிக் கூறும்போது 'பொதுமையானதும் மறு வடிவமானதுமாகிய விளக்க முறைகளையும், பொருத்தமான நடத்தையின் எதிர்பார்ப்புகளை முன்னமே கணக்கிடும் வல்லமை வாய்ந்த விளைவுகளைத் தன்னகத்தே கொண்டதுமாகிய இனக்குழுவியலிலிருந்து பெறப்பட்ட பண்பாட்டின் காட்சியே இங்கு வெளிப்படையாக்கப்பட்டுள்ளது' என்கிறார். மேலும், கூர்தல் வழியே மறு கட்டமைப்புச் செய்யப்பட்ட வகைபாடு, பகுப்பாய்வுக் கூறுகள் ஆகியவை உள்ளுறையாக இயங்குகின்றன என்றும் கூறுகிறார். அதாவது இப்புதுமுறை இனக்குழுவியல், பண்பாடுகளைப் புற உலகிலிருந்து காணுதற்கு மாறாக, உள்ளிருந்து ஆராய்ந்து புறஉலகைக் காணச் செய்கிறது. இதனால், விளக்கும் கூறுகள் மானிடவியல் துறையின் சொற் கோவையிலிருந்து (Lexicon of Anthropology) பெறப்படாமல் ஒரு பண்பாட்டின் பொருத்தமான பண்புகளிலிருந்தே அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன' என்று இதன் பரப்பை விரிவு படுத்திக் கூறுகிறார்.

இப்பின்னணியில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள இனக்குழு அறிவியலார், எடுகோள்களும் கோட்பாடுகளும் உருப்பெறுதல் ஒப்புநோக்கு ஆராய்ச்சியின் எல்லைக்குள் வரையறுக்கப்படக் கூடாது என்பதில் உறுதியுடன் நிற்கின்றனர். இந் நிலையில் இனக்குழுவியல் அளவிலேயே எடுகோள்களை உருவாக்கும் நோக்கத்தில் எழுந்ததே இனக் குழு அறிவியல்; அதோடு மட்டுமன்றி, பண்பாட்டாளர்களின் அறிதல் உலகு, (Cognitive World) ஆய்வு ஆகியவை பற்றிப் புரிந்து கொள்ளவும் வகைப்படுத்தவும் மொழியியல் வெளிப்பாடுகளைப் பயன்படுத்தலே இனக்குழு அறிவியல் அணுகுமுறையின் முதன்மையான பண்பாகும். அதே காலத்தில் சொந்தப் பண்பாட்டின் (Native Culture) மீது எவ்வித வெளிப்புற வகைபாட்டுக் கூறுகளையும்(External Catagories) திணிக்காமலிருக்க ஓர் உறுதியான முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறாகச் சொந்தப் பண்பாட்டின் சொல் வழக்கு அமைப்புகளுக்கும் வகைபாட்டு முறைகளுக்கும் இங்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் கண்கூடாகக் காணலாம்.

பல்வேறு பண்பாடுகளிலுள்ள உறவுமுறை அமைப்புகள், நிறச் சொல் வழக்குகள் (Colour Terminologies), தாவரங்கள், விலங்குகள் முதலானவற்றின் வகைபாடுகளை இனக்குழு அறிவியல்

கோணத்திலிருந்து பரவலாக ஆராய ஆய்வுப்பணி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இனக்குழு அறிவியல் முறைகளால், இதுவரை ஆய்வு செய்யப்பட்டுள்ள ஆய்வுப் பரப்புகளைக் காணும்போது, தனது ஆராய்ச் சிக்குச் சொல்வழக்கு அமைப்புகளையே இனக்குழு அறிவியல் சார்ந்துள்ளது என்பது தெளிவாகும்.

வி. சு.

துணை நூல்:

**Dufbin, Marshall**, Cognitive Anthropology, In J. J. Honigmann (ed.) Hand book of Social and Cultural Anthropology, Rand McNally & Co., Chicago, 1973.

**இனக்குழு இசையியல்** என்பது ஒவ்வொரு குழுவினரின் வாழ்க்கையமைப்பிலும் காணப் பெறும் இசைமுறைகளை, அறிவியல் முறைப்படி ஆராயும் ஒரு பண்பாட்டாய்வுப் பிரிவாகும். மக்கள் குழுவினர் அனைவருமே தாம் வாழும் நிலப்பகுதி யாலும், மொழியாலும், வாழ்க்கை முறைகளாலும் ஒன்றுபட்டு இனக்குழுவினராகக் (Ethnic group) காணப்படுகின்றனர். ஒவ்வோர் இனக்குழுவினரும் தம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள், விலங்குகள், இயற்கையமைப்பு, விண்வெளி, உலகம், இசை, சமயம், தெய்வம், வாழ்வின் நிகழ்ச்சி ஆகியவை பற்றி வெவ்வேறான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இக்கருத்தின் அடிப்படையிலேயே உலகத்தின்பால் பொதுக் கருத்தையும் தொடர்பு படுத்தி எண்ணுகின்றனர்.

இனக்குழு இசையியல் (Ethnomusicology) என்னும் சொல்லை 1950-இல் சாப் குன்சுட்டு (Jaap Kunst) என்னும் தச்சு (Dutch) நாட்டவர் உருவாக்கி னர். இசையியலாரையும் மானிடவியலாரையும் கொண்ட இனக்குழு இசையியல் என்னும் கழகம், 1955-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. பண் பாட்டின் பல தலையான கூறுகளுள் ஒன்றான இசையைத் தனியே விரிவாக ஆராயும் பொருட்டு முகிழ்த்த இத்துறை, கி.பி. 1880-இல் ஒப்பீட்டு இசை யியல் (Comparative Musicology) எனக் கூறப்பட்டு வந்தது. இனக்குழு இசையியலார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இசையின் எல்லை (Pitch), மானிடவியல் தரவுகள், அருங் காட்சியகப் பொருள்கள் முதலானவற்றில் ஈடுபட லாயினர். அவர்கள் இவை தவிர்த்துச் சப்பானியரின் கலை இசை (Japanese Art Music), நியூகினியா (New Guinea) பழங்குடிகளின் இசை, ஆப்பிரிக்கக் காதல் சார்ந்த இசை ஆகிய இசைகளையும் ஆங்கிலேயரின் நாட்டுப் புறப் பாடல்கள், ஐரோப்பிய - அமெரிக்கப் பாடல்கள் ஆகியவற்றின் இசைகளையும் ஆராய்வதில் ஈடுபட்டனர்.

இனக்குழு இசையியல், வளர்ந்து வரும் மானிடவியல்சார்ந்த ஒரு பிரிவாகும். இத்துறையில் இக்காலத்தினர் பல்வேறு அணுகுமுறையில் ஒவ்வொரு சமூகக் குழுவின் இசை அறிவினை ஆராய்வதன்வழி பல்வேறு கருத்துகளை வெளிக்காட்ட முற்படு கின்றனர். பழங்குடி மக்களிடையேயும் கிராமப்புற மக்களிடையேயும் இசை ஆழ்ந்த சமூகப் பிணைப் பினைக் கொண்டுள்ளது. சமயச் சடங்குகள், மந்திரம் சொல்லல், சமூக, குடும்ப விழாக்கள், இசையைக் கொண்டு மருத்துவம் புரிதல், ஆவிகள், இயல்பிறந்த சக்திகள் முதலானவற்றிலிருந்து விடுபட இசையைப் பயன்படுத்துதல், ஈமச் சடங்குகளின் போது கையாளப்படும் இசை, இயற்கைச் சீற்றத் தினைக் குறைக்க முயலும் இசை ஆகிய பல்வேறு துறைகளில் பயன்படும் இசையின் தன்மையை இனக் குழு இசையியலார் ஆராய்கின்றனர். பல்வேறு சமூகங்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளின் வகை களையும் அவற்றைச் செய்யும் தொழில் நுட்ப முறை களையும் கண்டறிவதனால் சமூகத்தின் பல்வேறு அமைப்புகளையும் ஆராயலாம்.

**இனக்குழு உயிரியல்:** இருபதாம் நூற்றாண் டில் முகிழ்த்த புதிய அறிவியற் பிரிவுகளுள் ஒன்றே இனக்குழு உயிரியல். அறிவியல்முன்னேற்றம்கொண்டி ராத ஆதிக்குடிகள், பழங்குடிகள், நாட்டுப்புற மக்கள் முதலானோர் தம்மைச் சூழ்ந்துள்ள உலக உயிரினங் களை வகைப்படுத்தி இந்த உயிரினங்களின் பால் அவர்கள் கொண்டிருக்கும் அறிவினையும் மதிப்பு களையும் பிணைப்புகளையும் அறிவதே இத்துறை யின் கருவாகும். இனக்குழு உயிரியல் (Ethnobiology) மனித சமுதாயத்திற்கும் தாவரங்கள், விலங்குகள் முதலான உயிரினங்களுக்கும் இடையிலான தொடர் பினைக் குறித்து ஆராயும்பொருட்டு இனக்குழுத் தாவரவியல், இனக்குழுவிலங்கியல் ஆகிய இரு உட் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு சமூகமும் வெவ்வேறு முறைகளில் உயிரினங்களை வகைப்படுத்தி வைத்திருந்தாலும் அடிப்படையில் சில ஒற்றுமைகள் காணப் பெறுவதும் உண்டு. இந்த ஆய்வுகளை அறியும் இனஉயிரியலை 'நாட்டார் உயிரியல்' (Folk Biology) என்றும் இவர் கள் உயிரினங்களை வகைப்படுத்தும் முறையை 'நாட் டார் வகைப்பாட்டியல்' என்றும் மானிடவியலார் குறிப்பிடுவர்.

இனக்குழுத் தாவரவியல்: ஒரு சமூகம் தன் சுற்றுப் புறச் சூழலில் உள்ள தாவரங்களை வகைப்படுத்தி வைத்துள்ள முறைமைகளைப்பற்றிவிளக்கி ஆய்வதை இனக்குழுத்தாவரவியல் எனக் கூறலாம். 'இனக்குழுத் தாவரவியல்' (Ethnobotany) என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் அமெரிக்க நாட்டின் பொருளியல்சார் தாவரவியல் (Economic Botany)துறையில் சிறந்து விளங்கிய ஆர்சு பெர்கர் (Harsh Berger) என்பவர். ஒவ்வோர் இனக்குழுவின் (Ethnic Group) வாழிடச் சூழலில் காணப்படும் தாவரங்களையும், அவற்றின் வரலாற்றுக்கால நிலை பேற்றையும் (Historical Existence) பொருளாதாரப் பண்பாட்டையும், அச்சூழலின் மக்கள் அத்தாவரங் களின்பால் கொண்டிருக்கும் மதிப்புகளையும், மருத்துவப் பயன்பாடுகளையும், நாட்டின் பொருளா தாரத்தில் அவற்றின் பங்கினையும் பற்றி விவரமாக அறிந்து கொள்ள இனத்தாவரவியல் முற்படுகிறது. மருத்துவத்திற்கு உதவும் தாவரங்கள், நச்சுத் தன்மையுள்ள தாவரங்கள் எவையெவை என மக்கள் அறிந்து வைத்திருப்பதையும் இனக்குழுத்தாவரவியல், இன்று வரை சிறப்புப் பிரிவாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் துணைப்பிரிவு மருத்துவத் தாவரவியல் (Medical Botany) எனவும் சொல்லப்படுவதுண்டு. ஆராயப் படும் சமூகம் வேளாண்மைத் தொழிலைத் தனது வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளது எனின், அவர்களின் உழவுமுறை, வேளாண்மை அறிவியல், தானியம், காய்கறி, கால்நடைத்தீவனம், மலர்ச்செடி வளர்ப்பு, நெசவு சார்ந்த விவசாயம், ஏதேனும் தனி வகைஅல்லது சிறப்புவகைப் பயிர்களை விளைவிக்கும் முறைகள் ஆகியவையும் இனக்குழுத் தாவரவிய லின் பகுதிகளாகும். அவற்றோடு நெசவுக்குத் துணை யான தாவர இழைகளின் பயன்கள் என்பது குறித் துப் பார்க்கும்போது, புறப்பட்டையின் மூலம் செய் யப்படும் பொருள்கள், கப்பல் கட்டுதலில் பயன்படும் பொருள்கள், முடிச்சுகள், பாய், கூடை பின்னுதல், நெசவு நெய்யப்பட்ட வகை, நெய்யப்படாத துணி வகை, காகிதத் தொழில் போன்றவை குறித்தும் ஆராயப்படும். முறைப்படுத்தப்பட்ட இனக்குழுத் தாவரவியல் ஆராய்ச்சி அண்மைக் காலத்தியதுதான் என்றாலும், இதற்கு முன் வந்துள்ள பல வெளியீடு கள் இனக்குழுத்தாவரவியலின் சிறப்புத் தன்மையை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. ஆதிக்குடிக ளோடு தொடர்புற்ற இனக்குழுவியலார், வனவிலங் குத் துறையினர், பயணிகள் முதலானோர் தரும் சில தரவுகள் இனக்குழுத்தாவரவியலுக்கு அடிப்படைத் தரவுகளாக அமைகின்றன. இனக்குழுத்தாவரவியல் ஆராய்ச்சியில் கள ஆய்வு சிறந்த இடம் பெறுகிறது. இவ்வாய்விற்குத் தகவல் கொடுப்பவர் மிக்க அறி வுள்ளவராகவும் நம்பத்தக்கவராகவும் மிகைப்படுத்தா தவராகவும் இருக்க வேண்டும். ஒரு தாவரத்தில் பயன்படும் பகுதிகள், அவற்றைச் சேகரித்தல், செப்ப மிடல், மருந்துத் தயாரிப்பு, மருந்தளவு, மருந்து இடு தல் குறித்தும் தரவு சேகரிக்கப்படுகிறது. இனக்குழு வினர் தாவரங்களுக்குத் தங்கள் மொழியில் வழங்கி வரும் பெயர்களையும் பதிவு செய்து கொள்கின்ற னர். தாவரங்களின் வட்டாரப் பெயர்களே (Local names) சில சமயங்களில் தாவர உருவமைப்பியல் (Morphology), வாழுமிடம் முதலானவற்றை விளக்கு வனவாகவும் அமைவதுண்டு.

இத்துறைக்கான தரவு சேகரிக்க, வெளியிடப் படாத சில பண்டைய இலக்கியங்களும் ஓலைச் சுவடி களும் உதவும். எடுத்துக் காட்டாக இந்தியாவில் வேதகால இலக்கியங்களில் இனக்குழுத்தாவரவியல் ஆராய்ச்சிக்குத் தேவையான பல செய்திகள் அடங்கி யிருக்கின்றன. பழைய இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ள பல தாவரங்களைப் பற்றி இன்றளவும் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியாதவையும் உண்டு (எ-டு. கற்பக மரம்). இனக்குழுத்தாவரவிய லாராய்ச்சி, ஆராயப்படும் சமூகம் தாவரத்தைத் தொன்றுதொட்டு மருத்துவத்திற்குப் பயன்படுத்தும் முறையையும் அறியச் செய்கிறது. இந்தியாவில் கடந்த இருபது ஆண்டுகளாக இனக்குழுத்தாவர வியல் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனினும், அது இன்னும் விரைவாகச் செயற்பட வேண்டும். இந்தியத் தாவரவியல் மதிப்பாய்வுத் துறை (Botanical Survey of India), இனக்குழுத் தாவரவியல் ஆராய்ச்சியில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. இனக்குழுத் தாவரவியல் என்னும் இப் புதிய ஆராய்ச்சிப் பிரிவு, முழுமையாகவும் முறைப் படியும் ஆராயப்படுமானால், அது இவ்வியலுக்கு மட்டுமன்றி, இனக்குழுவியல் (Ethnography), வர லாறு, தொல்லியல், மானிடவியல், தாவரப் புவியியல் (Plant Geography), தாவரவியல், மருத்துவத் தாவர வியல், மருந்தியல் (Pharmacology), தாவரக்கூறாய்வு வேதியியல் (Phytochemistry) போன்ற துறைகளிலும் பல பயன்மிக்க அறிவினைப் பெற இயலும்.

இனக்குழு விலங்கியல்: இத்துறை மனித சமுதா யத்திற்கும் விலங்குகளுக்குமிடையிலான தொடர்பு குறித்து அறியும் ஓர் அறிவியற் பிரிவாகும். இனக் குழு விலங்கியல் (Ethnozoology) என்னும் இப்பிரிவு நாட்டுப்புற விலங்கியல் (Folk zoology) என்றும் சொல்லப்படும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்கள் பாலூட்டிகள், பறவைகள், நீர்வாழ்வன, நிலத்தில் வாழ்வன, மீன்கள், பூச்சிகள் போன்ற விலங்குகளின்பால் வெவ்வேறு வகையான தொடர்பினைக் கொண்டிருப்பர். மனிதனின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையில் விலங்குகளின் பிணைப்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இது, பொதுவாக ஆதிக்குடிகளிடையேயும் நாட்டுப்புற மக்களிடையேயும் அவர்கள் மரபுவழியில் கொண்டிருக்கும் பிணைப்பினை அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டாலும் அறியலாம். அவர்கள் விலங்குகளைத் தெய்வத் தன்மையுற்றனவாகவும் குலக்குறிச் சின்னமாகவும், வழிபடும் மரபாகவும் கொண்டிருக்கின்றனர். விலங்குகள் பொருளாதாரச் செயற்பாடுகளில் முதன்மையாகப் பங்கேற்பதால் அவற்றைத் தம் நண்பராகவும், எண்ணிப் பாடல் புனைவதுமுண்டு. நூயர் (Nuer) பழங்குடியினர் தத்தம் பிரியமான பசுக்களுக்கும் எருதுகளுக்கும் பெயர்சூட்டி அப்பெயரையே தம்பால்அன்புடையவருக்கும் சூட்டுவதுண்டு. இவ்விலங்குகளிடமிருந்து பெறப்படும் கொம்பு, குளம்பு, உரோமம் முதலானவற்றிலிருந்து தம் வாழ்க்கைத் தொழிலுக்குத் தேவையான பொருள்களைச் செய்கின்றனர்.

இனக்குழு விலங்கியல் துறை, ஓர் இனக்குழுவினர் விலங்குகளைத் தம் வாழ்க்கையமைப்பிற்குப் பயன்படுத்தும் முறைகள், அவ்விலங்குகளின் மேல் கொண்டுள்ள உணர்வுகள், விலங்குகளை வீரியமுள்ளவை, வீரியங் குன்றியவை என வகைப்படுத்தும் முறைகள், விலங்குகளின் நோய்களைக் கவனிக்கும் முறைகள், விலங்குகளிலிருந்து பெறப்படும் உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகள் முதலானவற்றை ஆராய்கிறது.

நாட்டார் விலங்கியல், விலங்குகளின் நடத்தைக் கோலங்களை மக்கள் கண்டறியும் விதத்தினையும், அம்மக்கள் காட்டு மிருகங்களையும் தீங்கிழைக்கும் மிருகங்களையும் கட்டுப்படுத்தும் அறிவினையும், அவ்விலங்குகளை வேட்டையாடும் முறைகளையும் வேட்டைக்கு அவர்கள் பயன்படுத்தும் கருவிகளையும் அவர்கள் பண்பாட்டோடு ஒருங்கிணைத்து ஆய்வு செய்கிறது. காண்க: அறிதல்சார் மானிடவியல்.

ஆ.செ.

துணை நூல்கள்:

**Jain, S.K.,** Glimpses of Ethnobotany, Oxford & IBH Publishing Co., New Delhi, 1981.

**Ackernecht, E.,** Medicine and Ethnology, John Hopkins, Baltimore, 1971.

**இனக்குழு ஒப்பாய்வியல்** மானிடவியலின முதன்மையான பெரும் பிரிவுகளுள் ஒன்றாகும். உலகத்திலுள்ள மனித இனங்களும் அவர்கள் பண்பாடுகளும் பரவியுள்ளமை குறித்து ஒப்பீட்டு முறையில் ஆராயும் பெரும் பரப்பை இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) கொண்டுள்ளது. வரலாற்றுக்காலந் தொட்டு மனித இனங்களும் பண்பாடுகளும் பல நிலைகளில் பரவி வளர்ந்து வந்துள்ளன. இவற்றின் ஒவ்வொரு வளர்ச்சி நிலைகளையும் அறிவது முதல் இப்போதுள்ள இனங்களையும் பண்பாடுகளையும் ஒப்பிட்டறிவதுவரைஇத்துறை ஆராய்கிறது. இக்காலச் சமுதாயங்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நிலவும் தொடர்புகள், பண்பாட்டு முறைகள், சூழ்நிலை, வாழ்நிலை ஆகியவற்றின் அமைப்புகள் முதலான பல்வேறு கூறுகளையும் ஒப்பிட்டுக்காண்கிறது. இப்பிரிவு ஓர் அறிவியல் பரப்பாகையால் ஒவ்வொரு பண்பாட்டையும் தனித்தனியே ஆராயாமல் ஒரு பண்பாட்டின் ஒவ்வொரு கூற்றையும் மற்றப் பண்பாட்டோடு ஒப்பிட்டுப் பகுத்தாய்ந்து, ஒரு பொதுவான முறைமையைக் காண்கிறது. இனக்குழுவியல் (Ethnography) ஒரு தனிச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளை முழுவதுமாக விவரிக்கும் பிரிவாக அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய முழுவதுமான களப்பணி விவரமாக விளங்குகிறது. பல சமூகத்தைப் பற்றிய விரிவான களப்பணி விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், அவற்றை ஒருமுகப்படுத்திப் பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டாய்ந்து ஒவ்வொரு பண்பாட்டுக் கூறுகளின்பாலும் பரந்த அளவில் பொது முறையினை வரையறை செய்வதே, இனக்குழு ஒப்பாய்வியலின் உட்கருத்தாகும். எடுத்துக்காட்டாக, வேட்டையாடி-உணவு சேகரிக்கும் பழங்குடிகளின் பிழைப்புப் பொருளாதாரத்தின் (Subsistence Economy) பொதுக் கருத்தை அறியும் பொருட்டுத் தந்தைவழிப் பழங்குடி, தாய் வழிப் பழங்குடி, பல்கணவர் முறைப்பழங்குடி,பல்மனைவிமுறைப்பழங்குடி முதலான பல்வேறு சமுதாய அமைப்புகளைக் கொண்ட பழங்குடிகளிடையே காணப்படும் வேட்டையாடி-உணவு சேகரிக்கும் ஆதாரத் தொழிலின் பல கூறுகளையும் இனக்குழுவியல் ஆய்வுகளிலிருந்து பெற்று, அனைத்துத் தரவுகளையும் ஒப்பிட்டாய்ந்து, ஒரு பொதுக் கருத்தினை உருவாக்குவதாகும். இதைப் போன்றே, பண்பாடுகளின் ஒவ்வோர் அமைப்பின்பாலும் பொதுவான முறைமையைக் காண்பதாகும்.

இனக்குழு ஒப்பாய்வியல் மேற்கூறிய கூறுகளைச் சிறப்பாகத் தனிநிலையில் ஆராயும் பொருட்டுப் பல கொள்கை நிலைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பண்பாடும் பல கால கட்டங்களில் பல நிலைகளை

ஏற்றுவளர்ந்ததை அறியமுற்படும்போது, வரலாற்றுப் பின்னணி இன்றியமையாததாகிறது. இப் பின்னணியுடன் பண்பாட்டை அறிவது பண்பாட்டு வரலாறு (Cultural History) எனவும், பொது ஒழுங்கு முறையில் பண்பாட்டின் வளர்ச்சியை அறிவது 'பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கொள்கை' (Cultural Evolutionism) எனவும் சுட்டப்படுகிறது.

இனக்குழு ஒப்பாய்வியல், முற்றிலும் கோட்பாடுகளைச் சார்ந்த ஒரு மானிடவியல் பரப்பாகும். மனிதர்களின் நடத்தைக் கோலம், மனித நடத்தைகளுக்கும் பண்பாட்டிற்கும் இடையேயான தொடர்புகள் முதலானவற்றின் மீதான கோட்பாடுகளை நெறிப்படுத்துகிறது. தொடக்க காலங்களில் இனக்குழுவியலார், பெரும்பான்மையாகத் தொழில் சாராச் சமூகங்களையும், மேலைநாட்டவரல்லாத சமூகங்களையும் தங்கள் ஆய்வுப் பரப்பில் கொண்டிருந்தனர். இக்குடிகளுக்குத் தொன்மைக்குடி, பழங்குடி, எழுத்தறிவில்லாக்குடி, எளியகுடி, தொழில்சாராக்குடி எனச் சில பாகுபாட்டுக் காரணிகளை முன்வைத்துப் பெயரிட்டனர். இவர்கள் அனைவரும் 'திணைக்குடிகள்' (Native Peoples) என்றும் கூறப்பட்டனர். இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னரே, அமெரிக்க நகரச் சமுதாயங்களும், தொழில்துறை சார்ந்த ஐரோப்பியச் சமுதாயங்களும் இனக் குழுவியல் பரப்பில் உள்ளடக்கி ஆராயப்பட்டு வருகின்றன. இதனையடுத்துக் கலப்புச் சமுதாயங்களை (Complex Societies) மானிடவியல் ஆய்வுப் பரப்பு முதன்மையாக ஆராய முற்பட்டது. இதனால் இனக்குழு, ஒப்பாய்வியல் பரப்பு விரிவடைந்தது. எளிய சமூகங்களின் பண்பாட்டு ஒப்பாய்வுகளைக் கண்டறிந்து வகுத்த பண்பாட்டுக் கொள்கைகள், தொழில்சார் சமூகங்கள் கலப்புச் சமூகங்கள் முதலானவற்றின் ஒப்பாய்வுகள் அனைத்தும், மக்களின் வாழ்க்கை முறைகளை முழுவதுமாகத் தெளிவுபடுத்தியதுடன் மானிடவியலின் பண்பாட்டு மீதான கொள்கைகளையும் விரிவுபடுத்தி முழுமைப்படுத்தியது எனலாம்.

இனக்குழு ஒப்பாய்வியலின் வரலாற்றுக்கால வளர்ச்சி: இனக்குழு ஒப்பாய்வியலின் வளர்ச்சியை அறிய, இத்துறைக்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளையும் நிறுவனங்களையும் அறிய வேண்டும். இங்கிலாந்தில் கி.பி. 1843-ஆம் ஆண்டில் 'இனக்குழு ஒப்பாய்வியல் கழகம்' (Ethnological Society) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலேயே மானிடவியல் களப் பணிக்கான விளக்க ஏட்டினை இக்கழகம் வெளியிட்டது. பின்னர் கி.பி. 1863-ஆம் ஆண்டு இலண்டனில் 'மானிடவியல் கழகம்' (Anthropological Society) தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1871-இல் இரண்டு கழகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 'அயர்லாந்து, பிரிட்டன் மானிடவியல் நிறுவனம்' (Anthropological Institute of Great Britain and Ireland) என்ற பெயருடன் விளங்கியது. பின்னர், 1907-ஆம் ஆண்டில்,'பேரரசு'(Royal) என்ற முன்னடைவு சேர்க்கப்பட்டு 'அயர்லாந்து, பிரிட்டன் நாடுகளின் பேரரசு மானிடவியல் நிறுவனம்' என விளங்கியது. அமெரிக்காவில் கி.பி. 1842-ஆம் ஆண்டில், அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் கழகமும் (American Ethnological Society) கி.பி. 1879-இல் 'வாசிங்டன் மானிடவியற் கழகமும் (Anthropological Society of Washington), 1902-இல் அமெரிக்க மானிடவியல் கழகமும் (American Anthropological Association) தோற்றுவிக்கப்பட்டன. பிரான்சில் 'பாரிசு இனக்குழு ஒப்பாய்வியல் கழகம்'(The Society Ethnologique De Paris) கி.பி.1828-ஆம் ஆண்டிலும், செருமனியில் இனக்குழு ஒப்பாய்வியல் கழகம் கி.பி. 1869-ஆம் ஆண்டிலும் நிறுவப்பட்டன.

இனக்குழு ஒப்பாய்வியலார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுத்து வைக்கப்பட்ட தொன்மைப் பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிட்டு ஆய்வதிலும் சமகாலப் பண்பாடுகளை ஒப்பிட்டு ஆய்வதிலும் ஈடுபட்டனர்.அப்போது, இனக்குழுவியலுக்கும் இனக்குழு ஒப்பாய்வியலுக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. ஏனெனில், இனக்குழுவியலார் தாம் ஆராயும் பண்பாட்டுடன், அண்டைய பண்பாடுகளைக் குறித்தும் ஒப்பிட்டு எழுதி வந்தனர். தொடக்க காலத்தில் புவியியலுக்கும் மண்ணியலுக்கும் எவ்வாறு தெளிவான தனித்தன்மை இல்லையோ அவ்வாறே இனக்குழுவியலுக்கும் இனக்குழு ஒப்பாய்வியலுக்கும் தெளிவான தனித்தன்மை காணப்படவில்லை. இனக்குழு ஒப்பாய்வியல் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகுந்த வளர்ச்சி நிலையினை எட்டியது. வெர்னி ரே (Verne Ray) தாம் தொகுத்த 7,633 பண்பாட்டுக் கூறுகளும், சார்சு பீட்டர் முர்டாக்கு (George Peter Murdock) தொகுத்து வெளியிட்ட 1000க்குச் சற்றுக் குறைவான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட இனக்குழுவியல் வரைபடமும் (Ethnographic Atlas) இனக்குழு ஒப்பாய்வியலின் வளர்ச்சியினைக் குறிப்பதாகும்.

படிமலர்ச்சி ஆய்வுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதனால் இனக்குழு ஒப்பாய்வியலில் இரண்டு பிரிவுகள் தொடங்கப்பட்டன. ஒரு பிரிவு அமெரிக்க நாட்டில் பிரான்சு போவாசுவாலும் (Franz Boas) மற்றொரு பிரிவு செருமனியில் இரட்சல் (Ratzal), புரோபனியசு (Probenius) ஆகிய இருவராலும் தோற்றம்

பெற்றன. இரண்டு பிரிவுகளுமே பண்பாட்டு வளர்ச்சியில் பரவலும் (Diffusion) இடப் பெயர்ச்சியும் (Migration) வரலாற்றுக் காலத்தினூடே நிகழ்ந்து வருகின்றன என வலியுறுத்திக் கூறின.

அமெரிக்கர், செருமானியர் முதலானோர் ஏற்படுத்திய பிரிவுகளை அடுத்து, 20- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், செயற்பாட்டியல் பிரிவுகள் (Functional Schools) ஏற்படலாயின. இவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், ஒருவழிப் படிமலர்ச்சியியலாரையும் (Unilinear Evolutionists) பண்பாட்டு வரலாற்றாளர்களையும் (Culture Historicalists)ஒதுக்கி, மலினோசுக்கியும்(Malinowski), இராட்கிளிப் பிரௌனும் (Radcliff-Brown) வகுத்த செயற்பாட்டியற் கோட்பாட்டின் (Functionalism) வழிச் சமுதாயத்தின் ஒவ்வொரு செயலிலும் காணப்படும் முறைகளையும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ள தன்மையினையும் அறிய முற்பட்டனர். அதன் பின்னர், அமெரிக்க நாட்டில் முர்டாக்கு, பண்பாட்டிடை ஆய்வுகளை (Cross-Cultural Studies) மேற்கொண்டார். இதுபிற்கால இனக்குழு ஒப்பாய்வியல் துறையில் முதன்மையான பங்கினைப் பெற்றுவிட்டது.

துணை நூல்கள்:

**Dixon, R.B.**, The Building of Cultures, Scribner, New York, 1928.

**Lowie, R.H.**, The History of Ethnological Theory, Farrar and Rinehart, New York, 1937.

**Murdock, G.P.**, Social Structure, Macmillan, New York, 1949.

**இனக்குழூச் சொற்பொருளியல்**: மக்களின் பண்பாட்டு அமைப்புகளுக்கும் அவர்கள் பேசும் மொழிகளின் சொல் அமைப்புகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இத்தொடர்பினை ஆய்ந்துணரும் பரப்பில் சொற்பொருளின் (Semantics) பண்பு இன்றியமையாதது. ஒவ்வொரு மொழியின் சொற்கோவை அக்குழுவின் பண்பாட்டுச் சூழலுடன் தொடர்பு பெற்றுப் பண்பாட்டுக் குணநலன்களை வெளிப்படுத்தும் இயல்பினை அறியும் இனக்குழுச் சொற்பொருளியல் (Ethnosemantics), மானிடவியல் சார் மொழியியலின் ஒரு பிரிவாகும்.

ஒரு மொழியின் சொற்கோவையை ஆழ்ந்து ஆராயும்போது மொழிக்கும் பண்பாட்டிற்கு மிடையே மிகப் பெரியதோர் உறவு காணப்படுவதையும் பண்பாட்டுச் சூழலுடன் அம்மொழியின் சொற்கோவை தொடர்பு பெறும் சிறப்பு அமைப்புகளையும் சொற்பொருளியலார் (Semanticists) சுட்டிக் காட்டுவர். ஒவ்வோர் இனக்குழுவினரும் தம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம், விலங்குகள், தாவரங்கள், உலகம் முதலான அனைத்தையும் தத்தம் மனப்பாங்கின்படி வகைப்படுத்தும் இயல்பினைக் கொண்டுள்ளமை கண்கூடு. ஒரு மொழியைப் பேசுபவர்கள் தாம் சார்ந்த சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் வகைப்படுத்தவும் விளக்கிக் கூறவும் இனங்கண்டுகொள்ளவும் முற்படுகின்றனர். அன்றாட வாழ்வின் பல அமைப்புகளை விளக்கிப் பேசும்போது பல சொற்கள் கையாளப்படினும் ஒருசில குறிப்பிட்ட அமைப்பில் பல்வேறு பண்பாடுகளுக்கிடையே வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் காணப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக உடலின் உறுப்புகளைப் பகுத்தலிலும், எண்ணிக்கையை எண்ணுதலிலும், அளவையையும் காலத்தையும் அளத்தலிலும், நிறங்களைச் சுட்டிக்காட்டலிலும் பல முறைகள் பல்வேறு பண்பாடுகளில் கையாளப்படுகின்றன. புறப்பண்பாட்டு இயல் நிகழ்ச்சிகளில் பண்பாடு, தமக்குள் வேறுபடுவதோடு நில்லாது தாம் அமைக்கும் புறப் பண்பாட்டு உள்ளொளிகளிலும் வேறுபடுகிறது.

சொற்கோவையின் (Vocabulary) அளவு, சிறப்பு நிலை, வேறுபடுத்தும் நிலை ஆகியவற்றின் வாயிலாகப் பண்பாட்டு வலியுறுத்தலின் கருத்துகள் மொழியில் நேரடியாக எதிரொலிக்கப்படுகின்றன. ஒரு மொழியைப் பேசுபவர்களின் நெருங்கிய உறவுடைய சுற்றுச் சூழல் அல்லது பண்பாட்டுக் கூறுகளின் தொடர்பாக, மிகுதியான தனிச் சொற்களும் ஒருபொருட்பன்மொழிகளும் (Synonyms) நுண்பகுப்புகளும் காணப்படுகின்றன. இனக்குழுச் சொற்பொருளியலார் ஒவ்வொரு மொழியிலும் காணப்படும் உண்மையானதும் கற்பனையானதுமான பன்மைகள், வினைச்சொற்கள், உருவகங்கள் முதலான அனைத்தும், பண்பாட்டுப் பரப்பில் தொடர்புற்று வெளிப்படுவதைச் சொற்பொருளைக் கொண்டு ஆராய்வர். மொழியையும் பண்பாட்டையும் உறவுபடுத்தி ஆராயும் மானிடவியல்சார் மொழியியலார் இனக்குழுச் சொற்பொருளின் துணைக்கொண்டு பண்பாட்டின் பின்னணியைக் கண்ணுறுகின்றனர். இனக்குழுச் சொற்பொருளியல் ஆய்வுகள் மானிடவியல், மொழியியல் ஆகிய இரு துறைகளுக்கும் பொதுவாக அமைந்து நிற்கின்றன.

ஜெ.பா.

**இனக்குழூப்புவியியல்**: மனித இனத்தின் சமூகம், பண்பாடு, தொழில்நுட்பம் ஆகியவை தாம் சார்ந்திருக்கும் நிலச் சூழலுடன் கொண்டிருக்

கும் தொடர்புத் தன்மைகளையும், உலகின் பல பாகங்களில் பரவியுள்ள மனித இனங்கள் ஏற்றிருக்கும் வாழ்க்கைச் சூழல் அமைப்புகளையும் ஆராயும் மானிடவியல் பிரிவே இனக்குழுப் புவியியலாகும் (Ethnogeography), இப்பிரிவு 'மனிதப் புவியியல்' (Human Geography) 'மானிடப் புவியியல்' (Anthropogeography) என்றும் வழங்கப்படுகிறது. மனிதப் பண்பாட்டையும் சமூக அமைப்பையும் அறியும் மானிடவியலார் இக் குழுப்புவியியலைச் சமூகப்புவியியல் (Social Geography), பண்பாட்டுப் புவியியல் (Cultural Geography) என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

வாழ்வியலில் பல்வேறு துறைகளுக்கிடையே ஒன்றை ஒன்று சார்ந்து அவற்றின் கொள்கைகளையும் முறைகளையும் தம் துறைகளுக்கேற்ப மாற்றியமைத்து, வளர்ச்சியுறும் ஆய்வுப் பிரிவுகள், அண்மைக் காலங்களில் முகிழ்த்து வருகின்றன. அவ்வாறான பிரிவுகளுள் ஒன்றே இனக்குழுப்புவியியலாகும். மனிதன் இயற்கைத் தேர்வினாலும் சூழ்நிலையாலும் உருவாக்கப்பட்டவனாதலால், அவன் வாழ்க்கை முறைகளை அவன் வாழும் தரைச் சூழ்நிலையாலேயே (Terrestrial setting) அறியச் செருமானிய மானிடவியலாராகிய பிரீட்ரிச் இரட்சல் (Friedrich Ratzal)இப்பிரிவை உருவாக்கினார். இவர் கி.பி.1882 இல் எழுதி வெளியிட்ட 'மானிடப் புவியியல்'(Anthropogeography) முதல் தொகுதியில், தாம் எடுத்துக்கொண்ட சமுகத்தினை விவரிக்குமுன், அச்சமுகத்தினரின் சூழ்நிலையை மிக விரிவாகப் பகுத்தாய்ந்து, மக்களுக்கும் மக்கள் கொண்டுள்ள வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தும்பண்பாட்டிற்கும் விளக்கம் கண்டார். இவர் கி.பி.1891-இல் வெளியிட்ட இரண்டாம் தொகுதியில், முதல் தொகுதியில் கையாண்ட முறையினை எதிர்மறையாகக் கையாண்டார். மனிதன் இயற்கையினைப் பயன்படுத்தும் முறைகளை விளக்கி, மனிதன் இயற்கையினால் உருவாக்கப் பட்டவன் என்பதைவிட அவன் இயற்கையை வெல்லும் திறனுடையவனாக இருக்கின்றான் என்பதே பொருத்தமுடையது எனக் கூறுகின்றார்.

பின்னர், இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnolgy) இனக்குழுவியல் (Ethnography) துறைகளில் தரவுகள் சேகரிப்பதில் இனக்குழுப் புவியியலின் பரப்பு. முதன்மையானதாகக் கருதப்பட்டது. தாம் ஆராயும் சமூகத்தின் புவியியலமைப்பினைப் பெற, நிலக்கிடக்கையியல் (Topography) காலநிலையியல் (Climatology) முதலான பிரிவுகளின் அறிவின துணைக் கொண்டு ஆய்கின்றனர்.

பிரீட்ரிச் இரட்சல், செருமானிய மொழியில் எழுதிய நூலின் ஆங்கில மொழியாக்கமான'மனிதக் குலத்தின் வரலாறு' (History of Mankind) என்னும் நூலில் இனக்குழுப்புவியியலை அறிமுகப்படுத்தினார். இவர்தம் மாணாக்கர்களும் பிற்கால மானிடவியலாளர்களும் இப்பரப்பினை விரிவுபடுத்திப் பல்வேறு அணுகுமுறைகளைப் புகுத்தினர். சூழ்நிலையானது. பண்பாட்டை மேம்பாடடையச்செய்வதில் ஒரு நிலையான காரணியாகவோ கட்டுப்படுத்தும் காரணியாகவோ செயற்படும்;அல்லது எதிர்மறையாகச் செயற்படும். பண்பாட்டின் தலையான கூறுகளாகப் பொருளாதாரம், தொழில்நுட்பம், அரசியலமைப்பு, சமயம், கலை முதலானவற்றைக் குறிப்பிடலாம். வாழிடச் சூழ்நிலையில் அனைத்துக் காரணிகளும் ஒரே சீரான உறவினைப் பெற்றிருக்கவில்லை எடுத்துக்காட்டாக, சமய வழிபாடுகளும் கலைப் பொருள்கள் செய்வதில் கையாளும் திறனும், பொருளாதார அமைப்பு, தொழில்நுட்பம் ஆகிய அமைப்புகளைப் போல் நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருக்கவில்லை. சமூக, அரசியல் செயற்பாடுகள், பொருளாதார, அமைப்பையே நேரடியாகச் சார்ந்திருக்கின்றன. இருப்பினும், பல்வேறு சமூகத்தில் கலையும் சமயமும் இயற்கை அமைப்பினைப் பெரிதும் சார்ந்துள்ளமை கண்கூடு. ஆதிக்குடிகளும் பழங்குடிகளும் தம் சமய நம்பிக்கையையும்இயற்கைஆற்றல்களையும் இயல்பிறந்த ஆற்றல்களையும் கொண்டுள்ளமையால், இயற்கையின் வாழிடச் சூழல் அமைப்புகளைப் பல பொருள்களில் கலைப் பொருள்களாகச் செய்து வழிபடுகின்றனர்.

இந்நிலையில் சூழ்நிலை, கட்டுப்பாட்டுக் காரணியாக அமைகிறது. இதைப் போன்றே ஒரு சமூகத்தின் தொழில் நுட்பத்திறன் மிகுந்திருப்பின், மக்களின்மீது சூழ்நிலையின் செயல்திறன் குறைவானதாக இருக்கும். சூழ்நிலையின் ஆக்கத் திறன்களை மிகுதியான அளவில்கொண்டிருக்கும்பண்பாடு, குறைவான அளவிலேயே மாற்றத்தைப் பெறும் இயல்பினது. இவ்வகையான சூழ்நிலைத் தொடர்புகள் குறித்த ஆய்வுகளைப் பிற்கால இனக்குழுப்புவியியலார் 'பண்பாடு-சூழ்நிலை அடிப்படை உறவுகள்'(Fundamental Culture Environment Relationship) என்னும் அணுகுமுறையில் ஆராய்ந்தனர். இதன்வழி வகுத்த 'விதிமுறை சார்ந்த சூழ்நிலைக் கொள்கை' (Environmental Determinism) மனிதன் சூழ்நிலையோடு செயற்படும் அனைத்துச் செயற்பாட்டுச் சூழ்நிலைகளையும் விளக்குவதாகும்.

**இனக்குழு மருத்துவம்:** தொன்மைச் சமூகப், தொழில்சார்பற்ற சமூகப், மேலைநாட்ட...

ரல்லாத சமூகம் ஆகிய சமூகங்களில் மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களின்மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், அவற்றைக் குணப்படுத்தும் முறைகள் முதலானவற்றைப் பற்றி அறியும் ஒரு மானிடவியற் பிரிவே இனக்குழு மருத்துவம் (Ethnomedicine) ஆகும். மானிடவியலின் ஒவ்வொரு பிரிவும் மனித இனத்தின் வரலாற்றுக் கால நிகழ்வில் உயிர்சார் படிமலர்ச்சியையும் பண்பாட்டுப் படிமலர்ச்சியையும் அறிகிறது. அதன்வழி இனக்குழு மருத்துவம், மனித இனங்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் தத்தம் சுற்றுச் சூழல், தொழில் நுட்பம், பண்பாடு ஆகியவற்றோடு வாழ்வின் ஒவ்வோர் அமைப்பிலும் வெவ்வேறான இனக்குழுக்கள் கொண்டிருக்கும் நோய் முறைகளைப் பல்வேறு பரிமாணங்களில் வெவ்வேறான அணுகுமுறைகளில் ஆராய்கிறது. இத்துறை 'நாட்டுப்புற மருத்துவம்' (Folk Medicine) எனவும் 'தொன்மை மருத்துவம்' (Primitive Medicine) எனவும் ஒருசில மானிடவியலாரால் கூறப்படுவதுண்டு.

இனக்குழு மருத்துவம் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே பெரிதும் வளர்ச்சி நிலையினை எட்டத் தொடங்கியது. பல்வேறு பண்பாடுகளை ஆராய்ந்த பண்பாட்டு மானிடவியலாரும், இனக்கூறுகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்த உடல் சார் மானிடவியலாரும் (Physical Anthropologist), மருத்துவவியலாரும், உளவியலாரும், தொன்மை மக்களின் பண்பாடு, சமூகம், உளம், நடத்தைமுறை ஆகியவை நோய்முறைகளோடு ஒன்றியுள்ள முறைகளைத் தத்தம் அணுகுமுறையில் ஆராய்ந்தனர். உலகம் முழுவதுமுள்ள தொன்மைப் பண்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் நோய்கள் வருவதற்குச் சூனியம், விலக்குகளை மீறுதல், நோய்ப்பொருள் உடலினுள்புகுதல், உயிர்ப்புப் பொருளை இழத்தல் ஆகிய நான்குமே காரணங்கள் என நம்புகின்றனர் எனக் கூறுவார் கிளமண்டுசு (Clements). இம்மக்கள் நோய் வருவதற்கான பல காரணங்களைக் கொண்டிருப்பது போன்றே பல வகையான சிகிச்சை முறைகளையும் கொண்டிருக்கின்றனர். தொன்மைக் குடிகளின் மருத்துவம் அடிப்படையில் இருவகையான தாகும். அவை நோயை உண்டாக்கும் இயற்கை இறந்த ஆற்றல்களைக் கட்டுப்படுத்துவதும் நோய் வாராமல் தடுக்க இயல்பிறந்த ஆற்றல்களை வழிபடுதலும் ஆம். ஆதிக்குடிகளும் பழங்குடிகளும் பிற தொன்மைச் சமூகத்தினரும் நோயைக் கட்டுப்படுத்த அல்லது மருத்துவம் செய்ய மந்திரம், சூனியம், பில்லி சூனியம், மாயவித்தை, உயிர்ப்பலியிடுதல், குலக்குறிச் சின்னங்கள், முன்னோர்கள், ஆவிகள், இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றை வழிபடுதல், உடலில் துளையிடுதல், கீறுதல், மருந்துப் பொருள்களைத் தடவுதல் முதலிய முறைகளைக் கையாளுகின்றனர். இவ்வகையான மருத்துவத்தை 'மாயவித்தை மருத்துவம்' அல்லது 'மந்திர மருத்துவம்' எனவும் மானிடவியலார் கூறுவர். இவர்களிடையே சிகிச்சை முறைகளைச் செய்பவர்கள் பெரும்பாலும் சமயச் சார்புற்றவர்களாகவும் மந்திரம் கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் தம் செயல்களுக்கு ஏற்பத் தெய்வத்தன்மையுற்றவர் (Shaman), வருவதுரைப்பவர் (Prophet), சூனியக்காரர் (Sorcerer), சமயகுரு (Priest) எனப் பல வகையினராகப் பாகுபடுத்தப் பட்டுள்ளனர். தெய்வத் தன்மையுற்றவர்கள் சமயப் பேராளர்களாவர். நோயுற்றோருக்கு மருத்துவஞ் செய்து காத்தலும், தம் சமூகத்திற்கு நோய்வாராமல் தடுத்தலும், சமூகத்தின் சமய வழிபாடுகளை மேற்கொள்ளுதலும் இவர்களது பணியாகும். வருவதுரைப்பவர் இயற்கையாற்றலுடன் தொடர்புடையவராவர். தெய்வத்தன்மையுற்றவர்களைப் போன்றே இவர்களும் இயற்கையாற்றலோடு தொடர்புற்றுத் தம் சமூகத்தினருக்கு ஏற்படும் தீமைகளை முன்னறிவித்துக் காப்பர். இயற்கையில் அமையப் பெற்ற வாழ்க்கையமைப்பைக் குறை கூறுவர். செயற்கை முறைகளைக் கையாளுவதால் மட்டுமே வாழ்வில் மேம்பாடு அடைய முடியும் என்னும் கொள்கையைக் கூறிவருபவர்களாவர். சூனியக்காரர்கள் முன்னவர்களைப் போலன்றித் தம் பகைவர்களையும் விரும்பத்தகாதவர்களையும் இடையூறுசெய்து கொன்றுவிடும் தன்மையர். சமயகுருமார் பெரும்பான்மையாகத் தொன்மைச் சமூகங்களில் காணப்படுவதில்லை. இக்காலச் சமூகங்களில் வளர்ச்சியடைந்த சமயக் கொள்கையை ஏற்று அவற்றை மக்களுக்குக் கற்பித்தலே முதன்மையான செயலாகக் கொண்டவராவர்.

உலகின் பல பகுதிகளிலும் வாழும் பல்வேறு சமூகத்தினரின் மருத்துவ முறைகள் மானிடவியலாரால் அறியப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் மானிடவியலாரிடையே இனக்குழு மருத்துவம் பற்றிய கொள்கைகளை மாற்றியமைக்கும் கருத்து வலுப்பெற்று வருகிறது. சமயம், மருத்துவம், மனப்பாங்கு ஆகிய மூன்றும் மனிதனின் ஒவ்வோர் உடல் நலன் சார்ந்த செயல்களில் பங்கேற்பதால் 'நாட்டுப்புற மருத்துவம்' என்னும் கூற்றை மாற்றிச் 'சமூக மருத்துவம்' (Social Medicine) என்னும் கருத்தோடு அறிய முற்பட வேண்டும் என்பார் ஆக்கர்நெக்டு (Ackerknecht). இலிபன் (Lieban), உரூபல் (Rubel), பிரைசு வில்லியம்சு (Price-Williams) ஆகியோர் பல்வேறு இனக்குழுக்களிடையே நிலவும் மருத்துவ முறைகளை ஆராய்ந்தவர்களாவர். இவர்

கள் ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் ஒவ்வொரு நோய்க்கும் அவர்கள் கொண்டிருந்த சொல்வழக்கிற்கும் பொருளுக்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்தனர். ஒரே வகையான நோய் வெவ்வேறான பண்பாடுகளில் அந்தந்த மக்களிடையே காணப்பட்ட முறைகள், பண்பாட்டு ஒப்பாய்வுகளுக்கும் மக்களின் அறிதிறனை ஒப்பிடுவதற்கும் வழிவகுத்தன.

மாயத் தன்மை மிக்க தொன்மை மக்களின் மருத்துவத்திற்கும் அறிவியல் சார்ந்த தொழில்சார் சமூகத்தினரின் மருத்துவத்திற்குமுள்ள வேறுபாடுகளை மானிடவியலார் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். தொன்மை மருத்துவக் கூறுகள் தொழில் சார்பற்ற மக்களிடையே காணப்படினும் அறிவியல் மருத்துவம் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

துணை நூல்:

**Clements**, **P.E.**, Primitive Concepts of Disease, University of California, California, 1932.

***இனக்குழு மொழியியல்***: புதைநிலைப் பேச்சின் 'கருத்தாக்கக்குறியீடே' (Conceptual Code) 'மொழி' என்றும் சமுதாய நடத்தைக்குப் புறத்தேயுள்ள கருத்தாக்கக் குறியீடே 'பண்பாடு' என்றும் உணர்ந்து கொண்டால், 'பண்பாட்டின் திட்டவட்டமான பகுதியே மொழி' என்பது பெறப்படும். பண்பாடுகளை அறியும் முயற்சிக்கு உறுதுணையென இனக்குழுக்களின் மொழிகளைக் கற்ற பல மானிடவியலாளர், மொழிகளுக்கும் அவை சார்ந்த பண்பாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவு நிலவுவதைச் சுட்டி வந்தனர். இந்நிலையில் முகிழ்த்த ஒரு துறையே 'இனக்குழு மொழியியல்' (Ethnolinguistics). 'மக்களின் பண்பாட்டு அமைப்புகளுக்கும் அவர்தம் மொழிகளின் சொல் அமைப்புகளுக்கும் இடையே திகழும் நெருங்கிய உறவுநிலையை ஆய்ந்துணரும் தனிப் பெருந்துறையே இனக்குழு மொழியியல் என்பார் இக்கர்சன் (Hickerson).

தமது சமுதாயத்தின் கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாகிய மொழியின் உறுதுணையோடு மனித குலம் நிலைபெற்றிருக்கிறது. ஏனெனில், ஒரு குழுவின் மொழிப் பயன்பாட்டின் மீதே 'உண்மையான உலகு' தன்னையறியாமலேயே பெரும்பான்மையும் கட்டப் பெற்றுள்ளது.

ஒரு மொழி தன்னைப் பேசுபவர்களைத் தாம் சார்ந்த சுற்றுச் சூழலுடன் தம்மைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும், இயற்கை மற்றும் பண்பாட்டுப் பொருள்களை விளக்கிக் கூறவும், அவற்றை இனங்கண்டு கொள்ளவும், தமது சமுதாயச் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டு அவற்றை ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கவும் வழிவகை செய்கிறது. பறவைகள், மீன், சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசும்பொழுது இந்த முயற்சி அவ்வளவு ஒன்றும் பெரிதானதன்று. ஏனெனில், இவையனைத்தும் குறிப்பிட்ட எல்லைக் கோடுகளுக்குள் வரையறுக்கப்பட்டனவாகும். இதற்கு நேர் மாறாக, பல்வேறு மொழிகளுக்கிடையே தொடர்ச்சியான அல்லது வரையறையற்ற பரப்புகள்தொடர்பான பட்டறிவுகளைத் துண்டாக்கி வகைப்படுத்தும் முறைகளில், பல்வேறு மொழிகளுக்கிடையே மிகத் தெளிவான மாறுபாடு நிலவுகிறது. மனித உடல் போன்ற 'முழுமைகள்' (Wholes) பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. எண்ணுதற்கும் அளத்தற்கும் ஏற்ற வகையில் 'நேரம்' (Time), 'இடம்' (Space) 'அலகுகளாகப்' (Units) பகுக்கப்படுகின்றன. ஐம்பொறிகளின் பட்டறிவுகளான ஒலிகள், சுவைகள், நிறங்கள் போல்வன குழுப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. புறப்பண்பாட்டு உள்ளொளிகளின் (Material Phenomena) அமைப்புகளில் பண்பாடுகள், தமக்குள் வேறுபடுவதோடு நில்லாது, தாம் அமைக்கும் புறப்பண்பாட்டு உள்ளொளிகளிலும் வேறுபடுகின்றன. இதற்குச் சான்றாக, குளிர்ப் பகுதியில் வாழும் ஆங்கிலேயர், பனித்துளி (Dew), பனிமூட்டம் (Fog), பனிக் கட்டி (Ice), பனி (Snow), மூடுபனி (Mist), என வேறுபடுத்திப் பார்க்க, தென்னிந்தியாவைச் சார்ந்த கோயர் என்னும் நடுத்திராவிடப் பழங்குடியினர் 'மஞ்சு' என்னும் ஒரே சொல்லால் மேற்குறித்த அனைத்து நிலைகளையும் சுட்டுவதையும், துருவப் பகுதிகளில் வாழ்ந்து வரும் எசுகிமோப் பழங்குடியினர் நூற்றுக் கணக்கான சொற்களைக் கொண்டுள்ளதையும் கூறலாம்.

சொற்கோவையின் அளவு, சிறப்புநிலை, வேறுபடுத்துநிலை முதலானவற்றின் வாயிலாகப் பண்பாட்டு வலியுறுத்தலின் கருத்துகள், மொழியில் நேரடியாக எதிரொலிக்கப்படுகின்றன. அதாவது, மொழி பேசுநர் நெருங்கிய உறவுடைய சுற்றுச் சூழல் அல்லது பண்பாட்டுக் கூறுகளின் தொடர்பாக, மிகுதியான தனிச் சொற்களும் ஒரு பொருட்பன் மொழிகளும் (Synonyms) நுண் பகுப்புகளும் காணுதல் இயல்புடையதே.

போவாசு (Boas) என்னும் மானிடவியலார், கனடாவைச் சார்ந்த நடுப்பகுதி எசுகிமோக்கள் குறித்த தம் ஆய்வுப் படைப்பில், எசுகிமோக்கள் தங்கள் சுற்றுச் சூழலின் தலையாய கூறுகளான 'சீல்' (Seal)

என்னும் விலங்கு, 'பனி' முதலானவற்றிற்கு மிகுந்த சொற்களைத் தம் மொழியில் கொண்டுள்ளதைக் குறிப்பிடுகிறார். மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையே நிலவும் நெருங்கிய உறவைச் சுட்டிக் காட்ட இது செம்மையான சான்றாகப் பெரிதும் பலராலும் பேசப்பட்டு வருகிறது. போவாசைத் தொடர்ந்து அவர் மாணவரான சப்பீர் (Sapir), பண்பாடும் மொழியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயற்படுவதைத் தம் ஆராய்ச்சிகளின் வழி வெளியுலகுக்கு அறிவித்தார் என்றாலும், மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலுள்ள உறவை அறுதியிடுவதில் மிகவும் புகழ் வாய்ந்த மானிடவியல் அணுகுமுறையாக ஓர்பு (Whorf) என்பாரின் ஆய்வேடுகளைக் கூறலாம்.

காப்பீட்டு நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த ஓர்பு தீ, வெடி விபத்துகள்தொடர்பான கோப்புகளில் மொழித் தன்மையே விபத்துகளுக்குக் காரணமாயிருந்ததைக் கண்ணுற்றார். எடுத்துக் காட்டாக, 'காசோலின்' (Gazoline) எனப்படும் எளிதில் தீப்பற்றக்கூடிய எரிபொருள் நிரப்பியிருந்த வெற்றுப் பீப்பாய்கள், கவனக் குறைவுடனும் அலட்சியப் போக்குடனும் கையாளப்பட்டதனால், வெடி விபத்துகள் ஏற்பட்டுள்ளமையைக் கண்டார். அதாவது,'வெற்றுப் பீப்பாய்கள்' எனத் தவறாகக் கருதிப் பற்ற வைப்புச் செய்ததனாலேயே இவ் விபத்துகள் ஏற்பட்டன. இது போன்றே, விரைந்து தீப்பற்றக்கூடிய 'இசுபன் சுண்ணாம்புக் கற்கள்'(Spun lime Stone) என்னும் வேதியியல் பொருளின் தீங்கு உணரப்படாததனால், தீ விபத்துகள் பெரிதும் நடந்தன என்றும் கண்டார். இங்கு, இவ் வேதியியல் பொருளின் பெயரோடு காணப்படும் 'கல்' இதை ஒரு எரியாப் பொருள் எனத் தவறாக எண்ண வைத்து விட்டதே பெரும்பாலான தீ விபத்துகளுக்கு ஏதுவாயிற்று. தண்ணீர் பட்டதும் தீப்பற்றும் இயல்புடைய அசிட்டிலின் (Acetelene) வாயுவை 'இக்கல்' தோற்றுவிக்கும் என்பது பணியாளர்களால் அறியப்படவில்லை.

அமெரிக்க இந்தியப் பழங்குடி மொழியாராய்ச்சியில் ஓர்பு: தென்மேற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த அமெரிக்க இந்தியப் பழங்குடி மொழியான ஓப்பி (Hopi) மொழியை இவர் முறையாக ஆராய்ந்தார். தம் ஆய்வேடுகளில் 'நிலையான சராசரி ஐரோப்பிய மொழி'யுடன் (SAE = Standard Average European) ஓப்பி மொழியை ஒப்பு நோக்கினார். (ஆங்கிலம், பிரெஞ்சு, செருமனி உள்ளிட்ட மொழிகளே நிலையான சராசரி ஐரோப்பிய மொழி என இவரால் பொதுவாகச் சுட்டப்படுகின்றன).

பன்மையும் எண்ணிக்கையும்: உண்மையான மற்றும் கற்பனையான பன்மைகள் (Real and Imagining Plurals) நிலையான சராசரி ஐரோப்பிய மொழிகள் உருவாக்கக் கூடியன. 'பத்து மனிதர்' என்பதை உண்மையான பன்மைக்கு எடுத்துக்காட்டாகவும், 'பத்து நாள்கள்' என்பதைக் கற்பனையான பன்மைக்கு எடுத்துக் காட்டாகவும் கூறுவர். நேரத்தைத் தொகுப்பாகக் காட்டவியலாது என்ற உண்மையின் அடிப்படையிலேயே இத்தகைய பன்மைகளைக் 'கற்பனையான பன்மைகள்' என்கின்றனர். நேரத்தைச் சுழற்சியான நிகழ்ச்சியாகக் காண்பது ஓப்பிப் பண்பாடு. எனவே, கற்பனைப் பன்மைகளையும் அளவிடக்கூடிய பொருள்களாகக் காண்பது-உணர்வது நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் சிறப்புப் பண்பாகும்.

நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் வினைச் சொற்களுடைய 'மூன்று காலப் பாகுபாட்டு அமைப்பு' (Three-tense System), நேரம் பற்றிய அனைத்துச் சிந்தனைகளிலும் தனது தாக்கத்தைக் காட்டி நிற்கிறது. நேரத்தைப் பருப்பொருள் போன்று பார்க்கும் நோக்கினால், நேர அலகுகளை வரிசைப் படுத்தியும் அவற்றுக்குள் எல்லைக் கோடுகள் உள்ளன போன்றும் காணலாம். உண்மையில், நேர அலகுகளுக்கிடையே சீரிய ஒற்றுமை காணப்படுகிறது: தமக்குள் எல்லைக் கோடுகள் ஏதுமின்றிப் பிரித்தறிய முடியாதவாறு சங்கிலித் தொடராகவே உள்ளன. நிலையான சராசரி ஐரோப்பிய மொழிகளைப் போலல்லாது பல பழங்குடியினர் மொழிகளிலும் 'முந்தையது', 'பிந்தையது' என்ற இரு காலப் பாகுபாடே காணப்படுவது இங்கு நினைவுகூரத்தக்கது. ஏனைய நுண் பகுப்புகளனைத்தும் வினைச் சொற்களுடன் குறிக்கப்படும் 'மதிப்பீட்டு வடிவங்கள்', பார்க்கும் கோணம் ஆகியவற்றின் துணையால் உணர்த்தப்படுகின்றன. பேசுநர் குறிப்பிட்ட ஒரு செயலைத் தெரிவிக்கிறாரா, எதிர்பார்க்கிறாரா, தம் முந்தைப் பட்டறிவுவழி பேசுகிறாரா என்பதை மதிப்பீட்டு வடிவங்களும் செயலின் கால அளவும் சுட்டுகின்றன. சுருங்கச் சொன்னால், நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் நுண்ணலகு (Microcosm) புறவுலகைப் பொருள்களாகப் பார்ப்பதுடன், பரப்பு (Space) அல்லாதவற்றிற்கும் பரப்பு வடிவங்களைக் (Spatial forms) காண்கிறது. மாறாக, ஓப்பி உள்ளிட்ட பழங்குடியினர் மொழிகள் பெரும்பாலும் உண்மைநிலையை நிகழ்ச்சிகளாகவே பகுத்துணர்கின்றன.

ஓர்பு எடுகோளும் ஓர்பு புதிய எடுகோளும்: ஓர்பின் ஆய்வு முடிவுகளின் பிற்கால வளர்ச்சியுற்ற

நிலையே 'சப்பீர்-ஓர்பு எடுகோள் என்றும் 'ஓர்பு எடுகோள்' (Whorfian Hypothesis) என்றும் மானிட வியலாரால் கருதப்படுகிறது. மொழியும் பண்பாடும் தனித்தனியே பிரித்தறிய வொண்ணாமல் ஒன்றை யொன்று பின்னிப் பிணைந்த நிலையை உடையன என்பதே ஓர்பு எடுகோளின் மையக் கருத்து.

சிந்தனை மற்றும் பண்பாட்டு நடத்தைகள் தொடர்பாக மொழிக்கு ஓர் உருவாக்கப் பங்கை (Formative Role) எடுகோளாக்கும் செயலில் ஓர்பு மட்டும் ஈடுபடவில்லை. இவர் தம் காலத்தவரான தோரத்தி இலீ (Dorathy Lee) என்னும் அம்மையார், பல்வேறு பண்பாடுகளில் பட்டறிவைக் குறித்தற்கு மொழியே சீரியதொரு வழிமுறையெனக் கிரேக்க, திரோபிரியாண்டுப் (Trobriand) பண்பாட்டாய்வு களின் வாயிலாகத் தெளிவு படுத்தினார். தம் அனைத்து ஆய்வுகளிலும் மொழியின் இலக் கணக் கூறுகளுக்கும் தருக்க நெறிமுறைக்கும் இடை யிலுள்ள இணைப் போக்கை இனங்காண்பதே ஓர்பின் குறிக்கோளாக விளங்கிற்று. இந்தச் சீரிய குறிக் கோளே மானிடவியல் ஆய்வரங்கங்களில் ஓர்புக்குத் தனியிடத்தைத் தேடித் தந்தது. இருப்பினும், காலப் போக்கில் ஓர்பின் எடுகோள் மதிப்பை இழக்கத் தொடங்கியது.

எடுகோளுக்கு எதிராக எழுந்த மறுப்புரைகளுக் கும் ஐயப்பாடுகளுக்கும் தன்னிலை விளக்கம் கூறும் வண்ணம் ஓர்பு புதிய எடுகோளை (NeoWorfian Hypothesis) கரோல் என்பார்முன் வைத்தார். 'கட் புலனால் உணரப்படும் பட்டறிவை விளக்கும் வழி முறைகளில் மொழிகள் மாறுபட்டு நிற்கும் வரை மொழியைப் பயன்படுத்துவோர் தத்தம் மொழிகள் காட்டும் கூறுகளுக்கேற்பத் தம் பட்டறிவுகளைப் பிரிப்பதிலும் வேறுபடுத்திப் பார்ப்பதிலும் வெவ்வே றான போக்குகளையே கொண்டிருப்பர்' என்பதே ஓர்பு புதிய எடுகோளின் அடித்தளம்.

மொழிக்கும் பண்பாட்டிற்குமிடையே நிலவும் நேர் உறவு: ஒரு மொழியின் சொற்கோவையை ஆழ்ந்து ஆராயும்போது, மொழிக்கும் பண்பாட்டிற்கு மிடையே மிகப் பெரியதோர் உறவு இருக்கிறது என்ற உண்மை எளிதில் புலப்படும்.

சொற்கோவை: போவாசால் விளக்கப்பட்ட எசுகிமோப் பண்பாட்டில் பனி, சீல் போல்வன தொடர்பான சிறப்புச் சொற்களின் எண்ணிக்கை மிகுதி என்பது முன்னர்க் கூறப்பட்டுள்ளது. இது போன்றே, ஆயர் வாழ்க்கை நடத்தும் நூயர் (Nuer) பழங்குடியினருடைய மொழியில், கால்நடைகளின் பொருளாதாரப் பண்பாட்டு இன்றியமையாமை யினால் சிறப்புச் சொற்கள் மிகுதியாக வழங்கப்படு தலை இவான்சு பிரிச்சர்டு காட்டுகிறார். தம் ஆழ் கடல் மீன்பிடி தொழிலோடு முதன்மையாகத் தொடர்புடைய காற்று, கடல் நீரோட்டம், விண்மீன், வலை முதலியன குறித்த பல சொற்களை மீனவர் தமது தமிழ்க் கிளைமொழியில் பெற்றிருத்தல் மற்று மொரு சீரிய எடுத்துக்காட்டாகும். ஏனெனில், நேர மறியவும், காற்று மழையினை அறியவும் விண் மீன் களையே இவர்கள் துணையாகக் கொண்டுள்ளனர். இதனாலேயே ஏனைக் கிளைமொழிகளில் 'வாடை', 'தென்றல்' எனக் காற்றைக் குறிக்க ஓரிரு சொற்களே இருக்க, வாடெ, குன்னுவடெ, சல்வா, மூலச்சல்வா, செம்போத்து, கொண்டல் எனப் பல சொற்கள் இவர் தம் கிளைமொழியில் காணக்கிடக்கின்றன. வே வெள்ளி, வாடெ வெள்ளி, குருசு வெள்ளி, கப்ப வெள்ளி என்பன போன்ற விண்மீன் பெயர்களும், மே முறி, கீ முறி, வன்னி வெள்ளொம், சோனி வெள்ளொம் போன்ற நீரோட்டத்தைக் குறிக்கும் பெயர்களும் மீனவர் பண்பாட்டை எதிரொலிப் பனவே.

உருவகங்களும் பொருளின் விரிவும்: பண் பாட்டுச் சூழலுடன் ஒரு மொழியின் சொற்கோவை தொடர்பு பெறும் சிறப்பு வழி ஒன்றைச் சொற் பொருளியலார் (Semanticists) சுட்டிக் காட்டுகின்ற னர். பொருள் விரிவின் அடிப்படையில் சுட்டப்பெறும் உருவகங்களே அந்தச் சிறப்பு வழி. இவற்றுள் மனித உடலுறுப்புகளை அடியொற்றி உருவாக்கப் பெறும் உருவகங்களே உலகளாவிய தன்மையன. 'ஊசிக் காது', 'மேசைக் கால்', 'நாற்காலியின் கை' என்பன இதற்குச் சான்றாகும். தமது சுற்றுச் சூழல் பண்பு களைத் தம்மிடமிருந்து பிரித்தறியாத நிலையில் மொழி பேசுநர் காணும் போக்கே, இத்தகைய 'உடற் கூறு அடிப்படை நோக்கு' க்குக் (Physiognamic Perception) காரணமாகிறது. இது போன்ற உலக நோக்கின் அடிப்படையில் உருவகங்களை விரிவாகப் பயன்படுத்தும் போக்கைப் பார்க்கும்பொழுது, இத் தகைய அணுகுமுறை தொன்மையானதும் உலகளா வியதும் ஆகும் என்னும் கருத்து வலிவு பெறுகிறது.

மாறுபடும் பண்பாட்டில் தொழில் துறை அறி முகத்திற்கு ஏற்ற சொற்கோவையை வழங்குதலில் எவ்வாறு உருவகப் பொருளின் விரிவு பயன்படும் என, மேற்கு அப்பாச்சிப் பழங்குடியினரிடையே,தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் பாசோ (Basso) என் பார்தெளிவுபடுத்துகிறார். சான்றாக, தொழில்துறை அறிமுகத்தால் புறப்பண்பாட்டுப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உந்து வண்டிகளைக் குறிக்க, ஏற்

கெனவே உள்ள சொற்களை ஒட்டு மொத்தமாகப் பொருளின் விரிவுக்கு உட்படுத்தி, அப்பாச்சிப் பழங்குடியினர் பயன்படுத்துவதைக் காட்டுவார்.

வகைப்பாட்டியல்: இனக்குழுவினரிடையே வழங்கப்பெறும் வகைப்பாட்டியல்(Taxonomy) அமைப்புகள் தொடர்பான செய்திகளைத் திரட்டவும், அவற்றை ஒப்பு நோக்கவும் உரிய கள ஆய்வு நெறிமுறைகளை வளர்ப்பதில் இப்பொழுது மானிடவியலாளர் முனைந்துள்ளனர். இந்த அணுகுமுறையே இனக்குழு அறிவியல் (Ethnoscience) எனப் பண்பாட்டு மானிடவியலாளரிடையே பெயர் பெறுகிறது. இத் துறையிலும் மொழியிலும் பண்பாட்டு ஆய்வுகளும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்படுகின்றன. எப்பொழுது, எந்தச் சூழலில் பொதுச் சொற்களும் சிறப்புச் சொற்களும் வளர்ச்சியுறுகின்றன என ஆராய்வதும், பயன்தரு தாவரங்கள், விலங்குகளை வகைப்படுத்துதலில் நுண்ணிய சொற் பகுப்புகள் செய்யப்படுகின்றனவா? பயனில் தாவரங்கள், விலங்குகளில் இத்தகைய வேறுபாடுகள் உணரப்படுவதில்லையா? என ஆராய்வதே இனக்குழு மொழியியலுள் வகைப்பாட்டியலின் பரப்பாகும்.

நிறச் சொற்கள்: ஒவ்வொரு பண்பாட்டிலும் நிறங்களை அடையாளம் காட்டுவதிலும், பெயரிடுவதிலும், வரையறை செய்வதிலும் மொழிகளுக்கிடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன என்பது வெளிப்படை. நிறமாலையை (Colour Spectrum) உண்மையில் ஒரு தொடர்ச்சியாகக் கருதுவது கடினமானது எனினும், அனைத்து ஐரோப்பிய மொழிகளிலும், தொழில் சார்ந்த சமுதாயங்களின் பல்வேறு மொழிகளிலும் 'நிறச் சொற்கள்' நுண்மை மட்டத்திற்குப் படிமலர்ச்சியடைந்துள்ளன. அதாவது, பண்பாட்டுப் பொருள்களிலிருந்தும் சுற்றுச் சூழலைச் சார்ந்த ஏனைய நிறமிகளிலிருந்தும் (Pigments) நிறமாலையின் பிரிவுகள் அனைத்தும் நிறத்தைக் குறிக்கும் தனிச் சொற்களாகச் சுட்டப்படுகின்றன. இத்தகைய சொற்களே அடிப்படை நிறச் சொற்கள் (Basic Colour terms) எனப்படுகின்றன; என்றாலும், பொதுவாக உலக மொழிகளில் நிறச் சாயல்களைக் (Colour Shades) குறிக்கவும் சொற்கள் வழக்கில் உள்ளன. இவையே விளக்கச் சொற்கள் (Descriptors) அல்லது விளக்க நிலை நிறச் சொற்கள் (Descriptive Colour terms) எனப்படுகின்றன. பல்வேறு மொழிகளில் இந்த விளக்க நிலை நிறச் சொற்கள் மாறுபடுகின்றன.

பெரும்பாலான மொழிகளில் தாவர உலகையே நிறச் சொற்கள் முதன்மையாகக் குறிக்கக் காணலாம். தமிழில் வழங்கும் மஞ்சள், பசுமை அல்லது பச்சை, பழுப்பு முதலிய நிறச் சொற்களை இதற்குச் சீரிய எடுத்துக் காட்டுகளாகக் காட்டலாம். வேறு சில மொழிகளில் உடற்கூற்றியல் சார்ந்தனவாக நிறச் சொற்கள் உணர்த்தப்படுகின்றன. சிவப்பு நிறம் பெரும்பாலும் இரத்தம் என்றே மிகுதியான மொழிகளில் குறிக்கப்படுகிறது. இன்னும் சில மொழிகளில் வெளிச்சமும் இருட்டும் நிறச் சொற்களின் சொற்கோவைக்கு ஊற்றாகின்றன.

பெர்லின் என்பாரும் இரே என்பாரும் கூட்டாக நடத்திய ஆராய்ச்சியில், ஒரு மொழியின் வரலாற்றில் நுண்மை அல்லது அடிப்படை நிறப் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையில் அமைகின்றன என வெளிப்படுத்தினர்.

அவர்கள் கருத்துப்படி, (அ) அனைத்து மொழிகளும் கருப்பு வெள்ளை ஆகிய நிறங்களுக்குப் பெயர்களைக் கொண்டுள்ளன. (ஆ) ஒருமொழி மூன்று நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் சிவப்பைக் குறிக்கும் ஒரு பெயர் மூன்றாவதாக இருக்கும். (இ) ஒரு மொழி நான்கு நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் பச்சை அல்லது மஞ்சளைக் குறிக்கும் ஒரு பெயரை நான்காவதாகக் கொண்டிருக்கும். (ஈ) ஒரு மொழி ஐந்து நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் பச்சை, மஞ்சள் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டிருக்கும். (உ) ஒரு மொழி ஆறு நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் நீலத்தைக் குறிக்கும் ஒரு பெயரை ஆறாவதாகக் கொண்டிருக்கும். (ஊ) ஒரு மொழி ஏழு நிறப் பெயர்க்களைக் கொண்டிருப்பின் பழுப்பைக் குறிக்கும் ஒரு பெயரை ஏழாவதாகக் கொண்டிருக்கும்

பெரும்பான்மைப் பழங்குடியினர் மொழிகளில் 'இ' நிலையும் இக்காலத் தொழில் மயமாக்கப்பட்ட சமுதாயங்களில் 'ஊ' நிலையும் காணப்படுவதாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் குறித்த சொற்கோவை: எப்பொழுதும் காணப்படக் கூடியதும் அனைவராலும் எப்பொழுதும் பேசப்படுவதற்குரியதுமான சுற்றுச் சூழல், தனது இயற்கைச் சுற்றுச் சூழலுடன் பின்னிப் பிணைந்து, ஒன்றையொன்று சார்ந்த உறவுநிலையை ஒவ்வொரு சமுதாயமும் கொண்டிருக்கக் காணலாம். இத்தகைய இன்றியமையா உறவுநிலையினின்றே சுற்றுச்சூழல் ஒரு வடிவு பெறுகிறது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான முழுமையான உறவின் அடிப்படையிலேயே சுற்றுச்சூழல் குறித்த சொற்கோவை உருவாக்கப் பெறுகிறது என்பதனால், எந்த ஒரு மொழியின் சுற்றுச் சூழல் குறித்த சொற்கோவை

யும் தக அமையும் தன்மையது என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளவேண்டும்.

குளிர் பகுதியில் வாழும் ஆங்கிலேயர் தம் மொழியில் பனி நிலையைக் குறிக்கச் சில சொற்களே காணப்பட, துருவப் பகுதியில் வாழும் எசுகிமோப் பழங்குடியினர் மொழியில் நூற்றுக்கணக்கான சொற்கள் காணப்படுதல் இதற்குச் சீரிய எடுத்துக்காட்டு. பனி நிலை எந்த வகையிலும் முதன்மையாக அமையாத பெரும்பாலான தென்னிந்திய மொழிகளில் பனி என்னும் ஒரே ஒரு சொல் அனைத்து நிலைகளையும் உணர்த்தக் காணலாம்.

சிறப்புப் பெயர்கள்: உறவுமுறைப் பெயர்களுக்கு அடுத்து, பெயர்களின் (Personal Names) சொற்கோவை மொழியின் மற்றுமோர் உலகளாவிய பகுதியாக அமைகிறது. தனி மனிதரை இனங் கண்டு கொள்ளவும் வகைப்பாடு செய்யவும் இதுவே வழிகோலுகிறது. இந் நிலையில் சொற்கோவையின் சிறந்த வகை எனவும் இதைக் கூற வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒவ்வொரு சமுதாயத்திலும் சில குறிப்பிட்ட சிறப்புப் பெயர்களே பெயரிடுவதில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குச் சான்றாக, மிகக் குறைந்த எண்ணிக்கைப் பெயர்களிலிருந்தே தமக்குரிய பெயரை அமெரிக்கர் பெறுவதைக் கூறலாம். பொதுவாக, ஆடவர் பெயர்கள் பன்னிரண்டும் பெண்டிர் பெயர்கள் இருபதுமே கோடிக் கணக்கான அமெரிக்கரின் சிறப்புப் பெயர்களாக அமைகின்றன. இதனால், ஏறக்குறைய ஆறு மிலியன் 'சான்'களும் (John's) நான்கு மிலியன் 'மேரி'களும் (Mary) பெருத்த அளவில் 'வில்லியம்சு' களும் (Williams) காணப்படுகின்றனர். பெரும்பாலான சமுதாயங்களில் சமய நம்பிக்கைகள் இத்தகைய நிலைக்கு முதற் காரணமாகின்றன.

பெரும்பான்மைத் தொல்குடிச் சமுதாயங்களில் சிறப்புப் பெயர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையே உள்ளன. இப் பெயர்களே அடுத்தடுத்த பரம்பரையிலும் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படுகின்றன. மூதாதையரின் ஆவிகள் பேரப்பிள்ளைகளாக மறுபிறவி எடுக்கின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர்தம் சிறப்புப் பெயர்களே பேரப் பிள்ளைகளுக்கும் இடப்படுகின்றன. ஓரிசாவைச் சார்ந்த கொந்தர் (Khond) பழங்குடியினர் தம் குழந்தைகளுக்கு இறந்துபோன பெற்றோரின் பெயர்களுள் ஒன்றையே இடுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும், உறவுமுறை அமைப்பிலும் மூதாதையரின் உறவுமுறைப் பெயர்களே அவர்தம் பேரப் பிள்ளைகளுக்கும் அமைகின்றன.

பிறந்த குழந்தைகள் நிலைக்காமல் இறந்து கொண்டேயிருந்தால் அடுத்துப் பிறக்கும் குழந்தைக்கு மண்ணாங்கட்டி, குப்பன், பிச்சை, மூக்கன், பண்டாரம் என்னும் இழிவான பெயர்களை இடுவதன் வாயிலாகக் குழந்தையைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தமிழ் நாட்டுப்புறச் சமுதாயங்களில் உள்ளது.

மொழியையும் பண்பாட்டையும் உறவுபடுத்திப் பார்க்கும் இத்தகைய ஆராய்ச்சிகளிலேயே மானிடவியலாளர் பெரிதும் ஈடுபாடுற்றனர். பண்பாட்டு மானிடவியலாளர் களப் பணிக்கு ஏற்ற செய்முறைக் கருவியாகவும், பண்பாட்டாய்வில் ஆர்வத்தைத் தூண்டும் ஊற்றுக்களமாகவும் மொழியைக் கண்ணுற்றனர். இது போன்றே, பண்பாட்டுப் பின்னணியில் மொழியை ஆராய்தல் பொது மொழியியலில் ஆழத்தையும் பலவித ஆய்வுப் போக்குகளையும் அளித்துள்ளது என மொழியியலாளரும் கண்டு கொண்டுள்ளனர். எனவே, இனக்குழு மொழியியல் ஆராய்ச்சிகள் மானிடவியல், மொழியியல் என்னும் இரு துறைகளுக்கும் பொதுவானவை என்பது பெறப்படும். சி.ம.

துணை நூல்கள்:

**Boas**, **Franz**, Race, Language and Culture, Free Press, New Work, 1940.

**Hickerson**, **N.P.**, Linguistic Anthropology; Holt, Rinehort, New York, 1980.

**Sapir**, **Edward**, Language: An Introduction to the Study of Speech, Harcourt, Brace, New York, 1921.

**Whorf Benjamin L.**, The Relation of Habitual Thought and Behaviour to language, in L. Sapir et.al., Language, Culture and Personality, Wisconsin Banta, Menasha, 1941.

**இனக்குழு வரலாறு**: வாய்மொழி மரபுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், மொழியியல், தொல்லியல் தரவுகள், ஏனைய தொடர்புடைய செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் இனக்குழுக்களின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தலே இனக்குழு வரலாறு (Ethnohistory).

வரலாற்று ஆய்வுகள் முறையான வரலாறு (History Proper) எனவும், வரலாற்றுக்கு முன்னிலை வரலாறு (Prehistory) எனவும் முன்னர் வகைப் படுத்தப்பட்டன. முந்தையது எழுத்து மொழிகளைக் கொண்ட நாகரிகமுற்ற மக்கள் தொடர்பான வர லாற்றுச் செய்திகளையும், பிந்தையது நாகரிகம் அடைதற்கு முந்தைய காலத் தொல்குடிச் சமுதாயங் களைப் பற்றிய செய்திகளையும் ஆராயும் துறைக ளாகும். எனவே, அன்றைய நிலையில் பழங்குடியின ரின் வரலாற்றுத் தொடர்பான ஆய்வுகளுக்கு இடமில் லாமல் இருந்தது. இந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் வகையில் தலைசிறந்த ஆய்வுப் பரப்பொன்று 1950-இல் தொடங்கி, இனக்குழு வரலாறு என அமெ ரிக்கப் பண்பாட்டு மானிடவியலாளரால் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்புதுமுறை இனக்குழுவியல் (Ethnogrphy) பிற தரவுகளின் துணையுடன் அண்டை நாகரிகச் சமுதாயங்களின் ஆவணங் களைத் துணையாகக் கொண்டு, கல்வியறிவிற்கு முந்தைய மக்களின் (Preliterate People) வரலாற் றினை மீட்டுருவாக்கம் செய்யும் தன்மையது என் பார் சோவியத்து நாட்டு இனவிளக்கவியலாளர் பெர்சித்சு.

முதன் முதலில் தொடர்பு ஏற்பட்ட காலத்தி லிருந்தே, ஐரோப்பியருக்கு அமெரிக்க இந்தியப் பழங் குடியினர் ஆவலைத் தூண்டும் இனக்குழுக்களாகவே காணப்பட்டனர். ஐரோப்பியரின் தொடர்புக்குப் பின், மண்ணின் மைந்தரான அமெரிக்கஇந்தியப் பழங் குடியினரின் தோற்றம் அவர்தம் இடப்பெயர்ச்சி, சமு தாயப் பண்பாடு முதலான மாற்றங்கள், அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) துறையில் ஒரு வரலாற்று அணுகுமுறைக்கு வித்திட்டன. அமெரிக் காவில் மானிடவியல் துறை பல்லோராலும் ஏற்கப் பட்டுக் கொண்டிருந்த பொழுது, அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் துன் புறுத்தப்பட்டனர். ஒரு காலத்தில் பாதுகாப்புடனும் வலிவுடனும் காணப்பட்ட அமெரிக்க இந்தியப் பழங் குடியினரின் சமுதாயங்கள், கட்டுக்கோப்புக் குலைந்து, முழுதும் அழிவுற்றுவிடும் என்று அஞ்சத் தக்க நிலையில் இருப்பதைத் தொடர்புடையோர் உணர்ந்தனர்.

குறிப்பாக, மானிடவியலாளர் துயர் களையும் பணியில் ஈடுபடுவதோடமையாம முந்தைப் பழங்குடி யினர் வாழ்க்கை, மரபுகள் ஆகியன முழுதும் மறைந் தொழிவதற்கு முன்பாக அவற்றை முடிந்த மட்டில் பாதுகாத்து வைத்திட ஆர்வம் காட்டினர். இந் நிலையில் முகிழ்த்ததே இனக்குழு வரலாற்று ஆய்வுப் பார்வை.

ஒரு சமுதாயத்தைச் சார்ந்த அகவை முதிர் தோருடன் நேர் காணல், பழைய மடல்கள், பருவ இதழ்கள், நாட்குறிப்பேடுகள் ஆகிய எவ்வகையான தொடர்புடைய ஆவணங்களையும் துணைக் கொள்ளல், தொல்லியல் செய்திகள், மரபுக் கதைகள் (Legends) உள்ளிட்ட வாய்மொழி இலக்கியங்களை விளக்கிக் காட்டுதல் ஆகியவை இனக்குழு வரலாற்று ஆய்வின் கண் அடங்கும். சி.ம.

துணை நூல்கள்:

**Garbarino**. S., Socio-Cultural Theory in Anthropology: A short History (Baic Anthropology Units), Holt, Rinehart & Winston Inc. New York, 1977.

**Hudson**, C., Folk History and Ethnohistory. In Ethnohistory, Vol. 13, Bloomington, 1966.

**இனக்குழுவியல்** என்பது பண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக அமைவது. இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரி வான, முழுவதுமான அறிவினை எடுத்தியம்புகிறது. பழங்குடிச் சமூகம், கிராமச் சமூகம் முதலான சிறு சமூகங்களின் இடவியல்பு விளக்கம், மக்களின் உரு வத் தோற்றம், வாழிட அமைப்பு, வாழ்க்கை முறை, பேசும் மொழி, சமூக அமைப்பு, பொருளாதாரம், சமயம், சட்டமுறைகள், தொழில் நுட்பம், கலை மற்றும் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து, அப்பண்புகளை முறைப் படுத்தி இனக்குழுவியல் விளக்கும். ஒவ்வொரு சமூகத் தின் அக, புறப் பண்பாடுகளை அறிவியல் நோக்கில் இது ஆராயும். இது மானிடவியல் துறையின் துணைப் பகுதிகளுள் ஒன்று.

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிய முற்படும் இனக்குழுவியலார் அப்பண்பாட்டின் உறுப்பினர் களுடன் பலகாலம் ஒன்றி வாழ்ந்து, அன்றாடச் சூழ லில் அவர்கள் கையாளும் ஒவ்வொரு செயற்பாட்டி னையும் அறிவியல் பின்னணியுடன் கூர்ந்து ஆராய் வர். இன்றைய சமூகத்தினரைப் போன்றே ஆதிக் குடிகளிடமும் பழங்குடிகளிடமும் பண்பாட்டின் கூறு கள் பல்வேறு முறைகளில் செயற்படுகின்றன. சான் றாக, உறவுமுறை அமைப்பு, திருமண முறை, பிழைப்புப் பொருளாதாரம், பங்கீட்டு முறை, சொத் துரிமை, சமயச் செயற்பாடுகள், கலைகள், தலைமை யமைப்பு முறை போன்ற அனைத்துச் செயல்களிலும் அந்தந்தச் சமூகத்தினர் கொண்டிருக்கும் நம்பிக்கை கள், உணர்வுகள், மதிப்பீடு, உலகத்தின்பால் அவர்

கள் கொண்டுள்ள கருத்து ஆகியவற்றோடு, பண்பாட்டுக் கூறுகளனைத்தும் ஒன்றோடொன்று பெற்றுள்ள தொடர்பினையும் இத்தொடர்புகளின் செயல்முறைகளையும் இவர்கள் விரிவாக ஆராய்வர்.

இனக்குழுவியலின் வரலாறும் வளர்ச்சியும்: ஐரோப்பியர்கள் புதிய நிலப் பகுதிகளைக் கண்டறியக் கடல்வழிப் பயணங்களையும் பல ஆய்வுகளையும் மேற்கொண்டபொழுது தாம் சென்ற பகுதிகளில் பல்வேறு இன மக்களைக் கண்டனர். இவர்களின் பண்பாட்டுக் கோலங்களை ஐரோப்பியர்கள் கையெழுத்துப் படிகளில் எழுதி வைத்தனர். இவர்களில் இயற்கையியலார், ஆட்சியாளர், பயணியர் போன்றோரின் குறிப்புகள் பல்வேறு அணுகுமுறையில் காணப்பட்டாலும் இதன் வளர்ச்சியே இன்றைய இனக்குழுவியலுக்கு வித்திட்டது.

குடியேற்ற ஆதிக்க அரசுகள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டமையாலும், இயற்கையியலாரின் ஆய்வுகள் மிகுந்திருந்தமையாலும், சமயபோதனை அமைப்புகளின் வளர்ச்சி பரவியதாலும் தனிமைப் படுத்தப்பட்ட நிலப்பகுதிகளில் வாழ்ந்த ஆதிக்குடிச் சமூகங்களைப் பற்றிய விரிவான வாழ்க்கை முறைகளை எழுத முற்பட்டனர். பிகாபெட்டா (Pigafetta) என்பவர் கி.பி. 1525-இல் மேற்கொண்ட மெகல்லன் பயணத்தில் செபுவினரைப் (Cebus) பற்றிஎழுதியதை முதன்மையாகக் குறிப்பிடலாம். இதன்பின்னர், அருங்காட்சியகவியலாரும் பல்வேறு பண்பாட்டு மக்களின் வாழ்க்கைமுறையைச் சித்திரிக்கும் பொருள்களையும் அம்மக்களைப் பற்றிய குறிப்புகளையும் எழுதத் தொடங்கினர். இக்கால கட்டத்தில்தான் இனக்குழுவியலின் உத்திகள் செம்மைப்படுத்தப்பட்டன. தகவலாளரைப் பயன்படுத்துதல், வினாப்பட்டியல் தயாரித்துக்களத்தில் குறிப்புகளைச் சேகரித்தல், குறுகிய காலக் களப்பணி மேற்கொள்ளுதல், மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துதல் போன்ற கள முறைகளைக் கையாளத் தொடங்கினர்.

இனக்குழுவியல் 1925-இல் நன்கு வளர்ச்சி பெற்றது. இக்காலத்தில் அமெரிக்க, ஆங்கிலேய, ஐரோப்பிய மானிடவியலார் இத்துறையின் அடிப்படையில் ஓர் அணுகுமுறையைக் கொண்டிருந்தும் தங்களுக்கென்று தனிப்பாதையை அமைத்துக்கொண்டனர். அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் கழகம் (American Ethnological Society), அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (American Museum of Natural History), அமெரிக்க மானிடவியல் சங்கம் (American Anthropological Association), இலண்டன் பொருளியல் பள்ளி (London School of Economics), பிரிட்டன் அயர்லாந்து நாடுகளின் அரசு மானிடவியல் நிறுவனம் (Royal Anthropological Institute of Great Britain and Ireland) போன்ற அமைப்புகள் இனக்குழுவியல், இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) துறைகளில் ஈடுபட்ட வல்லுநர்களால் நிறுவப்பட்டு, தொடக்க காலத்திலிருந்தே இயங்கி வருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இனக்குழுவியலைப் பண்பாட்டு இலக்கணம் என, இப்பகுதியின் பரப்பையும் ஆழத்தினையும் அறுதியிட்டு, இதன் விரிவான ஆய்வுப் பகுதியையும் வகுத்தனர்.

ஓர் இனக்குழுவின் பண்பாட்டை விவரிக்கும் இனக்குழுவியல் பல கள உத்திகளைக் கொண்டிருக்கிறது. இனக்குழுவியலார் தாம் ஆராயவிருக்கும் சமூகத்துடன் ஒன்றாகக் கலந்து, அவர்களோடு பல காலம் வாழ்ந்து, தம் தகவலாளர்களுடன் நல்லுணர்வை வளர்த்துச் செயற்பட வேண்டியுள்ளதால், களப்பணியே இன்றியமையாததாகிறது. களப்பணியில் நேர்கண்டறிதல் (Participant observation), குடிவழிப்பட்டியல் (Genealogy), கருத்தறி பட்டியல் வினாப்பட்டியல், நேர்காணல், முன்னோடி ஆய்வு முதலான ஆய்வு நெறிகளைக் கையாளுகின்றனர்.

**இனக் கொள்கை:** உலகில் காணப்படும் மனித இனங்களுள் சிலவற்றை உயர்ந்த இனமென்றும் வேறு சிலவற்றைத் தாழ்ந்த இனமென்றும் நம்பி வந்த கருத்திற்குத் துணைநிற்கும் தவறான வாதத்தைக் கையாளும்போது பயன்படுத்தப்பட்ட சொல்லே இனக் கொள்கை (Racism) என்பது. இனங்களுள் சில உயர்ந்தனவென்றும் வேறு சில தாழ்ந்தனவென்றும் எண்ணுங்கருத்து மக்களிடையே பல்வேறு காரணங்களால் தோன்றியது. பல்வேறு நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் மனித குலத்தை உயர்ந்த, தாழ்ந்த இனங்களாகத் தங்கள் விருப்பப்படி வகைப்படுத்தினர். இவ்வாறு வகைப்படுத்தியதனால் பிற்காலத்தில் இனவகைப்பாட்டுக் கருத்தை உருவாக்கும்பொழுது இவர்களின் கருத்துப் பெருஞ்செல்வாக்குப் பெற்றது.

முற்காலத்தில் வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் மனிதக்குலத்தை நாகரிகமடைந்தவர்கள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் இருபெரும் குழுக்களாகப் பகுத்தனர்; பின்னர், கிரேக்கரல்லாதோரைக் காட்டுமிராண்டிகள் எனக் குறிப்பிட்டனர். இதன் வழித் தோன்றியதே உரோம உயர்குலத் தன்மை (Roman Superiority) என்னும் கருத்து.

உரோமானிய அரசியல் கருத்துகளே ஏனைய அமைப்புகளைக் காட்டிலும் சிறந்ததென உரோமானிய அறிஞர்கள் கூறி வந்தனர். இடைக் காலத்தில் இறையியல் அறிஞர்கள் (Theologian Scholars), மனிதகுலத்தைக் கிறித்தவர்கள், புறச் சமயத்தினர் (Infidel), ஈத்தூசுவினர் (Heatheus) என முப்பெரும் குழுக்களாகப் பகுத்தனர். பின்னர், நார்டிக்கு (Nordic), ஆரியர்(Aryan) பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு இனக்கொள்கை கருத்து விரைந்து வலுப்பெற்றது. செருமனியில் நாசிகள் 1930-இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது, தம் அண்டைப் பகுதிகளில் வாழ்ந்த யூதமக்கள் உயிர்சார் அமைப்பில் தம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று கருதி, அவர்களை ஒழிக்க முனைந்தனர். இந்த இனக்குழுப் போராட்டம் ஏனைய இனப் போராட்டங்களைக் காட்டிலும் முதன்மை இடத்தைப் பெற்றது.

ஆக்சுபோர்டு ஆங்கில அகர முதலியில் இனம் என்னும் சொல்லுக்கு, 'மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகிய உயிர்களின் ஒரு பொதுவான மரபு அல்லது தோற்றம்' என்னும் விளக்கம் காணப்படுகிறது. கி.பி. பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஆங்கில மொழியில் இனம் என்னும் சொல்லுக்கு மேற்கண்ட பொருளே வழங்கியது.

மானிடவியலாளர்கள் இனம் என்னும் சொல்லை முழுவதுமாக உயிரியல்சார் அறிவுடனே நோக்குகின்றனர். ஆதலால், இவர்கள் இனம் என்னும் சொல்லை ஒரு குடும்பம் என்றோ நாடு என்றோ, குழு என்றோ அணுகுவதில்லை. இனம் ஓர் உயிரியல் சார் இயல்நிகழ்ச்சியாதலால், அதன் உள்ளுறைத் தன்மையை உயிரியல்சார் சொல்வழக்கிலேயே வரையறை செய்ய வேண்டும். இதனால், இனத்தை உயிரியல்சார் சொல்வழக்கில் காணும் மக்கட்குழு, மரபுவழிப் பண்பிலும் அதனைச் சார்ந்த உடற்கூற்று அமைப்பிலும் ஒரு படித்தானதாகக் காணப்படும்.

ஊட்டன் (Hooton) என்பவர் இனம் பற்றி வரையறை செய்யும்பொழுது, 'இனம் மனிதகுலத்தின் மிகப் பெரும் பிரிவாகும்; உறுப்பினர்களனைவரும் தமக்குள் மிகச் சில மாறுபாடுகளைக் கொண்டிருப்பினும், உருவத்தோற்றத்திலும் உடல்சார்ந்த பண்புகளிலும் மிகுதியான வேறுபாட்டினைப் பெற்றிராத பொதுவான மரபையுடைய ஒரு குழுவாவர்' எனக் கூறுகிறார்.

ஒரு குழுவிற்கும் மற்றொரு குழுவிற்கும் இடையே காணப்படும் உடல்சார்ந்த கூறுகளை மானிடவியலார் தனித்து எடுத்து, அவற்றை அக்குழுவின் சிறப்பு அலகுகளாக வரையறை செய்தனர். முற்காலத்தில் ஒரு குழுவிற்குள் காணப்பட்ட மிகச் சிறிய வேறுபாடுகளை முன்வைத்துச் சிறுசிறு இனமாகப் பாகுபடுத்தினர். இவற்றிற்கு அமெரிக்க இந்தியர்களின் வகைப்பாடுகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இனக்கூறுகள் (Racial Traits), உடனிகழ்வு (Mutation) மாற்றத்தால் மாற்றம் பெறக்கூடியன. இதனால், இனம் ஒரு நிலையான குழுவாக இருக்காமல் மாறுந் தன்மை கொண்டதாகக் காணப்படுகிறது. இதன் கூறுகளின் பண்பு நிலை குன்றாமலிருக்கும் தன்மை மரபுப் பண்புகளைக் கொண்டு செல்லும் மரபணுவின் இயல்பினைப் பொறுத்தது. ஒரு குழுவினரின் மணமுறையும் இனக்கூறுகளின் பண்பினை மாற்றக் கூடியதாகும். மேற்கூறிய பண்புகளுள் ஏதாவது ஒன்றில் மாற்றம் ஏற்பட்டால்கூட, இனக்குழு முழுவதிலும் மாற்றம் ஏற்படும்.

சில அறிஞர்கள் இனம், இனக்கொள்கை ஆகிய இவ்விரண்டு சொற்களின் பொருளில் ஓர் ஐயப்பாடு உள்ளதாகக் கூறினர். உரூத்து பெனிடிக்டு (Ruth Benedict) என்னும் மானிடவியலார் இனக்கொள்கையை விவரிக்கும் போது, 'இனக்கொள்கை இக்கால மூடநம்பிக்கையாகும். இது சில இனக்குழுக்களைப் புறக்கணித்துச் சில தூய்மையான கூறுகளையுடைய இனக்குழுக்களை நிலைபெறச் செய்வதாலேயே நாகரிகத்தைப் பெறமுடியும் என்னும் நம்பிக்கையின் பிடிவாதக் கொள்கையே' என்று விளக்குகிறார். மேலும், இவர் இனத்தையும் இனக்கொள்கையையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறார். இனக்கொள்கை இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இதன் உட்பொருளை அறிவியல் அடிப்படையில் மட்டுமே ஆராய வேண்டும். இது மதம் என்னும் அமைப்பைப் போன்றே காட்சியளிக்கிறது. இதன் நம்பிக்கைகளை வரலாற்றுப் பின்னணியுடனும் தெளிவாக அறிய வேண்டும் என்பது இவர் கருத்து.

இனக்கொள்கைக் கோட்பாடு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் தோன்றியதாகும். இக்கோட்பாடு இக்காலத்தில் அரசியல் அமைப்புடன் மிகுந்த தொடர்பு பெற்றுச் சமூகத்தில் வேரூன்றிய நிலையினைப் பெற்றுவிட்டது.

இனக்கொள்கையும் பண்பாட்டுச் செயல்களும்: உலகின் மிகச் சிறந்த நாகரிக வளர்ச்சிக்கு உயர்ந்த இனமே முதன்மையான பங்கேற்கிறது என முற்கால இனக் கோட்பாடுகள் கூறிவந்தன. வடமேற்கு

ஐரோப்பிய வெள்ளை இனத்தவர்கள் (Nordic) மிகுந்த அறிவினையும் பெருந்தன்மையினையும் மற்றும் பல உயர்ந்த குணங்களையும் கொண்டிருந்தனர். இவர்களே இக்கால நாகரிகத்தை உருவாக்கக் காரணமாக இருந்தனர் என்று மொழிவார் மாடிசன் கிராண்டு (Madison Grant). ஏனைய மக்கள் மேற்கூறிய சிறந்த குணங்களைப் பெற்றிராததால், வடமேற்கு ஐரோப்பிய வெள்ளை இனத்தவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக இருந்தனர் என அவர் கூறுகிறார்.

கவுண்டு கோபிநீவு (Count Gobineau) என்னும் அறிஞர், நாகரிகம் தோன்றியதற்கும் அதன் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தவை இனங்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகளே எனச் சொல்கிறார். இவர் கருத்துப்படி, தூய இனங்களும் வளர்ச்சிபெற்ற இனங்களுமே வளர்ச்சிக்கு அடிப்படையானவையாகக் காணப்பட்டன. இடைப்பட்ட கலப்பினத்தவர்கள் நாகரிக வீழ்ச்சிக்கே அடிகோலினர் என்றும், வெள்ளை இனத்தவர்களான ஆரியர்கள் உயர்ந்த இனமென்றும், இவர்கள் மிகுந்த அறிவுத்திறன் கொண்டிருந்தனர் என்றும், இவர்களாலேயே உயர்ந்த நாகரிகத்தை நிலை நாட்ட முடிந்தது என்றும் மொழிகிறார் கோபிநீவு.

இனத்தைப் பற்றிய இந்தக் கருத்துகள் அனைத்தும் அறிவியல் அடிப்படையற்றவையே. அக்கால அறிஞர்கள் அறிவியல் பின்னணியுடன் சிந்திக்கவில்லை. இனக்கூறுகள் (Racial Traits) உயிர்சார் அடிப்படையில் மரபுவழியில் கொண்டுவரப்படுவது. ஆனால், பண்பாட்டுக் கூறுகள் உயிர்சார் மரபுவழியில் கொண்டுவரப்படுவதில்லை; பயிற்சி முறையிலும் கல்வி முறையிலுமே நிலை நிறுத்தப்படுகின்றன. அனைத்து இனங்களும் சம அளவில் அறிவுத்திறன் பெறுவனவாக இருக்கின்றன. பெரும்பான்மையான சமூக அறிவியலாரின் கருத்துப்படி, ஆளுமை, அறிதிறன் முதலானவை பெரும்பான்மையாகச் சமூகச் சூழ்நிலையாலேயே வரையறுக்கப்படுகின்றன. எனவே, ஓர் இனம் வேறோர் இனத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்றும், அறிவுத்திறன் பெற்றது என்றும், உயர்ந்த இனத்தவரே நாகரிகத்தைத் தோற்றுவிப்பவர்கள் என்றும் கூறுவது வீணான வாதமாகும். இக்கருத்துகள் அனைத்தையும் நன்குணர்ந்த சில அறிஞர்கள் இனக்கொள்கையை ஒரு வெற்றுப்புனைந்துரை என்றே சொல்கின்றனர்.

இனக்கொள்கையும் படிநிலை முறையும்: சமூகச் சமநிலையின்மையின் அடிப்படையில் காணப்படும் பொதுவான அமைப்பைப் படிநிலைமுறை என வரையறை செய்யலாம். இம்முறை பிறப்பின் அடிப்படையிலோ வேற்றுக் காரணிகளின் அடிப்படையிலோ அமையப் பெறலாம். தகுதிநிலையைக் கொண்டு வரிசைப்படுத்தப்பட்ட குழுக்களாக (Rank Groups) வகைப்படுத்தும் முறையை அறிவதால், இந்த வகைப்பாட்டிற்கான காரணிகளையும் அதன் விளைவுகளையும் கண்டறியலாம். பிறப்பைக் கொண்டு குறிப்பிடப்படுகிற படிநிலை அடிப்படையில் காணப்பெறுகிற உலகளாவிய இனக்கொள்கையில், உடற்கூறுகள், சமூகத்தில் வேறுபாடுகளைக் கொண்ட பல்வேறு குழுக்களை உருவாக்கக் காரணமாவதை அறியலாம். சமூகத்தில் சமநிலையற்ற நிலை, மனிதனின் விருப்பத்திற்குட்பட்டதும் ஒரு செயற்கையான விதிப்புமாகும். இயற்கையின் தேவைகளுக்காக உருவெடுத்த இக்குழுக்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டு அவனால் கற்கப்பட்டவை. ஆகையால், இந்த நிலைமையை மனிதன் தோற்றுவிக்காமலும் கற்றுணராமலும் இருக்க முடியும்.

பிறப்பின் அடிப்படையில் அமையும் தகுதிநிலைக் குழுக்களைச் சார்ந்தவர்கள் அனைவரும், தாங்கள் இவ்வகையான பாகுபாட்டால் கொடுமைக்குள்ளாவதால் இப்பாகுபாட்டைக் குற்றமாக எண்ணுகின்றனர். ஆனால், பாகுபாடு கொண்ட சமூகத்தை வகுப்பதின் மூலம் பலனடையும் குழுக்களைச் சார்ந்தவர்கள் இதனை ஆதரித்துப் பேசுகின்றனர். இரு குழுவினருமே மற்றொருவரின் ஆளுமையிற் (Personality) புகுந்து, கற்பனையாக அவர் நலன்களின் அனுபவத்தை அனுபவிப்பவரே. இதனால், பொறாமை எண்ணமும் குற்றம் நினைத்தலும் ஒரு குழுவினரிடமிருக்க, மற்றொருவர் குற்ற எண்ணம் கொண்டு பயப்படுவர். உயிரியல்சார் கருத்து என்று தன்முனைப்புக் கொண்ட, நேர்மையான பகுத்தறிவு எண்ணத்துடன் இனக்கொள்கையை விளக்க முற்படுவது நம்பிக்கையற்ற வீண் வாதமாவதுடன், இக்கொள்கைகளின்பால் புரட்சிகரமான உணர்வுகளை எதிர்த்து வாதமிடுதலுமாகும்.

இனப்படிநிலை(Racial Stratification) முறைகள் உயிரியல்சார் அடிப்படைகளற்ற ஒரு சமூகவியல் நிகழ்ச்சியாகும். தெளிவாகத் தெரிகிற சில மரபுவழி அமையும் பண்புகளான தோல் நிறம், மயிர் வடிவம், முக ஒப்புமை, உயரம் முதலானவற்றைக் கொண்டே, மூதாதையரையோ இன அடையாளத்தையோ கணக்கிடுவர். இந்த நிறத்தடை பெரும்பாலான சமுதாயத்தில் காணப்படுவதாகும். மக்களைப் பல குழுக்களாகப் பாகுபடுத்தக் கையாளப்படும் அளவைகளுள் சில நம்பத்தக்கனவாக இல்லை இன

அடையாளங்களை உறுதிப்படுத்தக் கையாளப்படும் விதிகள் சமுதாயத்துக்குச் சமுதாயம் மாறுபடுகின்றன. அமெரிக்காவில் ஒருவன் தன் முதல் மூதாதையர் கறுப்பராக இருப்பின், அவனும் கறுப்பன் என்றே கருதப்படுகிறான். இவன் மூதாதையர்கள் பலர் வெள்ளையர்களாக இருப்பினும், அதனைப் பொருட்படுத்தாது இவ்விதச் சமூக விதிப்பை ஏற்படுத்துகின்றனர். ஆப்பிரிக்காவிலுள்ள, பெரும்பாலான அமெரிக்கக் கறுப்பர்கள், கறுப்பர்கள் என்று கருதப்படுவதே இல்லை. இன்று இந்தியாவிலும் தந்தைவழி வெள்ளை மூதாதையர்களே ஆங்கிலோ-இந்தியர்கள் (Anglo-Indians) எனப்படுகின்றனர். இவ்வகை வெள்ளையர்களே வெள்ளையர் என்று கூறப்படுகின்றனர். தாய்வழி ஐரோப்பிய மூதாதையர்கள் தொடர்பற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். இனவகையில் படிநிலையுற்ற சமூகங்களின் புறத்தோற்றக் கூறுகள், ஒருவனின் சமூக அடையாளத்தைக் காட்டுவதாகவே அமைகின்றன.

அண்மைக் காலத்தில் தோன்றிய அமெரிக்க நீக்கிரோப் புரட்சியில் நீக்கிரோக்கள் தங்களின் உரிமையை வற்புறுத்தியது ஆளும் இனத்திற்கு (வெள்ளையர்) எதிர்ப்பாய் அமைந்தது. அமெரிக்கச் சமூகத்தின் வரலாற்றில் முழுவதிலும் வெள்ளையர்கள், நீக்கிரோக்களின் எதிர்மறையான பண்புகளையே தாம் எண்ணியபடி கூறிக்கொண்டதோடல்லாமல், நீக்கிரோக்களை நம்பவைப்பதிலும் முயற்சி செய்தனர். ஆனால், இன்று அரசியல் தெளிவுடைய நீக்கிரோக்கள் தம் குழந்தைகளுக்குத் தம்மினத்தின் உண்மைக் கருத்துகளையும் கறுப்பர்களே அழகானவர் என்பதையும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். வெள்ளையர்கள் பன்றிகளென்று வெள்ளையர்களைப் பற்றிய எதிர்மறையான கருத்துகளைத் தங்கள் குழந்தைகளிடம் எடுத்துரைக்கின்றனர்.

'அமெரிக்கக் கொள்கை' மக்களை இனச்சார்பு அடிப்படையில் வேறுபடுத்துவதில் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கவில்லை. எனினும், இனக்குழுக்களை வேறுபடுத்தி நடத்தும் முறைகள் இதில் காணப்படுகின்றன. ஆங்கில மானிடவியலாளரான பேராசிரியர் ஆசுலே மாண்டகு(Ashley Montagu) அமெரிக்க இனக்கொள்கையைப் பற்றிப் பேசும்போது, 'அமெரிக்க நாட்டிலிருப்பவர்களாகிய நாம் இனக் கொள்கை என்னும் ஒட்டுநோயை நம் அரசியல் அமைப்பிலிருந்து நீக்கும் நம்பிக்கையைக் கொண்டிருக்கலாம். இந்த நம்பிக்கை மட்டும் நமக்குப் போதுமானதாகஇராது. இதற்கான செயலில் முனைய வேண்டும். அறிவால் இதனைச் சிந்தித்துச் செயற்படுவதோடு, இந்த ஒட்டுநோயினை முழுவதுமாக அறிந்து கொள்வதும் இதனை எம்முறையில் அணுக வேண்டும் என்பதனைத் தெரிந்து கொள்ளுதலும் வேண்டும்' எனக் கூறினார். நீக்கிரோக்கள் வெள்ளையர்களைப் போன்று அறிவுத் திறன் பெற்றிருக்கவில்லை என்னும் கருத்தை அமெரிக்கக் கொள்கை ஏற்றுச் செயற்பட முற்படக்கூடாது. தொன்மை உரோமானியரைப் போன்றே ஆங்கிலேயர்களும் தங்கள்குடிமக்கள் என்னும் கருத்தை நிலைநிறுத்தி, இவர்களுக்கென்று தனி உரிமைகளைக் கொடுத்து மதித்து வந்தனர். இதைப்போன்றே தம் அதிகார வரம்பிற்குட்பட்ட குடியேற்ற நாடுகளிலும் இக்கொள்கையைக் கையாண்டனர்.

பெரும்பான்மையான சமூகங்களில் மனிதர்களுக்கு இடையேயான உறவுகளும் குழுக்களுக்கிடையேயான உறவுகளும் ஒருங்கிணைந்த நிறுவனமாகச் செயற்படுவதே, வரலாற்றின் பெரும்பான்மைக் காலங்களில் நிகழ்கிறது. இவ்வகையான கூட்டமைப்புப் பெரும்பாலும் சமயக் கருத்துக்ளையும் சமய நடைமுறைகளையும் சார்ந்தே காணப்படும். மதம் பண்பாட்டின் ஒரு பகுதி. படிநிலை குழுக்களில் அவரவர் பண்பாட்டுக் கருத்துகளை நிலைநிறுத்தி, உறவு முறைகளை ஒரே வகையில் கொண்டு செல்லும் போது, ஒருவித பாதிப்பு இக்குழுக்களிடையே காணப்படுகிறது. இக்கருத்துகளின் அடிப்படையில் இன உறவுகள் பற்றிய ஆய்வுகள் ஒப்பீட்டுச் சமூகப் படிநிலை (Comparative Social Stratification) ஆய்வுகளின் மையமாக அமைகிறதெனலாம்.

இனக் கொள்கையும் சாதிக் கொள்கையும்: பிறப்பின் அடிப்படையில் தகுதியைப் பெறும் சாதி முறை இந்துச் சமூகத்தின் தனித் தன்மையாகும். இந்தியாவில் உள்ள இந்துச் சமூகத்தினரின் சாதி, பிறப்பின் அடிப்படையில் படிநிலைத் தகுதியைப் பெற்று, வெவ்வேறு குழுக்களுடனும் சார்ந்து வாழும் குழுவாகும். சாதி ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பைச் சார்ந்தது; பண்பாட்டால் தனிப்பட்டது; வாழ்க்கைத் தொழில் பெரும்பாலும் மரபுவழியில் வருவது; அகமண அமைப்புடையது. 'இனம்' 'சாதி' ஆகிய இவ்விரண்டு சொற்களும் உயிர்சார் பண்புகளின் அடிப்படையில் இல்லாமல், பிறப்பின் அடிப்படையிலான மக்கள் குழுக்களையே குறிக்கிறது. மனித சமூகத்தில் இவ்விரண்டுமே சமூக வாழ்வில் சம தகுதியின்மையையும் மனிதன்பால் மனிதன் கொண்டுள்ள மனிதத் தன்மையற்ற தன்மையையும் காட்டுகின்றன.

ஜெ.பா.

துணை நூல்கள்:

**Ashley Montagu,** The Concept of Race, The free Press of Glencoe, London, 1964.

Benedict, R., Race and Racism, Routledge and Kegan Paul, London, 1983.

Oliver C. Cox, Caste, Class and Race, Garden City, Doubleday, New York, 1948.

Rex, John, Race Relations in Sociolgical Theory, Routledge and Kegan Paul, London, 1983.

Synder, L.L., The Idea of Racism-Its Meaning and History, Princeton, 1962 .

**இனங்கள், மனிதர்**: மனிதகுலத்தின் மிகப் பெரும் பிரிவே இனம். இனம் (Race) என்னும் சொல் பல்வேறு சூழலில் பலவாறாகப் பொருள்கொள்ளப் பட்டுக் கூறப்படுகிறது. அரசியலார், மொழியியலார், உயிரியலார், வரலாற்றியலார், சமய அறிஞர்கள் முதலானோர் பண்டைக் காலந்தொட்டே வெவ்வே றான கருத்தினைக் கொண்டு, தத்தம் சொல்வழக் கில் இச்சொல்லைக் கையாண்டுள்ளனர்.

இனப்பெயர்களுள் பல மொழிக் குழுக்களைக் குறிப்பனவாகவும், நிறத்தைக் குறிப்பனவாகவும், புவி யமைப்பைக் குறிப்பனவாகவும் காணப்படுகின்றன. தமிழினம், ஆரிய இனம், நார்டிக்கு இனம் (Nordic Race), ஐரிசு இனம், இசுகாட்டிசு இனம் (Scottish Race), யூதர் இனம், செமிட்டிக்கு இனம் (Semitic Race) முதலானவை சில எடுத்துக் காட்டுகள். ஆரிய இனம் என்று வழங்கப்பட்டதற்கு முதன்மையான காரணம் அவர்களனைவரும் இந்தோ-செருமானிய மொழியின் உறவினைப் பெற்றிருந்ததே. நார்டிக்கு இனத்தவர் தம் தோலின் நிறத்தாலும் உடலுயர்வு அளவாலும் உயர்ந்தவரென எண்ணி, நார்டிக்கு என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டனர். வட ஐரோப்பாவில் உள்ள மக்களினத்தில் உடலமைப்பில் யாவரினும் உயர்ந்தவர்கள் என்ற பொருளையும் நார்டிக்கு என்னும் சொல்லுக்கு இவர்கள் தந்தனர்.

நாடு சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் மக்களினம் பகுக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் பலர் ஐரிசு இனம் என்றும் இசுகாட்டிசு இனம் என்றும் நாட்டினத்தைக் குறிப்பதற்காகச் சொற்களைக் கையாண்டனர். மொழி, நாடு, புவியமைப்பு முதலானவற்றின் சார் பற்ற மக்கள் சமயத்தால் ஒன்றுபடும்போது இன மெனக் கூறப்படுவதுமுண்டு. யூதர் இனம், செமிட் டிக்கு இனம் ஆகியவற்றை இதற்குச் சான்றாகக்கூற லாம். நீக்கிரோ இனம் என்னும் சொற்றொடர் முற்காலத்தில் கறுப்பராக இருந்த அனைவரையும் குறித்தது. பின்னரே, இவ்வினம் ஆப்பிரிக்க மூதாதை யர்களைக் கொண்ட 'கறுப்பர்'களைக் குறிக்கும் குறைந்த எல்லையைக் கொண்ட சொற்றொடராகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஆசுத்திரேலியக் கறுப்பர்கள், தென்னிந்தியக் கறுப்பு நிறத்தவர்கள், பிசித் (Fiji) தீவுக் கறுப்பு நிற மக்கள், கறுப்பு நிற அமெரிக்க இந்தியர் முதலானவர்களை இத்தொடர் சுட்டிக் காட்டுவதில்லை. மேலும், பண்பாடு, அரசி யல் முதலான பின்னணி பற்றியும் இனம்பிரித்த லுண்டு. எடுத்துக்காட்டாக, மேசிடோனியர் (Macedonians), குரோட்சு (Croats), மாக்யார்கள்(Magyars) முதலானோரைக் குறிப்பிடலாம்.

இனம் பற்றிய மானிடவியலின் வரையறை நீண்ட வரலாறு கொண்டது. இக்கருத்தை அரிசுடாட்டிலின் இயற்கை பற்றிய கருத்துகள் முதல் இலின்னேயசு (Linnaeus) வகுத்த வகுப்பு (Class), பொதுவினம் (Genus), சிறப்பினம் (Species) முதலான கோட்பாடு கள் வரை தொடர்புபடுத்தி அறியலாம். தொன்மை மானிடவியலாரின் (Classical Anthropologists) இனம் பற்றிய கருத்து, அறிவியல்சார் கருத்துகளிலிருந்தும் மரபியல்சார் கருத்துகளிலிருந்தும் மாறுபட்டது. இவர்கள் அனைவரும் மக்களினம் இயற்கையிலேயே தனிப்பட்ட பண்புகளைக் கொண்ட ஒரு சிறப்புப் படைப்பு என்று கூறினர்.

இனம் என்னும் சொல்லை முதன்முதலில் கி.பி. 1749-ஆம் ஆண்டு இயற்கை வரலாற்றியலில் (Natural History) பப்பன் (Buffon) என்பவர் கையாண் டார். உடல்சார் மானிடவியலாரான (Physical Anthropologist) புளூமன்பேக்கு (Bluemenbach) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இனம் பற்றி மிகுதியாக ஆராய்ந்தார். இவர்தம் வரையறையும் கருத்துகளும் மனித உடலின் புறக்கூறுகள்மீது அமைந்த ஒரு தலைக் கருத்தாகவே காணப்பட்டன. தார்வினின் (Darwin) இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டின் வெளிப்பாட்டிலிருந்தே இனத்தின்பால் அறிவியல் சான்றோடு அறியும்போக்கு வலுப்பெற்றது. ஒவ் வொரு சிறப்பினமும் தான் வாழும் சூழ்நிலையில் நிலையான பண்புகளைச் சிதையாமல் நிலைநிறுத் தும் திறனைக் கொண்டிருக்கவில்லை. படிமலர்ச்சி (Evolution) நிகழ்வில் ஒவ்வோரினமும் காலப்போக் கில் தன் பண்புகளில் மாற்றம் பெற்று விடுகிறது. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே மானிட வியலார்கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இனம் பற்றிய கருத்துகளை வெளியிடுவதில் மனிதப் புறப்பண்புகளை விடுத்து, மரபுப் பண்புகளையும், இரத்த வகைகள், அமினோ அமிலங்கள், ஆர்எச் கூறுகள் (Rh Factors) முதலான உடற்கூற்றுப் பண்பு களையும் அடிப்படையாகக் கொண்டு, மனித வேற்று மைகளுக்கான காரணங்களை அறிய முற்பட்டனர்.

இன்று இனம் என்னும் சொல்லை மானிடவியலார் புனை கருத்துகள் கொண்டோ அரசியல், மொழி, சமுதாயம் முதலானவற்றின் புறச்சூழலை வெளிக்காட்டும் கருத்துகள் கொண்டோ வரையறுக்கவில்லை. உயிர்சார் அடிப்படையில் ஒத்த பண்புகளைக் கொண்ட மக்கள் குழு, இனப்பெருக்க மக்கள்தொகை (Breeding Population), மரபுவழிக் கொண்டு செல்லும் பண்புகளைக் கொண்ட மக்கள் குழு ஆகியவற்றையே இனம் என்று இக்கால மானிடவியலார் வரையறை செய்வர். மனிதகுலத்தைக் குறைந்த எண்ணிக்கையிலான இனங்களாகக் குறிக்கும் முற்கால இனவரையறை இக்கால மானிடவியலாளரால் மாற்றியமைத்துக் கூறப்படுகிறது. இனம் என்னும் சொல்லுக்குப் பதிலாக இனக்குழுக்கள் (Ethnic Groups) என்னும் சொல்லை வழக்கில் கொண்டுவர முனைகின்றனர். பாரிசில் உலக நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக்கழகம்(UNESCO) 1967-ஆம் ஆண்டு வெளியிட்ட இனம் பற்றிய வெளியீடு, இனம் என்னும் சொல்லை நாடு, சமயம், புவியமைப்பு, மொழி, பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்த குழுக்களோடு தொடர்புபடுத்தலாகாது எனக் கூறுகிறது. பண்டைக் காலந்தொட்டே மேற்கூறிய சொற்களோடு இனம் என்னும் சொல் தவிர்க்க முடியாமல், சொல் வழக்கில் வந்துவிட்டதால் இச்சொல்லைக் கைவிட்டு இனக்குழுக்கள் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என அவ்வெளியீடு கூறுகிறது. இனங்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள், ஒவ்வோரினத்திலும் அதன் மக்கள் குழுவினர் கொண்டுள்ள மாறுபட்ட பண்புகளைக் குறிப்பதாகும். இப்பண்புகள் தொடர்ச்சியான மாற்றங்களைப் பெற்று வருவன. மனிதக்குழுக்கள் சார்ந்துள்ள புவியமைப்பு, சூழ்நிலை, காலநிலை, உணவுமுறை முதலானவை நெடுங்காலமாகச் செயற்பட்டு ஒவ்வொரு மக்கள் குழுவையும் அதன் மரபுப் பண்பை மாற்றும் தன்மை கொண்டவை.

மனிதக் குலத்தின் அனைத்து வகையினரும் ‘ஓமோ’ (Homo) என்னும் பேரினத்தில் (Genus) ‘ஓமோ செபியன்’ (Homo Sapien) என்னும் சிறப்பினத்தின்கீழ் அடங்குவர். ஒரே சிறப்பினத்தின் உயிரினைக் கொண்ட மக்கள் மரபுப்பண்புகளின் அடிப்படையில் பல இனங்களாகப் பகுக்கப்படுகின்றனர். எளிதில் காணப்பெறும் புறத்தோற்றப் பண்புகளான தோல், மயிர், முகம், உடலமைப்புப் போன்றவற்றைக் கொண்டும், இரத்த வகைகள், அமினோ அமிலங்கள் (Amino Acids) சுரப்பில் வெளிப்படும் மாற்றங்கள், மரபுவழி வரும் சுரப்புநீரின் (Enzymes) தன்மைகள் போன்ற உடற்கூற்றுப் பண்புகளின் அடிப்படையிலும் மனித இனங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. புறத்தோற்றப் பண்புகள் முற்கால மானிடவியல் வகைப்பாடுகளில் முதன்மையான பாங்கினைப் பெற்றிருந்தன. இக்கால உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) உடற்கூற்றுப் பண்புகளையே பெரிதும் கையாளுகின்றனர். மனித இனங்களைக் குறிப்பிடும்போது, சில உயிரியலார் மனிதத் தொகுதி (Human Stocks), இனமரபினர் (Strain), வகைகள் (Varieties), இனக்குழுக்கள் (Ethnic Groups) எனப் பலவாறாகப் பயன்படுத்துவதும் உண்டு. இது பெரும்பாலும் அரசியல் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் வெறுப்புணர்ச்சி தரும் பெயரைக் கொண்டு ஓர் இனத்தை அழைப்பதிலிருந்து தவிர்ப்பதற்கும் இச்சொற்கள் கையாளப்படுகின்றன.

தொன்மைக் காலத்தில் மனிதகுலம் வெவ்வேறு சூழ்நிலையில் எண்ணிக்கையில் குறைந்து காணப்பட்டது. காலத்தினூடே படிமலர்ச்சி நிகழ்வில் மனிதக் குழுக்கள் பெரிய நிலப்பரப்புகளிலிருந்து வெவ்வேறு திசைகளில் இடம் பெயர்ந்தன. மலைத்தொடர்களாலும் பாலை நிலங்களாலும் கடல்களாலும் ஒதுக்கப்பட்ட புவிப்பரப்பில் வாழ்ந்த மக்களினங்கள் வாழும் தன்மையில் தகவமைந்து, மேன்மேலும் நுண்ணிய மாறுபாடுகளைப் பெற்றன. இம்மாற்றங்களின் அடிப்படையில் இனங்களைப் புவியமைப்புசார் இனங்கள் (Geographical Races), வட்டார இனங்கள் (Local Races), நுண்ணினங்கள் (Micro-races) என வகைப்படுத்தலாம்.

புவியமைப்புசார் இனங்கள்: மனித இனங்களின் வளர்ச்சியிலும் வேறுபாடுகளிலும் இயற்கையின் தாக்கம் மிகுதியானது. பண்டைக் காலத்தில் மனிதர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நிலப்பகுதிகளில் மட்டுமே வாழ்ந்திருந்தனர். பின்னர், அவர்கள் பூமியின் பல்வேறு இடங்களுக்கு, உயரமான மலைகள், அகன்ற ஆறுகள், அடர்ந்த காடுகள், செழிப்பற்ற பாலை நிலங்கள் முதலான இயற்கைத் தடைகளைக் கடந்து இடம்பெயர்ந்து வாழ முற்பட்டனர். இறுதியில், வரலாற்றுப் போக்கில் பூமியின் அனைத்துக் கண்டங்களிலும் வேறுபட்ட சூழ்நிலை, கால நிலைகளையுடைய அனைத்து நிலப்பரப்புகளிலும் மனித வாழ்க்கை பரவிவிட்டது. ஒவ்வோர் இயற்கைச் சூழலிலும் வாழும் மனிதக் குழு ஒவ்வொன்றும் தான் சார்ந்துள்ள நிலப்பரப்பின் தன்மைக்கேற்ற பண்புகளைப் பெற்று விடுகிறது. இதனால், மக்களிடையேபுறப்பண்புகளிலும்உடற்கூற்றுப் பண்புகளிலும் ஒவ்வொரு பகுதி மக்களும் ஏதோ ஒரு வகையில் தனிப்பட்டவர்களாகக் காணப்படுவர். இவ்வித மக்கள் இனத்தையே ‘புவியமைப்புசார் இனங்கள்’ எனக் கூறுவர்.

இவ்வினம் இயற்கையினால் அமையப் பெறுவது; புவிப்பரப்பால் பகுக்கப்படுவது; வேற்று நிலப்பரப்பு மக்களிடமிருந்து வேறுபடுவது. புவியமைப்புசார் இனங்கள் பற்றித் தெளிவாக விளக்கும்போது, மிகப் பரந்த நிலப்பரப்புகளைக் கொண்ட கண்டங்களைக் குறிப்பிடுவதே பொருத்தமானது. புவியமைப்புசார் இனங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கண்டத்தைச் சார்ந்ததாகக் காணப்படினும் சில இனத்தவர்கள் பிற கண்டங்களிலும் காணப்படுகின்றனர். பெரும்பாலான மானிடவியலார் உலக மக்களை ஒன்பது புவியமைப்புசார் இனங்களாகப் பகுப்பர். அவையாவன: 1. ஆப்பிரிக்கர், 2. அமெரிக்க இந்தியர், 3. ஆசியர் (Asian), 4. ஆசுத்திரேலியர் (Australian), 5. ஐரோப்பியர், 6. இந்தியர், 7. மெலனீசியர் (Melanesian), 8. மைக்ரோனீசியர் (Micronesian), 9. பாலினீசியர் (Polynesian). சில மானிடவியலார் ஆட்டண்டாட்டு (Hottentot), புசுமன் (Bushmen) ஆகியோரை ஆப்பிரிக்கர்களிலிருந்து பிரித்துத் தனிப் புவியமைப்புசார் இனமாகக் கணக்கிட்டுப் பத்துப் புவியமைப்புசார் இனங்கள் உண்டு என்பர்.

ஆப்பிரிக்கர்:இவர்களைநீக்கிரோவினர் (Negroid) எனக் குறிப்பிடுவர். இவர்கள் சகாராவின் தென் பகுதியிலிருந்து ஆப்பிரிக்கா முழுவதும் பரவியுள்ளனர். அமெரிக்கக் கறுப்பர்கள் பெரும்பான்மையோர் ஆப்பிரிக்கத் தோற்றத்தைக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரும் சுருண்ட அல்லது மிகச் சுருண்ட மயிரினையும் தடித்த உதடுகளையும், கருமையான தோல், மயிர், பல் ஈறு முதலானவற்றையும் கொண்டவர்கள்.

அமெரிக்க இந்தியர்: இவர்கள் அமர்இந்தியர் (Amerindian) அல்லது அமெரிக்க மங்கோலியர் எனவும் கூறப்படுவர்; ஆசிய மக்களோடு தொடர்புற்றவர்களாயினும் இரத்தக் குழுவில் மாற்றம் பெற்றவர்கள். தோலின் நிறம் இளம் பழுப்பு முதல் கருமையானபழுப்பு வரை காணப்படுகிறது. இவர்கள் கருமையான நேரான மயிரைக் கொண்டவர்கள். இவர்கள் தென்அமெரிக்காவிலும் வட அமெரிக்காவிலும் வாழ்கின்றனர்.

ஆசியர்: தெற்கு ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளைத் தவிர்த்துச் சப்பான் (Japan), தாய்லாந்து, பிலிப்பைன்சு, இந்தோனேசியத் தீவுகள் முதலானவற்றின் மக்களை ஆசியர் எனக் குறிப்பிடுவர். இவர்கள் இளம் பழுப்பு நிறத் தோலையும், இரப்பை அடிமடிப்பையும் (Epicanthic Fold), ஐரோப்பியர்களை விடக் சற்றுக் குறைவான உயரத்தையும் கொண்டவர்கள்.

ஆசுத்திரேலியர்: இவர்கள் ஆசுத்திரேலிய முதுகுடி (Australian Aborigine) என்றும், ஆசுத்திரேலிய இனத்தவர்கள் (Australoid) என்றும் கூறப்படுவர். இவ்வகையினர் ஆசுத்திரேலியாவின் வட்டார இனங்களின் குழுமமேயாகும். பெரிய பற்கள், குறுகிய மண்டையோடு, உடலில் மிதமான அளவில் மயிர், நடுத்தரமான தோல் நிறம் முதலான பண்புகளைப் பெற்றவர்கள் ஆசுத்திரேலியர்.

ஐரோப்பியர்: இவர்கள் காக்கேசியர் (Caucasoid) எனவும் கூறப்படுவர். ஐரோப்பா, மத்திய கிழக்கு, சகாராவின் வடக்குப் பகுதி முதலானவற்றின் மக்கள் இந்த வகையில் அடங்குவர். ஆசுத்திரேலிய, நியூசிலாந்து, வடக்கு, தெற்கு அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளிலுள்ள வெள்ளையர்களும் ஐரோப்பியப் புவியமைப்புசார் இனத்தைச் சேர்ந்தவர்களாவர். அனைத்துப் புவியமைப்புசார் இனங்களைக் காட்டிலும் மிதமான தோல் நிறம் கொண்டவர்கள்.

இந்தியர்: தெற்காசிய மக்களனைவரும் இந்த இனத்தில் அடங்குவர். தோலின் நிறம் மிதமானது முதல் கருமையான நிறம் வரை காணப்படுகிறது. வடபகுதியில் இளம்பழுப்பு நிறத்தையும் தென்பகுதியில் கரும்பழுப்பு நிறத்தையும் கொண்டவர்களாக உள்ளனர். இந்தியர்கள் ஐரோப்பியரோடு 'B' வகை இரத்தக் குழுவோடு பெரும்பான்மையாகக் கொண்டு ஒன்றுபடினும், வேறு சில இரத்தப் பண்புகளில் வேறுபடுகின்றனர்.

மெலனீசியர்: இவர்கள் மெலனீசிய – பப்புவர் (Melanesian – Papuan) எனவும் கூறப்படுவர். நியூபிரிட்டன், நியூகினி, சாலமன் தீவுகள் முதலானவற்றில் வாழும் இவர்கள் கருமையான தோலினைக் கொண்டவர்கள். இவர்கள் ஆப்பிரிக்கர்களோடு தோலின் நிறத்தால் ஒன்றுபட்டாலும் இரத்தக் குழுக்களால் வேறுபடுகின்றனர்.

மைக்ரோனீசியர்: கரோலின் (Caroline), கில்பர்ட்டு (Gilbert), மரியனா (Mariana), மார்சல் (Marshall) தீவுகளில் உள்ளவர்கள் இந்த இனத்தவர்களாவர். இவர்கள் அலைஅலையானது முதல் சுருட்டையானது வரையுடைய தலைமயிரைக் கொண்டவர்கள். இரத்த வகையில் பாலினீசியரைச் சில வகையில் ஒத்திருப்பினும், இவர் 'B' இரத்த வகையை மிகுதியாகப் பெற்றவர்கள்.

பாலினீசியர்: இவர்கள் பசிபிக்குக் கடலில் தூரப் பகுதிகளில் உள்ள தீவுகளில் குறிப்பாக வடக்கில் அவாய் (Hawaii) முதல் தெற்கில் நியூசிலாந்து

வரையிலும், கிழக்கில் ஈசுடர்த் தீவு (Easter Island) முதல் மேற்கில் துவலுத் (Tuvalu) தீவு வரையிலும் உள்ள தீவுகளில் காணப்படுகின்றனர். இவர்கள் மிதமானது முதல் நடுத்தரமானது வரையிலான தோலின் நிறங் கொண்டவர்கள். பிற பசிபிக்குக் கடல் மக்களினத்தவர்களைப் போன்றே குறைந்த அளவிலான 'B' வகை இரத்தக் குழுவைப் பெற்றுள்ளனர்.

வட்டார இனங்கள்: புவியமைப்புசார் இனங்கள் அனைத்தும் பல வட்டார இனப்பெருக்க மக்கள் தொகைகளை (Local Breeding Population) உடையன. குறைந்த எண்ணிக்கையுள்ள மக்கள்தொகையுடைய 'வட்டார இனங்கள்' மொழியாலும் மரபுப் பண்பாலும் பண்பாட்டாலும் மிகுந்த ஒற்றுமையைப் பெற்றிருக்கும். வட்டார மக்கள்தொகை (Local Population) என்றும் கூறப்படும் வட்டார இனங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்திருக்கும் பண்பினைக் கொண்டுள்ளதால், அவர்கள் பேசும் மொழியால் ஒன்றாகக் காணப்படுவர். அமெரிக்க இந்தியர்கள் எனப் பொதுவான பெயரைக் கொண்ட மக்கள் தொகையில் நூற்றுக்கும் மேற்பட்ட வட்டார இனங்கள் காணப்படுகின்றன. தொன்மை ஆசுத்திரேலிய இனத்தைச் (Proto-Australoid) சேர்ந்த பெரும்பான்மையான இந்திய மக்கள் தொகையிலும் நூற்றுக்கணக்கான வட்டார இனங்கள் காணப்படுகின்றன. தமிழகப் பகுதியில் வாழும் பழங்குடிகளுள் தோடர், படகர், இருளர், காடர் போன்ற மக்களனைவரும் ஒவ்வொரு வட்டார இனங்களாகவும், ஆந்திரப் பகுதியில் வாழும் செஞ்சுகள், எருகுளர், இலம்பாடி போன்றோர் ஒவ்வொருவரும் தனித்தனி வட்டார இனங்களாகவும் காணப்படுகின்றனர். வட்டார இனத்தைப் பற்றித் துல்லியமாக வரையறை செய்யும்பொழுது, ஒவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு சாதிக்குழுவும் தனித்தனி வட்டார இனமென்றே கூறவேண்டும். இதைப்போன்றே இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் மொழி, பண்பாடு, மரபுப் பண்பு முதலானவற்றின் அடிப்படையில் பல வட்டார இனங்கள் காணப்படுகின்றன.

நுண்ணினங்கள்: வட்டார இனப்பெருக்க மக்கள் தொகையைக் கொண்ட மக்கள் குழுவே, வட்டார இனங்களாகும். நுண்ணினங்கள் என்பன நெருக்கமான தொடர்பினைப் பெற்ற தனித்த இனப்பெருக்க மக்கள் தொகை (Isolated Breeding Population) ஆகும். சமூகம், சாதி, சமயம் முதலானவற்றின் அடிப்படையில் அமையப்பெறும் இனப்பெருக்க் குழுவும் நுண்ணினமே. சமயம், சாதி முதலான சமூக அமைப்புகள் பல விலக்குகளையும் (Taboos) பல தடுப்புகளையும் விதித்து, நுண்ணினத்தின் தனித்தன்மையைக் காத்து நிற்கின்றன.

மனித குலத்தைப் பாகுபடுத்துவதில் தலையான அலகாகக் காணப்படுவது இனமே. மனித இனங்களை அடையாளங் காணவும், வகைப்படுத்தவும், மனித இனங்களின் தோற்றத்தினை ஆழ்ந்து அறியவும் இனங்களுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகள் மனிதச் செயற்பாடுகளில் கொண்டுள்ள தொடர்புகளை அறியவும் மனித இனங்களின் உயிரியல் பண்புகளைக் கண்டறிய வேண்டும். உடல்சார் மானிடவியலார் மனித இனங்களை வகைப்படுத்தியதில் பல கருத்துகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இனத்தை வகைப்படுத்துவதில் பழைய அலகுகளாக நிறம், மயிர் வடிவம், மனித உடலளவு முதலியவற்றைக் கையாண்டனர். நெடுங் காலமாகவே புவியமைப்புசார் இனங்களும் வட்டார இனங்களும் கண், தோல், மயிர் முதலானவற்றின் நிறங்களை அடிப்படையாகக்கொண்டே பாகுபடுத்தப்பட்டன. வெள்ளை மனிதன், கறுப்பு மனிதன், மஞ்சள் மனிதன், சிவப்பு மனிதன், தோல் நிறம், மயிர் வடிவம், தலையமைப்பு முதலானவையும் பழைய அலகுகளாகும். இனங்களை வகைப்படுத்துவதில் புதிய அலகுகளாக இரத்தக் கூறுகளையும் (Blood Traits) பிற மரபுப் பண்புகளையும் பெரிதும் கையாளுகின்றனர். காண்க: இனவகைப் பாட்டின் அலகுகள்.

இனவகைகள்: மனித குலத்தை மரபுசார் பண்புகள் அடிப்படையிலும், பொதுவான உடலியற் பண்புகள் அடிப்படையிலும், பொதுவான சில வேறுபாட்டுப் பண்புகளின் (Variable Character) அடிப்படையிலும் பல இனங்களாக மானிடவியலார் வகைப்படுத்துவர். இனங்களை வகைப்படுத்துவதில் பல காலகட்டங்களில் மானிடவியலாரிடையே வேறுபட்ட பல கருத்துகள் காணப்பட்டாலும், அவர்கள் மனிதகுலத்தை நீக்ரோவினர் (Negroid), மங்கோலியர் (Mongoloid), காக்கேசியர் (Caucasoid) என்னும் மூன்று பெரும் இனக்குழுக்களாகப் பகுத்துள்ளனர். சில மானிடவியலார் ஆசுத்திரேலியர் (Australoid) என்ற நான்காவது இனத்தையும் சேர்ப்பர்.

ஒவ்வோரினமும் பல குழுக்களாகவும் உட்குழுக்களாகவும் பாகுபடுவதை அனைத்து மானிடவியலாரும் ஒப்புக்கொள்கின்றனர். இக்கால மானிடவியலாளர் நீக்ரோவினர், மங்கோலியர், காக்கேசியர் என்ற மூன்று இனங்களையே இனவகைப்பாட்டில் பெரிதும் கையாளுகின்றனர்.

## மங்கோலியர்



சப்பானியக் குழந்தை




அமெரிக்க இந்தியப் பெண்



சைபீரியப் பெண்


## நீக்கிரோவினர்



பாப்புவர்



தென்னாப்பிரிக்க புசுமன்



காடர் பழங்குடி



பாலினீசியப் பெண்



சூடான் நாட்டுப் பெண்



ஆப்பிரிக்கப் பெண்

காக்கேசியர்



தொன்மை திராவிடர்-ஊராளி



இந்தியர்




ஐரோப்பியர்



திராவிடப்பழங்குடி-ஏனாதி



திராவிடப்பழங்குடி-கோத்தர்



இந்தியப்பெண்

மங்கோலியர்



திபெத்துமங்கோலியர்



தொல்மங்கோலியர்-நாகர்



எசுக்கிமோ




தொடக்க கால மனித இடப்பெயர்ச்சி




புவியமைப்புசார் இனங்கள்

நீக்கிரோவினர்: இம்மக்களின் தோல் நிறம் கரும் பழுப்பு, கருப்பு நிறங்களில் அமையும். சில குழுக்களிடையே மஞ்சள் கலந்த பழுப்பு நிறமும் காணப்படும். மயிர் குட்டையாகவும் சுருள் சுருளாகவும், சிலரிடையே அடர்ந்து சுருட்டையாகவும் காணப்படும். இவர்களின் கண்கள் கரும்பழுப்பு, கருப்பு நிறங்களை உடையன. மூக்குப் பெரிதாகவும் தட்டையாகவுமிருக்கும். மூக்கடியும் (Nose Root) மூக்கு இணைப்பும் (Nose Bridge) தட்டையாகவும் பெரிதாகவுமிருக்கும்: முகநீட்சி (Facial Prognathism) குறிப்பிடும்படியாக இருக்கும். நீக்கிரோவினர் ஆப்பிரிக்க நீக்கிரோ (African Negro) என்றும் பசிபிக்குப் பெருங்கடல் பகுதியினர் (Oceanic) என்றும் பகுக்கப்படுகின்றனர்.

ஆப்பிரிக்க நீக்கிரோ: இக்குழுவினர், கலப்பற்ற நீக்கிரோவினர் (True Negros), நைல் ஆற்றுப் பகுதி நீக்கிரோவினர் (Nilotic Negros), பண்டு மொழி பேசும் நீக்கிரோவினர் அல்லது பண்டு (Bantu Speaking Negros or Bantu), புசுமன் ஆட்டண்டாட்டு (Bushmen Hutentot), நீக்கிரில்லோ (Negrillo) என ஐந்து உட்குழுக்களாகப் பகுக்கப்படுகின்றனர்.

கலப்பற்ற நீக்கிரோ: இவர்கள் கருமை அல்லது கரும்பழுப்பு நிறத் தோல், 173 செ.மீ. வரை உயரம், சுருட்டை மயிர், அகன்ற மூக்கு (Platyrrhine), நீண்டு குறுகிய தலை (Dolicocephalic), நீண்ட முகம், தடித்த உதடுகள் குட்டையான கால்கள் நீண்டகைகள் உடையோர். இந்நீக்கிரோக்கள் மேற்கு ஆப்பிரிக்காவிலும் கினி கரையிலும் (Guinea Coast) வாழ்கின்றனர். செனகல் ஆறு முதல் சூடான் வரையிலும், உகாண்டா, சாம்பியா முதலான பகுதிகளிலுள்ள அடர்ந்த காடுகளிலும் வாழும் நீக்கிரோக்கள் கலப்பற்ற நீக்கிரோக்களை விட உயரம் குறைந்து காணப்படுகின்றனர். இவர்களின் சராசரி உயரம் 165 செ.மீ. இவர்கள் உடலமைப்பில் பொதுவான அமைப்புகளைப் பெற்றிருப்பினும் மூக்குப் பெரியதாகவும் முக எலும்பு நீட்சி பெற்றதாகவும் காணப்படுகின்றனர்.

நைல் ஆற்றுப் பகுதி நீக்கிரோ: இவர்கள் மிகக் கருமையான தோல், 178 செ.மீ. வரை உயரம், நீண்ட கால்கள், நீண்டு குறுகிய தலை, அகன்ற மூக்கு, குறைந்த நீட்சியுடைய முகம், தடிப்பற்ற உதடுகள் பெற்றுள்ளனர். இப்பண்புகள் கலப்பற்ற நீக்கிரோக்களின் பண்புகளிலிருந்து மாறுபட்டவை. நைல் ஆற்றுப் பகுதியில் வாழும் நீக்கிரோக்களுள் சில்லூக்கு (Shilluk), தின்கா (Dinka), கவிரோண்டோ (Kavirondo), அமிட்டிக்கு (Hamitic) அல்லது எத்தியோப்பியருள் ஒரு பிரிவினர் முதலானோர் அடங்குவர். இவர்கள் நைல் பள்ளத்தாக்கின் மேற்பகுதியிலும் கிழக்குச் சூடானிலும் வாழ்கின்றனர்.

*நீக்கிரோவினர்*



*எத்தியோப்பியப் பெண்*



*மேற்கு ஆப்பிரிக்கப் பெண்*

பண்டு மொழி பேசும் நீக்கிரோ: இவர்கள் தென் ஆப்பிரிக்கா, நடு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் பண்டு மொழி பேசும் மக்கள். இக்குழுவில் பல மாறு பட்ட பண்பு கொண்ட மக்கள் தொகுதியினர் காணப்படுகின்றனர். இவர்களின் தோல் மஞ்சள் கலந்த பழுப்பு, கருப்பு நிறங்களை உடையது. பெரும் பான்மையோர் கரும்பழுப்பு நிறத்தவர். நீக்கிரோக் கள் பண்பினைக் கொண்ட தலைமுடியையும் 167 செ.மீ. வரையிலான உயரத்தையும் நீண்டு குறுகிய தலையையும் இவர்கள் கொண்டிருக்கின்றனர். சிலர் நடுத்தரத் தலை (Mesocephalic) அமைப்பையும் கொண்டுள்ளனர். நடுத்தரத்தலை அமைப்பைக் கொண்டவர்கள் குறைந்த உயரமானவர்கள். மிகுதி யான; கருப்பில்லாத தோலினையும் தட்டையான முன் நெற்றியையும் தாடை நீட்சி குறைந்த முகத் தினையும் உடையவர்கள். பண்டு மொழி பேசும் இவர் கள் நீக்கிரோ இனத்தவராயினும் அமிட்டிக்கு, நீக்கிரில் லோபுசுமன் - ஆட்டண்டாட்டு முதலான இனத்த வர்களுடன் கலப்புற்றுக் காணப்படுகின்றனர்.

புசுமன் - ஆட்டண்டாட்டு: உடல் தோற்ற அமைப்பில் புசுமன் (Bushmen), ஆட்டண்டாட்டு (Hottentot) ஆகிய இரு இனத்தவருமே ஏறத்தாழ ஒத்த பண்பினைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பண்பாட்டால் இருவரும் வேறுபடுகின்றனர். ஆட் டண்டாட்டு இனத்தவர் கொய்-கொய் (Khoi-Khoi) என்றும் புசுமன் இனத்தவர்கள் குவய் அல்லது சான் (San) என்றும் குறிக்கப்படுவர். புசுமன் இனத்த வர் முன்பு தென்னாப்பிரிக்காவின் பெரும் பரப்பு களில் காணப்படினும், இக்காலத்தில் கலகாரி (Kala hari) பாலைவனப் பகுதிகளில் மட்டுமே வாழ்கின்ற னர். ஆட்டண்டாட்டு இனத்தவர் தென்மேற்கு ஆப் பிரிக்காவில் வாழ்கின்றனர்.

புசுமன்-ஆட்டண்டாட்டு இனத்தவர்களின் புறப் பண்புகள் மிகுதியாக ஒத்த பண்புகளாகவே காணப் படுகின்றன. இவர்களின் தலை மயிர் சுருண்டு கருத் திருக்கும். உடலில் குறைந்த அளவு மயிர் உளது. ஒருசில குழுக்களில் உடலின்மேல் மயிர் காணப் படாது. புசுமன் தோலின் நிறம் வெளிர்பழுப்பு முதல் பழுப்பு மஞ்சள் வரையிலும் உள்ளது. ஆட்டண் டாட்டுத் தோலின் நிறம் சிவப்புக் கலந்த மஞ்சளா கும். இருவருக்குமே கண் நிறம் கரும்பழுப்பு ஆகும். ஆட்டண்டாட்டு இனத்தவர் 160 செ.மீ.வரை உட லுயரத்தையும், புசுமன் இனத்தவர் 145 செ.மீ. வரை உடலுயரத்தையும் கொண்டுள்ளனர். ஆட்டண் டாட்டு, புசுமன் ஆகியோரின் தலை நீண்டு குறுகி யும், முகம் நீண்டு முக்கோண வடிவமாகவும், தாடை குறைந்த நீட்சியுடையதாகவும், எடுப்பாகவும் மோவாய் சிறியதாகவும், முன்நெற்றி குமிழ் வடிவ மானதாகவும் மூக்கு தட்டையாகத் தாழ்ந்து அகன்று நுனி தடித்துக் குழிந்த உருவுடையதாகவும் உள் ளன. புசுமன்பெண்களின் மெலிந்த பிட்டத்தைப் போலல்லாதுஆட்டண்டாட்டுப் பெண்களின் பிட்டம் மிகுந்து புடைத்துக் காணப்படுகிறது.

நீக்கிரில்லோ (ஆப்பிரிக்கக் குள்ளர்): இவர்கள் 136 செ.மீ. உயரமுடையோர்; குறைந்த உடலுயரத் தினர்; குறுகிய கால்களும் நீண்ட கைகளும் நடுத் தரமான தலையும் தாடை நீண்டமுகமும் பெற்றுள் ளனர்; குறுகியதும் மெலிந்ததுமான கன்னமும் அகன்ற தட்டையான மூக்கும் இவர்கள் உடையவர்; இவர்களின் தலை மயிர் கரும்பழுப்பு நிறத்தில் மிகக் குட்டையாகவும் சுருட்டையாகவும் இருக்கும்; உடல் மயிர் மஞ்சள் நிறமுடையது.

நீக்கிரில்லோ மக்களில் அக்கா (Akka), பா திவா (Ba Twa), பா இம்புத்தி (Ba Mbuti) முதலான குழு வினர் அடங்குவர். இவர்கள் அனைவரும் காங்கோப் பகுதியில் உள்ள நிலநடுக்கோட்டுக் காட்டுப் பகுதி களில் வாழ்கின்றனர். குள்ளர்கள், நிலநடுக் கோட்டுப்பகுதியிலுள்ள ஆப்பிரிக்கா (காங்கோப் பகுதி), மலாய் முந்நீரகம் (Malay Peninsula), சுமித்திரா, அந்தமான் தீவுகள், பிலிப்பைன்சு, நியூ கினி முதலான பகுதிகளிலும் காணப்படுகின்றனர். இக்குள்ளர்கள் அனைவரையும் ஆப்பிரிக்கக்குள்ளர்கள் (நீக்கிரில்லோ), பசிபிக்குப் பெருங்கடற் பகுதிக் குள் ளர்கள், ஆசியக் குள்ளர்கள் என்று வகைப்படுத்த லாம். பசிபிக்குப் பெருங்கடற் பகுதிக் குள்ளர்களும் ஆசியக் குள்ளர்களும் நீக்கிரிட்டோ (Negrito) ஆவர்.

பசிபிக்குப் பகுதி நீக்கிரோ: நீக்கிரோ இனத்தின் ஒரு துணைப் பிரிவாகிய பசிபிக்குப் பகுதி நீக்கிரோ (Oceanic Negro) இனக்குழுவில் ஆசியப் பசிபிக்குப் பகுதிகளில் வாழும் நீக்கிரிட்டோவும் மெலனீசியரும் பப்புவரும் அடங்குவர்.

நீக்கிரிட்டோ குழுவில் அந்தமானியர், சீமாங்கு (Semang), அயிட்டா (Aeta), தப்பிரோ (Tapiro) முதலானோர் முதன்மையானவர்கள். இவர்களுள் அந்தமானியர், சீமாங்கு, அயிட்டா ஆகியோர் ஆசி யக் குள்ளர்கள். தப்பிரோ பசிபிக்குப் பகுதிக்குள் ளர்கள்.

அந்தமானியர்: குறைந்த உயரமுடையோர். இவர்களின் சராசரி உயரம் 148 செ.மீ. இவர்கள் குறுகி அகன்ற தலையமைப்பு, நேரான மூக்கு,

அகன்ற கன்னங்களையுடைய முகம், வெண்கல நிறம் முதல் புகைக்கரி கருப்பு நிறம் வரையிலான நிறமுடைய தோல், வெளிர்சிவப்புக் கலந்த கருநிறத் தலைமயிர் முதலான உடற்பண்புகளைப் பெற்றுள்ளனர். இவர்கள்உடல் பரவலான மயிருடனோ மயிரற்றோ காணப்படுகிறது.

சீமாங்கு இனத்தவர் சராசரியாக 152 செ.மீ. வரையிலான உயரத்தைப் பெற்றுள்ளனர். நல்ல உடற்கட்டுடன் காணப்படும் இவர்களது தலை நடுத்தரமாகவும், முகம் வட்டமாகவும், மூக்கு அகன்று தட்டையாகவும், தோல் கரும்பழுப்பு நிறமாகவும், தலை மயிர் சுருண்டு குட்டையானதாகவும் காணப்படுகின்றன. இவர்கள் கிழக்குச் சுமத்திராவிலும் மலாய் முந்நீரகத்தின் மையப் பகுதியிலும் வாழ்கின்றனர்.

அயிட்டா இனத்தவர்கள் சராசரி 146 செ.மீ.உயரமும் குறுகி அகன்ற (Brachycephalic) தலையமைப்பும் உடையவர்கள். இவர்தம் மூக்கு தட்டையாகிக் குறுகி அகன்றது; உதடுகள் நடுத்தரமாகத் தடித்துக் காணப்படும்; தோல் புகைக்கரி கருப்பு நிறமுடையது; தலைமயிர் கருத்தும் சுருண்டும் உள்ளது; உடலின்மீது அடர்ந்த மயிர் உள்ளது. இவர்கள் பிலிப்பைன்சுத் தீவுகளில் வாழ்கின்றனர். தப்பிரோ இனத்தவர் சராசரியாக 146 செ.மீ. உயரமுடையோர். சதைப் பற்றுள்ள இவர்கள்தலை நடுத்தரமானது; மேலுதடு ஆழ்ந்து குவிந்திருக்கும்; தலைமயிர் சுருண்டு குறுகிக் கருமையானது; முகம், உடல் ஆகிய இடங்களில் மயிர் நிறைந்திருக்கும்; தோல் மஞ்சள் கலந்த பழுப்புநிறமாகும். இவர்கள் நியூகினி தீவுகளில் வாழ்கின்றனர்.

பாப்புவ இனத்தவர் நியூகினி, மெலனீசியா ஆகிய தீவுகளில் வாழ்கின்றனர். சராசரியாக 168 செ.மீ. உயரமுள்ள இவர்களது தலையமைப்பு நீண்டு குறுகியது. இவர்களின் கண் குழி விளிம்பு (Brow Ridge) தொடர்ச்சியாகவும் தடித்துமிருக்கும். இத்தகைய உடல் அமைப்பு தொன்மைக் கால மனிதனிடம் காணப் பெறுவதாகும். இவர்கள் அழுந்திய வேர், குவிந்த உருவம், தடித்த நுனி ஆகிய பண்புகளையுடைய மூக்கு, சுருட்டையான கரு மயிர், கரும் பழுப்பு நிறத்தோல், முகத்திலும் உடலிலும் அடர்ந்த மயிர், கரும்பழுப்பு முதல் சிவந்த பழுப்பு நிறம் வரையிலான மயிர் ஆகிய பண்புகளைப் பெற்றுள்ளனர்.

மெலனீசிய இனத்தவர்கள் குள்ளமான உயரம் முதல் நடுத்தர உயரம் வரையில் காணப்படுகின்றனர். இவர்களிடையே நீண்டு குறுகிய தலையமைப்புப் பொதுவாகக் காணப்படினும், நடுத்தரத் தலையமைப்பும் குறுகி அகன்ற தலையமைப்பும் காணப்படுகிறது. இவர்தம் முன் நெற்றி வட்டமானதாகவும் மூக்கு அகன்றதாகவும் உள்ளன; மயிர் பெரும்பாலும் சுருட்டையானதாகவும் ஒரு சில குழுக்களிடையே வளைவமைப்பு உடையதாகவும் சுருள்சுருளாகவும் தோலின்நிறம் கரும்பழுப்பு, செம்பழுப்பு, கருமையாகவும் காணப்படுகின்றன. இவர்கள் நியூகினி தீவின் கடலோரப் பகுதிகளிலும் பிசி (Fiji), அட்மிரால்டி தீவு (Admirality Island), நியூகலிடோனியா (New Caledonia) தீவு ஆகியவற்றிலும் அதன் அண்டைய பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

மங்கோலிய இனத்தவர்களின் தோல் மஞ்சள் முதல் பழுப்புக் கலந்த மஞ்சள் வரை நிறமுடையது. சில குழுக்களிடையே அது வெளிர் மஞ்சளாகவும் உள்ளது. மங்கோலியர்களின் தலைமயிர் கருப்பாகவும், நேராகவும், சொறசொறப்பாகவும் இருக்கும்; உடலிலும் முகத்திலும் மயிர் குறைந்த அளவே இருக்கும். எடுப்பான கன்ன எலும்புகளைக் கொண்டு, இவர்கள் முகம் தட்டையாகி அகன்றிருக்கும். இவர்கள் கண் சாய்வானது; கண்ணில் உட்புற இரப்பை அடிமடிப்பு (Inner Epicanthus) என்னும் தசை வளர்ச்சி அல்லது மங்கோலிய மடிப்பு(Mongoloid Fold) என்னும் தசையுடன் காணப்படும்.

மங்கோலியர்களைத் தொன்மை அல்லது மைய மங்கோலியர்கள் (Classic or Central Mongoloids), வடதுருவ அல்லது வடபகுதி மங்கோலியர் அல்லது எசுகிமோவினர் (Arctic or Northern Mongoloids or Eskimoids), தெற்கத்திய அல்லது இந்தோனேசிய-மலாய் மங்கோலியர்கள் (Southern or Indonesian Malayan Mongoloids), அமெரிக்க இந்தியர்கள் (American Indians)என நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

தொன்மை அல்லது மைய மங்கோலியர்கள் சைபீரியா, வடசீனா, மங்கோலியா, திபேத்து முதலான பகுதிகளில் வாழ்கின்றனர். மங்கோலிய இனப் பழங்குடிகளுள் ஒருசிலர் பூரியாத்து (Buriat), கொன்யக்கு நாகர், கோல்டி (Goldi), கில்யக்கு(Gilyak) முதலானோராவர். திபேத்து நாட்டவரும் வடசீன மக்களும் இக்குழுவில் அடங்குவர். இவர்களின் தலை குறுகி அகன்றது. நடுத்தரத் தலையமைப்பும், நீண்டு குறுகிய தலையமைப்பும் இவர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. இவர்தம் முன்நெற்றி வட்டமானதும் நடுத்தர உயரமானதுமாகும். அழுந்திய அடியைக் கொண்ட இவர்களது மூக்கு நேராகவோ குழிந்தோ காணப்படுகிறது. இவர்களின் கன்ன

எலும்பு நன்கு வளர்ந்து காணப்படுகிறது; தோலின் நிறம் மஞ்சள் முதல் பழுப்பு மஞ்சள் வரை இருக்கும்; தலைமயிர் கருப்பாகவும் நேராகவும் சொற சொறப்பாகவும் உள்ளது; உடலிலும் முகத்திலும் மயிர் குறைந்து காணப்படுகிறது. இவர்கள் மங்கலாயிடு மடிப்புள்ள கண்களைக் கொண்டிருக்கின்றனர்.

வடதுருவ மங்கோலியர் அல்லது எசுகிமோவினர்: நேரான கருத்த தலைமயிர், மஞ்சள் நிறத் தோல், எடுப்பான கன்ன எலும்புகள், அகன்று தட்டையான முகம், குறுகிய மூக்கு, குறுகிய கைகள் மற்றும் பாதங்கள், நீண்ட உடல், குறுகிய கால்கள், நேரான கண்கள் ஆகியவற்றையும் மங்கோலிய மடிப்புகளை மிகக் குறைந்த அளவிலும் பெற்றுள்ளனர்.

இப்பிரிவினர் வடஆசியா, வடஅமெரிக்கா, ஆர்க்டிக்குக் கரைப் பகுதி, கிரீன்லாந்து, இலாப்ரடார், மேற்கு அலாசுகா (Western Alaska) முதலான பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் முதன்மையானவர்கள் எசுகிமோ, சுக்சி (Chukchi), காம்சடேல்சு (Kamtchadales), யாக்குட்சு (Yakuts) ஆகியோர். மேற்கத்திய எசுகிமோக்கள் சராசரி 168 செ.மீ. உயரத்துடனும் அலாசுகா எசுகிமோக்கள் சராசரி 168.8 செ.மீ. உயரத்துடனும் காணப்படுகின்றனர்.

இந்தோனேசிய-மலாய் மங்கோலியர்கள்: இவ்வகையிலடங்கும் பெரும்பாலான தெற்காசிய மங்கோலியர்கள் காக்கேசிய இனக் கூறுகளையும் நீக்கிரோ இனக் கூறுகளையும் கொண்டுள்ளனர். இதனால், இவ்வகையினரை மானிடவியலார் மலாய் வகையினர் என்றும் இந்தோனேசிய வகையினர் என்றும் பாகுபடுத்துகின்றனர்.

மலாய் வகையினர் சராசரி 158 செ.மீ. உயரம், குறுகி அகன்ற தலை, நடுத்தர அல்லது அகன்ற மூக்கு, நேரான, கருத்த தலை மயிர், முகத்திலும் உடலிலும் குறைந்த மயிர், பழுப்பு மஞ்சள் முதல் கரும் மஞ்சள் நிறம் வரையிலான தோல், உட்புற இரப்பை அடிமடிப்பு, அகன்ற எடுப்பான கன்ன எலும்புகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளனர். இவர்கள் தென்சீனா, இந்தோசீனா, பர்மா, தாய்லாந்து, மலாய் முந்நீரகம், தச்சு கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்சு, சப்பான் (Japan) முதலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.

இந்தோனேசிய வகையினர் மெலிந்தும் உயரம் குறைந்தும் காணப்படுகின்றனர். சராசரி 155 செ.மீ. உயரமுள்ள இவர்கள் நீண்டு குறுகிய தலையும் குறுகிய அகலத்துடன் நீண்டு உயர்ந்த மூக்கும் பெற்றுள்ளனர். சிலரிடம் மட்டும் உட்புற இரப்பை அடிமடிப்புக் காணப்படுகிறது. இவர்களின் தலைமயிர் கருப்பாகவும் மங்கலாகவும் காணப்படுகிறது. தோலின் நிறம் மங்கலான செம்பழுப்பு முதல் நடுத்தரமான பழுப்பு வரையிலிருக்கும். இவ்வகையினர் தென்சீனா, இந்தோ-சீனா, பர்மா, தாய்லாந்து, மலாய் தீவுக்கூட்டங்களின் உட்பகுதி முதலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.

அமெரிக்க இந்தியர்: இம்மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் மங்கோலிய இனத்தவர்; இருப்பினும், மிகக் குறைந்த அளவில் மங்கோலியரல்லாத இனக்கூறுகள் கலந்துவிட்டன. காக்கேசிய, ஆசுத்திரேலிய இனக்கூறுகள் குறைந்த அளவிலும் நீக்கிரில்லோக்கள் (Negrilloid) இனக்கூறுகள் மிகக் குறைந்த அளவிலும் கலப்புற்றுள்ளன.

அமெரிக்க இந்தியர்கள் பெரும்பான்மையோர் மஞ்சள் கலந்த பழுப்பு முதல் செம்பழுப்பு நிறம் வரையில் காணப்படுகின்றனர். ஒருசில குழுக்களில் செம்பழுப்பு நிறமான தலைமயிர் காணப்படினும், பெரும்பான்மையோர் கரியமயிரைக் கொண்டுள்ளனர். கரும்பழுப்பு நிறம் முதல் கருமை நிறம் வரை உடைய இவர்களின் கண்களில் மங்கோலிய மடிப்புக் காணப்படவில்லை. இருப்பினும், புற இரப்பைக் கண்மடிப்புப் பொதுவாக அனைவரிடமும் காணப்படுகிறது. மங்கோலியர்கள் பொதுப் பண்பாகிய அகன்ற முகத்துடன் கூடிய கன்ன எலும்புகள் மஞ்சள் கலந்த நிற அமெரிக்க இந்தியர்களிடையேயும் காணப்படுகிறது. நீண்டு குறுகிய நடுத்தரத் தலையமைப்பும் (Dolico-mesocephalic) குறுகி அகன்ற தலையமைப்பும் இவர்களிடையே காணப்படுகின்றன.

அமெரிக்க இந்தியர்களைத் தொல் அமெரிக்க இந்தியர் (Palaeo-Amerind), வடபகுதி அமெரிக்க இந்தியர் (Northern Amerind), புது அமெரிக்க இந்தியர் (Neo-Amerind), தெகுவல்சீ (Tehuelche), வடமேற்குக் கடற்கரை அமெரிக்க இந்தியர் (West Coast Amerind) என்னும் ஐந்து வகையினராகப் பகுப்பர்.

தொல் அமெரிக்க இந்தியர்கள் தென் அமெரிக்காவின் தொன்மையான இனத்தவர்கள்; சிறிய மண்டையோட்டைக் கொண்டவர்கள். இன்று வாழும் இவ்வினத்தவர்களுள் பொட்டோகுடோ (Botocudo), புரு (Buru) முதலியோர் முதன்மையானவர்கள். இவர்கள் கிழக்கு ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றனர்.

வட அமெரிக்க இந்தியர்கள் 168–175 செ.மீ. உயரமுள்ளவர்கள்; நீண்டு குறுகிய தலையமைப்பு அல்லது நடுத்தரத் தலையமைப்பு உள்ளவர்கள். மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் குறுகி அகன்ற தலையமைப்பைக் கொண்டுள்ளனர்; மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலையும், நீண்ட கருமையான தலை மயிரையும் தட்டையான நீள்வட்ட முகத்தையும் குவிந்த அல்லது நேரான மூக்கையும் கொண்ட பண்புடையோர்.

புது அமெரிக்க இந்தியர்கள் 155–178 செ.மீ. உயரத்தையும் குறுகி அகன்ற தலையையும் நேரான அல்லது குழிந்த மூக்கையும் அகன்ற முகத்தையும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலையும் கொண்டவர்கள். இவ்வகையினர் தென் அமெரிக்கா, நடு அமெரிக்கா, வட அமெரிக்கப் பீடபூமி முதலான பகுதிகளில் வாழ்கின்றனர்.

தெகுவல்சீ மக்கள் உயரமானவர்கள். இவர்கள் உயரம் 173–183 செ.மீ. வரைஉள்ளது.இவர்கள் தலை குறுகி அகன்றது. சதுரமான அகன்ற முகம், பழுப்பு நிறத்தோல், நேரான கருத்த தலைமயிர் முதலியன இவர்களின் பிற உடற் பண்புகள். தியாரா டெல் பியூகோ (Tierra del Fuego) பகுதியிலுள்ள ஓனாசு (Onas) மக்கள் இக்குழுவில் அடங்குவர்.

வட அமெரிக்கக் கடற்கரை அமெரிக்க இந்தியர்கள் ஏனைய அமெரிக்க இந்தியர்களைவிட மங்கலான நிறமுடைய தலைமயிரையும் தோலையும் கொண்டுள்ளனர். நடுத்தரமான உயரமுடைய இவர்கள் குறுகிய உடலையும் நீண்ட கைகளையும் உடையவர்கள். இவர்கள் வடபகுதியினர், தென்பகுதியினர் எனப் பகுக்கப்படுவர். வடபகுதியினர் தென் பகுதியினரை விட உயரமானவர்கள்.

காக்கேசியர்: இவ்வினத்தில் மிகுந்த எண்ணிக்கையிலான இனக்குழுக்கள் பல் வேறுபட்ட பண்புகளுடனும் மிகவும் விரிவடைந்த இனக்கூறுகளுடனும் காணப்படுகின்றன. காக்கேசிய இனத்தவர்களை நடுநிலக்கடல் இனத்தவர் (Mediterranean), நார்டிக்கு (Nordic), ஆல்பைன் (Alpine), கிழக்குப் பால்டிக்கு (East Baltic), தைனாரிக்கு (Dinaric), ஆர்மீனியர் (Armenoid), கெல்டிக்கு (Keltic), இலாப்பியர் (Lapps), இந்திய-திராவிடர் (Indo-Dravidian), பாலினீசியர் (Polynesian), அய்னு (Ainu) போன்ற இனக்குழுக்களாக உடல்சார் மானிடவியலார் பாகுபடுத்தியுள்ளனர்.

நடுநிலக்கடல் இனத்தவர் தொன்மைக் காலத்தில் நடுநிலக்கடல் பகுதியைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்தமையால் இப்பெயரைப் பெற்றனர். இன்று போர்ச்சுகல், இசுபெயின் (Spain), பிரான்சு, இத்தாலி, துருக்கி, வடஆப்பிரிக்கா, அரேபியா, ஈரான், ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான், இந்தியா முதலான பல நாடுகளிலும் வாழ்கின்றனர். நடுநிலக்கடல் இனத்தவர் அனைவரும் ஒத்த பல பண்புகளைப் பெற்றிருப்பினும், நடுநிலக்கடல் தொன்மை இனத்தவர் (Classic Mediterranean), அட்லாண்டிய நடுநிலக்கடல் இனத்தவர் (Atlantic–Mediterranean), இந்திய – ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் (Indo-Afghan Mediterranean) என மூன்று வகைப் படுவர்.

நடுநிலக்கடல் தொன்மை இனத்தவர்கள் வெளிர் பழுப்பு நிறம் முதல் வெண்பழுப்பு நிறம் வரையில் காணப்படுகின்றனர். கரிய மயிர் இவர்களிடையே அலைஅலையாகவும் சிலரிடையே சுருண்டும் காணப்படுகிறது. இவர்கள் தலை நீண்டு குறுகி நடுத்தரமாக உள்ளது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீள் வட்டமாகக் காணப்படுகிறது. இவ்வினத்தவர்கள் போர்ச்சுகல், இசுபெயின், பிரான்சு, இத்தாலி, செருமனி, நடுநிலக்கடல் தாழ்நிலப்பகுதி ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். வட ஆப்பிரிக்காவில் வாழும் எகிப்தியரும் மொரோக்கோ (Morocco), அரேபியா ஆகிய நாடுகளில் வாழும் பெர்பர் இனத்தவர்களும் இப்பிரிவில் அடங்குவர்.

அட்லாண்டிய நடுநிலக்கடல் இனத்தவர்கள் கரிய தோலையும், கரிய அலை அலையான அல்லது சுருண்ட மயிரையும், நீண்டு குறுகிய அல்லது நடுத்தரத் தலையையும், நீண்ட முகத்தையும் பெற்றுள்ளனர். இவ்வகையினர் வட ஆப்பிரிக்கா, ஈராக்கு, பாலசுத்தீனம் போன்ற நாடுகளிலும் அரேபியா, இசுபெயின், போர்ச்சுகல் போன்ற நாடுகளில் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

இந்திய-ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் வெளிர்பழுப்பு நிறத் தோலையும் அந்நிறத்தலைமயிரையும் உடல், முகம் ஆகிய இடங்களில் அடர்ந்த மயிரையும் குறுகிய மூக்கையும் கரிய கண்களையும் 161–178 செ.மீ. உடல் உயரத்தையும் கொண்டுள்ளனர். ஈராக்கு, ஈரான், ஆப்கானிசுத்தான், பலுச்சிசுத்தான், பாகிசுத்தான் ஆகிய நாடுகளிலும் வடமேற்கு இந்தியாவிலும் காணப்படுகின்றனர்.

நார்டிக்குகள் சிவப்புக் கலந்த வெண்மை நிறத் தோலினர். இவர்கள் தலைமயிர் வளைவுடையது; மயிர் செம்பழுப்பு முதல் வெளிர் பழுப்பு, சாம்பல் பழுப்பு, மஞ்சள் பழுப்பு வரையில் காணப்படுகிறது;

தலை நடுத்தரமானது; முகம் நீண்டு வலுவான எலும்புகளையுடையது; உதடுகள் நடுத்தரமானவை அல்லது மெலிந்தவை; கண் நீலம் அல்லது சாம்பல் நிறம் உடையது. இவர்கள் சராசரி 172 செ.மீ. உயரமுடையோர். இசுகாண்டிநேவியர்கள் (Scandinavians) நார்டிக்கு இனத்தின் உருமாதிரிகளாவர். பால்டிக்குப் பகுதி, வட செருமனி, வடபிரான்சு, பிரிட்டிசுத் தீவுகள், நெதர்லாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளில் சில பகுதிகளிலும் இவர்கள் வாழ்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவிலும் ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளிலும் இவர்கள் முதன்மையாகக் காணப்படுகின்றனர். ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் இவர்கள் பரவலாக உள்ளனர்.

ஆல்பைன் இனத்தவர்கள் மஞ்சள் கலந்த பச்சை, மாநிற வெண்மை அல்லது வெண்கல நிறத் தோல் உடையவர்கள். தலைமயிர் நடுத்தரப் பழுப்பு அல்லது கரும் பழுப்பு நிறத்தில் நடுத்தரமான அல்லது மென்மையான வளைவுகள் உடையது; தலை குறுகி அகன்றது; மூக்கு குறுகியோ நடுத்தரமாகவோ இருக்கும்;நேராகவும் கரும் பழுப்பு அல்லது நடுத்தரப் பழுப்பு நிறமுடையதாகவும் கண்கள் உள்ளன. இவர்கள் சராசரி 165 செ.மீ. உயரம் பெற்றிருப்பர்.

ஆல்பைன் இனத்தவர்கள் நடு ஐரோப்பாவிலும் பிரான்சிலிருந்து ஊரல் (Ural) மலைத்தொடர் வரையிலும் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பால்கன், தென்மார்க்கு (Denmark) வட இத்தாலி ஆகிய நாடுகளிலும் துருக்கி மலைத்தொடர்ப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவ் இனத்தவர்கள் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் மிகப் பரவலாக வாழ்கின்றனர்.

கிழக்குப் பால்டிக்கு இனத்தவர்கள் பழுப்புக் கலந்த வெண்மை அல்லது இளமஞ்சள் வெண்மையான தோல் உடையர். இவர்களின் தலை நடுத்தரமானது; முன் மண்டை அகன்று உயரமாக இருக்கும்; பின் மண்டை தட்டையானது; கன்ன எலும்புகள் எடுப்பானவை; மூக்கு நடுத்தரமானது; கண்கள் இளநீலம் அல்லது சாம்பல் நிறமானவை. குட்டை உயரம் முதல் நடுத்தர உயரம் வரையில் உள்ளனர். இவர்கள் மிகுந்த எண்ணிக்கையில் வட கிழக்குச் செருமனி, போலந்து, பால்டிக்கு (Baltic), உருசியா (Russia), பின்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர்.

தைனாரிக்கு இனத்தவர்கள் மாநிறமானவர்கள். மயிர் வளைவாகவும் சுருளாகவும் இருக்கும். இவர்களின் தலை குறுகி,அகன்று உயர்ந்து காணப்படுகிறது. பின்மண்டை தட்டையானது; முன் மண்டை சாய்வானது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீண்டது. இவ் இனத்தவர்கள் சராசரி 172செ.மீ. உயரம் உடையவர்கள். இவர்கள் மிகுதியாக யூகோசுலேவியா, அல்பேனியா ஆகிய நாடுகளிலும் ஆசுத்திரிய தைரால் (Austrian Tyrol) மலைத்தொடர்ப் பகுதியிலும் காணப்படுகின்றனர்.

ஆர்மீனிய இனத்தவர்கள் மஞ்சள் கலந்த பச்சை முதல் இளமஞ்சள் வெண்மை நிறம் வரையிலான நிறமுடையவர்கள். இவர்களுக்குக் கரும்பழுப்பு முதல் கருமை வரையிலான தலைமயிர் வளைவாகவும் சுருள்சுருளாகவும் இருக்கிறது. இவர்களின் தலை குறுகி அகன்றது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீண்டது. இவ்வினத்தவர்கள் சராசரி 167 செ.மீ. உயர முள்ளவர்கள். இவர்கள் துருக்கி,சிரியா,பாலசுத்தீனம் போன்றநாடுகளில் மிகுதியாக வாழ்கின்றனர். இந்த இனத்தவர்கள் தொன்மை நடுநிலக்கடல் இனத்தவர்களின் பண்பையும்; ஆல்பைன், இந்திய-ஆப்கானிய இனப்பண்பையும் கொண்டுள்ளனர்.

கெல்டிக்கு இனத்தவர்கள் வெளிரிய வெண்மைத் தோல் உடையோர். இவர்களின் மயிர் நடுத்தரம் முதல் கரும்பழுப்பு வரையிலோ சிவப்பாகவோ இருக்கும்; மயிர் அமைப்பு வளைந்தோ சுருண்டோ இருக்கும்; தலை நடுத்தரமானது; மூக்கு குறுகி நீண்டுயர்ந்தது; மூக்கின் வடிவம் நேரானது அல்லது குவிந்தது; கண்கள் நீலமாகவோ சாம்பலாகவோ இருக்கும். கெல்டிக்கு இனத்தவர்கள் ஐசுலாந்து (Iceland), இசுகாட்லாந்து (Scotland), வேல்சு (Wales) ஆகிய நாடுகளில் பரவலாகவும் இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பியப் பகுதிகளில் மிக அருகியும் வாழ்கின்றனர்.

இலாப்பியர்கள் சாம்பல் கலந்த மஞ்சள் முதல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலுடையோர். நேரான அல்லது இலேசான வளைவுகள் உடைய இவர்களின் மயிர் கரும்பழுப்பு முதல் கருப்பு வரையிலான நிறம் பெற்றிருக்கும். உடலிலும் முகத்திலும் மயிர் குறைவாக உள்ளது; தலை குறுகி நீண்டது; மூக்கு நடுத்தரமானது; வடிவம் குழிந்தது; முன் மண்டை குறுகியது; உதடுகள் நடுத்தரத் தடிப்புள்ளன; கண்ணில் மங்கோலிய மடிப்பு ஒருசிலரிடையே காணப்படுகிறது. இவர்கள் வட இசுகாண்டிநேவியா, சுவீடன், வட பின்லாந்து, நார்வே, வடகிழக்கு உருசியா போன்ற நாடுகளில் பரவியுள்ளனர். இவர்கள் மேற்கூறிய நாட்டு இனத்தவர்களின் பண்புகளையும் ஏற்றுக் கலப்பினத்தவராகக் காணப்படுகின்றனர்.

இவர்களுள் ஒரு குழுவினரை மங்கோலியர் எனவும் சில மானிடவியலார் கூறுவர். ஆனால், இவர்கள் காக்கேசிய இனப் பண்புகளையே பெரிதும் கொண்டுள்ளனர்.

இந்தோ-திராவிடர்கள் இளம்பழுப்பு முதல் கரும்பழுப்பு நிறத் தோலுடையோர். கரிய மயிர் பொதுவாக வளைவுகளைக் கொண்டது. இவர்களின் தலை நீண்டு குறுகியது; முன்நெற்றி பொதுவாக வட்டமானது; மூக்கடி சற்று அழுந்தியிருக்கும். மூக்கு நேராகவும் நடுத்தரமாகவும் இருக்கும்; முகம் நடுத்தரமாக நீண்டிருக்கும். பெரும்பாலும் இவர்களுக்குத் தாடை இல்லை. இவர்கள் சராசரி 164 செ.மீ. உயரமுள்ளவர்கள். இந்தோ-திராவிடர்கள் தென்இந்தியாவிலும் நடுஇந்தியாவிலும் காணப்படுகின்றனர். இவர்கள் காக்கேசிய இனத்தவராகக் காணப்படினும் இவர்களிடையே தொன்மை நடுநிலக்கடல் இனத்தவர்களின் கூறுகளும் ஆசுத்திரேலியர் வெத்தர் (Veddoid) இனக்கூறுகளும் கலப்புற்றுள்ளன.

பாலினீசியர்கள் இளம்பழுப்பு முதல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் வரை பெற்றிருப்பர். இவர்களின் மயிர் நேராகவும் கரும்பழுப்பு முதல் கருப்பு நிறம்வரையிலும் இருக்கும்; உடலிலும் முகத்திலும் குறைந்த அளவே மயிர் காணப்படுகிறது. பாலினீசியர்களின் தலையமைப்புப் பெரும்பாலும் குறுகி அகன்றதாயினும், நீண்டு குறுகிய தலையும் நடுத்தரத் தலையும் பரவலாகக் காணப்படுகின்றன; கண்கள் இளம்பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலான நிறம் உடையன. இவர்கள் சராசரி 178 செ.மீ. உயரம் உடையோர். பசிபிக்குக் கடலில் உள்ள நியூசிலாந்து, பிரண்டிலித்தீவு (Friendly Island), சமோவா, மர்குவாசாசு (Marquesas), அவாய் (Hawaii) ஆகிய பாலினீசியத் தீவுகளில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் மங்கோலியர், நீக்கிரோக்கள் முதலானோருடன் கலப்புற்ற கூட்டினத்தவர் ஆவர்.

அய்னுகள் வடசப்பானிலும், எசோ (Yezo), தென் சக்காலின் (South Sakhalin) முதலான பகுதிகளிலும் வாழ்கின்றனர். சப்பானின் தொன்மையான இனத்தவர்கள் இவர்களே. காக்கேசிய இனப்பண்புகள் கொண்டிருப்பினும், மங்கோலிய இனக் கூறுகளும் இவர்களிடையே காணப்படுகின்றன. அய்னு இனத்தவர் ஆசுத்திரேலிய முதுகுடிகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையால், இவர்களை ஆசுத்திரேலியர் எனவும் தொன்மைக் காக்கேசியர் எனவும் குறிப்பிடுவர்.

அய்னு மக்கள் இளம்பழுப்புக் கலந்த வெண்மை நிறத் தோல் உடையோர். இவர்களின் மயிர் கரும்பழுப்பு முதல் கரிய நிறம்வரை உடையது; உடலும் முகமும் மிகுந்த மயிர்களைக் கொண்டிருப்பதால் இவர்கள் மயிரடர்ந்த அய்னு (Hairy Ainu) எனப்படுவர். இவர்களின் தலை நடுத்தரமானது; மூக்கு நடுத்தரம் முதல் அகன்ற அளவு வரையில் இருக்கும்; இரப்பை அடிமடிப்பு இவர்களிடம் காணப்படுவதில்லை. இவர்களின் சராசரி உயரம் 158 செ.மீ. ஆகும்.

ஆசுத்திரேலியர் அல்லது தொன்மைக் காக்கேசியர்கள்: ஆசுத்திரேலிய இனத்தவர்கள் காக்கேசிய இனத்தவர்களுடன் பெருமளவில் ஒத்திருக்கின்றமையால், இவர்கள் காக்கேசியர்களின் கிளையினம் எனக் கருதப்படுகின்றனர். ஆசுத்திரேலிய இனத்தவர்கள் ஆசுத்திரேலிய முதுகுடிகள் (Australian Aborigines) எனவும் திராவிடர்களுக்கு முந்தையவர்கள் அல்லது ஆசுத்திரேலியர் அல்லது வெத்தர் (Pre-Dravidian or Australoid or Veddoid) எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குழுவும் மேலும் பல கிளைக் குழுக்களாகப் பகுக்கப்படுகிறது.

ஆசுத்திரேலிய முதுகுடிகள் ஆசுத்திரேலியாவில் வாழும் தொன்மைக் காக்கேசிய இனப்பண்புகளையும் நீக்கிரோ பண்புகளுள் சிலவற்றையும் பெற்றுள்ளனர். பசிபிக்குப் பெருங்கடல் இனத்தின் பண்புகளும் மிகக்குறைந்த அளவில் இவர்களிடம் உள்ளன.

ஆசுத்திரேலிய முதுகுடிகள் கோகோ பழுப்பு நிறத் தோல் உடையோர். இவர்களின் மயிர் சுருளாகவும் வளைவாகவுமிருக்கும்; முகத்திலும் உடலிலும் மயிர் அடர்த்தியாக உள்ளது; தலை பெரும்பாலும் குறுகியது; கண் குழிவிளிம்பு பெரிதானது; மூக்கு அகன்றது; முகம் சிறியது; முக நீட்சி நடுத்தரமானது; கண்ணின் நிறம் நடுத்தரப் பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலானது. இவர்கள் சராசரி 165செ.மீ. உயரமானவர்கள்.

திராவிடர்களுக்கு முந்தையவர்கள் அல்லது ஆசுத்திரேலியர் அல்லது வெத்தர்: சிரீலங்காவில் வாழும் வெத்தர்கள் (Veddoid) இக்குழுவின் பேராளிகளாவர். இவர்களின் தோல் நிறம் கரும்பழுப்பானது; கரிய மயிர் பெரும்பாலும் வளைவானது; தலை நீண்டு குறுகியது; முகம் குறுகி மூக்கு அகன்று இருக்கும். இவர்கள் சராசரி 152 செ.மீ. உயரத்தையே கொண்டுள்ளனர்.

திராவிடர்களுக்கு முந்தியவர்கள் இனத்தைச் சேர்ந்த இந்திய மக்கள் தென்னிந்தியாவிலும் நடு இந்தியாவிலும் காணப்படுகின்றனர். இவர்களுள்

முதன்மையானவர்கள் காடர், பணியர், இருளர், பில்லர், கோண்டு (Gond), காண்டு (Khond) ஓராவான் (Oraon) ஆகியவர்கள். மலாய் முந்நீரகத்தில் வாழும் சகாய் (Sakai) அல்லது செனாய் (Senoi) மக்களும் ஆசுத்திரேலியக் கிளை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மஞ்சள் கலந்த பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலான தோலையும், நடுத்தரத் தலையையும் முகத்தையும் கொண்டுள்ளனர். குள்ளமான இவர்களின் சராசரி உயரம் 152 செ.மீ. ஆகும்.

துணை நூல்கள்:

**Alland**, **A.**, **Jr**. Human Diversity, Anchor/Doubleday, New York, 1973.

**Coon**, **C.S.**, The Origin of Races, Alfred A. Knopf, New York, 1962.

**Coon**, **C.S.**, **S.M. Garn**, **J.B.Birdsell**, Races: A study of the Problem of Race Formation in Man, Charles C. Thomas, Springfield, 1950.

**Garn**, **S.M.**, Human Races, Charles C. Thomas, Springfield, Illinois, 1970.

**Montagu**, **A.**, (Ed.) The Concept of Race, Free Press, London, 1964.

**Osborne**, **R.H.**, (Ed.) The Biological and Social Meaning of Race, Freeman, San Francisco, 1971.

**இனச் சிறுபான்மையினர்**: சமூகத்தில் தம்முடனுள்ள பிற சமூகத்தினரைக் காட்டிலும் குறைந்த சமுதாயத் தகுதி, குறைந்த அதிகாரம், குறைந்த மதிப்பு, குறைந்த உரிமை ஆகியவற்றைப் பெற்றுள்ள மக்கள் குழுவே இனச்சிறுபான்மையினர் (Racial Minorities) எனப்படுவர். இவர்கள் இனம், நாடு, சமயம், மொழி முதலானவற்றால் பெரும்பான்மையினரிடமிருந்து வேறுபட்டு நிற்பர். பண்பாடு, மரபுமுறை, உடல்தோற்றம் ஆகியவற்றாலும் வேறுபடும் இவர்கள், அதிகாரச் சமூகத்தினரால் சில காலங்களில் வேறுபாட்டுணர்ச்சியோடு நடத்தப்படுவர். ஒவ்வொரு மக்கள் குழுவும், தம் அளவினைப் பொறுத்தே தாம் சார்ந்துள்ள சமுதாயத்தின் மதிப்பினையும் அதிகார அமைப்பையும் கொண்டிருக்கிறது. இருப்பினும், பல்வேறு வரலாற்றுக் காலங்களில் சிறுபான்மைக் குழுக்கள், உயர்திறப் படைக்கருவிகள், பண்பாட்டுத் திறமைகள், திறம் பட்ட அமைப்பு முறைகள் முதலானவற்றால் தம்மைவிட அளவிற் பெரிதான சமுதாயத்தை ஆண்ட வரலாறுகளும் உள. இன்றைய வரலாற்றினைக் காணும்பொழுது உரொடீசியா, தென்னாப்பிரிக்கா முதலான நாடுகளில் சிறுபான்மை இனத்தவரான வெள்ளையர்கள், பெரும்பான்மையான கருப்பு நிறத்தவர்களை ஆண்டு வருகின்றனர். காண்க: இனஒதுக்கீட்டுக் கொள்கை, இன ஒதுக்கல்.

இனச்சிறுபான்மையினர் எனப்படுபவர்கள் அனைவருமே இனக் குழுக்களுடன் (Ethnic Groups) தொடர்புடையவரல்லர். ஒரு சிறு இனத்தினுடைய வாழிடத்தின் அடிப்படையினாலன்றி வேறுவகையினாலும் இனச்சிறுபான்மையினரை அறிவியலார் வகைப்படுத்துவர். இவ்வகைக் குழுக்கள் வயது, பால் முதலானவற்றால் அமையப் பெறுவனவாகும்.

நாட்டினங்களில் இனச்சிறுபான்மையினர் பல காரணங்களால் காணப்படுகின்றனர். இதில் முதன்மையான காரணி அதிகார உறவுகளாகும். பெருஞ் சமுதாயத்தில் அதிகார அமைப்புகள் செயற்படும் போது, உட் பூசல்கள் ஏற்படுகின்றன. அதிகார வலிமையைப் பெற்ற இனத்தவர்கள் தம்மை ஒத்திராத வேற்று இனத்தவர்கள் மீது அதிகார அமைப்பினால் அடக்கி ஆள முனைவர். ஒடுக்கப்படும் இனத்தவரோ தம் தகுதி, மதிப்புகள் முதலானவற்றையும் மிகுதியான உரிமைகளையும் பெறப் பெரும்பான்மை இனத்தவரின் அதிகார அமைப்போடு போராடுவர். இவ்வாறான காலகட்டங்களில் சிறுபான்மை இனத்தவர்கள் தோற்றுவிக்கப்படுகின்றனர். இது தவிர்த்து இனச்சிறுபான்மையினர் நாட்டினங்களில் காணப்படுவதற்கு மேலும் மூன்று காரணிகள் முதன்மையாகக் கூறப்படுகின்றன. படையெடுப்பு, ஆட்சியைக் கைப்பற்றல், புதிய பகுதிகளை ஆட்சியுடன் இணைத்தல் ஆகியவை முதலாம் காரணியாகவும், பிறநாட்டிலிருந்து வந்து குடியமர்தலும் (Immigration) வேறு நாட்டிற்குச் சென்று குடியேறுதலும் (Migration) இரண்டாம் காரணியாகவும், அடிமைப் பண்ணையாட்களை வரவழைத்துக் குடியமர்த்துவது மூன்றாம் காரணியாகவும் இருக்கின்றன.

உலகத்தின் ஒவ்வொரு கண்டத்திலும் அதன் வரலாற்றுக் காலத்தில், ஒவ்வொரு நாட்டின் எல்லைகள், காலப்போக்கில் படையெடுப்பு, ஆட்சியைக் கைப்பற்றல் முதலானவை காரணமாகப் பல்வேறு இனமக்கள் புதிய அண்டைய மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்திய வரலாற்றிலும் இந்நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரியர்களின் வருகையாலும் உள்நாட்டு அரசர்களிடையே ஏற்பட்ட படையெடுப்புகளாலும் பல இன மக்கள், பல்வேறு இடங்களில் கலந்து வாழ வேண்டிய

தாயிற்று. இன்று இந்திய நாட்டில் கிறித்தவர். இசுலாமியர், யூதர், புத்த சமயத்தினர், பாரசீகர், சொராசுட்டிரியர்(Zoroastrians) போன்றோர் இனச் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் மொழிச் சிறுபான்மையினராகவும், சமயச் சிறுபான்மையினராகவும், அயல் நாட்டில் பிறந்த சிறுபான்மையினராகவும் (Foreign born Minorities), நாட்டுரிமைச் சிறுபான்மையினராகவும் (Minority Nationalities) காணப்படுகின்றனர்.

இனத்தின் தோற்றம் (Ethnic Origin) என்னும் ஒரே சமூக அலகினைக் கொண்டே, 1950-ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்கள் குழுக்களை, ஆதிக்கக் குழுக்கள் (Dominant Groups) எனவும், இனச்சிறுபான்மையினர் எனவும் பாகுபடுத்தி வந்தனர். இனம், சமயம், நாட்டுரிமை (Nationality), நாடு (Nation), பிறப்பிடம் (Nativity), மொழி ஆகிய ஆறு காரணிகளைக் கொண்டே இனக்குழுக்களும் பாகுபடுத்தப்பட்டன.

மனிதக்குலத்தைக் காக்கேசியர் (Caucasoid), மங்கோலியர் (Mongoloid), நீக்கிரோ (Negroid) என்னும் மூன்று பரந்த இனங்களாக வகைப்படுத்துவர் மானிடவியலார். ஒவ்வொரு பரந்த இனத்தினுள்ளும் பல கிளை இனங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காக்கேசியர் இனத்தில் நார்டிக்கு (Nordic), ஆல்பைன் (Alpine) மத்திய தரைக்கடல் வகையினர் (Mediterranean) என்னும் கிளை இனங்கள் உள்ளன. உயிரியல்சார் முறையில் தோலின் நிறம், எலும்பு அமைப்புகள், உடலுயர்வளவு, தலை அமைப்பு, இரத்தப்பண்புகள், உடல்சார் கூறுகள் முதலான அனைத்து அலகுகளையும் கொண்டே இனங்கள் பாகுபடுத்தப்படுகின்றன. எனினும், உடல்சார் மானிடவியலாரால் (Physical Anthropologists) மரபுவழியிலும் உயிரியல் முறையிலும் இனங்களுக்கிடையில் காணப்படும் தெளிவான வேற்றுமைகளுக்கும் ஒற்றுமைகளுக்கும் விளக்கம் கூறுவதில் சிறிய அளவிலான, திட்ட வட்டமான தெளிந்த கருத்துகாணப்படவில்லை. மனித இனங்களை ஆராய்வதைப் போன்றே இனச்சிறுபான்மையினரையும் மானிடவியலார் மேற்கண்ட அலகுகளின் துணைக் கொண்டு ஆராய்ந்து வருகின்றனர். டி.எஸ்.ந.

***இனச் சொற்கள்:*** இத் தொடர் ஒருமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் பொருள் ஒற்றுமையும், வடிவ ஒற்றுமையும் கொண்டு அமைந்துள்ள சொற்களைக் குறிக்கும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய இருபதுக்கு மேற்பட்ட மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தனவாகும். திராவிட மொழிக் குடும்பத்தைப் போல ஆரிய மொழிக் குடும்பம் என்றும் ஒன்று உண்டு. வடமொழி என்று கூறப்படும் சமசுகிருதம் ஆரிய மொழிகளுள் ஒன்று. திராவிடம், ஆரியம் போன்ற பல்வேறு மொழிக் குடும்பங்கள் இவ்வுலகில் உள்ளன. ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் 'இனமொழிகள்' எனப்படும். இனமொழிகள் வேறு, இனச்சொற்கள் வேறு. தமிழில் மொழி என்பது சொல்லையும் குறிக்கும். எனவே, இனமொழிகளை இனச்சொற்களாகக் கருதி மயங்குதல் கூடாது.

இருபதுக்குமேல் இனமொழிகளை உடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு பெருமொழிகளில் உப்பு என்னும் சொல் பொருள் ஒப்புமையும், வடிவ ஒப்புமையும் கொண்டு விளங்குகிறது. இந்நான்கு மொழிகளிலும் ஒரே பொருளைக் குறித்து உப்பு என்ற வடிவில் வரும் நான்கு சொற்களையும் இனச் சொற்கள் என்று கூறலாம். உப்பு என்பது நான்கு மொழிகளிலும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் குறித்து வரும். ஒவ்வொரு மொழியிலும் உப்பு என்ற சொல்லின் வடிவமும் கிட்டத்தட்ட ஒன்றாகவே அமைந்துள்ளது என்று கூறலாம். இங்கு 'வடிவம்' என்று குறிப்பிடப்படுவது ஒலிவடிவமாகும். எழுத்து வடிவம் அன்று. தமிழிலும், மலையாளத்திலும் உப்பு என்னும்போது அது குற்றியலுகரமாக உச்சரிக்கப்படுகிறது. கன்னடம், தெலுங்கில் அது முற்றிலுகரமாகும். உதடுகள் குவிந்து ஒலிக்கும் உகரத்தை முற்றியலுகரம் என்றும், குவியாது ஒலிப்பதைக் குற்றியலுகரம் என்றும் தமிழ் இலக்கண நூலார் கூறுவர்.

இனி வடிவத்தில் பெரிதும் வேறுபடாமல் பொருளில் மட்டும் ஒரு பகுதி வேறுபடும் இனச் சொற்களைக் காணலாம். தமிழ்: ஓடு 'மிக வேகமாகச் செல்', தெலுங்கு: ஓடு 'தோற்றுப்போ'. இங்கே பொருளில் முழு மாற்றம் இல்லை. ஒரு பகுதிதான் மாறியுள்ளது. ஓடுதலுக்கும், தோற்றுப் போதலுக்கும் ஒருவகைத் தொடர்பு உண்டு. போரில் தோற்பவன் ஓடுபவன் ஆவான்.

பொருளில் பெரிதும் வேறுபடாமல் வடிவத்தில் ஒரு பகுதி வேறுபடும் இனச் சொற்கள் மூன்றாம் வகையைச் சார்ந்தன. எடுத்துக் காட்டு: தமிழ், மலையாளம், கன்னடம்: கெடு, தெலுங்கு: செடு. இங்குப் பொருள் கிட்டத்தட்ட ஒன்றே. தெலுங்கில் மட்டும் ஒலிமாற்றம் நிகழ்ந்திருக்கக் காணலாம். ககரம் சகரமாக மாறியுள்ளது. ககரத்துக்குப் பின்னர் இகரமோ எகரமோ வரும்போதுதான் தெலுங்கில் இத்தகைய ஒலிமாற்றம் நிகழும்.

இறுதி வகை இனச் சொற்கள் பொருளிலும் வடிவத்திலும் ஓரளவு வேறுபடுவதைக் காணலாம். எடுத்துக்காட்டு: தமிழ்; கூழ் 'குழைந்த உணவு', தெலுங்கு; கூடு 'சோறு'. தமிழில் உள்ள ழகர வடிவம் தெலுங்கில் டகரமாக அமைந்துள்ளது. தமிழில் உள்ள இனச் சொல்லின் பொருள் கிட்டத்தட்ட திரவமாக உள்ள உணவையும், தெலுங்குச் சொல்லின் பொருள் திட உணவையும் குறிப்பதைக் காணலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனமொழிகளில் சொல்லிலும் பொருளிலும் முற்றிலும் மாறுபாட்டோடு அமைந்த சொற்களுக்கு இனச்சொற்கள் என்னும் பெயர் பொருந்தாது. தமிழில் உள்ள கல் என்ற சொல்லும் தெலுங்கில் உள்ள பேரு 'பெயர்' என்ற சொல்லும் இனச் சொற்கள் ஆகா. கல், பேரு என்ற சொற்களுக்கிடையே வடிவ ஒற்றுமையோ, பொருள் ஒற்றுமையோ சிறிதும் கிடையாது.

இனமொழிகளில் அமைந்த இனச் சொற்களில் மூன்று, நான்காம் வகைகளில் வடிவ வேற்றுமை அமைந்திருப்பது சுட்டிக்காட்டப்பெற்றது. தமிழ்: கோழி, தெலுங்கு: கோடி, தமிழ்: ஏழு, தெலுங்கு, ஏடு, தமிழ்: கூழ், தெலுங்கு: கூடு போன்ற சொற்களில் தமிழ் ழகரத்திற்கு இணையாகத் தெலுங்கில் டகரம் அமைந்துள்ளது. இந்த ழகர டகர வேறுபாட்டுக்கு அடிப்படையாக ஓர் ஒற்றுமை உண்டு. இந்த இரண்டு மொழிகளுக்கும் பொதுவான வடிவம் ழகரம். தமிழில் இது மாறாமல் அப்படியே உள்ளது. தெலுங்கில் ழகரம் உள்ள இடத்தில் டகரம் வந்துள்ளது. பண்டைக் காலத் தெலுங்கில் ழகர ஒலி இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

தமிழில் பாடு என்பதற்கு இணையாகத் தெலுங்கில் பாடு என்ற சொல் உண்டு. வாயால் இசை உண்டாக்கும் இப்பணிக்கு இருமொழிகளிலும் ஒரே சொல். இங்கே இருமொழிகளிலும் டகரம் உள்ளது. தமிழுக்கும் தெலுங்குக்கும் முந்திய மொழியில் டகரமே இருந்ததாகக் கருதலாம்.

தமிழ்: கோழி, தெலுங்கு: கோடி போன்ற சொற்களில் மூல மொழியில் ழகரம் உள்ளதாகக் கருதலாம். இந்த ழகரம் தமிழில் காக்கப்பட்டிருக்கிறது. தெலுங்கு ழகரத்தை இழந்து அந்த இடத்தில் டகரம் பெற்றுள்ளது.

தமிழ், தெலுங்கு மொழிகளுக்கிடையே டகரம்: டகரம் ஓர் ஒலிச் சமன்பாடாகும். அதுபோலவே ழகரம்: டகரம் இன்னொரு ஒலிச் சமன்பாடாகும். இந்தச் சமன்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மூலத் திராவிடத்தில் வடிவம் எவ்வாறு இருந்திருக்கலாம் என்று உய்த்துணர முடியும்.

ஒலிச் சமன்பாடுகள் இல்லாமல் உதிரியாக ஆங்காங்கே மொழிகளுக்கிடையே ஒப்புமையுடைய சொற்கள் இருந்தால் அவற்றை இனச் சொற்கள் என்று கருத முடியாது. தமிழிலும், அரபி மொழியிலும் தாலுக்கா என்ற சொல் உண்டு. தமிழ் இச் சொல்லை இரவல் வாங்கியது. எனவே, இதை இனச் சொல்லாகக் கருதக் கூடாது.

சில மொழிகளில் இயல்பாக ஒலியொப்புமையும் பொருள் ஒப்புமையும் அமைந்த சொற்கள் காணப் படலாம். தமிழில் 'சாத்து' என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் 'Guild' என்பதாகும். இந்த இரண்டு மொழிகளும் இனத் தொடர்பு உடையன அல்ல. ஆதலால், இச்சொற்களை இனச் சொற்களாகக் கருத முடியாது.

ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் பொருள் ஒப்புமையும் வடிவ ஒப்புமையும் உடைய சொற்கள் ஒலிச்சமன்பாட்டு விதிகளுக்கு உட்பட்டிருந்தால்தான் அவற்றை 'இனச்சொற்கள்' என்று கூறலாம். ந.கு.

**இனஞ்சுட்டி**: பெயர்களை அணைந்துநின்று அவற்றைச் சிறப்பித்து வருவன இனஞ்சுட்டிகள் எனப்படும். அந்த மரம், 'ஒரு மரம்' போன்றவற்றில் பெயரைத் தழுவி வரும் 'அந்த', 'ஒரு' ஆகியவை இனஞ்சுட்டிகள். குறிப்பிட்ட ஒரு மனிதன் அல்லது இடம் அல்லது பொருளின் பெயரைக் குறிக்காமல் பொதுவாகக் குறிப்பிடப்படும் மரம், நூல், சிறுமி போன்ற பொதுப் பெயர்கள் இனஞ்சுட்டிகள் (Determinations) இன்றி மொழியில் வருவதில்லை. நான் மரத்தைப் பார்த்தேன் என்று கூறமுடியாது. அந்த, ஒரு போன்ற இனஞ்சுட்டிகளை இட்டே கூற இயலும். ஆகவே, மொழியில் இனஞ்சுட்டிகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. அதனாலேயே ஆங்கில அறிஞர்கள் இதனைப் பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற எட்டுவகையான சொல்வகைகளில் ஒன்றாகக் கருதினர்.


இனஞ்சுட்டிகளை ஆறு வகையாகப் பிரிக்கலாம். (1) 'அந்த மனிதன்'. 'இந்தப் பெண்' போன்றவற்றில் வரும் 'அந்த', 'இந்த' போன்ற சுட்டுப் பெயரடைகள். (2) 'ஒரு மரம்', 'முதலாம் ஆண்டு' போன்றவற்றில் வரும் 'ஒரு', 'முதலாம்' போன்ற எண்ணுப் பெயரடைகள் (3) 'பல மனிதர்கள்', 'கொஞ்சம் நீர்' போன்றவற்றில் வரும் 'பல', 'கொஞ்சம்' போன்ற வரையறையில்லா எண்ணுப்

பெயரடைகள்.(4) 'அனைத்து நாடுகள்' போன்றவற்றில் வரும் ' அனைத்து' போன்ற முழுமைப் பெயரடைகள். (5) 'ஒவ்வொரு பெண்ணும்' போன்றவற்றில் வரும் 'ஒவ்வொரு' போன்ற பகிர்வுப் பெயரடைகள். (6) 'என்னுடைய வீடு' போன்றவற்றில் வரும் 'என்னுடைய' போன்ற உடைமைப் பெயரடைகள்.

தமிழ் மொழியில் இனஞ்சுட்டிகள் பெயரின் 'பால், எண்' ஆகியவற்றிற்குத் தகுந்தபடி மாறுவதில்லை. எடுத்துக்காட்டாக, அந்தச் சிறுவன், அந்தச் சிறுமி, அந்தச் சிறுவர்கள் மூன்றிலும் 'அந்த' என்ற இனஞ்சுட்டி மாறாமல் உள்ளது. ஆனால், ஆங்கிலம் போன்ற மொழிகளில் எண் வேறுபாடு இனஞ்சுட்டிகளில் காணப்படுகிறது.

எம்.சு.


**இனத்தொடர்பு**: ஒரே மொழிக் குடும்பத்தைச் (Language Family) சார்ந்த மொழிகளுக்குள் காணப்படும் தொடர்பே இனத் தொடர்பு (Genetic Relationship) எனப்படும். குடும்ப அடிப்படையில் மொழிகளைப் பிரிப்பது எப்படி என்பதை ஒப்புமை மொழியியல் (Comparative Linguistics) மிகத் தெளிவாக விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, மலையாளமும் தமிழும் பழந்தமிழிலிருந்து (Proto Tamil) பிரிந்ததைப் பின்வருமாறு விளக்கலாம்.




அதாவது, இருமொழிகள் ஒரே ஒரு முந்தைய மொழியிலிருந்து கிளைத்திருந்தால் அவற்றை ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என்பர். இவ்விரண்டு மொழிகளும் உருவாகக் காரணமாக இருந்த மொழியைத் தொல்-மொழி/அம்மா மொழி (Proto language) என்றும் அதிலிருந்து கிளைத்துத் தனிமொழிகளாக வழங்குவனவற்றை இனமொழி/மகள் மொழி (Cognate daughter language) என்றும் சொல்வர். மேலே கண்ட படத்தில் தொல் தமிழ், அம்மா/தொல் மொழியாகிறது; தமிழும் மலையாளமும் இனமொழிகளாகின்றன. இதுபோன்ற தொடர்பு கொண்ட மொழிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு மொழிக் குடும்பமாகச் செயற்படுகின்றன. இவற்றிடையே நிலவும் தொடர்பே இனத்தொடர்பு என்று சொல்லப்படுகிறது.

இன்று வழங்கி வரும் 25 திராவிட மொழிகள் (தென், நடு, வட திராவிட மொழிகள்) அனைத்தையும் சேர்த்துத் திராவிட மொழிக் குடும்பம் என்று சொல்கின்றனர். இவையனைத்தும் தொல் திராவிட மொழி (Proto Dravidian) யிலிருந்து பல்வேறு கால கட்டங்களில் தனித்தனி மொழிகளாகப் பிரிந்தவை என்பதை அம்மொழிகளுக்கிடையே காணப்படும் மொழியியல் ஒற்றுமைகளை(Linguistic Similarities) அடிப்படையாகக் கொண்டு விளக்க முடிகிறது.

ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகளுக்கிடையே காணப்படும் தொடர்பை இருவகையாகப் பிரித்து விளக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் இவ்வகை உறவை விளக்குகிறது.



இப்படத்தில் 'எ' மொழியும், 'ஏ' மொழியும் "A" என்ற மொழியிலிருந்து கிளைத்திருக்கின்றன. இவ் விரு மொழிகளும் நேரடி உறவைக் கொண்டிருக்கின் றன என்று சொல்லலாம். ஆனால், 'ஒ' மொழியை யும் 'கா' மொழியையும் எடுத்துக்கொண்டால், இவற்றில் 'ஒ' மொழி 'இ' மொழியிலிருந்து கிளைத் திருப்பதைக் காணலாம். 'கா' மொழியோ 'உ' என்ற மொழியிலிருந்து உருவாகியுள்ளது. இவ் விரண்டு மொழிகளும் ஒரே மொழியிலிருந்து கிளைக்க வில்லை. ஆனாலும், இரண்டும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே. இவ்வகை உறவை மறைமுக உறவு எனலாம்.

ஒரு மொழி இன்னொரு மொழியுடன் இனத் தொடர்பு கொண்டுள்ளதா இல்லையா என்பதைக் கண்டறிவது தனிக்கலையாகும். இதனை ஒப்பியல் மொழிக்கலை (Comparative Method) என்பர். இது கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பலராலும் விரும்பிப் பயிலப்பட்ட, ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட கலையாகும். கல்கத்தாவில் அரசப் பேராளராக இருந்த வில்லியம் சோன்சு என்பவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வடமொழியும் ஐரோப்பிய மொழி களும் ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற வாதத்தைக் எழுப்பினார். இதன் அடிப்படையில் மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து (மொழியமைப்பை மொழிக் கூறுகளை) அவற்றின் மூதாதை மொழி களைக் (Ancestral Languages) காணும் முயற்சி தொடங்கியது. இதற்குத் துணை செய்யும் நிலையில் உயிரியல் துறையில் பெரும் புரட்சிகரமான கருத்து கள் தோன்றிய வண்ணம் இருந்தன. இக்கருத்து களுள் முக்கியமானது 'பரிணாமதத்தத்துவம்' அல்லது 'கூர்தல் அறம்' என்பதாகும். தாவரங்கள், பிற உயிர் கள் ஆகியவற்றைப் போலவே மொழிகளும் பல மாற்றங்கள் அடைவது இயல்புதான் என அறிஞர்கள் கருதலாயினர். ஒப்பியல் மொழிக் கலையால் பல உண்மைகள் வெளிவரலாயின. இனத்தையும் மொழி யையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும் நோக்கும், மொழி களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறியும் நோக்கும் தலைதூக்கின. என்றாலும், மொழியை விளக்கும் முறை செம்மைப்படுத்தப்பட்ட பின்னர், 'ஒப்பியல் கலை' சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு கலையாகக் கருதப்படலாயிற்று.

அகச்சான்றுகளின் அடிப்படையில் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளையும் எல்லா நிலைகளிலும் விளக்கிட இயலாது. ஒரு மொழியில் ஏற்படும் மாற்றங்கள் காலப்போக்கில் எவ்விதச் சாயலையும் விட்டுவிடாமல் மொழியோடு இயல்பாக ஒன்றிவிடக்கூடும். அந்நிலையில், ஒரு மொழியின் பழங்காலத்தை விளக்குவது கடினமாக அமையும். மேலும், எல்லா மொழிகளிலும் எழுதப் பட்ட வரலாறு (Written History) இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்துவரும் மலைவாழ் மக்களின் (பழங்குடியினர்) மொழிகள் எழுத்து வழக்கைப் பெற்றிருக்கவில்லை. இதுபோன்ற நிலை பல திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. ஆகவே, அகச் சான்றுகளை அடை யாளம் காண்பது மிகவும் கடினமான செயல்.

அகச்சான்றின் அடிப்படையைத் தவிர்த்து, இன் னொரு முறை மொழிகளுடைய பழைய உருவத்தைக் கணிக்கப் பயன்படுகிறது. இம்முறையில் சில மொழி களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இருமொழிகள் தங்களுக்குள் மற்ற மொழிகளைவிட அதிக ஒற்றுமை (மொழி அமைப்பு, கூறுகள் அடிப்படையில்) கொண் டிருந்தால் அவை இரண்டும் ஒரு துணைக் குடும்பத் தைச் (Sub-group) சேர்ந்தவை என்று சொல்லப் படும். திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில், முதலில் இம்மூன்று மொழிகளும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை உடையனவாகத் தென்படு கின்றன. எனவே, இம்மூன்றும் ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என முடிவு செய்ய முடிகிறது. இனி, இம்மூன்றில் தமிழும் மலையாளமும் தம்முள் அதிக ஒற்றுமை உடையனவாகவும், தெலுங்கு ஓர ளவு ஒற்றுமை குறைந்து காணப்படுவதாகவும் அறிய முடிகிறது. ஆகவே, தமிழும் மலையாளமும் ஒரு துணைக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று முடிவு செய்யலாம். இவ்வாறு, ஒன்றுக்கொன்று இனத் தொடர்பு கொண்ட மொழிகளை ஒப்பிட்டு, அம் மொழிகளின் தொல்மொழியையும், இவற்றிடையே காணப்படும் மொழிக் கூறுகளின் ஒற்றுமை வேற்றுமை களையும் முறையாகக் கண்டறிய உதவும் துறையே ஒப்புமை மொழியியலாகும். பலகாலமாக, இம்முறை யில் முழுக்க முழுக்க ஒலி - ஒலியன் கோட்பாடுகளே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஏனென்றால், மொழி யின் முதல் வெளிப்பாடு ஒலியாக (Phone) இருக்கிறது. ஒலியடிப்படையில் பல மொழிகளில் வழங்கும் ஒலி களை ஒப்பிட்டுப் பார்த்து, அவை வழங்கும் ஒலி விதி முறைகளைக் கணிப்பதே(Phonetic Correspondences) வழக்கமாக இதுவரை இருந்து வந்துள்ளது. ஆனால், ஒலிகளை மட்டும் ஒப்பிடுவது போதாது. மொழியில் வழங்கும் பல்வேறு உருபன்கள்(Morphemes), தொடர் கள் (Phrases), ஆகியவற்றின் அமைப்புப் (Struc- ture) போன்றவற்றையும் ஒப்பிட்டு நோக்கி இனத் தொடர்பினை இன்னும் சிறப்பாக அறிய முடியும். இவ்வாறு, ஒலிக்கும் மேலே சென்று ஆராய்வதுதான்

ஒப்புமை மொழியியல் முறைக்கு ஒருவித உயிர்த் தோற்றத்தைத் தருகிறது என்று இப்போது பரவலாகக் கருதப்படுகிறது. அதற்கேற்பப் பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுப் பல வெளியீடுகள் வந்துள்ளமையும் காணலாம். எடுத்துக்காட்டாக, திராவிட மொழிகளில் வினைச் சொற்கள்–ஒப்பாய்வு; திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள்–ஒப்பாய்வு; திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினையமைப்பு; திராவிட மொழிகளில் வேற்றுமையமைப்பு; திராவிட மொழிகளில் துணைவினையமைப்புப் போன்ற ஆய்வுகள் இக்கோட்பாட்டினை நன்கு வலியுறுத்துவதோடு, ஒப்புமை மொழியியலாய்வுக்கு உரமிடுவதாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

கி.க.

**இனப்பெருக்க மக்கள் தொகை:** உயிர் சார் படிமலர்ச்சியில் ஒரு கூறான இனப்பெருக்க மக்கள்தொகை (Breeding Population) இனச் சந்ததியினரை உருவாக்கும் திறன் பெற்ற மக்கள் குழுவாகும். இந்த மக்கள்தொகை 'மெண்டலின் மக்கள் தொகை' (Mendelian Population) அல்லது 'வகையுறா உயிர்த்தொகுதி' (Deme) எனவும் கூறப்படுகிறது. மக்கள்தொகை என்னும்சொல் பல முறைகளில் பல்வேறு வழக்குகளில் பயன்படுத்தப்படுவதால் இச்சொல் வழக்கைக் கவனித்து வரையறை செய்தல் இன்றியமையாததாகிறது. எடுத்துக் காட்டாக 'இந்திய மக்கள் தொகை' என்னும் தொடர் இந்திய நாட்டின் அனைத்து மாநில மக்களையும் வயது, பால் ஆகியவற்றின் அடிப்படையிலல்லாது குறிப்பிடப்படுவதாகும். இதைப் போன்றே 'இனக்குழு மக்கள் தொகை' (Ethnic Population) என்னும் தொடர் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் ஒத்த பண்பாட்டைக் கொண்ட ஒருபடித்தான மக்களினத்தைக் குறிப்பதாகும். இதனாலேயே மானிடவியலில், படிமலர்ச்சிச் (Evolution) சொல் வழக்கில் 'மக்கள் தொகை' என்பது இனப்பெருக்கம் செய்யும் தகுதியுடைய குழுவினைச் சுட்டுவதாகும்.

இனப் பெருக்க மக்கள் தொகையினைப் பற்றித் தெளிவாக அறிய வேண்டுமாயின் மரபணுப் பொதுச் சேர்மம் (Gene Pool) என்னும் நிலையில் பிரித்தெடுத்து அறியலாம். மரபணுப் பொதுச் சேர்மம் என்பது குறிப்பிட்ட மக்கள் குழுவின் மரபுசார் இயற்பண்பின் தொகுப்பாகும் (Corporate genetic endowment), அல்லது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் மக்கள் குழுவில், ஒரே இடத்தில் காணப்படும் அனைத்து மரபணுக்களின் தொகுப்பாகும். இனப்பெருக்க மக்கள் தொகையின் வரம்பு குறிப்பிட்டு வரையறுத்துக் கூறுவது கடினம். உயரின உயிரிகளில் மரபணு ஒரு மக்கள் குழுவிலிருந்து மற்றொரு மக்கள் குழுவிற்குப் பரவும் தன்மையது. மனிதனை உள்ளடக்கிய இருபாலுயிரிகள் அனைத்திலும் வயது வந்த ஒரு உறுப்பினர் தம் குழுவைச் சார்ந்த எந்தவொரு எதிர்பாலாருடனும் இனப்பெருக்கம் செய்யும் நிலையைப் பெறுவர். ஆனால், ஒவ்வொரு உயிரியின் இனப்பெருக்கத் திறனும் ஒரே அளவினதாக அமையாது. இதனால், ஓர் இனப்பெருக்க மக்கள் தொகையில் பல படிநிலைகள் காணப்படுகின்றன. ஒரு சிறு பரப்பில் வாழும் சமூகத்தில் பல இனப்பெருக்க உறுப்பினர்களும் காணப்படலாம். ஆனால், பரந்த வாழிடப் பரப்பைக் கொண்ட சமுதாயத்தில் குறைந்த எண்ணிக்கையிலான இனப்பெருக்க உறுப்பினர்களே காணப்பெறுவதுமுண்டு. மனித இனப்பெருக்க மக்கள்தொகையில் பல உட்குழு (Sub units) மக்கள்தொகை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் ஒவ்வொரு குழுவிலும் மரபணுப் பொதுச் சேர்மத்தின் தன்மை வேறுபடுவதேயாகும். மனித இனங்கள் ஒவ்வொன்றும் மற்றதினின்று புறத்தோற்றத்தாலேயே பெரிதும் வேறுபடுகின்றது. இதற்குக் காரணம் மரபணுப் பொதுச் சேர்மத்தின் தன்மை ஒவ்வோர் இனத்திலும் மாறுபட்டுக் காணப்படுவதேயாகும். மனித இனங்கள் அல்லது மெண்டலின் மக்கள்தொகையில் காணப்பெறும் இந்த வேறுபாட்டுத் தன்மையினை இயற்கைச் சூழலில் காணப்படும் பொதுவான எடுத்துக் காட்டுகளின் வழி அறியலாம். ஒரு பரந்த நகரத்தின் பூங்காவில் வாழும் அணில்கள், சிறு கிராமத்தில் வாழும் எலிகள், சிறு வாழிடப் பகுதியில் பல மாடிக் கட்டிடங்களில் வாழும் பூனைகள் ஆகிய இவ்வனைத்தும் தத்தம் இனப்பெருக்கக் கூட்டமாகின்றன. அணில், எலி, பூனை ஆகிய உயிரிகள் தாம் வாழும் பரப்பிலிருக்கும் எதிர்பாலாருடனே இனப்பெருக்கம் கொள்கின்றன. ஆனால், மனிதர்களுள் இனப்பெருக்கத் தன்மை பண்பாட்டின் விதிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. புவியமைப்பு எல்லையே பெரும்பாலும் முதன்மையானதாகக் காணப்படுகிறது. சமயம், இனம், சமூகம், பொருளாதாரச் சூழல், மொழி, கல்வி, உளப்பாங்கு முதலான பண்பாட்டுக் காரணிகளும் உடன் நிற்கின்றன. மேற்கண்ட அனைத்துக் காரணிகளாலும் கட்டுப்பட்ட குழுக்களிலிருந்தே மக்கள் தத்தம் எதிர்பாலாரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகிறது. இம்மக்கள் தொகை 'இனப்பெருக்கத் தனிக்குழு' (Breeding Isolate) எனக் கூறப்படுகிறது. இந்த அனைத்துப் பண்புகளையும் கருத்திற்கொண்டே மனித இனப்பெருக்க மக்கள் தொகையைப் புவியமைப்புச் சார்ந்த சமூகக் குழு(Geographic-Social Group) என்றும் கூறப்படுகிறது. பொதுவாக உலகமனைத்திலும் மக்கள் தத்தம் பண்பாட்டுப் பண்பினைப் போற்றி வாழுதலைத் தலையாயதாகக் கொண்டுள்ளனர்.

கிரீன்லாந்து (Greenland) எசுகிமோக்கள், பசுபிக்குப் பரப்பில் வாழும் பிட்கேய்ரன் (Pitcairn), தென் அட்லாண்டிக்கில் வாழும் திரிசுடான் டா குன்கா (Tristan da cunha), சுவிட்சர்லாந்தின் மலை சார்ந்த கிராமங்கள், அரிசோனாவின் (Arizona) சுபய் இந்தியர் (Supai Indian), வங்காளக் கடலில் வாழும் அந்தமான் தீவினர், இந்தியாவில் வாழும் கொச்சின் யூதர்கள் அனைவரும் புவியமைப்புக் காரணங்களால் இனப்பெருக்கத் தனிக்குழுக்களாக வாழுகின்றனர். வாழிடப் பரப்பைப் போன்றே மொழி, சமயம் முதலானவையும் இனப்பெருக்கத் தனிக்குழுக்களை அமைக்கின்றன.

இந்தியப் பெருநாடு பல சமயங்களையும் பண்பாடுகளையும் கொண்டதாகும். பலவேறுபாடுகளைக் கொண்ட இந்திய நிலப்பரப்பில் மொழி, சமயம், முதலானவற்றால் பாகுபட்ட இந்திய மக்கள் தொகையில் 40,000க்கும் மேற்பட்ட இனப்பெருக்க மக்கள் தொகை உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இனப்பெருக்க மக்கள்தொகை உருவாவதில் மரபுப் பண்பு மட்டுமல்லாமல் புறப்பண்புகளும் காரணமாகின்றன. வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் நிலை முதல் தொழிற்சாலை நிரம்பியுள்ள நகர வாழ்க்கை வரை மக்கள் குழுக்கள் பலவாறாகப் பாகுபட்டுக் காணப்படுகின்றன. புவியமைப்புச் சூழல் சார்பிலும் மக்கள் பல துணைக் குழுக்களாகக் காணப்படுகின்றனர். இவ்வேறுபாடுகளைக் கொண்டு மரபு சார்மக்கள்தொகையியலார் (Population Geneticists) இனப்பெருக்க மக்கள்தொகைக் குழுக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர். மரபணு அடுக்கு நிகழ்வின் (Frequency) காரணமாகவும் இணைமரபுக்கீற்றில் (Allele) அடுக்கு நிகழ்வில் காணப்படும் வேறுபாடுகளாலும் மக்கள் குழுக்களிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவையே இனப்பெருக்க மக்கள் தொகையை அறுதியிடுவதில் தலைமைப் பங்கை வகிக்கின்றன. கே.நி.

**இனமுறைச் சட்டம்**: பாரதம் மொழி, இனம், மதச் சார்பற்ற நாடு (Secular State) என்று அதன் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்துக்கள், முகமதியர்கள், கிறித்தவர்கள் ஆகிய சமயத்தினர் பாரதத்தில் உள்ள மூன்று பெரும்பான்மை வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். புத்த, சமண, சீக்கியச் சமயங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகச் சட்டப்படி கருதப்படுகிறார்கள். ஒவ்வொரு பாரதக் குடிமகனும் தனக்குப் பிடித்த எந்தச் சமயக் கோட்பாட்டின்படியும் நடக்கலாம் என்று இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சமயத்தவரின் தனிப்பட்ட விவகாரங்கள் (Personal Matter) தொடர்பாகத் தனித்தனி இனமுறைச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பாரதத்தில் உள்ள 'பார்சி' என்னும் சிறுபான்மையினருக்கும் தனி இனமுறைச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனமுறைச் சட்டம் இலத்தீன் மொழியில் 'Lex Personnae' என்று சொல்லப்படுகிறது. பொதுவாக, இனமுறைச் சட்டம் திருமணம், வாரிசு முறை, மணவிலக்கு, மனைவி மற்றும் குழந்தைகள் பராமரிப்பு, சட்டப்படி வயது அடையாத குழந்தைகளுக்குப் பாதுகாப்பாளரை அமர்த்துதல் போன்ற தனிப்பட்ட விவகாரங்களுக்கு மட்டுமே செல்லத்தக்கது. இந்து இனத்தவருக்கு இந்துச் சட்டம் பொருந்தும்.

ஆனால், குற்றவியல் போன்ற விவகாரங்களுக்கு இனவேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவான குற்றவியல் சட்டம் உள்ளது. இவற்றிற்குத் தலச் சட்டமும் பொருந்தும். சில வகை உரிமையியல்களுக்கு எல்லா இனங்களுக்கும் பொதுவான சட்டங்கள் உள்ளன. விபத்தில் ஏற்பட்ட இறப்பு, மற்றும் காயங்களுக்கு நட்ட ஈடு வழங்க வகை செய்யும் சட்டங்கள்,ஒப்பந்தச் சட்டம் போன்றவை எல்லா இனத்தவருக்கும் பொதுவாகச் செல்லத்தக்கன. இத்தகைய பொதுச் சட்டங்கள் வட்டாரச் சட்டங்கள் (Local Laws) என்று குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில் அச்சட்டங்கள் வெளிநாடுகளில் செல்லத்தக்கனவல்ல. ஆனால், இனமுறைச் சட்டத்தை அந்த இனத்தவன் உலகில் எங்குச் சென்றாலும் உடன் கொண்டு செல்கிறான். அதாவது, வெளிநாட்டிலிருந்தாலும் அவனது தனிப்பட்ட விவகாரங்கள் (Personal Matter) தொடர்பாக அவனது இனச்சட்டம் பொருந்தும்.

பாரதத்தில் வாழும் எல்லா இனத்தவருக்கும். பொதுவான உரிமையியல் சட்டம் (Uniform Civil Code) உருவாவதற்குப் பாரத அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்பு 44-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய பொது உரிமையியல் சட்டம் இயற்றப்பட்டால் மேற்படி இனச்சட்டங்கள் பாரதத்தில் மறைந்து விடும். கே.கே.சு.

**இனமேம்பாட்டியல்,** சில தனிப்பட்ட அணுகுமுறைகளில் மனித இனத்தை மேம்படுத்தும் ஓர் அறிவியல் பிரிவாகும். இனமேம்பாட்டியல் (Eugenics) செயற்கை முறையில் தேர்ந்தெடுத்து

உடலாலும் உள்ளத்தாலும் வலிமையான இனப் பெருக்கம் செய்வதை ஆதரிக்கிறது. அது, மரபு வழியில் குறைபாடுகள் கொண்ட எதிர்காலச் சந்ததி யினரை உருவாக்குவதை ஆதரிக்கவில்லை. இதனால், இன மேம்பாட்டியல் தரமான வகையினை நிலை நிறுத்திக் குறைபாடுகளுடையவற்றை நீக்கி, மனித சமுதாயத்தை உருவாக்க வழிமுறைகளைக் காணுகிறதெனலாம். மனிதனின் மரபணுப் பொதுத் தேக்கத்தில் (Gene Pool) காணப்படும் கொல்லுந் தன்மையுடைய மரபணுக்களின் (Lethal Genes) நிகழும் எண்ணிக்கையைக் குறைக்கும் அணுகுமுறை இதில் ஒன்றாகும்.

'இனமேம்பாட்டியல்' என்னும் இச்சொல்வழக்கு, கி.பி. 1883-ஆம் ஆண்டு சர் பிரான்சிசு கால்டனால் (Sir Francis Galton) ஏற்படுத்தப்பட்டது. இவரே மனி தர்களை ஆய்வு செய்யும் துறையில் 'உடலளவையியல்' (Biometry) என்னும் சொல்வழக்கையும் அறிமுகப்படுத் தினார். இவர் தலைமையிலேயே இனமேம்பாட்டி யல் ஓர் அளவுசார்ந்த அறிவியலாக (Quantitative Science) வளர்ந்தது. கிரேக்க மொழியில் 'இன மேம்பாட்டியல்' என்னும் சொல்லுக்கு 'நன்றாகப் பிறத்தல்' (Well-born) அல்லது 'மேம்பட்ட மர பணுக்கள்' (Eugenes) என்பது பொருளாகும். இவ் வியல், சமூகக் கட்டுப்பாட்டின் (Social Control) கீழ் மேம்பட்ட மரபுவழிக் குணாதிசயங்களால் எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் நிலைகளை யும் அறிகிறது.

இனமேம்பாட்டியலின் தொன்மை முறைகள், திறனுள்ள உடலமைப்பைக் கொண்ட மனித இனத்தை உருவாக்குவதையே முதன்மையாகக் கொண்டிருந்தன. இக்கருத்தின்பால் கிரேக்கர்கள் நல்ல தெளிவான கருத்துகளைக் கொண்டிருந்த னர். ஆனால், இவர்கள் இருவகைக் கருத்தினைக் கொண்டிருந்தனர். கிரேக்க நாட்டில் இசுபார்ட்டா (Sparta) நகரத்து அறிஞர்கள், உடல் வளம் கொண்ட மக்களை உருவாக்குவதிலும் ஏதன்சு (Athens) அறிஞர்கள், அறிவுத் திறனுள்ள மக்களை உருவாக்கு வதிலும் கவனம் செலுத்தினர். தொடக்க கால உரோமில் ஊனமுற்ற குழந்தைகளைத் தார்பீனியன் (Tarpenian) பாறைப் பகுதியில் தள்ளி அழித்தனர்.

மனிதன், விலங்கினத்தில் ஓர் உறுப்பினனாகவும் இருப்பதோடு ஏனைய விலங்குகளுக்கு உள்ளிட்ட மரபுசார் விதிகளையும் முறைகளையுமே கொண்டு செல்லவேண்டியவனாயுள்ளான் என்ற பொதுக்கருத் தினை இனமேம்பாட்டியல் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வியலின் முப்பெரும் பிரிவுகளான சூழ்நிலை மேம் பாட்டியல் (Euthenics), இனமேம்பாட்டியல் (Eugenics), மரபணுப் பொறியியல் (Genetic Engineering) ஆகிய அனைத்துப் பிரிவுகளுமே, மனிதனின் தகுதியினை நிலைநிறுத்தி, எதிர்காலத்தில் தன் இனத்தை நிலை பெறச் செய்ய முயலுகின்றன. இனமேம்பாட்டியல் இன்று மரபுசார் கூறுகளைப் பற்றிக் கருத்துரைக்கும் ஒரு பிரிவாகச் செயற்படுகிறது. இத்துறையில் மரபு வழிப் பண்பின் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருவ தால், இதன் வெளிப்பாட்டினை உரைப்பது தேவை யாகிறது.

இனமேம்பாட்டியல் இரு வகைகளைக் கொண்ட தாகும். ஒன்று எதிர்மறை இனமேம்பாட்டியல் (Negative Eugenics) அல்லது தடுக்கக் கூடியது (Preventive). மற்றொன்று ஆக்கமுறை இனமேம்பாட்டியல் (Positive Eugenics) அல்லது வளரக்கூடியது (Progressive). எதிர்மறை இனமேம்பாட்டியல் விரும்பத்தகாத உரு வத்தோற்றத்தை (Phenotype) ஏற்படுத்தும். அது, இணை மரபுக் கீற்றில் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் அல்லது இல்லாமல் செய்வதற்கும் முனைகிறது.

ஆக்கமுறை இனமேம்பாட்டியல், மேம்பட்ட குணங் களைக் கொண்டு செல்லும் மரபணுக்களை (Gene) மனித மரபணுப் பொதுத் தேக்கத்திலிருந்து (Gene Pool) குறையாமலிருக்கவும் அதனைப் பேணிக்காக்க வும் வழிவகைகளை மேற்கொள்கிறது. மரபியல் (Genetics) விதிகளின் அடிப்படையில், மனித இனத் தின் நல்ல மரபுகளை வளம் பெறச் செய்ய, இணக்க மான கலப்பினை மேற்கொள்ள இவ்வியலார் அறி வுறுத்துகின்றனர். இதற்கென இனமேம்பாட்டியலார் மனித சமுதாயத்தை வளப்படுத்தக் கீழ்வரும் முறை களைக் குறிப்பிடுகின்றனர்.

1. இப்போது நிலைபெற்றிருக்கும் மனித இனத்தை வளம் பெறச் செய்ய மக்கள் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல், நல்ல சத்துணவு, நல்ல கல்வி, நல்ல மருத்துவ வசதி ஆகியவற்றை அளித்தல், துணையான சூழ்நிலை அமைத்தல் ஆகிய வற்றை மேற்கொள்ளுதல்.

2. இன்றுள்ள மனிதர்களின் கருத்திசு ஊன்நீரை (Germ plasm) ஊக்கப்படுத்தி நல்ல எதிர்காலச் சந்த தியினரைப் பெறுதல்.

ஓர் உயிரியின் வளர்ச்சிக்கு, மரபுவழிக் காரணி களும் சூழ்நிலைக் காரணிகளும் முதன்மையான பங் கினை ஆற்றுகின்றன. நல்ல கருத்திசு ஊன்நீர் கொண்ட மக்களின் (நல்ல பண்புகளைக் கொண்ட நடுத்தர மக்களின்) பிறப்பு விகிதம் குறைந்து கொண்டு வருவதும், குறைபாடுடைய

கருத்திசு ஊன்நீரைக் கொண்ட (குறைபாடுடைய உடற்பண்புகள் கொண்ட) மக்களின் பிறப்பு விகிதம் பெருகி வருவதும் ஆகிய இவ்விரு காரணிகளுமே மனித இனத்தை வளப்படுத்துவதில் இடர்ப்பாடாய் அமைந்துள்ளன. இதனால், இனமேம்பாட்டியல் துணைக்கொண்டு, குறைபாடுடைய மக்களின் எண்ணிக்கையைக் குறைத்தலும் நல்ல பண்புகளடங்கிய மக்களின் எண்ணிக்கையை உயர்த்துதலும் செய்யலாம். அது இன்றியமையாதது. மணம் கொள்ள விருப்பமான இருவரைத் திருமணம் செய்து வைத்தலும் (ஆக்கமுறை இனமேம்பாட்டியல்) விருப்பமற்றவர்களை மணம் செய்து கொள்ளாமல் தவிர்த்தலும் (எதிர்மறை இனமேம்பாட்டியல்) இதனையடைய வழி செய்யும். இம்முறைகளை மேற்கொள்வதில் எந்தெந்தப் பண்புகள் தேவையற்றன என்று கண்டறிவதாகிய சிக்கல் காணப்படுகிறது. குறைபாடுகளையுடைய திறனற்ற பண்புகளை நீக்கும் எதிர்மறை இனமேம்பாட்டியல், சிறந்த பண்புகளையுடைய மக்களின்பால் கலப்பை ஊக்கப்படுத்தும் ஆக்கமுறை இனமேம்பாட்டியல் ஆகிய இரண்டிலுமே பல சிக்கல்கள் காணப்படுகின்றன. எர்மன் முல்லர் (Herman Muller)கருத்திசுத் தேர்வு(Germinal Choice)என்னும் முறையைக் கையாண்டார். இது ஆக்கமுறை இனமேம்பாட்டியல் சார்ந்த முறையாகும். உடல், உள்ளத்திறனுள்ள ஆண்களின் விந்தணுச் சேமிப்பினை (Sperm Bank) ஏற்படுத்தி, உடல்நலம் பெற்ற பெண்களுக்கு அதன்மூலம் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறையினை அறிமுகப்படுத்தினார். இம்முறையில் வளமான பண்புகளையுடைய மனிதர்களைத் தேர்வு செய்வதிலும் கொல்லும் மரபணுக்களைக் (Lethal Genes) கண்டறிவதிலும் மிகுந்த சிக்கல்கள் காணப்படுவதால், செயற்கைக் கருத்தரிப்பு முறை செயல்முறைக்கு ஒவ்வாததாகிவிட்டது. இலெடர்பர்கு (Lederberg) இனமேம்பாட்டியலுக்கு மாற்றாகச் சூழ்நிலைமேம்பாட்டியல் என்னும் துறையை அறிமுகப்படுத்தினார். இவ்விரண்டுமே உருவத் தோற்றம் (Phenotype), மரபுத்தோற்றம் (Genotype) போன்றவையாகும். இனமேம்பாட்டியல் மரபுப்பண்பை மேம்படுத்தி, நல்ல மனித இனத்தை உருவாக்கும் இயலாகும்.

மரபியலின் கூற்றுப்படி, ஆண்களின் விந்தணுக்களைச் சேமித்து வைத்து, அதைப் பெண்களின் கருப்பையில் கருவுறச் செய்வதால் விந்தணு பெறப்பட்ட ஆணின் குணங்கள் வெளிப்படுவதில் வாய்ப்புக் குறைவாக உள்ளது. எடுத்துக்காட்டாக, ஓர் இசை வல்லுநரின் விந்தணுக்களைச் செலுத்திப் பெறப்படும் குழந்தை, இசையில் சிறந்து விளங்காமலும் போகும். சூழ்நிலைக் காரணிகள், குழந்தைகள் வளரும்போது மாற்றிவிடுகின்றன. இதனாலேயே விந்தணுச் சேமிப்பு முறை சிறப்பிடம் பெறவில்லை.

இனமேம்பாட்டியலின் அடிப்படைக் கருத்துகளும் கொள்கைகளும் அறிவியல் முறையில் வளராமல் போனதற்கு நாசிச் செருமனியர் காரணமாயினர். மேம்பட்ட பண்புகளைக் கொண்டிராதவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களைக் கொன்றும் மலட்டுத் தன்மையாக்கியும் அழித்தனர். இவர்களின் அளவைகள் சமூக, பண்பாடு, மரபுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிராததாலும், மக்களை நேரடியாகத் துன்புறுத்தியதாலும் இந்த அறிவியலின் வளர்ச்சியில் மக்கள் ஈடுபாடு செலுத்தவில்லை. இங்கிலாந்தில் பல கல்வி நிறுவனங்களிலும் தங்கள் நூல்களிலும் பருவ இதழ்களிலும் இனமேம்பாட்டியல் என்னும் சொல்லை அறவே நீக்கினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

உடல்வாகு, அறிவுத்திறன், உடல்நலம் முதலானவற்றில் சிறந்த பண்புகள் கொண்டோரை இணைத்தலின்வழி, நல்ல எதிர்கால இனத்தை உருவாக்க இயலும் என்னும் இத்துறையின் கொள்கைகள் சிக்கலானவையாகக் காணப்படுகின்றன. பண்புகளையும் சூழ்நிலைக் காரணிகளையும் தேர்ந்தெடுப்பதில் மக்களின் சுதந்திரத்திலும் உரிமையிலும் இதன் பாதிப்புக் காணப்படுவதால் இத்துறையினரின் செயல்முறைகள் வெற்றி காண இயலவில்லை.

எம்.சே.

துணை நூல்கள்:

**Eldon, J.G.,** Human Heredity, John Wiley, New York, 1983.

**Mertens, T.R.,** Human Genetics, Wiley, New York, 1975.

**Mertens, T.R., and Robinson, S.K.,** Human Genetics and Social Problems, MSS information, New-York, 1973.

**இனமையக் கொள்கை**: எல்லாச் சமுதாயத்தினரும் சமூகத்தின் அடிப்படை அமிசங்களில் பொதுவான கூறுகளைக் கணிசமான அளவில் கொண்டிருந்தாலும் கூட வாழ்க்கை முறைகளில் ஒரு சமூகத்தினர் நிச்சயமாக மற்றொரு சமூகத்தினரிடமிருந்து பல விதங்களில் மாறுபட்டே வாழ்கின்றனர். பிறந்ததிலிருந்தே தங்கள் பண்பாட்டு முறைகளைப் பின்பற்றி வருவதால் தங்களின் வாழ்க்கை முறையை மிக உயர்வானதாகக் கருதுகின்றனர்.

இவ்வகையான கருத்தே இனமையக் கொள்கை (Ethnocentrism) ஆகும். இனமையக் கொள்கை உணர்வானது பொறாமை மற்றும் போட்டி உணர்ச்சிகளில் இருந்து மாறுபட்டது. இனமையக் கொள்கை உணர்ச்சியில் தாங்களே உயர்ந்தவர்கள் என்ற உயர்வு மனப்பான்மையே காணப்படும். இவ்வுணர்வானது வெவ்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கிடையேயும், சில சமயங்களில் ஒரே பண்பாட்டுச் சமூகத்தைச் சேர்ந்த வெவ்வேறு மதம் அல்லது குழுக்களுக்கிடையேயும் காணப்படும்.

பிற சமூகத்தினரின் வாழ்க்கை முறைகள் தங்களுக்குப் பழக்கமில்லாததாகவும் புதியதாகவும் இருப்பதால் அப்பண்பாட்டு முறைகள் உயர்ந்தனவல்ல என்று எண்ணத் தொடங்குகிறார்கள். பெரும்பான்மையோர் தம்முடைய பண்பாட்டு முறைகளே உயர்வானவை, மற்றவை தாழ்வானவை என்று கருதுகிறார்கள். இம்மாதிரியான தங்கள் இனத்தின் பண்பாட்டு முறைகளே பிற பண்பாட்டு முறைகளை விட உயர்ந்தவை என்று கருதும் மனப்பான்மையே 'இனமையக் கொள்கை' ஆகும்.

இந்த இனமையக் கொள்கையின் முதன்மையான குணம் பிற பண்பாட்டு முறைகளை அளவிடுதலாகும். இங்குத் தங்கள் பண்பாட்டு முறைகளான நம்பிக்கைகள், மதிப்பீடுகள், அல்லது வாழ்வின் பழக்கங்கள் முதலானவற்றை உயர்ந்தனவென்றும், பிற பண்பாட்டு முறைகள் தாழ்ந்தன அல்லது பிற்போக்கானவை என்றும் மக்கள் கருதுவதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். மக்கள் தம் பண்பாட்டைப் பற்றி உயர்வு மனப்பான்மை கொண்டு, பிற சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடுகின்றனர். இந்தச் சுய பண்பாட்டுப் பெருமைக்கான முக்கிய காரணம் பிற பண்பாட்டு முறைகளையும், அவற்றின் வளர்ச்சியையும் பற்றிய தெளிவான அறிவு இல்லாமையே ஆகும். தாங்கள் மட்டுமே பண்பாட்டில் மிகவும் உயர்ந்தவர்கள் என்ற தற்பெருமையுணர்ச்சியும் மற்றொரு முதன்மையான காரணமாக அமைகின்றது.

பெரும்பாலோர் பிறரின் நடவடிக்கைகளையும், சமூக மதிப்பீடுகளையும், சமூக வழக்கங்களையும் அந்த சமூகச் சூழ்நிலையில் வைத்து அவர்களின் சமூகக் கண்ணோக்கில் புரிந்து கொள்ளாததே அறியாமைக்குரிய காரணமாகும். எனவே, பிற சமூகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களோடு பலகாலம் வாழ்ந்தவர்களுக்கு இந்த இனமையக் கொள்கை உணர்வு தோன்றுவது அரிது.

உளவியல் நோக்கில் இதற்கான காரணத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஒருவர் தம் சமூகத்தின் மேல் உள்ள பற்றை இனமையக் கொள்கை மூலம் தான் வெளிப்படுத்துகிறார் எனலாம். இந்த மனப்பான்மை சிலரிடம் தங்களிடையே உள்ள குறைகளை மறைப்பதற்காகவும் கொண்டுள்ளனர். பொதுவாக அதிக அளவு தொடர்பு இல்லாதவர்கள், பகுத்தறிவு இல்லாதவர்கள், பிறரோடு நெருங்கிப் பழகாமல் தனித்திருக்கும் குணம் கொண்டவர்கள், பிறரிடம் குற்றம் காணும் இயல்புடையவர்கள், தீவிர மதவுணர்ச்சி, மொழிப்பற்று, நாட்டுணர்வு கொண்டுள்ளவர்கள், எதேச்சாதிகார மனப்பான்மை உடையவர்கள் போன்றோரே இந்தச் சுயபண்பாட்டுப் பெருமைக் குணத்தைக் கொண்டிருப்பார்கள். எந்தவிதமான சூழ்நிலையில் வாழும் மக்கள், இத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருப்பார்கள் என்று சொல்வது கடினம். அதுபோல் எந்த அளவு கொண்டிருப்பார்கள் என்பதும் சொல்லுந் தரத்ததன்று. இனமையக் கொள்கை ஆளுமைத் தன்மையாலும் ஊக்குவித்து வளர்க்கப்படுகின்றது. சமூகத்தில் உள்ள எல்லோரும் ஒரேமாதிரியாக இம் மனப்பான்மையைக் கொண்டிருப்பதில்லை. சில குறிப்பிட்ட ஆளுமைக் குணங்களைக் கொண்டிருப்பவர்களே மற்றவர்களைக் காட்டிலும் இவ்வுணர்வைக் கொண்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட சாதியினர் மற்றச் சாதியினருக்கு எதிரான மனப்பான்மை கொண்டிருப்பதை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். ஆனால், தம்மிடையே அல்லது தம் சமூகத்தினரிடையே உள்ள இந்த இனமையக் கொள்கைக் குணத்தை மக்கள் எளிதில் உணர முடிவதில்லை.

சமூகத்திலுள்ள கல்வி நிறுவனங்கள், மதநிறுவனங்கள் எல்லாம் பொதுவாகவே தத்தம் பண்பாடே சிறந்தவை என்று மனிதனுடைய குழந்தைப் பருவந்தொட்டே போதிக்கத் தொடங்கிவிடுகிற காரணத்தால், இந்த ஒருமுகமான-ஒருதலைப்பட்சப் பண்பாட்டுணர்வு என்பது இயற்கையாக அவர்களிடம் காணப்படும் ஒன்றாய் மாறிவிடுகிறது. குழந்தைகளும் நாட்டின் வரலாறு, மொழி மற்றும் பாரம்பரியம் முதலியவற்றைக் கற்றுக் கொள்ளும் போதும் இப்பண்பாட்டுப் பெருமையுணர்வு மேலோங்கி, அவர்களது இன உணர்வு வேரூன்றிக் கால்கொண்டு வளர்ச்சியடைய வழி வகுக்கிறது. இவ்வாறு வித்திடப்பட்டு வளர்ச்சி நிலையை எட்டும் எந்த மனிதனது இனப் பெருமையும் பெரியவர்களாகும்போது பிற்காலத்தில் வெளிப்பட்டே நிற்கும். இது பற்றி யாருக்கும் ஐயப்பாடு எழத் தேவை

யில்லை. ஆனாலுங் கூடத் தன்னுடைய சமூகப் பண்பாட்டுக் கோட்பாடுகளை மட்டும் கடைப்பிடித்து நடப்பதுதான் இனமையக் கொள்கை என்றால் அது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வாழ்க்கையின் வசதிகளை ஒருவன் அறிந்தே பண்பாடு பற்றிய கோட்பாடுகளை இறுதியாகக் கடைப்பிடிக்கின்றான் என்பதே கண்கூடு. அவனிடத்திலே ஒருவித நம்பிக்கை அல்லது பிடிப்பு ஏற்படுவதென்றால் அதற்குக் காரணமாயிருப்பதும் இந்த வசதிகள்தாம் என்று சொல்லிவிடலாம். ஆகவே, பண்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும் ஒருவன் பிற பண்பாட்டு முறைகளை நன்கு தெரிந்து வைத்திருந்தாலும் கூட அதைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் சிரமங்களையும் எண்ணிப்பார்த்துத் தன் சமூகப் பண்பாட்டு முறைகளையே வாழ்வில் கடைப்பிடிக்க முற்படுகின்றான். இதுவும் ஒருவிதக் கட்டுப்பாடு, அதிலும் இயற்கையில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடு ஆகும். ஆகையால், இதற்கு மாறான போக்கு மனிதனிடம் காண்பதற்கில்லை. சான்றாக, இந்துச் சமூகத்தின் படித்த மக்களுள் பெரும்பான்மையோரும் தங்கள் வகுப்பிலே (சாதி) திருமணம் செய்து கொள்வதில் தான் ஒருவித அழுத்தமான விருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள். கலப்புத் திருமணம் என்பது அவர்களுக்கு ஒரு மாபெரும் பிரச்சினை அன்று. ஆயினும் கூடத் தன் சாதியில் நிகழும் திருமணம் சுமுகமான ஒன்று; அது பிரச்சினைகளை உண்டாக்க நியாயமில்லை என்பது அவர்களது அசையாத நம்பிக்கை; முடிந்த முடிவும் கூட. பெரும்பான்மையான பண்பாட்டுக்கோட்பாட்டு முறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் வழக்கத்தினால்கூட மிகவும் இயற்கையானவையாகவும் பொருத்தமானவையாகவும் ஆகிவிடும் ஒரு வளர்ச்சியடைந்த பண்பாட்டில் வேற்றுப் பண்பாட்டின் கலப்பு இருக்கும். ஆயினும், மக்கள் தங்கள் வாழ்க்கை முறையில் வேற்றுப்பண்பாட்டு முறைகள் கலந்திருப்பதைச் சில நேரங்களில் அறியாமல் கூட இருக்கச் செய்யும் ஆற்றல் இந்தச் சுய பண்பாட்டுப் பெருமை உணர்விற்கு உண்டு.

இந்த இனமையைக் கொள்கை நாடு, பண்பாடு மற்றும் சமூக அளவில் காணப்படுகிறது. பெரிய நாடாக இருப்பின் அவற்றின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வுணர்வு மக்களிடையே காணப்படுகிறது. அரிசி சாப்பிடுவோர், கோதுமை உரொட்டியை இகழ்ந்தும், தங்கள் தாய் மொழியினைச் சிறப்பிப்போர் பிறர்மொழியினைத் தாழ்த்தியும் பேசுவது இந்தச் சுய பண்பாட்டுப் பெருமை உணர்விற்கு ஏற்ற உதாரணமாகும். இனமைய உணர்வை மக்கள் குடும்பங்கள், மதங்கள், பள்ளிகள், சாதிகள் மூலமாகப் பெறுகிறார்கள்.

குழந்தைப் பருவத்தில் பயிலப்படும் பழமொழிகளும், ஓரிரு நாட்டுப்புறக் கதைகளும் இக்காலத்தில் பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளும் புதினங்களும், திரைப்படங்களும், இவ்வுணர்வை மக்களுக்கு அதிகமாக உண்டாக்குகின்றன.

இந்த இனமையக் கொள்கை பல அளவுகளில் சமூகத்தில் காணப்படுகிறது. சாதாரணமாகப் பிறர் பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடுவதிலிருந்து சில பழக்கங்களை மட்டும் பலமாகக் கண்டிப்பது வரை இந்த உணர்வு மக்களிடையே காணப்படுகிறது. காட்டாகப், பலவற்றைச் சொல்லலாம். அவற்றில் ஒன்று நாகரிகமடைந்தவர்கள் என்று கருதும் நகர்வாழ் மக்கள், ஆதிவாசி இனத்தவரின் உடையணியும் முறைகளை ஏளனமாகப் பார்ப்பது. இதைச் சாதாரணமாகப் பண்பாட்டுப் பெருமை உணர்வு எனலாம். மற்றொன்று, இப்போது பல கணவர்களை மணக்கும் முறையை நாகரிகமுற்ற மக்கள் தீவிரமாக எதிர்ப்பது. இதுவும் இனமையக் கொள்கையின் ஆழமான வெளிப்பாடாகும். இவர்கள் அனைவரும் ஆதிகுடிகளின் வாழ்க்கை முறைகளை அவர்கள் சூழலில் இருந்து அவற்றின் பயன்களை நோக்காத அறியாமையாகிய காரணத்தால்தான் இந்தப் பண்பாட்டு முறையினை இகழ்வாகக் கருதுவதற்குரிய நிலை ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் ஒரே பண்பாட்டுச் சமூகத்தினரிடையும் சில பழக்க வழக்கங்களில் பலரிடையே இவ்வுணர்வைக் காணலாம். சைவ உணவுப் பழக்கம் கொண்டவர்களிடையே பெரும்பாலோர் அசைவ உணவு உட்கொள்பவர்களைத் தாழ்வாகக் கருதுகிறார்கள். எனவே, மேற்சொன்ன உதாரணங்களினால் இந்த இனமையக்கொள்கை உணர்வானது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பது புலப்படுகிறது. எதையும் ஆராய்ந்து தெளிவாக நோக்கும்முறை இல்லையென்று வந்துவிட்டால் ஏற்படும் விளைவே இந்த இனமையக் கொள்கை உணர்வாகும் என்று சுருங்கச் சொல்லிவிடலாம். இச்சுய பண்பாட்டுப் பெருமை உணர்வானது மக்களைப் பிற பண்பாடுகளிலிருந்து தீவிரமாக வேறுபடுத்துகிறது. சமூகத்தில் குறிப்பாக மக்களின் எண்ணங்களுக்குத் தடைவிதிக்கிறது. சமூகத்தில் இனமையக் கொள்கை உணர்வினால் ஒரு நாட்டின் பண்பாட்டிற்கு நன்மைகளும் தீமைகளும் ஏற்படலாம்.

நன்மைகள்: இனமையக் கொள்கை அல்லது சுய உயர்வு எண்ணமானது பொதுவாக ஒரு சமூகத்தின் பண்பாட்டு முறைகள் நிலைத்து இருப்பதற்கு மிகவும் உதவி செய்கிறது. வழக்கில் உள்ள செயல்

முறைகளும் எண்ணங்களும் நம்பிக்கைகளும் பிற பண்பாட்டுச் சேர்க்கையினால் மாறிவிடாமல் பாது காக்கிறது. சுருங்கக் கூறினால் ஒரு சமூகத்தின் பாரம் பரியம் பாதுகாக்கப்படுகிறது. மேலும், மக்கள் தங் களைச் சார்ந்துள்ள சமூகத்தின் பண்பாட்டிற்கு முதன்மையான இடம் கொடுத்து அதைக் கடைப்பிடிப்பதின் மூலம் அந்தப் பண்பாட்டு முறை மாறாமலும் அழியாமலும் பாதுகாக்கிறார்கள். தங்கள் பண்பாட்டுக் கோட்பாடுகளே சரியென்றும், விரும்பத்தக்கவை என்றும், வாழ்விற்கு நன்மை செய்து பாதுகாப்பளிக்கக் கூடியவை என்றும் நம்பு கிறார்கள். இதனால், அந்தச் சமூகத்தின் பண்பாட் டிற்கு மக்களின் வெறுப்பினால் அழிவு ஏற்படும் என்ற பயமே இல்லை.

மேலும், இவ்வுணர்வினால் பெரும்பான்மையான மக்கள் ஒரே மாதிரியான வாழ்க்கை முறையினைக் கடைப்பிடிப்பதால் சமூகத்தில் வேறுபாட்டிற்கு இடமே இல்லை. வகுப்புகள், மதங்கள், இனங்கள் ஆகியவற்றிடையே சமூக மதிப்பீட்டு முறைகளில் வேறுபாடுகள் தோன்றுவதற்கும் இடமே இல்லை. இதனால், சமூகத்தில் அமைதி நிலவுகிறது. தன் இனத்திற்கு உண்மையாக இருப்பதும் நல்லதுதான். நாட்டுணர்வு, நாட்டுப்பற்று, இனம் மற்றும் மொழிப் பற்று ஆகியவற்றைப் பலப்படுத்துகிறது, தன் சமூகப் பண்பாட்டை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை உண்டாக்கி மாறுதல் ஏற்படாமல் தடுக்கிறது. இதனால், சமூக மாறுதலினால் உண்டா கும் பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன. குறிப்பாக மனப் போராட்டங்களும், விருப்பமில்லாமல் சமூகத் தோடு ஒத்துப் போகும்படியான சூழ்நிலைகளும், ஏற்படுவதில்லை. இந்த உணர்வினால் அமைதியாக வாழ முடிகிறது. மக்களைச் சமூகத்தோடு ஒன்றிப் போகச் செய்கிறது என்பதும் உண்மையாகிறது.

தீமைகள்: இனமையக்கொள்கை உணர்வானது பல சமயங்களில் சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிராகச் செயற்படுகிறது. பிறபண்பாட்டிலிருந்து பெறக்கூடிய நன்மைகள், புதிய முறைகள் முதலானவற்றைத் தம் சமூக வழக்கில் கொண்டு வராமல் தடுக்கிறது. பழம் பெருமையைப் பேசிப்புதிய மாறுதல்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் விரைவில் வரவிடாமல் தடுக் கிறது. வெளிக் கருத்துகள் ஐயத்தோடு பார்க்கப்பட்டு அவை பெரும்பாலும் தீமை பயப்பன என்றே கருதப் படுகின்றன. இதனால், சமூகத்தில் உள்ள பிரச்சினை கள் சுலபமாகத் தீர்க்கப்படுவதற்கு மாறாக அப்ப டியே விடப்படுகின்றன.

இவ்வுணர்வானது, மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும்பொழுது மக்களைப் பிற சமூகத்தின் அறிவு பூர்வமான நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாத வாறு தடுக்கிறது. அவற்றுக்குப் பெரும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. எனவே, பண்பாட்டுப் பரி மாற்றங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட்டு, சமூகத்தில் ஒரு வளமான வாழ்வு முறை அமையாமல் தடுக்கப் படுகிறது. இக்காலத்தில் எந்தச் சமூகமும் தனித்தி யங்க முடியாது. எந்தச் சமூகம் தானே உயர்ந்தது என்ற செருக்கோடு இருக்கிறதோ அதனால் பிற சமூகத்துடன் ஒன்றிப் போக இயலாது. இதனால், சமூகங்களிடையே பல்வேறு பிரச்சினைகள் தோன்று கின்றன. எனவே மனக்கசப்புகளும், பயமும் சந்தேகங் களும், காழ்ப்புணர்ச்சியும் தோன்றுகின்றன. வெவ் வேறுபட்ட பழக்கமுள்ள சமுதாயத்தினரிடையே ஒற்றுமை ஏற்படுவதை இது தடுக்கிறது.

எனவே, இனமையக் கொள்கை தற்காலச் சூழ் நிலையில் சமூகத்திற்கு அதிகமாக நன்மைகள் தருவ தில்லை. இந்த உணர்வைக் கட்டுப்படுத்தியோ அல் லது விலக்கியோ இருத்தல் இன்றியமையாதது. மக் கள் இவ்வுணர்விலிருந்து விடுபட அவர்களிடையே ஆராய்ந்து தெளியும் அறிவு பூர்வமான நோக்கு மலர வேண்டும். எந்தப் பண்பாட்டு நடவடிக்கை களையும் அப்பண்பாட்டுச் சூழலில் புரிந்து கொள்ளும் பழக்கம் மக்களிடையே ஏற்பட வேண்டும். இதற்குப் பொதுமக்களிடையே மிக்க செல்வாக்குள்ள செய்தித் தொடர்புச் சாதனங்களான நாளேடுகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் முதலியன பெரும் பணி ஆற்றவேண்டும். சீ.சே.தே.

துணை நூல்கள்:


**Moore, Alexander**, Cultural Anthropology, Harper Row, NewYork, 1978.

**Cuber, John, F.**, Sociology - A Synopsis of Principles, Printice Hall, New Jersy, 1968.

**Rokeach, Milton**, The open and closed mind: Investigations into the nature of Belief systems and Personality Systems, Basic Books, New York, 1960.


**இனவகைப்பாட்டின் அலகுகள்**: மனித குலத்தின் மிகப் பெரும் பிரிவே இனமாகும். இவ் வினக் குழுவினர் உடற்கூற்று அமைப்பிலும் உருவத் தோற்ற அமைப்பிலும், மரபுவழித் தொடரும் ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பர். இம்மரபுவழிப் பண்பு களை (Genetic Traits) அடிப்படையாகக் கொண்டே மனித இனம் பலவாறாகப் பிரிகிறது. இம்மரபுவழிப் பண்புகளையே இனவகைப்பாட்டின் அலகுகளாக

இனவியலார் பயன்படுத்துகின்றனர். மனித இனத்தைப் பல்வேறு இனக்குழுக்களாக வகைப்படுத்தக் கையாளப்படும் அலகுகளை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

முதற் பிரிவில் பொதுவான மாறுபட்ட பண்புகளைக் கொண்டதும் எளிதில் கையாளக் கூடியதுமான புறத்தோற்ற அலகுகளான தோலின்நிறம், மூக்கு அமைப்பு, முக வடிவம், தலை முடி, தலை அமைப்பு, கண், உடலுயர்வளவு (Stature), தோற்கூற்றியல் (Dermatoglyphics) முதலானவை அடங்கும். இவ் அலகுகள் பார்வைக்குரியனவாகவும், ஆய்வுக் கருவிகளைக் கொண்டு எளிதில் அறியக்கூடியனவாகவுமுள்ளன.

பொதுவான உடலியற் பண்புகளான இரத்த வகைகள் இரண்டாம் பிரிவில் அடங்கும். மூன்றாம் பிரிவில், குருட்டுத் தன்மை (Colour Blindness) கரியக நெய்ம( Phenylthiocarbomide-PTC) ஆய்வு, மிகக் குறைந்த அளவில் நிகழும் இயல்பற்ற பண்புகள் ஆகியன அடங்கும்.

இனவகைப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வோர் அலகும் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும். பொதுவாகப் புறஉறுப்புகளாக அமைந்திருக்கும். இதனால், ஒவ்வோர் ஆய்வாளரும் தனித்தனியான வேறுபாட்டினைக் கொள்ளாமலிருப்பர்.

இந்த அலகு, இயற்கைத் தேர்விற்கு உட்படாமலும் இருக்காது; இயற்கையோடு தகவமையும் பண்புகளாகவும் இருக்காது. இனவகைப்பாட்டிற்குக் கையாளப்படும் அலகுகள், எவ்விதச் சூழ்நிலைக் காரணிகளாலும் உடனிகழ்வாலும் (Mutation) மாறும் தன்மையற்றவை.

இந்த அலகுகள் அனைத்தும் மரபுக்கீற்றுச் (Chromosome) செயல்களினாலும் உடன்நிகழ்வால் ஏற்படும் பண்புகளாலும் பாதிக்கப்படாமலிருக்கும்.

புறத்தோற்ற உடற்பண்புகள்:

தோலின் நிறம்: இனக் குழுக்களிடையே முப்பெரும் நிறத்தில் தோலின் நிறம் காணப்படுகிறது. தோலின் நிறத்தைக் கொடுக்கும் நிறமிகள் மரபுவழிச் செல்வதாகும். வெள்ளை நிறத் தோல் (Leucoderm) மஞ்சள் நிறத் தோல், (Xanthoderm), கருப்பு நிறத் தோல் (Melanoderm)ஆகிய இம்மூன்று நிறங்களில் காணப்படும் இனக் குழுக்களை வகைப்படுத்த நிறமிகளே காரணங்களாக அமைகின்றன.

வெள்ளை நிற மக்களுள் (Leucoderms) ஐரோப்பியர் மட்டுமல்லாது மேற்கத்திய ஆசியர், பாலினீசியர் முதலானோர் இளஞ்சிவப்பிலிருந்து மிதமான பழுப்பு வரை காணப்படுகின்றனர். ஆசிய மங்கோலியர்கள் மஞ்சள் நிற (Xanthoderm) மக்களுக்கு எடுத்துக் காட்டாவர். பர்மா, சைனா, இந்தியாவின் வடகிழக்கு மலைப்பகுதியினரில் பெரும்பாலோரும் மஞ்சள் நிறத்தோல் கொண்டிருப்பதால் மங்கோலிய இனத்தவராவர். இவர்களைத் தவிர்த்து அமெரிக்க இந்தியர்களும் இந்த நிறமியைக் கொண்டுள்ளனர். கருமை நிற (Melanoderm), மக்களின் பேராளிகள் நீக்கிரோக்கள் ஆவர். இவர்களைத் தவிர்த்துக் கருமை நிறமுடைய ஆப்பிரிக்கர், பழுப்புக் கலந்த கருப்பு நிறத்தோலுடைய பாப்புவர் (Papuans), மெலனீசியர் (Melanesians), திராவிடர்களுக்கு முந்தியவர்கள், ஆசுத்திரேலிய முதுகுடிகள் முதலானவர் இவ்வகையில் அடங்குவர்.

மயிர்: மிக எளிமையான முறையில் கையாளப்படும் அலகுகளில் மயிரும் ஒன்றாகும். மயிரின் அமைப்பு (Hair form), நிறம், தன்மை (Texture), அளவு (Quantity), மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம், தலைச்சுழி (Hair Whorl) முதலான பண்புகளை ஆராய்ந்து அதனடிப்படையிலும் இனத்தை வகைப்படுத்துவர். மயிரின் அமைப்பு மூவகையானது: 1. வழவழப்பான மயிர் (Leiotrichous), 2. வளைவமைப்புடைய மயிர் (Cymotrichous), 3. சுருள் சுருளான மயிர் (Ulotrichous). வழவழப்பான அமைப்புடைய (Smooth form-Leiotrichous) மயிர் மங்கோலிய இனத்தவரிடையே காணப்படுகிறது. இவ்வகையில் மயிர் பொதுவாக நேராகவும் சொரசொரப்பாகவும் நிமிர்ந்தும் தட்டையான வளைவையும் (Flat wavy) கொண்டிருக்கும். வளைவமைப்புடைய (Wavy form-Cymotrichous) மயிர் வகையில் மயிர் அகல வளைவாகவும்(Broad wavy),குறுகிய வளைவாகவும்(Narrow wavy)காணப்படும். இவ்வமைப்புடைய மயிரினை ஐரோப்பியர், வடகிழக்கு ஆப்பிரிக்கர், மத்திய தரைக்கடல் மக்கள், ஆல்பைன் மக்கள், நார்டிக்கு மக்கள், மேற்கத்திய ஆசியர்கள் முதலானோர் கொண்டுள்ளனர்.மூன்றாம் வகையான சுருள் சுருளான முடியமைப்பினை நீக்கிரோ (Negro), நீக்கிரில்லோ (Negrillo), நீக்கிரிட்டோ (Negrito), பாப்புவர் (Papuans), மெலனீசியர் (Mellanesian), புசுமன் (Bushman)முதலானோர் கொண்டுள்ளனர். மூன்றாம் வகையான சுருள் சுருளான முடிவகையில் மயிரின் வளைவு மிகுதியாகவும் குட்டையாகவும் காணப்படும். புசுமென்களிடையே பருமனான பின்னலைக் கொண்ட மயிர் காணப்படினும் அவர்கள் மிகுந்த நெருக்கமுடைய சுருளமைப்பினையே கொண்டுள்ள

னர். சுருள்சுருளான மயிர் வெப்பப் பகுதிகளிலும் ஈரப்பதம் மிகுந்த கால நிலைகளிலும், வழவழப்பான மயிர் வறண்ட பகுதிகளிலும் குளிர்பகுதிகளிலும், வளைவமைப்புடைய மயிர் இவ்விரண்டிற்கும் இடைப் பட்ட சூழ்நிலையில் வாழும் மக்களிடத்திலும் காணப் படுகிறது. இன அடிப்படைக்காக எடுத்துக் கொள் ளப்படும் அலகு சூழ்நிலைக் காரணிகளால் தகவமை யாதது எனினும், மயிரின் தன்மையைப் பல்வேறு சூழ்நிலையில் வாழும் இனத்தவரிடையே உற்று நோக்கும்பொழுது, இக்கருத்துச் சற்று மாறுபடு கிறது. எனினும், இவ் அலகினைக் கொண்டு இனங் களை வகைப்படுத்த இயலும்.

மயிரின் நிறத்தை முதன்மையாகக் கொண்டு இனக்குழுக்களை வகைப்படுத்துவதில்லையாயினும் இது ஒரு துணை அலகாகக் கருதப்படுகிறது. ஐரோப்பிய மக்களிடையேயும் வடஆசிய மக்களிடை யேயும் மயிரின் நிறம் பரவலாக மாறுபடுகிறது. நடு நிலக்கடற் பகுதியினர் கருமை நிற மயிரையும், வடஐரோப்பாவினர் இளம் பழுப்பு நிறத்திலிருந்து சிவப்புநிறம் வரையிலும் கொண்டிருக்கின்றனர்.

நுண்ணோக்கியின் உதவியுடன் மயிரின் பருமனை அளவிட்டுப் பல்வேறு இனமக்களிடையே காணப்படும் வேறுபாட்டினை விளக்குகின்றனர். 56µ அலகு வரை மென்மையான மயிர் எனவும், 57µ -84µ வரை நடுத் தர மயிர் எனவும் 85µ அலகுக்கு மேலான மயிரைச் சொரசொரப்பான மயிரெனவும் வகைப்படுத்துகின்ற னர். மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள் சொர சொரப்பான மயிரையும், வெள்ளை நிறத்தவர் நடுத் தரமான மயிரையும் கொண்டுள்ளனர்.

உடலில் மயிரின் அளவு குறைவானதாகவும், நடுத்தரமாகவும், மிகுதியானதாகவும் காணப்படும் வகையில் இனக்குழுக்கள் காணப்படுகின்றன. உடல், மீசை, தாடி ஆகியவற்றில் காணப்படும் மயிரின் அளவும் கணக்கிடப்படுகிறது. நீக்கிரோக்களும் மங்கோலியர்களும் முகம், உடல் முழுவதுமே அடர்த்தியான மயிரைக் கொண்டிருப்பதில்லை. வெள்ளை இன மக்கள் மிகுதியாகவும் அடர்த்தியாக வும் மயிரைக் கொண்டிருக்கின்றனர்.

மயிரின் குறுக்குவெட்டுத் தோற்றம்: வட்ட வடிவம், நீள் உருண்டை வடிவம் முதலான இவ் விரண்டு வகையிலேயே மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம் காணப்படுகிறது. நேரான முடியி லிருந்து குறுகலான வளைவு வரையுடைய முடி யமைப்பினைக் கொண்ட மங்கோலியர், காக்கேசியர் இனத்தவர், ஐரோப்பியர் முதலானோரின் மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம், வட்ட வடிவைக் காட்டுகிறது. நீண்டுருண்ட குறுக்குவெட்டுத் தோற் றம், நீக்கிரோ இன மக்களின் சுருள் சுருளான முடி யமைப்பைக் காட்டுகிறது. இருப்பினும், இவ் அளவை மானிடவியலார் முதன்மையாகக் கையாளுவதில்லை.

தலை அமைப்பு: தலையைப் போல் வேறெந்த மனித உடற் பகுதியும் மானிடவியலாரால் மிக விரி வாக ஆராயப்படவில்லை. இப்பகுதி எளிதில் அள விடக் கூடியதாகும். சூழ்நிலையாலும் புறக் காரணி களாலும் தலைப்பகுதி மாற்றம் பெறுவதில்லை. இதனாலேயே இனவகைப்பாட்டின் முதன்மையான அலகுகளுள் தலைப்பகுதியும் ஒன்றாகக் கருதப்படு கிறது. தலையின் வடிவங்கள் நீள்வட்டமாகவும், ஐங்கோண வடிவமாகவும், நீண்டும் குறுகியும் பல் வேறு வகைகளில் காணப்படுவதால், பல்வேறு இனமக்களிடையேயும் தலையமைப்பு அளவுகள் எடுத்து ஒப்பிட்டுப்பார்த்து ஆராய்வது கடினமாகி றது. இதனாலேயே தலை அல்லது மண்டையோட் டின் அதிகப்படியான நீளத்தை நூறால் பெருக்கி அம்மண்டையோட்டின் அதிகப்படியான அகலத்தால் வகுத்துக் கிடைக்கும் அளவே மண்டையோட்டின் அளவுக் குறியீடாகும் (Ceph alic Index). மார்ட்டின் (Martin) என்பவர் மண்டை யோட்டின் நீள அகலங்களைப் பொறுத்துப் பல வகைகளாகத் தலை அமைப்பினைப் பகுத்துள்ளார். 69.9 வரை அளவினைக் கொண்ட தலையமைப்பை முகம் நீண்டு குறுகிய தலையமைப்பு எனவும், 70.00 – 75.9 வரையுள்ள தலையினை நீண்டு குறுகிய தலையமைப்பு (Dolicocephalic) எனவும், 76.00 – 80.9 அளவுள்ளவற்றை நடுத்தரத் தலையமைப்பு (Mesocephalic) எனவும் 81.0–85.5 அளவுள்ளவற்றைக் குறுகி அகன்ற தலையமைப்பு (Hyperbra-chycephalic) எனவும், 85.6க்கு மேல் அளவுள்ள தலை களை மிகக் குறுகி அகன்ற தலையமைப்பு (Brachycephalic) எனவும் வகைப்படுத்துவர். மங் கோலியர் (Mongoloid), நீக்கிரோ (Negroid), காக் கேசியர் (Caucasoid) ஆகிய மூன்று இனங்களிலுமே பொதுவாக அனைத்து வகைத்தலை அமைப்புகளும் காணப்படினும் அளவு மாறுபடுகிறது. மங்கோலியர் இனத்தில் நீண்டு குறுகிய தலையமைப்பும், நீக்கிரோ இனத்தில் குறுகிய அல்லது அகன்ற தலை யமைப்பும் மிகுந்து காணப்படுவதில்லை. காக்கேசியர் இனத்தில் மூன்று வகைகளுமே காணப்படுகின்றன. தொல்லுயிரியல் (Palaeontology) சான்றுகளின்படி ஆதிமனிதன் நீண்டு குறுகிய தலையமைப்பைக் கொண்டிருந்தான். உடன்நிகழ்வாலும் ஏனைய காரணங்களாலும் பிற்காலத்தில் குறுகிய அல்லது அகன்ற தலையமைப்புத் தோன்றியது.

முகம்: முகவமைப்புப் பொதுவாக நீள்வட்ட வடிவ மாகவும் வட்டமாகவும் அகன்றும் ஐங்கோண வடிவ மாகவும் காணப்படும். தலை அமைப்பைப் போன்றே முகத்தின் நீளத்தை 100-ஆல் பெருக்கி முகத்தின் அகலத்தால் வகுத்துக் கிடைக்கும் முக அளவுக் குறி யீட்டை (Facial Index) வைத்து முக அமைப்பை வகைப்படுத்தலாம். அளவு 78.9 வரையுள்ள முகங் களை மிக அகன்றதாகவும் (Hyper Euryprosopic), 79.0 – 83.9 அளவுடையவற்றை அகன்றதாகவும் (Euryprosopic), 84.0-87.9 அளவுடையவற்றை நடுத் தரமாகவும் (Mesoprosopic), 88.0 – 92.9 அளவு டையவற்றைக் குறுகிய முகங்களாகவும் (Leptoproso pic), 93.0 அளவுடையவற்றை மிகக் குறுகிய முகங் களாகவும் (Hyper Leptoprosopic) வகைப்படுத்துவர்.

அகன்ற முகம் பொதுவாக அகன்ற மண்டை யோடு கொண்டதாக இருக்கும். இதைப் போன்றே குறுகிய முகம் நீண்டு குறுகிய மண்டையோடு கொண்டதாக இருக்கும். இவ்வமைப்பு ஒருவகைப் பட்டதாகும் (Harmonic). நீண்ட தலையும் அகன்ற முகமும் குரோமேக்னன்(Cro–magnon) வகைகளிலும், எசுகிமோக்கள் (Eskimos) இடையேயும் காணப்படு கின்றன. ஆர்மீனியர் (Armenoid) மக்கள் குறுகிய முகங்களுடன், சிறியதும் அகன்றதுமான மண்டை யோட்டினைப் பெற்றுள்ளனர். இதைப்போன்ற அமைப்பு, பிரெஞ்சு பாசுகியுசு (Basques) மக்களிடை யேயும் காணப்படுகிறது. முகஅமைப்பிற்கும் மண்டை யோட்டிற்கும் ஒவ்வா அமைப்புடைய இம்முறை இணக்கமற்றது (Disharmonic) எனப்படும். முக அமைப்பில் தாடை நீட்சி (Prognathism) இன்றி யமையாதது. தாடை நீட்சியின் அடிப்படையிலேயே முகத்தின் அகலம், நீளம், வடிவம் முதலானவை அமையப்பெறுகின்றன. நீக்கிரோ, ஆசுத்திரேலிய மக்களிடையே தாடை நீட்சி சிறிது மிகுதியாகக் காணப்படுகிறது. மங்கலாயிடு மக்களினத்தில் தாடை நீட்சி சிறிதாகக் காணப்படும் அல்லது தாடை நீட்சி இல்லாமலேயும் இருக்கும்.

மூக்கு: இனவகைப்பாட்டில் கையாளப்படும் முதன்மையான அலகுகளுள் இதுவும் ஒன்றாகும். மூக்கின் இன்றியமையாத உறுப்புகளாக ஆராயப்படு வது மூக்கின் வேர் (Nasal Root), மூக்கின் நுனிப் பகுதி, இவ்விரண்டையும் இணைக்கும் சதைப்பற் றான இணைப்புப் பகுதி (Nasal Bridge) ஆகியவை யாம். இவையனைத்தும் சேர்ந்து பெறும் மூக்கின் உருவமைப்பு (Nasal Profile), அதன் தன்மைக்கேற் பச் சப்பை மூக்கு (Platyopic), நடுத்தர மூக்கு(Meso-pic), அகன்ற மூக்கு (Prosopic) என வகைப்படுத்தப் படுகிறது. மூக்கின் இடைச்சுவர் (Nasal Septum) கிடைநிலையாகவோ கீழ்நோக்கியோ மேல் நோக் கியோ அமைந்திருக்கும். இதைப் போன்றே மூக்கின் வேரையும் மூக்கின் நுனியையும் இணைக்கும் இணைப் புப் பகுதி தட்டையாகவோ குழிவாகவோ குவிந்த அமைப்புடனோ குழிந்து குவிந்த (Concavo–Convex) அமைப்புடனோ காணப்படும். இப் பண்புகளைப் பெற்று மூக்கின் நுனிப் பகுதி வட்டமாகவோ கூர்மை யாகவோ தடித்தோ மெலிந்தோ காணப்படும். இந்த அனைத்து வேறுபாடுகளையும் ஒன்று சேர்த்து இனங் களை மூக்கு அமைப்பின் அடிப்படையில் வகைப் படுத்துவது கடினமாகிறது. அதனாலேயே மூக்கின் அகலத்தை நூறால் பெருக்கி மூக்கின் நீளத்தால் வகுத்துக் கிடைக்கும் மூக்கின் அளவுக் குறியீட்டி னைக் (Nasal Index) கொண்டு மூக்கின் அமைப்பினை வகைப்படுத்தலாம். அளவு 54.9 வரை உள்ளவற்றை மிகக் குறுகிய மூக்கு எனவும் (Hyperleptorrhine), 55.0 – 69.9 அளவுடையனவற்றைக் குறுகிய மூக்கு அல் லது சப்பை மூக்கு எனவும், 70 – 84.9 அளவுடையன வற்றை நடுத்தர மூக்கு எனவும், 85.0 – 99.9 அள வுடையனவற்றை அகன்ற மூக்கு எனவும், 100.0க்கும் மிகுதியான அளவுடையனவற்றை மிக அகன்ற மூக்கு எனவும்(Hyperplatyrrhine) வகைப்படுத்துவர். ஆசுத்தி ரேலியப் பழங்குடிகள் அகன்ற மூக்கினையும், நீக்கி ரோக்கள் குறுகியதும் அகன்றதுமான மூக்கினையும், ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, ஆசியா முதலான பகுதிகளிலுள்ள காக்கேசியர்கள் குறுகிய மூக்கினை யும் கொண்டுள்ளனர்.

நீக்கிரோக்களின் மூக்கின் வேர் தாழ்வானதாகவும், மூக்கு இணைப்புத் தட்டையான அல்லது குழிந்த அமைப்புடையதாகவும், மூக்கு நுனி தடித்ததாகவும், காணப்படுகிறது. நடு நிலக் கடல் மக்களின் குறுகிய மூக்கமைப்பு, தட்டையாகவும் நடுத்தரமான மூக் கிணைப்பைக் கொண்டதாகவும் மூக்கு வேர் குறுகிய தாகவும் காணப்படுகிறது. நார்டிக்கு (Nordic) மக்கள், குறுகி நீண்ட மூக்கைக் கொண்டுள்ளனர். மூக்கு அளவுக் குறியீட்டை ஒப்பீட்டுப் பார்க்கும் போது இந்த அளவு பால்வேறுபாடுகளுக்குத் (Sexual Variation) தகுந்தவாறு மாறுவதாக உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) கண் டறிந்துள்ளனர்.

கண்: இக்கால மனிதர்களிடையே 'மங்கோலியக் கண்'(Mongoloid Eye)'மங்கோலியக் கண் அல்லாதது' (Non-Mongoloid Eye) என்னும் இருவகைக் கண்களே காணப்படுகின்றன என ஊட்டன் (Hooton) வகைப் படுத்துகிறார். மங்கோலிய இனத்தவர்களின் கண் அமைப்பு மற்ற இனத்தவர்களைக் காட்டிலும் வேறு பட்டது. மங்கோலியக் கண்ணின் மேல் இமையின்மேல்

ஒரு தசை மடிப்பு வளர்ந்து அத்தசை, மேல் இமையினை மூடி, விழியையும் மூடும் அளவில் காணப்படும். இத்தசை 'மங்கோலிய மடிப்பு' (Mongoloid Fold) என்றே சொல்லப்படுகிறது. இம்மடிப்புச் சாய்வாக அமைந்துள்ளது; கண்ணின் வெளிக்கோணம் உட்கோணத்தைக்காட்டிலும் பெரியது; மங்கோலியக் கண்ணில் இமைப்புழை (Palpebral Fissure) சாய்வானது; உட்புற இரப்பை அடிமடிப்பு(Inner Epicanthus) குழந்தைகள், பெண்கள் முதலானோரின் கண்களில் காணப்படும். மற்றொரு வகை, புற இரப்பை அடிமடிப்பு (External Epicanthus) ஆகும். இத்தசை மேல் இமையிலிருந்து வளர்ந்து கண்ணின் வெளிநுனிநோக்கி விழியை மறைக்கக் கூடியது. இவ்வகை பொதுவாக நடுத்தர வயதினரிடையேயும் வயது முதிர்ந்த ஆண்களிடையேயும் காணப்படுகிறது.

உடலுயர்வளவு: மனித இனங்களை வகைப்படுத்துவதில் முதன்மையான மாறுபடும் பண்புகளுடையது (Variable Character) உடலுயர்வளவு (Stature) ஆகும். பல்வேறு காலச் சூழ்நிலைகளால் தாக்கம் பெற்றுச் செயற்படுவதால், மனித வேறுபாடுகளை அறிவதில் இப்பண்பு உற்று நோக்க வேண்டியதாகும். உலகின் பல மாறுபட்ட சூழ்நிலைகளில் வாழும் மக்கள் உடலுயர்வளவில் மிகுந்த மாறுபாடுகளைக் கொண்டிருக்கின்றனர். பிரான்சின் இலிமௌசியான் (Limousion)மாவட்டத்தில் வாழும் மக்களும், வெனின்சுலாவின் யூபா இந்தியர்களும் (Yupa Indians) தம் வாழ்க்கைச் சூழலில் இருவித உடலுயர்வளவினைப் பெற்றிருந்தனர். வாழ்க்கைச் சூழலுக்கு ஒவ்வாத பகுதிகளில் வாழ்ந்தபோது குறைந்த உடலுயர்வளவையும், ஒத்த சூழ்நிலையில் வாழ முற்பட்டவுடன் உயர்ந்த உடலுயர்வளவையும் கொண்டிருந்தனர். முதலுலகப் பெரும் போருக்கு முன்னரும் பின்னரும் செருமானிய (German) இளையவர்களை ஆய்வு செய்த மார்டின் (Martin) இவர்களிடையே காணப்பட்ட குறைந்த உடலுயர்வளவிற்குக் காரணம், குறைவூட்ட உணவும் சூழ்நிலையும் எனத் தெரிவித்தார். காணிக்காரர்களை(Kanikars)ஆய்வு செய்த தர்சுடன் (Thurston), இம்மக்களிடையே காணப்பட்ட இருவித உடலுயர்வளவிற்கான காரணத்தைக் கண்டறிந்தார். காட்டுப் பகுதியில் வாழ்ந்த காணிக்காரர்கள் குறைந்த உடலுயர்வளவையும் காட்டுப் பகுதியில் இல்லாத காணிக்காரர்கள் உயர்ந்த உடலுயர்வளவையும் கொண்டிருந்தனர். சர்க்கார் (Sarkar), வடஇந்திய மலே (Male) பழங்குடிகளை ஆய்வு செய்தபோது, மலைப்பகுதியில் வாழ்பவர்கள் குறைந்த உடலுயர்வளவு உள்ளவராகவும் சமநிலப் பகுதியில் வாழ்பவர்கள் உயர்ந்த உடலுயர்வளவு உள்ளவர்களாகவும் காணப்பட்டனர் என்றார். இதைப் போன்றே மலைவாழ் கேரோ (Garo) பழங்குடிகளும் சமநிலைக் கேரோ பழங்குடிகளும் காணப்பட்டனர். தார்டே (Torday) என்பவர் காங்கோ போ திவா (Congo Bo Twa) குள்ளர்களின் உடலுயர்வளவைப் பற்றி மிகுதியான ஆய்வினை மேற்கொண்டவராவர். காட்டுப் பகுதியை விடுத்துச் சமநிலங்களில் பயிர்த் தொழில் மேற்கொண்டு வாழ்ந்த இவர்கள் இரண்டு தலைமுறைகளுக்குப் பின்னர்ச் சற்று உயர்ந்த உடலுயர்வளவு உள்ளவர்களாகக் காணப்பட்டனர்.

குளிர்ப்பிரதேசங்களில் வாழும் மக்கள் குறைந்த உடலுயர்வளவினையே கொண்டுள்ளனர் என்பது மானிடவியலாரின் பொதுவான கருத்தாகும். சூழ்நிலை மட்டுமே மனித உடலின் உயரத்திற்கு நேரடி காரணமாக அமையவில்லை, ஒவ்வோர் இனப் பெருக்க மக்கள் தொகையின் (Breeding Population) மரபணுப் பொதுச் சேர்மத்தில் (Gene pool) இருக்கும் மரபணுவின் (Gene) பண்புகளும் காரணமாகின்றன. ஒத்த பண்புகளுடைய ஒரே இனத்தில் பல்வேறு உயரங்களையுடையவர்களைக் காணலாம். தோப்பினார்டு (Topinard), ஆடன் (Haddon), மார்ட்டின் (Martin) ஆகியோர் மனித உடலுயர்வளவு அடிப்படையில் மக்களைப் பல வகைகளாகப் பகுத்துள்ளனர்.

| தோப்பினார்டு அளவை | | | |
|---|---|---|---|
| குள்ளர் (Pygmy) | | - | 150.0 செ.மீ. |
| குறைந்த உயரம் (Short) | 150.0 | - | 160.0 செ.மீ. |
| சராசரிக்கும் கீழ் (Under Average) | 160.0 | — | 165.0 செ.மீ. |
| சராசரிக்கும் மேல் (Above Average) | 165.0 | - | 170.0 செ.மீ. |
| மிகுதியான உயரம் (High) | 170.0 செ.மீ | | |

| ஆடன் அளவை | | | | |
|---|---|---|---|---|
| குள்ளர் (Pygmy) | — | — | — | 148.0 செ.மீ. |
| குறைந்த உயரம் (Short) | — | 148.0 | — | 158.0 செ.மீ. |
| நடுத்தரம் (Medium) | — | 158.0 | — | 168.0 செ.மீ. |
| உயர்ந்த உயரம் (Tall) | — | 168.0 | — | 172.0 செ.மீ. |
| மிக்க உயர்ந்த உயரம் (Very Tall) | — | 172.0 செ.மீ. | — | - |

| மார்ட்டின் அளவை | | | | |
|---|---|---|---|---|
| குள்ளர் (Pygmy) | — | — | — | 129.9 செ.மீ. |
| மிகக் குறைந்த உயரம் (Very Short) | — | 130.0 | — | 149.9 செ.மீ. |
| குறைந்த உயரம் (Short) | — | 150.0 | — | 159.9 செ. மீ. |
| நடுத்தரத்திற்கும் கீழ் (Below Medium) | — | 160.0 | — | 163.9 செ.மீ. |
| நடுத்தரம் (Medium) | — | 164.0 | — | 166.9 செ.மீ. |
| நடுத்தரத்திற்கும் மேல் (Above Medium) | — | 167.0 | — | 169.9 செ.மீ. |
| உயர்ந்த உயரம் (Tall) | — | 170.0 | — | 179.9 செ.மீ. |
| மிக்க உயர்ந்த உயரம் (Very Tall) | — | 180.0 | — | 199.0 செ.மீ. |
| பேருயரம் (Giant) | — | 200. செ.மீ. | — | — |

இம் மூன்று அளவைகளுள் மார்ட்டின் வகைப் பாடே மானிடவியலாரின் பயன்பாட்டில் மிகுதியாகக் கையாளப்படுகிறது. சீக்கியர்கள், இராசபுத்திரர்கள், வடமேற்கு ஐரோப்பியர்கள் அனைவரும் நல்ல உயர மானவர்களாகக் காணப்படுகின்றனர். வடசீனர்கள், நைல்நதி நீக்கிரோக்கள், பட்டகோனியர் (Patagonians) முதலானோரும் உயரமானவர்கள். நடு நிலக் கடல் பகுதியினர், ஆல்பைன் (Alpine) மக்கள், ஆர்மீனியர்கள் (Armenoids), திராவிடர்கள், அய்னு (Ainu) முதலானோர் நடுத்தர உடலுயர்வளவின ராவர். சில மங்கோலிய வகுப்பினரும் எசுகிமோக் களும் (Eskimos) இவ்வகையினராவர்.

வெத்தர் (Veddas), காடர் (Kadar), மெலனீசியர் (Melanesians) முதலானோர் குறைந்த உடலுயர்வள வினராவர். மனித இனங்களிலேயே மிகக் குறைந்த உடலுயர்வைக் கொண்டவர்களாக அந்தமானியர், அய்டா (Aeta), தப்பிரோ (Topiro), நீக்கிரில்லோ (Negrillo), அக்கா (Akka), பா திவா (Ba Twa), இம்புத்தி (Mbuti) ஆகியோர் காணப்படுகின்றனர்.

தோற்கூற்றியல்: இது இனவகைபாடுகளில் பயன்படுத்தப்படும் இன்றியமையாத அலகுகளைக் கொண்ட ஓர் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) பிரிவாகும். தோற்கூற்றியல் (Dermatoglyphics), கைவிரல்கள், உள்ளங்கை, கால்விரல், உள்ளங்கால் (Sole) முதலிய பகுதிகளில் தோலில் காணப்படும் பலவகையான வரியமைப்புகளைப் (Ridge Patterns) பற்றி விளக்குவதாகும். மனித உடலின் மேல்தோலானது மயிரினாலும் எண் ணெய்ச் சுரப்பிகளாலும் மூடப்பட்டதாகும். ஆனால், உள்ளங்கைப் பகுதியும் உள்ளங்காற் பகுதியும், மயிர் கள், எண்ணெய்ச் சுரப்பிகள் ஆகியவற்றைக் கொண்டி ருக்கவில்லை. எனினும் இப்பகுதிகள், உடலின் பிற பாகங்களிலில்லாத அளவில் வரிஅமைப்புகளையும் சிறு, பெரு இரேகைகளையும் கொண்டுள்ளன.

இவை மனித இனங்களில் வேறுபாடுகளுடைய அமைப்புகளைக் காட்டுகின்றன. இதனாலேயே தோற்கூற்றியல் இனங்களை வகைப்படுத்தும் அலகுகளால் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இந்த அலகுகள் இயற்கைச் சூழலால் மாற்றக்கூடியனவல்ல; தகவமைவனவுமல்ல. கருத்திசு தோன்றியது முதல் இறக்கும் வரை இவ்வமைப்பில் மாற்றம் ஏற்படுவதில்லை.

உள்ளங்கையின் வரியமைப்புகளும் உள்ளங்காலின் வரிஅமைப்புகளும் பல கோணங்களில் பல்வேறு முறைகளில் ஆராயப்படுகின்றன.

கைவிரல் வரியமைப்புகள் : வில்வளைவு(Arches), சுழல் வளையம் (Loops), சுழிகள் (Whorls), கலப்பு வரிகள் (Composites) என்னும் நான்கு வகைகளாகக் கைவிரல் வரியமைப்புகளை (Finger Ridge Patterns) என்றி (Henry) வகைப்படுத்துவார். இதையே தால்டன் (Dalton), வில்வளைவு, சுழல்வளையம், சுழி என மூன்று வகையாகப் பிரிப்பர்.

சுழல் வளையமானது ஓரச் சுழல் வளையமாகவோ (Ulnar Loop) ஆரச் சுழல் வளையமாகவோ (Radial Loop) காணப்படும். மூவார வளைவுகள் (Triradii) என்னும் வரியமைப்பு, வில்வளைவுகளில் காணப்படுவதில்லை. ஒரு மூவாரவளைவுகள் சுழல் வளையத்திலும், இரண்டு மூவாரவளைவுகள் சுழிகளிலும் காணப்படுகின்றன. வில்வளைவுகள், குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இருவிதச் சுழல்வளைவுகளுள் ஓரச் சுழல்வளையமே, ஆரச் சுழல் வளையத்தைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகிறது. கைவிரல் வரியமைப்பு இனங்களுக்கிடையே பல மாறுபாடுகளுடன் காணப்படுவதைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணையில் காட்டியுள்ளபடி சுழி, மங்கலாயிடு இன மக்களிடையே மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் சுழல்வளையம், காக்கேசியர் மக்களினத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது; மங்கோலியர், நீக்ரோ இனத்தவரிடையே சம அளவு வீதத்தில் காணப்படுகிறது. வில்வளைவுகள், மங்கோலியர் இனத்தவரிடையே மிகக் குறைவாகவும் காக்கேசியர் இனத்தவரிடம் சற்று மிகுதியாகவும் நீக்கிரோ இனத்தவரிடையே மேலும் மிகுதியாகவும் காணப்படுகிறது.

உள்ளங்கை: மனித உள்ளங்கை அமைப்பு. பலவாறாகப் பல இனங்களுக்கிடையில் காணப்படுகிறது. இதனடிப்படையில் தோற்கூற்றியல், 'உள்ளங்கையின் நேர்க் கோடு வாய்பாடு' (Palmar Mainline Formula) கொண்டு உள்ளங்கையின் அமைப்புகளை ஆராய்கிறது. கையின் கட்டைவிரல் தவிர்த்து மற்ற நான்கு விரல்களின் அடியில், மூவார வளைவுகள் (Triradii) காணப்படுகின்றன. இவை அ, ஆ, இ, ஈ, என ஆர-ஓர வரிசையில் (Radio-ulnar Sequence) குறிக்கப்படும். இவ்வாறு ஆர-ஓர வரிசையிலிடப்படுவதற்கு முதன்மையான காரணம், உள்ளங்கையின் நேர்க்கோடுகளைச் (Main Line) சுட்டிக்காட்டுவதற்கேயாகும். மனித உள்ளங்கை 13 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு குறியீடு கொண்டோ எண் கொண்டோ குறிக்கப்படும். கட்டைவிரல் தவிர்த்து ஏனைய விரல்களில் அடியிலிருந்து மூவார வளைவுகள் உள்ளங்கையை நோக்கிச் செல்கின்றன. இந்த வளைவுகளை நன்றாக உற்று நோக்குவோமானால், உள்ளங்கையில் எந்தப் பகுதியில் அது சென்று முடிகிறது என்பதனைக் கணக்கிடலாம். இந்தக் கோடே உள்ளங்கையின் நேர்கோடு (Palmar Mainline). இதைப் போன்றே நான்கு உள்ளங்கை நேர்கோடுகளையும் கண்

| மக்கள் தொகை | சுழி % | சுழல் வளையம் % | வில் வளைவு % |
|---|---|---|---|
| மங்கோலியர் | 40-50 | 50-60 | 1 2 |
| காக்கேசியர் | 20-30 | 60-70 | 4-7 |
| நீக்கிரோ | 30 | 50-60 | 6 7 |

டறிந்து, அதற்கு அ, ஆ, இ, ஈ எனப் பெயரிட வேண்டும். ஒவ்வோர் உள்ளங்கை நேர்கோடு முடியும் கடைப்பகுதிகளுக்குக் (Termination) கொடுக்கும் குறியீட்டின் (Symbol) அடிப்படையிலேயே நேர்கோடு வாய்பாடு அமைக்கப்படும்.

மனிதர்களிடையே மிகுந்த அளவில் காணப்படும் வாய்பாடுகள் 11, 9, 7; 9, 7, 5; 7, 5, 5 ஆகும். வில்டர் (wilder) ஆய்வுப்படி 11, 9, 7, ஐரோப்பியரின் வாய்பாடு எனவும் 9, 7, 5 மங்கோலியர் வாய்பாடு எனவும் 7, 5, 5 நீக்கிரோ வாய்பாடு எனவும் கொள்ளப்படும். காண்க: தோற்கூற்றியல்.

இரத்த வகைகள்: மனித இனங்களை வகைப்படுத்துவதில் இக்கால மானிடவியலார் உடற்கூற்றுப் பண்புகள் பலவற்றைக் கையாளுகின்றனர். அவற்றுள் ஒன்று இரத்த வகையாகும். இரத்தத்தை A,B,AB,O என நான்கு வகையாகப் பிரிப்பர். இது தவிர்த்து Rh காரணி(Rh Factor) இரத்தத்தில் கலந்துள்ளதா, இல்லையா என்பதைப் பொறுத்தும் இரத்தத்தை வகைப்படுத்துவர். இரத்த வகைகள், மரபுவழிப் பண்புகளாதலால் மனித இனங்களை வகைப்படுத்துவதில் தலையான பங்கினைப் பெற்றுள்ளன. கீழ்வரும் அட்டவணை சில குறிப்பிட்ட இரத்தக் குழுக்கள், பல்வேறு இனங்களில் காணப்படும் அடுக்கு நிகழ்வினைக் (Frequency) காட்டுகின்றது.

இரத்தக் குழுக்களின் அடிப்படையில் மனிதக் குழுக்களின் வகைகளை வகைப்படுத்தும்போது பல உடற்கூற்றுப் பண்புகள் இவ்வினங்களுக்கிடையே மாறுபடுவதைக் காணலாம்.

காக்கேசியர்கள் ஏனைய இனத்தவர்களைக் காட்டிலும் Rh எதிர்ப்பையும் (Rh—) A2 இரத்த வகையையும் மிகுதியாகக் கொண்டுள்ளனர். அமெரிக்க நீக்கிரோக்களிடையே Rh எதிர்ப்புக் காணப்படும் அடுக்கு நிகழ்வு, காக்கேசியர்களைக் காட்டிலும் குறைந்தும் ஆசிய மங்கோலியர்களை விட மிகுந்தும் இருக்கிறது. அமெரிக்க நீக்ரோக்களிடையே தப்பிக் காரணிகளும் குறைந்தே காணப்படுகின்றன. ஆசிய மங்கோலியர்களிடையே காரணி மிகுந்தும் A2, Rh எதிர்ப்பு இரத்த வகைகள் குறைந்தும் காணப்படுகின்றன. அமெரிக்க இந்தியர்களிடம் 'O' இரத்த வகை மிகுந்தும் 'A2' இரத்த வகை, Rh எதிர்ப்பு ஆகியவை குறைந்தும் காணப்படுகின்றன.

இனங்களை வகைப்படுத்துவதில் மேலும் சில உடற்கூற்றுப் பண்புகள் மானிடவியலாரால் கையாளப்படுகின்றன. அவை, கரியக நெய்மம் (Phenylthiocarbomide–PTC) வேதி கூட்டுப்பொருளைச் சுவைக்கும் தன்மை, காதுக் குரும்பியின் (Earwax) தன்மை முதலியனவாகும்.

சுவைஉணர்வோரும் உணராதோரும் (Tasters and Nontasters): மக்களுள் பெரும்பான்மையோர், கரியக நெய்மத்தின் சுவையை உணரக்கூடியவர்கள். இது பல வேதிசார் பொருள்களின் கூட்டுடன் தைராயிடு சுரப்பியின் இயக்கத்திற்கு எதிராகச் செயற்படக் கூடியது. நீர்த்த கரியக நெய்மக் கூட்டுப்பொருளை வடி தாளில் நனைத்து ஒருவரைச் சுவைக்கச் செய்யும்போது அவரால் ஒருவிதக் கசப்பான சுவையை உணர முடியும். இச்சுவையை உணருபவர்களின் அடுக்கு நிகழ்வு,

பல்வேறு மக்கள் தொகையில் இரத்தக் குழுக்களில் காணப்படும் அடுக்கு நிகழ்வு (விழுக்காடுகளில்) மக்கள் தொகை

| இரத்த வகை | காக்கேசியர்கள் | அமெரிக்க நீக்கிரோ | ஆசிய மங்கோலியர்கள் | அமெரிக்க இந்தியர் |
|---|---|---|---|---|
| $A_1$ | 5--40 | 8—30 | 0—45 | 0—20 |
| $A_2$ | 1—37 | 1—8 | 0—5 | —0 |
| B | 4—18 | 10—20 | 16—25 | 0—4 |
| O | 45—75 | 52—70 | 39—68 | 68—100 |
| Rh— | 25—46 | 4—29 | 0—5 | —0 |
| தப்பிக்காரணி (Duffy factor) | 37—82 | 0—6 | 90—100 | 22—99 |

பல்வேறு இனங்களுக்கிடையே வேறுபடுகிறது.

ஆசுத்திரேலியர் குறைந்த எண்ணிக்கையிலும் ஆசிய மங்கோலியர் மிகுதியான எண்ணிக்கையிலும் உணர்கின்றனர்.

| மக்கள் தொகை | சுவையை உணரக்கூடியவர்கள் (விழுக்காடுகள்) |
|---|---|
| ஐரோப்பியக் காக்கேசியர் | 60- 80 |
| அமெரிக்கக் கறுப்பர் | 90- 97 |
| ஆசிய மங்கோலியர் | 83-100 |
| ஆசுத்திரேலியர் | 50- 70 |

காதுக் குரும்பி: காதில் சுரக்கும் குரும்பியின் வகை இரண்டாகும். காதுக் குரும்பி (Earwax) ஒரு வகை வறண்டும் மற்றொரு வகை பசையுள்ளதாக வும் காணப்படுகிறது. காதுக் குரும்பியின்வறண்ட அல்லது பசையுள்ள தன்மை மரபுவழி அமையப் பெறுவதாகும். இதன் தன்மையைப் பொறுத்தும் மானிடவியலார் மக்களினங்களை வகைப்படுத்துவர். மக்களினங்களிடையே வறண்ட காதுக் குரும்பி

அடுக்கு நிகழ்வு

| மக்கள் தொகை | விழுக்காடு |
|---|---|
| வடசீனர் | 98 |
| தென்சீனர் | 86 |
| சப்பானியர் | 92 |
| செருமானியர் | 18 |
| ஐக்கிய அமெரிக்கர் | |
| காக்கேசியர் | 16 |
| அமெரிக்க நீக்கிரோ | 7 |

காணப்படும் அடுக்கு நிகழ்வின் அளவினைக் கொண்டு மக்களினங்களைப் பாகுபடுத்தும்போது மங்கோலி யர்கள் மிகுதியான அளவில் இத்தன்மையைப் பெற் றுள்ளனர். வறண்ட காதுக் குரும்பியை நிலைப் படுத்தும் மரபணுக்களைக் குறைந்த விழுக்காட்டள விலேயே அமெரிக்கக் காக்கேசியர்களும். அமெரிக்க நீக்கிரோக்களும் கொண்டுள்ளமை வெளிப்படுகிறது.

துணை நூல்கள்:

**Alland A.**, Jr. Human Diversity, Anchor- Doubleday, New York, 1973.

**Boyd, W.C.**, Genetics and the Races of man, Little, Brown, Boston, 1956.

**Coon, C.S.**, The Origin of Races, Knopf, NewYork, 1962.

**Emrys, Jones,** Human Geography, Praeger, New York, 1965.

**Garn, S.M.**, Human Races, Thomas, Springfield, 1969.

**Stern, C.**, Principles of Genetics, W.H. Freeman and Company, San Francisco, 1973.

**இனவழி மொழிப் பாகுபாடு** என்பது மொழியியலார் மொழிகளைப் பிரித்துக் காணும் இருவகைப் பாகுபாடுகளில் ஒன்றினைக் குறிக்கும். மொழிகள் அமைப்பு அடிப்படையிலும் இனஅடிப் படையிலும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. மொழி நூலார் முன்னதை அமைப்பு வகைப்பாகு பாடு (Typological Classification) என்றும், பின் னதை இனவழிப்பாகுபாடு (Tenealogical Classification) என்றும் கூறுவர். முன்வகையில் மொழிக ளைத் தனிநிலை மொழி (Isolating Language), ஒட்டு நிலை மொழி (Agglutinative Language), உட் பிணைப்பு நிலைமொழி (Inflectional Language), இணைப்பு நிலை மொழி (Synthetic Language), பல் இணைப்பு மொழி (Polysynthetic Language), உள் ளடக்கு நிலை மொழி (Incorporating Language) என்றெல்லாம் பகுத்துக் காட்டுவர். இன அடிப்படை யில் மொழிகளைப் பல்வேறு இனங்களாக அல்லது குடும்பங்களாகப் பிரித்து இந்தோ-ஐரோப்பிய மொழிகள், சீனதிபேத்திய மொழிகள், உரோலிக்கு அல்டெய்க்கு மொழிகள், திராவிட மொழிகள் என் றெல்லாம் பலவாறாகப் பிரித்துப் பகுத்துக் காட்டு வர்.

உலக மொழிகளுள் பல தம்முள் இனத்தொடர்பு உடையன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்ன டம் போன்ற மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந் தன. வங்காளி, இந்தி, பஞ்சாபி, செருமன், ஆங்கி லம் போன்றவை மற்றோர் இனத்தைச் சார்ந்தன.

இத்தகைய குடும்பப் பாகுபாடுகள் எவ்வடிப்படையில் அமைந்துள்ளன என்பதை ஆராய்ந்து காணுதல் பயனுடையதாகும்.

உலகில் காணப்படும் பல்வேறு மொழிகளை எடுத்து நோக்கின், பல சொற்கள் ஒரே விதமான ஒலியையும் பொருளையும் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக,

1. தமிழிலுள்ள பேச்சு, தாக்கு போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் இதே பொருளைத் தரும் Speech, Attack போன்ற சொற்களோடு ஒற்றுமையுடன் காணப்படுகின்றன.

2. தமிழிலுள்ள அப்பா, அம்மா போன்ற சொற்கள் ஆங்கில மொழியிலுள்ள பப்பா, மம்மா போன்ற சொற்களுடன் பொருந்திக் காணப்படுகின்றன.

3. இவற்றைப் போன்றே தமிழில் காணப்படும் தலை, கண், மூக்கு, வாய், தோள், கை போன்ற சொற்களும் மலையாளத்தில் காணப்படும் தலா கண்ணு, மூக்கு, வாயி, பல்லு, தோளு, கைய்யி போன்ற சொற்களும் பொருளிலும் ஒலியிலும் பொருந்திக் காணப்படுகின்றன.

இத்தகைய சொற்களை எடுத்து ஆராயும்போது முதல் இரண்டு பிரிவிலும் உள்ள சொற்கள் பொருளிலும் ஒலியிலும் ஒற்றுமையுடன் காணப்பட்டாலும், மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முதற்பிரிவில் காணப்படும் சொற்கள் தற்செயலாக (Accidental) எந்தக் காரணமுமின்றி வருவன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இரண்டாம் பிரிவிலுள்ள சொற்களோ குழந்தைச் சொற்களாகவும் (Nursery) குறிப்புச் சொற்களாகவும் உள்ளன. சில மொழிகளில் இத்தகைய ஒருமைப் பாட்டினைக் காணமுடியும். மேலும், துருவித் துருவி ஆராய்ந்தாலும் இத்தகைய சொற்களை மிகுதியாகக் காண முடியாது.

இருமொழிகள் கலந்து உறவாடுகிறபோது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியினர் கடனாகச் சொற்களைப் பெறுவதும் வழங்குவதும் இயற்கை. இவ்வாறு கடன் பெறுவதும் கொடுப்பதும் எல்லாப் பகுதிச் சொற்களிலும் ஒரே தன்மையாக இருப்பதில்லை. தமிழுக்கும் வடமொழிக்குமிடையே நீண்ட காலமாகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. எத்தனையோ சொற்களைத் தமிழும் கடனாகக் கொடுத்திருக்கிறது; பெற்றிருக்கிறது. இவ்வாறு கடனாகப் பெற்ற சொற்களை ஆராயின் ஒருண்மை புலப்படும். அடிப்படைச் சொற்களை (Basic Vocabularies) மிகுதியாகத் தமிழ்மொழி கடனாகப் பெறவில்லை; பண்பாட்டுச் சொற்களையே மிகுதியாகக் கடனாகப் பெற்றுள்ளது.

ஆனால், மூன்றாம் பிரிவுச் சொற்களோ அடிப்படைச் சொற்கள் ஆகும். மலையாள மொழியையும் தமிழையும் நோக்கின் இத்தகைய நூற்றுக்கணக்கான சொற்களைக் காணலாம். இந்நிலையில் இச்சொற்கள் தன்னியலாக ஏற்பட்டவை என்றோ ஒலிக்குறிப்பால் ஏற்பட்டவை என்றோ கடன் வாங்கலால் ஏற்பட்டவை என்றோ கருத முடியாது. எனவே, தமிழும் மலையாளமும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடன் காணப்படுகின்றன என்பது விளங்கும். இத்தொடர்பு எல்லாவிதமான சொற்களிலும் காணப்படும். பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல் ஆகிய முழுச் சொற்களில் மட்டுமன்றி, ஒட்டுகளிலும் கூட ஒரு தொடர்பினைக் காணலாம்.

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| தலை | தலா |
| கண்டு | கண்டு |
| வந்து | வந்நு |
| இடிந்து | இடிஞ்ஞீ |

மேற்கண்ட சொற்களில் ஒரு தொடர்பினைக் காணமுடிகிறது. தமிழில் காணப்படும் தலை, வலை, பனை போன்ற சொற்கள் அனைத்துமே மலையாளத்தில் தலா, வலா, பனா என ஓர் ஒழுங்கான மாற்றத்துடன் (ஐ-ஆ) காணப்படுவதை உணர்தல் கூடும். இவற்றைப் போன்றே அடித்தான், படித்தான், கடித்தான் போன்ற தமிழ்ச் சொற்கள் அடிச்சு, படிச்சு, கடிச்சு, என ஒழுங்காக (இத்த-இச்ச) மாறியிருப்பதைக் காணலாம். இவற்றைப் போன்றே அந்த என்பது ‘அ’ என்றும், இந்த என்பது ‘இ’ என்றும் ஒற்றுமையான சொற்களைக் கொண்டிருக்கக் காணலாம். இந்நிலையில் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியின் சொற்கூறுகள் வேறுபட்டிருந்தாலும் அவற்றிடையே ஓர் ஒப்புமையைக் காணமுடிகிறது. இவ்வொழுங்கினை ஒழுங்கான ஒலிமாற்றம் (Regular Phonetic Correspondence) என்பர்.

இவ்வாறு இருமொழிகளிடையே காணப்படும் தொடர்பு ஏதோ தன்னியல்பாக ஏற்பட்டதன்று என்ற முடிவுக்கு வருதல்கூடும். இதுபோலவே ஒரு மொழி மற்றொரு மொழியிலிருந்து இவ்வாறு கட

னாகப் பெற்றிருத்தல் முடியாது என எண்ணவுங் கூடும். எனவே, இரு மொழிகளுக்குமிடையே ஏதோ ஒருவித அடிப்படையான தொடர்பு இருப்பதைக் காணலாம். இத் தொடர்பினைத் தான் இனவழித் தொடர்பு (Genetic Relation) எனக் குறிப்பிடுவர்.

உலகிற் காணப்படும் பல மொழிகளிடையே இத்தகைய தொடர்பினைக் காணமுடியும். இந்தியாவின் தென்கோடியிலும் இலங்கையின் ஒரு பகுதியிலும் வாழும் தமிழும், பாக்கிசுத்தானிலுள்ள பிராகுயி மொழியும் ஒரே இனத்தவை என்னும் முடிவிற்கு வந்துள்ளனர். இது போன்றே ஆங்கிலமும் இந்தியும் ஒரே இனத்தைச் சார்ந்தவை.

உலகில் வழங்கும் மொழிகள் அனைத்தையும் 30 அல்லது 40 இனங்களாகப் பிரிப்பர் மொழியியல் அறிஞர்கள். உலகில் காணப்படும் எல்லா மொழிகளையும் எவ்வித ஐயப்பாடுமின்றி இனவழியாகப் பிரித்து விட்டனர் எனக் கூறமுடியாது. எனினும், இந்தோ-ஐரோப்பிய மொழியினம், திராவிட மொழியினம், உராலிக்கு அல்டெய்க்கு மொழியினம், சீன-திபேத்திய மொழியினம் எனப் பல இனங்களாகப் பிரித்துள்ளனர்.

உலக மொழியின் எண்ணிக்கையைப் பற்றியும் அவற்றின் இன உறவு பற்றியும் ஆராய்ந்த பிரெஞ்சு அறிவியல் கழகம், உலகில் 2796 மொழிகள் பேசப்படுகின்றன என்றும், இவை அனைத்தும் 27 இனங்களில் அடங்கும் என்றும் கூறியுள்ளது. ச.அ.

**இன வேறுபாட்டுணர்ச்சி**: இன ஒதுக்கீடு என்ற இனவெறிக் கொள்கை வெள்ளையரால் தென் ஆப்பிரிக்காவில் குறிப்பாக நமிபியாவில் பின்பற்றப் படுகிறது. ஐக்கிய நாடுகள் அவை இன ஒதுக்கீட்டைத் (Apartheid) தடுக்கவும் இதைப் பின்பற்றுவோரைத் தண்டிக்கவும் ஆவன செய்கிறது. எனினும், 1983 வரை கண்டிப்பது அல்லது கண்டனம் செய்வது மட்டுமே நடந்து வருகிறது. இதன்படி நாட்டின் எல்லா நில உரிமைகளும் வெள்ளையருக்கே. காற்பங்கு மட்டும் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமான இடத்தில் கறுப்பருக்கு அளிக்கப்படும். அவர்கள் நாகரிகமடைந்த நகரங்களுக்கு வெள்ளையருக்குப் பணி செய்ய மட்டுமே வரலாம், இருக்கலாம். வேலை ஊதியம், வசிக்கும் வீடு, உண்ணும் உணவு, உடுக்கும் உடை முதலியவை இன்னும் வெள்ளையரால்தான் வரையறுக்கப்படுகின்றன. ஆப்பிரிக்கர்களை வெள்ளையர் காவல்துறையினர் தம் விருப்பம் போல் சவுக்கால் அடிப்பது, சிறை செய்வது, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமல் சிறையில் நெடுநாள் வைத்திருப்பது, ஐயத்திற்குரியவர்களைக் கைது செய்வது, அவர்களைச் சிறையில் கொடுமைப்படுத்திக் கொன்றுவிடுவது முதலியவை சாதாரணமாக நடைபெறுகின்றன. பள்ளிச் சிறார்கள் கூட வெள்ளையர் காவல்துறையினரால் விருப்பம்போல் சுட்டுத் தள்ளப்படுகின்றார்கள். இந்த நிலையை மாற்ற 'இவாப்போ' (Iwapo) தன்னால் இயன்ற செயல்களை மேற்கொண்டுள்ளது. ஆனால், இந்த இயக்கத்தின் சிறந்த தலைவரான நெல்சன் மண்டெலா ஆயுள்தண்டனை விதிக்கப்பெற்றுவிட்டார். ஆயினும் இவ்வியக்கம் அங்கோலா, மொசாம்பிக்கு, சிம்பாப்வே வரை பரவியுள்ளது.

இட்லரின் தேசியமான ஆரிய இன மேம்பாட்டுக் கொள்கைதான் இனவேறுபாட்டுணர்ச்சியை (Racism) ஒரு வெறியாக மாற்றியது. யூத (Jews) இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்; சிறைகளில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாயினர். இன வேறுபாட்டுணர்ச்சியுடன் குடியாட்சிக் கொள்கையும் வளர்ந்து வந்தது வேடிக்கைக்கும் வேதனைக்கும் உரிய செயலாகும்.

நீக்கிரோ என்பவர் யார் என்ற கேள்விக்குக் குழப்பமான எண்ணமும் கருத்துவேறுபாடுமே இன்றும் நிலவுகிறது. நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி நீக்கிரோக்கள் இன்று உலகில் இல்லை. எவ்வாறு வெள்ளையர்களின் நிறம், அளவு, முக அமைப்பு போன்றவற்றை அறுதியிட்டுச் சொல்ல முடியாதோ, எவ்வாறு மஞ்சள் இன மனிதர் எத்தகைய முகக் குறிகளுடையவர் என்று சொல்ல முடியாதோ, அவ்வாறே நீக்கிரோக்கள் யார் என்பதையும் அவர் முக இலக்கணம் இன்னது என்பதையும் சொல்ல முடியாது. மனித இனம் என்பதற்கு அறிவியல்முறையில் இலக்கணம் இன்று கிடையாது. எவ்வாறு மனித இனம் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றி வளர்ந்து, பிற இனங்களோடு எவ்வகையில் எந்த அளவிற்குக் கலந்துவிட்டது என்பதை வரலாற்றுத்துறையால் அறியலாம். அதே முறையில் நீக்கிரோக்கள் என்பவர் கறுப்பாகவும் சுருட்டை முடியை உடையவராகவும் பருத்த உதடுகள், உருண்டை மூக்கு, சப்பை மண்டை முதலிய அமைப்புகளுடையவராகவும் இருப்பர் என்றும் அறியலாம். பெரும்பாலும் இவர்களை ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் காணலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதன் தெற்கு ஆசியாவிலிருந்து இரண்டு திசைகளில் பிரிந்து சென்றபோது, நீளமான தலையுடன் நீண்ட பரட்டை முடியுடன் கூடியவனாகத் தெற்கே ஆப்பிரிக்காவில் சென்று சேர்ந்தான். வடக்கே சென்ற

நீண்டமுடியையும் பெரிய தலையையும் உடையவன் கிழக்கு ஆசியாவில் சென்று குடியேறினான்.

நீக்கிரோக்கள் தலைசிறந்த போர்வீரர்களாக, வரலாறு படைப்பவர்களாகப் பல நூற்றாண்டுகளாக விளங்கினார்கள். பல நாடுகளின் பண்பாடு, சமயம் ஆகியவற்றின் ஊடுருவலைத் தாங்கி, அதனால் பெரிதும் பாதிக்கப்படாமல் விளங்கினார்கள். ஆப்பிரிக்காவில் இருதய நோய் கி.பி.15-ஆம் நூற்றாண்டில்தான் மிகத் தீவிரமாகப் பரவத் தொடங்கியது. பண்டைக் காலத்திய எகிப்தியப் பேரரசர்கள் கூட நீக்கிரோ இனத்தவர்களாய் இருந்ததுண்டு. இசுலாமியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை காரணமாகவே அடிமைகள் பல நாடுகளில் உருவாயினர். ஆப்பிரிக்காவும் இதற்கு விலக்கன்று. இசுலாமியர்களால் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையான அடிமைகள் ஆசியாவிலும் அமெரிக்காலும் வாழ்ந்த மக்களேயாவர். இதிலிருந்து சமய வேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகள் காரணமாக அடிமைத்தளை உருவானதேயன்றி, இனவேறுபாடு காரணமாக உருவாகவில்லை என்பதை உணரலாம்.

ஆப்பிரிக்காவின் தனிப் பண்பாடுகள் குடும்பம், சிறு இனம், சிறு நகரங்கள் ஆகியவையே. தேசியம், தேசிய அரசு என்பவை உருவாகியிருந்திருந்தால் அடிமைகள் உருவாவது தடுக்கப்பட்டிருக்கும். எத்தியோப்பியாவில் தோன்றிய தேசிய அரசு உருவாவதற்கானமுயற்சிகள் பாண்டுக்களால் முறியடிக்கப்பட்டன. இதேபோலத் தென்கிழக்கிலும் முறியடிக்கப்பட்டது. கினியாவிலும் யோடுபாவிலும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுக் காங்கோ வரை சென்றது. அது பாண்டுக்களால் அழிக்கப்பட்டது. வடக்கிலும் வடமேற்கிலும் சூடானியப் பட்டாளம் இசுலாமியப் பேரரசு என்ற கொள்கையைப் பரப்புவதில் தீவிரமாக இருந்தது. இந்தத் தீவிரமே 'தேசிய அரசு' முயற்சிகளை அழித்துவிட்டது. மேற்குச் சூடானில் பேரரசு நிறுவப்பட்டது. ஆனால் இரண்டு சூழ்நிலைகள் இதற்கு எதிராக இருந்தன. ஒன்று, சமயப் பற்றில்லாத தென்பகுதியார் தொடுத்த இடைவிடாத போரும் நீக்கிரோக்கள் அடிமைகளாக விற்கப்பட்டு வந்ததும் ஆகும். மற்றொன்று, ஆப்பிரிக்க வணிகம் நெடுங்காலமாக வடக்குத் திசை வழியே மேற்கொள்ளப்பட்டு வந்தது ஆகும். மூர்கள் என்னும் இனத்தவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இவ்வணிகத்தைத் தடுத்துவிட்டனர். இதனால் நீக்கிரோப் பேரரசுகள் உட்பூசலில் ஈடுபட்டுப் பாதிக்கப்பட்டன.

தென்மேற்கிலிருந்து ஐரோப்பிய அடிமை வணிகர்கள் மிகுதியானவர்கள் வந்து அடிமை வணிகத்தை மேலும் தீவிரப்படுத்தினார்கள். அவர்களுக்கும் ஆப்பிரிக்க ஆசிய இசுலாமியர்களுக்கும் ஏற்பட்ட போட்டியால் நீக்கிரோக்கள் என்னும் இனத்தார்கள் மிக அதிகமாக விலை கூறப்பட்ட மனிதப் பொருள்களாக ஆயினர். இதனால், பழங்கால நீக்கிரோப் பண்பாடுகள் அழிந்துபட்டன. இதனோடு சேர்ந்து ஐரோப்பிய நாட்டினர் இக்கண்டத்தைத் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டு, நீக்கிரோக்களை வெள்ளையரின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படுத்த, அவர்களை மேலை நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்கா கண்டத்தைப் புதிய மேலை நாடாக்கித் தத்தம் மேல் உரிமைகளை நிலைநிறுத்துவதில் ஈடுபட்டன.

நியாசா ஏரிக்கு வடக்கேயுள்ள நாடுகளில் மட்டும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நீக்கிரோ இனம் தழைத்து வளர்ந்து வந்தது. பல ஊடுருவல்களுக்குப் பிறகும் தழைத்த இந்நீக்கிரோவினத்தைக் கொண்ட உகாண்டா ஒரு செழுமையுள்ள நாடாக இருந்தது. இந்த இலாபாண்டூ இனம் மட்டும் அழியாமல், ஐரோப்பியர்களால் அடிமைப்படுத்தப் படாமல், சுதந்திரமாகத் தனித்தன்மையோடு வாழ்ந்து வந்தது.

நீக்கிரோக்களில் புதர் மனிதர்கள், பிக்மிக்கள், எடென்டாட்டுகள், சூலுக்கள், காபீர்கள், மூர்கள், பெர்பெர்கள் என்று பல சாதியினர் இருந்த 'போதிலும் அனைவரும் ஆப்பிரிக்கர்களே. ஒப்பீடு இன ஆராய்ச்சி அதன் 'மனித வரலாற்றில்' ஆப்பிரிக்க இனம் மிகக் கீழ்ப்படியில்-மிருக வடிவிலிருந்து-மனித வடிவிற்குச் சென்ற நிலையாகும் என்பதற்கு அறிவியல் ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று கூறியிருக்கிறது. நீக்கிரோக்களுக்கு மூளை மிகவும் சிறியது என்ற கருத்திற்கும் ஆதாரம் இல்லை. முதல் 'இனக் காங்கிரசின்' செயலாளர் கூறியதுபோல், நடுநிலையாளனான ஆராய்ச்சியாளன் உலகிலுள்ள எல்லா இன மக்களும் அறிவில், உழைப்பில், கொள்கையில், உடல் அமைப்பில் மாறுபாடுகள் உடையவராயினும் சமமானவரே என்ற கருத்தினை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் இந்த நிற வேறுபாடு உண்டானதன் மூலக் காரணங்கள் அடிமை வணிகமும் நீக்கிரோக்களின் அடிமைத்தளையும் ஆம். நிறம் அடிமைக்கு ஓர் அடையாளச் சின்னமாகாது. எனவே, ஆப்பிரிக்காவில் நீக்கிரோக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் இன வெறியர்களால் -வெள்ளையர்களால் இழைக்கப்படும் கொடுமைகளாகும். நீக்கிரோக்களுக்கு என்று தனி இருப்பிடம், பள்ளிகள், உணவகங்கள், கூலிகள் என வெள்ளையர்

களால் ஏற்படுத்தப்பட்டுள்ளவை உண்மையில் நீதிக்குப் புறம்பானவையேயாகும்.

வெள்ளை இனத்தவர் கறுப்பர்களைக் கொடுமைப்படுத்தும் அவலமான நிலையில், ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட ஓரிரண்டு நீக்கிரோ அரசுகளும் தகுதியற்ற அரசு அலுவலர், பொருள் விரயம் ஆகியவற்றால் வெற்றியாகச் செயற்படவில்லை. வெள்ளையர் அரசோச்சும் தென் ஆப்பிரிக்காவில் நீக்கிரோ மக்கள் நிலை மிக இரங்கத்தக்கது. உலக மக்களிடமிருந்து வந்த கடுமையான எதிர்ப்புகளினால் இக்கொடுமைகள் ஏட்டளவில் நின்றுவிட்டனவேயன்றிச் செயலளவில் இன்னும் நிற்கவில்லை. மொத்த 15,00,00,000 நீக்கிரோக்களுள் 12,10,00,000 பேர்கள் ஆப்பிரிக்காவிலும், 2,70,00,000 பேர்கள் புதிய உலகத்திலும் 20,00,000 பேர்கள் ஆசியாவிலும் வாழ்கிறார்கள். இனவேறுபாட்டுணர்வு மாறப் பிரைசு பிரபு கூறுவது ஒன்றே சரியானது. தென் அமெரிக்காவில் இசுபானியர்கள் இந்தியக் குடிகளோடு திருமணங்கள் மூலம் கலந்துவிட்டனர். போர்த்துகீசியர்கள் இந்தியக் குடிமக்களோடு மட்டுமல்லாமல் உடலமைப்பு மாறுபட்ட நீக்கிரோக்களுடனும் திருமண உறவு கொண்டுள்ளனர். இதுவே இன வேற்றுமையுணர்ச்சி மறையவும் இன ஒற்றுமையை வலுப்படுத்தவும் வழிகோலும் என்பது திண்ணம். அ.சி.

**இனாம்** என்பது அரபி மொழிச்சொல். இதற்குக் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஆதரவு எனப் பல பொருள்கள் உண்டு. 'வில்சன்' என்பார் இனாம் என்பதனை விளக்குங்கால், 'இந்தியாவில், குறிப்பாகத் தென் இந்தியாவில் நன்கொடையாக நிலத்தைப் பெற்று அதை ஒருவர் பரம்பரையாகத் (Hereditary) தீர்வைசெலுத் தியோ தீர்வையின்றியோ அனுபவித்து வருவது' எனக் குறித்துள்ளார். இனாம்கள் மூன்று வகைப்படும். அவையாவன: 1. எதிர்பார்ப்பு அற்ற நிலையான நன்கொடை (Non-Beneficial Grant), 2. தனிப்பட்ட சொந்தப் பயன்பாட்டிற்கான நன்கொடை (Personal Grant), 3. தொண்டுக்காகவிடப்பட்ட மானியங்கள் (Service Grants).

எதிர்பார்ப்பு அற்ற நிலையான நன்கொடையானது 13 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: சருவ இனாம் அல்லது சருவ மானியம் அல்லது அக்கிரகாரம் என்பது ஏக போக இனாமாக மதத் தொடர்பானவற்றிற்காகவோ மத்திற்காகவோ படித்தவர், பண்டிதர் அல்லதுபெருவாழ்வு வாழ்ந்து வறுமை நிலையிலிருக்கும் குடும்பத்தினருக்குக் (Decayed Noble Families) கொடுக்கப்படுவது. சிரோத்திரியம் (Shrotriyam)என்பது சுருதி அல்லது வேதத்தில் தேர்ச்சி பெற்ற பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுவது.

தனிப்பட்ட சொந்தப் பயன்பாட்டிற்கான நன்கொடை: இது பெறுபவருடைய வாழ்க்கை நலனுக்காகக் கொடுக்கப்படுவது. இதில் பட்டவிருத்தி என்ற இனாம் படித்த பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுவது. பிரமதாயம் என்ற இனாம் பிராமணர்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்படுவது. அத்தியயனம் என்ற இனாம் வேதம் அல்லது நான்கு மறைகளை ஓதி உணர்வோருக்குக் கொடுக்கப்படுவது. பாரதி என்ற இனாம் கோவில்களில் மகாபாரதம் படிப்பதற்காகக் கொடுக்கப்படுவது. பஞ்சாங்கம் என்ற இனாம் காலநிலை, நவக்கிரகங்களின் நிலை ஆகியவற்றை அறிந்து சொல்வது, நல்ல நாள் குறிப்பது போன்றவற்றிற்காகக் கொடுக்கப்படுவது. புராணம் என்ற இனாம் கோவில்களில் புராணங்கள் படிப்பதற்குக் கொடுக்கப்படுவது. வேதவிருத்தி என்ற இனாம் நான்மறைகளை ஓதுவதற்கும் சொல்லிக் கொடுப்பதற்கும் கொடுக்கப்படுவது. தருமாசனம் என்ற இனாம் முன்கூறிய அக்கிரகாரம் என்பதைப் போலப் பிராமணர்களுக்குக் கிராமமாகக் கொடுக்கப்படுவது. கைராட் என்பது முகமதியர்கள் நலனுக்காகவும் பிராமணர்கள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கப்படுவது.

தொண்டுக்காக விடப்பட்ட மானியங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன: 1. கொடுப்பவருடைய காரியங்களுக்காக வேலை பார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படுபவை. 2. பொதுத் தொண்டு செய்பவர்களுக்குக் கொடுக்கப்படுபவை. 3. பரம்பரை கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுபவை. 4. அறத்திற்கும் அறநிலையங்களுக்கும் கொடுக்கப்படுபவை. 5. நீர்ப்பாசன ஏரிகள் பராமரிப்பு, கண்காணிப்பு ஆகியவை செய்வோருக்குக் கொடுக்கப்படுபவை.

உண்மையான இனாம்களைக் கண்டுபிடித்துப் பதிவு செய்யும் நோக்கத்துடன் கி.பி. 1859-ஆம் ஆண்டில் இந்தியாவை அப்போது ஆண்டு வந்த ஆங்கில அரசு இனாம் ஆணைக்குழுவை நியமித்தது. 1963-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் இனாம்கள் ஒழிக்கப்பட்டு அந்நிலங்கள் இரயத்துவாரி முறைக்கு மாற்றப் பட்டு விட்டன. அதாவது, இனாம் நிலங்களில் குடிவார உரிமை உள்ளவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு, அவர்கள் அரசுக்கு நேரடியாக நில வரி செலுத்துமாறு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. ஜே.சீ.

**இனாம்கான்** மகாராட்டிர மாநிலத்தில் பூனா விலிருந்து 85 கி.மீ. தொலைவில், பீமா நதியின் துணைநதியான கோடு (Ghod) நதியின் கரையில் அமைந்துள்ள ஓர் ஊர். இவ்வூர் கல்–செப்புக்காலத் தில் (Chalolithic) பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது. இங்கு ஆறுமுறை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வுகளின் மூலம் தக்காணத்தின் கல்–செப்புக்காலப் பண்பாட்டை ஓரளவு அறிய முடி கிறது. அகழாய்வின் மூலம் மூன்று பண்பாட்டுக் காலங்கள் இனாம்கானில் (Inamgaon) இருந்ததாகத் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். முதற் காலம் மாள்வா பண்பாடு (Malwa Culture, கி.மு. 1600–1400) என்றும், இரண்டாம் காலம் தொடக்கச் சோர்வே பண்பாடு (Early Jorwe Culture, கி.மு. 1400–1000) என்றும், மூன்றாம் காலம் கடைச் சோர்வே பண்பாடு (Late Jorwe Culture, கி.மு. 1000–700) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அகழாய்வில் 600க்கும் மேற்பட்ட வீடுகளின் அழிவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வீடு கள் மூன்று காலப் பண்பாடுகளையும் சேர்ந்தவை. பெரும்பாலான வீடுகள் மூன்றாம் பண்பாடான கடைச் சோர்வே பண்பாட்டு மக்கள் வசித்தவை. முதலாம், இரண்டாம் பண்பாட்டுக் கால வீடுகள் செவ்வக வடிவில் கட்டப்பட்டவை. இவற்றின் சுவர் கள் மூங்கில்கள் பிளந்து கட்டப்பட்டு அதன்மேல் களிமண்ணும் சாணமும் பூசப்பட்டிருந்தன. கூரை கள் கூம்பு வடிவினைக் கொண்டவை. மூன்றாம் கால பண்பாட்டு மக்கள் சிறிய வட்ட வடிவமான வீடுகளில் வசித்தனர். கைவினைஞர்களான குயவர் களும், தட்டார்களும் நகரின் மேற்கு எல்லைப் புறங்களில் வசித்தனர். இவர்கள் வசித்த வீடுகளில் பதனக்குழிகள் (Pit Silos) பல காணப்பட்டன. நகரின் மையப் பகுதியில் இருந்த வீடுகளில் நான்கு கால்களுடைய சாடிகள் கிடைத்தன. இப்பகுதியில் வசித்த மக்கள் இச்சாடிகளில் தானியங்களைச் சேமித்து வைத்தனர். ஒரு வீட்டிற்குப் பக்கத்தில் தானியச் சேமிப்புக் களஞ்சியம் ஒன்றும் கண்டுபிடிக் கப்பட்டது.

அகழாய்வில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட கரை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இது கூழாங்கற்களி னால் கட்டப்பட்டுச் சுண்ணாம்பு, களிமண் ஆகியவை கொண்டு பூசப்பட்டிருந்தது. இதன் நீளம் 240 மீ. அகலம் 2.25 மீ. இதற்கு இணையாக ஒரு கால்வாய் 4 மீ. அகலமும், 3.50 மீ. ஆழமும் கொண்டிருந்தது. இக்கால்வாயில் பெருவெள்ளத்தில் வரும் நீரைச் சேமித்து வைத்தனர். இந்நீர் அருகிலுள்ள நிலங் களுக்கு பயன்பட்டது. மீதமிருந்த நீர் கால்வாயின் தென்புறமாக இருந்த ஓடையின் மூலம் வெளி யேற்றப்பட்டது.

இங்கு வசித்த மக்கள் சோர்வே மட்கலன் எனத் தொல்லியல் அறிஞர்களால் குறிக்கப்படும் தருப்பு வண்ணம் பூசப்பட்ட சிவப்பு மட்கலன்களைப் பயன் படுத்தினர். பெரும்பாலான மட்கலன்களில் குறிப் பிடத்தக்கவை கிண்ணங்கள் ஆகும். இவை வெவ் வேறு வடிவில் செய்யப்பட்டவை. இம்மட்கலன் களைச் சுடும் சூளை ஒன்றும் இவ்வூரில் கண்டு பிடிக்கப்பட்டது. இச்சூளை கருங்கல்லினால் கட்டப் பட்டுச் சூளையின் அடிப்பாகம் தீ எரியும் பகுதியை யும் கொண்டு விளங்கியது. இந்தச் சூளை இரண் டாம் காலப் பண்பாட்டைச் சார்ந்தது.

இங்கு வாழ்ந்த கல்–செப்புக்கால மக்கள் தாய்த் தெய்வத்தை வழிபட்டனர். அகழாய்வில் தாய்த் தெய்வத்தின் உருவம் ஒன்று மண்ணால் செய்யப் பட்ட பெட்டியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இது மாபாரதத்தில் குறிக்கப்படும் விசிரா(Visira)என்னும் பெண் தெய்வமாகும். இம்மக்கள் இறப்பிற்குப் பின் பும் வாழ்வு உண்டு என்று கருதினர். இறந்தவர் களை வீட்டிற்குள் புதைத்தனர். அவர்களின் அருகில் உணவும் நீரும் மட்கலன்களில் வைத்திருந்தனர். இந்நகரத்திலிருந்த நாகரிகம் கி.மு. 700–ஆம் ஆண் டில் அழிவுற்றது.

**இனிசந்த நாகனார்** கடைச் சங்கப் புலவர் களுள் ஒருவர். நாகனார் என்பது இவர் இயற்பெய ராகும். நாகனார் என்னும் பெயர் கொண்ட பிற புலவர்களினின்றும் வேறுபடுத்தி உணரும் வகையில் 'இனிசந்த' என்னும் அடை சேர்த்து இவ்வாறு வழங்கப்பட்டார். இவர் பெயரை விளக்குங்கால், 'இவர் இனிய குரலோடு பாடவல்லராதல் பற்றி இவ்வடைமொழி கொடுக்கப்பட்டார் போலும்' எனக் கருத்துரைத்த பின்னத்தூர் அ. நாரயணசாமி அய்யர், 'சந்தம் – குரல், இனிய சந்தம் இனி சந்தம் என விகாரப்பட்டது' என்று விளக்கமும் தந்துள் ளார். 'இனிசந்த' என்பது ஊர்ப் பெயரின் திரிந்த வடிவா அடைமொழியா என்பது தெரியவில்லை என்று தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் குறிப் பிட்டுள்ளது. இவரது ஒரே பாடல் நற்றிணை 66 –ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையி லமைந்த இப்பாடல், தலைமகனோடு உடன்போக் கில் தன் மகள் சென்றதுணர்ந்த நற்றாய் அது அற மென உணர்ந்தும், அவள் செல்லும் பாலை நிலத் தின் வெப்பக் கொடுமையால் அவளுடைய கண்கள் சிவந்து ஒளி மழுங்கி அலமருமே என்று எண்ணித் தன் வீட்டிலிருந்து வருந்திக் கூறும் கூற்றாக அமைந் துள்ளது. தன்னை விரும்பிய காதலனைக்கூடிச்சென்ற

போதிலும், சூடிய மாலை சிக்குண்டாலும், அணிந்த வளையல் நழுவினாலும், இடையில் அணிந்த காஞ்சியின் பொற்காசுகள் பிறழ்ந்தாலும் அவற்றைச் செப்பம் செய்து கொள்ள அறியாது அழுபவள் என்று தன் மகளின் இளமைத் தன்மையினை நினைந்து நற்றாய் வருந்துவது நயம்படக் காட்டப் பட்டுள்ளது.

**இனியவை நாற்பது** பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் ஆவர். இவர் சங்க மருவிய காலத்தவராவர். தம் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், திருமால், பிரம தேவன் ஆகியோரைப் பாடியிருப்பதால், இவர் வைதிக சமயச் சார்புடையவராக இருக்கலாம் என்பதும், சைவ வைணவ வேறுபாடு கருதாதவர் என்பதும் புலனாகின்றன. இவர்பெயரிலமைந்த சேந்தன் என்னும் பெயர் முருகனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். பிரம தேவனுக்கும் வணக்கம் கூறியிருப்பதால் இவ்வணக்கம் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்தபோது, இந்நூல் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். மாந்தர் தம் வாழ்வில் கொள்ளத்தகும் இனிய பண்புகள் பலவற்றை இந்நூல் நாற்பது வெண்பாக்களில் தொகுத்துக் கூறுகிறது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து தனியாக இடம் பெற்றுள்ளது. நூலின் எட்டாம் பாடல் ஐந்து அடிகளில் பஃறொடை வெண்பாவாக அமைந்துள்ளது. ஒருசில பாடல்கள் நீங்கலாக ஏனைய பாடல்களில் இனிய பண்புகள் மும்மூன்றாகக் கூறியிருத்தலின் இந்நூல் திரிகடுகத்துடன் ஒத்த போக்குடையது என்று கூறலாம். இந்நூல் திரிகடுகத்தின் பொருளமைப்பையும் இன்னாநாற்பதின் நூலமைப்பையும் கொண்டுள்ளது. இந்நூலுக்குச் சிறந்த பழைய உரை ஒன்றுள்ளது. ‘பிறன்கைப் பொருள் வெளவான் வாழ்தல் இனிதே; அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிதே’ என்னும் பாங்கில் இந்நூலில் அறங்கள் கூறப்பட்டுள்ளன.

**இனோனு, இசுமத்து** (கி.பி. 1884-1973) என்பார் துருக்கிக் குடியரசின் இராணுவ அலுவலர்; அரசியல் வித்தகர். இவர் கி.பி. 1884-ஆம் ஆண்டு இசுமீர் என்னும் ஊரில் பிறந்தார். துருக்கியை முடியாட்சிக் கொடுமைகளிலிருந்து விடுவித்துக் குடியரசாக்கிய முசுதாபா கெமால் ஆடாடர்க்கு என்பாரின் உறுதுணைவராக விளங்கினார். முசுதாபா கெமால் பாட்சா குடியரசுத் தலைவராக இருந்து மறைந்ததும், துருக்கிக் குடியரசின் தலைவராக இனோனு இசுமத்து (Inonu, Ismet) பதவி வகித்தார். தொடக்கத்தில் 1939 முதல் 1946 வரை ஒரு கட்சி ஆட்சியை விரும்பிய இனோனு, பிற்காலத்தில் மக்களாட்சி முறையைத் தீவிரமாக ஆதரிக்கும் அரசியல் வல்லுநரானார்.

இசுமத்து இனோனுவின் தந்தையார் முதன்மையான வழக்கறிஞர். கல்வியை முடித்ததும் இனோனு உதுமானியப் படையில் சேர்ந்தார். படையில் பல பதவிகளைப் பெற்று உயர்ந்த இவர் முதல் உலகப் போரின்போது சிரியாவில் நாலாம் படை அணியின் தலைவராக முன்னின்று நடத்தினார் (1916). உதுமானியத் துருக்கர்கள் சரணடைந்த போது (1918) இசுத்தான்புல்லில் போர்த்துறையின் துணைச் செயலராகப் பதவி வகித்தார். பின்னர், இவர் முசுதாபா கெமாலின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். அனடோலியாவைக் கைப்பற்றியிருந்த நேசப்படைகளை எதிர்க்க இவ்வியக்கம் அப்போது பாடுபட்டது. இறுதியாகக் கூட்டப்பெற்ற உதுமானியா நாடாளுமன்றத்தின் உறுப்பினராக இவர் 1920-ஆம்ஆண்டில்எடிரின்(Edirne) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். கிரேக்கர்கள் மேற்கு அனடோலியாவைக் கைப்பற்றிக்கொண்டபின்னர், தேசிய இராணுவத்தின்படைத்தலைவராக அமர்த்தப்பட்ட இனோனு இரு போர்களில் கிரேக்கப்படைகளை விரட்டியடித்தார். இப்போர் நடைபெற்ற இடம் இனோனு எனப்பட்டது. இவர் பெற்ற வெற்றியின் நினைவாகவே இவர் தம்மை இனோனு இசுமத்து எனக் கூறிக் கொண்டார்.

அங்காராவில் அமைக்கப்பெற்ற தேசியப் பெருமன்றத்தின் (Grand National Assembly) ஆட்சியின் போதுஇவர் வெளியுறவு அமைச்சராக1922-ஆம் ஆண்டில்அமர்த்தப்பட்டார். சுவிட்சர்லாந்தில்இலெளசான் (Loussanne) என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் துருக்கியின் பேராளராக இவர் பொறுப்பேற்றார். அம்மாநாட்டில் இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சராயிருந்த கர்சன் பிரபுவை (Lord Curzon) இவர் எதிர்த்தார். முசுதாபா கெமாலின் முழு ஆதரவையும் பெற்ற இவர், இலெளசான் உடன்படிக்கையில் துருக்கி நாடு கோரிய அனைத்தையும் பெற்றார். துருக்கி குடியரசு நாடாக 1923-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாள் அறிவிக்கப்பட்டபோது, இனோனு தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். அப்பொறுப்பினை இவர் 1937-ஆம் ஆண்டு வரை வகித்தார்.

முசுதாபா கெமால் ஆடாடர்க்கு 1938-ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாள் காலமானபோது, இவர் துருக்கியின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், குடியரசு மக்கள் கட்சியின்

தலைவராகவும் ஆனார். இவர் 1946-இல் மக்களாட்சிக் கட்சியை உருவாக்கி ஊக்கம் கொடுத்தார். குடியரசு மக்கள் கட்சியை 1950-ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி தோற்கடித்தது. செலால் பேயர் (Celal Bayar) என்பார் குடியரசுத் தலைவராகவே, இனோனு எதிர்க்கட்சித் தலைவரானார் (1950-60).

இராணுவப் புரட்சி 1960-இல் மூண்டபோது மக்களாட்சிக் கட்சியின் அரசு தூக்கியெறியப்பட்டது. இனோனு மூன்று கூட்டாட்சி அரசுகளை 1961க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைத்தார். ஆனால் 1965-ஆம் ஆண்டிலும் 1969-ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் இவருடைய கட்சி படுதோல்வியடைந்தது. இக்காலகட்டத்தில் கெமால் பாட்சாவின் ஆதரவாளர்களும் சமதருமக் கட்சியினரும் குடியரசு மக்கள் கட்சியின் உறுப்பினர்களாயிருந்துகொண்டே இனோனுவைக் குறை கூறிக் கண்டித்தனர். கூட்டாட்சிக் கட்சிகளுடன் இவர் செய்துகொண்ட கொள்கையில்லாக் கொள்கைகளை அவர்கள் எதிர்த்தார்கள். இதனால் கட்சியில் பிளவேற்பட்டது. இவரை எதிர்த்தவர்கள் 1967-இல் நம்பிக்கைக் கட்சியை (Reliance Party) உருவாக்கிக்கொண்டனர். இனோனு 1972-ஆம் ஆண்டில் குடியரசு மக்கள் கட்சியின் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். புளன்ட் ஈசுவிட்டு (Bulent Ecevit) என்பார் அக்கட்சியின் தலைவரானார். இசுமத் இனோனு 1973-ஆம் ஆண்டு திசம்பர் 25-ஆம் நாள் அங்காராவில் காலமானார்.

---

**ஈ** தமிழ் நெடுங்கணக்கில் நான்காம் உயிரெழுத்து; நெட்டெழுத்துகள் ஏழனுள் இரண்டாவது.

ஒலி: மேல் (High), முன் (Front), இதழ்குவியா (Unrounded), ஒலிப்புடை (Voiced), நெகிழ் (Lax), நெட்டுயிர் (Long Vowel) என்பது இதன் ஒலி; முதல் இடை கடையென மொழி மூவிடத்தும் வரும்.

வடிவம்:

(1) பழைய பிராமியில் இகரமும் ஈகாரமும் ஒரே வடிவில் குறிக்கப் பெற்றன. காண்க. 'இ'.

(2) வட்டெழுத்துகளில்

முற்காலம் (கி.பி. 950 வரை)

(கி.பி. 760) நெடுஞ்சடையன் சடில பராந்தகன் – சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள். ... ... ... ... 

(கி.பி. 870) பாண்டியன் வரகுணன் – திருச்செந்தூர்க் கல்வெட்டு. ... ... ... ... 

(கி.பி. 939) சோழன் பராந்தகன் I – யானை மலைக் கல்வெட்டு. ... ... ... ... 

பிற்காலம் (கி.பி. 1350க்குப் பின்)

(கி.பி. 15–ஆம் நூ.) (மலையாளச் சாயல் பெற்றது) கல்பாத்திக் கல்வெட்டு. ... ... ... ... 

(3) தமிழ்

முற்காலம் (கி.பி. 9–ஆம் நூ. வரை)

(கி.பி. 9–ஆம் நூ.) பல்லவன் நந்திவர்மன் III – வேலூர்ப் பாளையம் செப்பேடுகள். ... ... ... ... 

இடைக்காலம் (கி.பி. 1250 வரை) சோழர்காலம்.

(கி.பி. 1011) இராசராசன் – I – பெருவுடையார் கோயில், தஞ்சை. ... ... ... ... 

(கி.பி. 1025) இராசேந்திரன் – I – திருவாலங்காட்டுச் செப்பேடுகள். ... ... ... ... 

(கி.பி. 1204) குலோத்துங்கன் III – திருக்களர்ச் செப்பேடுகள். ... ... 

(4) கிரந்தம்

(கி.பி. 7-ஆம் நூ.) பல்லவர் காலம். … … … … 

(கி.பி. 1011) இராசராசன் – I – பெருவுடையார் கோயில்,
தஞ்சை. … … … … 

பொருள்

(அ) பெயர்

(1) (மொய்க்கும்) ஈ: ஈச்சிற கன்னதோர் தோலறினும் (நாலடியார் 41)

(2) தேனீ: ஈயின்றி யிருந்த தீந்தேன் (சீவக. 712)

(3) வண்டு

(4) சிறகு (பிங்கலநிகண்டு)

(5) அழிவு: ஈ பாவஞ் செய்து (திருவாய்மொழி 2:2:2)

(ஆ) வினை

(1) இழிந்தோர்க்குக் கொடுத்தல். ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே (தொல்: சொல்: 445)

(2) நேர்தல் (பரிபாடல் 9: 17)

(3) கொடுத்தல்

(4) பகிர்ந்து கொடுத்தல்

(5) வகுத்தல் (கணிதவியல்)

(6) படிப்பித்தல்: ஈத வியல்பே யியம்புங் காலை (நன்னூல் 36)

(7) படைத்தல் (Idiomatic) எவ்வுயிர்களு மீந்தான் (கம்பராமா. அகலிகை 49).

(8) ஈனுதல்

(இ) வியப்பு இடைச்சொல்
எங்களுக்குத் தெரியாதபடி யிரா நின்ற தீ! (ஈடு 1.3.9)

(ஈ) முன்னிலையசை (செய்யுள் வழக்கு) (நன்னூல் 440 உரை)

(உ) இளித்தலைக் குறிக்கும் சொல் (வழக்கு) ‘ஈ’யெனப் பல்லை இளிக்கின்றான்.

கோ.வி.

**ஈக்குவடார்** தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள மிகச் சிறிய குடியரசு நாடாகும். இசுபானிய மொழியில் ஈக்வடார் என்பது 'ஈக்வேட்டர்'(Ecuator) என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். உலக நடுக்கோட்டை 'ஈக்வேட்டர்' என்பர். உலக நடுக்கோடு இந்நாட்டின் வழியாகச் செல்வதால் இந்நாடு அமைந்திருக்கும் பகுதியை ஈக்குவடார் என்று குறிப்பிட்டனர்.




எல்லை: ஈக்குவடாரின் வடக்கில் கொலம்பியா (Colombia) என்னும் நாடும், கிழக்கிலும் தெற்கிலும் பெரு (Peru) என்னும் நாடும், மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் எல்லைகளாய் அமைந்துள்ளன. ஈக்வடாருக்கும் பெரு நாட்டிற்குமிடையே பன்னெடுங் காலமாக எல்லைத் தகராறு இருந்து வருகிறது. இவ்விரு நாடுகளுக் கிடையில் 1942 சனவரி 29-ஆம் நாள் முடிவு செய்யப்பெற்ற உடன்படிக்கையே மிக அண்மையில் செய்துகொள்ளப்பட்டதாகும். இவ்வுடன் படிக்கையால் ஈக்குவடார் அமேசான் பகுதியை இழக்கவேண்டியதாயிற்று. எனவே இவ்வுடன் படிக்கை செல்லத்தக்கதன்று என்று ஈக்குவடார் 1961 செப்டம்பர் மாதத்தில் ஒருதலையாகக் குறைகூறியது. மீண்டும் எல்லைத்தகராறு காரணமாக ஈக்குவடாருக்கும் பெருவுக்குமிடையே 1981 சனவரியில் போர் மூண்டது. ஆனால் அவ்வாண்டு பிப்பிரவரி மாதத்தின் தொடக்கத்திலேயே போர்நிறுத்தம் ஏற்பட்டது.

பரப்பு: ஈக்குவடாரின் பரப்பைத் திட்டவட்டமாகக் கூறுவது இயலாது. இதன் பரப்பு 2,83,561 ச.கி.மீ. ஆகும். இதனைக் குறைத்துக் கூறுபவர்களும் உண்டு. பெருவுக்கும் ஈக்குவடாருக்குமிடையே எல்லைத்தகராறு 1,90,807 சதுரக் கிலோமீட்டர்கள் பற்றியதாகும்.

ஈக்குவடார் நாட்டிலுள்ள பனிமூடிய ஆண்டீசு மலையுச்சிகள் உயரமானவை; பாலைநிலங்கள் போன்று தாழ்ந்த உயரமுடைய பகுதிகளும், பருவக்காற்று மழைக்காடுகளும் இங்கு அமைந்துள்ளன. தொழிற்சாலைகள் இந்நாட்டில் மிகமிகக் குறைவு. எனவே தென் அமெரிக்கக் கண்டத்திலேயே ஏழ்மையான நாடுகளுள் ஒன்றாக இதைக் கூறலாம். இந்நாட்டில் வாழும் மக்களில் பெரும்பான்மையான குழுக்களிடையே போக்குவரத்து மிகமிகக் குறைவு. இதனால் இவர்கள் பண்பாட்டளவிலும் உடல்உருவ அமைப்புகளிலும் பிரிந்து காணப்படுகிறார்கள். தென் அமெரிக்க இந்தியர் அக்குழுக்களில் ஒரு குழுவினராவர். அவர்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். தமக்கு வேண்டிய அளவிற்கு மிகுதியாகவே உணவுப் பொருள்களை விளைவித்துக் கொள்கிறார்கள்.

மெசுடிகோ (Mestigo) என்னும் பெயர் கொண்ட பிறிதோர் இனத்தவர் இந்தியர்களுக்கும் வெள்ளையருக்கும் பிறந்த கலப்பினத்தவர். இவர்கள் பெரும்பாலும் கடற்கரைத் தாழ்நிலங்களில் வாழ்கிறார்கள். இவர்களே ஈக்குவடார் தொழிலாள வர்க்கத்தின பெரும் பகுதியினராவர். இவர்களே நிலச் சொந்தக்காரர்களும் அரசாங்கத்தை நடத்தும் தலைவர்களுமாவர்.

நிலப்பிரிவுகள்: ஈக்குவடாரை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. மேற்கிலுள்ள கடற்கரை நிலங்கள், 2. ஆண்டீய மேட்டுநிலங்கள் (பெரும்பாலான மக்கள் இப்பகுதியில்தான் வாழ்கிறார்கள்), 3. ஆண்டீசு மலைத்தொடருக்கு அப்பால் பரவியுள்ள கிழக்குக் காட்டுப் பின்நிலங்கள் என்பனவாம்.

பசிபிக்குக் கடற்கரைச் சமவெளி குறுகலானது. இச்சமவெளியில் 500 மீட்டர் வரை உயரமுடைய தாழ்ந்த கடற்கரை மலைத்தொடர்களையும் காணலாம். இக்கடற்கரை வெதுவெதுப்பானது; ஈரக்கசிவானது. தெற்குக் கடற்கரையோரத்தில் மட்டும் பாதி வறண்ட பகுதியுள்ளது. தென் கடற்கரை வறண்டது. நீண்டதும் ஈரப்பசைமிக்கதுமான வடக்குக் கடற்கரைப் பகுதியில் ஆண்டுதோறும் 200செ.மீ. மழை பொழிகிறது. பருவக்காற்று மழைக் காடுகள் இந்தத் தட்பவெப்ப நிலையில் செழித்து வளருகின்றன. கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளிலும் ஆற்றுக் கழிமுகத்திலும் மாங்குரோங்காடுகள் உள்ளன. இப்பகுதியை 'கோசுட்டா' (Costa) என்பர்.

ஆண்டீய மேட்டுநிலப்பகுதி இருமலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. ஒன்றை மேற்குத்தொடர் என்றும் (Cordillera Occidental) மற்றொன்றை நடு மலைத்தொடர் என்றும் (Cordillera Central) கூறுவர். இம்மலைத்தொடர்களில் வரும் மலையுச்சிகள் 3300 மீட்டர் முதல் 6500 மீட்டர் வரை உயர்ந்துள்ளன. இம்மலைத் தொடருக்கிடையில் நடுப் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இம்மலைத்தொடர்களில் தான் கொட்டபாக்சி, சிம்பராகோ போன்ற எரிமலைகள் உள்ளன. கொட்டபாக்சி 6445 மீட்டர் உயரமுள்ளது. இன்றும் இவ்வெரிமலை உயிரோட்டம் உள்ளது. சிம்பராகோ ஏறத்தாழ 7000 மீட்டர் உயரமுள்ளது. ஆண்டீய மேட்டுநிலப்பகுதி குளிர்ந்தும் வறண்டுமுள்ளது. இதனைச் 'சீரா' (Sierra) என்பர். இப்பகுதியில் 4200 மீட்டர் முதல் 5000 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகள் தரிசுநிலங்களாக உள்ளன. இதனைப் 'பரமோசு' (Paramos) என்பர்.

மூன்றாம் பிரிவான ஆண்டீய மலைத்தொடருக்கப்பால் பரவியுள்ள கிழக்குக்காட்டுப் பின்நிலங்கள் 'ஓரியண்டே' (Orienta) எனப்படும். இங்குக் காடுகள் மிகுதி. இப்பகுதியில்தான் அமேசான் ஆற்றின் துணையாறுகள் பாய்ந்து இணைகின்றன. இங்கு மக்கள் தொகையும் மிகக் குறைவு. பொருளாதார வளக் குறைவான பகுதியும் இதுதான்.

**மக்கள்:** ஈக்குவடாரில் வாழும் மக்கள் பல இனத்தவர்கள். செவ்விந்தியர்கள் மிகுந்து காணப்படுகிறார்கள். கடற்கரைப் பகுதிகளில் நீக்கிரோக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இசுபானிய அடிமைகளாக வந்தவர்கள். செவ்விந்தியர்கள் இசுபானிய நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுவாகக் கூறின், ஈக்வடாரின் அரசியல் வாழ்வும் பொருளாதார அமைப்பும் நகரங்களின் அடிப்படையில் எழுந்தவையாகும். குவயாகுல் (Guayaquil) இந்நாட்டின் பெருநகரமும் முதன்மையான துறைமுகமும் வாணிகமையமுமாகும்.

குயிட்டோ (Quito) என்னும் நகரமே ஈக்குவடாரின் தலைநகரும் இரண்டாம் பெருநகரமுமாகும். இந்நகரம் இக்கால நாகரிகத்தால் பற்றப்படாமையால், இசுபானியக் குடியேற்ற ஆதிக்கத்தின் சின்னங்களாகத் திகழும் கட்டிடங்களைக் கொண்டு திகழ்கின்றது.

பொருளாதாரம்: ஈக்குவடாரின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது ஆண்டீசு மலைத்தொடராகும். இம்மலை போக்குவரத்திற்குப் பெருந்தடையாகவுள்ளதால் பல இடங்கள் பொருளாதார முன்னேற்றமின்றி நலிந்துள்ளன. முன்னர் ஓரிரு பயிர்களை மட்டும் பயிரிட்டு வந்ததாலும் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையேற்பட்டது. பல பொருள்களைப் பயிரிடும் பழக்கம் நடைமுறைக்கு வந்ததெனினும், இன்றும் பொருளாதார நிலை சீராக வளர்ந்து விட்டதாகக் கூறமுடியாது.

வேளாண்மையே ஈக்குவடாரின் பொருளாதாரத்தின் அடிப்படை. தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் பாதியினர் பண்ணைகளிலேயே பணியாற்றுகின்றனர். கால்பங்கு மக்கள் செய்தொழில் உற்பத்தியிலும் குடிசைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் மொத்த நிலத்தில் 5 விழுக்காட்டு நிலமே வேளாண்மை செய்யப்பயன்படுகிறது.

வாழைப் பழங்கள் இந்நாட்டின் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றன. காப்பியும் கோகோவும் அடுத்து வரும் ஏற்றுமதிப் பொருள்கள். பொத்தான்கள் செய்யப்படும் தாகுதாநட்டுச் (Tagudanut)செடிகள் வட பகுதிகளில் மிகுதி. ஈக்குவடாரில் தயாரிக்கப்படும் புகழ்பெற்ற பொருள்களுள் ஒன்று தான் பனாமாதொப்பிகள். அவை புல்லிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தக்கைமரங்கள் ஈக்குவடாரின் காடுகளிலிருந்து கிடைக்கின்றன. உலகம்முழுமைக்கும் இவை அனுப்பப்படுகின்றன.

உருளைக்கிழங்கு, கோதுமை, பார்லி, ஓட்சு, காய்கறிகள் சிறப்பான விளைபொருள்கள். கோழிகள் சில பகுதிகளில் சிறப்பாக வளர்க்கப்படுகின்றன. கால்நடைகளும் ஆடுகளும் புல்தரைகள் நிறைந்த மேட்டுநிலங்களில் மேய்கின்றன. சில பகுதிகளில் இரப்பரும் தயாரிக்கப்படுகின்றது.

இந்நாட்டில் சுரங்கத் தொழில் பெருகி வளரவில்லை. பொன், வெள்ளி, செம்பு, ஈயம் சில இடங்களில் வெட்டியெடுக்கப்பட்டுச் சிறு அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மக்களுக்குத் தேவையான துணிமணிகள், கம்பளங்கள் போன்றவை நெய்யப்படுகின்றன.

வரலாறு: இங்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன்னர்,செவ்விந்தியப் பழங்குடிமக்கள் வாழ்ந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்கா மக்களின் ஆட்சி இப்பகுதியில் பரவியிருந்தது. பிரான்சிசுகோ பிசாரோ என்னும் பெயர் கொண்ட இசுபானிய மாலுமியே கி.பி. 1532-ஆம் ஆண்டில் ஈக்குவடாரில் வந்திறங்கிய முதல் ஐரோப்பியர். அப்போது இன்கா மக்களின் ஆட்சி நடைபெற்று வந்தது. இன்கா மக்களை இசுபானியகுடியேற்றவாதி

கள் வெற்றிகண்டு, தம் குடியேற்ற அரசை நிறுவிக் கொண்டனர். அவர்கள் தாம் கைப்பற்றிய பகுதிக்கு குயிட்டோ எனப் பெயரிட்டனர். பல புதிய நகரங்களையும் நிலைநாட்டினர்.

குயிட்டோப் பகுதி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் பெரு நாட்டின் அரசப் பேராளரால் ஆளப்பட்டது. குயிட்டோ வாணிக வழியில் இருந்ததால் சிறப்பு பெறலாயிற்று. இப்பகுதி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புதிய கொலம்பியா அரசப் பிரதிநிதியின் ஆட்சிக்கு மாற்றப்பட்டது. இசுபானிய ஆட்சிக்கெதிராகப் பதினெட்டாம் நூற்றாண்டில் கிளர்ச்சிகள் மூண்டன. இசுபெயினில் பிரெஞ்சியரின் ஆட்சி புகுத்தப் பட்டபோது கலகங்கள் எழுந்தன. சைமன் பொலீவர் கி.பி. 1822-ஆம் ஆண்டில் ஈக்குவடாரின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி அந்நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றார்.

சுதந்திரம் பெற்ற ஈக்குவடார் வெனிசுவேலா, கொலம்பியா ஆகிய நாடுகளுடன் இணைந்து சைமன் பொலீவரின் தலைமையை ஏற்றுக் கொண்டது. எனினும் பல ஈக்குவடார் மக்கள் இதனைஏற்க மறுத்தனர்.ஈக்குவடார் கி.பி. 1830-ஆம் ஆண்டில் குடியரசு நாடாயிற்று.

குடியரசான ஈக்குவடாரின் வரலாறு தொல்லைகள் நிறைந்ததாயிற்று. உள்நாட்டுச் சிக்கல்களாலும், போர்களாலும் நாட்டில் குழப்பம் மேலிட்டது. நாட்டின் பகுதிகளுக்கிடையேயும், பழமை விரும்பிகளுக்கும் முற்போக்குவாதிகளுக்கும் இடையேயும் சச்சரவுகள் மூண்டன. ஈக்குவடாருக்கும் பெருவுக்குமிடையே 1941-இல் போர் மூண்டது. அதன் விளைவாக ஈக்குவடார் அதன் பரப்பில் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது.

ஈக்குவடார் அரசு 1940க்கும் 1950க்குமிடையே ஓரளவு நிலையானதாயிருந்தது. பின்னர் 1961-இல் பணவீக்கத்தாலும், புதுவரிவிதிப்பாலும், வாணிக நட்டத்தாலும் நாட்டில் அமைதியின்மை தோன்றியது. புதிதாக ஒருவர் குடியரசுத் தலைவரானார். இராணுவ ஆட்சி 1963-இல் ஏற்பட்டது. மீண்டும் மக்களாட்சி 1966-இல் மலர்ந்தது. குடியரசுத் தலைவர் தேர்தல் 1968-இல் நடைபெற்றது. அதையடுத்து 1972-இல் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. மீண்டும் மக்களாட்சி 1979-இல் நிலைநாட்டப்பட்டது.

**ஈக்குவடார் அரசியலமைப்பு:** ஈக்குவடார் தென் அமெரிக்க அல்லது இலத்தீன் அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய குடியரசு நாடு ஆகும். புவியியல் வரைபடத்தில் காணப்படும் நிலநடுக்கோடு (Equator) இந்நாட்டின் குறுக்கே செல்வதால் இது ஈக்குவடார் (Ecuador) எனப்பெயர் பெற்றது. உயிரியல் துறையில் பரிணாமக் கொள்கையை உருவாக்கிய சார்லசு தார்வின் என்ற அறிஞர் தமது ஆராய்ச்சிகள் பல நடத்துவதற்கு ஒரு நிலைக்களமாக இருந்த கலபாகசுத் தீவுகளும் (Galapagos Islands) ஈக்குவடார் நாட்டின் ஒரு பகுதியாகும். இத்தீவுகள் இந்நாட்டிற்கு மேற்கே பசிபிக்குப் பெருங்கடலில் நிலநடுக்கோட்டில் இருக்கின்றன. இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 2,69,178 சதுர கிலோமீட்டர்களாகும். பூமியின் நிலநடுக்கோட்டிலமைந்துள்ள பிரேசில், காங்கோ, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளைப் போன்று இது வெப்ப மண்டலத்தில் (Tropical Zone) அமைந்துள்ளதால், இது மிகுதியான வெப்பமும் மிகுதியான மழையும் உடையது. இதன் வடக்கில் கொலம்பியா நாடும், தெற்கிலும் கிழக்கிலும் பெருநாடும் (Peru), மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் இருக்கின்றன. இந்நாட்டின் தென்-வடலாக ஆண்டிசு (Andes) மலைத்தொடர் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் குவிட்டோ (Quito) என்பதாகும். இந்நாடு எண்ணெய் வளமும் செம்புவளமும் வளமான நிலங்களும் உடையதாயினும், இக்காலப் பொருளாதார முறைகள் கையாளப்படாததனால், இதற்குப் பொருளியல் தொடர்பான முன்னேற்றம் இல்லை. இந்நாட்டின் பழங்குடி மக்கள் இந்தியர்கள் எனப்படுவோர். இவர்கள் பண்டைய இங்காப் பேரரசின் (Inca Empire) கீழ் வந்தனர். இந்நாடு பதினாறாம் நூற்றாண்டில் இசுபானிய வீரர் பிசாரோ (Pisarro) என்பவரால் கைப்பற்றப்பட்டது. பழங்குடி மக்களோடு இசுபானியர் கலந்ததனால் ஒரு புதிய வெள்ளையர் இனம் தோன்றிற்று. இசுபானிய ஆட்சியிலும் மக்களுக்குப் பொருளியலில் வளர்ச்சியோ அரசியலில் தன்னாட்சிக்கு ஏற்ற பயிற்சியோ கிடைக்கவில்லை. குவிட்டோ நகரத்திலுள்ளவர்கள் 1822-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இசுபானியருக்கெதிராகக் கலகம் செய்தனர். அவர்களுக்குத் தென்னமெரிக்க விடுதலைப் போராட்ட வீரர் சைமன் பொலிவர் (Simon Bolivar) என்பவருடைய உதவியும் கிடைத்தது. ஈக்குவடார் இசுபானியருடைய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தாலும், அது அண்டை நாடுகளான கொலம்பியா, வெனிசுலா ஆகியநாடுகளுடன் ஓர் இணைப்பாட்சியில் (Confederation) சேர்ந்திருந்தது. ஆனால், அது 1830-ஆம் ஆண்டில் இவ்விணைப்பாட்சியிலிருந்து விலகி, தன்னுரிமை பெற்ற தனிக் குடியரசு நாடாக ஆயிற்று. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்தும், குடியாட்சிக்கு இன்றியமையாத உரிமையும் சமத்துவமும் பரவலாக இல்லாததாலும் நாட்டில்

ஒற்றுமையில்லை. செல்வம் படைத்த வணிகர் வகுப்புக்கே அரசியலில் செல்வாக்கு இருந்தது. ஒவ்வொரு நகரமும் ஒரு தனி அரசுபோலச் செயல்பட்டு, மற்ற வற்றோடு போட்டிபோட்டது. தொழிலாளர் வகுப்பு பின்தங்கிய நிலையிலிருந்தது. நாட்டின் ஒற்றுமையைக் காத்து, அது பிளவுபடக்கூடிய இடர்ப்பாட்டினின்றும் அதனைக் காப்பாற்றுதல் வேண்டுமென்று காரணம் கூறி, 1925-ஆம் ஆண்டில் இராணுவம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிற்று. பல இலத்தீன் அமெரிக்கக் குடியரசு நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளைப்போல இந்நாட்டிலும் இராணுவப் புரட்சி நடைபெற்றாலும், இந்த இராணுவப்புரட்சியால் இந்நாட்டின் சமுதாய, பொருளாதார அமைப்புகளில் எவ்வகையான மாறுதலும் ஏற்படவில்லை. தாராளக் கட்சித் தலைவர் பிளாசா (Plaza) என்பவர் 1948-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை குடியரசுத்தலைவராக (President of the Republic) ஆட்சி நடத்தியபோது, நாடு சிறிது காலம் அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியில் (Constitutional Government) இருந்தது. பின்னர் இபாரா என்பவருடைய இராணுவ ஆட்சி நடைபெற்றது. இவ்வாறு 1972-ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் இராணுவ ஆட்சியும், குடிமை இயல் ஆட்சியும் (Civil Government) மாறி மாறி நடைபெற்று வருகின்றன.

ஈக்குவடார் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி இது ஓர் இறைமையும் குடியாட்சியுமுடைய குடியரசு நாடு (Sovereign Democratic Republic) ஆகும். குடியரசுத் தலைவரும் (President), துணைத் தலைவரும் ஐந்தாண்டுக் காலத்துக்கு மக்களால் நேராக, இரகசிய வாக்கெடுப்பு வாயிலாகத் (Direct and Secret Voting) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவருக்கு உதவி செய்து, ஆலோசனை வழங்குவது அமைச்சரவை (Cabinet) ஆகும். நாட்டின் உயர்தரச் சட்டமியற்றும் அதிகாரம் தேசிய சார்பாளர் மன்றம் (National Chamber of Representatives) எனப்படும் ஓரவைச் சட்டமன்றத்தில் (Unicameral Legislature) இருக்கிறது. அதனுடைய 69 உறுப்பினர்களும் 5 ஆண்டுக்காலத்துக்கு மக்களால் தேசிய, மாகாண மட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நாடு 20 மாகாணங்களாகப் (Provinces) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆளுநரை அல்லது அரசியல் தலைவரைக் குடியரசுத் தலைவர் தம் சார்பாளராக அமர்த்துகிறார். ஒவ்வொரு மாகாணமும் காண்ட்டன் (Canton) எனப்படும் உட்பிரிவுகளாகவும், ஒவ்வொரு உட்பிரிவும் பகுதிகளாகவும் (Parishes) பிரிக்கப்பட்டிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஒவ்வொரு காண்ட்டனுக்கும் ஓர் அரசியல் தலைவரை அமர்த்துகிறார். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாணமன்றம் இருக்கிறது. ஒவ்வொரு காண்ட்டனுக்கும் ஒரு நகரமே தலைநகரமாக அமைந்து, அதற்கு ஒரு நகராட்சியும் இருக்கிறது. நாட்டில் பல கட்சிகள் இருந்தாலும், செல்வாக்கு மிக்க அரசியல் கட்சித்தலைவர்களே (Caudillos) நாட்டை ஆளுகின்றனர்.

**ஈக்குவடார் நாட்டில் கல்வி** ஈக்குவடார் (Euador) நாட்டுக் குழந்தைகள் நான்கு, ஐந்து வயதுகளில் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளியில் ஆறு வயது நிறைவு பெற்ற குழந்தைகளே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தொடக்கப்பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். தொடக்கப் பள்ளிக் கல்வி அனைவருக்கும் கட்டாயமாகும். இக் கல்வியை இலவசமாக அரசு வழங்குகின்றது.

தொடக்கப் பள்ளி முடித்த மாணவர்கள் பன்னிரெண்டு வயதில் உயர்நிலைப் பள்ளிகளில் சேருகின்றனர். இக் கல்வியின் கால அளவு மூன்றாண்டுகள். பதினைந்து வயதில் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றவர்களாகின்றனர்.

பதினாறு வயதில் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேருகின்றனர். இக் கல்வியின் கால அளவும் மூன்றாண்டுகளே. மேல்நிலைப் பள்ளிகளில் கலை, தொழில் நுட்பம், வேளாண்மை, கணக்கிடுதல் (Accountancy) போன்றவற்றில் மாணவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். 1982-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 1341 மேல்நிலைப் பள்ளிகள் இந் நாட்டில் இருந்தன. பதினேழு வயதில் பள்ளிப் படிப்பை மாணவர்கள் முடிக்கின்றனர்.

தேசிய அளவில் பள்ளிகளில் மாணவர், ஆசிரியர் விகிதம் 36:1 ஆகும்.

உயர் கல்வி: இந்நாட்டில் 12 அரசுப் பல்கலைக் கழகங்களும் 5 தனியார் பல்கலைக் கழகங்களும் உயர்கல்வி அளிக்கின்றன. உயர்கல்விக்கு அரசு நிதியுதவி செய்கிறது. அனைத்துப் பல்கலைக் கழகங்களும் தன்னாட்சி (Autonomous) பெற்று இயங்கி வருகின்றன. உயர்கல்வியில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களே அனுமதிக்கப் படுகின்றனர். உயர் கல்வியில் மாணவர் ஆசிரியர் விகிதம் 19:1 என்ற அடிப்படையில் உள்ளது.

வயது வந்தோர் கல்வி: ஈக்குவடார் நாட்டில் முறைசாராக் கல்வியானது தேசியக் கல்வித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, மூன்று வகைகளில் வழங்கப்படுகின்றது.

1. தொடக்கக் கல்வி: இக் கல்வி மூன்று சுற்றுகளில் (Cycles) கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சுற்றின் கால அளவும் ஒன்பது மாதங்களாகும்.

2. இடைநிலைக் கல்வி: அடிப்படைக் கல்வியில் மூன்றாண்டுகளும் பல்தொழில் பாடங்களில் (Diversified courses) மூன்றாண்டுகளும் இக்கல்வி வழங்கப்படுகின்றது. தொழில் பழகு பயிற்சியின்(Apprenticeship Training) கால அளவு பாடநுணுக்கத்திற்கு (Specialization) ஏற்றாற்போல் மாறுபடுகிறது.

நிதி நிருவாகம்: கல்விக்காக மக்களின் வரிப் பணத்தை அரசு பெரும் அளவில் செலவு செய்கிறது. மக்களிடமிருந்து திரட்டப்பட்ட வரிப் பணம் 21விழுக்காடு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 39.2 விழுக்காடு தொடக்கப் பள்ளிக்கும் ஒதுக்கப்படுகின்றது. பாட நூல்கள், போக்குவரத்து ஆகிய செலவினங்கள் மாணவர்களின் பொறுப்பாகும். பள்ளிகள் மாணவர்களிடமிருந்து பெயரடையாளத் தொகை (Nominal Fees) மட்டுமே பெறுகின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஈராண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்றவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியராகின்றனர். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாவதற்குப் பல்கலைக் கழகக் கல்வியியல் துறையில் பட்டம் பெறுதல் இன்றியமையாததாகும். பல்கலைக் கழக ஆசிரியர்களாவதற்குப் பயிற்சி ஏதும் கிடையாது. கல்வித் தகுதிகளே அடிப்படையாகும்.

பாடத் திட்டம், தேர்வு முறை: திறமையான ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாட நூல்கள் எழுதுகின்றனர். பாடநூல் எழுதுவதற்கு அரசு ஏதும் குழுக்கள் அமைக்கவில்லை. பள்ளிகளில் அரசுத் தேர்வுகளே கிடையாது. வகுப்பறைத் தேர்வுகளின் அடிப்படையிலே மாணவர்கள் மேல் வகுப்பிற்குச் செல்கின்றனர். புதிய கல்வி உத்திகளோ கல்வித் துணைப் பொருள்களோ பாடம் நடத்துதலில் ஆசிரியர் பயன்படுத்துவதில்லை. சொல்வது ஒப்ப எழுதுதல் (Dictation), மனப்பாடம் (Memorization) ஆகிய முறைகளிலே ஆசிரியர்கள் பெரிதும் பாடம் கற்பிக்கின்றனர்.

கல்வியாய்வு: அடிப்படைச் செய்திகளைத் திரட்டும் பணியாகவே இன்னும் கல்வியாய்வு இருந்து வருகிறது. இருப்பினும் ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் தொழில்திறன் முன்னேற்றம், கல்வித் திட்டம் மதிப்பிடுதல், கல்வித்திட்ட ஆக்கம் போன்றவற்றில் ஆய்வுகள் இப்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன.

ஈக்குவடார் நாட்டுக் கல்வி அமைப்பில் சில சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. இந் நாட்டுக் கல்விமுறை இன்னும் மாற்றியமைக்கப்படாமல் பழைய முறையிலேயே இருந்து வருகிறது. பள்ளிகளில் அடிப்படை வசதிகள் உயர்த்தப்படாமல் உள்ளன. மாறிவரும் புதிய தொழில்நுட்பச் சமுதாயத்திற்கு ஏற்றவாறு, ஊரக மக்களை மாற்ற வேண்டிய பொறுப்பு இந்நாட்டுக் கல்விக்கு உள்ளது.

**ஈக்குவடோரியா** ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகிழக்குப் பாகத்திலுள்ள சூடான் நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. ஈக்குவடோரியா (Equatoria) வை இக்காலத்தில் அல்-இசுடிவா-அய்யா (Al-Istiwa-Iyah) என்று குறிப்பிடுகிறார்கள். இதன் பரப்பு 1,97,968 ச.கி.மீ. ஆகும். மக்கள்தொகை 14,06,181 (1983). இதன் தலைநகரம் சூபா (Juba).

**ஈங்கோய் மலை** சோழ நாட்டிலுள்ள தேவாரம் பாடப்பெற்ற தலங்களுள் ஒன்று. இது திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் முசிறிக்கு மேற்கில் காவிரியின் வடகரையிலுள்ளது. இம்மலைமேல் சிவன் திருக்கோயில் உள்ளது. திருச்சி, நாமக்கல், குளித்தலை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் சென்று இதனை அடையலாம்.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகம் ஒன்றினால் இதனைப் பரவியுள்ளார். இறைவன் பெயர் மரகதநாதர்; மரகதாசலேசுவரர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் மரகதவல்லி. மலை மீதிருக்கும் திருக்கோயிலுக்குச் சற்றுச் செங்குத்தான படிகளைக் கொண்ட வழி உள்ளது. கோயிலில் அமைந்துள்ள இலிங்கத் திருமேனி மரகதம் போலப் பசுமை ஒளி உடையதாகத் திகழ்கிறது. காலையில் கடம்பந்துறையினையும் நண்பகலில் வாட்போக்கியையும் மாலையில் திருஈங்கோய்மலையினையும் வழிபடுவது சிறந்த பயனை நல்கும் என்பது இப்பகுதி மக்களிடையே நிலவும் நம்பிக்கை. இவ்வழிபாடு கார்த்திகைத் திங்கட்கிழமைகளில் நிகழ்த்துதல் மிக்க சிறப்புடையது. கடம்பந்துறையும் வாட்போக்கியும் இத்தலத்திற்கு எதிரே காவிரியின் தென்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. அம்பிகையால் வழிபடப்பட்டது என்பதனால் இம்மலை சிவசக்திமலை எனவும் வழங்கப்படுகிறது. இதன் இயற்கை எழில் நலத்தினை வியந்து, 'ஏனத்திரள் வந்திழியும் சாரல்', 'எண்கும் அரியும் திரியும் சாரல்', 'கொண்டல்மலை' என்றும் 'ஏலத்தொடு நல்லிலவங்கமழும் ஈங்கோய்' என்றும் திருஞானசம்பந்தர் சிறப்பித்துள்ளார். நக்கீரதேவர் பதினோராம் திருமுறையுள் ஒன்றாகிய 'ஈங்கோய் எழுபது' என்னும் நூலை இயற்றியுள்ளார்.

**ஈசாக்கான்** : வட இந்தியாவில் தில்லிச் சுல்தானிய வமிசங்களுள் ஒன்றான உலோடி மரபைப் பலோல்கான் என்னும் ஆப்கானியர் நிலைநாட்டினார். இவருடைய ஆட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்த குறுநில மன்னர்களுள் ஒருவன் ஈசாக்கான். இவன் கோயில் (Koil) என்னும் பகுதியைச் சுதந்திர அரசன் போல் ஆண்டான். ஆனால், உலோடி வமிச அரசர் பலோல்கான் இவனுடைய கொட்டத்தை அடக்கித் தம் ஆட்சியை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். ஈசாக்கான் அடிபணிந்த பின்னர் கருணையுடன் நடத்தப்பட்டான்.

**ஈசாக்கான்[2]** என்பான் மொகலாயப் பேரரசர் அக்பரின் ஆட்சிக்காலத்தில் வங்காளப் பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களுள் ஒருவன். அக்பரால் அமர்த்தப்பட்ட வங்காள ஆளுநர் முசாபர் கான் துர்பதி (Muzaffar Khan Turbati) என்பான் திறமையற்றவன்; எனினும், அவன் கடும் நடவடிக்கைகளாலும் கடுஞ்சொற்களாலும் பலரைப் பகைத்துக் கொண்டான். இதனால், வங்காளத்தில் புதுத்தொல்லைகள் பிறந்தன. பல குறுநில மன்னர்கள் அக்பரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்களுள் ஈசாக்கானும் (Isakhan) ஒருவன். இவன் கிழக்கு மத்திய தாக்காவையும் (Dhaka) மைமன்சிங்கையும் ஆண்டான்.

**ஈசாக்கு, இசுடெல்லா (கி.பி. 1100-1169)** புதிய காலக் கிறித்தவச் சிந்தனையாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1100-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இங்கிலாந்து, பிரான்சுபோன்ற நாடுகளில் கல்வி பயிலுவதற்கு முன்பு சிடாக்சு (Citeaux) என்ற சமய மடத்தில் சேர்ந்தார். சில ஆண்டுகள் கழிந்த பின்பு இவர் போய்டு (Poitou) என்ற மாவட்டத்தியுள்ள இசுடெல்லா என்னுமிடத்தில் கிறித்தவச் சமய குரு ஆனார்.

இவர் எழுத்தாற்றல் மிக்கவர். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை மனித உடன்பாடு (De Amine), கிறித்தவச் சமய விளக்கம், 54 சமயச் சொற்பொழிவுகள் ஆகியவையாகும். இசுடெல்லா (Stella) என்னுமிடத்தில் இவர் நிகழ்த்திய கிறித்தவச் சமயச் சொற்பொழிவுகள் குறிப்பிடத்தக்கவை.

இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் சிறந்த கிறித்தவச் சமயச் சிந்தனையாளராகவும், உளவியல் கோட்பாட்டாளராகவும் திகழ்ந்தார். இவர் தம் உளவியல் கோட்பாடுகள் பிரான்சு நாட்டுப் பள்ளிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டன .

இவர் பள்ளிப் பருவம் முதற்கொண்டே கிறித்தவச்சமயத்தில் ஆர்வங் கொண்டிருந்தார். இவரது எழுத்துப்பணி முழுவதும் கிறித்தவச் சமய மறையான விவிலிய நூலைப் பற்றியதாகும். ஈசாக்கு தம் காலத்துக் கிறித்தவ அறிஞர்களுடன் கிறித்தவச் சமயக் கருத்தில் சில இடங்களில் முரண்பட்டபோதிலும், கிறித்தவச் சமய நூல் தொகுதியைப் பயன்படுத்துகையில் மிகக் கவனத்துடனும் முறையாகவும் செயற்பட்டார்.

கிறித்தவச் சமயத் துறவிகளின் சமய விளக்கங்கள் மனித அற ஒழுக்க முறையுடன் இணைந்தவை; கிறித்தவச் சமய அற ஒழுக்கமுறை கிறித்தவ விவிலிய நூலின் சமய நூல் தொகுதியிலிருந்து பெறப்பட்டது என்பது இவர் கருத்து. இவர் கிறித்தவச் சமயக் கோட்பாட்டில் மிகுந்த ஆர்வமுடன் திகழ்ந்தார். இவர் கிறித்தவ விவிலிய மறைக்குத் தந்த பொருளுரை விளக்கம் புலன் கடந்த மெய்ப் பொருளியலுடன் தொடர்பு பெற்றிருந்தது.

தத்துவ இறையியல் கோட்பாட்டின்படி, ஈசாக்கு இசுடெல்லா (Issac of Stella) பழங்காலக் கிறித்தவச் சமயக் கோட்பாட்டினர் ஆவர். புதிய பிளேட்டோனியம் (New Platonism) என்பது, பிளேட்டோவின் கருத்துகளில் புதிய மாறுபாடுகளை உணர்ந்ததனால் அரிசுடாட்டிலுக்குப் பின்னர் உண்டாகியதாகும். இவர் காலத்தில் கிரேக்கக் கிறித்தவச் சமயத் தந்தையர்களும் புனித அகசுட்டினுமாகிய இரு சாரார் கோட்பாடுகளும் கிறித்தவ மடாலயங்களில் கற்பிக்கப்பட்டன.

உண்மையாகவே, கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் புதிய பிளேட்டோனியக் கோட்பாட்டில் ஈசாக்கு இசுடெல்லாவுக்கு இணையான அறிவினைப் பெற்றவர்கள் இடைக்காலத்தில் யாரும் இல்லை எனலாம். இவர் கிறித்தவச் சமய அல்லது கோட்பாட்டினுடைய கருத்துகளையும் தயானிசிய (Diony-siam) வழிபாட்டிற்குரிய சொற்களையும் பயன்படுத்துவதில் வல்லவர். இவர் தயானிசிய வழிபாட்டிற்குரிய சொற்களைப் பயன்படுத்துவதன் வாயிலாகப் புகழையும், சில தவறான வழிபாட்டிற்குரிய சொற்களைப் பயன்படுத்துவதை வெளி உலகிற்கு எடுத்துரைப்பதில் வல்லமையையும் பெற்றிருந்தார். இவர் 12 கிரேக்கச் சொற்களைத் தயானிசிய வழிபாட்டில் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஈசாக்கு இசுடெல்லா தத்துவவியல், இறையியல், புனித தாமசு அகசுட்டினின் மறைபொருள் சார்ந்த கருத்தியல் ஆகியவற்றிலும் ஈடுபட்டு, அவற்றின் வாயிலாகவும் புகழடைந்தார்.

ஈசாக்கு புதிய பிளேட்டோனியக் கோட்பாட்டையும் அரிசுடாட்டிலின் கோட்பாட்டையும் பொருத்திக்

காட்டினார். மனித அறிவின் காரணத்திறனைத் தெளிவுபடுத்தவும், புனித அகசுட்டின் பேரொளி விளக்கக் கோட்பாட்டினைப் புலன்களுக்கு அப்பாற் பட்ட கோட்பாட்டுடன் ஒன்றுபடுத்தவும் இவர் அறிவு முறையைப் பயன்படுத்தினார். ஈசாக்கின் பகுத்தறிவு ஆய்வு முறையமைப்பு பொதுக்கருத்தமைவு உடைய தாகும்.

புலன்களுக்கு அப்பாற்பட்டுள்ள தொடு உணர்வு அனுபவங்களுக்கும், உற்றறியக்கூடிய பொருள்களை அறிவதற்கும் பகுத்தறிவு ஆராய்ச்சியின் அமைப்பு ஒரு பொதுமையான கருத்தமைவு உடையதாகும் என்று இவர் கூறுகிறார்.

பேரொளிவிளக்கத்தின் மூலம் மனித அறிவுத் திறன் அவ்வப்போது உடல் சார்வில்லாத பொருள்களை அறிந்து கொள்ளுதற்குப் பயன்படுகின்றது என்றும் பொருள்களை நினைக்க அறிவு பயன்படுமாறு கற் பனை உதவுகிறது என்றும் இவர் விளக்குகின்றார்.

கடவுட் கோட்பாடு பற்றிய ஈசாக்கு இசுடெல் லாவின் எதிர்மறை விளக்கத்தில் போலித் தயானிசிய வழிபாட்டின் செல்வாக்கு பெருமளவில் காணப் படுகின்றது. ஈசாக்கு உயர் சமயக் குழுவின் மேல் அமைப்புகளிலும், பக்தியின் ஒழுக்க நெறிகளிலும், சமய இலக்கியக் கோட்பாட்டின் குறியீடுகளை வற் புறுத்துவதிலும் ஆர்வம் கொண்டு விளங்கினார். புனித அகசுட்டின் கூறிய கிறித்தவ இறையியல் கோட் பாட்டின் கருத்தான 'நடப்பது யாவுமே கடவுளால் முன்னுறுதி செய்யப்பட்டவை' என்பது, ஈசாக்கு இசு டெல்லாவின் பேச்சுகளிலும் பரவலாக இடம்பெற் றுள்ளது.

ஈசாக்கு தம் படைப்புகளிலும் சொற்பொழிவு களிலும் கிறித்தவச் சமயக் கோட்பாடுகளை விளக்கு மிடத்து, உளவியற் கருத்துகளைத் தகுந்த எடுத்துக் காட்டுகளின் வாயிலாக இயைபுபடுத்திக் கூறுவதை நெறியாகக் கொண்டிருந்தார். இவர்தம் இறையியற் கருத்துகளிலும் அவற்றை விளக்கிக் கூறும் நடையிலும் புனித அகசுட்டினின் செல்வாக்கு (Influence) ஆழ மாகப் பதிந்திருந்தது. இவர் கிறித்தவக் கடவுளின் மும்மைநிலை (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி), வீட்டு நெறி, தனிமனித வாழ்க்கையில் நற்பண்புகள் ஆகிய வற்றைப் பெரிதும் வலியுறுத்தினார். கிறித்தவச் சமயத்தின் அறிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஈசாக்கு கி.பி.1169-இல் காலமானார்.

**ஈசாப்புக் கதைகள்** பழம் பெருமையும் உல கப் புகழும் கொண்டவை; நீதியுணர்த்தும் கற்பனைக் கருவூலங்கள். இவை மனித வாழ்க்கையின் அவலங் களையும் குறைபாடுகளையும் விலங்குகள், பறவை கள், தெய்வங்கள், உயிரற்ற பொருள்கள் ஆகியவற் றைப் பாத்திரங்களாகக் கொண்டு, சுருங்கச் சொல்லி விளக்கும் தன்மையன.

இக்கதைகளின் ஆசிரியராகக் கருதப்படும் கிரேக்க அறிஞர் ஈசாப்பு (Aesop, கி.மு. 620-560) என்பவர் பற்றி வழங்கும் கதைகள் பல. அவற்றுள் வரலாற்று உண்மை உடையவை என்று ஏற்றுக் கொள்ளப்படுபவை சிலவே. இவர் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் சாமோசு (Samos) என்னும் தீவில் இயாதுமன் (Iadmon) என் பவரிடம் அடிமையாய் இருந்தாரென்றும் எண்ணு வதற்குச் சான்றுகள் உள்ளன. இவரது அடிமை வாழ்க்கையினைப் பற்றி கி.மு. ஐந்தாம் நூற்றாண் டில் வாழ்ந்த வரலாற்று அறிஞரான எரடோடசு (Herodotus) குறிப்பிடுகிறார். ஈசாப்பு திரேசு நாட் டின் மெசெம்பிரியா (Mesembria) என்னும் ஊரைச் சார்ந்தவரென்று, கி.மு. 421க்கு முன் நூல் எழுதிய யூசீன் (Eugeon) என்பார் அறிவித்திருப்பதாக அரிசு டாட்டில் (Aristotle) தெரிவிக்கிறார்.

ஈசாப்பின் வாழ்க்கை பற்றிப் பல ஆதாரமற்ற கட்டுக் கதைகளும் கிடைக்கின்றன. இவரது இறப் புப் பற்றிய கதை வருத்தந் தருவது. இவர் தெல்பி (Delphi) என்ற நகரில் இருந்தபொழுது அவ்வூர் மக்களைப் பழித்துப் பேசினாரென்றும், அதனால் சீற்றமடைந்தோர் சிலர் இவர் பொருள்களுள் ஒரு புனிதமான தங்கக் கிண்ணத்தைச் சேர்த்துவிட்டு, இவர் வெளியூர் செல்லுகையில் அதனை வெளிப் படுத்தித் திருடரென்று குற்றம் சாட்டி, ஒரு மலையி லிருந்து தள்ளிக் கொலை செய்தனரென்றும், பின் னர் இதுபற்றி வருந்திய எசமானர் ஈசாப்பின் பேர னுக்கு மிகுந்த பணம் அளித்துப் பழி துடைத்துக் கொள்ள முயன்றனரென்றும் கூறுவர். இவர் திரே சைச் சேர்ந்தவரா, பிரைசியாவைச் (Phrygia) சேர்ந்தவரா என்பதிலும் கருத்து வேறுபாடுகள் உள் ளன. புகழ்பெற்ற மனிதர்கள் பலரோடு இவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இலிடியாவின் மன்னன் குரோசசு (King Crossus of Lydia), ஏதென்சின் சட்டப் பேரறிஞன் சலோன் (Solon), கிரேக்கத்தின் ஏழு பேரறிஞர்கள் (Seven Wise Men), பெண்பாற் புலவர் சாபோ (Sapho) ஆகியோர் இவர் காலத்தவராகக் கருதப்படுகின்ற னர். ஆனால் அதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

ஈசாப்பின் வாழ்க்கை என்னும் கற்பனை மிகுந்த நூல் எகிப்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழு தப்பட்டிருத்தல் வேண்டும். இந்நூல் நாளடைவில் பல புதுச் சேர்க்கைகளோடு புது வடிவங்கள்பெற்

றது. இதனைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளானுடிசு (Planudes) சுருங்கிய வடிவில் வெளிக்கொணர்ந்தார். 1952-இல் இது முதன்முதலாக முழு அச்சு வடிவம் பெற்றது. ஈசாப்பு தம் எசமானர் சான்துசுவை (Xanthus) ஏமாற்றி விடுதலை பெற்றது, சாமோசு நகரத்தார் அவரைக் குரோசசிடம் ஒப்படைத்தது, மன்னனுக்காக அவர் கதைகள் கூறியது, அமைச்சராகவும் விடுகதைகள் புதிர்கள் ஆகியவற்றை விளக்குபவராகவும் அவர் பணியாற்றியது, தெல்பியில் கொலையுண்டது ஆகியவை பற்றிய கற்பனைத் திரட்டாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் ஈசாப்பு தெனாலிராமனைப் போன்று நுண்ணறிவு மிகுந்த ஒரு கோமாளியாகவும் மெத்தப் படித்த அறிஞர்களையும் பிரபுக்களையும் எளிதில் வெற்றி கொள்ளும் படிக்காத மேதையாகவும் காட்டப்படுகிறார். அலெக்சிசு (Alexis) என்னும் கிரேக்க நாடகாசிரியர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதிய ஈசாப்பு என்ற இன்பியல் நாடகத்திலும் இவர் இவ்வாறே படைக்கப் பட்டிருந்தார் என்பர். அந்நாடகமே இவ்வாழ்க்கை வரலாற்றிற்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

அரிசுடோபெனிசு (Aristophanes) தம் குளவிகள் (Wasps) என்னும் நாடகத்தில் பிலாக்லியன் (Philocleon) என்னும் பாத்திரம் ஈசாப்பின் கதைகளை விருந்துகளில் நடக்கும் உரையாடல்களிலிருந்து கற்றறிந்தனவாகக் குறிப்பிடுகிறார். சாக்கிரட்டீசு சிறையிலிருந்தபொழுது ஈசாப்பின் கதைகள் சிலவற்றிற்குக் கவிதை வடிவம் தந்ததாகப் பிளேட்டோ தெரிவிக்கிறார். அரிசுடாட்டில் தம் நடையியல் (Rhetoric) என்னும் நூலில், ஈசாப்பு ஓர் அரசியல்வாதியைத் தம் கதையின் மூலம் காக்க முயன்ற முறையைச் சொல்லுகிறார். பொதுச் சொத்தைக் கையாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல்வாதியைப் பதவியிலிருந்து நீக்க வேண்டாமென்று வாதிட்ட ஈசாப்பு, ஈக்களால் துன்புற்ற நரியின் கதையைக் கூறினார். நரியொன்றைத் தொல்லைக்குள்ளாக்கிய ஈக்களை விரட்ட ஒரு முள்ளம்பன்றி முன்வந்தது. நரியோ அவ்வீக்கள் முடிந்த அளவு குருதியைக் குடித்துவிட்டன என்றும், அவை விரட்டப்பட்டால் வேறு ஈக்கள் அதன் உடலில் அமர்ந்து எஞ்சியுள்ள குருதியையும் குடித்துவிடுமென்றும் கூறியது. இதனால், அவ்வரசியல்வாதி வேண்டிய அளவு சம்பாதித்துவிட்டதால் அவனே தொடர்ந்து பதவியில் இருக்கட்டுமென்று அறிவுறுத்தினார்.

தவளைகளின் கதையொன்றும் ஈசாப்புக் கூறியதாகச் சொல்லப்படுகிறது. பிசசுடிராசு (Pisistratus) என்ற தலைவனை ஏதென்சு நாட்டார் பதவியிலிருந்து விலக்க முற்பட்டபொழுது, ஈசாப்பு ஒரு கதை சொல்லி அதனைத் தடுக்க முயன்றார். ஒரு காலத்தில் பல தவளைகள் ஒன்று கூடி, அரசன் வேண்டுமென்று சூபிடரிடம் (Jupitor) கேட்டன. ஒரு கொக்கு அரசனாக அனுப்பப்படவும் அது தவளைகளையெல்லாம் தின்று தீர்த்தது. இது போன்று பல சூழ்நிலைகளில் ஈசாப்புக் கூறியனவாகப் பல கதைகள் வாய்மொழியாகவே வழங்கி வந்தன. அவற்றை அவர் எழுதி வைத்ததாகத் தெரியவில்லை. எனவே, நாளடைவில் மற்றையோர் சொன்ன, எழுதிய கதைகளோடு சேர்க்கப்பட்டு ஈசாப்பின் பெயரிலேயே வழங்கலாயின. ஏழு தொகுதிகளாகப் பல்கிப் பெருகிய இக்கதைகளில் இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் சென்ற கதைகளும் சேர்ந்து காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்களால் எவையெவை உண்மையில் ஈசாப்பால் சொல்லப்பட்டவையென்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஈசாப்பின் காலத்திற்கு முன்னேயே கிரேக்க நாட்டில் விலங்குக் கதைகள் வழக்கில் இருந்தமைக்குச் சான்றுகள் இருப்பினும், இவரே விலங்குக் கதைகளின் தந்தையாகக் கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அவருக்குமுன் இத்தகைய கதைகள் நகைச்சுவை கொண்ட துணுக்குகளாகவே சொல்லப்பட்டு வந்தன. அவரே இவற்றிற்கு ஓர் ஏற்றம் அளித்து, மக்களின் கவனத்தை ஈர்க்கும் பேச்சுகளில் வலுவுடைய ஆயுதமாகப் பயன்படுத்தி, அவற்றின் சிறப்பைப் புலப்படுத்தினார்.

பலேரியசு (Phalereus) என்பாரே கி.மு. 300-இல் முதன்முதலாக இத்தகைய கதைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். இவை இப்பொழுது கிடைக்கவில்லை. ஈசாப்பின் பெயரில் இன்று கிடைத்துள்ள கதைகளுள் சில, பாப்ரியசு (Babrius) என்ற கிரேக்கக் கவிஞரால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கவிதையாக்கப்பட்டன. பீடிரசு (Phaedrus) என்பார் 97 கவிதைகளுக்கு இலத்தீனில் கவிதை வடிவம் தந்தார். கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் 230 கதைகள் அகசுதானா (Augustana) என்ற தலைப்பில் பெயர் தெரியாத ஒருவரால் தொகுக்கப்பட்டன. இத்தொகுதிகளின் கதைகளில் பல நூற்றுக்கு மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் ஈசாப்பின் பெயரிலேயே காணப்பட்டன. வில்லியம் காக்சுடன் (William Caxton) கி.பி. 1484-இல் ஆங்கிலத்தில் 97 கதைகளை அச்சிட்டார். இன்பந்து என்ரிக்கு (The Infante Henrique) கி.பி. 1496-இல் இசுபானிசு (Spanish) மொழியில் பல கதைகளைத் தந்தார். இவற்றிற்கு இரியார்த்து (Iriarte) அம்மொழியிலேயே கவிதை வடிவம் கொடுத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட கதைகள் கி.பி. பதின்மூன்

றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேரி தி பிரான்சு (Marie de France) என்பவரால் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டன.

வில்லியம் காக்சுடன் தம் பதிப்பின் முன்னுரையில் இக்கதைகள் மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று அறிவு புகட்டும் ஆற்றலுடையன வென்றும், விலங்குகள், பறவைகள், மரங்கள் ஆகியவற்றைப் பாத்திரங்களாகக் கொண்டு மனித வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றனவென்றும் எழுதியுள்ளார். சேவலும் விலையுயர்ந்த கல்லும் பற்றிய கதை முதலாவதாக இத்தொகுதியில் இடம் பெறுகிறது. குப்பையில் கிடக்கிற வைரக்கல்லைப் பயனற்றதாக ஒதுக்கும் சேவலைப் போன்று இக் கதைகளில் புதைந்து கிடக்கும் மேலான அறிவைப் புறக்கணித்துவிட்டு, முட்டாள்களாக வேண்டாமென்று ஆசிரியர் குறிப்பால் அறிவுறுத்துகிறார். இரண்டாம் கதையில் ஆடு ஒன்று பல குற்றங்கள் செய்ததால், அதனை உண்ணத் தனக்கு உரிமையுண்டு என்று கூறும் ஓநாய் இடம்பெறுகிறது. பேராசையுள்ள நாய் வாயில் மாமிசத் துண்டோடு ஓடையைக் கடக்கும்பொழுது, அதன் நிழலை நீரில் கண்டு, அதனையும் கவ்வுதற்கு நீரில் பாயும் மடமையை ஐந்தாம் கதை படம் பிடித்துக் காட்டுகிறது. இன்னொரு கதையில் எளியோரை ஏய்த்துப் பிழைக்க முயல்வோர் தம்மினும் வலியோரால் தண்டிக்கப்படுவார் என்பது சுட்டப்படுகிறது. குயிலின் கூட்டிற்கு வரும் கழுகு அது நன்றாகப் பாடாவிடில் அதன் குஞ்சுகளில் ஒன்றைத் தின்று விடுவேனென்று மிரட்டுகிறது. அப்பொழுது அங்கு வரும் வேடன் அக்கழுகைப் பிடித்துச் செல்கிறான். ஒவ்வொரு கதையின் இறுதியிலும் அதனால் அறியப்பட வேண்டிய நீதி வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. இந்நீதிகள் யாரால் எக்காலத்தில் சேர்க்கப் பட்டனவென்பதிலும் அறிஞர்களிடையே உடன்பாடு இல்லை.

ஈசாப்பு என்பவர் யார், அவர் எக்காலத்தில் வாழ்ந்தார், உண்மையிலேயே அவரால் சொல்லப் பட்ட கதைகள் எவையெவை, அவை எச்சமயங்களில் எந்நோக்குடன் சொல்லப்பட்டன என்பன போன்ற வினாக்களுக்குச் சரியான விடைகள் கிடைக்கவில்லையாயினும், அவர் பெயரால் வழங்குகிற கதைகளுள் பல உலக இலக்கிய வரலாற்றில் தமக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்து விட்டன என்பது உறுதி. அவற்றின் தாக்கத்தினால் உலகில் பல்வேறு மொழிகளில் பொருளாழம் மிகுந்த விலங்குக் கதைகள் தோற்றம் பெற்றன. ஈசாப்பின் கதைகளில் 'நரியும் திராட்சைப் பழங்களும்'. 'வைக்கோல் போரில் நாய்', 'எறும்பும் வெட்டுக்கிளியும்' போன்றவை உலகின் எல்லா நாடுகளிலும் மத, இன, நிற, மொழி வேறுபாடின்றி, எல்லோராலும் அறியப்பட்டவையாகத் திகழ்வது அவற்றின் சிறப்புக்குச் சான்றாகும். பல்வேறுபட்ட மனிதப் பண்புகளை மிகவும் நுண்ணிய முறையில் ஆராய்ந்து, எளிய, எல்லோருக்கும் புரியக் கூடிய கதைகளால் அவற்றை விளக்க முற்பட்டது ஈசாப்பின் தனிப் பெருமையாகும்.

துணை நூல்கள்:

**Jacobs, J.**, The Fables of Aesop, New York, 1889.

**Daby, Lloyd W.**, Aesop without Morals, New York, 1961.

**Handford, Stanley**, A., Fables of Aesop Baltimore, 1954.

**ஈசான சிவ பண்டிதர்** முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985-1014) அரசகுரு போன்றவர். முதலாம் இராசராசன் கங்கைக் கரையில் சிறப்புற்று விளங்கிய சைவ சமய குருமார் பலரைத் தஞ்சைக்கு வரவழைத்து, தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பூசை செய்வதற்கு அமர்த்தினான். அவர்களுள் அருச்சகர் குழுத்தலைவர் ஈசான சிவ பண்டிதர் குறிப்பிடத்தக்கவர். இவர் இராசராசனின் குருவாகி அவனுக்கு நல் வழி காட்டினார். இவர் கோயில் விமானத்தின்மீதும் எட்டுத் திசைக் காவலர்களின் தளிகள்மீதும் வைப்பதற்காக, தங்கமுலாம் பூசப் பட்ட எட்டுச் செம்புக் கலசங்களை வழங்கினார்.

ஈசான சிவ பண்டிதர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குக் கற்பூரம் வாங்குவதற்கு 180 காசுகளைத் தானமளித்துள்ளார் என்பதனை, முதலாம் இராசேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். தஞ்சைப் பெருங்கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு அக் கோயிலில் எழுந்தருளுவிக்கப்பட்ட 'குருக்களின்' பதுமத்திற்கு முன் விளக்கேற்றுதற்கு இவர் பணம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இப்பண்டிதர் காஞ்சிபுரத்திற்குத் தெற்கிலுள்ள கூழம்பந்தல் என்னுமிடத்தில் 'கங்கை கொண்ட சோழீச்சுரர்' கோயிலைக் கட்டுவித்தார் என்பது, முதலாம் இராசேந்திரனது 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலறியப்படுகிறது. மேலும், முதலாம் இராசேந்திரனது 20-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், தஞ்சைப் பெருங்கோயிலின் தலைமைக் குருக்களாகச் சர்வசிவ பண்டிதர் விளங்கினார் என்று குறிக்கப்பட்டுள்ளமையால், இவர் கி.பி. 1031 வரை தஞ்சை

கோயிலின் நிருவாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார் என்று கொள்ளலாம்.

**ஈசான சிவாச்சாரியார் (1900-1963)** சென்னிமலையில் 16. 6.1900-இல் பிறந்தார். இவர் தந்தையார் சிவசுப்பிரமணியக் குருக்கள். இவர் தம் தந்தையார், காவேரி சுப்பிரமணியக் குருக்கள், மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை போன்ற புலவர்களிடம் கற்றுத் தமிழ், வடமொழிகளிலும் சைவ சித்தாந்தத்திலும் தேர்ச்சி பெற்றார்.

இவர் சென்னிமலையில் கலாஞான சங்கத்தை ஏற்படுத்தி, அங்கு ஒரு நூலகத்தையும் நிறுவினார். இவர் மெய் வருத்தத்தையோ பொருட்செலவையோ பொருட்படுத்தாமல், பாரத நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் நேபாளத்திற்கும் சென்று, சைவாகமச் சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பேணினார்.

இவர் காசியில் 12 ஆண்டுகள் ஆகம ஆராய்ச்சி செய்து 'காசிவாசி' என்ற பட்டம் பெற்றார். பின்னர்ப் பழநியில் வாழத் தொடங்கி, அங்குள்ள சிவாகமபாடசாலைத் தலைவராகப் பணியாற்றினார். சைவ சித்தாந்த சரபம் என்னும் பட்டத்தினைத் தருமபுர ஆதீனமும், மகா மகோபாத்தியாய, சிவாகமக்கடல், சிவாகம ஞானபாநு முதலிய பல பட்டங்களைப் பல்வேறு நிறுவனங்களும் இவருக்கு வழங்கிப் பாராட்டின. இவர் பல சைவ சமய மாநாடுகளில் பங்கேற்று உரைநிகழ்த்தியுள்ளார். ஆயிரக்கணக்கானோருக்குச் சமயத் தீட்சை வழங்கியுள்ளார்.

சைவ சமய நெறியினையும் கோயில் வழிபாட்டு முறையினையும் பரப்பி, நெறியில் வாழ்ந்த இப்பெரியார் 10. 4. 1963-இல் காலமானார். இரா.ச.

**ஈசான சுவாமிகள்** திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த புலவர்களுள் ஒருவர்; கவிஞர். இவர் கடம்பர் கோயிற் புராணத்தை இயற்றியுள்ளார்.

**ஈசான சுவாமிகள்[2]** பொம்மபுர ஆதீனப் புலவர். வசவ புராணம் இயற்றியவர். இப்புராணம் சேக்கிழார் காலத்தைய பசவேசர் என்னும் வச வண்ணர் வரலாற்றைக் கூறுவதாகும். இது வீரசைவ சமயச் செய்திகளைக் கூறும் நூல்.

**ஈசானதந்தர்** கம்போடியாவை ஆண்ட இந்து மன்னர் ஈசானவர்மன் காலத்தவர். இவர் ஒரு முனிவர். இவருடன் வித்தியாரண்யர் என்பாரும் வாழ்ந்ததாக அறியப்படுகிறது. கம்போடியா மன்னர்கள் இந்து சமயங்களான சைவம், வைணவம் போன்றவற்றைப் போற்றிக் காத்தவர்கள். இந்துக்களின் ஆசிரம வாழ்க்கையையும் வேதவேள்விகளையும் செய்வதில் வல்லவர்களான முனிவர்கள் இம்மன்னர்களுக்கு உறுதுணையாக இருந்தனர் என்பதற்கு ஈசானதத்தரும் வித்தியாரண்யரும் சான்றாவர்.

**ஈசான தேசிகர்** 'இலக்கணக் கொத்து' நூலின் ஆசிரியர். இவர்தம் இயற்பெயர் சாமிநாத தேசிகர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் பிறந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் ஐந்தாம் பட்டத்தில் இருந்த மாசிலாமணி தேசிகரிடம் தீட்சை பெற்றுத் துறவு பூண்டு குட்டித் தம்பிரானாக விளங்கினார். மயிலேறும் பெருமாள் பிள்ளையிடம் தமிழ் நூல்களையும் செப்பறைக் கனகசபாபதிக் குருக்களிடம் வடமொழி நூல்களையும் பயின்றார். இவர் திருவாவடுதுறையில் தங்கியிருந்தபோது இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகரோடு தொடர்பு கொண்டார். பின்னர்ச் சங்காபிடேகம் செய்யப் பெற்று, ஈசானதேசிகர் எனப் பட்டம் சூட்டித் திருநெல்வேலி ஈசான மடத்தின் தலைவரானார்.

இவர் திருச்செந்திற் கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய நூலையும் இலக்கணக் கொத்து என்னும் இலக்கண நூலையும் தசகாரியம் என்னும் சித்தாந்த சாத்திர நூலையும் இயற்றினார். சிவஞானபோதச் சூர்ணிக் கொத்தினையும் இவரே இயற்றினார் என்றும் கூறுவர்.

இலக்கணக் கொத்து தமிழ் இலக்கணத்தில் வடமொழி இலக்கணக் கலப்புப் பற்றி ஆராய்ந்து கூறும் நூலாகும். சொல்லிலக்கணம் பற்றி நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் பலவிடங்களிற் கூறியும் கூறாது விடுத்தும் உள்ள செய்திகளைத் தொகுத்து ஆராய்ந்து இந்நூல் அளிக்கிறது. இந்நூல் இலக்கணத் திறனாய்வு போல அமைந்திருந்தபோதிலும் இவருடைய வடமொழிச் சார்பு காரணமாகப் பிற்காலத் தமிழறிஞர்களால் பின்பற்றப்படவில்லை

திருச்செந்திற் கலம்பகம் திருச்செந்தூர்ச் செந்திலாண்டவன் கோவிலில் பூசைக் காலத்தின்போது ஓதப்படுகிறது. தசகாரியம் பண்டார சாத்திரம் என்னும் சித்தாந்த சாத்திரத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. நன்னூல் விருத்தியுரை ஆசிரியர் சங்கர நமச்சிவாயப் புலவர் இவர் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

**ஈசான முனிவர்** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாச்சாரியார்களுள் ஒருவர்; வேம்பத்தூரில் பிறந்தமையால் நிம்பை ஈசானமுனிவர் எனவும்

வழங்கப்பெற்றார். ஈசான தேவர் என்பது இவர்தம் வேறுபெயர். இவர் தென்காசிப் பாண்டிய மரபில் தோன்றித் தமிழ்ப் புலவராக விளங்கிய வரதுங்க ராமபாண்டிய மன்னனுக்குக் (கி.பி. 1583-1613) குருவாக விளங்கினார். சங்கர விலாசம் என்னும் புரா ணம் இயற்றிய சிதம்பரநாத கவிக்கு ஞானகுருவாக வும் இலக்கண ஆசிரியராகவும் விளங்கியமையால், அவர் ஈசான முனிவரை, 'சொல்லும் முத் தமிழின் இலக்கணப் பகுதி, தொகுத்தளித்து எனையாண்டரு ளும், எல்லையிட்டளவா இன்ப வீடுணரும் ஈசான தேவனைப் பணிவாம்' என்று போற்றிப் பரவியுள் ளார்.

**ஈசானவர்மன்** தென்கிழக்கு ஆசியாவில் கம் போடியாவை (Cambodia) ஆண்ட இந்து அரசர் களுள் ஒருவர். இந்துக்கள் கி.பி. முதலாம் நூற்றாண் டிலேயே பூனான், கம்போடியா போன்ற பகுதிகளில் இந்துக் குடியேற்றங்களை நிலைநாட்டினர். முதலாம் பவவர்மன் என்பான் கி.பி. 590-ஆம் ஆண்டளவில் கம்போடியாவின் ஆட்சியைக் கைப்பற்றி அதனைச் சுதந்திர நாடாக்கினான். இவன் மகாராசாதிராசன் என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டதுடன் பவபுரம் என்னும் புதிய தலைநகரையும் நிலைநாட்டினான். இவன் சைவ, வைணவச் சமயங்களைப் புரந்தவன். இந்து சமயம் மிகுதியாகப் பரவிக் கம்போடியாவில் முன்னேறியது. இவனை அடுத்து அரியணை ஏறிய வன் மகேந்திரவர்மன். இவனை அடுத்துப் பட்டத் திற்கு வந்தவன் ஈசானவர்மன் என்பான். இவன் இந்து சமய ஆசிரமங்களைக் கம்போடியாவில் நிலை நாட்டி, வேத வேள்விகளை வளர்த்தான்; மடாலய வாழ்க்கை முறையை ஆதரித்தான்.

**ஈசிய நாகரிகம்** என்பது ஆசியா மைனருக் கும் கிரீசுக்கும் இடையிலுள்ள ஈசியக் கடல் (Aegean Sea), அதிலுள்ள தீவுகள் ஆகியவற்றில் பண்டைக் காலத்திலிருந்ததாகும். இது ஐரோப்பிய நாகரிகங் களுள் பழமையானது. மிகப் பெரிய தீவான கிரீட் டில் ஈசிய நாகரிகம் (Aegean Civilization) தொடங்கி, மற்ற தீவுகட்கும் கிரீசுக்கும் பரவியது. இது கி. மு. 1600-இல் மத்தியதரைக் கடற் பகுதியில் சீரும் சிறப்புமுற்ற நிலையில் பரவியிருந்தது.

கிரீட்டுத் தீவு: மத்திய தரைக்கடலில் கிரீசுக்குத் தெற்கில் இத்தீவு ஏறத்தாழ 192 கி. மீ. நீளமும் 48 கி. மீ. அகலமும் உள்ளது. உலகில் மிகப் பழமையான நாகரிக மையங்களுள் இத்தீவும் ஒன்றாகும் . இதுவே ஈசிய நாகரிகத்தின் பிறப்பிடமும் ஆகும். கிரீட்டுத் தீவில்நூற்றுக்கு மேற்பட்ட நகரங்கள் சிறந்து விளங்கின. அவற்றுள் தலை சிறந்த நகரங்கள் நாசசு (Cnossus), பீசுடசு (Phaestus) என்பனவாம். இத னைக் கிரீட்டு நாகரிகம் அல்லது மினோவ நாகரிகம் (Minoan Civilization) என்பர். ஏனெனில், நாசசு நகரை மினோசு (Minos) என்னும் அரசர் ஆண்டு வந்தார். இந்நகரத்தின் தொல்பொருள்களை ஆய்ந்து கண்டவர் சர் ஆர்தர் இவான்சு (Sir Arthur Evans) என்னும் ஆங்கிலேயராவார். இந்நாகரிகம் வரலாற் றுக் காலத்திற்கு முந்தியது. இதன் காலத்தை முந்திய மினோவ காலம் (கி. மு. 2700-2000), மத்திய மினோவ காலம் (கி. மு. 2000-1600), பிந்திய மினோவ காலம் (கி. மு. 1600-1400) என்று வர லாற்று ஆசிரியர்கள் வரையறுத்துள்ளனர்.

செருமானியத் தொல்பொருளியலார் என்றி சீலிமென் (Henry Schileman) என்பவர் முதன்முதல் (கி. பி. 1890) கிரீட்டில் அகழாய்வு செய்து, இந் நாகரிகத்தின் சிறப்புக் கூறுகளை வெளியிட்டார்.

மினோவ நாகரிகம் ஏறத்தாழ கி. மு. 3000-இல் தொடங்கியது. தொடக்க காலத்தில் இந்நாகரிகம் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கவில்லை. இப் பொழுது கிரீட்டு கற்காலத்திலிருந்து உலோக காலத் திற்கு மாறியது. இது வெண்கலக் காலத்திற்கு முன்பே உயர்ந்து விளங்கியது. கிரீட்டில் வாழ்ந்த மக்கள் அமைதியுடன் சிறப்பாக வாழ்ந்தனர்.

முந்திய மினோவ காலத்தில் மக்கள் சிறிய சதுர மான வீடுகள் நிறைந்த சிற்றூர்களில் வாழ்ந்தனர். இவர்கள் கற்களால் திறமையுடன் வீடுகளைக் கட்டிக் கொண்டனர்; வெண்கல வேலை செய்யும் முறையை அறிந்திருந்தனர்; கத்திகள், கோடரிகள், ஈட்டி முனைகள் ஆகியவற்றைச் செய்யும் முறையையும் அறிந்திருந்தனர்; அழகான அணிகலன்களைப் பொன் னாலும் வெள்ளியாலும் செய்தனர். அணிகலன்கள் மிகுந்த வேலைப்பாடு கொண்டதாக இருந்தன. அவற்றில் விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப் பட்டிருந்தன.

மினோவ நாகரிக மக்கள் கி. மு. 2000-இல் தம் வாழ்வில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தனர். இக்கால மக்களை முந்திய மினோவ நாகரிக மக்கள் என்பர். கி. மு. 2000 முதல் 1600 வரையிலான நாகரிகத்தை மத்திய மினோவ நாகரிகம் என்று குறித்தனர். இந்நூற்றாண்டுகளில் இந்நாகரிக மக்கள் பெரிய அரண்மனைகளையும் கட்டடங்களையும் கொண்ட நல்ல நகரங்களை அமைத்துக்கொண்டு மாட மாளிகைகளில் சிறந்த செல்வப் பெருக்குடன் வாழ்ந்து வந்தனர். மினோவர்களால் கட்டப்பட்ட சிரிய நகரம் நாசசு (Cnossus). கிரீட்டின் வடக்கே யுள்ள மலைப்பகுதியின் பக்கத்தில் இந்நகரம் அமைந்

துள்ளது. இங்குள்ள மலையின் உச்சியில் ஒரு பெரிய அரண்மனை உள்ளது. இதுவே மினோசு என்ற அரசர் வசித்த மாளிகையாக இருந்தது. அரண்மனை முற்றங்களால் சூழப்பட்டிருந்தது. முற்றத்திலிருந்து வரும் அகலமான படிக்கட்டு வழியாக அரண்மனைக்குச் செல்லலாம். அரண்மனையைச் சுற்றி மதிற்சுவர்களில்லை.

அரண்மனையில் அரியணை என்னும் அறை இருந்தது. அரியணை கல்லினால் செதுக்கப்பட்டு வண்ணங்களுடன் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. இரு புறங்களிலும் சுவரோரத்தில் நீண்ட பலகைகள் உள்ளன. உட்புறத்திலுள்ள அறைகளின் சுவர்கள் பருமனாக இருந்தன. முக்கிய அறைகளின் சுவர்களிலும் தாழ்வார சுவர்களிலும் சுதையோவியங்கள் (Fresco)வண்ணப்பூச்சுடன் காணப்படுகின்றன. அறைகள்ஓவியங்களால் மிகநேர்த்தியாக அழகு செய்யப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் ஊர்வலங்களையும், ஆணும் பெண்ணும் பகட்டாக இருப்பதையும், நகர வாழ்க்கையையும், சிற்சில இடங்களில் போர்க் காட்சிகள் உள்ள சித்திரங்களையும் காணலாம். சுதையோவியப் படங்கள் மக்களின் நடையுடை பாவனைகளை எடுத்துக்காட்டுகின்றன.

குளியலறைகளும் சமையலறைகளும் விரிவான சாய்க்கடை திட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. இத்திட்டம் மிக உயர்ந்ததாக இருந்தது. வெளியேயுள்ள கிணற்றிலிருந்து மண் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் உள்ளே கொண்டுவரப்பட்டது. மற்றொரு குழாய் மூலமாக கழிவுநீர் வெளியேற்றப்பட்டது. நில மட்டத்திற்குக் கீழே சாய்க்கடை பொருத்தப்பட்டிருந்தது. சாய்க்கடைவழியாக வெளியிலுள்ள கழிநீர்க்கால்வாயின் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டது. கழிவுநீர், வடிகால், சாய்க்கடை போன்ற வசதிகளுடன் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர்.

அரண்மனையின் கீழ்ப்பக்கம் உள்ளது நாசசு நகரம். இங்கு மக்கள் இரண்டு, மூன்று அடுக்குகளுள்ள மாடி வீடுகளில் வாழ்ந்து வந்தனர். அடிப்படையும் முதல் மாடியும் கல்லால் 'கட்டப்பட்டன. மற்ற மாடிகள் செங்கல்லாலும் தேக்கு மரத்தாலும் கட்டப்பட்டன. வீடுகளின் முகப்புகள் நகரத்தின் செல்வாக்கை உணர்த்துகின்றன. சில வீடுகள் இரண்டு கதவுகளையும் மற்றவை ஒரு கதவையும் உடையவை. இங்குள்ள வீடுகளிலும் சாய்க்கடைத் திட்டம் பொருத்தப்பட்டிருந்தது. சுவர்கள் சித்திரங்களினால் அழகு செய்யப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் மரப் பொருள்கள் இருந்தன. அரசு ஊழியர்களுக்கு இடவசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

மினோசு மன்னருக்குப் பணி செய்யும் எண்ணற்ற பணியாட்கள் வாழ்வதற்காகக்குடியிருப்புப் பகுதிகள் இருந்தன. தச்சர், கல் தச்சர், தட்டார், குலாலர், உலோக வேலை செய்பவர் ஆகியவர்களின் தொழிற்கூடங்கள் அரண்மனையின் ஒரு பகுதியில் இருந்தன. அரசனின் பணியாட்கள் நிலத்தில் வேலை பார்த்தனர். வேளாண்மை சிறந்த முறையில் செய்யப்பட்டது. தானிய வகைகளும் மதுபானமும் கிரீசு, ஆசியாமைனர், எகிப்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்தனர்; கப்பல்களைக் கட்டினர். வாணிகத்திற்காகக் கப்பல்களையே நம்பியிருந்தனர். ஈசியக்கடல், மத்தியதரைக்கடல் ஆகிய கடற்கரைப் பகுதிகளுள்ள பல இடங்களுக்கு வணிகர்கள் தம் பொருள்களைக் கிரீட்டிலிருந்து எடுத்துச் செல்வதும் திரும்பக் கொண்டு வருவதுமாக இருந்ததோடல்லாமல், அவர்கள் முதன்முதலாகப் போக்குவரத்துத் துறையை நிறுவினர். எகிப்து மற்றும் கிழக்குப்பகுதி நாடுகளுடன் தொடர்பு கொண்டதால், அந்நாடுகளின் பண்பு, அறிவு, கண்டுபிடிப்புப் போன்றவை இவர்களுக்கு நன்மைபயத்தன. இது இவர்களுடைய நாகரிக வளர்ச்சிக்கு உதவியது. கிரீட்டு அரசர் கப்பற்படையை வைத்திருந்தார். மத்திய தரைக்கடற் கீழ்ப்பகுதி முழுவதும் அவரது ஆட்சியில் இருந்தது.

தோண்டி எடுக்கப்பட்ட அணிகலன்கள், கருவிகள், மட்பாண்டங்கள் போன்றவை ஒப்பற்றவை; அழகான வேலைப்பாடுகள் நிறைந்தவை. பெண்கள் கூந்தலை நன்றாக அழகு செய்து கொண்டும் நாகரிக உடைகளை உடுத்திக் கொண்டும் இருந்தனர். அவர்கள் முழுக்கை நீளச் சட்டைகள், இரவிக்கைகள் போன்றவற்றை அணிந்தனர்; கம்பள ஆடைகளையும் அவர்கள் உடுத்திக் கொண்டனர்; காப்பு, கொலுசு, தண்டை, கச்சை, ஒட்டியாணம் போன்ற அணிகலன்களை அணிந்தனர். சிறுவர் சிறுமியர் குட்டையானதும் தொடையைத் தொடும் அளவிற்குள்ளதுமான நீளமான பாவாடைகளையும், இடுப்பில் கச்சை, ஒட்டியாணம் போன்ற அணிகலன்களையும் அணிந்திருந்தனர். காளைமாட்டுச் சண்டை சிறுவர் சிறுமியர்களின் பொழுதுபோக்கு விளையாட்டாகும்.

கிரீட்டில் பல கைத்தொழில்கள் நடைபெற்றன. தொழிற்கலை மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. கையாலான நேர்த்தியான வேலைப்பாடுகள் நிறைந்த மெல்லிய மட்பாண்டங்கள் செய்யும் கலையை இவர்கள் முற்றிலும் கற்றிருந்தார்கள். இன்றும் கூட அத்தகைய மட்பாண்டங்களை வனைவது எளிதன்று. காலால் மிதிக்கப்பட்டு இயங்கும் இயந்திரத்தின் உதவியினால் மண் சாடிகளையும் பூக்கூடை

களையும் மிக நேர்த்தியான வடிவங்களாகக் கடைந்தெடுத்தனர். அவற்றில் சிப்பியின் உருவங்கள், மலர்கள், கடற்பாசி, கடற்பூண்டு போன்ற அழகான உருவங்களைச் சித்தரித்தனர். வண்ணப்பூச்சு வேலைகள் மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் செய்யப்பட்டன. ஒலிவ எண்ணெய் இறக்கும் இயந்திரமொன்றும், அதனை அடுத்துப்பெரிய சாடிகளும் இருந்தன. அரண்மனையில் சமைப்பதற்கும், விளக்கு எரிப்பதற்கும் எண்ணெயைச் சாடிகளில் சேமித்து வைத்தனர். ஏற்றுமதிப்பொருள்களில் ஒலிவ எண்ணெயும் ஒன்று.

கிரீட்டு மக்கள் கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். எழுத்துகள் பொறிக்கப்பட்ட களிமண் பலகைகள் கிடைத்துள்ளன. தொடக்க காலத்தில் படங்களின் உருவங்கள் மூலம் தம்முடைய கருத்துகளை வெளியிட்டனர். கோடரி, எருதின் தலை, கதவு, கண் போன்ற படங்களின் உருவங்களை எடுத்துக்காட்டாக கூறலாம். பிறகு, படங்களுக்கு மாறாக கோடுகளைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு கோடும் ஒரு சொல்லாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றைப் படிக்க முடிந்தாலும் பொருள்களை அறிந்து விளக்க முடியவில்லை.

நாசசு நகரத்தைப் போல கிரீட்டின் தென்மேற்குப் பகுதியில் பீசுடசு (Phaestus) என்ற நகரமும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது.

ஏறத்தாழ கி.மு.1600-இல் ஈசியக் கடற்பகுதியில் நினைக்க முடியாத அளவிற்குப் பல நில நடுக்கங்கள் ஏற்பட்டன. அந்த அதிர்ச்சியின் விளைவாகக் கிரீட்டு அழிந்தது. நாசசும் கிரீட்டில் உள்ள மற்ற நகரங்களும் மிகவும் சேதமடைந்தன.

பிந்திய மினோவ காலம்: நில நடுக்கங்கள் ஏற்பட்ட பிறகு ,பிந்திய மினோவ காலம் தொடங்கிற்று. சில நூற்றாண்டுகள் கிரீட்டு மக்கள் மிகச் சிறப்பாக வாழ்ந்தார்கள். நாசசு நகரில் உள்ள அரண்மனை மிக நேர்த்தியான வேலைப்பாட்டுடன் புதுப்பிக்கப்பட்டது. மூன்று, நான்கு மாடிகளுள்ள கட்டடங்களில் பல அறைகள் இருந்தன. கழிநீர், வடிகால், சாய்க்கடை முதலிய நல்வாழ்வு வசதிகளுடன் மக்கள் வாழ்ந்தனர். சுவர்களை அழகிய சுதையோவியங்கள் அழகுசெய்தன. அவை பல எருதுகளையும் எருதுச் சண்டைகளையும் சித்திரிக்கின்றன. நகர மக்கள் மிக்க நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர். நாசசு மன்னர்களின் கடற்படையினர் ஈசியக் கடலைத் தம் வசப்படுத்தி, அங்குள்ள தீவுகளைக் கவர்ந்தனர். எகிப்து நாட்டுடன் சிறப்பான முறையில் வாணிகம் நடந்தது.

கிரீட்டு மக்கள் அழகுக்கலைகளில் வல்லவர்களாக இருந்ததோடு எழுத்துக்களையும் அறிந்திருந்தார்கள். மொழியும் சிறிது வளர்ச்சியடைந்தது. அவர்களின் மொழி கிரேக்க மொழியைப் போல இருந்தது.

ஏறத்தாழ கி.மு.1400-இல் மினோவ நாகரிகம் அழியத் தொடங்கியது. அடுத்தடுத்துக் கிரீசு மக்களின் தாக்குதலுக்குக் கிரீட்டு உள்ளாகியது. எலனியர் (Hellenists) என்று தம்மை அழைத்துக் கொண்ட அக்கீயர்கள் கிரீட்டுக்குச் சென்று வந்ததன் பயனாகத் தொன்மையான ஈசிய நாகரிகம் கிரீசு நாட்டுக்கும் வந்துற்றது. கிரீசு நாட்டுப் புலவர் ஓமர் (Homer) அதைப்பற்றித் தம் காப்பியங்களில் புகழ்ந்துள்ளார். ஆனால், அக்கீயர் படையெடுப்பால் கிரீட்டு அழிந்தது. கிரீட்டின் புகழும் மேன்மையும் மறைந்தன. அதன் பழம் பெருமை ஒரு நினைவுச் சின்னமாக இன்றும் விளங்குகிறது.

மைசீனிய நாகரிகம் (கி.மு.1600–1100): மத்திய தரைக் கடற்கரை முழுவதும் பரவிய கிரீட்டு நாகரிகத்தின் செல்வாக்கால் கிரேக்க நாட்டில் ஈசியக் கடற்கரைகளில் மிகப் பழமையான சிதைந்த நகரமான மைசீனியாவில் நாகரிகம் ஒன்று தோன்றியது. இதுவே மைசீனிய நாகரிகம் ஆகும். நிலத்தடியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட சின்னங்கள், இறந்தவர் வீடுகளில் புதைத்து வைக்கப்பட்டவை, நாள் தோறும் பயன்படும் எளிய பொருள்கள், செல்வப் பெருக்கைக் காட்டும் பொருள்கள் போன்றவை இந் நாகரிகத்தின் அடிப்படைச் சான்றுகளாகும்.

ஆர்காசு சமவெளியின் வடகிழக்குப் பாகத்தில் மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் கடல் மட்டத்திற்கு மேல் 300 மீட்டர் உயரத்திலுள்ள ஒரு குன்றின் மீது மைசீனியா அமைந்துள்ளது. இங்கு நிறுவப்பட்ட கோட்டையும் அரண்மனையும் இக் குன்றின் உச்சியை அழகு செய்தது போலத் தோற்றமளிக்கிறது. அரண்மனையில் அரசமாளிகையைக் கொண்ட காவல் அரண் (Acrpolis) உள்ளது. காவல் அரண் ஒரு முக்கோண வடிவில் காட்சியளிக்கிறது. ஈசிய அரசுகள் மிகச் சிறியவை. அரசர்கள் எண்ணற்ற அடிமைகளை வைத்திருந்தனர். பெரும் கல்லறைகளும் கோட்டைகளும் இவ்வடிமைகளால் கட்டப்பட்டன. இவர்கள் முதன் முதலாகக் களிமண்ணையும் காரையையும் கொண்டு இச்சுவர்களை எழுப்பியுள்ளார்கள். இவ்வகையான கட்டட வேலைக்குச் செப்பமுறாப் பாணி (Cyclopean Method) என்று பெயர். நாளடைவில் சமமான கற்களை எடுத்து அவற்றை ஒழுங்கான முறையில் நீண்ட சதுரங்கள் போல் செதுக்கி, ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து

வாயில்களையும் கோபுரங்களையும் அமைத்தார்கள். சுவர்களில் கற்களினாலான வில்வளைவுக் கூரைகள் கொண்ட வழிகள் இருந்தன. மைசீனியக் கோட்டையில் இரண்டு வாயில்கள் உள்ளன. வாயிற்படி உத்தரம் ஒரு சதுரக் கல்லாலாகியது. மைசீனியாவின் அரண்மனைகளின் தோற்றமும் கட்டுமானமும் கிரீட்டு அரண்மனைகளை விட வேறுபட்டுக் காணப்படுகின்றன. தூண்களாலாகிய நுழைமாடக் கூடங்களைக் கொண்ட மையக் கூடம் அரண்மனையிலேயே சிறப்பானதொரு பகுதியாகும். ஆண் மக்களுக்கெனக் கட்டப்பட்ட கூடங்களின் சுவரில் அழகிய சித்திரங்கள் உள்ளன. மைசீனிய அரண்மனை வலிமையான வெளிச்சுவர்களால் காக்கப்பட்டிருக்கிறது. கூடங்களின் நடுவில் புகை போவதற்குக் கூரையில் சிறு திறப்புகள் உள்ளன. இக்கூடங்கள் மேலிருந்து வெளிச்சமாகக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அடுப்படி சிவப்பு, நீலம், வெள்ளை வண்ணச்சுருள் வடிவமும், முக்கோண வடிவமும் கொண்ட கோலங்களால் அழகு செய்யப்பட்டுள்ளன.

மைசீனிய நகரத்தில் இறந்தோர் உடலைப் புதைக்கும் இடங்கள் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. வளைவுக் கூரையையுடைய கல்லறைகள் பல நகரங்களில் உள்ளன. மக்கள் இறந்தோர் உடல்களைக் கல்லறைகளில் புதைத்தனர். மேற்குடி மக்களின் உடல்கள் கோட்டை மலையில் புதைக்கப்பட்டன. ஆடவர் கல்லறைகளில் போர்க்கருவிகள் காணப்பட்டன. இறந்த பெண்டிர் தலைகளில் பொன்னாலாகிய மகுடங்கள் சூட்டப்பட்டிருந்தன; விலையுயர்ந்த அணிகலன்களும் வீடுகளில் பயன்படும் பொருள்களும் இரு புறமும் வைக்கப்பட்டிருந்தன. கல்லறை சிற்ப வேலைகள் நிறைந்த கற்பலகையினால் மூடப்பட்டிருந்தது.

காவல் அரணின் எதிரிலுள்ள குன்றின் சரிவில் ஒன்பது குவிமாடங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள மிகப் பெரிய கல்லறைக்கு 'அட்ரியசின் பொருட் குவியல்' (Treasury of Atreus) என்பது பெயர். அதன் வாயிலின் முன்புறம் வண்ணம் தீட்டப்பட்ட பளிங்குக் கல்லாலானது. இரு புறங்களிலும் வெண்பளிங்குக் கற்றூண்கள் உள்ளன. இத்தூண்களின் தலைப்பாகங்களில் அழகிய சிற்பங்கள் உள்ளன. அரசர் கல்லறைகளினருகில் எளிய மக்களின் கல்லறைகளும் உள்ளன. சில சிற்றூர்களிலுள்ள கல்லறைகள் அரசர்களுடைய வில்வடிவமுள்ள கூரைகளைக் கொண்ட கல்லறை போலத் தோற்றமளிக்கின்றன. பெரும்பாலான பாறைகளில் செதுக்கப்பட்ட கல்லறைகளில் சதுரமான அறைகள் உள்ளன. ஈசியப் பகுதிகளிலுள்ள நகரங்களின் செல்வத்தைவிட மைசீனிய நகரத்தின்செல்வப் பெருக்கு மிகுதியாயிருந்தது என்பதற்கு மைசீனியக் கல்லறைகளில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட் குவியல்களே சான்றாகும். மலைக்கோட்டையில் கிடைக்கப்பெற்ற தங்கம் முதலிய செல்வக் குவியல்களும், கல்லறைகளில் கிடைக்கும் மட்பாண்டங்களும், வெண்கலத்தால் செய்யப்பட்ட போர்க் கருவிகளும் மிகவும் விலையுயர்ந்த பொருள்களாகும்.

மைசீனியாவில் நாள்தோறும் பணிக்குப்பயன்படுத்தும் பொருள்களின் மீது பொறித்துள்ள உருவங்களிலிருந்து மக்களின் நடையுடை பாவனைகள், போர்க்கருவிகள், அணிகலன்கள் முதலியவைபற்றி அறிந்து கொள்ள முடிகிறது. மைசீனியா, திரின்சு (Tiryns) ஆகிய நகரங்களில் கிடைத்த சின்னங்கள் கிரீசின் வெண்கலக் காலத்தையும் செப்புக் காலத்தையும் குறிப்பனவாகும். இரும்பு அரிதாகவே கிடைத்தது.

மைசீனிய அரசியர் பகட்டான வேலைப்பாடுகள் நிறைந்த பொன்னணிகளை அணிந்தனர். இவர்கள் நீண்ட கூந்தலை வளர்த்திருந்தனர். இக்கூந்தலை கட்டிக்கொண்டும் சடைகளாகப் பின்னி வைத்துக் கொண்டும் அழகு செய்து கொண்டனர். கூந்தலை வளையங்களாகத் திரித்து உச்சியில் கொண்டையாகவும் போட்டுக் கொண்டனர். கூந்தலின் பிற்பகுதி வெளியே தொங்கியது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களிலுள்ள சித்திரங்கள் மூலமாக மக்கள் பல்வேறு ஆடைகள் அணிந்திருந்ததை அறியலாம். பொதுவாகப் பெண்கள் உள் சட்டையும் மேலாடையும் அணிந்தனர். மேற் குடிப் பெண்கள் மார்பகக் கச்சைகளையும் பாவாடைகளையும் அணிந்தனர். நெற்றியில் ஒரு விதப் பட்டைக் கயிற்றை அணிந்திருந்தனர்.

மைசீனியர் படையெடுத்தல், முற்றுகையிடுதல், போர் செய்தல் போன்றவற்றில் தகுந்த ஆர்வம் காட்டினர். வாள், ஈட்டி, வில் போன்ற போர்க்கருவிகளையும் தலைச்சீரா, கேடயங்கள் போன்ற தற்காப்பு அணிகளையும் பயன்படுத்தினர். தலைச்சீராக்கள் தோலால் செய்யப்பட்டன. கேடயங்கள் மாட்டுத் தோலால் உருவாக்கப்பட்டன. அணிவோரின் கழுத்திலிருந்து உள்ளங்கால் வரை கேடயம் நீண்டிருந்தது. பிற்காலத்தில் வட்டக் கேடயங்கள் பயன்படுத்தப்பட்டன. அரசிளம்பிள்ளைகள் போர்க்களங்களுக்குக் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் சென்றனர். கைது செய்யப்பட்ட துருப்புகளையும் போர் வீரர்களையும் கிரீசுக்குக் கொண்டு வந்தனர். அவர்

களைக் கொடுமையாக நடத்தினார்கள்; நிலத்தில் வேலைசெய்யும் பணியாட்களாக நடத்தினர்.

மைசீனியாவின் பொருட் செல்வத்தை மட்பாண்டத் தொழில் பெருக்கியது. மட்பாண்டத் தொழில் இந்நகரின் பொருட் செல்வத்தைப் பெருக்கியது. இங்குக் கிடைத்துள்ள மட்பாண்டங்களில் வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய சாடியும் ஒன்றாகும். இந்நாகரிகத்தைச் சேர்ந்தவை என்று சொல்லக்கூடிய மட்பாண்டங்கள் போலிக்கழுத்தையுடைய சாடிகள் ஆகும். இச்சாடிகளுக்கு மேற்புறத்தில் திறப்பில்லை. ஆனால், ஒரு பக்கத்தில் திண்ணி மூக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

வண்ணம் தீட்டிய பாத்திரங்களை மெருகிட்டவை, மெருகிடாதவை என இருவகையாகப் பிரிக்கலாம். மெருகிடாத பாத்திரங்களில் அழகுக்காகக் கோடுகளையும் சுருள் வடிவங்களையும் வரைந்துள்ளனர். மெழுகெண்ணெய் பூசப்பட்ட சாடிகளில் செடி கொடிகள், விலங்குகள் போன்ற உருவங்களைத் தீட்டியுள்ளனர். குயவர்களின் கைவினைத் திறன் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது.

மைசீனியர்கள் மினோவர்களின் எழுதும் முறையைப் பின்பற்றினர். இம்முறையினால் எழுதிப் பழகுவதற்கு ஏறத்தாழ 90 எழுத்துகளை உருவாக்கினர்.

கி.மு. 1200–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிரேக்கர்கள் மைசீனிய அரசர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்கள். இதனால், அகமெம்னன் (Agamemnon) என்னும் அரசன் திராய் (Troy) நகரத்தின் மீது படையெடுத்தான்.

கி.மு. 1200–ஆம் ஆண்டின் இறுதியில் மைசீனியர்களின் நாகரிகம் திடீரென்று மறைந்தது. தோரியர்களின் (Dorians) தாக்குதலால் மைசீனியா, பைலசு (Pylos), திரின்சு நகரங்கள் அழிந்தன. காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு ஈசிய நாகரிகத்தை அடையாளம் தெரியாமல் அழித்துவிட்டது. அ.கே.

துணை நூல்கள்:

**Leon, M. Joseph.**, World Civilization, Vol. 1, Cliff's Notes Inc. Lincoln, Nelraska, 1970.

**Swain**, J.E., History of Civilization, S. Chand & Co., Delhi, 1978.

***ஈசுடர் தீவு*** தென் பசிபிக்குப்பெருங்கடலிலுள்ள சிலி நாட்டிற்குச் சொந்தமான தீவு. இத்தீவு சிலியிலிருந்து 3540 கி.மீ. தொலைவிலுள்ளது. எரிமலைகள் எரிந்த குழம்பு குளிர்ந்து உருவானது இத்தீவு. இத்தீவின் பெரும் பகுதிகளில் புற்றரைகள் உள்ளன. வாணிகக் காற்றுகள் (Trade Winds) இத்தீவின் மீது கடுமையாக வீசும். பாலினேசிய (Polynesia)மரபைச் சார்ந்த மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இங்குள்ள நிலம் வளமானது; பண்ணைத் தொழிலே மக்களின் சிறப்பான தொழிலாகும். இங்கு ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. சர்க்கரைவள்ளிக் கிழங்கு, அத்திப்பழம், வாழை, அன்னாசி, முலாம் பழம், காய்கறிகள் போன்றவை இங்கு விளைகின்றன. இங்கு வாழும் மக்கள் சிலி நாட்டுக் குடிமக்கள். எனினும், இவர்கள் அந்நாட்டிற்கு வரி செலுத்துவதில்லை; படைகளில் சேர்ந்து கட்டாயமாகப் பணி செய்ய வேண்டியதுமில்லை.

கிறித்தவர்கள் கொண்டாடும் விழாக்களில் ஒன்று ஈசுடர் பண்டிகை. அதன் நினைவாகவே இத்தீவிற்கு ஈசுடர் தீவெனப் (Easter Island) பெயர் வந்தது. இப்பெயரை கி.பி. 1772–ஆம் ஆண்டில் இதற்கு வழங்கியவர் தச்சிய (Dutch) மாலுமியான சேக்கப் இராக்கிவன் (Jakob Roggeven) என்பவராவார். அக்காலத்தில் இதன் மக்கள்தொகை 4000 ஆகும். ஆனால், ஐரோப்பாவிலிருந்து வந்த தொத்து நோயான பெரியம்மையாலும், இசுபானியக் கொள்ளையர்களின் கொடுமையினாலும் கி.பி. 1887–ஆம் ஆண்டளவில் இதன் மக்கள்தொகை 100 ஆகக் குறைந்தது. இதை கி.பி. 1888–ஆம் ஆண்டில் சிலி கைப்பற்றிக் கொண்டது. ஈசுடர் தீவில் பல்லாண்டுகளுக்கு முன்னர் அய்ரோகிளிபிக்கு (Hieroglyphic) எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முகத்தைப் போன்று அமைப்புடைய ஒற்றைக்கல் பாறைகள் பற்பல கதைகளைக் கூறும். அவற்றின் தொடக்கத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் கூற இயலாது. உருவச் சிலைகள் தூயா (Tufa) எனப்படும் எரிமலைக் கற்களில் வடிக்கப்பெற்றுள்ளன. இவற்றின் உயரம் 3 முதல் 12 மீ. வரை இருக்கும். சில சிலைகள் 50 கண்டிக்கு (Tons) மேல் எடையுள்ளவை.

***ஈசுர கீதை*** தத்துவராய சுவாமிகளால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பெற்ற நூலாகும். சிவப்பிரகாசம் என்னும் பெயரும் இதற்கு வழங்கும்.

வடமொழிக் கூர்ம புராணத்திலுள்ள உத்தர காண்டத்தின் முதல் 11 பகுதிகள் சிவ கீதை எனப்படும். இப்பகுதி 229 சுலோகங்களால் அமைந்தது. இதனையே தத்துவராயர் ஈசுர கீதை என்னும்

பெயரில் மொழி பெயர்த்து அமைத்துள்ளார். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

இந்நூல், இருடிகள் வினவுவது, சாங்கிய யோகம், சம்பிரதாயம், பத்திமை, விசுவரூபம், சிவசக்தியின் செயல் உரைத்தது, தத்துவ நிசம்-விபூதி, பிரபஞ்சம், மாயா விகாரம், தத்துவ தரிசனம், யோகம் ஆகிய பெயர்களில் பதினொரு பகுதிகளாகப் (அத்தியாயங்கள்) பகுக்கப் பெற்று, 338 திருவிருத்தங்களால் பாடப் பெற்றுள்ளது.

சூதமாமுனிவனைச் சவுனகன் முதலாகவுள்ள முனிவர்கள் பிறவியறுப்பதான ஞானத்தினைக் கூற வேண்டும் என்று கேட்க, அவர், 'சனற்குமாரன் முதலாம் முனிவர்க்கு உலகின் மூலத்தையும் பிறவற்றையும் இறைவன் தனதருளால் உணர்த்தினான்; அதனைக் கேளுங்கள்' எனக் கூறித் தொடர்வதாக அமைந்துள்ளது இந்நூல். பின்னர், ஈசன் உரைத்தவாறு செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. கண்ணன் அருளிய பகவத்கீதையில் அமைந்த விசுவரூப தரிசன அத்தியாயத்தில், கண்ணன் தன் எல்லையற்ற வடிவத்தைக் காட்டியது போலவே, ஈசுர கீதையிலும் விசுவரூப அத்தியாயத்தில், சிரங்களாயிரம், சேவடி பாயிரம், கரங்கள் ஆயிரம் கொண்டும், கரத்தேந்திய உரங்கொள் தண்டமும், ஓங்கிய சூலமும், பரந்த வேணியும், பன்மதிக் கண்ணியும் கொண்டு திகழும் தன் உருவத்தை முனிவர்கள் காணுமாறு ஈசன் காட்டுகிறான்.

சிவசக்தியின் செயலுரைத்த அத்தியாயத்தில், 'பாம்பரசன் இவ்வுலகைத் தாங்குவது என்னால்; வடமுகாக்கினி கடல் பொங்காதிருக்கச் செய்வது என்னால்; மற்றவையும் என்னால், என்று கூறியிருப்பதும், 'என் அடியை வணங்காது பிற தெய்வங்களை வணங்குபவரும்என் அடி வணங்குபவர் பெறும் பேறுகளெல்லாம் பெறுவர்' என்று கூறியிருப்பதும், 'எந்த ஆருயிர்கட்கும் இன்னுயிராகும் நாரணன், அந்த மாதியில்லாத எனக்கு அருளானதோர் வடிவாகும்' என்று கூறியிருப்பதும், பகவத் கீதையின் அடிப்படையில் இது அமைந்திருப்பதனை உணர்த்தும். இவ்வாறு, இறைவன் சனற்குமாரன் முதலாய முனிவர்க்கு உரைத்தான் என்று சவுனகன் முதலாய முனிவர்க்குச் சூதமா முனிவன் உணர்த்தருளினான். இக் கீதையை ஓதுபவர்களும், பொருளை அறிந்துணர்பவர்களும், அதனை ஓதக் கேட்பவர்களும் பாவம் வேரோடழியப் பரமபதம் பெறுவர் எனப் பயன் உரைத்தலுடன் நூல் முற்றுப் பெறுகிறது. கொ.இ.

**ஈசுர பாரதியார்** கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'பல்பொருட் சூடாமணி' என்னும் நூலை இயற்றியுள்ளார். இவர் தந்தையார் சிதம்பர பாரதி. இவரது ஊர் மடசை. இவ்வூர் காமராசர் மாவட்டம் வில்லிப்புத்தூரினைச் சார்ந்த மடவார் வளாகம் என்னும் ஊராகும் எனச் சிலர் கருதுகின்றனர். இந்நூலாசிரியர் தம் கடவுள் வாழ்த்துப் பாடலில் திருநெல்வேலி இறைவனைப் பாடியிருப்பது கொண்டு, இவர்தம் ஊராகிய மடவை நெல்லைக்கு அருகிலிருக்கும் ஊராகும் என்று சிலர் கருதுகின்றனர். இவரது நிகண்டு நூல் அகராதி நிகண்டு தோன்றிய பின்னர், அதன் அமைப்பினை மேலும் செம்மையாக்கிச் செய்யப்பட்ட ஒரு நூலாகும். இந்நூல் கி.பி. 1700-இல் இயற்றப்பட்டது. தாம் இந்த நூலை வடமொழி அமர கோசத்தைப் பின்பற்றிச் செய்திருப்பதாக ஆசிரியர் கூறியுள்ளார். இந்நூல் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கையெழுத்து நிலையிலுள்ள பிரதியில் மூன்றாம் காண்டம் கிடைக்கவில்லை. முதல் காண்டம் ஒரே பொருள் உடைய சொற்களைத் தொகுத்துக் கூறுகிறது. இரண்டாம் காண்டம் பல பொருள் கொண்ட சொற்களைத் தொகுத்துக் கூறுகிறது. அகராதி நிகண்டினைக் காட்டிலும் எளிதாக, இதன்கண் சொல்லைக் கண்டு பொருள் அறியலாம். சொற்கள் அகரவரிசையில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆனால், சொற்களின் முதல் எழுத்து மட்டுமே அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது முதலிய எழுத்துகள் அகரவரிசையில் அடுக்கப்பெறவில்லை. ஒரு பொருள் கொண்ட 2800 சொற்களும், பல பொருள் கொண்ட 1465 சொற்களும் ஆக 4265 சொற்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

**ஈசுரமூர்த்தியாப் பிள்ளை, மு.பொ.** கி.பி. 19-ஆம் நூற்றாண்டு தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1861-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு அருகில் உள்ள முன்னீர்ப்பள்ளம் என்னும் ஊரில் பொன்னம்பலம் பிள்ளைக்கும், சிதம்பரவடிவு அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். தமிழ்ப் புலவராகத் திகழ்ந்த இவர் உயர்நிலைப் பள்ளிகளிலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவருக்குத் திருக்குறளின்பால் மிகுந்த ஈடுபாடுமிருந்தது. இதனால், இவர் தம்வீட்டுத் தோட்டத்திற்குத் திருவள்ளுவர் தோட்டம் எனப் பெயர் சூட்டியிருந்தார். இவர் 'நீதிநெறித் தாலாட்டு', 'மெய்ப் பொருட் கும்மி', 'நாட்டுப்பண் கும்மி', 'திருவருள் விளக்கம்', 'அகராதி மாலை', 'இராசு குடும்ப வரலாறு', 'கைலாசம் பிள்ளை வரலாறு' முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

**ஈசுரா பவுண்டு (கி.பி. 1885-1972):** படிம வெளியீட்டுக் கவிஞர்களுள் ஈசுராபவுண்டு தமக்கென

ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றார். அமெரிக்க நாட்டில் பிறந்த இவர் 1908-இலிருந்து 1924 வரை இலண்டனில் வாழ்ந்தார். பிறகு பாரிசில் இருந்தபின் 1924-1945 வரையிலான கால கட்டத்தில் இத்தாலியில் தொடர்ந்து வாழ்ந்தார். இத்தாலியில் இருந்தபொழுது முசோலினி மீது இவர் கொண்ட ஈடுபாடு இரண்டாம் உலகப் போரின் முடிவில் அரசத் துரோகக் குற்றத்திற்கு இவரை ஆளாக்கியது. ஈசுராபவுண்டு (Ezra Pound) 1958 வரை சிறையிலிருந்தார் என்பது குறிக்கத்தக்க செய்தியாகும்.

இவர் தம் புரட்சிகரமான கருத்துக்களால் எப்போதும் விவாதத்திற்குரிய மனிதராகவே தம்மை வெளிப்படுத்திக்கொண்டார். ஆனால், கவிஞர் என்ற நிலையில் இவர்கால இலக்கியத்தை இவரது படைப்புப் பெரிதும் பாதித்தது. கவிதை என்பது மென்மை, வடிவம், உயரிய சிந்தனை ஆகியவற்றின் கூட்டுக்கலவை என இவர் கருதினார். இறந்தகால மரபுகளில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடுண்டு. பழமையான, விரிவான மனிதப்பண்பாடுகளின் மூலங்களிலிருந்து இவர் ஆங்கிலக் கவிதையைப் புதுப்பிக்க விரும்பினார்.

இவர் இத்தாலியில் இருந்தபொழுது எழுதிய 'தி காண்டோசு' (The Contos)என்ற காப்பியம் இவரது சாதனையாக அமைகிறது. மனிதரின் நிலையான நாகரிகவேட்கையைச் சுட்டுவதாக அமைவதோடு இக்கவிஞரின் சொந்த அனுபவங்களின் வெளிப்பாடாகவும் இது விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, ஈசுராபவுண்டு மரபு வழியான சொல்லாட்சியிலும் யாப்பு வடிவங்களிலும் பெரிதும் கருத்துச் செலுத்தியவர் அல்லர். பிரெஞ்சுக் கவிதையின் தாக்கத்தை இவர் படைப்புகளில் காணலாம். இவர் புதிய வடிவ உருவாக்கங்களில் பெரிதும் கருத்துச் செலுத்தியுள்ளார். சிறையிலிருந்தபொழுது இவர் எழுதிய 'தி பிசன்காண்டோ' என்ற நெடும் பாடல் இவர் மனித சமுதாயத்தின் மீது கொண்ட பரிவினைச் சுட்டுவதாக அமைகிறது. இப்படைப்பில் இவர் தம் சமகாலக் கருத்துச் சிக்கல்களைப் பரிவுடன் வெளிப்படுத்தியுள்ளார். அது 1949-ஆம் ஆண்டிற்கான அமெரிக்க நாட்டுப் 'பொலிங்கர்' பரிசினைப் பெற்றது.

படிமக்கவிஞரான பவுண்டு இருண்மைக் கூறுகளை விலக்கி, மிகச் சுருக்கமான சொற்களில் கவிதைகளை உருவாக்குவதிலேயே விருப்பம் கொண்டிருந்தார். மனித வரலாற்றின் வீரமிக்க செயல்களும் நாகரிகப் போக்குகளும் இவரைப் பெரிதும் கவர்ந்தன. சீன, சப்பானியப் படைப்பாளர்கள் உருவாக்கங்களில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடு இருந்தது. சப்பானிய வடிவ அமைப்பினைத் தம்முடைய சிறிய கவிதைப் படைப்புகளில் வெளிப்படுத்திக் காட்டினர்.

ஆங்கிலக் கவிதையைப் பழமைப் பிடியிலிருந்து விடுவித்த பெருமை இவருக்கு உண்டு. ஐரோப்பிய நாகரிகம் என்ற பொதுமைவழிப் பண்பாடே வேண்டும் என்றும், தனித் தேசிய பண்பாடுகள் என்ற வேறுபட்ட நோக்குகள் கூடா என்றும் இவர் வலியுறுத்தினார்.

தம் கவிதைகளில் செவிக்கு இனிமை தருகின்ற சந்தநயம் வாய்ந்தனவும், மக்கள் பழக்கத்தில் உள்ளனவுமான பழகு சொற்களையே பெரிதும் பயன்படுத்தினர். நீண்ட தொடர்களை இவர் பயன்படுத்தவில்லை. டி.எசு. எலியட்டைப் போல முன்னோர் தம்பொன்மொழிகளைப் பரந்த அளவில் இவர் எடுத்தாண்டுள்ளார்.

புதிய இலக்கியத்திற்குப் பவுண்டு செய்த சேவை மிகவும் குறிக்கத்தக்கது. புதிய கவிதைத் துறையில் புதிய இலக்கிய உத்திகளைப் புகுத்தியதுடன், பழமைக்கும் புதுமைக்குமிடையே கருத்துத் தொடர்பினை உருவாக்கம் செய்து, மரபுக் கவிதையிலும் புதுக்கவிதையிலும் புதுமைகள் பல கண்டார். இருபதாம் நூற்றாண்டின் போர்ப்பூசல்களாலும் அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட இவர், ஒரு புதுச்சமுதாயம் உருவாகவேண்டும் என்ற விருப்பினைத் தம் படைப்புகள் மூலம் பரிவுடன் வெளிப்படுத்தியுள்ளார். பி.எஸ்.வே.

**ஈசுவர்பாய் பட்டேல் ஆய்வுக்குழு** 1977-ஆம் ஆண்டு இந்தியக் கல்வி அமைச்சரால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவர் குசராத்துப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஈசுவர்பாய் பட்டேல் ஆவார். புதிய 10+2 என்ற கல்வித் திட்டத்திற்குத் தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம் உருவாக்கிய பாடத்திட்டங்கள், பயிற்று நூல்கள் ஆகியவற்றை இக்குழு ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கியது.

புதிய கல்விமுறையினைப் பள்ளிகளில் மட்டும் தான் புகுத்த வேண்டும் என்ற உறுதியான வரையறை ஏதும் இன்றி, முறைசாராக் கல்வி வாயிலாகவும் அக்கல்வியினை அளிக்கலாம் என்று இக்குழு பரிந்துரை செய்தது. புதிய கல்வி முறை மாணவரின்

தனித்தன்மைகள், தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப அமைதல், பாடத்திட்டம் வட்டாரத் தேவைகளை யொட்டி உருவாக்கப்படுதல், தொழிற்கல்விக்குத் தலைசிறந்த இடம் கொடுத்தல், சமுதாயத்திற்குப் பயனும் உற்பத்தித் திறனும் அளிக்கும் வேலைகளில் (Socially Useful Productive Work) மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்றவை ஈசுவர்பாய் பட்டேல் குழுவின் சிறந்த சில பரிந்துரைகளாகும்.

ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மொத்தம் மூன்று மணி நேரம் மட்டுமே கற்பித்தல், கட்டுத்திட்டமான பாட வேளைக்கு ஏற்பப் பாடங் கற்பித்தலைத் தவிர்த்தல், பள்ளி மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் தருவது தடை செய்யப்படுதல் போன்ற சில பரிந்துரைகளையும் இக்குழு வழங்கியது.

பள்ளி மாணவர்களிடம் தாமே கற்றலை (Self-Study) ஊக்குவித்தல், கல்வியாண்டுகளை (Adademic Years) கிராமப்புறத் தேவைகளையொட்டி அமைத்துக் கொள்ளுதல், கல்வியை இடையில் கைவிட்டவர்கள் (Dropouts) மீண்டும் முறைசார்ந்த கல்விமுறை அல்லது முறைசாராக் கல்விமுறை மூலம் எந்த வகுப்பிலும் எளிதில் நுழைய (Multiple Entry) வசதி ஏற்படுத்துதல் போன்றவை ஈசுவர்பாய் பட்டேல் கல்விக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடத்தக்கன.

துணை நூல்:

**Agarwal, A.C.**, Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

***ஈசுவர அவிகாரவாத சைவம்***: ஈசுவர அவிகாரவாத சைவம் என்ற பிரிவு அகச்சமயப் பிரிவுகளுள் ஒன்று. பிராணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவபங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவைத சைவம் என்னும் ஆறும் அகச் சமயங்களாகும். மேலும், சைவம் அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப் புறச் சமயம் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவையாவும் சைவ சித்தாந்தத்தோடு நெருங்கிய ஒற்றுமையுடையவை. ஈசுவர அவிகாரவாத சைவம் அகச் சமயத்தில் ஐந்தாவதாகும். இது முக்தி நிலையை விளக்குவதற்கு எடுத்தாளும் உவமையைச் சைவ சித்தாந்திகள் ஏற்றுக் கொள்ளுவதில்லை.

***ஈசுவர குப்தா*** (கி.பி.1811-1859) கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்காளத்தில் வாழ்ந்த சிறந்த எழுத்தாளர். இவர் வங்காளி மொழிக் கவிஞருமாவார்; சிறந்த பத்திரிகை ஆசிரியர். இவர் கவிஞராக எய்திய புகழினும், பத்திரிகை ஆசிரியராக அடைந்த புகழ்மிகுதியானது. வங்காள மொழியில் பத்திரிகைத் தொழிலின் தந்தை என்று இவர் போற்றப் பெற்றார். வங்காள நாட்டின்பாலும் மொழியின்பாலும் பண்பாட்டின்பாலும் அந்நாட்டு இளைஞர்களுக்கு மிக்க அன்புண்டாகுமாறு செய்தார். இவர் வங்காள மொழியில் வாழ்க்கை வரலாறு எழுதிய முதற்புலவராவார்.

வங்காள மொழியில் புதிய கவிதை தோன்றுவதற்கு அவ்விலக்கியப் புலத்தைப் பண்படுத்திய சிறப்பு இவருக்கு உண்டு. பழைய கவிதைக்கும் புதிய கவிதைக்கும் இடையே அமைந்த வேறுபாட்டினை அகற்றி அவற்றை இணைக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந்தார். இவர் எழுதிய உரைநடை கடுமையானது; அச்சந் தரத்தக்கது; எனினும் இவரது செய்யுள்நடை மிக்க எளிமையும் இனிமையும் கொண்டது. இவர் தம் காவியங்களில் சில நேருக்கு நேராகவும் வெளிப்படையாகவும் அறிவுரை கூறுவன; வேறுசில பழைய பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியன மங்கிவருவது கண்டு இரங்கி, அவற்றின் பழம்பெருமையைப் பாராட்டுவன. சில காவியங்கள் ஆங்கிலக் கல்வி கற்க, மக்கள் அம்மோகத்தில் மூழ்கி மேற்கொள்ளும் நடையுடை பாவனைகளை ஏளனஞ் செய்வனவாக அமைந்தன. அவற்றில் நகையும் நையாண்டியும் கலந்த நடையினைத் திறம்படக் கையாண்டார். தம் எழுத்தில் மக்கள் வழக்காற்றில் இடம்பெற்ற நாட்டுச் சொற்கள் பலவற்றைத் துணிந்து பயன்படுத்தினார். 18- ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த பராதசந்திரர் இராமப் பிரசாதர் போன்றவர்களின் படைப்புகளில் இவருக்கு ஆர்வம் மிக்கிருந்தது. அதனால் இவர்தம் படைப்புகளில் அப்பெருமக்கள் செயல்களின் பாதிப்பினைக் காணமுடிகிறது. இவர் 'சம்வாதி—பிரபாகர்' என்னும் வார ஏட்டின் ஆசிரியராக விளங்கினார். பின்னர் இது நாளேடாக வளர்ச்சியுற்றது. இவருடைய எழுத்துகள் பலவும் இவ்வேட்டிலேயே வெளிவந்தன. இவருடைய சிறந்த நூல்கள் பின்வருவன: இதோபதேச நூலின் மொழி பெயர்ப்பு, பிரபோத சந்திரோதயம் என்னும் உருவக நாடகத்தின் மொழி பெயர்ப்பு. இவை இரண்டும் வடமொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவையாகும். பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கவிதை எழுதுமாறு இவர் மிகவும் தூண்டினார். அவர்களின் படைப்புகளைத் தம் ஏட்டில் வெளியிட்டு அவர்களை ஊக்கப்படுத்தினார்.

***ஈசுவர சந்திர வித்தியாசாகரர்*** (கி.பி. 1820-1898) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்

காளத்தில் வாழ்ந்த அறிஞர்; கல்வியாளர்; சமூகச் சீர்திருத்தக்காரர். இவரை வங்காள மொழியின் உரைநடைத் தந்தை என்றும் கூறுவர். விதவை மறு மணத்திற்கான சட்டமொன்றை இயற்ற கி.பி. 1856-ஆம் ஆண்டில் இவர் உறுதுணையாக இருந் தார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார்; பல இதழ்களின் தொகுப்பாசிரியராகவும் இவர் இருந் தார். நூற்றுக்கணக்கான பள்ளிகளைத் தொடங்கி, இவர் கல்வித்துறையில் பெருந் தொண்டாற்றினார், இவர் வடமொழியில் தலைசிறந்த அறிஞர். அதனால் இவரைப் பண்டித வித்தியாசாகரர் என்றும் கூறுவர். இந்துக் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வது முறையானதே என்று பல கிளர்ச்சி களைத் தீவிரமாக நடத்தினார். தம் கொள்கையை நிலைநிறுத்தும் நோக்குடன் இவர் இந்து அறநூல் களிலிருந்து பல மேற்கோள்களைச் சுட்டிக்காட்டி, கைம்பெண் மறுமணம் சட்டத்திற்குட்பட்டதே என்பதை மெய்ப்பித்தார். பல்லாயிரக்கணக்கானவர் கையெழுத்திட்ட விண்ணப்பங்களைத் திரட்டி அர சுக்குஅனுப்பினார். அதன் விளைவாகவே விதவை மறு மணம்சட்டப்படி செல்லுபடியாகும் என்று அறிவிக்கப் பட்டது. இவர் கி.பி.1898-ஆம் ஆண்டில் கால மானார்.

**ஈசுவரதத்தர்** என்பார் மேலைச்சத்திரப்பர்களின் (Western Satraps) மரபுகளில் ஒன்றான சாசுத்தான வமிசத்தின் (Chashtana Dynasty) ஆட்சியைப்பறித் தவர். மேலைச்சத்திரபர்களின் அரசரான முதலாம் உருத்திரதாமன் என்பாரை மாளவம், கத்தியவார் மார்வார், கட்சு, சிந்து, வடகொங்கணம் போன்ற பகுதிகளை உச்சயினியிலிருந்து ஆண்ட மகாசத்திரபர் என்று கிர்நார் கல்வெட்டு கூறுகிறது. இவ்வமிசத் தைச் சார்ந்த 20 இளவரசர்கள் அரசாண்டார்கள். இவ்வரசர்களைப் பற்றிய கல்வெட்டுகள், காசுகள் போன்றவை இவ்வமிசத்தின் வரலாற்றை வரிசைப் படுத்தி விவரமாகக் கூறுகின்றன. உருத்திரதாமனை அடுத்து அரசோச்சிய 18 இளவரசர்கள் மகாசத்திர பர்கள் என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டார்கள். இவர்களின் ஆட்சியைப் பறித்துக்கொண்டவர்தாம் ஈசுவரதத்தர். இவரை ஈசுவரதத்த ஆபிரர் என்று கூறுவர். இவர் கி.பி. 236-இல் ஆட்சியைப் பறித்து கி.பி. 238 வரை ஆண்டதாகத் தெரிகிறது. இவரைப் பற்றி வேறு வரலாற்றுச் செய்திகள் கிடைத்தில.

**ஈசுவர முனிகள்** நாதமுனிகளின் திருமக னார் ஆவார். தந்தை சொல்லை மந்திரமாகக் கொண்டு பணி செய்து மகிழ்ந்தவர். காட்டு மன்னார்குடி என்னும் வீரநாராயணபுரத்தில் தந்தை யுடன் இருந்துவருங்கால், காட்டுமன்னார் கட்டளைப் படி தந்தையார் வடநாட்டுத் தலப்பயணம் மேற் கொண்ட போது உடன் சென்றார் வடமதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவாரகை, அயோத்தி முதலான திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் கார்மேகவண்ணன் திருக்கோலங்களைக் கண்டு களித் தார். இயமுனைக் கரையில் உள்ள கோவர்த்தன புரம் அடைந்து, தந்தையாரோடு தாமும் அங்கே தங்கித் தந்தையாருக்கும், தூய பெருநீர் இயமுனைத் துறைவருக்கும் கைத்திருத்தொண்டு செய்து மகிழ்ந் தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர்த் தந்தையோடு காட்டுமன்னார்குடி வந்து சேர்ந்தார். சீரங்கநாயகி என்ற இவர்தம் மனைவியார் கி.பி. 976-ஆம் ஆண்டு ஆண் மகவொன்றை ஈன்றெடுத்தார். நாதமுனிகள் தம் பேரனுக்கு இயமுனைத் துறைவன் எனப் பெயரிட்டார். ஈசுவர முனிகள் தம் மகனுக்கு முறைப்படி இளமைக்காலக் கடமைகள் யாவற்றை யும் நிறைவேற்றி மகிழ்ந்தார்.

இயமுனைத்துறைவர் 'ஏகசந்தக் கிராகி'. அத னால் ஒருமுறை ஒரு செய்தியினைக் கூறக் கேட்ட அளவில் மனத்தில் இருத்திக்கொள்வார். சிறுவயதி லேயே வேதம் முதலாகப் பல கலைகளையும் கற்றுத் தெளிவு பெற்றார். இவர் தம் ஆசிரியர் மகாபாடிய பட்டர் காரணமாக அப்போது சோழன் அவைப் புலவராக இருந்த ஆக்கியாழ்வானை வாதில் வென்று பெரும்புகழ் பெற்றார். வாதில் இவரே வெல்வார் என்று சோழன் மனைவி உறுதி கூறி யிருந்தார். அதனால், இவர் வென்றவுடன் அரசமா தேவி 'என்னை ஆளவந்தார்' என்று இவரைப் பாராட்டி மகிழ்ந்த சிறப்பால், இவர் அன்று முதல் ஆளவந்தார் என்றே அழைக்கப்பெற்றார். ஆள வந்தாருக்குத் தந்தையாராகவும் நாதமுனிகட்குத் தனயராகவும் திகழ்ந்தவர் ஈசுவரமுனிகள். கொ.இ.

**ஈசுவரன்**: காண்க: இறைவன்.

**ஈட்டன்** என்பது இங்கிலாந்து நாட்டிலுள்ள தொரு நகரம். இது பக்கிங்காம் சயரில் (Bucking-hamshire) அமைந்துள்ளது. தேம்சு ஆற்றங்கரை நகரமான இவ்வூரில் உலகப் புகழ்பெற்ற கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இங்கு ஏழை மாணவர்க ளும் படிக்கும் பொதுப்பள்ளிகளில் பல்லாயிரம் மாண வர்கள் கல்வி கற்றுப் பெரும் புகழ் படைத்தனர். முதன்மையான படைவீரர்களையும் அரசியல் வல்லு நர்களையும் இங்கிலாந்து பெற்றமைக்கு இக்கல்வி நிறுவனம் காரணமாயிருந்தது. உடலுக்கு உறுதியூட் டும் விளையாட்டுகள், உடலையும் உள்ளத்தையும் உரனாக்கி அரண் செய்யும் என்னும் கோட்பாட்டை வலியுறுத்தும் பழமொழியொன்று ஈட்டனின் (Eton)

சிறப்பைச் சுட்டிக்காட்டும். இக்கல்லூரி ஆறாம் என்றி (Henry VI) என்னும் மன்னரால் கி.பி. 1440 ஆம் ஆண்டில் நிலைநாட்டப் பெற்றது. அப்போது இங்குப் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 1250 ஆகும். ஈட்டனின் மக்கள்தொகை 4950 (1976).

**ஈட்டியெழுபது** செங்குந்தர் குலத் தலைவர்களின் வரலாறுகளையும் குலமாண்புகளையும் எடுத்துக் கூறும் நூலாகும். இந்நூலாசிரியர் குறித்துக் கருத்து வேறுபாடு உண்டு. இலக்கிய வரலாற்று ஆசிரியருள் பலர் ஒட்டக் கூத்தரே இந்நூலைப் பாடினார் என்னும் கொள்கையராவர். இக்கொள்கையை மறுப்பாரும் உளர்.

இந்நூல் கடவுள் வாழ்த்து, தற்சிறப்புப்பாயிரம் நீங்கலாக 71 பாடல்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்து விநாயகர் வாழ்த்தாகவும், பாயிரப்பாடல் இந்நூல் பாடப்பட்டதன் புராண வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.

குந்தப்படையின் சிறப்புக்களை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. நவவீரர்களின் திருக்கையில் இடம் பெறும் குந்தப்படை உமையம்மையால் கொடுக்கப் பட்டது. முருகக் கடவுளின் அறுபடை வீடுகளிலும் வீற்றிருக்கும் சிறப்பினைக் கொண்டது (17). தீயோரை அழிக்கும் செயலில் பகைமையை மட்டும் அழித்து அவர்களுக்கு நலஞ்செய்யும் பெருஞ்சிறப்பு இக் குந்தப்படைக்கு உண்டு என்பதைத் 'திருந்தலார் உரவங்கம் மண்மிசை யாக்கி, ஆவியைச் செங்கதிர் வழியிடைச் செலுத்தித் தேவர்கள் தங்களை வான் புகழ் தரும் செங்குந்தம்' (20) என்னும் புலவர் கூற்றால் அறியலாம். சிவபெருமானை அருச்சிப் பார்க்கும், மூவர் தேவாரத்தை முன்னின்று ஓதுவார்க்கும், ஆசையோடு ஐந்தெழுத்தை அகத்தில் நினைவார்க்கும் வீடுபேற்றைத் தரவல்லது (24); பூமாலை, கடப்பமாலை, புலவர்தம் பாமாலை போன்ற அருள் வழங்கும் நன்மாலைகளை ஒருபுறம் அணிந்து கொள்ள, மறுபுறம் பகை மன்னர்களை அழித்து அவர்தம் குடர் மாலைகளையும் மலர்மாலைகளாகச் சூடிக் கொள்ளும் பான்மையது (43) என்பதால் குந்தப்படையின் அருளாற்றலும், பகையழிக்கும் மற ஆற்றலும் புலனாகின்றன.

'நாட்டிலுயர் செங்குந்த நாயகர்' என்னும் தொடர் செங்குந்த மரபினரின் ஏற்றங் கூறுகிறது. இம்மக்கள் வீரமும் பெருந்தவமும் கொண்ட வீர வாகு தேவர் முதலிய நவவீரர்களின் மரபினர். இப் பெருமக்கள் முதலியார் என்றும் கைக்கோளர் என்றும் வழங்கப்பட்டனர். இம் மரபினர் தமிழகத்தின் பெயர் பெற்ற சிவத்தலங்களில் அறங்காவலர்களாக ஆட்சி செய்தனர் என்பது தெரியவருகிறது (3). சேவற்கொடி முருகப்பெருமானை விட்டு நீங்காத வாறு போலச் செங்குந்த இனத்தவரும் முருகப்பெருமானை விட்டு நீங்கா அன்பினராகத் திகழ்ந்தனர்.

இந்நூலுள் பழுவூர் வீரன் முதலாகத் தஞ்சை வேம்பன் ஈறாகப் பதினொரு செங்குந்தத் தலைவர்கள் பற்றிய வரலாறுகள் நிரலே கூறப்படுகின்றன. 'நாராயணனே விக்கிரம நாராயணனாம்' (47) என்னும் தொடரால் அக்கால மக்கள் இத் தலைவனைத் திருமாலாகக் கொண்டு வழிபட்டமை அறியலாம். 'நடுநின்று முடிப்பான் கச்சித் தணியன்' (48) என்னும் தொடர் கச்சித் தணியனின் நடுவுநின்ற பண்பாட்டுச் சிறப்பினைப் புலப்படுத்தும். பிணவன் என்பான் அஃறிணை உயிர்கள் மாட்டும் அன்பு செலுத்தியவனாக அறியப்படுகிறான். தஞ்சை வேம்பன் என்பான் திருவையாற்று ஐயாறப்பன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவனாகவும், பராந்தக சோழன் அவைக்களத்து முதலமைச்சனாகவும் விளங்கினான் என்னும் செய்தியை இந்நூலால் அறிந்து கொள்ள முடிகிறது. இரா.செ.

**ஈட்டுறுதி ஒப்பந்தம்**: ஈட்டுறுதி ஒப்பந்தத்தினை ஒப்பந்தவியல் சட்டம் விதிகள் 124-125-இல் காணலாம்.

ஒப்பந்தவியல் சட்டம், விதி 124 இதனை வரையறுக்கிறது. வாக்குறுதியர் ஒருவர் தனது செயல் மூலமாகவோ பிறர் ஒருவர் செயல் மூலமாகவோ ஒருவருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து ஈடுசெய்வதாக வாக்குறுதியளிக்கும் ஒப்பந்தம் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும்.

எடுத்துக்காட்டாக 'இ' என்பவர் உரூ.200 குறித்து 'ஆ' வின் மீது தொடுக்கும் வழக்கில் ஏற்படும் விளைவுகட்கு 'அ' ஈட்டுறுதி செய்வதாக ஒப்பந்தம் மேற்கொள்வது ஈட்டுறுதி ஒப்பந்தம் (Contract of Indeminty) எனப்படும்.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் வாக்குறுதியரைக் கட்டுப்படுத்த வாக்குறுதி பெறுநர் இழப்படைந்திருக்க வேண்டும். இழப்பு நிகழ்வடைவதினின்று தான் ஈட்டுறுதி அளிப்பவரின் கடப்பாடு தோன்றுகிறது.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் மறுபயன் அல்லது நோக்கம் சட்ட பூர்வமானதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அவதூறு ஒன்றினை வெளியிடுவதால் உண்டாகும் இழப்பினை ஈடுகட்ட அதனை எழுதியவர் முனையும் உடன்பாட்டினை சட்டப்படி வலியுறுத்தலாகாது.

ஈடுகட்டும் இழப்பு வாக்குறுதியர் அல்லது எவரேனும் ஒருவரின் நடத்தையால் ஏற்பட வேண்டும். இது மனித செயலன்றி, இயற்கையினால் விளையும் விபத்து, தீ முதலியவற்றால் ஏற்படும் இழப்புகளை உட்கொண்டதன்று. ஆனால், ஆங்கிலச் சட்டம் மனிதர் மற்றும் இயற்கைச் சக்திகளால் ஏற்படும் விளைவுகளையும் கட்டுப்படுத்தும்.

ஈட்டுறுதி பெறுநரின் உரிமைகளை விதி 125-இல் காணலாம். அவை மூன்று:

1. ஈட்டுறுதி செய்ய வாக்களிக்கப்பட்ட செயல்களில் ஏற்படும் எந்த வழக்கிலும் கொடுக்க வேண்டிய எல்லா இழப்பீடுகளையும் பெற உரிமை உடையவர்.

2. வாக்குறுதியரின் ஆணைக்கு மாறுபடாமலே மற்றும் ஈட்டுறுதியில்லா நிலையில் நேர்மையுடன் செயல்பட்டு அல்லது வாக்குறுதியரின் அனுமதியின் பேரில் தொடரப்பட்ட அல்லது எதிர்த்த வழக்குகளில் செலுத்தப்பட வேண்டிய எல்லாத் தொகையையும் வசூலிக்க உரிமையுடையவர்.

3. வாக்குறுதியரின் ஆணைக்கு மாறுபடாத உடன்பாடு மற்றும் ஈட்டுறுதி ஒப்பந்தமில்லா நிலையில் நேர்மையுடன் செயற்பட்டு வாக்குறுதி பெறுநர் ஏற்படுத்திய உடன்பாட்டில் அல்லது வாக்குறுதியர் அனுமதித்த வழக்குச் சமரசத்தின் நிபந்தனைப்படி கொடுத்த எல்லாத் தொகையையும் பெற உரிமையுடையவர்.

ஏ.ப.

**ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும்**: வாணிக நடவடிக்கையில் ஒருவருக்கு இழப்பு ஏற்பட்டால் அதை ஈடுகட்டுவதாக மற்றொருவர் உறுதி அளிப்பது ஈட்டுறுதி அல்லது ஈட்டு நிதி (Indemnity) எனப்படும். பணங் கொடுக்கல் வாங்கலில் கடன் பெறுபவர் கொடுக்கத் தவறினால், கடன் கொடுத்தவருக்கு மூன்றாம் ஆள் ஒருவர் தாம் கொடுப்பதாகப் பொறுப்பேற்றுக் கொள்வது பொறுப்புறுதி (Guarantee) எனப்படும்.

முருகன் வேலனுக்குப் பொருள்களை விற்கிறார். முருகனுக்குப் பணம் கிடைக்கக் கந்தன் ஈட்டுறுதி அளிக்கிறார். முருகனுக்குஇழப்பு (நட்டம்) ஏற்பட்டால் அதை ஈடுகட்டுவதாகக் கந்தன் உறுதியளிக்கிறார். இது போலவே, காப்பீட்டுக் கழகம் சொத்துகள் தீயினால் சேதப்பட்டால் அதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதாக உறுதியளிக்கிறது. அதுவும் ஈட்டுறுதி எனப்படும். தம் நடத்தையாலோ பிறர் நடத்தையாலோ ஒருவருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து அவரைக் காப்பாற்ற மற்றொருவர் வாக்குறுதி அளிக்கிறார். இந்த ஒப்பந்தமே ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இதில் ஈட்டுறுதி அளிப்பவர், ஈட்டுறுதி பெறுபவர் என இருவர் இருக்கின்றனர். புகைவண்டி மூலம் பொருள்களை அனுப்பும்போது, புகைவண்டிப் பற்றுச்சீட்டைக் (Receipt) காட்டித்தான் பொருள்களைத் திரும்பப் பெறமுடியும். இந்தப் பற்றுச்சீட்டைத் தொலைத்துவிட்டால் ஈட்டுறுதி ஆவணம் எழுதிக் கொடுத்து விட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புகைவண்டி நிலைய நிருவாகத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பை ஈடுகட்டும் பொறுப்பை ஆவணத்தின் மூலம் ஈட்டுறுதி அளிப்பவர் ஏற்றுக் கொள்கிறார்.

இராமன் என்பவரிடம் இலக்குவன் இருபதாயிரம் உரூபாய் கடன் பெறுகிறான். அதை இலக்குவன் தராவிட்டால் தானே தருவதாகப் பரதன் பொறுப்பேற்கலாம். இதுவே பொறுப்புறுதியாகும். இராமன் கடனீந்தவன். இலக்குவன் கடனாளி. பரதன் பொறுப்புறுதி கொடுத்தவன். இது மூவரிடையே ஏற்படும் ஒப்பந்தம். கடன் கொடுப்பதும் பொறுப்புறுதி அளிப்பதும் ஒரே காலத்தில் நிகழ வேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் பொறுப்புறுதியின் வகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட (Limited) பொறுப்புறுதி, தொடரும் பொறுப்புறுதி, நிகழும் கடனுக்கும் வருங்காலக் கடனுக்கும் அளிக்கப்படும் பொறுப்புறுதி, முழுத் தொகைக்கான பொறுப்புறுதி, பகுதித் தொகுதிக்கான பொறுப்புறுதி எனப் பொறுப்புறுதிகள் பலவகைப்படும். வரையறுக்கப்பட்ட ஒரு கடனுக்குப் பொறுப்புறுதி அளிக்கப்பட்டால் அது வரையறுக்கப்பட்ட பொறுப்புறுதியாகும். தொடரும் பொறுப்புறுதியில் பல நடவடிக்கைகள் தொடருகின்றன. கண்ணனுடைய சொத்துகளிலிருந்து வருவாய் பெறுவதற்குக் கோபாலன் என்பவர் அமர்த்தப்படுகிறார். கோபாலன் மூவாயிரம் உரூபாய் வரை வாங்கித் தருகிறார். பின்னர், அவர் தொடர்ந்து பெற்றுத் தாராதபொழுது, கேசவன் அதைத் தருகிறேன் என்று பொறுப்புறுதி அளிக்கிறார். இது தொடரும் பொறுப்புறுதி எனப்படும். பொறுப்புறுதி அளித்தவர் இறந்துவிட்டாலோ தாம் இனிப் பொறுப்பேற்க முடியாது என்று அறிவிப்புச் செய்தாலோ தொடரும் பொறுப்புறுதி நின்றுவிட்டதாகக் கருதப்படும். பொறுப்புறுதி அளிக்கப்படும் காலம் குறிக்கப்பட்டு, அது நிகழும் கடனுக்குரியதாகவோ வருங்காலக் கடனுக்குரியதாகவோ இருக்கலாம்.

பொறுப்புறுதி முழுத் தொகைக்குமாக இருந்து கடனாளி கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காவிட்டால், பொறுப்புறுதி அளித்தவர் முழுத் தொகையையும் செலுத்துவார். ஒரு பகுதித்

தொகைக்குப் பொறுப்புறுதி அளிக்கப்பட்டால், அதை மட்டுமே பொறுப்புறுதி அளித்தவர் செலுத்துவார்.

சிறப்புத் தன்மைகள்: (1) பொறுப்புறுதி ஒப்பந்தம் உயர்ந்த நன்னம்பிக்கை ஒப்பந்தம் அன்று. செய்திகள் அனைத்தையும் பொறுப்புறுதி அளிப்பவருக்குத் தெரியப்படுத்த வேண்டிய தேவையில்லை என்றாலும், முழுமையாக எல்லாவற்றையும் மறைக்கக் கூடாது. (2) பொறுப்புறுதி ஒப்பந்தம் வாய்ச் சொல் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ அமையலாம்; நடத்தை மூலம் வெளிப்படுவதாகவும் இருக்கலாம்; (3) பணம் திருப்பிச் செலுத்துமுன் கடனாளியிடம் பணத்தை வாங்குமாறு கடனீந்தோரிடம் பொறுப்புறுதி அளித்தவர் சொல்லலாம்; இதற்காக வழக்கும் தொடரலாம். (4) பணம் செலுத்தும்போது, ஈடுகளைக் கால வரிசைப்படி பயன்படுத்துமாறு கடனீந்தோரிடம் சொல்லலாம். எடுத்துக்காட்டாக, பாரியிடம் நிலம், கட்டடம் இரண்டும் அடைமானம் வைக்கப்பட்டுள்ளன. அதியமான் பொறுப்புறுதி அளித்திருக்கிறார். கடனுக்காக நிலத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறும் இன்னும் தொகை வரவேண்டி இருந்தால், கட்டடத்தின் மீதும் அடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் அதியமான் வேண்டிக் கொள்ளலாம். அதியமானுக்குக் கட்டடத்தின் மீது அடைமானம் இருந்தால், அவருக்கு இது உதவியாக இருக்கும். (5) கடனாளியின் கடனைப் பொறுப்புறுதி அளித்தவர் செலுத்தி விட்டால், கடனீந்தோருக்குக் கடனாளியின் மீதுள்ள உரிமைகள் அனைத்தும் பொறுப்புறுதி அளித்தவருக்கு வந்துவிடும். (6) பொறுப்புறுதி அளித்தவருக்குத் தெரியாமல், ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகள் மாற்றப்பட்டால், பொறுப்புறுதி அளித்தவர் தம் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவார். வட்டிவீதம் மாற்றப்பட்டாலோ ஈடு வைக்கப்பெற்ற சொத்துகள் மாற்றப்பட்டாலோ அது பொறுப்புறுதி அளித்தவரின் ஒப்புதலுடன் செய்யப்படவேண்டும். இல்லையேல், அவர் பணம் செலுத்தத் தேவையில்லை. (7) கடனாளி வயதடையாதவராக இருந்தால், கடனீந்தோர் முதன் முதலில் கடனாளி மீது வழக்குத் தொடரமாட்டார். இதற்குப் பொறுப்புறுதி அளித்தவர் மட்டுமே பொறுப்பாவார். (8) பலர் சேர்ந்து பொறுப்புறுதி கூட்டாக அளித்திருக்காலம். இதனைக் கூட்டுப் பொறுப்புறுதி என்பர். கடனாளி கடனைச் செலுத்தாவிட்டால் கூட்டுப் பொறுப்புறுதியாளர்கள் அதைச் சமமாக, ஆனால் ஒவ்வொருவரும் பொறுப்பேற்ற தொகையைவிட மிகாமல், செலுத்த வேண்டும். (9) பொறுப்புறுதி ஒப்பந்தம், மோசடி மூலமோ உண்மையை மறைத்தோ நிறைவேற்றப்பட்டிருந்தால், அது செல்லாது. கடனீந்தோர் தக்க காலத்தில் செயற்பட்டுக் கடனாளியிடமிருந்து கடனைத் திரும்பப் பெற முயற்சி எடுக்காமல் விட்டு விட்டாலும் ஒப்பந்தம் செல்லாது. இக்காலங்களில் பொறுப்புறுதியாளர் விடுதலை பெறுவார். (10) பொறுப்புறுதியாளர் இறந்து விட்டால் அவர் தர வேண்டிய பொறுப்பிற்கு அவர் சொத்துகளை ஈடாக எடுத்துக் கொள்ள வழக்குத் தொடரலாம். (11) சில சூழ்நிலைகளில் கடன் கொடுத்தோர் செயல்களாலும் பொறுப்புறுதியாளரின் பொறுப்புத் தீர்ந்துபோகிறது. பொறுப்புறுதியாளரின் உரிமைகளுக்குப் பாதகமாகக் கடன் கொடுத்தோர் யாதேனும் செய்தால் பொறுப்புறுதியாளர் விடுவிக்கப்படுவார்.

கடனீந்தோரின் கடமைகள்: கடனீந்தோர் சிறு தவறு செய்தாலும் அது பொறுப்புறுதி கொடுத்தவரை விடுவித்துவிடும். எனவே, கடனீந்தோர் கீழ்க்காணுபவைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.(1) பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் பகுதிகளைப் பொறுப்புறுதி அளித்தவர் அனுமதியில்லாமல் மாற்றக்கூடாது; மாற்றினால், அதன் பின்னர் எழும் செயல்களுக்குப் பொறுப்புறுதி அளித்தவர் பொறுப்பேற்க மாட்டார். எடுத்துக்காட்டாக, இளஞ்செழியன் வங்கியிலிருந்து கடன்பெற நினைக்கிறார். தம் சொத்துகளை அடைமானமாக வைத்து இளஞ்செழியன் உரூபாய் 50,000 வரை கடன் வாங்கலாம் என்று தமிழன்பன் பொறுப்புறுதி அளிக்கிறார். இளஞ்செழியன் சொத்துகளின் ஒரு பகுதியை அடைமானம் வைத்து உரூபாய் 25,000 கடன் வாங்கிவிட்டார். இதன் பிறகு, வங்கி இளஞ்செழியனுக்கு எவ்வித அடைமானமும் இல்லாமல் உரூபாய் 20,000 கடன் கொடுக்கிறது என்றால் இந்தக் கடன் பொறுப்புறுதியாளரின் பொறுப்பு வரம்பிற்குள் வராது. இதற்கு அவர் பொறுப்பல்லர். ஏனெனில், இது அடைமானம் இல்லாத கடன். பொறுப்புறுதி அடைமானக் கடனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. (2) கடனாளியைக் கடனீந்தோர் விடுவித்தால் பொறுப்புறுதி அளித்தவரும் விடுவிக்கப்படுவார். எடுத்துக்காட்டாக, வங்கியில் கண்ணன் அதிகப் பற்றாக உரூபாய் 5,000 பெற்றுக்கொள்ளப் பலராமன் பொறுப்புறுதி அளித்திருக்கிறார். இந்தக் கடனைக் கண்ணன் திருப்பிச் செலுத்திக் கணக்கு முடிக்கப்பட்டது. வேறொரு கணக்கு கண்ணன் பெயரில் தொடங்கப் பெற்று, அதில் அதிகப்பற்று அனுமதிக்கப்பட்டால் அதற்குப் பலராமன் பொறுப்பாக மாட்டார். (3) கடனாளியின் மீது வழக்குத் தொடுப்பதில்லை என்றோ கடன் திரும்பக் கொடுக்கவேண்டிய காலத்தை நீட்டித்தோ வட்டிவீதங்களை மாற்றியோ அடைமா

னப் பொருள்களில் மாற்றங்கள் செய்தோ, கடனீந்தோர் செயற்பட்டால் பொறுப்புறுதி கொடுத்தவர் விடுவிக்கப்படுவார். அவர் அனுமதியின்றி இவற்றைச் செய்யக்கூடாது. (4) பொறுப்புறுதி கொடுத்தவரின் நலனைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை களைக் கடனீந்தோர் செயற்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, கோதுமையை அடைமானம் வைத்துக் கடன் பெற்றிருந்தால், கடன் கொடுத்தவர் அந்தக் கோதுமையைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பொறுப்புறுதி கொடுத்தவர் கடனைச் செலுத்தினால் அவரிடம் கோதுமையை ஒப்படைக்க வேண்டும்.

ஈட்டுறுதிக்கும் பொறுப்புறுதிக்கும் உள்ள வேறுபாடுகள்: இவை இரண்டும் மேலோட்டமாக ஒன்று போலத் தோன்றினாலும், இவற்றிற்கு இடையில் பல வேறுபாடுகள் உள்ளன: (1) பொறுப்புறுதியில் கடனாளிக்கும் கடனீந்தோருக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும், கடனீந்தோருக்கும் பொறுப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும் ஆக இரண்டு ஒப்பந்தங்கள் உள்ளன. ஈட்டுறுதியில் ஈட்டுறுதி அளிப்பவருக்கும் பெறுபவருக்கும் இடையில் உள்ள ஒப்பந்தம் மட்டுமே உள்ளது. (2) பொறுப்புறுதியில் கடனாளி, கடனீந்தோர், பொறுப்புறுதி அளிப்பவர் என மூவர் உள்ளனர். ஈட்டுறுதியில் ஈட்டுறுதி அளிப்பவர், பெறுபவர் என இருவர் மட்டுமே தொடர்பு கொள்கிறார்கள். (3) பொறுப்புறுதியில் பொறுப்புறுதி அளித்தவரின் பொறுப்பு இரண்டாம் நிலையிலுள்ளது. கடனாளி கடனைச் செலுத்தா விட்டால்தான் பொறுப்புறுதி அளித்தவர் செலுத்த வேண்டும். ஆனால், ஈட்டுறுதி அளிப்பவர் பொறுப்பு முதன்மையானது. ஒப்பந்தப்படி, ஈட்டுறுதி அளிப்பவர் மட்டுமே இழப்பை ஈடுகட்ட வேண்டியவர் ஆகிறார். (4) பணம் செலுத்திய பிறகு, பொறுப்புறுதி அளித்தவருக்கு மாற்றமர்வு உரிமைகள் வருகின்றன. ஈட்டுறுதி கொடுத்தவருக்கு இத்தகைய உரிமைகள் இல்லை. (5) பொறுப்புறுதி வெளிப்படத் தெரியும் கடனுக்கோ கடமைக்கோ தரப்படுகிறது. ஆனால், ஈட்டுறுதி எதிர்காலத்தில் நிகழும் எதிர்பாராத செயலுக்கோ நிகழ்ச்சிக்கோ தரப்பட்டுப் பெரும்பாலும் இழப்பில் முடிகிறது. (6) பொறுப்புறுதி கொடுத்தவர் அது நிறைவேறிப் பணம் கொடுத்தால், அதைத் திரும்பப் பெறக் கடனாளி மீது வழக்குத் தொடரலாம். ஆனால், ஈட்டுறுதியில் சில சூழ்நிலைகளில் தவிரப் பெரும்பாலும் இழப்பு ஈட்டுறுதி கொடுத்தவரையே சார்கிறது. (7) பொறுப்புறுதி கொடுத்தவர் பொறுப்புறுதியினால் தமக்கு ஏற்பட்ட வட்டி, தள்ளுபடி, சரக்கு வைத்துள்ள இட வாடகை, காப்பீட்டுச் செலவு முதலிய சட்டப்படியான செலவுகள் அனைத்தையும் கடனாளியிடமிருந்து வாங்கலாம். ஈட்டுறுதியில் இவை நிகழ்வதில்லை.

இந்திய ஒப்பந்தச்சட்டத்தின் 124-ஆம்பிரிவு ஈட்டுறுதியை வரையறை செய்கிறது. அதன் 126-ஆம் பிரிவு முதல்147-ஆம் பிரிவு முடிய பொறுப்புறுதி பற்றிய விளக்கங்கள் உள்ளன. ஈட்டுறுதி பற்றிய வரையறை இந்தியச் சட்டத்தை விட ஆங்கிலச் சட்டத்தில் விளக்கமாக உள்ளது. நடவடிக்கையால் ஏற்பட்ட இழப்பிலிருந்து ஒருவரைக் காப்பாற்றச் செய்யப்படும்வாக்குறுதியே ஈட்டுறுதியாகும் என்பது ஆங்கிலச் சட்டம். பொதுவாக ஆங்கிலச் சட்டத்தின் நியாயமான கோட்பாடுகள் இந்தியச் சட்டத்திற்கும் பொருந்தும். சோ.சோ.மீ.சு.

**ஈடன்** என்னும் பெயரில் இங்கிலாந்திலும் இசுகாட்லாந்திலும் பல ஆறுகள் உள்ளன. அவற்றுள் சிறப்பானதாக வட இங்கிலாந்தில் வெசுட்டுமூர்லாந்தில் உற்பத்தியாகும் ஈடன் ஆற்றைக் குறிப்பிடலாம். இந்த ஆறு கம்பர்லாந்தின் குறுக்கே வடமேற்காகப் பாய்ந்து சால்வே கடற்கழியில் கலக்கிறது. ஈடன் (Eden) பள்ளத்தாக்குப் பண்ணைத் தொழிலுக்குகந்த நிலமாகும்.

**ஈடன் அந்தோனி** உலகப் புகழ்பெற்றவர். இவர் திறமை மிக்க அரசியல் வல்லுநர். இவரது திறன் இவரை இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் பதவி வரை உயர்த்தியது.

ஈடன் அந்தோனி (Eden Anthony) தர்காமில் (Durham) கி.பி. 1897-ஆம் ஆண்டு பிறந்தார். பழம் பெருங் குடும்பத்தைச் சார்ந்தவராதலின் இவர் பிறவியிலேயே எல்லா வாய்ப்பினையும் பெற்றிருந்தார். இவர் ஈட்டன் (Eton) பள்ளியில் சேர்ந்து படித்தார். முதலாம் உலகப் போர் 1914-இல் தொடங்கியவுடன் படையில் சேர்ந்தார். இவர் தமது இருபதாம் வயதிலேயே இராணுவ விருதுகள் பல பெற்றார். போர் முடிந்ததும் தமது கல்வியைத் தொடர்ந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கீழ்நாட்டு மொழிகளில் சிறப்புப் பட்டமும் பெற்றார்.

இவர் 1923-இல் வார்விக் லீமிங்க்டன் தொகுதியின் பேராளராக நாடாளுமன்றத்திற்குப் பழமை விரும்புவோர் (Conservative) கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தொகுதியின் பேராளராக 1957 வரை நாடாளுமன்றத்தில் பணிபுரிநதார்.

ஈடன் அந்தோனி நாடாளுமன்றத்தில் மிகப் புகழ் பெற்றவராக இருந்தார். இளமையும் அழகிய தோற்றமும் அயராது உழைக்கும் தன்மையும் பெற்றிருந்தார். போரைப் புறக்கணிக்கும் உலகொன்றை உருவாக்க இவர் விரும்பினார். இவரது திறமையைப் பாராட்டி இங்கிலாந்து அரசு, வெளியுறவு அமைச்சராக இருந்த சர் ஆஸ்டன் சேம்பர்லின் அவர்களுக்கு இவரை நாடாளுமன்றச் செயலாளராக 1926-இல் அமர்த்தியது. இப்பதவியில் 1929 வரை நீடித்திருந்தார். பின் 1931-இல் துணைச் செயலாளராகப் பதவி உயர்த்தப்பட்டார். அதன்பின் 1935 சூன் திங்களில் சர்வதேசசங்கத்தில் (League of Nations) இங்கிலாந்தின் அமைச்சராக அமர்த்தப்பட்டார். வெளியுறவு அமைச்சராக 1935-இல் பதவியேற்றார். இவரது ஆட்சிக் காலத்தில் சர்வதேச சங்கம் இத்தாலியைச் சார்ந்த முசோலினியையும், செருமனியைச் சார்ந்த இட்லரையும் கடுமையாக எதிர்க்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், அத்தகைய கொள்கையை ஈடனால் பின்பற்ற முடியவில்லை. ஏனெனில், முதலாம் உலகப் போரின் அதிர்ச்சியிலிருந்து மீளாத இங்கிலாந்து மக்கள், மேலும் மேலும் போர்ப் படையைப் பலப்படுத்த விரும்பாதிருந்ததால், அவரால் வெளியுறவில் உறுதியான கொள்கையொன்றைப் பின்பற்ற இயலவில்லை.

இட்லரின் நாடு கவர்தல் கொள்கை ஐரோப்பாவை அச்சத்தில் ஆழ்த்தியது. அமெரிக்க நாட்டு அதிபர் உரூசுவெல்ட்டும் சிறிது கலக்கமுற்றார். இதனை அறிந்த ஈடன் அந்தோனி உடனடியாக இங்கிலாந்து திரும்பினார். இங்கிலாந்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குமிடையே நல்லதொரு கூட்டுறவு ஏற்படக்கூடிய இந்த வாய்ப்பினை, அதுவும் இட்லரின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடான நிலையில் கிடைத்த வாய்ப்பினைச் சேம்பர்லின் கைவிட்டதைச் சுட்டிக்காட்டி அவரது செயலை ஈடன் அந்தோனி எதிர்த்தார். இத்தாலியின் நடத்தை, ஆங்கிலேய-இத்தாலிய உறவிற்கு உகந்ததாக இல்லை என்பதையும் ஈடன் உணர்ந்தார். எனவே 1938-ஆம் ஆண்டில் இவர் தம் பதவியை விட்டு விலகினார்.

இரண்டாம் உலகப் போர் 1939-இல் தொடங்கியது. ஈடன் குடியேற்ற நாடுகளின் அமைச்சராகச் சேம்பர்லின் அமைச்சரவையில் சேர்ந்தார். அடுத்து வந்த பிரதம மந்திரி சர் வின்சண்ட் சர்ச்சில் ஈடனைப் போர்த்துறை அமைச்சராக அமர்த்தினார். ஈடன் 1945-ஆம் ஆண்டு வரை அப்பதவியிலிருந்தார். தாம் போரில் இறக்க நேரிட்டால் ஈடனைத்தான் தலைமை அமைச்சராக்க வேண்டுமென இங்கிலாந்து மன்னரிடம் சர்ச்சில் கூறினார்.

பழமை விரும்புவோர் கட்சி 1951-இல் பதவிக்கு வந்தது. ஈடன் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார். இவரது புகழ் மேலும் பெருகியது. இரானிய எண்ணெய்த் தகராற்றை முடிவுக்குக் கொண்டு வந்தார். இத்தாலிக்கும் யூகோசுலாவியாவுக்குமிடையே இருந்த பூசலுக்குத் தீர்வு கண்டார். இந்தோசீனாவிலும் போரை முடிவிற்குக் கொண்டு வந்தார். மேலும் இவர் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கையை உருவாக்கினார். இவரது சொந்த முயற்சியால் மேற்கு ஐரோப்பியப் பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டு, ஐரோப்பாவிற்கு ஏற்பட்டிருந்த இடுக்கண் தவிர்க்கப்பட்டது. ஐரோப்பியப் பாதுகாப்பு நிறுவனத்தைப் பிரான்சு எதிர்த்தபோது, ஈடன் ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு இலண்டனில் ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்தார். பிரசல்சு (Brussels) உடன்படிக்கையில் சேர்ந்த நாடுகள் உடனடியாகப் போர்ப்படையை ஐரோப்பாவில் வைத்துக் கண்காணிக்கும் என்று இவர் கூறியதும், பிரான்சு அடங்கியது. எல்லா நாடுகளும் ஐரோப்பியப் பாதுகாப்பு அமைப்பை ஏற்றுக்கொண்டன. ஈடனுக்கு 'வீரன்' (Knight) என்னும் விருது கொடுக்கப்பட்டது.

ஈடன் 1952-இல் சர்ச்சிலின் மருமகளைத் திருமணம் செய்துகொண்டார். இவர் சர்ச்சிலுக்குப் பின் 1955-இல் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார். உலக நெருக்கடி நிலையைத்தவிர்க்க உருசிய நாட்டுத் தலைவர்களான குருசேவ் அவர்களையும், புல்கானின் அவர்களையும் இங்கிலாந்திற்கு அழைத்துப் பேசினார். இதன் பின், ஈடனுக்குச் சூயசு தகராறு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. வெளியுறவு அமைச்சராக இருந்த காலத்தில் எகிப்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஆங்கிலப் படையைச் சூயசுக் கால்வாயிலிருந்து திரும்பி வரும்படி செய்தார். இங்கிலாந்திற்கும் எகிப்திற்குமிடையே நல்லுணர்வை நிலைநாட்டுவதற்காகவே இதனைச் செய்தார். இந்நிலையில் எகிப்து அதிபர் நாசர் சூயசுக் கால்வாயை நாட்டுடைமையாக்கியதைக் கண்டு ஈடன் அதிர்ச்சியுற்றார்.

நாடாளுமன்றத்தில் இவரது சூயசுக் கொள்கைக்கும், ஐக்கிய நாட்டுச் சபையைப் பொறுத்தவரை இவர் நடந்துகொண்ட முறைக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. அமெரிக்காவுடனும் குடியேற்ற நாடுகளுடனும் ஈடன் நல்லுறவு கொள்ளவில்லையென்று நாடாளுமன்றம் குறை கூறியது. அதனால் ஈடன் 1957-இல் தலைமை அமைச்சர் பதவியை விட்டு விலகினார். இங்கிலாந்து இவரது தொண்டினைப் பாராட்டும் வகையில் இவரை ஆவான் (Avon) பிரபுவாக்கிச் சிறப்பித்தது. கி.பி.

**ஈடித்து சிட்வெல்** (கி.பி. 1887-1964): சிட்வெல் குடும்பம் ஈடித்து, ஆசுபெர்ட்டு (Osbert), செச்சவெரல் (Sacheverell) ஆகிய மூவரைக் கொண்டது. அவர்கள் இளம் கவிஞர் குழுவாகச் செயற்பட்டுச் 'சக்கரங்கள்' என்ற இலக்கிய இதழுக்குத் தம் படைப்புகளை அளித்து வந்தனர். இப்படைப்புகளில் ஒரே குடும்பச் சாயலையும், பொதுவான பாடுபொருள் அமைப்புகளையும், போக்குகளையும் காண முடிகிறது. பழமரபு எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்களாக அவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

தேம் ஈடித்து சிட்வெல்லினுடைய (Dame Edith Sitwell) தொடக்க காலக் கவிதைகள் செறிவான, ஆரவாரமான வண்ணப் படிமங்களைக் கொண்டமைந்தன. அவர் கவிதைகளில் சிந்தனைகள், உணர்வுகள், படிமங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் உலகியல் பொருள்களே சிறப்பிடம் பெறுகின்றன. இரிம்பாடின் (Rimbaud) தாக்கத்தினால் அவர் காட்சிப் பொருள்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். கவிதையில், 'நெசவு நேர்த்தி' (Texture) அமைப்பில் பெரிதும் கவனம் செலுத்தினார். அவருக்கு உருசிய 'பாலே' நடனத்தில் ஈடுபாடு உண்டு. எனவே, பாடுபொருள்களுக்குச்சிறப்பிடம் அளிப்பதைக் காட்டிலும், கவிதை உத்திகளுக்கே அவர் முதலிடம் அளித்தார்.

அவர் கவிதைகள் புரட்சிப் போக்குக் கொண்டவை. அவர் வாழ்ந்த காலத்தில் போரினால் ஏற்பட்ட துன்பமும், ஆன்ம இழப்பும் அவரை மிகுதியாகத் தாக்கின. எனவே, அவற்றினின்றும் தப்பித்துக் கலையுலகில் தம்மை இழந்து நின்றார். தம் காலப் பண்பாட்டு இழப்புப் பற்றிப் பெரிதும் வருந்திய ஈடித்து, தம் கவிதைகளில் செல்வர்களின் வளமிக்க வாழ்வின் போக்குகளையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தி நிறைவு கண்டார். 'கோமாளி வீடுகள்' (Clown Houses), 'பறக்கும் மரக்குதிரை' (The Wooden Pegasus),'ரோசா பாசுரம்' (The Canticle of the Rose), நாட்டுப்புற இன்பியல் நாடகங்கள்' (Bucolic Comedies) போன்ற கவிதைகளில் தம் இளமைக்காலக் கனவுகளின் வெளிப்பாடான ஒரு செயற்கை உலகத்தினை இக்கவிஞர் படைத்துக் காட்டினார். இக்கவிதைகளில், படிமக் கவிஞர்கள் வழிநின்று, ஒரு சொல்லிலேயே தேவையான கருத்து வீச்சுப் பொருண்மை வெளிப்படும்படியான உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

அவர்தம் கவிதையின் மற்றொரு சிறப்பு, ஆற்றலுடன் மெய்யெழுத்துகளைப் பயன்படுத்துவதும், உயிரெழுத்துகளைக் குறிப்பிட்ட சூழல்களில் அமைத்துக் காட்டுவதுமாகும். 'கோல்டு கோசுட்டு மரபுகள் (Gold Coast Customs) என்ற நெடும் பாடல் இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலத்து இயற்றப்பட்டதால், அதில் போரின் துன்பங்களையும் அழிவுகளையும் மனம் வருந்திப் பாடியுள்ளார். புதிய உலகத்தின் கொடுமையான, அழிவு தரத்தக்க அனைத்துச் செயல்களையும் தம் கவிதைகளில் கடுமையாகத் திறனாய்வு செய்கிறார். ஆனால், அவரே சமயச் சார்புடைய மெய்யுணர்வுக் கவிஞராகப் பிற்காலத்தில் மாறியது குறிப்பிடத்தக்கது. 'தங்கப் பாடல்' (The Song of the Gold) என்னும் இவர் கவிதை, மாயவுலகிலிருந்து இவர் ஆன்மிக உலகிற்கு மாறிய மன மாறுதலை விளக்குகிறது.

திறனாய்வாளர் என்ற முறையில் ஈடித்து கவிதைகளின் வடிவ அமைப்பையும் இலக்கிய உத்திகளையும் வற்புறுத்தினார். அவர் சொற்களை வைத்துக் கவிதை வடிவங்களில் புதுப்புதுச் சோதனைகளை உருவாக்கிக் காட்டினார். அவருடைய பிற்காலப் படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை 'உறங்கும் அழகு' (The Sleeping Beauty), திராய் பூங்கா (Troy Park), 'கவிதைத் தொகுப்பு' (Collected Poems) முதலியனவாகும். பி.எஸ்.வே.

**ஈடிப்பசு** கிரேக்கப் புராணவீரர்களுள் ஒருவன். இலேயசு என்னும் பெயர்கொண்ட தீப்சு அரசன், தன் மகன் தன்னைக் கொன்றுவிட்டுத் தாயை மணப்பான் என்று கோயில் தெய்வக்கூற்றுக் கூறியதை கேட்டதும் மகனைக் கொல்லத் திட்டமிட்டான். அடிமையொருவனிடம் மகனைக் கொடுத்துக் கொன்றுவிடுமாறு பணித்த போது, இரக்கம் கொண்ட அவ்வடிமை ஈடிப்பசைக் (Oedipus) காட்டில் விட்டுவிட்டான். ஆட்டிடையன் ஒருவன் இவனைக் கண்டெடுத்துத் தன் அரசனிடம் ஒப்படைத்தான். பாலிபசு (Polibus) என்னும் பெயரினான அவ்வரசன் கண்டெடுக்கப்பட்ட இக்குழந்தைக்கு ஈடிப்பசு என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். தெய்வமொழி முன்னர்க் கூறியதைப் போலவே ஈடிப்பசிடமும் கூறிற்று. பாலிபசேதன் தந்தையெனத் தவறாகக்கருதிய ஈடிப்பசு அவனைக் கொல்ல மனமின்றி ஊரைவிட்டு வெளியேறிப் போகும்போது வழியில் இலேயசைக் கண்டான். இருவருக்கும் மூண்ட கைகலப்பில் ஈடிப்பசு இலேயசைக் கொன்றான். ஈடிப்பசினால் தீப்சு நாடு நலமுற்றதை உணர்ந்த நாட்டு மக்கள் அவனை அரசனாக்கினர். தெய்வக் கூற்றின்படி ஈடிப்பசு தன் தாயையே மணந்துகொண்டான். உண்மைதெரிந்ததும் இவன் தாய் தற்கொலை செய்து கொண்டு மடிந்தாள். ஈடிப்பசு தன் கண்களை குத்திக்கொண்டு காட்டிற்குள் சென்று மறைந்தான். சோபாக்கிளீசு என்னும்

பெரியார் இந்நிகழ்ச்சியைக் குறித்து இரு நாடகங்களை எழுதினார். தாய் தந்தையரில் ஒருவரிடம் அன்பும் மற்றவரிடம் வெறுப்பும் காட்டும் மனப்பாங்கை ஈடிப்பசு மனப்பாங்கு என்று உளவியலார் வழங்குவர்.

**ஈடிப்பசு சிக்கல்** குழந்தை மன வளர்ச்சி நிலைகளில் ஏற்படும் உளப்போராட்டங்களுள்ஈடிப்பசு சிக்கல்(Oedipus Complex) என்பதும் ஒன்றாகும். இது சிக்மண்டு பிராய்டு என்னும் உளவியலறிஞரின் ஆளுமைக் கோட்பாட்டினுள் அடங்கும். பிராய்டு மனிதர்கள் எல்லோரிடமும் இருபாலியல்பு அமைந்திருப்பதாகக் கூறினார். குழந்தை வளர்ச்சியின் மூன்றாவது நிலையான பாலுறுப்பு நிலையில் ஆண் குழந்தை தன் தாயிடம் கொண்டிருந்த பாசத்தைக் குறைத்துக் கொள்கிறான். ஏனென்றால் அவன் தன் தந்தையிடம் அச்சம் கொள்கிறான். இவ்வச்சம் 'ஆண்மையழிப்பு' அடிப்படையில் குழந்தையிடம் தோன்றுகிறது. ஆயினும் அவன் தன் தந்தையுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறான். ஆண்மையழிப்பு அச்சம் அதிகமாவதற்கு ஒப்ப, அவன் ஆண் இனத்துடன் தன்னை ஒன்றுபடுத்துகிறான். இந்நிலையில் அவனிடம் வன்முறையியல்பு தோன்றுகிறது. இதுவே ஈடிப்பசு சிக்கலின் தீர்வு ஆகிறது.

ஆண் குழந்தை தன் தாயிடம் மிகுந்த பாசத்தையும் தன் தந்தையிடம் பகைமனப்பான்மையும் கொண்டிருக்கிறான். கிரேக்கப் புராணக் கதைகளில் கூறப்படும் ஈடிப்பசு என்பவன் தன் தந்தையைக் கொன்று திபசு என்ற நாட்டிற்கு அரசனான பிறகு, தன் தாயை யாரென அறியாமல் மணம் புரிந்து கொள்கின்றான். பிறகு உண்மையை யறிந்து தன்னுடைய கண்களைச் சிதைத்துக்கொள்கிறான். இந்தக் கிரேக்கப் புராணக்கதையை அடிப்படையாகக் கொண்டு, ஆண் குழந்தை தன் தாயிடம் கொண்டுள்ள அன்பு பாலுணர்வுள்ளதென்றும் அதன் காரணமாக அவன் தன் தந்தையிடம் பகைமையுணர்வை வளர்த்துக் கொள்கிறான் என்றும் சிக்மண்டு பிராய்டு தன் ஆளுமைக் வளர்ச்சிக் கோட்பாட்டினை விளக்குகின்றார்.

**ஈடு** திருவாய்மொழிக்கு அமைந்த உரைகளுள் தலைமைச் சிறப்பு உடைய உரையாகும். திருவாய்மொழிக்கு நிகராக இவ்வுரையும் தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கொண்டாடப்படுகிறது. இதனை 'முப்பத்தாறாயிரப்படி' என்று இதன் அளவு கருதிச் சொல்வதும் உண்டு. இது அளவில் சீபாடிய விளக்கமான சுருதப் பிரகாசிகை யுரையினை ஒத்தது.

ஈடு என்பதற்குத் தகுதி, இணை, கனம் ஆகிய பொருள்கள் உள்ளன. இது திருவாய்மொழிக்குத் தகுதி வாய்ந்த உரையாகத் திகழ்தலானும், இணையாகக் கருதப்படுதலானும், கருத்து வளத்தால் கனமாக இருத்தலானும் இப்பெயர் பெற்றது எனலாம். திருவாய்மொழிக்கேயன்றிக் கண்ணி நுண் சிறுத்தாம்பு, திருவிருத்தம் முதலிய சில நூல்களுக்கு நம்பிள்ளை அருளிய உரையும் ஈடு என்றே குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின், நம்பிள்ளை அருளிய எல்லா உரையினையும் தகுதியும் சிறப்பும் கருதி ஈடு என்று குறித்தனர் எனக் கொள்வது பொருந்தும்.

ஈடு முப்பத்தாறாயிரப்படியினைச் சொல்லியருளியவர் நம்பிள்ளை. இதனை ஓலைச் சுவடியில் எழுதி வைத்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இது வடக்குத் திருவீதிப் பிள்ளையால் எழுதப்பட்ட போதிலும், இதில் உள்ள கருத்துகள் நம்பிள்ளை சொன்னவையாக இருத்தலின் இதனை நம்பிள்ளை ஈடு என்றே குறிப்பர்.

நம்பிள்ளை ஓர் ஊரில் திருவாய்மொழிக்கு விளக்கவுரை நிகழ்த்தியபோது, அவர்தம் மாணாக்கரான வடக்குத் திருவீதிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் சென்று கேட்டு மகிழ்ந்தார். தாம் பகலில் கேட்டவற்றை மனத்தில் பதித்துக்கொண்டு இல்லம் திரும்பி இரவில் அவற்றை எழுதி வைத்தார். திருவாய்மொழி விளக்கச் சொற்பொழிவு நிறைவடைந்தவுடன் அதை நம்பிள்ளை திருமுன்பு கொண்டு சென்று வைத்தார். அவர் அதனைப் படித்துப் பார்த்து மிகச் சுருக்கமாகவோ விரிவாகவோ அமையாமல் 'ஆனைக்குக் கோலம் செய்து புறப்பட்டாற் போன்று' பெருமித நடையழகோடு இருப்பது கண்டு மகிழ்ந்தார். ஆனால் தம் இசைவின்றி எழுதப்பட்டதனால் அதனை வாங்கிக் கட்டி உள்ளே வைத்து விட்டார். நம்பிள்ளையின் மாணாக்கருள் ஒருவரான ஈயுண்ணி மாதவப் பெருமாள் திருவரங்கச் செல்வனை வணங்கி, ஈடு முப்பத்தாறாயிரப்படியினைத் தமக்குக் கொடுக்கும்படி நம்பிள்ளையைப் பணிக்குமாறு வேண்டினார். அவனும் அதனை ஏற்று ஒரு நாள் திருவடி தொழ வந்த நம்பிள்ளைக்குச் சிறப்புச் செய்து, ஈயுண்ணி மாதவருக்கு ஈட்டுரையினைத் தருமாறு கட்டளையிட்டான். நம்பிள்ளையும் அதனை அவருக்குக் கொடுக்க ஈடு வெளியாயிற்று. அவர் அதனைத் தம் மைந்தர் பத்மநாபருக்குக் கொடுத்தார்; அவர் தம் மைந்தரான தேவராசர் என்னும் நாலூராச்சான் பிள்ளைக்குக் கொடுத்தார். இதுவரையில் ஈடு ஓராண் வழியாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. அதாவது ஓர் ஆசிரியர் ஒரு மாணாக்கருக்குச் சொல்லும் முறையிலேயே வந்தது. நாலூராச்சான்பிள்ளை,

திருவாய்மொழிப் பிள்ளை முதலான பலருக்கு ஈட்டு ரையைச் சொல்லிப் பரப்பினார். திருவாய் மொழிப் பிள்ளையிடமிருந்து ஈட்டைக் கற்றறிந்த மணவாள மாமுனிகள் வாயிலாகவே ஈடு விரைந்து பரவியது. அவர் திருவரங்கத்தில் தொடர்ந்து ஓராண்டு ஈட்டு ரைச் சொற்பொழிவு நிகழ்த்தி 'ஈடு முப்பத்தாறாயி ரப் பெருக்கர்' என்னும் சிறப்பினைப் பெற்றார்.

இவ்வுரையில் ஆளவந்தார், இராமானுசர், அம் மங்கி அம்மாள், ஆண்டான், எம்பார், பட்டர் முத லான பெருமக்கள் திருவாய்மொழிப் பாசுரங்களுக்குக் கொண்ட பொருள்களும், உரைநயங்களும் அவ்வப் பொழுதுசொன்ன துணுக்குகளும் இடம்பெற்றுள்ளன. வைணவ ஆசாரியப் பெருமக்களைப் பற்றிய அரிய குறிப்புகளும் காணப்படுகின்றன. நம்பிள்ளை சொற் பொழிவில் சொன்ன நெஞ்சில் நிற்கக் கூடிய இனிய செய்திகளை வடக்குத் திருவீதிப்பிள்ளை சில இடங் களில், 'என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்' என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார். சில பாசுர விளக்கத்தில் வால்மீகி இராமாயணம், பாரதம் முதலிய இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. இது கட்டுரைக்கே அமைந்த தனிச் சிறப்பாகும். மேலும் ஈட்டில் கையாளப்படும் உவமைகள் பல்வேறு துறையைச் சார்ந்தனவாய் அழகும் சுவையும் நிறைந்திருத்தலோடு பிற்காலச் சோழர் கால நிலையைக் காட்டும் கண்ணாடிகளாக வும் திகழ்கின்றன.

ஈட்டுரையும் பெரியவாச்சான்பிள்ளையின் இரு பத்து நாலாயிரப்படி உரையும் சில இடங்களில் ஒன்றாகவே உள்ளன. இதனால் முன் தோன்றிய இருபத்து நாலாயிரப் படியின் துணை கொண்டே ஈடு எழுதப்பட்டது என்பது தெரிகிறது. எனினும் சொல்லழகும் பொருளாழமும் விரிவும் நிறைந்த் ஈடே இன்று பெரிதும் பயிற்சியில் உள்ளது. இவ் வுரை முழுதும் மணிப்பிரவாள நடையில் அமைந்த தாகும். தெ.ஞா.

**ஈடோ, ஈரோபூமி** (கி.பி. 1841-1909) சப் பான் நாட்டை மேற்கத்திய பாணியில் உருவாக்கிய வர். இவர் சோசு (Choshu) மாநிலக் குடியானவர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். கப்பற்கட்டும் அறி வியலைக் கற்றுணர்வதற்காக இவர் தம் 22-ஆம் வயதில் இலண்டன் சென்றார். இலண்டனிலிருந்து திரும்பியபின் கோபி மாநிலத்தின் ஆளுநராக அமர்த்தப் பெற்றார். அங்கு இவர் இக்கால நாணய முறையைச் செயற்படுத்தினார். ஈடோ (Ito Hiro-boumi) கி.பி. 1884 முதல் 1888 வரை சப்பானின் தலைமையமைச்சராகப் பதவியேற்றார். இவரால் உருவாக்கப்பெற்ற அரசியலமைப்புத் திட்டம் கி.பி. 1889-ஆம் ஆண்டு பேரரசரின் இசைவினைப்பெற்றது. தலைமை அமைச்சராக இவர் பதவியிலிருந்த போது (கி.பி. 1894-1896) சப்பானின் ஆதிக்கம் ஆசியாவின் பெரும்நிலப்பகுதியில் பரவுவதற்கு ஊக்கம் காட்டி னார். அப்போது கொரியாவைக் கட்டுப்படுத்தும் உரிமை சப்பானுக்குக் கிட்டியது. சிமோனோசுக்கி (Shimonoseki) உடன்படிக்கையின்படி இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது. சப்பான் சீனாவைத் தோற் கடித்ததன் விளைவாக வந்ததுதான் இவ்வுடன் படிக்கை. சப்பான் இக்காலத்திற்கேற்ற கப்பற் படையை அமைக்கப் பெருமுயற்சி செய்ததும், சப் பானியப் படையை மேற்கத்திய முறைப்படுத்தியதும் இவர் செய்த அரும் பணிகள். படைத்தலைவர் யமகட்டா (Yamagata) என்பாரின் தலைமையில் படைவீரர் குழுவொன்று ஈடோவின் செல்வாக்கை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பறித்தது. பேரரசர் முட்சிகிட்டோவின் (Mutshi Hito)ஆலோசக ராக யமகட்டா அமர்த்தப்பட்டதால் ஈடோவின் செல்வாக்குக் குறையலாயிற்று. எனினும், 1900-ஆம் ஆண்டில் ஈடோ இளவரசராக ஏற்றுக்கொள்ளப் பெற்று, மீண்டும் 1900-1901-ஆம் ஆண்டுகளில் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். இப் பதவி வகித்த காலத்தில், உருசியாவிலுள்ள புனித பீட்டர்சுபர்க்குச் சிறப்புத் தூதராக அவர் அனுப்பப்பெற்றார். உருசியாவுடன் போர் செய்யக் கூடாதென்று 1904-ஆம் ஆண்டு அமைச்சரவை முடி வெடுத்ததற்கெதிராக இவர் வாக்களித்ததற்காகப் பதவி துறக்க வேண்டியவரானார். இவர் 1906-ஆம் ஆண்டில் கொரியாவின் ஆளுநராக அமர்த்தப்பெற் றார். கொரியா நாட்டுத் தேசியவாதி ஒருவனால் 1909-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் நாள் ஆர்பின் என்னுமிடத்தில் கொலை செய்யப்பட்டார். இக்கொலையைக் காரணமாகக் கூறி தோக்கியோவில் (Tokyo) வாழ்ந்த ஈடோவின் பகைவர்கள், கொரியா வைச் சப்பானுடன் 1910 ஆகசுட்டு மாதத்தில் இணைத்துக்கொண்டனர்.

**ஈப்போ** மலேசியாவிலுள்ள பேராக்கு மாநிலத் தின் தலைநகர். இது நடுமலாய் முந்நீரகத்தில் கிண்டா ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. ஈப்போ (Ipoh) இக்காலத்து வணிகச் சிறப்புமிக்கது. இந்நகரம் மலேசியாவின் தகரச் சுரங்கங்களின் மாபெரும் மையமாகும். ஈப்போ நகருக்கண்மையில் இரப்பர்த் தோட்டங்களும் சுண்ணாம்புக்கல் சுரங்கங் களும் உள்ளன. 'சிங்கப்பூரில் பொருள்திரட்டிப் பினாங்கில் தங்கி வாழ்ந்து ஈப்போவில் சாகவேண் டும்' என்னும் வழக்கு அங்கு வாழும் மக்களிடையே வழங்கிவருகிறது.

**ஈப்ரோ** இசுபெயின் நாட்டில் பாயும் மிக நீண்ட ஆறு. இதன் நீளம் 925 கி.மீ. வட இசுபெயினி லுள்ள கண்டாபிரியன் மலைத் தொடர்களில் (Cantabrian Mountains) உற்பத்தியாகி, பிரனீசு (Pyrenees) மலைகளுக்கும் ஐபீரிய மலைகளுக்கும் இடையே தென்கிழக்காகப் பாய்ந்து, மத்தியதரைக் கடலில் கலக்குமுன் கழிமுக நிலத்தில் பாய்ந்து, தார்தோசா (Tortosa) வுக்கருகில் கடலில் கலக்கிறது. இந்த ஆறு உள்நாட்டுக் கப்பற் போக்குவரத்திற்குப் பயன்படுவதில்லை. நீரின் அளவு சீராக அமையாததே இதற்குக் காரணம். இசுபானிய உள் நாட்டுப் போரின்போது குடியரசுக் கட்சியினர் ஈப்ரோ (Ebro) ஆற்றையொட்டி நடைபெற்றபோரில் தோற்றுப்போனார்கள்.

**ஈபல் கோபுரம்** பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு மாநகரில் சாம்தி மார்சு (Chamde Mars, Paris) என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள கோபுர மாகும். இதனைக் கட்டக் காரணமான சிற்பியாகிய ஈபல் என்ற பொறியியல் வல்லுநரின் பெயரையே இது கொண்டுள்ளது. பாரிசு நகரில் கி.பி. 1889-ஆம் ஆண்டில் இதனைக் கட்டினார்கள். இதற்கு உரூ. 1,20,00,000 செலவாயிற்று. கட்டிய ஆண்டில் நுழைவுக் கட்டணமாகப் பெறப்பட்ட பணத்திலேயே இத்தொகை கிடைத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். இதன் உயரம் 300 மீ. இக்கோபுரம் 30மீ. சதுரமான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது. அடித்தளம் 9மீ. உயரமுள்ள செங்கல் சுவரின் மீது இரும்புக் கம்பி பின்னினாற் போல அழகாக அமைக்கப்பட்டுள்ளது. வானில் எழும் இக்கேபுரத்தைக் கட்ட 7,300 கண்டி (Tonne) இரும்பும், உருக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளன. 63 பேர்களை ஏற்றிச்செல்ல வசதிகள் நிறைந்த மூன்று மின் ஏற்றப் பொறிகள் இதனைக் காணவரும் பயணிகளைக் கோபுரத்தின் உச்சி வரை கொண்டு செல்கின்றன. கோபுரத்தின் உச்சியிலிருந்து 137 கி.மீ. தொலைவு வரை பார்க்க இயலும்.

கோபுரத்தின் உச்சியில் கண்ணாடி விளக்கொன்று எரியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இயற்பியல், உயிரியல் ஆய்வுக்கூடங்கள் அமைந்துள்ளன. இது தட்பவெப்ப நிலையை அறிவிக்கும் நிலையமாகவும், பரிசோதனைக் களமாகவும் நாட்டுத் தட்பவெப்ப ஆய்வுக் குழுவுக்கு உதவுகிறது. இது கம்பியில்லாச் செய்தி (Wireless) நிலையமாகவும், நாள்தோறும் சைகைகளைத் தரும் பன்னாட்டு ஒப்பந்தப்படி அமைக்கப்பட்டுள்ள வானொலி நிலையமாகவும் பயன்படுகிறது.



ஈபல் கோபுரம்

ஈபல் கோபுரத்தைக் கட்டிய அலெக்சாந்தர் கசுடவ் ஈபல் (Alexander Gustav Eiffel) பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர். அவர் கி.பி. 1832-ஆம் ஆண்டு திசான் (Dijan) என்னும் ஊரில் பிறந்தார். கி.பி. 1855-இல் பட்டம் பெற்ற இவர் கட்டடப் பொறியாளராகப் பணியைத் தொடங்கினார். போர் மோவிலுள்ள காரோன் ஆற்றுக்குக் குறுக்கில் உள்ள இருப்புப் பாதைப் பாலத்தை அவர் கி.பி. 1858-இல் கட்டி முடித்தார். தாம் நிறுவிய ஆட்டியுல் சோதனைக் கூடத்தை (Auteuil Laboratory) அவர் 1920-இல் பிரெஞ்சு அரசுக்கு நன்கொடையாக அளித்தார். அவர் 1923-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 27-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

ஈபல் என்னும் பெயரில் செருமனியில் ஒரு நகரம் இருக்கிறது.

**ஈபுரு உளவியல்:** விவிலியத்தின் பழைய ஏற்பாடு தோன்றிய காலத்தில் எழுந்த ஈபுரு இலக்கியமும் மொழியும் உளவியல் அமைப்பையொட்டிக் காணப்படுகின்றன என்னும் கருத்தே ஈபுரு உளவியலின் (Hepraic Psychology) அடிப்படையாகும். ஈபுருக்களிடையே உளவியல் துறையினைப் பற்றிய

தெளிவான கருத்துகள் தோன்றவில்லை. ஆயினும், விவிலியத்தின் பல்வேறு பகுதிகள் மனிதர்களின் செயல்கள், மனவெழுச்சிகள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தால் அவற்றில் சில உளவியல் கருத்துகள் அமைந்திருப்பனவாகத் தோன்றுகின்றன. ஈபுரூ மொழியில் காணப்படும் நெபெசு (Nephesh)என்னும் சொல் ஆன்மா என்று பொருள்படுவதாக நீண்ட காலமாகக் கருதி வந்தனர். ஆனால், இச்சொல்லின் கருத்தை உயிரி என்ற சொல்லினால் தெளிவுறக் குறிப்பிட முடியும். ஆதலின், ஆன்மா என்று கூறும் பொழுது அச்சொல் உடலையும் குறிப்பதாக இருக்கிறது. மூளையுடன் தொடர்பு உள்ளதாக இச்சொல் குறிப்பிடப்படவில்லை. ஈபுரூக்களிடையே நெபிசு என்பது உயிரியையும் அதனுடன் தொடர்பு கொண்ட ஆன்மாவையும் குறிப்பதால் குருதியுண்பது விலக்கம் செய்யப்பட்டிருந்தது. இம்முறையின் மனிதர்கள் விலங்குகளின் ஆன்மாவைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டியிருந்தது. நெபிசு என்பது ஒரு தனி மனிதனையும் குறிக்கும். அந்த நெபிசு என்பது உயிரும் உடலுமாக இயங்கும் மனிதன் என்ற பொருளையே குறிக்கும். ஆன்மா என்பது உயிரற்ற கண்ணுக்குத் தெரியாத ஒரு கருத்துப்பொருள் அன்று. மேலும், மூச்சுக்காற்று அல்லது காற்று என்று பொருள்படும் உருவாக் (Ruach) என்னும் சொல் மனிதனின் சிந்தனைக்கு இருப்பிடமான மனத்தையும் குறிக்கும். மனிதன் இறந்தபின் மறு உலக வாழ்க்கை இருந்ததாக அக்காலத்தில் நம்பிக்கை இல்லை. ஈபுரூக்களின் இத்தகைய கருத்துகள் ஆன்மா பற்றிய பிளேட்டோவின் கருத்துகளினின்று வேறுபட்டுள்ளன. உயிர் பிரிந்த பின் ஆன்மா இறவா நிலையை அடைந்து கடவுளிடம் சேருகிறது. உடல் அழியலாம்; ஆனால் ஆன்மா திரும்பவும் உயிர் வாழலாம் என்னும் கிரேக்கக்கருத்துகள் நாளடைவில் ஈபுரூக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கிரேக்க யூதவாதிகள் இத்தகைய ஆன்மிகக் கருத்துகளைக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஈபுரூக்களின் தனிமனிதன் பற்றிய கருத்துகளும் கிரேக்க, யூதக் கருத்துகளால் தாக்கம் பெற்ற ஆன்மா அழிவற்றது என்னும் கருத்துகளும் அடிப்படையில் வேறுபட்டு நின்றன. ஈபுரூக்களின் உயிரிக் கருத்து (Concept of Self) இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இராசர்சன் போன்ற உளவியல் சிந்தனையாளர்களாலும் இலெவி-புரூல் போன்ற தத்துவ அறிஞர்களாலும் விளக்கம் தரப்பட்டது. உடலும் உயிரும் ஒன்றே என்னும் ஈபுரூக்கருத்தே இருபதாம் நூற்றாண்டு உளவியல் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தது.

**ஈபோ** நைசீரியாவில் உள்ள ஒரு மொழிக் குழுவினர். ஐம்பது இலட்சம் மக்களுக்குமேல் எண்ணிக்கையுள்ள இவர்கள் தென்கிழக்கு நைசீரியாவில் மழைக் காடுகள் மிகுந்த நைசர் (Niger) ஆற்றுக்கும் கிராசு (Cross) ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்கிறார்கள். ஈபோக்களின் மொழி காங்கோ-கொர்டேபானிய மொழிக் குடும்பத்தைச் சார்நத குவாக்(Kwa) குழுவைச் சேர்ந்ததாகும்.

ஈபோ மக்களை ஒருங்கிணைந்த ஒரு தனி மக்கள் குழு என்பதைவிட ஒரு மொழி பேசும் குழு என்பதே பொருத்தமுடைத்தாகும். அவர்கள் தனித்தனியாக 200க்கும் மேற்பட்ட குழுவினராயினும், பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுபோல் காட்சியளிக்கும் 30க்கும் மேற்பட்ட சிற்றூர்களில் வாழ்பவராக இருக்கிறார்கள். இவர்களிடையே 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பண்பாட்டு ஒருமையுணர்வு ஏற்பட்டது. ஆங்கிலக் குடியேற்றவாதிகளின் ஆட்சி இதற்கு முக்கியக் காரணமாகும்.

சமூக வாழ்க்கை: குழுக்கள் அல்லது இயக்கங்கள் போன்ற அமைப்புகளின் ஒருமித்த உறுப்பினர் என்னும் அடிப்படையில், ஈபோ மக்களின் சமூக வாழ்க்கை அமைந்துள்ளது. அதன் விளைவாக இம்மக்களிடையே சமூக ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது. வயது முறையில் எழுந்த தரப்பிரிவுகள், சிற்றூர் மக்களின் கழகங்கள், விருது பெற்ற கழகங்கள் (Title societies), வளர்ச்சி நிறுவனங்கள் போன்ற பல்வேறு வடிவங்களை அவை பெற்றுள்ளன. இக்குழுக்கள் ஒன்றையொன்று பின்னிப் பிணையும் தன்மையைக் கொண்டுள்ளமையால், குறிப்பிட்டதொரு நிறுவனத்திடம் அதிகாரக் குவிப்பு ஏற்படுதல் தடுக்கப்படுகிறது.

வாழுமிடம்: ஈபோ மக்கள் வாழுமிடம் ஆப்பிரிக்காவிலேயே மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் ஒரு ச. கி. மீ. க்கு 400 பேருக்குமேல் மக்கள் வாழ்கிறார்கள். ஈபோ மக்கள் மரபுவழியாக உழவுத் தொழிலை மேற்கொள்பவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களின் சாகுபடிப் பயிர்கள் அவர்கள் தேவைக்குப் போதுமானவையாகவும் வாணிகத்திற்குப் பயன்படுவனவாகவும் அமைந்துள்ளன. ஈபோ மக்கள் சிறந்த கல்வியாளர்கள். எனவே, அவர்கள் நைசீரியா முழுவதிலும் அரசாங்க ஊழியர்களாகவும் வணிகர்களாகவும் எழுத்தர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

ஈபோ மக்களைப் பெருவாரியாகப் பெற்றுள்ள நைசீரியாவின் கிழக்குப் பகுதி பயாப்ரா குடியரசு (Republic of Biafra) என்னும் பெயரில் 1967-இல்

சுதந்தரம் பெற்றது. பின்னர்ப் பல நாட்கள் அங்கு உள்நாட்டுப் போர் மூண்டது. அப்போது கூட்டாட்சிப் படைவீரர்கள் பிரிந்து செல்ல நினைத்த பயாப்ராவின் மீது படையெடுத்தனர். பயாப்ரா தனி நாடாக முயற்சி செய்ததை அடுத்துப் பல்லாண்டு நைசீரியாவின் பகுதிகளுக்கிடையே சச்சரவுகள் எழுந்தன, அதன் விளைவாக ஆயிரக்கணக்கான ஈபோ மக்கள் வடபகுதியில் 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதக் கலவரத்தில் கொல்லப்பட்டனர்.

ஒனிட்சா (Onitsha), ஆபா (Aba) என்பவை ஈபோ மக்கள்வாழும் பகுதியிலுள்ள பெரு நகரங்களாகும். ஈபோ மக்கள் தொழில் நுட்பம் தெரிந்த கருமாரத் தொழிலாளர்களாகவும் மரக்கடைசலிடும் தொழிலாளர்களாகவும் இரபியா என்னும் துணி வகையை நெய்யும் நெசவாளர்களாகவும் சந்தைக் கடை வணிகர்களாகவும் விளங்குகிறார்கள்.

*ஈபோயே* என்பது தென்கிழக்குக் கிரீசிலுள்ள தொரு தீவு. கிரீசு உள்நாட்டுப் பகுதிகளான பொயோசியா (Boeotia) வையும் அட்டிகா (Attica) வையும் இவிரிபோசு (Euripos) நீர்ப்பிரிவு பிரிக்கிறது. ஈபோயேயை (Euboea) ஈவியா (Evvoia) என்றும் கூறுவர். ஈவியா பொதுவாக மலைகளால் சூழப்பட்டுச் செழிப்பான பள்ளத்தாக்குகளைக் கொண்டுள்ளது. இங்குச் செம்மறியாடு, கால்நடை போன்றவை வளர்க்கப்படுகின்றன; ஒலிவமரம், திராட்சை கோதுமை போன்றவையும் விளைவிக்கப்படுகின்றன. அயக்காந்தமும் பழுப்பு நிலக்கரியும் (Lignite) இங்குத் தோண்டி எடுக்கப்படுகின்றன. இங்குப் பளிங்குக் கற்களும் வெட்டியெடுக்கப்படுகின்றன. அயோனியரும், திரேசியரும் இத்தீவில் குடியேறினர். இங்குள்ள நகரங்களுள் கல்கிசு (Khalkis), எரிட்ரியா (Eretria) என்பவை சிறப்புமிக்கவை. செல்வச்சிறப்பிலும் வலிமையான ஆட்சியிலும் இந்நகரங்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் மாசிடோனியாவிலும், தெற்கு இத்தாலியிலும், சிசிலியிலும் குடியேற்றப் பகுதிகளை நிலைநாட்டிக் கொண்டிருந்தன. ஈபோயே தீவு கி.மு. 506க்கும் 411க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆதென்சு நகரின் செல்வாக்கிற்குட்பட்டன. மாசிடோனியாவின் மன்னரான இரண்டாம் பிலிப்பு (Philip II) என்பார் ஏறத்தாழ கி.மு. 338-ஆம் ஆண்டில் இத்தீவைக் கைப்பற்றிக் கொண்டார். உரோமாபுரி இத்தீவை கி.மு. 194-ஆம் ஆண்டில் அதன் பேரரசுடன் இணைத்துக் கொண்டது. பின்னர்ப் பைசாண்டியரின் ஆட்சிக்கு இது கைம்மாறியது. நான்காம் சிலுவைப் போரின் போது (கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) இத்தீவு வெனிசு நகரின் குடியேற்றப் பகுதியாயிற்று. உதுமானியத் துருக்கியப் பேரரசுக்கு இது கி.பி. 1470-ஆம் ஆண்டில் கொடையாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், இத்தீவு மக்கள் துருக்கியர் ஆட்சியை எதிர்த்து கி.பி. 1821-இல் கிளர்ச்சி செய்தனர். கிரீசுடன் இது கி.பி. 1830-ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது.

*ஈமச் சடங்குகள்*: காண்க: ஆதிக்குடிகளின் ஈமச்சடங்குகள்.

*ஈமப் பேழைகள்* உலோக கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யப் பின்பற்றிய பல முறைகளுள் இதுவும் ஒன்று. சிலர் இறந்தோரைப் புதைக்கச் சுடுமண் தாழிகளையும், கால்களுடன் கூடிய தாழிகளையும் பயன்படுத்தினர். இறந்தோரைப் படுக்கை நிலையில் அடக்கம் செய்வதற்கேற்ப, நீண்ட தொட்டிகளைப் போன்ற பேழைகளைத் தயார் செய்து, அதனை ஈமக்கலமாகப் பயன்படுத்துதலே ஈமப்பேழை (Legged Terracotta Sacrophagus) எனப் பெயர் பெற்றது. புதை குழிகளில் பயன்படுத்தப்பட்ட கலங்களில், பொதுவாக நான்கு கால்களே இருக்கும். ஈமப் பேழைகளிலோ, அதன் நீளத்திற்கேற்பப் பல கால்கள் காணப்படும். செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் 12 கால்களுடன் கூடிய ஈமப்பேழைகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஈமப் பேழைகள் சுடுமண்ணால் செய்யப்படுவன. சில இடங்களில் கல்லாலான ஈமப்பேழைகளும்



ஈமப் பேழைகள்

அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள செருகுட்டா, பாலி செட்டி ஆகிய இடங்களில் காணப்பட்டவற்றைச் சுட்டலாம்.

ஈமப்பேழைகள் குன்னத்தூர், பெரும்பெயர், தேவனூர், கொல்லனூர், திரிசூலம், பாபந்தம், பொருமனில்லா, இரலபண்டா, பெருக்கு, பையம் பள்ளி, சேவயூர், கச்சலகொண்டா, சாடி சென கள்ளி, ஆரனகுட்டகள்ளி, கடப்பா, பெல்லாரி ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஈமப்பேழை கள் பொதுவாக விலங்குருவில் காணப்படுகின்றன. பெல்லாரியில் யானை உருவத்திலும், கடப்பாவில் ஆட்டுக்கடா உருவத்திலும் ஈமப்பேழைகள் காணப் படுகின்றன. ஈமப் பேழைகளின் மூடிகளும் பலவித மான விலங்குருவங்களில் செய்யப்பட்டுள்ளன.

புதைகுழிகளில் (Pit Burial) இறந்த உடல் அமர்ந்த நிலையில் காலுள்ள கலங்களில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. ஆனால், ஈமப்பேழைகளில் இறந்த உடலைப் படுக்கைநிலையில் வைத்து அடக்கம் செய்தனர்.

*ஈமன் டி வேலரா* அயர்லாந்து குடியரசு நாட்டின் அதிபராயிருந்தவர். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் 14-ஆம் நாளில் அமெ ரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த நியூயார்க்கு நகரில் பிறந்தார். இவர்தம் தந்தையார் இசுபானிய நாட் டைச் சேர்ந்த ஒரு கலைஞர். குழந்தைப் பருவத்தி லேயே தந்தையை இழந்த ஈமன் டி வேலரா (Eamon De Valera) தம் தாயுடன் கி.பி. 1879-ஆம் ஆண்டு அயர்லாந்துக்குக் குடி பெயர்ந்தார். சிற்றூர்ப் புறத்தி லுள்ள தாய் வழிவந்தோர் குடிசைக் குடியிருப்பில் வளர்ந்தார்.

தொடக்கக் கல்வியை இவர் உள்ளூர்ப் பள்ளி யில் முடித்து, பிறகு அரதப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தப்ளின் (Dublin) நகரிலுள்ள பிளாக் ராக்கு (Blackrock) கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். பின்னர் இவர் கணித ஆசிரியராகப் பணியாற்றி னார். இவர் ஐரிசு (Irish) மொழியை வளர்ப்பதில் அயராது உழைத்தார். இவர் 1913-ஆம் ஆண்டில் ஐரிசுப் புரட்சிக்காரர்களோடு சேர்ந்து, உறுப்பினர் களிடையே ஒற்றுமையை வளர்த்து 1916-ஆம் ஆண்டி லேயே புரட்சியைத் தொடங்கினார். புரட்சி ஒடுக் கப்பட்டு, புரட்சியாளர்கள் தண்டனையை அனுப வித்தபோது அமெரிக்கக் குடிமகனாக இருந்த கார ணத்தால் இவர் மட்டும் தப்பித்துக் கொண்டார். இருப்பினும், அடிமை வாழ்வுத் தண்டனையிலிருந்து இவரால் தப்ப முடியவில்லை. அந்தத் தண்டனையி லிருந்தும் கூட 1917-ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட இவர், மீண்டும் 1918-ஆம் ஆண்டு மே திங்களில் கைதாக்கப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

இவர் புரட்சியாளர்களில் பழம்பெரும் தியாகி... என்பதாலும், சின்பென் (Sinn Fein) கட்சியின் தலைவர் என்பதாலும் பெரிதும் மதிக்கப்பட்டார். எனவேதான் 1918-ஆம் ஆண்டில் திசம்பர் திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவருடைய கட்சி யும் போட்டியிட்டுக் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது.

இந்த நிலையில் 1919-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் 'இலிங்கன் சிறைச்சாலை'யிலிருந்து மாறு வேடத்தில் தப்பிச் சென்று, அமெரிக்காவை அடைந்து அங்கே தம் கட்சியைவலுப்படுத்த இவர் நிதி திரட்டினார். அயர்லாந்தில் 1921-ஆம் ஆண்டின் உடன்படிக்கைபடி இராணுவ ஆட்சி முடிவடை வதற்கு முன்னரே இவர் அயர்லாந்து வந்து சேர்ந் தார். இலண்டனும் உடன்படிக்கையை நாடும் வண் ணம் முழு அதிகாரம் பெற்ற தூதுவர்களை நியமித் தார். ஆனால் அந்த உடன்படிக்கை வட அயர் லாந்தைப் பொருட்படுத்தவில்லை. ஆங்கில அரசு அயர்லாந்து கடப்பாடுடன் இருக்க வேண்டிய உறுதி மொழியை எதிர்பார்த்தது. எனவே டி வேலரா இவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தார்.

அயர்லாந்துக் குடியரசின் மாமன்றம் இந்த உடன் படிக்கையிலுள்ள குறைபாடுகளைக் களைய முயற்சி செய்தது. ஆனால் அப்போது நடைபெறவிருந்த உள்நாட்டுப் போரில் டி வேலரா குடியரசுக்கு எதி ராகச் செயற்பட ஏற்பாடுகளைச் செய்தார். எனவே அயர்லாந்து விடுதலை நாட்டின் காசுகிலேவினுடைய அமைச்சரவை டி வேலராவைக் கைது செய்து, 1923 -ஆம் ஆண்டில் விடுதலை செய்தது. விடுதலை பெற்றதும் மீண்டும் குடியரசுக்கு எதிரான ஐரிசுக் குடியரசுக் கட்சியைத் தொடங்கி, அக்கட்சியினர் மா மன்றத்தில் அமர மாட்டார்கள் என்றும் கூறினார். இவர் 1927-ஆம் ஆண்டில் தம் கட்சியின் புதிய உறுப்பினர்களை இலண்டனுடன் கடப்பாடுடன் இருக்க வேண்டிய உடன்படிக்கையில் கையொப்பம் இடும்படி வற்புறுத்தினார். ஆனால், இப்புதிய உறுப் பினர்கள் மாமன்றத்தில் அமர்ந்ததோடு, இலண்ட னுடன் செய்து கொண்ட உடன்படிக்கையையும் பொருட்படுத்தாமல், பிரிட்டனுக்கு ஆண்டுதோறும் செலுத்தி வந்த ஆண்டுத்தொகையை நிறுத்தவும் வழி கோலினர். காசுகிரேவின் (Cosgrave) அமைச் சரவை 1932-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்து, டி வேலராவின்

தலைமையில் ஒரு புதிய அமைச்சரவை பிரிட்டனுடன் விரைவில் புதிய தொடர்புகளைக் கையாண்டது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திப் பிரிட்டனுக்குத் தரவேண்டிய ஆண்டுத்தொகை நிறுத்தப்பட்டது. தொழிற்சாலைகள் பெருகி, காப்பு வரிகள் மூலம் தன்னாட்சி ஆக்கப் பொருள்கள் மிகுதியாக விற்பனையானதுடன், அயர்லாந்து தன்னிறைவைப் பெற்றது. இந்தக் குடியுரிமை பெற்ற நாடுதான் 1937-ஆம் ஆண்டில் இறைமையை முழுமையாகப் பெற்ற அயர்லாந்து குடியரசு நாடாக (Irish Free State) மாறியது.

இவர் 1932-ஆம் ஆண்டில் சர்வதேச சங்கப் பாதுகாப்புச் சபையின் தலைவராகவும், 1938-ஆம் ஆண்டில் பொதுச் சபையின் தலைவராகவும் டி வேலரா அமர்ந்தபோது இவருடைய புகழ் ஓங்கியது. இவர் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இரண்டாம் உலகப் போரில் அயர்லாந்து நடுநிலையை வகிக்கும் என அறிவித்தார். இவ்வாறு இரு புறமும் பகைவரின்றி, நாட்டை ஆக்கப் பாதையில் செலுத்தி, டி வேலரா அடுத்தடுத்து நடைபெற்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். இவரது புகழைப் பொறுக்க மாட்டாது, 1948-ஆம் ஆண்டில் கட்சிக்குள்ளேயே பிரிவினை ஏற்பட்டுச் சான் காசுடெல்லோ (John Castello)என்பவரின் தலைமையிலேயே எதிர்ப்புக் கூட்டணி ஒன்றும் வளர்ந்தது. ஆனால், நிலையற்ற இக்கூட்டணி மூன்றே ஆண்டுகளில் சிதைவுற்றது. எனவே, டி வேலரா பதவியில் தொடர்ந்து 1954-ஆம் ஆண்டு வரை அமர்ந்தார். மக்களின் கருத்திற்கு ஒவ்வாத சட்ட உரிமைகளைத் தாம் பெற டி வேலரா ஏற்பாடுகளைச் செய்தபோது,அவற்றையேகாரணமாக்கிகாசுடெல்லோ தம் இரண்டாம் அமைச்சரவையைக் கட்சிக்குள்ளேயே செயற்படுத்தினார். விலைவாசி உயர்வு, வேளாண்மைச் சீர்கேடு, மக்களின் அயல்நாட்டுக் குடியேற்றம் போன்ற காரணங்கள் எதிர்கட்சிக்குப் பலன் கொடுக்கும் வகைகளாக அமைந்துவிட்டன. உடனே டி வேலரா திறன்மிக்கதொரு கட்சி ஆட்சியே உகந்தது, வேறெந்தக்கூட்டணியும்தேவையில்லை என்பதையும் உணர்ந்தார். அடுத்து, 1957-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தேர்தலில் போட்டியிட்ட இவருடைய கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

இவர் 1959-ஆம் ஆண்டின் அரசுத் தலைவர் பதவியையும், ஐரிசுக் குடியரசுக் கட்சித் தலைவர் பதவியையும் விட்டு விலகி, மாகாண ஆட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மீண்டும் 1966-ஆம் ஆண்டு சூன் திங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் பதவியில் நீடித்தார். இவர் 1973-ஆம் ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். டி வேலரா 1975-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 20-ஆம் நாள் தப்ளினில் காலமானார். பொன்.சு.

ஈமு என்பார் அக்பரை எதிர்த்து இரண்டாம் பானிப்பட்டுப் போரில் போரிட்ட இந்துப் படைத் தலைவர். உமாயூன் கி.பி.1556-ஆம் ஆண்டில் காலமானபோது அக்பருக்குப் பதின்மூன்று வயதே நிரம்பியிருந்தது. முடிசூட்டிக் கொண்டவுடன் அவரை எதிர்நோக்கியிருந்த பெரும் சிக்கல் ஈமு (Hemu) என்பாரை எதிர்த்துப் போராடுவதுதான். ஈமு வங்காளத்தை ஆண்ட முகமது சா அதாலி என்பாரின் தலைமை அமைச்சராயிருந்தவர். உமாயூன் காலமாகிவிட்டார் என்ற செய்தி தெரிந்தவுடன் ஈமு ஆக்ராவின்மீதுபடையெடுத்துஅதனைக் கைப்பற்றிக் கொண்டார். அங்கிருந்து இவர் தில்லியை நோக்கி அணிவகுத்துச் சென்று அதனைத் தாக்கினார். தில்லியின் மொகலாய ஆளுநராயிருந்த தார்டிபேக்கு (Tardi Beg)ஈமுவை எதிர்க்கத் துணியாமல் தில்லியை விட்டு ஓடிப்போனான். தில்லியை ஈமு கைப்பற்றிக்கொண்டு விக்கிரமசித்து(Vikramajit) என்னும் பெயருடன் அரசரானார்.

ஈமு திறமைமிக்க போர்வீரர். இவர் பனியா (Baniya) வகுப்பில் பிறந்தவர். தொடக்கத்தில் இவர் சிறு கடையொன்றை வைத்திருந்தார். கடுமையான உழைப்பாலும் நேர்மைத் திறனாலும் இவர் சௌத்திரி (தலைவர்) என்று கருதப்பட்டார். இவருடைய திறமைகளைக் கண்ணுற்ற அரசு ஊழியர்கள் இவரைச் சுல்தானிடம் அறிமுகம் செய்துவைத்தனர். சிறிதுகாலத்தில் ஈமு சுல்தானின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உகந்தவராகிச் சுல்தானைப் பல தொல்லைகளிலிருந்து காத்தார். ஈமு தலைசிறந்த நிருவாகியாகவும், படைத்தலைவராகவும் பதவியில் உயர்த்தப் பெற்றார். இத்தகைய போர்வீரருடன் அக்பர் மோதவேண்டிய சூழ்நிலை தோன்றியது. அக்பருக்கு உறுதுணையாகப் பைராம்கான் வந்தார். ஈமுவை எதிர்ப்பதே சரியான வழி என்று அவர் அக்பருக்குக் கருத்துரை வழங்கினார். ஈமுவின் படைகளும், அக்பரின் படைகளும் கி.பி.1556-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பானிப்பட்டுப் போர்க் களத்தில் மோதிக் கொண்டன. தொடக்கத்தில் ஈமுவே வெற்றிபெறும் நிலையில் இருந்தார். ஆனால், அவருடைய கண்ணில் தைத்த அம்பொன்றின் விளைவாக ஈமு உணர்விழந்தார். அவருடைய படையில் குழப்பம் மூண்டது. ஆப்கானியர்கள் தலைவரின்றிப் போர்க்களத்தை விட்டு ஓடினர். ஏறத்தாழ 1500 யானைகளையும், எண்ணற்ற பிற பொருள்களையும் அக்பரும், பைராம்கானும் பெற்றார்கள். ஈமு கைப்பற்றப்பெற்று அக்ப

ருக்குமுன் கொண்டுவரப்பட்டார். அக்பரே ஈமுவைக் கொன்றார் என்று சிமித்து (Smith) கருதுகிறார். ஆனால், இதனை ஏற்றுக்கொள்ளாதவர்களும் உளர். தோல்வியுற்றவரை அக்பர் கொல்லவில்லை என்பது பேராசிரியர் சிரீவசுத்தவா (Srivastava) என்பாரின் கருத்தாகும். அக்பர் பெற்ற இவ்வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

**ஈயுண்ணி மாதவப் பெருமாள்:** வரதராசர் என்னும் பிள்ளைப் பெயரும், திருகலிகன்றி தாசர் என்னும் தாசநாமமும் பெற்று விளங்கிய நம்பிள்ளை என்னும் வைணவ ஆசாரியாரிடம் வடக்குத் திருவீதிப் பிள்ளை, பின்பழகிய பெருமாள் முதலிய பலர் சீடர்களாக விளங்கினர். அவர்களுள் ஒருவர் ஈயுண்ணிமாதவப் பெருமாள் என்பவராவார். இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் முயற்சியால் வடக்குத் திருவீதிப்பிள்ளை எழுதிய திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படி உலக மக்களுக்குக் கிடைத்தமை பற்றிப் பின்வரும் வரலாறு கூறப்படுகிறது.

நம்பிள்ளை விரிவுரை செய்த திருவாய்மொழி வியாக்யானத்தைக் கேட்ட வடக்குத் திருவீதிப் பிள்ளை அதனைச் சிறப்புற எழுதித் தம் ஆசிரியரா கிய நம்பிள்ளையிடம் காட்டினார். தம் அனுமதி பெறாமல் எழுதப்பட்ட அதனைப் பெற்ற நம் பிள்ளை ஒன்றும் கூறாமல் அப்படியே வைத்துவிட்டார். இதனை உணர்ந்த ஈயுண்ணி மாதவப் பெருமாள் முன்னர் நடுவில் திருவீதிப்பிள்ளை எழுதிக் காட்டியதனை அழித்துவிட்டதனைப் போல இந்த உரையினையும் தம் ஆசிரியர் அழித்து விடுவாரோ என்று அஞ்சித் திருவரங்கப் பெருமானிடம் குறையிரந்து வேண்டிக் கொண்டார். பெருமான் திருவருளால் அந்த உரை கைவரப் பெற்ற ஈயுண்ணி மாதவப் பெருமாள் அதனை, உலகிற்குப் பயன்படுமாறு செய்துதவினார். ஈடு என்னும் சிறப்புப் பெயரால் போற்றப்படும் திருவாய்மொழி முப்பத்தாறாயிரப் படி இவ்வாறு இவரால் தமிழ் கூறும் நல்லுலகில் நிலை பெறுவதாயிற்று.

**ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன்:** சங்க காலத்தில் வாழ்ந்த பெரு வீரனும் வள்ளலுமாவான்.

கொங்கு நாட்டின் இன்றைய ஈஞ்சூர் பண்டு ஈர்ந்தூர் என வழங்கப் பெற்றது. இவ்வூர் ஈர்ந்தை எனவும் வழங்கப்படும். இதன் தலைவனாக விளங்கியவன் தோயன்மாறன். இவன் ஊரொடு சார்த்தி, 'ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன்' எனப் பெயர்பெற்றான். ஈர்ந்தூரின் உரிமை பற்றி இவன் ஈர்ந்தூர் கிழான் எனப்பட்டான். இவன் பெயருக்கு, 'ஈர்ந்தூர் கிழான் கோயமான்' என்றொரு பாட பேதமும் காணப்படுகிறது.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்பவர் இவனைப் பாராட்டிப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. இப்பாடல் பண்டை இலக்கிய வகைகளில் ஒன்றாய், ஒரு வள்ளலிடம் பரிசு பெற்றவன் மற்றொருவனை அவ்வள்ளலிடம் நெறிப்படுத்தும் 'ஆற்றுப்படை' என்னும் வகையில் அமைந்துள்ளது. இப்பாடலில் தோயன்மாறன் சிறந்த வீரன். போர்க்களம் பல கண்டவன். அத்திப்பால் மருந்தாவதால் அதனைப் பெறுதற்காக அத்திமரத்தின் அடிப்பகுதி அடிக்கடி வெட்டப்படும். அதனால் வெட்டுத் தழும்புகள் நிறைந்து காணப்படும் அத்தியின் அடிமரம்போல், போரில் பெற்ற விழுப்புண்களின் வடுக்கள் நிறைந்தும் அழகு குன்றாத உடலினன். இவனிடம் தொடர்ந்து வழங்கும் பொருட் பெருமை இல்லை. ஆனாலும், தன்னிடம் இரப்போர்க்கு இல்லையெனும் பண்புச் சிறுமையும் இவனிடம் கிடையாது. எனவே, 'உன் வறுமைதீர வேண்டுமாயின் எம்மொடு நீயும் வருக. நாம் சென்று அவனிடம் பொருள் வேண்டி நிற்போம். அவனிடம் பொருள் இருப்பின் உடனே வழங்குவான். இல்லையெனின் போர்செய்து பகைவென்று பொருள் திரட்டித் தருவான். போர் செய்யும் வசதியும் இல்லையெனில், கொல்லனிடம் சென்று, வாடிய நம் வயிற்றைக் காட்டி, அதன் துயர்தீர்க்கத் துணையாகத் தனக்கு வேல்வடித்துக் கொடுக்குமாறு வேண்டி நிற்பான்' என்று ஒரு பாணன் மற்றொருவனிடம் கூறுவதாகப் புலவர் பாடியுள்ளார்.

இங்ஙனம், 'இல்லோர்க்காக இரத்தலும் பெருமை; இல்லை என மறுத்தலே சிறுமை' என வாழ்ந்தவன் ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன். மீ.மு.

**ஈரவைச் சட்டமன்றம்:** அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களாகச் சட்டமன்றம், செயல்துறை, நீதித்துறை அமைந்துள்ளன. அவை முறையே சட்டமியற்றவும், சட்டத்தைச் செயற்படுத்தவும், சட்டத் தொடர்பான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் செய்கின்றன. நேரடிமக்களாட்சி நடைபெற்ற பண்டைய கிரேக்க நகர அரசுகளில் வயது வந்த அனைத்து ஆண் குடிமக்களும் எக்லிசியா (Ecclisia) என்னும் அமைப்பின் பேரில் ஓரிடத்தில் கூடி சட்டமியற்றினர். ஆனால், இக்கால தேச அரசுகளில் நிலப்பரப்பும், மக்கள்தொகையும் அதிகமாகயிருப்பதால் சட்டமன்றம் குடிமக்களுக்குப் பதிலாக

மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது; மறைமுக மக்களாட்சி எனவும் சொல்லப்படுகின்றது. சட்ட மன்றத்தில் ஓர் அவை மட்டும் இருப்பின் அது ஒர வைச் சட்டமன்றம் எனவும், கீழவை, மேலவையென இரண்டு இருந்தால் அது ஈரவைச் சட்டமன்றம் என வும் சொல்லப்படுகிறது. ஓரவை அமைப்பு சீனா, இலங்கை போன்ற சில நாடுகளிலும், ஈரவை அமைப்பு பல நாடுகளிலும் உள்ளது. எனினும், ஈரவைச் சட்ட மன்ற அமைப்புகளின் பதவிக்காலம், அதிகாரம், நிறைகள் மற்றும் குறைகள் நாடுகள் தோறும் வேறு படுகின்றன.

தோற்றம்: பாராளுமன்ற மக்களாட்சியின் தாய கம் எனச் சொல்லப்படும் பிரிட்டனில் முன்பு ஓரவைச் சட்டமன்றமிருந்தது. அது கி.பி. 13-ஆம் நூற்றாண் டில்மாற ஆரம்பித்து, 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈரவைச் சட்டமன்றமாக முழுவுருப்பெற்றது. இம் மாற்றமானது ஏதேச்சையாக சமூகப் பொருளா தார முறையில் ஏற்பட்டதேயன்றி ஒரு திட்டமிட்ட செயலன்று. மக்களாட்சியின் இன்றைய பாதுகாவலர் எனச் சொல்லப்படும் அமெரிக்க ஐக்கியநாடுகளில் காணப்படும் ஈரவை முறை பிலடெல்பியா அரசியல் அமைப்பு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. மாநாட் டுப் பிரதிநிதிகள் இம்முறையைத் தேர்ந்தெடுத்ததின் முக்கியக் காரணம் மாநிலங்களுக்குச் சமப்பிரதிநிதித் துவம் அளித்து மாநிலங்களைக் கூட்டமைப்பில் ஏற் றுக் கொள்வதற்கே. இந்தியாவில் மாண்டேகு-செம்சு போர்டு சீர்திருத்தங்களின்படி, இந்திய அரசாங்கச் சட்டம் 1919 மூலம் முன்னர் இருந்த ஓரவை முறை ஈரவை முறையாக மாற்றப்பட்டது. மேலும், சுதந் திரத்திற்குப் பின் கூடிய அரசியல் நிருணய சபை தெளிவான நோக்கங்களுடன் ஈரவை முறையைத் தேர்ந்தெடுத்தது.

அமைப்பு: மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அவைகீழவையென்றும்,முதலவையென்றும் சொல்லப் படுகிறது. இந்திய 'லோக்சபை', அமெரிக்கப் பிரதி நிதிகள் சபை, பிரிட்டனின் பொதுமக்கள் சபை, பிரெஞ்சுத் தேசிய பேரவை போன்றவற்றை உதார ணங்களாகக் கொள்ளலாம். மற்றொன்று மேலவை யென்றும், இரண்டாம் அவையென்றும் சொல்லப் படுகிறது. இந்தியஇராச்சியசபை, அமெரிக்க ஆளவை மன்றம் பிரிட்டனின் பிரபுக்களவை, பிரெஞ்சு ஆளவை மன்றம் போன்றவை சிறந்த உதாரணங்களாகும்.

கீழவை உறுப்பினர்களின் பதவிக்காலம் மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலத்தைவிடக் குறுகியதாக எல்லா நாடுகளிலும் உள்ளது.

| உறுப்பினர்களின் பதவிக்காலம் | | |
|---|---|---|
| | கீழவை | மேலவை |
| இந்தியா | 5 | 6 (ஆண்டுகள்) |
| பிரிட்டன் | 5 | ஆயுள்முழுவதும் |
| அமெரிக்கா | 2 | 6 |
| பிரான்சு | 5 | 9 |
| சப்பான் | 4 | 6 |

இந்தியா, பிரிட்டன் போன்ற பாராளுமன்றச் செயல் துறை அமைப்பு நாடுகளில் கீழவையின் பதவிக் காலம் முடிவதற்கு முன்னரே அரசின் தலைவர் (உதாரணம் இந்திய சனாதிபதி) அதனைக் கலைத்துத் தேர்தல் நடத்தலாம். இதே போன்று மேலவையைக் கலைக்கும் அதிகாரம் எவருக்குமில்லை. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மேலவை உறுப் பினர்களுள் மூன்றில் ஒரு (1/3) பங்கினர் இரு ஆண்டு களுக்கு ஒருமுறை ஓய்வு பெறுவர். அந்நாட்டரசிய லமைப்பு முறைப்படி காலியான இடங்கள் தேர் தல் அல்லது வேறுமுறைப்படி உடனே நிரப்பப்படும்.

வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் கீழவைத் தேர்தலில் நாடு சமமாகப் பல தேர்தல் மாவட்டங் கள் அல்லது தொகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதி வாக்காளர்களும் அத் தொகுதிப் பிரதிநிதியை நேரடியாகத் தேர்ந்தெடுத்துக் கீழ வைக்கு அனுப்புகின்றனர். ஆனால், மேலவைத் தேர்தலில் கீழ்க்காணும் முறைகளில் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ பல நாடுகள் பின் பற்றுகின்றன.

1. பாரம்பரியம் (உதா. பிரிட்டனின் பிரபுக் களவை)
2. நியமித்தல் (பிரிட்டன், இந்தியா)
3. மறைமுகத்தேர்தல் (இந்தியா)
4. நேரடித்தேர்தல் (அமெரிக்க ஆளவை மன்றம்)

நியமித்தலையும், மறைமுகத் தேர்தலையும் இணைத்துக் கொள்வதே சிறந்த முறையென சிட்ச் விக்கு (Sidgwich) போன்ற அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பணிகள்: சட்டமியற்றுவதே பிரதான பணியாக இருப்பினும் சட்டமன்றம் வேறு சில பணிகளையும் செய்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற ஒரு சில நாடுகள் தவிர மற்ற ஈரவை நாடுகளில்

மேலவைகளைவிடக் கீழவைகள் வலுமிக்கதாக உள்ளன.

1. சட்டமியற்றும் பணி: சட்டமியற்றுவதின் முதல் கட்டம் சட்டமன்றத்தில் மசோதா கொணர்தல் ஆகும். மசோதா கொணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதில் ஈரவைகளும் சம அதிகாரத்தைப் பெற்றுள்ளன. எனினும் அவற்றிற்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அங்குச் சட்ட முடக்கம் (Deadlock) உண்டாகிறது. பெரும்பான்மை நாடுகளில் சட்டமுடக்கம் தீர்ப்பதில் கீழவைகளின் கைகள் உயர்ந்துள்ளன. உதாரணமாக, இந்தியாவில் பிரச்சினைக்குரிய மசோதா ஈரவைகளின் கலப்புக் கூட்டத்தில் வாக்களிப்புக்கு விடப்படும். மேலவையை விடக் கீழவை சுமார் இருமடங்கு அதிக உறுப்பினர்களைப் பெற்றிருப்பதால் கீழவை அதன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

2. நிதித்துறைப்பணி: உலகநாடுகள் அனைத்திலும் கீழவையில் மட்டுமே நிதி மசோதா முதலில் கொண்டு வரப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் மேலவை ஒப்புதல் அளிக்கவில்லையாயின் (உதாரணமாக இந்தியாவில் 14 நாட்கள்) அம் மசோதா தானாகவே நிறைவேறிவிடும். சுருங்கக் கூறின் அமெரிக்க ஆளவை மன்றம் போன்ற ஒரு சில மேலவைகள் தவிர, மற்ற மேலவைகள் நிதி மசோதாவைச் சிறிது காலம் தாமதப்படுத்தும் அதிகாரத்தை மட்டுமே பெற்றுள்ளன.

3. அரசியல் சட்டத்திருத்தப்பணி: அரசியல் சட்டம் (Constitution) திருத்துவதில் பெரும்பாலும் ஈரவைகளும் சம அதிகாரத்தையே (Co-equal Powers) பெற்றுள்ளன.

4. செயல்துறைப்பணி: பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் செயல் துறையானது சட்டமன்றத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்தில் செயல் துறையானது மக்களுக்கும் பொறுப்பாகின்றன. நன்கு ஆராய்ந்தால், முதல்வகைச் செயல்துறை மேலவையைவிடக் கீழவைக்கே முற்றிலும் பொறுப்புள்ளது தெரியவரும். சுருங்கக்கூறின் செயல் துறையை உண்டாக்கவும் அழிக்கவும் அதிகாரம் கீழவைக்குள்ளது.

5. நீதித்துறைப்பணி: பிரிட்டனின் மேலவையான பிரபுக்களவை தலைமை நீதிமன்றமாகவும் செயல்படுகிறது. அமெரிக்காவில் கீழவை சனாதிபதி, நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தும் அதிகாரத்தையும், மேலவை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. இந்தியப் பாராளுமன்றத்தில் ஏதாவது ஓரவை குற்றத்தைச் சுமத்தினால் பிறிதொரு அவை நீதிமன்றமாகச் செயற்பட்டுத்தீர்ப்பு வழங்கும்.

6. தேர்தல் பணி: இந்தியா போன்ற நாடுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டுத் தலைவராகிய சனாதிபதியையும், துணை சனாதிபதியையும் தேர்ந்தெடுக்கிறார்கள். சுவிட்சர்லாந்து சட்டமன்றம் பன்மைச்செயல் துறையினர் எழுவரைத்தேர்ந்தெடுக்கிறது. அமெரிக்காவில் சனாதிபதி, துணை சனாதிபதி தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் பெறாவிட்டால் அவர்களில் ஒருவரை முறையே பிரதிநிதிகள் சபையும், ஆளவை மன்றமும் தேர்ந்தெடுக்கின்றன. உருசியச் சட்டமன்றம் செயல்துறையின் ஓர் அங்கமான பிரசீடியத்தின் உறுப்பினர்களையும், மந்திரி சபையின் தலைவரையும் அவர் பரிந்துரையின் பேரில் மற்ற மந்திரிகளையும் தேர்ந்தெடுக்கிறது. சப்பானியச் சட்டமன்றமான தயட்டு (Diet) அந்நாட்டுப் பிரதமரைத் தேர்ந்தெடுத்ததும், பேரரசர் அவரைச் சம்பிரதாயப்படி நியமிக்கிறார்.

7. வினா எழுப்புதல் மற்றும் இதரபணிகள்: செயல்துறை நடவடிக்கைகள் தொடர்பான வினாக்களை எழுப்பக்கூடிய அதிகாரம் ஈரவைகளுக்கும் உள்ளது. மேலும், உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியின் குறைகளை அல்லது நாட்டு நலனுக்கு ஊறு விளைவிக்கும் செயல்களைச் செயல்துறையின் கவனத்திற்குக் கொணரலாம். இப்பணிகளைத் திறம் படச் செய்பவர்கள் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள்.

அரசியல் சட்டப்படி சட்டமன்றம் செயல்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால், இன்று அரசியல் கட்சிகள் மற்றும் வலிமைமிக்க செயல்துறைக் குறுக்கீடு காரணமாகச் சட்டமன்றம் அவற்றிற்குத் தலையாட்டும் கருவியாகச் செயற்பட்டு வறுகிறது.

### நிறைகள்

1. சட்டமியற்றும் அதிகாரங்கள் அனைத்தும் ஓரவையிடம் மட்டுமே இருந்தால் அவற்றை அது தவறான வழியில் பயன்படுத்தக்கூடும். அதன் விளைவாக அங்கு வல்லாட்சி ஏற்பட்டுவிடலாம். எனவே ஓரவைதன் அதிகார வரம்பை மீறாமல் தடுக்க இரண்டாம் அவை அவசியமாகிறது.

2. கீழவை இளைஞர்களைக் கொண்டிருப்பதாலும், சட்டரீதியில் முழுமையாகச் செயற்படுவதாலும், உணர்ச்சிவயப்பட்டு அதிவிரைவில் சட்டமியற்றலாம். அதன் காரணமாக அச்சட்டங்கள் நன்மைக்

குப் பதிலாக நாட்டு நலனுக்குத் தீங்கு விளைவித்து விடும். இதைத் தவிர்க்க நிதானத்துடனும் விவேகத்துடனும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் மேலவை உள்ள ஈரவை முறை தேவைப்படுகிறது. கிண்ணத்திலுள்ள (Cup) சூடான தேநீரை உடன் குளிரவைக்கத் தட்டு (Sawcer) எப்படி உதவுகிறதோ அதே போல் இரண்டாம் அவை செயற்படுகிறது.

3. மேலவையால் மசோதா பரிசீலனை செய்யப்படும் நேரத்தில் மக்கள் கருத்து உருவாகி வெளியிட வாய்ப்புள்ளது.

4. கூட்டாட்சி அரசில் கீழவை மக்களின் அவையாகவும், மேலவை மாநிலங்கள் அவையாகவும் செயற்படுகின்றன.

5. ஓரவை மட்டுமிருந்தால் அது பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளவையாகவே விளங்கும். காலப்போக்கில் சிறுபான்மை மக்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகநேரிடலாம். எனவே, மேலவையில் அவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதன் மூலம், அவர்களுக்குத் தேசிய உணர்வு ஏற்படுகிறது.

6. பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த சிலர் தேர்தலில் நிற்க வெட்கப்படலாம். மேலும், அப்படியே தேர்தலில் நின்றாலும் தோற்கும் வாய்ப்பைப் பெறலாம். அதனால், அவர்களின் திறமையைச் சட்டமியற்றுவதில் பயன்படுத்த முடியாமலாகிவிடும். எனவே, ஈரவைமுறையால் மேலவையில் நிபுணர்களை அந்நாட்டுத் தலைவர் நியமிப்பது மூலம் இக்குறை நீக்கப்படுகிறது.

7. இக்கால மக்களாட்சி நாடுகளில் அரசானது காவல் அரசு என்ற நிலையிலிருந்து பொதுநல அரசாக மாறிச் செயற்படுகிறது. அதன் விளைவாகச் சட்டமன்றத்தின் பணியும், வேலைப்பளுவும் மிகுந்துள்ளன. இந்நிலையில் சிக்கல்களும் பிரச்சினையுமில்லாத மசோதாக்களை இரண்டாமவை தோற்றுவிப்பதன் மூலமும், இதர மசோதாக்களை நன்கு பரிசீலனை செய்வதன் மூலமும் முதலவையின் வேலைப்பளுவைக் குறைக்கிறது.

8. கீழவை நிரந்தரத் தன்மையற்றதாகவும், மேலவை நிரந்தரமானதாகவும் அமைந்து, சீராக இம்முறையில் ஈரவை மக்களின் கருத்தையும் கருத்து மாற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

குறைகள்:

1. மக்களாட்சியில் மக்களின் கருத்தைக் கீழவை பிரதிபலிப்பது போன்று மேலவை பிரதிபலிக்கவில்லை. மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காத, மக்களின் பிரதிநிதிகளற்ற மேலவை (ஈரவை) மக்கள் திறமைக் கோட்பாட்டுக்கு எதிரானதாகும்.

2. ஈரவை முறையில் சில மேலவைகளில் பிற்போக்குவாதிகளும் பழமை விரும்பிகளும் பெரும்பான்மை உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, கீழவைகள் கொண்டு வரும் முற்போக்கு மசோதாக்களுக்கு இடையூறாக மேலவைகள் செயற்படுகின்றன.

3. இம்முறையில் இரு அவைகளும் எல்லா மசோதாக்களையும் நிறைவேற்றவேண்டும். ஒரு மசோதா ஒவ்வோர் அவையாலும் பல நிலைகளைத் தாண்டவேண்டும். எனவே, வீணான கால தாமதம் ஏற்படுகிறது.

4. இரு அவைகளும் ஒத்த கருத்துடையனவாகவும்,அனுசரித்துச் செயலாற்றும்போக்குடையவாகவும் இருந்தால் பிரச்சினையில்லை. இல்லையெனில் இரு எதிர்த்திசைகளில் இழுக்கும் இருமாடுகள் பூட்டப்பட்ட இரட்டைமாட்டு வண்டியின் நிலைபோல் ஈரவை முறை அமைந்துவிடும்.

5. ஈரவைமுறையில் மேலவை அமைப்புச் சம்பந்தமாக இதுவரையிலும் தெளிவான ஒருமித்த கருத்து அரசியல் வல்லுநர்களிடையே ஏற்படவில்லை.


6. கூட்டாட்சி அரசில் இரண்டாமவை மாநிலங்களின் நலனைப் பிரதிபலிப்பதாக இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் மிகுந்துள்ளதால் உறுப்பினர்கள் கட்சிரீதியில் செயற்படுகிறார்கள்.

7. அமைச்சகங்கள் மசோதாக்களைத் தயாரிப்பதாலும், மேலும் சபைகளில் உள்ள சம்பந்தப்பட்ட திறமைமிக்க உறுப்பினர்களைக் கொண்ட நிரந்தரக் குழுக்கள் அல்லது சிறப்புக் குழுக்களால் பரிசீலனை செய்யப்படுவதாலும், ஈரவை முறையில் கிடைக்கும் நிதானமும் விவேகமும் சிறப்புக் கவனமும் ஓரவை முறையிலும் கிடைக்கிறது.

8. ஈரவை முறையின் நிறைகளையும், குறைகளையும் ஒப்பிடும் போது நிறைகள் மிகுந்துள்ளன. எனவே, பெரும்பாலான நாடுகளில் ஈரவைச் சட்டமன்ற முறை பின்பற்றப்படுகிறது. எம்.சு.

**ஈராக்கு** முதல் உலகப் பெரும்போருக்குப் பின்னர் உருவாக்கப்பெற்ற புதிய சுதந்திர நாடுகளுள் ஒன்று. மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள இந் நாட்டின் வரலாறு மிகத் தொன்மையானது. எனவே உலக நாடுகளுள் மிகப் பழமையானதென ஈராக்கைக் (Iraq) கொள்ளலாம். இந்நாட்டின் மலைகளிலும், பாலைநிலங்களிலும், இந்நாட்டில் பாயும் தைகிரீசு – யூபரெட்டீசு ஆறுகளுக்கிடையே இருக்கும் வளமிக்க சமவெளிகளிலும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மரபு வழக்குப்படி ஈடன் தோட்டம் என்று கருதப்பட்ட பகுதியும் ஈராக்கில் தான் இருந்தது என்பர். இங்குத்தான் மிகத் தொன்மையான நாகரிகம் செழித்து விளங்கியது என்றுகருதுவர். எனவே, ஈராக்கை நாகரிகத்தின் பிறப்பிடம் என்று குறிப்பிடுவர். கிரேக்கர்கள் இதை மெசபடோமியா என்றனர். மெசபொட்டு (Mesopot) என்ற சொல்லுக்கு ஆற்றிடைப் பகுதி என்று பொருள். தைகிரீசு, யூபரெட்டீசு (Tigris-Eupharates) என்னும் இரு ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியைத் தான் மெசபடோமியா என்று கூறினர்.

எல்லைகள்: துருக்கி ஈராக்கு நாட்டின் வடக்கிலும், ஈரான் நாடு கிழக்கிலும், பாரசீக வளைகுடா, குவைத்து, சவுதி அராபியா போன்ற பகுதிகள் தெற்கிலும், சோர்டானும் (Jordan) சிரியாவும் மேற்கிலும் எல்லைகளாக அமைந்துள்ளன.




ஈராக்கு

பரப்பு: ஈராக்குநாட்டின் பரப்பு 4,38,446 ச.கி.மீ. ஆகும்.


நிலம்: ஈராக்கு நாட்டை மூன்று சிறந்த பிரிவுகளாகப்பிரிக்கலாம். அவை 1. செழிப்பான சமவெளி, 2. தாழ்ந்த சமவெளி, 3. வடகிழக்கிலுள்ள மலைத் தொடர்ப் பகுதி என்பனவாம்.

தைகிரீசு, யூபரெட்டீசு ஆறுகளுக்கிடையே உள்ள செழிப்பான சமவெளி தெற்கு, தென்கிழக்காகப் பரவியுள்ளது. ஈராக்கு நாட்டின் பெரும்பாலான சாகுபடி நிலம் இப்பகுதியில்தான் உள்ளது. வசந்த காலத்திலும் கோடைக்காலத்திலும் ஆறுகளில் வெள்ளம் வரும். அப்போது தாழ்நிலச் சமவெளியின் பெரும்பரப்பு வெள்ளக் காடுகளாகக் காணப்படும். இத்தாழ்நிலச் சமவெளியில் நீர்ப்பாசன வசதி மிகக் குறைவு. எனவே, பெருமளவு நிலங்கள் தரிசுகளாகப் பயனற்றுக் கிடக்கும். தெற்கில் தைகிரீசும் யூபரட்டீசும் இணைந்து சாட்டல் ஆரபு(Shattal Arab) என்றுபெயர் பெறுகிறது. அதன் விளைவாக அப்பகுதியில் பரந்த சதுப்பு நிலங்களைக்காணலாம். சாட்டல் ஆரபு ஆற்றில் கப்பல் போக்குவரத்து உரிமைகள் குறித்து ஈராக்கு, ஈரான் நாடுகளுக்கிடையே நெருக்கடி நிலையும் போரும் மூண்டுள்ளன. ஈராக்கு நாட்டின் வடகிழக்குப் பகுதி மலைகள் நிறைந்தது. சாக்ரோசு மலைத்தொடர் இப்பகுதியில் தொடங்கி ஈரான் வரை நீண்டு செல்கிறது. தெற்கும் தென் மேற்கும் பாலைநிலத்தைக் கொண்டு விளங்கும் பகுதிகளாகும்.

தட்பவெப்பநிலை: ஈராக்கு நாட்டின் வடக்குப் பகுதி மிதவெப்ப மண்டலத்தைச் சார்ந்தது. ஆனால் சமவெளிகளும் பாலைநிலமும் கொடுமையான வெப்பத்தால் காயும் பகுதிகளாகும். கோடைக் காலத்தின் வெப்பம் 49 பாகை செண்டிகிரேடு வரை உயரும். குளிர்காலத்தில் நீர் உறைந்து போகும் நிலை வரை வெப்பம் குறைவதும் உண்டு.

மக்கள்: ஈராக்கு நாட்டின் பெரும்பாலான மக்கள் அராபியர்கள். அவர்கள் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்கள்; அராபி மொழி பேசுகிறார்கள். அராபியத் தீபகற்பத்திலிருந்துபிற நாடுகளின்மீதுபடையெடுத்து முசுலிம்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இசுலாம் சமயத்தையும் தாம் வென்ற நாடுகளில் புகுத்தினார்கள். இக்காலத்தில்தான் அராபியர்கள் ஈராக்கில் நுழைந்தார்கள். கி.பி.17-ஆம்நூற்றாண்டில் வெற்றி கொண்டவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய அராபியர்களாவர். ஏனைய பின்னணியைச் சார்ந்த மக்களும் அவர்களின் மொழி, சமயம், பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அராபியர்கள் போல் தோற்ற

மளிக்கின்றனர். அராபியர்கள் அராபிய மொழியைப் பேசி, இசுலாம் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் சுன்னி, சியா என்னும் இசுலாம் சமயத்தின் இரு பெரும் பிரிவுகளைச் சார்ந்துள்ளனர்.



பாக்தாது

துருக்கியின் அண்மையிலிருக்கும் வடமலைத் தொடர்களிலும் ஈரானிய எல்லைகளை அடுத்தும் வாழும் குர்டுகளும் (Kurds) முசுலிம்களே. ஆனால் அவர்கள் அராபியர்களல்லர். அவர்கள் இன்றைய ஈரானிலிருந்து வந்தவர்கள். இந்திய-ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் குர்டிய மொழியைப் பேசுகிறார்கள். அண்மைக் காலங்களில் குர்டிய மொழி பேசுவோருக்கும், அராபிய பெரும்பான்மையினருக்குமிடையே குர்டியரின் உரிமைகள் குறித்துத் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ஈராக்கு 1970-ஆம் ஆண்டில் குர்டிய தேசியத்தை ஏற்றுக்கொண்டு ஈராக்கு நாட்டிற்குள் வாழ்ந்து கொண்டே குர்டுகள் தம்மை நிருவகித்துக் கொள்ளும் உரிமையை வழங்கியுள்ளது.

ஈராக்கின் மக்கள்தொகையில் 5 விழுக்காடு மக்கள் கிறித்தவர்கள். வட ஈராக்கின் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் அவர்கள் சிறப்பாக வாழ்கிறார்கள். குறிப்பாக, மோசூல் என்னும் நகரத்தைச் சுற்றி அவர்கள் வாழ்கிறார்கள். விவிலிய காலம் முதற் கொண்டே ஈராக்கில் யூதர்கள் வாழ்ந்துவந்துள்ளனர். யூதர்களின் தலைவராகக் கருதப்படும் ஆபிரகாம் யூபரெட்டீசுப் பள்ளத்தாக்கின் நடுப்பிரிவான கால்டியப் பகுதியில் உள்ள ஊர் (Ur) என்னுமிடத்திலிருந்து வந்தவர் என்பது மரபுவழிச் செய்தியாகும். ஆனால் இன்று ஈராக்கில் சில ஆயிரம் யூதர்களே வாழ்கிறார்கள். யூதர்களுள் பெரும்பாலோர் 1950-51-ஆம் ஆண்டுகளில் இசுரேலுக்குச் சென்றுவிட்டனர். மோசூலுக்கு வடக்கிலும் வடகிழக்கிலுமுள்ள மலைப்பகுதிகளில் இயசிடீசுகள் என்னும் குழுவைச் சார்ந்த சிலர் வாழ்கிறார்கள். அவர்கள் பாரசீக இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும். இசுலாம் சமயத்தையும், அதற்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாடுகளின் கலப்பையும் கொண்டு அவர்களுடைய சமயம் விளங்குகிறது.

ஈராக்கின் நகரங்கள்: ஈராக்கின் தலைநகரம் பாக்தாது (Baghdad). அதன் மக்கள்தொகை 33,00,000 (1982); மோசூல் (Mosul)மற்றொரு பெருநகரம். மக்கள் தொகை 3,50,000 (1982). பாசுரா துறைமுகப்பட்டினம்; மக்கள்தொகை 3,75,000 (1982). கிர்குக்கு (Kirkuk) என்னும் நகரின் மக்கள் தொகை 2,50,000 (1982).

வரலாற்றுச் சிறப்புமிக்க அழிவுச் சின்னங்களைக் கொண்டுள்ள ஊர் (Ur) என்னும் நகரில் சிகுராத்து (Ziggurat) எனப்படும் கோயிலின் மேல் எழுப்பப் பெற்றுள்ள தூபி இருக்கிறது. இது கி. மு. 2500-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். பாக்தாதிற்கு அருகில் தீசிபன்(Ctesi Phon)என்னும் வளைவு பிறிதொரு வரலாற்றுச் சின்னமாகும். இது கி. பி. 225-ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. யூபரெட்டீசு பள்ளத்தாக்கின் நடுப்பகுதியில் முசுலிம் உலகின்புனிதப்பயண இடங்களான நசாபு (Najaf), கர்பலா (Karbala) என்னும் நகரங்கள் உள்ளன. இவ்விரு நகரங்களிலும் சியா முசுலிம்கள் மிகுதியாக வாழ்கிறார்கள். பாக்தாதிற்கு அருகில் அல் கதிமெயின் (Al Kadhimain) என்னும் பிறிதொரு சியாக்களின் புனிதத் தலம் இருக்கிறது. அங்குப் புகழ்பெற்ற பொன்னாலான குவிமாட மசூதியொன்றுள்ளது.

வாழ்க்கைமுறை: யூபரெடீசு ஆற்றுக்கு மேற்கிலுள்ள பாலைநிலத்தில் வாழும் நாடோடிகள் ஒட்டகங்கள், ஆடுகள், செம்மறியாடுகள் போன்றவற்றை வளர்க்கிறார்கள். வட மலைத்தொடர்ப் பகுதிகளில் வாழும் குர்டுகள் ஆட்டு மந்தைகளையும் செம்மறியாட்டு மந்தைகளையும் பராமரிக்கிறார்கள். தென் பாகத்துச் சதுப்புநில மக்கள் நீர் எருமைகளை வளர்க்கிறார்கள்.

தொலைதூரங்களில் தென்படும் சிற்றூர்களிலும் மக்கள் தனித்து வாழாமல், இனிய பழக்கவழக்கங்களுடன் கூட்டாக வாழ்ந்து காலங்கழிக்கிறார்கள்.

வீடுகள் கூட்டங் கூட்டமாகக் கட்டப்பட்டுள்ளன. இந்நாட்டுப் பெண்கள் மாலை வேளைகளில் பிற வீடுகளுக்குச் சென்று மற்றப் பெண்களுடன் கூடி உரையாடி மகிழ்வர். தேநீர் கடைகளிலும் சந்தைக் கடைகளிலும் ஆண்கள் கூடிப் பொழுதுபோக்குவர்.

சிற்றூர்களில் உள்ள வீடுகள் தட்டையான கூரைகளைக் கொண்ட நீண்ட சதுர வடிவில் கட்டப்பட்டுள்ளன. சுவர்கள் உலர்ந்த களிமண் செங்கற்களால் ஆனவை. இவ்வீடுகள் கதவும் சாளரமும் கொண்டுள்ளன. வீட்டுத் தரைகள் கோரைப் பாய்களால் அல்லது பளிச்சிடும் கம்பளங்களால் பாவப்பட்டுள்ளன. துணிமணிகளையும் படுக்கைகளையும் சுற்றி வைக்க வீடுகளில் பெட்டியொன்றை வைத்துள்ளனர். பெருநகரங்களில் கற்களாலும் செங்கற்களாலும் நீண்டசதுர வடிவில் கட்டப்பட்டுள்ள வீடுகளைக் கொண்ட சாலைகளைக் காணலாம். கடுங் கோடைக் காலங்களில் குடும்பத்தினர் தத்தம் வீட்டுத் தட்டைமாடியில் படுத்துறங்குவர். இக்கால நகரங்கள் மேலைநாட்டுப் பாணியில்அமைக்கப்பட்டுள்ளன.

நாடோடிகளாகத் திரியும் அராபியர் கூடாரங்களில் வாழ்கிறார்கள். அக்கூடாரங்கள் செம்மறியாட்டு உரோமத்தாலானவை. தென்பகுதியிலுள்ள சதுப்பு நிலங்களில் வீடுகள் கோரைப் புற்களால் வேயப்பட்டுள்ளன. கோரைகள் கட்டுக்கட்டுகளாக இறுக்கிக் கட்டப்பட்டுத் துணை நிற்கும் வளைவுகளாக அவற்றை வளைக்கிறார்கள். வேயப்பட்ட கோரைப் பாய்கள் இவ்வளைவுகளின்மீது துணையாக நிறுத்தப் படுவதால் சாய்வான கூரையும், சுவர்களும் போல் அவை தோற்றமளிக்கின்றன.

ஈராக்குப் பெண்கள் நீண்ட கறுப்பு உடையை அணிவதை மரபாகக் கொண்டவர்கள். பாலை நிலத்திலும், சிற்றூர்களிலும் வாழும் பெண்பாலார் மூடாக்கு அணிவதில்லை. ஆனால் நகரங்களில் மூடாக்கு அணிவது வலியுறுத்தப்படுகிறது. இக்கால இளம் பெண்களும் நகரங்களில் வாழும் பெண்டிர் சிலரும் மேனாட்டு முறையில் ஆடைகளை அணிந்துகொண்டு மூடாக்குப் போடும் பழக்கத்தைப் புறக்கணித்து வருகின்றனர். நகரங்களில் ஆண்கள் மேனாட்டுப் பாணியில் ஆடையுடுத்திக்கொண்டாலும், மரபுவழியாக ஆடைஅணியும் ஆண்களையும் காணலாம்.

பேரிச்சம்பழம் ஈராக்கு மக்களின் மூல உணவுப் பொருள். அதை அவர்கள் சுட்ட ரொட்டியுடன் இணைத்து உண்பர். ஆட்டுக்கறி மக்களுக்குப் பிடித்தமான உணவு. அரிசி, காய்கறிகள், பழங்கள், தேநீர் போன்றவை உணவாக உட்கொள்ளப்படுகின்றன.

பொருளாதாரம் : பெட்ரோல் எண்ணெய் ஈராக்கின் ஏற்றுமதிப் பொருளுள் தலைசிறந்தது. அதுவே நாட்டின் வருமானத்திற்கும் வழிவகுக்கிறது. வேளாண்மைப் பண்ணைகளில் உழுது பயிரிடுதலும், கால்நடை வளர்த்தலும் மக்களின் இரு சிறப்பான தொழில்களாகும். பேரிச்சம்பழச் சாகுபடி நாட்டின் சிறப்பான விளைபொருள். உலகின் 80 விழுக்காடு பேரிச்சம்பழம் ஈராக்கிலிருந்தே கிடைக்கிறது. நெல்லும் சிறப்பான விளைபொருள்களுள் ஒன்று.

முதல் உலகப் போருக்கு முன்னர் ஈராக்கில் பழங்குடிப் பொருளாதார முறையே நடைமுறையில் இருந்தது. அப்போது வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு இருக்கவில்லை. ஈராக்கில் 1927-ஆம் ஆண்டில்தான் பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னரே ஈராக்கு மேலைநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ளத் தொடங்கியது. தொழில் நுட்பக் கல்வியின் விளைவாக ஈராக்கில் பெருமளவு பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆறுகளுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளும், நீர்ப்பாசனக் கால்வாய்களும் சாகுபடிக்கான நில அளவைப் பெருக்க வழிவகை செய்துள்ளன. அதனால் வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியும் பல்கிப் பெருகியுள்ளது. பேரளவைப் பண்ணைகளில் எந்திர சாதனங்களை அண்மைக் காலங்களில் பயன்படுத்துவதாலும் உற்பத்திப் பெருகியுள்ளது. அரசும் அறிவியல் முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க உதவிசெய்கிறது.

ஈராக்கில் 1958-ஆம் ஆண்டில் புரட்சி ஏற்பட்டது. இப்புரட்சிக்கு முன்னர் பெருமளவு நிலங்கள் பணக்கார நிலக்கிழார்களின் வசம் இருந்தன. புரட்சிக்குப் பின்னர் இந்நிலங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. குடியானவர்கள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய உதவும் திட்டங்களையும், ஊக்கத்தையும் அரசு அவர்களுக்குக் கொடுத்துள்ளது.

புரட்சிக்கு முன்னர் பெட்ரோல் எடுக்கும் தொழிலில் பெரும்பாலோர் ஈடுபட்டிருந்தனர். பெட்ரோல் எடுக்கும் நிறுவனங்கள் அந்நிய நாட்டு வணிகக் குழுக்களின் வசமிருந்தன. மாவரைத்தல், பேரிச்சம் பழத்தைப் பெட்டிகளில் அடைத்தல், உரோம-பருத்தி ஆடைகள் நெய்தல், செங்கல், சிமிண்டு உற்பத்தி செய்தல் போன்றவையே ஈராக்கின் ஏனைய

தொழில்களாக இருந்தன. புரட்சிக்குப் பின்னர் அனைத்துத் தொழில்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்னும் கோரிக்கையின் விளைவாக அரசு பல தொழிற்சாலைகளை அமைத்து ஆடை நெய்தல், இரசாயனப்பொருள்கள் உற்பத்திசெய்தல் போன்ற வற்றை ஊக்குவித்துள்ளது. ஆனால், உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களை விட விலை கூடுதலாக இருந்தன. அரசு 1964-ஆம் ஆண்டில் வங்கிகளையும் தொழிற்சாலைகளையும் நாட்டுடைமையாக்கியது. அண்மைக்காலத்தில் தனி யார் துறையினரும் வாணிகத்திலும் தொழில் உற் பத்தியிலும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

பெட்ரோல் உற்பத்தி செய்யும் அந்நிய நாட்டு வாணிகக்குழுக்களும் 1972-இல் நாட்டுடைமையாக்கப் பட்டன. அதனால், மேலைநாட்டு வாணிகம் குறைய லாயிற்று. பெட்ரோலியப் பொருள்களின் விலை 1973-இல் பெருமளவு உயர்ந்ததால் ஈராக்கின் வரு மானமும் பெருகியது. பெருகிய வருமானத்தைப் பயன்படுத்தி அரசு நாட்டை மேல்நாடுகளுடன் போட்டிபோடும் அளவிற்கு மாற்றி வருகிறது.

வரலாறு: தொல்லியல் அகழாய்வுகளின் பய னாக ஈராக்கு நாட்டில்தான் உலகிலேயே மிகத் தொன்மையான சுமேரிய நாகரிகம் மலர்ந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டது; ஏறத்தாழ கி.மு. 4000 ஆண் டிற்கும் கி.மு. 3000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத் தில் தோன்றியது (சில தொல்லியல் வல்லுநர்கள் நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் தோன்றிய நாகரிகமே மிகத் தொன்மையானது என்று கருதுவர்). சுமேரியர் களே முதன்முதலாகத் தம் மொழியை எழுத்து வடி வத்தில் எழுதியவர்கள். அவர்கள் களிமண் பலகை களில் இலக்கியம், சமயம், அறிவியல் பற்றிய செய்தி களை எழுதி விவரித்துள்ளார்கள். சுமேரியர்கள் சிறு சிறு சுதந்திர நாடுகளை அமைத்தனர். அவை அரசர் களால் ஆளப்பட்டன. அரசர்கள் தெய்வத்திற்கு இணையானவர்கள்.

அக்காட்டு என்னும் பகுதியை கி.மு.2300 ஆண்டு அளவில் ஆண்ட சார்கன் (Sargon) என்னும் அரசர் சுமேரியர்களில் தலைசிறந்தவராகக் கருதப்பட் டார். அவர் பல நாடுகளை வென்று பேரரசு ஒன் றினை உருவாக்கினார்.

பின்னர்த் தைகிரீசு-யூபரெடீசு பள்ளத்தாக்குகளி லிருந்து வந்தவர்கள் இரு புதிய பேரரசுகளை நிலை நாட்டினர். அவை பாபிலோனியா, அசிரியா எனப் பட்டன. பாபிலான் என்னும் நகரத்தை மையமா கக் கொண்டு பாபிலோனியர்கள் ஈராக்கின் நடுப் பகுதியை ஆண்டனர். ஆமுராபி (Hammurabi) என் னும் அரசர் பாபிலோனிய அரசர்களுள் தலைசிறந்த வராகக் கருதப்படுகிறார். அவருடைய சட்டத் தொகுப்பு உலகப் புகழ் பெற்றதாகும். பாபிலோனி யாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அசிரியர்கள் தலை யெடுத்தார்கள். அவர்கள் வடபகுதியிலிருந்த அசுர் (Assur), நினேவே (Nineveh) என்னும் ஊர்களைச் சுற்றி வாழ்ந்தவர்கள். அசிரியப் பேரரசு கி.மு.ஏழாம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது. பாபிலோனியர்கள் அதை வீழ்ச்சியுறச் செய்தவர்கள். இவர்கள் இரண் டாம் முறையாகப் பேரரசை நிறுவியவர்கள். நெபு காத்நேசர் (Nebugadnessar) என்பார் இவர்களின் சிறந்த அரசர். இவர் காலத்தில்தான் 'தொங்கும் தோட்டம்' (Hanging Garden) பாபிலோன் நகரில் நிலைநாட்டபட்டது.

பாரசீகப் பெருமன்னர் சைரசு என்பார் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனை வெற்றிகண் டார். பாரசீகரின் ஆட்சியைத் தோற்கடித்த மகா அலெக்சாந்தர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் அப் பகுதியில் கிரேக்கர்களின் ஆட்சியை நிலைநாட்டினார். அலெக்சாந்தருக்குப் பின்னர்ப் பார்த்தியர்களும், பின்னர் உரோமானியரும் கி.பி. ஏழாம் நூற்றாண் டின் தொடக்கம் வரை ஈராக்கை ஆண்டனர்.

மேற்கு அராபியாவில் நபிகள் நாயகத்தால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நிலைநாட்டப்பெற்ற இசுலாம் சமயம் உலக சக்தியாக எழுந்தது. இந்தியப் பெருங் கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடைப்பட்ட பகுதியை முசுலிம்கள் வெற்றிகண்டனர். நபிகள் நாய கத்திற்குப் பின்னர்க் காலிப்புகள் ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் மேற்கு ஆசியா முழுவதையும் வென்று புதிய அராபியப் பேரரசை நிலைநாட்டினர். அப்பேரரசின் தலைநகராகப் பாக்தாது நகரம் இருந்தது. இக்காலத் தைப் பொற்காலம் என்பர். 'அராபிய இரவுகள்' (Arabian Nights) என்னும் புகழ்பெற்ற கதைகள் எழுந்ததும் இக்காலத்தில்தான். ஆருன் அல் இரசீது (Harun-Al-Rashid) என்பார் காலிபாக இருந்த காலத்தில் இப்பேரரசு பெரும் புகழ்பெற்று இலக்கி யத்திற்கும், திறமைமிக்க ஆட்சிக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தது.

நடுவண் ஆட்சி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் நலியவே ஈராக்கு இருண்ட காலத்திற்குச் சென்றது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியரும், பின் னர்த் துருக்கியரும் இதன்மீது படையெடுத்தனர். ஈராக்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உதுமானியப் பேரரசின் மாநிலங்களில் ஒன்றாகத்

நிகழ்ந்தது. பின்னர் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் ஈராக்கு புறக்கணிக்கப் பட்ட நாடுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

முதல் உலகப் போரின்போது ஈராக்கும் ஏனைய அராபிய நாடுகளும் நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டு தத்தம் விடுதலைக்காக அரும்பாடுபட்டன. எனினும், போருக்குப் பின்னர் அந்நாடுகளின் விருப்பம் நிறைவேறவில்லை. நேசநாடுகள் இப்பகுதியில் புரவலர் (Mandate System) முறையைச் செயல்படுத்திய போது ஈராக்கும் உதுமானியரின் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்த வேறு சில பகுதிகளும் அத்தகைய முறைக்கு ஆளாயின. ஈராக்கு இங்கிலாந்தின் புரவலர் ஆட்சியின் கீழ் வந்தது.

புரலவர் ஆட்சியை ஈராக்கு ஒருவகை அந்நிய ஆதிக்கமே எனக் கருதியது. நாட்டுணர்ச்சியால் கிளர்ந்தெழுந்த மக்கள் விடுதலைக்காகக் கலகம் செய்தனர். இங்கிலாந்து கலகத்தை அடக்கிவிட்டுத் தேசியத் தலைவர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முடிவு செய்தது. தேசியத் தலைவர்களின் தலைமையில் 1921-ஆம் ஆண்டு தற்காலிக அரசொன்று நிலைநாட்டப்பட்டது. அராபியத் தலைவரும் மெக்கா சாரீப்பின் மகனுமான முதலாம் பைசல் (Faisal I) என்பார் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பைசல் 1921-ஆம் ஆண்டு ஆகசுட்டு 23-ஆம் நாள் முடிமன்னராக அரியணை ஏறினார். அவர் 1933-ஆம் ஆண்டு வரை அப்பதவி வகித்தார். எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஈராக்கில் மீண்டும் அராபியராட்சி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

புரவலர் ஆட்சி 1932-ஆம் ஆண்டுவரை நீடித்தது. பின்னர்ச் சுதந்திர நாடாக ஈராக்கு சர்வதேச சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. நிருவாகத் திறமைக் குறைவினாலும், சிக்கல் நிறைந்த உள்நாட்டுக் குழப்பங்களாலும் ஈராக்கின் முன்னேற்றம் குறைவாகவே இருந்தது. அரசியலில் இராணுவத்தலையீடு ஏற்பட்டதன் விளைவாக 1936க்கும் 1941க்கும் இடையில் பல இராணுவப் புரட்சிகள் எழுந்தன. இக்கால கட்டத்தில் ஈராக்கு அனைத்து அராபியரையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளின் மையமாகி, 1945-ஆம் ஆண்டில் அராபியக் குழு (Arab League) என்னும் இயக்கத்தை நிலைநாட்டுவதில் பெரும் பங்கேற்றது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் ஈராக்கு பல்துறை முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் பெறலாயிற்று. பெட்ரோலிய உற்பத்தியில் ஈடுபட்டிருந்த அந்நிய நாடுகளான இங்கிலாந்து, பிரானசு, அமெரிக்க ஐக்கிய நாடு போன்றவை கொடுத்த ஆதாயப் பங்கைப் பயன்படுத்தி ஈராக்கு பொருளாதார முன்னேற்றம் பெறலாயிற்று.

எனினும், அரசியல் குழுக்களின் தேசிய எழுச்சியும் அராபியர்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்னும் உணர்ச்சியும் மேலிட்டமையால் உள்நாட்டு இளைஞர்களும், இராணுவத்தினரும் இணைந்து முடியாட்சியை ஒழிக்கத் திரண்டெழுந்தனர். முடிமன்னரான இரண்டாம் பைசல் 1958 சூலை 14-ஆம் நாள் கிளர்ந்தெழுந்த இராணுவக் கலகத்தின்போது உயிர் துறந்தார். முடியாட்சி அகற்றப்பட்டு, குடியாட்சி நிலைநாட்டப் பெற்றது. எனினும், அரசு இராணுவத்தினரின் கைவசமிருந்தது. பலமுறை இராணுவப் புரட்சிகள் 1968-ஆம் ஆண்டு வரை நீடித்தன. அவ்வாண்டில் பாத்துக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இக்கட்சியினர் அராபிய சமதருமக் கொள்கையைக் கொண்டவர்கள். 19 இராணுவத் தொடர்பற்ற குடிமக்களையும் மூன்று இராணுவ உறுப்பினர்களையும் கொண்ட புரட்சிவாத ஆட்சிக்குழு நாட்டை ஆணைகள் மூலம் ஆண்டு வந்தது. பாத்துக்கட்சி ஈராக்கை முற்போக்கு நாடாக்கப் பெருமுயற்சி செய்தது. பெட்ரோலியப் பொருள்களிலிருந்து கிட்டும் வருவாயைப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப் பட்டது. சிரியாவும் ஈராக்கும் ஒன்றுபட 1979-இல் பேச்சு வார்த்தைகளை நடத்தின.

ஈராக்கு 1980-ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின்மீது படையெடுத்தது. சாட்டல் ஆரபு நீர்வழி குறித்த சிக்கலின் விளைவாக மூண்ட இப்போர் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அண்மையில் இந்தியாவின் தலைமை அமைச்சர் ஈராக்கு-ஈரான் போரை முடிவுக்குக் கொணர முயற்சி செய்தார். எனினும் இன்னும் இப்போர் ஓயவில்லை.

**ஈராக்குடு அணை** ஒரிசா மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள உலகிலேயே மிக நீண்ட அணையாகும். மகாநதி என்னும் ஆற்றின் குறுக்கே கட்டப் பட்டுள்ள அணைகள் மூன்றனுள் ஈராக்குடு (Hirakud) அணையும் ஒன்று. இந்த அணையின் நீர் நிற்கும் பரப்பு ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிதெனக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 750 ச.கி.மீ. பரப்பினைக் கொண்டது. இதன் ஏரிக்கரை 600 கி.மீ. நீளமுள்ளது. இதன். உயரம் 60மீ. ஆகும். இதன் மொத்த நீளம் ஏறக்குறைய 25 கி.மீ. ஆகும். இவ்வணையின் மீது 7½ மீ. அகலமும் 30 கி.மீ. நீளமும் கொண்ட சாலையொன்றுஅமைக்கப்பட்டுள்ளது. இவ்வணை பல

நோக்குப் பெருந்திட்டங்களைக கொண்டுள்ளது. நீர்மின்திட்டம், கழிமுகப் பகுதிகளில் வெள்ளச் சேதத்தைத் தடுத்தல், நீர்ப்பாசன வசதி, போக்கு வரத்து வசதி போன்றவை மிகுதியாகப் பெற்று, ஓரிசா மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் ஈராக்குடு அணைத்திட்டம் உதவுகிறது.

**ஈராக்கு நாட்டில் கல்வி**: ஈராக்கு நாட்டின் கல்வி அமைப்பின் முதல்படி மழலையர் பள்ளி (Kindergarten) ஆகும். நான்கு வயதிலேயே குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் சேர்கின்றனர். இப் பள்ளிகள் 1980-ஆம் ஆண்டில் 387 இருந்தன. அவற்றில் 76,507 குழந்தைகள் கல்வி கற்றனர்.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். ஆறு வயதில்தான் குழந்தைகள் தொடக்கப்பள்ளிகளில் சேர்கின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வி 1978–1979-இல் கட்டாயமாக்கப்பட்ட பின், ஆறு வயது நிறைந்த மொத்தம் 96 விழுக்காடு மாணவர்கள் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப் பட்டனர். அங்கு 11,280 தொடக்கப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ 26 இலட்சம் மாண வர்கள் கல்வி பயில்கின்றனர்.

தொடக்கப் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆறு ஆண்டுகள் கற்பிக் கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி இடை நிலைப் பள்ளிக் கல்வி (Intermediate) என்றும் முன் பயிற்சிப் பள்ளிக் கல்வி (Preparatory) என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் 54 விழுக்காடு மாணவர்கள் உள்ளனர். முதல் மூன்றாண்டுகள் பன்னிரண்டு வயதிலிருந்து பதினான்கு வயது நிறைந்த மாணவர்கள் இடை நிலைப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர். அடுத்த மூன்றாண்டுகள் பதினைந்து வயதிலிருந்து பதினேழு வயது வரையிலுள்ள மாணவர்கள் முன்பயிற்சிப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர்.

முன் பயிற்சிப் பள்ளிகளில் அறிவியல், கலைத் தொடர்பான பாடங்களிலோ தொழில் நுட்பம், வேளாண்மை, வணிகம், தொடர்பான பாடங் களிலோ மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெறுகின்ற னர்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் நுண்கலைப் பள்ளி களும் ஈராக்கு நாட்டில் உள்ளன. இவை முன்பயிற்சிப் பள்ளிகளைப் போலவே கற்பித்தல், நுண்கலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கின்றன.

தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஈராக்கு நாட்டில் 1970-ஆம் ஆண்டில் இருந்ததைப் போல் ஏறத்தாழ நான்கு மடங்கு பெருகியுள்ளன. தொழிற் பயிற்சிப் பள்ளிகள் 143 உள்ளன. உயர்கல்வி கல்லூரிகளிலும் தொழில் நுட்ப நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றது. உயர் நிலைப் பள்ளிக் கல்வி பயின்றவர்கள் கல்லூரி யில் சேர்கின்றனர். தொழில் நுட்பக் கல்லூரிகளில் இரண்டாண்டுத் தொழிற்கல்வி வழங்கப்படுகிறது. பாடத் தன்மையையும் பயிற்சியையும் பொறுத்து நான்கிலிருந்து ஆறாண்டு வரை கல்லூரிக் கல்வி அளிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கல்லூரிகள் 1970-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்புதான் தொடங்கப் பெற்றன என்பது குறிக்கத்தக்கது. அங்குள்ள 25 தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் ஏறத்தாழ இருபதாயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அந்நாட்டில் மொத்தம் 58 கல்லூரிகள் உள்ளன. அவை ஆறு பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. பட்டப் படிப்பும் பட்ட மேற்படிப்பும் கல்லூரிகளில் உள்ளன. ஏறத்தாழ எண்பத்து நான் காயிரம் மாணவர்கள் பட்டப் படிப்பிலும் இரண் டாயிரம் பேர் பட்ட மேற் படிப்பிலுமாக மொத்தம் 10.2 விழுக்காடு மாணவர்கள் உயர் கல்வியில் உள்ளனர். அந்நாட்டில் 50.5 விழுக்காடு மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர் (1977). பெரும்பாலும் நாட்டுப்புறப் பெண்களே எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர்.

ஈராக்கில் (Iraq) மக்களின் எழுத்தறிவின்மையை ஒழிக்க ஈராக்கு அரசு பல வழிகளில் போராடியது. அவையாவன: 1. எழுத்தறிவின்மையை ஒழிக்கத் தேசிய அளவில் கல்வியறிவுத் திட்டம் (Literacy Programme) நடைமுறைப்படுத்தப்பட்டது. 2. 'மக்கள் பள்ளிகள்'(Popular Schools) திறக்கப்பட்டன. கல்வி யறிவுத் திட்டத்தில் சேர்ந்த அனைவரும் இப்பள்ளி களில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டனர். 'மக்கள் பள்ளிக்' கல்வியானது தொடக்கப் பள்ளிக் கல்விக்கு ஈடாகும். 3.தொடக்கப் பள்ளிக் கல்வி அந்நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயம் என்பது சட்டமாக்கப்பட்டது.

அங்கு 1928-ஆம் ஆண்டுதான் கல்வியறிவின்மை ஒழிப்புத் திட்டம் தொடங்கப் பெற்றது. ஏறத்தாழ 72 விழுக்காடு மக்கள் 1981-ஆம் ஆண்டின் முற்பகுதி யில் இத்திட்டத்தில் சேர்ந்தோ சேர்ந்து முடித்தோ இருந்தனர்.

இத்திட்டத்தில் ஆண்களை விடப் பெண்களே கல்வி கற்க முன் வந்தனர் அதிலும், நாட்டுப்புறப் பெண்கள் மிக விருப்போடு கல்வியறிவு பெறும் திட்டத்தில் சேர்ந்து பயின்றனர். அதனால், 1981-ஆம் ஆண்டின் இடைப் பகுதியிலேயே எழுதப் படிக்கத் தெரியாதவர்களுள் 63 விழுக்காடு மக்கள் 'மக்கள் பள்ளிகளில்' சேர்ந்து விட்டனர்.

இவ்வளவு மிகுதியான மக்கள் கல்வியறிவின்மை ஒழிப்புத் திட்டத்தில் சேர்ந்ததன் முதல் காரணம், இத் திட்டத்திற்கு அரசு முதலிடம் தந்ததே ஆகும். மேலும், கல்வியறிவு புகட்டும் திட்டத்திற்கென்றே ஆசிரியர்கள், கட்டடங்கள் போன்ற பல வசதிகளை அரசு செய்து தந்தது.

நாட்டின் பல பகுதிகளிலும் ஒரே தன்மையான கல்வித் திட்டம் இருப்பது ஈராக்கு நாட்டுக் கல்வியின் சிறப்புக் கூறாகும். அதிகாரங்கள் பரவலாக்கப் படாமல் கல்வித் தொடர்பான அனைத்து முடிவுகளும் ஒன்றிரண்டு அரசு அலுவலகங்களாலேயே அந்நாட்டில் செய்யப்படுகின்றன. மழலையர் பள்ளிக் கல்வியும் தொடக்கப் பள்ளிக் கல்வியும் உள்ளாட்சித் துறையினரால் (The Ministry of Local Government) கண்காணிக்கப்படுகிறது. ஆயினும், சில நுட்பமான செயல்பாடுகளில் கல்வி அமைச்சகத்தின் முடிவே இறுதியானதாகும். கல்வி அமைச்சகமே (The Ministry of Education) பொதுக் கல்வி, தொழிற் கல்வி முதலிய அனைத்தையும் பொறுப்பேற்றுச் செயல்படுத்தி வருகிறது.

பல்கலைக் கழகக் கல்வியைப் பொறுத்த வரை பல்கலைக்கழகங்களுக்கு நிறைய அதிகாரங்கள் உண்டு. உயர்கல்வி, அறிவியல் ஆய்வு அமைச்சகமும் (The Ministry of Higher Education and Scientific Research) பல்கலைக் கழகக் கல்வி முன்னேற்றத்தில் ஒத்துழைக்கிறது.

ஈராக்கு நாட்டில் 1974-ஆம் ஆண்டுக்கு முன் இருந்த சில தனியார் கல்வி நிறுவனங்கள் இன்று இல்லை. அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இன்று அரசின் கண்காணிப்பிலும் நிதியுதவியிலும் இயங்கி வருகின்றன.

ஈராக்கு நாட்டில் அனைத்துக் கல்வி நிலைகளும் 1974-ஆம் ஆண்டிலிருந்து இலவசமாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. பாட நூல்கள் மட்டுமன்றி, விடுதியில் தங்கிப் படிப்பதும் இந்நாட்டில் இலவசமாகும்.

உயர்கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பட்ட மேற்படிப்போடு 'டாக்டர்' பட்டமும் வற்புறுத்தப்படுகின்றது. உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுள் பெரும்பாலோனோர் அறிவியலில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களே.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் கல்வியியல் கல்லூரிகளிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பள்ளியிலிருக்கும் ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சகம் கருத்தரங்கம், கல்விப்பட்டறை, தொலைக் காட்சி முதலியவற்றின் மூலம் பணியிடைப் பயிற்சியினை அமைத்துத் தருகிறது.

பொதுவாக, மாணவர்கள் பள்ளித் தேர்வில் வாங்கும் மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மேல் வகுப்புக்குச் செல்கின்றனர். ஆனால், ஒரு கல்வி நிலையிலிருந்து அடுத்த கல்வி நிலை செல்ல வேண்டும் என்றால், மாணவர்கள் தேசிய அளவில் கல்வி அமைச்சகம் நடத்தும் தேர்வில் வெற்றி பெற்றாக வேண்டும். தேசிய அளவில் நடைபெறும் தேர்வு நாடு முழுவதும் ஒரே தன்மையான கல்வித் தரத்தை நிலை நாட்ட உதவுகிறது. மேலும், இத் தேர்வின் அடிப்படையிலேயே மாணவர்கள் உயர் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**ஈராசு** கிரேக்க சமயத்தின் காதல் தேவன். ஈராசு (Eros) கேயாசு (Chaos) என்பாரின் மகன் என்பது ஒரு கூற்று. பிறிதொரு கூற்றின்படி இவர் ஆப்ரோடைட்டி என்பாளின் மகன். ஆப்ரோடைட்டி காதலுக்கும் அழகுக்கும் தேவதை. ஈராசு காமக்கடவுள் மட்டுமன்று; மக்கட்பேற்றை அருளும் தேவன் என்றும் கருதுவர். ஈராசின் சகோதரனை அண்டிராசு (Anteros) என்பர். சில சமயங்களில் அண்டிராசும் ஈராசும் பகைவர்கள் என்று வருணிக்கப்படுதலுமுண்டு. போதாசும் (Pothos) இமிராசும் (Hemiros) ஈராசின் உறுதுணைவர்கள். பிற்காலத்தில் எண்ணற்ற ஈராசுகள் இருந்தார்கள் என்று எழுதியுள்ளார்கள்.

**ஈராசு பாதிரியார்** (**கி.பி.1890-1955**) இசுபெயின் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வருகைபுரிந்த கத்தோலிக்கபாதிரியார். இவர் 1922-ஆம் ஆண்டு தம் 32-ஆம் வயதில் இந்தியாவுக்கு வந்தார். மகாராட்டிர மாநிலம் பம்பாய்ப் பெருநகரில் உள்ள புனித சேவியர் கல்லூரியில் (St. Xavier's College) இவர் இந்திய வரலாற்றுப் பேராசிரியராகப் பதவியேற்றார். முப்பதாண்டுகளுக்கு மேலாக இவர் இந்தியாவில் இந்திய வரலாற்றைக் கற்றும், ஆய்வு

செய்தும், தம் ஆய்வுகளை விளக்கியும் வந்தார். ஆழ்ந்து கற்ற ஈராசு பாதிரியார் தாம் கூறவேண்டிய கருத்தை ஆணித்தரமாக எடுத்து விளக்குவதிலும் வல்லவர். பல்லவ மன்னர்களின் தொடக்க காலத்தைப் பற்றி இவர் எழுதியுள்ளார். விசய நகரப் பேரரசர்களின் நான்காம் வமிசத்தையும் இவர் ஆராய்ந்து எழுதியுள்ளார். எனினும், இவர் எழுதியவற்றுள் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுவது 'சிந்துவெளி நாகரிகம்' (Indus Valley Civilization) என்னும் நூலேயாகும். சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த முத்திரைகளில் காணப்படும் எழுத்துவடிவம் தமிழ்மொழியைப் போன்றுள்ளது என்பதே இவரின் முடிந்த முடிபாகும். சிந்துவெளி எழுத்து வடிவத்தை ஆராயும் பணியில் அனைவருக்கும் வழிகாட்டியவர் ஈராசு பாதிரியார்தான். எனினும், சிந்துவெளி எழுத்துவடிவம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதும் இன்றும் இது விவாதநிலையிலேயே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிந்துவெளி எழுத்துமுறையை மேலும் பலர் இக்காலத்தில் ஆய்ந்து வருகின்றனர். மேற்கு இந்தியாவில் இந்திய வரலாற்று ஆய்வுகளைத் தொடங்கிப் புகழ்பெற்ற ஈராசு பாதிரியாரையடுத்துப் பல இந்திய ஆராய்ச்சியாளர்கள் இவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றனர். பேராசிரியர் சங்காலியா, டாக்டர் மொரேசு(Dr.Moraes)போன்றவர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஈராசு பாதிரியார் சொல்லாற்றல் மிகுந்த பேச்சாளர்; திறம்படக் கற்பிக்கும் நல்லாசிரியர்; சிறந்த சிந்தனையாளர். இவர் 1955-ஆம் ஆண்டில் காலமானார்.

**ஈரான்** மேற்கு ஆசியாவிலுள்ள நாடுகளுள் ஒன்று. அண்மைக் காலம் வரை இந்நாட்டைப் பாரசீகம் என்றே குறிப்பிட்டனர். கிரேக்கர்கள், அராபியர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள் போன்றோர்களின் படையெடுப்புகளினாலும் போர்களினாலும் ஈரானியப் பேரரசு நலிந்து, மெலியத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஈரான் மேலைநாடுகளுடன் போட்டியிடுமளவிற்கு முன்னேறி வருகிறது. சீர்திருத்தங்களை மேற்கொள்ளக் காரணமாயிருந்த பகலவி மரபினரைப் பிடிக்காத பழைமை விரும்பிகளான முசுலிம்கள் அம்மரபினை அகற்ற உறுதுணையாய் நின்றனர். ஈரானின் வடக்கில் சோவியத்து ஒன்றியமும் காசுபியன் கடலும், கிழக்கில் ஆப்கானிசுத்தானும் பாகிசுத்தானும், தெற்கில் ஓமன் வளைகுடாவும் பாரசீக வளைகுடாவும், மேற்கில் ஈராக்கும் துருக்கியும் அமைந்துள்ளன. ஈரான் நாட்டின் பரப்பளவு 16,48,000 ச.கி.மீ. நாட்டின் பெரும்பகுதி பாலைநிலம். இந்நாட்டின் மக்கள்தொகை 4,05,50,000 (1982).



ஈரான்

ஈரானின் பெரும்பகுதி மேட்டுநிலங்கள். ஏறத்தாழ 1200 மீட்டர் உயரமுள்ள இம் மேட்டு நிலங்களைச் சுற்றிலும் பெரும்பாலும் மலைத்தொடர்கள் சூழ்ந்துள்ளன. இந்நாட்டை நான்கு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. மலைத்தொடர்கள், 2. பாலைநிலங்கள், 3. காசுபியன் கடற்கரை, 4. குசித்தான் சமவெளி.

மலைத்தொடர்கள்: ஈரானின் மிக உயர்ந்ததும் மிகப் பரந்ததுமான மலைத்தொடர்கள் இந்நாட்டின் மேற்குப் பகுதியிலும், வட எல்லையை அடுத்தும் உள்ளன. சாக்ரோசு மலைகள் துருக்கி, உருசியாவின் எல்லைகளில் தெற்காகவும் மேற்காகவும் படர்ந்து பாரசீக வளைகுடாவைத் தொட்டு நிற்கின்றன. சாக்ரோசு மலைகளுக்குக் கிழக்கில் உள்ள மலைகளை மத்திய மலைகள் என்பர். இம்மலைத்தொடர்கள் பெரும்பாலும் ஈரானின் கால்பங்கு நிலப்பகுதியைக் கவர்ந்துள்ளன. இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் மத்திய மலைகளின் நீண்டு

குறுகிய பச்சைப்பசேலெனக் காட்சிதரும் பள்ளத் தாக்குகளில் வாழ்கிறார்கள்.

எல்பர்சு மலைகள் ஈரானின் வட எல்லையை ஒட்டி யுள்ளன. வட மலைச்சரிவுகளில் மரங்கள் மூடியுள் ளன. அவை காசுபியன் கடலையும் உருசியாவையும் நோக்கியுள்ளன. தமவந்து ஈரானின் மிக உயர்ந்த மலையுச்சியாகும். 5604 மீட்டர் உயரமுள்ள இம் மலையுச்சி எல்பர்சு மலையில் அமைந்துள்ளது. ஓமன் வளைகுடாவினைத்தொடர்ந்தும் ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான் எல்லைகளை யொட்டியும் சிறு மலைத் தொடர்கள் உள்ளன.

பாலை நிலங்கள்: தசுட்-இ-லுத்து(Dasht-i-Lut), தசுட்-இ-கவிர் (Dasht-i-Kavir) என்னும் பெயர் களில் இரு பரந்த வறண்ட பாலைநிலங்கள் இந்நாட் டில் உள்ளன. அவற்றில் மக்கள் வாழவில்லை. அவை 98,400 ச.கி.மீ. பரப்புள்ளனவாய் மத்திய ஈரானில் அமைந்துள்ளன. தசுட்-இ-லுத்துப் பாலைநிலத்தில் மணற்குன்றுகளும் பாறை வெளிகளும் உள்ளன. ஆனால், தசுட்-இ-கவிர் பாலைநிலத்தில் மணலுக்குப் பதிலாக உப்புகள் பரவியுள்ளன. மழைக் காலங்களில் மலையருவிகள் தசுட்-இ-கவிர் பாலைநிலத்தில் பாய் கின்றன. அவை சிறுசிறு ஏரிகளாகவும் கடும் கோடைக்காலத்தின்போது வறண்டும் உள்ளன.



இசபகான் மசூதி - ஈரான்

காசுபியன் கடற்கரை: எல்பர்சு மலைத்தொட ருக்கும் காசுபியன் கடலின் நீலப்பச்சை நீருக்கும் இடையில் குறுகிய வளமான தாழ்நிலமாக அமைந் திருப்பது காசுபியன் கடற்கரை. காசுபியன் கடலே உலகின் மிகப் பெரிய ஏரியாகும். இது கடல்மட் டத்தைவிட 27 மீட்டர் தாழ்வானது என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

குசித்தான் சமவெளி பாரசீக வளைகுடாவிற்கு வடக்கில் உள்ளது. இச்சமவெளி ஈராக்குச் சாக் ரோசு மலைத்தொடர்களுக்கு இடையிலுள்ளது. தட்டையானதும் வறண்டதுமான இப்பகுதியில் ஈரானின் பெட்ரோலியக் கிணறுகள் மிகுதியாக உள் ளன.

கடற்கரை: காசுபியன் கடலை ஒட்டியுள்ள வட கடற்கரை 604 கி.மீ. நீளமுடையது. ஈரானின் தென் கடற்கரை பாரசீக-ஓமன் வளைகுடாக்களை ஒட்டி 2032 கி.மீ. நீண்டுள்ளது. பாரசீக வளைகுடாவை யும் ஓமன் வளைகுடாவையும் ஆர்மசு நீர்ப்பிரிவு இணைக்கிறது.

ஆறுகள்: ஈரான் நாட்டு ஆறுகளுள் பெரும்பாலா னவை மலைத்தொடர்களிலிருந்து மத்திய ஈரானில் பாய்ந்து, மழைபொழிவேற்படாத பாலை நிலங் களில் சுவறிவிடுகின்றன. கரூன் என்னும் ஆறு சாக் ரோசு மலைகளில் உற்பத்தியாகி, குசித்தான் சம வெளி வழியாகத் தெற்கில் பாய்ந்து ஓடிச் சாட்டல் ஆரப்பு ஆற்றுடன் கலந்துவிடுகிறது. இவ்வாற்றில் கப்பல்கள் செல்ல இயலும். சாபிட்டு ஆறு எல் பர்சு மலைக் குடைவுகளின் வழியாக ஓடிக் காசுபியன் கடலில் விழுகிறது. ஈரானுக்கும் உருசியாவுக்கும் இடையில் வடகிழக்கு எல்லையாக ஆட்ரெக்கு ஆறு ஓடுகிறது.

ஏரிகள்: ஈரானின் பெரும்பாலான ஏரிகளில் உப்புக் கிடைக்கிறது. உப்புப் படிவங்களை அடித்துச் செல்லும் அருவிகள் இல்லாமையால், வெப்பத்தால் ஏரிகளின் நீர் ஆவியாகும்போது உப்பு படிந்துவிடு கிறது. உர்மியா ஈரானின் வடமேற்குப் பகுதியிலுள்ள மிகப் பெரிய ஏரியாகும். குளிர்காலத்தில் 5960 ச. கி.மீ. ஆகவும் கோடையில் 3890 ச.கி.மீ. ஆகவும் இதன் உருவம் மாறுபடுகிறது.

இயற்கைச் செல்வங்கள்: பெட்ரோலியப் பொருள்களே ஈரானின் சிறப்பான இயற்கைச் செல் வம். எண்ணெய் ஊற்றுகள் நாட்டின் பல பகுதிகளில் காணப்படினும் குசித்தான் பகுதியில் மிகச் சிறப்பாக

அமைந்துள்ளன. பசுரூல இரத்தினக் கற்கள், அரிதார நஞ்சு, உப்பு, இரும்பு, தகரம், அஞ்சனக்கல், கந்தகம், பொன் போன்றவை ஏனைய கனிமப் பொருள்கள். ஈரானில் காடுகள் மிகக் குறைவு. இந்நாட்டில் உள்ள காடுகள் காசுபியன் கடலை அடுத்துள்ளன. ஒக்கு, பீச்சு, ஆசு, எல்ம், பாப்லார், மாப்பில், இலவங்க மரங்கள் இக்காடுகளில் பயிராகின்றன.

ஓநாய், சிங்கம், சிறுத்தைப்புலி, ஆண்டிலோப் மான் போன்ற காட்டு விலங்குகள் தொலைதூரப் பகுதிகளில் சுற்றித்திரிகின்றன. பெலிகன், காட்டுக் கோழி, கொக்கு, வான்கோழி, கௌதாரி, பருந்து, புல்புல் போன்ற பறவைகள் ஈரானில் உள்ளன. சுட்டுர்சன் கார்ப்பு, வெள்ளை, எர்ரிங்கு போன்ற மீன்களைக் காசுபியன் கடலில் காணலாம்.

தட்பவெப்ப நிலை: வடக்கிருந்தும் மேற்கிருந்தும் வீசும் மழைக் காற்றுகளை எல்பர்சு சாக்ரோசு மலைத்தொடர்கள் தடுத்து விடுகின்றன. எனவே, மழைக்காலத்தில் இம்மலையுச்சிகளில் பெரும்பனிப் படலம் படர்ந்து நிற்கும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 30 செண்டிமீட்டர் மழையே ஈரான் பெறுகிறது.

குளிர்காலத்தில் பனி உறைந்துவிடும். ஈரான் நாட்டுக் கோடைக்காலம் கடுமையான வெப்பத்தைக் கொண்டுள்ளது.

காசுபியன் கடற்கரைப் பகுதிகளில் மிகுதியாக மழை பொழிகிறது. பாலை நிலப்பகுதிகளில் 13 செண்டிமீட்டர் வரை மழை பொழிகிறது. கோடைக் காலங்களில் பாலைநிலப்பகுதிகளில் வாழ்வது இன்னல் பயப்பதாகும். வேகமாக வீசும் காற்றினால் அடிக்கடி புயல்கள் தோன்றுவதும் உண்டு.

மக்கள் வாழ்க்கை: ஈரான் நாட்டு மக்களில் ஏறத்தாழ அரைப் பங்கினர் சிறு பண்ணைகள் நிரம்பிய சிற்றூர்களில் வாழ்கிறார்கள். இச்சிற்றூர்களில் பெரும்பாலானவை மேற்கு, வடக்கு ஈரான் மலைத் தொடர்களுக்கு அண்மையிலிருப்பவை. ஈரானியருள் ஏறத்தாழ 48விழுக்காட்டினர் மாநகரங்களிலோ நகரங்களிலோ வீடுகளில் வாழ்கின்றனர். ஏனையோர் நாடோடிகளாக ஆடு, செம்மறியாடு, கால்நடை மந்தைகளுடன் நாடெங்கும் சுற்றித் திரிகிறார்கள். அவர்களுள் பலர் மேற்கு, வடக்கு எல்லைப்புற மலைகளை அடுத்துள்ள பகுதிகளில் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

ஈரானிய இனத்தைச் சாராத மக்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே ஈரானில் குடியேறினர். ஈரானியர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். அராபியர், துருக்கர், மங்கோலியர் போன்றவர்களும் வந்த காலத்தில் இந்நாட்டில் கலப்பினம் ஒன்று உருவாகியுள்ளது.

குர்துகள், உலூர்கள், பக்தியாரி, காசுகாய், காமேசு, துருக்கோமன், பலூச்சி போன்றோர் ஈரானியரல்லர். இவர்களைத் தவிர்த்து யூதர்கள், அராபியர், அர்மீனியர் போன்றோரும் வாழ்கிறார்கள்.

ஈரானியரில் 100க்கு 98பேர் முசுலிம்கள். இசுலாம் ஈரானின் நாட்டுச் சமயம் ஆக்கப்பட்டுள்ளது. அவர்கள் சியா முசுலிம் மரபைச் சார்ந்தவர்கள். சுன்னி முசுலிம்கள் எட்டரை இலட்சம் பேர் வாழ்கிறார்கள். கிறித்தவர்கள் 70,000 பேரும் யூதர்கள் 40,000 பேரும் சொராசுடிரியர்கள் (பார்சிக்கள்) 10,000 பேரும் ஈரானில் உள்ளனர்.

மொழி: பெரும்பாலோர் பாரசீக மொழியைப் பேசுகிறார்கள். அம்மொழி அராபிய எழுத்துகளில் எழுதப்படுகிறது.

குடும்ப வாழ்க்கை: இந்நாட்டில் 1930-இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களால் பெண்கள் ஆண்களுடன் ஒத்தநிலையில் வாழும் நிலை வந்தது. இருப்பினும், 1979-இல் முடியாட்சி ஒழிக்கப்பட்ட பின்னர்ப் புரட்சியாளர்கள் பெண்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதைக் குறை கூறி வந்தனர். பெண் உரிமை பெரிய சிக்கலை இந்நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

தங்குமிடம்: நீண்டுயர்ந்த சுவர்களால் சுற்றிலும் கட்டப்பெற்றுள்ள அடைப்புகளுக்குள் மண்சுவராலான சிறு வீடுகளில் பெரும்பாலான ஈரானியர்கள் வாழ்கிறார்கள். வீடுகளின் நடுவில் முற்றம் உண்டு. வீட்டைச் சுற்றிலும் சில மரங்களும் மலர்ச்செடிகளும் நீர்த்தொட்டியும் உள்ளன. தொட்டிநீரைச் சமையலுக்கும் பாத்திரங்களைச் சுத்தம் செய்யவும் பயன்படுத்துகிறார்கள்; அதனைக் குடிக்கப் பயன்படுத்துவதில்லை. குடிநீர் கிணறுகளிலிருந்தும் நீர் ஊற்றுகளிலிருந்தும் பெறப்படுகிறது. கோடை வெயிலில் இளைப்பாற வீட்டின் முன்னால் முக மண்டபம் இருக்கிறது.

வீடுகளில் பகட்டான மரச்சாமான்கள் இருப்பது குறைவு. ஈரானியர் நாற்காலிகளில் உட்காராமல் தலையணைகளின்மேல் அமருவர்; தரையில் துணியை விரித்து அதன்மீது அமர்ந்து உணவருந்துகிறார்கள்; பாயின்மீது உறங்குகிறார்கள். செல்வர்கள் தம் வீட்டின் தரையில் கம்பளம்விரித்துள்ளனர்.

நாடோடிகள் வட்டவடிவமான கறுப்புக் கூடாரங்களில் வாழ்கிறார்கள். பெண்கள் கூடாரங்களுக்கான நூலை நெய்வதுடன் தரையில் விரிக்கும் கம்பளங்களையும் நெய்கிறார்கள். கழுதைகள், ஒட்டகங்கள் போன்ற விலங்குகளின்மீது சுமைகளை ஏற்றிப் பயணம் செய்கின்றனர். அச்சுமைகளின் மீது பெண்களும் குழந்தைகளும் அமர்ந்து கொள்வர். கால் நடையாகவோ குதிரை மீதமர்ந்தோ ஆண்கள் அவ்விலங்குகளை நடத்திச் செல்கின்றனர்.

உணவு: அரிசி, ரொட்டி, பாலாடைக்கட்டி, ஆட்டுக்கறி போன்றவை ஈரானியரின் சிறப்பான உணவுப் பொருள்கள். இம்மக்கள் கெபபு (Kebab) என்னும் உணவைச் சுவைத்து உண்பர். ஆட்டுக்கறியை அகப்பைக்கோலில் சொருகி வறுக்கும் முறையாக இவ்வுணவு அமைகிறது. தித்திப்பான தேநீரை இவர்கள் பெருமளவில் அருந்துவர்.

உடை: நகரங்களில் வாழும் பெரும்பாலான ஆடவர்களும் பண்ணைப் பகுதிகளில் வாழும் சில ஆண்களும் மேற்கத்திய முறையில் உடுக்கிறார்கள். ஆண்களில் எஞ்சியுள்ளவர்களில் பெரும்பான்மையோர் வெள்ளைப்பருத்தியிலான மேல்சட்டையையும் பைபோன்ற கறுப்பு அல்லது நீலநிறக் காலுறைகளையும் அணிந்துகொள்கிறார்கள். சில வேளைகளில் நீண்ட நீலப் பருத்தியிலான மேல் அங்கியையும் அணிகிறார்கள்.

சிற்றூர்களில் வாழும் ஈரானியப் பெண்களுள் பலர் இறுக்கமில்லாமார்புச் சட்டையையும், கறுப்பு நிறக் காலுறைகளையும் அணிகிறார்கள். பெருநகரங்களில் வாழும் பெண்டிருள் சிலர் மேற்கத்திய முறையில் உடுத்துகிறார்கள். பெரும்பாலான பெண்கள் நீண்ட கறுப்பு நிற ஆடை அணிவர். இதைச் சதோர் (Chador) என்பர். இப்போது பெண்கள் பர்தா அணியவேண்டுமென வற்புறுத்தப்படுகிறார்கள்.

பொழுதுபோக்கு: கால்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மற்போர், சதுரங்கம், தென்னிசு, பனியில் சறுக்கி விளையாடுதல் போன்ற களியாட்டங்களை விளையாடி மகிழ்வர். தேநீர் அருந்துவதும் உக்கா என்னும் புகைபிடிப்பதும் நண்பர்களுடன் உரையாடுவதும் ஈரானியரின் பொழுதுபோக்குகள்.

இசுலாம் சமயத் தொடர்பான சில நாள்களை அவர்கள் விடுமுறை நாள்களாகக் கொண்டாடுகிறார்கள். நவரோசு என்பது புத்தாண்டு நாளாகும்.

நகரவாழ்க்கை: ஈரான் நாட்டின் பெரும்பாலான நகரங்கள் இந்நாட்டின் மேற்குப் பகுதியில் மலைகளுக்கு அண்மையில் அமைந்துள்ளன. ஓர் இலட்சம் மக்களைக் கொண்ட ஈரானிய நகரங்கள் இருபது நகரங்களுக்கும் மிகுதியானவை.

களிமண் செங்கற்களான வீடுகளும் மினரட்டு என்னும் உயர்ந்த சிறு கிளைக் கோபுரங்களைக் கொண்ட மசூதிகளும் பார்ப்பதற்கு அழகாக இருப்பதில்லை. மாநகரங்களில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புக் கட்டிடங்கள், அரசாங்க அலுவலகக்கட்டிடங்கள் ஆகியவை அழகாகக் கட்டப்பட்டுள்ளன. இம்மாநகரங்கள் ஒருகாலத்தில் ஒட்டகங்களுடன் வரும் வணிகர்கள் கூடும் இடமாகவும் வழிபாட்டு மையமாகவும் இருந்தவை. இப்போது இவை அரசாங்க மையமாகவோ செய்தொழில்களின் மையங்களாகவோ திகழ்கின்றன.

கிராமப்புற வாழ்க்கை: உழவர்களுள் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். இக்கிராமங்கள் ஒரே தெருக்கள், குறுகிய இறுகலான செப்பனிடப்படாத சந்துபொந்துகளைக் கொண்டவை. கிராமத்தின் நடுவில் மசூதிகள் உள்ளன. பெரும்பாலான கிராமங்களில் பொதுவான குளியல் அறைகளும் மாவு ஆலைகளும் உள்ளன. பெரும்பாலான கிராமங்களில் பள்ளிகளோ பண்டகச் சாலைகளோ இல்லை. பெருநகரங்களில் மட்டும் கடைத்தெருக்களும் வாணிக மையங்களும் உள்ளன.

பொருளாதாரம்: ஈரான் 1950க்குப் பின்னர் மாறி வரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. பண்ணைகளையும் குடிசைக் கைத்தொழில்களையும் நம்பியிருந்த இந்நாட்டின் பொருளாதாரம், வளர்ந்து வரும் தொழிற்சாலைகளாகவும் பணப்பயிர்களை உற்பத்தி செய்யும் தொழில்களாகவும் மாறி வருகிறது. ஈரானில் கிடைக்கும் பெட்ரோலும் எரிவாயுவும் இந்நாட்டிற்குப் பெருஞ்செல்வத்தைவாரி வழங்குவதுடன், ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் ஈந்துள்ளன. பெட்ரோலிலிருந்து கிடைக்கும் வருவாய் ஒவ்வோராண்டும் பெருகி வருகிறது. பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் (OPEC) பெட்ரோலின் விலையை உயர்த்தியதால் வருமானம் உயர வழி பிறந்தது. ஆனால், இந்நாட்டில் 1979-இல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாகப் பெட்ரோல் உற்பத்தியும், அதனால் கிடைக்கும் வருவாயும் பெருமளவு குறைந்துவிட்டன. ஈரான்-ஈராக்கியப் போர்களினால் ஈரானின் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்துள்ளது.

ஈரானின் எண்ணெய்த் தொழிலில் 1970 -இலிருந்து மாற்றமொன்று ஏற்பட்டது. இங்குப்

பெட்ரோ-இரசாயனத் தொழிற்சாலைகள் உருவாக கப்பெற்றன. செயற்கை உரங்கள், நெகிழி (Plastics), செயற்கை நூல்கள், கந்தகம் ஏனைய இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படலாயின. உலோகங்கள், இயந்திரக் கருவிகள், பேருந்துக் கட்டுமானம் போன்றவற்றைத் தயாரிக்கும் பெருந் தொழிற்சாலைகள் இப்போது உருவாகி வருகின்றன. மேற்கூறிய தொழில்களைச் செய்ய வெளிநாட்டு வாணிகக்குழுக்கள் முன்வந்தன. அவை அரசிடமிருந்து இதற்காகப்பல சிறப்புரிமைகளைப் பெற்று இயங்கின. ஆனால், 1979-இல் ஏற்பட்ட இசுலாமியப் புரட்சிக்குப் பின்னர் அவை நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டன.

பொருளாதார முன்னேற்றத்திற்காக 1950க்கும் 1960க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு ஈரானுக்கு மிகுதியாகக் கடன் வழங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈரானுக்கு இக்காலத் தொழில்நுட்பங்களைக் கற்றுத்தர உதவினர். ஆனால், புரட்சிக்குப் பின்னர் இத்தகைய அமெரிக்க உதவிகள் அனைத்தும் நின்றுவிட்டன.

வரலாறு: ஈரானில் 3500-இலிருந்து 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரிய இன மக்கள் குடியேறினர். அவர்கள் சோவியத்து உருசியாவின் தென் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஈரானின் முதல் ஆயிரம் ஆண்டு அங்குத் தோன்றி மறைந்த பல அரசுகளின் வரலாறாகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாரசீக அக்மீனிய மரபைச் சார்ந்த பேரரசர் சைரசு என்பார் வட ஈரானிலிருந்த மீடியர்களைத் தோற்கடித்து, ஈரானிய மக்களை இணைத்தார். சைரசின் ஆட்சிக் காலத்தில் பாரசீகப் படைகள் இன்றைய மேற்கு ஆசியா, மத்திய ஆசியா போன்ற பகுதிகளை வென்றன. இன்றைய பாகிசுத்தானின் எல்லைவரை அவருடைய பேரரசு பரந்து விரிந்திருந்தது. சைரசால் நிலைநாட்டப்பெற்ற அப்பெரும் பேரரசு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் நீடித்தது. அவரைத் தொடர்ந்து தாரியசு (Darius) பஞ்சாபையும் சிந்துவையும் வென்றார். கி.மு. நான்காம் நூற்றாண்டில் மகா அலெக்சாந்தர் அப்பேரரசை அழித்தார். அலெக்சாந்தரும் அவர் பின்வந்தவர்களும் ஈரானில் புதியதொரு மரபினை நிலைநாட்டிக் கிரேக்கர்களின் பண்பாட்டுச் செல்வாக்கை அப்பகுதியில் பரப்பினர்.

கிரேக்கர்களின் ஆட்சி கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்தது. அவர்களுக்குப் பின்னர் ஈரானியர்களுடன் தொடர்புகொண்ட பார்தியர்கள் ஈரானில் தம்மாட்சியை நிலைநாட்டினர். 350 ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பார்த்தியர்களைச் சசானியர் தோற்கடித்து, மேலுமொரு பாரசீக மரபின் ஆட்சியை நிலைநாட்டி, உரோமானியரின் படையெடுப்புகளை விரட்டியடித்தனர். சசானியரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 224 முதல் 641 வரை) பாரசீகப் பண்பாடும் தேசியமும் மீண்டும் மறுமலர்ச்சியுற்றன. அராபியப் படைவீரர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஈரானிய மேட்டு நிலத்தைக் கைப்பற்றி, அங்கிருந்த சசானிய மரபினரின் ஆட்சியைக் கவிழ்த்தனர். அராபியர்கள் தங்கள் சமயமான இசுலாத்தையும் அராபிய எழுத்து முறையையும் இங்குப் புகுத்தினர். ஈரானியரின் பண்டைய சமயமான சொராட்டிரியம் அகற்றப்பட்டது.

அராபியர்களின் ஆதிக்கம் பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. அங்கு இசுலாமியப் பேரரசு நலியத் தொடங்கும்வரை இவ்வாதிக்கம் நீடித்தது. அராபியர்களை அடுத்து அயலார் பலர் ஈரானின்மீது படையெடுத்தனர். அடுத்தடுத்து அயலார் பலர் கி.பி. 1040 முதல் 1500 வரை ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் படையெடுத்து ஈரானில் ஊடுருவினர். செல்சுக்குத் துருக்கியர், செங்கிசுகான் தலைமையில் மங்கோலியர், தைமூர் தலைமையில் தார்டர் துருக்கர் போன்றோர் ஈரானைச் சூறையாடினர். ஈரானிய நகரங்கள் கொள்ளையடிக்கப்பட்டுச் சிற்றூர்கள் அழிந்தன. இப்படையெடுப்புகள் நிகழ்ந்த காலத்தில் ஈரானில் குழப்பமும் நலிவும் மிகுந்தன.

சபாவிய மரபினர் (Safawid Dynasty 1499-1722) பெருமுயற்சி செய்து பாரசீகத்தின் பழம்பெருமையை ஓரளவு திரும்ப நிலைநாட்டினர். அம்மரபினருள் முதலாம் சா அப்பாசு (கி.பி. 1587-1628) என்பார் தலைசிறந்தவர் என்று கருதப்படுகிறார். அவர் ஈரானிய நகரங்களைப் புதுப்பித்தும் புதிய சாலைகளை அமைத்தும் ஆட்சியை நிலைநிறுத்தினார். இசுபகான் என்னும் நகரம் உலகிலேயே அழகுவாய்ந்த நகரமாக அவர் காலத்தில் திகழலாயிற்று. சா அப்பாசு ஈரானில் இசுலாமிய சமயத்தின் சியாப் பிரிவினை நிலைநாட்டினார். அது நாட்டுச் சமயமாக்கப்பட்டது. சமய ஆர்வத்தைக் கிளர்ந்தெழச்செய்து நாட்டை ஒருமைப்படுத்த அவர் முயன்றார்.

ஆப்கானியரின் படையெடுப்பால் கி.பி. 1722-இல் சபாவிய மரபு நொறுங்கிச் சிதறுண்டது. நாதர் சாவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1736-47) மீண்டும் ஈரான் படை வலிமிக்க நாடாக மிளிர்ந்தது. பாரசீகப் படைவீரர்கள் ஆப்கானிசுத்தானத்தை வென்றதுடன், இந்தியாவில் தில்லிவரை படையெடுத்தனர். அப்படையெடுப்பின்போதுதான் நாதர் சா தில்லியிலிருந்த மயிலாசனத்தைக் கைப்பற்றிப் பாரசீகத்

திற்குக் கொண்டு சென்றார். இரத்தினங்கள் பதித்த இம்மயிலாசனம் உலகப் புகழ் பெற்றதாகக் கருதப் படுகிறது. அது இப்போது தெகரான் (Tehran) அருங் காட்சியகத்தில் உள்ளது. தெகரான் கி.பி. 1788 –இலிருந்து ஈரானின் தலைநகராயிற்று. நாதர் சா காலமானதை அடுத்து, இரு பகை மரபுகளுக்கிடையே ஈரானில் உள்நாட்டுப் போர் மூண்டது. கசார் மரபி னர் கி.பி. 1790–ஆம் ஆண்டளவில் வெற்றிபெற்று முதலாம் உலகப் பெரும்போரின் முடிவு வரை ஈரானை ஆண்டனர்.

அராபியரின் ஆட்சி முடிவுற்றதற்குப் பின்னர் ஈரானுக்கும் மேலை நாடுகளுக்குமிடையே இருந்த தொடர்பு அறுபட்டுப் போய், அந்நாடு அறிவியலி லும் தொழில்நுட்பத் துறையிலும் மிகவும் பின் னுக்குச் சென்றது. இடையறாத போர்களினாலும் தொடர்ந்து நிகழ்ந்த படையெடுப்புகளினாலும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈரான் பெரிதும் நலிந்து மெலிந்தது. ஈரானின் பலக் குறைவைப் பயன்படுத்திக் கொண்டு உருசியா, பிரிட் டன் மற்றும் ஏனைய மேலை நாடுகள் ஈரானின் பொருளாதார, அரசியல் சிக்கல்களில் ஈடுபாடு கொண்டன. ஈரானின் புவியியல் அமைப்பை உறு துணையாக்கிக் கொள்ள முனைந்த உருசியா, தெற்கே பாரசீக வளைகுடா வரை தம் நாட்டின் எல்லையை விரிவாக்கம் செய்ய விழைந்தது. ஆனால், பிரிட்டன் ஈரானை இடைநடு நாடாக்கி இந்தியா வுக்குள் உருசியரின் செல்வாக்கு வரவொட்டாமல் தடுக்க முயன்றது. ஈரானுக்கும் உருசியாவுக்கு மிடையே கி.பி. 1801–13, கி.பி. 1825–28 ஆகிய ஆண்டுகளில் இரு போர்கள் மூண்டன. இதன் பய னாக ஆராசு ஆற்றுக்கு வடபால் வரை இருந்த ஈரானிய நிலப்பகுதிகள் உருசியாவின் வச மாயின. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈரானின் பெரும் எண்ணெய்க் கிணறுகளின் வாணிக உரிமைகளைப் பிரிட்டன் கைப்பற்றியது. இக்காலங் களில் ஈரானிய அரசு பிரிட்டன், உருசியா ஆகிய இருநாடுகளின் கைப்பாவையாயிருந்தது. இவ்விரு நாடுகளும் 1907–இல் தத்தம் செல்வாக்குக் குட்பட்ட பகுதிகளாக ஈரானைப் பங்கிட்டுக் கொண்டன.

தம் சுதந்திரம் பறிபோகாமல் காத்துக் கொள் ளும் பொருட்டு, ஈரானிய மக்கள் உள்நாட்டுச் சீர் திருத்தம் கோரி இயக்கமொன்றைத் தொடங்கினர். அதன் விளைவாக 1906–இல் அரசியலமைப்புத் திட் டம் உருவாக்கப்பட்டது. அதன்படி பிரதிநிதித்துவ அரசுக்கு வழிபிறந்தது. முதல் உலகப் பெரும்போருக் குப் பின்னர் ஈரானைப் புதிய மயமாக்கும் முயற்சிகள் பெருகின. அப்போது இரிசா சா பகல்வி என்பார் சீர்திருத்தம், முன்னேற்றம் என்னும் அடிப்படைகளில் புதிய மரபினை நிலைநாட்டினார். பகலவி மர பின் ஆட்சி 1979–ஆம் ஆண்டு வரை நீடித்தது. புதிய தொழில் நுட்ப வளர்ச்சி, நிலச் சீர்திருத்தம், கல்வி முன்னேற்றம், பெண்களின் மதிப்புப் போன்ற வற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது. அரசியல் பகை வர்களை அவர் கடுமையாகவும் கொடுமையாகவும் நடத்தினார்.

இடதுசாரி அரசியல் குழுக்கள் சியா முசுலிம் களுடன் இணைந்து சா பகலவியை விரட்டிவிட்டு முசுலிம் சமயத் தலைவர்கள் விழைந்த இசுலாமியக் குடியரசை நிலைநாட்டின. அவர்களின் தலைவராக அயத்துல்லா கோமேனி என்பார் பொறுப்பேற்றார். அவர் இசுலாம் சமயத்தைப் பழைய முறையைப் பின்பற்றிப் பாதுகாப்பதில் முனைந்துள்ளார். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்களுமுண்டு.

இன்றைய நிலை: ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே 1980–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எல்லைகள் குறித்தும் வேறு காரணங்களுக்காகவும் ஏற்பட்ட சிக்கல்களின் விளைவாகப் போர் மூண்டது. உயிரிழப்புகளும் பொருளிழப்புகளும் இரு திறத்தா ருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியபோதிலும் போர் நின்றபாடில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இப்போர் நீடிப்பது, குறிப்பாக ஆசிய மக்க ளையும் பொதுவாக உலக மக்களையும் கவலைக் குள்ளாக்கியுள்ளது.

**ஈரான் நாட்டில் கல்வி**: ஈரானில் பதினைந்து விழுக்காடு மக்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் (1982). தொடக்கப் பள்ளிக் கல்வி ஆறாம் வகுப்பு வரை கற்பிக்கப்படுகிறது. இது அனைத்து மாணவ மாணவியருக்கும் கட்டாய மாகவும் இலவசமாகவும் வழங்கப்படுகிறது. இந் நாட்டில் ஆசிரியர் எண்ணிக்கை பற்றாக்குறையாக உள்ளது. புதிய பள்ளிகள் எழுப்பப் போதிய நிதி வசதிகள் இந்நாட்டில் செய்து தரப்படவில்லை.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஈரானில் யாருக்கும் கட்டாயம் இல்லை. இங்கு இக்கல்வி இலவசமாக்கப் படவும் இல்லை. குறைந்த அளவு மாணவர்களே உயர்நிலைப் பள்ளியில் வந்து சேருகின்றனர். இந் நாட்டில் 1960 வரை உயர்நிலைப் பள்ளிக் கல்வி யானது மாணவர்களைக் கல்லூரிக் கல்விக்கு மட்டுமே உருவாக்கி வந்தது. இப்பொழுது தொழிற்பயிற்சிக் கல்விக்கு உயர்நிலைப் பள்ளிகள் முதலிடம் தருகின் றன. எனவே, ஈரானில் தொழிற்பயிற்சிக் கல்லூரி களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

வயது வந்தோருக்குக் கல்வியறிவை வளர்த்திடும் நோக்கில் ஈரான் நாட்டின் கிராமப்புறங்களில் வயது வந்தோர் கல்வித் திட்டம் செயலில் உள்ளது. வயது வந்தோரின் கல்வியறிவை மேம்படுத்த மாலை வகுப்புகள், பகுதி நேரப் பகல் பள்ளிகள் உதவுகின்றன. முன்னர் ஈரான் இராணுவப் படையினரும் மக்களிடம் எழுத்தறிவை வளர்ப்பதில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனால், இப்பொழுது இராணுவப்படையினர் தவிர்க்கப்பட்டு, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மட்டும் மக்களிடம் எழுத்தறிவை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இப்பணியில் ஈடுபட்டுள்ள மாணவர் குழு 'எழுத்தறிவுக் குழு' (Literacy Corps) எனப்படுகிறது. இக்குழுவில் உள்ள மாணவர்கள் கிராமப்புறக் குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்கின்றனர். இத்தகைய முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் ஈரானில் தொடக்கப் பள்ளிக் கல்வி இன்னும் முழுமையாக வெற்றியடையாத நிலையில் உள்ளது. ஈரானில் ஆசிரியர்களுக்கு ஊதியம் மிகக் குறைவு. ஆகையால், இங்கு ஆசிரியர் வேலைக்குப் பலர் முன் வருவதில்லை.

ஈரானின் முதல் பல்கலைக் கழகம் இந்நாட்டின் தலைநகரான தெகரானில் (Tehran) 1934-இல் தொடங்கப்பட்டது. கலையியல், கல்வியியல், வேளாண்மை, கவின்கலை, அறிவியல், தொழில் நுட்பவியல், மருத்துவம், சட்டம், கால்நடை மருத்துவம், பல்மருத்துவம் போன்றவை இங்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஈரானில் வேறு சில நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் இப்பொழுது தோன்றியுள்ளன. இப்பல்கலைக்கழகங்களுக்குப் பணியாற்ற வரும் பேராசிரியர்கள் பொதுவாக அமெரிக்கா, ஐரோப்பியா ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றவர்களாகவே உள்ளனர்.

**ஈரானிய அரசியல்**: வடக்கில் சோவியத்து ஒன்றியம், காசுபியன் கடல் ஆகியவற்றையும் மேற்கில் துருக்கி, ஈராக்கு ஆகியவற்றையும் தெற்கில் பாரசீக, ஓமான் வளைகுடாக்களையும் கிழக்கில் பாகிசுத்தானையும் ஆப்கானிசுத்தானையும் எல்லையாகக் கொண்ட நாடு ஈரான். பாரசீக வளைகுடாவிலுள்ள சில தீவுகளும் இந்நாட்டிற்குச் சொந்தமானவையே.

பாரசீகம் (Persia) என்று அழைக்கப்பட்டு வந்த ஈரான் மிகச் சிறந்த வரலாற்றைக் கொண்டது. பண்டைய பேரரசுகள் பலவற்றின் இருக்கையாகத் திகழ்ந்த பெருமை பாரசீகத்திற்கு உண்டு. இப்பேரரசுகளின் எல்லைகள் இப்பொழுது உள்ளவற்றிற்கு மேற்பட்டிருந்தன.

அரசர்கள் 30-12-1096 வரைதம் விருப்பத்திற்கேற்பப் பாரசீகத்தை ஆண்டு வந்தனர். 1906-ஆம் ஆண்டின் இறுதியில்தான் இந்நாட்டிற்கு முதன்முறையாக அரசியலமைப்பு அளிக்கப்பட்டது. ஓர் இராணுவப் புரட்சியின் விளைவாக 31-10-1925-இல் காசர் (Qajar) பரம்பரையின் கடைசி மன்னர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, இரீசா கான் (Reza Khan) என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார். பின்னர் 12-12-1925-இல் பகலவி (Pahlavi) பரம்பரையின் முதல் அரசராக இரீசா கான் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாரசீகம் என்ற பெயர் ஈரான் என 31-3-1935-இல் மாற்றப்பட்டது. இரீசாகான் பகலவி தம் மகன் முகம்மது இரீசா பகலவி (Mohammed Reza Pahlavi) பதவிக்கு வருவதற்காக 16-9-1941-இல் முடி துறந்தார். நாடு தழுவிய கொந்தளிப்பின் விளைவாகப் பகலவி பரம்பரையின் இரண்டாம் மன்னரான முகம்மது இரீசா பகலவி 17-1-1979-இல் தம் குடும்பத்தினருடன் ஈரானை விட்டு வெளியேறினார். மன்னராட்சி முற்றுப் பெற்றது. எகிப்தில் தற்காலிகமாகக் குடியேறிய முகம்மது இரீசா பகலவி 27-7-1980-இல் இறந்தார்.

முகம்மது இரீசா பகலவி மன்னரின் ஆட்சி முற்றுப் பெற்றதற்குக் காரணமான புரட்சியைத் தொடங்கியவர் அயதுல்லா உருகொல்லா கொமெய்னி (Ayatullah Ruhollah Khomeini) என்ற இசுலாமிய மதத் தலைவர். இவர் 15 ஆண்டுகள் பிரான்சில் வாழ்ந்துவிட்டு, 1-2-1972-இல் தாயகம் திரும்பினார்; 5-2-1979-இல் தற்காலிக அரசாங்கத்தை நியமித்தார். ஈரான் ஓர் இசுலாமியக் குடியரசு என்பது 1-4-1979-இல் அறிவிக்கப்பட்டது.

ஈரானில் 1979-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் நடந்த பொதுவிருப்ப வாக்கெடுப்பில் இசுலாமியக் குடியரசின் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூக, அரசியல், பொருளாதார உறவுகளுக்கு அடிப்படையாக இசுலாமிய மதப்பண்புகள் அமையும் என்று புதிய அரசியலமைப்புக் கூறுகின்றது. வெலாயத் பக்கி (Velayat Faqih) அல்லது வாலி பக்கி (Wali Faqih) என்று அழைக்கப்படும் மதத் தலைவருக்கு நாட்டின் உச்ச அதிகாரத்தை அரசியலமைப்பு வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இவர் மேற்பார்வை செய்கின்றார். அயத்துல்லா கொமெய்னி உயிருடன் இருக்கும் வரையிலும் இப்பதவியை அவர் வகிப்பார். அவரது மறைவிற்குப் பின் அப்பதவி வகிக்க வேண்டியவரை இசுலாமிய மத குருக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

ஈரானின் ஆட்சித்துறைத் தலைவராக இருப்பவர் குடியரசுத் தலைவர். நாட்டின் தலைவரும் இவரே.

நான்கு ஆண்டுகள் பதவிக்காலம் உடைய இவரைப் பொதுமக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். தலைமை அமைச்சரை நியமிப்பவர் குடியரசுத் தலைவர். ஆனால், இந்த நியமனம் தேசிய பாராளு மன்றத்தால் உறுதிசெய்யப்பட வேண்டும். தலைமை அமைச்சரின் அமைச்சர் குழுவை ஆமோதிப்பதும் தேசிய பாராளு மன்றமே.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் மச்லிசு (Majlis) என்று சொல்லப்படும் ஓர் அவையைக் கொண்ட இசுலாமிய அவையிடம் (Islamic Consultative Assembly) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அவையின் 270 உறுப்பினர்களும் நான்கு ஆண்டு பதவிக்காலத்திற்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நம்பிக்கை இல்லாத்தீர்மானம் மூலம் குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் இந்த அவைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இயற்றப்படும் சட்டங்கள் யாவும் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாவலர் குழுவால்(Council of Guardians) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அரசியலமைப்புப் பாதுகாப்புக் குழு (Council for the Protection of the Consitution)என்றும் இக்குழுவைக் கூறலாம். இசுலாமிய விதிகளுக்கேற்பவும், அரசியலமைப்பிற்கு உட்பட்டும் சட்டங்கள் இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்வதே இந்தக் குழுவின் பணி. இந்தக் குழுவின்உறுப்பினர்களில் ஆறு பேரை வாலி பக்கியும், ஆறு பேரை நீதித் துறையும் நியமனம் செய்கின்றனர்.

உச்ச நீதிமன்றம்தான் நாட்டின் முதன்மையான நீதிமன்றம். இதன் தலைவரை விலாயத் பக்கி நியமனம் செய்கின்றார். இது தவிர 1979-ஆம் ஆண்டு இசுலாமிய புரட்சி நீதிமன்றங்கள் நாடெங்கிலும் நிறுவப்பட்டன.

ஈரான் 21 மாநிலங்களாகவும் (Provinces) இரண்டு ஆளுநர் தலைவர் பகுதிகளாகவும் (Governor-Generalships) பகுக்கப்பட்டுள்ளது. இவை 172 கோட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் ஆளுநர் தலைவராக உள்ளார். இதற்கு அடுத்தபடியாக 499 மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைவராக இருப்பவர் அக்சார் (Hakhshar) என்னும் அதிகாரி. ஒவ்வொரு மாவட்டமும் சில கிராமங்கள் கொண்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்தின் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவ்வாறு ஈரான் பகுக்கப்பட்ட போதிலும், 1979-இல் பதவியேற்ற அரசாங்கங்கள் நாடு முழுவதையும் மையக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றன.

நாட்டின் அரசியலமைப்பிற்கு உட்பட்டுச் செயற்படும் வகையில் அரசியல் கட்சிகள் ஈரானில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இசுலாமியக் குடியரசுக் கட்சி (Islamic Republican Party) 1980-இல் தேசிய பாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டிருந்தது. ஈரான் விடுதலை இயக்கம் (Iran Liberation Movement), முசுலிம் மக்கள் குடியரசுக் கட்சி (Muslim People's Republican Party), தேசிய மக்களாட்சி முன்னணி(National Democratic Front), தேசிய முன்னணி (National Front), தியுடே (பொதுவுடைமைக்) கட்சி (Communist Party)ஆகியவை ஈரானில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகள். ஆ.ஜா.

துணை நூல்கள்:

**Sykes, Sir Percy**, A History of Perisia, 1969.

**Auory, Peter, W**., Modern Iran, 1965.

ஈரி ஏரி கனடா நாட்டிலுள்ள பெரும் ஏரிகளுள் ஒன்று. இதன் பரப்பு 25,745 ச.கி.மீ. இதன் வடக்கில் கனடா நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான ஆண்டாரியோவும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான பென்சில்வேனியாவும், கிழக்கில் நியூயார்க்கு மாநிலமும், மேற்கில் மிச்சிகன் மாநிலமும் எல்லைகளாய் அமைந்துள்ளன. ஈரி ஏரி (Erie Lake) கடல் மட்டத்தைவிட 174.5 மீ. உயரத்தில் உள்ளது. கடல் மட்டத்தைவிட உயர்ந்த நிலையையுடைய ஏரிகளுள் இது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இதன் மிகுந்த அளவு ஆழம் 64மீ. வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள பெரும் ஏரிகளின் ஒரு பகுதியாக ஈரி ஏரி அமைந்துள்ளது. ஈரி ஏரியையும் ஊரன் ஏரியையும் (Huron Lake) தெட்ராய்டு ஆறு (Detroit River) இணைக்கிறது. நியூயார்க்கு மாநிலப் படகுக் கால்வாய் (Barge Canal) இந்த ஏரியை அட்சன் ஆற்றுடன் இணைக்கிறது.

குளிர் காலத்தில் ஈரி ஏரியின் ஒரு பகுதி பனியால் உறைந்துவிடும். அதனால், திசம்பர் மாதம் முதல் மார்ச்சு மாத இறுதிவரை இது படகு அல்லது கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படாது. ஏரிக்கரைகளில் அமைந்த நகரங்களின் கழிவு நீரும் தொழிற்சாலைக் கழிவு நீரும் இந்த ஏரியில் கலப்பதால் நீரின் தூய்மை கெட்டுவிட்டது. இதைத் தவிர்க்க அமெரிக்காவும் கனடாவும் 1972-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளன.

இந்த ஏரியை முதன் முதலாகக் கண்டவர் பிரான்சு நாட்டைச் சார்ந்த ஆய்வுப் பயணியான இலூயி சோலியத்து (Louis Jolliet) ஆவார். இவர் இதைக் கி.பி. 1669-இல் கண்டுபிடித்தார். தொடக்கத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும், பின்னர் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இதை உரிமைப்படுத்திக் கொள்ளப் போரிட்டுக் கொண்டார்கள். ஈரி ஏரிப் போர் (1813) அமெரிக்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நடைபெற்றது. இதில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர்.

**ஈரோடு மாவட்டம்**: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

**ஈலம்**: தென்மேற்கு ஈரானில் குசிசுத்தான் (Khuzistan), இலூரிசுதான் (Luristan) பகுதியே முன்பு ஈலம் (Elam) என்று குறிப்பிடப்பட்டது. இங்குத் தொன்மையான நாகரிகம் இருந்ததற்கான தடயங்கள் தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சமவெளிகளும் மலைகளும் நிறைந்தது. கார்கேக்கு (Karkheh), கரூன் (Karun) ஆகிய ஆறுகளினால் இப்பகுதி வளம் நிறைந்து காணப்படுகிறது. இப்பகுதி மேட்டுப்பாங்கான நிலத்தைக் கொண்டிருந்ததால் இதனை யூதர்கள் ஈலம் எனப் பெயரிட்டனர்.

இங்கு வாழ்ந்த மக்கள் ஈலமியர்கள் (Elamites) எனப்பட்டனர். ஈலமியர்கள் இப்பகுதியை ஆல்ட்டாம்டி (Haltamti) எனக் கூறினர். ஆல்ட்டாம்டி என்பதற்கு இறைநிலம் (Lord's land) என்று பொருள். ஈலமியர்கள் முதன்முதலில் ஈரானியப் பீடபூமி பகுதியில் வசித்து வந்தனர்; பின்னர்த் தாழ்நிலப் பகுதிகளிலும் வசிக்கத் தலைப்பட்டனர். அவர்கள் இப்பகுதியிலிருந்து குதிரைகள், மரப்பொருள்கள், மணிக்கல் வகைகள், உலோகப் பொருள்கள் போன்றவற்றை அக்காடு (Akkad), சுமர் (Sumer) பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

வரலாறு: தொல்லியல் அறிஞர்கள் இப்பகுதியில் அகழாய்வுகள் செய்து இங்கிருந்த நாகரிகம் கி.மு. 4500-ஆம் ஆண்டைச் சார்ந்தது என்றும், எகிப்து, சுமேரியா, சிந்து நாகரிகங்களின் காலத்தை ஒத்தது என்றும் கூறினர். மேலும், இங்குப் புதிய கற்காலக் கருவிகளும் அக்காலத்தைச் சார்ந்த மட்பாண்டங்களும் கிடைத்ததிலிருந்து புதிய கற்கால மனிதன் வாழ்ந்ததற்கான அறிகுறி தெரியவந்துள்ளது. ஈலமிய மக்கள் முதலில் நாடோடிகளாக நிலையற்ற வாழ்க்கையைக் கொண்டிருந்தனர். பின்னர்ப் படிப்படியாக நிலையான இடத்தில் வாழத் தலைப்பட்டனர். ஈலமியர்கள் விலங்குகளை வளர்த்தும் பருவ காலங்களில் வேளாண்மை செய்தும் வந்தனர். செம்பின் பயனை இவர்கள் அறிந்திருந்தனர். தந்தம், சங்கு, செம்பு போன்ற பொருள்களிலிருந்து அணிகலன்கள் செய்தனர்.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஈலமியர்களுக்கும் சுமேரியர்களுக்கும் இடையே பகைமை ஏற்பட்டது. இதில் ஈலமியர்கள் வெற்றி பெற்றனர். அக்காடு மன்னன் சார்கன் (Sarcon of Akkad) கல்வெட்டுகள் ஈலத்தையும் சுமேரியாவையும் சார்கன் வென்றதாகக் கூறுகின்றன. அரசர்கள் கூட்டாட்சி முறையில் (Federation of Rulers) ஈலத்தை ஆண்டார்கள். ஈலமியர்கள் சித்திர வடிவ எழுத்துமுறையை அறிந்திருந்தனர். இந்த ஆதி-ஈலமிய எழுத்து (Proto-Elimite) வகை இன்றளவும் புரிந்து கொள்ள இயலாததாகவே உள்ளது. ஈலத்தை அக்காடியர்கள் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தபொழுது ஆப்பு எழுத்துகள் புழக்கத்தில் வந்தன.

ஈலத்தின் தாழ்நிலப் பகுதி பன்னெடுங்காலமாகச் சுமேரியர்களின் வசம் இருந்தது. ஈலமியர்கள் சுமேரியர்களுக்குச் சொந்தமான சில பகுதிகளையும் குறிப்பாக 'ஊர்' (Ur) நகரையும் தங்களின் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தனர். ஈலத்தையும் மெசபடோமியாவையும் வடக்கத்திய இனத்தவரான காசைட்டுகளும் (Kassites) உரியன்சுகளும் (Hurrians) கி.மு. 2000 ஆண்டளவில் கைப்பற்றினர். ஆக்கிரமிப்புக் கொள்கை கொண்ட ஈலமிய அரசர்கள் கி.மு. 1300-இல் கீழை மெசபடோமியாவைத் தங்கள் ஆளுகைக்குக் கொண்டு வர அசிரியாவுடன் போரிட்டனர். இக்காலத்தில்தான் ஈலத்தில் கலைகளும் கைத்தொழில்களும் பெருமளவில் வளர்ச்சியடைந்தன. நகரங்களில் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றில் சூசா (Susa), சிகுராத்து (Zigurats), சோகா-சான்பில் (Choga-Zanbil) நகரங்களில் கட்டப்பட்ட கட்டடங்கள் சிறப்புமிக்கவை. நெபுகாத்நேசர் ஈலத்தை கி.மு. 1200-இல் போரிட்டுச் சூறையாடினார். சூசா நகரம் கொள்ளையடிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக ஈலத்தை ஆண்ட ஈல மரபினர் ஆட்சி முடிவுற்றது. இதன் பின்னர் ஈலத்தின் வரலாறு ஏறக்குறைய 300 ஆண்டுகள் வரை தெளிவாக அறியப்படவில்லை. இதனை ஈலத்தின் இருண்டகாலம் என்பர்.

புதிய ஈலமிய அரசு கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் ஏற்பட்டது. இவ்வரசு அசிரிய அரசர் சார்கானுடனும் அவன் வழி வந்தவர்களுடனும் போரிட்டது. புதிய ஈலமிய அரசு பாபிலோனியாவுடன் கூட்டுச் சேர்ந்து அசிரிய அரசர் சென்னாசெரிபை எதிர்த்தது. ஆனால், சென்னா

செரிபு பாபிலோனியாவைக் கைப்பற்றினார். அவர் கி.மு. 693-இல் ஈலத்தையும் அதன் தாழ்நிலப்பகுதி களையும் கைப்பற்றினார். ஈலம் பாரசீகத்துடன் கூட்டுச் சேர்ந்து போரைத் தொடர்ந்தது. தோல்வி யைத் தழுவும் நிலையில் அசிரியாவுடன் உடன் படிக்கை செய்துகொள்ள ஈலம் விழைந்தது. ஆனால், போர் நடவடிக்கைகள் நிற்கவில்லை. இதனால், அசிரியர்கள் கி.மு. 653-இல் பெருவெற்றி பெற்றனர். புதிய ஈலமிய அரசின் ஆட்சியும் கி.மு. 647-இல் முடி விற்குக் கொண்டுவரப்பட்டது. அகமீனியப் பேரரசின் ஒரு பகுதியாக ஈலம் ஆனது. மகா அலெக்சாந்தருக் குப்பின் ஈலம் எலிமயிசு (Elymais) என்னும் சிறு பகுதியாக இருந்தது. இப்பகுதி சூசாவிலிருந்து இலூரிசுதான் மலைப்பகுதி வரை பரவியிருந்தது. சசானியர்கள் இப்பகுதியை கி.பி. 3-ஆம் நூற்றாண் டில் அழித்தனர். அப்பொழுது இப்பகுதியில் குசி (Khuzi) என்னும் மக்கள் வாழ்ந்தனர் எனச் சில குறிப்புகள் கூறுகின்றன. இவர்களே இப்பகுதிக்கு குசிசுத்தான் எனப் பெயரிட்டனர்.

ஈலமிய மக்கள் சூசாவின் முதற்கடவுளான இன் சுசினாக்கையும் (Inshushinak) ஊபன் (Huban), கிரி ரிசா (Kririsha) என்னும் பெண்கடவுள்களையும் வழி பட்டனர், இவர்கள் வண்ணந் தீட்டப்பட்ட மட் பாண்டங்களைப் பயன்படுத்தினர். இம்மக்களின் பழக்கவழக்கங்களை இப்பகுதியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட பொருள்களிலிருந்து நன்கறியலாம். அகமீனியர்களின் பழக்கவழக்கங்களை இவர்களும் பின்பற்றினர்.

**ஈவாட்டு, எர்பர்ட்டு வீர்** (கி.பி.1894-1965) என்பார் ஆசுதிரேலியாவின் வெளியுறவு அமைச்ச ராகப் (1941-1949) பணியாற்றியவர். ஈவாட்டு (Herbert Vere Evatt) தென் ஆசுதிரேலியாவிலுள்ள கிழக்கு மெயிட்லாந்தில் (Maitland) கி.பி.1894-இல் பிறந்தார். இவர் தம் இளமைப் பருவத்தில் நியூ சௌத் வேல்சில் வாழ்ந்தார். சிட்னிப் (Sydney) பல் கலைக்கழகம் இவருக்கு ஆய்வறிஞர் பட்டம் அளித் தது.

ஈவாட்டு வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கி, தொழிற்சங்க விவகாரங்களில் அக்கறை காட்டினார். இவர் உயர்நீதி மன்ற நீதிபதியாகவும் (1930-1940) கான்பெர்ரா (Conberra) நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1940) பணியாற்றினார். சான் கர்ட்டின் (John Curtin) என்பார் அமைத்த தொழிற் கட்சி அரசில் ஈவாட்டு வெளியுறவு அமைச்சராக 1941, அக்டோபரில் பொறுப்பேற்றார்.

இவர் பன்னாட்டு அரசியலில் வல்லுநராகத் திகழ்ந்தார். பிரிட்டனில் அடுத்தடுத்து (1942-43) நடைபெற்ற மாநாடுகளில் ஆசுதிரேலியாவின் பேராளராகக் கலந்து கொண்டதும், சான்பிரான் சிசுகோ (San Francisco) மாநாட்டில் (1945) சிறு நாடுகளின் தலைவராகப் பணியாற்றியதும் இவர் தம் சீரிய அரசியல் அறிவுக்குச் சான்றுகள் ஆகும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை உருவாக்கியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. ஐ.நா.பட்டயத்திற்கு (UN Charter) இவர் 26 திருத்தங்களை விளக்கி வெற்றி பெற் றார். இவர் தம் அயராத உழைப்பினால் பாது காப்பு அவையில் நிலையான உறுப்பினர்களின் கொட்டத்தை அடக்கினார்.

சிப்லி (Chifley) என்பாரின் தலைமையின்கீழ் ஈவாட்டு வெளியுறவு அமைச்சராக இருந்தபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஆசுதிரேலியாவின் உறவு வலுப்பெற்றது. மென்சீசு (Menzies) என்பார் 1949, திசம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றமையால் ஈவாட்டு எதிர்கட்சியில் அமர்ந்து, ஒன்பது ஆண்டுகள் (1951-1960) ஆசுதிரேலியாவின் தொழிற்கட்சித்தலைவராகப் பணியாற்றினார். இவர் 1960-இல் அரசியலிலிருந்து விலகிய பின்னர், நியூ சௌத் வேல்சு உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதி பதியாக ஈராண்டுகள் பதவி வகித்து, 1965-இல் கால மானார்.

ஈழக்காசு பற்றிய முதல் குறிப்பு முதலாம் பராந்தக சோழனின் 33-ஆம் ஆட்சியாண்டுக் கல் வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. முதன் முதலாக இராச இராசன் காலத்தில்தான் காசு மனித உரு வம் பொறிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. வர லாற்று அறிஞர்கள் இதனையே ஈழக்காசு என வும் ஈழமனிதன் காசு எனவும் குறித்தனர். இத்த கைய காசுகள் இராசராசனுக்குப் பின்பும் முதலாம் குலோத்துங்கன் காலம்வரையில் வெளியிடப்பட் டன.

ஈழக்காசு என்பது சோழர்களால் ஈழத்தில் அறி முகப்படுத்தப்பட்டது என்றும், பின்னர் ஈழ அரசர் களால் பின்பற்றப் பட்டது என்றும் கூறுவர். திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள கொற்கையில் பாண்டியர் களால் இவ்வகைக் காசுகள் முதன் முதலில் வெளி யிடப்பட்டன என்றும், பின்னர்ச் சோழர்களாலும் அதன் பின்னர் ஈழத்துக் கண்டி அரசர்களாலும் வெளியிடப்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஈழக்காசுகளின் ஒருபுறத்தில் தெளிவற்ற மனித உருவம் நிற்கும் நிலையிலும், மறுபுறத்தில் அதே

மனிதன் அமர்ந்த நிலையிலும் பொறிக்கப்பட்டிருக்கும். அமர்ந்துள்ள மனித உருவத்தின் இடப்புறத்தில் நாகரி எழுத்துகளில் அரசன் பெயர் இடம் பெற்றிருக்கும். மேலும், சில காசுகளில் பின்புறம் உள்ள அமர்ந்த நிலையிலுள்ள மனித உருவத்திற்கு மாறாக, அமர்ந்த நிலையிலுள்ள காளையோ நிற்கும் பன்றியோ நிற்கும் யானையோ இடம்பெற்றிருக்கும். காளை இடம் பெற்றுள்ள காசுகள் முதலாம் குலோத்துங்கனாலும் அவனுக்குப் பின்வந்தவர்களாலும் வேங்கி நாட்டிலும் தமிழகத்தின் சோழ நாட்டுப் பகுதிகளிலும் புழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழைச் சாளுக்கியப் பகுதிகளை வென்றதைக் குறிக்கும் வகையில் பன்றியும் கேரளப் பகுதிகளை வென்றதைக் குறிக்கும் வகையில் யானையும் இடம் பெற்றன. இக்காசுகள் அவ்வப் பகுதிகளில் மட்டும் புழக்கத்தில் இருந்தன.

ஈழம் என்னும் சொல்லுக்குப் பொன் என்பது பொருள். பொற்காசுக்கு மாறாகக் கலப்படமான வெள்ளியால் செய்யப்பட்ட காசுகள் கருங்காசு, ஈழக் கருங்காசு எனப் பெயர்பெற்றன. ஆனால், சோழர்களால் வெளியிடப்பட்டுத் தமிழகத்திலும் ஈழத்திலும் வழக்கில் இருந்த காசுகளாக இப்போது கிடைப்பவை பெரும்பான்மையும் செப்புக் காசுகளே. சொ.சா.

துணை நூல்:

**Vidya Prakash**, Coinage of South India, The Numismatic Society of India, 1968.

**ஈழத் தமிழ் இலக்கியம்**: தமிழகத்தை உள்ளிட்ட இந்தியாவிற்கு வெளியே தமிழர்கள் கணிசமாக வாழும் நாடுகளுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மொரீசியசு, பிசித் (Fiji) தீவுகள் ஆகியன முக்கியமானவை. இங்கு வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு காலத்தில் தாயகமாக விளங்கியது தமிழ்நாடு. பல்வேறு காரணங்களாலும் சூழல்களாலும் இந்நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இவர்கள் அரசியல் பிரிவுகளால் வேற்று நாட்டினராயினும் மொழியால் தமிழர்கள். இந்நாடுகளுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்ஆகியவை தமக்கெனத் தனித்தன்மை வாய்ந்த தமிழ் இலக்கியங்களையும் கொண்டுள்ளன.

இவற்றுள் தமிழகத்தை அடுத்து மிக நீண்ட இலக்கிய வரலாற்றையுடையது ஈழத் தமிழிலக்கியம். இலங்கை, ஈழம் என இத்தீவு இரு பெயர்களைக் கொண்டிருந்தாலும், பழந்தமிழ் இலக்கிய மரபில் ஈழம் என்பதே பெருவழக்காய்க் காணப்படுகிறது. அதிலும் தமிழிலக்கிய வளர்ச்சியோடு தொடர்புப் படுத்திப் பேசும்போது ஈழம் என்ற சொல்லே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இடையில் பெருவழக்கில் இல்லாதிருந்த இச்சொல் மீண்டும் இந்நூற்றாண்டின் ஐம்பதுகளில் பெருவழக்கிற்கு வந்துவிட்டது. இக்காலகட்ட இலக்கியப் போக்குகளுக்குக் காரணமான முற்போக்கு இலக்கிய இயக்கமே இதனைச் செய்தது.

ஈழத்தின் தமிழ் இலக்கியப் பழமைக்கு முதற்காரணம் கிறித்துப் பிறப்பதற்கு முன்னரே தமிழர்கள் இத்தீவிற்குப் புலம் பெயர்ந்துவிட்டதாகும். அதனைத் தங்கள் தாய்நாடாக்கிக் கொண்டவுடன், தங்களுக்கெனப் பல துறைகளிலும் தனித் தன்மைகளை அவர்கள் வளர்த்துக்கொண்டு விட்டனர். இன்று மொழி, உணவு, உடை, பழக்கவழக்கம், பண்பாடு, சமூக அமைப்பு முதலிய அனைத்திலும் தனித் தன்மைகள் பல கொண்ட சமுதாயமாக ஈழத்துத் தமிழ்ச் சமுதாயம் விளங்குகிறது. மற்ற நாடுகளில் வாழ்கிற தமிழ்மக்கள் சென்ற நூற்றாண்டில் இந்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் வழித்தோன்றல்கள்.

இன்று ஈழத்தில் வாழும் தமிழ் மக்களில் முப்பிரிவினர் உள்ளனர். 1) இலங்கைத் தமிழர்– வரலாற்றுக் காலம் முதல் இங்கு வாழ்ந்து வரும் இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெருமளவு உள்ளனர். 2) இவர்களைப் போலவே நீண்ட காலம் வாழ்ந்துவரும் இசுலாமியத் தமிழர்கள். (3) சென்ற நூற்றாண்டில் இலங்கையின் தேயிலை, இரப்பர்த் தோட்டங்களில் உழைக்கச் சென்ற தமிழ்த் தொழிலாளர்களின் வழித்தோன்றல்கள். இந்தியத் தமிழர் என அழைக்கப்பட்ட இவர்கள், சென்ற முப்பது ஆண்டுகளாக ஈழத்துத் தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 'மலையகத் தமிழர்' என அழைக்கப்படுகின்றனர். 1975 புள்ளிவிவரக் கணக்கின்படி ஈழத்தின் 13,700,000 மக்கள் தொகையில் தமிழர் எண்ணிக்கை இருபத்தேழு விழுக்காடாகும். இதில் இலங்கைத் தமிழர் 11.2 விழுக்காட்டினர். இசுலாமியத் தமிழர்கள் 6.5 விழுக்காட்டினர். மலையகத் தமிழர் 9.3 விழுக்காட்டினர். இம்மூன்று பிரிவினராலும் படைக்கப்படும் இலக்கியங்களே ஈழத் தமிழ் இலக்கியம் என்ற பொதுப்பெயரைப் பெறுகின்றன.

ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பு: ஈழத்தின் தமிழ் இலக்கியத் தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது, இது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றை உடையதாகத் தெரிகிறது. தமிழ் இலக்கி

யங்களிலும் ஈழத்தைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு வருகின்றன. 'ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' என்பது பட்டினப்பாலை. செங்குட்டுவன் எடுத்த கண்ணகி விழாவில், 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' (கி.பி. 116–136) கலந்து கொண்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பக்திஇலக்கிய காலத்தைச் சேர்ந்த ஞானசம்பந்தரும் சுந்தரரும் ஈழத்தின் திருக்கோணமலை, திருக்கேதீசுவரம் ஆகிய தலங்களைப் பாடியுள்ளனர். இத்தகைய குறிப்புகள் பல ஈழத் தமிழிலக்கியத்தின் பழமையைவற்புறுத்தும் முறையிலேயே அமைந்தள்ளன.

இன்று கிடைக்கிற சான்றுகளின் அடிப்படையில் ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பினை ஐந்து காலகட்டங்களில் வகைப்படுத்த முடியும். அவை:

1. ஈழத் தமிழிலக்கியத்தின் தொடக்ககாலம்.
2. ஆரியப் பேரரசர்கள் காலம் (கி.பி. 1240–1619).
3. போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் காலம் (கி.பி. 1505–1796).
4. ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796–1948).
5. சுதந்திர ஆட்சிக் காலம் (கி.பி. 1948-).

இவ்வைந்தையும் ஐரோப்பியர் வருகைக்கு முன், பின் என இரு காலகட்டங்களாகச் சுருக்கலாம். இரண்டிற்கும் இடையில் தெளிவாகத் தெரியக்கூடிய பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தொடக்க காலம்: ஈழத் தமிழ் இலக்கியத்தின் தோற்றம் குறித்து இலக்கிய வரலாற்று ஆசிரியர்களிடையே வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. இவற்றை ஒருசேரத் தொகுத்துப் பார்க்கும் போது மூவகைக் கருத்துகள் தெளிவாகப் புலப்படுகின்றன.

இவற்றுள் முதலாம் கருத்து, சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முதல்வராகக் கொள்கிறது. இவர் பாடியனவாக அகநானூற்றில் மூன்று பாடல்களும் குறுந்தொகையில் மூன்று பாடல்களும் நற்றிணையில் ஒரு பாடலும் காணப்படுகின்றன. இப்பாடல்களை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தோற்றுவாயாகக் கொள்ளுதல் ஈழத்துத் தமிழ் அறிஞர்களிடையே ஒரு மரபாகவே காணப்படுகிறது.

> 'திருவளர் மதுரைத் தென்தமிழ்ச் சங்கம்
> புலவருள் ஒருவராய்ப் புவியிசை நாட்டிய
> பூதந்தேவனார் முதலிய சான்றோர்
> தோன்றுதற் கிடமால் ...... '

என்று ஈழத்துத் தமிழ் அறிஞர்களுள் ஒருவரான மகாவித்துவான் கணேசையர் (கி.பி.1878–1958) குறிப்பிடுகிறார். இவர் அல்லாமல் முரஞ்சியூர் முடிநாகராயரையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவராகத் தம் 'ஈழமண்டலப் புலவர் சரித்திரம்' என்னும் நூலில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுகிறார். எனினும், இதற்குச் சான்றுகள் எவையும் இல்லை.

ஈழத்துப் பூதந்தேவனாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படும் குழப்பம், இந்நூற்றாண்டின் அடுத்த இருகருத்துகளின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. இக்குழப்பங்கள் 1) இப்புலவர் தம் பாடல்களில் ஈழத்தைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. 2) பூதந்தேவனார், ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என மூன்று பெயர்கள் சங்க இலக்கியப் புலவர் வரிசையில் காணப்படுகின்றன. இம்மூவரும் ஒருவர்தாமா என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. 3) ஏறத்துப் பூதந்தேவனார் எனச் சில ஏடுகளில் இப்பெயர் காணப்படுவதாகப் பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் குறிப்பிடுகிறார். 4) ஈழம் என்பது அப்போது இலங்கையைத்தான் குறித்ததா என்னும் கருத்தும் ஆராயப்பட வேண்டியதாகும்.

இவற்றிற்கான தகுந்த விளக்கங்கள் இல்லாததால், அனுராதபுரகால இறுதிப் பகுதியில் காணப்படும் நான்குநாட்டார்கல்வெட்டுப் பாடலை ஈழத்தின் முதல் தமிழ்ப்பாடலாகச் சிலர் கொள்கின்றனர். கி. பி. 833-982ஆண்டுகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு நான்குநாட்டார் என்ற வாணிகக் குழுவினர் புத்த பள்ளி ஒன்றைக் கட்டிய செய்தியைக் கூறுகிறது.

> 'போதி நிழலமர்ந்த புண்ணியன்போல் எவ்வுயிர்க்குந்
> தீதிலருள் சுரக்குஞ் சிந்தையான் – ஆதி
> வருதன் (மங்) குன்றாத மாதவன் மாக்கோதை
> ஒருதன்ம பால னுள(ன்)'

என்பது அப்பாடல். ஈழத்துப் பூதந்தேவனாரைப் பற்றித் தெளிவு ஏற்படும் வரையில், இப்பாடலையே ஈழத்துத் தமிழிலக்கிய முதற்பாடலாகக் கொள்ள வேண்டும் என்பது இவர்கள் கூற்று. இது இரண்டாம் கருத்து.

மூன்றாம் கருத்து, இதற்குப் பிறகு ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய ஒரு நூல் பற்றியது. ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றின் இரண்டாம் காலகட்டத்தைச் சேர்ந்த நூல் இது.

ஆரியப் பேரரசர்கள் காலம்: ஆரியப் பேரரசர்கள் கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து

யாழ்ப்பாண நாட்டினை மையப் பகுதியாகக் கொண்டு ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் ஆண்டனர். இக்காலமே ஆரியப் பேரரசர்கள் காலம் எனப்படு கிறது. இவ்வாரியப் பேரரசர்களின் தோற்றம் பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. இவர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிராமணப் படைத்தலைவர்களின் வழித்தோன்றல்களாக இருக்கலாம் என்றொரு கருத்து வரலாற்று ஆசிரியர்களிடையே உள்ளது. எவ்வாறாயினும், இக்கால கட்டத்திலேயே ஈழத்தில் தமிழ் இலக்கிய நூல்கள் முதலில் வெளி வந்தன. இப்பேரரசர்கள் விசய கூளங்கை முதல் கனகசூரிய சிங்கையாரியன் ஈறாகப் பதினொருவர் என 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது.

இக்கால கட்டத்தில் குருநாகல் என்னும் நகரத்திற்கு அருகில் சிங்கள மன்னரின் ஆட்சிக்குட்பட்ட தம்பதேனியாவிலிருந்து ஆட்சி செலுத்திய நான்காம் பராக்கிரமபாகுவின் அவைக்களப் புலவராகிய தேனுவரைப் பெருமாள் எனப்படும் போசராச பண்டிதர் 1310-இல் இயற்றிய 'சரசோதி மாலை' என்ற நூலே இதுவரை கிடைத்துள்ள குறிப்புகளின்படி, ஈழத்தின் முதல் தமிழ் நூலாக அறியப்படுகிறது. ஈழத் தமிழிலக்கியத் தோற்றம் பற்றிய மூன்றாம் கருத்து இதுவே. முன்னவை இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவை பாடல் என்ற அளவிலேயே அமைகின்றன. முழுமையாக அமையும் நூல் இதுவே. இது ஒரு சோதிட நூல்.

இதனையடுத்து, இக்காலகட்டத்தில் தோன்றிய நூல்களைச் சமயத் தொடர்பான நூல்கள், யாழ்ப்பாணத்தரசர்களின் வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள், சோதிடம்-வைத்தியம் தொடர்பான நூல்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பண்டிதராசரின் தக்கிணகைலாச புராணம், கரசைப்புராணம், சகவீரரின் கண்ணகி வழக்குரை ஆகியவை முதல் வகையைச் சேர்ந்தவை. இவற்றுள், பாடல்பெற்ற தலமான திருக்கோணமலையைப் பற்றிய சிறப்புகளைக் கூறும் நூலாகத் தக்கிணகைலாச புராணம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டுக் கதையை அடிப்படையாகக் கொண்ட கண்ணகி வழக்குரையில் ஈழத்துச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. வையாபுரி அய்யரின் வையாபாடல், முத்துராச கவிராயரின் பரராச சேகரன் உலா முதலியவை யாழ்ப்பாணத்தரசர்களின் வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள். சோமசன்மாவின் செகராசஅசகர மாலை என்பது சோதிட நூல். செகராச சேகரம், பன்னிரு வைத்தியர்கள் இயற்றிய பரராசசேகரம் ஆகிய இரண்டும் வைத்திய நூல்கள். மகாகவி காளிதாசனின் இரகு வம்சம் இக்காலத்தில் அரசகேசரியால் மொழி பெயர்க்கப்பட்டது. கதிரைமலைப்பள்ளு என்ற ஒரு பள்ளு இலக்கிய நூலும் இக்காலத்திலேயே எழுதப் பட்டது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இக்காலப் பகுதியிலேயே பல்வேறு துறை நூல்கள் முதன்முதலில் இயற்றப்பட்டன.

போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் காலம்: ஈழ அரசியல் வரலாற்றில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு ஒரு திருப்பு மையமாக அமைகிறது. ஏனெனில், இந்நூற்றாண்டில் தொடங்கும் ஐரோப்பியர் தலையீடு 4-2-1948 -இல் ஈழம் விடுதலை பெறும் வரை, ஏறத்தாழ நாலரை நூற்றாண்டுகள் தொடர்ந்தது. இக்கால கட்டத்தில் போர்ச்சுகீசியர் (கி.பி. 1505-1658), தச்சுக்காரர் என்னும் ஒல்லாந்தர் (கி. பி. 1658-1796), ஆங்கிலேயர் (கி. பி. 1796-1948)என்னும் மூன்று ஐரோப்பிய இனத்தவர் ஈழத்தை ஆண்டுள்ளனர்.

இவர்களுள் போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் ஆகிய இருவரும் ஆண்டகாலம் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள். கிறித்தவ சமயம் இக்காலகட்டத்தில் மிக வேகமாகப் பரவத் தொடங்கியது. மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கத்தோலிக்க சமயம் நிலைபெறப் பிரான்சிசு சேவியர் கடுமையாக உழைத்தார். தச்சுக்காரர்களின் காலத்தில் மறுப்புரையாளர் (Protestant)சமயம் வேகமாகப் பரவத் தொடங்கியது. மதமாற்றத்தை இவ்விரு ஆட்சியாளர்களும் ஊக்குவித்ததுடன் அதற்கெனச் சிறப்புச் சலுகைகளையும் வழங்கினர். போர்ச்சுகீசியர் காலத்தில் மதம் மாறியோர் சில வரிகளிலிருந்து விலக்குப் பெற்று, நீதித் துறையிலும் சலுகைகள் பெற்றனர். சைவர்கள் பொதுவிடங்களில் வணங்குவதுகூட இக்கால கட்டத்தில் தடைசெய்யப்பட்டது. இதனால் ஞானப் பிரகாச முனிவர், தில்லைநாதத் தம்பிரான், வைத்தியநாத முனிவர் முதலிய சைவத் தமிழ்ப் புலவர்கள் இக்கொடுமைகளுக்கு அஞ்சித் தமிழகம் சென்றுவிட்டனர்.

இத்தகைய சூழலில் தோன்றிய இலக்கியங்களைக் கிறித்தவ சமயத்தாக்கத்தினால் பிறந்த இலக்கியங்கள், சைவ சமய இலக்கியங்கள் என இருவகைப் படுத்தலாம்.

கிறித்தவ சமயத்தினர் சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களையும் தங்கள் சமயம் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பள்ளு, குறவஞ்சி, அம்மானை முதலிய சிற்றிலக்கிய வகைகளையேபெரிதும் இயற்றினர். ஞானப்பள்ளு, சந்தியோகுமையூர் அம்மானை, திருச்செல்வர் அம்மானை, மருதப்பக் குறவஞ்சி ஆகியனவும் பேதுருப் புலவர் இயற்றிய அர்ச்சு யாகப்பர் அம்மானை, தொன் பிலிப்பு இயற்றிய

ஞானானந்த புராணம், பூலோகசிங்க முதலியார் இயற்றிய திருச்செல்வர் காவியம் ஆகிய நூல்களும் இப்போக்கில் வெளிவந்தவை.

இவற்றிற்கு எதிராக வெளிவந்த சைவசமய இலக்கியங்களுள் தலபிரபந்தங்கள், விரத மகிமை-கிரியை பற்றிய நூல்கள், வடமொழி இலக்கியங் களின் தழுவலாகவோ மொழிபெயர்ப்பாகவோ அமைந்த நூல்கள் ஆகியவை அடங்கும். சின்னத் தம்பிப் புலவரின் பறாளை விநாயகர் பள்ளு, கல் வளையமகவந்தாதி, கூழங்கைத் தம்பிரானின் நல் லைக் கலிவெண்பா, வீரக்கோன் முதலியாரின் வெருகல், சித்திர வேலாயுதர் காதல் முதலியவை தலபிரபந்தங்கள். வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியவை விரத மகிமையையும் கிரியைகளையும் விளக்கும் நூல்கள். இராமலிங்க முனிவரின் சந்தான தீபிகை வடமொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூல். தண்டிகைக் கனகராயன் பள்ளு, கரவை வேலன் கோவை ஆகியவையும் இக்காலகட்ட இலக்கியப் போக்கினை உணரத் துணைசெய்யும்.

கவிதையாகவே இருந்த இலக்கிய வாயில் இக் காலகட்டத்தில் உரைநடைக்கும் பரவியிருந்ததை மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. அடுத்த கால கட்டத்தில் உரைநடை பெறப்போகும் செல்வாக்கின் முன்னறிகுறி இது எனலாம்.

**ஆங்கிலேயர் காலம்:** ஈழத்தமிழ் இலக்கியம் மிக வேகமான வளர்ச்சியையும் மாற்றங்களையும் அடைந்தகாலம் ஆங்கிலேயர் காலம். ஈழத்தில் கி.பி. 1831-இல் ஏற்பட்ட முதலாம் அரசியல் சீர்திருத்தம் சொந்தநாட்டினர் (சுதேசிகள்) அரசியலில் பங்குபெற வழி வகுத்தது. இதனால், ஆங்கிலக் கல்வி மிக வேக மாகப் பரவியது. ஆங்கிலம் கற்று அரசாங்கப் பணி யில் ஈடுபட்ட ஒரு புதிய மத்தியதர இனம் உருவா கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கும் வகையில் அஞ்சல்துறை, புகைவண்டிப் பாதைகள் ஆகியவையும் அமைந்தன. மக்கள் வாழ்க்கைப் போக்கில் இவை பெரும்மாற்றங்களை ஏற்படுத்தின.

அச்சகங்களின் பெருக்கத்தால் நூல்களும் பத்திரி கைகளும் பெருகின. மதமாற்றம் இக்காலத்திலும் தொடர்ந்ததால் சமய உள்ளடக்கமே பத்திரிகை களிலும் காணப்படுகிறது. ஈழத்தின் முதல் பத்திரிகை யாக கி.பி.1841-இல் வெளிவந்த 'உதயதாரகை' கிறித் தவ சமயம் பரப்பும் நோக்கத்துடனேயே தொடங் கப்பட்டது. கத்தோலிக்கப் பாதுகாவலன், இலங்காபி மானி ஆகியவையும் இந்நோக்கத்துடன் தொடங்கப் பட்டவையே. இலங்கைநேசன், சைவாபிமானி, சைவ உதயபானு,இந்து சாதனம் ஆகியவை சைவம் பரப்ப எழுந்த பத்திரிகைகள்; முசுலிம் நேசன், சைபுல் இசுலாம் ஆகியவை இசுலாமியப் பத்திரிகைகள்.

பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை , கலம்பகம், குறவஞ்சி, மடல், அந்தாதி, இரட்டை மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் போன்ற சிற் றிலக்கிய வகைகளே இக்காலத்தில் மிகுதியாக வெளி வந்துள்ளன. இவற்றை அடுத்துப் பெருமளவில் புராணங்கள் தோன்றியுள்ளன.

அச்சுக்கலையும் பத்திரிகைகளும் இக்கால கட்டத்தில் கவிதையை மிக எளிமையாக்கிவிட்டன; சைவர்களும் கிறித்தவர்களும் இசுலாமியர்களும் பாடிய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் மக்களிடம் கவிதையை மிக வேகமாகப் பரவச் செய்தன. வண்ணார்பண்ணை சி. விநாயகமூர்த்திச் செட்டி யார் பாடிய கதிரை யாத்திரை விளக்கம், அசனா லெப்பைப் புலவர் இயற்றிய நவரத்தினத் திருப் புகழ், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் இயற்றிய சந்தத் திருப்புகழ் ஆகியவை இத்தகைய பாடல்களைக் கொண்ட நூல்களுள் குறிப்பிடத் தக்கவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடை யும் வேகமாக வளரத் தொடங்கியது. கல்வியின் பரவல், பத்திரிகைகள், நடுத்தர இனத்தின் எழுச்சி ஆகியவை இதற்குக் காரணங்கள் எனலாம். இந் நூற்றாண்டின் உடைநடை உருவாக்கத்திற்குப் பெருஞ்சக்தியாக விளங்கியவர் சைவப்பெரியார் ஆறுமுக நாவலர். 'வசனநடை கைவந்த வல்லாளர்' என அவர் போற்றப்படுகிறார்.

சைவசமயத்திற்கும் கிறித்தவ சமயத்திற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கும் ஒருவகையில் இக் காலத்தில் உரைநடை வளரக் காரணமாகியது. இரு தரப்பினரும் எழுதிக் கொண்ட கண்டன நூல்கள் உரைநடையில் இருந்தமையால் உரைநடை வளர்ந் தது. இயேசுமத பரிகாரம், சைவதூடண பரிகாரம், சுப்ரப்போதம், விவிலிய குற்சிதம், சைவமகத்துவ ஆபாச விளக்க மறுப்பு, சைவமகத்துவ பானுபாலம், குடாரம் போல்வன சைவசமயத்தினரின் சில கண்டன நூல்கள். விவிலிய குற்சிதகுடாரம், சைவ மகத்துவதிக்காரம், சைவமகத்துவதிமிரபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்றுப் போல்வன கிறித்தவக் கண்டன நூல்களுக்குச் சில எடுத்துக் காட்டுக்கள். நூற்றுக்கணக்கில் எழுந்த இத்தகைய

கண்டன நூல்கள் உரைநடை பரவவும் வளரவும் உதவின.

இச்சூழ்நிலைகளின் காரணமாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தில் உரை நடைப் புனைகதை முயற்சிகள் அரும்பின. தழுவல்களாகவும் தாமாக இயற்றப்பட்டவையாகவும் இவை அமைந்தன. காவலப்பன் கதை (1856), ஊசோன் பாலந்தை (1881), அசன்பேயுடைய கதை (1885), மோகனாங்கி (1895) ஆகியவை இவ்வகையில் முன்னோடிகளாக அமைந்த சில புனைகதைகள். இவற்றைத் தொடர்ந்து இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்த புதினங்கள் (Novels) புதின இலக்கியத்தை ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியாக்கின.

இக்காலத் தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதை ஈழத்தில் இந்நூற்றாண்டின் முப்பதுகளின் பிற்பகுதியில் அரும்பியது. சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க.தி. சம்பந்தர் ஆகிய மூவரும் இத்துறையின் முன்னோடிகள். 1940-களில் உருவான மறுமலர்ச்சிச் சங்கம் இத்துறை வளரவும் செல்வாக்குப் பெறவும் காரணமாக அமைந்தது. அ. செ. முருகானந்தம், தி. ச. வரதராசன், அ. ந. கந்தசாமி, கனக. செந்திநாதன், தாழையடி சபாரத்தினம், சொக்கன், சு. வேலுப்பிள்ளை ஆகியோர் இக்காலகட்டத்தில் உருவான எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

**சுதந்திர ஆட்சிக் காலம்:** ஈழம் 1948-இல் விடுதலை பெற்றாலும், 1950-களிலேயே தேசியநலனை முன்னிட்ட போராட்டம் தொடங்கியது எனலாம். 1953-இல் நிகழ்ந்த நாடு தழுவிய போராட்டம் அடிமட்ட மக்களின் எழுச்சிக் குரலாக அமைந்தது. இதன் காரணமாக 1956-இல் நிகழ்ந்த அரசியல் மாற்றம் தேசிய சக்திகள் அரசியலில் ஆதிக்கம் பெறத் துணை செய்தன. தேசியப் பண்பாட்டுணர்வும் சமதருமசிந்தனையும் பொதுமக்களை நெருங்கின. இடதுசாரிச் சிந்தனைகள் வலுப்பட்டன. இச்சூழலில் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி ஆனது. இச்செயல் 1958-இல் நாடு தழுவிய இனக்கலவரத்திற்கு வழிவகுத்தது. ஒரு பக்கம் பொதுவுடைமைச் சிந்தனையும் தேசிய எண்ணமும் பெருக, மறுபக்கம் இனவுணர்வு அதிகமானது. பல்வேறு வகைகளில் இவ்வாறு தனித்து நிற்கும் இக்காலகட்டம், இக்கால ஈழத்தமிழ் இலக்கிய வகைகளான புதினமும் சிறுகதையும் வளர உரமிட்டது. செ. கணேசலிங்கன், வ. அ. இராசரத்தினம், தொமினிக் சீவா, கே. டானியல், எசு. பொன்னுத்துரை, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், என். கே. இரகுநாதன், பித்தன், அ. சு. அப்துசு சமது, என். எசு. எம். இராமையா, நந்தி, மு. தளையசிங்கம், அ. முத்துலிங்கம், தெளிவத்தை சோசபு, கே. வி. நடராசன் ஆகியோர் இக்காலக்கட்ட எழுத்தாளர்களுள் சிறப்பிடம் பெறுகின்றனர். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் இவர்களுடைய படைப்புகள் தொடர்ந்தன.

மறுமலர்ச்சிச் சங்கத்திற்குப் பிறகு 1946-இல் ஈழத்தில் தோன்றிய இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1950-களில் ஈழத் தமிழிலக்கியப் போக்கினை நிருணயிக்கும் தலைமைச் சக்தியாக விளங்கியது. ஈழத்துக்கெனத் தனித்தன்மை உடைய தேசியத் தமிழ் இலக்கியம் வேண்டுமென முழங்கி, அதனை உருவாக்குவதில் இச்சங்கம் செய்த பணி மிகச் சிறப்பானது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் தாய்மொழி பல்கலைக் கழகங்களின் பயிற்றுமொழி ஆனபின், பல்கலைக்கழகத்திலிருந்து உருவான எழுத்தாளர் பலர் ஈழத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றனர். செ. இயோகநாதன், யோ. பெனடிக்ட் பாலன், செ. கதிர்காமநாதன், செம்பியன் செல்வன், செங்கையாழியான் போன்றோர் இவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

விடுதலைக்குப்பின் ஈழத் தமிழ்க் கவிதையும் அதன் உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் பெருமாற்றம் அடைந்தது. ஈழத் தமிழ்க் கவிதையின் இக்கால உருவாக்கத்திற்குப் பெருஞ் சக்தியாய் நின்றவர் மகாகவி. நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், யாழ்ப்பாணன், அ.ந. கந்தசாமி, முருகையன், நீலாவாணன், எம்.ஏ. இரகுமான், மௌனகுரு, ஈழவாணன் போன்றோர் ஈழத்து இக்காலக் கவிஞர்களுள் சிறந்தவர்கள்.

ஈழத் தமிழ் நாடக வரலாறும் ஏறத்தாழ முந்நூறு ஆண்டு காலப் பரப்புடையது. தொடக்கத்தில் கூத்துகள் எனப்படும் மரபுவழி நாடகங்களே ஓங்கியிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இவ்வகை நாடகங்களே ஓங்கியிருந்தன. விடுதலைக்குப் பின் மேடைநாடகங்கள், உரைநடை நாடகங்கள், பா நாடகங்கள், வானொலி நாடகங்கள் ஆகியவை பெருகி வருகின்றன, இரா.த.

**ஈழத்துப்பூதன் தேவனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கிய சமாசப் பதிப்பில் இவர் பாடியனவாக ஏழு பாடல்கள் (அகம். 88, 231, 307; குறு. 189, 343,

360; நற். 366) இடம்பெற்றுள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில் அதன் 343-ஆம் பாடலை ஈழத்துப்பூதன் தேவனார் என்னும் பெயரிலும், ஏனைய இரு பாடல்களை மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் என்னும் பெயரிலும் பதிப்பித்துள்ளார். இவ்விரு பெயரும் ஒரே புலவரைக் குறிப்பனவா என்பது ஆராய்வதற்குரியது. அகத்திணை மட்டுமே பாடிய இப்புலவர் பாலை (5 பாடல்), குறிஞ்சி (2 பாடல்) என்ற இரு திணைகளையும் பாடியுள்ளார்; பாலைத்திணையில் பிரிவு (4), உடன்போக்கு (1) என்ற இரு நிலைகளையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளார்; பாலைத் திணையில் மிகுதியான பாடல் பெறும் செலவு விலக்கல் (தோழி), செலவு தவிர்தல் (தலைவன்), ஆற்றுவித்தல் (தோழி) என்ற கூற்றுகளில் ஒவ்வொரு பாடல் இயற்றியுள்ளார்.

இவர்தம் குறு. 189-ஆம் பாடல் சங்க இலக்கியத்தில் தனிப்பாங்கானது. இப்பாடலில் வினைப் பொருட்டுப் பிரியும் தலைவன் பாகனிடம், 'இன்றே சென்று வருதும் நாளை' என விரைந்து சென்று வினைமுடித்து வர விரும்புவதனைச் சுட்டுகிறான். வினைவயிற் பிரியும்போது தலைவன் பாகனுக்கு உரைப்பதும் ஒருநாள் வினைப் பிரிவு பற்றிய குறிப்பும் இப்பாடலில் மட்டுமே அமையும் சிறப்புக் கூறுகள்.

இவர் பாடல்களில் புலி தொலைத்த யானை, பாம்பு படப்புற்றைக் கிளறும் கரடி, பதுக்கைக் காட்சி போன்ற கொடுமையான காட்சிகள் பயின்று வருகின்றன.

தலைவியின் எழில் நலம் பாடுபொருளுக்கு ஏற்பப் பாடலில் திறம்பட இணைக்கப்படுகிறது. பிரிவில் வற்புறுத்தும் தோழி கூற்றில், அது தலைவனை விரைந்து மீளச் செய்யும் கவர்ச்சியுடையது. செலவு விலக்கும் தோழி கூற்றில் அது தலைவன் பிரிவால் கெடும் நிலையுடையது; செலவு அழுங்கும் தலைவன் கூற்றில் அது அவனைச் செல்லவிடாது தடுத்து நிறுத்தும் ஆற்றல் மிக்கது.

இயற்கை வருணனையையும் பாடு பொருளுக்கு ஏற்பத் தேர்ந்து படைக்கும் நயம் இவரிடம் உள்ளது. செலவு விலக்கும் தோழி கூற்றில், தாம் உடனுறைந்த இடத்தைத் துறக்காது பழமை கருதி அங்குத் தங்கும் இணைப் புறவுகள் கூடியிருந்து அழைக்கும் காட்சி (அகம். 307) இடம் பெற்றுள்ளது. முதுக்குறை குருவி (தூக்கணாங்குருவி) முயன்று கட்டிய கூட்டை வாடைக் காற்று மூங்கிலில் மோதி அடிக்கும் காட்சியைச் செலவு தவிரும் தலைவன் கூற்றில் காணலாம் (நற். 366). தலைவியைத் தலைவனுடன் போக்கும் விருப்புடைய தோழியின் மொழியில், யானை முகத்தில் பிளந்த வாயுடன் பாய்ந்த புலி, யானையின் கோட்டிற்பட்டுத் தானே மடிதலாகிய செய்தி (குறு. 343) புனையப்பட்டுள்ளது. எஸ்.கு.

**ஈழம்** இன்றைய சிரீலங்காவே (Srilanka) பண்டைய ஈழம். ஈழநாடு, ஈழமண்டலம், இலங்கை, சிங்களம், சேரத்தீவு, தாம்பண்ணி போன்ற வேறு பெயர்களாலும் ஈழம் பண்டு குறிப்பிடப்பட்டது. ஒன்சிகுளுசு (Oncsiculus), மெகசுதனிசு (Megasthenes), ஏரதோசுதனீசு (Eratosthenes) போன்ற கிரேக்க எழுத்தாளர்கள் கி. மு. 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் இதனைத் தாப்ரோபேன் (Taprobane) என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவின் தெற்கே அமைந்துள்ள இத்தீவில் முன்பு தங்கம் மிகுதியாகக் கிடைத்ததால் இது 'ஈழம்' எனக் குறிக்கப்பட்டதாக அறிஞர் கூறுவர். ஈழம் என்ற சொல்லுக்குப் பொன் என்பது பொருள். பண்டைக் காலத்தில் இது இலெமூரியாக் (Lemuria) கண்டத்தில் தென்னிந்தியாவைத் தொடர்ந்த ஒரு நிலப்பரப்பாகவே இருந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இத்தீவு ஏறத்தாழ 65610 ச.கி.மீ. பரப்பளவு உடையது. மன்னார் வளைகுடாவும் பாக்குக் கடற்காலும் (Gulf of Mannar and Palk Strait) இதனைத் தென்னிந்தியத் தென்முனையினின்றும் பிரிக்கின்றன. தமிழகத்தின் தென்கரையிலிருந்து ஈழத்தின் வடகரை 32. 2. கி.மீ. தொலைவில் உள்ளது.

பண்டைக்காலத்திலிருந்தே தென்னிந்தியாவிற்கும் ஈழத்திற்கும் இடையே அரசியல், சமூக, பொருளாதார, வணிக, பண்பாட்டு உறவுகள் இருந்து வருகின்றன. சங்க காலத்தில் ஈழத்தைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் பலர் தமிழகத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றுப் பல பாக்களை இயற்றியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவரைச் சுட்டலாம். ஆங்கிலேயரின் பழைய குறிப்புகளிலும் ஆட்சி அறிக்கைகளிலும் மலபாரிகள் மாவட்டம் என்று குறிக்கப்பெறுவது ஈழத்தமிழர் நாடாகும். ஈழம் பண்டு தென்னிந்தியாவுடன் மட்டுமன்றிச் சீனம், மலாயா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலான நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது.

வட்டர் (வேடர்), நாகர், இயக்கர் ஆகியோர் ஈழத்தின் தொல் பழங்குடிகள். நாகர் என்று குறிக்கப் பெறுபவர்கள் திராவிடர்களே. இலங்கை வரலாற்று நூலான மாகாவம்சமும் தீபவம்சமும் ஈழநாட்டு வரலாற்றை எடுத்துக்கூறுகின்றன. இன்றைக்கு

ஏறத்தாழ 2100 ஆண்டுகளுக்கு முன்பு, ஏளார (கி.மு. 161-117) என்னும் தமிழ் மன்னன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கைத் தீவு முழுவதையும் ஆண்டு வந்தான்.

இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவின் மேற்குப் பகுதி, வடக்குப் பகுதி, கிழக்குக் கரையோரப் பகுதி, அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட வன்னியப்பகுதி ஆகியன தமிழரின் வாழ் விடங்களாக இருந்தன. இத்தீவின் தெற்குப் பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் சிங்களவர் செறிந்து வாழ்ந்தனர்.

ஈழம் சிலகாலம் தமிழக வேந்தர்களான முற்காலப் பாண்டியர், பல்லவர், பிற்காலச் சோழர் முதலானோரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. குறிப்பாக, முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இருவர் ஆட்சிக்காலத்திலும் தமிழரின் ஆட்சி ஈழத்தில் கொடி கட்டிப் பறந்தது. இவர்கள் காலத்தில் வங்காள விரிகுடா 'சோழரின் குடா' எனக் குறிக்கப்பட்டது. ஈழம் மும்முடிச் சோழமண்டலம் எனப் பெயரிடப்பட்டுச் சோழரால் ஆளப்பட்டு வந்தது. பின்னர், இலங்கையில் மாகனின் ஆட்சி (கி.பி. 1215-55) பாண்டியப் படைகளின் உதவியுடன் நடைபெற்றது. ஆரியப் பேரரசர்களின் தனியாட்சி கி.பி. 1282-இல் நிறுவப் பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழராட்சி சிறப்புடையது. இவர்கள் இராமேசுவரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மாமன்னன் அசோகனுக்குப்பின் இலங்கையில் புத்த சமயம் பரவி நன்கு வளர்ச்சி பெற்றது. தமிழ் வேந்தர் ஈழ வேந்தனுக்கு உதவி புரிவதும், ஈழ வேந்தர் தமிழக அரசனுக்கு உதவி புரிவதும் வழக்கமாக இருந்தன. இதனால், பண்டு இரு அரசுகளும் நெருங்கிய உறவால் பிணைக்கப் பட்டமை புலனாகும். ம.இரா.த.

**ஈழமண்டல சதகம்** இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு, சைவ சித்தாந்தக் கொள்கைச் சிறப்பு ஆகியவை பற்றிக் கூறுகிறது. இதற்குச் சந்திர மௌலீசுவரர் சதகம் என்ற பெயரும் உண்டு. இதன்கண் 104 பாடல்கள் (காப்பு-1, தற்சிறப்பாயிரம்-2, நூல்-100, முடிப்புரை -1) உள்ளன.

இதன் ஆசிரியர் திரு.ம.க. வேற்பிள்ளை. இவர் கி.பி. 1849-இல் இலங்கையிலுள்ள மட்டுவில் என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் கணபதிப் பிள்ளை. இவர் கார்த்திகேயர், ஆறுமுக நாவலர், பொன்னம்பலப்பிள்ளை போன்றோரிடம் கற்றுப் புலமை நிரம்பினார்; தம் மாணவர்கள் பல்ரைப் புலவராக்கினார். இவர் திருவாதவூரர்ப் புராணம் போன்ற சில நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவரால் இயற்றப்பெற்ற பிற செய்யுள் நூல்கள் புலோலி பர்வதவர்த்தினி அம்மை தோத்திரம், புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம் ஆகியன.

மட்டுவில் என்பது பிறமொழிப் பெயராயிருத்தலால், இவர்தம் வழிபடு கடவுளான சந்திரமௌலீசர் பெயரால் அவ்வூரைச் சந்திரமௌலீசர்புரம், சந்திரபுரம் என்று நூலில் குறிப்பிட்டுள்ளார். குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்று இச்சதகப் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும், 'சந்திரமௌலீசனே ஐந்தொழில் விலாசனே சந்த்ரபுரதல வாசனே' என்ற முடிப்பு வாசகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் மூன்று பிரகரணங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. அவை, பொதுப் பிரகரணம் (13), இலங்காபுரிப் பிரகரணம் (36), வீணாகானபுரப்பிரகரணம் (51) என்பன. பொதுப் பிரகரணத்தில் சைவ சித்தாந்தக் கொள்கை சிறப்பாகப் பதின்மூன்று பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தம், பதி, மகேசுரமூர்த்தங்கள், பத்துநாள் விழாவின் உண்மை, பசு, ஆதிசைவர் சிறப்பு, அரசர், வைசியர் முதலியோர் சிறப்புகள், பாசம், தத்துவத்திரயம் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இலங்காபுரிப் பிரகரணத்தில் இலங்கையின் சிறப்பு 7 பாடல்களில் கூறப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரம், திரிகோணமலை பற்றி ஏழு பாடல்களில் கூறப்பட்டுள்ளன. பின்னர், இறைவனுறையும் பல மலைகள், கதிர்காமமலை ஆகியவற்றின் சிறப்பினை 22 பாடல்களில் இந்நூலாசிரியர் கூறுகிறார். வீணாகானபுரப் பிரகரணத்தில் யாழ்ப்பாணத்தின் சிறப்பு, பெயர்க்காரணம் அங்கு வாழும் துறவியர், பண்டைப் புலவர்கள், மருத்துவம் முதலிய கலைகள் வளர்ந்த வரலாறு, ஆண்ட அரசர்கள், அதனைச் சுற்றியுள்ள சிறந்த ஊர்கள், ஆலயங்கள் ஆறுமுகநாவல சற்குரு, பொன்னம்பலப்பிள்ளை, அருகிலுள்ள நகுலேசுரம் போன்ற தலங்கள் ஆகியன பற்றி 51 பாடல்களில் விளக்கியுள்ளார்.

இந்நூல் (68) இலங்கையின் பெயர்க்காரணத்தினைச் 'சொல்லு நூற்றெட்டுத் திருத்தலங்களுள் மிக்குத் துலங்கலில் இலங்கையாம் பேர்' என்று குறிப் பிடுகிறது. இரா.ச.


**ஈழவர்** சோழர் கால கல்வெட்டுகளிலும் செப் பேடுகளிலும் குறிக்கப்படும் மக்கள். இவர்களுடைய

தொழில் பனை, தென்னை மரங்களிலிருந்து கள் இறக்குவதாகும். சோழர் காலத்தில் இவர்கள் இழி குலத்தவர்களாகக் கருதப்பட்டனர். இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் ஈழ வர்கள் பழையனூர் தேவதானத்தில் தென்னை, பனை மரங்களில் ஏறி கள் இறக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தனர் என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது. பொதுவாகச் சோழர்காலத்தில் இவர் கள் தேவதானம், பிரமதேயம் போன்ற பகுதிகளில் கள் இறக்குவதற்குத் தடை செய்யப்பட்டிருந்தனர். இன்றும் கேரளாவில் தென்னை, பனை மரங்களில் ஏறிக் கள் இறக்குவோர் ஈழவர் என்னும் குலத்தைச் சார்ந்தவரே.

**ஈற்று வரித்தொடர்**: தொடரியலில் சொற் களும் தொடர்களும் ஒன்றை அடுத்து ஒன்று தொடர்ந்து வந்து வாக்கிய உறுப்புகளாகவும் வாக்கி யங்களாகவும் அமைகின்றன. வாக்கியத்தில் பெயர்ச் சொல் தொடர் (பெ.சொ.தொ.), வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ.) என்ற இரு வகைகளில் தொடர்கள் அமைகின்றன. 'கண்ணன் வந்தான்' என்ற வாக்கியத்தில் 'கண்ணன்' என்பது பெயர்ச் சொல் தொடர். 'வந்தான்' என்பது வினைச்சொல் தொடர். பெயர்ச்சொல்லைத் தலைமையாகக் கொண்டு அமைகிற தொடர் பெயர்ச்சொல் தொடர்; வினைச்சொல்லைத் தலைமையாகக் கொண்டு அமைகிற தொடர் வினைச்சொல் தொடர்.

இவ்வாக்கியத்தில் பெயர்ச்சொல் தொடர் ஒரே ஓர் உறுப்பை மட்டும் கொண்டுள்ளது. இங்குச் சுட் டப்பெற்றுள்ள வினைச்சொல் தொடரை வினைச் சொல் என்றும் 'இறந்த காலம் காட்டும் உருபன்' என இரண்டாகப் பிரிக்கலாம். 'கண்ணன் வந்தான்' என்ற வாக்கிய அமைப்பை வரி மரத்தில் (Tree Dia-gram) அமைத்துக் காட்டும்போது, வாக்கியம் (வா.) என்பது பெயர்ச்சொல் தொடர் (பெ.சொ.தொ.) + வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ.) என்று அதாவது, வா.→பெ.சொ.தொ. + வி.சொ.தொ. எனப் பிரித்துக் காட்டப்படுகிறது. பெயர்ச்சொல் தொடர் பெயரை மட்டுமே (பெ) குறிப்பதால் 'பெயர்' என்று வரிமரத்தில் குறிக்கப்படுகிறது.

வரிமரம்:



ஆனால், வினைச் சொல் தொடர் வினைச் சொல் (வி.) என்றும் இறந்தகால உருபன் (இ.உ.) என்றும் பிரிக்கப்பட்டு, அவை 'வா' என்ற வினைச் சொல்லாகவும் (வி.சொ.) 'ந்த்' என்ற இறந்த கால உருபனாகவும் (இ.உ.) எழுதப்படுகின்றன. ஆகவே, இந்த வாக்கியத்தின் இரு தொடர்களிலும் பெயர்ச் சொல், வினைச் சொல், இறந்த கால உருபன் என்ற மூன்று உறுப்புகள் குறிக்கப்படுகின்றன. இவ்வாறு குறிக்கப்படும் மூன்று உறுப்புகளும் இணைந்த தொடரே ஈற்று வரித் தொடர் (Terminal String) என்று சொல்லப்படுகிறது.

இவ்வரிப்படத்தில் (வரிமரத்தில்) கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினைக் கீழ்வரும் தொடர் அமைப்பு விதிகள் மூலமும் விளக்கலாம்.

வா. ⟶ பெ. சொ. தொ. + வி. சொ. தொ.

பெ. சொ. தொ. ⟶ பெ.

வி. சொ. தொ. ⟶ வி. + இ.உ.


பெ. ⟶ கண்ணன்

வி. ⟶ வா

இ.உ. ⟶ ந்த்

இதேபோன்று 'அழகான கண்ணன் வேகமாக வந்தான்' என்ற வாக்கியத்தை 'அழகான கண்ணன்' என்ற பெயர்ச்சொல் தொடராகவும், 'வேகமாக வந்தான்' என்ற வினைச்சொல் தொடராகவும் பிரிக்கலாம். இங்குப் பெயர்ச்சொல் தொடரில் பெயரடை, பெயர் என்ற இரு உறுப்புகளும் வினைச் சொல் தொடரில் வினையடை, வினைமுற்று என்ற இரு உறுப்புகளும் அமைந்துள்ளன. பெயரடையில் பெயர் + பெயரடை உருபு என்றும், வினையடையில் பெயர்+வினையடை உருபு என்றும் உறுப்புகள் அமைகின்றன. ஆகவே, பெயர்ச்சொல் தொடரில் மூன்று உறுப்புகளும் வினைச்சொல் தொடரில் நான்கு உறுப்புகளும் கொண்டு ஈற்றுவரித் தொடர் அமைகிறது. கி.க.

வரிமரம்:



**ஈனயானம்** என்பது புத்தமதத்தின் ஒரு பிரிவு; மற்றொன்று மகாயானம். இவையேயன்றி, வச்சிரயானம் (வைர நெறி) முதலிய பிற பிரிவு களும் உள. ஆயினும், மேற்கூறிய இரண்டுமே புத்த சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் ஈனயானம் (Hinayana) ஏறத்தாழ கிறித்து ஆண்டுத் தொடக்க காலம் வரை பௌத் தர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த சமய நெறி யாகும்.

ஏறத்தாழ கி.மு. 486-இல் புத்தர் மறைந்தார். அப்போது இருபெரும் சீடர்களான உபாலி, ஆனந் தர் என்போர் அவர்தம் சமயக் கருத்துகளையும் போதனைகளையும் தொகுத்துப் பௌத்தர்களுக்கு எடுத்துரைத்தனர். இவர்களுள் முந்தியவர் 'விநய பிடகம்' (சமயநெறிமுறைகள்) என்பதையும், பிந்திய வர் 'சுத்தபிடகம்' (புத்தரின் சமயக் கூற்றுகள்) என்பதையும் தொகுத்தனர். அபிதம்மபிடகம் என்ற மற்றொன்றும் உண்டு. இவை மூன்றும் திரிபிடகம் எனப்படும். பிடகம் என்பதற்குக் 'கூடை' என்பது பொருள். புத்த சமயத்தின் நெறிகள் பண்டைக் காலத்தில் ஏட்டுச்சுவடிகளில் வரையப்பெற்றுத் தனித்தனிக் கூடைகளில் சேமித்து வைக்கப்பட்டமை யால் அவற்றிக்கு இப்பெயர் வரலாயிற்று.

புத்தர் மறைந்தவுடன் கூட்டப்பெற்ற ஒரு 'புத்த சமயப் பேரவை'யில் (Buddhist Council) இந்நிகழ்ச்சி கள் நடைபெற்றதாக அச்சமய மரபினர் கூறுவர். ஆயினும், 'அப்பேரவை பற்றிய மரபுவழிச் செய்தி கள் முற்றிலும் நம்பத்தகுந்தவை என்று கூற இய லாது' என்பர் சில அறிஞர். அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கழித்து வைசாலி என்னுமிடத்தில் மற்றுமொரு பேரவை கூடியதாகத் தெரிகிறது. இப்பேரவையில் புத்தசமயக் கோட் பாட்டினர்களிடையே பிளவு தோன்றியது. இவ்வாறு இருவேறு சமயக் கருத்துகளைப் பரப்ப முன்வந்த வர்கள் தேரவாதிகள் என்றும், மகா சங்கிகர் என் றும் இருவகைப்படுவர். அவர்களுள் தேரவாதிகள் பெரியோர் போதனைகளைப் பின்பற்றுவோர். மகாசங்கிகள் மாபெரும் சங்கத்தின் உறுப்பினர்கள்.

அசோகர் காலத்தில் பாடலிபுத்திரத்தில் மூன் றாம் புத்த சமயப் பேரவை கூடிற்று. அதில் சமயக் கருத்து வேறுபாடுகள் தோன்றின. தேரவாதிகள் உண்மையான புத்த சமய மரபைப் போற்றியவர் களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மறுப்பாளர் புதுமை போற்றிகளாகக் கருதப்பட்டுச் சங்கத்தி னின்றும் நீக்கப் பெற்றனர். இக்கூட்டத்தில் பாலி மொழியில் இயற்றப்பட்ட சமயத் திருமுறைகளின் இறுதிப்பகுதியான 'சுதாவத்து' சேர்க்கப்பட்டது. இது அபிதம்ம பிடகத்தின் ஒரு பகுதி.

புத்தருடைய போதனைகளாக அவர் சீடர்களால் எடுத்துக் கூறப்பெற்றவையும், திரிபிடகங்கள், பாலி மொழி (புத்த சமய) இலக்கியங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளவையும் ஈனயானச் சமயக் கோட் பாடுகளாகக் கருதப்பெறுபவை.

புத்தர் காலம் தொடங்கி வளர்ந்து வந்த இச்சமயக் கருத்துகளும் கோட்பாடுகளும் கிறித் தவ ஆண்டுத் தொடக்கத்தில் சில சிறப்பான மாறுதல்கள் அடையத் தொடங்கின. மேலை, நடு ஆசியப் பகுதிகளிலிருந்து வடமேற்கு இந்தியாவில் புகுந்த பல சமயப் பண்பாட்டுச் செல்வாக்குகளால் பாதிக்கப்பட்ட புத்தம் நாளடைவில் ஈனயான நிலையிலிருந்து மகாயான நிலைக்கு மாறலாயிற்று. புத்தரை ஒரு சமயப் போதகராகவும் நன்னெறி புகன்ற ஆசானாகவும் மட்டும் கருதாமல், ஏறத் தாழக் கடவுளுக்குச் சமமாகவே கருதும் நிலை உண்டானது. இம்மாறுதலுக்குப் புறத்தார் செல் வாக்கும், இந்திய பௌத்தர்களிடையே நாளடை வில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுமே காரணம். இம்மாறுதல்கள் தோன்றியபின் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரவிய புத்தம் மகாயானம் ஆகும். இப்பிரிவைச் சேர்ந்த புத்தசமய நூல்கள் வடமொழி யிலும், ஈனயான இலக்கியங்கள் பாலி மொழியிலும் எழுதப்பெற்றன.

ஈனயானக் கருத்துகளைக் கூறும் சமய இலக் கியங்களையும் திருமுறைகளையும் சூத்திரங்களையும் தொகுத்துச் சிங்களப் பௌத்தர் முறைப்படுத் தினர். அவர்கள் இவற்றை கி.பி. முதல் நூற்றாண் டில் சிங்களத்தில் ஆண்ட வட்ட காமனி என்னும் மன்னர் காலத்தில் முறைப்படுத்தினர்.

ஈனயானச் சமய மரபு திரிபிடகங்களில் பெரும் பாலும் அடங்கும். விநயபிடகத்தில் புத்தர் ஆங் காங்குச் சொற்பொழிவுகளிலும் அறவுரைகளிலும் எடுத்துக் கூறிய பேருண்மைகள் கூறப்பட்டுள்ளன. முதல் புத்த சமயப் பேரவையில் ஆனந்தர் எடுத்துக் கூறிய சுத்தபிடகம் திரிபிடகங்களுள் சிறந்தது. அதுவே அளவிலும் பெரிது. அது ஐந்து பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் 'நிகாயம்' எனப்படும். அவை திகநிகாயம், மச்சிம நிகாயம்,சம் யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம் என்பன. அவற்றுள் திக நிகாயம் புத்தர் ஆற்றிய நீண்ட சொற்பொழிவுகளையும் அவை எக்காலத்தில் எங்கு, எதற்காக ஆற்றப்பட்டன என்னும் விவரங்

களையும் எடுத்துரைக்கிறது. மச்சிம நிகாயம் என்பது போதுமான அளவினாலான அறவுரைச் சொற்பொழிவுகளின் தொகை. சம்யுத்த நிகாயமாவது சமயத் தொடர்புடைய பல செய்திகளைப் பற்றிப் புத்தர் சுருங்கக் கூறியுள்ள உரைநடைகளைத் தொகுத்துரைக்கிறது.

அங்குத்தர நிகாயம் என்பது ஏறத்தாழ 2000 சிறு போதனைகளை 11 அதிகாரங்களாகப் பிரித்துக் கூறுகிறது. அது நன்னெறியிற் செல்ல விழைவார் தவிர்க்க வேண்டியவற்றையும் மேற்கொள்ள வேண்டியவற்றையும் கூறுகிறது. குத்தக நிகாயம் செய்யுளும் உரைநடையுமாக உள்ள பல சிறு நூல்களைக் குறிக்கின்றது. அவற்றுள் சில பகுதிகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாக இருக்கலாம் என்பது அறிஞர் சிலர் கருத்து. இப்பிரிவில் தம்மபாதம், தேரகாதா, தேரிகாதா, சாதகக் கதைகள் (Jataka Tales) என்பன அடங்கும். அவற்றுள் தம்மபாதம் என்பது அறம் கூறும் பாடல் தொகுதி. தேரகாதா, தேரிகாதா என்பவை புத்த சமயத் துறவிகளின் சமயப்பாடல்கள்; சாதகக் கதைகள் புத்தர் தாமே தம் முற்பிறப்புக் கதைகளை எடுத்துக் கூறியதாக அமைந்துள்ளவை. அவற்றிற்குப் புத்தகோசர் என்னும் பேரறிஞர் உரை செய்துள்ளார். மூன்றாம் பிடகமான அபிதம்மபிடகம் புத்த சமயம் பற்றிய சில உளவியல் தத்துவங்களைக் கூறுகிறது. அது முன்பு கூறிய இருவகைப் பிடகங்களைவிடக் காலத்தாற் பிந்தியது. அவையேயன்றி, ஈனயானக் கருத்துகளையும் தத்துவங்களையும் கூறும் பிற நூல்களும் உண்டு. அவற்றுள் மிலாண்டரின் வினாக்கள்(Milinda Panha) என்பது முதன்மையானது. அந்நூலில் மிலாண்டர் என்னும் கிரேக்க-பாக்டீரிய மன்னனும் நாகசேனர் என்னும் பௌத்தத் துறவியும் நிகழ்த்திய உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிங்களத்தில் இயற்றப்பெற்ற தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பவையும் ஈனயானக் கருத்துகளை உடையவை.

ஈனயான பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கை இன்னா செய்யாமை (அகிம்சை). பிராமண சமயத்திலும் கிராம மக்களின் சிறு தெய்வவழிபாடுகளிலும் வன்முறையும் பலியிடுதலும் இடம்பெற்றிருந்தன. வேள்வியில் விலங்குகள் பலியிடப்பட்டன. புத்தர் இவ்வன்முறைகளை எதிர்த்து 'அன்பின்பாற்பட்ட சமய' த்தை நிறுவினார். அவர் உளவியல் முறையில் மனித குலத்தின் சிக்கல்களை அணுகினார். 'மனிதனின் துன்பங்கள் யாவற்றிற்கும் ஆசையே (காமம்) காரணம்; ஆசைவெகுளிக்கும், வெகுளி அறியாமையாகிய மயக்கத்திற்கும் காரணம்; எனவே, ஆசையை ஒழித்தால் துன்பங்கள் உருவாகா' என்று அவர் அறிவுறுத்தினார். ஆசையாற் பிறக்கும் துன்பங்களே துக்கம் எனப்படும். வருத்தம், நோவு, போதாது என்னும் மனநிலை என்பன ஆசையை விட்டார்க்கு இல்லை. தனி மனிதனின் ஆர்வங்களே துக்கத்திற்குக் காரணமாதலின், தனி மனிதக் கோட்பாடு நீக்கப்படல் வேண்டும் என்பது புத்தரின் அறவுரை என்பர் சிலர்.

புத்தர் எண்வகை நன்னெறிகளைக் கூறினார். அவை, நேர்மையான தூய கருத்துகள், தீர்மானம், பேச்சு, நடத்தை, வாழ்க்கை, முயற்சி, ஞாபகம், உள்ளுதல் என்பன. துக்கத்திற்குக் காரணமான ஆசையை ஒழிக்காவிடில் மறுபிறப்பு உண்டாகும்; ஆசையை அறவே ஒழித்து நன்னெறிகளைக் கடைப்பிடித்தால் மறுபிறப்பு உண்டாகாது; வீடுபேறு எய்தும் என்பது ஈனயான புத்தத்தின் அடிப்படைக் கொள்கை.

இயலுலகு (பிரபஞ்சம்) துக்கம் நிறைந்தது; அழியும் தன்மை உடையது. மறுபிறப்பைப் புத்தம் உடன்பட்ட போதிலும், ஒரே உயிர் ஓருடலினின்றும் மற்றொன்றிற்குத் தாவுகிறது என்னும் கருத்தை அது ஏற்கவில்லை. இச்சமயம் வினைக் (கர்மா) கோட்பாட்டை ஏற்று, முற்பிறவியில் செய்யப்பட்ட வினைப் பயன்களே மறுபிறவியை உண்டாக்குகின்றன எனக் கூறுகிறது. ஆன்மா, கடவுள் என்னும் கருத்துகளை இது ஏற்றுக் கொள்ளவில்லை.

இச்சமயம் சிரீலங்கா, பர்மா, சயாம், கம்போடியா, சீனா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது. ந.சு.

துணை நூல்கள்:

**Eliot, Sir,C.**, Hinduism and Buddhism, London, 1922.

**Rhys Davids, T.W.**, Buddhism, Its History and Literature, London, 1926.

**Thomas, E.J.**, History of Buddhist thought, London, 1933.

**Keith,A.B.**, Buddhist Philosophy in India and Ceylon, Oxford, 1923.

*ஈனியசு* ஓர் இலத்தீன் கவிஞன். வர்சில் (Virgil) எழுதிய ஈனியடு என்னும் காவியத்தின் தலைவன். இவன் திராய் (Troy) நாட்டின் தலைசிறந்த வீரனாகிய எக்டர் (Hector) என்பானுக்கு அடுத்த நிலையில் பெருவீரனாக விளங்கினான். கிரேக்கக் கவிஞர் ஓமரது (Homer) இலியடு (Iliad)

என்னும் காவியமும் இவனைச் சிறப்பித்துக் கூறு கிறது. இவன் பிற்காலத்தில் திரோசன் (Trojan) மக்களையும் அவர்கள் வழித்தோன்றல்களையும் ஆளுவான் என்று அந்நூல் கூறுகிறது.

கிரேக்க முற்றுகையை அடுத்து நிகழ்ந்த போரில் திராய் நகரம் வீழ்ச்சியுற்ற பிறகு ஈனியசு (Aeneas) தன் வயது முதிர்ந்த தந்தை ஆங்கிசிசைத் (Anchises) தோளிற் சுமந்துகொண்டும், தன் மகன் ஆசுகேனி யசைச் (Ascanius) கையில் பற்றிக் கொண்டும் தன் கூட்டத்தினருடன் வெளியேறினான். ஏழாண்டுக் காலம் மத்தியதரைக் கடலிற் பயணம் செய்து இலேசியம் (Latium) என்னும் நாட்டை அடைந்தான். அந்நாட்டு மன்னன் இலட்டைனசு (Latinus) என்பவனால் வரவேற்கப்பட்டு, இலவீனியம் (Lavinium) என்னுமிடத்தில் ஓர் அரசை நிறுவினான். தன்னை எதிர்த்து வந்த தர்னசு (Turnus) என்னும் அண்டை நாட்டு மன்னனை வென்று, இலட்டைனசின் மகள் இலவீனியாவை (Lavinia) மணந்தான். இலட்டைன சின் மறைவுக்குப் பிறகு திரோசன்களையும் இலத் தீன்களையும் இணைத்து ஒரு பெரும் நாட்டை ஆண்டான். அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேரரசாயிற்று. பல ஆண்டுகள் ஆளுகைக்குப் பின் எட்ருசுகன்களுடன் (Etruscuns) நடத்திய போரில் ஈனியசு காணாதொழிந்தான். அவன் கடவுளால் வானுலகுக்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கக்கூடும் என நம்பிய அவன் மக்கள் அவனைக் கடவுளாக வழிபட்டனர்.

வி. ஆர். அ.

**ஈனியடு** இலத்தீன் மொழியிலுள்ள சிறந்த காவியங்களுள் ஒன்றாகும். கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த வர்சில் (Virgil) என்னும் இலத்தீன் கவிஞரால் எழுதப்பட்டது இந்நூல். இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க திரோசன் (Trojan)போரை அடுத்துத் திராய் (Troy) நகரத்து மாவீரன் ஈனியசு என்பான் நிகழ்த்திய பயணங்களும் வீரச் செயல்களும் பாடு பொருளாக அமைந்துள்ளன. உரோம் நகரத்தின் பழமையைக் காட்டுவதும் உரோமானிய இனத்தவரின் தொன்மையை உரைப்பதும் இக்காவியத்தின் தலையாய நோக்கங்கள்.

இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களில் ஈனியசின் நீண்ட கடற் பயணங்களையும், முடிவில் இலேசியம் என்னுமிடத்தில் அவன் ஒரு திரோசன் அரசை நிறுவியதையும், அதுவே பின்னர், உரோமானிய இனத்தவரின் பிறப்பிடமாக அமைந்ததையும் விரித்துக் கூறுகிறது. இந்நூலில் கிரேக்கக் கவிஞர் ஓமரின் (Homer) காவியங்களில் காணக் கிடக்கும் புராணக் கூறுகளையும் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளையும் காண்பதுடன், பண்டைய உரோமானியரின் பண்பாடு, நாகரிகம், சமயம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றையும் பரக்கக் காணலாம். ஓமரின் இலியதிற் (Iliad) காணும் போர் முறைகளையும் ஒடிசியிற் (Odyssey) காணும் பயணங்கள் மற்றும் வீரச் செயல்களையும் வர்சில் இக்காவியத்தில் சிறப்பாகக் கையாண்டுள்ளார். கிரேக்கத் துன்பியல் நாடகாசிரியர்கள், இசைப் பாடலாசிரியர்கள் மற்றும் வர்சிலுக்கு முந்தைய தலைமுறையைச் சார்ந்த என்னீயசு (Ennius), உலுக்கிரீசியசு (Lucretius) ஆகியோர் செல்வாக்கினையும் இக்காவ்யத்தில் காணலாம். வர்சில் தம் இறுதிக்காலத்தில் இந்நூலைச் செப்பம் செய்ய இயலாது போனதால் இதனை அழித்துவிடுமாறு தம் நண்பர்களிடம் கூறினார் என்றும் ஆனால், அவரது மறைவுக்குப்பின் உரோமானியப் பேரரசன் அகசுடசின் (Agustus) ஆணையின்பேரில் இந்நூல் வெளியிடப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

**கதைச் சுருக்கம்**: பத்தாண்டுக் காலம் கிரேக்கர்கள் திராய் நகரத்தை முற்றுகையிட்டபின், அந்நகரத்துக்குள் தந்திரமாக நுழைந்து, அந்நகர மக்களைக் கொன்று குவித்து நகருக்குத் தீயூட்டினர். திரோசன் வீரனான ஈனியசு தன் தந்தை ஆங்கிசீசு, மகன் ஆசுகேனியசு ஆகியோர் அடங்கிய பெருங்கூட்டத்துடன் மரக்கலம் ஏறி வெளியேறினான். வழியில் சிசிலித் தீவில் (Sicily) ஆங்கிசீசு இறந்தார். பின் அவன் கார்த்தேசு (Carthage) நகரத்தை அடைந்தபோது, அதன் அரசி தைடோ (Dido) என்பவளால் வரவேற்கப்பட்டு அவள்தன் விருந்தினனாகத் தங்கினான். அவனது துயரமிக்க கதையைக் கேட்ட அரசிக்கு அவன்பால் அன்பு உண்டாயிற்று. ஒருநாள் அவ்விருவரும் வேட்டைக்குச் சென்றபோது, புயலால் தாக்குண்டு ஒரு குகைக்குள் புகலடைந்தனர். அங்கு அவர்கள் காதல் வயப்பட்டு உறவு கொண்டனர். குளிர்காலம் கழிந்து வசந்தம் மலர்ந்தவுடன் ஈனியசு தன் பயணத்தைத் தொடருவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டான். அதனை அறிந்த தைடோ தன்னை மணந்து கொள்ளுமாறு அவனிடம் வேண்டியும், அவன் அவளைப் புறக்கணித்துப் புறப்பட்டுச் சென்றான். ஆறாத்துயருற்ற அரசி தற்கொலை செய்து கொண்டாள்.

ஈனியசும் அவன் கூட்டத்தினரும் சிசிலிக்குத் திரும்பி ஆங்கிசீசின் நினைவுநாளை விருந்துண்டும் வீரவிளையாட்டுகள் ஆடியும் கொண்டாடினர். முதலில் படகுப்போட்டி நடைபெற்றது. அதில் குளோன்தசு என்பான் வெற்றிபெற்றான். அடுத்து நடைபெற்ற ஓட்டப் பந்தயத்தில் யூரியாலசு

(Urialus) என்பானும் மற்போரில் எண்டெலசு (Entellus) என்பானும் அம்பெய்தலில் ஊரிசன் (Urytion), அசெசுடீசு (Acestes) என்னும் இருவரும் வென்று பரிசுகளைப் பெற்றனர். ஈனியசின் மகனான ஆசுகேனியசு தன்னையொத்த சிறுவர்களுடன் போர் விளையாட்டுகளில் ஈடுபட்டான். பெண்கள் ஆங்கிசீசின் மறைவுக்காக அழுது புலம்பினர். பின்னர் ஈனியசும் அவன் கூட்டத்தினரும் இத்தாலி நாட்டை அடைந்தனர்.

இத்தாலியிலிருந்த ஒரு குறிசொல்லும் பெண் ஏடீசு (Hades) என்று சொல்லப்பட்ட கீழுலகத்துக்குச் செல்ல ஈனியசுக்கு உதவினாள். பூவுலகில் வாழ்ந்து மடிந்தவர்களின் ஆவிகளை அவன் அங்கே கண்டான். அவற்றுள் தைடோவின் ஆவியும் ஒன்றாகும். நிலவுலகில் தீமை புரிந்தவர்கள் அங்குத் தார்டாரசு (Tartaurus) என்னுமிடத்தில் தண்டனை அனுபவித்து வந்தனர். நல்லோர் ஆவிகள் எலிசியம் (Elysium) என்னுமிடத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தன. ஈனியசு அங்கே தன் தந்தை ஆங்கிசீசின் ஆவியைச் சந்தித்தான். அந்த ஆவி இத்தாலி நாட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓர் அரசை நிறுவுமாறு அவனுக்கு அறிவுறுத்தியதுடன், அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேரரசாகுமென்றும் முன்னறிவித்தது. மேலும், அங்கிருந்த சில ஆவிகளைச் சுட்டிக்காட்டி, அவை பிற்காலத்தில் உரோமுலசு (Romulus), அகசுடசு (Augustus), மார்செலசு (Marcellus)போன்ற பெருவீரர்களாக வரும் என்றும் கூறியது. பின் பூவுலகுக்குத் திரும்பிய ஈனியசு இத்தாலியக்கடற் கரையோரமாகப் பயணம் செய்து இலேசியம் (Latium) என்னும் நகரை அடைந்து, அதன் அரசன் இலட்டைனசு என்பவனால் வரவேற்றுப் பேணப்பட்டான்.

இலட்டைனசு தன் மகள் இலவீனியாவை (Lavinia) ஈனியசுக்கு மணமுடிக்க முன் வந்தான். அதனையறிந்து பொறாமை கொண்ட தர்னசு என்னும் அண்டை நாட்டு மன்னன் அவன்மீது போர் தொடுக்க வந்தான். இப்போரில் சூனோ(Juno) என்னும்பெண் தெய்வம் தர்னசுக்கு உதவியபோது, வீனசு (Venus) என்னும் காதல்தேவதை ஈனியசுக்கு வானுலகத்துக் கவசம் ஒன்றைப் பரிசளித்து உதவியது. நீண்ட போருக்குப்பின் ஈனியசு பெருவெற்றி பெற்றான். அதன்பிறகு இலவீனியாவை மணந்துகொண்டு அங்கு ஓர் அரசை நிறுவினான். அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேரரசாயிற்று.

இந்நூலின்கண் சில குறைபாடுகளும் உள்ளன. இதன் கதை மாந்தர் மரபுவழி இயங்குகின்றனரேயன்றித் தனித்தன்மையுடையவர்களாக இல்லை; ஈனியசு தைடோவைக் கைவிட்டது அறநெறிக்கு மாறானதாகவும், கைவிடப்பட்ட தைடோ உயிரிழப்பதும் கைவிட்ட ஈனியசு வாழ்வில் வெற்றிகளைக் குவிப்பதும் மறத்துக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன என்றும் கூறுவர். இருப்பினும் இக்காவியம் காலத்தை வென்று உலகின் தலைசிறந்த காவியங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. வி. ஆர். அ.

உ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள உயிரெழுத்துகளுள் (அ, இ, உ) மூன்றாவதாகும். இது ஒரு மாத்திரை ஒலியுடைய குறில் ஆகும்.

வடிவம்: இவ்வெழுத்தின் வரிவடிவ வளர்ச்சி நிலை மிக எளிதாக அமைந்துள்ளது. முதலில் மேலிருந்து கீழ் நோக்கிய நேர்கோட்டின் தொடர்ச்சியாக வலப்புறம் செல்லும் ஒரு நேர்கோட்டில் முடிகிற வடிவம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரை இருந்தது. பிறகு மேலிருந்து கீழ் நோக்கிய நேர்கோட்டின் தொடக்கத்தில் ஒரு கொக்கி போன்ற குறி இடப்பட்டு, அதன் பயனாக வலப்புறம் செல்லும் நேர்கோட்டின் நீளம் அதிகமாயிற்று. இந்நிலை சோழப் பேரரசன் இராசஇராசன் காலத்தில் ஏறக்குறைய கி.பி. 1000 வரை இருந்து வந்தது. இந்நிலையில், நேர்கோணமாக இருந்த எழுத்து சாய்ந்த கோணமாகவே மாறி, அம்மன்னனுக்குப் பிறகு நேர்கோண நிலைக்கு வந்தது.

தமிழ்நாட்டுக் குகைகளில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை. … … 


இது தனித்துக் காணப்படாமல் ஊ என்ற எழுத்தின் மூல வடிவமாகவே வருவது குறிப்பிடத்தக்கது. … … 

பல்லவ பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள், நந்திவர்ம பல்லவ மல்லனின் காசக்குடிச் செப்பேடுகள், செந்தலை முத்தரையர் கல்வெட்டுகள், பல்லவ நிருபதுங்கவர்மனின் இலால்குடிக் கல்வெட்டு-கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை. … … 

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் - கி.பி. பதினோராம் நூற்றாண்டு - சோழன் இராசேந்திரனுடையது. … … 

வட சொற்களை எழுதப் பயன்பட்ட கிரந்த நெடுங்கணக்கிலும் உகாரம் இவ்வாறே எழுதப்பட்டது. கிரந்தத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சில எழுத்துகள் வரிவடிவ வளர்ச்சியில் ஒரே வரலாற்றை உடையன என்பது குறிப்பிடத்தக்கது.

சொல்லின் இடையே மெய்யோடு கலந்துவரும் உகரத்தின் வரிவடிவங்கள் மூன்று வகையாகத் தோன்றுகின்றன. அவை பின்வருமாறு:




உகர ஒலி: இவ்வொலி மொழி முதல், இடை, கடை என்னும் மூவிடங்களிலும் வரும். இது அ, இ என்ற இரு எழுத்துகள் தோன்றும் இடத்திலிருந்தே கிளம்பி வாயைக் குவித்த நிலையில் வெளிப்படும். இலக்கண நூலார் இவ்வொலியைக் கரம், காரம், கான் என்ற சாரியைகளோடு சேர்த்துக் கூறுவர். ஆய்தத்தோடு உஃகான் என்றும் வழங்கப்பெறும். பள்ளிப் பிள்ளைகளுக்கு னா என்னும் சாரியையோடு (உனா) கற்பிக்கப்படுகிறது.

வரலாற்று நிலையும் பொருளும்: தாய்த்திராவிட மொழியிலும் வழங்கும்இவ்வெழுத்து தமிழில் இடையில் உள்ள பொருளைச் சுட்டும் ஒலியாகும். இதனடியாகப் பிறந்த எழுத்துகள் ஊ, ஒ,ஓ, ஔ என்பன. இது அகரத்தோடு சேர்ந்து ஔ என ஒலிக்கும் (அ+உ>ஔ) என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. தமிழில் கலந்துள்ள குறிப்பிட்ட வடமொழிச் சொற்களின் முதலெழுத்தாக இது சேர்க்கப்படுகிறது. (எ-டு) ருத்திர>உருத்திரன், ரூபாய்>உரூபாய். உகாரம் அகரத்துடன் தொடங்கி முடிவில் மகரமும் இணைந்தால் ஓங்காரமாக ஒலிக்கும் (அ+உ+ம் = ஓம்). தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் கண்ட கி.பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டுகளில் அரைசரு, சருப்பன்னாரு, வர்மரு என்ற சொல்லிறுதியில் இன்னோசை கருதி உகரம் சேர்க்கப்பட்டு

வழங்கிற்று. இது அக்காலத்தில் தெலுங்குக் கல்வெட்டுகளிலும் பிறகு அம்மொழியிலும் பெருவாரியாக வழங்கலாயிற்று. ஆனால், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் காணப்படவில்லை. சில அடிப்படை வினைச் சொற்களில் விளியன்றி வேறு நிலைகளில் உகர விகுதி இறுதியில் தோன்றுகிறது. (எ.டு) வா > வரு, தா > தரு என்பன. ஊ என்னும் நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரைக்கு மேல் அளபெடுக்கும் பொழுது அதற்கு அறிகுறியாக அந்நெடிலை அடுத்து உகரம் குறிக்கப்பெறும்.(எ-டு) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

தமிழ் எண்மானத்தில் உ என்பது 2 (இரண்டு) என்னும் எண்ணைக் குறிக்கும். ஆனால், அதன் தோற்றமும் வரிவடிவமும் வேறு விதமாகக் காணப்படுகிறது:

அனைத்திந்தியப் பின்னணியில் சாதவாகனர், கச்சிப்பல்லவர் முதலியவரின் கல்வெட்டுகள் (கி.பி 1-இலிருந்து 
5-ஆம் நூற்றாண்டு வரை) ... 

பாண்டியன் சடையவர்மன் பராந்தகன் (முதல் வரகுணன்) கி.பி 8-ஆம் 
நூற்றாண்டு ... 

உத்திர மேரூர் பார்த்திவேந்திரன் கல்வெட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டு ... 

இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு கி.பி. 1025 ... 

சொல்லிறுதியில் ஒலி குறைந்து வரும் உகரத்தைக் குற்றியலுகரம் என்பர் இலக்கணநூலார். (எ-டு) நாகு, எஃகு, வரகு முதலியன.

இக்கால வழக்கில் பெரும்பாலும் மெய்யிறுதிச் சொற்கள் உகரத்துடனேயே முடிகின்றன. (எ-டு) கண் > கண்ணு, காண் > காணு, புல் > புல்லு, ஆள் > ஆளு. கே.ஜி.கி.

**உக்கிரகுமார பாண்டியன்**: பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தால் அறியலாகும் பாண்டிய மன்னர்களுள் ஒருவன். இம்மன்னன் வரலாறு அப்புராணத்தில் உக்கிரகுமாரன் திரு அவதாரப் படலம், உக்கிர பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம், கடல் சுவற வேல் விட்ட படலம், இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம், மேருவைச் செண்டாலடித்த படலம் ஆகிய பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. இவன் பெயர், வரலாறு முதலியன சிறிய மாற்றங்களுடன் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலும் கூறப்பட்டுள்ளன.

இம்மன்னன் சோமசுந்தர பாண்டியனுக்கும் தடாதகைப் பிராட்டிக்கும் மைந்தனாகப் பிறந்தான்; இளமையில் கலைகள் பல பயின்றான்; உரிய காலத்தில் சோமசேகரன் என்னும் மன்னன் மகள் காந்திமதியை மணந்து, மதுரை ஆட்சியினை மேற்கொண்டான். இறைவன் அருளால் வளை, வேல், செண்டு ஆகிய படைகள் பெற்றான். இவன் 96 அசுவமேத யாகம் செய்து பெருமை பெற்றமை கண்டு, பொறாமை கொண்டு, இந்திரன் மதுரையை அழிக்கக் கடலை ஏவினான். சித்தராகத் தோன்றிய சிவபெருமான் தூண்டுதலால் உக்கிர குமார பாண்டியன் மதுரையைச் சூழ்ந்த கடலின்மீது தன் வேலினைச் செலுத்தி, அதன் வீறினை அடக்கினான்.

இவன் காலத்தில் தமிழகத்தில் மழை பெய்யாமல் வறுமை மிகவே, மழைவேண்டி இந்திரனின் உதவியை நாடி, சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் தேவருலகு சென்றனர். அவர்களின் வருகை உணர்ந்த இந்திரன் மூவர்க்கும் தனித்தனி இருக்கை அமைத்திருந்தான். சேர சோழ மன்னர் இருவரும் தத்தமக்கு அமைக்கப்பட்ட இருக்கையில் அமர, இப்பாண்டிய மன்னன் இந்திரனோடு ஓர் இருக்கையில் அமர்ந்தான். அது கண்டு மனம் புழுங்கிய இந்திரன் அதனை வெளிக்காட்டாமல் சேர சோழ மன்னர்க்கு உரிய சிறப்புச் செய்து அனுப்பி, அவர்கள் நாட்டில் மழை பொழியுமாறு செய்தான். பாண்டியனைப் பாராட்டுவதுபோன்று பலர் கூடிச் சுமக்கத்தக்க ஒரு பெரிய மலையினை அவனுக்கு அணிவித்தான். பாண்டியன் அதனை மிகவும் எளிதாகத் தோளில் ஏற்று விளங்கினான். அதனால், இப்பாண்டியன் ‘ஆரந்தாங்கு பாண்டியன்’ என்று இந்திரனால் சிறப்பிக்கப்பட்டான். பாண்டி நாட்டில் தொடர்ந்து மழை பெய்யாமலிருந்தது. ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற பாண்டியன் அங்கு வந்த இந்திரனுடைய மேகங்களைப் பிடித்துச் சிறையிலிட்டான். அவற்றை மீட்க எண்ணிப் படை எடுத்துவந்த இந்திரன் முடியினை வளை எறிந்து விழச் செய்தான். ‘மழை பெய்விக்கிறேன் மேகங்களை விடுக’ என வேண்டி இந்திரன் தூதனுப்பவும் இசையாமல், அவனுக்கு நண்பனான ஒருவேளாண் மகன் இந்திரனுக்குப் பிணையாகி வேண்ட விடுவித்தான்.

பிறிதொரு சமயம் நாட்டில் மழை பெய்யாமற் போக, பாண்டியன் சோமசுந்தரப் பெருமானை வேண்டினான். வறட்சி ஓராண்டு நீடிக்கும் என்றும், அது நீங்க மேருமலை சென்று அங்குள்ள பொன்னறை திறந்து பொன்னை எடுத்தபின் அதனை

மூடி நின் இலச்சினை பொறித்து வருக என்றும் அவர் அருளினார். இறைவன் ஏவலால் பாண்டியன் சென்று மேருவை அழைக்க, அது காலந்தாழ்த்திய தால் சினமுற்று அம்மேருவின் செருக்கு அடங்குமாறு அதன் சிகரத்தினைத் தன் கைச் செண்டினால் தாக்கினான். அதனால், நிலை தளர்ந்த மேரு பொன்னறையினைக் காட்டி வேண்டியவற்றை எடுத்துச் செல்லுமாறு வேண்டிப் பணிந்தது. அப்பொன்னைக் கொண்டு வந்து பாண்டியன் தன்குடிமக்களுக்களித்து நாட்டினைக் காத்தான். இப்பாண்டியன் இவ்வாறு பல்லாண்டு நாடுகாத்துப் பின்னர், தன் மகன் வீர பாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபத மெய்தினான்.

இம்மன்னன் உக்கிர பாண்டியன், ஆரந்தாங்கு பாண்டியன் என்றும் அழைக்கப் பெற்றான். இவன் இந்திரன் அணிவித்த மாலையை அணிந்தமை பற்றிய குறிப்புச் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இவனைச் சிலப்பதிகாரம் 'தேவராரமார்பன்' என்று குறிப்பிட்டுள்ளது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திலமைந்த வாழ்த்துக் காதையில் இடம் பெறும் கந்துகவரிப் பாடலில் 'தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்தடித்துமே, தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே' (சிலப் வாழ்த்து. கந்துகவரி) எனப்பந்தடிக்கும் மகளிர் பாடி பாடும் பகுதியில் இக்குறிப்பு அமைந்துள்ளது.

**உக்கிரப்பெருவழுதி** சங்க காலத்துப் பாண்டிய மன்னருள் ஒருவன். இவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, கானப்பேரெயில் கடந்த (தந்த?) உக்கிரப்பெருவழுதி எனவும் வழங்கப்பட்டான். பாண்டி நாட்டிற்கும் சோழ நாட்டிற்கு மிடையே அகழியும் புரிசையும் ஞாயிலும் மிளையும் கொண்டு விளங்கிய கானப்பேரெயிலை, அதற்குரிய வேங்கைமார்பனைப் போர்க்களத்தில் தோற்கடித்து வென்ற பெருவீரனாக ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவரால் இவன் பாராட்டப்பட்டுள்ளான் (புறம். 21). இதனாலும், சேர சோழ அரசர்களோடு இவன் சமனாக நட்புக் கொண்டிருந்த காரணத்தாலும் இவன் சங்க காலத்தில் வலிவும் பொலிவும் மிக்க ஓர் அரசனாக விளங்கியிருக்கவேண்டும் என்பது தெரிகிறது. சேரன் மாரி வண்கோ, சோழன் பெருநற்கிள்ளி ஆகியோருடன் இவன் ஒருங்கு விளங்கிய காட்சியை ஔவையார் புறநானூற்றில் பாராட்டியுள்ளார் (புறம்.367).

இவன் ஆட்சித்திறனிலும் போர்வன்மையிலும் மிக்கவன் என்பதனோடு புலமையிலும் வல்லவன் என்பதனை அகநானூற்றிலும் (26), நற்றிணையிலும் (98) இவன் பாடிய பாடல்கள் விளக்குகின்றன. இவை அரசியல் கலவாத அகப்பொருள் பாடல்களாக விளங்குகின்றன. 'இவனே உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மனாரைக் கொண்டு அகநானூற்றைத் தொகுத்தான்' என அந்நூலின் இறுதிக் குறிப்புத் தெரிவிக்கிறது. தமிழ்ச்சங்கம் பற்றிய பிற்காலக் கதையில் இவன் பெயரும் இடம்பெற்றுள்ளது. கவி அரங்கேறிய அரச புரவலர்களுள் இவனும் ஒருவன் என அக்கதை கூறுகிறது. இவன் பங்கேற்ற அவையில், வள்ளுவரின் முப்பால் நிறைவேற்றப்பட்டது என்று கூறப்படுகிறது. முப்பாலைப் புகழ்ந்து, 'நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா வள்ளுவனாய்த் தந்துரைத்ததாக' இவன் பாடிய ஒரு பாடல் திருவள்ளுவ மாலையில் இடம் பெற்றுள்ளது.

தமிழ்ச் சங்கத்தோடு இவன் தொடர்பு கொண்ட கதைக்கு இவன் பெயரில் இடம் பெற்றிருக்கும் உக்கிரன் என்னும் சொல்லும், அதன் பிற்காலப் புராண மரபும் காரணம் ஆயின போலும். தி.மு.

**உக்கிரன்கோட்டை** பாண்டிய நாட்டிலுள்ள நகரம். முற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உக்கிரன் கோட்டை அரசியல், சமூக, பொருளாதார முக்கியத்துவம் பெற்றிருந்தது. இது கரகிரிளந்தை, கரவந்தபுரம், களக்காடு முதலான பெயர்களாலும் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கரவந்தபுரம் கோட்டை கொத்தளங்கள் அமைக்கப்பட்டுச் சிறந்த பாளையமாக (படைவீடு) விளங்கியது.

உக்கிரன் என்னும் பெயர்கொண்ட புரட்சித் தலைவன் இதனைத் தனது தலைமையிடமாகக் கொண்டிருந்ததால் இது உக்கிரன்கோட்டை எனச் சொல்லப்பட்டது. இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் ஆட்சிக்காலத்தில் உக்கிரன் என்னும் புரட்சித் தலைவன் உக்கிரன் கோட்டைப் பகுதியில் பாண்டியர்க்கு எதிராகப் புரட்சிக்கொடி உயர்த்தினான் என்பதனையும் இராசசிம்மன் அவனை வென்று அடக்கினான் என்பதனையும் கல்வெட்டுகளால் அறியலாம். முதலாம் வரகுணன் ஆய்வேளிரை அடக்குவதற்கு உக்கிரன் கோட்டையில் கோட்டை கட்டி, அங்குப் பெரும் காவற் படையும் அமைத்திருந்தான்.

அரசியல் அதிகாரிகளின் பிறப்பிடம்: இங்குப் புகழ்பெற்ற அரசியல் அதிகாரிகளும் படைத்தலைவர்களும் தோன்றியுள்ளனர். நெடுஞ்சடையன் பராந்தகனின் ஆட்சிக்காலத்தில் மாறன் காரி என்பான் முதலமைச்சராகவும் (உத்தர மந்திரி) ஆணத்தியாகவும் பணிபுரிந்தான். இவன் மூவேந்த மங்கலப்பேர

ரையன், வைத்திய சிகாமணி, மதுரகவி முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றான்; ஆனைமலையில் நரசிம்மனுக்குக் குடைவரை ஒன்றினைக் குடைவித்தான்.

மாறன் காரியின் தம்பியான மாறன் எயினன் தன் அண்ணனின் இறப்பிற்குப்பின் பாண்டியனின் முதலமைச்சர் பதவியை ஏற்றான். இவனுக்குப் பாண்டிமங்கல விசயரையன் என்னும் பட்டம் பாண்டியனால் வழங்கப்பட்டது. சாத்தன் கணபதி என்னும் கரவந்தபுரத்தினன் அடுத்துப் பாண்டியர் படையின் தலைமைப் படைத்தலைவனாகப் பணிபுரிந்தான். இவன் மகாசாமந்தன். இவனுக்குப் பாண்டி அமிர்தமங்கலப் பேரரையன் என்னும் சிறப்புப்பெயர் பாண்டிய வேந்தனால் வழங்கப்பட்டது. இவன் திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் வழங்கினான். இவன் மனைவி அரக்கன் கொற்றி இக்குடைவரையில் சேட்டாதேவிக்கும் துர்க்கைக்கும் கோவில்கள் எடுத்துப் புகழ்பெற்றாள்.

சாத்தன் கணபதியின் தம்பியான ஏனாதிசாத்தனும் பாண்டியர் படையில் அதிகாரியாகப் பணி புரிந்தான். பெரும் தமிழ்க் கவிஞனாகிய இவனே வேள்விக்குடிச் செப்பேட்டின் பாக்களை இயற்றியவன். இவர்கள் அனைவரும் கரவந்தபுரம் வைத்திய குலத்தைச் சேர்ந்தவர்களே.

தீரதிரன் மூர்த்தி எயினன் என்பவன் கரவந்தபுரம் வைத்திய குலத்தைச் சார்ந்த மற்றுமொரு முதன்மைப் படையதிகாரி. இவன் நெடுஞ்சடையன் பராந்தகனின் மகாசாமந்தன். இவன் வீரமங்கலப் பேரரையன் என்னும் பட்டம் பெற்றான்.

பாண்டியர் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய இந்நகரம் சோழர் காலத்திலும் சிறப்புப் பெற்று விளங்கியது என்பதனைச் சோழர் கல்வெட்டுகளாலும் அறியலாம்.

அண்மைக் காலத்தில் மத்தியத் தொல்பொருள் துறையினர் உக்கிரன் கோட்டையில் அகழ்வாய்வினை மேற்கொண்டனர். இதில் பல கட்டடங்களின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கோட்டை ஏறத்தாழ 52.6 எக்டேர் பரப்பளவு கொண்டதாக விளங்கியது என அகழாய்வு தெரிவிக்கிறது.

கோயில்கள்: உக்கிரன் கோட்டையில் பெருங்கோட்டை மட்டுமன்றி, பல கோயில்கள் இருந்ததற்கான தடயங்களும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இங்குச் சூரியன் கோயில் (ஆதித்தியபட்டாரர் கோயில்), சொக்கலிங்கேசுவரர் கோயில், வடவாயில் அமர்ந்தாள் கோயில், விட்டுணுகோயில் முதலான கோயில்கள் இருந்தன. இன்றும் இங்குச் சொக்க நாயகி கோயிற் பகுதிகளில் சப்தமாதர், விட்டுணு (நின்றநிலை), பைரவர், காளி முதலான சிலைகள் அழகாகக் காட்சி தருகின்றன.

கரவந்தபுரத்தில் வணிகர்குடியிருப்பும் பார்ப்பனர் குடியிருப்பும் இருந்தன. இதனால், இந்நகர் பண்டு பொருளாதாரத்தில் முன்னேறி இருந்தமை புலனாகும்.

பராந்தக வீர நாராயணன் தளவாய்புரச் செப்பேட்டைக் கரவந்தபுரத்தில் தங்கியிருந்தபோது வெளியிட்டான் என்பது அச் செப்பேட்டின்வழி அறியப்படுகிறது. உக்கிரன்கோட்டை பெருமை சான்ற பல அரசியல் தலைவர்களின் பிறப்பிடமாதலாலும் சிறந்த கோட்டையுடன் கூடிய நகரமாதலாலும் பாண்டியர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

**உக்சுமால்** மாயா நாகரிகம் நிலவிய நகரம். இது மெக்சிகோவில் யுகாதன் (Yucatan) மாநிலத்தில் மிரிதா (Merida) என்னும் ஊருக்குத் தெற்காக 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நாகரிகம் சற்றேறக்குறைய கி.பி. 600க்கு முற்பட்டது. கி.பி. 1000-இல் தோல்தெக்குக் குடியினர் இந்நகரின் மீது படையெடுத்தனர். இவர்கள் தங்களின் தலைநகரைச் சிக்கன் இட்சாவில் (Chichen Itza) அமைத்துக் கொண்டு உக்சுமாலில் இருந்த கட்டடங்களை அழித்தனர். உக்சுமால் தொடர்ந்து மாயபன் கூட்டு (League of Mayapan) ஆட்சிக் காலத்திலும் அரசியல் சிறப்புப் பெற்று விளங்கியது என்று மாயா நாகரிக மரபுவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. உக்சுமால் பகுதியைச் சுற்றிக் காடுகள் பெருமளவில் உள்ளன. இவ்வூர் வறண்ட பகுதியாக விளங்கியது. உக்சுமால் (Uxmal) கட்டடக் கலைச் சிறப்புப் பெற்ற நகரம். இக் கட்டடங்கள் கி.பி. 600 முதல் 900 வரையிலான காலகட்டத்தைச் சார்ந்தவை. இவற்றின் சிதைவுகள் ஏறக்குறைய 160 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகின்றன. இங்குள்ள தொன்மைக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை ஆளுநர் மாளிகையும் மாயவித்தை செய்பவரின் கோயிலும் (Temple of the Magecian) துறவறம் பூண்ட பெண்களுக்கான மடமும் ஆகும்.

ஆளுநர் மாளிகை 90 மீ. உயரமுடையது. இது கட்டட வடிவியல் முறைப்படி கட்டப்பட்ட மாளிகையாகும். வித்தை செய்பவரின் கோயில் பிரமிடு அமைப்புடையது. பெண்களுக்கான மடம் நாற்



சிதைவுற்ற கட்டடங்கள் – உக்சுமால்

கோண அமைப்புடையது; இம்மடம் நான்கு செல்வக அமைப்பிலான கட்டடங்களை ஒருங்கே கொண்டது. பல சிறு அறைகளையும் ஒரு பெரிய முற்றத்தையும் கொண்டது. ஆமைகள் வீடு (House of Turtles) என்ற கட்டடத்தில் ஆமைகளின் உருவங்களை ஒப் பனைப் பட்டைகளில் செதுக்கி உள்ளனர். எனவே, இப் பெயரை இக்கட்டடம் பெற்றுள்ளது. மேலும்; புறாக்கள் வீடு (House of Pigeons) என்றொரு கட்டடமும் சிறப்பானது.

**உக்ரேனியன் மொழி**: சோவியத்து ஒன்றியத்தின் இரண்டாம் பெரிய குடியரசு உக்ரேனியன் குடியரசு. இங்குள்ள மக்களின் தாய்மொழி உக்ரேனியன் மொழி. இம்மொழி உக்ரேனியாவிலும் (சுமார் 33,000,000 பேர்) கனடா போன்ற பிற நாடுகளிலு மாக ஏறக்குறைய 38,000,000 பேரால் பேசப்படுகிறது.

சோவியத்து ஒன்றியத்தில் 53.7 விழுக்காடு மக்கள் உருசிய மொழியையும் ஏனையோர் 130க்கு மேற்பட்ட பிற மொழிகளையும் பேசுகின்றனர். உக்ரேனியன் மொழி உருசிய மொழிக்கு அடுத்து மிகுதியான மக்களால் பேசப்படுகிறது.

மொழிச் சிறப்பாலும் இலக்கியச் சிறப்பாலும் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே உக்ரேனியன் மொழி தனித்தன்மை பெற்றிருந்தது. எனினும், பல அரசியல் காரணங்களால் இதன் தனித்தன்மை புறக்கணிக்கப் பட்டு, இது உருசிய மொழியின் ஒரு கிளை மொழியாகக் கருதப்பட்டு வந்தது. உக்ரேனியர்கள் தம் மொழியின் தனித்தன்மையை நிலைநாட்டப் பன்னூற்றாண்டுக் காலம் போராடினர். ஆனால், உருசியப் புரட்சிக்குப் பின்பே இம்மொழிக்கு ஒரு தனி மொழி என்னும் நிலை கிடைத்தது. இது அமைப்பில் உருசிய மொழியோடும் போலிசு (Polish) மொழியோடும் நெருங்கிய தொடர்பு உடையது.

சிலாவிய மொழிக் குடும்பத்தில் 11 மொழிகள் உள்ளன. இவற்றைத் தெற்கு மொழிகள், கிழக்கு மொழிகள், மேற்கு மொழிகள் என்னும் 3 பிரிவுகளில் வகைப்படுத்துவர். இவற்றில் கிழக்குச் சிலாவியப் பிரிவில் உருசியன், உக்ரேனியன், பைலோ உருசியன் என்னும் மொழிகள் அடங்கும். இவை மூன்றும் பழைய உருசியன் (Old Russian) மொழியிலிருந்து வளர்ச்சி பெற்றுத் தனித்தனி மொழிகளாயின.

உக்ரேனியன் மொழி பழைய உருசிய மொழியின் கிளைமொழியாகப் பிறந்து, நாளடைவில் வேற்று

மொழிகளின் கலப்பினைப் பெற்றுப் புதிய தனி மொழியாக வளர்ச்சி பெற்றது. இதனால், இம்மொழி சிறிய உருசியன் (Little Russian) என்றும் குறிக்கப் படுகிறது. உக்ரேனியர்கள் இலித்துவேனியா, போலந்து போன்ற வேற்று நாட்டு அரசுகளின்கீழ் நெடுங்காலம் வாழ்ந்தனர். எனவே, உக்ரேனியன் மொழியில் அந்நாட்டவரின் மொழிகளான இலத் தீன், போலிசு ஆகியவற்றின் இயல்புகள் மிகுதியாகக் கலந்து, இம்மொழி பழைய உருசிய மொழியிலிருந்து வேறுபட்ட தனி மொழியாக வளர்ச்சி பெற்றது; வேற்று நாட்டவர் ஆட்சிக் காலத்துத் தோன்றிய இதன் இலக்கியங்களில் கிறித்தவ சமயம், சமயசீர் திருத்தம், மறுமலர்ச்சி போன்றவற்றின் தாக்கங்கள் பெரிதும் இடம்பெற்றுள்ளன.

உருசிய மன்னன் சாரின் (Orthodox Zar Alexis) துணையுடன் உக்ரேனியர்கள் தம்மை ஆண்ட போலந்தை எதிர்த்துப் போராடி கி.பி. 1648-இல் விடுதலை பெற்றுத் தம் நாட்டை உருசியாவுடன் இணைத்துக் கொண்டனர். உருசிய ஆட்சியில் உருசிய மொழி மட்டுமே ஆட்சி மொழியாகத் திகழ, ஏனைய மொழிகளுக்குத் தனித்தன்மை மறுக்கப்பட்டது. உக் ரேனியன் மொழி தனித்தன்மை பெற்றால் உக்ரே னியா உருசியாவிலிருந்து பிரிந்து தனிநாடாகிவிடும் என்ற அச்ச உணர்வின் காரணமாக ஆட்சியாளர் இதன் வளர்ச்சிக்கு இடையூறுகள் பல தோற்றுவித் தனர்; இதனை ஒரு தனிமொழியாக ஏற்க மறுத்து உருசிய மொழியின் ஒரு கிளைமொழி என்று குறிப் பிட்டனர். இம்மொழியினைப் பள்ளிகளில் கற்றுத் தருவதற்கும் இதில் நூல்கள் அச்சிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய அடக்கு முறைகளி னால் பல அறிஞர்கள் தம் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று பிற நாடுகளில் வாழ்ந்தனர். உருசிய அரசு இம்மொழியின் சிறந்த கவிஞரான செவ்சங்கோ (Taraz Shev Chanko, 1814-61) என்பவரைப்பத்தாண் டுகள் எதுவும் எழுதக்கூடாது என்று தடைவிதித்த தோடு, அவரை நாடும் கடத்தியது. தலைமறைவாக இருந்து கொண்டேதம் கவிதைகள் மூலம் இவர் நாட்டு மக்களிடையே மொழிப்பற்றை வளர்த்து வந்தார். சிறந்த கவிஞரும் வரலாற்று ஆசிரியருமான குலிசு (Panteleman Kulish, 1819-97) என்பவரின் விடா முயற்சியினால் இம்மொழிக்குச் சிரிலிக்கு (Cyrillic) என்னும் எழுத்து முறையும் இலக்கண நூலும் உரு வாக்கப்பட்டன.

புதிய சோவியத்து அரசு ஏற்பட்டபின் உக்ரே னிய மொழி தன் மதிப்பையும் சிறப்பையும் நிலை நாட்ட முடிந்தது. கீவ் என்ற நகரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு உருவாகிய உக்ரேன் மாநிலத் தில் உக்ரேனியன் அறிவியற் கழகம் (All-Ukrainian Academy of Science) நிறுவப்பட்டது. உக்ரேனியன்- உருசிய அகராதி வெளியிடப்பட்டது.

மொழியமைப்பு: உக்ரேனியன் திராவிட மொழி கள் போன்று ஒட்டு நிலை (Agglutination) மொழி யாகும். திராவிட மொழிகள் போன்று ஆண், பெண், அஃறிணை என்ற மூன்று பகுப்புகள் பாலில் அமைந் துள்ளபோதிலும், எண்ணில் ஒருமை பன்மையுடன் இருமை என்ற பகுப்பும் காணப்படுகிறது. நிலம், எல்லை (ஆண்பால்); தொழிற்சாலை (பெண்பால்) போன்றவற்றைச் சுட்டும் அஃறிணைச் சொற்களி லும் பால் வேறுபாடு குறிக்கப்படுகிறது. திராவிட மொழிகளில் பெயரடை பெயரோடு பால் எண் இயைபு பெறுவதில்லை. (எ-டு) நல்ல பையன், நல்ல பெண், ஆனால், உக்ரேனியனில் இவ்வியைபு காணப் படுகிறது. எழுவாய், ஐ, ஆல், கு, அது, இடம், விளி என்ற வேற்றுமைகள் இம்மொழியில் உள்ளன. தமி ழில் போன்று இம்மொழியிலும் உருபுகள் பின் னொட்டுகளாகவே அமைகின்றன.


சான்று:

| ஒருமை | பன்மை (ஆண்பால்) |
|---|---|
| ரொபித்நெக்-அ (வேலைக்காரனை) | ரொபித்நெக்-எவ் (வேலைக்காரர்களை) |

இலக்கிய வளர்ச்சி: இம்மொழியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை உள்ள இலக்கியங்கள் பெரும் பாலும் கோயில் நூல்களாகவே (வேதாகம மொழி பெயர்ப்புப் போன்ற (Church) நூல்கள்) அதாவது, மெய்ம்மையியல் சார்ந்த இலக்கியங்களாகவே அமைந் துள்ளன. போலிசுக் கிறித்தவச் சமயப் பரப்புநர் கள் இம்மொழியின் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். பிற்கால இலக்கியங்கள் மறு மலர்ச்சிக் கருத்துகளையும் உண்மைக் கொள்கை யையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. குவிதா (Hryhony Kvita, 1778-1893) என்பவரின் கதை களில் மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்கள் கருப்பொருளாக அமைந்துள்ளன. வெளிநாட்டு அரசுகளின் அடக்குமுறையை முனைப்புடன் எதிர்த்து வந்த செவ்சங்கோவின் கொப்சார் (Kobzar) என்ற புகழ் பெற்ற கவிதை நூல், உக்ரேனிய மக்களின் ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையை விவரிக்கிறது. தொழிலாளர் சிக்கல்கள் போராட்டங்கள் பற்றிய புதிய பொருள்களை இலக்கியத்தின் கருவாக அமைத் துத் தந்தவர் இவுன் பிராங்கோ (Ivan Franko, 1856 -1916). உக்ரயின்கா (Lesya Ukrainka, 1871-1913)

என்பவரும் பிராங்கோவைப் போன்றேபுரட்சி எழுத்தாளர். உருசியப் புரட்சியை ஒட்டித் தோன்றிய இவர்களின் நூல்கள் உக்ரேனிய இலக்கிய வளர்ச்சியின் உச்ச நிலையைக் காட்டுகின்றன. உருசியப் புரட்சிக்குப்பின் தோன்றிய இலக்கியங்களில் மக்கள் தொண்டு, சமுதாய மேம்பாடு பற்றியவை முதன்மைப் பொருளாக அமைகின்றன. இரிசுகி (Maksym Rylsky, 1895-1964), இரிபக்கு (Natan Rybak, 1913) போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கோர்.

கே.ச




துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள் (இரண்டாம் பகுதி), பாரிநிலையம், சென்னை, 1969.

**Bernard Comrie**, The Languages of the Soviet Union, Cambridge, 1981.


**Isaev, M.I.**, National Languages in the USSR: Problems and Solutions, Moscow, 1977.

**Jakobson, R.**, Slavic Languages-A Condensed Survey, 2nd Edn., New York, 1955.

**Mathews, W.K.**, Languages of the USSR, Cambridge, 1951.

**உக்ரேனியா:** உக்ரேனியன் சோவியத்துச் சமநிலைக் குடியரசு அல்லது உக்ரேன் (Ukraine) என்பது சோவியத்து உருசிய நாட்டில் உள்ள தன்னாட்சிக் (சமநிலை) குடியரசுகளுள் (Autonomous Republics) ஒன்று. இது 603,700 ச.கி.மீ. பரப்பளவு உடையது. இதன் வடக்கில் பைலோ உருசியாவும், கிழக்கில் உருசியச் சோவியத்துக் கூட்டாட்சிச் சமநிலைக் குடியரசும்; தெற்கில் ஆசாவ் கடலும் கருங்கடலும், மேற்கில் மால்டேவிய சமநிலைக் குடியரசு, உருமேனியா, அங்கேரி, போலந்து, செக்கோசுலோவேக்கியா முதலிய நாடுகளும் இருக்கின்றன.

உருசிய உறுப்பு நாடுகளுள் இதுவே பெரியது. இது 1924-இல் சோவியத்து இணையத்தில் ஓர்




உக்ரேனியா

இணையக் குடியரசு நாடாக (Union Republic) ஆயிற்று.

உருசிய நாட்டின் மொத்த வேளாண்மை, தொழில் உற்பத்தியில் 2.7 விழுக்காடு உக்ரேனிலிருந்தே வருகிறது. இந்நாட்டின் நில அமைப்புப் பெருமளவு சமதரையாக இருப்பதாலும், நீர்வளமும் புல்தரையும் மிகுதியாகப் பொருந்தியிருப்பதாலும் இது வேளாண்மைக்கு மிகுதியும் ஏற்றது. உணவுத் தானியங்கள், உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழங்கள் ஆகியவை மிகுதியாக இங்கே பயிரிடப்படுகின்றன. ஆடு மாடு வளர்ப்பும் மீன்பிடித்தலும் இங்கு முதன்மையான தொழில்கள்.

இங்குக் கூட்டுப் பண்ணைகளும்(Collective Farms) அரசாங்கப் பண்ணைகளும் (State Farms) அமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் இயந்திரங்கள் கையாளப்படுகின்றன. மாங்கனிசு, பாக்சைட்டு, பாதரசம், மண்ணெண்ணெய், இரும்பு முதலிய பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. பெருமளவில் நீர்மின்சார உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய போக்குவரவு வசதிகளும் ஆற்று வழிக் கப்பல் போக்குவரவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாழும் மக்கள் கிழக்குச் சிலாவிய இனத்தைச் (East Slavic Group)சேர்ந்தவர்கள்.

வரலாறு: உக்ரேன் எனப்படும் நிலப்பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் உருசு (Rus) என்னும் ஓர் அரசாங்க அமைப்பு, வரங்கியின் வழிவந்த (Varangian Origin) ஒரு பிரபுவின் தலைமையில் இருந்தது. இப்போதைய உக்ரேனிய நகரங்களாகிய கீவ் (Kiev), செர்னிகாவு (Chernijgov) முதலியவை இந்த அமைப்பிலிருந்தன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பைசாண்டிய நகரத்திலிருந்து வந்த கிறித்தவ நெறியை இதன் அரசர் ஏற்றார். ஆனால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் இவர் பேரரசு தார்த்தாரியர் எனப்படும் நாகரிகமற்ற கூட்டத்தாருடைய படையெடுப்பால் அழிவுக் குள்ளாயிற்று.

கீவ் அரசு வீழுதற்கு முன்பே தெற்கு உக்ரேனில் நீசுட்டர் (Dneister) ஆற்றுவெளியில் விளாடிமிர், ஆலிக்கு (Holych) என்ற இரு நகரங்களை மையங்களாகக் கொண்டு இரு சிறிய அரசுகள் தோன்றின. இவற்றை ஒல்கினியாவின் (Volhynia) அரசர் உரோமன் (Roman) கி.பி. 1199-இல் ஒன்றாக இணைத்து, ஒரு புதிய அரசக் குடும்பத்தின் ஆட்சியைத் தொடங்கினார். இவ்வரச குடும்பத்தினாட்சியும் கி.பி. 1383-இல் மறைந்தது. பின்னர்ப் பியசுட்டுக் (Piast) குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அரசரை (Polish) அரசுரிமை வந்தடைந்தது. அவ்வழிவந்த புகழ்மிக்க காசிமிர் (Casimir) என்பாருடைய ஆட்சியில் நாடு விரிவடைந்தது.

போலந்தின் ஆட்சியில் உக்ரேன் வந்தபோது, அதில் இருந்த சுதந்திரக் குடியானவர்கள் உள்ளூரிலிருந்த பெரிய பிரபுக்களுக்கு வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆயினும் ஒரு சில குடியானவர்கள் தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதற்காக வளமான தென்கிழக்குப் பகுதிக்குத் தப்பிச் சென்று நீப்பர் ஆற்றுவெளியில் (Dnieper River) குடியேறினர். இவர்களே காசக்குகள் (Cossacks) என்று சொல்லப்பட்டனர். நாளடைவில் இவர்களுடைய எண்ணிக்கை பெருகிற்று. இவர்கள் சிறந்த குதிரை வீரர்களாயினர். ஆனால் போலிசு (Polish) நிலப்பிரபுக்கள், தப்பிச் சென்ற காசக்குகள் கலகக்காரர்கள் என்றெண்ணினர். அவர்களை நிலப்பிரபுக்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில்கொண்டுவர முயல, இருசாராருக்குமிடையே பிளவு தோன்றிற்று. தென் உக்ரேன் பகுதியிலுள்ள சுதந்திரக் காசக்குகளை அடக்குவதற்குப் போலந்து குடக்குக் கோட்டை (Kudak) அமைக்க முற்பட்டபோது (கி.பி. 1635-38) சுதந்திரக் காசக்குகள் கலகங்கள் செய்தனர்; மேலும், சார் அரசர் அலக்சியாவின் பாதுகாப்பை வேண்டினர்.

கீவ் நாட்டை மீட்டுக்கொள்ள வாய்ப்பை எதிர்பார்த்திருந்த மாசுகோவின் உரோமனாவ் அரசர் இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு போலந்தின்மீது போர் தொடுத்தார். அண்ட்ரூசோவோ உடன்படிக்கையின்படி உக்ரேன் நாடு நீப்பர் ஆற்றின் வழியாகப் பிரிக்கப்பட்டு உருசியாவுக்கும் போலந்துக்குமிடையே பங்கிடப்பட்டது. இந்நிலையில் தோரோ என்ற புதிய காசக்குத் தலைவர் உக்ரேனை ஓட்டோமான் துருக்கியப் பேரரசுக்குட்பட்ட அரசாக ஆக்க விரும்பினார். நான்காம் சுல்தான் முகமது என்னும் ஓட்டோமான் பேரரசர் கி.பி. 1668-இல் உக்ரேனைத் தமது பாதுகாப்பில் கொண்டுவரும் பொருட்டுப் போலந்தினுள் படையெடுத்துச் சென்று, போலந்தின் பகுதியிலுள்ள உக்ரேனை ஓட்டோமானின் ஆட்சியினுள் வைத்தல் வேண்டுமென்று ஓர் ஒப்பந்தத்தைச் செய்தார். இவ்வொப்பந்தத்தைப் போலிசு பாராளுமன்றம் ஒப்புக்கொள்ளவில்லை. போலிசு அரசர் மூன்றாம் சான் சோபியசுகி போலிசு உக்ரேனிலிருந்து துருக்கியர்களை அகற்றிவிட்டார்.

உருசியப் பகுதியிலிருந்த உக்ரேனில் காசக்குகளின் தலைவரான ஐவன் மசேபா உருசிய சார் மன்னர் முதலாம் பீட்டருக்கு உதவிசெய்தாலும், இரண்டு உக்ரேன் பகுதிகளையும் ஒன்றாக இணைத்துத் தாமே அரசராதல் வேண்டுமென்ற நோக்கத்துடன் சுவீடன் அரசர் பன்னிரண்டாம் சார்லசுடன்

ஓர் ஒப்பந்தம் செய்தார். ஆனால் பீட்டர் ஒரு போரில் சார்லசைத் தோற்கடித்துவிடவே மசேபாவின் எண்ணம் கைகூடவில்லை. உருசியப் பகுதியிலிருந்த உக்ரேன் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. உருசியாவும் பிரசியாவும் இரண்டாம் முறையாகப் போலந்தை கி.பி.1795-இல் பங்குபோட்டுக் கொண்ட போது, போலிசுப் பகுதியிலுள்ள உக்ரேனும் உருசியாவுக்கு வந்துவிடவே, உருசியாவின் ஒரு பாகமாக உக்ரேன் இணைக்கப்பட்டது.

உக்ரேனின் 30 தொண்டர்கள் கீவ் நகரத்தில் கி.பி. 1846-இல் கூடி ஒரு கழகத்தை அமைத்துச் சுதந்திரம் பெற முயன்றனர். முன்பு ஆசுத்திரியாவுடன் சேர்க்கப்பட்ட உக்ரேன் பகுதியிலுள்ள, உலுவாவ் (Lvov) நகரம் உக்ரேன் தேசியவாதிகளின் செயல்களுக்கு மையமாக இருந்தது. ஒரு சுதந்திர நாட்டினராகத் தாங்கள் அமையும் பொருட்டு, ஒரு தேசிய உக்ரேன் மன்றத்தைத் தேர்ந்தெடுத்தனர். இது 1917-இல் கூடி ஒரு குழுவை அமைத்தது. இக்குழு உருசேவுசுகி (Hrushevsky) என்பவரைத் தலைவராகக் கொண்ட தன்னாட்சியுடைய உக்ரேனியக் குடியரசை அறிவித்தது. இதற்கிடையில் உருசியாவில் புரட்சி நடந்து பொதுவுடைமை அரசாங்கம் அமைக்கப்பட்டது. அது 1917 திசம்பரில் உக்ரேன் சோவியத்து அரசாங்கத்தைக் கார்காவில் (Kharkov) நிறுவிற்று. உக்ரேனிய அரசாங்கம் தன்னைச் சுதந்திர, இறைமையுடைய உக்ரேன் குடியரசு என்று அறிவித்துக்கொண்டது. போரின்போது உக்ரேன் இரண்டாகப் பிரிந்திருந்தாலும், போர்முடிந்ததும் பொதுவுடைமைப் படை கீவையும் மற்ற உக்ரேனிய நகரங்களையும் கைப்பற்றி அதை மீண்டும் (1920) இணைத்தது.

உருசியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, பைலோருசியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, உக்ரேனியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, திரான்சுகாகேசிய சோவியத்துச் சமநிலைக் குடியரசு ஆகிய நான்கு குடியரசுகளை ஒரு கூட்டாட்சி நாடாக இணைத்து, 1923-இல் ஓர் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை அமைக்கப்பட்டது. உக்ரேன் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இசுடாலினின் ஆட்சியில் பல உக்ரேன் தலைவர்கள் துரோகக் குற்றச்சாட்டுக்குள்ளாகிக் கொலையுண்டனர். இரண்டாம் உலகப் போரின்போது, போலந்தில் ஓர் உக்ரேனிய இரகசிய இராணுவ அமைப்புச் செருமனியின் உதவியுடன் உக்ரேனின் சுதந்திரத்தை மீண்டும் பெற முயன்றது. ஆனால், போரின் முடிவில் உருமேனியாவிடமிருந்தும் செக்கோசுலேவேகியாவிடமிருந்தும் போலந்திடமிருந்தும் புதிய நிலப் பகுதிகள் உக்ரேனோடு சேர்க்கப்பட்டு, அது முன்னைவிட அளவில் இருமடங்கு பெரிதாகி, உருசியக் கூட்டாட்சியின் ஓர் உறுப்பு நாடாக அமைந்துள்ளது.

உக்ரேனின் அரசியலமைப்பு: உக்ரேனின் அரசியலமைப்பு 1937-ஆம் ஆண்டின் அரசியலமைப்பையும் 1944-இல் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களையும் ஒட்டி அமைந்தது. இவ்வரசியலமைப்பு அயல் நாடுகளோடு நேரடியாக உறவுகளை வைத்துக்கொள்ளுதற்கு உக்ரேனுக்கு அதிகாரம் அளிக்கிறது. இது மற்ற நாடுகளோடு உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவும் தூதியலதிகாரிகளை அமர்த்திக்கொள்ளவும் தனக்குப் படைகளை அமைத்துக்கொள்ளவும் இயலும். உக்ரேனும் பைலோருசியாவும் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகவும், 70 பன்னாட்டு நிறுவனங்களில் உறுப்பினராகவும் இருக்கின்றன. ஆனால், இவை தன்னாட்சியுடைய இறைமையுடைய (Sovereign) நாடுகளல்ல. மேலும், இவற்றால் சோவியத்து நடுவண் அரசாங்கத்தின் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்த இயலாது.

அரசாங்கம்: சட்டமன்றம்: உக்ரேன் இணையக் குடியரசுக்கு ஓர் ஒற்றை மன்றச் சட்டமன்றம் (Unicameral Legislature) இருக்கிறது. இதற்குத் தலைமைச் சோவியத்து (Supreme Soviet) என்று பெயர். இதன் உறுப்பினர்கள் ஒரே பட்டியலில் அடங்கியுள்ள வேட்பாளர்களிடையே இருந்து 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது ஆண்டிற்கு இருமுறை கூடி மாசுகோவில் நடுவண் அரசாங்கம் நிறைவேற்றும் வரவு செலவுத் திட்டத்துக்கும் மற்றச் சட்டங்களுக்கும் ஒப்புதலளிக்கிறது. நடுவண் அரசாங்கத்திலிருப்பதுபோல் இங்கும் தலைமை சோவியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட (19) உறுப்பினர்களையுடைய தலைமைக்குழு (Presidium) என்ற ஒரு சிறு மன்றம் இருக்கிறது. இது சட்டமன்றம் கூடாத காலங்களில் சட்டமன்றத்தின் பணிகளையும் நிருவாகப் பணிகளையும் செய்கிறது.

நிருவாகக் குழு: இவ்வுறுப்புக் குடியரசின் உயர்தர நிருவாகக் குழு அரசை நிருவகிக்கும் அமைச்சர் குழு ஆகும். இதன் தலைவர் தலைமை அமைச்சரை ஒத்திருக்கிறார். தலைமை சோவியத்துச் சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங்களெல்லாம் அமைச்சரவையினாலேயே கொண்டுவரப்படுகின்றன. மேலும், நடுவண் அரசாங்கத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பு அமைச்சர் குழுவைச் சேர்ந்தது.

நீதிமன்றம்: உக்ரேனின் உயர் நீதிமன்றம் தலைமை நீதிமன்றம் (Supreme Court) என்று

சொல்லப்படுகிறது. இதன் 5 நீதிபதிகளும் 5 ஆண்டுகளுக்குத் தலைமைச் சோவியத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது கீழ் நீதிமன்றங்களின் செயல்களை மேற்பார்வை செய்கிறது. அரசியலமைப்புப் பற்றிய கேள்விகளைத் தீர்ப்பதற்குத் தலைமைக் குழுவிற்குத்தான் அதிகார முண்டேதவிர, தலைமை நீதிமன்றத்துக்கு அவ்வதிகாரம் இல்லை. உள்ளூர் நிலையில் மக்கள் நீதிமன்றங்களால் (People Courts) நீதி வழங்கப்படுகிறது.

அரசியல் கட்சி: உருசியச் சோவியத்து இணையத்தின் பொதுவுடைமைக் கட்சியின் ஒரு கிளையாக 1918-இல் நிறுவப்பட்ட உக்ரேன் பொதுவுடைமைக் கட்சி மட்டுமே இங்குச் செயற்படுகிற அரசியற் கட்சி. தலைமைச் சோவியத்தினால் ஒப்புக்கொள்ளப்படுகிற சட்டங்களுள் பெரும்பாலானவை இக்கட்சியினிடமிருந்தே தோன்றுகின்றன அல்லது இதனுடைய ஒப்புதலைப் பெறுகின்றன.

துணை நூல்:

**Vernadsky George**, Russia at the Modern Age, 1959.

**உகந்த அளவடைதல்**: பொருளியலின் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு முடிவு காண உகந்த அளவடைதல் (Optimisation) சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. இதன் பயன்களைப் புரிந்துகொள்ள உகந்த அளவடைதலின் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. சிக்கனமான முறையில் செயற்படுவது உகந்த அளவடைவதற்கு வழிகாட்டியாக உள்ளது. பொருளியலில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகக் கணக்கியல்கோட்பாடான 'உகந்த அளவடைதல்' அதன் பல்வேறு பிரிவுகளிலும் புகுத்தப்பட்டுள்ளது. உகந்த அளவடைதல் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் அளவையோ அதன் மதிப்பையோ மிகுதியாக்குவது அல்லது உயர்த்துவது ஆகும். இது பொருளியலின் பலவகையான கருத்துகளுக்குத் துணையாக இருப்பதால், இதனைப் பொதுவான முறையில் விளக்குவது கடினமானது.

உகந்த அளவடைதல் என்பது நடைமுறைப் பொருளியலில் ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை. இது பலவகையான பொருள் வளங்களைக் கொண்டு மனிதனின் பல தரப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வழிகளை எடுத்துக்காட்டும். பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மனித நடவடிக்கைகளைப் பற்றியே பொருளியல் ஆராய்கிறது. பொருள் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் மக்கள் அதனைச் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, உகந்த அளவடைதல் பல்வேறுபட்ட பயன்களில் பயன்படுத்தக் கூடிய, கிடைத்தற்கரிய பொருள் வளங்களையும், பொருள்கள், பணிகள், உற்பத்திக் காரணிகள் ஆகியவற்றைச் சமுதாயம் தன் தேவைகளைச் சமாளிக்கும் வகையிலும், பெரும்பயன் அடையும் வகையிலும் செயற்படுவதாகும்.

வளங்கள் கிடைத்தற்கருமையாகவும் மனிதனின் விருப்பங்கள் கணக்கிலடங்காதவையாகவும் இருப்பதால் ஒவ்வொருவரும் எல்லாப் பொருள்களையும் அடையமுடிவதில்லை. இதன் காரணமாகச் சிக்கல் பல உருவாகின்றன. எடுத்துக்காட்டாக, மின்சாரப் பற்றாக்குறை, வேலையின்மை, வீட்டு நெருக்கடி ஆகிய பொருளியல் இன்னல்களுக்குச் சிறந்த முறையில் முடிவு காண வேண்டியுள்ளது. திறமையான பொருளியல் முடிவுகள் (Economic Decisions) என்பது பின்வரும் வினாக்களின் விடையிலும் உகந்த அளவடைதலிலும் அடங்கியுள்ளது.

பொருளியல் வல்லுநர் சாமுவேல்சன் பொருளியலின் அடிப்படையில் பொருளியல் முடிவுகள் எடுக்க வேண்டும் என்கிறார். அதாவது, (1) எந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்? (2) எம்முறையில் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டும்? (3) எவ்வளவு பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்? (4) உற்பத்தியான பொருள்கள் எவ்வாறு மாற்றம் செய்யப்பட வேண்டும்? (5) உற்பத்திப் பொருள்களை யாருக்கு, எவ்வளவு பகிர்ந்து அளிக்க வேண்டும்? (6) எப்படிப் பொருள்களின் உற்பத்தியை உகந்த அளவில் வைத்து வேலைவாய்ப்பை நழுவ விடாமல் வைத்திருக்க வேண்டும்?

பொருள் வளங்கள் திறமைக் கண்ணோட்டத்தில் உயர் உகந்த முறையில் ஒதுக்கப்படுவதற்குச் சரியான பொருள்களைத், தேவையான அளவு சிறந்த முறையில் உற்பத்தி செய்ய வேண்டும். மேலும், உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி உகந்த அளவில் உற்பத்தி செய்வதுடன், உற்பத்திப் பொருள்களின் பங்கீட்டில் ஏற்படும் மாற்றங்களினால் சில பாதக நிலைக்குத் தள்ளப்பட்டுச் சிலர் சாதக நிலையை அடையாத சூழ்நிலை உருவாக வேண்டும். இது தொழில் நுணுக்க அறிவு, இயற்கை வளங்கள், சமுதாயத்தில் உள்ள உழைப்பு வளம் ஆகியவற்றையும் சமுதாய மதிப்புகளான பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது. சில காலங்களில் சமுதாய மதிப்புகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அமையாமல் இருக்கலாம்.

மேற்கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து உகந்த அளவு உச்ச அளவெனக் கருதப்படக்கூடாது. பல சூழ்நிலைகளில் உச்ச அளவை எட்டுவது மட்டுமே பொருளியல் நடவடிக்கைகளில் அடிப்படை நோக்க மாக இருப்பதில்லை. புகழ், பெயர், பாதுகாப்பு, விருப்பம், உடல்நலம், ஏனையோரின் நலத்தில் அக்கறை ஆகியவையும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தனி மனிதன் அல்லது ஒரு குடும்பத்திற்கு நேரம், பணம் மற்றும் பல பொருள்கள் கிடைத்தலருமை வளங்களாக இருக்கின்றமையால், கடற்கரையில் உல்லாசமாக விடுமுறையைக் கழிப்பது என்பது உழைப்பின் மூலம் கிடைக்கும் பயன்களைத் தியாகம் செய்வதாகும். தொழில் நிறுவனத்திற்குப் புதுக் கருவியை நிறுவுவது என்பது புது நிருவாகக் கட்டடத்திற்குப் பதிலாக அமைவதாக இருக்கலாம். ஒரு நாடு போர்க்கருவிகளைப் பெருக்குவது என்பது சிறந்த கல்வியமைப்பைக் கைவிடுவதாக இருக்கலாம். எல்லாச் சமுதாயத்திலும் எல்லாக் காலத்திலும் கிடைத்தலருமை காரணமாக மனித நடவடிக்கைகளில் தனிப்பட்ட சிக்கன முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது வரலாற்று நிகழ்ச்சிகளால் தெரியவருகின்றது.

நுகர்வோர் பொருள்களை வாங்கும்பொழுது நிலவுகிற அங்காடி விலையில் கையிருப்புப் பணத்திற் கேற்பத் தங்கள் தேவையினை மாற்றிக் கொள்வர். உச்ச அளவு பயன்பாட்டைத் தருகிற அளவு பொருளை நுகர்ச்சிக்காகப் பயன்படுத்துவதில்லை. உகந்த அளவடைதல் என்ற கோட்பாட்டின்படி, பொருளின் நுகர்ச்சியின் மூலம் கிடைக்கிற இறுதி நிலைப் பயன்பாடும் அதன் விலையும் சமமாக இருக்கிற அளவுப் பொருளை வாங்குவர். பொருளின் விற்பனையில் உகந்த அளவு என்பது அதன் தேவையும் அளிப்பும் சமமாக உள்ள நிலையாகக் கருதப்படுகிறது.

என். மா.

துணை நூல்கள்:

**Chiang, A.C.,** Fundamental Methods of Mathematical Economics, Mc-Graw Hill Limited, London, 1974.

**John E, Maher,** What is Economics? John Wiley and Sons, New York, 1969.

**Norman F. Keiser,** Introductory Economics, John Wiley and Sons, London, 1963.

**William, A., Kovisto,** Principles and Problems of Modern Economics, John Wiley and Sons, New Delhi, 1957.

**உகந்த அளவு நிறுவனம்:** தொழிலமைப்புகளில் நிறுவனம் என்பது வரையறுக்கப்பட்ட முறையில் தொழில்நுட்ப விதிகளுக்கேற்ப உற்பத்திக் காரணிகளை உற்பத்திப்பொருளாக மாற்றுவதாகும். அத்தகைய நிறுவனம் பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழில் நுட்ப அலகாகும். பலவகைத் தொழில் நிறுவனங்களுள் உகந்த அளவு நிறுவனம் (Optimum Firm) மிகச் சிறப்புடையது. உகந்த அளவு தொழில் நிறுவனத்தை அறிந்து கொள்ள, பலவகைத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடும் முறைகளை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. அவை: (1) நிறைவுப் போட்டி (Perfcet Competition) நிறுவனம், (2) முற்றுரிமை (Monopoly) நிறுவனம், நிறை குறைப் போட்டி (Imperfect Competition) நிறுவனம் முதலியன.

தொழில் நிறுவனங்கள் அங்காடியில் நிலவும் சூழ்நிலைக் கேற்பத் தங்கள் பொருள்களின் விலையை வரையறுக்கின்றன. முற்றுரிமை அங்காடியில் ஒரே ஓர் உற்பத்தியாளரே இருப்பர். அவர் அந்தப் பொருளின் அளிப்பைக் கட்டுப்படுத்துவதால், அதன் விலையையும் வரையறுப்பர். எ-டு: இரயில்வே போக்குவரத்து மைய அரசின் முற்றுரிமை பெற்ற நிறுவனமாக இருப்பதால் அரசு விரும்பியபடி கட்டண மாற்றங்களைச் செய்கிறது.

நிறைவுப் போட்டி அங்காடியில் பல தொழில் நிறுவனங்கள் பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. அவை தடையின்றி உற்பத்தியில் ஈடுபடவும் உற்பத்தியை நிறுத்தவும் இயலும். எந்த ஒரு தனிப்பட்ட நிறுவனமும் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. இச் சூழ்நிலையில் ஒரே விலைதான் நிலவ முடியும். எனவே, அவ்விலை வரையறையின் மூலம் உச்ச ஆதாயம் பெற உற்பத்தியளவை மாற்றியமைத்துக் கொள்கின்றன. முற்றுரிமை அங்காடியில் உச்ச ஆதாயம் பெற விலையை மாற்ற முடியும். இவ்விரண்டு வகையான அங்காடிகளிலும் வாங்குபவர்களை இழுப்பதற்கென விற்பனைச் செலவு எழாது. நடைமுறையில் பெரும்பான்மையான தொழில் நிறுவனங்கள் இவ்விரண்டு அங்காடிகளுக்குமிடையே அதாவது, நிறைகுறைப் போட்டி அல்லது முற்றுரிமைப் போட்டிச் சூழ்நிலையில் செயற்படுகின்றன. இச்சூழ்நிலையில் வாங்குபவர்களைக் கவரப் பண்டத்தின் தன்மையில் மாற்றங்களை உருவாக்குவது மட்டுமன்றி, விளம்பரம், பரிசுப் பொருள்கள் வழங்குதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட தொழில் நிறுவனங்கள் உச்ச ஆதாயத்தையடையும் குறிக்கோளுடன்

செயற்படுகின்றன. இக் குறிக்கோளை அடையும் நிலை ஒரு நிறுவனத்தின் சமநிலை (Equilibrium) எனக் கருதப்படுகிறது. அதாவது, வரையறுக்கப்பட்ட விலையில் உற்பத்தியளவை மிகையாக்க அல்லது குறைக்க நோக்கமற்றதாக அந்த நிறுவனம் செயற்பட வேண்டும். ஆதாயம் மொத்த வருவாய்க்கும் மொத்தச் செலவுக்குமிடையே உள்ள வேறுபாட்டிலிருந்து பெறப்படுகிறது. உச்ச ஆதாயத்தைக் கணக்கிடப் பல்வேறுபட்ட உற்பத்தி அளவுகளில் ஆதாயத்தை ஆய்வு செய்யுங்கால் உச்ச ஆதாயத்தில் இறுதிநிலைச் செலவு அந்நிறுவனத்தின் இறுதிநிலை வருவாய்க்குச் சமமாக இருக்கும் என்பது பெறப்படுகிறது. இறுதிநிலைச் செலவு இறுதிப் பண்டத்தின் விற்பனையிலிருந்து பெறுகிற வருவாய் ஆகும். இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவைவிட அதிகமாக இருப்பின் உற்பத்தியை மிகுதிப்படுத்துவதன் மூலம் ஆதாயத்தை மிகையாக்க இயலும். இறுதிநிலை வருவாய் இறுதி நிலைச் செலவைவிடக் குறைவாக இருப்பின், உற்பத்தியைக் குறைப்பதன் மூலமே ஆதாயத்தை மிகுதியாக்க இயலும். இறுதிநிலை வருவாய் = இறுதி நிலைச் செலவு என்ற நிலையில் நிறுவனத்தின் ஆதாயம் உகந்த அளவாக இருக்க வேண்டுமென்பதன்று. இவ்விதி நிருவாகத்தை வழிநடத்தும் கருவியே. நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளவும் அதனைச் சுருக்கமான முறையில் கூறவும் இச்சமன்பாடு உதவி செய்கிறது. இதுவே பொருளாதாரத் திறன் கண்ணோட்டத்தில் மிகச்சிறந்த முறையில் பணியாற்றும் நிறுவனம்.

அங்காடியில் வரையறுக்கப்பட்ட விலை நுகர்வோருக்கு நன்மை பயப்பதாக அமைவது அங்காடியில் நிலவும் போட்டியின் தன்மையைப் பொறுத்தது. நிறைவுப் போட்டியில் விலை ஆடம்சுமித்தின் காண முடியாத சக்தியின் (Invisible hand) மூலம் அதாவது, அங்காடித் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் நிலையில் முடிவு செய்யப்படுகிறது. நிறுவனங்களுக்கிடையே பண்டத்தின் விலை (சராசரி வருவாய்) மாறாதிருப்பதால் விலை இறுதிநிலை வருவாய்க்குச் சமமாக உள்ளது.


குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டி நிறுவனம் ஆதாயத்தையோ இயல்பு ஆதாயத்தையோ இழப்பையோ அடையலாம். ஆனால், நீண்டகாலத்தில் புதிய நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையில், எல்லா நிறுவனங்களும் சமநிலையை அடைய இயல்பு ஆதாயத்தையே பெறமுடியும். ஏனெனில், குறுகிய காலத்தில் இயல்பு ஆதாயத்தை விட ஆதாயம் மிகுதியாகப் பெறும் பொழுது, புதிய நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடுவதால் உற்பத்திக் காரணிகளின் விலை மிகுதியாவதாலும் பண்டத்தின் அளிப்பு மிகுதியாவதாலும் முறையே உற்பத்திச் செலவு கூடும்; விலை குறையும். இவ்வாறாகத் தடையற்ற நுழைவின் காரணமாக மிகுதியான ஆதாயம் களைந்தெறியப்படுகிறது. சாதகமான சூழ்நிலை காரணமாகவே நிறுவனம் தற்காலிகமாக ஆதாயம் பெற முடியும். குறுகிய காலத்தில் இழப்பு நிகழும்போது, நிறுவனங்கள் வெளியேறுவதால் அளிப்புக் குறைந்து விலை உயர்ந்து செலவிற்குச் சமமாகும்.

நீண்டகால நிறைவுப் போட்டியில் ஆதாயமிருக்காது. சமநிலையில் ஆதாயம் உச்சமாக இருக்கும் எனக் கருதப்படுகிற சூழ்நிலையில் ஆதாயம் இல்லையெனவும் கருதலாம். இவ்விரு முரண்பட்ட கருத்துகளும் புரிந்துகொள்ள வேண்டியனவாகும். அதாவது, சம நிலையில் உச்ச ஆதாயம் வெறுமையாக (Zero) இருந்தாலும், அது இழப்பை விட மேலானதாகும். அவ்வாறின்றி இழப்பாக இருந்தாலும் அது உண்மையாக இருக்கும். அங்காடி நடவடிக்கைகள் காரணமாக நிறைவுப் போட்டி நிறுவனங்கள் நீண்டகாலத்தில் சமநிலையில் மிகக்குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கின்றன. இத்தகைய நிறுவனங்கள் அதிகத் திறமை வாய்ந்தனவாக இருக்கும். இவ்வாறாக உண்மைச் செலவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உயர் உகந்த அளவு நிறுவனங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

உகந்த அளவு நிறுவனத்தின் அளவு தொழில்களுக்குத் தொழில் மாறுபட்டிருக்கும். வேளாண்மைத் துறையில் இது சிறியதாகவும் பேரளவுத் தொழில்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரியதாகவும் இருக்கும். எனவே, குறிப்பிட்ட அளவில் உற்பத்தி பெருகும்பொழுது சராசரிச் செலவு குறையும். பேரளவுச் சிக்கனமுறை காரணமாக அதன்பின்னர்ச் சராசரிச் செலவு மிகும். இவ்வாறாக நிறைவுப் போட்டியில் எல்லா நிறுவனங்களும் உகந்த அளவு நிறுவனமாக இருக்கும்.


நிறைவுப் போட்டி தவிர்ந்த பிற சூழ்நிலைகளில் நிறுவனத்தின் உற்பத்தி எல்லோருக்கும் உகந்த அளவாக இருப்பதில்லை. அது உற்பத்தியாளருக்கு மட்டுமே உகந்ததாகவும் நுகர்வோரிடமிருந்து அதிக விலைபெறும் நிறுவனமாகவும் திகழ்கிறது. பிற நிறுவனங்கள் நீண்ட காலச் சமநிலையில் இயல்பு ஆதாயத்தை அடையும் சூழ்நிலையில் அது உச்சமாக இருக்குங்கால், சராசரிச் செலவு உண்மையானதாக இருப்ப

உகந்த அளவு மக்கள்தொகை




படம்-1

நிறைவுப்போட்டியின் நிறுவனம்




படம்-2

முற்றுரிமை நிறுவனம்

தில்லை (படம்-2) அதனால் இத்தகைய நிறுவனம் திறமைக்குறைவாகச் செயற்படுவதாகக் கருதமுடியாது.

என்.மா.

துணை நூல்கள்:

**Bain**, J.S., Price Theory, John Wiley and Sons, New York, 1948.

**Norman**, **F.**, **Keiser**, Introductory Economics, John Wiley and Sons, New York, 1963.


**Kovisto**, **W. A.**, Principles and Problems of Modern Economics, Asia Publishing House, London, 1957.

**Paul**, **A.**, **Samuelson**, Economics - An Introductory Analysis, Mc Graw Hill Book Company, New York, 1961.

**உகந்த அளவு மக்கள்தொகை**: இது ஒரு நாட்டிற்குரிய தனித்தன்மையினை மையமாகக் கொண்டு, அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிகோலும் இயற்கைச் செல்வங்களைப் பயனுடையதாக மாற்றத் தேவைப்படும் தரமான மக்கள்தொகை வரையறையைக் குறிக்கும். இயற்கைச் செல்வங்களின் வளர்ச்சியைக் காட்டிலும் மக்கள் தொகைவளர்ச்சி மிகையாயிருந்தால் பொருளாதார வளர்ச்சியில் இடையூறுகள் ஏற்படும். அதுவே வாழ்க்கைத் தரத்தையும் தனியாள் வருமானத்தையும் பாதித்து முதலீடு, உற்பத்தி, வேலை வாய்ப்பு, நுகர்வு ஆகியவற்றைக் குறைத்துவிடுகிறது. எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகள் யாவை? அதை எதற்காக, எப்பொழுது கட்டுப்படுத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய உகந்த அளவு மக்கள்தொகைக் (Optimum Population) கோட்பாடு உதவுகிறது.

மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக் கோட்பாட்டினர் உலகம் ஏற்கெனவே நெருக்கடியாக உள்ளதெனக் கருதுகின்றனர். இப்போது ஆண்டொன்றுக்கு 0.4 விழுக்காட்டில் பெருகி வரும் உலக மக்கள் தொகை 175 ஆண்டுகளில் இருமடங்காகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக நாடுகள் பலவற்றில் மக்கள்தொகையின் வளர்ச்சி வீதம் இதைவிடவும் மிகையாக உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உணவு, உடை, உறைவிடம் போன்ற பொருள்களின் பங்கீட்டில் தனியாளுக்குக் கிடைக்கும் பங்கு காலப்போக்கில் குறையும். இது நாட்டின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்திருக்கும். ஒரு நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி முறையையும் உற்பத்திப் பொருள்களின் வளர்ச்சி முறையையும் அறிய அந்நாட்டு வருமானத்தையும் மொத்த உற்பத்தியையும் மக்கள் தொகை அளவோடு ஒப்பிட்டுப் பகுத்தாய வேண்டும்.

மக்கள்தொகையின் வளர்ச்சிமுறையை விளக்க அளவையியல் (Logistic), காம்பர்ட்சு (Gompertz) போன்ற வளைகோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறை மால்தசுவின் (Malthus) கோட்பாட்டுடன் தொடர்புடையது. வரைபடத்தில் காட்டியுள்ள வாறு நாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பொறுத்து, மக்கள்தொகை வளர்ச்சி K என்ற உகந்த அளவை எட்டிய பின்னர், அதிலேயே நிலைத்து நிற்கும் சூழ்நிலை இயல்பாக உருவாகும். இதன்படி மக்கள்தொகை வளர்ச்சி தொடர்ச்சியாகப் பெருகிக் கொண்டே செல்லாது. அது உகந்த அளவை அடைந்த பின்னர் அதிலேயே நிலைத்து நிற்கும். இதைப் பின்வரும் வரைபடம் விளக்குகிறது.




மக்கள்தொகை இந்த உகந்த அளவை அடைவதற்குத் தேவையான இடைப்பட்ட கட்டுமானக் காலத்தில் (Gestation Period) தனியாள் வருமானம் மக்கள்தொகை வளர்ச்சியால் பாதிக்கப்படலாம். மால்தசு மக்களிடையே தீய பழக்கங்கள் வளர்ச்சியடைவதற்கு மக்கள்தொகைப் பெருக்கமே காரணம் என்றார். அவருடைய கூற்றுப்படி வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் வளர்வீதத்தில் (Arithmetic Progression) 1, 2, 3, 4, 5, 6, ... எனவும், மக்கள்தொகை பெருக்கல் வீதத்தில் (Geometric Progression) 1, 2, 4, 8, 16 எனவும் வளர்ச்சியுறுவதால் மக்கள் வீதத்தைவிட உணவு 1:1, 2:2, 3:4, 4:8 எனக் குறைந்துகொண்டே செல்லும். பற்றாக்குறை காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களும் இயற்கையின் சீற்றங்களான வெள்ளம், வறட்சி போன்றவையும் கொடிய பஞ்சமும் உருவாகும். பற்றாக்குறையைத் தீர்க்கத் தொழில்நுட்ப வளர்ச்சி உதவும் என்பதில் மால்தசு நம்பிக்கை வைக்கவில்லை.

வளர்ச்சியுற்ற நாடுகளில் தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தேவைப் பொருள்களின் உற்பத்தி மிகையாவதால், வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு, பெற்றோர்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்தத் தூண்டப்படுகின்றனர் என்பது அந்நாட்டு வரலாறுகளிலிருந்து அறியப்படுகிறது. மேலும், மால்தசு கருதுவது போல மக்கள்தொகைப் பெருக்கம் எல்லாச் சூழ்நிலையிலும் தீமை தருவதில்லை. ஏனெனில், மக்கள்தொகைப் பெருக்கத்தால் உணவு உண்ண வாய் மட்டுமன்றி உழைப்பதற்கு இரு கைகளும் கூடவே தோன்றுகின்றன. எனவே, மக்கள் நுகர்வோராக மட்டுமன்றி உற்பத்தியாளராகவும் இருக்கின்றனர் என்பது தெளிவு.

மக்கள்தொகைக் குறைவும் மிகையான மக்கள் தொகையைப் போலத் தீமை பயக்கும். போதுமான அளவு உழைப்பாளர் கிடைக்காவிடில் இயற்கை வளங்களைப் பயன்படுத்த இயலாது. ஆக்கத்தேவை இல்லாத காரணத்தால் வேலைப் பகுப்பினால் உருவாகும் சிக்கனங்களைப் பயன்படுத்த இயலாது. ஒரு நாட்டின் நிலம் வளம் பொருந்தியதாகவும் நிலத்தடி பெருமளவில் கனிப்பொருள்கள் அடங்கியதாகவும் இருந்தாலும், போதுமான மக்கள்தொகை இல்லாவிடில் அவை மதிப்பின்றிப் பயனற்றுப் போகும். இவற்றைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவும் நுகரவும் உழைப்பு இன்றியமையாதது. எனவே, மக்கள்தொகை அளவு உற்பத்திக் காரணிப் பொருள்களின் அளவைச் சார்ந்துள்ளது.

எட்வின் கானன் (Edwin Cannon) என்பவரின் கூற்றுப்படி உகந்த அளவு மக்கள் தொகை நாட்டு உற்பத்தியோடு தொடர்புடையதேயன்றி, உணவு உற்பத்தியை மட்டுமே சார்ந்ததன்று. எனவே, தொடக்க காலத்தில் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் மிகையாகும் உழைப்பின் அளிப்பு நாட்டு வருமானம் பெருகும் வீதத்தில் பெருகக் காரணமாக அமைகிறது. அதனால், தனியாள் வருமானமும் $\frac{\text{(நாட்டு வருமானம்)}}{\text{(மக்கள்தொகை)}}$ மிகுந்துகொண்டே செல்லும். குறிப்பிட்ட மக்கள் தொகை உச்ச அளவு தனியாள் வருமானத்தைத் தரும். அதன் பின்னர், பெருகும் மக்கள்தொகை நாட்டு வருமானத்தைச் சிறிதளவே உயர்த்துவதால் தனியாள் வருமானம் குறையத்

தொடங்கும். பொருளியல் அறிஞர் தால்டன் (Dalton) உகந்த அளவு மக்கள்தொகையைப் (O) பின்னணியாக வைத்து, குறிப்பிட்ட காலத்தில் நாட்டில் நிலவும் மக்கள்தொகையின் (Actual Population) (A) தன்மையை $M = \frac{A - O}{O}$ என்பதன் மூலமாக அளவிடுகிறார். M என்பது நேர்மறை எண் (+) ஆக இருந்தால் அது அதிக மக்கள்தொகை என்றும், எதிர்மறை எண் (—) ஆக இருந்தால் குறைந்த மக்கள் தொகை என்றும் பொருள்படும். இதன் மூலம் மக்கள் தொகையைப் பெருக்கவோ குறைக்கவோ தேவையான நடவடிக்கைள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த உகந்த அளவு மக்கள்தொகைக் கோட்பாடு தொழிலறிவு மாறுபடும்பொழுது உகந்த அளவும் மாறுபடும் என்பதை வலியுறுத்துகிறது. இதனை அளவிடுதல் நடைமுறையில் எளிதன்று.

உகந்த அளவுமக்கள்தொகை அதனோடு தொடர்பான பிற காரணிகளின் உச்ச அளவினையும் குறிக்கும். வருவாய் சார்ந்த உகந்த அளவு வட்டிவீதம், முதலீட்டால் வருவாயில் தோன்றும் மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். நலம் சார்ந்த உகந்த அளவு பிற காரணிகளுடன் நலத் தொடர்பையும் (Welfare Function) சார்ந்திருக்கும். நிலவும் மக்கள்தொகை உகந்த அளவிலிருந்து மாறுபட்டிருப்பதைப் பல்வேறு குறியீட்டெண் (Index) காரணிகள் மூலம் கணக்கிட இயலும். அவை தனியாள் வருவாய், பன்னாட்டு வாணிக நிலை, வேலையின்மை ஆகியன. உழைப்பு, உற்பத்தி ஆகிய குறியீட்டெண்கள் மக்கள்தொகைப் பெருக்கத்தால் தொழில்களில் ஏற்படும் தாக்கங்களைக் கூறுகின்றன.

பிளாக்கர் (Blacker) என்பவர் மக்கள்தொகை வளர்ச்சியில் நிலவும் ஐந்து நிலைகளைக் கூறுகிறார். மக்கள்தொகை வளர்ச்சி வீதம் பிறப்பு வீதத்திற்கும் இறப்பு வீதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடாகும். தொடக்ககாலத்தில் இவ்விரு வீதங்களும் மிகையாக உள்ளதால் வளர்ச்சி வீதம் மாறாமலிருக்கிறது. அதன் பின்னர், இறப்பு வீதம் மட்டும் குறைவதால் மக்கள் தொகைப் பெருக்க வீதம் மிகுதியாக இருக்கும். அதற்கடுத்த நிலையில், பிறப்பு வீதம் குறைவதால் மக்கள் தொகை நிலையாக இருக்கும். நகரிய வளர்ச்சி, கல்வி முன்னேற்றம், பெண்கள் வேலைக்குச் செல்லுதல் போன்றவற்றால் பிறப்பு வீதம் இறப்பு வீதத்தைவிடக் குறையும். இதனால், மக்கள் தொகை குறையத் தொடங்கும். இத்தகைய பின்னணியில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் சமூக, பொருளியல் காரணிகள் வலிமை பெறும். இதே காரணங்களினால் இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் 1901-இல் 0.7 -ஆக இருந்து, 1951-இல் 1.33 ஆக மாற்றமடைந்து, 1981 -இல் 2.5 ஆக உயர்ந்துள்ளது.

இக்காலத்தில் நாடுகள் உகந்த அளவு மக்கள் தொகையை அடைவது மட்டுமே சிறந்த நோக்கமெனக்கருதவில்லை; மக்கள்தொகையில் சீர்கேடு உருவாகாமல் தடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மக்கள்தொகை 1 விழுக்காடு பெருகினால் அது ஆண்டு வருமானத்தில் 3 முதல் 5 விழுக்காட்டை விழுங்கிவிடும். எனவே, தனியாள் வருவாய் உயர்வது 0.5 முதல் 1 விழுக்காடு வரை தடை செய்யப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சி பெருமளவில் பெருகினால் வெளிநாடுகளுக்கு மக்கள் செல்வதை ஊக்கப்படுத்துதல், உற்பத்திக் காரணிகளைப் பெருக்குதல், உழைப்பின் தேவையைப் பெருக்குதல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்த முயல்கின்றனர். கீன்சின் (J.M. Keynes) கூற்றுப்படி மக்கள்தொகை வளர்ச்சி வீத உயர்வில் முழுநேர வேலையின்மை மட்டுமன்றிச் சுழலும் வேலையின்மையும் (Cyclical Unemployment) பெருகும்.

இந்தியா உலக நாடுகளின் மக்கள்தொகையில் இரண்டாம் இடத்தையும் நில அளவில் ஏழாம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியா உலக நாடுகளின் மக்கள்தொகையில் 15 விழுக்காட்டையும் நிலப்பரப்பில் 2.4 விழுக்காட்டையும் உலக வருமானத்தில் 1.5 விழுக்காட்டையும் கொண்டுள்ளது. மொத்த மக்கள்தொகை 700 மிலியனையும் விட மிகையாக உள்ளது. நாடுகளின் வருமானத்திற்கும் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்திற்கும் தொடர்பு இல்லை என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. குறைந்த வருவாய் நாடுகள் 2.3 விழுக்காட்டு வளர்ச்சி வீதத்தையும், செல்வம் மிக்க நாடுகள் 4.3 விழுக்காட்டு மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தையும் கொண்டுள்ளன. எனவே, மக்கள்தொகைப் பெருக்கம் உகந்த அளவு மக்கள்தொகையிலிருந்து வேறுபட்டிருந்தால் அதனைச் சமன் செய்ய வேண்டும்.

என்.மா.

துணை நூல்கள்:

**Bernard, P. Haley**, A Survey of Contemporary Economics, Richard D. Irwin Inc., Illionis, 1960.

**George Soule** , Economics - Measurement Theories, Core Studies, Rinehart and Winston Incorporation, New York, 1961.

Roger Leroy Miller, Economics Today-The Micro, Harper and Row Publishers, New York, 1974.

**உகந்த சமூக உற்பத்தி அளவு**: ஒரு நாட்டின் சமுதாய அமைப்பிற்குகந்த வகையில் உற்பத்தி முறையை அமைத்து, பொருளாதார நலனைப் பாதுகாப்பது உகந்த அளவு சமூக உற்பத்தி (Optimum Social Production) எனப்படும். நாட்டின் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் சுழல் ஓட்டத்தை (Circular Flow) நிருவகிக்க எண்ணிக்கையிலடங்கா முடிவுகள் இயற்றப்பட வேண்டும். பண்டங்களும் பணிகளும் நாட்டின் உற்பத்தி, நுகர்வு ஆகிய பிரிவுகளுக்கிடையே மாற்றப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியம், உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனை மூலம் உற்பத்திப் பிரிவுகளில் செலவிடப்பட்டு அவற்றின் வருவாயாக அமைகிறது. இச்சுழல் ஓட்டம் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் நாட்டு வருவாயைப் பெருக்குவதாகவும் வேலையின்மையைக் குறைப்பதாகவும் அமையவேண்டும். பொருள்களில் எவற்றை உற்பத்தி செய்யவேண்டும்? எம்முறையில் உற்பத்தி செய்ய வேண்டும்? எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்? எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்? என்னும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு உகந்த அளவு சமூக உற்பத்தி வரையறுக்கப்படும். இக்கூறுகள் சமுதாயத்தைப் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களையும் அளிக்கும். இவ்வினாக்களுக்குரிய பதில்களும் அவை பெறப்படும் முறைகளும் சமுதாய அமைப்பிற்குத் தகுந்தபடி மாறுபடுகின்றன. முதலாளித்துவ நாட்டில் சுதந்திரம் நிலவுவதாலும் சமத்துவச் சமுதாயத்தில் அரசுக் கட்டுப்பாடு நிலவுவதாலும் இவற்றிற்கு முடிவு காணும் முறைகளில் வேறுபாடுகள் உள்ளன.


உகந்த அளவுச் சமூக உற்பத்தியை வரையறுக்கும் முன்னர், எந்தப் பொருள்கள் எம்முறையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதனை முடிவு செய்ய வேண்டும். முதலாளித்துவ நாட்டில் நுகர்வோருக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் எந்தப் பொருள்களின் உற்பத்தியில் ஆதாயம் மிகையாகப் பெற இயலுமோ அவற்றை உற்பத்தி செய்வர். ஆதாய நோக்கின்படி தேவையும் விலையும் உயர்வாக உள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படும். அத்தகைய பொருள்கள் பெரும்பாலும் ஆடம்பரப் பொருள்களான தொலைக்காட்சிப் பெட்டி, இரண்டு சக்கர ஊர்திகள், குளிர் அறைப் பெட்டி போன்றவையாக இருக்கும். தேவை குறைவாக உள்ள பொருள்கள் பெரும்பாலும் இன்றியமையாப் பொருள்களான உணவு, உடை போன்றவையாக இருக்கும். ஆடம்பரப்பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்வது வாங்குந் திறனற்ற ஏழை மக்களை துன்பத்தில் ஆழ்த்தும். அத்தகைய உற்பத்தி உகந்த அளவினதாகக் கருதப்படமாட்டாது. எனவே, முதலாளித்துவ நாடுகளின் அங்காடித் தேவையை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. சமத்துவச் சமுதாய நோக்கத்தைப்போன்று மக்களின் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எம்முறையில் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்வது சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைச் சார்ந்தது. பண்டங்களின் உற்பத்திக்குத் தேவையான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளின் சேர்க்கை முறையே உற்பத்தி முறையாகும். அது உழைப்புச் செறிந்த (Labour Intensive) முறையாகவோ மூலதனம் செறிந்த முறையாகவோ இருக்கலாம். இவற்றில் உற்பத்திச் செலவு குறைவான முறையே தேர்ந்தெடுக்கப்படுகிறது. செறிந்த மூலதன முறையால் செலவு குறைவாக இருந்தாலும் அது வேலையின்மையைப் பெருக்குமானால் அம்முறையைப் பின்பற்றக் கூடாது.

எந்தப் பொருள்கள் எந்த முறையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை முடிவு செய்த பின்னர், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை வரையறுக்க வேண்டும். நாட்டின் உற்பத்தியைப் பொறுத்தே அந்நாட்டின் வருவாயும் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அமைகின்றன. நாட்டின் வருவாயைப் பெருக்குவதற்காக உற்பத்தியைப் பெருக்குவது பொருள் வளங்கள் அழியக் காரணமாகலாம். தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்காகப் பொருள்களின் உற்பத்தி கட்டுப்படுத்தப் பட்டால் பணவீக்கம் உருவாகலாம். எனவே, உற்பத்தியளவின் உகந்த அளவை வரையறுப்பது மிகவும் இன்றியமையாதது மட்டுமன்றி, அது பல காரணிகளைச் சார்ந்துள்ளதும் ஆகும்.

உகந்த அளவு உற்பத்தியை வரையறுக்கும் முறையைப் பேரட்டோ (Pareto), இலெர்னர் (Lerner) மற்றும் இலியோண்டிபு (Leontief) ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இக்கருத்துகள் பொதுச் சமநிலையை (General Equilibrium) அடையத் துணை, செய்கின்றன. நுகர்வோரிடையே சிறந்த முறையில் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Substitution)

செயற்படவேண்டும். நுகர்வோர் சமநிலையில் உச்ச நிலைப் பயன்பாட்டைப் பெற, நுகர்வோரின் இறுதி நிலைப் பதிலீட்டு வீதம் அப்பண்டங்களின் விலை வீதத்திற்குச் சமமாக இருக்கும். அங்காடி விலை வீதம் எல்லோருக்கும் ஒரே சீராக இருப்பதால் சம நிலையில் இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் சமமாக இருக்கும். இதே வகையில் தொழில்நுட்பத் திறன் உற்பத்தி முறையில் ஏற்பட, இறுதிநிலைத் தொழில் நுட்பப் பதிலீட்டு வீதம் சமமாக இருத்தல் வேண்டும். பொருளாதாரத் திறன் நிலவ நுகர்வோர் மிகுதியாக விரும்பும் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். இத்தகைய பொருள்களை உகந்த அளவில் உற்பத்தி செய்ய இரு பொருள்களுக்கிடையே சமுதாயத்தில் நிலவும் இறுதிநிலை மாற்று வீதம் குறிப்பிட்ட ஒருவரின் இறுதிநிலைப் பதிலீட்டு வீதத்திற்குச் சமமாக இருக்க வேண்டும். உற்பத்தி மாற்று வீதம் இறுதிநிலைச் சமுதாயச் செலவு வீதத்தைக் குறிப்பதாலும், விலை வீதம் இறுதிநிலைப் பதிலீட்டு வீதத்திற்குச் சமமாக இருப்பதாலும், சமநிலையில் உகந்த அளவு சமூக உற்பத்தியைப் பெற இறுதிநிலைச் சமுதாயச் செலவு வீதம் விலை வீதத்திற்குச் சமமாக இருக்கும். இக்கருத்தை வரைபடம் விளக்குகிறது.




$IC_1$, $IC_2$ என்பவை நுகர்வோரின் சமநோக்கு வளைகோடுகள். BA என்பது சமுதாயத்தின் உற்பத்தித்திறன் வளைகோடு. $P_1$ என்ற புள்ளியைக் காட்டிலும் $P_2$ என்ற புள்ளியில் பொருள்களின் சமுதாய உற்பத்தியும் நுகர்வோரின் பயன்பாடும் மிகையாக உள்ளன. இப்புள்ளியில் இரு வளைகோடுகளும் ஒன்றையொன்று தொட்டுச் செல்வதால் சமநோக்கு வளைகோட்டின் சரிவும் உற்பத்தித் திறன் வளைகோட்டின் சரிவும் சமமாக உள்ளன.

பேராசிரியர் இலெர்னர் இதனைக் கருத்தில் கொண்டு இறுதிநிலைச் சமுதாய நன்மையும் இறுதிநிலைச் சமுதாயச் செலவும் சமமாக உள்ள உற்பத்தி அளவே உகந்த அளவு சமூக உற்பத்தியெனக் கூறுகிறார். இச்சமன்பாடு உகந்த முறை நுகர்வு மாற்றம், உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றின் மூலமாகப் பெறப்படுகிறது. எனவே, ,இறுதிநிலைச் சமுதாய நன்மை=இறுதிநிலை உற்பத்தியின் மதிப்பு=இறுதிநிலை வருவாய்=இறுதிநிலைச் செலவு=இறுதிநிலை உற்பத்திக் காரணியின் மதிப்பு=இறுதிநிலைச் சமுதாயச் செலவு (Marginal Social Benefit = VMP = MR = MC = VM Factor = Marginal Social Cost).

பேரட்டோவின் கூற்றுப்படி உகந்த நிலையில் சமுதாயத்தில் உள்ள தனி ஒருவரின் பயன்பாடு உச்ச நிலைக்குக் கொண்டுவரப்படும் நிலையில், மற்றொருவரின் பயன்பாட்டில் குறைவு ஏற்படக் கூடாது. உற்பத்தி திறனுடையதாக இருப்பதற்கு ஒரு பொருளின் உற்பத்தி அளவு உச்சமாக்கப்படும்பொழுது வேறு எந்தப் பொருளின் உற்பத்தி அளவிலும் குறைவு ஏற்படக் கூடாது. எனவே, பேரட்டோவின் உற்பத்தி உகந்த அளவாக இருக்க வேண்டுமெனில் சமூக உற்பத்தி திறனுடையதாக இருக்க வேண்டும். அதே நிலையில் சமூக உற்பத்தி திறனுடையதாக இருப்பது மட்டுமே பேரட்டோவின் உகந்த அளவைக் குறிப்பதில்லை; அதன் பயன்பாட்டளவும் பொருத்தமாயிருக்க வேண்டும்.

இலியோண்டிபு என்பவரின் கூற்றுப்படி சமநிலை உற்பத்தியளவு கொடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப முறையில் பண்டத்தின் இறுதித்தேவை மாறுவதற்குத் தகுந்தபடி வரையறுக்கப்படுகிறது. இதன்படி உற்பத்திப் பொருள்களின் இறுதித் தேவையையும் தொழிற்சாலைகளுக்கிடையே நிலவும் தேவையையும் நிறைவு செய்யக்கூடிய அளவே, உகந்த அளவு சமூக உற்பத்தியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இலியோண்டிபு கூறுவது போல எஃகுத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் எஃகு திரும்பவும் அதே ஆலையில் பயன்படும்; கனரக இயந்திரங்கள் செய்யவும் வேறு ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யவும் பயன்படுகின்றது. மேலும், மிதிவண்டி, மேசை, நாற்காலி போன்ற இறுதித் தேவைப் பொருள்களை உற்பத்தி செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. இதுபோலவே சிமிண்டு, நிலக்கரி போன்ற பல பொருள்களும் பயன்படுகின்

றன. இவற்றைப் பின்னணியாக வைத்துப் பொருள்களைத் தொழில் நிறுவனங்களுக்கிடையே மாற்றிக் கொள்ளும் அட்டவணையை (Transaction Table) உருவாக்கி, உற்பத்தித் தொடர்புகளைக் கொண்டு சமநிலைச் சமன்பாடுகள் மூலம் சமநிலை உற்பத்தி அளவிற்கு முடிவு காணப்படுகிறது.

இங்கு விளக்கப்பட்ட முறைகளில் இலியோண்டிபு முறையே இக்காலக் கணக்கீட்டு முறைகளைப் பயன்படுத்துகிறது. முடிவுகள் தொகுக்கக் கூடிய புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்படுதலால் இம்முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

என்.மா.

துணை நூல்கள்:

**Blaug**, M., Economic Theory in Retrospect, Richard D. Irwin, Inc., Illinois, 1962.

**Kovisto, W.A.**, Problems of Modern Economics, Chopman and Hall Limited, London, 1957.

**Seth**, M.L., Principles of Economics, Educational Publishers, Agra, 1971.

**உகந்தருளிய நிலங்கள்** என்பன திருமால் கோயில் கொண்டருளிய இடங்கள் ஆகும். இவற்றைத் 'திவ்விய தேசங்கள்' என்றும் குறிப்பர். திவ்விய தேசங்கள் என்பதற்குத் தெய்வத்தன்மை நிறைந்த இடங்கள் என்பது பொருள். இறைவன் விரும்பி உறையும் இடங்களைத் தெய்வத்தன்மை நிறைந்தவையாகப் போற்றுவது மரபு.

திருமால் உகந்தருளிய நிலங்களாக நூற்றெட்டு இடங்களை வைணவர் சிறப்பாகப் போற்றுவர். இவை ஆழ்வார்களின் ஈரத்தமிழால் போற்றிச் சிறப்பிக்கப்பட்ட திருத்தலங்கள் ஆகும். இவற்றுள் பரமபதம், திருப்பாற்கடல் என்னும் இரண்டும் தவிர, ஏனையவை பாரத நாட்டில் அமைந்துள்ளன. திருப்பாற்கடல் என்னும் திருத்தலம் பரமபதம் போலவே மானிட யாக்கையோடு சென்று வணங்க முடியாதது. எனினும், இது வட நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகக் குறிக்கப்பட்டிருத்தலால் எங்கோ வடக்கில் உள்ளது என்பர். இந்நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பெரும்பாலானவை தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. சோழநாட்டில் நாற்பதும் பாண்டிய நாட்டில் பதினெட்டும் சேர நாட்டில் (மலை நாட்டில்) பதின்மூன்றும் நடுநாட்டில் இரண்டும் தொண்டை நாட்டில் இருபத்திரண்டும் வடநாட்டில் பன்னிரண்டும் பரமபதம் ஒன்றுமாக அவை அமைந்துள்ளன.

சோழநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவரங்கம், 2. உறையூர் (நிசுளாபுரி), 3. தஞ்சை மாமணிக் கோயில், 4. திருஅன்பில், 5. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்), 6. திருவெள்ளறை, 7. திருப்புள்ளம் பூதங்குடி, 8. திருப்பேர் நகர் (கோயிலடி), 9. திருஆதனூர், 10. திருவழுந்தூர் (தேரழுந்தூர்), 11. திருச்சிறுபுலியூர், 12. திருச்சேறை, 13. திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு), 14. திருக்குடந்தை,15. திருக்கண்டியூர், 16. திருவிண்ணகர்(ஒப்பிலியப்பன் சந்நிதி), 17. திருக்கண்ணபுரம், 18. திருவாலித் திருநகரி, 19. திருநாகை, 20. திருநறையூர் (நாச்சியார் கோயில்), 21. திருநந்திபுர விண்ணகரம்(நாதன் கோயில்), 22. திருஇந்தளூர், 23. திருச்சித்திர கூடம், 24. காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி), 25. திருக்கூடலூர்(ஆடுதுறைப் பெருமாள் கோயில்), 26. திருக்கண்ணங்குடி, 27. திருக்கண்ண மங்கை, 28. திருக்கவித்தலம், 29. திருவெள்ளியங்குடி, 30. திருமணிமாடக் கோயில், 31. திருவைகுந்த விண்ணகரம், 32. திருஅரிமேய விண்ணகரம், 33. திருத்தேவனார் தொகை, 34. திருவளர் புருடோத்தமம், 35. திருச்செம்பொன் கோயில், 36. திருத்தெற்றியம்பலம், 37. திருமணிக்கூடம், 38. திருக்காவளம்பாடி, 39. திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்), 40. திருப்பார்த்தன்பள்ளி ஆகியன.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்: 1. திருமாலிருஞ்சோலை மலை, 2. திருக்கோட்டியூர், 3. திருமெய்யம், 4. திருப்புல்லாணி, 5. திருத்தண்கால், 6. திருமோகூர், 7. திருக்கூடல் (மதுரை),8. திருவில்லிபுத்தூர், 9. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), 10. தொலைவில்லிமங்கலம், 11. வானமாமலை (சிரீவரமங்கை அல்லது நாங்குநேரி),12. திருப்புளிங்குடி (திருக்குருகூர்), 13. திருப்பேரை, 14.திருவைகுந்தம், 15. திருவரகுணமங்கை, 16. திருக்குளந்தை (பெருங்குளம்), 17. திருக்குறுங்குடி, 18. திருக்கோளூர்.

மலைநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவனந்தபுரம் (அநந்தசயனம்), 2. திருவண்பரிசாரம், 3. திருக்காட்கரை, 4. திருமூழிக்களம், 5. திருப்புலியூர், 6. திருச்செங்குன்றூர், 7. திருநாவாய், 8. திருவல்லவாழ், 9. திருவண்டூர், 10, திருவாட்டாறு, 11. திருவித்துவக்கோடு, 12. திருக்கடித்தானம், 13. திருவாறன்விளை ஆகியன.

நடுநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவயீந்திரபுரம், 2. திருக்கோவிலூர்.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்:1. திருக்கச்சி, 2. திருவட்டபுயங்கம், 3. திருத்தண்கா, 4. திரு

வெளுக்கை, 5. திருப்பாடகம், 6. திருநீரகம், 7. திருநிலாத்திங்கள்துண்டம், 8. திருவூரகம், 9. திருவெஃகா, 10. திருக்காரகம், 11. திருக்கார் வானம், 12.திருக்கள்வனூர், 13.திருப்பவளவண்ணம், 14. திருப்பரமேச்சுர விண்ணகரம், 15. திருப்புட்குழி, 16. திருநின்றவூர், 17.திருவெவ்வுளூர் (திருவள்ளூர்). 18. திருநீர்மலை, 19. திருவிடவெந்தை, 20. திருக் கடன்மல்லை (மாமல்லபுரம்), 21. திருவல்லிக்கேணி, 22. திருக்கடிகை (சோளிங்கபுரம்) ஆகியன.

வடநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவேங்கடம், 2. திருச்சிங்கவேள்குன்றம் (அகோபிலம்), 3. திருவயோத்தி, 4. திருநைமிசாரண்யம், 5. திருச்சாலக் கிராமம், 6.திருபதரியாச்சிரமம், 7. திருக்கண்டங்கடி நகர் (தேவப்ரயாகை), 8. திருப்பிரிதி, 9. திருத்து வாரகை, 10. திருவடமதுரை (கோவர்த்தநம்), 11. திருவாய்ப்பாடி (கோகுலம்), 12. திருப்பாற்கடல் ஆகியன.

திருமால் முல்லைநிலத் தெய்வம். ஆகையால் திருமால் கோயில்கள் காடும் காடு சார்ந்த நிலப் பகுதியிலேயே தொடக்க காலத்தில் தோன்றின. அந்நிலப்பகுதியில் உள்ள திருக்கோயில்கள் பெரும் பாலும் பழமைச் சிறப்புடையன. திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலைமலை முதலியவை அத்தகைய சிறப்புக்குரிய தலங்கள் ஆகும். இத்திருத்தலங்கள் முல்லைநில அழகோடு திகழ்ந்த திறத்தினை ஆழ்வார்கள் பாசுரங்களால் அறியலாம். அதிகமான திருப்பதிகளைக் குறித்துப் பாசுரம் புனைந்த பெருமைக்குரியர் திருமங்கையாழ்வார். அவர் திருப்பிரிதி முதலான வட நாட்டுத் திருத்தலங்களையும் பாடியுள்ளார். அவர் பாசுரங்களில் எண்பத்தாறு திவ்விய தேசங்கள் பாடப்பட்டுள்ளன.

இத்திருப்பதிகளில் பெருமான் மூவகைக் கோலங்களில் காட்சியளிக்கிறான். சில இடங்களில் கிடந்த கோலத்தோடும் சில இடங்களில் இருந்த கோலத்தோடும் சில இடங்களில் நின்ற கோலத்தோடும் கோயில் கொண்டுள்ளான். உகந்தருளிய நிலங்களில் எழுந்தருளிய இறைவடிவத்திற்கு 'அர்ச்சை' என்பது பெயர்.

தெ.ஞா.

**உகரித்து**: மத்திய தரைக்கடல் பகுதியில் அல் லாதிகூயியா (Al-Ladhiqiyah) என்னும் ஊரிலிருந்து 10 கி. மீ.தொலைவில் அமைந்துள்ள தொன்மை மிக்க நகரம். இந்நகரத்தின் சிதைவுகளைக் கொண்டமண்மேடு இராசுசம்ரா (Ras Shamra) என்று குறிக் கப்படுகிறது. இம்மண்மேட்டில் தொல்லியல் பொருள் களை உழவர் ஒருவர் தற்செயலாகக் கண்டுபிடித் தார். பின்னர், பிரான்சு நாட்டுத் தொல்லியலறிஞர் கிளவுடு எப். ஏ. இசுகாப்பர் (Claude F.A. Schaffer) என்பவர் தலைமையில் 1929-இல் இங்கு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

உகரித்தில் (Ugarit) புதிய கற்காலம், கல்செப்புக் காலம் போன்றவற்றின் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டன; வண்ணம் தீட்டப்பட்ட மட்கலன்களும் ஒரே நிறத்தில் பல சாயல்களில் உள்ள பளபளப்பு மிக்க மட்கலன்களும்சிவப்பு மட்கலன்களும் அகழாய்வில் கிடைத்தன. செப்புக் காலத்தில் உலோகத்தின் பயனை இங்கு வாழ்ந்த மக்கள் அறிந்தனர். இக்காலத்தில் இங்குப் புதிய குடியேற்றங்களும் ஏற்பட்டன. உகரித்து முற் காலத்தில் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. உகரித்தின் பொற்காலமாக கி.மு. 1450 முதல் 1200 வரையுள்ள காலம் கருதப்படுகிறது. இந்நகரை கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் வடக்கே வாழ்ந்த மக்கள் கைப்பற்றினர். இக்காலத்தில் இங்கு நில நடுக்கமும் பெரும் பஞ்சமும் ஏற்பட்டன.


அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அரச மாளிகைகள், நூல் நிலையங்கள், ஆவணக் கூடங்கள் உகரித்தின் பொற்காலத்தைச் சார்ந்தவை. பல கட்டடங்கள் சிறு குன்றில் கட்டப்பட்டுள்ளன. கட்டடங்களின் கலைத்திறன் மைசீனியக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. பல வீடுகளின் அடிப்பகுதியில் நிலவறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நூலகங்களும் ஆவணக் கூடங்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட தொன் மைச் சின்னங்களுள் சிறப்பு வாய்ந்தவை. பொது மக்களே பல நூலகங்களைக் கட்டி இருக்கின்றனர். இந்நூலகங்களில் பல ஆவணங்கள் உள்ளன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட நூல்களில் கீரட்டுப் புராணக் கதை (Keret Legend), தானியேல் புராணக்கதை (Legend of Daniel), பால்-அலியன் பழங்கதை (Myth of Baal Aliyan), பாலின் இறப்பு (Death of Baal) போன்றவை குறிப்பிடத்தக்கவை. விவிலிய நூலின் முன்னோடியாக உகரித்தில் கண்டுபிடிக்கப்பட்ட மூலங்கள் விளங்குகின்றன. இவற்றின் கதைகளே பிற்காலத்தில் விவிலிய நூலில் எடுத்துக் கையாளப் பட்டுள்ளன.

கனானைட்டு (Cannanite) நாகரிகத்திற்குச் சில சிறந்த சான்றுகளாக இவ்விலக்கிய மூலங்கள் விளங்கு கின்றன. கனானைட்டு மக்கள் செமிட்டிக்கு வகை ஆப்பு வடிவ எழுத்துகளையும் உகரித்திற்கே தனிப் பட்ட ஆப்பு வடிவ எழுத்துகளையும் பயன்படுத்தியுள் ளனர். இது உகரித்து அகரவகை எழுத்து எனப்படும். களிமண்ணால் செய்யப்பட்ட வரைபடத் தொகுதிகள்

பல இவ்வாவணக் கூடங்களில் கண்டுபிடிக்கப் பட்டன. சில எழுத்துகள் 1970-இல் படிக்கப்பட்டன. இவ்வெழுத்துகள் பாபிலோனிய ஆப்பு வடிவ எழுத்து களால் (Cuneiform) எழுதப்பட்டுள்ளன. இவ் வெழுத்துகளை வணிகர்களும் ஆட்சியாளர்களும் பயன்படுத்தினர். வடக்குச் செமிட்டிக்கு எழுத்து களைப் போன்று இவை காணப்படுகின்றன. இதில் 30 எழுத்துக் குறிகள் உள்ளன. 3 எழுத்துகள் உயிர் எழுத்தாகவும் 22 மெய் எழுத்துகளாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஆப்புவடிவ அமைப்பில் அமைந் துள்ள இவ்வெழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளன. உகரித்து, அக்காடியன், சுமேரி யன், ஊரியன் என்னும் நான்கு மொழிகளில் இவ் வரைபடத் தொகுதிகள் உள்ளன. 7 வகை வெவ் வேறான குறிகள் இவ்வரைபடத் தொகுதிகளில் காணப்படுகின்றன. இவ்வெழுத்து ஆவணங்கள் உகரித்தின் தொன்மைமிக்க வளர்ச்சியைப் பறை சாற்றுகின்றன.

இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுள் மட் கலன்களும் தந்தப் பொருள்களும் குறிப்பிடத் தக்கவை. தந்தத்தால் செய்யப்பட்ட பெட்டியி னுடைய மூடியின் இருபக்கங்களிலும் அழகான உரு வங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு பெண் அமர்ந்த நிலையில் இரண்டு கைகளில் இலைகளை வைத்துக் கொண்டுள்ளாள். அவளுக்கு இருபக்கங்களிலும் பின் னங்கால்களால் நின்ற நிலையிலுள்ள இரண்டு ஆடு கள் அவளது கையிலுள்ள இலைகளைத் தின்ன முயன்றவாறுள்ளன.

**உகாண்டா** கிழக்கு ஆப்பிரிக்கக் கண்டத்தி லுள்ள குடியரசு நாடு. வடக்கில் சூடானும் (Sudan),




உகாண்டா

தெற்கில் தான்சானியாவும் (Tanzania) உரூவாண் டாவும் (Rwanda), கிழக்கில் கென்யாவும் (Kenya), மேற்கில் செய்ரேவும் (Zaire) இதன் எல்லைகள். உகாண்டாவின் (Uganda) பெரும்பகுதி உலக நடுக் கோட்டிற்கு வடபால் அக்கோட்டினை ஒட்டினாற் போல் உள்ளது.

இயற்கையமைப்பு: உகாண்டா செழித்த மேட்டு நிலங்களைக் கொண்ட நாடு. கடல்மட்டத்திற்கு மேல் 1200 மீ. வரை இந்நாடு உயர்ந்துள்ளமையால் இதன் தட்பவெப்பநிலை நல்வாழ்வுக்கேற்றது. இந்நாட்டின் மையத்தில் கோயோகா (Kyoga) என்னும் ஏரியுள் ளது. உகாண்டா மேட்டு நிலத்தின் மேற்கில் பெரும் பிளவுப் பள்ளத்தாக்கின் மேற்குக் கிளை எல்லை போல் உள்ளது. ஆல்பர்ட்டு, எட்வர்டு போன்ற ஏர் களும் ஆல்பர்ட்டு நைல் ஆறும் இங்கு உள்ளன தென்மேற்கில் உரூவன்சோரி மலைத்தொடரும் (Ruwenzori Range) மர்கிரிட்டா மலையுச்சியும் (Mar- gherita Peak) உள்ளன. இவ்வுச்சியே உகாண்டாவின் மிக உயர்ந்த இடம். தெற்கில் விக்டோரியா ஏரியை யும் கிழக்கிலும் வடக்கிலும் பல மலைத் தொடர் களையும் காணலாம். உகாண்டாவின் நிலப்பரப்பில் ஆறிலொரு பங்கு நீர்நிலைகள்; ஏறத்தாழ 7 விழுக் காடு நிலம் 1520 மீட்டருக்கும் மிகுதியான உயர முடைய மலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. உல கிலேயே இரண்டாம் நன்னீர் ஏரியாகக் கருதப்படும் விக்டோரியா ஏரியின் ஒரு பகுதி உகாண்டாவில் உள்ளது. காட்டு விலங்குகள் பல இங்குள்ள பரந்த தேசியப் பூங்காக்களில் சுற்றித் திரிகின்றன.

பரப்பு: உகாண்டாவின் மொத்தப் பரப்பு 2,41,140 ச.கி.மீ. இவற்றுள் 39,459 ச.கி.மீ. சதுப்பு நிலங்களாலும் நீர் நிலைகளாலும் சூழப்பட்டுள்ளது.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 1,26,30,076 (1980). உகாண்டாவின் மக்களுள் பெரும் பாலோர் கறுப்பு ஆப்பிரிக்கர்கள். அவர்களுள் 90 விழுக்காட்டு மக்கள் சிற்றூர்களில் வாழ்கி றார்கள். ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு மக்கள் பண்டு (Bantu) மொழி பேசுகிறார்கள். இம்மொழி பேசும் இனத்தவர்களுள் கண்டா (Ganda), சோகா (Soga), அங்கோல் (Angol), நியோரோ (Nyoro), தோரோ (Toro) போன்றவர்கள் இந்நாட்டின் தென் பாதியில் வாழ்கிறார்கள். வடக்கில் வாழும் நிலோட் டியரும் (Nilotic), வடகிழக்கில் வாழும் நிலோ- அமித்தியரும் (Nilo-Hamitic) ஏனைய மொழி பேசு வோர். சூடானி மொழி பேசுவோர் வடமேற்கில் வாழ்கிறார்கள். ஆங்கில மொழியே உகாண்டாவின் ஆட்சிமொழி. வாணிக மையங்களில் பரவலாக

சுவாகிலி (Swahili) மொழியைப் பேசுகிறார்கள். 30 விழுக்காடு மக்கள் கிறித்தவர்கள்; ஏறத்தாழ 5 விழுக்காடு மக்கள் முசுலிம்கள்.

உகாண்டா மக்களுள் பகாண்டா (Baganda) எனப்படுவோர் எண்ணிக்கையிலும் செல்வச் செழிப்பிலும் திளைத்தவர்கள். இவர்கள் உகாண்டாவின் மையப் பகுதியிலும் தெற்கிலும் வாழ்கிறார்கள். இவர்களின் அரசியல் சமூக அமைப்புகள் மத்திய ஆப்பிரிக்காவிலேயே முன்னேறியவையாகக் கருதப்படுகின்றன. பகாண்டாக்களுக்கு 1967 வரை சொந்த அரசர்கள் இருந்தனர். இவர்கள் கபகா (Kabaka) எனப்பட்டனர். இவர்களின் நாடாளுமன்றம் உலுக்கிகோ (Lukiko) எனப்பட்டது. பகாண்டா மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். காப்பி, பருத்தி, தேயிலை போன்ற பணப்பயிர்களை இவர்கள் சாகுபடி செய்கிறார்கள். வாழையும் காய்கறிகளும் சிறப்பான உணவுப்பொருள்கள். பண்ணைகளில் பெரும்பாலான பணிகளைப் பெண்களே செய்கிறார்கள். மண்சுவர்களையும் இரும்புத் தகட்டுக் கூரைகளையும் கொண்ட வீடுகளில் பகாண்டாக்கள் வாழ்கிறார்கள். கரமோசோங்கு (Karamojong) என்னும் இனத்தவர்கள் ஆட்டிடையர்கள். இவர்கள் வடகிழக்குப் பகுதியில் வாழ்கிறார்கள். இவர்கள் வாழும்பகுதி வறட்சிமிக்கது. இவர்கள் எருதின் குருதியைப்பாலுடன் கலந்து அருந்தும் பழக்கம் கொண்டவர்கள்.

உகாண்டாவின் பெரும்பாலான மக்கள் மரபுவழியாக வந்த ஆப்பிரிக்கச் சமயங்களைப் பின்பற்றுகிறார்கள். வயது முதிர்ந்தோர்களுள் பெரும்பாலோருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. குழந்தைகளுள் நான்கில் மூவர் தொடக்க கல்வி பயில்கின்றனர். கம்பாலாவிலுள்ள மக்கிரிரிபல்கலைக் கழகம்(Makerere University) கல்வித் தொண்டில் ஈடுபட்டுள்ளது.

**பொருளாதாரம்:** உகாண்டாவின் பொருளாதாரம் வேளாண்மை அடிப்படையில் அமைந்துள்ளது. நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு மக்கள் பண்ணைகளில் பணியாற்றுகிறார்கள். கூவைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வாழைப்பழம், சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் போன்றவை சிறப்பான உணவுப் பயிர்கள். பருத்தி, காப்பி, தேயிலை, புகையிலை, கரும்பு, வேர்க்கடலை போன்றவை செல்வம்கொடுக்கும் பணப்பயிர்கள். இந்நாட்டில் கோழிகள், கால்நடைகள், செம்மறியாடுகள், ஆடுகள் போன்றவை வளர்க்கப்படுகின்றன. மீன் பிடித்தலும் முக்கியத் தொழில்களுள் ஒன்று. மகாகனி (Mahogany) என்னும் உறுதியான மரங்களை அறுக்கும் தொழிலிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். உகாண்டாவில் செம்புத் தாதுக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. தகரம், இரும்புத் தாதுக்கள், மாங்கனீசு, மரகதம், குரோமைட்டு, ஓல்புரம் (Wolfram) ஆகிய கனிமப் பொருள்களும் கிடைக்கின்றன. இந்நாட்டின் கைத்தொழில்கள் மிகக் குறைந்தவையே. அவற்றுள் வேளாண்மைப் பொருள்களைப் பதப்படுத்துதல் (குறிப்பாக, காப்பியைப் பதப்படுத்துதல், பருத்திக்கொட்டை எடுத்தல்) முக்கியமானது. மேலும், மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் பொருள்களுக்கான தொழில்கள் சிலவும் நடைபெறுகின்றன. ஆடை நெய்தல், சிமிண்டு உற்பத்தி செய்தல், செயற்கை உரம் தயாரித்தல், பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல், உலோகப் பொருள்கள் செய்தல் போன்றவை அத்தகைய தொழில்கள். விக்டோரியா நைல்ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ஓவன் நீர்வீழ்ச்சி (Owen Falls) நீர்மின்திட்டம் மின்சக்தி உற்பத்தி செய்யும் பெருந்திட்டமாகும். இத்திட்டம் சிஞ்சா (Jinja) நகரத்தில் செயற்படுகிறது.

உகாண்டா நாட்டில் இரு இருப்புப் பாதைத் தொடர்கள் சிறப்பானவை. ஒன்று இந்நாட்டின் தென்பாகத்தில் போடப்பட்டுள்ளது. மற்றொன்று கென்யா எல்லையிலுள்ள தோரோரோ(Tororo) என்னும் ஊரையும் வடக்கிலுள்ள கூலு(Gulu) என்னும் ஊரையும் இணைக்கிறது. இந்தியப் பெருங்கடல் நகரமான மொம்பாசாவுடன் (Mombasa) இருப்புப் பாதை இணைப்பும் உண்டு. உகாண்டாவின் வாணிகம் இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான், மேற்குச் செருமனி போன்ற நாடுகளுடன் நடைபெறுகிறது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமுதாய (East African Community) உறுப்பு நாடுகளுள் உகாண்டாவும் ஒன்று.

**உகாண்டாவின் நகரங்கள்:** உகாண்டாவின் சிற்றூர்களில் வாழும் நாட்டுப்புறமக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்கிறார்கள்; எனினும், நகர்ப்புறத்தில் சிறுபான்மையோரே வாழ்கின்றனர். இந்நாட்டின்தலைநகர் கம்பாலா (Kampala) ஏழு மலைகளின் மீது அமைந்துள்ளது. இதன் மக்கள்தொகை 5,00,000க்கும் மேலாகும். இதுவே உகாண்டாவின் பெருநகரமும் வாணிகம், தொழிற்சாலைகள், அரசு போன்றவற்றின் மையமுமாகும். இதுவே புகாண்டாவின் (Buganda) மரபுவழித் தலைநகராகக் கருதப்படுகிறது.

கம்பாலாவிலிருந்து சில கி.மீ. தொலைவில் விக்டோரியா ஏரிக்கரையில் அமைந்துள்ள எண்டபி (Entebbe) நகரம் பழைய குடியேற்ற ஆங்கிலேயர்களின் தலைநகராக இருந்தது. உகாண்டா நாட்டின்

பன்னாட்டு வானவூர்தி நிலையம் எண்டபியில் அமைக்கப்பட்டுள்ளது. சிஞ்சா என்னும் நகரம் உகாண்டாவின் இரண்டாம் பெருநகரம், விக்டோரியா நைல் ஆற்றங்கரையின்மீது இந்நகரம் அமைந்துள்ளது. ஓவன் நீர்வீழ்ச்சி அணைக்கட்டு 1954–இல் தொடங்கப்பெற்றதிலிருந்து சிஞ்சாவும் தொழிற்சாலை மையமாக உருவாகி வருகிறது.

வரலாறு: உகாண்டாவில் பழைய கற்காலம், புதிய கற்காலம் போன்ற நாகரிகங்களின் தொல்லியல் சுவடுகளைக் காணலாம். இந்நாட்டின் மக்கள் கி.பி. 8–9–ஆம் நூற்றாண்டுகளில் வேளாண்மையைச் செய்தும் இரும்பைப் பயன்படுத்தியும் வந்தார்கள்.

இம்மக்கள் தம் இனத்தலைவர்களைக் கொண்டு கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சி சிக்கலின்றி எளிமையானதாக நடைபெற்றது. பின்னர், கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் பல சுதேச அரசுகள் வளர்ந்து உருவாயின. பழங்கால அரசுகளுள் கிட்டாராவும் (Kitara), புன்யோரோவும் (Bunyoro) முக்கியமானவை. வட உகாண்டாவை கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலோ (Lwo) மொழி பேசும் மக்கள் வென்றார்கள். இலாங்கோ (Lango), தெசோ (Teso) மரபு மக்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் உகாண்டாவில் குடியேறினர். தென் உகாண்டாவில் கி.பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பன்யோரோ அரசு சிறந்து விளங்கியது. புகாண்டா மக்கள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பெருகி வளரலாயினர். அவர்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குள் விக்டோரியா நைல் ஆற்றங்கரையிலிருந்து ககேரா (Kagera) வரையிலுள்ள பகுதிகளை ஆண்டனர். கபகாக்கள் (அரசர்கள்) வல்லாட்சி நடத்தி புகாண்டாவினரைச் சீராக அமைத்தனர். புகண்டா மக்கள் கால்நடை, தந்தம், அடிமைகள் போன்றவற்றைக் கொள்ளை அடித்தனர். இந்தியப் பெருங்கடலின் கடற்கரைப் பகுதியிலிருந்து முசுலிம் வணிகர்கள் கி.பி. 1840–ஆம் ஆண்டளவில் புகாண்டா வந்து சேர்ந்தார்கள்; அவர்களுடன் துப்பாக்கிக் குண்டுகள், ஆடைகள், தந்தத்தினாலான மணிகள், அடிமைகள் போன்றவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள். கபரேகா (Kabarega) என்னும் பன்யோரோவின் தலைவர் கி.பி. 1869–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகாண்டாவினரை எதிர்த்தார். எனினும், கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மீண்டும் புகாண்டாக்களே தென் உகாண்டாவில் செல்வாக்குப் பெற்றார்கள்.

நைல் ஆற்றின் தொடக்கத்தைக் காணவந்த சான் ஏனிங் இசுபெக்கு (John Hanning Speke), சேம்சு கிராண்டு (James Grant) என்னும் இரு ஆங்கில ஆய்வாளர்களே உகாண்டாவில் முதன் முதலில் (கி.பி. 1862) அடிவைத்த ஐரோப்பியர்கள். சர் சாமுவேல் பேக்கர் (Sir Samuel Baker) என்னும் மற்றோர் ஆங்கில ஆய்வாளர் கி.பி. 1864–இல் உகாண்டாவுக்கு வருகை புரிந்தார். அவரே ஆல்பர்ட்டு ஏரியைக் கண்டுபிடித்தவர். அவர் விக்டோரியா பேரரசியின் கணவர் ஆல்பர்ட்டு இளவரசரின் பெயரை இவ்வேரிக்குச் சூட்டினார்.

உகாண்டாவிற்கு முதலில் வந்த ஐரோப்பியர்கள் இங்கு உருவாக்கப்பெற்றிருந்த தொடக்ககால அரசுகளின் சிக்கல் நிறைந்த சூழ்நிலையால் பெரிதும் கவரப்பட்டார்கள். புகாண்டாவை ஆண்ட முதலாம் முத்தேசா (Mutesa I) என்பார் ஐரோப்பிய அயலார்களின் தொழில்நுட்பத் திறனால் கவரப்பெற்றார். ஆய்வாளரும் நாளிதழாருமாகிய என்றி மார்ட்டன் இசுடான்லி (Henry Morton Stanley) கி.பி. 1875–ஆம் ஆண்டு புகாண்டாவிற்கு வந்தபோது அவர் முத்தேசாவைச் சந்தித்தார். புகாண்டாவில் கிறித்தவப் பாதிரிகளை வரவழைக்கும் கருத்தினைப் பரிந்துரைத்தவரும் அவரே. அவருடைய கருத்தினை முத்தேசா ஏற்றுக்கொண்டார். ஆனால், புகாண்டாவுக்கு வந்த கத்தோலிக்க, மறுப்புரைக்கிறித்தவ, முசுலிம் சமயப் பரப்பாளர்களிடையே பகைமை வளர்ந்தது. முத்தேசா கி.பி. 1884–இல் காலமானபோது, அவர்தம் மகன் முவாங்கா (Mwanga) மன்னரானார். அவர் கிறித்தவர்களை ஒறுத்தார். இதன் பயனாக உகாண்டாவில் பத்தாண்டுகள் உள்நாட்டுக் குழப்பமும் சமயச் சச்சரவுகளும் நிகழ்ந்தன.

ஆப்பிரிக்கக் கண்டத்தைத் தமக்குள் பங்குபோட்டுக் கொள்ளும் நோக்கத்திற்காக கி.பி. 1884–ஆம் ஆண்டில் கூட்டப் பெற்ற பெர்லின் மாநாட்டில் (Berlin Conference) கூடிய ஐரோப்பிய நாடுகள் ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்டன. இங்கிலாந்தும் செருமனியும் கிழக்கு ஆப்பிரிக்காவைப் பிரித்துக் கொள்வதென ஒப்புக் கொண்டன. கென்யாவும் உகாண்டாவும் இங்கிலாந்து நாட்டிற்கும், தங்கனீகா (Tanganyika) செருமனிக்கும் கொடுக்கப்பட்டன. உகாண்டாவின் பகுதியான புகாண்டாவில் ஆங்கிலக் காப்பரசு (Protectorate) அமைக்கப்பட்டது. ஆங்கிலேயரும் புகாண்டியரும் இணைந்து எஞ்சியிருந்த உகாண்டாவின் பகுதியிலும் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

இங்கிலாந்தும் புகாண்டா அரசும் கி.பி. 1900-ஆம் ஆண்டில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டன. அதன்படி புகாண்டாவுக்கு ஓரளவு சுதந்திரத்திற்கான தகுதி வழங்கப்பட்டது. பின்னர்ப் புன்யோரோ, தோரோ (Toro), அங்கோல் (Ankole) ஆகிய அரசுகளுக்கும் புசோகா (Busoga) என்னும் மாவட்டத்திற்கும் அத்தகைய சுதந்திரம் அளிக்கப்பட்டது.

உகாண்டாவில் வலிமை வாய்ந்த மத்தியஅரசை 1950-ஆம் ஆண்டளவில் நிலைநாட்ட இங்கிலாந்து முயன்றபோது புகாண்டா அதனை வன்மையாக எதிர்த்தது. எனினும், 1962-ஆம் ஆண்டில் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுக் கூட்டாட்சி முறை நிலைநாட்டப்பட்டது; புகாண்டாவும் ஏனைய அரசுகளும் அதனை ஏற்றுக் கொண்டன. புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தைப் புகாண்டா ஏற்றுக் கொண்டவுடன் சுதந்திரம் பெறுவதற்கிருந்த தடை நீக்கப்பட்டது. பொதுநல(Commonwealth) நாடுகளுள் ஒன்றாக, 9-10-1962-இல் உகாண்டா சுதந்திரம் பெற்றது. ஆங்கிலப் பேரரசியின் அரசப் பேராளராக ஒருவர் அரசின் தலைவராக அமர்த்தப்பட்டார்.

நடுவண அரசாங்கம்: உகாண்டா 1962-ஆம் ஆண்டைய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஓர் இறைமையுள்ள குடியரசு என்றும் (Sovereign Republic) அது பொதுநல நாடுகள் கழகத்தின் உறுப்பு நாடு என்றும் அறிவிக்கப்பட்டது. இந்நாட்டின் நடுவண அரசாங்கத்தின் தலைவராகவும் நாட்டின் தலைவராகவும் படைகளின் தளபதியாகவும் இருப்பவர் நிருவாகத் தலைவர் (Executive President) ஆவார். இவருக்கு ஓர் அமைச்சரவை உதவி செய்யும். அமைச்சரவையின் உறுப்பினர்கள் நாட்டின் சட்ட மன்றமாகிய தேசிய மன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமர்த்தப்படுகிறார்கள். ஓர் ஒற்றைமன்றம் நாட்டின் சட்ட மன்றமாகப் பணி செய்கிறது. இதன் உறுப்பினர்களாக 136 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதில் 10 இராணுவ அலுவலர் உறுப்பினர்களாக அமர்த்தப்படுகின்றனர். மன்றத்தில் அதிக இடங்களைப் பெறும் கட்சிக்கு 10 வரை கூடுதல் பெரும்பான்மை இருக்கும் பொருட்டு, மேலும் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மன்றத்தின் கூட்டங்கள் தலைவரால் நடத்தப்படுகின்றன. நிருவாகத் தலைவர் மன்ற விவாதங்களில் கலந்து கொள்ளுகிறார். தேசிய மன்றத்தின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்.

உள்ளாட்சி அமைப்பு: நாடு 1962-ஆம் ஆண்டு அரசியமைப்பின்படி ஒரு கூட்டாட்சி அமைப்பில் இருந்தது; அங்கோல், புகாண்டா, புன்யோரோ, தோரோ முதலிய அரசுகளிருந்தன. இவை நடுவண் அரசாங்கத்தோடு கூட்டாட்சி முறையில் தொடர்பு கொண்டிருந்தன. மரபு வழியான முடியாட்சி 1967-ஆம் ஆண்டுவரை நிகழ்ந்தது. எல்லா அரசுகளும் 1967-இல் ஒரே நாடாக இணைக்கப்பட்டு, நாடு முழுவதும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. பின்னர், அது மாற்றப்பட்டு, மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. நடுவண் அரசாங்கத்தில் உள்ளாட்சி அரசாங்க அமைச்சகம் உள்ளாட்சி அரசாங்கங்களுக்குள்ள பொறுப்பை ஏற்றுள்ளது.

நீதிமுறை: இங்கிலாந்து நாட்டிலுள்ளது போன்றே ஒரு நீதித்துறை உகாண்டா நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதற்குமான தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை உகாண்டாவின் நீதிமன்றம் (High Court of Justice of Uganda) பெற்றுள்ளது. ஒரு தலைமை நீதிபதியும் 8 துணை நீதிபதிகளும் அதில் இடம் பெற்றுள்ளனர்; மேலும், பதிவாளர்களும் சிறிய நீதிபதிகளும் (Magistrates) உள்ளனர். எல்லா நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் அமைச்சரவையின் ஆலோசனையின்படி அமர்த்தப்படுகின்றனர். தீய நடத்தை, உடல்நலக் குறைவு முதலிய காரணங்களுக்காக உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் நீக்குதல் இயலும். குடியரசுத் தலைவரைத் தலைவராகவும் (Chairman), அரசாங்க வழக்கறிஞரையும் (Attorney General) தலைவருடைய ஆலோசனையின் பேரில் அமர்த்தப்பட்ட சில துணை நீதிபதிகளையும் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு நீதித்துறைப் பணி ஆணையம் (Judicial Service Commission) இருக்கிறது. நாடு முழுவதும் மாவட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்திலிருந்து வரும் மேல் முறையீடுகளை இது ஆய்வு செய்கிறது.

சுதந்திரம் பெற்ற சிறிது காலத்திற்குள் அரசப் பேராளர் பதவி நீக்கப்பட்டது. புகாண்டாவின் அரசராக இருந்த சர் எட்வர்டு முத்தேசா (Sir Edward Mutesa) உகாண்டாவின் முதல் குடியரசுத் தலைவரானார். குடியரசுத் தலைவரான முத்தேசாவுக்கும் தலைமை அமைச்சராயிருந்த டாக்டர் அப்போலோ மில்ட்டன் ஓபோட்டே (Dr. Apolo Milton Obote) என்பாருக்குமிடையே 1966-இல் மோதல் ஏற்பட்டுப் போர் மூண்டது. போரில் குடியரசுத் தலைவரின் படைகள் தோற்றன. மில்ட்டன் ஓபோட்டே குடியரசுத் தலைவரானார். புதிய அரசியல் அமைப்புத் திட்டமொன்று செயல்முறைப்படுத்தப்பட்டது. அரசுகள்

அனைத்தும் கலைக்கப்பட்டன. நாடு 18 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, மத்திய அரசால் நிருவகிக்கப்பட்டது. உகாண்டாவின் இராணுவம் ஓபோட்டேவைப் பதவி நீக்கம் செய்தது. இடி அமீன் என்னும் படைத்தலைவர் உகாண்டாவின் தலைவரானார்.

இடி அமீன் 1971-இல் பழைய அரசியல் அமைப்புத் திட்டத்தை ஒழித்தார்; தேசிய சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தம்மையே நாட்டின் தலைவராகவும் அரசின் பொறுப்பாளராகவும் ஆக்கிக் கொண்டதோடு, தம் வாழ்நாள் முழுவதும் தாமே குடியரசுத் தலைவரென அறிவித்தார். அவர்தம் எட்டாண்டுக்கால வல்லாட்சியில் 3,00,000 கிறித்தவர்கள் கொல்லப்பட்டனர். உகாண்டா மக்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறினர். பொருளாதாரம் சீர்குலைந்தது.

தென் உகாண்டாவிலிருந்த இராணுவ அமைப்புகள் இடி அமீனுக்கெதிராகக் கலகஞ் செய்தன. கலகத்தை அடக்க இடி அமீன் பெரிதும் முயன்றார். தான்சானியாவின் பகுதிகள் சிலவற்றை அவர் கைப்பற்றிக் கொண்டார். தான்சானியா உகாண்டா கலகக்காரர்களுடன் இணைந்துகொண்டு, 1979-ஆம் ஆண்டில் அந்நாட்டின்மீது படையெடுத்தது. உகாண்டாவின் தலைநகர் கம்பாலா கைப்பற்றப்பட்டது. இடி அமீன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்.

யூசுப்பு உலூலே (Yusufu Lule) என்பாரின் தலைமையில் தற்காலிக அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பின்னர்க் காட்பிரே பினாய்சா (Godfrey-Binaisa) என்பவர் பதவியில் அமர்ந்தார். அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை 1980-இல் படைத்தலைவர் குழுவொன்று மேற்கொண்டது. அவ்வாண்டு இறுதியில் தேர்தல் நடைபெற்றது. ஓபோட்டே மீண்டும் நாடு திரும்பிக் குடியரசுத் தலைவரானார். தொடர்ந்து குழப்பமான சூழ்நிலையே நீடித்தது. பொருளாதார நிலை சீர் குலைந்தது. வட உகாண்டாவில் வாழ்ந்த மக்கள் பட்டினியால் வாடினர். நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாமல் அரசு தவித்தது.

**உகாண்டா நாட்டில் கல்வி**: பிற வளரும் நாடுகளைப் போலவே உகாண்டாவும் (Uganda) உயர்கல்வித் திறம் பெற்றவர்கள் பற்றாக் குறையால் வாடுகிறது. இக்காரணத்தால் இந்நாடு சமுதாய, பொருளாதார மேம்பாட்டில் பின்தங்கியுள்ளது.

உகாண்டாவின் பொருளாதார வளர்ச்சியும் சமுதாய நலனும் கல்வியால்தான் மேம்பட்டு அமையும் என்று இந்நாட்டு அரசு கருதத் தொடங்கியுள்ளது. அனைவருக்கும் கல்வியறிவு வழங்குவது, அந்நாட்டின் பண்பாடுகளைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவது, சுறுசுறுப்பான சமுதாயத்தின் ஆக்கத்திறன் மிக்க குடிமக்களை உருவாக்குவது, நாட்டுப் பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்யத் துணைபுரியும் திறமைமிக்க தொழில் வல்லுநர்களையும் கல்வியாளர்களையும் உருவாக்குவது ஆகியன உகாண்டா நாட்டுக் கல்வியின் தலையாய குறிக்கோள்கள்.

உகாண்டாவில் ஊர்ப்புறங்களில் மழலையர் பள்ளிகள் இன்னும் தோன்றவில்லை. நகர்ப்புறங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் உள்ள மழலையர் பள்ளிகளில் சில செல்வர் வீட்டுப் பிள்ளைகள் மட்டும் படித்து வருகின்றனர்.

தொடக்கக் கல்வி ஏழு ஆண்டுகள் பயிற்றுவிக்கப் படுகிறது. பெரும்பாலான குழந்தைகள் ஆறுவயதில் முதன் முதலாகப் பள்ளியில் காலடி எடுத்து வைக்கின்றனர். 70 விழுக்காடு குழந்தைகள் தொடக்கக் கல்வி பெறுகின்றனர். தொடக்கப் பள்ளியில் ஆங்கிலம் கணிதம், பொது அறிவியல், வரலாறு, சமய அறிவு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்பள்ளி மாணவர்கள் ஏழாம் ஆண்டிறுதியில் தொடக்க நிலையிறுதித் தேர்வு (Primary Learning Examina-tion - PLE) எழுதுகிறார்கள். இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலோ (Advanced 'A' level) தொழிற் பள்ளிகளிலோ சேருகின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவில் இம்மாணவர்கள் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் சேருகின்றனர். தொடக்கநிலைப் பள்ளிகளில் சேர்ந்து பயின்ற மாணவர்களுள் 25 விழுக்காடு மாணவர்களே உயர்நிலைக் கல்விக்குச் செல்கின்றனர். மற்றவர்கள் ஏறத்தாழப் பாதியிலே நின்று விடுகிறார்கள்.

உயர்நிலைக் கல்வியை வெற்றியுடன் முடித்த மாணவர்களுள், 20-இலிருந்து 40 விழுக்காடு வரையிலான மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலோ (Advanced 'A' level) ஆசிரியர் உயர் பயிற்சிக் கல்லூரிகளிலோ தொழிற்கல்வி நிறுவனங்களிலோ வணிகவியல் கல்லூரிகளிலோ சேர்ந்து பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் சேர்ந்து பயின்ற மாணவர்களுள் 20 விழுக்காடு மாணவர்களே வெற்றி பெறுகின்றனர். ஏறத்தாழ 80 விழுக்காடு மாணவர்கள் படிப்பைப் பாதியிலே நிறுத்திவிடுகின்றனர்.

உகாண்டாவில் பள்ளிசாராக் கல்வி(Non-formal Education) வசதி உண்டு. இக்கல்வி மையங்களில்

இளைஞர்களும் வயது முதிர்ந்தோரும் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு பெறும் வகையில் கல்வி கற்கின்றனர். பள்ளிசாராக் கல்வி வளர்ச்சியில் ஆலயங்கள், வட்டார எழுத்தறிவுக் கழகங்கள், பண்பாடு, சமுதாய மேம்பாடு அமைச்சகம் (Ministry of Culture and Community Development) ஆகியன ஈடுபடுகின்றன. இந்நாட்டில் 1964-65-ஆம் ஆண்டுகளில் அரசினால் தொடங்கப்பெற்ற வயதுவந்தோர் கல்வியறிவு இயக்கம்(Adult Literacy Campaign)வெற்றியடையவில்லை. இருந்தபோதிலும் இந்நாட்டு வானொலி, தொலைக்காட்சி ஆகியன உடல்நலம், உடல்நலப் பாதுகாப்பு, ஊட்டச் சத்துணவு, குடும்பநலம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில்கள் குறித்து மக்களுக்குப் பொது அறிவை வழங்கி வருகின்றன. உகாண்டாவிலுள்ள மாக்ரரே பல்கலைக்கழகத் தொடர்கல்வி மையம் (Makerere University's Centre for Continuing Education-CCE) பல்கலைக்கழகக் கல்வியை ஊர்ப்புற மக்களுக்கு அளிக்கும் சிறந்தபொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இம்மையம் வயதுவந்தோர் கல்விப் பாடங்களை முழுநேரக் கல்வியாகக் கற்பிக்கிறது. இக்கல்வி பெறுவோர் இம்மையத்தில் வந்து தங்கிக் கற்கின்றனர். ஓராண்டுக் கால இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழகம் வயதுவந்தோர் கல்விச் சான்றிதழ் (University Certificate in Adult Studies) வழங்குகிறது. இம்மையத்தின் மாநில மையங்கள் உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்விப் பாடங்களை வேலையில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்குக் கற்பிக்கின்றன. மேலும், இவை வயதுவந்தோர் கல்வி குறித்து ஆசிரியர்களைக் கொண்டு கலந்துரையாடல், கருத்தரங்கம் போன்றவற்றையும் நடத்தி வருகின்றன.

நிதியும் நிருவாகமும்: இந்நாட்டின் கல்வியை நிருவகிக்கும் முழுப் பொறுப்பும் கல்வி அமைச்சகத்திடமுள்ளது. ஆனால், தொடக்கநிலைப் பள்ளிகளின் பொது நிருவாகம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சகம் மேல்நிலைப் பள்ளிக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, தொழில்நுட்பக் கல்வி, வணிகவியல் கல்வி ஆகியவற்றை நேரடிப் பொறுப்பேற்றுக் கண்காணித்து வருகிறது. மாக்ரரே பல்கலைக்கழகம் தன்னாட்சி பெற்று (Autonomous) இயங்கி வருகிறது. பள்ளிசாராக்கல்வி நிருவாகம் பண்பாடு, சமுதாய மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்குகிறது. அரசு கல்விக்காகத்தன் வரவு செலவுத் திட்டத்தில் 1972-ஆம் ஆண்டில் 25.3 விழுக்காடு ஒதுக்கியது; ஆனால், நாட்டின் வருவாய்க் குறைவு காரணமாக 1980-ஆம் ஆண்டிலோ 14.7 விழுக்காடு நிதியே ஒதுக்கியது.

ஆசிரியர் பயிற்சி: உகாண்டாவில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள். மாக்ரரே பல்கலைக்கழகக் கல்வியியல் புலம் மேனிலைக் கல்வியில் ஆசிரியர் பயிற்சி தருகிறது. தேசியக் கல்வி நிறுவனம் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகிறது. கம்பாலா (Kampala) நகரிலுள்ள உகாண்டாத் தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில்நுட்பவியல் பணியாளர்களுக்குப் பயிற்சி தருகிறது.

கல்வித்திட்டம்: உகாண்டாவில் 1973-இல் தொடங்கப்பெற்ற தேசிய கல்வித் திட்ட மேம்பாட்டு மையமே(National Curriculam Development Centre) இந்நாட்டின் பாடத்திட்டம், கல்வித்திட்டம் ஆகியவற்றை முடிவு செய்கிறது. இம்மையத்தில் சிறந்த ஆசிரியர்களும் கல்வியாளர்கள் குழுக்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் தம் பாடநூல்கள் எழுதுதல், ஆசிரியர் கையேடு தயாரித்தல்,பாடநூல்களை அச்சிட்டு வெளிக் கொணருதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர். நாடு முழுவதற்கும் ஒரே தன்மையான கல்வித்திட்டம் இந்நாட்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய கல்வித் திட்ட மேம்பாட்டு மையம் புதிய கற்பித்தல் முறைகளைச் சோதித்தறிதல், கற்பித்தல் திறன்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்தி வருகிறது.

தேர்வு முறைகள்: வெளித்தேர்வு முறைகள் மூலமே உயர்நிலை, மேனிலை வகுப்புகளுக்கு மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர். உகாண்டாத் தேசியத் தேர்வுகள் கழகம் (Uganda National Examinations Board--UNEB) ஒவ்வொரு கல்வி நிலையிலும் தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் வழங்கி வருகிறது.

கல்வியியல் ஆய்வு: இந்நாட்டில் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் கல்வியியலாய்வு முன்னேற்றமடையவில்லை பல்கலைக்கழகங்களில் கற்பித்தலுக்கு முதன்மையிடம் தரப்படுகிறதேயொழிய, ஆய்வுக்குச் சிறப்பிடம் தரப்படவில்லை. தனியார் முயற்சியில் மாணவர்களின் கல்வித்திறம் குறித்தும் ஆசிரியர் நடத்தை குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களிடையே பெருகிவரும் எழுத்தறிவின்மை, தொடக்கநிலை, உயர்நிலை, மேனிலை ஆகிய ஒவ்வொரு நிலையிலும் கல்வியைப் பாதியிலேயே கைவிட்டவர்களின் எண்ணிக்கைப் பெருக்கம், கற்ற கல்விக்கும் செய்ய வேண்டிய பணிக்கும் தொடர்

பின்மை, தகுதித்திறம் கொண்ட ஆசிரியர் பற்றாக் குறை ஆகியன உகாண்டாக் கல்வி அமைப்பில் தீர்வு காணப்பட வேண்டிய சிக்கல்களாகத் தோன்றியுள் ளன. இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக உகாண்டா அரசு புதிய பள்ளிகளை நிறையத் தோற்றுவிக்கிறது; செயலறிவுப் பாடங்களைப் பள்ளிகளில் புகுத்தியுள் ளது; தொழில் நுட்பவியல் கல்விக்கு முதலிடம் தந்துள்ளது; பள்ளிப் பாடத்திட்டத்தில் வேளாண் மையை ஒரு பாடமாகப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய் துள்ளது.

துணை நூல்கள்:

Uganda, Education Commission, Education in Uganda Report, Government Printer, Entebe, 1963.

Uganda, Recovery Programme 1982-84, Government Printer, Entebe, 1982.

**உகாய்க்குடி கிழார்** சங்க காலப் புலவர்க ளுள் ஒருவர்; உகாய்க்குடி என்னும் ஊரைச் சேர்ந்த வர். இவரது ஊர்ப்பெயரே இவருக்குப் பெயராக வழங்கி வந்துள்ளது. இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் (63) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ள அப் பாடல் பொருள் ஈட்டச் செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. பொருள் இல்லாத ஒருவர் வறுமையிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் இன்பங்களை நுகரவும் முடியாது என் னும் உண்மையினை, 'ஈதலும் துய்த்தலும் இல் லோர்க் கில்லென' என்று தம் பாடலில் அழகுற அமைத்துக் காட்டியுள்ளார்.

**உகில், மேக்சு (கி.பி.1856-1944)** தென் அமெ ரிக்கத்தொல்லியல் அறிஞர். உகில், மேக்சு (Uhle, Max) கி.பி. 1856-இல் பிறந்தார். இவர் ஆண்டியன் நாகரிகத்தை ஆய்ந்தவர். மண்ணடுக்காய்வு(Stratigr- aphy) முறையில் ஆண்டியன் நாகரிகத் தொன்மைப் பொருள்களைப் பிரித்து, வரிசைப்படுத்திக் காலத் தைக் கணித்தபெருமை இவரையே சாரும். தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில் விரிவாகப் பல கள ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் தியாகுய னாகோ (Tiahuanaco) என்னும் தொன்மை நகரத் திற்குச் சென்று ஆய்வுகள் மேற்கொண்டார்; மோசிகா (Mochica) நாகரிகத் தொடர்புடைய பல் வேறு பகுதிகளையும் பச்சாகாமக்கு (Pachacamac) என்னும் நகரத்தையும் அகழாய்வு செய்தார். இவர் சிஞ்சா (Chincha), அய்கா (Ica) பள்ளத்தாக்குகளில் அகழாய்வுகள் மேற்கொண்டு, தொன்மை மிக்க நாசுகா (Naska) என்னும் மட்கலன்களைக் கண்டெ டுத்தார். பிற்காலத்தில் தென் அமெரிக்காவின் கடற்கரைப் பகுதிகளிலும் சிலி, ஈக்வடார்ப் பகுதிக ளிலும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் தம் ஆய்வுகளின் மூலம் சேகரித்த செய்திகளைக் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி னார். இக்குறிப்புகளைப் பல்வேறு அறிஞர்கள் பிற் காலத்தில் படித்துப் பல ஆய்வுப் புத்தகங்களை வெளியிட்டனர். இவர்தம் ஆய்வுக் குறிப்புகளைப் படித்து ஆய்ந்த அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் குரோபர் (Kroeber) ஆவார். உகில்மேக்சு 1944-ஆம் ஆண்டு காலமானார்.

**உச்சச் சுமை விலை வரையறை:** மிகுந்த சமுதாயப் பயன்பாடுள்ள பொருள்களை அரசு அல் லது பொதுத்துறை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றபோது அவற்றின் விலையை வரையறுப் பதில் பலகோட்பாடுகளைப் பின்பற்றுகின்றது. அவற் றுள் ஒன்று உச்சச் சுமைச் விலை வரையறை (Peak Load Pricing) ஆகும்.

விலைக் கொள்கை: பொதுவாக, தனியாரோ பொதுத் துறையோ ஒரு பொருளை உற்பத்தி செய்து, அதற்கான விலையை வரையறுக்கிற பொழுது ஓர் அடிப்படை விதியினைப் பின்பற்றுவார் கள். ஒரு பொருளின் இறுதிநிலைவருவாயும் (Margi- nal Revenue) இறுதிநிலைச் செலவும் (Marginal Cost) சமமாக இருக்கும் வகையில் அதன் விலை வரையறுக்கப்பட வேண்டும் என்பதே அவ்விதி.

ஒரு பொருளின் விலைதான் அதனுடைய உற் பத்தியாளருக்குக் கிடைக்கிற சராசரி வருவாய். ஒரு பொருளின் இறுதிநிலை வருவாயை (அதாவது சராசரி வருவாய்) விடக் குறைவாக இறுதிநிலைச் செலவு இருந்தால், அந்தப் பொருளை மேலும் உற் பத்தி செய்வது ஆதாயமாக இருக்கும். மேன்மேலும் அந்தப் பொருளை உற்பத்தி செய்கின்றபொழுது அத னுடைய இறுதி நிலைச் செலவு கூடும். இறுதி நிலைச் செலவு விலைக்குச் சமமாக உயர்கிறவரை உற்பத்தி செய்வதும் விற்பனை செய்வதும் ஆதாயமாக இருக் கும். இந்தப் பொது விதியை அரசுத் துறையும் பின் பற்றுகிறது.

தனிச் சூழ்நிலை: பொதுவாக, தனியார் பயன் படுத்துகிற பொருள்களை உற்பத்தி செய்வதிலோ விற்பனை செய்வதிலோ அரசு கவனம் செலுத்துவ தில்லை. ஆனால், சில குறிப்பிடத்தக்க சூழலில் அரசு தனியாருக்குத் தேவையான பொருள்களை விற்பனை செய்கிறது. அவற்றில் சில சிக்கல்கள் எழுகின்றன.

அரசு மட்டுமே ஒரு பொருளை உற்பத்தி செய்து, விற்பனை செய்தால் அது ஒரு முற்றுரிமை (Monopoly) நிறுவனமாகச் செயற்படும். அதனால், ஏற்படும் ஆதாயம் பொதுத்துறைக்குச் செல்லும். அரசு முற்றுரிமை ஆதாயம் பெற விரும்பாவிட்டால், விலைகளைக் குறைத்து விற்பனை செய்ய இயலும். இதனால், பொருள்கள் மிகுதியாக விற்பனையாகும். நிறைவுப் போட்டியில் இருப்பது போன்று விலை குறைவானதாக இருக்கும். நிறைவுப் போட்டியில் ஏற்படக்கூடிய நன்மைகள் எல்லாம் கிடைக்கும். ஆனால், அரசு மக்களின் நலம் கெடுக்கும் மது, சிகரெட்டுப் போன்றவற்றின் விலையை மிகவும்உயர்த்தி நுகர்வைக் குறைக்க முயலலாம். சில நாடுகளில் புகையிலை விற்பனையை அரசு மேற்கொண்டுள்ளது. பெரும்பாலான நாடுகளில் மக்கள் நலனைக் கெடுக்கும் மதுவின் விற்பனையை அரசு ஏற்று நடத்துகிறது.


பொருள்களின் அளிப்புப் பற்றாக்குறையாக இருந்தால், குறைந்த விலையில் அவை ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கத்தக்க பங்கீட்டு முறையை (Rationing) அரசு பின்பற்றலாம். வேறுபடுத்தப் பெற்ற விலைகளில் ஒரே பொருளை விற்பனை செய்வது உண்டு. இத்தகைய தனிப்பட்ட சூழ்நிலைகளில் பொதுத் துறையில் விலை வரையறை செய்வதும் பொருளியலில் முடிவு காண வேண்டிய சிக்கலாகிறது.

பொதுப் பயன்பாடுடைய ஒரு பொருளுக்குரிய தேவை சீராக இல்லாமல் அடிக்கடி மாறுகிற பொழுது, அதன் விலையை வரையறுப்பதில் பல காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுப் பயன்பாடுடைய மின்சாரத்தின் விலை வரையறையை எடுத்துக் கொண்டால், மின்சாரத்தின் தேவை தொழில்கள் மிகுந்த பகுதியில் பகலில் மிகவும் அதிகமாக இருக்கும். ஆனால், இரவில் சில குறிப்பிட்ட காலத்தில் மின்சாரத்தின் தேவை குறைவாக இருக்கும். இத்தகைய நிலையில் மின்சாரத்தின் விலையை உறுதி செய்ய அதன் தேவையைக் கால அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, உச்சத் தேவைக் காலம் (Peak-Period). மற்றொன்று, குறைவான தேவைக் காலம் (Off-Peak Period).

மின்சார உற்பத்தியின் விற்பனை நிறுவனம் அதனுடைய இறுதிநிலைச் செலவின் அடிப்படையில் எந்த நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும் ஒரே விலையை வரையறுப்பதாகக் கொண்டால், இவ் எடுகோளின் (Assumptions) அடிப்படையில் உச்சத் தேவைக் காலத்தில் மின்சாரத்திற்கான தேவை அதனுடைய அளிப்பை விட மிகையாக இருக்கும். ஆனால், குறைந்த தேவைக் காலத்தில் மின்சாரத்தின் அளிப்பு அதனுடைய தேவையை விட மிகுதியாக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் மிகுதியாகத் தேவை இருக்கும் பகற் பொழுதில் மின்சாரத்தின் அளிப்பை நெறிப்படுத்துவது தேவையாகிறது. யாருக்கு மின்சாரம் மிகவும் அதிகப் பயன்பாடுடையதாக இருக்குமோ அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கும் வகையில் விலையை வரையறுக்க வேண்டும்.

உச்ச அளவில் தேவை இருக்கும் காலத்தில் மின்சாரத்தின் ஓர் அலகுக்கு அதிக விலையும், குறைந்த அளவு தேவை இருக்கும் காலத்தில் குறைவான விலையும் வரையறுக்க வேண்டும். அப்பொழுது உச்ச அளவு தேவைக் காலத்தில் விலை மிகுதியாக இருப்பதால் மக்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவார்கள். மிகவும் தேவையானவர்கள் மட்டும் அதிக விலை கொடுத்து மின்சாரத்தைப் பயன்படுத்த முன்வருவார்கள். மற்றவர்கள் தங்கள் தேவையைக் குறைவான விலையுள்ள காலத்திற்கு மாற்றிக் கொள்வார்கள்.

குறைவாகத் தேவையுள்ள காலத்தில் வரையறுக்கிற விலை இறுதி நிலைச் செலவுக்குச் சமமாக இருப்பதாகக் கொண்டால், மிகுதியான தேவை உள்ள காலத்தில் அளிப்பை ஒட்டி விலையை அதிகமாக வரையறுக்கலாம். இதனால், தேவையை ஓரளவு மாற்றியமைப்பதோடு கூட, அந்த நிறுவனத்தின் ஆதாயம் மிகுதிப்படுவதையும் காணலாம். உச்சச் சுமை விலை வரையறுக்கப்படும் முறையை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




மின்சாரத்தின் அளிப்பு அலகுகள்

வரைபடத்தில் படுக்கை அச்சுக் கோட்டில் (OX) மின்சாரத்தின் அளிப்பு அலகுகளும், செங்குத்துக் கோட்டில் (OY) மின்சாரத்தின் ஓரலகு விலையும் குறிக்கப்பட்டுள்ளன. OC என்பது மின்சாரம் பயன் படுத்தக் கிடைக்கிற அளவைக் குறிக்கிறது. Dp Dp வளைகோடு உச்ச தேவைக் காலத் தேவையைக் (Peak-Period Demand) குறிக்கிறது. Do Do வளை கோடு குறைவான தேவைக் காலத் தேவையைக் (Off-Peak Period Demand) காட்டுகிறது. AB இறுதி நிலை உற்பத்திச் செலவுக் கோடாகும். இருக்கிற மின்சார அளிப்பு வரை உற்பத்திச் செலவு மாறாம லிருக்கும் என்பது எடுகோள். அதற்குமேல் அளிப்பைக் கூட்ட இயலாது. அளிப்பு நெகிழ்வற்று (Inelastic Supply) இருக்கும் நிலையை BE கோடு காட்டு கிறது.

தேவை குறைவாக இருக்கும் கால விலை ஓர் அலகிற்கு OA ஆக இருக்கும். இந்த விலையில் OF அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவார்கள். தேவை மிகுதியாக இருக்கும் காலத்தில் மின்சாரத்தின் ஓரலகு விலையை Opp ஆக வரையறுப்பார்கள். அதாவது, FC அளவு மின்சாரத்தை உயர்ந்த அளவு விலையில் விற்பனை செய்வார்கள்.

சிறப்பியல்புகள்: பொதுத் துறையின் விலை வரையறையில் உச்சச் சுமை விலை வரையறைக் கருத்துச் சிறப்பிடம் பெறுகிறது. விலை வேறுபாட் டின் (Differential Pricing) முக்கியத்துவத்தை இக் கருத்து வலியுறுத்துகிறது. அரசு அளிக்கிற ஒரே பொருளுக்கு அல்லது பணிக்கு இரு வேறுபட்ட விலை அல்லது கட்டணம் வாங்குவது பழக்கத்தில் இருக்கிறது. அதன் அடிப்படையை விளக்க இக் கருத்துத் துணை செய்கிறது. எடுத்துக்காட்டாக, அஞ்சலட்டைக் கட்டணத்தில் இருக்கும் வேறுபாட் டைக் கூறலாம். இந்தியாவில் கையால் எழுதுகிற அஞ்சலட்டைக்கு 15 காசு அஞ்சல் தலையும் அச் சிட்ட அஞ்சலட்டைக்கு 40 காசு அஞ்சல் தலை யும் ஒட்ட வேண்டியதிருக்கிறது. ஓர் அஞ்ச லட்டையின் அடக்கச் செலவு 15 காசுக்கு மேல் வரு கிறது. அஞ்சலட்டைகளைக் குறைவான கட்டணம் காரணமாக மிகுதியான மக்கள் பயன்படுத்துகின்ற னர். ஆதலால், அஞ்சலட்டையை ஒரே காசுக் கட்ட ணத்தில் வெளியிடுவது அஞ்சல் துறைக்கு இழப்பாக இருக்கும்.

அஞ்சலட்டைகளைப் பயன்படுத்துபவர்களை அஞ்சல் துறை இருவகைகளாகப் பகுக்கிறது. ஒரு பிரிவினர் ஏழை-எளிய நடுத்தர மக்கள். இவர்கள் கையினால் கடிதம் எழுதுபவர்கள். இரண்டாம் பிரி வினர் வணிகக் கடிதங்கள் எழுதுபவர்கள். இவர்கள் அஞ்சலட்டைகளைப் பொதுவாக அச்சிட்டு மிகுதி யான அளவில் பயன்படுத்துபவர்கள். அஞ்சல் கட்ட ணம் உயர்வாக இருந்தாலும் இவர்கள் அஞ்சலட்டை களைப் பயன்படுத்துவார்கள். ஆதலால், இவர் களிடம் உயர்ந்த கட்டணமும் பொதுமக்களிடம் குறைந்த கட்டணமும் வாங்குவதால், அஞ்சலட்டை வெளியிடுவதில் ஏற்படும் இழப்பை ஓரளவு ஈடுகட்ட முடிகிறது. இதில் சமுதாய அறக் கருத்தும் அடங்கு கிறது.

பொதுப் பயன்பாடுடைய பொருள் பற்றாக் குறையாக இருக்கிறபொழுது யாருக்கு அந்தப் பொருளை அளிப்பதென்ற சிக்கல் எழுகிறது. அரசு கட்டுப்பாட்டு விலையில் ஏழை எளியவர்களுக்கு அப்பொருள் ஓரளவுக்கேனும் கிடைக்கச் செய்து விட்டு, மீதியை வெளி அங்காடியில் தேவையை ஒட்டி அதிக விலைக்கு விற்கச் செய்கிறது. இதன் மூலம் பொதுப் பகிர்வின் நோக்கம் (Public Distribution Objective) ஓரளவு நிறைவேறக் காணலாம்.

பொதுத்துறை விரைந்து வளரும் இக்காலத்தில் உச்சச் சுமை விலை வரையறைக் கருத்துச் செல் வாக்குப் பெற்று வருகிறது. மா.பா.கு.

துணை நூல்கள்:

**Richard, A.,** Musgrave and Peggy B. Musgrave, Public Finance in Theory and Practice, Mc Graw-Hill International Book Company, New Delhi, 1983.

**Baumol, William, J. and Wallace Oates,** Economics - Environmental Policy and the Quality of Life, Englewood Clffs, N.J., Prentice-Hall, 1979.

**உச்ச நம்பக வெளியீட்டுக் கோட்பாடு**: இது தங்கத்தையோ பிற மதிப்பு வாய்ந்த உலோ கங்களையோ பிணையமாக (Security) வைக்காமல் செலாவணிக்கான பணத்தாள்களை வெளியிடும் கோட்பாடாகும். பிணையமில்லாமல் குறிப்பிட்ட ஓர் உச்ச அளவுக்குப் பணத்தாள்களை வெளியிட அரசு தன் நாட்டின் மைய வங்கிக்கு அனுமதி அளித் தல் உச்ச நம்பக வெளியீட்டு முறை (Maximum Fiduciary Issue System) எனப்படும்.

பணத்தாள் வெளியீடு: செலாவணிக் கோட் பாட்டின்படி (Currency Principle) 100 விழுக்காடு தங்கம் அல்லது வெள்ளியைப் பிணையுமாக வைத்து

மட்டுமே அதன் மொத்த மதிப்புக்கு ஈடான பணத்தாள்களை வெளியிட இயலும். ஆனால், இம்முறை எக்காலத்திலும் நடைமுறையில் செயற்படவில்லை. வங்கியியல் கோட்பாடு வலியுறுத்தும் பகுதியளவு வைப்பு முறையை (Partial Deposit System) உலகின் பல நாடுகள் செயற்படுத்துகின்றன. உச்ச நம்பக வெளியீட்டு முறை, நிலையான நம்பக வெளியீட்டு முறை (Fixed Fiduciary Issue System), ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை (Proportional Reserve System), குறைந்த காப்பு இருப்பு முறை (Minimum Reserve System) ஆகியன பகுதியளவு வைப்பு முறையின் நான்கு வகைகள்

உச்ச நம்பக வெளியீட்டு முறையைப் பிரான்சு முதன் முதல் கி.பி. 1870 முதல் 1928 வரை தன் நாட்டில் செயற்படுத்தியது. இங்கிலாந்து 1930-இலும், சப்பான் 1941-இலும் இம்முறையைப் பின்பற்றின. இம்முறையைப் பின்பற்றும் நாட்டின் அரசு தங்கம் அல்லது பிற மதிப்பு வாய்ந்த உலோகப் பிணையமின்றி எவ்வளவு உச்ச அளவு பணத்தாள்களை மைய வங்கி வெளியிடலாம் என்பதை வரையறுக்கும். இவ்வுச்ச அளவு வரையறை நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பொறுத்து அதன் தேவைக்குகந்த வகையில் திட்டமிடப்பட்டு உறுதி செய்யப்படும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலும் பணவியல் ஆய்வாளர்களின் திறனாய்வுகளின் அறிவுரைக்கு ஒத்த வண்ணமும், அவ்வப்போது உச்ச அளவு, நெகிழ்ச்சியுடையதாய் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசால் மாற்றி வரையறுக்கப்படும் இயல்புடையது.

கோட்பாட்டின் அடிப்படையில் இம்முறை மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பணத்தாள்களைச் சட்டமுறைப்படி ஒழுங்குபடுத்தக் கூடிய தனிச் சிறப்பு வாய்ந்த முறையென சே. எம். கீன்சு (J.M. Keynes) இதைப் பெரிதும் போற்றினார். ஆனால், நடைமுறையில் தேவைக்கு மிகையாக உச்ச அளவு வரையறுக்கப்பட்டு விடுவதால் பணவீக்கத்திற்கு (Inflation) உச்ச நம்பக வெளியீடு காரணமாகிறது. சில காலங்களில் அரசு எக்காரணமுமின்றி உயர்ந்த அளவில் உச்ச அளவை உறுதி செய்துவிடும் நிலை ஏற்பட்டும் பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டதுண்டு.

நிலையான நம்பக வெளியீட்டு முறை: இம்முறையில் ஒரு குறிப்பிட்ட நம்பக அளவுக்கு மட்டிலுமே தங்கப் பிணையமின்றிப் பணத்தாள்களை வெளியிடச் சட்டம் இயற்றப்பட்டு, மைய வங்கிக்குச் சட்டமுறைப்படி (by Law) ஆணை வழங்கப்படும். அதற்கு மேலாக வெளியிடப்படும் பணத்தாள்களின் மதிப்புக்கு ஈடான தங்கத்தை 100 விழுக்காடு பிணையமாக மைய வங்கி வைத்திருக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட நம்பக அளவு மாற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால், அதற்கான மாற்றுச் சட்டம் இயற்றப்பட்ட பின்னரே அது செயற்படும்.

நிலையான நம்பக வெளியீட்டு முறை இங்கிலாந்தில் கி.பி.1844 முதல் 1939 வரை நடைமுறையிலிருந்தது. நம்பக அளவு காலச் சூழ்நிலைக்கேற்றவாறு அவ்வப்போது மாற்றப்பட்டது. இத்தாலி, நார்வே, பின்லாந்து (Finland) ஆகிய நாடுகள் இம்முறையை 1929க்கு முன்னர்ப் பின்பற்றின, சப்பானும் இம்முறையைச் சில மாற்றங்களுடன் பின்பற்ற முயற்சி செய்தது. இந்தியாவில் கி.பி. 1861-ஆம் ஆண்டுச் சட்டப்படி நம்பக அளவு உரூபாய் 4 கோடியாக உறுதி செய்யப்பட்டது. இவ்வரையறை கி.பி. 1871-இல் உரூபாய் 6 கோடியாகவும், கி.பி. 1890- இல் உரூபாய் 8 கோடியாகவும், கி.பி. 1897-இல் உரூபாய் 10 கோடியாகவும், 1905-இல் உரூபாய் 12 கோடியாகவும், 1914-இல் உரூபாய் 14 கோடியாகவும், 1920-இல் உரூபாய் 120 கோடியாகவும் உயர்த்தப்பட்டது.

நிலையான நம்பக வெளியீட்டு முறையினால் பணத்தாள்களைத் தங்கமாக மாற்ற இயலும் (Convertibility) நம்பிக்கை மக்களுக்கு உண்டாகிறது. இத்தகைய பணத்தாள் வெளியீட்டின் மூலம் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது; இம்முறையில், பணத்தாள் வெளியீட்டின் அளவை உயர்த்தத் தங்கமும் வெள்ளியும் தேவைப்படுவதால் தேவைக்கு மிகையாகப் பணத்தாள் வெளியிடப்படுவது தவிர்க்கப்படுகிறது. இம்முறையின் நெகிழ்ச்சியற்ற தன்மை நெருக்கடிக்காலங்களிலும் வளர்ச்சியடையும் பொருளாதாரத்திலும் ஏற்படும் சிக்கல்களையும் தேவைகளையும் மேற்கொள்ள இயலாததாயுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்த குறையாகும்.

ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை: இம்முறையில் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தாள்கள் 100 விழுக்காடு தங்கப் பிணையத்தின் அடிப்படையில் மைய வங்கியால் வெளியிடப்படும். அதற்கு மிஞ்சியவை அனுமதிக்கப்பட்ட பிணைய ஆவணங்களின் (Approved Securities) அடிப்படையில் வெளியிடப்படும். தங்கப் பிணையத்தின் அடிப்படையில் வெளியிட அனுமதிக்கப்படும். பணத்தாள்களின் ஒப்புவீதக் காப்பு இருப்பு மொத்தப் பணத்தாள்களின் மதிப்பில் 25 முதல் 40 விழுக்காட்டுக்குள் அடங்கும்.

பிரான்சு இம்முறையை 1928-இல் தழுவியது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஆசுத்திரேலியா

(Australia), கனடா, நியூசிலாந்து, அர்செண்டினா ஆகிய நாடுகளும் இம்முறையை ஏற்றுக் கொண்டுள் ளன. இந்தியா 1927 முதல் 1956 வரை இம்முறை யைப் பின்பற்றியது. அதன்படி மொத்தப் பணத்தாள் வெளியீட்டில் 40 விழுக்காட்டுக்குத் தங்கக் கட்டி, தங்கக் காசுகள், இசுதெர்லிங்கு (Sterling) ஆகியவற் றைப் பிணையங்களாகவும், எஞ்சிய 60 விழுக்காட் டுக்கு உருபாயில் மதிப்பிட்ட பிணையங்களைப் பிணையமாகவும் (Rupee valued Sccurities) கொண்டு பணத்தாள்களை வெளியிட்டது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் 1934-இன்படி, மொத்தப் பணத்தாள் வெளியீட்டில் 40 விழுக்காட்டுக்குத் தங்க மும் எஞ்சிய 60 விழுக்காட்டுக்கு இசுதெர்லிங்கும் பிற அயற்செலாவணியும் பிணையமாக வைக்க வேண்டு மென்பதை ஏற்படுத்தியது. இது விழுக்காட்டு வைப்பு முறை(Percentage Deposit System) என வழங்கப்பட்டது.

ஒப்புவீதக் காப்பு முறையில் நெகிழ்ச்சித் தன்மை, பிணையங்களின் அளிப்பைப் பொறுத்திருப்பதால் பல நாடுகளில் இது பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், அரசு சட்டப்படி வரையறுக்கும் ஒப்புவீதக் காப்பு அளவு குறைக்கப்படக்கூடிய தன்மையற்றதால், தங்க அளிப்புக் குறையும்போது பணத்தாள்களின் அளிப்பும் குறைந்து பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்பட வழி வகுக்கிறது.

குறைந்த காப்பு இருப்பு முறை: இம்முறையில் ஒரு நாட்டின் பணவியல் ஆணையகம் (Monetery Authority) ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவுத் தங் கத்தைச் சட்டப்படி பிணையமாக வைத்துக்கொண்டு பணத்தாள்களை வெளியிடலாம். இந்தியா இம் முறையை 1956-இலிருந்து பின்பற்றி வருகிறது. இந்திய மைய இருப்பு வங்கி குறைந்த அளவு உரு.200 கோடி மதிப்புப் பெறும் பிணயங்களை மொத் தப் பணத்தாள் வெளியீட்டிற்குக் காப்பாக வைத் திருக்க வேண்டும். இவற்றில் உரு. 115 கோடி மதிப் புத் தங்கம் காப்பாக (Reserve) இருக்க வேண்டும்.

குறைந்த காப்பு இருப்பு முறையில் உச்ச நெகிழ்ச்சித் தன்மை அடங்கியுள்ளது. அதனால், பொருளாதாரத் தேவைக்குகந்த வகையில் மைய வங்கி பணத்தாள்களை வெளியிடலாம். ஆனால், நடைமுறையில் அரசுகள் தங்கள் நிதித் தேவையை மட்டும் கருத்தில் கொண்டு மைய வங்கிகளை மிகை யான அளவு பணத்தாள்களை வெளியிட வற்புறுத்து கின்றன. அதனால், பணவீக்கம் ஏற்பட்டுப் பொரு ளாதாரச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

பணத்தாள் வெளியீட்டு முறைகளை நன்கு பகுத் தாய்வு செய்தால் கோட்பாடுகளையும் முறைகளை யும் விடச் செலாவணியின் மதிப்பு இக்காலத்தில் அதன் வாங்கும் திறனைப் பொறுத்தே அமைந்துள் ளது. பணத்தாள்களைத் தங்கமாகவோ பணமாக வோ மாற்றவேண்டும் என மக்கள் எதிர்பார்ப்ப தில்லை. இத்தகைய மாறுபட்ட பொதுமக்களின் கண் ணோட்டம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடைமுறை வழக்கில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பணவீக்கத் திற்கு உந்தாத நெகிழ்ச்சியுள்ள பணத்தாள் வெளி யீட்டு முறையே இக்காலத்தின் இன்றியமையாத் தேவையாகக் கருதப்படுகிறது. இதற்குத் திறமை யான பணவியல் மேலாண்மையே (Monetary Manage ment) தேவை. பின் தங்கிய நாடுகளுக்கும் வளர்ச்சி யடைந்துவரும் நாடுகளுக்கும் குறைந்த காப்பு இருப்பு முறையே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**உச்சநீதி மன்றம்**: காண்க: இந்திய உச்ச நீதிமன்றம்.

**உச்சப் பணவீக்கம்**: பொருளாதாரத்தில் பணத்தின் அளிப்பு மிகுந்து மதிப்புக் குறைந்து, விலை கள் எவ்வகைப் பணவியல் கட்டுப்பாட்டு நடவடிக் கைகளுக்கும் கட்டுப்படாமல் வெகுவேகத்தில் உயர்ந்து கொண்டு செல்லுதலே உச்ச விலையேற்ற நிலை யாகும். இவ் உச்சப் பணவீக்கத்தைத்(Hyper Infla- tion) தாவி ஓடும் பணவீக்கம் (Galloping Inflation) என்றும் தப்பி ஓடும் பணவீக்கம் (Runaway Inflation) என்றும் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் விலைகள் தொடர்ந்து உச்ச வரையறையின்றி உயர்ந்து கொண்டே செல்லும். பணவியல் வல்லுநர் பிலிப் கேகன் (Phillip Cagan) கருத்துப்படி விலைகள் 50 விழுக்காட்டு வீதத்தில் உயரத் தொடங்கும் நிலை உச்சப் பணவீக்க நிலைக்கான தோற்றமாகும். பெரும்பாலும் அரசு மிகுந்த பணத்தை வெளியிடும் போது அதற்கு ஈடாக உற்பத்திப் பெருக்கம் இல் லாத காலங்களில் உச்சப் பணவீக்கம் தோன்றுகின் றது.

உச்சப் பணவீக்க நிலையில் தொடர்ந்து விலை யேற்றம் ஏற்படுமாகையால் பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்கள் நிகழும். மிகுதியான பண அளிப்பு (Quantity of Money) குறைந்த அளவு பண் டங்களையும் பணிகளையும் பெற முனைவதால் உற்பத்தி, வேலை, வருமானம் ஆகியவற்றின் தேவை நிறைவு செய்ய இயலாத வீதத்தில் பெரு கும். உற்பத்தியாளர், முதலீட்டாளர், விற்பனை யாளர் போன்றவர்களுக்குத் தங்களின் முதலீடும் முயற்சியும் ஆதாயத்தை ஈட்டும் என்ற எதிர்பார்ப்

பையும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் உச்சப் பணவீக்க நிலை அளிக்காது. முதலீட்டுச் செலவு, நுகர்வுச் செலவு, மூலவளம், ஊதியம் போன்ற உற்பத்திக் காரணிச் செலவு ஆகியன உயருவதால் உற்பத்திப் பெருக்கம் இருக்காது. தொடர்ந்து விலை ஏற ஏற பண்டங்கள் பணிகளுக்கான தேவை அவற்றின் அளிப்பைக் காட்டிலும் மிகுதியாகும். இந்நிலையில் தேவையான உற்பத்திப் பெருக்கமின்றிப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும். பணமதிப்பு இயல்புக்கு மாறான பேரளவில் கீழிறங்குவதால், சேமிப்பும் பாதிக்கப்பட்டு மூலதன இழப்புகளும் நிகழும். பண நடவடிக்கைகள் செயலிழந்து கடன் கொடுத்தவர்களுக்கு இழப்பும், கடன் பெற்றவர்களுக்கு ஆதாயமும் ஏற்படும். நிதிநிறுவனங்களும் வங்கிகளும் நொடிப்பு நிலையை (Bankruptcy) அடைந்து நிதி நெருக்கடி உண்டாகும்.

பொருளாதார அமைப்புச் சீர்குலைந்து சமுதாயத்திலும் அமைதியற்ற விளைவுகளை உச்சப் பணவீக்க நிலை உருவாக்கும். செல்வர்கள் மேலும் செல்வர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாறும் சூழ்நிலை உணரப்படும். செல்வமும் பணமும் பெருகினாலும் அவற்றின் உண்மை மதிப்பு மிகவும் குறைவாயிருக்கும். வருவாயின் உண்மை மதிப்பும் விரைவாகக் கீழிறங்கும் போக்கையுடையதாயிருக்கும். உயர் ஊதியத்திற்கான போராட்டங்களும், வணிகர்களிடையே ஒழுங்கீனமும், ஆதாயத்திற்காக எதையும் செய்ய நாடும் மனப்பான்மையும் நிலவும். மக்களிடையே மன நிறைவின்மையும், அரசின் மீதும் செலவாணியின் மீதும் அவநம்பிக்கையும் ஏற்படும்.

உச்சப் பணவீக்கம் பொதுவாக அடிக்கடி நிகழாத அரிய நிலையாகும். இதனால், இயல்பான சமூகப் பொருளாதார நிலையில் முறிவுண்டாகும். உச்சப் பணவீக்கம் பெரும்பாலும் போர் அல்லது அரசியல் சமூகப் பொருளாதாரப் புரட்சிக் காலத்தில் அல்லது அவை முடிந்த உடன் நிகழும் தன்மையுடையது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. செருமனியில் 1923-ஆம் ஆண்டில் ஒரு திங்களில் மட்டும் விலைகள் 2500 விழுக்காடு உயர்ந்தது. அக்காலத்தில் அந்நாட்டின் செலாவணியான மார்க்கு (Mark) அதன் முந்திய மதிப்போடு ஒப்பிடுகையில் 3 மிலியனில் 1 பங்கு என்ற அளவுக்கு வீழ்ந்துவிட்டது. இவ்வகையான பணவீக்கம் இரண்டாம் உலகப் போர் முடிந்த உடன் கிரேக்கம் (Greece), சீனா, அங்கேரி (Hungary) போன்ற நாடுகளில் ஏற்பட்டன. போருக்கு முந்தைய அங்கேரி நாட்டு ஒரு பென்கோ (Pengo) 1946-இல் 828 ஆக்டிலியனாக (828 Octillion, with 27 Zeros) மதிப்பிடப்பட்டது என்பது உச்சப் பணவீக்கத்தின் தன்மையை விளக்குகிறது.

உச்சப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசும் மக்களும் திட்டமிட்டு ஒருங்கிணைந்து செயற்படுதல் இன்றியமையாதது. பணவியல் நடவடிக்கைகள், நீதியியல் நடவடிக்கைகள், நேரடி, மறைமுக நடவடிக்கைகள் ஆகியவற்றால் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நீண்டகால, குறுகிய கால, அவசர காலத் திட்டங்களின் மூலம் இன்றியமையாத் துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையைக் குறைப்பதற்கும் அளிப்பைப் பெருக்குவதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நற்பலன் தரும். நீண்டகாலப் பொதுநலன் கருதி அரசு மக்களும் பேரளவில் தங்கள் கடும் உழைப்பை விட்டுக்கொடுக்கும் (Sacrifice) மனப்பான்மையில் மனநிறைவைப் பெறுதலே மேலும் விலைகள் ஏறாமல் நிலைமையை முன்னேற்றத்திற்கு நேராகத் திருப்ப வழிகோலும். காண்க: பணவீக்கம்.

**உச்சயினி**: மத்தியபிரதேச மாநிலத்தில் இந்தூரிலிருந்து 51 கி.மீ. தொலைவில் சிப்ரா ஆற்றங்கரையிலமைந்துள்ள நகரம். இந்நகரம் இந்துக்களின் ஏழு புனிதத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெறும் பல்வேறு திருவிழாக்களைக்காண மக்கள் பெருமளவில் இந்நகருக்கு வருகின்றனர். அத்திருவிழாக்களுள் 'கும்பமேளா' என்னும் திருவிழா சிறப்புப் பெற்றது. புராணக் கதைகளில் கூறப்படும் அரசர் விக்கிரமாதித்தருடன் உச்சயினி இணைத்துப் பேசப்படுகிறது.

அவந்தியின் தலைநகரமான இந்நகரம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பதினாறு மகாசனபதங்களுள் ஒன்றாக விளங்கியது. இந்நகரை அவந்திகாபுரி என்றும் கூறுவர். புத்தரின் காலத்தில் இந்நகரைப் பிராத்யோதர் (Prodyoda) என்னும் மன்னன் ஆட்சி புரிந்தான். அக்காலத்தில் இந்நகரத்திலிருந்தே மணிகாட்டும் நெடுங்கோடு (Longtitude) தொடங்கியதாக வானவியல் அறிஞர்கள் கணக்கிட்டனர். இந்நகரம் அக்காலத்தில் இன்றைய கிரீன்விச்சுப்போன்று செயற்பட்டது.

பல்வேறு சமயங்களுடனும் இந்நகரம் தொடர்புடையது. சீனப்பயணி யுவான்சுவாங்கு இந்நகருக்கு வந்து இந்நகரைப் பற்றித் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நகரம் 30 இலி (30 li-8 கி.மீ.) சுற்றளவுடையது என்றும், இந்நகரை இந்து அரசர் ஒருவர் ஆண்டுவந்தார் என்றும், நகரில் பல பௌத்த மடா

லயங்கள் இருந்தனவென்றும், இம்மடாலயங்களில் ஏறக்குறைய 300 பௌத்தத் துறவிகள் இருந்தன ரென்றும், மக்கள் நெருக்கம் மிக்க நகரமாக விளங்கிய இவ்வூரில் இந்துக் கோயில்களும் விளங்கின என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குப்தர் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்தர் சகசந்திரபர்களை வென்று உச்சயினியைத் தம் பேரரசுடன் இணைத்தார். பிரதிகார அரசர்கள், பரமார அரசர்கள் போன்றோர் ஆதரவைப் பெற்று விளங்கியது இந்நகரம். பின்னர்த் தோமரர், சௌகான் மரபுகளின் ஆளுகையின்கீழ் உச்சயினி வந்தது. இல்துத்மிசு என்னும் தில்லிச் சுல்தானிய மன்னர் கி.பி. 1236-இல் இந்நகரைக் கைப்பற்றினார். கில்சி மரபினர் வசம் கி.பி. 1305-இல் இந்நகரம் வந்தது. இந்நகரைமொகலாயர்கள் கி.பி. 1570 முதல் ஆண்டனர்.

காளிதாசரின் மேகதூதம் இந்நகர்ப் பெருமையை எடுத்துரைக்கிறது. இது தமிழ் இலக்கியங்களில் உஞ்சை, உஞ்சேனை, அவந்தி எனவும் வழங்கப்படுகிறது. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையில் இந்நகரம் விரிவாகப் பேசப்படுகிறது. இது அவந்தி நாட்டில் உள்ளதென்பதும் அதன் தலைநகரமாக அமைந்த இந்நகர் உஞ்சையம்பதி எனப் பெயர் கொண்டது என்பதும் சிலப்பதிகாரத்தால் புலனாகின்றன (சிலப். 5-103. உரை; 6-29). இது பிரச்சோதன மன்னன் தலைநகரமாக விளங்கியது என்று பெருங்கதை கூறுகிறது. இந்நகரின் புறத்தே காளவனம் (மகா காளவனம்) எனப் பெயர் கொண்ட ஒரு காடு இருந்தமையும், அதில் மாகாளிக்குக் கோயில் அமைந்திருந்தமையும் கொங்குவேளிர் குறிப்பிட்டுள்ளார் (பெருங். உஞ்சை. 36:240). இந்நகரில் உச்சயினி மாகாளம் என்னும் ஒரு சிவாலயம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மாநிலச் சீரமைப்பிற்கு முன்பு இருந்த குவாலியர் அரசின் தொல்லியல் துறையினர் இந்நகரின் பழமையை எடுத்தியம்ப இங்கு அகழாய்வினை மேற்கொண்டனர். பின்னர், இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையைச் சார்ந்த என்.பானர்சி தலைமையில் இங்கு விரிவான அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் இந்நகரில் நான்கு நாகரிகப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பது கண்டறியப்பட்டது.

முதல் பண்பாட்டு மக்கள் கி.மு. 750 முதல் கி.மு. 500 வரையில் இங்கு வாழ்ந்திருந்தனர். இவர்கள் கருப்பு சிவப்பு மட்பாண்டங்களையும், சிவப்பு மட்கலன்களையும், கரடுமுரடான மட்கலன்களையும் பயன்படுத்தினர். களிமண் சுவர்களாலான வீடுகளில் இவர்கள் வாழ்ந்தனர். அகழாய்வில் 13 மீட்டர் உயரமுடைய கோட்டைச் சுவர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவரின் அடிப்பகுதி 75 மீட்டர் அகலமுடையது. இணைவக அமைப்பையுடைய கோட்டைச்சுவரைச் சுற்றி 24 மீட்டர் அகலங்கொண்ட அகழி ஒன்றும் உள்ளது. இக்கோட்டைச் சுவரில் பலமுறை பிளவுகள் ஏற்பட்டு அவை புதுப்பிக்கப்பட்டன. ஆற்றுப் பக்கத்திலிருந்த கோட்டைச்சுவர் பிற பக்கங்களில் இருந்த சுவர்களை விட மிக்க வலிமை உடையதாகக் காணப்பட்டது.



மர உத்தரங்கள்

மர உத்தரங்களின் மீது களிமண்ணைப் பூசி இவ்வரண் கட்டப்பட்டது. வடமேற்குக் கோட்டைச் சுவரின் பக்கம் நகரினுள் நுழையும் பெருவாயில் காணப்பட்டது. இங்கிருந்து பல்வேறு நகரங்களுக்குச் சாலைகள் பிரிந்து சென்றன.

இரண்டாம் பண்பாட்டுக் காலம் கி.மு. 500 -இலிருந்து கி.மு. 200 வரை ஆகும். இப்பண்பாட்டுக் கால மக்கள் வடக்கத்திய பளபளப்பு மிக்க மட்

பாண்டங்களைப் (N.B.P.) பயன்படுத்தினர். இவை உள்ளூரில் இருந்த குயவர்களாலேயே வனையப் பட்டன. எலும்பாலான அம்பு முனைகளும் முத்திரைகளும் காசுகளும் இரும்புப் பொருள்களும் சுடுமண் பொம்மைகளும் அணிகலன்களும் வெண்கலம், தந்தம், இரவைக்கல் (Jasper), களிமண் போன்றவற்றால் செய்யப்பட்ட காதணிகளும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கிடைத்தன. மக்கள் சுட்ட செங்கற்களாலும் பச்சைச் செங்கற்களாலும் வீடுகளைக் கட்டினர். இக்காலத்தைச் சேர்ந்த தொட்டியும் கால்வாய் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தொட்டி 10 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் உடையது. கால்வாயின் நீளம் 56 மீட்டர். மணிகள், அம்புமுனைக் கருவிகள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்கூடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்றாம் பண்பாட்டுக் கால மக்கள் கி. மு. 200 முதல் கி. பி. 1300 வரை உள்ள காலப் பகுதியில் வாழ்ந்தனர். உச்சயினி அடையாளக் குறியுள்ள நாணயங்களும் சிறு சுடுமண் உருவங்களும் குசானர் காலத்தைச் சார்ந்த பெண் வடிவப் பொம்மை ஒன்றும் அகழாய்வில் கிடைத்தன. இப்பெண் பொம்மை அணிகலன்கள் மிக்கதாகக் காணப்படுகிறது. மணிகள் செய்யப்படும் தொழில் இக்காலத்தில் இங்குப் பெருமளவில் நடைபெற்றிருக்க வேண்டும். 'பெரிப்ளூசின் செங்கடற்செலவு' (Periplus of the Erythrean Sea) என்னும் நூல்உச்சயினியிலிருந்துமேற்கத்திய நாடுகளுக்கு மணிக்கற்கள்(Semi-Precious Stone)புரோச்சுத் துறைமுக வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கூறுகிறது.

நான்காம் பண்பாட்டுக் கால மக்கள் குறைந்த காலமே வாழ்ந்தனர். சில நாணயங்களும், கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்ட சில வீடுகளும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

தொன்மை மிக்க நகரம் இன்று பருத்தி ஆலைகளையும் எண்ணெய் வித்துகளின் ஆலைகளையும் பருத்திக் கொட்டையைப் பிரிக்கும் தொழிற்சாலைகளையும் கொண்டு விளங்குகிறது.இங்குத் துணிகளுக்குச்சாயம் தோய்க்கும் தொழிலும் கம்பளித் துணி நெய்தலும் நடைபெறுகின்றன. பாத்திரங்கள் செய்தல், ஓடுகள் செய்தல் போன்ற தொழில்களும் சிறப்புப் பெற்றுள்ளன. இவ்வூர் தின்பண்டங்களுக்குப் பேர் பெற்று விளங்குகிறது.

உச்சயினி மாகாளி சக்திவாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். ஆண்டுதோறும் விழாவெடுத்து மக்கள் இம்மாகாளியை வழிபடுகின்றனர். இத் தெய்வம் தமிழக ஊர்களில் உச்சுமாகாளி, உச்சுமாளி என்னும் பெயர்களையும் பெற்று வழிபடப்படுகிறது.

**உச்சரிப்பு முறை**: மொழியின் மிகச்சிறிய அடிப்படை அலகு ஒலி. உலகில் பேசப்பட்டு வரும் ஏறத்தாழநான்காயிரம் மொழிகளில் ஒவ்வொரு மொழியிலும் ஏராளமான ஒலிகள் காணப்படுகின்றன. மனித உடல் அமைப்பின், குறிப்பாகப் பேச்சுறுப்புகளின் அடிப்படை ஒற்றுமையால் சில ஒலிகள் பல மொழிகளில் பொதுத்தன்மை பெற்றுக் காணப்படுகின்றன. எனினும், ஒலிகளின் எண்ணிக்கை, ஒலிப்புத் தன்மை, வரன்முறை, இயல்பு போன்றவற்றில் மொழிகளிடையே பெரும்பாலும் வேறுபாடே காணப்படுகிறது. ஒலிகளின் இவ்வடிப்படை வேறுபாடே ஒரு மொழியை மற்றொரு மொழியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஒவ்வொருமொழியிலும் ஒவ்வொரு வகையான ஒலி சிறப்புடையதாகத் திகழ்கிறது.

மொழி ஆராய்ச்சி ஒலி அலகுகளை ஆராய்வதில் தொடங்குகிறது. ஒலிகள் எவ்வாறு பிறக்கின்றன அல்லது உச்சரிக்கப்படுகின்றன என்பதை விளக்கும் இயல் ஒலிப்பியல்(Articulatory Phonetics)எனப்படும்.

உயிர்ப்பு: ஒலிகள் உச்சரிக்கப்படுவதற்கு உயிர்த்தலே (Breathing) அடிப்படைச் சக்தியாகும். நுரையீரல் அமைந்துள்ள நெஞ்சறையின் அடிப்பகுதி உந்தி அல்லது 'உதர விதானம்' எனப்படும். உந்தி கீழும் மேலும் இயங்குவதால் நுரையீரல்கள் சுருங்கி விரிகின்றன. இதனால், நுரையீரல்களிலுள்ள காற்றின் அழுத்தம் வேறுபடுகிறது. நுரையீரலிலுள்ள காற்றின் அழுத்தம் குறையும்பொழுது வெளிக்காற்று மூக்கின் வழியே நுரையீரல்களுக்குள் செல்கிறது. இச்செயல் அகவுயிர்ப்பு (Inspiration) ஆகும். உட்செல்லும் காற்று 'அகவுயிர்ப்புக் காற்று' (Ingressive Air) எனப்படும். நுரையீரலிலுள்ள காற்றின் அழுத்தம் மிகும் பொழுது அங்கு அடைபட்ட காற்று மூச்சுக் குழலை அடைந்து, மூக்கு அல்லது வாய் வழியே வெளியேறுகிறது. இவ்வாறு உள்காற்று வெளியேறுதலைப் 'புறவுயிர்ப்பு' (Expiration) என்றும், வெளியேறும் காற்றைப் புறவுயிர்ப்புக் காற்று (Egressive Air) என்றும் கூறுவர்.

மொழிகளின் பெரும்பாலான ஒலிகள் இவ்வித நுரையீரலின் புறக்காற்றோட்ட (Pulmonic Air-Stream) இயக்கத்தினாலே பிறக்கின்றன.

உயிர், மெய் பிறப்பு: நுரையீரல்களிலிருந்து வெளியேறும் புறவுயிர்ப்புக் காற்று மூச்சுக் குழல் வழியே தொண்டையிலுள்ள குரல்வளை மடல்களின் (Vocal Cords) இடையே புகுந்து, வாய் அல்லது

மூக்கு வழியாக வெளிப்படும் பொழுது ஒலிகள் பிறக்கின்றன. காற்று வாயறையில் எவ்விதத் தடையுமின்றி வெளியேறும்பொழுது உயிரொலிகளும், வாயறையின் பல நிலைகளில் தடைபெற்று வெளியேறும்பொழுது மெய்யொலிகளும் தோன்றுகின்றன. இக்காற்றுத் தடை வேறுபாடே உயிர்களையும் மெய்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. உயிர்களைப் பேச்சுறுப்புகளின் அளவு நிலை (Positions of the vocal organs) அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

வாய் வழியாகக் காற்று வெளிப்படும்பொழுது பிறக்கும் ஒலிகள் வாயொலிகள் (Oral Sounds) என்றும், மூக்கு வழியாகக் காற்று வெளிப்படும் பொழுது பிறக்கும் ஒலிகள் மூக்கொலிகள் (Nasal Sounds) என்றும் பெயர் பெறும்.

காற்று வாயில் பல இடங்களில் பல நிலைகளில் தடைபெற்று வெளியேறும் தன்மைக்கு ஏற்ப வேறு வேறு ஒலிகளைத் தருகிறது. மெய்யொலிகளை உச்சரிப்பிடம் (Place of Articulation), உச்சரிப்பு முறை (Manner of Articulation), அதிர்வுநிலை (Voice-Voiceless) என்பனவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

உச்சரிப்பு முறையின் அடிப்படையில் மெய்யொலிகள் ஆறுவகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவை அடைப்பொலி, மூக்கொலி, உரசொலி, மருங்கொலி, வருடொலி, ஆடொலி என்பன.

அடைப்பொலிகள்: நுரையீரலிலிருந்து வெளிப்படும் புறக்காற்று நுரையீரலுக்கும் வாய்க்கும் இடையே ஓர் இடத்தில் அடைபட்டு, கடையண்ணம் (Soft Palate), மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்து காற்று மூச்சுக் குழல்வழி செல்லாமல் தடுக்கும் பொழுது, சட்டென வெடிப்புடன் வெளியேறு நிலையில் அடைப்பொலிகள் (Stops/Plossives) பிறக்கின்றன. கடையண்ணத்தின் இச்செயலே அடைப்பொலிகளை மூக்கொலிகளினின்று வேறுபடுத்துகிறது.

அடைப்பொலிகளின் பிறப்பாக்கத்தில் அடைப்பு ஏற்படும் எண்ணிக்கைக்குத் தக்கவாறு இவ்வொலிகள் இரண்டாகப் பிரிக்கப்படும். வாயின் ஓரிடத்தில் அமைப்பு நிகழுமானால் அது 'தனி அடைப்பொலி' (Simple Stop) என்றும், ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் அடைப்பு நிகழுமானால் அது 'கூட்டு அடைப்பொலி' (Compound Stop) என்றும் பெயர் பெறும். தமிழில் தனி அடைப்பொலிகளே காணப்படுகின்றன.

குரல்வளை மடல்களின் அதிர்வுடன் அடைப்பொலிகள் பிறக்கும்பொழுது அதிர்வு அடைப்பொலிகளும் (Voiced Stops), குரல்வளை மடல்களின் அதிர்வின்றிப் பிறக்கும் பொழுது அதிர்விலா அடைப்பொலிகளும் (Voiceless Stops) தோன்றுகின்றன.

அடைப்பொலிகளின் பிறப்பில் புறக்காற்றுத் திடீரென்றோ குப்பென்றோ வெளிப்படலாம். மேற்கூறிய இரண்டு நிலைகளிலும் காற்று வெறுயேறுவதே அடைப்பொலிகளின் சிறப்பியல்பாகும். காற்று குப்பென்று வெளியேறும்பொழுது பிறக்கும் அடைப்பொலிகள் 'மூச்சு அடைப்பொலிகள்' (Aspirated Stops) என்றும், காற்றுப் பொதுவாக வெளியேறும் பொழுது பிறக்கும் அடைப்பொலிகள் 'மூச்சிலா அடைப்பொலிகள்' (Non Aspirated Stops) என்றும் வழங்கப்படும். இந்திய மொழிகளில் தமிழ் தவிர மற்ற மொழிகளில் மூச்சு அடைப்பொலிகள் காணப்படுகின்றன.

ஆங்கிலத்தில் p,b,t,d,k,g, என்பன அடைப்பொலிகள். இவற்றில் b,d,g என்பன அதிர்வு அடைப்பொலிகள். மற்றவை அதிர்விலா அடைப்பொலிகள்.

தமிழ் வல்லின எழுத்துகளுள் க்,ச்,ட்,த்,ப்,ற் (இரட்டை) என்பன அடைப்பொலிகள். இவை அதிர்விலா அடைப்பொலிகள். பேச்சு மொழியில் இவ்வைந்தும் அதிர்வுடனும் ஒலிக்கப்படுகின்றன.

மூக்கொலிகள்: மூக்கொலிகள் அடைப்பொலிகளின் சில பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ளன. அடைப்பொலிகள் பிறக்கும்பொழுது பேச்சுறுப்புகள் எவ்வாறெல்லாம் செயற்படுகின்றனவோ அவ்வாறே மூக்கொலிகள் (Nasals) பிறக்கும்பொழுதும் செயற்படுகின்றன. வாயறையில் அடைபட்ட காற்று கடையண்ணம் கீழ் நோக்கித் தாழ்ந்து மூக்கறை வாயிலைத் திறக்கும்பொழுது மூக்கின் நாசித் துளைகள் வழி வெளியேறுகிறது. இவ்வியக்கத்தில் பிறப்பனவே மூக்கொலிகள். மூக்கொலிகள் பிறக்கும்பொழுது குரல்வளை மடல்கள் அதிர்வுறுகின்றன. இதனால், எல்லா மூக்கொலிகளும் அதிர்வுடை மூக்கொலிகளே.

அடைப்பொலி பிறக்கும்பொழுது ஏற்படும் காற்றுத் தடையை மூக்குவழியே வெளியேற்றும் பொழுது அடைப்பொலிகளுக்கு இணையான மூக்கொலிகள் (Homorganic Nasals) தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் m,n,ŋ என்பன மூக்கொலிகள். இவை b,d,g என்ற அடைப்பொலிகளுக்கு இணையானவை.

தமிழில் ங், ஞ், ண், ந், ம், ன் என்றமெல்லினங்கள் மூக்கொலிகள். இவை க், ச், ட், த், ப், ற்

(இரட்டை) என்ற அடைப்பொலிகளுக்கு இணையானவை.

சில வேளைகளில் கடையண்ணம் தாழ்ந்த நிலையிலும் வாயில் தடை ஏற்படாமல், காற்று வாய்வழியாகவும் மூக்கு வழியாகவும் வெளியேறும். இவ்வகையில் பிறக்கும் ஒலிகளை 'மூக்கினச்சாயல் ஒலிகள்' (Nasalized sounds) என்பர். பேச்சு மொழியில் இவ்வொலிகள் மிகுதி.

உரசொலிகள்: வாயறையில் அடைபடும் புறக்காற்று வாயிலுள்ள ஒரு குறுகிய இடைவழி வழியாக உராய்வுத் தன்மை ஏற்படுமாறு வெளியேறும் பொழுது உரசொலிகள் (Fricatives) பிறக்கின்றன. உரசொலிகள் குரல்வளை மடல்களின் அதிர்வுடனோ அதிர்வின்றியோ பிறக்கும். உரசொலிகளின் பிறப்பின்பொழுது வாயறையிலுள்ள பேச்சுறுப்புகள் முழுவதுமாக ஒன்றை ஒன்று நெருங்கி மூடிக் கொள்ளாமல் சிறிது இடைவெளிவிட்டு இருக்கின்றன. எனவே, உரசொலிகள் நாவில் ஏற்படும் இடைவெளிக்குத் தக்கவாறு 'பிளவு உரசொலி' (Slit fricative), அகழ் உரசொலி (Groove fricative), தட்டையுரசொலி (Surface fricative) என்று வகைப்படுத்தப்படுகின்றன.

ஆங்கிலத்தில் மொத்தம் 9 உரசொலிகள் உள்ளன. பேச்சுத் தமிழில் 7 உரசொலிகள் உள்ளன. இவை பெரும்பாலும் கடன் வாங்கப்பட்ட சொற்களில் காணப்படுகின்றன.

β- என்ற ஈரிதழ் உரசொலி (Bilabial fricative) கபம் என்ற சொல்லை உச்சரிக்கும் பொழுது தோன்றுகின்றது.

ʄ- என்ற பல்லிதழ் உரசொலி (Labio-dental fricative) கடன் வாங்கப்பட்ட ஆங்கில, உருதுச் சொற்கள் சிலவற்றின் முதலில் உச்சரிக்கப்படுகிறது. எ-டு, ஃபேன் (Fan).

ð- என்னும் அதிர்வு பல் உரசொலி (Dental fricative) பாதம், மாதம் போன்ற சொற்களில் இருவுயிர்களுக்கு இடையே வழக்கில் வரும்.

x- என்னும் அதிர்வு கடையண்ண ஒலி (Velar fricative) வேகு போன்ற சொல்லில் இரு உயிர்களுக்கு இடையே வரும்.

s- என்னும் அண்பல் அகழ் உரசொலியைச் (Groove fricative) சோறு, சாவு, சொப்பனம் போன்ற சொற்களில் காணலாம்.

ṣ- என்பது நாவளை உரசொலி (Retro flexo fricative). இவ்வொலி விஷம், கஷ்டம் போன்ற சொற்களில் வரும்.

h- என்பது குரல்வளை உரசொலி (Glottal fricative). இது ஹரி, ஹனுமான் போன்ற சொற்களில் வரும்.

உரசொலியில் அடைப்புரசொலி (Affricative) என்ற ஒரு வகையுண்டு. ஓர் அடைப்பொலியும் உரசொலியும் அடுத்தடுத்து உச்சரிக்கப்படும் பொழுது இவ்வொலிகள் தோன்றுகின்றன. இதனைச் சட்டை, சாட்சி, எச்சில் போன்ற சொற்களில் காணலாம்.

மருங்கொலிகள்: நாவின் மேற்பரப்புச் சிறிது குவிந்து பல், அண்ணப்பகுதி ஆகியவற்றைத் தொட, மூச்சுக் குழலில் அடைபட்ட காற்று நா ஓரங்களின் வழியாக வெளியேறும்பொழுது மருங்கொலிகள் (Laterals) பிறக்கின்றன. மருங்கொலிகள் எல்லாம் பெரும்பாலும் அதிர்வு ஒலிகளே.

ஆங்கிலத்தில் '*l*' என்பது மருங்கொலி. தமிழில் 'ல்', 'ழ்', 'ள்' என்பன மருங்கொலிகள். 'ழ்' என்னும் ஒலி தமிழ் மலையாளம் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை.

வருடொலி: நாக்கின் நுனி அண்ணத்தின் மேல் நோக்கி வளைந்திருக்கும்பொழுது காற்று மூச்சுக் குழலில் அடைபடுகிறது. பின்னர், நாக்கு அண்பல்லை வருடி வாயின் கீழ்ப்பகுதிக்கு வரும்பொழுது, காற்று நுனி நாக்கிற்கும் அண்பல்லிற்கும் இடையே வெளிப்படும். இந்நிலையில் வெளிப்படுவதே வருடொலி (Flap). இவ்வொலி குரல்வளை மடல்களின் அதிர்வுடனே பிறக்கிறது.

ஆங்கிலத்திலுள்ள veṛy, miṛṛor என்ற சொற்களில் வரும் 'ṛ' என்பது வருடொலியாகும். தமிழிலுள்ள 'ர்' என்னும் ஒலி வருடொலியே.

ஆடொலி: நுனிநாக்கு அண்ணத்தின் நடுப் பகுதியை நோக்கி உயர்ந்து வேகமாக அதிரும் பொழுது ஆடொலி (Trill) உண்டாகும். ஆடொலி அதிர்வு ஒலியே.

தமிழிலுள்ள வல்லின 'றி' ஆடொலியாகும். பேச்சுத் தமிழில் பொதுவாக ஆடொலிக்கு மாற்றாக வருடொலியே பயன்பாட்டில் உள்ளது. ஆங்கிலத்தில் 'r' என்பது ஆடொலி.

பல மொழிகளில் அரை உயிர்எழுத்துகளும் (Semi vowels) காணப்படுகின்றன. இவை மெய்க்கும்

உயிருக்கும் இடைப்பட்ட ஒலியியல்பு உடையன; மெய்யொலிகள் போலச் செயற்படும்; ஆனால், உயிரொலிகளுக்குரிய சில பண்புகளைக் கொண்டிருக்கும்.

ஆங்கிலத்தில் w,j என்பனவும் தமிழில் ய, வ என்பனவும் அரைவுயிர்கள். எச்.சி.

துணை நூல்கள்:


**Abercrombie, David** , Elements of General Phonetics, Edinburgh University Press, 1967.

**David Crystal**, A First Dictionary of Linguistics and Phonetics, Andre Deutsch, London, 1980.

**Pike, K.L.,** Phonemics, Anna Arbor, 1946.

**Sadanand Singh etal.,** Phonetics - Principles and Practices, University Park Press, Maryland, 1976.


**உச்ச வரம்பு**: பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றிச் சமநிலைச் சமுதாயத்தை (Socialist Society) நிலைநாட்டுவதற்காக ஒரு சிலரிடம் குவிந்து தேங்கிக் கிடக்கும் வள வாய்ப்புகளைப் பன்முகப் படுத்தி ,மறு பங்கீடு செய்ய முனையும் கோட்பாட்டு வழி முறைகள் பலவற்றுள் உச்சவரம்பும் (Ceiling) ஒன்றாகும். தனி ஒருவரின் வருவாய் ஈட்டும் வாய்ப்பு எல்லைக்கு உச்சவரம்பு வரையறுத்துச் செயற்படுத்துதல் இதன் உட்கூறாகும். தனியார் வைத்திருக்கக் கூடிய நில உரிமைக்குக் கட்டுப்பாடுகள் விதித்து அதற்கான உச்ச வரம்பை வரையறுத்தல் மூலம் இது நடைமுறைப்படுகிறது. இது சிறப்பாக, நகரிய நில உச்சவரம்பு (Urpan Land Ceiling), வேளாண்மை நில உச்ச வரம்பு (Agricultural Land ceiling) என இருவகைப்படுகிறது. இவற்றைத் தவிர வருமானத்திற்கு உச்சவரம்பை வரையறுத்து அதனைச் செயற்படுத்துதல் போன்ற நேரடி நடவடிக்கைகள் மக்களாட்சி நிலவும் பொருளாதாரங்களில் நடைமுறைக்குகந்ததன்று. எதிர்மறையான வகைகளில் வருமானம், ஆதாயம் போன்றவற்றிற்குப் பலவகைக் கட்டுப்பாடுகள், உயர்ந்த வரிவிதிப்புகள், உரிமம் ஆகியவற்றின் மூலம் உச்சவரம்பு வரையறுக்கப்படுகிறது. பொதுவுடைமை நாடுகளில் மையத் திட்டமிடல் (Centralised Planning) செயற்படுவதால் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் நேரடியான உச்ச வரம்புக் கட்டுப்பாட்டிற்குள் செயற்படுகின்றன.

நகரிய நில உச்சவரம்பின் இன்றியமையாமை: நிலக்கிழார் ஆதிக்க முறையினாலும் (Feudalism) சமீன்தாரி முறையினாலும் பெரும்பாலான இந்திய நில உடைமைகள் ஒருசில செல்வர்களிடம் பன்னெடுங்காலமாகக் குவிந்திருந்தன. அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களினாலும் முன்னேற்றங்களினாலும் நிலக்கிழார் ஆதிக்க முறையும் சமீன்தாரி முறையும் ஒழிக்கப்பட்டன. எனினும், இவை வேளாண்மை நிலக்குவியியலில் ஓரளவுக்குப் பங்கீட்டை ஏற்படுத்தியதே ஒழிய, நகரிய நிலங்களில் எவ்வகைத் தாக்கத்தையும் உண்டாக்கவில்லை. எனவே, இந்திய அரசு 1964-ஆம் ஆண்டிலேயே நகரிய நில உசச வரம்புச் சட்டம் இயற்றத் திட்டமிட்டது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அரசர்களுக்கு வழங்கிய ஒப்பந்தக்கொடையும் (Privy Purse) ஒழிக்கபட்ட 1969-ஆம் ஆண்டிற்குப் பின்னர், அரசு நகரிய நில உச்சவரம்புத் திட்டச் செயற்பாட்டிற்கான தீவிர ஆலோசனைகளையும் கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி நாடெங்கிலுமுள்ள பல்வேறு மக்களின் கருத்துகளை அறிய முனைந்தது

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி (1) இத்தகைய உச்சவரம்பை வரையறுக்கும் உரிமை மாநிலங்களைச் சார்ந்தது. (2) இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்து மைய அரசை இதற்கான சட்டம் இயற்றப் பணிக்கலாம். மகாராட்டிரம், இராசசுத்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கூட்டாக மைய அரசை நகரிய உச்சவரம்புச் சட்டம் இயற்ற ஒப்பந்த வேண்டுகோள் விடுத்தன. மைய அரசும் இதற்கு இணங்கி, 5 பேர் கொண்ட ஒரு நகர்வாழ் குடும்பத்தின் உச்ச நகரச் சொத்து வரையறையின் (Ceiling on Urban Property) மதிப்பு உரு. 5 இலட்சம் என அறிவித்தது. கூடுதலான எண்ணிக்கைக் கொண்ட குடும்பங்களுக்கு உச்ச வரையறை எண்ணிக்கை அடிப்படையில் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் நகரங்களின் உண்மைச் சொத்துகள் (Real Estate), வீட்டு நிலங்கள், தனியாரின் சொத்துகள் ஆகியவற்றின் மேல் மட்டிலுமே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தனியார் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் சொத்துகளுக்கு எவ்வகைக் கட்டுப்பாடோ வரையறையோ விதிக்கப்படவில்லை.

நகர்வாழ் செல்வர்களும் முதலாளிகளும் தொடர்ந்து தங்கள் நகரியச் சொத்துகளைப் பெருக்கிக் கொண்டேயிருந்தனர். நகரின் சொத்துகள் ஒரு சிலரின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி முற்றுரிமை நிலை நிலவியது. நகரங்களின் வளர்ச்சியினால் நகர நிலங்களின் தேவை மிகுந்து அவற்றின் மதிப்பு விரைந்த வேகத்தில் உயர்ந்துகொண்டே சென்றது. மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்புரட்சி,

வாணிக வளர்ச்சி ஆகியவற்றால் நகர்ப்புறங்களுக்கு மக்கள் பேரளவில் இடம்பெயர்ந்து சென்றனர். இவர்களால் குறிப்பிட்ட அளவேயுள்ள நகரிய நிலங்களின் மேல் ஏற்பட்ட தேவை அழுத்தம் மதிப்பு (விலை) ஏற்றத்திற்கும் ஊக வாணிகத்திற்கும் (Speculative trade on lands) வழி வகுத்தது. நகர் நிலங்களிலும், வீட்டுச் சொத்துகளிலும் முதலீடு செய்வது, ஆடம்பர கட்டிடங்களைக் கட்டுவது இவற்றில் கறுப்புப் பணத்தைச் செலவிடுவது ஆகியன பொருளாதார, சமூகத் தேவை வளங்கள் உற்பத்தியற்ற (Unproductivity) துறைக்கு ஒதுக்கப்படவும், பதுக்கல் செய்யப்படவும் உரிய வாய்ப்புகளாக விளங்கின. நடுத்தர, கீழ்மட்ட நிலை வீடுகளுக்கான தேவை பேரளவில் பெருகினவெனினும், வீட்டு வாடகைகள் உச்ச நிலைக்கு உயர்ந்து சென்றதே ஒழிய இத்தகைய வீடுகளின் எண்ணிக்கை தேவைக்குகந்த வண்ணம் பெருகவில்லை. குடியிருப்புப் பகுதிகள் உருவாக்கப்படுதற்கு ஊக வணிகர்கள் குறைந்த மதிப்பில் நிலங்களைப் பெற்று, மிக உயர்ந்த விலையில் அவற்றைத் துண்டு நிலங்களாக விற்று ஆதாயம் பெற்றனர். நடுத்தர, ஏழை வகுப்பு மக்கள் சொந்த நிலம் வாங்கி வீடு கட்டுவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க இயலாது என்ற நிலை ஏற்பட்டது.

இத்தகைய பொருளாதாரச் சமூக நல வளர்ச்சிக்கு எதிரான போக்கு மாற, நகரிய நில உச்ச வரம்பு நடவடிக்கைகள் இன்றியமையாதவையென உணரப்பட்டது. இவற்றின் சிறப்பியல்புகளாவன: (1) நடைமுறைக் காலத்திலுள்ள உடைமைகள் மீது உச்சவரம்பு வரையறுப்பது, (2) எதிர்காலத்தில் வாங்கப்படும் நிலங்கள் மீது உச்சவரம்பு வரையறுப்பது, (3) சொத்துகளின் மூலம் வருமானம் பெறுபவர்களுக்கும் உழைப்பின் மூலம் வருமானம் பெறுபவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் (Disparity) குறைப்பது, (4) ஒரு சிலரிடம் உபரியாகக் குவிந்து கிடக்கும் வீட்டுச் சொத்துகளைச் சட்டமுறைப்படி பெற்று நலிவுற்ற பொருளாதார வகுப்பினருக்குப் (Economically Weaker Sections) பகிர்ந்து அளிப்பது, (5) தேங்கியும் பதுங்கியும் கிடக்கும் பொருளாதார வளங்களை ஆக்க வழிகளில் பயன்படுத்தத் திரட்டுவது, (6) உற்பத்தியைப் பெருக்கும் துறைகளுக்கு முதலீட்டைத் திருப்புவதும் உற்பத்தியற்ற நடவடிக்கைகளுக்கும் ஆடம்பர, கட்டடச் செலவுகளுக்கும் பயன்படும் கறுப்புப் பண நடவடிக்கைகளை ஒழிப்பதும், (7) ஊக வாணிகத் தீமைகளைத் தடுப்பது ஆகியன.

நாட்டின் மொத்த உற்பத்திப் புள்ளி விவர மதிப்பீட்டின்படி (Estimates of National Product) 1970-71-ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 3 விழுக்காடே உண்மைச் சொத்து, வாணிக, வீட்டுக் கட்டடங்கள் ஆகியவற்றின் பங்காகும். தொழில் நிறுவனங்களும் தனியார் துறையும் 50 விழுக்காட்டுக்கும் மேலான பங்கை வகிக்கின்றன. இவற்றிற்கு எத்தகைய உச்ச வரம்பு விதிகளுமின்றி 3;விழுக்காடேயுள்ள உண்மைச் சொத்து, வீட்டுக் கட்டடங்கள் ஆகியவற்றின்மேல் மட்டிலுமே நகரிய நில உச்சவரம்பு மூலம் கட்டுப்பாடுகளை விதிப்பது, பேரளவில் வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் பயன்களை விளைவிக்காது எனக் கருதப்படுகிறது.

அட்டவணை - 1

உண்மைச் சொத்தும் வாணிக வீட்டுக் கட்டட உரிமைச் சொத்துகளும் (1970-71 விலையில்)

| வ.எண் | ஆண்டு | உருபாய் கோடியில் | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | 1950-51 | 429 | 2.6 |
| 2 | 1960-61 | 597 | 2.5 |
| 3 | 1970-71 | 1039 | 3.0 |
| 4 | 1975-76 | 1195 | 2.4 |
| 5 | 1978-79 | 1518 | 2.6 |

நகரிய நில உச்சவரம்புத் திட்டம் உண்மைச் சொத்தையும் கட்டட உரிமைச் சொத்தையும் மட்டுமே தன்னுள்ளடக்குவது பெருங்குறையாகக் கருதப்படுகிறது. நகரியச்சொத்தில் பங்குகள் (Shares), கடனுறுதிச் சீட்டுகள் (Bonds), கடனுறுதி ஆவணங்கள்(Debentures), வாணிக, தொழில் நிறுவனங்களின் சொத்துரிமைகள், கட்டித் தங்கம் (Gold Bullion) போன்ற மதிப்பு மிக்க பிற பொருள்கள், அசையாச் சொத்துகள் (Immovable Assets) ஆகியனவும் அடங்கும். இவற்றிற்கு எவ்வகையிலும் உச்சவரம்பு வரையறுக்க இயலா நிலையில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நகரிய நில உச்சவரம்பினால் மட்டும் குறைக்க இயலாது என்பது தெளிவாகும்.

உச்சவரம்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதிலும் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. அவை: உபரி நிலங்களைப் பெறுவதற்குக் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை எவ்வகையில் மதிப்பிடுவது? அதனைப் பணமாகக் கொடுப்பதா? அரசுக் கடனுறுதி ஆவணச் சீட்டுகளாகக் கொடுப்பதா? பெறப்பட்ட உபரி நிலங்களைப் பங்கீடு செய்வதில் யாருக்கு முன்னுரிமை அளிப்பது? அதற்கான அடிப்படைக் கோட்பாடு யாது? என்பவையாகும். போபால் போன்ற இரண்டாம் வகை (B-Type) நகரங்களில் உபரி நிலங்களாக மதிப்பிடப்படுபவை உரூ. 10 இலட்சம் மதிப்புள்ள சொத்துகளே. இவற்றை நலிந்த பிரிவினரில் சிலருக்கு மறுபங்கீடு செய்வது, நகர சமூகப் பொருளாதார வளவாய்ப்புகளை ஆக்கவழிக்கு ஒருமுகப்படுத்துவதாகக் கருத இடமில்லை. இதற்கு மாறாகப் பெரிய மாநகரங்களான (Metropolitan Cities A Class) தில்லி, கல்கத்தா, பாம்பாய், சென்னை போன்ற நகரங்களில் நகரிய உச்சநிலவரம்பு செயற்பட்டால், மிகையான உபரி நிலங்கள் கைப்பற்றப்பட்டு மறுபங்கீடு செய்யப்படுமாகையால் பேரளவில் நலிந்த பிரிவினர் பயன்பெறுவர். அதன் சமூகப் பொருளாதார விளைவுகளும் ஆக்க நலன் சார்ந்ததாயிருக்கும்.

நகரிய நில உச்சவரம்பு, கறுப்புப் பணத்தினால் ஆடம்பரக் கட்டடங்களும் வீடுகளும் கட்டப்படுவதை ஒழிக்கும் என்றும், ஊக வாணிகத்தினால் நிலங்கள் வாங்கப்பட்டுப் பதுக்கல் செய்யப்படுவதைத் தடை செய்யும் என்றும் எதிர்பார்ப்பது நிறைவேறத்தக்க குறிக்கோளன்று. கறுப்புப் பணம் முதலீடு செய்யப்படுவது ஆடம்பர வீடுகளிலும் கட்டடங்களிலும் மட்டுமன்று; அதனை ஆடம்பர நுகர்வுப் பொருள்களான காற்றுக் கட்டுப்பாடு (Air Conditioner), மகிழ்வுந்து (Pleasure Car), வீட்டு நீச்சல் குளம் போன்றவற்றிலும் முதலீடு செய்யலாம். இத்தகைய ஆடம்பர நுகர்வுப் பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்வதற்கு முதலீடு செய்யப்படுவதும் ஊக வாணிகத்தை ஊக்குவிக்கும்.

எனவே, நகரிய நில உச்சவரம்புத் திட்டம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துச் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க உதவ வேண்டுமானால், நகரியச் சொத்துத் தொடர்பான பிற வள வாய்ப்புக் கூறுகளனைத்தையும் கட்டுப்படுத்தும் சட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டே இந்திய நகரிய நில உச்ச வரம்புச் சட்டம் 1976-இல் இயற்றப்பட்டது. இச்சட்டம் 4 வகைப்படுத்தப்பட்ட (A,B,C,D, Class) 73 இந்திய நகரங்களை உள்ளடக்குகிறது. முதல் வகை நகரங்களின் நில உச்சவரம்பு 500 ச.மீ. என்றும், இரண்டாம் வகை நகரங்களுக்கு 1000 ச.மீ. என்றும், மூன்றாம் வகை நகரங்களுக்கு 1500 ச.மீ. என்றும், நான்காம் வகை நகரங்களுக்கு 2000 ச.மீ. என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் தனியாரையும், நிறுவனங்களையும், கூட்டுறவு இயக்கங்களையும், கூட்டுக் குடும்பங்களையும் கருத்தில் கொண்டு அவற்றிற்கான உச்ச வரையறையை வகைப்படுத்தியுள்ளது.

பணவீக்கத்தினாலும் பெருகி வரும் மக்கள் தொகையின் அழுத்தத்தினாலும் நகர நிலங்களின் மதிப்பைச் சீர்தூக்கி வரையறுப்பது கடினமானது. தொடர்ச்சியாக மாறிக்கொண்டேயிருக்கும் மதிப்பை அடிப்படையாக வைத்து நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயற்படுத்துவது நடைமுறையில் பல சிக்கல்களை உண்டாக்குகிறது. ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளையும் கட்டடங்களையும் மதிப்பிடும்பொழுது வரையறைக்கு மிகுந்த மதிப்புடைய கட்டடத்தின் (வீட்டின்) ஒரு பகுதியை (அறையை) மட்டும் அரசு கைப்பற்றி மறுபங்கீடு செய்வது இயலாததாகும். நில அளவு மட்டும் வரையறுக்கப்பட்டு அதே அளவு நிலத்தில் எத்தனை தனி இல்லங்கள்(Dwelling Units) இருக்கலாம் என்பது சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. நிலப்பற்றாக்குறையும் மக்கள் நெருக்கடியும் மிகுந்த நகரப் பகுதிகளில் பல மாடிக் கட்டடங்களும், இணை வீடுகளும் (Flat Systems) கட்டப்படுவது இக்கால இன்றியமையாத் தேவையாயிருப்பதால் நில உரிமையை வரையறுப்பதினால் மட்டும் முற்றுரிமையையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சிக்கல்களையும் ஒழித்துச் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க இயலாது என்பது தெளிவாகிறது.

வேளாண்மை நில உச்சவரம்பு: இது வேளாண்மைத் துறையின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்பட்ட ஐந்து நிலச் சீர்திருத்தத் திட்டங்களின்

ஒரு சிறப்புக் கூறாகும். நாடு விடுதலை அடைந்த பின்னர், 1948–ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. எல்லா மாநிலங்களும் தங்கள் மாநிலச் சூழ்நிலைக் குகந்தவண்ணம் சட்டங்களை இயற்றித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தின. சட்டப்படி சமீன்தாரி முறையும் இடைத் தரகர்களின் ஆதிக்கமும் ஒழிக்கப் பட்டு, உபரி நிலங்களை நிலக்கிழார்களிடமிருந்து கைப்பற்றிச் சிறிய விவசாயிகளுக்கும் நிலமற்ற விவ சாயிகளுக்கும் அவற்றைப் பங்கீடு செய்யும் உரி மையை அரசு பெற்றது. குறிப்பிட்ட குறைந்த கட் டுப்பாடான அளவேயுள்ள பயிரிடும் நிலம் (Limited Supply of Land) ஒரு சிலரிடம் மட்டும் குவியாமல் பரவலாக வேளாண்மையினரிடையே பங்கிடப்பட வேண்டியது பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமநிலைச் சமுதாயம் உருவாக்கப்படுதற்கும் இன்றி யமையாதது என உறுதியாகக் கருதப்பட்டது. நிலம் மட்டுமே ஊரக மக்களுக்கு வருவாயை அளிக்கும் மூல வளமாக விளங்குகிறது. இதனை எல்லா வகை ஊரக வேளாண்மை மக்களிடையேயும் பகிர்ந் தளிக்காவிட்டால் வருமான ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, அடிப்படைச் சமூக நீதியை நிலைநாட்ட இயலாது என்பதைத் திட்ட வல்லுநர்கள் உணர்ந்த னர்.

பேரளவு உற்பத்தி மொத்த உற்பத்தியைப் பெருக்கும் என்கிற கருத்து வேளாண்மையில் கோட்பாட்டு அளவுக்கே (Only Theoretical) உண் மையாயுள்ளது. சிறு துண்டு நிலங்களில் பெரும்பான் மையாகப் பயிரிடுகிற சப்பானின் நில ஆக்கத்திறன் (Productivity) ஓர் ஏக்கர் நிலத்திற்கு 52.5 குவிண் டால் அரிசியாகும். இதுவே பேரளவில் பயிரிடும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 52 குவிண்டாலாகவும், சோவியத்து உருசியாவில் 40 குவிண்டாலாகவும் காணப்படுகிறது. இச் சான்றுகளிலிருந்து தனி மனித உரிமைகளும் சமூக நீதியும் ஆக்கத்திறனைப் பெருக் கும் என்பதை அறியலாம். சிறிய துண்டு நிலம் என் றாலும் அதில் உழைக்கும் விவசாயி அதன் பலனைத் தான் அடையலாம் என்ற நம்பிக்கையையும் நில உடைமை உரிமையையும் பெற்றால் ஊக்கத்துடன் உழைத்து உற்பத்தியைத் திட்டமாகப் பெருக்க முடியும் என்பதும் மறுக்க முடியாத உண்மை. முதல் செறிந்த (Capital Intensive) பேரளவு உற்பத்தி முறையில் நிலங்களைப் பயிரிடுவது மொத்த உற்பத் தியைக் குறைத்து வேலையின்மையைப் பெருக்குகிறது.

இக்கருத்துகளின் அடிப்படையில் இந்திய உழ வர்கள் தங்கள் சொந்த நிலங்களில் உழைக்கும் வகையில் பேரளவு நிலங்களை உடையவர்கள் தங் கள் உபரி நிலங்களைத் தன்னியல்பாகவே அவற் றைப் பங்கீடு செய்வதற்கு வழங்கக் கேட்டுக் கொள் ளப்பட்டனர். இதனைச் செயற்படுத்தச் சட்ட முறைப்படியும் வழிவகைகள் செய்யப்பட்டன. இதன் முதல் கட்டத்தில் 1972–ஆம் ஆண்டு வரை நில உச்சவரம்பு தனி ஒருவரின் சொந்த நில அளவை (Land Holder as the Unit of Application) அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டது. ஆந்திரம், அசாம், குசராத்து, கேரளம், மத்திய பிர தேசம், மகாராட்டிரம், ஒரிசா, பஞ்சாபு, இராசசுத் தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் நில உச்சவரம்பிற் கான சட்டங்களை இயற்றின. ஒரே குடும்பத்தி லுள்ள வயது வந்தோர் தனி நில உடைமைக்குரிய வராய்க் கருதப்பட்டதால் 5 பேரைக் கொண்ட ஒரு குடும்பம் உச்ச வரையறையைப் பின்பற்றினாலும் மிகுதியான நில உரிமையைப் பெற்றனர். இது ஆந் திராவில் 1620 ஏக்கராகவும், மத்திய பிரதேசத்தில் 630ஏக்கராகவும், பஞ்சாபில் 800 ஏக்கராகவும் இருந் தது.

இப்போது நடைமுறையிலிருக்கும் திருத்தப்பட்ட (Amended) 1973–ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டப்படி 5 குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும் பத்தை அடிப்படையாகக் கொண்டு நில உச்சவரம்பு வரையறை செய்யப்படுகிறது. இதற்கும் மிகுதியான குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு எண் ணிக்கையின் அடிப்படையில் உச்சவரம்பு உயர்த்தப் படுகிறது. எனினும், ஒரு குடும்பத்தின் உச்சவரம்பு வரையறுக்கப்பட்ட உச்சவரம்பு அளவை விட இரு மடங்குக்கு மேல் மீறக்கூடாது. பழைய சட்டப்படி ஆந்திரப் பிரதேசத்தின் குறைந்த, உச்சவரம்புகள் (Lowest & Highest Limits) 27 முதல் 324 ஏக்கர் களாகும். இராசசுத்தானில் 22 முதல் 336 ஏக்கர் களென்றும், கர்நாடகாவில் 18 முதல் 216 ஏக்கர் களென்றும், குசராத்து மாநிலத்தில் 19 முதல் 132 ஏக்கர்களென்றும், மகாராட்டிரா மாநிலத்தில் 18 முதல் 126 ஏக்கர்களென்றும், பஞ்சாபு, அரியானா மாநிலங்களில் 30 முதல் 80 ஏக்கர்களென்றும் வரை யறை செய்யப்பட்டிருந்தன. புதிய சட்டப்படி நாடு முழுவதிலும் ஒரே அளவிலான உச்சவரம்பைக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் வற் றாத நீர்ப்பாசன வசதியையுடைய பகுதியிலுள்ள ஒரு குடும்பத்தின் உச்சநிலை வரம்பு 10 முதல் 18 ஏக் கர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. நில ஆக்கத் திறன், மண்வகை, ஒரு போக இருபோகச் சாகுபடி முறை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு உச்ச வரம்பு 54 ஏக்கர் வரை அனுமதிக்கப்படலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஒருபோகச் சாகுபடி நிலத்தின் உச்சவரம்பு 27 ஏக்கராகும்.

நில உச்சவரம்பிலிருந்து தனி விதி விலக்குரிமை பெறுபவை இன்றியமையாத துறைகள் மட்டுமே என 1973-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டது. விலக்களிக்கப்பட்டவையாவன: (1) தேயிலை, காப்பி, இரப்பர், ஏலம், கொக்கோ ஆகியவற்றைப் பயிரிடும் தோட்டங்கள் (2) வேளாண்மைச் சார்பற்ற (Non Agricultural) தொழில்களை நடத்தும் வாணிக, தொழில் நிறுவனங்களின் நிலங்கள். (3) சர்க்கரை ஆலைகள் சொந்தமாகப் பயிரிடும் கரும்புத் தோட்டங்கள். 100 ஏக்கர் மட்டிலுமே அனுமதிக்கப்படலாம் என வரையறுக்கப்பட்டது. பழைய இளவரசர் தலைமுறையினரின் நிலங்கள், தனியார் அறநிலையங்களின் (Private Trusts) நிலங்கள், இயந்திர மயமாக்கப்பட்ட பண்ணைகள், திறமையான மேலாண்மையினரால் நிருவகிக்கப்பட்ட பண்ணைகள் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டு வந்த விதி விலக்குகள் இச்சட்டப்படி ஒழிக்கப்பட்டன.

உச்சவரம்பிற்கு மேற்பட்ட உபரி நிலங்களை அரசு கைப்பற்றி அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பணமாகவோ அரசு ஆவணமாகவோ கொடுக்கிறது. சம்மு காசுமீரில் மட்டும் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படவில்லை. இழப்பீட்டுத் தொகை நிலத்தின் வளம், நீர்ப்பாசன வசதி, ஒருபோக இருபோகச் சாகுபடி ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இத்தொகை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இது பொதுவாக அங்காடி விலைக்கும் கீழாக மதிப்பிடப்பட்டு அதனைப் பங்கீடு செய்து பெறுவோரின் தகுதியின்படி முழுமையாகவோ தவணைமுறையிலோ அவர்களிடமிருந்து பெற அரசு முனைகிறது. உபரி நிலங்களைப் பங்கிட்டு ஒதுக்கீடு செய்வதில் இத்திட்டத்தினால் வேலையிழந்தோர், நிலமற்ற குத்தகை உழவர், சிறு துண்டு நிலங்களையுடையோர், அட்டவணைப்படுத்தப்பட்ட இனத்தவர் ஆகியோர் முன்னுரிமை (Priority) பெறுகின்றனர்.

இழப்பீட்டுத் தொகையை உறுதி செய்வதிலும் அதனை நிலம் பெறுவோரிடமிருந்து பெறுவதிலும், உபரி நிலங்களைப் பங்கீடு செய்வதிலும் அரசு பல சிக்கல்களை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. மொத்த உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்ட 43.5 இலட்சம் ஏக்கர் நிலங்களில் 1983-ஆம் ஆண்டு இறுதி வரையில் 29.45 இலட்சம் ஏக்கர் நிலங்களை அரசு பெற்று 20.05 இலட்சம் ஏக்கர் (46 விழுக்காடு) நிலங்கள் மட்டிலுமே பங்கீடு செய்யப்பட்டுள்ளன. நாட்டின் வேளாண்மை மாதிரி ஆய்வுக் குழுவின் (National Sample Survey of Agriculture) 1971-72-ஆம் ஆண்டு 26-ஆம் சுற்று (26th Round) ஆய்வுக் கண்டுபிடிப்பின்படி நாட்டில் 30 ஏக்கருக்கு மேலான அளவு கொண்ட மொத்தப் பண்ணைகளின் பரப்பளவு 57.81 மிலியன் ஏக்கருக்கும் மிகையானது. இவற்றிலிருந்து உபரி நிலங்களாகப் பெறக்கூடியவை 21.51 மிலியன் ஏக்கர்களாகும். அதேபோல் 50 ஏக்கருக்கு மேலான அளவு கொண்ட பண்ணை நிலங்களிலிருந்து பெறக்கூடிய உபரி நிலங்கள் 8.30 மிலியன் ஏக்கர்களாகும்.

சட்ட வரையறையை மீறும் உபரி நிலங்கள் பேரளவிலிருந்தாலும் அவற்றை அரசு பெறச் செயற்படுவதில் மக்களாட்சி நிலவும் இந்திய நாட்டில் இடர்ப்பாடுகள் பல உள்ளன. வலுக்கட்டாயத்தின் மூலமோ நீதி நியாயமற்ற வழிமுறைகளிலோ ஒருவர் உரிமை கொண்டாடும் நிலத்தை அரசு கைப்பற்ற இயலாது. தன்னியல்பாகப் பூதான இயக்கம் போன்றவை மூலம் உபரி நிலங்களைப் பெற எடுத்த முயற்சிகள் பெரும் பயனை நல்கவில்லை. தன்னியல்பாக வழங்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் மண்வளம், நீர்ப்பாசன வசதி போன்றவையற்ற பயிரிடத்தகா நிலங்களாகும். பெரும்பாலான உபரி நிலம் பிற பொருள் வளம் இல்லாத ஏழை வேளாண்மையினருக்கு அளிக்கப்பட்டது. நிலத்தை மட்டுமே வைத்துக் கொண்டு வேளாண்மையில் ஈடுபட இயலவில்லை. எனவே, அவர்கள் மறுபடியும் நிலக்கிழாரிடமே நிலத்தை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், நில உச்சவரம்பின் சிறப்பு நோக்கமே தோல்வியடைந்தது.

நில உச்சவரம்பு பொதுமக்களின் அறிவுக்கும் கலந்துரையாடலுக்கும் உட்பட்டுச் சட்டமாக இயற்றப்பட்டகால இடைவெளியின் காரணத்தால்பெரும் நிலக்கிழார்கள் உபரி நிலங்களைப் பொய்மாற்றங்கள் (MalafideTransfer) செய்தல். சொத்துரிமை மாறாமல் பெயர் மாற்றம் மட்டும் செய்தல் (Nominal Transfer), மற்றவர் பெயரில் வாங்கும் பினாமி மாற்றல்கள் (Binamy Transfer) போன்றவை மூலம் தங்கள் நில உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டனர். நில உச்சவரம்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான திறமை மிக்க நிறுவன நுட்பமும் இந்திய அரசியல் பணியாளர்களிடம் இல்லை. இந்திய நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்றாக வேளாண்மைத் துறை முன்னேற்றத்தில் பங்கேற்று வருகிறது. குறைபாடுகளுள்ள அணுகுமுறையாலும் மாற்றங்களுக்குட்பட்ட சட்டக் கூறுகளினாலும் நில உச்சவரம்புத் திட்டம் முழுமையாகச் செயற்பட்டு வெற்றி பெறவில்லை எனக் கருதப்படுகிறது.

**உச்சி படைப்போர்** என்பது ஓர் இசுலாமியத் தமிழ் இலக்கியம். இது படைப்போர் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த ஐந்து படைப்போரின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ளது. (காண்க: இபுனியன் படைப்போர்). அசன் அலிப் புலவரால் பாடப்பட்ட உச்சிப் படைப்போர் இபுனியன் படைப்போருக்கு அடுத்த நிலையில் இடம்பெற்றுள்ளது.

இரண்டாம் கலீபாவான அலி (ரலி)க்கும் முசுலிம் அல்லாதார் கூட்டத்தாரின் தலைவரான இபுனியனுக்கும் நடைபெற்ற முதல் போரில் இபுனியன் தோல்வியடைந்து, அலி அவர்களால் கொல்லப்பட்டான். இச்செய்தியைக் கேள்வியுற்ற ன்மன்ன இந்திராயன் பெருங்கோபங்கொண்டு போருக்கு ஆயத்தமாகிறான். இந்நிலையில் இந்திராயன் தன் மகள் பனிமதியை மணமுடித்துக் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த கொலுமண்டபத்தில் காத்திருந்த பல மன்னர்களை நோக்கி, அலியின் தலையைக் கொய்து கொண்டு வருகிற அரசனுக்குத் தன் மகள் பனிமதியை மண முடித்துக் கொடுப்பதாக அறிவிக்கிறான். அதனைக் கேட்டு உச்சி என்பவன் அலியின் தலையைக் கொண்டு வருவதாகக் கூறிப் போருக்குப் புறப்படுகிறான்.

இந்நிகழ்ச்சியுடன் தொடங்கும் உச்சி படைப்போர் அலி தலைமையில் வரும் முசுலிம்கள் கூட்டத்தாருக்கும் உச்சி தலைமையில் வரும் முசுலிம்கள் அல்லாதார்க் கூட்டத்தாருக்கும் இடையே நடைபெறும் போரை விரிவாக விவரிக்கிறது. உச்சி படைப்போரை அசன் அலிப்புலவர் 392 கண்ணிகளில் படைத்துள்ளார். இதன் பல கண்ணிகளில் அலியின் 'துல்துல்' என்னும் குதிரையின் ஆற்றலை ஆசிரியர் விரிவாகவும் சுவைபடவும் எடுத்துரைத்துள்ளார். அலியின் திறமை வாய்ந்த போருக்கு ஈடு கொடுக்க முடியாத உச்சி இறுதியில் பின்வாங்கி ஓடி மாண்டுவிட, இச்செய்தியைப் போரிலிருந்து உயிர்பிழைத்து ஓடியோர் மன்னன் இந்திராயனிடத்து எடுத்துக் கூறுவதுடன் உச்சி படைப்போர் முடிவுறுகிறது. உச்சி படைப்போரில் போர்க்களக் காட்சிகளை ஆசிரியர் திறம்பட வருணித்துள்ளார். இந்நூலில் அறபுச் சொற் கலப்பு மிகமிகக் குறைவு. ஐந்து படைப்போரில் உச்சி படைப்போரை அடுத்து வடோச்சி படைப்போர் நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. சி.ந.

**உசசு**: பண்டைய உரோமானியச் சட்டத்தில் கூறப்பட்ட உடைமை உரிமை (Right of Ownership), உடைமையை வைத்திருத்தல் (Right of Possession) ஆகியவற்றுள் ஒருவகை உரிமையைக் குறித்ததே உசசு (Usus) என்னும் சொல். இது ஒரு பொருளை உரிமையாகப் பெறாதவர் அப்பொருளின் பயனை நுகரும் உரிமையைக் குறித்தது.

உரோமானியச் சட்டத்தில் கூறப்பட்ட உடைமை உரிமை வகைகள்: உரோமானியச் சட்டத்தின்படி நிலமும் அசையும் பொருள்களும் தனி ஆட்களால் வரம்பற்ற முழுமையான உடைமைகளாகக் கொள்ளப்படுதல் இயலும். இதுவே வரம்பற்ற தனி உடைமை (Dominium or Absolute Ownership) எனப்பட்டது. செருமனிய, ஆங்கிலச் சட்டங்களில் ஒருவர் ஒரு சொத்தை வைத்திருப்பதே (Possession) உடைமை உரிமையாகக் கொள்ளப்பட்டது. உரோமானியச் சட்டத்தின்படி, நிலத்தை ஒருவர் இரண்டாண்டுகளுக்கும் அசையும் பொருள்களை ஓராண்டிற்கும் தொடர்ந்து வைத்திருந்தால் அவர் அவற்றின் உரிமையாளராவர். ஆனால், அந்தச் சொத்து திருடப்படாத அல்லது வல்லந்தத்தினால் பறிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். நிலத்தின்மீது எந்தக் கட்டடம் கட்டப்பட்டாலும் அது நிலத்தின் பாகமாக ஆகுமே தவிர, அதைத் தனியாக எவரும் தம் உடைமையாக ஆக்கிக் கொள்ளுதல் இயலாது.

நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பவருக்கு, நிலச் சொந்தக்காரருக்கு எதிராக ஒப்பந்தப்படியான உரிமையைத் தவிர வேறெதுவும் பாதுகாப்பு இல்லை. ஆனால், சிலவகைக் குத்தகை முறைகளில் குத்தகைதாரருக்குச் சில பாதுகாப்புகள் இருந்தன. நிலங்களும் கட்டடங்களும் நெடுங்காலத்துக்கு அல்லது குறிகியகாலத்திற்கு ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்போது, அவர் உடைமை உரிமைகளை ஒத்த உரிமைகளையே பெற்றார்.

உரோமானிய உடைமை உரிமைச் சட்டத்தில் பிறர் உரிமைக்கு இடம் தரும் உடைமைப் பொறுப்பு (Servitude) என்பதும் இருந்தது. சிலவகையான ஒப்பந்தங்களில் ஒருவருக்கு உரிய உடைமையில் சில உரிமைகளை வேறொருவர் அடைந்தார்; ஒருவருடைய நிலத்தின் விளைபொருளை வேறொருவர் அடைவதற்குரிய உரிமை உசசுபிரக்டசு (Ususfructus) எனப்படும். உசசு என்பது உசசு பிரக்டசு உரிமையை விட வரம்புக்குட்பட்ட உரிமையைக் குறித்தது. இதன்படி ஒரு பொருளை நுகர்பவர் அவருடைய வாழ்நாளுக்கு மட்டுமே அப்பொருளின் பயனைப் பெறலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் தாமே ஒரு வீட்டில் குடியிருத்தல் கூடும்; ஆனால், அவா அதை வாடகைக்கு விடுதல் இயலாது; அவ்வாறு செய்யின் அது அவ்வீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெறுவதற்கு ஒப்பாகும். ஆகையால், உசசு என்ற உரிமையின்படி

ஒருவர் ஒரு பொருளைத்தாம் நுகரலாமே தவிர அதை மற்றவருக்கு வாடகைக்குக் கொடுத்து வருமானம் பெறுதல் கூடாது.

*உசா* தைத்திய (Daitya) இளவரசி; பானா என்பவரின் மகள்; பாலி என்பவரின் பேர்த்தி. இவள் பிரிதிசுசா (Pritijusha) என்றும் கூறப்படுகிறாள்.

*உசாசு* இந்து சமயத்தின் முதற் கடவுள். உசாசு (Ushas) தையாசு (Dyaus) என்ற வான் கடவுளின் மகளும் ஆதித்தனின் (Adityas) சகோதரியும் ஆவாள். இருக்குவேதம் உசாசுவைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இவள் செல்வத்தைத் தருபவள் என்றும் மனிதர்களின் தோழி என்றும் குறிப்பிடப்படுகிறாள்.

**உசாத்தானம்** தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; சோழநாட்டில் உள்ளது. திருவுசாத்தானம் எனப்படும் இவ்வூர் இக்காலத்தில் கோவிலூர் என்று வழங்கப்படுகிறது. இது தஞ்சை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தினை இராமர், இலக்குவர், சாம்பவான், சுக்கிரீவன், அனுமன் ஆகியோர் வழிபட்டனர் என்று ஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வூருக்கு ஞானசம்பந்தர் பாடிய, 'நீரிடைத் துயின்றவன்' எனத் தொடங்கும் தேவாரப்பதிகம் (3.33) உள்ளது. அப்பதிகத்தில் ஒன்பது பாடல்களே கிடைத்துள்ளன. இத்தலத்தே கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் மந்திரபுரீசுவரர்; இறைவி பெயர் பெரியநாயகி. இங்குள்ள இலிங்கத் திருமேனி வெண்மை நிறங்கொண்டமைந்த சுயம்பு மூர்த்தியாகும். இத்தலத்திற்குச் சூதவனம் என்னும் பெயரும் உண்டு. 'சூதவனபுராணம்' என்று அப்பெயராலமைந்த ஒரு தலபுராணம் இயற்றப்பட்டுள்ளது. இத்தலத்தில் சங்கர வேதாந்திகள் மடம் ஒன்று உள்ளது.

**உசாந்துப் போர் (கி.பி. 1778)** அமெரிக்கப் புரட்சியின் போது நிகழ்ந்தது. இதனை முதலாம் உசாந்துப் போர் என்பர். இப்போர் 6-2-1778-இல் நடைபெற்றது. சாரடோக்காவில் (Saratoga) அமெரிக்கர்கள் வெற்றி பெற்றபோது, பிரான்சும் பிரிட்டனும் மோதிக் கொண்டன. இப்போர் உசாந்து கடற்கரையில் நிகழ்ந்தது. பிரான்சின் பிரட்டனித் தீபகற்பத்தில் உள்ள உசாந்து என்னுமிடத்தில் இப்போர் மூண்டதால் இதனை உசாந்துப்போர் என்று கூறுவர். இங்கிலாந்தின் மன்னரான மூன்றாம் சார்சு (George III) கப்பற்படைத் தலைவர் அகசுடசு கெப்பல் (Augustus Keppel) என்பாரின் தலைமையில் 30 கப்பல்களைப் போர்ட்சுமத்து நகரத்திலிருந்து உசாந்துப் போரில் பங்கு கொள்ள அனுப்பினார். பிரான்சு நாட்டினரும் ஏறத்தாழ அதே அளவு கப்பல்களுடன் காம்டி டீ ஆர்விலியர்சு (Comte d' Orvilliers) என்பாரின் தலைமையில் பங்கேற்றனர். இரு நாட்டுக் கப்பற்படையினரும் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட போதிலும் அவர்கள் வேறு அழிவில் ஈடுபடவில்லை. கப்பல்கள் மூழ்கடிக்கப்படவில்லை. கெப்பல் போர்ட்சுமத்திற்குத் திரும்பினார். காம்டி டீ ஆர்விலியர்சு, பிரசுட்டு (Brest) என்னும் ஊருக்குத் திரும்பினார்.

பிரெஞ்சுப் புரட்சியின்போது கி.பி. 1794-இல் நிகழ்ந்த இரண்டாம் உசாந்துப் போரில் பிரிட்டனும் பிரான்சும் மோதிக் கொண்டன. இதில் பிரிட்டன் வெற்றி பெற்ற ஆறு பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. எனினும், பிரெஞ்சுக்காரர்கள் தப்பியோடிவிட்டனர். இங்கிலாந்து வரலாற்றில் இதனைப் 'புகழ்மிக்க சூன் மாத முதல் நாள்' (Glorious First of June) என்று பெருமையாகப் பேசுவர். இரா.அ.

*உசுடாசா*: ஊகோசுலேவிய நாட்டில் குரோசியா (Croatia) மாநிலத்தில் செயற்பட்ட ஓர் இயக்கத்தின் பெயரே உசுடாசா (Ustasa) என்பதாகும். இது ஒரு தீவிர தேசிய இயக்கமாகும்.

இயக்கத்தின் தோற்றமும் நோக்கமும்: ஊகோசுலேவியா (Yugoslavia) நாட்டில் அரசர் முதலாம் அலக்சாண்டர் 1929-ஆம் ஆண்டில் செர்பிய ஆதிக்கம் மிகுந்த ஒரு சருவாதிகார ஆட்சியை நிறுவினார். அப்போது ஊகோசுலேவிய பாராளுமன்றத்தில் முன்னாள் உறுப்பினராக இருந்த அண்ட்டி பவேலிக்கு (Ante Pavelic) என்பவர் ஊகோசுலேவியாவில் உள்ள குரோசியா மாகாணம் தனிநாடாகப் பிரிதல் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். இந்த நோக்கத்தோடு அவர் இத்தாலிக்குத் தப்பிச் சென்று தொடங்கிய இயக்கமே உசுடாசா எனப்பட்டது.

உசுடாசாவின் செயல்கள்: உசுடாசா இத்தாலிய பாசிச இயக்கத்தைப் போன்று உருவெடுத்தது. அதைப்போலவே இது பயங்கரவாதிகளின் பயிற்சிக் கூடங்களை இத்தாலி, அங்கேரி முதலிய நாடுகளில் அமைத்தது. அந்நாடுகளில் அவர்களுக்குத் தங்குமிடமும் உதவியும் கிடைத்தன. அங்கிருந்து கொண்டு அவர்கள் குரோசியாவுக்குள் பிரச்சார அறிக்கைகளை விடுத்துக் கொண்டனர். அங்குள்ள மக்களை அரசர் அலக்சாண்டருடைய ஆட்சியிலிருந்து விலகுமாறு கேட்டுத் தூண்டிவிட்டனர். வட தால்மேசியாவில் (Dalmatia) குடியானவர் கலகத்தைத் தூண்டி

விட இவ்வியக்கத்தார் முயன்றனர். அரசர் அலக்சாண்டர் 1934-ஆம் ஆண்டில் மார்சேலில் கொலையுண்டார். அதில் உசுடாசாவுக்கும் தொடர்பு உண்டு என்று கருதப்பட்டது.

உசுடாசா தனி நாடாகிய குரோசியாவை ஆளுதல்: குரோசியா தனி நாடாக ஆதல் வேண்டுமென்ற அவர்களுடைய நோக்கம், இரண்டாம் உலகப் போரில் 1941-ஆம் ஆண்டு ஏப்பிரலில் செருமானியர் ஊகோசுலேவியாவைக் கைப்பற்றி, நாட்டைப் பிரிவினை செய்து, குரோசியத் தனி அரசை நிறுவிய போதுதான் நிறைவேறிற்று. இந்நிலையில் உசுடாசா இயக்கம் பவேலிக்குத் தலைமையில் குரோசியாவுக்குத் திரும்பி வந்து, ஓர் அரசாங்கத்தை நிறுவிற்று. ஊகோசுலேவியாவில் செருமனிக்கு எதிர்ப்பாகத் தோன்றிய இயக்கங்களைப் போரிட்டுத் தடுக்கவும், அச்சு நாட்டுப் படைகளோடு (செருமனிய, இத்தாலியப் படைகளோடு) சேருதற்கும் உசுடாசா ஒரு கட்டாயப் படையைத் திரட்டிற்று.

உசுடாசாவின் கொடுஞ்செயல்களும் வீழ்ச்சியும்: உசுடாசாவின் நோக்கம் வரவரக் குறுகியதாக மாறி, அதற்கு எதிர்ப்பைத் தோற்றுவித்து, நாளடைவில் அது வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. குரோசிய இன மக்கள் மட்டுமே வாழத்தக்கதாகக் குரோசியாவை ஆக்குதல் வேண்டுமென்று உசுடாசா இயக்கம் எண்ணிச் செயற்படலாயிற்று; இந்த இயக்கத்தார் குரோசியர் மட்டுமே அடங்கிய ஒரு படையைத் திரட்டித் தம் ஆட்சியிலிருந்த குரோசியரல்லாத மக்களை அச்சுறுத்தி, வைதிக செர்பிய, யூத மக்களைப் பெருமளவில் கொன்றொழித்தனர். இதனைக் கண்ட ஊகோசுலேவிய நடுத்தரப் போக்காளரும், இவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளித்துக் கொண்டிருந்த செருமனிய, இத்தாலிய அதிகாரிகளும் இவர்களுடைய கொடிய செயல்களை எதித்தனர். எனவே, குரோசியர் பலரும் இத்தகைய செயல்களை மறுக்கும் வகையாக எதிர்ப்பியக்கங்களில் சேர்ந்தனர். இவ்வியக்கம் 1945-ஆம் ஆண்டு மே மாதத்தில் அவர்களைப் பாதுகாத்து வந்த செருமனி வீழும் வரை குரோசியா நாட்டைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. செருமனி வீழ்ந்தது; பொதுவுடைமைக் கட்சியாருடைய ஆதிக்கம் வளர்ந்தது. பவேலிக்கையும், அவர்தம் ஆதரவாளர்களையும் பொதுவுடைமையாளர்கள் தாக்க வரவே, உசுடாசா இயக்கத்தார் பொதுவுடைமைக் கட்சியாரிடமிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

**உசுத்திநாவ், திமித்திரி பெடரோவிச்சு (1908—1984)** சோவியத்து உருசியாவின் பாதுகாப்பு அமைச்சராயிருந்தவர்; அரசியல்வாதி. இவர் 30-10-1908-இல் உருசியாவிலுள்ள கைபாசேவ்(Kuybyshev) என்னும் ஊரில் பிறந்தார். இந்நகரை முற்காலத்தில் சமரா (Samara) என்றுகுறித்தனர். உசுத்திநாவ் (Ustinov, Dmitry Fedorovich) 1976-இலிருந்து பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றினார். சோவியத்து நாட்டின் உயர்நிலை ஆட்சிக் குழுவில் செல்வாக்கு மிக்க உறுப்பினர்களுள் உசுத்திநாவும் ஒருவர். இவர் பொறியாளராகப் பணியைத் தொடங்கியவர். இரண்டாம் உலகப் போரின்போது சோவியத்துப் பாதுகாப்புத் தொடர்பான தொழில்களைப் பெருமளவிற்குப் பெருக்கக் காரணமாயிருந்தவர்.

உசுத்திநாவின் தந்தையார் ஒரு தொழிலாளி. உசுத்திநாவ் 1934-ஆம் ஆண்டில் இலெனின்கிராடு (Leningrad) நகரிலிருந்த இராணுவப் பொறித்துறை நிலையத்தில் படித்துப் பட்டம் பெற்றார். கட்டுமானப் பணிப் பொறியாளராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர், இலெனின்கிராடு போர்க் கருவிகள் உற்பத்தி செய்யும் ஆலையின் இயக்குநராகப் பொறுப்பேற்றார். செருமனி 1941-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் சோவியத்து ஒன்றியத்தைத் தாக்கிய போது அந்நாட்டின் தலைவராயிருந்த இசுடாலின் (Stalin) மக்கள் போர்க்கருவித் துறையின் உணவுப் பொறுப்பதிகாரியாக இவரை (1946-53) அமர்த்தினார். இப்பதவி அமைச்சர் பதவிக்கு இணையானது. இப்பதவி போர்க்கருவிகள் அமைச்சகத்தின் கீழ் இயங்கியது. பின்னர்,1953 முதல் 1957 வரை இவர் பாதுகாப்புத் தொழிற் சாலைகளின் அமைச்சராக்கப்பட்டார். இப்பொறுப்பு வகித்த காலத்தில் உசுத்திநாவ் சோவியத்துப் படைக்கல உற்பத்தித் தொழிற்சாலைகளை ஊரல் மலைகளுக்கு அப்பால் கொண்டு சென்றார். அக்காலத்தில் செருமானியப் படைகள் விரைந்து சோவியத்து நாட்டில் முன்னேறி வந்தன. செருமானியர்களின் கைகளுக்கு இத்தொழிற்சாலைகள் இலக்காகக் கூடாதென்னும் நோக்குடன்தான் இப்பணியை இவர் மேற்கொண்டார். போருக்குப் பின்னர்ச் சோவியத்துப் படைகளை இன்றைய அளவிற்கு உயர்த்திய பெருமைக்கும் உசுத்திநாவே காரணமாவார். சோவியத்து நாட்டின் மத்திய குழுவின் முழு உறுப்பினராக இவர் 1952-இலிருந்து பதவி வகித்தார். நிகிட்டா குருச்சேவ் (Nikita Khrushchev) இவரைத் துணை முதல்வராக 1957-இல் நியமித்து, போர்க்கருவிகள் தொழிற்சாலைகளின் அனைத்துப் பொறுப்புகளையும் கவனிக்குமாறு பணித்தார். தேசிய பொருளாதார உயர்நிலைக் குழுவின் தலைவராகவும் முதல் துணை முதல்வராகவும் இவர் 1963-இல் ஆக்கப்பெற்றார். பொதுக்குழுவின் செயலாளராக இவர் 1965-இல் பொறுப்பேற்ற

போது இராணுவம், பாதுகாப்புத் துறைத் தொடர்பான தொழிற்சாலைகள், பாதுகாப்பு உறுப்புகள் போன்ற துறைகளின் பொறுப்பேற்றார். போலிட்பீரோவின் (Politburo) உறுப்பினராகவும் ஆனார். இவர் உருசியாவின் ஒற்றர் படையின் தலைவரான யூரி ஆந்திரப்போவ் (Yuri Andropov) என்பாருடன் இணைந்து பணியாற்றினார். பாதுகாப்பு அமைச்சராயிருந்த மார்சல் ஆந்திரி கிராக்கோ(Marshal Andrey Grechko) என்பார் 1976-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் காலமானார். அவருக்குப் பின்னர் உசுத்திநாவ் பாதுகாப்பு அமைச்சரானார். அதே சமயத்தில் இவர் போலிட்பீரோவின் முழு உறுப்பினராகவும், சோவியத்து ஒன்றியத்தின் பெரும் படைத்தளபதியாகவும் (Marshal) நியமிக்கப்பெற்றார்.


அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத்து ஒன்றியத்துக்குமிடையே 1970-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஆயுதக் குறைப்பு உரையாடல்களின் போது, உசுத்திநாவ் பின்னணியில் இருந்துகொண்டு சீரிய தொண்டாற்றியதன் விளைவாக 1979-இல் ஆசுத்திரிய நாட்டின் தலைநகரான வியன்னா உச்சி மாநாட்டில் இவரும் பங்கு கொண்டார். இம்மாநாட்டில்தான் இரண்டாம் படைத்திறக் கட்டுப்பாட்டுக் குழுத் தொடர்பான ஒப்பந்தம் இவ்விரு நாடுகளுக்குமிடையே (Strategic Arms Limitation Talks-SALT II)கையெழுத்தாயிற்று. சோவியத்து ஒன்றியத்தின் சார்பாக இலியோனிடு பிரச்நேவும் (Leonid Brezhnev) அமெரிக்க ஐக்கிய நாட்டின் சார்பாகச் சிம்மி கார்ட்டரும் (Jimmy Carter) இம்மாநாட்டில் கலந்துக்கொண்டனர். பிரச்நேவ் காலமானதும், அவரை அடுத்துத் தலைவராக வரவேண்டுமென ஆந்திரப்போவின் பெயரை முன் மொழிந்தவரும் உசுத்திநாவ்தான். உசுத்திநாவ் 27-9-1984-இல் பொதுநிகழ்ச்சியில் பங்கு கொண்டபோது ஆந்திரப்போவை அடுத்துத் தலைவரான கான்சுடண்டின் செரனன்கோ (Konstantin Chernenko) என்பாருக்கு இலெனின் விருதினை வழங்கியவரும் இவரே. உசுத்திநாவுக்கும் இவ்விருது இருமுறை வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கதாகும்.

சோவியத்து உருசியாவின் வீரராகக் கருதப்பட்ட இவர் 20-12-1984-இல் மாசுக்கோ மாநகரில் காலமானார்.

**உசுதாத் ஈசா**: பாரசீக நாட்டைச் சார்ந்த சிற்பி. சாசகான் மொகலாயப் பேரரசராக இருந்த காலத்தில் தம் மனைவி மும்தாசு மகாலின் நினைவாகத் 'தாசுமகால்' என்னும் கலைக்கோயிலைக் கட்டினார். அந் நினைவுச் சின்னத்தின் சிற்பியாக அமர்த்தப்பட்டவரே உசுதாத் ஈசா என்பவர். இரா.அ.

**உசுதாத் மன்சூர்** என்பார் மொகலாயப் பேரரசர் சகாங்கீரின் அவையில் புகழுடன் விளங்கிய ஓவியக் கலைஞர். சகாங்கீர் ஓவியக் கலையில் சிறந்த வராகக் கருதப்பட்டார். ஆகா ரிசா (Aga Reza), அவர்தம் மகன் அபுல் ஆசன் (Abul Hazan) ஆகிய இருவரும் ஈரட் (Herat) டிலிருந்து வந்தவர்கள். முகமது நாதிரும் (Muhamad Nadir), முகமது மூராதும் சாமர்கண்டிலிருந்து (Samarkhand) வந்தவர்கள். அதுபோல உசுதாத் மன்சூரும் வெளிநாட்டிலிருந்து வந்த ஓவியக் கலைஞரே. இரா. அ.

**உசுபெக்குச் சோவியத்துக் குடியரசு** சோவியத்து ஒன்றியத்தின் (U.S.S.R.) குடியரசுகளுள் ஒன்று. இதனை உசுபெக்கிசுத்தான் (Uzbekistan) என்றும் கூறுவர். இக்குடியரசு மத்திய ஆசிய சோவியத்துக் குடியரசுகளுள் ஒன்று. தாசுகண்டு (Tashkent) இதன் தலைநகர்.




உசுபெக்குச் சோவியத்துக் குடியரசு

எல்லைகள்: உசபெக்கிசுத்தானின் வடக்கில் கசக்குச்(Kazakh) சோவியத்துக் குடியரசும், தெற்கில் ஆப்கானிசுத்தானமும், கிழக்கில் கிர்கிசுச் (Kirghiz) சோவியத்துக் குடியரசும் தாசிக்குச் (Tadzhik)சோவியத்துக் குடியரசும், மேற்கில் துருக்மன் சோவியத்துக் குடியரசும் இதன் எல்லைகள். கர-கல்பக்குத்(Kara Kalpak) தன்னாட்சிச் சோவியத்துக் குடியரசும் இதனுள் அடங்கும்.

பரப்பும் மக்கள் தொகையும்: உசுபெக்கிசுத்தானின் மொத்தப் பரப்பு 4,47,400 ச.கி.மீ. இக்குடியரசின் மக்கள்தொகை 1,70,39,000 (1983).

இயற்கையமைப்பு: இக்குடியரசின் நிலவியல் அமைப்பு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட இருகூறுகளாகப் பிரிந்துள்ளது. வடமேற்குப் பகுதியில் இருக்கும் முதற்பிரிவு மிகப் பெரிய அளவு பரப்பினைக் கொண்டுள்ளது. குசுயில்-கும் (Kyzyl-Kum) பாலை நிலத்தின் பகுதியாகவும் இது அமைகிறது. தென் கிழக்குப் பகுதியிலுள்ள இரண்டாம் பிரிவு சிறியது; இங்கு வளமான உலோயசு (Loess) என்னும் தளர் மண் சூழ்ந்துள்ளது. இப்பிரிவு தியன் சான் மலைத் தொடர்களைத் (Tien Shan Mountains) தொட்டுள்ளது. உசுபெக்கிசுத்தானின் வடமேற்கு எல்லையில் ஏரல் கடல் (Aral sea) அமைந்துள்ளது.

மத்திய ஆசியாவின் இருபெரும் ஆறுகளான ஆமுதாரியாவும்(Amu Darya) சிர்தாரியாவும்(Syr Darya) உசுபெக்குப் பகுதியின் குறுக்காகப் பாய்கின்றன. ஆமுதாரியா ஆறு கிவா பாலைநிலப் பசுஞ்சோலைக்கும் (Khiva Oasis), சிர்தாரியாவும் அதன் துணையாறுகளும் செழுமைமிக்கபர்க்கானாப் பள்ளத்தாக்கிற்கும் நீர்ப்பாசன வசதியளிக்கின்றன. தாசுகண்டு பாலைநிலப் பசுஞ்சோலையைச் சிர்சிக்கு (Chirchik), ஆங்கிரன் (Angren) ஆறுகளும், சாமர்கண்டு (Samarkhand), பொக்காரா (Bokhara) பாலைநிலப் பசுஞ்சோலைகளைச் செராவ்சன் (Zeravshan) ஆறும் பாசன வசதிக்குரியனவாக வளமாக்குகின்றன.

விளைபொருள்கள்: உசுபெக்குக் குடியரசு பல பொருள்களை விளைவிக்கிறது. சோவியத்து ஒன்றியத்தின் பருத்தி உற்பத்தியில் 85 விழுக்காடும் அரிசி உற்பத்தியில் பாதியும் இக்குடியரசு விளைவிக்கிறது. தானிய வகைகள், அல்பால்பா (Alfalfa) என்னும் மணப்புல் வகை, பழவகைகள், சாராயத்திற்குப் பயன்படும் திராட்சை, சணல் போன்ற நார்வகை (Kenaf), எள் (Sesame), புகையிலை கரும்பு போன்ற ஏனைய பொருள்களும் விளைவிக்கப்படுகின்றன. நீர்ப்பாசன வசதியுடன் செய்யப்படும் வேளாண்மைக்கு இக்குடியரசே சோவியத்து ஒன்றியத்தில் முதலிடம் பெறுகிறது. மிக வறண்ட மேற்குப் பகுதிகளில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பருத்தி, பட்டு, உரோமம் போன்றவை உசுபெக்கின் பெருகி வளர்ந்துள்ள நூற்பாலைத்தொழிலுக்கு அடித்தளமாய் அமைகின்றன. எந்திர உற்பத்தி, உலோகப்பொருள்கள் செய்தல், உணவுப் பொருள்கள் பதப்படுத்தல், நீர்மின் உற்பத்தி, இரும்பு உருக்கு உற்பத்தி, ஆடை நெய்தல் போன்றவை சிறப்பான தொழில்கள்.

உசுபெக்கிசுத்தான் கனிமப்பொருள்கள் நிறைந்தது. பர்க்கானாப் பள்ளத்தாக்கில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. மேற்கு உசுபெக்கிசுத்தானில் மிகுதியான இயற்கை எரிவாயுப் படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நிலக்கரி, துத்தநாகம், செம்பு, மின்தனிமம் (Tungsten), முறிவெள்ளி (Molybdenum), ஈயம், வண்ணப்படிகம்(Fluoropar), தாதுப் பொருள் (Wolfram), அரக்கு (Ozokerite), கந்தகம் (Sulphur), சுண்ணாம்புக்கல், உரச்சத்து (Marl), களிமண் போன்ற கனிமப் பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன.

வரலாறு: உசுபெக்கிசுத்தான் உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதி. பண்டைய பாரசீகர்களின் மாநிலமான சோக்டியானா (Sogdiana) இதுவே. மகா அலெக்சாந்தர் இதனை கி.மு. நான்காம் நூற்றாண்டில் வென்றார். துருக்கிய நாடோடிகள் இப்பகுதியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் நுழைந்தனர். அராபியர் இதனை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கைப்பற்றிக்கொண்டதுடன், இசுலாம் சமயத்தையும் புகுத்தினர். செல்சுக் துருக்கியர் (Seljuk Turks) உசுபெக்கிசுத்தானை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினர். செங்கிசுகான் (Genghis Khan) என்பார் இப்பகுதியை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினார். தைமூரின் பேரரசுப் பகுதியான இதை அக்காலத்தில் சாமர்கண்டு என்றுகுறித்தனர். இப்பகுதியே அப்பேரரசின் மையப் பகுதியாகக் கருதப்பட்டது. அவருக்குப் பின் அரியணையேறியவர்களின் காலத்தில் அப்பேரரசு சுருங்கி, கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் நலியத் தொடங்கியது. உசுபெக்குகள் இதன் மீது வடமேற்கிலிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் படையெடுத்தார்கள். உசுபெக்குகான் என்பாரின் வழித் தோன்றல்கள் இதனை ஆண்டமையால் அம்மரபினர் உசுபெக்குகள் எனப்பெற்றனர்.

உசுபெக்குகளின் பேரரசு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சிறுசிறு அரசுகளாகச் சிதைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களாலும் கலகங்களாலும் இப்பேரரசு பலக்குறைவு அடைந்தது. இச்சிற்றரசுகளை உருசியப்படைகள் வென்றன. தாசுகண்டு நகரை கி.பி. 1865-ஆம் ஆண்டிலும், சாமர்கண்டு, பொக்காரோவை கி.பி. 1868-இலும், கீவை (Khiv) கி.பி. 1873-ஆம் ஆண்டிலும் உருசியர்கள் கைப்பற்றினர். துருக்கிசுத்தான் தாமியங்கி சோவியத்துச் சமநிலைக் குடியரசு (Turkistan Autonomous Soviet Socialist Republic) என்னும் பெயரில் உசுபெக்குகளின் பகுதி

1918-ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. கொரேசம் (Khorezm), பொக்காரோ மக்கள் குடியரசுகள் 1920-ஆம் ஆண்டில் நிலைநாட்டப்பட்டன. இறுதியாக உசுபெக்குகள் வாழ்ந்த இடங்கள் அனைத்தும் ஒன்றாக்கப்பெற்று உசுபெக்குச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு என 1924-இல் இணைக்கப்பட்டன. தாசிக்கிக்கான் (Tadzhikikhan) 1929-ஆம் ஆண்டு வரை உசுபெக்குக்குடியரசின் பாதுகாப்பில் இருந்தது. பின்னர், இது தனியாகச் சுதந்திரக் குடியரசாக்கப்பட்டது. கர-கல்பக் தானியங்கிச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு 1936-ஆம் ஆண்டில் இதனுடன் இணைந்து விட்டன.

உசுபெக்குச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு 27-10-1924-இல் உருவாக்கப்பட்டது. துருக்கிசுத்தானும் அதன் பகுதியாக்கப்பட்டது.

உசுபெக்கு மக்களின் பழக்கவழக்கங்கள்: உசுபெக்குகள் துருக்கிய, ஈரானிய, மங்கோலிய இனத்தாரின் கலப்பினால் உருவானவர்கள். தொடக்கத்தில் இவர்கள் நாடோடிகளாக இருந்து இக்காலத்தில் ஒரே இடத்தில் வாழும் தன்மையைப் பெற்றுள்ளார்கள். முன்னர்ப் பழக்க வழக்கங்களையே சட்டமாக மதித்த இவர்கள் இப்போது அவற்றை எழுத்து வடிவில் மாற்றியுள்ளார்கள். இக்காலத்தில் இவர்கள் களிமண்ணாலும் மரத்தாலும் ஆன வீடுகளைக் கட்டிக்கொண்டாலும், கோடைக்காலத்தில் கூடாரங்களில் வாழ்வதை விரும்புகிறார்கள். உசுபெக்குகள் 92 இனங்களாக அல்லது குடும்பங்களாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வோர் இனமும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உசுபெக்குகள் பாரசீக மொழியின் செல்வாக்குக் காட்பட்ட துருக்கிப் பேச்சுமொழியைப் (Turki) பேசுகிறார்கள். இவர்களால் பேசப்படும் தசாக்கி (Tajaki) மொழி பண்பாடு, இலக்கியம் போன்றவற்றின் மொழியாகக் கருதப்படுகிறது.

**உசுமான் சாகரம்**: ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாயும் கிருட்டிணா ஆற்றின் குறுக்கில் கட்டப்பட்டுள்ள ஓர் அணைக்கட்டு. இதன் உயரம் ஏறத்தாழ 43 மீட்டர். இதனைக் கட்டி முடிக்க ஒன்பதாண்டுகளாயின. இவ்வணையின் நீர்க் கொள்ளளவு 34.2 இலட்சம் கன அடி என்று கூறுகிறார்கள்.

இரா.அ.

**உசுமானாபாது**: மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்த மாவட்டங்களுள் ஒன்று. இதன் பரப்பளவு 7510 ச.கி.மீ. மக்கள் தொகை 10,29,702 (1981). இதன் கிழக்குப் பகுதியில் கருநாடக மாநிலத்தின் பீதர் (Bidar) மாவட்டமும் வடக்கு, மேற்கு, தென்பகுதிகளில் அகமதுநகர், சோலாப்பூர் மாவட்டங்களும் எல்லைகள். இம்மாவட்டத்தின் நடுவில் அமைந்துள்ள மலைத்தொடர் இதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. இதன் வடகிழக்கிலும் கிழக்கிலும் மேட்டு நிலங்கள் உள்ளன. மேற்கிலும் தென் மேற்கிலும் சமவெளிகள் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் குறுக்காக மாஞ்சிரா ஆறு பாய்கிறது.

வெப்பம் மிகுந்த வறண்ட வெளி, சதுப்புள்ள குளிர்ந்தவெளி, ஈரமுள்ள வெளி என இம்மாவட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். தென் மேற்குப் பருவக் காற்றினால் இம்மாவட்டம் ஏறத்தாழ 100 செ.மீ. மழை பெறுகிறது.

இம்மாவட்டத்தின் சிறப்பான தொழில் வேளாண்மையே. பருத்தி, கோதுமை, பயறுவகைகள், எண்ணெய் விதைகள், பருப்புப் போன்றவை இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன. ஆடுமேய்த்தல் எளிய மக்களின் தொழில்களுள் ஒன்று. பருத்தி அரைத்தல், கம்பளி நெசவு, தோல் பதனிடல் போன்றவை சிறப்பான கைத்தொழில்கள்.

இம்மாவட்டம் முசுலிம்களின் ஆட்சிக்கு முன்னர் வரை இந்து அரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அலாவுதீன் கில்சி உசுமானாபாத்தைக் கைப்பற்றினார். பின்னர், இதனைப் பாமினி மரபினைச் சார்ந்த தக்காண முசுலிம்கள் ஆண்டனர். அவுரங்கசீபு இதனை மொகலாயப் பேரரசுடன் இணைத்தார். ஐதராபாத்து சுதேச அரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டபோது உசுமானாபாத்து ஐதராபாத்து அரசின் பகுதியாயிற்று. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் பெரும் பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்டபோது இதுவும் ஆங்கிலேயர் வசமாயிற்று; பின்னர் ஐதராபாத்து நிசாமின் ஆட்சிக்குக் கைமாறியது. மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது உசுமானாபாத்து மாவட்டம் மகாராட்டிர மாநிலத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. இம்மாவட்டத்தில் பல தொல்பொருள்களுக்குப் பெயர் பெற்ற இடங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் பல குகைக் குடைவுகள். உசுமானாபாத்து என்னும் பெயரில் வட்டமொன்றும் நகரம் ஒன்றுமுள்ளன. இவ்வூர் வணிகச் சிறப்புப் பெற்றது.

இரா.அ.

**உசுமானி, முகமது அதவுல் கனி** **(1919-1984)** பங்களாதேசத்தின் இராணுவ தளபதியாக இருந்தவர். இவர் 1919-ஆம் ஆண்டில் வங்காளத்

திலிருக்கும் சில்கட்டு (Sylhet) என்னும் ஊரில் பிறந்தார். உசுமானி (Osmany) சேக் முசிபுர் இரகுமான் (Sheikh Mujibur Rahman) என்பாரைப் பின்பற்றியவர். பங்களாதேசத்தின் விடுதலைக்காக 1971–ஆம் ஆண்டு மேற்குப் பாகிசுத்தானை எதிர்த்து நடைபெற்ற போரின் போது இவர் பங்களாதேசப் படைகளின் தலைவராயிருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது இவர் இந்திய இராணுவத்தில் பணி புரிந்தார். தம் 23–ஆம் வயதில் இவர் இராணுவத்தில் மேசர் (Major) என்னும் உயர்பதவியைப் பெற்றிருந்தார். இந்தியப் பிரிவினையின்போது 1947–இல் இவர் பாகிசுத்தான் இராணுவத்தில் சேர்ந்தார். பங்களாதேச அரசியல் கட்சிகளுள் ஒன்றான அவாமி லீகு (Awami League) 1970–ஆம் ஆண்டில் கிழக்குப் பாகிசுத்தான் தேர்தலில் வெற்றிபெற்ற போது, இவர் பங்களாதேசக் கொரில்லாப் (Guerrilla) படைகளின் தலைவராகப் பணியாற்றினார். பங்களாதேசம் விடுதலை பெற்றபோது அந்நாட்டுப் படைகளின் தலைமைத் தளபதியானார்.

உசுமானி படைத்தளபதி பதவியைத் துறந்துவிட்டு 1973-இல் தேர்தலில் வெற்றிபெற்றுப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பெற்றார். சேக் முசுபுர் இரகுமான் 1975–இல் கொலையுண்ட பின்னர், உசுமானி பாதுகாப்புத்துறை அறிவுரையாளர் (Defence Adviser) ஆனார். பின்னர், இவர் தேசிய மக்கள் கட்சியை (National People's Party) நிறுவினார். இவர் இருமுறை குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்றார். இவர் பாராளுமன்ற ஆட்சியில் முழு நம்பிக்கை கொண்டவர். பங்களாதேசத்தின் படைத் தலைவராயிருந்த உசேன் முகமது எர்சாத்து (Hussain Muhammad Ershad) என்பாருடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் இவர் பதவியைத் துறந்தார். இவர் 16–2–1984–இல் இங்கிலாந்து நாட்டின் தலைநகரமான இலண்டன் மாநகரில் காலமானார்.

**உசுமானியாப் பல்கலைக்கழகம்** இந்தியாவில் ஒன்பதாம் பல்கலைக்கழகமாகவும், ஆந்திர மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமாகவும் 1918–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. உசுமானியாப் பல்கலைக்கழகத்தின் (Osmania University) வைரவிழா (Diamond Jubilee) 1978–79–ஆம் கல்வியாண்டில் கொண்டாடப்பட்டது.

அய்தராபாது நகரில் உசுமானியாப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அய்தராபாதின் ஏழாம் நிசாம் (Nizam) மீர் உசுமான் அலிகான் (Mir Osman Ali Khan) என்பவரே இப்பல்கலைக்கழகத்தின் நிறுவனர். அவர் பெயரிலேயே இப்பல்கலைக்கழகம் விளங்கி வருகிறது.

உசுமானியாப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்ற ஆண்டில் 25 ஆசிரியர்களும் 225 மாணவர்களும் மட்டுமே இருந்தனர். வைரவிழாக் கொண்டாடிய ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் 35,000 மாணவர்கள் பெயரைப் பதிவு செய்திருந்தனர். இவர்களுள் 10,000 மாணவியர்கள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த 17 மகளிர் கல்லூரிகளில் சேர்ந்திருந்தனர். வைரவிழாவாண்டில் ஆயிரம் ஆசிரியர்களும் நூறு பேராசிரியர்களும் எண்ணூறு ஆராய்ச்சி மாணவர்களும் இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருந்தனர். உசுமானியாப் பல்கலைக்கழகத்தில் 7 வளாகக் கல்லூரிகளும் (Campus Colleges), 12 பல்கலைக்கழகப் பகுதிக் கல்லூரிகளும் (Constituent Colleges) 93 இணைந்த கல்லூரிகளும் (Affiliated Colleges) உள்ளன. இவையனைத்தும் வாரங்கல் (Warangal) நகர் தவிர்த்துத் தெலுங்கானாப் பகுதியிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

இப்பல்கலைக்கழகத்தில் முன்னர் இருந்த கால்நடை மருத்துவத் துறையும் வேளாண்மைத் துறையும் ஆந்திரப்பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு விட்டன. இப்பொழுது கலையியல், ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவம் (Ayurvedic and Unani Medicine), வணிகவியல், கல்வியியல், பொறியியல், சட்டவியல், மருத்துவம், அறிவியல், சமூக அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய 10 துறைகள் உசுமானியாப் பல்கலைக்கழகத்தில் உள்ளன.

இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே பல்கலைக்கழகக் கல்வியில் முதன்முதலாக இந்திய மொழிகளுள் ஒன்றான உருது மொழியைப் பயிற்று மொழியாக்கிய பெருமை உசுமானியாப்பல்கலைக் கழகத்தையே சாரும். இன்று ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, உருது ஆகிய நான்கு மொழிகளும் பல்கலைக்கழகக் கல்வியில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவிலேயே உசுமானியாப் பல்கலைக்கழகம் தான் முதன்முதலில் 1950–ஆம் ஆண்டில் மாலை நேரக் கல்லூரியைத் (Evening Colleges) தொடங்கி வைத்தது. இப்பல்கலைக்கழகந்தான் இந்நாட்டிலேயே முதன்முதலில், 1962–ஆம் ஆண்டில் இதழியல் (Journalism) துறைப்படிப்பை இளங்கலைப் பட்ட வகுப்பு அளவில் தொடங்கிய பெருமையையும் பெறுகிறது.

உசுமானியாப் பல்கலைக்கழகம் 1977–இலிருந்து அஞ்சல் வழித் தொடர் கல்வி மூலம் பட்டப்படிப்புகளுக்குப் பாடம் கற்பித்தும் வருகிறது.

சமசுகிருதக் கழகம் (Sanskrit Academy) என்னும் கல்வி மையம் 1954-ஆம் ஆண்டிலிருந்து உசுமானியாப் பல்கலைக்கழக உதவியுடன் பணியாற்றி வருகிறது. கிடைத்தற்கரிய பழைய சமசுகிருதக் கையெழுத்துப் படிகளைத் தேடுதல், பாதுகாத்தல், ஆராய்தல் போன்ற பணிகளை இம்மையம் செய்து வருகிறது. மேலும், இது அவற்றைப் பதிப்பித்து நூல்களாகவும் வெளியிட்டு வருகிறது. இம்மையத்தில் சமசுகிருத மொழி வளர்ச்சியை யொட்டிய ஆராய்ச்சியும் நடைபெறுகிறது.

**உசேன்** முகமது நபியின் மகள் பாத்திமாவிற்கும் நான்காம் கலீபா அலிக்கும் மகனாகப் பிறந்தவர். இவர் சகோதரர் அசன் கலீபா பதவியை உமயது மரபைச் சேர்ந்த முசூவியா என்பவருக்கு விட்டுக் கொடுத்தார்; பின்பு நஞ்சூட்டப்பட்டு இறந்தார்.

முசூவியா தம் ஆட்சியின் இறுதிக்காலத்தில் தம் மகன் எசீது (Yezid) என்பவரைக் கலீபாவாக அமர்த்தினார். நற்பண்புகளும் ஆட்சித்திறமையுமில்லாத எசீது கலீபாவாக ஆக்கப்பட்டதை எல்லோரும் எதிர்த்தனர். முகமது நபியின் பேரர் என்ற முறையிலும் காலஞ்சென்ற கலீபா அலியின் மகன் என்ற முறையிலும் உசேன் உரிமைக்குரல் எழுப்பினார். அப்பொழுது அவர் தம் குடும்பத்துடன் மதீனாவில் வாழ்ந்துவந்தார். பலரும் அவருக்கு உதவ முன்வந்தனர். குறிப்பாக ஈராக்கு நாட்டிலுள்ள கூபா (Kuba) என்ற நகரத்தைச் சேர்ந்த மக்கள் உசேனுக்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறினர். அவர்களை நம்பிய உசேன் தம் உறவினர்களடங்கிய ஒரு சிறு படையுடன் ஈராக்கை நோக்கிச் சென்றார். ஆனால், உசேன் கூபாவை அடைந்தபொழுது அங்குள்ள மக்கள் தம் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை; உசேனுக்கு உதவவில்லை.

கூபாவின் ஆளுநராக இருந்த உபயதுல்லா (Ubaidullah) தம் பெரும்படையுடன் கர்பலா என்ற இடத்தில் கி.பி. 680-இல் உசேனைச் சந்தித்தார். உசேனின் சமாதானப் பேச்சு பயனளிக்காததால் போர் மூண்டது. போரில் உசேன் குடும்பத்தின் ஒரு சிலரைத் தவிர அனைவரும் கொல்லப்பட்டனர். உசேனும் வீரப்போர் செய்து வீழ்ந்தார். எஞ்சியிருந்த உசேனின் குடும்பத்தினர் கலீபா எசீதிடம் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் கலீபாவால் அரச மரியாதைகளுடன் நடத்தப்பட்டனர்.

கர்பலாவில் நடந்த போருக்கும், உசேனின் இறப்பிற்கும் தாம் பொறுப்பல்ல என்றும் தம் படைத்தலைவர்தான் காரணமென்றும் கலீபா கூறினார். ஆனால், இசுலாமிய உலகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முகமதுநபியின் பேரரான உசேனும் அவர் குடும்பத்தவர்களும் கொல்லப்பட்ட முறையை அறிந்த சில இசுலாமியர்கள் சினமுற்றுக் கிளர்ந்தெழுந்தனர். நாளடைவில் அவர்களே சீயர்கள் என்று பெயர் பெற்றனர். கர்பலாவில் இறந்த உசேன் சீயர்களின் இமாம் (தலைவன்) எனக் கருதப்படுகிறார். அவர் புதையுண்டிருக்கும் கர்பலா அவர்களின் புனிதத் தலமாகக் கருதப்படுகிறது.

**உசேன் நிசாம்சா** தக்காணத்திலிருந்து அகமது நகர அரசினை ஆண்ட அரசர். இவர் தக்காணத்திலிருந்து வேறு இசுலாமிய அரசுகளுடன் கூட்டாகச் சேர்ந்து கொண்டு விசயநகரப் பேரரசை கி.பி. 1565-ஆம் ஆண்டில் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் தோற்கடித்தவர்களுள் ஒருவர். இவர் காலமானதும் இவர்தம் மகன் முதலாம் முர்தசா நிசாம் சா (Murtaza Nizam Shah I) என்பார் பட்டத்திற்கு வந்தார். இரா.அ.

**உசை** இருக்கு வேதம் கூறும் பெண் தெய்வங்களுள் முதன்மையானது. இவள் விடியற் காலையில் கிழக்கில் தோன்றுவாள். ஒளியை ஆடையாக உடுத்தியுள்ள இவள் ஆடல் அழகியாகச் சிறப்பிக்கப்படுகிறாள். ஒளிவீசுதல் என்னும் கருத்துடைய 'வஸ்' என்னும் வினையடியாகத் தோன்றியது இப்பெயர். உசை (Usha) இருளைக் களைகிறாள். இருக்கு வேதத்தில் இருபதுக்கு மேற்பட்ட பாடல்களில் இவள் போற்றி வணங்கப்படுகிறாள். இப்பாடல்கள் இவளுக்கு உருவம் கொடுத்துப் பாடுகின்றன. பல காலம் கழிந்தும் பல பருவங்கள் கடந்தும் முதிர்ச்சியுள்ள இவள் இளமை குறையாமல் உலா வரும் காட்சியினைக் கவிஞர் வியந்து பாடியுள்ளார். ஆனால், இவள் மக்களின் ஆயுளைத் தேய்ந்தழியும்படி செய்கிறாள். புதுப்புது உருவங்களோடு நாள்தோறும் விடியற் காலையில் தோன்றுவதால் மீண்டும் மீண்டும் பிறக்கும் பெண்ணாகவும் விண்ணின் கதவுகளைத் திறப்பவளாகவும் இவள் புனைந்துரைக்கப்பட்டுள்ளாள். இருளைப் போக்கும் இவள் அரக்கரை விரட்டுகிறாள். இவள்தன் ஒளிக்கிரணங்கள் மாட்டு மந்தை போல் காட்சியளிக்கின்றன.

இவள் ஒளிவீசத் தொடங்கும்போது பறவையினங்கள் கூட்டிலிருந்து பறந்து வெளியில் செல்கின்றன. மக்களும் உணவு தேடப் புறப்படுகின்றனர். வானத்தில் ஒவ்வொரு நாளும் பிறக்கும் இவளை வானத்தின் மகளாகவும் இரவினுடன் பிறந்த மூத்தவளாகவும் பல பாடல்கள் கூறுகின்றன. ஆடவன் பெண்ணைத் தொடர்வதைப் போல் சூரியன் இவ

ளைத் தொடர்கிறான். இவள் சூரியனின் மனைவி. சூரியன் எழுமுன் இவள் தோன்றுவதால் சூரியனைப் பிறப்பிப்பவள் என்றும் சூரியனின் தாய் என்றும் கவிஞரால் விவரிக்கப்படுகிறாள். வேறொரு கவிஞர் நல்ல ஒளிபொருந்திய குழந்தையை இவள் ஏந்தி வருவதாக புனைந்துரைந்துள்ளார். விடியற்காலையில் இவள் தோன்றுவதாலும் அப்போது வேள்வித்தீ மூட்டப்படுவதாலும், அக்கினியையும் இவளையும் தொடர்புபடுத்தி அக்கினியின் காதலியாக இவளை மற்றுமொரு கவிஞர் கூறியுள்ளார். விடியற்காலைப் பொழுதுடன் இணைத்துக் கூறப்படுபவர்கள் அசுவினி தேவர்களாவர். அவர்களுடன் இவளைத் தொடர்புபடுத்திப் பாடும் பல பாடல்கள் இருக்குவேதத்தில் அமைந்துள்ளன. இருளால் மறைக்கப்பட்டுக் கிடக்கும் செல்வங்களை வெளிப்படுத்திக் காட்டுவதுடன் அவற்றை வாரி வழங்கும் வள்ளன்மை உடையவளாகவும் இவள் இருக்கிறாள். இப் பெண் தெய்வம் தன்னை வணங்குவோர்க்குப் புகழ், பெருமை, செல்வம், குழந்தைகள், பாதுகாப்பு, நீண்ட கால வாழ்வு முதலியனவற்றை எல்லாம் வழங்கும் என்று இருக்கு வேதம் கூறுகிறது.

**உசை²** பலி என்பவனின் பேர்த்தியும் ஆயிரம் தோள்களையுடையவன் என்று கூறப்படும் பாணாசுரனின் மகளும் ஆவாள். அரக்கர் இளவரசியான உசை (Usha) கனவில் அநிருத்தனைத் தழுவுவது போல் கண்டு விழித்துக் கொண்டாள். பின்னர், அவனைக் காணாமல் வருத்தமுற்றாள். தன் தோழி சித்திரலேகையிடம் அச்செய்தியினைக் கூறினாள். சிறந்த ஓவிய வல்லுநளாகிய சித்திரலேகை பல்வேறு அரசர்களுடைய உருவங்களையெல்லாம் எழுதிக் காட்டினாள். அவற்றைக் கண்டு அவற்றில் இன்ன உருவமுடையவன் என உசை அவளுக்குச் சொல்லி அவனைத் தன்னிடம் சேர்ப்பிக்கும்படி அவளிடம் வேண்டிக் கொண்டாள். சித்திரலேகை அரண்மனையில் உறங்கிக் கொண்டிருந்த அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு வந்து உசையிடம் சேர்த்தாள். இவளும் அநிருத்தனும் இன்பம் துய்த்துக் கொண்டிருக்கும்பொழுது, அக்களவினை அறிந்த தந்தை அநிருத்தனை விலங்கிட்டுச் சிறையிலடைத்தான். இதனை நாரதரால் அறிந்த கண்ணன் தன் பேரனான அநிருத்தனை மீட்கும் பொருட்டுப் பாணாசுரனுடன் போரிட்டான். போரில் தோற்ற பாணாசுரன் உசையையும் அநிருத்தனையும் கண்ணனிடம் சேர்ப்பித்துத் தன்னைப் பொறுத்தருள வேண்டினான். உசை தான் விரும்பியபடி அநிருத்தனை மணந்து வாழ்ந்தாள்.

**உஞ்சை** என்பது உச்சயினி நகரம். இது உஞ்சேனை எனவும் வழங்கப்படும். காண்க: உச்சயினி.

**உஞ்சை மாகாளம்:** தேவார ஆசிரியர்களால் தனியே பதிகம் பாடிப் போற்றப்பெறாமல் அவர்கள்தம் பதிகங்களின் இடையே பெயர் மட்டும் சுட்டிச் சிறப்பிக்கப்பட்டுள்ள சிவத்தலங்கள் தேவார 'வைப்புத்தலங்கள்' எனப்படும். அத்தகு வைப்புத் தலங்களுள் ஒன்று உஞ்சை மாகாளம். இது உஞ்சேனை மாகாளம் எனவும் வழங்கப்படுகிறது. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இப்பதியினைத் தம் தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். திருஞானசம்பந்தர் 'நளிர்சோலை உஞ்சேனை மாகாளம்' (சம். தேவா. 2-39-9) என்றும், திருநாவுக்கரசர் 'மதில் உஞ்சை மாகாளம்'(அப். தேவா.6-7-11), 'உஞ்சேனை மாகாளம்' (அப். தேவா. 6-70-8) என்றும் குறிப்பிட்டுள்ளனர். இக்குறிப்புகளிலிருந்து இத் திருத்தலம் சோலை சூழ்ந்தது என்றும் மதில் அரண் கொண்டது என்றும் தெரிகிறது. தேவாரத் தலங்களை நாட்டடிப்படையில் தொகுத்துக் காண்போர் இத்தலம் வடநாட்டின்கண் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

உஞ்சை என்னும் பெயர் மத்திய பிரதேசத்து உச்சயினி நகரினைக் குறிப்பதாகும். உச்சயினி நகரம் உதயணன் கதை, சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களில் உஞ்சை, உஞ்சேனை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உஞ்சேனை மாகாளம் என்னும் பெயர் உஞ்சை என்னுமிடத்தில் அமைந்த மாகாளம் என்னும் சிவன்கோயிலைக் குறிப்பதாகும். ஊர்ப்பெயரும் அங்குள்ள சிவன் கோயிற் பெயரும் சேர்ந்து தலப்பெயராக அமைந்து விளங்கும் மரபு திருமுறைப் பதிகங்களில் காணப்படுகிறது.

உஞ்சை, உஞ்சேனை என வழங்கப்பெற்ற உச்சயினியில் உள்ள சிவன்கோயில் உச்சயினி மாகாளம் என்றும் கூறப்படும். உச்சயினி நகரத்தில் முருகவழிபாடு சிறந்திருந்ததாகப் பெருங்கதை கூறுகிறது. உச்சயினியில் சமண புத்த மடங்களும் மிக்கிருந்தன என்பதும் இந்நகருக்குப் புறத்தில் மாகாளவனம் என்னும் காட்டில் காளிதேவிக்குப் பெருங்கோயில் அமைந்திருந்தது என்பதும் கூறப்படுகின்றன. பல சமயங்களுக்கும் இடமாகத் திகழ்ந்த உச்சயினியிலுள்ள சிவாலயத்தின் சிறப்புணர்ந்த திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் நேரே சென்று அத்தலத்தினைத் தனிப் பதிகங்களால் பாடாவிடினும், தங்கள் பதிகப் பாக்களில் வைப்புத்தலமாக அமைத்துப் போற்றி வழிபட்டுள்ளனர்.

**உட்கட்சிக் கருத்துரிமை** அரசியல் கட்சிகள் மக்களின் எண்ணங்களை அரசாங்கத்திற்கு ஏந்திச் செல்கிற செயலாண்மைகள் ஆகும். அரசாங்கம்

மக்களின் எண்ணங்களைக் கொள்கைகளாக மாற்றிப் பின்னர் அவற்றைச் செயற்படுத்துகிறது. பெரும்பான்மை மக்களின் எண்ணங்கள்தாம் (Majority Opinion) மக்களாட்சி முறையிலான அரசாங்கத்தின் எண்ணங்கள். மக்களாட்சியில் பெரும்பான்மையோரின் நலன் காக்கப்படுவதோடு சிறுபான்மையோரின் நலன்களும் காக்கப்படவேண்டும். மக்கள் தங்கள் தேவைகள், குறைகள் ஆகியவற்றை அரசியல் கட்சிகளுக்குத் தெரிவிப்பர். பெரும்பான்மையோர் ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவு அளித்தால் அது ஆளும் கட்சியாகிவிடும். ஏனைய கட்சிகள் எதிர்க்கட்சிகளாகச் செயற்படும்.

அரசியல் கட்சிகள் என்பவைகுறிப்பிட்டகொள்கைகளுக்காக உறுப்பினர்கள் ஒன்று கூடிக் கருத்து வேற்றுமைகளைக் கலந்துரையாடித் தீர்வுக்கு வருபவை. மேலும், அவை தம் தலைமை உறுதி செய்யும் முடிவுகளைப் பிறழாமல் பின்பற்றி, நடந்து மக்கள் ஆதரவைத் தேடுகிற முயற்சிகளில் ஈடுபடுவன வாகும். தவிர, அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியல் அறிவையும் ஊட்டுகின்றன. நாட்டின் பிரச்சினைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தி, மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இதனால், மக்கள் அரசியலைப் பற்றி அறிந்துகொள்ளவும் அரசியலில் பங்கேற்கவும் வழியேற்படுகிறது.

உட்கட்சிக் கருத்துரிமை(Inner Party Democracy) அடிப்படையில்தான் ஒரு கட்சியின் கோட்பாடு (Ideology) உருவாக்கப்படுகிறது. கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு குறிக்கோள்கள் உருவாக்கப்படுகின்றன. இங்ஙனம் உருவாக்கப்பட்ட குறிக்கோள்களைச் செயற்படுத்தத்தான் கட்சி, அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முயலுகிறது. மக்களை மையமாகக் (Clientele Oriented) கொண்டு அரசியல் கட்சி இயங்குவதால், அக்கட்சி அதனுடைய உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறது. இதனால், பல்வேறு வகைப்பட்ட மக்கள் கட்சியில் இடம்பெற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே,அக்கட்சியின் அமைப்பை(Composition) அல்லது அதன் உறுப்பினர்களின் பின்னணியை ஆய்ந்தால், வேறுபட்ட சமூக, பொருளாதார நலன்களைக் கட்சி தன் குறிக்கோளாகக் கொண்டுள்ள தன் காரணம் தெரியவரும். வேறுபட்ட சமூக, பொருளாதார நோக்கங்களை அடைவதில் அரசியல் கட்சிகளிடையே போட்டி காணப்படுகிறது. இவை எப்படித் தங்கள் கொள்கைகளைக் கட்டிக் காக்கின்றன, செயற்படுத்துகின்றன என்பதை அக்கட்சிகள் கொண்டிருக்கக்கூடிய கட்டுப்பாடுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதிகார மையப்படுத்துதலை அடிப்படையாகக் கொண்டு கட்சியில் கட்டுப்பாடுகள் காணப்பட்டால், அக்கட்சி மக்களின் ஆதரவை முழுவதும் பெற்றது என்றுகூற இயலாது. தன் விருப்பத்தை (Spontaneous) அடிப்படையாகக் கொண்டு மக்களே விரும்பி ஏற்கக்கூடியதாக அரசியல் கட்சிகள் இருந்தால், அக்கட்சிகள் மக்களிடம் நிலையான ஆதரவைப் பெற்றவையாகக் காணப்படும். மக்களுக்கும் கட்சிக்குமிடையே இடைவெளி அதிகமிருக்காது.

ஒவ்வோர் அரசியல் கட்சியும் தான் அமைத்துக் கொள்கிற உட்கட்சிக் கருத்துரிமையின் மூலந்தான் தன் கொள்கைகளைச் செம்மையாகச் செயற்படுத்த முடியும். அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால்தான் மக்களுக்குகந்த கொள்கைகளை அவை உருவாக்க முடியும்; உட்கட்சிக் கருத்துரிமையும் மக்களுக்கேற்ப அமைய முடியும். மக்கள் எண்ணங்களின் மாற்றத்திற்கேற்ப உட்கட்சிக் கருத்துரிமையும் மாற்றத்திற்குள்ளாகும். அப்படி நிகழ்ந்தால்தான் மக்களின் ஆதரவைத் தொடர்ந்து பெறுவதற்கு முடியும். மாறுகிற எண்ணங்களை அவ்வப்பொழுது தெரிந்து கொள்வதற்காகக் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலுமாகக் கட்சியின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாப் பிரிவினர்களும் இடம் பெறுமாறு கட்சியின் அமைப்பு அமைந்திருக்கும். அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக, ஒத்துழைப்போடு பணியாற்ற வேண்டும். அரசியல் கட்சிப்பணி மக்கள்பணி என்று பொறுப்போடு பணியாற்றினால்தான் கட்சியின் கருத்துரிமை சீராக அமையும். கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்லாது கட்சியின் மேலாண்மை வகிப்போரும் பல்வேறு பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களில் அணுகி ஆராய்ந்து, எளிமையான முறையில் மக்களுக்குப் பணியாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

உட்கட்சிக் கருத்துரிமை கட்சிகளைச் சார்ந்து பல்வேறு வகைகளில் அமைந்துள்ளது. அரசியற் கட்சிகள் அவை செயற்படும் விதத்தை வைத்து ஒரு கட்சி ஆதிக்கமுறை (Single Party System),இரு கட்சி முறை (Two Party System), பலகட்சிமுறை (Multi-Party System) என்று மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு கட்சி ஆதிக்க முறையில் அக்கட்சியின் செயற்குழுவில் உட்கட்சிக் கருத்துரிமை உணரப்படும். எடுத்துக்காட்டாக, உருசியாவில் பொதுவுடைமைக் கட்சியின் பொலிட்பீரோ (Polit-bureau) என்ற உயர்நிலைக் கட்சிப்பிரிவு உட்கட்சிக் கருத்துரிமையை முடிவு செய்யும். இதற்காக அக்கட்சியின் உறுப்பினர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தும் வகையில் முயற்சி செய்வர்.

இருகட்சிமுறைக்கு இங்கிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் எடுத்துக்காட்டுகளாகும். தேசிய அவை (National Council), தலைமை அலுவலகம் என்று இரு பிரிவுகளை இங்கிலாந்துப் பழமையாளர் கட்சி கொண்டுள்ளது. தேசிய அவையில் உட்கட்சிக் கருத்துரிமை முடிவு செய்யப்படும். தொழிலாளர் கட்சியில் தேசிய செயற்குழு (National Executive Committee), மையப்பிரிவு (Central Bureau) ஆகிய பிரிவுகளில் செயற்குழு உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள குடியரசு, மக்களாட்சிக் கட்சிகளில் தேசியக் குழுக்கள் (National Committees) உட்கட்சிக் கருத்துரிமையை ஏற்படுத்தும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடக் கூடிய வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க இரண்டு அரசியல் கட்சிகளும் தங்கள் கட்சி அமைப்புகளில் தேர்தலை (Primaries Election) நடத்தி முடிவு செய்கின்றன என்பது, வெளிப்படையாக இரண்டு கட்சிகளும் தங்கள் கட்சியின் கருத்துரிமையை முடிவு செய்யும் முறை எனலாம். பல கட்சி முறையில் உட்கட்சிக் கருத்துரிமை பிற கட்சிகளைச் சார்ந்து அமைக்கப்படுகிறது

உட்கட்சிக் கருத்துரிமை கட்சிகளின் தலைமைகளால் உருவாக்கப்படுகிறதெனலாம். கட்சிகளின் தலைமையாளர்கள் உட்கட்சிக்கருத்துரிமைக்கேற்பச் செயற்படவேண்டு மென்பது கோட்பாடு. ஆனால், நடைமுறையில் ஒரு சிலரின் நன்மைகளுக்காகவும் வசதிக்காகவும் கௌரவத்திற்காகவுமே உட்கட்சிக் கருத்துரிமை உருவாக்கப்படுகிறது. கோட்பாட்டளவில் அனைவரும் சமமெனக் கட்சித் தலைவர் கூறுவார். ஆனால், நடைமுறையில் மிகுதியான அதிகாரம் தலைவரிடம் காணப்படும். அத்தகைய கட்சிகளில் கட்சித்தலைவரின் தனி மனிதர் செல்வாக்கின் மூலம் உட்கட்சிக் கருத்துரிமை உருவாக்கப்படுகிறது. தனி மனிதரால் கருத்துரிமை உருவாக்கப்படப் போதுமான ஆளுமை (Personality) இல்லையெனில், சிறு குழுவின் மூலம் அது உருவாக்கப்படுகிறது. இக்குழுவினர் தங்கள் சுயநலன்களுக்காகவே கருத்துரிமையை உருவாக்குவதால், இதனைத் தன்னலச் சிலராட்சி (Personal Oligarchy) என்று குறிப்பர்.

சில கட்சிகளில் இராணுவ முறையில் தங்களை ஒப்படைத்து இயங்கக்கூடிய அளவில் கட்சி உறுப்பினர்களை நியமித்துக் கருத்துரிமையை உருவாக்குவர். இதற்கு எடுத்துக்காட்டாக, இலெனினைக் கூறலாம். சில கட்சிகள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குகின்றனர். இட்லருடைய (Hitler) இளைஞர் அணி இதற்குச் சான்று. இன்றைய நாளில் ஆசுத்திரிய சமநிலைச்சமூகக் கட்சி, கட்சியின் ஒத்துழைப்பாளர்கள் (Party Co-oprators) என்பவர்களைத் தேர்வு செய்து, பயிற்சி கொடுத்து, அவர்கள் வாயிலாக உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குகிறது. உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குவது தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு மிகுதியாகப் பயன்படுகிறதென்றால் அது மிகையாகாது. எம்.ப.

துணை நூல்கள்:

**Alan Ware**, The Logic of Party Democracy, Macmillan, 1979.

**Maurice Duverger**, Political Parties, Methuen & Co., Ltd, 1967.

**William, E.** Wright (ed), A Comparative Study of Party Organization, Charles E. Merrill Publishing Company, Ohio, 1971.

**உட்கல் பல்கலைக்கழகம்,** ஒரிசா மாநிலத்தின் முதலாம் பல்கலைக் கழகம். இப் பல்கலைக் கழகம் 1943-ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது. ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேசுவர் (Bhubaneswar) நகரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் வாணி விகார் (Vani Vihar) என்னுமிடத்தில் உட்கல் பல்கலைக்கழகம் (Utkal University) அமைந்துள்ளது. பட்ட மேற்படிப்பு வழங்கும் அனைத்துத் துறைகளும் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரியும் வாணி விகார் வளாகத்தில் அமைந்துள்ளன. இப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மதுசூதன் சட்டக் கல்லூரி (Madhusudan Law College) கட்டாக்கு (Cuttak) நகரிலுள்ள பர்த்துவான் இல்லம் (Burdwan House) என்னும் 2 ஏக்கர் பரப்பளவுள்ள வளாகத்தில் அமைந்துள்ளது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் மானிடவியல், தாவரவியல், வேதியியல், வணிகவியல், செயலறிவுப் பொருளியல் (Applied Economics), ஆங்கிலம், புவியியல், மண்ணியல் (Geology), வரலாறு, தொழிலாளர் நலவியல் (Labour Welfare), சட்டவியல், கணிதவியல், ஒரிய மொழி, தத்துவம், இயற்பியல், அரசியல், உளவியல், சமசுகிருதம், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய 21 புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் கல்வியியல் புலம் இல்லை. பல்கலைக்கழகமே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பணியமர்த்துகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் (Affiliated Colleges) மொத்தம் 70 உள்

என. இவற்றுள் மிகுதியான கல்லூரிகள் புவனேசுவர், கட்டாக்கு, பூரி (Puri) ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன.

உட்கல் பல்கலைக்கழகத்தில் 1974–ஆம் ஆண்டிலிருந்து அஞ்சல்வழித் தொடர் கல்வி நடைபெற்று வருகிறது. பள்ளிக் கல்வி முடித்தவர்களுக்கு இடைநிலைக் (Intermediate) கல்வியினை இப்பல்கலைக்கழகம் அஞ்சல்வழி வழங்குகிறது. வணிகவியல், கலையியல் பாடங்களில் இளநிலைப் பட்டக் கல்வியும் அஞ்சல்வழியே வழங்கப்படுகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் பயிற்று மொழியாகவும் தேர்வுமொழியாகவும் (Language of Instruction and Examination) ஆங்கிலமே இருந்து வருகிறது.

உலகப் பல்கலைக்கழகப் பணிமையம் (World University Service Branch) இப்பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. இம்மையம் உலக நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கிடையே கல்வித் தொடர்பான உதவி, ஆராய்ச்சி, உறவு ஆகியவற்றை வளர்த்து வருகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் 1980–81–ஆம் கல்வி யாண்டின்படி 70,215 மாணவர்களும், 16,955 மாணவியரும் கல்வி பயின்றனர். இவர்களுள் பட்ட மேற்படிப்பு மேற்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 3852 ஆகும்.

இக்கால ஐரோப்பிய மொழிகளான உருசியன் (Russian), பிரெஞ்சு (French), செர்மன் (German) ஆகியவற்றில் ஈராண்டுப் பட்டச் சான்றிதழ் (Diploma), ஓராண்டுச் சான்றிதழ் (Certificate) பற்றிய வகுப்புகளும் உட்கல் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றன.

எம்.பில். (M.Phil.), பிஎச்.டி. (P.hD.). டி.லிட்.(D. Litt). போன்றபட்டங்கள் பெறுவதற்கும் உட்கல் பல்கலைக்கழகத்தில் வாய்ப்புகள் உண்டு. இப்பல்கலைக்கழகம் தகைமை மிக்க கல்வியாளர்களுக்கு பிஎச்.டி., டி.லிட்., டி.எசி. (D.Sc.) போன்ற மதிப்புப் பட்டங்களை (Honorary Degrees) வழங்கி வருகிறது.

**உட்கிடைக் குறைபாடு**: குறைபாடு என்பது தேவையான ஏதாவது ஒன்று இல்லாமல் இருப்பது; முழுமை பெறாமல் இருப்பது. குறைபாடு இரு முறைகளில் இருக்கலாம். அது உட்கிடையாக உள்ளுறைந்து இருக்கலாம் அல்லது வெளிப்படையாக இருக்கலாம். உட்கிடைக் குறைபாடு (Latent Defect) என்பது சாதாரணமாக, கண்ணுக்குப் புலப்படாமல், ஒரு சொத்தினை அல்லது பொருளை விற்பவர் கூறினாலன்றி வெளிப்படாமல் இருக்கக் கூடிய ஒன்று. வெளிப்படைக் குறைபாடு (Patent Defect) என்பது வாங்குபவரின் கண்களுக்கு வெளிப்படையாகத் தெரியக் கூடியது.

சொத்தில் அல்லது உரிமை மூலத்தில் (Title) உள்ள முக்கிய குறைபாடுகளை விற்பவர் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்புடையவர் எனச் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 55 (1) (அ) கூறுகிறது. சொத்தினை விற்பவர் தனக்குத் தெரிந்த, வாங்குபவருக்குத் தெரியாத, சாதாரணமாகப் புலனாகக் கூடிய சொத்து அல்லது உரிமை மூலத்தில் உள்ள முக்கிய குறைபாடுகளை வெளிப்படுதத வேண்டும் என்பதாக இப்பிரிவு கூறுகிறது. வெளிப்படைக் குறைபாடுகளைத் தெரிவிக்க வேண்டியதில்லை. தெரிவிக்க வேண்டிய குறைபாடுகளைத் தெரிவிக்காமல் இருப்பது மோசடியாகும். முக்கிய குறைபாடு எப்படி இருக்க வேண்டும் என்றால், வாங்குபவர் அதை அறிந்தால் வாங்காமல் இருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நடப்பில் இருக்கக் கூடிய வில்லங்கமொன்று வாங்குபவருக்குத் தெரியாது. சாதாரணமாக அவருக்குப் புலனாகாத ஒன்று. இத்தகைய உட்கிடைக் குறைபாடு உரிமை மூலக் குறைபாடாகும். இக்காரணத்தால் விற்பவர் வெளிப்படுத்தாமலிருப்பின் வாங்குபவர் வாங்குவதைத் தவிர்க்கலாம். சொத்தின் நடுவில் செல்லும் நிலத்தடிப் பாலம், வசதியுரிமை ஆகியவை இவ்வகைக் குறைபாடுகள். உட்கிடைக் குறைபாடுகளுக்கு, 'வாங்குபவனே விழித்திரு' (Caveat emptor) என்ற முதுமொழி பொருந்தாது. இந்திய வசதியுரிமைச் சட்டத்தின் 57–ஆம் பிரிவு உரிமம் ஒன்றினை வழங்குபவர் உரிமம் பெறுபவருக்குச் சொத்தின் குறைபாடுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது.

**உட்குழு**: மனிதர்கள் பலருடன் தொடர்புற்று வாழும் நிலையைக் கொண்டவர்கள்; தனித்து வாழ இயலாதவர்கள். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பலவகைப்பட்ட மக்களுடன் வாழவேண்டிப் பல பிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்வர். இப்பிணைப்புகளின்வழி உண்டாவதே குழு.

சமுதாயவியலில் குழு (Group) என்பது முதன்மையான கோட்பாடுகளுள் ஒன்று. இதனை விளக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வரையறையை வகுப்பதில் சமுதாயவியலார் உடன்படாமல் போயினர். இத்துறையின் சொல்வழக்கில் குழு என்பதன் வரையறை பலவாறு விளக்கப்படும். குழு என்பது 'மக்க

ளின் தொகுப்பு என்றும் பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ள மக்களின் சேர்மம் என்றும், ஒரு குறிப்பிட்ட அமைப்புடைய முறையைக் (Organized Pattern) கொண்டு செயற்படும் மக்கள் கூட்டம் என்றும், அனைத்துச் செயல்களில் கூட்டுணர்வும் (We Feeling) தாம் ஓர் உறுப்பினர் என்னும் எண்ணமும் உடைய மக்கள் கூட்டம் என்றும் பல வகையாகப் பொருள் கொண்டு விளக்கப்படும்.

பலர் ஒன்றுபட்டு ஓரிடத்தில் காணப்படுவதை மட்டும் வைத்து அவர்களைக் குழுவென வரையறை செய்யவியலாது. பேருந்து நிலையத்தில் காணப்படும் மக்களையோ தெருவில் நடக்கும் பலரையோ குழு எனக் கூறுவதும் பொருந்தாது. ஒரு குழுவைச் சேர்ந்த அனைவரும் அருகருகில் இருக்க வேண்டும் என்பதும் அவசியமன்று. ஒரு சமூகக் குழுவினர் ஒரு செயலில் கூட்டாக இணைவர்; ஒவ்வொருவரின் பங்களிப்பும் இன்றியமையாதனவாய்க் காணப்படும். ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு மரபை (Cult) வணங்கும் சமயக் கூட்டத்தினர், பல உறுப்பினர்களைக் கொண்ட விளையாட்டு அணி, ஒரே பொருளை உற்பத்தி செய்யும் பலர் ஆகிய ஒவ்வொரு வகையினரும் ஒருவகைக் குழுவாவர். இது தவிர்த்து ஒருவரை ஒருவர் முன்பின் அறியாத, ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தைச் சாராத பலர் குழுவாகச் செயற்படுவதுமுண்டு. எடுத்துக்காட்டாக, போக்குவரத்து அல்லது வேறு துறைகளில் பயன்படுத்துவோர் கட்டணம் உயர்த்தப்படும்போது, அதனால் பாதிக்கப்படுபவர் அனைவரும் ஒன்று சேர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர். இது தேசிய அளவில் ஏற்படுமானால் தேசிய குழுவாக (National Group) மாறும். இவ்வாறு குழு என்பதன் வகையும் தன்மையும் பரந்த அளவில் வேறுபடுகின்றன.

குழுக்கள் அவற்றின் செயல், அளவு, உறவு, பிணைப்பு, நோக்கம், பண்பு முதலானவற்றின் அடிப்படையில் பல வகையாகப் பாகுபடும். இவற்றுள் ஒன்றே உட்குழு (Subgroup) ஆகும். உட்குழு என்பது அது அடங்கியுள்ள குழுவின் பொதுத் தன்மைகளிலிருந்து சற்று விலகி, சில குறிப்பிட்ட செயல்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தனிக்குழு நிலையில் செயற்படும் தன்மையைக் கொண்டது. இது ஒட்டுமொத்தப் பார்வையில் ஒரு குழுவின் தனிப் பிரிவாகும். உட்குழுவினர் உறுப்பினர் நிலையிலும் செயல்கள், நோக்கங்கள் ஆகியவற்றிலும் தம் பெருங்குழுவிலிருந்து மாறுபடுவர். எடுத்துக்காட்டாக, பழங்குடிச் சமுதாயத்தில் இளையவர் கூடங்கள் (Dormitories) அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்பில் பெரும்பான்மையாக மணமாகாதவர்கள் பல செயற்பாடுகளுக்காக ஒன்றுபடுகின்றனர். இவர்கள் ஒரு குழுவாகும். இவர்களுள் பல வயதுப் பிரிவினர்கள் (Age-Sets) என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி, ஒவ்வொரு வயதுப் பிரிவினரையும் அந்தந்த வயதிற்கு ஏற்பச் சமய, சமூக, பொருளாதாரச் செயல்களில் பயிற்றுவிக்கின்றனர். இரவுக் காலங்களில் ஒரே குடிசையில் அனைவரும் ஒன்று கூடிக் காலம் கழிப்பர். இளையவர்கூட உறுப்பினர் என்ற குழு நிலையிலிருந்து வயதுப்பிரிவினர் என்ற உட்குழு நிலையில் பிரிகின்றனர்.

இது போன்றே வயது வந்த இளையோர் குழுவினருள் ஒருபாலார் இரகசியச் சங்க(Secret Society) உறுப்பினராகின்றனர். இச்சங்கத்தின் உறுப்பினர் தகுதி தனித்தன்மை வாய்ந்தது. நோக்கங்களும் செயல்களும் தனிப்பட்டவை. தம் சமூகத்தில் ஒத்த வயதுடைய ஆண், பெண் ஆகிய இருபாலரும் இளையவர்கூட அமைப்பில் ஒரு குழுவினராக இருப்பினும், இரகசியச் சங்க உறுப்பினர் நிலையில் உட்குழுவினராக மாறுகின்றனர். இன்பச் சுற்றுலாப் பயணம் செல்லும் குழுவில் அதைப் பொறுப்பேற்று நடத்தும் சிலர் உட்குழுவினராகச் செயற்படுவது போன்று உட்குழுவின் பல நிலைகளை விளக்கலாம்.

**உட்குழு மணவுறவு**: அனைத்து மனித சமுதாயங்களும் திருமணத்திற்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஏனெனில், சமுதாயத்திலுள்ள அனைத்துப் பெண்களும் புணர்ச்சிக்குரியவர்களாக ஏற்றுக் கொள்ளாத வரன்முறை ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படுகிறது. பால் உறவுத் தடைகள் பல மக்களிடையே பல்வேறுபட்ட உறவினர்களுக்கு விதிக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் எல்லா மக்களும் ஏதாவதொரு முறையில் தகாப் புணர்ச்சித் (Incest) தடைகளை ஏற்றிருப்பர். இது பண்பாட்டில் பல அமைப்புகளை நெறிப்படுத்த உதவுகிறது.

மக்கள் தம் வாழ்க்கைத் துணையைத் தாம் சார்ந்துள்ள இரத்தக் குழுவினருடன் அன்றி வேற்றுக் குழுவினரிடமிருந்து பெறுவது பெரும்பான்மைச் சமுதாயங்களில் காணப்படுகிறது. ஆனால், சில சமுதாயங்களில் மக்கள் தாம் சார்ந்துள்ள குழுக்குள் மணத் துணையை ஏற்பர். அதாவது, ஒரே மூதாதையரைக் கொண்டவர்கள் இரத்த உறவினர்கள், நெருக்கமான கால்வழி உறவினர்கள் ஆகியோருக்குள் மண உறவு கொள்ளுதல் உட்குழு மணமுறை (Inbreeding) எனப்படும்.

உட்குழு மணமுறையில் இரண்டு வகையுண்டு. ஒன்று, தேர்வுமுறையற்ற உட்குழு மணவுறவு (Random

Inbreeding). இவ்வகை மணவுறவு புவியமைப்பில் மிகவும் தனித்துக் காணப்படும் சிறிய சமூகங்களில் நிகழ்கிறது. இவர்களின் சமூகத்தில் இரத்த உறவற்ற தகுதியான வேற்றுக் குழு மணத் துணை கிடைப்ப தரிது. ஒவ்வொரு தலைமுறையிலும் உறவற்றவர் களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்லும் தன்மையும் காணப்படும். ஆதலால், இவ்வகையான சமூகங்களில் ஏதாவதொரு துணையை ஏற்றுக்கொள் வர். கால்வழியினருடன் மிகவும் நெருக்கமுள்ள வாழ்க் கைத்துணை ஒரு குறிப்பிட்ட உறவினராக இருப்ப தில்லை. பெற்றோரின் உடன்பிறந்தோரின் மக்கள் (First Cousin), அம்மக்களின் மக்கள் (Second Cousin) முதலான ஏதாவதொரு குறிப்பிட்ட உறவினரை மணக்காத குழுவினர், தேர்வு முறையற்ற உட்குழு மணவுறவினர் எனக் கூறப்படுவர். சில சமூ கத்தினர் உறவினர்களுள் ஒரு குறிப்பிட்ட உறவின ரையே திருமணத்திற்கு மிகவும் ஏற்புடையராகக் கருதுவர். இம்மணமுறைத் தேர்வு முறையுடைய உட் குழு மணமுறை (Nonrandom Inbreeding) ஆகும். சில சமூகத்தில் பெற்றோரின் உடன்பிறந்தார் மக்களை மட்டும் மணப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாக உள்ளது. இம்முறை பெரும்பாலும் சொத்துரிமையையும் உடைமைகளையும் தத்தம் குடும்பத்திலிருந்து வேற்றுக் குடும்பத்திற்கு மாறா மலிருக்கச் செய்து கொள்ளப்படுகிறது.

பண்டைய எகிப்து, அவாய் (Hawaii), இன்கா (Inca) ஆகிய அரச குடிகளிடையே உட்குழு மண முறை காணப்பட்டது. இவர்கள் தவிர்த்துப் பென் சில்வேனியா (Pennsylvania), அமிசு (Amish) குடி களிடையேயும் உட்குழு மணவுறவு காணப்பட்டது. இன்று இம்முறை சில ஆப்பிரிக்க, ஆசுத்திரேலிய பழங் குடிகளிடையேயும் காணப்படுகிறது. தமிழகத்தில் வாழும் பழநி மலைப் பழங்குடிகளிடையே பாட்டன் பேத்தியை மணக்கும் முறையும் குறிப்பிடத்தக்கது. முகமதியர்கள் தம் குடும்பச் சொத்தினையும் பிற உடைமைகளையும் தம் குடும்பத்தில் நிலைநிறுத்த உடன்பிறந்தாரின் மக்களை மணக்கின்றனர். எனி னும், அனைத்துச் சமுதாயத்திலுமே தந்தை-மகள், தாய்-மகன், உடன்பிறந்தாள்-உடன்பிறந்தான் முத லோரிடையே மணவுறவு தடுக்கப்பட்டுள்ளது.

உட்குழு மணவுறவு மரபுசார்ந்த விளைவுகளை மிகுதியாக ஏற்படுத்தக் கூடியது. ஒத்த பாலணுக் களையுடைய இருவருக்குத் தோன்றும் சந்ததியினரும் ஒத்த பாலணுக்களை உடையவராய்த் (Homozygo- sity) தோன்றுவர். தம் பெற்றோர் கொண்டிருந்த மர பணுக்களின் பெருந்தன்மையினை மக்களும் பெற மிகுதியான வாய்ப்புள்ளதால், ஒடுங்குதன்மையுடைய மரபுசார்ந்த கோளாறுகளான (Recessive Genetic Disorders) குள்ளத்தன்மை (Dwarfism), குறை உடற் பண்புகள் உடையவர்களாகவும் வலிமையற்றவர் களாகவும் மரபு வழியில் தன் இனத்திற்குத் தீங்கான பண்புகளை ஏற்றுள்ளவர்களாகவும் காணப்படுவர்.

திருமண உறவமைப்பை விவரிக்கும் பொருட்டு உட்குழு மணவுறவு தவிர்த்தல் (Inbreeding Avoid- ance) பற்றிய கோட்பாடு கி.பி. 19-ஆம் நூற்றாண் டின் இறுதிக் காலத்தில் தோன்றியது. இக்கோட் பாட்டினர் உட்குழு மணவுறவால் குறைப்பண்புகள் வளர்கின்றன எனச் சுட்டிக்காட்டினர். ஆனால், பிற் கால வல்லுநர்கள் இம்மண முறை சிறப்புப் பண்புகளையும் சிறப்பற்ற பண்புகளையும் உண் டாக்க வல்லது என இதனை ஆதரித்துப் பேசினர். இன்றைய மக்கள் தொகை மரபியல் (Population Genetics)ஆய்வுகள் உட்குழுமணவுறவு பெரும்பாலும் மனித இனத்திற்குத் தீங்கிழைக்கக் கூடியதாக உள் ளது என்ற முற்காலக் கோட்பாட்டாளரின் கருத் திற்கு உடன்பாடாக உள்ளது.

**உட்கூற்றுப் பகுப்பாய்வு:** சொற்பொரு ளின் உட்கூறுகளைக் (Components) கண்டறிந்து விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பெறும் ஓர் உத்தியே உட்கூற்றுப் பகுப்பாய்வு (Componential Analysis) முறை. சொற்பொருளின் உட்கூறுகளைக் கண்டறி வதன் வாயிலாக ஒரு சொல்லின் பொருள் பிற சொல்லின் பொருளினின்றும் வேறுபடும் முறைமை யினை இப்பகுப்பாய்வு விவரிக்கும். இந்த ஆய்வுமுறை பொருள் தொடர்புடைய சொற்களை விவரிப்ப தற்குப் பெரிதும் பயன்படுகிறன.

'மனிதன்', 'பெண்' என்னும் இருசொற்களின் பொருள் உட்கூறுகளைப் பின்வருமாறு விவரிக்கலாம்:

| | மக்கள் (Human) | ஆண் (Male) | முதியவர் (Adult) |
|---|---|---|---|
| மனிதன் | + | + | + |
| பெண் | + | — | + |

'மக்கள் என்னும் பொருள் உட்கூறு ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள இரு சொற்களிலும் காணப் பெறுவதால், இதனைப் பொதுமைப் பொருள் உட் கூறு (Semantic Marker) எனவும், 'ஆண்' என்னும் பொருள் உட்கூறு 'மனிதன்' என்னும் சொல்லில் மட்டுமே காணப்பெறுவதால் இதனை வேறுபடு பொருள் உட்கூறு (Semantic Distinguisher) எனவும் கருதலாம். வேறுபடு பொருள் உட்கூறுகளே சொற்

பொருளை வேறுபடுத்திக் காணத் துணைபுரியும். அனைத்து உட்கூறுகளின் சேர்க்கையே ஒரு சொல்லின் அகராதிப் பொருளாக அமையும்.

உறவுமுறைப் பெயர்களை (Kinship Terms) விவரிப்பதற்கு மானிடமொழியியலாரே (Anthropological Linguists) உட்கூற்றுப் பகுப்பாய்வு முறையினை முதன்முதலில் பயன்படுத்தினர். பால் (Sex), தலைமுறை (Generation), இரத்த உறவு (Blood Relation) போன்ற பண்புகளின் அடிப்படையில் உறவுமுறைப் பெயர்கள் உட்கூற்றுப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பின்னர், நிறத்தைக் குறிக்கும் சொற்கள், பதிலிப் பெயர்கள் (Pronouns) போன்றவற்றை விவரிக்கவும் இந்த ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டது.

உட்கூற்றுப் பகுப்பாய்வு முறையில் குறியிடுதல் (Naming), பதிலீட்டு விளக்கம் (Paraphrasing), விளக்கம் (Defining), வகைப்படுத்தல் (Classifying) என்னும் நான்கு முறைகள் பின்பற்றப்படும். இந்த ஆய்வு முறையின் முதல்படியில் தொடர்புடைய சொற்பொருள்கள் திரட்டப்படும். இரண்டாம்படியில் இப்பொருள்கள் உணர்த்தும் செயல்கள் அல்லது பருப்பொருள் வடிவங்கள் வகைப்படுத்தப்பெறும்.

அகராதியியலில் ஒருபொருள் பலசொற்களுக்கு (Synonyms) இடையே காணப்பெறும் பொருள் மயக்கத்தினைத் (Overlapping) தவிர்க்கவும், பலபொருள் ஒருசொல்லின் வெவ்வேறு பொருள்களை விவரிக்கவும், எதிர்ச்சொல் (Antonym) போன்றவற்றை விளக்கவும் உட்கூற்றுப் பகுப்பாய்வுமுறை பின்பற்றப்படுகிறது. இம்முறை ஆய்வின் வாயிலாகப் பொருள் தொடர்புடைய சொற்களுக்கிடையே காணப்பெறும் நுண்ணிய பொருள் வேறுபாட்டினை மட்டுமே கண்டறிதல் இயலும். அனைத்துச் சொற்களின் பொருளையும் கண்டறிய இவ்வாய்வு பயன்படுவதில்லை. குறிப்பாகக் குறிப்புப் பொருள் (Cannotative Meaning) தரும் சொற்களையும் உணர்ச்சியினை வெளிப்படுத்தும் சொற்களையும் இவ்வாய்வின் வழி அணுக இயலாது.

உட்கூற்றுப் பகுப்பாய்வு சில குறைபாடுகளை உடையதாக இருப்பினும், உட்கூறுகளை வரன்முறைப்படுத்திச் சொற்களின் பொருளை விளக்குவதற்கு இது பெரிதும் துணைபுரிகிறது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Bendix, E.H.,** Componential Analysis of General Vocabulary: The Semantic Structure of a set of Verb in English, Hindi and Japanese, IJAL, Vol. 32, 1966.

**Nida, Eugene, A.,** Componential Analysis of Meaning, The Hague, Mouton, 1975.

**Lyons, John,** Semantics, Volumes, I and II, The-Cambridge University Press, Cambridge, 1977.

**உட்சமுதாயம்**: சமுதாயம் என்பது தனித்ததும் தன்னிறைவு கொண்டதுமான பெருந்திரளான மக்கள் தொகையைக் குறிப்பிடுவதாகும். ஒரு சமுதாயத்தில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்தும், தனித்தன்மையான பண்பாட்டினைக் கொண்டும், மணத் துணையைத் தமக்குள் மாற்றிக் கொண்டும், ஒருமித்த சமூக அமைப்புடையராய்ப் பொருளாதார செயற்பாடுகளிலும் அனைத்து வாழ்க்கைச் செயல்களிலும் தனிப்பட்டவர்களாகவும் தன்னிறைவுடையவர்களாகவும் காணப்படுவர்.

சமுதாயத்தை வரையறுக்கும்போது பலர் பல நிலைகளைச் சிறப்பிடம் கொடுத்து வரையறுப்பதுண்டு. சமுதாயம் பற்றிய கோட்பாட்டின் வரலாற்றைக் காணும்போது பல வரையறைகள் முன் வைக்கப்பட்டன. தன்னிறைவு (Self Sufficiency) கொண்ட சமுதாய மக்கள் கூட்டம் சமுதாயம் எனவும், ஒத்த பண்பாட்டைக் கொண்ட மக்கள் கூட்டத்தினரும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்த மக்களினத்தவர்களும் சமுதாயத்தினர் எனவும் குறிப்பிடப்பட்டனர். இருப்பினும், சமுதாயவியலின் வளர்ச்சிப் போக்கில் இதன் வரையறைகள் பல கருத்துகளை ஒருங்கே ஏற்றுக் கொண்டுள்ளன.

பரு நிலையில் காணப்படும் சமுதாயத்தில் பல உட்சமுதாயங்கள் (Sub-Societies) காணப்படுகின்றன. இவற்றைச் சிறு சமுதாயங்கள் (Small Societies) என்றும் குறிப்பிடலாம். இவை முதன்மைக் குழுக்கள் (Primary Groups), நேருக்கு நேர் குழுக்கள் (Face to face Groups) ஆகியவற்றின் தன்மையினைக் கொண்டவை எனலாம். சமுதாயவியலாரும் சமுதாய மானிடவியலாரும் உட் சமுதாயத்தைச் சிறிய அளவினைக் கொண்ட மக்கள் கூட்டம் எனச் சுட்டுகின்றனர். இவ்வகை சிறிய அளவிலான சமுதாயத்தை ஆராய்வதைச் சமுதாய மானிடவியலார் முதன்மையாகக் கொண்டுள்ளனர்.

உட்சமுதாயத்தினர் குறிப்பிட்ட நிலப்பரப்பில் நெருக்கமான உறவுகளைப் பெற்றவர்களாவர். இவர்கள் அனைவருமே சமுதாயத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் நெருங்கிய தொடர்புகளையும் தொழில் பரிமாற்றங்களையும் மணவுறவுத் தொடர்புகளையும் கொண்டவராவர். தொழிற் பாகுபாடு

களையும் மிகுதியாகச் செயல்களையும் கொண்ட நிலையில், உட்சமுதாயத்தில் ஒவ்வொரு செயலுக்கும் மீண்டும் மீண்டும் ஒரு குறிப்பிட்ட குழுவினருடன் தொடர்பு கொள்ளும் நிலையில் இவர்களின் தொழிற் பகுப்பு அமைந்திருக்கும். பொருளாதாரம், சமயம், அரசியல், சமூகம் முதலான அனைத்து நிறுவனங்களிலும் உட்சமுதாயத்தினரிடையே காணப்பெறும் பிணைப்பும் உறவும் நீண்ட காலத்திற்குரியவை. நெருங்கிய உறவுக் கூட்டத்தினரைக் கொண்டதனால் மணத் துணைவரை இவர்களுக்குள் பரிமாற்றம் செய்துகொண்ட போதிலும், உட்சமுதாயத்தினரிடையே சமய நம்பிக்கைகள், வழிபடும் தெய்வங்கள், சமூக அமைப்பு, பொருளாதார உறவு, முதலான அனைத்துப் பரப்பிலும் ஒரு தனித்தன்மையுள்ள உறவு காணப்படும்.

**உட்சமூகம்**: ஒரு வட்டாரத்தில் கட்டமைந்த சமூக வாழ்க்கையைக் கொண்ட மக்கள் குழுவே சமூகமாகும். இருப்பினும், இதன் தன்மைகள் பலவாறாக வேறுபடுகின்றன. ஒரு குறிப்பிட்ட வாழிட எல்லையைக் கொண்டு பல குழுக்கள் அல்லது ஒரு குழுவினர் சமூக(Community) வாழ்வில் முழுவதுமாக அமைப்புற்றுக் காணப்படுவதே சமூகத்தின் தனிப் பண்பாகும். ஆனால் சமூகம் என்பதன் பொருள் பல பரிமாணங்களைப் பெற்றுவிட்டது. இச் சொல்லின் தோற்றம் ஒரு சிறு பகுதியில் குறைந்த எண்ணிக்கையிலான குடும்பங்கள் வாழ்ந்த நிலையைக் குறிப்பிட எழுந்ததாகும். ஆனால், இன்று மக்களின் சமுதாய வாழ்வில் பல படிமலர்ச்சி (Evolution) நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளமையால் சமூகத்தின் தன்மைகள் மாற்றம் பெற்றுள்ளன. இச்சொல்லின் பயன்பாடும் மிகுதியாக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, உலகச் சமுதாயம் (World Community), பன்னாட்டுச் சமுதாயம் (International Community) என இதன் பொருள் பலவாறு விரிந்துள்ள வழக்கினைக் கூறலாம்.

தொன்மைக் காலத்திலிருந்து இயற்கையின் சூழலோடு ஒன்றியமைந்த சமூக வாழ்க்கையைக் கொண்ட தொன்மைச் சமூகத்தினர் (Primitive Community) பெரும்பாலும் பலகுடும்பங்களைக் கொண்ட சிறு குழுக்களாகவே (Band) வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழ்க்கைத் தொழிலிற்கேற்ப வேட்டுவச் சமூகமாகவும் (Hunting Community), ஆயர் சமூகமாகவும் (Pastoral Community), வேளாண் சமூகமாகவும் (Agricultural Community) காணப்படுகின்றனர்.

சமூகத்தின் அளவு பெருமளவில் மாறுபடும். தொழில் நிறைந்த நகரங்களில் உள்ள சமூகங்கள் பெரிய அளவினவாகும். ஆனால், இதற்கு மாறாகத் தொன்மைச் சமூகங்கள்சிறுசமூகங்களாகக் காணப்படுகின்றன. இது மக்கள் குழுவினர் தம் வாழ்க்கையின் அடிப்படைப் பொருள்களைத் தேடுவதில் ஏற்படும் உறவால் ஏற்படுவதாகும். இந்த இருவகைச் சமூக நிலைகளுக்கிடையில் பல்வேறு அளவில் சமூகங்கள் காணப்படுகின்றன. இந்தத் தொடர்பே நாட்டுப்புற நகரத் தொடர்பு (Rural-Urban Continuum) எனக் கூறப்படும். இந்தத் தொடர்ச்சியில் சமூகங்களின் அளவு பலவகையாகக் குறிப்பிடப்படும். பழங்குடிச் சமூகம் (Tribal Community), ஊரகச் சமூகம் (Rural Community), நகரச் சமூகம் (Urban Community) எனப் பாகுபடும் அனைத்தும் தங்களின் வாழ்விடம், தொழிலுறவு, சமூக உறவு முதலானவற்றால் பெரும்பான்மையாக வேறுபடுகின்றன.

சமூகத்தின் பரந்த அமைப்பில் பல செயற்பாடுகளில் ஒருங்கிணைந்த போக்கைக் கொண்டு, நெருங்கிய உறவினைக் கொண்டுள்ள பல குழுக்கள் உள்ளன. இவற்றை உட்சமூகம் (Sub-Cummunity or Sect) என்றும், சமூகத்தின் ஒரு பிரிவு என்றும் கூறுவர். இக்குழுவினர் உறவின் அடிப்படை, தொழில் முறை, சமயச் செயற்பாடுகள் ஆகிய அனைத்திலுமே ஒருவரின் பங்கேற்பையும் உதவியையும் பெறுவர். இவர்களிடையே உள்ள உறவு நீண்ட கால அடிப்படையிலானது. இந்தியச் சமுதாயங்களில் ஒவ்வொரு சாதிக் குழுவும் ஒவ்வொரு சமூகமாகும். இந்தச் சாதிக் குழுவினருள் பல குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்கள் அனைத்துமே உட்சமூகம் ஆகும். இவை இவ்வாறு அமைந்ததற்குப் பல சமூகக் காரணிகளும் பொருளாதாரக் காரணிகளும் உள்ளன. ஒரு மூதாதையர் வழிவந்த குழுவினர்கள் ஒத்த இயல்பைக் கொண்டதனால் நெருங்கி ஒரே பரப்பில் வாழ்கின்றனர்; அல்லது இவர்கள் பொருளாதார அமைப்பில் ஒருங்கிணைந்து செயற்படவும் சில சமூக உட்பிரிவுகள் உள்ளன. பெரும்பான்மையாகப் புறமண அமைப்பை ஏற்றுக் கொள்ளும்பொருட்டு அமைந்த மணவழிக் குழுக்கள் என்னும் நிலையிலும் உட்சமூகம் காணப்படுகின்றது எனக் கூறுவர் சமுதாயவியலார். உட்சமூகத்தினர் தொழில்சார் அமைப்பை ஏற்று வாழ்தலை நகரச் சமூகத்தினரிடம் காணலாம்.

•

**உட்சுடாக்கு ஆணை** என்பது இங்கிலாந்தில் இரண்டாம் என்றி (Henry II) மன்னன் காடுகள் பற்றியும் அங்குக் கிடைக்கும் மான் இறைச்சி பற்றியும் உட்சுடாக்கு (Woodstock) என்னுமிடத்தில் பேராயர்கள் (Archbishops), ஆயர்கள் (Bishops),

ஆங்கிலப் பிரபுக்கள் (Lords) ஆகியோர் ஆலோசனையையும் ஒப்புதலையும் பெற்று விடுத்த ஆணையாகும்.

சட்டம் மக்களுக்கு உரியதாக இருப்பதால், மக்களைக் கலந்து கொண்டு மன்னன் சட்டத்தை உருவாக்குதல் வேண்டும் என்னும் கொள்கை உருவாயிற்று. பிராங்கிசுப் பேரரசை (Frankish Empire) கி.பி.6-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மெரோவிஞ்சியக் குல மன்னர்கள் (Kings of Merovingian Dynasty) இக்கொள்கையினைப் பின்பற்றினர். அவர்கள் ஆணைகளை விடுத்தபோது நாட்டிலுள்ள முதன்மை வாய்ந்த குடிமக்கள், ஆயர்கள், பிரபுக்கள் ஆகியோரைக் கலந்தாலோசித்த பின்னரே அவற்றை விடுப்பதாக அறிவித்தனர். இக்கொள்கை கி.பி.9-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. இதனால், அனைத்து மக்கள் சார்பாகவும் வெளியிடப்படுவதே சட்டம்; அது செல்லுபடியாவதற்கு மக்களின் ஒப்புதல் மிகவும் இன்றியமையாதது என்னும் கருத்துத் தோன்றியது. இங்கு ஒப்புதல் என்பது மக்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தல் என்று பொருள்படாது; அவர்கள் மன்னர் விடுக்கும் ஆணைகளை ஏற்றுக் கொள்கின்றனர் என்றே பொருள்படும். பிராங்கிசுப் பேரரசை ஆண்ட கரோலிஞ்சியக் குல (Carolingian Dynasty) மன்னன் சார்லமே, (Charlemagne) சட்டமோ ஆணையோ விடுத்தபோது தம் நாட்டு ஆயர்கள், மடாலயத் தலைவர்கள் (Abbots), பிரபுக்கள், குடிமக்கள் ஆகியோர் ஆலோசனையின்படி அதை விடுப்பதாகவும் அதனால் குடிமக்கள் அனைவரும் அதற்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும் என்றும் கூறினான்.

குடிமக்கள் அனைவரும் மன்னனுடைய ஆணைக்குக் கட்டுப்படுதல் வேண்டும் என்னும் நோக்கத்திலேயே, இரண்டாம் என்றி மன்னனும் உட்சுடாக்கு ஆணையை விடுத்தபோது குடிமக்கள், பிரபுக்கள், ஆயர்கள் ஆகிய அனைவரின் ஒப்புதலையும் பெற்று அதனை விடுப்பதாக அறிவித்தான். இதனால், இவ்வாணை அரசியல் சிறப்புப் பெற்றுள்ளது.

துணை நூல்:

**Sabine, G.H.,** A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

**உட்டாமரோ (கி.பி.1753–1806)** ஐரோப்பாவில் நன்கு புகழ்பெற்றிருந்த சப்பானின் முதல் கலைஞர். இவர் கி.பி.1753-இல் பிறந்தார்; எதோ (Eto)என்று முன்பு குறிக்கப்பட்ட தோக்கியோ (Tokyo) நகரத்தில் வாழ்ந்தார். இவர் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கண்கவர் பொம்மைகள், வண்ண ஓவியங்கள், நூல்களில் காணப்படும் எழில் மிக்க ஓவியங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் திறமை பெற்றவர். இக்கலைப் படைப்புகள் இவரது பெயரால் சப்பானியப் பாணியில் (Style) 'கிதாகவா உட்டாமரோ' (Kitagawa Utamaro) என்று வழங்கப்பெறுகின்றன.

உட்டாமரோ (Utamaro) யோசிவாரா மாவட்டத்து அரண்மனை வாழ் நங்கையர்களின் எழில் உருவங்களைச் சீரிய முறையில் ஓவியங்களாகத் தீட்டினார். பொதுவாக, அம்மாவட்டம் கேளிக்கைகள், விளையாட்டுகள், பொழுதுபோக்குக் கூறுகள் நிறைந்து காணப்பட்டது. இவர் கி.பி. 1790-இல் உக்கியோயி பள்ளியில் பணிபுரிந்தபோது மரங்களில் ஓவியங்களை அழகாகச் செதுக்கி வைத்தார். அவை இவருக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தன. இவர் காலத்துச் சப்பானிய அறிஞர்களும், மேலை நாட்டுத் திறனாய்வாளர்களும் சப்பானில் இதுவரையில் தோன்றியுள்ள மர ஓவியக் கலைஞர்களுள் உட்டாமரோவே சிறந்த வல்லுநர் எனப் பாராட்டியுள்ளனர்.

உட்டாமரோவின் புகழுக்கு இவரது தனித்திறமை வாய்ந்த கலைப்பாணியே காரணம். இவர் செதுக்கும் ஓவியங்கள் அழகும் அமைப்பு ஏற்றமும் உடையன. ஒவ்வொரு மரச் செதுக்கு ஓவியத்திலும் காணப்படும் அமைப்பு முறையும் தக்க அளவில் பயன்படுத்திய வண்ணங்களும் இவரை வானளாவப் புகழத் தூண்டுகின்றன.

உட்டாமரோவின் புகழ்பெற்ற படைப்புகளுள் கல்வியறிவுள்ள பத்துப் பெண்களின் ஓவியங்கள், பெண்களின் பிற சிறப்புக் கூறுகள் கொண்ட ஓவியங்கள், பச்சை நிற வீட்டின் அமைப்பு முறை, காதலர்களின் கண்கவர் ஓவியங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. நீண்ட காலமாக வெளிநாடுகளுக்குத் தெரியாமலிருந்த இவர் ஓவியங்கள், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சப்பானுக்கு வந்த பிரான்சு நாட்டுச் சமயப் பரப்பாளர்களால் உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தப்பட்டன. இவ்வோவியங்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற இவ்வோவியக் கலைஞர் கி.பி. 1806-இல் காலமானார். நா.ஜெ.

**உட்டு ஆவணம்**: இந்தியா ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டபின் (கி.பி. 1858) வணிகக் குழுவினர் (East India Company) கல்வி வளர்ச்சியில்

கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கினர். சர் தாமசு மன்ரோ (Sir Thomas Munroe) சென்னை ஆளுநராகப் பதவியேற்றதும் கல்வி வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண்டார். அவரது முயற்சியால் சாதகமான சூழ்நிலைகள் உருவாயின. பின்னர், கி.பி. 1838-இல் ஆளுநராகப் பதவியேற்ற எல்பின் சுடன் பிரபு பல்கலைக் கழக உயர்நிலைப் பள்ளி (High School of the University) என்ற நிறுவனத் தையும் மாவட்டப் பள்ளிகளையும் அமைத்தார்.

சர் சார்லசு உட்டு (Sir Charles Wood) கி.பி. 1854-ஆம் ஆண்டு சூலை மாதம் 19-ஆம் நாள் கல்வி பற்றிய அறிக்கை ஒன்று வெளியிட்டார். தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை கல்விப் பயிற்சிக்கு வரையறுக்கப் பெற்ற குறிக்கோள்கள் தேவையென இவர் வலியுறுத்தினார். இந்திய நாட்டுக் கல்வி வரலாற்றில் கி.பி. 1854-ஆம் ஆண்டு அறிக் கையை உச்சக் கட்டமெனக் கூறலாம். அதற்குமுன் மேற்கொள்ளப்பெற்ற முயற்சிகள் அவ்வாண்டில் முடிவுற்றன. பல முன்னேற்றங்கள் அவ்வாண்டிலி ருந்து தொடங்கின. 'இந்திய நாட்டு ஆங்கிலமுறைக் கல்வியில் மகா சாசனம்', இந்திய அறிவுப் பெருக்கின் ஒளிவிளக்கு' என்ற புகழுரைகளை உட்டு ஆவணம் (Wood's Dispatch) பெற்றது.

பரிந்துரைகள்:

அ. ஒவ்வொரு மாநிலத்திலும் பொதுநலக் கல்வித்துறை இயக்குநர் அமர்த்தப்பட வேண்டும்.

ஆ. தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்குப் பயிற்சிக் கல்லூரிகளும் உயர்நிலை இடை நிலைப் பள்ளிகளும் அமைத்தல் வேண்டும்.

இ. கல்விக்கூடங்கள் அமைப்பதில் தனியார் முயற்சிகளை ஊக்குவித்தல் வேண்டும்.

ஈ. திட்டம் செயற்படுவதைக் கண்காணிப் பதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் பொது நலக் கல்வித்துறையை (Department of Public Instruction) அமைக்கவேண்டும்.

இசுலாமிய மற்றும் இந்துமதச் சார்புடைய கல் விக்கூடங்கள் பல அப்போது இயங்கிவந்தன. கிறித் தவச் சமயத்தினரும் கல்விநிலையங்கள் ஏற்படுத்தி யிருந்தனர். நடைமுறையில் தொண்டாற்றி வரும் கல்வி நிறுவனங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை அரசு சேகரித்தது. இந்தியச் சூழல்களைப் புறக் கணித்து, மேலைநாட்டு முறைகளைப் புகுத்துவது முறையாகாது என்ற கருத்து நிலவியிருந்தது. உயர் நிலைக் கல்வி நிலையங்களில் ஆங்கில மொழி வாயி லாகப் பயிற்றுவிப்பது கல்வியின் தரத்தைப் பாது காக்கும் என்ற கருத்தை உட்டு வலியுறுத்தினார். ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் புலமைமிக்க ஆசிரியர்களின் துணையுடன், கல்வி புகட்டுவது அரசின் நோக்கமாக இருக்கவேண்டும்.

தாய்மொழியின் மதிப்பைச் செயல்முறையால் உட்டு ஆவணம் குறைத்தது எனக் கூறுவதே பொருந் தும். நாட்டில் நிலவியிருந்த வறுமையும், ஆங்கிலக் கல்வி பெற்று வேலைவாய்ப்புகளைப்பெருக்கிக் கொள் ளலாமென மக்கள் கருதியமையும் இவ்விளைவை ஏற்படுத்தின. வாழ்வாங்கு வாழ்வதற்கு இத்திட்டம் பயன்படவில்லை; ஆட்சி நிறுவனங்களில் பணித் தேவைகளை ஈடுசெய்யும் முறையில் எண்ணற்ற எழுத்தர்களை இத்திட்டம் உருவாக்கியது. எனினும் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் பல்கலைக்கழகங்களை அமைத்தல் வேண்டும் எனத் திட்டம் வலியுறுத்தியதைச் சிறப்பாகக் கூறவேண்டும். தன்னாட்சி நிலை (Autonomous Status) பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படவில்லை.

இப்பரிந்துரைகள் கி.பி. 1857-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன. அவ்வாண்டில் பெருங்கிளர்ச்சி தோன்றியது. கல்வித்திட்டம் கிளர்ச்சிக்கான கார ணங்களில் ஒன்றன்று என்பதை உறுதி செய்து கொண்டு, கி.பி. 1859-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் இந்திய அரசுச் செயலர் (Secretary of State for India) வெளியிட்ட அறிக்கை, கல்விக் கூடங்களில் மத போதனைகளைத் தவிர்க்க வேண்டும் என வலி யுறுத்தியது. கிறித்தவப் பாதிரிகளுள் சிலர் மத போதனை வகுப்புகளைத் தொடர்வதற்கு அனுமதி வேண்டினர். 'மதச் சார்பற்ற கல்வியை ஆதரித்து அரசு மேற்கொள்ளும் பணிகளில் எவ்வித மாறுதலை யும்அரசு ஏற்காது' என அவர் தெளிவாகவும் உறுதி யாகவும் கூறினார். தி.வெ.கு.

துணை நூல்கள்:

**Luriya, B.N.**, Evolution of Indian Culture, Lakshmi Narain Agarwal, Agra, 1981.

**Smith, V.A., and Percival Spear**, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976.

**உட்டோப்பியா** என்னும் சொல் குறை வொன்றுமில்லாத கற்பனை உலகத்தைக் குறிக்கும். உட்டோப்பியா (Utopia) என்னும் கிரேக்கச் சொல் லுக்கு 'இந்த இடமல்ல' (No Place)என்பது பொருள். பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் இல்லாத இலட்சிய சமுதாயத்தை இச்சொல் குறிப்பிடுவதா

கக் கூறுவர். நடைமுறைப்படுத்த முடியாதவற்றையும் பகற் கனவு காண்கிறவர்களையும் உட்டோப்பியர்கள் என்று சுட்டுவர்.

புனிதர் தாமசு மூர் (Saint-Thomas More) என்பவரே உட்டோப்பியா என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார். இச்சொல்லைத் தம் நூலின் தலைப்பாக இவர் பயன்படுத்தினார். இலத்தீன் மொழியில் இந்நூலை இவர் கி. பி. 1516-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதன் ஆங்கில மொழியாக்கம் கி. பி. 1551-இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் மூர் இலட்சிய அரசு குறித்துத் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார். இந்நூலில் ஒரு பகுதி இருவரிடையேயும் நிகழும் உரையாடல் போல் எழுதப்பட்டுள்ளது. தம் காலத்தில் நிலவிய சமூக, பொருளாதாரச் சீர்கேடுகளை இந்நூல் கடுமையாக குறை கூறுகிறது.

மூரின் உட்டோப்பியா என்னும் நூல் இராபேல் அய்த்லோதலே (Raphael Hythlodale) என்னும் பெயருடைய போர்ச்சுகீசிய மாலுமியின் அறிக்கையாகும். இம்மாலுமி அமெரிகோ வெசுபுக்கி (Amerigo Vespucci) என்னும் கடல் ஆய்வுப் பயணியுடன் இணைந்து மூன்று முறை அமெரிக்கா சென்று வந்திருந்தார். அதுவரை கண்டறியப்பெறாத இடங்களிலும் காடுகளிலும் இவர் செய்த பயணங்களை இந்நூல் கூறுகிறது. அவற்றுள் ஒன்று உட்டோப்பியா என்னும் தீவாகும். இத்தீவில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வில்லாமலும் வளமாகவும் மதிநுட்பமுள்ளவர்களாகவும் இருந்தனர் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

இலட்சிய சமுதாய நிலையைக் கற்பனை செய்து எழுதிய நூல்கள் பலவுண்டு. அவற்றுள் பிளேட்டோ எழுதிய குடியரசு (Republic) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் கி. மு. 375-ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டது. மேலும், சாமுவேல் பட்லர் கி. பி. 1872-இல் எழுதிய எரிவான் (Erewohn) என்னும் நூலும் கி. பி. 1888-இல் எட்வர்டு பெலாமி (Edward Bellamy) எழுதிய பின்னோக்கிப் பார்த்தல் (Looking Back-ward) என்னும் நூலும் சி. எச். வெல்சு (G.H. Wells) எழுதிய இக்கால உட்டோப்பியா (A Modern Utopia) என்னும் நூலும் உட்டோப்பியக் கருத்துகளைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

**உட்பண்பாடு**: பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் கொண்டுள்ள அறிவு, நம்பிக்கைகள், கலை, ஒழுக்கம், சட்டம், மரபுகள், நெறிமுறைகள்,பழக்கம் முதலான அலனத்தின் ஒட்டுமொத்தச் சேர்மமாகும். இது ஒரு சமுதாயத்தினர் அனைவரும் கற்று ஏற்றுக்கொண்ட மரபுவழிப் பாங்காகும்.

இக்காலச் சமுதாயங்கள் அனைத்திலுமே சில குழுவினர் சில தனிப் பண்புகளைக் கொண்டு தாம் சார்ந்துள்ள சமூகத்தினின்று விலகி மாறுபட்டுக் காணப்படுவர். இக் குழுவினரின் பண்பாடே உட்பண்பாடு (Sub-Culture) எனப்படும். வேற்று நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் ஒரு நாட்டினர் தாம் குடியேற்றம் பெற்ற நாட்டினரின் பண்பாட்டையும் தம் தாய்நாட்டின் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து ஒரு தனிப் பாங்கோடு வாழ்வர். ஒரு சமுதாயத்தில் மேட்டுக் குடியினரும் செல்வர்களும் தனிப்பட்ட வாழ்க்கை நிலையினையும் வறிய மக்கள் தனிப்பட்ட வறுமை நிலைப் பண்பாட்டையும்(Poverty of Culture) கொண்டிருப்பர். குமரப் பருவப் பண்பாட்டில் (Adolescent Culture) அவர்களின் உடை, நடத்தை, சிந்தனை முதலான அனைத்தும் தனிப்பட்டதாக அமையும். நிறுவனங்களின் நடத்தை முறைகள் (Behaviour Patterns)அந்த நிறுவனத்திற்கு வெளியே காணக் கூடியனவாக அமையா. எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளியின் பண்பாடு, ஒரு தொழிற்சாலையின் பண்பாடு, இராணுவ வாழ்க்கை முதலானவை இந்த அமைப்புகளுக்கு மட்டுமே உரித்தான பண்பாட்டைக் கொண்டிருக்கும். மேற்கூறிய அனைத்து எடுத்துக் காட்டுகளுமே உட்பண்பாட்டினை விளக்குவனவாகும். இதையே மாணவர் உட்பண்பாடு (Student Sub-Culture), குமரப் பருவ உட்பண்பாடு(Adolescent Sub-Culture) எனக் கூறலாம்.

தான் அடங்கிய சமுதாயத்தின் பண்பாட்டினை ஏற்றுக்கொண்டு, சில தனிப்பட்ட முறையில் தன் பண்பாட்டின் தன்மையிலிருந்து விலகித் தனிப் பண்பாட்டைக் கொண்ட உட்பண்பாட்டின் தன்மைகள் சமுதாயத்தில் பல நிலைகளில் காணப்படும். சமுதாயத்தில் காணப்படும் உட்பண்பாடுகள் தொழில்கள், சமயம், நாடு, வட்டாரம் (Region), சமூக வகுப்பு, வயது, பால் (Sex) முதலானவற்றைச் சார்ந்து காணப்படுவனவாகும்.

உட்பண்பாடு ஒவ்வொரு சமுதாயத்திலும் காணக் கூடிய பொதுத் தன்மையாகும். எந்த ஒரு பண்பாடுமே ஒரே தன்மையுள்ள (Uniform) தனிப்பண்பாட்டைப் பெற்றிருக்கவில்லை; ஆனால், பொதுவான பண்பாட்டுக் கூறுகளையும் (Culture Traits) பண்பாட்டுத் தொகுதியையும் (Culture Complexes) உட்பண்பாட்டையும் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் தம் செயல்களையும் நடத்தைகளையும் தம் சமுதா

யத்தின் ஏதாவதோர் உட்பண்பாட்டோடு ஈடுபடுத்திக் கொள்கின்றனர். ஒரு நாட்டில் குடியேற்றம் பெறுபவர்கள் குடியேறிய உட்பண்பாட்டினரோடு (Immigrant Sub-Culture) பெரும்பான்மையாக வாழ்வர். இராணுவத்தில் பணிபுரிபவரின் துணைவியர்கள் பொதுமக்களோடும் அவர்களின் வாழ்க்கைப் பங்கோடும் அவர்களின் மதிப்புகளோடும் (Civilian Values) மிகுந்த தொடர்பற்றவர்களாய் உள்ளனர். ஒவ்வொரு குழந்தையும் வயது உட்பண்பாட்டைக் (Age Sub-Culture) கடந்து வளருகின்றனர். பண்பாட்டின் பொதுத்தன்மை பல அலகுகளைக் (Units) கொண்டது. பல உட்பண்பாடுகளைக் கொண்ட பல அலகுகளின் ஒட்டுமொத்தமே பண்பாடாகும்.

**உட்பிணைப்பு மொழிகள்**: மொழிகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனிநிலை மொழிகள்(Isolating Languages), ஒட்டுநிலை மொழிகள் (Agglutinative Languages), உட்பிணைப்பு மொழிகள் (Inflectional Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages), பல்லிணைப்பு நிலை மொழிகள் (Polysynthetic Languages), உள்ளடக்குநிலை மொழிகள் (Incorporating Languages) எனப் பகுத்து ஆராயலாம்.

வேர்ச்சொற்களில் காணும் உயிர்மாற்றத்தினால் இலக்கணப் பொருளை உணர்த்துதல் உட்பிணைப்பு நிலை (Inflection) எனப்படும். இத்தகைய பண்புடைய மொழிகள் உட்பிணைப்புநிலை மொழிகள் எனப்படும். இம்மொழிகளில் இலக்கணக்கூறுகள், ஒட்டுகள் (Affixes) அடிச்சொற்களுடன் மிகப் பிணைந்து இணைவதாலும் வேர்ச்சொற்களில் நடைபெறும் உயிர்மாற்றங்களாலும் காட்டப்பெறுகின்றன. கிரீக்கு, இலத்தீன் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளும் செமிட்டிக்கு (Semitic) மொழிகளும் உட்பிணைப்புநிலை மொழிகளாகும். எண்ணிக்கையில் உட்பிணைப்புநிலை மொழிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இம்மொழிகளே மிகவும் வளர்ச்சியடைந்தவை என்ற தவறான கருத்தும் சில மொழியியல் அறிஞர்களிடம் காணப்பட்டது.

உட்பிணைப்புநிலை மொழிகளாகக் கருதப்படுபவற்றிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. செமிட்டிக்கு மொழிகளில் மூன்று மெய்யெழுத்துகளைக் கொண்ட வேர்ச்சொற்களில் சில உயிரெழுத்துகளை இணைத்து வெவ்வேறு இலக்கணக்கூறுகளைச் சுட்டும் முறைமை காணப்படுகிறது. ஆங்கில மொழியில் அடிச்சொற்களுடன் ஒட்டுகளை இணைப்பதன் வாயிலாகவும் வேர்ச்சொற்களில் உயிரெழுத்துகளை மாற்றியமைப்பதன் வாயிலாகவும் இலக்கணக்கூறுகள் அமைக்கப் பெறுகின்றன. ஆங்கில மொழியில் செமிட்டிக்கு மொழிகளைப் போன்று உட்பிணைப்புப் பண்பு மிகுதியும் காணப்பெறவில்லை.

ஆங்கில மொழியில் 'பாடுதல்' என்னும் பொருளைச் சுட்டும் 'Sing' என்னும் நிகழ்கால வினைச்சொல்லின் 'i' என்னும் உயிரெழுத்தினை 'a' என்னும் உயிரெழுத்தால் மாற்றியமைக்கும் நிலையில் 'Sang' என இவ்வினைச்சொல் வடிவமாற்றம் பெற்று, இறந்தகால இலக்கணப் பொருள் கிடைக்கப்பெறுகிறது. இதனைப் போன்றே 'கால்' என்னும் பொருள்தரும் 'fut' (foot) என்னும் ஒருமை வடிவத்தின் 'u' என்னும் உயிரெழுத்துக்குப் பதிலாக 'iy' என்பதனை அமைக்கும் நிலையில் 'fiyt' (feet) என்னும் பன்மை வடிவம் கிடைக்கப் பெறுகிறது. இங்ஙனம் வேர்ச் சொற்களில் உயிர்மாற்றங்கள் செய்வதன் வாயிலாக வெவ்வேறு இலக்கணப் பொருள்கள் சுட்டப் பெறுவதால் ஆங்கில மொழி உட்பிணைப்புநிலை மொழியாகக் கருதப்படுகிறது.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள், தொகுதி-1, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1968.

Lehmann, W.P., Historical Linguistics, Oxford &IB H. Publishing Co., New Delhi, 1975.

**உட்பிரிட்சு, பிரெடரிக் சேம்சு யூசேன்** (கி.பி. 1867-1940) உட்பிரிட்சு வின்சர் (Windsor) என்னும் இடத்தில் பிறந்தார்; அம்கெர்சுட்டுக் கல்லூரியிலும் (Amherst College) பெர்லின் (Berlin) பல்கலைக் கழகத்திலும் படித்தார். மின்னிசோட்டா (Minnesota) பல்கலைக் கழகத்தில் கி.பி. 1894 முதல் 1902 வரையும் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் 1902 முதல் 1937 வரையும் இவர் தத்துவம் பயிற்றுவித்தார். கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறைத் தலைவராகவும் இவர் பணியாற்றினார். அரிசுடாட்டிலின் முறைகளை அமெரிக்காவில் திரும்ப உயிர்த்தெழச் செய்த பெருமை இவரைச் சாரும்.

செயல்முறைக் கோட்பாடு, இயற்கைக் கோட்பாடு என்னும் இருவகைத் தத்துவக் கருத்துகளை உட்பிரிட்சு (Woodbridge) வெளியிட்டார். உயிரும் மனமும் இயற்கையான உலகில் ஏற்படும் மாற்றங்களே; உடலின் பல்வேறு இயக்கங்களாக மனம், உயிர், உணர்வு, ஆன்மா என்பன அமைகின்றன என்பதே செயல்முறைக் கோட்பாடு. மனம் இயற்கையில்

பொருள்களிடமிருந்து வெளிப்பட்டாலும் அது உலகத்தில் நிகழ்கிற சில மாற்றங்களை ஆளுகிற தன்மை உடையது. உணர்வு (Consciousness) என்பது சூழ்நிலையில் அமைந்திருக்கிற பொருள்களை அறிவது மட்டுமல்லாமல், அவற்றின் தரத்திற்கேற்ப மரியாதை செலுத்துவதுமாகும். அது பொருள்களின் இருத்தல் தன்மையை முன்கூட்டியே உணருகிறது.

இயற்கைக் கோட்பாடும் செயல்முறைக் கோட்பாடும் ஒன்று எனக் கூறும் உட்பிரிட்சு, அரிசுடாட்டிலின் புலன் கடந்த நுண்பொருள் கொள்கையை மீண்டும் வலியுறுத்துகிறார். இவர் கருத்துப்படி, இயற்கைக் கோட்பாடு என்பது ஒரு வித மனப்பான்மையே தவிரத்தனித்தன்மைவாய்ந்தகோட்பாடன்று. ஆனால், சில இக்கால எழுத்தாளர்கள் இயற்கைக் கோட்பாட்டை ஒரு நிறைவான அமைப்பாக (Form) ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சமய அறிஞர்கள் இயற்கைக் கோட்பாட்டை ஆன்மிகக் கொள்கையோடு ஒப்பிடும்பொழுது குறைவாக மதித்தனர். ஆனால், உட்பிரிட்சு இத்தகைய மதிப்பீடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் வானம், பூமி, கடல் ஆகியவற்றையும் அவற்றிலுள்ள பொருள்களையுமே இயற்கையாகக் கருதுகின்றனர் என்று இவர் கூறுகிறார்.

உட்பிரிட்சு கருத்துப்படி இயற்கை எல்லாவற்றையும் தன்னுள் அடங்கச்செய்யும். இயற்கை என்பது ஒவ்வொருவரையும் சூழ்ந்து, காணத் தகுந்தவாறு இருக்கிற பொருள்கள் ஆகும். இயற்கைக் கொள்கை நல்ல முறையில் ஆய்வு செய்வதற்குரிய ஒரு முறைமன்ற (Summons) அமைப்பாக உள்ளது.

உட்பிரிட்சின் படைப்புகள் இயற்கைக் கொள்கைகள், செயல் முறைக் கோட்பாடுகள் ஆகியவை பற்றி நன்கு விளக்குகின்றன. அவர் எழுதிய கட்டுரைகளுள் 'பொருள்', 'சமய சித்தாந்தம்', 'படைப்புத் தொழில்'. 'அமைப்பு', 'மனிதன்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

காலம் பற்றியும் அதன் மாறுதல் பற்றியும் உட்பிரிட்சு பின்வருமாறு கூறுகிறார்: ஒரு நிகழ்ச்சி என்பது அதற்குமுன் நடந்தகாரணத்தின் காரியம்(Effect) ஆகும். முன்பே நடந்த பொருளின் விரிவாகும். காலம் என்பது இறந்த காலத்திலிருந்து நிகழ் காலத்திற்கும் நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்திற்கும் மாறுவது என்ற கருத்து உட்பிரிட்சுக்கு ஏற்புடையது அன்று. அது நிகழுதற்கு வாய்ப்புள்ளது (Possible) என்னும் தன்மையிலிருந்து உண்மையாக நிகழக் கூடியது (Actual) ஆகிறது. ஆற்றலாக இருந்த தன்மையை இருத்தல் நிலைக்கு அது கொண்டு வருகிறது. இச் செயல் தன்னை மறந்த நிலையிலோ எதிர்பாராமலோ நினைவுற்ற நிலையிலோ நடைபெறுகிறது. கடந்த காலத்திலிருந்து வருகிற நிகழ்ச்சி நல்ல வாய்ப்பை அளிப்பதோடு கடினமான வரையறையினையும் அமைக்கிறது. அது ஒருவருக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினை அளிக்காமல் அவர் தம் குறிகோளை உணரத் துணை செய்கிறது.

**உட்பிரிவும் நிலச் சிதறல்களும்:** இந்திய வேளாண்மையின் பல கூறுகளுள் குறிப்பிடத்தக்கது வளஞ்சான்ற விளைவாகும். ஓர் உழவன் பயிரிடும் நிலம் ஒரே இடத்தில் அமையாமல் உரிமை மாற்றங் காரணமாகப் (Transfer of Ownership) பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுதலும் (Sub-Division), அவை பல இடங்களில் துண்டு நிலங்களாகச் சிதறிக் கிடத்தலும் (Fragmentation) உட்பிரிவும் நிலச் சிதறல்களும் எனக் கூறப்படுகின்றன. நிலங்களின் உட்பிரிவினாலும் சிதறலினாலும் தொழில்நுட்ப மாற்றங்களை வேளாண்மையில் புகுத்துவது கடினமாயுள்ளது. இத்தகைய நிலங்களில் உழவர்கள் தங்கள் கடின உடல் உழைப்பைச் செலுத்த வேண்டியிருப்பினும், அவர்கள் பெறும் வருவாய் மிகக் குறைவானதாயிருப்பதால் அது உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தை அளிப்பதில்லை. எனவே, இவை உழவர்களின் ஆக்கத்திறனையும் நிலத்தின் ஆக்கத்திறனையும் (Productivity) குறைத்து வேளாண்மைத் துறையின் வளர்ச்சியையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கின்றன.

உயர்ந்த அளவு விளைவை அளிக்கும் பயிரிடும் நில அளவு (Unit of Land) திட்டவட்டமாக வரையறுக்க இயலாதது. இவ் அளவு நிலத்தின் மூல வளம், செழிப்பு, காலநிலை, வேளாண்மையினரின் கல்வியறிவு, திறமை, ஊக்கம் போன்ற பல்வகை உள்ளீட்டுக் (Input) காரணிகளைச் சார்ந்து நாட்டுக்கு நாடு வேறுபடுவதுடன், ஒரு நாட்டிற்குள்ளும் பகுதிக்குப் பகுதி வேறுபட்டிருக்கும். அரசியல் சமூகப் பொருளாதாரக் காரணிகளும் பயிரிடும் நில அளவை வரையறுப்பதில் சிறந்த பங்கேற்கின்றன. இவ் அளவினை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுகின்றனர். இது குடும்ப அளவு (Family Holding), உத்தம அளவு (Optimum Holding), பொருளாதார அளவு (Economic Holding) என மூவகைப்படும்.

இந்திய நிலச் சீர்திருத்த ஆய்வுக் குழுவின் (Panel on Land Reforms) அறிக்கையின்படி ஐந்து பேர் கொண்ட ஒரு வேளாண்மைக் குடும்பத்திற்கு உரு.1600 ஆண்டு வருவாய் கொடுக்கக்கூடிய பயிரி

அட்டவணை-1

| | நிலஅளவுகள் | எண்ணிக்கை (மில்லியன்களில்) | | | | மொத்தப்பரப்பு (மில்லியன்களில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | (ஏக்கரில்) | 1970—71 | | 1976—77 | | 1970—71 | | 1976—77 | |
| | | (விழுக்காடு) | | | | (விழுக்காடு) | | | |
| 1. | $2\frac{1}{2}$–க்குக் கீழ் | 36.20 | 50.9 | 44.53 | 54.6 | 14.56 | 9.0 | 17.50 | 10.7 |
| 2 | $2\frac{1}{2}$–க்கும் 5–க்கும் இடையில் | 13.43 | 18.9 | 14.70 | 18.0 | 19.28 | 11.9 | 20.86 | 12.8 |
| 3. | 5–க்கும் 10–க்கும் இடையில் | 10.68 | 15.0 | 11.64 | 14.3 | 30.00 | 18.5 | 32.36 | 19.9 |
| 4. | 10–க்கும் 25–க்கும் இடையில் | 7.93 | 11.2 | 8.21 | 10.1 | 48.23 | 29.7 | 99.60 | 30.4 |
| 6. | 25–க்கும் மேற்பட்ட | 2. 7 | 4.0 | 5.44 | 3.0 | 50.06 | 30.9 | 42.82 | 26.2 |
| | கூடுதல் | 71.01 | 100 | 81.52 | 100 | 162.13 | 100 | 163.14 | 100 |

டும் நில அளவு குடும்ப அளவாகும். இது இந்தியா வில் 4 முதல் 6 ஏக்கர்களைக் கொண்டதாயிருக் வேண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனைப் பிழைப்பு மட்ட அளவு (Subsistence Holding) என வும் கூறுவர். ஒரு குடும்பம் இன்றியமையா வசதிகளு டன் வாழத் தேவையான வருவாய் கொடுக்கக்கூடிய பயிரிடும் நில அளவு பொருளாதார அளவாகும். இவ் அளவு மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டு 6 முதல் 10 ஏக்கர் வரையிலும் இருக்கும். பொருளா தார அளவை விட மூன்று மடங்கு மிகையானதும், தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி முதல், உழைப்பு, நிலம் ஆகியவற்றின் உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெறத் தகுதியுடையதுமாகிய பயிரிடும் நில அளவு உத்தம அளவாகும். இதுவே நில உச்சவரம்பு (Land Ceiling) அளவுமாகும். நில உச்சவரம்பை வரை யறுத்த மைய ஆய்வுக் குழு 1970–ஆம் ஆண்டு விலை களின் அடிப்படையில் உத்தம அளவை 10 முதல் 18 ஏக்கர்களாகக் குறிப்பிட்டது. உச்சவரம்பு நிலங்கள் ஆண்டுக்கு உரூ. 15,000 வருவாய் கொடுக்கக் கூடிய தாயிருக்கும்.

அட்டவணை 1-இல் கொடுத்துள்ளபடி அனைத் திந்தியப் பயிரிடும் நில அளவுகளில் 51 விழுக்காட் டுக்கு மேலான எண்ணிக்கை பிழைப்புமட்ட அளவுக் கும் கீழ் உள்ளன என்பது இந்திய வேளாண்மையின் பொது நிலையை விளக்குகிறது. இத்தகைய நிலச் சிற்றளவுகள் (Small Size Holdings) மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் சம வாரிசு உரிமைச் சட்ட(Law of Inheritance) மரபியலினாலும் மேலும் மேலும் பிரிக்கப்பட்டு, உட்பிரிவுகளும் (Divided & Sub-Divided) ஏற்பட்டுத் துண்டாடப்படுகின்றன. சிறப் பாக வாரிசு உரிமைச் சட்டத்தினால் ஒவ்வொரு தலைமுறையிலும் (Generation) சிற்றளவு நிலங்கள், பேரளவு தோட்டங்கள் முதலியன வாரிசுகளிடையே ஒத்த தன்மைக்காகத் துண்டாடப்படுகின்றன. 'இந் திய மரங்கள் அவற்றின் கிளைகள் முதற்கொண்டு உரிமையில் பங்கிடப்படும்' என்று கூறப்படுவது நிலம் துண்டாடப்படுவதின் முழுமை நிலையை அறிய உதவுகின்றது.

பன்னெடுங்காலமாக இந்திய ஊரகச் சமுதாயத் தில் வேரூன்றியிருந்த கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) சிதைவுற்று இக்காலத்தில் தனிக் குடும்ப வாழ்க்கை முறை வளர்ச்சி பெற்று வருவ தால் கூட்டுக் குடும்பங்களிலிருந்து நிலங்கள் சிறிய குடும்பங்களுக்குப் பங்கிடப்பட்டு நில உட்பிரிவுகளும் சிதறல்களும் பெருகுகின்றன. கல்வி வளர்ச்சி, தொழில் புரட்சி, தனியுரிமைக் கோட்பாடு (Indivi-dualism), அயல்நாட்டுப் பண்பாடு, நகரியமாதல் ஆகியவற்றின் வளர்ச்சி, ஒரு சிலரால் கட்டுப்படுத்தப் படும் கூட்டுக் குடும்ப முறை அழிவுற்று நிலங்கள் துண்டுபடக் காரணமாயுள்ளது.

ஊரகங்களில் வளர்ச்சி பெற்றுச்செழித்தோங்கிய கைவினைத் தொழிற்றுறை நலிவுற்றதனால் அத்

தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் உழவுத் தொழிலைப் பிழைப்புக்காக நாடுகின்றனர். தொழிற் புரட்சியினால் கைவினைப் பொருள்களின் விற்பனை பேரளவிற்கு வீழ்ந்துவிட்டது. உயர் கல்வியும் தொழில்நுட்ப அறிவும் பெற்றிராத கைவினைஞர் கள் (Artists) வேளாண்மையில் ஈடுபட வேண்டிய இன்றியமையாச் சூழ்நிலை ஏற்படுவதால் நிலத் தேவை மிகுந்து, நிலங்கள் மேலும் மேலும் பிரிக்கப் பட்டுச் சிதறுகின்றன.

ஊரகக் கடன் பளுவும் (Rural Indebtedness) வேளாண்மையினரின் ஏழ்மையைப் பயன்படுத்தி வாழும் வட்டித்தொழிலரின் (Mondy Lenders)தொல் லையும் உயர்ந்த வட்டிவீதங்களும் சிறு வேளாண்மை யினரைத் தங்கள் கடன் தொல்லையிலிருந்து விடுபட நிலங்களைத் துண்டாட வைக்கின்றன. வட்டித் தொழிலர் தீய நடவடிக்கையால் வேளாண்மையின ரைத் தங்கள்பால் சிக்க வைத்து, இறுதியில் வட்டி யோடு முதலுக்காக நில உரிமையைக் கைப்பற்று கின்றனர். நிலம் பிரிக்கப்பட்டு வட்டித்தொழி லருக்குக் கடனுக்கு ஈடாக அளிக்கப்படுவதால் நில உட்பிரிவும் சிதறலும் பெருகுகின்றன.

சமீன்தாரி முறை (Zamindari System) ஒழிக்கப் பட்டுத் தனி மனிதனின் நில உரிமைக்கு இந்திய நிலச் சீர்திருத்தங்களில் கொடுக்கப்பட்ட முன்னுரி மையும் முக்கியத்துவமும் பேரளவு சாகுபடி முறை அழிவுற்று நிலங்கள் சிதறக் காரணமாயின. நில உச்சவரம்புச் சட்டத்தினால் பெருநிலக்கிழார் கள் தங்கள் நிலங்களைப் பிரித்துத் துண்டுபடுத்தினர்

இந்தியாவில் பயிரிடப்படும் நில அளவுகள் சிறி யவை மட்டுமல்லாமல் அவை பல உட்பிரிவுகளுடன் சிதறப்பட்டும் காணப்படுகின்றன. ஓர் உழவன் பயி ரிடும் நிலம் அவன் ஊரகத்தில் பல இடங்களில் சிதறி யிருப்பதால், அவற்றில் தன் முழுக் கவனத்தையும் உழைப்பையும் முதலையும் ஒரே காலத்தில் திறமை யாகச் செலுத்தி, உயர்ந்த பலனைப் பெற இயலாது. சிதறிய நிலங்களை அணுக அலைய வேண்டியிருப்ப தால் பேரளவில் மனிதத் திறனும் உழைப்பும் முத லும் வீணாகின்றன. பல இடங்களிலுள்ள பயிர் நட வடிக்கைகளைத் தன் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க இயலாது. சிறிய துண்டு நிலத்தில் உழு வதற்கான உந்துகள் (Tractor),விதைக்கும் அறுவடை செய்யும் இயந்திரங்கள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்து வதும் இயலாதது. இவற்றைப் பயன்படுத்தினாலும் செலவு வருவாயைவிட மிகுந்து இழப்பை அளிக்கும். இத்தகைய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளை உண் டாக்குவது, கிணறு வெட்டுவது. வேலி அடைப்பது, வடிகால் அமைப்பது, நடைபாதை அமைப்பது போன்றவை பல இடையுறுகளை விளைக்கும். வேலி அடைப்பு, வாய்க்கால் வெட்டுதல் போன்றவற்றி னால் நிலம் மேலும் சிறியதாவதுடன் சண்டையும் உரிமையியல் வழக்கும் (Litigation) முடிவின்றித் தொடர்ந்து கொண்டே செல்லும்.

உட்பிரிவும் நிலச் சிதறல்களும் வேளாண்மையின் உற்பத்திச் செலவை (Cost of Agricultural Production) உயர்த்தி வருவாயைப் பேரளவில் குறைக்கின் றன. இதனால், ஏழ்மையும் வறுமையும் பெருகுகின் றன. பொருளாதார நில அளவைப் பெருக்குதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் (Consolidation of Lands)கூட்டுறவுப் பண்ணை முறையை ஊக்குவித்தல் ஆகியவற்றால் நில உட்பிரிவு, சிதறல்களால் ஏற் படும் தீமைகளை நீக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

பொருளாதார நில அளவான 6 முதல் 10 ஏக் கர் வரையான பண்ணைகள் இந்திய வேளாண்மைக்கு மிகச் சிறந்தனவாகும். இத்தகைய பண்ணைகள் தேவையான வருவாயை அளிப்பதுடன் சிற்றளவில் எந்திரங்களைப் பயன்படுத்தித் தொழில்நுட்ப முறை யைப் பரவலாக்கவும் உதவும். இவை மிகையான முதலாளித்துவ ஆதாயத்திற்கு வழிகாட்டாமல் வேளாண்மையினரின் திறமையை ஊக்குவிக்கத் தகுந்த இயல்பான ஆதாயத்தை அளிக்கும். பொரு ளாதார நில அளவைப் பரவலாக்கும் நோக்கத்தை ஓர் அடிப்படையாகக் கொண்டதே உச்சநில வரம் புத் திட்டம். இத்திட்டத்தின் மூலம் ஒரு நிலக்கிழா ரிடம் குவிந்து கிடக்கும் நிலத்தை அரசு பெற்று அவற்றைச் சிறிய வறுமையுற்ற விவசாயிகளுக்குப் பங்கிட முனைகிறது.

நில ஒருங்கிணைப்புத்(Consolidation of Holdings) திட்டத்தின் கீழ்ச் சிதறிய நிலங்களை ஒருங்கிணைக்க வும் ஊரக நிலங்களை ஒருங்கிணைக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஊரக நிலங்களை வேளாண்மை யினரின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைத்துப் பகுதி பகுதியாகப் (Block)பயிரிடுவது நிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்களில் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பின் பற்றவும் எந்திரங்களையும் இரசாயன உரங்களை யும் பயன்படுத்தவும் முடிவதால், வேளாண்மை உற் பத்தி பெருகுவதுடன் வேளாண்மையினரின் ஆக்கத் திறனும் உயருகிறது. இவற்றின் உற்பத்திச் செலவும் குறைந்து வருவாயும் ஆதாயமும் பெருகுகின்றன. ஒருங்கிணைப்புத் திட்டம் பஞ்சாபு மாநிலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் செயற்படுத்தப்பட்டுள்

ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 45 மிலியன் எக்டேர் நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பஞ்சாபு, அரியானா, உத்தரப் பிரதேசத்தின் மேற்குப் பகுதி ஆகிய இடங்களில் ஒருங்கிணைப்புமுழுமை பெற்றுள்ளது. தென் மாநிலங்களிலும் இராசசுத்தானத்திலும் இத்திட்டத்திற்கான எத்தகைய முயற்சியும் எடுக்கப்படவில்லை. பீகாரிலும் ஒரிசாவிலும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. சில மாநிலங்களில் தன்னியல்பில் (Voluntary) ஒருங்கிணைப்புச் செய்யச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழகத்திலும் கேரளாவிலும் இத்திட்டம் தொடங்கப்படவில்லை.

இவற்றிலிருந்து நில ஒருங்கிணைப்புத் திட்டம் இந்தியாவில் வெற்றிபெற இக்காலச் சூழ்நிலையில் வாய்ப்பில்லை என அறியப்படுகிறது. இதற்கு இந்திய மக்களிடையே காணப்படும் நிலஉரிமைப்பற்றுச் சிறப்புக் காரணம். சிறிய துண்டு நிலமாயினும் சிதறப்பட்ட நிலமாயினும் தங்களுக்கென்று உரிமையுடன் சிறுநிலம் வேண்டுமென்ற மரபியல் விருப்பமுடையவர்களாய் இருக்கின்றனர். மேலும், தலைமுறையாய் வரும் குடும்ப நிலப் பங்கில் தனிக் கவனமும் பற்றும் கொண்டுள்ளனர். நில ஒருங்கிணைப்பைச் செயற்படுத்துவதற்கான நுட்பமேலாண்மைத் திறமை இந்திய அரசுப் பணியாளர்களிடம் போதிய அளவு இல்லை. வளம் நிறைந்த நிலங்கள் தரம் குறைந்த நிலங்களுடன் இணைக்கப்படும்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவல்ல நிருவாகம் அமைக்கபடாததால் ஒருங்கிணைப்புக்கு வேளாண்மையினரிடம் விருப்பமும் ஒத்துழைப்பும் இல்லை. ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்களில் அறுவடையின் பங்கைப் பங்கீடு செய்வதிலும் நில உரிமையைப் பாதுகாப்பதிலும், பல குறைகளும் வேறுபட்ட கருத்துகளும் நிலவுவதால், நில ஒருங்கிணைப்பு வெற்றி பெறாமல் ஆற்றவிழந்து செயற்படுகிறது என ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மைய அரசும் திட்ட வல்லுநர்களும் கூட்டுறவுப் பண்ணை முறை இந்திய வேளாண்மைக்கு நிலையான பல நன்மைகளை வழங்கி, நில உட்பிரிவுச் சிதறல்களினால் ஏற்படும் தீமைகளையும் அகற்றும் எனவும் இந்திய வேளாண்மைத் துறையின் மறுமலர்ச்சிக்குக் கூட்டுறவுப் பண்ணையே சிறந்தது எனவும் அரசின் வேளாண்மைக் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார இழப்பில் ஆதாயமின்றிப் பயிரிடப்படும் நில அளவுகளைக் கொண்ட வேளாண்மையினரை அவற்றிலிருந்து விடுவித்துப் பிற தொழிலுக்கு மாற்றுதல் தேவையான நடவடிக்கையாகும். ஊரக மக்கள் நிலத்தை மட்டுமே பிழைப்புக்கான தொழிலாகக் கொண்டு வாழாமல் பிற தொழில்களில் ஈடுபடும் வகையில் ஊரகங்களில் தொழிற் புரட்சி ஏற்பட வேண்டும். கைவினைத் தொழில்களைப் புதுமைப்படுத்துதல், விரிவாக்குதல், சிறிய தொழிற்சாலைகளை அமைத்தல், கோழிப்பண்ணை, தேனீ வளர்ப்புப் போன்றவற்றை அமைத்தல் முதலியன நிலத்தின் மேல் மட்டும் அழுத்தும் மக்கள் பெருக்கத்தைப் (Pressure of Population on Land) பரவலாக்கி, நில உட்பிரிவையும் சிதறலையும்தவிர்க்க உதவும். இந்திய வாரிசுச் சட்ட முறைப்படி நிலம் துண்டாடப்படுவதை மாற்றி ஒரு குறிப்பிட்ட வரையறைக்குக் கீழ் நிலம் மேலும் பிரிக்கப்படலாகாது எனச் சட்டத்திருத்தம் கொண்டு வரலாம். ஆதாயமின்றி இழப்பைத் தரும் சிறிய பண்ணைகளில் பயிர் செய்வது சட்டத்துக்குப் புறம்பானது (Illegal) எனச் சட்டம் இயற்றிச் செயற்படுவதும் நன்மை பயக்கும். இத்தகைய சட்டமுறைப்படியான நடவடிக்கைகள் முன்னமே அசாம், பீகார், குசராத்து, மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஒரிசா, பஞ்சாபு, இராசசுத்தான், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், மணிப்பூர், திரிபுரா ஆகிய வட இந்திய மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் நடைமுறையில் உள்ளன.

உலக நாடுகளின் பண்ணை நில அளவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தாலும் இந்தியாவில் பயிரிடும் நில அளவுகள் மிகச் சிறியவை என்பதை அறியலாம்.

சப்பான் (Japan) நாட்டில் இந்தியப் பண்ணை அளவுகளையும் விடச் சிறிய அளவு நிலத் துண்டுகளில் பயிரிடுகின்றனர். எனினும், சப்பானியர் (Japanese) திறமைமிக்க தொழில்நுட்ப அறிவாலும் உழைப்பாலும் செறிந்த பண்ணை முறையின் (Intensive Farming) மூலமும் புதிய இரசாயன எந்திரச் சாகுபடி முறைகளைப் பின்பற்றியும் உற்பத்தியைப் பெருக்குகின்றனர். இவற்றிலிருந்து வேளாண்மையினரின் வருவாயைப் பெருக்கவும், மொத்த உற்பத்தியைப் பெருக்கவும் உழவனின் ஆக்கத்திறனும் நிலத்தின் உற்பத்தித் திறனும் உயர வேண்டும் என்பது அறியப்படுகிறது. குறை உற்பத்திக்குப் பயிரிடும் நில அளவுகள் மட்டுமே காரணம் எனக் கூற இயலாது. வேளாண்மையினரின் தொழில்நுட்ப அறிவு, பொதுக் கல்வி, திறமை, இரசாயனம், எந்திரக் கருவிகள், மின்சார ஆற்றல் போன்றவற்றைப் பயன்படுத்தத்தக்க வசதிகள், முதலீடு ஆகியன வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாக்

அட்டவணை - 2

| வ.எண் | நாடுகள் | ஆண்டு | எக்டர் (Hectares) |
|---|---|---|---|
| 1. | ஆசுத்திரேலியா | 1970 | 1993 |
| 2. | அமெரிக்க ஐக்கிய நாடு | 1969 | 158 |
| 3. | பிரிட்டன் | 1970 | 55 |
| 4. | பெல்சியம் | 1970 | 8.4 |
| 5. | யூகோசுலேவியா | 1970 | 5.0 |
| 6. | இந்தியா | 1970 | 2.3 |
| 7. | சப்பான் | 1970 | 1.0 |

(1 எக்டர் = 2.471 ஏக்கர்கள்)

காரணிகளாகும். இவை பெருகினால் சிறிய துண்டு நிலங்களைக் கொண்டும் இந்தியா பசுமைப் புரட்சியில் வெற்றி காண இயலும்.

**உட்புற நடைமுறைக் கோட்பாடு:** வாணிகம் செய்ய வேண்டியோ வேறு நோக்கத்திற்காகவோ பலர் ஒன்று கூடி, நிறுவும் அமைப்பிற்கு நிறுவனம் என்பது பெயர். அவ்வாறு கூடி நிறுவனம் அமைத்தவர்கள் பங்குதாரர்கள் (Share Holders) அல்லது நிறுவனத்தின் உறுப்பினர்கள் (Members) எனப்படுகின்றனர். இவ்வாறு நிறுவப்பட்ட நிறுவனம் அதனை அமைத்த உறுப்பினர்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட ஒரு தனிப்பட்டவர்போலவே இலங்குகிறது.

நிறுவனச் சட்டப்படி நிறுவப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமே சட்டப்பாதுகாப்புக் கொண்டது. நிறுவனம் பதிவு செய்யப்படுகிறபோது அதன் செயல்முறை விதிகளையும் (Articles of Association) அதன் அமைப்பு முறை ஏட்டினையும் (Memorandum) தவறாமல் பதிவு செய்துகொள்ள வேண்டும். எனவே, நிறுவனம் பதிவானவுடன் செயல்முறை விதிகளும் அமைப்புமுறை ஏடும் பொது ஆவணத் (Public Document) தன்மையைப் பெற்று விடுகின்றன. நிறுவனச் சட்டத்தின்படி மிகக் குறைந்த கட்டணம் செலுத்திப் பதிவாளர் அலுவலகத்தில் அவற்றைப் பொதுமக்கள் பார்வையிட்டுக் கொள்ளலாம். நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விழைகிறவர்களை அவற்றைப் படித்தறிந்தவர்களாக நீதிமன்றம் கருதுகிறது. அவர்களைப் பொறுத்து அவற்றில் குறிப்பிடப்பட்டவை கொள்நிலை அறிக்கை (Constructive Notice) ஆகும். பதிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறுவனத்தின் அதிகாரங்களை மட்டுமல்லாமல், அதன் இயக்குநர்களின் அதிகாரங்களையும், அவர்களின் அதிகாரவரம்பினையும், அத்தகைய அதிகாரங்கள் மீது செயல்முறை விதிகளில் அல்லது வரையறைகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் அறிந்தவர்களாகவே சட்டம் கருதுகிறது. கோட்லா வேங்கடசாமி எ. இராமமூர்த்தி (ALR.MAD 579) என்ற வழக்கில் இந்தக் கொள்கை விளக்கப்பட்டுள்ளது.

செயல்முறை விதிகளில் கூறியுள்ளபடி எல்லா ஒப்பாவணங்களிலும் (Deeds) மேலாண்மை இயக்குநரும் செயலாளரும் கையெழுத்திட வேண்டும். ஆனால், வழக்கில் செயலாளர் மட்டும் கையெழுத்திட்ட ஒப்பாவணத்தைப் பெற்றுக் கொண்ட ஒருவர் அத்தகைய ஒப்பாவணத்தால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்த இயலாது என்றும், அந்த ஒப்பாவணத்தில் மேலாண்மை இயக்குநரும் கையெழுத்திட வேண்டும் என்பது அவருக்குக் கொள்நிலை அறிக்கையாகும் என்றும் நீதிமன்றம் கூறியது.

இதனால், நிறுவனத்தின் உட்புற நடைமுறைகள் (Internal Proceedings) ஒழுங்குறக் கடைப்பிடிக்கப்பட்டனவா அல்லவா என்பதை நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் அறியவேண்டும் என்பதில்லை. மாறாக, நிறுவனம் அவற்றைப் பின்பற்றாவிடினும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறுவனத்தின் அத்தகைய தவறினால் பாதிக்கப்படு

வதில்லை. இதுவே உட்புற நடைமுறைக் கோட்பாடு (Doctrine of Indoor Management) என்று கூறப்படு கிறது.

உட்புற நடைமுறைக் கோட்பாடு மிகவும் புகழ் பெற்ற பிரிட்டிசுப் பேரரசு வங்கி எ. தர்கோந்து (Royal British Bank Vs Turquand (1856)119,E.R. 886) வழக்கில் தெளிவாக விளக்கப்பட்டது. எனவே நிறுவனத்தின் உட்புற நடைமுறை நடவடிக்கை களைப்(Internal Proceeding) பொறுத்து அனைத்தும் ஒழுங்குற நிறைவேறியுள்ளதாக நிறுவனத்துடன் தொடர்பு கொள்கிற வெளியார் ஊகித்துக் கொள் ளும் உரிமை படைத்தவர்கள் என்பது இந்த வழக் கினின்றும் பெறப்பட்டது. தர்கோந்து என்பவருக் குக் கடன் பத்திரம் வழங்கி, இயக்குநர்கள் நிறுவ னத்திற்காகக் கடன் பெற்றிருந்தனர். இயக்குநர் களுக்கு அத்தகைய அதிகாரத்தை வழங்கி நிறுவ னம் தனித் தீர்மானம் இயற்றவே இல்லை. எனி னும், வழக்கு மன்றம் அத்தகைய தனித்தீர்மானம் இயற்றப்பட்டு, அதன் அடிப்படையிலேயே இயக்கு நர்கள் இயங்கினார்கள் என்று ஊகித்துக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள் என்று தீர்ப்பளித்து, அந்தக் கடன் பத்திரத்தின் மூலம் நிறுவனத்தைக் கட்டுப் படுத்தியது. இந்த வழக்கில் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்கள் பதிவான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி விதிகளுக்கு முர ணாகச் செயல்முறைகள் நடைபெறாத போது, உட் புற நடைமுறை நடவடிக்கைகள் ஒழுங்குற நடை பெற்றுள்ளனவா என்று விசாரித்தறிந்து கொண்டு செயற்பட வேண்டியதில்லை என்பதும் கூறப்பட்டது.

இந்த உட்புற நடைமுறைக் கோட்பாட்டினை நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறு வனத்துக்கெதிராகப் பயன்படுத்திக் கொள்ள முடி கிறது. மாறாக, கொள்நிலை அறிக்கைக் கோட்பாடு (Doctrine of Constructive Notice) நிறுவனத்தினால் அதனுடன் தொடர்பு கொள்பவர்களுக்கெதிராகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே உட்புற நடைமுறைக் கோட்பாட்டில் நிறுவனத்தின் அதிகாரிகள் நிறு. வனத்தை நடத்தும் முறையைப் பற்றி, நிறுவனத் துடன் தொடர்பு கொள்ளும் வெளியார்கள் அறியத் தேவையில்லை என்பது தெளிவு. இந்தக் கோட்பாடு நியாயத்தின் அடிப்படையிலும் நடைமுறை வசதிக் காகவும் அமைந்தது. செயல்முறை விதிகளும் அமைப்பு முறை ஏடும் பொதுமக்கள் பார்வைக்குப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பொது ஆவணங்களாகும். ஆனால், உட்புற நடவடிக்கைகள் பொது மக்கள் பார்வைக்கு உள்ளாவதில்லை. எனவே தான், வெளியார் நிறுவனத்தின் அமைப்பு முறை யைப் பற்றி அறிந்திருப்பதாக ஊகிக்க முடியும். ஆனால், அதே சமயம் அவர்களுடைய பார்வைக்குப் படாத நிறுவனத்தின் நடைமுறைகள் பற்றி அவர்கள் அங்ஙனம் அறிந்திருக்க இயலாது. நிறுவனத்தின் உட்புற நடைமுறைகள் பற்றி அதனுடன் தொடர்பு கொள்பவர்கள் ஆராய்ந்தறிய வேண்டுமானால் வாணிகம் எளிதாக நடைபெற இயலாது. பேராசிரி யர் கோவர் (Professor Gower) இது பற்றி, வரம் பற்ற நிறுவனத்தின் கடனாளர்களுள் பெரும்பாலா னோர் நிலை முன்னமே மகிழ்ச்சிக்குரியதாக இல்லா நிலையில், அத்தகைய நிறுவனத்தின் சார்பில் செயற் பட அதிகாரம் படைத்தவர்களின் அதிகாரத்தை மறுத்துத் தன்னைப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ள நிறுவனம் முயலுமானால், அத்தகைய கடனாளர்களின் நிலை மேலும் அவலநிலைக்குரிய தாகும்' என்று தெளிவாக விளக்குகிறார்.

நடைமுறை வசதிக்காகவும் நியாயத்தை நிலை நாட்டவுமே பெரும்பாலான வழக்குகளில் இந்த உட் புற நடைமுறைக் கோட்பாடு பயன்பட்டுள்ளது. இந்தக் கோட்பாடு நூறாண்டு பழமையானது. பொருளாதார, சமுதாய வாழ்வில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கிற இக்காலத்தில் அதனுடைய நோக்கம் விரிவடைந்துள்ளது. ஆனால், சில விதி விலக்குகளுக்கு (Exceptions to the Rule) உள்ளடங் கியே இந்தக் கோட்பாட்டினை வழக்குமன்றங்கள் செயல்முறைப்படுத்துகின்றன.

1. ஒழுங்கீனம் தெரிந்திருந்தும் வாளாவிருத்தல்: ஓவர்டு எ. பேட்டெண்டு தந்தத் தொழிற்சாலை (Howard Vs Patent Ivory Manufacturing Co., (1888) 38. Ch.D. 156) வழக்கில் ஆயிரம் பவுன்களுக்கு மேல் கடன் வழங்க வேண்டுமானால், இயக்குநர்கள் நிறு வனத்தின் அனுமதி பெற வேண்டும் என்பது செயல் முறை விதிகளில் உள்ளது. ஆனால், அத்தகைய அனு மதி இல்லாமலேயே இயக்குநர்களே 3,500 பவுன் கடன் வழங்கி, நிறுவனத்திற்கு கடனீட்டுப் பத்திரங் கள் பெற்றுக் கொண்டனர். அந்தக் கடனீட்டுப் பத்தி ரங்கள் 1000 பவுன் வரைதான் செல்லும் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. தவற்றை உணர்ந்தும் தாங் களே தவற்றுக்குக் காரணமாயிருந்துவிட்ட இயக்கு நர்களுக்கு, உட்புற நடைமுறைக் கோட்பாட்டுத் தத்துவம் பயனளிக்கவில்லை என்பது கண்கூடு.

2. ஒழுங்கீனம் பற்றிய ஐயுறவு: ஓர் ஒப்பந்தம் ஏற் படுகிற சூழ்நிலைகள் பற்றி ஐயம் ஏற்படின் விசாரித்து அறிதல் அவசியம். நிறுவனத்தின் சொத்தை (Pro- perty) உரிமை மாற்றம் செய்யும் அதிகாரம் இல்லாத கணக்காளர் (Accountant) நிறுவனத்தின் சொத்தை உரிமை மாற்றம் செய்த சூழ்நிலை ஐயுறத்தக்கது

என்று ஆனந்து பிகாரிலால் எ. தீன்சா மற்றும் நிறுவனம் (Anand Biharilal Vs Dinshaw and Co. Air 1942 Oudh 417) வழக்கில் நீதிமன்றம் முடிவு செய்தது.

3. பொய்யாவணம் புனைதல்: உட்புற நடவடிக்கைகள் பற்றி நிறுவனத்தின் தொடர்பாளர் ஆய்ந்து அறிய வேண்டியதில்லை என்பது உட்புற நடைமுறைக் கோட்பாட்டில் கூறப்பட்டுள்ளது. ஆயினும், புனைந்துரைக்கப் பட்ட ஆவணங்கள் பற்றி ஆய்ந்தறிதல் முக்கியமாகும். பொய்யாவணம் (Forged Document) எப்பொழுதும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்பதனை உரூபன் எ. மாண்புமிகு பிங்கல் ஒன்றியம் (Ruben Vs Great Fingall Consolidated Ltd, 1906. A.C. 439) வழக்கும் பிற வழக்குகளும் தெளிவாக்கியுள்ளன.

4. வெளிப்படை அதிகாரத்திற்கு மீறிய செய்கைகள்: நிறுவனத்திற்குரிய காசோலைகளைத் (Cheques) தன்னுடைய தனிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளும்படி நிறுவனத்தின் இயக்குநர் கூறியது – அவருடைய அத்தகைய அதிகாரம் வழக்கத்தை மீறியதாகையால், அது நிறுவனத்தைப் பாதிக்க இயலாது என்று ஏ.எல். அண்டர்வுடு எ. இலிவர்ப்பூல் வங்கி (A.L. Underwood Ltd Vs Bank of Liverpool (1924) I.K. B. 775) வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

5. தனித்தீர்மானம் தேவைப்படுதல்: நிறுவனத்தின் செய்கைக்குத் தனித்தீர்மானம் தேவைப்படின், நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுவோர் பதிவாளர் அலுவலகத்தில், அத்தகைய தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரத்தைக் கண்டறிய முடியும். எனவே, அத்தகைய செய்கைகள் தனித்தீர்மானமின்றிச் செய்யப்பட்டால் அவை நிறுவனத்தைக் கட்டுப்படுத்த இயலா.

6. அமைப்பு முறை ஏடு செயல்முறை விதிகளில் உள்ளவற்றை அறியாதிருத்தல்: பொதுவாக, செயல்முறைவிதிகள் அளிப்படைவு அதிகாரம் (Delegation of Power) பற்றி விளக்கியிருக்கும். நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு தனிப்பட்ட இயக்குநர் ஒருவருக்கு நிறுவனத்தின் சார்பில் இயக்குநர் ஒப்பந்தம் செய்ய, 'அளிப்படைவு அதிகாரம்' வழங்கவல்லது என்பதனை அறிந்திருந்த ஒருவருடன், நிறுவனத்தின் சார்பில் அத்தகைய தனிப்பட்ட இயக்குநர் செய்து கொண்ட ஒப்பந்தம், நிறுவனத்தைக் கட்டுப்படுத்த வல்லது என்று ஆட்டன் மற்றும் நிறுவனம் எ. நோதார்டு, உலோ மற்றும் வில்சு (Houghton and Co Vs Nothard, Lowe and Wills Ltd (1927) 1.K.B.246) வழக்கில் கூறப்பட்டது. அத்தகைய வெளியார் அந்த இயக்குநருக்கு அளிப்படைவு அதிகாரம் வழங்கப்பட்டு விட்டதாக ஊகித்துக் கொள்ள உரிமைபடைத்தவர் என்று தெளிவாக விளக்கப்பட்டது. ஆனால், அந்தவெளியாரே செயல்முறை விதிகளில் உள்ள அளிப்படைவு அதிகாரம் பற்றி அறியாதவராக இருப்பின், அவருக்கு மேற்சொன்ன உரிமை கிடையாது என்றும் அந்த வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்பட்டது. எனவே, செயல்முறை விதிகளை நன்கறிந்துள்ளவரே அத்தகைய உரிமை படைத்தவர் என்றும் அந்த வழக்கில் சொல்லப்பட்டது.

நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு, செயல்முறைவிதிகள் ஆகியன பற்றி நன்கறிந்தவர்தாம் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தலாமென்பது தெரிகிறது. ஆனால், பிரிட்டிசு தாம்ப்சன் ஊசுடன் நிறுவனம் எ. இணைந்த ஐரோப்பியவங்கி (British Thompson Houston Co. Vs Federated European Bank Ltd (1932) 2.K.B. 176.) போன்ற வேறு சில வழக்குகளில் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகள் பற்றி அறவே அறிந்திருக்கத் தேவையில்லை என்பதும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றினின்றும் கீழ்க்காணுமாறு தெளிவு பெறலாம்:

1. அதிகாரியின் செய்கை வழக்கமான அதிகாரத்திற்கு உட்பட்டதாயின் நிறுவனம் அதற்குக் கட்டுப்படும். இச்செய்கைகளுக்காக நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் வெளியார் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகளை அறிந்திருந்தால்தான் நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதில்லை.

2. மாறாக, அதிகாரியின் செய்கை அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாயின், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தத் தொடர்பு கொள்ளும் வெளியார் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகளை அறிந்திருத்தல் தேவையாகிறது.

இறுதியாக நிறுவனச் சட்டம் 610-ஆம் விதி அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகள் முதலான பொது ஆவணங்களைப் பதிவாளர் அலுவலகத்தில் ஆய்ந்தறிய (Inspection) வழி வகை செய்திருப்பதால், நிறுவனத்துடன்தொடர்பு கொள்பவர்கள் அவற்றை நன்கு கண்டறிந்துகொண்டு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதும், ஆனால் செயல் முறைவிதிகளில் கூறப்பட்டுள்ள நிறுவனத்தின் உட்புற நடவடிக்கைகள் முறையாக ஒழுங்காக நடந்தேறியிருக்கும் என்று அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம் என்பதும் தெளிவாகின்றன. மேற்சொன்ன விலக்குகளுக்கு (Exceptions) உட்பட்டே அவர்கள் அவ்வாறு ஊகிக்

கும் உரிமைபடைத்தவர்கள் என்பதனை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் விளக்குகின்றன.

**உட்ரெக்ட்டு** என்பது நெதர்லாந்து நாட்டிலுள்ளதொரு நகரம். இந்த நகரம் இரைன் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. ஆம்சுடர்டாம் நகருக்குத் தென்கிழக்கில் 35 கி.மீ. தொலைவில் உள்ள இந்த ஊரைத் தூபிகளும் பாலங்களும் மிகுதியாக உள்ள நகரம் (City of Spires and Bridges) என்பர். இங்குள்ள எண்ணற்ற திருச்சபைகளின் தூபிகளும், இந் நகரத்தில் கட்டப்பட்டுள்ள பாலங்களுமே இப்பெயருக்குக் காரணமாகும். உட்ரெக்ட்டுச் (Utrecht) சாலையில் வைக்கப்பட்டுள்ள ஒருவகை மரம் மலிபான் (Maliebaan)எனப்படும்.இம் மரமறுக்கும் ஆலைகள், இயந்திரக்கூடங்கள், சாராய உற்பத்திச் சாலைகள், சமுக்காள வேலை மையங்கள், வெல்வெட்டுத் துணி ஆலைகள், பஞ்சாலைகள், நார்மடி ஆலைகள், இசைக்கருவிகள் செய்யும் தொழிற்கூடங்கள் ஆகியவை இங்கு மிகுதியாகவுள்ளன.



உட்ரெக்ட்டு நகரம்

இத்தொன்மையான நகரத்தை மையமாகக் கொண்டு பல சுவையான நிகழ்ச்சிகளைக் கூறுவர். நெதர்லாந்து நாட்டின் வடக்கிலுள்ள ஏழு மறுப்புரையாளர்(Protestants)மாநிலங்கள் உட்ரெக்ட்டில் தான் கி.பி.1579-ஆம் ஆண்டு ஒன்றாய் இணைந்தன. இவ்விணைப்பின் விளைவாய் உருவாக்கப்பட்டதே நெதர்லாந்து நாடாகும். இசுபானிய வாரிசுரிமைப் போர் முடிந்தவுடன் உடன்படிக்கையொன்று உட்ரெக்ட்டு நகரில்தான் கி.பி. 1713-ஆம் ஆண்டில் கையெழுத்தாயிற்று. இந்த உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்க பன்னாட்டு அமைதி உடன்படிக்கையாகும். இதன் தொடர்பான மாநாடு கி.பி. 1712 -ஆம் ஆண்டிலேயே உட்ரெக்ட்டில் தொடங்கியது. அப்போது இசுபானிய வாரிசுரிமைப் போர் முடியும் தறுவாயில் இருந்தது. அன்றைய முக்கிய ஐரோப்பிய நாடுகளின் பேராளர்கள் இம்மாநாட்டில் திரண்டிருந்தனர். அவர்கள் உட்ரெக்ட்டு உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு கி.பி. 1713-இல் கையெழுத்திட்டனர்.

உட்ரெக்ட்டு உடன்படிக்கை ஐரோப்பாவில் பல மாறுதல்களைச் செய்தது. இது நாடுகளிடையே சக்தி சமன்நிலையை நிலைநாட்ட முயன்றது. இங்கிலாந்தின் குடியேற்றம், வணிகவியல் சக்தி ஆகியவற்றைப் பெருக்க வழிவகை செய்தது. பிரெஞ்சுக்காரரான ஆஞ்சு பிரபுவை இசுபெயின் அரசராக இவ்வுடன்படிக்கை ஏற்றுக்கொண்டது. எனினும், பிரான்சையும் இசுபெயினையும் இணைத்து ஓரரசர் ஆட்சி செய்தலைப் பிரான்சு ஏற்க மறுத்தது. இசுபெயினிடமிருந்து சிப்ரால்ட்டரையும்(Gibraltar)மினார்க்காவை (Minorca)யும் இங்கிலாந்து பெற்றது. இசுபானியக் குடியேற்றப் பகுதிகளில் ஆப்பிரிக்க அடிமைகளைக் கொணர்ந்து வழங்கும் ஒப்பந்தத்தை இங்கிலாந்து நாட்டிடமே ஒப்படைத்தது. சவாய்க் கோமகன் இசுபானியத் தீவான சிசிலியைக் (Sicily) கைப்பற்றிக் கொண்டார். மிலான் (Milan), நேபில்சு (Naples), சார்டீனியா (Sardinia) கத்தோலிக்க நெதர்லாந்து (Catholic Netherland) போன்ற பகுதிகளை இசுபெயினிடமிருந்து ஆசுத்திரியா பெற்றது. பிரெஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தன் எல்லைப்புற நகரங்களைக் காத்துக்கொள்ளப் படைவீரர்கள் படைக் கருவிகள் பெற நெதர்லாந்து உரிமைபெற்றது.

அமெரிக்காவிலுள்ள பல இடங்கள் இவ்வுடன் படிக்கையின் பயனாக இங்கிலாந்துக்குக் கிடைத்தன. நோவாசுகோசியா (Novascotia), நியூபவுண்டுலாந்து (Newfoundland), அட்சன் விரிகுடாப் பகுதி (Hudson Bay Territory) போன்ற கனடாவிலிருந்த பகுதிகளை இங்கிலாந்து பிரான்சினிடமிருந்து பெற்றது. எனினும் குவிபெக்கு (Quebec) நகரத்தைப் பிரான்சே வைத்துக் கொண்டது. உட்ரெக்ட்டின் மக்கள் தொகை 2,34,543 (1982).

**உட்ரோ வில்சன்**: ஐக்கிய அமெரிக்க நாட்டின் இருபத்தெட்டாம் குடியரசுத் தலைவரும்,

சிறந்த குறிக்கோள்களையுடைய அமெரிக்க அரசியலறிஞரும், முதல் உலகப் போரில் அமெரிக்க நாடு சேர்தற்குக் காரணமாக இருந்தவரும், பாரிசு அமைதி மாநாட்டில் அனைத்துலகச் சங்கம் அமைக்கப்படுவதற்கு மிகுந்த ஆதரவளித்தவருமான உட்ரோ தாமசு வில்சன் (Woodrow Thomas Wilson), வெர்சினியா மாநிலத்தில் கி.பி. 1856–ஆம் ஆண்டில் சோசப்பு ரகில்சு வில்சன் என்னும் பிரசுபிட்டீரிய சமய குருவின் மகனாகப் பிறந்தார். தகப்பனாருடைய பணிந்து போகாத இயல்பு மகனிடத்திலும் காணப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போர் நடந்தபோது இவர் போரில் அழிவுக்குள்ளான சார்சியா (Georgia), தென் கரோலினா (South Corlina) முதலிய மாநிலங்களிலிருந்தார். பிற்காலத்தில் பிரின்சுடன் பல்கலைக்கழகமாக (Princeton University) வளர்ந்த கல்லூரியில் இவர் சேர்ந்து பயின்று, சொற்போர்களிலும் இலக்கியத் தொடர்பான செயல்களிலும் மாணவர் உடற்பயிற்சி நிருவாகத்திலும் பங்கு கொண்டு பட்டதாரி ஆனார். கல்லூரி மாணவராக இருந்தபோதே இவர் முக்கிய அமெரிக்க நாட்டின் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் (U.S. Congress) செயற்பட்டு வருகின்ற குழுமுறையைப் பற்றி நன்கு ஆய்வு செய்து வெளியிட்ட ஒரு கட்டுரை, இவர் பிற்காலத்தில் ஓர் அரசியற் சிந்தனையாளராக வருவாரென்பதைக் காட்டிற்று. சிறிது காலம் சட்டம் பயின்று, வழக்கறிஞராக அட்லாண்டாவில் பணி செய்த பின்னர், அரசாங்க அமைப்புகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, சான்சு ஆப்கின்சு பல்கலைக்கழகத்தில் (Johns Hopkins University) கி.பி. 1886–ஆம் ஆண்டில் முனைவர் (Ph. D.) பட்டம் பெற்றார். இவர் எழுதிய ஆராய்ச்சி நூல் அமெரிக்கச் சட்டமன்ற அரசாங்கம் (Congressional Government) என்பதாகும். சட்டமன்றக் குழுக்களின் குறைகளையும் அவற்றாலுண்டாகும் இடர்ப்பாடுகளையும் இவர் வன்மையாக இடித்துரைத்தார். சிலகாலம் இவர் பிரின்மார் கல்லூரியில் (Bryn Mawr College) வரலாற்று, அரசியல் பொருளாதாரப் பேராசிரியராகப் பணி செய்தார்; பின்னர்ப் பிரின்சுடனிலேயே பேராசிரியராகப் பணி செய்தார். அங்கு இவர் அக்கால அரசியல் கேள்விகளைப்பற்றி ஆய்வு செய்து விரிவுரைகளாற்றியும், கட்டுரைகள் வெளியிட்டும் புகழ் பெற்றார். ஆகையால், நியூசெர்சி மாநில 'ஆளுநர் பதவிக்கு நடந்த தேர்தலில் குடியாட்சிக் கட்சியினால் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார். இப்பதவியில் இவருடைய கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியினால் புகழ் வளரவே, 1912–ஆம் ஆண்டில் இவர் தேசிய அரசியலில் கலந்துகொண்டு, குடியாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, 1913 முதல் 1917 வரை முதல் முறையும், 1917 முதல் 1921 வரை இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவராகப் பணி செய்தார்.



உட்ரோ வில்சன்

வில்சனின் பணிகள்: வில்சன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சட்டமன்றத்துக்குத் தமது செய்தியை நேரிலேயே உரையாற்றித் தெரிவித்தார்; தம் நோக்கங்களைச் சட்டங்களாக ஆக்குவதற்குத் தனிப்பட்ட ஆளவை (Senate) உறுப்பினர்களையும், பேராளர் மன்ற உறுப்பினர்களையும் கண்டு பேசினார். சுங்க வரிகளைக் குறைப்பதற்கு 'அண்டர் உட் சுங்கவரி' (Underwood Tariff) என்னும் சட்டத்தை நிறைவேற்றினார். சுங்கவரி நிதிக்குறைவை ஈடு செய்யும் பொருட்டுக் கூட்டாட்சி வருமானவரி விதிக்கப்பட்டது. தனியார் வங்கி நிறுவனத்தின் சருவாதிகாரப் போக்கைத் தடுப்பதற்காகக் கூட்டாட்சி இருப்பு நிதிக்கழகம் (Federal Reserve Board) ஒன்று நிறுவப்பட்டது. வாணிகத்தில் போட்டி நிலைகளை உண்டாக்குதற்காகக் கூட்டாட்சி வாணிக ஆணையம் (Federal Trade Commission) நிறுவப்பட்டது. தொழிலாளர் தகராறுகளில் நீதிமன்றத் தடையாணைகள் கையாளுதலைத் தவிர்த்தும், வேலை நிறுத்தங்களையும் பொருள் புறக்கணிப்புகளையும் (Boycotts) சட்டப்படியான வழிகளாக ஆக்கியும்

ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இவற்றால் ஒரு புதிய சமூக, பொருளாதாரச் சூழ்நிலை உருவாயிற்று.

அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் வில்சன் வலுவற்ற நாடுகளுக்கெதிராக இராணுவ வலிமையைக் கையாளுதலைக் கைவிட்டு, சிறிய நாடுகளின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் கவனமான மதிப்புக் கொடுத்தார். அமெரிக்கக் குடியேற்ற நாடாகிய பிலிப்பைன்சின் மக்களைத் தன்னாட்சி பெறுதற்குத் தகுதியுடையவர்களாக ஆக்கினார். பனாமாக் கால்வாய் வழியைப் பயன்படுத்தும் அமெரிக்கக் கப்பல்கள் சுங்கம் செலுத்துதலினின்றும் விலக்கு அளிக்கப் பெற்றிருந்ததை வில்சன் மறுத்து, தம் நாட்டுக் கப்பல்களும் சுங்கம் செலுத்துதல் வேண்டுமென்று விதித்தார். கரிபியக் கடல் நாடுகளில் (Carribbean Sea States) தோன்றிய கலகச் சூழ்நிலைகளை அமெரிக்க அரசாங்கம் கண்காணித்து, எய்ட்டி தீவில் (Haitti) காப்பு அரசாங்கத்தை நிறுவிற்று; சான் தொமின்கோவிலும் (San Domingo) அமெரிக்காவின் கண்காணிப்புக்கு உட்பட்ட இராணுவ அரசாங்கம் நிறுவப்பட்டது. மெக்சிகோவில் நடைபெற்ற சருவாதிகார ஆட்சிஆங்குள்ள அமெரிக்க வணிகர் நலனைப் பாதித்தமையால் வில்சன் அந்நாட்டு நடவடிக்கைகளைக் கண்காணித்தார். முதல் உலகப் போரில் அமெரிக்க நாட்டின் நடுவு நிலையைப் பாதுகாத்தற்கே வில்சன் முயன்றார். போரில் இரு கட்சியாருக்குமிடையே நல்லிணக்கம் ஏற்படுத்துதற்கும் இவர் நடவடிக்கை எடுத்தார்; போரில் பிரிட்டனுக்குச் செல்லும் நடுவுநிலைக் கப்பல்களையும் அழிப்பதாகச் செருமனி அச்சுறுத்தியபோது, வில்சன் நடுவுநிலை உரிமைகளைச் செருமனி மதித்தல் வேண்டுமென்று வற்புறுத்தினார். பல தடவைகளில் செருமனி நடுவுநிலைக் கப்பல்களைத் தாக்கி அழித்தபோதும், கூடுமானவரை வில்சன் பொறுமையைக் கடைப்பிடித்தார். எனினும் பயணிகள், பொருள்கள் ஆகியவற்றைச் சுமந்து சென்ற கப்பல்களைச் செருமனிய நீர்மூழ்கிகள் தொடர்ந்து தாக்கவே, வேறு வழியின்றி 1917 ஏப்பிரலில் ஐக்கிய அமெரிக்க நாட்டைப் பிரிட்டன் சார்பாகப் போரிலிறங்குமாறு செய்தார். இவர் 1918 சனவரி 8-ஆம் நாள் நிலையான அமைதி உடன்படிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்டுத் தம் புகழ்மிக்க பதினான்கு குறிப்புகளை வெளியிட்டு விளக்கினார்.

செருமனியர் 1918, அக்டோபரில் தோல்வியை எதிர் நோக்கிய சூழ்நிலையில் வில்சனின் பதினான்கு குறிப்புகளை ஏற்றுக் கொள்ளுவதாக உறுதி கூறினர். ஒரு சிலவற்றைத் தவிர மற்றவற்றைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகப் பிரிட்டனும் பிரான்சும் வாக்குறுதி அளித்தன. ஆயினும் 1918-இல் அமெரிக்க ஆளவை மன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் இவருக்கு எதிரான குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மையாளராக வரவே, ஆளவைமன்ற அயல் உறவுக்குழு இவர்தம் எதிரிகளையுடையதாக ஆயிற்று. எனினும், இவர் தம் குறிப்புக்ளுக்கு ஆதரவு தேடிப் பாரிசு அமைதி மாநாட்டுக்குச் சென்றார். இவருடைய கோட்பாடுகள் குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை, நண்பர்களுக்கும் பகைவருக்கும் நீதிவழங்குதல், அனைத்துலகச் சங்கத்தின் வாயிலாகப் பாதுகாப்பு முதலிய ஒன்றுக்கொன்று தொடர்பான நோக்கங்களைக் கொண்டிருந்தன. மொத்தத்தில் இவருடைய கருத்துகளை ஐரோப்பிய நாடுகள் பாராட்டினாலும், தத்தம் நோக்கத்தைப் பொறுத்தவரை அவை இவர்தம் நோக்கங்களோடு மாறுபட்டு நின்றன. அனைத்துலகச் சங்கத்தை நிறுவுதல் வேண்டுமென்றும், அது அமைதி உடன்படிக்கைகளின் பாகமாக இருத்தல் வேண்டுமென்றும் இவர் கூறிய கருத்து பாரிசு மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது; ஆனால், இதன் பொருட்டு நாடுகளின் ஆதரவைப் பெறுதற்காக இவர் அவற்றின் பொருளாதார, நிலத் தொடர்பான கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. இவர் 1919 சூன் மாதத்தில் நாடு திரும்பியதும், ஆளவை மன்றத்தின் எதிர்ப்பை வென்று, தம் திட்டத்துக்கு (அமைதி உடன்படிக்கைக்கும் சங்கத்துக்கும்) ஆதரவு தேடும் பொருட்டுப் பல கூட்டங்களில் உரையாற்றினார்; இதனால், இவருடைய உடல் நலம் கெட்டது. ஆளவை மன்றத்தில் 1920, மார்ச்சு 20-இல் நடைபெற்ற வாக்கெடுப்பில் வில்சனின் அமைதி உடன்படிக்கைக்கும் அமெரிக்கா சங்கத்தில் சேருதல் வேண்டுமென்ற தீர்மானத்துக்கும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாமற்போகவே, வில்சனால் தோற்றுவிக்கப்பட்ட சங்கத்தில் இவருடைய நாடு உறுப்பினராகாமல் ஒதுங்கிவிட்டது. வில்சனுக்கு 1919-ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. இவர் 1921 மார்ச்சு மாதம் தமது பதவிக் காலம் முடிவடைந்ததும், அரசியலில் ஈடுபடாமல் அமைதியாகக் கொலம்பியா மாவட்ட வாசிங்டன் நகரத்தில் வாழ்ந்து, 1924-ஆம் ஆண்டில் காலமானார்.

**உட்ரோ வில்சனின் பதினான்கு கோட்பாடுகள்:** முதலாம் உலகப்போர் ஒருபுறம் செருமனி, ஆசுத்திரியா-அங்கேரி, பல்கேரியா, துருக்கி முதலிய நான்கு நாடுகளுக்கும், மறுபுறம் பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலியவற்றுக்குமிடையே (1914-1918) நடைபெற்றது. செருமனியும் அதன் கூட்டுநாடுகளும் தோற்கடிக்கப்

பட்டன; வெர்சே உடன்படிக்கைதான் (Treaty of Versailles) முதல் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த அமைதி உடன்படிக்கைகளுள் முக்கிய மானது ஆகும். இந்த உடன்படிக்கைக்கு ஆதார மாக அமைந்ததுதான் ஐக்கிய அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் வரைந்த பதி னான்கு கோட்பாடுகள் (Fourteen Points of President Woodrow Wilson of the U.S.A.) ஆகும்.

பதினான்கு கோட்பாடுகள்: 1) நாடுகளுக் கிடையே இரகசியமான ஒப்பந்தங்கள் இருத்தல் கூடாது. 2) கடல்வழிகளைப் பயன்படுத்துவதற்கு எல்லா நாடுகளுக்கும் சுதந்தரம் இருத்தல் வேண்டும். 3) பொருளாதாரத் துறையில் நாடுகளுக்கிடையே உள்ள தடைகள் (Barriers) நீக்கப்படுதல் வேண்டும். 4) போர்க் கருவிகளெல்லாம் மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கப்படுதல் வேண்டும். 5) குடி யேற்ற நாடுகளிலுள்ள மக்களின் நலனையும் அவற்றை ஆளுகின்ற அரசாங்கங்களின் உரிமைகளை யும் தீர்மானித்து, அக்குடியேற்ற நாடுகளின் உரிமை களை ஓரஞ்சாராமல் தீர்மானித்தல் வேண்டும். 6) உருசியமக்களின் விருப்பத்துக்கிணங்க நிறுவப் பட்ட நிறுவனங்களின் வாயிலாக உருசியா வளர்ச்சி அடைவதற்கும், மற்ற நாடுகளோடு அதற்கு நல் லுறவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். 7) பெல்சியம் நாட்டிலிருந்து அயலவர் படைகள் விலக்கப்பட்டு, அது முன்போலச் சுதந்தர நாடாக அமைதல் வேண்டும். 8) போருக்கு முன்பு செருமனி யினால் பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்ட அல்சேசு-லொரெய்ன் (Alsace-Lorraine) மாகாணங்களைப் பிரான்சுக்கே திருப்பி அளித்தல் வேண்டும். 9) இத்தாலிய நாட்டின் எல்லைப்புறங்கள் (Frontiers) மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். 10) ஆசுத்திரியா –அங்கேரி நாட்டில் சேர்க்கப்பட்டிருந்த சுதந்தரமற்ற சார்பு மக்கள் சுதந்தர மக்களாக ஆக்கப்படுதல் வேண்டும். 11) பால்கன் நாடுகளின் எல்லைகளெல் லாம் வரலாற்று எல்லைகளின் (Historical Lines) அடிப்படையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். 12) உதுமானியப் பேரரசில் (Ottoman Empire) சேர்க்கப்பட்டிருந்த துருக்கியரல்லாத மக்கள் வாழும் நிலங்களெல்லாம் சுதந்தரமான வளர்ச்சி பெறுவதற் குரிய வாய்ப்புகள் அளிக்கப்படுதல் வேண்டும். 13) ஐயத்திற்கிடமில்லாத வகையில் போலிசு (Polish) மக்கள் குடியிருக்கிற நிலப்பகுதிகளை இணைத்து ஒரு சுதந்தரப் போலந்து நாடு உருவாக்கப்படுதலும், அதற்குக் கடலோடு இணைப்பை ஏற்படுத்துதற்கு ஓர் இடைவழி (Corridor) ஏற்படுத்தப்படுதலும் வேண்டும். 14) நாடுகள் ஒன்றுக்கொன்று மற்றதன் அரசியற் சுதந்தரத்துக்குப் பொறுப்புடனிருக்கும் பொருட்டுத் திட்டவட்டமான ஒப்பந்தங்களினடிப் படையில் ஒரு பன்னாட்டுக் கழகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

பதினான்கு கோட்பாடுகளின் அரசியல் முக்கியத் துவமும் அவை செயற்படுத்தப்பட்ட விதமும்: குடி யேற்ற நாடுகளுக்குச் சுதந்தரம், எல்லா நாடுகளின் சுதந்தரத்துக்கும் பாதுகாப்பு, நாடுகளுக்கிடையே நல்லுறவு, ஒத்துழைப்பு, அமைதி ஆகிய நல்ல குறிக் கோள்களுடன் வரையப்பட்டவையே பதினான்கு கோட்பாடுகளாகும். ஆகையால், பதினான்கு கோட் பாடுகளும் அரசியல் முக்கியத்துவமுடையவையே யாகும்.

ஆனால் இவற்றுள் சிலவற்றைத் தவிர, மற்ற அரசியல் ஏற்பாடுகளெல்லாம் தீராத பூசல்களுக்கே இடமாக இருந்தன. எல்லாக் குடியேற்ற நாடுக ளும் சுதந்தரமாக்கப்படவில்லை; எடுத்துக்காட்டாக, தென் ஆப்பிரிக்காவிலிருந்த செருமனிக் குடியேற்ற நாடுகள் (Colonies) ஆங்கிலக் குடியேற்ற நாடுகளாக மாற்றப்பட்டன. நாடுகளுக்கிடையே இரகசிய ஒப் பந்தங்கள் தடுக்கப்பட்டாலும், தொடர்ந்து இரகசிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கடலில் எல்லா நாடுகளின் கப்பல்களும் செல்லுவதற்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்று ஒரு குறிப்புக் கூறினாலும், நடு நிலை நாடுகளின் சரக்குக் கப்பல் களைப் பகைநாடுகள் கைப்பற்றாதபடி தடுப்பதற் காக, அவற்றைக் கைப்பற்றுவதற்குத் தனக்கு உரிமை உண்டென்று பிரிட்டன் கூறிற்று. நாடுகளுக்கிடையே யுள்ள பொருளாதாரத் தடைகள் அகற்றப்படுதல் வேண்டுமென்று ஒரு குறிப்புக் கூறினாலும், உண்மை யில் போருக்குப் பிற்பட்ட காலத்தில் இத்தடைகள் பெருகின; ஒவ்வொரு நாடும் பொருளாதாரத்தில் தன்னிறைவடைவதிலும், தன் ஏற்றுமதிகளைப் பெருக்குவதிலும் நாட்டம் செலுத்திற்று. போர்க் கருவிகள் குறைக்கப்படுவதற்கு மாறாகச் செரு மனி, இத்தாலி முதலிய நாடுகளில் அவை மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டன. பிரிட்டன் ஒன்றுதான் குறைவான கருவிகளை வைத்திருந் தது. இதனால் உலக அமைதிக்கும் பாதுகாப் புக்கும் இடர்ப்பாட்டை உண்டாக்கக்கூடிய இரண் டாம் உலகப்போர் உண்டாகக்கூடிய நிலைமை உண்டாயிற்று. சோவியத்து உருசியாவோடு மேலை நேச நாடுகள் அமைதியான நல்லுறவை ஏற்படுத்து வதற்கு மாறாக, அதனோடு போரிட்டுப் பின்னர், பொருளாதாரப் புறக்கணிப்பு செய்து அதை வளர வொட்டாமல் தடுத்தன. இத்தாலிய எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டாலும், அந்நாடு ஏட்ரியாட்டிக்

குக் கடலின் கிழக்குக் கரையிலுள்ள நிலப்பகுதிகள் கொடுக்கப்படாததனால், அந்நாட்டுக்கும் யூகோசுலேவியாவுக்கும் இடையே எல்லைத் தகராறுகள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. போலந்துக்கு அளிக்கப்பட்ட இடைவழி நிலமானது தங்களுடைய நாட்டை இரண்டாகத் துண்டிக்கிறது என்றும், செருமானிய மக்கள் வாழ்கின்ற அந்த நிலம் தங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்டதென்றும் செருமனியர் குறை கூறிக் கொண்டேயிருந்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக உலக அமைதியை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட அனைத்துலகச் சங்கம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் சட்டமன்றத்தால் புறக்கணிக்கப்படவே, அந்நாடு சங்கத்தின் உறுப்பினராகவே இல்லை; மேலும் அந்தச் சங்கத்துக்கு அடிப்படையான ஒப்பந்தம் பழிவாங்கும் எண்ணத்தோடு வரையப்பட்ட வெர்சே உடன்படிக்கையோடு இணைக்கப்பட்டமையினால், அந்த உடன்படிக்கையை மீறி, வல்லரசுகளாகிய நாசிச செருமனி, பாசிச இத்தாலி, இராணுவ சப்பான் முதலிய நாடுகளெல்லாம் தம் விருப்பம்போல் செயற்பட்டுச் சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளவே, சங்கத்தால் அவற்றின் போர்ச் செயலைத் தடுக்க இயலவில்லை. இவ்வாறு சில குறைபாடுகள் இருந்தபோதிலும் வில்சனின் பதினான்கு குறிப்புகளில், தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை போன்ற குடியாட்சி உரிமைகளும், கடல்வழிச் சுதந்திரம் போன்ற உரிமைகளும் இடம் பெற்றிருந்தன என்பது மறுத்தல் இயலாது.

**உடந்தை**: குற்றச் செயலை ஒருவர் தாமாகச் செய்யலாம் அல்லது மற்றவரின் தூண்டுதலின் பேரில் செய்யலாம் அல்லது ஒரு பொதுத் திட்டத்தின் வழிச் செய்யலாம். அவ்வாறு அக்குற்றச் செயலைச் செய்யத் தூண்டுபவர், அதாவது உடந்தையாக இருப்பவர் குற்ற உடந்தையர் (Abettor) ஆவர். பொதுத்திட்டத்தில் பங்கு பெறுபவர் சதிகாரர் (Consipirator) ஆவர். மற்றவருடன் கூட்டுச் சேர்ந்து குற்றம் புரிந்திருப்பின், பங்கு கொண்ட மற்றவர்கள் உடன் குற்றவாளிகள் (Accompalices) ஆவர்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 107-ஆம் பிரிவு குற்ற உடந்தையை வரையறுக்கிறது. குற்ற உடந்தை (Abetment) மூன்று செயல்களால் ஏற்படுகிறது. ஒருவரைக் குற்றம் செய்யும்படி தூண்டுதல் (Instigation); ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுடன் ஒன்று கூடிச் சதி செய்து அதன் விளைவாகச் சட்ட முரணான ஒரு செயலைச் செய்தல் அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய செயலைச் செய்யாதிருத்தல்; உட்கருத்துடன் ஒரு குற்றச் செயல் புரிவதற்கு வேண்டுமென்றே செயலுதவியாக (Aid) இருத்தல் ஆகிய இம்மூன்று செயல்களும் குற்ற உடந்தை என்பதில் அடங்கும்.

குற்ற உடந்தை முழுமை பெற வேண்டுமெனில் i) குற்ற உடந்தையர் என்ற ஒருவர் இருத்தல் வேண்டும். ii) அவர் குற்றத்திற்கு உடந்தையாக இருக்க வேண்டும். iii) அச்செயல் குற்றமாக இருத்தல் வேண்டும். ஒரு செயலைச் செய்யத் தூண்டுபவர் அச்செயலுக்கு உடந்தையாக இருக்கிறார். அவ்வாறு தூண்டுதல் குற்ற உடந்தையாகக் கருதப்படும். அவர் தூண்டுதலில் மட்டும் ஈடுபடாமல், செய்யப்படும் செயலிலும் பங்கேற்கலாம். ஒருவருக்கு மேற்பட்டவருடன் கலந்தாலோசித்து, ஒப்பந்தப்படி செயற்படலாம். அதேபோல உட்கருத்துடன் ஒரு குற்றத்திற்குச் செயலுதவி அளிக்கலாம். இவை யாவும் குற்ற உடந்தையின் பாற்படும்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி ஒரு குற்றத்திற்குத் தூண்டுதல் மூலம் அல்லது சதி மூலம் உடந்தையாக இருந்தது உண்மையில் செயற்படாமற் போகலாம். எனினும், அது குற்ற உடந்தையாகக் கருதப்படும்.

குற்றம் புரியும் வேளையில் ஒருவர் உடனிருத்தல் மட்டும் போதாது; குற்றச் செயல் ஒன்றுக்கு உதவி அளித்து உறுதுணையாக இருத்தல் வேண்டும். இது தவிர, குற்றம் இழைக்கப்படும்போது குற்ற உடந்தையர் உடன் இருக்க வேணடும் என்ற அவசியமில்லை. குற்றத்திற்கு உடந்தையாக இருந்தால் மட்டுமே போதுமானது. ஆனால் குற்ற உடந்தையர் குற்றம் புரியும் வேளையில் இருந்தால் முதன்மைக் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

தூண்டப்படும் குற்றம் செய்யப்படாமற்போனாலும் குற்ற உடந்தையர் தண்டனைக்குரியவரே.

ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்தது மற்றொரு குற்றமாக முடியுமேயானால், பிந்தைய செயல் முந்தைய செயலின் எதிர்நோக்கக்கூடிய பின் விளைவாக இருக்கும் நிலையில் இரு குற்றங்களுக்கும் அவர் பொறுப்பாவார் (பிரிவு 111). (எ-டு ) ஒருவர் ஒரு குழந்தையை மற்றொருவர் உணவில் நஞ்சிடும்படி தூண்டுகிறார். தூண்டுதலின் விளைவாக அக் குழந்தை தவறுதலாகப் பக்கத்தில் இருப்பவரின் உணவில் நஞ்சைக் கலந்து விடுகிறது. இப்பொழுது, முதல் குற்றத் தூண்டுதலுக்குத் தூண்டியவர் பொறுப்பாவது போல், இரண்டாம் குற்றத் தூண்டுதலுக்கும் பொறுப்பாகிறார்.

ஒரு குறிப்பிட்ட விளைவை உண்டாக்கும் உட் கருத்துடன் ஒருவர் ஒரு செயலுக்கு உடந்தையாக இருந்து, அவ்வாறு செய்யப்பட்ட செயல் உட்கருத்தில் கொள்ளப்பட்ட செயலுக்கு வேறுபட்ட விளைவை ஏற்படுத்தினால், உடந்தையாக இருந்த செயல் அந்த வேறுபட்ட விளைவை உண்டாக்கக்கூடும் என்பதை அவர் அறிந்திருக்கும் போது, அந்தச் செயலுக்கும் அதே முறையில் அதே அளவு பொறுப்புடையவர் ஆவார். (எ-டு )ஒருவர் மற்றொருவருக்குக் கொடுங்காயம் விளைவிக்கும்படி தூண்டுகிறார். கொடுங்காயம் விளைவாக அவர் இறந்தால், அவரது மரணத்திற்கும் குற்ற உடந்தையர் பொறுப்பாவார்.

ஒரு குற்ற உடந்தைக்குத் தூண்டப்படும் ஒருவர் குற்றம் புரியத் தகுதியற்றவராக இருந்தாலும், குற்றம் புரிய ஊக்குவித்தவர் குற்றவாளியாவார். குழந்தைகள், புத்திசுவாதீனமற்றவர்கள் குற்ற உடந்தையராக இருக்க முடியாது.

குற்ற உடந்தைக்கு உடந்தையாக இருப்பதும் குற்றமேயாகும் (Abetment of an abetment is an offence).

**உடம்படு புணர்த்தல்:** ஓராசிரியர் தாம் உணர்த்த விரும்பும் செய்தியினைத் தம் நூலுள் உரிய விடத்தில் நேராகத் தெரிவிப்பது இயல்பாகும். நேராகத் தெரிவிக்காமல் அதனைப் பிற வழிகளாலும் தெரிவிப்பதுண்டு. அவ்வாறுணர்த்த அவர் மேற்கொள்ளும் வழிகளுள் 'உடம்படு புணர்த்தல்' என்பது ஒன்றாம். இந்த நுவல் திறன் இலக்கிய இலக்கண உத்திகளுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. உடம்படுபு, உணர்த்தல் ஆகிய சொற்கள் 'உடம்படு புணர்த்தல்' என்று புணர்ந்து நின்று, 'உடன்பட்டு உணர்த்துதல்' என்னும் பொருள் தந்து நிற்கின்றன. இதனை 'உடம்பொடு புணர்த்தல்' என்றும் கூறுவர்.

உடம்படுபுணர்த்தலாகிய நுவல்திறன் இலக்கண ஆசிரியர்களால் நன்கு மேற்கொள்ளப் பெற்றுள்ளது. பவணந்தி முனிவர் சில இலக்கண விதிகளை 'உடம்படு புணர்த்தல்' என்னும் வழியினை மேற்கொண்டு விளக்கியுள்ளார்.

1) அன்றி, இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் இறுதியிலுள்ள இகரம் செய்யுளில் உகரமாய் வருமாயின், அவற்றிற்கு முன் வரும் கசதபக்கள் மிகாது இயல்பாகும் என்பது நன்னூலார் கூறும் ஒரு புணர்ச்சிவிதியாகும். 'அன்றி இன்றி என் வினையெஞ்சிகரம், தொடர்பினுள் உகரமாய் வரின் இயல்பே' என்பது அதற்குரிய நூற்பா (நன். 173). இந்நூற்பாவில், 'அன்றி, இன்றி என்பவற்றின் இகரம் செய்யுளுள், உகரமாக வரும்' என்று ஆசிரியர் கூறவில்லை. 'உகரமாக வந்தால்' (வரின்) என்றே கூறியுள்ளார். 'வந்தால்' என்பது வரும் என்பதனை உடன்பட்டுக் கூறியதாக உள்ளது. இவ்வாறு ஒரு விதியினை நேரே கூறாமல், ஒரு வகையால் உடம்பட்டுக் கூறுவதும் விதியாக ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு கூறியது உடம்படு புணர்த்திக் கூறியதாகும்.

2) நன்னூலாசிரியர் வியங்கோள் வினைமுற்றினைக் கூறுமிடத்து, அதன் இறுதி எழுத்தினை விதந்து கூறி, அவற்றால் முடியும் வியங்கோள் வினைமுற்று ஐம்பால் மூவிடங்களிலும் செல்லும் என்று விதி கூறியுள்ளார். 'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள், இயலும் இடம் பால் எங்கும் என்ப' (நன். 338) என்பது அதற்குரிய நூற்பா. இதில் வியங்கோள் வினைமுற்றின் ஈறுகளாக க, ய, ர், ஆகிய மூன்றினையே குறிப்பிட்டுள்ளார். ஆனால் அல் என்பதும் வியங்கோள் விகுதியாக நன்னூலாசிரியருக்கு முற்பட்ட கால இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. 'பயனில் சொல்' எனத் தொடங்கும் குறளில் வரும் (குறள். 196) 'மக்கட் பதடி எனல்' என்னும் தொடரில் 'அல்' என்பது வியங்கோள் ஈறாக, மக்கட் பதடி என்று கூறுக என்னும் பொருளில் அமைந்தது. இந்த நூற்பாவில் அல் என்னும் விகுதியைக் கூறாது விடுத்தமை குன்றக்கூறல் என்னும் குற்றத்தின்பாற்படும். ஆனால், நன்னூலாசிரியர் வியங்கோள் ஈறுகளுள் 'அல்' என்பதும் ஒன்றாகும் என்பதனை உடன்பட்டு, தம் நூலுள் அதனை மேற்கொண்டு, 'வகுத்துரையாகவும் வகுத்தனர் கொளலே' (நன்.257) என்று நூற்பா இயற்றியுள்ளார். இதனால் 'அல்' என்பதும் வியங்கோள் ஈறாகும் என்பதனை அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பது புலனாகிறது. இவ்வாறு கூறுதலும் உடம்படு புணர்த்தல் ஆகும். இவ்வுத்தியினை ஆசிரியர் மேற்கொண்டமையால், வியங்கோள் வினை கூறுமிடத்து அல் விகுதி கூறாமை குற்றமாகாது என்பதும் உணரப்படும்.

**உடம்படுமெய்:** இரண்டு உயிர்கள் தொடர்ந்து வருங்கால் அவற்றை ஒலிப்பதற்கு ஏற்படும் சிக்கலைத் தவிர்க்கவும், மொழியின் ஒட்டுநிலைத் தன்மையைக் காக்கவும் இவ்வுயிர்களிடையே மெய்யெழுத்துகளைச் சேர்ப்பதுண்டு. இங்ஙனம் உயிர்களை உடன்படுத்தும் மெய்யே உடம்படுமெய் எனப்படும்.

ஒலித்தசை (Vocal Cord) மூடப்பெறும்போது உயிரொலிகள் ஒலிக்கப் பெற்றால், விட்டிசை தோன்றும். இத்தகு விட்டிசையினைத் தவிர்க்கவே உடம்

படுமெய்கள் சேர்க்கப்பெறுகின்றன. சில மொழிகளில் இரண்டு உயிர்கள் தொடர்ந்து வரும்பொழுது அவை இணைந்து ஓர் உயிராக ஒலிக்கும். இதனால், இவ்விரு உயிர்களுக்கிடையே நேரும் விட்டிசை (Hiatus) தடுக்கப்பெறும்.

ஒலிக்கும் முயற்சியை எளிதாக்கவும், அடிச் சொல், விகுதி முதலியவற்றைத் தெளிவாகக் காக்க வேண்டியும் அனைத்துத் திராவிட மொழிகளிலும் எல்லா உயிரொலிகளும் தனித்தனியே ஒலிக்கப்படுகின்றன. இரண்டு உயிரொலிகளை விட்டிசைத்தால் ஒலிக்கும் முயற்சி அரிதாகுமாதலின், அது நேராதவாறு தமிழிலும் இரு உயிர்களுக்கிடையே உயிரோடு ஒத்த 'ய்', 'வ்' என்னும் இரண்டு மெய்களுள் ஒன்று சேர்க்கப்பெறுகிறது.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும், சமசுகிருத மொழியிலும் 'ந' கரமே உடம்படுமெய்யாகச் செயற்படுகிறது. கூய், நாய்கி என்னும் திராவிட மொழிகளில் குரல்வளை வெடிப்பொலி (Glottal Stop) உடம்படு மெய்யாகச் செயற்படுகிறது.

தமிழ்மொழியில் உயிர்முன் பிறிதோர் உயிர் வருதலில்லை. இவ்விடங்களில் உடம்படுமெய்கள் தோன்றுகின்றன; அல்லது ஓர் உயிர் மறைந்துவிடுகிறது. பெரும்பாலும் யகர உடம்படுமெய் இ, ஈ, ஐ, ஏ என்னும் உயிர்களின் முன்னரும் (கோழி+இறகு= கோழியிறகு) வகரஉடம்படுமெய் அ,ஆ,உ,ஊ, ஒ,ஓ,ஔ என்னும் உயிர்களின் முன்னரும் (பலா + இலை=பலாவிலை) வருகின்றன.

தமிழ்மொழி வரலாற்றில் உடம்படுமெய்களைப் பொறுத்த மட்டில் மூன்று நிலைகளைக் காணலாம். முதல் நிலையில் உயிர் மயக்கங்கள் (Vowel Clusters) அனுமதிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலையில் இரண்டாம் உயிர்களை அடிப்படையாகக் கொண்டு உடம்படுமெய்கள் சேர்க்கப் பெற்றிருக்கலாம் (ஆ + இரு = ஆயிரு). மூன்றாம் நிலையில் முதல் உயிரை அடிப்படையாகக் கொண்டு உயிர்மெய்கள் சேர்க்கப் பெறுகின்றன. ஏ.ஆ.

**உடல்**: 'உடல்' என்ற பெயர் விளக்கத்துடன் ஒரு தோற்கருவி சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது கோயிலுக்குள்ளேயே வாசிக்கப்படும் ஒரு வகை வாத்தியம். அமைப்பில் தவிலைப் போலவே இருக்கும். இதன் ஒலி ஓங்காரத் தொனியை ஒத்திருக்கும். இதைப் பூசாகாலங்களில் மட்டுமே அடிப்பார்கள். புதுவைக்காளத்தீசுவரன் கோயிலில் 'உடல்' ஒன்று ஒரு மூலையில் தொங்க விடப்பட்டிருக்கிறது. இப்போது எவரும் அடிப்பதாகத் தெரியவில்லை.

**உடல் ஊனமுற்றோர் நலம்**: இன்றைய உலகில் ஏறக்குறைய 500 கோடிக்கு மேற்பட்ட மக்கள் உடல் ஊனமுற்றோராய் உள்ளனர். ஐக்கிய நாடுகள் அனைத்துலகக் குழந்தைகள் அவசர நிதி (UNICEF) என்ற அமைப்பின் தலைவர் 1985-ஆம் ஆண்டு ஒவ்வொரு நாட்டிலும் பத்திற்கு ஒருவராவது உடல், உள்ளம் அல்லது உணர்வுகள் ஊனமுற்றோராய் உள்ளார் என்று கூறினார். சமூகத்தில் உள்ள அடிநிலை வகுப்பாரிடத்தில் ஊனமுற்றோர்கள் பலர் உண்டு. ஆகவே, முன்னேற்றமடைந்த நாடுகளை விட முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஒவ்வொரு சமுதாயத்திலும் 25% மக்கள் ஊனமுற்றோராய் இருப்பர் எனவும், அவர்களைக் கண் தெரியாதோர், காது கேளாதோர், முடமானோர், மனநலமற்றோர், சமூகத்தோடு ஒத்து வாழ முடியாதோர், தொழு நோயாளர், புற்று நோயால் பாதிப்பு அடைந்தோர் என வகைப்படுத்தியும் 'உலக உடல்நல நிறுவனம்' (WHO) கூறியுள்ளது.

ஆதிகால முதல் மனிதன் ஊனமுற்றோரை வெறுக்கின்றவனாக, ஒதுக்கித் தள்ளுகிறவனாக இருந்தான். ஊனமுற்ற குழந்தைகள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கொலை செய்யப்பட்டனர். ஒருவரின் உயிரைக் கடவுளால்தான் போக்க முடியும் என்று கி.பி. 4 முதல் 13-ஆம் நூற்றாண்டுக் காலங்களில் எண்ணியதால் அக்குழந்தைகளை மடங்களிலும் வளர்க்க விரும்பும் மக்களிடமும் விட்டுவிட்டனர். குழந்தைகளின் உணர்ச்சிகளை உணர்ந்து, தங்கள் விருப்பம்போல் அவர்களை மாற்ற கி.பி. 13 முதல் 17-ஆம் நூற்றாண்டுக் காலத்தில் நினைத்தனர். குழந்தைகளின் வாழ்க்கையைச் சீர்படுத்துவது அல்லது பயிற்சி அளிப்பதில் பெற்றோர் கி.பி. 17-19-ஆம் நூற்றாண்டுகளில் தலையிடத் தொடங்கினர். குறையுள்ள மக்களைப் பாதுகாத்து வளர்ப்பது சிறந்த சேவையென கி.பி. 19 முதல் 20-ஆம் நூற்றாண்டின் மத்திய நாட்கள் வரையிலான காலங்களில் கருதப்பட்டது. இக்காலத்தில் குறையுள்ளோரைப் பாதுகாத்தலோடு தக்க பயிற்சியும் அளித்து இயல்பான வாழ்க்கை நிலைக்குக் கொண்டுவர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

உலக அளவில் ஊனமுற்றோரின் நலத்தைப் பற்றிப் பார்க்குமிடத்து, முதன் முதலில் சுவீடன் நாட்டில் அரசாங்கமே ஊனமுற்றோரைப் பாதுகாக்கத் தொடங்கியது. அவர்களுக்கென இல்லங்கள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் ஊனமுற்றோர்

குழந்தைகளுக்கென இலவசக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது. பின் இவ்வாறு தனிப்பட இல்லங்கள் அல்லது பள்ளிகளில் வாழவைப்பதோடு, சமுதாயத்தில் ஒன்றித்து வாழ வைத்தால் ஊனமுற்றோர் மனநிலையில் சமூகத்தில் தானும் ஓர் அங்கம் என்ற மனநிறைவையும் தகுதியையும் உண்டாக்க இயலும் என உணரப்பட்டதன் மூலம், தனிக் கல்வித் திட்டங்கள், சிகிச்சை முறைகள், சாதனங்கள், வேலை வாய்ப்புத் திட்டங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவை சிறந்த செயல் முறையில் உருவாகத் தொடங்கின. இந்தியாவில் முதன் முதலாகப் பீகாரில் உள்ள இராஞ்சியில் 1934-ஆம் ஆண்டு 'உளவியல் மருத்துவ நிலையம்' தொடங்கப்பட்டது. பம்பாயில் 1941-இல் ஊனமுற்றோர் தங்கிப் படிக்கவும், பராமரிக்கப்படவும் ஏற்றபடி ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. பின் 1944 முதல் 1954 வரை ஏறக்குறைய 18 நிறுவனங்களும், பள்ளிகளாகவும் இல்லங்களாகவும் தொழிற்பயிற்சி மையங்களாகவும் சிகிச்சை நிலையங்களாகவும் தொடங்கப்பட்டன. இல்லங்கள் பெரும்பாலும் கிறித்தவ மதக் கொள்கைப் பரப்புநரால் ஊனமுற்றோரின் அன்றாடத் தேவைகள் நிரப்பப்படும் வகையில் நடத்தப்பட்டு வந்தன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனிமனிதனின் உரிமை, சுதந்திரம், பெருமை ஆகியவற்றை மிகுதியாக வலியுறுத்தியதன் விளைவாக 1981-ஆம் ஆண்டு 'அனைத்துலக ஊனமுற்றோர் ஆண்டாக' அறிவிக்கப்பட்டது. 'சமஉரிமையும் முழு ஈடுபாடும்' என்பதே அதன் நோக்கமாகும். 'ஊனமுற்றோரின் பத்தாண்டுகள்' (Decade of the Disabled) என 1983-1992 வரை உள்ள காலம் ஐக்கிய நாடுகளின் சபையில் 1982-ஆம் ஆண்டு திசம்பர் 3-ஆம் நாள் வரையறுக்கப்பட்டது. ஓர் 'உலகச் செயல் திட்டமும்' (World Plan of Action) மேற்கொள்ளப்பட்டது. இதன்படி ஊனமுற்றோரின் குறைபாடுகளைத் தடுக்கவும், அவர்கள் சமூக வாழ்வின் முன்னேற்றத்தில் முழுமையாகப் பங்கு பெற வாய்ப்பளிக்கவும் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்திட்டங்கள் உடல் ஊனத் தடுப்பு முறைகளைப் பற்றியும், உடல் ஊனமுற்றோருக்கு மறு சீரமைப்பு, சுய வாய்ப்பு, ஒட்டுரிமை, குடியிருப்பு வசதி, ஊதியம், பாதுகாப்பு, கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு முதலியன அளித்தல் பற்றியும் பொழுதுபோக்கு, கலை ஆர்வமிக்க நிகழ்ச்சிகள், மதம், விளையாட்டு ஆகியவற்றில் ஊனமுற்றோரை ஈடுபடுத்துதல் பற்றியும் அமைந்துள்ளன. அத்திட்டங்களின்படி இந்தியாவில் பல தேசிய சீரமைப்பு நிறுவனங்கள் அரசாலும் தன்னார்வமிக்க மக்களாலும் சமய நிறுவனங்களாலும் அரிமாசங்கம் (Lions Club), சுழற் கழகம் (Rotary Club), செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) போன்ற சமூக சேவையில் ஆர்வமிக்க குழுக்களாலும் தொடங்கப்பட்டன. ஒற்றைக் குறைபாடு உள்ளவர்களுக்கும், பலவகைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் தனியாகவும் கூட்டாகவும் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

ஊனமுற்றோரின் நலங்கருதி அவர்களின் கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு, மறுசீரமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றில் அரசு மிக்க கவனம் செலுத்தி வருகிறது. ஏறக்குறைய 15 அல்லது 16 வயதுவரை இலவசக் கட்டாயக் கல்வி சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் அளிக்கப்படுகிறது. நல்ல உடல் இயக்கத்திறம் உடையவர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் அவர்களின் குறைபாடுகளுக்கேற்றபடி அமைக்கப்பட்ட சாதனங்களின் உதவியுடன் அளிக்கப்படுகின்றன. கண் தெரியாதோருக்காக அதிகமான கண்சிகிச்சை முகாம் ஏற்படுத்தப்பட்டுச் சிறந்த மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. காது கேளாதோருக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய உதவிகள் கிராமப்புறத்தில் உள்ளோருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். செயற்கைக் கால்கள் குறைந்தவிலை அல்லது இலவசமாக ஏழை மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். அதிகமான ஊனமுற்றோர்கள் தங்கி வேலைப் பயிற்சி பெற்று வேலை செய்யும் இடங்கள் மிகுதியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அரசால் தொடங்கப்பட்டுள்ள பல்வகைச் சீரமைப்புத் திட்டங்கள் ஏழைமக்களைச் சென்றடையும்படி செய்ய வேண்டும். தொழிற் பயிற்சி மையங்கள் 14க்கு மேற்பட்டும், சிறப்பு வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையங்கள் 22க்கு மேற்பட்டும் அமைக்கப்பட்டு எல்லாவகைக் குறைபாடுகள் உள்ளோருக்கும், அவர்களின் குறை, தகுதி, விருப்பம் ஆகியவற்றிற்கேற்ப வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுத்து வேலைக்கமர்த்தும் முறைப்படி 'C', 'D' வேலைகளில் 3% அதாவது 1% கண் தெரியாதோருக்கும், 1% காது கேளாதோருக்கும், 1% முடமானோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகத் திறமையுடையோர் 'A', 'B' பதவிகளுக்குங்கூட அமர்த்தப்படலாம். அரசு சிறந்த ஊழியர் எனத் தேசிய விருது அளித்து அவர்களை ஊக்குவித்து வருகிறது; மேலும் உதவித் தொகை, போக்குவரத்துச் சலுகை, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி, மின்சாரம், தண்ணீர் போன்றவற்றிற்கு வரிச் சலுகை, மேல் நாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் ஊனமுற்றோருக்கு உதவுகின்ற சாதனங்களுக்கு வரிச்சலுகை முதலியவை அளித்து வருகின்

றது. இன்னும் அதிகமாக ஏழ்மை நிலையில் உள்ள பலருக்கு இவ்வுதவிகள் கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கேற்ற எளிய, செலவு குறைந்த குடிசைத் தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதோடு, அவ்வாறு செய்த பொருள் களைக் கண்காட்சிக் கூடங்கள் அல்லது கூட்டுறவுப் பண்டசாலைகள் மூலம் விற்பனை செய்து பொருளு தவியும் ஊதியமும் கிடைக்கும்படியும் செய்ய வேண் டும். விவசாயம், தோட்டக்கலை, கோழி, ஆடு, மாடு வளர்த்தல் மூலம் சுய வேலைவாய்ப்பும் அளிக்கலாம். ஊனமுற்றோருக்கும் பொழுதுபோக் குக் கூடங்கள், தொலைக்காட்சி வசதிகள் தேவை என உணர்ந்து சமூக நல ஊழியர் தலைமையில் அமைத்துக் கொடுக்கலாம். மருத்துவ வசதிகள், உதவிகள், இன்றைய புதிய சாதனங்கள், அவற்றின் அமைப்பு, பயன்படுத்தும் விதம், சில ஊனமுற்றோ ரின் கலைத்திறன் ஆகியவற்றைத் தொலைக்காட்சி வாயிலாகக் காண்பிப்பதன் மூலம் அவர்களை ஊக்கு விக்க வேண்டும்.

இவ்வாறு ஊக்குவிப்பதோடு, இக்குறைபாடுகள் ஏற்படாவண்ணம் தடுத்தலும் அவசியம். தொடக் கத்திலேயே கண்டுபிடித்தல், தடுப்பூசி போடுதல், மகப்பேற்றிற்கு முன், பின் மருத்துவ உதவி அளித் தல், குழந்தைகளுக்குச் சத்துள்ள உணவு குழந்தைப் பருவத்தில் கிடைக்கச் செய்தல் ஆகியவை மிகமிக அவசியம். சமுதாயத்தில் காணப்படும் சுத்தமின்மை, சுகாதாரக் கேடுகள், குடி போன்ற பொருள்கள் ஆகியவை அதிக ஊனங்களுக்குக் காரணமாகின்றன. இந்திய அரசு பல திட்டங்களின் மூலம் இக்குறைபாடு களைக் களைந்தெறிய முயலுகின்றது. அரசு 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,00,000 ஊனமுற்றோ ருக்கு அவர்களின் வாழ்வைச் சீரமைத்து முன்னேற் றவும் அவர்களுக்கு ஆதாயமுள்ள தொழில் அமைத் துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யத் தீர்மானித்துள் ளது. இந்தியமைய அரசும் மாநில அரசுகளும் இவற்றை நிறைவேற்றும்போது நிச்சயமாக ஊன முற்றோர் வாழ்வு மேம்படும். பம்பாயில் 1985 பிப்பி ரவரி மாதம் 4-ஆம் நாள் முதல் 8-ஆம் நாள் வரை ஊனமுற்றோருக்குச் சம வாய்ப்பு அளிக்கும் தேசிய கழகம் அமைத்த இரண்டாம் அனைத்திந்திய மாநாட்டிலும், மார்ச்சு 24-28-ஆம் நாட்களில் தில் லியில் நடைபெற்ற 7-ஆம் உலக மனநலமற்றோ ருக்கான ஆராய்ச்சி மாநாட்டிலும் பலமுன்னேற்றத் திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன. அரசும் தன்னார்வ மிக்க நிறுவனங்களும் சேர்ந்து செய்யும் இம்முயற் களில் ஊனமுற்றோரின் ஒத்துழைப்பும் சமுதாயத் தின் ஒத்துழைப்பும் மிகமிகத் தேவை. மக்களிடையே ஏற்படும் ஊனங்களைத் தடுக்கவும், அவ்வாறுள்ள வர்களை ஆதரித்து முழுச் சீரமைப்புக்குப் பல முன் னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தவும் தீர் மானித்தால், ஊனமுற்றோர்களும் தாமும் இச்சமு தாயத்தில் ஓர் அங்கம், இந்நாட்டின் ஆக்க வேலை களுக்குரிய குடிமக்கள் என்ற பெருமையையும் தகுதி யையும் அடைய இயலும். சா.தி.

துணை நூல்கள்:

**Charles C, Veland and Jan.D. Swartz**, Exceptionalities through the Life Span, Macmillan Publishing Company, New York, 1982.

**Usha Bhatt**, The Physically Handicapped in India, Oriental Watchman Publishing House, Poona, 1963.

**Yash Pal Bedu**, A Hand Book of Hygiene and Public Health for Medical and Public Health Student, Atma Ram & Sons, New Delhi,1971.

**உடல்சார் மானிடவியல்** முதன்மையான பல அறிவியல் பிரிவுகளுள் ஒன்றாகும். மனித அறி வியலாகிய மானிடவியலில் இத்துறை மனிதத் தோற்றம், மனித வளர்ச்சி, மனிதர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள், மனித உடலமைப்பு, மனிதத் தகவமைப்பு முதலான பெரும் பரப்பு களைக் கொண்டதாகும். இதனாலேயே உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), உயிரியல் சார் மானிடவியல் (Biological Anthropology) என் றும் கூறப்படும்.

பெரும்பான்மையாக உடல்சார் மானிடவியலை உடற்கூற்றியல் (Anatomy), உடலியங்கியல் (Physiology), உயிரியல் முதலான அறிவியல் துறைகளோடு தொடர்புபடுத்தி ஒருசில அணுகுமுறைகளில் குழப் பம் பெறுவதுமுண்டு. உடற்கூற்றியல் முதலான துறைகள் இன்றைய மனிதன், விலங்குகள் ஆகிய வற்றின் உடலமைப்பையும் செயல்களையும் விரி வாக அறிவதாகும். உடல்சார் மானிடவியல் பனி யாற்றுக் காலத்திற்கு (Glacial Period) முற்பட்ட உயர்பாலூட்டிகள் முதல் இக்கால மனிதன் வரை அவற்றின் அனைத்து வளர்ச்சி நிலைகளையும் படி மலர்ச்சி (Evolution) நிலைகளையும் உயிரியல்சார் மாற்றங்களையும் அவற்றுடன் தொடர்புடைய புதைபடிவங்கள் (Fossils), காலக்கணிப்பு (Chronology), இன வகைகள் (Racial Types), விலங்கினச் சமூக அமைப்புகள், விலங்குகளின் நடத்தைகள் (Animal Behaviours) முதலான பல பிரிவுகளையும் உயிரியற் பண்பாட்டு அணுகுமுறையில் (Bio-Cul-

tural Appraoch) அறிய முற்படுகிறது. உடல்சார் மானிடவியல் ஓர் உயிரியல் சார் அறிவியலாயினும் (Biological Science) இதன் அணுகுமுறையில் பண்பாட்டு அடிப்படைகளும் கையாளப்படுகின்றன. மனித அறிவியல் மனிதப் பண்பாட்டோடு தொடர்புற்றது. மனிதப் பண்பாட்டின் அடிப்படையில் மனிதனைப் பற்றிய முழுமையான அறிவினைப் பெற இயலும் என்னும் அணுகுமுறையே உடல்சார் மானிடவியலைப் பிற உயிரியற் பிரிவுகளிடமிருந்து வேறுபடுத்துகிறது.

உடல்சார் மானிடவியலாரின் அணுகுமுறை பன்னோக்குடையது; இறந்தஉயிரிகளையும்(Organisms) வாழும் உயிரினங்களையும் குறிப்பாக மனிதனையும் நகர மக்கள் முதல் தனித்து வாழும் சிறு முதுகுடிச் சமூகங்கள் வரை அனைவரையும் ஆய்வுக் கூடங்களிலும் அவர்கள் வாழும் இயற்கைச் சூழல்களிலும் ஆராயும் முறை முதன்மையானதாகும்.

உடல்சார் மானிடவியலின் வரலாற்றுக்கால வளர்ச்சி: இத்துறை கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் தனிப்பெருந் துறையாக முகிழ்த்தது. மனித இன வேறுபாடுகளை அறிவதை முதன்மையாகக் கொண்டு முகிழ்த்த இத்துறை உயிரியல்சார் அறிவியலுள் ஒன்றானதால், இதன் வளர்ச்சி அறிவியலின் வளர்ச்சியில் ஒரு பகுதியாகவும் அதனின்று பிரிக்க முடியாததாகவும் ஆகிவிட்டது.

புதிய நிலங்களையும் மக்களையும் கண்டறிந்த நூற்றாண்டாக கி.பி. 13-ஆம் நூற்றாண்டு போற்றப்படுகிறது. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வாளராக மார்க்கோபோலோ (Marcopolo) திகழ்ந்தார். இவரைத் தொடர்ந்து பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுப் பயணத்தால் புதிய நிலப்பரப்புகள், உருவத்தோற்றத்தில் பல்வேறு அமைப்புடைய மக்கள், மக்களின் புதிய பழக்க வழக்கங்கள், பல்வேறு வாழ்க்கையமைப்புகள், தகவமைப்புகள் முதலானவை அறியப்பட்டன. இவ்வகையான மாற்றங்களுக்கு அடிப்படையான காரணங்களை அறியப் பலர் பல்வேறு அணுகுமுறைகளில் சிந்தித்ததே உடல்சார் மானிடவியல் தோற்றத்திற்கு வழிகோலிற்று எனலாம்.

இதன் பின்னர் தார்வின் (Darwin) உருவாக்கிய படிமலர்ச்சிக் கொள்கையை ஏற்று, உடல்சார் மானிடவியற்றுறை முழு வடிவம் பெற்று அறிவியல் துறையின் மனித இனம் பற்றிய முழுமையான அறிவியலாயிற்று. தார்வின் கொள்கைப்படி ஒவ்வொரு சிறப்பினமும் (Species) உடலமைப்பாலும் உடற்செயலாலும் வேறுபட்டது; படிமலர்ச்சி நிகழ்வில் தனிஇடம் பெற்றது. தார்வின் கி.பி. 1871-இல் எழுதி வெளியிட்ட 'மனிதனின் மரபு' (The Descent of Man) என்னும் நூல் மனிதப் படிமலர்ச்சி நிலைகளை அறிவதற்கான வினாக்களை முறைப்படுத்திக் கொடுத்தது. இதன் அடிப்படையிலேயே உடல்சார் மானிடவியலார் மனித மூதாதையரின் புதைபடிவங்களைக் கண்டறிந்து, மனித இன வளர்ச்சியின் கிளைப் படத்தை (Family Tree Diagram) வரையறுத்தனர்.

புதிய உடல்சார் மானிடவியலின் வளர்ச்சி: இக்காலத்திய உடல்சார் மானிடவியல் துறையானது 1940-இல் குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் வளர்ச்சி பெற்றதாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இன உயர்வுவாதம் (Racial Superiority) தலைவிரித்தாடியது. இப்போரின் விளைவுகளினாலேயே இனஉயர்வு வாதத்திற்கு உயிரியல்சார் அடிப்படையில் முழுவிளக்கம் கொடுக்கப்பட்டது. இதனால் இன உயர்வுத் தன்மை என்னும் போலிச் சித்தாந்தம் வலுவிழந்து அழிந்தது. உலகத்தின் பல்வேறு ஆட்சியாளர்களும் வெள்ளை இனமத சித்தாந்த வாதிகளும் கடுமையாகக் கையாண்ட இன உயர்வு வாதத்திற்கு முழு உண்மையைக் கண்டதில் உடல்சார் மானிடவியலாரே மிகப்பெரும் பங்கேற்றனர்.

உடல்சார் மானிடவியலின் தந்தையெனக் கூறப்படுபவர் சே.எப். புளுமன்பேக்கு (J.F. Blumenback) ஆவார். இவர் ஒரு செருமானிய மருத்துவராவார். இவர் மனிதர்களுக்கு இடையே காணப்படும் மிகுந்த வேறுபாடுகளைக் கண்டறிய ஒப்பீட்டு மனித உடற்கூற்றியலைப் (Comparative Human Anatomy) படித்து அதன் அடிப்படையில் மனிதஇனங்களை வகைப்படுத்த முனைந்தார். உலகமக்களைக்காக்கேசியர்(Caucasian), மங்கோலியர் (Mongolian), எத்தியோப்பியர்(Ethiopian), மலாயர் (Malayan), அமெரிக்கர் (American) என ஐந்து இனங்களாகப் பிரித்தார். எத்தியோப்பியர் என்னும் இனமானது பின்னர் நீக்கிரோ (Negro) இனமாகக் கொள்ளப்பட்டது. புளுமன்பேக்கு கி.பி. 1752-1840-இல் கூறிய வகைப்பாட்டிற்குப் பின்னர் வந்த மானிடவியலார் மனித இன வகைப்பாட்டிற்குச் சிறந்த பல முறைகளைக் கையாண்டனர்.

புது உடல்சார் மானிடவியலின் புதிய பரப்புகளுக்குப் பல பரிமாணங்களை வகுத்துக் கொடுத்தது மூன்று நூல்களாகும். இந்நூல்களுள் முதலாவது

வில்லியம் பாயிடு (William Boyd) 1950-இல் எழுதிய 'மரபியலும் மனித இனங்களும்' (Genetics and Races of Man) ஆகும். இந்நூல் வெளியாவதற்கு முன் உடல் சார்மானிடவியலார் மனித வேறுபாடுகளையறியப் புதை படிவங்களையும், இடுகாடுகளிலும் அகழாய்வு களிலும் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் அளவுகளையும், வாழும் இனத்தவர்களின் புற உடலளவையும் கணக்கிட்டு அறிவதையே பெரிதும் நம்பி யிருந்தனர். ஆனால் புாயிடு வெளியிட்ட நூல் இந்த அணுகுமுறையை முற்றிலும் மாற்றிவிட்டது. பாய்டு புறத்தோற்ற உடலமைப்புப் பெரிதும் சூழ்நிலையைச் (Environment) சார்ந்திருப்பதால் அதை மட்டும் வைத்து அறிவியல் அடிப்படையில் முடிவு காண்பது அரிது என வாதிட்டார். மனிதனின் மரபுப் பண்பினை (Genetic Character) அறிய வேண்டும்; புறத் தோற்ற உடலளவு சூழ்நிலையைச் சார்ந்ததாகையால் அது, அம்மக்கள் குழுவின் சூழ்நிலை வரலாற்றை (Environmental History) மட்டிலுமே வெளிப்படுத்தக் கூடியது; இந்த நிலையை விடுத்து மக்கள் குழுவின் இரத்தக் குழுக்களையும் மரபுப் பண்புகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய வேண்டும் என்று பாய்டு கூறினார். மரபுப் பண்புகளும் இரத்தக் குழுக்களும் சூழ்நிலையைச் சாராதவை; அவற்றை எளிதில் மக்களிடையே கண்டறிய முடியும்; அவற்றின் வழியால் மட்டுமே உயிரியல் சார்ந்த முடிவுகளைக் காண இயலும் என வாதிட்டார். வில்லியம் பாயிடு இரத்தக் குழுக்களின் அடிப்படையில் மனித இனங்களைத் தொடக்ககால ஐரோப்பியர் (Early Europeans), ஐரோப்பியர் (காக்கேசியர் - Caucasoids), ஆப்பிரிக்கர் (நீக்கிரோக்கள் - Negroids), ஆசியர் (மங்கோலியர் - Mongoloids), அமெரிக்க இந்தியர் (American Indians), ஆசுத்திரேலியர் (Australoids) எனஆறு இனங்களாகப் பகுத்தார். இவர் அறிமுகப்படுத்திய மரபுப் பண்பு அடிப்படையிலான அணுகுமுறை இக்கால மானிடவியலில் மக்கள் தொகையியல் சார் மரபியல் (Population Genetics) என்னும் பரந்த பிரிவாக உருப்பெற்றுள்ளது. இதனையொத்தே உயிர்வேதியியல் (Bio-chemical) பகுப்பாய்வும் உடல்சார் மானிடவியலில் தலையான ஆய்வு நெறிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாயிடு வெளியிட்ட அதே ஆண்டிலேயே சி.எசு. கூன் (C.S.Coon), எசு. எம். கார்ன் (S.M.Garn), சே. பி.பிர்ட் செல் (J.B.Birdsell) ஆகியோர் வெளியிட்ட 'இனங்கள்: மனிதருள் இனம் தோன்றியமுறை பற்றிய ஆய்வு' (Races: A Study of the Probelem of Race Formation in Man) ஆகியவை இத்துறையின் விரிவாக்கத்துக்கு உதவியது. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல்வேறு இனமக்களைப் பற்றி மிகுதியான அளவில் உடல்சார் மானிடவியல் தரவு களைச் (Data) சேகரித்த இவர்கள், அவற்றைத் தார்வின் படிமலர்ச்சிக் கோட்பாட்டோடு தொடர்பு படுத்திப் பகுத்தாய்ந்தனர். மனிதருள் பலவகை காணப்படுவதற்கு அவர்கள் வாழும் சூழ்நிலை ஒரு காரணமாகும். சூழ்நிலைத் தகவமைப்பு மரபுப் பண்பமைப்பில் மாற்றத்தைத் தோற்றுவிக்கிறது. இது மரபு வழியில் கொண்டுசெல்லப்படுகிறது எனப் புது விளக்கம் கொடுத்தனர்.

இதன் பின்னர் 1951-ஆம் ஆண்டில் செர்வுட்டு வாசுபர்ன் (Sherwood Washburn) என்பவர் நியூயார்க்கு அறிவியற் கழகத்தில் பேசிய 'புதிய உடல் சார் மானிடவியல்' (The New Physical Anthropology) என்னும் உரை உடல்சார் மானிடவியலாரிடையே மேலுமொரு புத்தொளியைத் தொடுத்தது. இவர் மனித வேறுபாடுகளை அறிவதில் வகைப்பாட்டியல் பாகுபாட்டை (Typological Classification) விடுத்து, ஒவ்வொரு வேறுபாட்டிற்கும் உயிரியற் கருத்துகளின் அடிப்படையை முதலில் அறிவது இன்றியமையாதது எனக் கூறினார். இந்த உயிரியற் கருத்தினை அறியும்போது ஊக அடிப்படையை (Speculation) அறவே விடுக்க வேண்டும். ஊகக் கருத்துகள் உயிரியற் கருத்துகளுக்குத் துணை நிற்காது என விளக்கினார். பருநிலை வேறுபாட்டிலிருந்து நுண் நிலை வேறுபாட்டை ஊக நிலையில் பகுக்கலாம். ஆனால் நுண் நிலையிலிருந்து மிக நுண்ணிய பாகுபாட்டை அறிய ஊகக் கருத்துகள் வழிவகுக்கா. எனவே உயிரியற் கருத்துகளை அறிவதே சிறந்தது என விளக்கும் இவரது வாதத்திற்கு இவர் பல அணுகு முறைகளைக் காட்டுகிறார்.

இந்த மூன்று வெளியீடுகளும் சற்றேறக்குறைய குறுகிய காலத்தில் வெளியானதால் உடல்சார் மானிடவியலாரிடையே ஒருமித்த கருத்து உண்டாக ஏதுவாயின. இக்கால உடல்சார் மானிடவியல் விரிந்த பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை, படிமலர்ச்சியியல், உயர்பாலூட்டிகளியல், மனிதஇனங்கள், மானிட உடலளவையியல், எலும்பியலும் பல்லமைப்பியலும், மனிதச் சூழலியல், மக்கள் தொகை மரபியல், மக்கள்தொகையியல், கருவியலும் உடலியலும், மூலக்கூறு உயிரியல், பயன்முறை உடல்சார் மானிடவியல் முதலியனவாகும்.

படிமலர்ச்சியியல்: மனித இனத்தின் வளர்ச்சியில் படிமலர்ச்சி நிகழ்வே மையமாக அமைந்துள்ளது. விலங்கினத்தின் ஒவ்வொரு நிலையிலும் அது அடைந்த மாற்றங்களைப் பல்வேறு கோட்பாடுகளில் உயிரியலார் பலர் கூறியுள்ளனர். இருப்பினும் தார்

வினுடைய இயற்கைத் தேர்வுக் கோட்பாடே முழுமைபெற்ற படிமலர்ச்சிக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின்னர், உடல்சார் மானிடவியலாரும் உயிரியலாரும் படிமலர்ச்சிக் கொள்கைக்கு மேலும் நுண்விளக்கங்கள் தந்துள்ளனர்.

ஓரணு உயிரியிலிருந்து (Unicellular Organism), வளர்ச்சி பெற்ற இக்கால மனிதன் வரையிலான படிமலர்ச்சியை அறியும் இப் பிரிவு, உடல்சார் மானிடவியலின் தலையான பிரிவுகளுள் ஒன்றாகும். இருப்பினும் இப்பிரிவு மனிதனை உள்ளடக்கிய உயர்பாலூட்டிகளின் (Primates) படிமலர்ச்சியினை விரிவாக ஆராய்கிறது. ஒவ்வொரு சிறப்பினத்திற்குள் ஏற்படும் மாற்றங்களையும், இம் மாற்றங்கள் மரபு வழியில் கொண்டு செல்லப்படும் தன்மை முதலானவற்றையும் பெருநிலைப் படிமலர்ச்சி (Macro Evolution) நிலையிலும் நுண்படிமலர்ச்சி (Micro Evolution) நிலையிலும் அறியலாம்.

தார்வின் காட்டிய இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டிலிருந்து விலகி, இன்றைய படிமலர்ச்சியியலார் படிமலர்ச்சி நிகழ்விற்குப் புதிய அணுகுமுறையில் விளக்கந் தருவர். இதற்கு உயிர் வேதியியலின் (Bio-chemistry) வளர்ச்சி துணை நிற்பதாகும். இதன் பின்னர், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க முப்பதில் புதிய படிமலர்ச்சித் தொகுப்பிணைவு (The Modern Synthesis of Evolution) வழிமுறையைத் தியோடோசியசு தோப்சான்சுகி (Theodosius Dobzhansky), சி.சி. சிம்ப்சன் (G.G.Simpson), எர்ன்சுட்டு மேயர் (Ernst Mayr) ஆகியோர் மக்கள் தொகை மரபியலுடன் கணக்கியல் அணுகுமுறைகளை ஒருங்கிணைத்து, உடனிகழ்வுக் கொள்கையருக்கும் (Mutationists), தேர்வுக் கோட்பாட்டாளருக்கும் (Selectionists) இடையே வளர்ந்து வந்த விவாதத்திற்கு முடிவு கண்டனர். மக்களினத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு இயற்கைத் தேர்வும் சிறிய அளவிலான மரபு மாற்றங்களும் (Genetic Changes) படிமலர்ச்சி நிகழ்விற்கு இன்றியமையாதன என்னும் கூற்றை மக்கள் தொகை மரபியலார் ஏற்றுக் கொண்டுள்ளனர். படிமலர்ச்சியியலையும் இதனைச் சார்ந்த அனைத்துப் பரப்புகளையும் உடல்சார் மானிடவியலார் ஆராய்ந்து வருகின்றனர்.

உயர்பாலூட்டிகளியல் விலங்கினத்தில் உயரிய நிலையில் உள்ள உயர்பாலூட்டிகளைப் பற்றிய அறிவியலாகும். மனிதன் உயர்பாலூட்டிகளின் வரிசையில்(Order) அடங்கியிருப்பதால், இப்பிரிவு (Primatology) உடல்சார் மானிடவியலில் முதன்மையான பிரிவாகும். இப்பிரிவில் மனிதனையும் மனிதனுக்கு மிக நெருக்கமுள்ள மனிதரல்லாத உயர்பாலூட்டிகளான (Non-Human Primates) குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் (Apes) ஆகியவற்றையும் சிறப்பாக ஆராய்வர்.

மனிதனின் சமூகத் தோற்றத்தினையும் (Social Origin) உயிரிகளின் படிமலர்ச்சியினையும் அறியும் பெரு நோக்கோடு மானிடவியலார் உயர்பாலூட்டிகளைப் பற்றிய விரிவான ஆய்வுகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே மேற்கொண்டனர்.

உயர்பாலூட்டிகளியலுள் பல பெரும் பிரிவுகள் உள்ளன. இந்த விலங்கின வரிசையில் உள்ள அனைத்து விலங்குகளின் உடற் செயலமைப்பு (Physiology), உடற்கூற்றமைப்பு (Anatomy), புறத்தோற்றம், தகவமைப்பு (Adaptation), நடத்தை முறைகள் முதலானவற்றை அறிந்து அதன்வழிப் படிமலர்ச்சித் தொடர்ச்சியினை அறிவர். வாலில்லாக் குரங்குகளும் உயிர்சார் அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் மனிதரைக் காட்டிலும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், மனிதன் இன்று கண்டு வரும் மருத்துவம், உயிரியல் சார்ந்த அறிவியல் ஆகிய ஆய்வுகளில் மனிதரல்லாத உயர் பாலூட்டிகளே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் இவ்விலங்கினத்தின் ஆய்வுகள் மிகுந்து வருகின்றன.

மனிதரோடு தொடர்புற்ற உயர்பாலூட்டிகளையும் பாலூட்டிகளையும் ஆய்வு செய்வதில் பல நெறிமுறைகள் கையாளப்படுகின்றன. மனிதரல்லாத உயர்பாலூட்டிகளின் நடத்தைகளையறியத் தொடர்ச்சியான நீண்ட காலப் புலக்காட்சியறிவுடன் உற்றுநோக்கல் (Observation) பெரும்பாலும் முதன்மையானதாகிறது. இவ்விலங்கினங்களை ஆய்வின் தன்மைக்கேற்ப இரண்டு நிலைகளில் கையாளுகின்றனர். விலங்குகளை அதன் சூழலிலேயே இருந்து ஆய்தல் ஒரு நிலையாகும். சில குறிப்பிட்ட வேதிப் பொருள்களின் விளைவுகளை ஆராயவும் ஒரு குறுகிய இடத்தில் அடைக்கப்பட்ட நிலையில் அதன் நடத்தை முறைகளை ஆராயவும் இவ்விலங்குகளைச் சோதனைக் கூடத்தில் சிறையிட்ட நிலையில் ஆராயுமுறை இரண்டாம் நிலையாகும்.

விலங்குகளின் நடத்தை முறைகளை அறிவது 'விலங்கினப் பண்பியல்' (Ethology) ஆகும். இப்பிரிவு உயர்பாலூட்டிகளியலில் தலையானதாகும். விலங்கினத் தொகுதியில் இரு வேறு விலங்கினக் குழுக்களிடையே நிலவும் பண்பு வேறுபாடுகளையும் இவற்றிற்கிடையே காணப்படும் இடைவெளியையும் அறுதியிட விலங்கினப் பண்பியலார் முற்படுகின்றனர். உயர்

பாலூட்டிகள் குழுக்களாக ஒன்றுபட்டு வாழும் பண்பினைக் கொண்டுள்ளன. பொதுவாக இக்குழுக்கள் ஒரு குறிப்பிட்ட வாழிட எல்லையைக் கொண்டு பெரும்பாலான காலங்களில் இப் பகுதியிலேயே வாழ்கின்றன. உயர் பாலூட்டிகளின் வாழ்க்கை ஒத்துழைப்பு, போட்டி ஆகிய இவ்விரண்டு பொதுப் படையான நிலைகளைக் கொண்டுள்ளது.

தம் வாழ்க்கைத் தேவைகளை ஈட்டும்போது ஏற்படும் போராட்டங்களிலும் போட்டிகளிலும் விலங்குகள் ஓடிஒளிதல், பயமுறுத்துதல், இணங்கிப் போதல் முதலான சூழ்நிலைகளை ஏற்றுச் செயற் படுகின்றன. உயர்பாலூட்டிகளில் மனிதன் மட்டுமே விலங்குகளைக் கொல்லும் ஆற்றல் பெற்றவன் என்னும் கருத்து, அண்மைக் கால ஆய்வுக் கருத்துகளால் மறுக்கப்பட்டுள்ளது. வாலில்லாக் குரங்குகள் ஒன்றாகவோ தனித்தோ வேட்டையாடுந்தன்மையைக் கொண்டுள்ளன என்றும் இவை வேட்டையாடிய விலங்கினைச் சேர்ந்து உண்ணும் இயல்பினைக் கொண்டிருக்கின்றன என்றும் விளக்கப்படுகின்றன. விலங்கினத்தின் மேற்கூறிய அனைத்துச் செயற்பாடுகளின் நடத்தைமுறைகளையும் அறியும் இப்பரப்பில் தரவுகளைச் சேகரித்தல், அவற்றைப் பகுத்தாய்தல், ஒப்பிட்டாய்தல் முதலானவை இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

மனித சமூகத்தின் படிமலர்ச்சியினைப் பரந்த சான்றுகளுடன் அறியப் பாலூட்டிகளின் வாழ்க்கை முறைகள் அல்லது உயர்பாலூட்டிகளின் நடத்தை முறைகள் மட்டுமே சான்று பகரா. இதைப் போன்றே, மேற்கண்ட ஆய்வுகளை ஓர் உயிரினத்தின்பால் மட்டும் ஆய்வு செய்தலும் வழி வகுக்காது. மனிதனின் செயல் ஒப்புமைகளை மனிதனை ஒத்த குரங்குகள் முதலான ஓரிரு உயர்பாலூட்டிகளின் அமைப்பு முறைகளோடு ஒட்டிப் பார்ப்பதோடு நில்லாமல், பாலூட்டி உயிரினத் தொகுப்பின் ஒட்டுமொத்தத்தோடு ஒட்டிப் பார்க்கும் ஆய்வும் இன்றியமையாததாகும். இதைக் கருத்திற் கொண்டே கார்ப்பெண்டர் (Carpenter) ஒரு முடிவான பொதுவிதியினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

உயர் பாலூட்டிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் எண்ணிக்கை, அளவு, பால், வயது முதலானவற்றின் அடிப்படையில் தனித்த குழுக்களாகக் காணப்படும். இக்குழுக்கள் தம் எல்லைப் பரப்பை வகுத்துக் கொண்டு அப்பரப்பிலேயே வாழ முற்படும். தம் இனத்திற்கு உட்பட்ட வேற்றுக் குழுக்களுடனும் ஒன்றி வாழ இசையா. இதன் வழியே விலங்குகள் ஒங்கு பண்பைச் சார்ந்த முறையிலும் குழுக்களாக வகைப்படும். மற்ற உடனொத்த உயிரிகளை ஒடுக்கும் பண்பு, அதன் பரப்பிற்குள் உள்ள விலங்குகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் குறியீட்டு மொழி, சைகை நடத்தை முதலானவற்றை வைத்து இவ்வித மான குழுக்களை அல்லது தனிவிலங்கினை அளவிட முடியும். இப்பண்புகளின் அமைப்பு முறைகள் பல கால நிலைகளில் தொடர்ந்து புலக்காட்சி வழியாக ஆராயப்படும்போது வெளிப்படும். ஒரு விலங்கினத் தொகுதி தன் வாழிடப் பரப்பிலேயே ஆண்டு முழுவதும் உணவு சேகரித்து இனப்பெருக்கம் செய்து வாழ முடியாததாகிறது. உணவுப் பற்றாக்குறை, வாழும் சூழ்நிலையில் வேறுபாடு முதலானவற்றால் தன் பரப்பிலிருந்து அண்டைப் பரப்பைச் சார்ந்து வாழ முற்படுகிறது. அனைத்து உயர்பாலூட்டிகளின் சமூக வாழ்க்கையின் அமைப்பை ஒப்பிட்டு அறியும் நோக்கத்தோடு விலங்கினங்களின் வாழிடச் சூழலின் (Econiche) பின்னணியில் இவற்றின் பண்புகளை ஒப்பாய்வு செய்தனர்.

மனித இனங்கள்: உலகின் ஒவ்வொரு பகுதியும் பல புவியமைப்புகளையும் கால நிலைகளையும் கொண்டு வெவ்வேறு பண்புகளையுடைய மக்களைக் கொண்டுள்ளது. இதனால், மக்கள் பலவாறாக வேறுபடுகின்றனர். மக்களுள் காணப்படும் இந்த வேறுபாடுகளை அறிவது உடல்சார் மானிடவியலின் ஒரு பிரிவாகும். இப்பிரிவை இனவியல் (Raciology) எனக் கூறுவர்.

இக்கால மனிதனின் அனைத்து இனங்களும் நியாண்டர்தல் (Neanderthal) மூதாதையிலிருந்து தோன்றிய ஒரே சிறப்பினம் (Species) ஆகும். அதன் பின் இவர்கள் பல காரணிகளின் தாக்கத்திற்குட்பட்டுப் பல்வேறு வகையினராகப் பிரிந்தனர். பாகுபட்ட இவர்களின் உடலமைப்பு, பண்பாடு ஆகியவை அரசியல் வளர்ச்சியில் பல சிக்கல்களை ஏற்படுத்தி விட்டன. இதனால் உருவெடுத்ததே இனக் கொள்கை (Racism) ஆகும். இனவெறிக்குட்பட்ட இக் கொள்கையின் உண்மையினைப் புலப்படுத்துவதில் மானிடவியலாரின் பங்கே முதன்மையாக நின்றது.

வெள்ளை இனத்தவர்கள் உயர்ந்தவர்கள்; கறுப்பு, மஞ்சள் நிறத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் இனவெறிவாதத்திற்கு அறிவியல் அடிப்படையில் உண்மை காண முற்பட்டனர். உயர்ந்த இனத்தவரால் மட்டுமே சிறந்த பண்பாடு தோற்றுவிக்கப் படுகிறது என்பதை மறுக்கப்பண்பாட்டு மானிடவியல் அடிப்படையிலும் தொல்லியல் அடிப்படையிலும் பண்டைய எகிப்திய சிந்துவெளி நாகரிகங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவர். பண்பாட்டின் தரத்திற்கு

மண்டையோட்டின் அளவு தொடர்புடையதன்று. இனத்தின் அடிப்படையில் பண்பாடும் நாகரிகமும் அமைகின்றன என்ற இனவாதத்தினருக்குச் செரு மானியரை எடுத்துக்காட்டாக மானிடவியலார் காட்டுவர். செருமானியரின் முதன் முன்னோர்கள் காட்டுவாசிகளாய் இருந்தனர். அவர்கள் நாடு இன்று தொழிற்றுறையில் உலகின் முன்னணியில் நிற்கும் நாடுகளுள் ஒன்றாய் விளங்குகிறது. இதைப் போன்றே நுண்ணறிவுத் திறன் (IQ) வெள்ளையினத் தவருக்கு மட்டும் மிகுதியாக உள்ளது என்பதை உடல்சார் மானிடவியலார் உளவியல், மரபியல் முத லான கருத்துகளைக் கொண்டு மறுத்துள்ளனர்.

மனித இனங்களின் தோற்றம் பற்றிய ஆய்வும் அதன் வேறுபாடுகளுக்கான முறைகளை ஆராய்வ தும் இனவியலாரின் தலையான பணியாயின. இதற்கு இவர்கள் பலமுறைகளைக் கையாண்டனர். இவர்கள் மனித இனங்களின் வேறுபாட்டிற்கான காரணங்க ளைக் கண்டறிய, மனிதக் குலத்தின் வாழ்க்கை யமைப்பு, அது சூழலுடன் கொண்டுள்ள தொடர்பு, உடலமைப்புக் கூறுகள், புறத்தோற்ற உடலளவு, மண்டையோட்டு அளவு, எலும்புகளின் அளவு முத லானவற்றைக் கண்டறிந்தனர். இதனால், முகிழ்த் ததே மானிட உடலளவையியல் (Anthropometry) ஆகும்.

மானிட உடலளவையியல்: மனித வேறுபாடு களையறிய உடலளவைகள் இன்றியமையாதன. மானிடவியலார் உடலளவையை முப்பெரும் பிரிவு களாகப் பகுத்து ஆராய்வர். அவை புறத்தோற்ற உடலளவையியல் (Somatometry), மண்டையோட்ட ளவையியல் (Cranimetry), எலும்பளவையியல்(Osteo-metry)ஆகும். இம்மூன்று அளவைகளையும் கொண்டு மனித இனங்களை வகைப்படுத்தலாம். மனித வேறு பாடுகளிலுள்ள பல ஆழ்ந்த உண்மைகளைத் தருவது தோற்கூற்றியலாகும் (Dermatoglyphics). இப்பிரிவு கைவிரல்கள், உள்ளங்கை, கால்விரல், உள்ளங்கால் முதலிய பகுதிகளில் தோலில் காணப்படும் பலவகை யான வரியமைப்புகளையும்(Ridge patterns)தலையில் காணப்படும் சுழிகளின் அமைப்புகளையும் ஆராய்வ தாகும். உடலின் பிற உறுப்புகளிலில்லாத அளவில் இப்பகுதியில் வரியமைப்புகளும் இரேகைகளும் காணப்படுகின்றன. இவை மனித இனங்களின் வேறு பாடுகளைக் காட்டுகின்றன. காண்க: இனவகைப் பாட்டின் அலகுகள்.

இரத்தவியலின் (Serology) பயன்பாடு மானிட உடலளவையியலில் பெருமளவாகும். மானிட உடல ளவையியலார் இரத்தப் பண்புகளைக் கணக்கிட்டு மனித வேறுபாடுகளை அறிய முடிகிறது. பல்வேறு இனங்களிடையே இரத்தக் குழுக்கள் (BloodGroups) தனித்தனியான பண்புகளைக் காட்டுகின்றன. இதன் வழி மனித இனங்களை உடல்சார் மானிடவியலார் வகைப்படுத்துவர்.

எலும்பியலும் பல்லமைப்பியலும்: எலும்புகளை யும் பற்களையும் பற்றிய அறிவியலே எலும்பியலும் (Osteology) பல்லியலுமாகும் (Odontology). எலும்பு களும் பற்களும் பற்றிய ஆய்வுகள் உடல்சார் மானிட வியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் இவ்விரண்டு உடற்பகுதிகளே சிதைவுறாப் புதைபடி வமாக நெடுங்காலத்திற்கு மண்ணில் பாதுகாக்கப்படு கின்றன. கடந்த கால படிமலர்ச்சியைக் காட்டுவதற் குப் புதைபடிவங்களே மிகச் சிறந்த எடுத்துக் காட்டு களாய் விளங்குவதால் இதனைப் பற்றிய அறிவியல் அறிவு இன்றியமையாததாகும்.

பற்களின் உருவத்தையும் அளவையும் கொண்டு ஒரு விலங்கின் உணவு முறையையும் அது வாழ்ந்த சுற்றுச் சூழலையும் அறிய முடியும். பற்களும் எலும்பு களும் உடலமைப்போடு தகவமைந்து பன்னெடுங் காலமாகப் படிமலர்ச்சி அடைந்து வருவதால், அவற்றின் வடிவம், நீளம், அகலம், உயரம் ஆகிய அளவுகளைக் கொண்டு வரலாற்றுக் கால வளர்ச்சி யினையும் ஒரே தொகுதியில் உள்ள பல்வேறு சிறப் பினங்களின் படி மலர்ச்சியையும் விவரிக்க முடியும். இதனால், இப்பிரிவு படிமலர்ச்சியியலில் ஒரு துணைப் பிரிவாக உள்ளது.

எலும்பளவையியல் என்பது எலும்புகளைக் குறிப் பாகப் பெரிய எலும்புகளை அளந்து ஆராயும் அறி வியலாகும். இதன் ஆய்வுகள் எலும்புக் கூடுகளின் அமைப்பைப் பல்வேறு மனித இனங்களுக்கிடையில் அளந்து இன வேறுபாடுகளை அறிவதற்குப் பெருந் துணை புரியும்.

மனிதச் சூழலியல்: பல்வேறு சுற்றுப்புறச் சூழ் நிலைகளில் மனித இனங்களும் இதர உயர் விலங்கி னங்களும் கொண்டுள்ள தகவமைப்பு முறைகளை யும் சூழ்நிலையோடு இந்த உயிரிகள் கொண்டுள்ள தொடர்புகளையும் இந்தத் துணைப் பரப்பு ஆராய் கிறது. இந்த ஆய்வுகளின் வழி ஒவ்வோர் உயிரியும் தன் உடற்கூறு, உடலியக்கம், உயிர் வேதிநிலை, நோய் முதலான அனைத்து உடல்சார் நிலைகளிலும் தன் சூழ்நிலைகளோடு வினைபுரியும் முறைகளைக் கண்டறியலாம்,

மனிதனின் உடல் அமைப்பும் செயல்களும் அவன் சார்ந்துள்ள வாழிடப் பரப்பிற்கேற்பவும் கால

நிலைக்கு (Climate) ஏற்பவும் செயற்படுவன. உலகின் ஒவ்வொரு புவியமைப்புப் பகுதியும் வெவ்வேறானது. அனைத்துப் பகுதிகளிலுமே மனிதன் தகவமைந்து வாழ்ந்து வருகிறான். கடுங்குளிர் மிகுந்த தென் துருவம், வெப்பம் மிகுந்த வடதுருவம், தண்ணீர் குறைந்த பாலைநிலப் பகுதி, உயரம் மிகுந்த மலைப்பகுதி முதலான பல்வேறு சூழ்நிலைகளில் வாழும் மக்கள் உடற் செயலிலும் மரபணுப் பண்பிலும் பல மாற்றங்கள் பெற்று வாழ்கின்றனர். இதன் அனைத்துப் பண்புகளையும் அறியும் மனிதச் சூழலியல் பிரிவும் மனிதத் தகவமைப்பும் (Human Adaptation) உடலியங்கியல்சார் மானிடவியலும் (Physiological Anthropology) மனித வேறுபாடுகளையறிய உதவுகின்றன.

மக்கள் தொகை மரபியல்: மனித இனக் குழுக்களுக்கிடையே உயிர்சார் வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் காணும்பொருட்டு இனக்குழுக்களிடையே மரபுப் பண்புகளையும் மக்களின் பிறப்பு விகிதத்தின் முறைகளையும் மனித மரபியலின் வளர்ச்சியின் உதவிகொண்டு உடல்சார் மானிடவியலார் ஆராய்கின்றனர். இன்று மக்களிடையே காணப்படும் இனப்பெருக்க வீதத்தினை அறிதலும் பால்சார்ந்த மக்கள் விகிதத்தில் மரபணுப் பெயர்ச்சி (Genetic Drift) ஏற்கும் நிலைகளை அறிதலும் இப்பிரிவின் பரப்புகளாகும்.

மக்கள் தொகை மரபியல் (Population Genetics) மக்கள் குழுக்களிடையே காணப்படும் இணைதல் (Mating) முறைகளையும் அவற்றோடு தொடர்புற்ற மக்கள்தொகைச் சமநிலை (Population Equilibrium), இனப்பெருக்க மக்கள் தொகை (Breeding Population) முதலானவற்றின் பண்புகளையும் அறிவதாகும். இத்துறையின் ஒரு பிரிவு மக்களினங்களிலுள்ள உடல்சார் குறைகளைக் கண்டறிந்து, சில தனிப்பட்ட அணுகுமுறையில் மனித இனத்தை மேம்படுத்த முனைகிறது. இனமேம்பாட்டியல் (Eugenics) என்னும் இப்பிரிவு உடலாலும் உள்ளத்தாலும் வலிமையான மரபினரைப் பெற இனப்பெருக்கம் செய்வதை ஆதரிக்கிறது. இப்பிரிவின் ஒரு பகுதியான மரபணுப் பொறியியல் (Genetic Engineering), மேம்பட்ட குணங்களைக் கொண்டு செல்லும் மரபணுக்கள் (Gene) மனித மரபணுப் பொதுத் தேக்கத்தில் (Gene Pool) குறையாமலிருக்கவும் அவற்றை பேணிக்காக்கவும் கருத்திசு ஊநீரை (Germ Plasm) ஊக்கப்படுத்தி வளம்பெறச் செய்து நல்ல பண்புகளையுடைய எதிர்கால மரபினைப் பெறவும் முயலுகிறது. இதற்கு, இணக்கமான கலப்பினை மேற்கொள்ள வேண்டுவது தேவையாகிறது என இனமேம்பாட்டியலார் கருதுகின்றனர்.

இது தவிர்த்து மக்கள் குழுக்களிடையே காணப்படும் உடனடி மாற்றங்களை (Mutation) அறிந்து, அதனால் மக்கள் தொகையில் ஏற்படும் நுண்படி மலர்ச்சியினையும் பெருநிலைப் படிமலர்ச்சியினையும் மக்கள் தொகை மரபியலார் அறிய முனைவர்.

மக்கள்தொகையியல்: இனப்பெருக்கக் கருவியல், நன்னடத்தை, இணைதல் (Mating), இடப்பெயர்ச்சி, மக்கள்தொகை எண்ணிக்கை முதலான மக்கள் தொகையியல் (Demography) ஆய்வுகளை இக்கால உடல்சார் மானிடவியல் தன்பரப்பில் கொண்டுள்ளது. மக்கட்டொகை எண்ணிக்கையும் மக்கள் தொகையின் அமைப்பும் அவர்களின் மரபணு அடுக்கு நிகழ்வில் (Genetic Frequency) முதன்மையாகச் சார்ந்திருப்பதால் இப்பரப்புத் தலையானதாகக் கருதப்படுகிறது. பண்பாட்டின் வடிவுருவத்திலும் மக்கள் தொகையின் எண்ணிக்கை முதன்மையான பங்கேற்றுள்ளது. ஓரினத்தின் பொருளாதாரச் செயற்பாடுகள், சமூக அமைப்புக்குட்பட்ட குடும்பம், திருமணம், தொழிற்பகுப்பு (Division of Lobour) முதலானவை மக்கள் தொகையின் அமைப்பையும் எண்ணிக்கையையுமே சார்ந்துள்ளன. ஆதலால், மானிடவியலார் மக்கள் தொகையின் அமைப்புகளை அறிவதை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இத்துறையின் பரப்புகளை விரிவான நிலையில் கொண்ட ஒரு சிலர் இதனை மக்கள் தொகையியல் சார் உயிரியல் (Population Biology) எனக் கூறுவர்.

கருவியலும் உடலியலும்: கருத்தோற்றத்திலிருந்து இறப்பு வரை காணப்படும் வாழ்க்கை நிரலின் அனைத்துக் கூறுகளையும் பகுத்தாயும் கருவியல் (Embryology) அணுகுமுறை உடல்சார் மானிடவியலில் ஒரு பிரிவாக ஏற்று ஆராயப்படுகிறது. திணை சார்ந்த குடிகளின் மக்களிடையே காணப்படும் வளர்ச்சி நிலைகளின் செயற்பாட்டினைக் கருவியல், உடலியங்கியல், உணவூட்டம், மண்ணின் தன்மை முதலான உயிர்க் காரணிகளோடு ஒப்பிட்டு அதன் அடிப்படையில் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் உடலமைப்பு வளர்ச்சி வீதம் முதலானவற்றை ஆராய்வது இத்துறையின் ஒரு கூறாகும். மருத்துவ மானிடவியலும் இதன்கண் ஓர் உறுப்பே எனலாம். உடலியங்கியல் சார் மானிடவியல், குறை ஊட்ட உணவு, மக்களின் உடல் எடை, உயரம், உடலமைப்பு, தகவமைப்பு முதலானவற்றையும் இதனைச் சார்ந்த பால் வேறுபாடுகளையும் அறிவதனால், மானிடவியலின் இப்பரப்பு ஏனைய உயிரியல்சார் துறைகளோடு ஒருங்கிணைந்து செயற்பட முடிகிறது.

மூலக்கூறு உயிரியல்: உயிர்வாழும் மக்கள் குழுக்களிலும் உயர்பாலூட்டிகளிலும் மூலக்கூறு

களின் பண்புக் கூறுகள் பரவிக் காணப்படுவதைக் கண்டறிவதில் மூலக்கூறு உயிரியல் (Molecular Biology) அணுகுமுறையில் உடல்சார் மானிடவியலார் முனைந்துள்ளனர். இந்த ஆய்வுகள் இயல்பு கடந்த இரத்தச் சிவப்பணுக்கள் (Haemglobin), குன்றிய உடலமைப்புகள் ஆகியவை தோன்றுவதற்கான காரணங்களைக் கண்டறிகின்றன. மருத்துவ மானிடவியலிலும் உடலியங்கியல்சார் மானிடவியலிலும் இப்பிரிவு சார்ந்த ஆய்வுகள் பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

பயன்முறை உடல்சார் மானிடவியல்: உடல்சார் மானிடவியலின் பயன்முறைகள் விரிவானதும் மிகுதியானதுமாகும். ஆதலால் இவற்றின் அனைத்துப் பயன்பாடுகளையும் அறியப் பல தனித்தனித் தலைப்புகளில் காண வேண்டும்.

உயிரியலும் உடலியங்கியலும்: மனித இனத்தின் படிமலர்ச்சியும் உயர்பாலூட்டிகளின் படிமலர்ச்சியும் புறஉடற் பண்புகளைச் சார்ந்து காணப்படுவதால் இந்தப் புறப்பண்பு மாற்றங்களை மனித உடலளவைக் கணிப்பின்வழி நன்கு கண்டறியலாம். எலும்புப் பகுதி, தசை, மூளை முதலான பகுதிகளை ஆய்வு செய்யும் உடலியங்கியல்சார் வேதியியலிலும் (Physiological Chemistry) வயது, பால் முதலானவற்றால் ஏற்படும் வேதியல் மாற்றங்கள், உடலமைப்பு மாற்றங்களின் தன்மையை அறிதல், ஒவ்வொரு மனித இனத்தின் நோயியல் பண்புகளையும் உறுதிப்படுத்துதல், சட்டத்துறை சார்ந்த மருத்துவம் (Forensic Medicine) முதலான துறைகளிலும் மனித உடலளவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

உயிர் வகைப்பாட்டியல்: மிகச் சிறந்த உயிர் வகைப் பாட்டியலாரான எச். இலாகியர் (H. Laugier) 1934-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த பன்னாட்டு மானிடவியல் அறிவியல் கழகத்தில் (International Congress of Anthropological Science) இத்துறையின் தேவையையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். உயிர் வகைப் பாட்டியலின் (Biotypology) அளவைகளையும் முறைகளையும் கொண்டு எங்கெங்கு மனிதச் சமூகத்தினை வகைப்படுத்தலும் தேர்வு செய்தலும் கையாளப்படுகின்றனவோ அங்கங்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது. பணியாளர்களைத் தேர்வு செய்வதில் குறிப்பாகப் படைப்பிரிவு ஊழியர் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பிரிவில் துணைபுரிதல், சமூகம், தொழில் முதலான துறைகளில் மக்களைப் பயன்படுத்துதல், விளையாட்டு, கற்பித்தல் வழி வகைப்படுத்தல் (Pedagogical Classification) போன்ற பல்வேறு மனித இனங்களின் உயிர்சார் பண்புகளைப் பகுத்தல் முதலான துறைகளில் இவ்வகைப் பாட்டியல் பயன்படுத்தப்படுகிறது. இவ்வியலின் பயன்பாடுகள் மானிடவியலின் அனைத்துப் பரப்பிலும் இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology), சமூகவியல் முதலான துறைகளின் ஆய்வுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

தண்டனையியலும் குற்றவியலும்: தொன்று தொட்டே தண்டனை, குற்றம் முதலியன குறித்த செயற்பாடுகளில் மானிட உடலளவையியலின் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சட்டம் சார்ந்த கணிப்புகளுக்கு முன்னர்ப் பயன்படுத்தப்பட்ட பெர்ட்டிலன் (Bertillon)முறை மேலும் மேம்படுத்தப்பட்டு, இப்போது விரலமைப்பியல் (Dactyloscopy) துறையிலும் பயன்படுத்தப்படுகிறது. சிறிது காலத்திற்கு முன்பு குற்றவியல் புற உடலளவையியலின் ஒரு பகுதியாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

மருத்துவமும் பொது நலப்பணியும்: மருத்துவத் துறையில் மானிட உடலளவையியலின் பங்கு குறிப்பிடத்தக்கது எனலாம். பெண் உறுப்பமைப்பியலார் (Gynaecologist)கர்ப்பிணிப் பெண்ணின் இடுப்பெலும்பின் நீளம், அகலம், உயரம் முதலானவற்றைக் கணக்கெடுத்தல் இன்றியமையாததாகிறது. இவ்வெலும்பின் பரிமாணத்தைக் கொண்டு பிறக்கும் குழந்தையின் தலை, நீளம், எடை முதலானவற்றின் அளவுகளை முன்கூட்டியே அறிகின்றனர். இதைத் தவிர்த்து மருத்துவத்தின் பிற துணைப் பரப்பிலும் மானிட உடலளவையியல் பயன்படுகிறது. இது மனித உடல் வளர்ச்சி காலத்திற்கேற்ப மாறி வருவதை அளவிட்டு, அது உடல் வளர்ச்சியுடன் இணைந்து காணப்படுகிறதா உறுப்புகளில் வேறுபாட்டு வளர்ச்சியுடன் (Differential Growth)காணப்படுகிறதா என்பதை அறிய உதவுகிறது. விளையாட்டு, மருத்துவம், பல்லியல், மூட்டியல் முதலான துணைப் பரப்பிலும் மானிட உடலளவையியல் பயன்படுத்தப்படுகிறது.

இன்றைய மருத்துவ முறையில் செயற்கை உறுப்புகள் பொருத்துவது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் கையாளப்படுகின்றது. இந்த உறுப்புகள் நீண்ட புற உறுப்புகள்முதல் நுண்ணிய அக உறுப்புகள் (Internal Organs) வரையிலானவையாகும். இந்த அனைத்து உறுப்புகளையும் உருவமைத்துச் செய்வதற்கும் பொருத்துவதற்கும் மானிட உடலளவை முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

படைப்பிரிவில் பயன்கள்: இராணுவத்தில் ஊழியர்களைத் தேர்வு செய்யும்போது உடல் உறுப்புகளின் தன்மையையும் அளவுகளையும் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் படைப்பிரிவில் சேர அனுமதிக்கப்படுவது பன்னெடுங்காலமாகக் கையாளப் படுவதாகும். இனவகைகள், அடையாளக் குறிகளைக் கண்டறிதல், உடலின் புற உறுப்புகளின் அளவினை எடுத்தல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்ற உடல் சார் மானிடவியலாளர்கள் இராணுவப் பிரிவுகளுக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் மருத்துவக் குழுவில் இடம் பெற்றிருக்க வேண்டுமென சி.பி. தாவன் போர்ட்டு (C.P.Davenport), ஏ.சி. இலவ் (A.C.Love) ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். படைப்பிரிவு ஊழியர்களைத் தேர்வு செய்வதிலும் அவர்கள் பயன்படுத்தும் கருவிகள், இருக்கைகள், துணைப் பொருள்களின் அமைப்புகள், மண்டைக் கவசங்கள், ஆவிக்கவசங்கள் (Gas-mask), இராணுவ வீரர்களின் உடைகளைத் தயாரித்தல் முதலானவற்றிலும் மானிட உடலளவையியலின் பங்கே முதன்மையானது.

ஆடை, அணிகள், காலணிகள் செய்யும் தொழில்களிலும் பிற தொழில் துறைகளிலும் இத்துறையின் பயன் மிகுதியானதாகும். பொதுமக்களுக்கு ஆடைகளும் காலணிகளும் தயார் நிலைப் பொருள்களாகவே (Ready made Goods) இன்று மலிந்து கிடப்பது கண் கூடு. மானிட உடலளவையியலார் மக்களின் சராசரி உறுப்பளவுகளை எடுத்து, அவற்றிற்கேற்பப் பொருள்களை உருவாக்க உதவுகின்றனர். இத்தகைய சரியான அளவுகள் கிடைப்பதனால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திச் செலவும் அடிப்படைப் பொருள்களும் பெருமளவு குறைகின்றன; மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

வரலாறு: வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாறு (Prehistory), வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப் பட்ட வரலாறு (Protohistory) ஆகிய துறைகளில் மனித நிகழ்ச்சிகளையும் மனித வடிவங்களையும் உடல் அமைப்புகளையும் பிற வரலாற்று இயல் நிகழ்ச்சிகளையும் அறிவதில் உடல்சார் மானிடவியல் துணை நிற்பது கண்கூடாகிறது.

சமூகவியலிலும் உடல்சார் மானிடவியலின் பங்கு பெரிதும் நாடப்படுவது இதன் பயன்பாட்டினைக் காட்டுவதாகும். தொல் சமூகத்தின் சமூக பொருளாதார அமைப்புகளை அறிந்து இக்காலச் சமூக அமைப்புகளுடன் ஒப்பிட இத்துறையின் களப்பணிகள் துணைபுரிகின்றன.

கல்வி: மரியா மாண்டசோரி (MariaMontessori) 1900-ஆம் ஆண்டில் வெளியிட்ட கற்பித்தலியல்சார் மானிடவியல் (Pedagogical Anthropology) என்னும் வெளியீடு இவ்விரு துறைகளின் இன்றியமையாமையை விளக்குவதாகும். சில நாடுகளில் ஆண்டுத் தேர்வுகளுக்குப் பின், மாணவர்களின் உடல் வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் இதற்கிடையேயான தொடர்புகளையும் மானிடவியலார் துணைக்கொண்டு அறிகின்றனர். இவ்வகையான ஆய்வுகளில் உளவியல் சார் மருத்துவர்கள் துணையும் நாடப்படுகிறது.

பி.கோ. & கே.நி.

துணை நூல்கள்:

**Boyd,W.C.**, Genetics and the Races of Man, Little Brown, Boston. 1950.

**Coon, C.S., Garn, S.M. and Birdsell, J.B.**, Races: A Study of the Problems of Race Formation in Man. Charles C. Thomas. Illinois, 1950.

**Darwin, C.**, Descent of Man and Selection in Relation to Sex. Appleton, Newyork, 1871.

**Hulse,F.S.**, The Human Species: An Introduction to Physical Anthropology, Random House, New york, 1971.

**Washburn, S.L.**, The New Physical Anthropology; Transactions of the New york Academy of Sciences, Reprinted in Yearbook of Physical Anthropology, New york, 1951.

**உடல் நலக் கல்வி**: உயிர் வாழ்வதற்கு உடல் இன்றியமையாதது. உறுதியான, நோயற்ற வாழ்வே இன்பமான வாழ்க்கைக்கு முதற்படியாகும். எனவே உடல் நலம் மிகவும் இன்றியமையாதது. உடல் நலத்தினைப் பற்றிய கல்வி உடல் நலக் கல்வியாகும். உடல் உறுப்புகள் பற்றிய செய்திகள், அவற்றின் அமைப்பு, வேலை செய்யும் முறைகள், ஒழுங்காக அவை வேலை செய்வதற்கு ஒருவர் பின்பற்ற வேண்டிய விதிகள், ஒருவர்க்கு வரும் நோய்கள் பற்றிய செய்திகள், அவற்றைத் தீர்க்கும் முறைகள் ஆகியவை பற்றிய கல்விதான் உடல் நலக் கல்வி.

உடல் நலக் கல்வியை எல்லோருக்கும் கற்பிக்க வேண்டும். ஆனால் அவர்களின் வயதிற்குத் தகுந்தாற்போல் கற்பிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயது வரைக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே தன்மையான உடல் நலக் கல்வியைக் கற்பிக்கலாம்.

சிறு குழந்தைகளுக்குப் பெற்றோர்களே உடல் நலம் பற்றிய செய்திகளைக் கற்பிப்பது மிகச் சிறந்ததாகும்.

பின்பு பள்ளியில் ஆசிரியர் பாடத்தின் வாயிலாக உடல்நலக் கல்வியியைக் கற்பிக்கலாம். அரசாங்கம் தன்னுடைய பலவகைத் திட்டங்கள் மூலமும் வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சி (Television), வீடியோ கேசெட்டு (Viedo Cassettee) ஆகியவற்றின் மூலமும் இக்கல்வியைக் கற்பிக்கலாம். தனிமனிதத் தூய்மை, பொது இடத்தூய்மை, மனிதனுக்கு வரும் நோய்கள், நோய்கள் வருவதற்கான அறிகுறிகள், அவற்றைத் தீர்க்கும் எளிய வழிமுறைகள் போன்றவற்றைச் சிறப்பு நிகழ்ச்சிகள் வாயிலாகக் கற்பிக்கலாம்.

மூன்று வயதிலிருந்து ஏழு வயதிற்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கு நன்றாகப் பல் துலக்குவது, குளிப்பது, உடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வது, குறித்த காலத்தில் உணவு உட்கொள்வது போன்றவற்றின் இன்றியமையாத் தன்மையை எடுத்துச் சொல்லலாம். திறந்த வெளியில் மூடப்படாமல் இருக்கும் உணவுப் பண்டங்களைத் தின்பதைத் தவிர்க்கச் சொல்லலாம்.

ஏழு முதல் பதினைந்து வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு உடல் உறுப்புகளின் அமைப்பு வேலை செய்யும் முறை பற்றிச் சொல்லிக் கொடுத்து, அவை நன்கு வேலை செய்யத் தேவையான சத்துணவுகளை (Nutritious Foods) உண்ணச் செய்யலாம். 'உடல் நலத்தை வளர்ப்பதற்குரிய சிறந்த வழி நல்ல, சத்தான உணவை உண்பதே என்பதும் நோய்கள் வருவதற்குரிய ஒரே காரணம் தவறான உணவு வகையே என்பதும் கர்னல் இராபர்ட் மெக்காரிசனின் கருத்தாகும். இக்கருத்தை மனத்திற் கொண்டு, சத்துள்ள உடம்பிற்கேற்ற உணவுகள் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கலாம். கீரைகள், பழங்கள், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்ளச் செய்யலாம். பீடி, சிகரெட்டு போன்றவற்றைப் பிடிப்பதனால் வரும் தீமைகள் பற்றியும் சொல்லி, அவற்றைத் தவிர்க்கச் செய்யலாம். உடலை நன்கு வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றை நாடோறும் செய்யச் சொல்லலாம்.

பதினைந்து வயது முதல் இருபத்தைந்து வயது வரையுள்ளவர்கட்குப் பாலியல் கல்வி (Sex Education) கற்பிக்கலாம். தவறான பால் உறவுகளால் ஏற்படும் நோய்கள் பற்றியும் தெரிவிக்க வேண்டும். மக்கள் தொகை பற்றிய கல்வி (Population Education) யும் மக்கள் தொகைமிகுவதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் அவர்களுக்குத் தெரியப் படுத்தலாம். மேலும் மனிதர்க்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்க இயற்கையோடு இயைந்த எளிமையான முறைகளைச் சொல்லிக் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக, மண் குளியல் (Mud Bath), இலைக் குளியல் (Leaf Bath), உடலைப் பிடித்துவிடும் கலை ஆகியவை பற்றித் தெரிவிக்கலாம். இயற்கை மருத்துவ நிலையங்கள் இந்தியாவில் பெங்களூர், கோயம் புத்தூர், சிவசைலம் போன்ற இடங்களில் உள்ளன.

மேலும், இவ்வயதினரான (15-25) மகளிர்க்கு மகப்பேறும் குழந்தை வளர்ப்பும் (Pregnancy and Child Care) பற்றிய கல்வி, நல்ல சத்தான உணவை எளிய முறையில் சமைக்கும் முறை ஆகியவற்றைக் கற்பிக்கலாம். காய்கறிகளை மிகுதியாக வேக வைப்பதால் அவற்றின் சத்துகள் வெளியே சென்று விடுகின்றன. சோற்றின் தண்ணீரை வடித்து விடுவதாலும் சத்துகள் வெளியே சென்று விடுகின்றன. இவற்றை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். புட்டிப்பால் கொடுப்பதால் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுகிறது. சிறு குழந்தைகள் இறப்பு விகிதம் மிகுந்துள்ளதற்கு இது ஒரு காரணமாகும். எனவே தாய்ப்பால் கொடுப்பதன் (Breast Feeding) இன்றியமையாமையை வலியுறுத்த வேண்டும். வீட்டையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளவும் எளிமையான யோகாசனங்களைச் செய்யவும் கற்றுத் தரலாம்.

இருபத்தைந்து வயதுக்கு மேல் நாற்பது வயது வரையில் உள்ளவர்களுக்கு மது, புகைபிடித்தல் வெற்றிலை பாக்கு போடுதல் ஆகியவற்றால் நோய்கள், இரத்த அழுத்தம், நீரிழிவு வருவதற்கான காரணங்கள் ஆகியவை பற்றியும், அவற்றைத் தடுக்க உடற்பயிற்சி செய்ய வேண்டியதன் தேவையைப் பற்றியும் கற்பிக்க வேண்டும். உடற்பயிற்சியினையும் யோகாசனங்களையும் ஒழுங்காகச் செய்வதன் மூலம் இதய வலியினையும் (Heart Attack) ஒரு சில நீரிழிவு நோய்களையும் இளைப்பு (Asthma), இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் தவிர்த்துவிடலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நோயற்று வாழும் வழிமுறைகள்: உண்ணும் உணவைப் பொறுத்தே உடல் வளர்ச்சி ஏற்படுகிறது. உணவில் கட்டுப்பாட்டுடன் இருந்தால் நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். இதைத்தான் டாக்டர் எச். வி. மென்கெல் 'எதை எவ்வளவு உண்பது' என்ற புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'மிகுதியாகச் சாப்பிடுவது, அடிக்கடி சாப்பிடுவது, மாவுச்

சத்து மிகுதியாக உள்ள உணவுகளையும் சர்க்கரை, புரதங்கள் ஆகியவை மிகுதியாகவுள்ள உணவுகளையும் மிகுதியாக உண்பது ஆகியவற்றால் நோய்கள் பல உண்டாகின்றன' என்று தெரிவிக்கிறார். 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது, அற்றது போற்றியுணின்' என்பது திருவள்ளுவர் வாக்கு. எனவே அளவாகக் குறித்த காலத்தில் உணவு உண்டால் நோயற்று வாழலாம்.

பழங்கள், கீரைகள், பச்சைக் காய்கறிகள், கொழுப்புச்சத்து இல்லாத உணவு வகைகள், குறைவான எண்ணெய்ப் பதார்த்தங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை அளவுடன் உண்ணுதல் மூலம் நம் உடலை உறுதிப்படுத்த முடியும். கொதிக்க வைத்து ஆறின நீரைப் பருகுவதாலும் காற்றோட்டமான இடங்களில் வசிப்பதாலும் நோய்கள் வராமல் தடுக்கலாம்.

'குருட்டுத்தன்மை, உடல் மெலிந்து இருப்பது போன்றவற்றிற்குக் காரணம் சத்தில்லாத உணவு உட்கொள்ளுவது தான். ஏழ்மையான நாடுகளில் சத்துள்ள உணவினை உண்பதன் மூலம் இத்தகைய நோய்களைஇன்னும்10 ஆண்டுகளில் இல்லாமல் செய்து விடலாம்' என்று சி. கோபாலன் தம்முடைய 'ஏழ்மையான நாடுகளில் சத்துணவுச் சிக்கல்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எஸ். ஆ.

***உடலியங்கியல்சார் மானிடவியல்:*** பல்வேறு சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் அமைப்புகளுக்கு ஏற்றவாறு உருவ அமைப்பிலும் உடலியக்க அமைப்பிலும் மனிதர்கள் கொண்டுள்ள தகவமைப்பு முறைகளை அறியும் ஒரு மானிடவியல் துணைப்பிரிவே உடலியங்கியல்சார் மானிடவியல் (Physiological Anthropology) ஆகும். இப்பிரிவு மானிடவியலில் தனிப் பெருந் துறையாகக் காணப்படவில்லையாயினும், இன்றைய மானிடவியலாளர்கள் மக்களின் தகவமைப்புகளை விரிவான பல பரப்புகளில் ஆராய்ந்து வருகின்றனர்.

மனிதனின் உடல் அமைப்பும் செயல்களும் அவன் சார்ந்துள்ள வாழிடப் பரப்பிற்கேற்பவும் காலநிலைக்கு (Climate) ஏற்பவும் செயற்படுவன. இதனையொத்தே மனிதனின் உடலியக்கத் துலங்கல்களும் (Physiological Responses) வாழ்க்கையமைப்பை ஏற்பதில் தகுதிகளும் அமைகின்றன என்பது உடலியங்கியலாரிடையே வழங்கப்படும் பெருவழக்காகும். மானிடவியலாளருள் சிலரும் உடலியங்கியலாருள் ஒரு சிலரும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மக்கள் குழுவினர் உடலியங்கு முறையில் சூழ்நிலையோடு பெற்றிருக்கும் தூண்டுதல்களில் வேறுபடுகின்றனரா என்பதை ஆராய்வதில் ஈடுபட்டனர். மனிதன் தோன்றிய காலந்தொட்டே பல வகைப்பட்ட சூழ்நிலை அழுத்தங்களும் (Environmental Stress) உடலியல் மாற்றங்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருவதை முழுதளாவிய முறையில் கண்டறியப் பல அணுகுமுறைகளைக் கண்டனர். இவற்றுள் அடிப்படையானது உருவ அமைப்பில் காணப்படும் மாற்றங்கள் உடலியங்கு முறையில் உண்டாக்கும் விளைவுகளை மதிப்பீடு செய்வது ஆகும்.

உடலியங்கியல்சார் மானிடவியலின் தொடக்க கால ஆய்வுப் பரப்பு மிகக் குறைந்த அளவினதாகும். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்து இதன் பரப்பு கீழ்வரும் ஆய்வுப் பரப்புகளைக் கொண்டு, விரிவானதொரு துணைப் பரப்பாக மானிடவியலில் இடம் பெற்றுவிட்டது. பாக்கர் Baker) உடலியங்கியல்சார் மானிடவியலின் பரப்பைப் பின்வருமாறு குறிப்பிடுவார். இத்துறை சூழ்நிலைத் தூண்டுதல்களுக்கு மனிதன் கொண்டுள்ள அனைத்து உடலியக்கத் துலங்கல்களையும் உடலியக்க நிலையில் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளையும் இதற்கான காரணங்களையும் அறிய முற்படுவதாகும். எடுத்துக்காட்டாக, குளிர், வெப்பம் முதலான காலநிலைகளில் மக்களின் தகவமைப்பையும், இவர்களின் உருவ அமைப்பிற்கும் மரபுப் பண்பின் வேறுபாட்டிற்கும் (Genetic Variation) உள்ள தொடர்புகளையும் கண்டறிவது முதன்மையானதாகும். இந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் போது தகவமைப்புச் சார்ந்த நிகழ்வுகளை அறியும் படிமலர்ச்சிக் கோட்பாடுகளை உடன்கொண்டு அறியவேண்டும். மனிதத் தகவமைப்பு ஆய்வுகள் அண்மைக் காலங்களில் பெருமளவில் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வுகளின் முடிவின்படி மனிதத் தகவமைப்பு மரபுப் பண்புகளின் தகவமைப்பையும் மரபுசாராப் பண்புகளின் தகவமைப்பையும் கொண்டதாகும் என அறிய முடிகிறது. மரபுப் பண்பின் தகவமைப்பு என்பது மரபணுவின் அடுக்கு நிகழ்வில் (Gene Frequency) ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாகும். மரபணுவின் அடுக்கு நிகழ்வில் ஏற்படும் மாற்றமானது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வளரும் மக்கள் தொகையின் இனப்பெருக்கச் செயல்திறனையும் நிருணயிப்பதாகும். பரவலான அடிப்படையில் மனிதன் மரபுத்தோற்ற நெகிழ்வுத் தன்மையினைக் (Genotypic Plasticity) கொண்டுள்ளான். இதன் விளைவால் சூழ்நிலைக்கும் புறத்தோற்ற அமைப்பிற்கும் இடையே ஏற்படும் வினைகள் ஒவ்வோர் உயிரியின் (Organism) உருவ அமைப்பிலும் நடத்

தைக் கோலத்திலும் மாறுபாடுகளைத் தோற்று விக்கின்றன.

மனித உடலியக்க முறைகளுக்கும் சூழ்நிலை அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளை அறிய, அறிவியலார் உயிரினக் கோளத்தைப் (Biosphere) பல பெரும் மண்டலங்களாகப் பிரித்து ஆராய்வர். மோரன் (Moran) என்பவர் உயிரினக் கோளத்தை வடதுருவ மண்டலம் (Arctic Zone), உயரமிகுந்த நில மண்டலம் (High Altitude Zone), வறட்சி மண்டலம் (Arid Zone), புல்வெளி மண்டலம் (Green Land), ஈரமுள்ள வெப்பமண்டலம் (Humid Tropics) என ஐந்து மண்டலங்களாகப் பிரிப்பர். மேற்கண்ட ஒவ்வொரு பகுதியிலும் மக்களும் உயிரினங்களும் பல தகவமைப்பைப் பெற்று வாழ வேண்டியுள்ளனர். கடுங்குளிர், கடுவெப்பம், தண்ணீர்ப் பற்றாக்குறை, ஈரப்பதம், உயரம் (Altitude) முதலான பல காரணிகள் வாழ்க்கைத் தொழிலோடும் உடல் தொழிலோடும் பங்கேற்று உள்ளதால், ஒவ்வொன்றின் செயல்தன்மையும் உடற்றொழிலில் மரபுவழியாகப் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இதை அறியவே உடலியங்கியல்சார் மானிடவியலார் மனிதத் தகவமைப்புகளை மூன்று வகையாகப் பிரிப்பர். மோரன் என்பார் கூற்றுப்படி, உயிரினங்கள் வளர்நிலைத் தகவமைப்பு (Developmental Adaptation), இணக்கநிலைத் தகவமைப்பு (Acclimatory Adaptation), நிலைப்படுத்தும் தகவமைப்பு (Regulatory Adaptation) ஆகிய மூன்று வகையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன.

வளர்நிலைத் தகவமைப்பும் இணக்கநிலைத் தகவமைப்பும் மாறுபட்டனவாகும். ஒவ்வொருவரும் வாழ்க்கையமைப்பிலும் வளர்நிலைப் பருவத்திலும் பல பின்னோக்கா மாற்றங்களைப் (Irreversible Changes) பெற்று வளர்ந்துவிடுவர். வளர்ச்சியடைந்த பருவத்தில் ஒருவனுக்கு ஏற்படும் சிற்சில பண்பாட்டு, சமூக நடத்தைசார் உள்தகவமைப்புகளை அமைத்துத் தருவதே இணக்கநிலைத் தகவமைப்பு ஆகும். இது பின்னோக்குடையதும்(Reversible) பின்னோக்கற்றதும் ஆகிய இரண்டு தகவமைப்புப் பண்புகளை ஏற்றதாகும். இந்த நிலையில் வாழ்க்கையின் இயல்பு நிலை அமையப் பெறும்போது அப்பண்புகளைத் தொடர்ந்து கொண்டு செல்லுவதே நிலைப்படுத்தும் தகவமைப்பாகும். படிமலர்ச்சி (Evolution) மாற்றங்களில் இயற்கைத் தேர்வு (Natural Selection) பெரும்பான்மையான பங்கினைப் பெற்றுள்ளது. சிறுவயது முதல் ஒவ்வொரு நிலையிலும் பல தகவமைப்புகளைப் பெற்று ஒவ்வொருவரும் வாழ்கின்றனர். இதனைப்போன்றே ஒவ்வொரு சமூகமும் சமுதாயமும் பல நிலைகளில் சுற்றுச்சூழலில் மாற்றத்தோடு ஒப்புற்றுப் படிமலர்ச்சியடைந்து வருகின்றது. மரபு வழியில் தொடரும் இப்பண்புகள் ஒவ்வொரு மக்கள் குழுவிலும் மாறுபடுவதால், ஒவ்வொரு சமூகத்தையும் தனித்தனியாக அறிதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, மிகுந்த உயரப் பகுதியில் வாழும் குழந்தைகள் பெரிய நுரையீரல்களையும் பெரிய மார்பகத்தையும் பெற்றுவிடுவர். மிக உயரமான மலைப் பகுதிகளிலும் மேட்டுப் பகுதிகளிலும் உள்ள காற்றில் உயிர்வாயு (Oxygen) குறைந்திருத்தலினால் இவை ஏற்படுவனவாகும். இது ஒரு வளர்நிலைத் தகவமைப்பு (Developmental Adjustments) ஆகும்.

மனித உடலியங்கியல் துலங்கல்கள்: தான் வாழும் சூழ்நிலைக்கேற்ப மனித உடற் செயல்கள் தகவமைந்திருத்தலை முப்பெரும் பகுதிகளாகப் பகுத்து ஆராயலாம். அவை 1. மனித உடல் வெப்பச் சீரமைப்பு முறை (Human Thermo Regulation), 2. சர்கேடியன் ஒழுங்கியல்பு (Circadian Rythms), 3. வேலையும் அடிப்படை உணவும் (Work and Diet Subsistence) ஆகும்.

மனித உடல் வெப்பச் சீரமைப்பு முறை: மனிதத் தகவமைப்பின் முதன்மையான கூறு தன் உடலின் வெப்ப நிலையைச் சீராகத் தானே செயற்படுத்தும் தன்மையேயாகும். மனிதனின் சராசரி உடல் வெப்ப நிலை 36.5°C முதல் 37.5°C வரையிலானதாகும். இந்த வெப்பநிலையிலிருந்து மாறி 24°C வரை கீழிறங்கினாலோ 45°Cவரை மிகுதியானாலோ உயிர் பிழைத்தல் கடினமானதாகிவிடும். வெப்பப் பரிமாற்ற (Heat Exchange) நிகழ்வினாலேயே உடல் அதன் வெப்பநிலையைச் சீராக வைத்துக் கொள்கிறது. இந்த நிகழ்வில் இரண்டு முதன்மையான நிலைகள் உள்ளன. ஒன்று வளர்சிதை மாற்றத்தினால் (Metabolism) உண்டாக்கப்படுகிறது. மற்றொன்று உடலிலிருந்து சூழ்நிலைக்கு வெப்பத்தைக் கடத்திவிடுவது. உடலுக்குத் தேவையான வெப்பத்தைப் பெறுதலும் உடலுக்கு மிகுதியான வெப்பத்தை வெளியேற்றுதலும் கடத்துதல்(Conduction), புடைப்பெயர்ச்சி (Convection), கதிர்வீச்சு (Radiation)ஆகிய மூன்று முறைகளால் நடைபெறுகின்றன. மனித உடலின் வெப்பச் சீரமைப்பு முறையை அறிவதற்கு உடலில் வெப்பம் எவ்வாறு உண்டாகிறது என்பதனை அறிதல் வேண்டும். உடல் முழுமையாக ஓய்வு நிலையில் உள்ளபோது நடைபெறும் குறைந்தபட்ச வளர்சிதை மாற்றச் செயல் 'அடிப்படை

வளர்சிதை மாற்ற வீதம்' (Basal Metabolic Rate,-BMR) எனக் கூறப்படும். இது உணவு உட்கொள்ளாமல் உடல் எட்டுமணி நேரக் காலத்திற்குப் பின் உள்ள நிலையினைக் குறிப்பதாகும். வயதுவந்த இளைஞனுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஓர் உடல் மேற்றளத்திற்குச் சராசரி 40 கிலோ கலோரி (40 K.Cals) தேவைப்படுகிறது.

உடலிலிருந்து வெப்பம் வெளியேறுதலில் பல தன்மைகள் காணப்படுகின்றன. உடலின் உட்கூறினுள் இருந்து புற உடலிற்கு வெப்பம் மாற்றப்படுவதைப் பல காரணிகள் செயற்படுத்துகின்றன. இவற்றுள் கொழுப்புச் சேர்மம், உடல் எடை, இரத்த மண்டலம் முதலானவை முதன்மையானவை. உடல் வெப்ப நிலையைச் சீரமைப்பதில் இரத்த மண்டலத்திற்குப் பெரும் பங்குண்டு. உடலின் அக உறுப்புகள் வெப்பத்தைப் பெற்று, மற்றப் புற உறுப்புகளுக்குப் பகிர்ந்து அளித்தலில் இரத்த நாளங்களின் நிலை இன்றியமையாதது. சூழ்நிலைத் தன்மைக் கேற்ப இரத்த நாளங்கள் 'தந்துகி விரிவு' (Vasodilation), 'தந்துகிச் சுருக்கம்' (Vaso Constriction) ஆகியவற்றை அடையுந் தன்மையன. பல்வேறு புவியமைப்பில் வாழ்ந்துவரும் மக்களினத்தவர்களை ஆராயும் உடலியங்கியல்சார் மானிடவியலார் (Physiological Anthropologists) குளிர், வெப்பம் ஆகிய இருபெரும் காலநிலைத் தகவமைப்புகளை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.

சர்கேடியன் ஒழுங்கியல்பு: மனித உடலியக்கத் தகவமைப்பின் இயல்நிகழ்ச்சிகளுள் (Phenomenon) உயிரியல்சார் ஒழுங்கியல்பும் (Biological Rythms) ஒன்றாகும். இது சர்கேடியன் ஒழுங்கியல்பு (Circadian Rythms) என்று கூறப்படும். இது ஒவ்வோர் உயிரியின் ஒரு நாளைய உயிர்வேதியியல் (Biochemical), உடற்றொழில் (Physiological) முதலான செயல்களின் பண்புகளை அறிவதாகும். இவற்றுடன் வடதுருவம், தென்துருவம் முதலான பல உச்சக் கால நிலைகளையுடைய மக்களின் உயிரியல் கடிகார (Biological Clock) அளவுகளைக் கணித்தாய்தலும் இதனுள் அடங்கும். எடுத்துக்காட்டாக, வடதுருவ மக்களுக்கு ஒளி முதன்மையானதாகும். இவர்களின் உயிரியல் கடிகார அளவையின்படி குளிர் காலங்களில் சீரான வாழ்க்கை நிலையையும் கோடைக் காலங்களில் வேறுபாடுகளையுடைய தகவமைப்பையும் பெற வேண்டியுள்ளனர். இந்தத் துருவத்தில் கோடையில் 24 மணி நேரம் ஒளியுடனும் குளிர்காலத்தில் 24 மணிநேரம் ஒளியின்றியும் இருக்க வேண்டியுள்ளது. இந்த அமைப்பு மாற்றிக் கொள்ள முடியாதது. இதனாலேயே வடதுருவ மக்களான எசுகிமோக்கள் (Eskimos) குளிர் காலங்களில் தாமாகத் தொகுப்பிணைக்கும் கால்சியம் சத்தினை மிகக் குறைவாகப் பெறுகின்றனர். உடற்றொழிலியல் செயல்களில் ஒளியின் பங்கு பெரிது. இதைப் போன்றே தென் துருவப் பகுதிகளில் வாழும் அண்டார்டிக்குப் பகுதி மக்களிடையே ஒளி முனைப்புத்தன்மை பலவாறாக மாறுபடுவதால் தூக்கமின்மை, மனவெழுச்சி, உளச் சோர்வு முதலான குறைபாடுகள் காணப்படுவதாக இவர்களை ஆராய்ந்த வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருசில வடதுருவ மக்களிடையே வடதுருவ மனஅதிர்ச்சி நோய் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இவையனைத்தும் இடைக்கால மனக் கோளாறுகளால் ஏற்படுவனவாகும். இது நனவு மனத்துடன் தொடர்புடையதால் நனவு மனநிலை பாதிக்கபடும்போது நினைவு இழத்தல், உளவழி உடல்நோய், கை கால் வலிப்பு (Epilepsy) முதலான நோய்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இந்நோய்கள் ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் மிகுதியாகக் காணப்படுவதாக உடலியங்கியல் சார் மானிடவியலார் கண்டறிந்துள்ளனர்.

வேலையும் அடிப்படை உணவும்: மனித உடற்றொழில் செயல்களுக்கும் உடலின் சீரான பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் போதுமான அளவு எரிசக்தி தேவைப்படுகிறது. இது சீரான இடைவெளியில் கொடுக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் உடல் சீரமைப்புத் தொடர்ச்சிக்கும் தேவையான ஆற்றல் கணக்கீட்டை அவன் ஓய்வு நிலையில் இருக்கும்போது அளவிட்டு 'அடிப்படை வளர்சிதை மாற்று வீதத்தை' (BMR) கணக்கிடலாம். இது ஒவ்வொருவரும் தான் உண்ணும் உணவு முறைக்கேற்றது. மக்கள் தம் சூழிடப் பரப்பில் கிடைக்கும் ஆதாரப் பொருள்களுள் எவற்றை உண்ணலாம்; எவற்றைத் தவிர்க்கலாம் என்னும் அறிதிறனைப் பன்னெடுங்காலமாக வளர்த்து வந்திருப்பர். எடுத்துக்காட்டாக, சில பழங்குடியினர் பூச்சிகளை உண்ணும் பழக்கத்தினைத் தம் உணவு முறையில் கொண்டுள்ளனர். கலகாரிப் பாலைநிலத்தினர், அமேசான் பழங்குடிகள், ஆசுத்திரேலிய முதுகுடிகள் ஆகியோர் சில பூச்சி வகைகளைத் தம் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

உடலியங்கியல்சார் மானிடவியலார் இவர்களை ஆய்வு செய்த போது, இது இவர்களின் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, கனிமச் சத்து முதலான அனைத்தையும் ஈடு செய்கிறது என மதிப்பிட்டுள்ளனர். மக்களுள் பெரும்பான்மையோர் சில உணவுப் பொருள்களில் மிகக் குறைவான அளவில் நச்சுத்

தன்மை இருப்பின் அவற்றை நீக்கி உண்ணும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர். மரவள்ளியில் (Manihot esculents) உள்ள ஒருவகை அமிலம் நச்சுத்தன்மை கொண்டது. இதனைப் பயன்படுத்தும்போது இம் மக்கள் பல்வேறு உணவு முறைகளை ஏற்றுத் தகவமைந்துள்ளனர். உடல்சார்ந்த தொழில்களைப் போன்றே பண்பாட்டு முறையிலும் மக்கள் பல்வேறு தகவமைப்பைக் கொண்டுள்ளனர். குளிர்ப்பகுதி மக்கள் உடுத்தும் துணி வகைகள், இருப்பிடம், விளக்குகளுக்குக் கடல்நாய் எண்ணெயைப் பயன்படுத்துதல் முதலான பல தகவமைப்புகளை ஏற்படுத்தி உடல் வெப்பத்தைக் காக்கின்றனர். பண்பாட்டின் அமைப்பில் வரும் அனைத்துக் கூறுகளையும் உட்படுத்தி உடற்றொழிலை ஆராயும் இப்பெரும்பிரிவு உடலியங்கியல்சார் மானிடவியலில் முதன்மையானதாகும்.

வேலைத்திறனும் உணவமைப்பும்: உணவுத் தகவமைப்பிற்கும் உடற்றொழிலுக்குமுள்ள உறவினைப் பற்றி அறிவதும் இத்துறையின் மற்றுமொரு பிரிவாகும். ஒரு பிரிவு மக்கள் கோகோ இலையைத் தின்பது தம் உழைப்புத் திறனை மிகுதியாக்குகிறது என நம்புகின்றனர். ஆப்பிரிக்கப் பண்ணைத் தோட்டங்களில் கோகோ இலையைத் தராமலிருப்பின் வேலையைச் செய்வதில் தயக்கம் காட்டுவர் என இவர்களை ஆராய்ந்த பண்பாட்டு மானிடவியலார் குறிப்பிடுகின்றனர். இந்த இலையை உண்பதால், சிறிய அளவில் தந்துகிச் சுருக்கம் (Vasoconstriction) ஏற்பட்டு வெப்பம் வெளியேறுவது குறைவதால் சுறுசுறுப்புடன் காணப்படுகின்றனர் எனவும், குடற்பகுதியில் உணவுப் பொருட்களை உறிஞ்சும் தன்மை மிகுதியாகிறதெனவும் கூறுகின்றனர்.

உணவமைப்பு முறையும் சூழ்நிலையமைப்பும் கொண்டுள்ள தொடர்பினுக்கிணங்க வேலைத்திறன் அமைகிறது. உயரமான பகுதிகளில் உள்ள பெரும் பண்ணைகளில் பணிபுரியப் பல பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்கள் வேறுபட்ட புதிய சூழ்நிலையில் வாழ முற்படும்போது பல உடல்சார்ந்த அமைப்புகளில் மாற்றம் பெற வேண்டியுள்ளது. இம்மாற்றங்கள் பல நிலைகளில் அவர்களின் உழைப்புத் திறனை மாற்றி அமைக்கின்றன. உயரமிக்க பகுதிகளுக்குக் குடியேறிய மக்களிடையே கருவளத்தன்மை குறைந்துள்ளதாக மதிப்பிட்டுள்ளனர்.

பாலைநிலத் தகவமைப்பும் வறண்ட வெப்பத் தகவமைப்பும்: பாலை நில மக்கள் தம் வாழ்க்கையமைப்பிற்கு ஏற்பப் பல தகவமைப்புகளை ஏற்றுள்ளனர். இந்நிலத்தின் மக்களைப் பற்றி பல்வேறு ஆய்வுகள் செய்து இவர்களின் வாழ்க்கைத் தகவமைப்புகளை அறிந்துள்ளனர். பெரும்பாலும் பாலை நிலத்தில் குடியேறும்போது அச்சூழ்நிலைக்கு ஏற்ப இணக்கமாவதற்கு 15 முதல் 30 நாட்கள் வரை பிடிக்கும் என அறியப்படுகிறது. இவர்களிடையே குறைவான நாடித் துடிப்பும் வியர்வை வெளியேறும் வீதம் மிகுதியாதலும் காணப்படும். பாலை நில வாழ்க்கைக்கு நன்கு தகவமைந்த மக்களின் உடல் உயரமாகவும் கை கால்கள் நீண்டும் மெலிந்தும் இருக்கும். உயரமான உடலமைப்பு உடலின் பரப்பை மிகுதிப்படுத்தி விரைவில் உடலின் வெப்பத்தைக் குறைத்துக் கட்டுப்படுத்தும். மெலிந்த உடல்கள் கொழுப்புப் பொருளைப் பயன்படுத்தி வெப்பத்தின் ஊடுருவலைக் குறைத்து, உடலை வேகமாகக் குளிர்ந்த நிலையை அடையச் செய்யும். பாலைநில மக்களின் வியர்வையில் உப்பின் அடர்த்தி குறைந்து காணப்படும். இத்தன்மை இரத்தக்குழாய் மண்டலத்தில் ஏற்படும் குறைபாடுகளையும் தசைப் பிடிப்புகளையும் தடுக்கிறது. சூடான் நாட்டில் வாழும் நைல் ஆற்று மக்களைப் பாலைநிலத் தகவமைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.

இவர்களது வாழ்க்கையமைப்பின் ஒவ்வொரு நிலையினையும் உடலியங்கியல்சார் மானிடவியலார் அறிகின்றனர். உயிர்சார் காரணிகளை முழுமையாக ஆராய்ந்த பின்னர் அடிப்படைப் பண்பாட்டுத் தகவமைப்புகளான உடை, உறைவிடம், உணவு முதலானவற்றை எடுத்துக் கொண்டு அந்த அமைப்புகள் இவர்களின் உயிர்சார் காரணிகளோடு தொடர்பு கொண்டுள்ள முறைகளை ஆராய்வர். இவர்கள் இறுக்கமற்ற ஆடைகளை அணிந்து உடலுக்கும் வளிமண்டலத்துக்கும் இடைவெளி ஏற்படுத்துகின்றனர். இதனால் எளிதில் உடல் வெப்பம் குறைகிறது. இவர்கள் அணியும் காலணி காலின் வெளி விளிம்பிலிருந்து அனைத்துப் பக்கங்களிலும் ஓர் அங்குலம் வெளியே நீட்டிக் கொண்டுள்ளது. இது தரையிலிருந்து வெளிப்படும் வெப்பத்தைக் காலின்மீது மிகுதியாகப் படாமல் தடுக்கிறது.

இனப்பெருக்க முறையிலும் பாலைநில மக்களிடையே மாற்றங்கள் காணப்படுகின்றன. பிறந்த குழந்தை ஒரு நாளைக்குச் சராசரியாக 1000 கிலோ கலோரிகளைத் தன் தாயிடமிருந்து பெறுகிறது. இதனால் தாய் உடனடியாகக் கொழுப்புச் சத்தினை மீட்டுக் கரு முதிர்ச்சி அடைய முடியாமற் போகிறது. இதனால் குழந்தை தாயிடமிருந்து பாலைக் குடிக்கும் காலம் மிகுதியாகிறது. தாயின் கருக்கொள்ளும் காலமும் நீட்டிக்கப்படுகிறது. ஆப்பிரிக்கப் பாலை

நிலப் பழங்குடிகளான குங் புசுமென் (Kung Bushman) குடிகளின் உணவு முறையில் விலங்கு, தாவரப் புரோ தச் சத்து மிகுதியாக உள்ளது. மாவுச் சத்தும் கொழுப்புச் சத்தும் குறைவாக உள்ளன. இதனால் உடலின் கொழுப்புச் சத்தின் விகிதமும் உடல் எடை யின் விகிதமும் மாறுவதால் மாதப்போக்கு கால தாமதமாகிறது. இதனால் முதிர்ந்த கருமுட்டையை வெளிப்படுத்துவதில் காலம் தாமதப்படுகிறது. குங் புசுமென் மக்களிடையே ஒரு குழந்தையைப் பெற்ற தாய் சராசரியாக நான்கு ஆண்டுகள் கழித்தே மறு குழந்தையைப் பெறுவதாக இவர்களை ஆய்வு செய்த மக் ஆர்தர் (Mc Aruther) கூறுவர்.

மனிதர்களின் மீது ஒளியின் பாதிப்பு: மனித உடலியக்கத்தை ஆராயும் உடலியங்கியலார் சூழ் நிலையில் ஒளியின் (Light) தன்மையையும் அது மக் களின் வாழ்க்கை அமைப்பில் ஏற்படுத்தும் மாறுதல் களையும் அறிவர். சூரிய ஒளியிலிருந்து மனிதன் நேரிடையாக ஆற்றலைப் பெறுகிறான். முன்னர்க் கூறியது போன்று ஒளியின் தன்மைக்கேற்ப உடலி யக்கச் செயல்கள் தகவமைந்து ஏனைய உடற்கூற்று மண்டலத்தின் அமைப்பை மாற்றவல்லது. அமெரிக் காவில் மிசுசௌரி (Missouri) மாநிலத்திலுள்ள மக் களின் 71-91 விழுக்காடு வைட்டமின் 'D' சத்து, இரத்தத்திலுள்ள $D_3$ இல் இருந்தும் அதன் சார்பான பொருள்களிலிருந்தும் பெறப்படுகின்றன. இது அப் பகுதியின் சூரிய ஒளியுடன் நேரடியாகத் தொடர் புற்றதாகும். போதுமான சூரிய ஒளி பெறாத குழந் தைகள் என்புருக்கி (Rickets) நோய்க்கு ஆளாகின் றனர். இந்நோயை வைட்டமின் 'D' மிகுந்த உணவை உண்டும் புற ஊதாக்கதிர்களைத் (Ultra Violet Rays) தோலின் மீது படச்செய்தும் குணப்படுத்துவர்.

உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சூரிய ஒளியின் அளவு ஒரே அளவாக இருப்பதில்லை. குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஆண்டு முழுவதும் சீராக இருப்ப தில்லை. உடலின் மேற்றோல் உடல்வெப்ப நிலை யைச் சீராக வைத்திருப்பதில் முதன்மையான பங்கு வகிக்கிறது. அடிப்படையில் தோலின் அமைப்பில் மக்களினங்களுக்கிடையே வேறுபாடுகள் இல்லையாயி னும் தொடர்ந்து பலகாலமாகச் சூரிய ஒளியின் தாக்கத்திற்கு உட்படும்போது வெளிர் நிறமிகளை யுடைய மக்கள் நீக்கிரோ மக்களைப் போலல்லாமல் சிறிய அளவிலான மாற்றத்தைப் பெறுகின்றனர். இதைப் போன்றே வெண்மை நிறத் தோலினையுடை யவர்கள் (Leucoderms), மஞ்சள் நிறத் தோலினை யுடையவர்கள் (Xanthoderms), கருமை நிறத் தோலி னையுடையவர்கள் (Melanoderms) முதலான முப் பெரும் இனத்தவர்களிடையே காணப்படும் உடல் அமைப்புகளை உடல்சார் மானிடவியலார் ஆராய்ந் துள்ளனர்.

தாம்சன், பக்சுடன் (Buxton) ஆகியோர் பல் வேறு இனக்குழுக்களிடையே மூக்கு, தலை, முகம் ஆகியவற்றின் தவமைப்புப் பண்புகளை ஆராய்ந்த போது, இவை சூழல் அமைப்பிற்கேற்பச் சில பண்பு களில் குறைந்த அளவிலான மாற்றங்களையாவது பெற்றுவிடுகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். சரா சரி வெப்பநிலை குறைந்த பகுதியிலுள்ள மக்களின் மூக்கின் அளவு (Nasel Index) குறைவானதாகும். இவர்களது ஆய்வின்படி ஈரப்பதத்தைக் காட்டிலும் வெப்பநிலையே மூக்கின் அமைப்பைப் பெரிதும் மாற்றுகிறது எனக் கணக்கிட்டுள்ளனர்.

மங்கோலியர்கள் கொண்டுள்ள தாழ்ந்து அகன்ற வட்டமான முகமானது இப்பகுதியின் படிமலர்ச்சிக் காலத்தில் வறண்ட குளிர் கால நிலையின் தாக்கமே யாகும். பனி அடர்ந்த காலநிலையின் தாக்கத்தி னால் இவர்களின் மூக்குக் குறுகியும் கன்ன எலும்பு கள் மெலிந்தும் காணப்படுகின்றன.

உயர மிகுந்த மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்ந்த மனித மூதாதையர்களிடமிருந்து தோன்றிய மனித உடலமைப்பு உயரமிகுந்த பகுதிகளில் வாழ ஏற்றதாக இல்லையெனச் சூழலியலார் கூறுகின்றனர். உலக மக்கள் தொகையின் 10 மிலியன் மக்கள் 3000 மீட்டர்கள் உயரமிகுந்த பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் தென் அமெரிக்காவில் உள்ள பெரும் பகுதியில் செல்லும் ஆண்டீசு மலைத் தொடரிலும் இதர பகுதியிலும் 80 விழுக்காட்டினர் வாழுகின்றனர். இதைத் தவிர்த்து நேபாளம், இமாலயப் பகுதியிலும் குறிப்பாக இலடாக்குப் பகுதியிலும் பெரும்பான்மை யோர் வாழுகின்றனர். இவர்களின் உடலமைப் பினை ஆராய்ந்த உடலியங்கியல்சார் மானிடவிய லார் பல மாறுபட்ட பண்புகளைக் கண்டறிந்துள்ள னர். இப் பகுதிகளில் வாழும் மக்கள் அகன்ற மார் பினையும் குறைந்த உயரத்தினையும் கொண்டுள்ள னர்.

உடலியங்கியல்சார் மானிடவியலார் மக்களி டையே காணப்படும் நோய்களையும் அவற்றை அம் மக்கள் குணப்படுத்தும் முறைகளையும் கண்டறிவதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

மக்களிடையே நோய் பரவலுக்கு அவர்கள் கொண் டுள்ள பண்பாட்டு நடைமுறைகளும் வழக்கங்களும் பெரிதும் காரணமாகின்றன. பழங்குடி மக்களிடையே காணப்படும் மாதப்போக்கு முறை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருபண்பாட்டிலும் மாதப்போக்கு நிகழ்விற்குத்

தனித்தனியான நடத்தைமுறைகள் காணப்படுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்கக் கங்குரு (Kanguru) பழங்குடிகளிடையே மாதப்போக்குடைய பெண் அன்றாடச் செயல்களிலிருந்து விலக்கப்படுகிறாள். விளை நிலங்களிலும் தோட்டங்களிலும் நடக்க அனுமதிக்கப்படுவதில்லை. நீரோடைகளில் ஆண்கள் குளிக்கும் இடத்திற்குக் கீழாகக் குளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறாள். ஆசுத்திரேலியப் பழங்குடிகளான அருண்டா (Arunta) குடிகளிடையே மாதப்போக்குக் காலத்தில் வரும் இரத்தமும் இனப்பெருக்க உறுப்புகளிலிருந்து வரும் எவ்வித இரத்தமும் நிலைகுலைந்த வாழ்வை வளப்படுத்தும் என நம்புகின்றனர். இதைப் போன்றே ஆண்குறியின் நுனித்தோல் அகற்றப்படும்போது வெளிப்படும் கருத்திசுவை சாவா (Java) மக்கள் உலரவைத்துத் தூளாக்கி கருவளம்பெற உண்பர். சில பிரேசில் நாட்டு இந்தியர்களிடையே கருத்திசுவின் அனைத்துப் பகுதியையும் உண்ணும் பழக்கம் உள்ளது. சில பழங்குடிகளிடையே கருத்திசுவும் மாதப்போக்கு இரத்தமும் மருந்தாகக் கொள்ளப்படுகின்றன.

உடல்சார்ந்த அனைத்துச் செயல்முறைகளையும் உடலியங்கியல்சார் மானிடவியலார் அவர்களின் வாழ்க்கைச் சூழலுடனும் பண்பாட்டுச் சூழலுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்து அவற்றின் தன்மையை அறிகின்றனர். இது இயற்கையோடு கொண்ட பண்பாட்டுத் தகவமைப்பையும் பண்பாட்டின் இதர அமைப்புகளுடன் பொருந்திய தொடர்பினையும் விளக்குவதாகும்.

இது தவிர்த்து உடலியங்கியல்சார் மானிடவியலார் மக்களின் பொருள்சார் பண்பாட்டின் அமைப்புகளான இருப்பிடம், தொழிற்கருவிகள், பிற உடைமைப் பொருள்கள் அனைத்தும் வாழ்க்கையின் செயல்களோடு கொண்டுள்ள இணக்கமுறை, தகவமைப்பு முதலானவற்றை அறிகின்றனர். எம்.சே.

துணை நூல்கள்:

**Albert Damon,** Physiological Anthropology, Oxford University Press, New York, 1975.

**Baker, P.T.,** The Biology of High Altitude Peoples, Cambridge University Press, Cambridge, 1978.

**Emilio, F.M.,** Human Adaptability: An Introduction to Ecological Anthropology, Westview Press, Colorodo, 1979.

**Mani, M.S.,** Fundamentals of High Altidude Biology, Oxford & IBH Publishing Company, New Delhi, 1974.

***உடலியல்சார் உளவியல்:*** உடலியல்சார் உளவியலானது உயிரிகளின் உடலின் அடிப்படை உறுப்புகளின் இயக்கங்களையும் அவற்றின் தொடர்பாக ஏற்படும் நடத்தையையும் ஆராயும் உளவியற் பிரிவு ஆகும். இக்காலத்தில் ஓர் உயிரியின் நடத்தைக்கான உண்மைகள் பல நன்கு தெளிவாகி உள்ளன. ஆனால் மனிதன் போன்ற சிக்கலான உயிரியின் நடத்தையை முற்றிலும் அறிவதற்கு இன்னும் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன. பொதுவாக உளவியல், குறிப்பாக உடற்கூற்று உளவியல் உடற்கூற்றியல் (Anatomy), வேதியியல், நாளமிலாச் சுரப்பியியல் (Endocrinology), மரபியல் (Genetics) போன்ற துறைகளில் உள்ள உண்மைகளையே பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையிலுள்ளது. உடலியல் துறையினைக் கொண்டுதான் வாட்சன் (J.B. Watson) நடத்தைக் கோட்பாட்டினை உருவாக்கினார். வாட்சன், அவரைப் பின்பற்றிய பல உளவியலார்கள், தாண்டைக்கு (T.H. Thorndike), இசுகின்னர் (B.F. Skinner), ஆர்லோ (Harlow) ஆகிய விலங்கியல் உளவியலார்கள், கோலர் (Kohler), காப்கா (Koffca) போன்ற முழுமை உளவியலார்கள் ஆகியோர் உயிரியின் நடத்தை விதிகளைப் பற்றி எலி, பூனை, குரங்கு போன்ற விலங்கினங்களைக் கொண்டு செய்த ஆராய்ச்சியின் அடிப்படைகளும், உருசிய நாட்டு உடற்கூற்று மேதையான பாவ்லவு நாய்களைக் கொண்டு நடத்தி வெளியிட்ட ஆக்கநிலையிருத்தக் கொள்கையும் உடலியல்சார் உளவியலுக்குப் பெருத்த உதவியாக அமைந்தன.

உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பினைத் தொன்றுதொட்டு இந்தியாவிலும் மேனாடுகளிலும் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் பண்டைக்காலம் முதல் உள்ளம் உடலைச் சார்ந்து எழுவது, அதன் காரணமாக உடலழிந்தால் உள்ளமும் அழிகிறது என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் மேலைநாட்டில் ஆன்மாவையும் உள்ளத்தையும் வேறுபாடின்றிக் கருதிவந்தார்கள்; உளவியல் 'ஆன்ம இயல்' எனவும் பொருள்படும்.

முதன்முதலாகத் தருக்கமுறையில் உடல்-உள்ளத் தொடர்பை ஆராய்ந்தவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தேகார்ட்டு என்னும் பிரெஞ்சு அறிஞராவர். அவர் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு உடல் உள்ளத் தொடர்பைப் பல்வேறாக வெளியிட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இசுபினோசா (Spinoza), இலாக்கு (Locke), பார்க்கிலே (Berkeley), யூம் (Hume) போன்ற தத்

துவ அறிஞர்களாவர். இவர்களின் மாறுபட்ட கருத்துகளை இணைக்க முயற்சி செய்தவர் பிராட்லி (Bradley) என்னும் செருமானியத் தத்துவ அறிஞர். மேற்கூறிய ஐரோப்பிய நாட்டு அறிஞர்கள் உள்ளம் என்பது பிறப்பால் அமைந்தாலும் அது சூழ்நிலை தூண்டுதல்களினால் வெளிப்படுகிறது என்று கருதினார்கள். இங்கிலாந்து அறிஞர்கள் பிறந்த ஒரு குழந்தையின் உள்ளம் 'வெறும் பலகை' போன்றிருக்கிறது என்றும் குழந்தை வளர வளரவே, சூழ்நிலைத் தூண்டுதல்களினால் உள்ளம் வளரத் தொடங்குகிறது என்றும் கருதினர்.

இந்த நூற்றாண்டில் நரம்பியல் துறை மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறையில் முதன்முதலாக உளவியலாரது ஆர்வத்தைத் தூண்டியவர் செரிங்ட்டன் (Sherrington) என்பவர். இப்போது ஓர் உயிரியின் நடத்தை இரண்டுவகையாக ஆராயப்படுகிறது. ஒன்று விலங்குகளின் மூளையின் பல்வேறு பாகங்களைச் சிறிது சிறிதாக அகற்றி, உயிரியின் நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள் யாவை என்பதை நோக்குவது. அவ்வாறே உளநோயால் பாதிக்கப்பட்டவர்களது மூளையின் குறிப்பிட்ட பாகங்களை அறுவை மருத்துவ முறையால் அகற்றிவிட்டு அவர்களது நடத்தையில் முன்னேற்றம் உள்ளதா என்பதை நோக்குவது. இது அகற்றுமுறை (Method of Extirpation) என்று கூறப்படுகிறது. மற்றொரு ஆராய்ச்சி வகை தூண்டுதல் முறை (Method of Stimulation). இதன்படி மூளையின் பகுதிகளை மின் ஆற்றல் கொண்டு தூண்டி, உயிரியின் நடத்தையில் மாறுதல்களை நோக்குவது. இவ்விரண்டு வகையான ஆராய்ச்சிகளால் உயிரியின் மூளையைப் பற்றிய அறிவும் மூளை எப்படிச் சிந்தனை, மனவெழுச்சி போன்றவைகளுக்கு இருப்பிடமாக அமைந்துள்ளது என்பதும் அறியப்பட்டன.

மனிதனின் உடலமைப்பு: மனிதனின் உடலில் பல கோடி நரம்புகள் உள்ளன. இந்நரம்புகள் மிகவும் மெல்லியனவாகவும் பல கிளைகள் கொண்டனவாகவும் இருக்கின்றன. இவை உடலில் பல பாகங்களாகிய தசைகள், புலன் உறுப்புகள் முதலியவற்றோடு சேருகின்றன. எனினும் பல பிரிவுகள் நேரடியாக ஒன்றோடொன்று இணைக்கப்படவில்லை. இவை யாவும் மூளையின் மூலமாகவும் தண்டுவடத்தின் மூலமாகவும் இணைக்கப்பட்டிருக்கின்றன. மனித உடலின் தூண்டுதலால் ஏற்படும் துடிப்புகளை (Impulses) மூளைக்கோ தண்டுவடத்துக்கோ எடுத்துச் செல்லும் நரம்புகளை 'உணர் நரம்புகள்' (Sensory Nerves) என்றும், தசைகளுக்கும் சுரப்பிகளுக்கும் (Glands) எடுத்துச் செல்லும் நரம்புகளை 'இயங்கு நரம்புகள்' (Motor Nerves) என்றும் குறிப்பிடுவார்கள். பல்வேறு நரம்புகளுக்கும் மூளைக்கும் தண்டு வடத்திற்கும் உள்ள தொடர்பை ஒரு தந்தி நிலையத்திற்கு ஒப்பிடுவதுண்டு. செய்திகள் வெளியிலிருந்து தந்திக் கம்பிகள் வழியாகத் தலைமை நிலையத்திற்குச் செல்கின்றன. தலைமை நிலையத்தில் அச்செய்திகள் பாகுபடுத்தப்பட்டுப் பிறகு உரிய இடத்திற்குத் தந்திக் கம்பிகள் வாயிலாக அனுப்பப்படுகின்றன.

மறிவினை: புலனுணர் கருவிகள் தூண்டப்பட்டு அவற்றின் காரணமாக உடலுறுப்புகள் இயங்குவது மறிவினை எனப்படும். மறிவினை ஏற்படுவதற்குத் தலைமை நரம்பு மண்டலம் இன்றியமையாததாகும். மறிவினைகள் (Reflexs) உயிரியின் தற்காப்புக்காகவும் நலத்திற்காகவும் அமைந்த இயற்கை வழியாகும். மறிவினைகளுள் முக்கியமானவை-ஒளி ஊடுருவும் படலம் (Cornea) தூண்டப்பட்டால் இமைத்தலும், விழித்திரை (Retina) மேற் படும் ஒளியினால் கண் சுருங்குதலும், ஆபத்தான தூண்டல்களிலிருந்து திடீரென்று விலகுதலும், சுவைப்புலனுணர்வு உறுப்புகள் தூண்டப்பட்டால் உமிழ்நீர் சுரத்தலும் ஆகிய செயல்களாகும்.

மறிவினை இரண்டாகும. ஒன்று, இயற்கையாக ஓர் உயிரியில் தோன்றுவதாகிய இயற்கை மறிவினை. மற்றொன்று, ஆக்கநிலையிருத்தம் செய்யப்பெற்ற (Conditioned) மறிவினை. இயற்கை மறிவினை ஓர் உயிரியோடு பிறந்த இயக்கமாகும். இவை ஓர் இன உயிரிகள் யாவற்றிலும் ஒரே தன்மையுடையனவாக இருக்கும்.

மைய நரம்பு மண்டலம்: ஓர் உயிரியின் பல்வேறு இயக்கங்களை இயக்கியும் கட்டுப்படுத்தியும் வைப்பது மைய நரம்பு மண்டலமாகும். இவ்வமைப்பு மீன் இனம் முதல் மனிதன் ஈறாகவுள்ள உயிர் வாழ்வனவற்றில் காணப்படுகிறது. ஆனால் இது மனிதனிடத்தேதான் மிகவும் பக்குவமடைந்துள்ளது. மைய நரம்பு மண்டலம் (Central Nervous System)மண்டையிலும் (Skull) முதுகெலும்பு வடத்திலும் (Verteberal Column) அடங்கியுள்ளது. மூளை, தண்டுவடம் ஆகியவை மூளைத்தண்டுவட நீரில் (Cerebrospinal Fluid) மிதந்துகொண்டிருக்கின்றன. இந்நீர் மூளையையும் தண்டுவடத்தையும் வெளியுலகத்து அதிர்ச்சியினின்றும் காப்பாற்றுகிறது.

தண்டுவடத்தின் செயல்கள் இருவகைப்படும். அவை உட்செல்லும் நரம்புகளின் செய்தியை மூளைக்கு அனுப்புவதும் மூளையிலிருந்து வரும் செய்-

தியை வெளிச்செல் நரம்புகளுக்கு அனுப்புவதுமாகும். தண்டுவடம் மூளையின் உதவியின்றி மறிவினையைத் தூண்டுவதும் உண்டு. தவளை போன்ற கீழ்த்தர உயிரிகளின் மூளையைத் தண்டுவடத்தினின்றும் அகற்றியபோதிலும் அவை பல தூண்டல்களுக்குத் துலங்கின. மனிதனிடத்தில் காணப்படும் முதுகு நிமிர்தல், குனிதல், சொறிதல் போன்ற நடத்தைகள் தண்டுவடத்தினாலேயே நடைபெறுகின்றன.

மூளையை முக்கியமாக முன் மூளை, நடுமூளை, பின் மூளை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். மூளையின் பின்பகுதியில் முகுளம் (Medulla Oblongata), சிறுமூளை (Cerebellum) ஆகிய இரு முக்கிய பகுதிகள் உள்ளன. இவற்றுடன் மூளையின் இருபகுதிகளையும் இணைக்கும் நரம்பிழைப்பட்டை (Pons) என்னும் பகுதியும் உள்ளது. இப்பகுதியே நடுமூளையையும் முகுளத்தையும் இணைக்கிறது. மூச்சுவிடுதல், இதயத் துடிப்பின் வேகம் ஆகியவற்றின் நிலையங்கள் முகுளத்தில் உள்ளன.

முன் மூளையை மூளையின் முக்கியமான பகுதியாகக் கருதலாம். இப்பகுதியில்தான் புறணி (Cerebral Cortex), மூளை நரம்பு முடிச்சு (Thalamus), கீழ் மூளை நரம்பு முடிச்சு (Hypothalamus) ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. இப்பாகங்களே பல உள நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக அமைகின்றன. மனிதனிடத்தும் மற்ற உயர்தர விலங்குகளிடத்தும் இப்பகுதியே மிகவும் பக்குவமடைந்துள்ளது. பெருமூளைப்புறணி மூளையின் வெளிப்பாகமாகும். பெருமூளைப் புறணியிலுள்ள சராசரி 140 கோடி உயிரணுக்கள் (Cells) நரம்புகளில் பாயும் செய்திகளின் திசைகளைக் கட்டுப்படுத்துகின்றன.

சிறுமூளை பின் மூளையில் அமைந்திருக்கிறது. கை, கால் முதலியவை ஒன்றி வேலை செய்வதற்கான நிலையம்(Centre)சிறு மூளையில்தான் உள்ளது. உடல் செங்குத்தாகவும் சமநிலையாகவும் இருப்பதற்கு இப்பகுதி காரணமாக உள்ளது.

நடுமூளை முன் மூளைக்கும் பின் மூளைக்கு மிடையே ஒரு பாலம் போலுள்ளது. இப்பகுதி செய்திகளை மேலும் கீழும் அனுப்ப உதவுகின்றது. மேலும் இப்பகுதியில் கட்புலன், செவிப்புலன் ஆகியவற்றிற்குரிய முக்கிய நிலையங்கள் உள்ளன.

மூளை நரம்பு முடிச்சு என்னும் மூளையின் பகுதி வெளியுலகத்துத் தூண்டல்களினால் புலன்கள் வழியாக வரும் பல்வேறு துடிப்புகளை அவற்றிற்குரிய பகுதிகளுக்குள் செலுத்துகிறது. தோலிலிருந்து வரும் துடிப்புகளைப் புறணியின் ஒரு பாகத்திற்கும், செவிப் புலனிலிருந்து வரும் துடிப்புகளைப் புறணியின் மற்றொரு பாகத்திற்கும் செலுத்துகிறது. புலனுணர்ச்சி, இயக்கம் ஆகியவற்றுக்கான பெரும்பாலான இயைபுகள் மூளை நரம்பு முடிச்சிலேயே ஏற்படுகின்றன; மூளை நரம்பு முடிச்சு புறணியிலிருந்தும் துடிப்புகளைப் பெறுகிறது. இத்துடிப்புகள் தம் இயக்கங்களைக் கட்டுப்படுத்தவே ஏற்படுகின்றன. மூளை நரம்பு முடிச்சுக்குச் சேதம் ஏற்பட்டால் இயக்கங்கள் மிகைப்படுகின்றன. எளிதாகச் கற்றற்குரிய செயல்களும் மூளை நரம்பு முடிச்சால் ஏற்படுகின்றன என்று கருதப்படுகிறது.

கீழ்மூளை நரம்பு முடிச்சு சிறிய பாகமாக இருந்த போதிலும் அது பல முக்கியமான இயக்கங்களை உடையது. அது மனவெழுச்சி (Emotions), ஊக்கி ஆகியவற்றிற்கு நிலையமாக உள்ளது. மனவெழுச்சிகளுக்கும் கீழ்மூளை நரம்பு முடிச்சுகளுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ச்சி வாயிலாக முதன் முதலாக வெளியிட்ட பெருமை கானன் (Cannon), பார்டு (Bard) ஆகியோரைச் சாரும். உறக்கம், விழிப்பு இரண்டிற்கும் கீழ்மூளை நரம்பு முடிச்சு ஆதார நிலையமாக அமைந்திருக்கிறது.

மூளையில் பல மடிப்புகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை 'உரோலேண்டோ' (Rollando), 'சில்வியசு' (Sylvius) என்பவையாகும். உரோலேண்டோ என்னும் பிளவு மூளையின் மேல் பக்கத்திலிருந்து கீழ் நோக்கிச் செல்கிறது. இது ஏறக்குறைய மூளையின் நடுவில் உள்ளது. இக்கோட்டின் முன்புறத்திலுள்ள மூளையின் பாகம் முன்மடல் (Frontal Lobe) எனப்படும். இது நெற்றியின் பாகத்தில் தொடங்கி 'உரோலேண்டோ'ப் பிளவுவரை நீண்டிருக்கிறது. விலங்கின் முன்மடலைவிட மனிதனின் முன்மடல் பெரிதாக உள்ளது. இயக்க இடம் (Motor Area) 'உரோலேண்டோ'ப் பிளவுக்கு முன்னே அமைந்திருக்கிறது. இப்பகுதியே மனிதனின் கை, கால் முதலிய உறுப்புகளில் இயக்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. இந்த இடத்திற்கு முன் பகுதி 'முன் இயக்க இடம்' (Pre-Motor Area) எனப்படும். இது மனிதனது உடல் முழுதும் பரவியுள்ள சிக்கலான இயக்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. 'சில்வியசு'ப் பிளவு மூளையின் முன்புறத்தின் அடிப்பாகத்திலிருந்து செல்கிறது. முன் இயக்க இடத்திற்குக் கீழேயும் சில்வியசுக்கு மேலேயும் இருப்பதை 'இயைபு இடங்கள்' (Association Areas) என்பர். இப்பகுதியே மனிதனின் நினைவு, சிந்தனை போன்ற உளச் செயல்களில் பங்கெடுத்துக் கொள்கிறது. முன்மடலுக்குச் சேதம் ஏற்பட்டால் மனிதனின் செயல்களில் மாறுபாடுகள் தோன்றும். முன் இயக்க இடத்திற்குச் சேதம் ஏற்பட்டால்

ஓரளவுக்குப் பொது அறிவு, நுண்ணறிவு ஆகியவற்றில் சீர்குலைவு ஏற்படுகிறது.

'சில்வியசீப் பிளவுக்கு அடியிலுள்ள பகுதியை முன் மடலிலிருந்து பிரிப்பது பக்கவாட்டு மடல் (Temporal Lobe). பக்கவாட்டு மடலின் மேல் ஓரத்தில் செவிப் புலன் பகுதி உள்ளது. இப்பகுதியை மின் ஆற்றல் கொண்டு தூண்டினால் ஒருவனிடம் பல்வேறு ஓசைகள் எழும். பக்கவாட்டு மடல் மூளையின் இரு கோணங்களிலும் அமைந்திருக்கிறது. ஒரு கோணத்தில் மட்டும் இப்பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் கேட்கும் திறன் குறைகிறது. இரண்டு கோணங்களிலும் உள்ள இப்பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் ஒருவன் முழுச் செவிடனாகிறான். பக்கவாட்டு அடிப்பாகத்தில் சுவை உணர்வுக்குரிய இடம் (Gestatory Area) இருக்கிறது. இப்பகுதிக்குப் பின் முகருணர்விடம் (Olfactory Area) உள்ளது. மூளைப் பின்மடல் (Occipital Lobe) மூளையின் பின்புறத்தில் இருக்கும் சிறிய பாகமாகும். இது கட்புலனுக்கு இருப்பிடம். விழிகள் வழியாக உட்செல்லும் செய்திகள் இப்பகுதியை அடைகின்றன. அச்செய்திகளைப் பொருள்(Meaning) படச் செய்வது இப்பகுதியே ஆகும். இப்பகுதிக்குப் பழுது ஏற்பட்டால் ஒருவன் முழுக்குருடு ஆவதில்லை. ஆனால் படிப்பது, பொருள்களை அறிந்துகொள்வது போன்றவை பாதிக்கப்படுவனவாகக் கருதப்படுகிறது.

இயைபுச் செயல்கள்: இயைபு இடம் பெருமூளைப் புறணியில் (Cerebral Cortex) இருக்கிறது. இந்த இடம் ஒருவனிடத்து ஏற்படும் பல செயல்களை ஒழுங்காக இணைக்க உதவுகிறது. இப்பகுதியில் புலனுணர்வ இடத்தை இயக்க இடத்துடன் இணைக்கும் பல நரம்புகள் உள்ளன. கற்றல், சிந்தனை, நினைவு போன்ற உளத்திறன்களுக்கு இயைபு இடம் ஆதார நிலையமாகவும் கருதப்படுகிறது. இப்பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் குறிப்பிட்ட இயல்பை இழப்பதில்லை. ஆனால் உளத்திறமையில் பொதுவாகக் குறைவு ஏற்படுகிறது. திறனின் குறைவு, சேதம் ஏற்படும் பகுதியின் அளவுக்குத் தக அமைந்துள்ளது. இந்த உண்மையை முதன்முதலாகக் கண்டவர் இலாசுலி (Lashley) என்னும் நரம்பியல் அறிஞர். மேலும், அவர் கண்ட உண்மையாவது சேதமடைந்த பகுதியின் இயக்கத்தை நாளடைவில் மற்றப் பகுதிகள் சமமாகப் பெற்று இயங்குகின்றன என்பதாகும். இந்த உண்மையைச் சம சக்திக் கொள்கை (Theory of Equipotentiality) என்று கூறுவார்கள்.

இயையு இடத்தில் மேலே கூறிய உளத்திறன்களோடு பேச்சைப் புரிந்துகொள்ளுதல், எழுதுதல் போன்ற நடத்தைகளுக்குத் தனிப்பட்ட நிலையங்களும் உண்டு.

பேச்சு: பேசுவதற்கான முக்கிய பகுதி பக்க மடலிலும் பக்கவாட்டு மடலிலும் அமைந்துள்ளது. இப்பகுதி செவிப் புலனுக்கான பகுதிக்கு அருகிலேயும் உள்ளது. அதன் காரணமாகத்தான் குழந்தைகள் முதன்முதலில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுப் புரிந்துகொண்டு, பிறகு பேச முயற்சி செய்கிறார்கள். செவிப்புலனுக்குரிய பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் பேச்சை இழக்க நேரிடும் அல்லது தடைபடும்.இதற்கு உணர்வு மறதி (Sensory Aphasia) என்பது பெயர். இக்குறை ஏற்பட்டால் மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியும்; ஆனால் புரிந்துகொள்ள இயலாது. மேலும் பாதிக்கப்பட்டவனது பேச்சு பொருளற்றிருக்கும். முன் இயக்க இடத்திற்கு (Pre-Motor Area) ஏதேனும் சேதம் ஏற்பட்டால் இயக்கப் பேச்சுக் குறை (Motor Aphasia) ஏற்படும். அதனால் சொற்களைத் திருந்த ஒலிக்க முடியாத நிலை ஏற்படும். இதற்குக் காரணம் பேசுவதற்குரிய தசைகள் இயைந்து இயங்குவதில்லை. தசைகளில் குறைகள் இல்லாவிடினும் இயைபில் குறை இருப்பதால் இந்நிலை ஏற்படுகிறது. முன் இயைபு இடம் (Frontal Association Area) அறிவுக் கூர்மைக்கு முக்கியமான பகுதியாகும். ஒருவனது முன் இயைபு இடம் சேதமடைந்தால் அவனது வேலைத்திறன் குறைகிறது. முன்யோசனை இன்றிச் செயல்களில் ஈடுபடும் போக்கை அடைகிறான். உளச்சோர்வு போன்ற உள நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இப்பகுதியை அறுவை முறைப்படி அகற்றிவிட்டால், அவர்கள் ஓரளவு குணமடைவதாகக் கருதப்படுகிறது. இது முன் மூளை அறுவை முறை (Frontal Lobstomy) எனப்பெயர் பெறும்.

மனவெழுச்சியும் தானியங்கு மண்டலமும்: தானியங்கு மண்டலம் மூளையினின்றும் தண்டுவடத்தினின்றும் வெளிப்பட்டு உடலின் பல்வேறு பகுதிகளில் தொடர்பு கொள்ளும் நரம்புகளைக் கொண்டதாகும். தானியங்கு மண்டலம் (Autonomous Nervous System) இருவகைப்படும். அவை சார்பு இயக்க மண்டலம் (Sympathetic System), எதிரியக்க மண்டலம் (Parasympathetic System) எனப்படும். சார்பு இயக்க மண்டலம் இருதயத் துடிப்பையும் இரத்த ஓட்டத்தையும் மிகுதிப்படுத்தி, மேல்புறத்துத் தசைகளுக்குச் செலுத்துகிறது. அதன் காரணமாகச் சீரணம் செய்யும் உடற்பகுதிக்கு இரத்த ஓட்டம் குறைகிறது. மிகுதியான இரத்தமானது வேறு பகுதிகளுக்குச் செலுத்தப்பட்டுச் சீரண உறுப்புகளுக்குக் குறைவதன் காரணமாக ஒருவன் அச்சம், சினம் போன்ற

மனவெழுச்சி வயப்பட்டால் சீரண உறுப்புகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எதிரியக்க மண்டலம் ஒருவன் அமைதியாக இருக்கும்போது இயங்குகிறது. உடலின் பகுதிகளுக்குச் சக்தி ஊட்டும் பகுதி இதுதான். இரத்த ஓட்டத்தின் வேகத்தைக் குறைப்பது, இருதயத் துடிப்பைக் குறைப்பது போன்றவை இப்பகுதியின் இயக்கங்களில் சில ஆகும்.

மனவெழுச்சி நிலையில் இரத்த ஓட்டத்தில் மாறுதல்கள் ஏற்படுவதோடு, சுவாசிக்கும் முறையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவற்றோடு கண் பாவைகள் (Pupils) விரிதல், நாக்கு வறட்சி ஏற்படல் போன்றவை ஏற்படுகின்றன. மனவெழுச்சி நிலையில் சார்பு இயக்க மண்டலத்தில் ஏற்படும் மற்றொரு மாறுதல் அண்ணீரகச் சுரப்பியால் (Adrenal Gland) ஆகும். இச்சுரப்பி சிறுநீரகத்திற்கு (Kidney) மேலே அமைந்துள்ளது. இச்சுரப்பியினின்றும் உயிர்வினை ஊக்கிச் (Harmone) சத்துகள் ஓடும் இரத்தத்தில் கலந்து மூளைக்கும் உடலின் பல வேறு தசைகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதன் காரணமாகத்தான் மனவெழுச்சி வயப்பட்டால் துடிப்பு மிகுதியாக ஏற்படுகிறது.

ஊக்கியும் நடத்தையும்: ஊக்கி என்னும் சொல் விடாய்கள், உந்துகள், இயல்பூக்கங்கள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாகும். பறவை, விலங்கினங்களில் ஊக்கிகள் ஓரளவுக்கு உடலைச் சார்ந்து அமைகின்றன. ஆனால் மனிதனிடம் அவை தொடக்கத்தில் உடலைச் சார்ந்து இருந்தபோதிலும், அவன் வளர வளர அவை பெருத்த மாறுதல்கள் அடைவதோடு உடலைச் சார்ந்த ஊக்கிகளோடு தொடர்பற்றும் போகின்றன. அதன் காரணமாக ஊக்கிகளை உடல்சார்பு ஊக்கிகள் (Physiological Motives) என்றும் உளச்சார்பு ஊக்கிகள் (Psychological Motives) என்றும் குறிப்பது உண்டு. இங்கு முக்கியமான உடல்சார்பு ஊக்கிகளான தாகம், பசி, தூக்கம், பால் இவைகளுக்கு விளக்கம் தரப்படும்.

தாகம்: உடலில் ஏற்படும் பல்வேறு சுரப்பிகளினின்றும் வெளிப்படும் சத்துகள் உடலைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் கலக்கின்றன. இவ்வாறு கலக்கும் சத்துகள் உடலின் பல்வேறு உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அச்சத்துகள் இவ்வுறுப்புகளுக்கு வலிமையும் சக்தியும் அளிக்கின்றன. உடலின் இரத்தம் அதற்கான குழாய்கள் வழியாகச் சுற்றிவர நீர் அவசியமாகிறது. இந்த நீர் குறைந்தால் இந்தக் குறைவை எடுத்துக்காட்ட இயற்கை வழியாகத் தாக உணர்ச்சி ஒருவனிடம் ஏற்படுகிறது. உடலிலுள்ள நீரானது குறைவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளுள் முக்கியமானது உடல் வெப்பநிலையிலுள்ளபோது உடலிலுள்ள நீரானது வியர்வையாக வெளிப்பட்டுத் தோலின்மேல் பரவி உடலின் தட்பவெப்பநிலையை நடுத்தர நிலைக்குக் கொண்டுவர உதவுவதாகும். இவ்வாறு வியர்வையாக வெளிப்படும் நீரானது சூழ்நிலையின் வெப்பநிலையின் காரணமாக ஆவியாகி உடலை விட்டு நீங்குகிறது. உடலின் நீரானது உடலுக்குத் தேவையற்ற பொருள்களைக் கழிப்பதற்குப் பயன் படுகிறது. சிறுநீர் கழித்தல் இதற்குச் சான்றாகும். மூளையின் பகுதியான கீழ்மூளை நரம்பு முடிச்சிலுள்ள உயிரணுக்கள் தாகத்துக்கான நீரின் அளவை ஒழுங்குபடுத்துவதாக ஆராய்ச்சி உண்மைகள் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் தாக உணர்ச்சியைத் தொண்டையிலும் வாயிலும் பெறுவது அறிவிப்புகள் (Signals) எனக் கருதலாம்.

பசி: உடல் தன் வளர்ச்சிக்கும் சூழ்நிலைத் தூண்டல்களுக்கும் செயலாற்றுவதன் காரணமாக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆற்றல் உணவிலிருந்து தான் பெறப்படுகிறது. ஒருவனுக்குப் பசி உணர்வு ஏற்பட்டால் வயிற்றிலுள்ள சீரண உறுப்புகளில் மாறுதல்கள் உண்டாகின்றன. அதன் காரணமாகப் பசி உணர்வுக்கு வயிற்றிலுள்ள சீரண உறுப்புகள் தாம் காரணம் என்று கருதுவதுண்டு. ஆனால் குடலில் ஏற்படும் புண் காரணமாகச் சீரண உறுப்புகள் அறுவை மருத்துவத்தால் நீக்கப்பட்டோர் பசி உணர்வை உடையவர்களாக உள்ளனர். இதனால் பசி உணர்வுக்கு வேறு உடல் உறுப்புகளும் காரணமாக உள்ளன எனத் தெரிகிறது. இது உடலில் ஏற்படும் பலவித வேதியல் மாறுதல்கள் என்று ஊகிக்கப்பட்டுள்ளது.

உறக்கம்: உறக்கமானது கழிவுப் பொருள்கள் அதிகம் சேகரிக்கப்படுவதன் காரணமாகவும் தனிப்பட்ட சில வேதிப்பொருள்கள் மிதமாக உடலில் உற்பத்தி செய்யப்படுவதன் காரணமாகவும் உண்டாவதாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆராய்ச்சி உண்மைகள் இக்காரணங்களைஉறுதிப்படுத்தவில்லை. ஒருசிலரைப்பல நாட்கள் தூங்கவிடாமல் வைத்து, அவர்களின் உடல் வலிமையையும் உளத்திறன்களையும் ஆராய்ந்தபோது அவற்றில் குறைவு ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சி செய்தோர் வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் உடல் வலிமையையும் உடல் உணர்வுகள் சிலவற்றையும் சிந்தனை, ஆய்வுத்திறன், கற்பனை போன்றவற்றையும் இழந்து காணப்பட்டார்கள் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தூக்கத்திற்கு அடிப்படைக் காரணம்

மூளையிலுள்ள சில பகுதிகள் என இப்போது கருதப் படுகிறது. ஆனால், மூளையின் தூக்கத்திற்கான நிலையங்கள் யாவை எனக் கூறும் நிலையில் இப் போதைய ஆராய்ச்சி உண்மைகள் இல்லை.

பால்உந்து: உடல்சார் ஊக்கிகளில் பால்உந்து தனிப்பட்டதாகும். பால்உந்து ஆற்றல் வாய்ந்தது; உயிரிகள் இந்நில உலகத்தில் நிலைத்திருக்கப் பரம் பரை வளர்ச்சிக்குப் பால்உந்து முக்கியமாக உள்ளது. எனினும் தாகம்,பசி, உறக்கம் போன்று ஓர் உயிரி உயிர் வாழ்வதற்குப் பால்உந்து இன்றியமையாதது அன்று. ஆண் பெண் வளர்ச்சியின் கட்டத்திலே ஆணின் பாலுறுப்பும் பெண்ணின் கருப்பையும்(Ovary),முக்கிய மான சத்துகளை-இன வளர்ச்சி சத்துகளை வெளிப் படுத்துகின்றன. இச்சத்துகளே இருபாலரிடமும் பால் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கின்றன ஒருவன் இளமைப் பருவத்தை அடைந்ததும் அவனது பால் சுரப்பிகள் முதிர்ச்சி அடைகின்றன. இப்பருவத் தில் ஆண், பெண் இரு பாலார்களிடமும் உடல் வடி வம் மாறுகிறது. பால் உறுப்புகள் முதிர்ச்சி பெறுகின் றன. இரு பாலாரிடமும் நடத்தையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு எதிர்பாலினருடன் பழ கும் ஆவல் ஏற்படுகிறது. பால் சுரப்பிகள் நன்கு வளர்ச்சி பெறாவிட்டாலோ பால் சார்ந்த சுரப்பிகள் பரிசோதனைக்காக அறுவை மருத்துவ முறைப்படி அகற்றப்பட்டாலோ அவர்களிடையே பால் தொடர். புடைய நடத்தைகள் மிகவும் குறைந்து காணப்படு கின்றன. மனிதர்களைப் பொறுத்தவரையில் பால் நடத்தை மிகவும் சிக்கலாக உள்ளது. இதற்குக் கார ணம் தொன்றுதொட்டுப் பால் நடத்தை குறித்துச் சமூகம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருப்பது தான் என்று கூறலாம்.

நாளமிலாச் சுரப்பிகள் ஒன்றுக்கு மேற்பட்ட சத்துகளை உடலைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் செலுத்துகின்றன. இந்தச் சத்துகள் உடலின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின் றன. இந்த உட்சுரப்பி நீர்கள் உடலுறுப்புகளின் இயக்கத்தை அதிகப்படுத்தவோ குறைவு படுத்தவோ செய்கின்றன.

எல்லாச் சுரப்பிகளும் தம் சத்துகளை இரத்தத் தில் கலப்பது இல்லை. சான்றாக, கணையம் (Pancreas) என்னும் சுரப்பி அதன் சத்தைச் சீரணத் திற்குக் காரணமான குடலில் நேராகச் செலுத்து கிறது. ஆனால், அதே சுரப்பி 'இன்சுலின்' (Insulin) என்னும் சத்தினை உற்பத்தி செய்து இரத்தத்தில் கலக்கிறது. சுரப்பிகளில் முக்கியமானவை கேட யச் சுரப்பி (Thyroid Gland), அண்ணீரகச் சுரப்பி (Adrenal Gland), பாலணுச்சுரப்பி (Gonads), அடி மூளைச் சுரப்பி (Pituitory Gland) ஆகியவையாம்.

கேடயச் சுரப்பி கழுத்துக்கு அடியில் உள்ளது. இதைக் கையினால் தடவிப் பார்த்து அறியலாம். ஆனால், இதற்குச் சேதம் ஏற்பட்டால் ஒருவனுடைய செயல்களில் விறுவிறுப்பு மிகவும் குறைகிறது. இந்த நிலைக்குக் குறைத் 'தைராய்டியக்கம்' (Myxodema) எனப்பெயர். இதனால், உடலிலும் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன; தசைகளின் இயக்கங்களிலும் மூளை யின் இயக்கங்களிலும் குறைவு ஏற்படுகிறது. ஒரு சிலர் மன வளர்ச்சி குன்றியவர் போலவும் நடந்து கொள் கிறார்கள். இந்தச் சுரப்பி அதிகம் வேலை செய் யத் தொடங்கினால் முன்கோபம், கவலையில் ஆழ் தல், பிறழ்வான உளநிலை, அதிக விறுவிறுப்பு போன்றவை ஏற்படும்.

அண்ணீரகம் சிறுநீரகத்திற்கு மேலே உள்ளது. இச்சுரப்பி புறணி (Cortex), அகணி (Medulla) என இருபகுதிகளைக்கொண்டது. புறணியினின்றும் வெளிப்படும் சத்துக்குக் 'கார்ட்டின்' (Cortin) எனப் பெயர். அகணியிலிருந்து வெளிப்படும் சத்துக்கு 'ஆட் ரினலின்' (Adrenalin) எனப்பெயர். 'கார்ட்டின்' சத்து உடலின் தசை வலிவுக்கும் இயக்கத்திற்கும் பாலியக்கத்திற்கும் முக்கியமானது. காச நோயின் காரணமாக இப்பகுதிக்குச் சேதம் ஏற்படுவது உண்டு; இதனால், 'அடிசன் நோய்' (Addisons Disease) ஏற் படலாம். இந்த நோயின் அறிகுறிகள் பால்உந்து இல் லாமை, உயிர்ப்பொருள் மாற்றலில்குறை, (Meta-bolism), தோல் கருமையாதல், தட்பவெப்ப நிலை யைத் தாங்க இயலாமை, உறக்கமின்மை (Inso-mnia) போன்றவையாகும். இந்நோயின் காரணமாக நடத்தையிலும் பெருத்த மாறுதல்கள் ஏற்படும். இம்மாறுதல்களுள் முக்கியமானவை எளிதில் சின மடைதல், எப்பொருள்களின்மேலும் அருவருப்புக் கொள்ளுதல், பிறரோடு ஒத்துழைக்க இயலாமை போன்றவை ஆகும். இந்த உடல், உள்ளக் கோளாறுகளைக் 'கார்ட்டின்' சத்தினைச் செயற்கை யாக உடலில் முறைப்படிச் செலுத்தி நீக்கிவிடமுடி யும்.

'ஆட்ரினலின்' மிகவும் முக்கியமான சத்தாகும். செயற்கை முறையில் சிறிதளவு'ஆட்ரினலினை'உடலில் செலுத்தினால், இதயத் துடிப்பின் வேகம் அதிகப் படும்; தசைகளுக்கும் மூளைக்கும் மிகுதியாக இரத் தம் பாயும்; ஆனால், ஈரலிலிருந்து அதிகச் சர்க்கரை வெளிப்படும். அயர்ச்சி எளிதல் ஏற்படாது. எளிதாக வியர்வை கொட்டும்; கண்விழிகள் அகலப் படும்.

பாலணுச் சுரப்பி மனிதனின் உடலிலும் உள்ளத்திலும் வெறும் மாறுதல்கள் ஏற்படுத்தும் ஒரு சுரப்பியாகும். இதில் உண்டாகும் சத்துகள் இன வளர்ச்சிக்கு முக்கியமான விந்தணுக்களை (Spermatozoa) ஆணிலும் அண்டத்தைப் (Ovum) பெண்ணிலும் உண்டாக்குகின்றன. இவை தவிர மற்றச் சத்துகளையும் பாலணுச் சுரப்பி உண்டாக்குகிறது. அவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகும். பாலணுச் சுரப்பி வெளியிடும் சத்துகளின் வலிவு இளம்பருவத்தில் உடலிலும் உள்ளத்திலும் பலமாறுதல்களை ஏற்படுத்துகின்றது. அம்மாறுதல்களில் பால்உந்து மிகுதியானால் 'காம வேட்கை' மிக்கவராகின்றனர்.

அடிமூளைச் சுரப்பி(Pituitary Gland) மிகவும் இன்றியமையாத சுரப்பிகளுள் ஒன்றாகும். இச்சுரப்பி மூளையோடு நேராக இணைக்கப்பட்டுள்ளது. இதினின்றும் வெளிப்படும் சத்துகள் 'தைராய்டு', அண்ணீரகம், பாலணுச் சுரப்பி முதலியவை சிறந்த முறையில் இயங்குவதற்கு உதவுகின்றன. அதன் காரணமாக இதைத் 'தலைமைச் சுரப்பி' என்று கூறுவர். அடிமூளைச் சுரப்பியின் வெளிப்பகுதியில் உற்பத்தியாகும் சத்துகள் உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இந்தச் சுரப்பி குழந்தைப் பருவத்தில் மிகுதியாக வேலை செய்தால், தசைகளும் நரம்புகளும் விரைவாக வளர்ந்து அளவில் பெரிதாகின்றன. இச்சுரப்பி மிகுதியாகச் சுரப்பதே ஒருவன் அளவுக்கு மீறிய உயரமாக வளர்வதற்குக் காரணமாகிறது. இதற்கு மாறாக, இச்சுரப்பி குழந்தைப் பருவத்தில் இயல்பாக வேலைசெய்யாத நிலையில் ஒருவன் வளர்ச்சி குன்றிக் குறுகிய வடிவத்தை (Midget) அடைகிறான். அடிமூளைச் சுரப்பி இயல்பாக இயங்கினால், அது முன் கூறியபடி, மற்றச் சுரப்பிகளைத் தூண்டி ஒருவனிடத்துச் சுறுசுறுப்பையும் சிந்தனையில் தெளிவையும் தீர்மானத்தில் உறுதியையும் உண்டாக்குகிறது. இச்சுரப்பி ஏதோ கோளாற்றினால் இயல்பாக இயங்காவிடின் ஒருவன் வலிமையற்றுப் போவதோடு எளிதாகக் கோழையாகவும் எளிதில் கண்ணீர் விடுபவனாகவும் ஆகிறான்.

தா.எ.ச.

**உடலுழைப்பற்ற தொழிலாளர்** மேலாண்மை, நிருவாகம், வாணிகம், கல்வி போன்ற துறைகளில் பணியாற்றுவோர் ஆவர். இத்தொழில்களில் உடல் வலிமையைப் பயன்படுத்தும் உழைப்பின் தேவை இருக்காது. ஆதலின், இத்தகைய தொழிலாளர் உடலுழைப்பற்ற தொழிலாளர் (White Collur Workers) எனச் சொல்லப்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இவர்கள் அணியும் துணியின் பாணியை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு சொல்லப்பட்டனர். இவர்களை 'நடுத்தர உழைக்கும் இனம்' (Middle Class Proletariat) எனவும் குறிப்பிடுகின்றனர்.

தொழிற் புரட்சிக்குப் பின்னரும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் உடலுழைப்பற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியுற்றது. தொழில்நுட்பத் தொழிலாளர்களின் (Blue Collar Workers) எண்ணிக்கை உலக நாடுகளெங்கிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1955-ஆம் ஆண்டில் இவ் இருவகைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் முதல் முறையாக ஒத்திருந்ததாகப் (Equalled) புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உடலுழைப்பற்ற தொழிலாளர்களுள் உயர்ந்த ஊதியம் பெறுபவர்களும், மிகக் குறைந்த ஊதியம் பெறுபவர்களும், உயர் கல்வி பெற்றவர்களும், நடுத்தரக் கல்வி அறிவு பெற்றவர்களும் உண்டு. இவர்களுள் பெரும்பாலானவர்கள் அலுவலகப் பணியாளர்களாகவும், நடுத்தரப் பொருளாதாரக் குடும்ப வகுப்பினராகவும் (Middle Class) இருப்பர். இவர்களின் பணி மேசை, நாற்காலி உட்பட்ட ஒரே இடத்தில் ஆற்றும் பணியாதலின் இவர்களை மேசையடித் தொழிலாளர் எனவும் கூறுகின்றனர்.

இந்தியத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்த அரசுத் தொழிலாளர் குழு (Royal Commission on Labour) 1931-ஆம் ஆண்டிலேயே இந்திய உடலுழைப்பற்ற தொழிலாளர்களிடையே கல்வி அறிவும் வேலையின்மையும் மிகுந்திருப்பதாகத் தன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தியக் கல்வி முறையும் பண்பாடும் இத்தொழிலைப் பேரளவில் மக்கள் நாடும் வகையில் அமைந்துள்ளது. இந்தியக் கல்வி முறையில் போதிய அளவு தொழிற்பயிற்சி அளிக்கப்படாததால், மக்கள் உயர் கல்வி கற்றாலும் வாணிக, அலுவலகப் பணிகளை மட்டுமே செய்யத் திறமையுள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். எனவே, இவர்களிடையே வேலையின்மை மிகுந்து காணப்படுகிறது. அனைத்திந்திய கல்வி கற்றும் வேலையில்லாதவர்(Educated Unemployed)எண்ணிக்கையில் 62 விழுக்காட்டினர் (1985) வாழ்வியல், அறிவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவராவர். இவர்கள் தங்களை உடலுழைப் பற்ற பணிகளுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள் எனக் கருதுகின்றனர்.

**உடலொறுப்புத் தண்டனை**: ஒரே தன்மையான செய்கையைப் புரிந்த குற்றவாளிக்குத்

தண்டனை வழங்குவதில் நாட்டுக்கு நாடு வேறுபாடு காணப்படுகிறது. அதுபோலவே காலத்துக்குக் காலம் வேறுபாடும் ஏற்படுகிறது. வழங்கப்படும் தண்டனை களுள் ஒன்று உடலொறுப்புத் தண்டனை (Corporal Punishment)என்பதாகும். உடலைத் துன்புறுத்துவது அல்லது சித்திரவதை செய்வது என்று இத்தண்ட னையைக் கூறலாம்.

மரண தண்டனை பல வகைகளில் நிறைவேற்றப் படுகிறது. விலங்குகள் மூலம் இறப்பு ஏற்படுத்துவது, நஞ்சினை யூட்டிச் சாகடிப்பது, சிலுவையில் அறை வது, தூக்கிலிடுவது, கழுத்தை வெட்டுவது, கல்லால் அடிப்பது போன்ற முறைகளால் முற்காலத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இக்காலத்தில் சுடுவது, மின்சாரம் செலுத்துவது, தூக்கிலிடுவது போன்ற வகைகளால் மரண தண்டனை நிறை வேற்றப்படுகிறது. இக்காலத்திலும் சில நாடுகளில் கல்லால் அடித்துக் கொல்லும் வழக்கம் உள்ளது. மரண தண்டனை நிறைவேற்றுவதிலும் உடல் துன்பம் ஏற்படுத்தப்படுகிறது என்றாலும், குற்ற வாளியைச் சாகடிக்காமலேயே உடலைத் துன்புறுத் துவதைத்தான் உடலொறுப்புத் தண்டனை என்ற வகையில் சேர்க்கலாம்.

குற்றவாளிக்குச் சூடுபோடுதல், விதையடித்தல், ஏதாவது ஓர் உறுப்பை வெட்டிவிடுதல், கசையடி கொடுத்தல் ஆகியவை உடலொறுப்புத் தண்டனை களுள் சிலவாகும். இங்கிலாந்து நாட்டைக் கான் யூட்டு (Canute) என்ற மன்னன் ஆண்டு வந்த காலத் தில் கற்பிழந்த பெண்ணின் மூக்கையும் காதுகளை யும் அறுத்து விடுவது வழக்கமாக இருந்தது. உயர் சாதியினர் எனப்படும் பிராமணர்களுக்கு அவர்களின் கடமைகள் பற்றிக் கீழ்ச் சாதியினர் எனப்படும் சூத் திரன் நினைவூட்டுவது ஆணவமான செயல் என்றும், அக்குற்றத்திற்கு அச்சூத்திரன் வாயிலும் காது களிலும் கொதிக்கும் எண்ணையை ஊற்ற வேண்டும் என்றும் மனு சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. மற்றவருக்குப் பாடமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும், குற்றவாளியைப் பழி வாங்கும் எண்ணத்துடன் தான் உடலொறுப்புத் தண்டனை வழங்கப்பட்டு வந்துள்ளது.

காலப்போக்கில் குற்றவியல்துறையில் புதிய கருத் துகள் தோன்றத் தொடங்கின. உடலொறுப்புத் தண் டனை வழங்கப்படுவது நாகரிகமற்ற செயல் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. எனவே, பல நாடு களில் உடலொறுப்புத் தண்டனை வழங்குவது இப் போது ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இக்காலத் திலும் சில இசுலாமிய நாடுகளில் கசையடி கொடுப் பது, கல்லால் அடிப்பது, கை கால்களை வெட்டுவது போன்ற உடலொறுப்புத் தண்டனைகள் வழங்கப் பட்டு வருகின்றன. உடலொறுப்புத் தண்டனைகள் வழங்குவதால் குற்றங்கள் குறைவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தூக்கிலிட வகை செய்யப்பட்டுள்ளது. இத்தண்டனை உடலொ றுப்புத் தண்டனை என்ற வகையில் சேராது. முன்னர், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் படி கசையடி கொடுக்கும் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. இந்தியா விடுதலையடைந்த பின்னர் இத் தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது. அன்றும் இன்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி கடும் சிறைத் தண்டனை விதிக்கப்படுபவர் சிறையில் கடினமான வேலை செய்யவேண்டும். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் கடும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட விடுதலை வீரர்கள் சிறையில் செக்கிழுக்க வைக்கப்பட்டார்கள். கடும் சிறைத் தண்டனையை உடலொறுப்புத் தண்டனையாகக் கருதினால், இத்தண்டனை ஒன்றுதான் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உடலொ றுப்புத் தண்டனையாகும்.

துணை நூல்:

**Majumdar, R.C.**, The Age of Imperial Unity, Bharatiya Vidya Bhavan, Bombay, 1980.

**உடற்கல்வி**: உடற்கல்வி என்பது ஒரு கல்வி முறையாகும். மனிதனது நல்வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் வேலை வாய்ப்பிற்கும் சமுதாயத்தில் தலைசிறந்து விளங்கு வதற்கும் வாழ்க்கையை இயல்பாக அனுபவிப்பதற் கும் உடற்கல்வி இன்றியமையாதது. உடற்கல்வி என்பது உடலுக்குக் கல்வியாகவும் உடலாற்பெறும் கல்வியாகவும் உடலைப் பற்றிய கல்வியாகவும் இருப்பதால், ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமை யாத கல்வியாகவுள்ளது எனலாம்.

உடற்கல்வியின் நோக்கமாக உடல், உள்ளம், உணர்வு, வலிமை போன்ற பண்புகளால் முழுமை யான வளர்ச்சி பெற்று, ஒருங்கிணைந்த ஆளுமைக் குணங்களோடு நாட்டிற்குகந்த நல்ல குடிமக்களை, தலைவர்களை உருவாக்குவதையே கொள்ளலாம். இந்நோக்கங்களைக் குழந்தையின் உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் படிப்படியாகத் தேவைப்படும் உடல் வளர்ச்சி, உடல் இயக்க வளர்ச்சி, புலன் உணர்வு வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகிய நால்வகையான இலக்குகளால்

(Goals) அடைய இயலும். இந்திய உடற் கல்வியின் தந்தை என்று போற்றப்படும் கேரி குரோ பக்கு (Harry Crow Buck) என்பார் உடற்கல்வியின் நோக்கங்களாகத் தசைச் சக்திகளின் வளர்ச்சி, நரம்பு, தசை மண்டலங்களின் இணைந்த திறமைகளின் வளர்ச்சி, உடற்கல்வியில் பொது ஆர்வம், குறிப்பிட்ட விளையாட்டில் தனி ஆர்வ வளர்ச்சி, சமுதாய ஈடுபாடு, நன்னடத்தை வளர்ச்சி, உடல் நலப் பழக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

**உடற் கல்வியின் வளர்ச்சி:** உலகில் விலங்கினமும் மனித இனமும் தோன்றிய காலத்திலேயே உடற் கல்வி தோன்றியுள்ளது. உயிரினங்களுக்கு இயல்பான உடல் அசைவுகளும் விளையாட்டுகளும் சண்டைகளும் உடற்பயிற்சிகளாக அமைந்திருக்கின்றன. இருப்பினும், இந்தியாவில் உடற்கல்வியின் தோற்றத்தினையும் பண்டைய கால வளர்ச்சிகளையும் எடுத்தியம்பும் வண்ணம் சிறந்த சான்றுகளில்லை எனலாம். கிடைத்துள்ள சான்றுகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடான காலத்தையும் கருத்துகளையும் கொண்டுள்ளன. ஆயினும், உடற்கல்வி முறைகள் கல்விக்கு முன்னரே தோன்றி இருக்க வேண்டும்.

ஆரியர்கள் காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம் ஈறாக, இந்திய வரலாற்றில் உடற்கல்வி முறைகள் இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் உள்ளன. ஆரியர்கள் இந்தியாவில் குடியேறியபோது தங்களைக் காத்துக் கொள்ள உடல் வலிமையை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. வலிமை பெற இவர்கள் ஓட்டம், தாவுதல், மற்போர், அம்பு எய்தல், குதிரை-யானை ஏற்றம், கத்திச் சண்டை, குத்துச் சண்டை, நீச்சல் போன்ற உடற் பயிற்சிகளைக் கையாண்டனர். புத்தர் காலப் பள்ளிகளில் மாணவரின் உடல் நலத்தேவைக்கு ஏற்ப விற் பயிற்சி, குதிரை வண்டிப் பந்தயம் (Chariot Racing), குத்துச்சண்டை, நடனம் போன்ற உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தியாவில் இந்து, புத்தமதக் கல்வி முறைகள் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் முசுலிம் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இவர்கள் காலத்தில் உடற்கல்வி சிறப்படையவில்லை எனலாம். எனினும், சுல்தான் பெரோசு சா (Sultan Feroz Shah) ஒட்டப் பந்தயங்களை நடத்தியுள்ளார். உடற் கல்வி முறைகள் இளவரசர்களின் பயிற்சி முறைகளில் இடம்பெற்றிருந்திருக்கின்றன. இப்போது பயன்படுத்தும் கம்புப் பயிற்சி முறைகள் (Pole Drills) முசுலிம் பயிற்சி முறைகளின் வெளிப்பாடேயாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, கி.பி. 1854-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உடுவின் அறிக்கையில் (Woods Report) உடற்கல்வி பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன. விக்டோரியா அரசி இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின், கி.பி. 1875-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இடம்பெற்றது. அப்போது பள்ளிகளில் உடற்கல்வி படைப் பயிற்சியைப் போல மிகவும் கடுமையாக நடத்தப்பட்டமையால் மாணவர்கள் அதை அதிகம் விரும்பவில்லை. நாகரான் (Nocharan) இந்தியப் பள்ளிகளுக்கான உடற்கல்விப் பாடத்திட்டத்தை முதன்முதலில் வெளியிட்டார். குழு விளையாட்டுகளினால் சமுதாயப் பண்புகள் வளர்கின்றன என்ற உண்மையை உணர்ந்தமையால், கல்வியாளர்கள் தனியொருவர் உடற்கல்வி முறையை மாற்றிக் குழு விளையாட்டுகளுக்குச் சிறப்பிடம் கொடுத்தனர். இதனால்தான் கால்பந்து, 'கிரிக்கெட்டு', வளைகோல் பந்து (Hockey), வரிப் பந்து (Tennis) போன்ற குழு விளையாட்டுகளும் தடைகளப் போட்டிகளும் (Track and Field Sports) மிகுதியாக இந்தியாவில் பரவின. கோல்பு (Golf), படகுப்போட்டி போன்ற விளையாட்டுகளும் ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. 1920-ஆம் ஆண்டில் அறிவியல் முறையிலான சிறந்த உடற் கல்வியைத் தோற்றுவித்த பெருமை இந்தியாவின் உடற்கல்வித் தந்தை எனப் போற்றப்படும் கேரி குரோ பக்கு என்பவரையே சாரும். இவ்வாண்டில்தான் ஆசியாவிலேயே முதலாவதான உடற்கல்விப் பயிற்சிப் பள்ளி சென்னையில் அவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாண்டிலிருந்துதான் பயிற்சிப் பெற்ற உடற் கல்வி ஆசிரியர்கள் இந்தியாவில் உருவாக்கப் பெற்றனர். 1932-ஆம் ஆண்டில் ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்விக் கல்லூரியைச் சென்னையில் தோற்றுவித்தவரும் எச்.சி. பக்கே ஆவார். இங்கு உடற்கல்விச் சான்றிதழ்ப் பயிற்சியும் பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. உடற்கல்விப் பட்டப்படிப்பு 1957-ஆம் ஆண்டில்தான் குவாலியரில் உள்ள இலட்சுமிபாய் தேசிய உடற்கல்விக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1960-ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் 1967-ஆம் ஆண்டு தமிழகத்திலும் உடற்கல்விப் பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டன. சிவாசி, பஞ்சாபு பல்கலைகழகங்களில் 1963-இல் முதுகலைப் பட்டப்படிப்புத் தொடங்கப்பெற்றது. தமிழகத்தில் முதுகலைப்பட்டப்படிப்பு 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தமிழகத்தில் 1975-ஆம் ஆண்டு முதல் உடற் கல்வி உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டுள்ளது. இதுவே இந்திய வர

லாற்றில் முதலாம் முயற்சியாகும். உடற்கல்வி இந்தியாவில் உயரிய நிலையை அடைந்துள்ளது. பல்கலைக் கழகங்கள் உடற்கல்வியில் எம்.பில்., பிஎச்.டி. போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களும் அளிக்கின்றன. இன்று உடற்கல்வி பல்வேறு பிரிவுகளைக் கொண்டு ஓர் அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. 1986-87 –ஆம் கல்வி ஆண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் பரிந்துரைசெய்யப்பட்ட மூன்றாண்டு இளநிலை அறிவியல் பட்டப்படிப்பு இந்தியாவிலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் தொடங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையில் (New Education Policy) உடற்கல்வி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கல்வி சாரா உடற்கல்வி என்னும் பிரிவிலும் ஒரு மாணவர் பெறும் மதிப்பெண்ணும் அவரது தேர்வினை முடிவு செய்ய உதவும் என்ற நிலை நடைமுறைக்கு வரவிருக்கிறது. பள்ளியிலும் கல்லூரிகளிலும் உடற்கல்வி கட்டாயப் பாடமாக்கப்பட்டுத் தேர்வுக்குரிய பாடமாக்கப்படவுள்ளது.

இந்தியாவிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்படாததால் முறையான உடற்கல்வி இப்பள்ளிகளில் இடம்பெறவில்லை. தேசிய விழாக்கள், பள்ளி ஆண்டு விழாக்கள் நடைபெறும்போது மாணவர்க்குச் சில உடற்பயிற்சிகளை வகுப்பாசிரியர்கள் கற்பிக்கின்றனர். இது தவிர மாணவர்கள், பள்ளி இடைவேளைகளில் தாமாக விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.

சில நடுநிலைப்பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் 1975–ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளமையால் உடற்கல்வி வகுப்புகள் முறையாக நடைபெற்று வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி கட்டாயப் பாடமாகத் தேர்வுக்குரிய பாடமாக்கப்பட்டுள்ளமையாலும், உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவரின் எண்ணிக்கையைப் பொறுத்து நியமிக்கப்படுவதாலும், இப்பள்ளிகளில் முறையான உடற்கல்விப் பாடத் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 2,886 உயர்நிலைப் பள்ளிகளில் 1975–ஆம் ஆண்டில் உடற்கல்வியைத் தேர்வுக்குரிய கட்டாயப் பாடமாக்கியவர் அன்றைய பள்ளிக்கல்வி இயக்குநராக இருந்த ஆர். பெருமாள் ஆவார். உடற்கல்விப் பாடத்திட்டங்கள் பள்ளிகளிலுள்ள வசதிகளுக்கேற்ப (1) போதுமான விளையாட்டுத்திடல் உள்ள பள்ளிகள், (2) குறைவான விளையாட்டுத்திடல் உள்ள பள்ளிகள், (3) விளையாட்டுத் திடலே இல்லாத பள்ளிகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு உடற்கல்விப் பாட வகுப்புகளும் பங்கேற்கும் வகுப்புகளும் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளில் தடைகளப் போட்டிகள், யோகாசனப் பயிற்சி, உருளுதல் போன்ற தனியாள் பயிற்சிகளும் நடைப்பயிற்சி, குழு விளையாட்டுகள் போன்ற குழுப் பயிற்சிகளும் இடம் பெறுகின்றன.

தமிழகக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் இருந்தபோது, அம்மாணவர்களுக்கும் முதலாண்டு பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் கட்டாய உடற்கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்தது. கல்லூரியில் பெரும்பாலும் ஓர் உடற்கல்வி ஆசிரியர்தாம் பணிசெய்கின்றமையாலும், போதிய வசதிகளும் ஊக்கமும் இல்லாமையாலும் உடற்கல்வி சிறப்படையவில்லை. கல்லூரிகளில் குழுக்களை அனைத்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆயத்தம் செய்வதிலேயே உடற்கல்வி ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குழுக்களின் வெற்றி தோல்வியே கல்லூரியின் உடற்கல்விப் பெருமையை நிலைநாட்டுகின்றன. எனவே, மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பயிற்றுவிப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது. கல்லூரி ஆண்டு விளையாட்டு விழாக்களையும் சில கல்லூரிகளில் பல விளையாட்டுப் போட்டிகளையும் ஆண்டுதோறும் நடத்துகின்றனர். இவை தவிர மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் உடல்நல ஆலோசனைகளும் உடற்கல்வி ஆசிரியர்களால் தரப் பெறுகின்றன.

சில கல்லூரிகளில் உடற்கல்வி பொதுப்பாடம் (Core-Subject) ஆகவும் சிறப்புப்பாடம் (Credit Subject) ஆகவும் உள்ளது. மதுரைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் உடற்கல்வி பட்டப்படிப்பு மாணவர்களுக்கு நான்காம் பாடப்பகுதியாக, தேர்வுக்குரிய பாடமாக நடத்தப்பட்டு மூன்றாண்டுகளுக்குப்பின் நிறுத்தப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கல்லூரிகளில் பி.எட். பட்டப் படிப்பில் உடற்கல்வி பொதுப்பாடமாக – செயல்முறைப் பகுதியாக (Practicals) உள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உடற்கல்வி பற்றியும் வகுப்புகள் நடத்துகின்ற முறைகள் பற்றியும் பயிற்சி கொடுக்கப் படுகிறது.

மகாராட்டிர மாநிலத்திலுள்ள பயிற்சிக் கல்லூரிகளில் உடற்கல்வியும் ஒரு விருப்பப்பாடமாக (Optional Subject) உள்ளது. இம்மாணவர்கள் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்களாகவும் பாட ஆசிரியராகவும் பணி செய்ய ஏதுவாக உள்ளது.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரியும் கோவை மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி யும் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வித்துறை யும் அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வித் துறையும் உடற்கல்வியில் இளங்கலை, முதுகலை, எம்.பில்.,பிஎச்.டி. பட்டப் படிப்புகளைக் கொண் டுள்ளன. இவை உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி மையங் களாக உள்ளன.

பல்கலைக்கழகங்களில் உள்ள உடற்கல்வித் துறைகள் பெரும்பாலும் விளையாட்டுக் குழுக்களை அனைத்துப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி களுக்குத் தெரிந்தெடுப்பதும், அவற்றிற்குப் பயிற்சி கொடுப்பதையுமே செய்கின்றன; பல்கலைக்கழகங் களுக்கிடையிலான போட்டிகள் சிலவற்றை நடத்து கின்றன.

உடற்கல்விக்காக உள்ள அமைப்புகள்: தேசிய உடற்கல்வி விளையாட்டு நிறுவனங்களின் அமைப்பு (Society of National Institutions for Physical Education and Sports) உடற்கல்வி பயிற்சிக் கல்லூரி களுக்கும், பல்கலைக்கழக உடற்கல்விப் பயிற்சித் துறைகளுக்கும் பொருளுதவியளிக்கிறது; அவற்றின் செயல்முறைகளைக் கண்காணிக்கிறது.

பல்கலைக்கழக மானியக் குழு கல்லூரிகளில் உடற்கல்விக்கு விளையாட்டுத் திடல்கள், உடற் பயிற்சிக் கூடங்கள் (Gymnasiums), நீச்சல் குளங்கள், தடைகளப் பந்தயத் திடல்கள், விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றிற்குப் பொருளுதவி செய் கிறது.

குவாலியரிலுள்ள இலட்சுமிபாய் தேசிய உடற்கல்விக் கல்லூரியும் கேரளாவிலுள்ள அதன் கிளையும் உடற்கல்விப் பயிற்சியையும் ஆய்வுப் பட்டப் படிப்புகளையும் நடத்துகின்றன. அவை சிறந்த உடற்கல்வி மையங்களாகத் திகழ்கின்றன.

விளையாட்டுகளின் முன்னேற்றத்திற்காகப் பயிற்சியாளர்களை உருவாக்கும் நேதாசி சுபாசு தேசிய விளையாட்டு நிறுவனம் (Netaji Subbash National Institute of Sports) பாட்டியாலாவில் உள்ளது. இது பல கிளைகளைக் கொண்டுள்ளது. இங்குப் பட்டயக் (Diploma) கல்வியும் விளை யாட்டில் முதுகலைக் கல்வியும் (Master of Sports) அளிக்கப்படுகின்றன. இங்குப் பயின்றவர்கள் மாவட்ட விளையாட்டு மையங்களில் பயிற்சியாளர் களாகப் பணியிலமர்த்தப்படுகின்றனர்.

இந்திய ஒலிம்பிக்குக் கழகம் அனைத்து நாடுகளுக் கிடையிலான போட்டிகளுக்கு இந்திய அணிகளை அனுப்பும் பொறுப்புடையது. மற்றைய மாநில விளையாட்டுக் கழக அமைப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்திய விளையாட்டு நிறுவனம் பெரும் பான்மையான மக்கள் விளையாட்டைப் பற்றி அறியப் பல செயல்களைச் செய்கிறது; விளையாட்டு களை மக்கள் மத்தியில் பரப்பவும் அவற்றின் முன் னேற்றத்திற்கும் பாடுபடுகிறது.

உடற்கல்வியினால் கிடைக்கும் வேலை வாய்ப்பு கள்: மற்றைய நாடுகளைப்போல உடற்கல்வியும் இந்தியாவில் முழு வளர்ச்சி பெற்ற அறிவியல் துறை யாக வளர்ந்துள்ளது. உடற்கல்வியில் பயிற்சி பெறு பவர்கள் தங்களின் கல்வித்தகுதிக்கேற்ப நடு நிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி கள் உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக் கழக உடற்கல்வித் துறைகள் போன்ற பலவகையான கல்வி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெறு கின்றனர்.

| | உடற்கல்வித் தகுதி | வேலை வாய்ப்பு |
|---|---|---|
| 1. | சான்றிதழ்ப் படிப்பு (Certificate Course) | நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணி |
| 2. | பட்டயச் சான்றிதழ் (Diploma) அல்லது இளங் கலைப் பட்டப்படிப்பு | உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி |
| 3. | முதுகலைப் பட்டப்படிப்பு | மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி, கல்லூரிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி |
| 4. | முதுகலைப் பட்டப்படிப்போடு என்.ஐ.எசு. பட்டயம் அல்லது எம்.பில். பட்டப்படிப்பு | |
| 5. | முனைவர் (பிஎச்.டி.) பட்டப்படிப்பு | பல்கலைக்கழக உடற்கல்வித் துறைகளில் உடற்கல்வி இயக்குநர்/துணைப் பேராசிரியர் பதவி, உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரிகளில் துணைப்பேராசிரியர் பதவி. |

உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் அரசு ஒப்புதல் (Recognition) பெற வேண்டுமாயின், உடற் கல்வி இயக்குநர் ஒருவர் பணியில் அமர்த்தப்பட்டு இருக்க வேண்டும். இல்லையேல் ஒப்புதல் மறுக்கப் பட்டுவிடும் நிலையுள்ளது.

உடற்கல்வியின் பயன்கள்: உடற்கல்வி பொதுவாக நலத்தை வளர்க்கவும், உடல் வலிமையைப் பெருக் கவும், நெஞ்சுறுதியை உண்டாக்கவும், உள்ளம் பக் குவம் அடையவும், மனிதப் பண்புகள் மேலோங்க வும், வாழ்க்கைச் சிக்கல்களை எதிர்நோக்கி வெல் கின்ற மனவலிமை சிறக்கவும், தலைமைப் பண்பும் சமுதாய உணர்வும் சமுதாயப் பண்புகளும் செம் மைப்படவும் உறுதுணையாய் இருக்கிறது. மேலும் இக் கல்வி உடல் தசை உறுதிப்படவும், மனித ஆற் றல் மேம்படவும் உடலின் உள்ளுறுப்புகள் ஒருங் கிணைந்து திறன்படச் செயற்படவும், மனித உட லசைவுகள் அழகுற, சிக்கனமாகச் செயற்படவும் பயன்படுகிறது. கல்வியின் நோக்கமான முழு வளர்ச்சி பெற்ற நன்மக்களை உருவாக்குவதில் இக்கல்வி பயன்படுகிறது. கூட்டு, தலைமை, கோட்பாடுகளை மதித்தல், இணைந்து செயல்படும் குழு உணர்வு, தன்னம்பிக்கை, பிறர் திறமைகளை மதித்தல், நேர்மை, உணர்ச்சிகளை அடக்கும் பக்குவம், வெற்றி யில் செருக்கின்மை, பணிவு, அறிவுடைமை போன்ற தன்னுடைமைச் செல்வங்கள் வளர வாய்ப்பு அளிக் கின்றது. விளையாட்டுத் திறன்களில் உயர்ந்து விளங்கி நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறவும் துணை செய்கிறது. இக்கல்வி தன்னைப் பற்றித்தான் மதிப்பாய் எண்ணுகின்ற (Self-Esteem) பண்பையும், சிறு வயதுமுதல் தனது ஆழ்மனத்தில் பதிந்துகிடக்கும் உயர் நோக்கங்களை அடையும் பண்பினையும் (Self-Actualization) வளர்க்கின்றது; சமுதாய ஒப்பு தல் (Social Recognition) பெறச் செய்கின்றது. விசய் அமிர்தராசு, கபில்தேவ், பி.டி. உசா போன்றவர்கள் விளையாட்டுத் திறனால் உலக நாடுகளில் மதிக்கப் படுகின்றனர் என்பதே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொன்.கு.

துணை நூல்கள்:

**Charles, A. Bucher**, Foundations of Physical Education and Sports, The C.V. Mosby Company, London, 1983.

**Thomas, J.P.**, Organisation of Physical Education, Gnanodaya Press, Madras, 1959.

***உடற்கூற்று வண்ணம்*** பட்டினத்தடிக ளால் பாடப்பட்டது; சந்தப் பாடலாக அமைந்தது; ‘தனதன தான தனதன தான’ என்னும் வண்ணத் தில் தொடங்குவது; மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை கூறுவது. ‘ஒரு மடமாதும் ஒருவனு மாகி’ என்று தொடங்கி, ‘ஓர் பிடி நீறும் இலாத உடம்பை நம்பும் அடியேனை இனி ஆளுமே’ என்று முடிவது. அருணகிரிநாதரின் ‘அறுகு நுனி பனியனைய’ எனத் தொடங்கும் திருவிடை மருதூர்த் திருப்புகழும் இது போன்ற கருத்துடைய ஒன்றாகும்.

கணவன், மனைவி ஆகிய இருவரின் இன்ப சுகத் தால் விந்துவும் சுரோணிதமும் கலந்து ஒரு துளியாகிப் பெண்ணின் கருப்பையுள் இடம் பெற்றுக் கண், வாய், செவி, கால், கை முதலியன பெற்று அத்துளி உடம் பாகி வளர்கிறது. பத்துத் திங்கள் நிறைவுற்று அது மகவாய்ப் புவியிடைப் பிறக்கிறது. அக்குழந்தை மண்ணிடைக் கவிழ்ந்தும் உந்தியும் விளையாடுகிறது; கொஞ்சம் கொஞ்சமாக ஓர் அறிவு, ஈரறிவு என அறிவு பெறுகிறது. தாய் மடியில் அமர்ந்து மழலை பேசி மகிழ்விக்கிறது. மேலும், வளர்ந்து உடைமணி அணிந்து, ஐந்து வயதில் தெருவிடை விளையாடு கிறது. பிறகு நல்லாசிரியனிடம் கலைபயிலச் சென்று முத்தமிழ்க் கலைகளைக் கற்றுப் பதினாறு வயதினை எய்துகிறது. தலையலங்காரம் முதலியவற்றுள் விருப் பம் கொண்டு, மணிபல பூண்டு பிறர் வணங்கிப் பெருமை செய்ய, இவன் மன்மதன் என மங்கையர் கண்டு மருண்டு நிற்கத் தோற்றம் காட்டுகிறது.

மயிலனைய மடமாதர் அழகு கண்டு, அவர்பின் சென்று, இதழமுது உண்டு, தேடிய செல்வத்தை அவர்வசம் தந்து நிற்கிறது வாலிபக் கோலம். அது கலையும்போது வளமையும் இளமையும் மாறுகின் றன. பல் விழுந்துவிட கண் இருண்டுவிட நரை திரை வர வாதம் முதலிய நோய்கள் மண்டுகின்றன. கையினில் தடியுடன் நடை பயில்கிறது. மந்தி என்னும்படிக் குந்தி நடந்து, துயில் வரும் காலம் இருமல் முதலிய நோய்களால் துன்புறுகிறது. கலகல என மல சலம் வரத் தெளிவின்றித் தடுமாறுகிறது. தனக்கினி ஆதரவு ஏது என்று நோகும் வேளை வேதன் எழுதிய காலம் வந்துவிட்ட தென உணர்கிறது. சுவாசம் தடுமாறும் அவ்வேளை கொடிய வடிவங் கொண்ட எம தூதுவர் வலை வீசி நிற்க, மனைவி மடியில் விழ்ந்தலற அயலவர்கள் வருத்தமுற உயிர் பிரிகிறது. வாசலில் பந்தலிட்டும் பறைகொட்டியும் பிணத்தினைக் கழுவி எடுத்தும் மாலைகளணிவித்தும், நாறுமுடம்பைச் சுடலைக்கு எடுத்துச் சென்று விறகிடை மூடித்தழல் கொண்டு மூட்ட வெந்து எலும்பும் கருகி ஓர்பிடி சாம்பலும் ஆகாமல் போய் விடுகிறது. இத்தகைய உடம்பை நம்பும் அடியேனை இறைவனே இனியாவது நீ ஆள

வேண்டும் என வேண்டுவது பட்டினத்தடிகள் இயற்றிய உடற் கூற்றுவண்ணத்தில் கூறப்படும் கருத்தாகும்.

ஜி.ஆர்.கி.

**உடற்பருமனும் உளவியற் கூறுகளும்:** உலகில் பெரும்பான்மையான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பட்டினியில் திண்டாடினாலும், உடற்பருமன் சிலருக்குக் குறிப்பாகச் சிலநாடுகளில் பெரும் சிக்கலாக இருந்துவருகிறது. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா போன்ற நாடுகளில் 20% மக்கள் இத்தொல்லையால் அவதியுறுகின்றனர். உடற்பருமன் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை இன்னும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இதைக் குறைப்பதற்கான சிகிச்சை முறைகள் பல இருந்தாலும் அவற்றால் முழுமையான பலன் கிடைக்கும் என்று உறுதிகூற இயலவில்லை. இத்துறையில் நடந்துவரும் ஆராய்ச்சிகள் புற்று நோய் குறித்த ஆராய்ச்சிகளைவிடக் குறைந்த பலனையே அளித்துள்ளன. உடற்பருமனைக் குறைக்க மருத்துவ உதவியை நாடும் 100 பேரில் 12 பேர் மட்டுமே பருமனைக் குறைக்கமுடிகிறது. இந்த 12 பேரிலும் 10 பேர் ஓரிரண்டு ஆண்டுகளில் முந்தைய உடற்பருமனைத் திரும்பப் பெற்றுவிடுகின்றனர்.

உடற்பருமன் ஏற்படுவதற்கு உளவியலிலும் உடற்கூற்றியலிலும் காரணங்கள் பல உள்ளன. சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்ற உளவியலாளர் குழந்தையின் தொடக்க கால வாழ்க்கையே உடற்பருமன் ஏற்படக் காரணமாக உள்ளதெனக் கூறியுள்ளார். குழந்தை முதல் 8 மாதங்களுக்குள் தாயிடம் இருந்து பெறும் அன்பும் கவனிப்புமே இதற்குச் சிறந்த காரணம் என்கிறார் இவர். எடுத்துக்காட்டாக, தாய் குழந்தையிடம் பாசமின்றியோ வெறுப்புடனோ இயந்திரம்போல் – குறிப்பாகப் பால் புகட்டும்போது நடந்து கொண்டால் அருந்துதல், உண்ணுதல், சுவைத்தல் ஆகிய செயல்களில் அளவற்ற ஆவலுள்ளவர்களாக இக்குழந்தைகள் வளர வாய்ப்புள்ளது. இத்தகைய பழக்கத்தால் இவர்கள் உடற்பருமன் அடைவது மட்டுமன்றி விரலைச் சுவைத்தல், புகைபிடித்தல், மது அருந்துதல், வாயாடுதல், இரைந்து பேசுதல், திக்கிப் பேசுதல், தேவையற்ற முறையில் அடிக்கடி வாயசைத்தல் அல்லது துடித்தல், உடலுறவின்போது வாய் வழி இன்பம் தேடுதல் ஆகியவற்றில் ஈடுபடலாம். அதாவது வாய் வழி இன்பம் துய்ப்பது இவர்களுக்குத் தலையாய இன்ப உணர்வு தரும் வழியாக அமைந்து விடுகிறது.

பிற்காலத்தில் உடற்பருமன் அடைந்தவர்களை விடக் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பருமன் உள்ளவர்களை மெலியச் செய்வது கடினமாகும். உடற்பருமன் ஒரே குடும்பத்தில் பலருக்கு இருப்பதுண்டு. இது பரம்பரை நோயாக இருந்து வருவதைக் குறிக்கிறது. பெற்றோரின் வளர்ப்பு முறையும் உடற்பருமன் ஏற்பட வாய்ப்புகளை மிகுதிப்படுத்தலாம். பெற்றோர்கள் உடற்பருமனையும் உடல் நலனையும் ஒன்றென நினைப்பது தவறு. இத்தகைய எண்ணத்தால் குழந்தைகள் உடல் நலமின்றி இருக்கும்போது அவர்களை உண்ணுமாறு பெற்றோர் வற்புறுத்துகின்றனர். குழந்தையும் பெற்றோரின் அன்பையும் துணையையும் பெறவேண்டும் என்ற ஆசையில் உண்ணுகிறது. குழந்தைக்கும் பெற்றோருக்கும் உணவு அன்பையும் துணையையும் வெளிக்காட்டும் ஒரு பொருளாக ஆகிவிடுகிறது. சில வேளைகளில் ஏமாற்றம், தனிமை, ஏக்கம் ஆகிய உணர்வுகள் மேலெழும்போது இக்குழந்தைகள் உணவுண்ண விரும்புவர். உடற்பருமன் உள்ளவர்களால் பசியையும் கோபம், அச்சம், துயரம், எரிச்சல் ஆகிய உணர்வுகளையும் வேறுபடுத்திப் பார்க்க இயலுவதில்லை. இதனால் இவர்கள் இத்தகைய உணர்வுகள் ஏற்படும்போது உண்ணத் தொடங்கிவிடுகின்றனர்.

உடற்பருமன் உடையவர்கள் மற்றவர்களைவிட அடிக்கடி மிகுதியாகவும் விரைவாகவும் உண்பார்கள். இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாவர். இவர்கள் உணவின் சுவையறிவதில் மற்றவர்களை விடச் சிறந்து விளங்குவர். வயிற்றில் பசி ஏற்படாவிட்டாலும் உணவுப்பொருள்களின் நிறம், மணம், சுவை இவற்றால் கவரப்பட்டு உண்ணத் தொடங்குவர். குடலின் சுருங்கி விரியும் இயக்கம் தொடங்கு முன்னரே இவர்களுக்குப் பசியெடுக்கத் தொடங்கிவிடுகிறது. அதாவது இவர்கள் உடற்கூறு காரணமாக ஏற்படும் உள்ளுணர்வினால் (Internal Feedback) உணவருந்தாமல் வெளித் தூண்டுதல்களால்(External Stimuli) உந்தப்பட்டு உண்ணத் தொடங்கிவிடுகின்றனர். வயிரார உணவு உண்டபிறகும் இவர்கள் ரொட்டி, கடலை, வறுவல் போன்றவற்றை உண்பார்கள்.

உடற்பருமன் உள்ளவர்கள் பசி எடுதது உணவு அருந்தாமல் கடிகாரம் காட்டும் நேரத்திற்கு ஏற்ப உணவருந்துகின்றனர். இவர்கள் தட்டில் வைத்ததை ஒன்றுவிடாமல் உண்ணும் பழக்கமுள்ளவர்கள். உடற்பருமன் உள்ளவர்கள் உணவுப்பொருள்களைச் சுவை மிக்கதாக இருந்தால் மிகுதியாகவும் சுவை குறைந்திருந்தால் குறைவாகவும் உண்பார்கள். இவர்கள் உணவுப் பொருளைப் பெறுவதற்கான முயற்சியில் சிறிது உடலை வருத்திக்கொள்ளவேண்டும் என்

றாலோ துன்பம் அடையவேண்டுமென்றாலோ அதை விரும்புவதில்லை. அதற்குப் பதிலாகப் பட்டினி கிடப்பதே மேல் என்று நினைப்பார்கள்.

உடற்கூற்றியல் வல்லுநர்கள் உடற்பருமனுக்குக் காரணம் உடலிலுள்ள கொழுப்பு அணுக்கள் (Fat Cells: Lipocytes Adipocytes) என்று கூறுகின்றனர். இக்கொழுப்பு அணுக்களின் எண்ணிக்கையை மாற்ற இயலாது. இவை குழந்தையின் முதல் மூன்று ஆண்டுகளிலேயே வரையறுக்கப்படுகின்றன. ஒரு சாரார் மூளையின் இருபகுதிகள் உண்பதற்கும் திகட்டுவதற்கும் காரணமாக இருப்பதாகக் கருதுகின்றனர். இவற்றின் செயலுக்கேற்ப உடற்பருமனும் உடல் மெலிவும் ஏற்படுகின்றன. திகட்டுவது மிகுந்தால் உடல் மெலிவு (Anorexia Nervosa) ஏற்படுகிறது. மூளையின் எந்தப் பாகத்தில் இப்பகுதிகள் இருக்கின்றன என்பதை இன்னும் திட்டவட்டமாக அறிய இயலவில்லை.

உடற்பருமனைக் குறைக்க உதவும் மருத்துவ முறைகள்: முழுமையான பலன் அளிக்காவிட்டாலும் ஓரளவு பலனளிக்கும் சில புதிய சிகிச்சை முறைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. மின் அதிர்ச்சி மருத்துவம்: உடற்பருமனை மிகுதியாக்கும் உணவு வகைகளை உண்ணவைத்து அதனுடனே மின் அதிர்ச்சியைக் கொடுத்து அவ் உணவுப் பொருள்களின் மேல் உள்ள ஆர்வத்தைக் குறைக்க முடியும்.

2. துர்வாடை மருத்துவம்: விரும்பியுண்ணும் உணவை உண்ணும்போது துர்வாடையை ஏற்படுத்தி, அவ்வுணவின் மேலுள்ள விருப்பத்தைக் குறைக்கலாம். பெருங்காயத்தை மூக்கின் அருகில் வைத்துக்கொண்டு உணவு அருந்தச்சொல்வதுமுண்டு. சுருட்டுப் புகையை விரும்பாத ஒருவரை உணவு அருந்தியதும் புகைபிடிக்கச் செய்வதால் அவ்வுணவின் மேல் உள்ள விருப்பத்தைக் குறைக்கலாம்.

3. வெளித்தூண்டுதலைக் கட்டுப்படுத்தும் மருத்துவம்: உடற்பருமன் உள்ளவர்கள் வெளித்தூண்டுதல் காரணமாகவே முக்கியமாகத் தூண்டப்பட்டு உணவு அருந்துவதால் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே சாப்பிடவேண்டும். உண்ணும்போது எந்த வேலையையும் செய்யக் கூடாது (படித்தல், இசைகேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்).

4. உள்தூண்டுதலைக்கட்டுப்படுத்தும்மருத்துவம்: உண்ணும்போது என்ன உண்கிறோம், எங்கே உண்கிறோம் என்பதைக் குறிப்பெடுத்தல் வேண்டும். உண்பது குறித்து எழும் எண்ணங்களைக் குறித்துக் கொண்டு, சாப்பிடுவது குறித்து முன்கூட்டியே திட்டமிடுவதும் நல்லது. உணவருந்தும்போதும் இடையில் நான்கு, ஐந்து இடைவெளிகளில் (ஒரு நிமிடம்) சாப்பிடுவதை நிறுத்துவது சாப்பாட்டின் அளவைக் கட்டுப்படுத்த உதவும்.

5. குடல் அறுவை மருத்துவம்: குடலின் ஒரு பகுதியை நீக்குவதன் மூலம் உடற்பருமனைக் குறைக்க இயலும் என்றாலும், இச்சிகிச்சைக்குப் பிறகு சில மன நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

6. உடற்பயிற்சி மருத்துவம்: பலவகை உடற்பயிற்சிகளின் மூலமாக உடற்பருமனைக் குறைக்க முடியும். உடற்பயிற்சிகளை மன உறுதியுடன் இடைவிடாமல் செய்யவேண்டும்.

7. உணவுக் கட்டுப்பாட்டு மருத்துவம்: உணவுப் பொருள்களின் சத்தின் அளவை (Calories) அறிந்து அளவாக உண்பது சிறந்த வழியாகும். இதற்கு மனக் கட்டுப்பாடு தேவை.

8. உள்மனமாற்று மருத்துவம்: உடலை ஓய்வுறச் செய்து மனக்கண் முன் சில காட்சிகளைக் கற்பனை செய்யச் செய்து அதன் மூலமாக உணவுப் பழக்கங்களை மாற்ற மனக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். ஒருவர் விரும்பியுண்ணும் உணவை உண்ணத் தொடங்கும்போது அவருக்குக் குமட்டலும் வாந்தியும் வருவது போலவும் அவர் உண்ணாமல் விலகிச் செல்லும்போது நல்ல மன அமைதி ஏற்படுவதுபோலவும் மனக்காட்சிகளை (Imagineries) ஏற்படுத்தி, அவ்வுணவின் மேலுள்ள ஆவலைக் குறைக்கலாம். தன்னுடைய உடற்பருமனைக் கண்டு மற்றவர்கள் எள்ளி நகையாடுவதையும் தன் உடற்கட்டு நன்றாக இருந்தால் மற்றவர்கள் பாராட்டுவதையும் கற்பனைக் காட்சிகளாக உருவாக்கி மருத்துவம் செய்யப்படுகிறது.

உளவியல் வல்லுநர்களுடன் மருத்துவர்களும் இணைந்து செயற்பட்டால் பெருஞ்சிக்கலான உடற்பருமனுக்குத் தகுந்த மருத்துவ முறையைத் தேர்வு செய்து அளிக்க இயலும். வே.க.

துணை நூல்கள்:

**Mc.Connell,J.V.**, Understanding Human Behaviour, Hoet Rinehart & Winston, New York, 1983.

**Norton,J.C.**, Introduction to Medical Psychology, Free Press, New York, 1982.

**Wolman,B.B.** (Ed), Psychological Aspects of Obesity: A Handbook, Van Nostrand & Reinhold, New York, 1982.

**Yates,A.J.**, Theory and Practice in Behaviour Therapy, John Wiley, New York, 1975.

**உடன் குற்றவாளி**: ஒரு குற்றத்தைச் செய்வதற்கு ஒருவனைத் தூண்டுபவனும், அவனுக்கு உதவியாக இருப்பவனும், அவனுடன் சேர்ந்து சதி செய்பவனும், பொதுவான எண்ணத்துடன் அவனுடன் சேர்ந்து செயற்படுபவனும் உடன் குற்றவாளி(Accomplice) எனச் சொல்லப்படுவான். ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்டவர்களும் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகச் சட்டவிரோதமான கும்பலாக இயங்கும் நிலையில் அக்கும்பலில் உள்ள ஒவ்வொருவனும் அக்கும்பலில் உள்ள மற்றவனுக்கு உடன் குற்றவாளியாவான்.

குற்றவாளியும் உடன் குற்றவாளியும்ஒத்த வயதினராயிருந்தால் இருவரும் ஒன்றாக விசாரிக்கப்படுவார்கள். அவர்களுள் ஒருவன் தலை மறைவாகிவிட்டால் பிடிபட்டவனை மட்டும் தனியாக விசாரணை நடத்துவர். அவ்விருவருள் ஒருவன் மட்டும் 18 வயதுக்குட்பட்ட சிறுவனாயிருந்து, மற்றவன் அவ்வயதுக்கு மேற்பட்டவனாயிருக்கும் நிலையில் அவ்விருவரும் தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள்.

ஒரே வழக்கில் குற்றவாளியும் உடன் குற்றவாளியும் ஒன்றாக விசாரிக்கப்படும் நிலையில், வழக்கு விசாரணையின் தொடக்க கட்டத்திலேயே ஒருவன் மட்டும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நிலையில், அவனைப் பொறுத்த மட்டிலும் பொதுவாக வழக்குப் பிரிக்கப்பட்டு, அடுத்தவன் மீது அதாவது குற்றத்தை ஒப்புக் கொள்ளாதவன் மீது தனியாகத் தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

குற்றம் புரிந்தவனும் அவனுக்கு உடந்தையாக இருந்த உடன் குற்றவாளி எனப்படுபவனும் சட்டப்படி குற்றவாளிகள் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் வரையில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளாகக் கருதப்படுவார்கள். அவ்விருவரும் ஒரு வழக்கில் ஒன்றாக விசாரிக்கப்படும் நிலையில் ஒருவன் எதிரியாகவும் மற்றவன் அவனுடன் ஒத்த எதிரியாகவும் கருதப்படுவான். அந்நிலையில் அவ்விருவருள் ஒருவன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் முறையாக மெய்ப்பிக்கப்பட்ட நிலையில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மற்ற எதிரிக்கு எதிராகவும் நீதிமன்றம் ஆராயலாம் (May take into Consideration) என்பது இந்திய சான்றுச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு ஆராயப்படத் தகுதி வாய்ந்ததாக அமைவதற்கு இரு முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவனும் மற்றவனும் ஒரே வழக்கில் சக எதிரிகளாக விசாரிக்கப்படவேண்டும். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவன் தானும் குற்றம் செய்தவன் என்று அதில் ஒப்புக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்கு விசாரணையின் போது வாக்குமூலம் கொடுத்தவன் மறுத்திட்ட போதிலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்துக்கு அளிக்கப்பட வேண்டிய மதிப்பில் குறைவு ஏற்படாது.

மேற்கூறிய இந்திய சான்றுச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில் உள்ள கோட்பாடு ஆங்கிலச் சட்டத்திலிருந்து மாறுபட்டதாகும். குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மற்றவருக்கு எதிராகப் பயன்படுத்த ஆங்கிலச் சட்டம் அனுமதிப்பதில்லை. இந்தியாவிலும் மேற்கூறிய கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதில் மிகவும் நிதானமும் முன் எச்சரிக்கையும் தேவை என்று நீதிமன்றங்கள் எச்சரித்துள்ளன. நீதிமன்றங்களின் தீர்ப்புப்படி ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் சக எதிரியைத் தண்டிக்கக்கூடாது. ஓர் எதிரிக்கு எதிராக வேறு வகையில் போதுமான சாட்சியமிருந்தால் அதை உறுதி செய்ய மற்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பயன்படுத்தலாம் எனச் சில வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சில சூழ்நிலைகளில் உடன் குற்றவாளி (Accomplice) எனப்படுபவன் சக எதிரியாக இல்லாமல் குற்றம் சாட்டுபவர் (Prosecution) தரப்பில் சாட்சியாக மாறுவான். அந்நிலையில் அவன் அளிக்கும் சாட்சியம் சக எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் காட்டிலும் தரத்தில் சிறிது உயர்ந்ததாகக் கருதப்படும். ஏனெனில், அவனது சாட்சியம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது. சக எதிரியின் ஒப்புதல் வாக்குமூலமோ குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை.

உறுதிப்படுத்தப்படாத உடன் குற்றவாளியின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒருவனைத் தண்டிப்பது சட்டவிரோதமான காரியம் அன்று என்று இந்திய சான்றியல் சட்டத்தின் 133 –ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதே சாட்சிய சட்டத்தின் 114–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள இரண்டாம் எடுத்துக்காட்டில் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகளில் வேறு சான்றின் மூலம் உறுதிப்படுத்தப்படாத உடன்குற்றவாளியின் சான்று நம்பத்தகாததாக அனுமானிக்கப்

படும் என அந்த எடுத்துக்காட்டில் சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய 133-ஆம் பிரிவையும் 114-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எடுத்துக்காட்டையும் ஒன்றாகப் படிக்கும்போது கீழ்க்காணும் கருத்துத் தோன்றுகிறது. உடன்குற்றவாளியின் சான்றின் அடிப்படையில் மட்டும் ஒருவனைத் தண்டிப்பதில் தடையேதுமில்லை. என்றாலும், அவ்வாறு தண்டிப்பதற்குமுன் உடன் குற்றவாளியின் சாட்சியத்தை வேறு சாட்சியத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வது அறிவொடுபட்ட செயலாகும்.

**உடன் கூட்டம்** சோழர் காலத்தில் அரசனுக்கு அருகில் இருந்து உதவிய அமைச்சர் குழு. இக்குழு தலைநகரம் மட்டுமன்றி மற்ற இடங்களிலும் அரசனுடன் இருந்து வந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம். கூட்டம் என்று வருகின்ற காரணத்தால் இது ஒருகுழு அல்லது அவையாக இருந்திருக்க வேண்டும். இந்தக் குழுவில் எத்தனை அமைச்சர்கள் இருந்தனர் என்பது சரியாகத் தெரியவில்லை.

சோழர் காலத்தைச் சார்ந்த விக்கிரம சோழனுலா என்னும் நூலில் 'பலர் முடிமேல் ஆர்க்குங் கழற்கால் அனகன் தனதவையுள் பார்க்கும் மதி மந்திர பாலகரில்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் அவை உடன் கூட்டமாக இருக்கலாம்.

சோழர் காலத்தில் ஏறக்குறைய கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்து உடன் கூட்டம் என்ற சொல் கல்வெட்டில் வருகின்றன. முதலாம் குலோத்துங்கனின் காலத்திற்குப் பின் இதன் செல்வாக்குக் குறைந்துவிட்டது. அரசனின் எண்ணங்களை அறிந்து அதைச் செயற்படுத்தும் அதிகாரிகளாகவும் அமைச்சர்களாகவும் இந்த அமைப்புச் செயற்பட்டு வந்தது. சோழர் காலத்திற்கு முன் இருந்த பல்லவர்கள் காலத்திலும் பின்னர் இருந்த விசய நகர நாயக்கர் காலத்திலும் உடன் கூட்டம் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. சௌசூகுவா என்ற சீன நாட்டு ஆசிரியர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியுள்ள நூலில் சோழ மன்னன் தன் அவைக்களத்தில் நான்கு அமைச்சர்களோடு வீற்றிருந்ததைத் தாம் நேரில் பார்த்ததாக எழுதி உள்ளார் மனுதரும சாத்திரத்தில் 7 அல்லது 8 மந்திரிகள் இருக்க வேண்டும் என்றும் அர்த்தசாத்திரத்தில் 18 பேர் கொண்ட அமைச்சர் அவை ஒன்றும் கூறப்பட்டுள்ளது. சோழ மன்னன் வீரராசேந்திர தேவனின் திருமுக்கூடல் கல்வெட்டில் உடன் கூட்டத்தில் இருந்த 6 மந்திரிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வீரராசேந்திரன் காலத்தில் உடன் கூட்டம் 6 மந்திரிகள் கொண்டிருந்தது எனலாம்.

உடன் கூட்டம் அரசனுக்குப் பல வழிகளில் துணை புரிந்துள்ளது. இவர்கள் வருவாய்த்துறையைக் கண்காணித்தனர்; அரசனின் ஆணையைச் செயற்படுத்தும் அதிகாரிகளாகவும் இருந்துள்ளனர். தி.சு.

**உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை**: பன்னாட்டுச் சட்டத்தில் கரையோர நாடுகளின் நன்மையைக் கருதி உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை (Hot Pursuit) உலகில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. துரத்திப் பிடித்தல் என்பது எந்நாட்டு வணிகக் கப்பலேனும் ஒரு நாட்டு எல்லையோரக் கடலில் சட்டத்தை மீறும் வகையிலோ குற்றம் புரியும் வகையிலோ நடந்துவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றால், எல்லையோரக் கடல் நாடு தன் போர்க் கப்பலின் துணைக் கொண்டு தவறிழைத்துத் தப்பிச் செல்லும் அயல் நாட்டு வணிகக் கப்பலைப் பின் தொடர்ந்து சென்று துரத்திப் பிடித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆகும். இவ்வுரிமை கீழ்க்காணும் சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படலாம்.

அயல் நாட்டு வணிகக் கப்பல் அக்குற்றத்தினைக் கரையோரக் கடல் எல்லைக்குள் தொடங்கியிருக்க வேண்டும். பிறகு ஆழ்கடலில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் தொடர்ந்து துரத்திப் பிடிக்கலாம். துரத்திப் பிடிப்பதில் தொடர்ச்சி விட்டுப்போனாலோ துரத்தப்படும் கப்பல் அந்நாட்டில் எல்லையோரக் கடலிலோ வேற்று நாட்டு எல்லையோரக் கடலிலோ நுழைந்து விட்டாலோ துரத்திப் பிடிக்கும் உரிமை அற்றுப் போகும். மேலும், குற்றம் செய்துவிட்டு அது கரையோரக் கடல் எல்லையைக் கடந்து ஆழ்கடலுக்குள் சென்று விட்டால், பிறகு துரத்திப் பிடிக்கும் உரிமை கிடையாது.

இவ்வகை உரிமை இப்போது நெடுங்கடல் பற்றிய செனிவா மாநாட்டு ஏற்பு விதி 23-இல் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி கரையோர நாடு அயல் நாட்டுக் கப்பல் எதுவும் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் அந்நாட்டின் சட்டத்தையோ ஒழுங்கு முறையையோ மீறும் வகையில் நடந்திருப்பதாக நம்புவதற்கு ஏற்ற காரணங்களிருந்தால், அந்தத் தவறிழைத்த கப்பல்களைத் துரத்திப் பிடித்து வரலாமென்று கூறுகிறது. மேலும்,

(அ) அவ்வாறு துரத்திப் பிடிக்கும் உரிமையைச் செயற்படுத்த அந்தக் குற்றம் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் குற்றம் புரிந்தவுடனே கரையோர நாடு குற்றக் கப்பலைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்

டும். அவ்வாறு துரத்திப் பிடித்தலை எல்லைக் கடலிலே தொடங்கி விட்டால், அந்நாட்டின் எல்லைக் கடலைத் தாண்டி ஆழ்கடலிலும் துரத்திப் பிடித்து வரலாம். ஆனால், குற்றக் கப்பல் ஆழ்கடலைத் தாண்டி வேறு நாட்டு எல்லைக் கடலில் புகுந்து விடு மேயானால் துரத்திப் பிடிக்கும் முயற்சியை அத் துடன் விட்டுவிடுதல் வேண்டும்.

(ஆ) இத்துரத்துதல் இடையீடோ முறிவோ இன்றித் தொடர்ந்து இருக்க வேண்டும்.

**உடன் பங்காண்மை**: இது தொழிலாளர்கள் தாங்கள் உழைக்கும் தொழிற்சாலை நிருவாகத்தில் பங்குபெறவும், பங்குகளின் உரிமை பெற்று ஆதாயத் தில் பங்குபெறவும் வாய்ப்பளிக்கும் தொழில் அமைப் பாகும். உடன் பங்காண்மையில் (Co-partnership) தொழிலாளர்கள் நிறுவனத்தின் முதலீட்டில் பங்கு களைப் பெறுகிறார்கள். இதன் விளைவாகத் தொழி லாளிகள் முதலாளிகளாக மாறுகிறார்கள். அதன் மூலம் ஆதாயத்தில் பங்கு பெறுகிறார்கள். தொழி லாளிகள் முதலீட்டில் பங்கு பெறுவதால் தாங்களே தொழிலாளியாகவும் முதலாளியாகவும் இருக் கிறார்கள். நிறுவனத்தின் பங்குமுதலில் பங்கு கொள் வதால் தொழிலாளர்கள் நிறுவனத்தின் நிருவாகத்தில் பங்கு பெறுகிறார்கள். நேரடியாக நிருவாகத்தில் பங்கு பெறுவதால் நிருவாக நடைமுறைச் சிக்கல்கள் என்ன என்பதை அவர்கள் அறிய இயலும். நிருவா கத்தில் பங்கு பெறாமல் தனித்து நிற்கும்பொழுது தாங்கள் ஏமாற்றப்பட்டோம் அல்லது முதலாளியால் தங்கள் உழைப்பு உறிஞ்சப்பட்டுத் தங்களுக்குகந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கும் தொழிலாளிகள்–உடன்பங்காண்மையின் விளைவாகப் பங்கு உரிமை பெற்று நிருவாகத்தில் பங்கு பெறும் பொழுது உண்மை நிலையை உணர்கிறார்கள். தொழிலாளர்–நிருவாக உறவில் ஏற்படும் சீர்கேடு கள் இதனால் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, தொழிலாளர் நிருவாக நல்லுறவிற்கு ஒரு பாலமாக உடன்பங்காண்மை அமைகிறது.

உடன்பங்காண்மையில் கூட்டு நிறுவனத்தின் இயக்குநர் தொழிற்சாலையின் நிருவாக இயக்குநர் ஆவார். நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை யும் கொள்கை முடிவுகளையும் இயக்குநர் குழுவே கவனிப்பதால், தொழிலாளர் நலன் பாதிக்கப்படும் பொழுது இயக்குநர் குழுவில் உள்ள தொழிலாளர் களின் பேராளர் தலையிட்டுத் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க இயலும். தொழிலாளர்கள் பங்குரிமைகளைப் பெற்று நிருவாகிகளாகவும் உரிமை யாளர்களாகவும் இருப்பதால், பொறுப்புகளை உணர்ந்து, தேவையற்ற கதவடைப்புகள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றைத் தவிர்க்க முயல்வர். மிகைக் கூலி கொடுக்கப்பட்டால் அந்தப் பணம் வேறு வழியில் தொழிலாளர்களால் செலவு செய்யப்பட்டு விடும். ஆனால், உடன்பங்காண்மையின் விளைவாக மிகை ஊதியமானது பங்குகளாக அளிக்கப்படுவதால் நிறுவனத்தின் முதலீட்டுத் தொகை பெருகி, தொழி லாளர்களும் நிருவாகமும் பயன்பெற முடியும். இதன் விளைவாக நாட்டு வருமானம் பெருகும். ஆகவே மறைமுகத் திட்டங்களில் உடன்பங்காண்மை சிறப்பு வாய்ந்த திட்டமாகக் கருதப்படுகிறது.

இத்திட்டத்தில் குறைபாடுகளும் சில உள்ளன. அவை: (1) இத்திட்டத்தின் விளைவாகத் தொழி லாளர்களுக்குக் கொடுக்கப்படும் உயர்கூலி மிகக் குறைவாகவும் கால தாமதமாகவும் அளிக்கப்படு கிறது. (2) தொழிலாளிக்கு அளிக்கப்படும் கூலிக்கும் அவர் செய்யும் உற்பத்திக்கும் தொடர்பற்றுப் போகிறது. (3) இயக்குநர் குழுவில் தொழிலாளிகளின் பேராளராக உள்ள இயக்குநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் அவர்கள் வலிமைகுன்றிக் காணப்படுகின்றனர். (4) இத்திட்டம் தொழிலாளர் களின் அமைப்புகளுடன் (Labour Unions) தொழி லாளர்களுக்குள்ள ஈடுபாட்டைக் குறைக்கிறது. (5) நிருவாகத் திறமையின்மையின் காரணமாக நிறு வனத்தின் ஆதாயம் குறைய வாய்ப்பு உள்ளது. இதன் விளைவாகத் தொழிலாளர்கள் பாதிக்கப்படு கிறார்கள்.

இக்குறைபாடுகள் இருந்தாலும் கூட உடன்பங் காண்மையானது நிருவாகம், தொழிலாளர் இவர் களுக்கு இடையே எழும் வேறுபாடுகள், அமைதி யின்மை ஆகியவற்றைக் குறைப்பதற்கும் ஏற்றத்தாழ்வு களை அகற்றுவதற்கும் இன்றியமையா வாய்ப்பினை அளிக்கிறது. எனவே, உடன் பங்காண்மை சிறந்த ஒரு மறைமுக ஊக்குவிப்புத் திட்டம் என்று கருதப்படு கிறது.

இந்தியத் தொழிலாளர்கள் உடன்பங்காண்மை யின் நன்மைகளை இப்போது நன்கு உணர்ந்துள்ள னர். இந்திய விடுதலை, இந்தியத் தொழிற் சங்கச் சட்டம் ஆகியவை இந்தியத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. தொழிலாளர் கள் அனைவரும் உடன்பங்காண்மையின் மூலம் நிரு வாகத்தில் பங்கு பெறுவதை வரவேற்கின்றனர். முதன் முதலில் மேற்குச் செருமனியில் கி.பி. 1835 –இலிருந்து 1951 வரையிலான காலத்தில் உடன்பங் காண்மைக்குச் சட்டவடிவு கொடுக்கப்பட்டது. மேற்குச் செருமனியின் 1951–ஆம் ஆண்டுச் சட்டம்

இரும்பு, எஃகு, கரித்தொழில் ஆகியவற்றில் உடன் பங்காண்மையைச் சட்டமுறைப்படுத்தியது. பின் னர்ப் பிரிட்டன், யூகோசுலேவியா போன்ற நாடு களில் உடன்பங்காண்மையின் முக்கியத்துவம் உணரப்பட்டுத் தொழில் நிறுவனங்களில் அது பல மாற்று வடிவங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தொழிலாளி, முதலாளி என்ற வேறுபாடு ஏற் பட்ட காலத்திலிருந்தே உடன்பங்காண்மை நடை முறையில் இருந்து வருகிறது. இப்போது அதன் இன்றியமையாமை பெரிதும் உணரப்பட்டுள்ளது. தொடக்க காலத்தில் நிறுவனங்கள் சிறிய அளவுடை யனவாகவும் பெரும்பாலும் குடும்பத் தொழிலாக வும் இருந்து வந்தன. இன்றும்கூட பல பலசரக்குக் கடைகளில் குடும்பத் தலைவன் முதலாளியாகவும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் தொழிலாளர் களாகவும் இருப்பதைக் காணலாம். அவ்வாறு உள்ள கடைகளின் நிருவாகத்தில் முதலாளியாக உள்ள தந்தை தொழிலாளிகளாகிய தம் மக்களிடம் தொழில் தொடர்பான முடிவுகளை எடுக்கும் பொழுது அவர்கள் கருத்துகளைக் கேட்பதுண்டு. ஆனால், இப்போது நிறுவனங்கள் பேரளவில் (Large Scale) உள்ளதால் குடும்பத்தவர்களைத் தவிர பிற ரும் அவற்றில் உழைக்கின்றனர். தமிழகத்தில் உள்ள டி.வி.எசு (T.V.S) நிருவாகம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நிறுவனங்கள் பேரளவில் அமைவதால் நிருவாகம் நேரடியாக எல்லாத் தொழிலாளர்களையும் கலந்து நிருவாக முடிவுகளை எடுக்க இயலாது. ஆகவேதான் உடன்பங்காண்மை கண்டிப்பாகத் தேவை என்று தொழிலமைப்புத் தலைவர்களும் தொழிலாளர் களும் வலியுறுத்துகின்றனர். நிருவாகத்தைத் தொழி லாளர்களின் முற்றுரிமையாக்க வேண்டும் என்பது உடன்பங்காண்மையின் நோக்கமன்று. ஆனால், நிரு வாகம் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நீதியை அளிக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே உடன்பங்காண்மையின் தலையாய நோக்கமாகும்.

ஆர்.சீ.

துணை நூல்கள்:

**Howard M. Wachel**, Worker's Management and Workers Wages in Yugoslavia: The Theory and Practice of Participatory Socialism, Cornell University Press, London, 1973.

**Tanic**, Zivam, Workers Participation in Management, Shri Ram Centre for Industrial Relations, New Delhi, 1969.

**Virmani, B.R.**, Workers Participation in Management, Macmillan Company of India Limited, New Delhi, 1978.

**உடன்படிக்கை**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளைப் பன்னாட்டுச் சட்டத்தின்படி இணைத்து வைக்கின்ற அல்லது கட்டுப்படுத்தி வைக் கின்ற எழுத்து வடிவத்தில் உள்ள ஓர் ஒப்பந்தம் அல் லது ஒரு முறைதான் உடன்படிக்கை (Treaty) எனப் படும். இக்கால அரசியலுறவு வழக்கிலே உடன் படிக்கை என்ற சொல் மிக முக்கியமான பன்னாட்டு ஒப்பந்தங்களையே குறிப்பிடுகிறது. ஆனால் இவற் றைப்போல முக்கியமல்லாத தாழ்ந்த நிலை ஒப்பந் தங்களெல்லாம் வழக்கங்கள் (Conventions), ஒப்பந் தங்கள் (Agreements), ஏற்பாடுகள் ( Arrangements) என்று சொல்லப்படுகின்றன.

உடன்படிக்கை செய்யப்படும் முறையும் அது நடைமுறைக்கு வருதலும்: முதலில் எந்தெந்த அர சாங்கங்கள் தமக்குள் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வருகின்றனவோ அவற்றின் முழு உரிமை பெற்ற தூதுவர்களால் (Plenipotentiaries) தத்தம் அரசாங்கங்கள் விடுத்துள்ள ஆணை வரம்பு களுக்கு உட்பட்டு உடன்படிக்கைகளின் பிரிவுகள் பேசி முடிக்கப்படுகின்றன. இவ்வுடன்படிக்கைப் பிரி வுகளெல்லாம் அவ்வரசாங்கங்களால் ஒப்புதலளிக்கப் பட்ட பின்னர் (Ratification), உடன்படிக்கை அத னைப் பேசிமுடிக்கும் தூதுவர்களுடைய கையெழுத் தைப் பெறுகிறது; சில சமயங்களில் தூதுவர்களின் கையெழுத்துத் தேவை இல்லையென்றும் விதிக்கப் படலாம். உடன்படிக்கைக்கு அரசாங்க ஒப்புதல்கள் அளிக்கப்படுதல் வேண்டுமென்பது கட்டாயம் ஆகும். பின்னர் அவ்வொப்புதல்களுடன் கூடிய உடன்படிக்கை மேற்படி அரசாங்கங்களால் ஒன்றுக்கொன்று பரிமா றிக் கொள்ளப்படுதல் (Exchange of Ratifications) வேண்டும். அப்பொழுதுதான் உடன்படிக்கை அவ்வ ரசாங்கங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறுகிறது. முதற்போரினிறுதியில் செய்யப்பட்ட 1919-ஆம் ஆண்டு வெர்சே (Versailles) உடன்படிக்கை, இரண் டாம் உலகப் போரினிறுதியில் பேசி முடிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் 1945-ஆம் ஆண்டுப் பட்டயம் (U.N. Charter, 1945) முதலியவை எல்லாம் பன்முக உடன்படிக்கைகள் (Multilateral Treaties) ஆகும்; இவை பன்னாட்டுத் தூதுவர்களின் மாநாட்டில் பேசி முடிக்கப்பட்டு, இறுதியில் அவர்களால் கையெழுத் திடப்படுகின்றன. உடன்படிக்கை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில்தான் செய்யப்படுதல் வேண்டுமென்ப தில்லை. அது ஓர் ஒப்பந்தவடிவத்திலும் (Contract) அமையலாம். அப்போது அதில் சேரும் ஒவ்வொரு

கட்சியும் தான் நிறைவேற்றவேண்டிய பணிகளைத் தான் நிறைவேற்றுவதற்காக ஒப்புக்கொள்ளுகிறது; இவ்வுடன்படிக்கை ஒரு கூட்டு அறிக்கை (A Joint Declaration) என்ற வடிவத்திலோ ஒன்றுக்கொன்று குறிப்புப் பரிவர்த்தனை செய்து கொள்ளுதல் (Exchange of Notes) என்ற வகையிலோ அமையலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் (Great Britain) அமெரிக்கப் பெரிய ஏரிகளில் (Great Lakes) படைகளை வைப்பதில்லை என்று ஒன்றுக்கொன்று செய்து கொண்ட கி.பி. 1818-ஆம் ஆண்டைய உருசு-பேகட்டு உடன்படிக்கையைக் (Rush-Bagot Agreement) கூறலாம். பொதுவாக எல்லா முக்கியமான உடன்படிக்கைகளும் ஒரு திட்டவட்டமான வடிவத்தில்தான் வரையப்படுவது வழக்கமாகும். அதாவது, உன்படிக்கையின் தொடக்கத்தில் ஒரு முன்னுரை (Preamble) கூறப்படுகிறது. இதில், உடன்படிக்கை செய்துகொள்ளும் உயர்நிலைக் கட்சிகளின் பெயர்கள், சிறப்பியல்புகள், அவை தங்களுடைய கருத்தில் கொண்டுள்ள பொதுவான நோக்கங்கள், உடன்படிக்கையைப் பேசி முடிப்பதற்கு அமர்த்தப்பட்ட தூதுவர்களின் பெயர்கள், பதவிகள், மேற்குறிக்கப் பெற்ற தூதுவர்களுடைய முழு அதிகாரங்களும் சரிபார்க்கப்பட்டுவிட்டன (Verified) என்ற அறிக்கை ஆகியனவெல்லாம் கூறப்படுகின்றன. பின்னர், உடன்படிக்கையின் பிரிவுகள் (Articles) கூறப்படுகின்றன; அவை ஒவ்வொன்றிலும் இரு சாராராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள் (Stipulations) கூறப்படுகின்றன. அடுத்து, இவ்வுடன்படிக்கை எவ்வளவு கால அளவுக்குச் செல்லுபடியாகக்கூடியதோ அந்தக் காலவரையறை குறிப்பிடப்படுகிறது. உடன்படிக்கையானது எக்காலத்துக்கும் நிலையானதாகக் கருதப்படுமாயின், அவ்வுடன்படிக்கையை எந்த ஒரு கட்சியும் தான் விரும்பினால் நீக்கிவிடும்பொருட்டு முன்னறிவிப்புச் (Notice) செய்வதற்கு வழிவகுக்கும் பிரிவு கூறப்படுகிறது. அடுத்து, உடன்படிக்கைக்கு அதனோடு தொடர்புள்ள அரசாங்கங்கள் ஒப்புதலளித்தல் வேண்டுமென்று கூறும் பிரிவும், அவ்வொப்புதல்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட வேண்டிய இடத்தையும் காலத்தையும் குறிப்பிடும் பிரிவும் கூறப்படுகின்றன. இறுதியில் இவ்வுடன்படிக்கைக்குச் சாட்சியாக அந்தந்த அரசாங்கங்களின் தூதுவர்கள் தங்களுடைய பெயர்களையும், முத்திரைகளையும் (Seals) பதித்துள்ளனர் என்று கூறும் பிரிவும் உள்ளது. இதனை அடுத்தே இடமும் நாளும் குறிப்பிடப்பட்டுக் கையெழுத்துகள் இடப்படுகின்றன. உடன்படிக்கையோடு கூடுதலான பிரிவுகள் (Additional Articles) பின்னர்த் தூதுவர்களால் சேர்க்கப்பட்டுக் கையெழுத்து இடப்படுதலும் கூடும்; அவ்வாறு கூடுதல் பிரிவுகள் இணைக்கப்படும்போது, தூதுவர்கள் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளவை ஒத்த ஆற்றலும் மதிப்பும் உடையவை என்று எழுத்து வடிவத்தில் அதில் உறுதி கூறிச் சேர்க்கின்றனர்.

**உடன்படிக்கைகளின் வகைகள்:** பன்னாட்டுச் சட்ட அறிஞர்கள் உடன்படிக்கைகளைப் பல்வேறு கொள்கைகளின்படி வகைப்படுத்தியுள்ளனர்; இரு நாட்டு உடன்படிக்கை (Bilateral Treaty), பல நாட்டு உடன்படிக்கை (Multilateral) முதலிய உடன்படிக்கை வகைகளைத் தவிர, ஒரு நிலப்பகுதியை வழங்குதற்கு வழி செய்தோ போர் நிறுத்தம் போன்ற ஒரு நடத்தை விதியை வலியுறுத்தியோ உடன்படிக்கை செய்யப்படுதலும் கூடும். உடன்படிக்கைகளின் நோக்கங்களைப் பொறுத்து அவற்றை (1) அரசியல் ஒப்பந்தங்கள், (2) வணிக உடன்படிக்கைகள், (3) அரசியலமைப்பு, ஆட்சிஇயல் உடன்படிக்கைகள், (4) குற்ற இயல் நீதி ஒப்பந்தங்கள், (5) குடிமை இயல் நீதி ஒப்பந்தங்கள், (6) பன்னாட்டுச் சட்டத்தொகுப்பு ஒப்பந்தங்கள் என்று வகைப்படுத்தியுள்ளனர். அமைதி ஏற்படுத்துதல், நட்புறவு செய்தல், நிலப்பகுதி வழங்குதல், வழக்குகளை அமைதியாகத் தீர்த்தல், படைக்குறைப்பு முதலியவற்றுக்கு வகை செய்தல் ஆகியன அரசியல் உடன்படிக்கைகள் (Political Treaties) ஆகும். சுங்கவரிக் குறைப்பு, மீன் பிடித்தல், வணிகத் தூதுவர் பரிமாற்றம், கப்பல் போக்குவரவு முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்பவை வணிக உடன்படிக்கைகள் (Commercial Treaties) ஆகும். பன்னாட்டுக் குற்றங்களை எடுத்துக்கூறி, குற்றவாளிகள் ஒப்படைவுக்கு (Extradition) வழி செய்யும் ஒப்பந்தம் குற்றவியல் நீதி உடன்படிக்கை ஆகும். மனித உரிமைகள், வணிகக் குறியீடுகள், நூல் பதிப்புரிமை, அயல் நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்குக் குடிமை இயல் நீதி உடன்படிக்கைகள் (Treaties) Relating to Civil Justice) வழி செய்கின்றன. பன்னாட்டுத் தகராறுகளை அமைதியாகத் தீர்த்தற்குரிய விதிமுறைகள், போர்முறை விதிகள், அரசுகளின் உரிமைகளும் கடமைகளும் பற்றிய இலக்கணங்கள் ஆகியவை எல்லாம் அடங்கியது பன்னாட்டுச் சட்டத் தொகுப்பு உடன்படிக்கை (Treaties Codifying International Law) ஆகும்.

**உடன்படிக்கை செயலற்றுப் போதல்:** உடன்படிக்கையில் சேர்ந்துள்ள ஏதேனுமொரு நாடு அழிக்கப்படும்போதோ உடன்படிக்கையின் முக்கிய நோக்கமே நடைமுறையிலில்லாமல் மறைந்துவிடும்போதோ உடன்படிக்கையாளர்களே அவ்வுடன்

படிக்கையைத் தள்ளுபடி செய்து விட்டு வேறொன் றைச் செய்யும்போதோ. உடன்படிக்கையிலேயே உடன்படிக்கையாளர்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட் டுள்ள அதிகாரங்களின்படி அவர்களுள் ஒருவர் உடன்படிக்கையை நீக்கிவிடும் அதிகாரத்தைக் கையா ளும் போதோ உடன்படிக்கையானது செயலற்றுப் போகும். உடன்படிக்கை நாடுகளுக்கிடையே போர் ஏற்படுமாயின் அப்போது உடன்படிக்கையானது செயற்படாமல் நிறுத்திவைக்கப்படும்; முழுமையாக நீக்கப்படுதல் பெரும்பாலும் இல்லை; ஆகையால், அவ்வுடன்படிக்கையானது அமைதி உடன்படிக்கை யின் வாயிலாக மீண்டும் தோற்றுவிக்கப்படுதல் பெரும்பாலும் வழக்கமாகும்.

**உடன்படிக்கைத் துறைமுகங்கள்**: உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் வாணிகத் திற்குத் திறக்கப்படும் துறைமுகத்தை உடன்படிக்கைத் துறைமுகம் (Treaty Port) என்பர். இங்கிலாந்திற் கும் சீனாவிற்கும் இடையில் கி.பி. 1839-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் ஆங்கில-சீனப்போர் அல்லது முதல் அபினிப்போர் கி.பி. 1842-ஆம் ஆண்டில் நான்கிங்கு உடன்படிக்கையின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது. அதன்பின் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகள் சீனாவில் வாணிக உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என அந்நாட்டின் துறைமுகங்களில் அதாவது துறைமுக நகரங்களில் உடன்படிக்கை செய்துகொண்டன. இவ்வுடன் படிக்கை நிகழ்ந்த துறைமுகங்கள் உடன்படிக்கைத் துறைமுகங்கள் எனப்பட்டன.

இச்சூழ்நிலையில் மேலை நாடுகள் பல சீனா வுடன் வாணிக உறவு மேற்கொள்ள முற்பட்டன. தன்னைப் பண்பாட்டின் மேல்படி என்று எண்ணிக் கொண்டிருந்த சீனா, புதிய சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாகரிக முதிர்ச்சி பெறாத நாடுகளை ஒன்றன்மீது ஒன்றை ஏவிவிட முயற்சி செய்தது. அந்நாடுகளிடத்தில் பிரிவை ஏற் படுத்த வேண்டும் என்று திட்டமிட்டுப் 'பிரிந்து தான் வாழவேண்டும்' என்ற கொள்கையைப் பின்பற்றியது.

அமெரிக்கா சீனாவுடன் கி.பி. 1844-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் வாங்கியா உடன்படிக்கையினைச் (Treaty of Wanghia)செய்துகொண்டது. இது ஆங்கி லேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் போலக் காணப்பட்டது. அதன்படி அபினி வாணிகம் தடைசெய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்நாடு சீனாவில் சிறப்புரிமையுடன் வாணிகஞ் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. உடன்படிக்கைத் துறைமுகங்களில் திருச்சபை, மருத்துவமனைகள், வாழும் இல்லங்கள், இன்ன பிறவற்றைப் பாதுகாப் பது என்று முடிவு செய்யப்பட்டது. அதுமட்டுமன்றி, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு அந்த உடன்படிக் கையினைப் புதுப்பித்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பிரான்சு சீனாவுடன் வாம்போவா என்னும் இடத் தில் ஓர் உடன் பாடு செய்து கொண்டது. இதற்கு வாம் போவா உடன்படிக்கை (Treaty of Whampoa) என்றுபெயர். இதுவும் அதேஆண்டு அக்டோபர்த்திங்க ளில் ஏற்பட்டது. வாங்கியா உடன்படிக்கையில் எவ் வெவ் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டனவோ அவ் வவ் விதிமுறைகள் இதற்குப் பொருந்தும் என்றனர். அத்துடன் கிறித்தவச் சமயத்தைத் தடையின்றிப் பரப்பவும் இவ்வுடன்பாட்டின் மூலம் வழி செய்யப் பட்டது. சீனாவும் இதை ஏற்றுக்கொண்டது.

நார்வேயும் சுவீடனும் கி.பி.1847-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சீனாவுடன் ஓர் உடன்படிக்கை யினைச் செய்துகொண்டன. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் பெற்ற சில சிறப்புரிமை களை அந்நாடுகள் பெற்றன.

சீனாவுடன் பெல்சியமும் போர்ச்சுகல்லும் உடன் படிக்கையினைச் செய்து கொண்டு பல சிறப்புரிமை களைப் பெற்றன. சுருங்கக்கூறின், சீனா நீட்டிய தாளில் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டது.

இவ்வுடன்படிக்கைகளால் சீனாவின் பெருமை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் இறைமை குறிப் பிட்ட அளவிற்குக் குறைந்து காணப்பட்டது. சீனா வின் வணிகக் கொள்கை பெருந்தோல்வியுற்றது. அவர்களுக்கே உரித்தான தனித் தன்மை வாய்ந்த, காசோடு கூடிய வணிகக் கொள்கை மறைந்து, காசில்லா நுழைவுச் சீட்டுக் கொள்கை அல்லது தடை யிலா நுழைவுக் கொள்கை (Open door Policy) எழுந்தது. ஐரோப்பியர்கள் காண்டன் துறைமுகத் தில் மட்டும் வாணிகம் செய்து வந்தனர். இவ்வுடன் படிக்கைத் துறைமுகங்களால் பல இடங்களில் வாணி கம் மேற்கொள்ள வழி ஏற்பட்டது. இதனால், சீனா வின் பொருளாதாரம் பொலிவற்றுக் காணப்பட்டது. இவ்வாறு ஐரோப்பிய நாட்டவர்கள் சீனாவின் மீது வன்முறையில் பன்முறை புகுந்து, பல குடியேற்றங் களை ஏற்படுத்தி, ஓர் அரசினுள் அரசாக வளர்ச்சி பெற்று, வளமோடும் நலமோடும் நடைபோடத் தொடங்கினர்.

நா.ஜெ.

**உடன்பாடு**: உடன்பாடு என்பது ஓர் உறுதி யுரை அல்லது தொகுப்பு எதிரிடை உறுதியுரை

கள் ஆகும். புரிவுரை (Proposal) ஒன்று ஏற்கப் படுவதன் வாயிலாக ஓர் உறுதியுரை அமைகிறது. எனவே, புரிவுரை ஏற்படுத்துகின்ற ஒரு புரிவுரையாள ரும் அதனை ஏற்க உறுதியுரை ஏற்பவரும் என இரு வர் இதற்கு வேண்டும். புரிவுரையாளரும் ஏற்பவரும் ஒன்றினையே ஒருமித்து ஒப்புக் கொள்ளல் வேண்டும்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் கி.பி. 1872-ஆம் ஆண்டு 'உடன்பாடு'(Agreement)என்ற சொல்லினைப் பிரிவு 2-இல் வரையறுத்துள்ளது. ஒன்றுக்கொன்று மறுபயன் அளிக்கக்கூடிய ஒவ்வோர் உறுதியுரையும் தொகுப்பு உறுதியுரைகளும் உடன்பாடாகும். ஏதா வது ஒன்று செய்யப்பட்டதற்கு அல்லது செய்யப் படப் போவதற்கு இருவர் ஒன்றாக இசைந்து ஒப்புக் கொள்ளுதலே உடன்பாடு எனப்படும். ஒருவர் ஒரு புரிவுரை ஏற்படுத்தி அதனை அடுத்தவர் ஏற்றுக் கொள்வதால் இது நிகழ்கிறது.

உடன்பாடுகளின் தன்மைகள் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2-இல் விளக்கப்பட்டுள்ளன. சட் டத்தினால் நிறைவேற்ற முடியாத உடன்பாடு, இல்லா நிலை உடன்பாடு(Void Agreement)ஆகும்.சட் டத்தினால் நிறைவேற்றப்படும் உடன்பாடு, முறை யான உடன்பாடு(Valid Agreement). ஆகும்.ஒன்று அல் லது அதற்கு மேற்பட்ட தரப்பினரின் விருப்பின் படி சட்டத்தினால் நிறைவேற்றப்படும் உடன்பாடு தவிர் தகு உடன்பாடு (Voidable Agreement) ஆகும். நிறை வேற்ற முடியாமல் போகும் போது ஓர் உடன்பாடு சட்டத்தினால் நிறைவேற்ற முடியாது. சட்ட முர ணான உடன்பாடுகள் அனைத்தும் இல்லாநிலை உடன்பாடுகள் ஆகும். ஆனால், இல்லாநிலை உடன் பாடுகள் அனைத்தும் சட்டமுரணான உடன்பாடுகள் ஆகா.

உறுதியுரை அளிப்பவர் (Promisor) விருப்பப்படி உறுதியுரை ஏற்பவர் (Promisee) ஏதாவது ஒன்றைச் செய்திருந்தால் அல்லது செய்ததிலிருந்து விலகியிருந் திருந்தால் அல்லது செய்தால் அல்லது செய்வதிலி ருந்து விலகியிருந்தால் அல்லது ஒன்றைச் செய்ய உறுதியுரை அளித்தால் அல்லது சிலவற்றைச் செய்வ திலிருந்து விலகியிருந்தால் அத்தகைய செயல் அல்லது செயல் தவிர்ப்பு அல்லது உறுதியுரை ஒரு மறுபயன் (Consideration) ஆகும். இந்த மறுபயன் ஒவ்வோர் உடன்பாட்டிற்கும் இன்றியமையாதது. உறுதியுரை யும் மறுபயனும் ஒப்பந்தம் ஒன்றின் தனித்தனி கூறு கள் ஆகும்.

உடன்பாட்டினைப் பின்வருமாறும் வரையறுக்க லாம். ஒன்றினைச் செய்வதற்கு அல்லது செய்யாம லிருப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தங்களின் கருத்தொற்றுமையை ஒப்புதல் மூலம் சட்டத்தின் வாயிலாக வெளிப்படுத்துவது உடன்பாடாகும். அவ் வாறு வெளிப்படுத்துதல் கீழ்க்காணும் சூழ்நிலை களில் நிகழ்கிறது. (அ) தரப்பினர் தங்கள் பொது எண்ணத்தை வாய் மொழியாக அல்லது எழுத்து வடி வத்தில் உடன்படும் போதும் (ஆ) முனைவு (Offer)ஒன்றினை ஒருவர் செய்து அதனை மற்றவர்ஏற் கும்போதும் நிகழ்கிறது. உடன்பாட்டின் இன்றியமை யாக் கூறுகளாவன: இரண்டு அல்லது அதற்கு மேற் பட்டவர்கள், இருவருக்கும் தெரிந்த அவர்களது தனிப்பட்ட பொது எண்ணம் ஆகியவையாம்.

முத்திரை (Seal) யிடப்படாத ஓர் ஒப்பந்தம் உடன்பாடாகும். முத்திரையிடப்பட்டிருந்தால் அது ஓர் ஆவணம் (Deed) ஆகும். உடன்பாடு நிறைவேற் றப்பட்டதாக இருக்கலாம் அல்லது நிறைவேற்றப் படக் கூடியதாகவும் (Executory) இருக்கலாம்.

உடன்பாடு என்பது பரந்த கருத்துப் படிவத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் என்பது அதில் ஒரு வகையாகும். ஒவ்வோர் ஒப்பந்தமும் ஓர் உடன் பாடாகும். ஆனால், ஒவ்வோர் உடன்பாடும் ஓர் ஒப் பந்தமன்று. ஆ.ச.

**உடன் பிறந்த எண்ணங்கள்**: மனித எண் ணங்களுள் சில உடன் பிறந்தவையாகவும், சில நுகர் வினால் அறியப்படுபவையாகவும், மேலும் சில புதி யனவாகக் கண்டுபிடிக்கப்பட்டவையாகவும் இருக் கின்றன. உடன் பிறந்த எண்ணங்களை இக்கால மெய்ப்பொருளியலில் அறிவைத் தோற்றுவாயாகவும் குறிக்கோளாகவும் கொண்டுள்ள அறிவு முதற் கொள்கையினரான தேக்கார்டு, இசுபினோசா, இலைப்னிட்சு ஆகியோர் தம் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். இவர்களின் கருத்துப்படி உடன் பிறந்த எண்ணங்கள் அல்லது புலன் வழி எழாத எண்ணங்கள் அல்லது இயல்பாயமைந்த எண்ணங்கள் என்பது உள்ளுணர்வின் மூலம் உறுதி யாகவும் நுட்பமாகவும் தீர்மானிக்கப்பட்டுத் தெளி வுடனும் தனித்தன்மையுடனும் உள்ளத்தில் நனவு நிலையில் எழும் எண்ணங்களாகும். இவ்வாறு மறுக் கவும் எதிர்க்கவும் முடியாத தெளிவுடனும் தனித் தன்மையுடனும் உள்ளத்தில் எழும் உடன்பிறந்த எண்ணங்களே உண்மையான அறிவு என்பது அறிவு முதற்கொள்கையினர் கருத்தாகும்.

தேக்கார்டு உடன் பிறந்த எண்ணங்களையே உண்மையான அறிவு என்றும், அவை அடிப்படைக் கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றிலிருந்து அறிவாய்வினால் கிடைக்கப்பெறுகின்றன என்றும், அவை சிந்தனையில் வெளியாகின்றன என்றும் கருது

கின்றார். உடன் பிறந்த எண்ணம்(Innate Ideas) அல்லது அறிவு என்பதற்கு உள்ளம் தன்னுள்ளே காண்பதென்றும், உள்ளத்தில் உட்பதிவுகளாக நிகழும் எண்ணம் என்றும், நுகர்வு நிகழ்ச்சிகளில் உள்ளம் உண்டாக்குவது என்றும் வெவ்வேறான விளக்கங்கள் அளிக்கிறார் தேக்கார்டு.

உள்ளத்தின் இருத்தல் தன்மை, கடவுளைப் பற்றிய எண்ணம், சடம், அதன் இயல்பான பரப்புடைமை, அதன் மாறுநிலைகளான உருவம் மற்றும் இயக்கம், உள்ளத்தின் பண்பான சிந்தனை, அதன் மாறு நிலைகளான புலனுணர்ச்சி மற்றும் கற்பனை, உள்ள-உடல் தொடர்புக்குக் காரணமான தறுவாய்க் கொள்கை ஆகியவற்றை உடன் பிறந்த எண்ணங்களாகத் தேக்கார்டு கருதுகிறார். ஏனெனில், அவை அடிப்படையில் தானே விளங்கும் உண்மைகளாக, தனிப்பட்ட முறையில் மிகத் தெளிவான முறையில் உள்ளுணர்வினால் உணர்ந்தறியப்படும் உண்மையான எண்ணங்களாக இருக்கின்றன. இவ்வுடன் பிறந்த எண்ணங்களில் தேக்கார்டு முதலில் உள்ளத்தின் இருத்தல் தன்மையும், அதிலிருந்து கடவுளைப் பற்றிய எண்ணமும், பின்னர்ப் படிப்படியாகப் பிறவும் உள்ளத்தால் தெளிவாகவும் தனித்தன்மையுடனும் அறியப்படுகின்றன என்று கருதுகின்றார். உள்ளம் இவ்வாறு ஒவ்வொன்றாக அறிந்தாலும் அவை உடன் பிறந்த எண்ணங்களேயாகும்.

ஆனால், இசுபினோசா உள்ளத்தின் இருத்தல் தன்மையும், பிறவும் கடவுளைப் பற்றிய எண்ணத்திலிருந்தே கிடைக்கப் பெறவேண்டியவை அல்லது அவர் சார்பாகக் கருதப்படவேண்டியவை என்கிறார். ஏனெனில், கடவுளைப் பற்றிய எண்ணமே அனைத்திலும் உறுதியானதும் ஏனைய எண்ணங்களின் உண்மைக்குத் துணையாக நிற்பதுமாகும். மேலும், இசுபினோசா கடவுள் மட்டுமே ஒரே உள்பொருள் என்றும், சடமும் உள்ளமும் அப்பொருளைக் கருதும் இரண்டு வேறுபட்ட வழிகள் என்றும், பரப்புடைமையும் சிந்தனையும் அப்பொருளின் எண்ணற்ற இயல்புகளுள் மனிதர்அறியக்கூடிய இரு இயல்புகள் என்றும், உடல்-உள்ளத் தொடர்புகளைக் கடவுள் இயற்கையில் இயக்கியாக இயக்குகிறார் என்றும், இப்புறவுலகின் தனிப்பட்ட எல்லையுற்ற பொருள்கள் ஒரே எல்லையற்ற பொருளான கடவுளின் மாறுநிலைகள் என்றும் கருதுகிறார்.

இலைப்னிட்சு உண்மையான அறிவு பொதுமையானதாகவும், இன்றியமையாத்தன்மை வாய்ந்ததாகவும் உடன்பிறந்த எண்ணமாகவும் எழுவது என்றும், உள்ளம் எப்பொழுதும் தன் உடன் பிறந்த எண்ணங்களைப் பற்றி நனவு நிலையில் உணர்ந்திருப்பதில்லை என்றும், எண்ணங்கள் உள்ளத்தில் ஒடுங்கி நிற்கின்றன என்றும், நுகர்வில் அவை தெளிவடைவதுடன் வெளிப்படையாக்கவும் பெறுகின்றன என்றும் கருதுகிறார். இவர் கடவுளைப் பற்றிக் கூறும்பொழுது கடவுள் படைக்கப்படாதவர் என்றும், அவரது இன்றியமையாத இயல்பு ஆற்றல் என்றும் பரப்புடைமை அதற்கு உள்ளடங்கியது என்றும் கூறுகிறார். இவையன்றி ஆன்மா, பொருள், ஒருமைப்பாடு, முற்றொருமை, காரணம், புலனறிவு, அறிவு முறை, அளவு நிலை ஆகியவற்றைத் தன்னுள் கொண்டுள்ளதும் உடன் பிறந்த எண்ணங்கள் என்கிறார்.

புலன் வழிக் கொள்கையினர் உடன் பிறந்த எண்ணங்கள் உள்ளத்தில் இருப்பதை மறுக்கின்றனர். அவர்கள் அறிவு அல்லது எண்ணங்கள் நுகர்வில்தான் ஏற்படும் என்கின்றனர்.

பின்னர் வந்த காண்ட்டு என்பவர் உடன் பிறந்த எண்ணங்களையும் புலன் வழி எழும் எண்ணங்களையும் தம் அடிப்படைக் கருத்துகளில் இணைக்கிறார்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள் :

**Yolton, J.W.(ed.),** Essay Concerning Human understanding, London, 1961.

**Auron, R.I.,** The Nature of Knowing, London, 1930.

**Price, H.H.,** Perception, London, 1932.

**உடன்போக்கு** அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் ஒரு துறையாகும். உடன்போக்கு என்னும் தொடர் உடன்போக்குகை எனப் பொருள்படும். இது தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவு வெளிப்படுதற்குரிய கிளவிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி பெற்றோர் அறியாது தோழியின் உதவியால் தலைவனொடு வேற்றிடம் செல்வது உடன்போக்காகும்.

தலைவன் தலைவியரிடம் முகிழ்த்த களவுக் காதல் மணம் செய்து கொண்டு,கற்பாக மலர வேண்டும் என்பது தமிழ் மக்கள் கண்ட அகவாழ்வுக் கோட்பாடாகும். களவுமணம் கற்புமணமாக ஆவதற்கு இடையூறு தோன்றுமாயின், அதனை நீக்கித்தான்காதலித்த அத்தலைவனையே மணப்பதற்கான முயற்சியினைத் தலைவியும், அவளுக்கு உற்ற துணையாகத் தோழியும் மேற்கொள்வர். அம்முயற்சிகளுள் ஒன்று அறத்தொடு நிற்றல் எனப்படும்.

தலைவி, தோழி முதலியோர் முறையே அறத்தொடு நிற்றலால் தலைவன் தலைவியரிடையே உள்ள காதல் உறவினை உணர்ந்த பெற்றோர் இறுதியில் அவர்களுக்கு மணஞ்செய்விப்பர். மற்றொரு முயற்சி உடன்போக்காகும். அறத்தொடு நிற்றல் அல்லது உடன்போக்கினால் களவு கற்பாவது உறுதியாகும். களவொழுக்கத்தில் ஒழுகும் தலைவன் அதனை நீட்டிக்கவே விரும்புவான். அப்போது ஊரில் அலர் தோன்றல் போன்றவற்றை அறிந்த தோழி அவ்வாறு களவு நீட்டிப்பதனை விரும்பாமையாலும், தலைவியின் காதல் உறவினைப் பெற்றோர்க்கு உணர்த்தும் துணிபில்லாமையாலும், மேற்கொள்ளத் தக்கது உடன்போக்கே என்று முடிவு செய்து, அவர்கள் உடன்போதற்குத் துணை நிற்பாள். இந்நிலையில், உடன்போக்கு களவுக்காதலாகிய இடையூறு நீங்கிக் கற்புமணம் ஆவதற்கு இன்றியமையாத அடிப்படையாக அமைகிறது.

உடன்போக்கினைத் தொல்காப்பியம், ‘கொண்டு தலைக்கழிதல்’, ‘போகிய திறம்’ (தொல். அகத். 17, 39) என்று குறிப்பிடுகிறது. இதற்கு இளம்பூரணர், ‘தமரைப் பிரிதலாகிய உடன்போக்கு’ என்று கருத்துரைத்துள்ளார். தலைவனொடு தலைவி உடன் போகியபொழுது நற்றாய் புலம்பிக் கூறும் கூற்று வகைகளைத் தொல்காப்பியர், ‘தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி’ என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார் (தொல். அகத். 39).

‘அகப்பொருள் விளக்கம்’ என்னும் அகவிலக்கண நூலினை இயற்றிய நாற்கவிராச நம்பி தம் நூலில் உடன்போக்கினை, வரைவியலில் அமைந்த ஒரு கிளவியாகக் குறிப்பிட்டுள்ளார். உடன்போக்கு என்னும் கிளவி போக்கு அறிவுறுத்தல், போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் என்று எட்டு வகைப்படும் (நம்பி. நூ. 181). மேலும் இது ‘பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்’ முதலாகப் பதினெட்டு வகையில் விரிவுபட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கம் கூறும் உடன்போக்குச் செய்திகள் வருமாறு:– உடன்போக முடிவு செய்த தோழி, தலைவன்பால் உடன்போக்குச் செய்தியினைக் கூறிய அளவில் அவன் அதற்கு உடன்பட மறுப்பான். தோழி மேலும் ஏதுக்காட்டி உடன்போக்கினை வற்புறுத்தத் தலைவன் அதற்கு உடன்படுவான். பின்னர்த் தோழி அதனைத் தலைவிக்கு உணர்த்துவாள். உடன்போக்கினால் தன் நாணம் அழிவதற்கு வருந்திய தலைவியினைக் கற்பு மாட்சி கூறித் தோழி தேற்றுவாள். அதுகேட்டு உளந்தேறிய தலைவி உடன்போக்கிற்கு உடன்படுவாள். விடியற் காலையில் செல்லும் தலைவன் தலைவியைப் பாலை நில வழியே அழைத்துச் செல்லுவான். தலைவிக்கு வழியிடை வருத்தம் தோன்றாதவாறு மலர்சூட்டியும் மகிழ்ந்துரையாடியும் அழைத்துச் செல்லுவான். காதலர்களை வழியிடைக் கண்டோர் வியந்துரைப்பர். இறுதியில் தலைவன் தன்னூர் சென்றடைந்தமையினைத் தலைவிக்கு உணர்த்துவான்.

ஓர் இளம்பெண் பெற்றோரைத் துறந்து, பழகிய சூழலை மறந்து புதிய ஆடவனோடு (காதலன்) துன்புறுத்தும் பாலை வழியில் செல்ல முற்படும் உடன்போக்கினைப் பற்றியும், உடன்போன பின்னர் நற்றாய் இரங்குதல் பற்றியும் அமைந்த பாடல்கள் பயில்வோர்களின் உணர்ச்சியினைத் தூண்டுவனவாக உள்ளன. சங்க அகப்பாடல்களுள் 122 பாடல்கள் இத்துறையில் அமைந்துள்ளனவாகக் குறிப்பிட்டுள்ளனர். கயமனார் என்னும் புலவர் இயற்றிய 22 சங்கப்பாடல்களுள் 20 பாடல்கள் உடன்போக்கு, தாயிரங்கல் பற்றியனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை** என்பது வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லுக்கும் பயனிலையாக வரும் ஒரு வினைச் சொல்லுக்குமிடையே உள்ள பொருள் தொடர்புகள் சில ஒட்டுகளால் சுட்டப்படுகின்றன. தமிழில் அவ்வொட்டுகள் வேற்றுமை உருபுகள் எனவும், பொருள் தொடர்பு வேற்றுமை எனவும் சொல்லப்படுகின்றன. பொதுவாகத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வேற்றுமைகளை முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண் அடிப்படையில் கூறி வந்திருக்கிறார்கள் இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது மூன்றாம் வேற்றுமையில் கருவி, உடனிகழ்ச்சி ஆகிய இரு பொருள் வேறுபாடுகள் கூறப்பட்டுள்ளமை காணலாம். உடனிகழ்ச்சியாவது ஒரு செயல் இரண்டு வினைமுதல்களால் இயற்றப்படுவது உடனிகழ்ச்சி ஆகும். எடுத்துக்காட்டாக, 1. கண்ணன் இராமனோடு வந்தான் என்னும் வாக்கியத்தில் வருதலாகிய தொழில் கண்ணன், இராமன் ஆகிய இரு வினைமுதல்களாலும் நடைபெறுவதால், இவ்வாக்கியம் உடனிகழ்ச்சிப் பொருளைக் கொண்டுள்ளது. மாறாக, 2. கண்ணன் புத்தகத்தோடு வந்தான் என்ற வாக்கியத்தில் வருதலாகிய தொழில் கண்ணனால் மட்டுமே நடைபெறுகிறது. புத்தகம் வருதலாகிய தொழிலைத் தானாகவே செய்ய இயலாது. எனவே, 2–ஆம் வாக்கியம் உடனிகழ்ச்சிப் பொருளை விளக்கவில்லை என்பது புலனாகின்றது. தொல்காப்

பியர் 558-ஆம் சூத்திரப் பிற்பகுதியில் உடனிகழ்ச்சி வேற்றுமை பற்றிக் கூறியுள்ளார்.

அவர் கூறும் நான்குவகை உடனிகழ்வையும் பொருள் அடிப்படையில் பார்த்தால், உடனிகழ்ச்சி வேற்றுமையாக இருக்க முடியுமா என்ற எண்ணம் மேலெழுகிறது. 1. அதனொடு மயங்கல்: (எ.டு) தேனொடு பால் கலந்தது; 2. அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி: (எ.டு) சாத்தனொடு கொற்றன் வந்தான்: 3. அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி: (எ.டு) மலையொடு பொருத மால்யானை; 4. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை: (எ.டு) பொன்னொடு இரும்பனையார் நின்னொடு பிறரே.

பொருளடிப்படையில் (1) உம் (3) இடவேற்றுமையைக் குறிக்கின்றன. (4)-ஆவது ஒப்புமையைக் காட்டுகிறது. (2)-வது மட்டுந்தான் உடனிகழ்ச்சி வேற்றுமையைக் காட்டுகிறது.

தொல்காப்பியர் சூத்திரம் 557-இல், ஒடு என்ற ஒரேயொரு வேற்றுமை உருபையே மூன்றாம் வேற்றுமையில் வரும் கருவிவேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை ஆகிய இரு வேற்றுமைகளுக்கும் கூறுகிறார். நன்னூலார் சூத்திரம் 297-இல் மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியவற்றைக் கூறுகிறார். சங்க இலக்கியத்தில் ஒடு, ஓடு, ஆல் போன்ற உருபுகளும் கண், உடன், வயின் போன்ற சொல்லுருபுகளும் உடனிகழ்ச்சி வேற்றுமைக்குப் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். இக்காலத் தமிழில் ஓடு என்ற ஒரேயோர் உருபும் உடன், கூட ஆகிய சொல்லுருபுகளும் உடனிகழ்ச்சிப் பொருளைத் தருவதைக் காணலாம். எடுத்துக் காட்டாக,

5. கண்ணன் மணிவண்ணனோடு விளையாடினான்

6. அவர் காந்தியடிகளாருடன் வந்தார்.

7. இரமணி அப்பா கூடப் போனான்.

சில வேளைகளில் உடனிகழ்ச்சி வேற்றுமை உருபாகிய ஓடு-வும் சொல்லுருபாகிய 'கூட' என்பதும் சேர்ந்து உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருளைத் தருவதைக் காணலாம்.

(எ.டு) என்னோடு கூட இரமணி வந்தான்.

வே.சா.அ.

**உடனிலை** புறப்பொருள் துறைகளுள் ஒன்று. 'ஒருங்கிருத்தல்' என்பது இதன் சொற்பொருளாகும். இரண்டு அரசர்கள் தோழமை உணர்வோடு ஒருங்கிருக்கும்போது அவர்களைச் சிறப்பித்துப் பாடுவது உடனிலை என்னும் துறையின் பாற்படும் என்பது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றின் (புறம் - 58, அடிக்குறிப்பு) அடிக்குறிப்பினால் அறியப்படுகிறது. இத்துறை புறப்பொருள் திணைகளுள் ஒன்றான பாடாண்டிணையின் துறைகளுள் ஒன்றாக அப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்புறநானூற்றுப் பாடல் சோழன் குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாரால் பாடப்பட்டது. அவர் அப்பாடலில் இரண்டு அரசர்களையும் சிறப்பித்து, அவர்கள் பலராமனும் கண்ணனும் போல் விளங்கினர் என்று பாராட்டியுள்ளார். மேலும், அவர்கள் இன்று போலவே என்றும் வாழ வேண்டும் என்பதனை, 'இன்றே போல்க நும்புணர்ச்சி' எனக்கூறி வாழ்த்தியுள்ளார் (புறம். 58: 14-16;28). இப்பாடலுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர் 'இருவரசர் ஒருங்கிருந்தாரைப் பாடினமையின், இது உடனிலை ஆயிற்று' என்று துறை விளக்கம் செய்துள்ளார். அப்புறப் பாடலுக்குத் திணை துறை வகுத்த பெருமக்கள் அதனைப் பாடாண்டிணை, உடனிலைத் துறையில் அடக்கியுள்ளனர். தொல்காப்பியப் பாடாண்டிணையில் உடனிலை என ஒரு துறை இடம்பெறவில்லை. அவ்வாறே, பின்னர்த்தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை விளக்கும் பாடாண்டிணையிலும் உடனிலைத் துறை இடம்பெறவில்லை. இவற்றைக் காணுமிடத்து, புறநானூற்றுப் பாடல்களுக்குத் திணை துறை வகுத்தோர் காலத்தால் முற்பட்ட அகத்தியம், தொல்காப்பியம், பிற்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களையேயன்றி, அவர்கள் காலத்திலங்கிய வேறு புறப்பொருள் இலக்கண நூலையும் பின்பற்றியுள்ளனர் என்பது புலனாகிறது.

**உடனுறை**: காண்க: இறைச்சி.

**உடிகா**: துனீசியாவில் மசார்தா (Majardah) ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள தொன்மை மிக்க நகரம். பியூனிசியர்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் உடிகா (Utica) வில் குடியேறி வாழ்ந்தனர். ஆப்பிரிக்காவில் பியூனிசியர்களின் கார்த்தேசு (Carthage) நகருக்கு அடுத்தபடியாக இந்நகரம் விளங்கியது. உரோமானியர்கள் கார்த்தேசு நகரத்தின்மீது போரிட்டுத் தாக்கியபொழுது உடிகா உரோமானியர்களுக்கு உதவியது. இதன் மூலம் கார்த்தேசு நகரம் அழிக்கப்பட்டதுடன் உடிகாவின் நிலையும் உயர்ந்தது. உரோமாபுரியின் அரசியல் நடவடிக்கைகள். உடிகாவைத் தலைமையகமாகக் கொண்டு ஆப்பிரிக்காவில் நடைபெற்றது. ஆக்டே

வியன் (அகசுடசு சீசர்) காலத்தில் உடிகா ஒரு பகுதி உரோமானியக் குடிஉரிமை பெற்ற நகரமாக விளங்கியது; ஆட்ரியன் என்னும் அரசர் காலத்தில் முழு உரிமை பெற்ற நகரமாக மாறியது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளில் பியூனிசியர்களின் புதைகுழிகள் பல கண்டுபிடிக்கப்பட்டதுடன் உரோமானியக் குடியேற்றப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டது.

**உடிகி** உருசியாவின் தூரக் கிழக்குப் பகுதியில் வாழும் முதுகுடிகளாவர். உடிகி (Udege) மக்கள் உடி (Ude) என்றும் உடிகேட்சி (Udegeytzy) என்றும் சொல்லப்படுவர். உருசியா பொதுவுடைமை நாடாவதற்கு முன்னர் இவர்கள் உசூரி (Ussuri), சிக்கோட்டா ஆலின் மலைப்பகுதி(Sikhota-Alin Mountain), ஒக்காட்சுக்குக் கடல் (Okhotsk Sea) முதலான பரந்த பகுதிகளைத் தம் பழைய இடமாகக் கொண்டிருந்தனர்.

உடிகி மக்கள் வாழ்ந்துவரும் உசூரி, ஆமூர் (Amur) ஆகிய பகுதிகளில் உல்ச்சி (Ulchi), ஓரோச்சி (Orochi) ஆகிய பழங்குடிகளும் குடியேறினர். உருசியாவுக்கும் சீனாவிற்கும் ஏற்பட்ட கி.பி. 1960-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி இப்பகுதி உருசியப் பேரரசுக்கு உட்பட்டதாக இணைக்கப்பட்டது. இருப்பினும், சீனா இப்பகுதியைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப் பல எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தது. சீனாவின் ஆட்சிக் காலத்தில் நிலையான நிருவாக அமைப்பைக் கண்டிராத இவர்கள் உருசியப் பேரரசில் இணைந்த பின்பு நிலையான நிருவாக அமைப்பின் கீழ் வாழத் தொடங்கினர். உருசியப் பேரரசின் கீழ்க் கொண்டுவரப்பட்ட இவர்கள் பகுதியில் சீன வணிகர்கள் வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

உடிகி முதுகுடிகளின் நிலப்பகுதி வளமிக்கது; காடுகள் நிறைந்தது; ஆறுகளும் நீர்நிலைகளும் நிறைந்தது. வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் ஏற்றபடி இவர்கள் தங்களின் குடியிருப்புப் பகுதிகளை இடம் விட்டு இடம் மாற்றிக்கொண்டு செல்வர். நாடோடி வாழ்க்கைக்கு ஏற்ப இவர்கள் வீடுகள் அமைக்கப்படுகின்றன. கூம்பு வடிவிலுள்ள இவர்கள் வீடுகள் பிரம்புகளாலும் மரப்பட்டைகளாலும் மீன் தோலாலும் கட்டப்படுகின்றன. தென் உசூரிப்பகுதியில் வாழும் உடிகியினர் சீன மக்களின் முறையின்படி சிறிய அளவில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வீடுகளின் அமைப்பு மாறுபட்டதாகக் காணப்படுகிறது. பொதுவாக இவர்கள் குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாகக் காணப்படுவதில்லை. மழைக் காலங்களில் பல குடும்பத்தினர் ஒரே கூரையின் கீழ்ச் சேர்ந்து வாழ்கின்றனர்.


உடிகியினரின் பொருளாதாரம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதாரத்தைச் சார்ந்ததாகும். காடுகளும் ஆறுகளும் நிறைந்த பகுதியில் வாழும் இவர்கள் ஆண்டு முழுவதும் இடம்விட்டு இடம்மாறி வாழ்க்கை நடத்துகின்றனர். வேட்டைத் தொழிலுக்கும் மீன்பிடித்தலுக்கும் வில்லையும் அம்பையும் பயன்படுத்தி வந்த இவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்து துப்பாக்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். பல பழங்குடிகள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளதால் வேட்டைப் பரப்பையும் மீன்பிடி பரப்பையும் ஆக்கிரமித்து வாழ்வதில் இவர்களிடையே போட்டி காணப்படுகிறது. புள்ளிமான் தோலைச் சீன வணிகர்கள் மிகுந்த விலை கொடுத்து வாங்குவதால் மான் வேட்டை இவர்களிடையே மிகுந்துள்ளது. கரடி வேட்டை இவர்களிடையே சிறப்பானதாகும். கரடியைக் கொன்ற அன்று உடிகியினர் கரடியைச் சமைக்கும் சடங்கினை மேற்கொள்கின்றனர். இச்சடங்கில் கரடியின் தலையை உண்பது உச்சக்கட்டமாகும். வேட்டைத் தளத்தில் தற்காப்புக்காக மட்டுமே சிங்கத்தைக் கொல்வர். இதைப் போன்றே பழுப்புக் கரடிக்கு மிகுந்த மதிப்பளித்துக் கொல்லாமலிருப்பர். இவர்களது துணை வருமானம் காட்டுப் பொருள்களைச் சார்ந்ததாகும். இவர்கள் கலைத் தொழிலிலும் வல்லவர்கள். மரத்தில் சிற்பங்கள் செதுக்குதல், தோலில் உருவப்படங்கள் வரைதல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

உடிகியினரிடையே வயது வந்த பெண்கள் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவதால் இவர்களிடையே திருமணத்தின் போது கொடுக்கப்படும் 'மணப் பெண் பணம்' மிகுதியாகும். உடிகி சமூகத்தில் மனைவியை மாற்றிக் கொள்ளுதலும் குழந்தைத் திருமணமும் காணப்படுகின்றன.

எல்லா முதுகுடிகளையும் போன்றே உடிகியினரும் மிகுந்த அளவில் கட்டுக்கதைகள், கதைப் பாடல்கள், புராணக் கதைகள் முதலானவற்றை வழக்கில் கொண்டுள்ளனர். உடிகியினரின் அரசியலமைப்பு சிக்கலற்றது; எளிமையானது. தந்தைத் தலைமையை (Patriarchy) ஏற்றுள்ள இக்குடிகளின் மூத்த தலைவன் இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். பழங்குடிகளுக்கிடையே அவ்வப்போது இரத்தச் சண்டைகள் மூளுகின்றன. வேட்டைத் தளம், மீன்பிடிஇடம் முதலானவற்றைக் கைப்பற்றும் போது நிகழ்கின்றன. பழங்குடிகளுக்கிடையே எழும் சண்டைகளை அப்போது நடுநிலைமை வகிக்கும் பழங்குடியினர் தீர்த்து வைக்கின்றனர்.

போல்சுவிக்குப் புரட்சியின் விளைவுகளை ஏற்கத் தயங்கிய இவர்களின் வாழ்க்கையமைப்புப் படிப்படியாக மாறத் தொடங்கியுள்ளது. மார்க்சிய அடிப்படையிலான சமுதாய, பொருளாதார அமைப்புகளின் தாக்கத்தினால் இவர்களின் தனித்தனியான வேட்டைப் பரப்புகளும் மீன்பிடி பரப்புகளும் பொதுமையாக்கப்பட்டன. உடிகியினர் இப்போது பெருமளவில் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர்.

**உடுக்கை** இடை சுருங்குபறை என்றும் துடி என்றும் கூறப்படும் ஒரு தோற்கருவி. இது ஒரு பழமையான இசைக் கருவி. இது நடுவே சிறுத்தும் ஓரங்கள் பெருத்தும் இருக்கும். இதன் உடல் மண்ணினாலோ மரத்தினாலோ பித்தளையினாலோ செய்யப்பட்டிருக்கும். தோல்களின் சுற்றுப் பக்கத்தில் சிறு துவாரங்கள் இருக்கும். இவற்றின் மூலமாக ஒரு நீண்ட கயிறு இரு முகங்களினின்றும் மாறி மாறி இறுகப் பின்னப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைச் சுற்றி நடுவில் ஒரு நாடா இருக்கும். வாசிப்பவர் இந்த நாடாவை அழுத்துவதினால் முகங்களின் சுருதி அதிகமாகி, சாருகமகம் போன்ற ஒரு நாதம் எழும்பும். இது கேட்பதற்கு மிக்க இனிமையாக இருக்கும். உடுக்கையை இடக்கையால் நடுவில் பிடித்துக் கொண்டு, வலக்கையால் வாசிப்பார்கள். மாரியம்மன் கோயில்களிலும் கிராம தேவதைகளின் கோயில்களிலும் இதைக் கேட்கலாம்.



உடுக்கை

இப்பறை உடுக்கு என்றும் வழங்கப்படுகிறது. இது ஏறக்குறைய ஓர் அடி நீளமுள்ளது. தெருப் பாடகர்கள் தம்பாடலுக்குப் பின்னணியாக இக் கருவியைப் பயன்படுத்துகின்றனர். குறிசொல்லுவோர் பேய், பிசாசுகளை விரட்டுவதற்காகத் தம் தெய்வங்களை வேண்டி உடுக்கையடிக்கிறார்கள்.

உடுக்கையின் இருபுறமும் கன்றின் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். உடுக்கை என்ற இக்கருவி மென்மைக் கருவியாகும். இது இடைக் கருவி வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இசைக்கப்படும் தோற்கருவிகளுள் இதுவும் ஒன்றாகும்.

உடுக்கை என்ற தோற்கருவி சிவனின் சின்னம் என்ற குறிப்புடன் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

'நிலையாய் உடுக்கை வாசிப்பான்' என்ற தொடர் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது. பேருடுக்கையைத் தவண்டையென்பர். இதன் வாய்கள் ஆட்டுச்சவ்வால் போர்க்கப்பட்டிருக்கும். இடப்பக்க வாயின் தோலின் மீது குதிரை மயிரினால் திரிக்கப்பட்ட மெல்லிய கயிறு கட்டப்பட்டிருக்கும். அதை வீணை என்பர். வலப்பக்க வாய் ஒன்றின் மீதே அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். அப்போது ஓர் உறைப்பான ஒலி உண்டாகும்.

'உடுக்கை வாசிக்கும் பாவை' ஒன்றைப்பற்றி ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அதாவது அப்பாவை செம்பால் செய்யப்பட்டு, பொன் முலாம் பூசப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

அதே போல் மத்தளம் கொட்டுகின்ற பாவை ஒன்றும், பாடுகின்ற பாவை ஒன்றும் ஆடுகின்ற பாவையொன்றும் இருந்ததாகவும் அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்தது; திருவையாறு பஞ்சநதீசுவரர் கோயிலில் உள்ளது.

**உடுப்பி** கருநாடக மாநிலம் தென் கன்னட மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். இவ்வூர் உடுப்பி என்னும் வட்டத்தின் மையமுமாகும். உடுப்பி (Udupi) கிருட்டிணன் கோயிலால் சிறப்புப் பெற்றுள்ளது. குழந்தை வடிவில் காட்சியளிக்கும் இத்திருவுருவம் கிருட்டிண வழிபாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஈர்ப்பதாகும். இத்திருக்கோயிலை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மத்துவாச்சாரியார் நிறுவினார் என்று கருதுகிறார்கள். எட்டு மத்துவ மடங்களைச் சார்ந்த ஆசாரியர்கள் இரண்டாண்டுக்கொருமுறை மாறி மாறி இக்கோயிலின் பொறுப்பேற்று வழிபாடு நடத்துகிறார்கள். அவற்றுள் ஒரு மடத்தினைப் பேசாவர் (Pejawar) மடம் என்பர். இம்மடத் தலைவர்கள் வைதிக ஆசாரத்திற்குப் பெயர்பெற்றவர். இங்கு 1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற விசுவ இந்து பரிசத்து மாநாட்டில் கூடிய மடாதிபதிகள் தீண்டாமை இந்து சமயத்திற்குப் புறம்பானது என்று தீர்மானம் நிறைவேற்றினர்; உடுப்பியின் மக்கள்தொகை 33,398 (1981).

**உடுமலைப்பேட்டை** தமிழ்நாட்டைச் சார்ந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ளதொரு வட்டமாகும்; உடுமலைப்பேட்டை என்னும் நகரம் இவ்வட்டத்தின் தலைநகராகவும் அமைந்துள்ளது. பழங்காலத்தில் உடுமலைப்பேட்டை கொங்கு மண்டலத்தில் இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் மூணாறு அருகில் அமராவதி ஆறு உற்பத்தியாகி இந் நகரின் வழியாகப் பாய்கிறது. சிறிய பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களை உருவாக்கி அரசு மிகுதியான பரப்பில் வேளாண்மை செய்ய வழிவகை செய்துள்ளது. உடுமலைப் பேட்டைக்கு ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் அமராவதி அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணை 1953-இல் தொடங்கப்பெற்று 1957-இல் கட்டி முடிக்கப்பெற்றது. இவ்வணையில் தேங்கும் நீர் உடுமலைப்பேட்டை வட்டத்திற்கும் பயன்படுகிறது. இவ்வூரின் அண்மையில் ‘திருமூர்த்தித் தேக்கம்’ என்னும் சிற்றணையொன்றும் கட்டப்பட்டுள்ளது. பரம்பிக்குளத்தலைமைக் கால்வாயும் உடுமலைப் பேட்டைக்குப் பயன்படுகிறது. உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள காடுகள் குறிப்பிடத்தக்கவை. இந் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிகுதியாகப் பருத்தி விளைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவுகளையொட்டி இந்நகரம் அமைந்துள்ளதால் இது நல்வாழ்வுக்கேற்ற தட்டவெப்பநிலையைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் கொல்லர்கள் திறமை மிக்கவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இந்நகரின் மக்கள்தொகை 54,804 (1981).

**உடை**: மனிதன் தோன்றிய தொடக்க காலத்தில் உடை ஒரு தேவையாகக் கருதப்படவே யில்லை. மனிதன் ஆடை இன்றியே வாழ்ந்தான். நாளடைவில் தான் உடை தோன்றி மெல்ல ஒரு தேவையாக மாறி, இன்றைக்கு உணவுக்கு அடுத்தபடியான இன்றியமையாத் தேவையாக நிலவுகிறது.

கூச்ச உணர்வின் காரணமாகவே மனிதன் உடை உடுத்தத் தொடங்கியிருக்கக் கூடும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இன்றைக்கு ஒரு சிறு மறைப்புக் கூட இல்லாமல் பொதுவாக யாரும்-ஆணோ பெண்ணோ வெளியில் வருவது கிடையாது. மேலும், உடுத்தி யிருக்கும் ஆடை நழுவ முற்பட்டால், மனிதனுடைய கை விரைவாகச் செயற்பட்டு நழுவும் ஆடையைச் சரி செய்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதனிடம் இயல்பாய் அமைந்திருக்கிற கூச்ச உணர்வே என்பது மேற் குறித்த கருத்துடையோரின் வாதம்.

ஆனால், உண்மையில் கூச்சம் என்பது ஓர் இயல் புணர்ச்சியன்று. அது பயிலப்பட்டு வருவது. எங்குக் கூச்ச உணர்வு கற்பிக்கப்பட்டு, எல்லோராலும் பயிலப்பட்டு, வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதோ அங்குத் தான் கூச்ச உணர்வுக்கும் உடைக்கும் தொடர்பு இருக்கிறது. ஆடை இன்றி ஒருவன் பிறர் முன்னால் வரலாகாது என்ற நெறி ஏற்பட்டு உடையணிவது ஒரு வழக்கமான நிலையாகும்போது, அந்த வழக்கத்தின் அடிப்படையில் அவன் உடையணிகிறான். உடை இல்லாத நிலையிலும் உடை நழுவிய நிலையிலும் அவனுக்குக் கூச்சம் ஏற்படுகிறது. உடையன்றி வேறு ஒன்றை அணிய வேண்டும் என்று நெறிப்படுத்தப்பட்டு அது வழக்கமாய் ஆகும்பொழுது அந்த ஒன்றை அணியாத நிலையில் அவனுக்குக் கூச்சம் ஏற்படும். தென் அமெரிக்காவில் வாழும் போடோக்யூடோ இந்தியர்களிடையே பெண்கள் ஆடையின்றி இருப்பார்கள். ஆனால், கீழ் உதட்டில் ஒரு துளை போட்டு அதில் ஒரு தக்கையைச் சொருகி யிருப்பார்கள். ஆடையில்லாமல் அவர்கள் பிறர் முன் தயக்கமின்றிச் செல்வார்கள். ஆனால், உதட்டு அணி இல்லாமல் ஒரு போதும் பிறர் முன் வரமாட்டார்கள். உதட்டு அணி இல்லாமல் போனால் கூச்சப்பட்டுக் கொண்டு, நாணிக் கோணி, ஒடி ஒளிந்து விடுவார்கள். அமேசான் (Amazan) ஆற்றுப் பள்ளத்தாக்கில் வாழும் விடோடோ இந்தியர்களிடையே பெண்கள் ஆடை அணிய மாட்டார்கள். ஆண்கள் மட்டும் இடுப்பில் ஒரு மரப்பட்டையை ஆடையாகச் சுற்றிக் கட்டியிருப்பார்கள். அந்த மரவுரியில்லாமல் அவர்கள் யார் முன்னும் நிற்க மாட்டார்கள். ஆக, கூச்சம் என்பது இயல்புணர்வும் அன்று; உடையணிதலும் அந்த உணர்வின் அடிப்படையில் எழுந்ததும் அன்று என் பதை உணர முடியும்.

புறச் சூழ்நிலையின் கூறுகளான குளிர், மழை ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே மனிதன் உடையணியத் தொடங்கியிருக்கக் கூடும் என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. ஆனால், அவனிடம் இயல்பாய் அமைந்திருக்கின்ற அலங்கார உணர்வின் உந்துதலால்தான் அவன் உடையணியத் தொடங்கி யிருக்கக் கூடும் என்று அமெரிக்கக் கல்விக்கலைக் களஞ்சியம் (The American Educator Encyclopaedia) கூறுகிறது. உடையைக் குறிக்க ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சொல் (Garment) உண்மையில் அலங்காரம் (Adornment) என்பதையே குறிக்கும் என்பதை இந்நூல் தன் கருத்துக்கு ஆதரவாக எடுத்துக் காட்டுகிறது.

வெப்ப மண்டலப் பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு உடம்பை மறைக்க வேண்டிய தேவை இல்லை. ஆகவே, அவர்கள் ஆடையின்றியோ குறைவான ஆடையை உடுத்திக் கொண்டோ இருக்கலாம்.

ஆயினும், அவர்கள் தாம் வாழும் புறச் சூழ்நிலைக்குத் தேவையில்லாத முறையில் உடை யணிந்திருக்கின்றனர். அராபியர்கள் வெம்மையான- பாலை நிலப் பகுதியில் வாழ்கிறார்கள். அத்தகைய புறச் சூழ் நிலையில் அவர்களுக்குக் குறைவான ஆடையே போதும். ஆயினும், அவர்கள்-ஆண் பெண் இருபாலாரும் உடம்பை மறைக்கக் கூடிய கனமான, நீண்ட ஆடைகளை அணிகிறார்கள். குளிர் மிகுந்த பகுதி களில் மிகுதியான உடைகள் தேவைப்படலாம். அத் தகைய சூழ்நிலையில் மக்கள் மிகுதியான, கனமான ஆடைகளை அணிவது தேவையாய் இருக்கலாம். ஆனால், தென் அமெரிக்காவின் தென் கோடியில் மிகக் குளிர்ந்த பகுதியில் வாழும் ஆதிக்குடிகளான இந்தியர்கள் ஆடை ஏதுமின்றி வாழ்கிறார்கள். குளிரிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள உடம்பு முழுவதும் சேற்றைப் பூசிக் கொள்கிறார்களே தவிர, ஆடை எதுவும் அணிவதில்லை. இதனால், மனிதன் குளிர், மழை ஆகியவற்றுக்காக உடையணிய முற் படவில்லை என்பதும், மனிதன் உடை உடுத்தத் தொடங்கியதற்கு இவை காரணமில்லை என்பதும் தெளிவு.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் ஆடையின்றி வாழ்ந்து வந்தான். அந்த நிலையி லும்கூட அவன் தன் உடலைப் பலவகையான இயற் கைச் சாயங்களைக் கொண்டு பூசி அலங்கரித்துக் கொண்டான். மணிகள், கிளிஞ்சல்கள், இறகுகள், மலர்கள் ஆகியவற்றை அணிந்து கொண்டான். உடல் அலங்காரத்தின் ஒரு பகுதியாக அவன் தன் இடுப்பைச் சுற்றி மலர்கள், இலைக் கொத்துகள், புல் கொத்துகள் ஆகியவற்றையும் அணிந்து கொண்டான். இதுவே உடையின் தோற்றத்து அடிக்கல்லாக அமைந்தது.

நாளடைவில் இடுப்பில் மலர், இலை, புல் இவற் றுக்குப் பதிலாக மரப்பட்டையை அணிந்து கொள் ளத் தொடங்கினான். மரப்பட்டையைத் தொடர்ந்து விலங்குகளின் தோலை அணியத் தொடங்கினான். மனிதன் தொடக்கத்தில் காட்டில் விளைந்த காய், கனி, கிழங்குகளைத் தன் உணவாக அமைத்துக் கொண்டான். இந்த உணவோடு விலங்குகளின் இறைச்சியைச் சேர்த்துக் கொள்ள, அவன் வேட்டை யாடும் தொழிலை மேற்கொண்டான். அப்போது வேட்டையில் கிடைத்த விலங்குகளின் தோலை அரை யில் உடுத்திக் கொண்டான். அறிவின் புதிய நூல்(The New Book of Knowledge) என்னும் நூல் 'மனிதன் விலங்குகளின் தோலை அணிந்து கொள்ள முற்பட்டது அதன் அலங்காரப் பகட்டுக்காக மட்டுமன்று, விலங்கு களின் தோலுக்கு ஒரு மாந்திரீகச் சக்தி இருக்கக் கூடும் என்று அவன் நம்பியதும் ஒரு காரணமாகும்' எனக் கூறுகிறது. 'ஒரு விலங்கின் தோலை அணிந்து கொண்டால் அவ்விலங்குக்குரிய வலிமையும் ஓடும் ஆற்றலும் தனக்கு அமையக் கூடும் என்று 'பண்டைய மனிதன் நம்பியிருக்க வேண்டும். அந்த நம்பிக்கையின் காரணமாக அவன் தன் வேட்டையில் வெற்றி பெற விலங்கின் தோலை அணியத் தொடங்கியிருக்கக் கூடும்' என்று இந்த நூல் கூறுகிறது.

விலங்குகளின் தோலை அரையில் ஆடையாக மனிதன் அணிய முற்பட்ட காலம் பழைய கற்கால மாய் இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். ஏனெனில், இக்காலத்தில்தான் மனிதன் வேட்டையாடும் தொழிலில் புகுந்தான்.

தொடக்கத்தில் மனிதன் உரிக்கப்பட்ட விலங்கின் தோலை அப்படியே அணிந்து கொண்டான். அது முரடாகவும் உறுத்துவதாகவும் இருந்ததால், தனக்கு இயல்பாய் அமைந்திருந்த வலிமையான தாடைப் பற்களால் சுவைத்துத் தொய்வாக்கி அணிந்து கொண்டான். பழைய கற்காலத்தில் வாழ்ந்த ஐடல் பர்க்கு மனிதன் இந்த முறையில் தான் விலங்குகளின் தோலைத் தொய்வாக்கி ஆடையாக அணிந்து கொண்டான் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறு கிறார்கள். இன்றைக்கும் இதே முறையில்தான் எசுகிமோக்கள் (Eskimos) பற்களைக் கொண்டு தோலைத் தொய்வாக்கி ஆடையாக அணிந்து கொள் ளுகிறார்கள்.

தொடக்கத்தில் மனிதன் தோலைத் தொய்வாக்கி யதன்மேல் ஏதும் செய்யவில்லை. தொய்வாக்கிய தோலை அப்படியே அரையில் கட்டிக் கொண்டான் அல்லது உடம்பில் போர்த்துக் கொண்டான். புதிய கற்காலத்தின் தொடக்கத்தில்தான் தோலினால் ஆடை தைக்கக் கற்றுக் கொண்டான். கூர்மையான கற்களால் அல்லது எலும்புத் துண்டுகளால் தோல் களைக் கிழித்து, எலும்பினால் அல்லது தந்தத்தினால் அல்லது கல்லினால் ஆன ஊசிகளைக் கொண்டு, கிழிக்கப்பட்ட தோல் துண்டுகளை இணைத்துத் தைத்து ஆடையாக அணிந்தான். இவ்வாறு தோலி னால் ஆடை தைத்து அணியும் வழக்கம் புதிய கற் காலத்தில்தான் ஏற்பட்டது.

நாளடைவில் புதிய கற்கால மனிதன் விலங்கு களின் மயிரையும், மென்னயச் சணல் (Flax) இழை களையும் கொண்டு நூல் நூற்கத் தொடங்கினான். அதற்காகத் தக்கிளிகளைக் (Spindles)கண்டுபிடித்து, அவற்றை நூல் நூற்கப் பயன்படுத்தினான். தென் பிரான்சில் குரோட்டு தியூ பாண்டால் (Grotte du

Pontal) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்காலத்தைச் சேர்ந்த தக்கிளிகள் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

விலங்குகளின் மயிரையும் மென்னயச் சணல் இழைகளையும் கொண்டு நூற்ற நூல்களை முறுக்கேற்றி, அவற்றைப் பாய் பின்னுவது போல் நெய்து ஆடையாக்கினான். அப்படி நெய்யப்பட்ட ஆடைகளின் மீது மஞ்சள், சிவப்பு, நீலம் என்று பல வண்ணங்களைச் சாயம் பூசி அழகுபடுத்தினான். சுவிட்சர்லாந்தில் இராபென்காசன் என்ற இடத்தில் தோண்டப்பட்ட புதிய கற்காலப் புதையிடங்களில் இத்தகைய ஆடைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பின்னர், நாகரிகக் காலத்தில் நார்மடியும் (Linen) பருத்தியும் பட்டும் ஆடைப் பொருள்களாக அமைந்தன. இன்றைக்குப் பருத்தி, பட்டு, கம்பளம், தோல், மென்மயிர்த்தோல், நார்மடி ஆகிய இயற்கை இழைகளுடன், 'தெரிலின்', 'நைலான்', 'ஆர்லான்', 'இரேயான்', 'நைலக்சு' முதலிய செயற்கை இழைகளும் உடை உருவாக்குதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, இயற்கை இழைகளும் செயற்கை இழைகளும் கலந்த கலப்பு இழைகளும் உடை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. பருத்தி நூலுடன் கம்பளியைக் கலந்து ஒருவகைத்துணி தயாரிக்கப்படுகிறது. அவ்வாறே பருத்தி நூலுடன் பட்டு இழைகளைக் கலந்தும் துணி தயாரிக்கப்படுகிறது. பருத்தி நூலோடு 'தெரிலின்' இழைகளைத்தகுந்த அளவில்கலந்து'தெரிகாட்டன்'என்ற துணிவகை தயாரிக்கப்படுகிறது. அவ்வாறே 'தெரிலினையும்' கம்பளியையும் கலந்து 'தெரிக்கம்பளி' என்ற துணி வகையும் தயாரிக்கப்படுகிறது.

நெசவுத் தொழில் ஏற்பட்ட பிறகு, தொடக்க காலத்தில் நாகரிக மக்கள் சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் நெய்யப்பட்ட துணிகளை அப்படியே ஆடைகளாக அணிந்து கொண்டனர். அவற்றை உடம்பின் மீது போர்த்திக் கொண்டனர். அவை ஒன்றோடொன்று பிரியாமல் இணைந்து இருப்பதற்கு அவற்றை இணைத்துக் கட்டினார்கள். அவை இடுப்பிலிருந்து நழுவாமல் இருப்பதற்கு அரையில் துணிப்பட்டைகளைக் கச்சைகளாகப் பயன்படுத்திக் கட்டிக் கொண்டனர்.

முற்காலத்தில் கிரேக்கர்கள் இந்த முறையில் தான் உடை அணிந்திருந்தார்கள். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இரண்டு உடைகள் உடுத்தியிருந்தார்கள். அவற்றுள் ஒன்று மெல்லிய 'உட்சட்டை' (Chiton) என்பது. இது உடம்பைப் பிடித்தவாறு இருந்தது; முழங்கால் வரை நீண்டிருந்தது; கை வைத்தும் கை வைக்காமலும் இருந்தது; நார்மடி அல்லது பருத்தி அல்லது கம்பளியால் நெய்யப்பட்டிருந்தது. செந்நீலம், சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய வண்ணங்களில் மிளிர்ந்தது. தோள் பட்டைகள் இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. பிடிமானத்திற்காக இடுப்பில் இந்த உடையைச் சுற்றி ஒரு பட்டை வளையத்தைப் பெண்கள் கட்டிக் கொண்டனர். பெண்களுடைய உட்சட்டை ஆண்களுடைய உட்சட்டைகளைக் காட்டிலும் உயரம் குறைவாக இருந்தன.

உட்சட்டைகளுக்கு மேல் ஆண்கள் நீண்ட, போர்வை போன்ற ஆடையைப்(Himation)போர்த்தியிருந்தார்கள். சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் அமைந்திருந்த கம்பளித் துணிகளையே போர்வை போன்ற ஆடையாகப் பயன்படுத்தினார்கள். இந்த ஆடை வெள்ளை நிறத்தில் இருந்தது. அதை வலக்கைப் பக்கம் வெறுமையாக இருக்கும்படி இடத் தோள்வழியாக உடம்பின் மீது போர்த்திக் கொண்டார்கள். பிடிப்புக்காகத் தோள்பட்டையில் கொக்கி (Hook) குத்திக் கொண்டார்கள். போர்வை போன்ற ஆடை தோளிலிருந்து கணுக்கால் வரை நீண்டிருந்தது. இந்த ஆடையினைப் பொதுமக்கள் அணிந்திருந்தார்கள். ஆனால், இராணுவ வீரர்களும் அரசாங்க அலுவலர்களும் உட்சட்டைக்கு மேல் போர்த்தியிருந்த அங்கி வேறுவிதமாக இருந்தது. அதுவும் சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் அமைந்திருந்தது. ஆனால், அது முழங்கால் வரை மட்டுமே நீண்டிருந்தது. அது பூ வேலைப்பாடுகள் நிறைந்து விளங்கியது.


பெண்கள் உட்சட்டைக்கு மேல் ஓராடையைப் போர்த்தியிருந்தார்கள். இது கம்பளிச் சால்வை போன்ற அங்கி. இவ் அங்கியால் உடம்பு முழுவதும் போர்த்தி, தோள் பட்டைகளைக் கொக்கிகளால் இணைத்து, இடுப்பில் ஒரு கச்சையைக் கட்டி அணிந்து கொண்டார்கள். கழுத்திலிருந்து ஒரு மடிப்பு இடுப்பு வரை தொங்கிக் கொண்டிருந்தது.

கிரேக்கர்களைப்போலவே உரோமானியரும் உடை அணிந்திருந்தனர். உரோமானிய ஆண்கள் உடம்பைப் பிடித்தவாறு அமைந்த, முழங்கால் வரை நீண்ட மேல் அங்கியை (Tunic) அணிந்திருந்தார்கள். இடுப்பில் பிடிமானத்திற்காக மேலங்கியைச் சுற்றி அரைக் கச்சையினைக் கட்டியிருந்தார்கள். ஆனால், அந்த உள்ளாடை வெறுமனே வெளுப்பாக இல்லாமல், செந்நீலப் பட்டை வரிகளைக் கொண்டிருந்தது. அணிபவருடைய தகுதிக் கேற்ப அந்தப் பட்டை வரி





உடை வகைகள்

















உடை வகைகள்

களின் எண்ணிக்கையும் அகலமும் வண்ணமும் அமைந்திருந்தன.

உரோமானியப் பெண்களுடைய உள்ளாடை 'சுடோலா' (Stola) என்று சொல்லப்பட்டது. இது ஆண்களுடைய மேல் அங்கியைப் போலவே இருந்தது. ஆனால் இதற்குக் கை குட்டையாக இருந்தது. (ஆண்கள் கை வைத்த அங்கிகளையும், கை வைக்காத அங்கிகளையும் அணிந்திருந்தனர்).

பெண்கள் 'சுடோலா' என்னும் உள்ளாடைக்கு மேல் 'பால' (Palla) என்ற ஆடையை அணிந்திருந்தனர். உரோமானியப் பெண்கள் பெரும்பாலும் தலையில் தொப்பி அல்லது மெல்லிய முகத்திரை அணிந்திருந்தார்கள். 'பால' ஆடையின் ஒரு முனையை அந்தத் தொப்பியின் மேல் அல்லது முகத்திரையின் மேல் போர்த்தி யிருந்தார்கள்.

கிரேக்கர்களைப் போலவே அராபியரும் உடை உடுத்தியிருந்தனர். அவர்களும் கணுக்கால் வரை நீண்ட, போர்வை போன்ற, நீளமான கைகளையுடைய'கைக்' என்னும் பெயர் கொண்ட அங்கியை அணிந்திருந்தனர். அவர்களுடைய அங்கி உடம்பு முழுவதும் பரவித் தொங்கிக்கொண்டிருந்தது. இந்த அங்கிக்குள் ஒரு குட்டைச் சட்டையை அணிந்திருந்தனர். தலையின் மேற்பகுதியை ஒரு துணியால் மூடியிருந்தனர் பிடிப்புக்காக அதை நெற்றியில் கயிறுகளால் கட்டியிருந்தனர்.

ஆனால் அராபியருக்கு நேர் மாறாக எகிப்தியர் உடை அணிந்திருந்தனர். அவர்கள் குறைவான ஆடையையே அணிந்திருந்தனர். ஆண்கள் இடுப்பில் மட்டும் வெள்ளை நார்மடியினாலான ஒரு சிறிய துணியை அணிந்திருந்தனர். அரச குடும்பத்தினர் மட்டும் பொன்னிழை விரவிய ஆடையை அணிந்திருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் கால்களைப் பிடித்தவாறு அமைந்த ஆடைகளை அணிந்து கொண்டார்கள். அப்போதும் அதற்கு மேல் குறும்பாவாடை அணிந்து கொண்டார்கள். மேலங்கியும் குறும்பாவாடையும் பகட்டாகவும் பூ வேலைப்பாடுகள் நிறைந்தும் இருந்தன. ஆனால் சாதாரணக் குடிமக்கள் குறும்பாவாடையினையே தொடர்ந்து அணிந்து வந்தனர்.

எகிப்தியப் பெண்கள் தொடக்கத்தில் கழுத்திலிருந்து கணுக்கால் வரை நீண்டிருந்த ஓர் ஒற்றைப் பாவாடையை அணிந்திருந்தார்கள். அச்சட்டைக்குக் கைகள் இருந்தன. அது கழுத்துப் பக்கம் வெட்டப்பட்டிருந்தது. பிற்காலத்தில் மேலங்கி வந்ததும், அரச குடும்பத்துப் பெண்கள் முழங்காலை ஒட்டிய தளருடையை அணியத் தொடங்கினார்கள். ஆனால் சாதாரணப் பெண்கள் மட்டும் தொடர்ந்து பழைய உடையையே அணிந்து வந்தனர்.

இந்தியாவில் ஆண்களும் பெண்களும் இடையில் மட்டும் ஆடையை அணிந்திருந்தனர். பெண்கள் அரையில் ஆடையைச் சுற்றிலும் பிடிமானத்திற்காக ஒரு பட்டை வளையத்தைக் கட்டியிருந்தார்கள். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை மாற்றம் ஏதுமில்லாமல் இந்த உடையே இந்தியாவில் நீடித்தது.

இந்தியாவின் தென் பகுதியாகிய தமிழகத்திலும் இந்த நிலையே நிலவியது. ஆண்கள் தலையில் ஒன்றும் (தலைப்பாகை) இடுப்பில் ஒன்றுமாக (வேட்டி) இரண்டு உடைகளை அணிந்திருந்தனர். பெண்கள் இடுப்பு வரையுள்ள உடல் முற்றிலும் வெறுமையாக இருக்க, அரையிலிருந்து கணைக்கால் வரையில் மட்டுமே உடை அணிந்திருந்தனர் (ந.சி. கந்தையா பிள்ளை).

சீனாவில் ஆன் (Han) அரச வமிசக் காலத்திலிருந்து (கி.மு.206-கி.பி.220) மிங்கு (Ming) அரச வமிசக் காலம் வரையிலும் (கி.பி.1368-1644) ஆண்களும் பெண்களும் அகன்ற கைகளையுடைய, அளவிறந்த மடிப்புகள் கொண்ட தளர்ச்சியான, பாதம் வரை நீண்ட கிமோனோ முறை அங்கிகளை அணிந்திருந்தனர். இடையில் அங்கியை ஒரு கச்சையால் கட்டியிருந்தனர். இந்த ஆடை அணியும் முறையை அவர்கள் பாவோ (P'ao) என்று குறிப்பிட்டனர். கி.பி.1644-இல் மிங்கு அரச வமிச ஆட்சியை முறியடித்துச் சிங்கு அரச வமிச ஆட்சி ஏற்பட்டபோது, சாவோ-பூ (Ch'ao-fu) என்ற ஆடை அணியும் முறை ஏற்பட்டது. இந்தப் புது முறையில் இடுப்புக்கு மேலே உள்ள ஆடைப் பகுதி நீண்ட பிடிப்பான கைகளை உடையதாகவும், கழுத்துப் பகுதியில் கழுத்தைப் பிடித்தவாறு அமைந்த விசிறி மடிப்புள்ள வட்டமான கழுத்துப்பட்டை உடையதாகவும் விளங்கியது. இடுப்புக்குக் கீழ்ப் பகுதி வழக்கம் போலப் பாதம் வரை நீண்டிருந்தது.

சப்பானியரும் சீனரைப் போன்றே கிமோனோ பாணியில் நீண்ட பாவோ ஆடை அணிந்திருந்தனர். ஆனால் இவ்வாடை அணியும் முறையை அரச குடும்பத்தினர் மட்டுமே கடைப்பிடித்தனர். அரச குடும்பத்தினர் கிமோனோ ஆடைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அணிந்திருந்தனர். அவர்களுடைய உடை மஞ்சள் நிறத்தில் இருந்தது. ஆனால் சாதாரணக் குடிமக்கள் 'கினு' (Kinu) என்ற பெயர் கொண்ட தொடை வரை நீண்ட சிறுசட்டையினை உடம்பின் மேற்பகுதியில் அணிந்திருந்தனர். உடம்பின்

கீழ்ப்பகுதியில் ஆண்கள் கால்களைப் பிடித்தவாறு அமைந்திருந்த காற்சட்டைகளையும், பெண்கள்'மோர' என்ற அரைப் பாவாடையையும் அணிந்திருந்தனர்.

நாளடைவில் உலகின் பல பகுதிகளிலும் உடைகளில் மேம்பாடான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. செல்வமும் வசதிகளும் பெருகப் பெருக, ஆடைத் தொடர்பான வண்ணங்கள் விரிவாக வளரத் தொடங்கின. அரச குடும்பத்தினரும் அவர்களைப் பின்பற்றி உயர் வகுப்பினரும் பகட்டான, செழிப்பான ஆடைகளை அணியத் தொடங்கினர். தமது சமூக-பொருளாதாரத் தகுநிலைக் கேற்ப உடைகள் அமைய வேண்டும் என்பதற்காகப் பகட்டான விலையுயர்ந்த ஆடைகளையும், அவற்றுக் கேற்ப அணி அலங்காரப் பொருள்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். அலங்கார வண்ணங்களில் அவர்களுடைய ஆடைகள் ஒளிர்ந்தன. நவமணிகளும் பொன்னிழைகளும் எடுப்பான பூ வேலைப்பாடுகளும் ஆடைகளுக்கு மெருகூட்டின. இத்தகைய ஆடை அலங்காரத்துக் கேற்ப ஆடம்பரமான அணிகலன்களும் தலையணிகளும் காலணிகளும் பயன்படுத்தப் பட்டன.

தங்களுடைய செல்வச் செழுமையைக் காட்டிக் கொள்ள மட்டுமன்றி, சமூகத்தில் தங்களுக்குள்ள உயர் தகுநிலையை வெளிப்படுத்தி நிலைநாட்டிக் கொள்ளவும் உயர் வகுப்பினர் பகட்டான, உயர்தரமான ஆடைகளைப் பயன்படுத்தினர். விலையுயர்ந்த மென் மயிர்த் தோலினாலான ஆடைகளை அணிந்தனர். உடையைச் சமூகத் தகுநிலையின் குறியீட்டுக் காரணியாகப் பயன்படுத்தினர்.

ஆயினும் அன்றைய கால கட்டத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சமயச் சீர்திருத்த வாதிகள் அலங்காரமான ஆடை அணிகளைக் கண்டித்தனர்; உடையில் எளிமை வேண்டும் என்று வற்புறுத்தினர். பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சமத்துவக் கோட்பாடுகள் எங்கும் பரவத் தொடங்கிய பிறகு, மக்களுடைய உடை அணியும் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பகட்டான உடைகள் மறைந்து, எளிமையான உடைகள் தோன்றத் தொடங்கின. செல்வர்கள், ஏழைகள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான உடைகள் தோன்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இருபது அல்லது முப்பதுகளில் நீண்ட முழுக்காற் சட்டைகள் அணியும் போக்கு வளரத் தொடங்கியது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனி உடைகள் ஏற்பட்டன. ஆண்களுக்குச் சட்டை, முழுக்காற் சட்டை என்றும், பெண்களுக்கு மேற் சட்டை, அரைப் பாவாடை என்றும் உடைகள் தோன்றின. இந்தக் கால கட்டத்திலேயே இந்தியா போன்ற கீழை நாடுகளிலும் ஆண்கள் சட்டையும், பெண்கள் சோளியும் அணியும் வழக்கம் ஏற்பட்டது.

தையல் பொறி கி.பி. 1850-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டதும் ஆண் பெண் இருபாலார் உடைகளும் தரப்படுத்தப்பட்டன. தொடக்கத்திலிருந்து பெரியவர்களைப் போலவே சிறாரும் தத்தம் பாலினத்துக்கேற்ப உடையணிந்து வந்தனர். பெரியவர்களுடைய உடைகள் மாறியபோது சிறாருடைய உடைகளும் மாறின. சிறாருடைய உடைகளும் இந்தக் கால கட்டத்தில் தரப்படுத்தப்பட்டன. உடைகள் தரப்படுத்தப்பட்டபோது, அவற்றைப் பேரளவில் உற்பத்தி செய்வது எளிதாயிற்று. இன்றைக்கு ஆண் பெண்இருபாலாருக்கும், எல்லா வயதினருக்கும் தரப்படுத்தப்பட்ட ஆயத்த ஆடைகள் புழக்கத்தில் இருக்கின்றன. இது இருபதாம் நூற்றாண்டின் சாதனையாகும்.

இன்று பண்பாட்டுத் தொடர்புகளால் பல்வேறு நாடுகளில் ஐரோப்பிய நாடுகளின் உடையணி முறையின் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் தம் தேசிய உடைகளை விலக்கி ஆங்கிலேயரைப்போல் உடைகளை அணிந்து வருகின்றனர். இத்தகைய போக்கு மிகுதியாக ஆண்களிடந்தான் காணப்படுகிறது. பெண்களிடம் இன்றும் மரபு வழியான உடைகளை அணியும் போக்கு நிலவி வருகிறது. இந்தியாவில் பெண்கள் சேலையையும், பர்மா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெண்கள் சாரோங்கு (Sarong),என்ற மரபு வழியான உடையையும், பாகிசுத்தானில் சால்வர்-காமீசு உடைகளையும் அணிந்து வருகின்றனர்.

உடைகளின் வகைகளும் உடை அணியும் முறைகளும் நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் வேறுபட்டாலும், உடை பொதுவாக எல்லா நாடுகளிலும் எல்லாக் கால கட்டங்களிலும் சில குறிப்பிட்ட செயல்களை ஆற்றுகிறது. முதலாவதாக, உடை மனிதனை மழை, குளிர் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கிறது. மழை, குளிர் இவற்றுக்கும் உடையின் தோற்றத்திற்கும் காரண - காரியத் தொடர்பு இல்லாவிடினும், செயற்பாட்டளவில் உடை மனிதனின் உடம்பை இக்கூறுகளிலிருந்து பாதுகாக்கிறது. மைய ஆசியாவின் இசுடெப்பி (Steppe) என்ற புல்வெளிப் பகுதிகளில் குளிர் அதிகமாக இருக்கும். கோடைக் காலத்தில் கூட இரவில் குளிர் அடிக்கும். ஆதலால் அங்குள்ள மக்கள் கதகதப்பான தோலாடைகளை அல்லது மென்மயிர்த் தோலாடைகளை

அணிந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளு கின்றனர். அவ்வாறே வட துருவப் பகுதியில் வாழும் எசுகிமோக்கள் கடுங் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தோலாடைகளையும் மென் மயிர்த் தோலாடைகளையும் அணிகின்றனர். ஆனால் வெப்ப மண்டலப் பகுதிகளில் வாழ்கிறவர்களுக்கு உடலுக்குக் காற்றோட்டம் தேவைப்படுகிறது. ஆகவே அவர்கள் குறைவான உடை அணிகிறார்கள்.

இரண்டாவதாக, உடை மானத்தைக் காப்பாற்று கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மக்கள் உடம்பு முழுவதையும் ஆடையால் மறைத்தார்கள். மைய மேற்கு நாடுகளில் வாழும் இசுலாமியர்கள் நீண்ட அங்கிகளை அணிகின்றனர். ஆண்கள் கழுத்தி லிருந்து கணுக்கால் வரையிலும் நீண்ட அங்கிகளை அணிகிறார்கள். மானத்தைப் பேண உடம்பை முழுவதும் மறைக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவ்வாறே பெண்களும் நீண்ட அங்கிகளை அணிகிறார்கள். தலையிலிருந்து கால் வரையிலும் உடம்பை மறைக்கும் அங்கிகளை அணி கிறார்கள். முகத்தை ஒரு மெல்லிய திரையால் மூடிக் கொள்ளுகிறார்கள். முகத்தை மூடுவதுதான் மானத்தைக் காக்கும் என்று அப்பெண்கள் கருது கிறார்கள். முகத்தை மூடாமல் இருப்பது நிருவாணத்துக்குச் சமம் என்றும், ஆகவே, முகத்தை மூடாமல் போனால் மானம் போகும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இதன் காரண மாகவே அவர்கள் முகத்திரை அணியாமல் வெளி யில் செல்வது கிடையாது. 1930-ஆம் ஆண்டு அள வில் ஈரானில் பெண்கள் முகத்திரை இடுவது தடை செய்யப்பட்டபோது, பல வயதான பெண்கள் வீட்டை விட்டு வெளியே வாராமல் வீட்டுக்குள் ளேயே முடங்கிக் கிடந்தார்கள். இலாவோசில் (Laos) வாழும் இலாமெட்டு (Lamet) மக்களிடையே தொடக் கத்தில் பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை எதுவும் அணியாமல் வாழ்ந்து வந்தனர். இருபதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் தாய்லாந்துப் பெண் களைப் பார்த்து அவர்கள் மார்புச்சட்டையும், பாவாடையும் அணியும் வழக்கத்தை மேற்கொண்ட னர். அதன் பிறகு அவர்கள் மார்புச் சட்டையின்றி வெளியே செல்லுவதில்லை. மார்புச்சட்டை அணியத் தொடங்கியதும், மானத்தைக் காக்க அது வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படத் தொடங்கியது. இந்த எண்ணமே இப்பொழுது இந்தியப் பெண்களுக்கு இருக்கிறது. ஆடை சற்றுக் கிழிந்திருந்தால் கூட அது அவமானமாகக் கருதப்படுகிறது.

மூன்றாவதாக, உடை அலங்காரத்துக்கு உதவு கிறது. அலங்காரத்துக்கு அணிகலன்கள் மட்டுமன்றி ஆடைகளும் பயன்படுகின்றன. வண்ண வண்ண வடி வங்களில் ஆண் பெண் இருபாலாரும் – குறிப்பாகப் பெண்கள் உடை அணிவது அலங்காரத்துக்கே. அலங்காரத்துக்கு மெருகு ஊட்டுவதற்காக உடை களில் கண்ணாடிகள், பொன்னிழைகள், வண்ணக் கரைகள், குஞ்சரங்கள், மடிப்புகள், பூ வேலைப்பாடு கள் வைக்கப்படுவதுமுண்டு.

நான்காவதாக, உடை அணிபவரின் சமூகத் தகுதிநிலையை வெளிக்காட்டுகிறது. அணிபவ ருடைய தகுநிலை எப்படிப் பட்டது என்பதை உடை வெளிப்படுத்துகிறது. உரோமப் பேரரசில் (கி.மு. 207-கி.பி. 476) அரசர்களும் போர்ப்படைத் தளபதி களும் நீதிபதிகளும் செந்நீல ‘டோகா’ க்களையே அணிந்திருந்தனர். சாதாரண குடிமக்கள் வெண்ணிற ‘டோகா’ க்களையே அணிந்திருந்தனர். பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னர் பிரான்சில் அரச குடும்பத்தினர் மட்டுமே பட்டாடைகளும் சூரியகாந்திப்பட்டு (Velvet) ஆடைகளும் அணிய உரிமை கொண்டிருந்த னர். அவ்வாறே இங்கிலாந்திலும் முதலாம் எலிச பெத்து ஆட்சிக் காலத்தின்போது (கி.பி. 1558-1603) அரச குடும்பத்தினர் மட்டுமே சூரியகாந்திப்பட்டு உடைகளை அணியும் உரிமை கொண்டிருந்தனர். சைனாவில் முன்பு மஞ்சள் நிற ஆடைகள் உயர் வகுப்பினருக்கு மட்டுமே உரியனவாக இருந்தன. எகிப்து, பாபிலோனியா, அல்சீரியா, பாரசீகம் முத லிய நாடுகளில் அரச குடும்பத்தினரும் செல்வர்களும் விலையுயர்ந்த பகட்டான ஆடைகளை அணியும் உரிமை கொண்டிருந்தனர்.

இன்றைக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லா விடினும் அவரவர் வயதுத் தகுநிலை, திருமணத் தகு நிலை, செய்தொழில் தகுநிலை ஆகியவற்றிற் கேற்ப ஆடை அணியும் வழக்கம் இருக்கிறது. இளங்குழந்தை களுக்கு என்று தனி உடை வகைகள் இருக்கின்றன. குழந்தைகள் பெரிய பிள்ளைகளாகும்பொழுது அப் பருவத்திற்கேற்ற ஆடைகள் அணிகின்றனர். பிறகு பெரியவர்களாகும்போது அப்பருவத்திற்கு ஏற்ப உடைகள் அணிகின்றனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒருவன் திருமண வயதை எய்தும்போது அதிக ஆடை கள் அணிவதன் மூலம் தன் வயதுத் தகுநிலையைத் தெரியப்படுத்துகிறான்.

உலகில் சில நாடுகளில் கைம்பெண்களுக்கென்று தனி உடை வகைகள் இருக்கின்றன. மேலை நாடு களில் கறுப்பு உடையும், இந்தியாவில் வெள்ளைச் சேலையும் பெண்களின் கைம்மை நிலையை வெளிப் படுத்துகின்றன. முன் காலத்தில் சைனாவில் சிவப்பு ஆடைகள் சுமங்கிலிகளுக்கும் வெள்ளை ஆடைகள் கைம்பெண்களுக்கும் உரித்தாக இருந்தன.

பல்வேறு துறைகளில் பணியாற்றுவோருக்கென்று இன்று தனித்தனி உடை வகைகள் இருக்கின்றன. மருத்துவர்கள், செவிலியர், இராணுவத்தினர், காவலர், இரயில்வே தொழிலாளிகள் என்ற பல தரப்பட்ட செய்தொழில் வகுப்பினர் தத்தமக்கென்று ஒரு சீருடை கொண்டிருக்கின்றனர். ஒரே பிரிவில் பணியாற்றுவோரும் (எடுத்துக் காட்டாக இராணுவத்தினர்) தத்தம் படிநிலைக் கேற்ப ஒரு தனிச் சீருடை கொண்டிருக்கின்றனர். சி.என்.ந.

துணை நூல்கள்:

கந்தையா, ந.சி., தமிழகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1972.

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, உடையலங்காரமும் நகையலங்காரமும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1982.

**Hoebel**, E., Adamson, Man in the Primitive World: An Introduction to Anthropology, McGraw-Hill Book Company, New York, 1958.

**உடைமை மீட்பு உரிமை**: உடைமையை வேறொருவரிடம் கொடுத்தபோது தன்னுடன் நிறுத்தி வைத்துக் கொண்ட உரிமையின்படி உடைமையைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளும் உரிமை உடைமை மீட்புரிமை (Right of re-entry)எனப்படும். இத்தகைய உரிமை சாதாரணமாகக் குத்தகையில் இடம் பெற்றிருக்கிறது. சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 111, உட்பிரிவு (எ)-இன்படி, குத்தகை விடுபவர் குத்தகை எடுத்தவர் வெளிப்படையான நிபந்தனை ஒன்றினை மீறும்போது உரிமையை மீட்கலாம் என்ற உரிமையைப் பெற்றிருந்தால், இந்த உரிமையைச் செயற்படுத்தலாம். இத்தகைய நிபந்தனை சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 31-இன் படி, ஏற்கனவே இறங்கியுள்ள சொத்தை அல்லது உரிமையை இழப்பதற்குக் காரணமாகக் கூடிய பின் நிபந்தனை (Condition Subsequent) ஆகும்.

ஓர் உடைமை மீட்புரிமை இருக்கிறதென்றால், அதனுடன் பின்னடை உரிமை கொண்ட சொத்து ஒன்றும் இருக்கிறது என்பது பொருள். உடைமை மீட்பு உரிமை சொத்துரிமையுடன் இணைந்த ஒன்று. இந்த உரிமையை மட்டும் சொத்திலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து உரிமை மாற்றம் செய்ய முடியாது. ஆ.ச.

**உடைமையும் அரசியலுரிமையும்**: சட்டம், நீதி, உரிமை, அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் முதலிய கருத்துகளை முதன்முதலில் ஆராய்ந்து திட்டவட்டமான இலக்கணங்களை வகுத்தவர்கள் பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர்களாகிய பிளேட்டோ, அரிசுடாட்டில் முதலியோர் ஆவர். இவர்கள் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தனர். இவர்கள் தாம் வாழ்ந்த நகரரசு (City State) என்னும் சமூக அமைப்பையும், அதனுடைய சில தனிப்பட்ட இயல்புகளையும் பின்னணியாக வைத்து இக்கருத்துகளை ஆய்வு செய்தனர். சுய சிந்தனையாளராகிய சாக்ரட்டீசின் (Socrates) மாணவராகிய பிளேட்டோ (Plato )கி.மு. 427-ஆம் ஆண்டுமுதல் கி.மு. 347-ஆம் ஆண்டு வரை ஏதென்சு (Athens) நகரரசில் வாழ்ந்து, 'அரிசுடாட்டில் போன்ற சிறந்த மாணவர்களுக்குத் தமது கழகத்தில் (Academy) தமது அரசியற் கருத்துகளை விளக்கி (இலட்சியக்) குடியரசு (Republic), அரசியலறிஞர் (Statesman), சட்டங்கள் (Laws) முதலிய அரிய நூல்களை எழுதினார். ஓர் இலட்சியக் குடியரசு நாட்டில் அரசியலறிவு அல்லது மெய்யுணர்வு பெற்றவரே ஆட்சி செய்தல் வேண்டும்; அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்; அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும் என்ற கருத்துகளை அவர் கூறுகிறார். ஆளுதல் என்பது பிழையற உணர்ந்த அறிவுடைமை ஒன்றையே சார்ந்திருக்கும் தொழில் ஆகும். ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளை மற்றவர்களின் வாயிலாக ஒருவருக்கொருவர் நிறைவு செய்து கொள்ளுதலே சமூகம் ஆகும். இவை இரண்டும் பிளேட்டோவின் மையக் கருத்துகள் ஆகும். நீதி (Justice) என்பது அறிவாற்றல், உணர்ச்சி யாற்றல், வீரம் அல்லது ஊக்கப் பண்பு ஆகிய மூவகை இயல்புகளையுமுடைய மனித சமுதாயத்தில் யாவரிடையே யும் நல்லிணக்கத்தையும் (Harmony) நல்ல ஒழுங்கையும் (Discipline) ஏற்படுத்தும் பண்பு (Virtue) என்று பிளேட்டோ தமது இலட்சியக் குடியரசு என்ற நாலில் கூறுகிறார்.

குடியரசு என்ற நூலில் பிளேட்டோ கூறும் உடைமை உரிமை பற்றிய கருத்து: இலட்சியக் குடியரசில்அறிவாற்றல் மிக்கோரே ஆளுவோராகையால், அவர் காவலர் (Guardian Class) வகுப்பையும், வீரம் அல்லது ஊக்கப் பண்புடையோர் போர்வீரர் வகுப்பையும் (Warrior Class), உணர்ச்சி ஆற்றலுடையோர் தொழிலாளர் வகுப்பையும் (Workers Class) சேர்ந்தவராவர். காவலராதற்குரிய பயிற்சி பெறுதற்குச் சில தகுதிகளை உடையவர்கள் குடிமக்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நாட்டிற்கு நன்மை செய்யக் கூடிய மனவளர்ச்சியும். உணர்ச்சி காரணமாக நல்ல நோக்கத்தினின்றும் வழுவிவிடாத மனஉறுதியும் உடையவர்களாக ஆகும் பொருட்டு

அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். போர் வீரர்களும் இவ்வாறே தகுதியுடைய குடிமக்க ளிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி கொடுக்கப்படுதல் வேண்டும். இலட்சியக் குடியரசில் காவலரையும், போர் வீரர்களையும் பொறுத்தவரை யில் தனியார் உடைமை உரிமை இல்லை. பொது வுடைமையே (Communism) நடைமுறையிலிருக்கும். காவலர் நீதிபதிகளாக அலுவல் செய்பவராதலால் அவர்கள் மனித இயல்பை அறிந்தவராகவும், நற் பண்பு எது என்றும் தீய பண்பு எது என்றும் அறிந்த வராகவும் இருத்தல் வேண்டும். தங்களுடைய ஆன்மா, உடல் ஆகிய இரண்டையும் அவர்கள் பேணுதல் வேண்டும். ஆனும் காவலரும் போர் வீர ரும் தமக்கு இன்றியமையாத தேவைக்குக் கூடுதலா கத் தமக்கெனச் சொந்த உடைமை எதுவும் வைத் துக் கொள்ளுதல் கூடாது; தமக்கெனச் சொந்த வீடு வைத்துக்கொள்ளுதல் கூடாது. தமது தொழிலுக்காக அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை ஆண்டுதோ றும் (ஓராண்டு வாழ்க்கைக்குப் போதுமான அளவில்) குடிகளிடமிருந்து பெறுதல் வேண்டும். அளவு கடந்த செல்வநிலையும் வறுமை நிலையும் மனிதப் பண்பை அழித்து விடுகின்றன. செல்வம் ஆடம்பரப் போக்கை யும் சோம்பலையும் வளர்க்க, வறுமை சிறுமையை யும் கயமையையும் வளர்க்கிறது. காவலர் போர் வீரர் வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுபவராத லால், போர்வீரர் வகுப்புக்கும் உடைமை உரிமை இல்லை.

பிளேட்டோ தமது பொதுவுடைமைக் கருத்தை மாற்றுதல்: பிளேட்டோ தமது முதல் நூலில் தனி யார் உடைமை உரிமையை மறுத்துப் பொதுவுடை மையை ஆதரித்ததுபோலவே, காவலருக்கும் போர் வீரருக்கும் திருமண உறவை மறுத்து, குடும்பமும் பொதுவுடைமையாக இருத்தல் வேண்டுமென்று கூறினார். பின்னர் இக்கருத்துகளை அவர் தமது பிற்கால நூலாகிய 'சட்டங்கள்' என்ற நூலில் மறுத்து, சிறந்த அறிவும் பண்புமுடைய மக்களைப் பெறுவதற்குக் குடும்ப வாழ்வே ஏற்றதாகையால் நிலையான திருமண முறையும் தனிக்குடும்ப வாழ்க்கை முறையும் இன்றியமையாதவை என்றும், பொதுவுடைமை நடைமுறைக்கு ஒத்து வாராதாகை யால் தனியார் சொத்து உரிமைக் கொள்கையே ஏற்றது என்றும் ஒப்புக் கொள்ளுகிறார். இவ்வாறு அவர் தனியார் சொத்து உரிமைக் கொள்கையை ஒப்புக் கொண்டாலும், ஒரு பொருளாதாரச் சமத்து வக் கொள்கையை மனத்தில் வைத்து அவர் மேலும் சில கருத்துகளைக் கூறுகிறார்.

சமமான சொத்துரிமை இன்மையினால் விளை யும் தீமைகளினின்றும் நாட்டைப் பாதுகாப்பதற்கா கச் சில தற்காப்புகள் இருத்தல் வேண்டும். அரசியலில் எழும் பூசல்களெல்லாம் பொருளாதார அடிப்படை யில் காணப்படுகின்றன. அமைதியான அரசில் தீவிர மான வறுமையோ தீவிரமான செல்வநிலையோ இருத்தல் இயலாது. எனவே பொருளுடைமைகளைச் சமமாக ஆக்கும் பொருட்டுச் சட்டங்கள் இயற்றப்படு தல் வேண்டும். நாட்டின் விளைநிலங்கள் குடிமக்கள் யாவருக்கும் சமமான பங்குகளில் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். வேறு வழியில் செல்வம் சிலர் கைவசம் திரண்டுவிடாமல் தடுப்பதற்காகக் குடிமக்கள் வணிகச் செயல்களிலீடுபடாமல் தடுத் தல் வேண்டும். அயற் செலாவணிக்குத் தேவைப் படும் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அர சாங்கக் கருவூலத்தில் மட்டும் சேகரித்து வைக்கப் படுதல் வேண்டும். இவ்வாறு சட்டங்கள் செய்யப் பட்டாலும், சொத்து உடைமையில் சமத்துவம் ஏற் படாது. ஆகையால் தவிர்க்க இயலாத அளவில் சம மில்லாத சொத்துடைமை தோன்றும். அப்போது அதை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கம் அமைக் கப்படுதல் வேண்டும். அரசாங்க அலுவல்களெல்லாம் சொத்துத் தகுதியின் அடிப்படையில் பிரித்தளிக்கப் படுதல் வேண்டும். சொத்து உடையவர்கள் நான்கு வகுப்பார்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். முதல் வகுப்பில் அரசாங்கத்தால் பாதுகாப்பாகச் சமபங் கீட்டு முறையின் வாயிலாக நிலம் பெற்றவரும், இரண்டாம் வகுப்பில் முதலாம் வகுப்பாரொரு வரைப்போல் இருமடங்கு சொத்துடையவரும், மூன்றாம் வகுப்பில் மூன்று மடங்கு சொத்துடைய வரும், நான்காம் வகுப்பில் நான்கு மடங்கு சொத் துடையவரும் இருத்தல் வேண்டும். நான்கு மடங்குக் கும் கூடுதல் மதிப்புள்ள சொத்துடையவரிடமிருந்து அச்சொத்து அரசாங்கத்தால் விசாரணையின்றியே பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

பிளேட்டோவின் கருத்தைப் பற்றிய மதிப்பீடு: பிளேட்டோ முதலில் கூறிய பொதுவுடைமைக் கருத்து (சொத்து உரிமையைப் பொறுத்த பொது வுடைமைக் கருத்து) அவர்காலத்து இசுபார்ட்டா (Sparta) நகரரசிலிருந்து சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்புகளிலிருந்துவருவிக்கப்பட்டதாகும். இந்தக் கருத்தை அவர் புகழ்ந்தாலும், அவருடைய அறிவிற்சிறந்த மாணவராகிய அரிசுடாட்டில் அதை மறுத்துக் குடும்ப உரிமையும், தனி உரிமையுமே சிறந்த அரசுக்கு ஆதாரமானவை என்று சுட்டிக் காட்டினார். சமபங்கீட்டுக் கொள்கையோடிணைந்த பிளேட்டோவின் பிற்கால உடைமை உரிமைக் கோட் பாடும், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சொலோன்

(Solon) என்ற அறிஞர் ஏதென்சு நகரரசில் நிறுவிய அரசியலமைப்புக் கோட்பாட்டிலிருந்தே வருவிக்கப் பட்டது. இந்தக் கோட்பாட்டையும் நடைமுறையில் செயற்படுத்துவது எளிதன்று. எனவே சொலோனின் அரசியலமைப்பும் வலுவிழந்தது. குறிக்கோளளவில் காணும்போது, நீதியான அரசுக்கு ஆதாரமாக உள்ளது தீவிர நிலையிலில்லாத சமமான சொத்துரிமை என்ற பிளேட்டோவின் கருத்தை அரிசுடாட்டிலும் பிற்கால பல அரசியற் சிந்தனையாளரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். எனினும் தனியார் தன் முயற்சி உரிமைக் கொள்கையும், பொருள் பெருக்குவதற் குரிய பல அறிவியல் புதிய முறைகளும் பெருகியுள்ள இக்காலத்தில் பிளேட்டோ கூறும் சமமான சொத்துரிமைக் கோட்பாட்டிற்கும், பொருள் சேர்க்கும் இக்கால நோக்கத்துக்கும் முரண்பாடு தொடர்ந்து இருந்து வருகிறது.

துணை நூல்கள்:

**Barker, Ernest**, Greek Political Theory: Plato and His Predecessors, London, 1951.

**Barker, Ernest**, The Laws of Plato, Manchester, 1920.

**உடைய நங்கை** ஆழ்வார்களுள் ஒருவராகிய நம்மாழ்வாருக்குத் தாயார். இவர் திருவண்பரிசாரம் என்னும் ஊரில் வாழ்ந்த திருவாழ்மார்பர் என்பவருக்கு மகளாகப் பிறந்தார். ஆழ்வார் திருநகரி எனப் பெயரிய திருக்குருகூரில் பொற்காரியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் காரியார் என்ற பெயர் கொண்டு விளங்கும் தம் மகனுக்கு உடைய நங்கையாரை மணம் செய்விக்க விரும்பி, உறவினரோடு திருவண்பரிசாரத்திலுள்ள திருவாழ்மார்பரின் இல்லத்திற்குச் சென்று மணம் பேசினார். உடைய நங்கைக்கும் காரியாருக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் சிலநாள் திருவண்பரிசாரத்தில் இருந்தபின்னர்த் திருக்குருகூர் வந்தடைந்தனர். காரியாரும் உடையநங்கையும் தமக்கு ஒரு மகனை அளிக்கவேண்டும் என்று குருகூர்ப் பெருமானை வேண்டிக் கொள்ள, அவரும் 'நாமேவந்து பிறக்கிறோம்' என்று அருள் செய்தார். அவ்வாறு, பெருமான் அருளால் உடையநங்கைக்கும் காரியார்க்கும் தோன்றியவரே பிற்காலத்தில் நம்மாழ்வார் என்று சிறப்புற்று விளங்கியவர் ஆவார்.

**உடையவர்**: காண்க: எம்பெருமானார்.

**உடோப்பியச் சமநிலைக் கோட்பாடு**: சமூகத்திலுள்ள எல்லாச் செல்வ வளங்களும் தனியாருடைய உடைமைகளாக இல்லாமல், சமூகத்தவரனைவருக்கும் பொதுவுடைமையாக ஆக்கப்படுதல் வேண்டும். யாவருக்கும் அச்செல்வ வளங்களோடு தமது உழைப்பைக் கலக்கவும், உழைப்பின் பயன்களைத் துய்க்கவும் சமமான உரிமையும் வாய்ப்பும் இருத்தல் வேண்டும். இதுவே சமநிலைக் கோட்பாட்டின் சுருக்கமான பொருள் ஆகும். இத்தகைய சமநிலைக் கோட்பாட்டைப் பொதுவுடைமைக் கருத்தாக வடித்தெடுத்து ஓர் அரசியல் கோட்பாடாக முதல் முதலிற் கூறியவர் கி.மு. ஆறாம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளேட்டோ என்ற கிரேக்க அரசியற் சிந்தனையாளராவர். அடுத்து கி.பி. 1477-ஆம் ஆண்டிற்கும் கி.பி. 1535-ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்த சிறந்த ஆங்கிலக் கலை மறுமலர்ச்சி எழுத்தாளரும் (English Renaissance Writer), மனிதப் பற்றாளருமாகிய (Humanist) சர் தாமசு மூர் (Sir Thomas More) என்பவர் இலத்தீன் மொழியில் கி.பி. 1515-ஆம் ஆண்டில் எழுதி, 1516-ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது 'உடோப்பியா' (Utopia) என்ற நூலில் கூறியுள்ள சமநிலைக் கருத்துகள், 'உடோப்பிய சமநிலைக் கோட்பாடு' என்று கூறப்படும். உடோப்பியா என்ற சொல் எந்தவிதமான தவறும் அல்லது குறையும் இல்லாத பொருள்களெல்லாவற்றையும் தன்னிடத்தே உள்ள கற்பனை உலகு என்று பொருள்படும். இது மிகச் சிறந்த பொருளாதார, சமூக நிலைகளையுடைய ஒருவகைச் சமுதாயத்தைக் குறிப்பிடுவதாகும். ஆகையால் செயற்படுத்த இயலாத, கருத்தளவாகவே உள்ள சீர்திருத்தத் திட்டங்களைக் குறிப்பிடும்போது, அவற்றை உடோப்பியத் திட்டங்கள் எனக் கூறுதல் வழக்கம். நடைமுறையில் காணப்படாத மிகச் சிறந்த எடுத்துக்காட்டான ஒரு சமூகத்தை அவர் கற்பனை செய்து கொண்டு அதனைப் பற்றி விளக்கம் தருவதால், அச்சமூகத்தார் வாழ்ந்த ஒரு தீவுக்கு அவர் அளித்த கற்பனைப் பெயரே உடோப்பியா (Utopia) என்பதாகும். இத்தீவு புதிய உலகமாகிய அமெரிக்கக் கரைக்கப்பால் உள்ளதென்றும், இதற்கு மூன்று தடவை அமெரிகோ வெசுபூகியுடன் கடற் பயணம் செய்து போய்வந்த இராபேல் இதிலோடேய் (Raphael Hythlodaye) என்ற போர்ச்சுகீசிய மீகான் (Sailor), இவ்வியத்தகு தீவில் வாழ்ந்த நன்மக்களுடைய சமத்துவநிலையையும் செழிப்பையும் கல்வியையும் அறிவையும் விரித்துக்கூறுவதாகவும் இந்நூல் கூறுகிறது; இதன் ஆசிரியர் மூர் இக்கற்பனைச் சமூகத்தவருடைய நற்பண்புகளைக் கூறும்போது, தம்கால ஐரோப்பிய, ஆங்கிலச் சமூகத்தாரிடம் காணப்பட்ட சீர்கேடுகளையும் ஒப்பிட்டு வஞ்சப் புகழ்ச்சியாகக் (Satire) குறிப்பிடுகிறார். தாம்

காணும் கற்பனை நாட்டைப் பற்றிக் கூறும் நூலுக்கு 'நல்ல இடம்' (Good Place)என்றும், 'எங்கும் காணப் படாத தீவு' (Island of Nowhere) அதாவது கற் பனைத் தீவு என்றும் பொருள்கள் தரக்கூடிய உடோப்பியா என்ற கிரேக்கப் பெயரைத் தாமே புனைந்து இட்டார்.

மூர் கூறும் சமநிலைக் கருத்துகள்: இக்கற்ப னைத் தீவினராகிய உடோப்பிய மக்கள் சமநிலைக் கோட்பாட்டை (Socialism) அடிப்படையாகக் கொண்டு வாழ்தலால், அவர்களிடையே அக்கால ஐரோப்பிய மக்களிடையே காணப்பட்ட சீர்கேடுகள் காணப்படவில்லை; அதில் எல்லாக் குடிமக்களும் உணவுப் பொருள்களை விளைவித்தல், நெசவுத் தொழில், வீடு கட்டுதல், கல்வி பயிலுதல், தத்துவ ஆராய்ச்சி செய்தல், ஆட்சிப் பணிகளை நிறைவேற் றுதல், போர்த் தொழில்கள் செய்தல், சமயப் பணி கள் செய்தல் முதலிய எல்லாச் செயல்களையும் சம உரிமையோடு பங்கு கொண்டு செய்து கூட்டு வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களுடைய சமூகம் ஒரு கூட்டுறவு அரசியற் சமூகமாகும் (A Co-operative Common Wealth); திருமண முறை ஒன்று மட்டுமே இக்கூட்டு வாழ்க்கைக்கு விதிவிலக்காகும்; அதாவது ஒருவருக்கு ஒரு மனைவிதான் என்ற ஒரு மணமுறை யோடு (Monogamy) கூடிய இல்லற நெறியே உடோப்பிய மக்களால் மிகவும் கடுமையாகக் கடைப் பிடிக்கப்படுகிறது. இக்கற்பனை நாட்டில் முழுக்குடி உரிமை (Full Citizenship) பெறுதற்கு ஒருவருக்கு இருக்க வேண்டிய ஒரே தகுதி என்னவென்றால், இவ்வுலகத்தை ஆளுபவரும், இம்மைக்கு அடுத்தபடி யாக உள்ள அழியா மறுமை வாழ்வில் ஒவ்வொரு வருக்கும் அவரவருடைய செயலுக்குத் தக்க நன்மை யையோ தண்டனையையோ வழங்குபவரும், நலன் தருபவரும், நல்ல நெறிமுறையாளருமாகிய ஒப்பற்ற இறைவனிடம் நம்பிக்கையோடிருப்பதுதான். இவ் வாறு ஒரு நல்ல சமூகத்தின் பண்புகளைப் பற்றிக் கூறும் மூர், தம் காலத்தில் ஆய்வு செய்யப்பட்ட தண்டனை இயல் (Penology), இனமேம்பாட்டு இயல் (Eugenics), நோவு இல்லாத சாவு (Euthanasia), மண விலக்கு(Divorce), நாணயத்தில் கையாளப்படும் தங்க நிலைமுறை (Gold Standard), பெண்கள் உரிமைகள், தொடர்ந்து அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கல்வி முறை, பல்சமய முறை, சூழல் முறை (Ecology) முத லிய எல்லாப் பொருள்களைப் பற்றியும் தமது கருத்து களைக் கூறியிருக்கிறார்; அவ்வாறு கூறும்போது தம் காலத்திய ஐரோப்பாவில், முக்கியமாக இங்கிலாந்தில் காணப்பட்ட பொருளாதார, சமூகச் சீர்கேடுகளை இடித்துரைக்கிறார். கற்பனை நாடாகிய உடோப்பி யாவில் தனியார் உடைமை உரிமை இல்லாமல், சமூக உடைமையும் கூட்டுறவு உழைப்பும் சமத்துவ மும் இருப்பதால், அங்குத் தனியார் முதலாளித்துவ அமைப்பில் காணப்படுவதும் எல்லாச் சமூகத் தீங்கு களுக்கும் பிறப்பிடமாக இருப்பதுமாகிய பேராசை என்ற கொடிய நச்சரவத்துக்கு இடமே இல்லை என்று கூறுகிறார்.

தகாவழியில் ஆட்சி உரிமையைக்கைப்பற்றியவனா கிய மூன்றாம் இரிச்சர்டு (Richard III) என்பவனைப் பற்றித் தாமெழுதிய ஒரு நூலிலும்மூர், தம்காலத்திய ஆங்கிலச் சமூகத்தவரிடம் காணப்பட்ட வரம்பற்ற பொருள் சேர்க்கும் மனப்பான்மையை இகழ்ந்துரைத் தார். சமூகத்தில் பொருளாதாரச் சீர்கேடுகள் மலிந் திருத்தலால், குற்றங்களும் அவற்றை ஒடுக்குவதற்கு மிகவும் கடுமையான காட்டுமிராண்டித்தனமான குற்றஇயற் சட்டங்களும் பெருகுகின்றன; சட்டங்கள் கடுமையாக இருத்தலால் பயன் ஏதும் இல்லை; ஏனெனில் பெரும்பாலான மக்களுக்குப் பிழைப்பதற் குரிய ஒரே வழி குற்றங்கள் செய்தலே. 'திருடர்களை நீங்கள் தோற்றுவித்து விட்டுப் பின்னர் அவர்களைத் தண்டிப்பதைத் தவிர வேறு நீங்கள் என்ன செய்கி றீர்கள்?' என்று மூர் வினவுகிறார். சமூகத்தில் வேலை இல்லா நிலை தோன்றுதற்குக் காரணத்தை யும் ஆராய்கிறார். போர்வீரர் பயிற்சி அளிக்கப் பட்ட ஆட்கள் போர் நீக்கப்பட்ட காரணத்தால், வேலை இல்லாமல், தொழிலில் ஈடுபட வாய்ப்பும் இல்லாமல், சமூகத்தாருக்குப் பெரும் சுமையாக வந்து விடுகின்றனர். மிகவும் ஊதியத்துக்கு விலை போகிற ஆட்டுக் கம்பளியைப் பெருக்கும் பொருட்டு, விளைச்சல் நிலங்களெல்லாம் (Arable Lands) மேய்ச் சல் நிலங்களாக (Pasture) மாற்றப்படவே, அவற்றில் வேளாண்மை செய்து வாழ்ந்தவரெல்லாம் துரத்தப் படுகின்றனர்; இவ்வாறு வேளாண் தொழிலாளரையே அத்தொழில் காப்பாற்ற இயலாமற்போக, வேலை இல்லாத போர் வீரர்களுக்கும் வேலை கிடைப்பது அரிதாகிறது. இவ்வாறு ஆடுகள் வயல்களையே மேய்ந்து அழித்து உண்டுவிட, வயல்களோடு வீடு களும் நகரங்களும் வளமிழந்து மறைகின்றன. குடி யானவர் பட்டினி கிடக்கின்றனர். உயிர் வாழ்தற் காகச் சில வேளைகளில் திருட்டுத் தொழிலிலும் ஈடு படுகின்றனர். செல்வர்களோ பகட்டாக உடுத்தி, விருந்துண்டு காலங்கழிக்கின்றனர். இத்தகைய தீங்கு களை நீக்குதற்கு அரசாங்கம் யாதொரு முயற்சியும் செய்யாமல், சட்டம் என்ற போர்வையிலிருந்து கொண்டு மக்களிடமிருந்து கடும் வரிகளை வாங்கி, பயனற்ற, கேடுகளை விளைவிக்கக்கூடிய போர், நாடு பிடிக்கும் திட்டம் ஆகியவற்றைச் செயற்படுத்த

முனைகிறது. விளைச்சல் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றுதல், ஊர்ப் பொது நிலங்களைப் பெருநிலக்கிழார்கள் வேலி அடைப்புப் போட்டுத் தமது உடைமைகளாக எடுத்துக் கொள்ளுதல், வேலை இல்லாத அவலநிலை முதலிய சமூகக் கேடுக ளெல்லாம் உடோப்பியாவில் இல்லை. அங்கு அனை வரும் கூட்டுறவு முறையில் வாழ்ந்து உழைக்கின்ற னர் உழைப்பின் பயனை நுகர்கின்றனர்; கல்வி பெறுகின்றனர் இறையுணர்வும் ஒழுக்க உணர்வும் பெற்றுள்ளனர்; பொருளாதார ஏற்றத்தாழ்வோ களவோ வேலை இன்மையோ அந்நாட்டில் தலை காட்டுவதில்லை என்று மூர் உடோப்பிய மக்கள் வாழ்க்கையைச் சிறப்பித்துரைக்கிறார்.

மூரின் கருத்தைப் பற்றிய மதிப்பீடு: மூர் தமது உடோப்பியாவில் கூறியுள்ள சமநிலை அல்லது பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பற்றிப் பிற்கால ஆசிரியர்கள் பலரும் பல்வேறு விளக்கங்களைத் தந் துள்ளனர்; காரல் காட்சுகி (Karal Kautsky) என்ற செருமானியச் சமநிலைக் கோட்பாட்டாளர் மூர் பிற்கால உருசியப் பொதுவுடைமைப் புரட்சிக்கு (1917-ஆம் ஆண்டு) வித்திட்ட ஓர் அறிஞராவார் என்று புகழ்கிறார்; வரலாற்றாசிரியர்கள் எதிர் காலத்தில் ஆங்கிலப் பேரரசு (British Empire) உரு வாகப் போகிறதென்று முன்னரே மூர் தமது நூலில் எடுத்துக் காட்டினார் என்றும், எந்த ஒரு சாரா ரோடும் சேராத ஓர் அறிஞருடைய சிறந்த நடுவு நிலை நோக்கை உடோப்பியா எடுத்துக் காட்டுகிற தென்று இலக்கியத் திறனாய்வாளரும்,அது கிறித்தவ சமய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப் படும் முழுச் சீர்திருத்தத்தைக் கூறும் ஒரு திட்டம் ஆகு மென்று மனிதப்பற்றாளரும் (Humanists) மதிப்பீடு செய்கின்றனர். இக்காலப் புலவர்கள் உடோப்பியா வுக்குப் பிற்பட்ட காலத்தில் மூர் எழுதிய நூல்களை ஆராய்ந்து, உடோப்பியாவை அவர் எழுதுவதற்குத் தூண்டுதல்களாக இருந்த சூழ்நிலைகளையும் அவ ருடைய நகைச்சுவை ததும்பும் நடையையும் அளவு கோலாக வைத்தே அவருடைய நூல்களின் கருத்து களை மதிப்பிடுகின்றனர். அரசியல் ஆசிரியர் சி.எச். சபைன் என்பவர் (G.H.Sabine) மூர் தமது காலத்திய வாணிகப் பொருளாதார முறையைத் (Economics of Business Enterprise) தாக்கியதற்கு முக்கிய கார ணம் இடைக் காலத்தில்(Middle Ages) காணப்பட்ட தும், மூர்காலத்தில் மறைந்து கொண்டு வந்ததுமான கூட்டுறவுச் சமுதாயம்,(Co-operative Commonwealth) என்ற சமூகக் கோட்பாட்டில் அவருக்கு இருந்த நம் பிக்கையும் பற்றுமே ஆகும் என்று கூறுகிறார். ஒன்றோடொன்று ஒத்துழைக்கும் பல்வேறு வகுப்பு களை உடையதாகச் சமூதாயம் அமைதல் வேண்டு மென்ற பிளேட்டோவின் கருத்தை மூர் ஏற்றுக் கொண்டார். சமூகத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பும் பொது நலனுக்கு ஏற்ற ஒரு பணியைச் செய்து, மற்ற வகுப்புகளின் சம உரிமையில் தலையிடாமல் தனக் குரிய ஊதியத்தைப் பெறுகிறது; இம்முறையில் தனி யார் முயற்சிக்கு வழி கிடையாது. அரசினுடைய ஒழுக்க இயல் சார்ந்த நோக்கம் யாதெனில், நல்ல குடிமக்களையும் அறிவியல் ஒழுக்க உரிமை உடை யோரையும் உருவாக்குதலே ஆகும்; அது சோம் பேறித்தனத்தையும் கடும் உழைப்பையும் நீக்கி, யாவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை அளித்து ஆடம்பரத்தையும் பொருளழிவையும் ஒழித்து, வறு மையையும் செல்வ மிகுதியையும் குறைத்து, பொருட் பற்றையும் பொருட்பறிப்பையும் மிகவும் குறைத்து, மனவளர்ச்சிக்கு முழு உரிமை வழங்குதல் வேண்டும். மிகவும் சிறப்பான ஒழுக்க இயற்கருத்து ஏதேனும் ஒன்று இருக்குமானால், அது நிச்சயமாக மூர் கூறும் உடோப்பியக் கருத்தே ஆகுமென்று சபைன் மதிப் பிடுகிறார். ஏனென்றால், அவருடைய காலத்தில் சமயப் போர்கள் நிகழக்கூடிய சூழ்நிலைகளும், இக்கால வாணிக முறை தோன்றக்கூடிய சூழ் நிலைகளும் இருந்தனவாகையால், மூர் எடுத்து இயம்பிய கூட்டுறவு வாழ்க்கை முறைக்கும் மனிதப் பண்புக்கும் இடமில்லாமற் போயிற்று. இது மறைந்து கொண்டு வந்த ஒரு பழைய கருத்தை எடுத்துக் காட்டிய ஒரு நூலே தவிர, புதிதாக வந்து கொண்டி ருந்த ஒரு காலத்தின் கருத்தை எடுத்துக்காட்ட வில்லை.

மூரின் சமநிலைக் கருத்துகளை இராபர்ட்டு ஓவன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் செயற்படுத்து தற்கு எடுத்த முயற்சியும் பயனும்: ஆங்கில நாட்டில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் தில் மிகவும் செல்வாக்குடனிருந்த உடோப்பியச் சம நிலைக் கோட்பாட்டாளர்களுள் இராபர்ட்டு ஓவன் (Robert Owen கி.பி. 1771-1858) என்ற வேல்சு நாட்டுத் தொழிலதிபர் முக்கியமானவர். சிறுவயதில் ஒரு தொழிலாளரிடம் வேலைக்கமர்ந்த இவர் தமது உழைக்கும் திறமையினால் முதலாளிகளின் ஆதர வைப் பெற்று, நூற்பாலை ஒன்றை இலங்காசயரில் நியூலானார்க்குப் (New Lanark) பட்டணத்தில் தாமே வாங்கி, அவ்வூரில் குற்றமனப்பான்மையிலும் சுகாதாரச் சீர்கேடுகளிலும் வாழ்ந்த 2000 மக்களை யும் சீர்திருத்தும் நோக்கத்துடன், அவர்களுடைய வீட்டு வசதிகளையும் துப்புரவு நிலைகளையும் சீராக்கி, சிக்கனமாக வாழும் பழக்கத்தை அவர் களுக்குக் கற்றுக் கொடுத்தார், நல்ல தரமான பொருள்களை வாங்கிய விலைக்குச் சிறிதளவே கூடுதலான விலைக்கு விற்கக்கூடிய ஒரு பண்ட

சாலையை (Store) நிறுவியதோடு குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். முதலில் அவரைச் சிறிது ஐயப்பாட்டுடனே நோக்கிய உள்ளூர் மக்கள், பின்னர் அவருடைய நற்செயல்களை உணர்ந்து நம்பிக்கை கொண்டு ஆதரவளித்தனர். அவருடன் தொழில் நடத்திய பங்குதாரர்கள், அவருடைய சீர்திருத்தத் திட்டங்கள் மிகவும் செலவுக் குரியவையாகையால் அத்திட்டங்களுக்கு ஆதரவளிக்க விரும்பவில்லை. எனவே அவர் அவர்களை விட்டு விலகி, முதலீட்டிற்கு 5% மட்டுமே ஊதியம் பெற முன்வந்த பயன்வழிக் கோட்பாட்டாளராகிய செரிமி பெந்தம் (Jeremy Bentham, the Utilitarian Political Thinker), வில்லியம் ஆலன் முதலியோரைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு, பழைய தொழில் நிறுவனத்தை வாங்கி நடத்தினார். அவர் தொழில் நடத்திய நியூலானார்க்குப் பட்டணத்துக்குச் சமூகச் சீர்திருத்தவாதிகளும் அரசியலறிஞர்களும் அரச குடும்பத்தவரும் வந்து கண்டு, வியந்து பாராட்டிச் சென்றனர். அங்கு வளர்ந்த குழந்தைகளெல்லாம் உடல் நலமும் வளமும் நற்பண்புமுடையவராகப் புகழ்பெற்றனர். அவருடைய தொழில் நிறுவனமும் வாணிக முறையில் செழித்து வளர்ந்தது. தொழிலாளர் பணிநேரக் கட்டுப்பாடு, இடர்ப்பாடில்லாத பணிச் சூழ்நிலை, துப்புரவான வீட்டு வசதி, தொழிலாளருக்குக் கணிசமான ஊதியம் முதலிய தொழிலாளர் சீர்திருத்தத்துக்காக எவரும் எந்த முயற்சியும் செய்யாத அந்தக் காலத்தில், ஓவன் தாமே முன்வந்து, தொழிலாளர் நலச் சட்டங்கள் உடனே இயற்றப்படுதல் வேண்டுமென்று துணிந்து, கி.பி. 1815-ஆம் ஆண்டில் ஓர் இயக்கம் நடத்தினார் இதற்கு ஆதரவு கிடைக்காததனால், இவருடைய இயக்கத்துக்கு உடனடியாக நற்பயன் எதுவும்கிடைக்கவில்லை. எனினும். பிற்காலத்தில் பிரிட்டனில் ஏற்பட்ட சமநிலைக் கோட்பாட்டின் (Socialism) வளர்ச்சிக்கும், கூட்டுறவு இயக்கத்துக்கும் (Co-operative Movement) இவர் ஒரு முன்னோடியாக விளங்கினார் எனலாம்.

ஓவன் செயற்படுத்திய சமநிலைக் கோட்பாடு: மனித உழைப்போடு இயந்திரங்கள் போட்டி போடுதலால்,தொழிலாளர்களுக்குநீங்காத் துன்பம் ஏற்படுகிறது. இதை நீக்க ஒரே வழி மனிதனுக்கு உட்பட்டதாக இயந்திரங்களைக் கட்டுப்படுத்தி உழைக்கும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்தான். வறியோருடைய துன்பத்தைப் போக்குதற்கு இது ஒன்றே வழி ஆகும். அப்போது (ஓவன் காலத்திலிருந்த) நடைமுறையிலிருந்த சமய நெறி முறைகள் வறுமையைப் போக்குதற்குச் சிறிதும் பயன்படவில்லை; அதற்குப் புதிய வழி ஒன்றைக் காண வேண்டிய தேவை ஏற்பட்டது. மனிதனுடைய பண்பாடு அவனால் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலைகளினாலேயே உருவாக்கப்படுகின்றபடியால், மனிதப் பண்பாட்டைச் சரியான முறையில் உருவாக்குவதற்கேற்ற ஒரே வழி அவனை அவனுடைய இளமையிலிருந்தே தக்க சூழ்நிலைகளில் வளருமாறு செய்தலேயாகும். மனிதனுடைய பொறுப்பற்ற போக்கும் அவனுடைய தொடக்ககால வாழ்க்கைச் சூழல் நிலைகளுமே ஓவனை ஒரு புதிய கல்வித் திட்டத்தையும், மனித சமூக மேம்பாட்டுத் திட்டத்தையும் வகுக்குமாறு வழிகாட்டின. ஒற்றுமையும் கூட்டுறவும் என்ற அடிப்படையில் ஊர்கள் அமைக்கப்படுமானால் வேலை இன்மையை நீக்க இயலும். ஒவ்வோர் ஊரிலும் ஏறக்குறைய 1200 பேர் 1500 ஏக்கர் பரப்பளவில் வாழத்தக்கதாக, ஒரு பெரிய பொதுவான வீடு ஒரே அடுக்களையுடனும் பல உணவருந்தும் கூடங்களுடனும் ஒவ்வொரு குடும்பமும் இருப்பதற்குத் தனித்தனி அறைகளுடனும் கட்டப்படுதல் வேண்டும். குழந்தைகள் 3 வயது வரை பெற்றோராலும் பின்னர்ச் சமுதாயத்தாலும் வளர்க்கப்படுதல் வேண்டும். அத்தகைய சமுதாயத்தில் வேலையும் பயனும் யாவராலும் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். வறுமையை (Pauperism) ஒழிப்பதற்கு ஓவன் பரிந்துரைத்த இந்தத் தன்னிறைவுச் சமுதாய வாழ்க்கையை (Self – Contained Communities) அவர் இலண்டனில் எடுத்துரைத்த போது, அதை மக்கள் பலர் வரவேற்றாலும் அவர் சமய நெறித்துறைகளை மறுத்ததனால், அவர் பலருடைய ஆதரவை இழந்தார். அவர் அமெரிக்காவில் இந்தியானா (Indiana) மாநிலத்தில் நியூ ஆர்மனி (New Harmony) என்னுமிடத்தில் 30,000 ஏக்கர் நிலத்தை வாங்கி, அதில் எடுத்துக்காட்டுத் தன்னிறைவுச் சமுதாயத்தை அமைத்தார். அந்த அமைப்பு அவருடைய நேர்மேற்பார்வையிலிருக்கும் வரையில் நல்லமுறையில் செயற்பட்டு வந்தது. பின்னர், அங்கு இருக்க வேண்டிய ஆட்சி அமைப்பு, சமய நெறிமுறைகள் ஆகியவை பற்றிக் கருத்து வேறுபாடுகள் தோன்றவும், ஓவன் பெரும் பொருள் நட்டத்துடன் இவ்வமைப்பிலிருந்து விலகிவிட்டார். வேறு பல இடங்களிலும் ஓவன் முறைச் சமுதாயங்கள் பலரால் நிறுவப்பட்டன. சமுதாய அமைப்பு மாறாத வரையில், வெறும் சமுதாயச் சீர்திருத்தங்களால் பயன் இல்லை என்னும் அவருடைய கருத்துக்கும், அவருடைய தன்னிறைவுச் சமுதாயக் கருத்துக்கும் இளம் தொழிலாளர்கள் ஊக்கத்துடன் ஆதரவளித்தனர். இவற்றுக்காகக் கழகங்கள் அமைக்கப்பட்டு, மாத, வார, நாள் ஏடுகள் வெளி

யிடப்பட்டன. ஓவனின் கோட்பாடு (Owenism) தன்னாட்சியுடைய தொழிற்சாலை முறையைத் (Self Governing Workshop) தோற்றுவித்தது. இத்தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்குரிய சந்தையாகத் தேசிய சமத்துவ தொழிலாளர் விற்பனை நிலையம் (National Equitable Labour Exchange) கி.பி. 1832-ஆம் ஆண்டில் தோன்றிற்று. இதனுடைய அடிப்படைக்கொள்கை, 'எல்லாச் செல்வங்களுக்கும் தோற்றுவாயாக இருப்பது உழைப்பே ஆகும்' என்பதாகும். இதுவே எல்லா வகைச் சமநிலைக் கோட்பாடுகளுக்கும் பொதுவான ஒரு கொள்கை ஆகும். இதை ஆதாரமாக வைத்தே ஓவன் தம் கல்வி, ஒழுக்க, அறிவியல், திருமணம் பற்றிய சீர்திருத்தக் கருத்துகளை உருவாக்கினார். அவர் தமது கொள்கையைப் பரப்பச் செய்த முயற்சிகளின் பயனாக ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தொழிற்சங்கம் தோன்றிற்று. அவற்றையெல்லாம் கூட்டாட்சி முறையில் இணைத்துத் தேசிய தொழிற் சங்கங்களின் பேரிணையம் (1834) (Grand National Consolidated Trades Unions) தோன்றிற்று. இதற்குத் தொழிலாளர்கள் வரவேற்பு இருந்தாலும், முதலாளிகளும் அரசாங்கமும் நீதிமன்றங்களும் இவ்வியக்கத்தை வெகுவிரைவில் ஒடுக்கி விட்டன. ஓவனிடம் அவர் தம் முதுமைக் காலத்தில் அவருடைய கருத்துகளை அவருக்குப்பின் எந்தனைபேர் செயற்படுத்த உள்ளனர் என்று அமெரிக்கச்சிந்தனையாளர் வால்டோ எமர்சன் என்பவர் (Waldo Emerson) கேட்க, அதற்கு அவர் 'ஒருவருமில்லை' என்று விடை அளித்தாராம். இவ்வாறிருந்தாலும் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதற்குத் தம்முயற்சி ஒன்றையே நம்பித் துணிந்து செயலாற்றியவர் ஓவன்தாம் என்பதையும், அவருடைய சமுதாய வாழ்க்கைக் கருத்துகளே உலக முழுவதும் இப்பொழுது பரவியுள்ள நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்துக்கு (Consumers' Co-operative Movement) அடித்தளமாக அமைந்தன என்பதையும் எவராலும் மறுத்தல் இயலாது. சர் தாமசு மூர் கூறும் உடோப்பியக் கற்பனைக் கருத்துகள் பிளேட்டோ கூறும் குடியரசைப் போலக் கருத்தளவில் கொள்ள வேண்டிய ஒரு நோக்கமேயன்றிச் செயற்படுத்துதற்குரிய ஒரு நோக்கம் அன்று.

துணை நூல்:

**Sabine, George H.**, A History of Political Theory, Oxford & IBH. Publishing Co., Calcutta, 1961.

***உண்டவல்லி*** ஆந்திர மாநிலக் குண்டூர் மாவட்டத்தில் கிருட்டிணா ஆற்றங்கரையில் அமைந்துள்ள சிற்றூர். இங்கு கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைகள் உள்ளன. அனந்தசயனக்குடி என்னும் பெயரால் இக்குடைவரைகள் குறிக்கப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் இக்குடைவரைகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மிக நல்லநிலையில் இருந்ததாகவும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் இக் கோயிலுக்குத் தானங்கள் வழங்கியதாகவும் குறிப்பிடுகின்றன. இக்குடைவரைக் கோயில் 4 தளங்களை உடையது, அடித்தளம் முற்றுப் பெறாத நிலையில் காணப்படுகிறது. அடித்தளத்தின் கூரைகளைத் தூண்கள் தாங்குமாறு குடையப்பட்டுள்ளன. அடித்தளத்தில் மண்டபமும் தூண்களால் பிரிக்கப்பட்ட ஏழு தலைவாயில்களும் உள்ளன. அடித்தளத்தின் மேலுள்ள முதல்தளம் அடித்தளத்தைவிடப் பரப்பில் பெரியது. இத்தளத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. இத்தளத்தில் காணப்படும் சிற்பங்கள் யாவும் திருமாலைப் பற்றியன. வடபக்கத்தில் மூலக் கோயிலை ஒட்டி ஒரு சிறிய கோயில் உள்ளது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையிலுள்ள நடுப்பகுதி மிகப்பெரியது. இங்கு ஏறத்தாழ 3 மீ. சதுரமான கருவறையும் 9 மீ. பக்கமுள்ள மண்டபமும் உள்ளன. நான்கு வரிசையாகத் தூண்கள் மேல் கூரையைத் தாங்கி நிற்கின்றன. கருவறையில் மூலவர் சிலையின் அடிமேடை மட்டும் உள்ளது. கோயிலின் முன் மண்டபத்தின் பின் பக்கச் சுவர்களில் திருமாலின் அவதாரங்கள் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவை பிற்காலத்தில் செதுக்கப்பட்டவையாகும். இத்தளத்தில் உள்ள யானையின் சிற்பம் ஒன்று அழகு மிக்கதாக உள்ளது. மேல் தளத்திற்குச் செல்ல நடுமண்டபத்திலிருந்து படிகள் உள்ளன. ஆனால் அடித்தளத்தில் இருந்து இத்தளத்திற்குச் செல்லப் படிகள் இல்லை. முதல் தளத்தின் அமைப்பிலிருந்து இத்தளம் பல்லவ அரசர் மகேந்திர வர்மன் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இத்தளத்தில் உள்ள துவாரபாலகர் சிற்பங்களும் பல்லவர்கால அமைப்பை உடையனவாகும்.

இரண்டாம் தளம் 9 மீ. அகலமும் ஏறக்குறைய 17 மீ. நீளமும் உள்ள மண்டபத்தையும் தென்மூலையில் 4 மீ.சதுரமான சிறிய அறையையும் வட கோடியில் ஒரு நீண்ட சதுரமான கருவறையையும் கொண்டு விளங்குகிறது. கருவறையில் அனந்தசயனரின் பெரிய சிலை ஒன்று உள்ளது. நடுமண்டபத்தில் தூண்கள் நான்கு வரிசையில் உள்ளன. தூண்களில் மிக நேர்த்தியான முறையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வைணவச் சிற்பங்கள் பல இத்தூண்களில் உள்ளன. முகப்புத் தூண்கள் இரண்டின் அடிப்பாகத்தில் சிங்க



உண்டவல்லி குடைவரைகள்

உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் பல்லவர் காலத் தூண்களின் அமைப்பை ஒத்துள்ளன. மண்டபத்தின் பின்சுவரில் ஆழ்வார்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. சைவச்சிற்பங்கள் சிலவும் உள் ளன. அனந்தசயனரின் உருவச்சிலையும் திருமாலுக் குரிய பிற சிற்பங்களும் இக்குடைவரைகளில் காணப் படுவதால், இது முதலில் திருமாலுக்குரிய கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் பல்லவர் காலச் சிவன் கோயில்களில் பொது வாகத் திருமாலின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலின் அமைப்பு சைவ உருவங்களுடைய மாடங்கள், அருகிலுள்ள மலையிலுள்ள கோயில் களில் சிவலிங்க வழிபாடு ஆகியவை யாவும் உண்ட வல்லி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சைவர்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இரண்டாம் தளத்தின் முகப்பில் கூரையற்ற முற்றம் ஒன்று உள்ளது. இதன் வட முனையில் மேலே மூன்றாம் தளத்திற்குச் செல்ல வழி உள்ளது. தென் முனையில் ஆண் உருவச் சிலை ஒன்றும் அதன் இருபக்கத்திலும் இரண்டு பெரிய சிங்கங்களின் உருவங்களும் காணப்படுகின் றன. ஆண் உருவச்சிலையின் தலைப் பகுதி சிதைந்து காணப்படுகிறது. இச்சிலை இக்குடைவரைகளை அமைத்த மன்னரின் சிலையாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மூன்றாம் தளம் முற்றுப் பெறா நிலையில் உள் ளது. இதில் முற்றம் ஒன்று கூரையற்றுக் காணப்படு கிறது. மூடப்பட்ட முகப்பு ஒன்றும் இத்தளத்தில் உள்ளது. இந்தக் குன்றிலேயே மற்றும் சில குடை வரைகள் காணப்படுகின்றன. இவை முற்றுப்பெறாத நிலையில் உள்ளன. உண்டவல்லிக் குகைக்கோயில் ஒன்றின் மேல் ஒன்றாகக் குடையப்பட்ட மூன்று தனிக் கோயிலாகும். இக்குடைவரைகள் மகேந்திர வர்மன் காலத்தைச் சார்ந்த மூன்று மாடக் கோயி லுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோயி லாகும். இக்குகைக் கோயில் தூண்களில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கிருட்டி ணன் கோவர்த்தன மலையைத் தூக்கி நிற்கும் காட்சியும் அடுக்கடுக்காக வைக்கப்பட்ட மட்பாண் டங்களைச் சுமந்து நிற்கும் ஆய்மகள் ஒருத்தியின் புடைப்புச் சிற்பமும் சிறப்பு வாய்ந்தவை. இங்குள்ள சிற்பங்கள் வாதாபி, மாமல்லபுரம், திருச்சிராப் பள்ளி, தேவகர் போன்ற இடங்களில் காணப் பெறும் புடைப்புச் சிற்பங்களை ஒத்துள்ளன.

**உண்டாட்டு** புறப்பொருள் திணைகளுள் ஒன் றாகிய வெட்சித்திணையில் அமைந்த ஒரு துறை. இதன் நேர்பொருள் 'உண்டு மகிழ்ந்து ஆடுதல்' என் பதாகும். தொல்காப்பியர் கருத்துப்படி, பகைவர்தம் ஆநிரைகளைக் கவர்தலும், அவ்வாறு கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டலும் வெட்சித் திணையாகும். பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்களும், அவற்றை மீட்டுக்கொண்டு வந்த வீரர் களும், தாம் பெற்ற வெற்றி மகிழ்ச்சியால் தம் சுற் றத்தாருடன் கள்ளுண்டு மகிழ்ந்து ஆடுவது இயல்பு. இதுவே உண்டாட்டு எனப்படும். இதனை நச்சி னார்க்கினியர், 'நிரை கொண்டார் தாம் கொண்ட நிரையைப் பகுத்துத் தாம் கொண்ட மகிழ்ச்சியால் சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரைமீட்ட கொற்றத்தால் உண்டாடுதலும்' என்று விளக்கியுள்ளார். இதற்கு எடுத்துக்காட்டாக, மதுரைப் பேராலவாயார் பாடி யுள்ள 'நறவுந் தொடுமின்' எனத் தொடங்கும் புற நானூற்றுப் பாடலையும், பிறிதொரு பாடலை யும் காட்டியுள்ளார்.

நிரைகவர்தலை வெட்சி என்றும் அதனை மீட் டலைக் கரந்தை என்றும் இருவேறு திணையாகக் கொண்ட புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், இத்துறையினை வெட்சித் திணையில் மட்டும் கூறி, அதற்குத் 'தொட்டிமிழுங் கழல் மறவர், மட்டுண்டு மகிழ்தூங்கின்று' என்று இலக்கணம் வகுத்துள்ளார். அதன் உரையாசிரியர் இத்துறையினைக் 'கட்டியார்க் கும் வீரக்கழலினையுடைய தறுகண்ணர் மதுவை யுண்டு மனங்களித்து ஆடியது' என்று விளக்கியுள் ளார். நிரைகோடலில் நிரையினைக் கவர்ந்து கொள் ளுதலும் அடங்கும் எனக் கருதிய நச்சினார்க்கினியர்,

'இருவர்க்கும் கோடல் தொழில் உளதாயிற்று ஆதலின், அடித்துக் கோடலும், மீட்டுக் கோடலும் வெட்சியாயின' என்று குறிப்பிட்டுள்ளார். அதனால், உண்டாட்டு என்பது தொல்காப்பிய அடிப்படையில், ஆநிரைகளைக் கவர்ந்தும் மீட்டும் பெற்ற வெற்றியால் வீரர்கள் உண்டு மகிழ்ந்து ஆடுவதனையும் புறப்பொருள் வெண்பாமாலை அடிப்படையில் ஆநிரைகளைக் கவர்ந்தோர் உண்டு மகிழ்ந்து ஆடுவதனையும் குறிக்கிறது. புறநானூற்றில் சில பாடல்கள் (257, 258, 269, 297) இத்துறையில் அமைந்துள்ளன. அதன் பழைய உரையாசிரியர் இத்துறையினை விளக்கப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தையே எடுத்தாண்டுள்ளார் (புறம். 257, 258. பழைய உரை).

**உண்டியல்கள்** என்பவை கடன் கருவிகளில் ஒரு வகையினவாகும். இவை மாற்றுமுறை ஆவணச் சட்டத்திற்கு (Negotiable Instruments Act) உட்பட்டு வரையப்படும்பொழுது மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange) என்றும் பெயர் பெறுகின்றன. வணிகத்தில் பண்டங்கள் கடனுக்கு வாங்கப் படலும் விற்கப்படலும் இயல்பாகலின் உண்டியல்கள் (Hundies) எழுதுவதற்கான தேவை எழுகிறது. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட மனிதருக்கு அல்லது அவர்தம் ஆணைக்கு அல்லது அதனைக் கொணர்பவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும் வகையில் கட்டுப்பாடற்ற முறையில் ஆணையிட்டு, ஆவணத்தை உருவாக்குபவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணம் உண்டியலாகும். இயங்கும் முறை: இரு வணிகர்கள் கடன் அடிப்படையில் செயற்படுவதாகக் கொண்டால் அதில் ஒருவர் கடனாளி (Debtor), பிறிதொருவர் கடன் ஈவோர் (Creditor) ஆவர். கடன் ஈவோர்க்கு உடனடியாகப் பணம் வேண்டும்; ஆனால் பொருள்களை அங்காடியில் விற்ற பிறகே கடனாளி பணம் தரும் சூழ்நிலை உள்ளது. எனவே இவர்களிடையே எழும் பேரம் உண்டியல் மூலம் ஓர் ஒப்பந்தம் தோன்றிட வழி வகுக்கிறது. கடன் ஈவோர் கடனாளியின் மீது ஒரு மூன்று மாதக் கால உண்டியலை வரைய ஒப்புக் கொள்வதன் மூலம் இப்பேரத்தை நிறைவு செய்யலாம்.

இங்குக் கடன் ஈவோர் உண்டியலை வரைவோராவர் (Drawer); கடனாளி வரையப்படுவோர் (Drawee) ஆகிறார். கடன் ஈவோரால் உண்டியல் வரையபபட்டுக் கடனாளிக்கு அனுப்பி வைக்கப் படுகிறது. அவ் உண்டியலில் கடன் பெறுவோரின் பொறுப்பும் கடனைத் திருப்பித் தரும் தவணைக் காலமும் குறிப்பிடப்பட்டுள்ளன. கடனாளி இவற்றை ஏற்று, உண்டியலின் மேல் தம்முடைய ஏற்பினைத் (Acceptance) தெரிவிக்கிறார். உண்டியலை ஏற்றுக் கொள்ளும் நிலையில் கடனாளி ஏற்போர் (Acceptor) ஆகிறார். இவ்வாறு உண்டியலை ஏற்றுக் கொண்டதும் அவர் அப்போதைக்கு அப்பேரத்தினை நிறைவு செய்கிறார். மூன்று மாதங்கள் சென்ற பின் எவரிடம் உண்டியல் உள்ளதோ அவருக்கு உண்டியலில் குறிப்பிட்டுள்ளபடி கடன் தீர்வு செய்திட அவர் முன்வர வேண்டும்.

சிறப்பியல்புகள்: (1) உண்டியல் எழுத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். வாய்ச்சொல் உறுதியின் அடிப்படையில் இது உருவாக்கப் பெறுவதில்லை. (2) இது கடனுக்குப் பண்டங்களை விற்பனை செய்தவர் அவற்றை வாங்கியவர்மீது அப்பண்டங்களின் மதிப்புக்கான தொகையினைச் செலுத்திடுமாறு விடுக்கும் ஆணையாகும். (3) இவ் வாணைகட்டுப்பாடற்ற தன்மையையுடையது. (4) உண்டியல் எழுதுபவரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். (5) இவ் உண்டியல் மூலம் நிகழும் வணிகக் கொடுக்கல் வாங்கலில் மூவர் இடம்பெறுகின்றனர். கடன் வழங்குவோர் 'வரைபவர்' ஆவார். கடன் பெற்றோர் பெயரில் உண்டியல் வரையப்படுவதால் அவர் 'வரையப்படுபவர்' அல்லது 'ஏற்பவர்' ஆகிறார். இவரன்றி, உண்டியலுக்குரிய தொகையைப் பெற உரிமை பெற்றுள்ளோர் 'பெறுவோர்' (Payee) ஆவார். இம்மூவரும் எவரென உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (6) கொடுக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவென உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். (7) இவ் ஆவணம் பணத்தினைக் கொடுக்குமாறு மட்டுமே வரையப்படும் ஆணையாகும். (8) வரையப்படும் உண்டியல் எவர் பெயரில் வரையப்படுகிறதோ அவர் ஒப்புதலைப் பெற வேண்டும். இல்லையெனில் அது மதிப்பற்றதாகும். மேற்கூறிய இலக்கணங்களைக் கொண்ட உண்டியலின் மாதிரி ஒன்று கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

வகைகள்: மேலே காணும் மாதிரி உண்டியலில் காலக்கெடு வரையறுக்கப் பட்டுள்ளமை காணத்தக்கது. இது தவணை உண்டியல் (Time Bill) எனப் படுகிறது. இதுவன்றிக்கேட்டவுடன் பணம்கொடுக்கத் தக்க வகையில் எழுதப்படும் உண்டியல்களைக் கேட்பு உண்டியல் (Demand Bill) என்கின்றனர். உண்டியல்கள் அவை எழுதப்பட்ட நாட்டின் அடிப்படையில், அதாவது வரைபவர், வரையப்படுபவர் ஆகியோர் வாழும் நாட்டின் அடிப்படையில் உள்நாட்டு உண்டியல்கள் (Inland Bills), வெளிநாட்டு உண்டியல்கள் (Foreign Bills) என்றும் வகை செய்யப்படுகின்றன.

உரு. 5000/-

தஞ்சாவூர்,
1.1.85.

மூன்று மாதங்களுக்குப் பின்னர்த் திரு. சண்முகத்திற்கு அல்லது அவரது ஆணைக்குப் பண்டங்களைப் பெற்றுக்கொண்ட வகையில் உரு. 5000/- செலுத்துக.

| பெறுநர் | ஏற்கப்பட்டது | கையொப்பம் |
| --- | --- | --- |
| திரு. சண்முகம்,<br>கோட்டையூர்,<br>மதுரை.<br>(Payee) | சிதம்பரம்<br>(வரையப் படுபவர்)<br>(Debtor) | (வரைபவர்)<br>(Creditor) |

கேட்பு உண்டியல்வரையப்படுவோர் கால இழப்பின்றி உடன் பணம் பெறும் வாய்ப்புள்ளது. ஆனால், தவணை உண்டியலாயின் குறிப்பிட்டுள்ள தவணை முடிந்த பின்னரே பணம் கிடைக்கும். எனவே, அக் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர், ஓர் உண்டியலின் உரிமையாளர் அதற்குரிய தொகையைப் பெற விழையின், அதனை அவருடைய வங்கியிடம் கொடுத்துக் கழிவு செய்து (Discount) பெற்றுக் கொள்ளலாம். வங்கி தம் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளத் தக்க உண்டியல்களை ஏற்கும். இப்பணிக்கு ஈடாக, உண்டியலின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கழிவுத் தொகையாக எடுத்துக் கொண்டு மிகுதித் தொகையை வரைபவருக்குச் செலுத்திவிடும். இவ்வாறு உண்டியலில் காலத் தவணைக்கு முன்னர், அதற்குரியவர் அதனை ஒரு வங்கியிடம் கொடுத்து அதற்குரிய தொகையினைப் பெறுதல் உண்டியல் கழிவு செய்தல் எனப்படுகிறது. உண்டியலைக் கழிவு செய்து தந்த வங்கி அதனைத் தவணைத் தேதியில் வரைபவரிடம் கொடுத்து அதன் மதிப்பைப் பெற்றுக் கொள்கிறது. உண்டியல்கள் அவற்றின் உரிமையாளரால் 'மேல் எழுத்து'ச்(Endorsement)செய்வதன் மூலம், எளிதே பிறருக்கு மாற்றியளிக்கப்படுகின்றன. இவ்வகையில் உண்டியல் மிகவும் எளிதான கடன் கருவியாகும். கடன் ஈவோரிடமிருந்து உண்டியலை வாங்கிய நிதியாளராகிய வங்கிக்குத் தவணைக் காலத்திற்கு முன்னர்ப் பணம் தேவைப்படுமாயின், இந்த உண்டியலை வங்கி சந்தையில் மறு கழிவு (Rediscount)செய்து பணம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். இ.

பொதுவாக உண்டியல் தவணை உண்டியல், கேட்பு உண்டியல், உள்நாட்டு உண்டியல், அயல் நாட்டு உண்டியல், பணவசதி உண்டியல், ஆவணங்கள் சேர்ந்த உண்டியல், கொணர்பவர் உண்டியல்,கட்டளை உண்டியல், பொருள் மயக்கம் தரும் உண்டியல், நிறையுறாத உண்டியல், பெயரளவு உண்டியல், கருவூல உண்டியல், உண்டியல் கோவை, இடங்குறி உண்டியல் எனப் பதினான்கு வகைப்படும். அந்தந்த நாட்டு மொழிகளில் எழுதப்படுகின்ற உண்டியல்களும் உண்டு. இவை வணிகர்களின் பழக்க வழக்கங்

களையொட்டி நடைபெறுகின்றன. நாட்டு மாற்று முறை ஆவணச் சட்டதிட்டங்கள் இவற்றைக் கட்டுப் படுத்தா. ஆனால், அதில் ஈடுபடுபவர்கள் பழக்க வழக்கங்களை விடுத்துச் செயலாற்றினால் சட்ட முறைப்படி கட்டுப்படுத்தப்படுபவர்களின் சில உண்டி யல்கள் காசோலை போல் தோன்றுகின்றன. ஏற்பு எழுத்தில் இருக்க வேண்டிய தேவையில்லை. மறுப்பு அறிவிக்கை விடவேண்டிய தேவையுமில்லை. இவ்வகை உண்டியல்கள் இருவகைப்படும். (1) காட்டப்பட்டதும் பணம் செலுத்தக்கூடிய தர்சானி (Dharshani) என் பது. (2) குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பணம் செலுத்தக்கூடிய முடாட்டி அல்லது மியாடி (Muddat or Miadi) என்பது. மேற்கூறிய வகைகளைச் சார்ந்து பொதுவாகப் பழக்கத்திலிருக்கும் உண்டியல்களா வன: (1) சாசோக்கு (Shahjog), (2) நாம்சோகு (Namjog), (3) தானிசோகு (Dhonijog), (4) சோக்மி (Jokmi) எசு. சோவாபி (S. Jowabi).

சாசோக்கு என்ற உண்டியலில் மேலெழுதுதல் தேவையில்லை.இது குறுக்குக் கோடிடப்பட்ட காசோ லைக்குச் (Crossed Cheque) சமமாகும். நாம்சோகு என்ற உண்டியல் யாருடைய பெயரில் எழுதப்பட் டுள்ளதோ அவருக்குத்தான் பணம் செலுத்தப்படும். ஆணை பெற்றவருக்குத் தரக் கூடிய முறையான ஓர் ஆணை ஆவணம் என்றும் இதைச் சொல்லுவர். கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதுதான் தானி சோகு என்ற உண்டியல். தானி என்றால் உரிமை யாளர் அல்லது பெற்றிருப்போர் என்று பொருள் படும். சோக்மி என்பது ஒரு கட்டுப்பாடான உண்டிய லாகும். உண்டியல் எழுதப்பட்ட தொகையைச் சரக் குகள் வந்தால்தான் செலுத்த வேண்டும் என்ற கட் டுப்பாட்டை இவ் உண்டியல் ஏற்றுள்ளது. மாற்றுச் சீட்டையும் காப்பீட்டு ஒப்பந்தத்தையும் சார்ந்த ஓர் ஆவணமாக இது தோன்றுகிறது. பணம் முன்னதா கச் செலுத்துவதற்கும், கப்பல் பாதுகாப்பாக வந்த டைந்த பின் பணத்தைப் பெறுவதற்கும் உள்ள வேறு பாட்டை இது விளக்கும். உண்டியலைப் பெற்றுள் ளோரிடம் சரக்குக்கான பணத்தைத் தரச்சொல்லி வாங்குவோரிடம் விற்போர் கேட்டுக் கொள்வார். சரக்குகளைப் பெற்ற பிறகுதான் உண்டியலில் குறிப் பிடப்பட்ட பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாட் டுடன் வாங்குவோர் இதனை ஏற்றுக் கொள்கின்ற னர். காப்பீட்டு நிறுவன இழப்பை இது ஏற்கிறது. எனவே, இவ்வகையான உண்டியல் வாங்குவோருக் கும் விற்போருக்கும் நன்மை பயக்கிறது. விற்போருக் குப் பணம் வருகிறது. வாங்குவோருக்குச் சரக்குகள் வந்தாலொழிய பொறுப்பில்லை. சோவாபி என்பது பணம் செலுத்தியவருக்குப் பணம் பெறுபவர் தரும் பதில் கடிதம் போலுள்ள பற்றுச்சீட்டு(Receipt)ஆகும். ஒருவர் மற்றோரிடத்திலுள்ள ஒருவருக்குப் பணம் அனுப்ப வேண்டுமானால் பெறுபவக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதை வங்கியரிடம் தருகிறார். வங்கியர் மேலெழுதிப் பெறுபவர் இடத்திலிருந்து அண்மை யிலுள்ள வங்கிக்கு அனுப்புகிறார். பெறுபவரும் பெற்றுக்கொண்டு பதில் கடிதம் போன்ற பற்றுச் சீட்டு தருகிறார். இந்தப் பற்றுச் சீட்டு முன் போலவே எழுதுபவரை அடைகிறது. உண்டியல் ஏற்கப் படாதபோது அதை முன்னர் வைத்திருந்தவர்கள் பயன்படுத்த அளிக்கும் பாதுகாப்புக் கடிதத்திற்குச் சிக்கிரிச் சிட்டு (Zikkiri Chit) என்று பெயர். மாற்றுச் சீட்டை மதிப்பதற்கு ஏற்கும் ஒருவரின் நிலையைப் போல் இது தோன்றுகிறது.

பயன்கள்: உண்டியல் பயனுள்ள பல நோக்கங் களை நிறைவேற்றுகிறது. இக்காலத்தில் அது பணப் பொருளாகவும் பணத்திற்குச் சரியான பதிலியாகவும் (Substitute) திகழ்கிறது. 1) ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மதிப்பு வாய்ந்த பொருள் களை (Valuable Goods) மாற்றுவதற்கு இவ்வுண்டி யல் பயன்படுகிறது. 2) தொலைதூரத்திலுள்ள இடங்களுக்கு நீர்மைப் பணத்தை (Liquid cash) அனுப்பாமல் கணக்குகளை முடிக்க இது பயன்படு கிறது. 3) கடன் உரிமை மாற்றத்திற்கு இது எளிய உறுதியான வழியை அளிக்கிறது. 4) வழக்கு களில் இது கடனுக்கு எளிய சான்றாகப் பயன்படு கிறது. 5) எதிர்காலத்தில் உள்ள அல்லது பின் தேதியிலுள்ள செலுத்து உண்டியலில் கடனாளர் முன்னதாகவே கொஞ்சம் தள்ளுபடி கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பின்னர், இவர் வங்கியிடம் விற்றுப்பணத்தைப்பெற்றுக்கொள்ள லாம். 6) உண்டியலில் பணம் செலுத்துவதற்கு இடம், காலம் போன்றவை குறிப்பிட்டிருந்தால் கடனைக் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகவும் அதிகமாக வும் ஆக்கிடலாம். 7) ஏற்பவர் உண்டியலில் கையெழுத்திடுவதால் அப்பொறுப்பை நிறைவேற்ற அவரால் ஆனதை முயற்சி செய்வார். இல்லாவிட் டால் அதன் விளைவு இன்னல் தரும்.

எவ்வகை உண்டியலாயினும் அதில் பணம் செலுத்துவதற்கான ஆணை, செலுத்த வேண்டிய தொகை முதலியன குறிப்பாகவும் தெளிவாகவும் பொருள் மயக்கமின்றியும் எழுதப்பட்டிருக்க வேண் டும்.குறிப்பிடப்பட்டுள்ள காலவரை முடிந்த பின்னர்ப் பணம் செலுத்தப்பட்டாலும் அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட்ட பின்னரும் உண்டியலிலுள்ள ஆணை கட்டுப்பாடற்றதாகத்தான் இருக்கும். நிகழ்ச்சி ஏற்படும் காலம் வேண்டுமானால் உறுதி

யாகச் சொல்ல முடியாமலிருக்கலாம். ஆனால், அது நிகழ்வது உறுதியாக இருக்க வேண்டும். மேலும், அப்பணம் எதிர்கால வட்டியுடன் திகழ வேண்டும். வட்டிவீதமும் குறிப்பிடப்பட வேண்டும். இது ஆவணத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்காது; அதன் உறுதித் தன்மையையும் குறைக்காது. இக் கட்டுப்பாடு கடனுறுதிச் சீட்டுக்கும் பொருந்தும்.

கே. என். இரா.

துணை நூல்கள்:

**Redy, P,N. & Gulshan, S.S.,** Principles of Business Organisation and Management, Eurasia Publishing House Private Limited, New Delhi, 1978.

**Kandasamy, P.S.,** The Essence of Mercantile Law, Sahaya Achagam, Tiruchirappalli, 1971.

**உண்டு செட்டு சிக்ரிடு (கி.பி. 1882-1949)** நார்வேநாட்டைச் சேர்ந்த பெண்எழுத்தாளர். இவர், தென்மார்க்கிலுள்ள (Denmark) கல்லன் போர்க்கு என்னுமிடத்தில் கி.பி. 1882-ஆம் ஆண்டு மே 20-ஆம் நாள் பிறந்தார். இவர் தாய் தேனிய (Danish) நாட்டவர்; தந்தையார் நார்வே நாட்டைச் சார்ந்த இவ்வால்டு மார்ட்டின் உண்டுசெட்டு ஆவார். இவர் ஒரு தொல்லியல் வல்லுநர். இளமையிலேயே தம் தந்தையை இழந்தமையால், சிக்ரிடு (Undset Sigrid) கல்லூரிக் கல்வி பெறாது அலுவலகம் ஒன்றில் பணிபுரிய நேர்ந்தது. பணிபுரியுங் காலத்திலேயே கதைகள் முதலியன எழுதத் தொடங்கினார். அலுவலகப் பணியை



உண்டு செட்டு சிக்ரிடு

விடுத்து, முழு நேரமும் எழுதும் பணியில் ஈடுபட்டார். உரோமாபுரியிலுள்ள கலைமாணவரின் கதை பற்றிய 'சென்னி' (Jenny) என்னும் இவரது புதினம் இவருக்குப் புகழைத் தந்தது. இவர் ஆண்டர்சு. சி. சுவர்சுடென் என்னும் ஒரு கலைஞரை மணந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் அவரை விட்டுப் பிரிந்தார். இவர் தம் 42- ஆம் வயதில் உரோமன் கத்தோலிக்கச் சமய வாழ்வினை மேற்கொண்டார். இவர் இடைக்கால நிலைமை பற்றிக் கூறும் 'இரிசுடின் லெவரன்சுடட்டர்' (Kristin - Lavransdatter) என்னும் வரலாற்றுப் புதினத்தினைப் படைத்தார். மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்ட இப்புதினம் மக்களிடையே மிக்க செல்வாக்குப் பெற்று இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்தது. இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த வரலாற்றுப் புதின இலக்கியத்திற்காக இவருக்கு 1928-ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. செருமானியர் நார்வே நாட்டின் மேல் படையெடுத்த போது, இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தப்பிச் சென்று சில ஆண்டுகள் வாழ்ந்தார். 1945-ஆம் ஆண்டில் நார்வே நாடு திரும்பிய இவர், பல புதினங்களையும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றையும் மொழி பெயர்ப்பு நூல்களையும் இயற்றினார். இவர் 67-ஆம் வயதில் (10.6.1949) நார்வேயிலுள்ள இலில்லி ஆமர் (Lille Hammer) என்னும் நகரில் காலமானார்.

**உண்டு வில்கெல்ம் (கி.பி. 1832-1920):** அறிவியல் சார் உளவியல் என்ற புதிய துறை உருவாவதற்குச் சிறந்த பங்காற்றியவர் உண்டு வில்கெல்ம்(Wundt, Wilhelm) என்னும் அறிஞர் ஆவார். இவர் சோதனைசார் உளவியலுக்கு அடிகோலியவர் என்றும் சோதனைசார் உளவியலின் தந்தை என்றும் குறிப்பிடப்படுவர். மேலும், இவர் முதன் முதலில் உளவியலுக்காகச் சோதனைக் கூடத்தை ஏற்படுத்தியவர் என்பதாலும் உளவியல் துறையின்சிறப்பு மிக்கவராகக் கருதப்படுகிறார்.

உண்டு வில்கெல்ம் மேற்குச் செருமனியிலுள்ள நெக்காரோ (Neekarau) என்னுமிடத்தில் கி.பி. 1832-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் பிறந்தார். இவர் தம் படிப்பை ஐடல்பர்கு என்னும் பல்கலைக் கழகத்தில் முடித்தார். இப்பல்கலைக் கழகத்திலேயே பதினேழு ஆண்டுகள் உடலியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பிறகு கி.பி. 1874-ஆம் ஆண்டில் இலெப்பப்சிக்கு என்ற பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். இப்பல்கலைக் கழகத்தில்தான் கி.பி.1879-ஆம் ஆண்டில் முதல் சோதனைக் கூடத்தைச் சோதனை உளவியலுக்காகத் (Experimental Psychology) திறந்து வைத்தார். இச் சோதனைக் கூடம் உளவியல் துறை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும்.

இச்சோதனைக் கூடம் பல நாடுகளிலிருந்த மாணவர்களை ஈர்த்தது. இதுவே உளவியல் துறையைத் தத்துவத் துறையிலிருந்து பிரித்துத் தனித்தியங்கும் ஒரு புதிய துறையாக உருப்பெற வழி செய்தது.

இவரது முதல் ஆய்வறிக்கை 'சிறு நீரில் சோடியம் குளோரைடு' என்பதாகும். 'இயற்பியல்சார் தத்துவ ஆய்வு' (Philosophische) என்ற திங்களிதழை கி.பி. 1881-ஆம் ஆண்டில் தொடங்கினார். இவ்விதழின் மூலம் தம் ஆய்வுகளையும் சோதனைக் கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளையும் வெளியிட்டார். 'நாட்டுப்புற உளவியல்'(Folk Psychology) என்ற தலைப்பில் பத்துத் தொகுதிகளை வெளியிட்டார்.

பெரும்பாலோர் உண்டு வில்கெல்மை ஓர் உளவியலறிஞர் என்று மட்டும் கருதினர். காரணம் இத்துறையின் மூலமாகவே இவர் பலருக்கும் தெரிந்தவரானார். ஆனால், இவர் தம்மை ஒரு தத்துவ அறிஞர் என்றும் பண்பாட்டு வரலாற்றாளர் என்றும் கருதினார். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டிலிருந்து தாம் இறக்கும் வரை பல நூல்களை எழுதிக் கொண்டிருந்தார். தம் அளவை யியல் (Logic) என்ற நூலை விரிவுபடுத்தி மூன்று தொகுதிகளாகப் பதிப்பித்தார். இவருடைய பெரிய படைப்புகளுள் இது சிறப்பானது. இதில் உளவியல்சார் சிந்தனை போன்ற கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அறநெறியியல் (Ethics), தத்துவ அமைப்பு முறை (System des philosophie) போன்ற பல நூல்களையும் இவர் எழுதினார். தம் 'நாட்டுப்புற உளவியல்' என்ற நூலில் மொழி, புனைகதைகள், சமயம், கலை, சமூகம், சட்டம், பண்பாடு, வரலாறு போன்ற பல கருத்துகளை விளக்கியுள்ளார். மனிதப் பண்பாட்டின் வரலாற்றை ஆய்வு செய்த இவர், மனிதனின் சிந்தனை இயல்பையும் உளச் செயல்களையும் அகநோக்கு முறையின் மூலம் சோதனைக் கூடத்திற்குள் ஆய்வு செய்வது இயலாது என்பதைக் கண்டார். ஆகவே, தம் 'உடலியல்சார் உளவியல் கோட்பாடு' என்ற நூலில் சிந்தனையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

அமைப்பியல் கோட்பாடு (Structuralism) என்ற உளவியல்கோட்பாட்டை உருவாக்குவதற்குக் காரணமானவர் வில்கெல்ம் ஆவர். உளவியல் என்பது அனுபவத்தைப் பற்றி விளக்குவதாகும் என்று இவர் கருதினார்; அதாவது, தம் நனவுநிலை உளத்துடன் தொடர்புடைய அனுபவத்தைப் பற்றி விளக்குவதென்று கருதினார்; குறிப்பாக, மனத்தின் அமைப்புப் பற்றி விளக்குவதென்று கருதினார்; எந்த ஒரு சிக்கலையும் அறிய முற்படும்பொழுது அதைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

வில்கெல்மின் சோதனைகள் பெரும்பாலும் புலன் சார்ந்தனவாகவும் (Sensory) புலன்காட்சி இயங்கும் தன்மை பற்றியனவாகவும் இருந்தன. இதன் விளைவாகப் புலன் உணர்வுகள் (Sensations), உருவம் (Images), உணர்வுகள் (Feelings)ஆகிய மூன்று அடிப்படைக் கூறுகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தார்.

இவர் தம் சோதனைக் கூடத்தில் குறிப்பாக இரு குறிக்கோள்களின் அடிப்படையில் ஆய்வுசெய்தார். ஒன்று, புலன் உணர்வு (Sensations), புலன் காட்சி (Perception) ஆகியவை பற்றியதாகும். இதில் ஐம்புலன்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்விற்கு பெக்னரின் (Fechner) உள இயற்பியல் முறைகள் பின்பற்றப்பட்டன. மற்றொன்று, மறிவினையாற்றும் நேரத்தை அறிவதாகும். இதை இவர் கழித்தல் முறை(Subtractive Procedure)என்று குறிப்பிட்டார். இதன் மூலம் இவர் புலன் உணர்விற்கு 0.1 நொடிகள் தேவைப்படுகின்றன என்ற முடிவிற்கு வந்தார். இதே முறையில் அறிதல், இயைதல் (Association), பிரித்தறிதல் ஆகியவை போன்ற பலவற்றிற்கும் உரிய கால அளவைக் கண்டறிந்தார்.

உளவியல் வரலாற்றில் சிறப்பானவராகக் கருதப்படும் இவருடைய கருத்துகள் பலவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தாலும் புதிய உளவியல் துறையின் அடிப்படைக்கு வித்திட்டவர் இவரே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வே.க.

துணை நூல்கள்:

**Morris Charles, G.**, Psychology: An introduction, Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1979.

**Bourne, Lyle E., Ekstrand, Bruce K.**, Psychology, CBS College Publishing, New York, 1982.

**உண்ணாமுலை எல்லப்ப நயினார்** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருவண்ணாமலைக்கு மேற்கில் 25 கல் தொலைவில் உள்ள தாழைநகர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். சைவ சமயத்தைச் சேர்ந்த இவர் வன்னியகுல சத்திரிய மரபினராவர். இவர் எல்லன், எல்லநயினான், காலிங்கராயன்,எல்லபூபதி, எல்லான், காலிங்கராயன், உண்ணாமுலை எல்லப்ப நயினார், எல்லான்காலிங்கராயன் ஆகிய பெயர்களாலும்அழைக்கப்பட்டார். இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர். இவர் சிறந்த தேவி வழி

பாட்டாளராகத் திகழ்ந்துள்ளார். சக்தி என்னும் தேவியின் வழிபாட்டினைச் சிறப்பிக்கும் யாமளை சாத்திரப் பயிற்சி மிக்குடையவர். இவரது உரை விளக்கங்களால் யாமள தந்திர நூல்கள் தெளிவுபடுத் தப்பட்டன. இவர் பல திருக்கோயில்களில் சத்தி தெய்வத்திற்கான பிரதிட்டைகள் அமைத்து, சத்தி வழிபாடு தழைத்தோங்க வழி செய்தார். இச்செய்தி 'தண்டாத (கா) கித் தலத்துவிடை பஞ்சசத்தி கண்டானெல் லன்காலிங் கன்' என்று முடியும் வெண் பாவால் தெரிகிறது 'அண்ணாமலையார் தம் பாகத் தம்மையுமம்மையைச் சூழ்பஞ்ச சத்தியுமே' என இவ ரைப் பற்றியுள்ள சாசனப் பாடல் தொடரால் பஞ்ச சத்தி திருவண்ணாமலையில் அம்மன் சந்நிதிக்குள் அமைந்துள்ளமை தெளியலாம். இவர் பாடிய கல் வெட்டுப் பாடல்களால் சிவநேசன், உலகநாதர் ஆகிய இரு துறவிகளின் தூண்டுதலினால் செவ்வப்ப நாயக்கர் என்ற அரசர் கி.பி. 1572-இல் திருவண்ணா மலை அருணாசலேசுவரர்கீழைக் கோபுரத்தைக் கட்டி முடித்தார் என்னும் செய்தி புலனாகிறது.

இவர் வீரைக் கவிராச பண்டிதரியற்றிய சௌந் தரியலகரிக்குச் சிறந்த உரையும், திருவாரூர்க் கோவை, திருவருணையந்தாதி, திருவிரிஞ்சைப்புரா ணம், திருப்பாலைப்பந்தல் உலா ஆகிய நூல்களை யும் இயற்றியுள்ளார் என்று கூறுவாருமுளர். திருக் கோவலூர் வட்டத்திலுள்ள திருப்பாலைப்பந்தல் என்ற ஊர்க்கல்வெட்டினால் எல்லப்ப நயினார் திருப்பாலைப் பந்தல் உலாவை இயற்றினார் என் பது தெரியவருகிறது. திருவாரூர்க்கோவை டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களால் அரும்பதவுரையு டனும் ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் சிறந்த முறை யில் அச்சிடப் பெற்று அண்மையில் வெளியிடப்பட் டுள்ளது. திருவருணைக்கலம்பகம் இயற்றிய சைவ எல்லப்ப நாவலர் இவரின் வேறானவராவார். அவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும்.

**உண்ணாயி வாரியர்** சிறந்த மலையாளக் கவிஞர். கோட்டயம் தம்புரான் காலத்திற்குப் பின்னர்க் கதகளி இலக்கியம் விரிவடைந்தபோதிலும் அபிநயத்திற்கு ஏற்றனவாகவும், இசைச் சிறப்புடை யனவாகவும், இலக்கியத்தரம் உடையனவாகவும் அமைந்தன சிலவேயாகும். இவ்வாறமைந்த சில இலக்கியங்களுள் தலைசிறந்து விளங்கும் நளசரி தத்தை இயற்றியவர் உண்ணாயிவாரியர். இவரது நளசரிதம் கதகளி இலக்கியத்துறையில் மட்டுமல்லா மல், பொதுவான மலையாள இலக்கியத் துறையிலும் முதன்மைபெற்றுத் திகழ்கிறது. இவர் இந்த நூலோடு, 'கிரிசா கலியாணம்' 'சீராம பஞ்சசதி' என்னும் வேறு நூல்களையும் இயற்றியுள்ளார் என்று கூறப்படு கிறது. எனினும், நளசரிதம் மட்டுமே இவரை மலையாளக் கவிஞர் வரிசையில் முதலிடம் பெறச் செய்யும் சிறப்புற்றுத் திகழ்கிறது. பாரதத்திலுள்ள நளகதை இவருடைய நளசரிதத்திற்கு மூல நூலாக அமைந்தது.

இவருடைய காலம் பற்றிக் கருத்து வேறுபாடி ருப்பினும், இவர் கி.பி. 1675-ஆம் ஆண்டிற்கும் 1775-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதி யில் வாழ்ந்தவராவார் என்று தெரிகிறது. இவர் இரிஞ்ஞாலக்குடா என்னும் ஊரில் அகத்தூட்டு வாரியத்தில் பிறந்தவர். அவ்வூரிலுள்ள மாணிக்கம் கோயிலில் 'கழக' வேலை (மாலைகட்டும் தொழில்) பார்த்து வந்தார். இவருடைய இயற்பெயர் உண்ணி ராமன். உண்ணிராமன் வாரியார் என்னும் பெயரே மருவி உண்ணாயி வாரியர் என்று வழங்கப்பட்டது. இவர் மலையாளமும் வடமொழியும் நன்கு கற்றுச் சிறந்த கவிஞராக விளங்கினார்.

இவருடைய நளசரிதம் ஒப்பற்ற கற்பனைத் திறன் வாய்ந்தது. ஆங்கிலநாட்டுச் சேக்சுபியரின் கலையுணர்வையும் வாழ்க்கைத் தத்துவங்கள் பற் றிய சிந்தனைகளையும் நினைவுபடுத்தும் பகுதிகள் இதன்கண் நிரம்ப உள்ளன. இந்நூலை இவர் நான்கு காண்டங்களாகப் பகுத்துள்ளார். இவர் அற்புதமாகப் படைத்துள்ள இந்நூலின் சிறப்பால் கதகளி, உயர்ந்த இலக்கியத்தரத்தினை அடைந்துள்ளது. பொதுவாகக் கதகளியில் சோபன முறைப்பாடல்களே இடம் பெறும். இவர் தமது நளசரிதத்தில் சோபன முறை யோடு தேசிய முறையையும் பின்பற்றிப் பாடல் களை அமைத்துள்ளார். அதனால், இவருடைய பாடல்கள் கேரள மக்களால் பெரிதும் பாராட்டப் படுகின்றன.

இவரைக் கார்த்திகைத் திருநாள் மகாராசா ஆதரித்தார். அம்மன்னரே பல ஆட்டக்கதை நூல் களை இயற்றியுள்ளார். அவர் திருவனந்தபுரம் அரண்மனையில் 'கொட்டாரம் கதகளி யோகம்' (அரண்மனைக் கதகளிக் குழு) ஒன்றினை நிறுவினார். உண்ணாயி வாரியர் முதலிய ஆட்டக்கதை ஆசிரியர் களை அரசவையில் இடம்பெறச் செய்தார். இவருக் குத் திருவாங்கூர் மன்னர் நிலம் பரிசாக வழங்கி னார்.

**உண்ணா விரதம்**: மக்கள் தங்கள் மனத்தி லுள்ள எண்ணங்கள் நிறைவேறவேண்டுமென்று உண்ணா நோன்பு (விரதம்) இருப்பது நீண்ட நாட்க ளாகப்பாரத நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு பழக்கமாகும். குழந்தை இல்லாதவர்கள் மகப்பேறு வேண்டியும், திருமணமாகாதவர்கள் நல்லவாழ்க்கைத்

துணையைப் பெற வேண்டியும், வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களிலிருந்து விடுபடும் பொருட்டும், மறுமையில் நல்லநிலை அடைய வேண்டியும் மக்கள் தங்களுடைய விருப்பமான தெய்வங்களை நினைத்து உண்ணா நோன்பு இருத்தல் பண்டைய பழக்கமாகும். பொதுவாக, ஆண்களை விடப் பெண்களே மிகுதியாக உண்ணா நோன்பு நோற்பர். ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியனை வணங்கியும், திங்கட் கிழமைகளில் சந்திரனையும் சிவபெருமானையும் வணங்கியும், செவ்வாய்க் கிழமைகளில் அங்காரகனையும் முருகனையும் வணங்கியும், புதன் கிழமைகளில் புதனையும் கலை மகளையும் வணங்கியும், வியாழக் கிழமைகளில் குரு பகவானை வணங்கியும், வெள்ளிக் கிழமைகளில் திருமகளையும் பராசக்தியையும் வணங்கியும், சனிக் கிழமைகளில் திருமாலை வணங்கியும் உண்ணா நோன்பு நோற்றல் நீண்ட காலமாக இந்து மதத்தில் இருந்து வரும் வழக்கமாகும்.

கிழமைகள் மட்டுமன்றி, ஒவ்வொரு தெய்வத்திற்கும் தொடர்புள்ள திதிகளிலேயும் உண்ணா நோன்பு நோற்றல் உண்டு. திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தொடர்பை வைத்துக் கணிக்கப்படும் காலப் பிரிவாகும். தம் முன்னோர்களை வணங்கி அமாவாசைத் திதியிலும், விநாயகரை வணங்கிச் சதுர்த்தியிலும், முருகனை வணங்கிச் சட்டியிலும், சக்தியை வணங்கி அட்டமியிலும், இராமனை வணங்கி நவமியிலும், திருமாலை வணங்கி ஏகாதசியிலும், சிவபெருமானை வணங்கித் திரயோதசியிலும், அம்மனை வணங்கிப் பௌர்ணமியிலும் உண்ணா நோன்பு நோற்றலும் நீண்ட காலமாகப் பழக்கத்தில் இருந்து வருகிறது. சிவபக்தர்கள் மகாசிவராத்திரியன்றும், வைணவ பக்தர்கள் வைகுண்ட ஏகாதசி யன்றும் உண்ணா நோன்பு இருப்பது பலரும் அறிந்த ஒன்றாகும். இந்தத் திதிகளில் உண்ணா நோன்பு மேற்கொள்ளல் அறிவியல் முறையில் நோக்கினும், மனிதனுடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வலிவுக்கும் உகந்ததாகும். கிழமையும் திதிகளும் மட்டுமேயன்றி, சில விண்மீன் நாட்களிலும் உண்ணா நோன்பு நோற்றலும் உண்டு. அண்டத்தில் சூரியனுடைய பாதையில் (Solar Orb) இருக்கக் கூடிய விண்மீன்களை இருபத்தேழு வகைகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு விண்மீனினுடைய இடத்திற்கும் சந்திரன் வரும் நாள் அந்த விண்மீனின் நாளாகக் கருதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, கார்த்திகை விண்மீன்களுடன் சந்திரன் சேரும் நாள் கார்த்திகை எனப்படுகிறது. இது போன்ற அவரவர்களுக்குப் பிடித்தமான விண்மீன் நாட்களிலும் உண்ணா நோன்பு நோற்பாரும் உண்டு.

கிழமை, திதி, விண்மீன் நாள் மட்டுமன்றி மார்கழி மாதம் முழுவதும் 'பாவை நோன்பு' என்ற நோன்பு நோற்றலைச் சைவ சமயமும் வைணவ சமயமும் பெரிதும் வலியுறுத்துகின்றன. மாணிக்க வாசகர் இயற்றிய திருவெம்பாவையும் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும் பாவை நோன்பு நோற்கும் முறைகளையும், பாவை நோன்பு நோற்க வேண்டியதன் இன்றியமையாமையினையும்,அதனால் ஏற்படும் நன்மைகளையும் நன்கு விளக்குகின்றன. அறியாமையினால் ஏற்பட்ட பந்த பாசத்தினால் ஆன்மாக்கள் உலகியலில் சிக்கித் தவிக்கின்றன; அறியாமையில் மூழ்கித் துயில்கின்றன. இப்படித் துயிலும் ஆன்மாக்களைத் தட்டியெழுப்பி, அவற்றின் உண்மைத் தன்மையையும், இறைவனை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட விளைவையும், இறைவனை அணுக வேண்டியதன் தேவையையும், பாவை நோன்பைக் கடைப்பிடித்து அவனை அணுகும் முறையையும் விளக்கும் நூல்களே திருவெம்பாவையும் திருப்பாவையும் ஆகும். இறைவன் உலகத்திற்கே தலைவன். அவனைச் சார்ந்து நிற்கும் ஆன்மாக்கள் அவன் முன்னால் தலைவிகள். இறைவனாகிய தலைவனை விட்டுப் பிரிந்த ஆன்மாவாகிய தலைவியானவள் பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தில் மூழ்கியிருக்கும் பொழுது, இறைவனை அடைந்த ஆன்மா மற்ற ஆன்மாக்களை ஆற்றுப்படுத்துவதே பாவை நூல்களின் உட்கருத்தாகும். நாயகனைப் பிரிந்து நிற்கும் நாயகி அவனை அடைய வேண்டி நோற்கும் நோன்பு பாவை நோன்பு ஆகும். இவை மட்டுமன்றி இந்து சமயப் பெண்கள் வரலட்சுமி நோன்பு, கேதார கௌரி நோன்பு, காரடையான் நோன்பு போன்ற நோன்புகளையும் நோற்கின்றனர். இதனால், வாழ்க்கையில் எல்லா வளங்களையும் பெறலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

இசுலாமியர்கள் இரம்சான் மாதம் முழுவதும் பகல் நேரங்களில் உண்ணா நோன்பைக் கடைப்பிடிக்கின்றனர். உண்ணா நோன்பு நோற்கும்போது பகல் நேரங்களில் இசுலாமியர்கள் உமிழ்நீர் கூட விழுங்குதல்கூடாது. இசுலாமியர்களுக்கு இரம்சான் மாதத்தில் உண்ணா நோன்பிருத்தல் ஒரு சமயக் கடமையாகும். இந்த உண்ணா நோன்பு குர்ரானில் கூறப்படும் ஐவகைச் சமயக் கடமைகளுள் ஒன்றாகும். இரம்சான் உண்ணா நோன்பின் இறுதியில் மூன்றாம் நாள் நிலாவை இசுலாம் சமயத் தலைவர் பார்த்து அறிவித்தபின், அவர்கள் இரம்சான் பண்டிகையைக் கொண்டாடி உண்ணா நோன்பை முடிக்கின்றனர். பொதுவாக, கிறித்தவர்கள் உண்ணா நோன்பு முறையை ஏற்றுக் கொள்வதில்லை. எனினும், சில கிறித்தவர்கள் புனித வெள்ளிக்கிழமையன்று உண்ணா நோன்பைக் கடைப்பிடிப்பர்.

சமயக் கண்ணோட்டத்தில் பார்க்காமல் அறிவியல் கண்ணோட்டத்தில் நோக்கினாலும் உண்ணா நோன்பு மேற்கொள்ளல் நன்மைபயக்கவல்லது. ஒரு சில நேரங்களில் உண்ணா நோன்பு சீரண மண்டலத்துக்கு ஓய்வையும் உடம்புக்குப் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது.

இல.மு.

**உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு** பணவீக்கத்தைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளினால் வட்டிவீதம் குறைந்து, மக்களின் வாங்கும் திறனும் மொத்தச் செலவும் உயருகின்றன என்பதை விளக்கும் பொருளியற் பகுப்பாய்வாகும். உண்மைப் பண இருப்பில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது, அம்மாற்றங்கள் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையில் நேரிடை விளைவுகளை உண்டாக்குதலை உண்மை இருப்பு விளைவு (Real Balance Effect) என்கின்றனர். இக்கருத்தை உருவாக்கிய பொருளியல் அறிஞர் பெயரில் இது 'பிகு விளைவு' (Pigou Effect) என்றும் கூறப்படுகிறது. 'சொத்து விளைவு' (Wealth Effect) என இதனைக் குறிப்பிடுவாரும் உளர்.

மொத்தப் பண அளிப்பிலோ (Supply of Money) பொது விலை நிலையிலோ (Price Level) மாற்றங்கள் ஏற்படும் பொழுது கையிலிருக்கும் உண்மைப் பணத்தில் (Real Cash Balance) மாற்றங்கள் நிகழ்கின்றன. கையிருப்புப் பணம் மிகையானால் மொத்தத் தேவை (Aggregate Demand) அதிகமாகும். கையிருப்புப் பணம் குறைந்தால் மொத்தத் தேவை கீழிறங்கும். மக்கள் தங்களிடமிருக்கும் பணத்தையும் பொருள்கள் பணிகள் ஆகியவற்றிற்காகத் தேவைப்படும் செலவுகளையும் ஒப்புவீதத் தொடர்பு முறையில் (Proportional Relationship) பங்கிட்டுச் சொத்தினைப் பணமாகவோ பொருளாகவோ இருப்பாக வைத்துக்கொள்ள விரும்புவர். பண அளிப்பில் ஏற்படும் மாற்றங்களினாலோ விலையில் ஏற்படும் மாற்றங்களினாலோ பொருளின் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு, சொத்தை எவ்வகையில் (பணமாகவா பொருளாகவா) இருப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டும். எனவே உண்மை இருப்பு விளைவு என்பது 'சொத்து விளைவுக்' கோட்பாடேயாகும்.

பொருளாதாரத்தில் விலைகள் குறையும்போது மக்கள் கையிலிருக்கும் பணத்தின் உண்மை மதிப்பு (Real Value) உயர்ந்து, அது பெறக்கூடிய பொருள்களும் பணிகளும் மிகையாகின்றன. பணத்தின் வாங்கும் திறன் (Purchasing Power) உயருகிறது. எனவே பணவீக்கம் குறையும்; பணவாட்ட நிலையில் (Recession) வட்டிவீதம் குறைந்து மூலதனச் செழிப்பு ஏற்படும். மூலதன அங்காடி நடவடிக்கைகள் பெருகிக் கடனுறுதிச் சீட்டுகள், ஆவணங்கள் பங்குகள் முதலியன விரைவில் மாற்றப்படும். பணவாட்ட நிலையில் கையிருப்புச் (நீர்மைச்) சொத்தின் (Liquid Assets) உண்மை மதிப்பைப் பாதுகாக்க மக்கள் தங்கள் வருவாயில் சிறு பகுதியைச் சேமித்தல் போதுமானதாகும். எனவே, தாங்கள் செல்வர்கள் என்ற நினைப்பில் மிகுதியாகத் தங்களிடம் எஞ்சியிருக்கும் உபரிப்பணத்தைப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றிற்காகச் செலவு செய்வர். அதனால், அவற்றிற்கான தேவை மிகையாகி அவற்றை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் வேலைவாய்ப்புகளும் பெருகுகின்றன.

உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு, உண்மை உலகப் பொருளாதாரச் சிக்கல்களில் எத்தகைய அளவில் பயனுள்ளதாயிருக்கிறது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. உண்மை இருப்பு விளைவையும் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் சீராக அளவிட இயலாதிருப்பதால், நடைமுறை உலகில் எதிர்பாராத நடவடிக்கைகளும் விளைவுகளும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பணவீக்கக் காலத்தில் விலைகள் உயரும்போது, மேலும் விலைகள் உயரும் என எதிர்பார்த்து மக்கள் தங்கள் செலவினை மிகுதிப்படுத்துகின்றனர். ஆனால், இக்கோட்பாட்டின்படி விலை உயரும்போது மக்கள் செலவினைக் குறைத்து இருப்பையும் குறைத்து வைத்திருப்பர் எனினும், 1960-ஆம் ஆண்டுவாக்கில் இக்கோட்பாடு நடைமுறையில் செயற்பட்டது எனலாம். அதற்குப் பிந்திய 1970-ஆம் ஆண்டுவாக்கில் பொருளாதாரச் சிக்கல்களில் பணவீக்கம் மேலும் பெருகியதே தவிரப் பணவாட்ட நிலைக்குத் திரும்பவில்லை. எனவே, அதன் பின்னர் வந்த பேரினப் பொருளியல் (Macro Economics) ஆய்வுகளில் எதிர்பார்க்கப்படும் விலை உயர்வுக்குத் தனிச் சிறப்பிடம் அளித்தனர். எனவே, 1980-ஆம் ஆண்டு வாக்கில் பின்பற்றப்படும் கொள்கையினால், பண இருப்புக்கும் செலவுகளுக்குமிடையேயிருந்த ஒப்பு வீதத் தொடர்பு நிலை கலைக்கப்பட்டுக் கையிருப்புப் பணம் (Liquid cash) தனி ஆட்கள் கையில் மிகையாகிறது. இப்பணத்தின் ஒரு பகுதியைப் பணிகளுக்கும் பொருள்களுக்கும் செலவு செய்வர். அதனால் நுகர்வும், பொருள்கள், பணிகள் ஆகியவற்றிற்கான தேவையும் மிகுதியாகும். எஞ்சிய பணத்தின் ஒரு பகுதியைப் பண அங்காடியில் கடனுக்கு அளிக்க விரும்புவர். அவ்வாறு கடனுக்கு அளிக்கப்படும் பணம் மிகையாவதால் மொத்தப் பண அளிப்பு மிகையாகிப் பண அங்காடியில் வட்டிவீதம் குறையும். வட்டிவீதம் குறையும்

போது முதலீட்டு நடவடிக்கைகளுக்கான (Investment Activities) நாட்டங்கள் மிகுந்து முதலீடு உயருகிறது. இவ்வாறு உண்மை இருப்பு விளைவு நுகர்வையும் முதலீட்டையும் உயர்த்துகிறது. முதலீடு உயரும் அளவுக்கு விளைவுகள் ஏற்படும்பொழுது, பொருளாதாரத்தில் முழுமையான மாற்றங்கள் ஏற்பட்டு, வேலைநிறைவு (Full Employment) நிலைக்கான சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எ.சி.பிகு 1943-இல் வெளியிட்ட உண்மை இருப்பு நிறைவுக் கோட்பாடு பிற்காலத்தில் சே.எம். கீன்சு (J.M. Keynes), தான் பேட்டின்கின் (Don Patinkin) போன்றோரால் விரிவுபடுத்தப்பட்டது. பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தேவை மாற்றம் அன்றாட விலை நிலையில் சிறிது ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கினாலும், பணவியல் துறையினால் பொது விலை நிலை (General Price level) வரையறுக்கப்படுகிறது. தொன்மைப் பொருளியல் கருத்தை உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு மறுக்கிறது. தான் பேட்டின்கின் இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார். பொருள்களுக்கும் பணிகளுக்கும் தேவை குறையும் போது அல்லது தேவை உயரும் போது அதற்கேற்ற வகையில் பண இருப்பிலும் திட்டவட்டமான மாற்றங்கள் ஏற்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் அதன் தாக்கம் வெளிப்படும். பொருளாதாரப் பணவியல் சிக்கல்களுக்கு நிலையான நடைமுறைக்குகந்த கோட்பாடுகளை வகுக்க அரசுகளும் பொருளியல் வல்லுநர்களும் முயன்று வருகிறார்கள்.

துணை நூல்கள்:

**Patinkin, Don**, Money Interest and Prices, Harper & Row, New York, 1965.

**Friedman Milton**, Money and Economy, Harcourt Brace Jovanovich, New York, 1978.

***உண்மைக் கூலி***: இது தொழிலாளர் வருவாயின் வாங்கும் திறனைக் குறிக்கும். உழைப்பிற்கு அளிக்கப்படும் விலை கூலி. பிற காரணிகளின் விலை உறுதி செய்யப்படுவது போன்று கூலியும் உழைப்பாளரின் தேவை அளிப்பைச் சார்ந்து வரையறுக்கப்படும். எனினும், உழைப்பின் தனிச் சிறப்பியல்புகளினால், முற்றிலுமாய் அங்காடி சார்ந்த கட்டுப்பாடுகளுக்குட்படாமல் தொழிலாளரின் பிழைப்பிற்குரிய இன்றியமையாமையைப் பொறுத்து, உண்மைக் கூலியில் (Real Wages) ஏற்றத்தாழ்வுகள் நிகழும். உண்மைக்கூலிக் கருத்துருவை (Concept) முதன் முதலில் அறிஞர் இரிக்கார்டோ (Ricardo) பகுத்தாய்ந்தார்.

தொழிலாளரின் அளிப்பு மிகையாக இருந்தால் உழைப்பின் அங்காடி விலை(Market Price of Labour) குறைவாக இருக்கும்; அளிப்புக் குறைவாக இருந்தால் உழைப்பின் அங்காடி விலை உயர்வாக இருக்கும். உண்மைக் கூலி தொழிலாளரின் வாழ்க்கைக்குத் தேவையான பணிகள், பொருள்கள் ஆகியவற்றின் விலையைச் சார்ந்திருக்கும். இவ்வுண்மைக் கூலியை ஒட்டியதாக உழைப்பின் அங்காடி விலையில் மாற்றங்கள் நிகழும். உணவு, உறைவிடம் போன்ற இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்ந்தால் பணக்கூலியில் (Money Wages) உயர்வு ஏற்பட்டு உண்மைக் கூலியும் உயரும். இப்பண்டங்களின் விலை உயர்வுக்குகந்த வகையில் பணக்கூலி உயராவிட்டால் உண்மைக் கூலி கீழிறங்கும்.

நுகர்பொருள்களின் விலைக் குறியீட்டை (Price Index) அடிப்படையாகக் கொண்டு பணக்கூலியுடன் அதனை ஒப்பிட்டு உண்மைக்கூலி கணக்கீடு செய்யப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் பணக்கூலியும் உண்மைக் கூலியும் ஒரே வீதத்தில் மாற்றங்களுக்குட்படுவதில்லை. பணவாட்ட நிலையில் (Recession) பணக்கூலி நுகர்பொருள் விலைக் குறியீட்டை விடக் (Price Index) குறைந்த வேகத்தில் கீழிறங்கும். இத்தகைய சூழ்நிலையில் உண்மைக் கூலி உயரும்.

பணக்கூலி குறைவதால், பணவாட்ட நிலையில் ஏற்படும் வணிகப் பொருளியல் சிக்கல்கள் தன்னியல்பாகவே சீரடையும் எனத் தொன்மைப் பொருளியல் கோட்பாட்டினர் கருதினர். இக்கருத்தின் குறைகளை சே.எம். கீன்சு (J.M. Keynes) தன்னுடைய வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment Interest and Money) என்னும் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். கீன்சின் கருத்துப்படி, உண்மைக்கூலி உயருமானால் பணக்கூலி கீழிறங்குவதால் விளையும் நன்மைகளைப் பெற இயலாது; செலவுகள் குறையா; ஆனால் நுகர்பொருள்களின் தேவை குறைந்து வணிகப் பின்னிறக்க நிலை (Business Recession) மேலும் தீவிர மடையும்.

பொருளாதாரத்தில் ஏற்படும் பல மாற்றங்கள், வணிகச் சுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் பணக்கூலியில் மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டேயிருப்பினும், உண்மைக் கூலியின் மாற்றங்கள் குறைந்த வேக வீதத்தில் (Slow Rate) நிகழ்ந்து, நீண்டகாலத்தில் உணரப்படும் என்பது பன்னாட்டு விலைக் குறியீட்டு அட்டவணைப் புள்ளி விவர ஆய்வு முடிவுகளிலிருந்து அறியப்படுகிறது.

***உண்மைச் செலவு***: ஒரு பொருளின் உற்பத்திச் செலவில் அடங்காமலும் பணத்தினால் மதிப்

பீடு செய்ய இயலாமலும் உள்ளடங்கும் செலவு உண்மைச் செலவு (Real Cost) எனப்படும். தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் உற்பத்திச் செலவை உண்மைச் செலவு என்ற கண்ணோட்டத்தில் விளக்கினர். உற்பத்தியில் உள்ளார்ந்திருக்கும் தியாகம், உளவியல் ஈடுபாடு, கற்பனை ஆற்றல், அறிவாற்றலைப் பயன்படுத்தல், முயற்சிகள் ஆகியவற்றின் மொத்தமே உண்மைச் செலவு.

உழைப்பாளர்கள் தங்கள் உடலுழைப்பாலும் சிந்தனை மூலமாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்தும் முயற்சிகளும், முதலீட்டார் தங்கள் உடனடிச் செலவுகளைக் கைவிட்டுச் சேமிப்பதற்கென ஆற்றிய தியாகம், காத்திருத்தல் போன்றவையும் உண்மைச் செலவினைச் சாரும். உழைப்பு எல்லாச் சூழ்நிலைகளிலும் காலங்களிலும் இன்பத்தை அளிப்பதில்லை. உழைப்பின் முயற்சிகள், ஆற்றிய தியாகம், எதிர்பார்த்தும் எதிர்பாராமலும் ஏற்படும் இழப்புகள், துன்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் கூலி வரையறை செய்யப்படுவதில்லை. நடைமுறையில் கூலிக்கும் வட்டிக்கும் பெரிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. இதன் அடிப்படையில் உண்மைச் செலவு என்ற கருத்தை ஆசுத்திரியப் பொருளியல் வல்லுநர்கள் மறுத்தனர். காண்க: உற்பத்திச் செலவு.

**உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள்** சொத்துகள், அடைமானங்கள் ஆகியவற்றைச் சிறு முதலீட்டார் முதலீடு செய்ய வகை செய்யும் நிதி நிறுவனங்கள் ஆகும். இதில் பங்கு பெறும் சிறு முதலீட்டாருக்கு இந்நிறுவனங்களின் மேலாண்மைப் பொறுப்பில் அடங்கும் சொத்துகளின் (Assets) ஆதாயத்தில் பங்குரிமை அளிக்கப்படும். பல நாடுகளில் இத்தகைய நிறுவனங்கள் செயற்படினும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் (U.S.A.) இவை தனித் தன்மையுடன் பரவலாகச் செயற்படுகின்றன.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் இருவகைப்படும். அவையாவன: 1. குறுகிய கால அடைமானங்களை முதலீடு செய்யும் அடைமான நிதி நிறுவனங்கள். இவை சிறப்பாகக் கட்டடப் பணிகள், திட்டங்கள், முன்னேற்றப் பணிகள் போன்றவற்றிற்குக்கடனுதவி அளிக்கின்றன. கட்டடப் பணிகள் நடந்து கொண்டிருக்கும்போது அவற்றிற்குத் தேவையான பணத்தை முன்பணமாக (Advance) அளிக்கின்றன. அக்கட்டடப் பணி முடிவடைந்த பின்னர், கடன் அளிப்போர் ஒருவர் அக் கட்டடத்தை நீண்டகால அடைமானமாக எடுத்துக் கடனைத் தீர்த்துவிடுவார். 2. அறநிதி நிறுவனங்கள் (Equity Trusts): இவை நேரடியாக உண்மைச் சொத்துகளுக்கு நிதி உதவிகளை அளிக்கின்றன. இந்நிறுவனங்களுக்குச் சொந்தமான உண்மைச் சொத்துகள் வருவாய் ஈட்டும் சொத்துகளாயிருக்கும்.

உண்மைச் சொத்துகளைப் பிணையங்களாகக் கொண்டு செயற்படும் வாணிக நிதி நடவடிக்கை பலவற்றுள், உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்களின் (Real Estate Investment Trusts) நடவடிக்கை சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவை உண்மைச் சொத்துகளைச் சொந்தமாக வைத்துக் கொள்ளவும், அவற்றிலிருந்து வருவாய் ஈட்டவும், வரையறுத்த பங்குதாரர்களுடன் (Limited Partnership) செயற்படவும், நிலையான வருவாயுடைய பிணைய அடைமானங்களைப்(Fixed Income Mortgage Securities) பெறவும் வழி வகுக்கின்றன. மிகக் குறைந்த செல்வம் (Wealth) உள்ளவர்களும் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். ஓய்வூதிய நிதியை (Pension Fund) நிருவகிக்கும் மேலாண்மையினர் இந்நிறுவனங்களின் உண்மைச் சொத்தில் முதலீடு செய்வதால் குறைந்த செலவில் தனி நிதியியல் நுட்பப் பயிற்சி பெற்ற பணியாளர்களை அமர்த்தி, தங்கள் நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட (Diversified) முதலீட்டுக்குப் பயன்படுத்துகின்றனர்.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்பியல்புகளாவன: 1. அங்காடியின் பண நீர்மைத் தன்மை அன்றாடம் பகுத்தாராயப்பட்டு அவற்றின் அடிப்படையில் பங்குகளின் மதிப்பு சீர்தூக்கப்படுவதால், பங்குகளின் விலை செலவற்ற வகையில் வரையறுக்கப்படுகின்றது. 2. நிருவாகச் செலவு பங்கீட்டு முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதால், மேலாண்மை நிருவாகம் சிறந்த முறையில் நடைபெறுகிறது. 3. குறிப்பிட்ட கால இடைவெளியில் எவ்வகைக் கால தாமதமுமின்றித் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. 4. நடவடிக்கைகள், பணிகள், நிதிநிலை ஆகியவை அவ்வந்நாட்டுப் பொது நிதி அங்காடிச் சட்ட ஒழுங்குகளுக்குட்பட்டு, அரசின் நிதி முகவர்களால் அவ்வப்போது தணிக்கை செய்யப்பட்டு நற்சான்றளிக்கப்படுகிறது. இதனால், நொடிப்பு நிலை (Bankruptcy) ஏற்படாதவாறு பாதுகாக்கப்படுகிறது.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் குறுகிய காலக் கடன் வசதிகளையே பெரும்பாலும் அளித்து வருகின்றன. எனினும் ,இக்காலத்தில் நீண்ட காலக் கடன்களையும் இவை வழங்கத் தொடங்கியுள்ளன. இவற்றின் வட்டிவீதம் வணிக வங்கிகளின்

வட்டிவீதத்தை ஒத்ததாக உள்ளது. அமெரிக்காவின் கட்டடத் தொழிற்றுறையில் இவை தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

**உண்மைநெறி விளக்கம்** சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் பதின்மூன்றாவ தாக வைத்து எண்ணப்படுவது. இதனை உமாபதி சிவம் செய்தார் என்று மரபாகக் கூறப்பட்டு வரு கிறது. இந்நூல் செய்தவர் உமாபதி சிவம் அல்லர், சீகாழி தத்துவ நாதர் என்பது இக்கால ஆய்வாளர் கள் கண்ட முடிபாகும். இவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும்.

இந்நூல் அளவிற் சிறியது; ஆறு பாடல்களை உடையது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் தச காரியங்களைச் செவ்வையாக விளக்குகிறது. தச காரி யங்களாவன: தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத் துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவ போகம் என்பன. முதற்பாடல் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்ற மூன்றை யும் கூறுகிறது. இரண்டாம் பாடல் ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி ஆகிய மூன்றை யும் உணர்த்துகிறது. பின்னுள்ள நான்கு பாடல் களும் முறையே சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்பவற்றை விளக்குகின்றன. அப்பாடல்களின் சாரத்தைப் பின்வருமாறு தொகுத் துக் கூறலாம். 1. உயிர் முப்பத்தாறு தத்துவங்களாற் கூட்டப் பெற்ற உடல், கருவி, உலகு, நுகர்பொருள் ஆகியவற்றின் தொழிற்பாட்டை அறிவது தத்துவ ரூபம். 2. மேற்கூறிய தத்துவக் கூட்டங்களுக்கு உணர்வு இல்லை என்று அறிவது தத்துவ தரிசனம். 3. உயிர் தத்துவக் கூட்டங்களின் வாயிலாய் இறை வனை அறிய முடியாதென்று கண்டு அவற்றை விட்டு நீங்குதல் தத்தவ சுத்தி. 4. இவ்வாறு தத்துவங் களின் தொடர்பு நீங்கிய பின்னர், உயிர் தன்னியல்பை யறிதல் ஆன்ம ரூபம். 5. உயிர் தன்செயல் அற்று நிற்றல் ஆன்ம தரிசனம். 6. பசுஞானமாகிய உயி ரறிவு மடங்கித் திருவருள் வயப்பட்டு அதனுள் அடங்கி வெளிப்படாதிருத்தல் ஆன்ம சுத்தி. 7. ஆணவ மலத்திற் கட்டுண்டிருக்கும் உயிர்களைக் கருதிப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் சிவ பரம்பொருள் திருவருளைத் தனக்குத் திருமேனி யாகக் கொண்டு குருவாய் வெளிப்பட்டு, இந்திரியங் களை வேறாகக் காணும்படி செய்து ஆதாரமாய் நிற்கிறது என்று உயிர் தன்னறிவிற் காண்பது சிவ ரூபம். 8. திருவருள் உயிரிடத்தில் சுட்டறிவு நீங்கும் படி நிலைபெற்றது சிவனது திருவடியாகும்; பார்க் கிற எவ்விடமும் சிவமே விளங்கும்படி நிட்டை கூடு தல் சிவனது முகமாகும். அப்போது அறிவுக்கறிவாக உயிரிடத்துத் தோன்றுகிற முதல்வனது விளக்கமே அவனது முடியாகும். உயிர் இவ்வுண்மையைத் தெளி யக் கண்டு, உடல் கருவி, உலகு முதலிய கட்டுகளினின் றும் நீங்கி, முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலே சிவதரிசனம். 9. அவ்வாறு ஏகனாகி நிற்கும்பொழுது, எத்தகைய பொருள் வந்து எதிர்ப்படினும் அவற்றின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து, அவற்றில் பற்று வைக்கும் உயிரியல்பையும் உணர்ந்து, உயிர்க்கு மேலா கிய திருவருளையும் அதற்கு முதலாக விளங்கும் சிவத்தையும் உணர்ந்து, எல்லாவற்றிற்கும் அப்பரம் பொருளே காரணம் என்பதைத் தெளியக் கண்டு, அவ னருளையல்லது ஒன்றையும் கருதாமல் 'தன்னை இழந்து நிற்றல் சிவ யோகம். 10) அவனருளால் அல் லது ஒன்றையும் செய்யாமல் முதல்வனோடு ஒன்றி நின்றால், ஊழ்வினையால் பாவங்களைச்செய்தாலும் தீயொழுக்கங்களில் தலைப்பட்டாலும் இறைவன் அவ்வுயிரினிடமாக நின்று அச்செயல்களையெல்லாம் தம் செயலாக ஏற்றுக் கொண்டு, வினைக்கு ஈடாக வரும் எல்லா நுகர்வுகளையும் சிவபோகமாக்கி, அவ் வுயிரைத் தானாகச் செய்துவிடுவான். இதுவே சிவ போகம்.

உயிர் மெய்யுணர்வு பெறறு இன்புறுதலாகிய உண்மை நிலையை இவ்வாறு பத்து வகையான படி நெறியில் வைத்து விளக்குவதால் இந்நூல் உண்மை நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

தச காரியம் என்னும் பொருளைத் தனியே எடுத்து விளக்கிய முதல் நூல் இதுவேயாகும்.

-ஆ. ஆ.

**உண்மை வருமானம்** என்பது ஒருவருடைய தனிப்பட்ட வருமானத்தின் வாங்கும் திறனைக் குறிக் கும். ஒரு நாட்டின் உண்மை வருமானம் (Real Income) அதன் வாங்கும் திறனைக் (Purchasing Power) கொண்டே கணக்கிடப்படும். ஒரு நாட்டுச் செலா வணியின் மதிப்பைப் பொறுத்தும் உற்பத்திக் காரணி களின் தேவை அளிப்பைப் பொறுத்தும் உண்மை வரு மானத்தில் மாற்றங்கள் ஏற்படும்.

பண வருமானத்தை (Money Income) நுகர் பொருள்களின் விலை மாற்றங்களுடன் ஒப்பிட்டு உண்மை வருமானம் கணக்கீடு (Compute) செய்யப் படுகிறது. விலைக்குறியீடு (Price Index) உயரும் அளவுக்குப் பண வருமானமும் பெருகுமானால் நுகர் வோரின் வாங்கும் திறனில் மாற்றங்கள் ஏற்படா, இத்தகைய சூழ்நிலையில் பண வருமானம் உயர் வாகக் காணப்பட்டாலும் உண்மை வருமானம்

மாற்றம் ஏதுமின்றியிருக்கும். பண வருமானம் பெருகும் வேகத்தைவிட மிகையான வேகத்தில் விலைகள் உயருமானால் உண்மை வருமானம் கீழிறங்கும். பண வருமானம் பெருகும் வீதத்தைவிடக் குறைவான அளவில் விலைகள் உயருமானால் உண்மை வருமானம் உயரும்.

பணவீக்கத்தினால் (Inflation) உண்மை வருமானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு ஊதியங்களும் ஆதாயப் பங்குகளும் உயர்ந்து வருமானம் மறு பங்கீடு (Re-distribution) செய்யப்படும். கடன் வாங்கியவரின் உண்மை வருமானம் உயரும். கடன் கொடுத்தவர் இழப்பை ஏற்க நேரிடும். நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள், நிலையான வருமானம் (Fixed Income), ஓய்வூதியம் (Pension), ஆண்டுத்தொகை (Annuities) போன்றவற்றைப் பெறுபவர்கள் ஆகியோரின் உண்மை வருமானத்தில் வீழ்ச்சி காணப்படும். இவர்களுக்குத் தங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் இல்லாததால், உண்மை வருமானம் வீழ்ச்சியுற்றுப் பேரளவில் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன் பெற்ற பணத்தையே பெறுவார்கள். அப்போது அப்பணம் அளித்த வாங்குந்திறன் இப்போது இல்லாததால், தங்கள் செலவுகளைக் குறைத்து ஏழ்மை நிலைக்குள்ளாவார்கள். இவர்களின் சேமிப்பும் பாதிக்கப்படும்.

பண வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்குமுள்ள வேறுபாடுகள் ஒரு நாட்டில் பகுதிக்குப் பகுதி வேறுபாடான தாக்கங்களை உருவாக்கும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் (Standard of Living) ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். எடுத்துக்காட்டாக, புதுதில்லியில் உரூ. 3000 வருமானம் பெறும் ஓர் ஆசிரியர் தம் வருமானத்தில் 20 விழுக்காட்டை வீட்டு வாடகைக்குச் செலுத்தவேண்டியிருக்கும். பிற செலவுகளுக்கும் கொடுத்த பின்னர்ச் சேமிப்புக்கு அவரிடம் பணம் இருக்காது. அதே காலத்தில் மதுரையில் உரூ. 2000 மட்டுமே வருமானம் பெறும் ஆசிரியர் தம் வருமானத்தில் 10 விழுக்காட்டை மட்டுமே வீட்டு வாடகைக்குச் செலுத்திவிட்டுப் பிற செலவுகளுக்கும் போக எஞ்சியதைச் சேமித்து வைப்பார். மிகுந்த பண வருமானம் ஈட்டக்கூடிய புதுதில்லியில் பணத்தின் வாங்கும் திறன் மிகக் குறைவு. எனவே, மதுரையில் வாழ்பவர் குறைந்த பண வருமானம் ஈட்டினாலும் அதன் உண்மை வருமானம் உயர்வாக உள்ளது. எனவே, அதன் மிகுந்த வாங்கும் திறனால் விளையும் நன்மைகளைப் பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பார்.

உற்பத்திக் காரணிகளின் தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் தொடர் மாற்றங்களினால் (Chain Reactions) உண்மை வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு உற்பத்தி முறை, பதிலீட்டுப் பண்டங்கள், முதலீடு (Capital), வட்டிவீதம் (Interest Rate) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் உருவாகும். எடுத்துக்காட்டாக, கைத்தறி ஆடைகளுக்கான தேவை குறைந்து அவற்றின் விலைகள் வீழ்ச்சியுற்றால் ஆலைத் துணிகளின் தேவை மிகும்; பிற செயற்கைத் துணிகளும் பதிலீட்டுப் பொருள்களாக உற்பத்திசெய்யப்படும்; தொழிற்றுறை வளர்ச்சியடையும்; தொழில் முதலீட்டுப் பொருள்களின் தேவையும் பெருகி வட்டிவீதம் உயரும்; கைத்தறித் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தோரின் உண்மை வருமானத்தில் வீழ்ச்சியும் வேலையின்மையும் ஏற்படும்; கைத்தறி முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியில் இழப்பும் அங்காடியில் தேக்கமும் ஏற்படும். இவற்றிற்கு மாறாகத் தொழிற்றுறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை, ஊதியம் ஆகியவை உயர்ந்து உண்மை வருமானத்திலும் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்படும். முதலீட்டுப் பெருக்கம், வட்டிவீத உயர்வு ஆகியன பொருளாதார முன்னேற்றத்திற்கான இணைப்பு விளைவுகளை (Linkage Effects) உண்டாக்கும்.

துணை நூல்:

**Lewis, C. Solmon**, Economics, Addison Wesley Publishing Company, Massachusetts, 1976.

***உண்மை விளக்கம்*** சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் ஒன்று. மெய்ந்நூல்களில் விளக்கப்படுவன இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களது உண்மையும் அவற்றது இயல்பும் சாதனமும் பயனும் என்னும் நான்குமேயாகும். 'உண்மை விளக்கம்' என்ற இந்நூற் பெயரில் 'உண்மை' என்றது அந்நான்கினையும் குறிக்கும். அந்நான்கினையும் விளக்கிக் கூறுதலின், இந்நூல் உண்மை விளக்கம் எனப் பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் மனவாசகங்கடந்தார். இவர் சிவஞான போதத்தை அருளிய மெய்கண்ட தேவரின் மாணாக்கருள் ஒருவர்; திருவதிகையில் வாழ்ந்தவர். இவை தவிர இவரைப் பற்றிய பிற வரலாறு ஒன்றும் புலப்படவில்லை.

மெய்கண்டாரின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளப்படுதலின், அவர் மாணாக்கராகிய மனவாசகங் கடந்தார் வாழ்ந்த காலமும் அதுவே என்பது தெளிவு.

இந்நூல் வெண்பாவினால் ஆனது. காப்புச் செய்யுள் உட்பட 54 வெண்பாக்கள் இதில் உள்ளன. சிறப்புப் பாயிரம் ஒன்றும் உள்ளது. வினா விடை வடிவில் இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது. மேலான உண்மைகள் பற்றி மனவாசகங் கடந்தார் தம் குருமூர்த்தியாகிய மெய் கண்ட தேவரிடம் வினவ, அவர் விடை கூறும் முறை யில் அமைந்துள்ளது. இந்நூலில் மாணாக்கர் கேட்கும் வினாக்கள் எட்டு. அவையாவன: 1) முப்பத்தாறு தத்துவங்கள் யாவை? 2) ஆணவ மலம் என்பது யாது? 3) கன்ம மலம் என்பது யாது? 4) இவற்றி னின்றும் நீங்காத உயிரின் இயல்பு யாது? 5) இக் கட்டுகளினின்றும் நீங்கி உயிரை ஆட்கொள்ளும் இறைவனது இயல்பு யாது? 6) இறைவனது நடனத் தின் இயல்பு யாது? 7) திருவைந்தெழுத்தின் தன்மை யாது? 8) முத்தி நிலை யாது? 1, 2, 23,27,30,39,49, ஆகிய வெண்பாக்களில் மாணவர் தம் குருவாகிய முதல்வரிடம் கேட்கும் வினாக்கள் உள்ளன. ஏனைய வற்றில் அருட்குருவின் விளக்கங்கள் உள்ளன. இறுதி வெண்பாவில் எல்லாவுண்மைகளையும் கேட்டுணர்ந்த மாணவர் 'வாழ்ந்தேன் அருட் கடலே' என்று தம் ஆசிரியர்க்கு நன்றி கூறும் முறையில் நூல் முடிவுறு கின்றது.

இச் சிறுநூல் சைவசித்தாந்தத்தை முறையாக அறியப் புகுவோர் முதலிற் பயிலுதற்குரிய அடிப் படைக் கருவி நூலாக அமைந்துள்ளது.

இந்நூல் ஆகமப் பொருள்களை எளிய முறையில் உணர்த்துகிறது. 'வன்மை தரும் ஆகம நூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்' என்று சிறப்புப் பாயிரம் கூறுதல் காணலாம்.

நாதன் நடம் எனக் கூறப் பெறும் கூத்தப் பெரு மானின் ஆடல் இயல்பை விளக்கியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். நடராச தத்துவத்தை இது போல் மிகச் சுருக்கி மிக விளக்கிய நூல் வேறில்லை எனலாம்.

ஆ.ஆ.

**உணர்ச்சி** என்பது உயிரினத்தில் காணப் படும் தூண்டப்பட்ட அல்லது கிளர்ச்சிவசப்பட்ட நிலை யினைக் குறிக்கிறது. மனிதன் உணர்ச்சி வசப்பட்டுக் கொந்தளித்திருக்கும் போது நிலைகுலைந்து விட்ட தாக உணருகின்றான். உளவியலார் கருத்துப்படி, உணர்ச்சி என்பது புலனுணர்ச்சி (Sensation) யுடன் சேராத வேறுபட்ட நிலையைக் குறிக்கும். தவிர, அது செயல்களுக்கெல்லாம் ஒரு பின்னணியாகவும் இருந்து வருகிறது.

உணர்ச்சியின் பொதுத் தன்மைகளைப் பற்றி உளவியலார் நன்கு ஆராய்ந்துள்ளனர். முதலில், அது ஒரு உட்புற நிகழ்ச்சியாகும். இந்த உள்ளுணர்ச்சி சுய நினைவுள்ளது. எடுத்துக்காட்டாக, தாய் தந்தையாரை மகிழ்ச்சியடையச் செய்வதற்கும் சலிப் படையச் செய்வதற்கும் அவர்தம் மகன் காரணம் அல்லன். அந்த மகனுடைய செயல்தான் மகிழ்ச்சி யையோ சலிப்பையோ உருவாக்குகிறது.

வாழ்க்கையில் மக்கள் பல்வகை உணர்ச்சிகளைப் பெறுகிறார்கள். மக்களின் செயல்களில் எல்லாம் முக்கிய நீரோட்டமாக உணர்ச்சிகள் இருப்பதால் அவை எந்த இடத்தில் இருக்கின்றன என்பதைக் கூற இயலாது. குறிப்பிட்ட ஓர் உடற்பகுதியில் மகிழ்ச்சி யையோ துன்பத்தையோ உணர்ந்ததாக எவரும் கூறு வதில்லை. ஆகவே, உணர்ச்சிகள் எப்போதும் உட லெங்கும் பரவிய நிலையில்தான் உணரப்படுகின் றன.

வாழ்க்கை அனுபவங்கள் பெரும்பாலும் இருதரப் பட்ட அடிப்படையான உணர்ச்சிகளுள் எதையாவது ஒன்றைத் தழுவியவாறு காணப்படுகின்றன. அவை மகிழ்ச்சி கலந்தோ சோக உணர்வுகளைக் கொண்டோ இருக்கலாம். மேலும், உணர்ச்சித் தொனிகளைக் (Feeling Tone) கொண்டு ஓர் அனு பவம் எந்த அளவுக்கு மகிழ்ச்சி அல்லது சோகமாக இருக்கிறது என்பதை அறியலாம். எடுத்துக்காட் டாக, இனிப்புச் சுவையை இன்ப உணர்ச்சியும் கசப்புச் சுவையை அருவருப்பு உணர்ச்சியும் (Unpleasant Feeling) எப்போதும் பின்தொடர்வதால், இந்த இரண்டு சுவைகளுக்கும் மிகுதியான உணர்ச்சித் தொனிகள் உள்ளன. ஆனால், அதே சமயம் உப்புச் சுவைக்கு உள்ள உணர்ச்சித் தொனி அந்த அள வுக்கு இல்லை. காரணம், அது உணர்ச்சிகளைக் குறிப்பிடக்கூடிய அளவுக்குக் கிளறுவதில்லை என்ப தேயாகும்.

உணர்ச்சிகளுக்கும் புலனுணர்வுகளுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்துவது நல்லது. புல னுணர்வுகளைப் (Sensation) போல வெளி உலகத் தன்மையைப் பற்றி உணர்ச்சிகள் (Feelings) எதுவும் கூறுவதில்லை. ஆனால், மனிதனின் அனுபவம் உணர்ச்சிகளின் பயனைப்பற்றி நன்கு கூறுகிறது. ஒருவன் புதிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வாங்கியது குறித்து மகிழ்ச்சியடையும்போது, அந்த மகிழ்வுணர்ச்சி புதிய வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வாங்கியதால் ஏற்படும் அனுபவத் தால் உருவாகிறது. இதில் புதியதாக உள்ளது தொலைக்காட்சிச் சாதனம். காட்சியைக் காண்பது புலனுணர்வு; அவ்வனுபவத்தால் ஏற்படுவது மகிழ்ச்சி யடைவது. இதுபோன்ற சூழ்நிலையில் ஒருவருக்கு உண்டாகும் உணர்ச்சிகள் யாவை என்பதைப் பிறர்

சரிவரக் கண்டுகொள்வது கடினமாக இருக்கலாம். அதற்காக உணர்ச்சிகள் போன்ற அனுபவங்களையே புறக்கணிக்க முடியாது.

இராய்சு (Royce) என்பவரின் கருத்துப்படி, ஒவ்வோர் உணர்ச்சிக்கும் இருவகைத் தன்மைகள் உண்டு. அதாவது 1. இன்ப உணர்ச்சி அல்லது அருவருப்பு, 2. ஓய்வில்லாமை அல்லது அமைதி.

உணர்ச்சியைப் (Feeling) போல மனவெழுச்சியும் (Emotion) கிளர்ச்சியடைந்த உயிரினத்தில் காணப்படும் நிலை எனக் கூறலாம். இரண்டிற்கும் ஒற்றுமை, வேற்றுமைகள் உள்ளன. இன்பதுன்பங்களை மக்கள் உடலெங்கும் உணருவதைப் போலவே பயம், கோபம், குதூகலம் (Amusement) போன்ற மனவெழுச்சிகளையும் உடலெங்கும் உணருகின்றனர். தவிர இரண்டிலும் உயிரினத்தின் சுய நினைவு கிளர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. இரண்டிற்குமுள்ள வேற்றுமைகளைக் காணும்போது உணர்ச்சியை ஒரு தென்றல் காற்று அல்லது அமைதியான நீரோட்டம் போன்றது என்றும், மனவெழுச்சியை ஒரு சூறாவளிக் காற்று அல்லது ஒரு காட்டாறு போன்றது என்றும் கூறலாம். செயல்களுக்கு எல்லாம் பின்னணியாக வெளிப்படும் உணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்து இருப்பதுண்டு. அது நீடித்திருக்கும் காலத்தில் பொதுத் தோற்றத்திற்குப் பல வண்ணங்களைச் சேர்க்கிறது. நல்ல உணவிற்குப் பிறகு, பலர் நகைச்சுவையாகப் பேசிக் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனால், உணர்ச்சிக்கு மாறாக மனவெழுச்சி மக்களைக் கவ்வி இழுத்துச் செல்கின்றது. அது சூழ்ந்துள்ளபோது மக்கள் அதன் ஆற்றலுக்கு உட்படுகின்றனர். ஆனால், நீண்டகாலம் அது சூழ்ந்திருப்பதில்லை. உடலெங்கும் மனவெழுச்சி உணரப்படுவதோடு, பலவித உள்ளுறுப்பு மாறுதல்களும் வெளி உறுப்பு மாறுதல்களும் ஏற்படுகின்றன. மனவெழுச்சியினால் ஏற்படும் மாறுதல்கள் தானியங்கு நரம்பு மண்டலத்தின் (Autonomic Nervous System) செயலாலும், உடலிலுள்ள சில நாளமில்லாச் சுரப்பிகளாலும் (Ductless Glands) உண்டாக்கப்படுவனவாகும். தவிர, அதனால் உண்டாகும் உடற்கூற்று மாறுதல்களின் பரப்பையும் வலுவையும் அளப்பதற்கு உளவியல் பரிசோதனைக் கூடத்தில் பலவகையான மின் இயக்க நுட்பக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மனவெழுச்சி தெளிவான முறையில் வெளிப்படுவதால் அதை அடையாளம் கண்டு கொள்வது எளிது. உதடுகள் துடிப்பது, கண்கள், முகம் எல்லாம் சிவப்பது, மூக்கு புடைப்பது, தோலின் மேல் பரப்பில் வியர்வை கை, கால் முட்டிகளை மடக்கி நீட்டுவது, கீழ் உதட்டை மடக்கிப் பற்களைக் கடிப்பது, புருவங்களை உயர்த்துவது, நெறிப்பது போன்ற வெளி உறுப்புச் செயல்களிலிருந்து, ஒருவன் கோபமாக இருக்கிறான் என்பது உணரப்படுகிறது.

பெரும்பாலோர் மனவெழுச்சி, உணர்ச்சி இரண்டையும் ஒன்றாக நினைத்துத் தெளிவின்றிக் காணப்பட்டாலும், அதே காலத்தில் மனவெழுச்சியானது அறிவிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதைத் தெரிந்து வைத்துள்ளனர். அறிவு மூளைக்குச் சொந்தமானது. ஆனால்,மனவெழுச்சியோ இருதயத்துக்குச் சொந்தம். அன்றாட வாழ்க்கையில் அறிவுக்கும் மனவெழுச்சிக்கும் போராட்டம் வரும்போது, பெரும்பாலும் மனவெழுச்சியே அதிக வலுவைப் பெற்று ஒருவருடைய செயலைத் திசை திருப்பி விடுகிறது. ஆகவே, மனிதனை மனவெழுச்சிக்கு அடிமையானவன் எனக் கூறுவதுண்டு. பண்டைக் காலத் தத்துவ அறிஞர்களான அரிசுடாட்டில் (Aristotle), காண்ட்டு (Kant) போன்றோர் 'மனவெழுச்சியை உள்ளத்தின் நோய்' என்றார்கள். உளவியலார் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. உளப்பாகுபாட்டு முறையின் தந்தையான (Father of Psychoanalysis) சிக்மண்டு பிராய்டின் (Sigmund Freud) கருத்து மனவெழுச்சியை வெளிப்படுத்தாமல், சோடா பாட்டிலில் வாயுவைப் போல் கட்டுப்படுத்துவது பலவித மனக் கோளாறுகளுக்குக் காரணமாகிறது என்பதாகும்.

அறிவைப் பயன்படுத்தி மனவெழுச்சியைக் கட்டுப்படுத்துவது, வாழ்க்கைக்கு இன்றியமையாதது என அனுபவமிக்க சான்றோர்கள் கூறுவதை மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும். மனவெழுச்சியை அளவுகடந்து கட்டுப்படுத்துவதோ அதற்கு அதிகமான சலுகை கொடுப்பதோ சீரான ஆளுமையைப் (Well Balanced Personality) பெறுவதற்கு எந்த வகையிலும் பயன்படாது. சீரான ஆளுமையைப் பெற ஒவ்வொருவரும் மனவெழுச்சிகளைத் திறம்படச் சமாளித்து, ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும். அதாவது, வாழ்க்கைத் திட்டத்தில் மனிதப் பண்புகள் ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய இடத்தை அளிக்கும் போது, மனிதன் சீரான ஆளுமையைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதென உளவியலார் கூறுகின்றனர்.

எம். சு.

துணை நூல்கள் :

**Hilgards, E.R., Atkinson, R.C. & Atkinson, R.L.,** Introduction to Psychology, Harcourt Brace Jovanovich, 1971.

**Kendler, H.H.**, Basic Psychology, Benjamin. W.H., Inc, California, 1975.

**Morgan, T.**, and **King, R.A.**, Introduction to Psychology, Tata MC Graw Hill, Publishing Company Limited, Bombay, 1971.

**உணர்வறிதிறப் பயிற்சி**: இது உணர்வுகளைத் திறப்படுத்திக் கொள்ளப் பயன்படும் ஒரு கற்றல் முறை. இப்பயிற்சியின் மூலம் ஒருவர் தம் விழிப் புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளவும், பிறரோடு பழ கும் வேளையில் தமது உணர்வுப் பாங்கினை மென் மையுறச் செய்து கொள்ளவும், தாம் உறையும் சுற் றுப்புறச் சூழலுக்கேற்றபடி தம் உணர்வுகளை வளர்ச்சியுறச் செய்துகொள்ளவும் இயலும்.

பொதுவாக, உணர்வறிதிறப் பயிற்சியை (Sensitivity Training) ஒரு சிலர் கொண்ட குழுவில் நடத்திக்காட்டலாம். இப்பயிற்சிக்கு வேண்டிய குழு வில் 8-இலிருந்து 20 பேர் வரை இருக்கலாம். இவ் வாறு அமையும் குழுவில் ஒரு தலைவரும் (Leader) இருப்பார். குழுவில் இடம் பெற்றவர்கள் ஒவ்வொரு வராக எழுந்து, அக்குழுவில் உள்ள மற்றவர்களைப் பற்றி மனம் திறந்து பேசலாம்; ஒருவர் மற்றவர் களைப் பற்றித் தாம் என்னென்ன உணர்வுகளையும் கருத்துகளையும் கொண்டிருக்கிறாரோ அவற்றை அக் கூட்டத்தில் ஒளிவு மறைவின்றிப்பேசுவர். தலைவரின் பணி, குழுப்பயிற்சியை நடத்திக் காட்டுவதாகும். இவ்வாறு ஒவ்வொருவரும் இப்பயிற்சியில் பேசுவதன் வாயிலாகக் குழுவில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு வரும் தம்மைப்பற்றிய நிறைகளையும் குறைகளையும் அறிய முடிகிறது.

சில சமயங்களில் பயிற்சிக் குழுவின் தலைவர், உறுப்பினர்களை அவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விளையாட்டுகளில் (Games) ஈடு படச் சொல்லுவார். இரு உறுப்பினர்கள் எழுந்து ஒரு வரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டே யிருத்தல், பாசத்தைப் பொழியுமாறு நடித்துக் காட்டு தல், கோபத்தைக் காட்டும் வகையில் சீறிக்காட்டுதல் போன்றவை உணர்ச்சி விளையாட்டுகளுள் சில வகை களாகும்.

உணர்வறிதிறப் பயிற்சி, ஒருவருடைய அக உணர்ச்சிகளை (Inner Feelings) அறிந்து கொள்வதற் கும் பிறரோடு நயத்தகு வகையில் பழகுவதற்கும் உதவுகிறது என உளவியலறிஞர்களுள் சிலர் நம்புகின் றனர். கல்வி கற்பித்தலில் இப்பயிற்சியை ஓர் உத்தி யாகப் (Technique) பயன்படுத்தச் சில கல்வியாளர் கள் பரிந்துரைக்கின்றனர். மாணவர்களது மனவெ ழுச்சி வளர்ச்சிக்கு (Emotional Development) இப் பயிற்சி மிகுதியாக உதவுமென அவர்கள் நம்பு கின்றனர்.

சிற்சில நேரங்களில், பயிற்சிக் குழு உறுப்பினர் களுள் சிலர், அளவுக்கு மீறியும் வரம்பு மீறியும் நடந்து கொள்ளும்போது, அது உறுப்பினர்களின் மனநிலைகளைப் பண்படுத்துவதற்குப் பதிலாகப் புண்படுத்திவிடுகிறது. எனவே, உணர்வறிதிறப் பயிற்சி பயனற்றது என்று உளவியலறிஞர் சிலர் கூறு வர். குழுத்தலைவர் பயிற்சியை முறையாக நடத்தி முடிக்கும் திறன் குறைந்தவராக இருந்தால், இப் பயிற்சி சிறப்பாக இராது என்றும், பயிற்சிக் கூட்டங் களில் சில உறுப்பினர்கள் மனமொடிந்து போய் விடு கின்றனர் என்றும், அதனால் இப்பயிற்சி குறை பாடுடையதென்றும் சிலர் கூறுவர்.

கர்ட்டு இலூவின் (Kurt Lewin) என்னும் செர் மானிய உளவியலறிஞரே 1946-ஆம் ஆண்டுமுதன் முத லில் உணர்வுத்திறப் பயிற்சியினை நடத்திக் காட்டி யவர். உணர்வுத் திறப் பயிற்சியை 1960-ஆம் ஆண் டில் கலிபோர்னியாவிலுள்ள எசலன் நிறுவனம் (Esalem Institute) உலகமறியச் செய்தது.

**உணர்வுசார் ஆசிரியர் கல்வி**: ஆசிரியர் அறிவு, ஆசிரியர் திறன்கள, ஆசிரியர் உணர்வு ஆகிய மூன்று பண்புகளும் பொதுவாக ஆசிரியர் கல்விப் பயிற்சியில் வலியுறுத்தப்படுகின்றன. உணர்வுசார் ஆசிரியர் கல்வி (Affective Teacher Education) என் பது ஆசிரியரின் உணர்வுகள், விழிப்புணர்ச்சி (Teacher Feelings and Self-awareness) ஆகியவற்றை வளர்த் திடும் வகையில் அமையும் கல்விப் பயிற்சி எனச் சொல்லப்படுகின்றது. கர்க்குபு (Carkhuff, 1982) என்னும் கல்வியாளர் உணர்வுசார் ஆசிரியர் கல்வி யினை, ஆசிரியர் - மாணவர் உறவில் நல்ல மதிப்புகளையும் மனப்பாங்குகளையும் வளர்க்கும் பயிற்சியாகக் கருதுகிறார். மேலும், உணர்வுசார் ஆசிரியர் கல்விப் பயிற்சியில், மனித உறவுகளை வளர்த்திட உதவும் உணர்வுகளும் திறன்களும் ஆசிரி யரிடையே வளர்ச்சியுறுவனவாக அவர் கருதுகிறார்.

உணர்வுசார் ஆசிரியர் கல்வி பற்றிப் புகழ்ந்து பேசும் கல்வியாளர்கள், இன்றைய ஆசிரியர் கல்வி யானது, கற்பித்தல் அறிவையும் திறனையும் மட்டும் வளர்ப்பதாக உள்ளது எனக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, செயல்வழி ஆசிரியர் கல்வி (Performance-based Teacher Education), திறமைசார் ஆசிரியர் கல்வி (Competency-based Teacher educa-tion) போன்ற புதிய ஆசிரியர் பயிற்சி முறைகள், கற்பித்தல் திறன்களுக்கு முதன்மையிடம் தந்து,

மனித உறவுத் தொடர்பான உணர்வுப் பகுதியினை ஒதுக்கிவிட்டன என்பது அவர்களின் குற்றச்சாட்டு.

மெனர்ட்டு (Mehnart, 1979) என்பவர், இன்றைய ஆசிரியர் கல்வியின் குறைபாட்டால், மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டை ஆசிரியர்கள் அறிய இயலாதவர்களாகவும், மாணவர்களின் உணர்ச்சியோடு ஒன்றாதவர்களாகவும், மாணவர்களின் உணர்ச்சித்தேவைகளுக்குஈடுகொடுக்கும்வகையில் கல்வி உத்திகளைப் பயன்படுத்தத் தெரியாதவர்களாகவும் உள்ளனரெனக் கூறுகிறார். முரே(Murray, 1979) என்பவர், 'ஆசிரியர், கற்பித்தல் திறன்களைப் பெற்றிருப்பதோடு, மனித உறவுகளைப் பலப்படுத்தும் திறன்களைக் கொண்டவராகவும் தன்னையும் பிறரையும் அறியும் உணர்வுத் திறன் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்' எனக் கூறுகிறார்.

உணர்வுசார் ஆசிரியர் கல்வியின்படி, கற்பித்தல் என்பது ஆசிரியர், மாணவர் என்ற இரண்டு ஆளுமைகளுக்கு(Personality) இடையே நிகழும் ஒரு நிகழ்ச்சி; இதில்ஆசிரியர் உயர்ந்தவர் என்றோ மாணவர் தாழ்ந்தவர் என்றோ எண்ண இடமில்லை. உயர்ந்த அனுபவமுள்ளவரின் வழிகாட்டலாக ஆசிரியர் செயல் மாணவர்களுக்கு அமைகிறது. மாணவர்களின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்ளுதல், வகுப்பறையில் மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டுக் காரணத்தைக்கண்டறிதல், அவ்வுணர்ச்சிகளுக்கு ஏற்றவகையில் கற்பித்தல், உத்திகள் அமைத்தல், மாணவர்களின் உணர்ச்சி உந்துதல்களையொட்டிப் பாடத்திட்டம் அமைத்தல் – போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதே உணர்வுசார் ஆசிரியர் கல்வியின் அடிப்படை நோக்கங்கள் என பிரவுன் (Brown, 1975) குறிப்பிடுகிறார். இக்குறிக்கோள்களை அடையும் வகையில், 'நடைமுறைச் செயற்' பகுப்பாய்வு (Transactional Analysis), தனியாள் வளர்ச்சித் திட்டம் (Personal Development Programme), உணர்வுசார் கல்வி வளர்ச்சித் திட்டம் (Affective Education Development Programme), ஆசிரியர் திறம் பயிற்சித் திட்டம் (Teacher Effectiveness Training Programme), மனித ஆற்றல் வளர்ச்சி மாதிரி (Human Resources Development Model), செய்தித் தொடர்பு முறைத் திட்டம் (Communication Network Programme) ஆகிய கல்விப் பயிற்சி முறைகள் உணர்வுசார் ஆசிரியர் கல்வியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பங்கேற்பு (Role-play), கற்பனை அனுபவம், போலி நிலை (Simulation) போன்ற உத்திகளும் இப் பயிற்சியில் பயன்படுத்தப்படுகின்றன.

அசுபி, உரோபக்கு (Aspy and Roebuck, 1982) ஆகியோரது ஆராய்ச்சியின் முடிவின்படி, மனித உறவுத் தொடர்பான உணர்ச்சிப் பாங்கினை ஆசிரியர்கள் பயிற்சியின் வழியாக உயர்த்திக் கொள்ள இயலும் என்பது புலனாகிறது. மேலும், இவர்களின் மற்றோர் ஆய்வு முடிவின் படி, உயர்ந்த உணர்வுப் பாங்கினைப் பெற்ற ஆசிரியர்கள் குறைந்த உணர்வுப் பாங்கினைப் பெற்ற ஆசிரியர்களை நோக்க மிகக் குறைந்த அளவே சிக்கல்களையும் இடையூறுகளையும் வகுப்பறையில் ஏற்படுத்தினார்கள் என்பது தெரிய வருகிறது. உயர்ந்த உணர்ச்சித் திறம் பெற்ற ஆசிரியர்களிடம் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி, மனப்பாங்கு, வருகைப்பதிவு, தன்னோக்குக் கருத்து (Self-concept), நடத்தை (Behaviour) ஆகியவற்றில் சிறந்திருந்தனர் என்பதையும் அவர்களது, ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

மனித உறவுகள் தொடர்பான திறன்களை (Interpersonal Skills)ஆசிரியர் மாணவர்களுக்கு எளிதில் கற்பிக்க இயலும் என்பது பலருடைய ஆராய்ச்சி முடிவில் கண்ட உண்மை. ஆயினும், இன்று பொதுவாக ஆசிரியர் கல்வியில் அறிவுப் பகுதி வளர்ச்சிக்கு (cognitive domain development) மட்டுமே மிகுந்த முதலிடம் தரப்படுகிறது. வருங்கால ஆசிரியர் கல்வியில் உணர்ச்சிப் பகுதி வளர்ச்சிக்கும் (Affective domain development) பயிற்சி தருவதன் மூலம், அப் பயிற்சியினைமுழுமையுடையதாக்குவது அவசியமாகும்.

துணை நூல்.

**Gordon, I.**, Teacher Effectiveness Training, Wyden Newyork, 1974.

**உணர்வுசார் கற்றல்**: உணர்வுகள், மதிப்புகள், மனப்பாங்குகள் ஆகியவற்றின் மாறுதல்களையொட்டித் தோன்றும் நடக்கை, திறன், துலக்கம் போன்றவற்றை மாற்றம் அடையச் செய்யும் கல்வி முறையே உணர்வுசார் கற்றல் எனச் சொல்லப் படுகிறது. இவ்வகைக் கற்றல் முறை, வயதுவந்தோர் கல்வியில் பெரிதும் பயன்படுத்தப் படுகிறது.

கிரத்வால் (Krathwohl, 1964) என்னும் அறிஞர் உணர்வுப் பகுதியானது (Affective domain) விழிப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுதல், ஆர்வத்தோடு பங்கு பெறுதல், மனப்பாங்குகளை மதித்துப் பண்படுத்துதல், பொறுப்பேற்றல், மதிப்புக் கோலங்களை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற அடிப்படை அனுபவங்களையும், மதிப்புகளின் எடுத்துக்காட்டாக இருத்தல், அவற்றையொட்டி வாழ்ந்துகாட்டுதல் போன்ற உயர் அனுபவங்களையும் கொண்டது எனக் கூறுகிறார்.

உணர்வுசார் கற்றல் என்பது வளர்ச்சியடைந்த மனிதனின் உணர்ச்சி, கிளர்ச்சி, அன்பு, பயம், காதல், இரக்கம், கோபம், எழுச்சி போன்ற பல் வகை அனுபவங்களைக் குறிப்பது எனக் கிது (Kidd, 1973) என்னும் அறிஞர் கூறுகிறார். தன் உணர்வு களை உணர்ந்து அவற்றோடியைந்து வாழ்க்கையில் மிகுந்த மனநிறைவு கொள்வது உணர்வுசார் கற்றலை வெளிப்படுத்தும். மன உளைச்சலை உதறித் தள்ள முனைவதும் பிறர்மேல் அன்பு காட்டுவதும், பிறர் அன்பு காட்டத் தகுந்தவராவதும் உணர்வு சார் கற்றல் நடை பெற்ற தன்மையினைக் காட்டும்.

இலாசுகர் (Lasker, 1980) என்பார் கற்றல் முறையை நடத்தைக் கொள்கை, அறிவுக் கொள்கை, மனிதவியல்புக் கொள்கை என்ற மூவகைகளில் பிரிக் கிறார். உணர்வுசார் கற்றல் மனிதவியல்புக் கொள்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்ட தாகும். மனிதவியல்புக் கொள்கை, கல்வி கற்றலின் நோக்கம் முழுமையான மனிதனாவதும் மனிதநேயமுடையவனாவதும் ஆம் எனக் கூறும்.

குடும்பவாழ்வு தொழில் வாழ்வு, பண்பாட்டு அரசியல், பொருளாதார வாழ்வு, சொந்த (தனி யார்) வளர்ச்சி, வாழ்நாள் கற்றல் ஆகிய ஐந்து பகுதிகளில் வயதுவந்தோர் (Adults) உணர்வுசார் கற்றல் பண்பினைப் பெறுவதன் மூலம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள இயலும் என்பது ஆராய்ச்சியாளர்கள் கூற்று. குடும்ப வாழ்க்கையில், உணர்வுசார் கற்றல் என்பதில் ஆண்-பெண் உறவுமுறை பற்றி அறிந்திருத் தல், குடும்பநலம் (Birth Control) பற்றி நல்ல மனப் பாங்கும் உணர்வும் கொண்டிருத்தல், குழந்தை நலம் பேணுதல், ஊட்டச்சத்துணவு பற்றிய கருத்து களை வளர்த்தல், பெற்றோர் பங்கும் பணியும் அறிந்திருத்தல், திருமண உறவும் நெறியும் தெரிந் திருத்தல் போன்றவை யாவும் அடங்கும் என நாக்சு (Knox, 1977) என்னும் அறிஞர் கூறுவர்.

இதே போல், தொழில் வாழ்க்கையில் பணி யளிப்போர், பணியாளர் உறவை வளப்படுத்துவது, தொழிலூக்கம் கொள்வது, பணிகுறித்த மனநிறைவு பெறுதல் போன்றவை உணர்வுசார் கற்றலில் அடங் கும். நேர்மையோடு நடத்தல், சட்டத்தை ஏற்று மதித்துப் பின்பற்றுதல், ஒழுக்க நெறிமுறையுடன் நடத்தல், இனம், பண்பாடு போன்ற வேறுபாடுகளை மதித்துப் போற்றுதல், சுற்றுப்புறச் சூழல் ஆபத்து களை உணர்தல், மனித வாழ்வைப் பாதிக்கும் வகை யில் எழக்கூடிய அரசியற்சிக்கல்களையும் வளர்ச்சியை யும் உணர்தல் போன்றவையும் பண்பாட்டு, அரசியல், பொருளாதாரம் சார்ந்த உணர்வுசார் கற்றல் வகை யில் அடங்கும் எனக் கிராசு (Cross, 1981) என்பார் மொழிவார்.

தன்னைப் பற்றிய நேரான தற்கருத்தினை-வாழ் நாள் முழுவதும் வளர்த்துக்கொள்வதும், வாழ்நாள் முழுதும் கற்றுக்கொண்டேயிருப்பதற்கான அடிப் படைத்திறன், பொறுப்பு ஆகியன குறித்த மனப் பாங்கினை வளர்ப்பதுவும் உணர்வுசார் கற்றலின் தலையாய பங்காகும் என நோவலசு (Knowles, 1975) கூறுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக, உணர்வுசார் கற்றல் பண்புகளைப் பிறரது அல்லது ஆசிரியரின் கண்காணிப்பில் வளர்த்துக் கொள்வதை விட, தாமே மாணவர்கள் முயன்று கற்று வளர்த்துக் கொள்வது வாழ்நாள் முழுவதும் கற்றல் என்ற கொள்கைக்கு ஏற்றதாக இருக்கும்.

துணை நூல்கள்:

**Kidd, J.R.**, How Adults Learn, Association Press, New York, 1973.

**Knowles, M. S.**, Self-directed Learning: A Guide for Learners and Teachers. Follett, Chicago, Illinois, 1975.

**Krathwohl, D.R.**, Taxonomy of Educational Objectives: Affective Domain, Mekay, New York, 1964.

**உணர்வூட்டல்**: அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் ஏழை, எளிய ஊரக மக்களிடையே விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தப் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பவுலோ பிரைரே (PauloFreire) என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பித்தல்-கற்றல் முறையே உணர்வூட்டல் அல்லது உணர்வாக்கம் (Conscientization) எனக் குறிக்கப்படுகின்றது.

உணர்வூட்டல் கல்விபெறும் ஏழை எளிய மக் கள் தம்மைப் போன்ற எளிய மனித குலத்தைப் பற்றிய விழிப்புணர்வு கொள்வதோடு, தம் உள் ளார்ந்த திறன்களைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஏழ்மைச் சமுதாயத்திற்கு விடுதலை தேடித் தருவதிலும் ஈடுபடுகின்றனர். பிரைரே வழங் கிய உணர்வூட்டல் கல்வியில், கற்போர், ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களாக மட் டும் கருதப்படாமல் அவர்களே கல்வி நிகழ்ச்சியை முழு ஈடுபாட்டுடன் நடத்திக் காட்டுபவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

பிரைரேவின் கல்விப் பயிற்சி முறை, முதன் முத லில் பிரேசில் (Brazil), சிலி (Chile) ஆகிய இலத்தீன்

அமெரிக்க நாடுகளில் வாழும் ஏழை எளிய மக்களிடம் வழங்கப்பட்டாலும், பின்னர்த் தாய்லாந்து, தான்சானியா, ஈக்வடார் ஆகிய நாடுகளில் வயது வந்தோர் கல்விப் பயிற்சியிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் வெற்றியுற நடத்திக் காட்டப்பட்டுள்ளது. உணர்வாக்கக் கல்விமுறை பொதுவாக, அறியாமையும் எழுத்தறிவின்மையும் மிகுந்த மக்களைக் கொண்ட மூன்றாம் நிலை நாடுகளில் (Third World Countries) வயது வந்தோர் கல்விப் பயிற்சியில் பயன்படுத்தப்படுகிறது.

வயது வந்தோர் கல்வியில் எழுதப் படிக்கக் கற்றல், செயலறிவு பெறுதல், சமூக விழிப்புணர்ச்சி எய்துதல் ஆகிய மூன்று கூறுகள் இன்றியமையாதவை. அறியாமையிலிருந்து விழித்தெழுதல், குறைந்த ஊதியப் பணியிலிருந்து விடுபடுதல், ஏற்றத் தாழ்வு, அநீதி ஆகியவற்றிலிருந்து விடுதலையடைதல் ஆகியவற்றிற்கு வெறும் ஏட்டுக் கல்வியோ எழுத்தறிவுக் கல்வியோ மட்டும் போதாது; உணர்வூட்டல் அல்லது உணர்வாக்கக் கல்வி இன்றியமையாதது என்பது பிரைரேவின் கருத்து. சுற்றுப்புறச் சூழலை ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கிச் சமுதாய நிறை குறைகளைக் காண்பது, குறைகளைக் களையச் செயலில் இறங்குவது, மீண்டும் மீண்டும் செயல்முறைகள் குறித்துச் சிந்திப்பது, தேவையான மாற்றத்தை நோக்கிக் கற்போர் முன்னேறுவது போன்றவை உணர்வாக்கக் கல்வியின் அடிப்படைகளாகும். உணர்வூட்டல் கல்விப் பயிற்சி பெற்ற மக்கள் மெல்ல மெல்லக் குடும்பம், பணி, சமுதாயம், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதோடு, தாமே எதையும் தொடங்கும் திறனையும், அதற்கான பொறுப்பினையும் பெற்றவர்களாகின்றனர்.

பிரைரேவின் உணர்வாக்கக் கற்பித்தலில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டு அது வகுப்பறையில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் உத்தியாக (Teaching Technique) இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்குச் சிக்கலான சமூக அமைப்புகளின் உண்மைத் தன்மையைப் படம் பிடித்துக் காட்ட ஆசிரியர் விரும்பும்போது உணர்வாக்கக் கற்பித்தல் முறையை ஆசிரியர் பயன்படுத்தலாம். சமூக அநீதியைச் சுட்டிக் காட்டவோ அதிகாரத்திலுள்ளோர் செய்யும் தவறுகளால் எவ்வகையில் சமூக முன்னேற்றம் தடைப்படுகிறது என்பதையோ உணர்வாக்கக் கற்பித்தலில் பாடமாக நடத்திக் காட்டலாம். இவ்வகைக் கற்பித்தலில் கற்போர் இருவகையான குணங்களைப் பெற்றிருப்பவராக இருப்பர். 1. சமூகத்தில் ஏற்றத் தாழ்வுக்குக் காரணம், கடவுள் செயல், முன்வினைப்பயன் என்று நினைப்பவர்களாக இருத்தல்; 2. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கண்டவுடன் களைந்தெறிந்து, மாறுதல் தேடும் ஆர்வமுடையவர்களாக இருத்தல். உணர்வாக்கக் கல்வியில் பங்கு பெறும் ஆசிரியர் முதிர்ந்த நடத்தையும், ஆழ்ந்த சமூக அறிவும் கொண்டவராயும் சமுதாய உட்கிடக்கைகளை அறிந்தவராகவும் இருத்தல்.

உணர்வாக்கக் கல்வி கற்பித்தலில், உளவழி நாடகம் (Psycho-drama), பாவனை ஏற்பு (Simulation), பங்கேற்பு (Role-Play), திரைப்படம், நுண்விவாதம் (Critical Dialogue), சோதனை முறை, நேரடி அனுபவம் ஆகிய பல்வகை உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

துணை நூல்:

**Freire, P.**, Pedagogy of the Opperessed, Secbury Press, New York, 1973.

**உணவு**: உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவு. எல்லா உயிரினங்களும் உயிர் வாழ உணவையே சார்ந்திருக்கின்றன. ஆகவே, அவற்றின் நடவடிக்கைகள் அடிப்படையில் உணவுத் தேட்டத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆதி மனிதனின் முதல் தொழில் உணவுத் தேட்டமே.

**உணவுத் தேட்டத்தின் வரலாறு**: ஆதிகாலத்தில் மனிதன் இதைத்தான் உண்ணுவது என்று கட்டுப்பாடு வைத்துக் கொள்ளவில்லை. காடுகளிலும் திறந்த வெளிகளிலும் அலைந்து திரிந்து கிடைக்கக் கூடியவற்றையெல்லாம் உண்டான். காய்கள், கிழங்குகள், கனிகள், கொட்டைகள், இலைகள், நாய்க்குடைகள் எனக் கண்ணில் பட்ட, உண்ணக் கூடிய தாவரங்களையெல்லாம் உண்டான். இவை மட்டுமல்லாமல் நீர்நிலைகளில் கிடைத்த மீன்கள், நிலத்தில் அகப்பட்ட புழு பூச்சிகள், நண்டுகள், நத்தைகள், சிறிய விலங்குகள் ஆகியவற்றையும் உண்டான். இவை கிடைக்காதபோது செத்துக் கிடந்த விலங்குகளின் இறைச்சியை யுண்டு பசியைத் தணித்துக் கொண்டான். இவை எதுவுமே கிடைக்காத போது மண்ணையும் களிமண்ணையும் கூடத் தின்றான்.

கால ஓட்டத்தில் மனிதன் கல்லிலிருந்தும் மரத்திலிருந்தும் வேட்டைக் கருவிகள் செய்யக் கற்றுக் கொண்டான். அவற்றைக் கொண்டு மான், பன்றி, கரடி, காட்டெருமை முதலிய விலங்குகளைக் கொல்லவும், நீர் வாழ் உயிரினங்களை வேட்டையாடவும் முடிந்தது. தொடக்கத்தில் மனிதன், தான் வேட்டை

யாடிய விலங்குகளைப் பச்சையாகவே உண்டான். நாளடைவில் நெருப்பை உண்டாக்கும் வழியை அறிந்ததும், விலங்குகளின் இறைச்சியை நெருப்பில் இட்டு வாட்டி உண்ணக் கற்றுக் கொண்டான். எப்படிப் பானை செய்வது என்ற கலையை அறிந்து கொண்டதும், தான் தேடிய உணவுப் பொருள்களைக் கொதிக்க வைத்து அல்லது வேக வைத்து உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டான். இவற்றால் அவனுக்கு உணவைச் சுவையாக்கி உண்ண முடிந்தது.

தொடக்கத்தில் தனியாக வேட்டையாடி வந்த மனிதன் வேட்டைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, மற்றவர்களுடன் சேர்ந்து பெரிய விலங்குகளையும் விலங்குக் கூட்டங்களையும் வேட்டையாடத் தொடங்கினான். இதனால், மக்கள் ஒரு கூட்டமாக வாழும் முறை ஏற்பட்டது. இவ்வாறு கூட்டமாக வாழத் தொடங்கிய மக்கள் காட்டு விலங்குகளில் சில வற்றைப் பிடித்துப் பழக்கி வளர்க்கத் தொடங்கினார்கள். ஆடு மாடுகள், செம்மறியாடுகள், பன்றிகள் முதலிய விலங்குகளைப் பிடித்துப் பழக்கி வீட்டு விலங்குகளாக ஆக்கிக் கொண்டார்கள். இவ்விலங்குகளை அவற்றின் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் வளர்த்தார்கள். நீர்நிலையோரங்களில் மீன்கள் கிடைக்காதபோது வீட்டு விலங்குகளின் தோலினால் படகுகள் செய்து, அவற்றைக் கொண்டு நீர்நிலைகளின் ஆழமான பகுதிகளுக்குச் சென்று மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். இதற்காக வலைகளைப் பின்னிக் கொண்டார்கள்.

மக்கள் கி.மு. 8000–ஆம் ஆண்டளவில், தம் உணவுக்காகப் பயிர்களை வளர்க்கும் முறையைக் கற்றுக் கொண்டார்கள். காய்கனி, கிழங்குகள் ஆகியவற்றைத் தேடி அலைவதை விடுத்து, இவற்றைத் தாமே பயிரிடக் கற்றுக் கொண்டார்கள். இதன் வழியாக எழுந்த வேளாண்மை அவர்களுக்கு உணவு கிடைக்கும் உறுதியை அளித்தது. ஒரே இடத்தில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழும் நிலையையும் உருவாக்கியது. வேளாண்மை முறை நிலைபெற்றுச் செப்பமடைந்ததும், தானியங்கள் முக்கிய வேளாண்மைப் பயிர்களாக அமைந்தன. வேளாண்மை ஏற்பட்ட இக்கால கட்டத்திலும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் ஆடுமாடுகள், செம்மறியாடுகள், பன்றிகள் முதலிய விலங்குகளை வளர்க்கும் நிலை நீடித்தது.

தங்களுடைய செய்தொழிலில் வெற்றி ஏற்படவும், பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் வேண்டி மக்கள் மிகுந்த சமயச் சடங்குகளை மேற்கொண்டார்கள். நல்ல விளைச்சல் உண்டாக நிலம், கதிரவன் மழை, ஆறுகள் ஆகியவற்றை வேண்டிக் கொண்டு பூசனை, பலி முதலிய சடங்குகளை மேற்கொண்டார்கள். அவ்வாறே தம் கால்நடைச் செல்வம் பெருகவும் பல வகைச் சடங்குகளை மேற் கொண்டார்கள். தம் வேண்டுதல் நிறைவேறியதும் திருவிழாக்கள் நடத்தித் தம் நன்றியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள்.

உணவு மூலாதாரங்கள்: இன்றும் மக்கள் தம் உணவைப் பெரிதும் தாவரங்கள், விலங்குகள் ஆகிய இரண்டு மூலாதாரங்களிலிருந்தே பெறுகிறார்கள். இவற்றில் மக்கள் உண்ணும் உணவில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தாவரங்களிலிருந்தே கிடைக்கிறது. ஆசுத்திரேலியா (Australia), ஐரோப்பா, வட அமெரிக்கா முதலிய கண்டங்களிலும், தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் மக்கள் மிகுதியான இறைச்சியை உண்ணுகிறார்கள். ஆயினும், அவ்விடங்களில் கூட மக்கள் தம் உணவில் பாதிக்கு மேல் தாவரங்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

தாவரங்களிலிருந்து பலவிதமான உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: (1) தானியங்கள், (2) காய்கனிகள். தானியங்களில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: அரிசி, கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வாற்கோதுமை (Barley), ஓட்சு (Oats) முதலியன. பயறு வகைகளும் தானியங்களே. உலக மக்களின் உணவின் பெரும்பகுதியைத் தானியங்களே அளிக்கின்றன. உலக மக்களில் பாதிப் பேர் கோதுமை, வாற்கோதுமை, சோளம், ஓட்சு ஆகியவற்றை உண்கிறார்கள். மீதிப்பேர் அரிசி உண்டு வாழ்கிறார்கள். வட அமெரிக்கரின் உணவில் மூன்றில் ஒரு பங்கைக் கோதுமை முதலிய தானியங்கள் அளிக்கின்றன. ஐரோப்பிய நாடுகளின் உணவில் பாதிக்கு மேல் தானியங்கள் இடம் பெறுகின்றன. ஆசியாவில் பெரும்பகுதியினர் அரிசியையே உண்கின்றனர். இந்தியா, தென் சீனா, சப்பான், தென் கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளின் உணவில் பெரும் பகுதி அரிசியே.

தாவரங்களிலிருந்து தானியங்கள், காய்கனிகள், மட்டுமன்றி, கொட்டைகள், கடலைகள், மசாலாப் பொருள்கள் (Spices), நாய்க்குடை, சர்க்கரை, எண்ணெய் முதலிய உணவுப் பொருள்களும் கிடைக்கின்றன. காப்பி, தேநீர், கோகோ (Coco) போன்றவையும் தாவரங்களிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. விலங்குகளிலிருந்து இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலியவை கிடைக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளை விட வளர்ச்சியுற்ற

நாடுகளில்தான் இறைச்சி மிகுதியாக உண்ணப் படுகிறது.

இறைச்சிகளுள் மக்களால் மிகுதியாக உண்ணப் படுபவை மாட்டிறைச்சியும் பன்றி இறைச்சியும் ஆட்டிறைச்சியுமே ஆகும். அமெரிக்காவிலும், கனடா விலும் மக்கள் விரும்பி உண்பவை இந்த இறைச்சி களேயாகும். ஆசுத்திரேலியாவிலும், அர்செண்டை னாவிலும் மாட்டிறைச்சி பெரிதும் விரும்பி உண்ணப் படுகிறது. மேற்கண்ட விலங்குகளின் இறைச்சி மட்டு மன்றிக் கோழி, வாத்து, வான்கோழி, புறா முதலிய பறவைகளின் இறைச்சியையும் உண்கின்றனர். சில நாடுகளில் கரிபூ என்ற கலைமான் வகையையும், குதிரை, குரங்கு, முதலை, புலி, முயல், நாய் முத லிய விலங்குகளையும் அடித்து உண்ணுவதுண்டு. இவற்றுடன் பாம்பு, ஆமை, எறும்பு, ஈசல், வெட்டுக் கிளி, நத்தை, தேனீக் கூட்டுப் புழுக்கள் ஆகியவற் றையும் உண்பதுண்டு. மீன், நீண்ட கடற்கரையுடைய நாடுகளிலும் தீவுகளிலும் முக்கிய உணவாகப் பயன் படுத்தப்படுகிறது. சிப்பிகளும் கூட உண்ணப்படுவ துண்டு.

பொதுவாக முட்டைகளுள் கோழி முட்டையும் வாத்து முட்டையும் உண்ணப்படுவதுண்டு. சில நாடு களில் ஈமு, கடற்பறவை, பெங்குயின் (Penguin), நெருப்புக்கோழி ஆகிய பறவைகளின் முட்டைகளும், ஆமை, முதலை முதலிய ஊர்வனவற்றின் முட்டை களும் உண்ணப்படுகின்றன.

பாலும் பாலிலிருந்து பெறப்படும் தயிர், வெண் ணெய், பாலாடைக்கட்டி போன்ற பொருள்களும் உணவாக அமைகின்றன. மிக அதிகமாகப் பயன்படும் பால் பசுவின் பால். ஐரோப்பிய, வடஅமெரிக்க நாடுகளில் பசுக்களே மக்கள் அருந்தும் பாலில் பெரும் பகுதியைத் தருகின்றன. பிற நாடுகளில் பல்வேறு பாலூட்டி விலங்குகள் பால் தருகின்றன. பிரான்சு (France), துருக்கி, இத்தாலி, கிரீசு (Greece) ஆகிய நாட்டினர் ஆட்டின்பாலை மிகுதியாகப் பயன்படுத்து கின்றனர். இலாப்லாந்திலும் பிற வட ஐரோப்பிய நாடுகளிலும் கலைமானின் (Reindeer) பாலைப் பயன்படுத்துகின்றனர். இந்தியா, பாகிசுத்தான், எகிப்து, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் எருமைப் பால் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. திபேத்து, மங்கோலியா ஆகிய நாடுகளில் கவரி எருமை (Yak), குதிரை ஆகியவற்றின் பால் பயன்படுத்தப்படுகிறது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள சில பாலை வனப் பழங்குடிகள் ஒட்டகப் பாலை அருந்துகிறார் கள். சிலி, ஈக்குவடார், பெரு, பொலிவியா முதலிய தென் அமெரிக்க நாடுகளில் இலாமா என்ற விலங் கின் பாலைக் குழந்தைகளுக்குத் தருகிறார்கள்.

**உணவில் உள்ள சத்துகள்:** உடல் இயங்கவும், வளர்ச்சியடையவும், நலமாக இருக்கவும் உடலுக்குச் சக்தி வேண்டும். உடலில் உள்ள இழைமங்கள் (Tissues) வலுவாக அமைய வேண்டும். அவை வலு விழந்து தேயும் பட்சத்தில் அவை புதுப்பிக்கப்பட வேண்டும். உடலில் நிகழும் செயற்பாங்குகள் ஒழுங் குற அமைய வேண்டும். இக்காரியங்களுக்காகவே உடலுக்குச் சில பொருள்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய பொருள்கள் உணவுச் சத்துகள் எனப் படும். அவற்றின் இரசாயன அமைப்புப்படி, அவை (1) புரதம் (Protein), (2) கரிநீரகி (Carbohydrate), (3) கொழுப்பு, (4) வைட்டமின்கள், (5) உலோகத் தாதுப் பொருள்கள் (Minerals) (6) தண்ணீர் என வகைப்படுத்தப்படுகின்றன.

உணவுச் சத்துகளில் புரதங்கள் தசை வளர்க் கும் சத்துகள். இவை கரி (Carban), உயிரகம் (Oxygen), நீரகம் (Hydrogen), வெடியம் (Nitrogen) ஆகிய தனிமங்களால் ஆனவை. சில புரதச் சத்து களில் கந்தகமும், வேறு சில புரதச் சத்துகளில் எரிம மும் இருக்கின்றன. புரதச் சத்துகள் உயிரின் உறை விடமாகிய 'ஊன்மம் (Protoplasm) என்ற உயிர்ப் பொருளின் முக்கிய பாகமாக இருக்கின்றன. புரதச் சத்துகளில் அமினோ அமிலங்கள் என்ற அமிலங்கள் உள்ளன. அமினோ அமிலங்களில் சில உயிர் வாழ் வதற்கும், உடல் வளர்ச்சிக்கும் பயன்படுகின்றன. அத்தகைய அமினோ அமிலங்களைக் கொண்ட புரதங்களை முதல் தரப் புரதங்கள் என்பர். அவை பால், முட்டை, இறைச்சி முதலிய உணவுப் பொருள் களில் உள்ளன. வேறு சில அமினோ அமிலங்கள் உயிர் வாழ்வதற்கு மட்டுமே பயன்பட்டு, உடல் வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை. அத்தகைய அமினோ அமிலங்களைக் கொண்ட புரதங்களை இரண்டாந்தரப் புரதங்கள் என்பர். அவை தானியங் களிலும் பயறுகளிலும் பருப்புகளிலும் கடலைகளி லும் அதிகமாக உள்ளன.

கரிநீரகிகள் மாச்சத்துகள் ஆகும். இவை கரி, உயிரகம், நீரகம், ஆகிய தனிமங்களால் ஆனவை. உடலுக்கு வேண்டிய சக்தியைக் கரிநீரகிகள் கொடுக் கின்றன. தானியங்களிலும் கிழங்குகளிலும் (குறிப் பாக, உருளைக் கிழங்கிலும் சர்க்கரை வள்ளிக் கிழங்கிலும்), பருப்புகளிலும் கொட்டைகளிலும் சர்க்கரையிலும் கரிநீரகிகள் அதிகமாக உள்ளன.

கொழுப்புகளில் மேற்கண்ட தனிமங்கள் இருப்பி னும், அவற்றில் கரிநீரகிகளில் இருக்கிற அளவுக்கு உயிரகம் கிடையாது. கொழுப்புகள் சக்தியைத் தருவ துடன், உடலின் வெப்பம் குறையாமல் இருக்கவும், மேனி வளமாக இருக்கவும், உடலின் உறுப்புகள்

நலமாக இருக்கவும் உதவுகின்றன. இறைச்சியிலும் மீனிலும் முட்டையிலும் பாலிலும் பால் பொருள்களி லும் எண்ணெய்களிலும் கொழுப்பு நிறைந்துள்ளது. ஆனால், பாலில் உள்ள கொழுப்பு ஏனைய கொழுப் புகளைப் போலல்லாமல் A.D. ஊட்டச் சத்துகள் (Vitamins) நிறைந்ததாயும், எளிதில் செரிக்கக் கூடி யதாகவும் இருக்கிறது.

ஊட்டச்சத்துகளில் இருபதுக்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. அவை உடல்நலத்திற்கும் வளர்ச்சிக்கும் துணையாய் இருக்கின்றன. பால்,காய் கறிகள், பழங்கள், தக்காளி, கீரை, முட்டை, முழுத் தானியங்கள், முளை கட்டிய பயறுகள், மீன், வெண்ணெய், நெய், ஈரல் ஆகிய பல உணவுகளில் அவை வெவ்வேறு அளவுகளில் பரவிக் கிடைக்கின் றன. பாலில் மட்டும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஊட்டச் சத்துகள் அனைத்தும் உள்ளன.

உலோகத் தாதுப் பொருள்கள் எலும்புகளுக்கும் பற்களுக்கும் வலுவூட்டுவன. அவை உடலின் பல நீர்களையும் தத்தம் இயல்பு மாறாமல் இருக்கும் படி காத்துக் கண்காணிக்கின்றன. உலோகத் தாதுப் பொருள்களுள் சுண்ணாம்புச் சத்தும் (Calcium), இரும்புச் சத்தும் செம்புச் சத்தும் கந்தகமும் எரிம மும் முக்கியமானவை. பால், முட்டை, காய்கறிகள், கீரைகள், பழங்கள் ஆகிய உணவுகளில் உலோகத் தாதுப் பொருள்கள் நிறைய உள்ளன. பாலில் தான் மிகுதியான உலோகத் தாதுப் பொருள்கள் உள்ளன.

உணவில் உள்ள தண்ணீர் மேற்கண்ட உணவுச் சத்துகளைக் கரைத்து உயிரணுக்களுக்குக் (Cells) கிடைக்குமாறு உதவுகிறது. கழிவுப் பொருள்கள் உடலிலிருந்து வெளியேறவும் தண்ணீர் உதவுகிறது.

இச் சத்துகளன்றி, உணவில் நார்ப் பொருளும் (fibre) உள்ளது. இது உணவும் கழிவுப்பொருள்களும் குடலில் அசைந்து செல்வதற்கு உதவியாக இருக் கிறது. காய்கறிகள், பழங்கள், தவிடு, தண்டு வகை கள் ஆகியவற்றில் நார்ப்பொருள் கிடைக்கிறது.

இயற்கையில் எந்த ஓர் உணவிலும் இச்சத்துகள் அனைத்தையும் ஒருங்கே காணமுடியாது, ஆகவே, நாம் எல்லாவிதமான உணவுப்பொருள்களும் கலந்த சீருணவை உண்ணுவது இன்றியமையாதது. அதன் மூலம் எல்லாச் சத்துகளையும் மக்கள் போதிய அள வில் பெறலாம்.

உணவுச் சத்துகள் பயன்படுத்தப்படும் விதம்: மேற்கண்ட உணவுச் சத்துகளை உடல் மூன்று வழி களில் பயன்படுத்துகிறது. முதலாவதாக, உடல் தனக்கு வேண்டிய சக்தியைத் தயாரிக்கச் சில உண வுச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. உடலின் எல்லா உறுப்புகளும் செயற்படச் சக்தி வேண்டும். இப்படி உடம்பின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தேவைப் படும் சக்தியைத் தயாரிக்க உணவில் உள்ள கரிநீர கிகளும் கொழுப்புகளும் உதவுகின்றன.

செரிமானத்தின்போது உணவில் உள்ள கரிநீரகி கள் எளிமையான சர்க்கரைகளாக உருமாறுகின்றன. கொழுப்புச் சத்துகள், கொழுப்பு அமிலங்கள், கரி நீர்ப்பாகு (Glycerol) என்ற இரு பொருள்களாகப் பிரிகின்றன. இந்த மூன்று பொருள்களும் உடலின் உயிரணுக்களில் எரிதலால் சக்தி (வெப்பச் சக்தி) வெளிப்படுகிறது. அந்தச் சக்தி உடலின் ஒவ்வொரு வேலைக்கும் பயன்படுகிறது. அந்தச் சக்தியின் காரண மாகவே உடலில் உள்ள பல்வேறு உறுப்புகளும் செயல் மண்டலங்களும் (Systems) செயற்பட முடிகின் றன. மேலும், உணவுச் சத்துகள் உயிரணுக்களில் எரியும்போது ஏற்படும் வெப்பம் உடலின் வெப்ப நிலை சீராக, 98.6° F (37° C) அளவில் இருக்கும் வண்ணம் உதவுகிறது. இந்த வெப்பம் இல்லாமல் உடல் ஒழுங்காக இயங்க முடியாது.

இரண்டாவதாக, உடலில் உள்ள எலும்புகள், பற்கள், தசைகள், பிற இழைமங்கள் தொடர்ந்த உபயோகத்தின் காரணமாகத் தேயும். அப்படித் தேயும்போது அவற்றைச் சரி செய்து புதுப்பித்தா லொழிய உடல் வளர்ச்சியடையவோ இயல்பாகச் செயற்படவோ இயலாது. மேலும், முற்றிலும் தேய்ந்த இழைமங்களுக்குப் பதிலாகப் புதிய இழை மங்களும் உருவாக்கப்படுவது இன்றியமையாதது. இக்காரியங்களுக்காக உடல் உணவில் உள்ள புரதச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. இழைமங்கள் புரதப் பொருள்களைக் கொண்டவை. அவை தேய்கிற போது புரதப் பொருள்களைக் கொண்டுதான் அவை கள் புதுப்பிக்கவும் வலுப்படுத்தவும் படுகின்றன.

உலோகத் தாதுப் பொருள்களும் உடல் இழை மங்கள் வலுவாக அமைய உதவுகின்றன. எடுத்துக் காட்டாக, சுண்ணாம்புச் சத்து, எரிமம் முதலியவை எலும்புகளும் பற்களும் உறுதியாக இருக்க உதவு கின்றன.

மூன்றாவதாக, உடல் தன்னிடம் நிகழும் பலவித மான செயற்பாங்குகள் ஒழுங்குற அமைய உணவுச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. இக்காரியத்திற்கு உணவில் உள்ள புரதச் சத்துகள் பெரிதும் பயன்படு கின்றன. உடலில் உணவு செரிக்கவும், சக்தி (வெப்பச் சக்தி) தயாராகவும், இழைமங்கள் வலுப்படுவதற்குத்

தேவையான புரதப் பொருள்கள் உருவாகவும் சுரப்பி நீர் (Enzymes) என்ற புரதப் பொருள்கள் உதவு கின்றன. உடலில் நிகழும் இரசாயனச் செயல்களை நொதிப்பிகள் (Hormones) என்ற புரதப் பொருள் கள் ஒழுங்குபடுத்துகின்றன. அவை நோய்க் கிருமி களை எதிர்த்துப் போராடி உடல் நலத்தைப் பாது காப்பவை. நோய் எதிர்ப்புப் பொருள்கள் (Antibodies) புரதப் பொருள்கள். உடல் இந்த எல்லாப் புர தப் பொருள்களையும் உணவில் உள்ள புரதச் சத்து களில் கிடைக்கும் அமினோ அமிலங்களிலிருந்து தயாரிக்கிறது.

உலோகத் தாதுப் பொருள்களும் ஊட்டச்சத்து களும் கூட உடலில் நிகழும் பல செயற்பாங்குகளில் பெரும் பங்கு வகிக்கின்றன. மற்றைய உணவுச் சத்து களைப் போல அல்லாமல், இவை உணவுச் செரி மானத்தின்போது நேரே இரத்த ஓட்டத்தில் சென்று கலக்கின்றன.

உலோகத் தாதுப் பொருள்கள் பலவிதமான பணி களைப் புரிகின்றன. எடுத்துக்காட்டாக, இரும்புச் சத் தும் செம்புச் சத்தும் சிவப்பு இரத்த அணுக்கள் வலு வாக அமைய உதவுகின்றன. உவர்மமும் (Sodium), பிற உலோகத் தாதுப் பொருள்களும் உடலின் இழை மங்களில் இருக்கும் நீரின் அளவு மாறாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்ளுகின்றன. சுண்ணாம்புச் சத்து காயம் பட்ட இடத்தில் இரத்தம் உறையத் துணை புரிகிறது.

உலோகத் தாதுப் பொருள்களைப்போல வைட்டமின்களும் பலவிதமான பணிகளைப் புரிகின் றன. ஊட்டச்சத்து A இரவில் பார்க்கவும், உறுதி யான எலும்புகள், ஆரோக்கியமான பற்கள், வலிமை யான தோல் ஆகியவை அமையவும் உதவுகின்றது. பலவிதமான B ஊட்டச்சத்துகள் உடலில் கரிநீரகி கள், கொழுப்புகள், புரதச் சத்துகள் ஆகியவை எரிந்து அதன் மூலம் உடலுக்குத் தேவையான சக்தி தயாராக உதவுகிறது. ஊட்டச்சத்து C உடல் உறுப்புகள் வலிமை பெறவும், எலும்புகளும் பற்களும் உறுதிப்படவும் உதவுகின்றது. ஊட்டச்சத்து D உடல் உணவில் உள்ள சுண்ணாம்புச் சத்தையும், எரிமத் தையும் (Phosphorous) பயன்படுத்த உதவுகிறது.

பொதுவாக ஊட்டசத்துகள் உடல்நலத்திற்கும், வளர்ச்சிக்கும், நோயை எதிர்க்கக் கூடிய வலிமைக் கும் பெருந்துணையாய் இருக்கின்றன. ஆகவே, உண் ணும் உணவில் வைட்டமின்கள் போதிய அளவில் இருக்க வேண்டும். அவை குறைந்தால் நோய்கள் உண்டாகும். எடுத்துக்காட்டாக, ஊட்டச்சத்து C குறைந்தால் சொறிநோய் உண்டாகும். வைட்டமின் D குறைந்தால் கணைச்சூடு உண்டாகும்.

உணவு வேறுபாடு: உடல் இயங்கவும் வளர்ச்சி யடையவும் நலமாக இருக்கவும் பல வகையான உணவுகள் தேவைப்படுவதால், மக்கள் ஒரே வித மான உணவுகளை உண்ணுவதில்லை. அவை நாட் டுக்கு நாடு வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, சில நாடுகளில் மிகுதியாக இறைச்சியை உண்ணு கிறார்கள். வேறு சில நாடுகளில் மீனை மிகுதியாக உண்ணுகிறார்கள். சில நாடுகளில் சைவ உணவு மட் டுமே உண்ணப்படுகிறது. சில நாடுகளில் சில உண வுகள் விரும்பி உண்ணப்படுகின்றன. ஆனால், அவை பிற நாடுகளில் விலக்கப்படுகின்றன. எடுத்துக்காட் டாக, ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலும், கிழக்காசிய நாடுகளிலும் பசிபிக்குத் தீவுகளிலும் மக்கள் நாயின் இறைச்சியை உண்ணுகிறார்கள். ஆனால், வடஅமெ ரிக்காவில் நாயின் இறைச்சியை யாரும் உண்ணுவ தில்லை. பெரு நாட்டு இந்தியர்கள் கினியா பன்றி இறைச்சியை விரும்பி உண்பார்கள். ஆனால், வட அமெரிக்காவில் அது அருவருப்பாகக் கருதப்படுகிறது.

உணவுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் இருக்கின்றன. அவை: (1) புவியியல் காரணங்கள், (2) பொருளா தாரக் காரணங்கள், (3) சமயக் காரணங்கள், (4) வழக்கங்கள்.

புவியியல் காரணங்கள்: வாழும் நிலத்தின் அமைவிடம், தட்ப வெப்ப நிலை, அங்கு நிலவும் புறச் சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து, ஒரு நாட்டு மக்களின் உணவுப் பழக்கம் அமையக் கூடும். தீவுகளில் அல்லது நீண்ட கடற்கரையுடைய நாடு களில் வாழும் மக்களின் உணவு பெரும்பாலும் கடல் வாழ் உயிரினங்களாக இருக்கும். நார்வே, சுவீடன், தென்மார்க்கு, பின்லாந்து, சப்பான் ஆகிய நாடு களில் மீனே மக்களின் முக்கிய உணவாக இருக்கிறது. காரணம், இந்நாடுகள் கடலை ஒட்டி இருப்பதால் மீன்பிடித்தல் தொழில் இங்கே முக்கியமான தொழி லாக அமைய முடிகிறது. ஆசுத்திரேலியா, அர்செண் டைனா, அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா ஆகிய நாடுகளில் மாட்டிறைச்சி பெரிதும் உண்ணப்படு கிறது. இதற்குக் காரணம் இந்நாடுகளில் மாடுகள் மேய்ப்பதற்கு ஏற்பப் பரந்த சமவெளிப் புல்வெளிகள் மிகுதியாக இருப்பதுதான். வெப்ப மண்டலப் பகுதி களில் வாழும் மக்கள் ஆண்டு முழுவதும் காய்கறி களும் பழங்களும் விளைவிக்க முடியும். ஆகவே, அவர்கள் உணவில் காய்கறிகளும் பழங்களும் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால், குளிர்ப் பகுதிகளில்

வாழும் மக்கள் குறைந்த காலந் தான் உணவுப் பயிர்களை விளைவிக்க முடியும். ஆகவே, அவர்கள் உணவில் தானியங்களும் காய்கறிகளும் குறைவாகவும், இறைச்சி, மீன் முதலியன மிகுதியாகவும் இருக்கும். வறண்ட நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் மக்காச் சோளம் போன்ற தானியங்களை விளைவித்து உண்ணுகிறார்கள். மழை வளம் நிரம்பிய செழிப்பான பகுதிகளில் வாழும் மக்கள் அரிசி விளைவித்து உண்ணுகிறார்கள்.

ஆனால், இப்போது போக்குவரத்துச் சாதனங்கள், செய்தித் தொடர்புச் சாதனங்கள் ஆகியவை பெருகியுள்ளதால் ஒரு நிலப் பகுதி மக்கள் பிற நிலப் பகுதி மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், பல்வேறு நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் தம்மிடையே உணவுப் பரிமாற்றம் வைத்துக் கொள்ள முடிகிறது. மேலும், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஒரு புறச் சூழ்நிலையில் வளரும் உணவுப் பயிர்கள் பிற சூழ்நிலையிலும் வளரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரக் காரணங்கள்: பொதுவாக ஒரு நாட்டு மக்கள் உண்ணும் உணவின் வகை, அளவு ஆகியவை அவர்களுடைய நாட்டின் பொருளாதார நிலையைப் பொறுத்து அமைகிறது. மிக்க வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்கள் பல வகையான உணவுகளையும் சத்து நிரம்பிய உணவையும் உண்ண முடிகிறது. அவர்களுடைய உணவில் தானியங்கள், காய் கனிகள் ஆகியவற்றுடன் இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலிய உணவுப் பொருள்களும் இடம் பெறுகின்றன. இதன் காரணமாக அவர்களுடைய உணவு சத்து நிரம்பியதாக, வளமானதாக இருக்கிறது.

பெரும்பாலான வளர்ந்து வரும் நாடுகளில் மக்களுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. கிடைக்கின்ற உணவும் சத்து நிரம்பியதாக இருப்பதில்லை. இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலியன அந்நாட்டு மக்களுக்கு விலையுயர்ந்தவையாக இருப்பதால், அவற்றை வாங்கியுண்ண அவர்களுடைய பொருளாதார நிலை இடந்தருவதில்லை.

சமய காரணங்கள்: பல மதங்களில் உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்து சமயம் மாட்டிறைச்சியை அனுமதிப்பதில்லை. சில இந்துக் குழுக்களில் எந்தவிதமான இறைச்சியும் அனுமதிக்கப்படுவதில்லை. இசுலாமிய சமயத்திலும் வைதிக சமயத்திலும் பன்றி இறைச்சி உண்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. சமணமும், புத்த சமயமும் புலால் உணவைக் கடுமையாகக் கண்டிக்கின்றன. ஏழாம் நாள் பிறப்பு (Seventh-day Adventist) என்ற கிறித்தவத் திருச்சபை தன்னுடைய உறுப்பினர்களை எந்த இறைச்சியையும் தொடலாகாது என்று வற்புறுத்துகிறது. சமயக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்தச் சமய மக்கள் தடை செய்யப்பட்ட உணவுகளை விலக்கி, அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளையே உண்ணுகிறார்கள்.

வழக்கங்கள்: வழக்கங்களின் அடிப்படையில் கூட மக்களின் உணவு வரையறுக்கப்படுகிறது. பல நாடுகளில் சில உணவு வகைகளே பெரிதும் உண்ணப்படுகின்றன. இதற்குக் காரணம் அவை மரபு வழி அமைந்த உணவுகள் என்பது தான். மரபு வழி அமையாத உணவுகள் வெறுத்து ஒதுக்கப்படுவதுண்டு.

அமெரிக்க மக்களுக்கு உரொட்டித்துண்டு, இறைச்சி, காய் கறிகள், பாலாடைக் கட்டி ஆகியவையும், பாலும், ஆரஞ்சுப் பழச்சாறும் முதன்மையான உணவு. ஆங்கிலேயரும் ஆசுத்திரேலியரும் மாவு, பால், முட்டைக் கரு முதலியவற்றைச் சேர்த்துப் பிசைந்து நெருப்பிலிட்டு வாட்டித் தயாரிக்கப்படும் ஒரு வகைப் பிட்டை வறுக்கப்பட்ட மாட்டிறைச்சியுடன் சேர்த்து உண்ணுகிறார்கள். இத்தாலியருக்குக் கோதுமை மாவு, முட்டைக்கரு ஆகியவற்றுடன் செய்யப்படும் குழல் பண்ணியங்கள் முதன்மையான உணவு. அவர்கள் இவற்றைத் தக்காளிக் கூட்டுச் சாற்றில் (Sauce) தோய்த்து உண்ணுகிறார்கள். பிரான்சில் உரொட்டியும், கூட்டுச் சாறும், மாவுக் கூழும் முக்கியமான உணவுகள். செருமானியர் உணவில் பொதுவாக மசாலா கலந்த, கொத்தப்பட்ட மாட்டிறைச்சி, உருளைக் கிழங்கு அடை, முட்டைக் கோசு ஆகியவை இடம் பெற்றிருக்கும். இசுபானியர் (Spanesh) அரிசி, கோழிக்கறி, காய்கறிகள், குங்குமப்பூ, மசாலாப் பொருள்கள் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்துத் தளதளவென்று நீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்படும் பாலா (Paella) என்ற உணவை விரும்பிச் சாப்பிடுகின்றனர். கிரீசு மக்களுக்கு அரைக்கப்பட்ட செம்மறியாட்டுக் குட்டிக்கறி, முட்டைக் கத்திரிச் செடியின் பழம், தக்காளிக் கூட்டுச் சாறு, பாலாடைக் கட்டி இவற்றுடன் சேர்த்துச் செய்யப்பட்ட மூசாகா (Moussaka) என்ற உணவு விருப்பமான உணவு. அங்கேரிய மக்களுக்கு மாட்டிறைச்சி, கன்றிறைச்சி, காய்கறிகள், 'பாப்ரிகா', என்ற மசாலாப் பொருள் ஆகியவற்றைக் கலந்து நீரில் வேக வைத்து வதக்கித் தயாரிக்கப்படும் கலாசு (Goulash) என்பதுதான் சிறந்த உணவு. இசுகாண்டிநேவிய மக்கள், உரொட்டி பாலாடைக் கட்டி, கெர்

ரிங்கு (Herring) என்ற கடல்மீன், மற்ற மீன்கள் ஆகிய வற்றை விரும்பி உண்ணுகிறார்கள். சோவியத்து மக்கள் விரும்பியுண்பது பாலாடைக் கட்டி பொதிந் திருக்கும் பிளினி (Blini) என்ற அடை. இதனுடன் கொர்ரிங்கு மீன், உப்பிட்டு உலர்த்திய பெரிய மீன் முட்டைகள், பார்ச்சு (Borsch) என்ற பீட்ரூட்டுச் சாறு (Soup) ஆகியவற்றைச் சேர்த்து உண்ணுகிறார் கள். மத்திய ஆசிய நாடுகளில் கோதுமை மாவில் பிசைந்த பிட்டா உரொட்டி என்றஉரொட்டிதான் முக்கியமான உணவு. இசுரேலில் பிட்டா உரொட்டி யுடன், நன்றாக அரைக்கப்பட்ட மாட்டிறைச்சி, 'சிக்-பீ' என்ற பயறு, மசாலாப் பொருள்கள் ஆகிய வற்றைச் சேர்த்து வறுத்துத் தயாரிக்கப்படும் பெல பெல் (Fellafel) என்ற பண்டத்தையும் சேர்த்து உண்ணுகிறார்கள். மெக்சிகோவில் மக்காச் சோள மாவினால் செய்யப்படும் அடை போன்ற தார்டீலா (Tortilla) என்ற உரொட்டிதான் முதன்மையான உணவு. இந்தியாவிலும் தென் சீனாவிலும் சப்பா னிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அரிசிதான் முதன்மையான உணவு. இந்தியர்கள் அரிசிச் சோற் றில் குழம்பு சேர்த்து உண்ணுகிறார்கள். சப்பானியர் அரிசிச் சோற்றுடன் உறைப்பில்லாத குழம்பு, வறுத்த காய்கறித் துண்டுகள், இறைச்சி, மீன் ஆகியவற்றைக் கலந்து உண்ணுகிறார்கள். வட, மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் செமோலினா என்ற தானிய மாவை வேக வைத்துத் தயாரிக்கப்படும் கூசுகூசு (Couscous) என்ற மாவு உணவே முதன்மையான உணவாகும். இதனு டன் மசாலாப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், கடலைகள், இனிப்புப் பொருள்கள் ஆகியவற்றையும் சேர்த்து உண்ணுகிறார்கள்.

உண்ணுகிற வேளைகளும் வழக்கத்தின் அடிப் படையில் அமைகின்றன. பெரும்பாலான நாடுகளில் காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை மட் டுமே உணவு உண்ணப்படுகிறது. வழக்கத்தின் அடிப் படையில் இது அமைகிறது. இப்பொழுது மேலை நாடுகளிலும், இந்தியாவிலும் காப்பி அல்லது தேநீ ருடன் கூடிய மாலைச் சிற்றுண்டி உண்ணும் வழக் கமும் ஏற்பட்டுள்ளது.

உணவு உண்ணும் விதம் கூட வழக்கத்தின் அடிப் படையில் ஏற்படுகிறது. பெரும்பாலான மேலை நாடுகளில் மக்கள் தட்டில் உணவை வைத்துக் கரண்டி, முள் கரண்டி, கத்தி ஆகியவற்றால் உணவை எடுத்து உண்ணுகிறார்கள். இந்தியர் தட்டில் அல் லது இலையில் உணவு பரிமாறப்பட, அதைக் கைக ளால் எடுத்து உண்ணுகின்றனர். சீனாவிலும் சப்பா னிலும் மாவுருண்டையினை மக்கள் குச்சிகளால் எடுத்து உண்ணுகிறார்கள்.

இக்கால உணவு முறை: வளர்ந்து வரும் நாடு களில் மக்கள் தாங்களாகவே உணவு உற்பத்தி செய்து தம் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளுகி றார்கள். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் உணவு உற்பத்திக்கென்றே ஒரு தொழில் நடைபெறுகிறது. அத்தொழிலில் உணவுகள் சுகாதாரமான முறையில் பக்குவப்படுத்தப்பட்டு, தகரக்கலத்தில் (tin), அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இறைச்சி, மீன் கூட இவ்விதம் பக்குவப்படுத்தப்பட்டுத் தகரக்கலத் தில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. புதிய அறி வியல் வளர்ச்சியின் காரணமாகச் செயற்கை உணவு களும் புழக்கத்திற்கு வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இயற்கை முட்டைகளுக்கு மாற்றாகச் செயற்கை (Synthetic) உணவுப் பொருள்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. சி.என்.ந.

**உணவுக் கட்டுப்பாடு**: காண்க: உணவுக் கொள்கை.

**உணவுக் கலப்புத் தடுப்புச்சட்டம்**: **(1954)** இது உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்கான ஒரு சட்டமாகும். இதன்கண் 1) கலப்படஞ் செய் பொருள், 2) கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டம், 3) உணவு பற்றிய பொதுவான வகை முறை, 4) உணவு ஆய்வாளர் 5) வழக்கு நடை முறை, போன்றவை ஆராயப்படுகின்றன.

கலப்படஞ் செய்பொருள்: கலப்படம் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகிற அல்லது பயன் படுத்தப்படக்கூடிய எந்தப் பொருளும் கலப்படஞ் செய்பொருள் எனப்படும்.

கலப்படம் செய்யப்பட்ட உணவுப்பண்டம்: அ) ஒரு விற்பனையாளரால் விற்கப்படும் பண்டம், விலைக்கு வாங்குகிறவர் கோரிய தன்மையோ ஊட் டச்சத்தோ தரமோ இல்லாதிருக்கும்போது; அல்லது ஆ) அதன் தன்மை, சத்து அல்லது தரம் வேறு ஏதேனும் ஒரு பொருளால் பாதித்திருக்கும்போது; அல்லது இ) அந்தப் பண்டத்தின் தன்மை, சத்து அல்லது அதன் தரத்துக்குக் கேடுவிளைவிக்கும் வகை யில் அதைவிட மட்டமான அல்லது மலிவான பொருள் ஏதேனும் முழுவதுமாகவோ பகுதியாகவோ கலக்கப்பட்டிருக்கும்போது; அல்லது ஈ) அதன் தன்மை, சத்து அல்லது தரத்துக்குக் கேடு விளை விக்கும் வகையில் அந்தப் பண்டத்தின் அமைப்பான எதுவும், முழுவதுமாகவோ பகுதியாகவோ பிரித் தெடுக்கப்பட்டிருக்கும்போது; அல்லது உ) அந்தப் பண்டம் சுகாதாரமற்ற சூழ்நிலையில் தயாரிக்கப் பட்டோ சிப்பமாகக் கட்டப்பட்டோ குறைபாடுற்ற தாகவோ உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடிய

தாகவோ இருக்கும்போது; அல்லது ஊ) அந்தப் பண்டம் அழுக்கான, நாற்றமுள்ள, அழுகிய, சிதைவுற்ற அல்லது நோயுற்ற பிராணியை அல்லது தாவரப் பொருளை முழுமையாகவோ பகுதியாகவோ கொண்டிருக்கும்போது; அல்லது பூச்சி பிடித்திருக்கும்போது; அல்லது மனிதர் அருந்துவதற்குத் தகுதியற்றதாக இருக்கும் போது; அல்லது எ) அந்தப் பண்டம் நோயுற்ற ஒரு பிராணியிடம் இருந்து பெறப்பட்டிருக்கும் போது; அல்லது ஏ) அந்தப் பண்டம் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கிற நச்சுப் பொருள் அல்லது வேறு பொருள் எதையும் உட்கொண்டிருக்கும் போது; அல்லது (ஐ) அந்தப் பண்டத்தின் கொள்கலனானது முழுமையாக உடல் நலத்திற்குக்கேடு விளைவிக்கக் கூடியதாகச் செய்யும் நச்சுப் பொருள் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருள் எதையும் கொண்டு ஆக்கப்பட்டிருக்கும்போது; அல்லது (ஒ) அந்தப் பண்டத்தில் அதற்கென விதிக்கப்பட்ட நிறமூட்டும் பொருள் தவிர வேறு எதுவும் இருந்தால், அல்லது அந்தப் பண்டத்திலுள்ள விதிக்கப்பட்ட நிறமூட்டும் பொருளின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாமலிருக்கும்போது; அல்லது (ஓ) அந்தப் பண்டமானது, தடை விதிக்கப்பட்ட பதனச் சரக்கு எதையும் கொண்டிருக்கும்போது; அல்லது அனுமதிக்கப்பட்ட பதனச் சரக்கு எதையும் விதிக்கப்பட்ட வரம்புகளுக்கு மிகையாகக் கொண்டிருக்கும்போது; அல்லது (ஔ) அந்தப் பண்டத்தின் தரமோ தூய்மையோ விதிக்கப்பட்ட அளவைத் திட்டத்துக்குக் குறைவாக இருக்கும்போது அல்லது அதன் அமைப்பான்களின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாதிருந்து, உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பதாக இருக்கும்போது அது கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டமாகக் கருதப்படும்.

ஆனால், அந்தப் பண்டம் அடிப்படை உணவுப் பொருளாக இருந்து, அந்தப் பண்டத்தின் தரம் அல்லது தூய்மை விதிக்கப்பட்ட அளவைத் திட்டங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அல்லது அதன் அமைப்பான்களின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாதிருக்குமிடத்து, இரண்டில் எந்த நிலையும், இயற்கைக் காரணங்களால் மாத்திரமே ஏற்பட்டதாகவும் மனித முயற்சியின் செயலுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்குமேயானால், அப்போது அத்தகைய பண்டம் இந்த உட்கூற்றுப் பொருளின்படி கலப்படம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

‘உணவு’ என்பது, மருந்துச் சரக்குகளும் நீரும் நீங்கலாக, மனிதர் அருந்துவதற்கான உணவாக அல்லது பருகுவதாகப் பயன்படுத்தப்படும் எவ்வகைப் பண்டங்களையும் குறிக்கும். மேலும், (அ) மனித உணவை அமைப்பதில் அல்லது தயாரிப்பதில் சாதாரணமாகச் சேருகிற அல்லது பயன்படுத்தப்படுகிற பண்டம் எதையும், (ஆ) நறுஞ்சுவையூட்டும் பொருள் அல்லது மசாலை எதையும், (இ) அதன் பயன், தன்மை, சத்து அல்லது தரத்தைக் கவனத்தில் கொண்டு இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய அரசு, உணவுப் பொருள் என அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விளம்புகிற வேறு பண்டம் எதையும் உள்ளடக்கும்.

போலியான உணவுப் பொருள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பொருளென்று பொய்யாகக் கூறுதல், மாற்றுப் பெயரில் விற்றல், ஒரு பண்டம் உண்மையில் இருப்பதைவிட மேலானதாகவோ மிக்க மதிப்புடையதாகவோ இருப்பதாகத் தோன்றுமாறு செய்தல், அதைப்பற்றிப் பொய்க் கூற்றுகள் கூறுதல் ஆகியவையும், சிப்பங்களில் அடைக்கப் பட்டிருந்தால், ஒவ்வொரு சிப்பத்தின் உள்ளடக்கமும் அதன் வெளிப்புறத்தில் எடுப்பாகவும் சரியாகவும் குறிப்பிடப்படாதிருந்தால், அதன் உள்ளடக்கம் ஏமாற்றும் தன்மையதாய் இருந்தால், அதன் மீதுள்ள குறிப்புச் சீட்டு ஒரு பொய்யான முகவரியினைக் கொண்டிருக்குமானால், அதன் உயிர்ச் சத்து. கனிமம் அல்லது உணவு சம்பந்தமான குணநலன்கள் சம்பந்தமாக விதிக்கப்படலாகும் விவரங்களை அதன் குறிப்புச்சீட்டுக்கொண்டிருக்கவில்லை யென்றால் அதுவும், செயற்கையான நறுஞ்சுவையூட்டும் பொருள், செயற்கையான நிறமூட்டும் பொருள் அல்லது இரசாயன பதனச் சரக்குகள் ஆகிய செய்திகளைக் குறிப்பிடுகின்ற குறிப்புச் சீட்டு இல்லாமலிருந்தால் அதுவும் தப்புக்குறியிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

உணவு அளவைத் திட்டங்களுக்கான கடமைகளை ஆற்றுவதற்கும் மத்திய, மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறுவதற்கும் மத்தியகுழு ஒன்றினை அமைத்தல் வேண்டும். மத்திய உணவு ஆய்வுக்கூடம் ஒன்றினை அரசு நிறுவுதல் வேண்டும்.

உணவு பற்றிப் பொதுவான வகை முறை: எவரும் (அ) கலப்படம் செய்யப்பட்ட உணவு எதையும் (ஆ) தப்புக்குறியிடப்பட்ட உணவு எதையும்(இ) எந்த ஓர் உணவுப் பண்டத்தை இறக்குமதி செய்ய உரிமம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த உரிமத்தில் உள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிராமல் உள்ள உணவுப் பண்டம் எதையும்; (ஈ) இந்தச் சட்டத்தின் வேறெந்த வகை முறையையும் மீறும் வகையில் உள்ள உணவுப் பண்டம் எதையும் இறக்குமதிசெய்தல் கூடாது.

கலப்படம் செய்யப்பட்ட உணவு, தப்புக் குறியிடப்பட்ட உணவு, பொதுமக்களின் உடல்நலனைப் பாதிக்கும்படியான தடை செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், கலப்படஞ் செய்பொருள் எதையும் விற்பனைக்காக உற்பத்தி செய்தலோ சேகரித்தலோ விற்றலோ கொடுத்தலோ கூடாது.

இச்சட்டத்தின்படி பணி அமர்த்தம் செய்யப்பட்டிருக்கும் உணவு ஆய்வாளர்களின் அதிகாரங்கள்: உணவுப் பண்டங்களின் மாதிரிகளை எடுக்கவும் கலப்பட உணவுப் பண்டங்களின் விற்பனையைத் தடை செய்யவும் உரிமைபெற்றவராவார். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எழும் வழக்கொன்றை ஒரு முதல் வகுப்பு நடுவர் அல்லது அவருக்கு இணையான அதிகாரம் பெற்ற ஒரு நீதித்துறை நடுவர் குறுகிய கால நடைமுறையில் விசாரித்து முடிவு கூறுவார்.

**உணவுக் கொள்கை:** மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றுள் தலையாய இடம்பெறுவது உணவு. இயற்கை வளங்கள், நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுவதால் ஒவ்வொரு தனி நாடும் பொருளாதாரத் தன்னிறைவைப் பெறுவது இயலாததாகும். தன் நாட்டிற்குகந்த பொருளாதாரத் துறையில் வளர்ச்சியைப் பெற்றுப் பன்னாட்டு வாணிகத்தின் (International Trade) மூலம் பிற துறைகளின் தேவைகளை நிறைவேற்றுவதே சிறந்த கொள்கை எனக் கருதப்படுகிறது. எனினும், எக்காலத்திலும் முற்றிலுமாக உணவு போன்ற இன்றியமையாத் தேவைகளுக்காக அந்நாட்டைச் சார்ந்திருப்பது காலப் போக்கில் மனித உரிமையை இழப்பதற்கும், பொருளாதார முற்றுரிமைக்கும் (Economic Monopoly) இடம் அளிக்கும். தொழில்நுட்ப அறிவை வேளாண்மைத் துறையில் புகுத்துவது, சிறந்த பங்கீட்டு முறையைச் செயற்படுத்துவது, உற்பத்திப் பொருள்களின் தரத்தை (Nutritional Value) உயர்த்துவது, கால் நடைகள், மீன்வளம் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவற்றின் மூலம் உணவு உற்பத்தியில் பசுமைப் புரட்சியை (Green Revolution) அடைய நாடுகள் முற்பட்டு வெற்றியையும் தன்னிறைவையும் அடைந்துள்ளன.

தொன்றுதொட்டு உணவு உற்பத்தியில் வளமான பெருக்கமும், பற்றாக்குறையும் உலகெங்கும் மாறி மாறி நிகழ்ந்து வருகின்றன. நைல், தைக்ரிசு, யூப்ரட்டிசு (Nile Tigris & Euphrates) ஆகிய ஆற்றோரப் பள்ளத்தாக்கு நிலங்களைச் சார்ந்து வாழ்ந்த அரசுகளும் மக்களும் வறட்சியாலும் பட்டினியாலும் துன்புற்றமையால் பேரரசுகள் வீழ்ச்சியுற்றன; பேரளவில் மக்கள் உயிரிழந்தனர்; எஞ்சியோர் இடம் பெயர்ந்து சென்றனர் என வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. எனினும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதி வரையிலும் உணவுச் சிக்கல், உலகளவில் பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணியதாகக் கூறப்படவில்லை. மக்கள் தொகையியல் வல்லுநர் மால்தசு (Thomas Malthus) கி.பி. 1789-ஆம் ஆண்டில் முதன் முதலாக உணவுப் பெருக்கத்திற்கும் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியை ஆராய்ந்தார். உலக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் உணவுப் பற்றாக் குறையினால் தொற்றுநோய், கொள்ளை நோய் (Epidemic & Pestilent) பஞ்சம் ஆகியவற்றால் மக்கள் பலர் உயிரிழக்க நேரும் என மால்தசு எச்சரித்தார். ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மக்கள்தொகைப் பெருக்கத்திற்குத் தேவையான அளவு உணவு உற்பத்தி பெருகவில்லை. அதன் விளைவாகவே பன்னாட்டு வாணிகமும், பிற நாட்டு நிலங்களைத் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தும் வழிமுறைகளும் காலனி ஆதிக்கத்தின்மூலம் வளர்ச்சியுற்றது என்று சொல்லலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், வளரும் நாடுகளில் மக்கள்தொகை எழுச்சியும் (Population Expolsion)உணவுப் பற்றாக்குறையும் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றை அறிவியல் வளர்ச்சி, பன்னாட்டு உதவி, உணவு வேளாண்மை அமைப்பின் (FAO) முயற்சிகள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் (Family Planning) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ள வளரும் நாடுகள் முயற்சிசெய்கின்றன,

பின்தங்கிய நாடுகளில் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள் நீண்டகால வறட்சியினாலும், தொழில் துறை வளர்ச்சியின்மையினாலும், பசி பட்டினி. வறுமை, பஞ்சம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுப் பேரளவில் உலக நாடுகளின் உதவியைப் பெற்ற பின்னரும் பஞ்சத்திலிருந்து விடுபடாத நிலையிலேயே நீடித்திருக்கின்றன. இந்நாடுகளில் இயற்கை வளங்களை உண்டாக்கும் குறுகிய கால, நீண்ட காலத் திட்டங்களைச் செயற்படுத்துதல் எக்காலத்திலும் பிற நாடுகளைச் சாராமல் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும். இந்நாடுகளில் சமூக, அரசியல், கல்வி, சுகாதாரத் துறைகளிலும் மக்கள் அடிப்படைத் தேவைகளின்றி வாழ்கின்றனர், இத்துறைகளின் முன்னேற்றத்திற்கு முயற்சிகள் எடுக்கப்படாவிடின் வறுமைச் சுழற்சியிலிருந்து (Vicious Circle of Poverty) இந்நாடுகள் விடுதலை பெற இயலாது. எனவே உணவுக் கொள்கையின் வெற்றி. பொருளாதார சமூக அரசியல்

துறைகளின் கொள்கைகளையும் முறைகளையும் சார்ந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

உலக மக்கள்தொகையான 3. 3 பிலியனில் (1965) 31 விழுக்காடு வளர்ச்சியடைந்த நாடுகளிலும், 69 விழுக்காடு ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய வளரும் நாடுகளிலும் பின் தங்கிய நாடுகளிலும் வாழ்கின்றனர். இத் தொகை 2000 ஆண்டளவில் 6. 7 பிலியனாக இரட்டிக்கப்பட்டு இவற்றுள் 80 விழுக்காடு அல்லது 5.3 பிலியன் மக்கள் பின்தங்கிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் வாழ்வர் என மக்கள்தொகை வல்லுநர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்குத் தேவையான குறைந்த அளவு உணவு 1965-ஆம் ஆண்டைய 935 மிலியன் கண்டியிலிருந்து 1936 மிலியன் கண்டியாகப் பெருக வேண்டும். மொத்த உணவு உற்பத்தியில் 40 விழுக்காடு 1965-இல் வளரும் நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும், 60 விழுக்காடு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் உற்பத்தி செய்யப்பட்டது.

உணவு உற்பத்தி பெருகியது. எனினும், அங்கு 2.3 விழுக்காடு வீதத்தில் பெருகிய மக்கள்தொகையின் தேவைக்கு ஏற்ப அளிப்பு ஈடாகவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் தேவைக்கு மிகையாக 2.7 விழுக்காடு வீதத்தில் உணவு உற்பத்தி செய்தன. ஆனால் அங்கு மக்கள்தொகைப் பெருக்கம் 1 விழுக்காடாகவே இருந்தது. எனவே வளர்ச்சியடைந்த நாடுகள் மிகை உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என 1960-ஆம் ஆண்டளவில் கருதின. அமெரிக்க ஐக்கிய நாடு 1960-இல் தன் நாட்டு உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றியது.

உணவு அளிப்பு நிலையில் 1972-ஆம் ஆண்டில் உலகளவில் நெருக்கடி நிலவ தொடங்கியது. குறிப்பாகச் சோவியத்து உருசியா (Russia), தென் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் உணவு உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டது. இதன் விளைவாக 1973-ஆம் ஆண்டிற்குப் பின் தொடர்ச்சியாகப் பணவீக்கமும் (Inflation) பொருளாதார நெருக்கடியும் நில

அட்டவணை - 1

உலக உணவு உற்பத்தி

1961-65-ஆம் ஆண்டு சராசரி 100

| வ.எண் | நாடுகள் | 1948-52 | 1956-60 | 1971-76 |
|---|---|---|---|---|
| 1 | வளர்ச்சியடைந்த நாடுகள் | 68 | 89 | 130 |
| 2 | வளரும் நாடுகள் | 66 | 87 | 133 |

உரோம் (Rome) நகரில் நிறுவப்பட்டுள்ள ஐ. நா. அவையின் உணவு வேளாண்மை அமைப்பு (FAO) 1977-இல் வெளியிட்ட ஆய்வு அறிக்கையிலிருந்து வளர்ச்சியடைத்த நாடுகள் எதிர்பாராத அளவிற்கு உணவு உற்பத்தியில் முன்னேற்றமடைந்திருப்பது அறியப்படுகிறது. அட்டவணை 1-இல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் அவ்வறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவையே. வளரும் நாடுகள் குறிப்பாக ஆசிய நாடுகள் மூன்று சிறப்பு வழிமுறைகளால் உற்பத்தியைப் பெருக்க முனைந்தன. அவையாவன: (1) வேளாண்மைத் தொழிலைத் தொழில்நுட்ப முறையால் இயந்திரமயமாக்கல், (2) புதிய நிலங்களை விளைநிலங்களாக மாற்றல், (3) செறிந்த பண்ணைமுறையில்(Intensive Farming) நில ஆக்கத் திறனை உயர்த்துதல். வளரும் நாடுகளில் விரைவில்

வின. உலக எண்ணெய் நெருக்கடியின் (World Oil Crisis) காரணத்தினாலும் உலகளவில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகள் உணவு ஏற்றுமதிப் பெருக்கத்தினால் பெரும் ஆதாயம் ஈட்டின. வளரும் நாடுகள் உணவு இறக்குமதிப் பெருக்கத்தினால் தங்கள் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பாதக (Unfavourable Balance of Payment) விளைவுகளைப் பெற்றுப் பெருஞ் சிக்கல்களுக்குள்ளாயின.

உலக வங்கி 1971-1975 ஆண்டுகளில் வேளாண்மைத் துறைத் திட்டங்களுக்கென 1,858,000,000 நிதியுதவி அளித்தது. இக்காலத்தில் வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளும் 10 விழுக்காட்டுக்கும் மேல் உயர்ந்தன. ஐ.நா. அவையின்

1964-74 ஆண்டுக் கால முன்னேற்றத் திட்டச் செலவு களில் 1/3 பாகம் வேளாண்மைத் திட்டங்களுக்காக அளிக்கப்பட்டது. இவற்றால் வளரும் நாடுகள் அயல் நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினால் தங்கள் 'பசுமைப் புரட்சி'த் திட்டங்களை நடைமுறைப்படுத் தாமலிருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. உணவு வேளாண்மை அமைப்பும் பிற பன்னாட்டு நிதி நிறுவனங்களும் வளரும் நாடுகளின் முன்னேற் றத் திட்டங்களில் பங்கு பெறுகின்றன. இவை அளிக் கும் ஆராய்ச்சிகள், கலந்தாலோசனைகள், அறிவு ரைகள், மறைமுக, நேர்முக நிதி உதவிகள், திட்டங் களைச் செயற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வள ரும் நாடுகள் பெரும் பலன்களைப் பெற்றுக் குறிப் பிடத்தக்க அளவில் உணவு நெருக்கடிச் சிக்கல்களை மேற்கொண்டன. பெரும்பாலான உலக நாடுகள் 1980–ஆம் ஆண்டளவில் உணவுத் தேவையில் 90 விழுக்காடு தன்னிறைவு பெற்றுள்ளன. உணவு வேளாண்மை அமைப்பின் (FAO) கணிப்பின்படி 1985–ஆம் ஆண்டளவில் தேவையை நிறைவேற்ற வள ரும் நாடுகள் 3.6 விழுக்காடு வீதத்தில் உணவு உற் பத்தியைப் பெருக்க வேண்டும்.

இந்தியாவில்: உணவுப் பற்றாக்குறையினால் நாட்டில் பல பகுதிகளில் 1775, 1801, 1826, 1851 1876, 1901, 1906, 1918, 1943 ஆகிய ஆண்டுகளில் பஞ்சம் நிகழ்ந்துள்ளமையால் இந்திய அரசு வேளாண் மைத் துறை வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து வருகி றது. வங்காளத்தில் ஏற்பட்ட 1943-ஆம் ஆண்டைய உணவுப் பஞ்சம் அண்மைக் கால வரலாற்றில் குறிப் பிடத்தக்க இடம் பெற்றதாகும். அதனை மேற் கொள்ள அரசு மிகை உணவு உற்பத்தி இயக்கத்தைச் (Grow More Food Compaign) செயற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது. உலகப் போரினால் தொடர்ந்து தேவையான அளவு இறக்குமதி செய்யப்பட இயல வில்லை. அதனால் விலையேற்றம் காணப்பட்டது. அரசு விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடி கைகள்எடுத்தது. நாடெங்கிலும் பங்கீட்டுமுறைபுகுத் தப்பட்டது அதுவும் தொடர்ந்து நடைமுறைப்படுத்த இயலாமல்கைவிடப்பட்டது. மீண்டும்பங்கீட்டுமுறை, கட்டுப்பாடு நடவடிக்கைகளுடன் 1948- ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இந்திய அரசால் கொண்டுவரப் பட்டது. இத்திட்டம் தமிழ்நாட்டிலும் செயற்படுத் தப்பட்டு 1952–ஆம் ஆண்டு வரை நடைமுறையிலி ருந்தது.

இந்திய அரசு 1949–இல் உணவு தன்னிறைவு இயக்கத்தை (Food Self-sufficiency Drive) அரசின் கொள்கையாக அறிவித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைக்கு முதன்மையிடம் அளிக் கப்பட்டது. உணவு உற்பத்தி, திட்ட இறுதியில் 65.8 மிலியன் கண்டியாகப் (Tonnes) பெருகியது. இக் காலத்தில் உணவு உற்பத்தியின் இறக்குமதியும் கீழி றங்கியது. உகந்த கால நிலையின் காரணமாகவும் உணவுப் பொருள்களின் விலை இறக்கத்தின் காரண மாகவும் உணவுச் சிக்கல் முற்றிலுமாக முடிவுற்றது எனக் கருதினர். ஆனால் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்மாறான நிலை ஏற்பட்டு, 1959-60 –ஆம் ஆண்டுக் காலத்தில், 39 முதல் 51 இலட்சம் கண்டி உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது.

மூன்றாம் ஐந்தாண்டுக் காலத்திலும் தொடர்ந்து உணவு உற்பத்தியில் முன்னேற்றம்காணப்படவில்லை. வேளாண்மைத் திட்டங்களில் ஏற்பட்ட தோல்வியே காரணங்களாகக் கருதப்பட்டன. இந்திய அரசு 1960-64–இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து ஆண் டொன்றுக்கு 16 மிலியன் கண்டி கோதுமையும் 1 மிலியன் கண்டி அரிசியும் இறக்குமதி செய்தது. அமெரிக்காவின் பொதுச் சட்டம் 480-இன் மூலம் (P.L.480) நிதியுதவி பெற்ற பின்னரும் இந்தியா தன் அயற்செலாவணியில் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது.

இந்திய அரசு அமைத்த வேளாண்மை விலை ஆணையம் (Agricultural Prices Commission) 1965 –இல் அரசின் வேளாண்மை விலைக் கொள்கையை அறிவித்தது. வேளாண்மையினரை உணவுஉற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்குவிக்கவும், நுகர்வோர் நியாய மான விலையில் உணவுப் பொருள்களைப் பெறவும் இக்கொள்கை செயற்படுத்தப்பட்டது. இக்கொள்கை யின்படி உணவுப் பொருள்களின் விலை அவ்வப்போது இவ் ஆணையகத்தால் வரையறுக்கப்படும். உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தால் அங்காடி யில் தேக்கம் (Glut) ஏற்படின், அரசு உற்பத்தியாள ருக்கு இழப்பீடு அளிக்கும் அல்லது அரசு மிகை உற் பத்திப் பொருளை வரையறுக்கப்பட்ட விலைக்கு வாங்கிப் பங்கீடு செய்யவோ நெருக்கடிக் காலத்திற் காக இருப்பாகச் சேமித்து வைக்கவோ (Buffer Stock) செய்யும். இதன் மூலம் அரசாங்கக் கொள் முதல் கொள்கையும் (Government Procurement Policy) செயற்படுத்தப்பட ஏதுவாயிருந்தது. தொடக்க காலத்தில் வரையறுக்கப்பட்ட விலையை விடக் கொள்முதல் விலை உயர்வாகக் குறிக்கப்பட்ட மையால் அரசின் கொள்முதலுக்கு ஆதரவு பெரு கியது.

அரசு வாணிகக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் உணவுப் பொருள்கள் பாதுகாக்கப்பட்

டுப் பங்கீடு செய்யப்படுகிறது. கூட்டுறவு நிறுவனங்களும் மாநில வேளாண்மைத் துறை நிறுவனங்களும் பல வகைகளில் அரசின் வேளாண்மைக் கொள்கைகளை நிறைவேற்றும் பணிகளில் பங்கேற்கின்றன. உணவுப் பொருள்களின் வாணிகத்தில் ஊக வாணிகம் நடைபெறாமல் தடுக்கவும் சேமிப்பு இருப்பை நெருக்கடிக் காலத் தேவைகளுக்காகப் பெருக்கவும், விலை நிலையைக் கட்டுப்படுத்தவும் 1965 இல் அரசு உணவுப் பொருள்களின் வாணிகத்தில்(State Trading) நேரடியாகத் தலையிட்டது. அரசு வாணிகக் கழகத்தின் மூலமும் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடனும் மைய அரசு மூன்று இலக்குகளையடைய முனைந்துள்ளது. அவையாவன: (1)உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், பாதுகாத்தல், பங்கீடு செய்தல், சரக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்றல்;(2) உணவுப் பொருள் உற்பத்தி பெருகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்; (3) உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் அரிசி ஆலைகளையும் அறவை ஆலைகளையும் நிறுவுதல், அவற்றை நிறுவ நிதி உதவி அளித்தல்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு நெருக்கடி நிலை ஓரளவு தணிந்தது. திட்டக் கால (1973-74) இறுதி ஆண்டில் எதிர்பார்த்த 129 மிலியன் கண்டி உணவுப் பொருளுக்கு 25.39 மிலியன் கண்டி குறைவாக 103.61 மிலியன் கண்டியே உற்பத்தி செய்யப்பட்டது. ஐந்தாம் திட்டக் காலத் தொடக்கத்தில் உணவு நெருக்கடிநிலை நிலவியது எனலாம். நெருக்கடி நிலையைத் தவிர்க்க 1975-ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது. இறக்குமதி 1974-இல் 51.6 இலட்சம் கண்டியாகவும், 1975-இல் 75.4 இலட்சம் கண்டியாகவும் பெருகி, 1976-இல் 67 இலட்சம் கண்டியாக இறங்கியது. எனினும் 1978,79,80-ஆம் ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் இறக்குமதியை அரசு நிறுத்தும் நிலைக்கு முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85)உணவுப் பொருள்களின் சேமிப்பு இருப்பைப் பாதுகாக்கவும் (Maintain) விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் இறக்குமதியை மீண்டும் தொடங்கியது. எனவே 1981-இல் 6.3 இலட்சம் கண்டியும்1982-இல் 15.5 இலட்சம் கண்டியும், 1983-இல் 37.3 இலட்சம் கண்டியும் இறக்திமதி செய்யப்பட்டன. திட்டக் கால இறுதியில் (1985) நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியா உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் அரிசி உற்பத்தியின் பெருக்கத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தென் மாநிலங்களிலும் கிழக்கு மாநிலங்களிலும் நெல் விளைச்சல் பெருகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், எண்ணெய் வித்துகள், தினை (Millet), பயறுவகைகள் (Pulses) ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

## உணவு சேகரிக்கும் பழங்குடிகள்:

வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழக்கத்தினை மனிதன் பல நூறாயிரம் ஆண்டுகட்டு முன்பே மேற்கொண்டான். ஏறத்தாழ முப்பத்தைந்தாயிரம் முதல் நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தச் சிக்கலான தொழில் முறையைக் கொண்ட வேட்டையாடும் மனிதக் குழுக்கள் காணப்பட்டன. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் திறனற்ற மனிதக் குழுக்கள் வேர்கள், பழங்கள், சிறு பூச்சிகள் முதலான இயற்கைப் பொருட்களைச் சேகரித்துப் பசியினைத் தணித்துக் கொண்டன. உணவு சேகரிக்கும் பழங்குடியினர் உணவு சேகரித்தலைத் தலையாய தொழிலாகக் கொண்டனர். அது அவர்களின் வாழ்க்கை ஆதாரத் தொழிலாகத் திகழ்வதாலேயாம். இந்தியா முழுமையிலும் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணவு சேகரிக்கும் பழங்குடியினர் காணப்படுகின்றனர்.

உத்தரப் பிரதேசத்தின் இராசி (Raji) பழங்குடியினர், மத்திய இந்தியாவின் மலைக் காரியர்கள் (Hill Khariyas), பீகாரின் பீர்கார் (Birhor), ஒரிசாவின் சுவாங்குகள் (Juangs),மத்திய பிரதேச மாவட்டத்தைச் சேர்ந்த மரியா கோண்டுகள்(Maria Gonds), ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த செஞ்சு(Chenchu), ஏனாதி (Yanadi), தமிழ் நாட்டைச் சேர்ந்த காடர் (Kadar), மலைப் பண்டாரம் (Malaipandaram), பளியர் கேரள மாநிலத்தின் மலபார் பகுதியைச் சேர்ந்த அரண்டர்கள் (Arandars), குறும்பர்கள் (Kurumbas), அந்தமான் தீவுகளைச் சேர்ந்த ஓஞ்சியினர் (Onge), சாரவர் (Jarawas), செண்டிநலியர் (Sentinelese), சோம்பன் (Shompen), நிக்கிகோபாரியர் ஆகியோரும் வேட்டையாடலும் உணவு சேகரித்தலும் தொழிலாகக் கொண்ட பழங்குடியினராவர்.

ஆசுத்திரேலியாவின் ஆதிக்குடிகளுக்கும், ஆப்பிரிக்கப் புசுமன் (Bushmen) பழங்குடியினருக்கும் பாலைநிலச் சூழல் புகலிடம் அளிக்கிறது. நீண்ட குளிர் காலத்தைக் கொண்ட வடதுருவப் பிரதேசத்

தில் அடர்ந்த உரோமங்களைக் கொண்ட விலங்குகளை வேட்டையாடும் நாசுகேப்பிப் (Nascapi) பழங்குடியினரும் குறிப்பிடத்தக்கவர்.

உணவு சேகரிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை மிக எளிமையானதாகவே காணப்படுகிறது. பெரும்பாலும் இவர்கள் தம் குடியிருப்பில் குறைந்த எண்ணிக்கையிலான குடிசைகளைக் கொண்டிருப்பர். பரந்த அளவில் வெவ்வேறு இடத்தில் காணப்படும் இச்சமுதாயத்தினரிடையே குறிப்பிட்ட சமூக அமைப்புக் காணப்படுகிறது. ஒரு குழுவினைச் சார்ந்தவன் மற்றொரு குழுவினைச் சார்ந்த பெண்ணை மணக்க வேண்டும் என்பதே பொதுவான நியதியாகும். பெரும்பாலும் தந்தையிடம் தங்கும் குழு அமைப்பே இப்பழங்குடியினரிடையே காணப்படுகிறது. இவ்வமைப்பு ஒருவரின் தாய், தாயின் தாய், தந்தை, தந்தையின் தந்தை என்ற கால் வழியில் உறவுமுறைக் குழுவினராகவும் வாழிடப் பரப்பை ஒன்றாகக் கொண்டு வாழும குழுவினராகவும் ஒரே எல்லையில் வேட்டையாடுபவராகவும் காணப்படுவதால், இவர்களிடையே குழு ஒற்றுமை பாதுகாக்கப்படுகிறது.

சிறுவயது முதலே தாங்கள் வசித்து வரும் இடத்திலிருக்கும் விலங்குகளைப் பற்றி இப்பழங்குடியினர் நன்கறிந்திருப்பதால், வேட்டையாடுதல் இவர்களுக்கு எளிதாகிறது. வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகிய இரண்டும் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாக உள்ளன. இவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலும் தனியாகவோ கூட்டாகவோ செய்யப்படுகின்றன. பொதுவாக அனைத்துக் குடும்பத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே உற்பத்திக் குழுவாகப் பொருள்களைச் சேகரிக்கின்றனர்.

இப்பழங்குடியினர்தம் வாழிடத்திற்கு அருகிலுள்ள பரந்த காடுகளிலிருந்து வேட்டையாடல், மீன் பிடித்தல், காட்டுப் பொருள்களைச் சேகரித் தல் முதலானவையே இவர்களது வாழ்க்கை ஆதாரப் பெருள்களாகும். வேட்டையாடி உணவு சேகரித்தலும், வேர்கள், கிழங்குகள், காய்கள், பழங்கள், கொட்டைகள், பூக்கள், இலைகள், கயிறு திரிப்பதற்கான நார்கள், மரப்பட்டைகள், தீப்பொறி உண்டு பண்ணும் கற்கள், மூங்கில், தேன், மெழுகு ஆகியவற்றைச் சேகரித்தலும் இப்பழங்குடியினரின் சமுதாய வாழ்க்கையாக அமைந்துள்ளன.

தோண்டும் கழிகள், இரும்பினாலான கத்திகள், மண், மரம், மூங்கில் முதலானவற்றால் செய்யப்பட்ட பானைகள், கூடைகள் போன்றவற்றை உணவு சேகரிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். பறவைகள், விலங்குகள் வேட்டையில் வெவ்வேறு வகையான பொறிகளையும் கண்ணிகளையும் இப் பழங்குடியினர் பயன்படுத்துகின்றனர். மேற்கு வங்கத்தைச் சார்ந்த இலோதாப் (Lodhas) பழங்குடியினர் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்கு குழிப் பொறியினையும், காடரும் செஞ்சுப் பழங்குடியினரும் வேட்டைக்கென நாய்களையும் பயன்படுத்துகின்றனர். கயிறு, நூல், மூங்கில் முதலானவற்றால் செய்யப்பட்ட வலைகளையும் ஈட்டிகளையும் கழிகளையும் கொண்டு மீன் பிடிக்கின்றனர். பெரும்பாலும் இக்கருவிகள் பழங்குடியினராலேயே செய்யப்படுகின்றன. சில சமயம் வாரச் சந்தையிலிருந்தும் அருகில் வசிக்கும் பிற பழங்குடியினரிடமிருந்தும் இவை பெறப்படுகின்றன. கோயரும் (Koyas), செஞ்சுப் பழங்குடியினரும் கிழங்குகளையும் வேர்களையும் தோண்டுவதற்குக் கொத்துக் கருவியைக் கையாளுகின்றனர். ஏனாதியர் வயல் வரப்பினைத் திறப்பதற்கும் இதனையே கையாள்கின்றனர்.

பொதுவாக, தேன் சேகரித்தலில் ஆடவர் ஈடுபடுகின்றனர். மார்ச்சு, மே மாதங்களின் வறட்சியான நேரங்களில் உயர்ந்த மரங்களிலும் பாறைகளிலுமுள்ள தேன் கூடுகளிலிருந்து தேன் சேகரிக்கப்படுகின்றது. காடரும் பிற தென்னிந்தியப் பழங்குடியினரும் உயர்ந்த மரங்களில் ஏறுவதற்காக மர அம்பையும் மூங்கிலையும் பயன்படுத்துகின்றனர். பாறைகளிலுள்ள தேனைச் சேகரிக்கும்பொழுது கயிறு வழிச் செல்பவனின் மனைவியுடைய சகோதரன் ஏறுபவன் கீழே விழா வண்ணம் கயிற்றினை இறுகப் பற்றிக் கொள்கிறான். ஏறுபவன் மரணம் அடைய நேர்ந்தால், கயிற்றினை பிடித்துக் கொண்டிருந்தவன் இறந்தவனின் மனைவியைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்னும் முறை கடைப் பிடிக்கப்படுகிறது.

உணவு சேகரிக்கும் பழங்குடியினரிடையே கூட்டு வேட்டைக்கு முன்னரும் பின்னரும் தொடர்ச்சியாகப் பல சடங்குகளும் பழக்கங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. வேட்டைக்குச் செல்வதற்கு முதல் நாள் கருவிகள் சேகரிக்கப்பட்டு, மறுநாள் அவர்கள் கூட்டமாகக் காட்டுக்குச் செல்கின்றனர். வேட்டையில் வெற்றியுடன் திரும்புதற்குக் கொடிய விலங்குக் கடவுளையும் தேவதைகளையும் வணங்குகின்றனர். குரங்கு வேட்டையின்போது பல பெரிய வலைகள் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குக் கட்டப்பட்டு அரைவட்ட வடிவில் அமைக்கப்படுகின்றன. சிலர் வலையருகில் நிற்க, மற்றவர்கள் குரங்குகள்

அமர்ந்துள்ள மரத்தினைத் தாக்கி அவற்றை வலையை நோக்கி ஓடச் செய்கின்றனர்.

சீவாங்குப் பழங்குடியினர் வேட்டையாட உதவிய கருவிகளைக் காட்டிலேயே வழிபட்டுப் பின் அவற்றை உரியவரிடம் சேர்ப்பிக்கின்றனர். வெற்றியுடன் வேட்டையாடியவனை 'இராசா' என அழைத்து மாலையிட்டு, அவன் தலையைச் சுற்றித் தலைப்பாகை கட்டுகின்றனர். வேட்டையாடப்பட்ட விலங்கினை எடுப்பதற்கு முன், அதன் உடம்பிலிருந்து சிறிதளவு இரத்தம் அவர்களுடைய மூதாதையருக்கு உரித்தாக்கப்படுகிறது. பின்னர் அதன் உடல் மூதாதையரின் வீட்டிற்கு அல்லது அருகிலுள்ள அருவிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வேட்டையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. விலங்கினைக் கொன்றவனுக்குப் பொதுவாக அளிக்கப்படும் பங்குடன் அவ்விலங்கின் பின்னங்கால்களும் அளிக்கப்படுகின்றன.

தனிப்பட்டோர் குளத்தில் பெருமளவில் நஞ்சு கலந்து மீன்பிடித்தலை மேற்கொண்டனர். பெரிய மீன்களைப் பிடித்தற் பொருட்டு ஒரு குறிப்பிட்ட உறவு முறையைச் சார்ந்தோர் அல்லது குறிப்பிட்ட வாழிடத்தைச் சார்ந்தோர் கூட்டாகவே செல்கின்றனர்.

அசாமைச் சார்ந்த குக்கிப் (Kuki) பழங்குடியினரின் வாழ்க்கைக்கு ஆதாரமாக மூங்கில் திகழ்கிறது. மூங்கில் தட்டிகளையும் இலைகளையும். கொண்டு இவர்களின் குடிசை அமைக்கப்படுகிறது. ஓரேயிடத்தில் நிலையாகத் தங்கும் இவர்கள் தங்கள் குடியிருப்புகளை மூங்கில் கழிகளின் மேல் அமைத்துள்ளனர். கூடைகள், பாய்கள், புகையிலைக் குழல், மீன் பிடிக்கும் வலைகள், விலங்குகளைப் பிடிக்கும் வலைகள் ஆகியவற்றை மூங்கிலைக் கொண்டு தயாரிக்கிறார்கள். சுவைக்காக மூங்கில் முளைகளை (Shoots) அரிசியுடன் கலந்து கொதிக்க வைக்கிறார்கள்.

பீகாரைச் சார்ந்த பிர்கார்ப் பழங்குடியினர் ஒரே சமயத்தில் நாடோடி வாழ்க்கையினையும் ஒரேயிடத்தில் குடியிருத்தலையும் மேற்கொண்டு, தனிப்பட்ட முக்கியத்துவம் உடையவராய்த் திகழ்கின்றனர். இவர்கள் பொருளாதாரத்தின் ஆறில் ஐந்து பாகங்கள் காட்டிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன. இவர்கள் பழங்கள், இலைகள் ஆகியவற்றைச் சேகரிப்பதற்கும் முயல், குரங்கு போன்ற மிருகங்களை வேட்டையாடுவதற்கும் காட்டையே அழிக்கவும் செய்கின்றனர். இவர்கள் வருமானத்திற்கு அடிப்படையாகத் திகழும் கயிறு திரித்தல், மரத்தால்



ஓங்கிப் பழங்குடியினர் - மீன்பிடித்தல்

பாத்திரங்கள் செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நாரினையும் மரத்துண்டுகளையும் சேகரிப்பதற்கும் குரங்குகளை வேட்டையாடுவதற்கும் கூட்டமாகச் செல்கின்றனர்.

இப்பழங்குடியினரிடையே நரமாமிசம் உண்ணும் பழக்கம் காணப்படுகிறது. தங்கள் உறவுமுறையைச் சார்ந்தோரை அதிலும் இறக்கும் தறுவாயிலுள்ள தாய், தகப்பன்போன்றோரை மட்டும் உண்கின்றனர்.

நல்ல மலையிலும், கிழக்கு மலைத் தொடர்ச்சியிலும், கிருட்டிணா நதியின் தென்புறத்திலும், பெண்ணையாற்றின் வடபகுதியிலும் காணப்படும் 'செஞ்சுப்' பழங்குடியினரின் பொருளாதாரம் இவர்கள் வாழ்விடங்களைச் சுற்றியுள்ள காடுகளையே முதன்மையாகச் சார்ந்திருக்கிறது. மீன்பிடித்தலும் சிறு அளவில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக இரண்டு முதல் பத்துப்பேர் வரை தேன் சேகரித்தலில் ஈடுபடுகின்றனர். தானியங்கள், மரவள்ளிக்கிழங்கு, காட்டுவேர்கள் ஆகியவற்றைத் தோண்டும் கழிகளால் எடுக்கின்றனர். காகம், ஓணான், கரடி, மயில், கருங்குரங்கு முதலியவற்றை வேட்டையாடுகின்றனர். இலுப்பை மரத்தின் பூவையும் மொட்டுகளையும் புளியம்பழத்தையும் மிகவும் விரும்பியுண்கின்றனர். வறட்சிக் காலங்களில் மூங்கில் அரிசியினை உணவாகப் பயன்படுத்துகின்றனர். தங்கள் தேவைக்காகக் குளத்தை நஞ்சுபடுத்துவதற்கோ காட்டை அழிப்பதற்கோ இவர்கள் தயங்குவதில்லை.

இப்பழங்குடியினரிடையே நடைபெறும் திருமணம், சூரியன் சரியாக 12 மணிக்கு நடு உச்சியை அடையும் போது 'அபிசி' இலக்கினத்தில் (Abhijit Lagna) நடத்தப்படுகின்றது. ஓர் அம்பினைச் செங்குத்தாக நிலைநிறுத்தி அதன் நிழல் எங்கும் விழாத போது சரியான நேரத்தைக் கணிக்கின்றனர்.

கேரளக் காடுகளில் வசிக்கும் காடர் பழங்குடியினர் ஒரேயிடத்தில் பத்து அல்லது பன்னிரண்டு குடிசைகளில் வசிக்கின்றனர். இவர்கள் உணவில் வேர்ப் பொருள்களும் கிழங்கு வகைகளும் முதன்மை இடத்தை வகிக்கின்றன. தேன் சேகரித்தல் இவர்களது துணைத் தொழிலாகும். தேன் சேகரிப்பில் ஈடுபடும் குழுவின் முனைப்பான உறுப்பினர் இறக்க நேரிட்டால் அக்குழுவைச் சார்ந்த பிற உறுப்பினர் இறந்தவரின் மனைவியையும் குடும்பத்தையும் ஆதரிக்கக் கடமைப்பட்டவராகிறார். இவர்கள் வேட்டைக்கென நாய்களைப் பயன்படுத்துகின்றனர்.

கள்ளிக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரண்டன் பழங்குடியினர் காட்டில் கிடைக்கும் பொருள்களைச் சேகரித்தல், மூங்கில்களை வெட்டுதல், பாம்புகளைப் பிடித்தல் ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்கின்றனர். மலைப்பாம்பின் தோலையும்கொழுப்பையும் விற்கின்றனர். இப்பழங்குடியினர் இதன் மாமிசத்தைச் சுவையான தின்பண்டமாகப் பயன்படுத்துகின்றனர்.

கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த குறும்பர் காட்டிலிருந்து கிடைக்கப்பெறும் மீன், வேர், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை மட்டுமே உண்டு வாழ்க்கை நடத்துகின்றனர்.

கோட்டயம் கொல்லம் மாவட்டங்களிலும் சபரி மலைக் காடுகளிலும் காணப்படும் வேட்டையாடுவோரும் உணவு சேகரிப்போருமாகிய மலைப்பண்டாரம் என்னும் பழங்குடியினர் சிறுசெடிகள், வேர்கள், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றனர். அய்ய பன்னா(Ayya Panna) எனப்படும் ஒருவகை நெட்டியைத் தேனுடன் கலந்துண்கின்றனர். ஆமைகளையும் மீன்களையும் பிடித்துண்கின்றனர். அம்பு, வில், ஊதுகோல், ஈட்டி முதலியவற்றாலும், பொறி வைத்தல், சுருக்கிடுதல், கண்ணி வைத்தல் ஆகிய முறைகளாலும் வேட்டையாடுகின்றனர். தற்காலிக வாழிடமாக இவர்கள் குகைகளிலும் பெரிய பாறைக் குடைவுகளிலும், மரப்பொந்துகளிலும் வசிக்கின்றனர். சக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு நெருப்புண்டாக்கும் இப்பழங்குடியினர் மரப்பட்டைகளை ஆடையாக அணிகின்றனர். இவர்கள் மலை, மரம், ஓடை ஆகியவற்றை வழிபடுகின்றனர். இறந்தோரை எரிக்கவோ புதைக்கவோ செய்யாமல் அந்தந்த இடத்திலேயே விட்டுச் செல்கின்றனர்.

ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் சல்லாயேனாதியர் மீன்களையும் பாம்புகளையும் பிடிப்பதில் அறிவுக் கூர்மையுடையராய்த் திகழ்கின்றனர். செங்குத்தான பாறையின் கீழ்ப்புறத்திலிருந்து 100 அடிக்குக் கீழே மூங்கில் கயிற்றின் உதவியால் ஊசலாடித் தேன் சேகரிப்பது இவர்கள் அஞ்சாநெஞ்சிற்கோர் எடுத்துக்காட்டாகும். இப்பழங்குடியினர் வயல் எலிகள், நண்டு, பெருச்சாளி ஆகியவற்றை உண்பதாலும், சுத்தமற்ற பழக்க வழக்கங்களாலும் தீண்டத்தகாதோராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் மூலிகைகளைக் கண்டறிவதிலும், விலங்குகளை அவற்றின் காலடிச் சுவடுகளைக் கொண்டு அறிவதிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களாயிருக்கின்றனர்.

ம.ந.பு.

துணை நூல்கள்:

Lee, R.B., and Devore, I., Man the Hunter, Aldine, Chicago, 1968.

**Fürer Haimendorf, C. Von,** Tribes of India, Oxford University Press, Delhi, 1982.

**Thurston, E.,** Castes and Tribes of Southern India, Vol. 1-7, Madras Government Press, Madras, 1909.

**உணவு பரிமாறுதல்:** மனித இனத்தின் உயிர் வாழ்தலுக்கு உணவு மிகவும் அவசியமாகும். மனிதர்கள் உண்ணும் உணவு அவர்கள் வாழும் பகுதி யின் நாகரிகம், பண்பாடு, தட்பவெப்ப நிலை ஆகிய வற்றிற்கேற்ப அமைகிறது. சாதாரணமாக நாம் உண்ணும் உணவை வகைப்படுத்திக் குறிப்பிட்ட முறையில்தான் உண்ணவேண்டும். பரிமாறுதலும் அதனைச் சார்ந்து அமைதல் வேண்டும். இவ்வடிப் படையில் நோக்கினால்,உணவு பரிமாறுதல் என்பது ஒரு கலையாகிறது.

பொதுவாக உணவு பரிமாறுதலை இந்திய முறை, மேனாட்டு முறை என இருவகைப்படுத்த லாம். இந்தியப் பண்பாட்டின்படி உணவு வாழை இலைகளிலேயே பரிமாறப்படுகிறது. சுத்தமாகச் சாணத்தினால் மெழுகப்பட்ட தரையில் பாய்விரித்து, இலையில் உணவு பரிமாறுவதே பண்டைய முறை யாகும். ஆனால் காலத்திற்கேற்ப இப்பொழுது நாக ரிகமாக மேசைகளில் உணவுத்தட்டுகளில் உணவு பரி மாறப்படுகிறது. மேசையில் போடப்படும் இலையின் நுனிப் பகுதி உண்பவரது இடப்புறமாக அமைக்கப் படுகிறது. பரிமாறப்படும் திட உணவுப் பொருள்கள் இடப்பக்கமும், திரவ உணவுப் பொருள்கள் வலப் பக்கமும் பரிமாறப்படுகின்றன. சில இடங்களில் இனிப்பு முதலில் பரிமாறப்பட்டுப் பின்னர்ப் பிற வகைகள் பரிமாறப்படுகின்றன. ஆனால் பொதுவாக மோர்ச் சோறு உண்ணுவதற்கு முன்தான் இனிப்புப் பரிமாறப்படுகிறது. இந்திய உணவு வகையில் காய் கறிகள் நன்றாக வேக வைத்தே பயன்படுத்தப்படு கின்றன. அதிகமாகப் பருப்பு வகைகள் பயன்படுத்தப் படுகின்றன.

மேனாட்டு முறையில் பரிமாறப்படும் உணவுகள் முறையே பசித்தூண்டற் பொருள் (Appetizer), வடி சாறு (Soup), மீன், முதன்மை உணவு (Main Dish), வறுவல் (Roast), காய்கறிகள் (Vegetables), இனிப்பு, தேநீர் போன்றவையாகும். இன்னும் சிலவுங் கூட உணவுடன் சேர்த்து வழங்கப்படும்.

இவை பரிமாறப்பட வேண்டிய வரிசையின்படி கொடுக்கப்பட்டுள்ளன. மேனாட்டு முறையில் உணவு உண்ண ஆயுதங்கள் (துணைக் கருவிகள்) மிகுதியும் பயன்படுத்தப்படுகின்றன. உணவு மேசையில் உணவுத் தட்டுடன் இடப்புறம் முள்கரண்டியும் வலப்புறம் தண்ணீர்க்குவளை, உணவுண்ணும் கரண்டி, கத்தி ஆகியவையும் வைக்கப்படுகின்றன. மற்றொரு தட் டில் காகிதக் கைக்குட்டை (Paper Napkin) வைக்கப் படுகின்றது. பெரும்பாலும் இம்முறையில் காய்கறி கள் பச்சையாகவோ அரைவேக்காடாகவோதாம் இருக்கும்.

மேனாட்டில் பெரும்பாலும் சுய சேவை முறை (Buffet) வழக்கத்திலுள்ளது. அனைத்து உணவு வகை களும் தனித்தனிப் பாத்திரங்களில் நீளமான மேசை யின்மீது வைக்கப்பட்டிருக்கும். உணவு உண்பவர் தட்டில் தம் தேவைக்கேற்பத் தாமாகவே எடுத்துக் கொண்டு, தமது நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டு உண்பர். இத்தகைய முறையில் பெரியோர், சிறியோர் என்ற தாழ்வு மனப்பான்மை ஒழிய வகை யுள்ளது. இடம்பெறும் பொருள்கள் அனைத்தும் பொதுவாக வைக்கப்படுவதால் வேற்றுமைக்கு இட மில்லை. இம்முறை முறைசாராச் சுயசேவை (Informal Buffet) எனப்படும். முக்கிய விருந்தினர்கள் கலந்துகொள்ளும் விருந்தில் ஒவ்வொரு உணவு மேசை யிலும் உணவு வகைகள் வைக்கப்பட்டிருக்கும். பரி மாறுவோர் உதவியின்றி விருந்தினர் தாமே எடுத் துக்கொள்ளும் இம்முறை முறைசார்ந்த சுயசேவை எனப்படும்.

சில வேளைகளில் முக்கிய விருந்தினர்க்கு இருக்கை வசதி செய்து தனிப்பட்ட கவனத்துடனும், மற்றவருக்குச் சுய சேவை மேசையிலும்(Self Service Counter) உணவுகள் பரிமாறப்படும். இதனைப் பகுதி முறை சார்ந்த (Semiformal) சுயசேவை என்பர். மேற்குறிப்பிடப்பட்ட மூன்று சுயசேவை முறைகளில் முறைசாரா முறைதான் பாகுபாடற்ற சமத்துவ மனப்பான்மைக்கு வகை செய்யக் கூடியது.

குறிப்பாக உணவு பரிமாறுதல் ஒவ்வொரு நாட் டிற்கும் மாறுபடுகிறது. அமெரிக்க முறைப்படி தேவையான உணவுகளனைத்தையும் தட்டிலே வைத்து விருந்தினர் முன் வைத்துவிடுவர். இம்முறை யில் ஏதேனும் ஒருவகை பரிமாறப்படவில்லை என்ற குறை நேராது.

பிரெஞ்சு (French) முறையில் உணவுப் பொருள் கள் பகுதி தயாரிப்புடன் விருந்தினர்முன் தள்ளு வண்டி (Tralley) அமைப்புள்ள மேசையில் வைத்துக் கொண்டு வரப்படும். விருந்தினர் சுவைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு, அவர் முன்னிலையிலேயே வழங்கப் படும். இம்முறை விருந்தினர்க்குத் தரப்படும் தனிப் பட்ட சலுகை விருந்தினைச் சிறப்புறச் செய்யும்.

உருசிய (Russia) முறையில் சமைக்கப்பட்ட உணவு வகைகள் தள்ளுவண்டி அமைப்புடைய மேசையில் வைக்கப்பட்டு விருந்தினர் முன்னர் கொண்டு வரப்படும். அவரவரின் விருப்பமான உணவு வகைகள் மட்டும் விருப்பத்திற்கிணங்க உணவுத் தட்டுகளில் பரிமாறப்பட்டு வழங்கப்படும். இம்முறையில் உணவு வீணாவதைத் தவிர்க்கலாம். ஆங்கிலேய முறை இந்திய உணவுமுறையைப் போன்றதே. மேற்கண்ட அனைத்து நாடுகளிலும் உணவு உண்ண உணவுக்கரண்டி, முள்கரண்டி ஆகியவை பயன்படுத் தப்படுகின்றன. சப்பானில் (Jopan) மட்டும் நன்றாகச் சீவப்பட்ட இருகுச்சிகள் (Chop Stick) உணவு உண்ணப் பயன்படுத்தப்படுகின்றன.

உணவு பரிமாறுதலில் பல்வகைப்பட்ட முறைகளும் உணவு வகைகளும் இருப்பதைப் போலவே விருந்து சிறக்க உணவு சமைப்பவரும் விருந்தினரும் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளும் சில உள்ளன.

உணவு பரிமாறுபவர் சுத்தமாகவும் வெண்மையான உடைகள் அணிந்தும் இருக்க வேண்டும். விருந்தினரின் தேவையறிந்து, உணவினை முறைப்படி பரிமாறுதல் இன்றியமையாதது. எப்போதும் விருந்தினரிடமே கண்ணாக இருந்து உணவு பரிமாறுதல் நல்லது.

விருந்தினர்களைப் பொறுத்தமட்டில், தம் நண்பருடன் உரையாடிக் கொண்டு உணவு அருந்தும்போது தமக்கு அருகில் உணவு அருந்துபவர்க்குத் தொல்லை ஏற்படாத வகையில் ஒலியைக் குறைத்துப் பேசுதல் நலம் பயப்பதாகும். இது அடுத்த விருந்தினரின் தேவையை உணவுபரிமாறுபவர் செவிமடுப்பதற்கும் வசதியாக இருக்கும். உட்கார்ந்து உணவு அருந்தும் போது தமது மடியில் ஒரு கைகுட்டையை விரித்துக் கொண்டால்,சிதறும்உணவுத் துணுக்குகள் உடையை அசுத்தப்படுத்தாமல் பாதுகாக்கும். விருந்து சிறப்பு விருந்தினரின் சுவை, பரிமாறுபவரின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே சிறப்படையும். சுவை குன்றிய உணவு கூடப் பரிமாறுபவரின் பணிவு, பரிமாறும் முறையைப் பொறுத்து முழுமையான மனநிறைவை அளிக்கக்கூடும்.

உணவு பரிமாறுதலில் உள்ள பல்வேறு வகைகளையும் பரிமாறும் முறைகளையும் நோக்குங்கால், இது ஒரு கலையேயாகும். இதன் சிறப்பு பரிமாறுபவர், விருந்தினர் ஆகிய இருசாராரின் ‘ஒத்துழைப்பினாலேயே முழுமை பெறுகிறது. சௌ.ச.

**உணவு வேளாண்மைக் கழகம்:** உலக உணவுச் சிக்கல்களை ஆராய்ந்த ஐக்கிய நாடுகளவை, 1943-ஆம் ஆண்டு நடந்த வர்சீனியா (Virginia) மாநாட்டில் உணவு வேளாண்மைக் கழகத்தை உருவாக்க முன்மொழிந்தது. அதற்கான ஆவணங்கள் வரையப்பட்டு 30 உலக நாடுகளின் ஒப்புதலுடன் 1945-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாளில் இக்கழகம் செயற்படத் தொடங்கியது. இக்கழகம் இப்போது 152 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது.

குறிக்கோள்கள்: உறுப்பு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உடல் வலிமைக்கும் நல்வாழ்வுக்கும் உரிய ஊட்டச்சத்துள்ள (Nutritional)உணவுப் பொருள்களைப் பெருக்க வழி வகுத்தல், வேளாண்மையைச் சார்ந்து வாழும் ஊரக மக்களின் வாழ்க்கை நிலையை (Living Conditions) உயர்த்துதல், அதன் மூலம் அவர்களிடையே காணப்படும் பசியையும் (Hunger) வறுமையையும் (Poverty) ஒழித்தல், நிலவளத்தையும் காட்டு வளத்தையும் மீன்வளத்தையும் பெருக்குதல், உணவு உற்பத்தியையும் அதன் பங்கீட்டு முறையையும் முன்னேற்றமடையச் செய்து அவற்றை ஒழுங்கான வகையில் சீரமைத்தல் ஆகியவையாகும்.

அமைப்பு: உணவு வேளாண்மைக் கழகத்தின் தலைமைச் செயலகம் உரோம் (Rome) நகரில் நிறுவப்பட்டுள்ளது. வட்டார அலுவலகங்கள், ஆப்பிரிக்காவிற்குக் கானாவிலும் (Ghana), ஆசியப்பசிபிக்கு நாடுகளுக்குத் தாய்லாந்திலும் (Thailand), இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்குச் சிலியிலும் (Chile) செயற்படுகின்றன. உறுப்பு நாடுகள் யாவும் பங்குபெறும் பொது மாநாடு (General Conference) இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இம்மாநாடு கழகத்தின் வரவு செலவுத் திட்டம், பணித்திட்டம் ஆகியவற்றை ஆராய்ந்து கோட்பாட்டு முடிவுகளைச் (Policy Decision) செய்கிறது. இம்மாநாடு தேர்வு செய்யும் 49 நாடுகளைக் கொண்ட குழு கழகத்தின் ஆட்சிக் குழுவாகப் (Governing Body) பணியாற்றுகிறது. பொது மாநாடு 366 மிலியன் தொகையை 1982-83-ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தொகையாக ஒப்புதல் அளித்தது. உறுப்பு நாடுகள் இத்தொகையைச் செலுத்துகின்றன. தலைமைச் செயலகத்தின் மேலாண்மைச் செலவுகள், தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டச் (Technical Co-operation Programmes) செலவுகள், சிறப்புச் செயல் திட்டச் (Special Action Programmes) செலவுகள் ஆகியன வரவு செலவுத் திட்டத்தில் அடங்குகின்றன.

பணிகள்: உணவு வேளாண்மைக் கழகம் தன் குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவையான அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுகிறது. இது சத்துணவு, விளைபொருள்கள், வேளாண்மையியல் ஆகியவற்றைச் சார்ந்த புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தொகுத்து அவற்றை ஆராய்ந்து கிடைக்கப்பெறும் கருத்துகளை உறுப்பு நாடுகளுக்கு அளிக்கிறது. இது தனிப்பட்ட நாடுகளும் உலக நாடுகளும், தனித்தனியாகவும் கூட்டாகவும் திட்டமிட்டுச் செய்ய வேண்டிய வேளாண்மைத் திட்டங்களை அரசுகளுக்குப் பரிந்துரைகளாக வழங்குகிறது. இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் இது அளிக்கிறது. அரசுகள் விரும்பினால், அவற்றோடு கூட்டாகச் சேர்ந்து பல நடைமுறைத் திட்டங்களைச் செயலாற்றும் பணிகளில் ஈடுபட்டு, உணவுப் பற்றாக்குறையை ஒழிக்கப் பாடுபடுகிறது. வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சிகள் பெருகவும் முதலீடுகளை ஊக்குவிக்கவும் தேவையான சூழ்நிலையை உருவாக்க இது வலியுறுத்துகிறது. வளரும் நாடுகளில் (Developing Countries) நில வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை (Water Management), கால்நடைகள், விளைபொருள்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துதல், தொழில்நுட்ப இடப் பெயர்வு, வேளாண்மை ஆராய்ச்சி ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்யும் திட்டங்களை அரசுகளின் ஒத்துழைப்புடன் இக்கழகம் செயற்படுத்துகிறது. இந்நாடுகளில் பூச்சிக்கொல்லி மருந்துகள், இரசாயன உரங்கள், உணவுப் பாதுகாப்பு இரசாயனங்கள் (Food Preservatives) ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டங்களிலும் அவற்றைப் பயன்படுத்தும் செயல் விளக்கத் திட்டங்களிலும் இக்கழகம் பங்கேற்கிறது. இது கால்நடைகளின் மருத்துவத் துறை முன்னேற்றத்திற்கும் மீன்வளப் பெருக்கத்திற்கும் வனத்துறைப் பாதுகாப்பிற்கும் தேவையான ஆலோசனைகளையும் நிதி உதவிகளையும் அளிக்கிறது. மேலும் நிலச் சீர்திருத்தம், வேளாண்மைப் பொறியியல் (Agricultural Engineering) வளர்ச்சி, போக்குவரத்து, தகவல் துறை முன்னேற்றம், புதிய கண்டு பிடிப்புகள், உணவுப் பொருள் வீணாவதைத் தடுத்தல் ஆகியவற்றிற்கேற்ற தொழில்நுட்ப அறிவைப் பயிற்சிகள் மூலம் இது வழங்குகிறது.

வாணிக மந்தம், அரசியல், பொருளாதாரச் சிக்கல், போர், உணவுப்பொருள் பற்றாக்குறை ஆகியவற்றால் உணவு நெருக்கடி (Food Crisis) ஏற்படும் காலங்களில் துயர் தவிர்ப்புதவிக்காக நாடுகள் உணவைச் சேமித்துக் காப்பாக வைத்திருக்கும் பண்டசாலைகளை அமைத்து, உயர் விளைச்சல் காலங்களில் மிகை உற்பத்தியைச் சேமித்து வைக்கும் திட்டத்தைச் செயற்படுத்த உணவு வேளாண்மைக் கழகம் முனைகிறது. இதற்கென இக்கழகம் உலகளாவிய செய்தி எச்சரிக்கை முறையை (Global Warning System) அமைத்துள்ளது. இதனால் உணவு நெருக்கடி நிகழக்கூடிய நாடுகள் முன்அறிவிக்கப்பட்டு அவை ஏற்ற நடவடிக்கைகள் எடுக்குமாறு உதவி செய்யப்படுகிறது. மிகை விளைச்சல் உள்ள நாடுகளையும், உணவைச் சேமித்துக் காப்பாக இருப்பு வைத்திருக்கும் நாடுகளையும் முன் குறித்து, அந்நாடுகளிலிருந்து பற்றாக்குறை நாடுகள் உதவி பெற்றுக் கொள்ள உதவுகிறது. நாட்டளவிலும் வட்டார அளவிலும் உணவு நெருக்கடியை முன்கூட்டியே அறியும் செய்தி எச்சரிக்கை முறை நிறுவப்பட உணவு வேளாண்மைக் கழகம் உதவுகிறது.

உணவு வேளாண்மைக் கழகம் உலக உணவுத் திட்டம் (World Food Programme) எனப்படும் தனிச் சிறப்பு வாய்ந்த திட்டத்தை 1963-ஆம் ஆண்டில் மூன்றாண்டுத் திட்டமாகத் தொடங்கியது. அதனால் விளைந்த பெரும்நன்மைகளினால் 1965-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இத்திட்டம் கால வரையறையின்றி நிலையான திட்டமாக மாற்றப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் உணவு நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உழைப்புச் செறிந்த(Labour Intensive) வேலை வாய்ப்புகளை உருவாக்கி, ஊதியமாகப் பணத்திற்குப் பதில் உணவுப் பொருள்களை உணவு வேளாண்மைக் கழகம் வழங்குகிறது. உலக உணவுத் திட்டத்தினால் வேலைவாய்ப்பற்றவர்கள் சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கல், சமுதாய முன்னேற்றப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். இவை பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சிக்கான அகக் கட்டுமானப் (Infrastructure) பணியானமையால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு உதவுகின்றன. உலக உணவுத் திட்டம் அண்மைக்காலத்தில் ஆலோசனைகளையும் அறிவுரைப் பணிகளையும் வழங்குவதுடன், உணவுப் பொருகள்ளை வாங்கிக் கப்பல் மூலம் பாதுகாப்பாகத் தேவையான நாடுகளுக்கு அனுப்பும் பணியிலும் ஈடுபடுகிறது. இவற்றிற்கான நிதி உதவிகளை, உதவி பெறும் நாடுகளும் ஐக்கிய நாடுகளவையின் பிற அமைப்புகளும் வழங்குகின்றன. உலக உணவுத் திட்டத்திற்கென 1980-ஆம் ஆண்டு வரை அளிக்கப்பட்ட மூலதன வளம் \$ 2.45 மிலியனாகும். இதில் உணவுப் பொருள்களாக வழங்கப்பட்ட \$ 2.45 மிலியனும், பணமாகவும் பணியாகவும் வழங்கப்பட்ட \$ 870 மிலியனும் அடங்கும். உலக உணவு மாநாட்டின் பரிந்துரையின் அடிப்படையில் 1975-ஆம் ஆண்டு உணவு வேளாண்மைக்

கழகம் பன்னாட்டு நெருக்கடிக் கால உணவுக் காப்பு இருப்பு (International Emergency Food Reserve) அமைப்பையும் நிருவகித்துவருகிறது.

உணவு வேளாண்மைக் கழகம் வட்டார அளவில் 12க்கும் மேற்பட்ட மன்றங்களையும் (Councils) ஆணையங்களையும் (Commissions) நிறுவி, அவற்றின் மூலம் தன் பணிகளைச் செயற்படுத்துகிறது. மேலும் துயர் தவிர்க்கும் சிறப்பு இயக்க அலுவலகம் (Office for Special Relief Operations-OSRO) ஒன்றை 1973-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் தீவிர வறட்சி நிலையின் (Drought Striken) இன்னல்களைப் போக்கச் சாகிலியன் வட்டாரத்தில் (Sahelian Region) நிறுவியது. இது தொடக்கத்தில் வறட்சியால் ஏற்பட்ட இன்னல்களை மட்டும் தீர்க்க முனைந்தது. எனினும், இப்போது அதன் நடவடிக்கைகள் போர், உள்நாட்டு அமைதியின்மை, இயற்கையால் ஏற்படும் எதிர்பாராத துயர நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இவற்றிற்கான நிதி உதவியைத் துயர் தவிர்க்கும் சிறப்பு இயக்க அலுவலகத்தின் (OSRO) பொது அறநிதியும் (General Trust Fund) ஐக்கிய நாடுகளவையின் முன்னேற்றத் திட்டமும் உணவு வேளாண்மைக் கழகத்தின் தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டமும் (Technical Co-operation Programme-TCP) வழங்குகின்றன.

தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டம் 1976-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தினால் உணவு வேளாண்மைக் கழகத்தின் உறுப்பு நாடுகள் வேளாண்மைத் துறையின் உடனடித் தேவைகளை நிறைவு செய்கின்றன. அதனால் பல சிக்கல்கள் அவ்வப் போது தீர்க்கப்பட்டுப் பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படாதவாறு தடுக்கப்படுகின்றன. வேளாண்மையினரின் தொழில்நுட்ப அறிவைப் பெருக்கவும் வேளாண்மைத் தொழிலில் தொழில்நுட்ப முறையைப் புகுத்தவும் வேளாண்மை முதலீட்டைப் பெருக்கவும் தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டம் பல திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இத்திட்டங்கள் 1980-ஆம் ஆண்டு வரையிலும் 61.7 மிலியன் மதிப்புப் பெறும் 952 திட்டங்களைக் கொண்டிருந்தன. இத் திட்டங்களில் 38 விழுக்காடு ஆப்பிரிக்க நாடுகளிலும், 24 விழுக்காடு ஆசியா, தூரக்கிழக்கு நாடுகளிலும், 24 விழுக்காடு இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், 12 விழுக்காடு கிழக்கு ஆசிய நாடுகளிலும், 2 விழுக்காடு ஐரோப்பிய நாடுகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வேளாண்மைக் கழகம் 1980-இல் வெளியிட்ட உலக வேளாண்மை நிலையைப் பற்றிய ஆய்வுக் கருத்துகள் வரவேற்கத்தக்கனவாயில்லை. உணவு வேளாண்மைக் கழகத்தின் 35 ஆண்டு முயற்சிக்குப் பின்னரும் உணவில் பற்றாக்குறை நீடித்திருப்பதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. உலக நாடுகளில் 420 மிலியன் மக்கள் தேவையான உணவின்றி வாழ்கின்றனர். இதனுடன் பெருகிவரும் மக்கள் தொகை அடிப்படையில் எழும் தேவைகளையும் கணக்கிட்டால் ஆண்டுக்கு 3.8 விழுக்காடு வீதத்தில் உணவு உற்பத்தி பெருகினால் மட்டுமே 2000 ஆண்டளவில் பேரளவில் உணவுப் பற்றாக்குறை நெருக்கடி நிகழாமல் தடுக்க இயலும். இதற்கு உலக உணவு உற்பத்திக் காப்பீடு (Insured World Food Production) முயற்சி இன்றியமையாததாகும். இதறகான திட்டங்களை உணவு வேளாண்மைக் கழகம் பன்முகப்படுத்தி நிறைவேற்றி வருகின்றதெனினும், நாடுகளின் ஒத்துழைப்பைச் சார்ந்தே வெற்றியைக் காண இயலும். உலக உணவுத் திட்டத்தின்கீழ் 1980-இல் தாய்லாந்து எல்லைப்பகுதிகளிலும் கம்பூச்சியா (Kampuchea) நாட்டிலும் 2.5 மிலியன் மக்கள் பசி, பட்டினி, வறுமை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆப்கானிசுத்தான் (Afghanistan) நாட்டு அகதிகள் பேரளவில் உதவி பெற்றுக்கொண்டிருக்கின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, சூடான் (Sudan), சாடு (Chad) போன்ற நாடுகளைப் பஞ்சத்தின் கொடுமைகளினின்று விடுவிக்க உணவு வேளாண்மைக் கழகம் தீவிரமாய் ஈடுபட்டுக் குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வருகிறது.

**உத்தண்டராம பிள்ளை, அ.** சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடிக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரத்தில் திரு. அய்யாசாமிப் பிள்ளைக்கும் திருமதி இலக்குமி அம்மாளுக்கும் மகவாய் 13-3-1905-இல் பிறந்தார். இளமையில் தூத்துக்குடி கால்டுவெல் உயர்பள்ளியில் பயின்றார். திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், பின்னர்த் திருச்சி தூய வளனார் கல்லூரியிலும்(St. Joseph's College) இவர் தம் கல்லூரிப் படிப்பினை முடித்தார். சென்னையிலுள்ள சட்டக் கல்லூரியில் பயின்று 1927-இல் சட்டத் தேர்வில் வெற்றி பெற்றார். அரசுப் பணியேற்ற இவர் வட்டத் துணை ஆட்சியர், தலைமை எழுத்தர், வட்ட ஆட்சியர் முதலிய பல்வேறு அரசுப் பதவிகளில் அனந்தப்பூர் முதலிய பலவிடங்களில் 1930-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். இறுதியாக 1948-ஆம் ஆண்டில் விசாகப்பட்டினத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரானார். இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்தபோது 1949-ஆம் ஆண்டில் இவருக்கு இ.ஆ.ப. (I.A.S.) என்னும் அரசுப்பணித் தகுதி

அளிக்கப்பட்டது. இவர், 1953-இல் கிழக்குக் கோதா வரியிலும், 1954-இல் தென்னார்க்காடு மாவட்டத்தி லும் மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்து சிறப்புறப் பணியாற்றினார்.

இவர் 1955 முதல் இந்து அறநிலையத்துறை ஆணையரானார். அத்துறையில் இவர் செய்த பணி கள் குறிப்பிடத்தக்கனவாகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் யாவும் சென்று மக்கள் வழிபடவும் அவ்வத்தலப் பெருமையை உணரவும் வாய்ப்பாகத் திருப்பதிகக் கல்வெட்டு நிறுவல், தல வரலாறு முத லியன வெளியிடல் முதலிய பணிகளைச் செய்தார். சிதைவுற்ற நிலையிலிருந்த சில திருக்கோயில்களைப் புதுப்பிக்கும் முயற்சிகள் மேற்கொண்டு அவற்றில் வெற்றி பெற்றார். கோயில்களின் வருமானத்தைப் பெருக்கவும் அங்கு வழிபாடுகள் முட்டின்றி நிகழவும் வேண்டிய ஆக்கப்பணிகளைச் செய்தார். இதே போன்று வைணவத் திருக்கோயில்களிலும் அச்சமய மரபுக்கேற்றவாறு புதுப்பிக்கவும் வழிபாடு நிகழ்த்த வும் வழிவகைகள் செய்தார்.

இவர் சைவத் திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங் கள், சைவ வைணவ வழிபாட்டு முறைகள் முதலிய வற்றைத் தாமே நன்கு தெரிந்திருந்தார். அதனால், மக்களையும் திருக்கோயிலில் தொண்டுபுரியும் அருச் சகர்களையும் நன்கு வழிபாடாற்றத் தூண்டினார். திருக்கோயில்கள் புனிதத் தன்மை வாய்ந்த இடங்கள் என்பதை மக்கள் உணரும் வகையில் அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என வற்புறுத் தினார். அறநிலையத் துறையில் இவர் ஆற்றிய தொண்டு பலரும் போற்றும் வகையில் சிறப்பாக அமைந்தது. இவர் 1960 ஏப்பிரல் முடிய அத்துறை யிலேயே ஆணையராயிருந்து அப்பணியினின்றும் ஓய்வு பெற விரும்பினார். எனினும், இவர்தம் பணிச்சிறப்புக் கருதி அரசு 1961 ஏப்பிரல் வரை ஓராண்டுக் கால நீட்டிப்பு வழங்கிச் சிறப்பித்தது. நீட்டிப்புக் காலம் முடிந்ததும் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவருக்கு 3 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர்.

ஓய்வு பெற்ற பின்பும் பல நிறுவனங்கள் இவ ரைத் தங்கள் நிறுவனங்களில் பணியாற்ற வேண்டின. இருப்பினும் சில ஆண்டுகள் அவ்வாறு பணிபுரிந்த பின்னர் அவற்றினீங்கி இறைவழிபாட்டிலேயே தம் இறுதிக்காலத்தைக் கழித்தார். திருச்செந்தூர் முருக னையே தம் வழிபடு தெய்வமாகக் கொண்ட இவர் சிறந்த நேர்மையாளராகவும் நிருவாகத் திறமை யுள்ளவராகவும் திகழ்ந்தார். இவர் 1-5-1981-இல் காலமானார்.

இரா. ச.

**உத்தண்ட வேலாயுதபாரதி** கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருவதிகை எனப்படும் சிவத்தலத்தில் வாழ்ந்து வந்த வர் என்பதனை அவ்வூர்த் திருக்கோயில் மதிலிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது. இப்புலவர் தொண்டை நாட்டினைச் சேர்ந்த காலியூர்க் கோட்டத்துத் தனியூரான உத்தர மேரூரைச் சார்ந்த மகிபால குலகாலச்சேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். அந்தணர் குலத்தினைச் சேர்ந்த இவருடைய தந்தையார் பெயர் தேவராசப் பட்டர் என்பதாகும். இவர் கௌடிலிய கோத்திரத் தில் தோன்றியவர். இப்புலவர் உத்தண்ட வேலா யுத கவி, வீரவல்லி தேவராசன், காசிநாதன், குப்பை யன் ஆகிய வேறு பெயர்களாலும் அழைக்கப் பெற் றார். இப்புலவர் திருவதிகை வீரட்டானத்து இறை வன் பேரில் ஒரு கலம்பகம் பாடினார் என்றும், அதற்காகத் திருவதிகைக் கோட்டையில் இவருக்கு மனையும் நிலங்களும் வழங்கப்பட்டன என்றும் திரு வதிகை வீரட்டானத்திலுள்ள திருக்கோயில் மதிற் சுவர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவர் கலம்பகம் பாடிப் பரிசு பெற்றது கி.பி. 1536-ஆம் ஆண்டுத் துன்முகி ஆடித்திங்கள் 10-ஆம் நாளாகும் என்ப தனையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இவரது திருவதிகைக் கலம்பகம் இப்பொழுது கிடைக்க வில்லை.

**உத்தண்டன் கோவை** கி.பி. 16-ஆம் நூற் றாண்டில் தமிழில் தோன்றிய கோவை நூல்களுள் ஒன்றாகும். இந் நூலாசிரியர் பெயர் அறியக்கூட வில்லை. தொண்டை மண்டலத்தே குமிழி நாட்டைச் சேர்ந்த ஆமூர்க் கோட்டத்திலுள்ள பாலாற்றின் கரையில், தைகை என்னும் குன்றினைச் சார்ந்துள்ள தையூரில் தோன்றிய உத்தண்டன் என்னும் வள்ளல் மீது பாடப்பட்டது இந்நூலாகும். தையூருக்கு இராச கேசரி நல்லூர் என்னும் வேறு பெயரும் உண்டு. தையூரில் தோன்றிய உத்தண்டன் மீது பாடப்பெற்ற மையால் இந்நூல் 'தையூர் உத்தண்டன் கோவை' எனவும் வழங்கப்படும். உத்தண்டன் தந்தை பெயர் குன்றன் என்பதாகும். இவர்குன்றுடையான் எனவும் வழங்கப்படுவர். இவர்காராளர் மரபில் தோன்றி யவர். இக்கோவை இன்னும் அச்சிடப்பெறவில்லை. சென்னை அரசின் தொன்னூல் நிலையத்தில் உள்ள கையேட்டில் இந்நூல் பற்றிய குறிப்பு உள்ளது. 400 பாடல்கள் கொண்ட இந்நூலில் 40 பாடல்கள் இல்லை என்று அக்குறிப்புக் கூறுகிறது. உத்தண்டன் அமைச்சன் என்றும் களத்துக் கதிபதி என்றும் கூறப் படுவதால், அவன் அக் காலத்திலாண்ட நாயக்க மன்னரிடம் படைத்தலைமை பூண்டு தொண்டாற்றி யவனாக இருந்திருத்தல் கூடும் என்பது புலனாகிறது.

'தமிழ்த் தொண்டு பட்டு ஏழ்மனைக்கே தகையுண்ட உத்தண்டன்' எனப் பாராட்டப்படுவது கொண்டு இவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றி யமையினை அறியலாம். இவ் உத்தண்டனை 'உத்த மர்கள் சூழ் மானவ உத்தண்டன்' என்று தினகர வெண்பா குறிப்பிடுகிறது. இதனால் மானவ என்னும் ஊரும் உத்தண்டனுக்கு உரியது என்பது தெரிகிறது.

**உத்தம சோழப் பல்லவர்** என்பது தொண்டை நாட்டின் 24 கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்திற் சிறந்த குன்றத்தூரில் தோன்றிப் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெரு மானின் சிறப்புப் பட்டப் பெயராகும். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவருக்குப் பாலறாவாயர் என்ற தம்பி ஒரு வரும் இருந்தார். இருவரும் இளமையிலேயே நன்கு கற்பன கற்று விற்பன்னராயினர். இருவருள்ளும் அருண்மொழித் தேவரின் கூரிய அறிவு மேம்பாட்டை அக்காலத்துச் சோழநாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்த அநபாயசோழர் (இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1133-1150) அறிந்து இவரைத் தம் முதல் அமைச்சராக ஆக்கிக் கொண்டார். அருண்மொழித் தேவர் அரசியற் பணிகளை மிகவும் சிறப்பாய் ஆற்றுவது கண்டு மெச்சி அவ்வரசரால் கொடுக்கப் பெற்ற பட்டமே 'உத்தம சோழப் பல்லவன்' என்ப தாகும். இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குரிய பல பெயர்களுள் உத்தம சோழப் பல்லவராயன் என் பதும் ஒன்றாகும். அருண்மொழித் தேவரிடம் கொண்ட பேரீடுபாட்டின் காரணமாகத் தம் பெய ரையே சிறந்த பட்டமாகச் சூட்டிய பெருமை குறிப் பிடத்தக்கது. 'அருண்மொழித் தேவர்க்குத் தத்துபரி வலவனுந்தன் செங்கோ லோக்சுந் தலைமையுமளித்து அவர் தமக்குத் தனது பேரும் உத்தம சோழப் பல் லவன் தான் என்றும் உயர் பட்டமும் கொடுத்திட' என்று சேக்கிழார் புராணம் கூறுகிறது. சேக்கிழார் குடியில் தோன்றியதால் 'சேக்கிழார்' என்றும், பெரிய புராணத்தில் அடியார்களின் பெருமையைச் சிறப் பித்துக் கூறியதால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்றும் இவர் வழங்கப் பெற்றார்.

அச்சிறப்புகள் எல்லாவற்றுளும் மிக்க சிறப்பின தாகக் கருதப்பெற்றது, அரசன் தன் பெயரையே பட்டமாகக் கொடுத்ததாகும். இப்பட்டத்தையே உத்தம சோழப் பல்லவராயர், உத்தமசோழப் பல்லவ ரையர் என்றும் சில கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் திருநாகேச்சுரப் பெருமான் மீது பேரீடுபாடு கொண்டிருந்தார். அதனால் குன்றத்தூரில் திருநா கேச்சுரம் என ஒரு திருக்கோயில் எழுப்பி வழிபட் டார். அநபாய சோழனைப் பத்தி வழியில் ஈடு படுத்திப் பெரியபுராணம் உலகிற்குக் கிடைக்க வழி செய்தார். பெரிய புராணத்தை இயற்றித் தலையாய 'சைவ வரலாற்றுக் காப்பியம்' எனப் புலவர்கள் போற்றும் நிலையை ஏற்படுத்தினார். இரா.ச.

**உத்தம சோழன்** பரகேசரி உத்தமசோழன் (கி. பி. 971-987) கி. பி. 971-ஆம் ஆண்டில் சோழ வேந்தனாக மணிமுடி சூட்டப்பட்டான். இவன் இராசகேசரி கண்டராதித்த சோழனுக்கும் (கி. பி. 955-957) செம்பியன்மாதேவிக்கும் மகனாகப் பிறந்தான். இவன் உத்தமசோழனான மதுராந்தகன் எனவும் அழைக்கப்பட்டான். பரகேசரி இரண்டாம் ஆதித்த சோழன் தனது ஆட்சிக் காலத்திலேயே கொலை செய்யப்பட்டான். இதன் காரணமாக இராசகேசரி சுந்தர சோழன் உத்தம சோழனுக்கு மணிமுடியினைச் சூட்டினான். இவ்வேந்தனது கல் வெட்டுகள் கும்பகோணம், பழங்கோயில், கோவிந்த புத்தூர், உடையார்குடி, திருவிளக்குடி, திருவிடை மருதூர், திருமெய்ஞ்ஞானம், திருமால்புரம், திரு முல்லைவாயில், காஞ்சிபுரம், மீஞ்சூர், திருவிடந்தை திருவொற்றியூர், திருவதிகை வீரட்டானம் முத லான இடங்களில் காணப்படுகின்றன. இதனால் இவ்வேந்தனது ஆட்சி தொண்டை நாட்டிலும் திரு முனைப்பாடி நாட்டிலுங் கூடப் பரவியிருந்தமை புல னாகும். இவ்வேந்தனது பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கிடைத்துள்ளதால் இவன் கி. பி. 987 முடிய அரசாண்டான் என்பதுறுதி.

சிற்றரசரும் அரசியலதிகாரிகளும்: திருக்கோவ லூரைத் தலைநகராகக் கொண்டு, மலையமான் நாட்டை ஆண்டுவந்த சித்தவடத்தடிகள் என்பான், உத்தம சோழனுக்கு உட்பட்ட குறுநில மன்னனாக விளங்கினான். இவன் நரசிங்கவர்மன் என்னும் அபி டேகப் பெயரையும் பெற்று விளங்கினான்.

உத்தம சோழனது அரசியல் அதிகாரிகளுள் அம்பலவன் பழுவூர்நக்கன் மிகவும் குறிப்பிடத்தக்க வன் ஆவான். குவலாளபுரத்தினனான இப்பழுவூர் நக்கனது சேவையைப் பாராட்டி, இச்சோழவேந்தன் 'விக்கிரம சோழ மாராயன்' என்னும் விருதுப்பெய ரினை அளித்தான். சில கல்வெட்டுகளில் இவன் 'குவலாளமுடையான் அம்பலவன் பழுவூர்நக்கனான விக்கிரமசோழ மகாராசன்' எனவும் குறிக்கப்பெறு கிறான். இத்தலைவன் முதலாம் இராசராச சோழ னது ஆட்சிக்காலத்தில் இராசராச பல்லவரையன் என்னும் பெயரில் குறிக்கப்பெறுகிறான். உத்தம சோழனது பத்தாம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 981) இத்தலைவன் திருச்சி மாவட்டம் விசயமங்கலத்தில் (கோவிந்தபுத்தூர்) கற்றளி ஒன்றினை எடுப்பித்து,

அதற்கு 96 ஆடுகளைத் தானமளித்து, விளக் கெரிக்க ஏற்பாடுகள் செய்துள்ளான். இக்கோயிலின் விமானத்தையும் (நடுவில் கோபுரம்) கி. பி. 984-இல் இவன் கற்களால் அமைத்துள்ளான்.

அடுத்து, உத்தம சோழனின் மகனான மதுராந் தகன் கண்டராதித்த சோழன் என்பான் முதலாம் இராசராச சோழனது ஆட்சிக்காலத்தில் கோயிலை யும், அறநிலையங்களையும் நன்கு பராமரித்து வந் தான் எனத் தெரிகிறது. இறையன்பில் மேம்பட்டு விளங்கிய உத்தமன் காஞ்சிபுரம் அரண்மனையில் தங்கி இருந்தபோது, திருப்பழங்கோளூர் திருக்கோயி லுக்குச் சில நிலங்களைத் தானமளித்ததுடன், அந் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளையும் செய்து தந் துள்ளான். இதனை இவ்வேந்தனது ஆறாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட பழங்கோயில் கல்வெட் டால் அறியலாம்.

வெள்ளிக்காசு: இவ்வேந்தனது ஆட்சிக்காலத் தில்தான் சோழர் வரலாற்றிலேயே முதன்முறை யாக வெள்ளிக்காசு வெளியிடப்பட்டது. இக்காசின் நடுவில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது; ஓரத்தில் உத்தமசோழன் என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. சோழர் கால நாணயங்க ளுள் இதுவே பழமைமிக்கது என்று கருதப்படுகிறது. தங்கம், செம்பு ஆகியஉலோகங்களாலானகாசுகளும் இவனது காலத்தில் வெளியிடப்பட்டன.

குடும்பம்: இவ்வேந்தனது பட்டத்தரசி மூத்த நம்பிராட்டியாகிய திருபுவன மாதேவி ஆவாள். இவளன்றியும் இவனுக்குப் பல அரசியர் இருந்தனர். செம்பியன் மாதேவி என்னும் ஊரில் உள்ள கல்வெட் டில், இவ்வேந்தனது அரசியர்களாக ஐவர் குறிக்கப் படுகின்றனர். அவர்கள் மழபாடித் தென்னவன் தேவி, பட்டன்தானதுங்கி, இருங்கோளர் மகள் வானவன்மாதேவி,' விழுப்பரையர் மகளாகிய கிழா னடிகள், பழுவேட்டரையர் மகள் ஆகியோராவர். பஞ்சவன்மாதேவி, சொன்னமாதேவி, ஆரூரன் அம்பலத்தடிகள் என்பாரும் இவன்தன் மனைவியரே. இவர்கள் அனைவரும் தம் மாமியார் செம்பியன் மாதேவியின் பால் பேரன்பும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். இதனை நாகபட்டினம் வட்டம், செம்பியன்மாதேவி என்னும் ஊரில் இவர்கள் அனை வரும் திருக்கயிலாயம் என்னும் சிவன் கோயிலைத் தம் மாமியார் பெயரால் எடுப்பித்து, நாள்வழிபாட் டிற்கும் திங்கள் விழாக்களுக்கும் அறக்கொடைகள் அளித்து உள்ளதால் அறியலாம்.

இணைந்த ஆட்சி: உத்தம சோழன் கி. பி. 985 -இல் முதலாம் இராசராச சோழனுக்கு மணிமுடி சூட்டி, அரசனாக்கித் தானும் அவனுடன் இணைந்து இரண்டாண்டுகள் ஆட்சிபுரிந்தான். இதனைத் திரு வாலங்காட்டுச் செப்பேட்டால் அறியலாம். இச்செப் பேடு குறிப்பிடும் மதுராந்தகன் என்பான் உத்தம சோழனேயாவான். ம. இரா. த.

**உத்தமசோழன் காசுகள்,** தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சோழர்கள் வெளியிட்ட காசுகளுள் பழமையானவை. விசயாலய சோழன் முதல் சுந்தர சோழன் வரையில் ஆண்ட சோழர் காசுகள் இதுவரையில் கிடைக்கவில்லை.

உத்தம சோழனது ஆட்சிக்காலத்தில் வழங்கி வந்த தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங் களால் ஆன காசுகள் கிடைத்துள்ளன. அவற்றில் மூன்று வகைக் காசுகள் உள்ளன.

முதல்வகைக் காசின் முன்புறம் புலி, இரட்டை மீன், வில் ஆகிய மூன்று உருவங்களும், பின்புறத்தில் உத்தம சோழன் என நாகரியில் எழுதப்பட்ட எழுத் துகளும் உள்ளன. இவ்வகைக் காசுகளே அதிக அள வில் கிடைத்துள்ளன. இரண்டாம் வகைக் காசின் ஒருபுறம் புலியும், மறு புறம் மீனும் பொறிக்கப்பட் டுள்ளன. இதன் ஓரத்தில் 'மதுராந்தகன்' என்னும் பெயர் தமிழிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளது. மூன்றாம் வகைக் காசுகளின் இருபுறமும் புலியும் மீனும் பொறிக்கப்பட்டுள்ளன. சுற்றிலும் 'உத்தம சோழன்' என்று எழுதப்பட்டுள்ளது. ம.இரா.த.

**உத்தம நம்பி:** இவர் கூரத்தாழ்வான காலத் தவர்; திருவரங்கம் பெரியகோயில் அதிகாரியாக இருந்தவர். கூரத்தாழ்வான் திருவரங்கத்தில் தங்கி, வீடுகளில் ஐயமேற்றுக் குடும்பச் செயல்களை நடத்தி வந்தார். இவர் ஒவ்வொரு நாளும் பெற்ற உணவில் மறுநாளைக்கென்று சிறிதும் மிச்சப் படுத்தி வைத்துக் கொள்வதில்லை. இவ்வாறு வாழ்ந்து வந்தபோது ஒருநாள் மழை இடைவிடாமல் பொழிந்தது. அத னால் வெளிச்செல்ல இயலாமல் போயிற்று. அதனால் அன்று தண்ணீரையே உட்கொண்டு திருவாய் மொழிச் சிந்தனையையே உணவாக உண்டு வேறு உணவு இன்றி இருந்தார். அன்று இரவு திருவரங்கம் பெரிய கோயிலிலே பெரிய பெருமாள் அமுதுசெய் யும் போது எழுந்த திருச்சின்னவொலி காற்றில் மிதந்துவந்தது. அதுகேட்ட ஆழ்வான் மனைவி ஆண் டாள் பெருமானைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினி கிடக்க, நீர் குலாவிக் குலாவி அமுதுசெய் தருளுகிறீரோ?' என்று நினைத்தார். திருவரங்கப் பெருமான் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்

ளப் பற்றினான். உடனே கோயில் திருப்பணிகளை நடத்திவரும் உத்தமநம்பிக்கு அர்ச்சகர்முகமாகக் கட்டளையிட்டு, தாம் அமுதுசெய்த அக்கார அடி சிலை அனுப்பிவைத்தான். உத்தமநம்பி குடை, கொடி, சாமரம் முதலிய வரிசைகளோடும் பல்வேறு இசைக்கருவிகளின் முழக்கத்தோடும் ஆழ்வான் திரு மாளிகைக்கு எழுந்தருளினார். அதுகண்டு பதறி எழுந்த ஆழ்வான், 'இது என்?' என்று திகைத்து எதிர்கொண்டார். உத்தமநம்பி, 'நம்பெருமாள் தேவ ரீருக்கு அக்கார அடிசில் அனுப்பியருளினார்; ஏற்றருள வேண்டும்' என்று சொல்லிப் பெருமாளுடைய கட்ட ளையைத் தெரிவித்தார். ஆழ்வான் அதனைப் பெருஞ்செல்வமாகப் போற்றி அதில் தமக்கும் தம் பத்தினிக்குமாக இருதிரளைகளை எடுத்துக் கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவைத்தார். பின்னர் ஆழ் வான், 'பெருமாள் இப்பொழுது அக்கார அடிசில் வரக்காட்டியது எதனால்?' என்று சிந்தித்தார். ஆண் டாளை நோக்கி, 'நீ ஏதேனும் நினைத்ததுண்டோ?' என்று வினவினார். அதற்கு அந்தப் பெருமாட்டி, 'யான் வேறொன்றும் நினைக்கவில்லை; பெருமாள் இரவு அமுதுசெய்தருளிய போது திருச்சின்னம் ஒலித் தது; அப்பொழுது, 'உம்முடைய அடியவர் இப்படிப் பசித்திருக்க, நீர் குலாவிக் குலாவி அமுதுசெய்கி நீரோ!' என்று மட்டும் நினைத்தேன்' என்றார். ஆழ்வான் அதனைக் கேட்டு, நீ இப்படிப் பெரு மாளைக் குறித்துக் கடுமையாக நினைக்கலாமோ? என்று அவளுக்கு நல்லறிவு கூறி, இறைவன் பேர ருளை வியந்து நின்றார். அந்த அடிசிலில் ஒரு பகுதி யைத் தாம் உட்கொண்டு எஞ்சியதை மனைவிக்குக் கொடுத்தருளினார். தயரதனுக்குப் பிள்ளைகளைத் தரும் வேள்வியில் (புத்திர காமேட்டி யாகம்) கிடைத்த பிண்டத்தின் கூறுகளே மக்கள் நால்வ ருடைய பிறப்புக்குக் காரணமாயினாற்போல, ஆழ் வானுக்குப் பராசரபட்டர், வேதவியாசபட்டர் என்னும் இருபிள்ளைகள் பிறப்பதற்கு இத்திரளை களே காரணமாயின. தெ.ஞா.

**உத்தரகாண்டம்** என்பது இராமாயணத்தில் இராவண வதம் முடிந்து அயோத்தியில் இராமன் முடிசூடிய பின்னர், நடந்த நிகழ்ச்சிகளை விளங்க எடுத்துக் கூறும் நூலாகும். இது கடவுள் வணக்கம், மெய்ப்பொருள் வணக்கம், அவையடக்கம், நூல் என்னும் அமைப்புடன் காணப்படுகிறது. கடவுள் வணக்கப் பாடல் இராமாவதாரத்துக்கு விளக்கம் தருவதாகவும், மெய்ப்பொருள் வணக்கம் பரம் பொருளை வணங்குவதாகவும் அமைந்துள்ளன. நூலுள் இடம்பெறும் படலங்கள், பாடல்கள் ஆகிய வற்றின் எண்ணிக்கை பதிப்பிற்குப் பதிப்பு வேறுபடு கிறது.

இராமாயண உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் இயற்றியதாகவே நெடுங்காலமாகக் கருதப்பெற்று வந்தபோதிலும், அதனை இயற்றியவர் யார் என்ப தில் இன்னும் கருத்து வேறுபாடுகள் இருந்து வரு கின்றன. இதுகாறும் வெளிவந்துள்ள உத்தரகாண்டப் பதிப்புகளில் அந்நூலாசிரியர் பெயர் 'கம்ப நாட்டாழ் வார்' என்றும், 'மகாகவி ஒட்டக்கூத்தர்' என்றும் இடம்பெற்றுள்ளமை அறியலாம். இலக்கிய உலகில் அபிதான சிந்தாமணி, அபிதான கோசம், சிறப்புப் பெயரகராதி போன்ற நூல்கள் ஒட்டக்கூத்தரே உத்தரகாண்டம் பாடினார் என்று குறிப்பிடுகின்றன. புலவர் புராணத்தில் இக்கருத்து செய்யுள் வடிவம் பெற்றுள்ளது. 'இராமாயணத்தில் உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடினதென்பது உலகப்பிரசித்தம்' என்பர் 'கம்பநாடார்' என்னும் நூலின் ஆசிரியர் செல்வக் கேசவராய முதலியார். பெரும்பாலான இலக்கிய வரலாற்று ஆசிரியர் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' என்னும் தொகுப்பு நூலின் ஆராய்ச்சியுரையில் மு. இராகவை யங்கார் 'இராமாயண உத்தரகாண்டம் கூத்தராற் பாடப்பட்டதென்பதற்குக் கன்ன பரம்பரை தவிர வேறு தக்க ஆதரவொன்றும் இதுவரை கிடைத்தி லது' என்ற கருத்தினோடு, கம்பருடன் இகலி நின்ற வாணியன்தாதன் என்பானே உத்தரகாண்டம் பாடி யிருக்கலாம் என்ற கருத்தையும் உடன் கூறியுள்ளார். இவ்வாய்வாளர், 'பூணி லாவும்' எனத் தொடங்கும் சோழமண்டல சதகச் செய்யுளில் 'கழலபயன் சபை யிற் பயிலுத் தரகாண்டம், வாணிதாதன் அரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே' என்று இடம்பெறும் ஈற்றடிகளைக் காட்டாகக் காட்டுவர். வாணியன்தா தன் என்னுஞ் சொல்லே மருவி வாணிதாதன் ஆயிற்று என்பது ஆய்வாளர் கருத்தாகும். வாணி தாதன் என்னுஞ் சொல் சில பதிப்புகளில் வாணிதா சன் என இடம்பெறுவது கொண்டு, கலைமகள் அருள்பெற்ற ஒட்டக்கூத்தரே வாணிதாசன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்று கூறுவாரும் உண்டு. 'கம்பர் பாடியது பாலகாண்டம் முதல் யுத்தகாண் டம் வரையிலுள்ள ஆறு காண்டங்களே என்பதும், பின்வந்த காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினார் என்பதும், அவ்வுத்தரகாண்டம் சோழனது அவைக் களத்தே அரங்கேற்றப்பட்டது என்பதும் சோழ மண் டல சதகப் பாடலால் தெளிவாகின்றன' என்று ரா. இராகவையங்கார் கருத்துரைப்பர்.

உத்தரகாண்டத்தில் இடம்பெறும் அகச்சான்று கள் வாயிலாக இந்நூலாசிரியர் குறித்தும், நூலின் சிறப்புகள் குறித்தும் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்நூலாசிரியர் அவர் காலத்துச் சிறந்து விளங்கிய சைவ வைணவ சமயங்கள் இணக்கமுற வாழ்தல் வேண்டும் என்னும் பேருள்ளம் கொண்டவர். சிவ பெருமானை, 'மலரோனுஞ் செந்தாமரைக் கண் திருமாலும் ஆனாய் போற்றி, சிவ போற்றி' எனப் போற்றும் போற்றியுரையிலும், திருமாலைச் 'சிவன் அயனாகி அலகிலா விளையாட்டாடுவாய் அகண்ட மாயினாய் யாருனை யறிவார்' எனப் பாராட்டும் பாராட்டுரையிலும் புலவரின் சமயப் பொதுநோக்கு விளக்கமுறுகிறது.

புலவர் எழுதிச் செல்லும் கருத்துகளும், இலக்கியத் தொடர்களும் அவர்தம் பன்னூற் புலமையை எடுத்துக் காட்டுவனவாகும். 'கமலம் ஒத்த சரணப் பெருவிரலால் ஒல்கி நின்று நிலங்கீறி', 'ஆலகாலம் அமிழ்தாக அடக்கி வைத்த மணிமிடற்றன்', 'மற்றவரையெல்லாம் களம்படக் கொன்று' போன்ற தொடர்கள் முறையே அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை முதலாய இலக்கியங்களை நினைவூட்டுகின்றன. 'ஒருதலையா னின்னாது காமமென உன்னான்', 'மானத்தாற் கவரிமாக்கள் சாதலைக் கண்டு தேனாய்த் தளர்ந்தொரு மயிருக்காக' என்னும் தொடர்கள் திருக்குறளை நினைவூட்டுவன. உத்தர காண்டத்தைப் பயில்வார் அந்நூலாசிரியர் கம்பராமாயண நூற்பயிற்சி மிக்கார் என்பதை உய்த்துணரலாம். 'அண்ணலும் அவனியிற் பிறந்த மங்கையும் மாறிக் கண்வலைப்பட்டு மனங்களின் மாறினர் புகுந்து', 'ஏதமுறு பழியூட்டி இப்பிறப்பில் எனையொழிய மாதரையென் மனத்தாலுந் தொடேனென்று வரந்தந்த காதலை', 'அருத்தி மாதவத்துக்கு இப்போது அழிவொன்றுமிலையே,' 'தாயுரை தலைமேற் கொண்டு' போன்ற தொடர்கள் கம்பராமாயணத்தை நினைவூட்டுகின்றன. தேவர்கள் வைகுந்தம் சென்று திருமாலைக் கண்டு துதிக்கும் பாடல்கள் யாவுமே 'யாருனை யறிவார்' என்னும் மகுடத்தைக் கொண்டன. இப்பகுதி கம்பராமாயணத்தில் யுத்தகாண்டம் நாகபாசப்படலம் (பாடல்கள் 251—261) 'யாரிவ் வதிரேக மாயையறிவார்' என்றுள்ள பகுதியை அப்படியே அடியொற்றிச் செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது.

பாடல்களை அடுக்கிச் சொல்வது இந்நூலாசிரியர் போக்காகக் காணப்படுகிறது. இலக்குவன் சீதையைக் கானகத்தே விட்டுத் திரும்பியபோது அவள் தன் நிலையை எண்ணி வருந்தி 'விதியேயோ விதியேயோ' எனக் கதறும் பாடல்கள், சூர்ப்பணகை அரற்றும்போது 'அண்ணாவோ அண்ணாவோ' என அரற்றிய பாடல்களின் நடையை ஒத்துள்ளன. வருணனையைக் கூறுமிடத்துப் பல பாடல்களைக் குளகமாகக் கொண்டு முடிப்பதும் இந்நூலாசிரியர் இயல்பாகும்.

பலவகையான சிறந்த உவமைகளைக் கையாண்டு கருத்து விளக்கம் தருவது புலவரின் சிறப்பியல்பாகும். 'தூய ஞானச் சுடர்விளக்குத் தோன்றத் தோன்ற நில்லாத மாயையெனவும், அறத்தினெதிர் மண்டும் வினைமண் டிலமெனவும்' தத்துவக் கருத்துகளை உவமையாக்குதல், 'வெஞ்சினம் உருக் கொண்டன்ன' 'வஞ்சமில்லா யோகியர்தம் மனம்போலத் தெளிந்து, மங்கையர்தம் நெஞ்சுபோல் மிக ஆழ்ந்து' என நுண்பொருள்களை உவமையாக்குதல், 'நீரொழியப் பால்நுகரும் அன்னம் போல்' 'செவியில் கனல் காய் நாராசம் நுழைந்தென', 'கன்றிழந்த பசுப் போல்' என மரபாகப் பழகிய உவமைகளைக் கையாளுதல், 'அரம்பைக் களிமேவு ஊசியின்' 'பூனைவாய் அகப்பட்ட கிளிபோல' எனப் பழமொழிகளை உவமையாக்குதல், 'உறுதுயரால் நரகத்தினிடையே கிடந்தழுந்தி நடுங்கும் உயிர்போல் நடுங்குவரால்' என நம்பிக்கையை உவமையாக்கல் போன்றன இந்நூலுள் இடம்பெற்றுள்ளன.

உத்தரகாண்டப் பாடல்கள் பொதுவான நடையில் அமைந்துள்ளமை காணலாம். அவை பழகு தமிழ்ப் பாவலரின் பாக்கள் என்பதனை உணர்த்தும். 'உங்களுக்கும் உம்புத்திர பௌத்திரர்க்கும்' 'ஓதவோதப்போதங் கெட்டு அபோதமானது ஓங்கியதே', 'எம்பெருமான் உரைத்தது எமக்கு இதமல்லாமல் அகிதமாமோ', 'மாதா குலத்தின் வழிநின்றும் பத்தாவாக வசீகரித்து' என்பன போல இந்நூற் பாடல்கள் வடமொழிக் கலப்பு நடையினவாய்க் காணப்படுகின்றன. இராவணன் 'தசக்கிரீவன்' என்றும், இராமன் 'தசரதராமன்' என்றும் பலவிடங்களில் குறிக்கப்பட்டுள்ளனர். 'வெய்யாள் ஏவக் காடணைந்த கருங்களிறு' 'இன்று போய் நாளை வாவென்று இயம்பிய இறைவன்' என்று முன்னிகழ்ந்த நிகழ்ச்சிகள் அடிப்படையில் இராமன் சுட்டப்படுகிறான்.

உத்தரகாண்டம் முன்னைய காண்டங்களின் விளக்கமாகவும் அமைகிறது. ஆரணிய காண்டம் சூர்ப்பணகைப் படலத்தில் இடம்பெறும் 'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி' எனத் தொடங்கும் பாடல் சூர்ப்பணகை இராமனிடம் தன்னைத் தெரிவிப்பதைக் குறிப்பதாகும். பிரமன் புதல்வன் புலத்தியன்; புலத்தியன் மகன் விச்சிரவசு; விச்சிரவசு மகள் சூர்ப்பணகை. இக்குலமுறைக் கொடிவழி அடிப்படையில் சூர்ப்பணகை 'பூவிலோன் புதல்வன் மைந்தன் மகள்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். உத்தரகாண்டத்து இடம்பெறும் புலத்தியப்

படலம், இராவணன் பிறப்புப் படலம் ஆகியவற்றை அறிந்திருந்தாலன்றி இவ்விளக்கம் விளங்க வாய்ப்பில்லை. 'முப்புரங்கள் செற்ற சேவலோன் துணைவனான செங்கையோன்' என்றது குபேரனை. இவனைப் பற்றியும் இவன் சிவன் தோழன் என்பது பற்றியும் இராவணன் பிறப்புப் படலத்தால்தான் அறிய முடியும். 'திக்கின் மாவெலாம் தொலைத்தான்' இராவணன் என்பது திக்குவிசயப் படலத்தால் அறியப்படுகிறது.

உலகியற் கருத்துகள், அறக் கருத்துகள், அரச நீதிக் கருத்துகள் பல இந்நூலுள் பரந்து கிடக்கின்றன. 'பெண்பெறுகை தனைப்போலப் பெரிய துயர் தானுண்டோ?' என மயன் கூறும் உலகியற் கூற்று எல்லோரும் எக்காலத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்க பேருண்மையாகும். 'அறம் வழுவாமல் பார்த்துச் செய்வ செய்; பழிபடு காரியஞ் செய்யேல்' என்று குபேரன் இராவணனுக்குக் கூறும் அறம், புலவர் உலகோர்க்குக் கூறும் அறமாகும். 'முறை செய்தல் இராச தன்மம்' என மன்னர்க்கு நீதி சுட்டுவர். குடிக்காப்புச் செய்யாத அரசரை 'மூடர்' என்றும், அறம் பிறழ்ந்து மறஞ் செய்யும் மன்னரைப் 'பாவியர்' என்றும் கடிந்துரைப்பர்.

உத்தரகாண்டம் மேற்கண்ட பல சிறப்புகளைக் கொண்ட பெட்டகமாகத் திகழ்கிறது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உத்தரகாண்டத்துள் இடம் பெறும் 'மக்கள் இழந்த இடும்பையினும்' எனத் தொடங்கும் அவலவுணர்ச்சிப் பாடலைத் தம் உரை மேற்கோளாகக் காட்டியுள்ளமை இந்நூலின் பெருஞ்சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இரா.செ.

**உத்தரகுரு** என்பது இன்பம் நுகருவதற்குரிய பூமியினைக் குறிக்கும். இதனைப் 'போகபூமி' என்றும் கூறுவர். இப்போகபூமி ஆறுவகைப்படும் என்று திவாகரநிகண்டு கூறுகிறது. அவை ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், இரணவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம் ஆகியனவாகும். நிலவுலகில் தலைமையான தானஞ் செய்தவர்கள் உத்தரகுருவாகிய போக பூமியிற் பிறந்து அவ்வறப் பயன் உள்ள வரையில் இன்பம் துய்ப்பர். அவர்கள் இன்பம் துய்க்குமாற்றை, 'ஒத்த அன்பும் ஒத்த நலனுங் கொண்ட பதினாறு வயதுக் குமரனும், பன்னிரண்டு வயதுக் குமரியுமாகத் தோன்றிக் கற்பகதரு முதலியன விரும்பியவற்றைக் கொடுக்க, அறப்பயன் உள்ள வரையில் இன்பம் நுகருவர்' என்றும் திவாகர நிகண்டு கூறுகிறது.


இப்போக பூமி, இமயம், ஏமகூடம், நிடதம், மேரு முதலிய மலைகளுக்கு அப்பால் உள்ளது என்றும், இராம ராவணப் போரில் அனுமன் சஞ்சீவி கொண்டு வருவதற்காகச் சென்ற போது இடையில் இதனைக் கண்டு, இதன் ஒளியால் பொழுது விடிந்து விட்டது போலும் என மயங்கிப் பின் இது வேறொரு பூமி எனத் தெளிந்து சென்றான் என்றும் நூல்கள் கூறுகின்றன. உத்தரகுரு மேருவிற்கு வடக்கிலுள்ளதாகக் கருதப்படுகிறது. இது 'உத்தரகுருவம்' என்று பெருங்கதையில் கூறப்பட்டுள்ளது.

**உத்தரகோச மங்கை** பாண்டிய நாட்டில் உள்ள திருவாசகத் தலங்களுள் தலைமைச் சிறப்புடைய தலமாகும். இத்தலத் திருக்கோயில் சேது சமத்தானத்தைச் சேர்ந்த திருக்கோயில்களுள் ஒன்று. தொன்மையும் சிறப்பும் பெற்ற இவ்வூர் இராமநாதபுரத்தில் இருந்து, தென்மேற்கே 10 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் மிகப்பெரியது. இறைவன் திருப்பெயர் மங்களேசுவர நாதர். இறைவியின் திருப்பெயர் மங்களேசுவரி. தேவார முதலியான மூவரும் பாடாத ஒரு சில சிவத்தலங்களுள் இதுவும் ஒன்று.

திருப்பெருந்துறையில் இறைவனால் தீட்சை செய்யப்பெற்ற மாணிக்கவாசகர் திருச்சதகம் பாடினார். பின்னர்த் திருஉத்தரகோச மங்கை வந்தடைந்தார். திருக்கோயிலுள் இறைவனைக் காணாது வருத்தமுற்று 'நீத்தல் விண்ணப்பம்' பாடி அருளினார். அப்பொழுது இறைவன் தம் திருமேனி காட்டி அருள்புரிந்தார் என்பர். 'தெங்குலவு சோலைத் திரு உத்தர கோசமங்கைத் தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி' என்னும் 'திருப்பொன்னூசல்' பாடற் பகுதியால் இறைவன் அருள் செய்தமை அறியத் தகும். 'திருப்பொன்னூசல்' பத்துப் பாடல்களும் திரு உத்தரகோச மங்கை பற்றியதாகும். இக்கோவிலில் மாணிக்கவாசகருக்குத் தனிச் சந்நிதி உண்டு.

கூத்தப் பெருமான் வீற்றிருக்கும் பகுதிக்கு 'ஆதி சிதம்பரம்' என்பது பெயர். நடராசர் திருமேனி மரகதத்தால் ஆயது. ஆண்டுதோறும் மார்கழித் திருவாதிரையில் நடைபெறும் வழிபாடு கண்டு மகிழத் தக்க சிறப்புடைய ஒன்றாகும்.

திருத் தசாங்கத்தில் இறைவன் வாழும் ஊர் எது என்ற வினாவிற்குச் 'சிதம்பரம் போலச் சிறப்புடைய திருஉத்தரகோச மங்கை' என்று விடையளிப்பதாக மாணிக்கவாசகர் பாடியிருப்பது இவ்வூரின் சிறப்பை உணர்த்தி நிற்கும். கோயில் வளாகத்தில் ஒருகல்தேரும் உயர்ந்த கல் தூணும் இருக்கின்றன. தேர்ச் சக்கரங்கள் ஏழ் இசை எழுப்பவல்லன.



உத்தரகோச மங்கை

இவ்வூரைப் பற்றித் திருஉத்தரகோச மங்கைப் புராணம் என்னும் தலபுராணம் பாடப்பட்டுள்ளது.

அ.வி.

**உத்தர நல்லூர் நங்கை:** பிற்காலப் புலவர்களுள் ஊர்ப்பெயரால் பெயர் பெற்று விளங்கிய ஒரு பெண்பாற் புலவர். இவர்தம் இயற்பெயர், பெற்றோர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இவர் பாடியனவாக 11 பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில பிழைபட்டும் வடிவஞ் சிதைந்தும் உள்ளன. நாட்டுப் பாடல் போல அவை வழங்கப்பட்டன. இப்புலவர் பிறந்த ஊர் உத்தர நல்லூர். இது திருச்சி மாவட்டத்தில் காவிரிக்கு வடபால் விளங்கும் தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றான திருப்பாச்சிலாச்சிராமத்தின் அருகில் உள்ளது. திருப்பாச்சிலாச்சிராமம் இக்காலத்தில் திருவாசி என்று வழங்கப்படுகிறது. இப்புலவர் தம் பாடல்களின் இறுதியில் குறிப்பிடப்படும் பாய்ச்சலூர் என்பது திருப்பாச்சிலாச்சிராமத்தினைச் சுட்டுவதாகலாம்.


இப்புலவர் பற்றிப் பின்வரும் வரலாறு கூறப்பட்டுள்ளது. இவர் நந்தனார் பிறந்த மரபில் தோன்றியவர். இப்பெண்பாற்புலவர் இளம்பருவத்தில் ஆற்றங்கரையருகே மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது நீராட வந்த ஓர் அந்தணச் சிறுவன் வேத மந்திரங்கள் ஓதிச் சந்தி வழிபாடு செய்வதனை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார். நாள்தோறும் கண்ட அக்காட்சியில் ஈடுபட்ட இவர் அந்த மந்திரங்களைக் கூர்ந்து கவனித்துப் பின் அவற்றைக் கற்றுக் கொண்டார். சாதி வேற்றுமை இன்றி இருவர்பாலும் தோன்றிய நட்பு நாள்தோறும் வளர்ந்தது. நட்பு வளர்ந்ததுபோலவே, அவனிடமிருந்து கற்ற வேதக் கலைகளும் நிரம்பப் பெற்றார். மங்கைப் பருவமெய்திய பின்னரும் தொடர்ந்த நட்புக் காதல் வடிவங்கொண்டதைக் கண்ட ஊரார் உள்ளத்தில் சினத்தீ மூண்டது. இரு சாராரும் அவர்களைக் கண்டிக்கலாயினர். சாதி வேறுபாட்டால் கொடுமை கொண்ட உள்ளத்தினர் அவர்களைப் பிரிக்க நினைந்து ஒருநாள் இரவு சேரியில் அவர்கள் இருந்த இடம் நோக்கிச் சினந்து சென்றனர். அதனைக் கண்டு இளைஞன் அஞ்சிய போதும் இப்பெண்பாற் புலவர் அஞ்சாது நின்று, தான் பெற்ற வேதக் கல்வியால் அவர்களை எதிர்த்துத் தடுத்து நின்று நல்லறிவு புகட்டினார். வேதக் கலையறிவும் உலகியல் ஞானமும் ஒருங்கு பெற்றிருந்த இவர், தம்மைத் தடுத்துக் கொடுமை புரியவந்த பாய்ச்சலூர் அந்தணர்களைப் பார்த்து வினவுவனவாகப் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். அவ்விருத்தப் பாடல்கள் பாய்ச்சலூர்ப்பதிகம் எனப்படும். அப் பாடல்களுள் சில தமிழ் நாவலர் சரிதையில் இடம்பெற்றுள்ளன. சாதியினால் உயர்வு தாழ்வு கற்பித்து வேறுபாடு கொள்வது இயற்கைக்கு முரண்பட்டது என்பதனை அப்பாடல்கள் எளிமையாகவும் தெளிவாகவும் விளக்குகின்றன. மேலும் அவை பண்பால் ஒன்றுபடும் காதலர்களைச் சாதிச் சழக்கால் வேறுபடுத்த முற்படுவது கொடுமையானது என்பதனை நன்கு காட்டுகின்றன. உடல் தீப்பட்டபோது அமையும் நிலையினைச் சுட்டிக் காட்டிச் சாதி வேறுபாடு எங்கே என்று வினவும் நயமான பகுதி வருமாறு: 'சந்தனம் அகிலும் வேம்பும் தனித்தனிக் கந்தம் நாறும், அந்தணர் தீயில் வீழ்ந்தால் அவர் மணம் வீசக்காணோம், செந்தலைப் புலையன் வீழ்ந்தால் தீ மணம் வேறதாமோ?' இவ்வினா சாதிக் கொடுமையை விளக்கிச் சாடும் வினாவாகும்.

சாதிக் கொடுமையின் விளைவினை நேரே அனுபவித்துணர்ந்த இப்புலவர், அதற்குக் காரணமாக விளங்கிய மக்களை நோக்கி, 'ஊருள பார்ப்பார் கூடி, உயர்ந்ததோர் சாலை கட்டி, நீரிலே மூழ்கி வந்து நெருப்பினில் நெய்யை விட்டுக், கார்வயல் தவளை போலக் கதறிய வேதந்தானும், பாறை விட்டகன்றதோதான் பாய்ச்சலூர்க் கிராமத்தாரே' என்று வினவுவது, அவ்வேறுபாட்டிற்கான காரணத்தினை நேரே தாக்கும் கணையாக அமைந்துள்ளது. விருத்தப்பாடல்களில் அமைந்துள்ள இப்பாடல்களின் நடையும் கருத்தும் கபிலரகவல் என்னும் பிற்கால நூலின் நடையினையும் கருத்தினையும் ஒத்துக் காணப்படுகின்றன. அதனால் இப்புலவரின் காலம் கபிலரகவல் தோன்றியதாகக் கருதப்படும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்று கருதுகின்றனர். இவர்தம் பாடலுட்சில தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெற்றுள்ளமையால் இவர் காலம்,

தமிழ் நாவலர் சரிதை தோன்றிய கி.பி. 17–ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதும் ஆகும். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் திரு. மு. அருணாசலம் இவர் காலம் கி.பி. 15–ஆம் நூற்றாண்டாகலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**உத்தரப் பிரதேசம்**: இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம். இது நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமாக விளங்குகிறது. இதன் தலைநகரம் இலட்சுமணபுரி. வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங்களும் புனித நகரங்களும் இம்மாநிலத்தில் உள்ளன. பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருந்த இம்மாநிலம் இப்பொழுது வேகமாக முன்னேறி வருகிறது. கவர்ச்சி மிகு நாட்டுபுறப் பண்பாட்டை இம்மாநில மக்கள் பெற்றுள்ளார்கள்.

இயற்கையமைப்பு: உத்தரப் பிரதேசத்தின் வடக்கில் நேபாளமும் திபேத்தும் இமாசலப் பிரதேசமும் உள்ளன. அரியானாவும் இராசசுத்தானும் மேற்கில் உள்ளன. தெற்கில் மத்திய பிரதேசம் உள்ளது. கிழக்கில் பீகார் உள்ளது. இம்மாநிலத்தை இயற்கை அமைப்பின்படி பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1. வடக்கே உள்ள இமயமலைப் பகுதிகள், 2. தெற்கேயுள்ள குன்றுகளும் மேட்டுநிலப் பகுதிகளும், 3. மத்தியிலுள்ள கங்கைச் சமவெளிப் பகுதி.




உத்தரப் பிரதேசம்

வடக்கே உள்ள இமயமலைப் பகுதி மாநிலத்தின் ஆறில் ஒரு பகுதி ஆகும்; இமயமலையில் 300 முதல் 6000 மீட்டர் உயரம் வரை ஏற்றத் தாழ்வுகள் உள்ளன.

தெற்கே உள்ள குன்றுகளும் மேட்டுநிலப் பகுதிகளும் கடல் மட்டத்திலிருந்து 300 மீட்டர் உயரத்திற்கு மேல் இல்லை. பொதுவாக வடகிழக்கை நோக்கிச் சாய்வுகள் உள்ளன.

மத்தியில் உள்ள கங்கைச் சமவெளி வளமான பகுதி ஆகும்; உழவுத் தொழிலுக்கு ஏற்றதாகும். எனவே மக்கள் தொகை இப்பகுதியில் மிகுதியாக உள்ளது.

இம்மாநிலத்தின் முக்கிய ஆறுகள் யமுனை, கங்கை, இராம்கங்கா, கோமதி காகரா ஆகியவை ஆகும். அவை அனைத்தும் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. வெப்ப நிலையில் மிகுந்த வேறுபாடு இங்கே ஏற்படுகிறது. சமவெளிப் பகுதியில் சனவரி மாதம் 8°C வெப்பநிலையும் மே-சூன் மாதங்களில் 42°C வெப்பநிலையும் நிலவுகிறது. ஆண்டுக்குச் சராசரியாக 94 செ.மீ. மழை இங்குப் பெய்கிறது. அதில் பெரும்பகுதி சூன் முதல் செப்டம்பர் வரை பெய்கிறது.

வரலாறு: உத்தரப் பிரதேசம் என்ற மாநிலம் பழங்காலத்தில் மத்திய தேசம் என்று வழங்கப்பட்டது. வேதங்களில் அந்த சொற்றொடரே பயன்படுத்தப்பட்டுள்ளது. மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் வரும் கதைமாந்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்து வீரச்செயல்களைச் செய்ததாக அக்காப்பியங்கள் கூறுகின்றன. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌதம புத்தர் இம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் தம் நற்கருத்துகளை மக்களுக்குப் போதித்தார். கி.மு. நான்காம், மூன்றாம் நூற்றாண்டுகளில் தழைத்தோங்கியிருந்த மௌரியப் பேரரசில் இப்பகுதி அடங்கியிருந்தது. அசோகரின் தூண் கல்வெட்டுகளும் பாறைக் கல்வெட்டுகளும் இப்பகுதியில் பல இடங்களில் உள்ளன. இம் மாநிலத்தின் வடமேற்குப் பகுதி கி.பி. முதல் நூற்றாண்டில் ஆட்சி செய்த கனிசுகரின் பேரரசில் அடங்கியிருந்தது. குப்தர் பேரரசு எழுச்சி பெற்றிருந்த கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளிலும் இது ஒரு பகுதியாக இருந்தது. அர்சர் தானேசுவரத்தையும் பின்னர்க் கன்னோசியையும் தலைநகரமாகக் கொண்டு கி.பி.

ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தார். அவர் காலத்தில் சீனாவிலிருந்து புத்தத் துறவி யுவான் சுவாங்கு இங்கு வந்திருந்தார். கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு கி:பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கூர்சர-பிரதிகாரர்கள் ஆட்சி செய்தார்கள்.

முகம்மது கோரி கி.பி. 1192-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தரைன் போரில் ஆசுமீர்-தில்லி அரசை ஆட்சி செய்துவந்த பிருதிவிராசனைத் தோற்கடித்தார். அதையடுத்துத் தில்லியில் முகம்மதியர் ஆட்சி அமைக்கப்பட்டது. அடுத்த சில ஆண்டுகளில் இம்மாநிலத்தின் பெரும் பகுதிகள் இசுலாமியயரின் ஆட்சிக்கு உட்பட்டன. மதுரா, கன்னோசி, காசி முதலான நகரங்களில் உள்ள இந்துக் கோயில்களின் செல்வங்கள் அவர்களால் கவரப்பட்டன. தில்லிச் சுல்தானியம் வீழ்ச்சியடையத் தொடங்கிய போது கான்பூர் அரசு தோன்றியது. அவ்வரசு கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டுகளில் உயர்நிலை பெற்றிருந்தது. முகலாயப் பேரரசர்கள் (கி.பி. 1526-1707) ஆட்சி செய்த போது மிகப் பெரிய கோட்டைகளும் பள்ளிவாசல்களும் கல்லறைகளும் ஆக்ரா, பதேபூர் சிக்ரி முதலான இடங்களில் கட்டப்பட்டன.

அவுரங்கசீபின் மறைவுக்குப் பின்னர் அயோத்தியின் நவாபு சாதத் அலி கான் (கி.பி. 1722-39) சுதந்திரம் பெற்றுத் தனி அரசை அமைத்தார். இவ்வரசு கி.பி. 1856-ஆம் ஆண்டு வரை தனியரசாகவே செயற்பட்டது. அயோத்தியை ஆண்ட நவாபு சுசா-உத்-தவ்லா(கி.பி.1754-75) வளர்ந்து வந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு போரிட வேண்டியிருந்தது. ஆங்கிலப் படையினால் கி.பி. 1764-ஆம் ஆண்டு நடைபெற்ற பக்சார் போரில் சுசா-உத்-தவுலாவும், முகலாயப்பேரரசரும், முன்னாள் வங்காள நவாபு மீர் காசிமும் தோற்கடிக்கப்பட்டார்கள். அதன்பின்னர்ச்செய்துகொள்ளப்பட்ட அலகாபாது உடன்படிக்கையின்படி (கி.பி. 1765) அயோத்தி நவாபு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பாதுகாப்பின் கீழ்ச் செயற்பட்டார். வெல்லசுலி பிரபு கி.பி. 1801-ஆம் ஆண்டு உரோகில்கண்டு, கொராக்பூர், கீழ் தோவாப் பகுதி முதலானவற்றை அயோத்தி நவாபிடமிருந்தும், கி.பி. 1804-ஆம் ஆண்டு மேல் தோவாப் பகுதி, பண்டெல்கண்டின் ஒரு பகுதி, ஆக்ரா ஆகியவற்றை மராட்டிய சிந்தியா அரசரிடமிருந்தும் பெற்றார். ஏசுடிங்சு பிரபு கி.பி.1816-ஆம் ஆண்டு கூர்க்காக்களுடன் ஒரு பெரும்போரை நடத்தி வெற்றிகண்டார். அதன் விளைவாகக் குமவான் முதலான பல பகுதிகளை அவர் பெற்றார். அப் பகுதிகளில் முசௌரி, தேராடூன் (Dehradun), அல்மோரா, நைனிடால் முதலான கோடைவாழ் நகரங்கள் உள்ளன. அவற்றை ஆங்கிலேயர்கள் பெரிதும் விரும்பி வளப்படுத்தினர். ஆங்கிலேயர்களால் கி.பி. 1817-ஆம் ஆண்டு மராட்டிய பீசுவாவிடமிருந்து பண்டெல்கண்டின் மற்றொரு பகுதி பெறப்பட்டது. இப்பகுதிகள் அனைத்தும் கல்கத்தாவிலிருந்து ஆட்சி செய்து வந்த அரசப் பேராளரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இவையனைத்தும் கி.பி.1835-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டு, வடமேற்கு மாநிலம் என்று பெயர் தரப்பட்டு, அங்கு ஒரு துணை ஆளுநர் நியமிக்கப்பட்டார். தல்கவுகிப் பிரபு கி.பி. 1856-ஆம் ஆண்டு அயோத்தி அரசைக் கைப்பற்றிக்கொண்டார். பெருங்கலகம் கி.பி. 1857-58-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றபோது முக்கிய நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றன. கி.பி. 1857-ஆம் ஆண்டு மே மாதம் மீரட்டில் இக்கலகம் தொடங்கியது. சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட படைத் தலைவன் நீல்(Neill) காசி, அலகாபாது, இலட்சுமணபுரி ஆகிய நகரங்களில் ஆயிரக் கணக்கான இந்தியர்களைச் சுட்டு வீழ்த்தினான். கான்பூரில் நானா சாகிபும் அவருடைய படைத்தலைவர் தாந்தியா தோபேயும் ஆங்கில ஆதிக்கத்தை முறியடிக்க முழுமூச்சுடன் போராடினார்கள். அவர்கள் பல நூறு ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்தார்கள். சான்சி நகரத்தின் இராணி இலட்சுமிபாய் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வீர மரணம் அடைந்தார். இக் கலகம் இறுதியில் ஆங்கிலேயரால் ஒடுக்கப்பட்டது. வடமேற்கு மாகாணம், அயோத்தி அடங்கிய மத்திய மாநிலங்கள் என்று கி.பி. 1861-இல் பெயர் பெற்றது. அதுவே 1902-ஆம் ஆண்டு ஆக்ராவும் அயோத்தியும் இணைந்த மாநிலம் (United Provinces) என்று குறிக்கப்பட்டது. இது 1920-ஆம் ஆண்டு ஆளுநரால் ஆட்சி செய்யப்பட்ட மாநிலமாக மாற்றப்பட்டது. இந்திய விடுதலை இயக்கத்தின்போது முக்கிய நிகழ்ச்சிகள் இம்மாநிலத்தில் நடைபெற்றன. இலட்சுமணபுரியில் 1916-ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரசு முசுலிம் லீக் ஆகியவற்றின் மாநாடுகளின்போது ஏற்பட்ட இலட்சுமணபுரி ஒப்பந்தம் முக்கியமான தாகும். கொராக்பூர் நகரத்திற்கு அருகில் உள்ள சவ்ரி சவ்ரா என்ற இடத்தில் 1922-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் நடைபெற்ற வன்முறையை அடுத்துக் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார். விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவரும் சுயராச்சியக் கட்சியை நிறுவியவருமான மோதிலால்நேரு அலகாபாதைச் சேர்ந்தவர். இந்தியா 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றபோது கவிக்குயில் திருமதி சரோசினி நாயுடு இம்மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் நான்கு தலைமை அமைச்சர்கள்-சவகர்லால் நேரு, இலால் பகதூர் சாத்திரி, இந்திரா காந்தி, இராசீவ்

காந்தி-இம்மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இது 1950-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மாநிலத்தின் நிருவாகத் தலைவர் ஆளுநர். அவருக்கு உதவியாக முதல் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் உள்ளனர். மாநிலச் சட்டமன்றம் இருசபைகளைக் கொண்டுள்ளது.

பொருளாதார நிலை: மொத்த மக்கள் தொகையில் 75 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அரிசி, கோதுமை, சோளம், பருப்பு வகைகள் முதலான உணவுப் பொருள்களும் சர்க்கரை, எண்ணெய் வகைகள், கிழங்கு வகைகள், பருத்தி, புகையிலை, சணல் முதலான வணிகப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றுள் சர்க்கரை மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

இம்மாநிலத்தில் நிலத்தடிச் செல்வங்கள் அதிகம் இல்லை. ஆனால் சிலிகா என்று சொல்லப்படும் பளிங்குக்கல் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 80 பகுதி இங்குக் கிடைக்கிறது. யமுனை, கங்கை, அவற்றின் கிளையாறுகள் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளில் நீர்மின்சக்தி கிடைக்கிறது. எனினும் மாநிலத்திற்குத் தேவையான மின் சக்தியில் 66 பகுதி அனல் மின்சக்தி உற்பத்தியால் செய்யப்படுகிறது. அதற்கான நிலக்கரி பீகாரிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகிறது.

தொழில் துறையில் இம்மாநிலம் பின்தங்கியிருந்தது. ஆனால் இப்பொழுது முன்னேறி வருகிறது. கிராமப்புறக் குடிசைத் தொழில்கள் மிகுதியாக உள்ளன. இம்மாநிலத்திற்குத் தேவையான துணி உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி கைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. கான்பூர் முக்கிய தொழில் நகரமாகும். இங்குப் பருத்தி ஆலைகள், தோல் தொழிற்சாலைகள், பலவிதமான இயந்திரங்கள் செய்யும் தொழிற் கூடங்கள் ஆகியவை உள்ளன. அரசு நடத்தும் பெருந் தொழிற் கூடங்கள் பல நகரங்களில் உள்ளன. அரித்துவாரில் பாரத கனரக மின்கருவித் தொழிற்சாலை, இரிசிகேசில் இந்திய மருந்துத் தொழிற்சாலை, வாரணாசியில் இரயில் பெட்டித் தொழிற்சாலை, அலகாபாதிலும் கோரக்பூரிலும் உரத்தொழிற்சாலை, சிங்ராலியில் நிலக்கரி வயல்கள், நைனிடாலில் இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை, இலட்சுமணபுரியில் போர் விமானங்கள் கட்டும் தொழிற்சாலை, மதுராவில் எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஆகியவை உள்ளன.

முக்கியமான நகரங்களை இணைக்கச் சாலைகளும் புகைவண்டிப் பாதைகளும் உள்ளன. அஞ்சல், தந்தி, தொலைபேசி வசதிகள் போதிய அளவு உள்ளன. கேதாரிநாத்து, பத்ரிநாத்து, அரித்துவாரம், மதுரா, அயோத்தி, அலகாபாது, காசி முதலான பல நகரங்கள் இந்துக்களின் புனித இடங்களாகும். ஆக்ராவில் உள்ள தாசுமகால் முதலான பல கட்டடங்களைக் காண நாடோறும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் செல்கின்றனர். முசௌரி, நைனிடால், அல்மோரா முதலானவை இன்பந்தரும் கோடைவாழ் நகரங்களாகும். இங்கெல்லாம் மக்கள் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

சமூக நிலை: உத்தரப் பிரதேசத்தில் ஏறத்தாழப் பன்னிரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். மாநிலத்தின் வட பகுதியில் வாழ்வோர் மங்கோலிய இனத்தினர்; தெற்கில் வாழ்வோர் திராவிட இனத்தினர்; மற்றப் பகுதிகளில் வாழ்வோர் ஆரியர். மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் இந்துக்கள்; 14 விழுக்காட்டினர் முகம்மதியர்; 1 விழுக்காட்டினர் சீக்கியர்கள், புத்தர்கள், சமணர்கள், கிருத்துவர்கள் ஆகியோராவர். மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் இந்தி பேசுகின்றனர்; 10 விழுக்காட்டினர் உருது பேசுகின்றனர்; மற்றவர்கள் மற்ற மொழிகளைப் பேசுகின்றனர். இந்துக்களில் பெரும் பகுதியினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இம் மாநிலத்தில் பத்தொன்பது பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் அலிகார் முசுலிம் பல்கலைக் கழகமும் காசி இந்துப் பல்கலைக் கழகமும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மாநிலத்தின் பல நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் பல்வேறு கலைகள் வளர்ச்சி பெறுகின்றன. இலட்சுமணபுரி சிகான் என்று சொல்லப்படும் வண்ணத் துணி வேலைப்பாட்டிற்குப் புகழ்பெற்றது. காசியில் வண்ண மணிப் பின்னல்களும் வேலைப்பாடு மிகுந்த பித்தளைப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. நகினா நகரம் மரவேலைப்பாட்டிற்குப் புகழ் பெற்றது. களிப்பூட்டும் நாட்டுப் பாடல்களும் நடனங்களும் இம்மாநிலத்தின் சிறப்பான அம்சமாகும். 'கசரி' என்று சொல்லப்படும் நடனப்பாட்டு மிர்சாபூரிலும் காசியிலும் விரிவாக இசைக்கப்படுகிறது. அகஊடல் என்பது நாட்டுப்புறக் காவியக் கதை ஆகும். ககர்வா என்பது ஒரு வகை நடனம். இலிலிகோரி என்பது பொய்க்கால் குதிரை விளையாட்டு. இலட்சுமணபுரியில் உள்ள நுண்கலைகள் கல்லூரியும் இசைக் கல்லூரியும், காசியில் உள்ள பண்பாட்டுக் கல்லூரியும் நுண்கலைகளின் வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றி



கங்கையில் இந்துக்கள் புனிதநீராடுதல்

வருகின்றன. அலகாபாதில் பல நாடக மன்றங்கள் உள்ளன. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவை போற்றத்தக்க பணியினைச் செய்து வருகின்றன.
நா.ப.

துணை நூல்:

**Majumdar, R.C.**, Ancient India, Delhi, 1922.

**உத்தர - மீமாம்சை**: 'வேதம்' என்ற சொல் லிற்கு, 'வித்' என்பது அடிச்சொல். அதன் பொருள் 'அறிய' (To know) என்பதாகும். ஆகவே வேதம் என்ற சொல்லிற்கு 'அறிவு' என்பது பொருள். வேதங் களின் தோற்றத்தையும் அவற்றைத் தொகுத்தது யார் என்பதையும் அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில், அவை மிகத் தொன்மையானவை, தனி மனிதச் சார்பற்றவை என்றே கருதப்படவேண்டும்.

வேதங்கள் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நால் வகைப்படும். ஒவ்வொரு வகையிலும் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை மந்திரம், பிராம் மணம், ஆரண்யகம், உபநிடதம் எனப்படும். இவற் றுள் மந்திரம், பிராம்மணம், ஆரண்யகம் என்பவை இம்மை மறுமை இன்பத்தை அடைய ஏதுவான வேள்விகளைப் பற்றியும், உபநிடதம் மேலான மெய்ப்பொருள் அறிவைப் பற்றியும் விரிவுபடுத்திக் கூறுகின்றன.

இந்த அடிப்படையில்தான் வேதத்தின் முதல் பாகம் கருமகாண்டம் என்றும், இரண்டாம் பாகம் ஞான காண்டம் என்றும் சொல்லப்படுகின்றன. உபநிடதங்கள் 'ஞான காண்டத்'தைக் குறிக்கின் றன. உபநிடதங்கள், வேதங்களின் இறுதிப் பகுதி யில் (அந்தம்) இடம் பெற்றிருப்பதால், அவை 'வேதாந்தம்' என்று பெயர் பெற்றன.

இந்த இருவகைக் கோட்பாடுகளில், எந்தக் கோட்பாட்டை வேதங்கள் வலியுறுத்துகின்றன என்று இந்திய மெய்ப்பொருள் இயல் ஆராய முற் படுகின்றது. வேதங்களின் உட்பொருளை ஆராய்ந்து விளக்கிப் பொருள் கூறுவதே 'மீமாம்சை' என்று சொல்லப்படும். மீமாம்சை என்ற சொல் ஆராய்தல் எனப்படும்.

'கர்மகாண்டம்' வேதங்களின் முற்பகுதியாக அமைவதால், இம்மையிலும் மறுமையிலும் சுகத்தை அடையக் காரணமான வேள்விகளை விளக்கிக் கூறு வதே வேதங்களின் குறிக்கோள் என்ற கருத்தை வலியுறுத்தும் பகுதி பூர்வ மீமாம்சை (முற்பகுதி) எனப்படும். 'ஞான-காண்டம்' வேதங்களின் பிற் பகுதியில் அமைவதால், மெய்ப்பொருள் அறிவை (ஞானம்) வலியுறுத்துவதேவேதங்களின் உட்கருத்து என்ற கருத்தை வலியுறுத்தும் பகுதி உத்தர மீமாம்சை (பிற்பகுதி) எனப்படும். வேதங்களின் கருத்துகளை 'முற்பகுதி', 'பிற்பகுதி', என்று பிரித்துக் கூறுவது காலவரையறையைக் குறித்த தன்று. உத்தரமீமாம்சை வேதத்தின் இறுதிப் பிரிவான உபநிடதங்களை ஆராய்வதால் வேதாந்தம் எனவும் பெயர்பெறும்.

உபநிடதம் என்ற சொல் 'ஆசிரியருக்குப் பக்கத் தில் அமர்ந்து பாடம் கேட்டல்' எனப்பொருள்படும். 'எது அறியாமையை அகற்றுகிறதோ' அதற்குப் பெயர் உபநிடதம் என்று பொருள் கூறுவர் ஆதி சங்கரர்.

முனிவர்கள் தங்கள் நுண் அறிவினால் (Intui- tion) தம்மைத் தாமே உணர்ந்து அந்தக் களிப்பி னால் ஏற்பட்ட ஆனந்த அனுபவங்களின் வெளிப் பாடே உபநிடதங்கள் ஆகும். மாக்சுமுல்லர் என்ற செருமானியத் தத்துவ அறிஞர் உபநிடதங்களை 'மெய்ப்பொருள் சார்ந்த களிப்புப் பாடல்கள்' (Philosophic Rhapsodies) என்று விவரிக்கிறார் எனவே வெல்வேறு காலத்தில் வாழ்ந்த முனிவர் களின் நுண்ணறிவு சார்ந்த அனுபவங்களும் அவை தொடர்பான கருத்துகளுமே உபநிடதங்கள் எனப் படும். உபநிடதங்களின் இந்தக் கோவையற்ற தன்மை யினால்தான் ஒரே பொருளைப் பற்றித் தோற்றத் தில் முரண்பாடான பலவித கருத்துகள் இடம் பெற் றிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, மெய்ப்பொருளின் தன்மை பற்றி இரண்டு விதமான கருத்துகள் காணப்படுகின்றன - மெய்ப்பொருள் குணமற்றது எனவும் எல்லா நற்குணங்களையும் உடையது எனவும் சொல்லப்படுகிறது. அதுபோலவே பரம்பொருளுடன் உலகத்திற்கும் சீவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்ற வினாவிற்கு, அவை அடிப்படையில் ஒன்றே என்றும், அடிப்படையிலேயே வெவ்வேறு என்றும் விடைகள் காணப்படுகின்றன. மேலும், மனிதனது இறுதிநிலை, 'வீட்டின்' தன்மை ஆகியவை பற்றியும் வெவ்வேறு கருத்துகள் இடம் பெறுகின்றன.

இந்த இருதரப்புக் கருத்துகளையும் தொகுத்து, ஒழுங்குபடுத்திப் பொருந்தச் செய்து, முழுமைப்படுத்தும் பொறுப்பை வியாசர் என்ற மாமுனிவர் ஏற்றுக்கொண்டார். பாதராயணர் என்பதும் வியாசரின் மறுபெயர்.

மெய்ப்பொருளை மையமாகக் கொண்டு அதன் தன்மையை ஆராய்ந்து, அதன் வாயிலாக அதற்கும் உலகத்திற்கும், அதற்கும் சீவனுக்கும் உள்ள தொடர்பை விளக்க முற்படுவதால், அந்நூல் 'பிரம்ம சூத்திரம்' அல்லது 'வேதாந்த சூத்திரம்' எனப்பட்டது. அதுவே 'உத்தரமீமாம்சை' என்று சொல்லப்படும்.

'சூத்திரம்' என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் மறைபொருள் வாசகம் எனப்பொருள்படும். உத்தரமீமாம்சையில் 555 சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நூல் நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நான்கு அத்தியாயங்களும் அவற்றின் உட்கருத்தும்:

1. சமன் வாய - பரம்பொருளின் தன்மையும் அதனுடன் மனிதனும் உலகமும் கொண்டுள்ள தொடர்பும்.
2. அவிரோத - பரம்பொருள், மனிதன், உலகம் ஆகியவற்றின் தொடர்பான பிற மரபுகளின் கருத்துகளைத் தவறு என்று காட்டுதல்.
3. சாதன - பரம்பொருள் அறிவை அடையும் வழிகள்.
4. பலன் - அந்த அறிவினால் ஏற்படும் பலன்கள் - அந்த அறிவை இந்த வாழ்க்கையிலேயே அடைய முடியும் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்துதல்.

ஒவ்வோர் அத்தியாயத்திலும் நான்கு பிரிவுகள் (பாதங்கள்) உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் பல உட்பிரிவுகள் (அதிகரணங்கள்) இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு உட்பிரிவிலும் பல சூத்திரங்கள் காணப்படுகின்றன. ஓர் அத்தியாயத்திற்கும் மற்றோர் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு, ஒவ்வொரு அத்தியாயத்திலுமுள்ள பாதங்கள் ஒன்றிற்கொன்று உள்ள தொடர்பு, ஒவ்வொரு பாதத்திலுமுள்ள அதிகரணங்கள், ஒன்றிற்கொன்று உள்ள தொடர்பு மற்றும் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அடுத்துவரும் சூத்திரத்திற்குமுள்ள தொடர்பு ஆகியவை இந்த நூலின் சிறப்பு அம்சமாகும்.

இந்நூலில் ஆராயப்படும் கருத்துகள்: மெய்ப்பொருள், உலகம், சீவன், மாயை, மெய்ப்பொருளை அடையும் வழி, மெய்ப்பொருள் அறிவின் தன்மை.

'பகவத் கீதை' வியாசரின் வேதாந்த சூத்திரங்களைப்போல, உபநிடதங்களின் சாரம். ஆகவே, உபநிடதங்கள் வேதாந்த சூத்திரம், பகவத் கீதை ஆகிய இம்மூன்றும் 'இந்து சமயத்தின் மூன்று தூண்கள்' என்று போற்றப்படுகின்றன.

வேதாந்த சூத்திரங்களின் தன்மையினால், அவை பலவிதமான திறனாய்வுகளுக்கு உட்பட்டு இருக்கின்றன. சங்கரர், இராமானுசர், மத்துவர், நிம்பார்க்கர், வல்லபர், பாசுகரர், யாதவப்பிரகாசர், கேசவர், நீலகண்டர், பவதேவர் போன்றோர் வேதாந்த சூத்திரத்திற்குத் தங்கள் கோட்பாட்டிற்கு ஏற்ப விளக்கங்கள் கொடுத்து, அவர்களுடைய மரபுகளை நிறுவியிருக்கிறார்கள். எஸ்.ஒ.ரா.

**உத்தரமேரூர்**: செங்கற்பட்டு மாவட்டத்தில், உத்தரமேரூர் வட்டத்தில், சென்னைக்குத் தென்மேற்கில் எண்பது கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. பல்லவப் பெருவேந்தனான தந்திவர்மன் காலந்தொட்டே இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்கு விளங்கியமை கல்வெட்டுகள் வாயிலாக அறியக்கிடக்கிறது. இவ்வூர் சதுர்வேதி மங்கலமாகப் பல்லவர் கால முதல் விளங்கியது. இவ்வூர் உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலம் என்றும் இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம் என்றும் கண்டகோபாலச் சதுர்வேதிமங்கலம் என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இது காலியூர்க் கோட்டத்தினுள் அடங்கிய ஊராகும். இவ்வூரில் அக்காலத்தில் இருந்த பல்வேறு கோயில்களுள் பெரும்பான்மையானவை சுவடற்றுப்




வைகுந்தப் பெருமாள் கோயில்

போய்விட்டன. இருப்பனவற்றுள் இரட்டைத் தளி ஈச்சரம், சுப்பிரமணியர் கோயில், கொலம்பேசுவரர் கோயில் போன்றவை நல்ல நிலையில் உள்ளன. இன்று இவ்வூரில் இருக்கும் கோயில்களுள் குறிப்பிடத் தக்கவை 1. வைகுந்தப் பெருமாள் கோயில், 2. சுந்தர வரதப் பெருமாள் கோயில், 3. கைலாச நாதர் கோயில் ஆகிய மூன்றுமேயாகும்.

வைகுந்தப் பெருமாள் கோயில்: இது மாடக் கோயில் வகையைச் சேர்ந்த பல்லவர் காலக் கற்றளி யாகும். இதன் திறந்த முன்மண்டபத்தைப் பதினாறு தூண்கள் தாங்குகின்றன. முகமண்டபத்தை அடுத்து உள்மண்டபமும் கருவறையும் அமைந்துள்ளன. கரு வறையில் வைகுந்தப் பெருமாளும் தேவியும் திருமணக் கோலத்தில் வீற்றிருக்கின்றனர். கரு வறையை ஒட்டியுள்ள உள்மண்டபப் புறச் சுவர்க ளில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அரைத் தூண்களும் மகரதோரணங்களும் காணப்படுகின்றன. மாடக்குழிகள், தெய்வத் திருமேனிகள் இன்றி வெறு மையாக உள்ளன. விமானத்தின் சிகரம் வேசர வகையைச் சார்ந்ததாகும். கிழக்கு நோக்கியுள்ள இத்திருக்கோயிலின் முன் கருடனுக்கென்று திருமுன் ஒன்று அமைந்துள்ளது.

இங்கிருந்து படியெடுக்கப்பட்டுள்ள எழுபது கல் வெட்டுகளுள் காலத்தால் பழமையானது தந்திவர் மனுடையதாகும். பிற்காலப் பல்லவர்களான நிருப துங்கவர்மன், நந்திவர்மன், கம்பவர்மன் ஆகியோர் கல்வெட்டுகளும் இங்குள்ளன. சோழப் பெருவேந்தர் களான முதலாம் பராந்தகன், வீரபாண்டியன் தலை கொண்ட பார்த்திவேந்தராதிபதி வர்மன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலியோரின் கல்வெட்டுகளும், இராட்டிரக்கூடக் கன்னரதேவனின் கல்வெட்டுகளும் இங்குக் காணப்படுகின்றன.


கல்வெட்டுச் செய்திகள்: இக்கல்வெட்டுகள் பெரும்பான்மையான கோயில் வழிபாட்டுக்குத் தரப் பட்ட கொடைகள் பற்றியும், இவ்வூரில் இருந்த வயிர மேகத்தடாகத்தை விரிவுபடுத்தவும் கரையமைக்க வும் ஓடம் விடவும் செய்யப்பட்ட அறங்களைப் பற் றியும் விரிவான பல செய்திகளைத் தருகின்றன. இவ்வூரிலேயே நிலையாக இருந்து பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகப் பவிசியக் கிடைப்புறமாகவும், வியாகரண சாத்திரம் என்னும் இலக்கண விளக்கம் செய்தவர்களுக்காக வியாக்கிய விருத்தியாகவும், நஞ்சை முறிக்கும் நஞ்சுக்கடி மருத்துவருக்கு விடகர போகமாகவும் நிலக்கொடைகள் தரப்பட்ட செய்தி யைச் சில கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பார்த்திவேந்திரனின் பதினொரு கல்வெட்டுகள், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சந்திரன் எழுநூற்றுவன் என்னும் வணிகப் பெருமகனார், இக்கோயிலுக்கும் பிறகோயில்களுக்குமாய்ச் செய்தருளிய பல்வேறு அறங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.



சுந்தரவரதப் பெருமாள் கோயில்

**சுந்தரவரதப் பெருமாள் கோயில்:** அழகிய சிற்பங்களைச் கொண்டு விளங்கும் இப்பல்லவர் காலத்து முத்தளக் கற்றளியின் முதல்தளக் கருவறையில் சுந்தர வரதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் தேவியருடன் காட்சியளிக்கிறார். இரண்டாம் தளக் கருவறையில் வைகுந்தநாதர் அமர்ந்த திருக்கோலத்தில் தேவியருடன் வீற்றிருக்கிறார். இக்கருவறையின் உட்சுவர்களில் விசயநகரக் காலத்து ஓவியங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. மூன்றாம் தளக் கருவறையில் அனந்த நாராயணனாய் இறைவன் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஒவ்வொரு தளத் தேவக்கோட்டங்களிலும் பெருமாளின் அழகிய பல தெய்வத் திருமேனிகள் நிறுவப் பட்டுள்ளன.

இங்கிருந்து படியெடுக்கப்பட்ட முப்பத்தொன்பது கல்வெட்டுகளுள் பதினான்கு முதலாம் இராசராசனுடையவை;ஒன்பது முதலாம் இராசேந்திரனுடையவை. காலத்தால் பழமையானது தந்திவர்மனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டுகளுள் பல, பார்த்திவேந்திரவர்மனின் தேவியார் திரிபுவன மாதேவியார்உட்படப் பல பெருமக்கள் இக்கோயிலுக்குச் செய்த விளக்கு அறங்கள், சிறப்பு வழிபாடுகள், படையல்கள் இவற்றிற்கான நிலக் கொடைகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தருகின்றன.



சுந்தரவரதப் பெருமாள் கோயிலின்
விமானத்தோற்றம்

**கைலாச நாதர் கோயில்:** ஊர்க்கோடியில் அழிந்துபட்ட நிலையில் காணப்படும் இக்கோயிலின் முன்மண்டபமும் முகமண்டபமும் சிதறி நொறுங்கிக் கற்குவியலாய்க் காட்சியளித்தபோதும் கருவறை முழுமையாக உள்ளது. விமானத்தின் இரண்டாம் தளத்திலுள்ள சுதையுருவங்கள் இந்நிலையிலும் எழிலோடு விளங்குகின்றன. சிகரம் வேசர வகையைச் சேர்ந்தது.



கைலாசநாதர் கோயில்

வெள்ளைமூர்த்தி, ஆழ்வார், இராகதேவர், அனந்தநாராயணன், கீழ்த்தளத்திலுள்ள மூன்று தெய்வத் திருமேனிகள், திருவாய்க்குலமுடையார் என்னும் சீகிருட்டிணர், புருடோத்தமர், சொக்கப்பெருமாள் என்று பல தெய்வத் திருமேனிகள் இக்கோயிலில் நிறுவப்பட்டதையும், வைணவப் பெரியார்களால் திருவாய்மொழியும் திருப்பதியங்களும் ஓதப்பட்டதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்கு அருளாளதாசன் மடம், குந்தவை ஆழ்வார் மடம் எனப் பல மடங்கள் இருந்தன. குந்தவை ஆழ்வார் மடத்தில் வைணவப் பெரியார்களை உண்பிக்க ஊரவை நிலமளித்தது கல்வெட்டுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், மூன்றாம் இராசராசனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டும், ஆயிரத்து இருநூற்றுவன் மாணிக்கம் என்னும் தேவரடியாள் இக்கோயிலில் வெளித்திருச்சுற்று, திருமுழுக்காட்டு மண்டபம் போன்றவற்றைப் பெரும் பொருட் செலவில் எடுப்பித்த திருப்பணிகளைப் போற்றி, இந்நங்கைக்கும் இவர்தம் வழியினருக்கும் நாள்தோறும் இறைவனுக்கிடும் படையலில் ஒரு குறுணிச் சோறு வழங்கவும், தேரோட்டத்தின்போது சில சிறப்புரிமைகள் காட்டவும் ஊரவை, கோயிலார் அனுமதியுடன் ஏற்பாடு செய்து இவரைப் பெருமைப்படுத்திய செய்தியைக் கூறுகின்றன. இதேபோல் மூன்றாம் இராசராசன் காலத்தில் சீவைணவ மாணிக்கம் என்னும் ஆடலரசிக்கும் அவளின் சேவைகளைப் பாராட்டிச் சிறப்புகள் செய்யப்பட்டதை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. வீரபாண்டியதேவனின் கல்வெட்டொன்று சொக்கப்பெருமாள் கோயிலைச்



கைலாச நாதர் கோயில் – அழிந்துள்ள முன் மண்டபம்

சுற்றியுள்ள தெருக்களில் வசிப்பவர்கள் எண்ணெய்ச் செக்குகள், தறிகள் முதலியவற்றிற்காக வரிகளைத் தரவேண்டாமெனக் குலசேகரன் சம்புவரையரால் தள்ளுபடி செய்யப்பட்ட செய்தியைத் தருகிறது.

இங்கிருந்து படியெடுக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டொன்று இக்கோயில் இறைவர்க்கு மூன்று சந்திக்கும் திரு அமுது, கறியமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுது ஆகியவற்றைப் படைக்கவும், முச்சந்திக்கும் ஆறு விளக்குகள் ஏற்றவும், இரண்டு நந்தா விளக்குகள் எரிக்கவும், வழிபாட்டு வகைகளுக்குமாய் ஊரவை நிலைக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

ஊராட்சி முறைபற்றிக் கூறும் கல்வெட்டுகள்: வைகுந்தப் பெருமாள் கோயிலில் முதற்பராந்தகனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும் பதினான்காம் ஆட்சியாண்டிலுமாய் வெட்டப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளும் வரலாற்றுச் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. இவை சோழர் காலத்து ஊராட்சி அமைப்பையும் தேர்தல் முறைகளையும் வேட்பாளர்களின் தகுதிகளையும் எடுத்துரைக்கின்றன. பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னன் ஆணைப்படி அரசு அலுவலரின் முன்னிலையில் ஊரவை அமைத்துக் கொண்ட தேர்தல் விதிகளையும், வாரிய அமைப்புகளையும் விளக்குகிறது. பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு அவ்விதிமுறைகளில் இரண்டாண்டு அனுபவங்களைக் கொண்டு ஊர்ப் பேரவை செய்து கொண்ட மாறுதல்களையும் வரன் முறைகளையும் தெளிவாக்குகிறது.

வாரியங்களில் உறுப்பினராவதற்குரியவர்: 1. முப்பது வயதுக்குமேற்பட்டு அறுபது வயதுக்கு உட்பட்டிருப்பவர். 2. சொந்த மனையில் வீடுகட்டிக் குடியிருப்பவர். 3. கால்வேலி நிலம் உள்ளவராய் இருப்பவர். 4. வேதத்தில் வல்லவர்களாய், அறநெறி தவறாதவர்களாய்ச் செயலாற்றல் நிறைந்தவர்களாய் நல்வழியில் பொருளீட்டி வாழ்பவர். 5. சிறந்த அறிவாற்றல் உடையவராயிருப்பின் அரைக் கால்வேலி நிலமிருப்பினும் போதுமானது. 6. மூவாண்டிற்குள் எந்த வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்.

உறுப்பினராகும் உரிமையற்றவர்: 1. வாரியங்களில் உறுப்பினராயிருந்து, பணிக்கால இறுதியில் கணக்குக் காட்டாமல் இருந்தவர்களும் இவர்களுடைய நெருங்கிய உறவினர்களும். 2. ஐம்பெருந் தீச்செயல்களில் முதல் நான்கைச் செய்தவர்கள். 3. தீயோர் கூட்டுறவால் கெட்டவர்கள். 4. கையூட்டுப் பெற்றவர்கள். 5. பிறர்பொருள் கவர்ந்தவர்கள். 6. கள்ளக் கையெழுத்திட்டவர்கள். 7. கூடக் கூடாதவர்களோடு கூடியவர்கள் 8. ஊருக்குத் தீங்கு செய்தவர்கள்.

உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறை: அக்காலத்தில் ஊரின் மொத்த விளைநிலங்கள் பல தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இத் தொகுப்பு ஒவ்வொன்றும் குடும்பு என்று வழங்கப் பட்டது. ஒவ்வொரு குடும்பும் சில குடும்பங்களை உடையதாக இருந்தது. ஒவ்வொரு குடும்புக்கும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்குடும்புகளின் எண்ணிக்கை ஊரின் அளவைப் பொறுத்தே அமைந்தது. உத்திரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஊரின் குடியிருப்புப் பகுதியின் உட்பிரிவுகள் குடும்புகள் எனப் பட்டன என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவி இருந்தது. ஆனால் இக்கால ஆய்வுகளில் இக்கருத்துத் தவறானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பில் உள்ளவர்களும் தமக்குள் வாரிய உறுப்பினராகக் கூடிய தகுதிகள் அமைந்த அனைவர் பெயரையும் தனித்தனி ஓலைத் துண்டுகளில் எழுதி ஒன்று சேர்த்து, அது எக்குடும்பைச் சேர்ந்தது என்பது தெரியுமாறு வாயோலை வைத்துக் கட்டி ஒரு குடத்திலிட்டு வைப்பர். இவ்வாறே முப்பது குடும்புகட்கும் தனித்தனியே கட்டிக் குடத்தில் இடுவர்.

தேர்தல் நாளன்று ஊரார் அனைவரும் நம்பிமார் உட்படக் கூடுவர். நம்பிமார்களுள் மூத்தவர் ஒருவர் அனைவரும் காணுமாறு குடும்புகளின் ஓலைக்கட்டுகள் போடப்பெற்ற குடத்தை மேல்நோக்கித் தூக்கிக் கொண்டு கூட்டத்தின் நடுவில் நிற்பார். விவரமறியாத ஒரு சிறுவனைக் கொண்டு அக்குடத்திலிருந்து ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை எடுக்கச் செய்து, அவிழ்த்து அதிலுள்ள ஓலைத்துண்டுகளை மற்றொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அத்துண்டுகளுள் ஒன்றை அச்சிறுவனைக் கொண்டு எடுக்கச் செய்து, அதை ஊரவை அலுவலரின் கையில் தரச் செய்வர். அவர் தம் ஐந்து விரல்களையும் அகல விரித்து அவ்வோலைத் துண்டை உள்ளங்கையில் பெற்று, அதிலுள்ள பெயரைப் படிப்பார். பின் நம்பிமார் ஒவ்வொருவராக அதைப் படிப்பார்கள். தனியோலை ஒன்றில் அப்பெயர் குறித்துக் கொள்ளப் படும். இதுபோன்றே முப்பது குடும்புகட்கும் முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள் அநுபவமும் அறிவும் நிறைந்த பன்னிருவர் சம்வத்சர வாரியத்திற்கும், அடுத்த பன்னிருவர் தோட்ட வாரியத்திற்கும், எஞ்சிய அறுவர் ஏரி வாரியத்திற்கும் பொறுப்பேற்பர். இது தவிர மீண்டும் குடவோலை

முறையில் பன்னிருவரைத் தேர்ந்து அறுவரைப் பொன்வாரியத்திற்கும் எஞ்சியவரைப் பஞ்ச வார வாரியத்திற்கும் உறுப்பினராய் அமர்த்துவர். இக் குடவோலைத் தேர்தல் முறையே சோழர்கால ஊராட்சியமைப்பின் அடிப்படைக் கருவாய் அமைந்திருந்தது. இரா.க.

துணை நூல்கள்

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

பாலசுப்பிரமணியம், எஸ். ஆர்., முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், 1966.

**Nilakanta Sastri, K.A.**, The Cholas, University of Madras, Madras, 1984.

***உத்தர ராம சரிதம்***: சிறந்த நாடகங்கள் 10 பிரிவுகளும் 4 அமைப்புகளும் உடையனவாகி, 9 சுவைகளுள் காதலையும் (சிருங்காரம்) வீரத்தையும் முக்கியமாக வெளிப்படுத்தும் ஆற்றலோடு, அவை யோரை மெய்ம்மறக்கத் தூண்டுவதாகிய உலகியலுக்கு மாறுபட்ட (அலௌகிக) சுவை விஞ்சப் பெற்று, முதல், வழி, சார்பு என்னும் நூல்வகை மூன்றனுள் ஒன்றாக அமையப் பெறுதல் வேண்டும் என வடமொழி அணி இலக்கண நூல்கள் விளக்குகின்றன. இவ்விலக்கணம் யாவும் சிறப்புற அமையப் பெற்றனவாக உத்தர ராம சரிதமும் சாகுந்தலமும் கருதப்படுகின்றன. இவ்விரு சிறந்த நாடக நூல்களுள்ளும் உத்தர ராம சரிதமே அனைத்திலக்கணமும் முற்றிலும் பொருந்தப்பெற்று, கற்போரையும் காண்போரையும் மெய்ம்மறக்கச் செய்யும் திறம் கொண்டுள்ளது என நாடக நூலறிஞர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

கருணை (Pathos) என்பது 9 சுவைகளுள் அடங்காத ஒரு தனிச்சுவை. இது ஊடலில் உண்டாகும் நாடக இன்பச் சுவையாகும். இதுவே வான்மீக ராமாயணத்தின் முக்கியச்சுவை. உத்தர ராம சரிதத்திலும் இதுவே முக்கியமாக இடம் பெற்றுள்ளது. இந்நாடக நூலைப் படித்தால் கல்லும் அழும்; வச்சிரமும் வெடிக்கும் என்று இதன் ஆசிரியர் கூறுகிறார். மகாகவி காளிதாசர் இந்நூலைப் பயின்று பாராட்டினார் என்பர்.

இந்நூலாசிரியர் இராமன் செயன்முறைகளை இரண்டாகப் பகுத்து, மகாவீர சரிதம், உத்தர ராம சரிதம் என்னும் தம் இரு நாடக நூல்களுக்கு அவற்றைக் கருவாக அமைத்துள்ளார். முடிசூட்டலுக்கு முன்னர் நிகழ்ந்த இராமனின் செயன்முறைகள் மகாவீர சரிதத்திலும், பின்னர் நிகழ்ந்த அவன் செயன்முறைகள் உத்தர ராம சரிதத்திலும் நாடகமாகப் புனையப்பெற்றுள்ளன. உத்தர ராம சரிதம் என்னும் பெயர் முடிசூட்டலுக்குப் பின்னர் இராமனின் செயன்முறைகள் என்று பொருள்படும். ‘உத்தர’ என்னும் சொல்லுக்குத் திருமால் என்னும் பொருள் உள்ளமையால், உத்தர ராம சரிதம் என்பதற்குத் திருமாலின் அவதாரமாகிய இராமனின் செயன்முறைகள் என்றும் பொருள் கூறுவர்.

சீதையின் தூய்மையினை நேரிலும் நெருப்புச் சோதனை வழியாகவும் வான்மீகி போன்ற முனிவர்கள் வழியாகவும் நன்கு உணர்ந்திருந்த போதிலும், ஒரு வண்ணான் கூறிய பழிச் சொல்லைப் பொருட்டாக ஏற்று, அவளை இறுதிவரை கைவிட்டமையால் இராமனுக்கு உண்டாகிய பழியைப் போக்கும் நோக்கத்தில் இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. இராமன் இலக்குவன் மூலமாகச் சீதையைக் காட்டிற்கு அனுப்பிய பகுதியிலிருந்து இதன் கதை தொடங்குகிறது. சீதை காட்டில் வான்மீகியின் பாதுகாப்பில் வாழ்வது, இலவன், குசன் என்னும் மைந்தர்கள் அவளுக்குப் பிறப்பது போன்ற நிகழ்ச்சிகள் வான்மீக ராமாயணத்திலுள்ளமை போன்று இதிலும் இடம் பெற்றுள்ளன. ஆயினும் சில புதிய நிகழ்ச்சிகளைக் கதையோட்டத்தோடு தொடர்புபடுத்தி, அவையோரின் உள்ளத்திற்கு இனிமை அளிக்கும் வகையில் இந்நாடகம் சேர்த்துள்ளது. இராமனும் சீதையும் மறை உடலில் புகுந்திருந்து, ஒருவரை ஒருவர் சந்திப்பதாக வரும் புதிய காட்சி இந்நூலில் நாடகத்திற்குள் நாடகமாக அமைந்துள்ளது. இந்நாடகம் இராமனுக்குப் பரதரால் நடத்தப்பட்டு, அவன் காண்பதாக உள்ளது. இது இராமன் சீதையோடும் தம் மைந்தர்களோடும் கூடி இருக்கும் வகையில் மங்களமாக முடிகிறது.

உத்தர ராம சரிதத்தை யாத்தவர் நீலகண்டன் என்னும் கவிஞர். இவருக்குப் பவபதி என்னும் வேறு பெயரும் உண்டு. இவர் உதும்பரர்கள் என்னும் அந்தண மரபினர்; பேரார் என்ற பதுமபுரத்தில் வாழ்ந்தார். இவர் வேத, சாத்திரங்களில் புலமை பெற்று யோக, ஞான நெறிகளில் நன்கு பயிற்சி பெற்றவர். இவர் தந்தை நீலகண்டர்; தாயார் சாதுகர்ணீ. இவர் யசோவர்மன் என்ற மன்னனால் ஆதரிக்கப் பெற்றார்.

***உத்தர ராமாயண நாடகம்***: வான்மீகியின் இராமாயணம், வியாசரின் பாரதம் ஆகிய இரண்டு

பெரிய இதிகாசங்களும் இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இராமாயணம் இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் கதைப் பகுதிகள் பிற இந்தியச் சமய இலக்கியங்களிலும் சிலபல வேறுபாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. கம்பர் தமிழில் இராமகாதையினை விரிவாகச் செய்த பின்னர் நாடகம், அம்மானை, கும்மி, இசைப்பாடல், நாட்டுப் பாடல்கள் போன்ற பல இலக்கிய வடிவங்களிலும் அது உருப்பெற்றுத் திகழ்கிறது. சீர்காழி அருணாசலக்கவிராயர் இராமாயணத்தைக் கீர்த்தனை, விருத்தங்கள் ஆகியவற்றால் நாடகமாக அமைத்துள்ளார். அது 'இராம நாடகக் கீர்த்தனை' எனப்படும். அதில் அவர் பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் முடிய உள்ள பகுதியில் அமைந்த வரலாற்றையே நாடகப்படுத்தியுள்ளார்; உத்தரகாண்டப் பகுதியைச் சேர்க்காது விடுத்துள்ளார்.

உத்தரகாண்டம் என்னும் பகுதியிலடங்கிய செய்திகளை நாடகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததே 'உத்தர ராமாயண நாடகம்' என்னும் நூல். இந்நூலும் இராம நாடகக் கீர்த்தனை போலவே கீர்த்தனைகள், விருத்தங்கள் முதலியவற்றால் இயற்றப்பட்டதாகும். இதன்கண் சில கட்டளைக் கலிப்பாக்களும் வெண்பாக்களும் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள கீர்த்தனைகள் இராக தாளக் குறிப்பினைக் கொண்டுள்ளன.

உத்தர ராமாயண நாடகத்தை இயற்றியவர் அனந்த பாரதி அய்யங்கார். தஞ்சை மாவட்ட உமையாள்புரத்தில் தோன்றிய இவர் கி.பி. 1786 முதல் கி.பி. 1846 வரை வாழ்ந்தார். இவர் தம் நாடக நூலினைக் குடந்தைச் சாரங்கபாணித் திருக்கோயில் சிங்கார மண்டபத்தில் அரங்கேற்றினார். இதனைக் 'கவி வாதி சிங்கார மண்டபத்தில், அனந்த வேதன் அரங்கேற்றினானே' என்னும் இந்நூலிலுள்ள செய்யுட்பகுதி குறிப்பிடுகிறது.

தமிழில் 'இராமாயண உத்தரகாண்டம்' என்னும் நூல் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. அது விருத்தச் செய்யுட்களால் ஆகியது. அவ்வகையில் நாடக வடிவில் அமைக்கப்பட்ட இந்த நூலை 'உத்தரகாண்ட நாடகம்' என்னாமல், 'உத்தர ராமாயண நாடகம்' என்று ஆசிரியர் பெயர் அமைத்துள்ளதிலிருந்து, இராமாயணத்தின் உத்தரகாண்டம் உத்தர ராமாயணம் என்னும் பெயராலும் வழங்கப்பட்ட செய்தி புலனாகிறது. இராவணன் இறப்புக்குப் பின்னர், அயோத்தி நகர் திரும்பி முடிபுனைந்து கொண்ட இராமன் வேண்டிக்கொள்ள, உத்தர காண்ட வரலாற்றை அகத்தியர் எடுத்துரைப்பதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இராவணன், கும்பகருணன் ஆகியோர் பிறப்பு வரலாறு, கும்பகருணன் வரம், மேகநாதன் வரலாறு, குபேரன் வரலாறு, இலங்கை நகர அமைப்பு, சூர்ப்பணகை கணவன் கொல்லப்படல் முதலிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலும், சீதைக்கு உண்டாகிய பழிச்சொல்,சீதை வான்மீகி ஆசிரமத்தில் உறைவது, குசனும் இலவனும் பிறத்தல், வான்மீகி குசலவர்க்குத் தம் இராமாயண காவியத்தைப் பாடக் கற்பித்தல், இராமனின் அசுவமேதயாகம், குசலவர் அவ்வேள்வியில் இராமாயண கானம் பாடுதல், சீதை அங்குவந்து சூளுரைத்துத் தான் குற்றமற்றவள் என்பதனை நிருவுதல், சீதை இரசாதல உலகம் செல்லுதல், சீதையைத் தம்மிடமிருந்து பிரித்த பூமிதேவியை இராமன் சினத்தல், அச்சினத்தைப் பிரமன் தணித்தல், சீதையைப் பிரிந்த இராமன் பொன்னால் சீதை உருவமைத்துப் பத்தாயிரம் ஆண்டு ஆளுதல், குசலவர் முதலியோர்க்கு ஆட்சி நல்குதல், இயமன் அந்தணனாக வந்து இராமனை ஒருவரும் அறியாமல் மேலுலகம் அழைத்துச் செல்லுதல், இராமன் சரயு நதிக்கரை சென்று, விண்ணுலகிலிருந்து வந்த விமானத்தேறித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுதல், வீடணன், அனுமன் ஆகியோர்க்கு அவன் அழியா வரம் (சிரஞ்சீவித் தன்மை) அளித்தல், அனுமன் வரலாறு ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள இரண்டாம் பாகம் இந்நூலாசிரியரின் சீடர் ஒருவரால் பாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூல் சென்னை அரசாங்கக் கையெழுத்துப்படிவ நூலகத்தால் 1960–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

**உத்தரன்** மகாபாரதக் கதைமாந்தருள் ஒருவன்; மச்சநாட்டு மன்னன்; விராடன் என்பவனுக்கு மகன். இவன் தாயின் பெயர் சுதட்சணை. பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்த (அஞ்ஞாதவாச) காலத்தில் இவன் நாட்டில்தான் வாழ்ந்தனர். துரியோதனன் ஆட்கள் இதனைக் குறிப்பாக உணர்ந்து, வெளிப்படுத்தும் கருத்தில் அந்நாட்டில் ஆனிரைகளைக் கவர்ந்து சென்றனர். உத்தரன் பேடி ஒருவனைத் தேர்ப்பாகனாகக் கொண்டு ஆனிரை மீட்கச் சென்றான். எதிரியின் படை கண்டு அஞ்சிப் பின் வாங்கினான். பேடி வடிவில் இருந்த அருச்சுனன் தன் உண்மையை அவனுக்கு உணர்த்தி, உத்தரனைத் தேரோட்டியாகக் கொண்டு போர் செய்து வென்று ஆனிரைகளை மீட்டான். தன் மகனே போரிட்டு வென்றதாக விராடன் எண்ணினான். ஆனால் மறைந்து வாழ்ந்த தருமரால் அவன் உண்மை

உணர்ந்தான். பாரதப் போர் நடைபெற்ற காலத்தில், உத்தரன் முதல்நாள் போரில் சல்லியன் என்பவனால் கொல்லப்பட்டான்.

**உத்தரன்**[2] சிலப்பதிகாரத்தால் அறியலாகும் வடநாட்டு அரசர்களுள் ஒருவன்; கண்ணகிக்குச் சிலையமைக்க விரும்பிய சேர மன்னன் செங்குட்டுவன், அதற்காக இமய மலையில் கல் கொணரும் பொருட்டுப் படையொடு வடநாடு சென்றான்; நூற்றுவர் கன்னர் அளித்த படகுகளின் உதவியால் கங்கையாற்றைக் கடந்து, உத்தரநாடு சென்று பாசறை அமைத்திருந்தான். செங்குட்டுவனை எதிர்த்த வடநாட்டு மன்னர்களாகிய கனகவியசருக்குத் துணையாகப் பல மன்னர் ஒன்று திரண்டு வந்து எதிர்த்தனர். அவர்களுள் ஒருவன் உத்தரன். ஏனைய மன்னர் விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகியோர். இவர்களுடன் செங்குட்டுவன் புரிந்த போரில் இம் மன்னர்கள் தோற்றுச் சிதறியோடினர்.

**உத்தராயணம்**: அயணம் என்பதற்கு வினை அடிப்படையில் செல்லும் வழி என்பது பொருள். இடத்திற்கு ஏற்ப இதற்குக் கதி, இருப்பிடம் என்றும் பொருள் அமையும். நாராயண, இராமாயண, பாராயண போன்ற தொடர்களில் இதனைக் காணலாம்

கதிரவன் கதிர்கள் (கிரணங்கள்) நேராகவன்றிச் சற்றுச் சாய்வாகவும் பாய்வதாலேயே பொருள்களில் உள்ள ஈரம், உரம் போன்றவற்றை அவற்றால் உரிஞ்ச முடிகிறது. சூரிய சக்தி கொண்ட மின்னாற்றல் எப்பொழுதும் குறுக்கேதான் பாயும். கதிரவனின் ஆயிரம் கதிர்களின் நடுவே மிக நுண்ணிய துளை இருக்கலாம் என்று வேதம் கூறுகிறது. உள்ளத்திற்கும் உடலுக்கும் வலிமை ஊட்ட வல்ல ''மர்த்யம்' என்ற ஆற்றல் உடலிலும், ஆன்மபலம் அளிக்கவல்ல 'அம்ருதம்' என்னும் ஆற்றல் உச்சந்தலையின் முன் பகுதியிலும் கதிரவன் கதிர்கள் சிலவற்றின் வழியாகப் பாய்கின்றன என்று வேதம் கூறுகிறது.

காலம் என்பது கடவுள் போன்று பிரிக்கவியலாத ஒரு தத்துவம். அது தவறின்றிச் செயற்படவல்லது. வைதிக நெறியில் இயற்றப்பட வேண்டிய கடன்கள் நேரம், நாள் கருதிச் செய்ய வேண்டி இருப்பதால், சோதிட சாத்திரத்திற்கிணங்க ஊழி, ஆண்டு, பருவம், மாதம், நாள் முகூர்த்தம், ஓரை முதலியனவாகக் காலம் பிரிக்கப்பட்டுள்ளது. கதிரவன் பூமியைச் சுற்றுகிறான் என்ற கொள்கை கொண்ட சாத்திர நூல்கள், கதிரவன் பூமியின் வட பகுதியில் சற்றுச் சாய்ந்து செல்லும் கால அளவை உத்தராயணம் எனவும், தெற்குப் பகுதியில் சாய்ந்து செல்லும் கால அளவைத் தட்சிணாயணம் எனவும் கூறுகின்றன.

அமரம் என்னும் நிகண்டு காலத்தை நிமிடம், காட்டை, கலை, கணம், முகூர்த்தம், பொழுது (பகல் அல்லது இரவு), நாள், பட்சம், மாதம், பருவம், அயணம் எனப் பகுத்து விளக்குகிறது. மூன்று பருவங்கள் கொண்டது ஓர் அயணம். தை முதல் ஆனி வரையிலான 6 மாதங்கள் உத்தராயணம் எனப்படும்.

காலவகைகளுள் நன்மை பயப்பனவும் தீமை விளைவிப்பனவும் உள்ளன, அவை முறையே மங்கல காலம், அமங்கல காலம் எனப்படுகின்றன. இராகு காலம், அமங்கலயோகம், தியாச்சியம் முதலிய காலங்களில் நற்செயல்கள் செய்தல் தகாது. கால நுட்பங்களை நன்கு உணர்ந்த ஆபசுத்தம்ப முனிவர் உத்தராயணம் வளர்பிறையில் குறிப்பிட்ட நாளில் மங்கல வேளையில்தான் செயல்களைச் செய்ய வேண்டும் எனவும், அப்பொழுதுதான் பூமியில் கதிரவன் கதிர்கள் வாயிலாக நிலச்சத்து ஏற்படும்; பூமிக்கடியில் உள்ள இரத்தினங்கள் முதலியன கெடாமலும் இருக்கும்; உயிரினங்களின் உடல், மனம், அறிவு, ஆன்மா ஆகியவற்றில் 'ஊர்க்கு' என்ற சீவாதார இரசாயனப் பொருள் சுரக்கும் எனவும் குறிப்பிடுகிறார். மேலும், அவர் கிரகணம் தவிர்த்து மற்றைய வேளைகளில் பூமலம், நீர்மலம், வானமலம் போன்ற மலங்கள் கதிரவன் கதிர்களுக்குள் புகா எனவும் கூறுகிறார்.

பழைய சாத்திர நூல்களில் தீயவர்களின் உயிர்க் காற்று உடலில் உள்ள 9 துளைகளுள் ஒன்றின் மூலம் வெளிப்படும். ஆனால் வீரர்கள், யோகிகள், சரணாகதர்கள், மெய்யடியார்கள் ஆகியோரின் உயிர்க் காற்று உச்சந்தலை மூர்த்தன்ய நாடி மூலம் வெளிப்பட்டு, சூரிய மண்டலத்தின் நடுவழியாகச் செல்லும். அவர்களுக்கு நரகம் வாய்க்காது. இவ்வாறு ஆன்மா செல்லும் வழியை அனுபூதி மார்க்கம், சமாதிமார்க்கம், அர்ச்சிராதிமார்க்கம் எனக் கூறுவர். அர்ச்சிராதி மார்க்கத்தில் முதன் முதலில் உத்தராயண தேவதை, வளர்பிறைத்தேவதை, பகல்தேவதை ஆகியோர் வழி நடத்துகின்றனர் என வைணவச் சாத்திரங்கள் கூறுகின்றன.
என்.எஸ்.தா.

**உத்தரை** பாரதப்போர் வீரர்களுள் ஒருவனும் மச்ச நாட்டின் அரசனுமாகிய விராடனுக்கும் சுதட்சணைக்கும் பிறந்தவள். பாண்டவர்கள் துரியோதனன் கூறியவாறு ஓராண்டுக் காலம் மறைந்துறையும் வாழ்க்கை (அஞ்ஞாத வாசம்) நடத்த விராடனிடம் சென்றனர். அப்போது பேடி உருவங் கொண்டிருந்த அருச்சுனனிடம் இவள் நடனம் கற்றுக் கொண்டாள். விராடன் மகன் உத்தரன் இவளை

அருச்சுனனுக்கு மணம் செய்விக்கக் கருதினான். ஆனால் அருச்சுனன் இவள் வயதில் இளையவள் என்று கூறி மறுத்து, தன் மகன் அபிமன்யுவிற்குத் மணம் செய்வித்தான். பாண்டவர்களுக்கும் துரியோதனன் முதலியவர்களுக்கும் போர் நிகழ்ந்தபொழுது அசுவத்தாமன் பாண்டவர் கருவறுக்க அம்பு எய்தான். அந்த அம்பு இவள் வயிற்றிலுள்ள கருவை அழிக்கப் புகுந்தது. அப்போது கண்ணன் அருளால் இவளும் கருவும் காப்பாற்றப்பட்டனர்.

**உத்தவகீதை**: கண்ணன் தம் அவதாரப் பணிகளை நிறைவேற்றி வைகுந்தத்திற்குத் திரும்ப ஆயத்தமாக இருந்தபோது, அவன் உத்தவருக்குக் கூறிய மெய்ஞ்ஞானச் செய்திகளைக் கொண்டதே உத்தவ கீதை. இக்கீதை வியாசபாகவதம் 11–ஆம் கந்தத்தில் 19 அத்தியாயங்களில் (10 முதல் 29 வரை) இடம் பெற்றுள்ளது. இது கண்ணனுக்கும் உத்தவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலாக அமைந்துள்ளது. இக்கீதை பெரும்பாலும் பகவத்கீதையின் போக்கில் உள்ளது.

உத்தவர் என்பவர் சிறந்த யோகி; கண்ணனின் பெரும் பக்தர்; நண்பர்; அறிவுரையாளர்; சிறிய தந்தையின் மகன்; வயதில் கண்ணனை விட முதியவர். அவதாரப்பணிகள் முடிந்ததும் பிரமன் தேவர்களுடன் வந்து கண்ணனை வைகுந்தம் எழுந்தருள வேண்டினான். கண்ணன் பிரமனை நோக்கி, 'யாதவகுலத்தில் சில சீர்திருத்தங்கள் செய்த பின்னர் வருவேன்' எனக் கூறிவிட்டு, அங்கிருந்த ஆயர்குல முதியோர்களைப் பார்த்து, 'இது துவாபரயுகம் முடியும் நேரம். இனிக் கலிபுருடன் ஆட்சி வரும்; பலவகையான தீமைகள் நேரலாம். அப்போது துவாரகையைக் கடல் கொள்ளும். ஆகவே நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுப் பிரபாசன் என்ற புண்ணியத் தலத்தை அடையுங்கள்' என அறிவுறுத்தினார். அப்போது அங்கிருந்த உத்தவர் கண்ணன் திருவடிகளில் விழுந்து வணங்கி, 'கண்ணா! உன்னுடன் அடியேனும் வைகுந்தம் வருதற்கு அருள் செய்வாயாக' என வேண்டினார். கண்ணன் உத்தவரிடம் குடும்பப்பற்றை விட்டுப் பதரிகாசிரமம் சென்று, வானப்பிரத்தராகித் தவம் புரிந்து உரிய வேளை வந்ததும் வைகுந்தம் வரலாம் என்று அறிவுறுத்தினார். இவ்வறிவுரை ஆன்மாவின் இயல்பு, அதன் நோக்கம், அந்நோக்கத்தை அடையும் நெறி முறை என்னும் வகையில் அமைந்து, உத்தவ கீதையாக உருப்பெற்றுள்ளது.

வீடு பயக்கும் நெறிகளான ஞான நெறி, கன்ம நெறி, பக்தி நெறி போன்ற அனைத்தும் தம்மையே வந்து அடைகின்றன என்றும், ஐம்புலன்களை அடக்கித் தன்னலமாகிய வினைப்பலன்மீதுள்ள பற்றினை அறவே நீக்கி, இறைவனாகிய தம்மிடம் முழுமையாக ஒப்படைத்துச் சரணடைகிற ஆன்மா, இவ்வுலகில் மெய்மறந்த இன்ப வாழ்வு பெற்று, பின்னர் பருஉடலை நீத்து வைகுந்தத்தில் தம்மோடு ஒன்றிப் பேரின்பத்தில் திளைக்கும் என்றும் கண்ணன் உத்தவரிடம் கூறுவதே இக்கீதையின் உட்பொருள் ஆகும். என்.எஸ்.தா.

**உத்தாலகர்** என்பவர் சாந்தோக்கிய உபநிடதத்தில் குறிக்கப்பெற்றுள்ள மெய்யறிஞர்களுள் ஒருவர்; ஆன்மிக ஞானமும் வேத, சாத்திரங்களில் ஆழ்ந்த புலமையும் உடையோர் மரபில் தோன்றியவர். இவர் தம் மகன் சுவேதகேதுவும் (Svetaketu) ஆன்மிக ஞானத்தில் தேர்ச்சி பெற்று, மெய்யறிஞனாகத் திகழ விரும்பினார். எனவே உத்தாலகர் (Uddalaka) தம் மகனை ஓர் ஆசிரியரிடம் அனுப்பினார்.

சுவேதகேது 12 ஆண்டுகள் வேதங்களையும் சாத்திரங்களையும் பயின்று, அவற்றை நன்கு மனனம் செய்து, கல்விச் செருக்குடன் தம் தந்தையிடம் திரும்பினான். தம் மகன் பிரம்மவித்தை எனப்படும் மெய்யறிவினை ஐயந்திரிபறப் பயின்று வந்திருப்பான் என்னும் கருத்தினராகிய உத்தாலகர் சுவேதகேதுவிடம், 'கேட்க முடியாததைக் கேட்கவும் காண முடியாததைக் காணவும் அறியமுடியாததை அறியவும் செய்வதாகிய அறிவைப்பற்றி உன் ஆசிரியரிடம் கற்றாயா? என வினவினார். வெறும்ஏட்டுக் கல்வியை மட்டுமே கற்றிருந்த சுவேதகேது அத்தகைய அறிவு பற்றி யாதும் அறியானாகி, அதனை விளக்குமாறு தன் தந்தையிடம் வேண்டினான். உத்தாலகர் அவனுக்குப் பல எடுத்துக்காட்டுகள் வாயிலாக ஆன்மாவும் பிரம்மனும் (இறைவனும்) ஒன்றே என்னும் அத்துவிதமாகிய ஞானநெறியை விளக்கினார்.

களிமண்ணின் இயல்பை நன்கு அறிந்து கொண்டால் அதனால் செய்யப்பட்ட பொருள்களைப் பற்றியும் அறிந்து கொள்ளவியலுதல் போன்று பிரம்மனை அறிந்து கொள்வதன் வாயிலாக இவ்வுலகு முழுவதையும் அறிந்து கொள்ளவியலும். இதன்வழிப் பிரம்மன் ஒன்றே அனைத்துலகமாக விரிந்துள்ளது என்பதனை உத்தாலகர் அறிவுறுத்துகிறார். மேலும், இவர் இவ்வுலகு இன்மையிலிருந்து(சூனியத்திலிருந்து) உருவாகியது என்னும் கருத்தை மறுத்து, பிரம்மன் என்னும் உண்மையிலிருந்தே (Sat) உள்ளதாகிய உலகு தோன்றியுள்ளது என்பதை நிறுவுகிறார்.

பிரம்மன் பற்றிய அறிவு இல்லாதபோதே அவன்

வேறு, இவன் வேறு; மரம் வேறு, விலங்கு வேறு என்பன போன்ற வேற்றுமை உணர்வு தோன்று கிறது. ஆனால் பிரம்மனை அறிந்து ஒடுங்கியநிலையில் எல்லாம் பிரம்மனாகவே விளங்கும். பல்வேறு வகைப் பூக்களிலிருந்து கொண்டுவரப் பெற்ற தேன் எல்லாம் தேன் கூட்டிற்குள் வந்தபோது, வேறு பாடின்றித் தேன் என்னும் ஒன்றாகவே அமைவதை எடுத்துக்காட்டி, இதனை உத்தாலகர் புலப்படுத்து கிறார். தானும் பிரம்மனும் ஒன்று என்னும் உணர்வு அடைவதே வீடு அடைதல் ஆகும். இவ்வுணர்வு அடைந்தோர் கடலுள் வந்து கலந்த அனைத்து ஆற்றுநீரும் பிறப்பிடம், ஊர்ந்த இடம், பெயர் போல்வன மறைந்து கடல்நீர் என்னும் ஒன்றாகவே அமைதலைப் போன்று, எல்லாம் தாமே என்னும் ஒருமைப்பாட்டுணர்வில் திளைப்பர் என்று கூறும் இவர், உடல் ஆன்மா வெளியேறியதும் உருமாறத் தக்கது; ஆனால் ஆன்மா நுண்பொருளாக அழி வின்மை உடையது என விளக்குகிறார்.

உத்தாலகரிடம் மெய்யறிவு பெற்ற சுவேதகேது தன்னை உணர்ந்தநிலையில் பேரறிஞன் ஆனான்.

**உத்தான துவாதசி** என்பது கார்த்திகை மாதத்தில் வரும் வளர் பிறையின் பன்னிரண்டாம் நாளைக் குறிக்கும். மாதந்தோறும் அமையும் ஏகா தசி, துவாதசி ஆகிய இரு நாட்களும் திருமாலுக்கு கந்த நாட்களாகக் கருதப்படுகின்றமையால், அவற் றில் வைணவர்கள் நோன்பு மேற்கொள்வர்.

சந்திரன் இயக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை இந்தியாவில் முற்காலத்தில் இருந்துவந்தது. சந்திரன் எனப்பொருள் படும் மதி, திங்கள் என்னும் சொற்களின் அடிப்படை யில் தமிழில் மாதம் என்றும் திங்கள் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர்கள் நான்கு வாரங் கள் கொண்ட காலப்பகுதியைக் குறிப்பன. அமாவா சைக்கு அடுத்த முதற்பிறைநாளை முதல் நாளாகக் கொண்டு எண்ணுங்கால், பன்னிரண்டாம் நாள் துவாதசி எனப்படும். அவ்வாறே, பௌர்ணமியினை அடுத்த நாளை முதலாகக் கொண்டு எண்ணப்படும் பன்னிரண்டாம் நாளும் துவாதசி எனப்படும்.

ஆடிமாத வளர்பிறைத் துவாதசியன்று திரு மால் உறங்கத் தொடங்குவார் என்றும், கார்த் திகை மாத வளர்பிறைத் துவாதசி அன்று அவர் துயிலெழுந்து, தம் படைப்புத் தொழிலில் முனைந்து ஈடுபடுவார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அத னால் ஆடி மாத வளர்பிறைத் துவாதசி 'சயன துவா தசி' என்றும், கார்த்திகை மாத வளர்பிறைத் துவா தசி'உத்தான துவாதசி' என்றும் கூறப்படுகின்றன. உத்தானம் என்பது துயில் எழுதல் என்று பொருள் படும்.

வைதிகச் சமயத் துறவியர் ஆடி மாத ஏகாதசி யன்று தாம் மேற்கொள்ளும் சாதுர் மாச நோன்பி னைத் தொடங்கி, கார்த்திகை மாத வளர்பிறைத் துவாதசியில் நிறைவு செய்வர். அக்காலம் மழைக் காலமாதலின் அவர்கள் இடம்பெயராது ஓரிடத்தே தங்கியிருந்து, வேதம் ஓதுதல் முதலியவற்றை மேற் கொண்டு நோன்பியற்றுவர்.

உத்தான துவாதசியன்று திருமாலை நினைந்து நோன்பியற்றுவோர் அவரைத் தாமோதரன் என் னும் திருநாமத்தால் வழிபடுவது சிறப்பாகும். திரு மால் துளசியிலும் நெல்லியிலும் உகந்து உறைவார் என்று கூறப்படுகின்றமையால், உத்தான துவாதசி நோன்பியற்றுவோர் பிருந்தாவனம் எனப்படும் துளசி மாடத்தில் நெல்லிக் கொம்பினை வைத்து, அதன் அடியில் கண்ணன் திருவுருவினை அமைத்து வழி பாடு செய்வர். வைணவர்கள் தங்கள் இல்லங்களில் துளசிமாடம் அமைத்துத் திருமாலை நாள்தோறும் வழிபடுவது முறையாகும். அங்ஙனம் துளசி, நெல்லி அமைத்து நாடோறும் வழிபட இயலாதவர்கள் உத் தான துவாதசி நாளில் அவ்வாறு வழிபடுவார்களா யின் நற்பயன் அடைவார்கள் என்பது மரபுவழி அமைந்த நம்பிக்கையாகும். உத்தான துவாதசிக்கு முதல் நாள் உத்தான ஏகாதசி எனப்படும்.

**உத்தானபாதன்** சுவாயம்பு மனுவிற்கும் சத ரூபை என்பவளுக்கும் இரண்டாம் மகனாகப் பிறந் தவன். இவனுடைய அண்ணன் பெயர் பிரியவரதர். இவர்கள் இருவரும் வாசுதேவருடைய கூறாக விளங் கினார்கள். உலகத்தைப் பார்ப்பதில் நோக்கமுடை யவர்களாக இருந்தார்கள். அரச மரபில் உதித்த உத்தானபாதனுக்குச் சுநீதி, சுருசி ஆகிய இரண்டு துணைவியர் இருந்தனர். இவனுக்குச் சுநீதியின் மூலம் துருவன் என்ற மகனும் சுருசியின் மூலம் உத் தமன் என்ற மகனும் இருந்தனர். இவன் சுநீதியிடம் அன்பில்லாமல் சுருசியிடத்தில் மிகவும் அன்புள்ளம் கொண்டவனாக இருந்தான். ஒரு சமயம் சுருசியின் மகனாகிய உத்தமன் தன் தந்தையின் இருக்கையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அப் பொழுது துருவனும் தன் தந்தையின் இருக்கையில் அமர்ந்து விளையாடச் சென்றான். அரசன் அவனைப் பொருட்படுத்தவில்லை. சுருசி துருவனை நோக்கி நீ என் வயிற்றில் பிறவாமையினால் அரசனுடைய ஆச னத்தில் ஏறுவதற்குத் தகுதியற்றவன். ஆகையினால் தவத்தினால் திருமாலை வழிபட்டு அவருடைய அருள் பெற்று என்னுடைய வயிற்றில் பிறந்தால்

உனக்குச் சிம்மாசனம் கிடைக்கும் என்று அரசன் முன்பாகச் சொன்னாள். இதைக் கேட்டும் தந்தை வாளாவிருந்ததை அறிந்து மிகவும் வேதனைப்பட்டுத் துருவன் திரும்பினான். பின்னர்த் தாயின் அறிவுரைப்படி துருவன் நாரதரின் உபதேசம் பெற்று மதுவனஞ் சென்று நாரரயணனைத் தியானித்தான். தன் மகன் வனத்திற்குச் சென்றமையால் அரசன் கவலை கொண்டிருந்தான். அப்பொழுது நாரதர் சென்று உன் மகனைத் தேவர்கள் காப்பாற்றுவார்கள்; உனக்குக் கவலை வேண்டாம் என்று கூறித் தேற்றினார்.

**உத்திகள்:** உத்தி என்பது இலக்கண நூல்களில் (தொல். மரபு.100, 112; நன்னூல் 14, 15) காணப்படும் கூறாகும். நூலிலக்கணம் ஐந்தனுள் ஒன்றாக இதனைத் தொல்காப்பியர் குறித்துள்ளார் (மரபு.100). இச்சொல் வடசொல்லின் சிதைவாகும். இது நூலமைப்பைப் பற்றிக் கூறுதலால் தந்திரவுத்தி எனப்படுகிறது. எடுத்துக்கொண்ட நூற்பொருளை உலக வழக்கோடும் சான்றோர் நூல்வழக்கோடும் தொடர்புபடுத்திக் காட்டி, ஏற்ற தலைப்புகள் தந்து அவற்றிற்குத் தக்க இடம் இது எனத் திட்பநுட்பம் செறிய முடிவு செய்து தக்கவாறு நடத்துவது தந்திர வுத்தி (நன். 15).

உணர்த்தப்படும் பொருள் இது என்று அறிதற்கும், நூற்பொருளை அதிகார முறைமைப்படுத்தித் தருதற்கும், செய்திகளைத் திரட்டிக் கூறுதற்கும், திரட்டிக் கூறியவற்றை விரித்துக்கூறி அதனால் ஒரு பயன் உண்டென அறிதற்கும் உத்திகள் இன்றியமையாதன. மேலும், முதல்நூற் பொருளை உணர்தற்குரிய கருவிகள் உத்திகளே. அவை சூத்திரச் சுருக்கத்திற்கும் ஏதுவாமென்பது பேராசிரியர் கருத்து. அவை நூல் செய்வார்க்கும் நூலை நுணுகிப் பயில்வார்க்கும் பெரிதும் பயனாவன. உத்திகள் புலப்பாட்டு நெறியாகக் கொள்ளத்தக்கன. உத்திகளை இலக்கணச் சார்போடு உரையாசிரியர்கள் விளக்கியிருப்பினும் ஈண்டு அவை பொதுவகையாகவே விளக்கப்படுகின்றன.

உத்திவகைகளைக் குறிப்பதில் தொல்காப்பியமும் நன்னூலும் வேறுபடினும் இரண்டும்' 32 உத்திகளையே குறிக்கின்றன. தொல்காப்பியம் கூறும் உத்திவகைகள் சிலவற்றை (தொகுத்துச்சுட்டல், வகுத்துக்காட்டல், பிறன்கோட்கூறல்) அப்படியே நன்னூல் ஏற்றுக்கொண்டுள்ளது. ஈண்டு இளம்பூரணர் கொண்ட பாட அடிப்படையில் உத்திகள் விளக்கப்படுகின்றன.

1. நுதலியது அறிதல்: நூலாசிரியர் என்ன கருதி ஒன்றினைக் கூறுகிறார் என அறிதல்.
2. அதிகார முறை (மை): முதலில் சொல்லிய ஒரு செய்தியைப் பின்வரும் இடங்களிலும் பெற வைத்தல்.
3. தொகுத்துக் கூறல்: செய்திகளைத் திரட்டிக் கூறுதல் (அல்லது) நிரல்படக் கூறப்பட்ட செய்திகளின் முடிவில் இதுவரை பேசப்பட்ட பொருள் இதுவெனக் கூறல்.
4. வகுத்துமெய்ந்நிறுத்தல்: திரட்டிக் கூறப்பட்ட பொருளைத் தனித்தனியாக விரித்துக் கூறல்.
5. மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்: சிக்கல் தோன்றுமிடத்து முன்கூறப்பட்ட பொருளினின்று மாறுபடா வகையிற் பொருள் கொள்ளுதல்.
6. மொழியாததனை முட்டின்றி முடித்தல்: நூலுள் ஒருசெய்தி விளக்கமாகக் கூறப்படாதிருப்பினும் சூழல்நோக்கி ஏற்புடைய விளக்கம் தந்து இடர்ப்பாடின்றி அறிதல். இவ்விரண்டினையும் பேராசிரியர் ஓர் உத்தியாக்கி விளக்குவர்.
7. வாராததனால் வந்தது முடித்தல்: ஒரு பொருண்மை பற்றிய எல்லாச் செய்திகளும் நிறைவுறக் கூறப்படா நிலையில் உள்ள செய்தியின் துணைகொண்டு சிக்கலுக்குத் தீர்வு காணல்.
8. வந்ததுகொண்டு வராததுமுடித்தல் (உணர்த்தல்): ஒருசேர வைத்து எண்ணப்பட்ட பொருள்களுள் ஒன்றற்கு ஒரு முடிவு கூற, அதுகொண்டு முன் கூறப்பட்ட பிற பொருள்களுக்கும் பொருந்தும் முடிவு காணல்.
9. முந்துமொழிந்ததன் தலைதடுமாற்று: முன்னொருகால் ஒரு செய்தியை ஒரு முறையில் விளக்கிப் பின்னோரிடத்து அதனின்றும் முரண்படுவதுபோலக் கூறுதல்.
10. ஒப்பக்கூறல்: ஒப்பில்லாத இரு பொருள்களுக்கு இடையில் ஒப்புள்ளதுபோல இணைத்துக் கூறல் (அல்லது) ஒன்று கூறுங்கால் இருபொருட் குறித்தது என்று இரட்டுறக் கூறல்.
11. ஒருதலைமொழி(தல்): கவர்ந்த பொருள் தருமிடங்களில் ஒரு பொருளைத் துணிந்து கொள்ளுதல்.
12. தன்கோட்கூறல்: பிற நூலாசிரியர்களின் நெறியைப் பின்பற்றாமல் ஆசிரியன் தன் கோட்பாட்டைக் கூறுதல்.
13. உடம்பொடுபுணர்த்தல்: ஓரிடத்து ஒன்றற்கு வரையறை கூறி, பிறிதோரிடத்து அவ்வரை

யறை மீறலாக ஒரு செய்தியை வைப்பின் அவ் வைப்பையே இலக்கணமாகக் கோடல். பேராசிரியர் இதனை ஒருதலைமொழிதலுக்கு இனமாக்கி முறைபிறழாமை என்ற உத்தியை இவ்விடத்தில் கூறுவர்.

14. பிறனுடம்பட்டது தானுடம்படுதல்: பிற நூலாசிரியர்க்கு உடன்பாடான உண்மையை நூலாசிரியரும் உடன்பட்டுக் கூறுதல்.

15. இறந்தது காத்தல்: முதலில் ஒரு செய்தியை விளக்குமிடத்துக் கூறாது விட்ட உண்மையைப் பின்னர் ஏற்ற இடத்தில் அமைத்துக் காத்தல்.

16. எதிரது போற்றல்: பின்னால் சொல்லப்பட வேண்டிய செய்தியைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பத் தொடக்கச்செய்தியை அமைத்தல்.

17. மொழிவாமென்றல்: ஒரு பொருள் பற்றிய எல்லாச் செய்திகளையும் கூறாது அவற்றுள் ஒன்றனைப் பின்னால் இன்ன இடத்துக் கூறுவேன் என்றல்.

18. கூறிற்றென்றல்: முன் கூறிய ஒரு மெய்ம்மையினைப் பிறிதொன்றற்கும் விதித்துக் கூற நேர்ந்தால் அவ்விடத்து மீண்டும் அதனை விளக்காது முன் கூறப்பட்டுள்ளது எனல்.

19. தான்குறியிடுதல்: நூலாசிரியன் தன் கருத்தைப் புலப்படுத்துதற்கு உரிய சொற்களை உலகவழக்கினின்று எடுத்துக் கொள்ளாமல் தானே படைத்தளித்தல்.

20. ஒருதலையன்மை முடிந்தது காட்டல்: ஒரு பொருளை ஓதியவழிக் கூறிய மெய்ம்மை அதற்கு மட்டுமன்றிப்பிறபொருட்கும் பொதுவாக முடிந்தமைகாட்டல். இவ்வுத்தியைப் பேராசிரியர் இரண்டாகக் காட்டுவார்.

21. ஆணை கூறல்: நூலாசிரியர் தன் கருத்து இது எனக் கூறுமிடத்து காரணங்காட்டி நிறுவாமல் ஆணையிட்டுக் கூறுதல்.

22. பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்: பல பொருள்படுமாறு ஒன்று கூறப்பட்டிருப்பின் அவ்விடத்திற்குப் பொருத்தமான நல்ல பொருளைக் கொள்ளுதல்.

23. தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்: தொகுத்துக் கூறிய செய்தி ஒன்றின் வழியே அதன் விரிவுகளை வகுத்துக் கொள்ளுதல்.

24. மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்: பிற நூலாசிரியர்ப் பொருண்மையைக் கெடுத்துத் தன் முடிபைக் கூறுதல்.

25. பிறன்கோட் கூறல்: பிற நூலாசிரியன் கோட்பாட்டைத் தன் நூலுள் கூறுதல்.

26. அறியாது உடம்படல்: நூலுள் கூறப்பட்ட செய்தியேயன்றி ஒப்புடைப் பிற செய்திகள் இருப்பின் அவற்றையும் அமைத்துக் கொள்க எனக் கூறுதல்.

27. பொருள் இடையிடுதல்: ஒரு பொருளை நிரல்படத் தொகுத்துக் கூறுமிடத்து இடையில் வேறு பொருள் பற்றிய செய்தியையும் கூறுதல்.

28. எதிர்பொருள் உணர்த்தல்: இனிக் கூறவேண்டியது இது என்றோ நூலுட் கூறிய பொருள் எதிர்காலத்தில் மாறுதலாகலாம் என்றோ கூறுதல்.

29. சொல்லின் எச்சம் சொல்லியாங்குணர்தல்: செய்தியை வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்லாற்றலால் பெறவைக்கும் இடங்களில் எடுத்தோதிய நெறி நின்று பொருளை உணர்தல்.

30. தந்து புணர்ந்துரைத்தல்: பொருள் நிலையை முன்னும் பின்னும் நோக்கி இடைநின்ற ஒன்றினை விளக்குதல் (அல்லது) உள்பொருள் அல்லதனை உளபோலத் தந்துரைத்தல்.

31. ஞாபகங்கூறல்: சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலின்றி அரிதின் முயன்று பொருள் கொள்ள வைத்து, அவ்வழியே வேறு பல பொருள்களும் கொள்ளவைத்தல் (அல்லது) இரட்டுறமொழிந்து இருபொருள் கொள்ள வைத்தல்.

32. உய்த்துக் கொண்டுணர்தல்: நூற்செய்தியில் பொருந்தாமை தோன்றுமிடத்துப் பொருந்துமாறு விசாரித்தறிதல். கோ.பா.

**உத்தியுத்தர்**: சிவன் தன் தடத்தநிலை மூன்றனுள் நடுவணதாகிய நிலையில் பெறுகிற பெயர். சிவன் உலகமும் உயிர்களும் ஆகிய பிற பொருள்களை நோக்காது தன்னளவில்தான் நிற்றல் சொரூப நிலை. இது தமிழில் 'தன்னிலை' அல்லது 'உண்மை நிலை' என்று சொல்லப்படும். இந்நிலையில் அவன் எந்த ஒரு வடிவத்தையும் பெயரையும் செயலையும் உடையவனாய் இரான்.

சொரூப நிலையில் உள்ள சிவன் தன் அருள் காரணமாக உயிர்களை நோக்கி அவற்றின் பொருட்டாக ஐந்தொழில் செய்தலை மேற்கொள்ளுதல் தடத்த நிலை. இது தமிழில் 'பொது நிலை' எனப்படும். இந்நிலை 'இலயம், போகம், அதிகாரம்'

என மூன்றாகும். இவை ஒன்றை விட மற்றொன்று தூலம் (பருமை) ஆகும். இலயம்-ஒழுக்கம். போகம்-அருளல். அதிகாரம்-செயலாற்றுதல்.

இலய நிலையில் சிவன் சக்தியோடு சேரும் அளவில் இருத்தலால் 'சத்தன்' எனப் பெயர் பெறுவான். பின்பு ஐந்தொழில் செய்ய முனையும் நிலையே போகநிலை; ஆதலின், அந்நிலையில் சிவன் 'உத்தியுத்தன்' எனப் பெயர் பெறுவான். இப்பெயர் 'உத்தியோகம்' என்பதிலிருந்து வருவது. உத்தியோகம்-முயற்சி. பின்பு ஐந்தொழில்களை இயற்றும் நிலையே அதிகார நிலையாகும். அந்நிலையில் சிவன் 'பிரவிருத்தன்' எனப் பெயர் பெறுவான். இலயம் முதலிய மூன்று நிலைகளிலும் சிவன் முறையே அருவம், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளைக் கொள்வான். அருவம்-உருவம் இல்லாதது. அருவுருவம்-உருவம் உடையதாயினும் முகம், கை, கால் முதலிய உறுப்புகள் இல்லாதது. அதுவே இலிங்கத் திருமேனி. உருவம்-முகம் முதலிய எல்லா உறுப்புகளோடும் கூடியது. அது மாதொரு பாகன் முதலாகப் பல வகைப்படும். சி.அ.

**உத்திரட்டாதி** இருபத்தேழு நாள் மீன்களுள் இருபத்தாறாவது ஆகும். இது சனிக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று.

இது மீன இராசியில் 3 பாகை 20 கலை முதல் 16 பாகை 40 கலை வரை அமைந்துள்ளது. பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய இரண்டு மீன்களும் ஒரு கட்டிலின் நான்கு கால்கள் போல அமைந்துள்ளன. எனவே உத்திரட்டாதி ஒரு கட்டிலின் இருகால் போல் அமைந்துள்ளது.

உத்திரட்டாதிக்கு முரசு, பிற்கொழுங்கால் அறிவன், நால் மன்னன், நிலம் ஆகிய பெயர்கள் உண்டு. உத்திரட்டாதியில் சந்திரன் இருக்கும்போது பிறந்த ஒரு குழந்தைக்குரிய திசை சனி திசை நிகழும். ப.ரா.க.

**உத்திரம்** இருபத்தேழு நாள் மீன்களுள் பன்னிரண்டாவதாகும். இதற்குப் பால்குனி, பங்குனி, கடைச்சனி, பொய்கை, மான்ஏறு, கதிர்நாளை ஆகியபெயர்கள் உண்டு. இது 4 மீன்கள் கொண்டது. பூரமும் உத்திரமும் சேர்ந்து ஒரு கட்டிலின் நான்கு கால்கள் போல் உருவம் பெற்றுள்ளன. உத்திரம் சூரியனுக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று. இது சிம்ம இராசியில் ஒரு பாதமும் கன்னி இராசியில் ஏனைய மூன்று பாதமும் கொண்டதாய் உள்ளது. இதனால் இதைத் தலையற்ற நாள் மீன்களுள் ஒன்றாகக்கூறுவர். திருமணம், மனை கோலுதல், குடிபுகுதல், வழிநடை ஆகியவற்றிற்கு நல்ல நாளாக இது கொள்ளப்படுவதில்லை. உத்திர நாள்மீனில் பிறந்த ஒருவர் சூரிய திசையில் பிறந்தவர். உத்திரம் சிம்மராசியில் 26 பாகை 40 கலை முதல் 30 பாகை வரையிலும் அமைந்து கன்னி இராசியின் முதல் 10 பாகை வரையிலும் இடம் பெற்றுள்ளது. எனவே, உத்திரம் சூரியனுக்குரிய சிம்ம வீட்டிலும் புதனுக்குரிய கன்னி வீட்டிலும் அமைகிறது. ப.ரா.க.

**உத்திராடம்** இருபத்தேழு நாண் மீன்களுள் இருபத்தொன்றாவது ஆகும். இது நான்கு மீன்களால் சதுர வடிவில் அமைந்துள்ளது. இது தனுசு இராசியில் முதல் பாதமும் மகர இராசியில் மூன்று பாதமும் பெற்றுள்ளது. இது தனுசு இராசியில் 26 பாகை 40 கலை முதலாகக் கன்னி இராசியில் முதல் 10 பாகை வரை இடம்பெற்றுள்ளது. உத்திராடத்திற்குக் குளம், கூவல், விச்சுவ நாள், ஆனி, ஆடி ஆகிய பெயர்கள் உண்டு. உத்திராடம் தலையற்ற நாண் மீன்களுள் ஒன்றாகும். இந்த நாளில் நற்செயல்கள் தவிர்க்கப்படும். சந்திரன் உத்திராடத்தில் இருக்கும் போது பிறந்த ஒருவர் உத்திராடத்திற்குரிய கோளாகிய சூரியன் திசையில் பிறந்தவர் ஆவார். உத்திராடம் குருவுக்குரிய தனுசு வீட்டிலும் சனிக்குரிய மகரவீட்டிலும் அமைகிறது. ப.ரா.க.

**உத்துனூர்** ஆந்திர மாநிலத்தில்இரெய்ச்சூர்ப் பகுதியில் மகபூப்நகர் மாவட்டத்தில் இசே (IJ) என்ற காட்டாற்றின் கரையில் உள்ளதொரு சிற்றூர்; தொல்லியல் சிறப்புப் பெற்றது. இப்பகுதியில் சாம்பல் மேடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இங்குள்ள சாம்பல் மேடுகள் பழமை வாய்ந்தவை என்று முதன் முதலில் மெக்கன்சி என்பவர் கண்டுபிடித்தார். இவர்க்குப் பின்வந்த அறிஞர்கள் இதை மறுக்கலானார்கள்.ஆனால் புரூசு பூட்டு(Bruce Foote)என்பவர்புதிய கற்கால மக்களின் தடயங்கள் இவை என்றார். பின்னர் இந்துச்சாம்பல் மேட்டை எப்.ஆர். அல்சின் (F.R. Allchin) என்பவர் 1957-இல் அகழாய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உத்துனூர் சாம்பல் மேடுகள் பற்றிய முதல் அறிக்கையை 'அய்தரபாது நிலவியல் பத்திரிக்கை' வெளியிட்டுள்ளது. இப்பகுதியில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டன. துங்கபத்திராஆற்றின் கரையில் 7 கி.மீ. தூரத்தில் இந்த ஊர் அமைந்திருப்பதால் புதிய கற்கால மக்களுக்குக்கற்கருவிகள் செய்யக் கற்கள் கிடைப்பது எளிதாக அமைந்தது. இந்த ஊருக்கருகில் புதிய கற்கால மக்களின் கைக்கோடரிகள் செய்யும் தொழில் பட்டரையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில்

செய்யப்பட்ட மேற்பரப்பாய்வில் புதிய கற்காலக் கோடரிகளும் மட்பாண்டங்களின் ஓடுகளும் கிடைத்துள்ளன.

இந்தச் சாம்பல் மேடுகளை அகழாய்வு செய்ய ஆந்திர மாநிலத் தொல்லியல் துறையினரும் உதவி செய்துள்ளனர். இந்தச் சாம்பல் மேடுகள் சுமார் 6 அடி உயரத்தில் காட்சி தருகின்றன. மேட்டின் மேல் பகுதியில் மூன்று இடங்களில் அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. பின்னர், இவை விரிவுபடுத்தப் பட்டுப் பல இடங்களில் குழிகள் தோண்டப்பட்டன. இந்தக் குழிகள் சுமார் 6 அடி வரை தோண்டப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 12 மண் அடுக்குகள் (Layers) கிடைத்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கால கட்டத்தைச் (Periods) சார்ந்தது. இந்த மண்ணடுக்களைக் கொண்டு இப்பகுதியில் ஐந்து காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இக்கால கட்டத்தைப் புதிய கற்காலம், வரலாற்றுக் காலம் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதற்பிரிவில் வாழ்ந்த மக்கள் புதிய கற்கால மக்கள். அவர்கள்இங்கு மூன்று காலங்களில் தங்கியுள்ளனர். 12-ஆம் மண் அடுக்கில் இருந்து 8-ஆம் மண் அடுக்கு வரை இந்தப் பிரிவைச் சார்ந்த தொல் பொருள்கள் கிடைக்கின்றன. இதில் கால் நடைகளின் சாணமும் சாணத்திற்குத் தீயிட்டதால் ஏற்பட்ட சாம்பல், கால்நடைகளின் எலும்பு ஆகியவையும் கிடைத்துள்ளன. இதில் மாடுகளின் குளம்படி படிந்த சாம்பல் படிவங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கருகில் மாட்டுச்சாணம் குவிக்கப்பட்ட மேடும் உள்ளது. இத்துடன் மண்ணில் கம்பம் நட்ட குழிகள் (Post-Holes) கிடைத்துள்ளன. இவை வீடு கட்டப் பயன்படுத்தப்பட்ட மரக் கம்பங்களை நடுவதற்கான குழிகளாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றன. இக்குழிகள் பெரியதாகவும் சிறியதாகவும் வேறுபட்ட அளவுகளில் கிடைக்கின்றன. மேலும் மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

புதிய கற்காலத்தில் இரண்டாம் பிரிவைச் சார்ந்த மக்கள் 7, 8-ஆம் மண் அடுக்குகளில் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தும் கால்நடைகள் வளர்த்ததற்கான தடயங்கள் கிடைக்கின்றன. கால்நடைகளை ஓர் இடத்தில் அடைத்து வைத்தனர். அந்த இடத்தில் பாதுகாப்புக்காகக் கால்நடையைச் சுற்றி வேலி போட்டுள்ளனர்; இரண்டு வேலிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டுள்ளனர். இவற்றின் முள்வேலிகளும் கிடைக்கின்றன. இக்காலத்தில் கிடைத்த சாம்பல் முற்காலத்தில் கிடைத்த சாம்பலைக் காட்டிலும் மிகுதியானது ஆகும். அம்மண்ணடுக்குகளில் பானை ஓடுகளும் புதிய கற்காலக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன.

மூன்று, நான்காம் காலங்களும் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. இக்காலத்திலும் சாம்பல், பானை ஓடுகள் கிடைத்துள்ளன. ஆனால் இக்காலத்திய பானை ஓடுகள் நேர்த்தியானவை. ஐந்தாம் காலப் பிரிவில் வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தில் வரலாற்றுக் கால மட்பாண்டங்கள், புதிய கற்காலக்கருவிகள் கிடைத்துள்ளன. இங்குப் புதிய கற்காலத்துக் கருவிகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. துங்கபத்திரா நதி அருகில் உள்ள காரணத்தால் இங்குக் கிடைத்த கற்கள் கற்கருவிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இங்குக் கிடைத்த கற்கருவிகளுள் சுரண்டிகள், முனைகள், பட்டைக்கற்கள், கைக்கோடரிகள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்தக் கல் ஆயுதங்கள் படிகக்கல் (Chert), பழுப்புமணி (Jasper), நீலவெண்மணி (Chalacedony) ஆகிய மணிக்கல் வகைகளால் செய்யப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்ட கல் அம்மி, கற்சுத்திகள் உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

உத்துனூர் அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை: 1. புதிய கற்காலப் பானைகள், 2. வரலாற்றுக் காலப் பானைகள். புதிய கற்காலத்துப் பானை ஓடுகள் கையால் செய்யப்பட்டவை. இப்பானைகள் மணல் அதிகம் நிறைந்த (Coarse Clay) மண்ணால் செய்யப்பட்டதால் சற்றுத் தடித்த ஓடுகளாகக் காட்சி தருகின்றன. இளகிய மண்ணால் செய்யப்பட்டவை குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. இக்காலப் பானை ஓடுகள் தக்காணப் பீடபூமிப் பகுதியில் கிடைக்கிற ஓடுகளை ஒத்துக் காணப்படுகின்றமையால் அங்கிருந்த மக்கள் குடிபெயர்ந்து இப்பகுதிக்கு வந்திருக்க வாய்ப்புகள் உள்ளன. இந்த ஓடுகளை (அ$^1$, அ$^2$, அ$^3$) என்று மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். முதல் பிரிவு தேய்த்து மெருகூட்டப்படாதவை; இரண்டாம் பிரிவு தேய்த்து மெருகூட்டப்பட்டவை; மூன்றாம் பிரிவு மேல்பாகத்தில் சாயம் பூசப்பட்டவை. அலங்காரக் கோடுகள் போடப்பட்ட பானைகளும் கிடைத்துள்ளன. இவற்றுள் சில சூளையிடுவதற்கு முன்பும், சில சூளையிலிட்ட பின்னும் வரையப்பட்ட கோடுகளாகும்.

இப்பானைகள் எவ்வாறு சுடப்பட்டன என்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் பானைகள் கும்பலாக வைத்துச் சுடப்பட்டிருக்க வேண்டும் என்பது உய்த்துணரப்படுகிறது. பானையின் மேல் பாகத்தில் குறியீடுகள் பதித்தவைகளும்

கிடைத்துள்ளன. பானையின் கழுத்துப் பாகத்தில் விரல்களை வைத்து அழுத்திக் குறியீடு செய்துள்ளனர். மங்கலான சிவப்பு நிறப் பானைகள் இங்கு அதிகம் கிடைக்கின்றன. இதைத் தொடர்ந்து கறுப்புப் பானைகளும் கிடைத்துள்ளன. சுமார் 70 பானைகள் அகழாய்வில் எடுக்கப்பட்டன. இவற்றுள் வட்டில்கள் (Shallow Platters), கிண்ணங்கள், சாடிகள், நீண்ட கழுத்துடன் கூடிய சாடிகள், மூடியுடன் கூடிய சாடிகள் போன்ற மட்பாண்டங்கள் குறிப்பிடத்தக்கன.

வரலாற்றுக் காலத்தில் கறுப்பு, சிவப்புப் பானைகள் கிடைத்துள்ளன. இவை மெருகூட்டப்பட்டவை. இவற்றுடன் கருப்புப் பானைகளும் கருப்பும் பழுப்பும் சேர்ந்த பானைகளும் கிடைத்துள்ளன. உரோமானிய பானைவகையைச் சார்ந்த உரௌலெட்டடு ஓடுகளும் இங்குக் கிடைத்தன. பானையின் மேல் பாகத்தில் வெண்ணிறக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. இவை குறுக்கு நெடுக்காகவும் நேராகவும் வரையப்பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த சாம்பல் நிற ஓடுகள் குறைந்த அளவிலே கிடைத்துள்ளன. இவை ஆந்திர நாட்டை ஆண்ட சாதவாகனர் காலத்து மட்பாண்டங்களை ஒத்து இருக்கிற காரணத்தால், கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கணிக்கப்படுகிறது.

இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இக்காலத்தில் இருந்துள்ளது. குழந்தையின் எலும்புக்கூடு ஒன்று அகழாய்வில் எடுக்கப்பட்டுள்ளது. இதில் சில எலும்புகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றோடு நூற்றுக் கணக்கான மிருகங்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. இந்த எலும்புகள் உடைந்து காணப்படுகின்றன. மாட்டின் எலும்பு அதிகமான அளவிலும் ஆடு, மான் ஆகியவற்றின் எலும்புகள் குறைந்தும் காணப்படுகின்றன. இந்த எலும்புகள் முற்காலத்தில் குறைந்தும் பிற்காலத்தில் அதிகரித்தும் வந்துள்ளன.

இங்குக் கிடைத்த சாம்பல் கட்டிகளை அய்தராபாதில் பாதுகாத்து வைத்துள்ளனர். இங்குக் கண்டெடுக்கப்பட்ட சாம்பல் கட்டிகள் சுவர்கள் கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 11-ஆம் மண்ணடுக்கில் இருந்து எடுக்கப்பட்ட சாம்பல் பரிசோதனைக்காகப் 'பிரிட்டீசு அருங்காட்சியகச்' சோதனைக் கூடத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்கள் இந்தச் சாம்பலின் காலம் கி.மு. 2160–150 என்று கணித்துள்ளனர். அதாவது இவற்றின் காலம் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இங்கு கி.மு. 2000-இலிருந்து கி.பி. முதல் நூற்றாண்டு வரை தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அறிய வருகிறது.

இங்கு வாழ்ந்த மக்கள் கால்நடைகளை வளர்க்கத் தெரிந்திருந்தார்கள். இக்கால்நடைகளின் பாதுகாவலுக்காக வேலியிட்டுள்ளனர். இவற்றின் சாணத்திற்குத் தீயிட்டுச் செல்வது அவர்களுடைய வழக்கமாக இருந்திருக்கிறது. தி.சு.

துணை நூல்கள்:

**Allchin**, F.R., Utnur Excavation, Andhra Pradesh Government Archaeological Series, No. 5, 1961.

**Zeuner**, F., On the Origin of the Cinder Mounds of the Bellary District, Bull Inst. of Archaeology, 2, 1959.

**உத்தேசங்கூறல்** என்பது நியாய நூற் குறியீட்டுச் சொல். ஒரு பொருளை விளக்கும் பொழுது உத்தேசம், இலக்கணம், பரீட்சை என்னும் மூன்று வகையில் விளக்கப்படும் என்பது நியாய நூல் முறை.

உத்தேசம் கூறல் என்பது எடுத்துக் கொண்ட பொருளை முதலில் பெயரளவாகச் சுட்டுதல். எடுத்துக் காட்டாகத் தொல்காப்பியம்,

'சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே' எனவும்,

'இடைச்சொற் கிளவியும், உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'

எனவும் கூறுகிறது. இவற்றில் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்று அவை பெயரளவிலே சுட்டப்பட்டன. இவ்வாறு கூறுதலே உத்தேசம் கூறுதலாகும்.

இவற்றிற்குப் பிறகு தொல்காப்பியம் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பவற்றில் முதற்கண் கூறிய நால்வகைச் சொற்களுக்கும் உரிய இலக்கணங்களை விரிக்கிறது. அவையெல்லாம் இலக்கணங் கூறலாம்.

'கூறப்பட்ட இலக்கணங்கள் அவ்வப் பொருளில் பொருந்தியுள்ளனவா என ஆராய்தல் பரீட்சையாகும். தொல்காப்பிய நூல் இதனைச் செய்யவில்லை. ஆயினும் இதனை அந்நூலின் உரைகள் நன்கு ஆய்வு செய்துள்ளமை காணலாம். அவ்வாறு செய்தலே பரீட்சித்தலாகும்.

'ஆதிஉத் தேசத் தானும்
இலக்கண பரீட்சை யானும்'

என்கிறது திருவிளையாடற் புராணம் (தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம் - 54). சி. அ.

**உத்பல மரபினர்** காசுமீரத்தை கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவர்கள். கார்க்கோட மரபினர் ஆட்சியை கி. பி. 855-ஆம் ஆண்டில் கைப்பற்றிய அவந்திவர்மன் என்பாரே இம்மரபின் முதல் அரசராவார். இவரே அம்மரபின் புகழ்மிக்க மன்னரும் கூட. உத்பல (Utpalas) அரசர்கள்கார்க்கோட மரபினருடன் மணஉறவு கொண்டிருந்தார்கள். இம் மரபினைச் சார்ந்த அவந்திவர்மன் கி. பி. 855 முதல் 883 வரை அரசாண்டார். வன்முறையின் அடிப்படையில் எழுந்த அயல்நாட்டுக் கொள்கையைப் புறக்கணித்த இவர், உள்நாட்டின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய்ச் செயற்பட்டார். தமக்குமுன் ஆண்ட பிந்தைய கார்க்கோட அரசர்களின் சீர்கெட்ட ஆட்சியின் விளைவுகளை நீக்கும் நோக்குடன் இவர் இத்தகைய கொள்கையைப் பின்பற்றினார். தம்மாட்சியின்போது செல்வாக்குற்ற நாட்டுப்புற நிலவுடைமையாளரான தமரர்களின் (Damaras) ஆதிக்கத்தை இவர் கட்டுப்படுத்தினார். இவர் வைணவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர். ஆனால் இவருடைய தலைமை அமைச்சராகப் பணியாற்றிய சுர (Sura) என்பார் ஆழ்ந்த சைவர். அவந்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் சுரபுரம் (Surapura)என்னும் ஊரும் அவந்திபுரம்(Avantipura) என்னும் ஊரும் உருவாக்கப்பட்டன. சிவன்கோயில்கள் பல கட்டப்பட்டன. இருப்பினும் இக்கோயில்கள் இலதிதாத்யன் கோயில்களைவிடத் தரம் குறைந்தவை. அவந்திவர்மன் பல மடங்களையும் உருவாக்கினார். இவருடைய அருஞ்சாதனைகளுள் ஒன்று சீலம் (Jhelum) ஆற்றுக்குக் குறுக்காக கட்டப்பெற்ற பெரும் நீர்த்தேக்கமாகும். இதனால் சீலம் ஆற்று வெள்ளைத்தைக் கட்டுப்படுத்தி, சீலத்தின் போக்கையே மாற்றியமைக்கும் வழியேற்பட்டது. இவர் அவ்வாற்றின் கரைகளைக் கற்களால் உயர்த்திக் கட்டினார். இம்மன்னனுக்கு உறுதுணையாக இவருடைய பொறியாளர்களுள் ஒருவரான சூயர் (Suyya) என்பார் இருந்தார்.

அவந்திவர்மன் கற்றோரைப் போற்றினார். இவருடைய அவையில் ஆனந்தவர்த்தனர் (Anandavardhana) என்னும் நூலாசிரியர் இருந்தார். துவன்யலோகம் (Dhvanyaloka) என்னும் நூலுக்கு இவரே உரை எழுதினார். கப்பனாப்யதயம் (Kapphanabhyadaya)என்னும் புத்தசமய இதிகாசத்தின் ஆசிரியரான சிவசாமின்(Sivasvamin) என்பாரும் அரிவிசயம் (Harivijaya) என்னும் நீண்ட காவியத்தை எழுதிய இரத்னாகரரும் (Ratnakara) பாணரின் காதம்பரி என்னும் நாடகத்தைச் செய்யுள் வடிவில் அமைத்த அபிநந்தரும்(Abhinanda)அவந்திவர்மனின் அவையை அலங்கரித்தனர்.

அவந்திவர்மனை அடுத்துச் சங்கரவர்மன் அறியணை ஏறினார். இவர் கி. பி. 883 முதல் 902-ஆம் ஆண்டு வரை அரசு நடத்தினார். இவர் போராடி வெற்றிபெற்ற பின்னரே பதவியைப் பெற்றார். கார்க்கோடப் பேரரசைப் புதுப்பிக்கவும் இவர் முயற்சி செய்தார். மிகிரபோசரின்(Mihira Bhoja)பெருகி வளரும் அதிகாரத்தை இவர் கட்டுப்படுத்தித் தடை செய்தார். மிகிரபோசரின் குறுநிலமன்னர்களுள் சிலரை இவர் வென்றார். இதற்குப் பின்னர் இவருடைய ஆக்கிரமிப்புக் கொள்கை வெற்றிபெறவில்லை. சங்கரவர்மன் தம் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்துக் கொடுங்கோலாட்சிக்கு வழி வகுத்தார். ஏழை மக்களை ஒறுத்துக் கட்டாயமாகப் பணி செய்ய வேண்டுமென வருத்தினார். கோயில்களுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட சிற்றூர்களைப் பறித்துக் கொண்டு, அக்கோயில்களுக்குக் குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கினார். எடைக்கற்கள், படிகல் போன்றவற்றின் அளவுகளைக் குறைத்து அரசின் வருமானத்தைப் பெருக்கவும் இவர் முயற்சி செய்தார்; கற்றோரைப் போற்றிப் புரக்கும் பணியையும் விடுத்தார். ஆனால், இவர் சங்கரபுரம் (Sankarapura) என்னும் ஊரில் இரு சிவன் கோயில்களைக் கட்டியதுடன், பல்லதசதகம் என்னும் நூலையாத்த பல்லதர் (Bhallata) என்பாரைப் போற்றிக் காத்தார். பல்லதர் பத்மமஞ்சரி (Padmamanjari) என்னும் பேரகராதியையும் தொகுத்தார். சங்கரவர்மன் படையெடுப்பிலிருந்து திரும்பியபோது கி. பி. 902-ஆம் ஆண்டில் காலமானார்.

சங்கரவர்மனுக்குப்பின் அவர் தம் மனைவியான சுகந்தா ஆட்சி செய்ய முயன்றாள். இவனுடைய ஆட்சியின்போது தந்திரிகள்(Tantrins)என்னும் படைத்தலைவர்கள் வல்லாட்சி நடத்தினர். இந்தத் தந்திரிகளைக் குறுநில மன்னர்கள் சிலர் இணைந்து அடக்கினர். உத்பலமரபினரின் ஆட்சியைப் பிராமணர்களின் அவையொன்று முடிவுக்குக் கொணர்ந்தது. யசசுகாரர் (Yasaskara) என்பார் முடிமன்னராக்கப்பட்டார்.

***உத்பலாச்சாரியார்***: காசுமீரச் சைவ சமயம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காசுமீரத்தில் தோன்றியது. அது வேதத்தை மேற்கொள்

ளாது, சாதி, நாடு முதலிய எல்லைகளை நோக்காது, மக்கள் எல்லோரும் சகோதரர்கள் என்பதையும் எல்லாத் தோற்றமும் அடிப்படையான நுண் பொருளின் பருப்பொருளாகும் என்பதையும் வலியுறுத்தியது. சிவசூத்திரத்திற்கு ஆசிரியரான வாசுகுப்தர் (கி.பி.825) என்பார்ஆகமக் கொள்கைகளைச் சாத்திர முறையில் விளக்கிய முதல்வராவர். சோமநந்தர் உண்மைப் பொருளைப் பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ந்தார். சோமநந்தரின் மாணவர் உத்பலாச்சாரியார் (கி.பி.900–950). இவர் மற்றைய சமயக்கட்சிகளோடு வேறுபட்ட பலவகைப் பௌத்தக் கட்சிகளை நுணுகி ஆராய்ந்து குறை கண்டார்.

அக்காலத்தில் பௌத்தம் காசுமீரத்தில் அதிகாரத்திலிருந்ததால் ஒருமைக் கொள்கைச் சைவத்தைப் பௌத்தர்கள் மறுத்தனர். அதற்கு மறுப்பாக உத்பலாச்சாரியார் ஈசுவர பிரத்யபிக்ஞா காரிகையையும் அதன் இரண்டு விருத்தியுரைகளையும் செய்தார்.

உத்பலாச்சாரியார் (Utpalachari) கருத்துப்படி சிவன் உண்மைப் பொருள், எல்லையில்லாத தன்னறிவுடைவர்; வரையறை செய்யமுடியாத தன்னுரிமையுடையவர்; எங்கும் நிறைந்தவர்; உருவமற்றவர்; நிலையானவர். அவரன்றி வேறொரு பொருளுமில்லை. உலகு வெளியே இருப்பதுபோலத் தோன்றினாலும், அது அவருடைய உணர்விலேயே அமைந்திருக்கிறது. கடவுள் தம் எண்ணத்தினால் உலகைத் தோற்றுவிக்கிறார். கண்ணாடியில் உருவங்கள் தோன்றுதல்போல உலகம் கடவுளிடமிருந்து தோன்றினாலும், வேறுபட்டிருப்பது போல் காணப்படுகிறது. அவரிடமிருக்கும் சக்தியினால் ஆன்மாக்களும் அவற்றின் அனுபவங்களும் ஏற்படுகின்றன. கடவுளிடமிருந்து ஏற்படுகிற தோற்றங்களினால் கடவுள் பாதிக்கப்படுவதில்லை. உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ளுதலே (Recognition) விடுதலையடையும் வழி என்று உத்பலாச்சாரியார் கூறுகிறார். மேலும் இவர் 36 தத்துவங்களையும் ஒப்புக்கொள்கிறார்.

இவர் சிவ தோத்ராவளி, ஈசுவர சித்தி, அசத பிரமாதிரி (Ajadapramatri), இசுபந்தபரதீபிகா (Spanda Paradipika) என்ற நூல்களும் எழுதியிருக்கிறார். எஸ் இல

துணை நூல்கள்:

**Kachur, Durga Prasad**, Utpala, The Saint Mystic of Kashmir, A monograph, Poona, 1945.

**Kaw, R.K.,** The Doctrine of Recognition (Pratyabhina Philosophy), Visheshvaranand Institute, Hoshiarpur, Punjab, 1967.

**Sharma**, L.N., Kashmir Saivism, Bharatiya Vidya Prakasham, Varanasi, 1972.

**உதகமண்டலம்**: தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தின் தலைநகரும் தமிழ்நாட்டின் தலைசிறந்த கோடைவாசத்தலமுமாகும். இதனை ஊட்டி (Ooty) என்றும் கூறுவர். இங்குத் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் தொதவர்கள் இதனை 'ஒத்தகமந்து' என்று தம் மொழியில் கூறினர். ஒத்தைக்கல் மந்து (ஒற்றைக்கல் மந்து) என்னும் தமிழ்ச் சொல்லே ஒத்தகமந்து' என்று திரிந்துள்ளது என்பர்.

உதகமண்டலம் நீலகிரி மாவட்டத்தின் பெருநகரம். இதன் மக்கள் தொகை 78,186 (1981). இந்நகரம் கடல் மட்டத்தை விட 2600மீ. உயரமுடையது. தமிழ் நாட்டின் மிக உயர்ந்த மலையுச்சியான தொட்டபெட்டா (Doddabetta) உதகமண்டலத்திலிருந்து மேலே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் உயரம் 2640 மீ.

கோவை மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக கி.பி. 1819-இல் இருந்த சான் சலிவன் (John Sullivan) நீலகிரிக்குச் சென்ற முதல் வெள்ளையர். இவர் சில ஆண்டுகளுக்குப் பின்னர் உதகமண்டலத்தில் தங்குவதற்காக முதன் முதலில் வீட்டையும் கட்டிக் கொண்டார். இசுடீபன் இரம்போல்டு இலசிங்கன் (Stephen Rambold Lushington) இந்நகரத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். இவர் கி.பி. 1827 முதல் 1832 வரை சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தார். கி.பி. 1855-இல் இது நகராட்சியாக மாறியது.

நீலகிரி மாவட்டம் தென்மேற்குப் பருவக்காற்றினால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1520 முதல் 1780 மி.மீ. வரை மழை பொழிகிறது. உதக மண்டலத்தைச் சுற்றியுள்ள மலைச்சரிவுகளிலும் பள்ளத்தாக்கிலும் தேயிலை, காப்பி போன்ற பணப்பயிர்கள் விளைகின்றன. உயர்ந்து செழிப்பாக வளரும் தேக்கு மரமும் சந்தன மரமும் காட்டு மர வகைகளாகும். இவற்றைத் தவிரத்தைலமரம் எனப்படும் 'யூகலிப்டசு' மரங்கள் உயர்ந்து வளருகின்றன. இம்மர வளர்ச்சிக்கு உதக மண்டலத்தின் தட்பவெப்பநிலை பொருத்தமுடையதாக உள்ளது. இங்குக் கொய்னாத் தோட்டங்களும் உள்ளன. கொய்னா மரப்பொருள்களிருந்து மருந்துகள் தயாரிக்கின்றனர்.

உதகமண்டலத்தில் காய்கறிகள் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. உருளைக்கிழங்கு, முட்டைக்

கோசு போன்றவை இங்குச் சிறப்பாகப் பயிராகின்றன. தோட்டப் பயிர்களுள் தேயிலையும் காப்பியும் சிறப்பானவை. இந்தியாவில். அசாமிற்கு அடுத்தபடியாகத் தேயிலை உதகமண்டலப் பகுதியில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது.

இந்நகரின் மையத்தில் உள்ள அழகான ஏரியும் அதன் அருகில் குதிரைப் பந்தய மைதானமும் பயணியர் தங்கும் விடுதிகளும் சிற்றுண்டிச் சாலைகளும் அழகிய பூங்காவும் தாவரவியல் தோட்டமும் இந்நகருக்கு அழகூட்டுவன. ஆண்டு தோறும் மே திங்களில் இங்கு மலர்க் காட்சி நடைபெறுகிறது. இதனைக் கண்டுகளிக்கப் பல்லாயிரவர் திரளுகின்றனர்.

உதகமண்டலத்தைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் தொதவர்கள் என்னும் பழங்குடி மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். பழங்குடி மக்களாயினும் இவர்கள் உருவத்தில் அழகானவர்கள். இருளர் படகர், கோத்தர் போன்ற ஏனைய பழங்குடி மக்களும் வாழ்கிறார்கள். படகர் நீலகிரி மாவட்டத்தில் மிகுதியாக வாழும் பழங்குடியினர். இங்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பழங்குடி மக்கள் ஆய்வு மையம் ஒன்றை நடத்திவருகிறது. இங்கு இந்துசுத்தான் ஒளிப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

**உதய்பூர்** மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூர்; கோயிற் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றது. சாஞ்சிக்கருகிலுள்ள பில்சா (Bhilsa) என்னும் தொன்மையான ஊருக்கு அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. உதயாதித்யா (Udayaditya) என்னும் பரமாரா (Paramara) அரசர் இங்கு உதயேசுவரம் என்னும் கோயிலைக் கட்டியுள்ளார். இக் கோயில் கி.பி. 1059க்கும் கி.பி. 1080க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. இவருக்கு முன்னர் ஆட்சிபுரிந்த போசா (Bhoja) என்னும் அரசர் கட்டடக் கலையில் நாட்டம் மிக்கவர். அவரைப் போன்றே உதயாதித்யாவும் கட்டடக்கலையில் ஆர்வமிக்கவராக விளங்கினர். உதயாதித்யா உதயசமுத்திரம் என்னும் பெரிய குளத்தை வெட்டினார். உதயாதித்யாவின் பெயரால் உதய்பூர் (Udaipur) அமைக்கப்பட்டது. இவரது பெயராலேயே இங்குள்ள கோயிலும் உதயேசுவரம் என்று கூறப்படுகிறது.

உதயேசுவரம் கோயில் நீள்சதுர வடிவம் உடையது. இக்கோயில் கருவறையையும் மூன்று முகப்பு மண்டபங்களையும் ஒரு பெரிய அறையையும் கொண்டுள்ளது. மாடக்குழியில் காணப்படும் ஆடவல்லான் சிற்பம் பரமாரர்களின் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று பகர்வதாக அமைந்துள்ளது. சரசுவதி, பார்வதி ஆகியோரின் நடனச் சிற்பங்கள் விமானத்தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இந்து சமயக் கடவுள்களின் உருவங்கள் பெருமளவில் இக்கோயிலில் காணப்படுகின்றன. திக்குப்பாலர்கள், கணேசர், கார்த்திகேயன், துர்க்கை, சிவன், திருமால், பிரமன் ஆகியோரின் சிற்பங்கள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இக்கோயிலின் கருவறை மேலே உயர்ந்த விமானத்தையும் மண்டபக் கூரை பிரமிடு அமைப்பையும் கொண்டு விளங்குகிறது. விமானத்தின் மேற்பகுதியில் உள்ள சிகரத்தில் மானிடச் சிற்பமொன்று காணப்படுகிறது. இது இக்கோயிலைக் கட்டிய கலைஞரின் சிற்பம் என்று கூறப்படுகிறது. இக்கோயிலைச் சுற்றி எட்டுச்சிறிய கோயில்கள் உள்ளன. இவை யாவும் பெருமளவில் அழிந்து காணப்படுகின்றன.



உதயேசுவரம் கோயில்


**உதயகிரி** மத்திய பிரதேச மாநில விதிசா (Vidisa) மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். வரலாற்றுப் புகழ்வாய்ந்த சாஞ்சி என்ற இடத்திலிருந்து சுமார் 7 கி.மீ. வடகிழக்கில் சென்றால் இவ்வூரை அடையலாம். இவ்வூர் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்தது. இங்கு இந்துக்கடவுள்களுக்கும் சமண தீர்த்தங்கரர்களுக்கும் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் 20க்கும் மேற்பட்ட குகைக் கோயில்கள் இங்கு உள்ளன. இயற்கையாக அமைந்த பாறைகளைக் குடைந்து இக் குகைக் கோயில்களை அமைத்துள்ளனர்.

இங்குள்ள குகைக் கோயில்களுள் சில முழுமையாகவும் சில முற்றுப் பெறாமலும் காட்சியளிக்கின்றன. பாறைகளை முழுமையாகக் குடைந்து குகைக்கோயில்களை அமைத்துள்ளனர். இக்குகைக் கோயில்களில் கருவறை செல்வகமாக விளங்க அதற்கு

முன் தூண்களுடன் கூடிய மண்டபங்கள் உள்ளன. பிற்காலத்தில் கற்களால் சில பகுதிகளைக் கட்டியுள்ளனர். குகைக் கோயிலின் முன்பகுதியில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. இவை குப்தர் காலத்திய கலை நுணுக்கத்தை எடுத்துக் கூறுகின்றன. இத்தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும் அதற்கு மேற்பகுதி எண்கோணமாகவும் மேற்பாகம் 16 முனை முகடுகளைக் கொண்டும் அமைந்துள்ளன. இவற்றிற்கு மேல் கும்பவாளி (குடம்) காணப்படுகிறது. கருவறையின் உள்ளே செல்லும் வழி மிகுந்த வேலைப்பாடுடன் அணிவகை செய்யப்பட்டுள்ளது.

வைக்கக் கருவறையின் நடுப்பகுதியில் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள மிகப் பெரிய குகைக் கோயில் சமண சமயத்தைச் சார்ந்தது. இக்குகையின் உள்பாகத்தில் பல அறைகள் உள்ளன. இங்கும் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பகுதிகள் உள்ளன. 'தாவா குகை' (Tawa Cave) என்பது மிக முக்கியமான குடைவரைக் கோயில் ஆகும். இதனுடைய அமைப்பு ஏறக்குறைய வட்டமானது. பெரிய பாறையைக் குடைந்து இந்தக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குக் காணப்படும்



உதயகிரி குகைக்கோயில்

பிற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வாயிலின் மேற்பாகத்தில் பலவகையான சிற்பங்கள் உள்ளன. ஆற்றுத் தெய்வங்களான கங்கையும் யமுனையும் இருபுறங்களிலும் காணப்படுகின்றன. முதலை, ஆமை ஆகிய வாகனங்கள் தெளிவான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழ் வாயில்காப்போர் (துவாரபாலகர்கள்) இருவர் புடைப்புச் சிற்பமாக உள்ளனர். இவற்றைத் தவிர மண்டபங்களின் சுவரிலும் பல வகையான புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. கருவறையின் உட்பகுதி சாதாரணமாக அமைக்கப்பட்டுள்ளது. மூலவரை

கல்வெட்டில் சந்திரகுப்தரின் அமைச்சர் இக்குடைவரையைக் குடைவித்தார் என்பது கூறப்பட்டுள்ளது.

இங்கு கி.பி. 400-இல் செதுக்கப்பட்டுள்ள வராகி அவதாரம் குறிப்பிடத்தக்கது. திருமாலின் பத்து அவதாரங்களுள் பல குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ளன. இதன் கம்பீரமான தோற்றமும் வனப்பும் கண்களைக் கவர்வன. திருமால் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் காட்சியும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

குப்த மன்னரான இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 375-414) காலத்தில் இவ்வூர் பெரிய கலைக்


கூடமாக மாற்றப்பட்டிருந்தது. குப்தர்களின் கட்டடக் கலைக்கு இக்குகைக் கோயில்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

**உதயகிரி[2]**: ஒரிசா மாநிலம் பூரி மாவட்டத்தில் உள்ள ஊர். இங்கு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த குகைக் கோயில்கள் காணப்படுகின்றன. இங்கு உதயகிரி, கந்தகிரி என்ற இரண்டு மலைகள் உள்ளன.

இங்குச் சுமார் 25 குடைவரைகள் உள்ளன. இவை சமண சமயத்தைச் சார்ந்தவர்களால் குடையப்பட்டவை. இங்கு இயற்கையாக அமைந்த குகையைப் பெரிதாக மாற்றியும் புதிய குகைகளைக் குடைந்தும் செய்யப்பட்ட இருவகையான குகைக் கோயில்களைக் காணலாம். குடைவரையில் கருவறைகளும் அதைத் தொடர்ந்து தூண்களுடன் கூடிய மண்டபங்களும் உள்ளன. இங்குள்ள தூண்கள் மரத்தூண்களைப் போன்று அலங்கார வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றன. தூண்கள் சதுரமாகவும் எண்கோண வடிவத்திலும் உள்ளன.

இங்குள்ள 4 குடைவரைகள் மிக முக்கியமானவை. இவை அனைத்தும் ஒரே சீராகக் குடைந்தவை எனக் கூறமுடியாது. குகை எண் – 1 'இராணி கும்பா' என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள குடைவரைகளில் இதுவே முதன்மையானது. இது இரண்டு தளங்களை உடையது. இது இக்குகையின் மேற்பாகத்தில் மரத்தின் கிளைகள் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குகைக் கோயிலின் வாயிற்பகுதி அரைவட்டத் தோரணம் போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதனுடைய இருபகுதிகளில் உள்ள மேற்பாகத்தில் விலங்குகளின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதன் முற்பகுதி அரைவட்டத் தோற்றமுடையது. வாயிலின் மேற்பாகத்திலும் இருபகுதிகளிலும் அலங்காரப் பூவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இங்கிருந்து மேல் தளத்திற்குச் செல்லப் படிகள் காணப்படுகின்றன. மேல்தளத்தில் முற்றம் தூண்களுடன் கூடிய மண்டபம் போன்று காட்சி தருகின்றது. இதைத் தொடர்ந்து குடைவரைகள் பல உள்ளன. இங்கும் சுமார் 10 குடைவரைகள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குகைகளில் புராணக் கதைகளைச் சிற்ப வடிவில் செதுக்கி வைத்துள்ளனர். இவைகள் அனைத்தும் புடைப்புச் சிற்பங்கள் ஆகும். குகை எண் – 10 'கணேச கும்பா' என்று சொல்லப்படுகிறது. இங்கு இரண்டு பெரிய யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்கள் புராணக் கதையைக் கூறுவதாக அமைந்துள்ளன.

தி.சு.



இராணி கும்பா – உதயகிரி

துணை நூல்கள்:

Archaeological Remains Monuments and Museums Part I, Archaeological Survey of India, New Delhi, 1964.

**Percy Brown**, Indian Architecture (Buddhist and Hindu), Tara Porevala Sons & Co., Pvt. Ltd, Bombay, 1981.

**உதயகுமரன்** ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் இடம்பெற்றுள்ள கதை மாந்தர்களுள் ஒருவன். காவிரிப்பூம்பட்டினத்தரசன் நெடுமுடிக்கிள்ளியின் மகன். இவன் சிறந்த போர்த் திறனும் கலையுள்ளமும் பெற்றிருந்தான். ஒருநாள் கட்டவிழ்த்துத் திரிந்த யானையை அடக்கிவிட்டு ஆடல்மகளிர் தெருவழியாக வரும்பொழுது எட்டி குமரனால் மணிமேகலையை அறிந்தான். இவன் அவளிடம் காதல்கொண்டு அவளைத்தேடி உவவனம் என்னும் மலர்க்காவிற்குச் சென்றான். மணிமேகலை பளிக்கறை மண்டபத்தில் மறைந்துகொண்டதால் காணாமல் திரும்பிவிட்டான். பின்னர்ச் சித்திராபதி யால் அறிந்து மணிமேகலையிருக்கும் உலக அறவிக் குச் சென்றான். அங்கு இவன் அவளிடம் தவம் செய்வதின் பயனை வினவ அதற்குப் பதில் கூறிவிட்டு அவள் சம்பாபதியாள் கோவிலுக்குள் நுழைந்தாள். இவனிடமிருந்து தப்பிப்பதற்காக மணிமேகலை காஞ் சனன் என்னும் வானவன் மனைவி காயசண்டிகை யின் உருவம் பெற்றாள்.

காஞ்சனன் பல ஆண்டுகளாகத் தன் மனைவி யைக் காணாமல் தேடி அலைந்து அங்கு வந்து சேர்ந் தான். காயசண்டிகை உருவில் உள்ள மணிமேகலை யிடம் சென்று தன் மனைவியென எண்ணிப் பழ மையை எடுத்துக் கூறினான். அதற்கு அவள் ஒன்றும் கூறாதவளாய்ச் சென்றுவிட்டாள். உதயகுமரன் காதலுடன் தன்னை அணுகியபோது மணிமேகலை அவனுக்கு அறிவுரைகள் சொல்லி, அவனுடைய விருப்பத்தை மறுத்தாள். உதயகுமரன் நடுஇரவில் உலக அறவியில் தங்கியுள்ள காயசண்டிகை உருவில் உள்ள மணிமேகலையிடம் வந்தான். அப்பொழுது மறைந்திருந்த காஞ்சனன் தன் மனைவியிடம் இவன் காம விருப்பத்தோடு வந்துள்ளான் என்று கருதி, உதயகுமரனை வாளால் வெட்டிக் கொன்றான்.

**உதயசங்கர் பட்டு (கி.பி. 1898-1966)** 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்தி எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் புதினம், கவிதை, நாடகம், ஓரங்க நாடகம் முதலிய துறைகளில் புகழ் பெற்று விளங்கினார்; இக்கால இந்தி இலக்கியத்துக் குப் புத்துயிர் அளித்தார். இவர் நாடகங்களுள் சில மேனாட்டு நாடகக் கலையைப் பின்பற்றி எழுந்தவை. அந்நாடகங்கள் இந்தியப் பண்பாட்டையும் பண் டைய நாகரிகத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவ ருடைய நாடகங்கள் இக்கால வாழ்க்கையின் சிக்கல் களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இவர் படைப்புகளுள் 'விக்கிரமாதித்ய', 'தாகர்' போன்ற வரலாற்று நாடகங்களும், 'அம்பா', 'சகர விசயம்' போன்ற புராண நாடகங்களும் பழங்கால இந்திய நாகரிகத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. இக்கா லச் சிக்கல்களை அறிந்துகொள்ள 'கமலா', 'அந்த கீன் அந்து' (எல்லையற்ற எல்லை), 'நயா சமாசு' (புது சமுதாயம்) முதலிய சமுதாய நாடகங்கள் பேருதவி புரிகின்றன. இவருடைய ஓரங்க நாடகத் தொகுப்புகளாக 'மத்சய கந்தர்', விசுவாமித்ர' முத லிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. நாவல் இலக் கியத்துள் 'சாகர்' லகரேங் ஔர் மனுத்ய' (கடல், அலை மற்றும் மனிதன்), 'நயாமோட்' (புதிய திருப் பம்) ஆகியன இவருக்கு அழியாப் புகழ் தந்தவை யாகும்.

**உதயசிங்கு** இராணா பிரதாபசிங்கின் தந்தை. இராசபுதன வரலாற்றில் சிறப்புப் பெற்றது மேவார். மேவார் இராணாக்கள் வீரச் செயல்களுக்குப் பெயர் பெற்றவர்கள். சித்தூர் மேவாரின் தலைநகராக விளங்கியது. இதனை இப்போது சித்தூர்கர் (Chitorgar) என்பர். உதயசிங்கு (Udai Singh) மேவாரின் இராணாவாக இருந்தகாலத்தில் மொகலாயப் பேர ரசை அக்பர் ஆண்டுவந்தார். அக்பர் இராசபுதனத் தின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட போதும், அவரால் மேவாரைக் கைப்பற்ற இயல வில்லை.

அக்பர் சித்தூர்க் கோட்டையை கி.பி. 1567-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முற்றுகையிட்டார். முற்றுகையை எதிர்க்க வகையறியாத உதயசிங்கு சித் தூரை விட்டு அருகிலிருந்த குன்றுகளுக்கு ஓடி விட்டார். சித்தூரை அத்தருணத்தில் செய்மால் (Jaimall), பட்டா (Patta) என்னும் வீரர் இருவர் காவல் புரிந்தனர். இவ்விருவரும் மொகலாயர் களின் முற்றுகையை எதிர்த்து நின்றனர். நான்கு மாதங்கள் தொடர்ந்த இம் முற்றுகை வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. மொகலாயரின் பெரும்படையை இராசபுத்திரரின் சிறுபடை நான்கு மாதங்கள் எதிர்த் துச் சமாளித்தது.

அக்பரின் துப்பாக்கிச் சூட்டிற்குச் செய்மால் இரையானார். பின்னர்ப் பட்டாவும் போரில் இறந்து பட்டார். திறன்மிக்க இவ்விரு வீரர்களின் சாவு இராசபுத்திரப் படை வீரர்களிடையே கலக்கத்தைத்

தோற்றுவித்தது. கைகளில் உடைவாளேந்தி இராச புத்திர வீரர்கள் மொகலாயப் படையைத் தாக்கி னர். அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். இராசபுத்திரப் பெண்கள் சவ்கர் (Jauhar) என்னும் தீமூட்டி அதில் குளித்துத் தம் உயிரினை மாய்த் துக் கொண்டனர். அக்பர் பின்னர்ச் சித்தூர்க் கோட் டையைத் தகர்த்து முன்னேறினார். இப்போரில் 30,000 பேர் இறந்துபட்டதாக அபுல் பசல் குறிப்பிட் டுள்ளார். எனினும் அவ்வளவு பேர் கொல்லப்பட்ட தாகக் குறிக்கப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்பது வரலாற்றாசிரியர்களின் கூற்றாகும். சித் தூர் வீழ்ச்சியுற்றது. உதயசிங்கு சித்தூரை இழந்து விட்ட போதிலும் மேவாரைத் தொடர்ந்து ஆண்டு வந்தார். இவர் மொகலாயருக்கு அடிபணிய மறுத்து விட்டார்.

இணையற்ற இம்மாவீர மன்னர் 3-3-1572-இல் கோகுண்டா (Gogunda) என்னுமிடத்தில் காலமா னார்.

**உதயணகுமார காவியம்** ஐஞ்சிறு காப்பி யங்களுள் ஒன்று. இக் காவியம் கொங்குவேளிர் இயற்றிய ‘பெருங்கதை’யின் வழிநூலாகும். பெருங் கதை மிக்க கல்வியுடையார்க்கன்றி மற்றவர் அறிதற் கியலாததாகவும், ஏடுகளை அரிதின் முயன்று தேடிக் கற்போருக்கல்லாது ஏனையோர்க்குக் கிடைத்தற் கரியதாகவும் இருந்தது. எனவே அப்பெருநூலில் அமைந்து விளங்கும் கதையினைத் தமிழ் மக்கள் அனைவரும் எளிதில் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் புலவர் ஒருவர் இக்காப்பி யத்தை இயற்றியுள்ளார். இந்நூல் விருத்தயாப்பில் செய்யப்பட்டது. இது உஞ்சைக் காண்டம், இலா வாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் ஆகிய ஆறு காண்டங்களையுடையது. இந்நூலை முதன் முதலில் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் 1935-இல் குறிப் புரையுடன் பதிப்பித்துள்ளார். அதன் முகவுரையில் இது ‘காப்பியவிலக்கணமுடையதன்று; இலக்கண வழுக்கள் உள்ளன; சந்த நயமும் பொலிவும் இல்லை’ என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**உதயணன்** கொங்குவேளிர் இயற்றிய பெருங் கதைக் காப்பியத்தில் அமைந்துள்ள கதை மாந்தருள் முதன்மையானவன்; வத்தவ நாட்டுச் சதானிகனுக் கும் மிருகாபதிக்கும் மகனாகப் பிறந்தவன். குரு குலத்தைச் சேர்ந்த இவன் சூரியன் உதிக்கும் காலத் தில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றான். கருவுற்றி ருந்த இவன் தாய் இரவில் உறங்கும்பொழுது அவளைச் சரபப்பறவை ஒன்று தசைத்தொகுதி என்று நினைத்துத் தூக்கி ஒரு காட்டிற்குச் சென் றது. அக்காட்டில் மிருகாபதி விழித்துக்கொண்டாள். அங்குத் தன் தந்தை தவமேற்கொண்டிருந்த படியால் மகளும் தந்தையும் ஓரிடத்தில் சந்தித்தனர். அங்கி ருக்கும்பொழுது பேறுகாலம் நெருங்க ஆண் குழந்தையொன்றை ஈன்றெடுத்தாள். அதற்கு உதய ணன் எனப் பெயரிட்டனர்.

உதயணன் இயற்கையிலேயே நல்ல அழகுடைய வன். தன் பாட்டனாரால் பிரமசுந்தர முனிவரின் நட்பு உதயணனுக்குக் கிடைத்தது. பிரமசுந்தர முனி வரின் வாயிலாக யானையை அடக்கி ஆளும் மந்தி ரத்தையும், கோடபதி என்னும் யாழினையும் பெற்றான். இது எப்போதும் தன் தன்மை திரியா தது. இதன்பால் இவனுக்குப் பெருமதிப்பிருந்தது. இவன் யாழிற்குரிய மரங்களின் இயல்புகளையும் நரம்புகளின் இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந் தான். இளமை முதற்கொண்டே பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து, அவற்றைப் பயிற்றுவித்தலிலும் சிறந்து விளங்கினான். இதனால் ‘ஆசான் தேசிகன்’ என்றும், ‘விச்சை வீரன்’ என்றும் இவன் சிறப்பிக்கப் பெற்றான். இவன் பெற்றோர்தம் குல மரபு புகழ் மிக்கது. தந்தையின் குலமாகிய குருகுலத்திற்கும் தாயின் குலமாகிய ஏயர் குலத்திற்கும் இவன் உரிமை பெற்றுத் திகழ்ந்தான். இவன் அரசர்களுக்கு அரசனாகவும் தனிச் செங்கோல் செலுத்துபவனாக வும் கருதப்பட்டான்.

கோசம்பி நகரில் இவன் ஆட்சி புரிந்து கொண் டிருந்தபொழுது உச்சயினி நாட்டரசன் பிரச் சோதனனுக்கும் இவனுக்கும் போர் நடைபெற்றது. அப்போரில் உதயணன் சாலங்காயன் என்னும் அமைச்சனின் சூழ்ச்சியால் சிறைப்படுத்தப்பட்டான். அச்சமயம் பிரச்சோதனனின் பட்டத்து யானை மதம் பிடித்து அந்நகரை அழித்தது. அதனைக் கண்ட பிரச்சோதனன் செய்வதறியாது திகைத்தான். அப் பொழுது சாலங்காயன் என்பவன் உதயணன் இம்மத யானையை அடக்கி விடுவான் என்று கூறினான். அவ்வண்ணமே அரசன் ஆணையிட உதயணன் தன் மந்திரத் திறமையால் அம்மத யானையை அடக்கி னான். அதனைக் கண்ட அரசனும் மற்றையோரும் இவனைப் பாராட்டினர். பிரச்சோதனன் தன் மகள் வாசவதத்தையைத் திருமணம் செய்து கொடுக்கத் திட்டமிட்டான். அதன் காரணமாக மன்னன் குஞ் சரச் சேரியில் மாளிகையொன்று அமைத்தான்.

உதயணனுக்கு வாசவதத்தை முதலிய மனை வியர் நால்வர் இருந்தனர். இடவகன், உருமண்ணுவா,

யூகி, வயந்தகன் ஆகிய நால்வர் சிறப்பு வாய்ந்த அமைச்சர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் இவனுக்குச் சிறந்த நண்பர்களாகவும் இருந்து பல உதவிகள் புரிந்தனர். மேலும், இசைச்சன் போன்ற பல நண்பர்களும் இருந்தனர். இவன் மலர்களால் கண்ணி தொடுப்பதிலும் வாழைக்குருத்தில் நகத்தினால் ஓவியங்கள் வரைவதிலும் வல்லவன்.

**உதயப்பூர்** இராசசுத்தானத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற நகரம்; பிச்சோலா என்ற ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இது கி.பி. 1568 முதல் மேவார் இராசபுத்திர அரசின் தலைநகரமாக இருந்தது. உதயப்பூர் இந்தியாவின் அழகுமிக்க நகரங்களுள் ஒன்றாகும். இவ்வூரிலுள்ள இராணாவின் அரண்மனை மிக்க அழகு வாய்ந்தது. இவ்வரண்மனையின் முக்கிய பகுதி 1570-இல் கட்டப்பட்டது. இவ்வரண்மனையின் மற்றப் பகுதிகள் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டன. அரண்மனை இராய் அங்கன், கரன் விலாசம், பாரிபோல், அமர விலாசம், திரிபுலியா வாயில், சினி கிசித்திரா வாயில் என்று பல்வேறு பகுதிகளைக் கொண்டது. இவை யாவும் அழகுமிக்க சிற்பங்கள் கொண்டு விளங்குகின்றன. இங்குள்ள சகமந்திரத் தீவில் உள்ள குல்மகால் என்னும் கட்டடம் கி.பி. 1640-இல் கட்டப்பட்டது. சகநிவாசம் என்னும் கட்டடம் கி.பி. 1740-இல் இங்குள்ள ஏரியில் உள்ள தீவில் கட்டப்பட்டது. இவையிரண்டும் பேரழகு மிக்க கட்டடங்கள் ஆகும். சகநிவாசம் ஏரியில் மிதக்கும் வீடு போல் பார்ப்போரின் கண்களுக்கு அழகு ஊட்டும் கட்டடமாக விளங்குகிறது. இங்குள்ள சுவர் ஓவியங்கள் இன்றளவும் அழியாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவை இராசபுத்திரர்களின் ஓவியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. உதயப்பூரில் உள்ள கட்டடங்கள் இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியைத் தழுவிய இந்துக் கட்டடங்கள் ஆகும். இங்குப் பல ஏரிகள் உள்ளன. இவற்றுள் 34 கி.மீ. பரப்புள்ள தேபார் தனிப்பத்தி என்னும் ஏரி மிகவும் அழகு வாய்ந்தது. உதயப்பூர் சமத்தானம் 1949-ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுடன் இணைக்கப்பட்டது.

**உதயேந்திரம் செப்பேடுகள்** முதலாம் நந்திவர்மன் காலத்தில் வெளியிடப்பெற்றவை; வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் உள்ள உதயேந்திரம் என்ற சிற்றூரில் கண்டுபிடிக்கப்பட்டவை.

இவை மூன்று ஏடுகளைக் கொண்டவை. இவற்றின் முதல் ஏட்டிலும் கடைசி ஏட்டிலும் உட்புறத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. முதல் ஏட்டின் முன்புறத்தில் முதலாம் பராந்தக சோழனின் ஆட்சிக் காலத்தில் தமிழில் பொறிக்கப்பட்ட புறக்குறிப்பு (Endorsement) இடம் பெற்றுள்ளது. இச்செப்பேடு முழுவதும் வடமொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. முதலாம் நந்திவர்ம பல்லவன் தன் முதலாம் ஆட்சியாண்டில் கூலசர்மான் என்பானுக்கு அடையாற்று நாட்டில் உள்ள காஞ்சிவாயில் என்னும் சிற்றூரையும், காட்டு நிலம் நான்கு பட்டிகளையும் பிரமதேயமாக வழங்கியதை இச்செப்பேடு தெரிவிக்கிறது. முதலாம் நந்திவர்மனால் வைகாசி மாதம் வளர்பிறைப் பஞ்சமியில் காஞ்சிபுரத்திலிருந்து இச்செப்பேடு வழங்கப்பட்டது.

இச் செப்பேடுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள போதிலும் வடமொழியில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ள இச்செப்பேடுகள் ஆந்திரப்பிரதேசத்தில் வழக்கில் இருந்த தெலுங்கு-கன்னட எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் காணப்படும் எழுத்துகள் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் எழுத்தமைதியின்றி, பத்தாம் நூற்றாண்டின் எழுத்தமைதியைக் கொண்டுள்ளன. இதனால் இச்செப்பேடுகள் மூலப்படியிலிருந்து படியெடுக்கப்பட்டன என்பது தெளிவு.

இச்செப்பேடுகள் நந்திவர்ம பல்லவனின் சிறந்த பண்புகளை விரித்துரைக்கின்றன. இவன் பரத்துவாச கோத்திரத்தில் பிறந்தவன் என்றும், பாகவதர்களில் சிறந்தவன் என்றும், கலியுகப் பாவத்தை அடக்கி அறத்தை உயர்த்தி நிலைநிறுத்துவதில் ஆர்வம் கொண்டவன் என்றும், பல போர்களில் வெற்றி பெற்றவன் என்றும், பக்திமான் என்றும் இச்செப்பேடுகள் புகழ்ந்து பேசுகின்றன.

**உதயேந்திரம் செப்பேடுகள்**[2] பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் 21-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டவை. வட ஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம் வாணியம்பாடிக்கு அருகில் உள்ள உதயேந்திரம் என்னும் சிற்றூரில் இச்செப்பேடுகள் கி.பி. 1850-இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஐந்து ஏடுகளைக் கொண்டவை. இச்செப்பேடுகளின் முதல் ஏட்டின் முன்புறம் ஒன்றும் எழுதப்பெறவில்லை. மற்ற நான்கு ஏடுகளின் இருபுறமும் வடமொழியினால் எழுதப்பெற்றுள்ளன. செப்பேட்டின் இறுதியில் மட்டும் நான்கு வரிகளில் தமிழில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் எழுதப்பட்ட புறக்குறிப்பு ஒன்றுள்ளது. நந்திவர்ம பல்லவ மல்லனின் இருபத்தோராம் ஆட்சியாண்டில் அவனது படைத்தலைவனான உதயசந்திரன் என்பானின்

விண்ணப்பத்தின் பேரில், பாலாற்றங்கரையில் அமைந் திருந்த சிற்றூர் ஒன்று உதயசந்திரமங்கலம் என்று பெயரிடப் பெற்று, 180 பார்ப்பனர்களுக்குத் தான மாக வழங்கப்பட்ட செய்தியை இச்செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

இச்செப்பேடுகள் உமையுடன் கூடிய சதாசிவப் பெருமானுக்கு வணக்கம் சொல்லி வாழ்த்தும் வட மொழிச் சுலோகத்துடன் தொடங்குகின்றன. எதிரிக ளால் நந்திவரத்தில் முற்றுகையிடப்பட்ட நந்திவர்ம பல்லவமல்லனை உதயசந்திரன் விடுவித்ததை யும், பல்லவ மன்னனின் போர் வெற்றிகள் பற்றியும் இவை குறிப்பிடுகின்றன. மேலும் நிம்பவனம், சூத வனம். சங்கர கிராமம், நெல்வேலி முதலான இடங் களில் பெற்ற வெற்றிகள் பற்றியும், நெல்வேலியில் சங்க சேனாபதியுடன் செய்த போர் பற்றியும் புகழ்ந்து கூறுகின்றன. இவன் சபர மன்னனான உதயணனை வென்று, மயில் தோகையால் அழகு செய்யப்பெற்ற அவனுடைய கண்ணாடிக் கொடி யினைக் கைபற்றிய செய்தியும், இவன் வடதிசையில் பெற்ற வெற்றிகள் பற்றிய செய்தியும் இச்செப்பேடு களில் விவரிக்கப்பட்டுள்ளன.

பல்லவ வேந்தரின் குடிவழிப்பட்டியல் இச்செப் பேடுகளில் கூறப்பட்டுள்ளது. இப்பட்டியலில் சிம்ம விட்டுணு, மமேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இரண் டாம் மகேந்திரவர்மன், பரமேசுவரவர்மன், நந்தி வர்ம பல்லவமல்லன் முதலான பல்லவமன்னர்களின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன.

நந்திவர்மனின் வெற்றிச் சிறப்புகளும் அவன் அசுவமேதயாகம் செய்ததும் முத்து மாலைகளையும் பொற்குவியல்களையும் கைப்பற்றியதும் இச்செப் பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேடுகளில் தானம் பெற்ற பார்ப்பனர்களின் பெயர், கோத்தி ரம், ஊர்ப்பெயர் ஆகியனவும் கூறப்பட்டுள்ளன.

ம.இரா.த.

**உதாத்த அணி** தமிழ்மொழியில் அமைந்துள்ள தண்டியலங்காரம் கூறும் முப்பத்தைந்து பொருளணி களுள் ஒன்று. உதாத்தம் என்னும் சொல் 'பிறி தொன்றற்கில்லாத பெருமை' எனப் பொருள்படும். ஒருவன் பெற்றுள்ள வியக்கத்தக்க செல்வத்தின் உயர்ச்சியினையோ அவனது மேம்பட்ட உள்ளத்தின் உயர்ச்சியினையோ சிறப்பித்துக் கூறுவது உதாத்த அணி எனப்படும். இதனைச் சில அணி இலக்கண நூலாசிரியர்கள் தமிழ்ப்படுத்தி, 'வீறு கோளணி' என்று குறிப்பிட்டுள்ளனர். இது செல்வ மிகுதி பற்றி அமைந்த உதாத்த அணி எனவும், உள்ள மிகுதி பற்றி அமைந்த உதாத்த அணி எனவும் இருவகை யாகப் பகுத்துக் கூறப்படும்.

**உதிட்டிரன்** மகாபாரதக் கதை மாந்தருள் ஒருவன். பாண்டு மன்னனுக்குக் குந்தி தேவியிடம் பிறந்த ஐந்து மக்களுள் முதலாமவன். இவன் தரும புத்திரன், தருமர் என்றும் அழைக்கப்படுவான். காண்க: தருமன்.

**உதியஞ் சேரல்** சங்க காலச் சேர மன்னர் களுள் ஒருவன். சங்க நூல்களில் கிடைக்கும் குறிப்பு களிலிருந்து உதியஞ்சேரல் என்னும் பெயரில் இரண்டு அரசர்கள் இருந்தனர் என்பது தெரிகிறது.

1) சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். இவனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் புறநானூற்று இரண்டாம் பாடலிற் சிறப்பித்துப் பாடியுள்ளார். இம் முடிநாக ராயர் தலைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்று இறையனார் களவியல் உரைப் பாயிரம் குறிப்பிடுகிறது. இதனால் இவரால் பாடப்பெற்ற உதியஞ்சேரல் என்னும் அரசனும் தலைச் சங்க காலத்தைச் சார்ந்தவனாக இருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம். இம்மன்னன் பாரதப் போரில் ஈடுபட்ட பாண்டவர், கவுரவர் ஆகிய இருசார் படையினர்க்கும் அப்போர் முடியும்வரை பெருஞ்சோறிட்டு உதவினான் என்பதும், அதனால் இவன் 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்' என வழங்கப்பட்டான் என்பதும் கூறப்படுகின்றன. இரு படையினர்க்கும் வரையாது சோறு வழங்கிய செய்தி யினை முடிநாக ராயர், 'அலங்குளைப் புரவி ஐவ ரொடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை, ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்' என்று (புறம்:2) குறிப்பிட்டுள்ளார். மாமூலனார் இச் செய்தியினை 'முதியர்ப்பேணிய உதியஞ்சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை' என்று (அகம். 233) சுட்டியுள்ளார். இவ்வரசன் பாரதப் போரில் இரு படையினர்க்கும் பெருஞ்சோறு கொடுத்தான் என்னும் செய்தியினை உடன்படாது பிறவாறு விளக்குவோரும் உள்ளனர். முரஞ்சியூர் முடிநாக ராயர் இம் மன்னனை முன்னிலைப்படுத்தி நேரே, 'வரையாது கொடுத்தோய்' என விளித்துச் செவி யறிவுறுத்தி வாழ்த்துவதாகப் பாடியுள்ளார். மாமூல னார் இச்செய்தியை உவமையால் முன்னர் நிகழ்ந்த பழஞ்செய்தியாக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

2) பாரதப் போர்ப் படையினர்க்குப் பெருஞ் சோறு வழங்கிய உதியஞ்சேரலாதன் என்னும் அர சனின் மரபில் வந்தவனாகக் கருதப்படும் ஒரு சேர வேந்தன். பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தினால்

சிறப்பிக்கப்படும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் மூன்றாம் பத்தினால் சிறப்பிக்கப்படும் பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்கும் தந்தையாவான். இவனைப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினுக்குரிய பதிகம் 'மன்னிய பெரும் புகழ் மறுவில் வாய்மொழி, இன்னிசை முரசின் உதியஞ்சேரல்' என்று குறிப்பிடுகிறது. இவனுடைய மனைவி 'வெளியன் மகளான நல்லினி' ஆவாள். இவனுக்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என இரண்டு புதல்வர் இருந்து, இவற்குப் பின் முறையே சேரநாட்டை ஆண்டனர் என்னும் செய்தி, பதிற்றுப் பத்தின் இரண்டு, மூன்று ஆகிய பதிகங்களால் அறியமுடிகிறது. பதிற்றுப்பத்தால் அறியலாகும் சேர அரசர்கள் உதியஞ்சேரல் மரபு என்றும், இரும்பொறை மரபு என்றும் இரு மரபினில் அடங்குவர். அவர்களுள் உதியஞ்சேரல் மரபு இம் மன்னனைத் தொடக்கமாகக் கொண்டது. மாமூலனார் தாம் பாடிய மற்றொரு அகநானூற்றுப் பாடலில் (அகம் 65) 'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரற், பாடிச் சென்ற பரிசிலர் போல' என்று ஒருவமையை ஆண்டுள்ளார்.'இப்பாட்டுடைத் தலைவனான உதியஞ்சேரல் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனின் வேறானவனாய், அவன் வழியில் வந்தவன். பதிற்றுப்பத்துள் இரண்டு மூன்றாம் பத்துகளை முறையே கொண்ட நெடுஞ்சேரலாதனும் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் இவ் உதியஞ்சேரற்கு மக்களாகத் தெரிகின்றனர்' என்று மு.இராகவையங்கார் விளக்கியுள்ளார். இளங்கீரனார் என்னும் புலவர் தம் நற்றிணைப் பாடலில் (நற்.113) உதியன் நடத்திய ஒரு பெரும் போரைக் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் குறிப்பிடும் உதியன் என்பவன் முன் குறிப்பிட்ட உதியஞ்சேரலாதனேயாவன் என்று மு.இராகவையங்கார் கருதுகிறார். இவ் உதியஞ்சேரலாதன் பதிற்றுப்பத்தில் மறைந்துபோன முதலாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

**உதியன்** என்பது சேரமன்னனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. 'பூழியன் உதியன் கொங்கன் பொறையன் .......... கோச்சேரன் பெயரே' என்று சேந்தன் திவாகரம் குறிப்பிடுகிறது. உதியர் என்பது பொதுவாகச் சேர வேந்தர்களையும் உதியர் மண்டலம் என்பது சேர நாட்டையும் குறிக்கின்றன. 'சதய நாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்' என்னும் கலிங்கத்துப் பரணித் தாழிசைப் பகுதியிலமைந்துள்ள உதியர் சேரர்களையும் உதியர் மண்டலம் சேர நாட்டினையும் குறிக்கின்றன. 'பொதுவாக அமையும் உதியன் என்னும் பெயர் சேரல் என்னும் அக்குலப் பொதுப் பெயரோடு சேர்ந்து 'உதியஞ்சேரல்' என நின்று, குறிப்பிட்டவொரு சேரமன்னனைச் சுட்டும் பெயராக அமைவதும் உண்டு. காண்க: உதியஞ்சேரல்.

**உதீசித்தேவர்** சமண தோத்திர நூலாகிய திருக்கலம்பக ஆசிரியர். இவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; சமண சமயத் துறவி. இவர் தொண்டை நாட்டிலுள்ள பையூர்க் கோட்டத்து ஆரணி நெடுந்துறையை அடுத்துள்ள ஆர்ப்பாகை என்னும் ஊரைச் சேர்ந்தவர். உதீசி என்னும் சொல் வடதிசை என்று பொருள்படும். இவர் வடதிசையைக் குறிக்கும் சொல்லால் உதீசித்தேவர் என்னும் பெயர் பெற்றார் என்பதனை, 'உத்தர திசை முதல் வைத்த தேவர் பெயர் பெற்ற நல்லறிவோன்' என்னும் உரைச் சிறப்புப்பாயிரத் தொடர் உணர்த்துகிறது. இவரை 'வடபால் மொழி தலை மணந்த தேவன்' என்று பாயிரப் பகுதி கூறுவதனால், வடமொழியில் இவர் மிக்க புலமையுடையவர் என்பது தெரிகிறது. புத்த சமயத்தை எதிர்த்து வாதிட்டு அதனை அழிக்க முயன்றார் என்பதனால் இவர் 'சாக்கிய குடாரன்' என்னும் பெயரால் சிறப்பிக்கப் பெற்றார். இவர் இயற்றிய திருக்கலம்பகம் 110 பாடல்களைக் கொண்டுள்ளது. இக்கலம்பகத்தில் பாண், தழை என்னும் இரண்டு கலம்பக உறுப்புகள் நீங்கலாக 16 உறுப்புகளே உள்ளன.

இந்நூலாசிரியர் சிவன், திருமால், முருகன் முதலிய சைவ வைணவத் தெய்வங்கள் எல்லாம் அருகனே என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அம்பிகையும் அருகதேவனின் ஆற்றலே என்று குறிப்பிட்டுள்ளார். இவர் தம் நூலில் தமிழகத்தில் விளங்கிய சமணத் தலங்களாகிய உச்சந்தமலை, சும்பை, தீபங்குடி, மயிலாபுரி ஆகியவற்றைச் சிறப்பித்துள்ளார். இவர் சிறந்த சமண சமயத் துறவியாதலின், தம் கலம்பகத்தில் அகப்பொருளைப் பாடாது விடுத்துள்ளார். இவர் தம் திருக்கலம்பகத்தில் சமண சமயக் கோட்பாடுகள் பலவற்றைச் சிறப்புறப் புலப்படுத்தியுள்ளார். இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. ஆர்ப்பாகை என்னும் ஊரினரான சந்திரநாதர் புதல்வரான அனந்ததேவர் அதனை எழுதினார் என்பது கூறப்படுகிறது. இவ்வுரையாசிரியர் அனந்தகவி எனவும் வழங்கப்படுவார். பாடலில் இடம் பெற்றுள்ள பல சமண சமயப் பொருள்களை இவ்வுரை தெளிவுற விளக்குகிறது.

**உதுமான் நயினார்ப் புலவர்** காயல் பட்டினத்தில் தோன்றிய இசுலாமியப் புலவர். இவர் உதுமான் நயினார் இலெப்பை என்றும் அழைக்கப் பெற்றார். சாமு நயினார் இலெப்பை இவருக்குத்

தந்தை. இவர் எழுதியுள்ள நூல்கள்யாவும் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சார்ந்தனவாக இருப்பதால், இவர் அக்காலப் பகுதியைச் சார்ந்தவராகவே இருத்தல் வேண்டும். இவர்தம் பிறப்பு, இறப்புப் பற்றிய காலக் குறிப்பினைச் சரியாக அறிய முடியவில்லை.

இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முசுலிம் புலவர்களுள் உதுமான் நயினார் புலவரும் ஒருவர். இவர் தமிழில் பல்வேறு வண்ணங்கள், சலவாத்துப் பாடல்கள், பதசுகள், நாகூர்ச் சிறப்பு முதலானவற்றை இயற்றியுள்ளார். இவர்தம் சலவாத்துப் பாடல்கள் பெருமானார் நபி (சல்) அவர்களின் புகழினைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. சலவாத்து என்பதன் பொருள் 'நபி புகழ்' என்பதாகும். இவரது சலவாத்துப் பாட்டு முதன்முதல் கி.பி. 1874-இல் அல்லாப் பிச்சைப் புலவரால் சென்னை மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது. பதிகமாக அமைந்துள்ள இச் சலவாத்துப் பாடலின் பின்னர்க் கீர்த்தனைப் பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. இச் சலவாத்துப் பாடல்கள் கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு, கும்மிப் பாட்டு, தாலாட்டு, தோழிப்பாட்டு என்ற முறையில் அமைந்துள்ளன.

இவர் இயற்றிய பதசுகள் 1900-இல் காதர் பாட்சா புலவரால் சென்னை வாணி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதில் பொது நிலையில் பெருமானாரின் சிறப்பு, இசுலாத்தின் பெருமைகள் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதே ஆண்டில் இவரது நாகூர்ச் சிறப்பு என்னும் நூலும் காதர் பாட்சா புலவரால் சென்னை வாணி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் இறைநேசச் செல்வர் நாகூர் சாகுல் அமீ தாண்டவர் என்பவரின் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சென்னையில் காலமான இவரது உடல் அங்கப்ப நாயக்கன் தெரு மசுசிதெ மகுமூலில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

சி. ந.

**உதுமானியப் பேரரசு:** துருக்கியின் பழைய வரலாறு: இப்பொழுது துருக்கி என்று சொல்லப்படும் மேற்காசிய நிலப்பகுதி பல்லாயிரம் ஆண்டுகளாக மேல்நாட்டு நாகரிகங்களும் கீழ்நாட்டு நாகரிகங்களும் கூடும் இடமாகவும், அதுவே பல நாகரிகங்களின் தோற்றுவாயாகவும் இருந்தது.

உதுமானியப் பேரரசை நிலைநிறுத்திய அரசர் உசுமான் (Osman) கி.பி. 1259 முதல் கி.பி. 1326 வரை வாழ்ந்தவர் இவர் தம் தந்தை எர்ட்டோ குருலிடமிருந்து ஒரு சிறிய அரசைப் பெற்றார். இந்தக் குடும்பத்தில் உசுமானே முதலாம் காசி ஆகையால், அவருடைய அரசும் உசுமான்லிப் பேரரசு என்று துருக்கிய வரலாற்றில் வழங்கப்படுகிறது. உதுமான் (Othman) என்ற அராபியப் பெயரே துருக்கியில் உசுமான் என்றாயிற்று. புருசா நகரம் இதன் தலைநகரம்.

சுல்தான் ஓர்கான் ஆட்சியில் (1326-1360) உதுமானியப் படையினர் ஐரோப்பியப் பகுதியிலிறங்கி, பால்கன் நாடுகளின் பல இடங்களைக் கைப்பற்றினர். அவர்கள் ஏசியன் கடல் தீவுகளையும் மாசிடோனியாவையும் திரேசையும் கொள்ளையடித்தனர். கலிபொலி நகரம் அவர்கள் வசமாயிற்று. உதுமானியர் தம் ஐரோப்பியப் பகுதிகளுக்கு ஏட்ரியா நோப்பிளைத் தலைநகராக அமைத்தனர். உதுமானியர் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று தான்யூபு (Danube) ஆற்றின் தென்பகுதிகளை வென்று, அங்கேரி, ஆசுத்திரியா, இத்தாலி, கிரேக்கம் முதலிய நாடுகளைக் கொள்ளையடித்தனர். மேற்காசியாவிலும் பல நாடுகளை அவர்கள் வென்றனர்.

முதலாம் ஓர்கானும் முதலாம் மூராதும் அரசாங்க அமைப்பை நிறுவினர்; அரசாங்க அதிகாரங்களைக் கூடுதலாக ஆக்கி, நாட்டில் புதிதாக வந்து குடியேறிய அராபியர்களையும் இரானியரையும் வரவேற்று, முசுலிம், கிறித்தவ, யூத மக்களை அரசாங்கப் பணிகளில் அமர்த்தி, வென்ற நாடுகளில் புதிய மாறுதல் செய்யாமல் உள்ளூர் வழக்கங்களே நடைமுறையிலிருக்குமாறு செய்தனர்; வென்ற நாடுகளிலுள்ள நிலங்களிலிருந்து வந்த வருமானத்தைப் போர் வீரர்களுக்களித்து, அவர்களுடைய பணியையும் வரையறை செய்தனர்.

இவர்கள் சிறந்த குதிரை வீரர்களும் ஆவர். திறமான பயிற்சி பெற்ற அடிமை வீரர் படையும் சுல்தானுக்கு உதவி செய்தது. சுல்தான் பயாசிடு 1,000,00 ஆங்கில, பிரஞ்சு, பிளமிசு, செருமானிய பிரபுக்களடங்கிய ஒரு படையைச் சிலுவைப் போரில் தோற்கடித்தார் (1396). இவர் பல நகரங்களை வென்று உதுமானியப் பேரரசை தெற்கே யூபிரட்டிசு ஆறு முதல் வடக்கே அங்கேரி வரை விரிவாக்கினார்.

சுதந்தர நாட்டமுடைய துருக்கியக் காசிகளே இவர் காலத்திலும், இவருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்திலும் நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தனர். பல காசிகள் சுதந்தர ஆட்சியாளர்களாகவே இருந்

தனர். செல்வம்மிக்க உதுமானியக் குடும்பங்களும் அப்போது செல்வாக்குடனிருந்து வந்த திறம் மிக்க ஆட்சியாளர் வகுப்பும் சுல்தானுடைய அதிகாரத்துக்குத் தடையாக இருந்தன. முதலாம் முகமதின் ஆட்சியில் ஐரோப்பிய நிலப்பகுதியில் அல்பேனியா, வாலாச்சியா முதலிய பாகங்கள் துருக்கியப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. உதுமானியச் சுல்தானுக்கு எதிரிகளாக கரமான் (Karaman) என்ற சிறிய நாட்டை ஆண்ட காசி அரசர்கள் அடிக்கடிக் கலகம் செய்தும் கலகங்களைத் தூண்டியும் வந்தனர். இரண்டாம் மூராதின் காலத்தில் துருக்கியர் சலோனிகா (Salonika) நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் பெருவீரரான போலிசு (Polish) அரசராகிய இலாடிசுலாசு (Ladislas) பெரும்படையுடன் வந்து துருக்கியப் படைகளைத் தோற்கடிக்கவே, மூராது வாலாச்சியாவை (Wallachia) விட்டுவிட்டு இலாடிசுலாசுடன் கி.பி.1444-இல் பத்தாண்டுகளுக்கு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார்.

மூராது தத்துவம், வரலாறு முதலியவற்றில் ஈடுபாடு கொண்டார்; இவர்காலத்தில் செல்சுக்கிய, உதுமான் அரசுகளின் வரலாறுகள் எழுதப்பட்டன. இவர் தம் அரண்மனையில் பள்ளிக்கூடம் நிறுவிக் கல்விக்கு ஊக்கம் அளித்தார். இதில் கணிதம், அரசாங்க அமைப்பு முறை, மொழிகள், வரலாறு, தத்துவம் முதலியன கற்றுக் கொடுக்கப்பட்டன. இதை முன்மாதிரியாக வைத்துத் துருக்கியப் பேரரசில் பல்வேறு இடங்களில் ஆட்சித் தலைவர்கள் கல்விக் கூடங்களை நிறுவினர். கான்சுடாண்ட்டிநோபிள் நகரம் துருக்கியர் வசமானதும் அங்கு ஒரு கல்விக் கூடம் நிறுவப்பட்டு, அது 1918 வரை பணி செய்தது.

இலாடிசுலாசு என்ற போலிசு அரசர் உதுமானியப் பேரரசிலிருந்து ஐரோப்பிய நிலங்களை மீட்டுக் கொள்ளுதற்காகப் பெரும்படையுடன் சிலுவைப் போரை (Crusade) நடத்திவரவும், மூராது ஒரு திறமிக்க படையுடன் வந்து 1444-இல் வர்னாப் (Varna) போரில் ஐரோப்பியப் படையைத் தோற்கடித்து, பாசுனியா (Bosina), செர்பியா (Serbia) முதலிய நாடுகளை அவற்றின் மக்களுடைய ஆதரவுடன் வென்றார். இலாடிசுலாசு போரில் இறந்தார். மூராது கிரேக்கநாட்டில் கொரிந்தையும் பத்ராசையும் வென்றார். இவர் 1451-இல் இறந்ததும், இவர் தம் மூன்றாம் மகன் இரண்டாம் முகமது அரியணை ஏறினார்.

உதுமானியத் துருக்கியர் கான்சுடாண்ட்டிநோபிளைக் கைப்பற்றுதல்: இரண்டாம் முகமதின் ஆட்சி உதுமானிய லரலாற்றில் சிறப்புமிக்கது. இவருடைய ஆட்சியில்தான் (கி.பி. 1451-1481) கிழக்கத்திய அல்லது பைசாண்டியப் பேரரசின் தலைநகராக ஆயிரமாண்டுகட்கு மேலாகச் சுதந்தரமாக விளங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க கான்சுடாண்டிநோபிள் நகரம், துருக்கியரால் கைப்பற்றப்பட்டுத் தலைநகரமாக்கப்பட்டது. அது உதுமானியப் பேரரசு மறைந்தபின்னரும் இன்றுவரை துருக்கியின் வசம் இருந்து வருகிறது.

முகமது, பாசுனியாவையும் செர்பியாவையும் தனதாட்சியில் அமைத்து, எர்சுகோவினாவையும் அல்பேனியாவையும் கிரேக்கம் முழுவதையும் வென்று, துருக்கியில் கரமான் நாட்டின் எதிர்ப்பையும் அழித்தார். இவருடைய பேரரசு தான்யூபு ஆற்றிலிருந்து யூபிரட்டிசு ஆறு வரை பரவியிருந்தது. இப்பேரரசை, இவர் நல்ல முறையில் ஆண்டார். தம் குடிகளுள் பெருமளவில் கிரேக்க வைதிகக் கிறித்தவர்களிருந்தமையால், அவர்களுடைய கிரேக்கத் திருச்சபையை இவர் ஒப்புக் கொண்டு, அவர்களுடைய தலைவருடன் (Patriarch) ஒத்துழைத்தார். இவருக்குப் பின் வந்த இரண்டாம் பாசிடின் முயற்சியால் உதுமானியக் கப்பற்படை மத்திய தரைக்கடலில் வெனிசைக் கட்டுப்படுத்த வல்லதாக அமைந்தது. இவர் தம் பின் தோன்றல் முதலாம் சலிம் இரானிய அரசரை வென்று, வடஇராக்கு, குர்டிசுத்தான், சிரியா, எகிப்து ஆகியவற்றைக் கைப்பற்றினார்.

உதுமானியப் பேரரசின் உச்சநிலை: முதலாம் சலிமின் மகனான முதலாம் சுலைமானின் ஆட்சிக்காலமே (கி.பி.1520-1566) உதுமானியப்பேரரசின் உச்சநிலையைக் காட்டுகிறது. அப்பேரரசில் அராபியர், எகிப்தியர், துருக்கியர் வாழ்ந்த நாடுகளிருந்தன. சலிமின் காலத்திலிருந்து 1922 வரை உதுமானியச் சுல்தான்கள் காலிப்புகள் (Caliphs) என்று மதிப்புடனழைக்கப்பட்டனர். முதலாம் சுலைமான் 'மாட்சிமிக்க' (The Magnificant), என்றழைக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக்காலம் பொற்காலம் எனச் சொல்லப்பட்டது.

சுலைமான் அங்கேரி நாடு முழுவதையும் வென்று இணைத்தார். இசுதான்புலிலிருந்து வியன்னா வரையிலும், கருங்கடலிலிருந்து ஏடிரியாடிக்குக் கடல் வரையிலுமுள்ள ஐரோப்பிய நாடுகள் எல்லாம் உதுமானியப் பேராசினுள் அடங்கியிருந்தன. துருக்கி முழுவதும், யூபிரட்டிசு ஆறு வரையுள்ள நிலங்களும் அதிலடங்கியிருந்தன. இவர் பாரசீகம்வரை தம் பேரரசை விரிவடையச் செய்து, ஏசியன் கடற்கரையிலும் தமதாதிக்கத்தை நிறுவினார்.

**உதுமானியப் பேரரசின் வீழ்ச்சி:** பரந்த பேரரசில் ஆட்சியாளர்கள் சுல்தானைவிட அதிகாரம் மிக்கவராயிருந்தனர்; ஆட்சியும் திறமையாக இல்லை; ஊழல் தோன்றிற்று. பல அதிகாரிகள் சுல்தானின் அடிமைகளாகவோ அடிமைகளின் அடிமைகளாகவோ இருந்தமையால், அவர்கள் நாட்டிற்கோ அரசருக்கோ பற்றுறுதியுடன் பணி செய்யவில்லை. ஆசுத்திரியாவின் (Austria) அரசர் தான்சுவான் (Don Juan) 1572-இல் ஒரு கப்பற்படையுடன் இலெபாண்டோவில் (Lepanto) உதுமானியக் கப்பற் படையைத் தோற்கடித்தார். இது முசுலிம்கள்மீது ஐரோப்பியக் கிறித்தவரடைந்த வெற்றியாகக் கருதப்பட்டது. இரண்டாம் சலிமுக்குப் பின்வந்த உதுமானியச் சுல்தான்கள் வலியற்றிருந்தனர். ஓர் உதுமானியப்படை போலந்தின் சான் சோபியசுகியினால் (Jon Sobieski) 1683-இல் தோற்கடிக்கப்பட்டது. உதுமானியப் படைகள் வியன்னாவிலிருந்து விரட்டப்பட்டன. அங்கேரி நாட்டை உதுமானியரிடமிருந்து ஆசுத்திரியர்கள் (Austrians) 1687-இல் வென்று கொண்டனர். சவாயின் அரசர் யூசின்(Eugene) கி.பி.1697-இல் செண்டாவில் உதுமானியப் படையை முறியடித்தார். பால்கனின்வடபகுதியிலிருந்து உதுமானியர் நீங்கவேண்டியதாயிற்று; உதுமானியர்கள் 1699-இல் செய்த கார்லோவிட்சு உடன்படிக்கையின்படி (Treaty of Karlowitz) வெனிசு, ஆசுத்திரியா, போலந்து, உருசியா முதலியவை உதுமானியப் பேரரசிலிருந்து முறையே தால்மேசியா, திரான்சில்வேனியா (Transilvania), பொடோலியா, ஆசாவ் முதலியவற்றை அடைந்தன. குறைந்த வரிகளில் வாணிகம் செய்தல், பேரரசிலிருந்து பிரஞ்சியருக்குப் பிரஞ்சுச் சட்டத்தின்படி சலுகைகள் முதலிய பல சலுகைகளைச் சுல்தான்கள் பிரஞ்சியருக்கு வழங்கினர்.

உருசியா கி.பி. 1774-இல் ஆசாவை வென்று, கிரிமியாவைச் சுதந்தர நாடாக ஆக்கி, உதுமானியப் பேரரசிலுள்ள கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பளிக்குமாறு சுல்தானோடு ஒப்பந்தம் செய்தது. கிறித்தவக் குடிகளின் நலனைச் சுல்தானிடம் கூறுதற்காக உருசியத் தூதர் சுல்தானின் நகரத்தில் அமர்த்தப்பட்டார். இந்த உரிமையை உருசியருக்கு வழங்கிய குச்சக் கெய்னார்சி (Kuchuk Kainardji) உடன்படிக்கையை ஆதாரமாக வைத்தே உருசியச் சார் மன்னர்கள் 1774-ஆம்ஆண்டிலிருந்துமுதலுலகப் போர்வரை உதுமானியப் பேரரசில் தலையிட்டனர். உருசியா கிரிமியாவையும் தன்வசமாக்கி, நீசுட்டர் ஆறுவரை தன் எல்லையை விரிவாக்கியது. காகசசைப் பாரசீகர் பிடித்துக்கொண்டனர். துருக்கியில் மேலைநாட்டு ஆட்சிமுறை, கல்விமுறை, தொழிற்பயிற்சி, அச்சகம் முதலியன புகுத்தப்பட்டன. உருசியா தார்டனல்சிலும் நடுத்தரைக் கடலிலும் நுழையாதவாறு தடுத்தற்கும் உதுமானியப் பேரரசைக் காத்தற்கும் பிரான்சு முயன்றது.

நெப்போலியனுடைய எகிப்தியப் படையெடுப்புக்குப் பின்னர் உதுமானியப் படையில் மாசிடோனியப் படையில் பணிசெய்துகொண்டிருந்த மகமதுஅலி கி.பி. 1806-இல் வலிமையோடு எகிப்தின் ஆளுநரானார். உதுமானியப் பேரரசில் வாணிகம் செய்தற்கு ஆங்கிலேயருக்கு 1809-இல் உரிமை அளிக்கப்பட்டது. உதுமானியப் பேரரசு ஓர் ஐரோப்பியப் பேரரசாக 1815-இல் வியன்னா மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

உதுமானியப் பேரரசின் பல மாகாணங்களில் சுதந்தர ஆளுநர்கள் தோன்றினர். எகிப்திய மகமது அலி வலிய ஆளுநரானார். பால்கனில் உதுமானிய ஆட்சியிலிருந்த ஐரோப்பியக் கிறித்தவர்கள் தேசிய உணர்வு கொண்டு, சுதந்தர நாடுகளை அமைத்தற்காக இயக்கங்களை நடத்தினர். கிரேக்கர்கள் சுதந்தர கிரேக்க நாட்டை நிறுவுதற்கு எடுத்த முயற்சியே கிரேக்கச் சுதந்தரப் போராகும். இதில் ஆங்கில, பிரஞ்சு, உருசியப் படைகள் உதுமானியப் படைகளைத் தோற்கடிக்கவே, சுல்தான் இரண்டாம் மாமுது ஏட்ரியா நோப்பிள் உடன்படிக்கையின்படி 1829-இல் கிரேக்கத்தைச் சுதந்தர நாடாக்கினார். எகிப்தின் மகமது அலியே சுல்தானை எதிர்த்தார். உருசியா சுல்தானுக்குப் பாதுகாப்பளிக்கவும் தார்டனல்சு நீர்வழியை அயல்நாட்டுப் போர்க் கப்பல்கள் பயன்படுத்தாமல் அடைக்கவும் கூடிய உரிமையை 1833-இல் பெற்றது. செர்பியா, வாலாச்சியா, மால்டேவியா முதலியவை தன்னாட்சி உரிமை பெற்றன. இரண்டாம் மாமுது மேல்நாட்டுச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

பேரரசிலுள்ள உருசியக் குருமார்களுக்குச் சிறப்புச் சலுகைகளை வழங்கச் சுல்தான் அப்துல் மசீது மறுக்க, உருசியச் சார் முதலாம் நிக்கோலசு 1854-1856 ஆம் ஆண்டு கிரிமியப் போர் தொடங்கினார். இதன் முடிவில் நற்பயன் ஏதும் தோன்றவில்லை. நிதி பற்றாக்குறையை நீக்குதற்குச் சுல்தான் வரிவிதிப்புச் செய்ய, பாசுனியா, எர்சுகோவினா, மாசிடோனியா பல்கேரியா ஆகிய ஐரோப்பிய மாகாணங்கள் கலகம் செய்தன. சுல்தானின் அடக்கு முறை மீண்டுமொரு போருக்கு வழிவகுத்தது. இப்போர் 1877-இல் முடிந்தது. சுல்தான் நல்லாட்சியை நிறுவுவதாக உறுதி கூறிய போதிலும், அவ்வாறு செய்யவிடாமல் நிதி நிலைமை தடுத்தது. 'இளந் துருக்கியர்கள்' (Young Turks) எனப்பட்ட தேசியவாதிகள் சீர்திருத்தங்களை

நிறுவும்பொருட்டுக் கிளர்ச்சி செய்தனர். இதைப் பயன்படுத்திப் பல்கேரியா சுதந்தரமடைந்தது. இலிபியாவைச் சுல்தான் இத்தாலிக்குக் கொடுத்துவிட்டார். பால்கன் நாடுகளெல்லாம் 1912-இல் துருக்கியை எதிர்க்கவே, துருக்கி ஐரோப்பாவில் இசுத்தான் புலையும் ஓரிரு நகரங்களையும் தவிர மற்றவற்றை இழந்தது. ஓராண்டில் இசுத்தான்புல் மட்டுமே துருக்கியிடம் இருந்தது (1913). இக்கால அமைப்புகளையும் சீர்திருத்தங்களையும் ஆதரித்த இளந் துருக்கியத் தலைவர் சியா கோகால்ப்பு (Ziya Gokalp) ஆவார்.

முதல் உலகப் போரினிறுதியில் உதுமானியப் பேரரசு மறைந்தது. முதல் உலகப் போரில் துருக்கி செருமனியுடன் சேர்ந்தது. செருமனியின் உதவியுடன் உருசியப் படையையும் பிரிட்டிசுப் படைகளையும் துருக்கி தடுத்தது. செருமனியர் தம் நாட்டைக் காக்கத் திரும்பியபோது துருக்கி வீழ்ந்தது. போரினிறுதியில் உடன்படிக்கைகளின் வாயிலாக உதுமானியப் பேரரசிலுள்ள துருக்கியரல்லாதார் வாழும் மாகாணங்கள் அதனிடமிருந்து பிரிக்கப்பட்டன. சுல்தான் ஆறாம் மகமது நேசநாடுகளின் கட்டுப்பாட்டில் வந்தார். செவரசு உடன்படிக்கையின்படி (1920) துருக்கிய மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. தேசியக் குடியரசு இயக்கத்தை நடத்திய முசுதாபா கமாலினால் இவ்வொப்பந்தம் மறுக்கப்படவே, இலாசேன் உடன்படிக்கையின்படி (1923) துருக்கி குடியரசாயிற்று. ஆறாம் மகமது கடைசி உதுமானியச் சுல்தான் 1922-இல் இசுதான்புலை விட்டு நீங்கினார்.

**உதே இந்தியர்கள்**: வட அமெரிக்காவில் சொசோனிய (Shoshonian) மொழி பேசும் பழங்குடிகளாவர். உதே இந்தியர்கள் (Ute Indians) கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் அமெரிக்க உத்தா (Utah), நெவதா (Nevada) ஆகிய பெரிய வடிநிலப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இப்போது இவர்கள் அமெரிக்க அரசால் ஒதுக்கப்பட்ட தென்மேற்குக் கொலராடோப் (Colorado) பகுதியிலும் வடகிழக்கு உத்தா மாநிலத்திலும் வாழ்ந்து வருகின்றனர். ‘உதே’ என்னும் சொல் இந்திய மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ‘மலை உச்சியில் வாழ்பவர்கள்’ என்பதாகும்.


உதே இந்தியர்களின் மூதாதையர்கள் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் உத்தா, நெவதா பகுதிகளில் குடியேறினர். அக் காலத்தில் இப்பகுதி சதுப்பு நில வெப்ப மண்டலக் காடாக இருந்தது. பனியாறுகளும் (Glaciers) மலைகளும் சூழ்ந்த இப்பகுதியில் உதே இந்தியரின் மூதாதையர்கள் வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் முதலான தொழில்களை ஏற்று வாழ்ந்தனர். பனியாற்றுக் காலத்திற்குப் பின் தொடர்ந்து காடுகள் அழிக்கப்பட்டதால், இந்த வடிநிலப்பகுதி இப்போது வறட்சி மிகுந்த பாலைநிலமாக மாறி உள்ளது.

கிழக்கு உத்தாப் பகுதி உதே இந்தியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் குடியேறிய வெள்ளை அமெரிக்கர்களால் பெருமாற்றத்திற்கு உள்ளாயினர். வெள்ளையர்கள் குடியேறிய தொடக்க காலத்தில் மலைப்பகுதி உதே இந்தியர்கள் வெள்ளையர்களிடமிருந்து குதிரைகளைப் பெற்றுச் சமவெளிப் பகுதிகளிலும் வடிநிலப் பகுதிகளிலும் எருமையை வேட்டையாடினர். இவர்கள் சொசோனியப் பழங்குடியினருடன் தொடர்பு கொண்டதால் அவர்களின் பண்பாட்டைப் படிப்படியாக ஏற்றுக் கொண்டனர். ஒருபகுதி உதே இந்தியர்கள் அண்டைப் பகுதியிலுள்ள நலிந்த பிரிவினரைக் கைப்பற்றி, இசுபானியர்களிடம் (Spanish) அடிமைகளாக விற்றனர். வெள்ளையர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்து உதே இந்தியர்களின் வேட்டை நிலங்களையும் மலைநிறைந்த காட்டுப் பகுதிகளையும் வேளாண்மைக்காகவும் மேய்ச்சல் நிலத்திற்காகவும் கைப்பபற்றத் தொடங்கினர். இதன் பின்னர்த் தொடர்ச்சியாக இருவரிடையேயும் சண்டைகள் நடைபெற்றன.

கொலராடோப் பகுதியில் கி.பி. 1850-ஆம் ஆண்டு தங்கம் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து பழங்குடிகளின் மீது வெள்ளையர்களின் ஆதிக்கம் மிகுந்தது. இக் காலங்களில் சொசோனியரும் பயூட்டினரும் (Paiutes) அவர்கள் பகுதி வழியே செல்லும் சரக்கு இரயிலைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். இதன் பின்னர் 1879-ஆம் ஆண்டு பெரும் சண்டை மூண்டதனால், அப்போதைய அமெரிக்க அரசு சமாதான வழிமுறைகளைக் கையாண்டு பல உறுதிமொழிகளை அளித்தது. எனினும் கி.பி.1890-இல் அரசின் செயல்களால் வெறுப்புற்ற இந்தியர்களும், சியோக்கு ஆவி நடன (Ghost Dancers) ஆட்டக்காரர்களும் மிகப் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இக் கலகத்தில் 300க்கும் மேற்பட்ட சியோக்கு நடனக்காரர்கள் அமெரிக்க அரசுப் படையினரால் சுடப்பட்டனர். இதன் பின்னரே, கொலராடோ உதே இந்தியர்களை உத்தா மாநிலத்தில் தனிப் பகுதியில் வாழ அமெரிக்க அரசு ஒதுக்கியது. நிலமிழந்த இந்தியர்களுக்கு 1950-இல் 31.9 மிலியன் தாலர் (Dollar) நட்ட ஈடு கொடுத்தது. இருப்பினும் உதே இந்தியர்கள் தம் முன்னோர் வாழ்ந்த இடத்தின் இருபெரும் பகுதியைப் பெற முயற்சி செய்து இறுதியில் அடைந்தனர். இப்போது உத்தா மாநிலத்தில் 3000 க்கும் மேற்பட்டவர்களும்

கொலராடோப் பகுதியில் 1700க்கும் மேற்பட்டவர்க ளுமாக உதே இந்தியர்கள் வாழ்கின்றனர்.

**உதைசுவர்**: கட்டடங்களில் உள்ள சுவருக்கு வலுவூட்டவும் வளைவுகள், கவிமாடங்கள் (Arches) அல்லது கும்மட்டம் போன்ற பகுதிகளின் மேலுள்ள பளுவைத் தாங்கவும் கட்டப்படும் சுவரே உதை சுவர் (Buttress) எனப்படும்.



இரட்டைப் பறப்பு உதைசுவர்

உரோமானியர்களின் கட்டடங்களிலேயே முதன் முதலில் வளைவுகள், கவிமாடங்கள், கும்மட்டங்கள் போன்றவை கட்டப்பட்டு, இவற்றின் பளு அழுத் தத்தைத் தாங்குதற்கு உதைசுவர்கள் அமைக்கப்பட் டன. உரோமானியர்களை அடுத்து உரோமானியக் கட்டடக் கலைப் பாணியைச் (Romenesque) சார்ந்த கட்டடங்களிலும் கோதிக்குக் (Gothic) கட்டடங்களி லும் உதைசுவர்கள் காணப்படுகின்றன. உதைசுவர் மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.அவை,கோபுர அல்லது குத்தூண் (Pier) உதைசுவர்கள், பறப்பு (Flying) உதைசுவர்கள், இரட்டைப் பறப்பு (Double Flying)உதைசுவர்கள் எனப்படும். பறப்பு உதைசுவர் கள் கோதிக்குக் கட்டடங்களிலேயே முதன் முதலில் புகுத்தப்பட்டன. இங்கிலாந்து நாட்டிலுள்ள கோதிக் குத் திருச்சபைகளில் கோபுர அல்லது குத்தூண் வகை உதை சுவர்களே காணப்படுகின்றன. உதை சுவர்களை அமைத்துக் கட்டப்பட்டுள்ள கோயில் களுள் குறிப்பிடத்தக்க உரோமானியக் கோயில் பிரான்சிலுள்ள தயானாக் (Diana) கோயிலும் உரோமிலுள்ள பாந்தியன் (Pantheon) கோயிலுமா கும்.

**உப்டன், கர்னல்** என்பார் கிழக்கிந்திய வணிகக்குழுவின் சார்பாக மராத்தியர்களுடன் கி.பி. 1776-இல் புரந்தர் உடன்படிக்கையைச் (Treaty of Purandar) செய்து கொண்டவர். மொகலாயப் பேர ரசு கி.பி. 1707-ஆம் ஆண்டிற்குப்பின் செல்வாக்கிழந் தது. சிவாசி மன்னரின் பெரு முயற்சியால் உருவாக் கப்பெற்ற மராத்தியரின் மதிப்பு கி.பி. 1772 -இல் நன்கு வளர்ந்திருந்தது. ஒழுங்கு முறைச் சட்டம் (Regulating Act) கி.பி. 1773-இல் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து, முதல் அரசப்பேராளராகப் பதவியேற்ற வாரன் ஏசு டிங்சு (Warren Hastings) பம்பாய், சென்னை மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். உரோகில்லர்களை (Rohillas) ஒடுக்குவதற்கென்று நவாபு சுசா-உத்-தௌலாவிற்கு (Shuja-ud-daula) வாரன் ஏசுடிங்கு கி.பி. 1773-இல் உதவியளித்தார். வங்காளத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு வளர்ந்து வருவதை மராத்தியர் விரும்பவில்லை. ஐரோப்பியப் போர்முறைகளைக் கடைப்பிடித்தாலன்றி, ஆங்கி லேயரை வங்காளத்திலிருந்து வெளியேற்றவியலாது என்பது மராத்தியருக்கு நன்கு தெரிந்திருந்தது. எனவே, மராத்தியர் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினர்.

அவ்வமயம் ஐதர் அலியின் (Hyder Ali) கை ஓங்கியிருந்தது. பிரெஞ்சு அமைச்சரவை அவருடன் அரசியல் உறவு கொள்வதற்கு மிகவும் விழைந்தது. பாண்டிச்சேரியில் பிரெஞ்சு ஆளுநராகவிருந்த இலா (Law) என்பவர் மராத்தியரின் உறவு மிக்க பல னளிக்குமெனக் கருதினார். இறுதியில் இலாவின் பரிந்துரையின்படி பிரெஞ்சுக்காரர்கள் மராத்திய ருடன் உடன்பாடு செய்துகொண்டனர்.

அமெரிக்காவில் கி.பி. 1774-இல் ஆங்கில, பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிடையே போர் மூண் டது. அதன் எதிரொலியாக இந்தியாவிலும் ஆங்கி லேய-பிரெஞ்சுப் போர்கள் நிகழ்ந்தன. இலாவை யடுத்து மார்குவிசு பெல்லி கோம்பே (Marquess of Belle Combe) 8-1-1777-இல் பாண்டிச்சேரி ஆளுந ராகப் பதவியேற்றார். பேசுவா மாதவராவ் உயிருட னிருந்தபோது ஐதர் அலியின் அதிகாரப் பெருக்குத் தடைபெற்றிருந்தது. மாதவராவ் இறந்த பின்னர் மராத்திய அரசியலில் குழப்பமேற்பட்டது. ஐதரின் செல்வாக்குப் பெருகத் தொடங்கியது. மாதவ ராவைத் தொடர்ந்து பதவியேற்ற நாராயணராவும் கொலையுண்டார். நாராயணராவும் பிரெஞ்சுக்கா ரர்களின் உதவியையே நாடியிருந்தார். நாராயண ராவின் மரணத்திற்குப்பின் மராட்டிய அரசியலில் பிளவு ஏற்பட்டது. இரகோபா என்பவர் ஆங்கிலே

யரின் உதவியுடன் தம் கட்சியை வலுப்படுத்த எண்ணினார். இரகோபாவின் வேண்டுகோளை ஏற்று 28-12-1774-இல் சால்செட்டு (Salsette) என்னுமிடத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர். மற்றுமொரு தலைவரான நானா பட்நவிசு(Nana Fadnavis)கி.பி. 1775 சூன் மாதத்தில் பிரெஞ்சுக்காரருடன் நட்புக்கொள்ள விரைந்தார்.

இந்நிலையில் கி.பி.1776-இல் தளபதி உப்டன் (Upton, Colonel) புனேவிற்குச் சென்று, புரந்தர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது மராத்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. அரசப்பேராளர் வாரன் ஏசுடிங்சு போரைத் தொடர்ந்து மராத்தியப் பகுதிகளைக் கைப்பற்ற விரும்பினார். அவருடைய கருத்தை அவரது நிருவாகக்குழு (Council) ஒப்புக்கொள்ளவில்லை. நிருவாகக்குழுவின் முக்கிய உறுப்பினரான பிரான்சிசு (Francis) என்பவருக்குத் தளபதி உப்டன் கருத்துக் கூறினார். நானா பட்னவிசின் திறமையையும் அரசியல் நுண்ணறிவையும் பிரான்சிசிற்கு உப்டன் எடுத்துரைத்தார். தார் (Dhar) என்னுமிடத்தில் 10-1-1775 -இல் ஆனந்திபாய் அம்மையாருக்குப் 'பாசிராவ்' (இரண்டாம் பாசிராவ்) பிறந்த செய்தியை எடுத்துரைத்து, இரகோபாவின் (இரகுநாதராவ்) செல்வாக்குத் தேய்ந்துவிட்டது என உணர்த்தினார்.

சிறந்ததோர் அரசியல் நுண்திறத்திற்கு (Diplomacy) எடுத்துக்காட்டாகப் புரந்தர் உடன்படிக்கை விளங்குகிறது. இயக்குநர் குழு (Court of Directors) வெட்டுரிமையைப் (Veto Power) பயன்படுத்தி நிருவாகக் குழுவின்முடிவைமாற்றியது. வாரன் ஏசுடிங்சு கி.பி. 1778-இல் புரந்தர் உடன்படிக்கைக்கு மீண்டும் உயிரளித்தார். மோசுட்டின் (Mostyn) என்பார் கி.பி. 1777-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆங்கிலத் தூதுவராகப் பணியாற்றினார். மராத்திய-பிரெஞ்சு உறவை உரிய நேரத்தில் துண்டித்து, ஆங்கிலேயரின் செல்வாக்கைப் பாதுகாத்தவர் என்ற முறையில் கர்னல் உப்டன் பெரிதும் போற்றப்பட்டார்.

தி.வெ.கு.

துணை நூல்கள்:

**Majumdar**, R.C. and **Others**, An Advanced History of India, 4th edition, Macmillan, Delhi, 1982.

**Sathyanathier, R. and Vasudeva Rao, N.T.**, History of India, Vol. III, S. Viswanathan (Pvt) Ltd., Madras, 1982.

***உப்பர்ட்டால்*** நகரம் செருமனி நாட்டின் வட இரைன்வெசுட்டு பேலியா மாநிலத்தில் அமைந்துள்ளது. இது உப்பர் (Wupper) ஆற்றின் இருமருங்கிலும் உள்ள செங்குத்தான சரிவுகளை ஒட்டினாற்போல் 13 கி.மீ. பரந்துள்ளது. உப்பர்ட்டால் (Wuppertal) ஒரு தொழில்நகரம். பட்டு, மென்பட்டுவகை, செயற்கை நூல்கள், கம்பளங்கள், வீட்டுக்குத் தேவையான தட்டுமுட்டுப் பொருள்கள் போன்ற பொருள்கள் இங்குச் சிறப்பாக உற்பத்தியாகின்றன. இரும்பு, உருக்கு ஆலைகள் பல இங்கு உள்ளன. உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல், மருந்து வகைகள், சாயப்பொருள், வெடிகுண்டுகள், இசைக்கருவிகள், காகிதம், தோல் போன்றவை உற்பத்தி செய்யப்படுதல் ஆகியவை இங்கு நிகழ்கின்றன.

உப்பர்ட்டால் பகுதியில் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் குடியேற்றங்கள் ஏற்பட்டுப் பல்வேறு சமூகங்கள் உருவாயின. பார்மன் (Barmen), எல்பர்பெல்டு (Elberfeld), உரோன்சுடார்பு (Ronsdorf), பியன்பர்கு (Beyenburg), குரோனன்பர்கு (Cronenburg), வோவிங்கல் (Vohwinkel) போன்ற நகராட்சிப் பகுதிகள் 1929-ஆம் ஆண்டில் பார்மன் எல்பர்பெல்டு (Barmen-Elberfeld) என்னும் பெயரில் ஒன்றாக இணைக்கப்பட்டன. இது உப்பர்ட்டால் என்னும் பெயராக 1930-இல் மாற்றப்பட்டது.

ஏழைகளுக்கு உதவி செய்யும் எல்பர்பெல்டு முறை, (Elberfeld System) இவ்வூரில் தொடங்கிப் பெரும் புகழ் பெற்றது. பின்னர் இம்முறையை ஏனைய செருமானிய நகரங்களும் ஏற்றுக் கொண்டன. இம்முறை கி.பி. 1853-ஆம் ஆண்டில் இந்நகரில் நிலைநாட்டப்பட்டது. இதன்வழி நலிந்தோர், வறியோர் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிமக்களின் பொறுப்பில் விடுத்து, அவர்களின் திறமைகளைப் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். தலைசிறந்த தொழில் நகரமாயிருந்த காரணத்தால் இரண்டாம் உலகப்போரின் போது இந்நகரம் கடுங்குண்டுவீச்சுக்காளாயிற்று. போருக்குப் பின்னர் மீண்டும் இந்நகரம் செழித்து வளர்ந்துள்ளது. இப்போது இந்நகரம் மேற்குச் செருமனியில் உள்ளது.

உப்பர்ட்டால் நகரின் மக்கள்தொகை 3,92,000 (1981).

***உப்பிலியர்*** தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் உப்பை உற்பத்தி செய்து, உப்புச் சார்ந்த பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ள ஒரு வகுப்பினர். தமிழ்நாட்டில் உள்ளவர்கள் உப்பிலியர் என்றும், ஆந்திரப் பிரதேசத்திலுள்ளவர்கள் உப்பரா (Uppara) என்றும், கருநாடக மாநிலத்திலுள்ளவர்கள் உப்பாரா(Uppara) என்றும் கூறப்படுவர். இவர்கள் முறையே தமிழ்,

தெலுங்கு, கன்னட மொழியைப் பேசுபவர்கள். கிணறு வெட்டுதல், கால்வாய் வெட்டுதல், வீடு கட்டுதல், கல் அறுத்தல், பிற மண் வேலைகள் முதலான வற்றைத் தொழிலாகக் கொண்ட சாதிக் குழுவினர் என உப்பலியர், உப்பராவினர் பற்றி எச்.ஏ. இசுட்டு வர்ட்டு (H.A. Stuart) குறிப்பிடுவார். தெலுங்கு உப்பராவினர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அரசர்களின் கோட்டைகளுக்கு மண்சுவர் எழுப்பும் தொழிலை மேற்கொண்டிருந்தனர் எனப் புச்சானன் (Buchanan)குறிப்பிடுகிறார். இவர்கள் உப்புத் தொழில் மட்டுமன்றி வெடிமருந்துக்கு முதன்மையான பொருள்களுள் ஒன்றான வெடியுப்புப் (Saltpetre) பொருளையும் உற்பத்தி செய்தனர். எனினும் இவர்களது மரபுத் தொழில் உப்புத் தொழிலே.

உப்பிலியர், உப்பராவினர், உப்பாராவினர் ஆகிய மூவரும் முன்னாளில் ஓர் இனத்தவரே என்பர் மானிடவியலார். நாளடைவில் இவ்வினத்தவர் பல பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து அந்தந்த வட்டார மொழியை எற்றுச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ முற்பட்டனர். இன்று இவர்கள் ஒரிசா மாநிலக் கஞ்சம் (Ganjam) மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டின் தென் பகுதி வரை பரவிக் காணப்படுகின்றனர்.

கடவுள் தமக்கு உப்பு வழங்கும் பொருட்டுப் படைத்துக்கொண்ட உப்பிலியனின் வழிவந்தவர்கள் என உப்பிலியர் தம்மைக் கருதுகின்றனர். உப்பிலியனின் மனைவி கண்ணாடி வளையல்கள் வாங்குவதற்கு உப்பைப் பண்டமாற்றம் செய்ததால் கடவுளின் நம்பிக்கையை இவ்வினத்தவர் இழந்தனர் என்றும், தவறு செய்த உப்பிலியன் மனைவியைக் கொல்ல முயன்றபோது, அவள் பின்பக்கத் துளை வழியே தப்பித்து விட்டாள் என்றும், இதனாலேயே தங்கள் சாதிப் பெண்கள் கண்ணாடி வளையல்களை அணிவதில்லை என்றும், இவர்கள் அடுப்புக் கட்டும் போது ஒரு துளையினை வைத்துக் கட்டுவர் என்றும் குறிப்பிடுவர். இவர்களது மரபினைக் குறிப்பிடும் போது விட்டுணு புராணத்தில்(Vishnu Purana) குறிப்பிடப்பட்டுள்ள சகாரா (Sagara) என்னும் தொன்மயனின் (Mythical Individual) வழிவந்தவர் என்றும் குறிப்பிடுவர். அத்தொன்மயன் வங்கக் கடலைத் தோண்டிய பெருங்கதையையும் குறிப்பிடுவர்.

உப்பங்கழியிலிருந்தும் கடல் நீரிலிருந்தும் பெறப்பட்ட உப்புகளை இலம்பாடிகளும், கொரச்சாவினரும் (Korachas) பெற்று வாணிகம் செய்தனர். அப்போதைய ஆங்கிலேய அரசும் சென்னை உப்பு ஆணையமும் (1876) நிசாம் (Nizam) அரசும் இவர்களின் தொழிலில் பல விதிகளைப் புகுத்தித் தொழில் முறையில் மாறுபாடுகளை ஏற்படுத்தின.

உப்பிலியர், உப்பரா, உப்பாரா ஆகியோர் இணக்கமாகப் பல இடங்களில் காணப்பட்டாலும் இவர்களின் குழுக்களிடையே திருமணம் நடைபெறுவதில்லை. இவர்களிடையே மணப்பெண் பூப்படைந்த பின்னரும் பூப்படையா முன்னரும் மணம் கொள்வர். மணமுறை பலபகுதிகளில் பலவாறாக நடைபெறுகிறது. தந்தைவழி அத்தையின் மகளை விரும்பி மணக்கின்றனர். இவர்களின் சமூகச் செயற்பாடுகளையும் சிக்கல்களையும் 'பட்டக்காரன்' என்னும் சாதித்தலைவன் கண்காணிக்கிறான். பஞ்சாயத்து அமைப்பு இவர்களிடையே இப்போது நிலவுகிறது. சமூகத்தில் குற்றம் இழைப்பவருக்கு எளிமையானது முதல் கடுமையானது வரை தண்டனை உண்டு. விதவை மணமும் மறுமணமும் இவர்களிடையே உண்டு.

உப்பிலியர்கள் சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் சார்ந்த இரு நிலையினராய் உள்ளனர். கிராமத் தெய்வங்களையே பெரிதும் வழிபடுகின்றனர். சங்கலம்மா (Sunkalamma), திம்மப்பா (Thimmappa), சம்புலம்மா (Jambulamma) போன்ற தெய்வங்கள் குறிப்பிடத்தக்கவை.

உப்பிலியர்கள் சமூக, பொருளாதார அமைப்பில் மாறுதல்களைப் பெற்று வருகின்றனர். இன்று இவர்களுள் பலர் தங்களின் மரபுத் தொழிலை விடுத்து அரசுப் பணியிலும் தொழிற் கூடங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

**உப்புச் சத்தியாக்கிரகம்**: அண்ணல் காந்தியடிகள் இந்தியத் திருநாட்டினை அடிமைப்படுத்திய அந்நிய ஆங்கிலப் பேரரசுக்கெதிராக நடத்திய அறப் போராட்டங்களுள் முக்கியமான ஒன்று உப்புச் சத்தியாக்கிரகம். மக்கள் நாடோறும் பயன்படுத்தும் முக்கிய பண்டமான உப்பின் மீது ஆங்கில அரசு விதித்த வரிப்பளுவினால் இந்திய ஏழை மக்கள் அல்லலுக்குள்ளாயினர். எனவே உப்புச் சட்டத்தை மீறிக் காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்த விழைந்தார். 'உப்புச் சட்டத்தை மீறுதல்' என்ற உப்புச் சத்தியாக்கிரகத்தால் காந்தியடிகள் இந்திய மக்களின் உள்ளங்களில் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டது. சாதி, சமய மற்றும் இனவேறுபாடுகளின்றி உப்பு அனைவருக்கும் பொதுவானதால் காந்தியடிகள் அதனையே படைக்கலமாகக் கொண்டு, அன்னை பாரதத்தின் அடிமை விலங்ககற்றி இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை வாங்கித்தர முற்பட்டார்.

இந்திய அரசப்பேராளரான இர்வின் பிரபுவினால் 'தேநீர்க் கிண்ணத்தில் எழுந்த புயல்' (Storm in a Tea Cup) என்றும், ஆங்கில அதிகாரிகளால் 'சிறுபிள்ளைத் தனமான கிளர்ச்சி' (Kindergarten Cries) என்

றும் எள்ளி நகையாடப்பட்ட உப்புச் சத்தியாக்கிரகம் இந்திய மக்களிடையே ஒரு விழிப்புணர்வையும் ஒரு மைப்பாட்டினையும் தோற்றுவித்தது.

உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்படலா மென்ற முடிவு 1930-ஆம் ஆண்டு பிப்பிரவரி 14-ஆம் நாள் முதல் 16-ஆம் நாள் வரை சபர்மதி ஆசிரமத் தில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் நடைமுறை களைத் தீர்மானிக்கும் பொறுப்பைக் காந்தியடி களின் விருப்பத்திற்கு விட்டுவிட முடிவெடுக்கப்பட் டது. அதற்குச் செயல்வடிவமும் தரப்பட்டது. எனவே அகமதாபாதிலிருந்து 385 கி.மீ. தொலைவிலிருந்த தண்டிக்குச் சென்று, அங்கு உப்புச்சட்டத்தை மீற அண்ணல் முடிவு செய்தார். தம் முடிவினை 2-3-1930 -இல் அப்போதைய அரசப் பேராளர்க்கு எழுத்து மூலம் தெரிவித்தார். அதன் மூலம் இந்தியாவின் எண்ணற்ற ஏழைமக்களை ஆங்கில அரசின் கொள் கைகளும் சட்டங்களும் துன்புறுத்துகின்றனவென்ப தும் புலப்படுத்தப்பட்டது. ஆயினும், அச்செயலில் தாம் எதுவும் செய்வதற்கில்லையென அரசப் பேரா ளர் மறுமொழி நல்கினார். எனவே ஆங்கிலப் பேரர சினை அடிபணியச் செய்யச் சத்தியாக்கிரகமே சரி யான வழியென அண்ணல் எண்ணினார். உப்புச் சத்தியாக்கிரகத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனச் செயல்திட்டங்கள் தீட்டப்பட்டன.

போராட்ட வீரர்கள் கதர் அணியவேண்டுமென அறிவிக்கப்பட்டனர். 1930-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அகமதாபாதில் நடைபெற்ற காங்கிரசின் முடிவின்படி, சத்தியாக்கிரகத்தின்போது ஒவ்வொரு வரும் கீழ்க்காணும் உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளுமாறு பணிக்கப்பட்டனர். 1. இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட விரும்பும் நான் அமைதியான சட்டமுறையிலமைந்த வழிகளில் இந்தி யாவை விடுதலை அடையச் செய்ய வேண்டுமென்ற கொள்கையை ஏற்கிறேன். 2. இப்போராட்டத்தில் சிறைபுகவும், துன்பங்களோடு தண்டனைகளை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். 3. சிறை செல்லுங் காலத்தில் குடும்பத்திற்கென எவ்விதமான உதவித் தொகையும் கேட்க மாட்டேன். 4. இயக்கத் திற்குப் பொறுப்பானவர்களின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன். இவ்வாறான உறுதிமொழி கள் மேற்கொள்ளப்பட்டபின் பயணந் தொடர வகை செய்யப்பட்டது.

சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த 78 சத்தியாக் கிரகிகளுடன் அண்ணல் காந்தியடிகள் 30-3-1930-இல் தண்டிக்குத் தம் பயணத்தைத் தொடங்கினார். பத்திரிகை நிருபர்கள், அரசியல் மேதைகள், கற்ற வர்கள், நெசவாளிகள், அரிசனங்கள் ஆகிய பலரும் அவர்களுள் இருந்தனர். 16 வயது இளைஞர் முதல் 61 வயதான காந்தியடிகள் வரை பல பருவத்தினர் அப்பயணத்தில் பங்கேற்றனர். பாதயாத்திரையின் போது அதிகாலை நான்கு மணிக்குக் காந்தியடிகள் எழுந்து வழிபாட்டினை முடித்துக் கொண்டு. கிராம மக்களுடன் உறவாடி, நூற்பு வேள்வியில் ஈடுபட்டுப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், கடிதங்கள் எழுது தல் போன்ற அன்றாடக் கடமைகளை முடித்துத் தம் பயணத்தைத் தொடர்ந்தார். காந்தியடிகளின் பார்வைபட்ட இடங்களிலிருந்தெல்லாம் போராட்டப் பொறி கிளம்ப, அப்போது இசைக்கப்பட்ட தம்புராக் களின் இசை போர் முரசாக, பாடப்பட்ட பக்திப் பாடல்கள் போர் முழக்கமென ஒலிக்க, நடைப் பயணம் 24 நாட்களுக்குப்பின் மார்ச்சு 5-இல் தண் டியில் சென்று முடிவுற்றது. காந்தியடிகளின் அந்த அறப்போராட்டத்தினை,‘ காந்திக்கு இது ஓர் ஓய்வு நேர விளையாட்டு’ என எள்ளி நகையாடியவர்கள், அண்ணலின் அறப்போர் இந்திய மக்களிடம் ஏற்படுத் திய எழுச்சியினைக் கண்டு, தாங்கள் கொண்டிருந்த ஐயப்பாடு குறித்து நாணமடைவதாக வெளிப்படை யாகக் கூறலாயினர்.

அடுத்த நாள் காலை வழிபாட்டிற்குப்பின் அண்ணல் உப்பை அள்ளி உப்புச் சட்டத்தை மீறி னார். ‘இந்த ஒரு பிடி இந்திய உப்பில்தான் நம் மானம் அடங்கியுள்ளது. கைமுட்டி முறிந்தாலும் உப்பைக்கைவிட வேண்டாம்’ என முழங்கிய நாட்டுத் தந்தையின் சொல்லுக்கிணங்கி, உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்ட அறுபத்தினாயிரத்துக்கும் மேற் பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர். பண்டித மதன் மோகன் மாளவியா, முன்சி, தேவதாசுகாந்தி, மகா தேவ தேசாய், பண்டித மோதிலால் நேரு, பண்டித சவகர்லால் நேரு போன்ற தலைவர்கள் கைதானவர் களுள் முக்கியமானவர்கள்.

இதனைத் தொடர்ந்து அண்ணலின் அறப்போர் மக்களியக்கமாக மலர்ந்தது. இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது புதிய தலைவர்கள் பொறுப்புகளை மேற்கொண்டு, போராட்டப் பணி களைத் தொடர்ந்தனர். உப்பு வரிச் சட்ட மீறலு டன் சட்டமறுப்புப் பணிகள் பலவழிகளில் மேற் கொள்ளப்பட்டன. பம்பாயில் அரசு ஆணைக்கு மாறாக உப்புக் காய்ச்சப்பட்டதுடன் உப்பு வரியின்றி விற்கப்பட்டது. தலைவர்கள் வீதிகளில் உப்பு விற்று அச்சட்டத்தை மீறினார்கள். சென்னை மெரீனா கடற்கரையில் ஆந்திரகேசரிபிரகாசமும் கே. நாகே சுவரராவும் உப்புவரிச் சட்டத்தை மீறினர்.

சி. இராசகோபாலாச்சாரியார் 13-4-1930 முதல் 28-4-1930 வரை திருச்சியிலிருந்து நடைப்பயணம் மேற்கொண்டு வேதாரணியக் கடற்கரையில் உப்புச் சட்டத்தை மீறினார். ஆங்கில அரசு அடக்கு முறையைத் தீவிரப்படுத்திச் சத்தியாக்கிரகத்தைச் செயலற்றுப்போகச் செய்ய முயன்றது. ஏப்பிரல் 27-ஆம் நாள் சத்தியாகிரகத்தையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் மாண்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

காந்தியடிகள் 4-5-1930 நள்ளிரவில் கைது செய்யப்பட்டுப் புனாவிலுள்ள எரவாடாச் சிறையில் காவலில் வைக்கப்பட்டார். மக்கள் கொதித்தெழுந்தனர். ஆங்கில அரசின் அடக்குமுறை தொடர்ந்தது. எனவே, வேலைநிறுத்தம், கடையடைப்பு முதலியன நாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. பம்பாய்,புனா போன்ற இடங்களில் கடைகள் முழுமையாக அடைக்கப்பட்டன. சோலாப்பூரில் இதனையொட்டி எழுந்த சிக்கலின்போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 25 பேர் மாண்டனர். காந்தியடிகளுக்குப் பின் போராட்டத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்ற அப்பாசு தியாப்சி கைது செய்யப்பட்டார். காந்தியடிகள் ஏற்கனவே முடிவு செய்திருந்தவாறு மே 21-இல் 'தர்சனா' என்ற இடத்திலிருந்த உப்பு மண்டியை இமாம்சாகிபு, சரோசினி நாயுடு போன்றோர் முற்றுகையிட்டனர். அறவழியில் நடைபெற்ற அப்போராட்டத்தினை ஆங்கில அரசு இரும்புக் கரங்கொண்டு நசுக்கியது. தொண்டர்கள் துன்புறுத்தப்பட்டுத் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

உப்புச் சத்தியாகிரகத்தையொட்டிச் சட்டமறுப்பு இயக்கம் தொடர்ந்தது. இடத்திற்கிடம் மாறுபட்டுச் சூழல்களுக்கொப்ப ஆங்கில அரசுக்கெதிரான பல செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் விடுதலை உணர்வுடன், ஆங்கிலப் பேரரசிற்கு எதிரான வெறுப்பு உணர்வு காரணமாக மேற்கொள்ளப்பட்ட செயல்கள் ஆங்கில அரசினை அச்சங்கொள்ளச் செய்தன. உப்புச் சத்தியாக்கிரகமும் சட்டமறுப்பு இயக்கமும் இந்திய விடுதலைப்போரின் வலிமைமிக்க அடித்தளங்களாக அமைந்தபோது, ஆங்கில அரசு சிக்கல்களுக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் நோக்கில் 12-11-1930 முதல் 19-1-1931 வரை முதல் வட்டமேசை மாநாட்டை இலண்டனில் கூட்டியது. ஆனால் காந்தியும் பிறதலைவர்களும் அம் மாநாட்டில் பங்கேற்க மறுத்துவிட்டனர். உப்புச் சத்தியாக்கிரகம் இந்திய விடுதலைப்போரில் ஒரு திருப்பு முனையாக அமைந்து ஆங்கில அரசினை முதன் முறையாகச் சிந்திக்கத் தூண்டியது. மா. கா.

**உப்பூரிகுடி கிழார்மகனார் உருத்திர சன்மனார்**: காண்க: உருத்திரசன்மன்.

**உப்பை** ஆதி என்னும் தாழ்ந்த குடிப் பெண்ணிற்கும், பகவன் என்னும் உயர்குடி ஆணுக்கும் பிறந்தவர்கள் எனக் கூறப்படும் எழுவருள் ஒரு பெண். இவளோடு பிறந்த ஏனையோர் ஔவை,அதியமான், உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் எனப் படுவர். ஆதியும் பகவனும் மணந்தபோது, தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த அப்போதே, அவ்வவ்விடங்களில் விடுத்துச் செல்லவேண்டும் என்று ஒப்பந்தஞ் செய்துகொண்டனர். அதன்படி, உப்பை பிறந்தபோது ஆதி, அக்குழந்தையை விட்டு நீங்கத் தயங்கினார் என்றும், உடனே அக்குழந்தை 'அத்தி முதல் எறும் பீறான உயிர் அத்தனைக்கும்' எனத் தொடங்கும் ஒரு வெண்பாவினைக் கூறியது என்றும், அதனைக் கேட்டுத் தெளிவுற்ற தாய் அதனை அவ்விடத்தே விட்டு நீங்கிக் கணவனுடன் வேற்றிடம் சென்றாள் என்றும் கூறப்படுகிறது. இவ் வுப்பை ஆடை வெளுப்போரால் வளர்க்கப் பெற்றுப் பின்னாளில் ஊற்றுக் காட்டில் அமர்ந்து, மாரியம்மை ஆயினாள் என்றும் கூறப்படுகிறது. இவ் வுப்பை பிருகு முனிவரின் பத்தினி என்றும், மும்மூர்த்திகளைப் பிருப் பெடுக்குமாறு செய்தாள் என்றும், அதனால் அவர்கள் கூறியபடி இவள் பூமியில் உப்பையாய்த் தோன்றிப் பின், மாரியம்மையானாள் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது. உப்பை முதலியவர்களின் தோற்றம் பற்றிய செய்திகளை இக்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை, ஆதி-பகவன் திருமணம், அவர்கள் ஏழுமக்களைப் பெற்றமை ஆகியன பற்றிய குறிப்பு ஞானாமிர்தம் என்னும் சைவ நூலிலும் காணப்படுகிறது.

**உபகார சஞ்சீவி** கண்ணகுமது மகுதூ முகமதுப் புலவர் கி.பி. 1892-இல் இயற்றிய நூல். இதனை ஆத்தீம்கிசா என்றும் கூறுவர். ஆத்திம் என்பவர் செய்த கொடைச் சிறப்பைப் பலகோணத்தில் படம் பிடித்துக் காட்டும் இந்நூல் 7 பிரிவுகளைக் கொண்டது. பி.தெ.

**உபகேசி**: இது கண்ணனின் மனைவியர் பலருள் ஒருவரான நப்பின்னைப் பிராட்டியின் பெயராகும். 'உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்' என்னும் திருவள்ளுவ மாலைச் (21) செய்யுளில் இடம் பெற்றுள்ள 'உபகேசி' என்பது நப்பின்னையையும், 'தோள்மணந்தான்' என்பது அவளை மணந்த கண்ணனையும் குறிக்கின்றன. இத்தொடருக்குப் பிறவாறும் பொருள்கூறுவர். நேமிநாத உரை இப்பெயர் நப்பின்னையைச் சுட்டுவதாகக் குறிப்பிடுகிறது (நேமிநா. சொல். 5,உரை). உபகேசம் என்பதற்கு, 'மயிராற் பின்னிய பின்' என்பது பொருள். பின்னை என்ற பெயரும் இப்பொருளில் அமைந்த

தாகும். அது சிறப்புணர்த்தும் இடைச்சொல்லொடு கூடி நப்பின்னை என்றாகி, கண்ணன் மனைவியருள் ஒருத்தியைக் குறிக்கிறது. நப்பின்னை சிலப்பதிகாரத்தில் பிஞ்ஞை என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளாள். உபகேசி, பின்னை ஆகியன ஒரு பொருட் பன்மொழியாகும். வடமொழியில் கண்ணன் இராதைத் தொடர்பு பேசப்பட்டிருப்பது போலக் கண்ணன் நப்பின்னைத் தொடர்பு தமிழ் இலக்கியங்களில் பெரிதும் கூறப்பட்டுள்ளது.

**உபசாந்த பிரகரணம்** கி.பி. 1871-இல் கிருட்டிணய்யங்காரால் எழுதப்பட்ட சுகாதாரம் பற்றிய நூலாகும். உடலை நலமாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய விதிமுறைகளை இந்நூல் விளக்குகிறது. பல உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைகளையும் இந்நூல் கூறுவதால் ஒரு சமையற்கலை நூலாகவும் விளங்குகிறது. பி.தெ.

**உபசார வழக்கு** என்பது சொற்றொடர் பொருள் உணர்த்தும் வகைகளுள் ஒன்றினைக் குறிக்கும் இலக்கணக் குறியீடாகும். வினைமுதலும் கருவியும் எனவும், கருவியும் பயனும் எனவும்,காரணமும் காரியமும் எனவும் இயைபுடையனவற்றைச் சொல்லுமிடத்து, இவற்றுள் ஒன்றைக் குறிப்பிடுவதற்காக மற்றொன்றை எடுத்துக் கூறுவது உபசார வழக்கு எனப்படும். 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பது அறிவு' என்னும் குறள் விளக்கத்தில் பரிமேலழகர், 'பிறப்பென்னும் பேதைமை யெனவும், சிறப்பென்னும் செம்பொருள் எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்' என்று குறிப்பிட்டுள்ளார். பேதைமை என்பது அவிச்சை (அறியாமை). அதனால் உண்டாவது பிறப்பாகும். இதில் பேதைமை காரணம்; பிறப்பு காரியம். இக்குறளில், பேதைமை என்னும் காரணத்தால் உண்டாகிய பிறப்பு என்று கூறாமல் பேதைமையே பிறப்பு என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, செம்பொருட் காட்சியால் உண்டாவது சிறப்பு. இதில் செம்பொருள் காரணம்; சிறப்பு காரியம். செம்பொருளால் உண்டாகிய சிறப்பு என்று கூறாமல் சிறப்பே செம்பொருளாகக் கூறப்பட்டுள்ளது. இக்குறளின் இவ்விரு இடங்களிலும் காரியம் (பிறப்பு, சிறப்பு) காரணமாகக் (பேதைமை, செம்பொருள்) கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்படுவது உபசார வழக்கு எனப்படும். காரியத்தைக் காரணமாகக் கூறுவது போலக் காரணத்தைக் காரியமாகக் கூறுவதும் உண்டு.

உபசார வழக்கினை ஒரு வகையில் இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடும் இலக்கணை என்பதனோடு ஒப்பிடலாம். இலக்கணையை விளக்குங்கால் இலக்கண உரையாசிரியர்கள், 'இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்து உரைப்பது' என்றும், 'அது விட்டஇலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்' என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர் (நன். 269, சிவஞானமுனிவர் விருத்தி). புளித்தின்றான் என்னும்போது புளிப்புடைய பழத்தைத் தின்றான் என்பது பொருளாகும். இங்குப் புளி என்னும் சுவைப்பெயர் அதனைக் கொண்ட ஒரு பழத்தினைக் குறிக்கிறது. புளிப்புடைய பழத்தைத் தின்றான் என்னும் பொருளில் புளித்தின்றான் எனக் கூறப்படும் இந்த இலக்கணை, ஒருவகையில் உபசார வழக்கினோடு ஒத்துக் காணப்படுகிறது.

**உபதேச கலை:** 'பிரமாணம்' அல்லது 'அளவை' பலவகையாகச் சொல்லப்படினும் அவற்றுள் தலையானவை காட்சி, கருதல், உரை என்னும் மூன்றுமேயாகும். அவற்றுள் உரையளவை அல்லது ஆகமப் பிரமாணம் தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என மூன்றாகும்.

கரும காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என்னும் வேதத்தின் பிரிவு மூன்றுமே முறையே தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என்பனவாம்.

இனிச் சைவாகமங்களில் உள்ள நாற்பாதங்களுள் சரியா பாதம் தந்திர கலை எனவும், கிரியா மற்றும் யோகபாதங்கள் மந்திர கலைஎனவும், ஞான பாதம் உபதேச கலைஎனவும் சொல்லப்படும் (சிவஞான சித்தியார் -சுபக்கம் -19 சிவஞான யோகிகள் உரை). சி.அ.

**உபதேச காண்டம்** 41 சருக்கங்களைக் கொண்டது. கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்தின் தொடர்ச்சியே இந்நூல். இதனாசிரியர் கோனேரியப்ப முதலியார். இந்நூல் கி.பி. 1887-இல் வெளிவந்தது. சிவசின்னம் அணிதல், சிவபுராணம் கேட்டல் முதலிய சிவத்தொண்டுகளின் விளக்கங்களை இந்நூலில் காணலாம். பி.தெ.

**உபதேச சங்கிரகம்:** இது சற்குரு இயல்புகளைக் கூறும் நூல். சம்பூரண இரகசியம் என்று இதற்கு மற்றொரு பெயருமுண்டு. இது சிட்டாகார பத்ததி, தேசிக விலாச பத்ததி, ஊர்வசிய பத்ததி என முப்பெரும் பிரிவுகளைக் கொண்ட தொகுப்பு நூல். இது கி.பி. 1882-இல் வெளிவந்தது. பி.தெ.

**உபதேச ரத்ன மாலை:** சிருங்கேரி மடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

மனிதப் பிறவியின் மேன்மையைக் கூறும் தத்துவ நூலாகிய இது 9 இயல்களைக் கொண்டது. சாத்திர நியதிகளை எல்லா மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டது. பி.தெ.

**உபதேச வெண்பா** என்னும் நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் வீற்றிருந்த அம்பலவாண தேசிகர் என்பவரால் இயற்றப் பெற்றது. இவர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. திருவாவடுதுறை ஆதீனத்திற்குத் தனியாகவே பண்டார சாத்திரம் என்று பதினான்கு நூல்கள் உள்ளன. அவற்றுள் தசகாரியம், சன்மார்க்க சித்தியார் முதலிய பத்து நூல்களை இந்த ஆசிரியரே இயற்றியுள்ளார். அத்தொகுப்பினுள் இந்நூல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்நூல் மனம் தூயராகிச் சரியை, கிரியை, யோகங்களிற் படிந்து ஞானம் கடைப்பிடிக்கும் முறை பற்றிக் கூறுவதாகும். 'துடிதுடித்தோடும் மனத்தினை நிறுத்தித் தூயதாக் கண்டு அவண் தவத்துத் தொன்னெறி நின்று சுரர்க்கு அரிதாகும் சோதியன் ஞானத்தை வழங்கல் துகளறும் உபதேசத்து வெண்பாவாம்' என்று இந்நூலைப் பற்றிச் சான்றோர் ஒருவர் கூறிய கருத்து இதன் பெருமையைத் தெற்றென விளக்கும்.

இந்நூல் 43 வெண்பாக்களாலாகியது. நூலினிறுதியிலுள்ள இரண்டு பாக்கள் இந்நூலைப் பற்றியனவாக அமைந்துள்ளன. பாக்கள் யாவும் சைவ சித்தாந்தத் தனிச் சிறப்பு, குருவின் பெருமை, தீக்கையின் விசேடம், சரியை, கிரியை, யோகம், ஞானச் சிறப்பியல்புகள், முத்திநெறி அடையும்வழி முதலியவை பற்றிக் கூறும் சிறப்பு வாய்ந்தவை.

ஞானம் பரஞானம், அபரஞானம் என இரு வகைப்படும். நூலறிவால் பெறப்படும் உலகியலறிவு அபரஞானம் என்றும், இறையறிவு பரஞானம் என்றும் சொல்லப் பெறும். பரஞானம் பெற முயல்வோர் அருளாளர் அருளிய ஞான நூல்களை நன்கு கற்க வேண்டும். அன்றியும், தக்க குரு ஒருவரை நாடிச் சென்று தீக்கை பெற வேண்டும். தீக்கை என்பது ஒருவனிடமுள்ள பல்வகைக் குற்றங்களையும் போக்கி நல்லாறு செலுத்தும் முறையாகும். பின்னர்த் தான் படித்தவற்றையும் குருவின் உபதேசங்களையும் மனத்துட் கொண்டு இறைவனைத் தியானித்து அவனருள் பெற முனைய வேண்டும். அதில் இடைவிடா முயற்சியின் பயனால் சிறந்த இன்ப அனுபவம் கிட்டும். இவ்வாறு இம் மூன்று படிமுறைகளினால் உயர்ந்து, பின் நிட்டை கூடினால் அது இறையனுபவத்திற்குத் தக்க வழி காட்டும். முத்திநிலை கிட்ட வேண்டும் எனில், உண்மையான வேட்கை வேண்டும். இன்றேல், அது வாய்க்காது என்றும், தேகத்தைப் பற்றியே கருதி அதனை ஓம்புவதையே பொருளாக் கொள்ளாது நன்மார்க்கம் சார்ந்து அறிவைப் பயன்படுத்தி முழுமுதற் பொருளாய அவனைத் தோய்தலே பேரின்பசுகம் ஆகும் என்றும் இன்னோரன்ன பல சிறப்பியல்புகளையும் விளக்கும் நூலாக விளங்குவது இவ்வுபதேச வெண்பாவாகும். இந்நூலை இயற்றிய அம்பலவாண தேசிகர் திருவாவடுதுறையில் சமாதியுற்றார்.

இரா.ச.

**உபநயனம்** என்பது ஒரு மாணவன் கல்வி பயிலுங்கால் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்துவதாகும். ஒரு மனிதனது வாழ்க்கையின் தொடக்கம் மாணவப் பருவம். மாணவன், இந்தப்பருவத்தில் உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்தித் தூய்மையான வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாதது. ஆகவே, இந்த மாணவப் பருவம் பிரமசரியம் என்று கூறப்படுகிறது. பிரமசரியம் என்ற சொல்லுக்குத் 'தன்னடக்கமுள்ள வாழ்க்கை முறை' என்பது பொருள். இந்தப் பிரமசரியப் பருவத்தின் அடிப்படையில் மற்ற மூன்று வாழ்க்கை முறைகளும் அமைவதால், இந்தப் பருவமே அம் மூன்றின் அடித்தளமாக அமைகிறது.

ஒரு சிறுவன் தன்னைத்தானே போற்றிப் பாதுகாத்துக் கொள்ளும் பருவம் எய்தியவுடன், தக்க ஆசிரியருடன் வசித்துக் கல்வி பயில அனுப்பி வைக்கப்படவேண்டியவன் ஆகிறான். மாணவன் ஆசிரியரை அணுகுங்கால், அவர் மாணவனுக்கு முப்புரி நூலை அணிவித்துக் 'கோல்' வழங்கி, மான்தோல் கொடுத்து, கோவணமும் மஞ்சள் துணியும் உடுத்தச் செய்து, முஞ்சாப் புல்லை மூன்று தடவை இடுப்பைச் சுற்றி அணிவித்து, மந்திரங்களிலேயே தலைசிறந்ததான காயத்திரி மந்திரத்தை அவனுக்கு அருளிச் செய்து ஏற்றுக் கொள்கிறார். இங்ஙனம், ஆசிரியர் மாணவனுக்கு முப்புரிநூல் அணிவித்துக் காயத்திரியைப் போதித்த கணத்திலிருந்து, மாணவன் 'இரண்டாம் பிறப்பு' எடுத்தவனாகக் கருதப்படுகிறான்.

யாக்ஞவல்கியர் என்ற மாமுனிவர் ஆசிரியர் மாணவனுக்கு முப்புரிநூல் அணிவித்துக் காயத்திரியைப் போதிக்க வேண்டிய வயதைப் பிராமணர்களுக்கு 8 என்றும் சத்திரியர்களுக்கு 11 என்றும் வைசியர்களுக்கு 12 என்றும் கூறுகிறார். ஆனால் மனு மேற்கண்டவர்களுக்குக் காயத்திரி போதிக்க

வேண்டிய வயதை 5,6,8 என வேறாக முறைப்படுத்திக் கூறுகிறார்.

மாணவன் ஆசிரியரின் அருகிலிருந்து கல்வி பயிலுங்கால், எத்தகைய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை ஆசிரியர் முப்புரி, நூலையும் பிற சாதனங்களையும் வழங்கும்போது குறிப்பாக உணர்த்துகிறார்.

முப்புரிநூல்: முப்புரிநூலில் மூன்று இழைகளும் அவை சேர்ந்த ஒரு முடிச்சும் உள்ளன. மூன்று இழைகளும் மேற்கூறிய மூன்றின் தத்துவ மறைபொருளை உணர்த்துகின்றன. எனவே, முப்புரிநூலை அணிவது, எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் மாணவன் கட்டுப்பாடு உடையவனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

கோல்: இது மாணவன் தன் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று வெளிப்பாடுகளிலும் விழிப்புடையவனாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

மான்தோல்: இது மாணவன் கல்வி பயிலுங்கால் துறவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறது.

கோவணமும் மஞ்சள் துணியும் உடுத்துதல்: ஒருவனது வாழ்க்கையில் மாணவப்பருவம் 'இரண்டாம் பிறவி', அதாவது 'ஆன்மிகப் பிறவி'. மஞ்சள் தெய்விகத்தைக் குறிப்பதால், மஞ்சள் துணி அணிதல், மாணவன் ஆன்ம தேகம் அடையப் பெற்றதைக் குறிக்கிறது. கோவணம் உடுத்துதல் மாணவன் ஆசைகளை அடக்கித் தூய்மையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து, தனது தலையாய கல்வி கற்றலில் முழுக் கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

முஞ்சாப்புல் அணிவித்தல்: முஞ்சாப்புல்லை மூன்று தடவை மாணவன் இடுப்பைச் சுற்றி அணிவித்தல் அவன் இப்பருவத்தில் வேதங்களின் கிளைகளான சம்கிதைகள், பிராமணங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்க வேண்டியதன் இன்றியமையாமையைக் குறிக்கிறது.

காயத்திரி மந்திரம்: இந்த மந்திரம் ஆதவனை மையமாகக் கொண்டது. இதன் பொருள், தன்மை, அமைப்பு ஆகியவை இதனைத் தலைசிறந்த மந்திரமாக உயர்த்தியிருக்கிறது.

இங்ஙனம், மாணவனை ஆசிரியரிடம் அழைத்துச் செல்லுதலையே 'உபநயனம்' என்ற சொல் குறிக்கிறது. 'உப'=அருகே; 'நயனம்'=நடத்திச் செல்லுதல். ஆனால், காலப்போக்கில் முப்புரிநூல் அணிவித்தல் என்பது ஒரு சடங்காக உருவெடுத்து, அதுவே 'உபநயனம்' என்று சொல்லப்படுகிறது. ஒரு மாணவனுக்கு இந்து சமயத்தைப் பற்றி முதன்முதலாக அறிவிக்கும் செயலும் உபநயனம் (Initiation) எனப்படுகிறது. எஸ்.ஓ.ரா.

**உபநிடதங்கள்** உபநிடதங்கள் வேதங்களின் பகுதிகளாகிய மந்திரம், பிராமணம், ஆரணியகம் ஆகியவற்றை அடுத்து இறுதிப் பகுதியாய் அமைந்துள்ளதால் வேதாந்தங்கள் எனப்படுகின்றன. உபநிடதம் என்னும் வடசொல்லுக்கு மிக்க கவனத்துடன் ஆசிரியர் அருகில் அமர்வது என்பது பொருள். உபநிடதங்களுக்கு மறைபொருள் என்ற பொருளும் உண்டு. எனவே மறையாகிய உண்மையறிவை ஆசிரியர் மாணவனுக்குக் கற்பித்தல் என்றும் பொருள் படும். வேதங்களில் சொல்லப்படும் உண்மைகளுள் இதுவே சிறந்தது என்பதாலும், வேத அறிவிற்கெல்லாம் இதுவே முடிவென்பதாலும், இவ்வுண்மையறிவு பிறவிப் பிணியையும் அதன் காரணமான அறியாமையையும் நீக்குவது என்று சங்கரரின் உரையிற் காணப்படுவதாலும் இவ்வறிவு காணப்படும் பகுதியான உபநிடதங்களுக்கு வேத-அந்தம் என்னும் பெயர் பொருந்துவதாகும். பின்னர், உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சிந்தனைகளும் வேதாந்தங்கள் என்றே சொல்லப்பட்டன.

உபநிடதங்கள் எப்பொழுது, எம்முறையில், யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்று கூறமுடிவதில்லை. உபநிடதங்களுள் மிகப் பழமையானவை புத்தர் காலத்திற்கு முன்னர் தோன்றியிருக்கவேண்டும் என்று கருதப்படுவதால் அவற்றின் காலத்தை கி.மு. எட்டாம் நூற்றாண்டு எனலாம்.

பார்த்து என்ற அறிஞரின் கருத்துப்படி உபநிடதம் என்ற பெயருள்ள 250 நூல்கள் இப்பொழுது இருக்கின்றன. உபநிடதங்களை 108 என்று கணக்கிட்டு முக்திகோபநிடதம் அட்டவணைப்படுத்துகிறது. இவற்றுள் மிகவும் பழமையானவையும், சங்கரர் போன்றோரால் அடிப்படையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளவையும் ஆகிய உபநிடதங்கள் 13 மட்டுமே. இவை ஈச, கேன, கத, பிரச்சன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்கிய, பிரகதாரணியக, கௌஷீதகீ, மைத்திராணீய, சுவேதாச்சுவதார உபநிடதங்கள். இவற்றுள் சில உரைநடையிலும் சில செய்யுள் வடிவிலும் சில இரண்டும் கலந்த நடையிலும் அமைந்துள்ளன. பிற்காலத்தில் தோன்றிய உபநிடதங்கள் அவை காணப்படுகின்ற

வேதப் பகுதியைப் பொறுத்தும், குணங்களுடன் கூடிய இறைவர்களைப் போற்றுவதைப் பொறுத்தும் பெயர் பெறுகின்றன. இவ்வகையில் மந்திரம் அல்லது சம்கிதையின் இறுதியில் உள்ள உபநிடதப்பகுதிகள் 'சங்கிதோபநிடதம்' எனவும், பிராமணங்களுடன் இணைந்தவை பிராமணோபநிடதம்' எனவும் குறிப்பிடப்படுகின்றன. விட்டுணு, சிவன், தேவி, கணேசன், கந்தன், சூரியன், இராமன், நரசிம்மன் போன்ற இறைவர்களையும், அவர்களின் தோற்றங்களையும் போற்றும் உபநிடதங்கள் அப்பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. இன்னும் சில உபநிடதங்கள் தாம் அடிப்படையாகக் கொண்டுள்ள பொருளின் பெயரால் சொல்லப்படுகின்றன. உபநிடதங்களை அவை சார்ந்த வேதங்களைக் கொண்டும் பிரித்துக் கூறுவதுண்டு. நால் வேதங்களில் அதர்வண வேதத்தைச் சார்ந்த உபநிடதங்களே எண்ணிக்கையில் மிகுந்தவை.

உபநிடதங்கள் பொதுவாக மூவகை அறிவைப் பற்றிப் பேசுகின்றன. அவை: கருமகாண்டம் எனப்படும் வினைப்பகுதியில் கூறப்பட்டுள்ள சில வினைகளுக்கோ அவற்றின் உறுப்புகள் சிலவற்றிற்கோ பொருளை விளக்கி, அவற்றின் மூலம் மன ஒருமைப்படுத்துதலைக் கூறுவது; ஆன்மாவை உணர்வதற்கான சில செயல்முறைகளை விவரிப்பது; தத்துவங்களைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பேருண்மைகளை எடுத்து உரிய வழிகளின்மூலம் ஆராய்வது.

உபநிடதங்கள் கற்பிக்கும் உண்மையைச் சுருக்கமாகப் பிரமம்-ஆன்மா என்பதனால் சுட்டலாம். எங்கும் எப்பொழுதும் உள்ளதும் பேரொளியானதும் அனைத்திற்கும் அடிப்படையாகவும் தோற்றுவாயாகவும் உள்ளதும் பிரமம். ஒவ்வொருவருக்கும் உள்ளே நின்று இயங்குவது ஆன்மா. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே என உபநிடதங்கள் கூறுகின்றன. புறத்தே தோன்றும் உலகிற்கு அடிப்படையாயுள்ளது ஆன்மா. அதுவே உண்மைப் பொருள். உலகத்தைப் பற்றிய எண்ணமும் தன்னைப் பற்றிய எண்ணமும் பிரமம்-ஆன்மா என்ற ஒரே பொருளில்தான் முடிவுறுகின்றன.

பிரம-ஆன்ம உண்மையை உபநிடதங்கள் இருவகையில் விளக்குகின்றன. i) முதலில் பருப்பொருள்களிலோ உடல் வட்டங்களிலோ உணர்வு நிலைகளிலோ தொடங்கி, இதுவல்ல இதுவல்ல என்று ஒவ்வொன்றாக விலக்கி, இறுதியில் அனைத்திற்கும் நுண்ணியதாக விளங்குவதே உண்மைப்பொருளான பிரமம்-ஆன்மா என்று உபநிடதம் கூறுகின்றது. இவ்விளக்கத்தில் உலகும் அதன் பொருள்களும் உண்மையல்ல; வெறுந் தோற்றமே என்று கருதப்படுவதால் இது நிட்பிரபஞ்சவாதம் அல்லது உலகுண்மை இன்மைக்கோட்பாடு என்று சொல்லப்படுகிறது. இக்கோட்பாடு பின்வரும் மூன்று உபநிடதங்களில் விளக்கப்பட்டுள்ளது.

பிருகதாரணியக உடநிடதத்தில் கார்கி என்னும் அம்மையார் அனைத்துப் பொருள்களுக்கும் அடிப்படையானது யாது என்று வினவியதற்கு, யாக்ஞவல்கியர் என்னும் முனிவர் விடையாக முதலில் பருப்பொருள்களிலிருந்து தொடங்கி, படிப்படியாகச் சென்று, பரந்தவெளியே யாவற்றுக்கும் அடிப்படை என்று முடித்தார். மேலும் வினவுகையில் வெளிக்கும் அப்பால் உள்ளது அழியாத, இன்னதென்று விவரிக்க இயலாத பொருள் என்று கூறுகிறார். அதுவே பிரமம் ஆகும்.

தைத்திரீய உபநிடதத்தில் பிருகு என்பவர் பிரமத்தைப்பற்றிக் கூறுமாறு தம் தந்தை வருணரைக் கேட்டார். அவர் எதிலிருந்து அனைத்தும் தோன்றி, எதில் வாழ்ந்து. இறுதியில் எதில் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம் ஆகிய உண்மைப் பொருள் என்றார். பின்னர்ப் பிருகு தம் தவ வலிமையால் அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம் ஆகிய உடல் திரைகளை ஒவ்வொன்றாகப் பிரமம் அல்ல என்று விலக்கி அவற்றுக்கு உள்ளே ஆனந்தப் பிழம்பாக விளங்கும் பொருளே பிரமம்-ஆன்மா என்று உணர்ந்தார்.

மாண்டுக்கிய உபநிடதம் ஆன்மாவை உணரும் பிறிதொரு முறையைக் குறிக்கிறது. பிரமம் அல்லது ஆன்மா என்னும் முதற்பொருளை ஓம் என்ற சொல் குறிக்கிறது. ஓங்காரத்திற்கு நான்கு மாத்திரைகள் இருப்பது போன்று ஆன்மாவிற்கு நான்கு நிலைகள் இருக்கின்றன. முதல் மூன்று நிலைகளான விழிப்பு, கனவு, உறக்கம் ஆகியவற்றில் உணரப்படும் பொருள்கள் தோன்றியும் மறைந்தும் வேறுபட்டும் இருப்பினும், இவற்றின் அடிப்படையாக விளங்கும் ஆன்மா மாறாதது; அழிவில்லாதது. இந்நிலை துரியம் எனப்படுகிறது. இது ஓங்காரத்தின் அ, உ, ம் என்ற ஒலிகளுக்கு அப்பால் உள்ள அரை மாத்திரையைப் போன்றது. ஆன்மாவின் அல்லது பிரமத்தின் உண்மை இயல்பு எண்ணத்திற்கும் மனத்திற்கும் அப்பால் இரண்டல்லாத ஒன்றான துரிய நிலை ஆகும். இந்நிலையில் ஆன்மாவின் இயல்பு ஆனந்தமே.

உபநிடதங்களில் நிட்பிரபஞ்சக் கோட்பாட்டைத் தெரிவிக்கும் வாக்கியங்களின் கருத்து பிரமம் வெறுமை என்பதன்று. எல்லையற்ற பொருளான பிரமம் எண்ணங்களுக்கு உட்பட்டதன்று என்பதனா

லேயே இதுஅன்று இதுஅன்று என்று குறிக்கப்படுகிறது. நிட்பிரபஞ்ச வாக்கியங்கள், 'பிரமம் சத்தியம் ஞானம் ஆனந்தம்', 'சத்தியத்தின் சத்தியம்' என்பன இலக்கண வாக்கியங்களுடன் சேர்ந்து பேருண்மைப் பொருளைப் போற்றுகின்றன. கால இடவரையறையின்றி எப்பொழுதும் எங்கும் உள்ளபடியால் சத்தியம் என்றும், உணர்வற்ற பொருளாயில்லாது உணர்வுப் பொருளாயிருப்பதால் ஞானம் என்றும், துன்பமற்று விணங்குவதால் ஆனந்தம் என்றும் பிரமம்-ஆன்மா கூறப்படுகின்றது.

2. பிரம-ஆன்மாவின் மற்றொரு வகை விளக்கத்தில் பிரமம் அல்லது ஆன்மா சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் அடிப்படையாக உள்ளது. உயிர்களுக்கும் உலகிற்கும் அதுவே முதல். இவ்விளக்கத்தில் உலகும் அதன் பொருள்களும் உண்மை என்று கருதப்படுவதால் இதனை சனப்பிரபஞ்சுவாதம் அல்லது உலகுண்மைக் கோட்பாடு என்கின்றனர். இக்கோட்பாடு சாந்தோக்கிய உபநிடதத்தில் விளக்கப்பட்டுள்ளது. இரண்டல்லாத ஒன்றாகிய உள்பொருள் மட்டுமே இருந்தது. அது 'நான் நன்றாகப் பெருகுவேனாக' என்ற எண்ணம் கொண்டவுடன், அதனின்றும் முதலில் நெருப்பும் பின்னர் நீரும் அதன்பின்பு உணவும் தோன்றின. பிறகு இம்மூன்றின் கலப்பால் ஏனைய உயிருள்ள பொருளகளும் உயிரற்ற பொருள்களும் தோன்றின. இரண்டல்லாத ஒன்றாகிய உள்பொருள் யாவற்றிற்கும் அடிப்படையாய் இருக்கின்றது. அதுவே அனைத்தும்; அதுவே உண்மை; அது பிரமம்-ஆன்மா. மேலும், பிரமம் அல்லது ஆன்மா மனமாகவும், பிராணனாகவும், உடலாகவும், ஒளிவடிவாகவும், உண்மையாகவும், உறுதியாகவும், அனைத்துச் செயல்களாகவும், விருப்பங்களாகவும், உணர்வுகளாகவும், அனைத்தையும் ஈர்த்துக்கொள்வதாகவும், சொல்லற்று அமைதியாய் விளங்குகிறது.

உலகுண்மைக் கருத்தின்படி இவ்வுலகம் பிரமத்தால் படைக்கப்பட்டது. பிரமத்தின் ஒரு பகுதியே உலகமாக மாறுகின்றது. உலகிற்குப் பொருள்காரணமும் செயல் காரணமும் பிரமமே. பிரமம் உலகமாகவும் அதே சமயம் உலகைக் கடந்தும் இருக்கிறது. உயிர்ப் பொருள்களும் உயிரற்றவையும் பிரமத்திலிருந்து படிப்படியாகத் தோன்றியவையே. இறுதியாய் இவையாவும் பிரமத்தையே அடைகின்றன.

சீவன் என்று சொல்லப்படும் உயிர் உண்மையில் ஆன்மா அல்லது பிரமத்தினின்றும் வேறானதன்று. அது அறியாமையினால் கட்டுப்பட்டுப் பிறப்பு இறப்பு வட்டத்தில் தொடர்ந்து பிறந்தும் இறந்தும், ஊழ் வினைகளின் பயனை நுகர்ந்துகொண்டே மேன் மேலும் புதிய வினைகளையும் சேர்க்கிறது. நான், எனது என்ற எண்ணங்களினால் துன்புறும் சீவனை அவ்வறியாமையினின்றும் விடுவிப்பதை உபநிடதங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

அறியாமையினின்று நீங்கி வீடுபேறு பெறுதற்குரிய வழிகளையும் உபநிடதங்கள் கூறுகின்றன. வீடுபேறு பெற முதலில் ஒருவன் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் அழியும் உலகப்பொருள்களின்பால் உள்ள பற்றை நீக்கி உண்மைப்பொருளான ஆன்மாவை அடையும் எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறகு, உண்மை உணர்ந்தவர்களை அடைந்து அவர்களின் வாயிலாக முற்றறிவைப் பெற வேண்டும். அவர்கள் சொல்வதைக் கவனத்துடன் கேட்டு, கேட்டவற்றின் பொருளை ஆராய்ந்து, தெளிந்தபொருளை மனத்தில் இருத்தி முதிர்ச்சிபெற்றுப்பக்குவமடைந்தால் முற்றறிவு அவனுக்குத் தோன்றும். அத்தகையவன் வீடுபேறு பெற்றவன் அல்லது முத்தன் எனப்படுகிறான். இந்நிலை உடலுடன் கூடி இருக்கும்பொழுதோ உடலை நீக்கிய பின்னரோ ஏற்படலாம். வீடுபேறு என்பது உபநிடதங்களின்படி சீவன் தன்னைப் பிரமம் என்று உணர்வதாகும்.

உபநிடதங்கள் முழுதும் கூறும் உண்மையைச் சில வாக்கியங்களே தெளிவுபடுத்துகின்றன. அவை 'அது நீயாக இருக்கின்றாய்', 'நானே பிரமமாக உள்ளேன்', 'சீவனும் பிரமமும் ஒன்று'. இவை உயர்ந்த வாக்கியங்கள் எனப்படுகின்றன. மேலும், இவ்வாக்கியங்களில் சீவனும் பிரமமும் ஒன்று என்றும், இரண்டும் வெவ்வேறானவை என்றும், ஒன்றும் வெவ்வேறும் ஆனவை என்றும் பொருள் சுட்டும் வாக்கியங்களும் உள்ளன. இவற்றுள் சீவனும் பிரமமும் ஒன்று என்ற வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கரர் அத்துவிதக் கோட்பாட்டினையும், ஒன்றும் வெவ்வேறும் ஆனவை என்பதன் அடிப்படையில் இராமாநுசர் விசிட்டாத்துவிதக் கோட்பாட்டினையும், வெவ்வேறானவை என்பதன் அடிப்படையில் மத்துவர் துவைதக் கோட்பாட்டினையும் நிறுவினர். இக்கோட்பாடுகள் வேதாந்தங்கள் என்று பெயர் கொண்டு விளங்குகின்றன. பி.ஆர்.ந.

**உபபுராணம்**: இந்திய இலக்கியங்களுள் புராணங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்பது பொருள். எது தொன்மைக் காலம் தொட்டு இன்று வரை தொடர்ந்து பரந்துள்ளதோ அது புராணம் எனப்படும். புராணம் பற்றிய குறிப்புகள் அதர்வண வேதம், உபநிடதங்கள், மகாபாரதம் ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ளன. வடமொழி நிகண்டுகள் புராண

அமைப்புப் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளன. இவ் வகையில் வடமொழியில் அமைந்த மகா புராணங் களின் எண்ணிக்கை பதினெட்டாகும். அவற்றை வேதவியாசர் இயற்றினார் எனக் கூறுகின்றனர். அந்த மகா புராணங்களுக்குத் துணையாகப் பதி னெட்டு உபபுராணங்கள் தோன்றின என்பது கூறப் படுகிறது. மகாபுராணங்களுக்குத் துணையாக அமை வதால் அவை உபபுராணங்கள் எனப்பட்டன. அவை சனத்குமார புராணம், காந்த புராணம், நந்திபுரா ணம்,நாரத புராணம், மானவ புராணம், பிரமாண்ட புராணம், காளிபுராணம், சாம்பபுராணம், பராசர புராணம், நரசிம்மபுராணம், சிவதருமபுராணம், துரு வாசபுராணம், ஔசநச புராணம், கபிலபுராணம், வருணபுராணம், மகேசுவர புராணம், சௌரபுரா ணம், மாரீச புராணம் ஆகியவையாகும். சனத் குமாரர், நந்தி, துருவாசர், நாரதர், கபிலர், மநு, சுக்கிரர், பராசரர், மரீசி ஆகியோர் இயற்றிய உப புராணங்கள் அவரவர் பெயரால் வழங்கப்படுகின் றன. எஞ்சிய உபபுராணங்களை வேதவியாசர் இயற்றினார் என்று கூறுகின்றனர். உபபுராணங்கள் முதன்மையான படைப்பு, இடைக்காலப் படைப்பு, சந்திர சூரிய மரபு, மனுக்களின் காலங்கள், அரச மரபு, முனிவர் மரபு ஆகியவற்றைச் சிறப்பாக விளக் கிக் கூறுகின்றன. இந்த உபபுராணங்களிற் சிலவே அச்சில் வெளிவந்துள்ளன.

**உபமன்யு** திருமன்யு என்பவரின் மகன். இவருக்கு ஐந்து வயது வரை தாய்ப்பால் இல்லாமை யால் அரிசிமாவினைக் கரைத்து அதனுடன் சர்க்கரை கலந்து தாய் ஊட்டி வளர்த்தாள். இந்நிலையில் தாய் தன் உடன் பிறந்தவராகிய வசிட்டரின் வீட்டிற் குச் சென்று ஒரு மாதம் குழந்தையுடன் தங்கியிருந் தாள். அப்பொழுது வசிட்டரின் மனைவி அருந்ததி வேள்வி செய்து காமதேனுவின் பாலைக் கொடுத்து வந்தாள். பின்னர்த் தன் வீட்டிற்கு வந்ததும் தாய் முன் போலவே மாவின் பால் கொடுத்தாள். குழந்தை அந்தப் பாலே (காமதேனுவின் பால்) தனக்கு வேண்டும் என்று கூறிற்று. அத்தகைய வள மெல்லாம் சிவபூசை செய்தார்க்கே உண்டு; நமக் கெல்லாம் உண்டாகாது என்று கூறித் தாய் புலம்பி னாள். அது கேட்ட சிறுவன் சிவமென்பதென்ன? அதனை வணங்கும் வழிமுறையாது? என்று வினவி னான். தாய் அதனைத் தந்தையிடம் கேட்டறியு மாறு கூறினாள். தந்தைபால் தீட்சை பெற்ற உப மன்யு தவமேற்கொண்டு திரிகூட மலையில் சிவோ பாசனை செய்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளி என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். இவர் தமக்குக் காமதேனுவின் இனிய பால் வேண்டு மென்று கேட்கச் சிவபெருமான் திருப்பாற்கடலை அளித்து எல்லோருக்கும் ஆசிரியராம் பதமும் அருளி னார். அவற்றைப் பெற்ற உபமன்யு பின்னர்த் தம் பெற்றோரை அடைந்தார்.

உபமன்யு[2] பல்லியுருக் கொண்டிருந்த கணவன் மனைவியரைத் தம்முடைய ஞான முதிர்ச்சியால் புனிதராக்கியவர். இவர் ஒருநாள் விருந்தினர்களுக்கு உணவு படைத்தார். விருந்துண்ட அவர்கள் உண் கலத்தைப் பின்பக்கமாகத் தூக்கி எறிந்தனர். அவ் வுண்கலம் அங்குப் பல்லியுருவில் இருந்த கணவன் மனைவி ஆகியோரின் மேல் விழுந்தது. இது அவர் கள் மேல் விழுந்ததால் பல்லிகளின் தலைகள் பொன் னுருவடைந்தன. பின்னர், முனிவரை வணங்க அவர் புண்ணியத் தலங்களில் நீராடும்படி, கூறித் தூயவராக் கினார்.

உபமன்யு[3] உமாதேவியின் சாபத்தால் முயலுருப் பெற்றவர். இவர் உமாதேவியை வணங்கும்போது இவர் கால் பீடத்தில் பட்டதனால் சாபம் பெற் றார். முயலுருப் பெற்ற இவர் காட்டில் வாழும் போது ஆதிவீசன் என்னும் அரசன் வேட்டைக்கு வந்தான். அங்கு அவ்வரசனால் அடியுண்டு பாதிரி மரத்தினருகில் சாபம் நீங்கிப் பழைய உருப் பெற் றார். இவர் கண்ணபெருமானுக்குச் சிவதீட்சை செய்து அவரைத் தவத்திற்கு அனுப்பினார்.

உபமன்யு[4] சிவபெருமானால் அருளப் பெற்ற வர். இவர் திருப்பாற் கடல் வேண்டித் தவம் புரிந் தார். அத்தவத்திற்கு இடையூறாக மாரீச முனிவ ரால் பேயுருவடைந்த முனிபுத்திரர்கள் சிலர் வந்த னர். இவர் அவர்களைப் பஞ்சாட்சர மந்திரத்தால் பேயுருவொழித்தார். சிவபெருமான் இந்திரனுருக் கொண்டு இவர் தவம் செய்யும் போது எதிர்சென்று சிவபெருமானைப் பலவாறு திட்டினார். அதனைப் பிடிக்காமல் அகோராத்திர மந்திரத்தை உச்சரித்து இந்திரன் மீது இவர் விபூதியெறிந்தார். நந்திமா தேவர் என்பவர் அதனைத் தடுத்தார். இதன் காரணமாக மூலாக்கினியால் உயிர்விட எண்ணி னார். அத்தருணத்தில் சிவபெருமான் காட்சி கொடுத்து இவருக்கு அருள் பாலித்தார்.

உபமன்யு[5] வியாக்கிரபாத முனிவரின் மகன்.

**உபமன்யு பக்தவிலாசம்**: சிவபெருமான் மூச்சுக்காற்றாகக் கருதப்படும் வேத இதிகாச புரா ணங்களுள் காந்த மகாபுராணத்தின் உபபுராணங்க ளாகப் போற்றப்படுவன பல உள. அவற்றுள் உப மன்யு பக்த விலாசம் என்னும் புராணமும் ஒன்று.

இப்புராணத்திற்கு மூலம் 'சிவரகசியம்' என்னும் பேரிதிகாசமாகும். இராமாயணம், பாரதம் என்பன மனித தருமங்களை மட்டும் கூறுவன. இச் சிவரகசியம் இறைவனுடைய மறைபொருளை உபநிடதத்தின் உட்கருத்துகளை உரைக்கிறது. இது பன்னிரண்டு பகுதிகளையும் ஏறத்தாழ 125000 கிரந்தங்களையுமுடைய நூலாகும். இதில் 9–ஆம் பகுதியில் 18–ஆவது முதல் 66–ஆவது வரையுள்ள அத்தியாயங்களில் 63 நாயன்மார்களுடைய சரித்திரம் கூறப்பட்டுள்ளது.

இதில் திருஞானசம்பந்தர் முதலான சைவ சமயாச்சாரியர்களின் வரலாறுகள் மிக விரிவாக அவர்கள் கண்டுவழிபட்ட தலங்களுடனும், அவ்வத்தல மூர்த்திகளின் தோத்திரங்களுடனும்கூறப்பட்டுள்ளன. மற்றவர்களின் வரலாறுகள் விரிவாகக் கூறப்படவில்லை.

பெரியார் சிலரது வரலாறு சிவரகசியத்தைக் காட்டிலும் இவ் உபமன்யு பக்த விலாசத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நூல் மூன்று பாகங்கள் கொண்டு விளங்குகிறது. முதல் பாகத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் முதல் நமிநந்தி அடிகள் வரை உள்ள வரலாறுகள் உள்ளன. இரண்டாம் பாகத்தில் திருஞானசம்பந்தர் வரலாறு மட்டுமே அமைந்துள்ளது. மூன்றாம் பாகத்தில் கலிக்காம நாயனார் முதல் இசை ஞானியார் வரை உள்ள வரலாறுகள் உள்ளன.

அப்பாலும் அடிசார்ந்தார் முதல் இசைஞானியார்வரை உள்ள 8 அடியார்களின் வரலாறுகள் சிவரகசியத்தில் கூறப்பட்டிருப்பதை விட இந்த உபமன்யு பக்த விலாசத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதைப் போல அகத்திய முனிவரால் இயற்றப்பெற்ற மற்றொரு பக்த விலாசமும் உண்டு. இவ்விரண்டினும் வரலாறுகள் ஒத்திருந்தாலும் பல நிகழ்ச்சிகள் வேறுபட்டுள்ளன.

உபமன்யு பக்த விலாசத்தை எழுதியவர் உபமன்யு என்ற முனிவர். இவர் வியாக்கிரபாதரின் மகன் ஆவார்; ஈசனின் அருளால் பாற்கடலின் பாலை உண்டு வளர்ந்தவர்; கிருட்டிணனுக்குச் சிவதீட்சை அருளியவர். இவருடைய பெருமை பாரதம் முதலான இதிகாசங்களில் பேசப்பட்டுள்ளது.

**உபமானம்**: பழங்கால இந்தியத் தத்துவ அறிவு ஆராய்ச்சியியலில் உவமானம் நான்காம் பிரமாணமாகக் கருதப்படுகிறது. உபமானம் என்னும் சொல் ஒப்புமை எனப் பொருள் படும். இவ் ஒப்புமை எவ்வாறு அறிவைப் பெறும் வழியாக உதவுகிறது என்பதை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாகக் கூறலாம். ஆமாவை (காட்டுப்பசுவை) அறியாத ஒருவனிடம் அது ஆவைப் போன்றிருக்கும் என்று கூறினால், அது கேட்டவன் காட்டிற் செல்லும்பொழுது ஆமாவைக் காண நேர்ந்தால் அது ஆவோடு ஒத்திருத்தல் பற்றி அதனை ஆமா என்று தெரிந்து கொள்வான். ஆதலின், ஒரு பொருளை விளக்க அதனோடு உவமையாகப் பொருந்துவதொன்றைக் கூறுதல் உலக வழக்கு. இதுவே உவமம் என்றும் சொல்லப்படும். உவமானத்தைப் பற்றிய கருத்துகள் உரையளவையியலில் காணப்படுகின்றன. இக்கருத்துகள் ஒப்புமை பற்றி உணரப்படுவதால் கருதலளவையில் அடங்கும். இக்கருத்தை நையாயிகர் தனி அளவையாகக் கொள்கின்றனர்.

**உபமிதி** உபமானப் பிரமாணத்தால் உண்டா கிற மெய்யறிவு. பிரமாணத்தால் உண்டாகின்ற மெய்யறிவு 'பிரமிதி' எனப்படும். அதுபோல அநுமானப் பிரமாணத்தால் உண்டாகிற மெய்யறிவு 'அநுமிதி' என்றும், உபமானத்தால் உண்டாகிற மெய்யறிவு 'உபமிதி' என்றும் பெயர் பெறுகின்றன. ஆமாவை (காட்டுப்பசுவை) அறியாதவன் காட்டில் செல்லும்போது ஆமாவைக் காண நேர்ந்தால் அது ஆவோடு ஒத்திருத்தல் பற்றி அதனை ஆமா என்று துணிவான். 'ஆமா ஆப்போல்வது' என அதனை அறிந்தோர் சொல்லக் கேட்டவனும் காட்டில் செல்லும் பொழுது ஆமாவைக் கண்டானாயின் தான் கேட்டறிந்த ஒப்புமையைக் காணுதலாலே, அதனை 'ஆமா' எனத் துணிவான். இத்துணிவுகள் மெய்யறிவே. இம் மெய்யறிவு ஒப்புமை பற்றி உண்டாவதால் இது 'உபமிதி' எனப்படும். இது நியாய வைசேடிக நூல் முறை.

சி. அ.

**உபயது, தால் அல்** பண்டைய மெசபடோமியாவிலிருந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டைக் கொண்ட இடம். உபயது, தால் அல் (Ubayd, Tall al) புகழ்மிக்க ஊர் (Ur) என்னும் நகருக்கு அருகே இன்றைய ஈராக்கின் தை கூவார் (Dhi Qar) பகுதியில் உள்ளது. இவ்விடத்தில் அகழாய்வுகள் செய்து தொன்மை மிக்க நாகரிகத்தை அறிஞர்கள் கண்டறிந்தனர். இவ்வூர் தெல் எல் உபயது(Tell El Ubayd) என்றும் கூறப்படுகிறது. இங்குக் கிடைத்த தொன்மைப் பொருள்களுள் வண்ணம் தீட்டப்பட்டும் வடிவவியல் உருவங்களால் (Geometric Design) அழகு செய்யப்பட்டும் கிடைத்த மட்கலன்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இம்மட் கலன்கள் கைப்பிடிகளுடனும் மூக்கு அமைப்புடைய ஊற்றும்

வாய்களுடனும் காணப்படுகின்றன. இதுபோன்ற அமைப்புள்ள மட்கலம் முதன்முதலில் இப்பகுதியில் தான் கிடைக்கிறது. சில மட்கலன்களின் வெளிப்பகுதியில் பூவேலைப்பாடுகளும் விலங்கின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. உபயது என்னும் ஊரில் தெற்குப் பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் நாகரிகம் சிறிது காலங்கடந்து பரவியது. தெற்குப் பகுதியில் கி.மு. 5200 முதல் 3500 வரை சிறந்த நாகரிகம் இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**உபயவிபூதி**: 'உபய' என்றால் இரண்டு என்றும் 'விபூதி' என்றால் செல்வம் (உடைமை) என்றும் பொருள்படும். ஆதலின், உபய விபூதி என்பது இரண்டு உடைமைகளைக் குறிக்கும். விண்ணுலகு, மண்ணுலகு ஆகியவையே இவ்விரு உடைமைகள். இவற்றிற்குத் தலைவன் நாராயணன் ஆவான். அவனுடைய நித்திய விபூதியாக விண்ணுலகும் இலீலா விபூதியாக மண்ணுலகும் குறிக்கப்படுகின்றன. நித்திய விபூதி என்றும் இருப்பது. இலீலா விபூதி அவனுடைய திருவிளையாடல்களுக்கு உரியது.


விண்ணுலகு பரமபதம் என்றும் திருநாடு என்றும் சுட்டப்படும். ஆதலின், அது எல்லா நாடுகளிலும் சிறந்த நாடு என்று சொல்லப்படுகிறது. அது முடிவற்ற நலன்களை உடையதாய் இலங்குவதாதலின், 'நலமந்தமில்லதோர் நாடு' என்றும் புகழ்ந்து பேசப்படுகிறது. அதற்குத் 'திரிபாத் விபூதி' என்னும் பெயரும் உண்டு. மண்ணுலகு காற்பகுதியாகவும், விண்ணுலகு முக்காற்பகுதியாகவும் அமைந்திருத்தலின் அது முறையே 'பாத விபூதி' என்றும் 'திரிபாத் விபூதி' என்றும் கூறப்படுகிறது.

விண்ணுலகு ஐந்து பெரும் சக்திமயமானது; பிறரால் உண்டாக்கப்படாதது; சுத்த சத்துவ குணமாய் இருப்பது; எல்லையற்ற இன்பமயமானது; ஒளிமயமாய்த் திகழ்வது; ஞானத்தையும் இன்பத்தையும் விளைவிப்பது; அங்குக் காலத்தால் உண்டாகும் மாற்றங்கள் இல்லை. அது மண்ணுலகில் பிறந்து உலகியற் சேறு கழிந்து வீடு அடையும் உயிர்கள் (முத்தர்கள்), ஒரு நாளும் பிறவாத உயிர்கள் (நித்தியர்) ஆகியோருக்கு உறைவிடம் ஆகும். அங்குப் பெருமானும் பிராட்டியும் நித்திய சூரிகளும் (அயர்வறும் அமரர்களும்) உறைகின்றனர். அங்கு உறைவோர்க்கு மூப்பு இல்லை; அவர்கள் என்றும் இருபத்தைந்து அகவையினராகவே இருப்பர்.

மண்ணுலகு 'இருள்தரு மாஞாலம்' என்று குறிக்கப்படும். இது துன்பத்திற்கும் அறியாமைக்கும் இடமாகுமாதலின் இப்பெயர் பெற்றது. வினையினால் கட்டுண்ட உயிர்கள் (பத்தர்கள்) பிறந்து உழலும் இடம் மண்ணுலகு ஆகும்.

மண்ணுலகு சத்துவக் குணக்கலப்புடையதாய் (மிச்சிர சத்துவக் குணமயமாய்) இருப்பது; பிறந்து உழல்பவர் அறிவுக்கும் இன்பத்துக்கும் மறைப்பை உண்டாக்குவது; திரிபுணர்ச்சியைத் தோற்றுவிப்பது. இவ்வுலகு ஐம்புலன், ஐம்பொறி, ஐந்து கருமேந்திரியம், ஐம்பூதம், பிரகிருதி, மான், அகங்காரம், மனம் என்னும் இருபத்துநான்கு தத்துவங்களாய் இருப்பது என்பது வைணவ சமயக் கோட்பாடு ஆகும். தெ.ஞா.

**உபர்கோட்டு** குசராத்து மாநிலத்தில் சுனாகது (Junagadh) என்னும் வரலாற்றுப் புகழ் பெற்ற ஊருக்கு அருகில் உள்ளதொரு சிற்றூர். இங்குக் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைகள் உள்ளன.



உபர்கோட்டு - குடைவரைகளின் உள்தோற்றம்

இக்குடைவரைகளில் குசராத்தி மொழிக் கல்வெட்டுகள் பல உள்ளன. மேற்கிந்தியாவை ஆண்ட சத்திரபர்கள் இக்குடைவரைகளைக் குடைந்துள்ளனர். புத்த மதக் குடைவரைகளான இவை பெருங்குன்றுகளைக் குடைந்து இரண்டு அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளன. குடைவரைகளின் உட்பகுதியில் கூரைகளைத் தாங்கும்வண்ணம் பல தூண்கள் உள்ளன. தூண்கள் உருண்டை வடிவ அமைப்புடையனவாகவும் நான்கிற்கு மேற்பட்ட கோணங்களைப் பெற்றும் திகழ்கின்றன. குடைவரைகளின் முதல் தளத்தில் பல அறைகளும் இடைவழிகளும் உள்ளன. சுவர்களில் வழிபாட்டுக்குரிய சிறிய சைத்திய (Chaitya) உருவ அமைப்புகள் காணப்படுகின்றன. மேல் தளத்தில் பெரிய அறையும் குளியல் அறையும் உள்ளன. உபர்கோட்டில் உள்ள கோட்டை மிகப்

பழமையானது என்று கருதப்படுகிறது. இக்கோட்டை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அழிந்துபட்டது. காடுகளால் இக்கோட்டை மறைந்திருந்தது. ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராசபுத்திர அரசர் இரர்கிரகர் (Rah Graher) என்பவர் இக் கோட்டையைக் கண்டு பிடித்தார்.

**உபலக்கணம்** என்பது சொற்றொடர் பொருள் உணர்த்தும் வகைகளுள் ஒன்றினைக் குறிக்கும் இலக்கணக் குறியீடாகும். ஒரே இனமாக அமையும் பலவற்றுள் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதனால் ஏனையவற்றை உடன் கூறிக்கொள்ளுமாறு அமைப்பது உபலக்கணம் எனப்படும். 'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' (குறள்.9) என்னும் குறளில், 'தாளை வணங்காத் தலை' என்ற தொடரை விளக்குங்கால் பரிமேலழகர், 'காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில என்பதூஉம் கொள்க' என்று குறிப்பிட்டுள்ளார். வணங்காத் தலைகள் பயனில்லை என்ற அளவில், அவ்வாறே காணாத கண், வாழ்த்தாத வாய், புகழ் கேளாத செவி, தொழாத கை, வலஞ்செய்யாத கால் ஆகியனவும் பயனில்லை என்று உடன் அறிந்து கொள்ளுவது உபலக்கணத்தால் அமைவதாகும். இதனைப் பவணந்தி முனிவர் தாமியற்றிய நன்னூற் பொதுவியலுள் ஒரு நூற்பாவில் இலக்கணப்படுத்தியுள்ளார். 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' (நன். 358) என்பது அந்நூற்பாவாகும். இதன் பொருள், 'பெயர் வினை இடை உரி என்னும் நால் வகைச் சொற்களுள் ஒவ்வொன்றும், ஒழிந்து நின்ற தன்தன் இனங்களைக் கொண்டு முடிதற்கு உரித்தாகும் என்பதாகும். இதனை 'நஞ்சுண்டான் சாவான் என்றவழி நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம்' என்று எடுத்துக்காட்டுத் தந்து உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

**உபவேதம்**: இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கும் தலையாய முதல நூல்களாய் இருத்தலின்அவை நூல்வேதம் எனப்பட்டன. அவற்றை அடுத்து அவற்றிற்குத் துணையாகத் தோன்றிய நால்வகை நூல்கள் 'உபவேதம்' எனப் படுகின்றன. அவை ஆயுர் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், அருத்த வேதம் எனப்படும்.

ஆயுர்வேதம் மருத்துவ நூல். மூல வேதத்தில் சொல்லப்பட்ட கருமங்களைச் செய்து பயன் பெறுதற்கு நல்லுடல் இன்றி இயலாது. ஆதலின் ஆயுர் வேதம் அந்த உடல் நலனைப்பற்றிக் கூறுகிறது. இது ஓர் உபவேதமாகச் சொல்லப்படுகின்றது.

தனுர்வேதம்: இது வில்லைப் பற்றிய வேதமாகும். 'வில்' எனக் கூறிய போதிலும் இது அனைத்துப் படைக்கலங்களையுமே குறித்து நிற்கின்றது. ஆகவே படைக்கலம் பயிலும் முறையைக் கூறுவதே தனுர் வேதமாம். நல்லுடல் இருப்பினும் அது பகைவரால் நலியப்படுதலைத் தவிர்க்க இவ் வில் வேதம் துணை செய்கிறது. ஆதலின் இதுவும் ஓர் உபவேதமாயிற்று.

காந்தர்வ வேதம் இசை நூல். 'இசையொடு சிவணிய நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும் கூறினார். (தொல். எழுத்து: நூல்மரபு, 33). கடவுளர் வழிபாட்டில் முதன்மையான இடத்தைப் பெறுவது சாத்திர முறைப்படி அமைந்த இசையோடு கூடிய துதிப்பாடல்களே. அத்தகைய இசைகளைக் கடவுளர் மிகவும் விரும்புகின்றனர். அதனால், அவ் விசையைத் தெரிவிக்கின்ற நூல் ஓர் உபவேதமாயிற்று.

அருத்த சாத்திரம் பொருள் நூல். அதாவது பொருளை ஈட்டுமாறும், காக்குமாறும், வகைப் படுத்திச் செலவு செய்யுமாறும், பயன் துய்க்குமாறும் போல்வனவற்றை உணர்த்தும் நூல். பொருளானே இம்மை மறுமைப் பயன்களை அடைதல் கூடும். ஆதலின், அதனைக் கூறும் நூல் இம்மை மறுமை பற்றிக் கூறும் வேதங்களோடு ஒப்ப வேதமாயிற்று.

சி.அ.

**உபாகமம்** சிவபெருமானால் செய்யப்பட்ட சிவாகமங்கள் அல்லது சைவாகமங்கள் 'மூலாகமங்கள்' என்றும் 'உபாகமங்கள்' என்றும் இரு வகைப் படும். அவற்றுள் சிவபெருமான் படைப்புக் காலத்திலே முதற்கண் செய்து சிலருக்கு உபதேசித்த ஆகமங்கள் 'மூலாகமங்கள்' எனப்படும். அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். அம் மூலாகமங்கள் ஒவ்வொன்றின் சார்பாகவும் அவற்றின் பொருளை அவ்வப்பொழுது சிலருக்கு அப் பெருமான் இனிது விளக்கிச் செய்த ஆகமங்கள் 'உபாகமங்கள்' எனப்படும். ஒவ்வொரு மூலாகமத்திற்கும் உபாகமங்கள் பல உண்டு. அனைத்து ஆகமங்கட்கும் உரிய உபாகமங்கள் இருநூற்றேழு. 'இருபதும் எட்டுமே மூலம், உபவேதம் இருநூறும் எழும் என எண்' என்பது சைவ சமய நெறி (பொது இலக்கணம்-336). ஒவ்வோர் ஆகமத்திற்கும் உரிய உபாகமங்கள் இத்தனை என்பதையும் அவற்றின் பெயர்களையும் இக்குறள் வெண்பாவின் உரையிற் காணலாம்.

சி.அ.

**உபாங்கங்கள்**: தொன்மைச் சிறப்புமிக்க வட மொழி வேதங்கள் இருக்கு, எசுர், சாமம், அதர் வணம் என நான்காகும். அவற்றின் பொருளை நன் குணர்ந்து பயில்வதற்குத் துணைபுரிவனவாக அமைந் தன அங்கங்கள் என்று கூறப்படும். அவை, சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்பதாகும். வேதாங்கம் எனவும் ஆறங்கம் (சடாங் கம்) எனவும் அவை குறிப்பிடப்படுகின்றன. வேதப் பொருளை நன்குணர இந்த ஆறு அங்கங்களுக்கும் வேறாக, மேலும் நான்கு அங்கங்கள் கொள்ளப்படு கின்றன. அவை 'மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி என்பனவாகும். வேதப் பயிற்சிக்குத் துணை அங்கங்களாக இவை அமைவதனால் இவை உபாங்கங் கள் எனப்படுகின்றன. இவற்றின் துணையின்றி வேதங் களுக்குப் பொருள் காண முற்படுவது தக்கதன்று; தவறாகவும் கூடும்.

**உபாத்திமைத் தொழில்**: பௌலர்துரை எழுதிய இந்நூல் கி.பி. 1885-இல் வெளிவந்தது. இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். மொழி பெயர்ப்பின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆசிரியர் மாணாக்கரைச் சிட்சை செய்து, அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் போது அனுசரிக்க வேண்டிய ஆதாரவிதி கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. பி.தெ.

**உபாயச் சிவ புண்ணியம்** சிவபெருமானை நோக்கிச் செய்யும் நல்வினைகள் யாவும் 'சிவ புண் ணியம்' எனப்படும். 'பதி புண்ணியம்' எனப்படுவன வாகிய இவை 'சிவதருமம்' என்றும் சொல்லப்படும். இவை மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் நிகழலாம். இவை சரியை, கிரியை, யோகம் என மூன் றாக வகுக்கப்பட்டுள்ளன. சிவபுண்ணியத்திற்கு உண் மைப் பயன் ஞானத்தின் வழியாக வரும் வீடு பேறே. ஆயினும் இவை புகழ், பொருள், வெற்றி, மகப்பேறு முதலிய உலகப் பயன்களை வேண்டிச் செய்யப்படு மாயின் 'உபாயச் சிவ புண்ணியம்' எனப்படும். இவை உலகப் பயன்களுள் ஒன்றையும் கருதாது அன்பே காரணமாகச் செய்யப்படும் பொழுது, 'உண்மைச் சிவபுண்ணியம்' எனப்படும். உண்மைச் சிவபுண் ணியமே வீடு பேற்றைத் தரும். உபாயச் சிவபுண்ணி யம் உண்மைச் சிவ புண்ணியத்திற்கு வழியாக அமையும். சி.அ.

**உபாய நிட்டை**: சைவ சித்தாந்தத்தில் ஞானம் நான்கு படிகளாக நிகழும் என்றும், அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்பன என்றும் அவற்றுள் நிட்டையே முடிந்த நிலை என்றும் சொல்லப்படுகின்றன.

இந்த நிட்டை நிலையை அடைந்தோர் அத னின்று மீளாது அசைவின்றி நிற்றல் வேண்டும். ஆயினும், அது சிலருக்கு இயலாமல் நிட்டையில் செல்வதும் மீள்வதுமான ஓர் அலைவு நிலை உண் டாகும். அந்த அலைவு நீங்கி நிலையான நிட்டை நிலையை அடைவதற்குச் சொல்லப்படும் வழியே உபாய நிட்டை எனப்படுகின்றது.

உபாய நிட்டையாவது சீவான்மா பரமான்மாவி னிடத்தில் அழுந்தித் தன்னை மறந்து இருக்கும் நிலை யில், அசைவின்றி நிற்கமாட்டாமல் பழைய பழக்க வாசனையால் சூக்கும, தூல உடம்புகளாகிய கருவி களில் முன்போலவே பொருந்தி, தன்னையும் உலகத் தையும் கண்டு இன்ப துன்ப மயக்கங்களை அடையும் நிலை தோன்றுமாயின், அருளாசிரியர் அறிவுறுத்த அருள்மொழிகளை நினைந்து, பாச, பசு, பதிகளாகிய முப்பொருளின் இயல்புகளை மறவாது உணர்ந்து நிற்றலேயாகும். அங்ஙனம் உணர்தற்கு வழியாக உள்ளத்திலே வைத்து உணர்தற்குரிய ஒரு குறிப் பொருள் அருளாசிரியரால் காட்டவும் படும். அக்குறி யின் வழி அறிவை நிலை பெறுத்தலும், பின்பு அக்குறி யை விடுத்து உலகெங்கும் சிவத்தை அகண்டப் பொரு ளாக உணர்ந்து நிற்றலும் ஆகிய இவையே உபாய நிட்டையாகும். சி.அ.

**உபாயநிட்டை வெண்பா**: தமிழில் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை விளக்கும் சிவஞான போதம் முதலிய சாத்திரங்களின் நுட்பங்களைத் தெளிவுற விளக்கும் வகையில் தோன்றியது 'பண் டார சாத்திரம்' என்னும் தமிழ் நூல் தொகுப்பா கும். அது பதினான்கு நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று 'உபாயநிட்டை வெண்பா' என்னும் நூலாகும். இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் தலைவராக விளங்கிய அம்பலவாண தேசிகரவர்களால் இயற்றப்பட்டது. அவர் இத் தொகுப்பில் மேலும் ஒன்பது நூல்களைச் செய்துள் ளார். அவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டெ னக் கருதப்படுகிறது. இந்நூல் 46-நேரிசை வெண் பாக்களால் அமைந்துள்ளது. இவற்றின் வேறாய் நூற்பயன், சிறப்பு ஆகியவற்றைக் கூறுவனவாக நூலின் தொடக்கத்தில் ஒரு வெண்பாவும் இறுதியில் ஒரு வெண்பாவும் உள்ளன.

ஞானம் எய்துவிக்கும் வாயில்கள் கேட்டல், சிந் தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்று நான்கா கும் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. அவற்றுள் நிட்டை முடிந்த நிலை என்றும், அந்நிலையினை அடைந்தவர்கள் வீடுபேறடைவர் என்றும் சைவ சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. இதனைச் சிவஞான சித்தியார், 'கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல் நிட்டை, கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்; வீட்டை அடைந்திடுவர் நிட்டை மேவி

னோர்கள்' என்று (சி. சி. சுபக்கம் 276) கூறுகிறது. நிட்டை நிலை அடைந்தவர்கள் அந்நிலையினின்றும் மீளாது அசைவின்றி நிற்றல் வேண்டும். சிலருக்கு அவ்வாறு அசைவின்றி நிற்க இயலாமல், நிட்டை கூடலும் நீங்கலுமான ஓர் அசைவுநிலை உண்டாக லாம். அந்த அசைவுநிலை அகன்று, நிட்டை நிலை யில் நிலைத்திருப்பதற்குக் கூறப்படும் வழி 'உபாய நிட்டை' எனப்படும். அத்தகைய உபாயநிட்டை யினை வெண்பாக்களால் விளக்கிக் கூறுவது இந்த 'உபாய நிட்டை வெண்பா' என்னும் நூலாகும். ஆன்மாவைப் பற்றி நிற்கும் மலப்பிணிப்பு, மாயை யின் தொடக்கு, கன்ம வலி முதலியவற்றை அகற்றிக் கொன்றை வேணியனாகிய சிவபெருமானின் திரு வடியினையும், ஆன்மாவினையும் விளங்கக் காட்ட வல்லது உபாயநிட்டை என்று இந்நூற் பொருள் பற்றிப் பழைய செய்யுள் ஒன்று குறிப்பிட்டுள்ளது. '........ பொன்னிகர் இதழியந் தொடைப் புனிதன், பொலங்கழல் தன்னையும் தனையும் புகலுறக் காட் டல் உபாயநிட்டையதாம்' என்பது அச்செய்யுட் பகுதியாகும். இந்நூல், பற்றற்றுத் தன்னையும் தலை வனையும் காணும் உபாயமுறையினைக் காட்டுவ தாகும். வாழும் உடம்பு சிவன் அன்று என்று கூறுப வர்களைப் பாவி என்றும், அவர்கட்கு இந்நூலைக் கூறவேண்டாம் என்றும் குறிப்பிடும் நூலாசிரியர், உயிர் செயலற்று ஒடுங்கும்போது அது ஈசன் செயல் என்று கூறுவோர்க்கு இந்நூலை உரைத்தல் வேண்டு மென்று இறுதி வெண்பாவில் (46)குறிப்பிட்டுள்ளார்.

**உபாயம்**: உபாயம் என்னும் வடசொல்லுக்கு வழி என்பது பொருள். வழி, ஆறு, நெறி, சாதனம், பிராபகம், கதி, உபாயம் என்பவை ஒருபொருட் கிள விகள். பேற்றினைத் தருவது எதுவோ அதுவே ஆறு.

இறைவனை அடைவதற்குரிய வழிகள் பல. அவை செயல்நெறி (கருமயோகம்), அறிவுநெறி (ஞானயோகம்), அன்புநெறி (பக்தியோகம்), அடைக் கல நெறி (சரணாகதி), ஆசிரியப்பற்று (ஆசார்யா பிமானம்) என்பவை ஆகும்.

செயல்நெறியாவது உயிரை உள்ளபடி அறியும் அறிவை-அதாவது இறைவன் உயிர், அவனொழிந்த மற்றப் பொருள்களும் உயிர்களும் அவனுக்கு உடல் என்னும் அறிவைப்பெற்றுத் தன் சாதிக்கும், நிலைக் கும் தக்கதாய் விதிக்கப்பட்ட செயலை விளைவில் விருப்பமோ 'நாம் செய்கிறோம்' என்னும் எண்ணம், பற்று ஆகியவையோ இன்றி இறைவனுக்குச் செய் யும் வழிபாடு என்னும் நினைவோடு செய்வதாகும். இப்படிச் செயல் செய்யவே தடையான தீவினை அழியும்; மனம் மலமற்றுத் தன்மைவிளக்கம் (சொரூ பப்பிரகாசம்) உண்டாகும்; அதனால் இறைவனை அறியும் அறிவும், அவனிடத்தில் விருப்பமும் பிறக் கும்; பின்னர், மேலான அன்பு (பரபக்தி) மேலான அறிவு, மிக்க மேலான அன்பு (பரமபக்தி) ஆகி யவை பேற்றினை நல்கும்.

பொறிகளை அடக்கி நெறிப்படுத்தித் தன்மையை உணர்ந்தால் இறைவனை அறியும் அறிவும் அவனைக் குறித்து அன்பும் பிறக்கும்; அவை பிறக்கவே மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகி யவை பிறந்து பேற்றினை அடைவிக்கும். இதுவே அறிவுநெறியாகும்.

அன்பு நெறியாவது செயல், அறிவு இரண்டனை யும் இறைவனுக்கு ஆக்கி, மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகியவற்றை எய்தச் செய்து வீடுபேறு அடையச் செய்யும். சுருங்கச் சொல் லின், செயல் அறிவுகளினால் வளர்க்கப்பட்ட அன் பால் இறைவனை அடைவதாகும்

இறைவனையே ஆறாகவும் பேறாகவும் கொண்டு அவன் திருவடிகளில் தஞ்சம் புகுவது அடைக்கல நெறியாகும். மற்ற நெறிகளில் வழியும் அதனால் அடையப்படுவதும் வெவ்வேறாக உள்ளன. இந்நெறி யில் இரண்டும் ஒன்றாக அமைகின்றன. மற்ற நெறி கள் மேற்கொள்வதற்கு அரியன. அவற்றை மேற் கொண்டால் பயன்தரும் காலத்தில் இறைவன் கைபார்த்திருக்க வேண்டும். அவனையே வழியாகக் கொண்டால் வேறொன்றைத் தேட வேண்டுவ தில்லை. இவ்வடைக்கல நெறியில் எக்கட்டுப்பாடும் இல்லை. ஆனால், அடைக்கலம் தருவோன், அடைக் கலம் புகுவோன் ஆகிய இருவரும் சில இலக்கணங் களை உடையவர்களாய் இருத்தல் இன்றியமையா தது. அடைக்கலம் தருவோன் 'சரண்யன்' என்றும், அடைக்கலம் புகுவோன் 'சரணாகதன்' என்றும் குறிக்கப்பெறுவர். அடைக்கலம் தருவோன் எல்லை யற்ற இன்பம் தருபவனுமாய், பகையினை அழிப்பவனுமாய், எல்லோர்க்கும் எளியவனுமாய் இருத்தல் வேண்டும். மேலும், இறைவனை நெறியா கக் கொள்ளும்பொழுது வேறு நெறிகளோடு தொடர்பு கூடாது.

மேற்கூறிய வழிகளை மேற்கொள்ள ஆற்றல் அற்றவனாய் இருப்பவனுக்கு ஆசிரியன் திருவடிகளே தஞ்சமாகும். அன்பு நெறி (பக்தியோகம்)அந்தணர், அரசர், வணிகர் என்னும் முக்குலத்தோர்க்குரியது என்றும், அடைக்கல நெறி எல்லார்க்கும் உரியது என்றும் கூறுவர்.

எந்நெறியை மேற்கொண்டாலும் இறைவனே பயன்தரும் வழியாய் அமைகிறான். பிறபயன் விழைவோர்க்குப் பிறபயனைத் தருபவனாகவும், தன்னையே பற்றினார்க்கு நேரே வழியாகவும் அமைகிறான். தெ.ஞா.

**உபேந்திரர்** காசிபருக்கு இந்திரனை அடுத்து அதிதியின்பால் பிறந்தவர். உபேந்திரர் என்பதற்கு இந்திரனைத் தொடர்ந்து பிறந்தவர் என்பது பொருள். தெய்வலோகத்தில் இந்திரனுக்குத் துணையாய் விளங்குபவர். இவர் பற்றிய குறிப்புகள் அரிவம்சம், பாகவத புராணம் ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

இவர் விட்டுணுவின் அவதாரமாகிய வாமனராக உருவெடுத்து மகாபலிச் சக்ரவர்த்தியிடம் சென்றார். அவன் தானே மூவுலகத்திற்கும் தலைவன் என்றும், ஒப்பற்ற கொடை வள்ளல் என்றும் மிகுந்த செருக்கோடிருந்தான். மகாபலியிடம் வாமனர் மூன்று அடி மண் கேட்டார். அவன் அதனைக் கொடுக்க ஒத்துக்கொள்ள வாமனர் திரிவிக்கிரமராகி ஓர் அடியால் மண்ணுலகத்தையும், மற்றோர் அடியால் விண்ணையும் பாதாளத்தையும் அளந்து, மூன்றாம் அடிக்கு வேறு இடம் இன்றி மகாபலிச் சக்கரவர்த்தியின் விருப்பத்திற்கிணங்க அவனுடைய தலையில் காலை வைத்துப் பாதாளத்தில் அழுத்தி, அங்கே அவனுக்கு வேண்டும் நலன்களை யெல்லாம் அருளினார்.

அ.ஆ.

**உபேந்திராசாரியார்** கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; சிநேந்திர மாலை என்னும் சோதிட நூல் இயற்றியவர்; சமண சமயத்தைச் சார்ந்து விளங்கிய புலவர். இவருக்குச் சைநமாமுனிவர் என்ற பெயரும் உண்டு. சிநேந்திர மாலையில் 464 பாடல்கள் உள்ளன. இந்நூல் சோதிடக்கலை பற்றியதாகும். சினேந்திரன் என்பது அருகனுக்குரிய பெயர்களுள் ஒன்று. அ.ஆ.

**உபேயம்** என்பது அடையப்படும் பேறு. இறைவழிபாட்டின் பயனாகக் கிட்டும் பேறுகள் மூன்று. அவை பொருட்பேறு, உயிர்ப்பேறு, இறைப்பேறு என்பன.

பொருள்கள் நிலையற்றவை; எப்பொழுதும் விகாரப்பாட்டுக்கு இருப்பிடமாய் இருப்பவை; மிகவும் இழிந்தவை; அறிவு இல்லாதவை. அவற்றால் வரும் இன்பம் அறிவு நீக்கத்திற்குக் காரணமாகவும், துயரம் நிறைந்ததாகவும் உள்ளது; அழிவினை விளைவிப்பதும் ஆகும். பொருட்பேற்றினை விழைவோர் 'பொருள் விரும்பி' என்று குறிக்கப் பெறுவர். அவர்கள் 'இழந்த பொருள் விரும்பி', 'புதிய பொருள் விரும்பி' என்று இருவகைப்படுவர்.

உயிர்ப்பேறு தன் உயிரினையே நுகரும் நுகர்ச்சி ஆகும். இது கைவல்யம் என்று சொல்லப்படும். இப்பேற்றினால் துன்பநீக்கம் உண்டாகிறது. இதனால் கிட்டும் இன்பம் அளவுபட்டது. இது மக்களால் அறிய முடியாததாய், பொருள்தரும் இன்பத்தை விடப் பெருத்தும், இறைநுகர்ச்சியால் கிட்டும் இன்பத்தைப் பார்க்கும்போது மிகவும் புல்லியதாகவும் இருப்பது. இப்பேற்றில் இறங்கியவர் இதிலிருந்து மீள்வதில்லை. அவர்களுக்கு இறை நுகர்ச்சி கிட்டாமல் போகிறது. இப்பேற்றினை நுகரும் இடம் நான்முகன் முதலானோர் உலகத்திற்கு மேலேயும் திருநாட்டிற்கு வெளியேயும் இருப்பதாகக் கூறுவர். இப்பேற்றினை விரும்புவோர் 'உயிர் விரும்பி' (கேவலர்) என்று குறிக்கப் பெறுவர்.

பொருட்பேறும் உயிர்ப்பேறும் 'எனது' என்னும் பற்று 'யான்' என்னும் செருக்கு ஆகியவற்றின் விளைவுகளாகும்.

இறைநுகர்ச்சியே ஒப்பற்ற பேறாகும். இறைவனிடம் செய்யும் நற்செயல்களே மேலானவையாகும். திருமகளோடு கூடியிருக்கும் பெருமானாகிய இரட்டையே (மிதுனமே) அடையத்தக்க பேறு. மனிதப் பிறவிக்குப் பயன் இறைவனைச் சார்தலே ஆகும்.

இவ்வுலகில் இறைநுகர்ச்சி உண்டானால் அது ஒவ்வொரு காலத்தில் மட்டுமே கிட்டுவதாகும். இவ்வுலக வாழ்வு நீங்கப்பெற்ற பின்பேமுழுமையாக இறைவனுக்குத் தொண்டு புரிதல் வாய்க்கும். அத்தொண்டு இறைவனை அடையும் நெறியினை மேற்கொண்டு, பிறப்பொழிந்து, செயற்கை கடந்த திருமேனியைப் பெற்றுத் திருநாட்டில் நிலைத்துறைபவர்களோடும் (நித்தியர்) வீடுற்றவர்களோடும் (முக்தர்) கூடிச் செய்யப்படுவதாகும்.

இறைவனுக்குத் தொண்டு செய்வது பேற்றின் தொடக்கமாகவும், இறையடியார்க்குத் தொண்டு செய்வது பேற்றின் எல்லையாகவும் அமைகின்றன. இறைவனுக்கு அடிமையாய் இருத்தல் என்பது இறையடியார்க்கும் அடிமையாய் இருத்தலையும் உட்கொண்டது என்பர். இறைவனைத் தவிர ஏனைய பேறுகளை விழைவோரைப் 'பிற பயன் வேண்டுமவர்' என்றும், இறைவனையே விழைவோரைப் 'பிற பயன் வேண்டாதார்' என்றும் குறித்தல் மரபு. தெ.ஞா.

**உம்பற்காட்டு இளங்கண்ணனார்** சங்கப் புலவர்களில் ஒருவர். இவர் பாடியதாக ஒரு பாடல் அகநானூற்றில் (264) தொகுக்கப் பெற்றுள்ளது. இப் பாடல் முல்லைத் திணையைச் சார்ந்தது. பருவம் கண்டு வருந்திய தலைவி கூற்று எனவும், தோழி தலைவிக்குக் கூறியது எனவும் இரு கிளவிகள் இப் பாடலுக்கு வழங்கப் பெற்றுள்ளன. பதினைந்து அடிகளையுடைய இப் பாடலின் முதற்பகுதி (பத்து அடிகள்) கூதிர்கால வருணனையை அழகுற வழங்குகிறது. வானத்தில் விண்மீன்கள் அழகு செய்வது போல முசுண்டையின் வெண்மலர்கள் மலர்கின்றன. கோடலின் வெண்மலர்களைத் தலையிற் சூடிய கோவலர், பகலிற்பெய்த மழையில் நனைந்து வருந்திய ஆனிரைகளொடு நீர் சொட்டும் தலைமாலையுடன் ஊரை நோக்கிச் செல்கின்றனர். மழை பொழிந்து எழுந்த நீர் தெருக்கள்தொறும் ஓடுகிறது. இடி முழங்குகிறது. இத்தகைய கூதிர்க் காலத்தில் பாசறையிலிருக்கும் 'காதலர் நம்நிலை அறியாராயினும் தம் நிலை அறிந்தனர் கொல்லோ' என்ற வினாவின் வாயிலாகத் தனது உள்ளத் துணர்வைப் புலப்படுத்துகிறாள் தலைவி.

தலைவன் பாசறைப் புலம்பினமை கூறக் கேட்ட தலைவி கூற்றாக இப்பாடலைக் கொண்டுள்ளார் நச்சினார்க்கினியர் (தொல். அகத்திணையியல் -நச்: உரைமேற்கோள் 44).


எஸ்கு.

**உம்மத்தூர்க் குறுநில மன்னர்கள்:** உம்மத்தூர் ஒரு சிறிய கிராமமாகும். இது மைசூரின் தெற்குப் பகுதியில் கோயம்புத்தூர் மாவட்டத்தினை ஒட்டிக் காணப்படுகின்ற ஓர் ஊராகும். இது ஒரு காலத்தில் கங்க நாட்டின் தலைநகராக விளங்கிய தலக்காட்டுக்கருகில் இருந்தது. இவ்விடமானது இன்று சாமராச நகர வட்டத்திற்குள் அடங்கியுள்ளது. கி.பி.15-ஆம் நூற்றாண்டின் முடிவில் கர்நாடகப் பகுதியை ஆண்டுவந்த குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அளித்தவர்கள் இரைசு என்பாரும் அயவருமாவார்கள். உம்மத்தூர்க் குறுநில மன்னர்களைப் பற்றி முன்னுக்குப் பின் முரணான செய்திகளை இவர்கள் கூறியுள்ள போதிலும் இவைவரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

'உம்மத்தூர் உடையார்கள்' என மிகச் சிறப்பாக அழைக்கப்பட்டு வந்த இவர்கள் விசயநகரப் பேரரசைச் சில காலம் எதிர்த்து வந்தனர்.

இக்குறுநில மன்னர்களைப் பற்றி இருகல்வெட்டுகள் நன்கு அறிவிக்கின்றன: 1. சாமராச நகர்ச் கல்வெட்டு, 2. குண்டலூ பேட் கல்வெட்டு. 'சௌராட்டிரா பிரபு', 'பெனுகொண்டா விக்காக்ரேசுவரா' என்பது இவர்களின் பட்டங்கள். ஆனால் இவை இரண்டுமே இவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இவர்கள் பொற்கொல்லர்கள் வழி வந்தவருமல்லர். இவர்களுக்கும் கங்கநாட்டினருக்கும் தொடர்பு இருந்ததைப் போன்று மைசூரை ஆண்ட வம்சத்தினருக்கும் கங்கர்களுக்கும் தொடர்பு இருந்தது. ஆகவே இவர்கள் கர்நாடகத்தினைச் சேர்ந்தவர்களென்றும் மத்திய அரசு பலவீனமடைந்த காரணத்தால் இவர்களும் பலவீனமடைந்தனர் என்றும் தெரிய வருகின்றது. உம்மத்தூரும் அண்டை நிலப்பகுதியான தெர்க்காநம்பியும் விசயநகர வீரனான கம்பண்ண உடையாரின் (1356)-(1376) ஆளுநர் ஒருவரால் ஆளப்பட்டு வந்தன என்பதைஅக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அச்சன்னா 1376, 1407 ஆகிய ஆண்டுகளில் ஆட்சி செலுத்தியுள்ளான். உம்மத்தூரை ஆண்டவர்கள் விசய நகர ஆளுநர்களைப் பின்பற்றியதுடன் விசய நகர அரசரின் கீழ் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

கொங்கு நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர் வரை இவர்களின் ஆட்சி பரவியிருந்திருக்கிறது. கொங்கு நாட்டில் தொடர்ச்சியான ஆட்சியிருந்திருக்க வேண்டுமென்பது அப்பகுதியில் கிடைத்த கல்வெட்டுகளால் தெளிவாகின்றது. உம்மத்தூர்க்குறுநில மன்னர்களின் வம்சாவளியைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.



மேலே காட்டிய வம்சா வளியானது வீரநஞ்சராயன்-1, இம்மடிதெப்பண்ணா ஆகிய இருவரும் சில காலம் ஆண்டுள்ளதையும், சிக்காவும் வீரநஞ்சராயா-2-உம் அவர்களுக்குப் பின் குறுநிலப் பகுதிகளை ஆண்டுள்ளதையும் காட்டுகின்றது. கொங்கு நாட்டின் தொடர்பு உம்மத்தூர்க் குறுநில மன்னர்களின் வம்சாவளியை அறியவும், ஆட்சி, மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை பற்றித் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றது.

நஞ்சண்ணா என அழைக்கப்படும் இரண்டாம் நஞ்சராயனைப் பற்றிய குறிப்பு நம்பியூர், பட்டணம், தாராபுரத்திலுள்ள தாத்தாங்கன்னி ஆகிய ஊர்களிலுள்ள சாசனங்களில் காணப்படுகிறது.

முதலாம் நஞ்சராயன்: இவன் முசுலிம்களால் கொடுவாய்க்கருகில் இடித்துத் தள்ளப்பட்ட பெருமாள் கோயிலைக் கட்டினான்; அதனைப் புனிதப்படுத்தினான். அழிந்துபோன சேர சோழ மன்னர்களின் எழுத்துகளை மீண்டும் சுவரில் பொறித்தான். கோயிலின் பூசைக்காகவும், அதனைப் பழுது பார்க்கவும் இரு கிராமங்களை ஈந்தான். கொடுவாய் மக்கள் அவ்வூர் வழியாகச் சென்ற மக்களுக்குச் சுவையான உணவுடன் கம்பும் தருமமாக வழங்கினர் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகின்றது. அக்காலத்தில் கொடுவாய் முக்கிய ஊராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அது வழி புக்க நாடு என்ற பகுதியில் அமைந்திருந்து.

சிக்காவின் அனாசிச் சாசனம், குன்னத்தூர்ச்சாசனம், குண்டூர்ச் சாசனம் ஆகியவை இவன் காலத்தில் நிகழ்ந்த வணிகரின் கொடை, வெட்டிய குளம், 50 உடையார்களுக்கு அளிக்கப்பட்ட உணவு, உடை முதலியவற்றையும் குறிப்பிடுகின்றன. பட்டணத்தில் கிடைக்கப்பெற்ற இரண்டாம் நஞ்சராயனின் கல்வெட்டொன்று ஆறு வணிகர்கள் அக்கிராமத்தை உருவாக்கினார்கள். என்றும் அதற்குச் சிரீநாத பட்டணம் என மறு பெயரிட்டனர் என்றும் குறிப்பிடுகின்றது.

இது குறுநில மன்னர்களின் ஆட்சித் திறமையையும், மக்கள் நலம் கருதி அவர்கள் வாழ்ந்தமையையும் தெளிவு படுத்துவதுடன், மக்கள் குறைவான கிராமங்களில் மக்களைக் குடியேறச் செய்வித்தனர் என்றும், ஆலயங்களைப் புதுப்பித்தனர் என்றும் கூறுகின்றது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பெரியபாளையத்துக்கருகில் இன்றும் காணப்படும் நஞ்சராயன் குளம் இரண்டாம் நஞ்சராயனால் வெட்டப்பட்டது என்றும், இவன் விவசாயத்தில் கவனம் செலுத்தினான் என்றும் தெரிகின்றது. இவன் விவசாயமே கிராமத்தின் முதுகெலும்பு என்பதை நன்கு அறிந்திருந்தான் போலும். அழிந்து போன ஆலயத்திலிருந்து கிடைத்த கல்வெட்டொன்று இவனே அக்குளத்தை வெட்டினான் எனக் கூறுகின்றது.

இரண்டாம் நஞ்சராயனின் தாத்தாங்கன்னிச் சாசனமானது திருபுவனத்து ராசாக்கள் தம்பிரானார் பராக்கிரமபாண்டிய தேவனுடைய மகனான நயினார் ராகுத்த பெருமாள் என்பவனைப் பற்றிக் குறிப்பிடுவதுடன் அவன் நன்கொடையாக அளித்த வரியையும் குறிப்பிடுகின்றது. விக்கிரமபாண்டிய பிரமராயன் உம்மத்தூர்க் குறுநில மன்னருக்குக் கீழ்ச் சிறு குறுநில மன்னராக இருந்தான் என்றும் கூறுகின்றது.

வலிமைமிக்க கிருட்டிண தேவராயர் பதவிக்கு வந்ததும் உம்மத்தூர்க் குறுநில மன்னர்களை அடக்க எண்ணினார். குமார வீரய்யாவைச் சீரங்கப் பட்டணத்திற்கும் மலபார் எல்லையில் காணப்படும் நிலப் பரப்பிற்கும் அரசனாக்கினார். இது கொங்கு நாட்டையும் உள்ளடக்கியது. இவை யாவும் கி.பி. 1510க்கும் 1512க்கும் இடையில் நிகழ்ந்தவையாகும். இவ்வாறு கொங்கு நாட்டின் சில பகுதிகளில் மேலாண்மை செலுத்திவந்த உம்மத்தூர்க் குறுநில மன்னர்களின் ஆட்சி முடிவடைந்தது. க.பு.சீ.

**உம்மாக் கட்சி**: நடு ஆப்பிரிக்க நாடாகிய சூடான் நாட்டில் (Sudan) 1943-ஆம் ஆண்டில் தோன்றிய நடுத்தரப் போக்குடைய தேசிய கட்சியே உம்மாக் (Ummah) கட்சியாகும். உம்மா என்பதற்கு நாடு அல்லது தேசம் என்பது பொருளாகும்.

சூடானின் பழைய வரலாறும், உம்மாக் கட்சி தோன்றிய சூழ்நிலைகளும்: பண்டைக் காலத்தில் நுபியா(Nubia) என்று சொல்லப்பட்ட சூடான் நிலப் பகுதியில் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்த மக்கள் வேட்டையாடிப் பிழைத்தனர். சிறிது சிறிதாக நாகரிக வளர்ச்சி பெற்ற இம்மக்கள் கி.மு. 3000-இல் எகிப்தின் படைஎழுச்சிகளுக்கு உள்ளாயினர். எகிப்திலிருந்தும் இலிபியாவிலிருந்தும் புதிய மக்கள் குடியேறினர். அடிக்கடி எகிப்திய-நுபியப் போர்கள் நடந்தன. நைல் ஆற்றின் தென்பகுதியில் இந்நாடு இருந்ததால் இதில் வேளாண்மையும், தங்கம் முதலிய உலோகத் தொழில்களும் வளர்ந்தன. இந்நாட்டை ஆளுதற்காக எகிப்திய அரசர்களாலமர்த்தப்பட்ட அதிகாரிகள் நாளடைவில் சுதந்திர அரசர்களாயினர். வடக்கே எகிப்திலும், பாரசீக, கிரேக்க, உரோமானிய அரசியலாதிக்கத்துக்கு உட்பட்ட இடத்திலும் நுபியா தனது நாகரிகத்தைப் பாதுகாத்தது. இந்

நாட்டிற்கு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் கிறித்தவக் குருமார் வந்து கல்வி, மருத்துவப் பணிகள் செய்து, சிறிது சிறிதாகச் சூடானிய மக்களை மேனாட்டு நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தகுதி உடையவராகச் செய்தனர். இதை அடுத்து, அராபியர் வந்து வட சூடானில் வாணிகம் செய்து தங்கினர். துருக்கியர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றத் தென் சூடானில் அராபியர் பரவினர். பல்வேறு இனமக்கள் சிறு சுதந்திர அரசுகளை நிறுவினர். புஞ்சு (Funj) என்ற இனத்தார் சூடானை ஆட்சி செய்தபோது, அவர்களுடைய படைகளில் அடிமைகளே பணி புரிந்தனர்; இதனால், வலுவிழந்த அரசர்களுடைய காலத்தில், இசுலாமிய நீதிபதிகளும் கலைஞர்களும் (உலாமாக்கள்) ஆதிக்கம் பெற்றனர். எகிப்தை ஓட்டோமான் துருக்கியத் தலைவரான முகமதுஅலி ஆட்சி செய்தபோது, அவர்தம் மகன் இசுமாயில் (Ismail) சூடானை வென்று அதை எகிப்தோடு கி.பி. 1821-இல் இணைத்தார். இதனை எதிர்த்த சூடானியர் ஒடுக்கப்பட்டுக் கடும்வரி விதிப்புக்கு உள்ளாயினர். சிறிது சிறிதாக வரி குறைக்கப்பட்டு, வணிக வழிகளும் திறக்கப்பட நாடு சிறிது வளம் பெற்றது. கார்ட்டும் (Khartoum) நாட்டின் தலைநகரமாயிற்று. பல சூடானியக் குழுக்களின் தலைவர்கள் (Shayks) எகிப்தினாட்சிக்கு ஆதரவளித்தனர். கப்பல் போக்குவரவு வசதிகள் ஏற்படுத்தப்பட வாணிகம் பெருகிற்று. இசுமாயில் 1863-இல் எகிப்தின் தலைமை ஆளுநராக வந்து, எகிப்திலும் சூடானிலும் மேலைநாட்டுத் தொழில் முறைகளையும், கல்வி முறையையும் புகுத்தி அவற்றை நவீன நாடுகளாக்க முயன்றார். இவர் நாட்டைத் தெற்கில் விரிவாக்கி, அடிமை நிலையையும் ஒழிக்க முயன்றார். பல்வேறு காரணங்களால் எகிப்தில் ஆங்கில அதிகாரியின் கட்டுப்பாட்டில் அரசாங்கம் வரலாயிற்று. சூடானில் கி.பி. 1881-இல் முகமது அகமது என்பவர் கடவுளால் அமர்த்தப்பட்டவர் என்று தம்மைக் கூறியதோடு, மகதி (Mahadi) என்றும் கூறிக் கொண்டு, அடிமை வணிகர்களுடைய ஆதரவைப் பெற்று, மக்களுடைய தலைவராகி படைதிரட்டிப் பிரிட்டிசுத் தளபதி கார்டனைத் தோற்கடித்துக் கொன்று, கி.பி. 1885-இல் கார்டுமைக் கைப்பற்றினார். மக்கள் பல துன்பங்களுக்கு உள்ளாயினர். மகதியின் ஆட்சியைச் சூடானிய மக்கள் ஏற்றனர். எகிப்தில் அயலவருக்கெதிராகத் தோன்றிய கலகத்தை அடக்கவும், மற்ற ஐரோப்பிய அரசுகளின் தலையீட்டைத் தடுக்கவும், பிரிட்டிசுப் படைகள் கி.பி. 1882-இல் எகிப்தின் மீது படையெடுத்து அதைக்கைப்பற்றின. பின்னர்கி.பி.1896-இல்பிரான்சு நைல் ஆற்றின் குறுக்கே அணைகட்டி அவ்வாற்றின் நீர் எகிப்துக்குக் கிடைத்தலைத் தடுக்க முயலவே, எகிப்துக்கு அவ்வாற்றின் நீர் கிடைக்கச் செய்வதற்காகப் பிரிட்டிசார் சூடானையும் கைப்பற்றுதல் தவிர்க்க முடியாததாயிற்று. ஓர் ஆங்கிலோ எகிப்தியப் படை கி.பி. 1897-இல் சூடானில் படையெடுத்துச் சென்று 1898-இல் ஆம்டுர்மானில் (Omdurman) சூடானியப் (மகதியின்) படையைத் தோற்கடிககவே சூடான் பிரிட்டிசார் வசமாயிற்று; பிரெஞ்சுத் தலையீடும் தவிர்க்கப்பட்டது. சூடானில் எகிப்து நடத்திய கடுமையான ஆட்சியே மகதியின் எழுச்சிக்கு வழி வகுத்ததென்று ஆங்கிலேயர் அறிந்து, தாம் வென்ற சூடானை எகிப்துக்கு அளிக்காமல், சூடானின் மீது ஆங்கிலோ-எகிப்திய இணைப்பாட்சியை (Anglo-Egyptian Condominium) கி.பி. 1899-இல் ஏற்படுத்தினர்.

இந்த ஏற்பாட்டின்படி சூடானுக்கு ஒரு தனியான அரசியல் நிலை அளிக்கப்பட்டது; அதன் மீதான இறைமை அதிகாரம் (Sovereignty) எகிப்தியத் தலைவராலும் கெடிவ் (Khedive) என்ற ஆங்கில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. நாட்டின் இராணுவ ஆட்சியும் குடிமை அரசாங்கமும் ஆங்கில அரசால் பெயர் குறிப்பிடப்பட்டு, ஒரு நியமனத் தலைமை ஆளுநரிடம் (Nominated Governor General) ஒப்படைக்கப்பட்டது. சூடானை வென்ற ஆங்கிலத் தளபதி கிச்சனர் பிரபு சூடானின் முதல் பிரிட்டிசுத் தலைமை ஆளுநராக கி.பி. 1899-இல் ஆனார். அவருக்குப் பின்னர் வந்த விங்கேட்டு (Wingate) என்பவருடைய ஆட்சிக் காலத்தில் சூடானில் அமைதியும் செழிப்பும் நிலவின. இரயில்வே, தந்தி, கப்பல் போக்குவரவு முதலியவை கொண்டு வரப்பட்டன. பருத்தி விளைச்சலுக்கு ஊக்கமளிக்கப்பட்டது தொடக்கப் பள்ளிகளும் தொழிற் பள்ளிகளும் கார்டன் நினைவுக் கல்லூரியும் நிறுவப்பட்டன. மேனாட்டு முறையில் கல்விப் பயிற்சி பெற்ற வல்லுநர் கூட்டம் ஒன்றுஉருவாயிற்று; இதனைப் பிரிட்டிசு அதிகாரிகள் புறக்கணிக்கவே, இவர்கள் எகிப்திய தேசிய வாதிகளைச் சார்ந்திருந்தனர். இவர்களிடையே இருந்துதான் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சூடானியத் தேசிய உணர்வு தோன்றிற்று.

சூடானில் தேசிய உணர்வு செயல்படுதலும் உம்மாக் கட்சி தோன்றுதலும்: சூடானில் அலி அபுதல் வத்தீபு என்பவர் ஐக்கியக் கூட்டக் கழகம் (United Tribes Society) என்பதை 1921-இல் நிறுவினார்; இவர் நடத்திய தேசிய கிளர்ச்சிக்காகச் சிறைபிடிக்கப்பட்டார். பிரிட்டிசாரைச் சூடானிலிருந்து வெளியேற்றுவதற்காக இவர் 1924-இல் வெண்கொடிக்

கழகம் (White Flag League) என ஒன்றைத் தொடங்கினார். கார்ட்டுமில் ஆங்கிலேயருக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் ஒடுக்கப்பட்டன. பிரிட்டிசுத் தலைமை ஆளுநர் சர் லீ இசுடாக்கு (Sir Le Stack) 1924-இல் கொல்லப்பட, பிரிட்டிசார் எகிதியரைச் சூடானிலிருந்து வெளியேற்றி, எகிப்தியருக்கு ஆதரவாகக் கலகம் செய்த ஒரு சூடானியப் படையை அழித்தனர். இதனால் பிரிட்டிசாருடைய ஆட்சிக்குச் சூடானில் இரண்டாம் உலகப் போரினிறுதிவரை எதிர்ப்பு ஏற்படவில்லை.

ஆங்கிலோ - எகிப்திய உடன்படிக்கையின்படி (Anglo-Egyptian treaty of 1936) எகிப்திய அலுவலர் சூடானில் மீண்டும் பணி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கை செய்யப்படுவதற்கு முன்னர், தங்களுடைய கருத்துகளைக் கேட்டறிவதற்குப் பிரிட்டனோ எகிப்தோ சிறிதும் முயலவில்லை என்று கற்றுவல்ல சூடானியர் குறைகூறினர். அவர்கள் பட்டதாரிகள் பொதுமன்றம் (Graduates General Congress) என்ற ஒரு குழுவின் வாயிலாகத் தம் குறைகளை எடுத்துரைத்தனர். இம்மன்றம் கார்டன் கல்லூரியின் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டதாகும். இதில் கற்றுவல்ல எல்லாச் சூடானியரும் இருந்தனர். முதலில் சமூக, கல்வி, முன்னேற்றச் செயல்களிலீடுபட்டிருந்த இந்த மன்றம் பின்னர், எகிப்தியருடைய தூண்டுதலால் சூடானியருடைய தேசியஉணர்வை வெளிப்படுத்துதற்குத் தான் ஒன்று தான் தகுதிபெற்ற பிரதிநிதி என்று தன்னைப் பிரிட்டிசார் ஒப்புக் கொள்ளுதல் வேண்டுமென்று வற்புறுத்திற்று. இதற்குச் சூடான் அரசாங்கம் மறுக்கவே, மன்றம் இருபகுதிகளாகப் பிரிந்தது; ஒரு பகுதியில் பெரும்பாலானவர்கள் இருந்து, நடுத்தரப் போக்குடையவர்களாகவும் அரசாங்கத்தை ஆதரித்தும் இருந்தனர்; மற்றப் பகுதியில் எகிப்தைச் சார்ந்திருந்தோர் சிறுபான்மையினராகஇருந்தனர்; சிறிய பகுதியின் தலைவர் இசுமாயில் அல் அசாரி (Ismail al Azhari) மன்றத்தைக் கட்டுப்படுத்தி, அதை 1943-இல் அசிகா (Ashiqqa) என்ற அரசியல் கட்சியாக நிறுவினார். இதுவே சூடானில் உருவாகிய முதல் அரசியற் கட்சியாகும். இதற்கெதிராகவே நடுத்தரப் போக்குடையோர்(Moderates) உம்மா(Ummah) என்ற தேசியக் கட்சியை சயித் அப்தார் ரகுமான் அல்மகதியின் தலைமையில் அமைத்தனர். இதனுடைய நோக்கம் சூடான் நாளடைவில் சுதந்தரம் பெறும் பொருட்டுப் பிரிட்டிசாருடன் ஒத்துழைத்தலே ஆகும். இதனுடைய தலைவராகிய சையித்து என்பவர் முன்னை நாள் மகதியின் மகனாகையால் அவருடைய தலைமையைப் பெருமளவில் சூடானியர் ஆதரித்தனர்.

**உம்மாக் கட்சியும், சூடானிய அரசியலும்:** உம்மாக் கட்சியின் தலைவர் சையித்து தமக்குக் கிடைத்த ஆதரவை உம்மாக் கட்சியின் கோட்பாடுகளோடு இணைக்க எண்ணினார். அசிகாக் கட்சிக்குக் காட்மியா என்ற கூட்டத்தார் ஆதரவளித்தனர். இருகட்சிகளுக்கும் இடையே ஐயுறவும் பூசலும் தோன்றின. அசிகாக் கட்சி தேசிய ஐக்கியக் கட்சியாக வளர்ந்தது. இதற்கும் உம்மாக் கட்சிக்கும் நல்லுறவு ஏற்படாததால் சூடானில் பாராளுமன்ற அரசாங்க முறை ஏற்படுவது தடைப்பட்டது. பிரிட்டிசார் கற்றுவல்ல சூடானியர்களை ஆட்சித் துறையிலீடுபடுத்தும் நோக்கத்துடன், அவர்களுடைய தேசிய உணர்வை ஒப்புக் கொண்டனர். ஆயினும் அவர்கள் வட சூடானுக்கு மட்டும் 28 சூடானியரும் ஒரு தலைமை ஆளுநரும் கொண்ட ஓர் ஆலோசனை மன்றத்தை நிறுவினர். வட சூடானிலிருந்த முசுலிம் அராபியர்களைத் தென் சூடானிலிருந்த கிறித்தவ ஆப்பிரிக்கர்களிடமிருந்து பிரித்தற்காகச் செய்த சூழ்ச்சியே இதுவாகும். ஆனால் இதனை நன்குணர்ந்த சூடானிய தேசியவாதிகள் ஆலோசனை மன்றத்தைத் தென் சூடானியரையுமுடைய ஒரு சட்டமன்றமாக மாற்றுதல் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். கடைசியில் பிரிட்டிசார் பிரித்தாளும் கொள்கையை விடுத்து 1947-இல் ஒரு சட்ட மன்றத்தை நிறுவி, சூடான் முழுவதற்கும் பிரதிநிதிகளாக அதில் தென் சூடானியரும் இருத்தற்கு ஏற்பாடு செய்தனர். இதனை எகிப்து எதிர்த்தது; எகிப்திய அரசாங்கம் 1951 அக்டோபரில் பிரிட்டனைக் கலந்துகொள்ளாமல் ஒருதலையாக 1936-ஆம் ஆண்டின் ஆங்கிலேய-எகிப்திய உடன்படிக்கையைத் தள்ளுபடி செய்தது; மேலும், அது சூடானின் மீது எகிப்திய ஆட்சியை நிறுவி ஓர் அறிக்கையை விடுத்தது. பின் விளைவுகளை எண்ணிப்பாராமல் எகிப்து செய்த இச்செயல் சூடானியரை எகிப்திடமிருந்து பிரிக்கவே செய்தது. எகிப்தில் 1952-இல் நாசரும் நெகுபும் நடத்திய புரட்சியின் விளைவாகச் சூடானியருடைய தேசிய உணர்வை மதிக்கக் கூடியவர்கள் எகிப்தில் ஆட்சிக்கு வந்தனர். அவர்களுடைய முயற்சியின் விளைவாகச் சூடானில்எகிப்தின் செல்வாக்குப் பரவிற்று. அவர்கள் 3 ஆண்டுகளுக்குள் சூடானுக்குத் தன்னாட்சி வழங்குவதென்றும், சூடானியருக்குத் தன்தேச உரிமையை உறுதி செய்யும் உரிமையையும் (Right of Self-Determination) வழங்குவதென்றும் பிரிட்டனோடு 1953 பிப்பிரவரியில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தனர்.

ஒரு பிரதிநிதித்துவப் பாராளு மன்றத்தைத் தேர்ந்தெடுத்தற்காக 1953 நவம்பரில் தேர்தல்கள் நடைபெற்றன. நைல் பள்ளத்தாக்கினர் யாவரும்

இணைதல் வேண்டுமென்று எகிப்தியர்கள் குரலெழுப்பி, அசிகாக் கட்சியின் (தேசிய ஐக்கியக் கட்சி) தலைவர் அசாரிக்கு உதவி செய்தனர். உம்மாக் கட்சியின் நோக்கம் ஒன்றுபட்ட நைல் பள்ளத்தாக்கு அன்று; அது தெற்குச் சூடானின் தனித்தன்மை பாதுகாக்கப்படுதல் வேண்டுமென்று விரும்பிற்று; அதற்குப் பிரிட்டிசாரின் ஆதரவு இருந்தும், அசாரியின் தேசிய ஐக்கியக் கட்சியே வென்று, ஆறு ஆண்டுகளாகச் சட்டமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்து ஆட்சி செய்த உம்மாக் கட்சியை நீக்கிற்று. தேசிய ஐக்கியக் கட்சித் தலைவர் அசாரி சூடானை எகிப்தோடு இணைத்தலைத் தமது நோக்கமாக வைத்துப் போட்டியிட்டுத் தேர்தலில் வென்றாலும், தென் சூடானில் இணைப்புக்கு எதிராகத் தோன்றிய கலகங்களும், பெரும் ஆட்சிப் பொறுப்புகளும் தமது நோக்கத்தைக் கைவிடும்படி அசாரியைத் தூண்ட, அவர் சூடானை 1956 சனவரி முதலாம் நாள் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவப் பாராளுமன்றத்தையுடைய ஒரு சுதந்திரக் குடியரசாக அறிவித்தார்.

பிற்கால அரசியல் நிலை: முதலில் சூடானில் தாராளப் பாராளுமன்றக் குடியாட்சி முறை வரவேற்கப்பட்டாலும், நாளடைவில் அந்தமுறையானது உட்கட்சிப் பூசல்களினாலும், தலைவர்களுடைய அதிகார, பொருள் விருப்பங்களினாலும் வலுவிழந்தது. அவர்களுக்குப் பழக்கமான சருவாதிகார ஆட்சி முறை மீண்டும் தோன்றிற்று. இராணுவத் தளபதி அபுத்து 1958-இல் அரசாங்கத்தைக் கைப்பற்றினார். இவர் அரசியற் கட்சிகளைக் கலைத்தார் இவருடைய ஆட்சியும் வீழ, 1965-இல் ஒரு கூட்டணி அரசாங்கம் உம்மாக் கட்சித் தலைவர்முகமது அகமது மகூபியின் தலைமையில் அமைக்கப்பட்டது. உம்மாக் கட்சியில் இருபிரிவுகள் தோன்றின; இரண்டையும் இணைக்கக் கூடிய பொது நோக்கங்களில்லை; பொருளாதார, சமூக, அரசியலமைப்புக் கேள்விகளைப் பாராளுமன்றத்தால் தீர்க்க இயலவில்லை. மீண்டும் இராணுவ ஆட்சி 1969-இல் நுமெய்ரியின் (Numayri) தலைமையில் ஏற்பட்டு உம்மாக் கட்சி ஒடுக்கப்பட்டது. பொதுவுடைமையர் நுமெய்ரியை எதிர்த்துக் கலகம் செய்தனர். அயலவர் ஆதரவுடன் மீண்டும் 1971-இல் ஆட்சிக்கு வந்த நுமெய்ரி ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்தி தேசிய மன்றத்தையும் அமைத்தார். தென் சூடானுடன் 1972-இல் அமைதி உடன்படிக்கை செய்யப்பட்டது; அதற்கு உள்ளாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டன; கலகங்கள் ஓய்ந்தன. பிரதேச தன்னாட்சிச் சட்டத்தின்படி கார்ட்டுமிலுள்ள நடுவண அரசாங்கம் பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கை, குடிமை உரிமை, அயல்வாணிகம், பொருளாதாரச் சமூகத் திட்டங்கள், நிதி, செய்தித்துறை, கல்வி முதலியவற்றிற்குப் பொறுப்பேற்றது. தென் சூடானியப் பிரதேச மக்கள் சட்டமன்றத்தின் தலைவர் நாட்டின் துணைத் தலைவராக ஆனார். ஒரு புதிய அரசியலமைப்பு 1973-இல் வரையப்பட்டது.

**உம்மை** என்பது தமிழ் மொழியில் வழங்கும் பெயர், வினை, இடை, உரி எனப்படும் நால்வகைச் சொற்களுள் இடைச் சொல் வகையினைச் சார்ந்ததாகும். 'உம்' என்னும் இடைச்சொல் 'ஐ' என்னும் சாரியை சேர்ந்து உம்மை என வழங்குகிறது. அதன் பொருள் 'உம்' என்னும் இடைச்சொல்லின் பொருளே யாகும். இடைச்சொல்லினை விளக்கும் தொல்காப்பியர், 'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும், தமக்கு இயல்பிலவே' (தொல்.சொல்.இடை.1) என்று கூறியுள்ளார். உம் என்னும் இடைச்சொல் எச்சம், சிறப்பு முதலான பொருள்களை உடையதேனும், பெயரையோ வினையையோ சார்ந்து வந்தாலன்றித் தனித்த நிலையில் அப்பொருளை உணர்த்தாது.

'உம்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருளைத் தொல்காப்பியர், 'எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை, முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று அப்பால் எட்டே உம்மைச் சொல்லே' என்னும் நூற்பாவில் (தொல்.சொல்.இடை.7) உணர்த்தியுள்ளார். இதனை இவ்வாறே ஏற்றுக் கூறிய நன்னூலார், எண் என்பதனை அளவை என்னும் சொல்லாற் குறிப்பிட்டுள்ளார். உணர்த்தும் பொருள் வேறுபட்டால் உம்மை, எச்சஉம்மை, சிறப்பும்மை, ஐயஉம்மை, எதிர்மறை உம்மை, முற்றும்மை, எண்ணும்மை, தெரிநிலைஉம்மை, ஆக்க உம்மை என்று எட்டு வகைப்படும்.

எஞ்சி நிற்பதனை உணர்த்துவது எச்சம் ஆகும். அவ்வகையில் அமையும் எச்சவும்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை என்றும், எதிரது தழீஇய எச்சவும்மை என்றும் இருவகைப்படும். 'சாத்தனும் வந்தான்' என்று கூறியவிடத்து, அத்தொடர் சாத்தன் வந்தமையேயன்றிக் கொற்றனும் வந்தான் என்னும் பொருள் பயக்குமாயின், 'சாத்தனும் வந்தான்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாகும். அவ்வாறே, 'சாத்தனும் வருவான்' என்று கூறியவிடத்து, அத்தொடர் சாத்தன் வருவதேயன்றிக் கொற்றனும் வருவான் என்னும் பொருள் பயக்குமாயின், 'சாத்தனும் வருவான்' என்னும் தொடரிலுள்ள உம்மை எதிரது தழீஇய எச்சஉம்மை எனப்படும். இதனை, நச்சினார்க்கினியர் வேறு

வகையாகவும் விளக்குவர். மேலும், எச்சவும்மை யினை முற்றும் தழுவுதல், ஒருபுடை தழுவுதல் என வகைப்படுத்திக் கூறுவதும் உண்டு. ஒருவன், 'யான் கருவூருக்குச் செல்வேன்' என்று கூறக்கேட்ட மற்றொருவன், 'யானும் அவ்வூர்க்குச் செல்வேன்' என்று கூறுவானாயின், அவன் கூற்றில் யானும் என்பதிலுள்ள உம்மை, 'கருவூருக்குச் செல்லல்' என்னும் கருத்து முழுவதையும் உடன்பட்டு நிற்கிறது. கேட்டவன் அவ்வாறு கூறாமல், 'யானும் உறையூர்க்குச் செல்வேன்' என்று கூறுவானாயின் அப்பொழுது அவன் கூற்று, 'செல்லுதல்' என்பதனோடு உடன்பட்டும், 'கருவூருக்கு' என்பதனோடு உடன்படாமலும் அமைகிறது. அப்பொழுது, யானும் என்பதிலுள்ள உம்மை, ஒருபுடை தழுவிய எச்சவும்மையாகும்.

சிறப்பும்மை உயர்வு சிறப்பும்மை என்றும் இழிவு சிறப்பும்மை என்றும் இருவகைப்படும். ஒரு பொருளின் உயர்வினைச் சிறப்பித்துக்கூறுவது உயர்வு சிறப்பு என்றும், இழிவினைச் சிறப்பித்துக் கூறுவது இழிவு சிறப்பு என்றும் பொருள்படும். 'குறவரும் மருளும் குன்று' என்னும்போது, மலையினைக் கண்டு மருளாத இயல்புடைய குறவர்களும் கண்டு மருளும் தன்மையது என அக்குன்றின் தன்மையைச் சிறப்பித்துக் கூறுவதால் அதன்பால் அமைந்துள்ள உம்மை உயர்வு சிறப்புமமையாகும். 'நாயும் உண்ணாத உணவு' என்னும் தொடர், எதனையும் உண்ணும் நாயும் உண்ணாத நிலையில் அமைந்த மிக இழிந்த உணவு எனப் பொருள்படுகிறது. இங்கு நாயும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பும்மையாகும்.

'அவன் போரில் வெல்லினும் வெல்வான்' என்று கூறுமிடத்து, அத்தொடர் போரில் வெல்வான் என்றோ தோற்பான் என்றோ தெளிவுறப் பொருள் தாராமல், வென்றாலும் வெல்லுவான் தோற்றாலும் தோற்பான் என்னும் ஐயப்பொருள் தந்து நிற்பதால் 'வெல்லினும்' என்பதில் உள்ள உம்மை ஐயவும்மை எனப்படும். 'கொற்றன் வருவதற்கும் உரியன்' என்று கூறுமிடத்து அத்தொடர், அவன் வாராமைக்கும் உரியன் என்னும் பொருளையும் தந்து நிற்கிறது. அதனால் அத்தொடரில் 'வருவதற்கும்' என்பதிலுள்ள உம்மை எதிர்மறை உம்மை எனப்படும்.

சேர சோழ பாண்டியர் ஆகிய மூவரும் வந்தார் என்னும் தொடர் தமிழகத்தை ஆண்டவர் மூவர் என்றும், அம்மூவேந்தர்களும் வந்தனர் என்றும் பொருள்தந்து நிற்கிறது. எஞ்சாமைப்பொருட்டாகிய அனைவரும் எனபதனை 'மூவரும்' என்பதிலுள்ள உம்மை புலப்படுத்துவதால் அது முற்றும்மை எனப்படும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேலாகச் சொற்களை இணைத்து, அவை உணர்த்தும் பொருளை ஒன்றோடொன்று எண்ணிக்கொள்ளுமாறு அமையும் உம்மை எண்ணும்மை எனப்படும். 'நிலனும் நீரும் தீயும் வளியும்' என்பதில் சொற்களுக்கு இடையே அமைந்துள்ள உம்மை, அச்சொற் பொருள்களை எண்ணிக் கொள்ளும் பாங்கில் அமைவதால் எண்ணும்மை எனப்படும். 'இரு அடிகளும் நிலத்தில் தோய்வதனால் இவள் திருமகளும் அல்லள்; அரமகளும் அல்லள்; இவள் யாராகும்' என எண்ணும்போது இதன்கண்ணுள்ள உம்மை இவள் திருமகளா அரமகளா என்று ஐயமுற்று வினவுவதற்காக அல்லாமல் மற்றுயார் என்று ஆராய்வதற்காக அமைந்துள்ளமையால் இது தெரிநிலைஉம்மை எனப்படும். 'பாலும் ஆயிற்று' என்னும்போது அதுவே மருந்தும் ஆயிற்று என்னும் பொருள் தந்து நிற்பதால் 'பாலும்' என்பதிலுள்ள உம்மை ஆக்கஉம்மையாகும்.

சொற்களிடையே உம்மை விரிந்து நிற்பதேயன்றித் தொக்கு நிற்பதும் உண்டு. இராப்பகல் என்பது இரவும் பகலும் என்று பொருள் படுங்கால் உம்மைத் தொகையாகும். உம்மைத் தொகை உம்மையால் இணைக்கப்பட்ட சொற்பொருளை எண்ணும் வகையில் அமையும்.

உம் உன்னும் இடைச்சொல் பலர்பால் ஒழிந்த படர்க்கை நிகழ்கால எதிர்கால முற்றுக்களில் விகுதியாக அமையும். அவன் செய்யும்; அவள் செய்யும்; அது செய்யும்; அவை செய்யும் என்பன எடுத்துக்காட்டாகும். நீங்கள் இதனைச் செய்யவேண்டும் என்னும் பொருளில், 'நீர் செய்யும்' என்று கூறும்போது உம்மை ஏவற்பன்மையாக அமைந்துள்ளது. நடப்பதாக எனப் பொருள்படும் 'நடக்கட்டும்' என்னும் சொல்லில் உம்மை வியங்கோள் துணை விகுதியாக அமைந்துள்ளது. 'வரும் பையன்' என்னும்போது உம்மை எதிர்காலப் பெயரெச்ச விகுதியாக உள்ளது. உம்மை இடைச்சொல் சிலவிடங்களில் விரைவுப் பொருளை உணர்த்திநிற்பதுண்டு. 'நன விற்புணர்ச்சி நடக்கலும் ஆங்கே' என்னும் கலித்தொகைப் பகுதியில் (கலி. 39-35), 'நடக்கலும்' என்பதிலுள்ள உம்மை நடந்த உடனேயே என்னும் விரைவுப் பொருளை உணர்த்தி நிற்கிறது. இதனை, 'உம்மீற்று வினையெச்சம், விரைவுதோன்ற நின்றது' என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். உம்மை, செய்யுளில் அசையாகவும் இடம் பெறுவதுண்டு. 'காமக்கடல் மன்னும் உண்டே' என்னும் திருக்குறள் தொடரில், மன், உம் ஆகிய இரண்டும் அசைநிலைகள் என்று பரிமேலழகர் காட்டியுள்ளார்.

உம்மை என்பது உம் என்னும் இடைச்சொல்லை உணர்த்தாமல், மறுபிறப்பு மறுவுலகம் என்ற

பொருளைத் தருதலும் உண்டு. அப்போது சொல்லின் தொடக்கத்திலுள்ள உகரம் சுட்டுப் பொருளதாகும். உம் என்னும் இடைச்சொல் சிலவிடங்களில் உந்து என்று திரிந்து நின்று அதேபொருளை உணர்த்துதலும் உண்டு. உம் என முடியும் பெயரெச்சமே இவ்வாறு திரியும். 'நீர்க்கோழி கூய்ப்பெயர்க்குந்து' (புறம். 395-11) என்னும்போது, பெயர்க்கும் என்னும் பெயரெச்சம் பெயர்க்குந்து என்று திரிந்து பொருள் மாறுபடாது நிற்கிறது. இவ்வாறாதலைத் தொல்காப்பியர், 'உம் உந்தாகும் இடனுமாறுண்டே' (தொல். சொல். இடை. 44)என்று கூறியுள்ளார்.

**உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். பரங்கொற்றனார் என்பது இவரது இயற்பெயர். இவர் தந்தை பெயர் உமட்டூர் கிழார். தந்தையாரின் இயற்பெயர் மறைந்து உமட்டூருக்கு உரிமையுடையவர் என்னும் பொருளில், உமட்டூர் கிழார் என்னும் சிறப்புப்பெயரே அவருக்குப் பெயராக வழங்கியது. பரங்கொற்றனாரின் பாடல் ஒன்று அகநானூற்றின் 69-ஆம் பாடலாக உள்ளது. பாலைத் திணையிலமைந்த இப்பாடல், பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் வாராமல் நீட்டித்தான் என்று நினைத்து வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. இப்புலவர் வரலாற்றுணர்வுடையவர் என்பதனை, இப்பாடலில் அமைந்துள்ள இரு வரலாற்றுக் குறிப்புகளால் அறிய முடிகிறது. மோரிய அரசர்கள் பற்றியும், ஆய் என்னும் குறுநில மன்னன் பற்றியும் இதன்கண் குறிப்புகள் உள்ளன. நெடிய மலையிடத்தும் இயங்கத் தக்க தேர்களையுடைய மோரிய அரசர்கள் தம் தேர்களின் உருளைகள் தடையின்றிச் செல்லும் பொருட்டுப் பாறைகளைச் செதுக்கி வழி உண்டு பண்ணினர் என்றும், ஆய் என்பவன் பகைவர்களின் அரண்களை அழித்து அடிப்படுத்தி, அவர்களின் நன்கலன்களை அகப்படுத்திக் கொணர்ந்து தரும் வலிமைமிக்க மறவர்களின் தலைவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். தலைவியின் மார்பு கமழும் மணத்திற்கு உவமையாக, ஆயின் காட்டகத்தே மலர்ந்து விளங்கும் மலர்களின் மணத்தினைக் காட்டியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

**உமண் சாத்து:** தமிழகத்தில் உப்பு வணிகம் செய்தோர் ஒரு தனிக்குடியாக வாழ்ந்தனர். அக்குடி 'உமண்குடி' எனப்பட்டது. அக்குடி ஆடவர் 'உமணர்' எனவும்; பெண்டிர் 'உமட்டியர்' எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் பரற்கற்களாலான மேட்டு நிலப்பகுதியில் சிறு சிறு குடில்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். இவர்களை 'வெள்ளுப்புப் பகர்நர்' என்றும் இலக்கியங்கள் குறிக்கும்.

'சாத்து' என்னும் சொல் வணிகத்தைக் குறிக்கும். சாத்தன் வணிகன். வணிகருள் தலைவன் மாசாத்தான், மாசாத்துவான் எனப்பட்டான். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைக் கல்வெட்டு 'ஏறு சாத்து', 'இறங்கு சாத்து' எனக் குறிக்கிறது. வணிகப் பணத்திற்குக் கைச்சான்றிட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டிற்குக் 'கைச்சாத்து' என்னும் சொல் உருவாயிற்று.

'உமண் சாத்து' என்பது உப்பு வணிகத்தைக் குறிக்கும் தொடராகும். உப்பு வணிகம் சில்லரையாகவும் மொத்தமாகவும் நடந்தது. சில்லரை வணிகத்தை உமட்டியர் நடத்தினர். 'உப்பு வயல்' எனப்படும் உப்பளத்திலிருந்து உப்பைப் பெற்றுவந்து ஆங்காங்கு அண்மையிலுள்ள சேரிகளுக்குத் தலைச்சுமையாகக் கொண்டுசென்று விற்றனர். 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' என்றபடி சம அளவு நெல்லைப் பெற்று உப்பை விற்றனர்.

மொத்த உப்பு வணிகம் உமணரால் நடத்தப்பட்டது. உப்பங்கழி நிலத்தில் குன்றுபோல் குவிக்கப்பட்டிருந்த உப்பை நெல் கொடுத்துப் பெற்றனர். இந்நெல் 'உப்பு நொடை நெல்' எனப்பட்டது. அண்டையிலுள்ள நகர்கள் முதல் காடும் நிலமுங் கடந்து மலைநிலம் வரை இவ்வணிகம் நடத்தப்பட்டது. சிறு தொலைவிற்குக் கழுதைகளின்மேல் உப்புப் பொதிகளை ஏற்றிச் சென்றனர். நெடுந்தொலைவிற்கு வண்டிகளில் ஏற்றிச் சென்றனர். வழித்துணை கருதியும் காட்டு வழியில் வழிப்பறிக் கொள்ளையரது தாக்குதல் கருதியும் பல வணிகர் கூடிக் குழுக்களாகச் சென்றனர்.

இவ்வாறு வணிகர் குழுக்களின் வண்டிகள் பல எண்ணிக்கையில் ஒழுங்கு வரிசையாகத் தொடர்ந்து செல்லும். இவ்வண்டித் தொடரை 'ஒழுகை' எனச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

மணற் பகுதியில் முனைந்து இழுக்கும் வலிமையுள்ள பகடுகள் பூட்டப்பட்ட வண்டி நிறைய உப்புப் பொதிகள் ஏற்றப்பட்டிருக்கும். பெரும் பாரத்தால் வண்டியின் அச்சு முறியலாம் என எதிர்பார்த்துப் பாதுகாப்பாகச் 'சேம அச்சு' பொருத்தியிருந்தனர். பகடுகள் களைத்தால் மாற்றுதற்கு மாற்றுப் பகடுகளையும் உடன் ஓட்டிச் சென்றனர். எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. பூட்டப்பட்ட பகடுகள் திருகித் தடம் மாறிவிடாமல் மற்றொரு தலைக்கயிறிட்டுப் பிடித்தவாறு உமணர் சாலை ஓரங்களில் நடந்து செல்ல, உமட்டியர் வண்டியில் அமர்ந்து ஓட்டிச் சென்றனர்.

உமணர் பல நாள்கள் பயணஞ் செல்ல நேர்ந்ததால் உணவுப் பண்டங்களுடன் குடும்பத்தையும் கொண்டு செல்ல நேர்ந்தது. பெண்டிர் சமையலுடன் வண்டி ஓட்டியும் துணையாயினர். நீர் வேட்கைக்குப் புளிங் காடி நிறைத்த மட்சால்களை வண்டியின் முன்னுள்ள குத்துக்கால்களில் இறுகப் பிணித்திருந்தனர். இக் காலத்தில் வளர்ப்பு நாய் வண்டியின் கீழே செல்வது போன்று வளர்ப்பு மந்தி வண்டியின் கீழே தொடர்ந்து சென்றதை ஒரு சங்கப் பாடல் (சிறு பாண்: 55) குறிக்கிறது.

இவ்வாறு வரும் வணிகக் கூட்டத்தை வழிப் பறிக் கொள்ளையர் எதிர்பார்த்திருந்து பொருள் களைப் பறித்துச் செல்லத் தாக்குவது வாடிக்கை யாக இருந்தது. தாக்குதலுக்கு ஈடுகொடுத்தும் இழப்பை ஏற்றும் இவ்வணிகம் தொடர்ந்து நடந் தது. இவ்வணிகத்திற்கென உமணர் மன்னர்க்கு 'உல்கு' எனப்படும் சுங்க வரிசெலுத்தினர். மன்னரும் வணிகர்க்குப் பாதுகாப்பாக 'நாடு காவல்', 'பாடி காவல்' படைகளை வைத்துக் பாதுகாப்பளித்த தனைப் பெரும்பாணாற்றுப்படை (81, 82) குறிக்கிறது.

பகடுகளைத் தூண்டி ஓட்டும்போது 'ஒய்' என்னும் ஒலியெழுப்பி அதட்டி ஓட்டினர். இவ்வாறு ஒலி யெழுப்பிச் செலுத்தப்படும் உப்பு வண்டி 'உப்பு ஒய் சகடம்' எனக்குறிக்கப்பட்டுள்ளது. (ஒய் இக்காலத் தில் 'ஐ' என்றும் ஒலிக்கப்படுகிறது)

எனவே, அக்காலத்து உமண் சாத்து ஒரு தனிக் குடியினரால் குடும்பத் தொழிலாக, நெல் மாற்று விற்பனையாகப் பெருமுயற்சியும் முனைப்பும் கொண்டதாக, பல இடையூறுகளைக் கடந்து செய் வதாக நடந்தது. கோ. இ.

**உமர்** இசுலாமிய வரலாற்றில் இரண்டாம் கலீபாவாகப் (Caliph) பதவியேற்றவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் தோளில் பலமும் உடை யவர். இவரது ஆட்சிக் காலத்தில்தான் எகிப்து சிரியா, பாரசீகம் ஆகிய நாடுகள் முசுலீம்களின் ஆட் சிக்கு உட்படுத்தப்பட்டன. முதலாம் கலீபாவான அபூபக்கரின் ஆட்சிக் காலத்திலேயே உமர் அவருக்கு உறுதுணையாக நின்று ஆட்சிப் பொறுப்புகளைக் கவனித்து வந்தார். அபூபக்கர் இறந்த பொழுது ஒருமுகமாகக் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபா உமரின் நீதியும் எளிமையும் போற்றத்தக்கன.

உமர் செல்வம் கொழிக்கும் பல பகுதிகளிலும் பரவிக் கிடந்த பேரரசின் அரசராக இருந்தாலும் எளிய வாழ்க்கை நடத்தினார். முசுலிம்களின் தன்னி கரற்ற தலைவராம் முகமது நபிக்குத் தம் அன்புமகள் அப்சாவைத் (Hapsha) திருமணம் செய்துகொடுத்துப் பெருமைபெற்றவர் உமர். 'இசுலாத்தின் கூர்வாள்' என்று கூறப்பட்ட தனிப் பெரும் படைத்தலைவர் காலீத்பின்-வலீது (Khalid bin Walid) என்பவர் தம் மால் தோற்கடிக்கப்பட்ட ஒரு தலைவனின் மனை வியைக் களத்திலேயே தம் மனைவியாக்கிய கொடு மையைக் கண்டு கொதித்தெழுந்த உமர், அப்போது கலீபாவாக இருந்த அபூபக்கரிடம் காலீதுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கும்படி வலியுறுத்தினார். தாம் பதவியேற்றதும் காலீதைப் படைத்தலைவர் பதவியி னின்றும் நீக்கினார். நீதியின் நிலைக்களமான இவர் குற்றம் புரிவோரைத் தண்டிக்கக் கையில் கசையை ஏந்திக் கடைத்தெருவெல்லாம் கூட அலைவாராம். சிரியா நாட்டிலுள்ள எருசலம் (Jeruselam) கைப் பற்றப்பட்டபொழுது அதை நேரில் காணவிழைந்த கலீபா உமர், ஒரு சாதாரண மனிதரைப்போன்று ஒட்டகத்தின்மேலேறி அங்குச் சென்றதைக் கண்டு மக்கள் வியப்புற்றனர்.

முசுலீம்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப் பட்டன. அவர்களின் சமயமும் பண்பாடும் பாது காக்கப்பட்டன. அவர்களின் நிலங்கள் அவர்களிடமே இருந்தன. நகரங்களில் வாழ்ந்த மக்களைத் துன்புறுத் தாத வகையில் கலீபா உமரின் அரசியல் அலுவலர் களும் ஆட்சியாளர்களும் நகரங்களின் வெளிப்புறத் தில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் வாழ்ந்தனர். அவ் வாறு கூடாரங்களாக இருந்து பின் குடியேற்றப்பகுதி களாக மாறியவைதாம் ஈராக்கு நாட்டிலுள்ள கூபா (Kuba), பசுரா (Basra) முதலிய நகரங்கள். தமது பத் தாண்டுக்கால ஆட்சியில் கலீபா உமர் நாட்டிற்கு நலம் பல செய்தார். நாட்டின் பொதுக் கருவூலம் (Public Treasury) ஒன்றை உருவாக்கினார். நபிநாயகத்தின் நெருங்கிய நண்பர்களான பல சான்றோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வழி செய்தார். எழுதப்படாமல் மக்களின் நெஞ்சங்களில் மட்டும் ஆழமாகப் பதிந் திருந்த குர்-ஆனின் வாசகங்களை ஒன்றுசேர்க்கும் பணியைத்தொடங்கினார். நல்லவராகவும் வல்லவரா கவும் வாழ்ந்த கலீபா உமர் ஒரு கொடியவனால் கி.பி. 644-ஆம் ஆண்டு கொலையுண்டார். அவரை வரலாற்று ஆசிரியர்கள் 'மாமன்னன்' (Omar, the Great) என்று குறிப்பிடுவர். மு. அ.

துணை நூல்கள்:

**Hitti, P.K.**, History of the Arabs, London, 1946.
**Mur. W.**, The Caliphate, Its Rise, Decline and Fall, Edinburgh, 1924.

**உமர் கையாம்** கி.பி. 1048-இல் ஈரான் நாட்டிலுள்ள குரான்சான் மாநிலத்தைச் சேர்ந்த நிசாப்பூரில் பிறந்தார். இவர் இயற்பெயர் கியாசுத்தீன் அபுல் பத் உமர் (Ghiyashuddin Abulbath Omer) என்பதாகும். உமர் என்ற பெயருடன் இணைந்துள்ள கையாம் என்பது இவரது குடும்பப் பெயராகும். இதன் பொருள் 'கூடாரம் தைக்கும் தொழிலாளர்' என்பதாகும். இவர்தம் மூதாதையர் இத்தொழில் செய்து வந்ததால் இவரும் இப்பெயர் பெற்றார்.

பாரசீகக் கவிஞராக உலகம் முழுவதும் அறிமுகமாகியுள்ள உமர்கையாம் ஒரு பல்துறை வித்தகராகத் திகழ்ந்தார் என்பதனை அவர் வரலாற்றால் அறியலாம். இவர் பார்சி நாட்டைச் சார்ந்தவர் என்ற கருத்து பொதுவாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், அரபு இனத்திலுள்ள 'அல் கய்யாமி' என்னும் பிரிவினைச் சார்ந்தவர் என்னும் கருத்தும் நிலவுகிறது.

உமர்கையாம் ஒரு சிறந்த இசுலாமிய சூபியாக — இறைநேசச் செல்வராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய உருபாத் (Rubaiyat) என்னும் கவிதை நூல் கி.பி. 1859-இல் பிட்செரால்டு (Edward Fitz Gerald) என்பவரால் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட பின்னரே, இவர்தம் ஆன்மிகத் தன்மையின் உயர்வை உலகு முழுமையாக உணர்ந்ததென்று கூறலாம். மேலும், இவர் இறைநேயத்தைப் பற்றியும், இறையின் சிறப்பியல்பு பற்றியும் ஆன்மிக நோக்கில் எண்ணற்ற கவிதைகளை உலகுக்களித்துள்ளார். அக்கவிதைகள் உலகளாவிய மெய்ப்பொருளை உள்ளடக்கமாகப் பெற்று இன்றளவும் உயிர் வாழும் சிறப்பினைக் கொண்டுள்ளன. இப்னு அலீ சீனா என்பவர் அரபு மொழியில் எழுதிய 'குத்பா'வைப் பார்சி மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

உமர்கையாம் விண்ணியல் ஆய்வாளராகவும் சிறந்த கணித மேதையாகவும் சோதிடராகவும் திகழ்ந்தார். இவர்தம் சிறப்பினை அறிந்த சுல்தான் மாலிக் சா இவரைப் பெரிதும் சிறப்பித்து, இவர்தம் ஆய்வுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். இவர்தம் விண்வெளி ஆய்வின் பயனாய் வெளியான சலாலி பஞ்சாங்கம் இவருக்குப் பெரும் புகழ் தந்தது. இவர்தம் வானநூற் புலமையை இமாம் கசாலி பெரிதும் பாராட்டிப் பெருமைப்படுத்தினார். விண்கலை பற்றிய சட்ட திட்டங்கள் என்னும் ஓர் அரிய நூலினையும் இவர் இயற்றியுள்ளார். இவர் இதனை கி.பி. 1094-இல் இயற்றியதாகத் தெரிகிறது. இவ்வரிய நூல் 'இசுத்தான் புல்' (Istanbul) நூல் நிலையத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவர் கணிதத் துறையில் கிரேக்க அறிஞர்களை விஞ்சும் அளவுக்கு அறிவு பெற்றிருந்தார். குறிக்கணக்கியல்(Algebra) பற்றிய இவர் நூல் கி.பி. 1851-இல் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கணிதத் தொடர்பாக இவர் எழுதியுள்ள 'மசத்ரத்', 'முசுகிலாத்துல் இசாப்' ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இயற்பியல் தொடர்பாகத் 'தாரீகூல்பீ' என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார்.

இவ்வாறு பல்துறை வித்தகராக விளங்கிய உமர் கையாம் கி.பி. 1123-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்; நிசாப்பூரில் உள்ள ஒரு பூங்காவில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அனைத்துத் துறைகளிலும் உமர்கையாம் சிறந்து விளங்கியிருப்பினும் இன்றளவும் உலகுக்கு அவர்தம் பெயரை நினைவூட்டிக் கொண்டிருப்பன அவர் இயற்றிய ஆன்மிகக் கவிதைகளே எனலாம். சி.ந.

**உமர் வலியுல்லாகு** இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த இறைநேசச் செல்வருள் ஒருவர். இவர் கி.பி. 1748-இல் காயல்பட்டினத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் அப்துல் காதிர்; தாயார் பெயர் பாத்திமா. இளமையிலேயே இசுலாமிய சமயக் கல்வியிலும், ஆன்மிக நெறியிலும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்த உமர் வலியுல்லாகு பிற்காலத்தில், இசுலாமிய இறைநேசச் செல்வர்களுள் குறிப்பிடத்தக்கவர் என்ற பெருமையைப் பெற்றார்.

உமர் வலியுல்லாகுவின் ஆன்மிக குரு சையிது முகுசின் முகைபிலி ஆவார். தம் ஆன்மிகக் குருவின் விருப்பத்திற்கிணங்க, உமர் வலியுல்லாகுமதினா சென்று அங்கு ஐந்து ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றிய பின் தாயகம் திரும்பினார். ஆன்மிக நெறியில் புகழ் பெற்றவரான சையிது முகமது புகாரித் தங்கலின் தொடர்பால் உமர் வலியுல்லாகுமென்மேலும் மெய்ஞ்ஞான ஆன்மிக அறிவு பெற்றார். இசுலாமிய ஆன்மிக நெறியின் ஒரு படித்தரமான 'விலாயத்' என்னும் நிலையினை உமர் வலியுல்லாகுமணமுடித்த பிற்காலத்தில் அடைந்தார்.

இரத்தினக் கற்கள் வணிகத்தினால் பெரும் பொருள் ஈட்டிய உமர் வலியுல்லாகு தம் செல்வங்களை எளியோருக்கு அளித்து இன்பம் பெற்றதுடன், சமுதாயத்தின் மேம்பாட்டிற்காகவும் அரும்பணியாற்றினார். அரபு மொழிப் பயிற்சியால் பல ஞானப் பாடல்களை அம்மொழியில் இயற்றியுள்

ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன ‘ஞானப்புலம்பல்’, ‘இலாசி கம்து பக்கீனீ’ முதலானவையாகும். ஆன்மிக நெறியின் அடிப்படையில் இவர்தம் கவிதைகளை ‘மரிபா’ என்னும் மெய்ஞானப் படித்தரத்தின் உயர் புகழ்க் கவிதைகள் என்று கூறலாம். இவர் தம் 53-ஆம் வயதில், கி.பி. 1801-ஆம் ஆண்டு காலமானார்.
சி.ந.

**உமறுப் புலவர்** கி.பி. 17 – ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் எழுதியுள்ள செந்தமிழ்க் காப்பியமாகிய சீறாப்புராணம் தமிழில் விளங்கும் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாகலாபுரத்தில் முகம்மது நயினார் பிள்ளை என்பாரின் மகனாக கி.பி. 1642-இல் பிறந்தார்.

சீறாப்புராணத்துடன் முதுமொழி மாலை, செய்தக்காதி நொண்டி நாடகம், சீதக்காதி திருமண வாழ்த்து என்னும் மூன்று நூல்களும் இவர் எழுதியனவாகக் கூறப்படுகின்றன. இவற்றுள் 88 விருத்தப் பாக்கள் அடங்கிய முதுமொழி மாலை மட்டும் அதன் இலக்கியத் தரம், பக்திச் சுவை முதலியன காரணமாக உமறுப் புலவரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பின்னிரு நூல்களும் உமறுப் புலவரால் எழுதப்பட்டவை அல்ல எனக் கருதப்படுகின்றன.

உமறுப் புலவர் கடிகைமுத்துப் புலவரிடத்தில் தமிழ் கற்றவர் என்றும், வாலை வாருதி என்னும் ஆணவங்கொண்ட புலவரைத் தம்முடைய கவிதைத் திறனால் வென்றார் என்றும், எட்டயபுரச் சமத்தானத்தின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தார் என்றும் செய்திகள் வழங்குகின்றன.

முகம்மது நபி வகுத்த இசுலாமியச் சமய நெறியாகிய தீன் நெறியை நிலைநாட்டிய செய்தியைக் கருப்பொருளாகக் கொண்டு உமறுப் புலவர் சீறாப் புராணத்தை எழுதியுள்ளார். இக்காப்பியம் எழுதத் தேவையான செய்திகளைக் கேட்டறிய இவர் சதக்கத்துல்லா அப்பா என்னும் சான்றோரை அணுகியதாகவும், அவர் உமறுப் புலவரின் தோற்றத்தைக் கண்டு உதவிசெய்ய மறுத்துவிட்டதாகவும், பின்னர் முகமது நபி கனவில் தமக்கிட்ட ஆணையை ஏற்று அவர் உமறுப் புலவருக்கு உதவியதாகவும் கதை வழங்குகிறது. மாமேதையும் பல நாடுகளைச் சுற்றிக் கண்டவரும் இசுலாமிய ஞானக் கடலாகத் திகழ்ந்தவருமாகிய சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உருவுகண்டு எள்ளும் இயல்பினர் அல்லர். எனவே இக்கதை நம்பத்தக்கதன்று.

சதக்கத்துல்லா அப்பா அவர்களின் உதவியுடன் உமறுப் புலவர் பறங்கிப்பேட்டைக்குச் சென்று சதக்கத்துல்லா அப்பாவின் மாணவராகிய முகம்மது திபி என்பாரிடத்தில் இசுலாமியச் சமயக் கருத்துகளைக் கற்றுத் தெளிந்தார். பறங்கிப் பேட்டையில் வாழ்ந்திருந்த அபுல் காசிம் என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டுச் சீறாப்புராணத்தை இயற்றினார். உமறுப் புலவர் வள்ளல் அபுல் காசிமைத் தம்முடைய காப்பியத்தில் இருபத்தோர் இடங்களில் நன்றியுணர்ச்சியுடன் புகழ்ந்து பாடியுள்ளார்.

சீறாப் புராணம் எழுத உமறுப்புலவருக்குச் சீதக்காதி உதவினார் என்னும் கருத்தொன்றும் நிலவுகிறது. இக்கருத்தை நிறுவத் தேவையான அகச்சான்று எதுவும் இந்நூலில் இல்லை. இதன்கண் ஓரிடத்திலேனும் சீதக்காதியின் பெயர் குறிக்கப்படவில்லை. இதன் இரண்டாம் படலமாகிய நாட்டுப் படலத்தின் நாற்பத்தொன்றாம் பாடலில், வள்ளல் அபுல் காசிம் புகழ்ப்படுவதால் தொடக்க காலத்திலிருந்து உமறுப் புலவருக்கு உதவியவர் வள்ளல் அபுல் காசிம் என்பது பெறப்படுகிறது. சதக்கத்துல்லா அப்பாவைப் போற்றிப் புகழ்ந்துள்ள உமறுப்புலவர் சீதக்காதி பற்றி யாதொன்றும் கூறாமையாலும் சீதக்காதி உதவினார் என்று நம்ப இடமில்லை. எனினும் இது பற்றிய கருத்து வேறுபாடுகள் இலக்கியத் திறனாளர் இடையில் நிலவுகின்றன.

சீறாப் புராணம் விலாதத்து (இளமைக்காலம்), நுபுவத்து (தூதர் பட்டம் கிடைத்த காலம்), இசுரத்து (குடிபெயர்ந்து சென்ற காலம்) என மூன்று காண்டங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. இக்காப்பியத்தில் 92 படலங்கள் உள்ளன. ‘திருவுருவா’ எனத்தொடங்கும் காப்புச் செய்யுள் நீங்கலாக 5028 விருத்தப்பாக்கள் உள்ளன.

சீறாப்புராணத்தில் காப்பியக் கட்டுக்கோப்புச் சிறப்பாக அமைந்துள்ளது. முகமது நபியின் வரலாறு பின்னணியாக அமையத் தீன் நெறியாகிய அறநெறிமறநெறியை எதிர்த்துவெற்றிகண்ட செய்தி நன்கு விளக்கப்பட்டுள்ளது. காப்பியத் தலைவரைத் ‘தீன் எனும் பயிர்க்கோர் செழுமழை’ எனப்புலவர் அறிமுகப்படுத்துகிறார். நுபுவத்துக் காண்டத்தின் முதல் பாடலில் ‘தீன் பயிர் விளைத்த கூறெலாம் விரித்தெடுத்துரைப்பாம்’ எனவும், இசுரத்துக் காண்டத்தின் முதல்பாடலில், ‘தீன் ஓங்கச் செய்தவை எடுத்துச் சொல்வோம்’ எனவும் கூறுகிறார். பதறு என்னும் போர்க்களத்தில் 313 முசுலிம்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமியப் பகைவர்களை வென்று இசுலாமியச் சமயத்தை

உறுதியாக நிலைநாட்டிய நிகழ்ச்சியைக் கூறும் பதறுப்படலத்தின் இறுதிப் பாடலில் 'தீன் எனும் பயிரும் பதிவுபெற்றிருந்து தழைத்தது' எனக் கூறுகிறார். இவ்வாறு சீறாப் புராணம் மிகச்சிறந்த காப்பியக் கட்டுக்கோப்புடைய நூலாகத் திகழ்கின்றது.

இப்புலவர் தம்முடைய காப்பியத்தில் ஏறத்தாழ ஆயிரம் அரபுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இசுலாமியச் சமயம், தத்துவம், பண்பாடு முதலியன வற்றை விளக்கும் கலைச் சொற்களாகும். அரபுச் சொற்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் பொருளையும் இணைத்துக்கூறும் இயல்பு உமறுப் புலவருக்கு உண்டு.

இவர் இசுலாமிய மரபும் தமிழ் மரபும் இணைந்து வரும் வகையில் பாடும் இயல்புடையவர். அராபியாவைத் தமிழ்நாடு எனத் தோன்றுமாறு பாடியுள்ளார். ஐந்திணை நெறி கூறல், காப்பியத் தலைவரின் பண்புகளைப் புனைதல், மகளிர் அழகும் புகழும் சாற்றல், வள்ளுவம் உள்ளிட்ட தமிழ் அறநூல் கருத்துகளை வாய்ப்பறிந்து பயன்படுத்துதல் போல்வனவற்றில் இவருடைய தமிழ் உள்ளத்தைக் கண்டு மகிழ்தல் கூடும்.

சீறாப் புராணம் தன்னுடைய செந்தமிழ்ச் சுவை காரணமாகத் தமிழறிந்தோர் இடையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. தண்டபாணி சுவாமிகள் தம்முடைய புலவர் புராணத்தில் பெயர் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ள இசுலாமியத் தமிழ் இலக்கியம் சீறாப்புராணமே ஆகும்.

உமறுப் புலவர் தம்முடைய கவிதைத் திறத்தாலும் படைப்பாற்றலாலும் இசுலாமியத் தமிழ்ப் புலவர்களின் தலைவராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இவர் தம் அறுபத்தோராம் வயதில் எட்டயபுரத்தில் கி. பி. 1703-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். எட்டயபுரத்தில் இவர் சமாதி உள்ளது.

செ. அ.

**உமாபதி சிவாச்சாரியர்** சந்தானாசாரியர் அல்லது சந்தான குரவர் என்று குறிப்பிடப்படும் சைவ சித்தாந்த ஆசிரியர்களுள் ஒருவர். இவர் உமாபதி சிவம் எனவும் வழங்கப்படுவர். இவர் சிதம்பரத்தில் தோன்றினார். புலவர் புராணம், சைவ சந்தானாசாரியர் புராணம், பின்னர் வந்த பல புலவர்கள் எழுதிய செய்யுள்கள், தாயுமானவரின் எந்நாட்கண்ணி முதலியவை உமாபதி சிவத்தின் வாழ்க்கையை எடுத்துக் கூறுகின்றன. இவர் இயற்றிய 'சங்கற்ப நிராகரணம்' 'ஏழஞ் சிருநூ றெடுத்த ஆயிரம், வாழுநற் சகனம் நவிற்றுவனே)' அடி 26–27) எனக் கூறுவதனால் அந்நூல் இயற்றப்பட்ட ஆண்டு சாலிவாகனத்துக்குச் சரியான கி. பி. 1313 என்று தெரிய வருகிறது. எனவே, உமாபதி சிவம் 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.

இவர் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யும் உரிமை பெற்ற தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர்; வடமொழி வேதாகமங்களையும் தமிழ்த் திருமுறைகளையும் இருமொழி இலக்கியங்களையும் கற்றுத் துறை போகியவர்.

ஒருநாள் உமாபதிசிவம் வழக்கம்போல் கோவில் பூசையை முடித்து விட்டுப் பல்லக்கில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் குடை, கொடி, தீவட்டி போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு பலர் போய்க் கொண்டிருந்தனர். அப்போது 'பட்ட கட்டையில் பகற் குருடு ஏகுது பாரீர்' என்றொரு குரல் கேட்டது. தாம் பல்லக்கில் ஏறிச் செல்வதையும் முன்னால் தீப்பந்தம் ஏந்திச் செல்வதையும் குறித்தே இவ்வாறு கூறப்பட்டது என்பதை அவர் உணர்ந்தார். உண்மையான குருவைத் தேடிக் கொண்டிருந்த உமாபதி அவ்வாறு கூறிய மறைஞானசம்பந்தரை நாடிச் சென்றார். அவருடைய பக்குவத்தை அறிய மறைஞானசம்பந்தர் நெசவாளிகள் பாவுக்கு வார்க்கும் கஞ்சியைத் தம் கையில் ஏந்திக் குடித்தார். உமாபதி சிவம் சிறிதும் தயங்காமல் அவருடைய முழங்கை வழியே ஒழுகிய கஞ்சியைத் தம் கையால் வாங்கிப் பருகினார். மறைஞானசம்பந்தர் இவருக்கு உபதேசம் செய்தருளினார். அதன் பிறகு தில்லைத் தீட்சிதர்கள் உமாபதியைச் சமூகத்திலிருந்தும் ஊரிலிருந்தும் விலக்கி வைத்தார்கள். அவர் ஊருக்கு வெளியே கொற்றவன்குடி என்னும் கிராமத்தில் வாழ்ந்து வரலானார். அதனால், கொற்றவன் குடி உமாபதி சிவம் என்றும் அழைக்கப்பட்டார். பிறகு அவ்வூர் கொற்றங்குடி என வழங்கப்பட்டது. இப்போது அதன் பெயர் கொத்தங்குடி.

உமாபதியின் பெருமையைப் பின்வரும் இருநிகழ்ச்சிகள் வெளிப்படுத்தும். தில்லை நடராசர் கோவிலில் திருவிழாவின் போது கொடி ஏறவில்லை. உமாபதியை அழைத்துவந்தார்கள். அவர் 'கொடிக்கவி' பாடினார். பின்னர்க் கொடி ஏறி விழா நடைபெற்றது. 'அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங், குடியார்க் கெழுதிய கைத் தீட்டு – படிமிசை, பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்தி கொடுக்க முறை' எனத் தில்லை நடராசர் எழுதி அனுப்ப, உமாபதி மடத்துக்கு விறகு கொடுத்

துக் கொண்டிருந்த பெத்தான் சாம்பனுக்குத் தீக்கை செய்தருளினார். அவன் உடனே முக்தி பெற்றான். அரசனிடம் இச்செய்தி திரித்துக் கூறப்பட்டது. அரசன் வந்து மீண்டும் அந்த அற்புதத்தைச் செய்து காட்டுமாறு கட்டளையிட்டான். அப்போது அங்கே, அபிடேகநீர் பாய்ந்து அதனால் வளர்ந்திருந்த ஒரு முள்ளிச் செடிக்கு உபதேசம் செய்ய அது மறைந்தது. ஆனால், இத்தகைய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு இவருடைய நூல்களில் இல்லை. அது போலவே இவருடைய வரலாறு பற்றிய நூல் குறிப்பும் இல்லை.

சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டு இவர் இயற்றியவை. அவை 'சித்தாந்த அட்டகம்' என வழங்கப்படும். அவை யாவன: 1. சிவப்பிரகாசம், 2. திருவருட்பயன், 3. வினாவெண்பா, 4. போற்றிப் பஃறொடை (தமது குருவைப் போற்றும் நூல்), 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடு தூது (தம் குருவிடம் நெஞ்சைத் தூது விட்டதாக அமையும் பாடல்), 7. உண்மை நெறி விளக்கம் (தசகாரியத்தை விளக்கும் நூல்), 8. சங்கற்ப நிராகரணம்.

உமாபதிசிவம் வடமொழியிலும் சில நூல்கள் எழுதியுள்ளார். 'நடராஜர்சஹஸ்ரநாமம்', 'ஸ்ரீருத்ரம்', 'சமகம்', 'வாயுசம்ஹிதை' ஆகியவற்றிற்கு உரையும், யந்திர விதானத்துக்கு ஒரு சிற்றுரையும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. பௌட்கர ஆகமத்துக்குப் பௌட்கர பாடியம் என்னும் உரை எழுதியுள்ளார். குஞ்சிதாங்கிரிசுதவம் என்னும் நூல் இறைவனின் தூக்கிய திருவடியின் பெருமையைப் பேசுகிறது. நடராசர் என்னும் சொல்லின் பெருமையை விளக்கும் வகையில் நடராசத்துவனி மந்திரத்தவம் என்னும் நூலையும் எழுதியதாகத் தெரிகிறது. இவர் எழுதிய பிற தமிழ் நூல்கள், 1. கோயிற் புராணம், 2. திருப்பதிக் கோவை, 3. திருப்பதிகக் கோவை, 4. சேக்கிழார் புராணம், 5. திருமுறை கண்ட புராணம், 6. திருத்தொண்டர்புராணசாரம், 7. தேவார அருள்முறைத் திரட்டு, 8. ஞானாசார சாத்திர பஞ்சகம் அல்லது ஞானசரிதை (ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞான தீட்சை அல்லது ஞனாதீட்சாவிதி, ஞானாந்தியேட்டி, போசனவிதி என்னும் 5 சிறு நூல்களைக் கொண்டது).

உமாபதி சிவம் ஒருவரே தாம் கூறப்போகும் பொருள் சைவசித்தாந்தம் என்றும் அது 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்றும் சிவப்பிரகாசத்தில் கூறுகிறார். இவர் இந் நூலில் சைவசித்தாந்தக் கொள்கைகளை மட்டும் கூறவில்லை. பிற சமயத்தினர் இந்நெறியில் உள்ள குறைகளாகக் கூறியவற்றிக்கு விடை தருவதுபோலவும் எழுதியுள்ளார். திருவருட் பயன் என்னும் நூல் திருவள்ளுவர் கூறாமல் விட்ட வீடு என்னும் பகுதியை வெளிப்படுத்துவது போலப் பப்பத்துக் குறள்களை யுடைய பத்து அதிகாரங்களைக் கொண்டது. சங்கற்பநிராகரணம் ஒன்பது சமயங்களின் வாதமும் மறுதலையுமாக மாறி மாறி வருகின்றது. இதில் குறிக்கப்பட்டுள்ள சமயங்கள் முறையே 1. மாயாவாதம், 2. ஐக்கியவாதம், 3. பாடாணவாதம், 4. பேதவாதம், 5. சிவ சமவாதம், 6. சங்கிராந்தவாதம், 7. ஈசுவரஅவிகார வாதம், 8. நிமித்தகாரண பரிணாமவாதம், 9. சைவ வாதம்.

கைதேர்ந்த சிற்பி செதுக்கிய அரிய சிலை போல சங்கற்பநிராகரணம் அழகாக அமைந்துள்ளது. உமாபதி இந்நூலில் தம் திறமையை எல்லாம் காட்டி இருக்கிறார். இதில் வரும் சமயங்களில் ஒவ்வொன்றும் தன் முன்னதைக் கண்டிப்பதோடு மட்டுமன்றி அதைவிடச் சிறந்ததாகவும் அமைந்துள்ளது.

டி.பி.சி.

**உமாமகேசுவரம்பிள்ளை, த.வே. (கி.பி. 1883-1941)** தஞ்சை நகரின் ஒரு பகுதியான கருந்திட்டைக்குடியில் (கரந்தை) வேம்பப்பிள்ளைக்கும் காமாட்சி அம்மையார்க்கும் மகனாக 7.5.1883-இல் பிறந்தார். இவர் தம் 12-ஆம் வயதில் அன்னையை இழந்ததால், சிற்றன்னை பெரியநாயகத்தம்மையாரால் வளர்க்கப்பெற்றார். தஞ்சைத் தூய பேதுரு கல்லூரியில் இளங்கலை (B.A.) பட்டம் பெற்றபின், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறிது காலம் எழுத்தர் பணியிலிருந்தார். பின்னர், சென்னைச் சட்டக் கல்லூரியிற்பயின்று, சட்டத்தேர்வில் (B.L.) தேர்ச்சிபெற்றார். தஞ்சையில் புகழ்பெற்ற வழக்கறிஞராகவும் தமிழறிஞராகவும் திகழ்ந்த கே. சீனிவாசப் பிள்ளையிடம் வழக்குப் பயிற்சி பெற்று, பின்னர்த் தாமாகவே வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். திருச்சி அரங்கசாமிப்பிள்ளையின் மகள் உலகநாயகியைத் தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். இவர்களுக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தனர். மூன்றாம் மகவு பிறந்த நான்காம் திங்களில் உலகநாயகி இறந்துவிட்டார்.

உமாமகேசுவரம்பிள்ளை தம் தம்பி இராதாகிருட்டிணப்பிள்ளையால் 14.5.1911-இல் நிறுவப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, அதன் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் பணி புரிந்தார். இவர்தம் சீரிய முயற்சியின் பயனாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டது. இவர் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பல அரிய பணிகளை நிறைவேற்றியது. நூல்நிலை

யம், செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி, திக்கற்ற மாணவர் இல்லம், இலவச மருத்துவமனை, இலவசப் படிப்பகம், தமிழ்ப் பொழில் என்னும் திங்களிதழ், கரந்தைப் புலவர் கல்லூரி, இராதாகிருட்டிணர் உயர் தொடக்கப்பள்ளி முதலியன நிறுவப்பட்டன. தமிழ்ப் பொழில் சங்கம் நிறுவப்பட்ட 4-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று, சீரிய தமிழாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. இவர் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்குவதற்கு முயன்று அரசினரின் ஒப்புதலைப் பெற்றார். ஆனால் அப்பள்ளி செயற்படுமுன் இவர் காலமாகிவிட்டமையால், சங்கத்தினர் அதற்கு 'உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி' எனப் பெயரிட்டு இவரைப் பெருமைப்படுத்தினர்.

இவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அதன் தொடக்க காலமுதல் பணியாற்றினார். மேலும், தஞ்சை வட்டக் கழகம்(Taluk Board), திராவிடக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு அச்சகம் ஆகியவற்றின் தலைவராகவும் தஞ்சை மாவட்டக் கழகம்(District Board), நகரவை, அர்பன் வங்கி, நிக்கல்சன் நகர வங்கி, உயர்நிலைப்பள்ளிக் கல்விக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் தஞ்சை மாவட்டக் கழகத்தின் இடைக்காலத் தலைவராகவும் சிறிது காலம் பணிபுரிந்ததுண்டு. இவர் நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவராக விளங்கியதோடு, 1936, 37-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.



உமாமகேசுவரம்பிள்ளை

உமாமகேசுவரம்பிள்ளை தமிழர் வாழ்வும் மொழியும் வளமுற வேண்டுமென்னும் நோக்குடையவர். வடநாட்டுக் கலைக் கழகங்களில் நாட்டு மொழிகள் எங்ஙனம் போற்றப்படுகின்றன, எவ்வெவ் வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பவற்றை நேரிற் கண்டு, நேரியவாயின் அவற்றைத் தம் சங்க வளர்ச்சியிலும் கைக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன், நண்பர் கணபதிப் பிள்ளையை உடனழைத்துக் கொண்டு வடபுலப் பயணத்தை மேற்கொண்ட இவர், அயோத்தி அருகே பைசாபாது என்னும் ஊரில் கடுங் காய்ச்சலால் 9.5.1941-இல் காலமானார். ச.சா.

**உமாமகேசுவரர்** சிவனும் உமையும் அமர்ந்த நிலையிலுள்ள இறைவுருவம். உமாமகேசுவரரின் உருவ அமைப்பு விட்டுணுதருமோத்தரம் (Vishnu-dharmottaram), உருபமந்தனம் (Rupamandanam) ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. விட்டுணு தருமோத்தரத்தில் சிவன் இரண்டு கைகளை உடையவராகவும் சடை மகுடத்தையும் சடையில் பிறை நிலவையும் கொண்டு, இடக்கையால் உமையின் இடத் தோளை அணைத்தவாறு இருவரும் அமர்ந்த நிலையில் இருப்பர் எனக் கூறப்பட்டுள்ளது. தம் வலக்கையில் 'நீலோத்பல' மலரை வைத்திருப்பார். உமையின் வலக்கை சிவனின் வலத் தோளை அணைத்தவாறு இருக்கும். இடக்கையில் ஆடி ஒன்றை வைத்திருப்பார். உருபமந்தனம் என்னும் நூல் நான்கு கைகளுடைய உமாமகேசுவரரைக் குறிப்பிடுகிறது. சிவன் தம் வலக்கைகளுள் ஒன்றில் சூலமும் மற்றொன்றில் மாதுளையையும் வைத்திருப்பார். இடக்கைகளுள் ஒன்று உமையின் தோளைத் தழுவியவாறு இருக்கும். பிறிதொன்று பாம்பு ஒன்றைப் பிடித்திருக்கும். உமாமகேசுவரரைச் சுற்றி நந்தி, கணேசர், முருகன், ஆடிய நிலையில் உள்ள பிருங்கி முனிவர் ஆகியோர் காணப்படுவர். சிறப்புமிக்க உமாமகேசுவரர் சிற்பங்கள் அய்கொளே, அவேரி, திருவனந்தபுரம், பகாலி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**உமாயூன்** (கி.பி. 1530 – 1540, 1555 – 56) மொகலாயர் ஆட்சியை இந்தியாவில் நிறுவியவர் பாபர். அவர்தம் மூத்த புதல்வர் உமாயூன். பாபர் நாற்பத்தேழு வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தமையால் மொகலாயர் ஆட்சி இந்தியாவில் நன்றாக வேரூன்றவில்லை. பாபர் பெற்ற வெற்றிகள் எல்லாம் போரில் அடைந்த வெற்றிகளாகவே இருந்தன. ஆட்சிமுறை அமைப்புகளும் வலுவாக அமைக்கப்படவில்லை.

ஆப்கானியர்கள் வட இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தங்கள் உரிமைப் போரைத் தொடங்குவதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். உமாயூனுடைய தம்பியர் இவர்பால் அழுக்காறு கொண்டிருந்தனர். அவர்களுள் மூத்தவரான காம்ரான் காபூல், ஆப்கானிசுத்தான், இலாகூர் முதலிய மாவட்டங்களைத் தம்வசமாக்கிக் கொண்டார். இதனால், அப்பகுதிகளிலிருந்து தமக்குத் தேவையான அளவிற்கு வீரர்களைத் திரட்டித் தம் படைப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பினை உமாயூன் இழந்தார்.

இவர் தம் தந்தையுடன் பல்வேறு போர்களில் பங்கு பெற்றிருந்தபோதிலும், அவர் போன்று விடா முயற்சி உடையவரல்லர்; சிற்றின்பத்தில் பேரீடு பாடும், மிகுதியாக அபின் உண்ணும் பழக்கமும் பெற்றிருந்தார். இதனால், விரைவில் முடிவு எடுக்கும் சிந்தனை ஆற்றலை இழந்திருந்தார். மனப் போக்கைப் புரிந்து, அதற்கேற்பச் செயலாற்றும் திறமையும் இவரிடம் இல்லை. 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்னும் மனப்போக்கும், 'எடுப்பார் கைப்பிள்ளையாக' மாறும் இயல்பும் இவரிடம் முனைப்பாக இருந்தன.

போர்கள்: முதலில் பீகாரிலிருந்து உமாயூனுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. உலோடி மரபைச் சேர்ந்த தலைவன் ஒருவன், 'தானே இந்தியாவின் அரசன்' என்று, இவருக்குப் போட்டியாகத் தோன்றினான். அப்போது களிஞ்சர்க் கோட்டையை இவர் முற்றுகை யிட்டிருந்தார். இவர் அம் முற்றுகையை விட்டுவிட்டுத் தம் புதிய பகைவனை எதிர்த்துப் போரிட்டு வென்றார்.

சில நாட்களுக்குப்பின் தில்லியின்மீது படை யெடுத்து வந்த கூர்ச்சரத்தின் சுல்தானான பகதூர் சாவை இவர் மாளவத்தில் எதிர்த்துத் தோற்கடித்து, அவனைக் கூர்ச்சரத்திற்குப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தார். பகதூர்சா நாட்டை இழந்து, மேற்குக் கரையில் இருந்த போர்ச்சுகீசியரின் தையூப் பட்டினத் திற்கு ஓடி, அவர்களிடம் அடைக்கலம் புகுந்தான்.

ஆனால், கூர்ச்சரத்தின்மீது தம்முடைய ஆதிக் கத்தை நிலைநாட்டித் தம் ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ளுவதில் உமாயூன் ஆர்வம் காட்டவில்லை. பல நாட்களைச் சிற்றின்பத்திலேயே வீணாகக் கழித்தார். இந்நிலையில், தோல்வியுற்று ஓடிய பகதூர்சா புதிதாகப் படையைத் திரட்டிக் கொண்டு வந்து, கூர்ச்சரத்திலிருந்த மொகலாயப் படைகளை விரட்டி அடித்துத் தன்னுடைய இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

அந்தச் சமயத்திலேயே ஆக்ராவிலும் மொக லாயய் பிரபுக்கள் சிலர் கலகம் செய்தனர். இதற் கிடையே திறமைமிக்க ஆப்கானிய வீரனான செர்சா என்பவன் வங்காளத்திற்கும் பீகாருக்கும் தன்னை ஆட்சித்தலைவன் என்று அறிவித்தான்.

இத்தகைய இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கு மிடையே, தாம் மாளவத்தில் கைப்பற்றிய நாட்டுப் பகுதிகளை உமாயூன் கைவிடலானார். பின்னர், செர்சாவை இவர் எதிர்க்கத் தொடங்கினார். செர்சா பீகாரில் வாழ்ந்த சூர் மரபைச் சேர்ந்த ஆப்கானியன். தன்னுடைய மூதாதையரின் வழிவந்த சாகீரைச் செர்சா கருத்தாகக் காத்துவந்தான். இப்ராகீம் லோடியிடமும் பாபரிடமும் அவன் பணி புரிந்தவனாகையால் அவன் தன் படைகளைச் சீர் படுத்தி, ஆற்றல் மிக்கதாக அமைத்துக்கொண்டான்.

பாபர் இறந்த பிறகு, பீகாரில் உள்ள ஆப் கானியக் கலகக்காரர்களுடன் செர்சா சேர்ந்து கொண்டான். படிப்படியாகப் பீகார் மாநிலத்தையும் பிறகு கங்கைக் கரையில் இருந்த சுனார் கோட்டை யையும் செர்சா கி.பி. 1531-இல் கைப்பற்றிக் கொண் டான். அதன்பின்னர், வங்காளத்தை ஆண்ட திறமை யற்ற அரசனிடமிருந்து, அந்த இராச்சியத்தையும் அவன் கைப்பற்றிக் கொண்டான்.

இதையறிந்த உமாயூன் வங்காளத்திமீது படை யெடுத்துச் சென்றார். மொகலாய அரசரைப்பீகாரில் எதிர்த்துப் போரிடாமல் செர்சா பின்வாங்கினான். அந்தச்சமயத்தில், பீகாரிலிருந்து வங்காளத்திற்குப் போகும் வழியில் இருந்த இராசமகால் கணவாயைப் பலப்படுத்திக்கொண்டு மொகலாயப் படையை வங்காளத்தில் நுழையுமாறு செய்தான். அதற்குள் மழைக்காலம் வந்துவிட்டது. தன் தலைநகருடன் போக்குவரத்துத் தொடர்பு வைத்துக்கொள்ள இயலாதவாறு உமாயூனைச் செர்சா தடைசெய்து விட்டுக் காசி, கான்பூர் முதலிய நகரங்களையும் தாக்கினான்.

இறுதியாக, கி.பி. 1539-இல் மிகுந்த தொல்லை களுக்கும் துன்பங்களுக்குமிடையே உமாயூன் பீகா ருக்குத் திரும்பினார். பக்சாருக்கு அருகில் உள்ள சாசா என்னுமிடத்தில் அவரைச் செர்சா முறியடித் தான். தப்பிப் பிழைத்தால் போதும் என்று ஆக்ரா விற்கு உமாயூன் திரும்பி ஓடினார்.

இவ்வெற்றிக்குப் பிறகு, 'சுல்தான்' என்னும் பட்டத்துடன் பேரரசர் பதவியையும் செர்சா வகித் தான். பின்னர் நடைபெற்ற போரில் உமாயூன் செர்சாவினால் தோற்கடிக்கப்பட்டார். வெற்றி வீரனான செர்சா ஆக்ராவிற்குச் சென்று அதையும் கைப்பற்றிக் கொண்டான்.

பஞ்சாபில் உமாயூன்: இனிமேல், செர்சாவை எதிர்ப்பதால் பயனில்லை என இவர் உணர்ந்தார். தம்மைச் சார்ந்தவர்களை அழைத்துக் கொண்டு, தம் தம்பி காம்ரான் ஆட்சிபுரிந்துவந்த இலாகூருக்குச் சென்றார். இத்தகைய துன்பம் நிறைந்த சோதனைக் காலத்திலும், தன் அண்ணன் மீது இருந்துவந்த பொறாமையினால், எத்தகைய உதவியும் செய்ய இயலாது என்று காம்ராயன் கைவிரித்து விட்டான்.

இலாகூரை நேகக்கிச் செர்சா படையெடுத்து வருவதாக உமாயூன் கேள்விப்பட்டார்; உடனே, பஞ்சாபிலிருந்து சிந்து மாநிலத்திற்குச் சென்றார். இவ்வாறு சிந்து மாநிலத்தில் இவர் அலைந்து கொண்டிருந்தபொழுது, கி.பி. 1542 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், உமாயூனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே, பிற்காலத்தில் பேரரசர் அக்பர் என்னும் புகழைப் பெற்றது.

ஆப்கானிசுத்தானத்தில் உமாயூன்: தம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகச் சிறிது காலத்திற்கெல்லாம் உமாயூன் பலுச்சிசுத்தானத்திற்குச் சென்றார்; அங்கிருந்து பாரசீகத்தினை அடைந்தார். அந்த நாட்டின் அரசன் இவருக்கு உதவிபுரிய முன்வந்தான். அந்த அரசனுடைய படையுதவியைப் பெற்றுத் தன் தம்பியிடம் இருந்த காந்தாரையும் காபூலையும் கி.பி. 1548-இல் உமாயூன் கைப்பற்றினார்.

செர்சாவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தோரிடம் மோதி மீண்டும் இந்தியாவில் தம்முடைய ஆட்சியை நிலைநாட்ட உமாயூன் முயன்றார். இந்த நோக்கத்தோடு இவர் பெசாவரைக் கைப்பற்றினார். அந்நிலையில் இவர் தம் தம்பியரின் தொல்லைகள் ஒய்ந்தன. இதனால் பஞ்சாபு மாநிலத்தை இவர் தாக்கினார். சிந்து ஆற்றைக் கடந்து, கி.பி. 1555-இல் ஆப்கானியரின் படையைச் சிர்கிந்து என்னுமிடத்தில் படு தோல்வி அடையுமாறு செய்தார்.

இறுதி நாட்கள்: இப்போரின் விளைவாகத் தில்லியைத் திரும்ப இவர் கைப்பற்றிக் கொண்டார். எனினும், இவருடைய இராச்சியம் சிறியதாகவே இருந்தது. இவர் அரசு கட்டிலேறிய சிறிதுகாலத்திற்குள் (கி.பி. 1556) மாடியிலிருந்து தவறி விழுந்து காலமானார்.

பண்பு நலன்: உமாயூனிடம் சிறப்புமிகு தலைமைப் பண்புகள் சில இருந்தன. உள்ளவுரம் வாய்ந்த படைத்தலைவராக இவர் விளங்கினார். தம்முடைய ஆதரவாளர்களைப் போற்றிக் காப்பதிலும் ஊக்கம் அளிப்பதிலும் இவர் வல்லவர். அதேகாலத்தில், எத்தகைய இடப்பாடுகளையும் இன்னல்களையும் தாங்கிக்கொள்ளும் இதயம் பெற்றவராகவும் இவர் வாழ்ந்தார்.

கலைகளில் பயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்தவராக உமாயூன் திகழ்ந்தார். கலையுணர்வு மிகு கலைஞராகவே விளங்கினார். பாரசீகப் பாணியில் சிறப்புற்று விளங்கிய பண்பாளர் என்று இவரை அறிஞர்கள் போற்றுகின்றனர். இவருடைய நடத்தை நாகரிகமானது; இவருடைய கல்வியறிவு மதிப்புமிக்கது. நல்ல நகைச்சுவை உணர்வும் பற்றும் பாசமும் மிக்கவராக இவர் வாழ்ந்தார்.

ஆனால், இந்தப் பண்புகளோடு சில தீய பழக்க வழக்கங்களும் இவரிடம் மிகுந்திருந்தன. சிற்றின்பத்தில் இவர் கொண்டிருந்த நாட்டம் இவருடைய இயல்புகளையும் நல்லறிவையும் மழுங்கச் செய்தது. அபினிப் பழக்கம் நெருக்கடி நேரத்தில் முடிவு எடுக்கும் அறிவுத்திறனை அடியோடு அழித்து விட்டது. இவற்றோடு, எவரையும் எளிதில் நம்பி விடும் இயல்பு பல வேளைகளில் நயவஞ்சகர்களை நம்பி, இன்னல்களுக்கு ஆளாகுமாறு செய்துவிட்டது. பாசத்தின் மிகுதியால் தம்பிமார்களின் பேராசைகளையும் உட்பகையுணர்வுகளையும் அறிந்துகொள்ள இவரால் இயலவில்லை. உலகத்தில் துன்பப்படுவதற்காகவே பிறந்த மனிதர்களுள் உமாயூனும் ஒருவராவார். க.த.தி.

**உமாயூன் (பாமினி அரசர்)**: தென்னிந்தியாவில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் நிறுவப்பெற்ற பாமினி அரசு சுமார் இருநூறாண்டுகள் தக்காணத்தில் ஆட்சி புரிந்து வந்தது. இதை ஆண்ட மன்னர்களுள் உமாயூன் ஒருவராவர். கி.பி. 1458 முதல் 1461 வரை ஆட்சிபுரிந்த இவருடைய முழுப்பெயர் அலாவுதீன் உமாயூன். இவருடைய தந்தை இரண்டாம் அலாவுதீன் அகமது. அவர் 1458-இல் இறந்தவுடன், உமாயூன் பட்டத்திற்கு வருவதைத் தடுக்கச் சில பிரபுக்கள் சூழ்ச்சி செய்து அவர்கள் விரும்பிய உமாயூனின் இளவலை அரசு கட்டிலிலேற்றினர். வெகுண்டெழுந்த உமாயூன் பகைவர்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று தள்ளிவிட்டு, தம் இளவலை விரட்டிவிட்டு அரியணையில் அமர்ந்தார். தொடக்க காலத்தில் நல்ல மனிதராக இருந்த இவர், பிறகு மனம் மாறி ஒரு கொடுங்கோலராகி விட்டார். சிறு தவறுகளுக்கும் பயங்கரமான தண்டனைகள் விதித்துவந்தார். இதனால் இவருக்கு ‘சாலிம்’ (Zalim) என்ற சாட்டுப்பெயர் கிடைத்தது. சாலிம் என்ற வார்த்தைக்குக் கொடுஞ்செயல் புரிவோன் என்பதுபொருள். அரியணையில் ஏறியதற்காகத் தம் இளவலின் கண்களைக் குருடாக்கினார். அவருக்கு உதவிசெய்தவர்கள் பழிக்குப் பழிவாங்கப் பெற்றனர். நாட்டில் கலகங்கள் மூண்டன. முக்கியமாக, நளகொண்டா ஆளுநர் நாட்டை இரு பிரிவுகளாக்கவேண்டிக் கலகம் செய்தார். சிக்கந்தர் கான் என்ற அவர் தம் மகன் மிகவும் தீவிரமாகப் போரிட ஆயத்தமானார். உமாயூன் இப்பெரிய கலகத்தைத் தமது படை வலிமையால் அடக்கி வெற்றிக் கொடி நாட்டினார், கலகத் தலைவரின் செல்வத்தைத் தமது

கருவூலத்திற் சேர்த்துக் கொண்டார். கண்களை இழந்த ஆசன்கான், தக்க தருணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார். சுல்தான் உமாயூனின் பகைவர்கள் யாவரும் ஆசனின் பக்கம் சேர்ந்தனர். தந்திரமாக விடுதலை பெற்ற சுமார் 7000 கைதிகளும் அவர்களுடன் சேர்ந்தனர். மற்றொரு பெரிய கலகம் நாட்டிலேற்பட்டது. அரசியலாரால் அதை அடக்க முடியவில்லை. பிசப்பூர் ஆளுநர் உதவி செய்திராவிடின் நிலைமை வேறுவிதமாக மாறியிருக்கக்கூடும். இறுதியில், கலகத் தலைவர் ஆசன் புலிக்கு இரையாக்கப் பெற்றார். அவருக்கு உதவி புரிந்தவர்கள் பல விலங்குகளுக்கு இரையாக்கப் பெற்றனர்.

உமாயூனைப் பற்றி மதிப்பீடு செய்வதில் வரலாற்றறிஞர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் உள. ஈசுவரி பிரசாது, பெரிசுட்டா (Ferishta) முதலிய பல ஆசிரியர்கள் உமாயூனைக் கொடுமையின் உருவம் என்றே கூறுகின்றனர். ஆனால், செர்வானி (Sherwani) போன்ற சில வரலாற்றறிஞர்கள் இவரை நல்ல பண்புடையவர் என்றும், இவரைச் சூழ்நிலை கொடுங்கோலராக மாற்றிவிட்டது என்றும் இவரைப் புகழ்ந்துரைக்கின்றனர். ஆகவே, உமாயூனைப் பற்றித்தீவிர ஆய்வு செய்தே முடிவான மதிப்புரையை வழங்க இயலும். கி.பி. 1461-இல் இவர் இறப்பிற்குப் பிறகு இவர் தம் மகன் பட்டமேற்றார். உமாயூனின் இறப்பு இயற்கையானதா அல்லது இவர் கொல்லப்பட்டாரா என்பது ஆய்வுக்குரிய செய்தி ஆகும்.

**உமாயூன் கபீர் (1907-1969)** இந்தியாவின் கல்வியமைச்சராயிருந்தவர்; தலைசிறந்த கல்வியாளர். இவர் 1907-ஆம் ஆண்டு வங்காளத்தில் பிறந்தார். கல்கத்தாவிலும் பின்னர் இங்கிலாந்திலுள்ள ஆக்சுபோர்டிலும் கல்விகற்றுத் தேர்ந்த இவர் பண்டித சவகர்லால் நேருவின் மத்திய அமைச்சரவையில் 1957 முதல் 1965 வரை கல்வி அமைச்சராக இருந்தார். பின்னர், பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராய் இருந்தார். உமாயூன் கபீர் (Humayun Kabir) காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறி, பங்களாக் காங்கிரசு(Bangla Congress)என்னும் தனிக்யானதொரு அரசியற் கட்சியை அமைத்தார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று 'நமது பாரம்பரியம்' (Our Heritage) என்னும் ஆங்கில நூலாகும். இவர் 1969-ஆம் ஆண்டு காலமானார்.

மு . அ.

**உமையது கலிபாக்கள்(கி.பி. 661-750)**இசுலாமிய வரலாற்றின் இரண்டாம் ஆளும் வமிசமான உமையாக்களின் ஆட்சியை கி.பி.661-இல் முவாவிய்யா(Mu'awiyyah)என்பார் தொடங்கி வைத்தார். இவ்வமிசத்தினர் குலபா-யி-இராசிதின் என்று அழைக்கப்பட்ட நான்கு கலிபாக்களின் ஆட்சிக்குப் பின்னரும், அப்பாசிகள் என்றழைக்கப்பட்ட கலிபாக்களின் ஆட்சிக்கு முன்னரும் இசுலாமிய உலகை ஆட்சி புரிந்துவந்தனர். உமையா என்ற தங்கள் மூதாதை ஒருவரின் பெயரையே தங்கள் வமிசத்திற்கு வைத்துக் கொண்ட இவர்களது ஆட்சி கி.பி.661-இல் முவாவிய்யாவுடன் தொடங்கி இரண்டாம் மர்வான் (Marwan II)என்பவருடைய ஆட்சியுடன் முடிவடைந்தது. உமையாக்களின் ஒரு கிளையினர் மர்வான்கள் எனப்படுவர். உமையா ஆட்சியின் இறுதியில் அவர்களுள் ஒருவர் அப்பாசிகள் நடத்திவந்த படுகொலைகளுக்கு ஆளாகாது தப்பி, இசுபெயினுக்கு ஓடிச்சென்று படிப்படியாக முன்னேற்றமுற்று, உமையாக்களின் ஆட்சியை அங்கே நிறுவிக்கொண்டார்.

இவ்வமிசம் தனக்கென சில சிறப்பியல்புகளைப் பெற்றுத் தனக்குமுன்பு ஆட்சிபுரிந்த ஆட்சியினரிடமிருந்து வேறுபட்டிருந்தது. பின்னவர்களின் காலத்தில் கலிபா மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை கையாளப்பட்டு வருகையில், உமையா வமிசத்தை உருவாக்கிய முவாவிய்யா அம்முறையைக் கைவிட்டு, வாரிசுரிமை முறையைக் கடைப்பிடித்தார். தவிரவும், வைதிகக் கலிபாக்களின் காலத்தில் பைத்-அல்-மால் அல்லது பொதுக் கருவூலம் பொதுமக்களின் சொத்தாக விளங்கி வருகையில், முவாவிய்யாவின் காலந்தொட்டு அது ஆட்சியாளர்களின் சொந்தச் சொத்தாகிவிட்டது. மேலும், வைதிகக் கலிபாக்களின் காலத்தில் கலிபாவுக்கு உதவியாகச் சான்றோர் அவை ஒன்று பணியாற்றி வந்தது. தவிரவும், நபி பெருமானாரின் போதனைகளின் விளைவாகக்குடியாட்சியின் பொழுது இனப் பொறாமை உணர்ச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் உமையாக்களின் காலத்தில் இனவெறி மீண்டும் தலைதூக்கியது. வைதிகக் கலிபாக்கள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு ஏழை எளியோரால் அணுகக் கூடியவர்களாக நடந்து கொண்டிருக்கையில், உமையாக் கலிபாக்கள் அந்த எளிய வாழ்கையைக் கைவிட்டுப் பகட்டான ஆட்சி நடத்தி வந்தனர்.

இவ்வமிசத்தைச் சேர்ந்த பதினான்கு அரசர்களுள் ஒருசிலர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கினர். முதல் கலிபா முவாவிய்யா இசுலாமிய நாட்டைக் கட்டுப்பாடற்ற அதிகாரங்களுடன் பெரும் மாட்சிமையுடனும் ஆடம்பரத்துடனும் ஆண்டுவந்தார். நாட்டுக்குள் தோன்றியிருந்த பல கட்சிகளை ஒடுக்கி உள்நாட்டுச் சிக்கல்கள் பலவற்றையும் தவிர்த்ததற்குப் பிறகு ஆப்பிரிக்காவை அடிபணிய வைத்தார். பைசாண்டியத்தின் (Byzantium) மீது படையெடுத்து

அதன் தலைநகரான கான்சுடாண்டிநோபிலைக் கைப் பற்றப் பெரும் முயற்சி எடுத்தார். எனினும் வெற்றி பெற முடியவில்லை. கிழக்கில் எராட்டு (Herat), காபூல் (Kabul), கசுனா, பால்க்கு (Balkh), கந்தார், புகாரா (Bukhara), சமர்கண்டு (Samarkand), திர்மிது ஆகியவை இசுலாமியப் பேரரசில் இணைத்துக் கொள்ளப் பட்டன. மாபெரும் கப்பற்படை ஒன்றினை உருவாக்கிய பெருமை அவருக்குரியதாகும். அதனைக் கொண்டு அவர் சைப்பிரசு, உரோட்சு மற்றும் ஏனைய கிரேக்கத் தீவுகளை வென்றார்.

அவருக்குப் பின்னர்ப் பதவி வகித்த அவருடைய மகன் முதலாம் யசித்தின் (Yazid I) காலத்தில், நான்காம் கலிபாவான அலியின் மகன் இமாம்உசைனுடன் கர்பலா (Carbela) என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் பின்னவர் தோற்கடிக்கப்பட்டு உயிர் நீத்தார். புனிதத் தியாகிகளின் மாபெரும் தலைவர் என இமாம்உசைனுக்குப் புகழ்பெற்றுத் தந்த அந்தக் கர்பலாப் போர் இசுலாமிய வரலாற்றில் சிறப்புப் பெற்ற போராயிற்று. முசுலிம் சமுதாயத்தைச் சுன்வர்கள், சியாக்கள் என ஏற்கனவே பிரித்திருந்த பிளவினை அந்தப் போர் மேலும் வலியுறுத்தியது.

அடுத்த முக்கிய கலிபா அப்துல் மாலிக்கு (Abdul-Malik) என்பவர் இன்னல்கள் பலவற்றை எதிர்நோக்க நேரிட்டது. ஆனால் அவர் அஞ்சா நெஞ்சத்துடன் அவற்றை ஏற்றுப் பல்லாண்டுகளாக நிகழ்ந்து வந்த போர்களில் வெற்றிபெற்று, ஒரே செங்கோலின் கீழ் முசுலிம் பேரரசைக் கொண்டுவந்தார்; ஈராக்கு, இசாசு (Hijaj) ஆகியவற்றின் மீது படையெடுத்தார்; உரோமானியர்களுடன் போர் புரிந்தார். ஆப்பிரிக்காவில் இசுலாமியர்களின் ஆட்சி மேலும் முன்னேறியது. அவருடைய ஆட்சிக் காலத்திலும் அவருக்கு அடுத்து ஆட்சி புரிந்த அவருடைய ஆண்மக்கள் நால்வரின் ஆட்சிக் காலத்திலும் உமையாக்களின் ஆட்சி தலைநிமிர்ந்து விளங்கியது. அல்வலீத்து, இசாம் (Hisham) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இசுலாமியப் பேரரசு மேலும் விரிவுற்று இருந்தது. அதன் எல்லைகள் அட்லாண்டிக்குப் பெருங்கடல், பிரன்னீசு மலைகள் ஆகியவற்றிலிருந்து, சிந்து ஆறு மற்றும் சீன எல்லைகள் வரையிலும் பரவியிருந்தன. அது போன்ற பரப்பளவினைப் பழங்காலத்தில் மற்றெந்தப் பேரரசும் கொண்டிருக்கவில்லை. இக்காலத்திலும் பிரிட்டிசு மற்றும் உருசியப் பேரரசுகள் மட்டுமே அதற்கு நிகராக இருந்தன. உமையாக்களின் புகழ் ஓங்கி நின்ற அக்காலத்தில் அவர்களுடைய பேரரசு மாபெரும் சாதனைகளைப் புரிந்தது. திரான்சோக்கியானா அடிபணிய வைக்கப்பட்டது; ஆப்பிரிக்கா மீண்டும் வெல்லப்பட்டது; அங்கு அமைதியும் நிலை நாட்டப்பட்டது. அராபியர்கள் தங்கள் வசத்தில் வைத்திருந்த மிகப்பெரிய ஐரோப்பிய நாடான இசுபெயின் அவர்களுடைய பேரரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதே காலத்தில் நிருவாகம் அராபிய குணவியல்புகளைப் பெற்றது. தொன்மையான அராபிய நாணயம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அஞ்சல் துறை உருவாக்கப்பட்டது. செருசலத்தில் பாறைக் கவிகைமாடம்(The Domb of the Rock)என்ற மாபெரும் நினைவுச்சின்னம் ஒன்றும் நிறுவப்பட்டது. அப்துல் மாலிக்கு நாணயங்களை இசுலாமிய மயமாக்கியதும் நிருவாகத்தை அராபிய மயமாக்கியதும் அவரது ஆட்சியின் சாலச் சிறந்த சாதனைகளாகும்.

அவருக்குப் பின்னர் ஆண்ட இரண்டாம் உமர் (Umar II) கலிபா கடவுள் பக்தி மிக்கவர் (தசு-சாலெக்) என்றழைக்கப்பட்டார். இவருடைய வைதிகம் பொதுவாக உமையாக்களின் சமயப் போக்கிற்கு மாறானதாக இருந்தது. செயற்கைத் தன்மையற்ற இவரது தெய்வ பக்தி, நீதி வழங்குவதில் இவர் கொண்டிருந்த நாட்டம், குடிமக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று இவர் கொண்டிருந்த ஆர்வம் ஆகிய அனைத்தும் அக் காலத்திய உமையாக்களின் உலகியல் வாழ்க்கைக்கும் போக்கிற்கும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தன. ஆகவேதான் இவர் உமையா மகான் என்று கருதப்பட்டார். இவருடைய வைதிகக் கொள்கை, பொது மக்கள் பால் இவர் புகுத்திய சீர்திருத்தங்கள் ஆகியவையெல்லாம் உமையா வமிசத்தைத் தீவிரமாகப் பாதித்து, அதன் இறுதி வீழ்ச்சிக்குக் காரணமாயின என்று பேராசிரியர் இட்டி (Hitti) போன்ற வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

அடுத்துக் குறிப்பிடத்தக்க கலிபா இசாம் (Hisham) என்பவர் பதவி ஏற்ற காலத்தில் பேரரசு இனச் சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தது. எங்கும் குழப்பமும் தொல்லைகளும் மல்கிக் கிடந்தன. ஒரு புறத்தில் உள்நாட்டுத் தொல்லைகளும் மற்றொரு புறத்தில் வெளிநாட்டுச் சிக்கல்களும் பேரரசின் நிலையை மிகத் தீவிரமாகப் பாதித்து இருந்தன. அத்தருணத்தில் அந்நிலையை எதிர் கொள்ள மிகவும் தகுதி வாய்ந்த ஒருவர் ஆட்சியாளராக வந்திருக்க வேண்டும். ஆனால் இசாமோ பகட்டான வாழ்வை விரும்பாதவராகவும், கஞ்சத்தன்மை படைத்தவராகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவராகவும், எவரையும் ஐயுற்று நோக்குபவராகவும் இருந்தார். தலை தூக்கிக் கொண்டிருந்த சதிகளை ஒடுக்கவும் சதி சூழ்ச்சிகளை முறியடிக்கவும் தம் பணியில் இருந்த தகுதியற்றவர்களையே இவர் நம்பி இருந்தார்.

இருபது ஆண்டுக் காலம்வரை நீடித்த இவரது ஆட்சிக் காலத்தில் முசுலிம் படைகள் ஆசக்சு

ஆற்றுக்கு அப்பால் இருந்த பகுதியில் பல தோல்விகளை அடைய நேரிட்டது. குரேசானில் (Khorasan) மூவாதிகளுக்கும் இம்யார்களுக்குமிடையே ஏற்பட்ட கடும் மோதல் பெரும் முயற்சிகளுக்குப் பிறகு ஒடுக்கப்பட்டது. வட பாரசீகத்தில் அர்மீனியாவும் ஆசர்பைசானும் இசாமின் சகோதரர் மசுமாவின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இப்பகுதியின் மீது படையெடுத்த துருக்கியர்கள் தோல்விக்கு இலக்காகி விரட்டியடிக்கப்பட்டனர்.

முசுலிம் படைகள் ஆப்பிரிக்காவிலும் இசுபெயினிலும் பெருந்தோல்வியை அனுபவிக்க நேரிட்டன. ஆப்பிரிக்காவின் கடலோரங்களில் வசித்து வந்த பெர்பர்கள் (Berbers) கி.பி. 734-இல் கிளர்ந்தெழுந்தனர். அவர்கட்கும் முசுலிம் படைகளுக்குமிடையே மூண்ட கடும்போரில் 'சிலை உருவங்களின் போர்க்களம்' என வரலாற்றில் புகழ் பெற்றுள்ள அப்போரின் இறுதியில் முசுலிம்கள் வெற்றி கண்டனர். மற்றுமோரிடத்தில் நிகழ்ந்த மோதலில் எண்ணற்ற அராபியத் தலைவர்கள் உயிரிழந்ததனால் 'பிரபுக்கள் போர்' என்று அதற்குப் பெயர் ஏற்பட்டது.

ஆப்பிரிக்காவைச் சார்ந்த நாடாக இருந்த இசுபெயின் அங்கு நடைபெற்ற கிளர்ச்சியின் விளைவாகப் பெரும் சிக்கலில் மூழ்கிக் கிடந்தது. அதன் படையின் தலைவராகப் பதவி ஏற்றிருந்த அப்துர் இரகுமான் (Abdur Rahman) என்ற மாபெரும் வீரர் பிரன்னீசு மலைத் தொடரைக் கடந்து பிரான்சுக்குள் நுழைந்து, தூர்சுக்கும் (Tours) பாய்டியர்சுக்கு (Poitiers) மிடையே இருந்த ஓரிடத்தில்சார்லசு மார்ட்டல் (Charles Martel) என்னும் பிரெஞ்சு மன்னருடன் கடும் போரில் ஈடுபட்டு, மிகத்தீவிரமாகப் போரிட்டு இறுதியில் மடிந்தார். இந்தப் போர் ஐரோப்பிய வரலாற்றில் மிகச் சிறப்பான போராகும் என இக்கால வரலாற்றறிஞர்கள் கருதுவர். இப் போரில் சார்லசு தோல்வியுற்றிருப்பாராயின் ஐரோப்பா முழுவதும் முசுலிம்கள் வசமாகி இருக்கும். ஐரோப்பியப் பண்பாடுகளுக்குப்பதிலாக இசுலாமியப் பண்பாடுகள் எங்கும் பரவியிருக்கும். ஆக்சுபோர்டு போன்ற மாபெரும் கல்விநிலையங்களில் கிறித்தவத் தத்துவமல்லாது இசுலாமியத் தத்துவம் போதிக்கப்பட்டு வந்திருக்கும் என்றெல்லாம் கிப்பன் (Gibbon) போன்ற வரலாற்றறிஞர்கள் கூறுவர்.

இறுதியாக ஆட்சி புரிந்த கலிபா இரண்டாம் மர்வான் (Marwan II, கி.பி. 744-750) என்பார் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டியவரானார். பதவிக்கு வந்து அவர் முதன் முதலாக எடுத்த நடவடிக்கை தலைநகரைத் திமசுக்கிலிருந்து அர்ரானுக்கு (Harran) மாற்றியதாகும். ஆங்காங்கே தலைதூக்கிய கிளர்ச்சிகளையும் கலகங்களையும் அவர் கடுமையாக ஒடுக்கினார்.

இந்த இக்கட்டான நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த அப்பாசிகள் குரேசானில் கிளர்ந்தெழுந்தனர். அவர்களுக்கு ஆதரவு அளித்த அபுமுசுலிம் என்பவர் தம் உரைகளின் மூலமாகவும் கூர்மதியினாலும் மக்கள் உணர்ச்சிகளை உமையாக்களுக்கெதிராக எழச் செய்தார். குரேசானின் ஆளுநரான நசர் என்பவர் எவ்விதமான ஆதரவையும் பெற முடியவில்லையாதலால் கதாபா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். கதாபாவும் அவர் மகன் அசனும் ஈராக்கு ஆளுநரைத் தோற்கடித்துக் கூபா நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். இத்தோல்வியைப் பற்றிக் கேள்வியுற்ற மர்வான், குரேசானில் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு, இறுதியில் அர்ரானில் சிறையடைக்கப்பட்டிருந்த இப்ராகீமைக் கொன்று விட்டார். ஆனால் கொல்லப்படுவதற்கு முன்னர் இப்ராகிம், சகோதரர் அபுல் அப்பாசு அப்துல்லாவைத் தமது வாரிசாக நியமித்திருந்தார். அப்பாசிகளின் சார்பாகப் பழிவாங்க உறுதி கொண்டிருந்தஅபுல்அப்பாசு தம் சகோதரரின் சாவிற்குப் பிறகு கூபா நகருக்கு ஓட்டம் பிடித்துக் கூபாவைக் கதாபா கைப்பற்றும் வரை அங்கேயே மறைந்து வசித்து வந்தார். கூபா பிடிபட்டவுடன் அபுமுசுலிமும் மற்றும் பல தலைவர்களும் கூபா மசூதியில் கூடி, அபுல் அப்பாசை அல்-சப்பா என்ற பட்டப் பெயருடன் கலிபாவாகவும் இமாமாகவும் தேர்ந்தெடுத்தனர். இவ்விதமாக உமையாக்களின் ஆட்சி மறைந்து அப்பாசிகளின் ஆட்சி உருவாயிற்று.

இவையெல்லாம் கேள்வியுற்ற மர்வான் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு எதிரிப் படையை சாபு (Zab) என்ற இடத்தில் சந்தித்தார். அங்கு நடைபெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க போரில் அவர் தோல்வியுற்றார். அப் போர் உமையாக்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டது. அப்பாசிகளின் ஆட்சிக்கு வழி வகுத்தது.

உமையாக்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்: உமையாக்களின் தகுதியின்மையும் குணச்சீர்கேடும் அவர்களுடைய அமைச்சர்களின் சுயநல மனப்பான்மையும் படை வீரர்களின் துரோகச் செயல்களும் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாயின. மூவாதிகளுக்கும் இம்யார்களுக்குமிடையே நடைபெற்று வந்த சச்சரவுகள் பேரரசின் வலிமையை மேலும் குலைத்தன. திட்டவட்டமான வாரிசுரிமைச்

சட்டமின்மையும் பல தொல்லைகளை உருவாக்கிற்று. அரசாங்கம் அராபியர்களை நடத்தியதைப் போல் அராபியரல்லாதாரை நடத்தத் தவறியது மற்றொரு குறையாகும். அராபியர்களுக்காகப் பல தியாகங்களைப் புரிந்து, பல்வேறு போர்களில் போரிட்டு அப்பேரரசைக் காப்பாற்றிய அந்த அராபியரல்லாதாரை அரசு அராபியர்களுக்குச் சரிசமமாக நடத்தத் தவறியதனால் எங்கும் மனக்குறை நிலவியது. எந்நிலையிலும் உமையாக்களைத் தொலைத்துவிட வேண்டும் என மனஉறுதி பூண்டிருந்த சியாக்கள் தங்கள் பலத்தைப் படிப்படியாக மிகுதியாக்கிக் கொண்டு தக்க வாய்ப்பிற்காகக் காத்திருந்தனர். அவ்வாய்ப்புக் கிட்டியதும் அவர்கள் விரைவாகச் செயற்பட்டு உமையாக்களைத் தொலைத்து விட்டுத் தங்கள் ஆட்சியை நிறுவிக் கொண்டனர்.

**உமையாக்களின் ஆட்சியில் அரசு, சமூகம் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் நிலை:** திமசுக்கைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட உமையாக்களின் பேரரசில் சிரியா, பாலசுத்தீனம், அல்-ராக்கு, பாரசீகம், அர்மீனியா, அல்-இசாசு, கர்மான், எகிப்து, இப்ரிகா, அல்-எமன் ஆகிய ஏழு நிருவாகப் பிரிவுகள் அடங்கியிருந்தன. வாரிசுரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசர் பதவி ஏற்றார். நிருவாகம், வரித்தண்டம் செய்தல், சமயத்தலைமை ஆகிய மூன்று அரசப் பொறுப்புகளும் மூன்று தனிப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. நீதித்துறை, முசுலிம்களுக்கு நீதியை வழங்கிவந்தது. போர்களை நடத்தப் படை தேவைப்பட்டதனால் சிறந்த படை ஒன்றையும் அவர்கள் அமைத்திருந்தனர். சமுதாயம் என்பது ஆளும் முசுலிம் தலைவர்கள், கலிபாவின் குடும்பத்தினர், புதிதாக முசுலிம்களானவர்கள், சிம்மிகள் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட புறச்சமயத்தினரான கிறித்தவர்கள், யூதர்கள், சேமியர்கள், சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருந்த அடிமைகள் என்னும் பிரிவுகளைக் கொண்டிருந்தது.

உமையாக்களின் காலம் இசுலாமிய வரலாற்றில் பல்வேறு சமய தத்துவ இயக்கங்கள் தோன்றிய தொரு காலமாகும். அவ்வியக்கங்கள் பின்னாளில் இசுலாமின் வேர்களையே ஆட்டி வைப்பதாக இருந்தன. முதசிலா என்னும் பகுத்தறிவுக் கோட்பாடு ஒன்று தோன்றியது. கதரிகள் இயக்கம், தன்விருப்பக் கோட்பாடு, காரிசிகள் இயக்கம் என்ற இயக்கங்களும் தோன்றின. உமையாக்களின் காலத்தில் சியா சமயப் பிரிவு மேலும் வலிமைபெற்றது.

உமையாக்களின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சொற்பொழிவு ஆற்றல் காணப்பட்டது. கலையில் எக்காலமும் கண்டிராத ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. அரசுப் போக்குவரத்துக் கடிதங்கள் துறையிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. அதுபோன்றே கவிதை இயற்றும் கலையும் உச்ச நிலையை அடைந்திருந்தது. இசுலாமிய சமயம் அக்கலைக்குச் சாதகமாக இருக்காவிடினும், உலகியலில் முசுலிம்கள் மிகுதியாக ஈடுபடத் தொடங்கியதும் பாட்டு, கவிதை ஆகியவை தம் பழைய நிலைக்கு வந்துவிட்டன. காதலைப் பற்றிப் பாடும் கவிஞர்கள் பலர் தோன்றலாயினர். கசிதாக்கள் எனக் குறிக்கப்பட்ட நீண்ட பாடல்கள், கசல்கள் (Gazals) ஆகியவை இயற்றப்பட்டன. இலைலா-மசுனூன் என்னும் நீண்ட பாடல் உணர்ச்சிப் பாடலுக்கும் அழியாக் காதலுக்கும் ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றது. அரசியல் கவிதை எழுதும் பாணியும் தோன்றிற்று. சிறப்புப் பெற்ற பாடல் பள்ளிகளும் விளங்கலாயின.

ஒழுங்காக அமைக்கப்பட்ட கல்வித்திட்டம் என்று ஏதும் இருக்கவில்லையாயினும்,ஆற்றல், துன்ப வேளையில் பொறுமை, அயலார்களின் உரிமை காத்தல், ஆண்மை, இரக்கக் குணம், விருந்தோம்பலியல்பு, பெண்கள்பால் மதிப்பு வைத்திருத்தல், வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல் ஆகிய பண்புகளை வளர்த்தல் கல்வியின் முக்கிய நோக்கங்கள் எனக் கருதப்பட்டன. ஆசான்களுக்குப் பெருமதிப்பு அளிக்கப்பட்டு வந்தது. கிரேக்கர்களின் அறிவியலுக்கு உமையாக்கள் புத்துயிர் அளித்தனர். மருத்துவக் கலைக்குப் பெரும் ஆதரவு அளிக்கப்பட்டது. உண்மையில் அக்கலை உமையாக்களின் காலத்தில் மிக உச்ச நிலையை அடைந்திருந்தது. காலித்-பின்-யசீத் என்பவர் இராமாயணத்திலும் மருத்துவக் கலையிலும் பெரும் புலமை பெற்று விளங்கினார். இரண்டாம் உமரும் அறிவுக்கும் அறிவாளிகளுக்கும் அதிக ஆதரவு தந்தார். அலியின் பேரன் தன் புதல்வரான சாபர் என்பவர் அக்காலத்திய அறிவுத் துறையில் பெரும் புலமை பெற்று விளங்கினார்.

கட்டடக் கலையிலும் உமையாக்கள் அதிக நாட்டங்கொண்டிருந்தனர். மினாராக்களைக் (தூபிகள்) கட்டும் முறையை அவர்கள் தொடங்கிவைத்தனர். கட்டடப் பாணியில் பல புதியவற்றை அவர்கள் புகுத்தினர். பாறைக் கவிகை மாடம் அக்காலக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாயிற்று. திமசுக்கின் மசூதி அக்காலக் கட்டடக் கலையின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாயிற்று.

ஈராக்கின் இரட்டை நகரங்களான கூபாவும் பசுராவும் (Basra) அறிவாற்றலின் மாபெரும் மையங்

களாக விளங்கின. பேரரசின் பல்வேறு பகுதிகளினின்றும் மாணவர்களும் அறிஞர்களும் அந்நகரங்களில் திரண்டனர். அராபிய மொழியின் பண்பாடு இந்நகரங்களில்தான் உருவாயிற்று என்று கூறுவர். அராபிய மொழியின் இலக்கணம், அகராதி ஆகியவை யெல்லாம் இந்நகரங்களில் தங்கள் புகழின் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தன. உமையாக்களின் காலத்தில் பசுராலில் நிலைபெற்றிருந்த பள்ளியில் அசன்-அல்-பசுத்நி, முகம்மது இப்சி சீரின் ஆகியோர் மாபெரும் அறிஞர்களாக விளங்கினர். அவ்விரு அறிஞர்களும் அக்காலத்தில் பசுராவின் தலையாய அறிவுச் சுடர்களாக விளங்கினர்.

பசுராவாசிகளைப் போன்றே கூபா நகரவாசிகளும் அராபியப்பண்பாட்டினை வளர்த்துப் பெருக்குவதில் புகழ்பெற்றவர்களாக விளங்கினர். அந்நகரின் பண்பாட்டின் வரலாற்றில் அப்துல்லா-பின்-மசூது என்பவர் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றார். திருக்குர்ஆனை ஆழ்ந்து கற்றறிந்த அவர் திருக்குர்ஆனுக்குச் சரியான விளக்கங்களை அளிப்பதில் மாபெரும் வல்லுநராகக் கருதப்பட்டார். பின்னாளில் திருக்குர்ஆனைக் கற்றுப் புகழ் பெற்று விளங்கியவர்களுள் பலர் அப்துல்லா மசீதின் சீடர்களாவர். அவர்கள் சட்ட நிபுணர்களுமாவர்.

இசுபெயினில் உமையாக்களின் ஆட்சி: உமையாக்கள் ஆட்சி கி.பி. 750-இல் பதவி ஏற்றபொழுது உமையா வமிசத்தினர், பலரைச் சிறிதளவும் ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தனர். அப்துர் இரகுமான் என்ற ஒருவர் மட்டுமே அப்படுகொலையினின்றும் தப்பினார். இவர் திமசுக்கில் பத்தாம் கலிபாவாக இருந்த இசாம் என்பவரின் பேரன் ஆவர். இருபது வயதினை எட்டியிருந்த இவர் மயிரிழையில் உயிர் தப்பி, ஐந்து ஆண்டுக் காலமாக மாறுவேடந் தரித்துப் பாலசுத்தீனம், எகிப்து, வட ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலெல்லாம் அலைந்துத் திரிந்து இறுதியில் இசுபெயினுக்கு வந்து சேர்ந்தார். ஆங்காங்கே ஆதரவை இவர் நாடிப் பெற்றுப் படிப்படியாக முன்னேறிக் கார்டோவா நகரை அடைந்தார். இசுபெயினிலிருந்த செவில்லின் (Seville) எமனித் தலைவரான அபு-அல்-சப்பா அல்-யக் சூபி என்பவர் பச்சைத் தலைப்பாகை ஒன்றை எடுத்து, ஈட்டியில் மாட்டிக் கொடியாகப் பறக்கவிட்டார். இங்ஙனம் தோன்றியவையே இசுபெயினில் உமையாக்களின் கொடியும் ஆட்சியாகும்.

கிளர்ச்சிகள் பலவற்றில் மூழ்கிக் கிடந்த இசுபெயினை அப்துர்-ரகுமான் முயன்று அவற்றிலிருந்து விடுவித்து, அவரை முறியடிக்கப் பிரன்னீசு மலைத் தொடரைக் கடந்து இசுபெயினுக்குள் நுழைந்த பிராங்கிய அரசன் சார்லமேனைச் சர்கோசாவில் முறியடித்துத் தம் நிலையை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார்; முப்பத்து மூன்று ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்து கி.பி. 685-இல் உயிர் நீத்தார். அவருக்குப் பின்னர், முதலாம் இசாம், அக்கம் ஆகியவர்கள் ஆட்சி புரிந்தனர். அக்கமுக்குப் பின்னர்ப் பதவிக்கு வந்த இரண்டாம் அப்துர் ரகுமானின் ஆட்சி சீரும் சிறப்புமுற்று விளங்கிற்று.

இசுபெயினில் ஆட்சி புரிந்த கலிபாக்களுள் தலைசிறந்தவர் மூன்றாம் அப்துர் ரகுமான் (Abdur Rahman III, கி.பி. 912-961) என்பவராவார். இருபத்து மூன்று வயதிலேயே அரசப் பதவி ஏற்ற அவர் மாபெரும் தலைவர்களுக்குரிய உயர் பண்புகள் பலவற்றையும் பெற்றிருந்தார். ஆற்றல், மனஉறுதி, கபடமின்றி வெளிப்படையாகப் பேசுந்திறன் ஆகியவற்றையெல்லாம் பெற்றிருந்த அவர் தலைசிறந்த ஆட்சியாளராகச் செயற்படத் தொடங்கினார்; உள்நாட்டுச் சிக்கல்கள் பலவற்றைத் தீர்த்தார்; அயல் நாட்டுப் பகைவர்களை அடக்கினார். ஆக, அவர் இசுபெயினில் அமைதியை மீண்டும் நிலைநாட்டி, அமீர்-வுல்-மோமினீன் என்ற பட்டப் பெயரையும் புனைந்து கொண்டார். செருமனி, இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளின் அரசர்களும் பைசாண்டியாவின் பேரரசரும் தங்கள் தூதர்கள் மூலமாக அவருடைய அரசவையுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அவ்வரசவையை உள்ளடக்கிக் கொண்டிருந்த கார்டோவா நகரம் சீரும் சிறப்பும் பெற்றதொரு தலைநகரமாக விளங்கிற்று. அப்துர் ரகுமானைப் போன்று கடுமையற்றவரும் அறிவு படைத்தவருமான மற்றெந்த ஓர் அரசரும் இசுபானிய நாட்டு அரியணையில் ஒருபொழுதும் அமர்ந்திருக்கவில்லை. அவருடைய மென்மையான தன்மை, கருணை குணம், நீதி வழங்குவதில் அவருக்கு இருந்த ஒரு தனிப்பட்ட ஆர்வம் ஆகியவற்றையெல்லாம் அவர் தம் நண்பர்களும் எதிரிகளுமாகிய அனைவருமே புகழ்ந்தனர். தாம் உருவாக்கிய கப்பற்படையைக் கொண்டு, அவர் மத்திய தரைக் கடற் பகுதியைத் தமது ஆட்சிக்குட்படுத்துவதற்காகப் பாத்திமா வமிசத்தினருடன் கடுமையாகப் போரிட்டார். எனவே அவரை இந்தியாவின் மொகலாயப் பேரரசர் அக்பர், அராபியாவின் முதலாம் உமர், பாக்தாதின் ஆரூன்-அல்-ரசீது ஆகியவர்களோடு ஒப்பிடலாம். உண்மையில் அவர் வரலாற்றில் உலகத்துச் சிறந்த அரசர்களுள் ஒருவராக விளங்குகின்றார். அவர் அமைத்த நகரங்களும் அவற்றில் அவர் கட்டிய மாடமாளிகைகளும் அமைத்த நூலகங்களும் அவருடைய பெருமைக்கும் புகழுக்கும் சான்று பகர்கின்றன.

கார்டோவா நகரின் சிறப்பு: இசுபானிய நாட்டை ஆண்ட உமையாக்களின் தலைநகரான கார்டோவா உலகத்திலேயே மிகச் சிறந்த நகரங்களுள் ஒன்றாகும். அக்காலத்தில் மாபெரும் நகரங்களாக விளங்கிய பாக்தாது, கான்சுடாண்டிநோபில் ஆகியவற்றுக்கு நிகராகவே கார்டோவாவும் விளங்கியது. ஐந்து இலட்சம் குடிமக்களையும், 3000 பொதுக்குளியல் அறைகளையும் கொண்டிருந்த அந்த மாபெரும் கார்டோவா நகரம், 'இது பாக்தாது நகரமா' என வியப்புற்றுக் கேட்கும் அளவுக்கு அமைந்திருந்தது. அதன் புகழ் தொலைவிலிருந்த நாடான செருமனிக்கும் எட்டியிருந்தது. இரோசுவிதா என்னும் பெண் துறவி அதனை 'உலகத்தின் அணிகலன்' என்று புகழ்ந்துள்ளார். 'அது அண்டலூரசியாவின் மணப்பெண்' என்று அதனை அராபிய ஆசிரியர் ஒருவர் புகழ்கின்றார்.

மாபெரும் கலிபாக்களின் ஆட்சியில் கார்டோவா தலைநகரம் அனைவராலும் போற்றப்படும் நகராக இருந்தது. அதன் எழில், அதன் கட்டடங்களின் அழகு, அதன் குடிமக்களுடைய பகட்டும் மென்மையும் வாய்ந்த வாழ்க்கை, அவர்களுடைய அறிவுத்துறை சார்ந்த சாதனைகள் ஆகியவற்றோடு ஐரோப்பிய நகரம் எதுவுமே போட்டியிட முடியாது. அதனை நிருவகித்து வந்த அராபிய ஆளுநர் அங்கே பல அழகிய கட்டடங்களைக் கட்டி அவற்றிற்கு அழகூட்டியிருந்தார். இருப்பினும் அதனை ஒழுங்குற அழகுபடுத்திய பெருமை முதற்கண் முதலாம் அப்துர் ரகுமானுக்குரியதாகும். சுற்றுப்புறத்தில் இருந்த குன்றுகளினின்றும் தலைநகருக்குக் குடிநீர் கொண்டு வருவதற்காக அவர் வாய்க்கால் ஒன்றை வெட்டினார். சிறப்பான கட்டடங்களைக் கொண்டிருந்த அந்நகரத்தில் உயர்குடி மக்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களுக்காக 50,000 மனைகளும், பொதுமக்ளுக்காக ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகளும், எழுபதுக்கு மேற்பட்ட நூலகங்களும் கணக்கற்ற நூல் விற்பனை நிலையங்களும் காட்சியளித்தன. மூன்றாம் அப்துர்-ரகுமான் தம் அன்புக்குரிய மனைவியான அல்-சகீராவுக்காகக் கட்டிய அரண்மனை உலகத்து அதிசயங்களுள் ஒன்றாக விளங்கிற்று. புகழ்வாய்ந்த இந்த அரண்மனை உலகத்துப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட தூய பளிங்குக் கற்களால் கட்டப்பட்டதாம். பயணிகள் அதன் அழகினைக் கண்டு பாராட்டினார்கள்.

கார்டோவாவின் அரண்மனைகளும் பூந்தோட்டங்களும் கவனத்தை ஈர்ப்பது போன்றே அதன் அறிவு வளர்ச்சியும் மக்கள் கவனத்தைக் கவர்கின்றது. அதில் புகழ் பெற்று விளங்கிய பேராசிரியர்களும் ஆசான்களும் அறிஞர்களும் அந்நகரை ஐரோப்பியப் பண்பாட்டின் மையமாக்கி விட்டனர். அங்கே கல்வி பெறுவதற்காக ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் திரண்டனர். அறிவியலின் அனைத்துக் கிளைகளும் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட்டன. குறிப்பாக, மருத்துவத் துறையில் ஏற்பட்ட பெரும் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. கார்டோவாவில் இருந்துகொண்டு ஆட்சி புரிந்த கலிபாக்கள் இலக்கியத்திற்கும் பெரும் ஆதரவு அளித்தனர். அந்நகரம் பண்பாட்டிற்கு மட்டுமே மையமாக அமையாமல் நலிந்தோர், பெண்கள் போன்றோரிடம் இரக்கங் காட்டும் பண்பிற்கும் மையமாகத் திகழ்ந்தது.

கலைத்துறையில் அண்டலூரசியா தலையாய நிலையைப் பெற்றிருந்தது. 'அழகுமிக்க நகர்' என்று சொல்லப்பட்ட கார்டோவா மசூதியை அந்நகரின் கை வினைஞர்கள் உருவாக்கினர். பட்டு நெய்யும் கலை அண்டலூரசியாவின் மிகச் சிறந்த தொழிலாகும். கார்டோவாவில் ஓர் இலட்சத்து முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட நெசவாளர்கள் இருந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அந்த மாபெரும் கார்டோவா நகருக்குப் போட்டியாக மற்றொரு நகரையும் அப்துர் ரகுமான் அமைத்தார். அந்நகரை அவர் குவாடல்குயிர் ஆற்றினை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது போல் அமைந்திருந்த சீரா மோரினா என்னும் மலையின் மேல் அமைத்தார். நூறு அறைகளும், பல்லாயிரக்கணக்கான அடிமைகள், பாதுகாப்பாளர்கள் ஆகியோர் குடியிருப்பதற்காகத் தனித்தனி மனைகளும் அந்நகருக்குள் கட்டப்பட்டிருந்தன.

அப்துர் ரகுமானுக்கு அடுத்துப் பதவி ஏற்ற அவர்தம் மகன் இரண்டாம் அக்கீம் என்பவர் பேரரசில் அமைதியை நிலைநாட்டி, அறிவு வளர்ச்சிசெய்வதில் மிகத் தீவிரமாக முனைந்திருந்தார். அறிவு வளர்ச்சித் துறையில் அவருடைய சாதனை உண்மையில் நிகரற்றதாக இருந்தது. அவருடைய காலத்தில் கார்டோவாவில் இருந்த பேரரசர் நூலகத்தில் நான்கு இலட்சத்திற்கும் மேலாக நூல்கள் திரட்டப்பட்டிருந்தன. கார்டோவாப் பல்கலைக்கழகம் உலகத்திலேயே மிகவும் சிறந்த கல்வி நிலையமாகப் புகழ் பெற்று விளங்கிற்று. அவருடைய காலத்தை அராபியாவின் அகசுடசு காலம் என வரலாற்றறிஞர்கள் கருதுவர். அவருடைய இறப்புடன் அப்பேரரசின் புகழும் அழிவுற்றது. இருப்பினும் அப்புகழை அந்தப் பேரரசு மீண்டும் ஒருமுறை அசுப்-அல்-மன்சூர் என்பவரின் காலத்தில் ஓரளவிற்குப்பெற்றது. இறுதியில்

சுலைமான் என்பவரின் நலிந்த ஆட்சியுடன் அப்புகழ் மறைந்தது. உ.செ.

**உய்த்துணரவைப்பு** என்பது நன்னூலார் கூறியுள்ள 32 உத்திகளுள் ஒன்று. சில நூற்பாக்களின் விதிகளைக் கொண்டு, ஆராய்ந்து அறிந்து கொள்ளுமாறு ஒரு பொருளைக் கூறுவது என்று ஆறுமுக நாவலர் இவ்வுத்தியினை விளக்கியுள்ளார். மகரக் குறுக்கம் கூறவந்த நன்னூலார், 'ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' (நன். 96) என்று நூற்பா இயற்றியுள்ளார். ணகர னகரங்களுள் ஒரெழுத்து நின்று தொடர்ந்திட அதற்கு முன்னால் மகரம் வந்தாலும், வகரம் வந்து தொடர்ந்திட அதற்கு மேல் மகரம் வந்தாலும், அம்மகரம் தனக்குரிய அரைமாத்திரையில் குறுகி ஒலிக்கும் என்பது இதன் பொருள். 'மருளினும் எல்லாம் மருண்ம்', 'திசையறி மீகானும் போன்ம்', 'தரும் வளவன்' ஆகியன இதற்குரிய எடுத்துக்காட்டுகள் ஆகும். முற்கூறிய நூற்பாவிற்குப் பின்னர் வரும் நூற்பாக்கள் சிலவற்றில் கூறப்பட்டவற்றை மனத்துட் கொண்டு உரையாசிரியர்கள்பின்வருவனவற்றைஉய்த்துணர்ந்து குறிப்பிட்டுள்ளனர். அவை வருமாறு: 1) ணகர னகரங்களின் முன்வந்த மகரம் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் இறுதியில் அமைந்த மகரம் ஆகும். 2) ஈற்றயல் உகரம் கெட, அந்தஉகரம் ஊர்ந்த ளகர லகரங்கள் ஈற்றிலுள்ள மகரத்தோடு மயங்காமையால் திரிந்த ணகர னகரங்களே இங்குக் கூறப்பட்டன. 3) இவ்வாறமையும் ணகர னகரங்கள் மகரத்தோடு ஈரொற்றாய் மயங்கினால் அங்கு மகரம் தன் மாத்திரையில் குறுகும். 4) இவ்வாறு குறுகுவது செய்யுட்கண்ணேயாகும். 5) காணும், கூறும் என்று வருவனவற்றுள் வரும் மகரம் குறுகாது. பின்வரும் நூற்பாக்களின் பொருளை நோக்கி இவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளுமாறு விதி அமைப்பது உய்த்துணர வைப்பு என்னும் உத்தியாகும்.

இது தொல்காப்பியத்தில் 'உய்த்துக் கொண்டு உணர்தல்' எனக் கூறப்பட்டுள்ளது. இதனை இளம்பூரணர், 'ஒரு நூற்பாவால் ஓரிலக்கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை உளதாகத் தோன்றின், அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்' என விளக்கியுள்ளார். மேலுமவர், பனி என்னும் சொல்லுக்கு அத்தும் இன்னும் சாரியை ஆம் என்றாராயினும், அவற்றுள் ஏற்பதொன்றாதலின் அவற்றுள் இது இன்ன இடத்து வரும் என்று அறிந்து கொள்ளுவது உய்த்துணர்தலாம் என்று கூறி எடுத்துக்காட்டும் தந்து இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**உய்ந்தபிள்ளை:** இவர் இராமானுசர் காலத்தில் வாழ்ந்தவர். இவரது பெயர் உஞ்சப் பிள்ளை என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவர் ஆடற்கலையில் வல்லவர்; திருவரங்கத்தில் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் கருத்திற்கும் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு மெய்ப்பாடு காட்டி ஆடியவர். இவரைப் பற்றிய குறிப்புப் பெரியவாச்சான்பிள்ளை உரையில் இரண்டு இடங்களில் காணப்படுகிறது. 'என்னை வருக எனக் குறித்திட்டு' என்னும் பெருமாள் திருமொழி தலைமகளின் ஊடலைத் தெரிவிக்கும் பாசுரம். இதன் ஈற்றடி 'இன்னமென் கையகத்து ஈங்கு ஒரு நாள் வருதியேல் என்சினம் தீர்வன்நானே' என்பதாகும். இதற்கு உய்ந்த பிள்ளை தலைமகள் பெருமானைக் காலாலே உதைப்பதாகவும், கையாலே தள்ளுவதாகவும் மெய்ப்பாடு பிடித்தார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த எம்பார் என்னும் ஆசாரியப் பெருமகனார், 'கெடுவாய்! அப்படித் தலைமகள் செய்தாளாகில் அவனுக்குப் பொல்லாதவையாகுமோ? அவன் நெடுநாள் வேண்டிக் கிடந்தவையல்லவா அவை! அவனுக்கு அவையன்றோ தேட்டமானவை!' என்று சொல்லி எப்படி ஆட வேண்டும் என்பதனைத் தம் கையையிட்டு முகத்தை மறைத்துத் திரிய வைத்துக் (திருப்பிக் கொண்டு) காட்டினாராம். மற்றொரு குறிப்பு 'மெய்ச்சூது சங்கம் இடந்தான்' என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தை இவர் மெய்ப்பாடு தோன்ற ஆடிக்காட்டும்போது நிகழ்ந்ததாக வந்துள்ளது. இப்பாட்டில், 'அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்' என்னும் அடியில் 'அத்தூதன்' என்பதறகுப் பெருமானைக் காட்டியும், 'அப்பூச்சி' என்பதற்குக் கண்ணை இறுத்துக் கொண்டும் வந்து மெய்ப்பாடு காட்டினார். இவ்வாட்டத்தினை இராமானுசருக்குப் பின்னே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த எம்பார், 'அப்பூச்சி' என்பதற்குத் திருக்கைகளைத் திருத்தோளோடு சேர்த்துத் திருவாழி, திருச்சங்கு என்ற பாவனையில் ஆட வேண்டும் என்று குறிப்புக் காட்டினார். உய்ந்த பிள்ளை எம்பாரது குறிப்பினை ஏற்றுத் தம் ஆட்டத்தை மாற்றிக் கொண்டார். இம்மாற்றத்தினைக் கண்ட இராமானுசர் அதன் காரணத்தை அறியச் சுற்றிலும் பார்த்து, அங்கு எம்பார் இருப்பதனைக் கண்டு, 'கோவிந்தப் பெருமாள் இருந்தீரோ?' என்று கூறினாராம்.

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் கருத்தினையும் உணர்ச்சியினையும் புலப்படும்வண்ணம் மெய்ப்பாடு காட்டி ஆடுவதற்கு அரையர் சேவை என்பது பெயர். அதனை 'அரையர்' என்னும் பட்டப் பெயர் கொண்டவர்களேயன்றி, உய்ந்த பிள்ளை போன்று

அப் பட்டப்பெயர் இல்லாதவர்களும் செய்துள்ளனர் என்பது இவரது வரலாற்றால் அறிய முடிகிறது.

தெ.ஞா.

*உய்யக்கொண்டார்* வைணவ ஆசாரியர்களுள் சீரும் சிறப்பும் மிகவுடையவரும், திருவாய்மொழியினைச் செம்மைப்படுத்தித் தொண்டு செய்தவரும் வைணவ ஆசாரியர் தலைவருமான நாதமுனிகளால் உய்யக் கொள்ளப்பெற்றவர். நாதமுனிகளால் உய்யக்கொள்ளப் பெற்றமையால் இவர் இப்பெயரெய்தினார் எனச் சிலர் கூறுவர். இன்னுஞ்சிலர், இவர் தம் பின்னே தோன்றிய மணக்கால் நம்பி போன்ற பலரையும் உய்யக் கொண்டருளியமையால் இப்பெயர் பெற்றார் என்று கூறுவர். இவர், சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள காட்டுமன்னார் கோயில் என்னும் சிற்றூரில் வைணவ சமயத் தொண்டாற்றும் அந்தணர் மரபில் புண்டரீகாட்சர் என்னும் இயற்பெயருடன் தோன்றினார். புண்டரீகாட்சர் என்னும் வடமொழிப் பெயர் தமிழில் 'தாமரைக் கண்ணன்' எனப் பொருள்படும். இவர் தம் குருவாகிய நாதமுனிகளின் அருளாணைப்படி வைணவ சாத்திர-தோத்திர நூல்களையும், திராவிட வேதமாய் விளங்கும் திருவாய் மொழியினையும் பயின்று, அதன் சீர்பரப்பும் தொண்டில் சிறந்து அவருக்குத் தலைமாணாக்கராய் விளங்கினார். வைணவ சமய மரபிலும் வரலாற்றிலும் தமக்கெனக் குறிப்பிடத் தக்க ஓரிடத்தினை இவர் பெற்றுள்ளார். கி.கோ.

*உய்யக்கொண்டான் திருமலை*: சோழர் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய தலங்களுள் ஒன்று. இது திருச்சியிலிருந்து தோகமலை செல்லும் சாலையில் திருச்சியிலிருந்து 4.8 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இதன் கீழ்புறம் உய்யக்கொண்டான் ஆறு (குடமுருட்டி, வைரமேகன் வாய்க்கால்) ஓடுகின்றது. 'உய்யக்கொண்டான்' என்பது முதலாம் இராசராச சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. எனவே ஊரும் ஆறும் இராசராச சோழனின் பெயரால் அமைந்தன என்பது புலனாகும். உய்யக் கொண்டான் திருமலை, நந்திவர்ம மங்கலம், திருக் கற்குடி, இராசாசிரய சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர்களாலும் குறிக்கப்பட்டது என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

சிவன் கோயில்: உய்யக்கொண்டான் திருமலை பல்லவர் காலத்திலிருந்தே புகழ்பெற ஆரம்பித்தது. இவ்வூரில் உள்ள சிவன் கோயிலின் காரணமாகவே உய்யக்கொண்டான் திருமலை வரலாற்றில் புகழ் பெற்றது. இங்குள்ள சிவன் கோயில் ஏறத்தாழ 50 அடி உயரமுள்ள பாறையின்மீது அழகாகக் கட்டப் பட்டுள்ளது. இறைவர் உச்சீவநாதசாமி என்று அழைக்கப்பெறுகிறார். இவ்விறைவர் கற்பகநாதர், முத்தீசர், உய்யக்கொண்ட நாயனார், விழுமியார், ஆள்வார், விழுமியதேவர், விழுமியநாயனார் முதலான பெயர்களால் அழைக்கப்படுகிறார். முதலாம் பராந்தக சோழனின் பத்தாமாட்சியாண்டுக் கல்வெட்டு இவ்விறைவரை, 'காவிரியின் தென்கரையிலமைந்த பிரமதேயமான நந்திவர்ம மங்கலத்துத் திருக்கற்குடிப் பரமேசுவரர்' என்று குறிக்கின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவி அஞ்சனாட்சி என அழைக்கப்பெறுகிறாள். மைதீட்டப்பட்ட கண்களை உடைமையால் அம்மன், 'அஞ்சனாட்சியம்மை' என்னும் பெயர் பெற்றாள். இங்கு இரு அம்மன் சந்நிதிகள் உள்ளன. இவை இரண்டுமே அஞ்சனாட்சியம்மைக்கு எடுக்கப்பட்டவையே. பழைய அம்மன் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. புதிய அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இரண்டு அம்மன்களுக்கும் நாள் வழிபாடு நடந்து வருகிறது.

உய்யக்கொண்டான் மலை, உய்யக்கொண்டீசுவரம் என்னும் பெயர்களால் அழைக்கப்பெறும். இத்தலம் அமைந்துள்ள பகுதி கல்வெட்டுகளில் மிகவும் போற்றப்பட்டுள்ளது. கோயிலை அடுத்து வட்டமான மதிலும் வெளியே சதுரமான பெரிய மதிலும் உள்ளன. இங்குள்ள வெளிப்புறமதில் ஆறு அடி கனத்தில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் சுவாமி, அம்மன் பிரகாரங்களைச் சேர்த்துத்திரு வீதி உட்பட ஐந்து பிரகாரங்கள் உள்ளன. இத்திருக்கோயிலில் தெற்கு நோக்கி இரண்டும், கிழக்கு நோக்கி ஒன்றுமாக மொத்தம் மூன்று வாயில்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டுக்குக் கோபுரமில்லை. வட்டமதிலின் வாயிலுக்கு மட்டும் ஒரு சிறிய கோபுரம் உள்ளது.

இத்திருக்கோயிலைச் சேர்ந்தனவாக ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. அவை பொன்னொளி ஓடை, குடமுருட்டி, ஞானவாவி, எண்கோணக் கிணறு, நாற்கோணக் கிணறு என்பனவாகும்.

இக்கோயிலுக்கு வெளியே ஆளுடையார் கோயிலும், இரண்டாம் பிரகாரத்தில் வடகிழக்கில் இடர் தீர்த்தவர் கோயிலும், கோயிலுக்குத் தெற்கே முத்திதீர்த்தக் கரையில் சண்முகர் கோயிலும் சுற்றுக் கோயில்களாக அமைந்துள்ளன.

பாடல் பெற்ற தலம்: சைவ சமய நாயன்மார்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இக்கற்குடிப் பெரு

மானைப் பாடிப் பரவியுள்ளனர். கற்குடியைக், 'கற் பகத்தைக் கண்ணாரக் கண்டேன்' என்பது திருத் தாண்டகம். அருணகிரிநாதரும் தமது திருப்புகழில் கற்குடி முருகப் பெருமானைப் பாடியுள்ளார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இத்திருத் தலப் பெருமையைக் 'கற்குடி மாமலை மாலை' என்னும் நூலில் 100 தோத்திரப் பாக்களால் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

படைத்தலம்: கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆங் கிலேயர், பிரெஞ்சுக்காரர், மைசூர் அரசர் ஆகி யோர் இடையே நடைபெற்ற போர்களில், இக்கோ யிலில் உள்ள வலிமைமிக்க மதில்களுக்குள் போர் வீரர்கள் பாதுகாப்பாகத் தங்கியிருந்து போர்புரிந் துள்ளனர். இதனால் இது ஓர் போர்ப்பாசறையாக வும் பயன்பட்டமை புலனாகும். மாலிக்காபூர் கி.பி. 1310-இல் உய்யக்கொண்டான் மலையைச் சூறையாடினான்.

கல்வெட்டுகள்: இத்திருக்கோயிலில் அறுபதுக் கும் மேற்பட்ட பிற்காலச் சோழர், பிற்காலப் பாண் டியர், விசயநகர வேந்தர் ஆகிய அரச குலத்தவரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இத்திருக் கோயிலுக்கு அதிக அளவில் அறக் கொடைகள் அளித்த பெருமை கண்டராதித்த சோழனின் அரசியாரான செம்பியன் மாதேவியா ரைச் சாரும். இவ்வம்மையார் பல நிலதானங்களும் பொன்தானங்களும் அளித்துள்ள போதிலும், திருக் கற்குடி இறைவர்க்கு விலையுயர்ந்த மகுடம் ஒன்று அளித்துள்ளமை பாராட்டத்தக்கது. இம்மணி முடி யில் 149 கழஞ்சுப் பொன்னும், 190 கழஞ்சு வெள்ளி யும், 700 முத்துக்களும், 3 இரத்தினங்களும், 27 வைரங்களும் இருந்தன. இதனை முதலாம் இராச ராசனுடைய பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். ம.இரா.த.

**உய்யவந்த தேவ நாயனார் (திருக் கடவூர்):** சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான் கனுள் இரண்டாவதாக எண்ணப் பெறுவது திருக்க ளிற்றுப்படியார் என்னும் நூலாகும். அதனை அரு ளிச் செய்தவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாய னார்.

திருவியலூரில் எழுந்தருளியிருந்த உய்யவந்த தேவநாயனார் என்னும் சிவயோகி தம் மாணவரா கிய திருவியலூர் ஆளுடைய தேவ நாயனார் பொருட்டாகத் திருவுந்தியார் என்னும் நூலைச் செய்தார். அவர்பால் மெய்யுணர்வு உபதேசம் பெற்ற ஆளுடைய தேவ நாயனார் ஒருமுறை திருக் கடவூருக்கு எழுந்தருளியபோது, அவ்வூரில் தம்மை வழிபாடு செய்த ஒருவரின் பக்குவத்தை உணர்ந்து அவருக்குத் தம்முடைய ஆசிரியர் பெயரைச் சூட்டி, தம் ஆசிரியர் அருளிய திருவுந்தியார் என்னும் மெய்ந்நூற் பொருளையும் அறிவுறுத்திச் சென்றார். ஆளுடைய தேவர்பால் உபதேசம் பெற்ற திருக்கட வூர் உய்ய வந்த தேவர் திருவுந்தியாரின் பொரு ளையே தம் பொருளாகக் கொண்டு விரித்துக் கூறும் திருக்களிற்றுப் படியார் என்னும் வழிநூலைச் செய் தருளினார்.

திருக்களிற்றுப்படியாரில் உள்ள இரண்டு பாடல் கள் (3,96) நூலாசிரியரையும் அவருக்கு உபதேசம் செய்த குரு பரம்பரையையும் குறிப்பிடுகின்றன.

இவர் நூல் செய்த காலத்து இவர் கீழ்ச்சாதி என்றும் இவரது நூலைக் கைக்கொள்ளலகாகாது என் றும் சிலர் சொல்ல, சிறிது பக்குவராயுள்ளவர்கள் அந்த நூலைத் தில்லை நடராசப் பெருமான் திரு முன் உள்ள பஞ்சாக்கரப் படியிலே வைத்தார்கள். அந்தப் படியிலே செய்திருந்த கல் யானை அந்நூ லைத் துதிக்கையாலே எடுத்து எல்லாவற்றிற்கும் மேற்படியிலே கொண்டு போய் வைத்தது. ஆகை யால் அந்நூல் அப்பெயர் பெற்றது. இவ்வரலாறு பழங்கால முதல் வழங்கி வருகிறது.

திருக்கடவூர் உய்ய வந்த தேவர் தமது நூலில் சைவ சமய நால்வர் வரலாற்று நிகழ்ச்சிகளையும், கண்ணப்பர், சண்டீசர், அரிவாள்தாயர், திருக்குறிப் புத் தொண்டர், மங்கையர்க்கரசியார், மூர்க்கர், மூர்த்தியார் முதலிய நாயன்மார் செயல்களையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். ஆதலின், பெரிய புராணம் பாடிய சேக்கிழார் காலத்தை ஒட்டி இவர் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பது தெரிகிறது. எனவே இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளுதல் பொருந்தும். திருக்களிற்றுப்படி யார் பாடப்பெற்ற காலம் கி.பி. 1177 என்பது அறிஞர் துணிபு.

இவர் திருவுந்தியாரிலுள்ள சொற்றொடர்களை அவ்வாறே எடுத்தாண்டு அவற்றின் பொருளை விளக்கியுள்ளார்; திருக்குறட்பாக்களையும் திருவாசக அடிகளையும் பொன்னே போல் போற்றி அமைத்துக் கொண்டுள்ளார். நால்வர் அருட்செயல்களையும் நாயன்மார் அருள்வாழ்க்கைகளையும் அமைத்துப் பாடியுள்ளார். அடியார் தொண்டுகளை மெல்வினை, வல்வினை என்று பிரித்து இவர் விளக்கியிருக்கும் முறை தனிச் சிறப்புடையதாகும். ஆ.ஆ.

**உய்யவந்த தேவ நாயனார் (திருவிய லூர்),** சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கி

னுள் முதலில் வைத்து எண்ணப் பெறுவது திருவுந்தியார் என்னும் நூலாகும். அதனை அருளிச் செய்தவர் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்.

உய்யவந்த தேவர் என்னும் சிவயோகி திருவியலூரில் எழுந்தருளியிருந்து, தம் மாணவராகிய ஆளுடையதேவ நாயனாரின் பொருட்டுத் திருவுந்தியார் என்னும் நூலினைச் செய்தார். ஆளுடைய தேவர் அந்நூலைத் திருக்கடவூரைச் சேர்ந்த தம் மாணவருக்கு உபதேசித்துத் தம் ஆசிரியரின் பெயரான உய்ய வந்த தேவர் என்னும் பெயரையும் சூட்டினார். பின் திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருவுந்தியாருக்கு வழிநூலாகத் திருக்களிற்றுப் படியார் என்னும் நூலைச் செய்தார். இச்செய்திகள் திருவுந்தியாருக்கு அமைந்த பழைய உரையில் காணப்படுகின்றன. திருவுந்தியாரின் ஆசிரியர் வட நாட்டிலிருந்து தென்னாடு வந்தவர் என்று கூறப் பட்டுள்ள செய்தி ஏற்புடையதாயில்லை என்று அறிஞர் கருதுவர்.

திருவுந்தியாரின் இறுதிப்பாடல் உய்யவந்தார் உரைத்த இம்மெய்ந்நூல் உலகத்தார் அனைவருக்கும் மும் மல நீக்கத்தைச் செய்யும் என்று தெரிவிக்கிறது. இதில் நூலாசிரியர் பெயரும், நூலின் பெருமையும் கூறப்பட்டுள்ளமை காணலாம். இதற்கு முந்திய வாழ்த்துப் பாடலில் ஆசிரியர் தமக்கு இறைவனே குருவாக வந்து அருள் செய்தான் என்பதனைத் தெளிவுறுத்தியுள்ளார்.

திருவுந்தியாரின் பொருளைப் பிறழாது விரித்துக் கூறும் முறையில் அதற்குச் செய்யுள் வடிவில் அமைந்த விளக்கவுரையாகத் திகழ்வது திருக்களிற்றுப்படியார். திருக்களிற்றுப்படியாரை இயற்றிய திருக்கடவூர் உய்ய வந்த தேவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். (பார்க்க: உய்ய வந்த தேவ நாயனார் (திருக்கடவூர்)) எனவே, அவர் தம் ஆசிரியருக்கு ஆசிரியராகிய திருவியலூர் உய்ய வந்த தேவரும் அதே நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம். இவர் திருவுந்தியாரை இயற்றிய காலம் கி.பி. 1147 என்று அறிஞர் கருதுவர்.

திருவியலூர் உய்யவந்த தேவர் சிறந்த சிவானுபவச் செல்வர்; தாம் உணர்ந்த திருவருள் அனுபவ உண்மைகளை 45 தாழிசைகளில் திருவாசகத்தில் வரும் திருவுந்தியாரின் அமைப்பினைப் பின்பற்றிப் பாடியுள்ளார். இப்பாடல்கள் எளிய சொற்களால் அமைந்தனவாயினும் திருமந்திரம் போல ஆழ்ந்து பொருளுணரும் தன்மையனவாய் உள்ளன.

இவர் சிவஞான போதத்தையருளிய மெய்கண்டதேவருக்கு முற்பட்டு வாழ்ந்தவர். எனவே சாத்திர நூல்களின் வரிசையில் இவர் நூல் முன் வைக்கப் பெறும் சிறப்பினைப் பெற்றது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவரது சந்தான பரம்பரை தோன்றுவதற்கு முன்னரே, திருவுந்தியாரையருளிய உய்யவந்த தேவரைக் குருவாகக் கொண்ட சைவ சித்தாந்த உபதேச பரம்பரை தோன்றி வளர்ந்திருந்தது என்பது இவ் வரலாற்றால் இனிது புலனாகும். ஆ.ஆ.

**உய்யவந்தாள்** பத்தமடைக் கல்வெட்டில் காணப்படும் கணிகை. கோவில்களில் நடனம் ஆடி நாடகம் நடித்துக் காட்டுவதற்குப் பாண்டிய மன்னனிடம் இவள் மானியம் பெற்றதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. பி.தெ.

**உயர் அளவுச் சோதனை:** ஒருவரின் தேர்ச்சியினை நன்கு வரையறுக்கப்பட்ட நடத்தைக் குறிக்கோள்கள்களின் அடிப்படையில் அளந்தறியப் பயன்படும் சோதனை உயரளவுச் சோதனை (Criterion Referenced Test) எனச் சொல்லப்படும்.

கற்பித்தலின் குறிக்கோள்கள் எந்த அளவுக்கு மாணவர்களிடம் வெளிப்படுகின்றன என்பதை இச் சோதனை பொருத்திப் பார்க்கின்றது. ஒப்பளவுச் சோதனையில் (Norm-referenced Test) ஒரு மாணவரின் தேர்ச்சியானது அவர் இருக்கும் குழுவின் மதிப்பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் தரப்படுத்தவும் (Ranking) பயன்படுத்தப்படுகிறது. உயரளவுச் சோதனை பெரும்பாலும் முழுதறி திறன் கற்றல், கற்பித்தல் மாதிரியில் பயன்படுத்தப்படுகிறது.

உயரளவுச் சோதனை மாணவர்கள் பாடத் திட்டம் வழியாக அடைய வேண்டிய அனைத்துக் குறிக்கோள்களையும் முழுதுமாக அடைந்து விட்டனரா அல்லது அறை குறையாக அடைந்துள்ளனரா எனக் கண்டறிகிறது. இச்சோதனையில் வெற்றி பெற்றவர்கள் தரப்படுத்தப் படுவதில்லை; மாறாக, முழுதும் அறிந்தோர் (Master), முழுதும் அறியாதவர் (Non-Master) என வகைப்படுத்தவும், முழுதிறன் பெறாத மாணவர்களைத் தனியாள் கற்பித்தல்(Individualised Instruction) வழியே கற்பிக்கவும் உயரளவுச் சோதனை பயன்படுகிறது. மேலும், உயரளவுச் சோதனையில் பயன்படுத்தப்படும் கேள்விகள், ஒப்பளவுப் பொருத்தச்சோதனையில் பயன்படுத்தப்படும் கேள்விகளிலிருந்து மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில். கேள்விகள் கடினத்தன்மை (Difficulty Level), வேறுபடுத்தும் குணகம் (Discrimative Index) ஆகிய பண்பு

களின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால் உயரளவுச் சோதனையில் கேள்விகள் கற்பித்தல் குறிக்கோளுக்கு உகந்தனவா உகந்தனவிலையா என்பதின் அடிப்படையில் சீர்தூக்கப்பட்டு, கற்பித்தல் குறிக்கோளை முழுதுமாக அடைய உகந்தவை மட்டும் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில் எத்தனை கேள்விகள் இருக்க வேண்டும் என்பது அச்சோதனையின் நம்பகத்தன்மையை ஒட்டி முடிவு செய்யப்படுகிறது, ஆனால் உயரளவுச் சோதனையில் கேள்விகளின் எண்ணிக்கை சோதனை தயார் செய்வோரின் முடிவையொட்டியே அமைகின்றது. இன்று வகுப்பறைகளில் பயன்படுத்தப்படும் ஒப்பளவுப் பொருத்தச் சோதனையைக் கைவிட்டு, உயரளவுச் சோதனையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகத் தேர்வுகளில் விரும்பத்தகு மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பது கல்வியாளர்களின் கருத்து. காண்க: ஒப்பளவுப் பொருத்தச் சோதனை.

துணை நூல்கள்:

**Brown, S.**, What do They Know? A Review of Criterion Referenced Assessment. Scottish Education Department, Edinburgh, 1980.

**Poham, W.J.**, Criterion-Referenced Measurement, Prentice-Hall, Englewood Cliffs, New Jersey, 1978.

***உயர் ஆய்தம்***: நன்னூலாசிரியர் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும் என்று கூறி, அவை இத்துணைய என்பதையும் விளக்கியுள்ளார். பத்துச் சார்பெழுத்துகளுள் 'ஆய்தம் ஒன்றாகும். அதனை அவர், 'உயர் ஆய்தம் எட்டு' என்று விரித்தும் காட்டியுள்ளார் (நன்.61). இதில் 'உயர் ஆய்தம்' என்பது தன் மாத்திரையில் குறைவுபடாது அமைந்தியலும் முற்றாய்தத்தினைக் குறிக்கும். புள்ளி வடிவினதாகிய முற்றாய்தம் குற்றெழுத்திற்கு முன்னதாய், உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலதாய் வருவதாகும். இதனை நன்னூலார், 'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி, உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே' என்று இலக்கணப்படுத்திக் காட்டியுள்ளார். இதனை, எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என்று வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறினோடு, அஃகடிய (அவ்+கடிய), அஃகான் (அ+கான்) என்று முறையே புணர்ச்சி விகாரத்தாலும் செய்யுள் விகாரத்தாலும் வரும் ஆய்தம் இரண்டினையும் சேர்த்து, முற்றாய்தம் எட்டு என்பதனை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுத் தந்து விளக்கியுள்ளனர். கஃறீது (கல்+தீது), முஃடீது (முள்+தீது) என்று லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியினால் உண்டாகிய ஆய்தம் புணர்ச்சியால் தோன்றிய ஆய்தம் என்றாலும், அவை குறுகி ஒலிப்பதனால் முற்றாய்தமாகக் கொள்ளப்படாமல் ஆய்தக் குறுக்கமாகவே கொள்ளப்படும். இதனை நன்னூலார், 'லள ஈற்று இயைபினாம் ஆய்தம் அஃகும்' என்னும் நூற்பாவில் (நன்.97) தெளிவுபடுத்தியுள்ளார். 'ஆய்தம்' தோன்றுவதற்கு இடம் தலை; முயற்சி அங்காத்தல் ஆகும்.

***உயர்கல்வி ஆளுகை***: பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகள் (Policies), செயல் திட்டங்கள் பற்றி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் (Authority) உயர்கல்வி ஆளுகை (Governance of Higher Education) எனச் சொல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உயர்கல்வி வழங்கும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அமைவிடம், அவற்றின் நோக்கம், மாணவர்கள் சேர்க்கை அளவு, மாணவர்களுக்கு வழங்கும் கற்பித்தல் முறை, பட்டம் வழங்குவதற்கான கல்வித் தகுதிகள், மாணவர்களின் கல்வித்தரம், ஆராய்ச்சிகளின் தரம், ஆசிரியர்களின் கற்பித்தல் சுதந்திரம், ஆசிரியர் பணியமர்த்தம், பல்கலைக் கழகங்களின் உள்ளமைப்பு, நிதியுதவி போன்ற தலையாய செயற்பாடுகளில் எடுக்கப்படும் அதிகார எல்லைகள் உயர்கல்வி ஆளுகையில் இடம்பெறுகின்றன.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் (International Council for Educational Development - ICED) ஆசுத்திரேலியா, கனடா, செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு, பிரான்சு, ஈரான், சப்பான், மெக்சிகோ, போலந்து, சுவீடன், தாய்லாந்து, இங்கிலாந்து(UK), ஐக்கிய அமெரிக்க நாடு ஆகிய 12 நாடுகளில் கல்விமுறை பற்றி அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களில் காணப்படும் அரசு நிதியுதவி, திட்டமிடல், ஒருங்கிணைப்பு, கல்விச் சுதந்திரம் ஆகிய உயர்கல்வி ஆளுகையின் எல்லைகள் பற்றி அவ்வறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் அந்நாடுகளில் உயர் கல்விக்கு அரசின் அதிக நிதியுதவி, உயர் கல்வியில் மைய அரசின் அதிகமான கட்டுப்பாடு, பல்வகை உயர் கல்வி நிலையங்களின் வளர்ச்சி, பல்கலைக் கழகத் தன்னாட்சி போன்றவை குறித்து ஈரிக்கு (Eurich, 1981) என்பவர் எழுதியுள்ளார். உயர்கல்வி வளர்ச்சி குறித்து ஈரிக்கு எழுதும்போது, உயர்கல்வியின்

தரம் உயர்த்தப்படுதலும், உயர்கல்வியில் பல்வகைப் பிரிவுகள் (Diversity in Higher Eductiaon) புகுத்தப் படுதலோடு அவை பலப்படுத்தப்படுதலும் அவசிய மானவை எனக் குறிப்பிடுகிறார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பல்கலைக் கழகங் கள், கல்லூரிகள் ஆகியவற்றின் உயர் கல்வி ஆளுகை யானது ஆளுகை மன்றங்கள் (Governing Boards), செயற்குழு, துறையாசிரியர்கள், துணைப் பணியா ளர்கள் (Support Staffs), மாணவர்கள், பழைய மாணவர்கள் (Alumni) ஆகியோரிடம் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாண வர்கள் ஆகியோருக்கு உயர்கல்வி குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

பொதுவாக, இந்தியப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி ஆளுகையானது வேந்தர் (Chancellor), துணைவேந்தர் (Vice-Chancellor), பதிவாளர் (Registrar) ஆகிய மூவரிடம் உள்ளது. மேலும், பேரவை (Senate), ஆட்சிக்குழு (Syndicate) இவ் விரண்டோடு புலத் தலைவர்களும் (Deans) உயர் கல்வி ஆளுகையில் இடம் பெறுகின்றனர். தில்லி, அலிகார், பனாரசு, விசுவபாரதி, சவகர்லால் நேரு (புதுதில்லி), ஐதராபாது போன்ற பெரும்பாலான மையப் பல்கலைக் கழகங்களின் (Central Universities) உயர்கல்வி ஆளுகையில் இந்திய அரசின் குடி யரசுத் தலைவரே கடமை வேந்தராக (Visiter) உள்ளார். மையப் பல்கலைக்கழக நிருவாகம் துணை வேந்தர், வேந்தர் ஆகியோரின் பொறுப்பில் உள் ளது. ஆயினும், தில்லி, ஐதராபாது மையப் பல் கலைக்கழகங்களுக்கு இந்திய அரசின் துணைக் குடி யரசுத் தலைவரே (Vice-President) வேந்தராக உள்ளார். மாநில ஆளுநரே மையப் பல்கலைக்கழக முதல்வர் (Rector) பொறுப்பில் உள்ளார்.

துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் கல்வி சார் மற்றும் நிருவாகப் (Academic and Administrative) பணிகளின் தலைவராவர். பதிவாளர் முதன்மைச் செயல் அலுவலராக (Chief Executive Officer) உள்ளார். பல்கலைக்கழகப் பேரவை (Senate) தான் பல்கலைக்கழகத்தின் உயரதிகாரக் குழு (Supreme Body) எனக் கருதப்படுகிறது. பல் கலைக்கழகத்தின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத் திற்கு ஒப்புதலளித்தல், பல்கலைக்கழக நிருவாகத் திற்கான சட்டமியற்றுதல், பல்கலைக்கழகப் பொது நிருவாகத்தை மேற்பார்வையிடுதல் போன்ற வற்றைப் பல்கலைக்கழகப் பேரவை செய்து வருகி றது. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவானது நிதி நிரு வாகம், பணி நியமனம், மேற்பார்வை போன்ற பணிகளில் துணைவேந்தருக்குத் துணையாக உள் ளது. பல்கலைக்கழகப் பாடக்குழுவானது (Board of Studies) பாடத்திட்டம், பாடநூல் தேர்வு போன்ற கல்விசார் பணிகளை ஒருங்கிணைத்து வருகிறது. இந்தியப் பல்கலைக்கழக உயர்கல்வி ஆளுகையில் மாணவர்களின் பங்கேற்பு பொதுவாக இல்லை யெனினும், அவர்களின் பங்கேற்பின் அவசியம் குறித்துக் கல்வியாளர்களின் ஆதரவு இருந்து வரு கிறது.

துணை நூல்கள்:

**Baldridge**, **J.V.**, Academic Governance, McCutcheon Berkeley, California, 1971.

**Eurich**, N.P., Systems of Higher Education in Twelve Counrties: A Comparative View. Praeger, New York, 1981.

The Association of Indian Universities, The Universities of India, A I U, New Delhi, 1981.

***உயர்கல்வி நுழைவு***: மேல்நிலைப் பள்ளிக் கல்விக்குப் பின்னர்க் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வியானது உயர்கல்வி (Higher Education) எனச் சொல்லப் படும். கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் நுழைவதற்குச்(Access) சில முறைகள் பின்பற்றப்படுகின்றன. அம்முறை களைப் பொதுவாக மூவகைப்படுத்தலாம். 1) மேல் நிலைப் பள்ளிக் கல்வியில் வெற்றி பெற்றிருத்தல், ii) மேல்நிலைப் பள்ளித் தகுதியுடன் நுழைவுத் தேர்வில் (Entrance Test) வெற்றி பெறுதல், iii) மேல்நிலைப் பள்ளி மதிப்பெண்களுடன் ஆர்வம், (Interest) நாட்டம் (Aptitude), பணியனுபவம் (Work Experience) போன்றவற்றிலும் தகுதி பெறு தல் ஆகிய ஏதாவதொரு முறையில் மாணவர்கள் உயர்கல்வியில் நுழைவுரிமை (Admission) பெறு கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளான இசுபெயின், இத்தாலி, பிரான்சு, செருமனி (கூட்டாட்சிக் குடியரசு) போன்ற நாடுகளில் உள்ள மாணவர்களின் மேல் நிலைக் கல்வி வெற்றியே அவர்கள் உயர்கல்வி நிறு வனங்களில் சேருவதற்கு அடிப்படையாக அமைகின் றது. துருக்கி, கிரீசு, தாய்லாந்து போன்ற நாடு களில் பள்ளி மாணவர்களுக்குத் தேசிய அளவில் நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. இத் தேர்வில் வெற்றிபெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களே

உயர்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சோவியத்து நாட்டில் நுழைவுத் தேர்வு தேசிய அளவில் நடைபெறுவதில்லை; ஒவ்வொரு நிறுவனமும் நுழைவுத் தேர்வு நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாய்மொழித் தேர்வும் (Oral Test) நடத்துகிறது. இத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களை மட்டுமே அந்நிறுவனம் சேர்த்துக் கொள்கிறது. சீன மக்கள் குடியரசில் (People's Republic of China) தேசிய அளவில் நடத்தப் பெறும் நுழைவுத் தேர்வுக்குப் பின்னரே, மாணவர்கள் உயர்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கியக் குடியரசு (USA) ஆகிய நாடுகளில் மேல்நிலைப்பள்ளி மதிப்பெண்களுடன் உயர்கல்விக்கான மாணவரின் ஆர்வம், நாட்டம், பணியனுபவம் ஆகியனவும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

மாணவர்களுக்கான உயர்கல்வி நுழைவுரிமை, இப்பொழுது பலநாடுகளில் அந்நாட்டிற்கு ஏற்ற வகையில் மாற்றம் பெற்று வருகிறது. தான்சானியா (TanZania), கியூபா போன்ற நாடுகளில் உயர்கல்வியானது சமுதாயத்தின் வளர்ச்சிநோக்கில் கருதப்படுகின்றது. எனவே, இந்நாடுகளில் பணியனுபவம் உள்ளவர்களுக்கு உயர்கல்வியில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. சுவீடன் நாட்டிலுள்ள ஒருவர் 25 வயது நிறைவுற்று நான்காண்டுப் பணியனுபவம் பெற்று இருந்தால், வழக்கமான பள்ளிச் சான்றிதழ்கள் இன்றியே உயர்கல்வியில் நுழைவுரிமை பெற்றுக் கல்வி பயில முடிகின்றது. இங்கிலாந்தின் வெளிப் பல்கலைக் கழகத்திலும் (United Kingdom's Open University) இப் பல்கலைக் கழகத்தைப் பின்பற்றி இந்தியா போன்ற பிறநாடுகளில் தோன்றியுள்ள வெளிப் பல்கலைக் கழகங்களிலும் முதலில் உயர்கல்வி வாய்ப்பினை இழந்தவர்களுக்கு இரண்டாம் முறையாக வாய்ப்புத் தரப்படுகின்றது. வெளிப்பல்கலைக் கழகங்களில் நுழைவிற்குத் தேவையான பட்டங்களும், வகுப்பு வருகையும் உயர்கல்வி பெறுவதற்குத் தடையாக இருப்பதில்லை.

இந்தியாவில் உயர் கல்வி நுழைவுக்கு மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் வெற்றிச் சான்றிதழே அடிப்படையாகும். மருத்துவம், பொறியியல், சட்டவியல், வேளாண்மை போன்ற தொழில்துறை சார்ந்த உயர்கல்விக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்படுகின்றது. மேல்நிலைப் பள்ளி மதிப்பெண், நுழைவுத் தேர்வு மதிப்பெண் ஆகியவற்றோடு மாணவரின் சமுதாயப் பொருளாதாரப் பின்னணியும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. பெற்றோரின் ஆண்டு வருமானம், மாணவரின் வகுப்பு (Casts) ஆகியனவும் உயர் கல்வி நுழைவு முறையில் கணக்கில் கொள்ளப் படுகின்றன.

துணை நூல்கள்:

**Bowles**; **F.**, The International Study of University Aministrations: Access to Higher Education, Vol.1, UNESCO, Paris, 1963.

**Ceych**, L., Acess and Structure of Post-Secondary Education, Institute of Education, European Cultural Foundation, Paris, 1975.

**உயர்குடி மணம்**: தாழ்ந்த குலப்பெண் உயர்குடி ஆடவனை மணப்பதே உயர்குடி மணம் (Hypergamy) எனப்படும். உலகத்தின் பல்வேறு இடங்களில் இந்த உயர்குடி மணம் காணப்பட்ட போதிலும், இந்தியாவிலேயே மிகுதியாக வளர்ச்சியடைந்த இதன் வரிசை முறையினைக் காண்கிறோம். மேற்கு வங்காளம், குசராத்து, இராசசுத்தான், கேரளா ஆகிய இடங்களிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகள் காணப்படுகின்றன.

சாதிகளுக்குள் தரப்படுத்தப்பட்ட கால்வழி குழுக்களுக்குள்ளாகவோ உட்பிரிவுகளுக்குள்ளாகவோ உயர்குடி மணம் நடைபெறலாம். கிளைச் சாதி அல்லது பல்வேறு சாதியினரிடையேயும் இத்தகைய மணம் ஏற்படலாம்.

வங்காளத்தில் இரார்கி (Rarhi) பிராமணர்கள், அவரவர் தகுதிகேற்பப் பலவகை குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். இவற்றுள் உயர்குழுவைச் சார்ந்தவர்கள் தங்கள் தகுதிக்குக் குறைந்த இடத்தில் பெண் எடுத்தாலும், தங்கள் மகளைத் தங்கள் தகுதிக்குக் குறைந்த ஆடவருக்குத் திருமணம் செய்து தர மாட்டார்கள். தகுதி குறைவாக இருக்குமிடத்தில் மாப்பிள்ளைப் பணமாக மிகுந்த தொகையினைக் கொடுத்து, அவர்கள் மணமகனின் தகுதியினை உயர்த்துகின்றனர். இதனால் உயர்சாதிப் பெண்டிருக்கு மணமகன் கிடைப்பது கடினமாகிறது. திருமணச் சந்தையில் பெண்களை விட ஆண்களே மிகுதியாகத் தேவைப்படுகிறார்கள். இதனால் மேல்மட்டத்தைச் சார்ந்த மணமகன் பல பெண்களை மணப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளான். தம் பெண்களுக்குத் தகுந்த மணமகனைத் தேடுவதில் உயர் சாதித் தகப்பனார்களுக்கிடையே ஏற்படும் போட்டியே பெண்களுக்குச் சிறு வயதிலேயே திருமணம் முடிக்கும் வழக்கத்தினை ஏற்படுத்தியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

குசராத்தில் பட்டிதார் (Patidar) சாதியினரிடை தரப்படுத்தப்பட்ட, வழிவந்த குழுக்களிடையேயும் உயர்குடி மணம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராசபுத்திரர்களிடையே காணப்படும் உயர்குடி மணத்திலும் சாதிகள் அல்லது உட்சாதிகள் திருமண உறவு அலகுகளாக அமைந்து, பட்டிதார்களிடையே உள்ளது போன்றே கால்வழிக் குழுக்களாகவேயுள்ளன. இராசபுதனக்கால்வழிக்குழுக்கள் புறமணக் கால்வழிக் குழுக்களாகும். இவற்றுள் மேற்குக் கால்வழியினரின் தகுதி கிழக்குக் கால்வழிச் சார்ந்தோரைவிட உயர்ந்துள்ளது. எனவே, இவர்கள் திருமணத்தில் மணமகன் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவராயும், மணப்பெண் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவராயும் இருப்பர். இராசபுத்திரரிடையே திகழும் இத்தகைய திருமணங்களின் செயல்முறைகளுக்கான காரணம் தெளிவாக விளங்கவில்லை. இதற்கு அரசியல் காரணம் ஏதேனும் இருக்கலாம் என்று ஊக முடிபினைக் கூறலாம். எனினும், இராசபுத்திரரிடை நிலவி வந்த தகுதி, அரசியல் அதிகாரம் ஆகியவற்றைத் தெளிவாக, முறைப்படி அறிந்து கொண்ட பின்னரே இதைப்பற்றி அறுதியிட்டுக் கூறவியலும்.

நாயர்களிடையுள்ள உயர்குடி மணத்தின் அரசியல் செயல்முறைகளைப் பற்றி மில்லர் (Miller) என்னும் மானிடவியலாளர் தெளிவாக விளக்கியுள்ளார். நாயர்கள் பல உட்சாதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தனர். திருமணங்கள் அந்த உட்சாதிக்குள்ளாக அல்லது அதனினும் உயர்சாதியுடன் நடைபெற்றன. அவர்கள் மேற்கொண்டிருந்த அரசியல் பொறுப்பினைக் கொண்டே உட்சாதிகள் வரையறுக்கப்பட்டன. நாயர்குலப் பெண்களைச் சத்திரியர் (Kstriyas) சமந்த்தான் (Samanton) போன்ற அரசக் குடியினரும் நம்பூதிரிப் பிராமணரும் மணம் செய்து கொள்ளலாம் என்ற நிலையும் காணப்பட்டது. பொதுவாக மணப்பெண்ணும் மணமகனும் ஒரே அரசியல் பகுதியினைச் (Political Unit) சார்ந்தோராயிருப்பர். இதனால், அவ்வமைப்புக்குள் மட்டும் உறவுமுறை ஏற்பட்டுப் பிற பகுதிகளிலிருந்து அது ஒதுங்கி நிற்கிறது. புறமணக் கால்வழி அமைப்பின் அடிப்படையில் சாதியினர் அகமணத்தை மேற்கொள்ளும்போது, சிறிய அளவேயுள்ள அரசுக் கால்வழியினர் அல்லது நம்பூதிரிச் சாதிக் கால் வழியினர் தகுந்த மணமக்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தங்களது அரசியல் அமைப்பை விட்டுப் புறத்தே செல்ல வேண்டியுள்ளது.

நம்பூதிரிகளின் இளைய புதல்வர்களுக்கும் நாயர் குலத் தாய்வழிக் கால்வழி மகளிருக்கும் ஏற்படும் உயர்குடி மணத்தால், நம்பூதிரிகளின் சொத்துகள் கைம்மாறாமல் பாதுகாக்கப்படுகின்றன. நம்பூதிரிக் குடும்பத்தின் தலைமகனும் அவன் தந்தை வழி வந்தோர் மட்டுமே சாதிக்குள் திருமணம் புரிந்து கொள்ளவியலும்.

உயர்குடி மணம் பற்றிய துறையினைக் குறித்துப் பல ஊகங்களும் விளக்கங்களும் அளிக்கப்பட்டிருந்தாலும்அவைகுறித்துப்பொருத்தமானதும் ஆதாரமுறையிலமைந்ததுமான கோட்பாடு இதுவரை தோன்றவில்லை. இந்தியாவில் ‘உயர்குடி மணங்கள்’ ஆதரிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும் ‘கீழ்க்குடி மணங்கள்’ முழுமையாகக் கண்டிக்கப்பட்டும் வருகின்றன என்ற கருத்தை ஆதரிக்கும் வகையில், ஏற்புடைய அமைப்புமுறை விளக்கம் இதுவரை காணப்படவில்லை,

ஒரு நாட்டின் மீது படையெடுக்கும் குழுக்கள் முதலில் அந்நாட்டு உயர்குடி மக்களுடன் மணஉறவு கொண்டு பின்னர், அந்த மண உறவுகளை விரிவுபடுத்திக் கொண்டனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் எழுந்ததே ‘சாதி’ எனக் கூறும்போது, உயர்சாதி மணக் கோட்பாட்டை இரைசிலி (Risely) பயன்படுத்துகிறார். இத்தகைய கோட்பாடுகள் பிற மானிடவியலாளரால் ஏற்கப்படவில்லை.

மேற்கூறிய நான்கு எடுத்துக் காட்டுகளும் ஒரே தன்மையான அமைப்பு முறைச் சிறப்பினைக் கொண்டிருக்கவில்லை. இராசபுத்திரர்கள், பட்டிதார்கள் ஆகியோரிடம் ஓரளவுக்கும், நாயர்களிடையே முழுமையான அளவுக்கும் அரசியல்தொடர்பு காணப்படுகிறது.உயர்குடித் திருமண முறையில் அரசியல் தொடர்புகளுக்குள் அமைப்பியல்சார் விளக்கமொன்று காணப்படல் வேண்டும்.

இதற்கு மாறாக, அரசியல் முதன்மை வாய்ந்த குழுக்களுக்கிடையேயான உறவுமுறைகளின் அமைப்பாக வங்காள உயர்குடி மணம் அமையவில்லை. மாறாக, இதனைக் கோட்பாட்டு அளவிலானசாதி குறித்த கட்டமைப்பில் (Frame Work), நெகிழ்வான இயக்கத்தை(Mechanism of Elasticity) அறிமுகப்படுத்தும் கட்டமைப்பில்லமாய்க் காணல் வேண்டும். இவ்வழிமுறையிலேயே செல்வர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் காணப்படும் உட்சாதிகளுடன் மண உறவு கொண்டு, தமது சொந்த மதிப்பையும் தங்கள் கால்வழி வந்தோர் சிலரின் சமூக நிலையையும் (Status) உயர்த்திக் கொள்ள முடிகிறது. இதற்கு நேர்மாறாக, நாயர் உயர்குல மணமோ குறுகிய சாதிஅகக்குடி மணத்திலிருந்து (Narrow Caste Endogamy) தோன்றும் அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு

காணும் வகையிலுள்ளது. அதே காலத்தில் சாதிகளின் தனித்தன்மையைப் படைக்கக் கூடிய எதனையும் இவர்கள் செய்வதில்லை. சாதி எல்லைகளைக் கடந்த உயர்குடி மணங்கள் உறவுமுறைத் தொடர்புகளை உருவாக்குவதில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

தாய்வழித் தோன்றுவதாலும் தந்தையின் உரிமைகளும் கடமைகளும் முழுவதுமாக நீக்கப்படுவதாலும் உயர்குடி மண இணைப்பால் பிறக்கும் குழந்தைகள் தாய்வழியினையே சாரும் என்பது உறுதியாகிறது. திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் வீட்டாரிடையேயும் மற்றும் இத்தகைய திருமணங்களால் உருவாகும் குழந்தைகளுக்கும் அவர் தம் உறவினருக்குமிடையேயும் நிலவும் தன்மையையும் நெருக்கத்தினையும் பொறுத்தே, உறவு முறைத் தொடர்புகளைச் சாதி அல்லது உட்சாதி எல்லைகளைக் கடக்க அனுமதிக்கும் உயர்குடி மண இயக்கத்தின் சிறப்புத் தன்மையினை அறுதியிட்டுரைக்க இயலும். ம.ந.பு.

துணை நூல்கள்:

**Hutton, J.H.**, Caste in India: Its Native Function and Origins, Oxford University Press, Bombay, 1961.

**Kothari, R.R.** (ed.), 'Caste and Political Mobilization in a Gujarat District' in Caste in Indian Politics, Orient Longmans, New Delhi, 1970.

**Mayor, Adrian.C.**, The Dominant Caste in a Region of Central India, South Western Jonrnal of Anthropology, XIV, No.4, 1958.

**Pocock, David. F.**, Kanti and Patidar: A Study of the Patidar Community of Gujarat, Clarendon Press, Londen 1972.

**உயர்குடியாக்கம்**: இந்தியச் சமுதாயங்களில் பழங்குடியினரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் கீழ்க்குடியினரும் உயர்குடியினரின் பண்பாட்டை ஏற்றுக் கொண்டு, சமுதாயத்தில் தங்களின் தகுதிகளை உயர்த்திக் கொள்ளும் முறையை விளக்கும் சமுதாய மாற்றக் கோட்பாடுகளுள் ஒன்றே உயர்குடியாக்கம் (Sanskritization) ஆகும். இந்திய மானிடவியலாரான எம். என். சீனிவாசு (M.N. Srinivas) என்பவர் 1952-இல் வெளியிட்ட 'கூர்க்கு மக்களிடையே சமயமும் சமுதாயமும்' (Religion and Society among the Coorgs) என்னும் நூலில்இக்கோட்பாட்டினை முன்வைத்தார்.

இந்தியச் சமுதாயம் சாதிகளின் அடிப்படையில் அமைந்தது. ஒருவனின் சமூகத் தகுதி பெரும்பாலும் சாதிகளின் வழி அமைகிறது. பல்வேறு சாதிகளிடையே கீழ்க்குடியினர் சமுதாயப் படிநிலையில். (Social Hierarchy) தங்களை உயர்த்திக்கொள்ள உயர்குடியினரின் மரபுகளையும் சடங்குகளையும் கருத்துகளையும் வாழ்க்கை முறைகளையும் ஏற்றுக் கொள்வர். மேலும், தங்கள் சடங்குகளையும் வழிபடும் தெய்வங்களையும் வேதங்கள் காட்டும் நெறி முறைகளுக்கேற்ற முறையில் மாற்றிக் கொண்டு, சமுதாயப் படிநிலையில் தங்களை உயர்த்திக் கொள்ள முயலுகின்றனர்.

வேத காலம் முதற்கொண்டே சமயத்தில் ஈடுபாடும், சடங்கில் நாட்டமும் கொண்ட பார்ப்பனர்களின் வாழ்க்கை முறை பிறசாதியினரால் ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறி என்று கருதப்படுகிறது. பார்ப்பனர் பன்னெடுங் காலமாகவே சமுதாயத்தில் உயர்மட்டத்தில் இருந்து வருதல் இதற்குக் காரணம் எனலாம். அவர்களை மதிக்கும் போக்கும், அவர்களின் வாழ்க்கை முறை உயர்ந்ததெனக் கருதும் நிலையும் பிற சாதியினரிடம் பல நூற்றாண்டுகளாகவே நிலவி வருதலை உணரலாம். இவ்வாறு சமுதாயப் படிநிலையில் அவர்கள் உயர்ந்து நிற்றலால், அவர்களின் சமயமும் சடங்குகளும் மற்றச் சாதியினரிடையே பரவத் தொடங்கின. அவர்களின் கோட்பாட்டினைப் பின்பற்றிக் கீழ்நிலைச் சாதியினர் மேல்நிலை அடைதற்கு முயல்கின்றனர் என்றும், இதுவே இந்தியச் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்குத் துணை நிற்கின்றன என்றும் சீனிவாசு கூறுவார்.

பார்ப்பனரின் பண்பாட்டைப் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என்பது சீனிவாசின் ஆரம்பக்காலக் கருத்தாகும். இதன்படி வடமொழி இலக்கியத்தில் வரும் சமயம், உலகியல் போன்ற பொருள் பற்றிய மதிப்புகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என்றுணரலாம்.

உயர்குடியாக்கத்தில் நான்கு வகைகள் உள்ளன. அவை: 1. பார்ப்பனவகை உயர்குடியாக்கம், 2. அரச அல்லது சத்திரியவகை உயர்குடியாக்கம், 3. வணிகவகை உயர்குடியாக்கம் 4. அரிசனவகை உயர்குடியாக்கம். முதல் வகையில், பார்ப்பனர்களை முன்மாதிரிக் குழுவாகக் (Reference Group)கொண்டு அவர்களின் மரபுகளை ஏற்க முற்படுபவர்கள் அடங்குவர். பெரும்பாலும் பார்ப்பனருக்குக் கீழுள்ள சாதியினர் இவ்வகை மாற்றத்திற்குத் தங்களை ஈடுபடுத்துவர். இது மேலே விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வகையில், கீழ்ச்சாதிகள் அரசர் அல்லது சத்திரியர்களின் வாழ்க்கை முறையைத் தழுவி மேலே உயர முயல்வதாகும். மூன்றாம் வகையான வணிக வகையில், கீழ்ச்சாதிகள் வணிக மக்களின் வாழ்க்கை மரபுகளை ஏற்றுக் கொண்டு மேலே உயர முயல்வதாகும். நான்காம் வகையில் சில சாதியினர் அரிசன அல்லது சூத்திரர் உயர்சாதி யாகக் கருதப்படுவதுண்டு. இவ்விடங்களில் அரிசனங் களிலே கீழ்நிலையிலுள்ளவர்கள் அல்லது அரிசனங் கள் அல்லாத பிற கீழ்ச்சாதிகள் அரிசனப் பொதுக் கோட்பாட்டைப் பின்பற்றி மேலே உயர முயல்வ தாகும்.

இந்த நான்கு வகை உயர்குடியாக்கங்களிலும் இரண்டு பொது நிலைமைகள் இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஒன்று, எந்த இடத்தில் எந்தச் சாதி சமுதாயப் படித்தர நிலையில் முதன்மை பெற்றதாக இருக்கிறதோ, அந்த இடத்தில் அந்தச் சாதியைச் சார்ந்த கீழ்ச்சாதிகளில் உயர்குடியாக்கம் நிலவுகிறது. ஒரு குறிப்பிட்ட சாதியின் முதன்மைக்கு அடிப்படைக் காரணங்கள் நிலவுடைமை, மக்கள் தொகைப்பெருக்கம், குறிப்பிட்ட இடத்தில் சமுதா யப் படிநிலையில் மேல் நிலை போன்றவையே ஆகும். இரண்டாவது,அந்த இடத்தில் அச்சாதியைச் சாராத பிற சாதிகள் அதை நோக்கி மேலே உயரும் உயர் குடியாக்கமும் நிலவுகிறது.

எடுத்துக்காட்டாக, பழங்குடிகளிடையே காணப் படும் உயர்குடியாக்கமும் சாதி வழக்கில் சேர்க்கப் படாத பொதுப்படை உயர் குடியாக்கமும் ஆகும். இன்றைய இந்தியாவில் பழங்குடிகள் தங்களைக் கீழ் நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயர்த்தி மாற்றம் செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். இதற்காக அச்சாதியினர் பிராமண வகையையோ அல்லது பிற சாதிவகையையோ தழுவிக் கொள்ள முன்வருகிறார் கள். அடுத்துப் பொதுப்படை உயர்குடியாக்கத்தால் சாதி வழக்கை ஆராயாமல் சமுதாயப் பொதுப்பண் பாட்டை ஆராய்ந்து பார்க்க முடிகிறது. கோ.க.

துணை நூல்கள்:

Srinivas, M.N., Social Change in Modern India, Orient Longmans, Bombay, 1972.

Srinivas, M.N., Caste in Modern India and Other Essays, Asia Publishing House, Bombay, 1962.

Srinivas, M.N., Religion and Society among the Coorgs of South India, Oxford University Press, London, 1952.

**Dube**, S.C., Towards a Sociology of Culture in India, Prentice-Hall, New Delhi, 1965.

**Singh Yogendra**, Modernizatian of Indian Tradition: A Systematic Study of Social Change Thomson Press, 1973.

***உயர் குடியாட்சி***: பிளேட்டோ கூறிய உயர் குடியாட்சி: பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளரான பிளேட்டோ (கி.மு. 427–கி.மு. 347) தாம் எழுதியுள்ள (இலட்சியக்) குடியரசு (Republic) என்ற நூலில் இலட்சிய அரசாங்கத்தின் நோக்கம் நீதியைக் (Justice) காண்பதே என்ற கருத்தை மையமாக வைத்து, அரசின் தோற்றத்திற் குக் காரணம், இலட்சிய அரசில் ஆளுவதற்குரிய இளைஞர்களுக்கான கல்விப் பயிற்சித் திட்டம், பொதுவுடைமை முதலியவற்றைப் பற்றித் தமது கருத்துரைகளைக் கூறுகிறார்; பின்னர்த்தமது இலட் சிய அரசின் இயல்புகளை மனத்தில் வைத்துக் கொண்டே, தம் காலத்தில் கிரீசில் நடைமுறையில் இருந்துவந்த அரசாங்க வகைகளை மதிப்பிட்டுக் கூறுகிறார்.

அரசுகளும் அரசியலமைப்பு வகைகளும் மனிதப் பண்புகளைப் பொறுத்தே அமைகின்றன. உயர்குடி யாளர் ஆட்சியின் தனித்தன்மையாவது அதில் மெய் யறிவுடைய ஞானிகளே ஆட்சி செய்வர் என்பதாம். ஞானிகள் நல்லியல்புகளெல்லாம் உடைய முழுப் பண்பாளர் ஆவர். ஏனையோர் ஓரளவே பண்புடை யவராதலால் அவர்கள் ஆளுதற்கு உரியரல்லர். ஆளு வோரிடையே எந்தப் பண்பு தலைமையாக விளங்கு கிறதோ, அந்தப் பண்பிற்கேற்பவே அதை அடிப் படையாக வைத்தே ஆட்சி வகையும் அமையும். காவலர்களாக இருந்து (Guardians) ஆட்சி அதிகாரத் தைக் கையாண்ட மெய்யறிவாளர்கள் (Philosophers) நீதி அல்லது முறைமை (Justice) என்ற நோக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டே கையாண்டனர். இதுவே இலட்சிய அரசில் காணப்படும் உயர்குடி யாளராட்சி ஆகும். பின்னர், அறிவு வளர்ச்சியில் தாழ்ந்த வீரர்களாட்சி (Timocracy) தோன்றிற்று. இவர்கள் தங்களுக்குப் புகழ் தேடும் நோக்கத்தோடு அதிகாரத்தைக் கையாண்டனர். மூன்றாவது, தாழ்ந்த ஆட்சி வகையாகிய செல்வச் சிறுகுடியின ராட்சி (Oligarchy) தனியார் சொத்துரிமை முறை யினின்றும் தோன்றியதாகையால், இவர்கள் சொத்துத் தகுதியை ஆதாரமாகக் கொண்டு அரசிய லதிகாரத்தைக் கையாளுகின்றனர். இது பல குறை பாடுகளை உடையது. நான்காவது, தாழ்ந்தவகையே குடியாட்சி (Democracy) ஆகும். செல்வச் சிறு குடி

யினருடைய ஆட்சியிலிருந்த நிலைமையை இவ்வாட்சியினர் மாற்றி, மக்களுடைய சுதந்திரம் அல்லது உரிமையைக் (Freedom or Liberty) காப்பாற்றும் பொருட்டு அதிகாரத்தைக் கையாளுகின்றனர். இதற்கடுத்த நிலையிலுள்ளதும் எல்லாவற்றுக்கும் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளதுமாகிய ஆட்சி வகை சருவாதிகாரம் (Tyranny) ஆகும். இது ஆட்சியாளரின் தன்னலத்துக்காகவே நடைபெறுவதாகும். பிளேட்டோ இவ்வாறு உயர் குடியாட்சி (Best Government) என்பது மெய்யறிவாளருடைய ஆட்சி என்று கூறுகிறார்.

அரிசுட்டாட்டில் வகுத்த அரசியலமைப்பு வகைகள்: (அரிசுடாட்டில், கி.மு. **384—கி.மு. 322**): அரிசுட்டாட்டிலின் கருத்துப்படி, இறைமை அதிகாரம் தங்கி இருக்கும் அரசியலதிகாரிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும், அரசாங்கச் செயல்கள் எந்த நோக்கத்துக்காகக் கையாளப்படுகின்றனவோ அந்த நோக்கங்களுக்குத் தக்கவாறும் அரசியலமைப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன. அரசாங்கத்தின் நோக்கமே அதைத் தூய்மையானது என்றும் (Pure Form), தூய்மையற்ற மாசுபட்ட அல்லது சிதைந்தவகையானது என்றும் (Corrupt Form) பிரித்து அறிவதற்கு அளவுகோலாகும். ஓர் அரசாங்கம் தன்னுடைய எல்லா மக்களுடைய முழு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு செயற்படுமானால் அது தூயவகையானதென்றும், ஆளுவோருடைய நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுமானால், அது தூய்மையற்ற வகையைச் சேர்ந்தது என்றும் ஒரு பொது விதியை வகுத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் ஆட்சித் தலைமையைக் கைப்பற்றுவதற்குச் (1) சுதந்திர அல்லது உரிமைக் கோட்பாடு (Principle of Freedom), (2) உடைமை அல்லது சொத்துக் கோட்பாடு (Principle of Wealth), (3) தகுதி அல்லது பண்புக் கோட்பாடு (Principle of Virture), (4) உயர்குடிப்பிறப்புக் கோட்பாடு (Principle of Good Birth) முதலிய 4 கோட்பாடுகள் போட்டியிடுகின்றன. சுதந்திர, சமத்துவக் கோட்பாட்டினடிப்படையில் அரசாங்க அதிகாரம் கையாளப்படுமாயின் அவ்வரசியலமைப்பு குடியாட்சி வகை ஆகும். அரசாங்க அதிகாரப் பகிர்வு செல்வத்தை ஆதாரமாகப் பெற்றிருந்தால் அது செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy) ஆகும். அரசியலதிகாரம் பண்பு அல்லது தகுதி (Virtue or Ability) என்ற கோட்பாட்டினடிப்படையில் கையாளப்படுமாயின் அது உயர்குடிப்பிறந்தோராட்சி (Aristocracy) ஆகும்.

அரிசுட்டாட்டில் சமுதாயச் சூழ்நிலைகளை அளவுகோலாகக் கொண்டு, அவற்றிற்கேற்பப் பல்வேறு அரசியலமைப்பு வகைகளை மிகச் சிறந்த வகை (Excellent Form) என்ற நிலையிலிருந்து படிப்படியாகத் தாழ்ந்த வகைகள் என்ற நிலையில் பாகுபடுத்திக் கூறுகிறார்.

1. கருத்தளவுக்கு ஒத்த முடியாட்சி (Ideal Royalty).
2. கலப்பில்லாத உயர்குடியாட்சி (Pure Arsitocracy); இது சுதந்திர, சொத்துக் கோட்பாடுகளோடு அமையாமல் தகுதி என்ற கோட்பாட்டின் மீது மட்டும் அமைந்தது.

| அரசியலமைப்பு வகைகள் | | |
|---|---|---|
| தலைமை அல்லது இறைமை அதிகாரம் | தூய அரசாங்க வகை | தூய்மையற்ற அரசாங்க வகை |
| 1. ஒருவரிடத்து இருந்தால் | முடியாட்சி (Monarchy) | சருவாதிகாரம் (Tyranny) |
| 2. சிலரிடத்தில் இருந்தால் | உயர்குடியினராட்சி (Aristocracy) | செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy) |
| 3. எல்லாக் குடிமக்களிடத்திலும் இருந்தால் | பாலிட்டி (Polity) என்ற மிதமான குடியாட்சி | குடியாட்சி அல்லது (Democracy) மக்களாட்சி |

3. கலவையான உயர்குடி ஆட்சி (Mixed Aristocracy). இது சொத்து, சுதந்திரம், தகுதி ஆகிய வற்றின் அடிப்படையில் அமைந்தது.

4. மிதமான குடியாட்சி (Polity).

5. மிதமான போக்குடைய செல்வராட்சி (Moderate Oligarchy).

6. தீவிர குடியாட்சி (Extreme Democracy).

7. தீவிரமான செல்வராட்சி (Extreme Oligarchy).

8. சர்வாதிகார ஆட்சி (Tryanny).

உயர்குடியினராட்சி திறமை அல்லது தகுதி என்ற கொள்கையினடிப்படையில் அமைந்துள்ளது. ஆயினும் திறமைமிக்க குடிமக்கள் ஆளும்போது ஆட்சியில் தாங்கள் பங்கு பெறுவதற்காகச் செல்வம் மட்டுமே மிகுந்த வகுப்பார் அதில் தலையிடுவாராயின், அப்போது உயர்குடியினராட்சி (Aristocracy) செல்வச் சிறுகுடியாட்சியாக (Oligarchy) மாறும். இவ்வாறு அரிசுட்டாட்டில் உயர்குடியாட்சி புரட்சிக்கு உள்ளாகும் காரணத்தைக் கூறுகிறார். இதைத் தடுப்பதற்குரிய பாதுகாப்பு, ஆட்சிச் சலுகைகளைப் பெற்றவர்களிடையே குடியாட்சிச் சமத்துவக் கோட்பாடு உறுதியாகச் செயற்படும்படி செய்தலே ஆகும்.

அரசியல் வகைகளை அரிசுட்டாட்டில் எடுத்துக் காட்டுவதற்குக் கையாண்ட அளவுகோல்கள் அரசாங்கத்தின் நோக்கத்தைச் சுட்டிக் காட்டுகின்றபடியால் அவை பாராட்டப்படுதற்கு உரியவையே ஆகும்.

துணை நூல்கள்:

**Grube, G.M.A.**, Plato's Thought, London, 1935.

**Allan, D.J.**, The Philosophy of Aristotle, London, 1952.

**Barker Ernest**, The Political Thought of Plato and Aristotle, London, 1906.

**உயர்தர அதிகாரம்**: ஆட்சியாளர் எனப்படுவோர் உயர்தர அதிகாரமுடையவர்களாவர். எவருடைய அதிகாரத்துக்கு எதிராகச் சட்டத்தில் மேல் முறையீடு செய்ய இயலாதோ, அவருடைய அதிகாரம் தலைமை அதிகாரம் (Sovereignty) எனப்படுகிறது. அரசியல் வரலாற்றில் அரசாங்க அதிகாரிகள் இறைமை அல்லது தலைமை அதிகாரத்தைக் கையாளுகின்றனர் என்னும் கருத்து பண்டைக் காலத்தில் உரோமானியர்களால் முதலில் நடைமுறையில் கையாளப்பட்டு உரோமானியச் சட்டத்திலும் கையாளப்பட்டது.

உரோமானியர் காலத்தில்: உரோம் நகர அரசு முடியாட்சி அமைப்பில் (Monarchy) இருந்த காலத்தில் (கி.மு. 753 முதல் கி.மு. 510 வரை) உரோமை ஆண்ட அரசர்கள் செலுத்தி வந்த அதிகாரம் உயர்தர அதிகாரம் (Imperium) எனப்பட்டது. இவ்வதிகாரம் (1) உயர்தர நீதி வழங்கும் அதிகாரம், (2) சமூக நலனுக்காகக் கடவுளர்க்கு வழிபாடுகளும் பலிகளும் நடத்தும் அதிகாரம், (3) போரில் தலைமைத் தளபதியாக இருந்து போரை நடத்தும் அதிகாரம் ஆகிய மூவகை அதிகாரங்களையும் குறித்தது.

முடியாட்சியில் உயர்தர அதிகார வரம்புகள்: முடியாட்சிக் காலத்தில் அரசர்களின் உயர்தர அதிகாரத்துக்கு வரம்புகள் இல்லை. என்றாலும்,இரண்டு உரோமானிய வழக்கங்கள் (Customs) உயர்தர அதிகாரத்துக்கு வரம்புகளாக அமைந்தன. ஒன்று, அரசரால் அமர்த்தப்பட்ட 300 உறுப்பினர்களை உடைய ஆலோசனை மன்றத்தின் (Senate, an Advisory Body) கருத்துகளை அரசர் கேட்டறிந்து, அவற்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லாவிட்டாலும் அவற்றை ஏற்றே ஆட்சி செய்தார். இரண்டு, அரசர் குற்ற இயல் வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும்போது, குற்றவாளிக்கு அவர் அளிக்கும் மரணதண்டனைத் தீர்ப்பை மக்கள் மன்றத்தின் (Comitia Curiata) இறுதி ஒப்புதலுக்கு விடுதல் வேண்டும்.

குடியரசில் உயர்தர அதிகார வரம்புகள்: (கி.மு. 510 முதல் கி.மு. 27 வரை) உரோமானிய நகர அரசில் கி.மு. 510-ஆம் ஆண்டில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு, குடியரசு (Republic) நிறுவப்பட்டது. அப்போது, அரச பதவி நீக்கப்பட்டாலும் அரசர் செலுத்தி வந்த உயர்தர நீதி, இராணுவ அதிகாரங்களை (Imperium) உரோமானியக் குடிமக்கள் தங்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிகாரிகளிடம்(Consuls)ஒப்படைத்து, இவ்வதிகாரிகளும் தங்களுடைய ஓராண்டு ஆட்சிக் காலத்தில் கொடுங்கோலர்களாக மாறி, குடிமக்களுடைய உரிமைகளையெல்லாம் அழித்து விடாதபடி அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, இவ்வதிகாரிகளின் இராணுவ, நீதி, உயர்தர அதிகாரிகளுக்குப் பல வரம்புகளை அமைத்தனர். இவ்வதிகாரிகளின் பதவிக்காலமும் ஓராண்டுதான். ஓர் அதிகாரி விடுக்கும் ஆணையை மற்ற அதிகாரி தள்ளுபடிசெய்தற்கு அதிகாரம் பெற்றிருந்தார். உயர்தர இராணுவ அதிகாரத்தை உரோம் நகரத்தின் எல்லைக்குள் கையாளுதல் இயலாது. மேலும், இவ்வதிகாரி ஓர் உரோமானியக் குடியாளின் உயிரையோ நிலையையோ பாதிக்கும்படியான தீர்ப்பை வழங்கினால், அத்தீர்ப்பை

மக்கள் மன்றத்தின் இறுதி ஒப்புதலுக்கு(Final Ratification) விடுதல் வேண்டும். மக்கள் மன்றம் அத்தீர்ப்புக்கு ஒப்புதல் அளித்தால்தான் அத்தீர்ப்புச் செல்லுபடியாகும்.

உரோமானியக் குடிமக்களுள் உயர்ந்த வகுப்பினர் (Patricians) எல்லா அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளையும் பெற்று நல்ல நிலையில் வாழவும், உரிமை இன்றி வறுமையில் வாழ்ந்த பெரும்பாலான எளிய மக்கள் (Plebeians)உயர்வகுப்பினருடன் சமஉரிமை பெறும் பொருட்டும் போராட்டங்களை நடத்தினர். அதன் விளைவாக அவர்களுடைய உயிரையும் உரிமைகளையும் உயர்வகுப்பாரின் எதேச்சாதிகாரத்தினின்று பாதுகாக்கும் பொருட்டு, எளியோர்க்கெனத் தனியாகப் புதிய அலுவலர்களை (Tribunes) ஆண்டுதோறும் தங்களிடையே இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றனர். இந்தப் புதிய அலுவலர்களுக்கு எதேச்சாதிகார ஆணைகளைத் தள்ளுபடி செய்து, தங்களுடைய வகுப்பாரின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய அதிகாரம்(Power of Intercession)இருந்தது. ஆகையால், இவ்வலுவலரின் மறுப்பாணை அதிகாரமும் மேட்டுக் குடியினரின் உயர்தர அதிகாரத்துக்கு ஒரு வரம்பாக இருந்தது.

குடியரசுக் காலத்தில் உரோமானிய அரசியலமைப்பில் ஆலோசனை மன்றத்தைத் தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறுசில மன்றங்களும் இருந்தன.

பேரரசுக் காலத்தில் அதிகாரக் குவிப்பு: (கி.பி. 4-ஆம் நூ.வரை): உரோமானியக் குடியரசு திறமைமிக்க படையினால் மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ளநாடுகளையெல்லாம்வென்று, ஒருபேரரசை (Empire) ஆளும் தகுதி பெற்றது. ஆகையால், அக்குடியரசின் அரசியலமைப்பிலும் தக்க மாறுதல்கள் ஏற்படுதல் தவிர்க்க இயலாததாயிற்று. குடியரசின் அரசியலமைப்பு நான்கு அடிப்படைகளில் அமைக்கப்பட்டிருந்தது: (1) பல அதிகாரிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட உயர் தர அதிகாரம், (2) அதிகாரிகளுக்குப் பதவிக்காலம் குறுகலாக ஆக்கப்படுதல், (3)நாட்டின் முக்கியமான கேள்விகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்கள் மன்றத்துக்கே இருத்தல், (4) அதிகாரியின் உயர்தர இராணுவ அதிகாரம் உரோம் நகர அரசினுள் கையாளப்படாதவாறு தடை செய்யப்படுதல். எந்த ஒரு அரசாங்க அதிகாரியும் சருவாதிகாரியாக மாறிவிடாதபடி தடுக்கும் பொருட்டு இந்த நான்கு அடிப்படைகளில் குடியரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, அதில் அதிகாரிகள் ஒருவர் விடுக்கும் ஆணையை மற்றவர் மறுப்பாணை வாயிலாகத் தடுக்கக் கூடிய அதிகாரமும் பெற்றிருந்த படியால், இக்கோட்பாடு தடை-சமன் கோட்பாடு (Principle of Checks and Balances)எனப்பட்டது. உரோமானியப் பேரரசைத் திறம்பட ஆளுதற்குத் திறமையான அதிகாரி ஒருவர் நிலையாக இருத்தல் வேண்டுமென்றும், குறுகிய ஆட்சிக் காலத்தில் தடை-சமன் விதிப்படி ஆளும் அதிகாரிகளால் பேரரசைத் திறமாக ஆளுதல் இயலாதென்றும் உரோமானியர் உணர்ந்தனர். இத்தேவையை நிறைவு செய்த திறமையாளரே அகசுடசு சீசர் (Augustus Caesar) ஆவார். சூலியசு சீசரின் (Julius Caesar) பேரராகிய இவர் வெற்றி வீரராகவும், ஆட்சித் திறமை உடையவராகவும், எல்லாவற்றையும் விடப் பழமை விரும்பிகளான உரோமானிய மக்களுடைய குடியரசு உணர்வை மதிக்கக்கூடியவராகவும், அதே சமயத்தில் பேரரசுக்குத் தேவையான அதிகாரக் குவிப்பையுடைய ஒற்றையாள் ஆட்சியைப் பலருடைய ஆட்சி என்ற வடிவத்தில் அமைக்கக் கூடிய அரியதிறனுடையவராகவும் இருந்தார். ஆகையால், எல்லா அதிகாரங்களையும் வெளிப்படையாக ஏற்ற சூலியசு சீசரை உரோமானியக் குடியரசு வாதிகள் வெறுத்தனர். அகசுடசு சீசர் உரோமானிய மாகாணங்களில் கையாளக்கூடிய உயர்தர அதிகாரத்தை (Proconsular Imperium) உரோமிலிருந்து கொண்டே கையாளுதற்கும், உரோம் நகரத்தினுள்ளும் கையாளுதற்கும், உரோமானிய அதிகாரிகளின் ஆணைகளையெல்லாம் தள்ளுபடி செய்யக்கூடிய மறுப்பாணையையும் (Tribunician Veto) தமது கையில் குவித்து வைத்துக் கொள்வதற்கும் வாய்ப்புப் பெற்றிருந்தார். இவ்வாறு உயர்தர அதிகாரமென்பது உரோமானிய முடியாட்சிக் காலத்திலும், குடியரசுக்காலத்திலும் பல வடிவங்களில் காணப்பட்டது.

சமுதாயத்தைக் காப்பதற்கும், அதனை முன்னேற்றப் பாதையில் செலுத்துவதற்கும் உயர்தர அதிகாரம் இன்றியமையாதது. ஆனால், இந்த உயர்தர அதிகாரம் கொடுங்கோன்மையாக மாறிவிடாதபடி அதற்கு வரம்புகள் அமைக்கப்படுதல் வேண்டுமென்ற விதியை முதன் முதலில் கண்டுபிடித்துக் காட்டியவர்கள் பண்டைய உரோமானியரே ஆவர். நீதிபதி உள்ளிட்ட எந்த அரசாங்க அதிகாரிக்கும் அதிகாரங்களை வழங்கும்போது, அதனை அவ்வதிகாரி தவறாகக் கையாளுதலினின்றும் அவரைத் தடுக்கக்கூடிய பாதுகாப்புகள் (Safeguards) எதுவும் இல்லாமல் அதிகாரங்களை வழங்குதல் கூடாது. இவ்விதியை நடைமுறையில் செய்து காட்டினார்கள் உரோமானியர்கள். இந்த விதியே அரசாங்க அமைப்பு விதிகளில் ஒன்றாக இக்காலத்தில் இங்கிலாந்து,

அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளின் அரசியலமைப்புகளில் பின்பற்றப்படுகிறது.

துணை நூல்கள்:


Fowler, W.W., The City – State of the Greeks and the Romans, Macmillan, 1921.

How, W.W. & Leigh, H.D., A History of Rome, Longmans, 1907.

Taylor, T.M.A., A Constitutional and Political History of Rome, Methuen, 1911.

Abbot, F.F., A History and Development of Roman Political Institutions, Guinn, 1901.


**உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழு**: இந்திய அரசால் 1952-ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குழு (Secondary Education Commission) அமைக்கப்பட்டது. இதன் தலைவர் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். ஏ. இலட்சுமணசாமி முதலியார் ஆவார். இக்குழுவில் மொத்தம் ஒன்பது கல்வி வல்லுநர்கள் இடம் பெற்றிருந்தனர். இந்தியாவின் உயர் நிலைப் பள்ளிக் கல்வியில் செயற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்கான பரிந்துரைகளை 1953-இல் ஓர் அறிக்கையாக இக்குழு அரசிடம் அளித்தது. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இரு உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மக்களாட்சிப் பண்புகளுள்ள குடிமகனாக மாணவர்களை வளர்த்தல், மாணவர்களின் தொழில் திறமைகளை உயர்வடையச் செய்தல், இந்தியாவின் பண்பாடு, மரபுகளுக்கு உகந்த வகையில் மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை வளர்த்தல், தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு உகந்தவாறு மாணவர்களிடம் தலைமைப் பண்புகளை (Leadership Qualities) வளர்த்தல் ஆகியவை உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் குறிக்கோள்கள் ஆகும் என இக்குழு வரையறுத்தது. நான்கு அல்லது ஐந்து ஆண்டுத் தொடக்கப் பள்ளிக் கல்வி, மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வி, நான்காண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி அமைந்திட இக்குழு பரிந்துரை செய்தது. பல்நோக்குப் பள்ளிகள், தொழிற் பள்ளிகள் ஆகியவற்றை மிகுந்த எண்ணிக்கையில் திறத்தல், மாணவ மாணவியர் இணைந்து பள்ளியில் கற்றல், மேல்நிலைப் பள்ளி வரையில் தாய் மொழியிலேயே கற்பித்தல், பாடநூல் உருவாக்கிட ஓர் உயர்நிலைக் குழு அமைத்தல் போன்றவை முதலியார் கல்விக் குழுவின் சில சிறந்த பரிந்துரைகளாகும்.

பள்ளியில் தேர்வுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், தேர்வுத் தாள்களில் கட்டுரைக் கேள்விகளைக் குறைத்து, ஒற்றைவிடை வினாக்கள் (Objective-type questions), அகமதிப்பீடு (Internal Assessment) ஆகியவற்றால் மாணவர்களை மதிப்பீடு செய்தல், மேல்நிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் பொதுத் தேர்வு நடத்துதல் போன்றவையும் இக்குழுவின் பரிந்துரைகளில் அடங்கும். ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளி இறுதிவரை கல்வி, ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு உதவித் தொகை, அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்குக் கல்வி, தொழில் தொடர்பான அறிவுரை வழங்குதல் ஆகியனவும் உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

துணை நூல்:


Agarwal, J.C., Development and Planning of Modern Education, Vikas: New Delhi, 1982.


**உயர்நிலைப் பெருக்கி** ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முதலீடு, நாட்டு வருவாய், நுகர்வு ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களை விளக்கும் கோட்பாடு. முதலீட்டின் வேறுபாடுகள் வருவாயிலும் செலவிலும் மாற்றங்களை உண்டுபண்ணும். இம்மாற்றங்கள் தொடர்ந்து பொருளாதாரத்தில் தாக்கங்களை உண்டாக்கி முதலீட்டு நிலையில் (Level of Investment) உள்ளாற்றலுடைய மாற்றங்களை ஏற்படுத்தும். இத்தகைய சுழற்சியின் படிநிலைகளில் கூடுதல் நிகர முதலீட்டின் விளைவால் கூடும் நாட்டு வருவாய் ஒவ்வொரு கட்டத்திலும் பெருகிக் கொண்டே செல்லும். இவ்வாறு முதலீட்டுக்கும்நாட்டுவருவாய்ப்பெருக்கத்திற்கும்உள்ள வீதம் ''பெருக்கி'' (Multiplier) எனப்படும். இக்கருத்தை முதன் முதலாக சே.எம். கீன்சு (J.M. Keynes) ஒரு கோட்பாடாக வெளியிட்டார். இவருக்குப்பின் வெளிவந்த புதுமைக் கீனிசியக் (Neo Keynisian) கோட்பாடுகளில் பெருக்கியுடன் 'முடுக்கி' (Accelerator) என்ற கருத்துருவும் (Concept) சேர்க்கப்பட்டது. பெருக்கியையும் முடுக்கியையும் இணைத்து சே.ஆர். இக்சு (J.R. Hicks) தம்முடைய வணிகச் சுழற்சி ஆய்வில் உயர்நிலைப் பெருக்கி (Super Multiplier) என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

'பெருக்கி' முதலீட்டின் இறுதிநிலைத் தாக்கத்தினால் நாட்டு வருவாயில் ஏற்படும் முன்னோக்கிய விளைவுகளை விளக்குவது ஆகும். 'முடுக்கி' வருமானப் பெருக்கத்தால் நுகர்வுப் பண்டங்களின் தேவையிலும் உற்பத்தியிலும் தாக்கங்கள் ஏற்பட்டு, முதலீட்டில் உண்டாகும் பின்னோக்கிய விளைவுகளை

(Feed back Effects) விளக்குவது ஆகும். நாட்டு வருவாய் வீதத்தில் ஏற்படும் வேறுபாடுகள் (Variations) முதலீட்டில் எத்தகைய மாற்றங்களை உண்டுபண்ணும் என்பவற்றை 'முடுக்கி' விளக்கும். இதனைவேக வளர்ச்சி என்றும் ஊக்கி என்றும் குறிப்பிடுவர். 'பெருக்கி' முதலீட்டினால் வருமானம் பெருகி அதன் வழியாக நுகர்வில் (Investment on Consumption) ஏற்படும் தாக்கங்களைக் காட்டுகிறது. 'முடுக்கி' மிகுந்த நுகர்வினால் முதலீட்டில் (Consumption on Investment) ஏற்படும் தாக்கங்களைக் காட்டுகிறது.

சே.ஆர். இக்சு தன்னியல்பான முதலீட்டிற்கும் (Autonomous Investment) சமநிலை வெளியீட்டிற்கும் (Equilibrium Output) உள்ள தொடர்பு வீதத்தைக் குறிக்க 'உயர்நிலைப் பெருக்கி' என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்தினார். குறிக்கப்பட்ட ஒரு தன்னியல்பான முதலீட்டு நிலையில் சமநிலை வருவாய் நிலை (Equilibrium Income Level) எவ்வளவு என்பதை உயர்நிலைப் பெருக்கி மூலம் அறியலாம். நிலையான வீதத்தில் (Constant Rate) வெளியீடு பெருகும்போது தன்னியல்பான முதலீட்டின் வளர்ச்சிக்குகந்த வகையில் நகரும் சமநிலை வரையறை செய்யப்படும். பிற காரணிகளால் தாக்கப்படாதிருந்தால் தொடர்ந்து இம்முறை இயங்கும்.

தொடக்கச் சமநிலை நிலையில் பெருகும் வருவாய் மூன்று கூறுகளைக் கொண்டது. அவையாவன: (1) நிலையான வீதத்தில் பெருகும் தன்னியல்பான முதலீடு, (2) தூண்டப்படும் (Induced) நுகர்வுகள், (3) தூண்டப்படும் முதலீடுகள். இவற்றிலிருந்து பெறப்படும் மொத்த வருவாய் $Y = C + I_A + I_P$.

$Y$ = மொத்த வருவாய்

$C$ = நுகர்வு

$I_A$ = தன்னியல்பான முதலீடு

$I_P$ = தூண்டப்படும் முதலீடு

நுகர்வுச் செலவில் மாறுதல்கள் ஏற்பட மூல காரணமாயிருப்பவை தன்னியல்பான முதலீட்டின் மாற்றங்களே. நடப்புக் கால (Current Period) நுகர்வில் ஏற்படும் மாறுதல்கள் முந்தைய கால (Previous Period) வருவாயில் ஏற்பட்டமாற்றங்களோடுதொடர்புடையனவாயிருக்கும். வருவாயில் மாற்றங்கள் ஏற்படும்பொழுது, இறுதி நிலை நுகர்வு நாட்டத்தின் (Marginal Propensity to Consume — MPC = இ.நு.நா.) அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் நுகர்வு மாற்றங்களுக்குட்படும். நுகர்வு (C) வருவாய் (Y) ஆகியவற்றின் மூலம் இறுதிநிலை நுகர்வு நாட்டத்தில் மாறுதல் ஏற்படுவது போன்றே இறுதிநிலை முதலீட்டு நாட்டம் (Marginal Propensity to Investment — MPI = இ.மு.நா.) குறிப்பிட்ட மொத்த தன்னியல்பான முதலீடு, மொத்த வருவாய் ஆகியவற்றின் மாறும் விகிதம் (Ratio of Change) ஆகும். இறுதிநிலை நுகர்வு நாட்டத்தை 'a' எனவும் இறுதிநிலை முதலீடு நாட்டத்தை 'b' எனவும் கொண்டால் சமநிலை வருவாய் (Y) அல்லது தொகு வருவாய் (Aggregate Income) =

$$Y = C\ I_A + I_P$$
$$= aY + I_A + bY$$

$$Y - aY - bY = I_A$$
$$Y\ (1-a-b) = I_A$$
$$Y = \frac{I_A}{1-a-b}$$

$$\text{தொகு வருவாய்} = \frac{\text{தன்னியல்பான முதலீடு}}{\text{இ.நு.நா.} - \text{இ.மு.நா.}}$$

இயங்கும் பொருளாதாரச் (Dynamic Economy) சேமிப்புக் கெழுவும் (Co-efficient) முதலீட்டுக் கெழுவும் நிலையானவை என்ற எடுகோளின் (Assumption) அடிப்படையில் வருவாயின் வளர்ச்சி வீதம் நிலையான தன்னியல்பான முதலீட்டின் வளர்ச்சி விகிதத்திற்கு ஒத்ததாயிருக்கும். தன்னியல்பான முதலீட்டின் பெருக்கம் ($\triangle I_A$) குறிப்பிட்ட ஓர் அளவு பெருகுமானால் ஏற்படும் புதிய சமநிலை வருவாய் (Y')=

$$Y' = C + I_A + I_P + I_A$$
$$= \frac{I_A + \triangle I_A}{1-a-b}$$

வருவாயில் ஏற்படும் பெருக்கம் ($\triangle Y$)

$$Y' - Y = \frac{I_A + \triangle I_A}{1-a-b} - \frac{I_A}{1-a-b}$$

$$\triangle Y = \frac{I_A + \triangle I_A - I_A}{1-a-b}$$

$$= \frac{\triangle I_A}{1-a-b}$$

$$= \triangle I_A \times \frac{1}{1-a-b}$$

இங்கு $\frac{1}{1-a-b}$ என்பது உயர்தரப் பெருக்கி 'K'.

a-யும் b-யும் வருவாயின் பின்ன எண்களா(Fractions) யிருக்கும். இவற்றின் மொத்தம் 1-க்குள் அடங்கும். தன்னியல்பான முதலீட்டை உயர்தரப் பெருக்கியி னால் பெருக்கிக்(Multiplied by) கிடைப்பது சமநிலை வருவாய்க்குச் சமமாக இருக்கும் என்று இச்சமன் பாடு விளக்குகிறது. எடுத்துக்காட்டாக,

$\triangle I_A$ = உரூ. 20 கோடி, a = 0.5, b = 0.3

$\triangle Y$ = உரூ. 20 கோடி $\times \frac{1}{1-0.5-0.3}$

= உரூ. 20 கோடி $\times \frac{1}{.2}$

= உரூ. 100 கோடி

கூடுதலான உரூ. 20 கோடி தன்னியல்பான முதலீடு வருவாயில் உரூ. 100 கோடிப் பெருக்கத்தை உண்டு பண்ணியிருப்பதால் இதில் உயர்தரப் பெருக்கி (K) 10 ஆகும். இக்சின் பகுப்பாய்வின்படி உயர்தரப் பெருக்கியைத் தன்னியல்பான முதலீட்டில் செலுத்தி வேறுபட்ட காலங்களின் சமநிலை வருவாயை அறிய லாம். இவரது வணிகச் சுழற்சி ஆய்வில் தன்னியல் பான முதலீடு பொருளாதாரத்தில் எப்போதும் இருப் பதாகக் குறிப்பிட்டுள்ளார். தன்னியல்பான முதலீடு நிலையான பெருக்கி வீதத்தில் (Geometrical Rate) பெருகும்; பிற இடையூறுகள் ஏற்படாவிடின் பொரு ளாதாரம் வளரும் சமநிலையில் செல்லும்; தன்னியல் பான முதலீட்டின் வளர்ச்சி விழுக்காட்டு வீதத்தில் வெளியீடு (Output) பெருகும். இவை இக்சின் வணி கச் சுழற்சிக் கோட்பாட்டின் எடுகோள்களாகும். வணி கச் சுழற்சியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளில் (Fluc- tuations) தன்னியல்பான முதலீட்டிற்குப் பங்கு இல்லை. அவற்றில் சுழலும் மாற்றங்களை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகச் செயற்படுவது தூண் டும் முதலீடு (Induced Investment) ஆகும்.

**உயர்நீதி மன்றம்**: இந்தியாவில் இன்றைய அமைப்பு முறையில் உள்ள உயர் நீதிமன்றங்கள் முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோன்றி யவையாகும். இவற்றை ஆங்கிலேயர் கி.பி. 1861-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் சென்னை, பம்பாய், கல் கத்தா ஆகிய மூன்று மாநகர்களில் முதன்முதலில் தோற்றுவித்தார்கள்.

இந்தியாவில் இப்போது உயர்நீதிமன்றங்களைப் பொறுத்தவரை பஞ்சாபு, அரியானா, அசாம், நாகலாந்து போன்ற மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் மாநிலத்திற்கோர் உயர்நீதிமன்றம் உள்ளது.

பஞ்சாபு, அரியானா மாநிலங்களைப் பொறுத்த வரை பஞ்சாபு உயர்நீதிமன்றமும், அசாம், நாகலாந்து மாநிலங்களைப் பொறுத்தவரை அசாம் உயர்நீதி மன்றமும் அவற்றின் உயர்நீதிமன்றங்களாக விளங்கு கின்றன. இவ்வாறு, இரண்டு மாநிலங்களுக்குப் பொதுவாக ஓர் உயர்நீதிமன்றத்தை நிறுவுகின்ற அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு. மைய ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களைப் (Union Territo ries) பொறுத்தவரை உயர்நீதி மன்றங்கள் அடியிற் கண்டவாறு அமையும்:

தில்லி மற்றும் இமாசலப் பிரதேசத்திற்குத் தில்லி உயர்நீதிமன்றமும்,

மணிப்பூர் மற்றும் திரிபுராப் பகுதிகளுக்கு அசாம் உயர்நீதிமன்றமும்,

அந்தமான், நிக்கோபார்த் தீவுகளுக்குக் கல்கத்தா உயர்நீதிமன்றமும்,

இலட்சத்தீவு, மினிக்காய், அமினித் தீவுகளுக்குக் கேரளா உயர்நீதிமன்றமும்,

கோவா, தையூ, தாமன், தத்ரா, நாகர்கவேலிப் பகுதிகளுக்குப் பம்பாய் உயர்நீதிமன்றமும்,

பாண்டிச்சேரி மைய ஆட்சிப் பகுதிக்குச் சென்னை உயர்நீதிமன்றமும்,

சண்டிகார் மைய ஆட்சிப் பகுதிக்குப் பஞ் சாபு மற்றும் அரியானா உயர்நீதிமன்றமும் உரிய நீதிமன்றங்களாகும்.

உயர்நீதி மன்றங்களின் அமைப்பு: உயர்நீதி மன் றம் ஒவ்வொன்றும் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் பணியின் அளவிற்கு ஏற்ற வகையில் பல நீதி பதிகளையும் கொண்டிருக்கும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி நியமனம் அல்லாத சமயங்களில் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் ஆலோசனைப்படி இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் நீதிபதிகளாக நிய மிக்கப்படுவதற்கு 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றியிருத்தல்வேண்டும்; அல்லது 10 ஆண்டு கள் நீதிமன்றங்களில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்திருத்தல் வேண்டும். இவர்களது பதவிக்காலம் 62 வயது. இவர்களுக்கான ஊதியம் இந்திய அரசிய லமைப்புச்சட்டம், இரண்டாம் அட்டவணையில் உள்ளபடி தீர்மானிக்கப்படும். இவர்களது ஊதியம், ஓய்வூதியம், பிற உதவித் தொகைகள், விடுப்புகள்

போன்றவை குறித்து மாற்றம் ஏதும் தேவையாக இருக்கும்போது, நாடாளுமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மாற்றியமைக்கலாம்.

உயர்நீதிமன்றங்களிடையே நீதிபதிகளின் மாற்றம்: இந்தியக் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கருத்துரையுடன் ஓர் உயர்நீதி மன்றத்திலிருந்து மற்றோர் உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை மாற்றலாம்.

இடைக்காலத் தலைமை நீதிபதி: உயர்நீதி மன்றம் ஒன்றின் தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும்போது அல்லது தலைமைநீதிபதி இல்லாமையால் அவரது பணிகள் முடங்கிக் கிடக்கும்போது அப்பணிகளைச் செய்து முடிக்கும் வகையில் குடியரசுத் தலைவர் அந்நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியை உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தலைமை நீதிபதியாக நியமிக்கலாம்.

கூடுதல் மற்றும் இடைக்கால நீதிபதிகள்: கூடுதல் நீதிபதி: உயர்நீதி மன்றம் ஒன்றின் உடனடிப் பணி அதிகரிப்பு நிமித்தம் அல்லது தேங்கிக் கிடக்கும் பணிகளை முடிக்கும் நிமித்தம் அந்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று குடியரசுத் தலைவருக்குத் தோன்றுங்கால் அவர் இரண்டாண்டுகளுக்குக் குறைவில்லாத விதத்தில் தகுதி வாய்ந்தவர்களைக் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கலாம்.

இடைக்கால நீதிபதி: உயர்நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதி அல்லாத வேறு நீதிபதி இல்லாமையின்போது அல்லது வேறு காரணங்களால் அவரது பணி நிறைவுறாதிருக்கும்போது, அல்லது அத்தகையவர் இடைக்காலத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் போது அவர் மீண்டும் தம் பணியில் வந்து ஈடுபடுகிறவரை, குடியரசுத் தலைவர் அவர் பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தகுதி வாய்ந்த ஒருவரை இடைக்கால நீதிபதியாக நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் எக்காரணம் கொண்டும் 62 வயதைக் கடந்தவர்களாக இருத்தல் கூடாது.

ஓய்வு பெற்ற நீதிபதி உயர்நீதிமன்ற நீதிபதியாதல்: உயர்நீதிமன்றத்திற்குத் தேவைப்படுவதாக இருக்குமிடத்து பதவி ஓய்வு பெறு நீதிபதி ஒருவரைக் குடியரசுத்தலைவரின் முன் அனுமதியுடன் உயர்நீதிமன்றத்தின் இடைக்கால நீதிபதியாகப் பணியமர்த்திக் கொள்ளலாம். இவ்வாறு பணியமர்த்தப்படும் நீதிபதி மற்றைய உயர்நீதிமன்ற நீதிபதிகளைப் போன்று அனைத்து அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்றிருப்பார்.

உயர்நீதிமன்ற ஆள்வரை: இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயற்படத் தொடங்குவதற்கு முன் உயர்நீதிமன்றங்கள் எத்தகைய அதிகாரங்களையும் ஆள்வரைகளையும் அனுபவித்து வந்தனவோ அத்தகைய அதிகாரங்களையும் ஆள்வரைகளையும் இப்போதும் கொண்டிருக்கும். எனினும், இவைகளை அரசியலமைப்பு மற்றும் சட்டமன்றச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே செயற்படுத்துதல் வேண்டும்.

நீதிப் பேராணை வழங்கும் அதிகாரம்: அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 226-இன் கீழ் உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றது. இதன்படி ஒருவர்,

1) ஆள் கொணர்விக்கும் நீதிப்பேராணை (Write of Habeas Corpus)
2) செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus)
3) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition)
4) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo Warranto)
5) நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை Writ of Certiorari)

ஆகியவற்றில் ஒன்றன்கீழ் நீதி வழங்கிட மனுச் செய்யும் போது உயர்நீதிமன்றம் அவற்றின் மீது நீதிப் பேராணையை வழங்கும்.

கீழமை நீதிமன்றங்களைக் கண்காணித்தலுக்குரிய அதிகாரம்: படைத் துறை அல்லது படைத் துறைத் தொடர்புடைய சட்டத்தின்கீழ்த் தோற்றுவிக்கப்பட்ட நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் தவிர உயர் நீதிமன்றம் தனது ஆள்வரைக்கு உட்பட்ட அனைத்துக் கீழமை நீதி மன்றங்களையும் மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. உயர்நீதிமன்றம் இவ்வாறு கீழமை நீதிமன்றங்களின் மீது கொண்ட அதிகார ஆளுகையினால் மேற்சுட்டியவற்றிற்குக் குறை ஏற்படுத்தாச் சூழ்நிலையில், 1) கீழமை நீதிமன்றங்களிலிருந்து தம்மிடத்திற்கு வழக்குகளை அனுப்பி வைக்கக் கேட்கவும், 2) அவற்றின் நடவடிக்கை மற்றும் நடைமுறைகள் குறித்த விதிகளை இயற்றவும், 3) நீதிமன்றப் பதிவேடுகள், கணக்குகள், பதிவுகள் போன்றவற்றை

நீதிமன்ற அலுவலர்கள் எவ்வாறு வைத்திருத்தல் வேண்டும் என்பதைக் குறித்துரைக்கவும் செய்யலாம்.

உயர்நீதிமன்ற அலுவலர்கள், பணியாட்கள், செலவினங்கள் குறித்து உயர்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்: உயர்நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாட்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது வேறு நீதிபதி அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற அலுவலரால் நியமிக்கப்படுகின்றனர். உயர் நீதிமன்ற அலுவலர்களாக நியமிக்கப்படவிருக்கின்ற வர்கள் உயர்நீதிமன்ற அலுவலோடு தொடர்பில் லாதவர்களாக இருக்கும்போது, மாநில ஆளுநர் அத்தகையவர்களை மாநிலத் தேர்வாணைக் குழு கருத்துரைப்படி நியமனம் செய்ய விதி செய்வார். உயர்நீதிமன்ற அலுவலர்கள், பணியாட்களின் பணி நிபந்தனைகள் மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றும் சட்டத்திற்கு உட்பட்டு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது வேறு நீதிபதி அல்லது தலைமை நீதி பதியின் அதிகாரம் பெற்ற அலுவலர் செய்யும் விதி களுக்கு ஏற்ற முறையில் அமையும்; இயற்றப்பட்ட விதிகள், ஊதியங்கள், படிகள் (Allowances), விடுப்பு, ஓய்வூதியம், ஆகிவற்றின் தொடர்புடையனவாக விருக்கும் போது, அதற்கு மாநில ஆளுநரின் ஒப்பு தலைப் பெற வேண்டும்.

நீதிமன்ற அலுவலர் மற்றும் பணியாட்களின் ஊதியங்கள், படிகள், ஓய்வூதியங்கள் போன்றவை மாநில இணைப்பு நிதியிலிருந்து (Consolidated Fund of the state) அளிக்கப்படுகின்றன.

துணை நூல்:

**Venkata Subba Rao**, Manual of Indian constitutional Law, Law Academy Pvt. Ltd, Hydrabad, 1983.

***உயர்பாலூட்டிகள்***: எழுநூறு இட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி இன்றும் வாழ்ந்து வரும் பாலூட்டிகள் பல உயரிய பண்புகளைக் கொண்ட விலங்கின வரிசையே (Order) உயர் பாலூட்டிகள்(Primates) ஆகும். உயர்பாலூட்டிகளுள் மனிதன்(Homo sapien), வாலில்லாக் குரங்குகள் (Apes), குரங்குகள், தேவாங்கு (Loris), பெருவிழி யுடைய தேவாங்கு வகை (Tarsier), மடகாசுகர் குரங்கு வகை (Lemur) முதலானவை குறிப்பிடத் தக்கனவாகும். உடல் சார் மானிடவியல் (Physical Anthropology) மனிதப் படி மலர்ச்சியை (Human Evolution) முதன்மையாகக் கொண்டுள்ளதால் மனி தன் இடம்பெற்றுள்ள வரிசையைச் சேர்ந்த பிற விலங் குகளும் முதன்மையாக ஆராயப்படுகின்றன. உடல் சார் மானிடவியலார் உயர்பாலூட்டிகளின் படி மலர்ச்சி, நடத்தை முறை, உடற்கூறு முதலான அனைத்துப் பிரிவுகளையும் விரிவாக ஆராயும் பொருட்டுப் பல அணுகு முறைகளை வகுத்துக் கொண்ட இத்துறை உயர்பாலூட்டியியல் (Primatology) எனக் கூறப்படும்.

விலங்கினத்தில் உயரிய நிலையிலுள்ள மனிதன், மனிதனை ஒத்த ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்கு (Chimpanzee), ஆப்பிரிக்கப் பெருங்குரங்கு வகை (Gorilla) ஆகியவற்றோடு ஒப்புமைகளை மிகுந்த அளவிலும் பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்க வா லில்லாக் குரங்கு (Gibbon), மலாய் மொழியில் காட்டு மனிதன் எனக் கூறப்படும் வாலில்லாக் குரங்கு (Orangutan) ஆகியவற்றோடு குறைந்த அளவிலும் தேவாங்கு, பிற கீழின உயர் பாலூட்டிகள் முதலான வற்றோடு மிகக் குறைந்த அளவிலும் பெற்றுக் காணப்படுகின்றான். இருப்பினும், மனிதன் கொண் டுள்ள சிறப்புப் பண்புகளான நுண்ணறிவு, நேரான நடை, கூட்டுறவு மிகுந்த சமூக வாழ்க்கை முதலானவை கீழின உயர்பாலூட்டிகளின் பண்புகளி லிருந்து விரிந்தனவாகும். இதைப்போன்றே உயர் பாலூட்டிகளின் வரிசையில் மேல் நிலையிலுள்ள மனி தன் முதல் கீழ்நிலையிலுள்ள மரமூஞ்சூறுகள் (Tree Shrews) வரை அனைத்தும் உயர்பாலூட்டிகளுக்கெ னப் பொதுவான பல பண்புகளைக் கொண்டுள்ளன. அவை:1. கால்களிலும் கைகளிலும் பற்றும் தன்மை டைய விரல்களைக் (Prehensile Fingers) கொண்டுள் ளன. சில உயர்பாலூட்டிகள் மரவாழ் வாழ்க்கைக் குத்தகுந்தவாறு எதிர்ப்புறம்வளைந்த விரல்களையும் (Opposable Digit) கொண்டுள்ளன. 2. உயர்பாலூட் டிகள் தங்கள் விரல்களில் தட்டையான நகங்களைக் கொண்டிருக்கும். இதனால் கையினாலும் கால்களி னாலும் பற்றும் தன்மை மிகுதியாகிறது. 3. நன்கு வளர்ந்த காறை எலும்பு (Clavicle) அல்லது கழுத் தெலும்பு (Collar Bone) இந்த விலங்கினத்தில் காணப்படுகிறது. 4. சைவ உணவிற்கும் அசைவ உண விற்கும் ஏற்ற வகையில் உயர்பாலூட்டிகளின் பற் களமைப்பு உள்ளது. இவ்விலங்குகள் தம் வாழ்க்கைக் காலத்தில் குறைந்தது ஏதாவதொரு காலத்தில் வெட்டுப்பற்கள் (Incisors), கோறைப்பற்கள் (Canines), பின்கடைவாய்ப் பற்கள் (Molars) ஆகிய மூன்று பல்வகைகளையும் கொண்டிருக்கும். 5. உயர்பாலூட் டிகள் திட்பப்பார்வையைக் (Steroscopic Vision) கொண்டவை. 6. உயர்பாலூட்டிகளின் மூளை வளர்ச்சி பெற்றது; உடல் அளவிற்கு ஏற்பப் பெரி தானது; பொதுவாக நுண்ணறிவு கொண்டது.

7. சில கீழின உயர்பாலூட்டிகளைத் தவிர்த்துப் பெரும்பான்மையான உயர்பாலூட்டிகள் குறிப்பிட்ட காலத்தில் ஒரு கால்வழியினரை மட்டும் பெற்றெடுப்ப வையாகும். பொதுவாக ஓர் இணை முலைகளை யுடையவை.

உயர்பாலூட்டிகளை முதன்மையான இரண்டு துணை வரிசைகளாகப் (Suborders) பிரிக்கலாம். மனிதன் இடம் பெறும் துணை வரிசை மனிதனை ஒத்த விலங்கினம் (Anthropoidea) என்று கூறப்படும். இந்தத் துணைத் தொகுதியில் குரங்குகளும் வாலில் லாக் குரங்குகளும் அடங்கும். இதனால் இந்த விலங் கினம் 'மேலின உயர் பாலூட்டிகள்' (Higer Primates) என்றும் கூறப்படும். இரண்டாம் துணை வரிசை முற்காலக் குரங்கினம் (Prosimi-Premonkeys) எனக் கூறப்படும். இப்பிரிவில் பெருவிழியுடைய தேவாங்கு வகை, மடகாசுகர் குரங்கு வகை முதலானவை சேரும். இந்த உள்வரிசையிலுள்ள குரங்கு வகைகள் வளர்ச்சியுறாச் சில பண்புகளைக் கொண்டுள்ளமை யால் இவை கீழின உயர்பாலூட்டிகள் (Lower Primates) எனக் கூறப்படும்.

முற்காலக் குரங்கினம்: இந்தத் துணை வரிசை யைச் சேர்ந்த விலங்குகள் சிறிய உருவின; பழைய உலகக் காடுகளில் வாழ்வன. இவ்விலங்குகள் படி மலர்ச்சிக் காலத்தில், குறிப்பாகப் பத்து இலட் சம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிலும் புத்துலகப் பரப்பிலும் பரவலாக வாழ்ந்தன. இப்பகுதிகளில் வாழ்ந்த முற்காலக் குரங்கினம் ஒரு சில பெரிய நாயைப் போன்று காணப்பட்டது. இன்று உயிர் வாழும் இவ்வினம் நடுத்தர மற்றும் சிறிய நாய் களின் உருவ அளவில் காணப்படுகிறது. உடற்கூற்று அளவில் இவ்வினத்தின் விலங்குகள் தொன்மையாகக் காணப்படினும் உயர்பாலூட்டிகளின் பண்புகளைப் பெரிதும் கொண்டுள்ளன.

முற்காலக் குரங்கினத்தை மூன்று துணைவரிசை களாகப் (Infraorders) பிரிக்கலாம். முதல்வகை மட காசுகர்க் குரங்கு (Lemuriforms) வகையாகும். இவ் வின விலங்குகள் இன்று மடகாசுகர்த் தீவிலும் தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைக் கப்பாலும் இதனை ஒட்டிய கொமோரோத் தீவுகளிலும் (Comoro Islands) வாழ்கின்றன; பல நிலப்பரப்புகளில்வாழும் பொருட்டுப் பலவகையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன. பெரும்பாலான முற்காலக் குரங்கி னங்கள் இரவுவாழ்விகளாகவும் (Nocturnal), மர வாழ்விகளாகவும் (Arboreal) உள்ளன. மடகாசுகர்க் குரங்கு வகையின் பல்வாய்பாடு 2-1-3-3-ஆகும். இருப்பினும் இவ்வகையின் ஒரு குடும்பமான நீண்ட முகமுடைய குரங்கு (Indridae) வகையின் பற் களமைப்பு மாறுபட்டது.

இரண்டாம் துணை வரிசை தேவாங்கு வகை (Lorisiformes) ஆகும். இதில் இரண்டு குடும்பங்கள் உள்ளன. முதல் வகைக் குடும்பத்தைச் சேர்ந்த குரங்கு கள் (Lorises) பொதுவாகச் செல்லும் காட்டுவாழி களாகும். வெப்பமண்டல ஆப்பிரிக்காவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் இவ்வினத்தவை பெரும்பான் மையாக வாழ்கின்றன. இரண்டாம் வகைக் குரங் குகள் (Galagos) பல தகவமைப்புகளுடன் வாழ்வ வதால் இவற்றை ஆறு சிற்றினமாகவும் (Species) பகுப்பர். அனைத்துமே ஆப்பிரிக்காவில் வாழ்கின் றன. இவைகளின் பின்னங்கால்கள் நீண்டவை; வேகமாகத் தாவும் இயல்பின.

முற்காலக் குரங்கினத்தின் மூன்றாம் துணை வரிசை பெருவிழிகளையுடைய தேவாங்கு வகை (Tarsiformes) ஆகும். இவை மலாய் முந்நீரகத்தி லும் (Malay Peninsula) அண்டைய தீவுகளிலும் காணப்படுகின்றன. இவை இரவு வாழ்விகள்; உருவத் தில் சிறியன; கண்கள் பெரியவை; பின்னங்கால்கள் நீண்டவை; நீண்ட தூரம் தாவுந் தன்மையன.

மேலின உயர்பாலூட்டிகள்: இந்தத் துணைவரி சையில் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள், மனிதர் ஆகியோர் அடங்குவர். இந்தத் துணைவரிசையைச் சேர்ந்தவிலங்குகளும் மனிதர்களும்அனைத்தும்பழைய உலகத்திலும் புத்துலகத்திலும் பரந்து காணப்படுகின் றன. முற்காலக் குரங்கின விலங்குகளைப் போலன்றி மனிதனை ஒத்த விலங்கினப் பிரிவைச் சேர்ந்த உயர்பாலூட்டிகளும் மேலின உயர்பாலூட்டிகளும் பல் வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்தாலும் பெருமளவு மாறுபாடு கொண்டிராமல் உள்ளன.

மனிதனை ஒத்த விலங்கினத்தைச் (Anthropoidea) சேர்ந்த உயர்பாலூட்டிகளைத் தட்டை மூக்கினம் (Platyrrhini) அல்லது புத்துலக உயர்பாலூட்டிகள் எனவும், நேர்மூக்கினம் (Catarrhini) அல்லது பழைய உலக உயர்பாலூட்டிகள் எனவும் இரண்டு துணை வரிசைகளாகப் பிரிப்பர். பல இலட்சம் ஆண்டு களுக்கு முன் பிரிவுண்ட இக்குழுக்கள் உடற்கூற்றில் பல ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பினும் தனித் தனியாகவே வளர்ச்சி பெற்றன. மூக்குத் துளை களின் அமைப்பில் உள்ள வேறுபாடே இக்குழுக் களை முதன்மையாக வகைப்படுத்தக் காரணமாகி றது. தட்டை மூக்கு விலங்குகளின் மூக்குத் துளை கள் அகன்று பக்கவாட்டில் திறந்திருக்கும். நேர்மூக்கு விலங்குகளின் மூக்குத்துளைகள் சற்றுக் குறுகிக் கீழ்

நோக்கித் திறந்திருக்கும். பற்களின் வாய்பாட்டிலும் இரண்டும் வேறுபட்டவையாகும். தட்டைமூக்கின 2-1-3-3 அமைப்பையும், நேர்மூக்கின 2-1-2-3 அமைப்பையும் கொண்டவை.

தட்டை மூக்குக் குரங்குகளைப் பொதுவாக புத்துலகக் குரங்குகள் என்றோ அமெரிக்கக் குரங்குகள் என்றோ கூறுவர். இவ்வினம் இரண்டு குடும்பங்களாகப் பிரிக்கப்படும்: முதல் குடும்பம் அமெரிக்க நிலப்பகுதியில் வாழும் மயிர் அடர்ந்த வாலுடைய சிறு குரங்கினம் (Callithricidae) ஆகும். இரண்டாம் குடும்பம் இரவுக் குரங்குகள் (Night Monkeys), ஊளையிடும் குரங்குகள் (Howler Monkeys), சிலந்திக் குரங்குகள் (Spider Monkeys), மயிரடர்ந்த குரங்குகள் (Wolly Monkeys), முகமூடிக் குரங்குகள் (Capuchin Monkeys), அணில் குரங்குகள் (Squirrel Monkeys), தென் அமெரிக்கச் சிறு குரங்கு வகை (Saki) முதலானவற்றை உள்ளடக்கிய குடும்பம் (Cebidae) ஆகும். நேர் மூக்கினக் குரங்குகள் இரண்டு உயர் குடும்பங்களாகப் (Super Families) பிரிக்கப்படும். பச்சைக் குரங்குகள் (Green Monkeys), கருப்பு வாலில்லாக் குரங்கு (Black Ape), நாய்முகக் குரங்கு (Baboon), நீண்ட வாலுடைய குரங்கு (Langur), நெடுநீள் மூக்குடைய குரங்கு (Proboscis Monkey) முதலானவற்றை உள்ளடக்கிய இக்குடும்பம் (Cercopithecoidea) ஒரு பிரிவாகும். இவை பழைய உலகக் குரங்கு வகையாகும். இவை தென்னாப்பிரிக்கா, சிப்ரால்டர் (Gibralter), தென்கிழக்கு ஆசியப் பகுதியின் கிழக்குப் பகுதி, சப்பான் (Japan) முதலான பகுதிகளில் வாழ்கின்றன. இரண்டாம் உயர்குடும்பத்தில் (Hominoidea) பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்குவகை (Gibbon), வாலில்லாப் பெருங்குரங்கு வகை (Siamang), மலாய்மொழியில் காட்டு மனிதன் எனக் கூறப்படும் வாலில்லாக் குரங்கு வகை (Orangutam), ஆப்பிரிக்கப் பெருங்குரங்கு வகை (Gorilla), மனிதனை ஒத்த ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்கு (Chimpanzee), மனிதன் முதலான அனைத்தும் இடம்பெறுகின்றன. முதலிரண்டும் கீழின வாலில்லாக் குரங்குகள் (Lesser apes) எனக் கருதப்படுகிறன. மனிதனைத் தவிர மற்றவைபெரிய வாலில்லாக் குரங்குகள் (Great Apes) எனப்படும். இந்த வகைப்பாடு உருவ அமைப்பின் அடிப்படையிலானதாகும். பழைய உலகுக் குரங்குகளும் புத்துலகக் குரங்குகளும் பல்வேறு அமைப்புகளில் வேறுபட்டிருந்தாலும் இவற்றிற்கிடையே ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இதற்கு இணைப் படிமலர்ச்சியின் (Parallel Evolution) நிகழ்வே காரணமாகும். இந்த இரண்டு வகைக் குரங்குகளின் தனித்தனியான படிமலர்ச்சி வரலாறு குறைந்தது 40 மிலியன் ஆண்டுகளிலிருந்தே செயற்பட்டு வருவதாகும். கே.நி.

**உயர்பொருட்பேறு** காலப்போக்கில் ஒரு மொழியில் காணப்பெறும் சொற்களின் பொருளில் ஏற்படும் மாற்றம் சொற்பொருள் மாற்றம் (Semantic Change) எனப்படும். மொழியில் இழிந்த பொருளில் வழங்கிய ஒரு சொல் பின்னர் உயர்ந்த பொருளில் வழங்கப்பெறும் உயர்பொருட்பேறு (Elevation) சொற்பொருள் மாற்றங்களின் வகைகளுள் ஒன்றாகும்.

தமிழ்மொழியில் 'கழகம்' என்னும் சொல் முன்னர்ச் சூதாடுமிடத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இது குழு (Association) அல்லது கூட்டத்தினைக் குறிக்கப் பயன்படுகிறது. இதனைப்போன்றே 'களிப்பு' என்னும் சொல் மது உண்டமையால் ஏற்படும் மனமகிழ்ச்சி நிலையினை மட்டும் குறிக்கப் பயன்படுத்தப்பெற்று, இக்காலத்தில் பொதுவாக அனைத்து நிலைகளிலும் உண்டாகும் மனமகிழ்ச்சியினைக் குறிக்குஞ் சொல்லாக, உயர் பொருளில் ஆளப்பட்டு வருகிறது. இங்ஙனம் இழி பொருளைக் குறிக்கும் ஒரு சொல், அப்பொருளை இழந்து உயர்பொருளைப் பெறுவதே உயர்பொருட்பேறு என்பதாகும்.

ஈண்டுக் 'கழகம்', 'குழு' என்னும் இரு சொற்களுக்கிடையே பொருண்மை நிலையில் காணப்பெறும் ஒற்றுமையே இத்தகைய பொருள் மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. ஒரு குழுவிலுள்ள அங்கத்தினர்கள் கழகத்தில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளுக்கும் இடம் கொடுத்தமையால் 'கழகம்' என்ற சொல் பொருண்மை நிலையில் மாற்றம் பெற்று உயர்பொருளில் வழங்கலாயிற்று. ஈண்டுச் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றமே இத்தகு பொருள் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Reddy**, **G.N.**, A Study of Telugu Semantics, Sri Venkateswara University, Tirupati, 1966.

**Ullmann**, S., Semantics: An Introduction to the Science of Meaning, Blackwell, Oxford, 1962.

**உயர்வு நவிற்சியணி** பொருளணி வகைகளுள் ஒன்று. ஒரு பொருள் அதற்குரிய சொல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விக்கும் வகையில் சொல்லப்படுவதும் அது அப்பொருள் அன்று எனத் தெரிந்திருந்தும் தன் விருப்பத்தினால் ஆகும்

என்று கொள்ளப்படுவதும் ஆகிய ஆரோப (ஒன்றின் மேல் ஏற்றிக் கூறல்) நிச்சியத்திற்குப் பொருளாவதும் ஆகும் என்று விசாகப் பெருமாளையர் இவ்வணியை விளக்கியுள்ளார். ஒன்றனை மிகவும் உயர்த்திக் கூறுவது என்பது சொற்பொருளாகும். இவ்வணியை வடநூலார் அதிசயோக்தியலங்காரமென்பர். இந்த அணி உருவக உயர்வு நவிற்சி, ஒழிப்புயர்வு நவிற்சி, பிரிநிலை உயர்வு நவிற்சி, தொடர்புயர்வு நவிற்சி, முறையிலுயர்வு நவிற்சி, விரைவுஉயர்வு நவிற்சி, மிகையுயர்வு நவிற்சி என ஏழு வகைப்படும். உருவக உயர்வு நவிற்சி என்பது பொருளைச் (உவமேயத்தை) சொல்லால் சொல்லாமல், உவமானச் சொல்லினால் இலக்கணையாகச் சொல்லுவதாகும். 'புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன், கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின், அயலே பசும்பொற் கொடி நின்றதால்' என்னும் செய்யுட் பகுதியில் புயல் முதலிய உவமானச் சொற்களால், கூந்தல் முதலிய உவமேயங்கள் இலக்கணையாகச் சொல்லப்பட்டுள்ளன. பைங்கொடி போன்ற ஒரு தலைவி சோலையில் கற்பக மரத்தின் நிழலில், புயல் போன்ற கூந்தலையும் பிறைபோன்ற நுதலையும் வில்போன்ற புருவத்தையும் கயல் போன்ற கண்ணையும் மலர்ந்த தாமரை போன்ற முகத்தையுங் கொண்டு நின்றாள் என்பதனை இவ்வாறு கூறாமல், புயலைச் சுமந்தும் பிறையை அணிந்தும் வில்லுடன் கயலை மணந்ததுமாகிய தாமரை மலர்ந்த ஒரு பசுங்கொடி கற்பகத்தின் அயலிலே நின்றது என்று கூறியுள்ளார். தலைவியின் கூந்தல், நுதல் முதலியன இலக்கண வகையால் புயல் பிறை முதலியனவாகக் கற்போர் அதிசயிக்குமாறு கற்பனை நயம்படக் கூறப்பட்டிருத்தலால் இது உருவக உயர்வு நவிற்சி அணியின்பாற்படும்.

***உயர்வு நோக்கம்***: ஒரு மொழி (Language) அல்லது கிளைமொழி (Dialect) அல்லது தனியாள் பேச்சுமொழியின் (Idiolect) கூறுகளைப் பிறிதோர் மொழியோ கிளைமொழியோ தனியாள் பேச்சு மொழியோ கடன்வாங்குதல் மொழி கடன்வாங்கல் எனப்படும். தேவை கருதியும் (Need Filling Motive), உயர்வு நோக்கம் (Prestige Motive) காரணமாகவும் இத்தகைய கடன்வாங்கல் நிகழலாம். இவற்றுள் உயர்வுநோக்கம் கருதி நடைபெறும் கடன்வாங்கல் ஒரு மொழியின்கண் மிகுதியாக நிகழ்கின்றது.

மொழி முதன்மை, கடன் கொடுக்கும் மொழியினைப் பேசுபவர் மீது கொண்ட உயர்விருப்பு, நாட்டை ஆளும் அயலாரின் ஆளுமை போன்றவை உயர்வு நோக்கத்திற்கு அடிப்படைகளாக அமையப் பெறும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் ஆங்கிலமொழிச் சொற்களைத் தேவையின்றிக் கடன் வாங்கித் தாம் பேசும் தமிழில் பயன்படுத்துவது உயர்வுநோக்கத்தின் பாற்பட்டதாகும். 'அப்பா வந்துவிட்டார்' என்ற வாக்கியத்தில் 'அப்பா' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக ஆங்கிலச் சொல்லைத் தேவையின்றிப் பயன்படுத்தும் நிலையில் இது உயர்வு நோக்கமாகக் கருதப்படும். ஆங்கிலமொழிப் புலமையுடையோர் மிக உயர்ந்தவர்களாகக் கருதப்படுவதால் உயர்வு நோக்கம் கருதி ஈண்டு ஆங்கில மொழிச் சொற்களைக் கடன்வாங்குதல் காணலாம்.

கிளைமொழிக் கூறுகளைக் கடன்வாங்குவதில் உயர்வு நோக்கம்பெரும்பங்கு வகிக்கின்றது. உயர்ந்த சாதியினர்கள் அல்லது உயர்பதவி வகிப்பவர்கள் பேசும் கிளைமொழிகளின் கூறுகள் பிற கிளைமொழிகளைப் பேசும் மக்களால் உயர்வு நோக்கம் காரணமாகக் கடன் வாங்கப் பெறுதலை அனைத்து மொழிகளிலும் காணமுடியும்.

உயர்வு நோக்கம் கருதி ஒரு மொழியின் கூறுகளைப் பிறிதோர் மொழி கடன்வாங்குதல் பெரும்பாலும் இரண்டு மொழிகளையும் பேசுகின்றவர்கள் சேர்ந்து வாழும் நிலையில் நிகழப் பெறுகின்றது. சமயத்தைப் பரப்புவதற்குத் தென்னிந்தியா வந்த வடமொழியினர் தென்னிந்தியர்களோடு வாழ்ந்தமையால் வடமொழிக் கூறுகள் பலவற்றைத் தென்னிந்திய மொழிகள் கடன்வாங்கின.

ஒருவரின் ஒலிப்பு முறைமையை உயர்வு நோக்கம் கருதிக் கடன்வாங்குதலும் உண்டு. உயர்பதவியிலிருப்பவர்கள் மீது கொண்டுள்ள உயர்விருப்புக் காரணமாக அவர்கள் பேச்சின் ஒலிப்பு முறைமையைப் பிறர் கடன்வாங்குதலும் உண்டு. சான்றாகத் தமிழ் நாட்டின் சில அரசியல் கட்சித் தலைவர்களின் ஒலிப்பு முறைமையைத் தொண்டர்கள் பின்பற்றுதலைக் கூறலாம். ஏ.ஆ.

துணை நூல்:

**Hockett, C.F.,** A course in Modern Linguistics, IBH Publishing Co., New Delhi, 1958.

***உயர்வுப் பன்மை***: ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது மதிப்பை வெளிப்படுத்தும் நிலை பல மொழிகளிலும் காணப்படுகிறது. குறிப்பிட்ட ஒருவன் அல்லது ஒருத்தியை ஒருவர் எனல் உயர்வு கருதிய பன்மையாகும். உயர்வுச் சிறப்பை வெளிப்படுத்துவதில் எல்லா மொழிகளும் ஒரே முறையைக் கையாளுவதில்லை. தமிழ் மொழியில் தன்மை, முன்

னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் உயர்வு காட்டப்படுகிறது. பண்டை இலக்கியங்கள் அனைத்திலும் இக்கூறு காணப்படுகிறது. உயர்வு ஒருமையை உயர்வாகக் குறிக்கப் பன்மை வடிவங்களைப் பயன்படுத்துவதைத் தொல்காப்பியம் கூறுகிறது (தொல். 27). ஒருவனை அல்லது ஒரு பொருளைக் குறிக்கப் பன்மை வடிவங்களைப் பயன்படுத்தும் முறை பேச்சு வழக்கில் உள்ளதைச் சுட்டும் தொல்காப்பியர், இலக்கண விதிகளுக்கு இக்கூறு ஒத்தது என்பதையும் காட்டுகிறார்.

(எ-டு) யாம் வந்தேம்.
நீயிர் வந்தீர்.
இவர் வந்தார்.

உயர்வு ஒருமையைக் குறிக்கப் பதிலிடு பெயர்களின் (Pronouns) பன்மை வடிவங்களும் பலர்பால் ஒட்டுகளும் பயன்படுத்தப் பெறுகின்றன.

(அ) பதிலிடு பெயர்கள்: பன்மைப் பதிலிடு பெயர்களே உயர்வுப் பதிலிடு பெயர்களாக வழங்குகின்றன. தமிழில் தன்மையிடத்தில் உயர்வுப் பதிலிடு பெயர்கள் மிக அருகியே காணப்படுகின்றன. முன்னிலையிலும் படர்க்கையிலும் உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள் பெருவழக்காக உள்ளன.

(எ-டு) தன்மை – யாம், நாம்.
முன்னிலை – நீயிர், நீங்கள், உங்கள், தாங்கள், நும், உம்.
படர்க்கை – அவர், இவர், அவர்கள், இவர்கள்.

பலர்பால் சுட்டும் எவர் என்பது உயர்வு ஒருமையாகவும் வரும்.

(ஆ) உயர்வு ஒருமை ஒட்டுகள்: பலர்பால் சுட்டும் ஒட்டுகள் உயர்வு ஒருமை காட்டும் ஒட்டுக்களாக வருகின்றன. -அர், -ஆர், -வர், -ஓர் ஆகியவை உயர்வு ஒருமை ஒட்டுகள்.

— அர்: (எ-கா.) அரசர், தோழியர்.

—ஆர்: -ஆர் வராத பல பெயர்களின் பின்னால் இவ்வொட்டு இடம்பெற்று உயர்வு சுட்டும்.
(எ-கா ) மகனார், தமையனார்.

உயர்வைச் சுட்ட இயற்பெயரோடு — ஆர் விகுதி சேர்க்கப்படுவதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது (சொல். 270).

(எ-கா ) சாத்தனார், சிதம்பரனார்.

— வர்: பன்மை ஒட்டு வரும் இடங்களிலெல்லாம் இவ்வொட்டு இடம் பெறும்.
(எ-கா ) புதல்வர், சிறந்தவர்.

— ஞர்: (எ-கா ) கவிஞர், அறிஞர்.

சாமி, அடிகள், ஐயா, அம்மையார் முதலான சொல்லொட்டுக்களும் உயர்வைச் சுட்டுகின்றன.

(எ-கா) கமலா அம்மையார்,
இளங்கோ அடிகள், காந்தியடிகள்.

இச்சொல்லொட்டுகளுடன் 'அவர்கள்' சேர்ந்து இரட்டை உயர்வு ஒருமையாக வரும்.

(எ.கா) சண்முகம் ஐயா அவர்கள்,
இந்திரா அம்மையார் அவர்கள்.

சிறப்புப் பெயரை அல்லது பதவிப் பெயரைத் தொடர்ந்தும் 'அவர்கள்' வரும்.

(எ-கா) மீனாட்சி சுந்தரம் அவர்கள்
துணைவேந்தர் அவர்கள்.

இ) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களையும் உயர்வு ஒருமை இடம் பெறும்போது வினை முற்றுகளிலும் பன்மை விகுதிகளே இடம் பெறுகின்றன.

(எ-கா) தன்மை:- (i) -ஏம்:— உண்பேம்.
(ii) -அம்:— அல், எல் ஆகிய எதிர்மறைகளுக்குப் பின்னர் வரும்.
நின்றலம், சென்றெலம்.
(iii) -ஆம்:— உண்டாம், கண்டாம், சென்றாம்.
(iv) -இகும்:— கண்டிகும்.
(v) -றும்:— சேறும்.

முன்னிலை:- (i) -ஈர்:— வந்தீர்
(ii) -ஈர்கள்:— வந்தீர்கள்.

படர்க்கை :- -ஆர்:— வருவார்.
(iii) -ஆர்கள்:— வருவார்கள்.

இயற்பெயர்கள் பயனிலையில் பன்மை விகுதிகளை ஏற்கும் என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

(எ-கா) சாத்தனார் வந்தார். இரா.செ.

**உயராய்வுக் கல்வி மையங்கள்**: பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்ட மேற்படிப்புக் கல்வியையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்துவ

தற்காக இந்தியப் பல்கலைக் கழக நிதி ஆணையம் (University Grants Commisson) 1963-ஆம் ஆண்டில், உயராய்வு மையங்கள் (Centres for Advanced Study) என்னும் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டத்தின்படி, சில பல்கலைக் கழகத் துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு துறையும், ஒரு குறிப்பிட்ட புலத்தின் கல்வி மேம்பாட்டுக்கான உயராய்வு மையம் என்ற சிறப்பு நிலையைப் பெற்றது. இன்று இந்தியாவில் 28 உயராய்வுக் கல்வி மையங்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இயங்கி வருகின்றன. ஒரு குறிப்பிட்ட புலத்தில் ஒரு துறை செய்துள்ள ஆராய்ச்சிகளின் தரம், பயன், முயற்சி, வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலேயேதான், அத்துறையானது உயராய்வு மையம் என்னும் சிறப்பு நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மையமும் தன்னுடைய புலத்தில் தகைமை மிக்க (Excell-ence)கல்விப் பணியையும் உயராராய்ச்சியையும் மேற்கொள்ள, புல்கலைக்கழக நிதி ஆணையம் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. இம்மையங்களின் தலையாய நோக்கம் இங்கு மேற்கொள்ளப்படும் உயர்கல்வியும் ஆராய்ச்சியும் உலகநாடுகள் சுட்டிக் காட்டும் அளவுக்கு உயர்தரமுடையாக இருக்க வேண்டும் என்பதேயாம்.

உயராய்வு மையங்களில் அமைக்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புகளை இந்தியாவின் எந்த மூலையிலுள்ள ஆராய்ச்சி மாணவரும் ஆசிரியரும் அங்குச் சென்று பயன்படுத்திக் கொள்ளலாம். இம்மையங்களில் தத்தம் துறைகளில் மிகவும் அனுபவமிக்க மூத்த பேராசிரியர்கள் பலரும் ஆராய்ச்சி மாணவர்களும் உயராய்வில் ஈடுபடுகின்றனர். இம்மையங்களில் பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், இந்திய நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் புகழ்மிக்க ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் வருகைப் பேராசிரியர்களாகப் (Visitng Professor) பணிபுரிகின்றனர். இம்மையங்களின் ஆராய்ச்சிப் பணிகள் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சிறப்பான ஆராய்ச்சிப் பணிகளைச் செய்த மையங்களே தொடர்ந்து உயராய்வு மையம் என்னும் சிறப்பு நிலையுடன் இருக்க இயலும்.

புனே பல்கலைக்கழகம் பொருளியல், சமசுகிருத இலக்கியம் ஆகிய புலங்களுக்கும்; தில்லிப் பல்கலைக் கழகம் பொதுநிதியும் தொழிற் சாலையும் சார்ந்த பொருளியல், சமூகவியல், பொருளியல் ஆகிய புலங்களுக்கும்; பம்பாய்ப் பல்கலைக்கழகம் பொருளியல் புலத்திற்கும்; பரோடாப் பல்கலைக்கழகம் கல்வியியற் புலத்திற்கும்; அலிகார் முசுலிம் பல்கலைக் கழகம் வரலாற்றுப் புலத்திற்கும்; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மொழியியல், கடலியற் புலங்களுக்கும்; சென்னைப் பல்கலைக்கழகம் தத்துவப் புலத்திற்கும்; உட்கல் பல்கலைக்கழகம் உளவியல் புலத்திற்கும் உயராய்வு மையங்களாக இயங்குகின்றன.

வான்கோளியலில் உசுமானியப் பல்கலைக்கழகமும்; தாவரவியலில் பனாரசு இந்துப் பல்கலைக்கழகம், கல்கத்தாப் பல்கலைக் கழகம், தில்லிப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; கணிதவியலில் பம்பாய்ப் பல்கலைக்கழகம், பஞ்சாபுப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; இயற்பியலில் கல்கத்தாப் பல்கலைக்கழகம், தில்லிப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; விலங்கியலில் தில்லிப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியனவும் உயராய்வுக் கல்வி மையங்களாக விளங்குகின்றன. மேலும், வேதியியல், உயிர் வேதியியல் (Bio-Chemistry) ஆகியவற்றின் உயராய்வுக்கல்வி மையமாகப் பெங்ளூரிலுள்ள இந்திய அறிவியல் கழகம் செயற்படுகிறது. பிற வேதியியல் உயராய்வுக் கல்வி மையங்கள் தில்லிப் பல்கலைக் கழகத்திலும், பம்பாய்ப் பல்கலைக்கழகத்திலும் உள்ளன. பனாரசு இந்துப் பல்கலைக்கழகத்திலும் பஞ்சாபு பல்கலைக்கழகத்திலும் முறையே, உலோகத் தொழில்சார் பொறியியல், மண்ணியல் ஆகியவற்றிற்கான உயராய்வுக் கல்விமையங்கள் உள்ளன.

**உயிர்**: உயிர்கள் பல என்பதை இந்து சமயம் ஏற்றுக் கொள்கிறது என்று பொதுவாகக் கூறலாம். ஒரு சாரார் உயிர்கள் (Souls) பலவாயினும் பொருள் அளவில் பரம்பொருளுக்கு வேறானவையல்ல என்பர். ஒரு கதிரவன் பல குளங்களில் அதன் உருவங்களைக் காட்டுவது போல, எல்லா இடங்களிலும் பரந்திருக்கும் ஆகாயம் தனித்தனிக் குடங்களிலும் இருப்பதை யாவரும் அறிவர். இதே போல் 'ஒவ்வோர் உடலிலும் இருக்கும் பரம்பொருளை 'உயிர்' என்று தனிப் பெயரிட்டழைக்கின்றனர். வேறு சிலர் 'பிரதிபிம்பம்' என்று கூறாமல், பரம் பொருளைப் போன்று உயிர்களும் அறிவுடைய சித்துப் பொருளே என்பர். உயிர்கள் கட்டுப்பட்ட நிலையில் உள்ளன. ஆனால், பரம்பொருள் சுதந்திரமானது. இப்படியாக வாழ்க்கை அனுபவங்களில், உயிர்கள் பலவாக இருப்பதையும் அவை சித்துப் பொருளாக இருக்கும் இயல்பையும் கடைசியில் பரம் பொருளை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதையும் எல்லா இந்துக்களும் உடன்படுகின்றனர்.

உயிர்களுக்கு இரண்டு இயல்புகள் உள்ளன: 1. கட்டுண்ட நிலை, 2. விடுபட்ட (முக்தி பெற்ற) நிலை.

உயிரின் கட்டுண்ட நிலையினைப் பலவகையாக விளக்குவர்; சிலர் அறியாமை (அவித்தை) என்பர். சிலர் திரிபு உணர்ச்சி எனக்கூறி அதனை 'மாயை' என்று கூறுவர். சிப்பியை (Shell) வெள்ளி என்றும் கயிற்றைப் பாம்பு என்றும் சொல்வதையே திரிபுணர்ச்சி என்பர். சிலர் மாயை என்பர். இன்னும் சிலர் 'ஆணவம்' என்பர். ஆயின் இன்றுள்ள நிலை கட்டுண்ட நிலை என்பதில் மாறுபட்ட கருத்துகள் இல்லை. இக்கட்டு எவ்வாறு ஏற்பட்டது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இக்கட்டு அனாதி; தொடக்கங் கூற முடியாது என்பர் சிலர். சிலர் தொடக்கத்தில் ஆன்மா கட்டில்லாமல் இருந்தது; கட்டு இடையே ஏற்பட்ட ஒன்றே என்பர்.

ஆயின் கட்டுண்ட நிலையை உயிர்களின் இயல்பு எனக் கூறும் வழக்கில்லை. இடையே வந்து சேர்ந்த காலத்தையும் கூறியதில்லை. எல்லா இந்துக்களும் இக் கட்டிலிருந்து விடுபட 'ஞானப் பேற்றையே' வற்புறுத்துவர். கட்டிலிருந்து விடுபட ஞானசாதனை வேண்டும் என்பதே இந்துக்களின் நம்பிக்கை. ஞானப்பேற்றின் விளைவாக ஒருவன் அடைகின்ற தெய்வானுபவமே இந்துக்களின் குறிக்கோள். இந்த அனுபவத்தை அத்துவிதம் என்பர் பலர். துவிதம் என்பர் சிலர். அத்துவிதம் என்பது இரண்டற்ற நிலை. தெய்வானுபவத்தில் நான் வேறு, தெய்வம் வேறு என்றநிலை இல்லை. இவ்வத்துவிதத்தையும் பல நிலைகளில் விளக்குவர்.

கேவலாத்துவிதம் என்பது அத்துவித அனுபவத்தில் ஒரு பொருளே உண்டு எனக் கூறும் கோட்பாடு. தெளிந்த ஞானம் பிறந்துவிடும்போது 'உயிர்கள்' என்ற பன்மை உண்மையன்று; உலகும் உண்மையன்று; இறை ஒன்றே உண்மை. எனவே, உயிர்கள் பலவாகத் தோன்றலும் பிற உலகத் தோற்றமும் உண்மையல்ல; ஞானக் குறைபாட்டால் தோன்றும் தோற்றமே என்பர். ஞானக் குறைபாட்டை மயக்க அறிவு என்றும் அவித்தை என்றும் கூறுவர். இறைவன் என்ற உண்மை வெளிப்படத் தோன்றாமலிருப்பதற்கு மாயை காரணமென்றும் அம்மாயை விலக்கப்பட முடியாதது என்றும் கூறுவர். ஞானயோகத்தால் மாயை என்ற போர்வை அகற்றப்பட்டுப் பிரமமே உண்மை என்பதைத் தெளியலாம். ஞானத்தால் உயிர்கள் பலவல்ல என்று அறியலாம். கட்டிலிருந்து விடுபட்ட ஆன்மாவும் பிரமமும் ஒன்றே என்பதாலும், கட்டிலிருந்து விடுபட 'அகம் பிரமாஸ்மி' என்னும் மகா வாக்கியத்தைத் தியானிப்பதாலும், இறைவனருளில் நம்பிக்கை கொண்டு பக்தி நெறியில் நிற்பவர்கள் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை; பிரமத்தை மறுத்து, 'நானே பிரமம்' எனக் கூறும் இவர்களை இகழ்வதுண்டு. ஆயினும், இவர்கள் கோட்பாட்டிலும் பக்திக்கு இடமுண்டு. இவர்கள் உலகியல் அளவில் கூறப்படும் 'நான்' என்பதும், வழிபடும் 'ஈசுவரன்' என்பதும் ஒன்றே எனக் கூறுவதில்லை.

'நான்' என்பது நிலையற்ற போதமே என்றும், நிலையான 'நான்' பரப்பிரமத்திற்கு வேறானதன்று என்றும் கூறி, இறுதியில் ஒரே பொருள்தான் உண்டு என்பதை வற்புறுத்துகிறார்களேயன்றி, உலகியலளவில் நான் உண்டு, ஈசுவரன் உண்டு, உலகுண்டு என்று நம்புகின்றவர்களேயாவர்.

இராமானுசரால் வளர்க்கப்பெற்ற வைணவக் கோட்பாட்டையே 'விசிட்டாத்துவிதம்' என்பர். சிவ-பரத்துவத்தை உடன்படும் சைவர்களிலும் 'விசிட்டாத்து விதிகள்' உண்டு என்பர். இவர்கள் கேவலாத்து விதிகள் கூறுவது போன்று இறுதியான உண்மை ஒன்றே என்று கூறினாலும், அவ்வொன்று விசேடணத்தோடு கூடியது என்பர். இக்கருத்துப்படி, பிரமத்துக்கு உயிர்கள், உலகு என இரண்டு அடைகள் உண்டு. வேறொரு வகையில் கூறுவதென்றால் பிரமத்துக்கு உலகு, உயிர்கள் என்ற இரண்டு உடல்கள் உண்டு எனலாம். இவ்வைணவ சித்தாந்தப்படி 1. அசித்து (உடல், உலகு), 2. சித்து (உயிர்), 3. ஈசுவரன் என்னும் மூன்று பொருள்களும் அழியாதவை. அடிப்படைச் சடத்திலிருந்து (மூலப்பிரகிருதி) மண், நீர் முதலிய 24 தத்துவங்கள் வளர்ந்துள்ளன என்றும், சித்து அல்லது உயிர் 25-ஆம் தத்துவம் என்றும், அசித்திலும் சித்திலும் உள்ளுறை பொருளாக ஈசுவரன் விளங்குகிறான் என்றும் கூறுவர்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பே அசித்து, சித்து என்னும் இரண்டிற்கும் ஈசுவரனுக்கும் உள்ள தொடர்பு. இத்தொடர்பினை வற்புறுத்துவதன் வழியாக இறுதியான உண்மை ஒன்றே என்பதை இக்கோட்பாடும் ஏற்றுக் கொள்கிறது. அவ்வுண்மை இரண்டு சரீரங்களோடு கூடியது என்பதே இதற்கும் கேவலாத்துவிதத்திற்கும் உள்ள வேறுபாடு.

மெய்கண்டாரால் விளக்கப்பெற்ற சைவ சித்தாந்தமும் அத்துவிதத்தை விளக்குவதே. கேவலாத்துவிதிகள் பிரமம் ஒன்றே உண்மை; ஏனைய உலகும் உயிர்களும் தோற்றம் என்பர். விசிட்டாத்துவிதிகள் பிரமம் ஒன்றே உண்மை; உலகு, உயிர்கள் அவ்வுண்மையின் அவயவம் என்பர். சைவ சித்தாந்திகளோ பிரமம், உயிர்கள், உலகம் ஆகிய மூன்றும்

உண்மை என்பர். இம்மூன்று பொருள்களையும் ஒத்துக் கொண்டாலும், மூன்று பொருள்களும் தன்மையில் வேறுபட்ட பொருளாகக் கொண்டாலும் தங்களுடைய கொள்கையை அத்துவிதம் என்றே கூறுவர். இறுதியான தெய்வ-அனுபவத்தில், ஆன்ம-அனுபவத்தில் ஆன்மாக்கள் தற்போதத்தை இழந்து சிவபோதத்தில் இரண்டற்று நிற்கும் என்ற பொருளிலேயே அத்துவிதத்தைக் கொள்கின்றனர். துவிதம் இறைவன், உலகு, உயிர்களை உண்மையானவை என ஏற்றுக் கொண்டாலும், இறைவன் ஒருவனே சுதந்திரமானவன் எனக் கூறும்; எல்லா நிலைகளிலும் இறைவனுக்கு உட்பட்டே உயிர்கள் இயங்குவதால், மோட்ச நிலையிலும் உயிர் இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்பதில்லை என்கிறது.

துணை நூல்:

**Radhakrishnan**, S., Indian Philosophy, 2 Vols, George Allen and Winston Ltd , London, 1923-1927.

***உயிர் ஒலிகள்:*** நுரையீரலிலிருந்து வெளிவரும் காற்று மிடற்றின் முயற்சியால் வாயின் வழியாக எவ்விதத் தடையும் இன்றி வெளிப்படும் நிலையில் உயிரொலிகள் (Vowels) பிறக்கின்றன. இவை பிறக்கும்போது பின்னண்ணம் மேலெழுந்து நின்று மூக்குவழியைத் தடுத்து நிற்கும். உயிரொலிகள் பெரும்பாலும் குரல்வளை நாண்களில் (Vocal cards) அதிர்வினை உருவாக்கிப் பிறப்பதால் அவை ஒலிப்புடை (Voiced) ஒலியன்களே.

அ, இ, உ என்னும் மூன்று உயிரொலிகளை அடிப்படை ஒலிகளாகக் கொண்டு இம்மூன்றின் பிறப்பிடங்களை ஒரு முக்கோணத்தின் மூலைகளுக்கு ஒப்பிட்டு, அதனை உயிர்முக்கோணமாக (Vowel triangle) அறிஞர் கருதுவர். தானியேல் சோன்சு (Daniel Jones) உயிரொலிகளின் இடங்களை எட்டு அடிப்படை உயிரொலிகளை (Cardinal vowels) ஆதாரமாகக் கொண்டு விளக்கினார். மெய்யொலிகளைவிட உயிரொலிகளே இசைமை (Sonority) உடையனவாக இருப்பதால் அசையில் (Syllable) எப்போதும் உயிரொலிகளே அசை முடியில் (Peak) இடம்பெறும். எனவேதான் உயிரொலிகளின் அடிப்படையில் அசைகள் கணக்கிடப்படுகின்றன.

உயிரொலிகளை அவை பிறக்கும் நிலையில் நாவின் நீட்சி, நாவின் உயரம், இதழின் நிலையிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்தலுண்டு.

நுனிநாவின் முன்னண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் முன்னுயிர்கள் (Front vowels) எனவும், கடைநாவின் மெல்லண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் பின்னுயிர்கள் (Back vowels) எனவும், இடைநாவின் வல்லண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் நடுவுயிர்கள் (Centre vowels) எனவும் நாவின் நீட்சியினை அடிப்படையாகக் கொண்டு உயிரொலிகள் வகைப்படுத்தப் பெறும்.

நாவின் உயரத்தினை அடிப்படையாகக் கொண்டு உயிரொலிகள் உயர் உயிர்கள் (High vowels) எனவும், இடை உயிர்கள் (Mid vowels) எனவும், கீழ் உயிர்கள் (Low vowels) எனவும் பகுக்கப் பெறும். இதழின் நிலையிட அடிப்படையில் அனைத்து உயிரொலிகளையும் இதழ்குவி உயிர்கள் (Rounded vowels) எனவும், இதழ்குவியா உயிர்கள் (Unrounded vowels) எனவும் பாகுபாடு செய்யப் பெறும். உயிர்கள் பிறக்கும்போது இதழ் குவியப் பெறுமானால் அவை இதழ்குவி உயிர்கள் எனவும், இதழ் குவியப் பெறாதிருக்குமாயின் அவை இதழ்குவியா உயிர்கள் எனவும் சுட்டப்பெறும்.

மேலும் உயிரொலிகளை விறைப்புயிர்கள் (Tense vowels) எனவும், நெகிழ்வுயிர்கள் (Lax vowels) எனவும் பகுக்கலாம். இதழ், நா முதலிய ஒலிப்பு உறுப்புகள் விறைப்பாக இருக்கும் நிலையில் பிறக்கும் உயிர்கள் விறைப்புயிர்கள் எனவும், ஒலிப்பு உறுப்புகள் நெகிழ்ச்சி பெற்றுப் பிறக்கும் உயிர்கள் நெகிழ்வு உயிர்கள் எனவும் கருதப்பெறும். தமிழில் குறில் உயிர்கள் ஒலித்தற்கு அருமையாக இருப்பதால் அவை விறைப்புயிர்கள் எனவும் நெடில் உயிர்கள் எளிமையாக இருப்பதால் அவை நெகிழ்வுயிர்கள் எனவும் கருதப்பெறுகின்றன. குறில் உயிர்கள் ஒரு மாத்திரை அளவினை உடையன எனவும், நெடில் உயிர்கள் இரண்டு மாத்திரை அளவினை உடையன எனவும் மரபிலக்கணங்கள் சுட்டுகின்றன.

உயிரொலிகள் பிறக்கும்போது பின்னண்ணம் மூக்கின் வழியாகக் காற்றுச் செல்லாதபடி தடுத்து நிற்கும். இப்பின்னண்ணம் சிலபோழ்து தாழ்ந்து நிற்கும் நிலையில் காற்றின் ஒருபகுதி வாய்வழியாகவும் மற்றொரு பகுதி மூக்கின் வழியாகவும் செல்லும். இந்நிலையில் பிறக்கும் உயிரொலிகள் மூக்கினச்சாயல் பெற்ற உயிர்கள் (Nasalised vowels) எனப்படும். இன்னமும் நாக்கு அண்ணத்தினை நோக்கி வளையும் நிலையில் பிறக்கும் உயிர்கள் நாவளை உயிர்கள் (Retroflex vowels) எனப்படும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Bloch, B. and Trager, G.L.,** Outline of Linguistic Analysis, Linguistic Society of America, Baltimore, 1942.

**Chomsky, N. and Halle, M.,** The Sound Pattern of English, Harper & Row, 1968.

***உயிர்தோன்றல்***: ஒரு சொல்லிற்குள்ளே இரண்டு மெய்யொலிகள் சேர்ந்து வரும்போது அவற்றைச் சேர்ந்தாற்போன்று ஒலிப்பது சற்றுக் கடினமாக இருக்கலாம். அந்த இரண்டு மெய்யொலிகளுக்கும் நடுவில் ஒலிப்பதற்குத் துணையாக ஓர் உயிரொலியைச் சேர்த்தால் அப்போது ஒலிப்பது எளிமையாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கல்யாணம் என்ற சொல்லில் /ல்ய்/ என்ற இரண்டு மெய்யொலிகளுக்கு நடுவில் இகர ஒலியைச் சேர்த்துக் கலியாணம் என்று ஒலித்தலைக் கூறலாம். இங்ஙனம், ஒலிப்பதற்குத் துணையாக் உயிரொலிகள் தோன்வதற்கு ஒலிப்புத்துணை / உயிர்தோன்றல் (Anaptyxis or Epenthesis) என்பது பெயர்.

ஒலிப்புத்துணை / உயிர்தோன்றல் பொதுவாகப் பல மொழிகளிலும் காணப்படுகின்றது.
சான்றுகள் வருமாறு:

ஆர்யர் ⟶ ஆரியர்

சூர்யன் ⟶ சூரியன்

தர்மம் ⟶ தருமம்

மேற்கண்டவாறு வடசொற்களில் மட்டுமல்லாமல், தமிழ்ச் சொற்களிலும் ஒலிப்புத்துணை / உயிர் தோன்றல் காணப்படுகின்றது. சான்றுகள் வருமாறு:

கொக்கு + இன் + (க்)கு ⟶ கொக்கினுக்கு (நற்றிணை 315-1)

சொல் + க ⟶ சொல்லுக (குறள்286 - 1)

ஒலிப்புத்துணை / உயிர்தோன்றலை சுரபக்தி (Swarabhakti) என்று வடமொழியிற் கூறுவர். சான்றுகள் வருமாறு:- indra → indara; darsata→darasata மராட்டி போன்ற இக்கால இந்தோ - ஆரிய மொழிகளிலும் இதற்குச் சான்றுகள் உள. அவை வருமாறு: prakara → parakara; bhrama→bharama. இந்தோ-ஐரோப்பிய மொழிகளிற் காணப்படும் சான்றுகள் வருமாறு:

hebdmos → hebdomos (கிரேக்கம்); faclis→facilis, poclum → poculim (இலத்தீன்); nrav → norov (உருசியன்). அ.கா.

துணை நூல்கள்:

**Gune, P.D.,** An Introduction to Comparative Philology.

**Robert, J., Jeffer & Ilas Lehiste,** Principles and Methods for Historical Linguistics.

***உயிர்ப்பட்டி***: காண்க: ஆயுள் அட்டவணை.

***உயிர்ப்பலி***: நெடுநாள் வாழ்தற்கும், இறந்துபோனவரை உயிர்ப்பிப்பதற்குமுரிய 'உயிர்ப்புச் சக்தி'யை அளித்தற்கும் தனது வாழ்நாள் முழுதும் மனிதன் வழிவகைகளைத் தேடிக் கொண்டேயிருந்தான். அந்நிலையில், அவன் கண்டு கொண்டதே உயிர்ப்பலி. அதாவது, ஓர் உயிரைப் பலி கொடுப்பதன் வழி உயிருடன் இருப்பவருக்கு உயிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், இறந்துபட்டவருக்கு உயிர்ப்புச் சக்தியை அளிக்கவும் இயலும் என மனிதன் நம்பினான். இந்நிலையில் மனித சமுதாயத்தின் கண் காணப்பெறும் பல்வேறு சடங்குகளுள் (Rituals) ஒன்றாக உயிர்ப் பலியும் உணரப்படலாயிற்று. எனவே, சமயம் சார்ந்த அமைப்பு எனப் பொருத்தமாக இது உணரப் பெறுகின்றது. அதாவது, சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒருங்கிணைந்ததொரு தொகுப்பே உயிர்ப்பலி எனலாம். அனைத்துச் சடங்குகளுக்கும் உரிய இயல்பான நிலையில், வளர்ந்து வரும் வேறுபட்ட பணிகளைப் பொறுத்தமையும் பல்வேறு வடிவங்களைக் கொண்டு, காலப் போக்கிற்கேற்ப மாறி வரும் நிலைமைகளைப் பின்பற்றி இன்றளவும் நின்று நிலவுகிறது. இதன் உள்ளுறைப் பொருளை (Inner Significance) அறிதற்கு வரலாற்று நிலையிலும், உளவியல் நிலையிலும், மானிடவியல் நிலையிலும் நின்று ஆராயவேண்டும். உயிர்ப் பலிச் சடங்கு மனித சமுதாயத்தில் தோன்றிய முறையினைப் பல நிலைகளில் மானிடவியலாரும் சமுதாய அறிவியலாரும் கூறுகின்றனர். இக் கருத்துகளில் உயிர்ப் பொருள் கருதுகோளும் (Conception of Soul-Substance) ஒன்றாகும். இரத்த இழப்பால் விலங்குகளும் மனிதரும் உயிரிழப்பதைக் கண்ணுற்ற பழங்கற்கால மனிதன் உயிருக்கும் இரத்தத்திற்குமிடையே உள்ள உறவை உணர்ந்தான். 'பழங்கற் காலக் குகை ஓவியங்களில்' காட்டப்பெற்ற வேட்டையாடப்பட்ட விலங்குகள் உயிர் துறப்பதை அம்புபட்ட காயங்களிலிருந்து இரத்தம் பெருகுவதன் வழிக் காட்டியுள்ளது இதற்குச் சான்றாகும். மனிதனும் இரத்தத்தில் 'உயிர்ப்புச் சக்தி' இருப்பதாக

நம்பினான். இரத்த இழப்பு உயிரிழப்பை ஏற்படுத்தும் என்று கருதினான். உயிர்ப்புச் சக்தி குன்றிக் காணப்படும் வயதில் முதிர்ந்தோர், உயிர்ப்புச் சக்தி யிழந்ததால் உயிரிழந்தோர் மீது உயிர்ப்புச் சக்தியைத் தெளிப்பதன் வழி உயிர்ப்பிக்கவியலும் என்று கருதத் தலைப்பட்டனா. எனவே, மனிதன் இரத்தத்தைப் படையல் பொருளாக அளித்தலை மேற்கொள்ளத் தொடங்கினான்; வேட்டையாடுதல் -உணவுதிரட்டுதல் காலந் தொடங்கி இத்தகைய 'இரத்தப் படையலைக்' கைக் கொள்ளலாயினான்.

இதைப் போன்றே உடலின் சில உறுப்புகளும் அவற்றின் 'சுரப்பு' களும் (Secretions) உயிர்ப்புச் சக்தியைக் கொண்டிருப்பதாக மனிதன் எண்ணத் தொடங்கினான். எடுத்துக்காட்டாக, நகங்கள், பற்கள், எலும்புகள், தோல், கல்லீரல், குடல், உமிழ்நீர், 'தொப்புள் கொடி' (Umblical Cord)முதலியவையும் உயிர்ப் பொருளை உடையனவாகக் கருதப்பட்டன. காலம் செல்லச் செல்ல விலங்குகள், தாவரங்கள், சில உயிரற்ற பொருள்கள் ஆகியனவும் உயிர்ப் பொருளை உடையனவாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளன. விலங்குகள் மற்றும் தாவரங்களில் உயிர்ப் பொருள் இருப்பதாகக் கருதி அவற்றின் மீது இரத்தத்தைச் சிந்த வைக்கும் சடங்குகளைக்'குலக்குறி வழிபாட்டினரிடை'யே (Totemists) காணலாம். ஆசுத்திரேலியப் பழங்குடியினரிடையே காணப்படும் 'உயிர்ப்புச் சடங்கு' இதற்குத் தக்க சான்றாகும். சோழிகள் (Cowrie Shells), பெண் குறியை ஒத்திருப்பதால் செழிப்புச் சடங்குப் (Fertility Rites) பொருளாகக் கருதப்பட்டு, நாளடைவில் அவற்றிலும் உயிர்ப் பொருள் இருப்பதாகப் பழங்குடியினரால் சடங்குகளில் பயன்படுத்தப்பட்டன. பின்னர், இரத்தத்தின் சிவப்பு நிறமே உயிர்ப்புச் சக்திக்குக் காரணம் என்று எண்ணிய நிலையில், சிவப்பு நிறமுடைய செம்மண் துகள்கள் , செந்தூரம்(Vermilion)ஆகியனவும் உயிர்ப் பொருள்களாகக் கொள்ளப்பட்ட நிலையையும் வரலாறு நன்கு காட்டுகிறது. இந்த அடிப்படையிலேயே இரத்தம் சிந்தும் சடங்குகளும், இரத்தத்தை ஒத்துள்ள பொருள்களாகப் பயன்படுத்திச் செய்யப்பெறும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இரத்தப் படையலும் தாவரப் படையலும் உயிர்ப்பலி கொடுக்கப்படும் உயிரினத்தைப் பொறுத்து இருவகைகளாகப் பகுக்கப்படுகின்றன. அதாவது, விலங்குகள் தொடங்கி மனிதர்வரை பலியாகக் கொடுப்பதில் இரத்தம் முதன்மைப் படையற் பொருளாவதால், 'இரத்தப்படையல்' முதல் வகையானது எனவும், தாவரங்களும் தாவரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விளைபொருள்களும் பலியாகக் கொடுக்கப் பெறுவதால் 'தாவரப் படையல்' இரண்டாம்வகையானது எனவும் உணரப் படுகின்றன.

உயிர்ப்புச் சக்தி மிகுந்திருப்பதாகக் கருதப்பட்டதனால் ஈமச் சடங்குகளிலும் மூதாதையர் வழிபாட்டுச் சடங்குகளிலும் சற்று விரிவான நிலையிலும், ஏனைப் பிற சடங்குகளில் சற்றுக் குறைந்த அளவிலும் இரத்தமானது படையற் பொருளாகப் பல்வேறு சமுதாயங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது கண்கூடு. எடுத்துக்காட்டாக, ஆசுத்திரேலியாவின் தார்லிங்கு ஆற்றுப் (Darling River) பழங்குடியினர் (Tribes of Darling River)வளைதடிகளால் (Boomrangs) ஒருவர் தலையை இன்னொருவர் காயப்படுத்தி, வெளிப்படும் இரத்தத்தைச் சவக்குழிக்கருகில் கிடத்தப்பட்டுள்ள பிணத்தின்மேல் படுமாறு செய்கின்றனர். இதற்கு மாறாக, நடு ஆசுத்திரேலிய அருண்டா (Arunta) இனக் குழுவினரிடையே சவக்குழியின் மீது பெண்டிர் தமது தலைகளிலிருந்து இரத்தத்தைச் சிந்தும் வழக்கத்தைக் காணலாம். இவ்வாறு இறந்தார் மீதும் சவக்குழிகளின் மீதும் இரத்தத்தைப் படச் செய்தல் இறந்தவர்களுக்கு வலிமையூட்டுவதும், அவர்கள் மறு உலகிற்குச் செல்வதற்குத் துணை புரிவதும் ஆகும்.

உணவாகப் பயன்படுத்தப்பெறுவனவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஒரே சீராக வைத்திருக்கவும் ஆசுத்திரேலியப் பழங்குடியினர் நடத்தும் சில சடங்குகளிலிருந்து 'இரத்தத்தின் உயிர்ப்பிக்கும் சக்தி'யும் இரத்தம் தோய்க்கப்பட்ட பொருள்களின் உயிர்ப்பிக்கும் சக்தியும் தெளிவாக உணரப்படுகின்றன. நடு ஆசுத்திரேலியாவின் 'உண்டியாரோ கங்காரு குலக்குறி' யைச் (Undiaro Kangaroo Totem) சார்ந்த ஆடவர் கங்காருகள் நிரம்பியிருப்பதாகக் கருதப்படும் குன்றின் அடிவாரத்தில் குழுமுகின்றனர். இக் குன்றின் சரிவில் ஒன்றின் மீது ஒன்றாக இரு கற்கள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. இவை, ஆண்-பெண் கங்காருகளாகக் கருதப்படுகின்றன. இக்குலக் குறியினரின் தலைவன் தன் தாய் மாமனுடன் இச் சரிவில் ஏறி, இவ்விரு கற்களையும் ஒரு கல்லால் தேய்க்கிறான். பின், 'மூதாதையரான கங்காருகளின் ஆவிகள்' உறைவதாகக் கருதப்படும் செங்குத்துப் பாறைகளுக்கு இவ் இருவரும் சென்று அதன் மீது சிவப்பு, வெள்ளைப் பட்டைகளைத் தீட்டுகின்றனர். சிவப்பு நிறப் பட்டைகளும் வெள்ளை நிறப் பட்டைகளும் முறையே கங்காருவின் தோலையும் எலும்புகளையும் குறிக்கின்றன. இதையடுத்து, இளையோர் பலரும் அந்தக் குறிப்பிட்ட செங்குத்துப்

பாறையின் மீது உட்காரவும் அடிவாரத்தில் குழுமி யுள்ள ஆடவர் கங்காருகள் பல்கிப் பெருக வேண்டிப் பாடுகின்றனர். இதைத் தொடர்ந்து, அனைவரும் இரத்தம் சிந்தும் சடங்கை மேற்கொள்கின்றனர். பின், கங்காரு வேட்டைக்கு இளையோர் சென்று, தாம் வேட்டையாடிய கங்காருகளுடன் தம் முகாமிற்குத் திரும்புகின்றனர். வெற்றியைக் கொண்டாட் நடனமாடிய பின்னர், வேட்டையாடப் பட்ட கங்காருகளைச் சிறிது உண்பர். இதுவே புகழ் மிக்க 'கங்காருச் சடங்கு'(Kangaroo Ceremony)எனக் கூறப்படுகிறது. இதே போன்று, ஈமுக்குலக்குறியினர் தமது கையைக் கிழித்து இரத்தத்தைப் படையலாக்கிய பின்னர், இரத்தம் உறைந்த காயத்தைச் சுற்றி வெள்ளை, மஞ்சள், கறுப்பு வண்ணங்களைத் தீட்டி ஈமுப்பறவையின் உடலைக் குறிப்பாக உணர்த்துகின்றனர். இவ்வாறு செய்வதனால் ஈமுப்பறவை யினம் அழியாது எனவும், அடுத்த தலைமுறைக்கான 'கருக்கள்' (Embryos) விரைவாக உண்டாகும் எனவும் இவர்கள் நம்புகின்றனர். 'அக்கியா மலர்க் கொத்து' எனக் கருதப்படும் கல்லின்மீது இரத்தம் சிந்தும் சடங்கை மேற்கொள்ளளுதலைக் காணலாம். இவ்வாறு, ஆசுத்திரேலியப் பழங்குடியினர் இரத்தப் படையலின் வழித் தமது'குலக் குறிகளை'ப் (Totems பல்கிப் பெருகச் செய்யும் உயிர்ப்பிக்கும் சடங்கை மேற்கொள்ளக் காணலாம். மேலும், 'இயற்கை கடந்தவற்றிற்கும்' மனிதனுக்குமிடையே ஒருவிதப் பிணைப்பைக் குலக்குறி வழிபாட்டினரின் இந்த உயிர்ப்பிக்கும் சடங்கு உருவாக்குவதும் வெளிப் படை.

சப்பான் (Japan) நாட்டைச் சார்ந்த அய்னுக் களிடையே (Ainus) நடைபெறும் 'கரடிப் பண்டிகை' யின் போது வேட்டையாடிப் பிடிக்கப்பட்ட அல்லது குட்டியிலிருந்து பிடித்து வளர்க்கப்பட்ட கரடியானது, மிகுந்த மன்னிப்புக் கோரப்பட்ட பின் கொல் லப்படுகின்றது. அவ்வாறு கொல்லப்படும்பொழுது இரத்தம் சிந்தாமல் கவனமாகத் தவிர்க்கப்படுகிறது. இருப்பினும், சிற்சில சமயங்களில் கொல்லப்படும் கரடியின் இரத்தம் ஆடவரால் பச்சையாகக் குடிக் கப்படுகின்றது. இதனால், கரடியின் வீரம், 'ஏனைய பிற பண்புகள் தமக்குக்கைவரப்பெறும் என்று அவர் கள் உறுதியாக நம்புகின்றனர்.

சில காலங்களில் குறிப்பிட்ட உயிரினம் பெரிதும் புனிதமாகக் கருதப்பட்ட நிலையில், உணவாகக் கொள்ளப்படாமலேயே இருக்கும் நிலையைக் காண லாம். இந்நிலையில், ஆண்டுக்கு ஒருமுறை அக்குறிப் பிட்ட உயிரினம் பலியிடப்பட்டு, புனிதமான தசை அல்லது உயிர்ப் பொருள் நிரம்பியுள்ளதாகக் கருதப் படும் சில உறுப்புகள் 'சடங்கு உணவாக' உண்ணப் படும். இதன்வழி, அப்புனித உயிரினத்தில் அடங்கி யுள்ள உயிர்ப்புச் சக்தி கைவரப்பெறும் என்று கருதப்படுகிறது. இத்தகையதொரு நிலையைத் தமிழ்நாட்டுத் தோடரது 'எருமைப் பலியிட்லில்' காணலாம். ஆண்டுக்கொருமுறை ஆடவர் மட் டும் கலந்து கொள்ளும் இந்த எருமைப் பலியிடலில், பலியிடப்பட்ட எருமையின் தசை நெருப்பில் சுடப் பட்டு, ஆடவரால் மட்டும் உண்ணப்படுகிறது.

இத்தகைய 'குலக்குறி' உணவைத்(Totem Feast) 'தந்தைக் கொலை' யின் எச்சமாக மணி-கயர்லே (Money-Kyrle)என்னும்மானிடவியலார் கருதுகிறார். பல்வேறு சமுதாயத்திற்குரிய தாவரப் படையல் பூமித்தாயின் மக்களாகத் தாவரங்கள் அமைவதா லும், பகுதித் தெய்வத்தன்மை பொருந்திய உயிர்ப் பொருள்களால் இவை உயிர்ப்பூட்டப் பெறுவதா லும் வேட்டையாடுதல், உணவு திரட்டுதலை மேற் கொண்டுள்ள சமுதாயங்களில் காணப்படுவது போன்றதொரு படையல் நிலை, பயிர்த் தொழிற் சமுதாயங்களிலும் காணப்படுகிறது. உயிர்ப் பலிச் செயலில் இரத்தப் படையலுடன் ஒப்பிடும் பொழுது தாவரப் படையலானது இன்றியமையா மையிலும் தொன்மையிலும் இரண்டாம் நிலையைக் கொண்டதே.

இந்த நிலையில், சிற்சில இடங்களில் தாவரங் களே தெய்வங்களாகக் கொண்டாடப்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, பெரு நாட்டினர் சோளத்தைத் 'தாய்த் தெய்வமாக'வே வழிபடக் காணலாம். சோளத் தட்டையினின்று, தானிய மணிகள் நீக்கப்பட்ட பின்னர், மரத் துண்டுகளின் மீது சோளக் கட்டுகளின் உருவங்கள் செதுக்கப் பட்டு, மனிதருக்குச் செய்வது போன்று அவ்வுருவங் களுக்கு ஆடை அணிவிக்கப்படுகிறது. பின்னர், குழந் தைகள் மற்றும் ஆடுகளுடன் இவ்வுருக்கள் தீயிலிடப் பட்டு எரிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதால், 'சோளத்தின் ஆவிகள்' உயிர்த்தெழும் என்று பெரு மக்கள் நம்பினர். ஆப்பிரிக்காவின் மெத்தபெலே (Matebele), 'யொம்பா'(Yomba)பழங்குடியினர் தம் பாட்டனாரின் கல்லறையின் முன்பாக எருது ஒன்றைப் பலியிட்டு, முதல் விளைச்சலில் பெறப் பட்ட தானியங்களிலிருந்து செய்யப்பட்ட மது, கஞ்சி ஆகியவற்றைப் படைத்த பின்னரே, தானியங்களை உணவாகக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்த னர்.

நடு இந்தியாவின் பழங்குடியினரிடத்தும் தென் னிந்தியப் பழங்குடியினரிடத்தும் பயிர்த்தொழிலுடன்

இணைந்த 'தாவரப் படையல்' காணக் கிடக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரிசாவின் கொந்தர் பழங்குடியினர் மாம்பழங்கள் மிகுந்து காணப்படும் கோடைக் காலத்தில், மாமரத்தில் உறைவதாகக் கருதப்படும் ஆவிகளுக்கு முதலில் படையலிட்ட பின்னரே மாம்பழத்தை உண்ணத் தொடங்குகின்றனர். தென்னிந்தியப் பழங்குடியினருள்ளும் இத்தகைய 'நன்றி தெரிவிக்கும் சடங்குகள்' (Thanks-giving Ceremonies) அறுவடையுடன் தொடர்புற்றமைவன காணக் கூடியன. பயிர்த் தொழிலைப் பெரிதும் போற்றிவரும் தமிழ்நாட்டு மலையாளிப் பழங்குடியினரான பச்சைமலை மலையாளியர் கம்பு, சோளம் உள்ளிட்ட தானியங்களை அறுவடை செய்யும்பொழுதும் சில தானியக் கதிர்களை நிலத்திற்குப் படையலாக இட்ட பின்னரே, வீட்டிற்குக் கட்டுக்கட்டாகத் தூக்கிச் செல்கின்றனர்.

மனிதப் பலியும் தலை வேட்டையாடலும்: இறைவனின் மறுபிறப்பாக அரசன் கருதப்பட்டதால், மூப்படைந்த அரசனைக் கொல்வதன்வழி இறைத்தன்மையானது மனித சமுதாயத்திற்குத் திரும்பவும் கிடைக்கிறது என்றும் இதனால் பயிர்த் தொழில் முந்தைய செழிப்புத் திரும்பத் திரும்பக் கைவரப்பெறும் என்றும் நம்பினர். இத்தகைய அரசக் கொலை (Regicide) நாளடைவில் அரசனுக்கு மாற்றாக வேறு மனிதர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் 'மனிதப் பலிக்கு' (Human Sacrifice) அடிகோலியது. நாடோடிகளான 'நகுவா'க்களிடமிருந்தே (Nahua People) நடு அமெரிக்காவிற்கு 'மனிதப் பலியிடும் வழக்கம்' வந்துற்றதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மேலும், உயிர்ப் பொருளைத் தாவரங்களில் சேர்ப்பதன் வழி, தாவரங்களுக்கு உயிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் அளிக்கவும் முடியும் என்று கருதிய நிலையில் மனிதன் தாவரப் படையலுடன் பிற உயிர்ப்பலிகளையும் மறுபடியும் கைக்கொள்ளலாயினான். இந்நிலையில் முகிழ்த்ததே மனிதப் பலியும் தலை வேட்டையாடலும்.

அசுதெக்குப் (Aztec) பழங்குடியினரின் பண்பாட்டில் 'மனிதப்பலி' முதன்மையான இடத்தைவகித்தது. சூரியக் கடவுளுக்கு மனிதரின் இதயத்தைப் படைப்பதன் வழி பயிர்களின் செழிப்புக் காக்கப்படுவதாக நம்பிய அசுதெக்கு மக்கள், போர்த்தொழிலை மேற்கொண்டு, வெற்றி பெற்ற நாட்டைச் சார்ந்த 'போர்க் கைதிகளைக்' (War Captives) கொண்டு இந்த 'இதயப் படையலைச்' (Offerings of Heart) செவ்வனே செய்து வந்துள்ளனர்.

நல்ல விளைச்சலுக்காக மனிதப் பலி கொடுக்கும் வழக்கத்தை உலகின் பல்வேறு பகுதிகளிலும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, மேற்கு ஆப்பிரிக்காவில் நிலங்களில் விதையிடுதற்கு முன்பாக, ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் மண்வெட்டிகளாலும் களைக் கொத்திகளாலும் அடித்துக் கொன்று, அவர்களின் பிணங்களைப் புதிதாக உழுத நிலத்தின் நடுவில் புதைப்பர். இதனால், அந்த நிலம் உயிர்ப்புச் சக்தி மிக்குற்று அதிக விளைச்சலை நல்கும் என உறுதியாக நம்பினர். பவ்னீயினர் (Pawnees) ஒரு பெண்ணைப் பலி கொடுத்து, அவள் தசைகளைச் சிறு சிறு துண்டுகளாக்கி, நெருப்பிலிட்டு வாட்டியெடுத்து ஒரு கூடையில் திரட்டி வைப்பர். பின் 'தலைமைச் சமய குரு' கூடையிலிருந்து ஒரு தசைத் துண்டை எடுத்துப் பிழிந்து விதைப்பிற்காக வைத்துள்ள சோள மணிகளின் மேல் ஒரு துளி இரத்தம் படுமாறு செய்வர். இதைத் தொடர்ந்து எல்லா விதைகளும் இவ்வாறு உயிர்ப்புச் சக்தியூட்டப்படும் வரை திரளாகக் கூடியுள்ள பிற மக்களும் இப்பணியைத் தொடர்ந்து செய்வர். நல்ல விளைச்சல் பெறவும் நோய் நொடி, பஞ்சம், வறட்சி ஆகிய வற்றினின்று தம்மைக் காத்துக் கொள்ளவும் ஒரிசாவைச் சார்ந்த கொந்தர் (Khonds) பழங்குடியினர் 'மெரியா' எனப்படும் மனிதப் பலியை அளிக்கின்றனர். யானையின் துதிக்கை போன்ற மரத்தில் பலியிடப்போகும் மனிதனைக் கட்டி, செங்குத்து மரத்தின் மீது அவனைச் சுழலுமாறு செய்கின்றனர். இந்நிலையில், மயக்கமுற்ற அம்மனிதனைச் சுற்றிலுமுள்ள கொந்தர் தத்தம் கோடரியால் துண்டு துண்டாகவெட்டி, எடுத்த தசையைப் பாசனம் செய்யும் நீர் நிலையிலோ விதையிடப் போகும் நிலத்திலோ புதைத்து வைப்பர். இவ்வாறு செய்வதனால் விளைச்சல் பல்கிப் பெருகும் என எண்ணினர்.

மனித உறுப்புகளிலேயே உயிர்ப்பொருள் மிகுதியாகக் கொண்டதாகத் 'தலை' கருதப்படுவதால், இறந்த மூதாதையர் வழிபாட்டிலும் பயிர்த்தொழிலிலும் மனிதப் பலி தொடர்புடையது போன்று'தலை வேட்டையாடலும்' சமமான இடத்தைப் பெறுவது இயல்பாகிறது. தலையில் பேய் ஒன்று இருப்பதாகவும், அது அலட்சியப்படுத்தாத வகையில் மண்ணில் வளத்தை உருவாக்குவதாகவும், பயிர்களின் வளர்ச்சியை நன்கு மேம்படுத்துவதாகவும், பொதுவாகச் சமுதாயத்திற்கும் குறிப்பாகத் தலையைக் கைப்பற்றியவனுக்கும் வளத்தைக் கொணர்வதாகவும் போர்னியோ தீவைச் சார்ந்த காயன் மக்கள் (Kayans) பெரிதும் கருதுகின்றனர். மேலைப் பர்மாவில், இடாப்பழங்குடியினர் (Ida Tribes) நிலத்தில் அபின் செடியில்(Opium Poppy)மலர்கள் பூத்துக் குலுங்கும் பொழுது, மனிதத் தலைகளைத் தேடிக் கிளம்புகின்றனர். எதிர்ப்படும் எந்த அந்நியரின்

தலையையும் வெட்டிக் கொணர்கின்றனர். தாம்வேட்டையாடிப்பெற்ற தலைகளுடன் தலை வேட்டையாடுநர் வெற்றியுடன் திரும்புங்கால் சிற்றூர் மக்கள் வெற்றி முழக்கத்துடன் வரவேற்பு நல்குகின்றனர், ஏனெனில், பள்ளத்தாக்குகளில் நெல் விளைச்சலும், மலைப்பக்கங்களில் சோளமும், மலையுச்சியில் அபின் செடி மலர்களும் நல்ல விளைச்சலைக் காட்டும் என்பது இவர்களின் உறுதியான நம்பிக்கை. பிலிப்பைன்சுத் தீவுகளில் வாழும் பொண்டாக்கு (Bontoc) மக்கள், விதைப்பின் பொழுதும், நடும்பொழுதும் ஒவ்வொரு பண்ணையும் குறைந்தது ஒரு புதிய மனிதத் தலையைத் தமது கிடங்கில் தவறாது வைத்திருக்க வேண்டியது தலையாயது எனக் கருதுகின்றனர். ஆப்பிரிக்காவில் மனிதப் பலி போன்றே தலை வேட்டையாடலும் பயிர்களின் வளர்ச்சிக்கு உதவுதற்கென அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது. எடுத்துக் காட்டாக, புதிது புதிதாகக் கிழங்குகள் தோண்டியெடுக்கும் பொழுது அசாந்தியர் (Ashanti) அக்குழிகளில் ஒரு மனிதத் தலையை வைக்கின்றனர். இதனால், மேலும் மேலும் கிழங்குகள் மிகுதியாக வளரும் என இவர்கள் நம்புகின்றனர். வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் (NEFA)வாழும் நாகர்களிடையே பயிர்களின் வளர்ச்சிக்காக மட்டும் அல்லாது கால் நடைகளின் மேம்பாட்டிற்காகவும் தலை வேட்டையாடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. அசாமில், மக்களின் அன்றாட வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாகத் தலை வேட்டையாடுதல் ஒரு கால கட்டத்தில் திகழ்ந்தது. அதிலும் குறிப்பாக நடவு மேற்கொள்ளும் காலமும், அறுவடைக் காலமும் தலை வேட்டையாடலின் முதன்மைப் பருவங்களாகும்.

தன்னின உண்ணல்: மனிதப் பலியிலும் தலை வேட்டையாடலிலும் பலிகொடுக்கப்பட்ட மனிதனின் தலை அல்லது உடலின் ஒரு பகுதியை அல்லது முழுப் பகுதியை உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இறந்து போனவரின் பண்புகளைப் பெறுதற்கு உயிர்ப் பொருளைக் கொள்ள வேண்டும் என்ற விருப்பின் விளைவே 'தன்னின உண்ணல்' (Cannibalism). காலப் போக்கில், பழிவாங்கும் பொருட்டும் இந்த 'தன்னின உண்ணல்' வழக்கிற்கு வந்துவிட்டது. மனிதப் பலியைக் காட்டிலும், தன்னின உண்ணல் சிறிதளவே காணப்படுகிறது எனக் கூறலாம். என்றாலும், பசியைப் போக்குதற்காக அல்லாமல், சடங்கின் பொருட்டு இது மேற்கொள்ளப்படும் வரையில் உயிர்ப் பொருளைக் கொடுத்துப் பெறுதலில் இவ்விரண்டும் நேரடியாகத் தொடர்புடையனவே.

தன்னுயிர் மாய்த்தல்: மற்றையோரின் பொருட்டு மனிதர் தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்ளல் (Self Sacrifice) உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மறுஉலகில் தம் கணவரைத் தொடர்ந்து சென்று பணிவிடை செய்தற்குப் பெண்டிர் தம் கணவரின் உடலுக்குத் தீ மூட்டிய சிதையில் தாமும் விழுந்து உயிர்விடும் 'உடன்கட்டை ஏறுதல்' இந்தியாவில் காணப்பட்டது என்பது வரலாறு காட்டும் செய்தி.

உயிர்ப் பலியின் படிமுறை வளர்ச்சி: வேட்டையாடுதல் உணவு சேகரித்தலை மேற்கொண்ட நிலையில் முந்தைத் தொல்மனிதர்கள் இரத்தப் படையலை உலகிற்கு அறிமுகப்படுத்தியது வரலாற்றில் முதல்நிலை எனலாம். பின்னர், இரத்தம் போன்ற சிவப்பு நிறமுடைய பொருள்களான செம்மண் துகள்கள், செந்தூரம் போன்றவற்றிற்கும் உயிர்ப்புச் சக்தி உண்டு என்று கருதிய நிலையில் இரத்தப் படையலையடுத்து உயிரற்ற பொருள்களாகிய படையல் பயன்பாட்டிற்கு வந்தது இரண்டாம் நிலை. இதைத் தொடர்ந்து செழிப்புச் சடங்குப் பொருள்களான கோழிகளும், பெண் உருவங்களும் படையலாக்கப்பட்டதைக் காணலாம். பிறகு, குலக்குறி வழிபாட்டினர் தமது இரத்தத்தை யளித்துத் தம் குலக்குறிகளுடன் ஒருவித பிணைப்பை மேற்கொள்ளும் நிலையை வரலாறு காட்டுகிறது. இதற்கு அடுத்த நிலையில், பயிர்த் தொழில் மேற்கொண்ட மனிதர் இரத்தப் படையலுக்கு மாறாகத் தாவரப் படையலை அறிமுகப்படுத்தியதைக் காணலாம். எனினும், இரத்தப் படையலுடன் கலந்த தாவரப் படையலே பிற்காலம் நிலைபெற்றதென அசுதெக்கு, மாயன், கொந்தர் பழங்குடியினரின் மனிதப் பலியிடும் வழக்கமும், போர்னியோ, பர்மா, அசாம், வடகிழக்கு எல்லைப் பகுதி (NEFA) ஆகியவற்றில் வாழும் மக்களின் தலை வேட்டையாடுதல் முறையும் உணர்த்துகின்றன. நாட்டுப்புறங்களின் சமய வழிபாட்டில் இரத்தப் படையல் இன்றளவும் நிலைத்து நிற்க, நகர்ப்புறங்களில் அரிசிச்சோறு முதலியன படையல் பொருளானது ஒரு மாற்றமே. இன்றைய இந்துக் கோயில்களில் உள்ள பலிபீடமும் அவற்றில் இடப்படும் மலர், எண்ணெய், சோற்றுருண்டைகள் ஆகியனவும் இக் கருத்திற்கு அரணாகக் காணலாம். வேதகாலம் முதற்கொண்டே, பிணத்துடன் ஒருவிலங்கைப் பலி கொடுத்தல்நிகழ்ந்து வந்தது. இவ்வழக்கமே பெருங்கற்காலத்தில் முதன்மையானதாகக் கொள்ளப்படலாயிற்று. அதாவது, பெருங்கற்காலம் தொடங்கி, இறந்தோருக்குச் செய்யும் ஈமச்சடங்குகளிலும் மூதாதையர் வழிபாட்டிலும் உயிர்ப்பலி தலையாய பங்கை வகித்த

மையைக் காணலாம். விரும்பியது பெற உயிர்ப் பலிகொடுக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்துற்றது. அடிக்கடி உடைபடும் பாலம், கட்டடங்கள் ஆகிய வற்றிற்கும் புதையல் எடுத்தற்கும் சட்டத்தின் கண் களுக்கு மறைவாக மனிதப்பலி கொடுப்பது இன்றள வும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுவ தாகச் செய்தித்தாள்களில் காண்பது இதற்கு அடுத்த நிலை. இது போன்றே அரேபியாவில் இன்றும் புது நிலங்கள், புது வீடுகள், புதுக் கிணறு கள் மீது இரத்தத்தைத் தெளிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். நாகரிகம் மீதுயர்ந்து காணப்படும் இக்கால உலகிலும் உயிர்ப்பலி தொடர்ந்து வருகிறது என்பது இதனால் பெறப்படும்.

உயிர்ப்பலிக்குக் காரணங்கள் பலவாகும். உயிர்ப் பலியின் போது செய்யும் சடங்குகள் ஒரு சமுதாயத் திலிருந்து பிறிதொன்று ஒன்றுக்கொன்று மாறு பட்டாலும், உயிர்ப்பலிக்குக் கீழ்வரும் காரணங்கள் பொதுவானவை எனலாம்.

அ. தாம் வழிபடும் கடவுள் அல்லது ஆவியானது மண்ணுலகில் நடத்த விழையும் நற்செயல்களை நடத்துதற்குரிய சக்தியை அளித்தற்கு.

ஆ. உயிர்ப்புச் சக்தி மிகுந்த புது இரத்தப் பெரு வழி இறப்பின் வலிமையையும் அழிவையும் எதிர் கொள்வதற்கும் - இதனால், வழிபடுநரைத் தீய சக்திகளின் தாக்கத்திற்கெதிராக வலிமைப் படுத்துதற்கும் - தெய்வ ஆணையை மீறுதலை மறைத்தற்கும்அல்லது முழுமையாகநீக்குதற்கும்;

இ. வழிபடுநருக்கும் வழிபடுபொருள்களுக்குமிடையே ஒரு சீரிய உறவு நிலையை நிலைப்படுத்துதற்கு ஏற்ற வகையில் நன்மையியற்றும் சக்திகளுடன் உறவுநிலையை நிறுவுவதற்கு அல்லது நிறுவிய உறவு நிலையை மறுநிலைப்படுத்துதற்கு. இதன் வழி 'இயற்கை விதிக்கும்' (Natural Order) இயற்கை கடந்த விதிகளுக்குமிடையே தடை யற்ற தகவல் தொடர்பைப் பெறுதலின் பொருட்டு.

கணக்கீட்டிற்குள் அடங்கா 'மனிதப் பட்டறிவின்' கூறினைக் கட்டுப்படுத்தும் வழியாகவும், உயிர்ப்புச் சக்தியைப் புத்துருவாக்கிப் பெறும் வழியாகவும் உயிர்ப்பலிக் கட்டமைப்பில்லம் நிலைப்படுத்தப்பட்டு விட்டது. உயிர்ப்பலிக் கட்டமைப்பில்லமும் அதோடு தொடர்புடைய சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இந்தப் 'பின்னல் வடி வமைப்பு' (Network) வேறுபட்டதாக அமைகின்றது. எவ்வாறாயினும், ஒவ்வொரு வடிவமைப்பிலும் 'ஓங்கு நிலைக் கூறாக'க் காணப்படுவது 'வாழ்வுக் கோட் பாட்டையும்' (Concept of Life) 'உண்மை நிலை யையும்' (Reality) நோக்கியமையும் ஒரு குறிப்பிட்ட அணுகுமுறையே என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தியாகும். அதாவது, உயிர்ப்புச் சக்தி வெளி யேற்றப்படுவதால் ஏற்படுவதே இறப்பு. ஓர் உயிரை மேம்படச் செய்யவும் பாதுகாக்கவுமே உயிர்ப் பலி மேற்கொள்ளப்படுகின்றது; உயிர்ப்பலியின் பொழுது, இயற்கை கடந்தவற்றிற்கே உயிர்ப்பொருள் மாற்றப் படுகின்றது என்பதே உலகளாவிய கருத்தாகும். எனவே இந்நிலையில் பலியாக்கப்படுவது அல்லது பலியாக்கப்படுபவர் அழிக்கப்படுதல் முதன்மையான தாகக் கருதப்படத் தேவையில்லை என்பர் மானிட வியலார். சி.ம.

துணை நூல்கள்:

**Arens**, W., The Man - Eating Myth, Oxford University Press, New York, 1979.

**Frazer**, **J.G.**, Golden Bough: A Study in Magic and Religion, Macmillan and Company, New York, 1890.

**Hoog**, **G.**, Cannibalism and Human Sacrifices, Coles the Book People, Inc., New York, 1980.

**James**, E.O., Origines of Sacrifice: Study in Comparative Religion, Hazell, Waston and Viney Ltd, London, 1933.

**Shastri**, **Dakshinaranjan.**, Origin and Development of the Rituals of Ancestor Worship in India, Boodland Pvt. Ltd, Calcutta, 1963.

**Shulman, D.D.**, Tamil Temple Myths: Sacrifice and Divine Marriage in the South Asian Saiva Tradition, Princeton Uiversity Press, Princeton, 1980.

**உயிர்ப்பு**: அடைப்பொலிகள் (Stops) பிறப்ப தற்குரிய சூழ்நிலையில் நுரையீரல் காற்றின் அழுத் தத்தினை மிகுதியாக்கிக் காற்றினை முழுமையும் தடைபடாமல் ஒரு குறிப்பிட்ட அளவு காற்று வெளிவரச் செய்யும் நிலையில் உயிர்ப்புடை அடைப் பொலிகள் (Aspirated stops) பிறக்கின்றன. இங்ங னம் அடைப்பொலியினைத் தொடர்ந்து வெளிவரும் மூச்சுக் காற்றே உயிர்ப்பு (Aspiration)எனப்படுகிறது.

அடைப்பொலிகள் உயிர்ப்புடை அடைப்பொலி கள் எனவும் உயிர்ப்பிலா அடைப்பொலிகள் (Unaspirated stops) எனவும் இரு வகைப்படும். உயிர்ப்பிலா

அடைப்பொலிகள் பிறக்கும்போது வாயின் கண்ணுள்ள தடை விலகியதும் மூச்சுக் காற்று வெளிவருவதில்லை. தமிழ்மொழியில் காணப்பெறும் க, ச, த, ப, ட போல்வன இத்தகைய உயிர்ப்பிலா அடைப்பொலிகளாகும். தமிழில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் இல்லை.

இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் காணப்படுகின்றன. ($p^h$) என்பது ஒலிப்பிலா உயிர்ப்புடை அடைப்பொலியாகும். இது தமிழிலுள்ள பகர ஒலிபோன்று பிறப்பினும் வாயின்கண்ணுள்ள தடை விலகும்போது அதிக அளவு மூச்சுக் காற்று வெளிவருகிறது. இதனைக் காற்று வாயிலிருந்து வெளிவரும் நிலையில் கையின் பின்பாகத்தை வைத்து அறிந்து கொள்ளலாம். அடைப்பொலியும் மூச்சுக் காற்றும் (Puff of Breath) இணையும் நிலையில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் பிறக்கின்றன.

உயிர்ப்புடை ஒலிகள் ஒலிப்புடை ஒலிகளாகவோ (Voiced sounds) ஒலிப்பிலா ஒலிகளாகவோ (Voiceless sounds) அமைய வாய்ப்பிருப்பினும் பெரும்பாலும் மொழிகளில் ஒலிப்பிலா உயிர்ப்புடை ஒலிகளே காணப்படுகின்றன.

வாயின்கண்ணுள்ள தடை விலகியதும் வெளிவரும் மூச்சுக் காற்றின் அளவினை அடிப்படையாகக் கொண்டு உயிர்ப்புடை ஒலிகள் இரண்டு வகையினவாகக் குறியீடிட்டுக் காண்பிக்கப்பெறும். குறைந்த அளவு மூச்சுக்காற்று வெளிவரும் நிலையில் உயிர்ப்புடை ஒலிகள் குறை உயிர்ப்புடை ஒலிகள் (þ) எனவும், அதிக அளவு மூச்சுக் காற்று வெளிவரும் நிலையில் உயிர்ப்புடை ஒலிகள் நிறை உயிர்ப்புடை ஒலிகள் ($p^h$) எனவும் குறிக்கப்பெறும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Jones, Daniel.**, An Outline of English Phonetics, Cambridge University Press, Cambridge, 1980.

**Heffner, R.M.S.**, General Phonetics, The University of Wisconsin Press, America, 1964.

***உயிர்ப்புள்ளியியல்***: காண்க: அடிப்படைப் புள்ளிவிவரம்.

***உயிர் முக்கோணம்***: காண்க: உயிர் ஒலிகள், உயிரெழுத்து.

***உயிர்வாழ் வீதம்***: இது குறிப்பிட்ட ஒரு காலத்தில் அல்லது பல்வேறு காலங்களில் ஓராயிரம் மக்களுள் எத்தனை பேர் உயிருடன் வாழ்கின்றனர் என்பதைக் குறிக்கும். ஒரு நாட்டின் உயிர்வாழ் வீதத்தைப் (Survival Rate) பற்றிய புள்ளி விவரங்கள் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயற்படுத்தும்பொழுது மக்கள்தொகையின் தேவைக்குகந்த வகையில் உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றை வரையறுக்கவும் இன்றியமையாதனவாயுள்ளன. பொதுநலத் துறையின் பயன்பாட்டிற்கும் ஆயுள் காப்பீட்டுப் பணிகளுக்கும் மக்கள் தொகையின் உயிர்வாழ் வீதம் நன்கு பயன்படுகிறது. ஒரு நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி அல்லது குறைவைப்பிற நாட்டு மக்கள்தொகையோடு ஒப்பிட்டு ஆய்வுகள் நடத்தவும் இது தேவைப்படுகிறது.

இறப்பு வீதம் (Mortality Rate) கணக்கிடுவதற்கு பல்வேறு குறியீடுகளைப் (Indices) பயன்படுத்துகின்றனர். அவை பொது இறப்பு வீதம் (Crude Death Rate), இளங்குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate), பால் அடிப்படையில் பல்வேறு வயதுகளில் இறப்பு வீதம் (Death rate at Different Ages by Sex) போன்றவையாகும். மக்கள்தொகையின் பொது இறப்பு வீதத்தைக் கணிக்கப் பின்பற்றும் முறைகளுள் சிறப்பானவை ஆயுள் பட்டியல்கள் (Life Tables).

ஆயுள் பட்டியல் மூலம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் பிறந்த குழந்தைகள் எத்தனை ஆண்டுகள் உயிர்வாழ்கின்றன என்பது கணிக்கப்படுகிறது. அந்த மக்கள்தொகையின் உயிர்வாழ் காலம் கணிக்க (Longevity) இது பயன்படுகிறது. பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணிப்பு (Decennial Census) நடைபெறுகிறது. இவைகளைக் கொண்டு இறப்பு வீதம் அல்லது உயிர்வாழ் வீதம் கணிக்கப்படுகிறது. ஆண் பெண் இரு பாலாருக்கும் தனித்தனியாக ஆயுள் பட்டியல்கள் உருவாக்கப்படுகின்றன. சில காலங்களில் ஒரு நாட்டின் பல்வேறு இனங்களுக்கும் பகுதிகளுக்கும் கூட இவ்விதப் பட்டியல்கள் கணிக்கப்படுவதுண்டு.

சில நோய்கள் வரவிடாமல் தடுக்கப்பட்டால் ஒரே காலத்தில் பிறந்த குழந்தைகளது உயிர்வாழ் வீதம் எப்படி இருக்கும் என்று ஆயுள் பட்டியல் மூலம் அறியலாம். இதைக்கொண்டு வருங்காலத்தில் ஒரு சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய தொழிலாளர் எண்ணிக்கையைப் பெற முடியும். மேலும், பள்ளி செல்லும் சிறுவர் எத்தனைபேர் இருப்பார்கள்? அவர்களுக்கு எத்தனைப் பள்ளிக் கட்டிடங்கள், தளவாடங்கள், ஆசிரியர்கள் வேண்டுமென்றும் கணிக்க இது உதவுகிறது.

ஆயுள் பட்டியல்களை உருவாக்கப் பிறப்பு, இறப்பு ஆகியன அடங்கிய அடிப்படைப் புள்ளி விவரங்

கள் (Vital Statistics) ஒழுங்காகாகப் பதிவு செய்யப் பட வேண்டும். பிறப்புகள் மக்கள் தொகைக்கணிப்பில் பதிவாகலாம். ஆனால், இறப்புகள் பதிவு செய்யப் படாமற் போவதுண்டு. துல்லியமாக இத்தகைய புள்ளி விவரங்கள் கிடைக்காமற் போனால் அவற்றை ஒப் பிட்டு ஆராய (Comparative Analysis) இயலாது போகும். ஆயுள் பட்டியல் ஒன்றை எடுத்துக்காட் டாகக் கொண்டு அதை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் காணலாம். கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள ஆயுள் பட்டியல் படிவத்திலுள்ள பல்வேறு கலங்களுள் (Columns) முக்கியமான ஒன்றுதான் உயிர்வாழ் வீத மாகும்.

of Probability) 1-இலிருந்து இறந்தவர்களின் வீதத் தைக் கழித்து வரும் தொகையாகும்.

(ஒருவர் வாழும் வாய்ப்பு p; இறக்கும் வாய்ப்பு q — p+q = 1 formula) px=1—qx = 1—0.13656 = 0.86344

6. $Lx = lx - \frac{1}{2}dx$

$lo = lo - \frac{1}{2}do = 132645 - \frac{1}{2} \times 18114 = 123588$

இவ் ஆயுள் பட்டியலின் ஆய்வில் ஒவ்வொரு வயதிலும் ஏற்படும் இறப்புகள் ஆண்டு முழுவதும்

| ஆயுள் பட்டியல் | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| வயது | குறிப்பிட்ட வயதில் (x)-இல் உயிரோடு இருப்பவர் | குறிப்பிட்ட வயதிற் கும் அடுத்த வயது (x+1) க்கும் இடை யில் இறப்பவர் | இறப்பு வீதம் | உயிர்வாழ் வீதம் | குறிப்பிட்ட வயது (x) க்கும் அடுத்த வயது (x+1) க்கும் இடையே உயிரோடு இருப்பவர் |
| x | lx | dx | qx | px | Lx |
| 0 | 132645 | 18114 | 0.13656 | 0.86344 | 123588 |
| 1 | 114531 | — | — | — | — |

1. x = பிறப்பில் தொடங்கி 0, 1, 2, 3, என்று 99 வரை வயதைக் குறிக்கும்.

2. lx = முதலாண்டு முடிய உயிருடன் இருப்ப வர்கள் = 132645

3. dx=முதலாண்டு முடிந்து ஆனால் இரண்டு ஆண்டு முடிவதற்குள் இறந்தவர்கள்

$dx = lx - lx + 1 = 132645 - 114531 = 18114$

4. முதல் ஆண்டில் உயிருடன் இருந்தவர்களின் எண்ணிக்கையான 132645 பேரில் மறு ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 18114 பேர் என்றால் இறப்பு வீதம் (முதலாண்டுக்கு)

$$qx = \frac{dx}{lx} = \frac{18114}{132645} = 0.136559 = 0.13656$$


5. px என்பது x வயதுள்ளவர்கள் மறு ஆண்டு வரை உயிருடன் இருக்கக் கூடிய வாய்ப்பு (Chance

பரவலாக நிகழ்வதாகவும், இறப்பினால் உண்டாகும் இழப்புகள் தவிரக் குடியேற்றம் போன்றவை நடக்க வில்லை என்றும், வறையறை செய்யப்பட்ட பிறப்பு கள் 10,000 அல்லது 1 இலட்சம் என்னும் எடுகோள் களாகக் (Assumptions) கொள்ளப்படுகிறது.

உயிர் வாழ் வீதம் பற்றிய புள்ளி விவரங்கள் துல்லியமாக எல்லா நாடுகளிலும் கிடைப்பதில்லை. ஐக்கிய நாட்டுச் சபை மக்கள் தொகை பற்றிய ஆண்டு அறிக்கையில் 1900-ஆம் ஆண்டு முதல் கிடைக் கக்கூடிய அனைத்து விவரங்களையும் ஒவ்வோர் ஆண்டும் தொகுத்து அளிக்கிறது.

கிரேக்கர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மக்களது கல்லறைகளில் இருந்து பெறப்படும் புள்ளி விவரங் களிலிருந்து அக்காலத்திலேயே உயிர்வாழ் வீதங்கள் கணிக்கப்பட்டுள்ளன என அறியப்படுகிறது. ஆயினும் இவை முழுமையாக ஏற்புடையனவா என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும்.

ஆயிரம் பிறப்புகளில் பற்பல வயதுகளில் உயிர் வாழ் வீதம் என்னவாக இருக்கும் என்பதைக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் விளக்குகிறது.




இக்காலத்தில் உயிர்வாழ் வீதம் உயர்ந்து கொண்டே வருகிறது. இறப்பு வீதம் மருத்துவக் கண்டுபிடிப்புகளாலும், தொற்று நோய்கள் பெரும் பாலும் ஒழிக்கப்பட்டிருப்பதாலும் குறைந்து வரு கிறது. குழந்தைகள் உயிர்வாழ் வீதமும் உயர்ந்துள் ளது. ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் 250 இளங் குழவிகள் தாய் வயிற்றிலேயே இறந்துவிடும் அவல நிலை இருந்தது. இப்போது தாய் சேய் நலப் பாது காப்பு வசதிகள் பெருகியுள்ளதாலும், பிறப்புக்கு முன்னும் பின்னும் தாய் சேய் நலம் நாடப்பட்டுத் தேவையான மருத்துவவசதி அளிக்கப்படுவதாலும் இத்தகைய இறப்பு வீதம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போது மகப்பேறு மருத்துவம் வளர்ச்சி பெற்று நாடெங்கிலும் கிடைப்பதாக உள்ளது.

காண்க: இளங்குழவி இறப்பு, இறப்பின் போக்கு.

தா.செ.

துணை நூல்கள்:

**Clark, Colin**, Population Growth and Land Use, Mc Millan, London, 1977.

**Gupta,** S.P., Statistical Methods, Sultan Chand, New Delhi, 1981.

**Part,J.E.** and Park, K., Preventive and Social Medicine, Banarsidas Bhanet, Jabalpur, 1985.

**Ashish Bose, E.d.**, Studies in Demography, George Allen, London, 1970.

***உயிரட்டவணை***: சைவ சமயத் தத்துவச் சார்புடைய நூலாகும். திருவாவடுதுறை ஆதீனம் 15–ஆம் பட்டம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் இயற்றிய இந்நூலில் சமயவுண்மைகள் எளிய உரைநடையில் விளக்கப்பட்டுள்ளன. பி.தெ.

***உயிராற்றல்***: இந்தியத் தத்துவ தரிசனங்களை யும் மேல்நாட்டுத் தத்துவ தரிசனங்களையும் ஆய்ந்து நோக்கும்போது உயிராற்றலைப் பற்றி அவை கூறும் கருத்துகள் தெளிவானவை. உள்ளு ணர்வைப் பற்றியும் உயிராற்றலைப் பற்றியும் என்றி பெர்க்சோன் (Henry Bergson) என்ற மேலை நாட்டறிஞர் நன்கு விளக்கியிருக்கிறார். உள் ளுணர்வு இல்லாத தனித் தன்மையற்ற சடப் பரப் பில்தான் அளவையியலுக்கும் அறிவியலுக்கும் மதிப் புண்டு. உயிராற்றல், உணர்வுநிலை முதலியவற்றை அறிவியல் முறையிலும் அளவையியல் முறையிலும், கணக்கியல் முறையிலும் நோக்க முடியாது என்று கூறுகிறார் என்றி பெர்க்சோன். கவிஞனுடைய படைக்கும் திறனாற்றலையொத்த ஒரு உந்துவிசை பிரபஞ்சத்தில் உள்ளது. அதுதான் உயிராற்றல் எனப்படும். அதனை அறிவியல் அறிவாலோ இயற் பியல் அறிவாலோ அளவையியல் அறிவாலோ மதிப் பிட முடியாது. இதனைச் சீரிய ஒத்துணர்வால் தான் மதிப்பிட முடியும். உள்ளுணர்வு என்பது இயல்பூக்கத்தைப் போன்றது. அறிவியலையும் அறி வாற்றலையும் விட உள்ளுணர்வு உயிராற்றலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. உண்மைத் தன்மையுள்ள உயிராற்றலையும் உணர்வு நிலையை யும் உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியும். மெய்ப்பொருளியலால் மட்டுமே அறிவுத் திறத்தை யும் உள்ளுணர்வையும் மதிப்பிட முடியும். உணர்வு நிலை உயிருள்ள எல்லாப் பொருள்களிலேயும் உள் ளது. தன்னுடைய செயற்பாட்டிற்காகப் பொருள் களைப் பயன்படுத்திக் கொள்ளும் உணர்வு நிலைதான் உயிராற்றல் ஆகும். பொருள்களின் (Matter) நெகிழ் வுத் தன்மைகளை உயிராற்றல் தனது தனி உரிமைக் காகப் பயன்படுத்திக் கொள்கிறது. உடம்பில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள உள்ளார்ந்த ஆற்றலை உயிராற் றல் தனது துடிப்பின் மூலம் தூண்டிவிட்டு, தன்னிச் சையான இயக்கங்களைச் செயற்படுத்துகின்றது. தொடர்ந்து புதுமைகளை உருவாக்குகின்ற செயற் பாட்டிற்குத்தான் உணர்வு நிலைத் திரள் என்பது பெயர். இந்த உலகத்திற்கு உருக்கொடுத்து அமை விக்கும் பொருளும் இந்தப் பொருளைப் பயன்படுத்

திக் கொள்ளும் உணர்வு நிலையும் தங்களைத் தாங்களே விளக்கிக் கொள்ள முடியாதவை. இவை இரண்டையும் ஆட்டுவிக்கும் மூலகாரணமான அந்தச் சக்தியின் (உயிராற்றலின்) தோற்றுவிக்கும் திறனால் தான் பரிணாமம் இவ்வளவுதூரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. முழுமையை மெய்யுருவாக்கிக் காண முடியாவிட்டாலும், உயிராற்றலை மனிதனிடத்தில் மட்டுந்தான் தெளிவாகக் காணமுடிகிறது. பொருள்களை ஒழுங்குபடுத்த முற்படும்போதும், தன்னுரிமைக்காகப் பொருளை ஒரு கருவியாகப் பயன்படுத்த முனையும்போதும் உணர்வுநிலை தன்னைத் தானே சிக்க வைத்துக்கொள்கிறது. உயிராற்றல் குறுகிய மனப்பான்மையுள்ள எந்த ஒரு பழக்கத்தையும் எதிர்க்கிறது. மனிதனுடைய முழுமைத் தன்மை வாய்ந்த ஆளுமையிலிருந்து அவனுடைய செயல்முறைகள் வெளிப்படும்பொழுது, அவன் சுதந்திரமாக இருக்கிறான். இந்தப் பக்குவப்பட்ட நிலை மனித வாழ்க்கையில் அமைவது அரிது.

உயிராற்றலுக்குப் பொருள் தடையாகவும் தூண்டுதலாகவும் அமைகிறது. பொருள், உயிராற்றலை உணர்வதற்குக் காரணமாகி, அந்த ஆற்றலைத் தீவிரப் படுத்துவதற்கும் வகை செய்கிறது. மனித வாழ்வின் முடிவான உரிமைக்காப்பு விளக்கமே புதுமையைப் படைத்தலாகும். புறத்தேயிருந்து பெறப்படாத ஆக்கக் கூறுகளால் மனித ஆளுமையைத் தொடர்ந்து வளப்படுத்துதல், அதாவது, தன்னுள்ளேயிருந்து அதனைத் தோற்றுவித்துக் கொள்ளுதல் உயிராற்றலின் முக்கிய பணியாகும். உணர்வு நிலையே உயிராற்றலின் முக்கிய பண்பாகும். உணர்வு நிலை இறந்தகால நிகழ்ச்சிகள் எவற்றையும் இழப்பதில்லை. அந்த ஆளுமையின் அனைத்து வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பிரிக்க முடியாத விதத்தில் தொடர்ந்து நினைவில் அமையக் காரணமாய் இருப்பது உயிராற்றலாகும். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைக்குப் பின்னாலும் இந்த உணர்வுநிலை தொடருமோ என்று எண்ணும் விதத்தில் உயிராற்றல் அதனைச் செயற்படுத்துகின்றது.

எல்.மு.

துணை நூல்கள்:


**Frank Thilly**, A History of Philosophy, Central Book Depot, Allahabad, 1965.

**Chevahir Jacquer**, Henri Bergron, London, 1928.

**Lindray, A.D.**, The Philosophy of Henri Bergron, London, 1911.

**Russell, Bertrand**, The Philosophy of Bergron, London, 1914.


**உயிரியம்** தொன்மைச் சமயத்தைப் பற்றி விளக்க முற்பட்ட பல்வேறு கோட்பாடுகளுள் ஒன்று. இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலைப் பற்றிய கோட்பாடான உயிரியத்தை (Animatism) வகுத்தவர் ஆர். ஆர். மாரட்டு (R. R. Marett) ஆவார். உயிர்ப்புள்ளதும் புரிந்துகொள்ள முடியாததும் உருவமற்றதும் ஆகிய இயற்கைக்கப்பாற் பட்ட ஆற்றல் இயற்கையின் வரையறைக்கு அப்பாலும் மனித ஆற்றலுக்கு உட்படாத அனைத்துச் செயல்களையும் இயக்கவல்லது. இந்த ஆற்றல் உலகிலுள்ளஅனைத்து உயிரில்லாப் பொருள்களிலும் குடி கொண்டிருக்கும். இதன் தோற்றம் மனித உணர்வுகளுக்கப்பால் காணப்பட்டாலும் செயல் திறனாகவோ மிகச் சிறப்பான மனிதச் செயல்களின் வழியாகவோ வெளிப்படும் இயல்புடையது.

மலனீசியரைப் பற்றி ஆராய்ந்த மாரட்டு உயிரியத்தையே 'மானா கோட்பாடு' (Manaism) என்றும் குறிப்பிடுகிறார். 'மானா' (Mana) என்னும் சொல் மலனீசிய மொழியிலிருந்து வந்ததாகும். மலனீசியர் பின்பற்றிய இம்மானாக் கோட்பாடு இயற்கை கடந்த நிகழ்வு, ஆவிகளின் நம்பிக்கைக்குட்பட்டது மட்டுமன்று; இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றல்களும் இதற்குக் காரணமாக உள்ளன. இவற்றின் ஆற்றல் உயிர்ப் பொருள்களைச் சார்ந்து தோன்றும். 'மானா' என்பது சிறப்பான உயிர்ப்புள்ள ஆற்றலாதலால், இந்தச் சிறப்பாற்றல் சில அரிய செயல்களை இயக்குந் தன்மை கொண்டதாகும். இதனால், சிறப்பாற்றல் பெற்ற மனிதர்களை 'மானா' என்றே குறிப்பிடுகின்றனர். கைவினைஞனுக்குக் கைதேர்ந்த கைவினைப் பொருள்களை உருவாக்கும் திறமையையும், கவிஞனுக்குப் புகழ்பெற்ற கவிதைகளை இயற்றும் திறனையும் 'மானா' கொடுக்கிறது என்று கருதுகின்றனர். மேலும், படகு செலுத்துதல், போர்த்திறன் போன்றவற்றில் ஒருவன் தன் உடனொத்த உறுப்பினரைக் காட்டிலும் மிகுந்த திறன் பெற்றிருப்பதற்கு 'மானா' ஆற்றலே காரணம் என்று நம்புகின்றனர். பாலினீசிய மக்களும் இத்தகைய கருத்தையே கொண்டுள்ளனர்.

இயற்கைப் பொருள்களின் ஆற்றல், மனித உருவம் அல்லது திறன் ஆகியவற்றின் வழியே மக்களிடையே மனக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இதுவே, அவர்களின் பண்பாட்டில் வேரூன்றிய சமய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இவ்வித 'மானா' நம்பிக்கை இந்திய ஆதிக்குடிகளிடையே 'போங்கா' (Bonga) என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றது.

பல்வேறு ஆவிகளும் அவற்றின் செயல்களுமே, மனித விதியை வரையறை செய்கின்றன என்றும்

ஆவியுலக நம்பிக்கையிலிருந்து மாறுபட்டது 'போங்கோ கோட்பாடு' என்றும் மசும்தார் (D.N. Majumdar) கூறுகிறார். ஆவி, அண்டம் அத்தனையும் கடந்த ஆற்றலே 'போங்கா' எனப்படுவது. இது கணக்கிட முடியாததும் உயிரில்லாததுமாகும். இது எவ்வித உருவத்தையும் வடிவத்தையும் ஏற்கும் தன்மை உடையதன்று; விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் உயிர் கொடுக்கக்கூடியது; வளர்ச்சியைத் தூண்டக்கூடியது; மழை, புயல், வெள்ளம், கடுங்குளிர் ஆகியவற்றிற்கும் காரணமாக அமைவது. ஓ (Ho), முண்டர் மற்றும் சோட்டா நாக்பூர் ஆதிக்குடிகளிடையே தெளிவான 'போங்கா' நம்பிக்கை காணப்படுவதாக மசும்தார் கூறுகிறார். இவர் போங்காவை மலனீசியரின் 'மானா' என்ற சொல்லிற்கும் மானாக்கோட்பாட்டிற்கும் இணையானது எனக் கூறுகிறார்.

உலகளாவிய ஆதிக்குடியினரின் நம்பிக்கைகளின் வழி உயிரியத்தின் வேறுசில கூறுகளையும் அறியலாம். சிரிகட்டாவ், அப்பாச்சி, பகண்டர், அசுதெக்கு ஆகியோர் இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலுடன் மக்களுக்கு மிக நெருக்கமான பிணைப்பு இருப்பதாக நம்புகின்றனர். இம்மக்களின் பேராளாகத் திகழ்வது 'மலை ஆவி' என்றும், விழாக் காலங்களில் இது அடிக்கடி இக்குடிகளைக் கண்காணிக்கிறது என்றும் கருதுகின்றனர். இதுதவிர, 'மனிதமலை ஆவிகள்' இவர்களின் விலங்குகளையும் செல்வத்தையும் காக்கின்றன என்றும், வேறுசில இயற்கை ஆற்றல்கள் (மானா) புயல் மற்றும் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்றன என்றும் நம்புகின்றனர். இவர்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள சிறுமலைகளின் ஆற்றலே இவர்களுக்கு நல்ல தண்ணீரை வழங்குகிறது என்பதனால் இம்மலைகளுக்குச் சிறப்பான வழிபாடுகளைச் செய்கின்றனர்.

கொசையன் (Gossaiyan)என்னும் இயற்கைக்கப்பாற்பட்ட ஆவியை மாலர் வழிபடுகின்றனர். இந்த ஆவியை வழிபடத் தவறினால் நோய், பஞ்சம், தண்ணீர்ப் பற்றாக்குறை, குறைந்த உணவு உற்பத்தி ஆகியவை ஏற்படுகின்றன என்று நம்புகின்றனர்.

உயிரற்ற, இயற்கைக்கப்பாற்பட்ட ஆவிகளின் பால் நம்பிக்கை கொண்ட சமயத்தை ஆவியுலகக் கோட்பாட்டின் (Animism) மூலம் முதன் முதலில் தைலர் (Tylor) அறிமுகப்படுத்தினார். ஒருவரது உடல் இறந்தபின் அல்லது அழிக்கப்பட்டபின் அவரது ஆவி நிலைத்திருக்கின்றது; இவ்வாவிகளே உலக நிகழ்ச்சிகளை ஆட்கொள்கின்றன என்பதே இக் கோட்பாட்டின் கருத்தாகும். உயிரியக் கோட்பாடு, ஆவியுலகக் கோட்பாடு ஆகிய இவ்விரண்டு கோட்பாடுகளும் மானிடவியல் துறைக்கு அறிமுகமாகிய திலிருந்தே இரண்டையும் வேறுபடுத்தித் தொன்மைச் சமயத்தை ஆராய்ந்து வந்தனர்.

துணை நூல்கள்:

**Lowie, R.,** Primitive Religion, Liveright Publishing Corporation, New York, 1948.

**Marett, R. R.,** The Threshold of Religion, Methuen, London, 1968.

**Radin, P.,** Primitive Religion: Its Nature and Origin, The Viking press, New York, 1937.

**Wallace, A.,** Religion: An Anthropological view, Random House, New York, 1937,

**உயிரியல்கல்வி மையம்**: இந்தியாவிலேயே முதன்முதலாக உயிரியல் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியர்களின் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 1985-இல் தொடங்கப்பெற்றது. இது இப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் புலத்தில் செயற்பட்டு வருகிறது. இது அறிவியல் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு தேசிய கல்வி மையமாகும்.

இவ்வுயிரியல்கல்வி மையம்(Biology Education centre)அறிவியலில் புதிய கல்வித் திட்டங்களை உருவாக்கவும், ஆய்வகங்களை உருவாக்கி அவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தவும், கணிப்பொறி, காட்சி கேள்வித் துணைக் கருவிகள் ஆகியவற்றை அறிவியல் கற்பித்தலில் பயன்படுத்தவும் நாட்டின் பலபகுதிகளிலும் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

அறிவியல் ஆசிரியர் ஒருவர் தம் புதிய கருத்தைச் சோதித்தறிய விழைவாரானால், அதற்கான அனைத்து வசதிகளும் இக்கல்வி மையத்தில் அவருக்குச் செய்து தரப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

**உயிரியல்சார் படிமலர்ச்சி**: உயிர்சார்ந்த பொருள்களின் அனைத்து அமைப்புகளிலும் தொடர்ச்சியான வேறுபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. இதனை ஒவ்வோர் உயிரினமும் எளிமையான, முழுமைபெறா அமைப்புகளிலிருந்து சிக்கலானதும் முழுமைபெற்றதுமான அமைப்புகளைப் பெற்று வருகிறது. ஓர் இனத்தின் மூதாதையருக்கும் அவர்களின் வழிவந்த சந்ததியினருக்குமிடையே பல வேறுபட்ட பண்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சந்ததியினரும் கொண்டுள்ள பண்பு மாற்றங்கள் படிமலர்ச்சி நிகழ்வினால் ஏற்பட்டவை. படிமலர்ச்சிக் காரணி

களின் அடிப்படையிலேயே ஒவ்வோர் உயிரினத்தின் வெளித்தோற்ற அமைப்பிலும் மரபுப் பண்புகளின் அமைப்பிலும் மாறுபாடுகள் தொடர்ந்து நிகழ்கின்றன. இந்த நிகழ்வு ஒரு காலத்தை மட்டும் சார்ந்த தன்று. மரபணுப் பொதுச் சேர்மத்தில் (Gene Pool) உள்ள மரபணுவின் பண்புகளில் நிகழும் மாற்றம் உயிரியின் (Organism) அமைப்பில் நுண்மாற்றத்தை ஏற்படுத்தி, தொடர்ச்சியான காலத்தின் நிகழ்வில் பருநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. சில உயிரியலார் படிமலர்ச்சி நிகழ்வு பெருமளவு உயிர் வேதியியல் சார்ந்தது என நம்புகின்றனர். எவ்வாறிருப்பினும் படிமலர்ச்சியினைப் பல அறிஞர்கள் பலவாறு வரையறைப்படுத்தினாலும், அதன் உட்பொருள் ஒன்றாகக் காணப்படுவதை அறியலாம்.

படிமலர்ச்சியின் இயல்பினை உயிரியலார் பலவாறு விளக்குவர். மரபணுவின் அடுக்குநிகழ்வில் (Gene Frequency) ஏற்படும் மாற்றம் என்றும் உடற்கூற்றில் ஏற்படும் மாற்றம் என்றும் மக்கள்தொகையின் மரபணுவின் (Gene) அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்றும் பலவாறு இதன்பொருள் விரித்துக் கூறப்படும். உயிரியல்சார் படிமலர்ச்சி பற்றிப் பல ஆய்வுகள் மூலம் பொதுப்படையான கருத்துகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. படிமலர்ச்சி மாற்றங்கள் பொதுவாக உயிரிகளின்மீது செயற்பட்டுக் காலப் போக்கில் மரபணுவின் பண்பில் மாற்றத்தைத் தோற்றுவிக்கின்றன.

உயிரியல்சார் படிமலர்ச்சியின் செயற்பாட்டிற்குக் கீழ்வரும் அடிப்படையான காரணங்களைக் குறிப்பிடுவர் உயிரியலார். 1. உடனடி மாற்றம் (Mutation)- இது படிமலர்ச்சிக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களை ஏற்படுத்துகிறது. 2. தேர்வு (Selection)- இது அடிப்படைப் பொருள்களைத் தகுதிவாய்ந்த மரபுத்தோற்ற வகையாகத் (Genotype) தேர்ந்தெடுக்கிறது. 3. குறிப்பற்ற மரபணுப் பெயர்ச்சி (Random Genetic Drift)- இது மக்கள் குழுவில் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. 4. வேறுபட்ட இடப்பெயர்ச்சியும் (Differential Migration) மரபணு ஓட்டமும் (Gene flow)- இவை மக்கள் தொகையில் மனிதர்களின் இடப்பெயர்ச்சியினால் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் நிலையற்ற மாற்றத்தையும் இருவேறுபட்ட மக்கள் குழுக்களிடையே மரபணுப் பண்பில் மாறுதலையும் ஏற்படுத்துகின்றன. இக்கூறுகள் அனைத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது படிமலர்ச்சியின் திசை மக்கள் குழுவின் ஒரு நிலையை வேறு நிலைக்குக் கொண்டு செல்லும் வளர்நிலைச் செயலாகவோ (Progressive Movement) ஒன்று அல்லது பல்வேறு மக்கள் குழுக்களிடையே மாற்றங்களை ஏற்படுத்தும் விரிநிலைச் செயலாகவோ (Divergence Movement) அமையும்.

ஒரு பெரிய அளவிலான மக்கள் தொகையில் படிமலர்ச்சி மாற்றத்திற்கு முதல்நிலை இயக்க ஆற்றலாக அமைவது மரபணு அடுக்கு நிகழ்வில் ஏற்படும் மாற்றமே ஆகும். இதில் மூன்று வகை மாற்றங்களைக் குறிப்பிடலாம். அவை 1. அமைப்புற்ற மாறுதல்கள் (Systematic Changes), 2. குறிப்பில்லாத ஏற்ற இறக்கம் (Random Fluctuation), 3. திரும்ப நிகழா மாற்றங்கள் (Non-recurrent Changes) ஆகும்.

ஓர் உயிரியின் அமைப்பில் மட்டும் படிமலர்ச்சி நிகழ்வு நடந்து, அந்தப் படிமலர்ச்சி நிகழ்வினால் புதிய சிறப்பினம் (Species) தோன்றுமேயானால் அவ்விதப் படிமலர்ச்சியினை உள்ளமைந்த படிமலர்ச்சி (Intra-specific Evolution) அல்லது நுண்படிமலர்ச்சி (Micro Evolution) எனவும், இவ்வாறன்றி ஒரு படிமலர்ச்சி நிகழ்வு உயிரினத்தில் பொதுக் குடும்பத்தையும் (General), குடும்பத்தையும் (Family) வரிசையையும்(Order) தோற்றுவிக்குமேயானால் அவ்விதப் படிமலர்ச்சி வெளியமைந்த படிமலர்ச்சி (Transpecific Evolution) அல்லது பெருநிலைப் படிமலர்ச்சி (Macro Evolution) எனவும் கூறப்படும். இவ்விரு வகைப் படிமலர்ச்சி நிகழ்வுகளுக்கிடையே காணப்படும் முதன்மையான வேற்றுமைப் படிமலர்ச்சி நிகழும் காலமேயாகும். நுண்படிமலர்ச்சி என்பது மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறிய வேறுபாட்டினை உயிரினத்தில் தோற்றுவிப்பதாகும் பெருநிலைப் படிமலர்ச்சி என்பது நீண்ட மண்ணியல் கால (Geological Time) அடிப்படையில் நிகழ்வதாகும். ஓர் உயிரினத்தின் மாற்றம் அல்லது குறிப்பிட்ட மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்கள்ஆகியவற்றைஅறியப் படிமலர்ச்சி வீதம் (Rate of Evolution), அது நிகழும் கால எல்லை முதலானவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

படிமலர்ச்சிவீதத்தினைக் கட்டுப்படுத்தும் அல்லது அதனைத் தூண்டும் காரணிகள் பலவாகும். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை மக்கள் தொகையில் உள்ள மரபணுப்பண்பின் வேறுபாடுகள் (Genetic Variability), மக்கள்தொகை அமைப்பு (Population Structure), மக்களின் தகவமைப்பு (Adaptation), மக்கள் தொகையில் ஏற்படும் உடனடி மாற்றத்தின் வீதம் (Mutation Rates) முதலியனவாகும். இதனாலேயே படிமலர்ச்சியின் வீதம் பல்வேறு சூழ்நிலையில் வாழும் இரு தனிக் குழுக்களிடையோ ஒரே சூழ்நிலையில்வாழும் குழுக்களிடையோ மாறுபட்டுக்காணப்படும். இது தவிர, ஒரே குழுவில் ஒரு வழியே நிகழும் படிமலர்ச்சியில், பல காலங்களில் அதன் வீதம் வேறுபாடுகளைக் காட்டுந் தன்மையது.

சிம்சன் (Simpson) என்பார் படிமலர்ச்சி வீதத்தினை அதன் நிகழ்வுத் தன்மையை வைத்துத் தொகுதிவழிப் படிமலர்ச்சி (Phyletic Evolution), மொத்தப் படிமலர்ச்சி (Quantum Evolution), சிறப்பினவாக்கம் அல்லது பிளவுறும் படிமலர்ச்சி (Speciation or Splitting Evolution), வெடிக்கும் படிமலர்ச்சி (Explosive Evolution), தார்வின் படிமலர்ச்சி (Darwin Evolution) என ஐந்து முறைகளாக விளக்குவார். அனைத்துப் படிமலர்ச்சி நிகழ்விற்கும் அடிப்படையாக அமைவது மரபணுவில் ஏற்படும் மாற்றமே. இம்மாற்றத்திற்கு வழி கோலுவது உடனடி மாற்றம் (Mutation) ஆகும் என்பது படிமலர்ச்சியியலாரின் பொதுக்கருத்து.

படிமலர்ச்சியின் வளர்ச்சி நிலையினை ஆராயின், இரு பரிமாணங்கள் இதன் செயற்பாங்கில் புலப்படும். உயிரினங்கள் அவை தோன்றிய கால்வழிக்குள் ஏற்படும் படிமலர்ச்சியினை (Anagenesis) ஒரு பரிமாணமாகவும், ஒருகால்வழி உயிரினங்கள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபட அமைந்த படிமலர்ச்சியினை (Cladogenesis) மற்றொரு பரிமாணமாகவும் உடையன. ஒரு கால்வழிக்குள் நிகழும் படிமலர்ச்சி மாற்றம் என்பது காலப்போக்கில் இயற்கைத் தேர்வின் வழி நிகழ்வதாகும். இதன்வழி அந்த உயிரினங்கள் தாம் வாழும் சூழ்நிலையில், இயற்பியல் (Physical) உயிர்சார் (Biotic) மாற்றங்களைப் பெறுகின்றன. இன்றைய உலகில் பல்வேறு உயிரினங்கள் காணப்படுதற்குக் கிளைப்படிமலர்ச்சி (Cladogenesis) காரணமாகிறது. இந்த நிகழ்வு உயிரினங்களுக்கு மாறுபட்ட தகவமைப்புப் பண்புகளையும் மாறுபட்ட வாழ்க்கையமைப்புகளையும் பெற வகை செய்கிறது. கிளைப் படிமலர்ச்சி நிகழ்வில் சிறப்பினத்தோற்றம் (Speciaion) நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

இனப்பெருக்கத்தில் தனித்த நிலையினைக் கொண்ட ஒவ்வொரு சிறப்பினமும் படிமலர்ச்சி நிகழ்வின் தனித்த அலகாகும். ஒவ்வொரு தனிச் சிறப்பினமும் தனித்த நிலையில் காலத்தினூடே மரபணுவின் பண்பில் மேலும் மேலும் மாற்றங்களைப் பெற்றுவரும். தொகுதிவழி வரலாற்றை (Phylogeny) நன்கு ஆராயின், ஒவ்வொரு தொகுதியின் உயிரினத்திலும் ஏற்பட்டுள்ள மரபு மாற்றத்தை (Genetic Change) அளவிட முடியும். அண்மைக் காலங்களில் பல புதிய அணுகுமுறைகளைக் கொண்டு, படிமலர்ச்சிகளை நுட்பமாக ஆராய்ந்து விளக்கியுள்ளனர்.

ஓர் உயிரியின் படிமலர்ச்சியில் இரு தன்மைகளைக் காணலாம். 1. அந்த உயிரியின் படிமலர்ச்சி அது வாழும் சூழிட வகைக்கு (Ecotype) ஏற்பத்தகவமைப்பை மாற்றும். 2. வளர்நிலை சார்ந்த (Progressive) அல்லது உயிரினக் குழுவின் வளர்ச்சியோடு ஒத்த படிமலர்ச்சியினை உண்டு பண்ணும். எனவே, படிமலர்ச்சி என்னும் கோட்பாட்டை முழுவதாக அறிய மக்கள் தொகையியல் சார் உயிரியல் (Population Biology) கூறும் இரு உண்மைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிறது. அவை 1. எந்த இரு தனி உயிரிகளும் ஒன்று போல் காணப்படா; 2. சூழ்நிலையும் மரபுச் சேர்மமும் (Genetic Endowment) ஒவ்வோர் உயிரியின் அனைத்துக் கூறுகளுக்கும் (Trait) தன் பங்களிப்பைக் கொடுக்கிறது என்பனவாகும்.

உலகின் பெரும்பகுதியில் மிகச்சிறிய பகுதியில் மட்டுமே மனித வாழ்க்கை காணப்படுகிறது. உயிரியல்சார் படிமலர்ச்சியின் அறிவினை இழந்த மண்ணுலகின் உயிரிகளை மட்டும் வைத்தே அறிய முடிகிறது. எனினும், இவ்வுலகில் உயிர் தோன்றிய சரியான காலம் என்ன என்பது இன்னும் வினாவாகவே உள்ளது. 500 மிலியன் ஆண்டுகள் வரை காலமுடைய புதைபடிவங்கள் (Fossils) ஆய்வுகளின் வழி கிடைக்கப்பெற்றுள்ளன. புதைபடிவங்களாகக் கிடைக்கும் சில உயிரிகள் கடலினத்தைச் சேர்ந்தவை ஆகும். இதனால், படி மலர்ச்சியினை ஆய்வு செய்யக் கிடைத்த புதைபடிவங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டன எனலாம். இதற்கு முதன்மையான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடலாம். 1. இன்று வாழும் சில தொன்மை உயிரிகள் மிகச் சிறியதாகவும் இவற்றை மண்ணுக்கடியில் பேணிக் காப்பது அரிதாகவுமிருத்தல். 2. 500 மிலியன் ஆண்டுகளுக்கு மேற்பட்ட மண்ணியல் அடுக்குகள் (Geological Strata) காலநிலையாலும் அழுத்தத்தாலும் மிகவும் மாறிவிட்டன. இந்த அனைத்துக் கருத்துகளையும் ஆய்வு செய்து தோப்சான்சுகி (Dobzhonsky), படிமலர்ச்சி, மரபியல், மனிதன் (Evolution, Genetics and Man) என்னும் நூலில் மண்ணுலகில் உயிரினம் 500 மிலியன் ஆண்டுகளுக்கு முன்பு உண்டானது என்பார். இன்று உயிர் வாழும் அனைத்து உயிரிகளின் கருத்திசு நிலையிலிருந்து வளர்ச்சி, அவற்றின் அமைப்புகள். வேதியியற் பண்புகள், சூழலமைப்பில் வளர்ச்சி, தகவமைப்பு முதலான அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி, உயிரினத்தின் தோற்றம் முதல் இன்றைய நிலை வரை காணும் பெரும் பரப்பை உயிரியல் சார் படிமலர்ச்சி கொண்டுள்ளது.

எம்.சே.

துணை நூல்கள்:

Dobzhonsky, T., Genetics of the Evolutionary Process, Columbia University Press, New York, 1970.

**Hanson.E.D.**, Animal Diversity, Prentice Hall, Inc., U.S.A., 1964.

**Savage, Jay,M.**, Evolution, Holt, Rinehart and Winston, New York, 1969.

**Simpson, G.G.**, The Major Features of Evolution, Columbia University Press, New York, 1953.

***உயிரியல்சார் மானிடவியல்***: காண்க: உடல்சார் மானிடவியல்.

***உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாடு***: மக்கள்தொகைப் பெருக்கம் இயற்கையான பாலுணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுகிறது என்ற இயற்கை விதிக் கோட்பாட்டிற்கு எதிராக இக் கோட்பாடு உருவானது. தாமசு இராபர்ட் மால்தசு என்னும் பொருளியல் பேரறிஞர் முதன் முதலாக மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய தம் ஆய்வுக் கருத்துகளை நூல்களின் மூலம் கி.பி. 1798-இலும் கி.பி. 1803-இலும் வெளியிட்டார். அன்றிருந்து மக்கள்தொகையியல் (Demography)பல ஆய்வுக்குட்பட்டுச் சிறந்த கருத்துத் தொகுப்புகளை வழங்கி வருகிறது. உயிரியல் சார்ந்த மாற்றங்கள் மனிதனில் ஏற்படுவதன் அடிப்படையில் மனித சமுதாயத்தின் படிமுறை வளர்ச்சி (Evolution) மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று இசுபென்சரும் (Herbert Spencer) கினியும் (Gini) கூறினர். இவ்வாறு ஏற்படும் உயிரியல் சார்ந்த இயற்கை மாற்றங்கள் அறுதியான தாக்கமுடையன என்று இவர்கள் உறுதியாகக் கருதினர். மனிதனது கருத்தரிக்கும் திறன் (Facundity) குறைபடுதல், இம் மாற்றங்களில் மிகவும் திட்டமான விளைவுகளை உண்டாக்க வல்லது. எனவே, இனப்பெருக்கத்திறன் ஊறுபட்ட பின்னர், மக்கள்தொகைப் பெருக்கமோ சுருக்கமோ மனிதனின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்டு, படிமுறை வளர்ச்சி ஆற்றலில் மனிதன் மேலும் கட்டுப்பாடு செலுத்த இயலாதவனாக ஆகிறான்.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டுக் (Biological Theory of Population) கருத்துகளைத் தோற்றுவித்த இசுபென்சர் (கி.பி. 1820–1903) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர்தம் உயிரியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் இவருக்கு முன்னோடிகளான சாட்லரும் (Sadler) தபுள்டேயும் (Doubleday) எழுதிய கருத்துகளை ஒட்டியவையாகும். மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு மனிதன் மட்டுமே காரணமாயிருக்க முடியாது. இதற்கு இயற்கைச் சக்திகளும் இன்றியமையாக் காரணிகளாக விளங்குகின்றன. மனிதன் தன் காலத்தையும் ஆற்றலையும் தன் சொந்த அறிவு வளர்ச்சி, பொது அறிவியல், பொருளாதார சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காகச் செலவிடும்போது, இனப்பெருக்கத்திற்குக் கவனம் செலுத்தாமற் போகிறான் என்பது இசுபென்சர் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து. குறிப்பாக, பெண்கள் அறிவு வளர்ச்சி சார்ந்த ஈடுபாடுகளில் கவனம் செலுத்தும்போது அவர்களது கருத்தறிக்கும் திறன் கீழிறங்குகிறது. இதன் விளைவாக மக்கள் தொகைப் பெருக்கம் மந்தநிலை அடைகிறது. சமுதாய முன்னேற்றப் போக்குப் பெண்கள் மிகுதியாகத் தங்கள் சொந்த வளர்ச்சியில் ஈடுபாடு செய்யத் தூண்டுவதாக அமைகிறது. அதுவும் அவர்களது கருத்தரிக்கும் திறனைக் குறைக்கிறது.

மூளை உழைப்பு மிகுதியாக மிகுதியாக, பெண்களின் இனப்பெருக்கத் திறன் (Fertility) குறைவுபடுகிறது என்று இசுபென்சர் கருதினார். உயர்குடிப் பிறந்த பெண்கள் ஏழைப்பெண்களை விட அதிகச் சத்துள்ள உணவைப் பெறுகிறார்கள். எனினும், அவர்களது இனப்பெருக்கத் திறன் குறைவுள்ளதாக இருப்பதற்கு வேறு காரணம் இருக்க முடியாது. அவர்கள் தங்கள் மூளை உழைப்பை மிகைப்படுத்தும்போது அவர்களது உடல் பாதிக்கப்படுகிறது. அதுநேரடியாக அவர்களது இனப்பெருக்கத் திறனைப் பாதிக்கிறது. அது மட்டுமன்றி அவர்களது கருத்தரிக்கும் திறனும் நாளடைவில் ஊனமடைகிறது. ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் அவர்களால் பெறமுடிவதில்லை. அவர்களால் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்து வளர்க்க முடிவதில்லை. சமுதாயத்தின் உயர்மட்டங்களில் உள்ள பெண்கள் கல்வி, பொருளாதாரம்,சமூகம் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு அதிக அக்கறை காட்டி வருவதால், சமுதாயத்தின் உயர்மட்டத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் இல்லை என்று இசுபென்சர் கூறினார்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளின் மக்கள்தொகைப் பெருக்கம் இவ்வகையைப் பின்பற்றினதாகத் தோற்றமளித்தாலும், இதுதான் மந்தமான மக்கள்தொகைப் பெருக்கத்திற்குக் காரணம் என்று கூறிடப் போதிய ஆதாரம் இல்லை. மேலும், இனப்பெருக்கத்தின் மீது மனிதனுக்கு முழுமையான கட்டுப்பாடு இல்லையென்றும், அது அவன் கட்டுப்பாட்டிற்குட்பட்டது என்றும் கூறுதல் ஏற்புடைத்தன்று.

இத்தாலிய நாட்டவரான கொராடோ கினி (Corrado Gini, கி.பி. 1884) என்பவர் சமுதாயங்கள் மூலமாக நாடுகள் படிமுறை வளர்ச்சிக்குள்ளாகின்றன என்று தம் உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டை

விளக்கினார். மக்கள்தொகை மாற்றங்கள் மூலமாகவே படிமுறை வளர்ச்சி நடைபெறுகிறது; சமூக, பொருளாதார மாற்றங்களை விட மக்கள்தொகைப் பெருக்க வீதங்களே நாடுகளின் படிமுறை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன என இவர் கூறினார். ஒரு சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்கள் கூட்டம் பல்வேறு மக்கள்தொகைப் பெருக்க வீதங்களுடையதாக விளங்குகிறது; ஆனால், விரைவில் முழு மக்கள் தொகையும் உயிரியல் சார்ந்த ஒரே சீரான குணங்களை அடைந்துவிடுகிறது; கினி பல்வேறு நாடுகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து இக்கருத்தை வெளியிட்டார்.ஒரு தலைமுறையில் சிறியதொரு பிரிவினரே பின்வரும் தலைமுறையின் பெரும்பான்மையான மக்கள் எண்ணிக்கையை உண்டாக்குகிறவர்களாக இருக்கின்றனர்; மக்கள் தொகை சுழற்சியான வளர்ச்சி, தேய்வு ஆகியவற்றுக்குட்படுகிறது என்று இவர் கூறினார்.

கினி ஒரு தனி ஆளின் வாழ்க்கைச் சுழற்சிக்கு மக்கள்தொகைப் பெருக்கச் சுழற்சியை ஒப்பிட்டார். முதலில் மிகத் தீவிர வளர்ச்சி ஏற்பட்டு, பின்னர் மந்தநிலை எழுகிறது. அதன் பிறகு முழுவதுமாக அடைபட்டுப் போகிறது. இப்பருவத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமாகக் குறைந்து செல்கிறது. நாகரிகத்தின் தன்மையும் குறைவுபடுகிறது. ஒவ்வொரு நாடும் இவ்வகையான சுழற்சி விதிக்குட்பட்டதே.

கினி கருத்துப்படி, முதற்கட்டத்தில் மிகுந்த கருத்தரிக்கும் திறனுள்ள தலைமுறையினர் மக்கள் தொகைப் பெருக்கத்தை உண்டாக்குகின்றனர். இவ்வித இனப்பெருக்கம் சமுதாயக் கட்டமைப்பில் சிக்கலான அமைப்புகளை உருவாக்குகிறது. பல சமூக இனங்களும் வகுப்புகளும் பிறக்கின்றன. தொழிற்றுறை மற்றும் வாணிக நடவடிக்கைகள் பெருகுகின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் வளர வளர அதன் அதிகரித்த தேவைகள் உணரப்படுகின்றன. போர் அல்லது குடியேற்றம் அல்லது இரண்டுமாகச் சேர்ந்த காரணங்கள் பெருக்கத்தைத் தாக்குகின்றன. அடுத்த கட்டத்தில் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு மேலும் சிக்கலடைகிறது. இதன் விளைவாக மக்கள்தொகைப் பெருக்க வீதம் குறைவுபடுகிறது. இந்தச் சமுதாயத்தின் உயர்குடி இனங்கள் கீழ்க்குடி மக்களைவிட இனவிருத்தித் திறன் குறைந்தவர்களாக இருக்கின்றனர்.இவ்வகையில் உயிரியல் சார்ந்த காரணமே மக்கள்தொகைப் பெருக்கத்தை மந்தப்படுத்துகிறது. இதுவே அடித்தளம். குழந்தைப் பிறப்புகள் குறைவுபடுதல் கருத்தறிக்கும் திறன் குறைவுபாட்டால் ஏற்படுகிறது. மனிதனது இனப்பெருக்கத் திறன், கருத்தரிக்கும் திறன், உயிர்வாழ் வீதம் ஆகியன யாவும் உயிரியல் காரணிகளால் ஏற்படுகின்றன.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டின்படி, சூழமைவு முறை உயிரியல் மாற்றமே (Mystique Biological Change) மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் காரணம் என்பது கூறப்படுகிறது. ஆனால், இன்றைய ஆய்வுகள் இக் கருத்தினை முழுவதுமாக ஆதரிக்கவில்லை. உயிரியல் சார்ந்த மாற்றங்களுக்கும் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் உள்ள உறவுகள் அறியப்படாத மறைபொருளாக இல்லாமல், அனைவரும் அறிந்த உண்மைகளாக இன்று அறியப்பட்டுள்ளன.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாடு, சமூக மக்கள் தொகைக் கோட்பாடு போன்றவை யாவும் அந்தந்தக் கால கட்டத்தில் சிறப்பாக விளங்கிய கருத்துகளின் அடிப்படையில் தோன்றியவையே. மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய விதி என்று ஒன்றை எல்லாக் காலங்களிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகக் கூற இயலாது என்பது மக்கள்தொகையியலாரின் பொதுவான கருத்து. தா.செ.

துணை நூல்கள்:

**Spencer, Herbert**, The Principles of Biology, D.Appleton and Company, New York, 1867-68.

**Spiegel, Henry**,W., The Development of Economic Thonght-Great Economists in Perspective, John Wiley and Sons, New York, 1952.

**Alfred Sauvy**, Fertility and Survival, Population Problems from Malthus to Mao Tse Tung, Criterion Books, New York, 1961.

**உயிரினங்களின் தோற்றம்:** சமூக வரலாற்றை அறிவியல் கோட்பாட்டின் வாயிலாக ஆய்வு செய்து வரலாறு, சமூகம், அரசாங்கம், சட்டம் ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய விதிகளை வகுக்கும் முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மிகுதியாகச் கையாளப்பட்டது. சார்லசு தார்வின் (Charles Darwin) என்ற ஆங்கில இயற்கோட்பாட்டாளர் தம் 'உயிரினங்களின் தோற்றம்' (The Origin of Species) என்ற நூலில் கூறியுள்ள பரிணாம வளர்ச்சிக்கோட்பாட்டை, எகல் (Hegal) போன்றோர் கையாண்டதிலிருந்து இந்த ஆய்வு முறை தொடங்கிற்று. சார்லசு இராபர்ட்டு தார்வின் (கி.பி. 1809-1882) இயற்கைப் பொருள்களை ஆராய்ந்து தம் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளைக் கூறினார். அவர் 5 ஆண்டுகள் தென்அமெரிக்காவின் மேற்குக் கரையி

லும் பசிபிக்குப் பெருங்கடல் தீவுகள் சிலவற்றிலு முள்ள செடிகள், உயிரினங்கள் ஆகியவற்றின் வாழும் முறையினை அவை வாழ்ந்த சூழ்நிலைகளிலேயே ஆய்வு செய்து, மனிதன் உட்பட எல்லா உயிரினங் களும் தத்தம் உறுப்புகளில் ஏற்படுகிற மாறுதல்களின் விளைவாகப் படிப்படியாக வளர்ந்து, வேறு வேறு உயிர்களின் உருவத்தை அடைகின்றன என்று கூறி னார். அவர் பரிணாமக் கோட்பாடுகளை 'உயிரினங் களின் தோற்றம்', 'மனிதனின் தோற்றம் (The Descent of Man) முதலிய தம் நூல்களில் விளக்கியுள் ளார்.

பரிணாமக் கோட்பாடு: ஓர் உயிர்வகை (விலங்கு அல்லது பறவை) படிப்படியாக வளர்ச்சி பெற்றுத் தன் உறுப்பில் ஏற்படும் மாறுதலினால் வேறோர் உயிரினத்தின் உறுப்புகளையும் உருவத்தையும் பெறு கிறது. இவ்வாறு பரிணாம முறையில் அல்லது படிப் படியான வளர்ச்சி முறையில் ஓர் இன உயிரிலிருந்து மற்ற இன உயிர்களெல்லாம் தோன்றுகின்றன. மனிதனின் தோற்றமும் இவ்வாறு பரிணாம முறை வாயிலாக மற்ற உயிரினங்களிலிருந்து ஏற்பட்டதே. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில், 1. பலவகை உயிரினங்கள் (Variations) உள்ளன. இதனால் ஓரின உயிர் மற்றோரினமாகப் படிப்படியான வளர்ச்சி முறையில் மாறுவதற்கு வழி ஏற்படுகிறது. 2. ஒவ் வோர் இன உயிரியும் தன் மரபு வழிப் பண்பு காரண மாகத் தன் உயிர் உறுப்புகளின் வடிவத்தை அடுத்த தலைமுறைக்கு அளிக்கிறது. 3. வாழுதற்கான போராட்டம் (Struggle for Existence) நடைபெறு கிறபோது, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த இன உயிர் வாழும் தகுதி உடையதோ, அந்த இனஉயிர் பெருகுதலின் வழியாக மற்றோர் இன உயிராக வளர்கிறது. தார்வின் கூறிய இந்தப் பரிணாம வளர்ச்சிக் கருத்துகள் பிற்காலத்தில் பெரும் மாறு தலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

அரசியல் ஆய்வில் பரிணாமக் கோட்பாடு: எகல் என்ற செருமானியரின் அரசு பற்றிய கோட்பாட்டில் (Theory of the State) தருக்க வாத முறையும் அரசியலதிகாரம் அனைத்தின் வடிவமே தேசிய அரசு என்னும் கருத்தும் காணப்படுகின்றன. அவர் பரிணா மக் கோட்பாட்டைத் தம் அரசியலாய்வில் கையாண் டார். முதலில் அவர் தருக்க வாத முறைப்படி தேசிய அரசே (National State) எல்லா அரசியல், சமூக அமைப்புகளுள்ளும் முதன்மைச் சிறப்பு உடை யது என்று கூறினார்.

எகல் வரலாற்று முறையினைக் கையாண்டார். இம் முறையின்படி, இயற்கையில் எல்லாப் பொருள் களுக்கும் பொருந்தக்கூடிய ஒரே வகையான வளர்ச்சி பற்றிய சட்டம் இருக்கிறது. இச்சட்டம் ஒவ்வொரு பொருளின் அனைத்து நிலைகளிலும் காணப்படுகி றது; பொருளாதார நிறுவனங்கள், விஞ்ஞானக் கருத்து, அரசாங்கம் பற்றிய கருத்து ஆகியவற்றில் காணப்படும் சட்டங்கள் எல்லாம் பரிணாம வளர்ச்சி யால் ஏற்பட்டவை; சமயம், ஒழுக்கவியல், சட்டம், அரசாங்கம் முதலிய ஒவ்வொன்றின் பரிணாம வளர்ச்சியிலும் ஒவ்வொன்றின் சிறப்பியல்பு நிலை பெற்றுள்ளது. சமூக இயல் தத்துவத்தில் மூன்று வெவ்வேறான விதிகள் காணப்படுகின்றன. 1.எல்லா மனித இனமும் வளர்ந்து முன்னேறுகின்றன. 2. இதன் விளைவாகப் படிப்படியான முன்னேற்ற முடைய தேசிய பண்பாடுகள் தோன்றுகின்றன. 3. பல்வேறு உயிரினங்களின் உறுப்புகள் பரிணாம முறை யில் வளருகின்றன.

மதிப்பீடு: எகல் கையாண்ட முறையிலும் அவர் தம் கருத்திலும் சில குறைபாடுகள் உள்ளன. உண் மையில் தருக்கவாத முறை என்பது தேசிய வலிமை என்பதோடு தொடர்புடையது அன்று. அவர் கூறிய முழுவல்லமை உடைய அரசு என்ற கோட்பாடு பழைமை விரும்பும் இயல்பையும், தருக்க இயல் கோட்பாடு புதிய தீவிரவாதத் தொழிலாளர் கோட் பாட்டையும் எடுத்துக் காட்டின. அவர்தம் தருக்க இயல் கோட்பாடு பின்னர் மார்க்சு (Marx) வகுத்த சமநிலைக் கொள்கைக்குத் தத்துவ இயலான ஆதா ரத்தை அமைத்துத் தந்தது.

எகல் பொருத்தமில்லா விதிகளை இணைத்துள் ளார். மனித இனத்தின் முன்னேற்றம் என்பதும் எகலின் வரலாறு பற்றிய தத்துவமும் தார்வின் கூறிய பல்வேறு வகைப்பட்ட உயிரின வகைகளையோ உயிர்களின் மரபுவழிப் பண்புகள் பற்றிய விதி களையோ சார்ந்திருக்கவில்லை. அவர் கூறும் பண் பாட்டு வளர்ச்சி பற்றிய கருத்தும் மனித முன்னேற்ற மென்ற கருத்துக்குப் பொருந்தவில்லை.

தார்வின் கூறிய வாழத் தகுதியுள்ள உயிரினம் இயற்கைத் தேர்வு விதியின்படி (Law of Natural Selection) இனப்பெருக்கம் செய்கிறது என்னும் கருத்துக்கும் அதன் உறுப்புகள் பரிணாம முறையில் வளருகின்றன என்னும் கருத்துக்கும் மார்க்சு கூறிய வருக்கப் போராட்டத்துக்கும் ஓரளவு ஒற்றுமை இருக்கிறது. தார்வின் கோட்பாடே செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James S.Mill) முத லியோர் வகுத்த பயன்வழிக் கோட்பாட்டிற்கு (Utilitarianism) நற்பயனுடைய செயலே மக்களால்

ஆதரிக்கப்பட்டு நிலைபெறும் என்ற கருத்தை அளித்தது. அதுவே எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) என்ற ஆங்கிலத் தனியாள் உரிமைக் கோட்பாட்டாளர்க்கு 'வாழத் தகுதியுடையது பெருகி வாழும்' என்ற கருத்தையும் அளித்தது. மேலும், அக் கோட்பாட்டின் 'தகுதியுடையதன் வாழ்வு' (Survival of the Fittest) என்னும் கருத்தே தனியார் பொருளாதாரக் கோட்பாட்டின் (Theory of Laissez Paire or Economic Individualism) சிறப்புக்கும் காரணமாக அமைந்திருந்தது.

துணை நூல்கள்:

**Aris, Reinhold**, History of Political Thought in Germany from 1789 to 1815, London, 1936.

**Hook, Sidney**, From Hegel to Marx: Studies in the Intellectual Development of Karl Marx, New York, 1936.

**உயிரெழுத்து**: மொழியறிஞர்கள் பேச்சொலிகளை உயிரெழுத்து, மெய்யெழுத்து எனப் பகுக்கின்றனர். மிடறு, வாய் முதலிய பேச்சுறுப்புகளின் வழியாக வெளியேறும் காற்று எவ்விதத் தடையோ உராய்வோ இன்றிச் செல்வதால் தோன்றுவன உயிரொலிகள். குரலிதழ்கள் (Vocal Chords) அதிரப் பிறக்கின்றமையால் இவை ஒலிப்புடை ஒலிகளாக (Voiced Sounds) உள்ளன.

பேச்சுப் பொறியில் (Speech Apparatus) வாயறையில் உள்ள நாவின் நிலை, இதழ்களின் வடிவம் இரண்டினையும் பொறுத்து உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன. நாவினை வாயறையில் தாழ்வாக இருக்குமாறு செய்யலாம்; முன் அண்ணம் (Hard Palate), பின் அண்ணம் (Soft Palate) ஆகியவற்றை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தலாம். நாவின் தொழில்களுடன் இதழ்களைக் குவித்தல், விரித்தல், இயல்பான நிலையில் வைத்துக் கொள்ளுதல் போன்ற தொழில்களாலும் உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன. நாவின் விறைப்பாலும் (Tense), நெகிழ்வாலும் (Lax), வளைவாலும் (Retroflexion), மூக்கறைக் காற்றாலும் உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன.

உலக மொழிகளில் சில அ,இ,உ என்னும் மூன்று உயிரெழுத்துகளை மட்டுமே கொண்டுள்ளன. எசுகிமோ மொழியும் சில அராபியக் கிளைமொழிகளும் இவ்வகையின. பெரும்பாலான மொழிகள் அ,இ,உ, எ,ஒ என்னும் ஐந்து உயிரெழுத்துகளைக் கொண்டுள்ளன. தமிழ், கன்னடம், இலத்தீன், சப்பான் மொழிகள் இவ்வகை மொழிகளுள் சிலவாகும். இத்தாலிய மொழியிலும் இலத்தீன் பேச்சு வழக்கிலும் மேற்கூறிய ஐந்து உயிரெழுத்துகளுடன் [ɛ,ɔ] என்னும் இரண்டு உயிரெழுத்துகளும் சேர்ந்து ஏழு உயிரெழுத்துகள் உள்ளன.

மொழியியலார் உயிரெழுத்துகளை வகைப்படுத்தும் முறைகள் வருமாறு: இதழ்கள் குவிந்த நிலையில் உ, ஒ [u,o] என்னும் உயிர்கள் பிறக்கின்றன; இவை குவி உயிர்கள்(Rounded Vowels) எனப்படும். இதழ்கள் குவியாமல் விரிந்திருக்கும் நிலையில் இ, எ [i,e] என்னும் உயிர்கள் பிறக்கின்றன. இவை குவியா உயிர்கள் (Unrounded Vowels) எனப்படும்.

வாயறையில் உள்ள நுனி நாவை (நாவின் முன்பகுதி) முன் அண்ணத்தை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தும்பொழுது நுனிநாவின் தொழிற்பாட்டால் [i,e,ɛ,a] என்னும் உயிர்கள் பிறக்கின்றன; இவை முன்னுயிர்கள் (Front Vowels) எனப்படும். கடைநாவினைப் (நாவின் பின்பகுதி) பின் அண்ணத்தை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தும்பொழுது கடைநாவின் தொழிற்பாட்டால் [u,o,ɔ,ɑ] எனவும் உயிர்கள் பிறக்கின்றன; இத்தகைய ஒலிகள் பின்னுயிர்கள் (Back Vowels) எனப்படும்.


நாவின் நடுப்பகுதி மேல்நோக்கிச் செல்லும் பொழுது [ə, a] என்னும் உயிர்கள் பிறக்கின்றன. இவை நடுநா மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் பொழுது பிறப்பதால் நடுவுயிர்கள் (Central Vowels) எனப்படும்.

நா அண்ணத்தை நோக்கி எழுகின்ற உயரத்தை நோக்கியும் உயிரெழுத்துகள் வேறுபடுத்தப்படுகின்றன. [i] என்னும் உயிரொலியை ஒலிக்கும்பொழுது நுனிநா முன் அண்ணத்தை நோக்கி உயர்கிறது. [u] என்னும் உயிரொலியை ஒலிக்கும் பொழுது, கடைநா பின் அண்ணத்தை நோக்கி உயர்கிறது. நா உயர்ந்துள்ள நிலையில் பிறக்கும் இவ்வுயிர்கள் மேலுயிர்கள் (High Vowels) எனப்படும். [e,ɛ] என்னும் உயிர்களை ஒலிக்கும்பொழுது நுனிநா முன் அண்ணத்திலிருந்து படிப்படியே முன்னிருந்து பின்னோக்கிக் கீழேஇறங்கிவருகிறது. [o,ɔ] என்னும் உயிர்களை ஒலிக்கும் பொழுது கடைநா பின் அண்ணத்திலிருந்து படிப்படியே கீழே இறங்கிவருகிறது.எனவே,[e,o] என்னும் உயிர்கள் இடையுயிர்கள் (Mid vowels) என்றும், [ɛ,ɔ] என்னும் உயிர்கள் கீழ் இடையுயிர்கள் (Low Mid vowels) என்றும் குறிக்கப் பெறும்.[a, ɑ] என்னும் உயிர்களை ஒலிக்கும்பொழுது வாயின் அடிப்

பகுதியை ஒட்டி நா தாழ்ந்து படிகிறது. எனவே, இவை தாழுயிர்கள் (Low Vowles) எனப்படுகின்றன.

[i,u] என்னும் மேலுயிர்களை ஒலிக்கும்பொழுது அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையிலுள்ள வெளி மிகக்குறைவாக இருப்பதால், இவ்வுயிர்களை அடைப்புயிர்கள் (Close Vowel) என்பர். [a,ɑ] என்னும் கீழுயிர்களை ஒலிக்கும்பொழுது அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையிலுள்ள வெளி பெரியதாக இருப்பதால், இவ்வுயிர்கள் திறப்புயிர்கள் (Open Vowels) என்று குறிக்கப்படும்.

தானியேல் சோன்சு (Daniel Jones) உயிரெழுத்தின் நிகழிடங்களை எட்டு அடிப்படை உயிர்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குகிறார்.




[i,u] என்னும் மேலுயிர்களை ஒலிக்கும் பொழுது நாவினை எவ்வளவு தூரம் மேலே உயர்த்தி வைத்துக் கொண்டு ஒலிக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் மேலே உயர்த்தி வைத்து ஒலிக்க வேண்டும் என்பதையும், [a,ɑ] என்னும் உயிர்களை ஒலிக்கும் பொழுது நாவினை எவ்வளவு தாழ்த்த முடியுமோ அவ்வளவு தாழ்த்தி வைத்துக்கொண்டு ஒலிக்க வேண்டும் என்பதையும் இப்படம் விளக்குகிறது. [e,o] என்னும் இடையுயிர்களையும் [ɛ,ɔ] என்னும் கீழ் இடையுயிர்களையும் ஒலிக்கும்பொழுது நாவினை அவ்வவ்விடங்களில் வைத்து ஒலிக்க வேண்டும். இவற்றை ஒலிக்கும் பொழுது கீழ்த்தாடை படிப்படியாகக் கீழே இறங்கி வருவதைப் படம் விளக்குகிறது. உயிரெழுத்துகள் அனைத்துக்கும் அ, இ, உ என்னும் மூன்றும் அடிப்படையாக உள்ளன. எனவே, இவற்றை அடிப்படை உயிர்கள் (Cardinal Vowels)என்பர். இவை பிறக்கும் இடங்களை இணைத்து முக்கோணம் வரைந்து விளக்குவர்; இம்முக்கோணம் உயிர் முக்கோணம் (Vowel Vriangle) எனப்படும்.

உயிரொலிகள் ஒலிப்புடை (Voiced) ஒலிகள் ஆகும். உலக மொழிகள் பலவற்றில் உயிர்கள் குறிலாகவும் நெடிலாகவும் உள்ளன. நெடில்கள் குறில்களைக் காட்டிலும் விறைப்பாக ஒலிக்கப்படுகின்றன; எனவே, நெடில்கள் விறைப்புயிர்கள் (Tense Vowels) எனப்படுகின்றன. குறில்கள் நா நெகிழ்ந்த நிலையில் ஒலிக்கப்படுவதால் நெகிழ்வுயிர்கள் (Lax Vowels) எனப்படுகின்றன. நா, இதழ் ஆகியவற்றால் எழுப்பப்படும் உயிரொலிகளை மூக்கொலிகளாகவும் (Nasals) ஒலிக்கலாம். தமிழ் மொழியில் ம், ன், ண் போன்ற மெல்லின மெய் ஈறுகளில் முடியும் சொற்களில் உள்ள மெல்லின ஈறுகள் பேச்சுமொழியில் ஒலிக்கப் பெறுவதில்லை; அவற்றின் முன்னருள்ள உயிர்கள் மூக்கின உயிர்களாக ஒலிக்கப்பெறுகின்றன; இவ்வுயிர்களை ஒலிக்கும்பொழுது காற்று மூக்கறை வழியாகச் செல்லுகிறது. எனவே, இவை மூக்குயிர்கள் (Nasals Vowels) எனப்படுகின்றன. முன்னுயிர்களையும் பின்னுயிர்களையும் ஒலிக்கும்பொழுது, நுனிநா அண்ணத்தை அடுத்தோ வளைந்தோ தொழிற்படலாம்; இவ்வாறு நுனிநாவை வளைத்து எழுப்பும் உயிரொலிகளை நாவளையுயிர்கள்(Retroflex Vowels) என்பர்.

ஓர் உயிரேயன்றி இரண்டு அல்லது மூன்று உயிர்கள் இணைந்து ஒலித்தலும் உண்டு. இவ்வாறு வரும் உயிரொலித் தொடர்களில் ஓர் உயிர் மட்டுமே ஏனைய உயிர்களைக் காட்டிலும் ஒலி முழக்கம் உடையதாக அமையும். உலகமொழிகள் பலவற்றில் இரண்டு உயிர்களே இணைந்து வருகின்றன; மிகச் சில மொழிகளில் மட்டும் மூன்று உயிர்கள் இணைந்து வருகின்றன. மூன்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் தொடர்ந்து வருதல் அரிது. இரண்டு உயிர்கள் இணைந்து வரும் கூட்டுயிர்களை ஈருயிர் (Dipthong) என்பர்.

தொல்காப்பியர் அகரம் முதல் ஔகாரம் முடிய பன்னிரண்டு உயிரெழுத்துகளைக் கூறியுள்ளார். எனினும் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து உயிர்கள் தாம் தமிழ் மொழியில் அடிப்படை உயிர்கள். தொல்காப்பியர் ஐ, ஔ என்னும் நெடில்களை ஈருயிர்கள் என்று கருதுகிறார்; அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரம் ஆகும் என்றும், அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்றும் அவர் கூறுகிறார். பேச்சுத் தமிழில் ஐகாரத்தில் வரும் இகரம் உராய்வு பெற்று மெய்யொலிப் பண்பைப் பெறுகிறது. இவ்

வாறு வரும் இகர ஒலியைத் தொல்காப்பியர் யகர மெய்யாகக் கருதியுள்ளார். அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்று தொல்காப்பியர் கூறியிருப்பினும், இவ்வொலி பேச்சில் அவ் என்றே ஒலிக்கப்படுகிறது. ஔகாரத்தை அகர உகர ஒலி களின் கூட்டாக ஒலிக்க வேண்டுமாயின் அகரத்தைப் பிறப்பித்த பின்னர் உகரத்தைப் பிறப்பிப்பதற்கு இதழ்களைக் குவிக்க வேண்டும். ஆனால், ஔகா ரத்தை ஒலிக்கும்பொழுது அகரத்தைப் பிறப்பித்த பின்னர்க் கீழிதழ்மேல் முன்பற்களை நெருங்கி இருக் கும் நிலையில் முடிக்கப்பெறுகிறது; அகரமும் வகர மெய்யும் கூடிய ஒலியாகவே ஔ ஒலிக்கப்படுகிறது. எனவே, ஐகார ஔகாரங்களை ஈருயிர்கள் என்பது பொருந்தாது.

மொழியியல் வளர்ச்சியின் காரணமாக, ஒவ் வோர் ஒலியும் வெவ்வேறு முனைப்புக் கூறுகளின் (Distinctive Features) தொகுதி என்று ஆராய்ந்து கண்டுள்ளனர். ஓரொலியைப் பிற ஒலிகளிடமிருந்து வேறுபடுத்துகிற பத்து முனைப்புக் கூறுகளை மொழி யியலார் விளக்குகின்றனர். அவ்வடிப்படையில், இக் காலப் பேச்சுத் தமிழ் உயிரொலிகள் அட்டவணை யில் விளக்கப்படுகின்றன.

| உயிர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| | அ ஆ | இ ஈ | உ ஊ | எ ஏ | ஒ ஓ |
| 1. உயிர்மை (Vocalic) | + | + | + | + | + |
| 2. மெய்ம்மை (Consonant) | — | — | — | — | — |
| 3. செறிவு (Compact) | + | — | — | — | — |
| 4. பரவல் (Diffuse) | 0 | + | + | — | — |
| 5. படுத்தல் ஒலியழுத்தம் (Grave) | 0 | — | + | — | + |
| 6. தொடர்வு (Continuous) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7. மூக்கொலி (Nasal) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 8. சூறையிசை (Flat) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 9. மீயிசை (Sharp) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10. உரப்பொலி (Strident) | 0 | 0 | 0 | 0 | 0 |

அ.பா.

துணை நூல்கள்:

**Robins**, General Linguistics, An Introductory Survey, 1967.

**Hockett**, C.F., A Course in Modern Linguistics, IBH Publishing Co, New Delhi, 1970.

**Meenakshisundaran**, T.P., A History of Tamil Language, Deccan College, Poona, 1965.

**உயிரொலி இயைபு** என்பது ஒருவகை முன் னோக்கு ஓரின ஒலித்திரிபு (Progressive Assimilation) ஆகும். ஒரு சொல்லின் இறுதியிலுள்ள உயிரொலி அந்தச் சொல்லோடு வந்து சேர்கிற மற்றொரு சொல் அல்லது விகுதியிலுள்ள உயிரொலியைத் தன்னினத்தைச் சேர்ந்த உயிரொலியாகத் திரி படையச் செய்தலுக்கு உயிரொலி இயைபு என்று பெயர்.

உயிரொலி இயைபு (Vowel Harmony) திராவிட மொழிகளில் தெலுங்கு மொழியிலேயே தெளிவாக வும் ஒழுங்காகவும் காணப்படுகிறது. எ-டு Katti+Ku 'Knife+to' → Kattiki. பொதுவாகப் பகுதியிற் காணப்படும் உயிரொலிகளே அடுத்துவரும் விகுதி களிற் காணப்படும் உயிரொலிகளைத் தம்மின ஒலி களாக மாற்றும். ஆனால், விகுதிகளிற் காணப்படும் உயிரொலிகளும் அருகிற் காணப்படும் உயிரொலி களைத் தம்மினப்படுத்தலும் தெலுங்கு மொழியிற் காணப்படுகிறது. எ-டு Katti + lu 'Knife+Plural' → Kattulu. துளு, கன்னடம் ஆகிய திராவிட மொழி களிலும் உயிரொலி இயைபு காணப்படுகிறது. தமிழில் பேச்சு வழக்கில் மட்டுமே உயிரொலி இயைபு காணப் படுகிறது. எ-டு நடுங்கு + இ →நடிங்கி; ஒதுங்கு+ இ→ஒதிங்கி.

பின்னிசு (Finnish), துருக்கி (Turkish) போன்ற சித்திய மொழிகளிலும் உயிரொலி இயைபு காணப் படுகிறது. பின்னிசு மொழியில் உயிரொலி இயைபு:

— hen 'into'
puu+hen → puu + hun 'tree+into'
maa+hen → maa + han 'hand+into'

துருக்கி மொழியில் உயிரொலி இயைபு:

—dir 'be'
Kus+dir → Kustur 'it is bird'
mu+dir → mudur 'is it cold'

கிரீக்கு, இலத்தீன், அயிரிசு போன்ற இந்தோ- ஐரோப்பிய மொழிகளிலும் உயிரொலி இயைபு காணப்படுகின்றது.

அ.கா.

**உயில்** அல்லது விருப்புறுதி ஆவணம் என்பது ஒருவர் தம் மறைவிற்குப் பின், தம் சொத்தை என்ன செய்ய வேண்டுமென்பது பற்றிய தம் கருத்தைச் சட்டப்படி தெரிவித்தலாகும்,

உயில் (Will) எழுதியவர் உயிலிலோ உயிலிணைப் பிலோ (Codicil) முன்னர் எழுதப்பட்ட ஓர் ஆவணத் தைக் குறிப்பிட்டு, அது அவர்தம் எண்ணத்தினைத் தெரிவிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அத் தகைய உயில் உயிலிணைப்பு ஆவணம் எனப்படும்.

உயிலின் நோக்கம்: 1. உயிலினை எழுதியவர் தாம் இறந்தபின் தம் சொத்துகளைப் பங்கிடவும் தம் விருப்பத்தினை நிறைவேற்றுபவரை நியமிக்கவும்;

2. உயில்வழிக் காப்பாளரை நியமிக்கவும்;

3. அடுத்த வாரிசினை நியமிக்கும் அதிகாரத்தி னைச் செயற்படுத்தவும்;

4. முன்பு எழுதிய உயிலினைத் தள்ளுபடி செய்ய வும் அல்லது மாற்றவும் செய்யலாம்.

உயிலின் தன்மைகள்:

1. உயில் எழுதியவரின் உள்எண்ணத்தினைச் சட்டப்படி அறிவிப்பதாக இருக்கவேண்டும்.

2. அவ்வறிவிப்பு உயில் எழுதியவரின் சொத்தி னைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

3. அவ்வறிவிப்பு உயில் எழுதியவர் இறந்தபிறகு செயற்படுத்தப்பட வேண்டியதாக இருக்கவேண்டும்.

இம்மூன்று தேவைகளுள் ஒன்று குறைவுபட்டா லும் அந்த ஆவணத்தினை உயில் என்று கருத முடி யாது.

உயிலின் வகைகள்:

1. சிறப்புரிமை உயில் (Privileged Will)
2. சிறப்புரிமையற்ற உயில்(Unprivileged Will)
3. வாய்மொழி உயில் (Nuncupative or Oral Will)
4. கைப்பட எழுதிய உயில் (Holograph Will)
5. ஒத்திசைவு உயில் (Mutual Will)
6. கூட்டு உயில் (Joint Will)
7. நிபந்தனையில் அமைந்த உயில் (Conditional Will)
8. செயலற்ற உயில் (Inofficious Will)

1. சிறப்புரிமை உயிலைப் போரில் ஈடுபட்டிருக்கும் பதினெட்டு வயதடைந்த முப்படை வீரர்கள் மட்டுமே எழுதமுடியும். இவ்வீரர் ஒருவர் தம் உயிலினை வாய் மொழியாகவோ எழுத்துவடிவிலோ அமைக்கலாம். வாய்மொழியாக இருக்கும்போது, அவர்தம் விருப்பத்தி னைப்போதிய சாட்சிகளின் முன்னிலையில் தெரிவிக்க வேண்டும். அதனை ஏற்படுத்தியவர் அதனை உரு வாக்கியதற்குப் பின்னர் ஒரு மாதத்துக்கு மேல் உயி ருடன் இருந்தால் அதனைச் செயற்படுத்த முடியாது.

இவ்வகை உயில் எழுத்து வடிவிலிருந்து,

1) உருவாக்கியவர் தாமே முழுவதும் எழுதி யிருந்தால் அவர் அதில் கையொப்பமிட வேண்டிய தில்லை; அது சான்றளிக்கப்படவும் வேண்டியதில்லை.

2) உயில் பகுதியளவோ முழுமையாகவோ வேறொருவரால் எழுதப்பட்டிருக்குமிடத்து உயிலை உருவாக்கியவர் கையெழுத்திட வேண்டும்; ஆனால் சான்றளிக்க வேண்டியதில்லை. உருவாக்கியவர் கையொப்பமிடாவிட்டால், அவ்வுயில் உருவாக்கியவ ரின் கட்டளையின்படி உருவாக்கப்பட்டது எனக்காட் டப்படல் வேண்டும் அல்லது அவர் அவ்வுயிலினைத் தம்முடையது என ஒப்புக்கொண்டதாகத் தெரி விக்கவேண்டும்.

3) வீரர் ஒருவர் உயில் எழுதுவதற்கான அறிவு ரைகளை எழுதிக் கொடுத்திருந்து அதனை உருவாக் கிச் செயற்படுத்துமுன் இறந்துவிட்டால், அவ்வறிவு ரைகளை உயிலாகக் கொள்ளலாம்.

4) இவ்வீரர் உயிலை எழுத வாய்மொழி அறி வுரைகளை இரு சாட்சிகளின் முன்னிலையில் கொடுத்திருந்து, அவை அவர்தம் வாழ்நாளிலேயே எழுதப்பட்டிருந்து, உயிலினை உருவாக்கிச் செயற் படுத்துமுன் இறந்துவிட்டால் அவற்றை உயிலாகக் கொள்ளலாம்.

2. சிறப்புரிமையற்ற உயில் முப்படை வீரர் களல்லாத யாரும் சட்டத்தின்படி உருவாக்கலாம். இவ்வுயில் எழுத்தால் எழுதப்பட்டிருத்தல் வேண் டும். வாய்மொழி உயில் செல்லாது.

இவ்வகை உயிலினை எழுத்தால் உருவாக்கிய வர் அல்லது அதனை வழங்கியவர் அதில் கையெழுத் திட்டிருக்கவேண்டும். கையெழுத்திட இயலாதவரா னால் அதில் அவர் தம் பெருவிரல் இரேகையினைப் பதித்திருக்க வேண்டும். கையெழுத்திட முடியாதவர் என்பது கல்வி அறிவு இல்லாதவரையும் வயதினால் மூப்பு எய்தினவரையும் ஊனத்தினாலும் படித் தறிந்து கையெழுத்துப் போட முடியாதவரையும் குறிக்கும். மேலும், அவ்வாறு பெருவிரல் இரேகை யைப் பதிப்பதில் அவர்தம் விரலினைப் பிடித்துப் பதித்துக் குறியிட மற்றவர்கள் உதவலாம்.

உயிலில் கையொப்பம் அல்லது பெருவிரல் குறி அல்லது அவருக்காகக் கையொப்பமிடுபவரின் கையொப்பம் உயிலின் தொடக்கத்திலோ இறுதி யிலோ இருக்கலாம். ஆனால், அவ்வாவணம் உயிலெ

னக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டது என்று தெளிவுறும்வகையில் கையெழுத்துப் போடப்பட்டிருக்க வேண்டும்.

உயிலினை எழுதியவரின் கையெழுத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் சான்றளித்திருக்க வேண்டும். ஒவ்வொரு சாட்சியும் உயிலினை எழுதியவரின் கையெழுத்தினை அல்லது பெருவிரல் இரேகையினைக் கண்டிருத்தல் வேண்டும்; அல்லது அவர்தம் ஆணையின்பேரில் அவர்தம் முன்னிலையில் அவருக்காக வேறொருவர் உயிலில் கையெழுத்திட்டதை ஒவ்வொரு சாட்சியும் கண்டிருத்தல் வேண்டும்; அல்லது உயில் முன்னரே கையொப்பமிடப்பட்டிருந்தால் அக்கையொப்பம் அல்லது இரேகைப்பதிப்பு தம்முடையதுதான் என்றோ தமக்காக வேறொருவர் இட்ட கையெழுத்து என்றோ ஒவ்வொரு சாட்சியும் உயிலினை எழுதியவரின் சொந்த ஏற்பளிப்பினைப் பெற்றிருக்க வேண்டும். இரு சாட்சிகளும் ஒரே சமயத்தில் பார்த்திருக்க வேண்டியதில்லை; ஒரு சாட்சியின் முன்னிலையில் கையொப்பமிட்டு, மற்றொரு சாட்சியினிடம் தம்முடைய கையொப்பத்தினை விருப்பாவணம் அளிப்பவர் ஒப்புக்கொண்டிருக்கலாம். ஒவ்வொரு சாட்சியும் விருப்பாவணம் வழங்கியவரின் முன்னிலையில் உயிலில் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். வேறெந்தத் தனிப்பட்ட சான்றளிப்புகளும் வேண்டியதில்லை,

3. வாய்மொழி உயில் என்பது சொத்திற்குரியவர் அல்லது ஆவணத்தைத் தந்தவர் போதிய எண்ணிக்கையுள்ள சாட்சிகளின் முன்னிலையில், சொத்தினைப் பற்றிய எண்ணத்தைத் தெரிவித்தல் ஆகும். இந்தியாவில் இந்திய வாரிசுரிமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் வாய்மொழி உயில் எழுதமுடியாது. இசுலாமியர்களின் சட்டப்படி, ஓர் இசுலாமியர் வாய்மொழி உயில் அமைக்க இயலும். வாய்மொழி உயிலினைச் சான்றுகாட்டி நிலைநிறுத்தப் பொறுப்பு மிகவும் தேவைப்படும்.

4. கைப்பட எழுதிய உயில் என்பது முழுவதும் சொத்துக்குரியவர் தம் கையினாலேயே எழுதப்படும் சிறப்புரிமையற்ற உயில் ஆகும்.

5. ஒத்திசைவு உயில் என்பது இருவர் உயில் எழுத உடன்பட்டு, ஒருவருக்கு ஒருவர் தம் சொத்தின்பேரில் மற்றவருக்கு உரிமை ஏற்படுத்தி எழுதிக் கொடுக்கும் ஆவணமாகும். இவ்வகை இனக்கூறுகள் ஒன்றோடொன்று ஒத்ததாக ஒரே நாளில் எழுதப்பட்ட இரு உயில்களாகும். இவற்றின் தன்மையாதெனில், வாழ்ந்துக்கொண்டிருக்கும் இருவருள் ஒருவர் மற்றவருக்குத் தெரிவித்துவிட்டு ஒத்திசைவு உயிலினை மாற்றிவிடலாம். இருவருள் ஒருவர் இறந்த பின்னர், உயிரோடிருப்பவர் இறந்தவரின் உயில் வழியாகப் பயனையடைந்த பின்னர், உயில்களை மாற்றிவிட இயலாது. ஒத்திசைவு உயில்கள் எழுதிய இருவருள் ஒருவர் இறந்த பின்னர், அவ்வுயில்கள் மூலமாக இறந்தவரின் சொத்திலிருந்து உயிரோடிருக்கும் மற்றவர் பயனடைந்திருக்க வேண்டும். உயிலினை உருவாக்குகிறவர்கள் அவற்றினை மாற்றக்கூடாது என்ற உடன்பாட்டின் பேரில்தான் ஒத்திசைவு உயில்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்விரு கட்டுப்பாடுகளும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட்டால்,ஒத்திசைவு உயிலினை மாற்றியமைக்கவியலாது. எனினும், ஒரு புதிய உயிலினை ஏற்படுத்துவதன்மூலம், உயிருடனிருக்கிற உரிமையாளர் முன்பு ஏற்படுத்திய உடன்படிக்கையினை மீறி ஒத்திசைவு உயிலினை மாற்றியமைத்தால், உயிருடனிருக்கிற உரிமையாளரின் சொந்தச்சொத்துகள் வரையில்தான் புதிய உயிலுக்கு உயில் மெய்ப்பிதழ் அனுமதிக்கப்படும்.

6. கூட்டு உயில் என்பது ஒருவருக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் ஒரே ஆவணத்தை அனைவரும் இணைந்து உருவாக்குவதன் மூலம், தங்கள் தனிச் சொத்துகளுக்கோ பொதுச் சொத்துகளுக்கோ வகை செய்து கொள்ளுவதாகும்.

இவ்வகை உயில் மூலம் ஒருவருக்கு மேற்பட்டோர் ஒரே ஆவணத்தின் வழித் தம் விருப்பத்தைச் செயற்படுத்த இயலும். இதனோடு உரிமையுடைய ஒவ்வொருவருக்கும் இதனை நீக்கவோ மாற்றியமைக்கவோ இயலும்.

இரு இந்துக்கள் சேர்ந்து ஒரு கூட்டு உயில்னை ஏற்படுத்த முடியும். ஆனால், இந்தக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கூட்டுக் குடும்பச் சொத்தில் தம் பங்கினைப் பொறுத்த மட்டில் ஓர் உயிலினை எழுத முடியாது. குடும்பப் பங்குரிமையாளர் அனைவராலும் உடன்பட்டு எழுதப்பட்ட உயிலினை ஒரு குடும்ப ஏற்பாடாகக் கொண்டு செயற்படுத்தலாம்.

7. நிபந்தனையில் அமைந்த உயில் உறுதியற்ற 'குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியினை' நிபந்தனையாகக் கொண்டு எழுதப்படும். அந்நிகழ்ச்சி நடைபெறாவிட்டால் அவ்வுயிலினைச் செயற்படுத்த முடியாது.

செயலற்றஉயில் என்பது உயிலினை உருவாக்கியவர் இயற்கையான அன்பிற்கும் நீதி நெறிக் கட

மைக்கும் ஒவ்வாத விதத்தில் உருவாக்கியதாகும். இது பணிக்கடனற்ற உயில் எனவும் கூறப்பெறும்.

உயில் எழுதத் தகுதி: 18 வயதிற்கு மேற்பட்ட உறுதியான உள்ளம் உடைய எவரும் உயில்வழித் தன் சொத்துகளுக்கு வழி செய்யலாம். எழுதியவர் திடசித்தமும் நினைவு ஆற்றலும் புரிந்துகொள்ளும் ஆற்றலும் உடையவராக இருக்கவேண்டும். நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பெற்றவர் 21 வயதினை அடைந்த பின்னரே உயிலினை எழுதும் தகுதியினைப் பெறுகிறார். இசுலாமியர் ஒருவர் தம் நிகரச் சொத்துகளில் ⅓பங்கை மட்டுமே உயில் எழுதலாம். அவர் உயில்வழிக் கொடையாகத் தம் வாரிசுகளுக்குக் கொடுக்க இயலாது. உயில் வழியாக ⅓ பங்கிற்கு மிகுதியாக் கொடுத்தாலும், கொடையாக வாரிசுகளுக்கே கொடுத்தாலும் அவர் இறந்தபின் ஏனைய வாரிசுகள் இசைவளிக்காவிட்டால் அவ்வுயில் செல்லுபடியாகாது.

திருமணமான ஒரு பெண் தன் வாழ்நாளில் கணவனின் விருப்பத்தைப் பெறாமல் எந்தச் சொத்தினையும் உயில்வழிக் கொடுக்கத் தகுதியுடையவராவர்.

பித்துநிலையர் பித்துத் தெளிந்த இடைவேளையில் உயிலை ஏற்படுத்தலாம். குடிபோதையினாலோ நோயின் கொடுமையினாலோ வயதின் முதிர்ச்சியினாலோ தாம் செய்வது இன்னதென்று அறியாத மனநிலையிலிருக்கும் போது ஒருவர் உயிலை ஏற்படுத்த முடியாது.

உயில் எழுதத் தகுதியற்றவர்: 18 வயது நிரம்பாதவர் (வயது வராதவர்) உயில் வழியாகத் தம் சொத்தினை வகுத்தமைக்கத் தகுதியற்றவர். நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பெற்றவர் 21 வயதை அடைந்தபின்னரே வயது வந்தவராகக் கருதப்படுவார்.

காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தின் கீழ்வரும் ஒரு காப்பாளர், நீதிமன்றத்தின் இசைவின்றித் தம் சொத்துகளை உயில்வழியாக வகுத்தமைக்கத் தகுதி பெற்றவரல்லர்.

உயிலின் பொருள் விளக்கம்: உயிலை எழுதுகின்றவர் தம் வாழ்க்கையின் இறுதிக்கட்டத்திலோ சாவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நேரத்திலோதான் உயில் எழுத முற்படுவார். முன்எச்சரிக்கையாக உயிலினை எழுதி வைத்திருப்பவர் மிகச் சிலரே. தம் பரம்பரைச் சொத்துகள் தங்கள் குடும்பத்தை விட்டு வெளியில் சென்றுவிடக் கூடாது என்ற எண்ணம் உடையவர்கள், சாகும் நிலையில் உயில் எழுதுவதற்கு ஒரு சட்ட வல்லுநரைத் தேடிச் செல்வது இயலாது. விருப்பாவணமளித்தவர் தமக்குத் தெரிந்த வழக்கத்திலிருக்கும் சொற்களைக் கொண்டு உயிலினை உருவாக்கியிருப்பார். அவ்வாறு உருவாக்கப்பட்ட உயிலின் பொருள் விளக்கத்தினை நன்கறிந்த பின்னர், உயிலில் கண்டுள்ளபடி சொத்துகளைப் பிரிப்பது மிகவும் சிறப்புடையது ஆகும்.

உயில் எழுதுவதற்குக் குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட சொற்களைத் தாம் பயன்படுத்த வேண்டும் என்னும் வரையறை இல்லை. எந்த மொழியிலும் எந்தப் படிவத்திலும் உருவாக்கலாம். உயிலினை உருவாக்கச் சட்ட நுணுக்கச் சொற்களையும் கலை நுட்பமான சொற்களையும்தாம் பயன்படுத்த வேண்டுமென்றில்லை. உயிலினை உருவாக்கியவரின் எண்ணங்களை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அறிய இயலாத பொழுது, பொருள் விளக்க விதிகளை நீதிமன்றம் என்ன செய்யவேண்டுமென்று சுட்டிக்காட்டும். உருவாக்கியவரின் எண்ணங்கள் வேறாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட சூழ்நிலையில் சட்டதிட்டங்கள் செயற்படும்.

உயிலில் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ தெரிவித்திருக்கும் எண்ணங்களை மட்டுமே நீதிமன்றம் செயற்படுத்தவியலும்.

விருப்பாவணமளித்தவரின் எண்ணங்களையறிந்த பின்னர், உயிலில் பயன்படுத்தப்பட்ட சொற்களைக் கொண்டு, யார் யாருக்கு என்னென்ன சொத்துகளைக் கொடுக்க விரும்பினார் எனத் தெளிதல் வேண்டும். உயிலின் சொற்களைக் கொண்டு விருப்பாவணமளித்தவரின் குடும்பச் சூழ்நிலையையும் உறவினர்களையும் சொத்துகளின் மதிப்பீட்டினையும் உயிலினை எழுதியபோது அவர் மனத்திற்கொண்ட கருத்துகளையும் நீதிமன்றம் தெரிந்துகொள்ள வேண்டும். பொருள் விளக்கங் காணும்போது உயில் வழியாகப் பயனடைவோரைப் பற்றியாவது சொத்துகளைப் பற்றியாவது ஐயம் ஏற்படின், புறம்பான சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

1) உயிலில் குறிப்பிட்ட சொற்களை அறிந்து கொள்வதற்குப் புறம்பான சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

2) கொடுக்கப்பட்ட விவரங்கள் சரியாகவிருந்து, பெயர் சரியில்லை என்றால் பெயரைத் தள்ளிவிட வேண்டும்.

3) ஒரு சாராரை அல்லது வகுப்பினரை இத்தனை பேர் எனக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்த உயில் எழுதிய நாளன்று

அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தால், நீதி மன்றம் எண்ணிக்கையினைத் தவறான யூகமெனக் கொண்டு, உயில் எழுதிய நாளன்று உயிரோடிருப் பவர்கள் கொடையினைப் பெறத் தகுதி பெற்றவர் கள் என முடிவெடுக்கும்.

4) உயிலினைப் பொருள் கொள்ள மிகத் தேவை யான சில சொற்கள் விடு பட்டதால் ஏற்படும் ஐயப் பாடுகளைக் களைவதற்கு அச்சொற்களைப் புகுத்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

5) விருப்பாவணமளித்தவர் உயில்வழிக் கொடை யாகக் கொடுக்க எண்ணிய பொருளினை, உயிலில் அவர் கொடுத்துள்ள விவரங்களைக் கொண்டு இயன்ற அளவிற்குக் கண்டு பிடிக்க முடியாதபோது, அவர் கொடுத்த ஒவ்வாத விவரங்களைத் தள்ளி விட்டு, உயில்வழிக் கொடையினைக் கொடுத்து விட வேண்டும்.

6) விருப்பாவணமளித்தவருக்குப் பல சொத்து கள் இருந்து, அவர் உயில்வழிக் கொடையாகக் கொடுக்க எண்ணி விவரித்த பெரும்பான்மையான விவரங்கள் பொருந்துகிற சொத்தினை மட்டுமே உயில்வழிக் கொடையாகக் கொடுத்து, ஏனைய சொத்துகளை அதிலிருந்து விலக்கிவிட வேண்டும்.

7) உயிலினைப் பொருள் கொள்ள விழையுங் கால், சில சமயம் பொருள் மயக்கம் அல்லது ஐயப் பாடுகள் தோன்றலாம். பொருள் மயக்கம் சொத்து களையோ உயில்வழி உரிமையாளரையோ குறித்ததாக இருக்கலாம். உயிலினைப் படித்துப் பார்க்கும்போது எவ்வித ஐயமுமின்றித் தெளிவாகத் தோன்றும். ஆனால், அதனை நிறைவேற்றச் செல் லும்பொழுது அதில் பொருள் மயக்கம் அல்லது ஐயப் பாடு தோன்றும். இதனையே உட்கிடைப் பொருள் மயக்கம் அல்லது மறைமுக ஐயப்பாடு என்பர். அப் போது நீதிமன்றம் புறம்பான சாட்சியங்களை ஏற் றுக்கொண்டு உயிலினை நிறைவேற்ற விழைய வேண் டும். விருப்பாவணமளித்தவர் உயிலில் இடைவெளி விட்டிருந்தால் அதனைச் சாட்சிகளின் விளக்கத்தைக் கொண்டு நிரப்ப முடியாது. ஆனால், உயிலின் ஏனைய பகுதியில் கூறப்பட்டவற்றைக் கொண்டு இடைவெளியினை நிரப்பக்கூடுமானால், அதற்கு மட்டும் வாய்மொழிச் சாட்சியங்களை அனுமதிக்க லாம்.

8) உயிலுக்குப் பொருள் விளக்கம் காணும்போது உயில் முழுவதையும் படித்துச் சூழ்நிலைக்கு ஏற்ற வாறு பயன்படுத்தப்பட்டுள்ள 'சொற்களுக்குப் பொருள் கண்டு, விருப்பாவணமளித்தவரின் உள் நோக்கத்தினை உணர்ந்து, சட்டம் அனுமதிக்கும் வரை, இயன்றவரை நிறைவேற்ற வேண்டும். உயிலின் பொதுவான நோக்கமென்னவென்று அறியவேண்டும்.

9) உயிலினை முழுமையாகப் படிக்கும்போது இருபொருள் கொடுக்குமானால், இரண்டில் மிக நியாயமானதெனக் கருதப்படும் பொருளையே மேற் கொள்ளவேண்டும். அப்பொருள் உயிலைச் செல்லு படியாக்கத் துணையாக உள்ள இயல்பான முடிவாக விருத்தல் வேண்டும்.

10) உயிலில் கூறப்பட்டுள்ள சொற்களில் ஒன்றை யும் தள்ளிவிடாமல் அவற்றிற்கான இயல்பான பொருள்களைக் கொண்டு, உயிலுக்குப் பொருள் விளக்கம் காணவேண்டும். பொருள் முன்னுக்குப்பின் முரணானது என்று கண்டாலொழிய, உயிலின் ஒவ் வொரு பகுதியையும் செயற்படுத்தாமல் இருக்கக் கூடாது.

11) உயிலின் ஒரு பகுதியில் தெளிவான குறிப் பான பொருளில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் வேறு பகுதியில் வருமானால் அவை அதே பொருளில் பயன் படுத்தப்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

12) உயில் முழுவதையும் படிப்பதன் மூலம் விருப் பாவணமளித்தவரின் நோக்கத்தினை அறிய முடியும்.

13) ஓர் உயிலில் ஒரே சொத்தினை இருமுறை இருவருக்குக் கொடுத்திருந்து, இரு கொடைகளும் ஒன்றோடன்று இணைந்து செல்லாமல் முரண்பட் டிருந்து முடிவெடுக்க வியலாதபோது, கடைசியாகக் கூறப்பட்ட சொற்களே விருப்பாவணமளித்தவரின் கடைசி விருப்பமாக மேலோங்கி நிற்கும்.

14) உயிலில் கொடைப் பொருள் யாதென்று கூறப்படாவிட்டால் தெளிவின்மையால் உயில் செல்லுபடியாகாது.

15) உயிலில் கூறப்பட்ட கொடைச் சொத்துகள் என்பவை உயிலினை உருவாக்கியவர் இறந்தபோது அவருக்குச் சொந்தமாக இருந்த சொத்துகளையே குறிக்கும். ஓர் உயிலில் இரண்டு தேதிகள் இருக்குமா னால், உயிலினை எழுதியவர் எந்தத் தேதியிலிருந்து உயில் செயற்படவேண்டுமென்று விரும்பினாரோ அந்தத் தேதியினின்றும் செயற்படும்.

16) உயிலில் குறிப்பிட்டுள்ள 'உயிரோடிக்கிறவர்' என்பது உயில் உருவாக்கப்பட்ட நாளன்று உயிரோ டிருக்கிறவர்களையே உயில் குறிக்கும்; உயிலினை எழுதியவர் இறந்த நாளன்று உயிரோடிருப்பவர் களையன்று.

பதிலாள் நியமன அதிகாரம் பெற்ற கொடை பெறுநரின் உயில்:

ஒரு சொத்தின் பேரில் எந்தவித உரிமையுமில்லாத ஒருவருக்கு, அச்சொத்தினை அவர் விரும்பிய யாருக்கு வேண்டுமானாலும் பிரித்துக் கொடுக்கும் அதிகாரத்தினைக் கொடுத்தலே பதிலாள் நியமன அதிகாரம். பதிலாள் நியமன அதிகாரம் இருவகைப்படும். ஒன்று பொதுவான அதிகாரம்; மற்றது சிறப்பு அதிகாரம்.

உயிலினை நீக்குதல்:

ஓர் உயிலினை உருவாக்கிய பின்னர் அதனை மாற்றியமைக்கவியலும். இத்தன்மையே உயிலினை வேறு ஆவணங்களின்று வேறுபடுத்திக் காட்டுகிறது. ஓர் உயில் உருவாக்கப்பட்டவுடன் ஏற்படுத்தியவரின் வாழ்நாளில் அது செயற்படுவதில்லை; அவர் இறந்த பின்னர்த்தான் செயற்படுகிறது. அதனால், ஏற்படுத்தியவரின் வாழ்நாளில் ஓர் உயில் நிலையற்ற அல்லது மாற்றியமைக்கும் தன்மையைக் கொண்டது. உயிலினை ஏற்படுத்தியவர் தம் வாழ்நாளில் எப்போது வேண்டுமானாலும் அதை மாற்றியமைக்கலாம்.

உயிலினை இருவிதத்தில் மாற்றியமைக்கலாம். 1. சட்டத்தின் நடைமுறையில் விலக்குதல்; 2. ஆவணத்தில் ஈடுபாடு உடையோர் செயல்முறையில் விலக்குதல். இரண்டாம் வகை இரு உட்பிரிவுகளைக் கொண்டது. (1) புதியதோர் உயில்வழி விலக்குதல்; (2) அழித்தலின் மூலம் விலக்குதல்.

ஒருவரால் உருவாக்கப்பட்ட எவ்வகை உயிலும் சிறப்புரிமை உயிலானாலும் சிறப்புரிமையற்ற உயிலானாலும் எழுதிவைத்தவருக்குத் திருமணம் ஆனவுடன் அழிந்துவிடும்; அவருக்கு மறுமணம் ஆனாலும் அவ்வுயில் அழிந்துவிடும்.

புதியதோர் உயில்வழிப் பழைய உயிலை நீக்குதல்: பின்னர் உருவாக்கும் புதிய உயில் மூலமாக முன்னர் உருவாக்கிய உயிலினை மாற்றியமைக்கலாம்; அல்லது செயற்படாமல் அழிக்கலாம். புதிய உயில் பழைய உயிலினை மாற்றியமைக்கிறது என்பது தெளிவாகவும் குறிப்பிட்டும் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

அழித்தலின் மூலம் உயிலை நீக்குதல்: உயிலினை அழிக்கும் எண்ணத்தோடு அதனை உருவாக்கியவரோ அவர் ஆணையின்படி அவர் முன்னிலையில் வேறொருவரோ உயிலினைத் தீயிட்டுக் கொளுத்தினாலோ கிழித்தாலோ அவ்வுயில் அழிந்துவிடும். தீயிட்டுக் கொளுத்துவது என்றால் உயில் முழுவதும் எரிந்துவிட வேண்டுமென்பதில்லை. உண்மையிலேயே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்பதற்காக ஓரளவு எரிந்திருக்க வேண்டும். உயிலினை உருவாக்கியவர் அதனை அழிக்கும் நோக்கத்தோடு கையெழுத்தையோ சாட்சிகளின் கையெழுத்தையோ வெட்டி எடுத்தால் உயில் முழுவதும் அழிக்கப்பட்டதாகக் கருதவேண்டும். வெட்டுதலும் கிழித்தலுக்குச் சமமாகும். உயிலினை அழிக்கும் நோக்கத்தோடு சிறிது கிழித்தாலும் போதும். உயிலினை ஏற்படுத்தியவரின் உத்தரவுப்படி மூன்றாமவரும் அவ்வாறு செய்யலாம். ஆனால், அவர் முன்னிலையில் செயற்பட வேண்டும். உயிலின் குறுக்கே கோடுகள் இட்டு அதனை நீக்குதல் மூலம் உயிலினை அழிக்க முடியாது.

உயிலினைப் புதுப்பித்தல்: நீக்கம் செய்யப்பட்ட உயிலினை மறுபடியும் உருவாக்கி அதில் விருப்பாவணமளித்தவர் கையொப்பமிட்டு, சாட்சிகள் சான்றொப்பமிடுவதன் மூலம் புதுப்பிக்கலாம். குறிப்பிட்ட வழிவழி வழக்கப்படிதான் மறு உருவாக்கம் இயலும். உயிலினை அளித்தவர் தம் கையொப்பத்தை வெட்டியெடுத்துச் சிதைத்த பின்னர், அக் கையெழுத்தினை அதே இடத்தில் ஒட்டி வைப்பதன் மூலம் மீண்டும் அவ்வுயிலினைப் புதுப்பிக்க முடியாது.

நீக்கம் செய்த உயிலினைப் புதுப்பிக்கும் எண்ணத்தை ஓர் உயிலிணைப்பினை உருவாக்குவதன் மூலம் தெரிவித்தால் அதுவே புதுப்பித்தல் என்று கூறப்படுகிறது.

உயிலிணைப்பு என்பது உயிலின் முடிவுகளை விளக்குவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேலும் சேர்ப்பதற்காகவோ குறைப்பதற்காகவோ உயிலுடன் இணைக்கப்படும் பிற்சேர்க்கையாகும். இது உயிலின் பகுதியாகவே கருதப்படும்.

சென்னை மாநகரில் உள்ளவர்கள்: சென்னை நகரத்தில் உள்ள சொத்துகளைக் குறித்தும் இம்மாநகரத்தில் இறந்தவர்களைக் குறித்தும் உள்ள உயில்களை நீதிமன்றம் மூலமாக உறுதிசெய்ய வேண்டிய இன்றியமையாமை உண்டு. அவ்வாறு உறுதி செய்ய இயலவில்லையெனில், உயிலுக்கு எந்தவித மதிப்பும் இல்லாமல் போய்விடும். இதற்கான மனுவைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். உயிலில் கூறப்பட்டுள்ள சொத்துகளை நிருவகிக்கச் செயலர்களை நியமிப்பது வழக்கம். இவர்கள் காப்பாளர்களாக இருந்து இறந்தவர்களின் சொத்துகளை நிருவகித்து, உயிலின்படி உரியவர்களுக்குச் சொத்துகளைச் சேர்க்க வேண்டும். இதற்கான மேற்பார்வை நீதிமன்றத்தாரிடம் உண்டு.

இறந்த ஒரு மனிதருக்கு வெளியாரிடமிருந்து பணமோ பணமதிப்புக் கொண்ட பங்குகளோ வர வேண்டி இருந்தால் அவற்றிற்கும் பிற அனைத்துக் காப்புகளுக்கும் இறந்தவரின் வாரிசுகள் வாரிசுச் சான்றிதழ் பெற்றால்தான் அவற்றைப் பெறமுடியும். இதற்கான வழிமுறைகளை இந்தச் சட்டம் வகுத்துக் கொடுத்துள்ளது. உயில் ஏதும் எழுதவில்லை என்றால்தான் இதுபோன்ற சான்றிதழ் பெறலாம். அதுவும் வரவேண்டிய கடன் தொகைகளுக்கும் பிற காப்புப் பணங்களுக்குந்தான் பெறமுடியும். இந்த வாரிசுச் சான்றிதழ்கள் பெறவேண்டுமாயின் மாநகரத்திலுள்ள உயர்நீதி மன்றங்களில் விண்ணப்பம் கொடுத்து, அவற்றிற்கான ஆணைகளைப் பெற வேண்டும்.

**உயில்வழிக் கொடை** என்பது ஓர் உயிலின் வாயிலாகக் கொடுக்கப்படும் கொடை எனப்படும். அசைவியல் பொருளையோ அசையாப் பொருளையோ உயில்வழிக் கொடையாக(Legacy or Beques) அளிக்கலாம். குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை (Specific Legacy), பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை (General Legacy) என இக் கொடை இரு வகைப்படும். இவையன்றி, சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை (Demonstrative Legacy) என மூன்றாம் வகை ஒன்றும் உளது.

குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 142-ஆம் பிரிவில் வரையறுக்கப் பட்டுள்ளது. கொடையளிப்பவரின் சொத்தில் குறிப்பாகக் கண்டுணரத்தக்க சொத்தாகவும் முழுச் சொத்திலிருந்து தனியே வேறுபடுத்திக் காட்டக் கூடியவாறு போதுமான விளக்கம் கொண்டதாகவும் இக்கொடை அமையும். 'என் தங்கச் சங்கிலியைத் தங்களுக்குத் தருகிறேன்' என்று 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு உயில் எழுதிக் கொடுப்பது குறித்துரைக்கப்பட்ட உயில் வழிக் கொடையாகும்

பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை என்பது கொடையளிப்பவரின் குறிப்பிட்ட சொத்துகளிலிருந்தன்றி மொத்தச் சொத்துகளிலிருந்து கொடுக்கப்படுவதாகும். அது அவர்தம் சொத்தின் ஒரு பாகமாகவோ அவ்வாறு இல்லாமலோ இருக்கலாம். 'இ என்பவர் எனக்குப் பரிசாகக் கொடுத்த வைர மோதிரம்' என்று குறிப்பிடாமல், என் 'வைர மோதிரம்' அல்லது 'ஒரு குதிரை' என்பதுபோல் பொதுத் தன்மை கொண்டதாகக் கொடையை அளித்தால், அது பொதுத் தன்மையுள்ள உயில் வழிக் கொடையாகும்.

குறித்துரைக்கப்பட்ட கொடைவழிக் கொடைப் பொருள் இல்லை என்றாலோ அது வேறு உருவமாக மாற்றப்பட்டிருந்தாலோ பொதுச் சொத்திலிருந்து உயில்வழிக் கொடையாளி ஏதும் பெற முடியாது. ஆனால், பொதுத் தன்மையுள்ள கொடையாளி சொத்து அனுமதிக்கும் வரை அதனைப் பெற உரிமை உண்டு.

உயில் எழுதியவர் (Testator) ஒரு குறிப்பிட்ட தொகையையோ குறிப்பிட்ட அளவு வேறு ஏதாவது ஒரு பொருளையோ தந்து, அது ஒருகுறிப்பிட்ட நிதியிலிருந்தோ இருப்பிலிருந்தோ பெறப்பட வேண்டும். ஒன்று உயில்வழியாகக் கொடுக்கப்படும் கொடை சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை (Demonstrative Legacy) ஆகும் என 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 150-ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. 'இ' என்பவர் எனக்குத் தர வேண்டிய உரூ. 2000-இல் உரூ. 1000 'ஆ' என்பவருக்குத் தரப்பட வேண்டும் என்று 'அ' என்பவர் உயில் எழுதினால் அது சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடையாகும்.

உயில்வழிக் கொடையாளிக்கு ஒரு குறிப்பிட்ட சொத்தினை அளித்தால் அது குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகும். அவ்வாறு இல்லாமல் குறிப்பிட்ட சொத்திலிருந்து அது பெறப்பட வேண்டும் என்றிருந்தால் அது சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையாகும். பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை போன்று நிபந்தனைகளற்று இருப்பதும், எந்தச் சொத்திலிருந்து அது பெறப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருத்தலும் இதன் சிறப்பியல்புகள் ஆகும். சார்மன் என்பார் சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையைப் பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடையின் ஓர் உட்பிரிவாகக் கொள்ளலாம் என்று கூறுகிறார்.

ஒரு சொத்தினின்று குறித்துரைக்கப்பட்ட மற்றும் சுட்டிக் காட்டும் உயில் வழிக் கொடைகள் அளிக்கப்பட வேண்டும் என்றிருப்பின், முதலில் குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடையும் எஞ்சியதில் சுட்டிக் காட்டும் கொடையும் கொடுக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள சொத்தில் சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையினை முழுமையாகக் கொடுக்க முடியாவிடில், உயில் எழுதிக் கொடுத்தவரின் பொதுச் சொத்திலிருந்து அது கொடுக்கப்பட வேண்டும் (பிரிவு 151).

கொடுக்கப்பட்ட உயில்வழிக் கொடைகள் சில நேரங்களில் சில காரணங்களினால் செயலுக்கு

வாராமல்போவது உயில்வழிக் கொடை அழிவுறுதல் (Ademption of Legacy) எனப்படும். இது 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 152-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்ட கொடை உயில் எழுதியவருக்கு அவரது மறைவின் போது சொந்தமற்றுப் போகும் போதோ வேறுவித மான சொத்தாக மாற்றப்படும்போதோ உயில் வழிக் கொடை அழிகிறது. அதாவது, உயிலின் செயற்பாட்டிலிருந்து கருப்பொருள் விலக்கப்படுவ தன் காரணமாக அது செயலுக்கு வருவதில்லை.

குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை மட்டுமே அழிவுறும். சுட்டியுரைக்கப்பட்ட உயில் வழிக் கொடை அழிவுறுவதில்லை. உயில்வழிக் கொடை அழிவுறுதல் பற்றிய விதிகளை 152 முதல் 166 வரையிலான பிரிவுகள் எடுத்துரைக்கின்றன. உயில்வழிக் கொடை பொதுவாக இரு வகைகளில் அழிவுறலாம். முதலாவதாக, உயில் எழுதியவரின் செயலினாலோ எண்ணத்தினாலோ அன்றி இயற்கைச் செயலினால் கொடையின் கருப்பொருள் அவருக்கு உரியதாக இல்லாமல் போவதால் ஏற்பட லாம். இரண்டாவதாக, உயில் எழுதியவரின் செய லினாலோ எண்ணத்தினாலோ கொடைப் பொருள் மறைவதால் ஏற்படலாம். அதாவது, சொத்தினை விற்பதன் மூலமோ வேறொருவருக்குக் கொடுத்து விடுவதன் மூலமோ இது நிகழலாம். ஆக, கொடை யின் கருப்பொருள் i) இல்லாமற் போகும் போது, ii) அவருக்கு உரியதாக இல்லாமல் போகும் போது, iii) முற்றிலும் மாறுபட்ட சொத்தாக மாற்றப்படும் போது உயில்வழிக் கொடை அழிவுறுகிறது. இவ் வாறு கொடை அழிவுறுவதால் அது பகுதியாகவோ முழுமையாகவோ மறைகிறது. ஆனால், உயிலின் மற்ற எந்த வாசகங்களையும் இது பாதிப்பதில்லை.

அழிவுறுதலுக்குச் சில விலக்குகளும் உண்டு. இவை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

*உயிலிணைப்பு*: என்பது உயிலின் முடிவு களை விளக்குவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேலும் சேர்ப்பதற்காகவோ குறைப்பதற்காகவோ உயிலுடன் இணைக்கப்படும் பின்னிணைப்பாகும். இது இந்திய வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 2 (ஆ)இல் வரையறுக்கப்பட்டுள்ளது. இது உயிலின் ஓர் உறுப் பாகக் கருதப்படும். உயிலுக்குரிய எல்லா விதிகளும் இதற்கும் பொருந்தும். ஆனால், இது முக்கிய ஆவ ணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தால், இது ஒரு தனி உயிலாகவே கருதப்படும்.

உயிலிணைப்பு (Codicil) மூல உயிலின் பின்புறத்தில் மேலெழுத்தாகவோ (Endorsement)ஒரு தனி ஆவண மாகவோ இருக்கலாம். பின்னிணைப்பாகச் சேர்க்கப் பட்ட ஓர் உயிலிணைப்பு, மூல உயில் நீக்கப்பட்ட பிறகுங்கூடத் தனித்து இயங்கும். இது சூழ்நிலை களிலிருந்து சேகரிக்கப்படும் உயிலெழுதுபவரின் எண் ணத்தைப் பொறுத்தது.

உயிலிணைப்பின் முக்கிய கூறுகளாவன: அ) இது எழுத்து வடிவிலான ஆவணமாக அமைதல் வேண்டும்; வாய்மொழியாக அமையக் கூடாது. ஆ) அப்போதிருக்கும் முந்தைய உயிலினைக் குறித்து இது அமைதல் வேண்டும்; தனித்தியங்கும் தனி ஆவணமாக இருக்கக் கூடாது. இ) முந்தைய உயிலின் அல்லது உயில்களின் வாசகங்களை விளக்குவதற்கா கவோ மாறுதல் செய்வதற்காகவோ வேறு ஏதா வது சேர்ப்பதற்காகவோ இது இருத்தல் வேண்டும். இக்காரணங்களுக்காக இது அவ்வுயிலின் ஓர் உறுப் பாகக் கருதப்படுகிறது. முந்தைய உயிலினை உறுதிப் படுத்தும் வெறும் ஆவணமாகக் கூட இது இருக்க லாம்.

உயிலின் பொருள் விளக்கத்திற்கு உயிலிணைப் பின் மொழியமைப்புக் கருத்திற் கொள்ளப்படுகிறது. ஓர் உயிலிணைப்பு முறையாகக் கையொப்பமிடப் பட்டு முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும்.

உயிலொன்று சட்டத்தின் செயலாலோ தரப்பி னரின் செயலாலோ மறுக்கப்படலாம். ஒருவர் எத் தனை உயில்களை மேண்டுமானாலும் எழுதிவைக்க லாம்; அதற்குத் தடை இல்லை. ஆனால், ஒருவரே இரு உயில்களை விட்டுவிட்டு இறக்க முடியாது. உயில் ஒன்று நீக்கமுறும்போது தானாக உயிலி ணைப்பும் நீக்கமுறும் என்பதில்லை. உயிலொன்று நீக்கமுறும்போது உயிலிணைப்பும் நீக்கமுற வேண் டும் என்ற எண்ணம் வெளிப்பட்டாலன்றி உயிலி ணைப்பு நீக்கமுறாது. உயிலினைப் போன்றே உயிலி ணைப்பினையும் எரித்தல் அல்லது அழித்தல் போன்ற செயல்களால் நீக்கம் செய்யலாம்.

உயிலைப் புதுப்பிக்கும் விதிமுறைகள் உயிலிணைப் பிற்கும் பொருந்தும். நீக்கம் செய்யப்பட்ட உயில் அல்லது உயிலிணைப்பு மீண்டும் நிறைவேற்றப்படும் போது புதுப்பிக்கப்படும். ஆ.ச.

*உரசொலிகள்*: நுரையீரல்களிலிருந்து வெளி வரும் காற்றின் வழியினைக் குறுக்கி, ஒரு சிறு இடுக் கின் வழியாகக் காற்றைச் செலுத்தி, அக்காற்றினை அதிரச் செய்யும் போது பிறக்கும் ஒலிகள் உரசொலி கள்(Fricatives)எனப்படுகின்றன. ஈண்டு மூச்சுக்காற்று

முற்றிலும் தடை செய்யப்படாமல் உரசிச்செல்ல வைக்கப் பெறுவதால் இவ்வொலிகள் பிறக்கின்றன.

உரசொலிகள் பிறக்கும்போது காற்றுத் தடைப் படுவதால் இவை தடையொலிகள் (Obstruents)எனக் கருதப்பெறுகின்றன.

காற்று வாயில் உரசிச் செல்லும் தன்மையின் அடிப்படையில் உரசொலிகள் பிளந்துரசொலி (Slit Fricative), குழிந்துரசொலி (Groove Fricative),மருங் குரசொலி (Lateral Fricative), தட்டை உரசொலி (Surface Fricative) எனப்பகுக்கப்படுகின்றன.

நுரையீரல்களிலிருந்து வெளிவ[illegible] வாய்ல் உரசிச் செல்லும் பகுதி ஆழமின்[illegible]றுய வெடிப் புப் போன்று அமைந்திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி பிளந்துரசொலி எனவும், இப்பகுதி குழிந் திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி குழிந்துர சொலி எனவும் கருதப்பெறும். மேலும், நுரையீரல் களிலிருந்து வெளிவரும் காற்றுப் பக்கவாட்டில் செலுத்தப்பெற்று, அதிரப்பெறும் நிலையில் பிறக்கும் உரசொலி மருங்குரசொலி எனவும், காற்று உரசிச் செல்லும் இடுக்குப் பகுதி தட்டையாய் ஆழமாக அமைந்திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி தட்டை உரசொலி எனவும் கருதப்பெறும்.

தமிழில் பிறமொழிக்கலப்புக் காரணமாக உர சொலிகள் சில காணப்பெறுகின்றன. 'f', 'v' என்னும் இரு பல்லிதழ்ப் பிளந்துரசொலிகள் (காபி - kāfi, பிலிம் - film).'ð' என்னும் ஒலிப்புடைப் பல் பிளந்துர சொலி (மதம் - maðam), 'x', 'ɣ' என்னும் கடை யண்ணப் பிளந்துரசொலிகள் (கால்கள் - kālxaḷ, பாகம் - pāɣam), 'h' என்னும் குரல்வளை ஒலிப் பிலாப் பிளந்துரசொலி (ஹோட்டல்-hōṭṭal), 's', 'z' என்னும் நுனியண்ணக் குழிந்துரசொலிகள் (வசம் - vasam, டசன் - ḍazan),'ṣ' என்னும் ஒலிப்பிலா நாவளை குழிந்துரசொலி (விஷம் - viṣam) போன்ற உரசொலிகள் பேச்சுத் தமிழில் காணப்படுகின்றன.

மருங்குரசொலிகள் நூட்கா, சாலிசன் போன்ற அமெரிக்க இந்திய மொழிகளில் காணப்படுகின்றன. குரல்வளை உரசொலிகள் மிகவும் அருகிக் காணப் படுகின்றன. மூக்குரசொலி எந்த மொழியிலும் காணப்பெறவில்லை. ஏ.ஆ.


***உரார்ந்து*** தென் மேற்கு ஆசியாவில் கருங் கடலின் தென்கிழக்கிலும் காசுபியன் கடலின் தென் மேற்கிலும் இருந்த தொன்மையான பகுதி. இப்பகுதி யில் கி. மு. 8 [illegible] இடைப்பகுதியில் உரார்த்து (Urartu) என்னும் அரசு ஆட்சி புரிந்து வந்தது. உரார்த்திய மக்கள் போரிடுவதில் வல்லவர் களாக விளங்கினர். உரார்த்தின் முதன்மைக் கடவு ளான கால்திசின் (Khaldisu) பெயரால் உரார்த்திய அரசு கால்தியா (Khaldia) என்றும் கூறப்பட்டது.

உரார்த்து அரசு பற்றி அசிரியர்களின் ஆவணங் கள் குறிப்பிடுகின்றன. உரார்த்து அசிரியப் பேரர சின் வடக்கே இருந்தது. உரார்த்தியர்கள் அடிக்கடி அசிரியர்களுடன் போரிட்டு வந்தனர். உரார்த்தின் தலைநகர் வான் (Van)என்னும் ஏரிக் கரையிலமைந் திருந்த துசுபா (Tushpa) நகரம் ஆகும். உரார்த்திய அரசின் ஆதிக்கம் துருக்கியிலுள்ள சில்திர் (Cildir), வான் ஏரிப்பகுதிகள், ஈரானில் உள்ள உர்மியா (Urmia), சோவியத்து அர்மீனியக் குடியரசிலுள்ள செவன் ஆகிய ஏரிப்பகுதிகளிலேயே அமைந்திருந் தது.

உராத்தியர்கள் ஊரியன்களின் (Hurrians)பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இவ்விரு இன மக்களும் பல பொதுத் தன்மைகள் பெற்றிருந்தனர். அசிரியர்களின் கலை, இலக்கிய எழுத்தமைதியை இம் மக்கள் பயன்படுத்தினர். அசிரியர்களுக்கும் உரார்த்தியர்களுக்கும் இடையில் பண்பாட்டுக் கலப்பு இருந்தது. முதலாம் சர்தூரி (Sarduri I, கி. மு. 840-830) என்னும் உரார்த்திய அரசர் வெளியிட்ட கல்வெட்டுகளே உரார்த்தியர்களைப் பற்றி அறிய உதவும் முதல் சான்றுகளாக உள்ளன. அவர்தம் மகன் இசுபியுனி (Ishpuini, கி. மு. 830-8'0) என்பவர் காலத்திலும் அவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த அவர்தம் மகன் மினுயா (Meinua, கி. மு. 810-781) காலத்திலும் உரார்த்தியர்கள் பல போர்களைச் செய்து பல பகுதிகளைக் கைப்பற்றி உரார்த்து அரசை விரிவு படுத்தினர். இவ்வரசர்களின் கல்வெட்டுகள் மேற்கே எலாசிகு (Elazig) நகரம் முதல் வடக்கே அராசு (Aras) வரையிலும், தெற்கே உர்மியா ஏரிக் கரை வரையிலும், தென்கிழக்கில் அர்தினி (Ardini) அல்லது முசாசிர் (Musasir)வரையிலும் உள்ள பகுதி களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரார்த்தியர்கள் அர்தினியாவிலிருந்த அல்தி (Haldi) என்னும் கோயி லுக்குப் பல கொடைகள் வழங்கி ஆதரவு அளித்த னர். இக்கோயிலில் அசிரியர்கள் வழிபடவும் அனுமதி அளிக்கப்பட்டது.

மினுயா காலத்தில் நாட்டில் வேளாண்மை பெரிதும் வளர்ந்தது. இவர் வெட்டிய கால்வாய் ஒன்று மினுயாக் கால்வாய் என்று கூறப்படுகிறது. இக்கால்வாய் மூலம் நிலங்களுக்கு நீர் எளிதில் கொண்டு செல்லப்பட்டது. இக்கால்வாய் 28 கி. மீ.

நீளமுடையது. மினுயாவை அடுத்து அவர்தம் மகன் முதலாம் அர்கிசுத்தி (Arguishti I, கி. மு. 780-765) ஆட்சிக்கு வந்தார். இவர் காலத்திலிருந்துதான் உரார்த்து அரசைப் பற்றி அறிந்து கொள்ள முழுமையான வரலாற்று ஆவணங்கள் கிடைக்கின்றன. இவ்வரசர் காலம் முதல் அடுத்து வந்த இரண்டாம் சர்துரி (Sarduri II, கி. மு. 755-735) காலம்வரை பல வரலாற்று ஆவணங்கள் வான் ஏரிக்கரைப் பகுதியிலுள்ள பாறைகளில் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் காலத்தில் உரார்த்தின் ஆதிக்கம் மேற்கில் விரிவடையத் தொடங்கியது. முதலாம் அர்கிசுத்தி கி. மு. 777-இல் மெலிதீன் (Melitene) நகரைக் கைப்பற்றினார். இதனை மறுமுறை இவர் மகன் இரண்டாம் சர்தூரியும் கைப்பற்றினார். இரண்டாம் சர்தூரி கோம்மாசென் அரசர் குசதசுபி (Kushtashpi of Commagene) என்பவரைக் கி. மு. 745-ஆம் ஆண்டளவில் தோற்கடித்தார். சர்தூரியின் தந்தையான முதலாம் அர்கிசுத்தியும் தாபல் (Tabal) அரசர் துயட்டு (Tuate) என்பவரைத் தோற்கடித்து, அந்நாட்டின் ஒரு பகுதியை உரார்த்துடன் இணைத்தார். இவ்விரு அரசர்களின் காலத்திலும் உரார்த்தின் ஆதிக்கம் பெரிதும் விரிவடைந்தது. இவ்வரசர்கள் உள்நாட்டிலும் வேளாண்மையைப் பெருக்கினர்; பல ஏரிகளை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தி நாட்டின் விளைபொருள்களைப் பன்மடங்காக்கினர்.




உரார்த்து அரசு

அடுத்துவந்த உரார்த்திய அரசர்கள் அசிரியாவுடன் போரிடுவதிலேயே ஈடுபட்டனர். அசிரியர்கள் கி. மு. 744 முதல் கி. மு. 715 வரை தங்கள் வலிமையைப் பெருக்கி உரார்த்தியர்களின் ஆதிக்கத்தை வீழ்த்துவதில் முனைந்தனர். அசிரிய அரசர் மூன்றாம் திக்லத்-பைல்சரும் (Tiglath - Pileser III) அவர் மகன் இரண்டாம் சார்கோனும் உரார்த்திய அரசர் முதலாம் உருசாசு (Rusas I) என்பவரைத் தோற்கடிக்க முயன்றனர். சார்கோன் தம் மகனான சென்னா செரிபு என்பவரை உளவறிந்து வர உரார்த்திற்கு அனுப்பி வைத்தார். முதலாம் உருசாசு அப்போது காகசசுப் பகுதியிலிருந்த நாடோடிக் கூட்டத்தினரிடம் போரிடுவதில் ஈடுபட்டிருந்தார். போரில் உரார்த்தியர்கள் பலமிழந்து காணப்பட்டமையால், உருசாசு தம் படைவீட்டிலிருந்து தலைநகர் திரும்பினார். இந்நேரத்தைப் பயன்படுத்திச் சார்கோன் உரார்த்து மீது படையெடுத்தார். இவ்வேளையில் உருசாசால் நாடோடிக் கூட்டத்தாருடன் போரில் ஈடுபட்டிருந்த தம் படைத்தளபதிகளுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. உருசாசு தோற்கடிக்கப்பட்டு, மலைப்பகுதியில் தப்பித்து மறைந்து வாழ்ந்து வந்தார். சார்கோன் பன்முறை உரார்த்தைச் சூறையாடினார். இறுதியில் அர்தினி (Ardini) கோயிலைச் சூறையாடிக் கோயிலினுள் இருந்த அல்தி (Haldi) என்னும் கடவுளின் சிலையைத் தம் நாட்டிற்குத் தூக்கிச் சென்றார். நாட்டை எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்ற இயலாமல் மறைந்து வாழ்ந்த உரார்த்திய அரசர் உருசாசு, இதனைக் கேள்வியுற்றுத் தற்கொலை செய்து கொண்டார். உருசாசின் இறப்பிற்குப்பின் அவர் மகன் இரண்டாம் அர்கிசுத்தி பெயரளவில் அரசரானார். இவர் நாட்டின் வேளாண்மையைப் பெருக்கினார். உரார்த்தியர்களின் ஆதிக்கம் நாளடைவில் தளர்த்தப்பட்டு, இறுதியில் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் அர்மீனியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

உரார்த்தியக் கல்வெட்டுகள் பெரும்பாலும் அவர்களது சமயத் [illegible] குறிப்பிடுகின்றன. உரார்த்தியக் கடவுள்களின் பெயர்கள், அவர்களை வழிபடும் முறை பற்றி இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்களின் சமூகம் அடிமைகளைக் கொண்டு விளங்கியது. உரார்த்தியர்கள் கட்டடக் கலையில் பெரிதும் நாட்டம் உடையோர். அரசர்கள் கோட்டைகளையும் நகரங்களையும் வேளாண்மைக்காகக் கால்வாய்களையும் கட்டினர். இவர்களின் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது தீசுபைனி (Teisbaini) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் அரண்மனை ஆகும். இவ்வரண்மனையில் உணவு, எண்ணெய், மது, கருவிகள் ஆகியவற்றைச் சேமிக்கும் பெரும் அறைகள் காணப்படுகின்றன. இவ்வரண்மனை 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டது. ஏறக்குறைய 120 அறைகளாக இவ்வரண்மனைப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வறைகளைச் சுற்றிச் சுற்றுச் சுவர்கள் கருங்கல்லாலும் சூரியவெப்பத்தில் காய

வைக்கப்பட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன. இச்சுவர்களின் ஒவ்வொரு மூலையிலும் உயர்ந்த தூபி போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள அறைகளின் உயரம் 32 அடியாகும். கோடைக் காலத்திலும் உள்ளே குளிர்ச்சியாக இருக்கும் வகையில் இவ்வரண்மனை கட்டப்பட்டுள்ளது. அறைகளின் கூரைகள் மரத்தால் வேயப்பட்டவையாகும். இவ்வரண்மனையைத் தவிர, பொதுவான வீடுகள் பல நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீரர்களும் வேளாண் மக்களும் வணிகர்களும் தட்டையான கூரை வீடுகளில் வசித்தனர். இவ்வீடுகள் பொதுவாக மூன்று அறைகளைக் கொண்டு விளங்கின. இந்நகரம் புயலால் சிறிது அழிந்தது. பின்னர், சித்தியர்களால் (Scythians) நெருப்பினால் கி.மு. 585-இல் தீக்கிரையாக்கப்பட்டது.

துணை நூல்கள்:

**Tull, G.K.**, Early Civilisations, Blandford Press, London, 1968.

**Upadhyaya, B.S.**, The Ancient World, S. Chand&Co., New Delhi, 1976.

*உரிச்சீர்* செய்யுள உறுப்பாக விளங்கும் சீரின் வகைளுள் ஒன்று. சீர் என்னும் செய்யுள் உறுப்பு அசைகளால் ஆகித் தளைக்குக் காரணமாக அமையும். இந்த உறுப்பினைத் தொல்காப்பியரும் பின்னர் வந்த யாப்பருங்கலம் முதலான இலக்கண நூலாரும் வெவ்வேறு வகையாக விளக்கியுள்ளனர். இறுதியில் குற்றியலுகரம் அல்லது குற்றியலிகரம் அமைந்த சொற்களை அலகிடுவது காரணமாக இச்சீர் வேறுபாடு தோன்றலாயிற்று.

நேர், நிரை என்பன இயலசை என்றும் நேர்பு, நிரைபு என்பன உரியசை என்றும் தொல்காப்பியர் கொண்டார். மேலுமவர் இவ்வசைகளால் உண்டாக்கப்படும் சீர்களுள் இயலசை மயங்கி வருவன இயற்சீர் என்றும், உரியசை மயங்கி வருவன உரிச்சீர் என்றும் குறிப்பிட்டுள்ளார். நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கினையும் நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர்பு நேர் நேர், நிரைபு நேர் நேர் என்றும் இன்ன பிறவாறும் உறழ்ந்தால் 64 மூவசைச்சீர் உண்டாகும். அவற்றுள் நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர் நிரை நேர், நிரை நிரை நேர் ஆகிய நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும். எஞ்சிய 60 சீர்களும் வஞ்சி உரிச்சீர்எனப்படும்.வஞ்சி உரிச்சீர் வஞ்சிப்பாவிற்கு மட்டுமே வரும். வஞ்சிப்பாவில் பிற சீர்களும் இடம்பெறும். இவை தொல்காப்பியர் கருத்தாகும்.

யாப்பருங்கல ஆசிரியர் இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என மூவகைச் சீர்களைச் சுட்டியுள்ளார். அவற்றுள் உரிச்சீர் என்பது மூன்று அசைகளால் ஆகியது. அது எட்டு வகைப்படும். நேரசையால் முடியும் நான்கு சீர்களும் வெண்பா உரிச்சீர் எனப்படும். நிரையசையால் முடியும் நான்கு சீர்களும் வஞ்சிப்பாவிற்குரியனவாய் வஞ்சி உரிச்சீர் எனப்படும் (யாப்பருங். 12). நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் ஆகிய நான்கும் வெண்பா உரிச்சீர். நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நேர் நிரை நிரை ஆகிய நான்கும் வஞ்சி உரிச்சீர். யாப்பருங்கல ஆசிரியராலேயே இயற்றப்பட்ட யாப்பருங்கலக் காரிகை இதனை, 'ஈரசை நாற்சீர் அகவற்குரிய வெண்பாவினவாம், நேரசையாலிற்ற மூவகைச்சீர் ... நிரையால் இறுப, ... வஞ்சிக்குரிச்சீர்' என்று காரிகை யாப்பால் விளக்கியுள்ளது.

*உரிச்சொல்*: தமிழ் இலக்கண மரபில் 'உரிச்சொல்' என வழங்குகிற சில சொற்களின் பெயர், இலக்கணம், தோற்றம், வடிவம், பயன்வகை, சொல்வகை ஆகியன பற்றிய செய்திகள் இன்றுகாறும் தீர்வான தெளிவும் விளக்கமும் பெறவில்லை. அவை உரிமை பெற்றிருத்தல் காரணமாக உரிச்சொல் எனப் பெயர் பெற்றன என்று விளக்கப்படுகின்றன. 'உரிமை' என்பது பொருட்கு உரிமை, இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றிற்கு உரிமை, செய்யுட்கு உரிமை, பெயர் வினைக்கு உரிமை, பண்பிற்கு உரிமை எனப் பலவகையாகவும் கூறப்படுகின்றது.

இலக்கணம்: தொல்காப்பியர் உரிச்சொற்கள் 'பெயர் வினைகளின் மருங்கிற் றோன்றும்' (தொ. சொ.157) என்றும், 'உயிரும் புள்ளியும் இறுதியாகிக் குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப் படவாராக் குறைச்சொற்கிளவி' (தொ.எ.482) என்றும், பெயரினும் வினையினும் மெய்தடுமாறுவன என்றும், 'ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றியும் பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றியும்' வருவன (தொ.சொ.297) என்றும் கூறுகின்றார். மேலும், அவர் 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல்பு இன்றே' (தொ.சொ.395) என்றதனால், உரிச்சொற்கள் உறுப்புகளாகப் பிரிந்து நின்று வேறு வேறு பொருள் உணர்த்துதல் இல்லை என்பதையும், அவை தனி நிலையிலேயே அமையும் என்பதையும் பெற வைக்கின்றார். எச்சவியலில் 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (தொ.சொ. 455) என்று இடைச்சொல்லின் செயலை விளக்கிய தொல்காப்பியர், தொடர்ந்து 'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய' (தொ.சொ.456) என்கின்றமையால்

உரிச்சொற்களில் சில வேற்றுமைச் சொல்லாகச் செயலாற்றுதற்குரியன என்பதை உணரவைக்கிறார். பவணந்திமுனிவர் உரிச்சொற்கள் பலவகைப் பண்பையும் பகர்வன, ஒருகுணம் பலகுணம் தழுவி வருவன, பெயர்வினைகளை ஒருவாதன (நீங்காதன), செய்யுட்கு உரியன (நன்.442) என்றெல்லாம் குறிக்கிறார்.

தொல்காப்பியர் சொல்வகைகள் 'பெயரே வினையென்று ஆயிரண் டென்ப' (தொ.சொ.159) என்று நிறுத்திக் கூறி இடை உரிக்கு இரண்டாம் நிலையினை (தொ.சொ.158)அளித்திருப்பதும்,சொல்நிலையில் உரிச்சொற்கள் உயர்திணை, அஃறிணை ஆயிரு திணையின்கண் இசைக்காமையினைக் (தொ.சொ.1) குறிப்பாக உணர்த்தியிருப்பதும், மொழி புணரியல்புகளை விளக்குங்கால் அவை தொடரில் சிறப்பிடம் பெறாமையினை(தொ.எ.108, 132)உய்த்துணர வைப்பதும், அவை புணர்ச்சியில் வேறுபடுகின்றமையினைப் புணரியல் நிலையிடை உணரத் தோன்றாதன எனக் குறிப்பிடுவதன் வாயிலாக உரிச்சொற்களைக் குறைச்சொற்கிளவி என்று பெயர் சூட்டி அழைப்பதும் உரிச்சொற்களின் இயல்புகளை அறியத் துணை செய்கின்றன. பிற்காலத்தில் இளம்பூரணரும் (தொ.எ.114) நன்னூலாரும் (நன்.152) அவை தொடரில் இடம் பெறுதலையும் நிலைமொழிகளாக அமைதலையும் (நன்.239) சுட்டியுள்ளனர்.

தோற்றம்: தொல்காப்பியர்,

'உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்

குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி'
(தொ.எ.483)

என்றும், 'உரிச்சொற்கிளவி கிளங்குங்காலை, இசையினும் குறிப்பினும்பண்பினும்தோன்றி'(தொ.சொ.291) என்றும் கூறி,உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு அடிப்படையாகப் பிறப்பன என விளக்குகிறார். இத்தகைய குறிப்பே பிற்காலத்தில் தொன்னூல் விளக்க உரையில் உரிச்சொற்களைக் குறிப்பு உரிச்சொற்கள், பண்புரிச்சொற்கள், இசை உரிச்சொற்கள் எனப் பாகுபடுத்திக் காண்பதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். நன்னூலார் உரிச்சொற்களைப் பல்வகைப் பண்பும் பகர்பெயராகி (நன்.422) என்று சுட்டி, அவற்றைப் பொருள்களின் பண்புகளைத் தெரிவிக்கிற பண்புப்பெயர் எனக் கொள்ளுகிறார். நன்னூல் உரிச்சொற்களைப் பண்பு அல்லது குணத்தினைக் கூறும் சொற்கள் எனக் கொண்டு அவற்றிற்கு விளக்கம் கூறுகிறது. இவ்வடிப்படையில் தான் வீரமாமுனிவர் உரிச்சொல்லைக் குணச்சொல் (தொ.வி.138) என்கிறார்.

இசைபற்றித் தோன்றுவதற்குத் துவைத்தலும் சிலைத்தலும், குறிப்புப் பற்றி வருவதற்குக் கறுப்பும் சிவப்பும், பண்பு பற்றியதற்கு நிறத்துருவம் ஆகியனவும் (தொ.சொ.292) இளம்பூரணர் தரும் எடுத்துக் காட்டுகள். தெய்வச்சிலையார் உறு என்பது இசையாலும் கறுத்தான் என்பது குறிப்பாலும் கண்சிவக்கும் என்பது பண்பாலும் புலப்பட்டது (தொ.சொ. 293) எனக் கூறி, இளம்பூரணரிலிருந்து சிறிது வேறுபடுகிறார். உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபட்டாலும் ஒரு மொழியின் எல்லாச் சொற்களும் இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே தோன்றுகின்றன என்பது தெளிவு. எனவே, தொல்காப்பியம் உரியியலில் சில அருஞ்சொற்களின் பொருளைக் கூறுதல் போன்றே சொற்களின் தோற்றத்தையும் கூற முயற்சி செய்கிறது என்பதில் தவறில்லை.

வடிவம்: தொல்காப்பியர் உரிச்சொல் 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' (தொ. சொ. 299) வரும் என்கிறார். உரிச்சொற்களை உரையாசிரியர் விளக்கங்களோடும் சங்க இலக்கிய வழக்குகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை பெயரைப் போன்றும் வினையைப் போன்றும் பெயரின்கண்ணும் வினையின்கண்ணும் வடிவம் மயங்கி வருதலையே அவர் கருதினார் என்பது பொருந்தும்.

உரிச்சொற்கள் ஒருநெறிப்பட்டுவாராதன; குறைநிலையுடையன (தொ. எ. 483). அவை எண், வேற்றுமை, காலம் போன்ற எந்தச் சொல் வேறுபாட்டு உருபனையும் (Inflectional Morpheme) ஏற்காதவை. அவற்றின் உறுப்புகளாகிய எழுத்துகள் பிரிந்து நின்று தனிப்பொருள் தருதல் இல்லை (தொ. சொ. 305). இங்கு நனி, தவ, வய போன்றனவும் தனி உறுப்புகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கொள்கை.

பயன்வகை: இலக்கண நூல்கள் பெயர், வினை ஆகியவற்றிற்குப் பயன்வகையைச் சுட்டுகின்றமை போன்று உரிச்சொற்கள் எல்லாவற்றிற்கும் பொதுமையான ஒரு பயன்வகையைக் குறிப்பிடவில்லை. தொல்காப்பியர் உரிச்சொற்களிலும் சில வேறுபடுக்கும் சொற்களாகச் செயலாற்றும் என்கிறார். எ-டு உறு, தவ, நனி, கடி முதலியன. தொல்காப்பியர் தரும் 120 உரிச்சொற்களின் வழக்குகளைச் சங்க இலக்கிய அடிப்படையில் ஆய்ந்தால், அவை பெயர்ச்சொற்களாகவும் வினைச்சொற்களாகவும் அவற்றுள் ஏறத்தாழ நாற்பது தொழிற்பெயர்களாகவும் உள்ளன. எனவே தொல்காப்பியர் கூறும் உரிச்சொற்கள் யாவும் தொடரன் நிலையில் (Syntactical Level) ஒரே வகையான பயன்வகையை உடையன அல்ல.

உரிச்சொற்கொள்கைகள்: உரிச்சொற்கள் பற்றி உரையாசிரியர்களும் ஆய்வு அறிஞர்களும் பல கொள்கைகளை வெளியிட்டுள்ளனர். அக்கொள்கைகள் ஒவ்வொன்றும் உரிச்சொற்களின் ஏதேனும் ஓர் இயல்பை விளக்கவோ அவற்றுள் ஒருசிலவற்றின் இயல்பைத் தெளிவுபடுத்தவோ செய்கின்றனவே தவிர, எல்லா உரிச்சொற்களின் இயல்பையும் முழு அளவில் அறிந்துகொள்ளத் துணை செய்வதில்லை. எந்த ஒரு கொள்கையும் உரிச்சொற்களின் இயல்பை ஓரளவு தெரிந்துகொள்ளத் துணைநிற்கின்றமையால் முழு அளவில் தள்ளுவதற்கு உரியதும் அன்று. உரிச்சொற்கள் பற்றிய கொள்கைகளாவன. 1. தனிச்சொல் வகையின, 2. தனிச்சொல் வகைக்குரியன அல்ல. 3. தாதுக்கள், 4. வேர்ச்சொற்கள், 5. பெயரடை-வினையடையாய் வருவன, 6. செய்யுள் வழக்கின, 7. அருகிய வழக்கின, 8. வெளிப்பட வாராதன, 9. சொற்களஞ்சியச் சார்பின.

தனிச்சொல்வகைக் கொள்கை: இலக்கண நூலார் உரிச்சொல்லைச் 'சொல்' என்ற பெயரால் குறித்திருப்பதும், உரிச்சொற்களுக்குப் பெயர் வினைகளுக்கு அளித்திருத்தல் போன்றே தனி இயல் அளித்திருப்பதும், பெயர்வினைகளைச் சொல்வகைகள் எனக் கூறும் இடத்தில் உரிச்சொல்லினையும் சேர்த்துக் கூறியிருத்தலும் உரியும் சொல்வகைகளில் ஒன்றாக மரபில் கொள்ளப்பட்டமைக்குக் காரணங்களாக அமைகின்றன. இலக்கணநூல்களில் உரியியல்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஆய்ந்தால் உருபன்நிலையிலும் தொடரன் நிலையிலும் அவையாவும் ஒரேவகையான அமைப்பையும் பயன்வகையினையும் உடையன அல்ல. எனவே உரிச்சொற்கள் அனைத்தும் தனி ஒரு சொல்வகையில் கொள்ளப்படுதல் இயலாததாகும்.

தனிச் சொல்வகையன்மைக் கொள்கை: தொல்காப்பியர் உரிச்சொல்லை,'அவற்று (பெயர், வினை) வழி மருங்கில் தோன்றும்' (தொ. சொ. 159)என்கின்றமையாலும், 'குறைச்சொற்கிளவி' எனப்பெயர் சூட்டிக் கூறுகின்றமையாலும், அதனை எந்த இடத்திலும் தொடரின் உறுப்பாகக் கூறாமையாலும், உரிச்சொற்கள் யாவும் உருபன் நிலையிலும் தொடரன் நிலையிலும் ஒரே வகையான இயல்பையும் இயங்குமுறையையும் உடையனவாக அமையாமையாலும் அவற்றைத் தனிச்சொல்வகையினவாகக் கொள்ளல் இயலாது. பிற்கால இலக்கண நூலாரும் அவற்றைத் தனிச்சொல்வகையின என்பதற்கான சான்றுகள் தரவில்லை.

தாதுக்கொள்கை: தெய்வச்சிலையார் வடநூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே உரிச்சொல் என்று கொள்ளப்படும் என்று கூறுகிறார். வடமொழி இலக்கண நூலார் கொள்கைப்படி, தாது என்பது வினைவேரேயாகும். ஆனால், மேலே குறிப்பிட்டபடி உரியியலில் பெயர்களும், உறு, மழ, போன்ற சில தழுவும் சொற்களும் உள்ளன.

வேர்ச்சொற் கொள்கை: சிலமொழியியல் அறிஞர்கள் உரியியல் வேர்ச்சொற்களைத் (Roots) தொகுத்துக் கூறும் பகுதி என்று கருதுகின்றனர். தொல்காப்பிய உரியியலில் பொற்பு, வெம்மை, சிறுமை, செழுமை, சீர்த்தி, செல்லல், இலம்பாடு போன்ற இருபத்துநான்கு ஆக்கப்பெயர்கள் உள. எனவே, இக்கொள்கையும் முழு அளவில் ஏற்புடையது அன்று.

பெயரடை வினையடைக் கொள்கை: தமிழ் இலக்கண மரபு பெயரடை, வினையடை ஆகியவற்றைக் கூறாமையும் பல மேனாட்டு அறிஞர்களும் உரிச்சொற்களைத் தழுவும் சொற்களாகக் கொண்டுள்ளமையும் இக் கொள்கைக்கு வழி வகுத்தன.

தொல்காப்பியர் எல்லா உரிச்சொற்களும் தழுவும் சொற்களல்ல; ஏறத்தாழ அறுபது உரிச்சொற்கள் மொழியில் பெயரெச்ச வினையெச்ச வடிவில் பெயர்வினைகளைத் தழுவி வழங்கினாலும் வேறுபல சொற்கள் முழு அளவில் பெயர்களே என்கிறார்.

செய்யுள் வழக்கு, அருகியவழக்கு, வெளிப்பட வாராக் கொள்கைகள்: சேனாவரையர்,'பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியனவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர்' என்று கூறுகிறார். நன்னூலார் 'செய்யுட்கு உரியன உரிச்சொல்' (நன்.442) என்று கூறுகின்றார். தொல்காப்பியம், 'பயிலாதவற்றை' (தொ.சொ.297), 'வெளிப்படவாரா' (தொ. சொ.298) என்று சுட்டுகிற இடங்கள் உரிச்சொற்கள் அக்கால வழக்கில் பயின்றனவல்ல; அன்றைய இலக்கியத்திற்கே உரியனவாக அமைந்தன என்பதை உய்த்து உணரவைக்கின்றன.

அன்று பொருள் வெளிப்பட அறியப்படாத சொற்களையே உரிச்சொற்களின்பாற்படுத்திக் கூறுவதாகத் தொல்காப்பியர் (தொ.சொ.298) தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இம்மூன்று கொள்கைகளும் உரிச்சொற்களின் அமைப்பு, பயன்வகை ஆகியவற்றைத் தெளிவு செய்யப் பயன்படுவதில்லை.

சொற்களஞ்சியச் சார்புக் கொள்கை: இலக்கண நூல்களின் உரியியல்தான் பிற்கால நிகண்டுகளுக்கு அதாவது, தமிழ்ச் சொற்களஞ்சியங்களுக்கு (Tamil Lexicon) அடிப்படையாக அமைந்தது என்பாரும் உளர். தொல்காப்பியரும் பிற இலக்கண நூலாரும்

உரியியலைச் சொற்களுக்குப் பொருள் கூறும் பகுதியாகவே அமைத்துள்ளனர் என்பதும் தெளிவு.

இது வரை கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் உரிச்சொற்களின் இயல்புகளை விளக்கும் முயற்சியில் சில முடிவுகள் இவண் தரப்படுகின்றன.

1. உரிச்சொற்கள் முழுமையும் ஒருங்குசேர ஒரே சொல்வகையினுள் அடங்குவதில்லை.

2. உரிச்சொற்களுள் பல வேர்ச்சொற்களாக அமைகின்றன. எனினும், அவை எல்லாவற்றையும் தாதுக்கள் என்றோ வேர்கள் என்றோ கூறுதல் இயலாது.

3. தொல்காப்பிய உரியியலில் உறு, தவ, நனி, கய, வய போன்ற பதினாறு சொற்களும் பிற இலக்கண நூல்களில் சில சொற்களும் தழுவும் சொற்களாக உள்ளன. இவற்றைப் பெயர்வினைகளாகக் கொள்ளுதல் இயலாது.

4. தொல்காப்பியர் சொல்வகைளில் ஒன்றாக உரிச்சொல்லைக் கொள்ளவில்லை எனவும் உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண நூலாரும் அதனை ஒரு தனிச்சொல்வகையாகக் கொள்ளவே அது மொழி மரபில் அத்தகைய இடத்தைப் பெற்றுவிட்டது எனவும் கருத்துகள் உள.

5. இலக்கண நூல்களில் உரியியல் சில வழக்கிழந்த பொருள் கூறும் நோக்குடனேயே அமைக்கப்பட்டிருக்கலாம். எனவே, அதனைச் சொற்களஞ்சியஞ் சார்ந்த பகுதி என்பதில் தவறில்லை.

மோ. இ.

துணை நூல்கள்:

ஆதித்தன், அ.கு., உரிச்சொல் விளக்கம், சாந்தி நூலகம் சென்னை, 1967.

வெள்ளைவாரணர், க., தொல்காப்பியம்-நன்னூல் (சொல்லதிகாரம்), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

**Vaiyapuri Pillai**, S., History of Tamil Language and Literature, New Century Book House, Madras, 1956.

மீனாட்சி சுந்தரன், தெ.பொ., உரிச்சொல், இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1974.

உரிச்சொல் நிகண்டு திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகளைப் பின்பற்றி இயற்றப்பட்டதாகும். இதற்கு ஆசிரிய நிகண்டு என்னும் பெயரும் உண்டு. இதன் ஆசிரியர் காங்கேயர். இவர் தம் நூலுக்கு 'உரிச்சொல்' என்றே பெயரிட்டார் என்பது, 'முந்துள திவாகரம் பிங்கல நிகண்டும் முந்துகாங் கேயன் உரிச்சொல்' என்னும் இதன்பாயிரப்பகுதியால் அறிய வருகிறது. இந் நூல் வெண்பாவினால் செய்யப்பெற்றுள்ளது.

சைவசாத்திரமாகிய சிவப்பிரகாசத்துக்குச் சிவப்பிரகாசர் என்பாரின் பேருரை கி.பி.1488-இல் இயற்றப் பெற்றது. இவ்வுரையில், 'உயிர்ப்பொலி வங்கூழ் சலனன் வாதம் வளி மாருதம்' என வரும் உரிச்சொல் நிகண்டுப் பகுதியை (1:35) இவர் மேற்கோளாகக் காட்டியுள்ளார் (சிவப். 38 உரை). எனவே, இவர் காலத்திற்கு முந்தியது இந் நூல் என்பது தெளிவு.

'வணங்கல்' என்னும் பொருளில் வரும் சொற்களுள் 'சலாம் செய்தல்' என்பதனையும் இந்நூல் (9:2) தருகிறது. 'சலாம்' என்பது முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் நாட்டு வழக்கிற் புகுந்தது. ஆகவே, இந்த உரிச்சொல் நிகண்டை கி.பி.14-ஆம் நூற்றாண்டைய நூல் எனலாம்.

இதற்குரிய பழம் பதிப்பு கி.பி.1840-இல் வந்த துத்தன்துரை என்பாரின் பதிப்பாகும். உரிச்சொல் நிகண்டில் 12 தொகுதிகள் இப்பொழுது அச்சில் காணப்படுகின்றன. ஆனால், முந்திய பதிப்புகளில் 10-ஆவதான 'ஒலி பற்றிய பெயர்த் தொகுதி'யும் 12-ஆவதான 'பல் பெயர்க்கு ஒரு பெயர்த் தொகுதியும் காணப் பெறவில்லை. பழைய ஏடுகளிலும் 10 தொகுதிகளே உள்ளன.

'உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்
சொல் தன்னை
... ... ... ... ... ...
பத்துத் தொகுதியில் சேர்த்தான் எவரும்
படித்திடவே'

எனவரும் அரிய செய்யுளும் இந்நூல் 10 தொகுதிகளையே உடையது என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. இவற்றால் 10, 12-ஆம் தொகுதிகளைப் பிற்காலத்து ஆசிரியர் ஒருவர் பாடிச் சேர்த்திருக்க வேண்டும் என்பது தெரியவரும்.

சொற்பொருள் உணர்த்தும் ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதியில் 36 வெண்பாக்கள் உள. இவற்றில் விளக்கப் பெற்ற சொற்கள் 151. பல்பொருட் சொற்கள் வெண்பாவில் அமையும் வகையில் வைத்துப் பாடப்பெற்றுள்ளனவே யன்றி, தக்க காரணங்களால் அடைவுபடுத்தியதாகக் கொள்ளக் கூடவில்லை. மு.ச.

# பொருளடைவு



அக்பர் 872
அகஸ்தஸ் சீசர் 308
அகப்பொருள் இலக்கண நூல்கள் 251
அகிலமாம் சகோதரத்துவம் 104
அங்கத நூல்கள் 307, 310
அடிமூளைச் சுரப்பி 769
அடிமை முறை ஒழிப்பு 374
அடிமை வணிகர்கள் 600
அடைப்பொலி 706
அண்ணீரகம் 768
அணியிலக்கண நூல்கள் 252
அந்தமானியர் 572
அப்துர் ரகுமான், மூன்றாம் 917
அப்துல் மாலிக்கு 914
அமராவதி அணை 789
அமின்திவி தீவு 293
அமெரிக்க இந்தியர் 568, 574
அய்னு இனத்தவர் 577
அரசியலமைப்பு வகைகள் 929, 930
அரசுத் தொழிலாளர் குழு 769
அரண்டன் 836
அராபியர்கள் 643
அராபியரின் ஆடைகள் 794
அரிசுடாட்டிலின் அரசியலமைப்பு 929
அரிதாசர் 157
அருத்த சாத்திரம் 894
அவந்திவர்மன் 867
அவிநயம் 251
அறவியல் அணுகுமுறை 259
அறிவு ஆராய்ச்சியியல் கொள்கை 326
அனந்த பாரதி அய்யங்கார் 858
அனமாக சாதகம் 117
அனைத்துலக ஊனமுற்றோர் ஆண்டு 747
ஆங்கிலேயர் காலத்தில் ஈழ இலக்கியம் 663
ஆங்கிலோ-எகிப்திய உடன்படிக்கை 901
ஆசியர் 568
ஆசுத்திரேலியர் 568, 577
ஆடன் உடலுயர்வளவு அளவை 594
ஆடொலி 707
ஆதாய இழப்புக் கணக்கு 496
ஆப்பிரிக்க நீக்கிரோ 571
ஆப்பிரிக்கர் 568
ஆப்பு வடிவ எழுத்து 691, 692
ஆயுர்வேதம் 894
ஆயுள் பட்டியல் 950, 951
ஆர்க்காட்டு இரட்டையர் 87
ஆர்மீனிய இனத்தவர் 576
ஆரியப் பேரரசர் காலத்தில் ஈழ இலக்கியம் 661
ஆல்பைன் இனத்தவர் 576
ஆளவந்தார் கொள்கைகள் 128
இசாம் 914
இசுடீபன் தைலர் 548
இசுதேசியசு 311
இசுபினோசா 784
இசுபென்சர், எட்பர்ட்டு 957
இசுலாமியரின் இறக்கும்தறுவாய் நன்கொடை 477, 478
இசுலாமிய வாரிசுரிமைச் சட்டங்கள் 476
இடைக்காலத் தலைமை நீதிபதி 935
இடைக்கால நீதிபதி 935
இணக்கநிலைத் தகவமைப்பு 759
இந்தி இராமாயணம் 123
இந்திய ஆப்கானியர் 575
இந்திய இராணுவச் செலவு 57
இந்திய ஒப்பந்தச் சட்டம் 783
இந்தியத் தண்டனைச் சட்டம் 770
இந்தியப் பல்கலைக்கழகங்களில் உயராய்வு மையங்கள் 941
இந்திய மறுமலர்ச்சியின் தந்தை 65
இந்தியர் 568
இந்தியாவில் இருப்பு மாற்றகம் 190
இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் 437
இந்தியாவில் இறப்பு வீதம் 487
இந்தியாவில் உயர்கல்வி ஆளுகை 924
இந்தியாவில் பயிரிடும் நில அளவுகள் 734
இந்தியாவின் உணவு உற்பத்தி 832
இந்து இளைஞர் கழகம் 464
இந்துக்களின் இறக்கும் தறுவாய் நன்கொடை 478
இந்துத் திருமணச் சட்டம் 173
இந்தோ-ஐரோப்பிய மொழிகள் 679
இந்தோ-திராவிடர் 577
இந்தோனேசிய மலாய் மங்கோலியர்கள் 574
இயற்கைத் தேர்வு விதி 959
இயையுச் செயல்கள் 766
இரகுவம்சம் 119
இரண்டாம் கிருட்டிணன் 38
இரண்டாம் கூர்க்கன் 39
இரண்டாம் கோவிந்தன் 35
இரத்தப் படையல் 944
இரத்த வகைகள் 596
இரத்தவியல் 753

இரம்சான் நோன்பு 811
இராசர்சு காரல் 1
இராசரத்தின்ம் பிள்ளை, டி.என். 2
இராசராசக் காடவராயன் 3
இராசராசக் கோவலராயன், முதலாம் 3
இராசராசக் கோவலராயன், இரண்டாம் 4
இராசராசச் சேதிராயன், முதலாம் 4
இராசராசச் சேதிராயன், இரண்டாம் 4
இராசராச சோழன், முதலாம் 5
இராசராச சோழன், இரண்டாம் 8
இராசராச சோழன், மூன்றாம் 9
இராசராச சோழனின் ஆட்சி முறை 6
இராசராச சோழனுலா 10
இராசராச மலையகுலராயன் 11
இராசராச விசயம் 11
இராசராசனின் பட்டப்பெயர்கள் 7
இராசராசேச்சுரம் 11
இராசராசேச்சுவர நாடகம் 13
இராசன், சர். பி. டி. 13
இராசாதித்தன் 14
இராசாதிராசன், முதலாம் 15
இராசாதிராசன், இரண்டாம் 17
இராசாராணி கோயில் 18
இராசாராம் கோவிந்தராவ் 19
இராசாவாலியா 19
இராசி 19
இராசிபுரம் 20
இராசிம் 20
இராசி வட்டம் 20
இராசு, எட்வர்டு 21
இராசேசுவரி அம்மையார், ஈ.த. 21
இராசேந்திர சோழ சேதிராயன் 22
இராசேந்திர சோழ மலையமான் 23
இராசேநதிர பிரசாத்து 23
இராசேந்திரம் பிள்ளை, பா. அ.அ. 25
இராசேந்திரன், முதலாம் 25
இராசேந்திரன், இரண்டாம் 31
இராசேந்திரனின் கலைப்பணி 28
இராட் கிளிபு பிரௌன், ஆல்பிரடு இரெசினால்டு 33
இராட்டிர கூடர் 34
இராட்டிரகூடர் ஓவியங்கள் 39
இராட்டிரகூடர் கட்டடக் கலை 39
இராட்லர் 40
இராட்லர் தமிழ்-ஆங்கில அகராதி 40
இராணா குண்டை 41
இராணா கும்பா 41
இராணா சங்கராமசிங்கு 42
இராணிகும்பா 371
இராணுவ ஆல்பா 42
இராணுவ ஆல்பாச் சோதனைகள் 43, 46
இராணுவ உளவியல் 45
இராணுவக் கூட்டு ஒப்பந்தம் 47
இராணுவச் சட்டம் 49
இராணுவச் சமூகப்பணி 54
இராணுவச் சமூகவியல் 46
இராணுவச் செலவும் பொருளாதாரமும் 55
இராணுவ நீதிமன்றங்கள் 52, 53
இராதா கிருட்டிணன் 58
இராதாசாமி சத்சங்கம் 59
இராப்சன், ஈ. ஜே. 60
இராப்போசனம் 60
இராபர்ட் சீவல் 61
இராபர்ட்-டி-நொபிலி 61
இராபாத்து 62
இராபிசன், பால் 62
இராபில்சு, சர் தாமசு இசுடாம் போர்டு 63
இராபின்சன், எட்வர்டு குவிட்டு 63
இராபேல் 64
இராம்கர் 64
இராம் மோகன் ராய், இராசா 65
இராம கவிராயர் 66
இராமகிருட்டிண ஐயர், என். 66
இராமகிருட்டிண கவி 67
இராமகிருட்டிண சங்கம் 68
இராமகிருட்டிண பரம அம்சர் 69
இராமகிருட்டிண மடம் 68
இராமகிருட்டிணானந்தர் 72
இராம கீதை 72
இராமச்சந்திரக் கவிராயர் 73
இராமச்சந்திர பாவா 73
இராமச்சந்திரர் 73
இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். 74
இராம சரிதம் 119
இராமசரித மானசம் 75
இராம சாத்திரி பிரபுனே 76
இராமசாமி, ஈ.வே. 76
இராமசாமி, எசு. வி. 78
இராமசாமி, வ. 79
இராமசாமி, வே. வ. 80
இராமசாமி அடிகள் 81
இராமசாமி அய்யர் 81
இராமசாமி அய்யர், என். 81
இராமசாமி அய்யர், சி.பி. 82
இராமசாமிக் கவிராயர் 84
இராமசாமிக் கவுண்டர், ஆ. 84
இராமசாமி சிவன் 85
இராமசாமி செட்டியார் 85
இராமசாமி தீட்சிதர் 86

இராமசாமி நாயுடு, சீ. 86
இராமசாமி பிள்ளை 87
இராமசாமி முதலியார், ஆ. 87
இராமசாமி ரெட்டியார், ஓ.பி. 89
இராம செயத் திருப்புகழ் 90
இராமதாசர், சமர்த்த 92
இராமதாசர், பத்திராசலம் 93
இராமதாசு, குரு 94
இராம தேவர் 94
இராமநாடகக் கீர்த்தனை 94
இராமநாத கவிராயர் 95
இராமநாதபுர மாவட்டம் 95
இராமநாதம் பிள்ளை, அ. 95
இராமநாத முனிவர் 96
இராமநாதன் 96
இராமநாதன் செட்டியார் 97
இராமநாதன், பொன்னம்பலம் 97
இராமப்பையன் அம்மானை 98
இராமபாரதி 98
இராமபித்திகசு 98
இராமய்யர், கே.கே. 99
இராமர் அம்மானை 100
இராமராச பூடண கவி 100
இராமலிங்க அடிகள் 101
இராமலிங்க ஐயர் 105
இராமலிங்கத் தம்பிரான் 106
இராமலிங்கம், தி.அ 106
இராமலிங்கம் பிள்ளை, வே. 107
*இராமலிங்கமிர்தா* 119
இராமலிங்கனார், கீ. 108
இராமன் 109
*இராமன்* 117, 120, 271, 272
இராமன் பிள்ளை, சி.வீ. 112
இராமன தீச்சரம் 113
இராமா கெமாங்கு 113
இராமா நந்தி 113
இராமாமிர்த அரங்கநாதன் 113
இராமாயண அகவல் 116
*இராமாயண சம்பூ* 120
*இராமாயண பாரதம்* 119
இராமாயணம் 116
*இராமாயணம்* 844
*இராமாயண மஞ்சரி* 119
இராமாயண வெண்பா 124
இராமானந்த சுவாமிகள் 125
இராமானந்தர் 125
இராமானுச அய்யங்கார் 125
இராமானுச அய்யங்கார், தி.கி. 126
இராமானுசக் கவிராயர் 126
இராமானுச நாவலர், வே. 126
இராமானுச நாவலர், வே.[2] 127
இராமானுச நூற்றந்தாதி 127
இராமானுசர் 128
*இராமானுசர்* 127, 128
இராமானுசர் தாலாட்டு 129
இராமானுசலு நாயுடு, எசு.சி. 130
இராமேச்சுரக் கோவை 130
இராமேசுவரம் 130
இராமையர் 133
இராமையா, பி.எசு. 134
*இராமோபாக்கியானம்* 118, 119
இராய், சரத் சந்திரர் 135
இராயல் மானிடவியல் நிறுவனம் 136
இராலே சர் வால்ட்டர் 137
இராவண காவியம் 139
இராவணன் 140
இரான் 144
இரி 144
இரிச்சுமாண்டு மேரி எலன் 145
இரிச்சு மார்கரட் எல்டன் 145
இரிசி கேசம் 146
இரிட்டிரியா 146
இரிவர்சு, வில்லியம் ஆல்சு இரிவர்சு 147
இரீவிசு சிம் 147
இரு 147
இருக்கு வேதம் 148
இருக்கு வேளிர் 149
இருகாரணிக் கொள்கை 152
இருகால் நடைப்பழக்கம் 153
*இருகாலியக்க முறைகள்* 154
இருங்கோ வேண்மான் 116
இருங்கோவேள் 156
இருங்கோன் ஒல்லை ஆயன் செங்கண்ணனார் 156
இருசமய விளக்கம் 157
இருசாது நாமா 158
இருசிய சிருங்கர் 158
இருஞ் சோணாடு 159
இருத்தல் கொள்கை 159
இருத்தல் கொள்கையும் கல்வியும் 165
இருத்தல் நிலை உளவழி மருத்துவம் 167
இருத்தல் நிலை உளவியல் 168
இருதயநாத் குன்சுரு 170
இருதலைக் கொள்ளி வாதம் 170
இருதுசம்காரம் 171
*இருதுணை மணச் சட்டங்கள்* 173
இருதுணை மணம் 172
இருந்த வளமுடையார் 173
இருந்தையூர்க் கருங்கோழி மோசியார் 174

இருந்தையூர்க் கொற்றன் புலவன் 174
இருநலக்கோடு 174
இருநாட்டுக் கொள்கை 175
இருநிற மயக்கம் 177
இருப்புக் காரணம் 178
இருப்புகளும் பங்குகளும் 179
இருப்பு நிலைக் குறிப்பு 497
இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கை 184
இருப்புப் பட்டியல் 185
இருப்புப் பாதைச் சொத்துச் சட்டம் 186
இருப்பு மாற்றகம் 187
இருப்பைக் குடிக் கிழவன் 191
இருபதாம் நூற்றாண்டு மொழியியல் 192
இருபா இருபஃது 195
இருபாலார் இணைக் கல்வி 196
இரும்பல் காஞ்சி 197
இரும்பிடர்த் தலையார் 198
இரும்புக்கனி ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு 198
இரும்புக் காலம் 199
இரும்புச் சட்டம் 200
இரும்புச் சட்டம்² 201
இரும்புத் திரை 203
இரும்புத் தூண் 204
இரும்பூளை 204
இரும்பை மாகாளம் 204
இருமுக வாணிக ஒப்பந்தம் 205
இருமைக் கொள்கை 207
இருமொழி அகராதி 209
இருமொழி இலக்கணம் 210
இருமொழியத்தின் நிலைகள் 212, 213
இருமொழியம் 211
இருமொழி வழிக்கல்வி 214
இருவர் போட்டி 216
இருளர் 218
இரெட்டியப்பட்டி சுவாமிகள் 220
இரெம்பிராண்டு 221
இரெய்பிசன் பிரடெரிக்கு வில்கெம் 222
இரேணார் 222
இரேணுகை 223
இரேவண சித்தர் 223
இரேனியசு ஐயர் 223
இரைதாசர் 224
இரையிசு சேக்கப்பு ஆககசுட்டு 225
இரைன் ஆறு 225
இரோசீமா 227
இல்துத் மிசு 228
இல்பர்ட்டு 231
இல்பரி துருக்கர் 232
இல்பொருளுணர்வு 232
இல்பொருளுணர்வு வகைகள் 233
இல்லம் 234
இல்லரி எட்மண்டு 238
இல்லீரிகம் 238
இல்லீரியா 238
இல்லுறை தெய்வம் 239
இலக்கணக் கூறுகள் 240
இலக்கணக் கொத்து 245
இலக்கண தீபம் 248
இலக்கண நூல்கள் 250
இலக்கணப் போலி 249
இலக்கணம் 249
இலக்கணம் சிதம்பரநாத முனிவர் 252
இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் 253
இலக்கண மாற்றம் 253
இலக்கண விளக்கச் சூறாவளி 253
இலக்கண விளக்கம் 254
இலக்கணை 255
இலக்கியக் கொள்கை 256, 257
இலக்கியத் திறனாய்வு 256
இலக்கியத்தின் கூறுகள் 264
இலக்கிய நடை 263
இலக்கியம் 263
இலக்கிய வகைகள் 266
இலக்கிய வடிவம் 265
இலக்கிய வரலாறு 266
இலக்கிய விளக்கம் 264
இலக்குமணப் பிள்ளை, தி. 266
இலக்குமண பாரதியார் 267
இலக்குமி 268
இலக்குமி தோத்திரம் 268
இலக்கு மொழி 268
இலக்குவன் 269
இலக்குவனார், சி. 273
இலக்சம்பர்க்கு 274
இலக்சம்பர்க்கு நாட்டில் கல்வி 275
இலங்கணி 277
இலங்காசுடர் 277
இலங்கை 278
இலங்கைத் தமிழர் 280, 287
இலங்கைப் பல்கலைக்கழகம் 287
இலங்கையில் கல்வி 288
இலங்கோ 289
இலஞ்ச ஊழல் 289
இலஞ்சி உலா 292
இலட்சத் தீவுகள் 293
இலட்சியம் 294
இலட்சுமணசாமி முதலியார் 295
இலட்சுமணபுரி 296

இலட்சுமிபாய், சான்சி இராணி 297
இலடாக்கியர் 298
இலண்டன் 299
*இலத்தீன் அமெரிக்க நாடுகள்* 305
இலத்தீன் அமெரிக்கா 305
இலத்தீன் இலக்கியம் 305
*இலத்தீன் தத்துவ நூல்கள்* 307
இலதா 312
இலபயத்து 312
இலபாயர் முறை 313
இலம்பாடிகள் 314
இலம்பையங் கோட்டூர் 317
இலயர் 317
*இலர்னர்* 688, 689
இலவ்சாய் ஓவன் 317
இலவங்கத் தீவுகள் 318
இலவசச் சட்ட உதவி 318
*இலவசச் சட்ட உதவிக் கழகம்* 319
*இலவசச் சட்ட உதவி முறைகள்* 321, 322, 323
இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் 324
இலவல் பியர் 324
இலாக்கு 325
இலாக்கு, அலைன் 325
இலாகி ஆண்டு 327
இலாகிசு 327
இலாகுல்-இசுபிட்டி 328
இலாகூர் 328
*இலாகூர் மாநாடு* 176
இலாகேசு 329
இலாங்டன், இசுடீபன் 329
இலாசரசு 330
இலாசா 330
இலாசால் 333
இலாசியம் 334
*இலாசுகர்* 821
இலாசுகி எரால்டு சோசபு 334
இலாசுகோ குகை 334
இலாட்டிமர் 335
இலாட்வியா 336
இலாடப் பேரரையன் 337
*இலாடிசுலாசு* 878
இலாடின் 337
இலாடு வில்லியம் 338
இலாத்ராபு சூலியா கிளிப்போர்டு 339
*இலாப்பியர்* 342, 343, 576
இலாப்ரெடார் 340
இலாப்லாந்து 341
இலாபிளாட்டா 343
இலாபூர் தோனே 344
இலா போர்ட்டே 344
இலாமா 345
இலாயிடு கார்சு, தாவீது 346
இலார்க்கானா 347
இலார்சு - தார்ண்டைக்குச் சோதனை 347
இலார்டி 348
இலார்டில் 348
இலாரன்சு, தாமசு எட்வர்டு 349
இலாரியே, சர்வில் பிரிடு 349
இலாரெலும் ஆர்டியும் 352
இலால் பகதூர் சாத்திரி 353
இலாலா இலசபதி ராய் 354
இலாலேசுவரி 355
இலாவோசு 355
இலாவோசு நாட்டில் கல்வி 358
*இலாவோசு மக்கள்* 796
இலான்சுடவுன் பிரபு 359
இலான்சுபரி சார்சு 359
இலான்பிராங்கு 359
இலிக்தன் இசுடைன் 360
இலிகர்டின் மேலாண்மை அமைப்புகள் 361
இலிங்க புராணக் குறுந்தொகை 365
இலிங்க புராணம் 365
*இலிங்கம்* 367
இலிங்கராசர் கோயில் 365
இலிங்க ரெட்டியார் 366
இலிங்க வழிபாடு 369
இலிங்கன் ஆச ரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை 368
இலிங்கன், ஆபிரகாம் 369
இலிங்காயத்துகள் 377
இலிங்கோற்பவர் 378
இலிசுட்டு 379
இலிடா 379
இலிண்டன், இரால்பு 379
இலிண்டுமன், எட்வர்டு 379
இலி, திரிக்வி ஆல்வ்தன் 380
இலிதுவேனியா 380
இலிப்மன், வால்டர் 383
இலிபான் கடாசுவு 384
இலிபியா 384
இலிபியா நாட்டில் கல்வி 387
இலி பிளே, பிரடெரிக்கு 388
இலிம் போபோ ஆறு 388
இலியனார்டோ டா வின்சி 389
இலியாது 391
இலியூ சாவ்-கி 393
இலியோ கரசு 393
இலியோனிதாசு 394

இலிவர்ப்பூல் 394
இலிவி 395
இலிவிங்சுடன், தாவீது 396
இலிவோவு, சார்சி யுவசினிவிச்சு 397
இலின்பியாவோ 397
இலினாய் 398
இலினாய் உள மொழியியல் திறன் சோதனை 399
இலீகாக்கு, இசுடீபன் பட்லர் 400
இலீகே, இலூயிசு சைமூர் பாசட்டு 401
இலீப்சிக்குப் போர் 402
இலீ. போர்ட்டர் இரேமாண்டு 402
இலீலாவதி 402
இலூசான் 402
இலூசியானா 403
இலூரி ஆரி இலாரன்சு 404
இலூவிசு, ஆசுகார் 405
இலெசப்சு, பெர்டினாண்டு டி 405
இலெசோத்தோ 406
இலெசோத்தோ நாட்டில் கல்வி 408
இலெட்சுவொர்த்து வில்லியம் பிரயோர் 409
இலெப்டிசு மக்னா 410
இலெபனான் 411
இலெபனான் நாட்டில் கல்வி 414
இலெபனானின் எதிர்மலலைத் தொடர் 412
இலெமார்க்கு 416
இலெய்பாக்கு மாநாடு 417
இலெயிட்டர் அனைத்துலகச் செயற் சோதனை 417
இலெவலாசியன் நுட்பம் 418
இலெவின் 418
இலென்பர்கு 418
இலெனின் 419
இலெனின் கிராடு 422
இலே 424
இலேபாக்சி 424
இலேலாந்து, சான் 424
இலேன்பூல், இசுடான்லி எட்வர்டு 425
இலைப்னிட்சு 784
இலைபீரியா 425
இலைபீரியாவில் கல்வி 428
இலோயிலோ 430
இவான்சு, சர் ஆர்தர் சான் 430
இவான்சு பிரிட்சர்டு, எட்வர்டு இவான் 430
இழப்பீட்டின் வகைகள் 431, 432, 433
இழப்பீடு 431
இழி பொருட்பேறு 434
இளங்கண்டீரக்கோ 435
இளங்கீரந்தையார் 435
இளங்கீரனார் 435
இளங்குமணன் 436
இளங்குழவி இறப்பு 436
இளங்குழவி இறப்பு வீதம் 436இ 437
இளங்குழவி உளவியற் சோதனைகள் 441
இளங்குழவிப் பருவத்தனிமை நோய் 443
இளங் குற்ற நடத்தை 446
இளங்குற்ற நடத்தைக்கான காரணங்கள் 447
இளங் குற்றவாளி 449
இளங்குற்றவாளி சீர்திருத்தப் பள்ளிகள் 451
இளங்கோ முத்தரையன் 451
இளங்கோவடிகள் 452
இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன் 454
இளங்கோவதியரையனான விக்கிரமபூதி 454
இளங்கோ வேண்மாள் 454
இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி 454
இளஞ்சேட்சென்னி 455
இளஞ்சேரல் இரும்பொறை 455
இளந்தத்தன் 456
இளந்திரையம் 456
இளந்திரையன் 456
இளந்தேவனார் 447
இளநாகனார் 457
இளம்பருவத்தினர் நலச் சட்டங்கள் 448
இளம்பல் கோசர் 458
இளம்புல்லூர்க் காவிதி 458
இளம்பூதனார் 458
இளம்பூரணர் 458
இளம்பூரணர் 862, 919
இளம்பெருஞ்சென்னி 460
இளம்பெருமானடிகள் 461
இளம்பெருமானார் 461
இளம்பெருவழுதி 461
இளம்பெருவழுதியார் 461
இளம்போதியார் 461
இளவயதினர் நீதிமன்றச் சட்டங்கள் 450
இளவிச்சிக்கோ 462
இளவெயினனார் 462
இளவெளிமான் 462
இளவேட்டனார் 462
இளைஞர் இயக்கம் 463
இளைஞர் கழகங்கள் 463
இளைஞர் சீர்திருத்தப் பள்ளிக் கல்வி 464
இளைஞர் வேலையின்மையும் கல்வியும் 466
இளைய இத்தாலியர் சங்கம் 467
இளையபெருமாள், மா. 471
இளையபெருமாள் பிள்ளை, சொ. 471
இளைய மக்கள் தொகை 471
இளையான்குடிச் செப்பேடு 471
இளையான்குடி மாற நாயனார் 472

இளையோர் உளவியல் 473
இறக்க விதி 476
இறக்கும் தறுவாய் நன்கொடை 477
இறக்குமதி 479
இறங்கு குடிக் குன்ற நாடன் 481
இறந்த மொழி 481
இறந்தவர் வரிச் சட்டம் 482
இறப்பின் போக்கு 484
இறப்பு நிலை 489
*இறப்பு வீதங்கள்* 950
*இறப்பு வீதத்தின் வகைகள்* 489
இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம் 490
இறுதி எச்சரிக்கை 491
இறுதித் தணிக்கை 492
இறுதிநிலை உற்பத்தித் திறன் 492
*இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு* 493
இறுதிநிலை உற்பத்திப் பொருள் 494
இறுதிநிலைக் கணக்குகள் 495
இறுதிநிலைச் செலவு 498
இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம் 499
இறுதிநிலை வருவாய் 500
இறை 501
இறைக் கொள்கை 502
இறைச்சி 502
இறைநிலைச் செயல் 503
*இறைப்பேறு* 897
இறைமை உறைவிடம் 505
*இறைமையின் வகைகள்* 505, 514
*இறைமையின் வரலாறு* 511
இறையனார் 507
இறையனார் அகப்பொருள் 508
இறையனாராற்றுப் படை 510
இறையாண்மைக் கோட்பாடு - பொருள் 511
*இறையாண்மையின் பண்புகள்* 513
இறையியல் 516
இறையிலி 516
இறையிலிக் கொள்கை 517
இறைவழி உரிமைக் கொள்கை 517
இறைவன் 519
இறைவாச நல்லூர்ப் புராணம் 520
இன ஆறு 521
இன்கா நாகரிகம் 522
இன்கார்டன், உரோமன் 527
இன்கிராம் சான் கெல்சு 527
இன்சினிரோசு, சோசு 527
இன்சுகேப்புப் பாறை 528
இன்சுபாக்கு 528
இன்சுலி மயக்க மருத்துவம் 528
இன்பகவிப் புலவர் 529
இன்ப துன்பச் சம நோக்காளர் 530
இன்ப நிலைக் கொள்கை 531
இன்பியல் இசை நாடகம் 531
இன்மை அறிவு 532
இன்லாந்துக் கடல் 532
இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 533
இன்னசெண்டு பதின்மூவர் 534
இன்னம்பர் 539
இன்னம்பூர் நாடு 539
இன்னா நாற்பது 539
இன்னிசை 540
இன்னிசை இருநூறு 540
இன்னிசை வெண்பா 540
இன்னிலை 541
இன அழிப்பு 542
இன ஒதுக்கல் 543
இனக் கலப்பு 547
இனக்குழு அறிவியல் 547
இனக்குழு இசையியல் 549
இனக்குழு உயிரியல் 549
இனக்குழு ஒப்பாய்வியல் 551
*இனக்குழு ஒப்பாய்வியல் கழகங்கள்* 552
இனக்குழுச் சொற்பொருளியல் 553
இனக்குழுப் புவியியல் 553
இனக்குழு மருத்துவம் 554
இனக்குழு மொழியியல் 556
இனக்குழு வரலாறு 560
இனக்குழுவியல் 561
*இனக்குழுவியல் கழகங்கள்* 562
இனக் கொள்கை 562
இனங்கள், மனிதர் 566
இனச்சிறு பான்மையினர் 578
இனச் சொற்கள் 579
இனத்தொடர்பு 581
இனப்பெருக்கத் தனிக்குழு 583
இனப்பெருக்க மக்கள் தொகை 583
இனமுறைச் சட்டம் 584
இனமேம்பாட்டியல் 584
*இனமேம்பாட்டியல் பிரிவுகள்* 585
இனமையக் கொள்கை 586
*இனவகைகள்* 569
இனவகைப்பாட்டின் அலகுகள் 589
இனவழி மொழிப் பாகுபாடு 597
இனவேறுபாட்டுணர்ச்சி 599
இனாம் 601
இனாம்கா 602
இனிசந்த நாகனார் 602
இனியவை நாற்பது 603
இனோறு, இசுமத்து 603

ஈ 605
ஈ எழுத்தின் படிமலர்ச்சி 605, 606
ஈக்குவடார் 607
ஈக்குவடார் அரசியலமைப்பு 609
ஈக்குவடார் நாட்டில் கல்வி 610
ஈக்குவடோரியா 611
ஈங்கோய் மலை 614
ஈசாக்கான் 612
ஈசாகு இசுடெல்லா 612
ஈசாப்புக் கதைகள் 613
ஈசான சிவ பண்டிதர் 615
ஈசான சிவாச்சாரியார் 616
ஈசான சுவாமிகள் 616
ஈசானதத்தர் 616
ஈசான தேசிகர் 616
ஈசான முனிவர் 616
ஈசான வர்மன் 617
ஈசிய நாகரிகம் 617
ஈசுடர் தீவு 621
ஈசுர கீதை 621
ஈசுர பாரதியார் 622
ஈசுர மூர்த்தியாப் பிள்ளை, மு.பொ. 622
ஈசுரா பவுண்டு 622
ஈசுவர்பாய் பட்டேல் ஆய்வுக்குழு 623
ஈசுவர ஆவிகாரவாத சைவம் 624
ஈசுவர குப்தா 624
ஈசுவர சந்திர வித்தியாசாகரர் 624
ஈசுவரதத்தர் 625
ஈசுவர முனிகள் 625
ஈசுவரன் 625
ஈட்டன் 625
ஈட்டியெழுபது 626
ஈட்டுறுதி ஒப்பந்தம் 626
ஈட்டுறுதி பெறுநரின் உரிமைகள் 627
ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும் 627
ஈடன் 629
ஈடன் அந்தோணி 629
ஈடித்து சிட்வெல் 631
ஈடிப்பசு 631
ஈடிப்பசு சிக்கல் 632
ஈடு 632
ஈடோ, ஈரோபூமி 633
ஈப்போ 633
ஈப்ரோ 634
ஈபல் கோபுரம் 634
ஈபுரு உளவியல் 634
ஈபோ 635
ஈபோயே 636
ஈமச்சடங்குகள் 636
ஈமப் பேழைகள் 636
ஈமன் டி வேலரா 637
ஈயுண்ணி மாதவப் பெருமாள் 639
ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் 639
ஈரவைச் சட்ட மன்ற நாடுகள் 640
ஈரவைச் சட்டமன்றம் 639
ஈராக்குடு அணை 647
ஈராக்கு நாட்டில் கல்வி 648
ஈராசு 649
ஈராசு பாதிரியார் 649
ஈரான் 650
ஈரான் நாட்டில் கல்வி 655
ஈரானிய அரசியல் 656
ஈரானியர்களின் ஆடைகள் 796
ஈரி ஏரி 657
ஈரோசுலர் அளவை 441
ஈரோடு மாவட்டம் 658
ஈலம் 658
ஈவாட்டு, எர்பர்ட்டு வீர் 659
ஈழக் காசு 659
ஈழத் தமிழ் இலக்கியம் 660
ஈழத்துப் பூதன் தேவனார் 664
ஈழப் போர் 31
ஈழம் 665
ஈழம் 26
ஈழமண்டல சதகம் 666
ஈழ வெற்றி 16
ஈற்று வரித்தொடர் 667
ஈனயானம் 669
ஈனியசு 670
ஈனியசு 671, 672
ஈனியடு 671
உ 673
உ எழுத்தின் படிமலர்ச்சி 673
உக்கிரகுமார பாண்டியன் 674
உக்கிரப் பெருவழுதி 675
உக்கிரன் கோட்டை 675
உக்சுமால் 676
உக்ரேனிய இலக்கிய வளர்ச்சி 678
உக்ரேனியன் மொழி 67[illegible]
உக்ரேனியா 679
உகந்த அளவடைதல் 682
உகந்த அளவு நிறுவனம் 683
உகந்த அளவு மக்கள் தொகை 685
உகந்த சமூக உற்பத்தி அளவு 688
உகந்தருளிய நிலங்கள் 690
உகர ஒலி 673
உகரித்து 691
உகாண்டா 692

உகாண்டா நாட்டில் கல்வி 696
உகாண்டாவின் மரபு மக்கள் 694
உகாய்க்குடி கிழார் 698
உகில் மேச்சு 698
உச்சச்சுமை விலை வரையறை 698
உச்ச நம்பக வெளியீட்டுக் கோட்பாடு 700
உச்ச நீதிமன்றம் 702
உச்சப் பணவீக்கம் 702
உச்சயினி 703
உச்சரிப்பு 703
உச்சரிப்பு முறை 705
உச்சவரம்பு 708
உச்சி படைப் போர் 713
உசசு 713
உசா 714
உசாசு 714
உசாத்தானம் 714
உசாந்துப் போர் 714
உசு டாசா 714
உசுத்திராவ், திமித்திரி பெமரோவிச்சு 715
உசுத்தாத் ஈசா 716
உசுதாத் மன்சூர் 716
உசுபெக்கு சோவியத்துக் குடியரசு 716
உசுமான் 877
உசுமான் சாகரம் 718
உசு மானாபாது 718
உசுமானி, முகமது அதவுல் கனி 718
உசுமானியப் பல்கலைக்கழகம் 719
உசேன் 720
உசேன் நிசாம்சா 720
உசை 720,721
உஞ்சை 721
உஞ்சை மாகாளம் 721
உட்கட்சிக் கருத்துரிமை 721
உட்கல் பல்கலைக்கழகம் 723
உட்கிடைக் குறைபாடு 724
உட்குழு 724
உட்குழு மணவுறவின் விளைவுகள் 726
உட்குழு மணவுறவு 725
உட்கூற்றுப் பகுப்பாய்வு 726
உட்சமுதாயம் 727
உட்சமூகம் 728
உட்சுடாக்கு ஆணை 728
உட்டாமரோ 729
உட்டு ஆவணப் பரிந்துரைகள் 730
உட்டுஆவணம் 729
உட்டு, சார்லசு 730
உட்டோப்பியா 730
உட்பண்பாடு 731
உட்பிணைப்பு மொழிகள் 732
உட்பிரிட்சு, பிரெடரிக் சேம்சு யூரேன் 732
உட்பிரிவும் நிலச் சிதறல்களும் 733
உட்புற நடைமுறைக் கோட்பாடு 737
உட்ரெக்ட்டு 740
உட்ரோ வில்சன் 740
உட்ரோவில்சனின் பதினான்குக் கோட்பாடுகள் 742
உடந்தை 744
உடம்படு புணர்தல் 745
உடம்படுமெய் 745
உடல் 746
உடல் ஊனமுற்றோர் நலம் 746
உடல்சார் மானிடவியல் 748
உடல்சார் மானிடவியலின் படைப்பிரிவு, பயன்கள் 756
உடல்சார் மானிடவியலும் பொதுநலப்பணியும் 755
உடல் நலக் கல்வி 756
உடலியங்கியல் 755
உடலியங்கியல்சார் மானிடவியல் 758
உடலியல் 754
உடலியல்சார் உளவியல் 761
உடலுயர்வளவு 593
உடலுழைப்பற்ற தொழிலாளர் 769
உடலொறுப்புத் தண்டனை முறைகள் 770
உடற்கல்வி 770
உடற்கல்விக் கல்லூரிகள் 773
உடற்கல்விக்கான நிறுவனங்கள் 773
உடற்கல்வி முறைகள் 770, 772
உடற்கல்வியின் பயன்கள் 774
உடற்கல்வியின் வளர்ச்சி 771
உடற்கல்வியும் வேலைவாய்ப்பும் 773
உடற்கூற்று வண்ணம் 774
உடற்பயிற்சிப் போட்டிகள் 771
உடற்பயிற்சி மருத்துவம் 771
உடற்பயிற்சி வகைகள் 771
உடற் பருமனும் உளவியற் கூறுகளும் 775
உடற்பருமனைக் குறைக்கும் மருத்துவ முறைகள் 776
உடன் குற்றவாளி 777
உடன் கூட்டம் 778
உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை 778
உடன் பங்காண்மை 779
உடன் பங்காண்மையின் குறைகள் 779
உடன்படிக்கை 780
உடன்படிக்கைத் துறைமுகங்கள் 782
உடன்படிக்கையின் வகைகள் 781
உடன்படிக்கையின் வடிவங்கள் 781
உடன்பாடு 782
உடன்பாடுகளின் தன்மைகள் 783
உடன்பிறந்த எண்ணங்கள் 783
உடன்போக்கு 784

உடனிகழ்ச்சிப்பொருள் வேற்றுமை 785
உடனிகழ்வு வகைகள் 786
உடனிலை 786
உடனுறை 786
உடிகா 786
உடிகி 787
உடுக்கை 788
உடுப்பி 788
உடுமலைப் பேட்டை 789
உடை 789
உடைமை மீட்பு உரிமை 797
உடைமையும் அரசிலமைப்பும் 797
உடைய நங்கை 799
உடையவர் 799
உடோப்பிய சமநிலைக் கோட்பாடு 799
உண்டவல்லி 803
உண்டாட்டு 804
உண்டியல்கள் 805
உண்டியல்களின் பயன்கள் 807
உண்டியல் சிறப்பியல்புகள் 805
உண்டியல் வகைகள் 805,807
உண்டு செட்டு சிக்ரிடு 808
உண்டு வில்கெல்ம் 808
உண்டு வில்கெல்ம் சோதனைகள் 809
உண்ணாமுலை எல்லப்ப நயினார் 809
உண்ணாயி வாரியார் 810
உண்ணாவிரதம் 810
உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு 812
உண்மைக் கூலி 813
உண்மைச் செலவு 813
உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் 814
உண்மைநெறி விளக்கம் 815
உண்மை வருமானம் 815
உண்மை விளக்கம் 816
உணர்ச்சி 817
உணர்ச்சிகளின் வகைகள் 817
உணர்வறி திறப் பயிற்சி 819
உணர்வுசார் ஆசிரியர் 819
உணர்வசார் கற்றல் 820
உணர்வூட்டல் 821
உணவிலுள்ள சத்துகள் 824
உணவு 822
உணவுக் கட்டுப்பாடு 828
உணவுக் கலப்புத் தடுப்புச் சட்டம் 828
உணவுக் கொள்கை 830
உணவுசேகரிக்கும் பழங்குடிகள் 833
உணவுத் தேட்டத்தின் வரலாறு 822
உணவு பரிமாறுதல் 837
உணவு பரிமாறும் முறைகள் 837
உணவு மூலாதாரங்கள் 823
உணவு வேளாண்மைக் கழகம் 838
உணவு வேறுபாட்டிற்கான காரணங்கள் 826, 827
உத்தண்டராம பிள்ளை, அ. 840
உத்தண்ட வேலாயுதபாரதி 841
உத்தண்டன் கோவை 841
உத்தமசோழப் பல்லவர் 842
உத்தம சோழன் 842
உத்தம சோழன் காசுகள் 843
உத்தம நம்பி 843
உத்தர காண்டம் 844
உத்தர குரு 846
உத்தரகோச மங்கை 847
உத்தர நல்லூர் நங்கை 816
உத்தரப்பிரதேசத்தின் இயற்கை அமைப்பு 848
உத்தரப்பிரதேசத்தின் வரலாறு 848
உத்தரப் பிரதேசம் 848
உத்தர புராணம் 118
உத்தர-மீமாம்சை 851
உத்தரமேரூர் 852
உத்தரராகவ சகலியமாலா 116
உத்தரராம சரிதம் 857
உத்தரராமாயண நாடகம் 857
உத்தரன் 858,859
உத்தரராமாயணம் 859
உத்தரை 859
உத்தவகீதை 860
உத்தாலகர் 860
உத்தான துவாதசி 861
உத்தானபாதன் 861
உத்திகள் 862
உத்தியுத்தர் 863
உத்திரட்டாதி 864
உத்திரம் 864
உத்திராடம் 864
உத்துனூர் 864
உத்தேசங்கூறல் 866
உத்பல மரபினர் 867
உத்பலாச்சாரியார் 867
உதகமண்டலம் 868
உதய்பூர் 869
உதயகிரி 871
உதயகுமாரன் 872
உதயசங்கர் பட்டு 872
உதய சிங்கு 872
உதயணகுமார காவியம் 873
உதயணன் 873
உதயப்பூர் 874
உதயேந்திரம் செப்பேடுகள் 874

உதாத்த அணி 875
உதிட்டிரன் 875
உதியஞ்சேரல் 875
உதியன் 876
உதீசித்தேவர் 876
உதுமான் நயினார்ப்புலவர் 876
உதுமானியப் பேரரசு 877
உதே இந்தியர்கள் 880
உதை சுவர் 881
உப்டன் கர்னல் 881
உப்பர்ட்டால் 882
உப்பிளியர் 882
உப்புச் சத்தியாக்கிரகம் 883
உப்பூரி குடி கிழார்மகனார் உருத்திரசன்மனார் 885
உப்பை 885
உபகார சஞ்சீவி 885
உபகேசி 885
உபசாந்த பிரகரணம் 886
உபசார வழக்கு 886
உபதேசகலை 886
உபதேச காண்டம் 886
உபதேச சங்கிரகம் 886
உபதேச ரத்ன மாலை 886
உபதேச வெண்பா 887
உபநயனம் 887
உபநிடதங்கள் 888
உபபுராணம் 890
உபமன்யு 891
உபமன்யு பக்தவிலாசம் 891
உபமானம் 892
உபமிதி 892
உபயது. தால் அல் 892
உபய விபூதி 893
உபர்கோட்டு 893
உபர்கோட்டுக் குடைவரைகள் 893
உபலக்கணம் 894
உபவேதம் 894
உபாகமம் 894
உபாங்கங்கள் 895
உபாத்திமைத் தொழில் 895
உபாயச் சிவ புண்ணியம் 895
உபாயநிட்டை 895
உபாய நிட்டை வெண்பா 895
உபாயம் 896
உபேந்திரர் 897
உபேந்திராசாரியார் 89
உபேயம் 897
உம்பற்காட்டு இளங்கண்ணனார் 898
உம்மத்தூர்க் குறுநில மன்னர்கள் 898
உம்மா கட்சி 899
உம்மை 902
உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் 904
உமண் சாத்து 904
உமர் 905
உமர் இரண்டாம் 914
உமர் கையாம் 906
உமர் வலியுல்லாகு 906
உமறுப்புலவர் 907
உமாபதி சிவாச்சாரியார் 908
உமாமகேசுவரம் பிள்ளை. த.வே. 939
உமாமகேசுவரர் 910
உமாமகேசுவரர் உயர்நிலைப் பள்ளி 910
உமாயூன் 910
உமாயூன் (பாமினி அரசர்) 912
உமாயூன் கபூர் 913
உமையது கலிபாக்கள் 913
உய்த்துணரவைப்பு 919
உய்ந்த பிள்ளை 919
உய்யக்கொண்டார் 920
உய்யக்கொண்டான் திருமலை 920
உய்யவந்த தேவ நாயனார் 921
உய்யவந்தார் 922
உயர் அளவுச் சோதனை 922
உயர் ஆய்தம் 923
உயர்கல்வி ஆளுகை 923
உயர்கல்வி நுழைவு 924
உயர்குடி மணம் 925
உயர்குடியாக்கம் 927
உயர் குடியாக்க வகைகள் 927
உயர்குடியாட்சி 928
உயர்தர அதிகாரம் 930
உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குழு 932
உயர்நிலைப் பெருக்கி 932
உயர்நீதிமன்ற அதிகாரங்கள் 935, 936
உயர்நீதிமன்ற ஆள்வரை 935
உயர்நீதிமன்ற நீதிபதி நியமன முறை 934
உயர்நீதிமன்றம் 934
உயர்பாலூட்டிகள் 936
உயர்பாலூட்டிகளியல் 751
உயர்பாலூட்டிகளின் பண்புகள் 936
உயர்பொருட்பேறு 938
உயர்வு நவிற்சியணி 938
உயர்வு நோக்கம் 939
உயர்வுப் பன்மை 939
உயராய்வுக் கல்வி மையங்கள் 940
உயிர் 941
உயிர் ஒலிகள் 943
உயிர் தோன்றல் 944

உயிர்ப்பட்டி 944
உயிர்ப்பலி 944
உயிர்ப்பலிக்குக் காரணங்கள் 949
உயிர்ப்பு 949
உயிர்ப்புள்ளியியல் 950
உயிர்ப்பேறு 897
உயிர் முக்கோணம் 950
உயிர் வகைப்பாட்டியல் 755
உயிர்வாழ் வீதம் 950
உயிரட்டவணை 952
உயிராற்றல் 952
உயிரியம் 953
உயிரியல் கல்வி மையம் 954
உயிரியல்சார் படிமலர்ச்சி 654
உயிரியல்சார் மானிடவியல் 957
உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாடு 957
உயிரின் இயல்புகள் 942
உயிரினக் கோள மண்டலங்கள் 759
உயிரினங்களின் தோற்றம் 958
உயிரெழுத்து 960
உயிரொலி இயைபு 962
உயிரொலிகள் 962, 961
உயில் 962
உயில் எழுதத் தகுதி 965
உயில்வழிக் கொடை 968
உயிலிணைப்பு 969
உயிலின் பொருள் விளக்கம் 965, 966
உயிலை மாற்றும் வகைகள் 967
உரசொலிகள் 969
உரசொலிகள் 707
உரார்த்து 970
உரிச்சீர் 972
உரிச்சொல் 972
உரிச்சொல் நிகண்டு 975
உரிச்சொற் கொள்கைகள் 974
உருசோ 514
உரோமானிய உடைமை உரிமை வகைகள் 713
உரோமானியரின் ஆடைகள் 791, 794
உலக இளைஞர் சுற்றுலாக் கழகம் 464
உலக உணவு உற்பத்தி 831
உலக உணவுத் திட்டம் 839
உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் 923
உலக நாடுகளில் உயர் கல்வி நுழைவு 924
உலக நாடுகளின் இறப்பு வீதம் 485
உலக மக்கள் தொகை 831
உலூகான் 310
உலூசியசு இல்லியசு ஆண்ட்ரோனிக்கசு 306
உள்நாட்டு உண்டியல்கள் 805
உள்மன மாற்று மருத்துவம் 805
உள்ளங்கை வரியமைப்புகள் 595
உள மருத்துவமுறைகள் 1,2
உளமுதிர்ச்சியின் அளவை வரிசைச் சோதனை 443
உளவியல் அணுகுமுறை 259
உளவியல் மருத்துவ நிலையம் 747
உற்பத்திக் கணக்கு 496
உறக்கம் 767
ஊட்டச் சத்துகள் 825
ஊட்டன் 563
ஊர் 644
ஊனமுற்றோரின் பத்தாண்டுகள் 747
எகிப்தியரின் ஆடைகள் 794
எசுகிமோக்கள் 236,574
எசுகிமோக்களின் தகவமைப்பு 761
எட்வின் கானன் 686
எல்பர்சு மலை 651
எலிசபெத்து இராசு 55
எலிசபெத்துக் காலம் 301
ஏனாதி 836
ஐந்தாண்டுத் திட்டங்களும் உணவு உற்பத்தியும் 833
ஐந்திலக்கணம் 250,255
ஐரோப்பியர் 568
ஒட்டக்கூத்தர் 10,844
ஒப்பியல் மொழிக்கலை 582
ஒப்பீட்டு முறைத் திறனாய்வு 259
ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை 701
ஒரியமொழி இராமாயணம் 123
ஒளியின் பாதிப்பு 762
ஒரவைச் சட்டமன்றம் 640
ஓவிடு 309
கங்காருச் சடங்கு 946
கங்கை கொண்ட சோழன் 26
கங்கைப் படையெழுச்சி 26
கட்டுப்பாட்டுடன் அமைந்த உயில் 964
கடாரப் படையெழுச்சி 27
கண்ணகி 452
கண்ணின் வகைகள் 592
கணேச கும்பா 871
கபிரியேல் மார்சல் 163
கம்பராமாயணம் 120,121
கம்பன் 121,124
கம்பாலா 693
கர்க்குப் 819
கர்மகாண்டம் 851
கருவியல் 754
கலப்பற்ற நீக்கிரோ 571
கலப்படஞ் செய்பொருள் 828

கன்னட இராமாயணம் 122
கனானைட் நாகரிகம் 691
காக்கேசியர் 575
காக்கை பாடினியம் 251
காக்கை பாடினியார் 251
காசில்லா நுழைவுச் சீட்டுக் கொள்கை 782
காசுபியன் கடற்கரை 651
காசுமீர இராமாயணம் 124
காஞ்சனன் 872
காட்சுகி, காரல் 801
காட்டுலகு 307
காண்ட்டு, இம்மானுவல் 178,179
காந்தர்வ வேதம் 894
காந்தியடிகள் 883,884
காயசண்டிகை 872
காயத்திரி மந்திரம் 888
கார்வோடா நகர் 918
காரகம் 247
காரல் காசுபர்சு 162
கால்கன் 514
காவிய இராமாயணங்கள் 119
கிப்பன் 403
கிரத்வால் 820
கிரீட்டித் தீவு 619
கிரேக்கர்களின் ஆடைகள் 791
கிழக்கிந்திய வாணிகக் குழு 284
கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் 576
கிறித்தவ இளைஞர்கழகம் 463
கிறித்தவரின் இறக்கும் தறுவாய் நன்கொடை 479
கிர்க்கி கார்டு 161
கீழின உயர்பாலூட்டிகள் 937
கீன்சு, சே.எம். 813
குக்கிப் பழங்குடி 835
குகைக் கோயில்கள் 869,870
குசராத்தி இராமாயணம் 123
குசித்தான் சமவெளி 651
குடவோலை முறை 856
குடியிருப்பு அமைப்புகள் 234,235
கும்பகருணன் 142
குயிட்டோப் பகுதி 609
குலக்குறி உணவு 946
குவிண்டசு என்னியசு 306
குவிண்டிலியன் 311
குற்றவியல் 755
குறைந்த காப்பு இருப்பு முறை 702
கூச்சு, சி.பி. 519
கூட்டு உயில் 964
கூட்டுறவுப் பண்ணை 376
கூடுதல் நீதிபதி 935
கூலி முறைகள் 813
கூன், சி.எசு. 750
கெசெல் பட்டியல் 442
கெட்டிசுபர்க்குப் பேருரை 376
கெல்டிக்கு இனத்தவர் 576
கேட்பு உண்டியல் 806
கேவலாத்துவிதம் 942
கைம்பெண்களின் உடை வகைகள் 796
கையறுநிலைப் பாடல்கள் 309
கைலாச நாதர் கோயில் 854
கைவிரல் வரியமைப்புகள் 595
கொட்டிகன் 39
கொப்பத்துப் போர் 31
கொழும்பு 279,288
கொள்ளை நோய்கள் 486
கோயர்கள் 834
கோர்னே கோட்பாடு 216
கோல்புரூக்குக் குழு 286
கோவை கிழார் 74
சங்கரவர்மன் 867
சட்டமன்றப் பணிகள் 641
சந்தானம் குழு 291
சப்பானியரின் ஆடைகள் 794
சப்பீர் ஓர்பு 557
சப்பீர் ஓர்பு எடுகோள் 557
சப்பீர் ஓர்புக் கோட்பாடு 547
சபர்மதி ஆசிரமம் 884
சபைன், சி.எச். 801
சமண இராமாயணம் 118
சமராபிராமன் 150
சமூகவியல் அணுகு முறை 260
சர்கேடியன் ஒருங்கியல்பு 760
சல்லசுடு 308
சலிவன், சான் 868
சாக்ரோசு மலை 651
சாங்கியர் 517
சாசோக்கு உண்டியல் 807
சாத்தர் 165
சாதகக் கதைகள் 117
சாமுவேல்சன் 682
சார்லட்டு பூலர் 441
சாரணர் இயக்கம் 464
சாளுக்கியப் போர் 16
சாளுக்கியர் 26
சான்லாக்கு 512
சானகி அரனா 119
சிங்களவர் 280
சிசரோ 308

சித்தாந்த அட்டகம் 909
சிம்ப்சன், சி.சி. 751
சிரீலங்கா சுதந்திரக் கட்சி 287
சிலுவைப் போர் 413
சிவதருமம் 895
சிவரகசியம் 892
சிவலிங்கம் 367, 368
சிவலிங்க வழிபாடு 366, 368
சிறப்புரிமை உயில் 963
சிறப்புரிமையற்ற உயில் 963
சிறிய உருசிய மொழி 678
சிறுகாக்கை பாடினியார் 251
சீதை 142, 143
சீமரங்கு இனத்தவர் 573
சீர்திருத்தப் பள்ளிகள் 465
சீறாப்புராணம் 907
சீன்பால் சார்த்துரே 164
சீனர்களின் ஆடைகள் 194
சீனிவாசு, எம்.என். 927
சுத்த சன்மார்க்க சங்கம் 102, 103
சுத்த சன்மார்க்கம் 103
சுதந்திர ஈழத்தில் ஈழ இலக்கியம் 664
சுந்தரவரதப் பெருமாள் கோயில் 854
சுயமரியாதை இயக்கம் 77
சுவை உணர்வோர் வகை 596
சூடான் வரலாறு 899
சூடோனியசு 311
சூலியசு சீசர் 308
சூவனெல் 310
செஞ்சுக்கள் 834
செம்பியன் இருக்கு வேளான பூதி பராந்தகன் 150
செம்பியன் இளங்கோ வேளான பூதி ஆதித்திய பிடாரன் 150
செயலற்ற உயில் 964
சொத்துரிமை மாற்றச் சட்டம் 477
சொத்து விளைவு 812
சொத்து விளைவுக் கோட்பாடு 812
சொற்களஞ்சியச் சார்புக் கொள்கை 974
சொற்பொழிவுக் கலை 307
சோக்மி உண்டியல் 807
சோமராயன் 898
சோவாபி உண்டியல் 807
சோழ நாட்டுத் திருப்பதிகள் 690
சோன்சு, தானியேல் 961
ஞாகசு நீவியசு 306
தக்கோலப் போர் 15
தச்சுக்காரர் காலத்தில் ஈழ இலக்கியம் 662
தச்சு நாட்டவர் 285
தசரத சாதகம் 117

தசரதா சதனம் 119
தசாவதார சரிதம் 311
தசிட்டசு 366
தசுயூக்கள் 7
தஞ்சைப் பெரிய கோயில் 782
தடையிலா நுழைவுக் கொள்கை 755
தண்டனையியல் 120
தத்துவ சங்கிரகராமாயணம் 35
தந்திதுர்க்கன் 450
தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 211
தமிழ் மெய்யொலியன்கள் 794
தமிழரின் ஆடைகள் 591
தலை அமைப்பின் வகைகள் 947
தலைவேட்டை 948
தன்னின உண்ணல் 307, 309
தன்னுணர்ச்சிப் பாடல்கள் 948
தன்னுயிர் மாய்த்தல் 974
தனிச்சொல்வகைக் கொள்கை 974
தனிச்சொல்வகையன்மைக் கொள்கை 894
தனுர்வேதம் 974
தாதுக் கொள்கை 799, 800
தாமசு மூர் 749, 959
தார்வின், சார்லசு 823
தாவர உணவுகள் 944
தாவரப் படையல் 870
தாவா குகை 807
தானிசோகு உண்டியல் 766
தானியங்கு மண்டலம் 309
திபுல்லசு 303
திரபால்கர் சதுக்கம் 579
திராவிட மொழிக் குடும்பம் 579. 581
திராவிட மொழிகள் 78
திராவிடர் கழகம் 577
திராவிடர்களுக்கு முந்தையோர் 789
திருமூர்த்தித் தேக்கம் 262
திறனாய்வின் இன்றைய நிலை 256
திறனாய்வின் பணிகள் 260
திறனாய்வின் பயன்கள் 261
திறனாய்வின் வளர்ச்சி 259
திறனாய்வு அணுகுமுறைகள் 258
திறனாய்வு வகைகள் 776
துர்வாடை மருத்துவம் 35, 36
துருவன் 310
துன்பியல் நாடகங்கள் 575
தெகுவல்சீ மக்கள் 512
தெய்விக அரசுரிமைக் கொள்கை 122
தெலுங்கு இராமாயணம் 49
தென்கிழக்காசிய ஒப்பந்தம் 783
தேக்கார்ட்டு

தைத்திரிய உபநிடதம் 889
தையல் பொறி 795
தைனாரிக்கு இனத்தவர் 576
தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 690
தொல் அமெரிக்க இந்தியர் 574
தொல்காப்பிய உரையாசிரியர்கள் 458, 459
தொல்காப்பியம் 862
தொல்காப்பியர் 961, 973
தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டம் 840
தொன்மவியல் அணுகுமுறை 260
தொன்மை காக்கேசியர் 577
தொன்மை மங்கோலியர் 573
தோப்சான்சுகி, தியோடோசியசு 751
தோப்பினார்டு உடலுயர்வளவு அளவை 593
தோலின் வகைகள் 590
தோற்கூற்றியல் 594
நகரிய நில உச்சவரம்பு 708
நகரிய நில உச்சவரம்புத் திட்டம் 709, 710
நஞ்சராயன், முதலாம் 899
நஞ்சன்னா 899
நடுநாட்டுத் திருப்பதிகள் 690
நடுநிலக் கடல் இனத்தவர் 575
நம்பூதிரிகள் 926
நரம்பு மண்டலம் 764
நளசரிதம் 810
நாகூரான் 771
நாடக இராமாயணங்கள் 120
நாம்சோகு உண்டியல் 807
நாயர் 926
நார்டிக்குகள் 575
நாளமில்லாச் சுரப்பிகள் 768
நாற்கூட்டு ஒப்பந்தம் 48
நில உச்சவரம்புச் சட்டங்கள் 711
நில ஒருங்கிணைப்புத் திட்டம் 735
நிலைப்படுத்தும் தகவமைப்பு 759
நிலையான நம்பக வெளியீட்டு முறை 701
நிறைவுப் போட்டி நிறுவனங்கள் 684
நீக்கிரிட்டோ 572
நீக்கிரில்லோ 572
நீக்கிரோக்கள் 571, 600
நீச்சே கொள்கை 161, 165
நீதிக்கட்சி 78
நீதிபதிகளின் மாற்ற முறை 935
நீலகண்டன் 857
நீலகிரி மாவட்டம் 868
நுண்ணினங்கள் 569
நெல்லர் 166
நோயற்று வாழும் வழிமுறைகள் 757
நோன்பு நோற்கும் காலங்கள் 811
பக்கிங்காம் அரண்மனை 304
பகுப்பு முறைத் திறனாய்வு 258
பங்கு உரிமைச் சீட்டு 182
பங்குகள் வெளியிடும் முறை 181
பங்குச் சரணடைவு 182
பங்குச் சான்றிதழ் 181
பங்குப் பறிமுதல் 182
பஞ்சாபி இராமாயணம் 123
பட்டி காவியம் 119
படிமலர்ச்சிக் கொள்கைகள் 416
படிமலர்ச்சியியல் 750
படிமலர்ச்சி வகைகள் 955
படைப்புவழித் திறனாய்வு 258
பணத்தாள் வெளியீடு 700
பணவீக்க வகைகள் 702, 703
பத்ம சம்பவர் 345
பதிபுண்ணியம் 895
பயன்முறை உடல்சார் மானிடவியல் 755
பயனுண்மை – பயனின்மை விதி 416
பரசுபர உயில் 964
பரதுர்க்க மர்த்தனன் 150
பராந்தகன் இருங்கோளான் ஆன சிறிய வேளான் 151
பராந்தகன் குஞ்சரமல்லனான வீரசோழ இளங்கோவேள் 150
பருவத்தனிமை நோயின் முறைகள் 444, 445
பல்லமைப்பியல் 753
பன்முக உடன்படிக்கைகள் 780
பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 690
பாண்டுரங்க மகாத்மியம் 67
பாப்புவர் 573
பாபர் 911
பாயிடு, வில்லியம் 750
பாரசீக வளைகுடா 651
பாராட்டுமுறைத் திறனாய்வு 259
பால்உந்து 768
பாலசுத்தீன விடுதலை இயக்கம் 413
பாலணுச் சுரப்பி 769
பாலியல் கல்வி 757
பாலினீசியர் 568
பாலைநில மக்களின் உடலமைப்பு 762
பாலைவனத் தகவமைப்பு 761
பாவை நோன்பு 811
பிக்காடிலி வளாகம் 304
பிகு விளைவு 812
பிண்டாரிகள் 147
பிந்திய மினோவ காலம் 619
பிர்கார் பழங்குடி 835
பிரம சமாசம் 66

பிராய்டு, சிக்மண்டு 775
பிருகதாரணியக உபநிடதம் 889
பிளாக்கர் 687
பிளினி 311
பிளேட்டோ 797, 798
பீகார் மாணவர் சங்கம் 23
புசுமன்-ஆட்டண்டாட்டு 572
புதிய உடல்சார் மானிடவியல் 749
புதிய கற்கால மனிதனின் ஆடைகள் 790
புது அமெரிக்க இந்தியர் 575
புராண இராமாயணங்கள் 120
புரோபெர்டியசு 309
புலவர் குழந்தை 139, 140
புலனுணர்வு 817
புவியமைப்புசார் இனங்கள் 567
புளூமன்பேக்கு, சே.எப். 749
புறப்பொருள் இலக்கண நூல்கள் 251
பூதிவிக்கிரம கேசரி 150
பெட்ரோனியசு 310
பெயரடை வினையடைக் கொள்கை 974
பேச்சு மண்டலம் 766
பேசாவர் மடம் 788
போங்கா கோட்பாடு 954
போட்டாலா மாளிகை 331
போர்ச்சுகீசியர் 284
போர்ச்சுகீசியர் காலத்தில் ஈழ இலக்கியம் 662
பௌத்த சமய நெறிகள் 669, 670
மக்கள்தொகைக் கல்வி 757
மக்கள் தொகையியல் 754
மசும்தார், டி.என். 953, 954
மங்கோலியர் 573
மங்கோலியர்களின் தகவமைப்பு 762
மண்ணுலகம் 893
மண்ரோவியா 427
மணிக்கொடி 80
மணிமேகலை 872
மத்துவர் 208
மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு 259
மயிரின் வகைகள் 590
மயோரிகள் 237
மர்வான், இரண்டாம் 915
மரபுவழித் திறனாய்வு 258
மராத்தி இராமாயணம் 123
மருங்கொலிகள் 706
மலாய் மக்கள் 574
மலைநாட்டுத் திருப்பதிகள் 690
மலையாள இராமாயணம் 123
மறிவினை 764
மனவெழுச்சி 766, 818
மனித இனங்கள் 257
மனித உடல்வெப்பச் சீரமைப்பு முறை 759
மனித உடலியங்கியல் துலங்கல்கள் 759
மனிதச் சூழலியல் 753
மனிதப்பலி 947
மனிதனின் உடலமைப்பு 764
மாட்சீன் 468, 469
மாண்டூக்கிய உபநிடதம் 889
மார்ட்டின் உடலுயர்வளவு அளவை 594
மார்ட்டின் எய்டெக்கர் 163
மாரட்டு, ஆர். ஆர். 953
மால்தசு, தாமசு 830
மாலத் தீவுகள் 5
மாற்றிலக்கணக் கோட்பாடு 194, 195
மானா கோட்பாடு 953
மானிட உடலளவையியல் 753
மிகை ஊதியப் பங்கு 183
மின் அதிர்ச்சி மருத்துவம் 776
மினிகாய்த்தீவு 293
மீர் உசுமான் அலிகான் 719
முக்கூட்டு ஒப்பந்தம் 47, 48
முகம்மது கோரி 849
முகமது அலி சின்னா 176, 177
முக வகைகள் 592
முஞ்சாப்புல் 888
முடக்காற்றுப் போர் 32
முடியரசில் உயர்தர அதிகாரம் 930
முடியாட்சியில் உயர்தர அதிகாரம் 930
முதலாம் அமோகவர்சன் 37
முதலாம் இராசராச சோழனின் வெற்றிகள் 5
முதலாம் இராசேந்திரனின் வெற்றிகள் 15, 25, 27
முதலாம் கிருட்டிணன் 35
முப்புரிநூல் 888
முருகியல்முறைத் திறனாய்வு 258
முல்லைப் பாடல்கள் 311
முற்காலக் குரங்கினம் 937
முன்னாள் இராணுவத்தினர் சங்கம் 55
முன்னுரிமைப் பங்குகள் 179
முன்னுரிமைப் பங்கு முறைகள் 180
மூக்கு வகைகள் 592
மூக்கொலிகள் 706
மூலக்கூறு உயிரியல் 754
மூலப்பாடத் திறனாய்வு 259
மூளையின் பிரிவுகள் 765
மூன்றாம் இந்திரன் 38
மூன்றாம் கிருட்டிணன் 39
மூன்றாம் கோவிந்தன் 36
மெசுடிகோ இனத்தவர் 607
மெண்டலின் மக்கள் தொகை 583

மெய்ப்பொருள் களிப்புப் பாடல்கள் 851
மெலனீசியர் 568, 573
மெனர்ட்டு 820
மேடா மரபினர் 64
மேலின உயர்பாலூட்டிகள் 937
மைக்ரோனீசியர் 568
மைசீனிய நகரம் 620
மைசீனிய நாகரிகம் 619
மைசீனியர் 620
யாப்பருங்கலக் காரிகை 251
யாப்பருங்கலம் 251
யாப்பிலக்கண நூல்கள் 251
வங்கமொழி இராமாயணம் 124
வட்டார இனங்கள் 569
வட அட்லாண்டிக்கு ஒப்பந்தம் 48
வட அமெரிக்க இந்தியர் 575
வடதுருவ மக்களின் நோய்கள் 761
வடதுருவ மங்கோலியர் 574
வடநாட்டுத் திருப்பதிகள் 690
வடமொழியில் இலக்கணம் 250
வடிவவியல் அணுகுமுறை 260
வரலாற்றுக்கு முந்திய கால ஆடைகள் 790
வரலாற்றுமுறைத் திறனாய்வு 258
வருடொலி 707
வளர்நிலைத் தகவமைப்பு 759
வாங்கியா உடன்படிக்கை 782
வாசுகோட காமா 294
வாசுபர்ன், செர்வுட்டு 750
வாணிகக் கணக்கு 496
வாம்போவா உடன்படிக்கை 782
வாய்மொழி உயில் 964
வார்சா ஒப்பந்தம் 48, 49
வால்மீகி இராமாயணம் 118, 119
விசிட்டாத்துவிதம் 942
விண்ணுலகம் 893
விதி முறைத் திறனாய்வு 258
விபோடோ இந்தியர்கள் 789
விலங்கு உணவுகள் 824
விலைக் கொள்கை 698
விளக்கமுறைத் திறனாய்வு 259
வினையியல் 247
வீரசைவர்கள் 377, 378
வெசுட்டு மினிசுடர் நகரம் 300
வெத்தர் 280, 577
வெர்சில் 309
வெளித்தூண்டுதலைக் கட்டுப்படுத்தும் மருத்துவம் 776
வெளிநாட்டு உண்டியல்கள் 805
வேதகால இராமாயணம் 117
வேதங்கள் 851
வேர்ச்சொற் கொள்கை 974
வேலைத்திறனும் உணவமைப்பும் 751
வேளாண்மை விலை ஆணையம் 832
வைகுந்தப்பெருமாள் கோயில் 853

# கலைச்சொற் பட்டியல்

## தமிழ் — ஆங்கிலம்

அமைப்பியற் கோட்பாடு — Structuralism
அறவியல் — Ethics
அறிதல் திறன் — Cognitive Ability
ஆவியுலகக் கோட்பாடு — Animism
ஆளுமை — Personality
இடவியல் — Topology
இணைப்படிமலர்ச்சி — Parallel Evolution
இதழியல் — Journalism
இயக்கக் கோட்பாடு — Dynamic Theory
இயற்கைக் கொள்கை — Naturalism
இரத்தவியல் — Serology
இருகால் நடைப்பழக்கம் — Bipedalism
இருத்தல் கொள்கை — Existentialism
இருதுணை மணம் — Bigamy
இருநிற மயக்கம் — Dichromatism
இருப்பு மாற்றகம் — Stock Exchange
இருமொழியம் — Bilingualism
இருவர் போட்டி — Duopoly
இருவழக்கு நிலை — Diglossia
இல்பொருளுணர்வு — Hallucination
இறைக் கொள்கை — Theism
இறைமை — Sovereignty
இறையியல் — Theology
இன்பநிலைக் கொள்கை — Hedonism
இன அழிப்பு — Genocide
இன ஒதுக்கல் — Racial Segregation
இனஒதுக்கீட்டுக் கொள்கை — Apartheid Policy
இனக்கலப்பு — Misscegenation
இனக்குழு — Ethnic Group
இனக்குழு அறிவியல் — Ethnoscience
இனக்குழு இசையியல் — Ethnomusicology
இனக்குழு உயிரியல் — Ethnobiology
இனக்குழு ஒப்பாய்வியல் — Ethnology

| | | |
|---|---|---|
| இனக்குழுச் சொற்பொருளியல் | — | Ethnosemantics |
| இனக்குழுத் தாவரவியல் | — | Ethnobotony |
| இனக்குழுப் புவியியல் | — | Ethnogeography |
| இனக்குழு மருத்துவம் | — | Ethnomedicine |
| இனக்குழு மொழியியல் | | Ethnolinguistics |
| இனக்குழு வரலாறு | — | Ethnohistory |
| இனக்குழுவியல் | — | Ethnography |
| இனக்குழு விலங்கியல் | — | Ethnozoology |
| இனக்கொள்கை | — | Racism |
| இனப்பெருக்க மக்கள் தொகை | — | Breeding Population |
| இனமேம்பாட்டியல் | — | Eugenics |
| இனமையக் கொள்கை | — | Ethnocentrism |
| உட்குழு | — | Sub-Group |
| உட்குழு மணவுறவு | — | Inbreeding |
| உட்பண்பாடு | — | Sub-Culture |
| உடலியல் | — | Physiology |
| உடற்கூற்றியல் | — | Anatomy |
| உண்டியல் | — | Bill |
| உயர்குடி மணம் | — | Hypergamy |
| உயர்குடியாக்கம் | — | Sanskritization |
| உயர்குடியாட்சி | — | Aristocracy |
| உயர் பாலூட்டி | — | Primate |
| உயர் பாலூட்டியியல் | — | Primatology |
| உயரின வாலில்லாக் குரங்கு | — | Great Ape |
| உயிர்முதல் வாதம் | — | Spiritualism |
| உயிரி | — | Organism |
| உயிரியம் | — | Animatism |
| உயிரினக் கோளம் | — | Biosphere |
| உரிமையியல் நீதிமன்றம் | — | Civil Court |
| உருபியல் | — | Morphology |
| உருவத் தோற்றம் | — | Phenotype |
| உள்ளுணர்வு | — | Intuition |
| உளச் சிதைவு நோய் | — | Schizophrenia |
| உளத்தாக்குதல் | — | Trauma |
| உளமருத்துவம் | — | Psychotherapy |
| உளமொழியியல் | — | Psycholinguistics |
| ஊழி | — | Epoch |

எலும்பளவையியல் — Osteometry
எலும்பியல் — Osteology
ஒருதார மணம் — Monogamy
ஒருவழிப் படிமலர்ச்சி — Unilineal Evolution
ஒலியன் — Phoneme
ஒலியனியல் — Phonology
ஓரச்சுழல் வளையம் — Radial Loop
கருத்திசு ஊனீர் — Germ Plasm
கருத்துமுதற் கொள்கை — Idealism
கருமைத் தோல் — Melanoderm
கருவியல் — Embryology
காலநிலையியல் — Climatology
கிளைமொழி — Dialect
குடிவழியியல் — Genealogy
குலக்குறி — Totem
குற்றவியல் நீதிமன்றம் — Criminal Court
கொல்லும் மரபணு — Lethal Gene
சில்லோர் போட்டி — Oligopoly
சிறப்பினம் — Species
சூழ்நிலை மேம்பாட்டியல் — Euthenics
சூழலியல் — Ecology
செயற்பாட்டியற் கோட்பாடு — Functionalism
செழிப்புச் சடங்கு — Fertility Rite
சொற்பிறப்பு வரலாற்றியல் — Etymology
சொற்பொருளியல் — Semantics
தகாப்புணர்ச்சி — Incest
தட்டை மூக்கினம் — Platyrrhine
தந்துகிச் சுருக்கம் — VasoConstriotion
தந்துகி விரிவு — VasoDilation
தனிமொழியாளர் — Monolinguals
தாடை நீட்சி — Prognathism
தேசியம் — Nationalism
தொகுதிவழித் தொடர்பு — Phylogenetic Affinity
தொடரியல் — Syntax
தொல்சூழ்நிலையியல் — Palaeoecology
தொல்லுயிரியல் — Palaeontology
தோற்கூற்றியல் — Dermatoglyphics

| | | |
|---|---|---|
| நகரியமாதல் | – | Urbanization |
| நாளமில்லாச் சுரப்பியல் | — | Endocrinology |
| நிலக்கிடக்கையியல் | — | Topography |
| நுண்படிமலர்ச்சி | — | Micro Evolution |
| நேர்மூக்கினம் | - | Catarrhine |
| நொடிப்பு நிலை | - | Bankruptcy |
| படிமலர்ச்சி | — | Evolution |
| பண்பாட்டுப் பேறு | – | Acculturation |
| பருவத்தனிமை நோய் | - | Autism |
| பல்லியல் | — | Odontology |
| பனியாற்றுக் காலம் | — | Glacial Period |
| புறத்தோற்ற உடலளவையியல் | — | Somatometry |
| பெண்உறுப்பமைப்பியல் | — | Gynaecology |
| பெருநிலைப் படிமலர்ச்சி | — | Macro Evolution |
| பொருள்சார் பண்பாடு | — | Material Culture |
| பொருள்முதல் வாதம் | — | Materialism |
| மஞ்சள் நிறத் தோல் | — | Xanthoderm |
| மண்டையோட்டளவையியல் | — | Craniometry |
| மரபணு | — | Gene |
| மரபணுப் பொதுச்சேர்மம் | — | Gene Pool |
| மரபுத் தோற்றம் | — | Genotype |
| மரபுப் பண்புகள் | — | Genetic Traits |
| மனிதநலக் கொள்கை | — | Humanism |
| மானிட உடலளவையியல் | — | Anthropometry |
| முற்றுரிமை | — | Monopoly |
| மூவார வளைவு | — | Triradii |
| மேம்பட்ட மரபணு | — | Eugene |
| வரலாற்று வரைவியல் | — | Historiography |
| வளர்சிதை மாற்றம் | — | Metabolism |
| வாலில்லாக்குரங்கு | — | Ape |
| விரலமைப்பியல் | — | Dactyloscopy |
| விலங்கினப் பண்பியல் | — | Ethology |
| வெண்ணிறத் தோல் | — | Leucoderm |

## ஆங்கிலம் — தமிழ்

Acculturation — பண்பாட்டுப் பேறு
Anatomy — உடற்கூற்றியல்
Animatism — உயிரியம்
Animism — ஆவியுலகக் கோட்பாடு
Anthropometry — மானிட உடலளவையியல்
Apartheid Policy — இனஒதுக்கீட்டுக் கொள்கை
Ape — வாலில்லாக் குரங்கு
Aristocracy — உயர்குடியாட்சி
Autism — பருவத்தனிமை நோய்
Bankruptcy — நொடிப்புநிலை
Bigamy — இருதுணை மணம்
Bilingualism — இருமொழியம்
Bill — உண்டியல்
Biosphere — உயிரினக் கோளம்
Bipedalism — இருகால் நடைப்பழக்கம்
Breeding Population — இனப்பெருக்க மக்கள்தொகை
Catarrhine — நேர்மூக்கினம்
Civil Court — உரிமையியல் நீதிமன்றம்
Climatology — காலநிலையியல்
Cognitive Ability — அறிதல் திறன்
Craniometry — மண்டையோட்டளவையியல்
Criminal Court — குற்றவியல் நீதிமன்றம்
Dactyloscopy — விரலமைப்பியல்
Dermatoglyphics — தோற்கூற்றியல்
Dialect — கிளைமொழி
Dichromatism — இருநிற மயக்கம்
Diglossia — இருவழக்கு நிலை
Duopoly — இருவர் போட்டி
Dynamic Theory — இயக்கக் கோட்பாடு
Ecology — சூழலியல்
Embryology — கருவியல்
Endocrinology — நாளமில்லாச் சுரப்பியல்
Epoch — ஊழி
Ethics — அறவியல்
Ethnic Group — இனக்குழு

Ethnobiology — இனக்குழு உயிரியல்
Ethnobotony — இனக்குழுத் தாவரவியல்
Ethnocentrism — இனமையக் கொள்கை
Ethnogeography — இனக்குழுப் புவியியல்
Ethnography — இனக்குழுவியல்
Ethnohistory — இனக்குழு வரலாறு
Ethnolinguistics — இனக்குழு மொழியியல்
Ethnology — இனக்குழு ஒப்பாய்வியல்
Ethnomedicine — இனக்குழு மருத்துவம்
Ethnomusicology — இனக்குழு இசையியல்
Ethnoscience — இனக்குழு அறிவியல்
Ethnosemantics — இனக்குழுச் சொற்பொருளியல்
Ethnozoology — இனக்குழு விலங்கியல்
Ethology — விலங்கினப் பண்பியல்
Etymology — சொற்பிறப்பு வரலாற்றியல்
Eugene — மேம்பட்ட மரபணு
Eugenics — இனமேம்பாட்டியல்
Euthenics — சூழ்நிலை மேம்பாட்டியல்
Evolution — படிமலர்ச்சி
Existentialism — இருத்தல் கொள்கை
Functionalism — செயற்பாட்டியற் கோட்பாடு
Fertility Rite — செழிப்புச் சடங்கு
Gene — மரபணு
Genealogy — குடிவழியியல்
Gene Pool — மரபணுப் பொதுச்சேர்மம்
Genetic Traits — மரபுப் பண்புகள்
Genocide — இன அழிப்பு
Genotype — மரபுத் தோற்றம்
Germ Plasm — கருத்திசு ஊனீர்
Glacial period — பனியாற்றுக் காலம்
Great Ape — உயிரின வாலில்லாக் குரங்கு
Gynaecology — பெண் உறுப்பமைப்பியல்
Hallucination — இல்பொருளுணர்வு
Hedonism — இன்பநிலைக் கொள்கை
Historiography — வரலாற்று வரைவியல்
Humanism — மனித நலக் கொள்கை
Hypergamy — உயர்குடி மணம்

| | | |
|---|---|---|
| Idealism | — | கருத்துமுதற் கொள்கை |
| Inbreeding | — | உட்குழு மணவுறவு |
| Incest | — | தகாப்புணர்ச்சி |
| Intuition | — | உள்ளுணர்வு |
| Journalism | — | இதழியல் |
| Lethal Gene | — | கொல்லும் மரபணு |
| Leucoderm | — | வெண்ணிறத் தோல் |
| Macro Evolution | — | பெருநிலைப் படிமலர்ச்சி |
| Material Culture | — | பொருள்சார் பண்பாடு |
| Materialism | — | பொருள்முதல் வாதம் |
| Melanoderm | — | கருமைத் தோல் |
| Metabolism | — | வளர்சிதை மாற்றம் |
| Micro Evolution | — | நுண்படிமலர்ச்சி |
| Misscegenation | — | இனக்கலப்பு |
| Monogamy | — | ஒருதார மணம் |
| Monolinguals | — | தனிமொழியாளர் |
| Monopoly | — | முற்றுரிமை |
| Morphology | — | உருபியல் |
| Nationalism | — | தேசியம் |
| Naturalism | — | இயற்கைக் கொள்கை |
| Odontology | — | பல்லியல் |
| Oligopoly | — | சில்லோர் போட்டி |
| Organism | — | உயிரி |
| Osteology | — | எலும்பியல் |
| Osteometry | — | எலும்பளவையியல் |
| Palaeoecology | — | தொல் சூழ்நிலையியல் |
| Palaeontology | — | தொல்லுயிரியல் |
| Parallel Evolution | — | இணைப் படிமலர்ச்சி |
| Personality | — | ஆளுமை |
| Phenotype | — | உருவத் தோற்றம் |
| Phoneme | — | ஒலியன் |
| Phonology | — | ஒலியனியல் |
| Phylogenetic Affinity | — | தொகுதிவழித் தொடர்பு |
| Physiology | — | உடலியல் |
| Platyrrhine | — | தட்டை மூக்கினம் |
| Primate | — | உயர் பாலூட்டி |
| Primatology | — | உயர் பாலூட்டியியல் |

| | | |
|---|---|---|
| Prognathism | — | தாடை நீட்சி |
| Psycholinguistics | — | உளமொழியியல் |
| Psychotherapy | — | உளமருத்துவம் |
| Racial Segregation | — | இனஒதுக்கல் |
| Racism | — | இனக்கொள்கை |
| Radial Loop | — | ஓரச்சுழல் வளையம் |
| Sanskritization | — | உயர்குடியாக்கம் |
| Schizophrenia | — | உளச்சிதைவு நோய் |
| Semantics | — | சொற்பொருளியல் |
| Serology | — | இரத்தவியல் |
| Somatometry | — | புறத்தோற்ற உடலளவையியல் |
| Sovereignty | — | இறைமை |
| Species | — | சிறப்பினம் |
| Spiritualism | — | உயிர் முதல் வாதம் |
| Stock Exchange | — | இருப்பு மாற்றகம் |
| Structuralism | — | அமைப்பியற் கோட்பாடு |
| Sub-Culture | — | உட்பண்பாடு |
| Sub-Group | — | உட்குழு |
| Syntax | — | தொடரியல் |
| Theism | — | இறைக் கொள்கை |
| Theology | — | இறையியல் |
| Topography | — | நிலக்கிடக்கையியல் |
| Totem | — | குலக்குறி |
| Trauma | — | உளத்தாக்குதல் |
| Triradii | — | மூவார வளைவு |
| Unilineal Evolution | — | ஒருவழிப் படிமலர்ச்சி |
| Urbanization | — | நகரியமாதல் |
| Vaso Constriction | — | தந்துகிச் சுருக்கம் |
| Vaso Dilation | — | தந்துகி விரிவு |
| Xanthoderm | — | மஞ்சள்நிறத் தோல் |

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்